இந்திய விவரச்சுவடி

தமிழ்நாடு மாநிலம்

கன்னியாகுமரி மாவட்டம்

கேரளம்
திருநெல்வேலி
விளவங்கோடு
கல்குளம்
தேவாலை
குழித்துறை
புதுக்கடை
நாகர்கோவில்
அகஸ்தீஸ்வரம்
மன்னார் வளைகுடா

கன்னியாகுமரி மாவட்ட விவரச்சுவடி

மாவட்ட வரைபடம்

தமிழ்நாடு மாவட்ட விவரச்சுவடிகள்

கன்னியாகுமரி மாவட்டம்

எம். கோபாலகிருஷ்ணன், பி.காம்.
(துணை ஆட்சியர்)
பதிப்பாசிரியர் (விவரச்சுவடிகள்)

தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சித்துறை,
சென்னை - 600 008

மொழி பெயர்ப்பாளர்
எம். கோபாலகிருஷ்ணன், பி.காம்.
பதிப்பாசிரியர் (ஓய்வு)

2006

COMPLIMENTARY COPY

© தமிழ்நாடு அரசு
தமிழ்நாடு ஆவணக் காப்பகம் மற்றும்
வரலாற்று ஆராய்ச்சி ஆணையர்
51, காந்தி - இர்வின் சாலை,
எழும்பூர், சென்னை - 600 008.

பிரதிகள் கிடைக்குமிடம்

அரசு வெளியீடுகள் விற்பனை மையம்
எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை
இயக்குநர் அலுவலகம்
816, அண்ணா சாலை,
சென்னை - 600 002.

மற்றும்

தமிழ்நாடு ஆவணக் காப்பகம் மற்றும் வரலாற்று
ஆராய்ச்சித்துறை ஆணையர் அலுவலகம்
51, காந்தி - இர்வின் சாலை,
எழும்பூர், சென்னை - 600 008.

அச்சிட்டோர்
சென்னை அச்சக தொழிற்கூட்டுறவு சங்கம்
118, பெரிய தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 600 005.

பேரா. கே. பொன்னுசாமி
எம்.எஸ்ஸி., பி.எல்.
கல்வி அமைச்சர்

புனித ஜார்ஜ் கோட்டை,
சென்னை - 600 009

அணிந்துரை

தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சித் துறையின் விவரச்சுவடிப் பிரிவு, தமிழக அரசின் சார்பாக கன்னியாகுமரி மாவட்டத்திற்கான விவரச் சுவடியை வெளியிடுவது குறித்து பெரு மகிழ்ச்சி அடைகிறேன். 1956 ஆம் ஆண்டு கன்னியாகுமரி மாவட்டம் தொடங்கப்படுவதற்கு முன்னர் திருவாங்கூர் அரசின் திருவனந்தபுரம் மாவட்டத்தின் ஒரு பகுதியாக இம்மாவட்டம் விளங்கியது. திருவாங்கூர் அரசு சார்பாக 1906 ஆம் ஆண்டு நாகமய்யாவையை பதிப்பாசிரியராகக் கொண்டு வெளியிடப்பட்ட திருவாங்கூர் மாநில வழிகாட்டி நூலில் இப்பகுதி இடம் பெற்றிருந்தது. இருப்பினும், புதிய வருவாய் மாவட்டமாகத் தொடங்கப்பட்டதற்குப் பின்னர் இம்மாவட்டத்திற்கென வெளியிடப்படுகின்ற முதல் விவரச்சுவடி இதுவாகும்.

ஆங்கில அகராதிகள், கெசட்டியர் (Gazetteer) என்ற சொல்லுக்கு புவியியல் அமைப்புப் பற்றி விவரிக்கக்கூடிய ஒரு நூல் என்று குறிப்பிடப்பட்டிருந்தாலும், தற்போது அதன் பொருள் விரிவடைந்து. ஒரு மாவட்டத்தின் அனைத்து விவரங்களையும் உள்ளடக்கிய ஒரு முக்கியமான தகவல் களஞ்சியமாகத் திகழ்கிறது.

முக்கடல்களின் கூடலில் அமைந்து, இந்திய தீபகற்பத்தின் நிலப்பரப்பின் முடிவு என்றழைக்கப்படும் இந்தியாவில், குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்டத்தின் மிகச் சிறந்த சுற்றுலா மையமான கன்னியாகுமரியின் பெயரால் அழைக்கப்படும் இம்மாவட்டம், பல்வகை வேறுபாடுடைய அரசியல், சமூக, பொருளாதார, கல்வி மற்றும் பண்பாட்டு வரலாற்றினை கொண்டு அமைந்துள்ளது.

ஐயப்பாடற்ற ஆதாரங்களிலிருந்து திரட்டப்பட்ட இத்தகைய வரலாற்றுச் செய்திகளுடன் விடுதலைக்குப்பின்னர், மத்திய மற்றும்

மாநில அரசுத் துறைகளின் மூலமாக நிறைவேற்றப்படும் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களையும், பல்வேறு துறைகளின் வளர்ச்சியையும் இவ்விவரச்சுவடி நன்கு விவரிக்கின்றது.

விவரச்சுவடிகள் என்று பின்னர் அழைக்கப்பட்ட மாவட்ட வழிகாட்டி நூல்கள் (Manuals) முதலில் ஆங்கிலேயர்களால் எழுதி வெளியிடப்பட்டது. 1868 ஆம் ஆண்டு ஜெ.எச். நெல்சன் என்பவரால் எழுதி வெளியிடப்பட்ட மதுரை மாவட்ட வழிகாட்டி நூலே முதன் முதலில் வெளிவந்த நூலாகும். அன்றிலிருந்து நிர்வாக வசதிக்கேற்ப வெவ்வேறு துறைகளின் மூலம் மாவட்டத்திற்கான விவரச்சுவடிகள் தயாரித்து வெளியிடப்பட்டன. பல மாவட்டங்களுக்கு திருத்தி எழுதப்பட்ட விவரச்சுவடிகள் வெளியிடப்பட்டுள்ளன. ஆங்கிலேய ஆட்சிக்காலத்தில் வரையறுக்கப்பட்ட மாவட்டங்களை நிர்வாக வசதிக்காகவும், அரசின் நலத்திட்டங்கள் மக்களுக்கு எளிதில் சென்றடையச் செய்யும் நோக்குடனும் மாவட்டங்கள் இரண்டாகவோ, மூன்றாகவோ அரசினால் பிரிக்கப்படும் பொழுது, புதிய மாவட்டங்களுக்கும் தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சித்துறையின் விவரச்சுவடிப்பிரிவு மாவட்ட விவரங்களை எழுதி வெளியிடுகிறது.

ஆட்சியாளர்களுக்கும் ஆராய்ச்சியாளர்களுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் இம்மாவட்டத்தைப் பற்றிய தேவையான விவரங்களை இக்கன்னியாகுமரி மாவட்ட விவரச்சுவடி வழங்கும் என உளமார நம்புகிறேன்.

ஓம்

பேரா. கே. பொன்னுசாமி

13-1-1995

அருண் ராமநாதன், இ.ஆ.ப.
ஆவணக்காப்பகம் மற்றும் வரலாற்று
ஆராய்ச்சித்துறை சிறப்பு ஆணையர்

தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
சென்னை - 600 008.

தமிழாக்கத்திற்கான முன்னுரை

கன்னியாகுமரி மாவட்டத்திற்கான விவரச்சுவடியின் ஆங்கில பதிப்பு 1995 ஆம் ஆண்டு விவரச்சுவடிகளின் முன்னாள் பதிப்பாசிரியர் திரு. எம். கோபாலகிருஷ்ணன், அவர்களால் தொகுக்கப்பட்டு தமிழக அரசு சார்பாக, தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி துறையால் வெளியிடப்பட்டது. ஆங்கிலத்தில் வெளியிடப்படும் விவரச்சுவடிகள் தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட வேண்டும் என்ற மாநில அரசின் ஆணைக்கிணங்க கன்னியாகுமரி மாவட்ட விவரச்சுவடி, தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித்துறையால் தெரிந்தெடுக்கப்பட்ட மொழி பெயர்ப்பாளர் களால் தமிழாக்கம் செய்யப்பட்டு முறையாக வெளியிடப்படுகிறது. இம்மாவட்டம் இந்தியப் பெருங்கடல் வங்காள விரிகுடாக்கடல் மற்றும் அரபிக்கடல்களால் சூழப்பட்ட இயற்கை எழில் கொண்ட மாவட்டமாகத் திகழ்கிறது. இந்நூலைப் படிப்பதன் மூலம் சமூகம், பொருளாதாரம் மற்றும் பண்பாடு போன்ற அனைத்து அம்சங்களையும் நன்கு அறிந்து கொள்வதற்கு இந்நூல் உதவி புரியும் என நம்புகிறேன். இதனைச் சீரிய முறையில் மொழிபெயர்த்து அளிக்கத் தனி முயற்சி மேற்கொண்ட தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் அவர்களுக்கும் மொழிபெயர்ப்பாளர் காலஞ்சென்ற திரு. மா. கோபால கிருஷ்ணன், முன்னாள் பதிப்பாசிரியர் அவர்களுக்கும் விவரச்சுவடி நல்ல முறையில் அச்சிட்டு வெளியிட உறுதுணை புரிந்த சென்னை அச்சகத் தொழில் கூட்டுறவு சங்கத்திற்கும் மற்றும் இவ்விவரச்சுவடி நன்கு வெளிவர ஒத்துழைப்பு அளித்த அனைத்து துறை அலுவலர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்விவரச்சுவடியின் தமிழாக்க வெளியீட்டில், தனிக் கவனம் செலுத்தி இப்பணியினை செம்மையாக நிறைவேற்றிய பதிப்பாசிரியர், உதவிப் பதிப்பாசிரியர்கள் மற்றும் விவரச்சுவடிப் பிரிவு அனைத்து அலுவலர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாள் : 21-4-2005

அருண் ராமநாதன்

எஸ். ரெங்கமணி, இ.ஆ.ப.,
ஆவணக் காப்பகம் மற்றும் வரலாற்று
ஆராய்ச்சி துறை ஆணையர்

ஆவணக்காப்பகம்
எழும்பூர்,
சென்னை-8.

முகவுரை

நாடு விடுதலையடைந்த பின்னர், வெளியிடப்பட்ட மாவட்ட விவரச் சுவடிகளில், ஒன்பதாவதாக, கன்னியாகுமரி மாவட்ட விவரச் சுவடியினை வெளியிடுவதில் நான் மன மகிழ்வு கொள்கிறேன். ஆவணக் காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி ஆணையராக நான் பணியாற்றிவரும் காலத்தில், இரண்டு மாவட்ட விவரச்சுவடிகள் தயார் செய்வதில் நான் ஈடுபட்டேன்; அவற்றிலொன்றான தர்மபுரி மாவட்ட விவரச் சுவடி, தற்போது அச்சிலுள்ளது; மற்றொன்று, இம்மாவட்ட விவரச் சுவடியாகும்.

தற்போது, விவரச்சுவடிப் பதிப்பாசிரியராகப் பணியாற்றிவரும், திரு. எம். கோபாலகிருஷ்ணன், ஒரு துணை ஆட்சியராவார். அவர் இப்பணியிற் சேரும்போது, கன்னியாகுமரி மாவட்ட விவரச் சுவடிப்பணி, துவங்கப்பட்டிருந்தது. அவர் இப்பணியிற் காட்டிய ஆர்வம், துணையூக்கம், அயரா உழைப்பு, ஆகியவற்றுடன், இம்மாபெரும் பணியினை பத்தே மாதங்களில், மிக விரைவில் செய்து முடித்திருப்பது குறிப்பிடத்தக்கது. குறுகிய காலத்தில் வியப்பூட்டுமளவிற்கு நல்ல முன்னேற்றம் காட்டியுள்ள பதிப்பாசிரியர் மற்றும் உதவி பதிப்பாசிரியர்கள் ஆகியோருக்கு என் பாராட்டுதலைத் தெரிவிக்கிறேன். அவர்களது விடாமுயற்சி, செயல்திறமிக்க ஒத்துழைப்பு, மற்றும் பணியில் முழு ஈடுபாடு, ஆகியவற்றினால்தான் இம்மகத்தான சாதனையினை எய்த முடிந்ததெனில் மிகையில்லை.

இந்த மாவட்ட விவரச்சுவடியில், படங்கள், விளக்கச் செய்திகள் ஆகியவையும் இடம்பெற்றுள்ளன. விவரச் சுவடியில் சேர்ப்பதற்கு அரிய நிழற்படங்கள், கடும் முயற்சியுடன் சேகரிக்கப்பட்டுள்ளன. மிக அண்மைக்கால செய்திக் குறிப்புகளைத் தொகுத்து அளித்திட அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தின் செய்தி அமைப்புப் பின்னல் வலையமைவுத் தனிச்சிறப்பு யாதெனில், பயன்மட்டுமே

கருதி நாகர்கோவிலில் உருவாக்கப்பட்ட வானொலி நிலையமாகும். இது, பிற வானொலி நிலையங்களில் மண்டல ஒலிபரப்பினின்றும் சற்றே மாறுபட்டதாகும். இவ்வகையான வானொலி நிலையம், நம் நாட்டிலேயே இங்குதான் முதன் முதலாக நிறுவப்பட்டுள்ளது. சில துறைகளில் தனி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, அவ்வாய்வு அறிக்கைகளும், விவரச்சுவடியில் சேர்க்கப்பட்டுள்ளமை கூடுதல் தனிச்சிறப்பாகும்.

இவ்விவரச்சுவடி தயாரித்து அதற்கு இறுதி வடிவம் அளிக்கப்படும் வரை, ஒவ்வொரு நிலையிலும், பதிப்பாசிரியர் திரு. எம். கோபாலகிருஷ்ணன், எனது ஆலோசனையினைப்பெற்று, அதனை செயற்படுத்தியுள்ளார், விவரச்சுவடியின் ஒவ்வொரு இயலும், எனது ஒப்புதலைப் பெற்றுள்ளது.

கன்னியாகுமரி மாவட்ட விவரச்சுவடி, பதிப்பாசிரியர் மற்றும் அவரது உதவிப் பதிப்பாசிரியர்கள் ஆகியோரது அரிய படைப்பாகும். பதிப்பாசிரியர் மிகக்குறுகிய கால அட்டவணைப்படி, இப்பணியினை மனநிறைவிற்கேற்ப முடித்துள்ளாரென பெருமையுடன் கூறிக்கொள்கிறேன். மிக துரிதமாக இப்பணி நிறைவுற்றதை நோக்கின், பிற மாவட்ட விவரச்சுவடிகளையும் விரைவில் முடிக்க இயலுமென நினைக்கத் தூண்டுகிறது. இப்பணியினை துரிதப்படுத்துவதில், இடர்ப்பாடுகள் இருந்த போதிலும், பிற மாவட்ட விவரச்சுவடிகள் தொடர்ந்து விரைவில் வெளிவருமென்பதில் ஐயமில்லை. வேகமாக இப்பணி முடிவுறவேண்டுமென்பது நமது நோக்கமெனினும், தரம் குறையாத வெளியீடுகளாக அவை அமையுமென நான் உறுதிபடக் கூறுகிறேன்.

நாள்: 3.3.1989

எஸ். ரெங்கமணி

முன்னுரை

விவரச் சுவடிகளின் முக்கியத்துவத்தை நம்மை உணர வைத்த, ஆங்கிலேய ஆட்சியாளர்களுக்கு நாம் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறோம். ஆமில்ட்டன் அவர்களால் எழுதப்பட்ட கிழக்கிந்திய விவரச் சுவடி, 1815 ஆம் ஆண்டு, முதன் முதலில் வெளியிடப்பட்ட விவரச் சுவடியாகும். இதனுடன், டபிள்யூ.டபிள்யூ அண்ட்டர் அவர்களால் எழுதப்பட்ட இந்தியப் பேரரசின் விவரச் சுவடியும் சேர்த்துக்கொள்ளப்பட்டது; இதுதான் முன்னர் வெளியிடப்பட்டவைகளில், மிகச் சிறந்த விவரச் சுவடியாகும். அகராதிகளில், விவரச்சுவடி என்பது, ஒரு "நில இயல் சார்ந்த சொற்களஞ்சியம்" என வரையறுக்கப்பட்டிருப்பினும், இப்பால், பொதுக் கருத்துத் தொடர்புடன் அது விரிவாக்கப்பட்டிருப்பது வெள்ளிடைமலை. மேலும், விவரச் சுவடியலடங்கிய நிலப் பகுதி தொடர்பான பயனுள்ள விவரங்கள் அனைத்தும் அதனில் அளிக்கப்பட்டுள்ளன. அது, ஆட்சியாளர்கள், நிருவாகிகள், பொதுமக்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் ஆகியோருக்குத் தேவைப்படும் தகவல்களை அளிக்கிறது. விவரச் சுவடிகள், நெறிமுறையை வளர்க்கும், பல நோக்குள்ள இன்றியமையா நூல்களாகும்.

தமிழ்நாட்டில் விவரச் சுவடியின் வரலாறு, 1869 ஆம் ஆண்டு, முதன் முதலில் மதுரை நடைமுறை நூல் பிரசுரிக்கப்பட்டதிலிருந்து, துவங்குகிறது. மாவட்ட நடைமுறை நூல்கள் பின்னர், மாவட்ட விவரச் சுவடிகளாக வெளியிடப்பட்டன, முதன்முதலில், 1906 ஆம் ஆண்டு, மதுரை மற்றும் தென் ஆற்காடு மாவட்ட விவரச்சுவடிகள் வெளியிடப்பட்டன, நாடு விடுதலையடைந்த பின்னர், முதலில், 1957 ஆம் ஆண்டு, தஞ்சாவூர் மாவட்ட விவரச் சுவடி வெளியிடப்பட்டது. அதன் பின்னர், ஆறு மாவட்ட விவரச் சுவடிகள் வெளியிடப்பட்டன; மேலும், தற்போது, தர்மபுரி மாவட்ட விவரச் சுவடி அச்சில் உள்ளது, இந்த விவரச் சுவடி கன்னியாகுமரி மாவட்டத்திற்குரியதாகும். இது, இம்மாவட்டம் அமைக்கப்பட்ட 1.11.1956-க்குப் பின்னர், வெளியிடப்படும், முதல் விவரச் சுவடியாகும்.

நாட்டின் தந்தையான, மகாத்மா காந்தி அவர்கள், இந்தியாவின் தென்முனையிலுள்ள கன்னியாகுமரிக்குக் கடந்த 15.1.1937 அன்று வருகை தந்த போது கீழ்க்காணும் கருத்தினைத் தெரிவித்துள்ளார்.

"கன்னியாகுமரி, தேவைப்பொருள்களுக்காக அல்லது செப்பணிடுவதற்காகக் கப்பல்கள் செல்லக்கூடிய துறைமுகமில்லையெனினும், தனக்குவமையில்லாத அபூர்வமான தோற்றத்தை அளித்திடும் மூன்று கடல்களின் நீரும் சங்கமமாகுமிடமாகத் திகழ்கிறது. இங்கு அமர்ந்து நான் இதனை எழுதுகிறேன். இங்குள்ள பெண் தெய்வத்தைப் போன்று, சுற்றியுள்ள கடல் நீரும், கன்னித்தன்மையுடன் திகழ்கிறது".

ஒரு இடத்தின் முக்கியத்துவத்தை சிறப்புற எடுத்துக்காட்டுவதும், அது உலக முழுவதுமுள்ள மக்களை எவ்வாறு கவர்ந்திழுக்கிறதென தெளிவாக விளக்குவதுமே, விவரச் சுவடியின் முக்கிய நோக்கமாகும். இவற்றைக்கருத்திற்

கொண்டுதான், மகாத்மாகாந்தி அவர்களது மேற்காணும் கருத்து விளக்கம் இதனில் இடம் பெறுகிறது.

இந்திய நாட்டின் தென்முனை, இரண்டாம் தமிழ்ச் சங்கம் நடந்த, தெற்கு எல்லையான கபாடபுரமென சங்க இலக்கியம் கூறுகிறது. அப்பகுதி, பின்னர் கடலில் மூழ்கியதால், நில அரிப்பு ஏற்பட்டு தற்போதைய நிலை உருவாக்கப்பட்டிருக்கலாமெனக்கூறப்படுகிறது. திருப்பதி மலைகள் மற்றும் கன்னியாகுமரி இவற்றிற்கிடைப்பட்ட நிலப்பரப்புதான் தமிழ் பேசப்பட்டு வந்த பகுதியென, தமிழ் இலக்கியம் உறுதிபடக் கூறுகிறது.

சங்க காலத்தில், தமிழ் பேசப்பட்டுவந்த பகுதிகள், தமிழ் மூவேந்தர்களான சேர, சோழ, பாண்டியர் ஆளுகையிலிருந்து வந்தன.

கேரள மாநிலம் உள்ளிட்ட, தற்போதைய கன்னியாகுமரி மாவட்டம் முழுமையும், சேர மன்னர்களின் ஆட்சிப் பரப்பில் அமைந்திருந்தன. அவர்களில் மிகவும் புகழ் பெற்ற மன்னர், சேரன் செங்குட்டுவன் ஆவார். ஆயிகள், பாண்டியர்கள், சோழர்கள், நாயக்கர்கள், மற்றும் வேனாடு மன்னர்கள் ஆகியோர், சேரர்களைத் தொடர்ந்து, அரசோச்சினர். நாடு விடுதலைபெற்ற பின்னரும் கூட, அது, முடிமன்னர்களது ஆட்சியிலேயே வந்தமை குறிப்பிடத்தக்கது; பின்னர், திருவாங்கூர் மன்னர், தனது மாகாணத்தினை இந்தியப்பேரரசுடன் இணைத்திட இசைந்தார். அப்போது தான், திருவாங்கூர்-கொச்சி மாநிலம் உதயமாகியது. ஆனால், மாநிலத்தில் தொன்றுதொட்டு தமிழ் பேசப்பட்டு வந்த பகுதியான தென் திருவாங்கூர் வாழ் மக்கள், தாங்கள் வாழும் பகுதியினை முந்தைய சென்னை மாநிலத்துடன் இணைக்க, வலியுறுத்தினர். கடும் போராட்டத்திற்குப் பின்னர், அவர்கள் தங்களது குறிக்கோளில் வெற்றியடைந்தனர். 1956 ஆம் ஆண்டின் மாநில சீரமைப்புச் சட்டம் (1956 ஆண்டின் 37-வது சட்டம்) மாவட்டத்தின் கன்னித் தெய்வமான கன்னியாகுமரியின் பெயரில், இப்புதிய மாவட்டத்தினை உருவாக்கியது, இவ்விவரச் சவடியினைத்தயார் செய்கையில், மத்தியவிவரச்சுவடி அலகு, அறுதியிட்டுக் கூறியுள்ள வழிகாட்டு விதிமுறைகள் கவனத்துடன், வழுவாது பின்பற்றப்பட்டுள்ளன.

தற்போதைய கன்னியாகுமரி மாவட்டப்பகுதிகள், பலகாலமாக, திருவாங்கூர் மாநிலத்துடன் இணைந்திருந்ததால், அவை பற்றிய விவரங்கள் திருவாங்கூர் மாநில நடைமுறை நூலில் அளிக்கப்பட்டன. அண்டை கேரள மாநில நாகரிகத் தன்மையின் தடத்தினை கன்னியாகுமரி மாவட்டப்பகுதியில் தற்போதும் காண முடிகிறது. எனவே, இக்கருத்து, கன்னியாகுமரி மாவட்ட விவரச்சுவடி எழுதும்போது, மிகக்கவனத்துடன், குறிப்பாக "மக்கள்" மற்றும் "கல்வி" ஆகிய இயல்களில் கையாளப்பட்டுள்ளது.

மாவட்ட விவரச்சுவடிகள் தயாரித்திட, இந்திய அரசு வழங்கியுள்ள வழிகாட்டுவிதிமுறைகளுக்கொப்ப, " பொருளாதாரப் போக்கு", மற்றும் "பல வகைத் தொழில்கள்" ஆகிய இரு இயல்களும் இணைத்து எழுதப்பட்டுள்ளன.

கன்னியாகுமரி மாவட்ட மக்களின் பண்பு, நாகரிகம் ஆகியவை, அண்மை கேரள மாநில மக்களுடையவற்றை ஒத்தவையாகும். இம்மாவட்டத்தில், கல்வி

கற்றோரின் எண்ணிக்கை, மாநிலத்தின் பிற மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில், மிகவும் அதிகமானதாகும். (63.85 விழுக்காடு - ஆனால் மாநில விழுக்காடு 46.76 தான்). இந்நூல், படிப்போரின் கவனத்தைத் தூண்டும் வகையில், பெருமுயற்சியெடுத்து, மிக அக்கறையுடன் எழுதப்பட்டுள்ளது; மிகச் சிறிய விவரங்கூட புறக்கணிக்கப்படவில்லை. கன்னியாகுமரி மாவட்டத்தின் பல்வேறு சிறப்பியல்புகள் குறித்து, ஆராய்ச்சியிலீடுபடுவோருக்கு, நடைமுறைப் பயனுடையதாக இந்நூல் அமைய, தனி முயற்சி மேற்கொள்ளப்பட்டு, அதற்குகந்த முறையில் எழுதப்பட்டுள்ளது.

இப்பணியின் முற்பகுதி, முனைவர் கே.டி. சுவாமிநாதன் அவர்களால் துவக்கப்பட்டு, அவருக்குப் பின் பணியாற்றியவர்களால் தொடரப்பட்டது. ஆனால், தவிர்க்கமுடியாத காரணங்களால் உரிய அளவு முன்னேற்றம் காண இயலவில்லை, பின்னர், கன்னியாகுமரி மாவட்ட விவரச்சுவடியின் பூர்வாங்கப் பணி, எனக்கு முன்னர் பதிப்பாசிரியராகப் பணியாற்றிய திரு.பி. பழனியாண்டி செஞ்சி (துணை ஆட்சியர்) அவர்களால் துவங்கப்பட்டது. நான் 1988 மார்ச் மாதம் பதிப்பாசிரியராகப் பணியேற்ற பின்னர் இப்பணி தொடர்ந்தது.

கன்னியாகுமரி மாவட்டத்தின் தனிச்சிறப்பு யாதெனில், உள்ளூர் பேச்சு வழக்கில் பயன்படுத்தபடும் மொழியின் சிறப்புப் பண்புக் கூறாகும். எனவே, இது தொடர்பாக வல்லுநர்களால் தனி ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, "மக்கள்" என்ற இயலில், அவ்வாய்வறிக்கை இணைக்கப்பட்டுள்ளது. அதனுடன், கன்னியாகுமரி மாவட்ட மக்கள் மரபு வழிப் பழக்க வழக்கக் கோட்பாட்டுத் தொகுதி பற்றி ஆய்வறிக்கையும் சேர்த்தளிக்கப்பட்டுள்ளது. இவ்விரு ஆய்வறிக்கைகளைத் தயாரித்தளித்த, அண்ணாமலைப் பல்கலைக் கழக முன்னாள் மொழியியல் துறைப் பேராசிரியரும், தஞ்சாவூர் தமிழ் பல்கலைக் கழகத்தின் தற்போதைய துணை வேந்தருமான முனைவர் எஸ். அகஸ்தியலிங்கம் அவர்களும், அவருக்கு உறுதுணையாயிருந்த மொழியியல் வல்லுநர்களுக்கும் என் உள்ளார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இவ்விரச் சுவடியினை எழுதி முடித்திடத் தேவையான விவரங்களை அளித்துதவிய கன்னியாகுமரி மாவட்ட முன்னாள் ஆட்சியர் திரு. சையது முனிர் ஹோதா, ஐ.ஏ.எஸ்., அவர்களுக்கும், அவரைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சியராகப் பணியாற்றிய திரு. என். சுந்தரதேவன், ஐ.ஏ.எஸ்., அவர்களுக்கும் என் மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

விவரச்சுவடிப் பிரிவுப் பணியாளர்களுக்கு, நாகர்கோவிலைச் சார்ந்த முனைவர் எஸ். பத்மநாபன், பல்வேறு விவரங்களை அளித்து, விவரச் சுவடியினை முடிக்க உவகையோடு ஒத்துழைத்தமை, குறிப்பிடத்தக்கது. அவருக்கும் எனது நன்றியினை உரித்தாக்குகிறேன்.

விவரச்சுவடி தயாரிப்பதற்குத் தேவையான மூலப்பொருள்கள் மற்றும் விவரங்கள் கொடுத்துதவிய பல்வேறு துறைத்தலைமை அலுவலர்கள், அரசு நிறுவனங்களின் நிருவாக இயக்குநர்கள், மாவட்ட நிலையிலுள்ள பல்வேறுதுறை அலுவலர்கள், மைய அரசின் பல்வேறுதுறை அலுவலர்கள்,

மைய அரசு நிறுவனங்களின் நிருவாக இயக்குநர்கள், தனியார் நிறுவனங்களின் நிருவாகிகள், மாவட்டத்தைச்சார்ந்த வல்லுநர்கள், மற்றும், ஆராய்ச்சியாளர்கள் ஆகியோருக்கு மிக்க நன்றியுடையேன்.

என்னுடனிணைந்து பணியாற்றிய, உதவிப்பதிப்பாசிரியர்கள், திருவாளர்கள் கே.எஸ். வேங்கட்ராமன், கே.எஸ்.கே. வேல்மணி, ஆர். சின்னக்கனி, என். கோவிந்தராசன், திருமதி வி. மன்மதவல்லி, கண்காணிப்பாளர்கள், திருமதி கிரேஸ் ஹெப்சிபாய், திரு.ட்டி. ஸ்ரீநிவாசராவ், உதவியாளர்கள் திருமதி எஸ். விசயலெட்சுமி, திருவாளர்கள் எஸ். பாலகிருஷ்ணன், எம்.பி. ரகுநாதன், தனி உதவியாளர் திருமதி ஆர். வசந்தா, சுருக்கெழுத்துத் தட்டச்சர் திரு. எம். எஸ் இராகவன், தட்டச்சர் திரு.பி. இராசரெத்தினம், முதுநிலை வாசகர் திரு. ஆர். சந்திரசேகரன், மற்றும் நகல் படிப்பவர் செல்வி பி. கீதா ஆகியோருடைய தொண்டு குறிப்பிடத்தக்கது. அவர்களது ஒத்துழைப்பின்றி, இவ்விவரச்சுவடியினை, மிகக்குறுகிய காலத்தில் நான் முடித்திருக்க இயலாது.

முடிந்தவரை, இந்நூலில், அனைத்து விவரங்களும், சேர்க்கப்பட்டு, பயனுள்ள வகையில் நூல் முடித்தளிக்கப்பட்டுள்ளது. எனினும், ஒரு சில தகவல்கள் மேலும் தேவைப்படக்கூடும்: அல்லது எங்களது கவனத்தைக் கவராதிருக்கக் கூடும்.

எனவே, இந்நூலின் மீதான ஒவ்வொரு புதுக்கருத்தையும், மற்றும் குறிப்புரையையும் நாங்கள் அன்புடன் வரவேற்கிறோம். அவை எங்களது வருங்கால வெளியீடுகளின் தரத்தினை உயர்த்திட, பேருதவியாயிருக்குமென உளமார நம்புகிறோம்.

தமிழ்நாடு ஆவணக்காப்பகம்,
எழும்பூர், சென்னை - 8.
நாள்: 3.3.1989

எம். கோபாலகிருஷ்ணன்,
துணை ஆட்சியர்
பதிப்பாசிரியர் (விவரச்சுவடிகள்)
(10-3-1988 முதல் 31-8--1993 வரை)

விவரச்சுவடிப்பிரிவு அலுவலர்கள்

1.	திரு. கே.எஸ். வெங்கட்ராமன்	.. உதவிப்பதிப்பாசிரியர்
2.	திரு. கே.எஸ்.கே. வேல்மணி	.. உதவிப்பதிப்பாசிரியர்
3.	திரு. ஆர். சின்னக்கனி	.. உதவிப்பதிப்பாசிரியர்
4.	திருமதி. வி. மன்மதவல்லி	.. உதவிப்பதிப்பாசிரியர்
5.	திரு. என். கோவிந்தராசன்	.. உதவிப்பதிப்பாசிரியர்
6.	திருமதி. ஆர். நளினி	.. உதவிப்பதிப்பாசிரியர்
7.	திருமதி. சி. கிரேஸி ஹெப்ஸிபாய்	.. கண்காணிப்பாளர்
8.	திரு. ஆர். சந்திரசேகரன்	.. முதுநிலை வாசகர்
9.	திரு. எம்.பி. ரகுநாதன்	.. உதவியாளர்
10.	திருமதி. எம். விசயலெட்சுமி	.. உதவியாளர்
11.	திருமதி. ஆர். வசந்தா	.. பதிப்பாசிரியரின் தனி உதவியாளர்
12.	திரு. எம். எஸ். இராகவன்	.. பதிப்பாசிரியரின் தனி எழுத்தர்
13.	திரு. பி. இராசரெத்தினம்	.. தட்டச்சர்
14.	திருமதி பி. கீதா	.. நகல் படிப்பவர்

உள்ளடக்கம்

இயல்கள்		பக்கங்கள்
1.	பொது	1
2.	வரலாறு	58
3.	மக்கள்	137
4.	வேளாண்மையும், நீர்ப்பாசனமும்	222
5.	தொழில்கள்	400
6.	வங்கித் தொழில், வணிகம் மற்றும் பெரு வாணிகம்	454
7.	தகவல் தொடர்பு	570
8.	பலவகை வாழ்வுத் தொழில்கள் மற்றும்	
9.	பொருளாதாரப் போக்குகள்	606
10.	பொது நிருவாகம்	664
11.	வருவாய் நிருவாகம்	680
12.	சட்டம், ஒழுங்கு மற்றும் நீதி	714
13.	பிற துறைகள்	774
14.	உள்ளாட்சி	840
15.	கல்வி	952
16.	மருத்துவம் மற்றும் பொது சுகாதாரப் பணிகள்	1202
17.	பிற சமூகப்பணிகள்	1257
18.	பொது வாழ்வு மற்றும் சமூகப்பணி அமைப்புகள்	1297
19.	முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள்	1325

இணைப்பு

தேர்ந்தெடுக்கப் பெற்ற நூற்பெயர்க் கோவை	1400
அறிக்கைகள், பருவ இதழ்கள், பருவ இதழ் சுவடிகள் போன்றவை	1403
சட்டங்கள், அருஞ்சொல் விளக்கக் கோவை	1405
அட்டவணை	1410

தேவி கன்னியாகுமரி அம்மன்



விவேகானந்தர் பாறை

சூரியன் எழும் காட்சி

சூரியன் மறையும் காட்சி



விண்ணிலிருந்து குமரி முனையின் தோற்றம்



முக்கடல்களின் கூடல்

இயல்-1
பொது

முன்னுரை

கன்னியாகுமரி மாவட்டத்தின் இயற்கை சூழல், போற்றுதற்குரியது. கடற்கரைகள், சமநிலங்கள், குன்றுகள், பள்ளத்தாக்குகள் மற்றும் மலை முகடுகள் போன்றவை, இடைஇடையே பரந்து காணப்படும் இம்மாவட்டம், காண்போரைக் கவர்வது இயற்கையே. மாறிவரும் சூழ்நிலையிலும் பழைய நாட்டுப்புற அழகு இம்மாவட்டத்தில் சிறிதேனும் குறையவில்லை.

தாழ்ந்த மற்றும் மணற்பாங்கான கடற்கரையை ஒட்டியுள்ள செங்குத்தான பாறையின் உச்சியிலிருந்து காணும் போது இம்மாவட்டத்தின் பரந்த இயற்கைக் காட்சியை விவரிக்க இயலாதது. பரந்து. விரிந்து கிடக்கும் கடலுடன் அடிவானம் ஐக்கியமாவதுபோன்ற நீல வண்ண மயமான காட்சி; கடலின் அலைபொங்கும் நீர்ப்பரப்பினின்றும், பொங்கிவரும் கருநீலக் கடல் நீர், கரையைக்கடக்கும் தோற்றம்; நீல நிறக் கடல் நீரிலும் மஞ்சள் நிறம் கலந்த கடற்கரை மணலிலும் பிரதிபலிக்கும் கதிரவனின் ஒளிப் பாங்கு; அடர்ந்து கிடக்கும் தென்னஞ்சோலை; விரிந்த பசுமையான சமவெளிகள்; நாற்கோணத்தில் சற்றே சாய்வாக அமைந்துள்ள மேல்தளங்களின் மகுடமாகக் காட்சிதரும் கோபுரங்கள்; உயர்ந்து நிற்கும் கிறித்துவ திருக்கோயில்கள் தேவாலயங்கள்; மிளகுக்கொடிகளால் பற்றிக்கொள்ளப்பட்டு நிற்கும் உயர்ந்த மரங்கள்; தார் வேய்ந்த அழகான சாலைகள்: மெதுவாகச் செல்லும் இயல்புடைய ஊர்திகள் ; பசுமையான தாவரங்களின் இரு மருங்கிலும் வளைந்து செல்லும் நீரோடைகள் ; இனிமையான குரல் எழுப்பும் வகையிலிருந்து, வீறிட்டு அலறும் வகை வரையிலான சிறகடித்துப் பறந்து செல்லும் பலதரப்பட்ட வண்ண வண்ணப் பறவை இனங்கள், இவையனைத்தும் ஒருங்கிணைந்த இயற்கை எழில், காண்போரின் கண்களுக்கு விருந்தாக, பிரமிப்பூட்டும் வகையில் உள்ள ஒரு அடுக்கு மணிமாலையைக் காணும் அழகில் மொத்த உருவாக, இம்மாவட்டம் தோற்றமளிக்கிறதென்றால் மிகையில்லை. ஆக, இந்நிலப்பகுதியை மேதகு கன்னிமேரா, "ஒரு வனதேவதையின் புனித நிலம்" என அழைத்தது சாலப்பொருந்தும்[1].

தோற்றம் மற்றும் இம்மாவட்டத்தின் பெயர்

"கேப் காமரின்" என அழைக்கப் பெறும் கன்னியாகுமரி நகரியத்தினைக் கருத்திற் கொண்டு இம்மாவட்டம் "கன்னியாகுமரி" என அழைக்கப்படுகிறது. இம்மாவட்டம் இந்தியத் துணைக் கண்டத்தின் தென் முனையில் அமைந்துள்ளது. அதனைத் தொடர்ந்து இரு குன்றுகளே உள்ளன; ஒன்றில் சுவாமி விவேகானந்தரின் நினைவுச் சின்னம் அமைந்துள்ளது. நகரியம் இத்திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள தேவி கன்னியாகுமரியின் பெயரில் உருவாக்கப் பட்டுள்ளது.

இருப்பிடம், பொது எல்லைகள், மொத்தப்பரப்பு மற்றும் மக்கட்தொகை

தமிழ்நாட்டின் தென் கோடியில் அமைந்துள்ள மாவட்டம் கன்னியாகுமரியாகும். 77°05'-77°36' கிழக்கு நேர்கோட்டிலும், 8°03'-8°35' வடக்கு சுற்றுக் கோட்டிலும் இம்மாவட்டம் அமைந்துள்ளது.

வடக்கிலும் கிழக்கிலும் இம்மாவட்டம், திருநெல்வேலி மாவட்டத்தால் சூழப்பட்டுள்ளது. தென் கிழக்கு எல்லை, மன்னார் வளைகுடாவாகும். தெற்கிலும் தென்மேற்கிலும் முறையே, இந்து மகா சமுத்திரம் மற்றும் அரபிக்கடல் ஆகியவற்றால், இம்மாவட்டம் சூழப்பட்டுள்ளது. கேரள மாநிலம், இம்மாவட்டத்தின் மேற்கு, மற்றும் வடமேற்கு எல்லையாக அமைந்துள்ளது.

தமிழ்நாட்டின் பரப்பு 1,30,058 சதுர கிலோ மீட்டர் ஆகும். தமிழ் நாட்டின் மொத்தப்பரப்பில் 1.29 விழுக்காடு அதாவது 1684 சதுர கிலோ மீட்டர் பரப்பில் கன்னியாகுமரி மாவட்டம் உள்ளது. 1981 ஆம் ஆண்டு மக்கட் தொகைக் கணக்கெடுப்பின்படி, இம்மாவட்டத்தின் மொத்த மக்கட்தொகை, 14,23,399. அவற்றில் 7,16,958 (50.4 விழுக்காடு) ஆண்கள் மற்றும் 7,06,441 (49.6 விழுக்காடு) பெண்கள் ஆவர்.

ஒரு நிர்வாக அலகாக மாவட்டம் தோன்றிய வரலாறு மற்றும் அதனின் உள்ளடங்கிய பகுதிகளில் அவ்வப்போது ஏற்பட்ட மாற்றங்கள்

தற்போதைய கன்னியாகுமரி மாவட்டமானது, துவக்கத்தில், முந்தைய திருவாங்கூர் மாநிலத்தின் (சமஸ்தானம் என்பர்) ஒரு பகுதியாக இருந்தது. அம்மாநிலத்தை கி.பி.1758 முதல் 1798 முடிய மன்னர் ராமவர்மா அரசோச்சிய காலத்தில், வடக்கி முக்கம், பதிஞ்சர முக்கம் மற்றும் தெக்கி முக்கம் ஆகிய மூன்று வருவாய்க் கோட்டங்கள் அம்மாநிலத்தில் இருந்தன. தற்போதைய கன்னியாகுமரி மாவட்டம், தெக்கி முக்கம் கோட்டத்தின் ஒரு பகுதியாக இருந்தது.

கி.பி. 1835 ஆம் ஆண்டு மாநிலம் வடக்கு மற்றும் தெற்குக் கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. அப்போது இந்நிலப்பரப்பு தெற்குக் கோட்டத்தில் இணைந்தது. அக்கோட்டம் கோட்டயம் திவான் பேஷ்காரின் பொறுப்பில் விடப்பட்டது. பின்னர், திருவனந்தபுரம் கோட்டம் உருவாக்கப்பட்டு, அதனில் கன்னியாகுமரி சரகம் இணைக்கப்பட்டது. 1949-ம் ஆண்டு,சூலை மாதம், திருவாங்கூர் மற்றும் கொச்சி ஐக்கிய மாநிலம் துவக்கப்பெற்ற பொழுது, தற்போதைய கன்னியாகுமரி மாவட்டத்திலடங்கிய நிலப்பரப்பு, கேரள மாநிலத்திலுள்ள திருவனந்தபுரம் மாவட்டத்தின் ஒரு பகுதியாகத் தொடர்ந்து இருந்து வந்தது.

முந்தைய திருவனந்தபுரம் மாவட்டத்தின், தெற்குக் கோட்டத்திலடங்கிய அகஸ்தீஸ்வரம்,தோவாளை, கல்குளம் மற்றும் விளவங்கோடு வட்டங்களைச் சார்ந்த மக்கள் பெரும்பாலும் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டிருந்தனர். எனவே தாங்கள் வாழும் பகுதியை சென்னை மாநிலத்துடன் இணைக்க, அவர்கள் கோரிக்கை எழுப்பினார்கள், மாநில மறுசீரமைப்புக் குழுவும் அவர்களது கோரிக்கையினைப்

சுசீந்திரம் கோயிலின் கோபுரக் காட்சி மற்றும் தெப்பக்குளம்

பரிந்துரை செய்தது,[2] அதனைத் தொடர்ந்து, 1956 ஆம் ஆண்டில், மாநிலங்கள் மறுசீரமைப்புச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு, 1-11-1956-ந் தேதி, அகஸ்தீஸ்வரம், தோவாளை, கல்குளம் மற்றும் விளவங்கோடு ஆகிய வட்டங்களடங்கிய தமிழ்நாடு மாநிலத்துடன் இணைக்கப்பட்ட கன்னியாகுமரி மாவட்டம் உதயமானது.

துணைக் கோட்டங்கள் மற்றும் வட்டங்கள்

இம்மாவட்டம், பத்மநாபபுரம் மற்றும் நாகர்கோயில் ஆகிய இரு வருவாய்க் கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பத்மநாபபுரம் கோட்டத்தில், விளவங்கோடு மற்றும் கல்குளம் வட்டங்களும், நாகர்கோயில் கோட்டத்தில் அகஸ்தீஸ்வரம் மற்றும் தோவாளை ஆகிய வட்டங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

இடவியல்பு விளக்க விவரம்

முதன்மை வாய்ந்த, ஆனால் பல்வேறு வகைப்பட்ட இயற்கை வளங்கள், இம்மாவட்டத்தின் சிறப்பு அம்சமாகும். ஆழ்ந்த உணர்ச்சியைத் தூண்டத்தக்க வகையிலான இயற்கைத் தல அமைப்பு, அலையலையான சுற்றுச்சூழல்கள் நிறைந்த கம்பீரமான குன்றுகள், கண்கவர் கடற்கரைகளால் சூழப்பட்ட சமவெளிகள், அடுத்தடுத்து எழுப்பப்பட்டுள்ள கிறித்தவ திருக்கோயில்கள் மற்றும் மாட மாளிகைகள், ஆகியவற்றால் இணைத்துப் பின்னப்பட்ட புனித பூமியாகக் கன்னியாகுமரி மாவட்டம் திகழ்கிறதென ஓராயிரம் முறை கூறலாம், உழைக்கும் வர்க்கத்தின் விளக்கச் சான்றாக உள்ள வளமான தோட்டங்களும், வயல்களும் மாவட்டத்தின் இயற்கையழகும் காண்போரை பரவசமூட்டுவது கண்கூடு.

நிலப்பரப்பின் இயற்கை வடிவமைப்பு மற்றும் உயர்நிலை

மாவட்டத்தின் அனைத்துப் புறங்களும் பல திருப்பங்களையும், வளைவுகளையும் கொண்டுள்ளன. எனினும், மாவட்டத்தின் வடிவம், சாய்ந்த சதுரத்தை ஒத்ததாக உளது, கன்னியாகுமரியின் நிலக் கூம்பு, மாவட்டத்தின் தென்மேற்கு முனையாகும். மாவட்டத்தின் தென்கோடி எல்லையான கடற்கரை, மேற்கூறிய முனையிலிருந்து வட மேற்கில் செல்கிறது. இவ்வழியாகச் செல்லும் அதன் திக்கு காடியாப்பட்டிணத் திற்கப்பால் மிகுதியாக அங்கம் வகிக்கிறது. மாவட்டத்தின் இவ் வெல்லை, நிரோதிதூராவிற்கப்பால் இரண்டு கிலோ மீட்டர் தொலைவு வரை நீண்டு செல்கிறது. இவ்விடத்திலிருந்து, மாவட்டத்தின் தெற்கு எல்லை, வடகிழக்கு திசையில் சென்று, வாளாச்சித்தோடு என்ற இடத்தை ஒட்டியுள்ள ஒதுக்குக்காட்டை அடைகிறது. மறுபடியும், மாவட்டத்தின் வடக்கு எல்லை, தென்கிழக்கு திசையில் மகேந்திரகிரிக் குன்றுக்கு அப்பால் சாய்ந்து செல்கிறது. இவ்விடத்திலிருந்து, கிழக்கு எல்லை, தென் திசையில் சென்று, ஆல்விளைக் குடியிருப்புக்கு வடக்கிலுள்ள மன்னார் வளைகுடாவின் கரையைத்தொடுகிறது. பின்னர், இறுதியாக கன்னியாகுமரியை நோக்கிச் செல்கிறது.

மாவட்ட நிலப்பரப்பின் இயற்கை வடிவமைப்பு, மூன்று பிரிவுகளாக உள்ளது அவையாவன:

1) மாவட்டத்தின் வடகிழக்குப் பரப்பான மலைகள் நிறைந்த நிலப்பகுதி

இது விளவங்கோடு மற்றும் கல்குளம் வட்டங்களின் வட பகுதிகள் அடங்கியதாகும். இந்நிலப்பகுதியில் அரிய குன்றுகளின் உச்சிகள் காண்போர் மனதைக் கவரும். இப்பகுதி, வடக்கிலுள்ள கம்பீரமான, அகன்ற மலைத் தொடரின் நீட்சியாகும்.

2) மாவட்டத்தின் தென்கிழக்கு,தெற்கு மற்றும் தென்மேற்கு பகுதிகளிலுள்ள வளமான கடற்கரை நிலப்பரப்பு

ஆங்காங்கே உயர்ந்த செங்குத்தான மலைப்பகுதிகள் தென்பட்டாலும், மணல் நிறைந்த தாழ்வான இந்நிலப்பரப்பின் ஓரங்களில் தென்னை மரங்கள் பயிரிடப்பட்டுள்ளமை இயற்கை அழகிற்கோர் எடுத்துக்காட்டு.

3) அலையலையான ஓரங்களையுடைய பள்ளத்தாக்குகள் நிறைந்த நிலப்பரப்பு மற்றும் மலைகள் நிறைந்த நிலப்பகுதிக்கும், கடற்கரைக்கும் இடைப்பட்ட சமவெளிப் பிரதேசம்

இந்நிலப்பரப்பில் ஒரு சில சிற்றாறுகளையும் காணலாம். பொதுவாக, மாவட்டத்தின் மேற்குப் பகுதியில் சாய்வான நிலப்பரப்பு உள்ளது.

குன்றுகள், அவைசார்ந்த மலைகளின் வரையறை, பெயர்பெற்ற முனைகள், அவற்றின் உயரம், சுற்றுச்சூழல், தோட்டப்பிரதேசம் போன்றவை

மாவட்டத்தின் வடக்கு மலைத்தொடர் பரப்பில், முத்துக் குழிவயல் என்ற உடல் நலத்திற்குகந்த இடம் உள்ளது. இவ்விடம் பீர்மேட்டிற்கு 1341 மீட்டர் தெற்கே அமைந்துள்ளது. இங்குதான், இப்பிரதேசம் குறிப்பிடும்படியான அளவு அகலமாகத் தென்படுகிறது. நாகமையா கூறுவதாவது[3]:

"இப்பிரதேசத்தின் எஞ்சிய பகுதியைப்பற்றிக் கூறுவோமானால், பெரும்பாலான பிரதேசம் இருபுறமும் சாய்வாக உள்ள வெறும் முகடாகத் தோன்றுகிறது. இது, வடக்கு, வடமேற்கு, தெற்கு மற்றும் தென்கிழக்கு திசையில், 4000 அடி உயரத்தில், தனிமைப் படுத்தப்பட்ட முனைகளாகக் காட்சி தருகிறது".

பெரும்பாலும் மேற்குத் தொடர்ச்சி மலையைச் சார்ந்த இணையொத்த முகடுகளாகவும் பள்ளத்தாக்குகளாகவும் உள்ளதாகத் தெரிவிக்கும் நாகமையா கூற்றை ஏற்பது சற்றுக் கடினமாக இருக்கிறது. நாகமையா மேற்குத் தொடர்ச்சி மலையைப்பற்றி கீழ்க்கண்டவாறு கூறுகிறார்[4] :

"இந்தியத் துணைக்கண்டத்திற்கு, இமயமலை எப்படியோ, அதே போன்றுதான், திருவாங்கூருக்கு மேற்குத் தொடர்ச்சி மலையும் அமைந்துள்ளது"

அகன்ற செங்குத்தான் முகடுகளும், கூம்பு வடிவமான உச்சிகளும் மேற்குத் தொடர்ச்சி மலையினது. சாகியாத்ரி வரிசையின்

வால் பகுதியாக இருந்த போதிலும், அது ஆரல்வாய்மொழிக் கணவாயுடன் முடிகிறது. இதன் தெற்கே 808 மீட்டர் தொலைவில், அருமையான பாறைக்குவியல் ஒன்றுள்ளது. அதுதான் முழுமையாகப் பிரிக்கப்பட்ட காட்டாடிமலையாகும். இங்கிருந்து ஒரு சிதைந்த பாறை, 370 மீட்டர் தென் திசையில் சென்று, மருத்துவ மலையாக உருப்பெற்றுள்ளது. இம்மலை கன்னியாகுமரியின் வட மேற்கே ஏழு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. கல்குளம் வட்டத்திலுள்ள வெளிமலை மற்றும் அகஸ்தீஸ்வரம் வட்டத்திலுள்ள மருத்துவமலை போன்றவை, தனித்தனியாகவுள்ள முக்கியக்குன்றுகளாகும். மற்றொரு குறிப்பிடத்தகுந்த குன்று, மாவட்டத்தின் வடமேற்குப் பகுதியிலுள்ள கல்மலையாகும் (900 மீட்டர்) மொளிவாடி (700 மீட்டர்) என்பது கல்குளம் வட்டத்திலுள்ள ஒதுக்கப்பட்ட காட்டின் பரப்பெல்லையிலுள்ளது. மருதத்தூர், ஜி.டி.எஸ் (956 மீட்டர்), தோவாளை மற்றும் கல்குளம் வட்டங்களின் எல்லையில், அதாவது, வெளிமலை காப்புக் காடுகளின் தெற்கே அமைந்துள்ளது.

மாவட்டத்திலுள்ள மலைப்பிரதேசத்தின் தட்பவெட்பநிலை மற்றும் உயரம் ஆகியவற்றின் வேற்றுமை, இப்பகுதியின் தாவர வளர்ச்சி மற்றும் வாழ்க்கையினைப் பெரிதும் வேறுபடுத்துவது இயற்கையே. அது, பலதரப்பட்ட நிலங்களது தனிச்சிறப்பின் பயனேயாகும். இம்மாவட்டத்தின் மிக உயரமான குன்று மகேந்திர கிரியாகும் (1654 மீட்டர்). இது, தோவாளை வட்டத்தில், கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களின் எல்லையிலுள்ளது. இம்மலையுச்சியிலிருந்து குதித்து, அனுமான் வானவெளியில் சென்று இலங்கையை அடைந்ததாக மரபு.

ஆரல்வாய்மொழி இம்மாவட்டத்திலுள்ள மிக முக்கியத்துவம் வாய்ந்த கணவாய் ஆகும். இதனூடேதான் திருநெல்வேலியிலிருந்து நாகர்கோயில் செல்லும் பெருவழி மாவட்டத்தினுள் நுழைகிறது.

மேட்டு நிலங்களும் சமநிலங்களும்

மாவட்டத்தின் வடக்கு மற்றும் கிழக்குப்பகுதி மலைப் பாங்கான பிரதேசம், பெரிய அளவில் மேட்டுநிலங்களைக் கொண்டதாகும். இவை, உயரமான குன்றுகளின் உச்சியில் உள்ளன. குன்றுகளின் சாய்வான பகுதிகள் பொதுவாக செங்குத்தாக இருந்தபோதிலும், அவற்றில் சில பரவலாக உள்ளன. இவ்விடங்களில் கண்ணைக் கவரும் பல தோட்டங்கள் குறிப்பிடப்படத்தகுந்தவை.

மாவட்டத்தின் மையப் பகுதி, குறிப்பாக அகஸ்தீஸ்வரம் வட்டத்தின் பெரும்பகுதி, வேளாண்மைக்கேற்ற சம நிலங்களாகும். உண்மையில், அகஸ்தீஸ்வரம் மற்றும் தோவாளை வட்டங்களின் மரபார்ந்த பெயர், நாஞ்சில் நாடு என்பதாகும். நாஞ்சில் என்ற சொற்றொடர் உழவைக் குறிக்கும்.

கடற்கரை

இம்மாவட்டம் 68 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரையைக்

கொண்டதாகும். கடற்கரையின் பெரும்பகுதி சீராக அமைந்துள்ளது. ஆனால். கன்னியாகுமரி, முட்டம் மற்றும் இறையாந்துரை ஆகிய இடங்களில் கடலை நோக்கி புடைப்பு உள்ளது. ஒரு சில ஏற்றுமதி-இறக்குமதி செய்யும் இடங்களும் (சிறிய துறைமுகங்கள்) குறிப்பிடத் தக்கவை.

தமிழ்நாட்டின் மேற்குக் கடற்கரையிலுள்ள ஒரே இயற்கைத் துறைமுகம், குளச்சல் துறைமுகமாகும். இம்மாவட்டத்தின் மற்றொரு சிறிய துறைமுகம் கன்னியாகுமரியில் உள்ளது. அது சுற்றுலாத்தலமாக விளங்குகிறது. கன்னியாகுமரியின் மேற்கே மணக்குடி ஏரியின் முனையில், மணக்குடி என்ற கிராமத்தில் ஒரு சிறிய துறைமுகம் உள்ளது. முதலைக்குன்றின் வடகிழக்கு திசையில் ஐந்து கிலோ மீட்டர் தொலைவில், அதாவது மாவட்டத்தின் தென் எல்லையின் மையத்தில் கடியாப்பட்டினம் உள்ளது.

ஆற்றுப்பாசன முறையும் ஏனைய நீர்ப்பாசன வழிமுறைகளும்

கன்னியாகுமரி மாவட்டம் குறித்து நாம் விவாதிக்கும்போது மட்டும், முந்தைய திருவாங்கூர் மாவட்டத்தின் ஆற்றுப்பாசன முறையின் தனிச்சிறப்பு பற்றி நாகமையா கூறியதை சற்றே ஒதுக்கிவிட வேண்டிய நிலையிலுள்ளோம்[5]. ஆனால், பரளியாறு, கோதையாறு மற்றும் பழையாறு ஆகியவை ஏனைய பல சிற்றாறுகளுடன் இணைந்து, மாவட்டத்தை செழிப்படையச்செய்வது நமக்கு மன நிறைவளிக்கிறது. இப்பின்னலமைப்பில், மாவட்டத்திலுள்ள குளங்களும், ஏரிகளும் சேர்ந்தவையே. முறையான இவ்வமைப்பினால், கடலில் சேரும் தண்ணீர் இயன்ற அளவு கட்டுப்படுத்தப்படுகிறது.

தலைமையான ஆறுகளும், கிளையாறுகளும்

பழையாறு இந்தியாவின் தென் கோடியிலுள்ளது. தமிழில் "பழையாறு" என்ற சொற்றொடர் "மிகப் பழைமையான ஆறு" என பொருள்தரும்.[6] இந்திரன், சுசீந்திரத்தில் கோயில் எழுப்பியபொழுது, ஐராவதம் என்ற அவரது யானை, அவரது ஆணையை ஏற்று, அக்கோயிலுக்காகவே, அதனுடைய தந்தத்தின் உதவி கொண்டு ஒரு ஆற்றினை உருவாக்கியதாக மரபு. எனவே, இந்த ஆறு தந்தநதி என அழைக்கப்படுகிறது. இதற்கு வடசேரி ஆறு என்ற பெயரும் உண்டு.

சாயாத்ரி என்ற இரண்டாம்தர பரப்பிலிருந்து பல சிற்றாறுகள் தோன்றி, அவை ஒவ்வொன்றாக பழையாறுடன் இணைகின்றன. அவற்றின் நீர், மகேந்திரகிரிமலை மற்றும் அருகிலுள்ள தோட்டங்கள் ஆகியவற்றில் வடிந்து, தோவாளை மற்றும் அகஸ்தீஸ்வரம் ஆகிய வட்டங்கள் வழியாகப் பாய்ந்து, இவ்வட்டங்களிலுள்ள நிலங்களுக்குப் பயனளிப்பது இவ்வட்ட மக்களுக்கோர் அரும் பரிசாகும். இவ்வாறு, மாவட்டத்தின் தெற்கு மற்றும் தென்கிழக்குத் திசையில் 37 கிலோ மீட்டர் தொலைவில் ஓடி, மணக்குடி கழிமுகத்துடன் இணைகிறது. பூதப்பாண்டி, தாழக்குடி, வடசேரி, நாகர்கோவில் மற்றும் சசீந்திரம் ஆகிய முக்கிய இடங்களின் வழியாக பழையாறு ஓடுகிறது.

முத்துக்குழிவயல் மேட்டு நிலத்தின் தெற்குப் பகுதியிலுள்ள, மூலாச்சியில் கோதையாறு உற்பத்தியாகிறது. முதலில் தென்மேற்கு திசையில், பயிரிடப்படாத நிலப்பரப்பில் ஓடுகிறது. மொட்டவான் பொத்தாவிலிருந்து ஒரு சிற்றாறும் தச்சமலைக் குன்றிலிருந்து, ஒரு சிற்றாறும் தோன்றி, அவையிரண்டும் கோதையாற்றுடன் பின்னர் இணைகின்றன. குன்றுகளின் இறுதியிலும், ஒரு சில கிலோமீட்டர் தொலைவு தவிர, பொதுவாக, நில அடுக்குகள், செங்குத்தான கூரைகள் கூர்மையான திருப்பங்கள் அடுத்தடுத்துள்ள நீர் வீழ்ச்சிகள் இவற்றைக் கோதையாறு சீராகக் கடந்து செல்கிறது. திருப்பரப்பிலுள்ள இவ்வாற்றின் நீர் வீழ்ச்சி, 13 மீட்டர் உயரமுள்ளது. இவ்விடத்தில் தொன்மையான ஒரு சிவன் கோயிலைக் காணலாம்.

கல்குளம் மற்றும் விளவங்கோடு வட்டங்கள் வழியாக 32 கிலோ மீட்டர் ஓடி, கோதையாறு பரளியாற்றுடன் இணைந்து, இறுதியில் மேற்கு தாமிரபரணியாக உருவெடுக்கிறது.

பரளியாறு, மகேந்திரகிரியின் வடக்கிலுள்ள மலைகளில் தோன்றி, பொதுவாக தெற்கு, தென்மேற்கு திசையில் கல்குளம் மற்றும் விளவங்கோடு வட்டங்கள் வழியாகப் பாய்ந்து செல்கிறது.[7] பொன்மனைக்கு அருகில், இவ்வாற்றின் குறுக்கே பெருஞ்சாணி அணை கட்டப்பட்டுள்ளது. புத்தன் அணைக்கு முன்னர், இடக்கரை வாய்க்கால் வழியாக, பேச்சிப்பாறை நீர்த்தேக்கத்திலிருந்து இவ்வாறு நீரினைப் பெறுகிறது.

பாண்டிய மன்னர்கள் காலத்திலேயே, நாஞ்சில் நாட்டில் பரளியாற்றுத் தண்ணீர் வேளாண் நிலங்களின் பாசனத்திற்குப் பயன்படுத்தப்பட்டு வந்தது. ஏறத்தாழ ஓராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், கல்குளம் வட்டத்தில் பரளியாற்றின் குறுக்கே நிறுவப்பட்ட பாண்டியன் அணை, பாண்டியன் கால், மற்றும் அதனைச் சார்ந்த நீர்ப்பாசனக் கட்டுமானப்பணிகள் ஆகியவை பண்டைக்கால மக்களின் பொறியியல் ஆற்றலுக்குச் சான்றாக விளங்குகின்றன.[8] பாண்டியன் அணையிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவிலுள்ள தாழ்வான பகுதியில், கி.பி.1750 இல் புத்தன் அணை மற்றும் பத்மநாபபுரம் புத்தன் வாய்க்கால் ஆகியவை கட்டப்பட்டன.

குழித்துரை ஆறு என மற்றொரு பெயருடன் விளங்கும் மேற்கு தாமிரபரணி, திருவட்டாறுக்கு அருகில் பரளியாறு மற்றும் கோதையாறு ஆகியவற்றின் இணைப்பால் உருவாகிறது. திருவட்டாறு, குழித்துறை மற்றும் முஞ்சிரை ஆகியவை அதன் கரையிலுள்ள முகிய இடங்களாகும்.

விளவங்கோடு வட்டத்திலுள்ள முல்லையாறு என்ற சிற்றாறு, களியல், எடக்கோடு, மற்றும் பாகோடு ஆகிய கிராமங்கள் வழியாகப் பாய்ந்து செல்கிறது. அது தீக்குருச்சிக்கு அருகில் மேற்கு தாமிரபரணியுடன் இணைகிறது.

பதினாறு கிலோ மீட்டர் நீளமுள்ள வள்ளியாறு ஒரு சிறிய ஆறாகும். அது வெளிமலைக் குன்றுகளில் தோன்றி, கூத்தாநல்லூர்,

கல்குளம், இரணியல், தாலக்குளம், மணவாளக்குறிச்சி மற்றும் கடியாப்பட்டணம் வழியாகச் சென்று அரபிக் கடலில் கூடுகிறது. மாம்பழத்துறைக்குன்றுகளிலிருந்து வரக்கூடிய மற்றொரு சிறிய ஆறு இடையே இதனுடன் இணைகிறது.

கேரள மாநிலம், திருவனந்தபுரம் மாவட்டம், நெய்யாற்றங்கரை வட்டத்திலுள்ள நெய்யாறு மற்றும் கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், குளச்சல் ஆகிய கிராமங்களை இணைக்கு முகத்தான், 24 கிலோ மீட்டர் நீளமுள்ள, ஒரு செயற்கைக் கால்வாய் வெட்டப்பட்டுள்ளது. இக்கால்வாயின் 16 கிலோ மீட்டர் நீளமுள்ள பகுதி கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ளது.

ஏரிகளும், குளங்களும்

பரளியாறு, கடலில் கலக்குமுன் மணக்குடி ஏரியில் மணக்குடிக் காயல் என்ற கடற்கழியாக உருவெடுக்கிறது. இது தாமரைக்குளம் என்றும் அழைக்கப்படுகிறது.

விளவங்கோடு வட்டத்திலுள்ள குழித்துறை ஆற்றின் கழிமுகத்தினைத் தேங்காப்பட்டினம் ஏரி என அழைக்கின்றனர்.

பேச்சிப்பாறையில் கோதையாறு அணை கட்டப்பட்டு, ஒரு செயற்கையான, புதுமை குன்றாத நீர்தேங்கியுள்ள ஏரி உருவாக்கப் பட்டுள்ளது. இதன் நீர்ப்பிடிப்புப் பரப்பு 13 சதுர கிலோ மீட்டராகும். இந்நீர் பாசனத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது.

பெருஞ்சாணி அணையினால் உருவாக்கப்பட்டுள்ள மற்றொரு செயற்கை ஏரி ஒன்பது சதுர கிலோ மீட்டர் நீர்ப்பிடிப்புப் பரப்பினைக் கொண்டதாகும். முக்கூடல் பள்ளத்தாக்கின் குறுக்கே அமைந்துள்ள மண் அணை முக்கூடல் ஏரி என்ற நீர்த்தேக்கத்தை உருவாக்கி யுள்ளது. இதிலிருந்துதான் நாகர்கோயில் நகரத்திற்குக் குடிநீர் வழங்கப்படுகிறது. இம்மாவட்டத்தில், மழை மற்றும் கால்வாய் மூலம் நீரைப்பெறும் 2593 சேமிப்பு குளங்கள் உள்ளன. கோதையாறு அமைப்பு முறை மட்டும் 933 குளங்களைக் கொண்டதாகும்.

நிலத்தடிநீர் துணைவளம்

பாசன வசதிக்காக இம்மாவட்டத்தில், 125 குழாய்க் கிணறுகள் உள்ளன. மேலும், மாவட்டத்திலுள்ள 996 கிணறுகள், பாசன வசதியை இணைந்து நிறைவாக்குகின்றன. 15026 கிணறுகள், மக்களின் குடிநீர் மற்றும் குடியிருப்புத் தேவைகளை நிறைவு செய்கின்றன.[9]

மண்ணியல் ஆராய்ச்சிக் கூறுகள்

பல தரப்பட்ட குன்றுகளின், மண்ணியல் ஆராய்ச்சிக் கூறுகளின் நிலை, அக்குன்றுகளின் இழைநயம் மற்றும், நிலப்பகுதியில் கூட்டமை வுக்குரிய தன்மை, ஆகியவற்றிற்கொப்ப மாறுபடும் இயல்புடையது. வெவ்வேறுவகைப்பட்ட குன்றுகளின் தற்போதைய நிலத்தடி நீரின் தன்மை கீழே விவரிக்கப்படுகிறது.

அடிநில நீர் மட்டம், இயங்குகிற முறையினை ஆராய்வதன் பொருட்டு, 25 ஆழமற்ற கிணறுகள் தோற்றுவிக்கப்பட்டு, நீரின் அளவு மாதந்தோறும் கூர் நோக்கப்படுகிறது. இப்புள்ளிவிவரங்கள், 1973ஆம் ஆண்டு முதல் சேகரிக்கப்பட்டுள்ளன. இக்கிணறுகளில் பதிவு செய்யப்பட்ட நீர் அளவின் ஏற்றத்தாழ்வு, மழைநீர், பாசனத்திற்குப் பயன்படுத்தப்பட்ட நீர் போன்ற உள்ளடங்கிய பகுதிகளின் மறு ஊற்றினை கோடிட்டுக் காட்டுகிறது. முறைகேடான பருவ காலத்தில், நிலவும் சூழ்நிலையின் முக்கியத்துவத்தை உணர இது உதவுகிறது. பல்வேறுவகையான குன்றுகளில் நிலவும் மண்ணியல் ஆராய்ச்சிக் கூறுகளாவன: மூன்றாவது வரிசையிலுள்ள மண்வகை மற்றும் மிகச் சிறிது காலத்திற்கு முன் உருவான வண்டல் ஆகியவை சிறிய பரப்பிலேயே உள்ளன. எனவே, நிலத்தடிநீரை அதிக அளவில் மேம்படுத்த, அவை ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளப் படவில்லை. எனினும், குடியிருப்புப் பயன்பாட்டினைக் கருத்திற் கொண்டு, அதனில் சிறிதளவினை மேம்படுத்த முற்படலாம்.

சார்னோகைட் பாறை உருவாகியுள்ள பகுதியில் மண்ணியல் ஆராய்ச்சிக் கூறுகளில் அடங்கியவற்றின் நன்மை

தோவாளை வட்டாரத்தின் தென்பகுதி, மற்றும் அகஸ்தீஸ்வரம், ராஜக்கமங்கலம் வட்டாரங்கள் ஆகியவற்றில், "சார்னோகைட் பாறை" உருவாகியுள்ளது. இந்தச் சரகத்தில் நிலத்தடி நீர் மேற்பரப்பிலும் இணைந்த பகுதியிலும் மட்டுமே உட்படுத்தப்பட்டுள்ளதை அறியலாம். சார்னோகைட் பாறையினது மேற்பரப்பின் கனம், 10 மீட்டர் ஆழம் வரை காணப்படுகிறது. மழைக்காலத்தில் நீரின் ஆழம் 2.6 மீட்டர் முதல் 26.2 மீட்டர் வரையிலும், வெயிற் காலத்தில் 12 மீட்டர் முதல் 29 மீட்டர் வரையிலும் தென்படுகிறது. (அடி நில நீர் மட்டத்தின் அளவில் மிகுந்த வேறுபாடு காணப்படுவதற்கான காரணம் இச்சரகத்தின் சுழற்சி முறையிலான இயற்கைத் தல அமைப்பேயாகும்). இயல்பில், இச்சரகத்தில் மிகுதியான குறுக்களவுள்ள ஆழ் கிணறுகள்தான் நடைமுறைக்குகந்தவையாகும். அவை, 1 முதல் 1.5 ஹெக்டர் வரை பரப்பளவுள்ள நிலத்தின் பாசனத்திற்குத் தேவையான ஒரு மணித்துளிக்கு 200 லிட்டர் நீரை வழங்க வல்லவை.

படிகம், கனிமம், அப்பிரகம் முதலியவை கலந்த அடுக்குப் பாறை அமைந்துள்ள பகுதியில் நிலத்தடி நீரின் தன்மை

தோவாளை, கிள்ளியூர், மேல்புரம் மற்றும் முஞ்சிரை வட்டாரங்களின் வடபகுதியிலும், குருந்தங்கோடு, திருவட்டார், தக்கலை ஆகிய வட்டாரங்களிலும் படிகம், கனிமம், அப்பிரகம் முதலியவை கலந்த அடுக்குப்பாறைகள் அமைந்துள்ளன. இம்மாதிரியான அடுக்குப்பாறைப் பகுதிகளில், நிலத்தடி நீர் மேற்பரப்பிலும், இணைந்த மற்றும் வெடிப்பு கண்ட பகுதிகளிலும் தென்படுவதைக் காணலாம். மேற்பரப்பு மற்றும் இணைந்த பகுதிகள் 10 மீட்டர் முதல் 21 மீட்டர் ஆழம் வரை உள்ளன. இயற்கையமைப்பிற்கேற்ப இச்சரகத்தில், மழை காலத்திலான நீர் அளவு இரண்டு மீட்டர் முதல் 27.75 மீட்டர் வரை

உள்ளது. வெயிற் காலத்தில், மேல் நில அளவிலிருந்து, நீரின் அளவு ஐந்து மீட்டர் முதல் 28 மீட்டர் ஆழம் வரை செல்கிறது. பொதுவாக, மிகுதியான குறுக்களவுள்ள ஆழ்கிணறுகள் இந்த வட்டாரங்களில் நடைமுறைக்குகந்தவையாக உள்ளன. அவை 29 மீட்டர் ஆழம்வரை, வெட்டப்படுகின்றன. ஒவ்வொரு கிணறும், 1 முதல் 1.5 எக்டர் வரை பரப்பளவுள்ள நிலத்தின் பாசனத்திற்குத் தேவையான ஒரு மணித்துளிக்கு 200 முதல் 250 லிட்டர் நீரை வழங்கவல்லது.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள நிலத்தடி நீரின் தன்மை

இராஜாக்கமங்கலத்தின் மேற்குப்பகுதி மற்றும் மேல்புரம், முஞ்சிரை கிள்ளியூர், திருவட்டார், தக்கலை, குருந்தக்கோடு ஆகிய வட்டாரங் களில் நீரின் திறம் பொதுவாக, ஏற்கத்தக்க வரம்பிற்குட்பட்டேயுள்ளது. (மின் ஆற்றலுக்குரிய இகைப்புத் திறனின் மதிப்பு 1000 மைக்ரமாஸுற்குக் குறைவாகவே உள்ளது). இராஜாக்கமங்கலம் மற்றும் அகஸ்தீஸ்வரம் வட்டாரங்களின் கிழக்குப்பகுதி மற்றும் தோவாளை வட்டாரத்தின் கிழக்குப் பகுதி ஆகியவற்றில் நிலத்தடி நீரின் திறம் குறைவாகவே உள்ளது. (மின் ஆற்றலுக்குரிய இகைப்புத் திறனின் மதிப்பு, 25 நூறுகூறுகளுள்ள 2250 முதல் 3000 வரையிலான மைக்ரமாஸாக உள்ளது). அகஸ்தீஸ்வரம் வட்டாரத்தின் மையப்பகுதியி லிருந்து, தோவாளை வட்டாரத்தின் கிழக்குப்பகுதி வரை, முக்கியமாக வெயிற் காலத்தில், நிலத்தடி நீரின் திறம் வளமற்றதாக இருப்பதை அறியலாம். "கன்கர்" காணப்படுவதாலேயே நீர் வளமற்றதாக உள்ளது. திங்கள்சந்தை, ஆரல்வாய்மொழி, மைலாடி மற்றும் தடிக்காரன் கோணம் பகுதிகளிலுள்ள நிலத்தடி நீரில், சல்பேட்(கந்தகி) மற்றும் நைட்ரேட் (வெடியகி) ஆகியவை அதிகமான அளவு சேர்ந்திருப்பதாக ஆராய்ச்சியில் அறியப்படுகிறது.

நிலத்தடி நீர் ஆற்றல் வளத்தின் மதிப்பீடு

பொதுப்பணித் துறையின் நிலத்தடி நீர்ப்பிரிவினது நுண் சமதளத்தின் மதிப்பாய்வின் அடிப்படையில், நிலத்தடி நீர் ஆற்றல் வளத்தின் மதிப்பீடு நிர்ணயிக்கப்படுகிறது. நிலத்தடி நீர் கருச்சத்தின் நிலையினையொத்து, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள ஒன்பது வட்டாரங்களும், "வெள்ளை" என பாகுபாடு செய்யப்பட்டுள்ளன. இப்பகுதிகளில், நிலத்தடிநீரின் கருச்சத்து அளவு, ஆண்டு மறு ஊற்றில் 65 விழுக்காட்டிற்கும் குறைவாக உள்ளது. எனவே, கன்னியாகுமரி மாவட்டத்தின் அனைத்து வட்டாரங்களிலும், மேலும் சிறிய நீர் பாசனத் திட்டங்களை எவ்வித சிக்கலுமின்றி நடைமுறைப் படுத்தலாம்.

அறிவுரை வழங்கும் பணி

கிணறுகளின் நீரின்மையை ஓரளவு குறைத்திடவும் பல அரசு நிறுவனங்கள், அரசு நிதி உதவியுடன் செயலாற்றும் நிறுவனங்கள், தனியார் வணிகத் துறை நிறுவனங்கள், வேளாண் குடியினர், மற்றும்

பொது மக்கள் ஆகியோருக்கு பெயரளவில் நிர்ணயிக்கும் கட்டணத் தினை ஏற்று, தொழில் நுட்ப அறிவுரை முறையாக வழங்கப்படுகிறது.

புவியியல்

மாவட்டத்தின் தனித்தன்மை மற்றும் சிறப்பு அதனுடைய புவியியலிலும் தெளிவாகத் தென்படுகிறது. தமிழ் இலக்கியம் நிலப் பரப்பினை ஐந்து கூறாக வகைப்படுத்துகிறது. அவை: குறிஞ்சி (மலைச்சார்ந்த நிலங்கள்,) முல்லை (காடுகலிருந்த நிலங்கள்), மருதம், (பயிர் நிலங்கள்), நெய்தல் (கடல் சார்ந்த நிலங்கள்) மற்றும் பாலை (வறட்சி காலத்திய வனம் சார்ந்த நிலங்கள்). தமிழ்நாட்டில் பாலைவனங்களில்லை யெனினும் சில நேரங்களில், குறிஞ்சி மற்றும் முல்லை வகை நிலங்கள், நீர் தட்டுப்பாட்டினால் பாலைவனமாகத் தோன்றுகின்றன. எனவே, நிலங்களின் முக்கியமான வகைகள் நான்கு தான், அவையாவும் கன்னியாகுமரி மாவட்டத்தில் காணப்படுகின்றன. மாவட்டத்தின் வடக்கு மற்றும் மேற்குப் பகுதிகள் ஆகியவை, மலை சார்ந்த நிலங்கள் மற்றும் காடுகள் நிறைந்தவையாகும். மாவட்டத்தின் தென் கிழக்கு மற்றும் மையப் பகுதிகளில் வேளாண் நிலங்கள் உள்ளன. இப்பகுதியே தொன்மையாக நாஞ்சில் நாடு (வேளாண் நிலம்) என அழைக்கப்பட்டு வந்தது. மாவட்டத்தின் தெற்கு எல்லை நீண்ட கடற்கரையாக அமைந்துள்ளது. மாவட்டத்தின் மிக உயர்ந்த மலை, மகேந்திரகிரியாகும் (1654 மீட்டர்). உயரத்தில், அடிக்கடி வேறுபாடு காணப்படுகிறது. ஆனால், சமநிலங்களின் விதிவிலக்கு, அகஸ்தீஸ்வரம் மற்றும் தோவாளை வட்டங்களாகும். மாவட்டம் முழுதும் இங்குமங்கும் குன்றுகளாலான முகடுகளேயுள்ளன. அவற்றில். கணவாய்களும் சமவெளிகளும் குறுக்கிடுகின்றன. தெற்கே மணற்பாங்கான கடற்கரைகளும் கற்பாளங்களும் எல்லையாக அமைந்துள்ளன.

புவியின் தொன்மை

தென்னிந்திய தீபகற்பம், இரு புறமும் குறைபாடுள்ள உயர்நிலம் என பொதுவாக வர்ணிக்கப்படுகிறது. கிழக்குக்கரை மிகத்தொன்மை யான காலத்திலேயே குறைபாடுள்ளதாக இருந்திருக்கிறது. பின்னர், நாளாவட்டத்தில், கடலின் வரம்பு கடப்பு, வளைவின் எதிர் புறத் திருப்பம் ஆகியவற்றின் விளைவாக, பல இடங்களில் வண்டல் படிந்த பரப்பு உருவாகியுள்ளது.

ஆனால், மேற்குக்கரையின் கதையோ வேறுபாடுள்ளதாகும். மரபுவழிக் கதையின் கூற்று என்னவெனில், பரசுராமர் இந்நிலத்தை கடலினின்று மீட்டபொழுது, கன்னியாகுமரி மாவட்டம் உள்ளிட்ட மேற்குக்கரையின் குறைபாடு, பின்னர், அதாவது மையோசின் காலத்தில், 250 இலட்சம் ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்டதென்ப தாகும். அக்குறைபாடுகளுக்குப் பின்னர் கடல் வரம்பு கடந்து சென்றிருக்கக் கூடுமென, கடல் சார்ந்த மற்றும் கடலில் விளைகிற பொருள்களது உருவாக்கத்திலிருந்து அறிய வருகிறது. ஆனால்,

பிற்காலத்தில், நிலத்தின் பெரும் பகுதி உயர்ந்துவிட்ட காரணத்தால், கடல் பின்னோக்கிச் சென்றிருக்கலாமென அனுமானிக்கப்படுகிறது. மிகவும் வலிவுள்ள எழில்மிக்க சிற்றாறுகள், நீர்வீழ்ச்சிகள், உயர் கணவாய்கள், வண்டல் சார்ந்த நிலங்கள், உயர்நிலையில் உருவான கடல் சார்ந்த வண்டல் திட்டுகள், குளச்சல் மற்றும் சுசீந்திரம் ஆகியவற்றின் அருகில் காணப்படும் கடலில் உருவாகும் உயர் செங்குத்துப் பாறைகள் போன்றவை, நிலத்தின் பெரும்பகுதி உயர்ந்து விட்டமைக்கு சாட்சியமளிக்கின்றன. கன்னியாகுமரியின் கடல் மட்டத்திலிருந்து, 18 முதல் 21 மீட்டர் உயரத்தில் உயர்தர சிப்பி சுண்ணாம்புக்கற்கள் உருவாகியிருப்பது, இப்பகுதியில், நிலம் உயர்ந்திட்ட கருத்திற்கு வலிமையளிக்கிறது. இது தொடர்பாக புருஸ் ஃபூட் வெளியிட்ட கீழ்காணும் கருத்தினை நாகமையா குறிப்பிட்டுள்ளார்.[10]

"குமரி முனையிலும், அதன் வடக்குக் கரையின் மேலும் இரு இடங்களிலும், மிக முக்கியத்துவம் வாய்ந்த சிறு பகுதியுள்ள பரப்பு உருவாகியுள்ளது. அவை கடற்சார்ந்த பகுதியினையும், கடற் சங்குக் குவியலையும் மிகுதியாகப் பெற்றுள்ளதை உற்று நோக்குங்கால், அவற்றின் பூர்விகத் தோற்றம் நன்கு புலனாகிறது, மேலும் இத் தீபகற்பத்தின் கடற்கரை வண்டல் படிந்த காலம் முதல் அவ்வப்போது நிலத்தில் உயர்வெழுச்சிக்கு ஆளாகியுள்ளதைக் காண முடிகிறது"

இவ்வாறாக பல கட்டங்களில் நிலப்பகுதி மேம்பாடடைந்த காரணத்தால், தொன்மையான சிற்றாறுகள், மீண்டும் இளமை பெற்றுள்ளன என்றால் மிகையில்லை. மேக்கோட்டில் காணப்படும் இடைவெளி, ஆற்றுக்களவின் விளைவினால் ஏற்பட்ட காற்று இடை வெளியின் எடுத்துக்காட்டாகும். மூன்றாம் தொடரைச் சார்ந்த காலத்தில், கோதையாறு பரணியாற்றினைத் தன்னுடன் இணைத்துக் கொண்டமை, இதற்குக் காரணமென கருதப்படுகிறது[11].

புவியின் தோற்றம்

புவியியல் கூறப்பட்ட முதல் வழியைச் சார்ந்த காலத்தில், பாறைகள் இரண்டு வகைகளில் உருவாகின. அவை (1) பளிங்கு போன்ற கனிப்பொருள் வகை (2) மாவட்டத்தின் பெரும் பகுதியிலுள்ள அப்பிரகம் முதலியவை கலந்த அடுக்குப் பாறை வகை.

பளிங்கு போன்ற கனிப் பொருள் வகை, இராதாபுரம், ஆரல்வாய்மொழி, குலசேகரம், தக்கலை மற்றும் இராஜக்கமங்கலம் ஆகிய இடங்களில் காணப்படுகின்றன. இக்கனிப்பொருளில், கண்ணாடி வில்லை மற்றும் வட்டப்பட்டை போன்றவையும் தெரிகின்றன. அவற்றினூடே, படிக்கல் நாளமும், அவற்றின் தொகுதியும் இழையோடுகின்றன.

மூன்றாம் தொடரைச் சார்ந்த காலத்தில் உருவாகிய வார்க்கலாப்படுகைகளும், கடற்கரையை ஒட்டியுள்ள குழித்துறைக்குத் தென்மேற்குப் பகுதிகளில் மெல்லிய முகடு போன்ற உருவில் வெளிப்படுகின்றன. கன்னியாகுமரி, கோவல்குளம், லீபுரம், வட்டக்கோட்டை ஆகிய கடற்கரையோரத்தில் சிறிது காலத்திற்கு

முற்பட்ட தலைமுறையைச் சார்ந்த, சுண்ண நீற்றாலான மணற் பாறைகளும், ஓடு மற்றும் சுண்ணாம்பு நீர்க்கல் ஆகியவற்றின் அமைப்பும் காணப்படுகின்றன.

கனிம வளம்

மாவட்டத்தின் முதன்மையான கனிப்பொருள் நடவடிக்கையே, கடற்கரையோரத்தில் அலைகள் அவற்றின் செயலால் சுமந்து செல்லும் கனிவளமணல்களால் உருவாகியுள்ள கனிவளம் காணத்தக்க ஆற்றின் வண்டற் படிவாகும். இல்மினைட்,ருடைல், சிர்கான், மோனாசைட், கார்னெட், சில்லிமனைட், சிலிகா ஆகிய இக்கனிப்பொருட்களாகும் (இவை பெரும்பாலும், ஒண்மணிக் கல்லாக செதுக்கப்படும் உலோகத் தனிமவகை அடங்கிய களிமக்கல், பளிங்கு போன்ற கனிப்பொருள் வகை மற்றும் செந்நிர ஒண்மணிக்கல் ஆகியவையாகும்) அடர்த்தியான அளவிலுள்ள இந்த கனிப் பொருள்களைத் தவிர, சிறு அளவில் மைக்கா, காரீயம், களிமண், சுண்ணாம்பு நீர்க்கல் ஆகியவையும் தென்படுகின்றன. செம்பு, நிக்கல், முறிவள்ளியின் தடயம், கோபால்டு, பொன் வண்ண பச்சை நிற மணிக்கல், கடல் வண்ணக்கல், கூழாங்கல் படுகையிலுள்ள கற்கள் ஆகிய செயற்கை வைரக் கற்களுடன் தனிமைப்படுத்தப்பட்டு காணப்படும்.

கனரக கனிப்பொருள் மணல்கள்

வள்ளியாறு ஆற்று முகத்திலிருந்து, குளச்சலுக்கு அருகிலுள்ள மணவாளக்குறிச்சி வரையிலான ஆறு கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரைப் பிராந்தியம் மற்றும் அதற்குச் சற்று அருகிலுள்ள மாவட்டத்தின் இதர நிலப்பரப்பு ஆகியவற்றில் கனரக கனிப்பொருள்கள் உள்ளன. அவை: இல்மினைட், ருடைல், சிர்கான், கார்னெட், மோனாசைட் சில்லிமனைட், மாக்னைடட் மற்றும் சிறிய அளவில் லியோகோக்ஸின் ஆகியவை, முதன்மையாக ஒருமித்து இடம் பெற்றவை:

இல்மினைட்	-	45 முதல்	55	விழுக்காடு
கார்னெட்	-	7 முதல்	14	விழுக்காடு
சிர்கான்	-	4 முதல்	6	விழுக்காடு
மோனோசைட்	-	3 முதல்	4	விழுக்காடு
ருடைல்	-	2 முதல்	3	விழுக்காடு
சில்லிமனைட்	-	2 முதல்	3	விழுக்காடு

தி இந்தியன் ரேர் எர்த்ஸ் லிமிடெட் என்ற இந்திய அரசு நிறுவனம், மணவாளக்குறிச்சியிலுள்ள கனிப்பொருள் மணலைச் சுரங்கப் பணிமுறையில் தோண்டியெடுத்து, முறையாகப் புத்துருவாக்கு தலில் ஈடுபட்டுள்ளது. மணலைத் தோண்டி யெடுக்கும் அச்சுரங்கப் பணி, மனித உழைப்பின் மூலமும் மண்பறித்து ஆழமாக்கும் இயந்திரத் தின் மூலமும் மேற்கொள்ளப்படுகிறது. வெயிலில் உலர்ந்த மணலைப் புத்துருவாக்கும் பணி, மின் ஆற்றலால் உண்டு பண்ணப்படும் காந்த சக்தி மூலமும் நிலை மின் இயல் மூலமும் முடிக்கப்படுகிறது. தி இந்தியன் ரேர் எர்த்ஸ் லிமிடெட், மணவாளக்குறிச்சியில் ஆற்று

மணலைப்புத்துருவாக்கும் தொழிற்சாலை ஒன்றினைத் துவக்கி யுள்ளது. அதன் ஆண்டு செயலாற்று உற்பத்தித் திறன் பின்வருமாறு:

இல்மினைட்	.. .. ..	65,000 டன்.
ருடைல்	.. .. ..	1,000 டன்.
சிர்கான்	.. .. ..	5,000 டன்.
மோனோசைட்	.. .. ..	3,500 டன்.
கார்னெட்	.. .. ..	4,500 டன்.

கனரக கனிப்பொருள் கொள்ளளவினை, 50 விழுக்காட்டிலிருந்து 95 விழுக்காடாக உயர்த்தும் நோக்கில், ஈரந்தோய்ந்த கனிப்பொருளைக் கெட்டியாக்கும் தொழிற்சாலை ஆஸ்திரேலிய நாட்டின் தொழில் நுட்ப உதவியுடன், மணவாளக்குறிச்சியில் துவக்கப்பட்டுள்ளது. 1200 டன் கடற்கரை மணலைத் தோண்டி யெடுக்கும் குறிக்கோளுடனும், 600 டன் கனரக கனிப்பொருள் தொகுப்பினை உருவாக்கும் முனைப் புடனும் மண்பறித்து ஆழமாக்கும் இயந்திரமும் பயன்படுத்தப்படுகிறது.

பலதரப்பட்ட கனிப்பொருள் கூறுகளின் உத்தேச சேமிப்பு விவரம் கீழே அளிக்கப்பட்டுள்ளது :

இல்மினைட்	.. .. ..	4.70 மிலியன் டன்.
ருடைல்	.. .. ..	0.08 மிலியன் டன்.
கார்னெட்	.. .. ..	0.13 மிலியன் டன்.
சிர்கான்	.. .. ..	0.15 மிலியன் டன்.

அரிய நிலத்தளத்தின், சீரியம் ஆகிய பாஸ்பேட்டை மோனோசைட் என அழைப்பார்கள். அரிய நிலத்தள ஆக்ஸைடு மற்றும் நைட்ரேட் தயாரிக்க டிராம்பே அணு இயக்கத் தொழிற்சாலை, மோனோசைட்டுடன், தோரியம் ஆக்ஸைடையும் சேர்த்து புத்துருவாக்குதலில் ஈடுபட்டுள்ளது. உள்நாட்டுத் தேவைக்கும், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்திடவும் இல்மினைட், ருடைல், சிர்கான் ஆகியவை பயன்படுத்தப்படுகின்றன. குறிப்பிட்ட தேவைக்கேற்ப, கார்னெட் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

உலோகம் சார்ந்த சல்பைடு

தோவாளை வட்டம், அருமநல்லூருக்கு 1.5 கிலோ மீட்டர் தென்மேற்கிலுள்ள மங்கமலையில், செம்பு, நிக்கல், முறிவெள்ளியின் சிறிதளவு, பிஸ்மத் (நிமிளை) இவற்றைத் தாங்கிய உலோகம் சார்ந்த சல்பைடு, படிகம், கனிமம், அப்பிரகம் முதலியவை கலந்த அடுக்குப் பாறையாகக் காணப்படுகிறது. 100 மீட்டருக்கு 10 மீட்டர் என்ற அளவில், உலோகம் சார்ந்த சல்பைடு கண்டறியப்படுகிறது. உலோகக் கருவின் நடுப்பகுதி, முதலாவதாக, பைரோடைட், முறிவெள்ளி மற்றும் செம்பு சல்பைடு ஆகியவற்றாலானது. உலோகக்கருவில், ஒரு விழுக்காடு செம்பு, 0.6 விழுக்காடு, நிக்கல், முறிவெள்ளியின் சிறிதளவு, பிஸ்மத் மற்றும் கோபால்டு ஆகியவை அடங்கியுள்ளதென தீவிர ஆராய்ச்சியினின்றும் புலனாகிறது. உலோகம் சார்ந்த உட் பொருள் மற்றும் உலோகக்கரு மிகக் குறைந்த அளவிலேயே

வெளிக்கொணரப்படுவதால், வெளிக்கொணரப்படும் அளவு வாணிக நோக்கில் சிக்கனமற்றதாயிருக்கிறது.

கிளிஞ்சல்கள் மற்றும் கன்கரி சுண்ணாம்புக்கற்கள்

அகஸ்தீஸ்வரம் வட்டத்தில், கோவளத்தின் கிழக்கிலிருந்து, கனகப்பபுரம் வரை, கடற்கரையில், கூடுகளும், கன்கரி சுண்ணாம்புக் கற்களும் ஆங்காங்கே தென்படுவது பதிவு செய்யப்பட்டுள்ளது. அவற்றின் கனம் 0.35 மீட்டரிலிருந்து, 2.5 வரை உள்ளது. பல்வேறு விதமாக வட்டப்பட்டைகள் கீழ்க்கண்ட இடங்களில் காணப்படுகின்றன:

1) கோவளத்தின் கிழக்குப்பகுதி
2) குமரி முனை
3) லீபுரம் கல்விளைகுடியிருப்பு
4) கிருஷ்ணன் புதூர்
5) வட்டக்கோட்டை மற்றும்
6) கனகப்பபுரத்தின் தென்மேற்குப் பகுதி.

அனைத்து ரக சேமிப்பும் 2.43 மிலியன் டன் என மதிப்பிடப் பட்டுள்ளது. எனினும், சுண்ணாம்புக் கற்கள் 10.93 விழுக்காட்டி லிருந்து 43.3 விழுக்காடுவரையிலான சிலியன் கலந்த மிகவும் மணற் சததடங்கியவையாக உள்ளன. "சியோ" என்ற பொருள் 40 விழுக்காட்டுக்கும் குறைவாக உள்ளது. இந்த சுண்ணாம்புக் கற்களை உள்ளூர் தேவைக்கான சுட்ட சுண்ணாம்பு தயாரிக்கவே பயன்படுத்த முடியும். இப்பகுதிகளில் சுண்ணாம்புக் கற்களைத் தோண்டியெடுப்ப தென்பது இயலாது. ஏனெனில், அவை உள்ளூர் வேளாண் பெருமக்களால் அதிக முக்கியத்துவம் அளித்து, பெரும் பொருட் செலவில் பயிரிடப்படும் வேளாண் நிலங்கள் மற்றும் தென்னந் தோப்புகள் ஆகியவற்றில் தான் காணப்படும் என்பதே இதற்கு முதன்மைக்காரணமாகும்.

காரீயகம்

அருமநல்லூருக்குத் தென்மேற்குப் பகுதியில் 1.5 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்த குன்றுகளில் 384 காரீயம் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

மைக்கா

ப்லோகோபைட் வகை மைக்கா, கல்குளம் வட்டத்தைச் சார்ந்த காக்காப்பொன்குளம், கிழகுவிளை, குழித்துறை ஆகிய இடங்களி லுள்ள படிக்கல் பாறைகள், அப்பிரகமும், படிகமும் மாறி மாறிய தகடுகளாக அமைந்த பாறைகள் ஆகியவற்றில் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

களிமண்

வெள்ளைக் களிமண், சிறிய அளவில் கடற்கரையின் தெற்கு மற்றும் மேற்குப் பகுதியில், செவ்வண்ண இரும்பகக் களிமண் மற்றும்

வண்டல் மண் ஆகியவற்றின் அடிப்புறத்தில் உள்ளதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. சில இடங்களில், மணற்சத்தடங்கிய களிமண்ணை உருவாக்கிட, கருங்கல் சார்ந்த படிகம், கனிமம், அப்பிரகம் கலந்த அடுக்குப் பாறை வகைகள் இயல்வளிப்பட்டு பதமாகின்றன.

மணிக்கல்

தோவாளை வட்டம் தடிக்காரன் கோணம், செங்கம்மாள் எஸ்டேட் மற்றும் மகேந்திர கிரி ஆகிய இடங்களில், பொன்வண்ண பச்சை நிற மணிக்கல் மற்றும் கடல் வண்ணக்கல் ஆகியவை இருப்பது கண்டறியப்பட்டது. அவை, விளவங்கோடு வட்டம், பலுக்கல் மற்றும் மிடாளம் ஆகிய இடங்களில் கூழாங்கல் படுகைகளில் இணைந்து காணப்பட்டு, அவை விரிவான ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்டன. தெளிந்த மற்றும் விலை உயர்ந்த, பொன்வண்ண பச்சை நிற மணிக்கல் வகை, தொடர்ச்சியற்றவையாகத்தான் தென்படுகின்றன. அவை 'கொண்டலைட்' என்ற களிமண் வகையினூடே காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

தாவரங்கள்

திருவாங்கூர் செடி, கொடி வளத்தின் தனிச் சிறப்பு, அவற்றின் மாறுபட்ட வளர்ச்சி, அழகு மற்றும் பயன்வளம் வாய்ந்த மதிப்பு என நாகமையா வர்ணிக்கிறார்.[12] இது தொடர்பாக, வனத்துறை பாதுகாவலர் டி.எஃப்.ப். போர்டிலன் என்பவரது "திருவாங்கூரின் செடி, கொடிவளம்" என்ற கட்டுரையின் கீழ்க்குறிப்பிட்ட சிறு பகுதியை மேற்கோள் காட்டுகிறார் (1903 சூன் மாதத்தில் பிரசுரமான மலபார் காலாண்டு ஆய்வுரை).[13]

"..... இந்தியாவின் மேற்குக் கடற்கரைப் பகுதியிலிருந்து, அஸ்ஸாம் மற்றும் பர்மா வரையிலான ஒரே தொடர்ச்சியிலுள்ள சீரான சிறப்பியல்பினைக் கொண்ட காடுகளும் இந்தியாவின் எதிர்மாறான திசைகோடியிலுள்ள செடி, கொடிகளும் ஒரே சந்ததியினின்றும் தோன்றியவை என்ற கூற்றில் நியாயமிருக்கிறது. தற்போது எஞ்சியுள்ள காடுகள், அவற்றின் நினைவூட்டுப் பொருள்களேயன்றி வேறல்ல. இவை முழுமையும் அழிக்கப்படுவதிலிருந்து இவற்றைக் காப்பது, அறிவியல் பூர்வமாக இன்றியமையாததாகிறது....."

இங்கே காணப்படும் செடி, கொடிவளத்தினை நோக்கும்போது, அவர் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்:[14] திருவாங்கூர் காடுகளின் போற்றத்தக்க சிறப்பு என்னவெனில், அங்கே அடர்ந்தும் பல வகைகளைச் சார்ந்தவையாயுமுள்ள செடி, கொடி வளம்தான் என ஐயப்பாடின்றிக் கூறலாம். திருவாங்கூர் செடி, கொடிகளும், அவற்றின் வளர்ச்சியும் ஒருவித கவர்ச்சியைத் தோற்றுவிக்கின்றன. *முதலாவதாக* (ஏற்கனவே குறிப்பிட்டது போன்று) ஒரு காலத்தில், இந்தியாவின் பல்வேறு பகுதிகளில், ஒரே சீராகக் காணப்பட்ட செடி, கொடிகளின், நினைவூட்டுச் சின்னங்களாக அவை உள்ளன; *இரண்டாவதாக* ஒரு

சிறு பகுதியிலேயே வியக்கத்தக்க பல்வேறு வகையான செடி கொடிகள் உள்ளன: *மூன்றாவதாக* உலகத்தின் பலபகுதியிலுமுள்ள பிரமிக்கத்தக்க பல்வேறு வகையான செடி, கொடிகள் இங்குள்ள இதே வகையான செடி கொடிகளுடனேயே ஒப்புநோக்கப்படுகின்றன"....

இன்றும் கூட, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள செடி, கொடி வளம், இவ்வாறே மிக அழகாக வர்ணிக்கப்படுகின்றது. மாவட்டத்திலுள்ள பலதரப்பட்ட மிக மதிப்புள்ள விறகுக்கான மரங்கள், கோந்துகள் வழங்கக்கூடிய மரங்கள், நீரில் கரையாத ஆற்றல் மிக்க பிசின் வகைகள் மற்றும் சாய வகைகள் தரும் மரங்கள், நிழல் தரும் மரங்கள், பனை மற்றும் பனை போன்ற மர வகைகள், மூங்கில், நாணல், நார்ப்பொருள் அடங்கிய தாவரங்கள், மருந்துவகைத் தாவரங்கள், மலர்கள் மற்றும் அணி செய்யப்பயன்படும் தாவரங்கள் ஆகியவை, மாவட்டத்தைத் தமிழகத்தின் தாவரவியல் தோட்டமாகப் படைத்துள்ளதென்றால் மிகையில்லை.

தாவரவியல் பகுதிகள்[15]

மாவட்டத்திலுள்ள குன்றுப்பகுதிகளின் இருமருங்கிலும், வறட்சி முதலிய நிலத்தடை கடந்து வளரவல்ல, தனிச்சிறப்பியல்புள்ள செடிகள் காணப்படுகின்றன. அக்குன்றுகளின் மேல் பகுதிகளில், அதிக அளவில் புல்களும், அடிப்பகுதியில் புதர்ச் செடிகளும் நிறைந்துள்ளன. அவற்றுள் முதன்மையான புல் வகைகள்:

ஆண்ட்ரபோகன் (ராமச்சம்)
பனிக்கம் (இஞ்சிப்புல்)

எலுமிச்சைப்புல் மற்றும் கால்நடைத்தீவனத்திற்கான புல்வகை இங்கு அதிக அளவில் காணப்படுகின்றன. மூங்கில் வகையைச் சார்ந்த மிகப்பெரிய கொத்துகள், ஓச்சலந்த்ரா என்ற வகையைச் சார்ந்த அடர்ந்த மூங்கில்கள் மற்றும் பிரம்பு ஆகியவையும் காணப்படுகின்றன. பல்வேறு வகையான தரங்குன்றிய ஓராண்டு வாழும் மருந்து செடியினங்கள், புல்லினால், சூழப்பட்டுள்ளன. இவை, சில நாட்கள் மட்டும் நிலைத்திருக்கிற செடியினங்களாகும். எப்பொழுதும் நிலைத்து வாழ்கிற மருந்தினச் செடிகளும் புல்லினால் சூழப்பட்டுள்ளன. அவற்றில் ஒரு பகுதி பூண்டுகளினின்று தோன்றுபவையாகவும், மற்றொரு பகுதி அடிநிலத்தண்டிலிருந்து தோன்றுபவையாகவும் உள்ளன. அவற்றின் அடிக்கிளை உகந்த பருவ காலத்தில்தான் உருப்பெறுகிறது. மற்ற இனத்தைச் சார்ந்தவை அரிதாகவே மலர்கின்றன. உயர்நிலைப் பரப்பின் கீழ் பகுதியில் பியோனிக்ஸ், சைகாஸ் மற்றும் இலந்தை போன்ற இனங்கள், புதரின் இயல்புடையவையாக உள்ளன. உயர்நிலைப் பரப்பின் மேல் பகுதியில், ஆங்கியோப்டரிஸ் என்ற மூடுவிதைச் செடியினம் காணப்படுகின்றன. முத்துக்குழிவயலில், பருவகால காடுகளின் சதுப்பு நிலப்பகுதியில், குறிப்பிடத்தக்க தாவர வளர்ச்சியினைக் காணமுடிகிறது. இந்த சதுப்பு நிலப்பரப்பின் தனிச் சிறப்பு என்னவெனில், அவற்றில்

உருப்பெற்றுள்ள பல்வகைப்புல் இனங்களும், *சிபெரஸ்* என்ற வெப்ப மண்டல கோரைப்புல் இனமும், *இரியோகுலான்* என்ற முட்செடி வகையைச் சார்ந்த இனமுமேயாம். இப்பகுதியில் காணப்படும் மற்றொரு வகைப்புல் எலுமிச்சைப் புல்லாகும்.

தாழ்வான நிலப்பரப்பிலும், குன்றுகளின் முகடு நிழலில் காணப்படும் கணவாய்ப்பகுதிகளிலும், பிரதான உணவுப்பயிரான நெல் விரிவாகப் பயிரிடப்படுகிறது, இரண்டாவது முக்கியமான உணவுப் பயிர் மரவள்ளிக்கிழங்காகும். இது விளவங்கோடு மற்றும் கல்குளம் வட்டங்களில், மிக அதிகமாக பயிரிடப்படுகிறது, கல்குளம் மற்றும் விளவங்கோடு வட்டங்களிலுள்ள நிலப்பரப்பில் விரிந்த அளவிலும், அகஸ்தீஸ்வரம் மற்றும் தோவாளை வட்டங்களில் குறைந்த அளவிலும் பனைமரங்களைக் காணலாம். விளவங்கோடு வட்டத்தைச் சார்ந்த தேங்காய்பட்டிணத்திலுள்ள கழிமுகத்தையொட்டியும், மனக்குடி ஏரி, மாவட்டத்திலுள்ள ஆறுகள் மற்றும் குளங்களின் கரைகள் ஆகிய வற்றிலும், மணற்பாங்கான கடலோரப்பகுதியின் குறுகலான ஓரங் களிலும் அழகே உருவான தென்னந்தோப்புகள் காணப்படுகின்றன.

பான்யன், ப்யூப்பில் (ஆலமரம் மற்றும் அரசமரம்), *ஜங்கின் ஜாக்* (அஞ்சிலி), *இளினியா* (நாவல்), *போர்ஷியா* (பூவரசு), புளியமரம், *லாரல்* (புன்னைமரம்), *இந்தியா பீச்* (புங்கு), *அல்பீனியா* (வாகை), *பொயின்ஹியானா* (வரச்சி), *கோல்டு மோகூர் மரம், ரெயின்* (தூங்குமூஞ்சி மரம்), கொடுக்காப்புளி, வேம்பு நீம் அல்லது *மார்கோஸா)* முந்திரி மரம், *(காஷினா)* (காத்தாடி மரம்), ஆகியவை இந்த சரகத்தில் வளரும் முக்கியமான நிழல்தரும் மரங்களாகும். உண்ணத்தக்க பழங்களை அளிக்கும் மரங்கள் மற்றும் தாவரங்களில் மிகப்பொதுவாகக் காணக்கூடிய மரங்கள், மா, பலா, சீத்தாப்பழம், பலதரப்பட்ட வாழைப்பழங்கள், பைனாப்பிள், முந்திரி, கொய்யா, உலர்ந்த கொடிமுந்திரிப் பழம், காட்டு ஆப்பிள், (விலங்கை), (இலந்தை), நாவல், பப்பாளி, ஈரப்பலா, ஆரஞ்சு மற்றும் எலுமிச்சை ஆகியவையாகும். மாதுளம்பழமும் மிகுந்த ஆதாயத்துடன் பயிரிடப் படுகிறது. சில பகுதிகளில் திராட்சைக் கொடியும் விளைகிறது. அகஸ்தீஸ்வரம் வட்டத்திலுள்ள சூரங்குடி கிராமத்தில் காய்க்கும் மா மற்றும் பலாப்பழங்கள், முதல்தரமான ருசிக்குப் பெயர் போனவை. மலைப்பிரதேசங்களில், வாழை மரங்கள் வணிக நோக்கில் பயிரிடப்படுகின்றன. கல்குளம், விளவங்கோடு மற்றும் தோவாளை ஆகிய வட்டங்களில் பாக்கு மரங்கள் சிறிய அளவில் விளைவிக் கப்பட்டுள்ளன.

இங்கே பலதரப்பட்ட மருந்து வகைத் தாவரங்கள் பயிரிடப் பட்டுள்ளன. அவற்றில் ஏறத்தாழ 60 வகை காய்கறிகள் தோட்டத்தில் பயிரிட முடியும். உள்ளத்தைத் தட்டி எழுப்புகிற பெயரான 'மருத்துவ மலை' (மருந்து வகை செடிகள் விளையும் குன்று) என, இங்குள்ள சிறு குன்றுகளில் ஒன்றிற்குப் பெயர் சூட்டியிருப்பதே இதற்குச் சான்றாகும். தோவாளையில் *கொழுந்து* பயிரிடப்படுகிறது.[16]

இவைதவிர, பலதரப்பட்ட காய்கறிகள், பயிறு வகைகள், மற்றும் பீன்ஸ ஆகியவையும் பயிரிடப்படுகின்றன. ஒரு சில ஏக்கர்களில் நிலக்கடலை பயிரிடப்படுகிறது. இப்பகுதியில் பயிரிடப்படும் நறுமணப் பொருள்கள் மற்றும் சுவையூட்டும் பொருள்கள் ஆகியவற்றில் ஏலக்காய், கருமிளகு, இஞ்சி, மஞ்சள், மிளகாய், புளி, வெங்காயம், பூண்டு, மல்லி, சீரகம், கிராம்பு, சாதிக்காய், கடுகு, புன்னை இலை, மற்றும் கருவேப்பிலை போன்றவை முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். உணவுடன் பயன்படத்தக்க கிழங்கு வகைகளில் குறிப்பிடத்தக்கவை யாதெனில், *சக்கர வள்ளிக் கிழங்கு, கூவைக்கிழங்கு, சேனை, சேம்பு, சீவக்கிழங்கு, கருணைக்கிழங்கு, சிறுவள்ளிக் கிழங்கு, மற்றும் மரவள்ளிக்கிழங்கு* ஆகியவையாம்.

எல்லையிலுள்ள புதர் வேலிகளில், முட்செடிகளும், சாற்றுச் செறிவான குத்துச் செடிகளும் உருவாகியுள்ளன. அவை, திருகிலைத் தாவரவகை, சப்பாத்திக் கள்ளி, பைன் ஆப்பிள் *(அன்னாசிப்பழம்)* அகவி *(கத்தாழை)*, யுபோர்பியா *(கள்ளி)*, காஸ்டர் *(ஆமணக்கு)* போன்றவையாகும். இவைகள் நிறைந்த தொற்றிப் படரும் பல கொடிகளால், எல்லைப் புதர்வேலிகள், மிகுந்த வளர்ச்சி பெறுகின்றன. றாட்ரோஃபா *(காட்டாமணக்கு)*, பிதகொலோபியம் *(கொடுக்காப் புள்ளி)*, காக்ஷரினா *(காத்தாடி)*, செஸ்பேனியா *(அகத்தி)*, எரித்திரினா *(முள்ளுமுருங்கை)*, பொங்கு மற்றும் லன்டன்னா *(உண்ணி)* ஆகியவை, எல்லைப்புதர் வேலிகளில், பற்றிப்படரும் தாவரங்களாகும்.

சென்பகம், ஹென்னா *(மருதாணி)* *செம்பருத்தி*, *தெட்டி*, கிலோன்ஜாஸ்மின் அல்லது *நந்தியாவட்டை*, *அசோகம்*, *அரளி*, *நாலுமணிப்பூ*, *மல்லி* அல்லது *முல்லை* மற்றும் பிச்சி ஆகியவை, பகட்டான மற்றும் நறுமணம் கமழும் தாவரங்களாகும். தோட்டங்களில், பலதரப்பட்ட ரோஜாக்கள் பயிரிடப்படுகின்றன.

வறட்சிக் காலத்தில் வளரவல்ல செடிகளுக்கு மாறாக, குறிப்பிடத்தக்க நீர்வாழ் செடிகளை இம்மாவட்டம் பெற்றிருக்கிறது. மாவட்டத்தின் பல குளங்களில், தாமரை மற்றும் அல்லிமலர்களும் அவற்றினிடையே ஏனைய வகைகளைச் சார்ந்த நீர்வாழ் செடிகளின் மலர்களும், வளர்ந்துள்ளதைக் காணமுடிகிறது. 'பலதரப்பட்ட மிதக்கும் தாவர இனங்களுடன், மாபெரும் அரசமரங்களின் நிழலிலும், பிஸ்டியா ஸ்டாடிஸ்டீஸ் நிழலிலும் நீர்ப்பரப்பில், *ட்ராபா பிஸ்பைன்ஸ்* காணப்படுகின்றன. 'நீரில் அமிழ்ந்து, அடியில் பின்னிக் கிடக்கும் கொடிகள், *எரிதோபைலம், உட்ரிகுலேரியா, சாரா* (பாசி) முதலானவை யாகும். கரைக்கு அருகில், *நெப்டுனியா* மற்றும் *ஹைக்ரோனிஸா* ஆகியவை, *அஸ்கைநோமினா அஸ்பிரா, லூடிவிகியா* மற்றும் *இபோமியா ரெப்டான்ஸ்* ஆகியவற்றுடன், ஒன்றோடொன்று சேர்ந்து வளர்ந்துள்ளன. அவற்றினடியில், நிலையான நிலப்பரப்பு உள்ளதை மறைத்துக் காண்பிக்கும் அளவிற்கு, ஓரப்பகுதியை மூடி வளர்கின்றன.

மற்ற ஆழமற்ற குளங்களிலும், ஆற்று வடிநிலங்களிலும், வறண்ட வானிலை காலத்தில், சதுப்புத் தாழ்நிலங்களில், *நீர்ப்பரப்பில் ஜூதன்குஸ், ஸ்கிரிபஸ், ஸிப்ரஸ்* மற்றும் *டைஃபா* ஆகிய *நாணல் வகைகள்* படர்கின்றன. அப்போது, அவை, மிக நெருக்கமாக இலைகளினால் அடைப்பு போடப்பட்டது போன்று காட்சி தருகின்றன. ஓரக்காலுக்கும், நாணலுக்கும் ஊடே பல தரப்பட்ட சதுப்பு நிலத் தாவரங்கள் வளர்கின்றன.

குமரி முனைப் பகுதியில் உள்ள தாவரங்கள், குறிப்பிடத்தக்க வறட்சி காலத்தில் வளரத்தக்க இனத்தைச் சேர்ந்தவையாகும். அவை தனிச்சிறப்புள்ள, குறிப்பிட்ட காலங்களில் மற்றும் தோன்றுகின்ற *ஏசியா பிளார்னிஃபார்மிஸ்.* (ஓடை மரம்) என்ற வகையைச் சார்ந்த சோலை மரங்களாகும். மற்ற பகுதிகளில் வளரும் மரங்களும் இங்கு காணப்படுகின்றன. ஆனால் அவையாவும் வளர்ச்சி தடைப்பட்டது போன்று காணப்படும், அல்லது *ஏசியா* போன்று குடைவடிவமாகவும் தோன்றக்கூடும். ஏசியா காட்டுப்பகுதியில் வளர்பவை, *காக்டஸ், அகேளி, அலோ* ஆகியவையாகும். இவை வறட்சி காலத்தில் வளரவல்ல மருந்து வகைச்செடியும், பலவகைப் புல் இனங்களுமாகும்.

சிலவகைப் புல் இனங்கள், மணல் நிலப்பரப்பில் தோன்றுகின்றன. கடற்புரத்தில் தோன்றும் களை போன்ற புதர்ச்செடிகளின் மூன்று பெரிய பிரிவுகளும் குன்றுகளையொன்றி முளைக்கின்றன. கடலின் ஆழமற்ற பகுதிகளில், கடல்அலை வரிசைவரம்பில் கடல் மலர்தாவரங்கள் விளைகின்றன. கடற்கரையின் அலைவரிசை வரம்பில், குன்றுகளையொட்டி, ஏனைய புதர்ச்செடி இனங்களும் காணப் படுகின்றன. சற்று உட்பகுதியில் பழுப்பு மற்றும் சிவப்பு அல் என்ற களை வகைகள் தென்படுகின்றன.

ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்தில் தாவர வளர்ச்சி சற்றே மாறுபடினும், மொத்தத்தில், மைய நிலப்பரப்பிலும், தாழ்வான நிலப்பரப்பிலும் தாவர வளர்ச்சி ஒரே சீராகத்தான் உள்ளது.

மாவட்ட முழுமையும், ஒரு சில இன காளானும், குடைத் தாவரமும் உள்ளன. இவை, மருந்து வகை, உணவு வகை மற்றும் சுவரின் மேல் பற்றி வளரும் கொடி வகை ஆகிய இனங்களைச் சார்ந்தவை. அடைப்புக்குறி வண்ணத்தில், பலா மரங்களில் காணப்படும், தாவரங்கள் "பழ மஞ்சள்" என அழைக்கப்படுகின்றன. இவை சில இடங்களில், மருந்துக்குப் பயன்படுத்தப்படுகின்றன. முட்டைக் காளான் என்பது பொதுவில் உணவாகக் கொள்ளப்படும் வகையாகும். தென்னை மரங்களில் பொதுவாகக் காணப்படும் பட்ராட் என்ற நோய் இப்பகுதிகளில் காளான்களினால் பரவுகிறதென கூறப்படுகிறது. தென்னை மரங்களை வெகுவாக பாதிக்கும் உடற் பகுதி நீர்க்கசிவு நோய், இலை வெப்பு நோய் மற்றும் வதக்கு நோய் ஆகியவை காளான்களினால் பரவுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

பயிரிடப்படும் தாவரங்கள், தோட்டம் மற்றும் பூங்காக்கள்

அழகு செய்ய பயன்படுத்தப்படும் வகையைச் சார்ந்த தாவரங்கள், இந்தத் தோட்டங்களில் பயிரிடப்படுகின்றன. இவை, வறட்சி காலத்திலும் வளரவல்லவை. அவையாவன:

லொச்நீரா புளில்லா (முர்) கே' ஸ்க்.
தீவேடியா பெருரவியானா (பெர்ஸ) மெர்.
லியூகெய்னா க்னெளாகா (லின்) பென்த்
பெல்டோஃபோரம் ப்டெரோகார்பும் பேகெட்.
கேசியா ஃபிஸ்டுலர் லில்.
லோச்நேரா ரோசியா (லின்) ரெய்சில்.
நீரியம் இன்டிகம் மில்.
டிலோனிக்ஸ் ரீஜியா (போஜ்) ராஃப்.
மீலியோ அளிடாரா லின்.
பௌஹனியா புர்பூரியா லின்
பிதிஸெல்லோபியம் டல்ஸ் (ராக்ஸ்ப்) பென்த்
டெகோமா ஸ்டான்ஸ் ஜுநஸ்
ப்ளுமீரியா ருப்ரா. எஃப். அக்யூடிஸ்து பாலியா ஊட்ஸ்.
எரைத்ரினா வேரியகாட்டா லின், வார்,
ஓரியன்டிலிஸ் (லின்) மெர்.
ட்யூரான்ட்ஸ் ரீபென்ஸ் லின்.
டாபர்நியோ மான்டனா டைவாரி கேட்டா
(லின்) ஆர்.பிஆர்.
அல்லமாண்டா ஒயதார்டிகா லின்
க்விஸ்க்வாலிஸ் இன்டிகா லின்.
கன்னா-எஸ்.பி.
சியஸல்யினியா புல்செர்ரிமா எஸ் டபிள்யூ.
எக்ளியோகாரியா கோசின் சினென்விஸ் லௌர்
கோடியேயும் வேரிகேட்டம் லின்
ரஸ்ஸிலியா சிக் யுஸடிஃபார்மிஸ் ஸ்கோ சாம்.
மில்லிங்டோனியா உறார்டென்ளிஸ் லின். எஃப்.
சாமானியா சாமன் (ஜாக்) மெர்.
உறிபிஸ்கஸ் ரோஸா-சினென்விஸ லின்.
ஓசிமம் அமெரிகாநம் வின்
மோலென்பெக்கியா பிளடைகேடா (ம்யூல்) மிகிளின்.
பௌகென்வில்லியா ஸ்பெக்டாபிலிஸ் வில்டு.
மிராபிலஸ் ஜலபா லின்
கோம்பெரீனா க்ளோபோஸா வின்
முர்ரயா பனிகுலேடா (லின்)
யூஃபோர்பியா புல்செரிமா வில்டு
அச்ராஸ் சபோடா லின்
காஷீரினா ஈக்விளிடிஃ போலியா லின்,

இந்த மணற்பாங்கான பரப்பில் நன்றாக விளைந்தாலும், அவை அதிக அளவில் பயிரிடப்படுவதில்லை.

அ-தாவர வளர்ச்சியும், காடுகளும்

மாவட்டத்தின் தாவர வளர்ச்சி குறித்து பலர் ஆராய்ச்சி செய்துள்ளார்கள். அவர்களில், திரு.எம்.பரமேஸ்வரன் நாயர், குறிப்பிடத்தக்கவர் ஆவார். கன்னியாகுமரி மாவட்ட விவரச் சுவடிக்காக, மைய அரசின் நில அளவைத்துறையைச் சார்ந்த திருவாளர்கள் ஆர். கோபாலன், ஏ.என்.ஹென்றி ஆகியோர், மாவட்டத்தின் தாவர வளர்ச்சி மற்றும் காடுகள் குறித்து, தனிப்பட்ட குறிப்பு தயார் செய்துள்ளார்கள். கீழ்க்காணும் விவரங்கள் அக்குறிப்பினை ஆதாரமாகக் கொண்டவை.

கடற்கரைத் தாவர வளர்ச்சி

கடற்கரையிலுள்ள செடி, கொடிவளம், மிகவும் குறைபாடுடைய தாக உள்ளது. இதற்கு முதன்மையான காரணமென்னவெனில், மணற்பாங்கு, மண்ணில் வறண்ட தன்மை, மழையின்மை மற்றும் காற்றின் வேகம் ஆகியவையாகும். கடற்கரை தாவர வளர்ச்சியினை இடைகரை மணற் பகுதி தாவர வளர்ச்சி, நில உட்புற மணற்பகுதி தாவர வளர்ச்சி என இரு கூறாகப் பிரிக்கலாம்.

இடைகரை மணற் பகுதி தாவர வளர்ச்சி

இப்பகுதியில், *ஸ்பினிஃபிக்ஸ் லிட்டோரியஸ்* மெர், *இபோமோயா பெஸ்காப்ரியா ஸ்வீட், செசுவியம் போர்ட்டுலோ காஸ்ட்ரம்* எல்., *ஆட்ரீப்ளெக்ஸ் ரீபென்ஸ்* ரோத், *சிபிரஸ் ரோடுன்டஸ்* எல்., *மொல்லுகோ செர்னியானா* (எல்) ஏ.டிசி. *திஃப் ரோஸியா பர்ப்புரியா* பெர்ஸ்., டி.ஹிர்டா உறாம்., *பெடாலியம் ம்யூரெக்ஸ்* எல்., *போர்ட்டுலேஸ் க்ளிராளியா* எல். மற்றும் *பி. க்வாட்ரிஃபியா* லின்., ஆகியவை பொதுவாகக் காணப்படுகின்றன. சதுப்பான உப்பங்கழிப் பகுதிகளில், *சௌடியா நுடிஃப்ளோரா*, மோக்., *சாலிகோர்னியா ப்ராக்கியாட்டா* ராக்ஸ்ப் மேலும் *ஆர்த்ரோக்னிமம் இன்டிகம்* மோக்., ஆகியவை அடிக்கடி தென்படுகின்றன.

கடற்கரைப் பகுதியில், மருந்துக்கும், தோல் பதனிடுவதற்கும் பயன்படும் பட்டையினையுடைய வெப்ப மண்டல சதுப்பு நிலப்படர் தாவரவகை காணப்படுவதில்லை. எனினும் மேற்குப்புறத்தில் அவற்றை இணைக்கும் வாய்க்கால்கள் மற்றும் ஆற்றுமுகங்களிலுள்ள உப்பங் கழிகள் நிறைந்த பகுதியின் ஓரங்களில் *பான்டனஸ் டாக்டோரியஸ்* சோலண்டு என்ற வகைத் தாவரங்கள் அடர்த்தியாக உள்ளன. நீர் வற்றிய பகுதிகளில், *அக்ரோஸ்டிச்சம் ஆரியம்* மற்றும் *எக்ஸ்கோகாரியா அகலோச்சர* எல். ஆகியவை பொதுவாகக் காணப்படுகின்றன. தேங்காப்பட்டினம்-- முஞ்சிரையின் உப்பங்கழிப் பகுதிகளில் *பாரிங்க்டோனியா ரேஸ்மோஸா* ராக்ஸ்ப்., *இக்ஸோரா கோக்சினியா* எல். மற்றும் *நெளக்லியா மிஷனிஸ்* வைட் ஆர்ஸ் ஆகியவை தென்படுகின்றன.

உட்புற மணற்பகுதித் தாவர வளர்ச்சி

இஃபோர்பியா திருக்கல்லி எல்., *ஜட்ரோஃபா கர்காஸ்* எல்: *ஜே.காளிபிஃபோலியா* எல்., *க்ளியோமி அஸ்பிரா* கோயின்.,

ஸி.டெனெல்லா எல். எஃப்: *ஏர்வா லானடா ஜீதஸ்., ஃபைலா நோடி ஃப்ளோரா* (எல்) பச்சை மற்றும் *ஸோர்னியா டிஃபைல்லா* பெர்ஸ், ஆகியவை, இப்பகுதியின் தனிச்சிறப்பாகும்.

கடற்கரை மற்றும் குன்றுகளின் இடைப்பட்ட சமவெளிப்பகுதிகளின் தாவர வளர்ச்சி

தென்புற நிலவுலக வெப்ப மண்டலப்பகுதி சார்ந்த முட்புதர் நிறைந்த காடுகள்

சமவெளிப்பகுதிகளில், 200 மீட்டர் உயரம் வரையில், தென்புற நிலவுலக வெப்ப மண்டலப்பகுதி சார்ந்த முட்புதர் உள்ள காடுகள் நிறைந்த பிராந்தியமாகும். இவ்வின தாவர வளர்ச்சியினை அஞ்சுக் கிராமம், வட்டக்கோட்டை, கன்னியாகுமரி, மருத்துவமலை, குளச்சல் மற்றும் குழித்துறை ஆகிய இடங்களில் காணலாம். கன்னியா குமரியைச் சுற்றியுள்ள இடங்களில் *அகேசியா பிளான்ட்ஃப்ரான்ஸ்* வைட் ஆர்ன்., என்ற குடைவடிவ மரங்கள் பொதுவாகக் காணப்படுகின்றன. மேற்கே செல்லச்செல்ல, இவை படிப்படியாக மறைந்துவிடுகின்றன. *அசிமா டெட்ராகாந்தாலாம்., காஷநரினா ஈக்வி செடிஃபோலியா* ஃபோர்ஸ்ட்,*டொடோனியா விஸ்கோஸா* ஜாக்., *லெளனியா சார்மென்டோஸா* (வில்டு) ஆல்ஸ்ட்டன், *லிபிடாகதிஸ் புங்கன்ஸ்* நீஸ் மற்றும் *ஜட்ரோஃபா மஹேஸ்வரி* ஸபர்., நாயார், ஆகியவை பொதுவாகக் கன்னியாகுமரியில் தென்படுகின்றன.

ஸிஸிஃபஸ் ஸெனோப்லியா மில், இஸட், *மௌரிடியானா* லெம்., *ஃப்ளாகோர்ட்டியா இன்டிகா* (பர்ம். எஃப்) மெர்., *அட்லாண்டியா மோனோஃபைல்லா* கோர்., *ஜட்ரோஃபா க்ளாண்டுலிஃபோரா ராக்ஸ்ப் ரிளினிஸ் கம்யூன்னிஸ்* எல்., தொட்டாலியா அசியாடிகா லாம், மற்றும் லாஸோனியா *இனெர்மிஸ்* எல்., ஆகிய வறட்சி காலத்தில் வளர வல்ல செடிகளும் காணப்படுகின்றன.

உட்புற சமவெளிப்பகுதிகளில் செடி, கொடி வளம்

கேசியா சியாமியா லாம்., *டிஸோஸ்டாசீஸ் சினீரியா* (எல்) வைட் & ஆர்ஸ்., *மொரீண்டா புலஸ்ஸென்ஸ், ஸ்மித் தெஸ்பேசியா* பாடில்நியா, (எல்)., ஸோல். எக்ஸ். கொர்ரியா, *ஃபிகஸ் பெங்காலினிஸ்* எல்., எஃப் *ரிடுசா* எல்., *மங்கிஃபைரா இன்டிகா* எல்: *அல்ஸ்டோனியா ஸ்காலாரிஸ்* ஆர். பிர்.... *பொங்கமியா பின்னடா* (எல்) மெர்., மற்றும் *கெலோஃபைல்லம் இனோஃபைல்லம்* எல். ஆகியவை இச்சமவெளிப் பகுதியில் பொதுவாகக் காணப்படும் மரங்களாகும்.இவை தவிர, க்ரோடோலாரியா ஜிஜான்டியா (எல்) ஆர்.பிர்., காசியா ஆரிகுலாட்டா எல்., *சி. ஆக்கிடென்டலிஸ்* எல்., *சி. டோரா* எல்., *ஜட்ரோஃபா கர்காஸ்* எல்., *ஜே.காளிபிஃபோலியா* எல் *வைடெக்ஸ் நிகுன்டோ* எல்., க்ரோட்டோலாரியா ஸ்ட்ரையாட்டா டி.சி., *காப்பாரிஸ் செபியாரியா* எல்., *சிசிபஸ் சிலோபைரஸ்* ஒல்டு., *டொடோனியா விஸ்கோஸா* எல்., *க்ளெடென்ட்ரம் செர்ராட்டம்* (எல்) மூன், உறிபிஸ்கஸ் *சர்ட்டென்னிஸ்* எல்., மற்றும் எஹரிடியா மைக்ரோஃபில்லா லாம்., ஆகிய புதர் செடிகளும், குறும் புதர் வகைச் செடிகளும் பொதுவாக இவ்வகைப்

பகுதியில் தென்படுகின்றன. *பொராஸஸ் ஃப்ளாபெலிஃபர்* என்ற வகை எங்கணும் பொதுவாகக் காணக்கூடியதாகும்.

ரினாகாண்டஸ் நகுட்டா (எல்), *குர்ஸ், அசைஸ்டேசியா கேஞ்சடிகா* டி., மற்றும் *ஹெலியோட்ரோபியம் இன்டிகம்* எல்; *அகலைஃபா ஃப்ருட்டி கோஸா ஃபோர்ஸ்க்., வெர்னோனியா ஸினோரியா* லெஸ்., *அன்ட்ரோக் ரோஃபிஸ் பனிகுலேட்டா நீஸ்., ட்ரிசோடெஸ்மா இன்டிகம்* ஆர்., பிர்., *ஜஸ்டீசியா சிம்ப்ளெக்ஸ்* டி.டன், *மைக்ரோகோக்கா மேர்கூரியலிஸ்* பென்த் மற்றும் *பெரிஸ்ட்ரோஃபி பைகலைக்யூலேட்டா* நீஸ்., ஆகியவை புதர்ச் செடிகள் மற்றும் மரங்களின் நிழலில் வாழும் மருந்து இனங்களாகும்.

சிஸ்ஸஸ் க்வாட்ராங்குலாரிஸ் எல்., *கோகாயினியா கிரேடிஸ்(எல்) வாய்கித்* மற்றும் *பெர்குலேரியா டியாமியா* (ஃபோர்ஸ்க்) சியோ ஆகியவை அடுத்தடுத்து காணப்படும் தழுவிச் செல்லும் இனங்களைச் சார்ந்த தாவரங்களாகும்.

களைச் செடி, கொடி வளம்

அம்மானியா பேக்கிஃபெரா எல்., *பகோபா மொன்னியெரி* (எல்.,) *பென்னெல், கேள்டிபிடா மினிமா* (எல்) ஏ.பிர். & *ஆச்சேர்ஸ்., கோல்டீனியா ப்ரோகும்பென்ஸ்* எல்., *டென்டெல்லா ரீபென்ஸ்* (எல்) ஜே & ஜி ஃபோர்ஸ்ட், *எக்ளிப்ட்டா ப்ராஸ்டாட்டா* (எல்) எல். *கிசேகியா ஃபார்னகியோடிஸ்* (எல்)., *ஸ்ஃபாரன்தஸ் இன்டிகஸ்* எல்., *ட்ரிபுலஸ் டெர்ரனிஸ்* எல்., *விகோயா இன்டிகா* (எல்)., டிசி., *சென்டெல்லா அசியாடிகா* உர்ப்., *ஸைபெரஸ் கைல்லிங்கா,* எல்டில் *ஸ்பிலன்தஸ் அக்மெல்லா* முர்., *மேலோச்சியா கார்க்கோரி ஃபோலியா* எல்., *லோபோலியா ஆல்சிநாய்டஸ்* லாம்., *லின்டெர்னியா அனாகல்லிஸ்* (பர்ம்),. பென்னெல் மற்றும் லூட்விகியா பார்வி ஃப்ளோரா ராக்ஸ். ஒ. ஆகியவை சமவெளிப்பகுதியிலுள்ள களைச் செடிகளுக்குத் துணை செல்லும் குணமுள்ளவையாகும்.

ஸ்ட்டுருசியம் ஸ்பார்கனோ; போரம் (எல்) & கிட்ஸ், என்ற களை புதர்ச்செடி., பிற இடங்களிலிருந்து கொண்டு வரப்பட்டு இந்தியாவில் நிலை பெற்ற, ஒரு புதிய செடியாகும். இது குழித்துறை மற்றும் முஞ்சிரை சரகங்களில் தாமிரபரணி ஆற்றின் கரைகளில் காணப்படுகிறது.

நீர் வாழ் செடி கொடிவளம்

மாவட்டத்தில் எண்ணிலடங்கா நீர் வாழ் செடி, கொடிகளுக்கு உறைவிடமளிக்கும் குட்டைகள், குளங்கள், ஏரிகள் மற்றும் கால்வாய்கள் பல உள்ளன. நீர்வாழ் செடி, கொடிகள் மூன்று பெரிய பகுதிகளாகப் பிரிக்கப்படுகின்றன. அவையாவன: நீரிலிருந்து கிளம்பும் செடிவகை; நீரில் மூழ்கி வாழும் செடி வகை; நீரில் மிதந்து வாழும் செடிவகை.

நீரிலிருந்து கிளம்பும் செடிவகை

ஹைக்ரோஃபிலா ஆரிகுலேட்டா (ஸ்கம்)., *ஹெய்னி, ஆஸ்சைநோமினீ, ஆஸ்பெரா* எல்., *ஸ்கிர்ப்பஸ் ஆர்டிகுலேட்டஸ்* எல், எஸ். *குபினஸ்* எல்., *ஹைட்ரோலியா சைலீனிகா* (எல்) வால், *லிம்னோஃபிலா கூீடெரோஃபைல்லா, பென்த்., மோனோகோரியா வாஜினாலிஸ்* பிரஸில் மற்றும் *சக்கோலிபஸ் இன்டெருப்டா* ஸ்டெஃப் ஆகியவை நீரிலிருந்து கிளம்பும் செடி வகையாகும்.

நீரில் மூழ்கி வாழும் செடி வகைகள்

இவை குளங்களில் வடிநிலம் முழுமையும் வாழும் செடிவகை களாகும். *ஓட்டலிஸ் அலிமயாடெஸ்* பெர்ஸ்., *வல்லிஸ்நீரியா ஸ்பிரால்ஸ்* எல்., *லகாரோஸிபென் ஆல்டெர்ணி ஃபோலியஸ்* (ராக்ஸ்ப்) ட்ருஸ், *ஹைட்ரில்லா, வெரிசில்லா* ராய்லி., *எலைக்சா ஆக்டன்ட்ரா* பிளாஞ்ச் மற்றும் *ஸெர்ட்டோ ஃபைல்லம் டெமெர்சம்* எல்., ஆகியவை இதனில் அடங்கியவையாகும்.

நீரில் மிதந்து வாழும் செடிவகை

இவற்றில் இரண்டு வகையுள்ளன. ஒன்று நீரில் மிதக்கும் அடிக்கிளை மற்றும் இவற்றுடன் உள்ள வேருடன் கூடியது; மற்றொன்று, முழுமையாக நீரில் மிதக்கும் தன்மையுடையது.

நீரில் மிதக்கும் அடிக்கிளை மற்றும் இவற்றுடன் உள்ள வேருடன் கூடிய வகை

அபோனோஜிடன் நாடான்ஸ் (எல்)., என்ஜில் & க்ரௌஸ் *போடோமோஜிடோன் இன்டிகஸ்* ராக்ஸ்ப்., *நைம்ஃபாயா ஸ்டெல் லாட்டா* வில்டு., என்.*ப்யூபெஸன்ஸ்* வில்டு., *நைம்ஃப்ஸைட்ஸ் ஹைட்ரோ ஃபைல்லா* குண்டஸ்., *லுட்வீஜியா அட்ஸ்ஸென்டென்ஸ்* (எல்) ஹரா, *நெப்ட்யூனியா ஒலெரேஷியா* லௌர்., *ப்ஸ்யுடோராஃபிஸ்* ஆஸ்பெரா பில்ஸுர், மற்றும் *நீலம்பூ நியுஸிஃபெரா* ஜியார்டடென்.

முழுமையாக நீரில் மிதக்கும் தன்மையுடைய வகை

ஐக்காநியா ஒராசிப்பெஸ் காலம்ஸ் ட்ராபா பிஸ்பினோஸா ராக்ஸ்ப், *லெம்னா பௌஸிகோஸ்டாட்டா ஹெக்லம்*, மற்றும் *அஸோல்லா* பின்னாட்டா ஆர். பிர்; ஆகியவை இவ்வகையில் முதன்மையான இனங்களாகும். இவை நீரின் மேற்பரப்பில் முழுமையாக உள்ளன.

ஆ- காடுகள்

கன்னியாகுமரி மாவட்டத்தின் மொத்த பரப்பளவு 1684 சதுர கிலோ மீட்டராகும்; அதாவது 650.024 சதுர மைல் அல்லது 1,68,356.216 ஹெக்டேர். இதனில் 48,423 ஹெக்டேர் நிலப்பரப்பில் காடுகள் உள்ளன. ஒதுக்கப்பட்ட காடுகள் மட்டும் 44,799 ஹெக்டேரில் உள்ளன. 3605 ஹெக்டேர், வகைப்படுத்தப்படாத காடுகள் ஆகும். எஞ்சியுள்ள 19 ஹெக்டேர், ஒதுக்கப்பட்ட நிலங்கள் என வகைப்படுத்தப்பட்டவையாகும்.[17] மாவட்டத்திலுள்ள பல காடுகள், பல தரப்பட்ட ஓடைகள் மற்றும் ஆறுகளின் நீர் வரும் பரப்பில் உள்ளன. மிகுந்த மழைப் பொழிவுள்ள பீடபூமிகள் மற்றும்

குன்றுகளின் சரிவில் தோன்றியுள்ள காடுகளை அவை முழுமையாக அழிக்கப்படுவதினின்றும், மேற்பரப்புப் பாறைப் பகுதியிலுள்ள மண்பகுதி நீக்கப்படுவதினின்றும், காக்க வேண்டியது இன்றியமையாத தாகிறது. இதற்கொப்ப, காடு வளர்ப்பு நியதியின் படி, இயற்கை வளத்தை உழைத்துப் பயன்படுத்திக் கொள்ளும் நோக்கில், காட்டு மரங்கள், பல்வேறு மரவேலைகளுக்கு முறையாகப் பயன்படுத்தப் படுகின்றன. எப்பொழுதுமே படிப்படியாக உற்பத்தியை அதிகரிக்கும் கருத்திலும் சிக்கனமாக காடுகள் வளர்க்கும் முறையை மேம்படுத்தும் நோக்கிலும் திட்டமிட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன. இத்திட்டத்தின்படி, தகுதியான நிலப்பரப்புப் பகுதிகளில், தேக்கு மற்றும் தீக்குச்சி மரங்கள் பயிரிடப்படுகின்றன. இக்காடுகளில், 600 வகையான மாபெரும், மரவேலைக்குரிய பல்வேறு பெருங்கன்றுகளும் 3500 ஏனைய வகைக் கன்றுகளும் உள்ளன. அவற்றில் பல நல்ல மதிப்புள்ளவையாகும். பெருமதிப்புள்ள மரவேலைக்கு பயன்படக்கூடிய மரங்களில் தேக்கு, கருங்காலி, கருந்தேக்கு, *அங்சிலி* (காட்டுப்பலா), *கருந்தலி* (மலபார் பெனி), *மஞ்சைக்கடம்பு, வெண்தேக்கு, கருமருது,* அல்லது *தேம்பாவு* மற்றும் *வேங்கை* ஆகியவை பெரும்பாலும் வீடு கட்டுவதற்கான சாமான்கள், தட்டுமுட்டு சாமான்கள், ஏர், கலப்பை நுகத்தடி கைவண்டிகள், மாட்டு வண்டிகள், குதிரை வண்டிகள், புகைவண்டிப் பெட்டிகள், பல்வேறு வேளாண் கருவிகள் போன்றவை செய்ய பொதுவாகப் பயன்படுகின்றன. சந்தனமரம் உள்ளிட்ட ஏனைய விலை மதிப்புள்ள மரங்களும் இங்குள்ளன. இலவு போன்ற ஊசியிலைக்காட்டு மரங்கள் தவிர, பல்வேறு நாணல் வகைகளும், மூங்கில்களும் இங்கு உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இலவு மரம், கடலில் செலுத்தப்படும் படகுகள், தேயிலைப் பெட்டகத்திற்கான பலகைகள், குழந்தை விளையாட்டுப் பொருட்கள் மற்றும் தீக்குச்சிகள் ஆகியவற்றிற்குப் பயன்படுகிறது. இலவம் பழத்திலிருந்து எடுக்கப்படும் பஞ்சு, தலையணைகள், திண்டுகள் மற்றும் மெத்தைகள் ஆகியவற்றி லடைக்க பயன்படுகிறது. குன்றுகளின் உயரமான பகுதிகளில், ஏல மரங்கள் மற்றும் தேயிலைச்செடிகள் காணப்படுகின்றன. அவற்றின் தாழ்ந்த பகுதிகளில் மிளகு, இரப்பர், இஞ்சி மற்றும் மஞ்சள் ஆகியவை செழித்து வளர்கின்றன.

காடுகளிலிருந்து, ஆண்டுதோறும், 1,00,000 கன அடி அளவுள்ள வேலைக்கான மரங்கள் கிடைக்கின்றன. இவைதவிர, சிறு காடுகளில் நிறைந்த பலன் தரும் மரங்களின் அனுபவபாத்யதை ஏலம் மற்றும் மரங்களின் விற்பனையின், மூலமும் மற்றும் மூங்கில், பிரம்புப்பனை ஆகியவற்றின் விற்பனையின் மூலமும் அரசுக்குப் போதுமான வருவாய் கிடைக்கிறது. பல்வேறு வேலைக்குகந்த மரங்களைத் தயாரித்திட, மரங்களைத் தேர்ந்தெடுத்து வெட்டுதல் மற்றும் முழுமையாக வெட்டுதல் ஆகிய செயல் திட்டங்கள் கையாளப்படுகின்றன. மரங்களை முழுமையாக வெட்டும் திட்டத்தின் கீழ் ,மரங்களை அப்புறப்படுத்திய பின்னர், நிலப்பரப்பில் எஞ்சியுள்ள சிறு கன்றுகளும் வீழ்த்தப்படுகின்றன. அந்நிலப்பரப்பில், தேக்குபோன்ற பயனுள்ள,

வணிக நோக்கில் ஆதாயமளிக்கக் கூடிய மரங்கள் பயிரிடப்படுகின்றன. நல்ல ஆதாயமளிக்கக் கூடிய மரவகைகளையும், தீக்குச்சிகள் செய்வதற்கான மரங்களையும் மற்றும் அரக்கு மரங்களையும் இங்கு பயிரிட நல்ல வாய்ப்புள்ளது. இந்த பிராந்தியத்தில் அதிக அளவு தென்னை மற்றும் பனை பயிரிடப்பட்டுள்ளன. இப்பகுதியில் மற்றொரு முதன்மையான மரம் என்னவெனில், கவர்ச்சி மிகுந்த இலைகளையுடைய பலா மரமாகும். இம்மாவட்டத்தில், வாழை, மா மற்றும் பலா மரங்கள் பொதுவாகக் காணப்படுகின்றன. மழை காலத்தில் ஒவ்வொரு குழியும் தாவரங்களாலும், சிற்றிலைப் படர் செடியினங்களாலும் நிரம்புகிறது. இப்பிராந்தியத்தின் சமவெளிப் பகுதிகளில், பனைமரத் தோப்புகள் விரிவாக உள்ளன. மாவட்டத்தின் உட் பகுதியில், பலா, அஞ்சிலி, மா, புளி, முந்திரி மற்றும் இவை போன்ற இதர மரங்கள் அதிக அளவில் காணப்படுகின்றன. ஆனால், குன்றுகளின் சரிவிலுள்ள பரப்பில், பலதரப்பட்ட வாழைத் தோப்பு களும், மிரவள்ளிக்கிழங்கும் பயிரிடப்பட்ட நிலங்களும் உள்ளன.

காடுகள் உள்ள பகுதியில், காப்பி, தேயிலை, ரப்பர், மிளகு, ஏலம் போன்ற வணிக ஆதாயம் கொண்டவை அதிக அளவில் பயிரிடப் பட்டுள்ளன.

திருவாங்கூரிலுள்ள காடுகளைப்பற்றி, தெளிவான விவரங்களை அளித்துள்ள திரு.நாகமையா மனச் சோர்வுடன் இவ்வாறு கூறுகிறார்:[18]

"காடுகளைப் பற்றிய மேற்கூறிய விவரங்களை நோக்குங்கால், திருவாங்கூரில், வனச்செல்வம் மிகுந்து இருப்பதான கணிப்பை வாசகர்கள் அளிக்கக்கூடும். ஆனால், கடந்த காலத்தில் காடுகளின் நிலை எப்படியிருந்தாலும் இன்றைய நிலையில் அவையாவும் பொருந்தாக் கற்பனையேயாகும். ஆங்கிலேயர் அரசோச்சிய காலத்தில், பல உயர்தரக் கப்பல்களைக் கட்டுவதற்கு திருவாங்கூர் காடுகளி லிருந்த தேக்கு மரங்களே பயன்படுத்தப்பட்டன. அக்கப்பல்களே, நைல் நதிதீர சண்டையில், ட்ரஃபால்கரில், நெல்சனுக்கு மாபெரும் வெற்றியைத் தேடித்தந்தது. ஆனால், இன்றைய நிலை முற்றிலும் மாறுபட்டது. திருவாங்கூர் காடுகளின் செழிப்பும் அவற்றினின்று பெருகிற செல்வமும் பழங்கதையாகி விட்டது. தொடர்ந்து 100 ஆண்டு காலங்களுக்கு அக்கரையும், சிக்கனமும் முறையாக விழிப் புடன் கடைப்பிடிக்கப்பட்டால், திருவாங்கூர் காடுகளுக்குப் புத்துயிர் அளித்து, அதனால், வேளாண் குடி மக்களுக்கு நற்பயனளிக்க வகை செய்து அவர்களது வாழ்வை வளமாக்கலாமென்பதில் ஐயமில்லை."

வளர்ந்துவரும் மக்கட்தொகை மற்றும் அதனைத் தொடர்ந்து நிலத்தின் தேவை நெருக்கடி ஆகியவை காடுகளின் பரப்பளவைக் குறைத்துள்ளது. நாகமையா அவர்கள் 80 ஆண்டுகளுக்கு முன்னர் வெளிப்படுத்திய செய்தி, இன்றைய நிலையில் பொருத்தமாக உள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள காடுகளைப்பற்றி, முன்னதாக, திருவாளர்கள் ஏ.என்.ஹென்றி மற்றும் எம்.எஸ். சுவாமிநாதன் ஆகியோர் விவரித்துள்ளார்கள்[19]. திருவாளர்கள்

ஆர்.கோபாலன் மற்றும் ஏ.என்.ஹென்றி ஆகியோரின் அண்மைக்கால கணிப்பு பின்வருமாறு:

தெற்கிலுள்ள வெப்பமண்டல வறண்ட, நிலையற்ற மற்றும் மாறுபடக் கூடிய காடுகள்

இவ்வகைக்காடுகள், பேச்சிப்பாறையிலுள்ள குட்டியாறு பிராந்தியம் மற்றும் அழகியபாண்டியபுரம் தொகுதிக்கு அருகாமையிலுள்ள கீரிப்பாறை, மங்கோல்மொட்டை (கீழ் கொடையாறு), குலசேகரம் தொகுதியைச் சார்ந்த மருதப்பாறை முறைக்காவல் பகுதி, உலக்கருவி ஆகிய இடங்களில் 200 முதல் 600 மீட்டர் உயரத்தில் உள்ளன. இந்தப் பிராந்தியத்தில் சில பகுதிகளிலுள்ள காடுகள், ரப்பர் பயிரிடப் பெறுவதற்கான வனத்துறையினரால் அப்புறப்படுத்தப்பட்டன. மரங்கள் அப்புறப்படுத்தப்படாத ஏனைய பகுதியில், *ஹெல்டினா கார்டிஃபோலியா* (ராக்ஸ்ப்) ரிடீடா எல்இ *கோச்லாஸ்பெர்மம் ரிலிஜியாஸம்* (எல்) அல்ஸ்டன், *டில்லீனியா பென்டாக்யனா* ராக்ஸ்ப், *ஹைட்னோகார்பஸ் லெளரிஃபோரியஸ்* (டென்னஸ்ட்) ஸ்ல்யூமெர், *ஹைமினோடிக்டம் எக்ஸெல்ஸம்* (ராக்ஸ்ப்) வால்., *லென்னியா கோரோமான்டெலிகா* (ஹைளட்) மெர்., *லிமிகார்பஸ் அனாகார்டியம்* எல்.எஃப். மற்றும் டெர்மினாலியா சீபுலா (கார்டன்), ரிட்ஸ்., ஆகியவை காணப் படுகின்றன.

டெஸ்மோடியம் ட்ரையாங்குலரி (ரெட்ஸ்) மெர். வார் *கன்ஜெஸ்டம்* (வைட் & ஆர்ன்)சான்ட், ஆகியவை அடிபாகம் வளர்ச்சியற்ற புதர்காடுகளாக உள்ளன. ஆஜினீடியா இன்டிகா எல். மற்றும் ஏ. பெடுன்குலேட்டா (ராக்ஸ்ப்) வால்., ஆகியவை இந்தப் பிராந்தியத்தில், பற்றி வளரும் கொடிவகையாகும்.

தெற்கிலுள்ள வெப்ப மண்டல ஈரமான, நிலையற்ற மற்றும் மாறுபடக் கூடிய காடுகள்

இவ்வகைக் காடுகள் 600 மீட்டர் உயரத்திலுள்ள கீழ் கோதை யாற்றிலுள்ள வல்லச்சித்தோடு, பாலமோர் அருகாமையிலுள்ள கலிகாசம் ஆறு மற்றும் கீழவயறு மலை ஆகிய பகுதிகளில் காணப்படுகின்றன. இவை மிகவும் அடர்த்தியாகக் காட்சியளிக்கின்றன. *அக்ரோணைகியா பெடுன்குலேட்டா* (எல்) மிக், *ஆல்ஸ்டோனியா ஸ்காலாரிஸ்* (எல்.) ஆர்.பிர்., *ஸ்க்லச்ரோபைரம் வாலிசியா நம்* (வைட் & ஆர்ன்) ஆரன். *டெர்ரிஸ் தைர்ஸ் ஃப்ளோரா* (பென்த்)பென்த்வார். யுவலேட்டா (பெட்) டூத், ஆகியவை இப்பகுதியில் காணப்படும் பொது மரங்களாகும். கற்களின் மேல் வளரும் மருந்தின செடிவகைகளான *பெகோனியா ஃப்ளோஸிபெரா* பெட் மற்றும் *பி. மாலாபாரிகா* லாம், ஆகியவை கீழவியாறுமலை மற்றும் வெள்ளச்சித்தோடு ஆகிய பகுதிகளில் ஏராளமாகக் காணப்படுகின்றன.

தெற்கிலுள்ள வெப்ப மண்டல ஈரக்கசிவான என்றும் பசுமைக் காடுகள்

இவ்வகைக்காடுகள், மேல் கோதையாறு, முத்துக்குழிவயல், அதற்குச் செல்லும் வழியிலுள்ள இடங்கள் மற்றும் மஹேந்திரகிரி

ஆகிய இடங்களில் 800 மீட்டர் உயரத்தில், மேய்ச்சல் வெளியை யொட்டியும், அதற்கிடையிலும் உள்ளன. இவை அடர்த்தியாகவும், ஊடுருவிச் செல்ல இடந்தராத வகையிலும் அமைந்துள்ளன. கடுமையான பருவகால மழையினால், நாயுருவி மற்றும் நிலப்பரப்பில் வளரும் பகட்டு வண்ண மலர்ச் செடி ஆகியவை, இந்தப் பிராந்தியத்தில் அதிக அளவு வளர்கின்றன. மரங்கள் மிகவும் உயரமாகவும், மிகப் பெரிய உடற்பகுதியையுடையவையாயுமுள்ளன. முதன்மையான, பொதுவான மரங்கள் மற்றும் புதர்ச் செடிகள் ஆகியவை வருமாறு:

அக்லையா பௌண்டிலோனி காம்பின், *குல்லீனியா எக்ஸஸெரில் லாட்டா* ஏ. ராய்யன்ஸ., *டிமோகார்பஸ லங்கான்* லௌர்., *எலாயோகார்பஸ் முன்ரோயி* (வைட்) மார்ட்., *இ.ட்யூபர்குலேடஸ்* ராக்ஸ்., *இ.வீனஸ்டஸ்* பெட்., *ஜார்சீனியா ட்ராவான் கோரிகா* பெட் *லிங்கஸ்ட்ரம் ட்ராவான் கோரிகம்* காம்பிள் *ளிம்ப்ளோகாஸ் கொச்சின் சினென்ளிஸ்* (லௌர்) மூரே சப்ஸ்,லௌரீனா (ரிட்ஸ்) நூடெப், (எஸ் நைரீ - ஹென்றி, கோபாலன் மற்றும் சுவாமிநாதன்) திருச்சில்லா, கண்ணார், கொன்னா ராய்டெஸ் (வைட் & அர்ன்) பென்ட்வெல்சன், வொர்நோனியா மோனோளில் டி.சி. மற்றும் வி.ட்ராவென் சகாரிகா (ஹநக்ஃஎப்), ஆகியவை இவற்றில் காணப்படும் பொதுமரங்கள் மற்றும் புதர்ச்செடிகளாகும்.

பொதுவாகத் தழுவிச் செல்லக்கூடிய கொடிகள், *எம்பிலியா பாஸல்* (ரோயம் & ஸ்கல்ட்) ஏ.டிசி., *ஸ்மிலெக்ஸ் ஸைலானிகா* எல்., *டெட்ராஸ் டிக்மா ஸரல்காடம்* (லாஸன்) (லாஸன்) கேம்பிள் மற்றும் *சாந்தோக்ஸைலம் டெட்ராஸ்பெர்னம்* வைட் & ஆர்ன் ஆகியவை.

ஆச்சைநாந்தஸ் பெர்ரோட்டெட்டை டிசி., மற்றும் *ஹோயா பாளிஃப்ளோரா* வைட் ஆகியவை பொதுவாக இந்தப்பிராந்தியத்தி லுள்ள நாயுருவி ரகத்தைச் சேர்ந்த செடிகளாகும். மேல் கோதையாறு மற்றும் கீழ்கோதையாறு சரகத்தில், காடுகளின் பெரும்பகுதி கோதையாறு நீர்மின் ஆற்றல் திட்டத்திற்காக அப்புறப்படுத்தப்பட்டது. ரப்பர் பயிரிடுவதற்கும், மேலும் அதனை விரிவுப்படுத்தவும், கீரிப்பாறை, பேச்சிப்பாறை, பெருஞ்சாணி மற்றும் சுற்று வட்டாரங்களிலுள்ள காடுகள் பெருமளவு அகற்றப்பட்டன. மாவட்டத்தில், சிறுகச்சிறுக மறைந்து வரும் செடி, கொடிகளை அழிவதினின்றும் காப்பது இன்றியமையாததாகிறது.

வன விலங்குகள்

வனவிலங்குகளைப் பொறுத்த வரையில்[20] மாவட்டம், முழுநிறைவானதாக உள்ளது. மாவட்டத்தின் குன்றுகளிலுள்ள காடுகள் பல தரப்பட்ட உயிரினங்களைக் கொண்டுள்ளதாக உள்ளன. அவற்றில் பெரும்பாலானவை தென்னிந்திய வகைகளாகும். ஆசாம்புக் காடுகளின் மேல் பகுதிகள் மற்றும் வீரப்புளி, கமலா ஒதுக்குக் காடுகளில் யானைகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. ஆனால், அவை

அடிக்கடி காணப்படும் இடம் மகேந்திர மலையாகும். முத்துக்குழிப் பள்ளத்தாக்குப் பகுதியில், ஆட்டு மந்தைகள் காணப்படுகின்றன. மழைக் காலங்களில், அவை மேலிருந்து கோதையாறு ஏரிக்கு இறங்கி வருவதைக் காணலாம். ஒத்தக்கடை மற்றும் கருங்குன்று எஸ்டேட் சரகத்தில், மேலிருந்து கீழ் பகுதிகளுக்கு புலிகள் இறங்கிவருவது வழக்கமாக உள்ளது. அவ்வாறு அவை அக்டோபர்-நவம்பர் மாதங்களில் இறங்கிவருகின்றன. புலிகளை விட சிறுத்தைகள்தான் அனைத்துக் காடுகளிலும் சஞ்சரிக்கின்றன. 3000 அடி உயரத்திலும் அதற்கு மேலேயுள்ள பகுதிகளிலும் கரடிகள் பொதுவாகத் தோன்றுகின்றன. அவை, சில சமயங்களில் கீழ் மட்டத்திலுள்ள வீரப்பிளி மற்றும் ஆசாம்பு போன்ற காடுகளுக்கு இறங்கி வருகின்றன. ஆசாம்பு வனப்பகுதியின் மேற்புரத்திலும், முத்துக்குழிப் பள்ளத்தாக்கினைச் சுற்றியும் உள்ள பசுமை நிலப்பரப்பிலும் புல் அடர்ந்துள்ள பகுதிகளிலும், காட்டெருதுகள் சிறு மந்தையாக அடிக்கடி செல்கின்றன. முத்துக்குழிக்கணவாய் மற்றும் ஆசாம்புக் காடுகளின் முழுப்பகுதியும், கடமான்களுக்கு விரும்பத்தக்க புகலிடமாகும். புள்ளிமான்கள் மற்றும் இரைச்சலிடும் மான்கள் ஆகியவற்றை இங்கு காண்பது அரிதே. காட்டு நாய்கள் முத்துக்குழிப் பள்ளத்தாக்கில் மிகுந்து காணப்படுகின்றன. குன்றுகளின் பசுமைப்பகுதிகள் மற்றும் சதுப்பு நில நிலையற்ற மற்றும் மாறுபடக்கூடிய நிலையிலுள்ள காடுகள் உள்ள பகுதிகளில் கருங்குரங்குகள் குடியேறியுள்ளன. இவற்றின் தோலுக்காகவும் மருந்து சார்ந்த தசைக்காகவும் இந்த மிருகங்கள் வேட்டையாடப்படுகின்றன வென கூறப்படுகிறது. நரி, கீரி, முயல் நீர்நாய் ஆகியவை இம்மாவட்டத்திலுள்ள மிருகங்களில் சில.

பேச்சிப்பாறைப் பிராந்தியம், ஒரு முழுநிறைவுள்ள விளையாட்டுப் புனிதத்தலமாக வளர்ச்சியடையுமென்பதில் ஐயமில்லை. வனவிலங்குகளைக் கள்ளத்தனமாக வேட்டையாடும் கொடுமை முழுமையாக நிறுத்தப்பட்டால், இம்மாவட்டத்திலுள்ள வன விலங்குகள் நன்கு வளர்ச்சியடைய முடியும்.

உயிரினம்

"திருவாங்கூர் உயிரினம்" கங்கையாற்றின் கிழக்கேயுள்ள துணைப் பிராந்தியம் அடங்கிய புகழ் மிக்க இந்தோ-மலேசியா அல்லது கீழ்த்திசை நாடுகளைச் சார்ந்ததாகுமென ஃபர்கூசன் கோடிட்டுக் காட்டுகிறார்[21]. திருவாங்கூர் குன்றுகளிலுள்ள உயிரினம், இமயமலைத் தொடர் மற்றும் இலங்கையின் தென்மேற்கு குன்றுப் பகுதியிலுள்ள உயிரினங்களுடன் அடிப்படை அமைப்பு ஒப்புகை கொண்டதாக உள்ளனவென அவர் மேலும் குறிப்பிடுகிறார்.

அ) பாலூட்டும் உயிரினம்

இம்மாவட்டத்தில் பத்துவகைப்பட்ட பாலூட்டும் உயிரினங்கள் காணப்படுகின்றன. அவையாவன:

அ) *ஆர்டர் பிரைமடெஸ்* (முன் உலகக் குரங்குகள்)

ஆ) *ஸ்லென்டர் லாரிஸ்* போன்ற *ஆர்டர் லிமுராய்டியா* (நரி முகங்கள் போன்ற அமைப்பைப் பெற்ற குரங்குகள்)
இ) *ஆர்டர் கார்னிவோரி* (பூனைகளும், நாய்களும்)
ஈ) *ஆர்டர் இன்ஸெக்டிவோரா* (முள்ளெலி)
உ) *ஆர்டர் சிரோப்டேரா* (வௌவால்)
ஊ) *ஆர்டர் ரொடென்ஷியா* (அணில்கள், எலிகள், சுண்டெலிகள், முயல்கள் போன்றவை)
எ) *ஆர்டர் ப்ரோபோஸிடியா* (யானைகள்)
ஏ) *ஆர்டர் உன்குலேட்டா* (பன்றிகள், மான்கள் போன்ற பாலூட்டும் உயிரினங்கள்)
ஐ) *ஆர்டர் கார்டேசியா* (திமிங்கிலங்கள், கடற்பன்றிகள் வகை மற்றும் திமிங்கில இனம் சார்ந்த எட்டு அல்லது பத்து அடி நீளமுள்ள அலகுபோன்ற நீண்ட முன்னுறுப்புடைய கடல் விலங்கு வகை)
ஒ) *ஆர்டர் எடண்டடா இந்தியன்* (எறும்புண்ணும் வகையைச் சார்ந்த பல்லில்லாத பாலூட்டும் உயிரினங்கள்)
ஓ) *டபிரைமடெஸ்* (முன் உலகக் குரங்குகள்)

இவை, மாவட்ட முழுவதுமுள்ள ஆழமற்ற நீரடி மணல் திட்டுகளிலும் சதுப்பு நில, நிலையற்ற மற்றும் மாறுபடக்கூடிய நிலையிலுள்ள காடுகளிலும் காணப்படுகின்றன. இவற்றில் நான்கு வகைகளுள்ளன. அவையாவன :

1) சாம்பல் நிறமுள்ள அல்லது இரண்டாவது வயிறு உள்ள குரங்குகள் *(மகேஸஸ் லினிகஸ்)*
2) டோக்யூ குரங்குகள் *(எம்.பிலியாடஸ்)*
3) சிங்கம் போன்ற வாலினைப் பெற்ற குரங்கு *(மெக்குகஸ் ஸிலென்பஸ்)*, மற்றும்
4) நீலகிரி வகை, நீண்ட வாலுடைய குரங்கு.

இவற்றில் முதலிரண்டு வகைகளும் தாழ்வான பிரதேசத்திலுள்ளன. ஏனைய இரண்டுவகைகளும் குன்றுகளின் 2000 அடி உயரத்தில் உள்ளன. நீலகிரி வகை, நீண்ட வாலுடைய குரங்குகளின் தசை ஆயுர்வேத மருந்துகளுக்குப் பயன்படுத்தப் படுகிறது. இந்த மிருகங்கள் யாவும் தீராப்பெரும்பசியுடையவை. காடுகளிலுள்ள பழவகைகளை இடைவிடாது உண்டு வாழ்பவை.

ஆ) லிமுராய்டியா

இந்த வகையைச் சார்ந்த குரங்குகள் மிகவும் அரிதாகவே உள்ளன. *ஸ்லென்டர் லாரிஸ்* என்ற வகை உட்பகுதி காடுகளில் காணப் படுகின்றன.

இ) கார்னிவோரி (பூனைகளும், நாய்களும்)

கார்னிவோரி அல்லது இரைவிலங்கு, இம்மாவட்டத்தில் அதிக அளவில் உள்ளன.

புலிகள் *(பெலிஸ் டைக்ரிஸ்)* மாவட்டத்தின் கருங்குன்று

எஸ்டேட் பகுதிகளில் நன்கு காணப்படுகின்றன. அக்டோபர்-நவம்பர் மாதங்களில் இந்த மிருகங்கள், கீழேயுள்ள பகுதிகளுக்கு இறங்கிவருகின்றன. காடுகளின் எல்லையையொட்டியுள்ள கிராமங்களிலும் இவை காணப்படுகின்றன. அவை இயற்கையிலேயே பன்றிகள், மான்கள் மற்றும் முள்ளம்பன்றிகள் போன்ற மிருகங்களை அழித்திடும் இயல்புடையவை. சில சமயங்களில். இளம் காட்டெருதுகளும், இவற்றிற்கு பலியாகின்றன,

சிறுத்தைகள் (ஃபெலிஸ் பார்டஸ்)

இவை குறுங்காடுகளிலிருந்து, சதுப்பு நில நிலையற்ற மற்றும் மாறுபடக்கூடிய நிலையிலுள்ள பெரிய காடுகள் வரை, அனைத்துக் காடுகளிலும் காணப்படுகின்றன. அவை அடிக்கடி ஆடுகள், கால்நடைகள், கடமான்கள், நாய்கள், நரிகள் ஆகியவற்றைக்கொன்று இறையாக்கிக் கொள்கின்றன.

கரடிகள் (தேனுண்ணுங் கரடிவகை)

மெலூர்ஸ்ஸா உர்ளின்ஸா, வழக்கமாக குன்றுகளின் 3000 அடி உயரத்திற்கும் மேலே தான் வாழ்கின்றன. சில நேரங்களில் அவை, கீழ்ப்பகுதிகளிலுள்ள வீரப்புலி மற்றும் அசாம்பு ஒதுக்குக் காட்டுப் புறங்களுக்கு இறங்குவதுமுண்டு. அவை, குன்றுகளின் பக்கவாட்டிலுள்ள குகைகளை இருப்பிடமாகக் கொண்டுள்ளன. அவை, பசுமையான காடுகளிலுள்ள காட்டியல்பான பழங்கள், கொட்டைகள் ஆகியவற்றை உண்டு உயிர்வாழ்கின்றன. வழக்கமாக, அவை மனிதர்களுக்கு எவ்விதத் தீங்கும் விளைவிப்பதில்லை. ஆனால், அவைகளின் குட்டிகளைக் காப்பதன் நிமித்தம், சிலநேரங்களில் மலைவாழ் மக்களைத் துன்புறுத்தவும் அஞ்சுவதில்லை.

காட்டு நாய்கள் *(சியான் சுகுனென்ளிஸ்)* குன்றுகளை இருப்பிடமாகக் கொண்டுள்ளன. அவற்றில் பல, முத்துக்குழி பள்ளத்தாக்குகளில் காணப்படுகின்றன. அவை. கும்பலாக, அதாவது ஆறு முதல் 12 வரை சேர்ந்து கொண்டு, மான், காட்டுப்பன்றி ஆகியவற்றைத் தாக்கி வேட்டையாடுகின்றன.

கீரிகள், குன்றுகளின் தாழ்வான பகுதிகளிலும் குறுங்குன்றுகளிலும் வாழ்கின்றன. அவற்றில் நான்கு வகைகள் இங்கே காணப்படுகின்றன. அவற்றில் மிகவும் பிரசித்தி பெற்றது, மங்கலான சாம்பல் நிறம் கொண்ட, குட்டையான கால்கள் மற்றும் நீண்ட உடற்பகுதியைக் கொண்ட *ஹார்பெஸ்டெஸ் எட்வார்ட்சிட்* என்ற வகையாகும்.

வீட்டில் வாழும் பூனைகளை விட, உருவத்தில் சற்று பெரியவையான காட்டுப்பூனைகள் (பெலிஸ் செளஸ்) குன்றுகளின் தாழ்வான பகுதியில் வாழ்கின்றன. இந்தப் பூனைகள் அடுத்துள்ள கிராமங்களிலுள்ள பண்ணைகளை அடிக்கடி தாக்கி சேதம் விளைவிக்கின்றன. குள்ளநரிகளும், நரிகளும் குறுங்குன்றுகளில் பொதுவாகக் காணப்படும் மிருகங்களாகும்.

ஈ) புழுப்பூச்சியுண்ணும் சிறு பாலுண்ணியின உயிர்களில் ஒன்று (ஸ்ரீனிக்யுவஸ் மைக்ரோபஸ்)

தென்னிந்திய வகையைச் சார்ந்த ஒரே முள்ளெலிதான் தென் பகுதி முழுமையும் வாழ்கிறது. மாவட்டத்தில் இந்த ஒரு வகைதான் காணப்படுகிறது.

உ) வெளவால் இனம் - பொதுவாக மாவட்டத்தில் வெளவால்கள் காணப்படுகின்றன. பழங்களை உண்டு வாழும் அகல விரிவான வெளவால்கள் "பழம் உண்ணும் வெளவால்கள்" என்று அழைக்கப்படு கின்றன. மாவட்டத்தில் பலவகைப்பட்ட வெளவால்கள் உள்ளன. அவையாவன:

ப்டீரோபஸ் மீடியஸ் (ஜைஜாண்டல்), *ஸைனோப்டெரஸ் மார்ஜீனடஸ், வெஸ்பெருகோ அப்ராமஸ்* மற்றும் *செரிவோலுவா பிக்ட்டா.*

இவற்றில் முதல்வகையானது, நரியின் முகத்தைப் பிரதிபலிக்கும் மிகப்பெரிய இந்திய வெளவால் இனத்தைச் சார்ந்தது. இவற்றில் பொதுவாகக் காணப்படுவது *வெஸ்பெருகோ* என்ற இனமாகும். அவை பகல் நேரங்களில் மரப்பொந்துகளிலும், வீட்டுக்கூரைகளிலும் ஒளிந்து வாழும். அந்தி சாயும் நேரத்தில். சிறு பூச்சிகளைத் தேடி, வீடுகளில் அங்குமிங்கும் பறந்து பொழுதைக் கழிக்கும் *ஸெரிவெளலா பிக்டா* என்ற இனம் மிக அழகான வண்ணத்தில் காணப்படும்.

ஊ) ரொடென்ஷியா : (அணில்கள், எலிகள், சுண்டெலிகள், முயல்கள் ஆகியவை).

அணில்களில், பனை அணில் அல்லது வரியிட்ட அணில், கிராமப் புறங்களில் அதிகமாகக் காணப்படுகிறது. முதுகில் மூன்று வண்ண வரிகள், வழ வழப்பான ரோமங்களையுடைய நீண்டு நெளிந்த வால், நகரும் போது எழுப்பும் எளிமையான ஒலி ஆகியவற்றை ஒருங்கே பெற்ற மிக அழகான உயிரினம்தான் கிராமப்புற அணில். மற்றொரு வகை, கரும் பழுப்பு நிறத்திலான மலபார் அணில் எனப்படும். இதனுடைய உடலின், கீழ்ப்பகுதி வெளுப்பாகவும், வால் கறுப்பாகவும் அமைந்திருக்கும். இது சதுப்பு நில, நிலையற்ற மற்றும் மாறுபடக் கூடிய நிலையிலுள்ள காடுகளிலும், பசுமைக் காடுகளிலுமுள்ள மிக உயர்ந்த காடுகளின் மரப் பொந்துகளிலும் வாழ்கிறது. இது ஒதுக்குக் காடுகளில் வேட்டையாடப் பெறாத, பாதுகாக்கப்பட்ட உயிரினங்களிலொன்றாகும்.

ஹைஸ்ட்ரிக் லெளகூரா (இந்தியாவிலுள்ள முள்ளம்பன்றி) அனைத்துக் காடுகளிலும் காணப்படுகின்றன. இவை பயிர்வகைகளை அழிக்கும் தன்மையுடையவை. பகல் நேரங்களில் இவை ஆற்றின் கரைகளிலும் குன்றுகளின் பக்க வாட்டிலும் உள்ள குகைகள் அல்லது தம்மால் உருவாக்கப்பட்ட வளைகள் ஆகியவற்றில் வாழும்.

எலிகள், சுண்டெலிகள், முயல்கள் ஆகியவை பொதுவாகக் காணப்படும் வேறு உயிரினங்களாகும். அவை நாற்றங்கால்களை

அழிக்கும் தன்மையுடையன. *மஸ் ராட்டியஸ்* என்ற எலிவகை வீடுகளில் வாழ்பவை. இவை மிகுந்த தொல்லை கொடுக்கும் உயிரினமாகும். *மஸ் பூடுஜி* என்பவை தோட்டங்களை சேதப்படுத்தும் இந்திய நில சுண்டெலி இனமாகும்.

எ) ப்ரோபோஸிடியா (யானைகள்):

கோதையாறு மற்றும் பெருஞ்சாணை நீர்த்தேக்கங்களைச் சுற்றியுள்ள பகுதிகள் மற்றும் கோரிமான்யா - பாலமார் சாலைகள் ஆகிய பகுதிகளில் யானைகள் மிகுந்த தேசம் விளைவிக்கின்றன. இளம் மரங்களை வேருடன் சாய்த்து தரையில் மிதித்தும், பெரிய மரங்களின் கிளைகளை உடைத்துச்சாய்த்தும் இன்னல் விளைவிக் கின்றன. இவை ஆசாம்பு மற்றும் வீரப்புளி ஒதுக்குக் காடுகளின் உயரமான மேல் பகுதிகளில் அதிகமாகத் தென்படுகின்றன. ஆனால், இப்பகுதிகளில் காணப்படும் யானைகள் இயற்கையிலேயே அஞ்சி மருகுகிற இயல்புடையவை. முரட்டு ஆண் யானைகளும் எப்பொழுதா வது காணப்படுவதுண்டு.

ஏ) உன்குலாட்டா (பன்றிகள், மான்கள் போன்றவை)

மான்கள், மாவட்டத்துக் குன்றுகளிலுள்ள அனைத்துக் காடுகளிலும் தென்படுகின்றன. மாவட்டத்தில் மூன்று வகையான மான்கள் உள்ளன. அவையாவன: புள்ளி மான்கள் *(கார்வஸ் ஆக்ஸிஸ்)* சாம்பர் *(கார்வஸ் யுனிகலர்)*, இரைச்சல் எழுப்பும் மான்கள் *(ஸெரிவ்லஸ் முன்ட்ஜாக்)*. முத்துக்குழிப்பள்ளதாக்கு மற்றும் ஆசாம்பு காடுகள் ஆகியவை, சாம்பர் இன மான்களுக்கு உகந்த புகலிடங்களாகும். காட்டெருதுகள் *(போஸ்கௌரூஸ்)* தான், எருதினங்களிலேயே மாவட்டத்துக் காடுகளில் அதிகமாகக் காணப்படுபவையாகும். அவை 5000 அடி உயரத்திலுள்ள குன்றுகளின் பாறைக் குகைகளில் வாழ்கின்றன. முத்துக்குழிப் பள்ளத்தாக்கு மற்றும் ஆசாம்பு காடுகளின் உயர்ந்த பகுதிகள் ஆகியவற்றிலுள்ள பசுமையான நிலப்பரப்புகள், மற்றும் புல் தரைகள் ஆகியவற்றில் எருதுகள் மந்தையாகக் காணப்படுகின்றன. பொதுவாக அவை இயற்கையிலேயே அஞ்சி மருளுகிற இயல்புடையவை.

உள் வாங்கிய பெரிய கொம்புகளையுடைய மலையாடுகள், காட்டாடுகள் என அழைக்கப்படுகின்றன. இவை பெரும்பாலும் குன்றுகளின் புல் சரிவுகளில் மேய்கின்றன.

குன்றுகளிலும் புதர் நிறைந்த குறுங்காடுகளிலும் காட்டுக் கரடிகள் *(சஸ்கிரிட்ஸாட்டஸ்)* மந்தை மந்தையாகக் காணப்படுகின்றன. அவை, நிலக்கடலை மற்றும் கிழங்குவகைப் பயிர்களை அழிக்கும் இயல்புடையவை. அவை எல்லாக் காட்டு மிருகங்களிலும் மிக துணிச்சலுடையவையெனவும், இறுதிவரை விடாமுயற்சியுடன் எதிர்த்துப் போரிடும் திறனுள்ளவையெனவும் கருதப்படுகின்றன. இம்மாதிரியான சண்டை காட்டுக் கரடி, புலி ஆகியவற்றிற்க்கிடையே அடிக்கடி நிகழ்வதைக் காணமுடிகிறது.

ஐ) கார்ட்டேஷியா (திமிங்கிலங்கள், கடற் பன்றிகள் மற்றும் திமிங்கில இனம் சார்ந்த எட்டு அல்லது பத்து அடி நீளமுள்ள அலகு போன்ற நீண்ட முன்னுறுப்புடைய கடல் விலங்கு வகை).

மேற்குறிப்பிட்ட நீண்ட முன்னுறுப்புடைய கடல் விலங்கு மற்றும் கடற்பன்றிகள், ஆற்று வாயில்களிலும், உப்பங்கழிகளிலும், காணப் படுகின்றன. கரைகளில் தரமுள்ள ஒன்றிரண்டைத் தவிர, இம் மாவட்டத்தில், திமிங்கலங்கள் காணப்படுவதில்லை. 1904 ஆம் ஆண்டு, இராஜாக்கமங்கலம் கடற்கரையில், துடுப்பு போன்ற உறுப்பைப்பெற்ற திமிங்கிலமும் தகட்டெலும்புடன் கூடிய திமிங்கல மும், தனித்து செயலற்ற நிலையில் இருந்தமை கண்டறியப்பட்டது.

ஈடென்டாட்டா இன்டியன் (இந்தியன் எறும்புண்ணும் விலங்கு வகை). இவை பல்லில்லாத பாலூட்டும் உயிரினவகையைச் சேர்ந்தவையாகும். இந்தியன் பங்கோலின் அல்லது செதிழ்கள் மூடிய எறும்புண்ணும், இரவில் நடமாடுகிற இவ்வகை உயிரினம், காடுகளின் தோட்டங்களில் காணப்படுகின்றன.

பறவைகள்

இம்மாவட்டத்திலுள்ள காடுகள் பல இனங்களைச் சார்ந்த பறவைகளுக்கு இடமளிக்கின்றன. இந்த சரகத்தில் 360 வகைகள் காணப்படுகின்றன. இந்த சரகத்திலுள்ள பறவையினங்களின் வளத்தை அறிய வேண்டுமெனில், தென்னிந்திய கிளைகளைப் பற்றிக்கொண்டு அமர்வதற்கேற்ற கால்களையுடைய 204 பறவையினங்களில், 140 பறவையினங்கள், இந்த சரகத்தில் இருப்பதிலிருந்தே தெரியவரும்.

இந்திய பறவைகளிலேயே மிகவும் பெரியனவாகக் காணப்படும் வீட்டுக் காக்கை *(கார்வஸ் ஸ்ப்ளென்டென்ஸ் ஸ்ப்ளென்டென்ஸ்)* என்பது இம்மாவட்டத்தில் பரவலாகக் காணப்படுகிறது. காட்டுக் காக்கையை விட வீட்டுக்காக்கை, உடலளவில் சற்று சிறியதாக உள்ளது. இருப்பினும், பளபளப்பான மைக்கரு நிறமுடையது காட்டுக்காக்கை மாறுபட்டிருக்கிறது. அதனுடைய குரல், இயல்பான வீட்டுக் காக்கையின் குரலினின்றும் வேறுபடுகின்றது. அதனுடைய கரைகுரல் ஆழமிக்கதாகவும், கேட்க அருவருப்பாகவும் இருக்கும். அவற்றை அடிக்கடி நாம் கிராமப்புறத்திலும் பார்க்கிறோம். வழக்கமாக அது தனிமையாகத்தான் உள்ளது. அது கூட்டமாகப் பறப்பது மிக அரிதாக இருக்கும். பருவ காலத்தில், கசப்பான காட்டு ஆப்பிள் பழம், அதனுடைய உணவாகும்.

நீண்ட கால்களையுடைய இன்னிசைப் பறவை, இரட்டை இரட்டையாகவோ அல்லது கூட்டமாகவோ, தாழ்ந்த குத்துச்செடிக ளிலோ, அல்லது தரையின் மீதோ செல்கின்றன. இவற்றில் இரண்டு வகைகள் உள்ளன. அவை, (1) காட்டு இன்னிசைப்பறவை மற்றும் (2) இயல்பான இன்னிசைப்பறவை, காட்டு இன்னிசைப் பறவை, மணல் போன்ற பழுப்பு நிறமுடையது, நீண்ட வாலையுடைய இப்பறவை தூய்மையற்ற நிலையில் காணப்படும். இந்நீண்ட

வாலினால் எப்பொழுதும் தனது உடல் பகுதியில் அடித்துக்கொள்வது போன்றதொரு செய்கையினை தோற்றுவிக்கும். அது உணவு உட்கொள்ளும்பொழுது, ஒலியை எழுப்பிக்கொண்டேயிருக்கும். அந்த ஒலி சிறிது சிறிதாக, உரத்த குரலில் எழும்பும். வறண்ட சமவெளிப்பகுதியில் காணப்படும், இயல்பான இன்னிசைப்பறவை, காட்டு இன்னிசைப் பறவையைவிட, மெல்லிய உடலமைப்புக் கொண்டது. அடிக்கடி அவற்றை நாம் ஏழு அல்லது எட்டுப் பறவைகள் கொண்ட கூட்டமாகக் காண்பதுண்டு. அவை பெரும்பாலும் நிலப் பரப்பில்தான் உட்கொண்டு வாழ்கின்றன. அவை ஓடிச் செல்லும்போது, அவை ஆட்டிச்செல்லும் நான்கு அங்குல நீளமுள்ள வால், எலி வாலை ஆட்டிச்செல்வது போன்ற ஒரு தோற்றத்தை அளிக்கும். இப்பறவைகள் மனதிற்குகந்த, சிலிர்ப்பூட்டும் ஒலியினைத் தொடர்ந்து எழுப்பும்.

அதிகாலை வேளை, அல்லது அந்தி சாயும் நேரம் அல்லது நடுநிசியில், குயிலின் இனிமையான குரலை நாம் கேட்க முடிகிறது. குயில், காக்கையைப்போன்ற உடலமைப்பைப் பெற்ற, பெரிய கரிய நிறப்பறவையாகும். அது நீண்ட வாலையும், பச்சை நிற அலகையும் கொண்டதாகும்.

அழகான வண்ணமுள்ள மற்றொரு பறவை, கிளி இனத்தைச் சார்ந்ததாகும். இப்பறவையின் சிறகும், வாலும் கறுப்பாக இருக்கும். இதன் கண்கள் மூலமாக ஒளிநிற வண்ணக்கோடுகள் வெளிப்படும். இப்பறவை பழந்தோட்டங்கள் மற்றும் சோலைகளில், புளி, வாழை, மா போன்ற மரங்களில் வாழ்ந்து, அவற்றின் கனிகளை விரும்பி உண்ணும். இப்பறவை மென்மையான, கணிந்த குரலிசையை எழுப்பும். இந்தியக் குருவி, பொதுவாக நமது கிராமங்களில் காணப்படும் பறவைகளிலொன்றாகும். இது அடிக்கடி கிராமப் புறங்களின் திறந்த வெளிகளிலும், வறண்ட பகுதிகளிலும் பறந்து திரியும். நமது வீட்டுத்தோட்டங்களிலும், வீட்டு வளாகத்திலும் இதனை நாம் அவ்வப்போது காணலாம். இது, வாலின் அடிப்பாகத்தில், சிவப்பு வண்ணத்தைக் கொண்ட கருநிறப் பறவையாகும். இது பறக்கும்போது, ஒவ்வொரு இறகிலும், வெள்ளை நிற வட்டப்பட்டைகள் தெரியும். பல்வகை புழுப்பூச்சிகளும், கம்பளிப்பூச்சிகளும் இதன் முதன்மை உணவாகும். *தயால்* என்ற மற்றொரு குருவியினமும் உண்டு. இப்பறவை குடியிருப்புப் பகுதிகளின் அருகில் காணப்படும். இந்தியக் குருவியைப் போன்றே இப்பறவையும் சீரான கறுப்பு, வெள்ளை நிற வடிவமைப்பையும், குவிந்த வாலையும் பெற்றிருக்கும்; இது நன்றாகப் பாடவல்லது.

இலைகளைத் தைத்திணைத்துக் கடமைக்கும் பறவைவகையைச் சார்ந்த இப்பறவை *(ஆர்த்தோடோமஸ் ஸ்யூடோரியஸ்)* ஓய்வின்றி அலைந்து திரியும் பச்சை நிறப் பறவையாகும். இது அடிக்கடி கிராமப்புறங்களுக்கு வருகை தருகிறது. இஃது எழுப்பும் இனிமையான ("டுவிட்", "டுவிட்" என்ற) ஒலியானது, பாடுபவர் பழக்கப்பட்டு எழுப்பும் பாட்டொலிக்கு ஈடானது.

சிவப்புத் தொளையுடைய "புல் புல்" என்ற *(னீபக்நோநோட்டஸ் கேஃபர்விஸினெஸ்)* இனிமையாகப் பாடும் பறவை வகை. இந்தியா முழுமையும் 4000 அடி உயரமான பகுதிகளில் அதிகமாக உள்ளது. இது கறுப்பு வண்ணத் தலைப் பகுதியினைக் கொண்ட பழுப்பு நிறப் பறவையாகும். இது மார்பிலும், முதுகிலும் செதில் போன்ற குறிகளையும், வாலில் வெளிப்படையாகத் தெரியக்கூடிய செந்நிறமுள்ள வட்டப் பட்டைகளையும் கொண்ட பறவையாகும். இது சமவெளிப்பகுதிகளில், அதிக பழங்களைக் கொண்ட வாழை மரங்கள் போன்று, உணவு எங்கு அதிகம் கிடைக்கிறதோ, அப்பகுதிகளில் காணப்படுகிறது.

பல தடவை நாம், நமது வீட்டுத் தோட்டங்களிலும். சோலைகளிலும். பல வண்ணங்களையுடைய அயோரா (எகிதி நாட்டி ஃபியா) என்ற சிறு பறவையைப் பார்த்திருக்கிறோம். அவற்றில் பெண் பறவைகளின் நிறம், பச்சையாகும். பொதுவாக இப்பறவைகள் ஜோடியாகவே செல்கின்றன. இவை ஒவ்வொரு குச்சி அல்லது கம்பிலிருந்து மற்றொன்றிற்குத் தத்தித் தத்திச்சென்று, கம்பளிப்பூச்சிகள் மற்றும் இதர புழுக்களைப் பிடித்து உண்டு வாழ்கின்றன. இவை இனிமையான குரலெழுப்பி அல்லது இசையொலியெழுப்பி, ஏனைய பறவைகளுடன் தொடர்பு கொள்கின்றன.

கொல்பறவை வகைகளில், வண்ணத்துப் பூச்சிவகைகள் மிகப் பொதுவாகக் காணக்கூடியவை. இவை மரங்கள் நிறைந்த பகுதிகளிலும், பசுமையான குறுங்காடுகளிலும் வாழகின்றன. இவை "வீட்வீட்"- அல்லது "வி-ரீ-ரீ" என்ற ரம்யமாக குரலினை எழுப்பக் கூடியவை.

அரச காக்கை *(டிக்ருரஸ் மாக்ரோஸெர்க்கஸ்)* என்றழைக்கப்படும், பிளவுபட்ட வாலையுள்ள கருமை நிறப் பறவை, நாட்டுப்புறப் பகுதிகளில் அடிக்கடி காணப்படுகிறது. இது புழு பூச்சிகளை உண்டு வாழ்கிறது. வேளாண்மை பணிக்கு இது எவ்வித இடையூறும் விளைவிப்பதில்லை: எனவே,இது, 'உழவனின் நண்பன்' என்று அழைக்கப்படுகிறது.

புல் தரைகளில் சாதாரண மைனா (அக்ரி டோதெரஸ் டிரிஸ்டிஸ்) அடிக்கடி நடப்பதை நாம் காணலாம். இதனுடைய குஞ்சுகளும் பழுப்பு நிறத்திலிருக்கும். அதன் அலகோ ஒளிவிடும் மஞ்சள் நிறமானது. இப்பறவை பறக்கும்போது, இதனுடைய சிறகில் ஒரு பெரிய வெள்ளை நிற வட்டப்பட்டை தெரியும். இதனுடைய குஞ்சு, பிறர்போல் நடித்துக் காட்டவல்லது. அதற்குப் பேசக் கற்றுக் கொடுக்கலாம். மற்ற பறவைகளின் குரலொலியை அது வழக்கமாக நடித்துக்காட்டும்.

பொது தூக்கணாங்குருவி, சிட்டுக்குருவியைப் போன்ற உடலமைப்புடைய பறவையாகும். தென்னை மற்றும் பனை மரச்சோலைகளில், இவற்றின் செயல் மிகவும் வியக்கத்தக்கதாகும். இவை குடுவையைப் போன்று வடிவுடைய தங்களது கூடுகளை,

மரத்திலிருந்து அவை தொங்குவது போன்றதொரு அமைப்பில், நெய்கின்றன. இக்கூடுகள் மரத்தினின்றும் தொங்கினாலும், நல்ல பிடிப்புடன் இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். அவ்வாறு தொங்கும் கூட்டின் கீழ்புறமிருந்து தான் இவை உள்ளே நுழைகின்றன. வழக்கமாக. தென்னை-பனை போன்ற ஒற்றைத்தடி மரவகைகளைத் தான் இவை கூடுகட்ட தேர்ந்தெடுக்கின்றன. அவற்றில் மிகச் சிறந்தவை, தென்னையோலைகளிலுள்ள வண்ணக்கோடு போன்ற பகுதியேயாகும். இவை இலையின் முனையைத் தங்களது அலகு களால் பற்றி இழுத்து, பின்னர் நீளமான மெல்லிய நார்களை உருவாக்குகின்றன. அதன்பின், கூட்டின் கழுத்துப்புறத்தை இரட்டையாக உருவாகுமாறு சேர்த்து இணைக்கின்றன. கூடு, படிப்படியாக, தலைகீழாகத் திருப்பியமைக்கப் பெற்ற திராட்சை சாறுக்குப்பியைப் போன்றதொரு அல்லது குடும்பத்தை உள்ளடக்கும் அளவிற்காக மணி போன்றதொரு உருப்பெறுகிறது. பிறகு அந்த மணியின் வாய்ப்பகுதி இரு கூறாகப் பிரிக்கப்படுகிறது. ஒன்று முட்டையிட ஏற்ற அளவிற்கு, அமைக்கப்படுகிறது. மற்றொன்று நீண்ட கழுத்தைப்போன்ற அமைப்பில் உருவாக்கப்படுகிறது.

இறகுகளின் தொகுதிகளில். கறுப்பு வண்ணக்கோடுகளைப் பெற்றுள்ள சிட்டுக்குருவிகளைப் போன்று தோற்றமளிக்கும் வானம்பாடி, குன்றுகளிலும் அவற்றின் கீழ்ப்பகுதிகளிலும் அடிக்கடி தோன்றுகின்றன. அவை, விநோதமாக சிறகடித்து துடிதுடிப்புடன் பறக்கும் இயல்புள்ளவை. மேலும், பாராட்டுத் திறனுடைய இசைக்குரலை எழுப்பவல்லவை. இனப்பெருக்க காலத்தில் ஆண் இனப்பறவைகள் பலர் அறிய கவர்ச்சியாகப் பாடக் கூடியவை.

பகட்டு வண்ண இறகுத் தொகுதியுடைய பறவை வகை அல்லது பெரிய ஆஸதிரேலிய இனப் பறவை வகை, தோட்டங்களில் அடிக்கடி, எழில்மிகு வண்ணத்தில் காணப்படும் சிறிய பறவைகளாகும். அவற்றில் மூன்று வகையுண்டு அவையாவன: *சின்னைரிஸ் ஸைலானிக்கா, சின்னைரிஸ் அஸிஸ்ஸாடிகா,* மற்றும் *சின்னைரிஸ் லோடெனியா.*

மரங்கொத்தி பொதுவாகக் காணப்படும் பறவை வகைகளாகும். அவை அடிமரங்களில் காணும் பூச்சி புழுக்களை உண்டு வாழ்கின்றன. அவை, மரங்களின் அமைப்பில் பல வளைவுகளிருப்பினும், உச்சியி லிருந்து, அடிமரம் வரை, எவ்விதத் தடங்கலுமின்றி ஏறி இறங்கும் திறன் படைத்தவை. அவற்றின் தலை எப்பொழுதும் மேல்நோக்கியே காணப்படும். அவை தங்களது கூடுகளைப் பட்டுப்போன மரங்களின் அடி மரங்களிலேயே கட்டுகின்றன. இப்குதிகளில் வழக்கமாகக் காணப்படும் வகைகள் யாதெனில், தங்கநிற முதுகுப்புறமுள்ள மரங்கொத்தி, *(ப்ராசைப்டெரௌஸ் பெங்காலென்ஸிஸ்),* முன்புறம் மஞ்சள் நிறமுள்ள பல வண்ண மரங்கொத்தி, *(ட்ரையோபேடஸ் மஹ்ராட்டென்சிஸ்),* மற்றும் தெற்கத்திய செம்முப்பான மரங்கொத்தி *(மைக்ராப்டெர்ன்ஸ் ப்ராச்யூரஸ்)* ஆகியவையாகும்.

பாடும் பறவை வகை

பாறைக்குன்றுகளின் சிற்றாறு ஓரங்களில். கருநீல நிறமுள்ள மலபார் பாடும் பறவை வகையினத்தின் இனிய குரல் கேட்கப் படுகிறது. இனப்பெருக்க காலத்தில், அவை மனித இனத்தின் எழில் மிக்க குரலையொத்து குரலெழுப்புகின்றன. எனவே, அவை "சீழ்க்கையொலி எழுப்பும் (சீட்டியடிக்கும்) பள்ளி மாணவன்" என அழைக்கப்படுகின்றன. நீரில் வாழும் புழுக்கள், நத்தைகள், நண்டுகள் ஆகியவை இவற்றின் உணவாகும்.

அழகு வண்ணச் சிறகுகளையுடைய, பறக்கும்போதே ஈக்களைப் பிடித்துத் தின்னும் பறவை வகை, நிழல்தரும் சோலைகள், தோட்டங்கள் மற்றும் சதுப்பு நில நிலையற்ற மற்றும் மாறுபடக்கூடிய நிலையிலுள்ள குறுங்காடுகள் ஆகியவற்றில் அடிக்கடி தோன்று கின்றன. அவை, நாடாபோன்ற நீளமான இரண்டு இறகுகளையும், கருத்த தலையினையும் கொண்ட வெள்ளை வண்ண பறவைகளாகும். பெண் இனத்தைச் சார்ந்தவை புல்புல் போன்று தோற்றமளிக்கின்றன. அவை சாம்பல் கலந்த வெள்ளை வண்ணத்தில் வடிவமைப்புப் பெற்றவை, வீட்டு சிட்டுக்குருவிகள், குடியிருப்புப்பகுதிகள் எங்குள்ளனவோ அங்கு மிகுந்த அளவில் காணப்படுகின்றன.

கிளிகள் பெரும்பாலும் குன்றுகள் மற்றும் மரங்கள் நிறைந்த பகுதிகளில் வாழ்கின்றன. நாடு முழுவதும் பெண் இனத்தைச் சேர்ந்த கிளிகள் பச்சையாக இருக்கும், ஆனால், ஆண் இனத்தைச் சேர்ந்தவை, ரோசா நிறமுடைய கழுத்துப்பட்டையுடையனவாக, அதனைச்சுற்றி சுருக்கு அணியப்பட்டதொரு தோற்றத்தையளிக்கும். அவற்றின் அலகு பவழச் சிவப்பில் அமைந்துள்ளது. தானியம், பழங்கள் ஆகியன அவற்றின் உணவாகும். அறுவடைத்தருணத் திலுள்ள பயிர்களுக்கு இவை மிகுந்த சேதமுண்டாக்கும். இவை பறக்கும்போது மிகவும் கவர்ச்சியாகக் காட்சியளிக்கும்.

வெள்ளத்தில் மூழ்கிக் கிடக்கும் நெல்வயல்கள், குட்டைகள், கிணறுகள் மணல் மேலிட்ட கடற்கரைகள் ஆகியவற்றில் மீன் கொத்திப் பறவை, மிகுந்து காணப்படுகிறது. நீல இரத்தினக்கல் வண்ணத்தில் காணப்படும் இப்பறவையின் தலை பழுப்பாகவும், முன்புறம் வெள்ளையாகவும், அலகு சிவப்பாகவும் இருக்கும். மரங்களின் வெற்றுக்கிளைகளில் பாதுகாப்பான இடத்திலமர்ந்து கொண்டு கிராமப்புறத்தை கணிக்கும். ஊர்ந்து செல்கிற புழுப்பூச்சிகளை நொடிப்பொழுதில் கொத்தி எடுத்துக்கொண்டு, அதனுடன் பறந்து சென்று மற்றொரு பாதுகாப்பான இடத்தில் அமர்ந்து கொண்டுஅதனை உண்ணும்.

தேனீக்களை உண்ணும் பறவை இனம் இப்பகுதியில் வெகுவாகக் காணப்படுகிறது. இந்த மெல்லிய ஒளிமிக்க பச்சை நிறப்பறவை, சிவந்த பழுப்பு நிறத்தில் தனது தலை மற்றும் கழுத்தினைப் பெற்றுள்ளது. இதனுடைய வாலின் இறகுகளுடைய நடுப்பகுதி மிக

நீண்டுள்ளது. இப்பறவைகள் செவிக்கினிய 'டிட், 'டிட், 'டிட்' என்ற ஒலியை எழுப்புகின்றன.

இந்திய நீலநிற மாடப்புறாக்கள் எல்லா சமவெளிப்பரப்பிலும் காணப்படுகின்றன. கற்பலகையையொத்த சாம்பல் நிறமுடைய இப்பறவைகள், கழுத்தைச் சுற்றிலும் மினுமினுக்கும் வண்ணத்தைப் பெற்றுள்ளன.

சண்டைக் கோழிகளில், குறுங்காட்டு சண்டைக்கோழி, மிகவும் பொதுவாகக் காணப்படும் கோழி இனமாகும். *(காலஸ் சொன்னெரட்டி)* மூங்கில் மரங்கள் மலர்ந்து, காய்விடும்போது இவை, இனப்பெருக்கம் செய்யும், அழகிய பாண்டியபுரம் சரகத்திலுள்ள ஆசாம்பு காடுகள்தான் இவை தங்கி வாழ்வதற்குத் தகுந்த இடமாகும். சாம்பல் நிற கௌதாரி *(பிரான்கோலியன்ஸ் எஸ்.பி.பி)* மற்றொரு சண்டையிடும் பறவையாகும். இது முட்புதர்கள் மற்றும் குறுங்காடுகள் நிறைந்த பகுதிகளில் காணப்படுகின்றன. சாம்பல்-பழுப்பு நிறத்திலுள்ள இப்பறவை, புல்வளரும் வறண்ட நிலப்பகுதியிலும் முட்புதர்கள் நிறைந்த குறுங்காடுகளிலும் வாழ்கின்றன.

பொதுவாக இரண்டு வகையான ஆந்தைகள் உள்ளன. அவை; (1) புள்ளியுள்ள ஆந்தை வகை: (அதினீ பிராமா) (2) மேற்பாகம் வைக்கோல் நிறமாயும், கீழ்ப்பாகம் வெண்மையாயுமுள்ள *'கோட்பின்'* ஆந்தை வகை. *(ஸ்டிக்ஸ் ஃப்ளேமியா)*. புள்ளியுள்ள ஆந்தைக் குஞ்சுகளின் கீழ் இறகுகளில் கரும்பழுப்புப் புள்ளிகள் உள்ளன. அந்தி சாயும் நேரம் அல்லது நடுநிசியில் அவை வெளிவந்து, தொடர்ந்து கீச்சொலி எழுப்பும் அல்லது கொக்கரிக்கும். சில நேரங்களில் இரண்டு ஒலிகளையும் ஒரே நேரத்தில் எழுப்பிடும். மேற் குறிப்பிட்ட கோட்டான் ஆந்தை வகை, வெள்ளை, கருப்புக்கோடுகளையுடைய சிவந்த பழுப்பு நிறப்பறவையாகும். அவற்றின் முகம் உருண்டையாகவும். உடல் நீளமாயுமிருக்கும். அவை மரத்தில் வாழ்கின்றன. அவை ஒரு குறிப்பிட்ட காலங்களில். நடுஇரவில் கிராமப்புற வீடுகளின் குறுக்குக் கம்பிகளின் மீது அமர்ந்து கத்தும் தன்மையுள்ளவை. அப்படிக்கத்துவது, கெட்ட செய்திகளை முன்கூட்டியே அறிவிப்பதாகக் கிராமத்தினர் கருதுவதால், இவற்றை அவர்கள் விரட்டியடிப்பதுண்டு. பழுப்புநிற மீன் கொத்தும் ஆந்தை *(கேடுபா கெய்லானென்னிஸ்)* மற்றும் இந்திய இன பெரிய கொம்புள்ள ஆந்தை *(பூலோ பூபு)* ஆகியவை ஏனைய ஆந்தை இனங்களாகும்.

மாவட்டத்தில் பறைய இனப்பருந்து மற்றும் பிராமண இனப்பருந்து என இரண்டு முதன்மையான வகைப்பருந்துகள் உள்ளன. பழுப்பு நிறமுள்ள நீளமான உருவமைந்த பறையஇனப்பருந்து நகர் மற்றும் கிராமப்புறத்தைச் சுத்தம் செய்யும் 'நல்ல தோட்டி' எனக்கூறலாம். மரத்தின் உச்சியிலமர்ந்து கொண்டு, கண்களைக் கீழே பூமியை நோக்கி, இறைதேடி, இறையினைத் தூக்கிச்செல்லும் இயல்புடையவை. பிராமண இனப்பருந்து, வெள்ளை வண்ணத் தலையையும் துருவையொத்த சிவப்பு வண்ண உடலமைப்பையுமுடைய

இந்தப்பறவை, பிற உயிரினங்களைக் கொன்று தின்னும் பழக்கமுள்ளவை. இவை, கூர்மையான பார்வையையுடையவையாகும். இவை வானத்தில் சுற்றி சுற்றி உயரப்பறந்து சென்று, இறையைத் தேடுபவை. அடிக்கடி, இவை கடற்கரைப்பகுதியில் இறைதேடி வட்டமிடும், நண்டுகள், பல்லிகள், சிறிய பாம்புகள் மற்றும் மீன்கள் ஆகியவற்றை இவை பிடித்து உட்கொள்ளும்.

பிற உயிரினங்களைச் கொன்று தின்னும் பறவைகளில் , வெள்ளையான முதுகினையுடைய கழுகுகள் *(ப்ஸுடோகிப்ஸ் பென்கால்வென்சிஸ்)* முதன்மையானவையாகும். இந்தியாவில் வெள்ளை நிறமுள்ள தோட்டிப்பணியாற்றும் கழுகு தான் பொதுவாகக் காணப்படுகின்றன. அவை கருஞ்சாம்பல் நிறமுடையவை. பெரும் பாலும் கறுப்பு நிறமெனச் சொல்லலாம். அவை மிகக் கூர்மையான பார்வையுடையவை. இவை விலங்கின் பிணம், அவற்றின் உடல்பாகம் மற்றும் ஏனைய கழிவுப் பொருள்களைக் கண்ணுற்றால், மற்ற சக நண்பர்களுடன் ஒரு விநாடியில் கூட்டம் சேர்ந்து, இறையைப் பங்கு பிரித்துக் கொள்ளும். வெள்ளை நிறமுள்ள தோட்டிப் பருந்து என்பது மற்றொரு வகையாகும். அவற்றின் இறகுகளில் தொகுதி அழுக்கேறிய வெள்ளை வண்ணத்திற்கொப் பானவை. அவற்றின் இறக்கைகளின் முனை, கறுப்பாக இருக்கும். கழுத்து இறகுகளால் மூடப்பட்டிருக்கும்.

(நீர்க்காக்கைகள்) நீர்ப்பறவைகள், அவற்றிற்குப் புகலிடமளிக்கும் கடற்கரை உப்பங்கழிகளிலும், நீரில் மூழ்கியிருக்கும் நெல் வயல்கள் மற்றும் குளங்களிலும் பொதுவாகக் காணப்படும், வெள்ளை நிற மார்பையுடைய நீர்க்கோழி, *(அமௌரோனிஸ் ஃப்யோகியோரஸ்)*, கரும்பலகையையொத்த சாம்பல் வண்ணமுள்ள பறவையாகும். அவற்றை நாம், நாணல்கள் மற்றும் புதர்கள் நிறைந்த சதுப்பு நிலப்பரப்பிலும், குட்டைகளின் ஓரங்களிலும்,மூங்கில் கொத்துகளின் இடையிலும் காணமுடியும். இந்தப் பறவைகள் எழுப்பும் ஒளி நம்மை திகைப்படையச் செய்யும். வறண்ட காலங்களில், இவை மிகவும் மௌனமாக இருக்கும். மழை பெய்யத் துவங்கியவுடன், ஒரு கொடிய மிருகத்தினைப் போன்று பேரிரைச்சலுடன் முழுக்கமிடும். ஆனால், இவற்றின் பறக்கும் திறன் வரையறுக்கப்பட்டுள்ளது.

குளங்களிலும், நீரில் மூழ்கியுள்ள நெல் வயல்களிலும் காணப்படும் மற்றொரு நீர்ப்பறவை, உச்சியில் வெண்கட்டியும், குறுவாலுமுள்ள வாத்தின் நீர்ப்பறவை வகையைச் சார்ந்ததாகும். அதாவது வாத்துபோன்று இதனையும் சுட்டு வீழ்த்தி மனிதர்கள் உண்கின்றனர்.

மூழ்கியிருக்கும் நெல் வயல்களிலும், குளங்களிலும், குட்டைகளிலும், ஆறுகளிலும், அடிக்கடி நாம் கொக்குகளைப் பார்க்கிறோம். இவை கருஞ்சிவந்த அலகுகளையுடைய மற்றும் சாம்பல் கலந்த வெள்ளை நிறமுடைய பறவைகளாகும். இவை போன்றவையே நீர் நிறைந்த சமவெளிப் பகுதிகளில் காணப்படும். நாரை வகைப் பறவைகள், புழுப் பூச்சிகளும், ஊர்ந்து செல்கிற உயிரினங்களுமே இவற்றின் உணவாகும்.

இப்பகுதியில் நான்கு வகைகளைச் சார்ந்த குள்ளவாத்துகள் அடிக்கடி காணப்படுகின்றன. அவற்றின் உடல்கள் நீளமாகவும், படகு களைப்போன்றும் அமைந்திருக்கும்: அவற்றின் இறகுகளின் தொகுதி முடியும் எண்ணெய் படிந்த பளபளப்பையொத்தும் அமைந்திருக்கும். அவற்றின் கால்கள் குட்டையாயும். ஒரு கட்டைவிரலுடன் மற்றொரு கட்டைவிரலை இணைத்துப்பின்னி, படகில் பயன்படுத்தப்படும் துடுப்பு போன்றும் அமைந்துள்ளன. இவற்றைப் பற்றிக் கொண்டு இப்பறவைகள் நீரின் மேற்பகுதியில் நெருக்கமாக துடிப்புடன் தாமதமின்றி செல்வது வியக்கத்தக்கது.

நெய்வயல்களிலும், குட்டைகளிலும், நெல் பறவைகள் *(ஆர்டியோலாக்ரோ)* மிக அதிக அளவில் காணப்படுகின்றன. அவற்றின் இறகுகள், பெரும்பாலும் வெள்ளையாக உள்ளன. அவை தண்ணீரும் உணவும் மிகுதியாக கிடைக்கும் இடங்களில் வாழ்கின்றன. தவளைகள், மீன்கள், நண்டுகள் மற்றும் பூச்சிகள் ஆகியவை இவற்றின் உணவாகும்.

ஊர்வன

முதலைகள், ஆமைகள், கடலாமைகள், பல்லிகள் மற்றும் பாம்புகள் ஆகியவை ஊர்வனவாகும். முந்தைய திருவாங்கூர் மாநிலத்தில் இருந்ததென பதிவு செய்யப்பட்ட இரண்டு வகை முதலைகள். ஒன்பதுவகை ஆமைகள், 33 வகைப் பல்லிகள், மற்றும் 74 வகைப் பாம்புகள் கன்னியாகுமரி மாவட்டத்திலும் காணப்படுகின்றன.

இந்திய நச்சுப்பாம்பு வகை *(நயாபங்காரஸ்)* பசுமையான காடுகளிலுள்ள ஆறுகள் மற்றும் சிற்றாறுகளில் அடிக்கடி காணப்படுகின்றன. இது மாவட்டத்தில் காணப்படும் தனிவகைப் பாம்பினமாகும். வீரியன் *(இச்சீஸ் காரிநாட்டா)* மற்றும் நல்ல பாம்பு *(நையா ட்ரிபூடியன்ஸ்)* ஆகியவை மரங்களின் பொந்துகளிலும், இடிந்து போன வீடுகளிலும் காணப்படுகின்றன. எலி பிடித்து உண்ணும் பாம்புகளும் இங்கு உண்டு. ஆனால், அவை நச்சுத் தன்மையற்றவை. வறண்ட மணல் பகுதிகளில் மலைப்பாம்புகளைக் காணலாம். *(பைத்தான் மோல்ரஸ்)*.

நில நீர்வாழ் உயிரினம்

நில நீர்வாழ் உயிரினங்களில், தவளைகள் முதன்மை வாய்ந்தவை. அவற்றில் 34 வகைகள் உள்ளன. அவற்றுள் மூன்று வகை இப்பிராந்தியத்தில், தனித்தன்மை வாய்ந்தவையாகும். அவையாவன: *ரானா ஆரன்டையாஸி, இக்தேலஸ் ட்ராவன்கோரியஸ்* மற்றும் *பம்ப்ம்போ ம்பொர்கூஸனி.* இந்த நில நீர் வாழ் உயிரினங்கள், ஈரம் ததும்பிய பகுதிகளிலும் நெல் வயல்களிலும் மழைநீர் தேங்கியுள்ள இடங்களிலும் காணப்படுகின்றன.

மீன்கள்

திருவாங்கூர் கடற்கரை பல்வேறு வகையான மீன்களுக்குப் பெயர் பெற்றது. ஏறத்தாழ 370 வகையான மீன்கள் கடலில் காணப்

படுகின்றன. உயர்தர மீன்கள், திமிங்கிலங்கள், சுரா மீன்கள், மற்றும் வாள் மீன்கள் ஆகியவை, கடல்களில் அதிகமாகத் தென்படுகின்றன. தட்டைக்கடல் மீன்கள், இரால்மீன்கள், போன்றவற்றை அதிக அளவில் காணலாம். பாறைகளில் காணும் சிப்பிகள், கோவளம் மற்றும் விளிஞ்சம் ஆகிய இடங்களிலுள்ள அடர்த்தியான குடியிருப்புப் பகுதிக்கருகில் இவை காணப்படுகின்றன. சிப்பிகள் உணவாகக் கொள்ளத்தக்க பொருளாகிலும் அவை சாப்பிடப் பயன்படுத்தப்படுவதில்லை. ஏனெனில், ஒன்றை ஒன்றுடன் பிணைத்திருக்கும் முனைகளையுடைய அவற்றின் ஓடுகள், எளிதில் திறக்க இயலாதவை. குமரிமுனையிலுள்ள பாறைகளின் அடியில், வாய்முகப்பைச் சுற்றிலும் எட்டுக் கிளையுறுப்புக்களையுடைய அச்சந்தரத்தக்க கடல் விலங்கினமான "என் காலி" தென்படுகிறது.

விளிஞ்சம் மற்றும் கோவளம் கடற்கரைகளில், மிகவும் அதிக அளவில் புனிதமான சங்குகள் *(டர்பினெல்லா பைரம்)* இருப்பதாக அறியப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் அதிக அளவில் அவை சேகரிக்கப்பட்டு, வங்காளத்திற்கு அனுப்பப்படுகின்றன. அங்கே, அவைகளை முறையாக அறுத்து,வளைகள், மோதிரங்கள் ஆகியவை செய்கிறார்கள். குமரிமுனையில், இரண்டு ரகமான உயர்தர கிளிஞ்சிற் சிப்பிகள், அதிகமாக உள்ளன. *(ட்ரோசஸ், ரேடியேடஸ் & காஸ்டேடஸ்).* இவ்வகைக் கிளிஞ்சிற் சிப்பிகள் மிகவும் கவனமாகவும் உள்ளே முத்து அடங்கியவையாயுமுள்ளன. அவை பட்டன் செய்வதற்குப் பயன்படுகின்றன.

ஒட்டுத்தோடுடைய இணைப்புடல் உயிரினங்களின் வகை

இவை மிகப் பெரிய வகுப்பைச் சேர்ந்தவையாக உள்ளன. அவை யாவன:

இன்ஸெக்டா மைரியாபோடா (பூரான் மற்றும் மரவட்டை)
அரச்நீடா (தேன்,சிலந்தி ஆகியவை)
கிரஸ்டேசியா (நண்டு)
"ஒளிகோ" ஃபோரா

ஒளிகோ ஃபோரா, இப்பகுதிகளில் காணப்படுவதில்லை. பூச்சிகளில், செனிப்பாம்புகள், கரப்பான் பூச்சிகள், இலைப்பூச்சிகள், வெட்டுக் கிளிகள் மற்றும் சிள்வண்டுகள் (சுவர்க்கோழி) ஆகியவற்றைக் குறிப்பிடலாம். நச்சுத்தன்மை வாய்ந்த பூச்சிகளில், பலவகைப்பட்ட தேன்கள், மற்றும் சிலந்திகள் மாவட்டத்தில் காணப்படுகின்றன. உண்ணி (நாய்-ஆடு, மாடுவகைகளைப் பற்றியுள்ள நச்சு ஈ வகை) *இக்ஸ்ஸோடஸ்,* புல்தரைகளில் பரவலாகக் காணப்படுகின்றன. அவை பாம்பு பல்லி உள்பட நிலத்திலுள்ள அனைத்து முதுகெலும்புடைய உயிரினங்களையும் தாக்குகின்றன.

தட்ப வெட்ப நிலை

மாவட்டம் குளிர்காலமற்ற, ஈரக்கசிவான மற்றும் வெதுவெதுப்பான தட்பவெட்ப நிலையைப் பெற்றுள்ளது. வெயிற்காலம், சற்று

கடுமையாகவே இருக்கும். மார்ச் முதல் மே மாதம் வரையிலான வெயிற்காலத்திற்குப் பின்னர், சூன் முதல் செப்டம்பர் வரையில் தென்மேற்குப் பருவக்காற்றுக் காலமாகும். தென்மேற்குப் பருவக்காற்றுக் காலத்தைத் தொடர்ந்து, அதாவது பின்னடைவு காலமான, அக்டோபர்-நவம்பர் மாதங்களில், இடிமின்னலுடன் கூடிய புயல்காற்று வீசக்கூடும். டிசம்பர் முதல் பிப்ரவரி மாதம் வரை வடகிழக்குப் பருவக்காற்றுக் காலமாகும். இக்காலத்தின் முன் பாதியில் நல்ல மழை பொழியும், பின்பாதி காலத்தில் பொதுவாக ஒளிமிக்க வாணிலை காணப்படும்.

மழைப்பொழிவு

மாவட்டத்தில் கடந்த 15 மதல் 70 வரையிலான ஆண்டு காலத்தில் பொழிந்த மழையின் அளவு மழைமானி நிலையங்களில் பதிவு செய்யப்பட்டு, அது குறித்த ஆவணங்கள் பாதுகாத்து வைக்கப் பட்டுள்ளன. இந்நிலையங்களில் பொழிந்த மழையின் அளவையும், மாவட்ட முழுமைக்கான மழையளவையும் காட்டும் விவரங்கள் ஒன்று மற்றும் இரண்டாம் பட்டியலில் குறிக்கப்பட்டுள்ளன. மாவட்டத்தின் ஆண்டு பெய்யளவு 1469.7 மில்லி மீட்டராகும். மாவட்டத்தின் பெய்யளவு தென்கிழக்கிலிருந்து, வடமேற்காக பொதுவாக அதிகரிக்கிறது. அதாவது, தெற்குக்கரைக்கு அருகாமையில், தாமரைக்குளத்தில் (பழைய உப்புத்தொழிற்சாலை) 807.4 மில்லி மீட்டரில் துவங்கி பேச்சிப்பாறையில் 2262.2 மில்லி மீட்டர் என, வேறுபடுகிறது. பொதுவாக சிறிது மழையாவது ஆண்டு முழுமையும் பொழிவது கண்கூடு. குறைந்த அளவு மழை சனவரி-பிப்ரவரி மாதங்களில் பொழிகிறது. பின்னடைவு காலமான அக்டோபர்-நவம்பர் மாதங்களில், இடி, மின்னல், புயல் காற்றுடன் கூடிய மிகக் கனமான மழை பொழியக்கூடும். ஆண்டு தோறும் பொழியும் பெய்யளவில், 39 விழுக்காடு அக்டோபர்-நவம்பர் மாதங்களில் பொழியக்கூடும். இடி,மின்னல், புயல்காற்றுடன் ஏப்ரல்-மே மாதங்களில் பொழியும் மழையின் அளவு. 17 விழுக்காடு ஆகும். தென்மேற்குப் பருவக் காற்றுக்காலமான சூன் முதல் செப்டம்பர் மாதம் வரை பொழியும் மழையின் அளவு ஆண்டு முழுமையும் பெய்யும் மழையின் 37 விழுக்காடாகும். ஆண்டுக்காண்டு, மழையளவின் வேறுபாடு, கணிசமாக அதிகரித்துள்ளது. இது ஆறுதலையளிக்கிறது. மாவட்டத் தின் தென்கிழக்கு பாகத்தில், மழையின் அளவு, மேலும் அதிகரிக்கிறது. கடந்த 50 ஆண்டு காலத்தில், மாவட்டத்தில் மிகமிக அதிக அளவான 154 விழுக்காடு 1933ஆம் ஆண்டு பெய்துள்ளது. மிகக் குறைவாக அதாவது, இயல்பான ஆண்டு பெய்யளவில், 55 விழுக்காடு மட்டும் 1908 ஆம் ஆண்டு பெய்துள்ளது. 1901 முதல் 1950 முடிய உள்ள 50 அண்டு காலத்தில், 14 ஆண்டுகளில், மிகக்குறைவாகப் பெய்த மழை, 80 விழுக்காடு ஆகும். இந்த கால வரையில், இயல்பாக ஆண்டுப் பெய்யளவில் 80 விழுக்காடு இருமுறை தொடர்ந்து இரண்டு ஆண்டுகளிலும், ஒரு முறை தொடர்ந்து மூன்று ஆண்டுகளிலும், இருமுறை தொடர்ந்து நான்கு ஆண்டுகளிலும், மழை

பெய்துள்ளதெனக் கூறலாம். கோட்டாரம் என்ற இடத்தில் 1934 முதல் 1938 வரையிலான ஐந்து ஆண்டுகளில், ஐந்து முறை தொடர்ந்து அம்மாதிரி குறைவான அளவு மழை பொழிந்துள்ளது. தொடர்ந்த 50 ஆண்டு காலத்தில், 38 ஆண்டுகளில், மாவட்டத்தின் ஆண்டுப்பெய்யளவு 900 மில்லி மீட்டர் முதல் 1600 மில்லி மீட்டர் வரை இருந்திருக்கிறதென்ற விவரம் பட்டியல் இரண்டை நோக்கின் தெரியவரும்.

மாவட்டத்தில், ஓர் ஆண்டிற்கு, சராசரியாக, 86 நாட்கள் மழை பொழிகிறது. (இந்நாட்களில் 2.5 மில்லி மீட்டரோ அதற்கு அதிகமாகவோ, மழை பெய்யும்). இந்த அளவும், ஆண்டு சராசரி மழை அளவைப்போன்றே, தாமரைக் குளத்தில் 53 மில்லிமீட்டரில் துவங்கி, பேச்சிப்பாறையில் 122 மில்லி மீட்டர் என மாறுபட்டு அதிகரிக்கிறது. 1922-ம் ஆண்டு நவம்பர் மாதம் 30-ம் நாளன்று, 24 மணிநேரத்தில் மிக மிக அதிகமான அளவில் மழையின் பெய்யளவு 304.8 மில்லி மீட்டர் என இம்மாவட்டத்திலுள்ள சீத்தப்பால் மழைமானி நிலையத்தில் பதிவாகியுள்ளது.

தட்பவெட்ப அளவு

கன்னியாகுமரி மாவட்டத்தில், ஒரு வானிலையாராய்ச்சி ஆய்வுக்கூடம் அமைந்துள்ளது. இது தொடர்புள்ள ஆவணங்கள் இங்கு குறைந்த காலத்திற்கே, சேர்த்து வைக்கப்பட்டிருப்பினும், பொதுவாக மாவட்டத்தில் நிலவும் வானிலை குறித்து, சரியான தகவல்களையே இது அளிக்கிறது. வழக்கமாக, மாவட்டத்தில் தென் மேற்குப் பருவக்காற்று வீசும் காலமான பிப்ரவரி மாதமையத்திலிருந்து. மே மாத இறுதிவாரம் வரை, மாவட்டத்தின் பகல் நேர அதிக பட்ச தட்ப, வெட்ப சராசரி அளவு, 33.1°. ஸெண்டிகிரேடு ஆகும். மார்ச் மாதத்தில் பகல்நேர அதிக தட்ப,வெட்ப சராசரி அளவு மெள்ள மெள்ள உயரும். மே மாதத்தில் பகல் நேர குறைந்த பட்ச தட்ப,வெட்ப அளவு 26.1° சென்டிகிரேடாக உள்ளது. வானிலையில் கடுமை, கடலின் குளிர்ந்த தென்றலினால், சற்றே தணிந்து, இடியுடன் கூடிய மின்னலும், புயல்காற்றும் அடிக்கின்றன. தென்மேற்குப் பருவக்காற்று தொடங்கியவுடன், தட்ப, வெட்ப அளவு சற்று அதிகரிக்கிறது. ஆனால், பொதுவாக, பகல் தட்ப வெட்ப நிலை, சனவரி மாதம் வரை, பருவகாலத்தில் உள்ளது போன்றே தொடர்ந்து நீடிக்கிறது. நவம்பர் முதல் பிப்ரவரி மாதம்வரை, இரவு நேரம் சற்று குளிர்ச்சியாக உள்ளது.

1973-ம் ஆண்டு, மே மாதம் 15-ந் தேதியும், 1973-ம் ஆண்டு நவம்பர் மாதம் 15-ந் தேதியும், கன்னியாகுமரியில் பதிவாகியுள்ள அதிகபட்ச தட்ப, வெட்ப அளவு 38.2° சென்டிகிரேடாகும். 1974-ம் ஆண்டு பிப்ரவரி 7-ம் தேதி பதிவாகியுள்ள தட்ப, வெட்ப அளவு 18.8° சென்டிகிரேடு ஆகும்.

ஈரம்

மாவட்டத்தில், ஈரக்கசிவு ஆண்டு முழுவதும் ஒரே சீராக உள்ளது. ஆண்டின் சனவரி முதல் மார்ச் மாதம் வரையிலான காலம், வறண்ட காலமாகும், இக்காலத்தில், பிற்பகலில் உள்ள ஈரப்பதம், 65 விழுக் காட்டிலிருந்து 70 விழுக்காடு வரை, உள்ளது.

மேகமூட்டம்

சனவரி, பிப்ரவரி மாதங்களில் வானம் தெளிவாக இருக்கும். அல்லது சற்று மேக மூட்டத்துடன் காணப்படும். அடுத்த மூன்று மாதங்களில், மேக மூட்டம் சற்று அதிகமாகக் காணப்படும். பல நாட்களில், அச்சுறுத்தக் கூடிய இடி, மின்னலுடன் கூடிய புயல் பின் தொடரக்கூடும். தென் மேற்குப் பருவக்காற்றுக் காலத்திலும், அதன் பின்னடைவு காலத்திலும், வானம் மிக அதிக மேக மூட்டத்துடனோ, மப்பு மந்தாரத்துடனோ காணப்படும். டிசம்பர் மாதத்தில் மிதமானது முதல் கனமான மேகமூட்டம் தென்படும்.

காற்றோட்டம்

தென்மேற்குப் பருவ காலத்தில், மென்மையானது முதல் மிதமானது வரையிலான காற்றடிக்கும். சில நேரங்களில் அது வலுவடையக்கூடும். டிசம்பர் முதல் பிப்ரவரி மாதம் வரை, காற்று வடகிழக்கு திசை நோக்கியே அடிக்கவல்லது. மார்ச்முதல் நவம்பர் மாதம் வரை,காற்று, பொதுவாக, வடமேற்கு திசையிலிருந்து மேற்கு திசையில் அடிக்கக்கூடியது.

குறிப்பிடத்தக்க தனி வானிலை

மாவட்டத்தில் ஆண்டு முழுமையும், இடி, மின்னல் மற்றும் புயல்காற்று, வீசக்கூடிய நிலைமை நீடிக்கிறது. இருப்பினும், மார்ச் முதல் மே மாதம் வரையிலும் மற்றும் அக்டோபர், டிசம்பர் மாதங் களிலும் இடி, மின்னலுடன் கூடிய புயல்காற்று எந்நேரமும் தவறாது, வீசக்கூடிய வாய்ப்புள்ளது.

கன்னியாகுமரியின், தட்ப வெட்ப அளவு,ஈரம், காற்றின் குறைந்த அளவு வேகம், குறிப்பிடத்தக்க தனி வானிலை போன்ற விவரங்கள் 3,4 மற்றும் 5-வது பட்டியலில் அளிக்கப்பட்டுள்ளன.

பட்டியல் - 1

இயல்பு மற்றும் அதிக அளவு பெய்த மழை (மில்லி மீட்டரில்)

நிலையம்	'ஆண்டு'களின் எண்ணிக்கை	சனவரி	பிப்ரவரி	மார்ச்	ஏப்ரல்	மே	சூன்	சூலை	ஆகஸ்ட்	செப்
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)
பேச்சிப்பாறை	35 அ	41.1	33.3	86.9	181.1	246.4	346.7	233.9	161.5	186.2
	ஆ	2.5	2.1	5.4	11.1	11.1	17.5	15.3	11.5	10.3
களியல்	35 அ	28.7	27.7	17.0	167.6	195.8	277.7	187.7	127.5	138.7
	ஆ	1.8	1.5	4.4	9.3	9.2	15.8	12.1	9.9	8.6
குலசேகரம்	35 அ	31.7	40.9	89.1	174.5	211.6	295.4	164.6	149.3	157.7
	ஆ	2.5	2.3	5.4	9.9	9.5	16.0	13.2	10.5	9.1
பேச்சிப்பாறை, பெருஞ்சாணி வாய்க்கால்	35 அ	24.4	23.4	45.0	125.2	128.5	216.7	110.2	78.5	81.0
	ஆ	1.9	1.5	3.1	6.0	6.6	12.9	10.5	6.8	5.9
புத்தன் அணை	35 அ	35.6	30.5	85.3	180.9	190.7	309.6	190.5	142.2	156.2
	ஆ	2.3	2.6	5.4	9.8	9.3	16.8	14.1	10.6	9.6
தாடிக்காரன் கோணம்	35 அ	24.9	17.5	69.3	145.5	164.9	284.3	175.8	115.6	123.7
	ஆ	1.7	1.5	4.7	8.5	8.1	14.9	12.3	8.6	7.7
குழித்துறை	50 அ	18.6	19.6	38.6	100.1	152.9	258.6	140.5	89.9	103.9
	ஆ	1.3	1.2	2.6	5.9	6.8	14.1	10.9	6.5	6.5

பட்டியல்.1 - தொடர்ச்சி

நிலையம்	அக்டோபர்	நவம்பர்	டிசம்பர்	ஆண்டு மழை அளவு	இயல்பான ஆண்டு மழையளவைவிடத்து அதிகபட்ச ஆண்டு மழை அளவின் வீழ்க்காடு	இயல்பான ஆண்டு மழையளவைவிடத்து குறைந்தபட்ச ஆண்டு மழை அளவின் வீழ்க்காடு	24மணி நேரத்தில்பதிவு அதிகபட்ச மழை அளவு	
							அளவு (மில்லி மீட்டரில்)	பெய்த தேதி
	(12)	(13)	(14)	(15)	(16)	(17)	(18)	(19)
பேச்சிப்பாறை	353.6 15.7	298.5 13.6	93.0 5.5	2262.2 121.6	169 (1933)	65 (1938)	236.2	1949 சூன் 30
களியல்	342.1 15.1	289.3 13.4	86.6 5.2	1947.8 106.3	175 (1933)	19 (1948)	190.5	1943 அக்.10
குலசேகரம்	354.8 15.5	286.5 13.8	96.3 5.5	2052.9 113.0	156 (1933)	71 (1938)	188.0	1930 அக்.23
பேச்சிப்பாறை, பெருஞ்சாணி வாய்க்கால்	277.4 13.0	277.4 13.0	71.6 4.2	1459.6 84.8	160 (1943)	53 (1938)	241.3	1945 அக்.18
புத்தன் அணை	360.4 16.0	275.8 13.4	93.7 5.5	2051.4 115.9	151 (1933)	61 (1934)	238.8	1924 அக்.30
தாடிக்காரன் கோணம்	283.0 14.9	251.5 13.2	60.2 3.8	1715.9 99.9	160 (1933)	53 (1945)	200.7	1925 நவம்.9
குழித்துறை	250.4 11.7	221.2 10.4	65.8 3.6	1459.5 81.5	176 (1933)	58 (1922)	238.8	1925 நவம் 10

பட்டியல்-1 - தொடர்ச்சி

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)
மேக்கோடு	35 அ	32.3	24.1	65.5	133.3	166.6	262.4	159.3	125.2	129.3
	ஆ	2.2	1.8	4.6	8.0	8.4	15.4	12.7	9.2	8.3
முலகுமோடு	35 அ	24.6	20.8	59.2	117.6	172.7	242.6	139.7	98.5	95.8
	ஆ	1.4	1.5	3.3	6.8	7.3	18.7	10.5	7.1	6.2
சீத்தாப்பால்	35 அ	19.6	18.3	48.8	91.9	103.9	178.6	103.6	63.0	63.5
	ஆ	1.5	1.2	3.5	5.7	5.7	12.3	8.9	5.4	5.2
கொல்லங்க்கோடு	35 அ	27.4	22.1	66.8	138.2	173.5	296.2	171.7	127.5	133.6
	ஆ	2.0	1.8	5.2	8.4	8.5	15.6	12.9	9.3	8.5
ஆரல்வாய்மொழி	50 அ	28.5	18.3	38.6	68.6	60.5	129.0	66.3	33.3	37.3
	ஆ	1.8	1.3	2.7	4.4	3.6	9.1	6.5	3.7	3.3
கல்குளம்	35 அ	26.9	26.7	64.5	138.2	164.9	224.5	121.9	86.1	96.0
	ஆ	1.6	1.5	8.9	7.2	7.7	13.3	9.3	6.5	5.9
இரணியல்	50 அ	17.3	16.5	40.4	92.2	125.7	212.6	115.8	66.0	79.8
	ஆ	1.2	1.1	2.6	5.5	6.2	12.8	8.9	4.9	5.4
குளச்சல் (உப்புத் தொழிற்சாலை)	46 அ	19.3	14.7	32.0	79.0	130.6	218.4	124.7	71.4	78.0
	ஆ	1.5	1.0	2.2	4.4	6.7	13.4	9.7	5.6	5.7
நாகர்கோவில் (பொது மராமத்துத்துறை)	50 அ	23.1	12.2	34.8	76.5	89.1	169.2	89.7	47.0	60.2
	ஆ	1.6	1.0	2.3	4.7	5.6	11.6	8.2	4.4	4.7

பட்டியல்-1 - தொடர்ச்சி

(1)	(12)	(13)	(14)	(15)	(16)	(17)	(18)	(19)
மேக்கோடு	327.1 15.1	252.0 13.1	78.5 5.1	1755.6 103.9	155 (1933)	58 (1938)	240.0	1932 ஆக 28
முலகுமோடு	266.2 12.4	242.3 11.6	69.3 3.6	1549.3 85.4	165 (1933)	69 (1949)	177.8	1945 அக் 18
சீத்தாப்பால்	199.1 11.4	199.4 10.7	57.7 3.3	1147.4 74.5	157 (1924)	53 (1934)	304.8	1922 நவ.30
கொல்லங்கோடு	306.11 15.3	261.6 13.2	70.1 4.5	1794.8 104.9	158 (1933)	64 (1947)	181.6	1922 நவ.30
ஆரல்வாய்மொழி	210.3 10.7	199.9 10.1	79.3 4.0	969,9 61.2	150 (1943)	44 (1949)	246.4	1925 நவ.9
கல்குளம்	278.4 11.9	242.3 11.7	67.1 3.8	1537.5 84.3	179 (1933**)	48 (1949)	228.6	1939 மே 10
இரணியல்	229.1 11.2	200.7 10.2	64.3 3.4	1260.4 73.4	162 (1932)	64 (1942)	276.9	1939 மே 10
குளச்சல் (உப்புத் தொழிற்சாலை)	204.0 10.3	184.9 9.8	61.0 3.4	1218.0 73.7	176 (1920)	62 (1937)	254.3	1939 மே 10
நாகர்கோவில் (பொது மராமத்துத் துறை)	201.2 10.7	182.1 10.4	60.7 3.3	1045.8 67.9	140 (1924)	66 (1908)	179.8	1892 ஏப் 24

பட்டியல்-1 - தொடர்ச்சி

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)
இராஜாக்கமங்கலம்	50 அ	21.6	10.9	24.9	65.3	109.0	181.6	90.4	49.8	53.3
	ஆ	1.6	0.8	2.0	4.1	6.0	12.3	8.4	4.4	4.4
தாமரைக்குளம் (பழைய உப்புத்தொழிற்சாலை)	50 அ	16.0	12.9	25.1	58.9	60.5	116.3	59.4	33.8	32.3
	ஆ	1.3	0.8	1.7	3.4	4.0	9.5	6.2	3.0	3.2
கொட்டாரம்	35 அ	24.4	17.5	32.5	58.4	71.6	105.4	63.7	33.0	37.1
	ஆ	1.9	1.0	2.0	3.6	4.5	9.1	6.6	3.6	3.3
கன்னியாகுமரி மாவட்டம்	அ	25.5	21.5	54.0	115.4	143.1	227.1	132.1	89.4	97.0
	ஆ	1.8	1.4	3.5	6.7	7.1	13.5	10.4	6.9	6.4

அ) இயல்பான ஆண்டு மழையளவு (மில்லி மீட்டரில்)

ஆ) மழை பெய்த சராசரி நாட்கள் (2.5 மில்லி மீட்டர் அல்லது அதற்குமேல் மழை பெய்த நாட்கள்).

* 1970ஆம் ஆண்டு முடிய கிடைக்கப்பெற்ற புள்ளிவிவரங்களை ஆதாரமாகக் கொண்டு தயார் செய்யப்பட்டது.

** ஆண்டுகள் அடைப்புக்குறிகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

பட்டியல்-1 - தொடர்ச்சி

(1)	(12)	(13)	(14)	(15)	(16)	(17)	(18)	(19)
இராஜாக்கமங்கலம்	180.9 10.0	178.8 9.8	61.0 3.4	1027.5 67.2	150 (1924)	66 (1949)	268.5	1896 டிச 26
தாமரைக்குளம் (பழைய உப்புத்தொழிற்சாலை	147.8 8.1	179.1 8.9	65.3 3.0	807.4 53.1	180 (1925)	54 (1944)	200.7	1925 நவ 9
கொட்டாரம்	150.9 9.0	198.6 10.5	70.1 3.9	863.2 59.0	157 (1920)	63 (1949)	224.8	1925 நவ 9
கன்னியாகுமரி மாவட்டம்	259.1 12.5	232.7 11.6	72.21 4.1	469.7 85.9	154 (1933)	55 (1908)		

அ) இயல்பான ஆண்டு மழையளவு (மில்லி மீட்டரில்)

ஆ) மழை பெய்த சராசரி நாட்கள் (2.5 மில்லி மீட்டர் அல்லது அதற்குமேல் மழை பெய்த நாட்கள்).

* 1970 ஆம் ஆண்டு முடிய கிடைக்கப்பெற்ற புள்ளிவிவரங்களை ஆதாரமாகக் கொண்டு தயார் செய்யப்பட்டது.

** ஆண்டுகள் அடைப்புக்குறிகளில் கொடுக்கப்பட்டுள்ளன

பட்டியல்-2

கன்னியாகுமரி மாவட்டத்தில் அடுத்தடுத்து பெய்த மழையின், ஆண்டு பெய்யளவு விவரங்கள்

மழை பெய்யளவு – இலக்கின் தொலைவளவு (மில்லி மீட்டரில்)	ஆண்டுகளின் எண்ணிக்கை	பெய்யளவு (மில்லி மீட்டரில்) முதல்	வரை	ஆண்டுகளின் எண்ணிக்கை
801-900	2	1601 -	1700	3
901-1000	5	1701 -	1800	2
1001-1100	5	1801 -	1900	1
1101-1200	4	1901 -	2000	1
1201-1300	8	2001 -	2100	2
1301-1400	9	2101 -	2200	0
1401-1500	1	2201 -	2300	1
1501-1600	6			

பட்டியல் - 3

உயர்ந்தபட்ச மற்றும் குறைந்த பட்ச தட்ப, வெட்ப நிலை

கன்னியாகுமரி

மாதம்	சராசரி நாள் அதிக பட்ச தட்ப, வெட்ப அளவு	சராசரி நாள் குறைந்த பட்ச தட்ப, வெட்ப அளவு	பதிவு செய்யப்பட்ட உயர்ந்த பட்ச தட்ப வெட்ப அளவு		பதிவு செய்யப்பட்ட குறைந்த பட்ச தட்ப வெட்ப அளவு		தொடர்புடைய ஈரப்பதம்	
							08.3°	173°
	சென்டிகிரேடு*	சென்டிகிரேடு*	சென்டி கிரேடு*	தேதி	சென்டி கிரேடு*	தேதி	(விழுக்காடு)	(விழுக்காடு)
ஜனவரி	30.7	23.4	33.5	1962 சன 26	20.1	1973 சன	68	68
பிப்ரவரி	31.5	25.6	34.6	1974 பிப் 22	18.8	1974 பிப் 7	67	67
மார்ச்	32.1	25.0	34.6	1968 மார்ச் 24	21.7	1972 மார்ச் 11	69	69
ஏப்ரல்	31.4	25.9	36.8	1979 ஏப் 30	20.9	1980 ஏப்ரல் 6	71	71
மே	33.1	26.1	38.2	1973 மே 15	21.8	1978 மே 3	73	73
சூன்	30.5	24.5	35.4	1965 சூன் 3,4	21.0	1967 சூன் 23	80	78
சூலை	29.7	23.9	34.8	1976 சூலை 3	19.2	1980 சூலை 25	80	78
ஆகஸ்ட்	30.4	24.0	34.7	1969 ஆக 15	21.3	1972 ஆக 13	79	77
செப்டம்பர்	30.5	24.2	35.0	1978 செப் 17	21.3	1978 செப் 5	77	77
அக்டோபர்	30.5	24.2	34.2	1963 அக் 4	20.8	1967 அக் 1	77	79
நவம்பர்	30.3	23.9	38.2.	1973 நவ 15	20.1	1967 நவ 30	75	73
டிசம்பர்	30.1	23.5	33.3	1868 டிச 5	19.6	1965 டிச 21	72	68
ஆண்டு சராசரி	30.1	24.3					74	73

* மணி – இந்திய தரப்படுத்தப்பட்ட நேரம்

பட்டியல் - 4

சராசரி காற்றுவேகம் (கிலோ மீட்டர் / மணி)

கன்னியாகுமரி

ஜனவரி	பிப்ரவரி	மார்ச்	ஏப்ரல்	மே	ஜூன்	ஜூலை	ஆகஸ்ட்	செப்	அக்டோ	நவம்பர்	டிசம்பர்	ஆண்டு (சராசரி)
21.8	19.4	15.1	12.7	19.0	18.7	18.6	19.3	18.3	13.9	16.1	19.5	17.7

பட்டியல் - 5

குறிப்பிடத்தக்க வானிலை

கன்னியாகுமரி

சராசரி நாட்கள் வானிலை விவரங்கள் மற்றும் அதற்கு மேற்பட்ட நாட்கள், முழு எண்களில் கொடுக்கப்பட்டுள்ளன	சனவரி	பிப்ரவரி	மார்ச்	ஏப்ரல்	மே	ஜூன்	ஜூலை	ஆகஸ்ட்	செப்	அக்	நவ	டிச	ஆண்டு (சராசரி)
இடி	0	0.2	0.6	1.1	0	0.1	0.2	0.3	0.1	1.1	0.8	0.1	5
–	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0
–	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0
–	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0
–	0	0	0	0	0	0	0.2	0	0	0	0	0	0.2

நூல் அட்டவணை

ஆசிரியர் / வெளியீட்டாளர்	நூலின் பெயர்
1. ராமநாத அய்யர் .எஸ். திருவனந்தபுரம்	இன்றைய திருவாங்கூர், (1920), பக்கம் 1.
Ramanatha Aiyar .S. Trivandrum	Travancore of To-day, (1920), page - 1.
2. ஸ்ரீதர மேனன் .ஏ. திருவனந்தபுரம்	திருவனந்தபுரம் மாவட்ட விவரச் சுவடி (1962), பக்கம் 1.
Sreedhara Menon .A. Trivandrum	Trivandrum District Gazetteer, (1962), page 1.
3. நாகம் அய்யா .வி. திருவனந்தபுரம்	திருவாங்கூர் மாநில நடைமுறை நூல், (1906), தொகுதி–1 பக்கம் 14.
Nagam Aiya .V. Trivandrum	Travancore State Manual, Trivandrum (1906), Volume-1, page 14.
4. நாகம் அய்யா. வி. திருவனந்தபுரம்	மாநில நடைமுறைநூல், (1906), தொகுதி–1, பக்கம் 11.
Nagam Aiya .V. Trivandrum	Travancore State Manual, (1906), Volume-1, - page 11.
5. நாகம் அய்யா .வி. திருவனந்தபுரம்	திருவாங்கூர் மாநில நடைமுறை நூல், (1906), தொகுதி–1, பக்கம் 16.
Nagam Aiya .V. Trivandrum	Travancore State Manual, (1906), Volume-1, page 16.
6. மெக்லீன் (பதிப்பு) சி.டி.	சென்னை மாநிலத்தின் ஆட்சிச் சொல் அகராதி, (1893), பக்கம் 670.
Ed.Maclean, C.D.	Glossary of the Madras Presidency, (1893), page 670.
7. பரோஹா & கம்பெனி	தென் இந்திய விவரச்சுவடி, (1855), பக்கம் 604.
8. தமிழக அரசு	சென்னை தகவல்கள் – தொகுதி XII, எண்.1, சனவரி 1958, பக்கம் 6.
Government of Tamilnadu	Madras Information-Vol.XII, No.1, January 1958, page 6.
9. தமிழக அரசு	புள்ளிவிவரக்கையேடு, தமிழ்நாடு, (1985), பக்கம் 156.
Government of Tamilnadu	Statistical Hand Book, (1985), page 156.
10. நாகம் அய்யா .வி. திருவனந்தபுரம்	திருவாங்கூர் மாநில நடைமுறை நூல், தொகுதி–1, பக்கம் 42.
Nagam Aiya .V. Trivandrum	Travancore State Manual, Volume-1, page 42.
11. மகாதேவன், டி.எம். இந்திய புவியியல் ஆராய்ச்சித்துறை	கன்னியாகுமரி மாவட்ட விவரச் சுவடிக்காக எழுதி அளித்துள்ள குறிப்பு.
Mahadevan, T.M. Geological Survey of India	Note given for the preparation of Kanyakumari Dist. Gazetteer
12. நாகம் அய்யா. வி. திருவனந்தபுரம்	திருவாங்கூர் மாநில நடைமுறை நூல், தொகுதி–1, பக்கம் 76.

	Nagam Aiya,V. Trivandrum	Travancore State Manual, Vol-1, page 76.
13.	மேற்படி	அதே நூற்பகுதியில், பக்கம் 77.
14.	மேற்படி	அதே நூற்பகுதியில், பக்கங்கள் 77–79.
	Ibid	page 77
	Ibid	page 77-79
15.	இந்திய அரசு	மாவட்ட மக்கட் தொகைக் கையேடு, கன்னியாகுமரி, (1961), பக்கங்கள் 6–8.
	Government of India	District Census Hand book, Kanniyakumari, (1961), page 6-8.
16.	பரமேஸ்வரன் நாயர். எம்.	கன்னியாகுமரி மாவட்டம், கன்னியாகுமரியின் தாவர வளர்ச்சி, (பாப்சி – தொகுதி 1 எண் 1 பக்கங்கள் 122–126), 1959 இந்திய தாவரவியல் ஆராய்ச்சித்துறையினரால் வெளியிடப்பட்டது.
	Parameswaran Nayar. M.	The Vegetation of Kanniyakumari, Kanniyakumari District, (BOBSI - Vol I No.1, pages 122-126), 1959 Published by the Botanical Survey of India.
17.	தமிழக அரசு	புள்ளிவிவரக் கையேடு, தமிழ்நாடு, (1986), பக்கம் 194.
	Government of Tamilnadu	Statistical Handbook, Tamilnadu, (1986), page 194.
18.	நாகம் அய்யா. வி. திருவனந்தபுரம்	திருவாங்கூர் மாநில நடைமுறை நூல், (தொகுதி 1), பக்கம் 114.
	Nagam Aiya. V. Trivandrum	The Travancore State Manual, Volume I, page 114.
19.	ஹென்றி. ஏ.என். & சுவாமிநாதன். எம்.எஸ்.	கன்னியாகுமரி மாவட்டத்தில் தாவர வளர்ச்சி குறித்து கருத்தறிவிப்பு (புல். பாட். சர்வ். இந்தியா), தொகுதி–23, எண்கள் 3 மற்றும் 4 பக்கங்கள் 135–139), 1981.
	Henry. A.N. & Swaminathan. M.S.	Observations of the vegetation of Kanniyakumari District, Tamilnadu (Bull - Bot - Surv. India), Volume 23, Nos. 3 & 4, pages 135-139, 1981.
20.	இந்திய அரசு	மாவட்ட மக்கட்தொகைக் கையேடு, கன்னியாகுமரி, (1961), பக்கம் 8.
	Government of India	District Census Handbook, Kanniyakumari, (1961), page 8.
21.	நாகம் அய்யா. வி. திருவனந்தபுரம்	திருவாங்கூர் மாநில நடைமுறை நூல், தொகுதி 1, பக்கம் 119.
	Nagam Aiya. V. Trivandrum	The Travancore State Manual, - Volume I, page 119.

இயல் -2

வரலாறு

முன்னுரை

இன்றைய கன்னியாகுமரி மாவட்டம், முந்தைய திருவாங்கூர்-கொச்சி மாநிலத்தின் ஒரு பகுதியாக இருந்தது (அம்மாநிலத்தை முன்னர் "சமஸ்தானம்" எனவும் கூறுவதுண்டு). மேலும் தெளிவாக கூறுவதாயின், முந்தைய் திருவனந்தபுரம் மாவட்டத்தின் பகுதியாக 1956ஆம் ஆண்டுவரை இது இருந்து வந்தது. மொழிவழி அடிப்படையில், 1956-ம் ஆண்டு மாநிலங்கள் புனரமைப்பு செய்யப்பட்டபோது, தற்போதைய கன்னியாகுமரி மாவட்டம் தோன்றியது. தமிழ் மற்றும் கேரள இலக்கியங்களில், நாஞ்சில் நாடு, எடநாடு என குறிப்பிடப் பட்டுள்ள பகுதிதான் தற்போதைய கன்னியாகுமரி மாவட்டமாகும்.

கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம், தோவாளை, கல்குளம் மற்றும் விளவங்கோடு ஆகிய நான்கு வட்டங்களைக் கொண்டதாகும். அகஸ்தீஸ்வரம் மற்றும் தோவாளை ஆகிய இரு வட்டங்களும் அடங்கும் பகுதி நாஞ்சில் நாடெனவும், ஏனைய இரண்டு வட்டங் களும் அடங்கிய பகுதி எடநாடு எனவும் அழைக்கப்பட்டது. இப்பகுதி முன்னர் திருவாங்கூர் மாநிலத்தின் பகுதியாகவும், பின்னர் கேரள மாநிலத்தின் பகுதியாகவும் இருந்துவந்த போதிலும் அது, பண்பாடு, சமுதாயம் மற்றும் பொருளாதார நிலையில் தனது தனித்தன்மையை எப்பொழுதுமே நிலைநிறுத்தி வந்துள்ளது.

தற்போதைய கன்னியாகுமரி மாவட்டம், ஆய் மன்னர்களின் காலந்தவிர, ஒரே முடியரசு நாடாக இருந்ததில்லை. மாவட்டத்தின் பகுதிகள், பற்பல காலக்கட்டங்களில், பல மன்னர்கள் மற்றும் மக்கள் தலைவர்கள் ஆட்சியின் கீழ் இருந்துவந்தது. மாவட்டத்தை ஆண்ட பற்பல அரச குலத்தினரின் வரலாற்றினைப் பொருத்தமான நிகழ்ச்சி களைத் தேடித்தொகுத்து, மாவட்டத்தின் வரலாற்றினை அளிக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதாவது, கன்னியாகுமரி மாவட்டத்தையோ, அதன் ஒரு பகுதியையோ, முன்னர் ஆண்ட பாண்டியர், சோழர், நாயக்கர் மற்றும் வேநாட்டை ஆண்ட பரம்பரையினர் ஆகியோர் குறித்த வரலாற்றினை ஆய்ந்து,மாவட்டத்தின் வரலாறு தொகுக்கப்பட்டுள்ளது. திருவாளர்கள் நாகமையா, டி.கே. வேலுப்பிள்ளை ஆகியோர் எழுதிய திருவாங்கூர் மாவட்ட நடைமுறை நூல், திரு. சங்குண்ணி மேனன் எழுதிய திருவாங்கூர் வரலாறு திரு. கே.கே. பிள்ளை எழுதிய "சுசீந்திரம் திருக்கோயில்". திரு.கே.ஏ. என். சாஸ்திரி எழுதிய "சோழர்", "பாண்டிய வரலாறு" மற்றும் "தென்னிந்திய வரலாறு". இவைதவிர, தென்னிந்திய வரலாறு" குறித்து, ஏனைய வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் எழுதிய நூல்களிலிருந்தும் ஆதாரங்கள் தொகுக்கப்பட்டு, இத்தொகுதியில் சேர்க்கப்பட்டுள்ளன.

நாஞ்சில் நாட்டின் தோற்றம் பற்றிய வரலாற்று விவரங்கள், "கேரளோத்பத்தி" என்ற மலையாள நூல் "கேரள மகாத்மியம்" என்ற வடமொழி (சமஸ்கிருதம்) நூல் ஆகியவற்றில் அடங்கியுள்ளன. தற்போதைய கன்னியாகுமரி கடலில் மூழ்கியிருந்ததாகவும், மஹா விஷ்ணுவின் அவதாரமான பரசுராமரின் கடுந்தவ வலிமையால் கடல்நீர் வற்றியதாகவும், உடனடியாக, நீர் வற்றிய நிலம் தெரிய வந்ததாகவும் அதுவே கன்னியாகுமரி எனப்பெயர் பெற்றதாகவும் இந்நூல்கள் கூறுகின்றன. ஆனால், தமிழ் இலக்கியங்கள் மாறுபட்ட கருத்தைத் தெரிவிக்கின்றன. தமிழகத்தின் தெற்கு எல்லை மேலும் தெற்குக் கோடியில் இருந்ததாகவும், பின்னர், வடதிசையில் கடல் அரிப்பினால் மூடப்பட்டு விட்டதாகவும் அவை கூறுகின்றன. இந்த வரலாற்றுக் கதைகளை உறுதி செய்யும் வகையில், இந்நிலம் ஒரு காலத்தில் கடல் நீருக்கு அடியில் இருந்ததாக மண்ணூல் ஆராய்ச்சியாளர்கள் எழுதியுள்ளார்கள். ஆகையால், இந்த வரலாற்றுக் கதைகள், பின்னர் தெற்கே ஊடுருவிய ஆரியர்களால் பொருத்தமாக உருவகப்படுத்தப் பட்டிருக்கலாமென்பது புலனாகிறது[1].

வரலாற்றிற்கு முற்பட்ட காலம்

கன்னியாகுமரி மாவட்டத்தினுடைய வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தின் நாகரீகம் குறித்து ஆழ்ந்த ஆராய்ச்சியோ, கல்வெட்டுப் போன்றவற்றைத் தோண்டியெடுத்து வரலாற்று விவரங்களைக் கண்டறிதல் போன்ற ஆய்வோ இதுகாறும் மேற்கொள்ளப்படவில்லை. எனினும் திருநெல்வெலி கட்டபொம்மன், வ.உ. சிதம்பரனார் மற்றும் மதுரை ஆகிய அண்டை மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட தொல்பொருள் ஆராய்ச்சி மற்றும் அகழாய்வு போன்றவற்றிலிருந்து 4000 ஆண்டுகளுக்கு முன்னர், வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திய மனிதர்கள் வாழ்ந்திருப்பதை உறுதி செய்கிறது. அதே நிலை, கன்னியாகுமரி மாவட்டத்திலும் இருந்திருக்கலாமென கருதமுடிகிறது.

1945ஆம் ஆண்டு, முந்தைய திருவாங்கூர் மாநில அரசின் தொல்பொருள் ஆராய்ச்சித்துரை கல்குளம் வட்டம், வெள்ளிமலை கிராமத்தில் அகழாய்வை முனைந்து மேற்கொண்டது. அவ்வமயம், இறந்தவர்களைப் புதைக்கப் பயன்படுத்தப்பட்ட தாழிகள் கண்டு பிடிக்கப்பட்டன. அதேபோன்று தாழிகள், திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ஆதிச்சநல்லூர் கிராமத்திலும் தோண்டி யெடுக்கப்பட்டது. அவற்றில் உடைந்த பாறைகள் மற்றும் துருப்பிடித்த இரும்பு ஆகியவற்றின் தூள்கள் இருந்ததாகக் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இவை "கூன்" என அழைக்கப்பட்டன. "கூன்" என்ற தமிழ் சொல் "வளைந்த முதுகு" எனப்பொருள்படும். பண்டைய காலங்களில் மக்கள் முதிர்ந்த வயதுவரை வாழ்ந்தார்களெனவும், மூப்பு காரணத்தால், அவர்கள் முதுகு வளைந்து காணப்பட்டார்களென்பதில் மக்களுக்கு நம்பிக்கை இருந்ததென்பதும் தெரிகிறது. முதியோர் இறந்த பின்னர், அவர்களது சடலங்களை, அவர்கள் விரும்பி பயன்படுத்திய அவர்களது

சொந்த உடைமைகளான, பானைகள், தானியங்கள் மற்றும் இரும்புப் படைக்கலங்கள் ஆகியவற்றுடன் சேர்த்து புதைத்தார்களெனவும் கூறப்படுகிறது. எனினும், இந்தத்தாழிகள், சடலங்களைப் புதைத்த பின்னர் மேற்கொள்ளப்படும் சடங்குகளுக்கு, கிறிஸ்து பிறப்பிற்கு முற்பட்ட காலத்தில் மூன்றாவது நூற்றாண்டிலிருந்து முதல் நூற்றாண்டு வரை (3-வது நூற்றாண்டு பி.சி. முதல் 1ஆம் நூற்றாண்டு பி.சி. வரை) வாழ்ந்த மனிதர்களால் பயன்படுத்தப்பட்டிருக்கலாமென தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களில் ஒரு பகுதியினர் கருதுகிறார்கள். சங்ககால இலக்கியமான, "புறநானூற்றில்". முது மக்கள்தாழி, அதாவது முன்னோர்கள் பயன்படுத்திய தாழிகள் பற்றி, குறிப்பிடப்பட்டுள்ளது. கலியக்காவிளை கிராமத்திற்கு அருகாமையிலுள்ள பெராம்கோடு என்ற இடத்தில், புதிய கற்காலத்தைச் சார்ந்த, தோராயமாக கிறிஸ்து பிறப்பிற்கு முற்பட்ட 1500 முதல் 1000 நூற்றாண்டு வரையிலான காலத்தில், (வரலாற்றுக்கு முந்திய காலத்தில் வழங்கிய)கோடாரி போன்ற கருவி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்டம், தூத்தூர் கிராமத்தில், கையினால் செய்யப்பட்ட சொர சொரப்பான மண் சாடியும், ஏனைய வரலாற்று நினைவூட்டுப் பொருட்களும் தேடியெடுக்கப்பட்டன. அவற்றின் வடிவமைப்பு அணி மற்றும் ஒப்பனை ஆகியவற்றை நோக்குங்கால், அவை வரலாற்றிற்கு முன்னர் வாழ்ந்த கற்கால மனிதர்கள் காலத்தையொத்தவை என கணிக்க முடிகிறது.

இப்பகுதியின் பழக்க வழக்கங்கள், பழங்கதைகள் ஆகியவற்றைக் கூர்ந்து ஆராய்ந்திடின், இங்கு ஒரு பெரிய நகரம் வளமையூட்டிய தெனவும், அது வரலாற்றிற்கு முன்னர் வாழ்ந்த கற்கால மனிதர்கள் காலத்தையொட்டியிருக்கலாமெனவும், அது மொஹஞ்சதாரோ, ஹரப்பா நாகரீகத்தையொத்ததாக இருந்திருக்கலாமெனவும் எவ்வித ஐயப் பாடின்றி நம்ப இடமளிக்கிறது. மேற்குறிப்பிட்ட வரலாற்று நினைவுப் பொருட்கள், ஆற்றுப் படுகையில் கண்டுபிடிக்கப்பட்டமையால், இந்நாகரீகம் பிற்காலத்தில் கடல் அரிப்பினால் வேகமாக அடித்துச் செல்லப்பட்டிருக்கலாமென நம்ப வேண்டியுள்ளது[1(அ)].

தொல்பொருள் ஆராய்ச்சி

மாவட்ட தொல்பொருள் ஆராய்ச்சியின் தனித்தன்மை, சிற்பக் கலை, சிற்ப செதுக்கு கலை, மற்றும் கல்வெட்டுக்கலை ஆகிய தலைப் பின் கீழ் விவரிக்கப்பட்டுள்ளன. தொல்பொருள் ஆராய்ச்சியில் கண்டு பிடிக்கப்பட்ட பல்வேறு பொருட்கள், மதுரை மற்றும் திருநெல்வேலி-கட்டபொம்மன் ஆகிய அண்டை மாவட்டங்களில் கண்டுபிடிக்கப்பட்ட பொருட்களை யொத்தவையாயுள்ளன.

மாவட்டத்தின் சிற்பக்கலைப்பாங்கின் ஆதாரம், திராவிட பாரம் பரியத்தின் சிற்பவேலைப்பாட்டினையொத்துள்ளது. மாவட்டத்திலுள்ள பல தொன்மையான கோயில்களின் பாங்கு மற்றும் சிற்ப வேலைத் திறன், ஆகியவை மிகவும் அற்புதமாக உள்ளன.

இது தொடர்பான முதன்மையான மேற்கோள்கள் பின்வருமாறு:

1) சுசீந்திரம் கோவிலின் கோபுரம் மிகவும் நேர்த்தியான வேலைப்பாடு கொண்டது. இக் கோவிலைப் புதுப்பிக்கும் பணி, முதலாம் பாண்டிய பேரரசின் மன்னரான மாறன் சடையன் (765 கி.பி.-815 கி.பி.) அரசாண்ட காலத்தில் மேற்கொள்ளப்பட்டது.[2]

2) கன்னியாகுமரியிலுள்ள கன்னிதேவதையான கன்னியாகுமரி அம்மனுக்கு அர்ப்பணம் செய்யப்பட்டுள்ள கன்னியாகுமரி கோவில், பாண்டிய மன்னரான கோச்சடையன் அரசாண்டபோது, அவரது 16-வது ஆட்சி ஆண்டில் (726 கி.பி.) மிகச் சிறப்பாகக் கட்டப்பட்டது. எனவே, இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. சோழபுரம், கிருஷ்ணன் கோயில் மற்றும் திருவட்டார் ஆகிய ஊர்களிலுள்ள தொன்மையான கோவில்களும், திராவிட பாரம்பரியத்தின் சிற்ப வேலைப்பாட்டினையே பிரதிபலிக்கின்றன.

இவை தவிர, நாகர்கோயிலுள்ள நாகராச கோயில் மற்றும் விளவங்கோடு வட்டம் குழித்துறைக்கு அருகிலுள்ள சிட்டாரல் ஆகிய இடங்களில் சமணர் காலத்துத் தொன்மையான நினைவுச் சின்னங்கள் காணப்படுகின்றன. சிட்டாரலுக்கு அருகிலுள்ள திருச்சானாட்டு மலையில், பாறையைக் குடைந்து, ஒரு நேர்த்தியான சமணர் கோயில் கட்டப்பட்டுள்ளது. ஆனால் தற்போது சமணர் செல்வாக்கு குறைந்து, இந்துக்களின் தனிச்சிறப்பு வாய்ந்த புண்ணியத்தலமாக அது விளங்குகிறது.

நாகர்கோயிலிலுள்ள நாகராசா கோயிலில், கேரள மற்றும் சமண சிற்பக்கலையை ஒட்டுமொத்தமாகக் கொண்ட சிற்பம் உள்ளது. இது, திராவிட பாரம்பரியத்தின் சிற்ப வேலைப்பாட்டினை பிரதிபலிக்கிறது. 1522 கி.பி. வரை இது சமணர் கோயிலாகவே இருந்து வந்தது. பின்னர் இது ஒரு இந்து கோயிலாகப் புதுப்பிக்கப்பட்டது.[3]

சிற்பக்கலை

இருவகை கோட்பாடுகளை விளக்கும் வகையில் சிற்பங்கள் இம்மாவட்டத்தில் உள்ளன. ஒன்று சமணர் கோட்பாட்டுக்குரியது; மற்றொன்று இந்து கோட்பாட்டைத் தழுவியது. சிற்ப செதுக்குவேலைகளில் பல, புடைப்புச் சிற்பங்கள் வடிவிலேயே உள்ளன. சமண சமயத்தைச் சார்ந்த 24 தீர்த்தங்கரர்கள் கோயில்களில் பெரும்பாலும் காணப்படுகின்றனர். இவற்றில், திருச்சானாட்டுமலை, பகவதியம்மன் கோயிலிலுள்ள கல்வெட்டுக்கள் முதலியன முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். அங்கே, சமண சமயத்தைச் சார்ந்த சிற்பங்களின் சிறப்பியல்புகள் எளிதில் விளங்குகிற அளவில் வரையப்பட்டுள்ளன.

மாவட்டத்திலுள்ள இந்து கோயில்களில், இந்து கோட்பாட்டுக்குரிய சிறப்பியல்புகள் விலக்கும் வகையில் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன,

சுசீந்திரத்திலுள்ள திருக்கோயில், மிகச்சிறப்பு பெற்ற இந்து கோட்பாட்டிற்கான சிற்பங்கள் உள்ளன.

கல்வெட்டுக்கள்

வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த பல கல்வெட்டுக்கள் மாவட்டத்தில் கண்டறிந்து படியெடுக்கப்பட்டு பதிப்பிக்கப்பட்டுள்ளது இம்மாவட்டத்தின் மிகப்பழமையான கல்வேட்டு கி.பி. எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும். அக்கல்வெட்டுக்கள் பெரும்பாலும் தமிழ் அல்லது வட்டெழுத்தில் உள்ளன.

வரலாற்றின் துவக்கம்

இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்த அயல்நாட்டுப் பயணிகள் அளித்துள்ள பயணக் குறிப்புகள், சங்க இலக்கியங்கள் ஆகியவற்றில் தற்போதைய கன்னியாகுமரி மாவட்ட பகுதியின் வரலாறு விரிவாக விளக்கப்பட்டுள்ளது. நடுநிலக் கடல் பகுதியை ஒரு காலத்தில் ஆண்டவர்களான பினீசியர், கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் அதன் சுற்றுப் பகுதிகளில் வளர்ந்திருந்த சந்தனமரங்கள் மற்றும் நறுமணப்பொருட்கள் ஆகியவற்றால் ஈர்க்கப்பட்டனர் என வரலாறு கூறுகிறது. அதனால், அவர்கள் இந்நிலப் பகுதியில், மிகப்பரவலாகப் பயணம் செய்தனர். கன்னியாகுமரி மாவட்டப் பகுதி குறித்து எழுதிய அயல்நாட்டுப் பயணிகளில் பினீசியர் முதலிடம் வகிக்கின்றனர். கி.மு. 276இல், இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட இரடோஸ் தனிஸ்[4], தனது குறிப்பில், கன்னியாகுமரியைப் பற்றி விளக்கிக் கூறியுள்ளார். பெயர் குறிப்பிடப்படாத ஒரு நூலாசிரியர் "இரைத்திரியன் கடல்" குறித்த தனது நூலில், (கி.பி. 81-96) கன்னியாகுமரியைப் பற்றிக் குறித்துள்ளார். இதில், 'கொமரி' என்பது 'துறைமுகம்' என பொருள்படும் என விளக்கப்பட்டுள்ளது. மேலும், 'நெல் சிந்தா' விற்குத் தெற்கே, கொமரி வரை உள்ள நிலப்பரப்பு, பாண்டிய நாட்டின் ஒரு பகுதியாக இருந்ததென இதில் குறிப்பிடப்பட்டுள்ளது[5]. கான்ஸல் யூல், நெல் சிந்தாவை 'கல்லடா' வுடன் அடையாளம் காட்டியுள்ளார்[6]. ஆனால், கே.ஜி அய்யர், அதனைக் கேரள மாநிலம் கொல்லத்திற்கு அருகிலுள்ள 'நிந்தக்கரா' எனக் கூறியுள்ளார். ஆனால் கே.கே. பிள்ளையின் கூற்றுப்படி, இவை இரண்டுமே சரியல்ல எனத் தெரிகிறது. ஏனெனில் "இரைத்திரியின் கடல்" என்ற நூலில் கூறியுள்ளவாறு, 'நெல்சிந்தா', "மௌஸிர்ஸ்"லிருந்து 500 "ஸ்டடி" தொலைவிலிருந்ததாகவும், ஆனால் கல்லடா மற்றும் நிந்தக்கரா ஆகியவை "கொமரி"யிலிருந்து 800 ஸ்டடி தொலைவிலிருப்பதாக வரலாற்றுப் படைப்புக்களிலிருந்து அறியவருகிறது. எனினும், கனகசபை பிள்ளை கொமரியை, மினசலுக்கு அருகிலுள்ள நீர்குன்றம் என்ற இடத்துடன் அடையாளம் காட்டிக் கூறுகிறார். இது, கே.கே. பிள்ளையின் கருத்தை ஒத்துள்ளது.

அடுத்த ஐரோப்பிய பயணியான தாலமி இப் பகுதியினைப் பற்றி, தனது" நில இயல்" என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். இந்நூல் கி.பி.140-இல்

தொகுக்கப்பட்டது. அவரது கூற்றுப்படி ஆய்மன்னர்களின் நாடு, சேர நாட்டிற்குத் தெற்கே சிறந்து விளங்கியது. மேலும் அது நெல்சிந்தாவிலிருந்து (அநேகமாக பெரிப்லஸ் நூலில் குறிப்பிட்டுள்ள நெல்சிந்தாவிற்கு ஒப்ப உள்ளது) "கொமரி" வரை பரவலாக இருந்தது. இதில் "கொமரி" எனக் குறிப்பிட்டுள்ளது. பெரிப்லஸ் நூலில் குறிப்பிட்டுள்ள பாண்டிய மன்னர்களின் ஆட்சியிலிருந்த "கொமரியா" தான் என்பது புலனாகிறது. ஆயிகள் பாண்டிய மன்னர்களிடமிருந்து இவ்வாட்சி பகுதியை வென்றிருக்கலாமென இதனின்றும் தெரிய வருகிறது.

ஆயிகள் இப்பகுதியினை வென்று, பெற்ற காலம் கி.பி.96-லிருந்து கி.பி. 140-க்குள் இருந்திருக்கலாமென கூறப்படுகிறது. ஆனால், இது தொடர்புள்ள ஏனைய விவரங்கள் குறித்து அறிய இயலவில்லை.

நாஞ்சில் நாடும் ஆயி மன்னர்களும்

இப் பகுதியினை ஆண்ட மிகப் பழைய மன்னர்கள் ஆயி பரம்பரையைச் சார்ந்தவர் ஆவர். அவர்களின் நெடுங்காலத்திற்கு முந்திய மூதாதையர், 'ஹித ராஜா' எனப்படுவர் என அசோகன் பாறைக் கல்வெட்டுகளில், அரசாணைகள் II மற்றும் XIV ஆக செதுக்கப்பட்டுள்ள விவரம் தெரிய வருகிறது. 'ஹிதா' என்ற சொற்றொடர் 'இட' அல்லது 'இடையர்' எனப் படிப்படியாக மாறுபட்டு, அதன் இணைப்பொருட் சொல்லான ' ஆயர்' என அழைக்கப்படுகிறது. 'ஆயர்' என்ற சொல்லின் ஒருமைச் சொல் 'ஆயி' எனப்படும். 'பொதியில் ' மலைத் தொடரை சுற்றியுள்ள பகுதி அவர்களின் ஆளுகைக்குட்பட்டதாக இருந்திருக்கலாம். எனவே' ஆயி'களின் தொல் பழமைக்காலம், கி.மு.250 ஆகவோ அல்லது அதற்கு முன்னதாகவோ இருக்குமென கருதலாம். இவர்களைப் பற்றிய குறிப்பு அசோகர் காலத்திய அரசாணைகளைத் தாங்கிய கல்வெட்டுக்களில், சோழர், பாண்டியர், சேரர் மற்றும் சத்திய புத்திரர்கள் போன்ற மன்னர்களுடன் சேர்த்து, தன்னாட்சி உரிமை பெற்ற மன்னர்கள் என கோடிட்டுக் காட்டியிருப்பதனால், இவர்களது முக்கியத்துவம் மேலோங்கி நிற்கிறது எனில், மிகையில்லை.

ஏற்கனவே கூறியது போன்று, பெரிப்லஸ் நூலில் (கி.பி.181-96) நெல்சிந்தாவிலிருந்து, கன்னியாகுமரி வரையிலான பகுதி, பாண்டிய மன்னர்களின் ஆளுகைக்குட்பட்டிருந்ததென குறிப்பிடப்பட்டுள்ளது. "ஆயி" என்ற இனத்தவர் குமரி முனை மற்றும் பொதியில் மலைப் பிரதேசத்தை ஆண்டு வந்தார்கள் என்ற கூற்று, பெரிப்லஸ் நூலில் குறிப்பிட்டுள்ளது போன்று, ஆயிகள் பாண்டிய மன்னர்ளுக்கு, கப்பம் செலுத்துபவர்களாக இருந்திருக்கலாம் எனவும், சில காலத்திற்குப் பின்னரே தன்னாட்சி உரிமை பெற்றிருக்கலாம் எனவும் கிரேக்க நில இயல் ஆராய்ச்சியாளரான, தாலமி கூறுகிறார். தாலமியின் காலத்தில் நாஞ்சில் நாடு, சேர மற்றும் பாண்டிய மன்னர்களின் தாக்குதலுக் காளாகிய நாடாக இருந்திருக்கலாம் எனவும் கருத இடமுண்டு.

ஆயி ஆந்திரன்

கன்னியாகுமரி மாவட்ட பகுதிகளை ஆண்ட மன்னர்களுள் ஆயி ஆந்திரனும் ஒருவர். இவர்களின் மூதாதையர் வழி மரபு குறித்து பல கதைகள் உண்டு. அவர்கள் "ஓமகுண்டத்தினின்றும்" வந்தவர்கள் என்பது அவற்றுள் ஒன்றாகும். மேற்குத் தொடர்ச்சி மலையின் தென்கோடியிலுள்ள பொதிகை மலைத் தொடரைச் சுற்றி அமைந்த பகுதியே ஆயி ஆந்திரனின் ஆளுகைக்குட்பட்ட பகுதியாகும்.

சங்க இலக்கியங்களிலுள்ள செய்திகள் ஆயிகளைப்பற்றியோ அவர்களது அரசாட்சியைப் பற்றியோ, ஒரு திட்டவட்டமான முடிவெடுக்க உதவியளிப்பவையாக இல்லை. அறுதியிட்டு இறுதியாகச் சொல்லக்கூடிய ஆதாரங்கள் எவையும் அவற்றில் இல்லை என கொள்ளலாம். ஒரு ஆயி ஆந்திரனைப்பற்றி புறநானூறு கூறுகிறது. என்னவெனில், அவர் வேல் ஆயி எனவும், மாவேல் ஆயி எனவும் அழைக்கப்பட்டார். திரு.வி.வி. சுவாமிநாத அய்யரின் கூற்றுப்படி, முன்னர் ஒரு முதன்மையான நகரமாக இருந்த ஆயிகுடி, (தற்போது செங்கோட்டைக்கு அருகேயுள்ள உட்கிராமம்) ஆயிகளின் தலைநகரமாக இருந்திருக்கலாம். ஆனால், திரு. கோபிநாதராவ், திரு. சுவாமிநாத அய்யரின் கூற்றினை ஏற்கவில்லை[7]. கோட்டைகளோ, அரண்மனைகளோ இருந்தமைக்கு ஆயிகுடியில் எவ்வித தடையமும் இல்லை என்ற காரணத்தால், அது தலைநகரமாக இருந்திருக்க முடியாது என்பதே அவர் கூறும் முகாந்தரமாகும். கட்டிட அமைப்புகள் இல்லாத ஒரே காரணத்தால், அது தலைநகரமாக இருந்திருக்க முடியாதென்ற அவரது விவாதம் வலுவற்றதாகும். உதாரணமாக புகார், கருர் ஆகிய இடங்களில், நினைவுச் சின்னங்களோ, கட்டிட அமைப்புகளோ இல்லை; எனினும், அவை சோழர் காலத்து தலைநகரங்களாக இருந்திருக்க முடியும் என்பதற்கு, வேறுபல சான்றுகள் உள்ளதால் அவை தலைநகரங்கள்தான் என நம்ப முடிகிறது.[8]

ஆயர்களில், (மேய்க்கும் இனத்தைச் சார்ந்தோர்) ஒரு ஆற்றல் மிக்க தனியுரிமை ஆட்சியாளராக ஆயி ஆந்திரன் விளங்கினார். தமிழ் கவிஞர்களுக்கு அவர் நல்லாதரவினை நல்கினார். குறிப்பாக, அவரைப் பற்றி புகழ்ந்து பாடிய முடமோசியார், குட்டுவன் கீரனார் மற்றும் ஓடைக்கிழார் ஆகியோரைச் சொல்லலாம். அதே காலத்தில் வாழ்ந்த மற்றொரு கவிஞரான காரைக்கண்ணனார் ஆயி ஆந்திரனைப்பற்றி, தனது படைப்பில் கூறியுள்ளார்.[9] சோழ மன்னரின் தன்னாட்சி உரிமை பெற்ற சேரமன்னர், முடித்தலை-கோ-பெறுநற்கிள்ளி குறித்தும், சேர அரசின் தன்னாட்சி உரிமை பெற்ற மன்னர் அந்துவன் சேரல் ஆகியோரைப்பற்றியும் புகழ்ந்து பாடிய முடமோசியார், ஆயி ஆந்திரன் அதே காலத்தில் வாழ்ந்த சோழ, சேர மன்னர்களுடன் தொடர்பு கொண்டு, ஆட்சி குறித்து மேற்கொண்ட சமகால நிகழ்ச்சிகளை உறுதிப்படுத்தும் ஒரு பாலமாக விளங்குகிறார்.

தமிழ்நாட்டு வரலாற்றில் கால நிர்ணயத்தின் முக்கிய சான்றலிக்க கையாளப்படும் மூலமாக அமைந்துள்ள "கயவாகு செங்குட்டுவன் சந்திப்பு நிகழ்வினை" ஆதாரமாகக் கொண்டு கணக்கிடின்,[10] அந்துவன் சேரறின் ஆட்சிக் காலம் ஏறக்குறைய கி.பி.100 முதல் 120 வரை இருந்திருக்கலாமெனக் கருதலாம். இதிலிருந்து ஆயி ஆந்திரனும் ஏறத்தாழ அதே காலத்தில், (அதாவது) கி.பி. 100 முதல் 120 வரை அரசோச்சி இருக்கலாமென நினைக்கத் தூண்டுகிறது. ஆனால், திரு.கே.என். சிவராஜப்பிள்ளையின் கூற்றுப்படி, அவர் அரசோச்சிய காலம் தோராயமான கி.பி. 1 முதல் 25 வரை இருக்கலாம் எனக் கருதலாம்.[11]

திதியன்

ஆயி ஆந்திரனை மரபில் பின் தொடர்ந்தவர், எவரென இன்னமும் அறுதியிட்டுக் கூற இயலவில்லை.[12] ஆனால், பூத பாண்டியன் என்ற கவி மன்னரால், திதியன் என்பவர் 'பொதியற் செல்வன்' என குறிப்பிடப்பட்டிருப்பதாக சங்க இலக்கியம் கூறுகிறது.[13]

கயபாகு செங்குட்டுவன் ஒருங்கு நிகழ்வு

பத்தினிதேவியின் உருவ திருநிலைப்பாட்டிற்கு வருகைதந்த பல மன்னர்கள் குறித்து சிலப்பதிகாரம் கூறுகிறது. அவர்களுள், இலங்கை யை ஆண்ட மன்னர், கயவாகுவும் ஒருவர். கயவாகு கி.பி 175 முதல் கி.பி.191 வரை இலங்கையை ஆண்டார். எனவே, செங்குட்டுவனின் பதவிக்காலம் கி.பி. 2-ம் நூற்றாண்டென நாம் ஐயமின்றிக் கூறலாம். இதை மூலபலமாக கொள்ளலாமெனும் திரு.கே.ஜி. சேஷய்யரின் கூற்றில் எவ்வித ஐயப்பாடுமில்லை, இக்கருத்து தென்னிந்திய வரலாற்றாசிரியர்களான கே.என்.சிவராஜபிள்ளை, கே.கே.பிள்ளை, கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி மற்றும் பலரால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது [சேஷய்யர், கே.ஜி. சங்க காலத்தைச் சார்ந்த சேர மன்னர்கள் (1937), பக்கங்கள் 119-121].

திரு.கே.என் சிவராஜபிள்ளை, முதலாம் திதியன் என்பவர், ஆதி அந்திரனின் மரபு வழி வந்தவர் என ஆராய்ந்து கூறுகிறார். ஆனால், ஐயப்பாடற்ற உண்மை என்னவெனில், திதியன் என்பவர் ஆயி அந்திரனின் மரபு வழி வந்தவர்களில் ஒருவர் என்பதாகவும், ஒரு விரிவான மலைப்பிரதேசத்தை ஆண்ட திதியன் என்ற மன்னனின் ஆட்சியினுடைய உயர்நிலையை பூதபாண்டியன் என்ற கவி மன்னர் அவரது பாடல்கள் ஒன்றில் கீழ்க்கண்டவாறு ஒப்புகை அளித்துள்ளார்:[14]

"வருவா வாழி தொழி பொருநர்,
செல்சமர் கடந்த வில்கெழ தடக்கைப்
பொதியிற் செல்வன் பொலந்தேர்த் திதிய
வின்னிசை யியத்திற் கறங்குங்
கன்மிசை யருவிய காடிறந்தோரே"[15]

முடமொசியார் அவர்கள், "புறநானூற்றில்" தெளிவாக விளக்கியுள்ளார். அதில் ஆயிமன்னர்கள் தன்னாட்சி உரிமை பெற்ற ஆட்சியாளர்கள் என கூறப்பட்டுள்ளது. அந்தப் பாடல் பின்வருமாறு:[16]

"கழறொடி யாஅய் மழைதவழ் பொதியி
வாடுமகள் குறுகி னல்லது
பிடகெழு மன்னர் குறுகலோ வரிதே"

திதியன் ஆட்சியின் உயர்நிலையிலிருந்த போதிலும், அவரது சம காலத்தவரான பூதபாண்டியன், திதியனின் எல்லையில் ஊடுருவிச் சென்று, அதில் அடங்கிய ஒரு கிராமத்திற்கு அவரது பெயரைச் சார்ந்து "பூதபாண்டி" என பெயர் சூட்டினார். அவ்வூர் அதே பெயரில் இன்றும் அழைக்கப்படுகிறது. அந்த நகரத்தில் ஒரு எழில்மிகு கோயிலும் எழுப்பப் பட்டிருக்கிறது. பாண்டிய நாட்டின் மேற்கு எல்லையாக பூதபாண்டியை நிர்ணயித்து, திதியனுக்கும் பாண்டிய மன்னனுக்கும் ஓர் உடன்பாடு ஏற்பட்டிருக்கக்கூடுமென கருதலாம்.[17] ஆனால் பூதபாண்டியன் மற்றும் திதியன் ஆகியோரின் ஆட்சிக் காலத்தை சரியாக கணித்திட மேற்கொண்ட முயற்சிகள் பயனளிக்கவில்லை. எனினும், திதியனின் ஆட்சிக் காலம் கி.பி. 25 முதல் கி.பி. 50 வரை என திரு.கே.என். சிவராஜப்பிள்ளை வகுத்துள்ளார்.[18]

அதியன்

அதியன் கி.பி.50 முதல் கி.பி. 75 வரை ஆட்சிப் பொறுப்பில் இருந்திருக்கிறார்.[19] இவர், திதியனுக்குப் பிறகு ஆட்சியை ஏற்றுள்ளார். பிள்ளையவர்கள் இந்த காலவரையை, பசும்பொன் பாண்டியன், அதியன் என்பவரை வெற்றி கொண்டதாகப் புறநானூற்றில் கூறியிருப்பதை மேற்கோள் காட்டி நிர்ணயித்துள்ளார்.[20] நெய்யாற்றங்கரை வட்டத்தில், அதியனூர் எனும் பெயர் கொண்ட கிராமம் இருப்பதாகவும், அதேபோன்று தோவாளை வட்டம் அழகிய பாண்டியபுரம் கிராமம் முன்னர் அதியனூர் என அழைக்கப்பட்டு வந்ததாகவும், இக்கிராமங்களுக்கு அதியனின் பெயரை வைத்தே அதியனூர் என பெயர் சூட்டப்பட்டதெனவும் அவர் மேலும் கூறுகிறார். ஆனால், இந்த சொல்லாக்க விளக்கம் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை. ஏனெனில், 'அகநானூறிலோ, அல்லது வேறு வரலாற்று நூல்கள் அல்லது இலக்கியங்களிலோ, அதியன் பொதியில் மலைப் பிரதேசத்தை ஆண்டதாகவோ, அவர் ஆயி வம்சத்தைச் சார்ந்தவர் எனவோ, குறிப்புகள் இல்லை. அதே நேரத்தில், அதியனை தகடூரை ஆண்ட அதியமானுடன் அடையாளங்கண்டு கொள்ளலாம் என நம்ப முடிகிறது.[21]

இரண்டாம் திதியன்

அதியன் ஆட்சி புரிந்த காலத்தில், ஆயி வம்சத்தினர், பாண்டியர்களின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு, தன்னாட்சி உரிமை பெற கடுமையாகப் போராடினார்கள். இரண்டாம் திதியன் அதியனுக்குப்

பிறகு, பதவியேற்றிருக்கலாம் எனவும், அவர், பாண்டிய மன்னர் மூன்றாம் நெடுஞ்செழியனுடன் அரசியல் கூட்டு உடன்பாடு மேற்கொண்டிருக்கலாமெனவும் தொடர்ந்து உச்சக்கட்டமாக புகழ் பெற்ற தலையாலங்கானம் போரில் அது முடிந்திருக்கலாமெனவும் கருதமுடிகிறது. இரண்டாதிதியன் அரசியல் கூட்டு உடன்பாட்டினை தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, பாண்டியர் இணைப் பினின்றும் விடுபட்டுச் செல்ல எத்தணித்திருக்கலாமெனவும், ஆனால், மூன்றாம் நெடுஞ்செழியன் வல்லமை மிக்க ஆற்றல் பொருந்தியவராக இருந்ததால், இரண்டாம் திதியனின் முயற்சி பலனளிக்கவில்லை எனபதே மெய்யெனத் தெரிகிறது. தலையாலங்காணத்து போர், ஒரு காலத்தில் மிகுந்த ஆற்றலுடன் ஆட்சி புரிந்து வந்த ஆயி அரசுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டதெனவே கூறலாம். திரு.கே.என். சிவராஜ பிள்ளையின் கூற்றுப்படி, இரண்டாம் திதியன் அரசாண்ட காலம் கி.பி.75 முதல் கி.பி.125 ஆக இருந்திருக்கலாம் என்பதாகும்.[22]

தலையாலங்கானப் போர் முடிவிற்குப்பின்னர், பொதியில் நாடு மக்கள் தலைவர்களின் ஆளுகைக்குட்பட்ட வட்டாறு, நாஞ்சில் நாடு போன்ற சிறுசிறு பகுதிகளாக சிதறுண்டது. வட்டாற்றை, எழினி ஆதனும், நாஞ்சில் நாட்டை வள்ளுவர் கந்தனும் ஆண்டுவந்தார்கள். அவர்கள் ஆண்ட காலம், தலையாலங்கானப் போர் முடிந்த உடன் காலத்திலேயே, இருந்திருக்கலாமென தெரிகிறது. மைய மற்றும் தென் திருவாங்கூர் பகுதிதான் (தற்போதைய கன்னியாகுமரி மாவட்டத்தில் அடங்கிய பகுதி)"ஆயி நாடு" என தாலமி (கி.பி. 140) சுட்டிக் காட்டியுள்ளார். ஆயி வம்சம், தலையாலங்கானப் போரில், முழுமையாக அழிக்கப்பட்டுவிட்டாலும், ஆயி என்ற பெயர், அதன் பின்னர், பல காலங்களுக்கு அப்பகுதி மக்களின் செவிகளில் ஒலித்துக் கொண்டுதான் இருந்தது எனவும் இதுவே இப்பகுதியின் ஆயி நாடு என குறிப்பிட தாலமிக்கு தூண்டுகோலாக இருந்திருக்க வேண்டும். ஆனால், தலையாலங்கானத்துப் போருக்கு, திரு.கே.வ.என். சாஸ்திரி கணித்த காலவரையை ஏற்றுக்கொள்வதாயின், தாலமி தனது கருத்தை அதற்கு முன்னரே கூறியிருக்க வேண்டும்.

திரு.கே.என். சிவராஜபிள்ளை[23] முதலாம் திதியனுக்குப் பின் ஆயிகள் வரலாற்றில் ஒரு இடைவெளி இருந்ததாக குறிப்பிட்டுள்ளார். ஆனால், அவர்கள் எட்டாம் நூற்றாண்டில் அரசாட்சி செய்ததாக வரலாறு கூறுவதால், திரு.கே.கே.பிள்ளை கூறியுள்ள இடைப்பட்ட காலத்தில், ஆயிகள் வடக்கே ஆட்சி புரிந்த சேர மன்னர்களால், மிகக் குறுநில மன்னர்கள் நிலைக்கு இறக்கப்பட்டிருக்கலாமெனத் தோன்றுகிறது. எட்டாம் நூற்றாண்டில், ஆயிகள் குரு நாட்டை (திருவிதான் கோட்டை சுற்றிலுமுள்ள பகுதி) ஆண்டுவந்தார்கள் என்ற கூற்று, அவர்கள் பொதியில் மலைப் பிரதேசத்தை ஆண்டார்கள் என்ற வரலாற்றை முறியடிப்பதாகத் தெரிகிறது.

நாஞ்சில் பொருநன்

சங்க காலத்து கவிஞர்களான ஔவையார். ஒருசிரை பெரியனார் கருவூர் காடப்பிள்ளை ஆகியோரின் பாடல்களில், நாஞ்சில் பொருநன் என்பவரைப் புகழ்ந்து பாடியிருப்பதிலிருந்து நம்மில் உருப்பெறும் கருத்துயாதெனில், அவர் நாஞ்சில் நாட்டின் ஒரு பகுதியில் ஆட்சி புரிந்து வந்தார் என்பதுதான். புறநானூற்றின் கனத்துரையாளர் ஒருவர், அவரை 'நாஞ்சில் வள்ளுவன்' என வர்ணித்துள்ளார். ஆனால், அவரது தொடக்கப் பெயர் 'கந்தன்' என்பதாகும். 'பொருநன்' என்ற சொற்றொடர் 'மன்னர்' எனப் பொருள்படும். ஆனால், அது அரசர்களின் பட்டப் பெயர் எனத் தெரிகிறது.

அவர் மன்னரிடமிருந்து நில மானிய முறை உரிமை பெற்று ஆண்டு வந்தவரா, அதனால், அவர் சேர அல்லது பாண்டி மன்னர் களுக்குக் கடமைப் பட்டவரா, என்ற வாதம் கருத்து மாறுபாட்டிற்கு வழி வகுக்கும். திரு. சுவாமிநாத அய்யர், அவர், சேரர்களின் நிலமானிய உரிமை பெற்றவரெனக் கூறுகிறார். ஆனால், திரு.கே.கே. பிள்ளை, அவரது மேலாட்சி அரசு, பாண்டியர்கள்தான் என்ற கருத்தை பிரதிபலிக்கிறார்[24].

"செங்குட்டுவன்-கயவாகு ஒருங்கு நிகழ்வினை" அடிப்படையாகக் கொண்டால், நாஞ்சில் பொருனனின் ஆட்சிக்காலத்தை கி.பி. மூன்றாம் நூற்றாண்டெனவும், குறிப்பாக அந்நூற்றாண்டின் பிற்பகுதி எனவும் முடிவு செய்யலாம்.[25] ஆனால், திரு.கே.என்.சிவராஜபிள்ளை தயாரித்துள்ள ஒரு வரலாற்று நிகழ்ச்சிகளின் தொகுப்புப் பட்டியல்களை நோக்குங்கால், நாஞ்சில் பொருநனின் ஆட்சிக்காலம் கி.பி. 150 முதல் கி.பி. 175 வரை எனத் தெரிகிறது.

நாஞ்சில் பொருனனின் வழித்தோன்றல்களைப் பற்றி செய்திகளே இல்லை. நாஞ்சில் மலைக் குன்றுகளின் அடிப்புறத்தில் அமைந்துள்ள அதிக்கனூர் என்ற கிராமம் பின்னர் அழகிய பாண்டியபுரம் என அழைக்கப்பட்டது. இப்பெயர் மாற்றம் யாரால் ஏற்படுத்தப்பட்டதென்பது விவாதத்திற்குரிய பொருளாகும். வடநாஞ்சில் நாட்டை வென்ற பசும்பொன் பாண்டியன் அதிகனூருக்கு அழகிய பாண்டியபுரம் என பெயர் சூட்டியிருக்கலாம். ஏனெனில் "அழகிய" எனும் சொற்றொடர் "பசும்பொன்" எனப்பொருள்படுமென்ற திரு.கே.கே. பிள்ளையின் கூற்றினை மறுப்பதற்கில்லை[26].

சங்ககாலப் பாண்டியர் ஆளுகைக்குட்பட்ட நாஞ்சில் நாடு

தென் திருவாங்கூரின் தமிழ்மொழி பேசப்பட்டு வந்த 'பழைய பாண்டிய நாடு' என்ற சொற்றொடர், 'நாஞ்சில் நாட்டினை' த்தான் குறிக்குமென்ற கருத்து நிலவி வருகிறது. இப்பகுதி, திருநெல்வேலி யின் தென்மேற்கிலும் கன்னியாகுமரியின் வட மேற்கிலும் அமைந்த தாகும்.[27] பாண்டியர்கள் எப்பொழுதும் நாஞ்சில் நாட்டுடன் தொடர்பு கொண்டு வந்தார்களென்பதற்கு இலக்கியங்களிலும் கல்வெட்டுக் களிலும் போதிய சான்றுகள் உள. குறிப்பாக, இந்தியதுணைக்கண்டத்

தினுடைய நிலப்பரப்பின் தென்கோடியிலுள்ள புனித நகரமான கன்னியாகுமரி, நெடுங்காலத்திற்குப் பாண்டியப் பேரரசின் ஒரு பகுதியாக இருந்து வந்தது. ஒரு பாண்டிய மன்னரை "குமரி சேர்பன்"என,ஒரு சொற்களஞ்சியம் கூறுகிறது. கன்னியாகுமரி பாண்டியர்களின் ஆளுகைக்குட்பட்டிருந்ததென்ற கூற்றுக்கு "மதுரைக் காஞ்சி" என்ற இலக்கிய வரலாற்று நூல், ஆதாரமளிக்கிறது.[28] கன்னியாகுமரியில் கடலுடன் கலக்கும் "பஃருளி யாற்றின் ஆட்சியாளர்" பாண்டியமன்னர் என 'புறநானூறு' கூறுகிறது. இது தவிர, பண்டைய கல்வெட்டுக்களிலும் நாஞ்சில் நாடு, பாண்டிய நாட்டின் பகுதி என பொறிக்கப்பட்டுள்ளது. வடிவம்பலம்ப நின்ற பாண்டியன், தனது பொறியியல் திறனால் இந்த ஆற்றின் போக்கினை மாற்றியதாகக் கூறப்படுகிறது.[29] அன்னை கன்னியாகுமரி பாண்டியர்களின் குடும்ப தெய்வமாகப் போற்றப்பட்டது[30]. எனவே, பாண்டிய அரசு, நாஞ்சில் நாடு வரை விரிவாக்கப்பட்டமை, இந்திய நாட்டின் இப்பகுதியில் தாலமி பயணம் செய்த பின்னர், (கி.பி.140), நிகழ்ந்திருக்கலாமென கருதப்படுகிறது.

வலிவான பாண்டியர்கள் கன்னியாகுமரியின் வடபகுதியில், போரில் அவ்வப்போது வென்று, தனது உயர்நிலையை மேம்படுத்திக் கொண்டார்களென்பது, ஆயி குல மக்கள் தலைவர்கள் அவ்வப்போது, பாண்டியரிடம் போரிட்டுத் தோற்றார்கள் என்பதிலிருந்தே தெரிய வருகிறது.

தமிழ்ச்சங்க காலத்திலிருந்தே, நாஞ்சில் நாடு போர்க்களமாக இருந்து வந்திருக்கிறதென்பது உண்மையே. நாஞ்சில்நாடு மீது படையெடுக்கும் பாண்டியர்களுக்கு, ஆரல்வாய் மொழிகணவாய்தான் நுழைவாயிலாக இருந்தது. ஓலையூர் பூதபாண்டியன் என்பவர் நாஞ்சில் நாட்டின் மீது படையெடுத்த, மிகத்தொடக்க காலத்திய பாண்டிய மன்னராவார். கேரளோத்பத்தி என்ற மலையாள இலக்கியத்தில் இதுபற்றிக் கூறப்பட்டுள்ளது. எனினும், அவர் நாஞ்சில் நாட்டில் எப்பகுதிவரை படையெடுத்தாரெனத் திட்டவட்டமாக அறிய முடியவில்லை; ஆனால், பூதபாண்டி கிராமத்திற்கு அவரது வெற்றியைக் குறிக்குமுகத்தான் அப்பெயர் சூட்டப்பட்டிருப்பதிலிருந்து, பூதபாண்டியரை, அவர் போரில் வென்றிருக்கலாமென்பதிலும் பாண்டிய நாட்டுடன் நாஞ்சில்நாட்டின் இப்பகுதி அடங்கியிருந்திருக்கலாமென் பதிலும் எவ்வித கருத்து வேறுபாடுமில்லை.

நாஞ்சில் நாடும் முதல் பாண்டியப்பேரரசும்

பாண்டியர்களின் முதல் பேரரசு, கி.பி. 7-ம் நூற்றாண்டு முதல் 10-ம் நூற்றாண்டு துவக்கம் வரை உயர்ந்த நிலை வகித்தது. பராந்தக நெடுஞ்சடையனின் 'வேள்விக்குடிப்பட்டயம்', இராசசிம்மனின் பெரிய மற்றும் சிறிய சின்னமனூர் பட்டயங்கள், சென்னை அருங்காட்சியகத் திலுள்ள ஜடிலவர்மனின் பட்டயங்கள் மற்றும் பாண்டிய மன்னர்களின் ஏனைய கல்வெட்டுக்கள் இவற்றின் உதவியால் முதல் பாண்டியப் பேரரசின் வரலாறு தெளிவாக எழுதப்பட்டுள்ளது[31]. இது தொடர்பாக,

நாஞ்சில் நாட்டிலுள்ள கல்வெட்டு ஆதாரங்கள் மிக மிகக் குறைவானவையே. இருக்கக்கூடிய ஒருசில ஆதாரங்கள் பாண்டியர் படையெடுப்பைப் பற்றியே கூறுகின்றன. எனவே, அவை பயனுள்ளவையாக இல்லை. முதல் பாண்டியப் பேரரசர்களின் கால வரிசைப் பட்டியலை, ஒருமுகமாக அனைவராலும் ஏற்றுக்கொள்ள இயலவில்லையெனினும், திரு.கே.ஏ.என். சாஸ்திரி, கீழ்க்கண்ட கால வரிசைப் பட்டியலை அளித்துள்ளார்:[32]

1.	கடுங்கோன்	..	கி.பி. 560-590
2.	மாறவர்மன் அவனி சூளாமணி	..	கி.பி. 590-620
3.	சேந்தன்	..	கி.பி 620-650
4.	அரிகேசரி பராங்குச மாறவர்மன்	..	கி.பி 650-700
5.	கோச்சடையன்	..	கி.பி 700-730
6.	மாறவர்ம இராசசிம்மன்	..	கி.பி 730-765
7.	ஜடில பராந்தக நெடும் சடையன்	..	கி.பி 765-815
8.	ஸ்ரீமாற ஸ்ரீ வல்லபன்	..	கி.பி 815-862
9.	பராந்தக வீரநாராயணன்	..	கி.பி 862-885
10.	இரண்டாம் வரகுணன்	..	கி.பி 860-905
11.	இரண்டாம் மாறவர்ம இராசசிம்மன்	..	கி.பி 905-920

சேந்தன்

வேள்விக்குடிப்பட்டயத்தில் குறிப்பிட்டுள்ள, பாண்டிய மன்னர் களில், கேரள நாட்டின் மீது படையெடுக்க நாஞ்சில் நாடு வழியாகச் சென்ற தொடக்க காலத்துப் பாண்டிய மன்னர் சடையன் அல்லது ஜயந்தவர்மன் ஆவார். சேரர்கள் அவரது ஆற்றலை மிகவும் பாராட்டி, அதனைத் தொடர்ந்து, "வளவன்" என்ற பட்டப் பெயர் சூட்டப்பெற்றதால், சேரர்கள் மீது அவர் செலுத்திய மேலாட்சி நன்கு புலனாகிறது. சுசீந்திரத்திற்கு அருகில் தாளக்குடி என்ற கிராமத்தில், பாண்டிய மன்னரின் பெயருக்கொப்ப, சேந்த ஈசுவரமுடையார் என்ற பெயர் கொண்ட இறைவனுக்கு அர்ப்பணம் செய்யப்பட்டதாகக் கூறப்படும் கோயில் ஒன்றுள்ளது. அழகிய பாண்டியபுரத்திற்கு அருகில், ஜயந்தனார் கோயில் என்றொரு கோயில் உள்ளது. அதே போன்று சுசீந்திரத்திற்கு அருகில் சேந்தன்புதூர் என்ற கிராமம் அமைந்துள்ளது. இப்பெயர்கள் பாண்டிய மன்னாகளின் பெயர்களுக் கேற்ப உள்ளன.

அரிகேசரி மாறவர்மன்

அரிகேசரி மாறவர்மன் என்பவர், கூன் அல்லது சுந்தரபாண்டியன் என்பவருடன் இனம் காட்டப்பட்டுள்ளார். தமிழ் இலக்கியத்தின்படி இவர், நின்றசீர் நெடுமாறன் எனவும் அழைக்கப்பட்டார். அருட் தொண்டர் சம்பந்தரால் இவர் சமண மதத்திலிருந்து சைவ மதத்திற்கு மாற்றப்பட்டார். இவரைப் பற்றிய குறிப்பு, வேள்விக்குடி மற்றும் பெரிய

சின்னமனூர் பட்டயங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவர் நாஞ்சில் நாட்டின் மீது படையெடுத்து, பாளி, நெல்வேலி, சென்னிலம் மற்றும் புலியூர் ஆகிய இடங்களை வெற்றி கொண்டாரென்பது குறிப்பிடத்தக்கது[33].

பறவர்கள் மற்றும் குறுநாட்டினர் மீது அவர் படையெடுத்து வெற்றி கண்டார். முனைவர் ஹூல்ட்சி மற்றும் வெங்கையா ஆகியோரால், நெல்வேலி, திருநெல்வேலியுடன் அடையாளம் காண்பிக்கப்பட்டுள்ளது. எனினும், ஆயிகுலத்தினரின் கோட்டையான குறுநாட்டிலுள்ள நெல்வேலியுடன் அதனை ஒப்பிடுவதே பொருத்தமாக உளது.[34] விளினம் மற்றும் கோட்டார் ஆகிய இடங்கள், வேறு பல இடங்களுடன், போரிட்டுப் பிடிக்கப்பட்டதென இறையனார் அகப்பொருள் விளக்கவுரையில் கூறப்பட்டுள்ளது.[35] அவரது முன்னோர் வெற்றிபெற இயலாத, நாஞ்சில்நாட்டின் பகுதியினை, அவர் வெற்றிவாகை சூடி, சேர்த்துக்கொண்டாரென்பதே அவரது வெற்றியின் உட்கருத்தாகும்.

கோச்சடையன்

அரிகேசரி மாறவர்மனின் மகனும், அவரது வழித் தோன்றலுமான கோச்சடையன் என்ற ரணதீரன், புகழ்பெற்ற மாவீரராவார். வானவன், செம்பியன், கொங்கார்க்கோன் மற்றும் சோழன் ஆகிய பட்டப்பெயர்கள் சேர, சோழ மன்னர்களால், அவருக்கு சூட்டப்பட்டவையாகும். இந்த மன்னர் இப்பட்டப் பெயர்களைப் பெற்றதால், இவர் சேர, சோழ மன்னர்களை வென்றதற்கு அடையாளமாகப்பெறப்பட்ட பட்டங்கள் என்பது உறுதியாகிறது. அவரது சமகாலத்தவரும், அவருடைய பகைவருமான ஆயி மன்னரை மருதூரில் ஒரு போரில் வென்றது குறித்து வேள்விக்குடி பட்டயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், மாவீரனான இப்பாண்டிய மன்னன் தனது பகைவனை தன்னுடைய பேரரசின் மையப் பகுதியில் அமைந்துள்ள அம்பாசமுத்திரம் வரை புகுவதற்கு இடமளித்திருக்க இயலாதென்பது தெளிவாகிறது. எனவே, இந்த மருதூர் குருநாட்டிலுள்ள மருதத்தூர்தான் எனக்கூறுவதே சரியானதாகும்[36].

கோச்சடையன், ஆயிவேளை, சேங்கோடி மற்றும் புத்தன்கோட்டில் வெற்றிகொண்டது குறித்தும் வேள்விக்குடி பட்டயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், இந்தப் பெயர்கள் ஆயி மன்னரின் முடிசூட்டு விழாவில் பயன்படுத்தப்பட்ட அரசுரிமை சின்னங்களேயன்றி, போர்க்களங்களின் பெயரல்லவென திரு. கிருஷ்ணா சாஸ்திரி கூறுகிறார். இந்தக்கருத்து, திரு.கே.ஏ.என். சாஸ்திரியாலும் ஏற்கப்பட்டுள்ளது[37]. ஆனால், சேங்கோடி மற்றும் பூதன்கோடு ஆகிய இரு கிராமங்களும் உண்மையிலேயே குருநாட்டில் உள்ளவைதானென திரு.கே.கே.பிள்ளை கூறுகிறார்[38]. நாஞ்சில்நாட்டு மண்ணில் எந்த ஒரு போரும் நிகழவில்லையென கூறப்பட்டாலும், இந்த ஆயி மன்னரின் தோல்வி, பாண்டிய மன்னர்கள் நாஞ்சில்

நாட்டை வென்றனர் என்றே பொருள்படும். கன்னியாகுமரி கோயில் இப்பாண்டிய மன்னரின் 16-வது முடிசூட்டு ஆண்டு விழா குறித்த கல்வெட்டும் இருக்கிறது.

ஜடிலபராந்தகன்

ஆனமலை கல்வெட்டுகளை நோக்குங்கால், கோச்சடையனின் பேரன் ஜடிலபராந்தகனுக்கு மாறன் சடையன் என்ற பெயரும் உண்டெனத் தெரிகிறது. அவர், ஆயிவேள் என்ற ஆயிகுல தலைவர் மீதும் அவருக்குதவிய ஏனைய தலைவர்கள் மீதும் படையெடுத்தார். நாட்டுக் குறும்பு, என்ற இடத்தில், ஆயிவேல் என்பாரையும், அவருடன் சேர்ந்தோரையும் ஜடிலபராந்தகன் வெற்றி கொண்டதாக வேள்விக்குடி பட்டயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது[39]. பாண்டிய மன்னர் ஆயிவேளை தோற்கடித்ததாகவும் அப்போரில் ஆயிவேள் இறந்துவிட்டதாகவும் அவரது நாட்டின் தலைநகரம் மிக அழிக்கப்பட்டதாகவும் (தோராயமாக கி.பி.773), அதனைத் தொடர்ந்து அங்கிருந்த யானைகள், குதிரைகள், மற்றும் கருவூலங்கள் ஆகியவற்றைக் கைப்பற்றி, ஆயி மன்னரின் குடும்ப உறுப்பினர்களையும் சிறைப்பிடித்துச் சென்றதாகவும் சென்னை அருங்காட்சியகத்திலுள்ள பட்டயங்களில் தெளிவாகக் குறிப்பிடப் பட்டுள்ளது.

பாண்டிய மன்னனின் 23-வது முடிசூட்டு ஆட்சியாண்டில் சடையன்-கருநந்தன் என்ற ஆயிகுல வழித்தோன்றல் ஒருவர், தனது முன்னோர்களால் இழந்த செல்வாக்கினைத் திரும்பப்பெற பாண்டிய மன்னரை எதிர்த்துப் போரிட்டார். ஆனால், அவரது முயற்சி பயனற்றுப் போகவே, பாண்டிய மன்னரால் அறிவியூர் கோட்டைதான் குருநாட்டிலுள்ள அறிவிக்கூரையுடன் ஒப்பிட்டுக் காட்டப்படுகிறது.

ஜடிலபராந்தகன் இதுகாறும் பெற்ற வெற்றிகளினால் மன நிறைவு பெறாமல், மலைநாட்டையும் தனது பேரரசுடன் சேர்க்க விரும்பினார். ஆனால், பாண்டிய மன்னருக்கு தனது முயற்சி பயனளிக்க வில்லையென, திருவனந்தபுரம் கல்வெட்டுகளினின்று தெரிய வருகிறது. சேரர்கள் ஆயி அரசர்களின் உதவிக்கு வந்த பாண்டியரைக் காரைக்கோட்டை என்ற இடத்தில் தடுத்துவிட்டதாலேயே பாண்டியருக்கு வெற்றி கிட்டவில்லையெனத் தெரிகிறது. காரைக்கோட்டை என்ற இந்த இடம், தற்போது ஆரல்வாய்மொழி என அழைக்கப்படுகிறது[40].

ஸ்ரீ மாற ஸ்ரீவல்லப பாண்டியன்

ஜடிலபராந்தகனுக்குப் பிறகு ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன் பதவிக்கு வந்தார். எந்த சேரர்கள், ஆயிகள் ஆகியோரிடம் தனது முன்னவர் ஜடிலபராந்தகன் தோல்வியைத் தழுவினாரோ, அவர்களை வலியதாக்க முற்பட்டார். ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன் சேரர்களுக்கு எதிராகப் படையெடுத்து, சேர நாட்டில் ஊடுருவி, நாஞ்சில் நாட்டில் எவ்வித எதிர்ப்புமின்றி, குன்னூர் மற்றும் விழிஞம் வரையில் விரைந்து முன்னேறினார்.

மன்னர்களின் குறிப்பறிந்து நடக்கும் இத்தன்மை, பாண்டியர்களின் உயர்நிலையை, ஆயிகள் ஒப்புதலளித்தமைக்கு சான்று பகர்கிறது. இவ்வுண்மை, பெரிய சின்னமனூர் பட்டயங்களில் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது.[41]

பாண்டியர்களின் சரிவு

ஸ்ரீமாற ஸ்ரீவல்லபனைத் தொடர்ந்து, வரகுண வர்மன் பதவியேற்றார். அவருக்குப்பின் அவரது இளவல் வீரநாராயண சடையன் பதவிப் பொறுப்பை ஏற்றார். கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள இம்மன்னர் காலத்திய கல்வெட்டுக்கள் (கி.பி.880) பலவற்றை நோக்குங்கால், ஆயி குலமக்கள் தலைவர்கள், வலிவற்ற எதிர்ப்பை காட்டியிருந்தும், செல்வாக்குப் பெற்றிருந்த பாண்டியரின் ஆதிக்கம் இவர் காலத்தில் சற்று கட்டுப்படுத்தப் பட்டதாகவே தெரிகிறது.

பாண்டிய வீர நாராயணன், சுசீந்திரம் கோயிலுடன் நெருங்கிய ஈடுபாடு கொண்டிருந்ததாக சுசீந்திரம் கோயிலிலுள்ள கல்வெட்டு களிலும் தெரியவருகிறது. சுசீந்திரத்திற்கு அருகிலுள்ள வீரநாராய ணீசுவரம், வீரநாராயண மங்கலம் ஆகிய கிராமங்களுக்கு இப்பாண்டிய மன்னரின் நினைவாகவே அப்பெயர்கள் சூட்டப்பட்டிருக் கலாமென தெரிகிறது. வானவன்மாதேவி என்ற சேரகுல இளவரசி இப்பாண்டிய மன்னரின் வாழ்க்கைத் துணைவி என்பதிலிருந்தே இவருக்கும் கேரளத்திற்கும் இருந்த நெருங்கிய தொடர்பு தெரிய வருகிறது[42].

பெரிய சின்னமனூர் செப்பேடுகளை வழங்கிய, இராஜஸிம்மன், கி.பி.900-ல், வீரநாராயணனுக்குப் பின்னர் அரியணையில் அமர்ந்தார் என்று கூறுகின்றனர். அவர் தொடர்ந்து 16 ஆண்டுகள் நாஞ்சில் நாட்டை ஆண்டதற்கு சான்றுகள் உள. கி.பி. 920-ல் முதலாம் பராந்தகச் சோழர் இப் பாண்டிய மன்னர் இலங்கையில் அடைக்கலம் புகுந்தார். இதிலிருந்து, எவ்வாறு பாண்டிய ஆதிக்கத்தின் ஒளி மங்கத் தொடங்கியதென அறியலாம்.

பிற்கால ஆயிகள்

சங்க காலத்திற்குப் பிறகு, சடையன் என்ற ஆயி குல மன்னரைப் பற்றிய முதல் குறிப்பு தென்படுகின்றது[43]. பிற்கால ஆயி குலம் அரசாண்ட நேரத்தில், ஆயி அரசின் கிழக்கு எல்லையில் பாண்டியர்கள் ஆற்றல் மிக்க வல்லரசாகத் திகழ்ந்தார்கள். வடக்கே, சேரப் பேரரசு, ஆயி அரசின் எல்லையாக அமைந்திருந்தது. தெற்கே திருவட்டார் மற்றும் ஏனைய இடங்கள், ஆயி குலத்தினரின் ஆளுகையில் இருந்தன. ஆக, ஆயி குல ஆட்சிப்பகுதி, பாண்டியர்கள் மற்றும் சேரர்கள் ஆகியோரின் பேரரசுகளுக்கிடையே, அவர்களது தாக்குதலைத் தடுக்கும் நிலையில், ஆனால் வலிமைமிக்க ஒரு நாடாக உருவாகியிருந்தது. ஆயி குலம் சரியத் துவங்கிய நேரம் பாண்டியர்களுக்கு சாதகமாக அமைந்தது. உடன் அவர்கள் சேரர்களைத் தாக்க துவங்கினார்கள். அதே போன்று சோழர்களும் சேரர்களைத்

தாக்கினார்கள். ஆனால், பாண்டியர்கள் ஆயிகளின் ஆட்சிப்பகுதியினை அபகரிப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தார்கள். ஆயினும், அவர்களது வெற்றி, மிகக் குறைந்த காலமே நீடித்தது. ஆயிகள் தங்களது எதிர்ப்பைக் காண்பித்து, தனி ஆட்சி உரிமையை நிலை நிறுத்திக் கொள்ள பெரிதும் பாடுபட்டார்கள்.

சடையன் மற்றும் கருநந்தன்

எட்டாம் நூற்றாண்டின் இரண்டாவது பகுதியில் சடையனும் அவரது மகன் கருநந்தனும், ஆயி குலத்தின் சார்பில் அரசாண்டதாகக் கழுகுமலைக் கல்வெட்டுகள் கூறுகின்றன. அவர்கள் பாண்டிய மன்னர் ஜடிலபராந்தகன் ஆண்ட காலத்தில் ஆயி அரசை ஆண்டு வந்தார்கள் ("ஜடிலபராந்தகா" என்ற தலைப்பில் கண்ட விவரங்களை நோக்குக).

கருணந்தகன்

கருணந்தகன், கி.பி. 857-ல் ஆயி மன்னராக முடிசூட்டிக் கொண்டாரெனவும், அவரது ஆளுகைக்குட்பட்ட அரசு, வடக்கே திருபாப்பூரிலிருந்து தெற்கே நாகர்கோவில் வரை படர்ந்து கிடந்ததெனத் திரு.பி.என். குஞ்சம்பிள்ளை கூறுகிறார்.[44] கன்னியாகுமரி, சுசீந்தரம், கோட்டாறு மற்றும் நாகர்கோவில் ஆகியவை, பாண்டியர்கள் ஆளுகைக்குட்பட்டும், கொளச்சல், மூஞ்சிரை ஆகியவை ஆயி குல மன்னர் ஆட்சியிலும் இருந்தன.[45] விழிஞம், ஆயி அரசின் தலைநகராக விளங்கியது. திருவிடைக்காடு என்ற இடத்தில், இந்த மன்னரின் கல்வெட்டுகளில் சில, கண்டுபிடிக்கப்பட்டன. ஒரு காலத்தில் திருவடைக்காடு ஆயி மன்னர்களின் மூல இடமாக விளங்கியது எனவும் அவர்கள் விளவங்கோடு வட்டம் பார்வதிபுரத்தில் ஒரு பெருமாள் கோயிலை நிர்மாணித்தார்கள் எனவும் திரு.கே.கே. பிள்ளை கூறியுள்ளார். கருணந்தகன், உலகுடிவிளை என்ற கிராமத்தில், முஞ்சிரை சபையிடமிருந்து ஒரு இடத்தைப் பெற்று, அந்த இடத்தில் ஒரு பெருமாள் கோயிலை எழுப்பி, அந்த இடத்திற்கு பார்வதிபுரம் என பெயர் சூட்டினார் என ஒரு கல்வெட்டினின்றும் தெரிய வருகிறது. தொண்ணுற்றி ஆறு மாணவர்களுக்கு இலவச கல்வி, உணவு, மற்றும் தங்குமிடம் ஆகிய வசதிகளைச் செய்து கொடுத்தார்.[46]

விக்கிரமாதித்ய வரகுணா (கி.பி.885 முதல் 925)

பிற்கால ஆயி அரசர்களில் மற்றொரு குறிப்பிடத்தக்க ஆட்சியாளர், கருணந்தகனுக்குப் பிறகு பட்டத்திற்கு வந்த விக்ரமாதித்ய வரகுணா என்பவராகும். அவர், புகழ்வாய்ந்த பள்ளியம் தாமிர பட்டயத்தை அளித்த கொடையாளியாவார். அவரது ஆட்சி கி.பி. 925-யுடன் முடிவுற்றது. அவருடன் ஆயி வம்சத்தின் புகழ் மங்கியது. அவருக்குப் பிறகு, தன்னாட்சி உரிமையுடன் ஆயிகுலம் ஆட்சி புரிந்ததாக வரலாறு இல்லை. இவர் அரசாண்டக் காலத்தில்தான் பாண்டிய மன்னரான இரண்டாம் இராசசிம்ம பராந்தகச் சோழனால் தோற்கடிக்கப்பட்டார்; ஆகையால், நாஞ்சில்நாடு சோழ மன்னர்களின் பேரரசில் சேர்ந்து

விட்டது. அவரது காலத்தில் தான், சோழ மன்னர்கள் வளர்ச்சி யடைந்து, ஆட்சியின் உயர்நிலையை அடைந்தார்கள்.

அவரது ஆட்சியின் முதன்மையான தனிச்சிறப்பு என்னவெனில், பிற சமயங்கள் குறித்த சகிப்புத்தன்மையேயாகும். மற்ற சமயங்கள் மீதுகொண்டுள்ள ஒரு இந்துவின் சகிப்புத் தன்மை போற்றுதற்குரியது. புத்த சமயமும் அதே நேரத்தில், தழைத்தோங்கியது. கேரளத்திலுள்ள திருநல்லபாதத்திலுள்ள புகழ்பெற்ற புத்தர் கோயிலுக்கு அவர் அளித்த நன்கொடை விவரங்கள் பள்ளிபாளையம் தாமிரப் பட்டயத்தில் முறையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. விளவங்கோடு வட்டம், சித்ரலில் உள்ள கல்வெட்டுக்களில், இவ்வரசர், அங்குள்ள சமணக் கோயிலுக்கு நன்கொடை அளித்திருப்பது குறித்து பொறிக்கப் பட்டுள்ளதைக் காணலாம். கன்னியாகுமரி மாவட்டம், திருச்சாட்டானு மலை, சமண சமயக்கோயிலில், தீர்த்தங்கரரின் உருவம், இவர் ஆட்சிகாலத்தில் தான் செதுக்கப்பட்டுள்ளது.

ஆயிகுல அரசர்களின் நிருவாகம்

அக்காலத்து நடைமுறையின்படி, ஆயிகுல ஆட்சி முடியாட்சியாகத் தான் இருந்து வந்தது. குடும்பத்தின் மூத்தமகன் பட்டத்தை ஏற்பது வழக்கமாயிருந்தது. ஆயி அரசு பல நாடுகளாகப் பிரிக்கப்பட்டது. அந்நாடுகள், மேலும் தேசங்களென உட்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன. ஒவ்வொரு நாடும், கிழவன் (நல்ல உடற்கட்டுள்ளுவர்) என்ற அலுவலரின் கட்டுப்பாட்டில், இயங்கிவந்தது. தத்தம் சரகத்தில், சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவதே அவர்களது பொறுப்பாக இருந்தது.

எவரேனும் குற்றம் புரிந்தால், அதற்குரிய பொதுவான தண்டனை, அபராதமாகும். அபராதம் எப்பொழுதாவது, தங்கக் காசாக விதிக்கப்படும். வசூல் செய்யப்படும் அபராதத் தொகை அரசுக் கருவூலங்களில் முறையாக செலுத்தப்பட்டு வந்தது. கோயில்கள் மற்றும் உள்ளாட்சி நிருவாகத்தினை சபைகள் கவனித்து வந்தன. கல்வியைப் பொறுத்த வரையில், அது பாண்டிய, சோழ அரசுகளுக்கு மட்டும் வரையறுக்கப்பட்டதாகக் கொள்ள இயலாது. இந்த இரு அரசுகளாலும் போற்றத்தக்க அளவில் கல்வித் திட்டம் வகுக்கப்பட்டிருந்தாலும், ஆயி அரசும் அவற்றிற்கு சளைத்ததல்ல என்ற அளவில் கல்வித் திட்டத்தை வகுத்திருந்தது. எனினும், பிராமண குலத்தினர், நல்ல பலனடைந்தார்கள். ஆயிகுலத்தினர் அரசாண்டக் காலத்தில், சுசீந்திரம் மற்றும் நாஞ்சில் நாடு ஆகியவை செழித்தோங்கினாலும், புகழ் வாய்ந்த கல்விக் கூடங்கள் நடத்துவதிலும் அவை பெயர் பெற்று விளங்கின. மூஞ்சிரை சாலை, கன்னியாகுமரியிலிருந்த ஸ்ரீவல்லப பெருஞ்சாலை மற்றும் புகழ்வாய்ந்த கந்தலூர் சாலை ஆகியவற்றை எடுத்துக்காட்டாகக் சொல்லலாம்.

இந்த மாதிரியான சாலைகள் மற்றும் பள்ளிகள் தவிர, பொது மக்கள் சார்ந்த மற்றும் மக்கள் பாராட்டிற்குரிய கல்வித்திட்டத்தையும்

ஆங்காங்கே செயல்முறைப்படுத்த வாய்ப்பு இருந்தது. மண்டபங்கள், கோயில்களின் மிகப்பெரிய அறைகள் ஆகியவை, வகுப்பறைகளாகப் பயன்படுத்தப்பட்டு, அங்கு சமய சார்புள்ள போதனாமுறை கற்றுக் கொடுக்கப்பட்டது. சுசீந்திரம் கோயிலில், மகாபாரதக்கழகம், சிறப்பாக நடைபெற்று வந்தது.

சோழர்

முதலாம் பராந்தகச் சோழர், பாண்டியர்களை வென்றனார். நாஞ்சில் நாட்டில், இப்போர்கள் நடந்ததற்கான ஆதாரங்களில்லையெனினும், முதலாம் பராந்தகச் சோழர் ஆண்ட காலத்திய (கி.பி.907 முதல் கி.பி.953) 10-ம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டுகள் இந்த கருத்து சரிதானென்பதற்கு சான்று பகர்கின்றன.

சோழர்களின் எழுச்சியும், வளர்ச்சியும், திடீரெனவோ, எவ்வித சம்பவங்களுமின்றியோ ஏற்பட்டதெனக் கூற இயலாது. இராட்டிரகூடர் படையெடுப்பைத் தொடர்ந்து, தக்கோலத்தில் வரலாற்றுச் சிறப்பு மிக்க போர் நிகழ்ந்தது. அதில் சோழர்கள் படுதோல்வியினைத் தழுவினார்கள். சோழப் பேரரசின் இவ்விழிநிலை, பாண்டிய அரசின் வழித்தோன்றல் வீரபாண்டியன் என்பவரால் தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளப்பட்டது. தன்னை சோழன் தலைகொண்ட வீரபாண்டியன் என பிரகடனப் படுத்திக்கொண்டார். ஆனால், தலை கொய்யப்பட்ட சோழ அரசரின் பெயர் என்ன என்பது இதுகாறும் உறுதி செய்யப்படவில்லை.

அவருடையது ஒரு மின்னல் தோற்றமான எழுச்சி எனினும் அவரது முடியாட்சி பலகாலம் நீடிக்கவில்லை. பராந்தகச்சோழனின் மகன் ஆதித்ய சோழன் என்பவரால் வீரபாண்டியன் சிறை பிடிக்கப்பட்டு தூக்கிலிடப்பட்டார்.

இராச இராச சோழன்

நாஞ்சில் நாட்டின் மீதான திட்ட மிட்ட படையெடுப்பு, இராச இராச சோழன் காலத்தில் தான் மேற்கொள்ளப்பட்டது. தனது வீர, தீரச்செயல் மிகு படையெடுப்பினை, தன்னுடைய 4-வது ஆட்சி ஆண்டில் அவர் துவக்கினார். அவர், தமிழ்நாடு முழுமையையும் மற்றும் தட்சிணப் பிரதேசத்தின் பகுதிகள், அனைத்தையும் தனது ஆட்சிக் குட்படுத்தினார். இராச இராச சோழன் முதலில் வெற்றி கொண்டது விழிஞமா அல்லது மதுரையா என்ற கருத்து மாறுபாடு, இன்னமும் இருந்து கொண்டுதானிருக்கிறது. அவரது முதல் படையெடுப்பு மதுரை மீதுதானென திரு.கே.கே. பிள்ளை கருத்துத் தெரிவிக்கிறார். இக்கருத்திற்கு திருவாலங்காடு பட்டயங்கள் சான்றளிக்கின்றன.

இராச இராசன் முதலில் கேரளத்தைச் சார்ந்த காந்தளூர் சாலையைத் தாக்கி, பின்னர் மதுரையைத் தாக்கினாரென்ற கருத்து, இராச இராசனது மெய்க்கீர்த்திகளின் ஆதரவைப் பெற்றுள்ளது. திருநெல்வேலி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களிலுள்ள இராச

இராசனது கல்வெட்டுக்களுக்கு இரண்டாண்டுகளுக்கு முன்னதாக உள்ள கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கல்வெட்டுக்களும் இந்த மூன்றாவது கருத்திற்கு வலுவளிக்கின்றன.

தெற்குநாடுகளில், இராச இராசன் மேற்கொண்ட படையெடுப்புகள் குறித்து, திருவாலங்காடு பட்டயங்களும் இராச இராசனின் மெய்க் கீர்த்திகளும் கலப்பான விவரங்களை அளித்ததாக திரு.கே.ஏ.என். சாஸ்திரி, கருத்துத் தெரிவிக்கிறார்.[47] எனினும், பாண்டியர் மற்றும் அவர்களது நட்பு நாட்டினரான சேரர் ஆகியோர் மீது ஒரு முறைக்கு மேல் இராச இராசன் படையெடுத்தாரென்பதும், அதிலொன்று கொல்லத்தை நோக்கி மேற்கொண்டதாகுமென்பதும் தெளிவாகத் தெரிகிறது. இப்படையெடுப்பு முற்றிலும் மாறுபட்ட தெனவும், இதற்கும் காந்தளூர், விழிஞம், போர்களுக்கும் எவ்விதத் தொடர்புமில்லை யென்பதும், தஞ்சாவூர் கல்வெட்டுகளிலிருந்து தெரிய வருகிறது.

இம்மாவட்டத்தின் தர்சனம்போக்கு என்ற இடத்தில் இராச இராசனின் 8-வது ஆண்டு ஆட்சிகாலத்திய மிகப்பழமையான கல்வெட்டொன்று கண்டுபிடிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, இராச இராசனின் 10-வது மற்றும் 14-வது ஆட்சியாண்டுக் காலத்திய கல்வெட்டுக்கள் சுசீந்திரம் கோயிலில் கண்டுபிடிக்கப்பட்டன. இவ்வரசனின் 10-வது ஆண்டு ஆட்சி காலத்திய கல்வெட்டுக்களில் சுசீந்திரம் "நாஞ்சில் நாட்டு திருச்சி வின்றம்" எனக்குறிப்பிடப் பட்டிருப்பதையும், ஆனால் 14-வது ஆண்டு ஆட்சிக் காலத்திய கல்வெட்டுக்களில், சுசீந்திரம். "இராச இராச வளநாட்டு திருச்சிவின்றம்" எனக்குறிப்பிடப்பட்டிருப்பதையும் கூர்ந்தாய்ந்திட வேண்டியுள்ளது. இதனைக் கருத்திற்கொண்டு, நாஞ்சில் நாடு, இராச இராசனினுடைய சோழப்பேரரசின் ஆளுகையின் கீழ் இராச இராசனின் 10-வது ஆண்டு ஆட்சி காலத்திலிருந்து, 14-வது ஆண்டு ஆட்சி காலத்திற்குள்ளாக, சிறுகச் சிறுகக் கொணரப்பட்டிருக்க வேண்டுமென திரு.கே.கே. பிள்ளை கருத்துத் தெரிவிக்கிறார்.[48] இராச இராச பாண்டி நாட்டின் ஒரு மாவட்டமான "உத்தம சோழ வளநாட்டில் " அடங்கிய ஒரு துணைக் கோட்டமாக நாஞ்சில் நாடு இருந்திருக்கிறதென பிற்கால சோழப் பேரரசின் கல்வெட்டுக்களில் பொறிக்கப்பட்டுள்ளது. இத்தருணத்தில்தான் சோழர்கள் நாஞ்சில் நாட்டில் முழுமையாகக் குடியேறினார்களெனத் தெரியவருகிறது.

புகழ்மிக்க இராச இராச சோழன் தனது பேரரசை விரிவாக்குவதுடன் நில்லாது, தனது நாட்டுக்குடிகள் மற்றும் தான் வென்ற நாட்டுக்குடிகள் ஆகிய அனைவரது நல்லெண்ணத்தையும் பெற விரும்பினார். அதனைத் தொடர்ந்து, பல வளர்ச்சிப் பணிகளை மேற்கொண்டார். அவற்றில் முதன்மையானது, கோயில்களின் நிலையினை உயர்த்துவது, மேலும் அவற்றை மக்களின் சமூக, சமய வாழ்க்கையின் அச்சாணியாக அமைப்பது என்பதுதான்.

கோயில்களுக்கு பல்வேறுவிதமான கொடைகளை அளித்தார். மேலும், பிராமணர்களுக்கு இலவசமாக உணவளிக்க உரிய நடவடிக் கைகளை மேற்கொண்டார். புனிதமான இறைப்பணியாற்றிட வேண்டு மென்ற உயர்ந்த நோக்கில், தேவதாசி முறையை நடைமுறைப் படுத்தினார். பின்னர் இம்முறை அதனது முக்கியத்துவத்தை இழந்ததால் அதை அனைவரும் வெறுக்கும் நிலை உருவாகியது. இறுதியாக, இந்நூற்றாண்டில் இத்திட்டம் முழுமையாக ஒழிக்கப்பட்டது. தேவாரம், திருவாசகம் போன்ற பக்திப்பாடல்களைக் கோயில்களில் இசைக்கும் பணியினை ஊக்குவித்தார். கோயில் திருவிழாக்கள் மற்றும் மரபு முறைகள் ஆகியவற்றை பரமருக்குரியதாக்கினார். செயங்கொண்ட சோழன் என்பவரால், பொதுமக்களுக்குக் குடிநீர் வழங்க ஒரு சாவடி கட்டப்பெற்றதென கன்னியாகுமரியில் இராச இராசனின் 34-வது ஆட்சியாண்டு காலத்திய கல்வெட்டு ஒன்றில் பொறிக்கப்பட்டுள்ளது. இப்பட்டப்பெயர், இராச இராசனது ஆட்சிக் காலத்தின் பிற்பகுதியில் அவருக்கு சூட்டப்பட்டதென்ற குறிப்பும் உள்ளது.

இயற்கையிலேயே இராச இராசன் கடவுள் பக்தியும் மிக்கவராகை யால், அவர் ஆலயங்கள் எழுப்புவதில் முதன்மையானவரென போற்றப்பட்டார். தஞ்சாவூரிலுள்ள பிரம்மாண்டமான பிரகதீசுவரர் ஆலயமும் கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரத்திலுள்ள ஆலய கோபுரம் ஆகியவை இராச இராசனின் புகழ்பரப்பும் அழியாத நினைவுச் சின்னங்களாக விளங்குகின்றன.

இராசேந்திர சோழர்

தந்தையின் பெயருக்குப்புகழ் சேர்த்த அவரது மகன் இராசேந்திர சோழர், நாஞ்சில் நாட்டில் சோழர் ஆதிக்கத்தை வலுப்படுத்தினார். சுசீந்திரத்திற்குக் கிழக்கில் ஐந்து கிலோ மீட்டர் தொலைவிலுள்ள சோழபுரம் என்ற கிராமத்தில், இராசேந்திரச் சோழரின் அலுவலர் ஒருவரால் எழுப்பப்பட்ட சிவன் கோயில் இராசேந்திர சோழேசுவரம் என அழைக்கப்படுகிறது. அவர் காலத்து கல்வெட்டுக்கள், கன்னியாகுமரி மற்றும் தேரூர் ஆகிய இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

உடனிகழ்வாக, சுசீந்திரம் கோயிலும் அவரிடமிருந்து பல மானியங்களைப் பெற்றது. அவர் காலத்து கல்வெட்டு ஒன்றும் இங்கு இருக்கிறது. விழிஞம் என்ற நகரத்திற்கு, இராசேந்திர சோழ பட்டினம் என பெயர் சூட்டியமை, சோழப்பேரரசின் உயர்நிலை, நாஞ்சில் நாட்டின் தெற்கேயும், முறையாக போற்றப்பட்டு வந்ததற்கு ஒரு சான்றாகும்.

சோழ, பாண்டியப் பேரரசுகளில் அரசுப் பிரதிநிதிமுறை

இராசேந்திர சோழர் ஒரு மாவீரர் மட்டுமல்ல, ஒரு தலை சிறந்த நிருவாகியும்கூட. அவரது ஆட்சியின் துவக்க காலத்திலேயே, அவரது மகன் இராசாதிராசர் என்பாரை இளவரசராக நியமித்து, அரசின் பல்வேறுவிதப் பணிக்கும் அவருக்கு உறுதுணையாக இருக்கச் செய்தார். ஒரு மன்னர் அரசுக்கட்டிலிலிருக்கும் பொழுதே, அவரது

வழித்தோன்றலை முறையாகப் பதவியிலமர்த்தி, மன்னருடன் தோளோடு தோள் நிற்கச் செய்து, அவரது பல்வேறு நிருவாகப் பணிகளில் பங்கு கொள்ளச் செய்து, பேரரசின் நிருவாக நெறிமுறைகளை செவ்வனே பேணிக்காக்க உரிய நடவடிக்கை மேற்கொள்வது மரபு. சொந்த மகன் இல்லாத மன்னர்கள், பொருத்தமான ஒருவரை தத்தெடுத்து, அவருக்கு மேற்குறிப்பிட்டது போன்று, அனைத்து நிருவாக முறைகளையும் கற்பிப்பதும் மரபு. இவ்வாறு, மன்னர் உயிருடன் இருக்கும் காலத்திலேயே முறையாக தத்தெடுத்து பயிற்சியளிப்பது, பின்னர் சரியான வழித் தோன்றலைத் தேர்ந்தெடுத்து பதவியலமர்த்துவதில் ஏற்படும் சிக்கலைத் தவிர்ப்பதற்காகவேதானன்றி வேறில்லை. மன்னரின் வாரிசுகளை, அவர்கள் உரிய வயதையடைந்தவுடன், பேரரசின் பல்வேறு மாநிலங்களில் அவரவரது தகுதி மற்றும் திறமைக்கேற்ப, நியமிக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இராசேந்திர சோழருக்கு, அவரது ஆட்சிக் காலத்தின் துவக்க நிலையில், அவரது கண்காணிப்பில் பணியாற்றும் ஒரு ஆட்சியாளர் துணை புரிந்தாரெனத் தெரிகிறது. அப்போது பாண்டிய நாடும் கேரள நாடும் அவரது ஆளுகைக்குட்பட்ட பகுதிகளாக இருந்தன. முதலாம் இராசேந்திரனின் இவ்வறிவு பூர்வமான மகத்தான திட்டம், அரச குடும்பத்தைச் சார்ந்த இளவரசர்களனைவருக்கும் அவரவர் திறனுக்கேற்ற அலுவலைத் தேடித்தந்ததோடல்லாமல், அவர்களது மனநிறைவின்மையையும் ஓரளவு தணித்தது போற்றுதற்குரிய செயலாகும். மேலும், அரண்மனையில் துவங்கும் உட்கிளர்ச்சி, பூசல் மற்றும் அரசியல் புரட்சி ஆகியவையும் பெருமளவு குறைந்தது. அதே நேரத்தில், பல கடினமான உள்நாட்டு, அயல்நாட்டுப் பிரச்சனைகளைக் களைய, பரந்த பேரரசின் நிருவாகத்திற்குப் புது வலிமை சேர்த்ததாகவுமைந்தது.[49]

தெற்கே தொடர்ந்து வெற்றிகளைக் குவித்து, இராச இராசனால் சேர்க்கப்பட்ட பேரரசினை சிதறாமல், தொடர்ந்து தக்கவைத்துக் கொண்டமை, பாண்டிய நாட்டிலுள்ள அவரது கல்வெட்டுக்களினின்றும் தெரிய வருகிறது. இராசேந்திரன் தனது சொந்த மகனையே மதுரையில் அரசுப் பிரதிநிதியாக (வைசுராய்) நியமித்து, அவனுக்கு "சோழ பாண்டியன்" என்ற பட்டப்பெயரையும் சூட்டினாரென திருவாலங்காடு பட்டயங்கள் கூறுகின்றன. இந்த செய்தி, கீழ்க்கண்ட காரணங்களால் தெளிவுற்றதாகத் தெரிகிறது. சோழபாண்டிய அரசுப்பிரதிநிதி, சிறிது காலத்திலேயே கேரள நாட்டின் பொறுப்பையும் வகித்தாரெனவும், அவர் ஜடாவர்ம சுந்தர சோழ பாண்டியர்தானெனவும அதே கல்வெட்டுகளினின்றும் தெரிய வருகிறது. இதுகாறும் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுக்களில், அதிக எண்ணிக்கை யிலானவை, ஜடாவர்ம சுந்தர சோழ பாண்டியன் காலத்தியவைதா னென்பது இதனின்றும் உறுதி செய்யப்படுகிறது[50].

ஏறத்தாழ அரை நூற்றாண்டு காலம், நாஞ்சில் நாட்டை உள்ளிட்ட பாண்டியப் பேரரசின் தென்பகுதியினை, சோழ-பாண்டிய அரசுப் பிரதிநிதிகள் தான் மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு ஆட்சி செய்து வந்தார்கள்[51]. அப்படிப்பட்ட நான்கு அரசுப்பிரதிநிதிகள் குறித்த தகவல்கள் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன.

ஜடாவர்ம சுந்தர சோழ பாண்டியர்

இராசேந்திரரின் புதல்வரான ஜடாவர்ம சுந்தர சோழர்தான் தெற்கில் முதல் சோழ பாண்டிய அரசுப்பிரதிநிதியாக ஆட்சி புரிந்து வந்தாரென்பது குறிப்பிடத்தக்கது. அவர் கி.பி.108ல் நியமிக்கப்பட்டார். (சிலர், இந்த ஆண்டை கி.பி.1019 என்றும் கூறுகின்றனர்) திருவிதாங்கோடு, சோழபுரம், சுசீந்திரம் ஆகிய இடங்களில், இவரது பெயரைத் தாங்கிய கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. அண்டை மாவட்டமான திருநெல்வேலியிலும் அதே போன்ற கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. அவரது அதிகார எல்லை குருநாடுவரை பரவியிருந்ததென திருவிதாங்கோடு கல்வெட்டுக்களினின்றும் தெரியவருகிறது.

சுசீந்திரம் கிராமம், அப்பகுதியை ஆண்ட அரசுப்பிரநிதியின் பெயரில் "சுந்தர சோழ சதுர்வேதிமங்கலம்" என அழைக்கப்பட்ட விவரம் அங்குள்ள கல்வெட்டில் இடம் பெறுவதால், அக்கல்வெட்டு மிகவும் முதன்மையானதாகக் கருதப்படுகிறது.[52]

மிகவும் ஆர்வமிக்க, ஆனால் எளிதில் விவரிக்க இயலாத, ஒரு உண்மை நாகர்கோயிலின் அருகிலுள்ள கோட்டாறிலுள்ள, ஒரு பட்டயத்தைப் பற்றியது. இந்த பட்டயம், கிழக்கு சாளுக்கிய வம்ச இளவரசர் காலத்தியதென கூறப்படுகிறது. அவர், தன்னை சர்வ லோகாஸ்ரய ஸ்ரீ விஷ்ணு வர்த்தன மகாராசா என்ற சாளுக்கிய விஜயாதித்ய விக்கியண்ணன் என்று அழைத்துக் கொண்டார். அக்கல்வெட்டு, சுந்தரசோழரின் 11-வது ஆண்டைச் சார்ந்ததாகும் (கி.பி. 1029). அக்காலத்தில், போர்த் திற முக்கியத்துவம் வாய்ந்த, வலிமை மிக்க, கோட்டைக் காவற்படையுடைய அரணமைந்த நகராக, கோட்டாறு திகழ்ந்தது. இராணுவத்தில் முக்கியப்பங்காற்றிய ஒரு கிழக்கு சாளுக்கிய இளவரசர், கோட்டாறில் சில ஆண்டுகள் வாழ்ந்ததற்கு சாத்தியக் கூறு இருக்கிறதென திரு.கே.ஏ.என். சாஸ்திரி கூறுகிறார். எனினும், அவ்விளவரசர் யாரென இதுவரை எவரும் அறுதியிட்டுக்கூற இயலவில்லை.

ஜடாவர்ம உடையார் ஸ்ரீ சோழ பாண்டியர்

தெற்கே சோழப்பேரரசின் சார்பில், அலுவல் புரிந்த மற்றொரு அரசுப்பிரதிநிதி, ஜடாவர்ம உடையார் ஸ்ரீ சோழ பாண்டியராவார். வீர இராசேந்திரரால் அரசுப்பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட இளவரசர் கங்கை கொண்ட சோழருக்கு எல்லாக்கூறுகளிலும் ஒப்பானவராக ஜடாவர்மர் காணப்பட்டார். இவர் காலத்திய இரண்டு கல்வெட்டுக்கள், சுசீந்திரம் ஆலயத்தில் உள்ளன. அவற்றிலொன்று, இவர் அரசுப்பிரதிநிதியாக

ஆட்சி செய்த 25-வது ஆண்டில் பொறிக்கப்பட்டதாகும். இவர் மிக நீண்டகாலம் அரசுப் பிரதிநிதியாகப் பணி புரிந்தமைக்கு இதுவே சாட்சியம் கூறுகிறது.

மாறவர்மன் உடையார் ஸ்ரீ விக்கிரமன்

மாறவர்மன் உடையார் ஸ்ரீ விக்கிரமன், தெற்கே ஆட்சி செய்த பிற்காலச் சோழ, பாண்டிய அரசுப் பிரதிநிதி ஆவார். அவரது காலத்திய இரண்டு கல்வெட்டுக்கள் கன்னியாகுமரியில் காணப்படுகின்றன. இவ்வரசுப் பிரதிநிதி ஆட்சி செய்த பின்னர் சுசீந்திரத்திலிருந்து வடமேற்கே 11 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள அல்லூர் என்ற கிராமத்திற்கு இவர் நினைவாக, விக்கிரமசோழ பாண்டியபுரம் எனப் பெயர் சூட்டப்பட்டது[53].

பின்னர் ஆண்ட இரண்டு அரசுப் பிரதிநிதிகளின் பெயர், காலவரையினை சரியாக நிர்ணயிக்க இயலவில்லை. எனினும், நாஞ்சில் நாடு சோழ-பாண்டிய அரசுப் பிரதிநிதிகளின் ஆட்சியில் கி.பி.1019 முதல் 1070 வரை இருந்திருக்கிறது.

முதலாம் குலோத்துங்கர் பதவியேற்றவுடன், தெற்கிலுள்ள பகுதிகளுக்கு அரசுப்பிரதிநிதியை நியமனம் செய்யும் முறை கைவிடப்பட்டது.

முதலாம் குலோத்துங்கர்

சோழ-சாளுக்கிய மன்னர்களில், குலோத்துங்கர்தான் முதன் முதலில், அரியணை ஏறிய மன்னராவார்.[54] கன்னியாகுமரி மாவட்ட வரலாற்றில், முதலாம் இராசேந்திரருக்குப் பிறகு, முதலாம் குலோத்துங்கர் தான் முதன்மை வாய்ந்த மன்னராகத் திகழ்ந்தார்.

சோழப்பேரரசு ஆட்சி முறைக்கு ஒருபுதிய தூண்டுவிசையளிக்க குலோத்துங்கர் பெரிதும் முயன்றார். அவர் பல படையெடுப்புகளை மேற்கொண்டும், வடக்கே வேங்கை நாட்டினை இழந்தார். ஆகையால், அதனைத் திரும்ப வெற்றி கொள்வதில் நேரத்தை வீணடிக்காமல் தெற்கிலும், மேற்கிலும் தனது நிலையை வலுப்படுத்துவதில் கவனம் செலுத்தினார்.

தெற்கே அவர் மேற்கொண்ட படையெடுப்புகள் தொடர்பாக, இலக்கியங்கள் மற்றும் கல்வெட்டுக்கள் வாயிலாகப் பல சான்றுகள் உள்ளன. எடுத்துக்காட்டாக, அவர் எவ்வாறு "ஐந்து பாண்டியர்" களை வென்று, முத்துக்குளிக்குமிடங்களையும் பொதியில் பகுதிகளையும் கைப்பற்றினார் என்பது குறித்தும் கோட்டாறை எவ்வாறு தீக்கிறையாக்கினாரென்பது குறித்தும் திருக்கழுக்குன்றம் கல்வெட்டுக்களில் விளக்கப்பட்டுள்ளது.[55] இந்நிகழ்ச்சிகளை "விக்ரமசோழன் உலா நூல்" உறுதிப்படுத்துகிறது. விழிஞம் துறைமுகமும், காந்தளூர் சாலையும் எவ்வாறு அவரால் தரைமட்டமாக்கப் பட்டனவென "கலிங்கத்துப்பரணி" யில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.[56]

அவர் வெற்றிகொண்ட பகுதிகளை ஒன்று சேர்க்க, ஒரு புதிய வழி முறையைக் கையாண்டார். அவரது ஆட்சி எல்லையில் போர்த்திற முக்கியத்துவம் வாய்ந்த முனைகளில் கோட்டைக் காவற் படையினை அமைத்தார். அவற்றில் கோட்டாறும் உண்டு. அதனை அவரே போர்காலத்தில் தீக்கிரையாக்கினார். ஆனால், கோட்டைக் காவற் படைகள் ஒரு மாறுபாட்டுடன் செயல்பட்டன. அதாவது, அவை மன்னருக்குச் சேரவேண்டிய கப்பத் தொகையை வசூல் செய்யும் பணியில் ஈடுபடுத்தப்பட்டன. உள்ளாட்சி விவகாரத்தில் அவை ஈடுபடுத்தப்படவில்லை.

அவர் காலத்திய கல்வெட்டுக்கள், சோழபுரம், அகத்தீசுவரம், சுசீந்திரம், வாரையூர், கன்னியாகுமரி மற்றும் கோட்டாறு ஆகிய இடங்களில் காணப்படுகின்றன[57].

குலோத்துங்கச் சோழரின் பதவிக்கால இறுதியில், புகழ் வாய்ந்த சோழப் பேரரசு பிரியத் துவங்கியது. மேற்கே போசள மன்னர்களும், வடக்கே சாளுக்கியர்களும் அடிபணிய மறுத்ததன் விளைவுதான் சோழப் பேரரசு சிதறுண்டதற்குக் காரணமாகும். மாறவர்ம பராக்கிரம பாண்டியன் மகனான பராந்தகப் பாண்டியன், தன்னை மன்னராகப் பிரகடனம் செய்து கொண்டார் என்பது கன்னியாகுமரியிலுள்ள கல்வெட்டுக்களினின்றும் தெரியவருகிறது. அவர், தனது காலத்து கல்வெட்டில் தெலுங்க பீமாவின் குலம் மற்றும் தெற்கு கலிங்கதேசத்தைக் கைப்பற்றியமை குறித்து பதிவு செய்துள்ளார். இவையிரண்டும் முதலாம் குலோத்துங்கனின் மகனான விக்ரம சோழன் தன்வயப்படுத்தியதற்கு ஒத்தவாறு உள்ளது[58].

சோழப்பேரரசின் நிலக்குடியுரிமையாளரான பராந்தக பாண்டியன், மேற்குறிப்பிட்ட படையெடுப்புக்களில் விக்ரம சோழனுக்கு உதவி புரிந்திருக்கலாம் எனத் தெரியவருகிறது. பராந்தக பாண்டியன், சேர மற்றும் கூபக காந்தளூர் மன்னர்களைத் தோற்கடித்து. விழிஞம் மற்றும் சாலை ஆகியவற்றைக் கைப்பற்றியது குறித்து அவர் காலத்து கல்வெட்டுக்களில் காணப்படுகிறது. அவரது ஆற்றல்மிக்க நிர்வாகத்திறன், புதிய எடைகள், மற்றும் அளவுகள் ஆகியவற்றை நடைமுறைப்படுத்தியது போன்ற நிர்வாக சீர்திருத்தங்கள குறித்தும் அக்கல்வெட்டுக்கள் கூறுகின்றன. அனந்தபுரத்தில் உள்ள இறைவனுக்கு அவர் அழகான பத்து தங்க விளக்குகளைக் கொடையாக அளித்தார். எல்லாவற்றிற்கும் மேலாக, அவர் உலகெங்கும் பரவியுள்ள மிகப்பரந்த நிலப்பரப்பினில் ஆட்சிபுரிந்தாரென வரலாறு கூறுகிறது. ஆனால், இது மிகைப்படுத்திக் கூறப்பட்டதெனவும், அது நம்பத்தக்கதாக இல்லையெனவும் கல்வெட்டின் நம்பகத்தன்மையை இது பெரிதும் பாதிக்கிறது எனவும் கே.கே. பிள்ளை கூறுகிறார்[59]. இம்மன்னர், கன்னியாகுமரியிலிருந்து, திருவனந்தபுரம் வரை படையெடுத்து விழிஞம் மற்றும் கண்டலூர் சாலை ஆகியவற்றினை வென்றிருக்கலாமெனவும் கூறுகிறார்[60].

வேநாடு மன்னர்கள்

தெற்குப்பகுதியில், சோழர்களின் ஆட்சி வலிமை குன்றிய காரணத்தால், குலோத்துங்கச் சோழரின் ஆட்சிகாலத்திலேயே நாஞ்சில் நாட்டின் ஓர் கணிசமான பகுதி, வேநாடு மன்னர்களின் மறு ஆதிக்கத்திற்குள்ளாயிற்று. இப்பணியினை செவ்வனே நிறைவேற்றிய வேநாட்டு மன்னரின் தனித்தன்மை மனநிறைவிற்கேற்ப, வெளிக் கொணரப்படாமலேயே இருந்துவந்தது. இப்பணியினை முடித்த வேநாட்டு மன்னர் வீர கேரளவர்மன் என திரு.கே.கே. பிள்ளை கூறுகிறார்[61].

கி.பி. 12-ம் நூற்றாண்டின் முதல் காலாண்டில், வேநாட்டு அரசு உயர்நிலையினையடைந்ததென வரலாறு கூறுகிறது.

பறளியில் உள்ள பாண்டியநாடு கருங்கற் பீடமமைந்த ஒரு கல்வெட்டில் வேநாடு அரசின் உயர்நிலை குறித்து பதிவு செய்யப்பட்டுள்ளது. கி.பி.1116 இல் கூபக நாட்டு அரசர் ஒருவர், கோட்டாற் மற்றும் நாஞ்சில் நாட்டை முழுமையாக பாண்டிய மன்னர் ராஜசிம்மனிட மிருந்து வென்றார் என இக்கல்வெட்டு தெரிவிக்கிறது.[62] நாஞ்சில் நாட்டில் பிரபலமடைந்த ஒரு நாட்டுப் பாடல் இதனை உறுதி செய்கிறது.[63]

பத்மநாபசுவாமி ஆலயத்திலுள்ள கையெழுத்து ஆவணங்கள் இந்நிகழ்ச்சியை வலுப்படுத்துகின்றன[64] எனவும் இந்நிகழ்ச்சி 282 எம்.இ. என குறிப்பிடப்பட்டுள்ளது சரியல்லவெனவும், உண்மையி லேயே இந்நிகழ்ச்சி 292 எம்.இயில் (கி.பி.1116) ஏற்பட்டதாகுமெனவும் நாகமையா கூறுகிறார்.[65]

ஆனால், இவ்விவரங்களனைத்தையும், கூர்ந்து ஆராய்ந்தால் பல ஐயப்பாடுகள் களையப்படவேண்டியுள்ளன. பத்மநாபபுரம் ஆலய ஆவணங்கள் மற்றும் நாட்டுப் பாடலில் தெரிவித்துள்ள கூபக மற்றும் பாண்டிய நாட்டு மன்னர்கள் யாரென கண்டுபிடிக்க முயலவில்லை. வேநாட்டு மன்னர்கள் கூபக வம்சத்தைச் சார்ந்தவர்களென அடிக்கடி விவரிக்கப்படுவதாக திரு.டி.கே. வேலுப்பிள்ளை[66] தெரிவிக்கிறார்.

அவர் தொடர்ந்து தெரிவிப்பதாவது:

"வேநாட்டு மன்னர்களுக்கும், பாண்டியர்களுக்கும் நடந்த போரில் வீரகேரளவர்மன் வெற்றி பெற்றார் என தற்காலிகமாக ஏற்றுக் கொள்ளலாம். ஆனால், பாண்டிய மன்னர் (ராஜசிம்மன்) யார் எனக் கண்டுபிடிக்க இயலவில்லை. ஏனெனில் இவ்வாதத்தை ஏற்றுக் கொள்ள ஆதாரமேதுமில்லை. கி.பி.1120-ல் அரசாண்ட பராந்தக பாண்டியன் கூபகர்களை வென்றதாகக் கூறுவதையும் கருத்திற்கொள்ள வேண்டியுள்ளது. இவ்வாதங்களனைத்தையும ஆய்ந்து நோக்கிடின், எவ்வித இறுதிமுடிவையும் மேற்கொள்ள இயலவில்லை[67]".

நாஞ்சில் குறவன் வரலாறு

கன்னியாகுமரி மாவட்ட வரலாற்றில் மற்றொரு கருத்து மாறுபாட்டிற்குரிய நிகழ்ச்சி யாதெனில் நாஞ்சில் குறவனின் ஆட்சி தொடர்புடையதாகும். பாண்டிய நாட்டில் முதல் அரை நூற்றாண்டு காலம் முகமதிய மன்னர்கள் ஆண்டபொழுது திருவாங்கூரைச் சார்ந்த

குறுநிலமன்னர்களில் ஒருவரான நாஞ்சில் குறவன் என்பார், நாஞ்சில் நாட்டின் ஆட்சியாளரானார். 2903ஆம் கொல்லமாண்டில் (கி.பி.1117) திருவாங்கூர் மன்னர், நாஞ்சில் குறவனையும் அவருடன் சேர்ந்தோரையும் விரட்டியடித்ததாக கூறப்படுகின்றது.

மேற்கூறிய விவரங்களை ஏற்றுக்கொண்டு, நாகமையா நாஞ்சில் குறவன் குறித்த உட்கதையை விவரிக்கிறார்.[68] பத்மநாபபுரத்தைச் சேர்ந்த சிவன்பிள்ளை என்பவர், ஒரு பழைய கதையை நினைவிற் கொணர்ந்துள்ளார். அதாவது, நாஞ்சில் குறவன் வம்சத்தை துவக்கியவரான கோணங்கிகுறவர் என்பவர் ஒரு பொன்மாற்றுச் சித்தரென்பதையும், அவர் எவ்வாறு, கோட்டாறு சுசீந்திரம் மற்றும் ஏனைய இடங்களில் நிலையாக ஆட்சி புரிந்தாரென்பதையும் அவரது பின்சந்ததியினர் இப்பகுதிகளைத் தொடர்ந்து செல்வாக்குடன் எவ்வாறு அவருக்குப்பிறகு பல நூற்றாண்டுகள் திறம்பட ஆட்சி புரிந்தார்கள் என்பதையும் அக்கதை தெளிவாகக் கூறுகிறது. இதை நாகமையா தனது நூலில் எடுத்துக்காட்டியுள்ளார்.

குறவகுலத்தின் கடைசித்தலைவர் எவ்வாறு பதவி நீக்கம் செய்யப்பட்டாரென்பது குறித்து ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. மலையாளம் ஆண்டு 292-ல் குறவ குலத்தலைவர், திருவாங்கூர் பேரரசால் பதவிநீக்கம் செய்யப்பட்டாரென சங்குண்ணி மேனன் கூறுகிறார். ஆனால், நாகமையா இதனை மறுக்கிறார். கடைசிக் குறவத்தலைவரின் பதவியை அவரிடம் மேலாளராகப் பணியாற்றி முதலியார் இனத்தைச் சேர்ந்த ஒருவர் தவறான வழியில் பறித்துக்கொண்டு பதவியேற்றாரென நாகமையா கூறுகிறார்.

கோட்டாறைச் சேந்த அண்ணாவி என்பவரைப்பற்றிய கதையினை நம்பலாம் என வரலாற்றிற்கு இறுதி வடிவம் அளிக்கையில் மெக்கன்சி கூறியதாக திரு.கே.கே.பிள்ளை வாதிடுகிறார்.[69] இவற்றைக் கூர்ந்து ஆராய்ந்தால், கதை புனைபவர்களின் கூர்மதித்திறன் வியப்பையளிக்கிற தென திரு.கே.கே. பிள்ளை கூறுகிறார். இக்கதை பெரியவீட்டு முதலியார் குடும்பத்தைச் சேர்ந்த சிலரால் கூறப்பட்டதற்கான சாத்தியக்கூறினை முழுமையாக ஒதுக்கிட இயலாது. அக் குடும்பத்தினரின் மூதாதையர்களிலொருவர் மேற்குத்தொடர்ச்சி மலைக்கப்பால் இடம் பெயர்ந்து சென்று, ஒரு நல்ல நிலையை அடைந்து, இறுதியாக, நாஞ்சில் நாட்டின் தலைவரானார். அக் குடும்பத்தின் பிற்கால வழியினரிலொருவர் அவரது மூதாதையர், ஒரு கற்பனையான ஆட்சியாளரிடம் (அதாவது நாஞ்சில் குறவன்) தொடர்பு கொண்டு , நாஞ்சில் நாட்டை ஆண்டிருக்கலாமென்ற, ஆதாரமற்ற வரலாற்றினை உருவாக்கியளித்திருக்கலாமென கருத முடிகிறது. இக்கருத்திற்கு ஆனி 10, மலையாளம் ஆண்டு 1004-ம் ஆண்டு முதலியார் கையெழுத்துப் பிரதி ஆவணங்கள் வலுவாக்குகின்றன[70].

நாஞ்சில் பொருநன் மற்றும் நாஞ்சில் வள்ளுவன் ஆகியோர் தொடர்பான தமிழ் இலக்கியத்திலுள்ள நாஞ்சில் குறவன்

கற்பனைக்கதையைப்பொறுத்த கணிப்பு, தெளிவற்றதாக உள்ளது. பொருநன், அழகிய பாண்டியபுரத்திற்கு அருகிலுள்ள பகுதியில் தனது ஆட்சிப்பொறுப்பினை வகித்து வந்தானென்ற கூற்று, அவர் நாஞ்சில் குறவனுக்கு உறவினராக இருக்கலாமென்று அனுமானிக்க இடமளிக்கிறது. அழகிய பாண்டியபுரத்திற்கு அருகிலுள்ள குறட்டியரை என்ற கிராமத்தின் பெயர், குசத்தியாரை என்ற கிராமத்துடன் தொடர்பு படுத்திக் கூறப்படுகிறது. இக்கருத்து கி.பி.1476-ல் ஏற்படுத்தப்பட்ட பனையோலை ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சங்குண்ணி மேனன் மற்றும் நாகமையா ஆகியோரால் விவரிக்கப்பட்டுள்ள, நாஞ்சில் குறவன் பற்றி உட்கதை, காலத்திற்கு முரண்பாடான கருத்துக்களைப் பிரதிபலிப்பதாக உள்ளது. முகம்மதியர்கள் பாண்டிய நாட்டை ஆண்ட காலத்தில்தான், நாஞ்சில் குறவன் அவனது ஆட்சிப்பகுதியை உருவாக்கியதாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால், தெற்கே முகம்மதியர்கள் படையெடுத்தது கி.பி.1310-க்குப் முன்னரல்ல என்பது வரலாறு. எனவே, இந்த கருத்து ஆதாரமற்றது. ஆகையால், நாஞ்சில் குறவன் பற்றிய உட்கதையின் நம்பத்தக்க நிலை, திரு.கே.கே. பிள்ளை கூறியது போன்று, மீண்டும் ஐயப்பாட்டிற்கு இடமளிப்பதாகவேயுள்ளது.

வேநாடு-தனிமுதல் ஆதிக்கம்

கி.பி.12ஆம் நூற்றாண்டின், தொடக்கத்தில் சில ஆண்டுகள் கன்னியாகுமரி மாவட்டத்தின் சில பகுதிகள், வேநாடு மன்னர்களின் ஆளுகையிலிருந்தன. கி.பி.1140 முடிய வேநாட்டை ஆண்ட வீர கேரள வர்மா, நாஞ்சில் குறவனைத் தோற்கடித்ததாகக் கூறப்படுகிறது நாஞ்சில் குறவன் உட்கதை, வரலாற்றிலுள்ளதா இல்லையா என்பதொருபுறமிருக்க, கி.பி.12-வது நூற்றாண்டின் முதற்கால் பகுதியில் நாஞ்சில் நாட்டின் பகுதிகளை உயர்வான நிலையில் அரசாண்டார்களென்பதை மறுப்பதற்கில்லை.[71] நாஞ்சில் நாட்டைச் சேர்ந்த வடசேரி கிராமத்தில் தேவதான நிலங்களினின்றும் கிடைக்கும் வருவாயினை, கோட்டாறிலுள்ள இராசேந்திர சோளீசுவரமுடைய மகாதேவர் ஆலயத்திற்கு வேநாட்டு மன்னர் ஒப்படை செய்தாரென கொல்லம் ஆண்டு 302-ன் (கி.பி.1127) கல்வெட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளதென்பது அன்றைய வேநாட்டு மன்னரின் உயர்நிலைக்கு சான்று அளிக்கிறது.

இக்கல்வெட்டு குறித்து, பேராசிரியர் திரு.பி. சுந்தரம்பிள்ளை கீழ்க்கண்டவாறு கூறுகிறார்:[72]

"ஸ்ரீ வீரகேசரிவர்மன் எச்சூழ்நிலையில், தனது வருவாயில் ஒரு பகுதியினை சமயப்பணியார்வத்தில், அயல்நாட்டினரால் எழுப்பப்பட்ட ஒரு ஆலயத்திற்கு அளித்தாரென, நிர்ணயிப்பது மிகக்கடினமாக உள்ளது. ஆனால், நான் வாதத்திற்காக எடுத்துக் கொண்டாலும். எல்லாவகையிலும், அரசியலில் அமைதியான சூழ்நிலையினை உருவாக்க, இந்நிலத்தை ஆண்ட சோழ ஏகாதிபத்யத்தின்

பிரதிநிதிகளுக்கு அளித்த, தனது விருப்பக்கொடையாகவே ஐயப்பாடு கொள்ள வேண்டியுளது"[73].

இது அந்த நேரத்தில் சோழர்களின் நிலையை, அளவுக்கு மீறி மதிப்பிடச் செய்வதனால் சுந்தரம் பிள்ளையின் இப்பொருள் விளக்கத்தை ஏற்கவியலாது என கே.கே.பிள்ளை கூறுகிறார்.

மேலும், மலையாளம் ஆண்டு 301-ல் உள்ள (கி.பி.1126) கல்வெட்டு ஒன்றில், அப்போது பதவியிலிருந்த மன்னர், அல்லது அவரது ஆட்சி ஆண்டு ஆகியவற்றைக் குறிப்பிடாத போதிலும், முதன் முறையாக கொல்லம் ஆண்டின் எண்ணிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி ஆராயுங்கால், அந்தப்பகுதியில் அவ்வமயம் வேநாட்டு மன்னர்கள் முதன்மை நிலையிலிருந்தார்கள் எனக் கருதத் தூண்டுகிறது. இஃதன்றியும் அக்கல்வெட்டில், சுசீந்திரம், வீர கேரள சதுர்வேதி மங்கலம் என்ற பெயரில் அழைக்கப்பட்டதாகக் காணப்படுகிறது. ஒரு வேளை நூலாசிரியர் 12-ம் நூற்றாண்டில் உயர் நிலையிலிருந்த வீர கேரள வர்மனைக் குறிப்பிட்டிருக்கலாமெனத் தோன்றுகிறது[74].

மலையாளம் ஆண்டு முன்னூற்றி பத்தொன்பது (கி.பி. 1144) வீர கேரள வர்மன் காலத்து கல்வெட்டு ஒன்று, திருவல்லம் என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. இது அவரது ஆட்சி தொடர்ந்து நீடித்தமைக்கு சான்று பகர்கிறது. அதே ஆண்டில் ஆட்சி புரிந்த மாறவர்மன் ஸ்ரீவல்லபன் என்ற பாண்டிய மன்னனைக் குறித்த கல்வெட்டு ஒன்றும் சுசீந்திரத்தில் இருக்கிறது. மாறவர்மன் ஸ்ரீவல்லபன் காலத்திய சில கல்வெட்டுக்களும், பரவசேரி, கல்லிடைக்குறிச்சி ஆகிய இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆனால், அவற்றின் சரியான தேதிகளை அறுதியிட்டுக்கூற இயலவில்லை[75]. எனினும், தொல்லெழுத்துக்கலை ஆதாரங்கள் மற்றும் கல்வெட்டுக்களின் முன்னுரைக்கான பாங்கு ஆகியவற்றை கூர்ந்து நோக்குங்கால், இம்மன்னரின் ஆட்சி காலம் கி.பி. 12-ம் நூற்றாண்டாக இருக்ககூடுமென கருதமுடிகிறது. மாறவர்மன் ஸ்ரீவல்லபன் திருநெல்வேலி மற்றும் வடக்கு திருவாங்கூர் ஆகிய பகுதிகளில் ஆட்சி புரிந்தவரெனவும், இவை முறையே கீழ் வேம்பநாடு, மேல் வேம்ப நாடு என கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டிருப்பதாக நாகமையா கருத்துத்தெரிவிக்கிறார்[76]. அவர் இம்முடிவினை மேற் கொண்டதற்கு காரணம், திருநெல்வேலி, கீழ் வேம்ப நாடு என அழைக்கப்பட்டதனாலாகும். வடக்கு திருவாங்கூர், மேல் வேம்ப நாடு என ஒரு பொழுதும் அழைக்கப்பட்டதில்லையெனவும், எனவே, நாகமையாவின் கூற்று ஏற்கக்கூடியதாயில்லையென கே.கே.பிள்ளை கூறுகிறார். திருநெல்வேலி, கீழ் வேம்ப நாடு என அழைக்கப்பட்டதை அவர் ஏற்றுக் கொள்கிறார். ஆனால், மேல் வேம்ப நாடு என்பது கீழ் வேம்பநாட்டிற்கு மேற்கே உள்ள பகுதியெனவும், ஆனால், வடக்கு திருவாங்கூர் அல்ல எனவும் உறுதிபடக் கூறுகிறார். திருநெல்வேலிக்கு மேற்கேயுள்ள கோடலூர் என்ற இடம், மேல் வேம்ப நாட்டின் ஒரு பகுதியென

மற்றொரு தென்னிந்தியக் கல்வெட்டில் காணப்படுகிறது (மேல் வேம்ப நாட்டு கோடலூரான குலசேகர சதுர்வேதி மங்கலம்). ஆகையால், கோடலூர் என்பது, திருநெல்வேலிக்கு மேற்கேயுள்ள கோடக்கநல்லூர் என்ற இடத்தைத் தவிர வேறல்ல. ஆகவே, கைவசமுள்ள ஆதாரங்களின் அடிப்படையில் ஸ்ரீவல்லபன், வேநாடு அல்லது நாஞ்சில் நாட்டில் உயர்நிலையிலிருந்தாரென்ற முடிவினை மேற்கொள்ள இயலாதென கே.கே.பிள்ளை கூறுகிறார்.

கோட கேரள வர்மா (கி.பி. 1140 முதல் 1155 முடிய)

கோட கேரள வர்மாவின் முதலாவது கல்வெட்டு மலையாள ஆண்டு 320-ல் (கி.பி.1145) பொறிக்கப்பட்டது. எனவே, வீர கேரளவர்மா மலையாள ஆண்டு 320-க்கு முன்னரே பதவிகாலத்தை முடித்திருக்கக்கூடும். இந்த மன்னரது பதவி காலத்து முதலாம் ஆண்டைச் சார்ந்த மற்றொரு கல்வெட்டு சுசீந்திரத்தில் கண்டுபிடிக்கப் பட்டது. அவர் மிகுந்த செல்வாக்குடன் விளங்கினா ரெனவும், அவரது அரசு தெற்கு நாஞ்சில் வரை விரிவாக்கப்பட்ட தெனவும் அக்கல்வெட்டிலிருந்து தெரியவருகிறது. அவர் சுசீந்திரம் ஆலயத்தில் முதன்மை வாய்ந்த காப்பாளர்களிலொருவ ராகத் திகழ்ந்தார். ஆலயத்திற்கு அதிகப்பரப்புள்ள நிலங்களை வழங்கினார்.

ஸ்ரீவீர ரவிவர்மா (கி.பி.1151 முதல் 1164 முடிய)

கோட கேரள வர்மாவிற்குப் பின்னர், ஸ்ரீ வீர ரவிவர்மா பதவி ஏற்றார். மலையாள ஆண்டு 336 (கி.பி.1161) கல்வெட்டினை நோக்குங்கால், அவரது அரசின் எல்லை நாஞ்சில் நாட்டின் கீழ்ப்பகுதி வரை பரவியிருந்ததெனத் தெரிகிறது.[77] தாளக்குடியிலிருந்து நிலங்களை, புரவசேரி ஆலயத்திற்கு அவர் கொடையாக அளித்தாரென்பதும் அக்கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது. நாஞ்சில் நாட்டு நிருவாகம் முப்பெரும் அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டு வந்ததெனவும் அக்கல்வெட்டு கூறுகிறது. கிராம அளவிலான நிறுவனம் மன்னர் வழங்கும் கொடைக்குப் பின் ஒப்புதலளித்து, அதனை நடைமுறைப்படுத்தவும், தாளக்குடி மக்களுக்குரிய உரிமைகளையும் அக்கல்வெட்டு விளக்கிக் கூறுகிறது.

வீர ரவிவர்மா வேநாட்டின் தன்னாட்சி உரிமை பெற்ற ஆட்சியாளர் அல்ல எனவும், பாண்டிய மன்னர் மாறவர்மன் ஸ்ரீ வல்லபரின் நிலக்குடியுரிமையாளரெனவும், கே.ஏ.என் சாஸ்திரி கூறுகிறார். நாஞ்சில் நாட்டில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டு, இப்படிப்பட்ட கருத்தினை வெளிப்படுத்திட, இந்த வரலாற்று ஆசிரியர்களைத் தூண்டியிருக்கக் கூடும். வேநாடு அல்லது நாஞ்சில் நாட்டில், ஸ்ரீ வல்லபரின் உயர்நிலை குறித்து புள்ளி விவரங்கள், மேற் குறிப்பிட்டவாறான முடிவினை எடுத்திடப் போதுமான சான்றுகளல்ல, ஏனெனில், கொடை வழங்கப்பட்டதாகக் கூறப்படும் நிலங்கள் வேநாட்டில் இல்லை: ஆனால், அவை பாண்டியப் பேரரசின் நிலப்பரப்பில் உள. மேலும், இந்த கல்வெட்டுக்கள் எக்காலத்தில்

பொறிக்கப்பட்டனவென, சரிவர நிருபிக்கப்படவில்லை. ஆனால், தொல்லெழுத்துக் கலை கணிப்புப்படி, இக்கல்வெட்டுக்கள், கி.பி.12-ம் நூற்றாண்டைச் சார்ந்தவையாதலால் இவை ஸ்ரீவல்லபரின் ஆட்சி ஆண்டு காலம் குறித்து ஐயப்பாட்டை எழுப்புகின்றன. மேலும், ஸ்ரீ வல்லப, மன்னரான உதயமார்த்தாண்ட வர்மனின் சம காலத்தவரென்ற கூற்று, வரலாற்று ஆசிரியர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகும். அவர் உதய மார்த்தாண்ட வர்மனின் மகளான திரிபுவனதேவியை மணம் செய்து கொண்டமை இதனை உறுதி செய்கிறது. நாஞ்சில் நாடு, வேநாட்டு மன்னர்களின் ஆட்சிக்குட்பட்ட பகுதியாக இருந்ததென்பதற்கு வேறு சில சான்றுகளும் உள்ளன[78].

உதய மார்த்தாண்ட வர்மா

வரலாற்றுப்படி தற்போதய கன்னியாகுமரி மாவட்டம் அடங்கிய பகுதியின் அடுத்த வேநாட்டு ஆட்சியாளர், உதயமார்த்தாண்ட மன்னராவார். (கி.பி.12ம் நூற்றாண்டு). இவர் பதவியேற்ற ஆண்டு குறித்து, வறலாற்றறிஞர்களிடையே இன்னமும் கருத்து வேறுபாடு நிலவி வருகிறது. நாகமையாவின் கூற்றுப்படி, அவர் பதவியேற்றது, கொல்லம் ஆண்டு 348 ஆகும் (கி.பி. 1178).[79] மார்த்தாண்டவர்மனின் திருவட்டார் கல்வெட்டுக்களை ஆதாரமாகக் காட்டி, பேராசிரியர் பி.சுந்தரம்பிள்ளை கூறியுள்ளதை நாகமையா, கோடிட்டுக் காட்டியுள்ளார், ஆனால் திருவட்டார் கல்வெட்டுக்கள் படிக்க இயலாத அளவிற்குத் தெளிவற்றதாக உள்ளனவெனவும், எனவே, இம்மன்னரது பதவி ஏற்ற நாள் இன்னமும் விவாதத்திற்குரியதாகவே உளதென. கே.கே.பிள்ளை கூறுகிறார். மன்னர் பதவியேற்றது 348-வது கொல்லமாண்டென சுந்தரம்பிள்ளை கூறினாலும், அது 398-வது கொல்லமாண்டுதான் என, கோபிநாதராவ் கூறுகிறார். ஆனால், இவரது கருத்து, சுந்தரம்பிள்ளையின் கருத்தினையொத்து உள்ளது; ஏனெனில் உதயமார்த்தாண்டவர்மனின் வழித் தோன்றலான ஆதித்யவர்மன் காலத்திய கல்வெட்டு 368-வது கொல்லமாண்டைச் சார்ந்தது. உதய மார்த்தண்டவர்மன், சுசீந்திரம் ஆலயத்தின் அர்த்த மண்டபம் எழுப்புவதில், தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டார். அவரைத் தொடர்ந்து பல புகழ்பெற்ற மன்னர்கள் 13 மற்றும் 17-ம் நூற்றாண்டுகளில் வேநாட்டை ஆண்டார்கள். வரலாற்று ஆசிரியர் களுக்கு, மிகுந்த இடர்பாடுகளை உண்டுபண்ணும் சிறப்பியல்பு என்னவெனில், வேநாட்டு ஆட்சியாளர்கள் பங்கு முறையில் பணியாற்றியமை அல்லது இளநிலையிலுள்ள மன்னர், பேரரசை ஆண்ட முதுநிலையிலிருந்த மன்னரின் கீழ் இணைந்து செயல்பட்டமை ஆகியவையாகும். இது தொடர்பாக, நாகமையா கீழ்க்கண்டவாறு கூறுகிறார்:

"ஒரே குலத்தைச் சார்ந்த இரண்டு அல்லது மேற்பட்ட மன்னர்கள், ஒரே நாட்டை ஒரே நேரத்தில் ஆண்டு வந்தார்கள். அவர்கள் சிறு சிறு பகுதிகளின் தலைவர்களாயிருந்து ஆட்சியை நடத்தி வந்திருக்கலாம். அல்லது முதுநிலையிலிருந்த மன்னர் தலைமை பீடத்திலிருந்து

கொண்டு, இளநிலையிலிருந்தவர், அரசு நிருவாகப் பணியில் முதுநிலையிலிருந்த மன்னருடன் இணைந்து, அவருக்கு உதவிப் பணி புரிந்து செயலாற்றியிருக்கலாம்"

இதுதான், இத்தருணத்தில், வரலாற்றை மிகவும் சிக்கலானதாக்கி விடுகிறது. கி.பி.14-வது நூற்றாண்டின் துவக்கத்தில், கொல்லத்தி லிருந்து ஆண்டுவந்த ரவிவர்மன் குலசேகரன், தன்னை மேற்குத் தொடர்ச்சி மலைக் கடற்கரைப்பகுதியின் பெரிய மாவீரனாக உறுதிப் படுத்திக் கொண்டார். அவர் மலைத் தொடரின் மறுபுறமுள்ள பகுதிக்கு ஆரல்வாய்மொழிக் கணவாய் மூலம் வந்து, கன்னியாகுமரியின் ஆட்சியாளர்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்துக்கொண்டாரா இல்லையா என்பது குறித்து திட்டவட்டமாகத் தெரியவில்லை.

பராக்கிரமபாண்டியர்

வேநாட்டு மன்னர்களுக்கு நாஞ்சில் நாட்டின் மீதான பிடிப்பு உறுதியானது. ஆனால், இரண்டாம் பாண்டியப் பேரரசினை கி.பி. 1357-ல் ஆண்ட பராக்கிரமபாண்டியர், நாஞ்சில் நாட்டைக் கைப்பற்றி, தனது ஆளுகையின் கீழ் கொணர்ந்தாரென்ற, தனது கருத்தினை நாகமையா அளித்துள்ளார். இக்கருந்து, சுசீந்திரம் மற்றும் சோழ புரத்திலுள்ள பராக்கிரம பாண்டியன் காலத்து, கல்வெட்டுக்களினின் றும் தொகுத்து அளிக்கப்பட்டிருக்கலாம்.

ஆனால், இக்கல்வெட்டுக்களின் கருத்தையும், பராக்கிரம பாண்டியன், கி.பி.1372 முதல் 1385 முடிய ஆண்டதாகக் கூறும் கூற்றையும் கோபிநாத ராவ் ஏற்கவில்லை. இக்கல்வெட்டுக்கள், பிற்காலத்தியன, அதாவது கி.பி.15-ம் நூற்றாண்டைச் சேர்ந்தவைதான் என்று உறுதிபடக் கூறுகிறார்.

பாண்டியர்களின் அரசியல் உயர்நிலை குறித்து, சோழபுரம் கல்வெட்டுக்களில் எக்கருத்தும் தெரிவிக்கப்படவில்லையெனவும், மேலும், அக்கல்வெட்டு எந்த ஆண்டு பொறிக்கப்பட்டதென்ற விவரம் கூட இல்லையெனவும், திரு.கே.கே. பிள்ளை தெரிவிக்கிறார். அண்டை நாட்டிலுள்ள ஆலயங்களுக்குக் கொடையளிப்பது அரசர்குல கருத்து வேறுபாடுகளுக்கும், போரிடுபவர்களின் துணிவாண்மை ஆகியவற்றி ற்கும் அப்பாற்பட்டதென அவர் தெரிவிக்கிறார். எனவே, பராக்கிரமனின் சோழபுரம் கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டது மட்டும், தமிழ்நாட்டின் இப்பகுதியில், பராக்கிரமன் உயர்நிலையில் ஆண்டார் என்பதற்கு உரிய ஆதாரமாகாது.

பராக்கிரமன் கி.பி.1372 முதல் 1385 முடிய நாஞ்நில் நாட்டை ஆண்டாரெனவும், வேநாட்டு மன்னரான வீர ரவிவர்மா, பாண்டியர்க ளிடமிருந்து நாஞ்சில் நாட்டைத் திரும்பப்பெற்றாரெனவும் நாகமையா கூறுகிறார்[80]. முதல் வெற்றியோ அல்லது மறு வெற்றியோ, ஐயப்பாடின்றி நிரூபிக்கப்படவில்லையென திரு.கே.கே.பிள்ளை கூறுகிறார்[81]. மலையாளம் ஆண்டு 592-ல் (கி.பி.1416) இரவிவர்மன், கருவேலங்குளம் போரில் ஏற்பட்ட இழப்பினை ஈடுசெய்ய, சில

கொடைகளைக் கோயிலுக்கு அளித்தாரென பத்மநாபசுவாமி கோயிலின் செய்திப்பட்டியலினின்றும் தெரிய வருகிறது. ஆனால், இப்போர், வேநாட்டு அரசரின் வலியத்தாக்குதல்தான் எனக் கூறப்படுகிறது. நாஞ்சில் நாட்டு ஆட்சியாளருக்கு பதிலாக பாண்டியர்களே அத் தருணத்தில் சற்று தளர்ந்து காணப்பட்டதால், ஆரல்வாய் மொழிக்குக் கிழக்கேயிருந்த பகுதி, முக்கியத்துவம் வாய்ந்தமையாகக் கருதப்பட்டது. ஆனால், தொடர்ந்து பல நூற்றாண்டுகளுக்கு, வேநாட்டு மன்னர்கள், வள்ளியூர் மற்றும் நாங்குநேரி ஆகிய பகுதிகளில் செல்வாக்குடன் இருந்தார்கள் என்பதை மறுக்க இயலாது.

14-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில், நாஞ்சில் நாட்டிலுள்ள கோயில்களுக்கு பாண்டியர்கள் தொடர்ந்து கொடையளித்து வந்தார்களென்பதற்கு ஆதாரங்கள் உள்ளன. சுசீந்திரம் கோயிலில், மாறவர்மன் வீரபாண்டியர் மற்றும் அரிகேசரி பராக்கிரமா ஆகியோரின் கல்வெட்டுக்கள் உள்ளன. அவை, முறையே அவர்களது ஆட்சி காலத்திய கல்வெட்டுக்களாக இருப்பினும், அந்த சரகங்களில் அவர்களது அரசியல், உயர்நிலையிலிருந்ததற்கான சான்றுகளேது மில்லை.

இடைநிலைக்காலத்திய வரலாறு

இரவிவர்மா குலசேகரன் (கி.பி. 1299 முதல் 1313 முடிய)

வேநாட்டின் இடைநிலைக்காலத்திய வரலாறு, இரவிவர்மகுல சேகரன் ஆட்சி காலத்தில் துவங்கியதாகக் கூறப்படுகிறது. அவர், அவரது சமகாலத்திய பாண்டிய மன்னரான மாறவர்மன் குலசேகரனின் மகளைத் திருமணம் செய்து கொண்டு கி.பி.1310 வரை, அவரது மேலாட்சியை ஏற்றுக்கொண்ட மன்னராக ஆட்சி புரிந்தார். கி.பி.1310-ல், பாண்டிய மன்னர், இறந்த பின்னர், அவர் தன் ஆட்சி உரிமை பெற்ற மன்னரானார்[82].

அவர் ஒரு மாவீரனாவார்; அவர், "சங்கிரமதீரா"என அனைவராலும் அழைக்கப்பட்டார். "சங்கிரமதீரா" எனில், "போரில் மனஉறுதியுடை யோன்" எனப்பொருள்படும். தொடர்ந்து பெற்ற வெற்றியினால், வேநாட்டின் நிலையான ஒரு பலம் பொருந்திய இராணுவ நாடாக உயர்த்திக்காட்டினார்[83].

இரவிவர்மா குலசேகரனுக்குப்பிறகு, வீர உதய மார்த்தாண்ட வர்மன் பதவிக்கு வந்தார், இம்மன்னரின் ஆட்சிகாலத்தை நிர்ணயிப்பது குறித்து, வரலாற்று ஆசிரியர்களிடையே கருத்து வேறுபாடு நிலவி வருகிறது. எனினும், உதய மார்த்தாண்ட வர்மன் கி.பி. 1313 முதல் 1350 முடிய ஆட்சி செய்தாரென திருவனந்தபுரம் மாவட்ட விவரச் சுவடியின் பதிப்பாசிரியர் ஏ.ஸ்ரீதரமேனன் கூறுகிறார். அவரது கூற்று பத்மநாபசுவாமி திருக்கோயிலிலுள்ள ஆவணங்களினடிப்படையிலானது.

அவருக்குப் பின்னர் இரவிவர்மா ஆட்சி பீடமமர்ந்தார். கி.பி.1350 முதல் 1384 முடிய உள்ள காலம், வேநாட்டு அரசின் வரலாற்றிலேயே, மிகவும் ஒளிமயமானது.

அது இரவிவர்மன் மற்றும் ஆதித்திய வர்மன் ஆகிய முதன்மையான இரு உடன் பிறப்புக்களின் செல்வாக்குமிக்க காலமாகும். இவர்களது ஆட்சி காலத்தில்தான், அவர்களது நாட்டின் தென்பகுதி, (தற்போதைய கன்னியாகுமரி மாவட்டம்) சரமாரியான முகம்மதியப்படையெடுப்பை சந்திக்க நேர்ந்தது. இவ்வாட்சியர்கள், முகம்மதியர்களின் படையெடுப்பை எதிர்த்துப் போரிடத் தேவையான படைக்கலங்களையுடைய வலிமை மிக்க போர்வீரர்களை அவ்வப்போது தயார் நிலையில் வைத்திருந்தார்கள். கோட்டாறு (தற்போதைய நாகர்கோயில்) மற்றும் அமராவதி ஆகிய இடங்களில், ஆட்சியாளர்கள் புது அரண்மனைகளை நிறுவியிருந்தார்கள். ரவிவர்மன் தான், வரலாற்றுச் சிறப்பு மிக்க திருவிதாங்கோடு கல்வெட்டினைப் படைத்தவராவார். ஆண்டுதோறும் நடைபெறும் வைசாகத் திருவிழாவில், திருவிதாங்கோடு திருக்கோயிலில், 12 பிராமணர்களுக்கு உணவளிக்க, உரிய அளவு நிலத்தினைக் கொடையாக வழங்கியமை குறித்து, இக்கல்வெட்டுக்களில், பதிவு செய்யப்பட்டுள்ளது. ரவிவர்மன் கலை மற்றும் இலக்கியங்களின் காப்பாளராகத் திகழ்ந்தார். ரவிவர்மன் காலஞ்சென்ற பின், அவரது சகோதரரும், உடன்-ஆட்சி புரிந்தவருமான ஆதித்ய வர்மன், கி.பி. 1376-ல், வேநாட்டின் முழு ஆட்சிப் பொறுப்பினையும் ஏற்றார். அவர், அறிவாற்றல் மிக்கவரும், கவிஞரும் கூட. தனது சகோதரரைப்போன்று, இவரும், கலை, மற்றும் இலக்கிய காப்பாளராகத் திகழ்ந்தார். பல மலையாள இலக்கியங்களில், மாவீரரென இவரைப் போற்றி புகழ்ந்து எழுதப்பட்டது. இவர் அனைத்து வகையிலும் மக்களின் நன்மதிப்பைப்பெற்றிருந்தார். வேநாட்டு எல்லையை அடிக்கடி தாக்கிய முகம்மதிய மன்னர்களை, ஒரு இராணுவ தளபதியாயிருந்து தோற்கடித்து, வெற்றி வாகை சூடிவந்தார். வடசேரியிலுள்ள (தற்போதைய நாகர்கோயில்) கிருஷ்ணன் கோயில் இம்மன்னரால் எழுப்பப்பட்டதென அக்கோயிலுள்ள, கல்வெட்டில், குறிக்கப்பட்டுள்ளது. இவர் அறிவியலில் வல்லுனர் எனவும், இலக்கண மேதை எனவும் அக்கல்வெட்டு இவரது அறிவுத்திறனை, வெளிப் படுத்தியுள்ளது. பலதரப்பட்ட படைக்கலங்களைக் கையாளுவதில், இவர் வல்லவரென பாராட்டப்பெற்றார்[84].

சேர உதய மார்த்தாண்ட வர்மா (கி.பி.1383 முதல் 1444 முடிய)

திருவாங்கூர் வரலாற்றிலேயே நீண்ட நெடுங்காலம் அதாவது கி.பி. 1383 முதல் 1444 முடிய (மலையாளம் ஆண்டு 558 முதல் 619 முடிய) ஆட்சி புரிந்தது, சேர உதய மார்த்தாண்ட வர்மா தானென, சங்குண்ணி மேனன் தெரிவிக்கிறார். திருக்கோயில் ஆவணங்களை ஆதாரங்காட்டி, சங்குண்ணி மேனனின் கருத்தினை, திரு.டி.கே. வேலுப்பிள்ளை உறுதிப்படுத்துகிறார். இந்த காலகட்டத்தில் ஆட்சி புரிந்ததாகக் கூறப்படும் வீர ரவி வர்மா என்பவர், ஓர் இளநிலை இளவரசர் தானெனவும் அவர் கூறுகிறார். சேர, உதய மார்த்தாண்ட வர்மனின் பேரரசு, மலைத் தொடர்களின் இருமருங்கிற்கிடையேயும் அடங்கிய பகுதியாகும். மேலும், எந்த கேரள மன்னரும், அந்த

காலகட்டத்தில், அவ்வளவு பெரிய நிலப்பரப்பினைத் தனது ஆளுகையில் வைத்திருக்கவில்லை[85].

கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரம் ஆலயத்துடன், மன்னர் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். அத்திருக்கோயிலின் சபா மண்டபம் கட்ட மன்னரே வடிவமைத்துக் கொடுத்திருக்கிறார். மன்னர் அறச்செயல்களுக்களித்த கொடைகளைப் போற்றி, அவருக்கு "கேரள லஷ்மி பதீந்த்ரா" என்ற பட்டப்பெயர் அளித்துள்ளமை, திருக்கோயில் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது (கேரளத்தின் தலைசிறந்த பேரரசர் எனப் பொருள்படும்).

சேர உதய மார்த்தாண்ட வர்மனின் வழிவந்தோர் ஆதித்யவர்மா, அவரது இளைய சகோதரர் இராம வர்மா, குடும்பத்தினரின் மற்றொரு உறுப்பினர் ஆகியோராகும். அவர்களனைவரும், தீபகற்பத்தின் தென் பகுதியை 15-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இணைந்து ஆட்சி புரிந்த மன்னர்களாவர். சுசீந்திரம் திருக்கோயில் மற்றும் அதன்கோபுரம் ஆகிய வற்றை அழகுப்படுத்தும் பணியினை இம்மன்னர்களும் தொடர்ந்தார்கள். அவர்கள் காலத்திய கல்வெட்டுக்களே அதுபற்றி கூறுகின்றன.[86]

15-ம் நூற்றாண்டின் கடைசி கால் நூற்றாண்டில், இரண்டாம் ஜெயசிம்ம தேவா (கி.பி.1486-ல் ஆண்டிருக்கக் கூடும்) மற்றும் அவர் வழிவந்த சகலகலா மார்த்தாண்டவர்மா (கி.பி. 1495-ல் ஆட்சி புரிந்திருக்கக் கூடும்) ஆகியோர், தற்போதைய கன்னியாகுமரி மாவட்ட வரலாற்றில் இடம் பெற்றுள்ளார்கள். இரண்டாம் ஜெயசிம்ம தேவா, ஒரு முறை தாளக்குடியைச் சார்ந்த, ஒடுக்கப்பட்ட நெசவாளர்களை விடுவித்ததாக வரலாறு கூறுகிறது. அதாவது, மன்னர், வடசேரியில் முகாமிட்டு, இடம் பெயர்ந்து வந்த மக்களின் குறைகளைப் பொறுமையாகக் கேட்டறிந்திருக்கிறார். துணிகளுக்கு சாயம் தோய்த்து, அதனின்றும் கிடைக்கும் வருவாயை வைத்து, பிழைப்பு நடத்தி வந்ததாகவும், அவர்கள், உயர்குடியைச் சார்ந்த, பிராமணர்கள் மற்றும் பிள்ளைமார்கள் ஆகியோரால் பல்வேறு அவதிக்கு ஆளாவதாகவும் முறையீடு செய்திருக்கிறார்கள்.[87] இதற்கு ஒரு முடிவு காண, மன்னர், ஒரு அவசர உரிமைக் கட்டளையைப் பிறப்பித்திருக்கிறார். அதன்படி, பொதுக்கிணறுகள் மற்றும் குளங்கள் ஆகியவற்றிலிருந்து அந்நெசவாளர்கள் தண்ணீரைப் பயன்படுத்துவதைத் தடுத்தால், அவர்கள் கடுமையான தண்டனைக்குள்ளாவார்களென்பது அந்த உரிமைக் கட்டளையின் உட்கருத்தாகும். கோட்டாற்றிலுள்ள பரசுராம பெருந்தேர் கல்வெட்டில் இவ்விவரங்கள் குறிக்கப்பட்டுள்ளன.

சகல கலா மார்த்தாண்ட வர்மா

சகல கலா மார்த்தாண்ட வர்மா, கி.பி.1495-ல் ஆட்சி புரிந்தார். அவர், சுசீந்திரம் அருகிலுள்ள மருகூர் என்ற கிராமத்தில், ஒரு விநாயகர் ஆலயத்தை நிறுவினார். உள்ளூர் மக்களிடையேயான கருத்து வேறுபாடுகள் களையப்பெற, பொதுவாக அவர், தனது மூதாதையர் களுடைய அணுகுமுறையினையே கையாண்டார். அவர் மேலும் ஒரு

படி சென்று, மக்களின் ஒழுக்கத்தை வரன்முறைப்படுத்த சில விதிகளைப் பிரகடனம் செய்தார். வலது, இடது கைகள் ஒன்றோடொன்று எவ்வாறு பின்னிப் பிணைந்து உறவு கொண்டாடுகின்றனவோ, அதே முறையான உறவினை ஒவ்வொரு இனத்தைச் சேர்ந்த மக்களும் வளர்க்க வேண்டுமென்ற புதுமையான தத்துவத்தின் அடிப்படையில் மேற்குறிப்பிட்ட விதிகளை வரைந்தார்.[88]

பூதள, திரு வீர உதய மார்த்தாண்டர்

கன்னியாகுமரி மாவட்டத்தில் அடுத்து ஆற்றல்மிகு ஆட்சி புரிந்தவர் வேநாட்டு மன்னர் பூதள ஸ்ரீ வீர உதய மார்த்தாண்டராவார். அவர் மலையாளம் ஆண்டு 691-ல் (கி.பி.1516) அரியணையில மர்ந்தாலும், கி.பி.1495-ல், அவரது நாட்டின் நிருவாகம் குறிப்பிடத் தக்கது (மலையாள ஆண்டு 670). அவர், பல வெற்றிகளைக்குவித்து, வடகிழக்கே திருநெல்வேலி வரையில் படையெடுத்துச் சென்றார். அவரது வெற்றியின் நினைவாக, "மண்கொண்ட பூதள வீரர்" என்ற பட்டப்பெயரினைப் பெற்றார். பிரம்மதேசம், சேரன்மாதேவி, அம்பாச முத்திரம், மற்றும் களக்காடு ஆகிய இடங்களிலுள்ள கல்வெட்டுக்கள் இவரது வெற்றிகளுக்கு சான்றளிக்கின்றன. மாவட்டத்திலுள்ள அனைத்து ஆலயங்களுக்கும் பேராதரவு நல்கி, மானியங்களை வழங்கினார். சுசீந்திரம் திருக்கோயிலுக்கு தாளக்குடி கிராமத்தில், சில நிலங்களைக் கொடையாக அளித்தார். சுசீந்திரம் திருக்கோயிலின் நுழைவாயிலில், வரிபாட்டிற்குரிய உதய மார்த்தாண்ட விநாயகரின் திருஉருவத்தை நிறுவியதற்கு அவர்தான் பொறுப்பான நடவடிக் கையினை மேற்கொண்டாரென கூறப்படுகிறது. தாளக்குடியிலுள்ள செயந்தீசுவரர் திருக்கோயில், தோவாளையிலுள்ள கிருஷ்ண சுவாமி திருக்கோயில் ஆகியவற்றிற்கு இம்மன்னர் பல மானியங்களை வழங்கியுள்ளார். அவர் கையாண்ட சமய சார்பின்மை, மற்றும் சகிப்புத்தன்மை போற்றுதற்குரியது. இது, அவர் நாகர்கோயிலுள்ள சமண சமய திருக்கோயிலுக்கு நிலங்களைக் கொடையாக வழங்கியதிலிருந்தே தெரியவரும். குமரிமுட்டத்திலுள்ள கிறிஸ்தவ சமயத்தைச் சார்ந்த பறவர்களை இந்து சமயத்தைச் சார்ந்தோரின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவித்து, அவர்கள் மீது விதிக்கப்பட்டிருந்த சட்டத்திற்குப்புறம்பான வரிகளையும் நீக்கினார்.

எனவே, ஒரு ஆற்றல்மிக்க மாவீரர், திறமையான நிர்வாகி போன்ற பெயரும், புகழும்பெற்ற உதய மார்த்தாண்ட வர்மனின் செல்வாக்கு மிக்க ஆட்சி முறை, நாஞ்சில் நாட்டு வரலாற்றில் சிறப்புடையது[89].

நாஞ்சில் நாடும், விசய நகரமும்

வேநாட்டு மன்னர், விசயநகரப் பேரரசின், மேலாண்மையினை ஏற்றுக்கொள்ளும் செயலுக்கு உள்ளாக்கப்பட்டதாக வரலாற்றாசிரியர் கள், பொதுவாகக்கருதுகிறார்கள். ஆனால், திருவாங்கூர் மாநில நடைமுறை நூலாசிரியர், மாறுபட்ட கருத்தினைத் தெரிவிக்கிறார்.[90] இது விவாதத்திற்குரிய தாகையால், இது குறித்து, தெளிவாக ஆராய்ந்து

முடிவெடுக்க வேண்டியிருக்கிறது. கி.பி. 1532-ல், கிருட்டிண தேவராயர் ஆட்சி புரிந்த காலத்தில், முதன் முதலாக வேநாட்டின் மீது, படையெடுத்தார். விசய நகரப் பேரரசின் மேலாண்மையை ஏற்றுக்கொண்ட பாண்டிய மன்னரின் அண்டை நாட்டவரான வேநாட்டு மன்னர், பாண்டிய மன்னருக்கு தொல்லை கொடுத்து வந்ததே இதற்குக் காரணமாகும். இதைத் தொடர்ந்துதான். விசய நகர மன்னர், தன்னை நம்பியிருந்த பாண்டிய மன்னருக்கு உதவி புரிய முன் வந்தார். கிருட்டிணதேவராயருடன் உடன்பாட்டையும், நட்பையும் முறித்துக் கொண்ட ஒரு சோழ மன்னருக்கு, வேநாட்டு மன்னர் உதவிபுரிந்தது, இதற்கு மற்றொரு காரணமாகும். வேநாட்டின் மீது வலியத்தாக்குதல் மேற்கொள்வதற்கு, இந்த இரண்டு காரணங்களும் கிருஷ்ண தேவ இராயருக்குப் போதுமானவையாக இருந்தன. ஆனால், போரின் இறுதி முடிவைக் காணும் வரை கிருஷ்ண தேவ இராயர் உயிருடனில்லை. அவரது வழித்தோன்றல், அச்சுதராயர், படையெடுப்பினைத் தொடர்ந்தார். படை சீரங்கத்தை அடைந்தது. அவர், தனது மைத்துனர், சாலகதிம்மாவின் தலைமையில், வேநாட்டுடன் போரிட படையினை அனுப்பிவைத்தார். தாமிரபரணி ஆற்றங்கரையில் போர் மூண்டது. அதனில், விசய நகரப்பேரரசு வெற்றிபெற்றது. பாண்டிய மன்னர், மீண்டும் பதவியிலமர்த்தப்பட்டார்.

போரில் விசய நகரப் பேரரசின் வெற்றி குறித்தும், அவரது வெற்றிக்கடையாளமாக, அச்சுதராயரால், ஒரு வெற்றித் தூண் நிறுவப்பட்டது குறித்தும் "அச்சுதராயப்பைடயம்" என்ற இலக்கிய நூலிலும், காஞ்சிபுரத்திலுள்ள அச்சுதராயரின் கல்வெட்டிலும் கூறப் பட்டுள்ளது. போரில் தோல்விகண்ட வேநாட்டு அரசர், சரணடைந்த தோடல்லாமல், யானைகள், குதிரைகள் மற்றும் மதிப்புமிக்க பொருட்கள் ஆகியவற்றை வெற்றிகொண்ட அரசருக்குப் பரிசாக அளித்தார். எனினும், விசயநகரப்படைப் பெருந்தலைவர், வேநாட்டு மன்னரை, விசயநகர மன்னர் தங்கியிருந்த ஸ்ரீரங்கத்திற்கு அழைத்துச் சென்று, வேநாட்டு மன்னர், பாண்டிய மன்னருக்கிழைத்த கொடுமைகளுக்கு உரிய தண்டனை வழங்கினார்[91].

இந்த இலக்கியம் மற்றும் கல்வெட்டிலடங்கிய தகவல்கள் சரியல்லவென கே.கே.பிள்ளை கருத்துத் தெரிவிக்கிறார். "அச்சுதராயப் பைடயம்" புகழுரைக்காகவே தயாரிக்கப்பட்ட நூலாகையால், அதனை ஏற்கமுடியாதென்பது அவரது வாதமாகும். கல்வெட்டு ஆதாரத்தைப் பற்றி குறிப்பிடுகையில், அது திருவாங்கூரிலில்லையெனவும் தொலைவிடத்தில் (அதாவது, காஞ்சியில்)இருப்பதால், அது உண்மைக்குப் புறம்பான தெனவும், அவர் மேலும் தெரிவிக்கிறார். கே.கே. பிள்ளை இக்கருத்திற்கு உடன்படவில்லை. அவர் கீழ்க்கண்ட வாறு கூறுகிறார்:

"விஜயநகரப் பேரரசின் தோல்வியை மூடிமறைப்பதற்காகவே, "அச்சுதராயப்பைடயம்" என்ற நூலில் திருவடியுடன் சாலகதிம்மா, திருவனந்தபுரம் மீது படையெடுத்ததாக, கதை கட்டிவிடப்பட்டுள்ளது

டி.கே. வேலுப்பிள்ளை பிள்ளையின் கூற்று, நம்பத்தகுந்ததாக இல்லை. தாமரபரணியிலிருந்து, திருவனந்தபுரம் செல்லும் வழியில், முக்கியமான இடம் பத்மநாபபுரம் என்றும், அதைப் பற்றி, "அச்சுதராயப்பைடயம்" என்ற நூலில், குறிப்பிடப்படாமலிருக்கும் சூழ்நிலையைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்த வேலுப்பிள்ளை முயன்றிருக்கிறார். இந்த மாறுபட்ட சான்று, விஜயநகரத்தின் படையெடுப்பை பொய் என அப்படையெடுப்பிற்கு மாசு கற்பிக்க இயலாது. இது கவிஞரின், கற்பனையில் உதித்த செய்தியேயன்றி வேறல்ல".

"டி.கே.கே. வேப்பிள்ளையின் கருத்திற்கு மிக முதன்மையான மறுப்பு, கல்வெட்டு சான்றினை வைத்து, தெரிவிக்கப்படுகிறது. அவரது வாதம், கல்வெட்டின் பிறப்பிடத்தை ஆதாரமாகக் கொண்டது என்பது மனநிறைவிற்கேற்ப இல்லை. தாமிரபரணிபோரில், பேரரசர் ஈடுபட வில்லை, அவரது படைப்பெருந்தலைவர், திருநெல்வேலியில் வெற்றிபெற்றிருக்க இயலாது. கி.பி.1541-ல், பள்ளிக்கால் திருக்கோயில் (திருநெல்வேலி மாவட்டம்) சாந்தி செய்து, அத்திருக்கோயிலுக்கு தன் பெயரைச் சேர்த்து சூட்டியுள்ளார். இந்நிகழ்ச்சி விசயநகர வெற்றியை உறுதிப்படுத்த இயலாதென்ற கூற்று, எவ்விதத்திலும் ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல."

"அதே நேரத்தில், கல்வெட்டுக்கள் அளித்துள்ள சான்றுகளையும் முழுமையாக ஒதுக்கித் தள்ளிவிட முடியாது. முத்து கிருட்டிணப்பா அரசாண்ட காலத்திய தாமிரப்பட்டயம் திருவடியின் தோல்வியினை உறுதி செய்கிறது. இராசாதிராஜ விட்டல ராசாவிடம் ஒரு அலுவலராகப் பணியாற்றிய அன்னன் பசுவன நாயக்கரின் மகனால், திருவடி தேசத்தில் புலியூர்குரிச்சி என்ற கிராமம், தானமாக அளிக்கப்பட்டமை குறித்து அத்தகட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அத்தகடு சக ஆண்டு 1459- கொல்லம் ஆண்டு 713-ஐச் சார்ந்தது. அது கி.பி. 1537-க்கு ஈடான ஆண்டாகும். திரிவேதியினால் விசயநகரப்பேரரசின் உயர்நிலை ஏற்றுக் கொள்ளப்படாவிட்டால், இப்பட்டயத்தில் உள்ள நிகழ்ச்சிகள் எவ்வாறு நிழ்ந்திருக்கும்? மேலும், அச்சுத மன்னனின் வெற்றி தவிர, "திருவேதி சப்தங்கஹரணா" என்ற பட்டப் பெயரளித்த விவரமும், சக 1453ஆம் ஆண்டின் (கி.பி.1532)எலவனசூர் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது. இப்பட்டபெயர், "திருவடி அரசின் ஏழு மரபுச் சின்னங்களைக் கைப்பற்றியவர் எனப்பொருள்படும். இவ்வாறான மிகப்பெரிய சான்றினை ஆராயுங்கால், கி.பி.1532ஆம் ஆண்டைப்போரில், விசயநகரப்பேரரசின் வெற்றி, எவ்வித ஐயப்பாட்டிற்கும் இடங்கொடாது உறுதிப்படுத்தப்படுகிறது".[92]

விசயநகரப் பேரரசின் இரண்டாம் படையெடுப்பும், வீரகேரள வர்மனும்

உதய மார்த்தாண்ட வர்மா இறந்த பின்னர், பூதள வீர ஸ்ரீ கேரளா எனும் உன்னி கேரள வர்மா, கி.பி.1535-ல், வேநாட்டின் அரியணையில் ஏறினார். இவரது காலத்தில்தான், விசயநகரப் பேரரசின் இரண்டாம் படையெடுப்பை சந்திக்க நேரிட்டது, விசயநகரப்பேரரசின்

மேலாதிக்கத்தை ஏற்றுக்கொண்ட பாண்டியர்களின் நாட்டு எல்லையில். அடுத்தடுத்து வேநாட்டு மன்னர்கள் தொல்லை கொடுத்து வந்ததாலும், மேற்கு கடற்பகுதியைச் சார்ந்த பரவர்களின் வேநாடு இந்த இரண்டாவது முறைத்தாக்குதலுக்குள்ளானது. விசுவாரச்சை பெற வேண்டியும் இப்போர் தற்போதைய கன்னியாகுமரி மாவட்ட எல்லைக்குள் நடைபெற்றதால், இப்படையெடுப்பு வரலாற்றுச் சிறப்பு வாய்ந்ததாக கருதப்பட்டது. போர்ச்சுகீஸியர்களால் கிறித்தவ சமயத்திற்கு மாற்றப்பட்ட பவர்கள் அவர்களது நம்பிக்கைக் குரியவர்களாக இருந்தனர். இப்படையெடுப்பிற்கு மேற்சொன்ன காரணங்களிருந்த போதிலும், முதன்மையான காரணமென்னவெனில், வேநாட்டு மன்னர் விசயநகரப்பேரரசிற்குக் கப்பங்கட்ட மறுத்ததேயாகும்.

இறுதியில், இப்படையெடுப்பு, மதுரையில் விசயநகர அரசுப்பிரதிநிதி இராம ராய விதாலா என்பவராலும், அவரது சகோதரர் சின்னதிம்பி என்பவராலும் தலைமை தாங்கி நடத்தப்பட்டது. இப்படை ஆரல்வாய் மொழிக்கணவாய் வழியாகச் சென்று, கோட்டாற்றில், வேநாட்டுப் படையை சந்தித்தது.

இப்போரின் முடிவினைப்பற்றி, ஆராயுங்கால், பிஷப் சேவியர் என்பார், தன் கைகளில் சிலுவையுடன் போர்க்களத்தில் நுழைந்தாரெனக் கூறப்படுகிறது. இது, படையெடுத்து வந்தோருக்கு அச்சத்தை உண்டு பண்ணியதாகத் தெரிகிறது. ஆனால், நிலையாக இப்போர் நடந்ததாகவோ, வேநாட்டு மன்னர் வெற்றி பெற்றதாகவோ, எவ்வித ஆதாரமும் கூறவில்லை. எனினும், பிஷப் சேவியர், உன்னி கேரள மன்னருக்கு ஆதரவாக இவ்வாறு செய்திருக்கலாமெனவும் விசயநகர மற்றும் வேநாட்டு மன்னர்களிடையே மீண்டும் நல்லிணக்க நிலையை ஏற்படுத்த இவ்வாறு முனைந்திருக்கலாமெனவும் கூறப்படுகிறது.

ஆனால், இந்நல்லிணக்க நிலைக்கோணத்தில், இதனை ஆராய்வதை டி.கே. வேலுப்பிள்ளை மறுக்கிறார். விசய நகர அரசு, வேநாட்டு அரசினிடம் இழிவான முறையில், இரண்டாவது தடவையாக கி.பி.1544-ல் தோல்வியை சந்தித்ததாக, அவர் கூறுகிறார். ஆனால், அவரது கருத்திற்கு, ஒரு சிறிய சான்று கூட அளிக்கப்படவில்லை. எனினும், சுசீந்திரத்திலுள்ள இரண்டு கல்வெட்டுக்களைக்காட்டி, தனது கருத்தினை, அவர் நிலை நிறுத்த முயலுகிறார். இக்கல்வெட்டுக் களைத் தீவிரமாக ஆராய்ந்து நோக்கின், வேலுப்பிள்ளையின் கருத்தினை ஏற்றுக்கொள்வது இயலாததாக உளது. விதால மன்னர், திருவேங்கடநாதர் கோயில் கோபுரத்தையும், பெருமாள் கோபுரத்திற்கு முன்னர் கொடிக்கம்பத்தையும் எழுப்பியதாக 720ஆம் மலையாள ஆண்டின் கல்வெட்டினின்றும் தெரியவருகிறது. விதால மன்னரின் பிறந்த நாட்களில், வென்று மண்கொண்ட பூதள வீர ரவிவர்மா, திருவேங்கிட எம்பிரானுக்கு, நிலங்கள் தானமாக அளித்ததாக 722ஆம் மலையாளஆண்டு கல்வெட்டில் பதியப்பட்டுள்ளது.

திருவாங்கூர் மாநில நடைமுறை நூலாசிரியர், விதால மன்னர், கோபுரத்தை எழுப்பியமைக்குக் கைமாறாக, திருவாங்கூர் மன்னர் அறக்கொடை அளித்ததாக, மிக அவசரப்பட்டுக் கூறுவதாக கே. கே. பிள்ளை கருதுகிறார்.[93] இது ஒரு கூர்மதியுடைய கருத்தாகத் தோன்றினாலும், மனநிறைவளிப்பதாக இல்லை. விதால மன்னரும், அவரது போர்ப்படையினரும், தோற்கடிக்கப்பட்டு, துரத்தியடிக்கப் பட்டிருந்தால், மிகப் பெரிய தொண்டான திருக்கோயில் கோபுரத்தை எழுப்பும் பணியினை எவ்வாறு மேற்கொண்டிருக்க இயலும்? மேலும், ஒரு மன்னர் கட்டணத்திற்காகப் போர் புரிந்து, வென்று, அதனைத் தொடர்ந்து, அறக்கொடை அளித்தாரென்பது, இயற்கை எதிர்பார்ப்பிற்கு நேர்மாறாக உள்ளது. ஆனால், இப்படையெடுப்பு, விசயநகரப் பேரரசு, திருவடிகளைவிட மிக வலிமை பெற்றதென்பதை உறுதிப்படுத்துவதற் காகம் விசய நகரப் பேரரசை அண்டி வாழும் பாண்டியர்களுக்கு அவர்களது நாட்டினைத் திரும்பப் பெற்று ஒப்படைப்பதற்காகவுமே யன்றி, வேறல்லவென்பது கருத்திற்கொள்ள வேண்டியதாகும். இறுதியில் சொல்லப்போனால், வேநாட்டு மன்னர்கள் விசயநகர மன்னர்களுக்குக் கீழ்படிந்தவர்களேயென்பதை ஐயமின்றிக் கூறலாம். வேநாட்டை வென்ற விதால மன்னரைப் புகழ்ந்து பாடியுள்ள " ராமராச்யம்". மற்றும் "யாதயபைத்யவைக்யா" ஆகிய இலக்கிய நூல்கள், இந்தக் கல்வெட்டில் பதியப்பட்டுள்ளவற்றை உறுதி செய்கின்றன[94].

வேநாட்டு மன்னர்களின் இறுதிநிலை குறித்து திரு.கே.கே.பிள்ளை இவ்வாறு கூறுகிறார்:

"உண்மையிலேயே, சேவியரின் இடையீட்டால், வேநாட்டு மன்னர், விசயநகரப் பேரரசின் உயர்நிலையை ஏற்று, அமைதி உடன்படிக்கை மேற்கொண்டதாகக் தெரிகிறது. ஆனால், உடன்படிக்கையின் சரியான விதிமுறைகள் யாதெனத் தெரியவில்லை. ஆனால், கப்பங்கட்ட வேண்டியதென்ற நிபந்தனை விதி ஏற்படுத்தப்பட்டதா என அறிந்து கொள்ள இயலவில்லை. இந்நிலப்பரப்பின் மீது, மதுரை நாயக்கர்கள் தங்களது படையெடுப்பினை ஆதாரங்காட்டியிருப்பதை ஏற்பதாயின், கப்பங்கட்டுவது ஒரு விதியாக ஏற்கப்பட்டதாகக் கொள்ளலாம்."

திருவனந்தபுரம் மாவட்ட விவரச் சுவடியின் பதிப்பாசிரியர்,[95] கே.கே. பிள்ளையின் கருத்தை ஏற்கிறார்.

இறுதி விசயநகரப் படையெடுப்பு

விதால மன்னரின் தலைமையிலான விசயநகரப்படை, கி.பி.1558ஆம் ஆண்டில், மூன்றாவது முறையாக திருவாங்கூர் மீது படையெடுத்தது. திருவடி கப்பத்தொகை குறைவாகச் செலுத்தியதால், போர் மூண்டதாகக் கூறப்படுகிறது.[96] ஆனால், இவ்விறுதிப் படையெடுப்பு, விதால மன்னருக்கு எதிராக முடிந்தது. திருவாங்கூர் மன்னரின், விதாள மன்னருக்கான ஒற்றனாக, போர்ச்சுகீசிய சமயப்பரப்பாளர் அருட் தந்தை பெரசு பணியாற்றினார். அவர் தனது குறிப்பில், திருவாங்கூர் படை ஒரு கொடியை ஏந்திக் கொண்டு,

போரிட்டதாகவும், இயேசுவின் பெயரில் அவர்கள் மிக உணர்ச்சிவயப்பட்டு போரிட்டதாகவும் இது, எதிரிப்படைகளுக்கு அச்சத்தை உண்டு பண்ணியதாகவும், இறுதியில் விசய நகரப்படை தோல்வியைத் தழுவியதாகவும் அதன் பின்னர், விதாள மன்னரைப் பற்றிய தகவலேதுமில்லையெனவும், தெரிவித்துள்ளார். இவ்வாறாக, விசயநகர அரசிடமிருந்து விடுபட்ட, திருவாங்கூர், தனி ஆட்சி உரிமை பெற்ற நாடாகத் திகழ்ந்தது.[97]

நாஞ்சில் நாடும், மதுரையை ஆண்ட நாயக்க மன்னர்களும்

நாஞ்சில் நாட்டு மக்கள் 17ஆம் நூற்றாண்டில், கொடுந் துன்பத்திற்கும், சோதனைக்கும் ஆளானார்கள். நாயக்கர்களின் படையெடுப்பால், மக்கள் மிகுந்த தொல்லைக்குட்பட்டார்கள். போர்க்களத் தாக்குதலைத் தொடர்ந்து கொள்ளை, சூறை ஆகியவற்றையும் அவர்கள் சந்திக்க வேண்டியதாயிற்று.

அச்சுதராயரின் ஆட்சி முடிவடைந்தவுடன், அஃதாவது கி.பி.1542-ல் நாடெங்கிலும் நாயக்க மன்னர்கள் படிப்படியாக தனி ஆட்சி உரிமை பெறத் தொடங்கினார்கள். மைய அரசின் மீதான அவர்களது பற்றுறுதி, உள்ளுணர்ச்சியற்றதாக இருந்தது.

மதுரையில் நாயக்கப்பேரரசினைத் தோற்றுவித்த விசுவநாத நாயக்கர், கி.பி.1553-ல் பாண்டி மன்னரை அடிபணியச் செய்து, அவரை திருநெல்வேலி மற்றும் அதன் சுற்றுவட்டாரங்களடங்கிய பகுதிக்கு குறுநில மன்னராக நியமித்தார். பாண்டியர்கள் அடிபணிந்தமை, நாயக்க மன்னர் நாஞ்சில் நாட்டை வலியத்தாக்குவதற்கு, பீடிகையாக அமைந்தது. கி.பி.1609-ல், நாயக்கர்களால் கன்னியாகுமரி கைப்பற்றப் பட்டது. அதனைத் தொடர்ந்து, கன்னியாகுமரியைச் சேர்ந்த பரவர்கள், மதுரை நாயக்கர்களுக்கு கப்பங்கட்டுவதற்குட்பட்டார்களென அருட் தந்தை ஏ.லியோர்சீசு தனது 20.11.1609 நாளைய கடிதத்தில் எழுதியுள்ளார்[98].

திருமலை நாயக்கர்

திருமலை நாயக்கரின் தலைமையில், மதுரை நாயக்கர் பேரரசு, ஒரு புதிய தூண்டுதிறம் பெற்றது. தனது ஆட்சி எல்லைப் பரப்பினை, ஒருங்கிணைக்க, பல அண்டை நாடுகளை வெற்றிகொள்வதில், அவர் தனது முழுகவனத்தையும் செலுத்தினார். அவரது சம காலத்திய மன்னரான ரவி வர்மா வேநாட்டை ஆண்டு வந்தார்.(கி.பி.1611-63), அவரது ஆட்சி காலத்தில்தான், பத்மநாபபுரம், வேநாட்டுமன்னர்களின் தலைநகரமாகியது[99].

திருமலை நாயக்கரின் நாஞ்சில் நாட்டுப் படையெடுப்பு

கி.பி. 1634-ல், திருமலை நாயக்கர், நாஞ்சில் நாட்டின் மீது படையெடுத்தார். இப்படையெடுப்பிற்கான காரணத்தை சரிவர அறியமுடியவில்லை. திருமலை நாயக்கர், வலிய மேற்கொண்ட தாக்குதல்தானிது என கே.கே.பிள்ளை கூறுகிறார். வேநாட்டு மன்னர்,

திருமலை நாயக்கருக்குக் கப்பங்கட்ட மறுத்ததுதான் படையெடுப் பிற்கான காரணமெனவும், அவர்கள் விசயநகரப் பேரரசின் வழிவந்தவர்களெனவும், அவர்கள் கப்பத்தொகையினை வசூல் செய்ய அதிகாரம் பெற்றிருந்தனரெனவும் கூறப்படுகிறது.

அந்த காலத்திற்கான வரலாற்றுப் படைப்புகள் தவிர, அழகிய பாண்டியபுரம் "பெரிய வீட்டு முதலியாரின்" வாரிசான முதலியாரின் "கையெழுத்துப்பிரதி ஆவணங்களில்" திருமலை நாயக்கரின் படையெடுப்பு, அதனால் மக்கள்பட்ட துன்பம் ஆகியவை குறித்து, விரிவாக விளக்கப்பட்டுள்ளது[100].

திருமலை நாயக்கரின் படையெடுப்பு குறித்து, "ராமப்பையன் அம்மானை" என்ற நாட்டுப்பாடல், வேறுபடுத்திக் கூறுகிறது. "மலையாள நாட்டை," நாயக்கர் வென்றதுபற்றி மட்டிலும் அது கூறவில்லை, மதுரைமன்னர் திருமலை நாயக்கர், "மலையாள நாட்டை வெற்றி கொண்டதோடு மட்டுமன்றி, நாஞ்சில் நாட்டு மன்னரை, அவரது நிலமானிய முறை உரிமை பெறுபவராகவும் பணியிறக்கம் செய்து, மதுரைக் கோட்டைகளைக் காக்கும் பணியினையும் அவருக்கு அளித்தார் எனவும், அப்பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது. திருமலை நாயக்கர், சேதுபதியுடன், போர்புரியும் போது, நாஞ்சில் நாட்டு மன்னர், திருமலை நாயக்கருக்கு ஒத்துழைப்பு நல்கியதாகவும் அப்பாடல் கூறுகிறது. "வெற்றியைப் பற்றி மிகைப்படுத்திக் கூறுவது, தகுதிக்கு மேற்பட்ட மதிப்பீடு" என்று கருதவேண்டியுள்ளது; ஆனால், மன்னர் நாயக்கரின் நிலமானியமுறை உரிமை பெற்றவராக, சேதுபதிக்கு எதிராகப் போர் புரிந்தாரென்பது உண்மைக்குப் புறம்பான செய்தியாகும். இந்த நாட்டுப்பாடலில் "நாஞ்சில் நாட்டு மன்னர் எனக்குறிப் பிட்டிருப்பது வேநாட்டு மன்னரைத் தவிர, வேறுயாரையுமல்ல" என கே.கே.பிள்ளை கூறுகிறார்[101].

"இரவிக்குட்டி பிள்ளை பாட்டு" என்ற தென் திருவாங்கூர் நாட்டுப்பாடல், புகழ் சான்ற போர் வீரனைக் குறித்த பாடலாகும். இரவிக்குட்டி பிள்ளை என்ற படைப்பெருந்தலைவர், கனனியாகுளம் என்ற இடத்தில், மதுரைப் படைகளோடு, வல்லமையுடன் போர் புரிந்தார். ஆனால், திருமலை நாயக்கருக்கும், வேநாட்டு மன்னருக்கும், நிகழ்ந்த அப்போரில், அவர் வீரமரணமெய்தினார். இப்படையெடுப் பினைத் தொடர்ந்து, திருமலை நாயக்கர், நாஞ்சில் நாட்டின் மீது, அடுத்தடுத்து தாக்குதல் தொடுத்தார். அவை பற்றி விவரங்கள், கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. நாயக்கர்கள் மலையாள மாண்டு 852-லிருந்து 871 வரை அடுத்தடுத்து மேற்கொண்ட படையெடுப்புகளில், நாஞ்சில் நாடு சூறையாடப்பட்டு, மக்கள் பெருந்தொல்லைகளுக்குள்ளானார்களென 873-ம் மலையாளம் ஆண்டு வடசேரி கல்வெட்டு கூறுகிறது. இத்தாக்குதல்களில், மக்களின் சொத்துக்களுக்கு இழப்பு, வேளாண்மைக்கு ஊறு விளைவித்தல் போன்றவை பெருமளவில் இருந்தன. துயறுற்ற மக்களின் உயிருக்கும், உடமைக்கும் பாதுகாப்பற்ற நிலை ஏற்பட்டது.[102]

கி.பி.1684 முதல் 1718 வரை, வேநாட்டை ஆண்ட ரவி வர்மன், மக்களின் துயர் தணிக்கும் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார் என வடசேரி கல்வெட்டு கூறுகிறது. கோயில் நிலங்களை வேளாண்மை செய்த வேளாண் குடிமக்கள் போன்ற ஏழை எளியோர் நலனில் மன்னர் மிகவும் அக்கரை கொண்டிருந்தாரென 898 மலையாளம் ஆண்டைய பனையோலை ஆவணத்தில் பதியப் பட்டுள்ளது.

அவரையடுத்து, கி.பி.1780-ல், உன்னி கேரள வர்மன் அரியணையேறினார். அவருக்கு முந்தையவரைப் போலவே அவர் மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். மக்களைத் துன்புறுத்தி வஞ்சிக்கும் கொள்ளைக்காரர்களைக் கையுங்களவுமாகப் பிடித்து அவர்களை நாட்டினின்றும் வெளியேற்றி அவர்கள் மீது கடும் நடவடிக்கையெடுத்தார். இதனால் மக்கள் தம் நாட்டிற்குத் திரும்பி, வேளாண் பணியில் தீவிரமாக ஈடுபடும் நல்ல சூழ்நிலை உருவானது.

இராணி மங்கம்மாளின் படையெடுப்பு

மதுரையை ஆண்ட நாயக்க அரசி இராணி மங்கம்மாள், கி.பி.1697-ல் நாஞ்சில் நாட்டின் மீது படையெடுத்தார். இப்படை யெடுப்பின் காரணம், படைசென்ற திசை ஆகியவை, நெல்சனின் "மதுரை நடைமுறை நூல்" மற்றும் டெய்லரின், "கையெழுத்துப்பிரதித் தொகுப்பு" ஆகியவற்றில் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

நாஞ்சில்நாட்டின் அன்றைய மன்னரான ரவி வர்மன், கீழ்ப்படியாத பண்ணை நிலக்குடியுரிமையாளர்களான "எட்டு வீட்டுப் பிள்ளைமார் கள்" என்போரை அடிபணியவைக்கும் பொருட்டு, "படகர்"களின் உதவியை நாடினார்[103]. அவ்வாறே படகர்களும், உதவியளித்ததால், மன்னரின் பணி வெற்றிகரமாக முடிவுற்றது. ஆனால், ஒரு புதிய திருப்பத்தினால், ரவிவர்மா வரம்புமீறி, படகர்களைத் தாக்கி, அவர்களைக் கொன்றுவிட்டார். அத்துமீறிய கோரச் செயலினால் "படகர்"களை ஒழித்த ரவி வர்மனுக்கு, உரிய தண்டனை வழங்குவதற்காக, இராணி மங்கம்மாள் தளவாய் நரசப்பையா தலைமையில் படையனுப்பி ரவி வர்மாவிற்கு எதிராகப் போர் தொடுத்தார். இறுதியில் மதுரைப்படை வெற்றி பெற்று, அதனைத் தொடர்ந்து போர் நிறுத்த உடன்பாடு, மேற்கொள்ளப்பட்டது. ஆனால், டி.கே.வேலுப்பிள்ளையின் கருத்து, முற்றிலும் மாறுபட்டதாக உள்ளது.

நரசப்பையாவின் படையெடுப்பையே டி.கே. வேலுப்பிள்ளை மறுக்கிறார். அவரது முதன்மையான வாதம் வருமாறு: நரசப்பையா, தோல்வியடைந்த மன்னரிடமிருந்து, பீரங்கிகள், இயந்திரத் துப்பாக்கி கள் போன்ற படைக்கலங்கள் உள்ளிட்ட பல நினைவுச் சின்னங் களைப் பெற்றுச்சென்று, அவற்றை மதுரை மற்றும் திருச்சிராப் பள்ளியிலிருந்த கோட்டைகளில் பாதுகாப்பாக வைத்திருந்ததாகவும், டெய்லரின் குறிப்பு கூறுகிறது.[104] ஆனால், தீவிர சோதனைக்குப் பின்னரும், அந்த படைக்கலன்களைக் காணமுடியவில்லையென,

நெல்சன் தனது மதுரை மாவட்ட நடைமுறை நூலில் கூறியிருக்கிறார். நெல்சனின் குறிப்பினை ஆதாரமாக வைத்து, டி.கே.வேலுப்பிள்ளை, நரசப்பையாவின் வெற்றியை ஒப்புக் கொள்ள மறுக்கிறார். ஆனால், நெல்சன், நரசப்பையாவின் படையெடுப்பிற்கு 150 ஆண்டுகள் கழிந்த பிறகே, அதாவது கி.பி.1868-ல், மேற்குறிப்பிட்ட கோட்டைகளைப் பார்வையிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நீண்ட நெடுங்காலத்தில், அக்கோட்டைகளில் என்ன நேர்ந்ததென்பது குறித்து, அதிகாரபூர்வமான அல்லது விவரமான ஆவணங்களேதுமில்லை, என்ற கூற்றில், டி.கே.வேலுப்பிள்ளையின் கருத்தினை கே.கே. பிள்ளை ஏற்க மறுக்கிறார். மேலும். வடசேரி (நாகர்கோயில்)யிலிருக்கும், ஒரு கிணற்றிற்கு அருகிலுள்ள ஒரு கல்லில் செதுக்கப்பட்டுள்ள பொறிப்பில், ராணி மங்கம்மாளின் பெயர் இடம்பெற்றுள்ளது. அக்கிணறும், "மங்கம்மாள் தர்மக் கிணறு" என உள்ளூர் மக்களால் அழைக்கப்படுகிறது. எனவே டி.கே. வேலுப்பிள்ளை நரசப்பையாவின் படையெடுப்பை மறுத்துக் கூறியுள்ள கருத்து வாதத்திற்காகக் கூறப்பட்டிருப்பதாகவும் அது மனநிறைவை அளிக்கவில்லையெனவும், கே.கே.பிள்ளை கூறுகிறார்[105].

தற்கால வரலாறு

பாலமார்த்தாண்ட வர்மா (கி.பி. 1729 முல் 1758 வரை)

கன்னியாகுமரி மாவட்டத்தின் தற்கால வரலாறு, கி.பி.1729-ல் அரியணையிலமர்ந்த, பால மார்த்தாண்ட வர்மனின் ஆட்சிக்காலம் முதல் துவங்குகிறது. அவரது ஆட்சிக் காலத்தில், ஆட்சி எதிர்ப்பு மற்றும் நாயக்கப்படைகளின் ஊடுறுவல் ஆகியவற்றால் அரசியல் நிலைமை நிலையற்றதாக இருந்தது. அரசின் இந்நிலையற்ற தன்மை, "பண்ணை நிலக்குடியுரிமையாளர்களான யோகக்காரர்கள் மற்றும் எட்டுவீட்டு பிள்ளைமார்கள்" ஆகியோருக்கு சாதகமாக அமைந்து, அதனைத் தொடர்ந்து அவர்கள் தனி ஆட்சி உரிமை பிரகடனம் செய்ய வழி வகுத்தது. ஆனால், மார்த்தாண்ட வர்மா ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியார், மற்றும் மதுரை நாயக்க மன்னர்கள் ஆகியோரின் உதவியால், உறுதியான நடவடிக்கை மேற்கொண்டு கலகக்காரர்களை ஒடுக்கி, அடிபணிய வைத்தார். திருவாங்கூரின் அரியணையைப் பிடிக்க, சூழ்ச்சி செய்த முந்தைய மன்னரின் இரு மகன்களான பத்மநாப தம்பி, இராமன் தம்பி ஆகியோர் சார்பில், பண்ணை நிலக்குடியுரிமை யாளர்கள் இடையிடையே தங்களது எதிர்ப்பைத் தெரிவித்தார்கள். இறுதியாக, அவர்கள் நாகர்கோயிலில் பிடிபட்டு, தூக்கிலிடப்பட்டார்கள்.

தனது நிலையை வலுப்படுத்திக்கொண்டு, மார்த்தாண்டவர்மன், வெற்றிப்பாதையைத் துவக்கினார். மிகவும் திட்டமிட்ட முறையில், அண்டை சிற்றரசுகளான அட்டிங்கல் மற்றும் கொல்லம் ஆகியவற்றின் மீது வெற்றி கொண்டு, தனது பேரரசுடன் சேர்த்துக் கொண்டார். காயன்குளம் மன்னர் கொச்சி மன்னருடன் ஓர் உடன்பாடு மேற்கொண்டு, கொல்லம் மன்னரை மீது முறியடித்து வெற்றியும்

கண்டார். ஆனால், இவ்வெற்றி சிறிது காலத்திற்கே நீடித்தது. கூட்டாக வந்த மேற்குறிப்பிட்ட படைகளை ஆங்கிலேயரின் உதவியுடன் மார்த்தாண்டவர்மன் தோற்கடித்து, கொல்லம் எல்லையை மறுபடியும் தன் ஆட்சிக்குட்படுத்தினார்.

மார்த்தாண்ட வர்மன் வலியத்தாக்குதல் மேற்கொண்டதால் ஆத்திரமடைந்த டச்சுக்காரர்கள் இலங்கையிலிருந்த தங்களது ஆளுநரான வான் இமூஃப் என்பவரை, மார்த்தாண்ட வர்மனைத் தாக்க ஏவினார்கள். அதனைத் தொடர்ந்து போர் மூண்டது. இறுதியில் டச்சுப்படை தோல்வியைத் தழுவியது. எனினும், டச்சுப்படை, தளராமல், தெற்கிலிருந்து, திருவாங்கூரைத் தாக்கி, கொளச்சலிலிருந்து, கோட்டாறு வரையிலுள்ள பகுதியை தன் வசமாக்கிக் கொண்டது. இவ்வெற்றி, மார்த்தாண்ட வர்மனின் தெற்குப் பகுதியின் தலைமையிடமான கல்குளத்திற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியது.

ஆனால், மார்த்தாண்ட வர்மன் மறுமுறை தனது பேராற்றலை வெளிப்படுத்தி, டச்சுக்காரர்களை 1741ஆம் ஆண்டு, ஆகஸ்டு,10-ம் நாள், கொளச்சலில் நடந்த போரில் வெற்றி கொண்டார். இது டச்சுக் காரர்களுக்கு சாவு மணி அடித்தது போலாகியது. அவர்களை அவர்களது முந்தைய நிலையான வியாபாரிகளாகவே அமரச் செய்தது[105(அ)]. தொடர்ந்து மார்த்தாண்டவர்மன் காயன்குளம் மற்றும் மலபார் மாநிலம் ஆகியவற்றையும் வென்றார். அவர் அரசியல் மேதை மட்டுமல்லாமல், சிறந்த ஆட்சியாளராகவும் திகழ்ந்தார். தனது நிலையினை வலுப்படுத்தி, நிருவாக இயந்திரத்தையும், நன்முறையில் திருத்தியமைத்தார். அவரது ஆட்சி, உண்மையிலேயே ஒரு சகாப்தமெனில் மிகையில்லை.

சந்தா சாகிப் படையெடுப்பு

இத்தருணத்தில்தான், ஆற்காடு நவாப்பின் தூண்டுதலின் பேரில், (கி.பி.1740) சந்தா சாகிப், நாஞ்சில் நாட்டின் மீது படையெடுத்தது கண்டு, மார்த்தாண்ட வர்மன் பேரதிர்ச்சியடைந்தார். அவர், காயன்குளம் மன்னர் மற்றும் டச்சுப்படை இரண்டின் தாக்குதலையும் சமாளிக்க வேண்டியிருந்ததால் அமைதியிழந்தார்[106]. எனவே, மார்த்தாண்ட வர்மனின் ஆணையின் பேரில், கூர்மதி வாய்ந்த அவரது அமைச்சர் ராமையன் தளவாய், பெருந்தொகை செலவு செய்து, சந்தாசாகிப்புடன் சமாதான உடன்படிக்கை மேற்கொண்டார். ஆனால், இவ்வுடன்படிக்கை செயலாற்றப்படுவதற்கு முன்னரே, நாஞ்சில்நாடு எதிரியின் படையிடம் அனைத்தையுமிழந்தது. "தொன்மை மாட்சியுடைய ஆரல்வாய்மொழிக் கணவாய் மூலம், பேராசை பிடித்த எதிரிப்படைகள் விரைந்து வந்தன. கோட்டாறு வழியாக வந்து, அவை கடந்து வந்த இடங்களையெல்லாம் சூறையாடி, இறுதியாக சுசீந்திரம் அருகிலுள்ள இட்டன் காடை அடைந்தன. வேநாட்டு மன்னரின் தலைமையிடமான கல்குளத்தில், மன்னரின் படைகள் தங்கியிருந்தன. அவை, எதிரிப்படைகளை தாக்க முற்படவில்லை. ஏனெனில், அவர்களது பணி வடக்கே மிகவும் அவசரமாகத் தேவைப்பட்டது."

"வெற்றி மேல் வெற்றி குவித்த எதிரிகளின் படைகள் சுசீந்திரத்தை நோக்கிப் புறப்பட்டன. சுசீந்திரம் கோயிலில் பேரழிவு ஏற்படுத்திவிட்டு, படைகள் கோட்டாறு, வடசேரி, திருப்பதீசுவரம் மற்றும் விமனசேரி ஆகிய இடங்களில் தங்களது கொள்ளையினைத் தொடர்ந்து நடத்தின.[107] சித்திரை மாதத் துவக்கத்தில், மன்னர் மார்த்தாண்ட வர்மன் தனது பிரதிநிதிகளை யனுப்பி, சந்தாசாகிப்புடன் நல்லிணக்க நிலையினை ஏற்படுத்திக்கொண்டார். ஏற்கனவே குறிப்பிட்டது போன்று, இதற்கு ஒரு பெரிய தொகையினை அவர் அளிக்க வேண்டியதாயிற்று, அதன் பின்னரே படைகள் திரும்பப்பெறப்பட்டன[108].

பத்மநாப சுவாமிக்கு திருவாங்கூர் அர்ப்பணஞ் செய்யப்பட்டமை

திருவாங்கூரிலுள்ள கோயில்கள் வரலாற்றில் மார்த்தாண்ட வர்மனின் ஆட்சி தனிச்சிறப்பிற்குரியதாகும். அவர் தனது ஆட்சிப் பகுதியினை, அருள்மிகு பத்மநாபசுவாமிக்கு அர்ப்பணஞ் செய்தார். இப்புனிதப்பணி, 925ஆம் மலையாளமாண்டு, தை மாதம் 5-ம் நாள் (கி.பி.1750 சனவரி) மேற்கொள்ளப்பட்டது. அன்றையிலிருந்து, அவரும் அவரது வழியினரும் நாட்டின் ஆட்சிப் பகுதியை அருள்மிகு பத்மநாபசுவாமியின் பாதுகாப்பாளர்களாக, சுவாமியின் சார்பில் ஆண்டு வந்தார்கள். இது மக்களின் மத்தியில் திருவாங்கூரின் மதிப்பினை உயர்த்தினார். இந்து தர்மத்தின் காவலர் என்ற முறையில் அப்பேரரசு, ஒரு பெரியபொறுப்பினையும் ஏற்கச் செய்தார்[109].

மார்த்தாண்ட வர்மன் ஆட்சியில் நிருவாக அமைப்பு

வளம்பெறக்கூடிய நிருவாகத்திற்கு, கிராமம் ஒரு அலகாக எடுத்துக்கொள்ளப்பட்டு, "ப்ரவ்ருத்திகார்" என்ற அலுவலரின் பொறுப்பில் விடப்பட்டது. அவரது முதன்மையான கடமைகள்யா தெனில், வருவாய் வசூலிப்பதும், கிராம நீர்ப்பாசனத் திட்டத்தினைப் பராமரிப்பதுமேயாகும். அவர் கிராமத்தில் சிறிய குற்றவியல் வழக்குகளை விசாரணை செய்யும் குற்றவியல் நடுவராகவும் பணியாற்றிவந்தார்.

கிராமங்களின் ஒரு தொகுதி, ஒரு நிர்வாகக் கோட்டமாக அமைக்கப்பட்டது. அது "மண்டபத்துவதுக்கள்" என அழைக்கப்பட்டது. அதன் நிருவாகத்தைக் "காரியக்காரர்" என்பவர் தலைமையேற்று நடத்திவந்தார். அவருடைய பணிகள், தற்போது வட்டாட்சியராகப் பணியாற்றுபவரின் பணிகளுக்குக்கொப்பானவை.

நிதி நிருவாகத்தைப் பொறுத்தவரையில், நிதி ஒதுக்கீடுமுறை பின்பற்றப்பட்டது. "பதிவுக்கணக்கு," அதாவது பற்பல துறைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யும் முறை கையாளப்பட்டது. நில அளவை மற்றும் நிலவரித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆங்கிலேயரின் இராணுவப்படை போன்றே, மன்னரின் இராணுவப்படையும் திருத்தியமைக்கப்பட்டது. பத்மநாபபுரம், கன்னியாகுமரி போன்ற இடங்களில் கட்டியுள்ள கோட்டைகளும் ஆரல்வாய்மொழி கோட்டை

திரும்ப கட்டப்பட்டிருப்பதும் இந்த மன்னரால் செய்யப்பட்டவையாகும். பத்மநாபபுரம் கோட்டையில் படைவீரர்கள் காவலுக்கு நியமிக்கப்பட்டார்கள், படைக் கருவிகள் அக்கோட்டையிலேயே சேமித்து வைக்கப்பட்டன. ஆக, அக்கோட்டை மைய ஒதுக்கீட்டிடமாக அமைந்தது. அங்கிருந்துதான் படை வீரர்கள் முறையாகக் கடமையாற்ற வெளியனுப்பப்பட்டனர். அவ்வாறே படைக் கருவிகளும் அவ்வப்போது வெளியனுப்பப்பட்டன.

அவரது ஆட்சிகாலத்தில் வேளாண்மைக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது. நாஞ்சில் நாட்டில் மார்த்தாண்ட மன்னன் பல நீர்ப்பாசனத் திட்டங்களை தொடங்கினார். அவற்றில் முதன்மையானவை பொன் மணி மற்றும் புத்தேர் அணைகளாகும். இந்த அணைகள் நீர்ப்பாசனத் திற்கு மட்டும் அல்லாது, கல்குளம், பத்மநாபபுரம் மற்றும் நாஞ்சில் நாட்டிலுள்ள எனைய அண்டை கிராமங்களுக்கும் குடிநீர் வழங்கி பயனளிக்கின்றன. வேளாண்மை செய்யப்படாத பல ஏக்கர் நிலங்கள், வேளாண்மைக்குக் கொண்டுவரப்பட்டன. ஒருபோக சாகுபடி செய்யப்பட்டுவந்த நிலங்களில் இரண்டுபோகம் சாகுபடி செய்யப்பட்டது. இதனால் நாஞ்சில் நாட்டில் வேளாண் உற்பத்தி பெருகி, நாட்டில் வளம் பெருகியது.

மார்த்தாண்டவர்மனின் வழித்தோன்றல்கள்

மார்த்தாண்டவர்மனுக்குப் பிறகு கீழ்க்குறிப்பிட்ட மன்னர்கள் திருவாங்கூர் மாநிலத்தை ஆண்டனர். அவர்கள் ஆட்சிகாலத்தில் நாட்டில் நல்ல முன்னேற்றம் காணப்பட்டது. அவர்களுடைய ஆட்சித்திறம் குறித்து கீழ்க்கண்ட பத்திகளில் விவரிக்கப்பட்டுள்ளது:

வரிசை எண்	*மன்னரின்பெயர்*	*ஆட்சிபுரிந்த ஆண்டு (கி.பி)*
1.	இராமவர்மா கார்த்திகைத் திருநாள்	1758-1798
2.	பால இராமவர்மா	1798-1810
3.	இராணிகௌரி லஷ்மிபாய்	1811-1815
4.	இராணிகௌரி பார்வதிபாய்	1815-1829
5.	இராமவர்மா சுவாதித்திருநாள்	1829-1847
6.	மார்த்தாண்ட வர்மா உத்தரன்திருநாள்	1847-1860
7.	இராமவர்மா ஆயில்யம் திருநாள்	1860-1880
8.	இராமவர்மா விசாகம் திருநாள்	1880-1885
9.	திரு மூலம் திருநாள்	1885-1924
10.	ரீஜண்ட சேது லஷ்மிபாய்	1924-1932
11.	இராமவர்மா திரு சித்திரைத்திருநாள்	1932 முதல் (முடியாட்சிமுறை கைவிடப்பட்டது வரை, அதாவது 1-9-1949 வரை).

இந்த மன்னர்களின் அயல்நாட்டுக் கொள்கையின் சிறப்பு என்னவெனில் அவர்கள் ஆங்கிலேயருடன் சுமூகமான உறவு கொண்டார்கள்.

இராம வர்மா கார்த்திகைத் திருநாள்

மார்த்தாண்டவர்மனின் உடன்பிறந்தவரது மகனான இராமவர்மன், மார்த்தாண்டவர்மனுக்குப் பிறகு ஆட்சி புரிந்தார். அவர் பொது மக்களின் நன்மதிப்பைப் பெற்று, "தர்மராஜா" என அவர்களால் அழைக்கப்பட்டார். அவரது ஆட்சி காலத்திய முதன்மையான வரலாற்று நிகழ்ச்சி என்னவெனில், திப்பு சுல்தானின் படையெடுப்பும், அவரது தோல்வியுமாகும். ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியுடன் ஏற்பட்ட உடன்பாட்டினால், திருவாங்கூர் படை, திப்பு சுல்தானின் படையை வெல்ல முடிந்தது. ராமவர்மன் அவரது திறமைமிகு அமைச்சர்களான அய்யப்பன், மார்த்தாண்டவர்மன் மற்றும் இராசா கேசவதாஸ், ஆகியோரின் உதவியால் இவ்வெற்றியைப் பெற்றார். ஆற்றல்மிகு இவ்வமைச்சர்கள் மூவரும் குறிப்பிடத்தக்கவராவர்.

விளவங்கோடு வட்டத்தைச் சார்ந்த குன்றத்தூர் கிராமத்தில் பிறந்த இராசா கேசவதாஸ், திருவாங்கூர் திவானாக, கி.பி.1788 முதல் 1798 வரை பணியாற்றினார். அரண்மனையில், ஒரு எழுத்தராகப் பணியிற் சேர்ந்த அவர், தனது அயராத உழைப்பினாலும் திறமையினாலும், திவான் பதவிக்கு உயர்ந்தார். அவரது பணிக்காலத்தில்தான், "தளவாய்" என்ற பதவிப்பெயர், "திவான்" என மாற்றியமைக்கப்பட்டது. திருவாங்கூரின் முதல் திவானாகப் பதவியேற்ற அவர், பின்னர் "இராஜா" என்ற பட்டப் பெயர் சூடப்பெற்றார். அவர் ஒரு திறமைமிக்க படைப்பெருந்தலைவராக விளங்கினார். மன்னர் பெற்ற பல வெற்றிகள், அடைந்த சாதனைகள் யாவும், திவானுடைய திறமையினால்தானெனில் மிகையில்லை. திருவாங்கூர் மாநிலத்தின மீது எவரேனும் வலியத்தாக்குதல் நடத்தினால் கிழக்கிந்தியக் கம்பெனி தனது முழு உதவியையுமளிப்பதாக, திருவாங்கூர் மன்னருடன் கி.மு. 1795ஆம் ஆண்டில் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டது. இவ்வொப்பந்தம், வெற்றிகரமாக நிறைவேற்றப்பெற, திவான் சிறந்த பங்காற்றினார். வேளாண்மை, நீர்ப்பாசனம், போக்குவரத்து மற்றும் தொழில் முன்னேற்றம் ஆகிய துறைகளில், மாநிலம் நல்ல மேம்பாடு காண அவர் முழுப்பொறுப்பேற்று செவ்வனே பணியாற்றினார். விளவங்கோடு வட்டத்திலுள்ள புதுக்கடை மற்றும் அகத்தீசுவரம் வட்டத்திலுள்ள கோட்டாறு ஆகிய இடங்களை முதன்மையான வணிக மையங்களாக உயர்த்தினார்.

பால இராம வர்மா (கி.பி. 1798 முதல் 1810 வரை)

இராம வர்மாவிற்குப்பிறகு, பால இராம வர்மா தனது 13-வது வயதில் ஆட்சிப்பொறுப்பை ஏற்றார். அவர் ஒரு திறமையற்ற ஆட்சியாளராக இருந்தாரென்பது அவரது வயதிலிருந்தே தெரியவரும். இதனைச் சாதகமாக்கிக்கொண்டு, உத்தியோரி ஜயந்தன் சங்கரன் என்ற உயர்குடியைச் சார்ந்த நம்பூத்ரி, பல உட்கிளர்ச்சிகளிலீடுபட்டு, மன்னரின்

விருப்பத்திற்கு உகந்தவராகி, சர்வாதிகார்யகாரராக நியமிக்கப்பெற்றார். அவருக்கு தக்கலையைச் சேர்ந்த சங்கர நாராயண செட்டி மற்றும் மாத்துதாரகன் ஆகியோர் உதவி புரிந்தார்கள். அறியாமை, ஒழுக்கக்கேடு, மற்றும் கொடுங்கொள்ளை ஆகியவற்றால் மாநிலம் தத்தளித்தது.[110] மாநிலத்தின் நிதி நிலையில், பொருளக முறிவு ஏற்பட்டது. நிதிநிலையை சமநிலைக்குக் கொணர, அதிக அளவு வரிகள் விதிக்கப்பட்டு, கட்டாயத்துடன் வசூலிக்கப்பட்டன. மக்கள் வரிசெலுத்த மறுத்தாலோ, அல்லது வரி செலுத்த இயலாத நிலையிருந்தாலோ, அவர்கள் பொது இடத்தில் கசையடி கொடுக்கப்பட்டார்கள் அல்லது சிறைப்படுத்தப்பட்டார்கள். இக் கொடுங்கோலாட்சியை எதிர்த்து, மக்கள் கிளர்ச்சி செய்தனர். மாநிலத்திற்கெதிரான இக்கிளர்ச்சி, வேலுத்தம்பி என்பவரது தலைமையில் புரட்சியாக உருவெடுத்தது.

வேலுத்தம்பியின் எழுச்சி

நாஞ்சில் நாட்டைச் சேர்ந்த, கல்குளம் வட்டம் தாழைக் குளம் கிராமத்தில், கி.பி.1765-ம் ஆண்டு, பாரம்பரியம் மிக்க குடும்பத்தில் வேலுத்தம்பி பிறந்தார். அவர், மிக இளம் வயதிலேயே தனது சொந்த கிராமத்தின் காரியக்காரரானார். பால இராமவர்மனின் கொடுங்கோல் அமைச்சகம், ருபாய் மூவாயிரத்தை, வரியாக மக்களிடம் வசூலித்து செலுத்துமாறு வேலுத்தம்பிக்கு ஆணை பிறப்பித்தது. ஆனால், வேலுத்தம்பி கடுஞ்சினங் கொண்டார். வரிகள் நியாயமற்றவை என அவர் கருதியிருக்கக்கூடும்; எனவே, வரி செலுத்துவதற்குக் காலங் கடத்தினார். வரி செலுத்துவதற்கு அவர் கோரிய மூன்று நாட்கள் காலவரை அளிக்கப்பட்டது. இதற்கிடையே அவர் மக்களை எழுச்சியுறச் செய்தார். மேலும், இந்தக்கொடுங் கோலாட்சியை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தார். அவர் சிறந்த நாவண்மைபடைத்தவராதலால், மக்களை எளிதில் ஒன்று திரட்டினார். மூன்றாவது நாளன்று, வேலுத்தம்பி, ஆயுதமேந்திய மக்கள் கூட்டத்துடன் திருவனந்தபுரம் கோட்டையை முற்றுகையிட்டார். உரிமைப்படியாக மன்னர், பாலராம வர்மா அதிர்ச்சியுற்று, வேலுத்தம்பியுடன் அமைதி உடன்பாடு மேற்கொள்ள முன்வந்தார். ஆனால், வேலுத்தம்பியோ, ஜயந்தன் சங்கரன் நம்பூத்ரி தலைமையிலான அமைச்சரவையை உடனடியாக நீக்கி, அவர்களுக்கு உரிய தண்டனை வழங்க வேண்டுமெனவும் நியாயமற்ற வகையிலான அனைத்து வரிகளையும் ரத்து செய்ய வேண்டுமெனவும், நிபந்தனை விதித்தார். மன்னர் வேலுத்தம்பியின் நிபந்தனைகளை ஏற்று, அமைச்சர்களை நீக்கம் செய்து,அவர்களுக்கு உரிய தண்டனையையும் வழங்கினார். இதனைத் தொடர்ந்து, வேலுதம்பியும் அவரைச் சார்ந்தோறும் முக்கியப் பணிகளில் அமர்த்தப்பட்டார்கள். செண்பக ராமன் பிள்ளை வாளிய சர்வாதிகார்யகாரராகவும் (தளவாய்), வேலுத்தம்பி, மூலகுமட்டி சில்லா சர்வாதிகார்யகாரராகவும் (வாணிகத் தொடர்பு அமைச்சர்) நியமிக்கப்பட்டார்கள்,[111] கி.பி.1801ஆம் ஆண்டு, செண்பக ராமன்பிள்ளை காலமானார். அதனைத் தொடர்ந்து, திருவாங்கூர் அரசவையில் ஆங்கிலேயரின் ஆளுநராகப் பணியாற்றிய மெக்காலே என்பவரது

ஒப்புதலின்பேரில், மன்னர் வேலுத்தம்பிக்கு, செண்பகராமன் பிள்ளை கவனித்து வந்த அமைச்சுப் பணிகளையும் மேற்கொள்ள ஆணை பிறப்பித்தார்.

வேலுத்தம்பி, திறமையும் ஆற்றலுமிக்க நிருவாகியாகவும், இலக்கியல் நிறைந்த நாட்டுப்பற்று மிக்கவராகவும், எல்லாவற்றிற்கும் மேலாக, ஏழை, எளிய மக்களின் காவலராகவும் திகழ்ந்தாரென்பது உண்மையே எனினும், நிருவாகத்தை சீர்திருத்தம் செய்ய அவர் மேற்கொண்ட நடவடிக்கை அவரது பழியஞ்சாமையை வெளிப்படுத்தியது. இதன் விளைவாக, அவரோடு சேர்ந்தவர்களின் எதிர்ப்பிற்கு ஆளானார். அவர்கள், வேலுத்தம்பியைசிறைபிடித்து, அமைச்சரவையிலினின்று நீக்க வேண்டுமென வலியுறுத்தினார்கள், வேலுத்தம்பி தனது திறமை மிக்க இராசதந்திரத்தைப் பயன்படுத்தி அவருக்கு எதிர்ப்பு தெரிவித்தோரை சிறையிலடைத்தார். வேலுத்தம்பி மீதான எதிர்ப்பு, இராணுவத்திலும் எதிரொலித்தது. அதன் விளைவாக, படைவீரர் கலகம் மூண்டது. கிளர்ச்சிப்படை வீரர்கள் தலைநகருக்குச் சென்று, வேலுத் தம்பியை நீக்கம் செய்யக்கோரி ஆர்ப்பாட்டம் செய்தார்கள், ஆனால், ஆளுனர் மெக்காலே, வேலுத்தம்பிக்குத் தனது முழு ஆதரவையும் தெரிவித்து, நிலைமையைக் கட்டுப்பாட்டிற்குள் கொணர்ந்ததால் படை வீரர்களின் கிளர்ச்சி அவர்களுக்கு எவ்வித பயனையும் அளிக்கவில்லை.

மாநில நிருவாகத்தின் உள்விவகாரங்களில் ஆங்கிலேயரின் தலையீடு இருந்து வந்ததால், வேநாட்டு மன்னர் பால இராம வர்மாவிற்கும், ஆங்கிலேயருக்குமிடையே, ஒப்பந்தமேற்பட்டது. ஒப்பந்தத்தின் அடிப்படையில் திருவாங்கூர் மாநிலம் ஆங்கிலேயரின் காப்பாட்சியில் கொணரப்பட்டதோடல்லாமல், ஆங்கிலேயரின் நட்பு நாடாகவும் மாறியது. அதன் விளைவாக. மன்னர், ஆங்கிலேயருக்கு எட்டு லட்சம் ருபாய் ஆண்டுக்கப்பமாக செலுத்த நேரிட்டது.[112]

ஆளுநர் மெகாலே, மாநில நிருவாகத்தில், தேவையின்றி தலையிட்டதால், வேலுத்தம்பிக்கும், மெகாலேவுக்கும் இடையேயிருந்த உறவு மங்கத் தொடங்கி, கருத்து வேறுபாடு ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து, திருவாங்கூர் மன்னர், சென்னை மாகாண ஆளுநருக்கு, மெகாலேயைத் திரும்பப்பெறக்கோரி, முறையீடு செய்தார். அதனால், சினங்கொண்ட மெகாலே, ஆங்கிலேயே அரசிற்கு மன்னர் செலுத்த வேண்டிய கப்ப நிலுவைத் தொகையை உடனடியாக செலுத்துமாறு வலியுறுத்தினார். நாட்டுப்பற்றுமிக்க வேலுத்தம்பி இதனால் மிகக் கோபங்கொண்டார். தன் சொந்த நாட்டினை, அயர் நாட்டினரிடமிருந்து மீட்க, ஆங்கிலேயருக்கு எதிராக, அவர் போர் தொடுத்தார். இந்த ஆட்சி எதிர்ப்புப் புரட்சி, நாடு முழுமையும் பரவியது. அதில், பல ஆங்கிலேய அலுவலர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். ஆங்கிலேய அரசிற்கு எதிரான சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு, கி.பி. 1809ஆம் ஆண்டு சனவரி மாதம், ஒரு பொது அறிவிப்பினைச் செய்தார். அந்த அறிவிப்பிற்கு மக்கள் பேராதரவினை நல்கினார்கள். ஆக, மாநிலம் முழுமையும் ஆங்கிலேயருக்கு எதிராகக் கொதித்தெழுந்தது[113].

எனவே, திருவாங்கூர் இராணுவத்திற்கும், ஆங்கிலேய இராணுவத்திற்குமிடையே போர் மூண்டது. திருவாங்கூர் இராணுவத்தைவிட ஆங்கிலேய இராணுவம் வலிமை வாய்ந்ததாக இருந்தது; கி.பி. 1809ஆம் ஆண்டு, கொல்லத்தில் திருவாங்கூர் இராணுவம் தோல்வியைத் தழுவியது. வெற்றிபெற்ற ஆங்கிலேய இராணுவம் நாஞ்சில் நாட்டினுள் புகுந்து, பத்மநாபபுரம் மற்றும் உதயகிரிக் கோட்டைகளைத் தகர்த்தது[114].

அனைத்தும் பறிபோய்விட்ட நேரத்தில், வேலுத்தம்பி. மன்னருக்கு தனது மரியாதையைத் தெரிவித்துவிட்டு, திருவனந்தபுரத்தை விட்டுப்புறப்பட்டார். திரும்ப திருவனந்தபுரம் வரக் கூடாதென்ற உறுதிபூண்டார். தலைநகரை விட்டகலுமுன், எல்லாவற்றிற்கும் தளவாய் தான் காரணம் என பழியை தன்மீது போட்டு மன்னரை குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவித்துக் கொள்ளுமாறு வேலுத்தம்பி மன்னரிடம் மன்றாடியதாகக் கூறப்படுகிறது. திருவனந்தபுரத்தை விட்டுச் செல்வதென்ற போர்வையில் மற்றொரு போராட்டத்திற்கு அவர் அணி திரட்டினாரென சொல்லப்படுகிறது.

திருவாங்கூர் மன்னர், உம்மினித்தம்பி என்பவரை வேலுத்தம்பிக்கு பதிலாக நியமித்தார். ஆங்கிலேயருக்கும் வேநாட்டு மன்னருக்குமிடையே அமைதி உடன்பாடு ஏற்பட்டது. அதன்படி, வேலுத்தம்பியால் நியமிக்கப்பட்ட இராணுவம் நீக்கப்பட்டு, வேலுத்தம்பியைப் பிடிப்பதற்கு பற்றாணை பிறப்பிக்கப்பட்டது. வேலுத்தம்பி இறுதியில் அவரது சொந்த நகரமான மன்னோடியில் பிடிபட்டார். இந்த அவமானத்தைத் தாங்கிக் கொள்ள இயலாமல், தன்னைக்கொன்று விடுமாறு தனது சகோதரனுக்கு வேண்டுகோள் விடுத்தார். அவரதற்கு செவிமடுக்க மறுக்கவே, வேலுத் தம்பி தன்னைத் தானே சுத்தியால் குத்திக் கொண்டு, மரணத்தைத் தழுவினார். அவருடைய முடிவினை நாகமையா இவ்வாறு விளக்குகிறார்:

"திருவாங்கூர் படை, போரில் தோல்வியுறக் காரணமாயிருந்தவரும் நம்பிக்கையிழந்தவருமான அவர், மகத்தான ரோமானியபாணியில், தன் கையாலேயே தனது முடிவினைத் தேடிக்கொண்டார்."[115]

கிழக்கிந்தியக் கம்பெனியின் எதோச்சதிகாரத்திற்கு, " எதிர்ப்பு" எனும் கொடியை அகலப்பறக்க விட்ட, ஒரு நாட்டுப்பற்றுமிக்க தலைவனின் வாழ்க்கை, இவ்வாறாக முடிந்தது. ஆங்கிலேய அரசு, அவரது அடிச்சுவட்டைப்பின் பற்றிய நண்பர்களையும் விட்டு வைக்கவில்லை.

வேலுத்தம்பி விவகாரத்தில், ஆங்கிலேய அரசு தேவையின்றி தலையிட்டதைக் கண்டனம் செய்து, மிண்டோ பிரபு பின்னர், கீழ்க் கண்டவாறான கருத்தினைத் தெரிவித்துள்ளார்.

"நியாயமும், பொதுப்பாதுகாப்பும் திவானின் இறப்பினால், கிடைக்கப்பெற்றுள்ளது. ஆனால், அந்த நோக்கம் நிறைவேறிய பின்னரும் பழிவாங்கும் கொள்கையினை தொடர்ந்து கடைப்பிடித்தது, மனித இனத்தின் மன உணர்ச்சிக்கும் பண்பு நிறைந்த அரசின் கொள்கைகளுக்கும் நேர்மாறான செயலாகும்"[116].

வேலுத்தம்பிக்கு எதிராக நடந்த போரினால், ஆங்கில அரசிற்கு ஏற்பட்ட இழப்பினை ஈடுசெய்ய திருவாங்கூர் அரசு, மிகப் பெரிய தொகையினை, ஆங்கில அரசிற்குக் கொடுக்க நேரிட்டது. திருவாங்கூர் மன்னருக்கும் ஆங்கில அரசிற்கும் ஏற்பட்ட துணை உடன்பாட்டின்படி, ஆங்கிலேய படையின் ஒரு பகுதியை மாநில நிதியினின்றும் பராமரிக்க வேண்டியதாயிற்று. ஆங்கில அரசிற்கு எதிராக வேலுத்தம்பி போரிட்ட பொழுது, மிகத் தீவிரமாகப் பங்கேற்ற நாஞ்சில் நாட்டு மக்கள் உம்மினித்தம்பி அமைச்சரவையால் ஒடுக்கப்பட்டனர்.

கௌரி லட்சுமிபாய்

பால இராம வர்மாவைத் தொடர்ந்து, கௌரி லசுமிபாய், அரியணையிலமர்ந்தார். அவர், ஆங்கில அரசுடன் நட்புறவுகொள்ளும் கொள்கையினையே கடைப்பிடித்து வந்தார். அவர், உம்மினித்தம்பியை பதவி நீக்கம் செய்து. அவரது இடத்தில் மன்ரோ பிரபுவை தனது திவானாக நியமனம் செய்து கொண்டார். மாநில நிருவாகத்தில், கீழ்ப்படியாமை மற்றும் அதிக அளவில் கையூட்டுப் பெறுதல் போன்றவை தலைவிரித்தாடியதை மன்றோ கண்டறிந்தார். அதற்கு முதற்படியாக, அலுவலர்களுக்கிடையே மாறுதல் வரிசைப் படிநிலைகள் முறையைக் கொணர்ந்து தவறு செய்யும் அலுவலர்களுக்கு கசையடிபோன்ற உடல் சார்ந்த தண்டனை வழங்கினார். அவர் மாநிலத்தில் சுற்றுப் பயணம் செய்து, அலுவலர்களின் செயல்பாட்டை நேரில் கண்டறிந்தார். மாநில அரசுப்பணியில் அவசியமற்ற பணியிடங்களை நீக்கி, நெடுங்காலமாக நிலுவையிருந்த வரிப்பணத்தையும், வசூல் செய்ய துரித நடவடிக்கை மேற்கொண்டார். அதே நேரத்தில், மக்களை வதைக்கும் அநியாய வரிகளை நீக்கவும் செய்தார். வணிகம் மற்றும் வணிகத் தொடர்பு புத்துயிர் பெற்று, நிலையான "சௌக்கிகள்" என்ற சுங்கச் சாவடிகள் நிறுவப்பட்டன. கோயில் நிருவாகம் சீர்திருத்தியமைக்கப்பட்டது. சுசீந்திரம் திருக்கோயில் மற்றும் மாநிலத்திலுள்ள ஏனைய 347 திருக்கோயில்கள், மாநிலத்தின் பராமரிப்பில் கொண்டுவரப்பட்டன. திருக்கோயில்களின் "யோஉறகாரர்கள்" என்ற அறங்காவலர்கள், மக்கள் மீது கொடிய செல்வாக்கினைப் பயன்படுத்தி மாநிலத்தில் "வல்லாட்சிக்குள் ஒரு வல்லாட்சி" யை நடத்தி வந்தார்கள்: அவர்களின் இவ்வளர்ச்சிக்கு, கோயில் சீர்திருத்தம் ஒரு தடுப்பு நடவடிக்கையாக அமைந்தது.[117] ஆக, மன்ரோவின் நிருவாகம், மக்களுக்கு ஒரு நல்வாய்ப்பாக அமைந்தது.

கௌரி லட்சுமிபாய் இறந்து. அவருக்குபின் அவரது சகோதரி கௌரி பார்வதிபாய் அரியணையிலமர்ந்தார். (கி.பி. 1815-1820). அவரது ஆட்சிக்காலத்திலும் மன்ரோ திவானாகத் தொடர்ந்து பதவியிலிருந்தார். அவரது அட்சிக் காலத்தில் கிறித்துவ சமயப்பரப்புப் பணி அமைப்புகளின் அயராத நடவடிக்கைகளினால், அதிக அளவில் மக்கள் கிறித்துவ சமயத்திற்கு மாறினார்கள். இதன் விளைவாக, நாகர்கோயிலில் இலண்டன் சமயபரப்புப் பணி அமைப்பு நிறுவப்பட்டது.

இராம வர்மா சுவாதித் திருநாள் (கி.பி.1829-1847)

இராம வர்மா சுவாதித் திருநாள், கி.பி.1829ஆம் ஆண்டு திருவாங்கூர் அரியணையிலமர்ந்தார். தனிப்பட்டவர் வாழ்க்கையினினறு எழும் (சிவில்) வழக்குகள் மற்றும் குற்றவியல் வழக்குகள் ஆகியவற்றை விசாரிக்க தனி நீதி மன்றங்கள் அமைத்தல் போன்ற பல நிருவாக சீர்திருத்தங்களை அவர் நடைமுறைப்படுத்தினார். கி.பி.1835-ம் ஆண்டு ஆங்கிலேய முறைப்படி சட்டங்களைத் தொகுத்தமைத்தல், மேற்கத்திய நாடுகளின் கல்வி முறையைப் பின்பற்றுதல் மற்றும் ஆங்கிலப் பொறியியல் கல்வியைப் பரப்ப, அரசில் தனித்துறைகளை ஏறபடுத்துதல், நீர்ப்பாசன வசதி செய்து கொடுத்தல் போன்ற பல நிருவாக சீர்திருத்த முறைகளை நடைமுறைப் படுத்தினார். ஆற்றல்மிகு நிருவாகி மட்டுமல்லாது, மலையாளத்திலும் தமிழிலும் புலமை பெற்றவராகத் திகழ்ந்தார். அவரே ஒரு கவிஞர் ஆவார். பல கவிதைகளை அவர் புனைந்திருக்கிறார். அவர், தென் இந்தியாவின் புகழ்மிக்க பாடகர்களிலொருவராவார்.

மார்த்தாண்ட வர்மா உத்திரம் திருநாள் (கி.பி.1847-1860)

இராம வர்மாவிற்குப் பிறகு, மார்த்தாண்ட வர்மா ஆட்சி பொறுப்பினை ஏற்றார். வருவாய் வசூல் செய்வதில், மாநிலத்தின் நிதி நிலைமை உயரும் வகையில், பயனுள்ள திட்டத்தினை செயல் முறைப்படுத்தினார்.

அவரது ஆட்சி காலத்தில்தான் மாநிலத்தில் ஒரு நெருக்கடி ஏற்பட்டது. நாஞ்சில் நாட்டிலுள்ள கிறித்துவ சாணார் வகுப்பைச் சேர்ந்த பெண்களுக்கு, உயர் வகுப்பைச் சேர்ந்த பெண்கள் அணிவது போன்று, மேற் சட்டை அணியும் உரிமையினை அளிக்கக் கோரி, கிளர்ச்சி செய்தார்கள்,[118] விளவங்கோடு, கல்குளம், அகத்தீசுவரம் மற்றும் தோவாளை ஆகிய வட்டங்களில், சட்டம் மற்றும் ஒழுங்கு பெரிதும் பாதிக்கும்வகையில், அக்கிளர்ச்சி தீவிரமடைந்தது. வேறு வழியின்றி, மன்னர் சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட படையை அனுப்பி வைத்தார்.

பின்னர், அவர்களது கோரிக்கையை நிறைவேற்றக் கோரி, சாணார் வகுப்பைச் சார்ந்தோர், முந்தைய சென்னை மாகாண ஆளுநருக்கும், மன்னருக்கும் முறையிட்டு மனுக்களை அனுப்பிவைத்தனர். அதனைத் தொடர்ந்து, கிருத்துவ "சாணார் பெண்டிர்" உடை அணிவதில் கடைப்பிடிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை நீக்கி. கி.பி.1859ஆம் ஆண்டு ஆணை பிறப்பித்தார்.

அவரது ஆட்சிக் காலத்தில் ஒரு சிறந்த சாதனை என்னவெனில், திருவனந்தபுரத்திற்கும் நாஞ்சில் நாட்டிற்கும் இடையே ஒரு புதிய நீர்ப்பாசனக் கால்வாய் வெட்டப்பட்டதேயாகும். அக்கால்வாய்க்கு மன்னரின் நினைவாக "ஆனந்த மார்த்தாண்ட கால்வாய்" என பெயர் சூட்டப்பட்டது.[119]

ஆயில்யம் திருநாள் (கி.பி. 1860-1880)

மார்த்தாண்ட வர்மா உத்திரம் திருநாளுக்குப் பிறகு, கி.பி. 1860 ஆம் ஆண்டு ஆயில்யம் திருநாள் ஆட்சி பீடமேறினார். அவர் ஆட்சி காலத்தில்,

வேளாண்மைத் துறை நல்ல முன்னேற்றம் கண்டது. அதுவரை நடைமுறையிலிருந்த விதியென்னவெனில், மாநிலத்திலுள்ள அனைத்து வேளாண் நிலங்களுக்கும் அரசே முழு உரிமை (ஜன்மி) பெற்றிருந்தது; வேளாண் குடிமக்களுக்கு, வேளாண்மை செய்யும் உரிமை மட்டுமே இருந்தது. வேளாண் நிலத்தை மாற்றவோ விற்கவோ வாரிசுகள் பின்னுரிமை பெறவோ உரிமை பெற இயலாத நிலை இருந்து வந்தது. கி.பி.1865 ஆம் ஆண்டு, ஆயில்யம் திருநாள் " பண்டாரப்பட்டம் பொது அறிவிப்பு" என்ற ஒரு அறிவிப்பினைச் செய்தார். அதன்படி, தாம் உழும் நிலத்தின் முழு உரிமையையும், உழவர்பெருமக்கள் பெற்றார்கள்: அதனைத் தொடர்ந்து, அவர்கள் நிலத்தை மாற்றவோ, விற்கவோ தனது வாரிசுக்கு பின்னுரிமை அளிக்கவோ அவ்வறிப்பு வகை செய்தது. கி.பி.1867-ல், மற்றொரு பொது அறிவிப்பு மன்னரால் பிறப்பிக்கப்பட்டது. நிலத்தின் குத்தகைதாரர், அவர் குறிப்பிட்ட குத்தகைத் தொகையையும், ஏனைய மரபு வழக்கமான மீதி (வரி)த் தொகை ஆகியவற்றையும் முழுமையாக தவறாது செலுத்திவரும் வரை. எக்காரணத்தைக் கொண்டும் நிலத்தினின்று வெளியேற்றப்பட மாட்டாரெனவும் அவ்வறிவிப்பு தெரிவித்தது. இவ்விரண்டு பொது அறிவிப்புகளும், திருவாங்கூர் மாநில வேளாண் குடி மக்களின் "பேருரிமைப் பத்திரம்" [120] என அனைவராலும் போற்றப்பட்டது.

அம்மன்னரின் காலத்தில்தான், நாஞ்சில் நாட்டில் தனித்தமிழ்ப் பள்ளிகள் துவக்கப்பட்டன. கோதையாறு அணை கட்ட, பூர்வாங்க நில அளவைப் பணியும் இவர் காலத்தில் மேற் கொள்ளப்பட்டது, தனிச்சிறப்பாகும்.

இராம வர்மா விசாகம் திருநாள் (கி.பி.1880-85)

இராம வர்மா விசாகம் திருநாள், ஆற்றல் மிகு அறிஞராவார். அவர், சில சீர்திருத்தப்பணிகளை மேற்கொண்டார். பழைய காவல் முறையினை அறவே ஒழித்து, புதிய அமைப்பு முறையை புகுத்தினார். குற்றவியல் நீதித்துறை நிருவாகத்தை, மேம்படுத்த. காவல் நிருவாகத்தை நீதித்துறை நிருவாகத்தினின்றும் பிரித்தமைத்தார். அவர் மேற்கொண்ட மிக முதன்மையான பொது நலத்திட்டம் என்னவெனில், வருவாய் நில அளவை மற்றும் நிலவரித்திட்டப்பணியாகும். தொடக்க கல்விக்காக, தொடர்புள்ள பள்ளி நிறுவனங்களுக்கு அரசு உதவியளிக்கும் திட்டத்தை நடை முறைக்குக் கொணர்ந்தார். ஆங்காங்கே தொழில் உற்பத்திக்கு ஆதரவளித்தார். தென் திருவாங்கூர் (தற்போதைய கன்னியாகுமரி மாவட்டம்) நீர்ப்பாசனத் திட்டத்தினை மேம்படுத்தினார்.

ஸ்ரீ மூலம் திருநாள் (கி.பி.1885-1924)

இராம வர்மா விசாகம் திருநாளுக்குப் பிறகு, கி.பி.1885-ல், ஸ்ரீ மூலம் திருநாள் அரியணையேறினார். அவர், மாநிலத்தில், பல்வேறுபட்ட வளர்ச்சிப்பணிகளை மேற்கொண்டார். திருவாங்கூர் மாநில வரலாற்றிலேயே முதன் முறையாக மாநில சட்டப்பேரவையில் மக்கட் பிரதிநிதித்துவம் நடை முறைப்படுத்தப்பட்டது. கி.பி.1886-ல் முதல்

முறையாக புதிய நில வரித்திட்டம் கொண்டு வரப்பட்டது. இத்திட்டம் தொடர்ந்து 30 ஆண்டுகள் நடைமுறையிலிருந்து வந்தது.

வேளாண் துறைக்கு உரிய முதன்மையளிக்கப்பட்டது. நாஞ்சில் நாட்டிலும், இட நாட்டிலும் பல நீர்ப்பாசன வசதிகள் உழவர் பெருமக்களுக்கு செய்துகொடுக்கப்பட்டன. அகத்தீசுவரம் மற்றும் தோவாளை வட்டங்களில், தண்ணீர் தட்டுப்பாட்டினை அகற்றிட, "பாண்டியன் கால்வாய்" மற்றும் புத்தனார் ஆறு ஆகியவை அகலப் படுத்தப்பட்டன. அவரது ஆட்சி காலத்தில்தான் கோதையாறு திட்டம் முடிவுற்றது. தற்போதைய கன்னியாகுமரி மாவட்டப்பகுதியிலுள்ள மக்கள் இதனால் பெரிதும் பயனடைந்தனர். மன்னர் குடியரசு முறைப்படி அரசமைக்க வழிவகுத்தார். கி.பி.1888ஆம் ஆண்டு, சட்ட மேலவையைத் தொடக்கி வைத்தார். கி.பி.1904-ல், சட்ட மன்றம் மன்னர் பெயரால் அழைக்கப்பட்டது. அதில் பொது நோக்கிலான பொருள் குறித்து, மக்கள் பிரதிநிதிகள் தங்களது கருத்தினை முறையாகத் தெரிவிக்க வாய்ப்பளிக்கப்பட்டது. துவக்கத்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் மன்னரால் நியமிக்கப்பட்டனர். பின்னர், தகுதியுள்ள வாக்காளர்களால் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ஆண்டிற்கு ரு.100/-க்கு குறையாமல் வரி செலுத்தும் பொது மக்கள் வாக்காளர்களாகப் பதிவு செய்யப்பட்டார்கள். அதன்பின்னர், அவரது ஆட்சி கால முடிவில், இந்த வரியின் வரம்பு ஆண்டிற்கு ரு.5/- என குறைக்கப்பட்டது[121].

சேது லட்சுமி பாய் அவர்களது பகர ஆட்சிக்காலம் (கி.பி.1924-32)

ஸ்ரீ மூலம் திருநாள் இறந்த பின்னர், ஒரு பிரச்னை எழுந்தது. அவர் நேர்வாரிசான ஸ்ரீ சித்திரைத் திருநாளுக்கு 12 வயதே ஆகியிருந்ததால், அவர் அரியணையேற முடியவில்லை. எனவே, முதுநிலை மகாராணியான சேது லட்சுமி பாய் ஆளுநராகப் பதவியேற்றார். (1) தென் திருவாங்கூரி லுள்ள (தற்போதைய கன்னியாகுமரி மாவட்டம்) சில கோயில்களில் நடை முறையிலிருந்த தேவதாசி முறைமை, (2) தேவாஸ்வம் துறையில் நடை முறையிலிருந்த கோயில்களில், மிருக பலியிடும் கொடுமையான பழக்கம், ஆகியவற்றை நீக்கம் செய்த பெருமை இந்த இராணியையே சாரும்[122].

ஸ்ரீ சித்திரைத் திருநாள் (1932)

ஸ்ரீ சித்திரைத் திருநாள், உரிய வயதையடைந்தவுடன், 1931-ம் ஆண்டு, பதவியேற்றார். பின்னர், சேது லட்சுமி பாயின் ஆளுநர் பணிக்காலம் முடிவடைந்தது. 1931-ம் ஆண்டிலிருந்து, மாநிலம் பல மேம்பாடுகளைக் கண்டது. 1932-ல், சட்ட மன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வாக்களிக்கும் தகுதியையும், உரிமையையுமளிக்கும் சீர் திருத்தச் சட்டத்தினை மன்னர் இயற்றினார். அவர் சட்ட மன்றத்தினைத் திருத்தியமைத்தார். அது இரண்டு அரங்குகளையுடையதாயிருந்தது. அவை ஸ்ரீ மூலம் சட்ட மன்றம் மற்றும் ஸ்ரீ சித்திரை மாநில சட்ட மேலவை யாகும். ஸ்ரீ மூலம் சட்ட மன்றம், 72 உறுப்பினர்களைக் கொண்டது. ஆனால், ஸ்ரீ சித்திரை மாநில மேலவை 37 உறுப்பினர்களடங்கியது. ஸ்ரீ மூலம் சட்ட மன்றத்தில், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள நான்கு

வட்டங்களிலிருந்தும், ஒரு வட்டத்திற்கு ஒரு உறுப்பினர் என்ற அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள், திவான் சர்.சி.பி. இராமசுவாமி அய்யரின் அறிவுரையின்படி. மன்னர், "கோயிலில் நுழைதல்" (ஆலயப் பிரவேசம்) பொது அறிவிப்பை வெளியிட்டார். இவ்வறிவிப்பின்படி, தற்போதைய கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் மாநிலத்திலுள்ள இதர பகுதிகள் ஆகியவற்றிலுள்ள அனைத்துக்கோயில்களிலும் ஆதிதிராவிடர் உள்ளிட்ட இந்து சமயத்தைச் சார்ந்த அனைத்து மக்களும் வழிபட அனுமதிக்கப்பட்டார்கள். இது என்றென்றும் நிலைத்து நிற்கக் கூடிய மிக முக்கியத்துவம் வாய்ந்த சீர்திருத்தமாகும். இந்தியாவிலேயே, இம்மாதிரியான சீர்திருத்த நடவடிக்கை திருவாங்கூர் மாநிலத்தில்தான் முதன்முதல் மேற்கொள்ளப்பட்டது[123]. 1938ஆம் ஆண்டு, திருவனந்தபுரத்தையும் கன்னியாகுமரியையும் இணைக்கும் பெருவழி அமைக்கப்பட்டு, காங்கிரீட் வைத்து, கெட்டிப்படுத்தப்பட்டது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் மக்கள் பிரதிநிதித்துவ அரசு அமைக்ககோரிப் போராட்டம்

1956ஆம் ஆண்டு வரை கன்னியாகுமரி மாவட்டம், முந்தைய திருவாங்கூர் மாநிலத்தின் ஒரு பகுதியாகவே இருந்து வந்தது. மாநில மக்களின் அரசியல் நடவடிக்கைகள், இந்திய தேசிய காங்கிரஸின் முயற்சியினால் கட்டப்பட்ட "மாநில மக்கள் மாநாட்டின்" முடிவுப்படியும் அறிவுரைப்படியும் அமைந்தது. 1919-ம் ஆண்டு ஒத்துழையாமை மற்றும் ஆங்கிலேயப் பொருட்களை விலக்குதல் போன்ற கருத்துக்களை மாநில மக்களிடம் பரப்புவதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டது. 1929-ல், 'மாநில மக்கள் மாநாட்டின் கூட்டம், திருவனந்தபுரத்தில் நடைபெற்றது. அக்கூட்டத்திற்கு, முந்தைய மைசூர் மாநிலத்தின் நீடித்தீ அனுபவம் பெற்ற நிர்வாகியான திரு.எம்.விசுவேச்வரய்யா தலைமை வகித்தார். இக்கூட்டத்தில், மாநிலத்தில் ஒரு பொறுப்புள்ள அரசு அமைக்கப்பெற வலியுறுத்தப்பட்டது[124]. 1930-ம் ஆண்டு, மகாத்மாகாந்தி, உப்பு சத்யாக்கிரகம் நடத்தியபோது, மாவட்டத்தின், தலைசிறந்த நாட்டுப்பற்று மிக்கவர்களான டாக்டர் எம்.இ.நாயுடு, திருவாளர்கள் தேரூர் சுப்ரமணியபிள்ளை, ஏ.சி. சுந்தரம்பிள்ளை, எம்.சிவதாணுப்பிள்ளை ஆகியோர் அதில் தீவிரப் பங்காற்றினார்கள்.

திருவாங்கூர் மாநில சட்ட மன்றத்தில், 1932-ம் ஆண்டில், சட்டமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வாக்களிக்கும் தகுதியையும், உரிமையையும் அளிக்கும் சீர்திருத்தச் சட்டம் இயற்றப்பட்டது. இச் சட்டத்தின்படி, அதிக நிலம் படைத்த ஒரு சிலரே ஓட்டுரிமை பெறத் தகுதி பெற்றார்கள். மாநிலத்தில் அதிக நிலங்களைப் பெற்ற நாயர் வகுப்பைச் சேர்ந்தோர், சட்ட மன்றத்தில் செல்வாக்கு மிக்கவர்களாக இருந்தார்கள். சிறுபான்மை வகுப்பினைச் சார்ந்த ஈழவர்கள், முகம்மதியர்கள் மற்றும் கிருத்துவ மதத்தைச் சார்ந்த சில பகுதியினர், அதிக நிலம் படைத்தவர்களல்லர் என்ற காரணத்தால் அரசியலில் குறைந்த செல்வாக்குடையவராக இருந்தனர். எனவே, சிறுபான்மை வகுப்பைச் சார்ந்தோர், வெறுப்படைந்து, அச்சட்டத்தினைத் தீவிரமாக

எதிர்த்தார்கள். இதன் விளைவாக, அவர்கள் "ஒருங்கிணைந்த அரசியல் காங்கிரஸ்" அல்லது "சம்யுக்த கட்சி" என்ற கட்சியைத் துவக்கி, அவர்களது கோரிக்கைகளை கிளர்ச்சிகளின் மூலம் வலியுறுத்தினார்கள். இறுதியில், அரசு அவர்களது கோரிக்கையினை ஏற்று, சட்டத்தைத் திருத்தியமைத்து, சிறுபான்மை வகுப்பினர் சட்டமன்றத்தில் உரிய பிரதிநிதித்துவம் பெற வழிவகை செய்தது[125].

திருவாங்கூர் மாநில காங்கிரஸ், பின்னர், ஒரு ஆற்றல் மிக்க அரசியல் அமைப்பாக உருவானது, ஒருங்கிணைந்த அரசியல் காங்கிரஸின் விளைவேயன்றி வேறல்ல.

1938ஆம் ஆண்டு, இந்திய தேசிய காங்கிரஸின் மாநாடு, திருவாங்கூரில் டாக்டர் பட்டாபி சீதாராமையா தலைமையில் நடைபெற்றது. சிறிய ஆட்சிப்பகுதிகளான திருவாங்கூர், கொச்சி மற்றும் மலபார் ஆகியவை அடங்கிய ஒன்றுபட்ட கேரள மாநிலம் அமைக்கும் தீர்மானம் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது. திரு. பட்டம் தாணுப்பிள்ளையைத் தலைவராகக் கொண்ட திருவாங்கூர் மாநில காங்கிரஸ், இரண்டாவது உலகப்போரின்போது அதனுடைய நடவடிக்கைகளை விரிவாக்கத் துவங்கியது. கூட்டு அரசியல் காங்கிரசும், மாநில காங்கிரசுக்கு தனது பேராதரவை நல்கியது. 1938-ல் மாநில காங்கிரஸ் மாநிலத்தில் பலதரப்பட்ட கிளர்ச்சிகளை மேற்கொள்ள திட்டம் வகுத்தது. அதில் முக்கியத்துவம் வாய்ந்தது, மாநிலத்தில் ஒரு பொறுப்புள்ள அரசை அமைப்பதாகும். காங்கிரஸின் முதல் கூட்டத்தில் தீர்மானித்தபடி அதனுடைய முக்கிய நோக்கம் என்னவெனில், அனைத்து தரப்பினருக்கும் அமைதியான முறையிலும் நியாயமானதாகவும் வாக்குரிமை அளிக்க வேண்டும் என்பதும் சிறுபான்மை வகுப்பினரின் நலனை காப்பதுமாகும். ஆனால், சர்.சி.பி. இராமசுவாமி அய்யரை திவானாகக் கொண்ட மாநில அரசின் கருத்துக்கள் மாறுபட்டும், மக்கள் கருத்திற்கு புறம்பானதாகவும் இருந்தன. அரசு மேற்கொண்ட கடுமையான நடவடிக்கைகள் தளர்ச்சியை அதிகரித்தன. இதனால் சூழ்நிலை மிகவும் மோசமாயிற்று. மாநில காங்கிரஸ் ஒரு படி மேலே சென்று திவான் சர்.சி.பி. இராமசுவாமி அய்யரை பதவி நீக்கம் செய்ய வேண்டுமென வலியுறுத்தியது. ஆனால், மாநில அரசு தனது நிலையில் மிகவும் உறுதியாக இருந்தது. மாநில காங்கிரசில் அனைத்து கூட்டங்களுக்கும் தடை விதிக்கப்பட்டது. ஆனால், காங்கிரசைச் சார்ந்தோர் மாநிலத்தில் ஒத்துழையாமை இயக்கத்தை மேற்கொண்டார்கள். தடையை மீறி ஆர்பாட்டங்கள் தொடர்ந்து நடந்தன.[126] இதற்கிடையே திவான் சர்.சி.பி. இராமசுவாமி அய்யர் மாநில காங்கிரசின் தலைவருடன் சமாதான உடன்படிக்கை மேற்கொள்ள முன்வந்தார். அதற்கு முன்னர், அவர்கள் தன்னை பதவி நீக்கம் செய்ய வேண்டுமென்ற கோரிக்கையினைத் திரும்ப பெறவேண்டுமென வலியுறுத்தினார். ஆனால், காங்கிரசுத் தலைவர்கள் சமாதானத்திற்கு முன்னர், இக்கோரிக்கையினை ஏற்றுக் கொள்ள மறுத்தனர். எனினும், மகாத்மா காந்தியின் அறிவுரையின் பேரில் அவர்கள் தங்களது கோரிக்கையினைத் திரும்ப பெற்றார்கள். ஆனால், மாநில அரசின்

போக்கில் எவ்வித மாறுதலும் தென்படவில்லை. மாறாக கோரிக்கையினை எழுப்பியவர் மீது அரசு நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டது. இதன்விளைவாக மாநில காங்கிரசு இரண்டாக பிரிந்தது. "இளைஞர் இணைக்கழகம்" (யூத்லீக்) என்ற புதிய கழகம் துடிப்பு மிக்க, பொது ஆர்வம் கொண்ட இளைஞர்களால் திருவனந்தபுரத்தில் நிறுவப்பட்டது. இது, தற்போதைய கேரள கம்யூனிஸட் கட்சியின் முன்னோடியாகும்.[127] 1939ஆம் ஆண்டு முதல், காங்கிரஸ், ஆங்கிலேயர்களை இந்தியாவை விட்டு உடனடியாக செல்லக்கோரும் இயக்கத்தை துவக்கியது. இது திருவாங்கூர் மாநிலத்தில், குறிப்பாக தற்போதைய கன்னியாகுமரி மாவட்டத்தில் எதிரொலித்தது. அப்பகுதியில் சட்டம், ஒழுங்கு பாதிக்கப்பட்டது. மேலும், காங்கிரஸ் தலைவர்கள் சிறை வைக்கப்பட்டனர்[128]. "வெள்ளையனே வெளியேறு" இயக்கத்தில் டாக்டர் எம்.இ.நாயுடு, திருவாளர்கள் சிவமுத்து கருப்பபிள்ளை, சிவன்பிள்ளை, பி.எஸ். மணி மற்றும் பலர் ஈடுபட்டு சிறைவைக்கப்பட்டார்கள்[128(அ)].

ஐக்கிய கேரள கிளர்ச்சியும் திருவாங்கூர் தமிழர்கள் நிலையும்

1945 முதல் 1956 வரையுள்ள காலம் கன்னியாகுமரி மாவட்டத்தின் தற்கால வரலாற்றைப் பொருத்தவரை தனிச்சிறப்புடையது. திருவாங்கூர், கொச்சி மற்றும் மலபார் ஆகிய மாநிலங்கள் ஒருங்கிணைந்த கேரள மாநிலத்தை உருவாக்க, 1945ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18-ம் நாள் திருவாங்கூர் மாநில காங்கிரஸ் ஓர் தீர்மானம் நிறைவேற்றியது. திருவாங்கூர் மாநிலத்தின் தென்வட்டங்களைச் சார்ந்த முதன்மையான தமிழகத் தலைவர்கள் இத்தீர்மானத்தினை எதிர்த்தார்கள். ஆகையால், இதுகாறும் திருவாங்கூர் மாநில ஆட்சி மொழிகளில் ஒன்றாக இருந்து வந்த தமிழ்மொழி, அவ்வாறு அங்கீகரிக்கப்படாமல், மாறாக, மலையாள மொழி ஒன்றே மாநிலத்தின் ஆட்சி மொழியாகத் தொடர்ந்தது. இதைத் தமிழர்கள், தங்களை அவமதிப்பதாகக் கருதினார்கள். சமுக, பொருளாதார மற்றும் அரசியல் துறைகளில், தங்களது பிடிப்பு தளர்வதாக அவர்களுக்குத் தோன்றியது. மொத்தத்தில், மாநிலத்தில் அவர்கள் ஒதுக்கப்பட்ட இனமாகக் கருதப்பட்டார்கள். எனினும், முதன்மையாக மலையாளம் பேசப்படும் ஒரு பகுதியில் 15 லட்சம் தமிழ் மக்கள் தொகையுடைய தமிழர்களுக்கு அரசியல் நாட்டம் சற்றும் குறையவில்லை. தமிழர்களும் வலிமை குன்றவில்லை.

தமிழர்கள் மாநாடு ஒன்று, 1945-ம் ஆண்டு டிசம்பர் 16-ம் நாள், நாகர்கோயிலில் நடைபெற்றது. அதில், முன்னனி தமிழர் தலைவர்களான, திருவாளர்கள் சாம் நத்தேனியல், வேலாயுதம் பிள்ளை, கே.நாகலிங்கம், காந்திராமன், எஸ்.என்.தாஸ், ஆர்.கே.ராம், முத்தையா, வி.மார்க்கண்டன் மற்றும் பி.எஸ். மணி ஆகியோர் கலந்து கொண்டனர். தமிழர்களின் நலனைப் பாதுகாத்திட புதிதாக ஒரு அரசியல் கட்சியைத் துவக்கிட அம்மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து, "அனைத்துத் திருவாங்கூர் தமிழர் காங்கிரஸ்" என்ற கட்சி, 1946ஆம் ஆண்டு சூன் திங்கள் 30-ம் நாள் உதயமானது.[129]

1946-ம் ஆண்டு, அனைத்துத் திருவாங்கூர் தமிழர் காங்கிரஸ் கட்சி துவக்கப்பட்டதிலிருந்து, திரு.பி.எஸ். மணி அதில் முன்னணி தலைவராக திகழ்ந்தார். பள்ளியாடி கிராமத்தைச் சேர்ந்த திரு.ஏ.நேசமணி, அக்கட்சியல் சேர்ந்ததிலிருந்து, அது ஒரு மாபெறும் மக்கள் இயக்கமாக உருவெடுத்தது. அகஸ்தீஸ்வரம், தோவாளை வட்டங்களுக்கு அப்பால், கல்குளம், விளவங்கோடு மற்றும் நெய்யாற்றங்கரை வரை கட்சியின் கொள்கை களைப் பரப்பியதில், திரு.ஏ.நேசமணி அவர்களது பங்கு, குறிப்பிடத் தக்கது[129(அ)]. இன்றைய கன்னியாகுமரி மாவட்டத்தை திருவாங்கூர் மாநிலத்திலிருந்து பிரித்து தமிழ் நாட்டுடன் இணைக்க நடந்த போராட்டத்தை வழி நடத்தியதைப் பாராட்டி அவரை "மார்ஷல் நேசமணி" என மக்கள் அழைத்தார்கள்.

திரு.சாம் நத்தேனியல் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். கட்சியின் பிரதிநிதிகள் திரு. காமராசர் போன்ற தேசியத் தலைவர்களைச் சந்தித்து, திருவாங்கூர் மாநிலத்தில் நிலவும் பதட்டம் குறித்தும், தமிழ் பேசும் மக்கள் படும் இன்னல் குறித்தும் தெளிவாக விளக்கினார்கள்.

இதற்கிடையே 1946-ம் ஆண்டு, பிரிட்டன் இந்தியாவிற்கு சுதந்திரம் அளிக்க தனது இசைவினைத் தெரிவித்தது. இந்திய சுதந்திரச் சட்டத்தின் ஏழாவது பிரிவின்படி, இந்தியா சுதந்திரம் பெற்ற உடன் காலத்தில், பிரிட்டிசு ஏகாதிபத்யத்தின் உயர்தலைமை, இந்தியாவின் மீதான ஆட்சியுரிமையை இழக்க வேண்டிய நிலையிலிருந்தது. இதைக் கேள்வியுற்ற, திவான், சர்.சி.பி. இராமசுவாமி அய்யர், திருவாங்கூர் மாநிலம், சுதந்திரமாகவே செயல்படுமென்ற அறிக்கையை வெளியிட்டார். இவ்வறிவிப்பு மாநிலத்தில், அமைதியின்மையைத் தோற்றுவித்தது. அவ்வமயம், திவானின் உயிருக்கு ஆபத்தான சூழ்நிலை உருவாகியது. இதன் விளைவாக, மகாராஜா சித்திரைத் திருநாள், திருவாங்கூர் மாநிலத்தை இந்தியத் துணைக் கண்டத்துடன் இணைக்க இசைவு தெரிவிக்க நேரிட்டது. இதனைத் தொடர்ந்து, ஒரு அசையா நிலை உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டது. இறுதியாக, 1947-ம் ஆண்டு, ஆகஸ்ட் மாதம் 19-ம் நாள், திவான் சர்.சி.பி. இராமசுவாமி அய்யர் பதவி விலக நேரிட்டது[130].

1947-ம் ஆண்டு, ஆகஸ்ட் மாதம் 9-ம் நாள், நாகர்கோயிலிலுள்ள அல்லன் நினைவு மன்றத்தில், அனைத்துத் திருவாங்கூர் தமிழர் காங்கிரஸ் கட்சியின் மாபெரும் பொதுக் கூட்டம் நடந்தது. அக்கூட்டத்தைத் திரு.ஏ.நேசமணி தலைமை தாங்கி நடத்தினார். மாநிலத்திலுள்ள தமிழ் மக்களின் உரிமைகள் அவர்களுக்கான சலுகைகள் ஆகியவற்றைப் பெற்றுத்தர, அனைத்துத் திருவாங்கூர் தமிழர் காங்கிரஸ் கட்சியினால்தான் இயலும் என்ற சூழ்நிலை உருவானது.

இணைப்புக்கான இயக்கம்

1947-ம் ஆண்டு, அனைத்துத் திருவாங்கூர் தமிழர் காங்கிரஸ் கட்சி, இரவிப்புத்தூரில் ஒரு மாநாடு நடத்தியது. அதில், திருவாளர்கள்

சி. உமைத்தாணு, எஸ்.தவசி. சிதம்பரநாதன், சி.மாதவன்பிள்ளை, டி.டி.டேனியல், டி.மகாலிங்கம், உமைத்தாணுப்பிள்ளை மற்றும் பலர் கலந்து கொண்டனர். இந்த மாநாட்டில்தான், கட்சியின் பெயர் "திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ்" என மாற்றப்பட்டது. மாநிலத்திலுள்ள தமிழ் சிறுபான்மையினரின் நலனைக் காப்பதெனவும் மாநிலத்தின் தமிழ் பேசும் மக்களடங்கிய வட்டங்களை முந்தைய சென்னை மாநிலத்துடன் இணைக்கப் பாடுபடுவதெனவும் தலைவர்கள் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். தமிழர் தலைவர்களின் இப்போக்கின் விளைவாக தமிழ் மக்களின் நலன்கள் புறக்கணிக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து, "ஐக்கிய கேரள மாநிலம்" அமைக்க, மற்ற பிரிவினரால் கிளர்ச்சி மேற்கொள்ளப் பட்டது. "ஒன்றுபட்டகேரள" மாநிலத்தில் தங்களது நலன்கள் பெரிதும் பாதிக்கப்படுமென்ற ஐயப்பாடு தமிழர் மத்தியில் எழுந்தது. திருவாங்கூர் மாநிலத்தில் தமிழ் பேசும் மக்கள் வாழும் பகுதியினை முந்தைய சென்னை மாநிலத்துடன் இணைக்கக் கோரும் கிளர்ச்சியை "திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ்" தொடர்ந்து நடத்தியது. தமிழ் பேசும் மக்கள் வாழும் பகுதியை முந்தைய சென்னை மாநிலத்துடன் இணைப்பதற்கான முக்கியத்துவத்தைப் பல பேரரிவாளர்களும் எழுத்தாளர்களும், பொது மக்களுக்கு தங்களது கவிதைகள், கட்டுரைகள் மூலம் உணர்த்தினார்கள். பேராசிரியர் பி. சுந்தரம்பிள்ளை (1855-1897)"மனோன்மணியம்" நாடகத்தைக் கவிதை நடையில் எழுதினார். சிந்தனையாளரான திரு.கே.என். சிவராச பிள்ளை "தொடக்க காலத்து தமிழர்களின் காலவரிசைப்பட்டி" என்ற நூலை எழுதினார். அவரது ஆராய்ச்சி நூல்கள் இன்றும் உயர்வாகப்போற்றப்படுகின்றன. கவிஞர் செய்குத்தம்பிப் பாவலர், (1874-1950) பல செயல்களை ஒருமுகப்படுத்தி ஒரே நேரத்தில் செய்யும் திறன் படைத்தவர் . (சதாவதானி). அவர், "முஸ்லீம் மித்திரன்" என்ற பருவ இதழ்ச் சுவடியை வெளியிட்டார். ரௌலட் சட்டத்தினை எதிர்த்து 1919-ம் ஆண்டு தீவிரமான ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றபோது, அவர், "சுதேச மித்ரன்" என்ற நாளேட்டின் பதிப்பாசிரியரான திரு.எஸ். சுப்ரமணிய அய்யருடன் சேர்ந்து கொண்டு, நடத்திய அவரது நடவடிக்கைகள் ஆங்கில அரசினால், கவனமாகக் கண்காணிக்கப்பட்டன. கன்னியாகுமரி மாவட்டத்தில் பிறந்த இலக்கியவாதியும், புகழ் பெற்ற கவிஞருமான கவிமணி திரு. தேசிக விநாயகம் பிள்ளை தனது எழுதுகோலினால், மக்களின் நாட்டுப்பற்றினை வளர்த்தார். மாவட்டத்தில் பிறந்த நீதித்த அனுபவமிக்க அரசியல் தலைவரான ஜீவாநந்தம், "ஜீவா" என உள்ளன்புடன் எல்லோராலும் அழைக்கப்பட்டார். அவர் ஒரு திறமையான எழுத்தாளரும், சொல்வன்மை, வாய்ந்த பேச்சாளருமாவார். அவர் எழுதிய கட்டுரைகள், நாட்டுமக்கள் மத்தியில் நாட்டுப்பற்றை வளர்த்தன. சுதந்திரப் போராட்டத்தில், தீவிரப்பங் கேற்றமைக்காக, ஆங்கில அரசால் தூக்கிலிடப்பட்ட "பஞ்சாப் சிங்கம்". பகவத் சிங் பற்றி, ஒரு நூல் வெளியிட்டதற்கு அவருக்கு சிறை தண்டனை விதிக்கப்பட்டது.

1948 பொது தேர்தலின் போது, திருவாங்கூர் மாநில அரசு, தமிழர்கள் மீது அடக்கு முறையைக் கையாண்டது. திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸின் தலைவர், திரு.சாம். நத்தேனியலியலின் உயிருக்கு ஆபத்து

ஏற்பட்டது. மோன்கோடாவில், திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் ஏற்பாடு செய்திருந்த தேர்தல் கூட்டத்தில், காவல்துறை, துப்பாக்கி சூடு நடத்தியது. அதற்கு, இருவர் பலியாயினர். 1948ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில், தமிழரசுக் கட்சித் தலைவர் திரு.எம்.பி. சிவஞானம் முக்கியப்பங்கேற்றார். முந்தைய சென்னைமாகாணத்துடன், திருவாங்கூர் மாநிலத்தின் தமிழ் பேசும் பகுதிகளை இணைக்கும் முயற்சியை வெகுவாகப் பாராட்டிப் பேசினார். திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் எக்காரணத்தை முன் வைத்துத் தேர்தலில் பங்கேற்றதோ, அதில் வெற்றி கண்டது. முந்தைய தென் திருவாங்கூரின் அனைத்து பதினான்கு தொகுதிகளிலும் அக்கட்சி வெற்றி பெற்றது. அக்கட்சி முழு அங்கீகாரம் பெற இவ்வெற்றி அடிகோலியது; மேலும், திருவாங்கூரில் அமைச்சரவை அமைக்க, இக்கட்டிசியின் பக்கபலம், பெரிதும் எதிர்நோக்கப்பட்டது[131]. மக்களின் நன்மதிப்பைப் பெற்ற திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியை அகில இந்திய காங்கிரஸ் குழு, அங்கீகாரம் செய்தது.

1948-ம் ஆண்டு மார்ச் மாதம் 24-ம் நாள், மக்கள் பாராட்டிற்குரிய அமைச்சரவை பதவியேற்றது. அதற்கு முதலமைச்சர் ஆக திரு. பட்டம் தாணுப்பிள்ளை பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்[132]. சிலகாலத்திற்குப் பிறகு திரு.டி.கே. நாராயணபிள்ளை முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். திருவாங்கூர் மற்றும் கொச்சி மாநிலங்களின் இணைப்பிற்கான பெருமை அவரையே சாரும். ஆனால், தென் வட்டங்களைச் சார்ந்த தமிழர்கள் அதனை விரும்பவில்லை. இந்த இரண்டு மாநில இணைப்பினால், சட்டமன்றத்தில், தங்களுக்குரிய பிரதிநிதித்துவம் மாநிலத்தில் மிகவும் குறைந்துவிடுமென அவர்கள் கருதினார்கள். எனவே, இப்பகுதியினை முந்தைய சென்னை மாகாணத்துடன் இணைக்கும் கோரிக்கையையே அவர்கள் வலியுறுத்தினார்கள்.

இதற்கிடையில், இந்தியத் துணைக்கண்டத்தில் முந்தைய துணைப் பிரதமர் திரு.சர்தார் வல்லபாய் படேல், அப்பகுதியினை சென்னை மாகாணத்துடன் இணைக்கவேண்டி அவர்கள் விடுத்த கோரிக்கை, மொழி அடிப்படையில் மாநிலங்களை அமைக்கும் தருணத்தில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென திருவாங்கூர் தமிழர்களுக்கு வாக்குறுதி யளித்தார். அந்த வாக்குறுதிப்படி, கன்னியாகுமரி மாவட்டத்தில் தமிழர்கள் கிளர்ச்சிகள் நிறுத்திவைக்கப்பட்டன.

1948ஆம் ஆண்டு, திருவாங்கூர் மற்றும் கொச்சி மாநிலங்களை இணைக்க, மறுமுறை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அவ்விரு மாநிலத்தைச் சார்ந்த மக்களும் ஒரே பண்பாடு, நாகரீகம் மற்றும் பழக்கவழக்கமுள்ளவர் களெனவும், ஒரே மொழியைப் பேசுபவர்களெனவும் இதற்குக் காரணம் காட்டப்பட்டது. திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரசும் அதே காரணங்களால், இம்மாநிலங்கள் முந்தைய சென்னை மாகாணத் துடன் இணைக்கப்பட வேண்டுமென்ற தங்களது கோரிக்கையினை வலியுறுத்தியது. 1949ஆம் ஆண்டு சூன் திங்கள் 1-ம் நாள் திருவாங்கூர் - கொச்சி மாநிலங்கள் இணைப்பு நடைமுறைப் படுத்தப்பட்டது.

1951 பொதுத் தேர்தலில், மாநில காங்சிரஸ் கட்சி மொத்தமிருந்த 108 இடங்களில், 44 சட்டமன்ற இடங்களையே பெற முடிந்தது. அதனைத் தொடர்ந்து, சட்ட மன்றத்தில் எட்டு இடங்களைப் பெற்றிருந்த திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரசுடன் சேர்ந்து, கூட்டு அமைச்சரவை அமைத்தது. கூட்டு அமைச்சரவையில், திரு.ஏ.ஜே. ஜான், முதலமைச் சராகப்பதவியேற்றார். அமைச்சரவையில், திரு.ஏ.சிதம்பரநாதன் திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரசுன் பிரதிநிதியாகப் பதவியேற்றவர். ஆனால், 1952-ம் ஆண்டுத் துவக்கத்தில், கருத்து வேறுபாடு காரணமாக திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ், மாநில காங்கிரசுக்கான தனது ஆதரவினை விலக்கிக் கொண்டது. இதன் விளைவாக, திரு.ஏ. சிதம்பரநாதன் அமைச்சரவையினின்றும் விலகினார். தொடர்ந்து மாநில காங்கிரசிலேயே உட்பூசல் கிளம்பியது. திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரசும் தனது ஆதரவை விலக்கிக் கொண்ட நிலையில், அமைச்சரவை கவிழ்ந்தது[133].

அதன்பின்னர், 1954-ல் புதிதாக நடந்த தேர்தலில், மாநில காங்கிரசு, மொத்தமிருந்த 117 இடங்களில் 45 இடங்களிலேயே வெற்றி பெற முடிந்தது. திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரசு, தமிழ் பேசும் பகுதியிலிருந்த 12 இடங்களிலும் வெற்றி பெற்று, புதிய சட்டமன்றத்தில், தனது பலத்தை உயர்த்திக்கொண்டது. ஆனால், அது, மாநில காங்கிரசிற்கு தனது ஆதரவினை அளிக்கவில்லை, சட்டமன்றத்தில், பெரும்பான்மையான இடங் களைப் பெற்ற பிரஜாசோசலிஸ்ட் கட்சி திரு.பட்டம்தாணுப்பிள்ளை தலைமையில் 1954-ம் ஆண்டு மார்ச், திங்கள் 17-ம் நாள் அமைச்சரவை அமைத்தது[134].

திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் நாளடைவில் இரண்டாகப் பிரிந்தது. ஒரு பிரிவிற்கு திரு.எ.நேசமணியும், மற்றொரு பிரிவிற்கு திரு.பி. தாணுலிங்க நாடாரும் தலைமைப் பொறுப்பை ஏற்றார்கள். எனினும், விரைவில் கருத்து வேறுபாடு மறைந்து, மறுமுறை, அதாவது 1958ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 29-ம் நாள், இரண்டு பிரிவினரும் இணைந்தனர். இணைந்த கட்சியின் ஒருமித்த தலைவராக திரு.பி.இராமசாமி பிள்ளை தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர், கட்சியினை மக்களிடையே செல்வாக்கு மிக்கதாகக் கொணர்ந்தார். திருவாங்கூர் மாநிலத்தை முந்தைய சென்னை மாகாணத்துடன் இணைக்கும் கோரிக்கை புத்துயிர் பெற்றது. அவர்கள் கிளர்ச்சிகளிலும். ஆர்ப்பாட்டங்களிலும் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளளாயினர். 1954ஆம் ஆண்டு அரசின் அடக்குமுறைகளுக்கிடையே இணைப்பு முயற்சிக்கு மாவட்டமுழுமையும் ஆதரவு பெருகிற்று. பொதுமக்கள் வாழ்க்கையே நாள்தோறும் கடைஅடைப்புக்கள் போராட்டங்கள், பொது கூட்டங்கள், மற்றும் ஊர்வலங்கள் என மாறின. இணைப்பு முயற்சி மிக உச்ச நிலையை அடையும்போது அரசின் அடக்கு முறையும் அதிகரிக்கலாயிற்று. அதன் விளைவு தொடுவெட்டி, புதுக்கடை, மார்த்தாண்டம் சுசீந்திரம் ஆகிய இடங்களில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்து பல உயிர்கள் அதற்கு பலியாயின. கன்னியாகுமரி மாவட்டத்தில் சட்டம் ஒழுங்கு நிலைமை சீர்குலைந்தது. இறுதியில் மக்களிடம்

செல்வாக்கு மிக்க தலைவர்களான திருவாளர்கள் என்.எ.நூர்முகமது. பி.துளசிங்கம், எம்.வில்லியம் மற்றும் டி.டி.டேனியல் ஆகிய சட்டமன்ற உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டு, தக்களை கிளைச் சிறையில் காவலில் வைக்கப்பட்டனர். ஆனால் திரு.எ.நேசமணி, கைது செய்யப்படுவ தினின்றும் தப்பி கைது செய்யப்பட்டவர்களை வெளிக் கொணர சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுச் செய்தார். அம்மனு நிராகரிக்கப்படவே, டெல்லி உச்ச நீதி மன்றத்திற்கு மேல் முறையீடு செய்தார். அம்மேல் முறையீடு மைசூர் உயர்நீதி மன்றத்தின் நடவடிக்கைக்காக டெல்லி உச்ச நீதி மன்றத்தினால் அனுப்பிவைக்கப்பட்டது. அவ்வமயம் மாநிலத்தில் ஆட்சிப் பொறுப்பிலிருந்த பிரஜா சோஷலிஸ்ட் கட்சியைச் சார்ந்த சட்ட மன்ற உறுப்பினர் திரு. டி.எஸ். இராமசாமி பிள்ளையை மைசூர் உயர்நீதி மன்றம் விடுதலை செய்தது. தமிழ் குடி மக்களின் கோரிக்கைக்கு ஆதரவு தெரிவிக்குமுகத்தான் அவர் சட்டமன்ற உறுப்பினர் பதவியை இராசினாமா செய்து அமைச்சரவையின் மீது சட்டமன்றத்தில் நம்பிக்கையில்லா தீர்மானத்தைக் கொணந்தார். அத்தீர்மானம் மன்றத்தில் நிறைவேறியதால், அமைச்சரவை கவிழ்ந்தது. அதனைத் தொடர்ந்து திருவாங்கூர் மாநில காங்கிரஸ், திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியுடன் உடன்பாடு செய்து கொண்டு திரு.பனம்பள்ளி கோவிந்த மேனன் தலைமையில் அமைச்சரவையை உருவாக்கியது. இந்த அமைச்சரவையும் அதிக நாட்கள் நீடிக்கவில்லை. எனவே, 1956ஆம் ஆண்டு திருவாங்கூர்-கொச்சி மாநிலங்களில் ஜனாதிபதி ஆட்சி கொண்டுவரப்பட்டது.

1955ஆம் ஆண்டு முதல் திரு.எ.நேசமணி, திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவராகப் பணியாற்றி வந்தார். அவ்வாறு அவர் பணியாற்றிய காலத்தில்தான் மாநிலங்களை மொழியடிப்படையில் திருத்தி அமைக்கும் கோரிக்கை இந்திய அரசின் பரிசீலனையிலிருந்து வந்தது. அதனைத் தொடர்ந்து 1956ஆம் ஆண்டு, நல்ல குறிக்கோளுடனும், நடுநிலை தவறாமலும், இந்தியாவில் உள்ள மாநிலங்களை மொழியடிப் படையில் திருத்தி அமைக்க மாநில சீர்அமைப்புக் குழுவினை மைய அரசு அமைத்தது. இக்குழு, மாநிலங்கள் சீர் அமைப்பு குறித்து பொது மக்களிடம் முறையீடுகள், கருத்துகள் மற்றும் பரிந்துரைகள் ஆகியவற்றைக் கோரியது. திருவாங்கூர்-கொச்சி மாநிலத்திலிருந்த தமிழ் பேசும் வட்டங்களான தோவாளை, அகஸ்தீஸ்வரம், கல்குளம், விளவங்கோடு, செங்கோட்டை, நெய்யாற்றங்கரை, தேவிகுளம், பீர்மேடு மற்றும் சிற்றூர் ஆகியவற்றை முந்தைய சென்னை மாகாணத்துடன் இணைக்கக் கோரி திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி சீரமைப்புக் குழுவிற்குக் கோரிக்கை விடுத்தது. இப்பகுதியில் வாழ்ந்த மக்களுக்கும் தமிழ்நட்டில் வாழ்ந்த மக்களுக்கும் புவியியல் மற்றும் மொழி வழி இருந்த ஒற்றுமை மற்றும் உறவு ஆகிய முதன்மையான இரண்டு சாத்தியக் கூறுகளை கட்சி சீரமைப்புக் குழுவிற்கு தனது கோரிக்கையில் விளக்கியது. திருவாங்கூரின் ஐந்து தென் வட்டங்களான தோவாளை, அகஸ்தீஸ்வரம், கல்குளம், விளவங்கோடு மற்றும் செங்கோட்டை ஆகியவற்றை முந்தைய சென்னை மாகாணத்துடன் இணைக்க குழு முடிவு செய்தது. திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ், முந்தைய சென்னை மாகாணத்துடன் இணைக்கக் கோரிய,

எஞ்சிய நான்கு வட்டங்களையும் திருவாங்கூர்-கொச்சி மாநிலத்திலேயே தொடர்ந்து நீட்டிக்க குழு தீர்மானித்தது. தமிழர்கள் வாழ்ந்து வந்த பீர்மேடு, தேவி குளம் இரண்டு வட்டங்களும், பொருளாதாரச் சிறப்பு வாய்ந்த பகுதியாகக் குழுவினால் கருதப்பட்டதால், அப்பகுதியினை தமிழ்நாட்டுடன் இணைக்கக்கோரிய தமிழர்களின் கோரிக்கை கைவிடப்பட்டது.

மாநில சீரமைப்புக் குழுவின் பரிந்துரைப்படி, 1956ஆம் ஆண்டு, மார்ச் திங்கள், இந்தியப் பாராளுமன்றம், "மாநில சீரமைப்புச்" சட்டத்தை நிறைவேற்றியது. அதன்படி, அதஸ்தீஸ்வரம், தோவாளை, கல்குளம் மற்றும் விளவங்கோடு வட்டங்கள் உள்ளிட்ட "கன்னியாகுமரி மாவட்டம்" என்ற புதிய மாவட்டம் உருவாகியது. செங்கோட்டை வட்டம், முந்தைய திருநெல்வேலி மாவட்டத்துடன் இணைக்கப்பட்டது. 1956-ம் ஆண்டு, நவம்பர் திங்கள் 1-ம் நாள், நாகர்கோயிலைத் தலைநகராகக் கொண்ட கன்னியாகுமரி மாவட்டம் உதயமானது. அந்த சரக மக்களின் நீண்ட கால விருப்பம் கன்னியாகுமரி மாவட்டம் அமைக்கப்பட்டதால் நிறைவேற்றப்பட்டது. மாவட்டம் உருவானபின் நடைபெற்ற முதல் பொதுத் தேர்தலில், திருவாளர்கள் ஏ.நேசமணி, ஏ.சிதம்பரநாத நாடார், டி.டி.டேனியல், எம்.வில்லியம், திருமதி சைமன் மற்றும் டி.எஸ். இராமசாமி பிள்ளை ஆகியோர், சட்டமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். திருமதி சைமன் சென்னை மாநில அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

நூல் அட்டவணை

ஆசிரியர்/வெளியீட்டாளர்	நூலின் பெயர்
1. Pillai .K.K.	The Sucindram Temple, (1953), Madras, p.13.
பிள்ளை. கே.கே.	சுசீந்திரம் திருக்கோயில், (1953), சென்னை, பக்கம் 13.
1. (a) Daniel Rose. N.	The Article to the 'MIRROR', March, (1983), p.87-89.
(அ) டேனியல் ரோஸ் .என்.	மிர்ரர், மார்ச் 1983 - கட்டுரை, பக்கங்கள் 87-89.
2. Govt. of India	Travancore Archaeological Series, Vol. iv, p.118.
மைய அரசு	திருவாங்கூர் தொல்பொருள் ஆராய்ச்சி, தொகுதி, பிரிவு-4, பக்கம் 118.
3. அதே நூற்பகுதி	பக்கங்கள் 193-196
4. Nagam Aiya .V.	Travancore State Manual, (1906), Trivandrum, Vol-I, p.232.
நாகம் அய்யா. வி.	திருவாங்கூர் மாநில நடைமுறை நூல், (1906), திருவனந்தபுரம், தொகுதி -1, பக்கம் 232.
5. Pillai .K.K.	The Sucindram Temple, (1953), Madras - 15.
பிள்ளை .கே.கே.	சுசீந்திரம் திருக்கோயில், (1953), சென்னை, பக்கம் 15.
6. Neelakanta Sastri .K.A.	A History of South India, (1976), IVth Edition, Madras, p.121.
நீலகண்ட சாஸ்திரி .கே.ஏ.	தென்னிந்திய வரலாறு, (1976), 4வது பதிப்பு, சென்னை, பக்கம் 121.
7. Govt. of India Dept. of Archaeology	Travancore Archaeological Series, Vol - I, p.188.
மைய அரசு தொல்பொருள் ஆராய்ச்சித் துறை	திருவாங்கூர் தொல்பொருள் ஆராய்ச்சித் தொகுதி, பிரிவு1,பக்கம் 188.
8. Pillai .K.K.	The Sucindram Temple, (1953), Madras, p.15.
பிள்ளை .கே.கே.	சுசீந்திரம் திருக்கோயில், (1953), சென்னை, பக்கம் 15.
9. Sivarajapillai .K.N.	The Chronology of the Early Tamils, (1932), Madras, p.106.
சிவராஜ பிள்ளை.கே.என்.	தொடக்க காலத்திற்குரிய தமிழர்களின் காலவரிசைப்பட்டி, (1932), சென்னை, பக்கம் 106.
10. (a) Pillai .K.K.	The Sucindram Temple, (1953), Madras, p.16.

(b) Sesha Iyer .K.G. Chera Kings of the Sangam Period, (1937), London, p.129.

(அ) பிள்ளை .கே.கே. சுசீந்திரம் திருக்கோயில், (1953), சென்னை, பக்கம் 16.

(ஆ) சேஷ அய்யர், .கே.ஜி. சங்க காலத்தைச் சார்ந்த சேர மன்னர்கள் (1937), லண்டன், பக்கம் 129.

11. Sivaraja Pillai .K.N. The Chronology of the Early Tamils, (1932), Madras, Synchronistic Tables.

சிவராஜ பிள்ளை.கே.என். தொடக்க காலத்திற்குரிய தமிழர்களின் காலவரிசைப்பட்டி, (1932), சென்னை, ஒரே காலத்திற்குரிய நிகழ்ச்சிகளைக் குறிக்கும் பட்டிகள்.

12. *Ibid* p.118

அதே நூற்பகுதி பக்கம் 118

13. *Ibid* p.114 - 115

அதே நூற்பகுதி பக்கங்கள் 114-115

14. Pillai .K.K. The Sucindram Temple, (1953) Madras, p.16.

பிள்ளை .கே.கே. சுசீந்திரம் திருக்கோயில், (1953) சென்னை, பக்கம் 16.

15. Agananuru Staunza - 25

அகநாநூறு செய்யுட்பத்தி - 25

16. Purananuru Staunza - 120

புறநாநூறு செய்யுட்பத்தி-25

17. (a) Pillai .K.K The Sucindram Temple, (1953), Madras, p-16.

(b) However, K.N. Sivaraja Pillai viewed differently that Atiyan, the successor of Titiyan, had lost the territory to Pasumpon Pandiyan (son of Bhutha Pandian and probably the Pandiya ruler after his conquest must have founded this town in memory of his father Bhuthapandiyan [Sivaraja Pillai .K.N. (The Chronology of the Early Tamils) (1932), Madras, p.122.]

(அ) பிள்ளை.கே.கே. சுசீந்திரம் திருக்கோயில், (1953), சென்னை, பக்கம் 16.

(ஆ) திட்டியனின் பின்னோடியான அட்டியன், தனது ஆட்சிப்பகுதியை பசும்பொன் பாண்டியனிடமிழந்தவர். (இவர் பூத பாண்டியனின் மகனாவார்: இப்பாண்டிய மன்னர், தனது வெற்றிக்குப் பின்னர், இந்நகரத்தை தனது தந்தை பூத பாண்டியனின் நினைவாக நிர்மாணித்திருக்கக் கூடும்) என, திரு.கே.என். சிவராஜபிள்ளை மாறுபட்ட கருத்தினைத் தெரிவிக்கிறார். [சிவராஜபிள்ளை, கே.என்.,தொடக்க காலத்திற்குரிய தமிழர்களின் கால வரிசைப்பட்டி, [1932], சென்னை, பக்கம் 132].

18. Sivaraja Pillai .K.N. The Chronology of the Early Tamils (1932), Madras, Synchronistic table.

சிவராஜபிள்ளை .கே.என். தொடக்க காலத்திற்குரிய தமிழர்களின் கால வரிசைப்பட்டி, (1932), சென்னை, ஒரே காலத்திற்குரிய நிகழ்ச்சிகளைக் குறிக்கும் பட்டியல்.

19. Sivaraja Pillai .K.N. The Chronology of the Early Tamils, (1932), Madras, foot note of the Synchronistic tables.

சிவராஜ பிள்ளை .கே.என். தொடக்க காலத்திற்குரிய தமிழர்களின் காலவரிசைப்பட்டி, (1932), சென்னை, ஒரே காலத்திற்குரிய நிகழ்ச்சிகளை குறிக்கும் பட்டியலின் அடிக்குறிப்பு.

20. நசை பிழைப்பறியா சுழறொடி யதிகன்
கோளற அறியாப் பயங்கெழு பலவின்
வேங்கை சேர்ந்த வெற்பகம் பொலிய
வில்கெழு தானைப் பசும்பூட் பாண்டியன்
களிறணி வெல்கொடி கடுப்பக் காண்வர

21. Pillai. K.K. The Sucindram Temple, (1953), Madras, p.16 & 17.

பிள்ளை.கே.கே. சுசீந்திரம் திருக்கோயில், (1953), சென்னை, பக்கங்கள் 16 மற்றும் 17.

22. Neelakanta Sastri .K.A. A History of South India, (1976), IVth Edition, Madras, p.126.

நீலகண்ட சாஸ்திரி.கே.ஏ. தென்னிந்திய வரலாறு, (1976), 4-வது பதிப்பு, சென்னை, பக்கம் 126.

23. Pillai .K.K. The Sucindram Temple, (1953), Madras, p.17.

பிள்ளை .கே.கே. சுசீந்திரம் திருக்கோயில், (1953), சென்னை, பக்கம்-17.

24. *Ibid* p.18

அதே நூற்பகுதி பக்கம்18

25. Sesha Iyer. K.G. Chera Kings of Sangam Period, (1937), London, p.121.

சேஷ அய்யர். கே.ஜி. சங்க காலத்தைச் சார்ந்த சேர மன்னர்கள், (1937), லண்டன், பக்கம் 120.

26. (a) Pillai .K.K. The Sucindram Temple, (1953), Madras, p.19.

(b) Sivaraja Pillai .K.N. The Chronology of the Early Tamils, (1932), Madras, p.122.

(அ) பிள்ளை .கே.கே. சுசீந்திரம் திருக்கோயில், (1953), சென்னை, பக்கம் 19.

(ஆ) சிவராஜ பிள்ளை.கே.ஏ. தொடக்க காலத்திற்குரிய தமிழர்களின் காலவரிசைப்பட்டி, (1932), சென்னை, பக்கம் 122.

27. Caldwell Bishop	History of Tinnevelly (Asian Educational Service, Reprint) 1982, p.3.
கால்டுவெல் பிஷப்	திருநெல்வேலி வரலாறு (ஆசிய கல்விப் பணி நிறுவனம், மறு அச்சுப் பதிப்பு), 1982 பக்கம் 3.
28. Govt. of India, Dept. of Archaeology	Inscriptions of Parantaka Pandya, Travancore Archaeological Series, Volume no.3.
மைய அரசு, தொல்பொருள் ஆராய்ச்சித் துறை	பராந்தக பாண்டியனின் கல்வெட்டுக்கள், திருவாங்கூர் தொல் பொருள் ஆராய்ச்சித் தொகுதி, பிரிவு 1, எண் 3.
29. Purananuru	Staunza, 9
புறநானூறு	செய்யுட் பத்தி 9
30. "தென்னவர் தம்குல தெய்வம் தென்குமரி"	(மதுரைக் காஞ்சி-வரி 190)
31. Neelakanta Sastri .K.A.	The Pandya Kingdom, (1929), 1972, Reprint, Madras, p.23.
நீலகண்ட சாஸ்திரி .கே.ஏ.	பாண்டியப்பேரரசு, (1929), 1972-மறு அச்சிப்பதிப்பு, சென்னை, பக்கம் 23.
32. Neelakanta Sastri. K.A.	A History of South India, (1959), IVth, Edition, 1976, p.172. But, the same author in his earlier work "The Pandya Kingdom (1929), 1972, Reprint, Madras" - presents a slightly different chronology. However, we accept his latter view.
நீலகண்ட சாஸ்திரி. கே.ஏ.	தென்னிந்திய வரலாறு, (1959), நான்காம் பதிப்பு, 1976, பக்கம் 172, ஆனால், இதே நூலாசிரியர், அவரது முந்தைய படைப்பான "பாண்டியப் பேரரசு 1929-மறு பதிப்பு, 1972-சென்னை" என்ற நூலில் மாறுபட்ட காலவரிசைப் பட்டியை அளித்திருக்கிறார். எனினும், நாம் அவரது பிந்தைய கருத்தினை ஏற்கிறோம்.

திரு.கே.ஏ.என். சாஸ்திரி அவர்களது முந்தைய படைப்பான "பாண்டியப் பேரரசு" என்ற நூலில் கண்டவாறு, தொடக்க காலத்திற்குரிய பாண்டியர்களின் காலவரிசைப்பட்டி:

	கி.பி.
1. காடுங்கன்	500-620
2. மாரவர்மன் ஆவணி சூளாமணி	620-645
3. சேந்தன்	645-670

4. அரிகேசரி மாரவர்மன்	670-710
5. கோச்சடையான்	710-740
6. மாரவர்மன்- இராஜசிம்மன்-1	740-765
7. ஜடில பராந்தக நெடுஞ்செழியன்	765-815
8. ஸ்ரீ மார சிவவல்லபன்	815-862
9. வரகுண வர்மன்	862-880
10. பராந்தக வீரநாராயணன்	880-900
11. மாரவர்மன் இராஜசிம்மன்-2	900-920

33. Neelakanta, Sastri .K.A. — The Pandya Kingdom, (1929), 1972, Reprint, Madras, p.23.

நீலகண்ட சாஸ்திரி.கே.ஏ. — பாண்டியப் பேரரசு, (1929), 1972-மறு பதிப்பு,சென்னை,பக்கம் 47.

34. Pillai .K.K. — The Sucindram Temple, (1953), Madras, p.21 (foot note).

பிள்ளை .கே.கே. — சுசீந்திரம் திருக்கோயில், (1953), சென்னை, பக்கம் 21-ல் கண்ட அடிக்குறிப்பு.

35. *Ibid* — p.29

அதே நூற்பகுதி — பக்கம் 29

36. *Ibid* — p.22

அதே நூற்பகுதி — பக்கம் 22

37. Neelakanta Sastri .K.A. — The Pandya Kingdom, (1929), 1972, Reprint, Madras, p.50, (foot note 3).

நீலகண்ட சாஸ்திரி.கே.ஏ. — பாண்டியப் பேரரசு, (1929), 1972, மறு பதிப்பு, சென்னை, பக்கம் 50-ல் கண்ட அடிக்குறிப்பு-3.

38. Pillai .K.K. — The Sucindram Temple, (1953), Madras, p.22.

பிள்ளை.கே.கே. — சுசீந்திரம் திருக்கோயில், (1953), சென்னை, பக்கம் 22.

39. Neelakanta Sastri .K.A. — The Pandya Kingdom, (1929), 1972, Reprint, Madras, p.54.

நீலகண்ட சாஸதிரி .கே.ஏ. — பாண்டியப் பேரரசு, (1929), 1972, மறுபதிப்பு, சென்னை, பக்கம் 54.

40. Pillai .K.K. — The Sucindram Temple, (1953), Madras, p.23 foot note (Even today, Aralvoimozhi is Spoken as Kottaikarai)

பிள்ளை .கே.கே.	சுசீந்திரம் திருக்கோயில், (1953), சென்னை பக்கம் 23-ல் கண்டிருந்த அடிக்குறிப்பு (இன்றும், 'ஆரல்வாய்மொழி', "கோட்டைக் கரை" என்றே அழைக்கப்படுகிறது).
41. *Ibid*	p.23 - 24
அதே நூற்பகுதி	பக்கங்கள் 23-24
42. *Ibid*	p.24
அதே நூற்பகுதி	பக்கம் 24

43. It was this Ayivel ruler who was subdued by the Pandya, Jatila Paranthaka in Ariviyurkottai and other places.

இந்த ஆயிவேல் மன்னர்தான், பாண்டிய மன்னரான ஜடில பராந்தகரால், அறிவியூர் கோட்டை மற்றும் இதர இடங்களில் தோற்கடிக்கப்பட்டார்.

44. Kanjampillai	Sila Kerala Charithra Prasarangal, Part-I, p.112-113.
கெஞ்சம்பிள்ளை	சில கேரள சரித்திர பிரசாரங்கள் பகுதி-1, பக்கங்கள் 112-113.
45. Sreedhara Menon .A.	Editor - Kerala District Gazetteer, Trivendrum District, (1962), Trivendrum, p.108.
ஸ்ரீதர மேனன் .ஏ.	பதிப்பாசிரியர்-கேரள மாவட்ட விவரச் சுவடிகள், திருவனந்தபுரம் மாவட்டம், (1962), திருவனந்தபுரம், பக்கம் 108.
46. *Ibid*	p.107
அதே நூற்பகுதி	பக்கம் 107
47. Neelakanta Sastri .K.A.	The Cholas, (1935), Madras, p.202 - 203.
நீலகண்ட சாஸ்திரி .கே.ஏ.	சோழர்கள், (1935), சென்னை, பக்கங்கள் 202-203.
48. Pillai .K.K.	The Sucindram Temple, (1953), Madras, p.26.
பிள்ளை .கே.கே.	சுசீந்திரம் திருக்கோயில், (1953), சென்னை, பக்கம் 26.
49. Neelakanta Sastri .K.A.	The Cholas, (1935), Madras, p.196-197.
நீலகண்ட சாஸ்திரி. கே.ஏ.	சோழர்கள், (1935), சென்னை, பக்கம் 196-197.
50. *Ibid*	p.202 - 203
அதே நூற்பகுதி	பக்கங்கள் 202-203
51. *Ibid*	p.608 - 618
அதே நூற்பகுதி	பக்கம் 608-618

52. *Ibid* p.244

அதே நூற்பகுதி பக்கம் 244

53. Pillai .K.K. The Sucindram Temple, (1953), p.26

பிள்ளை .கே.கே சுசீந்திரம் கோயில், (1953), பக்கம் 26

54. Kulothunga *alias* Rajendra-II was the grandson of Rajendra-I through his daughter Ammanga Devi, married to an Eastern Chalukya Prince.

குலோத்துங்கர் என்ற இரண்டாம் இராசேந்திரர் முதலாம் இராசேந்திரரின் பேரனாவார். கிழக்கு சாளுக்கிய இளவரசருக்கு திருமணம் செய்யப்பட்ட முதலாம் இராசேந்திரரின் மகளான அம்மங்காதேவியின் மகன்தான், குலோத்துங்கர் என்ற இரண்டாம் இராசேந்திரர்.

55. Pillai .K.K. The Sucindram Temple, (1953), p.28

பிள்ளை .கே.கே. சுசீந்திரம் கோயில், (1953), பக்கம் 28

56. *Ibid* p.28

அதே நூற்பகுதி பக்கம் 28

57. Neelakanta Sastri .K.A. The Pandya Kingdom, (1929), 1972, Reprint, Madras, p.67.

நீலகண்ட சாஸ்திரி .கே.ஏ. பாண்டியப் பேரரசு, (1929), 1972-மறு பதிப்பு, சென்னை, பக்கம் 67.

58. (a) *Ibid* p.110

(b)Neelakanta Sastri .K.A. The Cholas, (1935), Madras, p.529.

(அ) அதே நூற்பகுதி பக்கம் 110

(ஆ) நீலகண்ட சாஸ்திரி .கே.ஏ. சோழர்கள், (1935), சென்னை, பக்கம் 529

59. *Ibid* p.111

அதே நூற்பகுதி பக்கம் 111

60. Pillai .K.K. The Sucindram Temple, (1953), p.29.

பிள்ளை. கே.கே. சுசீந்திரம் திருக்கோயில், (1953), பக்கம் 29

61. *Ibid* p.29.

அதே நூற்பகுதி பக்கம் 29

62. Nagam Aiya .V. Travancore State Manual, (1906), Trivandrum, Vol-I, p.251.

நாகம் அய்யா .வி. திருவாங்கூர் மாநில நடைமுறைநூல், (1906), திருவனந்தபுரம், தொகுதி-1, பக்கம் 251.

63. "எத்திசையும் புகழ்படைத்த கொல்லம் இருநூற்றி
தொண்ணூற்றிரண்டாமாண்டு
வெற்றி செய்யும் குடும்பத்தில் வியாழநின்ற
விளங்கு திங்களாவணி பன்னொன்றாந்தேதி

பெரிதும் பாதித்துள்ளன. மாவட்டத்தின் இவ்வகையான மொழிச் சிறப்பியல்பினை வெளிக்கொணர்ந்திட, கன்னியாகுமரி மாவட்ட விவரச் சுவடி எழுதுவதற்காக, ஒரு தனி ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வு, அண்ணாமலைப் பல்கலைக்கழக, மொழி நூலாராய்ச்சித் துறையினரால் நடத்தப்பட்டது. தெளிவாகத் தெரிகிற அந்நிலப் பகுதியின் பழக்க மரபுகள் மற்றும் பேச்சு வழக்கில் ஏற்பட்ட மாறுபாடுகள் ஆகியவை குறித்து ஆழமாக சிந்தித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இது தொடர்பாக எழுதப்பட்ட தனி அறிக்கையினை, தொகுதியின் இணைப்பில் காணலாம். உடனிகழ்வாக, மாவட்ட மக்களின் மரபாராய்ச்சியும் தனியாக செய்யப்பட்டது. அதன் முடிவில் எழுதப்பட்ட அறிக்கையினை இணைப்பு 2-ல் காணலாம்.

சமயம், மற்றும் சமுதாயப்பிரிவு

1981-ம் ஆண்டில், மக்கள் தொகைக் கணக்கெடுப்பு கையேட்டில் பல சமயத் தொகுதிகளின் மக்கள் தொகைப்புள்ளி விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. சமயம், முதன்மையான மற்றும் மக்களின் நாகரீகத்தை முறையாக வேறுபடுத்திக்காட்டும் இயல்புடைய ஆதாரமாகத் திகழ்கிறது. 1951 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பிற்கு முன்பாக நம் நாட்டில் கணக்கெடுப்பு பட்டியல்களில் காணப்படும் புள்ளி விவரங்கள் சமயத்தை அடிப்படையாகக் கொண்டுதான், தொகுக்கப்பட்டன. இதிலிருந்தே, நம் நாட்டில் சமயத்திற்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவத்தை நாம் உணரலாம். 1952ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பி லிருந்துதான், புள்ளி விவரங்களைத் தொகுக்க, 'பொருளாதார வகுப்பு முறை" கையாளப்பட்டு வருகிறது. மாநிலத்தின் ஏனைய இடங்களிலுள்ளது போன்று, கன்னியாகுமரி மாவட்டத்திலும், இந்து சமயத்தைச் சார்ந்தோர், கணிசமான அளவு உள்ளனர். (56.99 விழுக்காடு பட்டியல் 3:6:1). எனினும், மாநிலத்தின் மற்ற மாவட்டங்களிலுள்ள இந்து சமய மக்கள் தொகையை ஒப்பு நோக்கும்போது, இது மிகவும் குறைந்த விழுக்காடாகும். மாநிலத்திலுள்ள இந்து சமய மக்கள் தொகையின் சராசரி விழுக்காட்டைவிட அதிகமாகவே உள்ளது (88.86 விழுக்காடு). ஏனைய மாவட்டங்கள் 80-க்கும் மேலாக, இந்து சமய மக்கள் தொகையைக் கொண்டுள்ளன. எனவே, இந்துக்கள் "பெரும்பான்மைத் தொகுதி"யினராயிருக்கிறார்களெனக் கொள்ளலாமேயன்றி, "பெருந் தொகையிலிருக்கிறார்களெனக் கருத இயலாது"; ஏனெனில், மக்கள் தொகையில் கிறித்துவர்கள் 38.77 விழுக்காடு ஆக அங்கம் வகிக்கிறார்கள்.

மாவட்டத்தின் கிறித்துவ மக்கள் தொகையின் விழுக்காடு, இதர மாவட்டங்களிலுள்ள கிறித்துவ மக்கள் தொகையின் விழுக்காட்டை விட உயர்ந்து காணப்படுகிறது. மேலும், மாநிலத்திலுள்ள கிறித்துவ மக்கள் தொகையின் விழுக்காட்டை விட ஏழு மடங்கு அதிகமாக

பட்டியல் 3 :4

கன்னியாகுமரி மாவட்டத்தில், பல்வேறு மொழிகள் பேசும் மக்களின் எண்ணிக்கை

மொழிகள்	மொத்த குடும்பங்கள்	ஆண்கள்	பெண்கள்	மொத்தம்
குஜராத்தி	301	844	794	1638
இந்தி	25	96	56	152
கன்னடம்	31	82	72	154
மலையாளம்	26539	69426	69433	1,38,859
மராத்தி	11	29	16	45
ஒரியா	1	1	-	1
பஞ்சாபி	2	2	3	5
தமிழ்	2,49,143	6,416,20	6,303,14	1,271,934
தெலுங்கு	416	1051	1036	2087
உருது	73	211	195	406

பட்டியல் 3 : 5

தமிழ்நாட்டில் பல்வேறு மொழிகள் பேசும் மக்களின் எண்ணிக்கை

மொழிகள்	மொத்த குடும்பங்கள்	ஆண்கள்	பெண்கள்	மொத்தம்
அஸ்ஸாமி	61	107	87	194
பெங்காளி	977	1940	1775	3715
குஜராத்தி	43620	110113	106925	217038
இந்தி	20285	59531	52058	111589
மலையாளம்	122154	306278	271612	577890
மராத்தி	12777	33046	32150	65196
ஒரியா	336	755	625	1380
பஞ்சாபி	1203	2632	2450	5082
சமஸ்கிருதம்	56	130	114	244
இந்தி	1836	5048	4919	9967
தமிழ்	8,813,176	2,06,83,066	2,03,62,525	4,10,45,591
தெலுங்கு	842.485	20,15,573	19,72,894	39,88,467
உருது	152,697	4,38,292	4,26,519	8,64,811

உள்ளது. (பட்டியல் 3.6.3). முகம்மதியர்கள், மக்கள் தொகையில் 4.23 விழுக்காடு உள்ளனர். ஆனால், சமணர்கள், சீக்கியர்கள் மற்றும் ஏனைய சமயத்தினர், மிகவும் குறைவாக உள்ளனர். எனவே, மாவட்டத்தின் பெரும்பான்மையான மக்கள் தொகையினர், இந்து மற்றும் கிறித்துவ சமயத்தைச் சார்ந்தோராகும். முகம்மதிய மக்கள் தொகையின் பரிமாணம், மாநிலத்தின் முகம்மதிய சமய மக்கள் தொகையினின்றும் வேறுபடவில்லை. மாநிலம் மற்றும் மாவட்டத்தின் வட்டங்களிலுள்ள பலதரப்பட்ட சமயங்களைச் சார்ந்த தொகுதிகளின் மக்கள் தொகை புள்ளி விவரங்கள் முறையே பட்டியல்கள் 3:6:1 மற்றும் 3:6:2 ஆகியவற்றில் கொடுக்கப்பட்டுள்ளன.

மாவட்டத்தின் மொத்த கிறித்துவ மக்கள் தொகை 5,51,908 ஆகும். இதனில், விளவங்கோடு மற்றும் கல்குளம் வட்டங்களில், அவர்கள் முழுச்செறிவிலுள்ளார்கள். இவ்விரு வட்டங்களில் மட்டும் 4,16,451 கிறித்துவ மக்கள் வாழ்கிறார்கள். இதற்கு நாம் அவ்விதமான முகாந்திரத்தையும் அளிக்க இயலாத போதிலும், இப்பகுதி அண்டை மாநிலமான கேரள மாநிலத்தையடுத்துள்ளதே முழு முதற்காரண மென்பது கண்கூடு. நமது மாறுபாட்டிற்கு எதிரான மற்றொரு அம்சமென்னவெனில், கிறித்துவ மக்கள் தொகை, நகர்ப்பகுதியைவிட புறப்பகுதியில் மிகவும் அதிகமாக உள்ளது. கிறித்துவர்கள் மாவட்ட முழுமையிலும், குறிப்பாக மேற்கண்ட இரண்டு வட்டங்களிலும் பரந்து காணப்படுகிறார்களெனவே இதற்கு பொருள்படும். இவ்விரண்டு சமயத்தவர்களில் கலவை, மாநிலத்தில், குறிப்பாக இம்மாவட்டம் பற்றிய வேறுபடுத்திக் காட்டும் தனி இயல்பை வெளிப்படுத்துகிற தென்பது பட்டியல்களைக் கூர்ந்து நோக்கின் நாம் உணர முடிகிறது.

நமது நாட்டில் "சமுதாயப்பிரிவு முறை" குறிப்பாக நாடு சுதந்திரம் பெற்ற பின்னர், வலிமை குன்றிவிட்டதென்ற கூற்று உண்மைதான்: இதற்கு முதன்மையான காரணம் சமுதாயத்தில் கல்வி வளர்ச்சியும், போக்குவரத்துப் பணியில் நாடு கண்டுள்ள முன்னேற்றமுமேயாகும். நாடு தனி ஆட்சி உரிமை பெறுவதற்கு முன்னர், சமுதாயப் பிரிவின் அடிப்படையில், கடுமையான சமூகப்பழக்க வழக்கங்களை பழங்காலத்தில் மக்கள் கடைப்பிடித்து வந்ததாக, ஆங்கில வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் அவர்கள் பிரசுரித்த மாவட்ட விவரச் சுவடிகளில், சுட்டி காட்டியிருந்தார்கள். ஆனால், அவை தற்போது பெரும்பாலும நடைமுறையிலில்லையென்பதை நாம் காண முடிகிறது. இருப்பினும். ஒரு சில சமுதாயப்பிரிவுகள், மாவட்டத்தில், தொடர்ந்து ஆதிக்கம் வகிப்பது, இன்றும் நடைமுறையிலிருந்து வருகிறது. பொதுவாக, மதுரை, இராமநாதபுரம் உள்ளிட்ட தென்மாவட்டங்களில், இந்து நாடார்கள், ஒரு பெரும்பான்மையான சமுதாயத்தினராகத் திகழ்கிறார்கள். இச்சமுதாயத்தின் ஒரு கணிசமான பிரிவினர் கிறித்துவ சமயத்தில் இணைந்துவிட்டனர். இச்சமுதாயத்தைச் சார்ந்த மக்கள், வேளாண்மை, கள்-இறக்குதல், வாணிகம், மற்றும் வாணிகத் தொடர்பு ஆகியவற்றில் வெற்றிநடை போடுகிறார்கள்.

நாஞ்சில் நாட்டு வெள்ளாளர்கள், கி.பி. முதலாம் நூற்றாண்டில் மதுரையிலிருந்து குடியேறியதாகக் கூறப்படுகிறது. அவர்கள் மாவட்டத்தின் மற்றொரு பெரிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாகத் திகழ்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்டம், பாண்டிய நாட்டு ஆட்சிப்பகுதியுடன் பல காலம் இணைந்திருந்ததால், இந்த வேளாண் குடிமக்கள், திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து தெற்கே குடியேறியிருக்கலாமென யூகிக்கப்படுகிறது.

மாவட்டத்தில், இரண்டு பறவர் சமுதாயங்கள் உள்ளன. ஒரு தொகுதியினர் அட்டவணையிற் சேர்க்கப்பட்ட வகுப்பினராவர். 1981ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்புப்படி, அவர்களது எண்ணிக்கை 1472 ஆகும். மற்றொரு சமூகத்தினர், மாவட்டத்திலுள்ள முக்கிய சமுதாயத்தினரின் மூன்றாவது இடத்திலிருக்கிறார்கள். இவர்கள் பெரும்பாலும், ரோமன் கத்தோலிக்க சமயக் கோட்பாடுகளைப் பின்பற்றுபவர்களாவர். கடலோடிகளான அவர்கள், தூத்துக்குடியிலிருந்து வந்து, கடலோரப்பகுதிகளில் பரவலாக வாழ்பவர்களென நம்பப்படுகிறது.

முக்தவர்கள் என்ற இனத்தினர், முத்துக் குளித்து, முத்துச் சிப்பி எடுப்பதில் வல்லவர்கள். அவர்கள் ஸ்ரீலங்காவிலிருந்து, இங்கு வந்து குடியேறியதாகக் கூறப்படுகிறது. அவர்களில் பெரும்பாலோனோர், கத்தோலிக்க கிறித்துவர்கள். கிருஷ்ணன் பிறப்பிடமான அம்பாடியைச் சேர்ந்தவர்கள். அவர்களது முதன்மையான பணி, வேளாண்மையாகும். அடுத்த சமுதாயத்தினரான நாயர்கள், முன்னர் இராணுவத்தில் பணியாற்றியவர்கள். அவர்கள் தற்போது, வேளாண்மை, அரசுப்பணி மற்றும் ஏனைய பணிகளில் ஈடுபட்டுள்ளார்கள்.

விளக்கித்தல நாயர், கம்மாளர் அல்லது ஆசாரி, சக்ரவார்கள் மற்றும் கேரள முதலியார் ஆகியோர், மாவட்டத்திலுள்ள முதன்மையான சமுதாயத்தினர் ஆவர்.

மாவட்டத்தில் அட்டவணையிட்ட வகுப்பினரின் எண்ணிக்கை 4.23 விழுக்காடும், அட்டவணையிட்ட பழங்குடியினர், 0.45 விழுக்காடும் உள்ளனர். மாவட்டத்தில் அட்டவணையிட்ட வகுப்பினர் மற்றும் அட்டவணையிட்ட மலைவாழ்வகுப்பினர் ஆகியோரின், வட்ட வாரியான புள்ளி விவரங்கள் பட்டியல் 3:6-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

மாவட்டத்திலுள்ள இந்து சமுதாயத்தினரின் அமைப்பு முறை எந்த விதத்திலும் வேறுபட்டதல்ல. ஒரே மாதிரியான சமய நம்பிக்கைகள் மற்றும் பழக்க வழக்கங்கள் பின்பற்றப்படுகின்றன. 1961 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்புப்படி, மாவட்டத்தில் 126 திருக்கோயில் களுள்ளன. மாவட்டத்திலுள்ள இந்து சமயத் திருக்கோயில்களில், சுசீந்திரத்திலுள்ள தாணுமாலயன் திருக்கோயில், குமரி முனையிலுள்ள கன்னியாகுமரி அம்மன் திருக்கோயில், நாகர் கோயிலிலுள்ள நாகராஜா திருக்கோயில், குமரன்கோயில், பத்ம நாபசுவாமி திருக்கோயில், மண்டைக்காட்டிலுள்ள பகவதி அம்மன் திருக்கோயில் ஆகியவை

பட்டியல் 3 : 6

அட்டவணையிட்ட வகுப்பினர் மற்றும் அட்டவணையிட்ட மலைவாழ் வகுப்பினர் ஆகியோரின் வட்ட வாரியான மக்கள் தொகை

வட்டத்தின் / நகரத்தின் பெயர்	மொத்தம் கிராமப்புறம் நகர்ப்பகுதி	அட்டவணையிட்ட வகுப்பினர்			அட்டவணையிட்ட மலைவாழ் வகுப்பினர்		
		ஆண்கள்	பெண்கள்	மொத்தம்	ஆண்கள்	பெண்கள்	மொத்தம்
விளவங்கோடு வட்டம்	மொ	6383	6504	12887	1153	1157	2310
	கி	6170	6302	12472	1153	1157	2310
குழித்துறை நகராட்சி	ந	213	202	415	-	-	-
	ந	213	202	415	-	-	-
கல்குளம் வட்டம்	மொ	8829	8545	17374	1589	1481	3070
	கி	7608	7399	15007	1573	1472	3045
	ந	1221	1146	2367	16	9	25
பத்மநாபபுரம் நகராட்சி	ந	973	902	1875	16	9	25
கொளச்சல் நகராட்சி	ந	248	244	492	-	-	-
தோவாளை வட்டம்	மொ	4089	4118	8207	109	95	204
	கி	4089	4118	8207	109	95	204
	ந	-	-	-	-	-	-
அகஸ்தீஸ்வரம் வட்டம்	மொ	10748	10957	21705	396	378	774
	கி	7645	7967	15612	146	157	303
	ந	3103	2990	6093	250	221	471
நாகர்கோவில் நகராட்சி	ந	3043	2936	5979	200	175	375
கன்னியாகுமரி நகரியம்	ந	60	54	114	50	46	96

மொ = மொத்தம், கி = கிராமப்புறம், ந = நகர்ப்பகுதி

ஆதாரம் : இந்திய மக்கள் தொகை - 1981, கன்னியாகுமரி மாவட்டம் பக்கம் 88

குறிப்பிடத்தக்கவை. சைவ, வைணவ சிறப்புத் தொழுகையிடங்களும், அதே கோயிலில் பல இடங்களில் உள்ளன. திருக்கோயில்களின் பூஜைகளுக்கு, பொதுவாக, *மந்திர, தந்திர முறைகள்* கையாளப்படுகின்றன.

சிவன், விஷ்ணு, பிள்ளையார், முருகர், அம்பிகை (பகவதி) மற்றும் சாஸ்தா ஆகிய முதன்மையான தெய்வங்களை மக்கள் வழிபடுகின்றனர். அம்பிகை, சாஸ்தா மற்றும் சில இடங்களில் முருகர் ஆகியவை மக்கள் பிரபலமாக வணங்கும் தெய்வங்களாகும். கன்னியாகுமரிக் கடற்கரையிலுள்ள புகழ் வாய்ந்த பகவதி அம்மன் கோயில் இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் பல ஆயிரக்கணக்கான யாத்ரீகர்களைக் கவரும் கோயிலாகும். தக்களைக்கு அருகாமையிலுள்ள, குமரன் கோயிலிலிருக்கும் சுப்ரமணியசுவாமி கோயில், அருள்மிகு குமரப்பெருமானுக்கு அர்ப்பணம் செய்யப்பட்டதாகும். இக்கோயிலும் பல பக்தர்களைக் கவரும் திருக்கோயிலாகும். முதன்மையான சிவன் கோயில்களில், பத்மநாபபுரத்திலுள்ள நீலகண்டசுவாமி கோயில், முஞ்சிரையிலுள்ள திருமலை கோயில் (இங்கு முதன்மையான தெய்வங்கள் சிவனும், விஷ்ணுவுமாவர்), பேச்சிப்பாறைக்குச் செல்லும் வழியிலுள்ள திருநந்திக்கரைக்கோயில் மற்றும் தீருப்பரப்பு கோயில் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. நாகர்கோயிலுக்கு அருகாமையிலுள்ள திருவட்டார் கோயில் மற்றும் திருப்பதிஸ்வரம் கோயில் ஆகியவை விஷ்ணு கோயில்களில் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். மதுசூதனப் பெருமானுக்கு அர்ப்பணம் செய்யப்பட்ட நாகர்கோயிலுக்கு அருகாமையிலுள்ள பரக்கை கோயிலும் குறிப்பிடத்தக்கதாகும். மாவட்டத்திலுள்ள பல பெரிய கோயில்களில், "ஆண்டுத் திருவிழா" நடைபெறுகிறது. சில கோயில்களில், ஒரு ஆண்டில் இரண்டிற்கு மேற்பட்ட திருவிழாக்களும் நடைபெறுவதுண்டு. பொதுவாக ஆண்டுத் திருவிழா 10 நாட்களுக்குத் தொடர்ந்து நடக்கும்.

திருவிழாவிற்கு அதிக அளவில் பக்தர்கள் வருகை தருவார்கள். இந்துக்களின் சமயக் கோட்பாடு வாழ்க்கை நெறிமுறையில், மாதத்தின் சில முக்கியமான நாட்களில், உண்ணாமல், விரதம் அனுசரிக்கும் முறை வழக்கிலுள்ளது. அவ்வாறு விரதம் அனுசரிக்கப்படும் நாட்கள், ஆண்டின் 12 மாதங்களிலும் வருவதுண்டு. இவை, தெய்வத்தை ஆழ்ந்து சிந்திக்கும் நாட்களாகக் கருதப்படும். இவை தவிர, சமுதாயப் பிரிவுகளின், ஒவ்வொரு உட்பிரிவிலுமுள்ளோர் ஒவ்வோராண்டும், சில தனி நாட்களில், விரதம் மேற்கொள்கிறார்கள். இவ்வாறாக *"வைகுண்ட ஏகாதசி"* விஷ்ணுவிற்குப் புனிதமான நாளாகும். அதே போன்று, *சிவராத்திரியன்று* இரவு, சிவபெருமானுக்குப் புனிதமான நாளாகும்.

அட்டவணையிடப்பட்ட பழங்குடியினரின் (காணிகள்) மதச்சடங்கு மற்றும் தெய்வத்தை வழிபடும் முறை ஆகியவை, பொதுவாக, நீண்ட மற்றும் சிக்கல் வாய்ந்த சமய உணர்வு நிலையைக் கொண்டவையாகும். முற்பட்ட காலத்திய சமயக் கோட்பாடுகளில், ஆவியுலகக்

பட்டியல் - 3:6:1

ஆறு பெரிய சமயங்களின் வளர்ச்சியும், இதர சமயங்களின் வளர்ச்சியும், சமயக்கோட்பாடுகலும் தனியாகக் கொடுக்கப்படாத ஏனைய சமயங்களும், (1971-1981 பத்தாண்டு மக்கள் தொகை காலத்திற்குரியவை). பெரிய சமயங்களைச் சார்ந்த சமுதாயப் பிரிவினரின் (அ) மக்கள்தொகையும் (ஆ) அதிகரித்துள்ள மக்கள் தொகையின் விழுக்காடும் (1971-1981).

தொடர் எண்.	மாநிலம் / மாவட்டம்	மக்கள் தொகை ஆண்டு	மொத்த மக்கள் தொகை	மொத்த மக்கள் தொகை அதிகரிப் பின் விழுக்காடு	கொத்தமர்கள்		கிறித்தவர்கள்			இந்துக்கள்		
					மக்கள் தொகை	அதிகரிப் பின் விழுக்காடு (1971-81)	மக்கள் தொகை	மொத்த மக்கள் தொகைக்கு அதிகரிப்பான விழுக்காடு	1971-83 அதிகரிப்பு விழுக்காடு	மக்கள் தொகை	மொத்த மக்கள் தொகைக்கு அதிகரிப்பான விழுக்காடு	1971-83 அதிகரிப்பு விழுக்காடு
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)
	தமிழ்நாடு	1971	41,199,168	17.50	148	(-)35.98	2,367.749	5.75	18.17	36,674,150	89.02	17.29
		1981	48,808,077		735		2,998,048	5.78		33,016,546	88.86	
1.	சென்னை	1971	2,579,276	27.04	705	(-)55.04	168,150	6.52	30.96	2,177,517	84.42	26.95
		1981	3,276,622		317		220,211	6.72		2,764,286	84.36	
2.	செங்கற்பட்டு	1971	2,797,772	29.26	71	23.35	114,260	4.08	43.62	2,599,852	92.93	28.21
		1981	3,616,508		89		164,105	4.54		3,333,194	92.17	
3.	வட ஆற்காடு	1971	3,755,797	17.53	28	553.57	99,127	2.64	17.17	3,402,048	90.58	17.03
		1981	4,414,324		183		116,151	2.63		3,981,291	90.19	
4.	தென் ஆற்காடு	1971	3,617,723	16.15	163	(-)93.25	131,948	3.65	15.80	3,346,199	92.50	15.90
		1981	4,201,869		11		120.70	3.63		3,878,325	92.30	
5.	தர்மபுரி	1971	1,677,775	19.03	28	★	17,882	1.07	103.60	1,581,746	94.28	19.03
		1981	1,997,060				36,408	1.82		1,882,735	94.28	
6.	சேலம்	1971	2,992,616	15.01	4	450.00	39,028	1.30	19.65	2,891,407	96.62	14.71
		1981	3,441,717		22		46,698	1.36		3,316,840	96.37	
7.	பெரியார்	1971	1,797,016	15.11	–	-	38,982	2.17	7.34	1,715,118	95.44	15.22
		1981	2,068,462				41,845	2.02		1,976,157	95.54	

பட்டியல் - 3 :6 :1 - தொடர்ச்சி

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)
8	கோயம்புத்தூர்	1971	2,576,162	18.79	27	37.04	94,415	3.67	20.74	2,370.427	92.01	18.22
		1981	3,060,184		37		113,994	3.73		2,802,392	91.58	
9.	நீலகிரி	1971	494,015	27.56	18	(-)66.67	67,302	13.62	13.92	377.645	76.45	30.60
		1981	630,169		6		76,672	12.17		493,219	78.27	
10.	மதுரை	1971	3,938,197	15.18	18	(-)38.89	179,873	4.57	12.97	3,578,960	90.88	15.25
		1981	4,535.897		11		203,194	4.48		4,124,663	90.93	
11.	திருச்சிராப்பள்ளி	1971	3,192,134	13.16	27	(-)14.81	189.195	5.94	13.57	2,857,669	89.52	12.83
		1981	3,612,320		23		215,209	5.96		3,224,315	89.26	
12.	தஞ்சாவூர்	1971	3,550,063	14.46	43	(-)53.49	145,493	4.10	16.05	3,165,846	89.18	13.86
		1981	4,063,545		20		168,845	4.16		3,604,729	88.71	
13.	புதுக்கோட்டை	1971	947,351	22.11	-	-	44,444	4.66	24.65	841,191	88.80	21.82
		1981	1,156,813				55,026	4.76		1,024,721	88.58	
14.	இராமநாதபுரம்	1971	2,860,207	16.62	-	-	161,642	5.65	21.51	2,498,573	87.36	16.49
		1981	3,335,437		9		196,404	5.89		2,910,507	87.26	
15.	திருநெல்வேலி	1971	3,200,515	11.66	13	(-)84.62	400,397	12.51	9.54	2.575,430	80.47	12.14
		1981	3,573,751		2		438,585	12.27		2,887,992	80.81	
16.	கன்னியாகுமரி	1971	1,222,549	16.43	3	66.67	175,611	38.90	16.04	4,694.522	56.81	16.80
		1981	1,423,399		5		551,908	38.77		811,180	56.99	

பட்டியல் - 3 : 6 : 1 - தொடர்ச்சி

தொடர் எண்.	மாநிலம் / மாவட்டம்	மக்கள் தொகை ஆண்டு	சமணர்கள்			முகம்மதியர்கள்			சீக்கியர்கள்	
			மொத்த மக்கள் தொகை	மொத்த மக்கள் தொகைக்கு அதிகரிப்பு விழுக்காடு	1971–81–க்கு அதிகரிப்பு விழுக் காடு	மக்கள் தொகை	மொத்த மக்கள் தொகைக்கு அதிகரிப்பு விழுக்காடு	1971–81–க்கு அதிகரிப்பு விழுக் காடு	மொத்த மக்கள் தொகைக்கு அதிகரிப்பு விழுக்காடு	1971 81–க்கு அதிகரிப்பு விழுக் காடு
	(1)	(2)	(14)	(15)	(16)	(17)	(18)	(19)	(20)	(21)
	தமிழ்நாடு	1971	41,097	0.10	20.60	2,103,899	5.11	43.55	0.01	0.92
		1981	49,564	0.10		2,519,947	5.21	43.95	0.01	
1.	சென்னை	1971	17,260	0.67	32.17	214,135	8.30	13.61	0.05	(–)6.65
		1981	22,812	0.70		265,881	8.11	12.76	0.04	
2.	செங்கற்பட்டு	1971	3,502	0.13	46.66	79,038	2.82	10.10	0.04	40.26
		1981	5,136	0.14		111,760	3.09	14.25	0.04	
3.	வடஆற்காடு	1971	10,051	0.27	(–)1.50	244,302	6.51	1.09		76.15
		1981	9,900	0.22		304,638	6.90	1.92	0.01	
4.	தென்ஆற்காடு	1971	5,976	0.17	11.60	132,482	3.66	1.13		76.99
		1981	6,669	0.16		161,201	3.84	2.00		
5.	தர்மபுரி	1971	69		104.35	77,187	4.60	18		77.78
		1981	141	0.01		77,323	3.87	32		
6.	சேலம்	1971	319	0.01	50.47	61,563	2.06	60		91.67
		1981	480	0.01		76.547	2.22	1.15		
7.	பெரியார்	1971	23		313.04	42,467	2.36	1.83	0.01	(–)61.20
		1981	95			50,152	2.43	71		
8.	கோயம்புத்தூர்	1971	1,218	0.05	16.50	109,582	4.25	4.53*	0.02	★
		1981	1,419	0.05		141,468	4.62	4.53	0.01	

பட்டியல் - 3 : 6 : 1 - தொடர்ச்சி

தொடர் எண்.	மாநிலம் / மாவட்டம்	ஆண்டு	மற்ற சமயங்களும், சமயக் கோட்பாடுகளும்			விவரிக்கப்படாத சமயங்கள்		
			மொத்த மக்கள் தொகை	மொத்த மக்கள் தொகை அதிகரிப்பு விழுக்காடு	1971-81-க்கு அதிகரிப்பு விழுக் காடு	மொத்த மக்கள் தொகை	மொத்த மக்கள் தொகை அதிகரிப்பு விழுக்காடு	1971-81-க்கு அதிகரிப்பு விழுக் காடு
	(1)	(2)	(22)	(23)	(24)	(25)	(26)	(27)
	தமிழ்நாடு	1971	6,080	0.01	179.14	690	N	171.01
		1981	16,972	0.04		1,870	N	
1.	சென்னை	1971	140	0.01	1,059.29	2ï4	0.0ï	–
		1981	1,623	0.05				
2.	செங்கற்பட்டு	1971	33	N	2,139.39	6ö	N	–
		1981	739	0.02				
3.	வடஆற்காடு	1971	130	N	1,180.00	2	N	15,150.00
		1981	1,664	0.04		305	0.01	
4.	தென்ஆற்காடு	1971	833	0.02	185.59	9	N	3,133.33
		1981	2,379	0.06		291	0.01	
5.	தர்மபுரி	1971	236	0.01	63.56	609	0.04	(–)94.25
		1981	386	0.02		35	N	
6.	சேலம்	1971	234	0.01	273.08	1	N	14,100.00
		1981	873	0.03		142	0.01	
7.	பெரியார்	1971	243	0.02	(–)46.50	ï2	N	*
		1981	130	0.01				
8.	கோயம்புத்தூர்	1971	40	N	675.00	ïï1	N	*
		1981	310	0.01				

பட்டியல் - 3 : 6 : 1 - தொடர்ச்சி

	(1)	(2)	(14)	(15)	(16)	(17)	(18)	(19)	(20)	(21)
9.	நீலகிரி	1971	1,038	0.22	7.54	47,718	9.66	193	0.04	54.40
		1981	1,170	0.18		58,653	9.31	298	0.05	
10.	மதுரை	1971	161	N	45.34	178,829	4.54	126	N	(–)86.51
		1981	234	0.01		207,078	4.57	17	N	
11.	திருச்சிராப்பள்ளி	1971	350	0.01	(–)8.86	143,133	4.48	502	9.02	(–)78.49
		1981	319	0.01		170,492	4.72	108	N	
12.	தஞ்சாவூர்	1971	971	0.03	(–)1.44	235,366	6.63	106	N	(–)1.89
		1981	957	0.02		283,780	6.98	104	N	
13.	புதுக்கோட்டை	1971	"	"	"	61,507	6.49	4	N	425.00
		1981	i	N		76,224	6.59	21	N	
14.	இராமநாதபுரம்	1971	17	N	105.88	199,754	6.98	32	N	(–)25.00
		1981	35	N		228,033	6.84	24	N	
15.	திருநெல்வேலி	1971	88	N	107.95	224,479	7.02	26	N	96.15
		1981	183	0.01		246,562	6.90	51	N	
16.	கன்னியாகுமரி	1971	4	N	225.00	52,357	4.28	45	0.01	(–)86.67
		1981	13	N		60,155	4.23	6	N	

பட்டியல் - 3 : 6 : 1 - தொடர்ச்சி

	(1)	(2)	(22)	(23)	(24)	(25)	(26)	(27)
9.	நீலகிரி	1971	51	0.01	111.76	43	N	–
		1981	108	0.02				
10.	மதுரை	1971	196	0.01	142.35	34	N	561.76
		1981	475	0.01		225	N	
11.	திருச்சிராப்பள்ளி	1971	949	0.03	74.50	9	N	2,100.00
		1981	1,656	0.05		198	N	
12.	தஞ்சாவூர்	1971	2,230	0.06	128.79	8**	N	Nil
		1981	5,102	0.13		8	N	
13.	புதுக்கோட்டை	1971	504	0.05	57.54	1	N	2,500.00
		1981	794	0.07		26	N	
14.	இராமநாதபுரம்	1971	189	0.01	72.49	-	-	*
		1981	326	0.01		99	N	
15.	திருநெல்வேலி	1971	65	N	387.69	17	N	247.06
		1981	317	0.01		59	N	
16.	கன்னியாகுமரி	1971	7	N	1,185.71	-	-	
		1981	90	0.01		42	N	*

★ 1971, 1981 ஆகிய இரு மக்கள் தொகை ஆண்டுகளிலுமே, கோயம்புத்தூர் மாவட்டத்தில் சீக்கியர்களின் எண்ணிக்கை, எவ்வித மாறுதலுமின்றி, 453 ஆக நிலையாக உள்ளது.

★★ 1971, 1981 ஆகிய இரு மக்கள் தொகை ஆண்டுகளிலுமே, தஞ்சாவூர் மாவட்டத்தில் "விவரிக்கப்படாத சமயங்கள்" எவ்வித மாறுதலுமின்றி, 8 ஆக நிலையாக உள்ளது.

குறிப்பு :

1. இந்தியாவிலுள்ள பல்வேறு மாநிலங்கள், மற்றும் எல்லை மாநிலங்களிலுள்ள (யூனியன் பிரதேசங்கள்) ஒவ்வொரு சமயத்தையும் சார்ந்த மக்கள் தொகைப் புள்ளி விவரங்களை, ஒப்பு நோக்கிட, தமிழ்நாடு மாநிலம் மற்றும் அகில இந்திய அளவில் பதிவு செய்யப்பட்ட பெரிய சமயத்தைச் சார்ந்தோர் குறித்த புள்ளி விவரங்கள் இப்பட்டியலில் அளிக்கப்பட்டுள்ளன.
2. 1971-ம் ஆண்டின் சமயம் சார்ந்தோர் பற்றிய விவரங்கள் தனிப்பட்டோர் சீட்டில் பதியம் பெற்றிருந்ததை ஆதாரமாகக் கொண்டு தொகுக்கப்பட்டன. ஆனால் 1981-ம் ஆண்டின் இப்புள்ளி விவரங்கள் 1981-ம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கு அட்டவணையில் குறிப்பிட்டுள்ள குடும்பத் தலைவரின் சமயத்தை ஆதாரமாகக் கொண்டு தொகுக்கப்பட்டுள்ளன. புள்ளி விவரங்களை ஒப்பு நோக்கும் போது இச்செய்தியினை கருத்தில் கொள்ள வேண்டும்.

பட்டியல் - 3 : 6 : 2

எச்.எச். குடும்பங்களின் மொத்த மக்கள் தொகை மற்றும் பல்வேறு சமயங்களைச் சார்ந்த குடும்பங்கள், அவற்றின் மக்கள் தொகை ஆகியவை

மாநிலம் / மாவட்டம் / வட்டம் / நகர்ப்பகுதி / நகரையொட்டி அமைந்த பகுதி / நகரம் (1)	மொத்தம் கிராமப்புறம் / நகர்ப்பகுதி (2)	மொத்த குடும்பங்களின் மக்கள் தொகை				மொத்தர்கள்			
		குடும்பங்களின் எண்ணிக்கை (3)	மக்கள் (4)	ஆண்கள் (5)	பெண்கள் (6)	குடும்பங்களின் எண்ணிக்கை (7)	மக்கள் (8)	ஆண்கள் (9)	பெண்கள் (10)
16. கன்னியாகுமரி மாவட்டம்	மொத்தம்	277,061	1,423,399	716,958	706,441	1	5	4	
	கிராமப்புறம்	230,071	1,177,867	593,906	583,961	1	5	4	
	நகர்ப்பகுதி	46,990	345,532	123,052	122,480	-	-	-	
1. விளவங்கோடு வட்டம்	மொத்தம்	84,819	458,590	231,592	226,998	1	5	4	
	கிராமப்புறம்	81,406	440,163	222,400	217,763	1	5	4	
	நகர்ப்பகுதி	3,413	18,427	9,192	9,235	-	-	-	
குழித்துறை (ந)	நகர்ப்பகுதி	3,413	18,427	9,192	9,235	-	-	-	
2. கல்குளம் வட்டம்	மொத்தம்	92,215	476,633	241,642	234,991	-	-	-	
	கிராமப்புறம்	84,291	435,263	220,701	214,562	-	-	-	
	நகர்ப்பகுதி	7,924	41,370	20,941	20,429	-	-	-	
பத்மநாபபுரம் (ந)	நகர்ப்பகுதி	3,637	18,246	9,156	9,090	-	-	-	
கொளச்சல் (ந)	நகர்ப்பகுதி	4,287	23,124	11,785	11,339	-	-	-	
3. தோவாளை வட்டம்	மொத்தம்	19,469	88,176	44,258	43,918	-	-	-	
	கிராமப்புறம்	19,469	88,176	44,258	43,918	-	-	-	

பட்டியல் 3 : 6 : 2 - தொடர்ச்சி

எச்.எச். குடும்பங்களின் மொத்த மக்கள் தொகை மற்றும் பல்வேறு சமயங்களைச் சார்ந்த குடும்பங்கள், அவற்றின் மக்கள் தொகை ஆகியவை. தொடர்ச்சி

மாநிலம் / மாவட்டம் வட்டம் / நகர்ப்புறுதி நகரமொட்டி அமைந்த பகுதி / நகரம்	மொத்த கிராமப்புறம் நகர்ப்புறுதி	கிறித்தவர்கள்				இந்துக்கள்			
		குடும்பங் களின் எண் ணிக்கை	மக்கள்	ஆண்கள்	பெண்கள்	குடும்பங் களின் எண் ணிக்கை	மக்கள்	ஆண்கள்	பெண்கள்
(1)	(2)	(11)	(12)	(13)	(14)	(15)	(16)	(17)	(18)
16. கன்னியாகுமரி மாவட்டம்	மொத்தம்	107,846	551,908	276,928	274,980	159,027	811,180	409,863	401,317
	கிராமப்புறம்	24,111	479,409	240,850	238,559	129,678	661,291	334,462	326,829
	நகர்ப்பகுதி	13,735	72,499	36,078	36,421	29,349	149,889	75,401	74,488
1. விளவங்கோடு வட்டம்	மொத்தம்	39,858	210,744	106,001	104,743	42,814	234,575	118,942	115,633
	கிராமப்புறம்	38,516	203,443	102,395	101,048	40,836	224,030	113,646	110,384
	நகர்ப்பகுதி	1,342	7,301	3,606	3,695	1,978	10,545	5,296	5,249
குழித்துறை (ந)	நகர்ப்பகுதி	1,342	7,301	3,606	3,695	1,978	10,545	5,249	
2. கல்குளம் வட்டம்	மொத்தம்	40,712	205,707	104,186	101,521	47,515	247,021	125,451	121,570
	கிராமப்புறம்	37,873	190,867	96,613	94,254	43,857	229,083	116,404	112,679
	நகர்ப்பகுதி	2,839	14,840	7,573	7,267	3,658	17,938	9,047	8,891
பத்மநாபபுரம் (ந)	நகர்ப்பகுதி	501	2,673	1,350	1,323	2,552	12,151	6,134	6,017
கொளச்சல் (ந)	நகர்ப்பகுதி	2,335	12,167	6,223	5,944	1,106	5,787	2,913	2,874
3. தோவாளை வட்டம்	மொத்தம்	4,922	22,250	11,103	11,147	13,594	60,795	30,595	30,200
	கிராமப்புறம்	4,922	22,250	11,103	11,147	13,594	60,795	30,595	30,200

பட்டியல் - 3 : 6 : 2 - தொடர்ச்சி

எச்.எச். குடும்பங்களின் மொத்த மக்கள் தொகை மற்றும் பல்வேறு சமயங்களைச் சார்ந்த குடும்பங்கள், அவற்றின் மக்கள் தொகை ஆகியவை-தொடர்ச்சி

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)
16. கன்னியாகுமரி மாவட்டம்									
அகஸ்தீஸ்வரம் வட்டம்	மொத்தம்	80,558	400,000	199,466	200,534	-	-	-	-
	நகர்ப்பகுதி	44,905	214,265	106,547	107,718	-	-	-	-
	கிராமப்புறம்	35,653	185,735	92,919	92,816	-	-	-	-
நாகர்கோவில் (ந)	நகர்ப்பகுதி	32,945	171,648	85,872	85,776	-	-	-	-
கன்னியாகுமரி (ந)	நகர்ப்பகுதி	2,708	14,087	7,047	7,040	-	-	-	-

(1)	(2)	(11)	(12)	(13)	(14)	(15)	(16)	(17)	(18)
16. கன்னியாகுமரி மாவட்டம்									
அகஸ்தீஸ்வரம் வட்டம்	மொத்தம்	22,354	113,207	55,638	57,569	55,101	268,789	134,875	433,914
	நகர்ப்பகுதி	12,800	62,849	30,739	32,110	31,391	147,383	73,817	73,566
	கிராமப்புறம்	9,554	50,358	24,899	25,459	23,713	121,406	61,058	60,348
நாகர்கோவில் (ந)	நகர்ப்பகுதி	8,025	41,676	20,540	21,136	22,662	116,723	58,744	57,979
கன்னியாகுமரி (ந)	நகர்ப்பகுதி	1,529	8,682	4,359	4,233	1,051	4,683	2,314	2,369

பட்டியல் - 3 : 6 : 2 - தொடர்ச்சி

எச்.எச். குடும்பங்களின் மொத்த மக்கள் தொகை மற்றும் பல்வேறு சமயங்களைச் சார்ந்த குடும்பங்கள், அவற்றின் மக்கள் தொகை ஆகியவை - தொடர்ச்சி

மாநிலம் / மாவட்டம் / வட்டம் / நகர்ப்பகுதி / நகரைபொட்டி அமைந்த பகுதி / நகரியம்	மொத்தம் கிராமப்புறம்/ நகர்ப்பகுதி	சமணர்கள்				முகம்மதியர்கள்			
		குடும்பங் களின் எண் ணிக்கை	மக்கள்	ஆண்கள்	பெண்கள்	குடும்பங் களின் எண் ணிக்கை	மக்கள்	ஆண்கள்	பெண்கள்
(1)	(2)	(19)	(20)	(21)	(22)	(23)	(24)	(25)	(26)
16. கன்னியாகுமரி மாவட்டம்	மொத்தம்	2	13	7	6	10,154	60,135	30,000	
	கிராமப்புறம்	–	–	–	–	6,270	37,114	11,345	
	நகர்ப்பகுதி	2	13	7	6	3,884	23,011	11,520	
1. விளவங்கோடு வட்டம்	மொத்தம்	–	–	–	–	2,140	13,244	6,633	
	கிராமப்புறம்	–	–	–	–	2,050	12,672	6,300	
	நகர்ப்பகுதி	–	–	–	–	90	572	286	
குழித்துறை (ந)	நகர்ப்பகுதி	–	–	–	–	90	572	286	
2. கல்குளம் வட்டம்	மொத்தம்	–	–	–	–	3,982	23,883	11,700	
	கிராமப்புறம்	–	–	–	–	2,557	15,296	768	
	நகர்ப்பகுதி	–	–	–	–	1,425	8,587	4,317	
பத்மநாபபுரம் (ந)	நகர்ப்பகுதி	–	–	–	–	583	3,418	4,317	
கொளச்சல் (ந)	நகர்ப்பகுதி	–	–	–	–	842	5,169	2,453	
3. தோவாளை வட்டம்	மொத்தம்	–	–	–	–	951	5,121	250	
	கிராமப்புறம்	–	–	–	–	951	5,121	250	
	நகர்ப்பகுதி	–	–	–	–	–	–	–	
4. அகஸ்தீஸ்வரம் வட்டம்	மொத்தம்	2	13	7	6	3,081	17907	220	
	கிராமப்புறம்	–	–	–	–	712	4,025	190	
	நகர்ப்பகுதி	2	13	7	6	2,369	13,882	690	
நாகர்கோவில் (ந)	நகர்பகுதி	2	13	7	6	2,241	13,160	630	
கன்னியாகுமரி நகரியம்	நகர்ப்பகுதி	–	–	–	–	128	722	374	

பட்டியல் 3 : 6 : 2 - தொடர்ச்சி

எச்.எச். 15.1 குடும்பங்களின் மொத்த மக்கள் தொகை மற்றும் பல்வேறு சமயங்களைச் சார்ந்த குடும்பங்கள், அவற்றின் மக்கள் தொகை ஆகியவை - தொடர்ச்சி

மாநிலம் / மாவட்டம் / வட்டம் / நகர்ப்பகுதி நகரையொட்டி அமைந்த பகுதி / நகரியம்	மொத்தம் கிராமப்புறம் நகர்ப்பகுதி	சீக்கியர்கள்				மற்ற சமயங்களும் சமயக் கோட்பாடுகளும்				விவரிக்கப்படாத சமயங்கள்			
		குடும்பங்களின் எண்ணிக்கை	மக்கள்	ஆண்கள்	பெண்கள்	குடும்பங்களின் எண்ணிக்கை	மக்கள்	ஆண்கள்	பெண்கள்	குடும்பங்களின் எண்ணிக்கை	மக்கள்	ஆண்கள்	பெண்கள்
(1)	(2)	(27)	(28)	(29)	(30)	(31)	(32)	(33)	(34)	(35)	(36)	(37)	(38)
16. கன்னியாகுமரி மாவட்டம்	மொத்தம்	2	6	3	3	19	90	47	43	10	42	22	20
	கிராமப்புறம்	1	2	2	–	5	27	14	13	5	19	10	9
	நகர்ப்பகுதி	1	4	1	3	14	63	33	30	5	23	12	11
1. விளவங்கோடு வட்டம்	மொத்தம்	–	–	–	–	4	14	6	8	2	8	4	4
	கிராமப்புறம்	–	–	–	–	2	10	5	5	1	3	1	2
	நகர்ப்பகுதி	–	–	–	–	2	4	1	3	1	5	3	2
குழித்துறை (ந)	நகர்ப்பகுதி	–	–	–	–	2	4	1	3	1	5	3	2
2. கல்குளம் வட்டம்	மொத்தம்	1	2	2	–	2	10	6	4	3	10	6	4
	கிராமப்புறம்	1	2	2	–	2	10	6	4	1	5	2	3
	நகர்ப்பகுதி	–	–	–	–	–	–	–	–	2	5	4	1
பத்மநாபபுரம் (ந)	நகர்ப்பகுதி	–	–	–	–	–	–	–	–	1	4	3	1
குளச்சல் (ந)	நகர்ப்பகுதி	–	–	–	–	–	–	–	–	1	1	1	–
3. தோவாளை வட்டம்	மொத்தம்	–	–	–	–	1	7	3	4	1	3	1	2
	கிராமப்புறம்	–	–	–	–	1	7	3	4	1	3	1	2
	நகர்ப்பகுதி	–	–	–	–	–	–	–	–	–	–	–	–
4. அகஸ்தீஸ்வரம் வட்டம்	மொத்தம்	1	4	1	3	12	59	32	27	4	21	11	10
	கிராமப்புறம்	1	4	–	–	–	–	–	–	2	8	6	2
	நகர்ப்பகுதி	1	4	1	3	12	59	32	27	2	13	5	8
நாகர்கோவில் (ந)	நகர்பகுதி	–	–	1	3	12	59	32	27	2	13	5	8
கன்னியாகுமரி நகரியம்	நகர்ப்பகுதி	–	–	–	–	–	–	–	–	–	–	–	–

(ந) நகராட்சி

கோட்பாடு என்பது, பழங்குடியினரின் நம்பிக்கைக்குரியதென்ற பொதுக் கருத்து, அவர்களிடையே நிலவி வருகிறது. ஆவியுலகக் கோட்பாடென்பதற்கு, ஆவிகளின் மீதான அசையாத நம்பிக்கை, மேலும், பிற்பட்ட நிலையில் கட்டுப்படுத்தும் ஆற்றல் பெற்ற தெய்வங்கள் மற்றும் புனித ஆவிகள் மீதான நம்பிக்கை எனப்பொருள் படும். வீடுகள் மற்றும் கிராமங்களில் தங்கி வாழ்கிற பல்வேறுவகைப் பட்ட பேய்களைக் காணிகள் நம்புகிறார்கள். அவை, பயிர்களுக்கு சேதம் விளைவித்தல், கடுந்நோய்களைப் பரப்புதல் மற்றும் பஞ்சம் போன்ற தீங்குகளை விளைவிப்பதில் விருப்பமுடைய துர்தேவதைகளாகும். இந்த தேவதைகளின் சினத்தைத் தணிப்பது, காணிகளுடைய சமயத்தின் தனிச் சிறப்பினாலன்றி, வேறில்லை. காணிகள் துர்தேவதைகளின் சினத்தை தணிப்பதில், தனிகவனம் செலுத்து கின்றனர். அவர்கள் அகத்திய மாமுனிவரையும், மூதாதையர்-தேவதைகளையும் கூட வணங்குகின்றனர். அவர்கள் "சாஸ்தான்" என்ற காட்டுக் கடவுளுக்கு உருவமளித்து வணங்குகின்றனர். இவை தவிர, அவர்கள் அம்மன், பூதத்தான் போன்ற மேலும் சில தெய்வங்களையும் வணங்குகின்றனர். பொதுவாக, ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி மாதத்தில், "கோடை" என்ற திருவிழா நடைபெறுகிறது. அப்போது, காணிகளனைவரும், ஒரு இடத்தில் கூடுகிறார்கள். முல்லை சார்ந்த தெய்வங்களுக்கு, படையல், காணிக்கை அளித்தல் மற்றும் வழிபாடு நடத்துதல் ஆகியவை தெய்வப் பண்புள்ள ஒரு இடத்தில், நடைபெறுகின்றன.

காணிகள்

காணிகள் இந்து தெய்வங்களான "சாஸ்தா" போன்றவற்றை வணங்குவதால், அவர்கள் இந்து சமயத்தைச் சார்ந்தவர்கள் தான் என்பது தெரிய வருகிறது.

நிலப்பகுதியிலுள்ள மக்களுடன் அடிக்கடி தொடர்பாடு கொண்டுள்ளதால், இந்த மலைவாழ் பழங்குடியினரின் முந்தைய காலத்திய நாகரீகம் மற்றும் பழக்க வழக்கங்கள் சிறுகச் சிறுக மாறி, அவர்கள் மேலும் மேலும் நாகரீகமடைந்து வருகிறார்கள். உதாரணமாக, சில காலத்திற்கு முன்னர் வரையில், காணிகள், அவர்களது குடியிருப்பிற்கு அருகாமையில், வெளியார் எவரேனும் வந்தால், பயத்தின் காரணமாக, அவர்கள் வீட்டுப் பெண்மணிகளை, அடர்த்தியான காட்டுப்பகுதிக்கு அனுப்பி வந்தார்கள். தற்போது இந்தப் பழக்கம், சிறிது சிறிதாக மறையத் துவங்கியுள்ளது.

காணிகள் நாடோடிகள்தான், ஆனால், அவர்கள் வேளாண் குடி மக்களாவர். அரிசிதான் அவர்களது முக்கிய உணவாகும். அவர்கள் நெல்தவிர, மரவள்ளிக்கிழங்கு, பல தரப்பட்ட தானியங்கள், பயறு வகைகள், சர்க்கரை வள்ளிக்கிழங்கு, காய்கறிகள், வாழை மற்றும் தக்காளி ஆகியவையும் பயிரிடுகிறார்கள். காட்டிலுள்ள காணிகள், இவை தவிர, பறவைகள், ஊர்வன, மற்றும் விலங்குகள் ஆகியவற்றை யும், அடித்து உண்கிறார்கள். தென்னை, பனை போன்ற ஒற்றைத்தடி

மரத்தின் பழங்களினின்றும், தயார் செய்யப்படும் ரொட்டியையும் அவர்கள் சாப்பிடுகிறார்கள். அவர்கள் தேனருந்துவதுடன் காட்டோடை களிலுள்ள மீன்களையும் பிடித்து உண்கிறார்கள்.

வேளாண் நிலங்களைப் பண்படுத்துதல், விறகிற்கான மரங்களை வெட்டுதல் மற்றும் இதர காரியங்களுக்குப் புல்லரிவாளைப் பயன்படுத்துகிறார்கள். அவர்களது பயிர்களை அழித்திடும் கொடிய மிருகங்களைக் கொல்வதற்கு, வில், அம்புகளைப் பயன்படுத்து கிறார்கள். மரம் அல்லது மூங்கிலை வைத்து, வில்லைச் செய்கிறார்கள்; மேலும், பல்வகைப்பட்ட நாணலைக்கொண்டு, அம்புகளைச் செய்கிறார்கள். மிருகங்களைக் கொள்வதற்கேற்ற குண்டுகளை மிகுந்த பலத்துடன் எறிகிறார்கள். காணிகள் துளையிடுவதற்கான கருவியை வைத்தோ அல்லது சிக்கிமுக்கிக்கல்லின் உதவி கொண்டோ, நெருப்பை உண்டு பண்ணுகிறார்கள். தீப்பெட்டிகள் உபயோகம் தற்போது வெகுவேகத்தில் பரவி வருகின்றன. சில காணிகள், பண்ணையார்களின் எஸ்டேட்டுகளில் கூலி வேலை செய்கிறார்கள். அல்லது ஒப்பந்தக்காரர்களுக்கு விறகுக்கான மரங்களையோ, மூங்கில்களையோ வெட்டி, தம் பிழைப்பை நடத்துகிறார்கள்.

காணிகளுக்கு விளையாட்டுகள் மிகவும் பிடித்தமானவை. அவர்கள் பாதை போடுவதில் தேர்ந்தவர்கள். தடம் பார்த்துச் செல்லும் பழக்கம் உள்ளவர்கள். காடுகள் வழியாகச் செல்லும், அலுவலர்கள் மற்றும் ஏனையோரை, மனநிறைவுடன் வழிகாட்டிச் செல்வார்கள்.

கிறித்துவ சமயம்

கிறித்துவர்கள், மாவட்டத்தின் இரண்டாவது பெரிய சமூகத்தைச் சார்ந்தவர்கள் ஆவார்கள்.

மாவட்டத்திலுள்ள கிறித்துவர்களில், ரோமன் கத்தோலிக்க வகுப்பைச் சார்ந்தவர்கள், பெரிய பிரிவாக உள்ளனர். தென்னிந்தியத் திருச்சபையைச் சார்ந்தோரும், பொது மக்களிடம் சமய மறு எழுச்சி உண்டு பண்ணப் படைத்துறைப் படிவ முறைகளைப் பின்பற்றும் அமைப்பைச் (சால்வேஷன் ஆர்மி-இரட்சனிய சேனை) சார்ந்தோரும், இருக்கிறார்கள். சிரியா நாட்டைச் சார்ந்த கிறித்துவர்களின் எண்ணிக்கை மிகமிகக் குறைவுதான். கிறித்துவர்கள் பெரும்பாலும் இந்து சமயத்தினின்றும் மாறியவர்களே: அதிலும் பெயரளவிலான பழைய காலத்து கீழ் சமுதாயப் பிரிவைச் சார்ந்தவர் ஆவர். மாவட்டத்தின் பல வட்டங்களிலும், கிறித்துவர்கள் உள்ளனர். இவையாவும், துவக்க காலத்தில், பல சமயப்பரப்புப் பணியமைப்புகளின் நடவடிக்கை மையங்களாயிருந்தன. அவையாவன: இலண்டன் சமயப்பரப்பு சங்கம், சமய மறு எழுச்சி உண்டுபண்ணப் படைத்துறைப் படிவ முறைகளைப் பின்பற்றும் அமைப்பு, மற்றும், கத்தோலிக்க திருச்சபை ஆகும்.

ஏசு கிறித்துவின் பன்னிரண்டு திருத்தொண்டர்களில் ஒருவரான புனித தாமஸ் அவர்களுடைய (கி.பி.52-68) கேரள பிராந்தியத்தில் தான், கிறித்துவ சமயம்[2] முதன் முதலில் புதிதாகத் தொடங்கி

வைக்கப்பட்டது. கி.பி.16 ஆம் நூற்றாண்டு அளவில், இக்னெஷியஸ் லாயோலா என்பவரால் 1533-ல் நிறுவப்பட்ட இயேசுநாதர் சங்கம் என்ற, ரோமன் கத்தோலிக்கக் குழுவின் உறுப்பினரான ஜேகுட் என்பவரால் துவக்கப்பட்ட சமயப்பரப்புப் பணியமைப்பின் தீவிர முயற்சியால், லத்தீன் மொழி சார்ந்த கிறித்துவ சமயம், மாவட்டத்தில் வேருன்றத் தொடங்கிற்று. 16-வது நூற்றாண்டின் இடையில், புனித பிரான்ஸ் சேவியர் என்பவர், தென்னிந்தியாவின் கடற்கரையில், தனது அமைப்பின் பணிகளைத் தொடங்கினார். இவரது அமைப்பின் நடவடிக்கைகளுக்கு போர்ச்சுகீஸிய அலுவலர்கள், ஓரளவு உதவியளித்தார்கள். புனித பிரான்ஸ் சேவியர், தூத்துக்குடி கடற்கரைப் பிரதேசத்தில், சில காலம் பணியாற்றிவிட்டு, கி.பி.1544 ஆம் ஆண்டு, திருவாங்கூர் வந்தார். கிறித்துவ சமயநெறி சார்ந்த அவரது அமைப்பிற்கு திருவாங்கூர் மன்னர், நல்ல வாய்ப்பினை நல்கினார். புனித சேவியர், பல இந்துக்களை கிறித்துவ சமயத்திற்கு மாற்றினார். அவர், மக்களை கிறித்துவ சமயத்திற்கு மாற்ற பின்பற்றிய முறை மிகவும் எளிதானது: அதிக செலவிலான தனிபலமிடம் கொண்ட திருக்கோட்டம் அமைப்பதற்காகவோ அல்லது இடமகன்ற கிறித்துவ திருக்கோயில் கட்டுவதற்காகவோ, காத்திருக்கவில்லை. முதலில் ஒரு சிலுவையை செய்து, பின்னர் பனை ஓலைகளாலான சிறு குடிசையை அமைத்து அங்கு வழிபாட்டு முறைகளை மேற்கொண்டார். கல், சிமிண்ட்டில் ஆன திருக்கோயில்கள் பின்னர்தான் கட்டப்பட்டன. புனித சேவியர், தனது தலைமையிடத்தை கோட்டாரில் வைத்துக்கொண்டார். கோட்டாரைச் சுற்றியுள்ள இடங்களில், மக்களை மதமாற்றம் செய்யவும், கிறித்துவ மக்களாக அவர்களை ஒன்று சேர்க்கவும், அவர், லத்தீன் மொழி சார்ந்த கத்தோலிக்கர்களைப் பெரிதும் பயன்படுத்திக் கொண்டனர்.

கிறித்துவ கத்தோலிக்க சமயப்பரப்புக்குழு, மாவட்டத்தில் மிகவும், சுறுசுறுப்பாக செயல்பட்டது. புனித சேவியர் வழிபட்டு வந்த கோட்டார் கிறித்துவத் திருக்கோயில் தென்இந்திய கத்தோலிக்கர்களால், மிகவும் புனிதமாகக் கருதப்பட்டு வந்தது. திருக்கோயிலின் ஆண்டுத் திருவிழா ஒவ்வோராண்டும், டிசம்பர் மாதத்தில் நடைபெற்று வந்தது. தென்னிந்தியாவிலுள்ள. திருக்கூட்ட கத்தோலிக்க கிறித்தவர் களனைவரும், ஆண்டுத்திருவிழாவிற்கு வருகை தருகிறார்கள். முன்னர், மாவட்டத்திலுள்ள கத்தோலிக்க திருக்கோயில்களனைத்தும், கொல்லம் கிறித்துவ சமயவட்டத்தலைவரின் (பிஷப்) கட்டுப்பாட்டி லிருந்தன. ஆனால், பின்னர், கோட்டாரில், ஒரு தனி சமயவட்டத் தலைவர், தெய்வப்புனித பணிக்கென நியமிக்கப்பட்டார்.

18 ஆம் நூற்றாண்டின் இறுதியில், இப்பகுதியில் கிறித்தவ சமயத்தைப் பரப்புவதற்கு, மேற்கத்திய கிறித்தவ சமயப்பரப்புக் குழுக்கள் அவைகளது நடவடிக்கைகளைப் படிப்படியாக அதிகரித்தன. அவைகளில், பிராடஸ்டண்டு சமயப்பரப்புக் குழுக்கள் மிகவும் அதிக அளவிலிருந்தன. தென்னிந்திய திருச்சபையின் முக்கிய அங்கமான

இலண்டன் சமயப்பரப்புச்சங்கம், தனது பணியினை, இப்பகுதியில் கி.பி.1806-ம் ஆண்டு துவங்கியது. அது, திருவாங்கூர் மன்னரின் முறையான ஆணையைப்பெற்று, கன்னியாகுமரிக்கு அருகாமையிலுள்ள மைலாடியில், பிராடஸ்டண்டுகளுக்காக ஒரு திருக்கோயிலை நிறுவியது. நாகர்கோயிலைத் தலைமையிடமாகக் கொண்டு அது பணியாற்றியது. மக்களுக்கு கல்வி மற்றும் மருத்துவப்பணிகளில், பொதுத் தொண்டாற்றியது.

1905ஆம் ஆண்டு, மாவட்டத்திலுள்ள இலண்டன் சமயப்பரப்பு திருக்கோயில், மதுரையிலுள்ள அமெரிக்க சமயப்பரப்புக் குழுவுடன் இணைந்து செயலாற்றிய திருக்கோயில்களோடு, ஒரு உடன் படிக்கையை மேற்கொண்டது. பின்னர், 1908 ஆம் ஆண்டு, கிறித்துவ பொது ஆட்சி முறை திருச்சபையின் உறுப்பினர் மற்றும் திருக்கோயிலுக்கு வழக்கமாகச் செல்பவர்களின் தொகுதியைச் சார்ந்தோர் ஆகியோரின் மரபுகளைச் சார்ந்த திருக்கோயில்கள் ஒன்றாக இணைந்து, தென்னிந்திய ஒருங்கிணைந்த திருக்கோயில், ஒருபுறம் உண்மையான இந்தியர்களாகத் திகழவும், மறுபுறம் இந்தியாவிலுள்ள ஏனைய திருக்கோயில்களுடன் ஒற்றுமை உணர்வுடன் இருக்கவும் விரும்பின. இம்முடிவினை அடிப்படையாகக் கொண்டு, ஆங்கில நாட்டுத் திருச் சபை மரபை ஏற்றவர்களின் தென்னிந்திய திருச்சபையுடன் 1920 ஆம் ஆண்டு கலந்துரையாடப்பட்டது; கண்டிப்பான கிறித்துவ சமயக் கோட்பாடுடையவர்களும், (மெதடிஸ்ட்) தென்னிந்திய திருச்சபையுடன் இணைந்து செயலாற்ற தீர்மானம் நிறைவேற்றினார்கள். 1945 ஆம் ஆண்டு, இத்திட்டத்தினை, இந்தியா, பர்மா மற்றும் சிலோன் ஆகிய நாடுகளில், ஆங்கில நாட்டுத்திருச்சபை மரபை ஏற்றவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். தென்னிந்திய திருச்சபை 1947 ஆம் ஆண்டு, இயங்கத்துவங்கியது. முதல் தடவையாக மாவட்டத்தில் இத்திருச்சபை சமய வட்டத்தலைவரின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. தென்னிந்திய திருச்சபையின் கன்னியாகுமரி மாவட்டச் சமய முதல்வரின் அருளாட்சிப்பரப்பு (டையாஸீஸ்) நாகர்கோயிலைத் தனது தலைமையிடமாகக் கொண்டுள்ளது.

சால்வேஷன் ஆர்மி என்ற பொதுமக்களிடம் சமய மறு எழுச்சி உண்டு பண்ணப்படைத்துறைப்படிவ முறைகளைப் பின்பற்றும் அமைப்பைச் சேர்ந்தோர், மாவட்டத்தில் மிக சுறுசுறுப்பாக இயங்குகிறார்கள். அகஸ்தீஸ்வரம் வட்டத்தில், நாகர்கோயிலின் புறப்பகுதியான கிருஷ்ணன் கோயிலில், சால்வேஷன் ஆர்மி தனது தலைமையிடத்தைக் கொண்டுள்ளது. இந்து சமயத்தைச் சார்ந்த பரையர்களையும் மற்றும் தாழ்த்தப்பட்ட வகுப்பினரையுமே, சால்வேஷன் ஆர்மி தங்களது பணியில் ஒருமுகப்படுத்தியது. கல்குளம் வட்டத்திலுள்ள தக்கலைதான், அவர்களது முதன்மையான மையமாகத் திகழ்ந்தது.

செவன்த் டே அட்வண்டிஸ்ட் மிஷன் என்ற திருவாயிர வருகைக் கோட்பாட்டாளரின் சமயப்பரப்புக்குழு, கல்குளம் வட்டம், பத்மநாபபுரத்

திற்கு அருகாமையிலுள்ள சாரோடு என்ற இடத்தில், ஒரு திருக் கோயிலை நிறுவியுள்ளது. பிரிட்டனில் இரண்டாம் ஜேம்ஸ் முடிதுறந்த பின்னும், அவரை அல்லது அவருடைய பின்மரபினரை ஆதரித்து, சிரியா நாட்டுப்பழக்க வழக்கங்களைக் கடைபிடிக்கும் கிறித்தவர்கள், (சிரியன் ஜாக்கோபைட் கிறித்தவர்கள்) மாவட்டத்தில் சிறிய அளவில் உள்ளனர். மாவட்டத்தில், அவர்களது நடவடிக்கை முதன்மை வாய்ந்ததாக இல்லை. அவர்கள் பெரும்பாலும், முந்தைய திருவாங்கூர் மாநிலத்தின் தலைமையிடமான திருவனந்தபுரத்தில் தான் உள்ளனர்.

முகம்மதியர்கள்

மாவட்டத்தின் மூன்றாவது பெரிய வகுப்பினரான முகம்மதியர்கள், மக்கள் தொகையில் ஐந்து விழுக்காடு இருக்கிறார்கள். முந்தைய காலத்திலிருந்தே, மேற்குக் கடற்கரையிலுள்ள துறைமுகங்களில் உலகத்திலுள்ள பலபகுதிகளிலிருந்தும் கடலோடிகள் வந்து சென்றார் கள். முகம்மதியர்களின் ஒரு தொகுதியினர் கி.பி.712 ஆம் ஆண்டு மலபாரை அடைந்தார்கள். அவர்கள் வணிகர்களாகவந்து கடற்கரைப் பகுதிகளில் நிலையாகக் குடியேறினார்கள். அவர்கள் நமது நாட்டின் பழக்க வழக்கங்கள், நாகரீகம் மற்றும் வழக்காற்று மரபுகளைக் கடைபிடித்ததோடல்லாமல், நம்நாட்டு மக்களிடம் சுமூகமான உறவை மேற்கொண்டார்கள். அவர்கள் தகுதியான இடங்களில் மசூதிகளை நிறுவினார்கள். மேலும், பலரை இஸ்லாம் சமயத்திற்கு சிறிது சிறிதாக மாற்ற முயன்றார்கள்.

மாவட்டத்திலுள்ள முகம்மதியர்களின் அமைப்பு, பழக்க வழக்கங்கள், செயல்வகை மற்றும் சமய நம்பிக்கைகள் ஆகியவை, அடிப்படையில், மாநிலத்தின் ஏனைய பகுதியிலுள்ளோரைப் போலவே அமைந்துள்ளது.

மாவட்டத்திலுள்ள பல்வேறு வட்டங்களிலும் முகம்மதியர்கள் சீராக வாழ்ந்து வருகிறார்கள். எனினும், கல்குளம் வட்டத்திலுள்ள திருவிதாங்கோடு, தக்களை மற்றும் கொளச்சல், தோவாளை வட்டத்திலுள்ள திட்டுவிளை, மற்றும் அகஸ்தீஸ்வரம் வட்டத்திலுள்ள இடலக்காடி ஆகிய இடங்களில் பெரும்பகுதியான முகம்மதியர்கள் வணிகத்தில் ஈடுபட்டுள்ளார்கள். இவ்விடத்திலுள்ள முகம்மதியர்கள் "சியாகா" மற்றும் "சன்னி" ஆகிய இருபிரிவினைச் சார்ந்தவர்கள்.

புதிய சமய மற்றும் சமூக சீர்திருத்த இயக்கங்களும், அவற்றின் தலைவர்களும்

மாவட்டத்தில் தனிப்பட்ட சமய மற்றும் சமூக சீர்திருத்த இயக்கம் ஏதும் தோன்றியதில்லை. மற்ற பகுதிகளில் துவக்கப்பெற்ற இயக்கங் கள், இப்பகுதிகளிலும் நாளடைவில் பரவி இப்பகுதி மக்களை கவர்ந்தன. அகில இந்திய இயக்கங்களான இராமகிருஷ்ணா சமயப் பரப்புக்குழு, ஆரிய சமாஜம் மற்றும் பிரம்மஞான சங்கம் ஆகியவை, கடுமையான சாதி வேறுபாடுகளைக் களைய பெரிதும் பாடுபட்டன.

தற்போதைய கன்னியாகுமரி மாவட்டம், முன்பு ஒரு பகுதியாக இருந்த திருவனந்தபுரம் மாவட்டத்திலேயே, ஸ்ரீ செட்டம்பி சுவாமிகள்

(1854-1924) மற்றும் ஸ்ரீ நாராயணகுரு ஆகிய இரண்டு சமயத் தலைவர்கள் பிறந்தார்கள். திரு.செட்டம்பி சுவாமிகள், பெரிய இந்து வகுப்பினர்களான ஈழவர்கள் மற்றும் நாயர்கள் ஆகியோரது சமூக நிலையில் ஒரு மாபெரும் மாற்றத்தை தோற்றுவிக்கப் பாடுபட்டார். திரு. நாராயண குருவும், திரு. செட்டம்பி சுவாமிகளின் சமகாலத்தில் வாழ்ந்தவராவார். அவர், அவரது வாழ்நாள் முழுவதும் ஆதிதிராவிடர் கள், ஈழவர்கள் மற்றும் ஏனைய பிற்பட்ட வகுப்பினைச் சார்ந்தோரின் சமூக முன்னேற்றத்திற்காகப் பெரிதும் பாடுபட்டார். சாதி வேறுபாட்டுக் கொடுமைகளைத் தகர்த்தெரிய சுவாமிகள் முழு மூச்சுடன் செயல்பட்டார். அவர் தனது சொந்த சமூகத்தைச் சேர்ந்தோர் நலனுக்கு மட்டுமல்ல, ஏனைய சமூகத்தினர் நலனுக்காகவும் கேரளத்தின் பல பகுதிகளிலுமுள்ள கோயில்களையும் நற்றுமையாக்கினார். சமயத்தின் பெயரால், ஈழவர்கள், ஆதிதிராவிடர்கள் மற்றும் ஏனையோரால் மிருக பலி செய்யப்பட்டு வந்த பழக்கத்தை அடியோடு ஒழிக்க, ஒரு மாபெரும் திட்டத்தினைக் கையாண்டு அதில் வெற்றியும் பெற்றார். மிகுந்த பொருட்செலவில், பகுத்தறிவிற்கு மாறாக, ஈழவர்கள் கடைபிடித்த மூட பழக்க, வழக்கங்களை அடியோடு கைவிட, அவ்வப்போது அவர்களுக்கு அறிவுரை வழங்கினார். அவர்கள் தொடர்ந்து கடைப்பிடித்துவந்த தாலிக்கட்டு, திறண்டுக் கல்யாணம், புலிக்குடி போன்ற மதச் சடங்குகள், சடங்கு முறைகள் ஆகியவற்றைக் கைவிட அவர்களை வலியுறுத்தினார். வெளிப்பகட்டான மற்றும் பொருளற்ற வழிபாட்டு முறைகளையும், பழக்கங்களையும் சமயத்தின் பெயரால் மேற்கொள்வது தவறென்பது அவரது அசைக்க முடியாத கருத்தாக இருந்தது. அதே சமயம், சமயங்கள், உயர்ந்த நெறிமுறைகளையும், நல்லொழுக்கத்தையும் வழிகாட்டுபவையாக அமையவேண்டுமென்பது, அவரது அறிவுரையாகும். சாதி வேறுபாடு களைக் களையவும், சாதி, சமயமற்ற, ஒரு சமுதாயத்தை உருவாக் கிடவும், கலப்புத் திருமணத்தை ஆதரித்தார்.

மாவட்டத்திலுள்ள ஒரு சில முகம்மதியர்களிடையே 1889 ஆம் ஆண்டு, கிழக்கு பஞ்சாப்பில், அஸ்ரத் மிர்ஸா குலாம் அகமத் என்பவரால் துவக்கப்பெற்ற இஸ்லாம் அகமதிய இயக்கம் பரவியது. இந்தியத் துணைக் கண்டம் முழுமையும், இவ்வியக்கத்திற்கு 150 கிளைகள் உள்ளன. கோட்டாறில், 1945 ஆம் ஆண்டு துவங்கப்பெற்ற ஜமாதி-அகமதியா, அவ்வியக்கத்தின் கிளைகளில் ஒன்றாகும். கோட்டாறிலுள்ள எடலக்குடியில், 1954 ஆம் ஆண்டு, சூன் திங்கள் 15 ஆம் நாள், புதிதாகக் கட்டப்பட்ட அகமதியா மசூதியும், ஒரு சமயப்பரப்புக் குழுக்கூடமும் திறக்கப்பட்டன. இவ்வியக்கத்தைப் பின்பற்றுபவர்கள் முகமது நபிக்குப் பிறகு, அஸ்ரத் குலாம் அகமதை, அருட்போதகராகக் கருதுகிறார்கள். தோராயமாக 50 குடும்பத்தைச் சார்ந்த அவர்கள் கோட்டாறில் வசிக்கிறார்கள்.

சமூக வாழ்க்கையமைப்பு

சொத்து மற்றும் பரம்பரை உடைமை

மரபுரிமைகளில், மாவட்ட மக்களிடையே மருமக்கத்தாயம் மற்றும் மக்கத்தாயம் ஆகிய இரு முறைகளும் பரவியிருந்தன. மருமக்கத்தாயம் மரபுரிமை, கேரளத்தில் சிறப்பியல்பாகும். மருமக்கத்தாயம் மரபுரிமை முறையில், மரபு வழி வருகை, பெண் வழியிலோ அல்லது சகோதரியின் குழந்தைகள் மூலமாகவே அமைகிறது. குடும்பம் அல்லது *தாராவாடு*, (அவ்வாறு அது அழைக்கப்படுகிறது) என்பது பெண் வழியில் மட்டும், ஒரு பொது குல முதல்வியின் அனைத்து (மரபினர்) வழித்தோன்றலையும் அடக்கியதாகும். *தாராவாடு* ஒரு கூட்டுக் குடும்பமாக இருந்தது. குடும்பத்தின் சொத்து அனைத்து உறுப்பினர்களுக்கும் கூட்டுச் சொத்தாக இருந்து வந்தது. மேலும், குடும்ப உறுப்பினர் ஒவ்வொருவரும், அதை அனுபவித்திடத் தகுதியுள்ளவராயிருந்தனர். ஆனால், குடும்ப உறுப்பினர் அச்சொத்தினைப் பாகம் பிரித்துப்பெற தகுதியற்றவராகிறார்கள். தாராவாடின் அனைத்து உறுப்பினர்களின் இசைவினைப் பெற்றால்தான், சொத்தினை பாகம் பிரித்திட இயலும். குடும்பத்தின் மூத்த ஆண் உறுப்பினர் *காரணயான்* என அழைக்கப்பட்டார். குடும்பச் சொத்தினை மேற்பார்வை செய்ய அவர் முழு உரிமை பெற்றவராயிருந்தார். அவரது உரிமைகளில் ஒரே ஒரு கட்டுபாட்டு விதி என்னவெனில், அவர், *அனந்தராயான்கள்* அல்லது இளநிலை உறுப்பினர்களின் இசைவுடன் தான் குடும்பச் சொத்தினை மாற்றிடவோ, பராதீனம் செய்திடவோ இயலும். சொந்த சொத்துக்களில்லாத இளநிலை உறுப்பினர்கள், *காரணயாஸ்தனன்* சொத்துக்கு தங்களது முதுநிலைப்படி, மேறகுறிப் பிட்டவாரான உரிமையைப் பெறுகிறார்கள். காரணயான் குடும்ப சொத்துக்களை மேற்பார்வை செய்வதில் பெருங்குறை யிருப்பதாக நிருபிக்கப்பட்டால், அவரை அவரது பணியினின்றும் நீக்கிட நீதி மன்றத்தில் வழக்காட அனந்தராயான்கள் உரிமை பெற்றவராயிருந்தார் கள்.

திருமணங்கள்

ஆதிகாலம் முதற்கொண்டே திருமணங்கள் இந்துக்களால் நெஞ்சார்ந்த, புனிதச்சடங்காகக் கருதப்படுகிறது. பொதுவாகச் சொன்னால், ஏற்கப்பட்ட விதியானது, ஒரு துணை மணம், அதாவது *ஒரு கணவன்-ஒரு மனைவி* என்பதாகும். பண்மனை மணமும், ஆங்காங்கே வழக்கத்திலிருந்தது. 1955 ஆம் ஆண்டு, இந்து திருமணச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்தியா முழுமையும், இந்து திருமணங்கள் தொடர்புள்ள சட்டத்தை இது முறைப்படுத்தி சீர்திருத்தியது. அனைத்துத்தர இந்துக்களுக்கும், ஒரு துணை மணம், பொதுவானதாகவும், கட்டாயமானதாகவும் ஆக்கப்பட்டது. கிறித்தவர் களிடையே பண்மனை மணம், சட்டப்படியும், சமயத்தின்படியும் தடைக்குட்பட்டதாகும். சட்டப்படியும், வழக்கத்தின் அடிப்படையிலும், முகம்மதியர்களுக்கு, பண்மனை மணம் தடை செய்யபட்டதன்று:

இருப்பினும், பொதுமக்கள் கருத்து, இதற்கு எப்பொழுதும் மாறுபட்டதாகவே உள்ளது.

மருமக்கத்தாயத்தில், ஒரு கூட்டுக்குடும்பத்திலுள்ள சொத்துக்களின் முக்கியமான தனிச் சிறப்பு என்னவெனில், காரணவானின் மனைவி (அம்மாவி) அவருக்கோ அவரது குழந்தைக்கோ, காரணயானின் குடும்பச் சொத்துக்களில் எவ்வித உரிமையும் இல்லாதிருந்தும் கூட, "தராவாடு" குடும்ப விவகாரங்களில் மிகுந்த செல்வாக்குடையவராக இருந்திருக்கிறார். குடும்பத்தில் அடிக்கடி நிகழும் உணர்ச்சி மேலிட்ட விவகாரங்களுக்கு, அம்மாவி, காரணமாயிருந்திருக்கிறார், எனவே, எப்பொழுதும் அவர்கள் அனந்தராயன்களின் மதிப்பிற்குரியவராக இருந்ததில்லை. கூட்டுக் குடும்பமுறை, எப்போதுமே இனக்கமான சூழ்நிலையிலிருந்ததில்லை. கூட்டுக்குடும்பத்தில், காரணவான்களின் பெருத்த அதிகாரங்களுக்கு எதிராக இளநிலை உறுப்பினர்கள் குழப்பம் விளைவிக்கத் தொடங்கியதால், மருமக்கத்தாயம் முறை, கடந்த சில காலமாக, குறிப்பிட்ட மாறுதல்களுக்குள்ளாகியது. தொடர்ந்து மேற்கொள்ளப் பட்ட சட்ட பூர்வ நடவடிக்கைகளால், இந்து சமுதாயத்தைச் சார்ந்த பல பிரிவினர், "மக்கத்தாயம்" முறையைப் பின்பற்றலாயினர்.

துவக்க காலத்தில், நாஞ்சில் நாட்டு வெள்ளாளர்கள் மக்கத்தாயம் முறையை பின்பற்றி வந்தார்கள். பின்னர், அவர்கள் மலையாளிகளைப் போன்று, மருமக்கத்தாயம் சட்டத்தை ஏற்றுக் கொண்டார்கள், முந்தைய காலங்களில், நாஞ்சில் நாடு வெள்ளாளர்களின் மரபுரிமைச் சட்டங்கள், மக்கத்தாயம் மற்றும் மருமக்கத்தாயம் முறைகளின் கலவை என எட்கர் தர்ஸ்ட்டன் கூறுகிறார். சிலர் தந்தையின் தனியுரிமைச் சொத்துக்களில் ஒரு பகுதியை நாலில் ஒரு பாகத்திற்கு மிகாமலும் மக்கத்தாயம் குடும்பத்தில், மரபில் வந்த நான்கில் ஒரு பாகத்தையும் அடையத் தகுதியுடையவராயினர். இந்த சொத்து, உரிமைக்கு மாறாக அன்பின் அடிப்படையில் அளிக்கப்பட்டு வந்ததால், இதனை "உகந்துதாமா"என அழைக்கலாயினர்.

திருமணம், குடும்ப மேற்பார்வை மற்றும் மரபுரிமை ஆகிய வற்றிற்கு சட்ட வடிவம் கொடுக்க வேண்டுமென நாஞ்சில் நாடு வெள்ளாள வகுப்பினர் கருதினார்கள். இப்பொருள் குறித்து, உடனடியாக சட்டமியற்ற வேண்டுமென்ற கோரிக்கை எழுந்தது. தற்போது பின்பற்றப்பட்டுவரும் திருமண முறைகளை ஏற்று, திருமணங்களையும் வரன் முறைப்படுத்தி, சட்டப்படி அவற்றை செல்லுபடியாக்க வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள கோரிக்கை விடப்பட்டது. மரபுப்படி கொரமாண்டல் கடற்கரைப் பகுதியிலிருந்து மக்கள் துவக்கத்தில், நாஞ்சில் நாட்டில் குடியேறினார்கள். மலையாள மக்களின் செல்வாக்கினால், அவர்கள், தங்களது சமூக மற்றும் குடும்ப அமைப்பினை மாற்றிக்கொள்ளத் துவங்கினார்கள். அவர்களது மரபுரிமை மாற்றியமைக்கப்பட்டது. திருமணஞ்சார்ந்த கருத்துக்கள் திருத்தியமைக்கப்பட்டன: அவர்களது

சாதியமைப்பு, கருத்திற்கொள்ளக் கூடிய வகையில், தமிழ் மற்றும் மலையாள சமூக தனிச்சிறப்புகளைக் கொண்ட பலதரப்பட்ட மக்களின் கூட்டமைப்பாகியது. மரபுவழி முறைகளை நம்புவதாயின், மக்கத் தாயத்திலிருந்து மருமக்கத்தாயம் முறைக்கு மாறிய நடவடிக்கை சமுதாயத்தினரால், வெளிப்படையாக மேற்க்கொள்ளப்பட்டதாகும். சமுதாயத்தினர், துவக்கத்தில் மக்கத்தாயம் முறையை பின்பற்றினார்கள் என்பதில் எவ்வித ஐயப்பாடுமிருக்கமுடியாது. ஆனால், தாய், குடும்பத் தலைவியாகவுள்ள சமுதாய அமைப்பின் வடிவம், நாளடைவில் பொருத்தி இணைக்கப்பட்டது. அரச குடும்பத்தினர் போன்று, தாய், குடும்பத் தலைவியாகவுள்ள சமுதாய அமைப்பினை அவர்கள் பின்பற்றியதால், தமிழ்நாட்டிலுள்ள அவர்களது சகோதரர்களுடன் மனமுறிவு, சுற்றுச்சூழ்நிலை ஏற்படுத்தும் செல்வாக்கு, முன்பு ஒப்புயர்வற்ற வேளாண் சமூகத்தினராக வாழ்ந்த அவர்கள் பெற்ற பயன்கள், பின்னர் நீதித்துறையின் செல்வாக்கு ஆகியவை குறைந்த அல்லது அதிக அளவில், இந்து சட்டத் தத்துவத்திற்கு அவர்களை செவி சாய்க்க விடாமல் மருமக்கத்தாயம் சட்டத்தை ஏற்க வழிவகுத்தன.

1926 ஆம் ஆண்டின் நாஞ்சி நாடு வெள்ளாளச் சட்டம், இச் சமுதாயத்தைச் சேர்ந்தோரை, "மருமக்கத்தாயத்திற்கு பதிலாக, "மக்கத்தாயம்" முறையை பின்பற்ற வழிவகை செய்தது. இதிலிருந்து நாஞ்சி நாட்டு வெள்ளாளர்களால், மருமக்கத்தாயம் முறை கைவிடப்பட்டது. மக்கத்தாயம் முறையினை அவர்கள் கடைப்பிடிக்கலா யினர். அத்துடன் மருமக்கத்தாயம் முறை, படிப்படியாக மறைந்தது.

இந்து சட்டத்தின் "நிதாக்ஷரா" முறையைப் பின்பற்றிய நாடார்களிடம், மரபுரிமைத் தோற்றம், கண்டிப்பாக மக்கத்தாயமாகவே எப்போதும் இருந்து வருகிறது.

நாயர்களிடம், பரம்பரை உடைமைச்சட்டம், மருமக்கத்தாயம் தான், ஆனால், நாயர் ஒழுங்கு விதிமுறைகள், மக்கத்தாயம் முறையைத்தான் கடைப்பிடிக்கக் கூறுகின்றன. அதன்படி, இறந்து போன நாயரின் மனைவியும், அவரது குழந்தைகளுமே அவரது தன் உரிமைச் சொத்துகளுக்கு வாரிசுதாரர்களாகிறார்கள். தாராவாடுகளின் சொத்துக்களையும், பாகப்பிரிவினை செய்ய வழிவகை செய்தது; பங்குகளும் ஒவ்வொருவருக்கும் பிரித்துக் கணக்கிடப்பட்டது. 1925-ஆம் ஆண்டு நாயர் சட்டம், சொத்துக்கள் மீது இறந்தவரின் உடன்பிறந்தார் மகனுக்கு எவ்வித பாத்தியதையுமில்லையென எடுத்துரைத்தது.

ஈழவர்கள் மக்கத்தாயம், மருமக்கதாயம் ஆகிய இரண்டும் கலந்த முறையைப் பின்பற்றினர். ஆனால், 1925 ஆம் ஆண்டில், திருவாங்கூரில், ஈழவர்கள் ஒழுங்கு விதிமுறையின் நடைமுறைப் படுத்தப்பட்டவுடன், பரம்பரை உடைமை, ஆணின் நேர் மரபுவழி சான்றாக ஏற்படுத்தப்பட்டது.

காணிக்காரர்கள் "மக்கத்தாயம்", மருமக்கத்தாயம் ஆகிய இரண்டும் கலந்த ஒரு முறையைப் பின்பற்றுகிறார்கள். ஆனால், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள காணிக்காரர்களில், பலர், மக்கத்தாயிகளாகவே இருந்து வருகிறார்கள். மாவட்டத்திலுள்ள கிறித்துவர்கள் மற்றும் முகம்மதியர்களின் மரபுவழிமுறை, ஆணின் நேர் மரபுவழிச் சார்ந்ததாக அமைந்தது.

குடும்ப வாழ்க்கை

குடியிருப்பு வீடுகள்

மாவட்டத்தில், குடியிருப்பிற்குப் பயன்படுத்தப்படும் வீடுகளின் எண்ணிக்கை 2,57,300 ஆகும். இவற்றில், 2,13,123 வீடுகள் புறப்பகுதியிலும், 44,177 வீடுகள் நகர்ப்பகுதியிலும் உள்ளன. மாவட்டத்திலுள்ள குடியிருப்பு வீடுகள் தொடர்பான புள்ளி விவரங்கள் 1981ஆம் ஆண்டு, மக்கள் கணக்கெடுப்புக் கையேட்டினின்றும் தொகுக்கப்பட்டு, கீழே அளிக்கப்பட்டுள்ளன. சராசரியாக, ஒரு வீட்டில் ஆறு குடியிருப்பாளர்கள் உள்ளனர்.

மாவட்டத்தில் வீடுகளின் இட அமைவு, அடிப்படையிலேயே அண்டை கேரள மாநிலத்தினின்றும் வேறுபடுகிறது. கேரள மாநிலத்தில், ஒரு தொடர்ச்சியான, விரிந்த பரப்பளவில், தனிமையாக வீடுகள் அமைந்துள்ளமை, ஒரு தனிச் சிறப்பாகும்: ஆனால், தற்போதைய கன்னியாகுமரி மாவட்டத்திலும், கிழக்குக் கடற்கரையிலும் பொதுவாக, நெருக்கமாக வீடுகள் அமைந்துள்ளமை பொதுவான இயல்பாகும்.

ஏழைகளின் வீடுகள் மண்ணிலேயே கட்டப்பட்டன. அவ் வீடுகளுக்குக் கதவுகளோ, சன்னல்களோ கிடையாது. அவரை, தென்னை ஓலை மற்றும் பனை ஓலை போன்றவற்றால் கூரை வேயப்பட்ட சிறிய வீடுகளாகும். நடுத்தர வகுப்பினர்களின் வீடுகளுடைய சுவர்கள் மரத்தினால் செய்யப்பட்டவை; சுவர்கள் வெய்யிலில் காய்ந்த அல்லது சுடப்பட்ட செங்கல்லினால் கட்டப்பட்டவையாகும். அவைகளுக்கும் கணிசமான அளவு கூரைகள், கதவுகள் மற்றும் சன்னல்கள் இருக்கும். அவைகள் கூரை வீடுகளாகவோ அல்லது ஓட்டு வீடுகளாகவோ உள்ளன. பணக்காரர்கள் தற்காலத் திட்ட அமைப்புப்படி, வீடுகளைக் கட்டுகிறார்கள். அவைகள் செங்கல், சிமிண்டினால் கட்டப்பட்ட காங்கிரீட் வேலையிலமைந்த வீடுகளாக இருக்கும், அவற்றில், தற்காலத்திலே முறைப்படியான கழிப்பறைகள், குளியலறைகள் மற்றும் சாக்கடைகள் கட்டப் பட்டிருக்கும். செல்வந்தர்கள் மற்றும் நன்கு படித்தவர்களின் வீடுகளில் எல்லா வசதிகளும் செய்யப்பட்டிருக்கும். வானொலி போன்ற விலை உயர்ந்த பொருட்களையும், அவர்கள் தங்களது வீடுகளில் வைத்திருப் பார்கள். அட்டவணையிட்ட வகுப்பினர் மற்றும் பழங்குடியினர், குடிசைகளிலேயே வசித்து வருகிறார்கள்; அவர்களது வீடுகளில் ஒரு சில மண்பானைகளும், பாய்களும் மட்டுமே காணப்படும்.

ஆடை, ஆபரணங்கள்

எளிதான, ஆனால், நவநாகரீக ஆடை இம்மாவட்ட மக்களின் தனிச்சிறப்பியல்பாகும். முன்பெல்லாம், பார்வையில் சில மாறுபட்ட சிறப்பியல்புகளையும், அவர்கள் அணியும் ஆடையையும் வைத்து, அவர்கள் எந்த சமுதாய மரபைச் சேர்ந்தவர்களென எளிதில் அடையாளம் கண்டு கொள்ள முடிந்தது. தற்போது அனைத்து வகுப்பினரும், ஒரே மாதிரியான ஆடைகளை அணியும் முறையினைக் கையாளுவதால், தற்போது ஆடைகளை வைத்து அடையாளம் கண்டு கொள்ளும் பழக்கம் மாறிவிட்டது. ஆடைகளணிவது குறித்து மேற்கத்திய நாடுகளின் கருத்துக்களும், பழக்க வழக்க நடைமுறை களும் பொருத்தமாயிருப்பதாக மக்கள் கருதுகிறார்கள். மிகுந்தளவு அலுவலர்களும், பள்ளி மாணவர்களும், மேற்கத்திய நாடுகள் ஆடை முறையினையே பின்பற்றுகிறார்கள். தற்போது, பெண்டிர் ஆடை அணியும் முறையிலும் அப்படியொரு மாறுதலைக் காணமுடிகிறது. இன்று அனைத்து வகுப்பினர், மற்றும் சமுதாய மரபினரிடமும், ஆடை அணியும் அமைப்பு முறையே மாறிவிட்டது. சட்டை, வலதுபுறம் சிறு தொங்குபை போன்ற அமைப்புக்கொண்ட சட்டை, ரவிக்கை ஆகியவை அதிக அளவில் பரவியுள்ளது. ஆடவர் ஆடையணியும் முறை பரவலாக அனைத்து வகுப்பினர் மற்றும் சமுதாய மரபினரிடமும் ஒரே மாதிரியாகத்தானுள்ளது. சிலர், வேஷ்டி மற்றும் சட்டை அணிவதையும், மற்றும் சிலர் வேஷ்டி மற்றும் கழுத்தைச் சுற்றி மேல்துண்டு அணிவதையும், பழக்கமாகக் கொண்டுள்ளனர். நகர்ப்பகுதிகளில், முழுக்கால்சட்டை, வலதுபுறம் சிறு தொங்குபை போன்ற அமைப்புக்கொண்ட சட்டை, அதே அமைப்பினைக் கொண்ட புறச்சட்டை ஆகியவை தற்போது மக்களால் விரும்பி அணியப்படுகின்றன. அவர்கள் அணியும் துணியின் நயம், அவர்களது நிதிவசதிக்கேற்ப மாறுபடுகிறது.

பொதுவாகப் பெண்கள் புடவை மற்றும் ரவிக்கை ஆகியவற்றை அணிகிறார்கள். எனினும், பெண்கள் உடைகளணிவதில், தற்போது, குறிப்பிட்ட மாறுதல் காணப்படுகிறது; அதேபோன்று, வெவ்வேறு சமுதாய மரபினைச் சார்ந்தோர் அணியும் உடைகளிலும் மாறுபாட் டினைக் காணமுடிகிறது. சில முகம்மதியர்கள் (ஆடவர், பெண்டிர் இருபாலருமே), தங்களை ஏனைய சமயத்தைச் சார்ந்தோரிடமிருந்து வேறுபடுத்திக்காட்ட தங்களது மரபு வழக்குப்படியான ஆடைகளையே அணிகிறார்கள். மலையாள மொழி பேசும் பெண்டிர் வெண்ணிற ஆடையையே விரும்பி அணிகிறார்கள். கடந்த சில ஆண்டுகளாக அவர்களும், ஏனைய வகுப்பினரின் ஆடை அணியும் முறையினையே பின்பற்றி வருகிறார்கள்.

பல்வேறு சமுதாய மரபினைச் சார்ந்த பெண்களிடம், அதிகமாக நகைகள் அணியும் பழக்கம், காலப்போக்கில் மறைந்துவருகிறது. மிகவும் நாகரிக அமைப்புமுறையைப் பின்பற்றுபவர்கள், நகைகளை மிகவும் குறைத்துக்கொண்டுள்ளார்கள். வழக்கமாய், ஒரு தங்கச் சங்கிலி, ஒரு

ஜோடி கொலுசுகள் (பொதுவாக, கணுக்காலில் அணியும் வெள்ளி நகை), ஆகியவற்றை அணிவது நடைமுறையிலுள்ளது.

உணவு

மாவட்டத்திலுள்ள பணக்காரர்கள், ஏழைகள் ஆகிய அனைத்துத் தரப்பினருக்கும் அரிசியே, முதன்மையான உணவாகும். ஏழைகளில், பொருளாதார அடிப்படையில் மிகவும் பின் தங்கியுள்ளோர், மரவள்ளிக்கிழங்கு சாப்பிடுகிறார்கள். இந்துக்களில், சில பிரிவினர், காய்கறி உணவு உண்பவர்கள், பொதுவாக, முகம்மதியர்களும், கிறித்தவர்களும், ஏனையோரைவிட அதிக அளவில் மீன் மற்றும் இறைச்சி உண்கிறார்கள். நீரில் கலந்த குடிவகையான டீ மற்றும் காபி ஆகியவற்றை, மாவட்டத்தின் புறப்பகுதியில் கூட அதிக அளவில் மக்கள் அருந்துகிறார்கள்.

திருவிழாக்கள் மற்றும் பொழுதுபோக்கு விளையாட்டுகள்

அனைத்து வட்டங்களிலுமுள்ள இந்து கோயில்கள், மசூதிகள் மற்றும் கிறித்தவத் திருக்கோயில்கள் ஆகியவற்றில் பல கொண்டாட்டங்களையொட்டி திருவிழாக்கள் நடைபெறுகின்றன. ஒவ்வொரு ஆண்டும், சனவரி திங்களில், சுசீந்திரம் திருக்கோயில் தேர், திருவிழாவிற்கு, அதிக அளவில் மக்கள் கூடுகிறார்கள். கல்குளம் வட்டத்திலுள்ள மண்டைக்காடு கோயிலில் மார்ச்-ஏப்ரல் மாதங்களில், திருக்கல்யாண உத்சவம் விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. இந்து சமயத்தைச் சார்ந்தோருக்கு, பொங்கலும் (சனவரியில்) தீபாவளியும் (நவம்பரில்), மகிழ்ச்சியுடன் கொண்டாடப்படும் திருவிழாக்களாகும். ஆகஸ்ட்-செப்டம்பர் மாதங்களில், பல களிப்பூட்டும் விளையாட்டு களுடன், அறுசுவை விருந்து படைத்தும், மலையாளிகள், ஓணம் பண்டிகை கொண்டாடுகிறார்கள். அனைத்து வட்டங்களிலுமுள்ள முகம்மதியர்கள் முகரம் மற்றும் ரம்சான் பண்டிகைகளைக் கொண்டாடு வதுண்டு. அதே போன்று, கிறித்தவர்களுக்கு, கிறிஸ்துமஸ் ஒரு முதன்மையான பண்டிகையாகும். கோட்டாறிலுள்ள புனித சேவியர் கிறித்தவ திருக்கோயிலில் பெரிய அளவில், ஆண்டுதோறும் டிசம்பர் மாதத்தில் ஒரு திருவிழா கொண்டாடப்படுகிறது. தென்னிந்தியாவின் பல இடங்களிலிருந்தும் கத்தோலிக்க கிறித்தவர்கள் இதற்கு வருகை தருகிறார்கள்.

புறப்பகுதியிலுள்ள, வெகுளித்தனம் படைத்த மக்கள் தொன்மை மாட்சியுடைய வேடிக்கைகளிலும், விளையாட்டுக்களிலும் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ளார்கள். அதே சமயம், மாவட்ட முழுமையும், திரைப்படம்(சினிமா), மக்களின் கவனத்தைக் கவர்ந்த பொழுது போக்கு அம்சமாகத் திகழ்கிறது. பாட்டு, நாடகம் ஆகியவற்றிற்கும் மக்களி டையே நல்ல செல்வாக்கு உள்ளது. மேற்கத்திய நாடுகளின் விளையாட்டுக்களான கால்பந்தாட்டம், வரிப்பந்தாட்டம், உந்து பந்தாட்டம், பூப்பந்தாட்டம், ஆகியவை, மாவட்டத்தின் படித்த இளைஞரின் மதிப்பைப்பெற்ற விளையாட்டுகளாகும். மக்கள் கலை

மற்றும் நடனம் ஆகியவையும், பிரபலமானவையாகும். கோயில் திருவிழாக்கள் மற்றும் பள்ளிகளில் கொண்டாடப்படும் விழாக்கள், ஆகியவை நடைபெறும்போது, மக்கள் கலை, மக்கள் நடனம் ஆகியவை, இடம்பெறுகின்றன. மக்கள் நடனங்களில், "திருவாதிரைக் காளி" பெருமைக்குரிய இடத்தைப் பெற்றுள்ளது. கும்மியைப் போன்ற இவ்விளையாட்டு, ஆண்டு தோறும், ஓணம் திருவிழாவின்போது, விளையாடப்படுகிறது. இவ்விளையாட்டில் பங்கு கொள்வோர் சிறு வயதுப் பெண்களாகும். ஒவ்வொரு நடனத்திலும். 8,10,12 அல்லது 16 பெண்கள் கலந்து கொள்கிறார்கள். அவர்கள் சுற்றி வந்து, ஒரே குரலில் ஒலி எழுப்பிப் பாடுகிறார்கள். ஒவ்வொரு பெண்ணும், தங்களது இரு கைகளிலுமுள்ள குச்சிகளை அடிப்பதும், அவர்கள் அவற்றிற்கொப்ப கால்களை யெடுத்து வைப்பதும் இராகத்திற்கொப்பவும் ஓசையெழுப்புகிறார்கள்.

களியல் : இது, கிராமப்புறங்களில், ஆண்களும், சிறுவர்களும் ஆடும் நடனமாகும். ஒரு பிரிவின் தலைவர், நேரத்திற்கொப்ப தாளங்களை எழுப்பி, பாட்டுக்களைப் பாடுவார். அப்பிரிவைச் சேர்ந்தோர், அவர்களது கைகளில், கோல்களுடன், நடுவிலுள்ள எரியும் விளக்கினைச் சுற்றி, நடனமாடி, அவர்களது தலைவர் பாடும் பாட்டையும், திரும்பப்பாடிக்கொண்டு வருவார்கள். பின்னர், அவர்கள் திரும்பி, உடலை முறுக்கி, முன்னும், பின்னும் சாய்ந்து, தரையில் குந்திக்கொண்டு, இராகத்திற்குத் தக்கவாறு, சுற்றி நகர்ந்து கொண்டே வருவார்கள். துவக்கத்தில், அவர்கள் காலடிவைப்பது விரிவடைந்து காணப்படும: சில நேரத்தில், நடை மிகவும் விரைவாகவும், கோபாவேசமாகவுமிருக்கும். ஏதேனுமொரு நிகழ்ச்சியில், இந்நடனமாட அவர்களை அழைத்தால், நாட்டியமாடும் இவர்கள், பொதுவாக தெய்வத்தின் உதவியை வேண்டிய வழிபாட்டுடன் துவக்கி, ஏற்றப்பட்ட விளக்குகளைக் கையிலேந்தி, அந்த விளக்கு நடனத்துடன் நடனத்தை முடிப்பார்கள். இந்த மக்கள் நடனம், கிராம மக்களின் கலைத்திறன் மற்றும் பொழுதுபோக்கு அம்சத்துடன் கூடிய வாழ்க்கையைப் பிரதிபலிக்கிறது.

கதகளி : கதகளி என்பது ஒரு தனித்தன்மை வாய்ந்த நாடக மாகும். அது திருவாங்கூரைப் பிறப்பிடமாகக் கொண்டது. கதகளி, (கதை-நடனம்) பதினைந்து அல்லது பதினாறாம் நூற்றாண்டில் வளர்ச்சி பெற்றது. அக்காலத்தில் நடத்தப்பெற்ற நடனங்களைக் காட்டிலும் அது சற்றே மாறுபட்டது. உருவக வடிவான நடிப்புடன் கூடிய கடவுட்பற்று மிக்க சொல்லமைப்பு தான் கதகளியின் தனிச்சிறப்பாகும். கலையம்சம் பொருந்திய இந்த நடனத்தில், நாட்டியமாடுபவர்கள், தங்களது கருத்துக்களை சொல்லால் பிரதிபலிப்பதில்லை. ஆனால் குறிப்பிடத் தக்க செயற்குறிப்பிலேயே வெளிப்படுத்துகிறார்கள். உடலசைவுகள் பரத நாட்டியக் கலையைப் பின்பற்றி, சில மாற்றங்களுடன் மேற்கொள்ளப்படுகின்றன. நடிகர்களிடையேயான உரையாடல் மற்றும்,

கதைச்சுருக்கம் ஆகியவை கவிதை நடையிலேயே, வாத்ய இசைப் பின்னணியுடன், பாகவதரால், உரக்க, பாடப்படுகின்றன. நடிகரின் நடிப்பு, அவர் வாயிலிருந்து வெளிப்படும் சொற்களுக்கொப்ப உள்ளது. ஆடை, செயற்கை அணிமணி, வேடப்பொருத்தம் ஆகியவை, ஒரு நடிகருக்கு கதகளியில் முக்கியமான அம்சங்களாகும். பல்வேறு வகைப்பட்ட நடிகர்களுக்கு நிலையான வேடப்பொருத்த சாதனங்க ளுள்ளன. ஆனால், சிவப்பு, மஞ்சள், பச்சை, கறுப்பு மற்றும் வெள்ளை நிறங்கள் பயன்படுத்தப்படுகின்றன. தலைக்கு மேல் வைத்துக் கொள்ளக்கூடிய தலைப்பாகை, கிரீடம் போன்ற ஆடை, அணிமணிகள் இலேசான எடையுள்ள மரத்தினால் செய்யப்பட்டவை. அவை சிறுசிறு கண்ணாடித்தூள்கள், மின்மினித்தகடுகள் மற்றும் பல நிறக்கற்கள் ஆகியவற்றால் அணி செய்யப்பட்டவையாகும். வழக்கமான, ஒரு கதகளி செயல்காட்சி, எட்டு முதல் பத்து மணி நேரங்கள் நடக்கும். திரைப்படங்கள் (சினிமா) வந்த பின்னர், கதகளிகலை, மக்கள் மதிப்பினின்றும் சிறிது சிறிதாகக் குறையத் தொடங்கியது. தற்போது இந்த நடனம், கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டார், திருப்பரப்பு, பொன்மனம், குழித்துரை, நெய்யூர் மற்றும் முஞ்சிரை ஆகிய இடங்களிலுள்ள கோயில்களில், ஆண்டிற்கிருமுறை திருவிழாக்காலங் களில் நடைபெறுகிறது.

கரகாட்டம்

கிராமப்புறங்களில், இந்த வகையான ஆட்டம் பொதுவாக நடத்தப்படுகிறது. திருவழாக்காலங்களிலும், திருமணங்களிலும், இவ்வட்டத்தில், ஆடவர், பெண்டிர் இரு வகுப்பினரும் கலந்து கொள்கின்றனர்.

களரியுத்தம்

இது ஒரு தற்காப்பு நடவடிக்கையாகும். இந்தக்கலையில் பயிற்சிபெற்றோர், எத்தாக்குதலையும் வாள்,கத்தி, மற்றும் கைத்தடி ஆகியவற்றால், தற்காப்பின் நிமித்தம் எதிர்த்துத் தாக்கிட இயலும். ஒரு ஊக்கந்தளராத களரிச் சண்டை செய்பவர், படைக்கலங்களுடன் ஒரு கூட்டம் தாக்கினாலும், எளிதில் தப்பிக்கலாம். களரியுத்தம், ஒரு விதமான தேகப்பயிர்ச்சியுமாகும். தற்காப்பு செய்தல், வாள் சண்டை, கத்தியினால் சண்டையிடுதல், நீளமான மற்றும் குட்டையான தடியினால் சண்டையிடுதல், தற்காப்புக்காக சமயோசித புத்தி கூர்மையால் தப்புதல், நெருப்புப்பந்தங்களை வைத்துக்கொண்டு விளையாடுதல், ஏனைய மற்ற வடிவத்தினாலான சண்டைகள் ஆகியவை களரியுத்தத்தில் அடங்கும். இவ்விளையாட்டு, இம் மாவட்டத்தின் சிறப்பியல்பாகும். ஆனால், தற்போது இது அவ்வளவு பிரபலமாக இல்லை. இங்குமங்கும் சில இளைஞர்கள் மட்டும் இக்கலையைப் பயின்று வருகின்றனர்.

பல்வேறு சமூக மக்களின் வாழ்க்கை முறை

யாத்ரிகர் மையங்கள்

வரலாற்று காலத்திலிருந்தே, கன்னியாகுமரிப் பகுதி யாத்ரிகர் மையங்களுக்குப் பெயர் பெற்றதாக விளங்குகிறது. தொன்மையான காலத்திலிருந்தே, கன்னியாகுமரி (குமரி முனை) இந்துகளின் புனிதமான யாத்ரிகர் மையங்களிலொன்றாகத் திகழ்கிறது. பொதுவாக, கன்னியாகுமரி (குமரி முனை) என அழைக்கப்படும் இவ்விடம், மூன்று கடல்களான, அரபிக் கடல், வங்காளக் குடாக்கடல், இந்து மஹா சமுத்திரம் ஆகியவை கூடுமிடத்தில் (சங்கமமாகுமிடத்தில்) உள்ளது. கன்னியாகுமரியிலுள்ள கடற்கரைக்கோயில், கன்னி-தேவிகுமரிக்கு அர்ப்பணம் செய்யப்பட்டதாகும். கி.பி.984 இல், இராச இராச சோழர், இவ்விடத்தில், குஹநதேஸ்வரம் என்ற சிவன் கோயிலை எழுப்பினார். கல்குளம் வட்டத்திலுள்ள குமரன் கோயில் என்ற இடத்தில், எழுப்பப்பட்டு, சுப்ரமணியசுவாமிக்கு அர்ப்பணம் செய்யப்பட்டுள்ள கோயில், மிக அதிக அளவில் யாத்ரிகர்கள் வந்து செல்லும் புனிதத்தலமாகும்.

இம்மாவட்டத்தின் அகஸ்தீஸ்வரம் வட்டத்திலுள்ள சுசீந்திரம் திருக்கோயில், மற்றொரு முதன்மையான யாத்ரிகர் மையமாகும். மிகவும் புகழ்வாய்ந்த, புராதனக் கோயிலான தாணுமாலயச் சுவாமி கோயில், இங்குதானுள்ளது. இத்திருக்கோயிலில், தொல்பொருள் ஆராய்ச்சி முக்கியத்துவம் வாய்ந்த பல கல்வெட்டுக்கள் உள்ளன. இந்திரன், செய்த பாவங்களுக்கு இங்குதான் பரிகாரம் கிடைத்ததாகவும், எனவே "சுசீந்திரன்" என்ற பெயர் வந்ததாகவும் மரபு. இக்கோயில் இந்திரனாலேயே எழுப்பப்பட்டதாகவும் கூறப்படுகிறது. மாவட்டத்திலுள்ள ஏனைய கோயில்களைப் பற்றிய செய்திகள், "முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள்" என்ற தலைப்பிலான தொகுதியில் அளிக்கப்பட்டுள்ளன.

கழகங்களும், சங்கங்களும்

பல்வேறு சமூக மக்களின் வாழ்க்கை முறைகளை மேம்படுத்தவும், தற்காலிக விளையாட்டுக்கள் மற்றும் பல்வேறு ஆட்டங்கள் ஆகியவற்றை மக்களிடையே பரப்பிடவும், பல கழகங்களும், சங்கங்களும் செயல்பட்டு வருகின்றன. அவை தவிர, பொதுவாக, சமூகத்திற்கு நற்பணியாற்றவும், அவர்களது நலன்களை மேம்படுத்தவும் ஒரு சில அமைப்புகளும் செயல்படுகின்றன*.

மக்களின் சமூக வாழ்க்கையமைப்பிற்கேற்றவாரான பொருளாதார மற்றும் தொழில் தொகுதிகளும், பிரிவுகளும்

மாவட்டத்து மக்களின் தற்போதைய சமூக அமைப்பு, ஒரு நூறு ஆண்டுகளுக்கு முன்னர் இருந்ததற்குப் பெரிதும் மாறுபட்டது. சமூக மற்றும் பொருளாதார வாழ்க்கையமைப்பில், சிறப்பாக தொழில்கள்

---

* "பொதுவாழ்வு மற்றும் சமூகப்பணி அமைப்புகள்"

மற்றும் அலுவல்களில், நல்ல முன்னேற்றம் காணப்படுகிறது. இன்று சமூக அமைப்பின் அனைத்துப் பிரிவினரும்-பணக்காரர்களானாலும் ஏழையானாலும்,-வளர்ச்சியுற்றோர் மற்றும் பிற்பட்டோர், -இரு வகுப்பினருமே, தனி சொல்லமைப்பு மற்றும் தனி வளர்ச்சி ஆகியவற்றில் ஒரே அளவிலான வாய்ப்பினைப் பெற்றுள்ளனர். வளர்ச்சியுற்ற நாடு என்ற பொதுக்கருத்து, ஊக்குவிக்கப்பட்டதை தொடர்ந்து, தற்போதைய அரசு, ஏழை எளியோர் மற்றும் பிற்பட்ட பிரிவினைச் சார்ந்தோர் ஆகியோரின் கல்வி, வேலை ஆகியவற்றிற்கான ஊக்குவிப்பினை அளித்து சலுகைகளையும் அவ்வப்போது செய்து கொடுக்கிறது. பழைய காலத்திலிருந்தது போலல்லாது, ஒரு குறிப்பிட்ட சமுதாய மரபைச் சேர்ந்த மக்கள், அவர்களது மூதாதையரின் தொழிலைத்தான் பின்பற்ற வேண்டுமென்ற நியதியில்லை. மாவட்டத்திலுள்ள நாடார்கள், ஈழவர்கள் போன்ற சமுதாய மரபினர், அவர்களது மூதாதையர்களின் தொழிலை அறவே ஒதுக்கி விட்டு, புதுப்புதுத் தொழில்களைத் துவக்கிவிட்டார்கள். நிலையான மற்றும் நிரந்தர வருவாயை அளிக்கும் சிறப்பியல்புகளைக் கொண்ட தொழில்களான எழுத்தர், ஆசிரியர் போன்ற பல்வேறு விதமான தொழில்கள் மாறுபட்ட ஊதிய உரிமைக்கோரிக்கைகளுக்கு வழி வகுத்து விட்டன. நாட்டின் ஏனைய பகுதிகளிலுள்ளது போன்று, இம்மாவட்டத்திலும், சாதி முறைப்படியான தொழில் அமைப்பு மாற்றப்பட்டு மேற்சொன்ன வகையான தொழில்களில் பெரும்பாலும் மக்கள் தங்களை ஈடுபத்திக் கொண்டதால், அவையே சமூகத்தின் மாறுபட்ட தொழில் அமைப்பிற்கு அமைந்து விட்டன.

மொழி நூலாராய்ச்சி சிறப்பியல்பு - ஆய்வு அறிக்கை

இந்த மொழியியல் ஆராய்ச்சி ஆய்வு அறிக்கையில் தமிழ் நாட்டிலுள்ள கன்னியாகுமரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலுள்ள தமிழர்களின் பழக்க மரபுகள், அவர்கள் பேசும்போது, பேச்சு வழக்கிலுள்ள வேறுபாடுகள், ஆகியவை தெளிவாக அளிக்கப் பட்டுள்ளன.

கடந்த 1980 ஆம் ஆண்டு, ஆகஸ்ட் - செப்டம்பர் திங்களில், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த, மொழியியல் ஆராய்ச்சி உயர்தர, ஆழ்நிலை ஆய்வு மையத்தைச் சார்ந்த வல்லுனர் குழுமம், அவர்களது களப்பணியின் போது சேகரித்த, மொழியியல் ஆராய்ச்சி சார்ந்த விவரங்களின் அடிப்படையில், இந்த ஆய்வு அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. பல்வேறு வட்டங்களில், மாறுபட்ட, சமுதாயப் பிரிவுகளைச் சார்ந்த உள்ளூர் மக்களை அணுகி, அவர்களது பேச்சு வழக்கினைக் கூர்ந்து நோக்கி, புள்ளி விவரங்கள் தொகுக்கப் பட்டுள்ளன. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த மொழியியல் ஆராய்ச்சி உயர்தர ஆழ்நிலை ஆய்வு மையம், "சமூக மொழியியல் ஆராய்ச்சி" மற்றும் "மொழியின் சொற்கள் ஆய்வு" ஆகிய தலைப்புகளில் வினாப்பட்டிகள் தயாரித்து, அவ்வினாப் பட்டிகளுக்கேற்ப, விவரங்கள் அவ்வப்போது சேகரிக்கப்பட்டன.

துவக்கத்தில், உள்ளூர் மக்களின் குரலொலிக்கொப்ப, பதிவு செய்து அதன் பின்னர், ஆராய்ச்சியாளர், ஆய்வு மேற்கொள்ள உதவியாக, அதே முறையில், "நாடாப்பதிவு" (டேப் ரிக்கார்டு) செய்யப்பட்டுள்ளது. பொருத்தமான மொழியியல் ஆராய்ச்சி விவரங்களை சேகரிக்க, வல்லுனர் குழுமத்தினர், கன்னியாகுமரி மாவட்டத்தின் ஐந்து வட்டங்களான, தோவாளை, அகஸ்தீஸ்வரம், கல்குளம், கொளச்சல் மற்றும் விளவங்கோடு ஆசியவற்றில், துல்லியமான இடங்களைத் தேர்ந்தெடுத்து, அவ்விடங்களில், களப்பணி மேற்கொண்டார்கள். கன்னியாகுமரி மாவட்டம் 6184 சதுர கிலோ மீட்டர் பரப்பளவைக் கொண்டது. அதனின் தோராயமான மக்கள் தொகை 15,00,000 ஆகும். வடமேற்கில் கேரள மாநிலம், வடகிழக்கில் மேற்குத் தொடர்ச்சி மலை, கிழக்கில் திருநெல்வேலி மாவட்டம், தென்கிழக்கு, தெற்கு மற்றும் மேற்குப் பக்கங்களில் மூன்று கடல்கள் ஆகியவற்றால், கன்னியாகுமரி மாவட்டம் சூழப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிலேயே கன்னியாகுமரி மாவட்டத்தில்தான், படித்தோரின் எண்ணிக்கை மிக அதிகமாக உள்ளது, அதாவது 58.21 விழுக்காடாக உள்ளது.

இப்பகுதி மக்களின் முதன்மையான தொழில் வேளாண்மையாகும். எனினும், மிகுதியாக மக்கள், சிறுதொழில்களான, முந்திரிப்பருப்பு எடுத்தல், நெசவு, இரப்பர் பயிரிடுதல் போன்றவற்றில் ஈடுபட்டுள்ளார் கள். இம்மாவட்டத்தில் பல சமுதாயப் பிரிவுகள் உள்ளன. அவற்றில் அதிக எண்ணிக்கையிலுள்ள வகுப்பினர் - ஆதிதிராவிடர்கள், நாடார்கள், வெள்ளாளர்கள், முகம்மதியர்கள், நாயர்கள், ஈழவர்கள் ஆகியோர் ஆவர். மூன்று பெரிய சமயப்பிரிவுகள் - இந்து, கிறித்தவ மற்றும் இஸ்லாம் சமயங்களாகும். ஒரே சமுதாயப் பிரிவினைச் சேர்ந்த பல்வேறு வகை மக்கள், இந்து சமயம், கிறித்தவ சமயம் இரண்டிலுமே காணப்படுகிறார் கள். இவ்விரு சமயப்பிரிவுகளைச் சார்ந்தோரும், மாவட்டத்திலுள்ள அனைத்து கிராமங்கள் மற்றும் நகரங்களில் வாழ்கின்றார்கள். அதே போன்று, வெள்ளாளர்கள், ஆதிதிராவிடர்கள் போன்ற வகுப்பினர்களில், கிறித்தவர்கள், இந்துக்கள் ஆகிய இரு சமயத்தினரும் இருக்கிறார்கள். கிறித்தவ சமயத்தைச் சார்ந்த வெள்ளாளர்கள் மற்றும் ஆதிதிராவிடர்கள் ஆகியோரின் எண்ணிக்கை, நாடார் இனத்தைவிட குறைந்த விழுக்காடாகும்.

ஒன்று அல்லது இரண்டு வட்டங்களில், வெள்ளாள இனத்தவரின் தொகை, இதர இனத்தைச் சார்ந்தோரின் எண்ணிக்கையைவிட அதிகமாக உள்ளது. எனினும், கல்குளம், விளவங்கோடு மற்றும் அகஸ்தீஸ்வரம் வட்டங்களில், நாடார் இனத்தைச் சார்ந்தோர் அதிக அளவில் உள்ளனர். அதிக அளவில் மக்கள் உள்ள பிரிவினைச் சார்ந்தவர்களுக்கு, சரியான பிரதிநிதித்துவம் அளிக்கும் வகையில், அப்படிப்பட்டோரிடம், வல்லுநர்கள் தகவல் சேகரித்துள்ளார்கள், இறுதியான மொழியியல் ஆராய்ச்சிப் பாகுபாடு, ஆராய்ச்சிக்குட்பட்ட மக்கள் பேசும், பேச்சுவகைகளனைத்தையும், விளக்கமாக அளிக்க வேண்டுமென்ற கருத்தில், இந்த முறையில் தகவல் சேகரிக்கப்பட்டது.

மக்கள் பேசும் பேச்சு குறித்து, தகவல் அளிப்பவர்களைத் தேர்ந்தெடுக்கும் போது, அவர்களது வயது வரம்பு, நிதிநிலை, அவர்கள் செய்யும் தொழில், கல்வித்தகுதி ஆகிய சமூக சிறப்பியல்புகளைத் கருத்திற் கொண்டு தேர்வு செய்வார்கள்.

கன்னியாகுமரி பேச்சுப்பிரிவு, தற்போதைய பேச்சுவழக்கு வல்லுனர்களால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஐந்து பேச்சுவழக்குப் பிரிவில் ஒன்றாகக் கருதப்படுகிறது. ஏனைய பேச்சுவழக்குப் பிரிவுகள் 1. தெற்கு பேச்சு வழக்குப் பிரிவு 2. கிழக்கு பேச்சு வழக்குப் பிரிவு 3. மேற்கு பேச்சு வழக்குப் பிரிவு 4. வடக்கு பேச்சு வழக்குப் பிரிவு என பிரிக்கப்பட்டுள்ளன. இந்த பேச்சு வழக்குப் பிரிவுகளனைத்தும், பேச்சு வழக்கு எல்லைகளை அடிப்படையாக வைத்து, பயிற்சியளிக்கப் பட்டுள்ளன. பேச்சு வழக்கு எல்லையை வரையறுத்துக் காண்பிப் பதற்காக, பேச்சு வழக்கு நிர்ணய எல்லை வல்லுனர்கள் சிறப்பியல் பினைக் கொண்ட மொழி நூலாராய்ச்சி, பழக்க மரபுகள் (ஐஸோகிளாஸஸ்) என்ற ஒரு பொதுக்கருத்தினை பயன்படுத்துகிறார் கள். இவை அந்தந்த பகுதிகளில், தனிப்பட்ட முறையில் பயன்படுத்தப்படும் பழக்க மரபுகளாகும். சில நேரங்களில், பயன்படுத்தும் மொழியில் பல கட்டங்களில், ஒன்றுக்கு மேற்பட்ட பழக்க மரபுகள் கையாளப்படுகின்றன. அப்படிப்பட்ட பழக்க மரபுகள் யாவையும் ஒன்று சேர்த்து, அவை, ஒட்டு மொத்தமாக உருவகப்படுத்தப்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட பேச்சுப்பகுதியைவிட ஒன்று அல்லது அதற்கு மேலான தனிப்பட்ட பழக்க மரபுகள் கொண்ட பகுதிகளை வரையறுத்து அடையாளம் கண்டால், அப்பகுதி "பேச்சு வழக்கு வகைப்பகுதி" என அழைக்கப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட பேச்சு வழக்கு வகைப்பகுதியை அதே வகையான பிரிதொரு பகுதியினின்று வேறுபடுத்திக் காட்ட, பல்வேறு பழக்க மரபுகள் பொறுப்பு வாய்ந்தவையெனில், "குவிமையத்தைச் சார்ந்த பகுதி" என அழைக்கப்படும். இயல்பாக, அம்மாதிரியான பகுதிகள் அதிகமாக மாவட்டத்தில் இல்லை; எனினும் சில பகுதிகளில், ஒட்டு மொத்தமாக பழக்க மரபுகள் உருவகப்படுத்தப்பட்டுள்ளதையும், தனிப்பட்ட வகையான பழக்க மரபுகள் பழக்கத்திலுள்ளதையும் காணமுடிகிறது. தமிழ் பேச்சு வழக்குப் பகுதியினை வரையறுப்பதைப் பொறுத்த வரையில், கன்னியாகுமரி பேச்சுப்பகுதி, அப்படியொரு குவிமையத்தை சார்ந்த பகுதியாக உள்ளது என்பதைக் காணும் போது, ஒரு ஆர்வத்தை உண்டு பண்ணுகிறது. ஒலி மற்றும் இலக்கணம் சார்ந்த நிலைகளில், முப்பதுக்கும் மேற்பட்ட பழக்க மரபுகள் உள்ளன. மற்ற பேச்சு வழக்கு வகைப்பகுதியினின்றும், கன்னியாகுமரிப் பகுதியினை மட்டும் வேறுபடுத்திக்காட்ட, 300-க்கும் மேலான தனிப்பட்ட மொழியின் சொற்கள் பற்றிய பழக்க மரபுகள் இப்பகுதியில் உள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது. நடைமுறைப்பழக்கத்திலுள்ள மொழியியல் ஆராய்ச்சி சிறப்பியல்புகளின் உதவியுடன், கீழ்க்குறிப்பிட்ட எளிதில் விளங்குகிற பழக்க மரபுகள் இருப்பது தெரிய வருகிறது:

ஒலி சார்ந்த நிலை

1. "ஆர்" - ஒரு தனி ஒலியமாக நிகழ்தல். (முகட்டெழுத்து)

(இந்த ஒரு பேச்சுவழக்குப்பகுதியில்தான், நாம், பேச்சு வழக்கில் / ஆர் / என்ற எழுத்திற்கு, அடக்கமாக சப்தத்தைக் கேட்கிறோம். மற்ற பகுதிகளனைத்திலும், (ஆர்) (சிற்றெழுத்து) மற்றும் (ஆர்) (முகட்டெழுத்து), இரண்டும் இணைந்து, பேச்சு வழக்கில், "ஆர்" (சிற்றெழுத்து) சப்தத்தையே, நாம் கேட்க முடிகிறது.

2. ஒலியியலின் மற்ற சிறப்பியல்புகள்

கே (சிற்றெழுத்து)	கேய்	(சிற்றெழுத்து)
ஆர் (முகட்டெழுத்து)	ட்டி	(சிற்றெழுத்து)
ட்டி (சிற்றெழுத்து)	ஆர்	(சிற்றெழுத்து)
லி (சிற்றெழுத்து)	ஒய்	(சிற்றெழுத்து)
ஒய் (சிற்றெழுத்து)	லி	(சிற்றெழுத்து)
என்பி (முகட்டெழுத்து)	என்என்	(முகட்டெழுத்து)
ப்பி$_1$ ப்பி$_1$ (முகட்டெழுத்து)	என்$_1$ ப்பி$_1$ ப்பி$_2$ ப்பி$_2$	(முகட்டெழுத்து)
ஆர் (முகட்டெழுத்து)	ட்டி	(சிற்றெழுத்து)
ஒ' (சிற்றெழுத்து)	ஒ	(சிற்றெழுத்து)
யூ' (சிற்றெழுத்து)	ஒ	(சிற்றெழுத்து)
ஏ (சிற்றெழுத்து)	இ'	(சிற்றெழுத்து)
பி (சிற்றெழுத்து)	லி'	(சிற்றெழுத்து)
ட்டி (சிற்றெழுத்து)	ஏல்	(சிற்றெழுத்து)
ட்டி (சிற்றெழுத்து)	ஒய்	(சிற்றெழுத்து)
ஒ (சிற்றெழுத்து)	அய்	(சிற்றெழுத்து)
ஒ (சிற்றெழுத்து)	ஒ	(சிற்றெழுத்து) முதலியவை

3. உயிரெழுத்து நிகழ்தல் (ஒ) (சிற்றெழுத்து)

ஆ) இலக்கணம் சார்ந்த நிலை

1. மூன்றாம் வேற்றுமை (கருவிப் பொருள் வேற்றுமை) : கூட்டு - ட்டு
   " "
2. சமூகப் பொருள் வேற்றுமை : ஒட்டிக்கு - ட்டி
   " "
3. கொடைப்பொருள் வேற்றுமை : இல்
4. ஆறாம் வேற்றுமை : உக்கு, உன்ட்ட மேலும் - ஏ

5. ஏழாம் வேற்றுமை (இடவேற்றுமை) : - எல்
6. நிகழ்காலம் : - ஓ - மேலும் - ஓய்
7. இறந்த காலம் : ஒய்
8. எதிர்காலம் : சிசி (முகட்டெழுத்து)
   யூவி (சிற்றெழுத்து)
9. எதிர்மறை குறியீடு :
   அ) - ஆ' ட் - ,
   ஆ) வினைப்பொது நிலை + எல்லீ
   இ) வினைப்பொது நிலை ' ஏ 'ண்டா' (ண்)
   ஈ) வினைப் பொது நிலை மா, உட்,
10. வினைப் பொது நிலை - க்கா
11. வீட்டு, - வீட்டு
12. மறு பெயர் சார்ந்த முடிவில் இழப்பு
    மூன்றாம் நிலை - *ஆண் பெண் பால் வேறுபாடு சாட்டாப் பெயர்ச்சொல்*
13. எண் வரிசை முறை விகுதிசேர் - ஆ' மட்டீ
14. வினையடைக்குரிய விகுதிசேர் - ஆ' ட்டு,
15. *இசைவு தருகிற குறி* - ஆட்டு,
16. சார்ப்பு நிலைக்குறிப்பு - விகுதி சேர் - ஆ'க்கி
17. கீழ்க்குறிப்பிட்ட மறுபெயர் சார்ந்த முடிவு நிகழ்தல்
    அ) - ஐயோ
    ஆ) - ஐயோ / - ஐ
    இ) - ஆ' / - ஆ''வா
    ஈ)
18. ஏவலைக் குறிக்கும் எதிர்மறை - ஏட்டி
19. துணைச் சொற்கள்
    அ) முழுமையாக்கும் சொல்
    ஆ) தன்மறிவியற் சொல்
20. பி. ஆர். பன்மை ஆதாரம் - நோ
21. நோக்கச் சொல் - உன'க்கே

22. ஐந்தாம் வேற்றுமை - லொன்னு - லொண்டு

23. பால் சொல்வேறுபாடு எண் குறியீடு
அ) ஆண்பால் - பன்மை - வானுக்கு
ஆ) பெண்பால் - பன்மை - வாளுக்கு

24. உறுதியான முறைமை பயன்படுத்துதல் - ஆ'க்கும்

25. உலகியல் சார்ந்த, நிலையற்ற சொல் குறியிடுவோர் - பீ (எல்) மற்றும் - லிலீ

26. மனித இயல்பு சார்ந்த பன்மைக்குறியீடும், அதன் பயனும்

27. அழுத்தமான வினைச் சொற்களில், உயிரெழுத்திற்கு முன்னர், "க்" என்ற எழுத்து மறைகிறது.

மொழி நூலாராய்ச்சி சிறப்பியல்பு என்ற பிரிவில், கன்னியாகுமரி மாவட்ட எல்லையில், மக்கள் பேசும் தமிழ் பேச்சு வழக்கு வகைகளில், நிகழும், சிறப்பியல்பான அம்சங்கள் குறித்து விரிவான விளக்கம், தகுந்த எடுத்துக்காட்டுகளுடன் அளிக்கப் பட்டுள்ளன.

கன்னியாகுமரி மாவட்டம், மேலே குறிப்பிட்டுள்ளது போன்று, கேரள மாநிலத்தையொட்டி உள்ளது. மேலும், இம்மாவட்டம், 1957 வரை, கேரள மாநிலத்துடன் இணைந்து செயல்பட்டது. இயற்கை யாகவே, நூற்றுக்கு நூறு விழுக்காடு, இரு மொழி பேசுகிற மக்கள், இம்மாவட்டத்தின் பல இடங்களில் (கிராமங்கள் மற்றும் நகரங்களில்) வசிக்கின்றனர். நாங்கள் களப்பணியாற்றியபோது, ஏறத்தாழ கன்னியாகுமரி மாவட்டத்தின் அனைத்து எல்லைப்பகுதிகளிலும், இருமொழி பேசும் பழக்கத்தினை மக்களிடம் காணமுடிந்தது. இப்பகுதி வாழ் மக்கள், அழுத்தம்பட தமிழ் உச்சரிப்பதைக் கேட்கும்போது, மலையாள மொழிக்கு குரலை உயர்த்தி மற்றும் தாழ்த்திப் பேசுவது போன்று அதே பாணியில், தமிழையும் உச்சரித்துப்பேசி வருவது தெரியவருகிறது. தமிழ் பேசும் இப்பகுதிவாழ் மக்கள், பேசும்போது மூக்கொலி எழுப்பி, பின்னர், மூச்சை இழுத்து விடும்போது, பேச வேண்டிய பேச்சுக்களை, (என் + பி = நாஸல் + ப்ளேசிவ்) மூக்கொலி எழுப்பி, பேசத் துவக்கி, மூச்சொலி எழுப்பியே முடிக்கிறார்கள். (எம் + என் = நாஸல் + நாஸல்). மேலும், மலையாள மொழியில் சொற்கள் பற்றிய தனிச்சிறப்பின் பயன், இலக்கணம் சார்ந்த சிறப்பியல்புகளை விட மிகுதியேயாகும். உயிரெழுத்துக்களை உரைக்கும்போது, இறுதியாக முடிக்கும் தருவாயில், ' ஓ ' என்ற நிகழ்வு காணப்படுகிறது. அண்ண ஒலியும் (என்) பின் அண்ணஞ்சார்ந்த ஒலியும் (கே) அடிக்கடி எழுப்பப்படுவது, மற்ற பேச்சு வழக்கு வகைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, சற்று அதிகமாகவே உள்ளது.

ஆ - சிறப்பியல்புத் தோற்றம்

கன்னியாகுமரிப் பகுதி தமிழில், கீழ்க்குறிப்பிட்டவாறு, எளிதில் விளங்குகிற ஒலியியல், கடிதத்கொடர்பு, காணப்படுகிறது.

கடிதத் தொடர்பு :

இ.1 - கே (க்) -- கே் (க்ய்)

தே'ம்கா' தே'ம்க்யே

வா'ய்க்கா' வா'க்ய

மங்கீ' ம'ங்க்யே முதலியவை

இ.2 - ஆர் (ற்) -- ட்டி (த்்)

கா'ற்று - கா'ட்டு

மா'ற்று - மா'ட்டு

தோற்று - தே:ரட்டு முதலியவை

இ.3 - ட்டி (த்்) -- (ர்)

ஆட்டு - ஆறு

கோட்டி - கோரி

கேட்டி - கே'ரி

விட்டி - வீரி

காட்டோ - காரோ

குடிப்பு - குறிப்பு

கா'ட்டு - கா'ரு முதலியவை

இ.4 - சி (சி) - - ஓய் (ய்)

கா'யூ - கா'யீ

கோயூ - கோய்வு

தோ'சி - தோ'யோ

பேகு - பேீ

பாவு - பாயுவு

பா'சி - பா'யி

பே'க - பே'யீ

காகப்பு - காயப்பு

பசி - பயீ

கசக்கு - கயக்கு

ஊ'சி - ஊ'யீ முதலியவை

இ.5 - ஓய் (ய்) -- சி (சீ)

மயக்கம் - மசக்கம்

ஓயரம் - ஒசரம்

இ.6 - என்பி -- என்என்

அ) ம்க் - ந்ந

தே'ம்கா' - தே'ன்னா'

மா'ம்கா' - மா'ன்னா

ஆ) ன்ச் -- ந்ந

குஞ்சு - குன்னு

பஞ்ச - பன்னு

பா'ஞ்சு - பா'ன்னு

இ) ந்த் -- ந்த்

பந்து - பந்து

வந்தா'ன் - வன்னா'ன்

நடந்தா' - நடந்தா'

ஈ) ந்த் -- ன்ட்

கண்ணு - லிருந்து - கண்ணு - லென்ட்டு

மரட்டு - லிருந்து - மரட்டு - லென்ட்டு

உ) ங்க் -- ண்ண்

வருவா 'ன்' ங்கி - வருவான் 'ன்' என்னா',

பா'த்தா' ன்ங்கி - பா'த்தா'ன் என்னா'

என், ப்பி,

ஆ) ப்பி$_1$ ப்பி$_1$ - ப்பி$_2$ ப்பி$_2$

1) ட்டி ட்டி - ஏன் ட்டி

செய்ய - மா'ட்டே'ன் - செய்ய மா'ன்டே'ன்

வர-மா'ட்டா'ன் - வர மா'ன்ட்டா'ன்

2) கேகே -- சிசி

படிக்க - படிச்ச

நடிக்க - நடிச்ச

குடிக்குவான் - குடிச்சியான்

வடிக்க - வடிச்சியா

இ.7 ற் -- ட்

கறி - கடி

ஆ'று - ஆ'டு

கூ'று - கூ'டு

கன்று - கவ்டு

அறிஞ்சேன் - அடிஞ்சே'ன்

பறிச்சே'ன் - படிச்சே'ன்

இ.8 ஒ -- இ

வரம் போ' (1) - வரம்பே (1)

நடக்கம் போ (1) - நடக்கம் பே(1)

இ.9 யு -- ஒ

ஆ'று - ஆ'ரோ

கா'டு - கா'டோ

பா'ட்டு - பா'டோ

மா'டு - மா'டோ முதலியவை

இ.10 ஆ - ஏ

வா'ங்கு - வே'ங்கு

இ.11 பே -- வே

பே'ங்கு - வே'ங்கு

பெஞ்சி[1] - வெஞ்சி[2]

பிரா'ண்டி[1] - விரா'ண்டி[1]

இ.12 ட் -- ல்

வந்துக்கிட்'டு - வந்துக்கில'ட்டு

படிச்சுக்கிடுவான் - படிச்சுக்கிளுவா'ன்

இ.13 தா -- யா

நெய்தா'ன் - நெய்யா'ன்

கொய்தான் - கொய்யான்

இ.14 ஒ -- இ

ஒனக்கு - ஒக்கு - இக்கு

ஒனக்கே - ஒக்கே - இக்கே

இ.15 ஒ -- ஏ

சொன்னா'ன் - சென்னா'ன்

இ.16 மே -- ரே

வாரா - 'மே - வாரா - 'ரே

நடக்கா - 'மே - நடக்கா - 'ரே

ஆ) / ற் / நிகழ்தல்

/ ற் / என்ற எழுத்து / ர் / என்ற எழுத்துக்கு மாறுபட்டது ; மற்றொன்று, / ட் /, / ட், / முதலியவை போன்றது. இந்த பேச்சு வழக்கு வகை நடைமுறையிலுள்ள பகுதியில் தான், இம்மாதிரியான ஒரு சப்தம் ஒலிக்கப்படுவதை நாம் உணர முடிகிறது. மற்ற பகுதிகளில் / ற் / என்பது / ர் / எனவே உச்சரிக்கப்படுகிறது.

உதாரணமாக, - / ஆ' (று) /
/ கா' (ற்) (று) /
/ மா' (ற்) (று) /
/ க(றி) /
/ இ(றா)' லு /
/ பு (றா)' வு /

இ) 'ஆ' என்ற எழுத்து நிகழ்தல்

'ஆ' என்ற ஒலி, சொல்லின் இறுதி நிலையில், ஒரு தனி ஒலியமாக நிகழ்கிறது. அப்படிப்பட்ட எல்லா சொற்களிலும், இந்த ஒலி "அய்" என்ற எழுத்தின் ஒலிக்கு பதிலாகத் திகழ்கிறது. பொதுவாக, இது எழுத்தின் இறுதி நிலையில் / ஆ / என்ற ஒலியின் தனி ஒலியமாக நிகழ்கிறது.

கன்னியாகுமரி தமிழ்	**மற்ற பகுதிகளின் பேச்சுவழக்கு**
/ எ (லா) /	/ எ(லை) /
/ த (லா) /	/ த(லை) /
/ அ (ணா) /	/ அ(ணை) / முதலியவை

இ. சிறப்பியல்புத் தோற்றம்

கன்னியாகுமரி தமிழ் பேச்சு வகைகளில், கீழ்க்கண்டவாறு, எளிதில் விளங்குகிற, இலக்கணம் சார்ந்த தனிச்சிறப்பு காணப் படுகிறது.

1. வேற்றுமைக் குறியீடுகள்

இலக்கண விதிகள் யொட்டிய வேற்றுமைகளை உருவாக்கும் போது, கருவிப்பொருள் வேற்றுமை, சமுதாயப்பொருள் வேற்றுமை, கொடைப் பொருள் வேற்றுமை, ஆறாம் வேற்றுமை; இட வேற்றுமை, ஐந்தாம் வேற்றுமை, மற்றும் நோக்கச் சொல் வேற்றுமை ஆகிய ஏழுவகை வேற்றுமைகளும், பெயர்ச்சொல் வடிவங்கள் தொடரும்போது எளிதில் விளங்குகிற தோற்றத்தைப் பயன்படுத்துகின்றன.

2. 1.1 கருவிப்பொருள் வேற்றுமை

கொண்டு மற்றும் - *இத்து*

ஆகிய இரண்டுஉச்சரிப்புகளும், கருவிப்பொருள் வேற்றுமையைக் குறிக்கின்றன. இவை, தமிழ் மொழியின் ஏனைய பல பேச்சு வழக்கு வகைச் சொற்களில், காணப்படும் *ஆ'லோர்* மற்றும் *எவச்சு* ஆகியவற்றையும் உள்ளடக்கியதாகும். உதாரணமாக,

தத்தி - கொண்டு

கத்தி - இட்டு

1 : 2 சமுதாயப்பொருள் வேற்றுமை

ஓ' ட மற்றும் *கூ' ட* இரண்டு உசரிப்புகளும், மிக தாராளமாக, கன்னியாகுமரி பேச்சுவழக்கில், சமுதாயப் பொருள் வேற்றுமையைக் குறிப்பவையாக நிகழ்கின்றன. இருப்பினும், பல இடங்களில், வேற்றுமை உருவத்தை அளிப்பதற்காக, அவை ஒன்றன்பின் ஒன்றாக நிகழ்வதை நாம் காண முடிகிறது. உதாரணமாக,

என்னோ'டு - கூ'ட

அவநோ'டு - கூ'ட

1:3 கொடைப்பொருள் வேற்றுமை

-இல் மற்றும் லெ ஆகியகுறிகளும், தமிழில், முறையாக உள்ள கொடைப்பொருள்களுடன், சேர்த்து உச்சரிக்கப்படுகின்றன.

உதாரணமாக

வீ'ட்'டில் போ'னா'ன்

வீ'ட்லே போ'னா'வ

1:4 ஆறாம் வேற்றுமை

ஆறாம் வேற்றுமையைக் குறிக்கும் இந்தப் பேச்சு வகைகளில் மூன்று எளிதில் விளங்கும் குறிகள் தென்படுகின்றன. அவையாவன: 1) - (உ) க்கு ; 2) (உ) ன்து) மற்றும் 3) - எ

1) எனக்கு
அவன் - உக்கு
ரா மனுக்கு

2) அது - ன்து
என் - து
ராமன் - து

3) அவள் - எ

ரா'மன் - எ முதலியவை.

இரண்டாவது குறி - (உ) ன்து, இயற்கையிலேயே மாவட்டத்தின் எல்லைப்பகுதியில், மலையாளத்தோற்றமடங்கிய (-(ன்)து) இரு மொழிப்பேச்சு வழக்கு, பழக்கத்திலிருப்பதனாலாகும்.

இவை தவிர, - எ என்ற குறி, சில சமுதாயப்பிரிவைச் சார்ந்த நடுத்தர வகுப்பினர் மற்றும் கீழ்த்தர வகுப்பினரின் பேச்சு வழக்கில் காணப்படுகிறது.

உதாரணமாக, --

அவள் - ஏ

அக்கா'ள் - ஏ

நம்மாள் - ஏ

1:5 இடவேற்றுமை

இடவேற்றுமையை உணர்த்தும், இந்தப்பேச்சு வகையில், - இ என்ற எளிதில் விளங்குகிற ஒரே குறி உளது.

உதாரணமாக -

வீ'ட்டி

கா'ட்டி

நா'ட்டி

மா'ட்டி

1:6 ஐந்தாம் வேற்றுமை

- லிருந்து என்ற குறி தவிர, பெயர்ச்சொல்லுடன் கூட, - லேந்து மற்றும் லேன்னு ஆகிய இரண்டு விகுதி சேர், இணைத்து உச்சரிக்கப்படுகின்றன. இந்த இரண்டு குறிகளும், கன்னியாகுமரி பேச்சு வழக்கில், தெளிவாக விளங்குகின்றன.

உதாரணமாக, - 1) கா'ட்டு - லேன்னு

கா'ட்டு - லேந்து

2) சந்தே - லேன்னு

சந்தே - லேந்து

1:7 நோக்கல் சொல் வேற்றுமை

நோக்கச் சொல் வேற்றுமையில், - *உக்காக* என்ற உச்சரிப்புடன் கூட, - *உன'க்கோ* என்ற குறியும், கன்னியாகுமரி தமிழ் பேச்சு வழக்கில், நிகழ்வது காணப்படுகிறது. இது, இந்தப்பேச்சு வகையில், ஒரு சிறப்பியல்புள்ள உச்சரிப்பானதாகும்.

உதாரணமாக, -

வீ'ட்டு - னக்கோ

மா - உன'க்கோ மான்னுனெ'க்கோ

மரம் - டு - உந'க்கோ மரட்டுன'க்கோ

கோ'யி-லுன'க்கோ

11. காலத்தையுணர்த்தும் குறிகள்

நிகழ்காலம், இறந்தகாலம் மற்றும் எதிர்காலம் ஆகியவற்றை உணர்த்தக்கூடிய மிகவும் எளிதாக விளங்கக்கூடிய சில குறிகள் கன்னியாகுமரி தமிழில் இடம் பெற்றுள்ளன.

2:1 நிகழ்காலம்

பல இனங்களில், நிகழ்காலம் குறியிடப்படுவதில்லை. நிகழ் காலத்தை உணர்த்தக்கூடிய, எளிதில் விளங்கும் இரண்டு உச்சரிப்புகள் உள. அவையாவன: - கா - மற்றும் - யா - இவையும் நிகழ்காலத்தைக் காண்பிக்கக் கூடியதுவையாகும். ஒன்று, இரண்டு வினைச் சொற்களில் மட்டும், பேசும்போது, - ரா - என்ற குறி, காணப்படுகிறது. எனினு, பல பிரிவு மக்களிடையே தோன்றும் செயலெதிர்ச் செயலின் விளைவாக, நாளடைவில், மக்கள் பொதுவான உருவாக்கக்குறிகளைப் பயன்படுத்தியே உச்சரிக்கத் துவங்கிவிட்டார்கள்.

உதாரணமாக, -

படிக் - கான் படிக்கா'ன்

படி-ய்-யா'ன்

அழு-க-ா' (1)

திறி-ய-'வா

சொல்-அட்-உக்கு சொல்லத்துக்கு

தின் - யா-'ன் தின்யான்,

கே' - ள்- அது கே'க்குது

ஒ'டு-வான் ஒ'டவான்

பொதுவான உருவகங்களென்னவெனில்,

படிக்கரா'ன், படிக்கரா'ம்க

கே'க்ரது, ஒ'ட்ரவன், - ஆகியவை

2:2 எதிர்காலம்

-குவா - மற்றும் - சுவா - ஆகிய இரண்டு உச்சரிப்புப்பதங்களும், இந்தப் பேச்சு வழக்கு வகையில், எளிதில் விளங்குகிற இரு குறிகளாக உள்ளன. எனினும், - குவா - என்ற குறி, சில மலை வாழ் மக்கள் பேச்சு வழக்கு வகைகளில் காணப்படுகிறது. ஆகையால், - சுவா - ஒன்றுதான், இந்த பேச்சு வழக்கில், தனித் தன்மை வாய்ந்த குறியாகத் திகழ்கிறது.

குடு - ச்சுவ - ஆ'(ள்)

ஒடி - ச்சுவா - 'வா

படி - ச்சு - வா'ன்

குடு - க்குவா - ன்'

2:3 இறந்த காலம்

விளவங்கோடு, தமிழ் பேச்சு வகைகளில், ஆண்கள் மற்றும் பெண்களின் பேச்சு வழக்கில், ஒரு முக்கிய மாறுபாடு தென்படுகிறது.

பெண்களின் பேச்சு வழக்கில், யா உடன் முடியும் வினைச்சொற்கள் வடிவத்தில் - ய- என்பது இறந்த காலத்தைக் குறிக்கிறது .-

உதாரணமாக, -

கொய், நெய், பொய், செய் ஆகியவை

கொய் - யா'ன்

செய் - யா'ன்

நெய் - யா'ன்

3) எதிர்மறை உச்சரிப்புகள்

3:1 எதிர்மறை விகுதி

- ஆ'த்த - என்ற உச்சரிப்பு, இந்தப் பேச்சு வழக்கு வகையில் சிறப்பியல்பான தோற்றத்தை அளிக்கிறது. இது தொடர்பு மொழியான மலையாளத்தில் சொல்வாக்கினால் ஏற்பட்டதாகும்.

செய் - யர்த்த செய்யா'த்த

(செய்யா'த்த வே'லை)

படிக்கா'த்த புத்தகம்

3:2 எதிர்மறை

இது ஒரு கடினமான வினைச்சொல் வடிவமாகும். துணை வினைச் சொல், - ஆ'ந்த (ம்) என்ற குறி, முதன்மையான வினைச்சொல்லின் வினைப்பொதுநிலை வடிவத்தையொட்டி, உச்சரிக்கப்படுகிறது. வினைபொது நிலை ஆ'ந்-த - எதிர்மறை

உதாரணமாக,

வாரா - ஆ'ந்"த (ம்) வாரா'ந்த (ம்).

செய்யா - ஆ'ந்'த' (ம்) செய்யா"ந்த (ம்)

போகா - ஆந்'த (ம்) போகா'ந்த' (ம்)

3:3 கடந்த மறுப்புக் கோட்பாடு

இது இரண்டு வகைகளில் வெளிப்படுத்தப்படுகிறது - அதாவது

1) விணையெச்ச, வடிவம் + எதிர் மறைக்குறி

2) வினைப்பொது நிலை வடிவம் + எதிர்மறைக்குறி

வினையெச்சம் + எதிர்மறை

வந்து - இல்லா' /- இல்லே வந்தில்லா' / ஏ

பா'த்து - இல்லா ' / இல்லே பா'த்தில்லோ' /- இல்லே

வினைப்பொது நிலை + எதிர்மறை

வர - இல்லே வரல்லே

பாக்க - இல்லே பாகெல்லே

3:4 வரும் எதிர்மறை

வினைச் சொற்களின் வினைப் பொதுநிலை வடிவங்களுடன், -மா'ட் மற்றும் மா'ன்ட் - ஆகிய குறிகள் உச்சரிக்கப்படுகின்றன.

வினைப்பொது நிலை, + மா'ட் + மறுபெயரின் இயல்புள்ள முடிவு மா'ன்ட்

இவற்றில், - *மா'ன்ட்* - என்ற குறி வேறெப்பகுதியிலும் காணப்படாத சிறப்பியல்புத் தோற்றத்தையுடையது. இது குறிப்பாக, விளவங்கோடுப் பகுதியில், பழக்கத்திலுள்ளது.

செய்ய மா'ன்டன்

வரமா'ன்டா"ன்

போ'மான்டே

3:5 நிகழ் மறுப்புக் கோட்பாடு

- ஆ'ன் என்ற குறி, விளவங்கோடு பேச்சு வழக்கு வகைப் பகுதியில், உச்சரிக்கப்படுகிறது.

உதாரணமாக,

வரா' - ன் - ஆ'ன்

நடக்கா - 'ந்நா - ஆ' (1)

ஈ) வினைப் பொது நிலைக்குறி

-ச்சிய, என்ற தனித்தன்மை வாய்ந்த குறி, கன்னியாகுமரி மாவட்ட பேச்சு வழக்கு வகையில், குறிப்பாக, விளவங்கோடு பகுதியில், கடினமான வினைச்சொற்களுடன் இணைத்து, உச்சரிக்கப்படுகிறது.

படி - ச்சியா

நட - ச்சியா

குடி - ச்சியா

பார் - ச்சியா

எடு - ச்சியா

ஒடி - ச்சியா

அரு - ச்சியா

உ) எண் வரிசை முறைப்பெயர் விகுதி

- ஆ' மாட்டி என்ற குறி, எளிதில் விளங்குகிற குறியாகும் இதற்கு, எண் வரிசை முறைப்பெயர் அளிக்கப்பட, இது, முதன்மையான எண்குறி இலக்க ஆதாரங்களுடன் இணைத்து, உச்சரிக்கப்படுகிறது. எண் வரிசை முறைப்பெயர் ஆதாரம் எண் வரிசை முறைப்பெயர் விகுதி எண் வரிசை முறைப்பெயர் வடிவம்.

ரெண்டு - ஆ'மாட்டி

நா'லு - ஆ'மாட்டி
ஏ'ழு - ஆ'மாட்டி
ரெண்டா' மாட்டி வீ'ட்டு
நா'லா' மாட்டி வீ'தி
ஏ'ழா' மாட்டி மரம்
ரெண்டா மட்டி
நா'லா' மட்டி
ஏ'ழா' மட்டி

ஊ) வினையடைக்குரிய விகுதி

கன்னியாகுமரி மாவட்ட பேச்சு வழக்குத் தமிழில், - ஆ'ட்டு என்ற குறி, வினையடை வடிவம் கொடுக்க, சில பெயர்ச்சொற்களின் இடையிலேயே இணைத்து, உச்சரிக்கப்படுகிறது.

பெயர்ச்சொல் இடை + வினையடைக்குரிய விகுதி = வினையடைக்குரிய வடிவம்

அழகு - ஆ'ட்டி அழகா'ட்டு

நேரு - ஆ'ட்டு நே'ரா'ட்டு

வே'கம் - ஆ'ட்டு வே'கமா'ட்டு

எ) சார்பு நிலைக்குறிப்புச் சொல் குறிகள்

இறந்த கால வடிவங்களுக்குப் பின்னர், இணைத்து உச்சரிக்கக் கூடிய சார்பு நிலைக்குறிப்புச் சொல் குறி, - *ஆ'க்கி* என்பதாகும். இதுவும் ஒரு சிறப்பியல்புள்ள குறியாகும்.

சார்புநிலை குறிப்புச்சொல் வடிவம் - வினைச்சொல் இடை + இறந்த காலம் + சார்பு நிலை குறிப்புச் சொல் குறி, -

உதாரணமாக,

வந்த - ர'க்கி

செய்த-ர'க்கி

பா'த்த-ர'க்கி

படிச்ச - ர'க்கி

7. முடிவுடைய வினையெச்சம் சார்பு நிலைக்குறிப்புச் சொல் குறி

உதாரணமாக,-

வந்தா'ன் - *என்னா'ல்*

என்னில்

என்னில் என்ற குறி வடிவம், மலையாள மொழியின் சிறப்பியல்புத் தலையிட்டால் நிகழ்கிறது.

8. வினையின் ஏவல் வடிவம் (எதிர்மறை)

எதிர்மறை, வினையின் ஏவல் வடிவம், வினை சொல் இடையுடன், *-ஏட்டோ* என்ற குறியினை இணைத்து, உச்சரிக்கப்படுகிறது.

உதாரஷமாக,

நடக்/கெட்டோ

செய்யெட்டோ

பாக்'கெட்டோ

ஒ'டெட்டோ முதலியவை.

9. முன்னிலை - ஒருமை ஆதாரங்கள் நிகழ்தல்

கொடைப்பொருள் வேற்றுமை மற்றும் ஆறாம் வேற்றுமைக்குறிகள் ஆகியவற்றிற்கு முன்பாக, *ஒ* - மற்றும் *நோ* - ஆகிய இரண்டு

ஆதாரங்கள் நிகழ்கின்றன. அவைகளில், *நோ* - என்ற குறி, இந்தப் பேச்சு வழக்கில் ஒரு சிறப்பியல்பினை அளிக்கிறது.

உதாரணமாக,

ஒ-க்கு

நோ - க்கு

ஒ-க்கி

நோ-க்கி

10) மறுபெயர் இயல்புள்ள முடிவின் பயன் முடிவுடைய வினைச்சொல் வடிவம்

10.1 முன்னிலை - பன்மை

முடிவுடைய வினைச்சொல் வடிவத்தில், இந்த பேச்சு வழக்கு வகைகளில் நிகழும்போது, - இயோ என்ற குறி, முன்னிலை - பன்மையையும், மதிப்பு வழக்குச் சொல்லின் - ஒருமையையும் குறிக்கிறது.

உதாரணமாக,

நீ' ங்-கோ வந்தேயோ

நீ' ங்-கோ செஞ்சேயோ

10.2 படர்க்கை - ஆண்பால் - பன்மை

-ஆனுகோ என்ற குறி, படர்க்கை, ஆண்பால், பன்மையை உச்சரிக்கும் போது நிகழ்கிறது.

உதாரணமாக,

அவனுகோ வந்தா'னுக

10.3 படர்க்கை - பெண்பால் - பன்மை

- ஆ'னுகோ என்ற குறி, படர்க்கை, பெண்பால், பன்மையை உச்சரிக்கும் போது நிகழ்கிறது.

உதாரணமாக,

அவளுக வந்தா'ளுக

10.4 படர்க்கை (மனித இயல்பு) பன்மை

- ஆ' மற்றும் - அ' வா ஆகிய இரண்டு எளிதாக விளங்குகிற குறிகளும், முடிவுடைய வினைச்சொற்கள் உருவாக, உச்சரிக்கப்படுகிறது.

வ-ந்த்-ஆ'	வந்தா'
அ' வா	வந்தா'வ
அவங்கோ	போ:னா'வ

அவங்கோ போ'னா'

- ஆ:ளா என்ற குறி சிலரால், படர்க்கை மற்றும் மதிப்பு வழக்குச் சொல்லின் ஒருமை அல்லது பன்மை (மனித இயல்பு) உடன் இணைந்து உச்சரிக்கப்படுகிறது.

உதாரணமாக,

அவங்கோ வந்தா : ளா?

அவங்கோ வந்தா'

10.5 படர்க்கை - ஆண், பெண்பால் வேறுபாடு காட்டாப் பெயர்ச் சொல் - ஒருமை

தமிழில், முடிவுடைய வினைச்சொற்கள், மறுபெயரில் இயல்புள்ள முடிவாக, இறுதி நிலையை அடைகின்றன. எழுவாய் மறுபெயர் மற்றும் முடிவுடைய வினைச்சொற்களின் மறுபெயர் இயல்பிற்கும் நெருங்கிய தொடர்புள்ளது. ஆனால் கன்னியாகுமரி தமிழ் பேச்சு வழக்கில், படர்க்கை - ஆண், பெண்பால் வேறுபாடு காட்டப் பெயர்ச்சொல், மறுபெயரில் இயல்புள்ள முடிவில், உச்சரிக்கப் படுவதில்லை.

- து

அது வந்து

அதுக்கோ வந்து'

அது ஒ'டு

பேச்சு வழக்கில் மேற்சொன்ன குறியின் மறைவு, மலையாள வடிவத்தின் தலையீட்டாலிருக்கலாம். மலையாள மொழியில், அந்தந்த மறு பெயரை குறிப்பதற்கு, முடிவுடைய வினைச்சொல் வடிவங்களில், மறுபெயரின் இயல்புடைய முடிவு இல்லை.

11. எதிர்மறைக்கு முன்னர், வினைச் சொல் இடையில், - கேகே - என்ற குறி இழப்பு

வினைச் சொல் இடையில் முறையான எடுத்துக் காட்டமைப்பு என்னவெனில், விகுதியுடன் துவங்கும் உயிரெழுத்துக்கு முன்பு, --க்கா- என்ற குறி உச்சரிக்கப்படும். ஆகையால் அனைத்து தமிழ் பேச்சு வழக்கு வகையிலும் *-க்கா* - என்ற குறியினை, நாம் இடை ஆக்கச் சொல்லாகவோ அல்லது, சொல்லின் இலக்கணக் கூறு ஒலியவிதியாகவோ காண்கிறோம்.

நடச் - ஆ' - மல் நடக்கா ' மெ

படிச் - ஆ' - மல - ஏ படிக்கா ' மலே'

ஆனால், சில நேரங்களில், கன்னியாகுமரி பேச்சு வழக்கு வகைகளில், - க்கா - என்ற உச்சரிப்பினை நாம் காண்பதில்லை. மாறாக, தடையின்றி நழுவிச் செல்லும் போக்கினைக் காண முடிகிறது.

நடக்கா ' மெ நடவா ' மெ

படிக்கா ' மெ படியா ' மெ

12. - ஆ' க்கும் என்னும் குறியினை, வரிகளில் பயன் படுத்துதல்

ஆ'க்கும் எனும் குறி, ஒரு பொருள் பற்றி, "அழுத்தமாகக் கூறுதலுக்கோ" அல்லது "மறுத்துரைப்பதற்கோ "வரிகளமைத்து, உச்சரிக்கும்போது, கீழ்க்கண்டவாறு பயன்படுத்தப்படுகிறது. இது ஒரு மலையாள வரியின் எடுத்துக் காட்டமைப்பையும், ஆதாரமாகக் கொண்டதாகும்.

உதாரணமாக,-

தமிழ் : அவன் ஆ'க்கும் வந்தா'ன்

\- - -

மலையாளம் : அவன் ஆ'னே வன்னாது.

\- -- -- --

இம்மாதிரியான வரியமைப்பு, தமிழ் பேச்சு வழக்கு வகைகளில் பொதுவாகக் காணப்படுவதில்லை.

13. துணை வினைச் சொற்களை பயன்படுத்துதல்

13.1 முழுமையாக்குதல்

- கிட்டு,, - கிச்சி மற்றும் *- உண்டு* ஆகிய குறிகள், வரிகளை முழுமையாக்கும் வகையில், நேர் வினைச்சொற்களுடைய வினையெச்சங்களுடன், இணைத்து உச்சரிக்கப்படுகிறது.

வந்து - கிட்டு வந்துட்டு

வந்த் - இச்சி வந்துச்சி

வந்த் - உண்டு வந்துண்டு

படிச்சி - கிட்டு படிச்சிட்டு

படிச் - இச்சி படிச்சிச்சி

படிச் - உண்டு படிச்சுண்டு

13 : 2 தன்மறிவியற் சொல்

தன்மறிவியற் சொல் என்பது, நேர் வினைச் சொற்களுடைய வினையெச்சங்களுடன், துணை வினைச் சொற்களை இணைத்து உச்சரிக்கப்படுகிறது.

வினையெச்சம் + தன்பறிவியற் சொல் துணை வினைச்சொல் = தன்மறிவியற் சொல்-வடிவம்

கன்னியாகுமரி பேச்சு வழக்குத் தமிழ் வகையில், கிட்டு என்ற குறியினைத் தவிர, இரண்டு துணை வினைச் சொற்கள், -'' அதாவது அன்று மற்றும் - கிளு ஆகியவை நேர் வினைச் சொற்களுடைய வினையெச்சங்களுடன் இணைத்து உச்சரிக்கப்படுகின்றன.

படிச்சி - அள்ளு -வ-ா'ன்

வந்து - அள்ளு வ-ா'ன்

எடுத்து - அள்ள - மாட்ட-ா'ன்

வந்து - க்கிளு - வ-ா' (1)

14. நிலையற்ற குறிகள்

-ப்போ (1) மற்றும் - ச்சில்லே - ஆகியவை, நிலையற்ற வகையைச் சார்ந்த, ஆனால், எளிதில் விளங்குகிற இரண்டு குறிகளாகும்.

உதாரணமாக,-

வர-ச்சில்லே

வரப்போ

பா'க்கப்போ

பா'க்கச்சில்லே

4) மனித இயல்புடைய பன்மை

மனித இயல்புடைய பன்மையைக் காட்ட மூன்று விகுதிகள் உள்ளன. சுட்டுச்சொல் ஆதாரங்களுடன் விகுதிகளைச் சேர்த்து, இது உருவகப்படுத்தப்படுகிறது.

அவையாவன : - விச்சியாள், - வியாள் மற்றும் வேங்காள்,

இவற்றில், - விச்சியாள் என்ற குறி, கன்னியாகுமரி தமிழ்பேச்சு வழக்கில், எளிதில் விளங்குகிற விகுதியாக உச்சரிக்கப்படுகிறது.

அ - விச்சியாள்

இ - விச்சியாள்

அ - விச்சியாள - ா' அவ்விச்சியாளா'

ஈ) சிறப்பியல்புள்ள தோற்றங்கள்

கன்னியாகுமரி தமிழ்பேச்சு வழக்கு வகைகளில், சிறப்பியல்புள்ள மொழியில் சொற்கள் பற்றிய வடிவங்களின் பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது.

தொடர் எண். (1)	*மொழியின் சொற்கள் பற்றிய வகை* (2)	*அவற்றின் பொருள்* (3)
1.	இப்பம்	இப்பொழுது
2.	இஞ்சே	இங்கே
3.	இரு	உட்கார்
4.	/ வாச்சி /	பறத்தல்
5.	/ வாக்கி /	பனை இலையின் நரம்பு
6.	/ லாக்காலு /	ஷ
7.	/ லாஸ்ட்டு /	போீச்சமரம்
8.	/ லான்னே /	ஷ
9.	/ லான்ஸி /	ஷ
	/ எ /	
10.	/ எப்பம் /	எப்பொழுது
11.	/ எதாவது /	ஈடுபாடு
12.	/ எதோச்சம் /	பெரும்பாலும்
13.	/ எடுப்பு /	வருவதுரைத்தல்
14.	/ எச்சம் /	சிலந்தி / பறவைகளின் மலம்
15.	/ எக்கு /	இடுப்பு
16.	/ எறச்சி /	இறைச்சி
17.	/ எயக்கம் /	தளர்ச்சி நிலை
18.	/ என்னானே /	எப்படி
	/ ஏ /	
19.	/ ஏ'ப்பு /	குன்று
20.	/ ஏத்தி /	(முகவரியிட்டு) அழைக்கும் பாங்கு
21.	/ ஏ' லு	வலிமை
21.அ	/ ஏ' ந்திரங்கா' /	ஒரு வகையான வாழைப்பழம்
	/ அ /	
22.	/ அப்பம் /	அப்பொழுது / பிறகு
23.	/ அப்பச்சி /	தாத்தா
24.	/ அப்பா'வு /	தந்தை
25.	/ அப்பியாலு /	ஒரு மாதத்தின் பெயர்
26.	/ அட்டுவானி /	
27.	/ அட்டம்/	முடிவு
28.	/ அடியந்திரம் /	விழா, சமயவினைமுறை, (திருமணத்தில் நடப்பவை முதலியவை)

29. / அடமாங்கா / மாங்காய் ஊறுகாய் உலர்ந்தது
30. / அக்ட்டி / உட்புறமாக
31. / அம்மா / தாய்
32. / அச்சன் / தந்தை
33. / அம்மா'ச்சன் / தாய் மாமன்
34. / அனக்கம் / ஒலி
35. / அனப்பு / சூடு
36. / அந்தி / கொட்டை
37. / அரங்கு / சரக்குச் சேமிப்பறை
38. / அன்னணி / அங்கே
39. / அருமானி / அரிவாள் மனை
40. / அலப்பு / பசி
41. / அல்ப்பசி / ஐப்பசி (ஒரு தமிழ் மாதத்தின் பெயர்)
42. / அவட்டம் / ஆபத்து
43. / அபகடம் / -
44. / அவயான் / பெருச்சாளி
44. (அ) / அய்யம் / கேடு

/ ஆ /

45. / ஆத்தாளு / மழைத்தூரல்
46. / ஆத்தன்காலோ / சிற்றாறு
47. / ஆச்சி / நாள்
48. / ஆல்சி / ஷ
49. / ஆ'யா'ரி / ஆசாரி

/ ஒ /

50. / ஒப்பு / அடையாளக் குறிப்பு
51. / ஒத்தி / அடைமானம்
52. / ஒடப்பொறந்தா / உடன்பிறந்தாள்
53. / ஒச்சம் / குறைபாடு
54. / ஒச்சு / முடிவு / முழுமையும்
55. / ஒமி / கண்ணிமை
56. / ஒமலு / ஷ
57. / ஒன்னி / ஒற்றுமைப்படுத்துதல்
58. /ஒருமி/ ஷ
58.(அ) / ஒருவாத்து / -

/ ஓ /

59. / ஓ'ம் / ஆம்
60. / ஓர்மி / நினைவில் வைத்திருத்தல்

/ உ /

61. / உச்சி / நண்பகல்
62. / உச்சம் / உயரம்
63. / உந்து / நொண்டு நடை
64. / உலுப்பு / குலுக்கம்

65. / உள்ளி / வெங்காயம்

/ ஊ /

66. / ஊ'ட்டாம்பேத்தி / விளையாட்டு ஊதற்பை
67. / ஊட்டு / ஒரு இசைக்கருவி
68. / ஊத்தி / பெரிய வயிறு
69. / ஊனி / ஒரு கும்பு
70. / ஊறு / பல் ஈறு
71. / ஊயி / ஊசி

/ ப /

72. / பின்னியம் / பின்னர்
73. / பின்னி / ஷ
74. / பிட்டி / சிறிய துணை
75. / பினாத்தி / முணு முணுத்தல்
76. / பீலி/ பனங்கிழங்கின் குருத்து
77. / பிடாப்பு / கம்பளம்
78. / பே'யி / பேசுக
79. / பட்டம் / கட்டம்
80. / பட்டால் / நடுப்பகுதி எடுக்கப்படும் மரவகைத்தண்டு
81. / பதுக்கே / மெதுவாக
82. / படிப்பெரே / வராந்தா
83. / பெருமாற்றம் / நல்லொழுக்கம்
84. / பதெ / நுரை / உமிழ் நீர்
85. / பதிக்கம் / படிக்கம்
86. / பதக்கு / ஷ
87. / பாத்தி / பாத்யதை
88. / பத்மம் / ஷ
89. / பகரம் / பதிலாக
90. / பக் / வண்ணத்துப்பூச்சி
91. / பருமாட்டம் / நடத்தை
92. / பருமாத்து / பணியாற்றுதல்
93. / பரம்பு / பாய்
94. / பலுப்பு / பழுப்பு
95. / பழஞ்சி / பழைய சோறு
96. / பல்லு / மறுமொழி கூறுதல்
97. / பயி / பசி
98. / பயு / பசு
99. / பயே / பசை
100. / பாட்டம் / நெல் வயல் குத்தகை
101. / பா'யி / நீரில் வாழும் ஒரு தாவரம்

/ பொ /

102. / பொடனாச்சி / புதன்கிழமை

103. / பொட்டை / சிறு குன்று
104. / பொத்தி / சிறிய
105. / பொத்தகம் / பெட்டி (பெட்டகம்)
106. / பொக்கு / மரப்பொந்து
107. / பொலி / நெல்
108. / பொழி / அழித்தல்
109. / போட்டி / தாத்தா
110. / போணி / பாத்திரம்
111. / போளு / தோள்
112. / புருனம் / புருவம்
113. / பத்தை / அகலப்புனை கதை
114. / பூத்தி / இறகு
115. / பூச்சி / வண்டு
116. / புழு / பிட்டம் (உடலின் பிற்புறத்தில் புடைப்பாக உள்ள பகுதி)
117. / பிராயம் / பூப்புப்பருவம்
118. / பிரானு/ பட்டம்
119. / பிரதமம் / பிரசாதம்

/ தீ /

120. / தீத்தி / குன்று
121. / தீனம் / நோய்
122. / திரியாலு / இயந்திரம் (அரைக்கும் கருவி)
123. / திழு,ளு / மென்மையான இலை
124. / திரானி / திறமை / வலிமை
125. / திங்களாச்சி / திங்கட்கிழமை
126. / திட்டு / சுண்ணாம்புத் தண்ணீர்
127. / தீனம் / நோய்
128. / தெங்கு / தென்னை
129. / தென்னு / ஷ
130. / தெந்து / கோரிக்கை
131. / தேற்று / தவறு
132. / தேவாரி / அரைத்துணி
133. / தேரி / குன்று
134. / தப்பிதம் / தவறு
135. / தொங்கட்டான் / காதணி
136. / தொந்தி / பருமன்
137. / தன்சி / பை
138. / தவி / அகப்பை
139. / தவப்பன் / தந்தை
140. / தாச்சி / சான்று, சாட்சி
141. / தாச்ச / ஆழம்
142. / தாக்கோலு / திறவு கோல்

143. / தாக்கி / ஷ
144. / தாமசம் / தாமதம் / காலங்கடத்தல்
145. / தாரா / குள்ளவாத்து
146. / தொக்கு / பொறுத்தருள்கை
147. / தொந்து / தென்னை உமி
148. / தோலு / கால்நடைத் தொழுவம்
149. / தோத்து / பழத்தோல்
150. / தோக்கு / துப்பாக்கி
151. / தோயி / தோசை
152. / துத்தி / இறப்பு
153. / துருசம் / வேகம்
154. / தூவாலு / இறவு
155. / திராயி / திராசு

/ டா /

156. / டாராத்தி / புழுவகை

/ சி /

157. / சிப்பம் / ஒரு அளவு
158. / செப்பு / பேழை
159. / செக்காளி / வாணிபன்
160. / செங்கட்டி / செங்கற்கட்டி
161. / செம்மான் / செருப்புச்செப்பனிடுவர்
162. / சென்னி / கன்னம்
163. / செவி / காது
164. / செவ்வாச்சி / செவ்வாய்க்கிழமை
165. / செவ்வானி/ சரியாக
166. / செறகு / சிறகு
167. / செறத்தி / தேங்காயின் முகடு
168. / செடவு / களைப்பு
169. / செதுவு / சறுக்கல்
170. / சக்கே / பலே (ப்பழம்)
171. / சம்பாரம் / சிறப்பு மோர்
172. / சம்மந்தி / உணவின் தனிச்சுவை
173. / சம்மனசு / தேவதூதர்
174. / சமுத்து / நடையொலி
175. / சங்கு / தொண்டை
176. / சந்தம் / அழகு
177. / சனிலம் / கடுந்துன்பம்
178. / சனியாச்சி / சனிக்கிழமை
179. / சந்த / வைக்கோல்பதர்
180. / சேரி / தசை
181. / சார்ட்டி / வாந்தியெடுத்தல்
182. / சலம் / சீழ்

183. / சவல்லு / வளைதல்
184. / சா'த்து / குதித்தல்
185. / சாத்'தம் / குதித்கிற
186. / சாம்பான் / ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த ஒரு மனிதர்
187. / சாம்பாவார் / ஆதிதிராவிடர்கள்
188. / சாணங்கி / பசுவின் சாணம்
189. / சாறு / சத்து
190. / சாரி / சாதி
191. / சாவி / வைக்கோல் பதர்
192. / செட்டி / நொண்டியான
193. / சொத்துக்காரன் / செல்வந்தர்
194. / சொத்தை / சொத்து
195. / சொடக்கு / விரலடி இணை எலும்புகள் / குதிரை மூட்டு
196. / சொத்தி / சிறியது
197. / சோனி / மிருகங்களின் கருப்பம்
198. / சொளவு / முறம்
199. / சோவி / சோழி
200. / தண்டு / சுண்டு / உதடு
201. / கூத்து / நடனம்
202 / குட்டு / பனை ஒலைகளினால் செய்யப்பட்ட கைப்பந்தம்
203. / சும்பு / கடனுதவித் தொகை
204. / சிலாம்பு / மரத்தின் சிறுபகுதி

/ ஜ /

205. / ஜம்னு / சங்கிலி
206. / கிடுவு / ஒரு பாய்
207. / கிதிவு / ஷ
208. / கிடுக்கு / பின்னிய தென்னோலைகள்
209. / கினவு / கனவு
210. / சின்னாரம் / இகழ்ச்சி
211. / கிஷாயம் / ஒரு மருந்து கஷாயம்
212. / கேத்தி / கால்நடைத் தொழுவம்
213. / கேலரம் / உயரம்
214. / கேராக்கு / சுழற்றுதல்

/ க /

215. / கடம்பி / --
216. / கடம் / கடன்
217. / கடவம் / பெரிய கூடை
218. / கசேரி / நாற்காலி
219. / கச்சி / அரைக்கச்சை

220. / கக்கம் / எண்ணெயிலுள்ள வண்டல்
221. / கங்கு / எரியும் கரி
222. / கனுக்கு / கழுகு மரம் / ஓலை
223. / கங்கணம் / நோக்கம் / குறிக்கோள்
224. / கன்று / முறை
225. / கண்டாங்கி / சேலை
226. / கானி / ஒரு மரக்கட்டை
227. / கண்ணம்மே / பாட்டி
228. / கன்னாலு / குடிசை
229. / கரவு / கதவு
230. / கருக்கு / இளநீர்
231. / கல்லெடுப்பு / சவ ஊர்வலம்
232. / கழட்டு / பரித்தல்
233. / கழுகு / கழுவு
234. / கவ்த்து / கயிறு
235. / கரும்பி / கருமி
236. / கயக்கு / கசக்கிடுதல்
237. / கயப்பு / கசப்பு
238. / காங்கி / சிவப்பு நிறம்
239. / காணம் / கொள்ளு
240. / காரு / காரம்
241. / கா'யி / காசு
242. / கொத்துலு / சிறிய குடிசை
243. / கேத்தாமுனி / சுத்தி
244. / கெல்லாம் / சரி
245. / கொய்வு / கொசு
246. / கோத்தம் / வளைவு / குறைபாடு
247. / கோனம் / கோணம் / நெல் வயல்
248. / குப்பி / புட்டி, குப்பி
249. / குட்டுவம் / பாத்திரம்
250. / கும்ப்ளி / நீர்க்குமிழி
251. / கும்ழி / நீர்க்குமிழி
252. / குளுச்சி / குயவர் இனத்தைச் சார்ந்த பெண்
253. / குளுவன் / குயவர்
254. / குமின்சான் / நறுமணமுள்ள சாம்பிராணிப் பிசின்
255. / குரும்பால் / பக்குவமடையாத தென்னை அல்லது பனங்கொட்டை
256. / குழுசி / குளிப்பு
257. / குறுக்கு / உடலின் பின்புறம்
258. / கூத்துவான் / கறி
259. / கூம்பு / இருதயம்
260. / கரிசி / வயல், நிலம்

261. / க்ரிசிக்காரன் / உழவன்

/ ம /

262. / மின்னி / முகம்
263. / மீத்தி / படுக்கை, முட்டுப்பூச்சி
264. / மாது / மன், குட்டை,
265. / மதி சீல்லி / --
266. / நடுமாட்டி / மண்வெட்டி
267. / மஞ்ஞி / பனித்திவலை
268. / மாறி / திரும்புகை
269. / மஞ்சம் / படுக்கை
270. / மசி / மை
271. / மலட்டு / திறத்தல்
272. / மருதாணி / கற்பூரம்
273. / மாடம் / ஒரு தற்காலிக குடிசை - குறிப்பாக நெல்வயலில் கட்டப்பட்டது
274. / மாச்சல் / சோம்பேறித்தனம்
275. / மாக்கீதி / தவளை
276. / மாக்கான் / தவளை
277. / மோடம் / வெற்றியை உறுதிசெய்கிற, உலோகத்தட்டு
278. / மேலி / மூங்கில்
279. / மூலி / காரணம்
280. / மோயப்பு / உச்சி
281. / மோதகம் / கொழுக்கட்டை
282. / மோத்து / கூறை
283. / மோட்டிப்பூ / திருட்டு
284. / மோயனம் / திருட்டு
285. / மோய்ரம் / மோதிரம்
286. / முட்டாசி / கற்கண்டு
287. / முந்து / வேஷடி
288. / மலை / மலைத் தொடர், பெருங்குவியல்

/ நி /

289. / நீராவி / ஒரு குட்டை
290. / நீக்கம்பு / வாந்தி பேதி நோய்
291. / நீங்கு / இடம் பெயர்ந்து செல்லல்
292. / நஞ்சி / விஷம்
292.(அ)/ நல்லப்பம் / முதல்
293. / நாளத்தக்கி / நாளை மறுநாள்
294. / நாருங்கி / கொண்டிப்பட்டு
295. / நாய்ராச்சி / ஞாயிற்றுக்கிழமை
296. / நா'சி / மூக்கு
297. / நாவியான் / நாவிதர்

298. / நா'யி / மூக்கின் உட்குடைவு
299. / நொம்பலம் / வலி
300. / நுள்ளு / கிள்ளுதல்

/ நா /

301. / நா'று / நெல் நாற்றங்கால்
302. / நாய்ராச்சி / ஞாயிற்றுக்கிழமை

/ லெ /

303. / லெப்பே / தமிழ் முகம்மதிய சமயத்தினர்
304. / லே'லம் / ஏலம்
305. / லா'மி / அடைக்கும் பகுதி

/ ர /

306. / ரா'வோ / தேய்ப்பு
307. / ரூ'பம் / உருவம்
308. / ரா'லு / பிரான் என்ற மீன்

/ வி /

309. / விக்குவபன் / விற்கிறவன்
310. / விளி / அழைத்தல்
311. / விரி / விதி
312. / விருச்சூலி / --
313. / வீறு / தந்தம்
314. / வெதுக்கம் / வெட்கம்
315. / வேலம்பு / பணியாற்றுதல்
316. / வெள்ளியாச்சி / வெள்ளிக்கிழமை
317. / வேக்கேரி / வியர்த்தல் / அதிக வெட்பம்
317.(அ)/ வேங்கு / வாங்கு
318. / வேலாச்சி / வியாழக்கிழமை
319. / வாதிநீரு / அரிசி வெந்த சாறு (உலைநீர்)
320. / வடலி / ஒரு சிறிய பனை மரம்
321. / வட்டு / மாத்திரை
322. / வாச்சூட்டி / புகை வாயில்
323. / வண்ணம் / பருமன்
324. / வர்மம் / பழியார்வமுள்ள குணம்
325. / வலயன் / சிலந்தி
326. / வாளி / வளை சிலந்திக் கூடு
327. / வள்ளம் / ஓடம்
328. / வசக்கு / கடல் மீன் வகை / இரயில் வண்டி
329. / வாத்து / இடுப்புக்கச்சை
330. / வாரி / கூரையின் குறுக்குச் சட்டங்கள்
331. / வா'ருவலு / கூட்டும் தொடப்பம்
332. / யா'னம் / தட்டு முட்டு சாமான்கள் (பாத்திரம்)
333. / யா'வாரம் / வியாபாரம்
334. / யா'வா'ரி / வியாபாரி

கன்னியாகுமரி மாவட்டத்தில் மொழியியல் ஆராய்ச்சி ஆய்வு

முன்னுரை

கன்னியாகுமரி மாவட்டம் தொன்றுதொட்டு, இருமொழி பேசும் பகுதியாகத் திகழ்கிறது. இங்கு, தாய்மொழியான தமிழும், முன்பு ஆட்சி மொழியாக இருந்த மலையாளமும், இன்று கூட, அனைவராலும், வெகுவாக பயன்படுத்தப்பட்டு வருகின்றன. கல்வியறிவு பெற்ற மக்கள், இந்த இரண்டு மொழிகளுடன், ஆங்கிலமும் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாக விளங்குகிறார்கள். ஆக, அவர்கள் மூன்று மொழிகள் அறிந்தவர்களாக உள்ளார்கள். விளவங்கோடு மற்றும் கல்குளமடங்கின மாவட்டத்தின் மேற்குப்பகுதியில், தோவாளை மற்றும் அகஸ்தீஸ்வரம் வட்டங்களடங்கிய கிழக்குப் பகுதி வாழ் மக்களைவிட மலையாளம் பேசத் தெரிந்த, மூன்று மொழி அறிந்தோர் வாழ்கிறார்கள்.

ஒரியியல் சிறப்பியல்புகள்

உயிரெழுத்து : அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, மற்றும்

மெய்யெழுத்து : ப், ட், த், (ட்டி), ச், க், ம், ந், நா, ந், ல், லெ, ர், றி, வ் மற்றும் ய்

இப்பேச்சு வழக்கு வகைகள், ஆங்கில எழுத்துக்களான / ஆர் / மற்றும் / ஆர் / இவையிரண்டையும், முறையே (ர்) மற்றும் (றீ) என மாறுபடுத்திக் காட்டுகின்றன. (றி) எனும் ஒலியத்தை, (ட்டி) எனும் ஆங்கில எழுத்தின் ஒலியைப் போன்று ஒலிக்க வேண்டியதன் நிமித்தம், இலேசாக நிறுத்தி உச்சரிக்கப்பட வேண்டியதாகிறது. அதாவது ஆங்கில எழுத்தான (ட்டி)க்கொப்ப, ஒரு பல்லடி ஒலி எழுப்பி, நிறுத்தி, உச்சரிக்கவேண்டியுள்ளது. பண்டைய தமிழ் இலக்கணமான தொல்காப்பியத்தின்படி, (றி) / ட்டி / எனும் எழுத்து, வல்லினமாக உச்சரிக்கப்பட்டது. இப்பேச்சு வழக்கு வகைகளில், இந்த சிறப்பியல்பு, கையாளப்பட்டு வருகிறது. ஆனால், இச்சிறப்பியல்பினால், இப்பகுதியின் எழுதும் முறை சிறிது பாதிக்கப்பட்டுள்ளது. பொது அலுவலகங்களிலும், பயணிகள் செல்லும் ஊர்திகளின் பெயர் பலகைகளிலும், ஒரு மாறுபாடான சொல்லின் எழுத்தாக்கத்தைக் காணலாம். (ர்) மற்றும் (றீ) ஆகிய எழுத்துக்களினூடே உள்ள மாறுபாட்டினை மக்கள் உச்சரிக்கும் போது சரியாக உச்சரித்து, மாறுபாட்டினை வேறுபடுத்திக் காட்டுவது தெரிய வருகிறது. ஆனால், எழுதும் போது, இக்குழப்பம் தொடர்ந்து காணப்படுகிறது. எனவே, (ர்) மற்றும் (றீ) ஆகிய எழுத்துக்களை எங்கு, எவ்வாறு, பயன்படுத்த வேண்டுமென தெளிவாகப் பள்ளிக் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். இல்லையேல், அவர்களது வாழ்க்கை முழுவதும் இத்தவறு நீடிக்குமென்பது திண்ணம்.

(றி) என்னும் சொல், ஆங்கிலச் சொல்லான / ட்டி / என, பேச்சுவழக்கில் உச்சரிக்கப்படும் சில சொற்கள் :

றீ ஷாப் ... ட்டீ ஷாப்

சாற்லீஸ்	...	சார்லெஸ்
றெற்றஸ்	...	ட்டீடஸ்
லாறன்ஸ்	...	லாரென்ஸ்
றைஸ்மில்	...	ரைஸ்மில்
லோறி	...	லாரி
டிறினிற்றி	...	ட்ரிநிட்டி

/ர்/ மற்றும் /ற்/ ஆகிய இரு சொற்களும், குழப்பத்தில் ஒன்றுக்கொன்று மாறுபட்டு உச்சரிக்கப்படுகின்றன.

இணைப்பு - 2 (பத்தி 3 : 3: 3)

கன்னியாகுமரி மாவட்டத்தின் மக்கள் மரபாராய்ச்சி ஆய்வு

இந்தியத் துணைக் கண்டம், தமிழ்நாட்டின் தென்கோடியிலுள்ள கன்னியாகுமரி மாவட்டம், புராணக்கதையம்சம், வரலாற்று முக்கியத்துவம் மற்றும் கலைச்சுவையுள்ள புனிதமான பல இடங்களைக் கொண்டதாகும். 645 சதுர மைல் பரப்புள்ள, 600 திருக் கோயில்களுள்ளன. அவற்றில் கன்னியாகுமரியிலுள்ள குமரி பகவதி, சுசீந்திரத்திலுள்ள தாணுமாலையன், மற்றும் நாகர்கோயிலிலுள்ள நாகராஜா கோயில், ஆகிய திருக்கோயில்கள் மிகவும் முக்கியமானவை. இவை தவிர, வெள்ளிமலை மற்றும் முருங்கூரிலுள்ள சுப்ரமணியசுவாமி திருக்கோயில், பரக்கையிலுள்ள மதுசூதனப் பெருமாள் கோயில், வடிவீஸ்வரத்திலுள்ள அழகம்மன் கோயில், கிருஷ்ணன் கோவிலிலுள்ள கிருஷ்ணன் கோபுரம், ஆரல்வாய்மொழியிலுள்ள மீனாட்சி கோயில், பூத பாண்டியிலுள்ள பூதலிங்கசுவாமி கோயில், மண்டைக்காட்டிலுள்ள பகவதி அம்மன் கோபுரம், பத்மநாபபுரத்திலுள்ள நீலகண்டசுவாமி, ஆறுதிங்கட்கொரு முறை தனது நிறத்தை மாற்றிக்கொள்ளும் சக்தி வாய்ந்த விநாயகப் பெருமான் அருள்பாலித்துவரும் கேரளபுரம் கோயில், சித்தாரலிலுள்ள குகைக்கோயில், நிருநந்திக்கரையிலுள்ள, மலையைக் குடைந்து, உருவாக்கப்பட்டுள்ள குகைக்கோயில், ஆகியவை மேலும் சில முதன்மையான கோயில்களாகும்.

அடுத்து, கருங்காலிலுள்ள பகவதி கோயில் அடுத்து முதன்மை வாய்ந்ததாகும். சக்தி, சிவன், மகாவிஷ்ணு மூவரும், மான் மற்றும் கோடரியை கையிலேந்தி, ஒரே *கர்ப்பக்கிருகத்தில்* இங்கு கோயில் கொண்டுள்ளார்கள். திருப்பரமலையில் 14 அடி உயரமுள்ள அரிய கிருஷ்ணர் உருவம் பிரதிட்டை செய்யப்பட்டுள்ள கோயில், தமிழ்நாட்டில் தெய்வீகப்புலவரான அவ்வையாருக்கு அர்ப்பனஞ் செய்யப்பட்டதாகும். அகஸ்தீஸ்வரத்திலுள்ள அகத்தியர் கோயிலும் மாவட்டத்தில் அடுத்து முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

இம்மாவட்டத்தின் சுவாமித்தோப்பு என்ற கிராமம் வைகுந்தசுவாமி அல்லது நாராயணசுவாமியை வழிபடுபவர்களால் போற்றப்படும் இடமாகும். 150 ஆண்டுகளுக்கு முன்பு, முத்துக்குட்டி சுவாமி என

அழைக்கப்பட்ட சாது ஒருவர் நாஞ்சில் நாட்டுப்பகுதியில், மணக்குடிக்கும் லீபுரத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் வாழ்ந்த மக்களை விடுவிக்க திருவாங்கூர் மன்னருடன் முழுமூச்சோடு வாதாடி வந்தார். துவக்கத்தில், அவர், திருநெல்வேலி மாவட்டம், திருவைகுண்டத்தினின்றும் வந்திருக்கக்கூடுமென யூகிக்கப்படுகிறது. அப்பகுதி மக்கள், கிறித்தவ சமயத்திற்கு, மாற்றம் பெற கட்டாயப்படுத்தப்பட்டதாகவும், அதனின்றும் அவர்களை விடுவித்து, அவர்களிடையே வைணவ சமயக்கோட்பாட்டு முறைகளைப்பரப்ப அவர் பெரிதும் பாடுபட்டதாகவும் கூறப்படுகிறது. அவர், உருவ வழிபாடற்ற வழிபாட்டு மரபினைப் புதிதாகத் தொடங்கினார். அவரது கொள்கையினைப் பலர் பின்பற்றலாயினர். அவர் இறந்த பிறகு, அவரைப் பின்பற்றுபவர்கள், பெரும்பாலும் இந்து - நாடார்கள், அவரை வழிபடத் தொடங்கினார்கள். அவரது கல்லரை அமைந்த இடம், சுவாமித்தோப்பு என்ற பெயருடன் வளர்ச்சி பெறத்துவங்கியது. அங்கு ஆண்டிற்கு மூன்று தடவைகள், திருவிழா கொண்டாடப்பட்டது. அவரது செல்வாக்கினால், அந்த சுற்றுவட்டார பல இந்து கிராமங்களில், உள்ளூர் கோயில்களுடன், நாராயணசுவாமி கோயில்களும் எழுப்பப் பட்டு, மக்கள் வழிபட்டு வருகின்றனர். ஒசரவிள்ளையிலுள்ள அம்பலப்பட்டி, மாவட்டத்தில் பலரால், *பட்டி* என அழைக்கப்படுகிறது. எல்லா கிராமங்களிலும் நாராயணசுவாமி கோயிலை, மக்கள் *பட்டி* என அழைக்கலாயினர். இங்கு, உருவ வழிபாடு மேற்கொள்ளப்படுவதில்லை. திருநீருக்கு பதிலாக, முன் நெற்றியில், மேல்நோக்கிக் குறியிடும் *நாமத்திற்கு* சுண்ணாம்பு நீர் கலந்த மணலைப் பயன்படுத்துகிறார்கள். திரு. முத்துகுமாரசுவாமிகள், *அகிலத்திரட்டு* என்ற கொள்கை விளக்கங்களை உருவாக்கினார். பனையோலைகளில் எழுதப்பட்ட அவை முறையாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. *பட்டி* களில், திருவிழாக் காலங்களில், கிராம மக்கள், இக்கொள்கை விளக்கங்களை முறையாகப் படித்து, மன அமைதி பெறுகிறார்கள். இப்போது கூட *அகிலத்திரட்டு* படிக்கும் முறை பின்பற்றப்பட்டு வருகிறது. இது *ஏட்டு வாசிப்பு* என அழைக்கப்படுகிறது. 40 ஆண்டுகளுக்கு முன்னர், நூல் வடிவில், இது பிரசுரிக்கப்பட்டது. அதனில், திரு. முத்துகுமார சுவாமிகள், மணக்குடி கிராமத்தினை மணவாய்ப்பட்டி எனவும், அப்பகுதியினை குருநாடு எனவும் குறிப்பிட்டுள்ளார்.

கிறித்தவ சமயத்தைப் பொறுத்தவரையில், கன்னியாகுமரி மாவட்டம் கிறித்தவ சமயத்தை நிலை நாட்டிய முதலிடமாகத் திகழ்கிறது. இதற்கு, கி.பி. 16-ம் நூற்றாண்டு முதல், கோட்டாற்றிலுள்ள புனித பிரான்சிஸ் சேவியரின், மாவட்டத் தலைமை கிறித்தவக் கோயில் சான்றளிக்கிறதெனில், மிகையில்லை. 1819-ம் ஆண்டு, கிரேக்க முறையில் நாகர்கோயிலில் கட்டப்பட்ட "ஹோம் சர்ச்" என்ற கிறித்தவக் கோயில், (இது உள்ளூரில் கல்லுக்கோவில் 'என அழைக்கப்படுகிறது) தெற்கு ஆசியாவிலும், இந்தியாவிலும், மிகப்பெரிய பிராடஸ்டண்ட் கிறித்துவக்கோயில்களில் ஒன்றாகும். கிறிஸ்து காலத்துக் கோயில்

என்று அழைக்கப்படும் மிகப் பழைய திருக்கோயில் அழகிய மண்டபம் அருகே காணப்படுகிறது. இது, கிறித்துவின் சமகாலத்தவரும், அவரது திருத்தொண்டருமான புனித தாமஸ் என்பவரால் துவக்கப்பெற்றதென கூறப்படுகிறது.

முகம்மதிய சமயம் தொடக்க கால நூற்றாண்டுகளிலிருந்தே துவக்கப்பட்டதென அறியப்படுகிறது. தக்களையிலுள்ள அழகிய மசூதி இதற்கு சான்றாக விளங்குகிறது. ஒரு முகம்மதிய தமிழ் புலவரும், பேராற்றல் வாய்ந்தவருமான பீர் முகமது சாகிப்பிற்கு இது அர்ப்பணம் செய்யப்பட்டதாகும்.

இம்மாவட்டத்தில், இந்தியாவின் அனைத்து சமயங்களும் செழித்தோங்கிய போதிலும், இந்து சமயம் தான் தொன்றுதொட்டு முன்னோடியாகத் திகழ்கிறது. நான்கு சமயக்கோட்பாடுகளான சைவம், வைணவம், சமணம் மற்றும் புத்தம் ஆகியவற்றின் கருத்துருவமாக விளங்கும் நாகர்கோயிலுள்ள நாகராஜா திருக்கோயிலே இதற்குச் சான்றாகும். சிறிய பரப்பிலுள்ள கன்னியாகுமரி மாவட்டமானது நான்கு கோணங்களிலும், பராசக்தியால், நான்கு பெயர்களில் காவல்காக்கப் படுகிறதென நம்பப்படுகிறது. அதாவது, கன்னியாகுமரியில், அன்னை குமரியாகவும் (பகவதி அம்மன்), ஆரல்வாய்மொழியில் மீனாட்சியாகவும், மண்டைக்காட்டில் பகவதியாகவும், கொல்லங்கோட்டில் மாகாளியாகவும், பராசக்தி அவதரித்து கோயில் கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

தாடகைமலை, மருத்துவமலை மற்றும் மகேந்திர கிரி ஆகிய இடங்களுக்கு, புராணக் கதைகளை ஆதாரமாகக் கொண்டு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

மேற்குக் கடற்கரை மலைத் தொடரில், 5500 அடி உயரத்திலுள்ள கம்பீரமான முகடான மகேந்திர கிரி, அனுமன், சீதா தேவியைத் தேடிக் கொண்டு, இலங்கைக்குச் செல்கையில், இந்த முகட்டிலிருந்துதான் தாவிச் சென்றதாக, வால்மீகி இராமாயணத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. மருந்துக்கான செடியினங்களையுடைய சிறு குன்றான மருந்து வாழ மலை (மருத்துவமலை), அனுமன், இராம, இராவணப் போரின் போது, சுமந்து சென்ற ஒழத்தி மலையினின்றும் கீழே வீழ்ந்த ஒரு சிறு பகுதிதான் என கூறப்படுகிறது. பூதபாண்டிக்கு அருகாமையிலுள்ள தாடகைமலை இராமாயணத்தில் வரும் தாடகையின் இருப்பிடமெனவும் கருதப்படுகிறது.

தமிழ் கவிஞர்களான அகத்தியர், தொல்காப்பியர், திருவள்ளுவர் மற்றும் அவ்வையார் ஆகியோர் வாழ்ந்த காலம் குறித்து, பல வரலாற்று ஊகங்கள் உள்ளன. கன்னியாகுமரிக்கு அருகாமையில், அகஸ்தீஸ்வரம் என்ற கிராமத்தில், அகத்தியரின் பெயரில் ஒரு கோயில் நிறுவப் பட்டுள்ளது. ஆதங்கோட்டு ஆசானின் சட்டமன்றத்தில், துவக்க காலத்துத் தமிழ் இலக்கணமான தொல்காப்பியம் தொடங்கி வைக்கப்பட்டது. ஆசான், ஆதங்கோடு மாகாணத்தின் மக்கள் தலைவனாகக் கருதப்பட்டான். இவ்விடம் கன்னியாகுமரி,

மாவட்டத்தில், தற்போது ஒரு சிறு கிராமமாக உள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில், *சிலம்புக்* கலை, அல்லது சோதிடக் கலை அல்லது மருத்துவக் கலை ஆகியவற்றில், சிறந்து விளங்குபவரை *ஆசான்* என அழைப்பார்கள். எனவே, ஆதன்கோட்டாசான் என்பவன், ஆதன் கோட்டின் ஆசான் எனக் கருதப்பட்டிருக்கக்கூடும். இம்மாவட்டத்தில், கோட்டு என்ற சொல்லுடன் முடிவடையும் பெயர்களையுடைய, ஏறத்தாழ 50 கிராமங்கள் இருப்பதே, இக்கூற்றுக்கு சான்றாக விளங்குகிறது. 'கோட்டு' என்றால் "தொடர்ந்து செயலாற்றுதல் / வங்கி" எனப்பொருள்படும். இம்மாவட்டத்தில், கொல்லங்கோடு (கொல்லங்கோட்டு), மாலங்கோடு (மாலங்கோட்டு), திருதான்கோடு (திருவிதாங்கோடு), விளவங்கோடு (விளவங்கோட்டு) போன்ற பெயர்களையுடைய கிராமங்கள் உள்ளன. திருவள்ளுவரின் பிறந்த இடம் திருநாயனார்குரிச்சி எனவும், அவ்வையார் இறந்த இடம் தாழக்குடி எனவும் இவ்விரு ஊர்களும், இந்த மாவட்டத்தி லுள்ளனவெனவும் ஒரு கருத்து நிலவுகிறது. நாஞ்சில் நாட்டை ஒரு காலத்தில், நாஞ்சில் வள்ளுவன் என்பவர் ஆண்டு வந்ததாக *'புறநானூற்றில்* குறிப்பிடப்பட்டுள்ளது. அவர், திருவள்ளுவரின் உறவினராயிருக்கலாமெனவும், வள்ளுவன் கோட்டு என்பது நாளடைவில் மருவி, விளவன் கோடு என அழைக்கப்பட்டு வரக் கூடுமென ஊகிக்கப்படுகிறது.

தமிழ் இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று அவ்வை யாரில் முதல்வரான சங்க காலத்து அவ்வையார், நாஞ்சில் நாட்டில் பிறந்தவரென கூறப்படுகிறது. நாஞ்சில் நாட்டின் வடபகுதியில், அவ்வையாருக்கு மூன்று கோயில்கள் உள்ளன. முதலாவது, அழகிய பாண்டியபுரத்திற்கருகாமையிலுள்ள குறட்டியறையிலுள்ளது; இரண்டா வது தாழக்குடியிலுள்ளது. நாவல் மரங்கள் மற்றும் வண்ணான் பாறை ஆகியவற்றால் சூழப்பட்ட அவ்வையாரின் கல்லரை இங்குதான் உள்ளது. மூன்றாவது முப்பந்தலிலுள்ளது. முப்பந்தல் என்ற இடமே அவ்வையாருக்காக ஏற்பட்டதெனக் கூறப்படுகிறது. அதாவது, மூவேந்தர்களான சேர, சோழ, பாண்டியருக்கு, மக்கள் தலைவனான அதியமான் மீது இருந்த கோபத்தைக் களைத்து, அவர்களுக்குள் சமரச இணக்கம் மேற் கொள்ள, ஒரு "சந்திப்பு இடத்தினை" அவ்வையார் தோற்றெடுத்ததாகவும், அவ்விடத்தில் மூவந்தர்களும் மூன்று பந்தல்கள் நிர்மாணித்ததாகவும், மூவேந்தர்களின் அந்த "சந்திப்பு இடம்" பின்னர் முப்பந்தல் என அழைக்கப்பட்டதாகவும் இன்றுகூட அவ்விடத்தில் அறியப்படுகிறது. மூன்று பந்தல்களையும், (மடங்கள்) அவ்வையாரின் கோயிலையும் காணலாம். அவ்வையாருக்குக் கோயில் எழுப்பியுள்ள இடங்களில், அப்பகுதியிலுள்ள பெண்கள், *அவ்வை விரதம்* மேற்கொள்கிறார்கள். அவர்கள் ஆடி மாதம், (சூலை - ஆகஸ்ட்) ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும், கூழ் (அரிசிக்கஞ்சி) மற்றும் கொழுக்கட்டை (இனிப்பு - அரிசிப்பண்டம்) படைக்கிறார்கள்.

மாவட்டத்திலுள்ள ஒரே ஆறான பழையாறு குறித்தும், ஒரு கருத்து நிலவுகிறது. கி.பி. 1745 வரை, இந்த ஆறு, பரளியாறு என அழைக்கப்பட்டு வந்தது. இது, தமிழ் இலக்கியத்தில் கூறப்பட்டுள்ள பஹ்ருளியாறு எனவும், ஒரு காலத்தில், இது, தமிழ்நாட்டின் தென் எல்லையாயிருந்த தெனவும் பின்னர், இந்துப்பெருங்கடலில் மூழ்கி விட்டதெனவும், தமிழ் இலக்கியத்தில் கூறப்பட்டுள்ளது.

எனினும், மூன்று தமிழ் மன்னர்களான சேர, சோழ, பாண்டியர் இம்மாவட்டத்துடன் 2000 ஆண்டுகள் தொடர்பு கொண்டிருந்தார் களென்பது, நிரூபணமாகிறது. அவ்வாறு அவர்கள் தொடர்பு கொண்டிருந்தமைக்கு, கேரளபுரம், சோழபுரம் மற்றும் அழகிய பாண்டியபுரம் ஆகியவை சான்று பகர்கின்றன.

"கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டா" மென அவ்வையார் அறிவுரை வழங்கினார்கள். அதே போன்று, இம்மாவட்டத்தில், பனையோலை இலக்கியங்கள் இல்லாத கிராமங்களேயில்லையெனக் கூறலாம். கைவசமுள்ள பல பனையோலை இலக்கியங்களில், இசக்கியம்மன், முத்தாரம்மன், சாஸ்தா, புழங்கொண்டாளம்மன், சுடலையம்மன், மன்னார் ராசா போன்ற உள்ளூர் தெய்வங்கள் தொடர்புள்ள மக்கள் கதைகள் இடம் பெற்றுள்ளன. சில இலக்கியங்களில் வெங்கலராசன் கதை, தம்பிமார் கதை, முத்துப் பாட்டன் கதை போன்ற வரலாற்று முதன்மை வாய்ந்த நிகழ்ச்சிகள், விளக்கப்பட்டுள்ளன. மேலும், ஒவ்வொரு கிராமத்திற்கும் பல உள்ளூர் தெய்வங்களைப் பற்றிய பல மக்கள் கதைகள், இப்பகுதியின் பல கிராமங்களில், வில்லுப்பாட்டாகவும், கனியன் பாட்டாகவும் பாடப்படுகின்றன.

பல மக்கள் கதைகள் பழக்கத்திலிருந்த போதிலும், பல மக்கள் மத்தியில், தற்போது, இயக்கியம்மன் கதை தான் பிரபலமாகியுள்ளது. அது எல்லோராலும் *நீலிக்கதை* எனக் கூறப்படுகிறது. கதை சொல்பவர், நீலியின் தோற்றத்தைப் பற்றிக்கூறும் போது, அவர், நீலியின் (இயக்க) கோயில்கள உள்ள பழவூர், முப்பந்தல், சீதப்பால், கலியங்காடு, மணிக்கட்டிப்பொட்டல் ஆகியவற்றுடன் இணைத்துக் கூறுவதுண்டு. ஒரு காலத்தில், பொருட்களை ஏற்றிக் கொண்டு வர, மக்கள் இக்கிராமங்களின் வழியாக வரும் பாதையைத்தான் பயன்படுத்தி வந்தார்கள். இக்கோயில், இப்பாதையினையொட்டி எழுப்பப் பட்டிருப்பதால், இக்கோயில்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இயக்கியின் பல கோயில்களில், முப்பந்தல் இயக்கி, மிகவும் சக்தி வாய்ந்த தெய்வமாக கருதப்படுகிறது. எனவே, நாகர்கோயிலிலிருந்து முப்பந்தல் வழியாக வரும் வண்டிகளும், நாகர்கோயிலுக்கு செல்லும் ஊர்திகளும், பயணிகள் நீலியம்மனுக்கு வழிபாடு செய்வதற்காக, சற்று நேரம் நின்று செல்வதுண்டு. வில்லுப்பாட்டில் நீதியின் கதை கீழ்க்கண்டவாறு விளக்கப்படுகிறது:

பார்புகழும் பழவூராம் பண்புடைய பேரூராம்
சீர்நிறைந்த திருவூராம் தென்திசையில் ஓரூராம்
அப்பெரிய பதிதனிலே அம்மையப்பர் கோவிலிலே
ஆடிவரும் பாடிவரும் அழகுடைய தாசியவள்
கண்டாரை மயக்கிடுமாம் கட்டழகு தாசியவள்
கண்ணசைந்த வேளையிலே பையசைந்து ஓடிடுமாம்
அப்பெரிய கோவிலிலே அம்மையப்பர் கோவிலிலே
பூசைசெய்யும் சிவபஸ்பான் புத்திரரே இல்லாமல்
அம்மையப்பர் திருவருளால் ஆண்மகனைப் பெற்றெடுத்தாள்
பெற்றெடுத்த மகனுக்குத்தான் வேலனென்று பேருமிட்டாள்
பெற்ற அந்தப் பிள்ளையுமே வளர்ந்து அங்கே வருகுதங்கே
இப்படியே நாட்கள் செல்ல ஏதுசெய்தான் பாப்பானவன்
தன்னுடைய மகனைத்தான் அம்மையப்பர் கோவிலிலே
பூசை செய்து வாயென்று வேலனிடம் சொல்லிவந்தான்
வேலனவன் பூசை செய்து விரைவுடனே இருகையிலே
ஆடிவரும் பாடிவரும் அழகுடைய தாசியைத்தான்
தாசியைத்தான் கண்டிடுவான் கட்டழகு வேலனவன்
கண்டானே வேலவனன் அந்த நல்ல வேளையிலே
தாசிதன்னைக்
கண்டவுடன் பேரானந்தம் கொண்டிடுவான்
தாசியும் வேலனும்தான் இவர்கள் ரெண்டு போ்களுமே
அன்புடனே பழகிவந்தனா.

கையிலுள்ள பொருளையெல்லாம் தாசியிடம் கொட்டிவந்தான்
கையிலிப்பம் காசுமில்லை வேலவன் ஏதுசெய்தான்
தாசியவள் வீடதிலே அடைக்களம்தான் புகுந்துவந்தான்
கையிலொரு காசுமில்லை கடன்தருவார் யாருமில்லை
இப்படியே இருக்கும் நாளில் வேலனவன் ஏதுசெய்தான்
தாசியுடன் தாயுமே வேலனைத்தான் அழைத்திடுவாள்

கையிலொரு காசுமில்லை உன்னிடத்தில் இப்போது
இங்குதானும் இருக்கவேண்டாம் என்று சொன்னாள் தாசியவள்
இத்தனையும் கேட்ட அந்த வேலனவன் ஏதுசெய்தான்
தாசியவள் வீட்டை விட்டு வெளியேறிச் சென்றிடுவான்

பழகைநல்லூர் காடைவிட்டு வாறானே வேலனவன்
பழகைநல்லூர் காடதிலே கருவேல மூடதிலே
கருவேல மூடதிலே வந்தமர்ந்தான் வேலனவன்
தன்னுடைய கணவனைத்தான் காணாமல் ஏதுசெய்வாள்
தாசியவள் அப்போது பழகைநல்லூர் காடை நோக்கி
கணவனைத்தான் தேடியங்கே வதைவதைக்க ஓடிவந்தாள்
காட்டிலே இருக்கும்போது வேலனைத்தான் கண்டிடுவாள்
கண்டாளே தாசியவள் கட்டழகு தாசியவள்
நம்முடைய வீட்டிற்குத்தான் சென்றிடுவோம் என்று சொன்னாள்

இத்தனையும் கேட்ட அந்த வேலனவன் ஏதுசெய்தான்
அந்த நல்ல வேளையிலே போகவேண்டாம் என்று சொல்லி
சிறிது நேரம் கழித்து அங்கே போயிடலாம் என்று சொன்னான்
இத்தனையும் கேட்ட அந்த தாசியவள் எதுசெய்தாள்
வேலனவன் மடிமீது தலைவைத்துப் படுத்திடுவாள்
தாசியவள் கழுத்தினிலே நகைகளெல்லாம் ரெம்ப உண்டு
இந்த நல்ல நகைகளெல்லாம் நாமெடுத்துச் செல்ல வேண்டும்
என்று அந்த வேலனவன் நினைத்திடுவான் அப்போது
மடியிலுள்ள தலைத்தனையே மணல்மேலே தானும்
வைத்தான்
பாராங்கல்லைக் கொண்டுவந்து தாசியவள் தலையில்
போட்டான்

போட்டவுடன் தாசியவள் புழுவாகத் துடித்திடுவாள்

ஏ !! குற்றமொன்றும் செய்யவில்லை ... நீ
என்தலையில் கல்லைப் போட்டாய்

ஏ !! மாபாவி மாபாவி .... உனக்கு
என்ன குற்றம் செய்து வந்தேன்

வீட்டிற்கு அழைக்கல்லவா - உன்னை வேகமாக அழைக்கவந்தேன்
இப்படியே தாசியவள் அங்கே ஏதேதோ சொல்லிடுவாள்
பக்கத்திலே நின்ற நல்ல கள்ளியைத்தான் பார்த்திடுவாள்
பக்கத்திலே நின்ற கள்ளி நீயே சாட்சி என்றாள்
கருவேல மூடதையும் நீயே சாட்சி என்றாள்
என்று சொல்லி தாசியவள் அப்போது உயிரைவிட்டாள்
கழுத்திலுள்ள நகைகளெல்லாம் கழற்றி அங்கே வேலனவன்
துணி முடிச்சை கட்டிக்கொண்டு விரைவாக நடந்திடுவான்
தண்ணீர்தான் குடிப்பதற்கு அங்கு வேலனவன் ஏதுசெய்தான்
பாழடைந்த கிணற்றைத்தான் அங்கே கண்டானே வேலனவன்
பாழடைந்த கிணற்றினிலே சற்று வெள்ளந்தன்னைக் கண்டிடுவான்
நகைகளெல்லாம் கையில் கொண்டு
பாழடைந்த கிணற்றுக்குள்ளே இறங்கிடுவான் வேலனவன்
பாழடைந்த கிணற்றிலே - கிணற்றிலே
ஒரு நாகமது வந்திடுமாம் - வந்திடுமாம்
வேலனைத்தான் தீண்டிடுமாம், அப்போது வேலனவன்
புழுவாகத் துடித்தானே அந்தப்பழடைந்த கிணத்துக்குள்ளே
கிணற்றினிலே வேலனும் அங்கே தன்னுயிரை மாய்த்திடுவான்

அக்காளைக் காணாமல் வாறானே தம்பியவன்
தாசியவள் தம்பியவன் பழவூரு காட்டுக்குள்ளே
போனநல்ல அக்காளை காணவில்லை என்று சொல்லி வாறானே
தம்பியவன்

அக்காளின் கோரமான உடலை அங்கு கண்டு
அப்போ, பதைபதைத்து ஏதுசெய்வான்

தன்னுடைய நாவதையும் தான் பிடுங்கிச் செத்திடுவான்

இவ்வாறாக, கதையின் முதற் பகுதி முடிவடைகிறது. அந்த மூன்று ஆவிகளும் சிவபெருமானின் இருப்பிடம் சென்றன. தாசியினது ஆவி, அவளது காதலனான வேலனைப் பழிக்குப்பழி வாங்க, வரனளிக்கக் கோரியது. சிவபெருமானும் அவள் வேண்டிய வரனை அளித்தார். மறுபிறவியில், வேலன் காவிரிப்பூம்பட்டிணத்தில் ஒரு செட்டியாரின் மகனாகப்பிறந்தான். ஒரு சமயம் அவனது தந்தை, தனது பிற்காலம் குறித்து அறிந்துகொண்ட ஒரு ஆருடனை அழைத்தார். பிறகு,

அந்தச் சோசியனும் ஏதுசொன்னான்
இவன் தென்திசைதான் போகவேண்டாம்
ஒரு ஆபத்தொன்று இருக்குதய்யா
என்று சொல்லி சோசியனும்
ஒரு மந்திரக்கம்பைக் கொண்டு
மந்திரக்கம்பு ஒன்று - கம்பு ஒன்று
வேலனிடம்தான் கொடுத்தான் - தான் கொடுத்தான்
இவ்வாறு இருக்கும்போது - ஏதேது நடக்குதய்யா
வியாபாரம் செய்யும்போது - செய்யும்போது
எங்கெங்கு சென்றாலும் யாவாரம் பெருகவில்லை
தென்திசைதான் போவாமென்று - போவோமென்று
வாறானே செட்டியவன் - செட்டியவன்
பாதையங்கே தவறியவன் பழவூரு தான் வாறான்
பழவூரு காடதிலே வாறானே செட்டியவன்
அவன்பதை பதைக்க வரும்போது - வரும்போது
சேலை நல்ல உடையழகி - உடையழகி
செந்தூரப் பொட்டழகி நல்லபார் போற்றும் சொல்லழகி
வேலைப்போன்ற கண்ணழகி - இந்த நல்ல அழகோடு
நின்றிடுவான் இசக்கியம்மன்
செட்டிதன்னைக் கண்டபோது அங்கே இசக்கியம்மன் ஏதுசெய்தாள்
பக்கத்திலே நின்ற நல்லகள்ளியைத்தான் உற்றுப்பாத்தாள்
கள்ளியையும் தான் முறித்து - தான் முறித்து
ஒரு கைப்பிள்ளையாய் ஆக்கிக்கொண்டு - ஆக்கிக்கொண்டு
வேலனின் எதிரே சென்று வேலவனை வரவேற்றாள்
வாருமய்யா செட்டியாரே - செட்டியாரே
வார்த்தை ஒன்று சொல்லைக் கேளும்
வெற்றிலைதான் போடுதற்குக் கொஞ்சம் சுண்ணாம்பு
வேண்டுமென்றாள்
அப்போது செட்டியவன் சுண்ணாம்பு கொடுக்கும்போது
பாக்கு கொஞ்சம் வேணுமென்றாள்
இப்படியே கேட்கும்போது செட்டியவன் ஏதுசெய்தான்
இவளிடத்தில் இப்போது இருக்கவேண்டாம் என்று சொல்லி
கொண்டுவந்த பொருளையெல்லாம் தலையிலங்கே எடுத்துக்
கொண்டான்

பார்த்தாளே. இசக்கியவள் இந்தச் செட்டி தன்னைவிட வேண்டாம்
கையிலுள்ள பிள்ளைதன்னை - பிள்ளை தன்னை
அங்கே அவள் இறக்கிவிட்டாள்
பிள்ளை அங்கே ஓடோடிச் செல்லுதய்யா - அப்போது
அப்பா அப்பா என்று சொல்லி - என்று சொல்லிச்
செட்டிதன்னைப் பிடித்திடுமாம்
யாருபெற்ற பிள்ளையிவள் - என்னை வந்து அப்பா என்று
அப்பாயென்று அழைக்குதய்யா - அழைக்குதய்யா
என்று சொல்லிச் செட்டியவன் பிள்ளையைத் தான் கூப்பிடென்றான்
அப்போது இசக்கியவள் - கோரமாகச் சிரித்துக்கொண்டு
என்னுடைய கணவரே நீ - கணவரே நீ
என்னை விட்டுச் செல்ல வேண்டாம்
இவர்கள்தான் ரெண்டு பேரும் - ரெண்டு பேரும்
தற்கம் அங்கே போடயிலே - போடயிலே
பழவூரு ஊருக்குள்ளே பஞ்சாயத்தைக் கூட்டினல்லோ
நம்ம நல்ல இருவருடைய கதையைத்தான் சொல்வோமென்று
செட்டிதன்னை அழைத்துக்கொண்டு வாறாளே நீலியவள்
பழகை நல்லூர் ஊரதிலே வந்து நின்றாள் இசக்கியம்மன்
ஊரெல்லாம் ஒன்றுகூட்டி - ஒன்று கூட்டி
இசக்கியம்மன் ஏது சொல்வாள்
என்னுடைய கணவரய்யா - என்னைவிட்டுச் சென்று விட்டார்
இவருக்குப் பிறந்த நல்ல .. குழந்தையைத்தான் பாருமய்யா
எங்களைத்தான் இப்போது - இப்போது
விட்டுவிட்டுச் செல்லப் போறார்
ஊராரே பாருமய்யா எங்கள் குறையதைத்தான் தீருமய்யா
என்று சொன்னாள், இசக்கியம்மன் - அப்போது
ஊரார்கள் செட்டி தன்னைப் பார்த்து அங்கே
கணவன் நல்ல மனைவியுமே - மனைவியுமே
சண்டை நீங்கள் போடவேண்டாம்
ரெண்டு பேருக்கும் ஒரு வீடுதன்னைத் தாம் கொடுத்து
ரெண்டு பேரையும் ஊரார்கள் வைத்திடுவார்
இவர்கள் என்ன என்ன சொல்வாரென்று ஊரார்கள் கேட்டிடுவார்
பூட்டியுள்ள கதவு தன்னில் - கதவு தன்னில்
காதுவைத்துக் கேட்கின்றார்கள்
அப்போது தாசியவள் இங்கே வீட்டினுள்ளே ஏது செய்தாள்
தொட்டிலொன்றைத் தானும்கட்டி - தானும் கட்டி
பிள்ளையைத்தான் தானுமிட்டுத் தாலாட்டு பாடுகின்றாள்.
அவள் எப்டித்தான் தாலாட்டுப் பாடுகின்றாள் என்று பார்த்தால்
கானாங்கரையிலே கட்டான தரையிதிலே
கணுக்கணுவாய் தழுப்பவனும் - தழுப்பவனும்
வெட்ட வெட்ட தழுப்பவனும் வேலிகட்டிக்காப்பவனும்

உச்சியிலே பூத்தவனும் உள்ளமெல்லாம் பால்வடிய
பால்போல் நிலவடிக்க பார்வதியாள் பந்தடிக்க
பார்வதியாள் அடிக்கும்பந்தை பறந்தடிக்க வந்தவனும்
ஈஸ்வரனார் அடிக்கும் பந்தை பிள்ளை ஏடுத்தடிக்க வந்தவனும்
என்று சொல்லித் தாசியவள் தாலாட்டுப் பாடுகின்றான்.
பார்த்தாரே ஊரவர்கள் - இவர்கள் கணவனுமே மனைவியென்று
இவர்கள் ரெண்டுபேரும் வீட்டிலேதான் இருக்கச் சொல்லி
போய்விட்டார்கள்
அர்த்தராத்திரி வேளையிலே அழகான சாமத்திலே
அயர்ந்து அங்கே செட்டியவன் தூங்கும்போது
மூதேவி மந்திரத்தைச் செட்டி மேலே ஓதிடுவாள் - ஏவிடுவாள்
அப்போது செட்டியவன் கண்ணயர்ந்து தூங்கிடுவான்
பார்த்தாளே இசக்கியம்மன் பாய்ந்தாளே செட்டி மேலே
அவனது மார்பைதைத்தான் பிடுங்கி மாலையாகத் தானும் போட்டாள்
கையதிலே சிறுகுடலை அம்மைக்கட்டியாக எடுத்துக் கொண்டாள்
வாயிலே ஊன் வடிய பார்த்தாளே இசக்கியம்மன்
பிள்ளைதன்னை தானெடுத்துக் கள்ளிக் கொப்பாய் தானும் மாற்றி
அந்த வேலன் மேலே ஊன்றிக் கொண்டு
வெளியில் பாய்ந்தாள் இசக்கியம்மன்
பழவூரு ஊரதையும் - அவள்
சுற்றிசுற்றித்தான் வாறாள் - அவள்
ஆங்காரக் குலவையிட்டாள் - அய்யா
ஓங்காரக் குலவையிட்டாள்
பார்த்தாரே ஊரவர்கள் இது என்ன மாயம் என்று சொல்லி
சோசியரை வரவழைத்துச் சொற்பொருத்தம் கேட்டபோது
அந்த சோசியனும் ஏது சொல்வான்
பழவூரு காட்டிலுள்ள இசக்கியம்மன் வந்திருக்காள்
இந்த நல்ல அம்மனுக்கு அழகான கோயில்கட்டி
குடியிருத்த வேண்டுமென்றான்....

இக்கதையின் முதல் பகுதியில், ஒரு பிராமணரும், ஒரு தேவதாசியும் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். இரண்டாவது பகுதியில், ஒரு செட்டியார் (வணிகர்) ஈடுபடுத்தப்பட்டுள்ளார். தனது காதலனால் (கணவர்) ஏமாற்றப்பட்ட ஒருவன், பழிக்குப்பழி வாங்குவதை பெரும்பாலும், இக்கதை சித்தரிக்கிறது. செட்டியார் சமூகத்தினர், காவிரிப்பூம்பட்டிணத்திலிருந்து, இடம் பெயர்ந்து வந்தவர்களென்பதும், கண்ணகியின் கதையும், இங்கு ஆண்கள், பெண்களை ஏமாற்றும் பழக்கமுடையவர்களென்பதுமே இக்கதையின் மூல காரணமாயிருக்கலாமென யூகிக்க முடிகிறது. இறுதியாக, இது நீலி என்ற நீலங்கோட்டு இசக்கியின் கதை மூலம் நிரூபிக்கப்படுகிறது. ஆனால், முன்னர் சொன்ன கதையினின்றும், இசக்கியின் கதை சற்று வேறுபாடானது. ஆனால் கதையின் உட்கருத்து ஒன்றுதான். ஒரு கன்னி தனது விரோதியைக் கொன்று, பழிக்குப்பழி வாங்குவதை

இக்கதை சித்தரிக்கிறது. இக்கதைகளைத் தவிர மாவட்டம் முழுமையும், இயக்கி தேவதையின் திகிலாட்சி முறையை வெளிப்படுத்தும் வகையில் சொல்சார்ந்த பல கதைகள் உள்ளன.

விடுகதைகள்

பழக்கத்தில், பலவகையான விடுகதைகள் இருந்துவந்தபோதிலும், சில விடுகதைகள், நல்ல கருத்துள்ளவையாயும், நல்ல பல வரலாற்றுச் சான்றுகளை உரைப்பவையாயுமுள்ளன.

சங்கை பெறும் மலையாளத் தேசத்தில்
தமிழ்ப் பாண்டியன் ஒருவனும்
தக்கதோர் கடற்கரையில் வாழும் அரசர்களில் ஒருவனும்
இவர்கள் தயவாக வாழுகின்ற நாளில்
இங்கே மலையாளத் தேசத்தில்
ஒருவனை ஆறுமூன்றாக வெட்டி

அடுத்தவனை இருபிளப்பாய் பிளந்து
அரசனை முதுகிலேற்றிச்
சிங்காரமாகவே கோட்டைவாசல் கொண்டு சென்று
அங்கே சிங்கங்கள் போலவே பலபேர் கூடிச்
சீறி சினந்து வெட்டிப்பங்கப் படுகிற வேளையில்
பாண்டியன் பார்பார் என்று பகரவே
இவர்களோடு சேர்ந்து படுகளச் சோரைபாய
மான்டதோநாலுபேர்
மூன்றுபேரைக் கண்டேன் ஒருவனைக் காணவில்லை.

இவ்விடுகதை,. வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு மற்றும் புகையிலை ஆகியவற்றை ஒருங்கிணைத்து, வாயில் சுவைக்கும் பாங்கினை விவரிக்கிறது. இம்முறையில், சுவைக்கும்போது, வெற்றிலை மாறுநிலைக்கோணத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளது.

கெங்கை நதி புனல் மூழ்கி கரையேறிவந்து
கதிரவனைக் கண்ட உடல் காய்ந்து
பொங்குங்கடல் நீர் உண்டு ரிஷபமேறி
பூலோகம் காக்கவருவது சிவனுமல்ல
இங்கிதனை அறிந்து சொல்லும் பெரியோர்தம்மை
எப்போதும் குருவென்று வணங்கலாமே

இவ்விடுகதைக்கான விடை உலர்ந்த மீன் என்பதாகும். உலர்ந்த மீன், எருமைகள் மீது ஏற்றப்பட்டு, ஒரு இடம் விட்டு ஒரு இடத்திற்கு ஏற்றிச் செல்லப்பட்ட முறையினை, இவ்விடுகதை விளக்குகிறது. இது, "ரிஷபம் ஏறி" என இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. அக்காலத்தில், உலர்ந்த மீன், முதன்மையான உணவாக, மக்களால், கருதப்பட்டது.

தட்டினால் விளக்கேற்றும்
தவறினால் வைகுண்டம் ஏற்றும்

இவ்விடுகதை புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டு, மக்களால்

பயன்படுத்தப் பெறும் "மின்சார"த்தைக் குறிக்கிறது.

பழமொழிகள்

தமிழ்மொழியிலுள்ள, பல பழமொழிகளில், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மக்களால், சில பழமொழிகள் மிக சரளமாகப் பயன்படுத்தப்படுகின்றன.

1. வேலிக்கு ஒந்நான் சாட்சி
2. நுங்கு தின்னவன் ஓடிட்டான்
   கந்தல் நக்கினவன் மாட்டிக்கிட்டான்
3. பஞ்சி நூப்பது மாதிரி நூக்காதே
4. பேச்சிலே ஏசு மூச்சிலே காசு
5. பங்களாவைச் சுத்தினவன் பரதேசியானான்
6. ஒரு மூட்டெலும்புக்காக நாயாக மாறாதே
7. குருவியிருக்கப் பனம்பழம் விழுந்த மாதிரி
8. நரிக்கு இடம் கொடுத்தால் கிடைக்கு ரெண்டு ஆட்டைப் பிடிக்கும்
9. தெய்வத்தின் தூய்மை நறுநெய் பட்டபாடு
10. மச்சம் பிடிப்பவனுக்கு மிச்சமில்லை

புனைக் கதைகள்

விடுகதைகள் போன்று, மக்கள் இன்பமாகக் கழிக்கும் ஓய்வு நேரங்களில், புனைக்கதைகளைச் சொல்லி, பொழுதைக் கழிப்பது வழக்கம். இந்தப் புனைக்கதைகளில், எவ்வித பொருளும் இருப்பதில்லை. ஆனால், அவை சில வகையான இலக்கியம் சார்ந்த மகிழ்ச்சியை அளிப்பதுண்டு. உதாரணமாக :

1. முள்ளு முனையில் மூணுகுளம் வெட்டி
ரெண்டு குளம் பாழ் ஒருகுளம் தண்ணியே இல்லை
தண்ணியில்லா குளத்திலே வளஞ்ச பானை மூணு
இரண்டு பானை பச்சை, ஒரு பானை வேகல்ல
வேகாத பானையில் போட்ட அரிசி மூணு
இரண்டு அரிசிபச்சை ஒரு அரிசி வேகல்ல
வேகாத அரிசிக்கு வந்த விருந்து மூணு
இரண்டு பேர் பட்னி, ஒருவர் சாப்பிடல்ல
சாப்பிடாதவர்க்கு குடுத்த பணம் மூணு
இரண்டு பணம் செம்பு, ஒரு பணம் அளியாதது
அளியாத பணத்திற்குப் பிடித்த எருமை மூணு
ரெண்டெருமை மலடு ஒண்ணு ஈணாதம்

இது நாஞ்சில் நாட்டிலுள்ள இந்து நாடார்களிடையே பயன்படுத்துவதுண்டு. அது, இலக்கியம் சார்ந்த பொருள் அளிக்காவிட்டாலும், கி.மு. 1745-ம் ஆண்டு, பட்டனாறு வாய்க்கால், கட்டப்பட்டபோது, நாஞ்சில் நாட்டில் ஏரிகளை வெட்டியதற்கு, திவாங்கூர் அரசிடமிருந்து எவ்வித கூலியும் கிடைக்காமல் பரிதவித்த

நாட்டார்களின் பரிதாப நிலையை சித்தரிக்கிறது.

2. உலகம் அறியாத ஆண்டு, ஒருவரும் காணாத மாதம்
ஒருநாளும் இல்லாத தேதி, ஊரில்லாத ஊரில் இருக்கும்
தலைகாய்ந்த தண்டாவர முதலியார் குமாரன்
சரிப்படாத ஊரில் இருக்கும்
பித்தம்பிடிச்ச பேயாண்டி செட்டியார் குமாரன்
பேரில்லாதவன் பெரட்டி எழுதிக் கொடுத்த
குதுவை இல்லாத கடப்பித்திரமாவது
இப்பணம் என்னுடைய வீட்டிற்கும் கெளுக்கு
அவனுடைய வீட்டிற்கும் மேற்கு
இவருடைய வீட்டிற்கும் தெற்கு
அவளுடைய வீட்டிற்கு வடக்கு
இந்த நாற்பக்கெல்லைக்கு உட்பட்ட
ஜென்ன பட்டணம் ஜில்லாமணி
தம்மிடி ரூபாய் ஐநூறுக்கும் ஒன்றுக்கு எட்டும்
தாங்கள் வேண்டாதபோது
அவர்கொடுக்காமல் போகக் கடனாகவும்
அப்படிக்கு ஒரு சமயம் கொடுக்கும்படி
அப்பியந்தப்பட்டால், தங்கள் எந்தக் கோட்டிலாவது போட்டு
கோட்டுச் செலவு அசல் பூஜ்யமாகப் போகக் கடனாகவும்
இப்படிக்கு என்னுடைய மனோராஜிக்கு

சம்மதிச்சி எழுதிக்கொடுத்த வாக்குத் தத்தப் பத்திரமானது, இதற்குச் சாட்சி இவனோ இவளோ?

இந்த புனைக்கதை கன்னியாகுமரி மாவட்டத்தில் செட்டியார் சமூகத்தினரால் பயன்படுத்தப்படுகிறது. இக்கதை, செட்டியார்கள் வட்டிக்குப் பணம் கடனாகக்கொடுப்பதையும், அவர்களிடம் கடன் பெற்ற தொகையினை கடன் பெற்றவர்கள், திருப்பிக்கொடுக்காத நிலையில், அவர்கள் கடும் ஏமாற்றத்திற்கு ஆளாகிறார்களென்பதையும் பிரதிபலிக்கிறது.

குறிப்புகள் :

1. வி.நாகமையா திருவாங்கூர் மாநில நடைமுறை நூல், தொகுதி இரண்டு (1906), பக்கம் 1.
2. மேற்படி. பக்கம் 135

இயல் - 4

வேளாண்மை மற்றும் நீர்ப்பாசனம்

பகுதி - 1

வேளாண்மை

வேளாண்மை, இப்பொழுதும், எப்பொழுதும் சுற்றுச்சூழலுடன், பின்னிய செயல்விளைவினை அளிக்கக்கூடியதென்பது வெள்ளிடை மலை. மண், தட்பவெட்ப நிலை, இடக்கிடப்பியல், நீரில் பண்பியல் யமைதிகள் மற்றும் உயர்நிலைச் சார்ந்த நிலைகள் ஆகியவை வேளாண் நடவடிக்கைகள் மற்றும் வேளாண்மையினின்றும் வரக்கூடிய ஆதாயம், ஆகியவற்றின் மீது, ஒரு பெரிய கட்டுப்பாட்டை உருவாக்கியுள்ளன[1].

நிலச்சீர்திருத்தம்

மக்கள் தொகை அதிகரித்த காரணத்தால், துவக்கத்தில், காடாக இருந்த நிலங்கள், பின்னர், சமூக விரோதிகளின் தாக்குதலுக்குட்பட்டு, மனம் போன போக்கில் பயன்படுத்தப்பட்டு, காடுகளும் சிறிது சிறிதாக அழிக்கப்பட்டு வருகின்றன ; தொலைவான தூரத்திலுள்ள காடுகளி லிருந்து, வீடுகட்டுவதற்குத் தேவையான மரங்கள் மற்றும் விறகுக்குத் தேவையான மரங்கள் போன்றவை காடுகளிலிருந்து, பெறப்பட்ட போதிலும், நாளடைவில், காடுகள் அழிக்கப்படுவதால், நிலச்சரிவுகளும், மண் அரிப்பும் குறிப்பாக சரிவு நிலங்களில், காணப்படுகின்றன[2]. நிலச்சீர்திருத்த வேலைகளை எடுத்துக் கொள்வதற்கு, இதுவே முக்கிய காரணமாக அமைந்தது.

கன்னியாகுமரியில், மண் பெரும்பாலும் வண்டல் படிந்ததாக உள்ளது. மேல்பரப்பில், நீரரிப்பு ஏற்பட்டிருக்கும் அளவிற்கொப்ப, மணல் அல்லது களிமண் தன்மையுடையதாக, மண் அமைகிறது.[3] மணலின் ஆழம் வெகுவாக மாறுபடுகிறது. பள்ளத்தாக்குகளிலும், தாழ்வான நிலப்பரப்பிலும் அவற்றின் சுற்றுவட்டாரத்திலுள்ள சிறு குன்றுகளில், நீரரிப்பு திரண்டு காணப்படுகிறது. இதன் விளைவாக, மண் மிகவும் ஆழமாக உள்ளதால், தாவர வளர்ச்சி ஊக்கம் பெறுகிறது. அடிக்கடி கடுமையான நீரரிப்பு ஏற்படும் குன்றுகளின் சரிவுகளிலும், உயர்ந்த நிலப்பரப்புகளிலும், மண், குறிப்பிடத்தக்க மஞ்சள் மற்றும் சிகப்பு கலந்த மஞ்சள் நிறத்தில் காணப்படுகிறது. குன்றுகளின் உச்சியிலும், உயரமான சரிவு நிலங்களிலும், நீரரிப்பு மிகவும் அதிக அளவிலுள்ளது. அங்கே, நிலம், பாறைகள் நிறைந்ததாகவும், மண் ஆழமற்றதாகவும், ஆனால், கடினமாகவும் காணப்படுகிறது.

நிலத்தை முறையாக பயன்படுத்துதல்

நிலத்தை வகைப்படுத்துதல் என்பது, பல்வேறு விதமான மற்றும் எளிதில் விளங்குகிற மண் வகைகளாக, வேறுபட்ட பெயர்களிலும், சொல் விளக்கங்களிலும் பிரித்துக் காட்டுவதாகும்.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள நில வகைகளின் விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன:

1.	*நிலஇயல் சார்ந்த மொத்த பரப்பு*	*எக்டேரில்*	
	(அ) பணித்துறை - நிலஅளவையின் படி ...	1,67,267	
	(ஆ) கிராமக்கணக்குகளின் படி ...	1,67,267	
2.	காடுகள் ...	54,453	(32,567)
3.	தரிசான மற்றும் வேளாண்மை செய்யப்படாத நிலங்கள் ...	4,198	(4123.2)[5]
4.	வேளாண்மையல்லாத காரியங்களுக்குப் பயன்படுத்தப்பட்ட நிலங்கள் ...	23,827	
5.	வேளாண்மைக்கு பயன்படுத்தத் தகுதியான, ஆனால் தரிசாகக் கிடக்கும் நிலங்கள் ...	143	
6.	நிலையான மேய்ச்சல் பசும்புல் தரைகள் ...	102	
7.	வேளாண்மை செய்யப்படும் நிலங்களின் நிகர பரப்பளவில் சேராத, பலவகை மரங்கள் மற்றும் சோலைகள் ...	230	
8.	நடப்புத்தரிசு நிலங்கள் ...	2,037	
9.	மற்ற தரிசு நிலங்கள் ...	1,439	
10.	வேளாண்மை செய்யப்பட்டுள்ள நிலங்களின் நிகரப்பரப்பளவு ...	80,802	

மாறுபட்ட பிரிவுகளிலான நிலங்களின் வகைகள்

1983-84-ம் ஆண்டில், கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் தமிழ்நாடு மாநிலத்தில், பலவகைப்பட்ட நிலங்களின் பரப்பளவு - விழுக்காட்டின் ஒப்புமை செய்யும் பட்டியல்:

நிலங்களின் பல்வேறு வகைகள்	*மொத்த பரப்பளவின் விழுக்காடு (1விழுக்காடு)*	
	கன்னியாகுமரி	*தமிழ்நாடு*
(1)	*(2)*	*(3)*
1. காடுகள் ..	32.6	15.6
2. தரிசான மற்றும் வேளாண்மை செய்யப்படாத நிலங்கள் ..	2.5	4.5

நிலங்களின் பல்வேறு வகைகள்		மொத்த பரப்பளவின் விழுக்காடு (1விழுக்காடு)	
		கன்னியாகுமரி	தமிழ்நாடு
(1)		(2)	(3)
3. வேளாண்மையல்லாத காரியங்களுக்குப் பயன்படுத்தப்பட்ட நிலங்கள்	..	14.2	13.8
4. வேளாண்மைக்கு லாயக்கான ஆனால், தரிசாகக் கிடக்கும் நிலங்கள்	..	0.1	2.4
5. நிலையான மேய்ச்சல் பசும்புல் தரைகள்	..	0.1	1.2
6. வேளாண்மை செய்யப்படும் நிலங்களின் பரப்பளவில் சேராத பல்வகை மரங்கள் மற்றும் சோலைகள்	..	0.1	1.4
7. நடப்புத் தரிசு நிலங்கள்	..	1.2	11.7
8. மற்ற தரிசு நிலங்கள்	..	0.8	4.2
9. வேளாண்மை செய்யப்பட்டுள்ள நிலங்களின் நிகரப்பரப்பளவு	..	48.3	45.0

மண் அரிப்பு

'மண் அரிப்பு' மற்றும் 'மண் வடியப் பெறுதல்' ஆகிய இரு வகைகளில் "மண் அரிப்பு" நேரிடுகிறது. இந்த இருவகை அழிப்பினையும் கட்டுப்படுத்தும் முறைமை, "மண் பாதுகாத்தல்" எனப்படும். நிலத்தை வறிதாக்குதல், பொதுவாக விடாது தொடர்ந்து பயிரிடுவதனால் நேரிடுவதாகும். சுழற்சி முறையில் பயிரிடுதல் மற்றும் மண்ணுக்கு முறைப்படி உரமிடுதல் ஆகிய வழிமுறைகளால், மண் வடியப்பெறுதலை, பல காலத்திற்குத் தள்ளி வைக்க வாய்ப்புண்டு.

மண் துணுக்குகள், ஆற்றுப் படுகைகளிலிருந்து இடம் பெயர்ந்து செல்வதும், காற்று மற்றும் நீர் இவற்றின் செயலினால் ஓரிடத்தினின்று, வேறொரு இடத்திற்கு எடுத்துச் செல்லப்படுவதும், நிலத்தை வறிதாக்க வழி வகுக்கும். காடுகள் அழிக்கப்படுவதாலும், விஞ்ஞான ரீதியல்லாத பயிர் செய்யும் முறைகளாலும் மண் அரிப்பு மேலும் அதிகமாகிறது.

மண் பாதுகாப்பிற்கான தேவை

மத்திய மண் மற்றும் நீர் பாதுகாப்பு ஆராய்ச்சிப் பயிற்சிப்பள்ளி, ஆண்டின் சராசரி மண் இழப்பு எக்டருக்கு 2.4 டன்னிலிருந்து 112.50 டன் வரை மாறுபடுகிறது. இது, நிலத்தைப் பயன்படுத்தும் பாங்கைப் பொறுத்து மாறுபடுகிறது. மேலும், மண்சரிவின் விளைவு, நீர்த்தேக்கங்களில் உரிய காலத்திற்கு முன்பே வண்டல்மண் படிந்து விடுகிறது[6].

மண் பாதுகாப்பு, நடைமுறை உயிர்நூலைச் சார்ந்த மற்றும் இயந்திர நுட்பம் சார்ந்தவையாகும்.

மண் பாதுகாப்பு நடவடிக்கைகள், மண் அரிப்பிற்கான மூல காரணங்கள் மற்றும் அவற்றை வேறுபடுத்திக்காட்டும் இயல்பு இவற்றைவிட, துல்லியமாக அறிந்து கொள்ளப்படுகின்றன. இந்தியாவில், ஆதிகாலத்திலிருந்து மேற்கொள்ளப்படும் மண் பாதுகாப்பு முறைகளில், மிகவும் கண்ணைக்கவர்ந்து ஈர்க்கிற முறை என்னவெனில், படிவரிசை அமைப்பைப் பெற்ற முறையாகும்[7]. (பொதுவாக, நீண்ட இருக்கை போன்ற படிவரிசை அமைப்பைப் பெற்றவை). ஏறத்தாழ எல்லா கிராமங்களிலும் இதே போன்ற அமைப்பு முறைதான் பின்பற்றப்படுகிறது.

கடுமையான மண் அரிப்பு, குறிப்பாக சிறு குன்றுகள் மற்றும் அலையலையான ஓரங்களையுடைய நிலங்களின் பரப்பு ஆகியவற்றில் ஏற்படுவது, வளமான மேல் மண்ணின் இழப்பிற்குக் காரணமாக அமைகிறது. மேடு, பள்ள அடுக்கு நிலக்கரைகள் அமைத்தல் மற்றும் படிவரிசை அமைப்பு வேளாண்மை ஆகியவை, அலையலையான ஓரங்களையுடைய நிலங்களில் நேரிடுகிற மண் அரிப்பினை சீர்திருத்தியமைக்க அவசியமாகின்றன.

கன்னியாகுமரி மாவட்டத்தில், வேளாண் பொறியியல் துறை, மேற்கொண்ட மண் பாதுகாப்புப் பணி பற்றிய விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன.

இத்துறை, நில அபிவிருத்தி, சிறிய நீர்ப்பாசனம் மற்றும் மண் மற்றும் நீர்ப்பாதுகாப்பு ஆகிய பணிகளை முறையாக மேற்கொண்டு வருகிறது.

இயந்திர நுட்பம் சார்ந்த துணைக்கோட்டம், தொழில்நுட்ப அறிவுரைகள் மற்றும் தேவைப்படும் வேளாண்மைக்கருவிகள் ஆகியவற்றை, முக்கியமான வேளாண் குடிமக்களுக்கு வழங்கி வருகிறது. நாகர்கோயிலில் ஒரு நிலையான மண் வளத்துணைக் கோட்டம் இயங்கி வருகிறது. இம்மாவட்டம் குறிப்பாக சிறு குன்றுகளைப் பெற்ற பகுதியாக இருப்பதால், மேடுபள்ள அடுக்கு நிலக்கரைகள், கற்சுவர்களாக எழுப்பப்படுகின்றன. நீர், கீழ்நோக்கிப்பாயும் வகையில், சரிவாக இவை அமைக்கப்படுகின்றன. மாவட்டத்தில், புஞ்சை நிலங்களை மேம்படுத்தி,

மண் மற்றும் நீர் வள ஆதாரத்தைப் பாதுகாத்துப் பெருக்கிடும் வகையில், இத்துறையினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மாவட்டத்தில், 1980-81 முதல் 1985-86 வரை மேற்கொள்ளப்பட்ட மண் பாதுகாப்புப் பணியின் விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன:[8]

பணி மேற்கொள்ளப் பட்ட ஆண்டு	பணி முடிவடைந்த நிலப்பரப்பு (எக்டேரில்)	செலவழிக்கப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்)
1980-81	504	8.54
1981-82	478	9.18
1982-83	360	8.48
1983-84	541	13.59
1984-85	750	14.44
1985-86	760	17.14

கன்னியாகுமரி மாவட்ட முழுப்பரப்பிலுள்ள இரப்பர் தோட்டங்களில், உயிர்நூலைச் சார்ந்த பாதுகாப்பு வழிமுறை பின்பற்றப்பட்டு, **ப்யூரேரியா ஜாவானிகர்,** பயிரிடப்பட்டுள்ளது[9]. பரப்பளவின் கணிசமான அளவு, சரிவு நிலப்பகுதியின் 10 முதல் 60 விழுக்காட்டுப் பிரிவில் அமைந்துள்ளதால், இயந்திர நுட்பம் சார்ந்த பாதுகாப்பு முறைமையில் மேடுபள்ள அடுக்கு நிலக்கரைகள், கற்சுவர்க்கரைகளாக எழுப்பப்பட்டுள்ளன. ஆற்றுப் பள்ளத்தாக்கு வடிநிலங்களில், தோட்ட அணை கரையிலிருந்து பள்ளத்தாக்கு வரை, அடுக்கு நில கற்சுவர்க்கரைகள் கட்டும்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம், மூன்று பெரிய ஆற்று வடிநிலப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை, தாமிரபரணி, பழையாறு மற்றும் வள்ளியாறு ஆகிய ஆற்று வடிநிலங்களாகும். இந்த ஆற்றுப் பள்ளத்தாக்குகள் மேலும் பல துணை ஆற்றுப் பள்ளத்தாக்குகளாகவும், நுண் ஆற்றுப் பள்ளத்தாக்குகளாகவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

மேடுபள்ள அடுக்கு நில கற்சுவர்க்கரைகள், உள்ளூரிலுள்ள கற்களாலும், பல்வேறு நிலங்களிலிருந்தும் கொண்டு வரப்பட்ட கற்களாலும் எழுப்பப்படுகின்றன. மேடு பள்ள அடுக்கு நில கற்சுவர்கள் கட்டுவதற்கான மொத்த செலவு ரூ.6,000/- லிருந்து ரூ.10,000/- வரை சரிவுகளின் நிலையைப் பொறுத்தும், தொடர்புள்ள இடங்களில் கிடைக்கக்கூடிய கற்களைப் பொறுத்தும் மாறுபடுகிறது. தமிழக அரசு, அலகின் செலவினை எக்டருக்கு ரூ.6,500/- என நிர்ணயித்துள்ளது. எஞ்சிய தொகை, வேளாண்குடிமக்களால், அவர்களது ஈட்டுத் தொகையாக அளிக்கப்படுகிறது.

செலவுத் தொகையில், 40 விழுக்காடு முழு மொத்த ஊக்கத் தொகையாக வேளாண்குடி மக்களுக்கு அளிக்கப்படுகிறது (வேலைகளின்

மொத்தச் செலவு + மொத்தச் செலவில் 20 விழுக்காடு). எஞ்சியத் தொகை, வேலைகள் முடிவுற்ற இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர், 10 தவணைகளில், ஆண்டுக்கு 12 விழுக்காடு வட்டியுடன் திரும்பப் பெறப்படுகிறது. மாவட்டத்தில், திட்டம் துவக்கப்பட்டதிலிருந்து, அதாவது, 1964-லிருந்து, நாளது தேதி வரை, மண் பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட மொத்த பரப்பளவு 4466 எக்டேராகும். இப்பணிக்கு, 99 இலட்சரூபாய் செலவழிக்கப்பட்டுள்ளது. 1985-86-ம் ஆண்டிலிருந்து, அட்டவணையிட்ட வகுப்பினர் / மலைவாழ் வகுப்பினர் ஆகியோருக்குக் கூடுதலாக 10 விழுக்காடு ஊக்கத் தொகையும் அரசு அளித்துள்ளது.

இரப்பர் தோட்டங்களில், மண் பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட மற்றும் மேற்கொள்ளப்படாத நிலங்களில் விளைச்சல் மதிப்பீடு :

விளைச்சல் / கிகி / எக்டேர்

ஆண்டு	திட்டம் மேற்கொள்ளப் பட்ட நிலங்கள்	திட்டம் மேற்கொள்ளப் படாத நிலங்கள்	நிகர விளைச்சல்
(1)	(2)	(3)	(4)
0 (துவக்கத்தில்)	900	900	0
1.	970	880	90
2.	1030	860	170
3.	1070	840	230
4.	1110	810	300
5.	1140	780	360
6.	1140	750	390

தட்ப வெட்ப நிலை

மாவட்டம், விவசாயத்திற்கேற்ற தட்ப, வெட்ப நிலையைப் பெற்றுள்ளதாகும். அந்த தட்ப, வெட்ப நிலையில், பல்வேறு பயிர் வகைகளை விளைவிக்கலாம். நிலநடுக்கோட்டிற்கு மாவட்டம் நெருங்கியுள்ளமை, அதனுடைய இடக்கிடப்பியல் மற்றும் ஏனைய தட்ப, வெட்ப நிலை ஆக்கக் கூறுகள் ஆகியவை, பல்வேறு வகைப்பட்ட பயிர்கள் விளைவிக்க உகந்ததாயுள்ளன[10].

கல்குளம் மற்றும் விளவங்கோடு வட்டங்களில் நிலவி வரும் விவசாயத்திற்கேற்ற தட்ப, வெட்ப நிலை, தோவாளை மற்றும் அகஸ்தீஸ்வரம் வட்டங்களிலுள்ள தட்ப, வெட்ப நிலையினின்றும் மாறுபட்டதாகும். இது, கீழ்க்குறிப்பிட்ட விவரங்களிலிருந்தே தெரியவரும். தோவாளை மற்றும் அகஸ்தீஸ்வரம் வட்டங்களில் இரண்டாம் போகத்தில் பயிரிடப்படும் நெல் வகைகள், கல்குளம் மற்றும் விளவங்கோடு வட்டங்களில் முதல் போகப் பயிராக விளைவிக்கப்படு கின்றன. மாவட்டத்திற்குள்ளேயே தட்ப, வெட்ப நிலையில், மிகுந்த வேறுபாடு காணப்படுவது இதனின்றும் தெளிவாகிறது.

பருவக்காற்றுகள்

தமிழ்நாட்டிலுள்ள, ஏனைய மாவட்டங்களைப் போலல்லாது, இம் மாவட்டம், தென்மேற்குப் பருவக்காற்று மற்றும் வடகிழக்குப் பருவக்காற்று ஆகிய இரு பருவகாலங்களிலுமே மழையைப் பெறக்கூடிய தனித்தன்மை வாய்ந்த அனுகூலத்தையுடையதாகும். தென்மேற்குப் பருவக்காற்று சூன் மாதம் துவங்கி, செப்டம்பர் மாதம் முடிகிறது. அதே போன்று, வடகிழக்குப் பருவக்காற்று அக்டோபர் மாதம் துவங்கி, டிசம்பர் மாதம் முடிகிறது. வட பாகங்களில், மழை பெரும்பாலும் அதிக அளவில் பொழிகிறது. ஆனால், மாவட்டத்திலுள்ள தென்பகுதிகளில், மழையின் அளவு குறைவானதாகும். மாவட்டத்தில் பொழியும் மழையின் சராசரி அளவு 1465 மில்லி மீட்டராகும். இது கீழ் குறிப்பிட்டவாறு, கடந்த 50 ஆண்டுகளில் பொழிந்த மழையின் சராசரி அளவினை ஆதாரமாகக் கொண்டதாகும்.

மாதாந்திர மழையளவு பரப்பீடு (32 ஆண்டுகள் பெய்த மழையின் சராசரி அளவை ஆதாரமாகக் கொண்டது)" :

சனவரி	.. ..	20.59 மி.மீ.
பிப்ரவரி	.. ..	26.79 மி.மீ.
மார்ச்	.. ..	49.93 மி.மீ.
ஏப்ரல்	.. ..	121.02 மி.மீ.
மே	.. ..	160.89 மி.மீ.
சூன்	.. ..	192.56 மி.மீ.
சூலை	.. ..	128.93 மி.மீ.
ஆகஸ்ட்	.. ..	94.96 மி.மீ.
செப்டம்பர்	.. ..	120.85 மி.மீ.
அக்டோபர்	.. ..	256.77 மி.மீ.
நவம்பர்	.. ..	206.58 மி.மீ.
டிசம்பர்	.. ..	85.38 மி.மீ.
		.....
மொத்தம்		1464.95 மி.மீ.
		அல்லது
		1465 மி.மீ.
		.....

மண்கள்

இயல்பு, வகை மற்றும் பல்வேறு பயிர்கள் விளைவிப்பதற்கான தகுதி ஆகியவை

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மண்கள், சிவப்பு மண் மற்றும் வண்டல் மண் ஆகிய இரு பெரிய வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

சிவப்பு மண், மேலும் சிவப்பு களிச் சேற்று வண்டல் மண் மற்றும் சிவப்பு மண் என பாகுபாடு செய்யப்பட்டுள்ளது. வண்டல் மண், மேலும் கடற்கரையோரமுள்ள வண்டல் மண் மற்றும் ஆற்றங்கரையோர வண்டல்

1957-58 முதல் 1987-88 முடிய கன்னியாகுமரி மாவட்டத்தில் பெய்த மழை அளவைக் காட்டும் பட்டியல் (மி.மீ.)

தொடர் எண். (1)	ஆண்டு (2)	ஜூன் (3)	ஜூலை (4)	ஆகஸ்ட் (5)	செப்டம்பர் (6)	அக்டோபர் (7)	நவம்பர் (8)	டிசம்பர் (9)	ஜனவரி (10)	பிப்ரவரி (11)	மார்ச் (12)	ஏப்ரல் (13)	மே (14)	மொத்தம் (15)
1.	1957-58	337.3	113.5	28.5	19.6	203.2	224.0	67.1	3.2	77.6	63.0	151.9	208.6	1497.5
2.	1958-59	257.4	112.1	134.8	7.8	102.5	204.3	5.5	5.4	33.2	0.7	143.0	337.0	1367.4
3.	1959-60	213.9	334.1	68.4	105.0	124.6	135.1	28.6	7.7	12.9	45.8	99.1	334.0	1508.6
4.	1960-61	55.2	205.5	50.4	133.2	140.4	346.9	15.3	65.2	33.3	20.0	46.9	235.5	1347.8
5.	1961-62	542.6	239.5	137.5	75.6	105.2	114.3	9.1	63.8	50.7	36.8	143.8	281.4	1800.3
6.	1962-63	104.1	220.3	60.7	50.0	340.6	72.2	95.3	29.6	17.2	75.8	67.9	149.8	1388.5
7.	1963-64	191.2	154.3	162.7	93.1	179.5	157.6	80.0	0.4	0.0	65.0	42.5	56.6	1182.9
8.	1964-65	68.0	172.1	92.9	183.6	232.1	246.6	3.3	3.6	6.9	40.0	153.3	152.5	1354.9
9.	1965-66	214.4	110.2	17.9	20.4	369.3	238.5	298.8	1.7	3.8	55.8	87.6	68.8	1487.2
10.	1966-67	145.6	92.7	23.1	253.9	233.1	182.4	108.8	43.6	0.0	59.8	75.4	207.2	1425.6
11.	1967-68	300.1	107.0	111.2	104.6	240.3	38.9	27.9	10.3	30.2	78.6	140.8	12.0	1201.9
12.	1968-69	338.3	182.4	24.8	170.2	176.5	135.1	81.6	2.8	1.3	40.6	128.0	113.8	1395.4
13.	1969-70	66.0	136.9	116.9	43.9	317.3	157.7	110.4	5.2	31.9	56.6	180.5	142.6	1365.9
14.	1970-71	88.7	44.5	69.9	60.6	536.7	175.6	29.8	58.1	31.1	80.6	120.0	123.3	1418.9
15.	1971-72	295.9	95.6	76.8	418.6	216.5	96.6	148.3	0.2	1.0	10.2	75.1	305.7	1785.5

புள்ளி விவரத்துறை இயக்குநர், சென்னை, அறிக்கை நாள் : 1-12-1988

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)	(14)	(15)
16.	1972-73	40.3	213.3	20.2	179.0	362.6	150.3	79.3	0.0	0.0	30.1	176.1	86.4	1337.6
17.	1973-74	292.0	98.1	57.9	15.7	300.0	136.4	134.5	0.0	41.7	5.6	163.8	204.5	1450.2
18.	1974-75	45.6	138.2	210.0	223.8	109.6	99.6	5.3	0.9	23.3	47.0	253.5	101.1	1257.9
19.	1975-76	227.3	84.6	110.3	195.1	193.0	267.0	34.9	1.7	0.0	51.0	123.0	70.9	1358.8
20.	1976-77	45.5	56.2	85.5	27.9	271.5	334.6	22.5	0.0	55.1	50.9	133.0	321.1	1403.8
21.	1977-78	93.2	89.6	58.4	77.0	471.3	283.4	14.0	17.0	4.8	63.7	70.0	143.3	1386.0
22.	1978-79	116.2	79.2	87.6	27.1	199.8	560.5	37.3	0.0	96.8	26.0	32.4	35.6	1383.0
23.	1979-80	229.3	93.5	82.5	165.7	213.3	349.3	83.2	0.0	0.0	24.6	98.5	74.0	1427.9
24.	1980-81	183.2	68.9	58.6	72.0	146.7	194.8	146.9	3.1	3.1	42.6	109.4	82.9	1112.2
25.	1981-82	359.5	77.9	167.5	172.3	320.3	204.4	29.1	0.0	0.0	28.4	65.0	169.3	1594.0
26.	1982-83	247.8	116.3	49.9	27.9	195.7	182.6	11.4	0.0	1.0	2.1	47.1	144.2	1026.0
27.	1983-84	109.5	56.3	98.1	72.8	103.4	199.3	150.8	30.8	88.8	146.4	173.3	32.3	1261.8
28.	1984-85	134.4	77.9	4.9	120.6	242.8	98.6	0.2	88.1	15.3	23.0	36.3	98.9	941.3
29.	1985-86	241.1	21.1	41.3	47.0	181.8	186.7	15.0	10.4	66.3	9.3	80.4	50.7	952.9
30.	1986-87	55.8	41.3	139.9	45.9	139.6	124.4	18.1	13.1	0.0	38.4	100.9	83.1	805.7
31.	1987-88	107.5	13.0	138.0	131.3	305.2	263.6	134.7	0.0	47.4	99.3	160.0	25.2	1405.2

புள்ளி விவரத்துறை இயக்குநர், சென்னை, அறிக்கை நாள் 1-12-1988

மண் என வகைப்படுத்தப்பட்டுள்ளது. சிவப்பு மண் வகை தான் கன்னியாகுமரி மாவட்டத்திலேயே அதிகமான பகுதிகளில் பரவலாக உள்ளது.

இது தொடர்பாக, 1984-85-ம் ஆண்டு, திருநெல்வேலி மண் ஆய்வு மற்றும் நிலப்பயன்பாட்டு நிறுவனத்தினால், முன்னீடான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மண் இயலின் வகுப்பு தொகுப்பு முறைக்கூறு பிரிவுகளின்படி, கீழ்க்குறிப்பிட்ட மண் இனத்தொகுதிகள் இருப்பது, இவ்வாய்வினின்றும் தெரியவருகிறது. ஒவ்வொரு மண்வகையிலான நிலப்பரப்பு, அவற்றினெதிரே குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர் எண். (1)	*மண்வகை* (2)	*பரப்பு (எக்டரில்)* (3)
1.	கரடுமுரடான களிச்சேற்று வண்டல் மண் (லிதிக் அஸ்ட்டார்தென்ட்ஸ்)	2446
2.	நேர்த்தியான களிச்சேற்று வண்டல் மண் (லிதிக் ட்ராபோர் தென்ட்ஸ்)	1847
3.	டிபிக் ட்ரோபோப் ஸாமென்ட்ஸ்	1171
4.	கரடுமுரடான களிச்சேற்று வண்டல் மண்ணின் மற்றொரு வகை (ஃப்ளூவெண்டிக் டிஸ்ட்ரா பெப்ட்ஸ்)	2731
5.	நேர்த்தியான களிச் சேற்று வண்டல் மண் (டிபிக் டிஸ்ட்ராபெப்ட்ஸ்)	31774
6.	கரடு முரடான களிச்சேற்று வண்டல் மண்ணின் வேறொரு வகை (ஃப்ளூவெண்டிக் யூட்ரோபெப்ட்ஸ்)	4222
7.	களிச்சேற்று வண்டல்மண் (டிபிக் யூட்ரோபெப்ட்ஸ்)	4851
8.	நேர்த்தியான களிச்சேற்று வண்டல் மண்ணின் வகை (யுடிக் ரோடு டால்ஃப்ஸ்)	8894
9.	நேர்த்தியான களிச்சேற்று வண்டல் மண்ணின் வேறொரு வகை (யுடிக் ஹாப்லஸ்டால்ஃப்ஸ்)	1658
10.	கரடு முரடான களிச்சேற்று வண்டல் மண்ணின் வகைகளிலொன்று (அக்விக் ட்ராபூ டால்ஃப்ஸ்)	9224
11.	நேர்த்தியான களிச்சேற்று வண்டல் மண்ணின் மற்றொரு வகை (டிபிக் ட்ரோபூ டால்ஃப்ஸ்)	23588

12.	டிபிக் உடிப்சாம்மெண்ட்ஸ்	2342
13.	நேர்த்தியான களிச்சேற்று வண்டல் மண்ணின் வகை (அக்விக் ஹேப்லஸ்டாஃப்ஸ்)	7894

மண் வரிசை முறை

வரிசை முறைகள் என்பவை, மண்ணின் வகை மற்றும் தரம் ஆகியவற்றை பிரதிபலிக்கின்றன. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மண் வகைகள், "என்டி ஸால்ஸ்", "இன்செப்டிஸால்ஸ்" மற்றும் "ஆல்ஃபிஸால்ஸ்", ஆகிய மூன்று வரிசை முறைகளின் கீழ் பாகுபடுத்தப் பட்டுள்ளன. ஒவ்வொரு வரிசை முறையும், துணை வரிசை முறையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. துணை வரிசை முறை, மண்ணின் தோற்றம், மற்றும் விளையும் தாவரம் ஆகியவற்றின் இயக்க விளைவுகளைப் பிரதி பலிக்கிறது. பல்வேறு விதமான மண்கள், பெரிய வகை, துணை வகை, இனத்தொகுதி, தொடர் போன்ற முறையில் பாகுபாடு செய்யப்பட்டுள்ளன.

மண்கள் மற்றும் பயிர்த்தொகுதி

1. கரடு, முரடான களிச்சேற்று வண்டல் மண் (லிதிக் அஸ்ட்டார் தென்ட்ஸ்)

இது "என்ட்டிஸால்" என்ற சிவப்பு மண் வகையின் கீழ் பாகுபாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வகை மண்கள், நிறைய பயனற்ற கரடு, முரடான களிச்சேற்று வண்டல் மற்றும் மஞ்சள் கலந்த பழுப்பு நிறத்தில், எளிய இழைநயத்தோடு கூடிய சுண்ண நீற்றுச் சார்பற்ற மண் வகையாகும். நிலத்தின் மேற்பரப்பிலிருந்து, 30 சென்டி மீட்டர் அளவிற்குள், கல் சார்ந்த வகைத் தொடர்புடைய, கட்டமைப்பு வளர்ச்சி எதுவுமில்லை. இந்த மண்வகைகள், சரிவான நிலங்களில் மேல்பகுதிகளில் காணப்படுகின்றன. அவற்றின் பெருந்தளப்பரப்பில் மண் அரிப்பு ஏற்பட்டு, அதன் விளைவாக, இடந்தரும் இயல்பு விரைவாக ஏற்படுகிறது. இந்த மண் வகைகள், நெல் மற்றும் வாழை பயிரிட தகுதி வாய்ந்தவையாகும்.

2. நேர்த்தியான களிச்சேற்று வண்டல் மண் வகை (லிதிக் ட்ராபோர்தென்ட்ஸ்)[12]

இதுவும் "என்ட்டிஸால்" என்ற சிவப்பு மண் வகையின் கீழ் பாகுபாடு செய்யப்பட்டுள்ளது. இவை, மஞ்சள் கலந்த சிவப்பு, மிதமான, ஆழமிக்க, நேர்த்தியான களிச்சேற்று வண்டல் மேலிட்ட, சுண்ணநீற்றுச் சார்பற்ற, மற்றும் நீர் நன்றாக வடிந்த மண் வகையாகும். இவை படிகம், களிமண், அப்பிரகம் முதலியவை கலந்த அடுக்குப் பாறை வகையினைச் சார்ந்தவையாகும். இயற்கையமைப்பின்படி, இம்மண் வகைகள், சரிவான நிலங்களின் மேல்பகுதிகளில் காணப்படுகின்றன. இவற்றிலும், பெருந்தளப்பரப்பு - மண் அரிப்பு ஏற்படுகிறது. இந்த தரமுள்ள மண் வகைகள், ஆற்று நீர்ப்பாசனத்தில், வாழை பயிரிடவும், மழைநீரின் உதவியால் வேளாண்மை செய்யப்படும் நிலங்களில், இரப்பர் மற்றும் மரவள்ளிக்கிழங்கு பயிரிடவும் பயன்படுகின்றன. மேற்பரப்பிலுள்ள மண், மஞ்சள் கலந்த சிவப்பிலிருந்து, சிவப்பு கலந்த பழுப்பு வரை, பல நிறங்களிலுள்ளது.

3. டிபிக் ட்ரோபோப் ஸாமென்ட்ஸ்

இவ்வகை மண்களும், "என்ட்டிஸால்" என்ற கடற்கரையோரமுள்ள வண்டல் மண் வகையாக பாகுபாடு செய்யப்பட்டுள்ளது. அவை, மிகுந்த வெளுத்த பழுப்பு, மிகவும் ஆழமிக்க மணல் கலந்த, சொர சொரப்புள்ள மிதமான, சுண்ண நீற்றுச் சார்புள்ள, மிக அதிக அளவில் நீர் வடிந்த, கடற்கரையோரமுள்ள வண்டல் மண்ணினின்றும் முதுர்ச்சியுற்று வெளிப்பட்டவையாகும். அவை காற்று மண் அரிப்புக்கு உட்பட்டவை யாகும். அவை தென்னை பயிரிடத் தகுதி வாய்ந்தவையாகக் கருதப்படுகின்றன.

4. கரடு முரடான களிச்சேற்று வண்டல் மண் (ஃப்ளூவெண்டிக் டிஸ்ட்ரோபெப்ட்ஸ்)

இவ்வகை மண்கள், "இன்ஸெப்டிஸால்" என்ற ஒருவித வண்டல் மண் வகையைச் சார்ந்தவை. அவை, சிவப்பு கலந்த பழுப்பு, மிகவும் ஆழமிக்க கரடு, முரடான களிச்சேற்று வண்டல் மிக்க, மிக அதிக அளவில் நீர் வடிந்த, மிதமாக விரைவில் இடந்தரும் இயல்புடையவையாகும். அவை, அலையலையாக அமைந்துள்ள நிலப்பரப்பில் காணப்படுகின்றன. அவை பெருந்தளப்பரப்பு - மண் அரிப்பிற்கு இடங்கொடுக்கும். இவை தென்னை பயிரிடத் தகுதியான மண் வகைகளாகும்.

5. நேர்த்தியான களிச்சேற்று வண்டல் மண் (டிபிக் டிஸ்ட்ராபெப்ட்ஸ்)

இந்த இனத்தொகுதி மண்கள், "இன்ஸெப்டிஸால்" என்ற சிவப்பு மண் வகையைச் சார்ந்தவையாகும். அவை, சிவப்பு கலந்த பழுப்பு, மிகவும் ஆழமிக்க நேர்த்தியான களிச்சேற்று வண்டல் மிக்க, சுண்ண நீற்றுச் சார்பற்ற, மிக அதிக அளவில் நீர் வடிந்த மிதமாக மற்றும் மெதுவாக இடந்தரும் இயல்புடையவையாகும். அவை அலையலையாக அமைந்துள்ள நிலப்பரப்பின் சரிவான பகுதியில் காணப்படுகின்றன. அவை பெருந்தளப்பரப்பு - மண் அரிப்பிற்கு இடங்கொடுக்கும். ஆற்றுப் பாசனப்பிரதேசத்தில் நெல்லும், மழைநீரின் உதவியால் வேளாண்மை செய்யப்படும் நிலங்களில் மரவள்ளிக் கிழங்கும் பயிரிடப்படுகின்றன. மேற்பரப்பிலுள்ள மண், மணல் கலந்த களிமண்ணிலிருந்து, களிமண் வரையிலான வகையினைச் சேர்ந்ததாகும்.

6. கரடு, முரடான களிச்சேற்று வண்டல் மண்ணின் வேறொரு வகை (ஃப்ளூவெண்டிக் யூட்ரோபெப்ட்ஸ்)

இந்த வகை மண்கள், "இன்ஸெப்டிஸால்" என்ற வண்டலான மண் வகையாகும். இம்மண் வகைகள், கருமையான, மஞ்சள் கலந்த பழுப்பு நிறத்திலும், மிக ஆழமிக்க கரடு, முரடான களிச் சேற்று வண்டலாகவும் உள்ளவை. அவை நன்கு நீர் வடிந்த, சுண்ண நீற்றுச் சார்பற்ற மற்றும் வேகமாக இடந்தரும் இயல்புடையவை. அவை சரிவான நிலப்பகுதியில் காணப்படுகின்றன. மேலும் அவை பெருந்தளப்பரப்பு - மண் அரிப்பிற்கு இடங்கொடுக்கும். இந்த மண் வகைகள் நெல், வாழை மற்றும் நிலக்கடலை ஆகியவை பயிரிடப் பெறத் தகுதி பெற்றவை. நிலத்தின்

மேற்பரப்பிலுள்ள மண் களிமணல் கலந்த வகையிலிருந்து, களிச்சேற்று வண்டல் மண் வரையிலான வகையினைச் சேர்ந்ததாகும்.

7. களிச்சேற்று வண்டல் மண் (டிபிக் யூட்ரோபெப்ட்ஸ்)

இந்த இனத்தொகுதி மண்கள், "இன்செப்டிஸால்" என்ற மணல் கலந்த சிவப்பு களிச்சேற்று வண்டல் மண் வகையைச் சார்ந்தவையாகும். இவை, மஞ்சள் சிவப்பான, ஆழமிக்க, சரளைக்கல் கலந்த களிச்சேற்று வண்டல் மண் வகையைச் சார்ந்த, சுணைநீற்றுச் சார்பற்ற, நன்கு நீர் வடிந்த, மிதமான காடித்தன்மையுள்ள மணவகைகளைச் சேர்ந்தவை யாகும். இவை வேகமாக ஊடுருவ இடந்தரும் இயல்புடையவையாகும். இயற்கையமைப்பின்படி, இம்மண் வகைகள், அலையலையாக அமைந்துள்ள நிலப்பரப்பின் சரிவான பகுதியில் காணப்படுகின்றன. அவை பெருந்தளப்பரப்பு - மண் அரிப்பிற்கு இடங்கொடுக்கும். இந்த மண்வகைகள் காணப்படும் ஆற்றுப்பாசன நிலப்பகுதியில் எண்ணெய் வித்துப்பயிர்களும், மழை நீரின் உதவியால் வேளாண்மை செய்யப்படும் நிலப்பகுதியில் இரப்பரும் பயிரிடப்படுகின்றன. நிலத்தின் மேற்பரப்பி லுள்ள மண், சரளைக்கல் கலந்த வண்டல் மண்ணிலிருந்து, மணல்கலந்த களிச்சேற்று வண்டல் மண் வரையிலான வகையினைச் சார்ந்ததாகும்.

8. நேர்த்தியான களிச்சேற்று வண்டல்மண்ணின் வகை (யுடிக் ரோடுடால் ஃப்ஸ்)

இந்த இனத்தொகுதி மண்கள் "ஆல்ஃபிஸால்" என்ற சிவப்பு களிச் சேற்று வண்டல் மண் வகையைச் சார்ந்தவையாகும். இவை, கருஞ் சிவப்பான, ஆழமிக்க, மணல் கலந்த களிச்சேற்று வண்டல்மண் வகையைச் சார்ந்த, சுண்ணநீர் சார்பற்ற, நன்கு நீர்வடிந்த, சிறிது காடித்தன்மையுள்ள மண்வகைகளைச் சேர்ந்தவையாகும். இவை மிதமாக, ஊடுருவ இடந்தரும் இயல்புடையவையாகும். இயற்கையமைப் பின்படி இம்மண்வகைகள் பெரும்பாலும் கடற்கரையோரம் சார்ந்த வண்டல்மண் பகுதிகளிலும், அலையலையாக அமைந்துள்ள நிலப்பரப்பின் சரிவான பகுதிகளிலும் காணப்படுகின்றன. இவை மலை இடுக்குகளில் அரிப்புக்கு இடங்கொடுக்கும். இந்தவகை மண்கள், முந்திரி, மா மற்றும் மரவள்ளிக் கிழங்கு ஆகியவை பயிரிட தகுதியானவையாகும். நிலத்தின் மேற்பரப்பிலுள்ள மண், மணல்கலந்த களிச்சேற்று வண்டல்மண் வகையிலிருந்து, இயல்பான களிமண் கலந்த வண்டல்மண் வரையிலான வகையினைச் சேர்ந்ததாகும்.

9. நேர்த்தியான களிச்சேற்று வண்டல் மண்ணின் வேறொரு வகை (யுடிக் ஹாப்லஸ் டால்ஃப்ஸ்)

இந்த இனத்தொகுதி மண்கள், "ஆல்ஃபிஸால்" என்ற சிவப்பு களிச்சேற்று வண்டல்மண் வகைகளைச் சார்ந்தவையாகும். இவ்வகை மண்கள், கரும்பழுப்பான, ஆழமிக்க நேர்த்தியான களிச்சேற்று வண்டல் வகையைச் சார்ந்த, சுண்ணநீற்றுச் சார்பற்ற, நன்கு நீர்வடிந்த, வேகமாக ஊடுருவ இடந்தரும் இயல்புடையவையாகும். இம்மண் வகைகளின் அமைப்புமுறை புதுவளம், மிதமாக உள்ளது. இவை அலை அலையாக

அமைந்துள்ள நிலப்பரப்பின் சரிவான பகுதிகளில் காணப்படுகின்றன. இந்த மண்வகைகள் நெல், பயிறு வகைகள் மற்றும் வாழை ஆகியவை, பயிரிடப்படத்தகுதி வாய்ந்தவையாகும்.

10. கரடு, முரடான களிச்சேற்று வண்டல் மண்ணின் வகைகளிலொன்று (அக்விக் ட்ராபூடால்ஃப்ஸ்)

இந்தவகை மண்கள், "ஆல்பிஸால்" என்ற சிவப்பு மற்றும் மணல் கலந்த களிமண் வகையைச் சார்ந்தவையாகும். அவை மஞ்சள் கலந்த பழுப்பு நிறமுள்ள, ஆழமிக்க, கரடு, முரடான களிச்சேற்று வண்டல்மண வகை சார்ந்த, சுண்ண நீற்றுச் சார்பற்ற, மிதமாக நீர்வடிந்த, காடித் தன்மை வாய்ந்த மற்றும் மிதமாக ஊடுருவ இடந்தரும் இயல்புடைய மண் வகையாகும். இயற்கையமைப்பின்படி, இவ்வகை மண்கள், அலையலையாக அமைந்துள்ள பள்ளத்தாக்குப் பகுதிகளில் காணப்படுகின்றன. மிதமாக, அவை பெருந்தளப்பரப்பு மண் அரிப்பிற்கு இடங்கொடுக்கும் தன்மையுடையவை. இவ்வகை மண்கள், நெல் பயிரிடத் தகுதியானவை. நிலத்தின் மேற்பரப்பிலுள்ள மண், மணல் கலந்த வண்டல் களிமண் வகையிலிருந்து களிச்சேற்று வண்டல்மண் வரையிலான வகையினைச் சார்ந்ததாகும்.

11. நேர்த்தியான, களிச்சேற்று வண்டல் மண்ணின் மற்றொரு வகை (டிபிக் ட்ரோபூடால்ஃப்ஸ்)

இந்த வகை மண்கள், "ஆல்ஃபிஸால்" என்ற சிவப்பு, களிச்சேற்று வண்டல்மண் வகையினைச் சார்ந்தவையாகும். அவை, கருஞ்சாம்பல் கலந்த பழுப்புநிறமுள்ள, மிகவும் ஆழமிக்க, நேர்த்தியான களிச்சேற்று வண்டல்மண் வகை சார்ந்த, சுண்ணநீற்றுச் சார்பற்ற, மிகக்குறைவாக நீர்வடிந்த மண் வகைகளைச் சார்ந்தவையாகும். இவை மெதுவாக ஊடுருவ இடந்தரும் இயல்புடையவையாகும். இயற்கையமைப்பின்படி, அவை சிறுகுன்றுகளின் சரிவான நிலப்பரப்பிலுள்ளன. அவை பெருந் தளப்பரப்பு - மண் அரிப்பிற்கு இடங்கொடுக்கும் - தன்மையுடையவை. அவை நெல் மற்றும் பயிறு வகைகள் பயிரிடத்தகுதி வாய்ந்தவை. நிலத்தின் மேற்பரப்பிலுள்ள மண், மணல் கலந்த வண்டல் களிமண் வகையிலிருந்து, களிச்சேற்று வண்டல்மண் வரையிலான வகையினைச் சார்ந்ததாகும்.

12. டிபிக் உடிப்சாம்மெண்ட்ஸ்

இவ்வகை மண்களும், "என்டிலால்" என்ற கடற்கரைப் பகுதியிலுள்ள வண்டலான மண்வகைகளைச் சார்ந்ததாகும். இவை, சிவப்பு மற்றும் சாம்பல் கலந்த பழுப்பு நிறமுள்ள, மணல் கலந்த ஆழமிக்க, கரடு முரடான, உட்கட்டமைந்த இழையோடிய, சுண்ணநீற்றுச் சார்புள்ள மற்றும் சுண்ணநீற்று சார்பற்ற, மிக அதிக அளவில் நீர்வடிந்த, கடற்கரைப் பகுதியிலுள்ள வண்டலான மண் வகைகளாகும். இவ்வகை மண்கள், விரைந்து ஊடுருவ இடந்தரும் இயல்புடையவை. அவை ஆற்றினால் மண்அரிப்பு நேரிட இடமளிக்கின்றன. தென்னை மற்றும் பனை ஆகியவை பயிரிட இவை ஏற்ற மண்வகைகளாகும்.

13. நேர்த்தியான களிச்சேற்று வண்டல் மண்ணின் வகை (அக்விக் ஹேப்லஸ்டாஃப்ஸ்)

இவ்வகை மண்கள் "ஆஸ்ஃபிஸால்" என்ற வகையினைச் சார்ந்தவையாகும். இவை கருஞ்சாம்பல் நிறமுள்ள, மிகவும் ஆழமிக்க, நேர்த்தியான களிச்சேற்று வண்டல்சார்ந்த, குறைவாக நீர் வடிந்த, சுண்ண நீற்றுச் சார்புள்ள மண் வகைகளாகும். இவை மிதமாகவும், மெதுவாகவும் ஊடுருவ இடந்தரும் இயல்புடையவை. இவை சிறு குன்றுகளின் சரிவான நிலப்பரப்பில் காணப்படுகின்றன. மிதமாக அவை, பெருந்தளப்பரப்பு - அரிப்பிற்கு இடங்கொடுக்கும். இவை நெல் பயிரிடப்படுவதற்கு மட்டுமே தகுதியான மண் வகையாகும். மேற்பரப்பிலுள்ள இழையோடிய மண்வகை, மண் கலந்த களிச்சேற்று வண்டல்மண் வகையிலிருந்து, சேற்றுப்படிவுள்ள களிசேர்ந்த வண்டல் மண் வரையிலான வகையினைச் சேர்ந்ததாகும்.

வேளாண்மை

முந்தைய திருவாங்கூர் மாநிலத்தின் "நெற்களஞ்சியம்" என எல்லோராலும் அழைக்கப்பட்டு வரும் கன்னியாகுமரி மாவட்டம், அதிக அளவு நெல் விளையும் நிலங்களையும், மிகுந்த அளவு காடுகளையும் பெற்றுள்ள பகுதியாகும்.

இம்மாவட்டத்தில், மூன்று பெரிய மண் வகைகள் உள. செவ்வண்ண இரும்பகக் களிமண் வகைகள், திருவட்டார், முஞ்சிரை, குருந்தங்கோடு, இராசக்காமங்கலம், கிள்ளியூர், தக்களை மற்றும் மேல்புரம் ஆகிய வட்டாரங்களில் காணப்படுகின்றன. சிவப்பு மற்றும் வண்டல் சார்ந்த கலவையிலான மண்வகைகள், அகதீஸ்வரம் மற்றும் தோவாளை வட்டாரங்களில் பரவலாக உள்ளன. மாவட்டத்தின் தென்பகுதியில் உள்ளவை இயற்கையிலேயே சிவப்பு களிச்சேற்று வண்டல்மண், சிவப்பு மற்றும் வண்டல் சார்ந்த கலவையிலான மண் ஆகியவையாகும். இந்த சிவப்புக் களிச்சேற்று வண்டல்மண், சிவப்பு மற்றும் வண்டல்சார்ந்த கலவையிலான மண் ஆகிய இரு வகைகளுமே, வளத்தில் தாம் குறைந்தவையாகும். ஆனால், கடற்கரைப் பகுதியிலுள்ள வண்டல் சார்ந்த மண்வகை, வளம் நிறைந்ததாகும். இம்மண் வகைகள் மணலாகவும், மணல் மேலிட்ட தரமிக்க களிச்சேற்று வண்டல மணணாகவும் காணப்படும். கல்குளம் மற்றும் விளவங்கோடு வட்டங்களில் அதிகமான பகுதியில் காடித்தன்மையுள்ள நிலம் தென்படுவதால், சுண்ணாம்புத் தகுநிலை காணப்படுவதில்லை. சிறு குன்றுப் பகுதிகளில் கனமழை பொழிவதாலும், அடித்தளத்தில் களிமண் கசிவூறலுக்கு உட்படுத்தப் படுவதாலும், மாவட்டத்தில் அதிக அளவு காடித்தன்மை, மண் வகைகளில் தோன்றுகிறது.

டீ, காபி, இரப்பர், தென்னை, கோகோ, பைனாப்பிள், கிராம்பு மற்றும் மிளகு ஆகிய பயிர்கள், உயர் மட்டத்திலுள்ள நிலங்களில் பயிரிடப் படுகின்றன. கீழ்மட்டத்திலுள்ள நிலங்களில் தென்னை, பாக்கு, நெல் மற்றும் வாழை ஆகியவை, கீழ்வட்டத்திலுள்ள நிலங்களிலும் நெல், தென்னை, வாழை, மரவள்ளி, நிலக்கடலை மற்றும் காய்கறிவகைகள் நடுமட்டத்திலுள்ள நிலங்களிலும் பயிரிடப்படுகின்றன. பழத்தோட்டங் களில் மா, நார்த்தை, எலுமிச்சை, கிச்சலி முதலியவை உள்ளிட்ட

1975-76 முதல் 1981-82 முடிய, உணவுப் பயிர்கள், வணிகப் பயிர்கள், எண்ணெய் வித்துக்கள் மற்றும் இதர பயிர்கள், பயிரிடப்பட்டுள்ள பரப்பளவு விவரங்கள் (கன்னியாகுமரி மாவட்டம்)

தொடர் எண். 1.	பயிரின் பெயர் 2.	1975-76 3.	1976-77 4.	1977-78 5.	1978-79 6.	1979-80 7.	1980-81 8.	1981-82 9.
	உணவுப் பயிர்கள் :							
1.	நெல்	53054	44580	49248	46280	49963	44000	48091
2.	சோளம்	20	100	29	8	4	..	29
	பயிறுகள் :							
3.	துவரை	138	42	70	3	3	..	1
4.	உளுந்து	2171	4225	4139	926	851	1000	668
5.	பாசிப்பயிறு	589	1937	1795	67	63	..	27
6.	கொள்ளு	1421	566	334	449	4	..	23
7.	இதர பயறு வகைகள்	708	161	..	856	103	1000	32
8.	மிளகாய்	63	57	24A	24	11	..	37
9.	சுவையூட்டும் பொருட்கள் மற்றும் நறுமணச் சரக்கு வகைகள்	2734	2941	3190	3334	3277	3000	3352
10.	மொத்த சர்க்கரைப் பயிர்கள்	2861	3032	3068	3164	3141	3000	3140
11.	மா	2424	1652	1767	1795	1765	2000	1800
12.	வாழை	1795	1388	1371	1596	1902	2000	2162
13.	இதர பழ வகைகளும், கிழங்குப் பயிர்கள் உள்ளிட்ட காய்கறிகளும்	15933	16009	16544	13494	15181	16000	15414
	எண்ணெய் வித்துக்கள் :							
14.	வேர்க்கடலை	2480	1764	1819	1851	1327	1000	1353
15.	தென்னை	15507	16239	15122	15353	15641	15000	15848
16.	இதர எண்ணெய் வித்துக்கள்	594	344	368	306	260	1000	319
17.	மருந்துச் சரக்குகளும், மரமரப்பூட்டும் மருந்துகளும்	832	755	691	627	13327	13000	12856

கன்னியாகுமரி மாவட்டத்தில் பயிரிடப்பட்ட பரப்பளவு
(எக்டேரில்)

தொடர் எண்.	*பயிரின் பெயர்*	***1982-83***	***1983-84***
1.	நெல்	46025	39619
2.	சோளம்	19	34
3.	துவரை	21	35
4.	உளுந்து	947	576
5.	பாசிப்பயிறு	72	64
6.	கொள்ளு	46	125
7.	இதர பயறு வகைகள்	58	147
8.	மிளகாய்	20	22
9.	இதர சுவையூட்டுப் பொருட்களும், மற்றும் நறுமணச் சரக்கு வகைகளும்	3386	3535
10.	கொத்த சர்க்கரைப் பயிர்கள்	3077	3045
11.	மா	1749	1721
12.	வாழை	2215	2205
13.	இதர பழ வகைகளும், கிழங்குப் பயிர்கள் உள்ளிட்ட காய்கறிகளும்	15492	15449
14.	நிலக்கடலை	1357	922
15.	தென்னை	16076	16775
16.	இதர எண்ணெய் வித்துக்கள்	349	366

கன்னியாகுமரி மாவட்டத்தில் பயிரிடப்பட்ட பரப்பளவு (எக்டேரில்) - தொடர்ச்சி

தொடர் எண்.	பயிரின் பெயர்	1984-85	1985-86	1986-87	1987-88
1.	நெல்	46000	44000	29685	33073
2.	சோளம்	30	5	57	6
3.	துவரை	..	..	12	..
4.	உளுந்து	2600	2900	1480	..
5.	பாசிப்பயிறு	..	..	133	..
6.	கொள்ளு	..	..	357	..
7.	இதர பயறு வகைகள்	..	..	125	..
8.	மிளகாய்	20	21	10	15
9.	இதர சுவையூட்டுப் பொருட்களும், மற்றும் நறுமணச் சரக்கு வகைகளும்	3535	3535	3535	3535
10.	மொத்த சர்க்கரைப் பயிர்கள்	3045	3140	2800	2400
11.	மா	1721	1721	1721	1721
12.	வாழை	2205	2350	2530	2685
13.	இதர பழ வகைகளும், கிழங்குப் பயிர்கள் உள்ளிட்ட காய்கறிகளும்	15449	15449	15449	15449
14.	நிலக்கடலை	960	1056	822	683
15.	தென்னை	16775	17200	17200	17200
16.	இதர எண்ணெய் வித்துக்கள்	366	366	300	350
17.	இரப்பர்	12800	12800	12800	12800

புள்ளி விவர இயக்குநர், சென்னை , அறிக்கை நாள் 21-12-1988

வேளாண் குடி மக்களுடைய கைப்பற்று நிலங்களின் அளவிற்கேற்ப, வேளாண்மையில் ஈடுபட்டுள்ள குடும்பங்களின் பங்கீட்டை நோக்குங்கால், அவர்களில் 90 விழுக்காடு, சிறு மற்றும் குறு விவசாயிகள் என்பதும், பயிரிடப்பட்டுள்ள மொத்த நிலங்களில் அவர்கள் 57 விழுக்காடு பரப்பளவு நிலங்களுக்கு உரிமையானவர்களென்பதும் விளங்குகிறது.

அளவு : பகிர்ந்தளிக்கப்பட்ட கைப்பற்று நிலங்களும், விவசாயிகளின் கைப்பற்றிலுள்ள நிலங்களின் பரப்பளவும்.

வகைப்படுத்தப் பட்ட நிலங்களின் பரப்பளவு (எக்டேரில்)	கைப்பற்று நிலங்களை உடையோர்		கைப்பற்று நிலங்களின் பரப்பளவு		கைப்பற்று நிலங்களின் சராசரி பரப்பளவு (எக்டரில்)
	எண்ணிக்கை	விழுக்காடு	எக்டேர்	விழுக்காடு	
0.01 - 0.49	191437	78.0	33126	34.9	0.173
0.50 - 0.90	31087	12.6	21698	22.8	0.697
1.00 - 1.99	17605	7.2	23447	24.7	1.331
2.00 - 2.99	3306	1.3	7621	8.0	2.305
3.00 - 3.99	1477	0.6	5074	5.3	3.435
4.00 - 4.99	158	0.1	688	0.7	4.354
5.00 - 9.99	214	0.1	1442	1.5	6.738
10.00 - 19.99	118	0.1	1574	1.7	13.338
20.00 - 29.99	13	..	347	0.4	26.592
30.00 - (எக்டேரும் அதற்கு மேலும்)	..	..	..	..	..
மொத்தம்	245415	100.00	95017	100.00	

மரப்பேரினம், முந்திரி மற்றும் பலா ஆகியவை முக்கியமான பழந்தரும் மரங்களாகும். [13] உயர்மட்ட நிலங்களில், விளைச்சல் மிகவும் போற்றத்தக்க வகையில் உள்ளது. ஆனால், குறிப்பிட்ட பருவ காலத்தில் நல்ல மழை பெய்தால் மட்டுமே கீழ் மற்றும் இடைமட்ட நிலங்களில் நல்ல விளைச்சலைக் காணமுடியும். மாவட்டத்தில் செழிப்பான காடுகள் காணப்படுவதால் பருவமழைக்குப் பஞ்சமில்லை ; எனவே, நீர்ப் பாசனத்திற்குத் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படுவதில்லை. உணவுப் பயிர்கள், வணிகப் பயிர்கள் மற்றும் எண்ணெய் வித்துக்கள் மற்றும் இதர பயிர்கள் பயிரிடப்படும் பரப்பளவு விவரங்கள் கீழே அளிக்கப்படுகின்றன.

மேற்கண்ட பட்டியல்களினின்றும் தெரியவருவதென்னவெனில், மொத்த பரப்பளவில் 35 விழுக்காடு 0.50 எக்டேருக்குக் குறைவாக நிலங்களைப் பெற்றுள்ள விளிம்படுத்த விவசாயிகள் ஆவர். இவர்கள், மொத்த வேளாண் குடிமக்களின் 78 விழுக்காட்டினையுடையவர்களாக இருக்கிறார்கள். இரண்டு (2.00) எக்டேருக்கும் குறைவாக நிலமுடையோரின் விழுக்காடு 98 ஆகும். இவர்கள், மொத்தம் பயிரான நிலப்பரப்பில், 82 விழுக்காடு பயிரிடுகிறார்கள். ஒரு விளிம்படுத்த விவசாயி பயிரிட்டு வரும், நிலத்தின் சராசரி அளவு, ஒரு எக்டரில் 6-ல் 1 பங்காகும் ; அதாவது 43 சென்ட் எனக் கணக்கிடப்படுகிறது. வேளாண் குடிமக்களில் 20 விழுக்காடு உள்ளவர்கள் சிறு விவசாயிகள் ஆவார்கள். அவர்கள் மொத்த நிலப்பரப்பில் 48 விழுக்காடு நிலங்களைப் பயிரிடுகிறார்கள். அவர்களது சராசரி கைப்பற்று நிலம் ஒரு எக்டருக்கும் குறைவானது. குத்தகை சாகுபடியும், நிலச்சுவாந்தர்கள் உடமையினின்று விலகியிருத்தலும் இம்மாவட்டத்தில் பொதுவாகக் காணப்படுகிறது. மொத்தக் கைப்பற்று நிலங்களில் மூன்று எக்டேருக்கும் குறைவாகக் காணப்படும் நிலங்களைக் கொண்ட பண்ணைகள், ஒரு விழுக்காட்டிற்கும் குறைவாக உள்ளன[14]. எனவே, சிறு மற்றும் விளிம்படுத்த விவசாயிகளை மேம்படுத்தப்படுத்த நல்ல வாய்ப்புள்ளது. அவ்வாறு அவர்கள் மேம்படுத்தப்பட்டால், அவர்களது பொருளாதார மற்றும் சமுகப்படிநிலை உயருமென்பதில் ஐயமில்லை. அரசு அவர்களை அனைத்து வகையிலும் உயர்த்த, உரிய நடவடிக்கையெடுத்து வருகிறது.

தோட்டக்கலை

தோட்டக்கலை, வேளாண்மையின் முதன்மையான கிளைகளிலொன்றாகும். துவக்கத்தில், அது குறிப்பாக தோட்டத்தில் சிறிய அளவு மேற்கொள்ளப்படும் சாகுபடியைத்தான் குறிக்கும் என அனைவரும் கருதினார்கள். பூக்கள், காய்கறிகள், பழங்கள் மற்றும் வழிபாட்டிற்குத் தேவையான பூவினங்கள் போன்ற தோட்டங்களில் பயிரிடப்பட்ட தாவரங்கள், "தோட்டக்கலை சார்ந்த தாவரங்கள்" என அழைக்கப்பட்டு வந்தன. ஆனால் தற்போது தோட்டக்கலை என்பது இன்பமளிக்கவோ, இலாபம் ஈட்டவோ வீட்டிலுள்ள சிறு தோட்டங்களில் பயிரிடப்படும் செடிகள் மட்டுமல்ல, தாவரங்கள், பழவகைகள், பூ வகைகள் மற்றும் வழிபாட்டிற்குத் தேவையான பூவினங்கள் ஆகிய அதிக அளவில், வயல்களில் பயிரிடப்படும் தோட்டப் பயிர்களைக் குறிக்கிறது. மேலும்,

தோட்டக்கலை என்பது, உற்பத்தி மற்றும் தாவரங்கள், பயிர்கள் ஆகியவற்றை விற்பனை செய்ய தேவைப்படும் பல்வேறு விதப் பணிகளையும் உள்ளடக்கியதாகும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் தோட்டக்கலை வளர்ச்சி

கன்னியாகுமரி மாவட்டத்தில், நிலவுலக வெட்ப மண்டலப் பகுதி சார்ந்த மற்றும் ஏறத்தாழ வெப்பமண்டல நிலை சார்ந்த தட்ப, வெட்ப நிலை நிலவி வருகிறது. இம்மாதிரியான இருவகை தட்ப, வெட்ப நிலை கிழக்கு மற்றும் தெற்குக் கடற்கரைப் பிராந்தியங்களில் காணப்படுகிறது. மேற்குக் கடற்கரைப் பிராந்தியத்திலும் ஓரளவிற்கு, நிலம் ஏறத்தாழ சமமாக உள்ளது. அங்கும், நிலவுலக வெப்ப மண்டலப் பகுதி சார்ந்த தட்ப, வெட்ப நிலை நிலவுகிறது. மாவட்டத்தின் ஏனைய பகுதிகளில், மேற்குத் தொடர்ச்சி மலைகளும், சம நிலப்பரப்பும் உள. மாவட்டத்தின் சிறு குன்றுகள் அமைந்துள்ள பகுதியில், தட்ப, வெட்ப நிலை, நிலவுலக வெட்ப மண்டலப்பகுதி சார்ந்ததாகும். இப்பகுதியில், நறுமணப் பொருட்கள், தோட்டப் பயிர்கள் மற்றும், நிலவுலக வெட்ப மண்டலப் பகுதி மற்றும் ஏறத்தாழ வெட்ப மண்டல நிலை சார்ந்த பகுதி ஆகியவற்றில் பயிரிடப்படும் பழவகைகள் ஆகிய தோட்டக்கலைப் பயிர்கள் பயிரிடப் படுகின்றன. சம நிலப்பரப்புப் பகுதியில் நெல், வாழை, கிழங்கு வகைப்பயிர்கள் மற்றும் காய்கறிகள் ஆகியவை பெரும்பரப்பில் பயிரிடப்படுகின்றன.

நிலஇயல் அமைப்புப்படி, மாவட்டத்தின் மொத்த பரப்பு 1.67 இலட்சம் எக்டேராகும். அவற்றில், 1984-85-ம் ஆண்டின் புள்ளிவிவரங்களின்படி, 0.8 இலட்சம் எக்டேர் நிலத்தில், பலதரப்பட்ட பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. இம்மாவட்டத்தில் பலதரப்பட்ட தோட்டக்கலைப் பயிர்கள் 0.35 இலட்சம் எக்டேரில் பயிரிடப்பட்டுள்ளன. இவை, மொத்த சாகுபடி பரப்பளவில் 47.5 விழுக்காடாகும்[15].

பருவ காலம் மற்றும் ஒரு எக்டேரில் விளைச்சல் அளவு

தொடர். எண்	பயிர்	பருவ காலம்	விளைச்சல் அளவு
1.	மா	சூலை-டிசம்பர் வரை	20,000 கி./எக்டேருக்கு
2.	கொய்யா	சூன்-டிசம்பர் வரை	25,000 கி./எக்டேருக்கு
3.	எலுமிச்சை	சூன்-டிசம்பர் வரை	25,500 கி./எக்டேருக்கு
4.	வாழை	சனவரி, பிப்ரவரி மற்றும் நவம்பர் மாதங்கள்	50 டன்கள்/எக்டேருக்கு
5.	மிளகு	சூலை-டிசம்பர் வரை	1500 கி./எக்டேருக்கு
6.	கிராம்பு	சூலை-டிசம்பர் வரை	1600 கி/.எக்டேருக்கு

(தோட்டக்கலைத் துணை இயக்குநர், திருநெல்வேலி, அறிக்கை நாள் 23.1.1989)

பட்டியல் -1

1984-85 ஆம் ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் பயிரிடப்பட்ட தோட்டப்பயிர்கள் - வட்டவாரியான புள்ளி விவரங்கள்

தொடர் எண்.	பயிர்	பரப்பளவு (எக்டேரில்)				
		அகஸ்தீஸ்வரம்	தோவாளை	கல்குளம்	விளவங்கோடு	மொத்தம்
1.	வாழை	241	274	1022	646	2183
2.	மா	418	100	577	618	1713
3.	பலா	25	47	454	264	790
4.	கொய்யா	5	4	2	2	13
5.	எலுமிச்சை	2	33	..	2	37
6.	அன்னாச்சி	..	10	9	2	21
7.	இதர புதிய கனிகள்	2	..	..	..	2
8.	மரவள்ளி	64	434	3545	7359	11402
9.	இதரகாய்கறிப் பயிர்கள்	3	15	47	77	142
10.	பாக்கு	5	192	424	180	801
11.	மிளகாய்	1	5	..	19	25
12.	மஞ்சள்	327	..	..	..	327
13.	ஏலக்காய்	..	44	31	..	75
14.	கிராம்பு	..	244	323	19	586
15.	மிளகு	..	10	52	15	77
16.	இஞ்சி	..	..	6	21	27
17.	சாதிக்காய்	..	..	3	..	3
18.	முந்திரி	1489	52	487	190	2218
19.	காப்பி	..	20	21	..	41
20.	தேயிலை	..	105	298	..	403
21.	இரப்பர்	..	1289	6731	5273	13293
22.	வெற்றிலை	..	..	6	25	31
23.	மலர்கள்	..	180	4	..	184

(தோட்டக்கலை மற்றும் தோட்டப் பண்ணைப்பயிர்கள் இயக்குநர், தர்மபுரி, அறிக்கை நாள் 23.1.1989.)

பட்டியல் -1

1985-86 ஆம் ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் பயிரிடப்பட்ட தோட்டப்பயிர்கள் - வட்டவாரியான புள்ளி விவரங்கள்

தொடர் எண்.	பயிர்	பரப்பளவு (எக்டேரில்)				
		அகஸ்தீஸ்வரம்	தோவாளை	கல்குளம்	விளவங்கோடு	மொத்தம்
1.	வாழை	256	262	1162	670	2350
2.	மா	421	102	615	615	1753
3.	பலா	25	50	468	253	796
4.	கொய்யா	5	5	5	1	16
5.	எலுமிச்சை	2	33	1	1	37
6.	அன்னாச்சி	..	10	13	3	26
7.	ஆரஞ்சு	..	..	43	31	74
8.	மரவள்ளி	68	362	3423	7375	11,228
9.	சர்க்கரைவள்ளி	..	..	..	1	1
10.	கொடிவள்ளி	..	1	1	..	2
11.	வெங்காயம்	..	4	..	..	4
12.	கத்திரி	4	5	4	52	65
13.	வெண்ணை	1	4	4	28	37
14.	பீன்ஸ் வகை (லாப்-லாப்)	..	3	2	2	7
15.	முட்டகோஸ்	..	..	..	3	3
16.	இதர காய்கறிகள்	..	5	29	16	50
17.	கீரை வகைகள்	1	2	2	..	5
18.	பாக்கு	4	173	430	177	1784
19.	ஏலக்காய்	..	44	74	..	118
20.	இஞ்சி	..	..	6	20	26
21.	மிளகு	..	10	54	15	79
22.	கிராம்பு	..	240	305	11	556
23.	சாதிக்காய்	..	..	6	8	14
24.	மிளகாய்	..	5	2	10	17
25.	மஞ்சள்	..	..	1	..	1
26.	புளி	324	80	597	997	1998
27.	கோக்கோ	..	..	35	5	40
28.	முந்திரி	1465	47	485	189	2186
29.	காப்பி	..	20	24	2	46
30.	தேயிலை	..	105	304	..	409
31.	இரப்பர்	..	1289	6800	5421	13510
32.	வெற்றிலை	..	..	8	32	40
33.	மலர்கள்	..	180	2	..	182

(தோட்டக்கலை மற்றும் தோட்டப் பண்ணைப்பயிர்கள் இயக்குநர், தர்மபுரி, அறிக்கை நாள் 23.1.1989.)

ஒரு மரத்திற்குப் பயன்படுத்தப்படும் உரத்தின் அளவு

தொடர் எண்	பயிர்	உரம்	என்/கிலோ	ப்பி/கிலோ	க்கே/கிலோ
1	மா	50	1.0	1.0	1.5
2	கொய்யா	50	1	1	1
3	எலுமிச்சை	30	0.6	0.2	0.5
4	வாழை	10	0.110	0.35	0.330 ஜீஎம்/தாவரம்
5	மிளகு	10	0.100	0.400	0.140 கொடி

பழ மரங்களில் குறிப்பிடத்தக்க அளவு காணப்படும், பூச்சிகள், மரங்களைத் தாக்கும் நோய்கள் மற்றும் நோய்களைக் கட்டுப்படுத்த மேற்கொள்ளும் நடவடிக்கைகள்

நோய் தாக்கு தலுக்குட்படும்பழ மரங்கள்	பூச்சி மருந்துகள்	கட்டுப்படுத்த மேற் கொள்ளப்படும் நடவடிக்கைகள்
மா	ஹாப்பர் ஸ்டெம்போரர்	போசலோன் (0.05) விழுக்காடு ஸெல்ஃப் பாஸ் மாத்திரை (துளையிடுதல்)
வாழை	வில்ட்	பாவிஸ்ட்டின் 50 மி.கி. மாத்திரை
கொய்யா	டீ மஸ்சிட்டோ பக்	0.1 விழுக்காடு மாலத்தியான்
நார்த்தை, எலுமிச்சை, கிச்சிலி முதலி யவை உள்ளிட்ட மரப்பேரினம்	நெமட்டோடு கார்போ ஃப்யுரான்	ஒரு மரத்திற்கு 750 கிராம் ;
கிராம்பு	லிஃப் ஸ்பாட்	டித்தேன் எம்.45 2 கி/லிட்டர்

மலர்ச்செடி வளர்ப்பு[16]

தோவாளை வட்டத்தைச் சேர்ந்த தோவாளை ஆரல்வாய்மொழி மற்றும் தோவாளைப் பகுதிகளில் மல்லிகை, சாதி மல்லி, முல்லை மற்றும் கொத்து மலருடைய செடிவகைகள் ஆகியவை பரவலாகப் பயிரிடப்படுகின்றன. மரிக்கொழுந்து போன்ற நறுமணம் கமழும் மலர் வகைகளும் குறிப்பிட்ட நிலப்பரப்பில் பயிரிடப்படுகின்றன. மாவட்டத்தில் மலர் வகைகள் பயிரிடப்படும் மொத்த பரப்பளவு 185 எக்டேராகும். இங்கு அறுவடை செய்யப்படும் மலர்கள், தரகு வணிகர்களால் விலைக்கு வாங்கப்பட்டு, ஒரு கணிசமான அளவு திருவனந்தபுரத்திற்கு அனுப்பப்படுகிறது.

தோட்டக்கலை சார்ந்த திட்டங்கள்

இம்மாவட்டத்தில், தோட்டக்கலை சார்ந்த 12 திட்டங்கள் செயல்முறைப்படுத்தப்பட்டுள்ளன. தோட்டக்கலை சார்ந்த மூன்று பண்ணைகள் பராமரிக்கும் பணியும் இதிலடங்கும். 1985-86ஆம் ஆண்டு, 10.5 இலட்ச ரூபாய் மொத்த வருவாயில், 10.4 இலட்ச ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது. 1986-87-ம் ஆண்டிலிருந்து, மாவட்டத்தில் தோட்டக்கலை சார்ந்த நடவடிக்கைகள், வலுப்படுத்தப்பட்டுள்ளன. பழவகைகள் பயிரிடும் நிலப்பரப்பையும் அதிகரித்து ஏறத்தாழ வெட்ப மண்டல நிலை சார்ந்த தட்ப, வெட்ப நிலைக்கொப்ப உள்ள நிலங்களில் வாழை, அன்னாசிப் பழம், நறுமணப் பொருட்கள் மற்றும் தோட்டப்பயிர்கள் பயிரிடப்படுகின்றன.

தோட்டக்கலை சார்ந்த பண்ணைகள்

1. அரசு பழப்பண்ணை, கன்னியாகுமரி

கன்னியாகுமரிக்கு அருகாமையிலுள்ள, குண்டல் கிராமத்தில், தேசிய நெடுஞ்சாலை 47-ல், 1922-ம் ஆண்டு, திருவாங்கூர் மன்னர், ஸ்ரீ மூலம் திருநாள் மகாராஜாவால் 6.97 எக்டோ் நிலப்பரப்பில், இப்பண்ணை நிறுவப்பட்டது. 1956-ம் ஆண்டு, மாநில சீரமைப்புச் சட்டப்படி, தற்போதைய கன்னியாகுமரி மாவட்டம் உருவாகி, தமிழ்நாட்டுடன் இணைக்கப்பட்டது. அதனை தொடர்ந்து, இப்பண்ணையில் பராமரிப்பு, மாநில வேளாண் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டது. ஐ.ஸி.ஏ.ஆர். ஆதரவில், இடைக்காலத்தில் மாங்காய் காய்ப்புக்கு வருவது குறித்து ஆராய்ச்சி மேற்கொள்ள முடிவாக்கப்பட்டு, 1960 முதல் 1969 முடிய ஆராய்ச்சியும் மேற்கொள்ளப்பட்டது. ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கு, உரிய வசதிகளைச் செய்து கொடுக்க, 5.69 எக்டோ் கூடுதல் பரப்புள்ள நிலம் 1964-ல் பக்க நிலச் சுவாந்தார்களிடமிருந்து விலைக்கு வாங்கி, பண்ணையுடன் சேர்க்கப்பட்டது. 1969-ம் ஆண்டு வரை பண்ணை ஒரு மாதிரிப்பண்ணையாகத் திகழவும், பலதரப்பட்ட பழவகைப் பயிர்கள் உற்பத்தி செய்யும் நாற்றுப்பண்ணை மையமாக இயங்கவும் பண்ணை ஒருங்கிணைந்த, வேளாண்துறையினரால், பராமரிக்கப்பட்டது. 1979-ம் ஆண்டு, செப்டம்பர் மாதம் இப்பண்ணை, புதிதாக உருவாக்கப்பட்ட தோட்டக் கலைத்துறையின் கண்காணிப்பிற்கு கொண்டுவரப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும், தோட்டக்கலை சார்ந்த இப்பண்ணையில் இனப்பெருக்க நடவடிக்கை துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வெட்ப மண்டல நிலை சார்ந்த, தட்ப வெட்ப நிலையில் பயிரிடப்படக்கூடிய பழங்கள் மற்றும் நறுமணப் பொருட்கள் ஆகியவற்றின் மேம்பாட்டிற்கு, மத்திய அரசு நிதியுதவியளித்து வரும் மேற்கு மலைத் தொடர் திட்டங்களுக்குத் தேவைப்படும், பலதரப்பட்ட பழ வகைகளைச் சார்ந்த குடிவழித் தாவரங்களை இப்பண்ணை வழங்கி வருகிறது.

மிகவும் குறைந்த அளவு மழை, பொழியும் பகுதியில் இப்பண்ணை அமைக்கப்பட்டிருந்தாலும், நல்ல நிருவாகத்திறமையினால், பண்ணை

யின் ஆண்டு இலாபம் 1981-82-ல் இந்த ரூபாய் 0.20 இலட்சத்திலிருந்து, 1985-86-ல் ரூபாய் 3.08 ஆக உயர்ந்திருக்கிறது. ஆண்டுதோறும், இப்பண்ணை 60,000 ஒட்டு மாங்கன்றுகள் உள்பட, 1.25 இலட்சம் தாவரக் கன்றுகளை உற்பத்தி செய்து வழங்குகிறது.

2. அன்னாசிப் பழம் நாற்றுப் பண்ணை, பேச்சிப்பாறை

கடந்த 1975-ம் ஆண்டு, பேச்சிப்பாறை கிராமத்தில், 9.8 எக்டேர் பரப்பளவுள்ள காட்டு நிலத்தில், துவங்கப்பெற்றது (வனத்துறைக்குச் சொந்தமான இந்த நிலம் நீண்ட கால குத்தகையில் பெறப்பட்டதாகும்). பேச்சிப்பாறை அணையின் நீர்ப்பாசன வாய்க்காலுக்கு அருகாமையில் இந்த பண்ணை நிறுவப்பட்டுள்ளது. சாலைகள் மற்றும் பாதைகள் அமைந்துள்ள பகுதிகள் தவிர, ஏனைய நிலப்பரப்பில், அன்னாசிப்பழத் தோட்டம் உள்ளது. இலண்டன் போன்ற அயல்நாட்டு (க்யூ வகை) அன்னாசிப்பழ ஒட்டுக் கன்றுகள் பயிரிட்டு, பல இடங்களுக்கு அனுப்புவதும், அதற்கான பரப்பளவை விரிவாக்குவதுமே இப்பண்ணையின் நோக்கமாகும். இவ்வகை அன்னாசிப்பழம், குறிப்பிட்ட தொழில் வளர்ச்சிக்கும் பயன்படுத்தப்படுகிறது. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டங்களின் கீழ், ஆண்டு தோறும் 1.5 இலட்சம் ஒட்டுக் கன்றுகள் பயிரிடப்பட்டு, வழங்கப்படுகின்றன.

இப்பண்ணையில், மழை நீரை எதிர்நோக்கியே கன்றுகள் பயிரிடப் படுவதால், தட்ப, வெட்ப நிலைக்குத் தக்கவாறு, மழை பொழிவதைப் பொறுத்து, ஒட்டுக்கன்றுகள் பயிரிடப்பட வேண்டியுள்ளது. 1982 முதல் 1986 முடிய பருவக்காற்றில் குறைபாடு இருந்ததால் ஒட்டுக்கன்று உற்பத்தி தடைப்பட்டது. 1985-86, நிதியாண்டில், வரவு ரூபாய் 0.83 இலட்சமாக இருந்த போது, செலவு ரூபாய் 0.96 இலட்சமாகிறது. நீர்ப்பாசன வசதியைப் பெருக்கிடவும், ஆண்டுதோறும் 1.0 இலட்சம் ஒட்டுக் கன்றுகள் வழங்கிடவும், உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப்பண்ணையில் உற்பத்தி செய்யப்படும் அன்னாசிப் பழங்கள், மார்த்தாண்டத்திலுள்ள, கன்னியாகுமரி பழக்கூட்டுறவு சங்கத்திற்கு, நகர அடைப்புகளில் அடைப்பதற்காக, விற்பனை செய்யப்படுகின்றன. பண்ணையின் வருவாயைப் பெருக்கிட கருமிளகுக்கொடிகள் காட்டு மரங்களின் மீது படரவிடப்படுகின்றன.

மிளகுப் பண்ணை, வாலிய ஏலா, பேச்சிப்பாறை

1967-ல் நிறுவப்பட்ட மிளகுப்பண்ணை, 1981-ம் ஆண்டு நிலையானதாக்கப்பட்டது. பண்ணையின் மொத்த பரப்பளவு 6 எக்டேராகும். பேச்சிப்பாறையிலிருந்து, கோதையாறு அணைக்குச் செல்லும் சாலையில், "ஓ" என்ற முறையில் இப்பண்ணை அமைந்துள்ளது. பண்ணை வனத்துறையின் நிலத்தில் நிறுவப்பட்டுள்ளது. நாற்றங்கால் நீங்கலாக, 5.6 எக்டேர் நிலப்பரப்பில், மிளகு, கிராம்பு மற்றும் சாதிக்காய் ஆகியவையும் பயிரிடப்படுகின்றன. நீர்ப்பாசனத்திற்கு ஒரு திறந்த கிணறு உள்ளது. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், மாவட்டத்திலும் மற்றும் தமிழ்நாட்டின் ஏனைய பகுதியிலுமுள்ள பயிர் வளர்ப்போருக்கு

வழங்குவதற்காக, "குட்டநாதன்" என்ற இரண்டு இலட்சம் மிளகு வகைத் தாவரம், ஆண்டுதோறும் இப்பண்ணையில் உற்பத்தி செய்யப்படுகிறது. இதே பண்ணையில், "பன்னியூர்-1" என்ற இனங்கலந்து தோன்றும் மிளகுப் பயிர் மேம்பாட்டுத் திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டு, மூன்று எக்டேர் பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ளது. அதனின்றும் ஆண்டுதோறும் ஒரு இலட்சம் நிலைகொண்ட பதியம் வைக்க வெட்டப்படும் "பன்னியூர்" வகை மிளகுப்பதியங்களும், 10,000 கிராம்பு விதைக் கன்றுகளும் பயிர் வளர்ப்போருக்கு வழங்குவதற்காக உற்பத்தி செய்யப்படுகின்றன.

பல்வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்துதல்

மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட பல்வேறு நிலையான வரைவு மற்றும் வரைவு சாரா திட்டங்கள் பற்றிய விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன.

1. நிலையான திட்டங்கள்

1. அரசு பழப்பண்ணை, கன்னியாகுமரி
2. மிளகு நாற்றுப்பண்ணை, பேச்சிப்பாறை
3. பாக்கு மேம்பாட்டுத் திட்டம் (கன்னியாகுமரி பழப்பண்ணையில் நிறுவப்பட்டது)

வரைவுத் திட்டங்கள்

1. மத்திய மற்றும் மாநில அரசு உதவியுடன் மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டுத் திட்டங்களின் கீழ், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில், வெட்ப மண்டல நிலை சார்ந்த தட்ப, வெட்ப நிலையில் பயிரிடப்படக்கூடிய பழங்கள் மற்றும் நறுமணப் பொருட்களின் பெருக்கம்.
2. "க்யூ" வகை அன்னாசிப்பழம் பெருக்கம் (மாநில வரைவுத் திட்டம்)
3. இனங்கலந்து தோன்றும் மிளகு வகைப் பெருக்கம் (மாநில வரைவுத் திட்டம்).
4. இனங்கலந்து தோன்றும் காய்கறி விதைகள் பெருக்கம் (மாநில வரைவுத் திட்டம்).
5. வாழைப் பெருக்கத் திட்டம் (மாநில வரைவுத் திட்டம்).
6. முந்திரி பெருக்குத் திட்டம் (மத்திய வரைவுத் திட்டம்).
7. பயறு வகைகள் மற்றும் காய்கறி வகைகளடங்கிய பைகள் வழங்குதல் (மத்திய வரைவுத் திட்டம்).

வரைவு சாரா திட்டம்

1. அன்னாசிப் பழப் பெருக்கத் திட்டம் (மாநில வரைவுத் திட்டம்).

பட்டுப்புழு வளர்ப்பு

கன்னியாகுமரி மாவட்டத்தில், 1978-79-ம் ஆண்டு, முதன் முதலாக, சோதனை அடிப்படையில், பட்டுப்புழு வளர்ப்புத் திட்டம் முறையாக, துவக்கப்பெற்றது. அது, தொடர்ந்து வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது.

பட்டுப்புழு வளர்ப்பு விரிவுபடுத்தும் மையம்

1980-81 ஆம் ஆண்டு, நாகர்கோயிலில் ஒரு பட்டுப்புழு வளர்ப்பு மையம் நிறுவப்பட்டது. இம்மையம் பட்டுப்புழு வளர்ப்போருக்கு அவ்வப்போது தொழில் நுட்பமான அறிவுரை வழங்குகிறது. 1983-84-ம் ஆண்டு 50 உழவர்களுக்கு மூன்று மாத பயிற்சி அளிக்கப்பட்டது. அவர்களுக்கு பயிற்சி காலத்திற்கு மாதத்திற்கு ரூ.100/- உதவித்தொகையும் வழங்கப்பட்டது. சவுக்கு வளர்ப்புக்கு ரூ.400/- பெறுமதிப்புள்ள இயந்திரக் கருவிகளும், துறை சாதனங்களும் வழங்கப்பட்டன. 1979-80 ஆம் ஆண்டு முதல், 1983-84 ஆம் ஆண்டு வரை, ஆண்டுதோறும் பயிற்சியளிக்கப்பட்ட உழவர்கள் விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன.

ஆண்டு		*பயிற்சி அளிக்கப்பட்ட உழவர்களின் எண்ணிக்கை*
1979-80	....	72
1980-81	...	25
1981-82	...	68
1982-83	...	70
1983-84	...	50

ஆண்டுதோறும் முசுக்கட்டை பயிரிடப்பட்ட நிலப்பரப்பில் விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன[17].

1985-86 ஆம் ஆண்டு, முசுக்கட்டை பயிரிடப்பட்ட மொத்த நிலப்பரப்பு 64 ஏக்கராகும். ஆனால், 1986-87 ஆம் ஆண்டு, இது 47.25 ஏக்கராக குறைந்து விட்டது.

1985-86, 1986-87 ஆம் ஆண்டுகளில் முசுக்கட்டை பயிரிடப்பட்டு விரிவடைந்த நிலப்பரப்பு விவரம் கீழே அளிக்கப்பட்டுள்ளது:[18]

		பரப்பளவு (ஏக்கரில்)	
	வட்டம்	*1985-86*	*1986-87*
1.	தோவாளை	14.50	10.40
2.	அகஸ்தீஸ்வரம்	19.50	15.60
3.	கல்குளம்	15.50	10.00
4.	விளவங்கோடு	14.50	11.25
	மொத்தம்	64.00	47.25

1980-81 ஆம் ஆண்டு முதல், 1986-87 ஆம் ஆண்டு வரை, உற்பத்தி செய்யப்பட்ட பட்டுப்புழுக் கூடுகளின் விவரங்கள், வட்டவாரியாகக் கீழே அளிக்கப்பட்டுள்ளன:

பட்டுப்புழுக்கூடுகளின் உற்பத்தி (கிலோகிராமில்)

ஆண்டு (1)	வட்டம்				
	தோவாளை (2)	அகஸ்தீஸ்வரம் (3)	கல்குளம் (4)	விளவங்கோடு (5)	மொத்தம் (6)
1980-81	350.500	460.000	190.500	119.350	1120.350
1981-82	270.000	360.000	150.500	178.900	959.400
1982-83	370.500	480.000	200.500	129.300	1180.300
1983-84	600.000	700.000	450.000	415.800	2165.800
1984-85	1060.000	1500.500	560.00	451.000	3571.500
1985-86	1500.00	2080.000	1020.300	917.400	5517.700
1986-87	960.100	1500.000	250.300	300.400	3010.800

(பட்டுப்புழு வளர்ப்பு இயக்குநர், சேலம், அறிக்கை நாள் 7.2.1989)

சிட்ட அலகு

1980 டிசம்பரில் தமிழக அரசு நாகர்கோயிலில் ஒரு சிட்ட அலகு நிறுவியது. அதன் கொள்திறம், ஆறு வட்டில் நிறையளவாகும்.

செயல்விளக்க மற்றும் பயிற்சி மையம்

நாகர்கோயில் அருகே, கோனம் என்ற இடத்தில், செயல்விளக்க மற்றும் பயிற்சி மையம் துவங்கியுள்ளது. பட்டுப்புழு வளர்க்கும் தொழில் துறையில், அம்மையம் புது தொழிற்துறை உரிமையாளர்களுக்கு பயிற்சியளிக்கிறது.

பட்டுப்புழு வளர்க்கும் தொழிலில் மலைவாழ் குடியினரின் ஈடுபாடு

விளவங்கோடு வட்டத்திலுள்ள மலைவாழ் குடியினரான காணிகள் மற்றும் அரங்காணிகள் பட்டுப்புழு வளர்க்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். 1983-84ஆம் ஆண்டில் ஏறத்தாழ 10 குடும்பத்தினர் இப்பணியில் ஈடுபட்டிருந்தனர். துணைக்கருவிகள் வாங்குவதற்கும், பட்டுப்பூச்சி வளர்க்கும் கூடங்கள் அமைப்பதற்கும் அவர்களுக்கு அரசால் ரூ.50,000/- கடனாக வழங்கப்பட்டது.

பயிரிடும் பாங்கு

மாவட்டத்தில் பின்பற்றப்படும் பயிரிடும் பாங்கு, கீழே விவரிக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில், நெல், மரவள்ளி, பயறு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துக்களான நிலக்கடலை மற்றும் எள்ளு, தென்னை இவைகளுடன், வணிகப் பயிர்களான முந்திரி, இரப்பர், பழங்கள் (மா, பலா, அன்னாசிப் பழம் ஆகியவை) மற்றும் நறுமணப் பொருட்கள் (மிளகு, கிராம்பு மற்றும் சாதிக்காய்) ஆகியவை பயிரிடப்படுகின்றன. இம்மாவட்டத்தில், முக்கியமாகக் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவெனில், பருவமற்ற காலத்தில் பயிரிடப்படும் மா இனமாகும். இவ்வகை மாங்கன்றுகள், குறிப்பாக கன்னியாகுமரியிலும், அதன் சுற்று வட்டாரத்திலும் பயிரிடப்படுகின்றன.

நெல்

நெல், மாவட்டத்தின் முக்கிய உணவுப் பயிராகும். நெல் இரண்டு பருவ காலங்களில் பயிரிடப்படுகிறது. முதல் போகம் ஏப்ரல் - மே மாதங்களிலும், இரண்டாம் போகம் செப்டம்பர் - அக்டோபர் மாதங்களிலும் பயிரிடப்படுகின்றன.

மரவள்ளிக்கிழங்கு

இம்மாவட்டத்தில், மரவள்ளிக்கிழங்கு, துணை உணவுப் பொருளாகப் பயிரிடப்படுகிறது. சில பகுதிகளில் மரவள்ளி இரண்டாம் போகப் பயிராக செப்டம்பர் - அக்டோபர் மாதங்களில் பயிரிடப்படுகிறது. இம்மாவட்டத்தில் மரவள்ளி பருவக்காற்றிற்கேற்ப, மழைநீரை நம்பி பயிரிடப்படுகிறது.

தென்னை

தென்னை, இம்மாவட்டத்தில் ரொக்கப் பயிராகப் பயிரிடப்படுகிறது. தென்னை பயிரிடப்படும் பருவம், மேமாதத்திலிருந்து சூலை மாதம் வரையிலுள்ள காலமாகும். பயறு வகைகள், நெல் அறுவடையான பின்னர் தரிசாக விடப்பட்ட நிலங்களில், மரவள்ளியுடன் கலப்புப் பயிராக பயிரிடப்படு கின்றன. முக்கியமாகப் பயிரிடப்படும் பயறு வகைகள், உளுந்து, பாசிப்பயறு, கொள்ளு, மொச்சை இனங்கள் மற்றும் துவரை ஆகியவையாகும். ஏப்ரல் - மே மற்றும் செப்டம்பர் - அக்டோபர் மாதங்களில், பயறு வகைகள், மரவள்ளியுடன் கலப்பு பயிர்களாகப் பயிரிடப்படுகின்றன. பிப்ரவரி - மே மாதங்களில், பயறுகள் முழுமையாக நெல் அறுவடையான பின்னர் தரிசாக விடப்பட்ட நிலங்களிலேயே பயிரிடப்படுகின்றன.

காய்கறிகள், சனவரி - பிப்ரவரி மற்றும் சூலை - ஆகஸ்ட் மாதங்களில் பயிரிடப்படுகின்றன. குடங்களில் நீர் எடுத்து, காய்கறிகளுக்கு ஊற்றுவதே, உள்ளூர் பழக்கமாக நடைமுறையிலிருந்து வருகிறது. இம்மாவட்டத்தின் சில பகுதிகளில், இரண்டாம் போகப் பயிர் அறுவடையான பின்னர், காய்கறிகள் மூன்றாம் போகமாக பயிரிடப்படுகின்றன. ஆனால், இம்மாதிரியான ஒரு நடைமுறை மற்ற மாவட்டங்களில் அரிதாகவே காணப்படுகிறது.

வாழை

முக்கியமாக மார்ச் மாதத்திலிருந்து மே மாதம் வரையிலும், மற்றும் செப்டம்பர் - அக்டோபர் மாதங்களிலும் வாழை பயிரிடப்படுகிறது.

நிலக்கடலை

நிலக்கடலை, மார்ச் - ஏப்ரல் மாதங்களிலும், அக்டோபர் - நவம்பர் மாதங்களிலும் மழை நீரைக்கொண்டு பயிரிடப்படும் பயிராக உள்ளது.

இவை தவிர மாவட்டத்தின் சிறு பகுதிகளில் மிளகு, கிராம்பு, பாக்கு, வெற்றிலை, கோகோ, எள்ளு, இஞ்சி மஞ்சள், கூவைக்கிழங்கு ஆகியவையும் பயிரிடப்படுகின்றன.

கன்னியாகுமரி மாவட்டத்தில் பின்பற்றப்பட்டு வரும் பயிர் வரிசை முறை[19]

1. நெல் - நெல் - நடப்புத்தரிசு - (ஓராண்டு சுழற்சி)
2. நெல் - நெல் - பயிறுகள் - (ஓராண்டு சுழற்சி)
3. நெல் - வாழை - நெல் - (ஈராண்டு சுழற்சி)
4. நெல் - வாழை - மரவள்ளி - (ஈராண்டு சுழற்சி)

செம்மைப்படுத்தப்பட்ட பயிர்களைப் பயிர்செய்யும் முறையும், பயிர் சுழற்சியும்

நெல் பயிரிடப் பின்பற்றும் நடைமுறை

மாவட்டத்தின் முதன்மையான உணவுப் பயிர், அரிசிதான். தொடர்ந்து இரு பருவகாலங்களில் நெல் பயிரிடப்படுகிறது. முதல் போகப் பயிர் ஏப்ரல் - மே மாதங்களில் பயிரிடப்படுகிறது. இப்பருவ காலம் 'கன்னிப்பூ' (கார் பருவம்) என அழைக்கப்படுகிறது. இரண்டாம் போகப் பயிர், செப்டம்பர் - அக்டோபர் மாதங்களில் பயிரிடப்படுகிறது. இப்பருவ காலம், கும்பப்பூ (பிஷாணம் பருவம்) என அழைக்கப்படுகிறது. ஒரு கணிசமான பரப்பளவுள்ள நிலங்களில் குறிப்பாக நாஞ்சில் நாட்டின் அகஸ்தீஸ்வரம் மற்றும் தோவாளை வட்டங்களில், நிலம் ஓரளவு உலர்ந்த நிலையில் முதல் போக நெல் பயிரிடப்படுகிறது. இரண்டாம் போக பருவ காலத்தில் முழுப்பகுதியும் மறுநடவுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

கன்னியாகுமரியில், வேளாண்மைக்கு மூன்று வேறுபட்ட முறைகள் பின்பற்றப்படுகின்றன. அவையாவன :

1. ஓரளவு உலர்ந்த நிலத்தில் சாகுபடி ; 2. நஞ்சை நிலத்தில் நேரடியாக விதைத்து சாகுபடி ; 3. நஞ்சை நிலத்தில், நாற்று நடவு செய்து சாகுபடி.

1. ஓரளவு உலர்ந்த நிலத்தில் சாகுபடி செய்யும் முறை

இம்முறைச் சாகுபடி குறிப்பாக, அகஸ்தீஸ்வரம், தோவாளை வட்டம் மற்றும் கல்குளம், விளவங்கோடு வட்டங்களின் பகுதிகள் ஆகியவற்றில் மேற்கொள்ளப்படுகின்றன. ஏப்ரல்-மே மாதங்களில், கோடைமழை பெய்யும் காலத்தில், ஒரு எக்டேருக்கு 100 கிலோ கிராம் என்ற அளவில், விதை தெளிக்கப்பட்டு, உழவு மேற்கொள்ளப்பட்டு, வலுப்படுத்தப் படுகிறது. நிலத்தை சமப்படுத்துவதும், வலுப்படுத்து வதும், விதை தெளிக்கப்பட்ட மூன்றாம், நான்காம், ஐந்தாம், ஏழாம் நாட்களில் மறுபடியும் மேற்கொள்ளப்படுகின்றன. ஒருமாத காலத்திற்கு பயிர் நிலத்திலுள்ள ஈரக்கசிவின் ஆதாரத்திலேயே வளர்கிறது. பிறகு சூன் மாதத்தில் வாய்க்காலில் விடப்படும் தண்ணீர் நிலத்திற்குப் பாய்ந்து, பின்னர் நிலத்தில் நீர் கணிசமான அளவு தேக்கிவைத்துக் கொள்ளப்படுகிறது. பாதி உலர்ந்த நிலையில், அதிக மகசூல் அளிக்கும் வகைகளான டி.கே.எம்.9., ஏ.டி.டி.36., மற்றும் ட்டி.பி.எஸ்.1., ஆகிய வகைகள் பயிரிடப்படுகின்றன. இதைத்தவிர, உள்ளூர் வகை நெற்பயிர்களான கட்டைச் சம்பா மற்றும் குறுவை ஆகியவை சிறு பரப்பளவில் பயிரிடப்படுகின்றன. இவற்றின் கால அளவு 105 முதல் 115 நாட்களாகும்.

2. நஞ்சை நிலத்தில் நேரடியாக விதைத்து சாகுபடி செய்யும் முறை

இந்த முறையிலான சாகுபடி, மே-சூன் மாதங்களில், நீர் அதிக அளவில் உள்ள இடங்களில் பின்பற்றப்படுகிறது. குறுகிய கால, அதிக மகசூலளிக்கும் பயிர்களான ட்.டி.கே.எம்.9., ஏ.டி.ட்டி.36., மற்றும ட்டி.பி.எஸ்.1., ஆகியவை பயிரிடப்படுகின்றன. உள்ளூர் வகை நெல்களான கட்டைச் சம்பா மற்றும் குருவை ஆகியவை சிறு பரப்பளவு நிலங்களில் பயிரிடப்படுகின்றன. உயரமாக வளரக்கூடிய விதைகள், மணல் கலந்த குழைசேறு உள்ள நிலங்களில், எக்டேருக்கு 75 கிலோ கிராம் என்ற அளவில் தெளிக்கப்படுகின்றன.

3. நஞ்சையில் நாற்று நடவு செய்து சாகுபடி செய்யும்முறை

முதல் பருவத்தில், வாய்க்கால் பாசனப்பகுதிகளாக கல்குளம் மற்றும் விளவங்கோடு வட்டங்களில் கணிசமான பரப்பளவிலும் மற்றும தோவாளை, அகஸ்தீஸ்வரம் வட்டங்களிலும் இந்த செய்முறை பயன்படுத்தப்படுகிறது. இரண்டாவது பருவத்தில் இந்த செய்முறை கன்னியாகுமரி மாவட்ட முழுமையும் பயன்படுத்தப்படுகிறது. முதல் பருவத்தில், ட்டி.கே.எம்.9., ஏ.டி.ட்டி.36., டி.பி.எஸ்.1., ஆகிய வகை நெல்கள் முதன்மையாகப் பயன்படுத்தப்படுகின்றன. இரண்டாவது பருவத்தில் ஐ.ஆர்.20, பொன்னி, வெள்ளைப் பொன்னி, ஏ.யூ.2.., ட்டி.ப்பி.எஸ்.2., மற்றும் சி.ஆர்.1009., ஆகிய அதிக மகசூல் அளிக்கும் நெல்வகைகள் மாவட்டத்தில் பயிரிடப்படுகின்றன. இவைதவிர, உள்ளூர் நெல் வகைகளான வால்சிரை முண்டான், தட்டத்த வெள்ளை, வல்லாரக்கண், கொச்சிச் சம்பா ஆகியவையும் பயிரிடப்படுகின்றன. நடுத்தரக்கால வகையான பொன்னி, இரண்டாவது பருவத்திற்குப் பொதுவாக பரிந்துரைக்கப்படுகிறது. ஆனால் கல்குளம் மற்றும் விளவங்கோடு வட்டங்களில் பெரும்பாலும் முதல் பருவத்தில் (கன்னிப்பூ பருவம்) இந்த ரகம் பயிரிடப்படுகிறது.

மரவள்ளி

முழுமையாக மழைநீர் நிலையினைப் பொறுத்தே, மாவட்டத்தில் மரவள்ளி பயிரிடப்படுகிறது. ஏப்ரல்-மே மற்றும், செப்டம்பர்-அக்டோபர் மாதங்களில் கோடை மழை பொழிந்த உடன் காலத்தில் 12,000 எக்டேர் நிலங்களில், மரவள்ளி பயிரிடப்படுகிறது. இரண்டு மரவள்ளி பாவுதளக்கட்டைகள் நிலங்களில், மண்ணினால் அமைக்கப்பட்ட குவியலின் மையத்தில் இரண்டு அடி முதல் மூன்று அடி இடைவெளியில் நடப்படுகின்றன. மரவள்ளி பயிரிடப்படும் கணிசமான பகுதிகள் கல்குளம் மற்றும் விளவங்கோடு வட்டங்களில்தான் உள்ளன. அடுக்குப்படி வரிசை வகை சாகுபடிதான் இவ்வட்டங்களில் மேற்கொள்ளப்படுகிறது. பயிரின் காலவரை 10 மாதங்கள் ஆகும். முதல் பருவம், மே-சூன் மாதங்களில் துவங்குகிறது. மரவள்ளி பயிரிடக்கூடிய அடுத்த பருவம், செப்டம்பர் - அக்டோபர் மாதங்களாகும். மொத்த நிலப்பரப்பின் 70 விழுக்காடு பரப்பில் முதல் பருவத்திலும், எஞ்சிய பரப்பளவில் செப்டம்பர் - அக்டோபரில் இரண்டாவது பருவத்திலும் மரவள்ளி பயிரிடப்படுகிறது. மரவள்ளியின்

சராசரி விளைச்சல் எக்டேருக்கு 12 டன்களாகும். அதிக மகசூல் அளிக்கும் வகைகளான ஸ்ரீவிசாகம் மற்றும் எம்.4 ஆகியவை, எக்டேருக்கு 25 முதல் 30 டன்கள் அளிக்கும் விளைச்சல் இயல்திறன் கொண்டவையாகும். அறுவடைக்குப்பிறகு, கிழங்குகள், மக்கள் பயன்படுத்துவதற்கு விற்பனை செய்யப்படுகின்றன. கிழங்குகள் சிறு துண்டுகளாக நறுக்கப்பட்டு, சூரிய ஒளியில் உலர்த்தப்பட்டு, பின்னர் அவை பல்வேறு மாப்பொருட்கள் உற்பத்தி செய்ய, மாவாலைகளில் பயன்படுத்தப் படுகின்றன.

பயறு வகைகள்[20]

பயறுகள் முழுமையாக மழைநீரை எதிர் நோக்கியுள்ள நிலங்களில்தான் பயிரிடப்படுகின்றன. அவை, இம்மாவட்டத்தில் மூன்று பருவங்களில் பயிரிடப்படுகின்றன. ஏப்ரல்-மே மாதங்களில், பயறு வகைகள், மரவள்ளியின் ஊடு பயிராகப் பயிரிடப்படுகின்றன. இரண்டாம் பருவமான செப்டம்பர்-அக்டோபர் மாதங்களில் பயறு வகைகள், மரவள்ளியுடன் ஊடு பயிராகப் பயிரிடப்படுகின்றன. இயல்பில், உளுந்து மற்றும் பாசிப்பயறு ஆகியவை, ஏப்ரல்-மே மாதங்களில் முதல் போகமாவும், செப்டம்பர்-அக்டோபர் மாதங்களில், இரண்டாம் போகமாக கொள்ளு மற்றும் உளுந்து ஆகியவையும், மரவள்ளியுடன் ஊடுபயிராகப் பயிரிடப்படுகின்றன. இரண்டாம் போக நெல் அறுவடை செய்தபின், நடப்புத் தரிசாகவுள்ள நிலங்களிலும் பயறுவகைகள் பயிரிடப்படுகின்றன.

நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ள நிலப்பரப்பு, அதனில் உயர் மகசூல் அளிக்கும் வகைகளின் பரப்பளவு ஆகிய விவரங்கள் பட்டியல் - 1இல் கொடுக்கப்பட்டுள்ளன. இயல்பான நிலப்பரப்பளவு, மற்றும் பல்வேறு வகைப் பயிர்களின் மகசூல் அளவு ஆகிய விவரங்கள் பட்டியல் - 2-லும், பல்வேறு பயிர்கள் பயிரிட மேற்கொள்ளப்பட்ட செலவு முதலான விவரங்கள் பட்டியல் - 3-லும் கொடுக்கப்பட்டுள்ளன.

பட்டியல் - 1

ஆண்டு	*நெல் பயிரிடப்பட்டுள்ள நிலப் பகுதி (2 பயிர்களும்)* (எக்டேரில்)	*உயர் மகசூல் அளிக்கும் நெல் வகைகள்* (எக்டேரில்)
1975-76	53035	33,512
1976-77	44580	32,458
1977-78	49245	31,226
1978-79	46209	31,844
1979-80	49671	31,541
1980-81	43695	39,296
1981-82	48091	29,030
1982-83	46212	30343

1983-84	38526	29944
1984-85	46227	24658
1985-86	44189	30787
1986-87	29685	21400
1987-88	33077	30800

(வேளாண் துறை இயக்குநர், சென்னை, அறிக்கை நாள் 23-9-1986 மற்றும் வேளாண் துறை இணை இயக்குநர், நாகர்கோயில், அறிக்கை நாள் 28-11-1988)

பட்டியல் - 2

பயிர்கள் சாகுபடி செய்யப்பட்ட இயல்பான பரப்பளவும், பல்வேறு வகைப் பயிர்களின் மகசூல் அளவும்

தொடர் எண்	பயிர்வகை	பரப்பளவு *(எக்டேரில்)*	இயல்பான மகசூல் கி.கிராமில் *(எக்டேருக்கு)*
1.	நெல்	46,000 (23,000+ 23,000) இரு பயிர்களும்	2569.5 கி.அரிசி
2.	மரவள்ளி	12,000	10,000 கிலோ
3.	தென்னை	15,200	10,000 காய்கள்/எக்டேருக்கு
4.	நிலக்கடலை	1,000	750 கிலோ
5.	வாழை	3,006	25,000 கி/எக்டேருக்கு
6.	முந்திரி	2,153	2,000 மெ.டன்கள்
7.	பாக்கு	757	5.0 இலட்சம் கொட்டைகள்
8.	மா	1769	20,000 மெ.டன்கள்
9.	மிளகு	42	250 கிலோ/எக்டேருக்கு
10.	பயறு வகைகள்	5,000	280 கிலோ/எக்டேருக்கு
11.	இரப்பர்	12,800	1200 கிலோ/எக்டேருக்கு

1. கன்னியாகுமரி மாவட்டத்தில் வேளாண்மை குறித்த அறிக்கை 1987, வேளாண்துறை இணை இயக்குநர், நாகர்கோவில். மற்றும் வேளாண்துறை இணை இயக்குநர், நாகர்கோயில், அறிக்கை நாள் 28-11-1998

கன்னியாகுமரி மாவட்டத்தில் பல்வேறு வகைப்பட்ட பயிர்கள், பயிரிட மேற்கொள்ளப்பட்ட செலவு விவரங்கள்

பயிரின் பெயர்	*பயிரிட செலவான தொகை (ஏக்கருக்கு)* (ரூபாய்)	*முழு மொத்த வருவாய்* (ரூபாய்)	*நிகர வருவாய்* (ரூபாய்)
நெல் (உயர் மகசூல் வகை)	1838.00	2757.00	919.00
நெல் (உள்ளூர் ரகம்)	1450.00	2120.00	670.00
மரவள்ளி (மழைநீர் சாகுபடி)	1640.00	2660.00	1020.00

தென்னை (மழைநீர் சாகுபடி)	2625.00	5075.00	2450.00
வாழை (நேந்திரன்) ரத்துன் வாழை	6120.00	9600.00	3480.00
வாழை (பூவன், மொந்தன் மற்றும் ஏனைய உள்ளூர் வகை)	3120.00	6400.00	3280.00
நிலக்கடலை (மழைநீர் சாகுபடி)	1035.00	1500.00	465.00
இரப்பர் (பராமரிப்பு)	2250.00	7200.00	4950.00
பயறுவகைகள் (மழைநீர் சாகுபடி)	361.50	800.00	438.50
முந்திரி (மேற்படி)	940.00	2800.00	1860.00
வெற்றிலை	11,920.00	20000.00	8080.00
மலர்கள் (மல்லிகை)	6,175.00	16800.00	10625.00

(கன்னியாகுமரி மாவட்டத்தில் வேளாண்மை குறித்த அறிக்கை - 1987, பக்கம் 23, வேளாண்துறை இணை இயக்குநர், நாகர்கோயில்)

வேளாண் விரிவாக்க மையங்கள்

1988ஆம் ஆண்டின் புள்ளிவிவரப்படி கன்னியாகுமரி மாவட்டத்தில் 19 வேளாண் விரிவாக்க மையங்கள் உள்ளன[21]. அவை கீழ்க்குறிப்பிட்ட இடங்களில் இயங்கிவருகின்றன :

1. நாகர்கோயில்
2. பூதபாண்டி
3. பெருமாள்புரம்
4. பழவிளை
5. குருந்தக்கோடு
6. கோழிப்பொரிவிளை
7. திருவட்டார்
8. மேல்புரம்
9. கிள்ளியூர்
10. முஞ்சிரை
11. சகாயனூர்
12. பரக்கை
13. தக்களை
14. குமாரபுரம்
15. தோடுவெட்டி
16. கருங்கல்
17. அஞ்சுக்கிராமம்
18. திங்கள் சந்தை
19. வழுக்கம்பாறையில் இயங்கும் சுசீந்திரம் மையம்

ஒவ்வொரு வேளாண் விரிவாக்க மையமும், ஒரு வேளாண் அலுவலரால், நிருவகிக்கப்பட்டு வருகிறது. உழவர்களுக்கு, தொழில் நுட்ப அறிவுரை வழங்குவதில் இவ்விரிவாக்க மையங்கள் முக்கிய அங்கம் வகிக்கின்றன. வேளாண் குடிமக்களும், அதிக மகசூல் அளிக்கும் விதை வகைகள், பூச்சி கொல்லி மருந்துகள், அஸாஸ் பிரில்லிம் மற்றும் அஸோல்லா முதலிய உரங்கள் வழங்கப்பட்டு ஊக்குவிக்கப்படுகின்றனர். இவ்வாறாக, வேளாண் விரிவாக்க மையங்கள் வேளாண் சமுதாயத்தின் நலனுக்காகப் பாடுபட்டுவருகின்றன.

இரப்பர் தோட்டங்கள்

இரப்பர் தோட்டங்களின் மொத்த பரப்பளவு மற்றும் 1978-79ஆம் ஆண்டு இறுதியில் கன்னியாகுமரி மாவட்டத்தில் இரப்பர் பயிரிடும் தொகுதிகளின் எண்ணிக்கை ஆகிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

தொடர் எண்.	*இடம்*	*மொத்த தொகுதிகளின் எண்ணிக்கை*	*பரப்பளவு (எக்டேரில்)*
(1)	*(2)*	*(3)*	*(4)*
1.	தோவாளை	59	1038
2.	கல்குளம்	2161	5338
3.	விளவங்கோடு	1468	4931
4.	கன்னியாகுமரி மாவட்டத்தின் மொத்தம்	3688	11307
5.	தமிழ்நாட்டின் மொத்தம்	3720	11984
6.	இந்தியாவின் மொத்தம்	156138	249190

ஆக, 1978-79 ஆம் ஆண்டு புள்ளி விவரப்படி இரப்பர் தோட்டங்கள் அமைந்துள்ள மாவட்டத்தில் மொத்த பரப்பளவான 11307 எக்டேர், 1980ஆம் ஆண்டு 12,688 எக்டேராக உயர்ந்தது. 1986 ஆம் ஆண்டு, இரப்பர் தோட்டங்களின் பரப்பளவு (அரசு மற்றும் தனியாருக்குச் சொந்தமானவை - இரண்டும் சேர்த்து) 13,168 எக்டேராக மேலும் உயர்ந்தது. இது, தமிழ்நாடு மாநிலத்தின், மொத்த இரப்பர் பயிரிடப்படும் பரப்பளவில் 97 விழுக்காடு ஆகும். இந்த இரப்பர் தோட்டங்களில் 50,000 தொழிலாளிகள் பணியாற்றுகிறார்கள்.

மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இயங்கிவரும் இரப்பர் வாரியம், நாகர்கோயிலில், ஒரு மண்டல அலுவலகத்தினையும், குழித்துறைக்கு அருகாமையில் ஒரு இரப்பர் நாற்றுப்பண்ணையையும் இயக்கி வருகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் இரப்பர் பயிரிடுவோரின் நலனுக்காக, போதிய விரிவாக்க மற்றும் அறிவுரை வழங்கும் பணிகளும் மண்டல அலுவலகத்தினால் முறையாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆக்க வளத்தைப் பெருக்கிடவும், இரப்பர் பயிரிடுவோரின் பொருளாதார தரத்தை உயர்த்திடுவதுமே இதன் நோக்கமாகும். 1980-81 முதல் 1984-85 முடிய உள்ள ஐந்தாண்டுகளில், புதிதாக இரப்பர் பயிரிடுவதையும், மறுபயிரிட்டுப் பணியினை மேற்கொள்ளவும், "இரப்பர் பயிரிடுதல் மேம்பாட்டுத் திட்டம்" என்ற திட்டத்தினை வாரியம் நடைமுறைப்படுத்தியது. இரப்பர் பயிரிடுவோர், மூலப்பொருள், நிதியுதவி மற்றும் தொழில்நுட்ப உதவி ஆகியவற்றை வாரியத்தினின்று பெற, இத்திட்டம் வழி வகுக்கிறது. மேலும், வேளாண்மைக்குரிய நிதி வழங்கும் மேம்பாட்டுக் கழகத்தின் கடன் வழங்கும் திட்டத்தின் கீழ், வங்கிகளினால், இரப்பர் பயிரிடுவோருக்கு நீண்ட கால கடன்களும் வழங்கப்பட்டன.

இத்திட்டத்தின் கீழான உதவிகளில் இரப்பர் வாரியத்தின் ரொக்க மானியம், சிறிய நிலச்சுவாந்தார்களுக்கு ஊக்கமானியம், வங்கிகளினால் அளிக்கப்பெறும் நீண்டகால கடன்தொகை, வங்கிக் கடனுக்கான வட்ட மானியம் மற்றும் கட்டணமற்ற தொழில்நுட்ப ஆதரவு ஆகியவை அடங்கும்.

நீர்ப்பாசன வசதியை அதிகரிக்க இரப்பர் வாரியம் ஒரு திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது[22]. தொன்றுதொட்டு இரப்பர் பயிரிடப்படும் பகுதிகளில், நீர்ப்பாசன வசதியைப் பெருக்கிட இரப்பர் பயிரிடுவோருக்கு ஒருவருக்கு, ஒரு எக்டேருக்கு ரூ.2,500/- அதிக பட்சத்தொகை ரூ.7,500/- என நிர்ணயித்து நிதியுதவியளித்திட திட்டம் வழிவகுக்கிறது. தொன்றுதொட்டு, இரப்பர் பயிரிடும் பகுதிகளில், இத்திட்டத்தை செயல்முறைப்படுத்த முதலீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூபாய் 10 இலட்சமாகும்.

முந்திரி பயிரிடுதல்[23]

கன்னியாகுமரி மாவட்டத்தில், முந்திரி பயிரிடப்படும் பரப்பளவின் விவரம் கீழே அளிக்கப்பட்டுள்ளது:

தொடர் எண்.	*வட்டம்*	*பரப்பளவு* (எக்டேரில்)
1.	அகஸ்தீஸ்வரம்	1632
2.	தோவாளை	15
3.	கல்குளம்	474
4.	விளவங்கோடு	181
	மொத்தம்	2302

காஃபி மற்றும் டீ பயிரிடுதல்

கன்னியாகுமரி மாவட்டத்தில், காஃபி மற்றும் டீ பயிரிடும் நிலப்பரப்பு முறையே 42 மற்றும் 403 எக்டேராகும். இப்பயிர்கள் பெரும்பாலும் தோவாளை மற்றும் கல்குளம் வட்டங்களிலேயே பயிரிடப்பட்டுள்ளன. தமிழ்நாடு மாநிலத்தில், காஃபி மற்றும் டீ பயிரிடப்பட்டுள்ள மொத்த நிலப்பரப்பு முறையே 33,319 மற்றும் 40,794 எக்டேர் என கணக்கிடப் பட்டுள்ளது. மாநிலத்தில், காஃபி மற்றும் டீ பயிரிடப்படும் மொத்த பரப்பளவுடன் ஒப்பிடுகையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் இவை பயிரிடப்படும் பரப்பளவு மிகச் சிறிதளவேயாகும்.

விஞ்ஞான ரீதியான வேளாண்மையில் முன்னேற்றம்[24]

இந்தியாவில் வேளாண்மை தற்போது உருமாற்றம் பெற்று வருகிறது. தொன்றுதொட்டு கடைபிடிக்கப்பட்டு வந்த தொழில்துறை விஞ்ஞானம், தற்போது தற்காலத்திய தொழில்துறை விஞ்ஞானத்திற்கு இடமளித்து வருகிறது. தற்போது மேற்கொள்ளப்படும் வழிவகைகள் புதிய மற்றும் அதிக மகசூல் அளிக்கும் வகைகளைச் சார்ந்த நெல் விதைகளை செயல்முறைப்படுத்துதல் பரிந்துரைக்கப்பட்ட அளவு குறிப்பிட்ட உரங்களைப் பயன்படுத்துதல் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள்

பயன்படுத்துதலை விரிவாக்குதல் ஆகியவையாகும். இவ்வாறான தொழில்துறை விஞ்ஞானத்தில் தடை தகர்த்து உண்டாக்கப்பட்ட வழி, வேளாண் உற்பத்தியில் பிரமிக்கத்தக்க மாறுதல்களை உண்டாக்கியுள்ளது.

வேளாண் கருவிகள்

பழைய வகைகள்

இந்தியா முழுமையும் உபயோகத்திலுள்ள வேளாண் கருவிகள் மிகவும் குறைவானவையாயும், எளிமையானவையாயுமுள்ளன. வார்ப்பட பலகையிலாலான ஏற்ற பரப்பு அல்லது கொழுத்தட்டு, மரத்திலாலான விதை வரிசை இயந்திரம், உழவர்கள் பயன்படுத்தும் கொழுத்தட்டுகள், அரிவாள் ஆகியவை சராசரி வேளாண் குடிமக்களின் விவசாயக் கருவிகளாகும்[25].

நெல் விளையும் பகுதிகளில், குறித்த காலத்தில் நாற்று நட்டு முடிக்க உதவியாக, நிலங்களை விரைவில் உழுது முடித்திட அதிக அளவில் உழவு மாடுகள் உழவர்களால் பராமரிக்கப்படுகின்றன.

அண்மைக் காலங்களில் விவசாயம் செய்ய, அறுவடை மேற்கொள்ள மற்றும் களத்தில் போர் அடித்திட இயந்திரங்களைப் பயன்படுத்தி வருவதால் நல்ல முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. மனித ஆற்றலுக்குப் பதிலாக இயந்திரத்தினைப் பயன்படுத்துவது நல்ல உற்பத்திக்கு வழி வகுத்துவருகிறது.

திணை நிலம் மற்றும் மாவட்டத்தில், விவசாய செயல்பாடுகள்

அகஸ்தீஸ்வரம் வட்டத்திலும், தோவாளை வட்டத்தில் ஒரு பகுதியிலும் திணை நிலம் தட்டையாக உள்ளது. இப்பகுதிகளின் மண், மரவள்ளி மற்றும் மா, பலா போன்ற பழவகைக் கன்றுகளைப் பயிரிடப் பொருத்தமானதாகும். புஞ்சை நிலங்களில் அதிக அளவு மரங்களிருப்ப தால், புஞ்சை சாகுபடிக்கு, குறிப்பாக கல்குளம் மற்றும் விளவங்கோடு வட்டங்களில் தற்காலக் கருவிகளான இழுவை இயந்திரம் ஆகியவை பயன்படுத்தப்படுவதில்லை. புஞ்சை நிலங்களில் பயிரிடும்போது கூட, உழுவதற்கு எருதுகளைப் பயன்படுத்துவதில்லை. அதற்கு பதிலாக மனித உழைப்பினாலேயே நிலம் சீர்த்திருத்தப்பட்டு, புஞ்சைப்பயிர் சாகுபடிக்கு ஏற்றதாகக் கொணரப்படுகிறது. அகஸ்தீஸ்வரம் மற்றும் தோவாளை வட்டங்களில் தற்காலக்கருவிகளும், உழவு மாடுகளும் முதன்மையாக நஞ்சை நிலங்களை உழுவதற்கும், நஞ்சைப் பயிர் சாகுபடி செய்யவும்தான் பயன்படுத்தப்படுகின்றன. கடந்த சில காலமாக, கல்குளம் மற்றும் விளவங்கோடு வட்டங்களில், நஞ்சை சாகுபடிக்கு இழுவை இயந்திரங்களைப் பயன்படுத்துவது காணப்படுகிறது.

தற்காலக்கருவிகள்

விவசாயத்துறையில் முதன்முதலில் இயந்திர ஆற்றல் பயன்படுத்தப் பட்ட பொழுது, ஒரு நிலையான நீராவிப்பொறி, இழுப்பதற்கேற்ற கம்பி வட ஏற்பாட்டுடன் மேற்கொள்ளப்பட்டது[26]. ஆனால் இதனை சிறிதளவுதான் பயன்படுத்த முடிந்தது. பல்வேறு வகைப்பட்ட பணிகளுக்கு இதனைப்

பயன்படுத்தமுடியவில்லை. உள்நாட்டு எரியூட்டுப் பொறியின் உதவியுடன் விவசாயத் துறையில் பல புரட்சிகரமான திட்டங்கள் உருவாக்கப்பட்டு, தொன்றுதொட்டு, மனித ஆற்றலால், மேற்கொள்ளப் பட்டு வந்த விவசாயப்பணிகள், பலதரப்பட்ட நவீன இயந்திரங்களின் உதவியால் விரைவாகவும், வெற்றிகரமாகவும் முடிக்கப்பட்டு பலமடங்கு உற்பத்தியும் பெருக்கப்பட்டது. தற்போது வேளாண் குடிமக்களால், அதிகமாகப் பயன்படுத்தப்பட்டு வரும் சில வேளாண் கருவிகள் மற்றும் இயந்திரங்கள் ஆகியவை குறித்து கீழே விவரிக்கப்பட்டுள்ளது.

1. இழுவை இயந்திரம்[27]

காட்டு மரங்களை வெட்டியும், அலையலையான மேடுபள்ளங்கள் உடைய பகுதிகளை சமப்படுத்தி, சீர்திருத்தம் செய்து, அதிக நிலங்களை சாகுபடிக்குக் கொண்டு வரவும் இழுவை இயந்திரங்கள் பயன்படுத்தப் படுகின்றன. நிலங்களை ஆழமாக உழுது பயன்படுத்தி, கரைகட்டி மற்றும் அடுக்கு வரிசையாக உருவாக்கிடவும் அவற்றை வேளாண் குடிமக்கள் பயன்படுத்துகிறார்கள். இழுவை இயந்திரங்களைக் கொண்டு, நிலங்களை அதிக அளவில் ஆழமாகவும், அகலமாகவும் உழுது சாகுபடி செய்ய இயலும். நிலங்களை உழுது நிலங்களிலுள்ள மண் கட்டிகளை உடைத்து, சீர்திருத்தி களிமண்ணையும், மணலையும் கலந்து, பிசைந்து குழைச்சேராக்கி மக்கிபோன எரு, நிலவளச்சத்து ஆகியவற்றுடன் மிதித்துத் துவைத்து நிலங்களை மிக விரைவில் சாகுபடிக்கு இலாயக்கான நிலைக்கு இழுவை இயந்திரங்களின் உதவியால் கொண்டு வரப்படுகிறது. நிலச்சமன் பொறிகளால், நிலங்களை சமப்படுத்துதல், கரை கட்டுதல் புதிய நிலங்களை சீர்திருத்தம் செய்தல், மண் அரிப்பு நிலங்களை சமப்படுத்துதல், அரித்தோடிய நிலங்களை சீர்படுத்தி பள்ளங்களை நிரப்புதல், வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஒதுக்கித் தள்ளப்பட்ட மண்ணை சமப்படுத்தி சரிசெய்தல், ஏரிகளை ஆழப்படுத்துதல், ஏரிகளிலும் மற்றும் ஊற்று வாய்க்கால்களிலும் உள்ள வண்டல் மண்ணை அகற்றுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப் படுகின்றன.

மாவட்டத்தில் பயன்படுத்தப்படும், பழையவகை வேளாண் கருவிகள் மற்றும் நவீன கருவிகள் ஆகியவற்றின் விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன :

தொடர் எண்.	*கையால் இயங்கப்பெறும் கருவிகள்*	*புறப்பகுதி*	*நகர்ப் புறம்*	*மொத்தம்*
1.	துளைப்புப்பொறி (விதை/உரம்)	27	-	27
2.	துளைப்புப்பொறி (விதை)	18	-	18
3.	வைக்கோல் வெட்டும் இயந்திரம்	505	5	510
4.	தெளிவாளி	248	33	281
5.	தூசி துடைக்கும் துணி	8	-	8

தொடர் எண்.	கையால் இயங்கப்பெறும் கருவிகள்	புறப்பகுதி	நகர்ப் புறம்	மொத்தம்
	மாடுகள் இயக்கும் கருவிகள் / இயந்திரங்கள்			
1.	மரத்தினாலான ஏர், கலப்பை	15019	11535	26554
	இரும்பு ஏர் / கலப்பை			
அ)	மண்ணை கிளறும் கருவி	385	52	437
ஆ)	மண் கடைசல் பொறி	159	20	179
இ)	வட்டத்தகட்டாலான மண்கட்டி உடைக்கும் கருவி	48	3	51
ஈ)	துளைப்புப்பொறி (விதை/உரம்)	3	-	3
உ)	துளைப்புப்பொறி (விதை)	32	-	32
ஊ)	மண் சரிமட்டக் கருவி	4042	100	4142
எ)	நஞ்சை நிலத்தை மேம்படுத்த பயன்படும் கருவி	7422	39	7461
ஏ)	புடைக்கும் பொறி	17	17	34
ஐ)	மாட்டு வண்டி	1641	93	1734
ஒ)	கரும்பு பிழியும் கருவி	1	-	1

தொடர் எண்.	கையால் இயங்கப்பெறும் கருவிகள்	புறப்பகுதி	நகர்ப் புறம்	மொத்தம்
	பயிர் பாதுகாக்கும் கருவி			
அ)	மின்விசையினால் இயங்கும் தெளிவாளி மின்விசையினால் இயங்கும் மற்றும் இழுவை இயந்திரத்தினால் இயங்கும் கருவிகள்	9	-	9
அ)	உழுசாலில் மண்ணைப் பெயர்த்துத் தள்ளும் முளைப்பலகை	1	-	1
ஆ)	வட்டத் தகட்டாலான மண் கட்டியுடைக்கும் கருவி	1	-	1
இ)	இழுவை இயந்திரம்	8	-	8[28]

கன்னியாகுமரி வேளாண் பொறியியல் மற்றும் சேவை கூட்டுறவு சங்கம்

கன்னியாகுமரி வேளாண் பொறியியல் மற்றும் சேவைக் கூட்டுறவு சங்கமானது, அகஸ்தீஸ்வரம் வேளாண் சேவை மையம் மற்றும் தோவாளை வேளாண் சேவை மையம் ஆகிய இரண்டையும் இணைத்து, 1981-ம் ஆண்டு நிறுவப்பட்டது. இச்சங்கம் பணியாற்றும் வரையறுக்கப்பட்ட பரப்பளவு எல்லை, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள வருவாய் கிராமங்களடங்கியதாகும் (இது தமிழ்நாடு வேளாண் பொறியியல் மற்றும்

சேவை கூட்டுறவு கூட்டிணைக்கழகத்துடன் இணைந்ததாகும்). இச்சங்கம், ஒரு பங்குத்தொகை ரூ.10/- வீதத்தில், 355 உறுப்பினர் களுடன், ரூ.17330/- பங்குத்தொகை முதலீட்டைக் கொண்டதாகும்.

இச்சங்கத்தின் அடிப்படை நோக்கங்கள் பின்வருமாறு:[29]

அ. இழுவை இயந்திரங்கள், நீர் வாங்கு குழாய்கள், மின் ஆற்றல் கருவிகள், எண்ணெய் இயந்திர நீர் வாங்கு குழாய்கள், துளைப்புப் பொறிகள் மற்றும் நிலச்சமன் பொறிகள் போன்ற வேளாண் கருவிகள் மற்றும் இயந்திரங்களை இயங்கச் செய்தல் மற்றும் பழுது பார்த்தல் ;

ஆ. உறுப்பினர்களின் தேவைக்கேற்ப, வேளாண் கருவிகள் மற்றும் இயந்திரங்களையும், இழுவை இயந்திரங்களையும் வாடகைக்கு அமர்த்ததுல் ;

இ. சங்கத்திற்குத் தேவைப்படும் வேளாண் கருவிகள் மற்றும் இயந்திரங்களைப் பெறுதல், விற்றல், உற்பத்தி செய்தல் அல்லது இவற்றிற்கு முகவர்களாகப் பணியாற்றுதல் ;

ஈ. மண் பரிசோதனை உள்ளிட்ட, வேளாண்மை தொடர்புள்ள பல்வேறு தொழில் நுட்பப்பணியாற்றுதல் ;

உ. நீர்ப்பாசனம், நில மேம்பாடு மற்றும் நீர் மேலாண்மை தொடர்புள்ள பணியினை மேற்கொள்ளல் ;

ஊ. சரக்குச் சேமிப்பாளராக நியமிக்கப்பெற்று, கல்லெண்ணெய் (பெட்ரோல்), டீசல் எண்ணெய், மசகுப்பொருள் போன்றவை விற்பனை செய்தல்.

விதை நற்சான்றளித்தல் - கன்னியாகுமரி மாவட்டம்

விதை நற்சான்றளிக்கும் துறை, கோயம்புத்தூர் விதை நற்சான்றளிக்கும் இயக்குநரின் கண்காணிப்பில் இயங்கிவருகிறது. மாநில முழுமையும் அவரது கட்டுப்பாட்டிலடங்கியதாகும். அவரது நிர்வாகத்தின் கீழ், கன்னியாகுமரி மாவட்டம் முழுமைக்கும் பொறுப்பாக, நாகர்கோயிலில் ஒருவிதை நற்சான்றளிக்கும் அலுவலர் பணியாற்றி வருகிறார். அவர் திருநெல்வேலி விதை நற்சான்றளிக்கும் உதவி இயக்குநரின் மேலாண்மையில் பணியாற்றுகிறார். அரசு, மாவட்டத்தின் தனி விதை உற்பத்திசெய்யும் முகவர் நிலையிலுள்ளது. இம்மாவட்டத்தில் தனியார் துறையில் விதை உற்பத்தி செய்வோர் எவருமில்லை. நாகர்கோயிலில் ஒன்றும், தக்களையில் மற்றொன்றும் ஆக இரண்டு விதை உற்பத்தி மையங்கள் மாவட்டத்திலுள்ளன. இம்மையங்கள், ஒரு வேளாண் உதவி இயக்குநரின் கட்டுப்பாட்டில் இயங்கிவருகின்றன. இப்பணியினை மேற்கொள்ள, அவரிடம் போதுமான சார்நிலை அலுவலர்களும் பணியாற்றி வருகிறார்கள்.

இந்த விதை மையங்களில் நெல் மற்றும் பயறு வகை விதைகள், உற்பத்தி செய்யப்படுகின்றன. நெல் வகைகளில் ட்டி.கே.எம்.9., பொன்னி, ஐ.ஆர்.20., மற்றும் சாவித்திரி ஆகியவை முதன்மையானவை. பயறு

வகைகளில் ட்டி.9., ஏ.டி.ட்டி.2., உளுந்து ஆகியவை உற்பத்தி செய்யப்படும் வகைகளாகும். இந்த இரண்டு விதை மையங்களைத் தவிர, மூலதத்துவ விதைகளை உற்பத்தி செய்யும் மாநில விதைப்பண்ணை, திருப்பதி சாரத்தில் நிறுவப்பட்டுள்ளன. இவ்விதைப்பண்ணை, ஒரு வேளாண் அலுவலரின் (பண்ணை மேலாண்மை) கட்டுப்பாட்டில் இயங்கிவருகிறது.

விதை உருவாக்கம் செய்யும் அலகு

திருப்பதி சாரம், மாநில விதைப்பண்ணையில் ஒரு விதை உருவாக்கம் செய்யும் அலகு இயங்கி வருகிறது. இவ்வுருவாக்கம் செய்யும் அலகிற்கு, விதை சான்றளித்தல் இயக்குநர், ஒப்புதல் வழங்கி அலகு எண்.40 என இதற்குக் குறிப்பிட்டுள்ளார். இதுகாறும், விதை உருவாக்க செயல்முறை ஒரு சிறிய இயந்திரத்தின் உதவியினால் மேற்கொள்ளப் பட்டு வந்தது. தற்போது அதிக கொள்திறம் மற்றும் செயல் ஆற்றல் உள்ள இயந்திரம் இப்பணிக்கென நிறுவப்பட்டுள்ளது. விதைப்பண்ணை உழவர்கள், மாவட்டத்தின் பல இடங்களில், விதைகள் உற்பத்தி செய்யும் வாடிக்கைக்காரர்களாக இருக்கிறார்கள்.

நெல் மற்றும் பயறு வகைகளில் 1981-82 ஆம் ஆண்டு முதல் 1987-88 ஆம் ஆண்டு வரை சான்றளிக்கத்தகுந்த விதைகள் உருவாக்கம் செய்திட, பதிவுசெய்யப்பட்ட நிலப்பரப்பு விவரங்கள் பட்டியல்-1-ல் அளிக்கப் பட்டுள்ளன.

நெல் மற்றும் பயறு வகைகளில் 1981-82 ஆம் ஆண்டு முதல் 1987-88 ஆம் ஆண்டுவரை, உருவாக்கம் செய்யப்பட்டு சான்றளிக்கப் பட்ட விதைகளின் அளவு அதிக விவரங்கள் பட்டியல்-2 மற்றும் 3-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

1983-84 முதல் 1988-89 வரை, மாதிரி விதைகள் பரிசோதனை செய்யப்பட்ட விவரங்களை பட்டியல்-4-ல் காணலாம்.

பட்டியல் - 1

அ. சான்றளிக்கத் தகுந்த விதைகள் உருவாக்கம் செய்திடப் பதிவு செய்யப்பட்ட நிலப்பரப்பு விவரங்கள்

(1981-82 முதல் 1987-88 வரை எக்டேரில்)

பயிர்	1981-82	1982-83	1983-84	1984-85	1985-86	1986-87	1987-88
நெல்	41.78	94.48	76.62	144.73	104.45	68.57	61.20
பயறு வகைகள்	3.98	35.64	8.56	58.80	61.80	21.19	17.60
மொத்தம்	45.76	130.12	88.18	203.53	166.25	89.76	78.80

(விதை சான்றளித்தல் இயக்குநர், கோயம்புத்தூர், அறிக்கை நாள் 29.8.1988)

பட்டியல் - 2

ஆ. உருவாக்கம் செய்யப்படும் விதைகளின் அளவு
(மெட்ரிக் டன்னில்)

பயிர்	1981-82	1982-83	1983-84	1984-85	1985-86	1986-87	1987-88
நெல்	120.900	200.738	182.322	301.757	205.369	189.839	118.816
பயறு வகைகள்	0.984	2.318	1.635	1.105	3.260	1.297	2.415
மொத்தம்	121.884	203.056	183.957	302.862	208.629	191.136	121.231

பட்டியல் - 3

சான்றளிக்கப்பட்ட விதைகளின் அளவு
(மெட்ரிக் டன்னில்)

பயிர்	1981-82	1982-83	1983-84	1984-85	1985-86	1986-87	1987-88
நெல்	117.300	143.630	137.274	260.339	201.690	201.006	146.811
பயறு வகைகள்	0.984	-	1.635	1.105	2.525	1.292	1.276
மொத்தம்	118.284	143.630	138.909	261.444	204.215	202.298	148.087

பட்டியல் - 4

விதைப் பரிசோதனை ஆய்வுக்கூடம்
சோதனை செய்யப்பட்ட விதை மாதிரிகளின் எண்ணிக்கை

(ஆண்டு)	வழங்கீடு மாதிரிகளின் எண்ணிக்கை	பணித்துறைக்குரிய மாதிரிகளின் எண்ணிக்கை
(1)	(2)	(3)
1983-84	328	புள்ளிவிவரங்களில்லை
1984-85	300	137
1985-86	165	337
1986-87	79	302
1987-88	18	443
1988-89	1	128

கன்னியாகுமரி மாவட்டத்தில் உற்பத்தி செய்து வழங்கப்பட்ட விதைகளின் அளவு பற்றிய விவரங்கள்[30]

ஆண்டு		அளவு (மெ.டன்னில்)
1974-75	-	169.119
1975-76	-	171.068
1976-77	-	280.105
1977-78	-	211.725
1978-79	-	158.020

1979-80	-	165.917
1980-81	-	179.000
1981-82	-	178.000
1982-83	-	161.609
1983-84	-	350.000
1984-85	-	223.000
1985-86	-	284.392

பயிர்களுக்கு உரமூட்டல்

தாவரங்கள் நன்கு செழித்து வளர்ந்திட முறையாகப் பேணிக்காக்க வேண்டியுள்ளது. எனவே, உற்பத்தியைப் பெருக்கிட, பயிர்களுக்கு உரமூட்டுதல் அவசியமாகிறது. தொழில்கள் வளம் பெற, மூலப் பொருட்கள் எவ்வாறு இன்றியமையாதவையோ, அதேபோன்று மக்கிப்போன எரு, நிலவளச்சத்து ஆகியவை, விவசாயத்திற்குத் தவிர்க்க முடியாதவையாகின்றன. கூடுதலான வேளாண் பொருட்கள் உற்பத்தி செய்ய வேண்டியது அவசியமாகிறபடியால், தாவரங்களுக்கேற்ற ஊட்டச் சத்துக்களைத் தேவை யான அளவு மண்ணுடன் ஏதாவதொரு வடிவத்தில் சேர்க்கவேண்டியுள்ளது[31].

வேளாண்மை செய்வதால் ஏற்படும் நட்டத்தை ஈடுகட்ட நைட்ரஜன், பாஸ்பேட், பொட்டேஷ் போன்ற உரங்களை நிலத்திற்களிக்க வேண்டும். நிலத்தின் மண்வகை, விளைவிக்கப்படும் பயிர், பெய்த மழையின் அளவு போன்றவற்றைப் பொறுத்து, தேவைப்படும் உரத்தின் அளவினை நிர்ணயிக்க வேண்டியுள்ளது.

மாவட்டத்திலுள்ள வேளாண் குடிமக்களுக்கு, 1971-75ஆம் ஆண்டிலிருந்து, 1983-84ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்ட பல்வேறு வகைப்பட்ட உரத்தின் அளவு கீழே அளிக்கப்பட்டுள்ளது:

ஆண்டு	*நைட்ரேட் (என்)*	*பாஸ்பேட் (ம்பி)*	*பொடேஷ் (க்கே)*
	(மெட்ரிக் டன்னில்)		
1974-75	2878.017	1363.392	897.655
1975-76	5012.000	1680.000	1510.000
1976-77	3617.000	1580.000	1497.000
1977-78	3151.000	1560.000	1507.000
1978-79	2901.000	1091.000	1194.000
1979-80	3583.000	1277.000	1288.000
1980-81	3488.000	1201.000	1201.000
1981-82	3965.000	1276.000	1300.000
1982-83	5286.000	1708.000	1516.000
1983-84	4083.000	1599.000	1633.00

ஒரு எக்டேர் நிலத்திற்குச் சராசரியாகப் பயன்படுத்தப்பட்ட நைட்ரேட், பாஸ்பேட் மற்றும் பொட்டாஷ் ஆகியவற்றின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன[32].

ஆண்டு	நைட்ரேட் (என்)	பாஸ்பேட் (ப்பி)	பொடேஷ் (க்கே)
	(கிலோவில்)		
1974-75	32.5	15.0	10.0
1975-76	55.0	20.0	17.5
1976-77	51.8	22.50	12.5
1977-78	38.8	19.20	18.5
1978-79	36.8	13.4	14.7
1979-80	44.1	15.7	15.8
1980-81	42.9	14.7	14.7
1981-82	48.8	15.7	16.0
1982-83	65.10	21.0	18.6
1983-84	50.2	19.7	20.1

1975-76ஆம் ஆண்டு முதல் 1985-86 ஆம் ஆண்டு முடிய கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள வேளாண் குடிமக்களுக்கு வழங்கப் பட்ட பல்வேறுவகைப்பட்ட உரங்களின் அளவுகள் கீழே கண்ட பட்டியலில் அளிக்கப்பட்டுள்ளன:[33]

அளவு (மெ. டன்னில்)

ஆண்டு	நைட்ரேட் (என்)	பாஸ்பேட் (ப்பி)	பொடேஷ் (க்கே)
(1)	(2)	(3)	(4)
1975-76	5012	1680	1510
1976-77	3671	1580	1497
1977-78	3151	1560	1507
1978-79	2991	1091	1194
1979-80	3583	1277	1288
1980-81	3488	1201	1201
1981-82	3965	1276	1300
1982-83	5286	1708	1516
1983-84	4083	1802	1633
1984-85	4302	1802	1903
1985-86	4733	1757	2080

வேளாண்மை நோய்கள்

பூச்சிகள், தாவர நோய்கள் மற்றும் களைகள் ஆகியவற்றால், பயிர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. இதனால், விளைச்சல் குறைந்து, பயிரின் தரமும் வெகுவாக ஊறுபடுகிறது. தானியங்கள் வாடி வதங்குவதும், பெரிதும் சுருங்குவதும், பயிரின் தரம் ஊறுபடுவதற்குக் காரணமாகிறது. புழுப்பூச்சிகள், பழங்கள் மற்றும் காய்கறிகளின் நிறம் மாறி, அவற்றின் தூய்மை கெடுகிறது.

மாவட்டத்தில் 1974-75ஆம் ஆண்டு முதல், 1983-84 ஆம் ஆண்டு வரை, வழங்கப்பட்ட தாவரப் பாதுகாப்பு வேதியியல் சார்ந்த பொருட்களின் அளவு கீழேயுள்ள பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ளது:

ஆண்டு	*தூள் வடிவில்* (மெ.டன்னில்)	*திரவ வடிவில்* (லிட்டரில்)
1974-75	52.0	8377.7
1975-76	107.9	8675.1
1976-77	43.8	2657.1
1977-78	48.68	3441.4
1978-79	68.22	2337.0
1979-80	74.5	2604.3
1980-81	150.6	2187.7
1981-82	206.8	2415.1
1982-83	142.163	2132.200
1983-84	538.644	8843.500

பொதுவாக, முதல் போக பருவத்தில், பாதி உலர்ந்த மற்றும் நஞ்சை நிலங்களில், நெல் நாற்று நடவு செய்த நிலையில், பூச்சி மற்றும் நோய்களின் தாக்குதல் மிகவும் குறைந்த அளவே உள்ளது. எனினும், பூச்சிகள் முட்டைப்புழுக்கள் மற்றும் பலதரப்பட்ட செடிகளையரிக்கும் பூச்சி வகைகள் ஆகியவையும் பல பயிர்களில் கல்குளம் மற்றும் விளவங்கோடு வட்டங்களின் சில இடங்களில், முதல் போக பருவத்திலேயே காணப்படுகின்றன. விளவங்கோடு வட்டத்தில், பயிர்கள் வாடிக்கருகிப்போகும் நோயும் காணப்படுகிறது.

இரண்டாம் போக பருவக்காலத்தில் பயிரின் நடுப்பகுதியில் பூச்சி தொளையிட்டு செல்லும் நோயும், இலை சுருட்டி நோயும், நெல் பயிரிடப்படும் எல்லாப்பகுதிகளிலும் காணப்படுகின்றன. நெல் பயிரிட மிகவும் ஏற்ற தட்ப, வெட்ப நிலையுடைய கல்குளம் மற்றும் விளவங்கோடு வட்டங்களில் நெற்பயிரில், பயிர்கள் வாடிக்கருகும் நோயும், குடற்புழுவி

னால் ஏற்படும் நோயும், நுரையீரல் புழுவினால் ஏற்படும் நோயும் பயிர்களைத் தாக்குகின்றன.

நோய்தடுப்பு முறைகளைப் பொறுத்தவரையில், பேரத்தியான், எண்டோசல்ஃபான் மற்றும் ஈக்காலக்ஸ் போன்ற பூச்சி மருந்துகள், பூச்சிகளைக் கட்டுப்படுத்த தெளிக்கப்படுகின்றன. அதேபோன்று, உறினோஸான், டீத்தேன் ஆகிய மருந்துகள் காளான் நோயினின்றும் பயிர்களைக் காத்திட தெளிக்கப்படுகின்றன. மாவட்ட முழுமையும் நடத்தப்பெற்றுவரும் வேளாண் விரிவாக்க மையங்கள், வேளாண் குடிமக்களுக்கு பயிர் பாதுகாப்பு வேதியியல் சார்ந்த மருந்துகளை வழங்குகின்றன.

வேளாண் மையங்கள்

மாவட்டத்தில், கீழ்க்குறிப்பிட்ட இடங்களில் அவற்றினெதிரே கண்டவாறு வேளாண் மையங்கள் இயங்கி வருகின்றன :

1. மாநில விதைப்பண்ணை, திருப்பதிசாரம்
2. மாதிரி பழத்தோட்டம், கன்னியாகுமரி
3. மிளகு நாற்றுப்பண்ணை, பேச்சிப்பாறை
4. அன்னாசிப்பழ நாற்றுப்பண்ணை, பேச்சிப்பாறை
5. நெல் செய்முறை ஆய்வு நிலையம், திருப்பதிசாரம்

வேளாண் ஆய்வு நிலையம், திருப்பதிசாரம்

திருப்பதிசாரத்திலுள்ள வேளாண் ஆய்வு நிலையம், 1976ஆம் ஆண்டு துவங்கப்பெற்றது. மார்ச் திங்கள் 31, 1981 வரை அது வேளாண்துறை இயக்குநரது கட்டுப்பாட்டிலிருந்தது. 1981ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ந் தேதி இந்நிலையம் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டது.

பண்ணை, நாகர்கோயிலுக்கு ஏழு கிலோ மீட்டருக்கு கிழக்கே, அமைந்துள்ளது. பண்ணையின் மொத்தப் பரப்பளவு 7.15 எக்டேராகும்.

மண்

இங்குள்ள மண்வகை, களிச்சேற்று வண்டல் மண்ணாகும். மண்ணின் **ப்பி.எச்.** 7.5 லிருந்து 7.9 வரை மாறுபடுகிறது. இம்மண்ணி லுள்ள நைட்ரஜன் உட்பொருள் மிகவும் குறைந்த அளவேயாகும். இவற்றிலிருக்கும் பாஸ்ஃபேட் மற்றும் பொடாஷ் ஆகியவை இடைத்தர அளவாகும்.

தட்ப, வெட்ப நிலை

ஆண்டு சராசரி மழையளவு 745 மில்லி மீட்டராகும். அதிக அளவு, குழ்நிலைக்குரிய தட்ப, வெட்ப நிலை 25^{0} சென்டிகிரேடிலிருந்து 30^{0} சென்டிகிரேடு வரையிலானது. ஈரம் 50 முதல் 100 விழுக்காடு வரை மாறுபடுகிறது.

பயிர்கள்

முதல்போக பருவத்திலும், இரண்டாம் போகத்திலும் நெற் பயிர் மட்டும்தான் பயிரிடப்படுகிறது. முறையே (கன்னிப்பூ மற்றும் கும்பப்பூ) கோடைப் பருவத்தில் நெல் அறுவடை செய்யப்பட்ட நடப்புத்தரிசு நிலங்களில், பயறு வகைகள் பயிரிடப்படுகின்றன. மழைநீரின் உதவியால் சாகுபடி செய்யப்படும் நிலங்களில் தென்னை பயிரிடப்படுகிறது.

செயல்முறையிலுள்ள திட்டங்கள்

1. கன்னியாகுமரி மாவட்டம், திருப்பதிசாரத்தில் வேளாண் ஆராய்ச்சி நிலையம் நிறுவப்படுவதற்கான திட்டம்.
2. பேச்சிப்பாறையில் மண்டல ஆய்வு நிலையம் மற்றும் திருப்பதி சாரத்தில் துணை நிலையம் ஏற்படுத்துதலும், அவற்றை வலுவூட்டலும், தேசிய வேளாண் ஆய்வுத்திட்டம் வகுத்தலும்.
3. தென்னை வேர் நோய் அழிக்கும் திட்டம்

முடிவுற்ற திட்டம்

நெல்லுக்கு, வெள்ளை நிற நீண்டுருண்ட வடிவுடைய புழுவகை யினால் ஏற்படும் நோயினை ஒழிக்கும் திட்டம்.

சாதனை

அ. பயிர் வளர்ச்சி

1. வெளியிடப்பட்ட அரிசி வகைகள்

1. ட்டி. ப்பி.எஸ்.1.

விழுக்காடு	.. ..	ஐ.ஆர்.8/கட்டிசம்பா
காலவரை	.. ..	110 முதல் 115 நாட்கள் வரை
பருவம்	.. ..	கன்னிப்பூ (கார்)

சிறப்பியல்புகள்

சிறப்பு பெரிய அரிசி, நேரடி சாகுபடிக்கும், நாற்று நட்டு சாகுபடி செய்யும் நிலைக்கும் ஏற்றது. வறட்சி நிலையினைத் தாங்கிக்கொள்ளும் சிறப்பியல்புடையது.

வெளியிடப்பட்ட ஆண்டு : 1985

2. ட்டி. ப்பி.எஸ்.2.

விழுக்காடு	.. ..	ஐ.ஆர்.26/ஸி.ஓ.40
காலவரை	.. ..	125 முதல் 130 நாட்கள் வரை
பருவம்	.. ..	கும்பப்பூ (பிஷாணம்)
சிறப்பியல்புகள்	.. ..	வெள்ளை பெரிய நெல் ; காற்றில் உதிராத தன்மையுடையது.

வெளியிடப்பட்ட ஆண்டு .. 1987

நல்ல எதிர்காலமுள்ள நெற்பயிர் வகைகள்

அ. குறுகிய காலப்பயிர்

(அ.1.) பாதி உலர்ந்த நிலத்தின் நிலை

ஏ.எஸ்.25370

விழுக்காடு	.. ..	ஏ.எஸ்.டி.1/இரும்பு 297
காலவரை	.. ..	110 நாட்கள்
சிறப்பியல்புகள்	.. ..	இடைத்தரமான, வளமற்ற தானியம் (வெள்ளை நெல்).

ஏ.எஸ்.26556

விழுக்காடு	.. ..	(ஐ.இ.ட்டி.5233/ஐ.ஆர்.) 2153-26-3-5-2).
காலவரை	.. ..	105 நாட்கள்
சிறப்பியல்புகள்	.. ..	சிவப்பு நெல் - வறட்சி நிலையினைத் தாங்கிக் கொள்ளும் சிறப்பில்புடையது.

(அ.2.) ஈரக்கசிவு நிலை (நஞ்சை நில நிலை) (ஏ.எஸ்.25370)

விழுக்காடு	.. ..	ஏ.எஸ்.டி.1/இரும்பு.297
காலவரை	.. ..	110 நாட்கள்
சிறப்பியல்புகள்	.. ..	இடைத்தரமான, வளமற்ற தானியம் (வெள்ளை நெல்)

(அ.3.) இடைத்தரமான காலவரை (ஏ.எஸ்.37343)

விழுக்காடு	.. ..	ஏ.டி.14185 / ஐ.ஆர்.50
காலவரை	.. ..	120 நாட்கள்
நெல்	.. ..	வெள்ளை

ஏ.எஸ்.38559

விழுக்காடு	.. ..	ஐ.ஆர்.36/ஏ.எஸ்.டி.1
காலவரை	.. ..	120 நாட்கள்
நெல்	.. ..	வெள்ளை

(அ.4.) நீண்ட காலவரை - ட்டிபி. 4121

விழுக்காடு	.. ..	சிஓ.25 சி.ஓ.40
காலவரை	.. ..	160 முதல் 165 நாட்கள்

(அ.5.) 'இலா' சாகுபடி

நெல் சி.ஆர்.1009 (பொன்மணி)

ஐ.இ.ட்டி.5656 மற்றும் சி.ஓ.42 ஆகிய ரகங்கள், நல்ல மகசூல் அளிப்பவையாயுள்ளன.

ஆ. பயிர் மேலாண்மை

1. பாதி உலர்ந்த நிலங்களில் பயிரிடப்படும் நெற் பயிரினூடே களையினைக் கட்டுப்படுத்துதல்

விதைத்த எட்டாம் நாளில், மண்ணில் ஈரக்கசிவு இருக்கையில், எக்டேருக்கு இரண்டு கிலோ வீதம் "புடாச்லர்" என்ற மருந்து, பயிர் நிலத்தில் தெளிக்கப்படுகிறது. இம்மருந்து வளரத்தொடங்கும் களையினைக் கட்டுப்படுத்துகிறது.

2. நெல் நாற்று நடப்பட்ட நிலங்களில் களையினைக் கட்டுப்படுத்துதல்

நடவு முடிந்த மூன்று அல்லது ஐந்து நாட்களில், ஒரு எக்டேருக்கு ஒரு கிலோ வீதம், "புடாச்லர்" என்ற மருந்து, நிலத்தில் தெளிக்கப்படுகிறது.

3. பாதி உலர்ந்த நிலங்களில் நெல் விதை தெளிக்கும் அளவும், தெளிக்க வேண்டிய உரத்தின் அளவும்

ட்டி.ப்பி.எஸ் 1 ரக நெல்லிற்கு, ஒரு எக்டேருக்கு 100 கிலோ வீதம் நெல் விதையும், ஒரு எக்டேருக்கு 75 $^{நை}$, 45 $^{பாஸ்}{}_{2}$, 0_{5} மற்றும் 60 $^{பொ}{}_{2}$கிலோ ஆகிய உரங்கள் உகந்தவையாகும்.

4. நெல் நாற்று நடப்படும் நிலங்களில், நடுவதற்குத் தேவைப்படும் நாற்றுகளின் எண்ணிக்கையும், தேவைப்படும் உரத்தின் அளவும்

ஒரு எக்டேர் நிலப்பரப்பளவிற்கு, 20 x 10 சென்டிமீட்டர் இடைவெளியுள்ள பரப்பளவிற்கு ஒரு ட்டி.ப்பி.எஸ்2 ரக நெல் நாற்று வீதம், மொத்தம் 50 நாற்றுகள் தேவையெனவும், ஒரு எக்டேருக்கு 100 $^{நை}$, 25 $^{பாஸ்}{}_{2}$, 0_{5} மற்றும் 50 $^{பொ}{}_{2}$ கிலோ உகந்தவையெனவும் கண்டறியப்பட்டுள்ளது. 5 சி.ஆர்.1009 ரக நெல்லிற்கு (பொன்மணி) துவக்கநிலை, உழுது பயன்படுத்தும் நிலை, பயிர்வெளிவரும் நிலை, ஆகிய பல்வேறு கட்டங்களில், நைட்ரஜன், பிரித்து நிலத்தில் தெளிக்கப்படுகிறது.

இ. பயிர் பாதுகாப்பு

நீண்டுருண்ட வடிவுடைய புழுவகைகளைக் கட்டுப்படுத்தும் முறை

நெற்பயிரில் வெள்ளை நுனிப்பகுதியுடைய நீண்டுருண்ட வடிவுடைய புழு வகைகளைக் கட்டுப்படுத்தவும், அப்புழுக்களைத் தடுக்கவும் தேவையான பரிந்துரைகள் :

(அ) நெல் அறுவடையான பின்னர் வயலிலுள்ள வைக்கோலின் கட்டைப்பகுதி மற்றும் எஞ்சியவற்றை எரித்தல். (இதனால் அறுவடையான நிலத்திலிருக்கும் புழுப்பூச்சிகள் இறக்கக்கூடும்).

(ஆ) விதைகளிலுள்ள நச்சுத்தன்மையை நீக்கிட, தொடர்ந்து இரண்டு நாட்களுக்கு காலை 10.00 மணியிலிருந்து பிற்பகல் 4.00 மணிவரை மொத்தம் 12.00 மணிநேரம் விதைகளை சூரிய வெப்பத்தில் காயவைத்தல்.

(இ) நிலத்தை உழுது பயன்படுத்தும் நேரத்தில், அதிக அளவு ஈரக்கசிவிலும், நனைந்த நிலையிலும் இருந்தால், நோய் தடுக்கும் மருந்து தெளிக்கப்படுகிறது. க்ளோர்பைரிஃபாஸ் 20 இ.சி. என்ற மருந்து ஒரு எக்டேருக்கு 1.25 கிலோ என்ற அளவிலும் அல்லது மோனோக்ரோட்டோஃபாஸ் 36 இ.சி ஒரு எக்டேருக்கு 500 மில்லி கிராம் என்ற அளவிலும் அல்லது க்வொய்நால்ஃபாஸ் 25 இ.சி. ஒரு எக்டேருக்கு / கிலோ என்ற அளவிலும், நிலத்தில் தெளிக்கப்படுகிறது.

(ஈ) எதிர்ப்பு சக்தியுள்ள வகை நெல்விதைகளான, ட்டி.ப்பி.எஸ்.1 மற்றும் ட்டி.ப்பி.எஸ்.2 ஆகியவற்றை பயிரிடுதல்.

பயிர்களைப் புழு மற்றும் பூச்சிகள் அழிப்பதினின்றும் கண்காணித்தல்

கும்பப்பூ பருவத்தில் (பிஷாணம்), இலை சுருட்டிப்புழுக்கள், வெட்டுப்புழுக்கள், தொளையிடும் புழுக்கள் மற்றும் பயிர் அரிக்கும் பூச்சிகள் ஆகியவை துவக்க நிலையிலேயே நெற்பயிரைத் தாக்குகின்றன. நெற்பயிருக்கு எலிகளாலும் சேதம் விளைவிக்கப்படுகிறது. நெற்பயிரைக் கருகடிக்கும் நோயும் காணப்படுகிறது.

2. தென்னை

தஞ்சாவூர் "வதக்கு" நோய் மேலாண்மை

தஞ்சாவூர் "வதக்கு" நோய் குறித்து, கொள்ளை நோய் ஆராய்ச்சி மேற்கொண்டதின் ஒவ்வொரு ஆண்டும் குறுதி வடியும் வட்டப் பட்டைகளின் எண்ணிக்கை உயர்ந்துகொண்டே வந்தது. இதனைத் தொடர்ந்து, பனையிலும் குறுதி வடியும் வட்டப் பட்டைகளின் உயரமும் அதிகரித்துக்கொண்டே வந்தது. இந்நோய் ஆகஸ்ட் மாதம் முதல் நவம்பர் முடிய மிதமாக இருந்தது. இந்நோய்கள் எந்தப் பகுதிகளில் சற்றுக் குறைவாகப் பாதித்ததோ, அப்பகுதிகளில் நோயைக் கட்டுப்படுத்த, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பனைகளில், நோய் துவக்க நிலையிலிருக்கும் பகுதிகளில், மிகவும் சக்தி வாய்ந்ததான நோய் உண்டாக்கும் நுன்மங்களை அழிக்கும் திறனுள்ள, வேதியியல் சேர்மத்தைக் கொண்டு, நோய் குணப்படுத்தும் முறை கையாளப்படுகிறது.

வேப்பம் புண்ணாக்கைத் தனியாகவும் அல்லது கார்பென்டைஸின் அல்லது கார்பாக்ஸின் போன்ற காளான் கொல்லியுடன் கலந்தும் நிலத்தில் தெளித்தால், நோயை நன்முறையில் தடுக்க இயலும். தேவைப்படும் பொழுதெல்லாம் இம்முறை கையாளப்படுகிறது.

இதுகாறும், ஆய்வு செய்து சோதனை செய்யப்பட்ட பல வழிமுறைகளான மண்ணில் மருந்தினைக் கலத்தல், பயிரின்

உடற்பகுதியில் ஊசியின் மூலம் மருந்து ஏற்றல் மற்றும் வேர் மூலம் தீனியளித்தல் ஆகியவற்றில் வேர் மூலம் தீனியளிக்கும் முறையே நற்பயனளிக்கக் கூடியதாகத் தெரிகிறது.

வேர் வதக்கு நோய் பரவும் பாங்கு

வேர் வதக்கு நோய் பரவும் பாங்கு குறித்து ஆய்வு மேற்கொண்டதில், இந்நோய் ஒரு முறையான வகையில் பரவுவதாகத் தெரியவில்லை. இது ஒரு மிதநிலையை அடைவதற்கு நோய் தோன்றிய ஆண்டிலிருந்து, ஈராண்டுகளும், முற்போக்கு நிலையை அடைவதற்கு ஐந்தாண்டுகளும் ஆகின்றன. வேர் வதக்கு நோயினால் மகசூல் சேதம், 57.3 விழுக்காட்டிலிருந்து 77.2 விழுக்காடாகுமென கணக்கிடப் பட்டுள்ளது.

ஆய்வு மற்றும் விரிவாக்கப் பிரதிநிதிகள்

"பயிற்சி மற்றும் பார்வையிடுதல்" மண்டல தொழில் ஆலைகள் மற்றும் மண்டல ஆலோசனைக் குழு ஆகியவற்றின் பருவ காலக் கட்டங்கள் மூலம் ஆய்வு மட்டும் விரிவாக்கப் பிரதிநிதிகளுடன் இணைப்பு ஏற்படுத்திக் கொள்ளப்படுகிறது. வேளாண் குடிமக்களின் கூட்டங்களும், பண்ணைகள் ஆலோசனைக் குழுக்களின் கூட்டங்களும், அவ்வப்போது நடத்தப்படுகின்றன. இவை வாழைக்கு உரமிடுவதை நடத்திக் காண்பித்தல், நெற்பயிர் கருகி, வாடுவதினின்றும் பாதுகாத்தல், தென்னையில் வேர் வதக்கு நோய் தாக்குவதைக் கட்டுப்படுத்துதல் மற்றும் மேற்கொள்ளப்படவிருக்கும் ஆய்வுகள் குறித்து விவாதித்தல் ஆகிய பணிகளைச் செய்து அவ்வப்போது எழும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்கின்றன.

ஆய்வு நிலையங்களைப் பார்வையிடுதல்

1. வேளாண் ஆராய்ச்சி நிலையத்தின் தலைவர் மற்றும் துணைப் பேராசிரியர்கள் 20.4.1988 நாளைய அறிக்கையின்படி, தேசிய வேளாண் ஆராய்ச்சித் திட்டப்பணியை ஆய்வு செய்ய, வேளாண் ஆராய்ச்சி நிலையத்தினை உலக வங்கிக்குழு உறுப்பினர்கள் பார்வையிட்டனர்.

2. கருகி வாடும் நோய் கண்ட நெற்பயிரை ஆய்ந்து, தொடர் நடவடிக்கை மேற்கொள்ள இந்நிலையத்தை வியட்நாமிலுள்ள விஞ்ஞானிகள் பார்வையிட்டார்கள் (20.4.1988 நாளைய அறிக்கையினைக் காண்க).

மாநில விதைப்பண்ணை, திருப்பதிசாரம்

தொழில்நுட்ப பணியாளர்களின் நேரடிக்கட்டுப்பாட்டிலும், மேலாண்மையிலும் தரமுள்ள மற்றும் சான்றளிக்கப்பட்ட விதைகள் வேளாண்துறை சார்பில், அதிக அளவில், உற்பத்தி செய்யப்படுகின்றன. அவ்விதைகள், விவசாயிகளால், தனியார் விதைப்பண்ணை உருவாக்கப்

பட்டு, பன்மடங்கு உற்பத்தியைப் பெருக்கும் நோக்கில், வட்டார அளவில், விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. இது மத்திய அரசின் மானியம் பெறக்கூடிய ஐந்தாண்டு திட்டங்களிலடங்கிய பல திட்டங்களில் ஒரு முதன்மையான திட்டமாகும்.

தமிழ்நாட்டிலுள்ள பழைய விதைப்பண்ணைகளில், திருப்பதி சாரம் மாநில விதைப்பண்ணை முதன்மையானதாகும். இது முந்தைய திருவாங்கூர் மாநில அரசால் கடந்த 1914ஆம் ஆண்டு துவங்கப்பெற்று, 1956ஆம் ஆண்டு கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டுடன் இணைக்கப் பட்டபோது, தமிழ்நாடு அரசிடம் ஒப்படைக்கப்பட்டது.

பரப்பளவு

பண்ணையின் மொத்த பரப்பளவு	.. ..	59.63 ஏக்கர்
நஞ்சை நிலங்கள்	.. ..	50.42 ஏக்கர்
சாலைகள், கட்டிடங்கள்	.. ..	8.91 ஏக்கர்
வேளாண் பள்ளியின் போரடிக்கும் தளம்	.. ..	0.30 ஏக்கர்

நிலை முதல் வளர்ச்சிக்கான முதலீடு

நிலத்தின் மதிப்பு	.. ..	ரூ. 3,53,000
மரங்களின் மற்றும் கிணறுகளின் மதிப்பு	.. ..	ரூ. 28,000
கட்டிடத்தின் மதிப்பு	.. ..	ரூ.1,65,000
மற்றவை	.. ..	ரூ. 35,000

பணியாளர் அமைப்பு

வேளாண் அலுவலர்	.. ..	1
உதவி வேளாண் அலுவலர்	.. ..	1
களிச்சான்று விளக்க அலுவலர்	.. ..	2
காவலாள்	.. ..	2

சாதனை

10 ஆண்டிற்கான சாகுபடி பரப்பளவு மற்றும் உற்பத்தி அளவு[34]

ஆண்டு	*சாகுபடி செய்யப்பட்ட பரப்பளவு (ஏ.செ.)*	*உற்பத்தி செய்யப்பட்ட விதை அளவு (மெ. டன்னில்)*
1980-81	104.79	106.310
1981-82	104.83	118.130
1982-83	104-87	128.120

1983-84	104.08	100.227
1984-85	100.80	109.776
1985-86	99.79	128.158
1986-87	60.67	85.075
1987-88	60.11	80.128

பயிரிடுதல் திறன்

ஆண்டு	சாகுபடி செய்யப்பட்ட பரப்பளவு			மொத்தம்	பயிரிடுதல் திறன் (விழுக்காடு)
	நெல்	பயிறு வகைகள்	நிலஉரம்		
1981-82	104.83	22.41	..	124.24	239%
1982-83	104.87	25.76	..	130.63	245%
1983-84	105.78	43.84	..	149.62	283%
1984-85	100.84	39.75	..	140.59	278%
1985-86	98.79	12.86	14.69	126.34	255%
1986-87	60.67	..	..	60.67	120%
1987-88	60.11	..	..	60.11	119%

புது நெல் வகை விதைகளை சோதனை செய்வதிலும், எந்த ஒரு குறிப்பிட்ட வகை, ஒரு குறிப்பிட்ட பகுதிக்கு ஏற்றதென அறிவுரை வழங்குவதிலும் இப்பண்ணை முதன்மையாக விளங்குகிறது. முக்கிய மாற்றியமைக்கத்தக்க சோதனைகள், உரம் சார்ந்த சோதனைகள் மற்றும் நிலங்களில் களைகளை அப்புறப்படுத்துவது குறித்த சோதனைகள், ஆகியவை பண்ணையில் நடத்தப்படும் இந்த சோதனைகளின் மகசூல் மாவட்ட அளவிலான சோதனை முடிவுகளுடன் ஒப்பிட்டு ஆய்வு செய்யப்படுகிறது.

இந்த மாநில விதைப்பண்ணை, பண்ணையில் உற்பத்தி செய்யப்படும் விதையினை சோதனை செய்து தொடர் நடவடிக்கை மேற்கொள்வது தவிர, தனியார் வேளாண்குடி மக்கள் உற்பத்தி செய்யும் விதைகளையும் சோதனை செய்கிறது. இப்பண்ணையில் ஆண்டுக்கு 350 மெ.டன் நெல் விதைகளை சோதனை செய்து சான்று அளிக்கின்றனர்.

மண் சோதனை ஆய்வுக்கூடம், நாகர்கோயில்

நாகர்கோயிலிலுள்ள, மண் சோதனை ஆய்வுக்கூடம் தனது பல்வேறு வகைப்பட்ட நடவடிக்கைகளைக் கடந்த 15.6.1973 முதல் துவக்கியது. இத்திட்டம், 29.5.1973 நாளைய 1328 எண். கொண்ட அரசாணையில் (வேளாண்துறை) துவக்கத்தில் வழங்கப்பட்டது. பின்னர், ஒவ்வொரு ஆண்டும் இத்திட்டம் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டம் தற்போது ஒரு உதவி மண் வேதியியல் வல்லுநரின் தலைமையில் செயல்முறைப்படுத்தப்படுகிறது.

திட்டத்தின் நோக்கங்கள்

1. வேளாண் குடிமக்களின் நிலங்களினின்று திரட்டப்பட்ட மண் மாதிரிகளை கூர்ந்தாய்ந்து, குறைந்த செலவில் நிறைந்த மகசூலைப் பெற தகுந்த உரங்களை அளிக்க பரிந்துரை செய்தல்;
2. வேளாண் குடிமக்களின் நிலங்களினின்று திரட்டப்பட்ட நீர் மாதிரிகளை பகுத்தாய்ந்து, பல்வேறுவகையான பயிர்களை விளைவிக்க, நீர்ப்பாசனத்திற்கு அவை தகுதியானவைதானா என அவற்றின் தரத்தை நிர்ணயித்தல் ;
3. இயற்கையிலேயே காடித்தன்மையுள்ள மண், காரத்தன்மையுள்ள மண் மற்றும் உப்பு கலந்த மண் ஆகிய பிரச்னையுள்ள மண் வகைகளை சீர்திருத்தத் தகுந்த நடவடிக்கையெடுத்தல் ;
4. மண் பரிசோதனை செய்து, அவ்வகை மண்ணிற்குப் பயிரின் எதிர்செயல் எவ்வாறுள்ளதென தொடர்புப்படுத்தி, அம்மண்ணிற்கு எவ்வகையான உரம் தேவையெனப் பரிந்துரை செய்ய, உரப்பரிசோதனையும் மேற்கொள்ளுதல் மற்றும் ;
5. விவசாய சமூகத்தினரிடம், மண் பரிசோதனைப் பணியின் முக்கியத்துவத்தை விளக்கி, அதன் பயனை அவர்கள் உணரச் செய்தல்.

திட்டத்தின் செயலாக்கம்

கடந்த 14 ஆண்டுகளாக இத்திட்டம் இயங்கி வருகிறது.

மாதிரிகளை கூர்ந்தாய்வு செய்ததில் ஆண்டுவாரியான சாதனை விவரங்கள்

ஆண்டு (1)	*குறியீடு (2)*	*சாதனை (3)*
1973-74	-	5,304
1974-75	12,000	12,406
1975-76	12,000	11,790
1976-77	12,000	10,503
1977-78	12,000	12,546
1978-79	12,000	12,644
1979-80	12,000	12,703
1980-81	12,000	14,273
1981-82	12,000	15,405
1982-83	10,800	10,554
1983-84	7,200	8,631

1984-85	12,000	12,057
1985-86	12,000	12,273
1986-87	12,000	12,172
1987-88	12,000	12,256

(உதவி மண் வேதியியல், வல்லுநர், மண் பரி சோதனை ஆய்வுக் கூடம், நாகர்கோயில், நாள் 22.11.1988)

பொதுவாக, இவ்வாய்வுக்கூடம் குறியீட்டை முழுமையாக எய்தியது. வேளாண் குடிமக்களின் நிலங்களினின்றும் திரட்டப்பட்ட மாதிரிகள் பகுத்தாய்வு செய்யப்பட்டு அவ்வாய்வின் முடிவின்படி தகுந்த இடங்கள் சுற்றுச்சார்பு நிலை மற்றும் தேவையான உரங்கள் பற்றிய பரிந்துரைகள் ஆகியவை வேளாண் குடிமக்களுக்கு அளிக்கப்பட்டன. அவர்களும், அவர்களது விருப்பத்திற்கேற்ப, பல்வேறு பயிர்களை நிர்ணயித்துக் கொண்டனர். பிரச்சினையுள்ள மண் வகைகளை ஈடுபடுத்த, அவ்வாறான மண் வகைகளைப் பயன்படுத்தி சீர்படுத்த ஆய்வுக்கூடம் அவ்வப்போது அறிவுரை வழங்கி வருகிறது.

இதுதவிர ஒரு நடமாடும் மண் பரிசோதனை ஆய்வுக்கூடம், உதவி மண் வேதியியல் வல்லுநர் ஒருவர் தலைமையில், 1980 ஆம் ஆண்டு முதல் இம்மாவட்டத்தில் இயங்கி வருகிறது. இவ்வாய்வுக் கூடத்தின் நோக்கமென்னவெனில் வேளாண் குடிமக்களிடமிருந்து கிடைக்கும் மாதிரிகளை அவ்விடத்திலேயே பரிசோதனை செய்து, உடனுக்குடன் முடிவினை வேளாண்குடி மக்களிடம் நேரிலேயே சேர்ப்பிக்கப்படுகிறது.

நடமாடும் மண் பரிசோதனை ஆய்வுக்கூடம், மாதிரிகளைக் கூர்ந்தாய்வு செய்தது தொடர்பான ஆண்டு வாரி சாதனை விவரங்கள்

ஆண்டு	குறியீடு	சாதனை
1980-81	6000	2614
1981-82	6000	4556
1982-83	14200	8746
1983-84	10800	11183
1984-85	18000	18038
1985-86	18000	18151
1986-87	18000	15375
1987-88	18000	18362

ஆய்வு நடவடிக்கைகள்

மண் மாதிரிகளைக் கூர்ந்தாய்வு செய்வது தவிர, பல்வேறு பயிர்களான நெல், தென்னை மற்றும் மரவள்ளி ஆகியவை தொடர்பாக 1974-75 ஆம் ஆண்டு முதல் இவ்வாய்வுக்கூடம் ஆய்வு சோதனைகளையும் நடத்திவருகிறது. வேளாண் குடிமக்கள் பல்வேறு துயர்களை மேற்

கொள்ளும்போது, அவற்றைத் துடைக்கவும் மற்றும் பயிரிடத் தேவையான தகுந்த உரங்களைத் தேர்ந்தெடுத்து அறிவுரை வழங்கவும், ஆய்வுப் பரிசோதனைகள் நடத்தப்பட்டன. நிலங்களில் எழும் பல்வேறு பிரச்சினைகள், மண்ணின் இக்கட்டான நிலை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஆய்வுப் பரிசோதனை மேற்கொள்ளப் பட்டன. விவசாயிகள் சந்திக்கும் பிரச்சினைகள் மற்றும் இக்கட்டான நிலைகளை முறியடித்து, அவர்கள் முன்னேறுவதற்கான வழி முறைகளை ஆய்ந்து தொடர் நடவடிக்கை மேற்கொள்ள இப்பரிசோதனைகள் வழிவகுத்தன. மொத்தத்தில், இவ்வாய்வுக் கூடம், அது துவங்கப்பட்ட காலத்திலிருந்து, அதனுடைய வாலாய நடவடிக்கையான மண் மாதிரி களைக் கூர்ந்தாய்வு செய்வது தவிர, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள உழவர் சமுதாயத்தினரின் பொருளாதார முன்னேற்றத்தைக் கருத்திற் கொண்டு பல்வேறு பயிர்கள் குறித்து 53 ஆய்வுப் பரிசோதனைகளை மேற்கொண்டுள்ளது.

தொடர் செயல் ஆய்வுகள்

ஆய்வுக் கூடத்தால், மண் பரிசோதனைத் தொடற்செயல் ஆய்வுகளும், மேற்கொள்ளப்பட்டது. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள, வட்டங்களிலடங்கிய கிராமங்களனைத்திலும் உழவர் குடிமக்களை சந்தித்து, அவர்களது நிலங்களிலின்றும் மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டன. அவை கூர்ந்தாய்வு செய்யப்பட்டு, அவர்களது நிலத்திலுள்ள மண்வளத்தையொத்து, உகந்த ரக உரங்களைப் பயன்படுத்த பரிந்துரை செய்யப்பட்டது. இம்மாதிரியான உரங்களைப் பயன்படுத்தும் முறை, பொதுவாக உகந்ததாக கருதப்பட்டது. இவ்வாய்வின் முதன்மையான நோக்கம் என்னவெனில், இவ்வகையான மண் பரிசோதனை நடவடிக்கைகளில் உழவர்களை ஈடுபடுத்தி மண் பரிசோதனையின் முக்கியத்துவத்தை அவர்களுக்கு சீரிய முறையில் உணர்த்துவதற்கே யாகும்.

காடிப்பொருள் கலந்த மண் மற்றும் காடித்தன்மையை எதிர்நின்று சமப்படுத்தும் பொருள் கலந்த மண் வகைகளை சீர்திருத்தம் செய்தல்

இம்மாவட்டத்தில் தீவிர மண் ஆய்வுப்பணி இன்னமும் முடிவுறவில்லை. கன்னியாகுமரி மாவட்டத்தில் நெல் பயிரிடப்பட்டுள்ள 60,000 ஏக்கர் நிலத்தில் மண் மாதிரிகள் கிடைக்கப்பெற்று, ஆய்வுக் கூடத்தில் பரிசோதனை செய்யப்பட்டதில், ஏறத்தாழ 10,000 ஏக்கர் நிலத்திலான மண்வகையின் எதிர்விளைவு, காடிப்பொருள் கலந்தவை யாகவே இருந்தது. பகுப்பாராய்ச்சியின் முடிவினை ஆதாரமாகக் கொண்டால், கல்குளம் மற்றும் விளவங்கோடு வட்டங்களிலுள்ள பெரும்பாலான நிலங்களும், அகஸ்தீஸ்வரம் வட்டத்திலுள்ள சிராமடம், வீரநாராயணமங்கலம், திட்டிவிளை மற்றும் திரிசனங்கோப்பு ஆகிய கிராமங்களிலுள்ள நிலங்களும் காடிப்பொருள் கலந்தவையாகவே உள்ளன. அதிக நெல் விளைச்சல் வேண்டுமெனில் தேவையான

சுண்ணாம்புச் சத்தின் அளவு ஏக்கருக்கு 2000 கிலோ கிராமாகும் (இவ்வாறு தொடர்ந்து ஐந்து முறை நெல் பயிரிடத் தேவையான அதாவது ஒரு ஏக்கருக்கு, ஒரு பயிருக்கு 400 கிலோகிராம் என்ற அளவில் கணக்கிடப்படுகிறது). சுண்ணாம்புச்சத்தின் விலைமதிப்பு ஒரு டன்னுக்கு ரூ.600/- ஆகும். ஆய்வுக்கூடத்தினால் மேற்கொள்ளப் பட்ட இவ்வகையான ஆய்வினை ஆதாரமாகக் கொண்டு, சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங்களின் அடிப்படையில் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள காடிப்பொருள் கலந்த மண்ணை செம்மைப்படுத்த தகுந்த பரிந்துரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

உப்பியல்புடைய மற்றும் காரப்பொருள் கலந்த மண்வகைகள்

உப்புக்கலந்த மண்வகைகளைப் பொறுத்த வரையில், அவ்வகையான மண் உள்ளப் பகுதிகள் மிகக் குறைவாகவே உள்ளன. ஆனால், காரப்பொருள் கலந்த மண் வகைகள், தோவாளை வட்டத்திலுள்ள செண்பகராமன் புதூர் கிராமம், அகஸ்தீஸ்வரம் வட்டத்திலுள்ள மூன்று கிராமங்கள் ஆகியவற்றில் சிறு பகுதிகளில் காரப்பொருள் கலந்த மண் வகைகள் காணப்படுகின்றன. அவ்விடங்களிலிருந்து பெறப்படும் மாதிரிகள் பகுப்பாராய்ச்சி செய்யப்பட்டு, அதனின்று பெறப்பட்ட விவரங்கள் அடிப்படையில், தகுந்த அளவு கனிக்கல் (ஜிப்ஸம்) மண்ணை செம்மைப்படுத்த பரிந்துரைக்கப்படுகிறது.

சிறப்புப்பணி

இவ்வாய்வுக்கூடம், பாளையங்கோட்டையிலுள்ள, மண் ஆராய்ச்சி மற்றும் நிலப்பயன்பாட்டு நிறுவனம், கன்னியாகுமரி மாவட்டம் தொடர்புள்ள மண் ஆய்வு குறித்த சிற்றேடும், மண் ஆய்வு நிலப்பட ஏடும் தயார் செய்தது. நிலப்பட ஏடு, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள நிலவளத்தரம் குறித்த மதிப்புள்ள தகவல்களை அளிக்கிறது. அது, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மண்வள தர நிலையினைப் பற்றிய விவரங்களை விஞ்ஞானிகள் அறிய ஒரு ஆதாரமாகத் திகழ்கிறது.

நீர் மாதிரிகள்

இவைதவிர, நீர் மாதிரிகளும் பகுப்பாராய்ச்சி செய்யப்பட்டு நீரின் தரமும் குறிப்பிட்டுக் காட்டப்படுகிறது.

எண்ணெய் வித்துக்கள்

கன்னியாகுமரி மாவட்டத்தில் தென்னையும், வேர்க்கடலையும் அதிகமாகப் பயிரிடப்படும் எண்ணெய் வித்துக்களாகும். சில பகுதிகளில், நெல் அறுவடை முடிந்து தரிசாகக் கிடக்கும் நிலங்களில், எள் பயிரிடப்படுகிறது. எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியைப் பெருக்கிட, எண்ணெய் வித்துக்கள் துறையினால் நல்ல பல திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன. கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி எண்ணெய் வித்துக்கள் மண்டலத்தின் ஒரு அலகாகும். அது ஒரு மண்டல வேளாண் துணை இயக்குநரின் தலைமையில் திருநெல்வேலியைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகிறது[35].

கன்னியாகுமரி மாவட்டத்தில், நாகர்கோவிலிலுள்ள (எண்ணெய் வித்துக்கள்) வேளாண் உதவி இயக்குநர், எண்ணெய் வித்துக்கள் துறைகளின் பல்வேறு திட்டங்களை செயல்முறைப் படுத்தி வருகிறார்.

நடைமுறையிலுள்ள திட்டங்கள்

1. எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியைப் பெருக்குதல் ;
2. கன்னியாகுமரி மாவட்டத்தில், தென்னை உற்பத்தியைப் பெருக்குதல்;
3. தென்னை வளர்ச்சிக்கு மகத்தான திட்டம் ;
4. விரிவான தென்னை வளர்ச்சித்திட்டம் ;
5. தென்னையில் கருந்தலையுடைய, கம்பளிப்பூச்சிகளைக் கட்டுப்படுத்தும் திட்டம் ;
6. கன்னியாகுமரி மாவட்டம், கேரள வேர் வதக்கு நோயை ஒழிக்கும் திட்டம் ;
7. தஞ்சாவூர் வதக்கு நோய் ஒழிக்கும் திட்டம் ;
8. காண்டாமிருக வண்டுகளைக் கட்டுப்படுத்தும் திட்டம் ; மற்றும்
9. தென்னை வளர்ச்சி வாரியத்தால், நிதியுதவியளிக்கப்படும் திட்டம்.

இத்திட்டங்களின் நோக்கங்களும், இதனால் உழவர் குடிமக்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் பல்வேறு சலுகைகள் குறித்தும் கீழே விவரிக்கப் பட்டுள்ளன. மேம்படுத்தப்பட்ட பல்வேறு பழக்கங்கள் குறித்து, உழவர் களுக்கு அவ்வப்போது பயிற்றுவிக்கப்படுகிறது. உழவர்களுக்கு உதவி செய்ய, முறைமை சான்று விளக்கங்கள், நடத்தப்பெறுகின்றன. அவர்களை ஊக்குவிக்க, ஊக்கமானியமாக விதைகள், உரங்கள் மற்றும் பயிர் பாதுகாப்பு வேதியியல் பொருள்கள் ஆகியவை சிறிய செயல்விளக்கங்கள் நடத்துவதற்காக வழங்கப்படுகின்றன.

2. ஒருங்கிணைக்கப்பட்ட மற்றும் விரிவானத் திட்டங்கள்

இத்திட்டத்தின் நோக்கம் என்னவெனில், தென்னை விளைச்சலை ஆதார ஆண்டான 1978இல் இருந்ததைவிட, ஒரு மரத்திற்கு ஐந்து காய்கள் வீதம் பெருக்கிடுவதேயாகும். பரிந்துரைக்கப்பட்ட அளவு உரத்தை அளித்திடவும், பரிந்துரைக்கப்பட்ட பயிர் பாதுகாப்பு நடவடிக்கை களைப் பின்பற்றவும், உழவர்கள் அவ்வப்போது பயிற்றுவிக்கப் படுகிறார்கள்.

3. தீவிர தென்னை வளர்ச்சித் திட்டம்

பரிந்துரைக்கப்பட்ட மற்றும் மேம்படுத்தப்பட்ட பல்வேறு பழக்கங் களான நிலவள எருச்சத்திடுதல், வேதியியல் சார்ந்த உரிய அளவு உரங்களிடுதல் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பின்பற்றுதல் ஆகியவை குறித்து உழவர்களுக்கு அறிவுரை வழங்கப்படுகிறது.

4. கருந்தலையுடைய கம்பளிப்புழுக்களை, உயிர்நூலைச் சார்ந்த முறைப்படி கட்டுப்படுத்துதல்

கருந்தலையுடைய கம்பளிப் புழுக்களைக் கைவசமுள்ள வேதியியல் சார்ந்த பொருள்களைவிட்டு கட்டுப்படுத்துவது என்பது உயிர்நூலைச் சார்ந்த முறைப்படி கட்டுப்படுத்துவது போன்று அவ்வளவு சிறந்த வழியல்ல. உயிர்நூலைச் சார்ந்த முறைப்படி கட்டுப்படுத்த, "பெதாலிட்ஸ்", "ப்ரோகோனிட்ஸ்" மற்றும் "பூலோஃபிட்ஸ்" போன்ற ஒட்டுயிர் கொல்லிகள் நாகர்கோவிலிலுள்ள ஒட்டுயிர்க்கொல்லிகள் இனப்பெருக்க நிலையத்தில், உருவாக்கப்படுகின்றன. பின்னர், அவை, கருந்தலையுடைய கம்பளிப்புழுக்களால் தாக்கப்பட்டுள்ள தென்னந்தோப்புகளுக்கு அனுப்பப்படுகின்றன. இம்மாதிரியான ஒட்டுயிர்க்கொல்லிகளை வழங்க, பணிக்கட்டணமாக ஒரு எக்டேருக்கு ரூபாய் இருபத்தைந்து என்ற விகிதத்தில் வசூலிக்கப்படுகிறது.

5. கன்னியாகுமரி மாவட்டத்தில், கேரள வேர் வதக்கு நோயினை ஒழித்தல்

"கேரள வேர் வதக்கு நோய்" என்ற நோயினால், தென்னை தாக்கப்படுகிறது. இந்நோய் பரவுவதைக் கட்டுப்படுத்த, தாக்கப்பட்ட இளந்தென்னை மரங்கள் அடையாளங்காணப்பட்டு, அழிக்கப்படுகின்றன. அவ்வாறு நோய் தாக்கப்பட்ட மரங்களை அப்புறப்படுத்த மரமொன்றிற்கு ரூ.75/- வீதம் உழவர்களுக்கு வழங்கப்படுகிறது.

உயர்ந்த மற்றும் குள்ளமான இனங்கலந்த தென்னங்கன்றுகள், மானிய விலையில் வழங்கப்படுகின்றன. ஒரு கன்றுக்கு ரூபாய் இரண்டு விலை மதிப்புள்ள உரங்களும், உழவர்களுக்கு இனாமாக வழங்கப் படுகின்றன.

6. தஞ்சாவூர் வேர் வதக்கு நோயினை அழித்தல்

தஞ்சாவூர் வேர் வதக்கு நோயினால் தாக்கப்பட்டுள்ள தென்னை மரங்களைப் பாதுகாக்க, மயில்துத்தம் (காப்பர் சல்பேட்) வேளாண் விரிவாக்க மையங்களின் மூலமாக, உழவர்களுக்கு அதனது விலையின் 50 விழுக்காட்டில் வழங்கப்படுகிறது.

7. காண்டாமிருக வண்டுகளை, தீங்கிழைக்கும் நுண்மங்களின் எதிர் நுண்மம் பெருக்கி, இயற்கைக் கோளாறு மட்டுப்படுத்தும் முறை

தென்னையை தாக்கும் பூச்சிகளில் காண்டாமிருக வண்டு மிகவும் முக்கியமானதும், அபாயகரமானதுமாகும். ஏறத்தாழ இந்தியாவிலுள்ள தென்னை பயிரிடப்படும் அனைத்துப் பகுதியிலும் இந்நோய் பரவலாகவும், தொடர்ந்தும் தென்னை மரங்களைத் தாக்கி வருகிறது. வயதான வண்டுகள், இளங்கன்றுகளின் ஓலைகளையும், உச்சிப்பகுதியையும் உண்டு, அதன் விளைவாக கன்றின் வளர்ச்சியினைக் குறையச் செய்கிறது. கன்றின் மடல்கள் தாக்கப்பட்டால் காய்ப்பும் குறைகிறது. இளங்கன்றுகள், சில சமயங்களில் அழிந்து விடுகின்றன. பூச்சிகள் பண்ணை வெளி எருவிலும் காற்றில் விழுந்து கிடக்கும் தென்னை மரங்களிலும்

இனப்பெருக்கம் செய்வதால், கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் இனப் பெருக்கம் நடக்கும் இடங்களிலும் மரங்களின் மேலுமே மேற்கொள்ளப் படுகின்றன. இளங்கன்றுகள் மற்றும் வயதான தென்னை மரங்களில் மேற்கொள்ளப்படும் கட்டுப்பாட்டு நடவடிக்கை மிகவும் செலவு பிடிக்கக்கூடியதாகும். எனவே, ஒரு சுலபமான மாற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

அதாவது, பாதுகாப்பளிக்கின்ற மற்றும் தெளிவான காளான் பயன்படுத்தும் முறை கன்னியாகுமரி மாவட்டத்தில் பின்பற்றப்படுகிறது. "மெட்டரீஸியம் அனிஸோபிலிக்" என்ற காளான் வகை, காண்டாமிருக வண்டினை ஒழித்திட மாவட்டத்தில் பயன்படுத்தப்படுகிறது.

8. தென்னை வளர்ச்சி வாரியத்தால், நிதியுதவியளிக்கப்படும் திட்டம்

மத்திய அரசின் தென்னை வளர்ச்சி வாரியம், தென்னஞ்சோலை அபிவிருத்திக்கு உதவியளிக்கிறது. புதிய பகுதிகளில் தென்னை பயிரிடும் விவசாயிகளுக்கு ஒரு எக்டேருக்கு ரூ.3,000/- மானியம் வழங்கப்படுகிறது. அதேபோன்று, வறட்சி காலத்தில் எண்ணெய் இயந்திரம் மற்றும் மின் விசைப்பொறி ஆகியவை வாங்கிட தென்னை உற்பத்தியாளர்களுக்கு நீர்ப்பாசன மானியமாக ரூ.1,000/- வழங்கப்படுகிறது.

வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில், தென்னை வளர்ச்சிக்கு சிறப்புத் திட்டங்கள்

இத்திட்டத்தின்கீழ், சொட்டுநீர் தெளிப்பு முறை அலகுகள் மானிய விலையில் வழங்கப்படுகின்றன. மானியம் வழங்கும் பாங்கு யாதெனில், 0.5 எக்டேர் உள்ள ஒரு தொகுதிக்கு, ஒரு விவசாயிக்கு ரூ.1,300/- மானியமாக வழங்கப்படுகிறது. அதிக பட்ச மானியம் ரூ.10,000/- என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்திய அரசின் உதவித்திட்டத்தின் கீழ், சொட்டு நீர் தெளிப்பு முறை அலகுகள் மானிய விலையில் வழங்கப்பட இருக்கின்றது. சிறு விவசாயிகளுக்கு மானிய விலை ரூ.1,500/- லிருந்து ரூ.3,375/- வரை நிர்ணயிக்கப்படுகிறது. நடுத்தர விவசாயிகளுக்கு குறைந்த பட்ச மானியம் ரூபாய் 2,000/- எனவும், அதிக பட்ச மானியம் ரூபாய் 4,500/- எனவும் நிர்ணயிக்கப்படுகிறது. அட்டவணையிட்ட வகுப்பினர் மற்றும் அட்டவணையிட்ட மலைவாழ் மரபினருக்கு குறைந்த அளவு மானியம் ரூபாய் 3,000/- எனவும், அதிக அளவு மானியம் ரூபாய் 6,750/- எனவும் நிர்ணயிக்கப்படுகிறது.

சமுதாயத்திட்டங்கள் (அடக்கத்தில் 50 விழுக்காடு)

1988-89ஆம் ஆண்டிற்கு, கன்னியாகுமரி மாவட்டத்திற்கு, 10 அலகு குறியீடாகவும், நிதிக்குறியீடு ரூபாய் 50,000/- எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

எண்ணெய் வித்துக்கள் பயிரிடப்படும் நிலப்பரப்பு

தென்னை பயிரிடப்பட்டுள்ள
நிலப்பரப்பு .. .. 17,258 எக்டோ்

வேர்க்கடலை பயிரிடப்பட்டுள்ள
இயல்பு நிலப்பரப்பு .. .. .. 1,000 எக்டோ்

(1987-88ஆம் ஆண்டில், இதுகாறும் 683 எக்டோரில், வேர்க்கடலை பயிரிடப்பட்டுள்ளது)

நெட்டையான மற்றும் குள்ளமானவகைத் தென்னங்கன்றுகள் வளர்க்கும் திட்டம்

இத்திட்டத்திற்கு வேளாண் துறையினால் 15.3.1980ஆம் ஆண்டு ஒப்புதலளிக்கப்பட்டு, 9.9.1980முதல் இத்திட்டம், நடைமுறையிலிருந்து வருகிறது. வேளாண்துறை உதவி இயக்குநர் ஒருவரது கட்டுப்பாட்டில், இத்திட்டத்தின் களப்பணியாளர்களுக்கு, தென்னையை கலப்பு முறையில் பயிரிடப்படுவது குறித்து, பட்டுக்கோட்டையில் பயிற்சியளிக்கப்பட்டு, இப்பணி கன்னியாகுமரி மாவட்டத்தில் அடியிற்கண்ட இடங்களில் 1.9.1980 முதல் துவக்கப்பட்டுள்ளது.

1. அகஸ்தீஸ்வரம் 2. புத்தாளம் 3. இராசக்காமங்கலம் மற்றும் கோட்டுமங்கலம்.

ஒவ்வொரு மையத்திலும் ஒரு வேளாண் அலுவலரின் தலைமையில், ஒரு உதவி வேளாண் அலுவலரும் மற்றும் 11 பயிற்சி பெற்ற தொழில் நுட்பமறிந்த பணியாளர்களும் பணியாற்றி வருகிறார்கள்.

திட்டப்பணி

இத்திட்டத்தின் முதன்மையான நோக்கம் என்னவெனில், இனக்கலப்பு தென்னங்கன்றுகளை உற்பத்தி செய்வதேயாகும். முதலில், விதை உற்பத்தி மையங்களின் அலுவலர்கள், தென்னந்தோட்டத்தினை பார்வையிட வேண்டும். நோயற்ற, உயர் விளைச்சலையளிக்கும் நெட்டையான தென்னமரங்களைத்தான், தேர்ந்தெடுக்க வேண்டும். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட மரங்கள், தாய் மரங்களாகக் கருதப்படுகின்றன. குள்ளமான தென்னங்கன்றுகள், மகரந்தத்தை திரட்டுவதற்காக தாய்க் கன்றுகளாகக் கருதப்படுகின்றன. திரட்டப்பட்ட மகரந்தம், உயரமாக தாய்மரங்களின் பூக்களின் மீது குறிப்பிட்ட தருணத்தில் தூவப்படுகிறது. இந்த செயற்கை முறையினால் உற்பத்தி செய்யப்பட்ட தென்னை வித்துக்கள், பதினோராவது மாதத்தில் கன்றுகளாக வளர்ச்சி பெற்று, நடுவதற்குத் தகுதியாக உள்ளன. இந்த இனக்கலப்பு முறையில் உற்பத்தி செய்யப்படும் தென்னை வித்துக்கள், நெட்டை மற்றும் குள்ளமான இனக்கலப்புத் தென்னங்கன்றுகளை தோற்றுவிக்கின்றன.

தென்னை நாற்றுப்பண்ணை[36]

இந்நாற்றுப்பண்ணை மணவாளக்குறிச்சியில், 1.9.1981ஆம் நாள் துவக்கப்பட்டது. நாற்றுப் பண்ணையின் மொத்த பரப்பளவு 2.03 எக்டேர் ஆகும். நெடிய மற்றும் குள்ளமான கலப்பினத் தேங்காய்கள், அக்கலப் பினத் தென்னங்கன்றுகளைத் தோற்றுவிக்க துணை மையத்தினின்று, இந்த நாற்றுப் பண்ணையில் பெறப்பட்டு, கலப்பினத் தென்னங்கன்றுகள் தோற்றுவிக்கப்படுகின்றன.

நெட்டைத் தென்னை நாற்றுப்பண்ணை

புத்தாலத்திலுள்ள அரசு தென்னை நாற்றுப்பண்ணை தரமுள்ள உயரமான தென்னங்கன்றுகளைத் தோற்றுவிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. கன்னியாகுமரி மற்றும் அண்டைய மாவட்டங்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் அளவிற்கு, இப்பண்ணை நன்முறையில் செயலாற்றுகிறது. இந்நாற்றுப்பணி 1964ஆம் ஆண்டு துவக்கப்பெற்றது. இதனின் மொத்த பரப்பளவு 1.97 எக்டேராகும்.

விலங்கின வளர்ப்பு[37]

விலங்கின வளர்ப்பு, வேளாண்மையின் ஒரு கிளை என்றால் அது மிகையில்லை. வீட்டு விலங்குகள் மற்றும் வளர்ப்பு பறவைகள் ஆகிய வற்றைப் பேணிக்காத்து, அவை அளிக்கும் அல்லது அவற்றினின்றும் கிடைக்கும் பால், இறைச்சி, முட்டை மற்றும் கம்பளி ஆகியவற்றின் உற்பத்தியைப் பெருக்குவதே இதனில் அடங்கும்.

இன்றைய நாளில், விலங்கின பராமரிப்பென்பது, தற்கால வேளாண் ஆராய்ச்சியை ஆதாரமாகக் கொண்டு, பின்பற்றப்பட்டுவரும் விஞ்ஞான வழி முறைகளையையே நம்பியுள்ளது. விலங்குகளை நோய்களினின்று காத்தல் மற்றும் அவற்றிற்கு மிகவும் கவனமாக, தரமான உணவினை அளித்தல் ஆகியவையே அவ்வழிமுறைகளாகும். இவைதவிர, விலங்கு களின் இனப்பெருக்கம், தோந்தெடுக்கப்பட்ட சில முக்கிய இனப்பெருக்க வகைகள், கலப்பு இனப்பெருக்கம் மற்றும் செயற்கையாகப் பண்பூட்டுதல் போன்ற உத்திகளின் அடிப்படையில், விஞ்ஞான ரீதியில் கட்டுப்படுத்தப்படுகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் விலங்கின வளர்ப்பு

கன்னியாகுமரி மாவட்டத்தில், விலங்கின வளர்ப்பு நடவடிக்கைகள், திருநெல்வேலி - கட்டபொம்மன் மாவட்டம், விலங்கின வளர்ப்பு மண்டல இணை இயக்குனரால், செயல்முறைப்படுத்தப்பட்டு வருகின்றன. கால்நடை கணக்கெடுப்பு 1980இல் மேற்கொள்ளப்பட்டது. அது தொடர்பான கணக்கெடுப்புப் புள்ளி விவரங்கள் பட்டியல் 1-ல் அளிக்கப் பட்டுள்ளன. உள்நாட்டுக் கால்நடைகளின் தரத்தை உயர்த்திட, உயற

பண்புடைய மிகத்தரமான எருதுகளைப் பயன்படுத்தி, "செயற்கையாக பண்பூட்டுதல்" முறையைக் கையாளுவது, சிறந்த வழியாகும். இத்திட்டம், முதன்மையான கிராமத்திட்டமாக, நடைமுறைப்படுத்தப்படுகிறது. மாவட்டத்திலுள்ள மூன்று முதன்மையான கிராம வட்டாரங்களும், 30 துணை மையங்களும், ஒருவிலங்கின வளர்ப்பு துணை இயக்குனரின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன. அந்த துறை மையங்களின் பெயர்கள், பட்டியல்-2-ல் அளிக்கப்பட்டுள்ளன. இந்த முதன்மையான கிராம வட்டாரங்களில், பிரீஸ்லாந்த் நாட்டு எருது வகைகளும், மர்ரா வகை எருதுகளும் முறையே உள்நாட்டு வெள்ளை மற்றும் கறுப்பு எருமை வகைகளை தரப்படுத்துவதற்காக வளர்க்கப் படுகின்றன.

உள்நாட்டுக் கால்நடைகளின் உடல் நலத்தைப் பேணிக்காக்க, நாகர்கோவிலில், ஒரு மருத்துவ மையம் உள்ளது. பட்டியல்-3ல் குறிப்பிட்டுள்ளவாறு, இரண்டு விலங்கின வளர்ப்பு துணை இயக்குநர்கள் மாவட்டத்தில் பணியாற்றுகின்றனர். ஒருவரது அலுவலகம் நாகர்கோயிலிலும், மற்றொருவரது அலுவலகம் தக்களையிலும் இயங்கிவருகின்றன. அவர்கள் திருநெல்வேலி விலங்கின வளர்ப்பு மண்டல இணை இயக்குநரின் கட்டுப்பாட்டின்கீழ் பணியாற்றி வருகின்றனர். இந்த துணை இயக்குநர்கள், அவரவர்களது பகுதியிலுள்ள விலங்கின வளர்ப்பு நடவடிக்கைகளைக் கவனித்து வருகின்றனர். அவரவர்களது கட்டுப்பாட்டிலடங்கிய கால்நடை மருத்துவமனைகள், மருத்துவ அறக்கூடங்கள் மற்றும் பட்டியல்-3இல் கண்ட நடமாடும் மருத்துவமனைகள் ஆகியவற்றிற்கான பொறுப்பினையும் வகிக்கின்றனர். அப்பகுதியிலடங்கிய கால்நடைகளை அவ்வப்போது சோதனை செய்து, அவற்றின் தேவையைப் பூர்த்தி செய்கின்றனர். கோட்டாரத்தில், வளர்ப்புப்பறவைகள் விரிவாக்க மையமொன்றுள்ளது. கால்நடைகளைக் கோமாரி தாக்குதலினின்று காத்திட நாகர்கோயிலில் "நோயற்ற மண்டலம்" நிறுவப்பட்டுள்ளது. கோமாரி ஒழிப்பு மாவட்டப் படையும் நாகர்கோயிலில் இயங்கி வருகிறது. இப்படை, கோமாரி எளிதில் தாக்கக்கூடிய கால்நடைகளான மாடுகள், செம்மறி ஆடுகள், வெள்ளாடுகள் ஆகியவற்றிற்கு கோமாரி தடுப்பு ஊசி போட்டு மாவட்டத்தில் நோய் பரவாவண்ணம் தகுந்த தற்காப்பு மற்றும் தடுப்பு நடவடிக்கையெடுத்து வருகிறது. தக்க பாதுகாப்பின்றி வெளி மாநிலங்களி லிருந்து, நம் மாநிலத்திற்குள் நுழையும் கால்நடைகள் மற்றும் மாநிலத்தினின்றும் வெளிச்செல்லும் கால்நடைகள் ஆகியவற்றிற்கு கோமாரி தடுப்பு ஊசி போடுவதற்காக மாவட்ட எல்லையிலுள்ள காவல்கிணறு என்ற இடத்தில், ஒரு கோமாரி தடுப்பு சோதனைச் சாவடி நிறுவப்பட்டுள்ளது. கோமாரி நோய் தடுப்பு ஊசி போட்ட விவரங்களும், அதே போன்று முக்கிய கிராம மையங்களிலும், மேற்கொள்ளப்பட்ட நோய் தடுப்பு நடவடிக்கைகள் குறித்த விவரங்களும் பட்டியல்-4இல்

அளிக்கப்பட்டுள்ளது. மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதி வளர்ச்சித் திட்டம், மாவட்டத்தில் நடைமுறையிலுள்ளது. கால்நடைகளை வைத்து பராமரித்துவரும் கிராம மக்களுக்கு இத்திட்டத்தின் கீழ், கால்நடைத் தீவனம் மற்றும் விதைகள் ஆகியவை பாதிவிலையில் கொடுக்கப்பட்டு வருகின்றன.

1984-85ஆம் ஆண்டில் மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பால் மற்றும் முட்டை ஆகியவற்றின் மதிப்பீடு பின்வருமாறு :

பால் உற்பத்தி .. .. 5,16,25,350 கி.கி.
முட்டை உற்பத்தி .. .. 2,57,78,514 கி.கி.

1985-86 ஆம் ஆண்டில் இறைச்சி உற்பத்தி தோராயமாக 1,99,362 கிலோகிராம் ஆகும்.

பட்டியல் - 1

15.7.1982 நாளைய நிலவரப்படி கன்னியாகுமரி மாவட்ட வீட்டு விலங்குகள் தொகை விவரம்

1.	மொத்த வீட்டு விலங்குகள் எண்ணிக்கை	..	2,02,615
2.	கால்நடைகள்	..	1,03,446
3.	எருமைகள்	..	22,886
4.	செம்மறி ஆடுகள்	..	4,014
5.	வெள்ளாடுகள்	..	43,351
6.	பன்றிகள்	..	12,476
7.	குதிரைகளும், மட்டக்குதிரைகளும்	..	13
8.	கோவேறு கழுதை	..	8
9.	கழுதைகள்	..	329
10.	ஒட்டகங்கள்	..	..
11.	வீட்டு நாய்கள்	..	16,092
1.	மொத்த கால்நடைகளும், எருமைகளும்	..	1,26,332
	அ) ஆண்	..	46,409
	ஆ) பெண்	..	79,923
2.	மொத்தக் கால்நடைகள்	..	1,03,446
	அ) ஆண்	..	31,953
	ஆ) பெண்	..	71,493

பட்டியல்-1 - தொடர்ச்சி

மொத்தக் கால்நடைகள் (ஆண்)

விவரங்கள்	கால் நடைகள்	வேற்றுநாட்டி லிருந்து கொணரப்பட்ட காலநடைகள்	காலநடைகள் உள்ளூர் /ஒரேஇனம்	காலநடைகள் கலப்பு இனம்	காலநடைகள் (நம்நாட்டைச் சாராதவை)
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1. ஓராண்டுக் குட்பட்டவை	8,370	5	611	2,412	5342
2. ஓராண்டி-லிருந்து 2½ ஆண்டுகள் வரை	4,793	7	493	1,006	3,287
3. 2½ ஆண்டுகளுக்கு மேற்பட்டவை					
அ) இனப் பெருக்க ஆற்றல் அழிக்கப் பட்டவை	16,603	1	3,087	793	12,722
ஆ) இனப்பெருக்க ஆற்றல் அழிக்க பெறாதவை	2,187	28	605	285	1,269
4. மொத்த ஆண்கள்	31,953	41	4,796	4,496	22,620

மொத்தக் கால்நடைகள் (பெண்)

(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1. ஓராண்டுக் குட்பட்டவை	14,624	8	1,487	4,056	9,073
2. ஓராண்டிலிருந்து 2½ ஆண்டுகள் வரை	11,521	34	1,301	2,907	7,279
3. 2½ ஆண்டுகளுக்கு மேறபட்டவை					
அ) பால் உள்ளவை	26,432	16	2,704	7,323	16,389
ஆ) பால் வற்றியவை	10,269	15	1,256	2,623	6,375

பட்டியல்-1 - தொடர்ச்சி

இ) ஒரு முறை கூட கன்று ஈர்க்காதவை	8,647	16	678	2,113	5,840
4. மொத்த பெண் தொகை	71,493	89	7.426	19,022	44,956

பட்டியல் - 2

1. இன்றியமையா கிராம வட்டாரம்

1. குழித்துறை
2. கோட்டாரம்
3. திங்கள் சந்தை

2. இன்றியமையா கிராம துணை மையங்கள்

1. குழித்துறை
2. சீராத்தூர்
3. கலியக்காவிலை
4. கடையால்
5. அருமனை
6. செம்மங்கலா
7. பூவன்கோடு
8. குலசேகரம்
9. திருவட்டாறு
10. காட்டாத்துரை
11. குமரேசபுரம்
12. கோட்டாரம்
13. அழகப்பபுரம்
14. மைலாடி
15. தாமரைக்குளம்
16. குலசேகரம்புதூர்
17. நல்லூர்
18. பரக்கை
19. சூரங்குடி
20. இராசக்காமங்கலம்
21. ஒசரவிளை
22. திங்கள் சந்தை
23. வெள்ளி சந்தை

24. பரசேரி
25. கிள்ளியூர்
26. திக்கனங்கோடு
27. மணவாளக்குறிச்சி
28. முஞ்சிரை
29. புதுக்கரை
30. கல்குளம்

பட்டியல் - 3

அ. விலங்கின வளர்ப்பு உதவி இயக்குநர்கள்

1. நாகர்கோவில்
2. தக்களை

ஆ. கால்நடை மருத்துவ மனைகள்

1. தக்களை
2. குழித்துறை

3. கால்நடை மருத்துவ அறக்கூடங்கள்

1. செம்மங்கலா
2. அருமனை
3. காட்டாத்துரை
4. பூதபாண்டி
5. ஆரல்வாய் மொழி
6. நல்லூர்
7. இராசக்காமங்கலம்
8. கோட்டாரம்
9. பரக்கை
10. குருத்தங்கோடு
11. திருவட்டாறு
12. குலசேகரம்
13. மாத்துக்கும்மல்
14. திங்கள் சந்தை

4. நடமாடும் அலகு

நாகர் கோவில்

பட்டியல் - 4

1. கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்ட இனங்கள் .. 51,44,063

2. இன்றியமையாக் கிராம மையங்கள் மேற்கொள்ளப்பட்ட பணிவிவரங்கள்

	செயற்கை யாகப் பண் பூட்டப்பட்ட இனங்கள்	செயற்கை யாகப் பண் பூட்டப்பட்ட இனங்கள் சரிபார்க்கப் பட்டவை	பிறந்த கன்று களின் எண்ணிக் கை	மருத்துவம் செய்யப் பட்ட இனங்கள்	இனப் பெருக்க ஆற்றல் ழிப்பு மேற்கொள் ளப்பட்ட இனங்கள்	நோய் தடுப்பு ஊசிபோடப் பட்ட இனங்கள்
வெள்ளை கால்நடைகள் (டபிள்யூ.சி)	55,854	52,873	14,131	43,524	2022	1,30,343
கறுப்புக் கால்நடைகள் (பி.சி.)	1,950	2,084	482			
மொத்தம்	57,804	54,957	14,613			

3. நாகர்கோவில் (படுக்கை) மருத்துவ மையத்தில் மேற்கொள்ளப்பட்ட பணிவிவரங்கள் (1985-86)

1.	மருத்துவம் மேற்கொள்ளப்பட்ட இனங்கள்	..	21,461
2.	தடுப்புஊசி போடப்பட்ட இனங்கள்	..	15,282
3.	புழுஅழிப்பு முறை மேற்கொள்ளப்பட்ட இனங்கள்..		1,314
4.	உள் நோயாளிகளாக மருத்துவம் செய்யப்பட்ட இனங்கள்	..	64
5.	இனப்பெருக்க ஆற்றலழிப்பு மேற்கொண்ட இனங்கள்		21
6.	அறுவை சிகிச்சை அளிக்கப்பட்ட இனங்கள்	..	559
7.	பயனடைந்தோர் எண்ணிக்கை	..	10.826

கன்னியாகுமரி மாவட்டத்தில் பால்பண்ணை வளர்ச்சி

தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தி கட்டிணைக்கழகம் (டி.என்.சி.எம்.ப்பி.எப்.)

பால்பண்ணைத் தொழிலின் முதன்மையான அலுவல்களை ஒருங்கிணைத்து, கிராம அளவு, மாவட்ட அளவு மற்றும் மாநில அளவில் ஒரு மூன்றடுக்கு கூட்டுறவு அமைப்பை தமிழ்நாடு பின்பற்றிவருகிறது. இவ்வமைப்பில், பால் கொள்முதல், பால் மற்றும் அதனுடைய துணைப் பொருட்கள் ஆகியவற்றை உருவாக்குதல் மற்றும் விற்பனைக்கு அனுப்புதல் ஆகியவை அடங்கும்.

இவ்வமைப்பு புறப்பகுதி உற்பத்தியாளர் மற்றும் நகரத்திலுள்ள நுகர்வோர் இவர்களிடையே ஒரு முக்கியமான இணைப்பை உருவாக்கி,

பால்பண்ணை விவசாயி தனது பொருளை நல்ல விலைக்கு விற்பனை செய்ய, நல்லாதரவையும் அளிக்கிறது.

இம்மாவட்டத்தின் பொருளாதாரம், முழுக்க முழுக்க வேளாண்மையை அடிப்படையாகக் கொண்டே அமைந்துள்ளது. தமிழ்நாட்டிலேயே இந்த ஒரு மாவட்டத்தில்தான். இரப்பர் பயிரிடப்படுகிறது. இம்மாவட்டம் செம்மையான நிலவளத்தைக் கொண்டதாகும். இம்மாவட்டத்தில் வேளாண்குடி மக்கள் மற்றும் வேளாண் தொழிலாளர்கள் ஆகியோர், மேற்கொண்டுள்ள துணைத் தொழில் பால்பண்ணையாகும்.

தமிழ்நாடு அரசு, இம்மாவட்டத்தில் அமுல் முறையை 1.1.1981ஆம் நாளன்று செயல்முறைப்படுத்தியது. பால்பண்ணை வளர்ச்சித் துறையின் சீரிய முயற்சியினால் மிகக்குறுகிய ஐந்தாண்டு காலத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில், பால் உற்பத்தி மூன்று மடங்கு அதிகரித்துள்ளதென்றால் மிகையில்லை. கன்னியாகுமரி மாவட்டம் வெள்ள நிவாரண செயல்முறைத் திட்டம் மேற்கொண்டுள்ள பகுதியில் அடங்கியதல்ல. இம்மாவட்டத்திலுள்ள 82 வருவாய் கிராமங்களில், 99 விழுக்காடு கிராமங்கள் பால் உற்பத்தி கூட்டுறவு சங்கங்களின் பாதுகாப்பிலுள்ளன. இம்மாவட்டத்தில் 52,000 உறுப்பினர்களைக் கொண்ட 89 பால் உற்பத்தி சங்கங்களுள்ளன. மாவட்டத்திலுள்ள அனைத்து சங்கங்களும், சராசரியாக ஒரு நாளைக்கு 41,725 லிட்டர் பால் உற்பத்தி செய்கின்றன. ஏறத்தாழ, 7780 குடும்பங்கள் இச்சங்கங்களினால் பயடைகின்றன. அவற்றில் 2,500 குடும்பத்தினர் அட்டவணையிட்ட வகுப்பினரைச் சேர்ந்தோராவர்.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின்படி, மாவட்டத்திலுள்ள கால்நடைகளின் தொகை பின்வருமாறு :

	ஆண்	*பெண்*
பசு	31,953	71,488
எருது	14,457	8,430

கால்நடைகளுக்கு சத்துணவு அளிக்காத காரணத்தால், கொழுப்புச் சத்து போன்றவை அடங்கிய பாலின் தரம், சற்றே குறைந்து காணப்படுகிறது.

பால் உற்பத்தி கூட்டுறவு சங்கங்களின் அமைப்பு முறை

அமுல் வகை சங்கங்களை அமைத்திட, அரசு 1980ஆம் ஆண்டு ஒரு உதவி பால்பண்ணை அலுவலரின் தலைமையில் ஒரு பால் கொள்முதல் குழுவினை அமைத்தது. இக்குழு, சங்கங்களைப் பதிவு செய்யக் கோரும் விண்ணப்பங்களை (பால்பண்ணை) துணைப்பதிவாளரின் சார்பில், பெற்று ஆய்வு மேற்கொள்கிறது.

நடமாடும் கால்நடை மருத்துவ அலகு

பால் உற்பத்தியாளர் சங்கங்களின் உறுப்பினர்களுக்குச் சொந்தமான விலங்கினங்களுக்கு இலவச மருத்துவ சிகிச்சை அளித்திட, மாவட்ட

கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்துடன் இணைந்து அரசின் நடமாடும் கால்நடை மருத்துவ அலகு செயல்படுகிறது. இந்த நடமாடும் அலகு ஒரு வாரத்தில் வெவ்வேறு ஐந்து வழிகளில் சில குறிப்பிட்ட சங்கங்களைப் பார்வையிடுகிறது.

கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிமிடெட்

இந்த ஒன்றியம் 25.1.1949இல் பதிவு செய்யப்பட்டு, 17.2.1950 அன்று துவங்கப்பெற்றது. துவக்கத்தில் அது "நாஞ்சில் நாடு கூட்டுறவு பால் வழங்கும் சங்கம்" என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டு இயங்கி வந்தது. பிறகு 1961ஆம் ஆண்டு அதன் பெயர் "கன்னியாகுமரி மாவட்ட பால் வழங்கும் கூட்டுறவு ஒன்றியம்" என மாற்றியமைக்கப்பட்டது. அது பணியாற்றும் பகுதியும் கன்னியாகுமரி மாவட்டம் முழுமைக்கும் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தின் நாங்குனேரி, இராமநாதாபுரம் வட்டங்களுக்கு விரிவாக்கப்பட்டது. மொத்த பங்கு முதலீட்டுத் தொகையான ரூ.4,43,780-ல் அரசின் பங்கு ரூ.3,50,000/- ஆகும். எஞ்சிய தொகை, இணை உறுப்பினர் சங்கங்களால் அளிக்கப்பட்டுள்ளது. முறையாகப் பாலைத் துப்புறவு செய்யும் தொழிற்சாலையின் கொள்ளளவு ஒரு நாளைக்கு 4000 லிட்டராகும். ஒன்றியத்தின் சராசரி உற்பத்தி, ஒரு நாளைக்கு 17,000 லிட்டராகும். துப்புறவு செய்யப்பட்ட பால் நாகர்கோவில் நகரம் மற்றும் கன்னியாகுமரி நகரியம் ஆகியவற்றிற்கு நேரடியாகவும், கல்குளம் மற்றும் விளவங்கோடு வட்டங்களுக்கு பால் நுகர்வோர் சங்கத்தின் மூலமாகவும் வழங்கப்படுகிறது. மேலும் ஒன்றியம் துவக்கப்பட்ட காலத்திலிருந்தே, கேரள மாநிலத்தின் தலைநகரான திருவனந்தபுரம் நகரத்திற்கு அது பாலை வழங்கி வருகிறது. தேவைக்கதிகமாயுள்ள பால், வளமான காலத்தில் மதுரை மாவட்ட கூட்டுறவுபால் உற்பத்தியாளர் ஒன்றியத்திற்கு, பாலை வெண்ணையாக மாற்றவும் ஏடு எடுத்த பாலை தூள் (பால்பவுடர்) தயாரிக்கவும் அனுப்பப்படுகிறது. மேலும், ஒன்றியம் பாலை சிறுநறுமணப்பையில் வழங்குகிறது. பையிலுள்ள பால், முகவர்கள் மூலமும், 14 கன்னியா பால்கூடங்களின் மூலமும் மாவட்டத்திலுள்ள பல்வேறு இடங்களுக்கு அனுப்பப்படுகிறது.

தணுப்பு மையம்

ஒன்றியம் மார்த்தாண்டத்தில், ஒரு தணுப்பு மையத்தினை இயக்கி வருகிறது. இம்மையம் ரூ.3,52,400/- செலவில் கட்டப்பட்டது. தணுப்பு துணைக்கருவித் தொகுதியின் கொள்ளவு ஒரு நாளைக்கு 3000 லிட்டராகும். 45 சங்கங்கள் இம்மையத்தினால், பயனடைகின்றன. இச்சங்கங்களினால் உற்பத்தி செய்யப்படும் பால், இருபால் திரட்டுத் தடங்கள் உருவாக்கப்பட்டு, அவற்றின் மூலம் திரட்டப்படுகிறது. ஒரு நாளைய சராசரி பால் உற்பத்தி 2000 லிட்டராகும்.

உற்பத்தியாகும் பொருட்கள்

உபரியாகக் கிடைக்கும் பாலைப்பயன்படுத்தி, இவ்வொன்றியம், இடை விளைவுப் பொருட்களையும் உற்பத்தி செய்கிறது. கடந்த ஆண்டு, உற்பத்தி செய்யப்பட்ட இடை விளைவுப் பொருட்களின் விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன:

நறுமணச்சுவைமிக்க பால்	42,877	குப்பிகள்
பால்பேடா	8,562	பைகள்
பாலாடைக்கட்டி	4,094	கிலோகிராம்
ஏடுஎடுத்த பால்தூள்	15,000	கிலோ கிராம்

தற்கால முறையில் பால்பண்ணை அமைக்கும் திட்டம்

மைய அரசின் ஆதரவில், மாவட்டத்தின் ஒரு முதன்மையான இடத்தில் ஒரு நாளைக்கு 50,000 லிட்டர் கொள்ளளவுள்ள தற்கால முறையினைப் பின்பற்றி ஒரு பால்பண்ணை நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மீன் தொழில் துறை[38]

கன்னியாகுமரி மாவட்டம் மீன் தொழில் துறையில், சங்கு திரட்டும் செயல்முறை

ஆயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பெட்டாமாண்டு பிப்ரவரி திங்கள் இருபத்தாறாம் (26.2.1958) நாளைய (காடுகள் மற்றும் மீன் தொழில்துறை) எண். 749 கொண்ட அரசாணையில், 1957-58ஆம் ஆண்டு அரசின் மீன் தொழில் துறையினால் சங்கு திரட்டும் பணியினை செயல்முறைப்படுத்த, ஒப்புதல் அளிக்கப்பட்டது. எனயம் - புத்தன் துறை மற்றும் இராமன் துறை ஆகிய இடங்களில் செயல்முறைப்படுத்தப்பட்டது. நீரோடி, ஏழுதேசம் போன்ற இடங்களில் அதிக அளவில் சங்கு திரட்ட இயலுமென எதிர்பார்க்கப் பட்டாலும் திரட்டப்பட்ட சங்கின் அளவு மிகக் குறைவாகவே இருந்தது. மீன்பிடிக்கும் உரிமையில் சங்கு திரட்டும் செயல்முறைக்கு தனியார் பணியாளர்கள் நியமிக்கப்பட்டனர். சங்கு திரட்டும் மேற்பார்வையாளர் மேலும் இரண்டு சார் நிலைப்பணியாளர்கள் இதனில் அடங்குவர். இவர்கள், எனயம் - புத்தந்துறை பகுதியின் மீன் தொழில்துறை, துணை-ஆய்வாளரது மேற்பார்வையில் பணியாற்றி வந்தார்கள். இப்பணியினைத் துவக்க அரசு ஆணை பிறப்பிக்க சற்று தாமதமாகியதால். 1957-58ஆம் ஆண்டின் சங்கு திரட்டும் பணி மன நிறைவிற்கேற்ப இல்லை. சங்கு திரட்டும் பணி 24.1.1958 அன்றே துவக்கப்பட்டு, 10.5.1958-ந் தேதி முடிக்கப்பட்டதே, பணி தடைப்பட்டதற்குக் காரணமென கூறப்படுகிறது.

மீன் பிடிக்கும் தொழில் அடிப்படையில், சங்கு சேகரிக்கும் பணி, 1959-60 வரை, அரசுத்துறையிலேயே மேற்கொள்ளப்பட்டு வந்தது. அதன் பின்னர், இப்பணி தொடர்ந்து மூன்று ஆண்டு காலத்திற்கு தனியார்

நிறுவனத்திற்குக் குத்தகைக்கு விடப்பட்டது. தொடர்ந்து 1960-61 ஆம் ஆண்டு மாவட்டத்தின் சங்கு திரட்டும் குத்தகை முந்தைய இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள கீழக்கரை சங்கு நிறுவனத்திற்கு விடப்பட்டது. இக்குத்தகை 14.4.1960ஆம் நாளய (காடுகள் மற்றும் முன் தொழில் துறை) 1409 எண். கொண்ட அரசாணையில் 15.4.1960 முதல் மூன்று ஆண்டுகளுக்கு ஆண்டொன்றிற்கு ரூ.4,786/- குத்தகைத் தொகை என நிர்ணயிக்கப்பட்டது. அதன்பின்னர், 1.5.1963 முதல் மேலும் மூன்று ஆண்டுகளுக்கு, ஆண்டுக் குத்தகை ரூ.14,239/- என நிர்ணயிக்கப்பட்டு, குத்தகை அதே நிறுவனத்திற்கு நீட்டிக்கப்பட்டது. குத்தகைதாரர் பின்னர் குத்தகைத் தொகையினைச் செலுத்தாத காரணத்தால் 6.6.1969 முதல் குத்தகை ரத்து செய்யப்பட்டது. சங்குத் திரட்டும் குத்தகை மறுபடியும் குத்தகைக்கு விடப்பட்டது.

1970ஆம் ஆண்டு முதல் குத்தகைக் காலவரை முடிவுற்றபின், சங்கு திரட்டும் உரிமைக்கு உரிமம் வழங்கும் திட்டம் தமிழகரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து சங்கு திரட்டும் உரிமைக்கு அதன் பின்னர், உரிமம் வழங்கும் முறை பின்பற்றப்பட்டு வருகிறது.

அரசுத் துறையினால் திரட்டப்பட்ட சங்குகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

ஆண்டு	முழு அளவுள்ளவை	புழுவை உள்ள டக்கயவை	குறை அளவுள்ளவை
1957-58	2,032	361	283
1958-59	2,702	922	280
1959-60	2,485	735	239
1960-61	8,607	244	2,909
1961-62	13,231	1,409	4
1962-63	11,488	1,954	..
1963-64	5,945	4,556	10
1964-65	1,117	3,426	..

1971-72 முதல் வசூல் செய்யப்பட்ட உரிமைக் கட்டண விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன:

ஆண்டு	வசூல் செய்யப்பட்ட உரிமக் கட்டணம் (ரூபாய்)
1971-72	150/- (ஒரு உரிமத்திற்கு ரூ.10 என்ற விகிதத்தில்)
1973-74	650/-

1974-75	இல்லை
1975-76	90/-
1976-77	40/-

ஆனால், உரிமைதாரர்களால் திரட்டப்பட்ட சங்குகளின் எண்ணிக்கையினை அறிய இயலவில்லை. 1977ஆம் ஆண்டு முதல், சங்கு திரட்டும் பணி அரசின் ஏகபோகக் கொள்முதலாகக் கொணரப்பட்டு விட்டது. எனினும், அதன்பின்னர் சங்கு திரட்டும் பணி மீன் தொழில் துறையினால் மேற்கொள்ளப்படவில்லையாதலால் எவ்வித சங்கும் அதன் பின்னர் திரட்டப்படவில்லை.

பெருங்குடல் நண்டு வகை மீன் (லாப்ஸ்ட்டர்) பிடிக்கு உரிமை

கன்னியாகுமரி மாவட்டத்தில் பெருங்கடல் நண்டு வகை மீன் (லாப்ஸ்ட்டர்) பிடிக்கும் உரிமை ஒரு குறிப்பிட்ட காலத்தில்தான் மேற்கொள்ளப்படுகிறது. அதாவது செப்டம்பர் மாத இறுதியிலிருந்து ஏப்ரல் மாத இறுதிவரை இப்பணியாற்றப்படுகிறது. இப்பணியினை மேற் கொள்ளும் காலத்தினை வானிலையையொட்டியே நிர்ணயிக்க முடிகிறது. இளங்காற்று வீசும் காலமே இப்பணிக்கேற்றதாகும். இவ்வாறாக வடகிழக்குப் பருவக்காற்று தணிந்து இயல்பான இளங்காற்றாக வீசும்போது, கடல் மீன் பிடிப்பினை மேற்கொள்ள உகந்த நிலையிலுள்ளது. கடல் மாச் மாத இறுதியில் மிகக் கடுமையாக உருவெடுக்கும் போது மீன்பிடிப்பு பாதிக்கப்பட்டு உடனடியாக நிறுத்தப்படுகிறது. மீன்பிடிப்பின் உச்சகாலக்கட்டம் ஆண்டுதோறும் டிசம்பர் 15இலிருந்து பிப்ரவரி 15 வரையிலானதாகும்.

இப்பகுதியில் மிக அதிகமாகக் காணப்படுபவை. "பானுலிரஸ் ஹோமாரஸ்" என்றவகை மீனாகும். எனினும் மீன்பிடிப்புப் பகுதியில் மேலும் இரண்டு வகைகளைச் சார்ந்த "பானுலிரஸ்" மீன்களும் காணப்படுகின்றன. ஆனால், அவை மிகக்குறைந்த அளவிலேயே உள்ளன. அவை "பானுலிரஸ் ஆர்னேடஸ்" மற்றும் "பானுலிரஸ் வெர்ஸிகலர்", ஆகியவையாகும்.

மாவட்டத்தின் அனைத்து மையங்களிலும், லாப்ஸ்டர் மீன் வகையினைப் பிடிக்க பயன்படுத்தப்படுவது கட்டு மரம் என்ற ஒரே மரக்கலமாகும். பயன்படுத்தப்படும் மீன்பிடிக்கருவிகளின், கூடை வடிவமைப்பு கொண்ட பொறி, தூண்டில் முள் மற்றும் வலை ஆகிய வற்றைக் கொண்டதாகும். பழுப்பு நிறம் உள்ள இன்னிசைப் பறவைகளின் (மிட்டிலஸ் எஸ்பிபி) இறைச்சியினைப் பொறியிலிட்டு, மீன்களைப் பிடிக்கும் பழக்கம் கையாளப்படுகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் எனயம், மிட்டாளம், கொளச்சல், காடியாப்பட்டினம், முட்டம், இராசக்காமங்கலம், மணகுடி மற்றும் கன்னியாகுமரி ஆகியவை முதன்மையான மீன் பிடிக்கும் மையங்களாகும்.

கன்னியாகுமரியிலுள்ள கடற்படை உயிர்நூலைச் சார்ந்த நிலையத்தின் ஆய்வுக்கூட உதவியாளர், புள்ளி விவரங்களைத் திரட்டுதல் பிடிக்கப்படும் மீன்வகைகளின் அளவு இனவகை போன்ற விவரங்களைத் தொகுத்தல் போன்ற பணிகளைச் செய்து வருகிறார். இந்த கால கட்டத்தில் மேற் குறிப்பிட்ட எட்டு மையங்களும் பருவ காலங்களில் பார்வையிடப் பட்டு லாப்ஸ்ட்டர் வகையின் மாதிரிகள் அங்கொன்று, இங்கொன்றாக சேகரிக்கப்பட்டு, திரட்டப்பட்ட மீன்களின் அளவு இனவகை அறிதல் மற்றும் தொகுப்புப்பணிக்கான ஆய்வு செய்யப்பட்டன. இவை தவிர, திரட்டிக் கொண்டுவரப்பட்ட சரக்கின் அளவும் கணக்கிடப்பட்டது.

கடந்த ஐந்தாண்டுகளில், திரட்டிக்கொண்டுவரப்பட்ட சரக்கின் அளவு பின்வருமாறு :

1975-76	...	26.426 மெட்ரிக் டன்கள்
1976-77	...	34.975 மெட்ரிக் டன்கள்
1977-78	...	50.969 மெட்ரிக் டன்கள்
1978-79	...	40.670 மெட்ரிக் டன்கள்
1979-80	...	30.010 மெட்ரிக் டன்கள்

மொத்த சரக்குகளின் அளவு குறிக்கப்பட்ட காலத்தில் மேற்கண்ட எட்டு மையங்களினின்றும் திரட்டப்பட்டவையையே குறிக்கிறது.

பலதரப்பட்ட மீன் வகைகளின் விவரங்கள் கீழே அளிக்கப் பட்டுள்ளன.

உள்நாட்டு மீன்வகைகள்-(அ) இருப்பிலுள்ள வகைகள்

கட்லா, ரோஹு, மிரிகல், லாபியோ ஃபிம்பிரியாட்டஸ், காமன் கார்ப், (பொதுவான நன்னீர் வாழும் குள மீன்வகை), சில்வர் கார்ப் (வெள்ளி நிற நன்னீர் வாழும் குள மீன் வகை), கிராஸ் கார்ப் புல் நிற நன்னீர் வாழும் குள மீன் வகை.

(ஆ) இருப்பிலில்லா வகைகள்

மூர்ரெல், பார்பஸ், ட்டிலாபியா, கேட்ஃபிஷ் (பூனை போன்ற அமைப்புடைய மீன் வகை), எட்ரோப்லஸ்.

கடற்கரை மீன் வகைகள்

சேர், காரங்க்ஸ், பெர்ச்செஸ் (துடுப்புக்கொண்ட ஐரோப்பிய நன்னீர் உணவு மீன் வகை), ரிப்பன்ஃபிஷ் (நீண்டு ஒடுங்கிய தட்டை மீன் வகை), ஒயிட்பெயிட் (தூண்டில் இரையாகப் பயன்படுத்தப்படும் சிறுமீன்), ஷார்க் ஷார்க்ஸ்கேட்ஸ் (சுரா மீன்), ரேஸ் (திருக்கை மீன்), டுனா, லாக்டே ரியஸ், ஸார்டைன், சிரோடிஸன்ட்ரஸ், கட்டில்ஃபிஷ் (கணவாய் மீன்), பிரான்ஸ் (இரால் மீன்கள்) மற்றும் லாப்ஸ்ட்டர் (பெருங்கடல் நண்டு வகை).

மீன் பண்ணைகள்

மீன் வளர்ப்பு மையம், பேச்சிப்பாறை மற்றும் மீன் வளர்ப்பு மையம், சித்தார் - 2 ஆகியவை மாவட்டத்திலுள்ள குறிப்பிடத்தக்க மீன் வளர்ப்புப் பண்ணைகளாகும்.

ஆய்வு நிலையம்

தொழில் நுட்ப ஆய்வு நிலையம்

கன்னியாகுமரியில், கடற்கரை உயிர் நூலைச் சார்ந்த நிலையம் அமைந்துள்ளது.

உள்நாட்டு மீன் பிடிப்பு செயற்பாடுகள், நீர்த்தேக்கங்கள், குளங்கள் மற்றும் குட்டைகள் ஆகியவற்றில் நடக்கின்றன. கடற்கரை மீன்பிடிப்பு செயற்பாடுகள் மாவட்டத்தின் கடற்கரைப்பகுதிகள் யாவற்றிலும் நடைபெறுகின்றன.

1985-86 ஆம் ஆண்டு மீன் உற்பத்தி விவரம் கீழே அளிக்கப் பட்டுள்ளது :

கடல் வாழ் மீன்கள்	70,574 டன்கள்
உள்நாட்டு மீன் வகைகள்	50 டன்கள்

மாவட்டத்தில் ஏற்கனவே ஒரு மீன் பண்ணைக்காரர்கள் வளர்ச்சி நிறுவனம் இயங்கிவருகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் மீன் வளம்[39]

மன்னார் வளைகுடா, அரபிக்கடல் மற்றும் இந்தியப் பெருங்கடல் ஆகியவற்றின் கூட்டு சேர்க்கையால் நீர்மருத்துவம் மற்றும் உயிர்நூலைச் சார்ந்த சாதகமான அடிப்படைக்காரணங்கள், கன்னியாகுமரி மாவட்டத்தில் கடலில் மீன் பிடிக்கும் வாய்ப்பினை பன்மடங்குப் பெருக்கியுள்ளது. இதனைத் தொடர்ந்து மாவட்டத்தில் மீன்வளம் பெருகி, பணந்திரட்டு வகைமுறை வாய்ப்புகளும் அதிகரித்துள்ளன. இப்பகுதியினை, தமிழ்நாடு மாநிலத்துடன் இணைத்த பின்னர், மீன் தொழில் துறையினரால் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, பல்வேறு வளர்ச்சிப்பணிகள் வேகமாக முடுக்கி விடப்பட்டன. ஆக்கவிளைவினை அதிகரிக்கவும், அவற்றைச் சீறிய முறையில் பயன்படுத்தவுமே இந்த வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்பணிக்கான ஒரு தனி மீன் தொழில் துறை அலகு, ஒரு உதவி இயக்குநர் தலைமையில் 1957 நவம்பர் முதல் நாகர்கோவிலில் பணியாற்றி வருகிறது.

மீன் பிடிப்பவர்களும், அவர்கள் பயன்படுத்தும் கருவிகளும்

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கடற்கரையின் நீளம் 68 கிலோ மீட்டராகும். இக்கடற்கரைப்பகுதியில் மீன் பிடிப்போர் வாழும் 44

கிராமங்கள் அமைந்துள்ளன. அவற்றில் வாழும் மக்கள் தொகை 1,14,897 ஆகும். அவர்களில் 32,915 ஆண்களும், 31,321 பெண்களும், 50,661 குழந்தைகளும் உள்ளனர். முக்கியமான மீன் பிடிக்கும் கருவி, கட்டுமரமாகும். மீன் பிடிப்பதற்கு மொத்தம் 19,264 கட்டுமரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. பயன்படுத்தப்படும் படகுகள் 1312 ஆகும். அவர்கள் பயன்படுத்தும் துணைக்கருவிகள் 591 காரவலை, 9327 வாலவலை, சாலவலை மற்றும் ஓடம் வலை மேலும் 2904 கொக்கிகள் மற்றும் உட்புற உறையணி ஆகியவையாகும்.

மீன் பிடிக்கும் பருவ காலங்கள்

பொதுவாக, மடிவலை ஏப்ரல் மாதம் முதல் அக்டோபர் மாதம் வரையிலும், காரவலை செப்டம்பர் மாதம் முதல் சூன் வரையிலும் பயன்படுத்தப்படுகின்றன. வாலவலை, காலவலை ஆகியவை ஆகஸ்ட் முதல் ஏப்ரல் வரையிலும், ஓடம்வலை முக்கியமாக சேர்வகை மீன்களைப் பிடிக்க ஆகஸ்ட் முதல் நவம்பர் வரை விரிக்கப்படுகின்றன. நேதலி வலையை ஏப்ரல்-மே மாதங்களிலும், செப்டம்பர்-அக்டோபர் மாதங்களிலும் பயன்படுத்துகிறார்கள். தினந்தோறும் ஏறத்தாழ 120 முதல் 150 அடி ஆழம் வரை சென்று மீன் பிடிக்கப்படுகிறது. மிகவும் ஆழமானதும், வளப்பமிக்க பல மீன்வகைகளையுடையதுமான கன்னியாகுமரி கடற்கரையின் தென்மேற்கேயுள்ள பகுதியில்தான், சனவரி முதல் ஏப்ரல் வரையுள்ள காலங்களில் பெரும்பாலும் மீன் பிடிக்கப்படுகிறது.

விற்பனைக்குத் தேவையான பல முதன்மையான மீன் வகைகளைப் பிடிக்கும் பருவ காலங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

மீன்வகை (1)	*பருவகாலம்* (2)
1. ஒயிட் பெயிட் (தூண்டில் இரையாகப் பயன்படுத்தப்படும் சிறு மீன்)	ஏப்ரல், மே மற்றும் செப்டம்பர், நவம்பர்
2. பெரிய தாடையையுடைய வகை	மார்ச், ஏப்ரல் மற்றும் ஆகஸ்ட், அக்டோபர்
3. ஸாபர் ஃபிஷ் (கொடுவாள் வடிவுடைய மீன்)	சூலை - செப்டம்பர்
4. கேட் ஃபிஷ் (பூனை போன்ற அமைப்புடைய மீன் வகை)	பிப்ரவரி - மார்ச்
5. பெர்ச்செஸ் (துடுப்புக் கொண்ட ஐரோப்பிய நன்னீர் உணவு மீன்வகை)	சூலை-ஆகஸ்ட் மற்றும் பிப்ரவரி - மார்ச்
6. ஹார்ஸ் மாக்கொரெல்ஸ்	மே-சூலை
7. சில்வர் - பெல்லீஸ்	நவம்பர்
8. பாம்ஃப்ரெட்ஸ்	மார்ச் - ஏப்ரல்

9. ட்ரிகர் ஃபிஷஸ்	சனவரி - மார்ச்
10. ஷார்க்ஸ் (பெரிய வகை) (சுரா மீன்)	சூலை - செப்டம்பர்
11. ஷார்க்ஸ் (சிறிய வகை) (சுரா மீன்)	ஆண்டு முழுமையும்
12. ரெயின்போ சார்டைன் - (பதனச் சிறு கடல் மீன் வகை)	டிசம்பர் - சனவரி
13. பிரான்ஸ் (இரால் மீன்)	சூன் - ஆகஸ்ட்
14. ராக்-காட் (உணவுக்குப் பெரிதும் பயன்படும் பெரிய கடல்மீன்வகை)	சூலை - ஆகஸ்ட் மற்றும் டிசம்பர் - பிப்ரவரி
15. சேத் ஃபிஷ்	ஆகஸ்ட் - நவம்பர்
16. லாப்ஸ்ட்டர் (பெருங்கடல் நண்டு வகை)	நவம்பர் - பிப்ரவரி

திரட்டி இறக்கப்படும் மீன்களின் மதிப்பீடு

இம்மாவட்டக் கடற்கரையில் திரட்டி இறக்கப்பட்ட மீன்களின் அளவு குறித்து முறையாக ஆய்வு செய்து புள்ளிவிவரங்கள் சேகரித்ததில் ஆண்டுதோறு பிடிக்கப்பட்ட மீன்கள் அளவின் மதிப்பீடு, 70574 டன்களாகும். மீன்கள் திரட்டி விற்பனைக்கு இறக்கப்படும் முக்கிய மையங்கள் கன்னியாகுமரி, முட்டம், காடியாப்பட்டினம், கொளச்சல், எனயம், புத்தன்துறை மற்றும் தூத்தூர் ஆகியவையாகும்.

மாவட்டத்திலுள்ள அனைத்து மீன்பிடிப்பு கிராமங்களும், நாகர் கோவிலுடன் நல்ல சாலைகள் மூலம் இணைக்கப்பட்டுள்ளன. பிடிக்கப்பட்ட மொத்த மீன்களில் 40 விழுக்காடு பதனம் செய்யப்படுகின்றன. எஞ்சிய அளவு அப்படியே அண்டை கிராமங்களுக்கு விற்பனைக்கு அனுப்பப் படுகின்றன. முதன்மையான மீன் சேகரிப்பு மையங்களிலிருந்து உட்பகுதி கிராமங்களுக்கு 150 முதல் 200 வரையிலான இரு சக்கர மிதி வண்டிகளில் மீன்கள் தேவைக்காக அனுப்பப்படுகின்றன. பதனப்படுத்தப்பட்ட மீன்களில் 80 விழுக்காடு, ஸ்ரீலங்காவிற்கு ஏற்றுமதி செய்வதற்கு பாரஉந்து மூலம் தூத்துக்குடிக்கு அனுப்பப்படுகின்றன. எஞ்சிய மீன்கள், இம்மாநிலத்திலுள்ள மையங்களான சென்னை, கோயில்பட்டி, நாஸரத், மேலப்பாளயம், தென்காசி, பரமக்குடி, மதுரை, திருச்சிராப்பள்ளி, அரக்கோணம் மற்றும் கேரள மாநிலத்தைச் சேர்ந்த சங்கணஞ்சேரி ஆகியவற்றிற்கு அனுப்பப்படுகிறது.

லாப்ஸ்ட்டர் வகையைச் சார்ந்தவை, மீனவர்களிடமிருந்து முட்டம் மற்றும் மணவாளக்குரிச்சியிலுள்ள மூன்று தனியார் நிறுவனங்களால் விலைக்கு வாங்கப்பட்டு, திருவனந்தபுரம் மற்றும் எர்ணாகுளம் ஆகிய இடங்களுக்கு அனுப்பப்படுகின்றன. அங்கே அவை, குளிர்சாதன முறையில் பாதுகாப்பாக அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டு நல்ல அயல்நாட்டு நாணயம் மீட்ட வழிவகுக்கின்றன.

மீனவர்களின் பொருளாதார நிலை

இம்மாவட்டத்திலுள்ள மீனவர்களின் பொருளாதார நிலையினை ஏனைய மாவட்ட மீனவர்களது நிலையுடன் ஒப்பிட்டு நோக்குங்கால் இவர்கள் நிலை உயர்ந்ததெனத் தெளிவுறக் கூறலாம். இவர்கள் பெரும்பாலும் ரோமன் கத்தோலிக்க வகுப்பைச் சார்ந்த கிறித்தவ மதத்தினராவர். மீனவர்களிடையே அவர்கள் ஏற்படுத்தியுள்ள சமயப்பரப்புக் குழுவின் இணைந்த செயல்பாடும், கடற்கரைத் தண்ணீரில் அவர்கள் நன்முறையில், சீராக மீன்பிடித்து வருவதுமே அவர்களது முன்னேற்றத்தின் அடிப்படையாகும். மாநிலத்திலுள்ள மீனவர்களுக்கான இலவச வீட்டு வசதித்திட்டத்தின் கீழ் இதுகாறும் 25 மீனவர் வாழ் கிராமங்களில் 1608 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மீனவர் வாழ் கிராமத்தி லும், ஒரு கிறித்தவத் திருக்கோயிலும் ஒரு பள்ளியும் அமைந்துள்ளன. அவற்றை முறையாக பராமரிப்பதில் மீனவர்களின் பங்கு குறிப்பிடத்தக்கது.

கூடுதல் வளர்ச்சி

இந்த கடற்கரைப்பகுதியில், மீன் பிடிப்புப் பணியினை மேலும் செம்மைப்படுத்த குறிப்பிடத்தக்க வாய்ப்புகள் உள்ளன. தொழில் நுட்ப மற்றும் உயிர்நூல் ஆய்வு நிலையமொன்று, கன்னியாகுமரியில் நிறுவப்பட்டுள்ளது. இம்மையம், இப்பகுதியிலுள்ள மீன்வளம் குறித்த மதிப்பீடு, பாதுகாப்பு உருவாக்கம் மற்றும் அவற்றைக் கைப்பற்றுதல், பயன்படுத்துதல் ஆகியவை குறித்து விரிவாக ஆராய்ச்சி செய்து, தொடர் நடவடிக்கை மேற்கொள்கிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் தமிழ்நாடு மீன்தொழில் துறை வளர்ச்சிக் கழகத்தின் நடவடிக்கைகளும், சாதனைகளும்

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள, மீனவர்களின் சமூக, பொருளாதார நிலையை உயர்த்திட ஒரு புதிய திட்டம் துவக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், தமிழ்நாடு மீன்தொழில்துறை வளர்ச்சிக் கழகத் தாலும், தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலமாகவும், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மீனவர்களுக்குத் தவணைக்கு வாங்கும் திட்டத்தின் கீழ் இயந்திர விசைப் படகுகள் வழங்கப்பட்டுள்ளன.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மீனவர்களுக்குத் தமிழ்நாடு மீன் தொழில்துறை வளர்ச்சிக் கழகத்தினால் வழங்கப்பட்ட இயந்திர விசைப்படகுகள் குறித்த விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன:[40]

முதல் மற்றும் இரண்டாவது கட்டங்கள்	*ஐ.பி.*	*எஸ்.டி.பி.*	*மொத்தம்*
தவணைக்கு வாங்கும் முறை	32	10	42
இந்திய மத்திய வங்கி, நாகர்கோயில்	40	21	61

யுனைடெட் கமர்சியல் வங்கி, நாகர்கோவில்	10	1	11
கனரா வங்கி, கோட்டாறு	2	2	4
மொத்தம்	84	34	118
மூன்றாவது கட்டம் :			
இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, வெள்ளிச்சந்தை	1	24	25
இந்திய ஸ்டேட்வங்கி, நாகர்கோவில்	1	3	4
முதன்மை நில வளர்ச்சி வங்கி, தக்களை	1	5	6
முதன்மை நில வளர்ச்சி வங்கி, அகஸ்தீஸ்வரம்	-	2	2
முதன்மை நில வளர்ச்சி வங்கி, முஞ்சிரை	1	1	2
	4	35	39
மொத்த கூடுதல்	88	69	157

மீனவர்கள், பிடிக்கும் மீன்களுக்கு நியாயமான தொகை கிடைப்பதற்கு, மீன் தொழில் துறை வளர்ச்சிக் கழகம் வழிவகுக்கிறது. இத்திட்டம் துவக்கப்பெற்றதிலிருந்து கழகத்தினால் கொள்முதல் செய்யப்பட்ட மீன்கள், அவற்றின் மதிப்பு ஆகிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

ஆண்டு	*பிடிக்கப்பட்ட மீன்களின் அளவு (கி.கிராமில்)*	*தொகை* ரூ. பை.
1979-80	30,742.250	1,49,549.94
1980-81	42,985.900	2,64,173.47
1981-82	39,741.000	3,12,888.65
1982-84	மீன் கொள்முதல் நடைபெறவில்லை	
1984-85	3,601.000	50,853.25
1985-86	4,307.000	58,009.00
1986-87	15,175.000	2,31,455.00
1987-88	19,999.000	1,89,750.00

மீன் பண்ணைக்காரர்கள் வளர்ச்சி நிறுவனம், நாகர்கோவில்

தமிழ்நாடு அரசு தனது 27.4.1982 நாளய (காடுகள் மற்றும் மீன் தொழில் துறை) 538 எண். கொண்ட அரசாணையில் கடந்த 1982-83, இல் கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவிலைத் தலைமையிடமாகக் கொண்டு, ஒரு மீன் பண்ணைக்காரர்கள் வளர்ச்சி நிறுவனத்தை உருவாக்க ஒப்புதலளித்தது. இதனுடைய நோக்கம் என்னவெனில் உள்ளூர் மக்களின் உதவியுடன் தீவிரமாக மீன் பண்ணைகளை உருவாக்குதல், வேளாண் மக்களிடையே பயிரிடும் பழக்கத்தை ஊக்குவித்தல் மற்றும் உள்நாட்டு மீன் உற்பத்தியைப் பெருக்குதல் ஆகியவையாகும். இந்நிறுவனம், 2.6.1982ஆம் நாளன்று செயலாற்றத் துவங்கியது.

திட்டத்தின் நோக்கங்கள்

அ. மாவட்டத்தில் மீன் உற்பத்திக்கேற்ற குட்டைகள், குளங்கள் ஆகியவற்றை படிப்படியாக சீர்திருத்தம் செய்து அவறறில் மீன் உற்பத்தியைப் பெருக்குதல் ;

ஆ. இங்கு நிறுவனத்தின் நடவடிக்கையினை ஒரு மையக்கருவாக அமைத்து மற்ற பகுதிகளுக்கும் இப்பணிகளை விரிவாக்கும் நோக்கில் செயலாற்றுதல் ;

இ. கிராம மக்களுக்கு, மீன் வளர்ப்பு குறித்து நன்கு பயிற்சி அளித்து அம்முறை குறித்து விளம்பரப்படுத்தி அவர்களை மீன் வளர்ப்பதைத் துணைத் தொழிலாகக் கொள்ள ஊக்கமளித்து அவர்களது பொருளாதார நிலையை உயர்த்திட வழிவகுத்து, அவ்வாறே புறப்பகுதிப் பொருளாதார நிலையை உயர்த்திட வழிவகுத்து அவ்வாறே புறப்பகுதிப் பொருளாதாரமும் முன்னேறப் பாடுபடுதல்.

1982-83ஆம் ஆண்டு முதல் 1987-88 வரை சாதனை

1.	அடையாளம் கண்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட குளங்கள்	.. 343
2.	அடையாளம் கண்டுகொள்ளப்பட்ட நிலப்பரப்பு	.. 538.95 எக்டேர்
3.	எடுத்துக் கொள்ளப்பட்ட குளங்கள்	.. 250
4.	எடுத்துக் கொள்ளப்பட்ட நிலப்பரப்பு	.. 431.50 எக்டேர்
5.	செயல்முறையிலுள்ள குளங்கள்	.. 191
6.	செயல்முறையிலுள்ள பரப்பளவு	.. 370.60 எக்டேர்
7.	பயிற்சியளிக்கப்பட்ட மீன் பண்ணைக்காரர்கள்	.. 305
8.	நடவடிக்கை மேற்கொண்டுள்ள மீன் பண்ணைக்காரர்கள்	.. 248

1982-83ஆம் ஆண்டு முதல் 1987-88 ஆண்டு வரை சாதனை - தொடர்ச்சி

9.	இருப்பிலுள்ள மிகச்சிறு உருப்பெற்ற மீன்கள்	.. 44,01,940
10.	கிடைக்கப்பெற்ற மீன்களின் அளவு	.. 4,43,382,100 கி. கிராம்
11.	மீன் விற்பனை மூலம் ஈட்டிய வருவாய்	.. 19,74,187
12.	ஒரு எக்டேரில் கிடைக்கப்பெற்ற அதிக அளவு உற்பத்தி	.. 751 கி.கிராம்

முதலீடு செய்ய வழங்கப்படும் கடன்

13.	மீன் பண்ணைக்காரர்களுக்கு நிறுவனம் மூலம் தொழிலில் முதலீடு செய்வதற்காக வழங்கப்பட்ட கடன்	.. 3,02,500.70
14.	மீன் பண்ணைக்காரர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட தொகை (அசல் மற்றும் வட்டி)	.. 2,38,138.55
15.	வங்கிமூலம் மீன் பண்ணைக்காரர்களுக்கு வழங்கப்பட்ட முதலீட்டுக்கடன்	ரூ. 8,55,598.00
16.	வங்கிக்கடனுக்காக மீன் பண்ணைக்காரர் களிடமிருந்து திருப்பி வசூலிக்கப்பட்ட தொகை (அசல் மற்றும் வட்டி)	ரூ. 2,99,848.70
17.	முதலீட்டின் மீது, மீன் பண்ணைக்காரர்களுக்கு வழங்கப்பட்ட அரசு மானியம்	ரூ. 1,24,456.45

சீர்திருத்தக்கடன்

18.	வங்கி மூலம் மீன் பண்ணைக்காரர்களுக்கு வழங்கப்பட்ட சீர்திருத்தக்கடன்	ரூ. 2,01,107.50
19.	சீர்திருத்தம் செய்ய, மீன் பண்ணைக்காரர் களுக்கு வழங்கப்பட்ட அரசுமானியம்	ரூ. 48,218.25

1. மீன் உற்பத்திப் பண்ணை, சித்தார் அணை -2

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், தமிழக அரசு ரூ.5.1 இலட்சம் மதிப்பீட்டில் 100 விழுக்காடு மானியம் வழங்கி மீன் பண்ணைக்காரர்களின் வளர்ச்சி நிறுவனத்திற்காக, ஒரு மீன் பண்ணையினைக் கட்டுவதற்கு தனது 17.11.1982 நாளய (உள்ளாட்சித் துறை) (ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி-2) ஆணையில் ஒப்புதலளித்தது. அதன்படி, 16 மீன்கள் காப்பறைகள் (10.30 x 6.20 மீட்டர் அளவு) இரண்டு மீன்கள் வளர்க்கும் குட்டைகள் (20 மீட்டர் x 12.85 மீட்டர் - அளவு) ஒரு

கிணறு, டீசல் பொறியுடன் கூடிய குழாய் நீர் வீடு மற்றும் ஒரு சிறிய அலுவலகக் கட்டிடம் ஆகியவை நிறுவப்பட்டன. சித்தார் அணை-2இல் உள்ள மீன் பண்ணை 12.6.1987 அன்று பொறுப்பேற்கப்பட்டது. காப்பறைகளும், மீன் வளர்ப்புக்குட்டைகளும் சிறிய உருப்பெற்ற மீன்களை வளர்க்கப் பயன்படுத்தப்படுகின்றன.

2. மேற்கு மலைத் தொடர் வளர்ச்சித் திட்டம்

தமிழக அரசு, தனது 19.4.1988 நாளய (திட்டம் மற்றும் வளர்ச்சி) 50 எண். கொண்ட ஆணையில் சித்தார் அணை-2இல் மேற்கு மலைத்தொடர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், கூடுதல் மீன் வளர்ப்புக் குட்டைகள் மற்றும் பணியாளர்கள் இருப்பிடம் ஆகியவை நிறுவ, ரூ.10 இலட்சம் வழங்கி, ஒப்புதல் அளித்தது. அதன்படி, நாகர்கோவிலிலுள்ள மீன் பிடிக்கும் துறைமுகத் திட்டங்களையும் மைய கண்காணிப்புப் பொறியாளர் கட்டுமானப் பணிகளையும் கவனித்து வருகிறார்.

சின்ன முட்டம் மீன் பிடிக்கும் துறைமுகத் திட்டம்

சின்னமுட்டம், மீன்கள் வாழும் சூழ்நிலைக்கொத்த பெரும் பகுதியையும், தொடர்ந்து மீன்கள் வாழும் பகுதியையும் பெற்றிருக்கிறது. மீன்கள் வாழும் மிகப்பெரும் இரண்டு பகுதிகளான கன்னியாகுமரி கரை, வாட்ஜ் கரை ஆகியவை சின்ன முட்டத்திலிருந்து மிக அருகாமையிலுள்ள சரகத்தில்தான் அமைந்துள்ளன. கடற்பரப்பில் வாழ்கிற மீன்களின் வளமும், வாய்ப்பும் இங்கு ஏராளம் ; எனவே, பெரும்பை வலை, வாலவலை, ஓடம் வலை போன்ற வலைகளை விரித்து மீன்களைப் பிடிக்க நல்ல வாய்ப்புள்ளது[41].

படித்தட்டு போன்ற அமைப்பைப்பெற்ற ஒதுக்குப்புறமாயுள்ள சின்ன முட்டம் பகுதி, பெருங்கடல் நண்டு வகையைச் சார்ந்த மற்றும் இரால் மீன்களுக்குப் பெயர் பெற்ற பகுதியாக விளங்குகிறது. இவ்வகை மீன்கள் தொடர்ந்து உற்பத்திப் பெருக்கமளிக்க, ஏற்ற பகுதியாக சின்ன முட்டம் கடற்கரை அமைந்துள்ளது. எர்ணாகுளத்திலுள்ள கடற்பரப் பிற்குரிய மீன் தொழில்துறை அலகு மேற்கொண்ட ஆய்வில் இப்பகுதி திரள் திரளாக உள்ள மீன் வகைகளில் அதிகமாக உள்ள நெய்த்தோலி போன்ற மீன்வகைகள் மேலும் பல ஆண்டுகளுக்கு பெருகிட நல்ல வாய்ப்புள்ளமை அறியவருகிறது.

மீன் வள ஆதாரமும், வாய்ப்பும்

ஏற்கனவே கூறியது போன்று மீன்கள் கணிசமாக வாழும் மிகப்பெரும் இரண்டு பகுதிகளான கன்னியாகுமரி கரை, வாட்ஜ் கரை ஆகியவை சின்னமுட்டத்தினின்றும் மிக அருகாமையிலுள்ள சரகத்திலேயே உள்ளன. கன்னியாகுமரி கரையின் பரப்பளவு 23,310 சதுர கிலோ மீட்டராகும். வாட்ஜ் கரை, பரப்பளவு கன்னியாகுமரி கரையின் பரப்பளவில்

சரிபாதியாகும். இவ்விரு கரைகளிலுமே துடுப்புக் கொண்ட ஐரோப்பிய நன்னீர் உணவு மீன் வகைகள் ஏராளமாக உள்ளன. அவை கை வலைகள், நீண்ட பெரிய வலைகள், பொறியமைப்பு, பெரும்பை வலைகள் இனங்களின் உதவியால் பிடிக்கலாம். பெருங்கடல் நண்டு வகையைச் சார்ந்தவை மிகவும் அதிகமான அளவு காணப்படும் என்ற பகுதி சின்ன முட்டத்திலிருந்து 25 கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது. பெருநிலப் பகுதியைத் தாண்டிச் சென்றால், ஆழ்கடலில் இரால் மீன்கள் காணப்படுகின்றன.

இந்திய துணைக்கண்டத்திலேயே மிக அதிக அளவில் கடற்பரப்பில் வாழுகிற பல வகை மீன்கள் ஒருங்கே வாழும் தனிச் சிறப்பியல்பை சின்னமுட்டம் பெற்றுள்ளது.

கன்னியாகுமரி ஐந்து கிலோ மீட்டர் வடக்கேயுள்ள சின்ன முட்டத்தில், ஒரு புதிய மீன்பிடிக்கும் துறைமுகம் கட்டப்பட்டு வருகிறது. இத்துறைமுகத்தின் வடபுறத்தில் நீர்க்கரையும், கடலரிப்புத் தடுப்பு அரணும் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தென்புறத்தில், அலை தாங்கியொன்று உருவாக்கப்படவுள்ளது. மீன் பிடிக்கப் பயன்படுத்தப்படும் பெரிய படகுகளை கடலில் வசதியாய் இயக்கவும், நங்கூரம் பாய்ச்ச அமைதியான அகலிடம் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இப்பணிக்கான அரசு தனது 23.3.1982 நாளய 328 (காடுகள் மற்றும் மீன் தொழில் துறை) எண். கொண்ட ஆணையில் 1978ஆம் ஆண்டு அளித்த ஆதாரங்களினடிப்படையிலும், 1976-77 ஆம் ஆண்டிற்கான அட்டவணையிட்ட விலை மதிப்புப்படியும் 234 இலட்சம் ரூபாய் வழங்கி ஒப்புதலளித்துள்ளது. 1971-72 முதல் 1982-83 வரையிலான திட்ட மதிப்பு உயர்வினைக் கருத்திற்கொண்டு, 1986-87 ஆம் ஆண்டிற்கான அட்டவ ணையிட்ட விலை மதிப்புப்படி, திட்ட மதிப்பினை ரூ.684 இலட்சமாக உயர்த்தி ஆணை வழங்கப்பட்டது.

இத்திட்டம், மத்திய அரசின் ஆதரவில் மேற்கொள்ளப் பட்டதாகையால், திட்டச் செலவில் 50 விழுக்காடு மத்திய அரசும், 50 விழுக்காடு மாநில அரசும் ஏற்கின்றன. இவைதவிர மாநில அரசு நிதியினின்றும் ரூ.246.84 இலட்சம் மேலும் சில வசதிகளளிக்க ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள சின்ன முட்டத்தில் உருவாகி வரும் இத்திட்டத்தினைத் தொடர்ந்து அதிக அளவு மீன்பிடிப்பதற்காக 9.8 மீட்டர் அளவுள்ள 200 மீன் பிடிக்கும் பெரிய படகுகளும், 16 மீட்டர் அளவுள்ள 40 பொறி பொருத்தப்பட்ட 40 மீன் பிடிக்கும் படகுகளும், 23 மீட்டர் அளவுள்ள ஐந்து படகுகளும், மேலும் 28 மீட்டர் அளவுள்ள ஐந்து படகுகளும் பயன்படுத்த ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனால் திரட்டி இறக்கப்படும் மீன்களின் அளவு 2000 டன்னிலிருந்து 35,000 டன்னாக உயருமென எதிர்நோக்கப்படுகிறது. இதனால் 2000 மீனவர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டத்தின்படி கீழ்புரம் மற்றும் மேல்புரத்தில் அலை தாங்கிகள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. அணுகும் கரைகள், கடற்கரை அணுகும் சாலைகள், நீர் வழங்கும் பணியில் பூர்வாங்கி நிலை ஆகியவை முடிவுற்றன. இத்திட்டம் 1990 அக்டோபரில் முழுமையாக முடிவுறுமென எதிர்பார்க்கப்படுகிறது[42].

காட்டு நிலம்

மாவட்டத்தின் பொருளாதாரத்தை நிர்ணயிக்க காட்டு நிலங்களின் முக்கியத்துவம்

காட்டு நிலங்கள், கொள்கை அடிப்படையிலும், நடைமுறையிலும் காடுகளை உருவாக்குதல், பாதுகாத்தல், விஞ்ஞான ரீதியில் அவைகளைப் பேணிக் காத்தல் மற்றும் தேவைக்கு வேண்டிய மரங்கள் தொடர்பான பொருட்களை உற்பத்தி செய்து, பணந்திரட்டு வகைமுறை வாய்ப்பினை ஏற்படுத்துதல் போன்ற அரிய சாதனைகளைப் புரிகின்றன[43].

ஒரு மாவட்டத்திலுள்ள காடுகள் இயற்கை தந்த சொத்துக்களாகும். அவற்றின் மதிப்பு அளவிட இயலாதது. மக்கள் வீடுகட்டுவதற்குத் தேவையான பலவகை மரங்கள், விறகு, மூங்கில்கள், பல்வேறு இதர பொருட்கள் மற்றும் காட்டிற்குக்கருகாமையில் வாழ்ந்து வரும் மக்களின் கால்நடைகளுக்கு தீவனத்தையளித்தல் ஆகிய பலவகைகளில் காடுகள் மக்களுக்குப் பயன்படுகின்றன. மேலும் விரிந்து, பரந்து கிடக்கும் காட்டுப்பகுதிகளில் கால்நடைகள் மேய்ந்து பசியாற்ற வழி வகுக்கின்றன. இவைதவிர கரி, காகிதம் உற்பத்தி செய்தல், மருந்துகள் தயாரித்தல் போன்ற பொருளாதார அடிப்படையிலும் மற்றும் வாணிபம், தொழில் தொடர்பானதுமான பொருட்களை உற்பத்தி செய்வதற்குத் தேவையான மூலப்பொருட்களையும் காட்டு மரங்கள் அளிக்கின்றன.

மரங்களைப் பாதுகாத்தல், கட்டிட மரவேலைத் தேவைகளுக்கு வேண்டிய மரங்களின் உபரி பாகங்களை சேதமின்றி வெட்டுதல், புதிதாக மரங்களைத் திரும்ப உண்டு பண்ணுதல், துணை வேலைகளுக்குப் பயன்படுத்துதல், மூலப் பொருட்களைச் சேகரித்து விற்பனை செய்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள பலருக்கு வேலைவாய்ப்பு அளிக்கக் காடுகள் வழி வகுக்கின்றன.

சுற்றுமுகமாகச் சொன்னால், காடுகள் இயற்கையமைப்பு வடிவங்களை அப்படியே பேணிக் காக்கின்றன. மண் அரிப்பு, வெள்ளம் ஆகியவற்றைத் தடுத்து நிறுத்துகின்றன. நீரோடைகள் வற்றாமல்

(நிர்வாகப் பொறியாளர், சின்னமுட்டம் மீன்பிடிப்புத் துறைமுகக் கோட்டம், நாகர்கோவில், அறிக்கை நாள் 21.11.1988)

பாய்வதற்கு வழிவகுத்து விவசாயத்திற்குப் பெரிதும் உதவுகின்றன. தட்ப, வெட்ப நிலையினை நடுநிலை அளவில் இட்டுச் சென்று உடல் நலத்தைப் பயன்படத்தக்க அளவு பேணிக்காக்க உதவி செய்கின்றன. விஞ்ஞான மற்றும் பொழுது போக்கு முக்கியத்துவம் வாய்ந்த அளவில் மிருகங்களுக்கும் அடைக்கலமளிக்கின்றன.

திருநெல்வேலி தெற்கு காடுகள் கோட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு, கன்னியாகுமரி காடுகள் கோட்டம், நாகர்கோவிலைத் தலைமையிடமாகக் கொண்டு 1.4.1977 முதல் துவங்கப்பெற்றது.

கன்னியாகுமரி வருவாய் மாவட்டத்தின் பரப்பளவு 1671.8 சதுர கிலோமீட்டராகும். அவற்றில் ஒதுக்கப்பட்ட காடுகளின் பரப்பளவு 446.5 சதுர கிலோமீட்டராகும். இது மாவட்டத்தின் மொத்த பரப்பளவில் 26.7 விழுக்காடாகும்.

பல்வேறு ஒதுக்கப்பட்ட காடுகளின் பரப்பளவு விவரங்கள் வருமாறு:

1.	தெற்கு மலை கிழக்கு	11.87	சதுர கி.மீ.
2.	தெற்கு மலை மேற்கு	9.07	"
3.	தாடகை மலை	6.75	"
4.	பொய்கை மலை	7.75	"
5.	மகேந்திர கிரி	43.73	"
6.	வீரப்புளி	249.50	"
7.	வேலிமலை	12.82	"
8.	பேச்சிப்பாறை - பிட் 1-அ	0.26	"
9.	பேச்சிப்பாறை - பிட் 1-ஆ	0.33	"
10.	கல்குளம் - பிட் - 1 - அ	0.39	"
11.	கல்குளம் - பிட் - 1 - ஆ	0.44	"
12.	கீழமலை	62.16	"
13.	தாடலிக்காடு	1.54	"
14.	ஆசாம்பு	39.84	"
	மொத்தம்	446.45	

446.5 சதுர கிலோ மீட்டர்

கன்னியாகுமரி காடுகள் கோட்டம், குலசேகரம், அழகியபாண்டிய புரம் மற்றும் பூதபாண்டி ஆகிய மூன்று ஆட்சிப்பரப்பை உள்ளடிக்கிய தாகும். மேல் கோதையாறு பகுதிகளைப் பாதுகாத்திட, ஒரு சிறப்புப் பணி சரகம், இரண்டு நில அளவை சரகம் மற்றும் ஒரு மரங்கள் சேமிப்புக் கிடங்கு சரகம் என இவை பிரிக்கப்பட்டு இயங்கி வருகின்றன.

மேலும், இரப்பர் வட்டாரங்கள் கட்டுப்பாட்டில் 4785 எக்டேர் பரப்பளவில் இரப்பர் பயிரிடப்பட்டிருந்தது. நாகர்கோவிலைத்

தலைமையிடமாகக் கொண்டு, அரசு இரப்பர் கழகம் உருவாக்கப்பட்ட பின்னர், கிழக்கு மற்றும் மேற்கு கன்னியாகுமரி இரப்பர் வட்டாரங்கள் மூடப்பட்டு, அப்பகுதி நீண்ட கால குத்தகை அடிப்படையில், அரசு இரப்பர் கழகத்தின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டது. பக்குவமடைந்த இரப்பர் பயிர்களுக்கு எக்டேர் ஒன்றுக்கு ரூ.4,000/- ஆண்டுக் குத்தகைத் தொகையாக, கழகம் வழங்கி வருகிறது[44].

இது தவிர 110 எக்டேர் நிலப்பரப்பில் கிராம்பு, பயிரிடப்பட்டு, இந்தப் பகுதியும், கிராம்பு காடுகள் கோட்டத்தின் பராமரிப்பிலிருந்து வருகிறது.

பயிரிடப்பட்டுள்ள பலவகைப் பயிர்கள் மற்றும் அவை பயிரிடப்பட்ட நிலப்பரப்பு ஆகிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

1.	தேக்கு	2271.00	எக்டேர்
2.	ஊசியிலைக்காடு (அப்பீஸியா ஃபால்கேட்டா)	2614.00	"
3.	மூங்கில்	102.00	"
4.	தைலம் தரும் தேவதாரு மரவகை	37.50	"
5.	புளி	90.00	"

கிராம்புத் தோட்டப்பண்ணை, நாகர்கோவில்
(கிராம்பு - யூஜீனியா கேர்யோப்ரைல்லஸ்)

அதிக விலை மதிப்புள்ள கிராம்பு உலகம் முழுமையும் தேவைப்படும் பொருளாகும். கிராம்பு உலர்ந்த பக்குவமடைந்த மூடிய மலர் மொக்கு களையுடையதாகும்.

கிராம்பு பயிர் செய்தல்

கிராம்புப் பயிர் கடல் நிலையிலிருந்து 900 மீட்டர்கள் உயரம் வரை வளர்ந்து பூக்கிறது. அதற்குத் தகுந்த தட்ப, வெட்ப நிலை, 25° சென்டிகிரேடிலிருந்து, 30° சென்டிகிரேடு வரையிலாகும். அதற்கு, ஆண்டிற்கு 1500 முதல் 2000 மில்லி மீட்டர் வரை மழை தேவைப் படுகிறது. நல்ல வடிமான வசதிபெற்ற, மேலும் ஆண்டு முழுவதும் போதுமான ஈரப்பசையுள்ள தளர்ந்த மண்ணில்தான் இப்பயிர் வளர்கிறது. இலை, தழை, மக்கிய சத்துக்கள் உள்ள ஆழமான களிச் சேற்று வண்டல் மண், கிராம்பு பயிரிட ஏற்றதாகும். கிராம்பு வளரவும், மலரவும், சூரிய ஒளி, அத்தியாவசியமானது.

முந்தைய நிர்வாகம்

1971, 1972, 1973 மற்றும் 1975 ஆம் ஆண்டுகளில், அழகிய பாண்டியபுரம் சரகம், மகேந்திரகிரி ஒதுக்குக் காட்டில், ஏறத்தாழ 600 மீட்டர் உயரத்தில், இரண்டு எக்டேர் நிலத்தில், சோதனை அடிப்படையில் கிராம்பு பயிரிடப்பட்டது.

சோதனை வெற்றியளித்ததால், 1975ஆம் ஆண்டு ஒரு புதிய கோட்டம் துவங்கப்பட்டது. வீரப்புளி ஒதுக்குக் காட்டில், மரமலை என்ற இடத்தில் 250 முதல் 550 மீட்டர் உயரத்தில், 102 எக்டேர் நிலப் பரப்பில் கிராம்பு பயிரிடப்பட்டது. விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன:

1976	31 எக்டேர்
1977	36 எக்டேர்
1978	35 எக்டேர்

கிராம்பு பயிரிடுவதற்கான திட்ட அறிக்கைக்கு 24.7.1975 நாளய (காடுகள் மற்றும் மீன் தொழில் துறை) 700 எண். கொண்ட அரசாணையில், ஒப்புதலளிக்கப்பட்டது. இத்திட்டம், ஐந்தாவது, ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ், மத்திய அரசு ஆதரவில் நடைமுறைப் படுத்தப்பட்ட தாகையால், மொத்த செலவில், 50 விழுக்காட்டினை மத்திய அரசு ஏற்றது. இத்திட்டம், ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலமான, 1984-85 வரை நீடித்தது.

இந்தியாவில், இந்தத் தோட்டக்கலைப் பயிர் குறித்து, இதுகாறும் எவ்வித விஞ்ஞான ஆய்வும் மேற்கொள்ளப்படவில்லை. 1970ஆம் ஆண்டு முதல், கன்னியாகுமரி மாவட்டத்தில், கிராம்பு பயிரிடும் ஊக்ரகழுச்சியுடைய தனியார் எஸ்டேட் உரிமையாளர்கள் பெற்ற அனுபவத்தையும், ஆற்றலையும் அடிப்படையாகக் கொண்டு திட்டம் மேற்கொள்ளப்பட்டு, 1976ஆம் ஆண்டு முதல் கிராம்பு சாகுபடி துவக்கப்பட்டது.

1975ஆம் ஆண்டு முதல் 1984 ஆண்டு வரை சராசரி மழை அளவு 1679.59 மில்லி மீட்டராக இருந்த போதிலும் 1982ஆம் ஆண்டு மிகக் குறைந்த அளவான 1262 மில்லி மீட்டர்தான் மழை பெய்தது. 1982 மற்றும் 1983 ஆண்டுகளில், இப்பகுதியில் எப்பொழுதுமிருந்திராத அளவு வறட்சி நிலவியது. அதனால், இறப்பு எண்ணிக்கை மிகவும் அதிகமானது. சூரிய ஒளி மற்றும் தண்ணீர் இரண்டுமே தேவைப்படும் பயிராகையால், நீரில்லாத காரணத்தால் 1983ஆம் ஆண்டு கிராம்புப் பயிர் வளர்ச்சி மிகவும் குறைந்தது.

பூச்சிகளும், நோய்களும்

கிராம்பு இந்நிலத்திற்குப் புதிதான, அயற் பண்புடைய பயிராதலாலும் இயற்கையிலேயே மிக நுண்ணியதாகையாலும் பூச்சிகள் நீண்டுருண்ட வடிவுடைய புழுவகைகள், காளான் மற்றும் நச்சுக் கோளாறுள்ள நோய்கள் இவற்றின் பாதிப்பிற்காளாகும் தன்மையுடையது. நடுத்தண்டில் துளையிடும் பூச்சிகள் பொதுவாக பயிரின் பரவின-காளான் பரவுவதால், நுனியினின்று கீழே படிப்படியாக உலர்ந்து போகும் நோயும் பயிரைத் தாக்கியது. அதனால் இந்நோய் தாக்கிய பயிர்கள் நுனியிலிருந்து அடிவரை வாடி வதங்கி சுருங்கிப் போயின.

பூச்சிகள் மற்றும் நோய்களினின்றும் பயிர்களைக் காத்திடவும், தோட்டக்கலை சுகாதாரத்தைப் பேணிக்காக்கவும், பூச்சிக்கொல்லி மற்றும் காளான் கொல்லி மருந்துகளைத் தெளிப்பது இன்றியமையாதது. இப்பகுதியில் சராசரியாக 1500 மில்லிமீட்டர் மழை பொழிகிறது. மழை பெய்யும் காலமும், ஆண்டிற்கு 100 நாட்களாகும். ஆண்டிற்கு நான்குதடவை, களைகள் நீக்கப்படுகின்றன. மேலும், நீளமான புல், ஆண்டு முழுவதும் காணப்படும் புதர் செடிகள் வகை ஆகியவை (யுபொடோரியம், லான்டானா) ஆங்காங்கே வேருடன் அகற்றப்படுகின்றன. இச்செயல்முறைகள், பயிர்களைக் களையினின்று காப்பதோடல்லாமல், பூச்சிகள் மற்றும் நோய்களால் விளையும் சேதத்தையும், ஓரளவு குறைக்கின்றன.

பயிர்களின் நிலை

1971, 1972, 1973 மற்றும் 1975 ஆகிய நான்கு ஆண்டுகளிலும் பயிரிடப்பட்ட, கிராம்புப்பயிர்கள் 1985ஆம் ஆண்டு நிலவரப்படியான இருப்பு விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன:

ஆண்டு	*மொத்தப் பயிர்களின் எண்ணிக்கை*	*பிழைத்த பயிர்களின் எண்ணிக்கை*	*விழுக்காடு*
1976	8,990	8,455	95
1977	9,300	8,875	95
1978	14,400	14,112	98
பழையன	2,264	2,100	93
மொத்தம்	34,954	33,542	95

மொத்தமிருந்த 33,542 அல்லது 33,500 பயிர்களில் பழைய தோட்டப்பயிர்கள் நீங்கலாக, எஞ்சிய பயிர்களுக்கு தோராயமாக வயது நிர்ணயித்து, கீழேகண்ட பட்டியலில் அளிக்கப்பட்டுள்ளது:

வயது	*1976*	*1977*	*1978*
1. 9 ஆண்டுகள் வயதான பயிர்கள்	84	..	..
2. 8 ஆண்டுகள் வயதான பயிர்கள்	133	73	..
3. 7 ஆண்டுகள் வயதான பயிர்கள்	214	171	271
4. 6 ஆண்டுகள் வயதான பயிர்கள்	529	296	372
5. 5 ஆண்டுகள் வயதான பயிர்கள்	832	548	481
6. 4 ஆண்டுகள் வயதான பயிர்கள்	737	509	534
7. 3 ஆண்டுகள் வயதான பயிர்கள்	1,241	2,812	6,005
8. 2 ஆண்டுகள் வயதான பயிர்கள்	3,670	4,140	5,200
9. 1 ஆண்டு வயதான பயிர்கள்	715	338	1,249
	8,155	8,887	14,112

புதிய கோட்டம் அமைத்தல்

"பாலமோர்" என்பது, கினரிப்பாறையிலிருந்து, எட்டு கிலோ மீட்டர் தொலைவிலுள்ள, ஒரு கைவிடப்பட்ட தேயிலை எஸ்டேட்டாகும். நாணூற்றி ஐம்பது மீட்டர் உயரத்திலுள்ள 120 எக்டோ் பரப்பளவைக் கொண்ட இந்த எஸ்டேட், காடுகள் வளர்ப்புத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ளது. இது அதிலுள்ள மரங்களை வெட்டாமலேயே கிராம்பு பயிரிட மிகத் தகுந்த நிலப்பரப்பாகும். மற்றொரு நன்மை என்னவெனில் இப்பகுதியினடியில் பாயும் கலிகேசம் ஆற்றிலிருந்து தேவைப்படும் தண்ணீரைக் குழாய் மூலம் கொண்டு சென்று நீர்ப்பாசனத்திற்குப் பயன்படுத்த வாய்ப்புள்ளது.

பயிர் - செயல் முறைகள்

கிராம்பு ஒரு தோட்டப் பயிராகையால் கடும் வறட்சிக்கும், களைகளுக்கும் ஈடுகொடுக்க இயலாதது. இப்பயிரின் வேர்கள் மிக ஆழமாகச் செல்ல இயலாதவை. வேர்கள் தரைமட்டத்திற்கு சற்றே கீழ் சென்று நின்றுவிடுவதால், தோட்டக்கலை சுகாதாரத்தைப் பேணிக் காக்கவும், சுற்றுப்புறத்தில் களைகள் பரவாவண்ணம் ஓரளவு பாதுகாக்கவும் முடிகிறது. கிராம்புத் தோட்டத்தில், களைகள் தோன்றாமல் விழிப்பாக இருப்பது மிகவும் அவசியமாகிறது.

களையெடுத்தல்

ஆண்டிற்கு நான்கு தடவைகள், களைகள் நீக்கப்படுகின்றன. மேலும் நீளமாக வளர்ந்துள்ள யானைப்புல், மற்ற புதர் செடிகள் (யுபொடோரியம், லான்டானா) ஆகியவை நீக்கப்படுகின்றன. அதிலும், மழை மிகவும் அதிக மாகவும், ஈரப்பசையுள்ள மற்றும் இலையுதிர் வகைக்காடுகள் சுற்றியுள்ள பகுதியில் இப்புதர்ச் செடிகளை அவ்வப்போது நீக்குவது அவசியமாகிறது.

கிராம்புத் தோட்டப்பண்ணை[45]

ஒரு கிராம்பு மரத்தின் ஆயுட்காலம் 250 ஆண்டுகளுக்கு மேலானது. விளைச்சலும் ஆண்டுக்கு ஆண்டு அதிகரிக்கும் தன்மையுடையது. பன்னிரெண்டாவது ஆண்டு வரையில் பயிர்கள் குறைந்த விளைச்சலையே அளிக்கும். அதன்பிறகு ஒரு மரத்திற்கு 2 கிலோகிராம் கிராம்பு கிடைக்கும்.

நீர் பாய்ச்சுதல்

டிசம்பர் மாத இடையிலிருந்து மே மாத முதல் வாரம் வரை, அதாவது தென்மேற்கு பருவக்காற்றுக் காலம் வரை பயிருக்கு நீர் பாய்ச்சவேண்டும். உலர்ந்த காலத்தில் நீர்ப்பாய்ச்ச வேண்டியிருப்பின் தென்மேற்கு மற்றும் வடகிழக்குப் பருவக்காற்று ஆகியவை வீசும் இடைப்பட்ட காலத்தில் அதாவது செப்டம்பர் மாதத்தில் நீர் பாய்ச்சுவது அவசியம்.

கிராம்பு மரங்கள், தரை மட்டத்திலிருந்து நுனி வரை, கனமான கிளைகளை வெளிப்படுத்துகின்றன. மரங்கள், கம்பு வடிவான அமைப் புடையவை. கிளைகள் கனமாக இருப்பினும், மரங்களின் வேர்கள் ஆழமற்றவை. எனவே, அவை எளிதில் பாதிக்கப்படும் இயல்புடையவை. அதனால், கிளைகள் பிளவுபடுகின்றன. அதேபோன்று, இளமரங்கள் கனமான காற்று வீசுவதாலும் மரங்களின் தேய்ப்பொலியினாலும் வேர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு அவ்விளமரங்கள் இறக்கின்றன. ஆகையால், இப்படிப்பட்ட சேதங்களினின்றும் மரங்களைக் காப்பது அவசியமாகிறது. இளமரங்களை இரண்டு அல்லது மூன்று கம்புகளைக் கொண்டு கயிறுகளின் ஆதரவுடன் கட்டுதல், சில சமயங்களில் கிளைகளைக் கயிற்றினால் கட்டுதல், சில இடங்களில் உடற்பகுதியினை தனிப்படுத்து தல் மற்றும் உடைந்திருக்கும் கிளைகளை ஒழுங்கு செய்தல் போன்ற வழிமுறைகளைக் கையாண்டு மரங்களுக்கு நேரிடும் சேதங்களைத் தடுக்கலாம்.

பூச்சிகளும், நோய்களும்

நடுத்தண்டில் துளையிடும் பூச்சிகள், செதிற்பூச்சிகள், வெண்பொடி யுருவான பூச்சிகள், வேர்தாக்கி நோய், பயிரின் நுணியினின்று கீழே படிப்படியாக உலர்ந்து போகச் செய்யும் நோய், இலைகளை உதிர வைக்கும் நோய் ஆகியவை அயற்பண்புடைய இந்த கிராம்பு மரங்களில் அவற்றின் ஆயுட்காலம் முழுமையும் பொதுவாகக் காணப்படும் பூச்சிகளின், நோக்கமாகும். அச்சந்தரக்கூடிய இந்நோய்களைக் களைய, தற்காப்பு மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் அவசியமாகின்றன. காளான் கொல்லிகளான டீத்தேன், தம்மாட், போரேடு, ப்ளூ காப்பர் ஆகியவையும் பூச்சிகொல்லிகளான மிட்டேய்ஸ்டாக்ஸ், நூவான்ஸ், டி.டி.டிடி. ஆகியவற்றை அப்பகுதியில் இப்பூச்சிகளும், நோய்களும் எப்போது காணப்படுகின்றனவோ அவ்வப்போது பின்னர் ஒரு குறிப்பிட்ட இடைவெளியிலும் தெளித்து வரவேண்டும்.

உரங்கள்

தோட்டக்கலைப் பயிர்களை வளர்க்கும் முறையில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியதென்னவெனில் மரங்கள் வளர்ச்சிபெற மண்ணை வளப்படுத்துவது, அதனைத் தொடர்ந்து விளைச்சலைப் பெருக்குவதுமே யாகும். இங்கு கையாளப்படும் பழக்கம் யாதெனில், 250 கிராம் அளவுள்ள இரசாயன உரமும் (ML 17) அதற்குச் சமமான அளவுள்ள கலப்பு உரமும், பயிருக்கு அளிக்கப்படுகிறது. இங்குள்ள மண், அதிக மழை யுடன் கூடிய செவ்வண்ண இரும்பகக் களிமண் வகையைச் சார்ந்ததாகும். கிராம்புத் தோட்டம், செங்குத்துச் சரிவுப் பகுதியில் அமைந்துள்ளது.

பி.எச்.(பாஸ்பேட்) மதிப்பு 6-லிருந்து 6.5 வரை உள்ளது. காரணக் கூறுகளையும், பயிர்களின் அளவையும் கூர்ந்தாராயுங்கால், 250 கிராம் அளவு மிகக் குறைந்ததாகும். இதனை ஆண்டுதோறும், ஒரு பூக்கும்

பயிருக்கு இரண்டு முதல் ஐந்து கிலோகிராம் வரை அதிகரிக்க வேண்டும். பூக்கும் பயிர்களுக்கு பொட்டாஷ் உரத்தை, அளிப்பது குறித்தும் ஆராயலாம்.

விற்பனைக்கூடங்களும், விற்பனைக்குரிய விளைபொருள்களும்[46]

அழகிய பாண்டியபுரம் மற்றும் குலசேகரம் காடுகள் சரகத்தில், காட்டு மரங்களினின்றும் தேவைக்குரிய மரங்கள், வெட்டியெடுக்கப்படுகின்றன. தேக்கு மரங்கள் மட்டும் ஒழுங்கு செய்யப்படுகின்றன. தேக்கு மற்றும் கருங்காலி ஆகிய இரண்டு மர வகைகள் அதிக அளவு மக்களுக்குத் தேவைப்படுகின்றன. எவ்விதக் குறைபாடுமற்ற 1.85 மீட்டரும் அதற்கும் மேலான சுற்றளவுமுள்ள கருங்காலி மரக்கட்டைகள், கப்பலில் ஏற்றி வெளிநாடுகளுக்கு அனுப்பக்கூடிய அளவிற்கு நல்ல தரமுள்ளவையெனக் கருதப்படுகின்றன. மேற்குக்கடற்கரையிலுள்ள வணிகர்கள் அவற்றை வாங்கி, வெளிநாடுகளுக்கு அனுப்புகிறார்கள். அங்கு அவை அணியான பொருட்கள் செய்ய பயன்படுத்தப்படுகின்றன. இந்த இரண்டு வகைகள் தவிர, இதர வகைகளான, **டெர்மென்டோஸா பனிகுலேட்டா,** டெர்மினாலயா, டொமென்டோஸா ஆகியவையும் அதிக அளவில் தேவைப்படுகின்றன.

நாகர்கோவிலுள்ள பல்வேறு மரக்கிடங்குகள், உள்ளூர் தேவைகளையும் அண்டை மாவட்டத் தேவைகளையும் பூர்த்தி செய்கின்றன. நாகர்கோவிலிலுள்ள அரசு மரக்கிடங்கு ஆண்டொன்றிற்கு 6700 க்யூபிக் மீட்டர்கள் அளவுள்ள மரங்களை விற்பனை செய்கின்றன.

ஊசியிலைக்காட்டு மரக்கட்டை

கட்டு மரங்கள் கட்டுவதற்கு, ஊசியிலைக் காட்டு மரவகைகளான, **மேலியா ட்யூபியா** மற்றும் **அல்பீஸியா ஃபால்கேட்டா,** ஆகியவை தேவைப்படுகின்றன. மேலும், தீக்குச்சித் தொழிற்சாலைகள், **அல்லன்தஸ் மாலா பேரிக்கா, அல்ஸ்டோனியா ஸ்காலாரிஸ்** மற்றும் **அல்பீனியா ஃபால்கேட்டா** ஆகிய வகை மரங்களைப் பயன்படுத்துகின்றன. இப்பொருட்கள் மாவட்டத்தின் தேவையைப் பூர்த்தி செய்கின்றன.

விறகுக்கான மரங்களும், சிறிய மரக்கட்டைகளும்

விறகுக்கான அனைத்து மரங்களும், சிறிய மரக்கட்டைகளும் மாவட்டத்தின் புறப்பகுதி மற்றும் நகர்ப்பகுதிகளில் விற்பனை செய்யப் படுகின்றன.

மூங்கில்கள்

மக்களின் பெருமளவுத் தேவை, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மரங்களிலிருந்தே பூர்த்தி செய்யப்படுகின்றன.

நாணல்வகை

நாணல் வகைகள் முதன்மையாக குலசேகரம் மற்றும் அழகிய

பாண்டியபுரம் சரகங்களில் உள்ளன. அவை 1988-89ஆம் ஆண்டு, ஸ்ரீகுமாரி கைவினை நிலையத்திற்கு, மூலப்பொருட்களாக அனுப்பப் பட்டன.

சிறிய காடுகள் விளைபொருள்

சிறிய காடுகள் விளைபொருள்களில் தேன், புளி, ஏலக்காய், நெல்லிக்காய், கரும்பு ஆகியவை முதன்மையானவையாகும். அவை யாவும் உள்ளூர் தேவையைப் பூர்த்தி செய்கின்றன. ஏலக்காய் காடுகளினூடே பல குத்தகை அலகுகளில் பயிரிடப்படுகிறது. இது விற்பனைக்காக இதர மாவட்டங்களுக்கு அனுப்பப்படுகிறது.

சமுதாயக் காட்டு நிலங்கள்

மாநிலத்தில், சமுதாயக் காடுகள் வளர்ப்பதன் முக்கியத்துவத்தை உணர்ந்து, தமிழ்நாடு காடுகள் வளர்ப்புத்துறை, ஒதுக்கப்பட்ட காடுகள் நீங்கலாக ஏனைய பகுதிகளில், முதன்மையான இடங்களை அடையாளங்கண்டு, அங்கு இத்திட்டத்தை செயல்முறைப்படுத்தி பின்னர், "ஆற்று வாய்க்கால் தோட்டப் பண்ணைகள்" மற்றும் "பண்ணைக் காடுகள் வளர்க்கும் கலை" ஆகிய திட்டங்களை நடைமுறைப் படுத்தினார்கள். 1956ஆம் ஆண்டு வரையறுக்கப்பட்ட திட்டத்தின்கீழ் "ஆற்று வாய்க்கால் தோட்டப்பண்ணைகளில்" பல்வேறு வகை மரங்கள் பயிரிடப்பட்டன. "பண்ணைக்காடுகள் வளர்க்கும் கலை" என்ற திட்டம் தான் தற்போதைய சமுதாயக் காடுகள் வளர்க்கும் திட்டமாகும். இது ஒரு வழிகாட்டும் திட்டமாக 1961 ஆம் ஆண்டு செயலாக்கப்பட்டது.

இத்திட்டத்தின்படி, செயலாக்கத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதன்மையான பகுதிகள், குளத்தின் இடைகரைகள், சிறு குன்றுகள் கிராமத்திலுள்ள அரசு புறம்போக்கு நிலங்கள் ஆகியவையாகும். விரிவாக்கப் பணித்திட்டத்தின் கீழ், தனியார் தோட்டப் பண்ணையில் மரங்கள் நடும் முயற்சியும் ஊக்குவிக்கப்பட்டது. தற்போதைய சமுதாயக் காடுகள் வளர்ப்புத்திட்டம், ஸ்வீடிஷ் உலகத் தொழிலாளர் கூட்டமைப்பு வளர்ச்சி நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் 1980ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. இதனுடைய முக்கிய நோக்கம் என்னவெனில், மக்களைத் தனிப்பட்ட முறையிலும், சமுதாயத்தின் ஓர் அங்கம் என்ற ரீதியிலும், கைவசமுள்ள நிலங்களில் முடிந்த அளவு மரங்களைப் பயிரிடச் செய்வதும், அதனால் அனைத்துத் தரப்பினரும் பயனடையச் செய்வதும் குறிப்பாக புறப்பகுதி வாழ் ஏழை எளியோருக்கு விறகு மற்றும் காடுகளிலிருந்து இதர விளை பொருட்கள் கிடைக்க வழி வகுப்பதுமே ஆகும்[47].

1981-82 ஆம் ஆண்டு முதல் சமுதாயக் காடுகள் வளர்ப்புத் திட்டம், திருச்செந்தூர் சமுதாயக் காடுகள் வளர்ப்புக் கோட்டத்தினால் செயல்முறைப்படுத்தப்பட்டு வருகிறது[48].

சமுதாயக்காடுகள் வளர்ப்புத் திட்டத்தின் கீழ் 1982-83 முதல் 1986-1987 வரை சாதனை விவரங்கள்

தொடர் எண்.	மரங்கள் பயிரிடப்பட்ட நிலங்கள் குறித்த விவரம் (இயற்பொருள் சார்ந்த சாதனை)	1982-83	1983-84	1984-85	1985-86	1986-87	மொத்தம்
		(எக்டேரில்)					
1.	ஏரிகளின் இடைகரை	-	49.60	12.0	-	-	61.60
2.	அரசு புரம்போக்கு நிலப் பரப்புகள்	-	-	2.0	-	-	5.00
3.	அரசு புரம்போக்கு சிறு குன்றுகள்	-	-	15.0	-	-	15.00
4.	கால்நடைத் தீவனம்	-	-	-	6.2	-	6.2
5.	சாலை ஓரங்கள்	-	-	6 கி.மீ.	-	-	6 கி.மீ.
6.	ஆற்றுவாய்க்கால் கரைகள்	-	-	10 கி.மீ.	-	-	17.5 கி.மீ.
7.	புகைவண்டித்தட ஓரங்கள்	-	-	23 கி.மீ.	3 கி.மீ.	30 கி.மீ.	69 கி.மீ.
8.	மரங்கள் நடுவதற்கு ஊக்கத்திட்டம்	ரூ.30000	30000	11713	100000	100000	271713
9.	மரங்கள் நடுவதற்கு விரிவாக்கத் திட்டம்	ரூ.60000	120000	43287	200000	125000	548287
	நிதி குறித்த சாதனை (பயிர்வாரி-புள்ளி விவரங்கள்)						

ஆதாரம் : கூடுதல் முதன்மை வனக் காப்பாளர், சமுதாய காடுகள் வளர்ப்புத் திட்டம், சென்னை அறிக்கை, 7.12.1987.

1981-82 ஆம் ஆண்டு முதல் 1986-87 ஆம் ஆண்டு வரை, 89.80 எக்டேர் நிலப்பரப்புள்ள பகுதி, கூட்டுப்பயிரிடுதலுக்கு, நிர்ணயிக்கப் பட்டது. இது ஏரிக்கரைகள் அரசு புரம்போக்கு நிலப்பரப்புகள், மற்றும் அரசு புரம்போக்கு சிறு குன்றுகள், ஆகியவற்றை உள்ளிட்டதாக இருந்தது. இதன் நோக்கம் என்னவெனில், புறப்பகுதி வாழ் ஏழை, எளிய மக்களின் அத்தியாவசியத் தேவைகளான, விறகு, கால்நடைத் தீவனம், பசுந்தாள் உரம் மற்றும் இதர சிறிய காடுகள், விளை பொருள்கள் ஆகியவற்றைப் பூர்த்தி செய்வதேயாகும். 1981-82 ஆம் ஆண்டு முதல் 1986-87 முடிய 92.52 கிலோ மீட்டர் பரப்புள்ள ஒரு பகுதி நிலம், நீளவரிசைப் பயிரிடுதலுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் சாலை ஓரங்கள், புகைவண்டித்தட ஓரங்கள், ஆற்றுவாய்க்கால் கரைகள் மற்றும் ஏரிக்கரைகள் ஆகியவற்றில் மரங்கள் நடப்பட்டுள்ளன. நடப்பட்ட மரவகைகள், புளி, வேம்பு, புங்கம், நாவல், வேலா, தைலந்தரும் தேவதாரு, நெல்லி மற்றும் கொடுக்காப்புளி ஆகியவையாகும்.

முதன்மையான காடுகளின் விளைபொருட்கள் தேக்கு, அல்பீஸியா, மூங்கில், நாணல் மற்றும் ஏனைய பல்வேறு மரவிளை பொருட்களான மருது, வேங்கை, மஞ்சக்கடம்பு ஆகிய மர வகைகளாகும்.

காடுகளின் விளைபொருட்களினின்றும் 1983-84 முதல் 1985-86 வரை கிடைக்கப்பெற்ற வருவாய் விவரங்கள்[49] :

1983-84	...	ரூ.35,05,031/-
1984-85	...	ரூ.39,85,365/-
1985-86	...	ரூ.58,87,267/-

இயற்கை இடர்பாடுகள்

வெள்ளம்

வெள்ளம் பெரிய நீர்ப்பாசனப் பகுதிகளுக்கு சேதம் விளைவித்து வருகிறது. குறிப்பாக ஆற்றுப் பாசனப் பகுதிகளில் சேதம் மிகுதியாகக் காணப்படுகிறது. சங்கிலித்தொடர் போன்று ஏரிகள் அமைந்துள்ள பகுதிகளிலும் வெள்ளம் அதிக அளவில் சேதம் விளைவிக்கிறது. அம்மாதிரி பகுதிகளில், ஒரு ஏரியில் உடைப்பு கண்டவுடன் தாழ்வான பகுதி நோக்கி வெள்ள நீர் பாய்வதில், தாழ்வான பகுதிகளில் உள்ள பயிர்கள் அதிக அளவு சேதமடைகின்றன.

வெள்ளத்தைத் தடுப்பதற்குச் சிறந்த வழி என்னவெனில், வெள்ள நீரை தேக்கி, சேமித்திட ஆங்காங்கே நீர்த்தேக்கங்கள் கட்டுவதே ஆகும். அம்மாதிரி வெள்ள நீரைத் தேக்கி வைத்தால், கால்வாய்கள் மூலம் தாழ்வான பகுதிகளுக்கு சீராக நீரைப் பாய்ச்சிட இயலும்.

வறட்சி

வறட்சியால் எழக்கூடிய பிரச்சனைகள், பகுதிக்குப் பகுதி மாறுபடுகிறது. பொழியக்கூடிய மழையின் அளவிற்குத் தக்கவாறும், நீர்ப்பாசனம் செய்யக் கூடிய நிலப்பரப்பின் அளவிற்குத் தக்கவாறும் இம்மாறுபாடு காணப்படுகிறது[50].

இவ்வாறாக, வறட்சி, வெள்ளம் மற்றும் கடல் அரிப்பு ஆகிய இயற்கை இடர்பாடுகள் மாவட்டத்தின் பொருளாதாரத்தை பெரிதும் பாதிக்கின்றன. கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், ஒரு சில காலங்கள் தவிர, மற்ற நேரங்களில் மாவட்டம், இயற்கையின் இடர்பாட்டினால் பாதிப்பிற்குள்ளாவதில்லை.

இப்பகுதியில் இயற்கையின் இடர்பாடு குறித்த கடந்த கால வரலாற்றை நோக்குங்கால், 1915-16-ம் ஆண்டு இப்பகுதி வரண்டு காணப்பட்டு எப்பொழுதும் இருந்திராத அளவிற்கு நீண்ட நெடுங்காலம் வறட்சி நீடித்தது. 1934 மற்றும் 1938-ம் ஆண்டு மாவட்டம், வறட்சியால் மிகவும் பாதிக்கப்பட்டது. பின்னர் தெற்கு, மேற்குப் பருவக்காற்று உரிய காலத்தில் வீசத்தொடங்கியதால், தொடர்ந்து மழைபொழிந்து வறட்சி நிலை மாறியது.

மறுமுறை, 1969-ம் ஆண்டு கடுமையான வறட்சி இப்பகுதியில் நிலவியது. அதனால் புறப்பகுதி நகர்ப்புறம் இரண்டிலுமே தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டது. கடுமையான உலர்ந்த வானிலை காரணமாக மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்ல இயலவில்லை. தொடர்ந்து வேலையில்லாத் திண்டாட்டம் நிலவியது. பின்னர் பருவக்காற்று வீசத் தொடங்கியதால் வறட்சி நிலை சற்றே தணிந்தது.

1980-81 - வறட்சி

பருவக்காற்று தவறியதால், 1980இல் மாவட்டத்தில் பருவநிலை பாதிக்கப்பட்டு, 1980ஆம் ஆண்டு கடைசி மாதத்தில் குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டு மக்கள் பெரும் அவதிக்குள்ளாயினர். உடனடி நிவாரண நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

மேற்கொள்ளப்பட்ட நிவாரண நடவடிக்கை விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன[51]

மேற்கொள்ளப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டங்கள்	ஒப்புதலளிக்கப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்)	எடுக்கப்பட்ட பணிகளின் எண்ணிக்கை
1. கிணறுகள் ஆழப்படுத்துதல்	3.20	116
2. பாரஉந்து மூலம் குடிநீர் வழங்குதல்	0.27	4

மேற்கொள்ளப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டங்கள்	ஒப்புதலளிக்கப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்)	எடுக்கப்பட்ட பணிகளின் எண்ணிக்கை
உழைப்பாற்றல் மூலம் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் (நீர்ப்பாசனம்)		
3. பெருவழித்துறை நிவாரணப் பணிகள்	1.00	9
4. பொதுப்பணித்துறை (நீர்ப்பாசனம்)	4.00	62
5. பெருவழித்துறை நிவாரணப் பணி-சாலைப் பணிகள்	2.00	11

1982-83 மற்றும் 1983-84 வறட்சி

1982-83 ஆம் ஆண்டிலும் மாவட்டத்தில் பருவநிலை பாதிக்கப் பட்டு குடிநீர் பற்றாக்குறை நிலவியது. ஆய்வுக்குழு மற்றும் புது தில்லி உயர் மட்டக்குழு ஆகியவற்றின் பரிந்துரைகளை ஆதாரமாகக் கொண்டு இந்திய அரசு தமிழ்நாட்டில் 1982-83 மற்றும் 1983-84 ஆகிய ஆண்டுகளில் வறட்சி நிவாரணப் பணிக்கென அதிக அளவு செலவினமாக ரூ.77.54 கோடிக்கு ஒப்புதலளித்தது. இவற்றில் குடிநீர் வழங்குதல், வேலை வாய்ப்பளித்தல், பொதுச் சுகாதாரம் மற்றும் விலங்கினம் பேணிக்காத்தல் ஆகியவை அடங்கும்.

இவை தவிர சில நிபந்தனைகளுக்குட்பட்டு நிலவரியைத் தள்ளுபடி செய்தும், நிலவரி மற்றும் கடன் தவணைத் தொகை ஆகியவற்றை வசூல் செய்வதைத் தள்ளி வைத்தும் அரசு ஆணை பிறப்பித்தது. மேலும், 1982-83 வறட்சி காலத்தில் தனியார் நீர்ப்பாசன கிணறுகளை ஆழப்படுத்த வேளாண் குடிமக்களுக்கு அரசுக்கடனும் வழங்கப்பட்டது. தமிழக அரசு, தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திடமிருந்து வேட்டிகள் மற்றும் சேலைகளை விலைக்கு வாங்கி நிலமற்ற வேளாண் தொழிலாளர்களுக்கு இலவசமாக வழங்கியது. 1984ஆம் ஆண்டிலும் மாவட்டத்தில் வறட்சியின் கடுமை தணியாததால், பாதிக்கப்பட்ட பகுதிமக்களுக்கு வேலைவாய்ப்பு அளித்திடவும் பல்வேறு பணிகளுடன் குறிப்பாக நீர்ப்பாசனப் பாய்ச்சலாதாரங்களைப் (ஆறு, வாய்க்கால், ஏரி, குளம் போன்றவை) பழுது பார்க்கவும் ஒரு மாபெறும் நிவாரணத் திட்டத்தினை அரசு செயல்முறைப்படுத்தியது. புறப்பகுதி வேளாண் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்திட, மத்திய அரசு அதிக அளவாக நிர்ணயித்திருந்த 26.65 கோடி ரூபாயில் 12.27 கோடி ரூபாயினை, பொதுப்பணித்துறை பெருவழி மற்றும் புறப்பகுதி பணித்துறை, தமிழ்நாடு, குடிநீர்வடிகால் வாரியம் மற்றும் உள்ளாட்சித்துறை ஆகியவற்றிற்கு சில முதன்மையான பணிகளை உடனடியாக செய்து முடித்திட தமிழக அரசு வழங்கியது.

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவரால் வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு வகை திட்டங்கள் - புதிய ஆழ்குழாய்க் கிணறுகள் தோண்டுதல், பொது குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்துதல், பார உந்து மூலம் மக்களுக்குக் குடிநீர் வழங்குதல், ஏரிப்படுகைகளில் புதிய திறந்த கிணறுகள் வெட்டுதல், பேரூராட்சிகள் மற்றும் நகராட்சிகள் ஆகியவற்றில் பல்வேறு குடிநீர் வழங்குத் திட்டங்களை மேம்படுத்துதல், 50 ஏக்கர்களுக்கு மேல் ஆயக்கட்டு நிலங்களையுடைய நீர்ப்பாசனப் பாய்ச்சலாதாரங்களை மேம்படுத்துதல், 50 ஏக்கர்கள் மற்றும் அதற்குக் குறைவான ஆயக்கட்டு நிலங்களையுடைய பாய்ச்சலாதாரங்களை மேம்படுத்துதல், புதிய மண் சாலைகள் அமைத்தல் மற்றும் குடிநீர் ஊரணிகளை மேம்படுத்துதல் ஆகியவையாகும். இப்பணிகளை மேற்கொண்டதால் மாவட்டத்திலுள்ள குறிப்பாக கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க முடிந்தது. அப்பணிகள் வறட்சி காலத்தில், அவர்கள் தங்களது பிழப்பை நடத்திட பெரும் உதவியாயிருந்தன.

1983-84ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு வளர்ச்சி நிவாரணப் பணிகள், அவற்றுக்காக செலவு செய்யப்பட்ட தொகை ஆகிய விவரங்கள் கீழ்க்காணும் பட்டியலில் தரப்பட்டுள்ளன[52]:

பணியின் விவரம்	எந்த நிறுவனம் அல்லது துறையால் பணி மேற்கொள்ளப்பட்டது	முடிக்கப்பட்ட பணிகளின் எண்ணிக்கை	செலவு செய்யப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்)
1. புதிய ஆழ்குழாய் கிணறுகள் தோண்டுதல்	தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்	530	113.97
2. பொது குடிநீர் கிணறுகளை ஆழப்படுத்துதல்	உள்ளாட்சிகள்	429	14.00
3. பாரஉந்து மூலம் பொது மக்களுக்கு குடிநீர் வழங்குதல்	உள்ளாட்சிகள்	19	10.68
4. ஏரிப்படுகைகளில் புதிய திறந்த கிணறுகள் வெட்டுதல்	பொதுப்பணித்துறை	10	5.98
5. பேரூராட்சிகள் மற்றும் நகராட்சிகள் ஆகியவற்றில் பல்வேறு குடிநீர் வழங்கும் திட்டங்களை மேம்படுத்துதல்	தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்	13	10.49

பணியின் விவரம்	எந்த நிறுவனம் அல்லது துறையால் பணி மேற்கொள்ளப்பட்டது	முடிக்கப்பட்ட பணிகளின் எண்ணிக்கை	செலவு செய்யப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்)
6. 50 ஏக்கர்களுக்கு மேல் ஆயக்கட்டு நிலங்களையுடைய நீர்ப்பாசன பாய்ச்சலாதாரங்களை மேம்படுத்துதல்	பொதுப்பணித்துறை	112	11.00
7. 50 ஏக்கர்கள் மற்றும் அதற்குக் குறைவான ஆயக்கட்டு நிலங்களையுடைய பாய்ச்சலாதாரங்களை மேம்படுத்துதல்	பெருவழி மற்றும் புறப்பகுதிப் பணித் துறை	73	3.17
8. புதிய மண் சாலைகள் அமைத்தல்	பெருவழி மற்றும் புறப்பகுதிப் பணித்துறை	12	0.76
9. குடிநீர் ஊரணிகளை மேம்படுத்துதல்	பெருவழி மற்றும் புறப்-பகுதிப் பணித்துறை	34	2.22

மறுபடியும் 1987ஆம் ஆண்டு பருவக்காற்று தவறியதால் கன்னியாகுமரி மாவட்டத்தில் கடும் வறட்சி நிலவியது. பல குடிநீர் கிணறுகள் முழுமையாக வற்றிவிட்டன. அதனால், மக்கள் குடிநீர் பெற இயலாமல் பெரும் அவதிக்குள்ளானார்கள். ஆகையால், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் மாவட்டத்தில், தீவிரமான சுற்றுப்பயணம் மேற்கொண்டு வற்றிப்போன திறந்த கிணறுகளை அடையாளம் கண்டு அந்தந்த பகுதி மக்கட் தொகைக்கேற்ப ஆழ்குழாய் கிணறுகள் வெட்ட ஒரு திட்டம் வகுத்தார். சுற்று வட்டப் பட்டைக் கிணறுகள் வெட்டவும் ஒரு திட்டம் மேற்கொண்டார். அத்தியாவசியமான இடங்களுக்கு வறட்சி காலம் முழுமையும் பார உந்து மூலம் மக்களுக்குத் தண்ணீர் வழங்கவும் நடவடிக்கை எடுத்தார். குடிநீர் வழங்குவதற்கு மொத்தம் 223.67 இலட்சம் ரூபாய் அவ்வாண்டு செலவிடப்பட்டது.

வேளாண் துறையைப் பொறுத்த வரையில், பாசனத்திற்கான தண்ணீர் தட்டுப்பாட்டினால் உழவர்கள் போதுமான வேலையில்லாது பிழைப்பை நடத்த பெரிதும் அவதியுற்றார்கள். அவ்வாறான பிரச்சனைகளினின்று அவர்களை மீட்க, தேவைப்படும் இடங்களிலெல்லாம், உழைப்போர் மேம்பாட்டுத் திட்டங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் நடைமுறைப்படுத்தினார். ஊரக வளர்ச்சித்துறை மற்றும் பொதுப்பணித் துறை ஆகியவற்றை ஈடுபடுத்தி ஏரிகளில் தூர் எடுத்தல், ஏரிகளை செப்பணிடுதல் போன்ற பணிகளை உள்ளூர் உழவர் பெருமக்களுக்கு

அளிக்கச் செய்தார். அதேபோன்று, மண் பாதுகாப்புப்பணியும், வேளாண் பொறியியல் துறை, ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சிகள் மற்றும் நகராட்சிகள் ஆகியவற்றின் மூலமாக மேற்கொள்ளப்பட்டு, இப்பணியிலும், உழவர்கள் ஈடுபடுத்தப்பட் டார்கள். மேலும், சாலைகளுக்கு சிவப்பு மண் மற்றும் சரளைக்கல் பாவுதல் மற்றும் தார்போடுதல், கால்வாய்களைச் செப்பனிடுதல், தேவைப்படும் இடங்களில் மண்ணினால் அணை கட்டுதல், கற்களினால் நிலையான கரைகளெழுப்புதல் போன்ற பணிகளும் உள்ளூர் தொழிலாளர்கள் மூலம் செய்துமுடிக்கப்பட்டன. இவ்வாறு உழைப்போர் மேம்பாட்டுத் திட்டங்களனைத்தும் 85.5 இலட்சரூபாய் செலவில் செய்து முடிக்கப்பட்டன. குடிநீர் திட்டங்களை அதிகரிக்கும் முகத்தான, மாவட்ட ஆட்சித் தலைவர் கன்னியாகுமரி நகரியத்திற்கு மூன்று இலட்ச ரூபாய் வழங்கி அத்திட்டங்களை முறையாக நடைமுறைப்படுத்தினார்.

வறட்சி நிவாரணத்திட்டங்களின் கீழ் குடிநீர் வழங்குதலை மேம்படுத்த 31.12.1987 தேதிப்படி, கீழ்க்குறிப்பிட்ட பணிகள் செய்து முடிக்கப்பட்டன.

தொடர் எண்.	பணிகளின் விவரங்கள்	முடிக்கப்பெற்ற பணி எண்ணிக்கை
1.	புதிய திறந்த கிணறுகள்	56
2.	தற்போதிருக்கும் திறந்த கிணறுகளை ஆழப்படுத்துதல்	227
3.	ஆழ்குழாய்க் கிணறுகள்	430
4.	குடிநீர் திட்டங்களுக்குத் தனியான இணைப்பு வழிகள்	2
5.	விரிவான குடிநீர் வழங்குத் திட்டங்கள்	40
6.	சுற்று வட்டப்பட்டைக் கிணறுகள்	53

நிவாரணப்பணிகளுக்காக 1.4.1988 தேதிப்படி 199.80 இலட்ச ரூபாய், இம்மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டது.

முடிக்கப்பெற்ற உழைப்போர் மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்த விவரங்கள், கீழேயுள்ள பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ளன:

பட்டியல்

உழைப்போர் மேம்பாட்டுத் திட்டங்கள்

மேற்கொள்ளப்பட்ட பணிகள் விவரமும், பணிகளைச் செய்த துறைகளும்	பணிகளின் எண்ணிக்கை	வழங்கப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்)	முடிக்கப்பெற்ற பணிகளின் எண்ணிக்கை	செலவழிக்கப்பட்ட தொகை(ரூ. இலட்சத்தில்)
அ. ஏரிகளில் தூர் எடுத்தல் :				
1. ஊரக வளர்ச்சித்துறை சிறிய நீர்ப்பாசனம்	345	45.00	345	45.00

மேற்கொள்ளப்பட்ட பணிகள் விவரமும், பணிகளைச் செய்த துறைகளும்	பணிகளின் எண்ணிக்கை	வழங்கப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்)	முடிக்கப்பெற்ற பணிகளின் எண்ணிக்கை	செலவழிக்கப் பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்)
2. பொதுப்பணித்துறை	71	14.50	71	14.50
ஆ. மண்பாதுகாப்பு :				
1. வேளாண் பொறியியல் துறை	34	9.50	34	9.95
2. ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் பேரூராட்சிகள்	43	5.75	43	5.75
3. நகராட்சிகள்	3	0.50	3	0.30
இ. ஊரக வளர்ச்சித்துறை இயக்குநர் :				
1. சாலைகள்	27	10.00	27	7.00
2. வாய்க்கால்கள்	10			
ஈ. பேரூராட்சிகள் இயக்குநர் :				
சாலைகள்	17	3.00	17	3.00
மொத்தம்		88.25		85.50

சுருக்கம்

	ஒதுக்கீடு	செலவு (ரூபாய் இலட்சத்தில்)
குடிநீர் வழங்குதல்	218.23	223.67
உழைப்போர் மேம்பாட்டுத் திட்டங்கள்	88.25	85.50
	306.48	309.17
குடிநீர் திட்டங்கள் அதிகரித்தல் கன்னியாகுமரி நகரியம்	3.00	
	309.48	

மாவட்டத்தில் வெள்ள நிலை குறித்து, வட்டவாரியான விவரங்கள்

அகஸ்தீஸ்வரம் வட்டம்

1978 மற்றும் 1979 ஆம் ஆண்டுகளில், வடகிழக்கு பருவகாற்று காலத்தில் இவ்வட்டத்தின் அனைத்து வருவாய் கிராமங்களும் பாதிக்கப்பட்டு ஏறத்தாழ 1620 புறப்பகுதிவாழ் மக்கள் அவதியுற்றார்கள். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிராம மக்களுக்கு ரொக்க நிவாரணத் தொகையாக 1,04,725 ரூபாய் வழங்கப்பட்டது. இது தவிர 8100 கிலோகிராம் அரிசியும், 1620 தொகுதிகள் துணிகளும் இலவசமாக வழங்கப்பட்டன. 1979 ஆம் ஆண்டு வெள்ளத்தில், 279 ஏழை மக்கள் பாதிக்கப்பட்டனர். அவர்களுக்கு ரொக்க நிவாரணத் தொகையாக 15,285 ரூபாய் வழங்கப்பட்டது.

கடல் அரிப்பினால் 142 நபர்கள் பாதிக்கப்பட்டனர். அவர்களுக்கு 2.3.1984 முதல் 30.6.1985 வரை, ரொக்க நிவாரணத் தொகையாக 24,650 ரூபாய் வழங்கப்பட்டது.

கல்குளம் வட்டம்

1978-79 ஆம் ஆண்டு கல்குளம் வட்டம் கடும் வெள்ளத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டது. பேச்சிப்பாறை மற்றும் பெருஞ்சாணி ஆகிய இருபெரும் நீர்த்தேக்கங்களும் இவ்வட்டத்திலிருப்பதால் மாவட்டத்தின் ஏனைய பகுதிகளைவிட இந்த வட்டத்தில்தான் வெள்ளத்தின் விளைவு மிகவும் கடுமையாக இருந்தது. இவ்விரு நீர்த்தேக்கங்களும் நீரால் நிரம்பியிருந்தன. தண்ணீர் அபாயக் குறியினைத் தாண்டும்போது பெரிய அபாயத்தை தவிர்த்திட மதகுகள் திறக்கப்பட்டு நீர் வெளியேற்றப்பட்டது. அதனால் பொதுப்பணித்துறை பணியாளர்களின் குடியிருப்புகள் நீரில் மூழ்கின. அதன் விளைவாக அவர்களது உடைமைகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன.

15.9.1980 முதல் 8.7.1985 வரை கொட்டிப்பாடு, மாரமடி, கொளச்சல், காடியாப்பட்டினம் மற்றும் மணவாளக்குறிச்சி ஆகிய கிராமங்களில் கடல் அரிப்பு ஏற்பட்டு அதனால் 475 நபர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். அந்த காலவரையில் அவர்களுக்கு 60,500 ரூபாய் ரொக்க நிவாரணத் தொகை வழங்கப்பட்டது. இத்தொகை மாண்புமிகு பிரதம மந்திரியின் தேசிய நிவாரண நிதியிலிருந்து பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் ரூ.500/- வழங்கப்பட்ட நிவாரணத் தொகையும் அடங்கும். இது நீங்கலாக, பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஐந்து கிலோ கிராம் அரிசியும் ஒரு லிட்டர் மண்ணெண்ணையும் இலவசமாக வழங்கப்பட்டது.

தோவாளை வட்டம்

1978 ஆம் ஆண்டு இந்த வட்டம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டது. அதன் விளைவாக 506 வீடுகள் (71 வீடுகள் முழுமையாகவும், 435 வீடுகள் பகுதியாகவும்) சேதமடைந்தன. பாதிக்கப்பட்ட மக்களுக்கு 28575/- ரூபாய் ரொக்க நிவாரணத் தொகையாகவும், 2505 கிலோ கிராம் அரிசி இலவசமாகவும் வழங்கப்பட்டன.

விளவங்கோடு வட்டம்

கடந்த 1979 ஆம் ஆண்டு, இவ்வட்டம் கடல் அரிப்பினாலும், வெள்ளத்தினாலும் பெரிதும் பாதிக்கப்பட்டது. கடல் அரிப்பின் விளைவு மிகவும் கடுமையாக இருந்தது. மக்கள் சிலர் அவர்களது உடைமையுடன் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டனர்.

இயல்பாக கடல் அரிப்பு ஏற்படக்கூடிய கிராமங்கள் மற்றும் குக்கிராமங்களின் பெயர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

வருவாய் கிராமத்தின் பெயர்	குக்கிராமங்களின் பெயர்கள்
1. கொல்லங்கோடு	அ. நீரோடித்துரை ஆ. வள்ளவிலை இ. மார்த்தாண்டம் துறை
2. ஏழு தேசம்	அ. பூத்துறை ஆ. ஏரயுமாந்துறை இ. சின்னத்துறை ஈ. தூத்தூர்
3. பெயின்குளம்	அ. முள்ளூர்துறை
4. கீழ்க்குளம்	அ. ராமன்துறை ஆ. எனயம் புத்தன்துறை இ. எனயம் துறை
5. மிடாளம்	அ. நடுத்துறை ஆ. மேல்மிடாளந்துறை
6. கீழ்மிடாளம்	அ. குரும்பனை

பாதிக்கப்பட்ட கிராமங்கள், பாதிப்பு ஏற்பட்ட மாதங்கள், பாதிக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை வழங்கப்பட்ட நிவாரணத் தொகை ஆகிய விவரங்கள் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் அளிக்கப்பட்டுள்ளன.

கடல் அரிப்பு[53]

தமிழ்நாடு இந்தியத் துணைக்கண்டத்தின் தென்கிழக்கு முனையில் அமைந்துள்ளது. 920 கிலோ மீட்டருக்கு மிக நீளமான கடற்கரையைப் பெற்றுள்ளது. தமிழ்நாடு, அதனில், 70 கிலோ மீட்டர் அரபிக்கடலைச் சார்ந்துள்ளது. இப்பகுதிகளில் ஒவ்வொரு ஆண்டும் மே மாத மத்தியிலிருந்து செப்டம்பர் மத்திய மாதம் வரை நான்கு மாத காலத்திற்கு தென்மேற்குப் பருவக்காற்று வீசுகிறது. காற்று அலைகள் மிகவும் உயரமாகவும் கடற்கரைப்பகுதிக்கு சேதம் விளைவிக்கும் அளவிலும் அடிக்கக்கூடும். கடற்கரைப் பகுதி முழுமையும் ஒவ்வொரு ஆண்டும் புயல் காற்றினால் பாதிக்கப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தின் கடற்கரைப் பகுதியில் ஒவ்வொரு ஆண்டும் புயல்காற்று சேதம் விளைவிப்பது வாடிக்கையாக நிகழ்வதாகும். இதனால் மனித உயிர்கள் சேதம், பொருட்சேதம், வீடுகளுக்கு சேதம் ஆகியவை தவிர்க்க முடியாதவை யாகின்றன. எனவே கடற்கரைப் பகுதியில் எங்கே கடல் அரிப்பு மிகவும் அதிகமாகக் காணப்படுகிறதோ, அப்பகுதியில் பொங்கி வழியும் நீரைத் தடுத்திட தடுப்புக் கடல் அரண் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

இணைப்பு

பாதிக்கப்பட்ட கிராமங்கள், பாதிப்பு ஏற்பட்ட மாதங்கள், பாதிக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை மற்றும் வழங்கப்பட்ட நிவாரணத் தொகை ஆகிய விவரங்களைக் காட்டும் பட்டியல்

தொடர் எண். (1)	கிராமத்தின் பெயர் (2)	பாதிக்கப்பட்ட இடத்தின் பெயர் (3)	பாதிப்பு ஏற்பட்ட ஆண்டும், மாதமும் (4)	பாதிக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை (5)	வழங்கப்பட்ட நிவாரணத் தொகை (ரூபாய்) (6)
1.	ஏழுதேசம்	அ. எரயும்மாந்துறை ஆ. சின்னத்துறை இ. பூத்துறை ஈ. தூத்தூர் உ. கீழ்க்குளம் ஊ. ராமன்துறை	6/1979	167	12,300.00
2.	கீழ்க்குளம்	ராமன்துறை	7/1979	166	12,950.00
3.	பெயின் குளம்	முன்னூர் துறை			
4.	கொல்லங்கோடு	காளிங்கராசபுரம்	9/1979	2	150.00
5.	ஏழுதேசம்	அ. எரயும்மாந்துறை ஆ. தூத்தூர் இ. சின்னத்துறை	7/1980	13	900.00
6.	மிடாளம்	மிடாளம்			
7.	கொல்லங்கோடு	அ. வலிய விலை			

(1)	(2)	(3)	(4)	(5)	(6)
		ஆ. மருதாண்டாம் துறை இ. நீரோடி	8/1980	72	3,750.00
8.	மிடாளம்	மேல்மிடாளம்	9/1980	3	150.00
9.	கொல்லங்கோடு	கொல்லங்கோடு	6/1981	26	1,600.00
10.	ஏழுதேசம்	வல்லவிலை			
11.	ஏழுதேசம்	பூத்துறை	7/1981	28	2,4560.00
12.	கீழ்மிடாளம்	குரும்பனை			
13.	மிடாளம்	மேல் மிடாளம்	1984	..	..
14.	கீழ்க்குளம்	எனயம் எரயுமாந்துறை புத்தென்துறை	4/1984	40	3,850.00
15.	ஏழுதேசம்	தூத்தூர் பூத்துறை			
16.	ஏழுதேசம்	பூத்துறை வலியவிலை எனயம் ராமன்துறை	7/1985	221	52,200.00
17.	ஏழுதேசம்	தூத்துர்			
18.	மிடாளம்	மிடாளம்	9/1985	3	600.00

மாவட்ட ஆட்சித் தலைவர், கன்னியாகுமரி, அறிக்கை நாள் 24.7.1987.

அரபிக் கடற்கரைப் பகுதியில் புயல் காற்றுகளினாலும் உயரமான அலைகளினாலும் 1960 ஆம் ஆண்டு முதல் கடல் அரிப்பு தொடர்ந்து நிகழ்ந்து வருகிறது. இப்பகுதியில் கடல் மீது தாக்குதல் கட்டு மீறியதாகவே உள்ளது. கட்டு மீறிய அலைகளின் தாக்குதலால் 5,59,000/- ரூபாய் மதிப்புள்ள வீடுகளும், குடிசைகளும் அழிந்து விட்டன ; மேலும், கணக்கிட இயலாத அளவு வளமுள்ள தென்னை மரங்கள் வேருடன் சாய்ந்து விழுந்தன. தற்காலிகமாக்க் கட்டப்பட்டிருந்த பாதுகாப்பு அரண்களும் நாசமாயின. அவற்றின் மதிப்பே 4,57,500 ரூபாயாகும்.

கடல் அரிப்பினை நிறுத்த 1970-71 ஆம் ஆண்டில் கீழ்கண்ட பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன :

1. எரயும்மாந்துரையில் கடற்கரைக்கு இணையாக 1.20.402 ரூபாய் செலவில் கட்டுமானக் கருங்கல் சுவர் ;
2. மிதலம் துறையில் 89,500 ரூபாய் செலவில் கரடுமுரடான கற்களாலான பாதுகாப்புச் சுவர் ;
3. மேலமணக் குடியில் 47,100 ரூபாய் செலவில் பாதுகாப்புச்சுவர்

மற்றும்

4. பள்ளம்துறையில் 2,00,552/- ரூபாய் செலவில் கட்டுமானக் கருங்கல் பாதுகாப்புச் சுவர்.

இந்தச் சுவர்கள் அனைத்தும் பின்னர் கடல் அரிப்பினால் பெரிதும் பாதிக்கப்பட்டு சேதமடைந்து விட்டன.

விரிவான ஆய்வுக்கும், ஆராய்ச்சிக்கும் பின்னர் தற்போது கடல் அரிப்புப் பகுதிகளில் கீழ்மட்ட அகலம் 18 மீட்டரிலும் உயர்மட்ட அகலம் 1.55 மீட்டரிலும் கட்டுமானக் கருங்கல் மேடுகள் நிறுவப்படுகின்றன.

கடல் அரிப்பு நிகழ்வதும் அதற்கான காரணங்களும்

தென்மேற்குப் பருவக்காற்று காலங்களில் மேற்குக் கடற்கரையில் பருவகால கடல் அரிப்பு ஏற்படுவதற்கான காரணங்கள் கீழே விளக்கப்பட்டுள்ளன :

அ. கடற்கரையின் படுகைச் சரிவு மற்றும் உயர் நீர்மட்டக் குறியிலிருந்து ஆறு மீட்டர் கடற்பரப்புக்கு மேற்பட்ட வேறுபாட்டெல்லை வரை 1:4 என்ற விகிதத்தில் மிகுந்த செங்குத்துச் சரிவாக உள்ளது. ஆகையால் அலைகள் வேகமாக வந்து கடற்கரையின் வெகு அருகாமையில் சிதறுகின்றன;

ஆ. கடற்கரைப் பகுதியில் காணப்படும் மணலும், கடல் படுகையில் சிறிய ஆழத்தில் அல்லது அலைகள் சிதறுண்டு செல்லும் பகுதியில் காணப்படும் மணலும், நேர்த்தியான ரகத்திலிருந்து நடுத்தர அரிமணல் பொடி ரகம் வரையிலானவை ;

இ. அவை சுண்ண நீற்றுச் சார்புள்ள மற்றும் கிளிஞ்சிற் சிப்பியுடன் கூடிய களிமண் வகையைச் சார்ந்தவைகள், இந்த மண்ணில் கலந்திருக்கின்றன ; மேலும் இவை குறைந்த செறிவுள்ளவையாக உள்ளன மற்றும்

ஈ. இவை குறைந்த செறிவுள்ளவையாக இருப்பதால், வேகமாக மோதும் அலைகளின் விளைவுக்கு ஈடுகொடுக்க முடிவதில்லை ; இவை வெகுசுலபமாக, அலைகளால் அடித்துச் செல்லப்படுகின்றன; சில சமயம், தொங்கு நிலையிலும் கிடத்தப்பட்டு இவை சரியான நிலைக்கு வருவதற்கு வெகு காலமாகின்றன[54].

விளைவிக்கப்பட்ட சேதம் குறித்து சில விவரங்கள்

1969 ஆம் ஆண்டு முதல் 1977ஆம் ஆண்டு வரை 649 மீனவர் குடும்பங்களும், குடிசைகளும் சேதமாயின. சேதத்தின் மதிப்பீடு கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

ஆண்டு	*சேதமான வீடுகள் மற்றும் குடிசைகளின் எண்ணிக்கை*	*சேதத்தின் மதிப்பு (ரூபாய்)*
1969	97	46,000/-
1970	110	56,000/-
1971	32	40,000/-
1972	61	60,000/-
1973	191	2,00,000/-
1974	64	70,000/-
1975	13	10,000/-
1976	44	50,000/-
1977	37	27,000/-

கடல் அரிப்புத் தடுப்புத்துறை [55]

டிசம்பர், 7 1977 நாளைய (பொதுப்பணித்துறை) 196 எண். கொண்ட அரசாணையில் கடல் அரிப்புத் தடுப்புக்கோட்டம், நாகர்கோவிலில் துவக்கப்பெற்றது. இவற்றிற்கான இரண்டு துணைக்கோட்டங்கள் 1977 மார்ச் மாதம் எரணியலில் துவங்கின. இவை, கடற்கரையைச் சார்ந்த கிராமங்களை, கடல் அரிப்பினின்றும் பாதுகாக்க அரபிக் கடற்கரையை யொட்டி கட்டுமானக் கருங்கல் மேட்டினாலான கடல் சுவர் எழுப்பும் பணியினை கவனித்து வருகின்றன. பின்னர் கடல் சுவர் எழுப்பப்படும் பணியிடத்தின் அருகாமையில் இருக்கும் நோக்கத்தில் ஒரு துணைக் கோட்டம் 1980ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் எரணியிலிலிருந்து நாகர்கோவிலுக்கு மாற்றப்பட்டது. இவ்விரு துணைக் கோட்டங்கள்

நீங்கலாக மேலும் ஒரு துணைக்கோட்டம் 1983ஆம் ஆண்டு நாகர் கோவிலில் துவக்கப்பட்டது. பின்னர் பணியிடத்திற்கருகாமையில் இருக்கும் நோக்கத்துடன் இக்கோட்டம் 1983 நவம்பர் மாதம் குழித்துரைக்கு மாற்றப்பட்டது.

வ.உ.சிதம்பரனார் மாவட்டம் மணப்பாடு, பெரியதலை ஆகிய இடங்களிலுள்ள கடல் அரிப்புத்தடுப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக எரணியலிலிருந்த துணைக்கோட்டம், 1986ஆம் ஆண்டு திருச் செந்தூருக்கு மாற்றப்பட்டது. செப்டம்பர் 30, 1986 வரை இந்த மூன்று துணைக் கோட்டங்களும், பொதுப்பணித்துறையின் கட்டுப்பாட்டில் இயங்கி வந்தன. அக்டோபர் 1, 1986 முதல் நாகர்கோவில் கடல் அரிப்புத் தடுப்புக் கோட்டமும் மூன்று துணைக் கோட்டங்களும் பொதுப் பணித்துறையிலிருந்து மீன் தொழில் துறைக்கு மாற்றப்பட்டு, மீன் தொழில்துறை இயக்குநரின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் கொணரப்பட்டன.

ஜூலை 1, 1987 ஆம் தேதி முதல் கடல் அரிப்புத் தடுப்புக் கோட்டம், சத்தியமங்கலத்திற்கு மாற்றப்பட்டு பின் அதற்கு பவானிசாகர் கோட்டம் என பெயர் சூட்டப்பட்டது. சத்தியமங்கலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வந்தது. மீன் தொழிற்துறைப் பணிகளை விரைவுப்படுத்தும் முகத்தான், இம்மாற்றம் மேற்கொள்ளப்பட்டது. கடல் அரிப்புத் தடுப்பு கோட்டத்தை சத்தியமங்கலத்திற்கு மாற்றுகையில் அதனுடைய மூன்று துணைக் கோட்டங்களான கடல் அரிப்புத் தடுப்புத் துணைக்கோட்டம்-1, நாகர்கோவில், கடல்அரிப்புத் தடுப்பு துணைக்கோட்டம்-2, திருச்செந்தூர் மற்றும் கடல் அரிப்புத் தடுப்புத் துணைக்கோட்டம்-3, குழித்துரை ஆகியவை முறையே நாகர்கோவில், சத்தியமங்கலம் மற்றும் தஞ்சாவூர் ஆகிய இடங்களிலுள்ள மீன் தொழில்துறைத் திட்டக் கோட்டங்களுடன் இணைக்கப்பட்டன.

தற்போது, நாகர்கோவிலிலுள்ள சின்ன முட்டம் மீன்பிடிப்பு கடற்கரைக் கோட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ள நாகர்கோவில் கடல் அரிப்புத் தடுப்புத் துணைக்கோட்டம், மீன் தொழில்துறை இயக்குநரின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் கன்னியாகுமரி, திருநெல்வேலி கட்டபொம்மன் மற்றும் வ.உ.சிதம்பரனார் மாவட்டங்களிலுள்ள எஞ்சிய கடல் அரிப்புத் தடுப்புப் பணிகளைச் செய்து வருகிறது.

கடல் அரிப்பினால், மீனவ சமுதாயத்திற்கு இயல்பாக ஏற்படும் சேதங்கள்

கடல் அரிப்பு காலங்களில் மிகுந்த பாதிப்பிற்காளாவது மீனவ சமுதாயமேயாகும். கடல் அரிப்பு காலங்களில் மீனவ குடும்பத்தினர், பத்திரமான இடங்களுக்கு அழைத்துச் செல்லப்படுகிறார்கள். இயற்கை இடர்பாடுகளினால் அவதியுறும் காலங்களில் அவர்களுக்கு ரொக்க நிவாரணத் தொகையுடன் அரிசி, மண்ணெண்ணெய், துணிகள் ஆகியவை இலவசமாக வழங்கப்படுகின்றன. எங்கெங்கு கடல் அரிப்பு ஏற்படுகிறதோ, அங்கெல்லாம் மணல் நிரப்பப்பட்ட மூட்டைகள் அதிக அளவில் குவிக்கப்படுகின்றன. கடல் அரிப்புத் தடுப்பு நடவடிக்கையாக

பெரிய அளவிலான கட்டுமானக் கருங்கற்களால், தடுப்புச் சுவர்கள் கடல் அரிப்புப் பகுதிகளில் எழுப்பப்படுகின்றன.

வேளாண் துறையில், கூட்டுறவு இயக்கம்[56]

தமிழ்நாட்டில் கூட்டுறவு இயக்கம் பலகோணங்களில் தொடர்ந்து முன்னேற்றம் கண்டு வருகிறது. அரசும், ஏழை மக்களின் நலன் கருதி கிராம கடன் வழங்கும் கூட்டுறவு சங்கங்களைத் துவக்கி தொடர்ந்து இவ்வியக்கத்தின் பணியினை நன்முறையில் பயன்படுத்தி வருகிறது. வேளாண் குடிமக்கள் மற்றும் பொதுமக்களின் அன்றாட அத்தியாவசியத் தேவைக்கு வேண்டிய வேளாண் உரம், வேளாண் கருவிகள், உணவுப் பொருட்கள், துணிகள் மற்றும் ஏனைய இன்றியமையாப் பொருட்கள் ஆகியவற்றை அவ்வப்போது வழங்கிடும் பலநோக்கு நடவடிக்கைகளை இச்சங்கங்கள் மேற்கொண்டு வருகின்றன.

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை கட்டிணைக் கழகம்

இம்மாநிலத்தில், 1959 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை கட்டிணைக் கழகம் இயங்கி வருகிறது. அதனுடைய முதன்மையான நோக்கம் என்னவெனில் தமிழ்நாட்டிலுள்ள உழவர்களுக்கு, உழவுத் தொழிலுக்கு அவர்களுக்குத் தேவையான முதலீட்டிற்கு வழி செய்வதும், அவர்கள் தங்களது நிலங்களில் உற்பத்தி செய்யும் பொருட்களை நல்ல ஆதாயத்துடன் விற்பனை செய்ய ஏற்பாடு செய்து அவர்களுக்கு உதவுவதுமே ஆகும்.

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை கட்டிணைக் கழகம், (டான்ஃபெட்) அதனுடைய பணி நடவடிக்கைகளில், குறிப்பாக மாநிலம் முழுமையும், களப்பணியாற்றிட 14 மண்டல அலுவலகங்களைக் கொண்டுள்ளது. இந்த மண்டல அலுவலகங்கள், காஞ்சிபுரம், வேலூர், கடலூர், தர்மபுரி, சேலம், ஈரோடு, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மன்னார்குடி, தஞ்சாவூர் மாவட்டம், புதுக்கோட்டை, மதுரை, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் நாகர்கோவில் ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன.

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை கட்டிணைக் கழகம் (டான்ஃபெட்) 117 "ஏ" வகுப்பு உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. இவற்றில் வட்ட அளவிலான கட்டிணை விற்பனை சங்கங்களும், தமிழ்நாடு அரசும் அடங்கும். மேலும் 3908 "பி" வகுப்பு உறுப்பினர்களும் உள்ளனர். கட்டிணைக் கழகத்தின், செலுத்தப்பெற்ற மொத்த பங்கு முதலீட்டுத் தொகை ரூ.219 இலட்சமாகும். 1987-88 பருவத்தில் தொழில் இயங்குமுறையில், பரிமாற்றக் கைமுதல் ரூ.7682.47 இலட்சமாகும்.

நாகர்கோவில் மண்டலம் கன்னியாகுமரி வருவாய் மாவட்டத்தை மட்டும் உள்ளடக்கியதாகும். ஏனைய மாவட்டங்களைப் போலல்லாது,

கன்னியாகுமரி மாவட்டம் சில தனி இயல்களைக் கொண்டது ; மேலும், நறுமணப் பொருட்கள் இம்மாவட்டத்தில் பெயர் பெற்றவை. இம் மாவட்டத்தில் வணிகர்களைக் கவரக்கூடிய முதன்மையான பொருட்கள் என்னவெனில் ஏலக்காய், மிளகு, பழங்கள், முந்திரி, மரவள்ளி, கோக்கோ, தென்னை ஆகியவையாகும். இவைபோன்று தோட்டப் பண்ணை பயிர்களுக்குத் தேவையான பல்வேறு உரங்களுக்கும் இங்கே நல்ல விற்பனையுண்டு.

தமிழ்நாட்டில் இக்கட்டிணைக் கழகத்தின் முதலீட்டினைப் பங்கிட்டு வழங்குவதில், 4352 கூட்டுறவு சங்கங்கள் சில்லரை விற்பனைக் கூடங்களாக தத்தம் பணிகளைச் செவ்வனே ஆற்றி வருகின்றன. இச்சிறிய மாவட்டத்தில் 115 கூட்டுறவு சங்கங்கள் பொருள் வழங்கும் பணியினை மேற்கொண்டுள்ளன. இவ்வாண்டில் இக்கட்டிணைச் சங்கம் கன்னியா குமரி மாவட்டத்திலும், தமிழ்நாட்டிலும் 6402 இலட்ச ரூபாய் மதிப்புள்ள உரங்களை வழங்கியுள்ளது. 1987-88 ஆம் ஆண்டில் மட்டும் 210.13 இலட்சரூபாய் மதிப்புள்ள உரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவைதவிர, உழவர்களின் இதர முதலீட்டிற்குத் தேவையான 1.62 இலட்ச ரூபாய் மதிப்புள்ள விதைகள், பூச்சி கொல்லி மருந்துகள் மற்றும் வேளாண் கருவிகள் ஆகியவையும் வழங்கப்பட்டுள்ளன.

வேளாண் பொருட்கள் விற்பனை செய்வதை ஆயுங்கால் 1987-88 ஆம் ஆண்டு இம்மாவட்டத்தினின்றும் 16.55 இலட்ச ரூபாய் மதிப்புள்ள மிளகை, இக்கட்டிணைக் கழகம் விற்பனை செய்துள்ளது[57].

இரப்பர்

மாநிலத்திலேயே இரப்பர் விற்பனையில் ஈடுபட்டுள்ள ஒரே சங்கம் கன்னியாகுமரி மாவட்ட இரப்பர் பயிரிடுவோர் கூட்டுறவு விற்பனை சங்கம்தான் எனில் மிகையில்லை. ஜூன், 30, 1983 தேதிய நிலவரப்படி, அதனுடைய செலுத்தப்பெற்ற பங்கு முதலீட்டுப் பட்டியலில் 1522 உறுப்பினர்கள் இருந்தார்கள். அவர்கள் பங்கு முதலீட்டுத் தொகையாக ரூபாய் 4.10 இலட்சம் செலுத்தியுள்ளார்கள். இதனில் தமிழக அரசின் பங்கான 1.39 இலட்ச ரூபாயும், இரப்பர் கழகத்தின் பங்கான 50,000 ரூபாயும் அடங்கும். 1982-83 ஆம் ஆண்டில் இச்சங்கம் 47.69 இலட்ச ரூபாய் மதிப்புள்ள இரப்பரைக் கையாண்டுள்ளது.

இரப்பர் பயிரிடும் உறுப்பினர்களின் முதலீட்டுத் தேவையான கலப்பு உரங்கள், கரிசக்காடி (அமிலம்), அலுமினியத் தட்டுகள் மற்றும் கொதி கலங்கள், இரப்பர் இறக்கும் கருவிகள், இரப்பர் இறக்கப் பயன்படுத்தும் கத்திகள், சேமிப்பு அடுக்குப் பேழைகள், தோண்டப் பயன்படும் கவைமுட்கள் ஆகியவற்றையும் சங்கம் அவர்களுக்கு வழங்குகிறது.

படித்தரம் நிர்ணயிக்கும் நடவடிக்கைகள்

உறுப்பினர்கள் கொணரும் பொருளுக்கு நல்ல விலையினை ஈட்டித்தர, கூட்டுறவு சங்கங்களை ஊக்குவித்து, இரப்பருக்கு 'படித்தரம்' நிர்ணயிக்க வேண்டியது அவசியமாகிறது. எனவே, 'படித்தரம்' நிர்ணயிக்கும் கருவிகள் வாங்க அரசு மானியம் வழங்குவதன் மூலம் நிதியுதவி அளித்து வருகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் வேளாண் பொருள் விற்பனை[58]

வேளாண் பொருள் விற்பனை என்பது, வேளாண் குடிமக்கள் கொண்டு வரும் பல்வேறு வேளாண் பொருட்களைத் தரத்திற்கேற்ப வாங்குவதும் அவற்றை சந்தை விலையினைக் கருத்திற்கொண்டு விற்பதுமாகும். வேளாண் பொருள் விற்பனை என்பது, தற்காலத்தில் மூன்று முக்கிய பணிகளை உள்ளடக்கியதாகும். அவையாவன : அ. பொருட்களை ஒன்று திரட்டுதல் (ஒரு முகப்படுத்துதல்) ஆ. பயன்படுத்துவதற்கான முன்னேற்பாடுகள் செய்தல் (செயற் பாங்கு) இ.வழங்குதல் (பரப்பீடு).

திறமிக்க விற்பனை முறையில் முக்கியத்துவம் முதன்முதலில் "வேளாண்மை" குறித்து, ராயல் குழு அறிக்கை 1928 ஆம் ஆண்டு அறிக்கையில் ஏற்பிசைவளிக்கப்பட்டது. அக்குழுவின் பரிந்துரைப்படி இந்திய அரசு 1937 ஆம் ஆண்டின் "வேளாண் பொருட்கள்" படித்தரம் நிர்ணயித்தல் மற்றும் குறியிடுதல் சட்டத்தை இயற்றியது.

படித்தரம் நிர்ணயித்தலை மேம்படுத்துதல் மற்றும் வேளாண் விளை பொருட்களின் தர அளவுப்படுத்துதல் ஆகியவை, இச்சட்டத்தில் அடங்கும். திட்டத்தின்படி விளைபொருட்களுக்கு இரண்டு நிலைகளில் படித்தரம் நிர்ணயிக்கப்படுகிறது.

அ. நுகர்வோர் நிலை மற்றும்

ஆ. உற்பத்தியாளர் அல்லது உழவர் நிலை

நுகர்வோர் நிலை - படித்தரம் நிர்ணயித்தல் (அக்மார்க் படித்தரம்)

"அக்மார்க்" படித்தரம் நிர்ணயிப்பதன் முக்கிய நோக்கங்களாவன :

1. பொருளின் தரத்திற்கும், கலப்பற்ற தன்மைக்கும், நுகர்வோருக்கு உத்திரவாதம் அளிக்கப்படுகிறது.
2. பொருளின் தரம் மற்றும் கலப்பற்ற தன்மை குறித்து முன் கூட்டியே பரிசோதனை செய்யப்பட்டு போலியல்லாத பொருட்களே நுகர்வோருக்கு வழங்கப்படுகின்றன.
3. உணவுப் பொருள் உற்பத்தியாளர்கள் அல்லது ஆக்கத் தொழில திபர்களுக்கு தகுந்த மீளவரவுக்கு உதவுதல்.

"அக்மார்க்" படித்தரம் நிர்ணயித்தால் பொதுமக்களுக்குத் தரமுள்ள பொருட்கள் கிடைக்க உறுதியளிப்பதுடன் மக்களைப் பல அபாயமான நோய்களினின்றும் பாதுகாக்க முடிகிறது. "அக்மார்க்" படித்தரம் நிர்ணயிப்பதன் நோக்கமே, உணவுப்பொருட்களில் கலப்படத்தினைத் தவிர்ப்பதும், கலப்படமற்ற உணவுப்பொருட்கள், நுகர்வோருக்குக் கிடைத்திட வழி செய்வதுமேயாகும்.

1937 ஆம் ஆண்டில் வேளாண் பொருட்கள் படித்தரம் நிர்ணயித்தல் மற்றும் குறியிடுதல் சட்டம் உற்பத்தியாளர்கள் மற்றும் தொழிலதிபர்கள் தாமாகவே படித்தரம் மற்றும் தரக்கட்டுப்பாட்டினை நிர்ணயிக்க வழிவகுக்கிறது. வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கு அக்மார்க் படித்தரம் நிர்ணயிப்பது கட்டாயமாக்கப் பட்டுள்ளது. தமிழ்நாட்டில் தற்போது 35 மாநில 'அக்மார்க்' படித்தர நிர்ணய ஆய்வுக் கூடங்கள் உள்ளன. பொருட்களுக்கு உள்நாட்டுப் பயனுக்காக படித்தரம் நிர்ணயம் செய்யப்படுகிறது. இவ்வாய்வுக் கூடங்களில் நெல், காய்கறி, எண்ணெய்கள், தேன் மற்றும் நறுமணப் பொருட்கள் ஆகியவற்றிற்கு படித்தரம் நிர்ணயிக்கப்படுகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் "அக்மார்க்" படித்தரம் நிர்ணயித்தல்

முதல் மாநில "அக்மார்க்" படித்தரம் நிர்ணயிக்கும் ஆய்வுக்கூடம் இம்மாவட்டத்தில் நாகர்கோவிலில் துவக்கப்பட்டது. வடசேரி ஒழுங்குமுறை விற்பனைக்கூட வளாகத்தில் நவம்பர் 1, 1974ஆம் நாளன்று இவ்வாய்வுக் கூடம் செயல்படத்துவங்கியது.

இரண்டாவது மாநில "அக்மார்க்" படித்தரம் நிர்ணயிக்கும் ஆய்வுக்கூடம் ஏப்ரல் 1, 1982ஆம் நாளன்று மார்த்தாண்டத்தில் துவங்கப்பட்டது. இவ்வாய்வுக்கூடம் தற்போது குழித்துரையில் இயங்கிவருகிறது.

பணியாளர் அமைப்புமுறை

"அக்மார்க்" படித்தரம் நிர்ணயிக்கும் ஆய்வுக்கூடம், நாகர்கோவில்

தொடர் எண்.	*பணியிடம்*	*எண்ணிக்கை*
1.	வேளாண் அலுவலர் (வேதியியல்)	1 (ஒன்று)
2.	இளநிலை உதவியாளர் (பிணை)	1 (ஒன்று)
3.	ஆய்வுக்கூட உதவியாளர்	1 (ஒன்று)
4.	ஆய்வுக்கூட பணிப்பையன்	1 (ஒன்று)

திட்டத்தின் துவக்கத்திலிருந்து நிர்ணயிக்கப்பட்ட குறியீடும் சாதனை அளவும் (பொருள் வாரியாக)

தொடர் எண்.	பொருள்	ஆண்டு	இயற்பொருள் சார்ந்த		நிதி ஒதுக்கீடு சார்ந்த	
			குறியீடு (குவிண்டாலில்)	சாதனை	குறியீடு (ரூபாயில்)	சாதனை
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1.	தேங்காய் எண்ணெய்	1974-75	1100	1184	2200	2368
	தேன்		605	684	6050	6840
	நிலத்தில் கிடைக்கும் நறுமணப் பொருட்கள்		55	101	550	1010
2.	தேங்காய் எண்ணெய்	1975-76	4000	3540	8000	7080
	தேன்		1000	1120	10000	11200
	நிலத்தில் கிடைக்கும் நறுமணப் பொருட்கள்		250	250	2500	2500
3.	தேங்காய் எண்ணெய்	1976-77	5000	5692	10000	11384
	தேன்		2000	2053	20000	20530
	நிலத்தில் கிடைக்கும் நறுமணப் பொருட்கள்		350	392	3500	3920
4.	தேங்காய் எண்ணெய்	1977-78	5525	5184	11000	10368
	தேன்		2350	2176	23500	21760
	நிலத்தில் கிடைக்கும் நறுமணப் பொருட்கள்		550	560	4000	5600
5.	தேங்காய் எண்ணெய்	1978-79	5600	4632	11200	9264
	தேன்		2350	1900	23000	19000
	நிலத்தில் கிடைக்கும் நறுமணப் பொருட்கள்		500	177	5000	1770
6.	தேங்காய் எண்ணெய்	1979-80	5000	6434	10000	12848
	தேன்		2000	1001	20000	10010
	நிலத்தில் கிடைக்கும் நறுமணப் பொருட்கள்		125	22	1250	220
7.	தேங்காய் எண்ணெய்	1980-81	6000	3032	12000	10064
	தேன்		1100	1352	11000	13520
	நிலத்தில் கிடைக்கும் நறுமணப் பொருட்கள்		..	..	..	..
8.	தேங்காய் எண்ணெய்	1981-82	7000	6066	14000	12132
	தேன்		150	153	1500	1530
	நிலத்தில் கிடைக்கும் நறுமணப் பொருட்கள்		..	..	..	..

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
9.	தேங்காய் எண்ணெய்	1982-83	6500	6604	13000	13208
	தேன்		150	160	1500	1600
	நிலத்தில் கிடைக்கும் நறுமணப் பொருட்கள்		..	10	..	100
10.	தேங்காய் எண்ணெய்	1983-84	7000	5356	14000	10712
	தேன்		200	78	2000	780
	நிலத்தில் கிடைக்கும் நறுமணப் பொருட்கள்		50	53	750	880
11.	தேங்காய் எண்ணெய்	1984-85	8000	3256	16000	6656
	தேன்		180	112	1800	1120
	நிலத்தில் கிடைக்கும் நறுமணப் பொருட்கள்		60	73	900	1170
12.	தேங்காய் எண்ணெய்	1985-86	6500	6066	13000	13839
	தேன்		150	152	1500	1520
	நிலத்தில் கிடைக்கும் நறுமணப்பொருட்கள்		100	105	1500	1600
13.	தேங்காய் எண்ணெய்	1986-87	6500	5002	19500	15006
	தேன்		140	195	1400	1950
	நிலத்தில் கிடைக்கும் நறுமணப் பொருட்கள்		120	201	1800	3100
14.	தேங்காய் எண்ணெய்	1987-88	7000	3398	21000	10194
	தேன்		150	395	1500	3950
	நிலத்தில் கிடைக்கும் நறுமணப் பொருட்கள்		200	386	3000	5790

மாநில "அக்மார்க்" படித்தரம் நிர்ணயிக்கும் ஆய்வுக்கூடம், மார்த்தாண்டம்

இவ்வாய்வுக்கூடம் முதன்மையாக இப்பகுதியிலுள்ள தேன் சேகரித்துக் கட்டுவோன் தேவையைக் கருத்திற்கொண்டு துவக்கப்பட்டது. இப்பகுதி தேன் உற்பத்திக்குப் பெயர் பெற்றதென்பது இந்திய மக்கள் யாவரும் அறிந்ததாகும்.

பணியாளர் அமைப்பு முறை

தொடர் எண்.	பணியிடம்	எண்ணிக்கை
1.	வேளாண் அலுவலர் (வேதியியல்)	1 (ஒன்று)
2.	இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர்	1 (ஒன்று)
3.	ஆய்வுக்கூட உதவியாளர்	1 (ஒன்று)
4.	ஆய்வுக்கூடப்பணிப்பையன்	1 (ஒன்று)
5.	காவலாள்	1 (ஒன்று)

திட்டத்தின் துவக்கத்திலிருந்து கையாளப்பட்ட பொருட்கள் - நிர்ணயிக்கப்பட்ட குறியீடும், சாதனையும்

தொடர் எண்.	பொருள்	ஆண்டு	இயற்பொருள் சார்ந்த		நிதி ஒதுக்கீடு சார்ந்த	
			குறியீடு (குவிண்டாலில்)	சாதனை	குறியீடு (ரூபாயில்)	சாதனை
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1.	தேன்	1982-83	1490	1501	14900	15010
2.	தேன்	1983-84	2000	2103	20000	21030
3.	தேங்காய் எண்ணெய்		..	120	..	360
4.	தேன்	1985-86	2200	1885	22000	18850
	தேங்காய் எண்ணெய்			840		2520
5.	தேன்	1986-87	2000	1203	20000	12030
	தேங்காய் எண்ணெய்		1000	550	3000	1050
6.	தேன்	1987-88	2200	2455	22000	24550
	தேங்காய் எணணெய்		1160	680	3480	2040

பொருள் நிலை (அல்லது) கிராம நிலை (அல்லது) வணிகப்படித்தர நிர்ணயம்

இப்படித்தர நிர்ணயம், வேளாண் விளைபொருளை விற்கவும், வாங்கவும் ஒதுக்கப்பட்டுள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திலும், வேளாண் குடிமக்களின் பண்ணைக்கூடங்களிலும் நடைபெறுகின்றன. இது அவர்கள் தங்களது பொருட்களுக்கு ஆதாயமான விலைகளைப் பெறவும் விற்பனைச் சந்தையில் படித்தர நிர்ணயத்தின் முக்கியத்துவத்தை உணரவும் பெரிதும் உதவுகிறது.

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்

1933ஆம் ஆண்டில் தமிழ்நாடு வணிகப்பயிர்கள் விற்பனைச் சட்டம் பிறகு 1959ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருட்கள் விற்பனைச் சட்டம் என திருத்தியமைக்கப்பட்டது. இது மாவட்டத் தலைமையிடங்களில் (சந்தை) விற்பனைக் குழுக்களை உருவாக்க வழி வகுத்தது. இந்த முறையில் நாகர்கோவிலைத் தலைமையிடமாகக் கொண்ட கன்னியாகுமரி (சந்தை) விற்பனைக்குழு ஜனவரி 1, 1967 ஆம் நாள் அமைக்கப்பட்டது.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் பெயர்களும், அவைகள் அமைக்கப்பட்ட தேதிகளும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் இயங்கி வரும் இடம்	அமைக்கப்பட்ட தேதி
1. வடசேரி	18.4.1968
2. ஈதமொழி	18.4.1967
3. கலியக்காவிலை	25.7.1968
4. தோடுவெட்டி	16.8.1969
5. குலசேகரம்	1.9.1975
6. திங்கள் சந்தை	16.8.1969

கன்னியாகுமரி மாவட்டத்தில் பிரசுரிக்கப்பட்ட பயிர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

1. தென்னை 2. முந்திரி 3. மரவள்ளி 4. புளி 5. வெல்லம் 6.நெல் 7. வேர்க்கடலை 8. இரப்பர்

நியாயமான விலையில் தங்களது விளைபொருட்களை விற்க ஒழுங்குமுறை விற்பனைக் கூட வளாகத்திலேயே வேளாண் குடி மக்களுக்கு தங்கும் அறைகள், தொலைபேசி இணைப்பு, குடிநீர் வசதி மற்றும் கால்நடைக்கூடம் ஆகிய வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன.

கிராம அங்காடிகள் கட்டுதல்

அறுவடை காலங்களிலும் விளைப்பொருட்களின் விலையில் சரிவு ஏற்படும் காலங்களிலும் குறைந்த விலைக்கு தங்கள் பொருட்களை விற்று, சிறு மற்றும் குறு விவசாயிகள் நட்டம் அடையாதிருக்கவும் அவர்கள் தங்களது விளைபொருட்களை குறிப்பிட்ட காலத்திற்குப் பாதுகாப்பாக வைத்திட மத்திய அரசின் உதவியும், கிராமச் சந்தை கூடும் இடங்களில் தமிழக அரசால் கிடங்குகள் கட்டப்பட்டுள்ளன. இதுகாறும் ஒவ்வொன்றும் 1000 மெட்ரிக் டன்கள் கொள்ளளவுள்ள 89 கிராமக் கிடங்குகள் கட்டப்பட்டுள்ளன. கிடங்கில் வைக்கப்பட்டுள்ள விளை பொருட்களுக்கு 50 விழுக்காடு பிணையத் தொகையாக விவசாயிகள் பெற்றுக் கொள்ளலாம்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் குலசேகரம், கலியக்காவலை, திங்கள் சந்தை, தோடுவெட்டி மற்றும் வடசேரி ஆகிய ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் அமைந்துள்ள ஐந்து கிராமங்களில், கிராமக் கிடங்குகள் கட்டப்பட்டுள்ளன.

வணிக படித்தர நிர்ணய கிராமங்கள் (ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில்)[59]

வேளாண் விளை பொருட்களின் தரம் குறித்து அறிவுரை வழங்கவும் அறுவடைக்குப் பின்னர், கையாள வேண்டிய தொழில் நுட்பம் குறித்து தெளிவுரையளிக்கவும், உழவர்கள் தங்கள் விளை பொருட்களை விற்பனை செய்யும்போது, பேரம் பேசுதலில் நல்ல உத்தியைக்

கையாளுதல் குறித்து ஆராயவும், வணிக படித்தர நிர்ணய மையங்கள், ஒழுங்குமுறை விற்பனைக்கூட வளாகத்திலேயே துவக்கப்பட்டுள்ளன.

வணிக படித்தர நிர்ணய மையங்களின் பணிகள்

வேளாண் விளை பொருட்களுக்கு படித்தரம் நிர்ணயிக்கும் செயல், வேளாண் குடிமக்களைத் தங்களது விளைபொருட்கள் தரமுள்ளவையாக இருத்தல் வேண்டுமென உணர்ந்து செயல்படச் செய்தது. படித்தரம் நிர்ணயிப்போர், அதாவது உதவி வேளாண் அலுவலர்கள், அறிவிப்பு செய்யப்பட்ட அல்லது அறிவிப்பு செய்யப்படாத வேளாண் பொருட்களின் மாதிரிகளை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் கிடைக்கப் பெற்றவையினின்றும் மற்றும் வேளாண் குடிமக்களின் பண்ணைக் கூடங்களின்றும் சேகரித்து, அவற்றிற்கு வாணிப பரித்தர குறிப்பீடுகளில் குறிப்பிட்டுள்ள அடிப்படையில் படித்தரங்களை நிர்ணயிக்கிறார்கள். அவ்வாராய்ச்சியின் போது, சேகரிக்கப்பட்ட மாதிரிகளுக்கு, பொருட்களின் மாசின்மை விழுக்காடு உறுதி செய்யப்படுகிறது. ஆராய்ச்சிக்குட்படுத்தப் பட்ட பொருட்களில் உள்ள அயல்பொருட்கள் உடைந்தவை, துணைச் சேர்க்கைப் பொருள், முழுதும் விளையாதவை, நீர் நயப்புள்ளவை, நிறம் வேறாக்கப்பட்டவை மற்றும் சேதமடைந்தவை போன்ற விவரங்கள் கணக்கிடப்பட்டு பொருட்கள் அனைத்துக்கும் படித்தரம் நிர்ணயிக்கப்படு கிறது. படித்தரம் எவ்விதக் கட்டணமுமின்றி இலவசமாக நிர்ணயம் செய்யப்படுகிறது. விற்பனைக்கு முன்னர் தங்களது விளை பொருட் களுக்குப் படித்தரம் நிர்ணயம் செய்து பெற்றால் அவற்றிற்கு ஒரு குவிண்டாலுக்கு ரூ.5/-லிருந்து ரூ.10/- வரை உற்பத்தியாளர்கள் அதிகத் தொகை பெறுகிறார்கள்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் வணிகமுறை படித்தர நிர்ணயம்

கன்னியாகுமரி மாவட்டத்தில், இரண்டு வணிக முறை படித்தர நிர்ணய மையங்கள் உள்ளன. ஒன்று வடசேரி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திலும் மற்றொன்று திங்கள் சந்தை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திலும் இயங்கி வருகின்றன.

ஒவ்வொரு வணிக முறை படித்தர நிர்ணய மையத்திற்குமுள்ள பணியாளர் அமைப்பு

தொடர் எண்	*பணியிடத்தின் பெயர்*	*எண்ணிக்கை*
1.	வேளாண் அலுவலர்	1 (ஒன்று)
2.	ஆய்வுக்கூடப்பணிப்பையன்	1 (ஒன்று)

படித்தரம் நிர்ணயம் செய்யப்பட்ட விளை பொருட்கள்

1983-84 முதல் 1987-88 முடிய வணிக முறை படித்தர மையங்களில், படித்தரம் நிர்ணயம் செய்யப்பட்ட வேளாண் விளைபொருட்களின் அளவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :

தொடர் எண்	விளைபொருட்களின் பெயர்	அளவு 1983-84	1984-85	1985-86	1986-87	1987-88
		(அளவு குவிண்டாலில்)				
வடசேரி	நெல்	1642	15008	15294	15017	17003
(துவக்கத்தில் இருந்து)	நிலக்கடலை	1295	6016	6010	6024	6017
திங்கள் சந்தை	நெல்	2314	9854	10023	10094	12097
	நிலக்கடலை	3016	5000	4008	4026	4182

பகுதி - 2

நீர்ப்பாசனம்

"நீர்ப்பாசனம்" என்பது, பயிர் உற்பத்தி செய்ய நிலத்தில் செயற்கையாக நீரைப்பயன்படுத்தும் முறையாகும். மண் ஈரப்பதத்துடன் இருப்பதற்கு நிலத்தடி நீரும், மழைநீரும் பெரிதும் உதவுகின்றன. இருப்பினும் பயிர் வளர்ச்சிக்கு இந்த நீர் போதாததால் பல பாய்ச்சலாதாரங்களிலிருந்தும் நிலத்திற்கு நீர் பாய்ச்சப்பட்டு வருகிறது. உலகத்தின் பல பகுதிகளிலும் பொழியக்கூடிய மழையின் அளவும், காலமும், பயிர்களுக்கு போதுமான ஈரப்பதத்தை அளிக்க இயலவில்லை. எனவே, மக்களின் தேவைக்கேற்ப உணவுப் பொருட்களை உற்பத்தி செய்யவும் கால்நடைகளின் தீவனத்திற்கான நார்ப்பொருளை அளிக்கவும் பயிர்களைக் கணிசமான அளவு விளைவித்திட நீர்ப்பாசனம் இன்றியமையாததாகிறது.

நீர்ப்பாசனம் என்பது நாகரீகத்தைப் போன்று மிகப் பழமையானதாகும். நாளுக்கு நாள் பெருகிக்கொண்டு வரும் மக்கட் தொகைக்கு ஈடு கொடுக்கும் வகையில் பயிர் உற்பத்தியை பெருக்க வேண்டியிருப்பதால் உலக முழுமையும் நீர்ப்பாசனத்தையும் பெருக்க வேண்டியது தவிர்க்க முடியாததாகிறது.

நமது பாய்ச்சலாதாரங்களை வளர்க்கவும், பாதுகாக்கவும் உணர்வாற்றல் சார்ந்த பல ஆக்கக்கூறுகளைக் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது[60]. நீர் எளிதில் கிடைக்கக்கூடிய தன்மை, அதனுடைய தரம், இட அமைவு கிடைக்கப்பெறும் நீரின் அளவு மற்றும் வேறுபாடு, தட்ப, வெட்ப நிலை, பயிரிடப்படும் நில மண்ணின் தன்மை மற்றும் தரம், தற்கால போட்டி சந்தையில் பயிருக்கான தேவை மற்றும் சமூகப் பொருளாதார நிலைகள் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

நமது நோக்கம் என்னவெனில், ஒரு அலகிற்கான வேளாண் உற்பத்தியைப் பெருக்கிட அதற்கொப்ப ஒரு அலகிற்குத் தேவையான தண்ணீர் அளவு மற்றும் ஒரு அலகு நேரத்தில் பயிரிடப்படும் நிலப்பரப்பு ஆகியவற்றையும் அதிகரிப்பதேயாகும். வானிலையின் தூண்டுதலால் உணவு உற்பத்தியில் ஏற்படும் ஏற்ற தாழ்விற்கு ஈடான காப்பீடு அளித்திட நீர்ப்பாசனத்திற்கான தண்ணீரைப் பயன்படுத்துவதில் விஞ்ஞான ரீதியான நுட்ப முறையைக் கையாளுவது நலன் பயக்கும்.

நமது வேளாண் பொருட்களை போட்டிக்குரியவையாயும், நல்ல இலாபமளிக்கக்கூடியவையாயும் செய்திட இந்த நுட்ப முறையே சிறந்ததாகும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் நீர்ப்பாசனம்

கன்னியாகுமரி மாவட்டத்தில் நீர்ப்பாசனம், ஆறுகள் மற்றும் ஏரிகள் ஆகியவற்றினின்றும் கிடைக்கக்கூடிய நீரை வைத்தே மேற்கொள்ளப் படுகிறது. நீர்ப்பாசன பாய்ச்சலாதாரங்கள் அவற்றால் பாசனப் பயன்பெறும் நிலங்களின் தரம் மற்றும் பரப்பளவிற்கேற்ப, "பெரியவை" "சிறியவை" மற்றும் "மிகச்சிறியவை" என பாகுபாடு செய்யப்படுகின்றன. இப்பகுதியில் பெரிய நீர்ப்பாசனப் பாய்ச்சலாதாரம், "கோதையாறு நீர்ப்பாசனத் திட்டம்" சார்ந்ததாகும். இதனின்றும் தண்ணீரை கோதையாறு, பரளியாறு (இவை குழித்துறையாறாக இணைகின்றன) மற்றும் பழையாறு ஆகியவற்றை பெற்று அத்தண்ணீர் பாசனத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது.

பாசனம் செய்யப்படும் பரப்பளவு

1983-84ஆம் ஆண்டு நிகரப்பரப்பளவான 80,802 எக்டேர் பயிரிடப்பட்டதில் (18,263 எக்டேர் ஒரு தடவைக்கு மேலாக பயிரிடப் பட்டது) 28,253 எக்டேரில் அதாவது 34.97 விழுக்காட்டிற்கு மேலாக நீர் பாய்ச்சப்பட்டது.

கன்னியாகுமரியில், நிகரப்பரப்பளவு பயிரிடப்பட்டதில், நீர்ப்பாய்ச்சிய நிகரப்பரப்பளவு 35 விழுக்காடாகும்.

பாய்ச்சலாதாரங்கள்

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏரிப்பாசனம்தான் முதன்மையான பாய்ச்சலாதாரமாகும். மாவட்டத்தில் மொத்தம் பயிரிடப்பட்ட பரப்பளவில் ஏரி நீர்ப்பாசனத்தில் பயிரிடப்பட்ட நிலங்களின் பரப்பளவு 56.6 விழுக்காடாகும். பல்வேறு வகைப்பட்ட பாய்ச்சலாதாரங்களால் பயிரிடப்பட்ட நிலங்களின் பரப்பளவு (உணவுப் பயிர்களும், ஏனைய பயிர்களும்) விவரங்கள் பட்டியலில் அளிக்கப்பட்டுள்ளன.

நீர்ப்பாய்ச்சப்பட்ட பயிர் விவரம்

பயிரிடப்பட்ட முழுமொத்த பரப்பளவு 69,44,959 எக்டேராகும். நிகர பரப்பளவு 58,46,128 எக்டேர்தான். எஞ்சிய 10,98,831 எக்டேர் 1983-84 ஆம் ஆண்டில் ஒருமுறைக்கு மேல் பயிரிடப்பட்டுள்ளன. பயிரிடப்பட்ட முழு மொத்த பரப்பளவில் நீர் பாய்ச்சப்பட்ட முழுமொத்த பரப்பளவு 45.7 விழுக்காடாகும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் மொத்தம் பயிரிடப்பட்ட பரப்பளவில் உணவுப்பயிர்கள் பயிரிடப்பட்ட பரப்பளவு 67.2 விழுக்காடாகும்.

பட்டியல் -1

பல்வேறு பாய்ச்சலாதாரங்களால் 1975-76 முதல் 1983-84 வரை பயிரிடப்பட்ட நிலங்களின் பரப்பளவு விவரங்கள்

தொடர் எண்.	நீர்ப்பாய்ச்சலாதாரங்கள்	1975-76	1976-77	1977-78	1978-79	1979-80	1980-81	1981-82	1982-83	1983-84
1.	அரசுக் கால்வாய்கள்	16,301	12,951	12,471	12,984	13,474	11,155	12,046	11,453	11,560
2.	தனியார் கால்வாய்கள்	..	..	..	..	..	..	..	..	..
3.	ஏரிகள்	11,701	13,534	15,797	15,734	15,457	15,229	15,911	16,040	15,999
4.	குழாய் கிணறுகள்	36	36	36	37	16	157	..	165	57
5.	கிணறுகள் (தனிப்பாசனம்)	287	347	342	200	232	229	283	395	418
6.	ஏனைய பாய்ச்சலாதாரங்களுடன் இணைந்து வளமூட்டும் கிணறுகள்	365	369	369	251	28	28	16	15	21
7.	இதர பாய்ச்சலாதாரங்கள் (ஊற்றுகள், வாய்க்கால்கள் போன்றவை)	365	205	206	100	98	214	365	313	219
8.	நீர்ப்பாய்ச்சப்பட்ட நிகரப் பரப்பளவு (ஏனைய பாய்ச்சலாதாரங்களுடன் இணைந்து வளமூட்டும் கிணறுகள் நீங்கலாக)	28,690	27,093	28,852	29,055	29,277	26,954	28,605	28,654	28,253
9.	அதே ஆண்டு, ஒரு தடவைக்கு மேலாக நீர்ப்பாய்ச்சப்பட்ட பரப்பளவு	26,734	19,350	23,323	21,122	24,866	19,968	23,845	22,377	17,002
10.	நீர்ப்பாய்ச்சப்பட்டு பயிரிடப்பட்ட மொத்த பரப்பளவு	55,424	46,443	52,175	50,177	54,143	46,952	52,450	51,323	45,255

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பாசன பாய்ச்சலாதாரங்கள் மற்றும் அவற்றின் பராமரிப்பு

கன்னியாகுமரி மாவட்டம், வடகிழக்கு மற்றும் தென்மேற்குப் பருவகாற்றுகளை நம்பியிருக்கும் முதன்மையான வேளாண் பகுதியாகும். இவ்விரண்டு பருவ காலங்களிலும் மாவட்டம் நல்ல மழையினைப் பெறுகிறது.

மாவட்டத்திலுள்ள ஒரே பெரிய ஆறு தாமிரபரணியாகும் (இது இப்பகுதியில் குழித்துறையாறு எனவும் அழைக்கப்படுகிறது). இந்த ஆறுகளுக்கு கோதையார் ஆறு மற்றும் பரளயார் ஆறு என்ற இரண்டு பெரிய கிளையாறுகள் உள்ளன. கோதையாறுக்கு சித்தாறு-1 மற்றும் சித்தாறு-2 என்ற இரண்டு பெரிய கிளையாறுகள் உள்ளன. முதன்மை ஆறான தாமிரபரணியின் பிறப்பிடம் மேற்குமலைத் தொடராகும். கன்னியாகுமரி மாவட்ட எல்லையில் இவ்வாறு 59.2 கிலோ மீட்டர் தொலைவு பாய்ந்து பின்னர் தங்கப்பட்டினம் அருகே அரபிக் கடலில் கலக்கிறது. இந்தியாவின் தென்முனையிலுள்ள கன்னியாகுமரியிலிருந்து 56 கிலோ மீட்டர் தொலைவில் தங்கப்பட்டினம் உள்ளது.

கோதையாறு நீர்ப்பாசனத் தொகுதி

தமிழ்நாட்டிலுள்ள மிகப்பழமையான நீர்ப்பாசனத் திட்டங்களி லொன்றான கோதையாறு நீர்ப்பாசனத் திட்டத்தினால் மாவட்டம் நல்ல பயனடைகிறது. இத்திட்டத்தினால், இப்பகுதிவாழ் மக்கள் இருபோக நெல் பயிரிடும் வாய்ப்பினை பெற்றுள்ளனர். இத்திட்டத்திலடங்கிய ஆயக்கட்டு மற்றும் ஏனைய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

அ. கோதையாறு தொகுதி

கன்னியாகுமரி மாவட்டத்தில் 64,000 ஏக்கர் நிலத்திற்கான நீர்ப்பாசனத்தை மேற்கொள்ள கோதையாறு தொகுதியில் பேச்சிப்பாறை மற்றும் பெருஞ்சானி ஆகிய இரண்டு அணைகளும் ஒரு முறையான பின்னலமைப்பினாலான கால்வாய்களும் உள்ளன. கல்குளம், அகஸ்தீஸ்வரம் மற்றும் தோவாளை வட்டங்களிலுள்ள நிலங்களுக்கு நீர் பாய்ச்சிட உதவியாக கோதையாற்றுத் தண்ணீரை பரளயாற்றிற்கு நெறி மாற்றி, பரளயாற்றிலிருந்து செல்லும் கால்வாய்களுக்கு நீர் வழங்குவதை விரிவாக்குவதே இத்தொகுதியின் நோக்கமாகும்.

1.	திட்ட அமைப்பு ஆயக்கட்டு	...	64,000 ஏக்கர்கள் (இருபோகப் பயிர்)
2.	நீர்ப்பாய்ச்சக்கூடிய பரப்பளவு	...	58,289 ஏக்கர்கள் (இரண்டு)

இப்பரப்பளவு நிலங்களுக்கு நான்கு வாய்க்கால்கள் மூலம் பாசன நீர் கிடைக்கிறது. அவையாவன :

(1)	(2)		(3)
1.	தோவாளை வாய்க்கால்	...	12,864 ஏக்கர்கள்
2.	ஆனந்தனார் வாய்க்கால்	...	9,901 ஏக்கர்கள்
3.	பத்மநாபபுரம் புத்தனார் வாய்க்கால்	...	19,702 ஏக்கர்கள்
4.	பழையாறு உள்ளிட்ட நாஞ்சில் நாடு புத்தனார் வாய்க்கால்	...	1,58,822 ஏக்கர்கள்
5.	முதன்மைக் கால்வாய்களின் நீளம்	...	60.8 கி.மீட்டர்
6.	கிளை வாய்க்கால்களின் நீளம்	...	169.6 கி.மீட்டர்
7.	பரப்பீட்டின் நீளம்	...	166.4 கி.மீட்டர்

ஒவ்வொரு ஆண்டும் சூன் 1-ந் தேதியன்று நீர்ப்பாசனத்திற்கு இத்தொகையினின்றும் தண்ணீர் விடுவிக்கப்பட்டு பிப்ரவரி மாத இறுதியில் அடைக்கப்படுகிறது.

கோதையாறு தொகுதி கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள, மேற்கு மலைத் தொடரின் மேற்கு சரிவில் அலைஅலையான மேடு பள்ளங்களுடைய திண்ணிய தினை நிலத்தில் அமைந்துள்ளது. 26,000 எக்டேர் பரப்பளவுள்ள இருபோக நெற்பயிர் விளையும் நிலங்களுக்கு முறையாக நீர் பாய்ச்சிட, இரண்டு பெரிய ஆறுகளான கோதையாறு மற்றும் பரளயாறு மற்றும் இரண்டு வடிநீர் எடுத்துச் செல்லும் தொகுதிகளான பழயாறு மற்றும் வள்ளியாறு இவை யாவற்றையும் ஒருங்கே அமையப்பெற்ற முழுமையான செயல்முறை ஆதிக்கமுள்ள ஆதாரத்தை தன்னிடத்தே இத்தொகுதி பெற்றுள்ளது. இவை தவிர, இந்த ஆதிக்க ஆதாரம் பட்டணங்கால் ஆதிக்க ஆதாரத்தின் கீழுள்ள 4368 எக்டேர் பரப்பளவுள்ள இருபோக நெல் விளையும் நிலங்களுக்கும் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ராதாபுரம் ஆதிக்க அதிகாரத்தில் அடங்கிய 6883 எக்டேர் பரப்பளவுள்ள மழை நீரினால் விளையும் நிலங்களுக்கு இணைந்து வளமூட்டவும், விரிவாக்கப் பட்டுள்ளது (233.1 மெட்ரிக் க்யூபிக் மீட்டர், இணைந்த நெடுங்கால இருப்புக் கொள்ளளவைக் கொண்ட). கோதையாறு தொகுதி நான்கு நீர்த்தேக்கங்களை உடையது :- அவையாவன : கோதையாறு இடகரைக்கால்வாய் (முதன்மையான பாசன நீர் கொண்டு செல்லும் கால்வாய்) (புத்தன் அணை என்ற புத்துணர்ச்சி பெற்ற அணைக்கட்டு)

தோவாளை வாய்க்கால் நாஞ்சில் நாடு, புத்தனாறு வாய்க்கால், ஆனந்தனார் கால்வாய் மற்றும் பத்மநாபபுரம் - புத்தனார் வாய்க்கால் ஆகியனவாகும். இவைதவிர, தோவாளை வாய்க்காலில் நீட்டிப்பான பட்டணங்கால் வாய்க்கால் உள்ளது. இது கோதையாறு இடகரை வாய்க்காலிலிருந்தும், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ராதாபுரம் வாய்க்காலிலிருந்தும் நீரைப் பாசனத்திற்கு எடுத்துச் செல்கிறது.

ஆற்று வடிநிலமும், அதன் வளர்ச்சியும்

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தாமிரபரணி ஆறு அண்டை மாநிலமான திருநெல்வேலியில் பாயும் தாமிரபரணி ஆற்றினின்றும் வேறுபட்டதாகும். இம்மாவட்டத்தில் இந்த ஆறு, கோதையார் மற்றும் பரளயார் ஆகிய இரு கிளை ஆறுகளைக் கொண்டதாகும். கோதையார் ஆறு, மேற்கு மலைத் தொடரின் மேற்கு சரிவில் அகத்திய மலைக்கருகே 1500 மீட்டர் உயரத்தில், (எம்.எஸ்.எல். க்கு மேல்) தோன்றி கோதையார் ஆற்றுடன் இணைகிறது. கோதையார் ஆறு பல கிளை ஆறுகளைக் கொண்டது. அவற்றுள் சித்தாறு-1 மற்றும் சித்தாறு-2 ஆகியவை முதன்மையான கிளையாறுகளாகும். கோதையார் மற்றும் பரளயார் இவை இரண்டும் சங்கமமானவுடன், மோங்கோடு கிராமத்தில் குன்றுச் சரிவுகளில் தோன்றும் முல்லையால் என்ற சிற்றாறு விளவங்கோடு வட்டத்தைச் சார்ந்த திருக்குரிச்சி என்ற கிராமத்திற்கருகே தாமிரபரணி ஆற்றுடன் இணைகிறது.

கோதையார் மற்றும் பரளயார் ஆறுகளின் வடிநிலங்களுக்கருகே தனித்தனியாக பழையார் வடிநிலம் மற்றும் வள்ளியார் வடிநிலம் என்ற இரண்டு வடிநிலங்கள் உள்ளன. இவற்றினின்றும் தொன்றுதொட்டு பாசனம் செய்யப்பட்டு வந்தது. வடிநீர் கொண்டு செல்லும் சிறிய ஆறான பழையார், நாகர்கோவிலின் வடமேற்கே 1.61 கி.மீ. தொலைவிலுள்ள ஷோரோலக்கோடு என்ற இடத்தில் துவங்கி 35 கி.மீட்டர் தொலைவு பாய்ந்து, இறுதியாக மனக்குடி என்ற இடத்தின் அருகே அரபிக்கடலில் சங்கமமாகிறத. அதே போன்று, வடிநீர் கொண்டு செல்லும் மற்றொரு சிறிய ஆறான "வள்ளியார்" வள்ளிமலையில் உற்பத்தியாகி 16 கி.மீட்டர் பாய்ந்து சென்று பின்னர், காடியாப்பட்டினத்தில் அரபிக்கடலுடன் சேர்கிறது. இது, வள்ளியார் வடிநில மிகை நீரைக் கொண்டு செல்கிறது.

மாவட்டத்திலுள்ள பாய்ச்சலாதாரங்கள் அனைத்தும் இந்த இரண்டு வடிநிலங்களிலும் ஆயிரமாண்டுகளுக்கு முன்னரே உற்பத்தியாயின. பழையார் வடிநிலத்தில், அனந்தனார், நாஞ்சில்நாடு, புத்தனார் கால்வாய் (என்.பி.கால்வாய்) ஆகிய இரண்டு கால்வாய்கள் மூலமே நீர்ப்பாசனம் மேற்கொள்ளப்பட்டு வந்தது. வடிகாலுக்குக் குறுக்கே ஷோரோலக்கோடு மற்றும் சாட்டாபுத்தூர் ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ள இரண்டு அணைக்கட்டுகள் மூலம் பழையார் ஆற்றிலிருந்து தண்ணீர் பாசனத்திற்கு

எடுத்துச் செல்லப்பட்டது. பழையாறு வடிநிலத்தில் பின்னர் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டதால் பாண்டிய மன்னர்கள் பரளயாற்றிலிருந்து பழையார் ஆற்றுக்கு ஒரு வடிநிலத்திலிருந்து மற்றொரு வடிநிலத்திற்கு வடிநீர் மாற்றும் திட்டத்தினை ஆய்ந்து, நடைமுறைப்படுத்தினார்கள். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், "பாண்டியன் அணை" என்ற திசை மாற்ற அணைக்கட்டினை, பரளயார் ஆற்றின் குறுக்கே பழையார் வடிநிலங்களில் அனந்தனார் மற்றும் நாஞ்சில்நாடு புத்தனார் கால்வாய்களுக்கு பாசன நீர் அளித்திட, "பாண்டியன் கால்" என்ற வாய்க்காலைத் தோண்டினார்கள். பாண்டியன் அணையில் சிறிது சிறிதாக வண்டல் சேற்றுப்படிவு ஏற்பட்டது. அதனுடைய பயனுறுதி, ஊறுபடுத்தப்பட்டுவிட்டதாக, புகழ்வாய்ந்த சேர மன்னரான மார்த்தாண்டவர்மா உணர்ந்ததால் பின்னர் (ஏறத்தாழ 200 ஆண்டுகளுக்கு முன்னர்) "புத்தன் அணை" என்ற புது திசைமாற்று அணையினை பாண்டியன் அணையின் நீரோட்ட திசையில் 400 மீட்டரில் கட்டி முடித்தார். அதே நேரத்தில் பரளயார் வடிநில வடிநீரை வள்ளியார் வடிநிலத்திற்கு மாற்ற, பத்மநாபபுரம் புத்தனார் கால்வாய் (பி.பி. கால்வாய்) என்ற ஒரு புதிய வாய்க்காலைக் கட்டினார்.

இந்த பாய்ச்சலாதாரங்கள் தான் மாவட்டத்தின் தற்போதைய நீர்ப்பாசனத் தொகுதியின் மையக்கருவாக விளங்குகின்றனவெனில், ஐயமில்லை.

பரளயார் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட பாண்டியன் அணை மற்றும் புத்தன் அணை ஆகியவை திசைமாற்ற அணைகளாகவே இருந்ததால், பரளயார் ஆற்றில் விழுந்த தண்ணீரின் பெரும் பகுதி வீணடிக்கப்பட்டது. கோதையார் அணையிலோ முழு அளவுத் தண்ணீருமே பயன்படுத்தப்படாமல் வீணடிக்கப்பட்டன. ஆனால் வள்ளியார், பழையார் ஆறுகளின் வடிநிலப் பகுதிகளைச் சுற்றியுள்ள ஆதிக்க ஆதார பரப்பளவு ஆண்டுக்கு ஆண்டு நிதானமாக அதிகரிக்கத் துவங்கியது. இதனால் ஆதிக்க ஆதாரங்கள் வழங்கும் நீருக்குப் பற்றாக் குறை ஏற்பட்டது. எனவே இந்த ஆதிக்க ஆதாரங்களுக்கு போதிய தண்ணீர் வரத்துக்கு வழிவகை செய்ய ஒரு சேமிப்பு நீர்த்தேக்கம் கட்ட வேண்டிய அவசியமேற்பட்டது.

மாவட்டத்தில் கட்டப்பட்டுள்ள அணைகள் பற்றிய விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன.

1. பேச்சிப்பாறை அணை

முன்னாள் திருவாங்கூர் மாநிலத்தின் மன்னர் 1906 ஆம் ஆண்டு கோதையார் ஆற்றின் குறுக்கே, பேச்சிப்பாறை அணையைக் கட்டினார். அணையைப் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

விவரங்கள் (1)		பேச்சிப்பாறை (2)
1.	கட்டப்பட்ட ஆண்டு	1896-1906
2.	அணையின் நீளம்	425.51 மீட்டர்
3.	அணையின் அமைப்புரு	கட்டுமான வேலை
4.	அணையின் எம்.எஸ்.எல்லின் உயரம்	94.5 மீ.
5.	அதிகபட்ச நீர்நிலை	92.0 மீ.
6.	ஃஎப்.ஆர்.எல்.	92.0 மீ.
7.	மதகின் அடித்தளக்கட்டின் நிலை	77.4 மீ.
8.	நீர்ப்பிடி பரப்பளவு	15 சதுர கி.மீ.
9.	கொள்ளளவு (முழு மொத்தம்)	150.25 மெ.க்யூ.மீ.
10.	நிகர கொள்ளளவு	123.18 மெ.க்யூ.மீ.
11.	மோசமான கொள்ளளவு	27.07 மெ.க்யூ.மீ.
12.	நீர்வரும் பரப்பு	204.8 ச.கி.மீ.
13.	சராசரி மழையளவு	2180 மி.மீ.
14.	திட்ட அமைப்பு - வெள்ளம்	1104 க்யூ.மி./எஸ்.
15.	சராசரி ஆண்டு விளைச்சல்	402 மெ.க்யூ.மீ.
16.	உபரி ஒழுங்கியக்கி	5
17.	வாய்ப்பிடங்கள்	4.6 மீ.

குலசேகரத்திற்கு 11.27 கி.மீட்டர் வடக்கிலும், நாகர்கோவிலுக்கு 45.08 கிலோ மீட்டர் வடக்கிலும் உள்ள பேச்சிப்பாறையில் கள்ளார், சித்தார் மற்றும் குட்டியார் ஆகிய கிளையாறுகள் கூடுமிடத்திற்குக் கீழே 1.61 கிலோ மீட்டர் தொலைவில் கோதையார் ஆற்றின் குறுக்கே பேச்சிப்பாறை அணை கட்டப்பட்டுள்ளது. கோதையார் ஆற்றுத் தண்ணிர் பரளயார் ஆற்றுத் தண்ணீருடன் கலக்குமிடத்தில் கோதையார் ஆற்றுத் தண்ணீரை புத்தன் அணைக்கட்டிற்கு திசை திருப்ப, பேச்சிப்பாறை அணையின் இடக்கரையிலிருந்து 17 மீட்டர் நீளத்திற்கு ஒரு இணைப்பு வாய்க்கால் வெட்டப்பட்டது. மேலும், செல்லம் துருத்தியிலுள்ள பாண்டியக்காலிலிருந்து நீரை எடுத்துச் செல்ல தோவாளைக் கால்வாய் என்ற புது வாய்க்கால் கட்டப்பட்டது. பழையார் வடிநிலத்தின் இடப்பக்கமுள்ள புதிய ஆதிக்க ஆதாரத்திற்கு உரிய அளவு நீர் அளித்திடவே இந்த வாய்க்கால் கட்டப்பட்டதாகும். இடகரை வாய்க்கால் மூலம் புத்தன் அணைக்கு பேச்சிப்பாரை அணைக் கட்டினின்று வரக்கூடிய நீர் மற்றும் பரளயார் ஆற்றினின்று புத்தன் அணைக்கு வரும் நீர் ஆகிய இரண்டும் ஐந்து துணைத் தொகுதிகள் மூலம் 20,000 எக்டேர் நிலங்களுக்கு நீர்ப்பாய்ச்ச திட்ட அமைப்பு மேற்கொள்ளப்பட்டது. இவ்வைந்து துணைத்தொகுதி களாவன :

பத்மநாபபுரம் - புத்தனார் கால்வாய், நாஞ்சில்நாடு - புத்தனார் வாய்க்கால், ஆனந்தனார் கால்வாய், தோவாளைக் கால்வாய் மற்றும் பழையார் ஆறு ஆகியவையாகும். இது பழைய கோதையார் தொகுதி என அழைக்கப்படுகிறது.

2. பெருஞ்சாணி அணைக்கட்டு

கோதையார் தொகுதியில் தண்ணீர் பற்றாக்குறை இருந்ததால், பரளியார் ஆற்றில் வெள்ள உபரி நீரை சேமித்து வைக்க பாண்டியன் அணைக்கட்டின் நீரோட்டத்திற்கு எதிர்திசையில் 1953 ஆம் ஆண்டு பெருஞ்சாணி அணை கட்டப்பட்டது. அதன் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

விவரங்கள்	பெருஞ்சாணி
1. கட்டப்பட்ட ஆண்டு	1948-53
2. அணையின் நீளம்	373 மீட்டர்
3. அணையின் அமைப்புரு	கட்டுமான வேலை
4. அணையின் எம்.எஸ்.எல்.லின் உயரம்	94.2 மீட்டர்
5. அதிகபட்ச நீர்நிலை	93.3 மீட்டர்
6. ஃஎப்.ஆர்.எல்.	93.3 மீட்டர்
7. மதகின் அடித்தளக்கட்டின் நிலை	69.8 மீட்டர்
8. நீர்ப்பிடி பரப்பளவு	9.50 சதுர கி.மீ.
9. கொள்ளளவு (முழு மொத்தம்)	81.80 மெ.க்யூ.மீ.
10. நிகர கொள்ளளவு	81.80 மெ.க்யூ.மீ.
11. மோசமான கொள்ளளவு	...
12. நீர் வரும் பரப்பு	154.4 சதுர.கி.மீ.
13. சராசரி மழையளவு	2240 மி.மீ.
14. திட்ட அமைப்பு வெள்ளம்	878 க்யூ.மி./எல்
15. சராசரி ஆண்டு விளைச்சல்	218 மெ.க்யூ.மீ.
16. உபரி ஒழுங்கியக்கி	4
17. வாய்ப்பிடங்கள்	12.2 மீட்டர் x 4.6 மீட்டர்

குலசேகரத்திலிருந்து 9.66 கி.மீ. கிழக்கிலும் நாகர்கோவிலிருந்து 41.86 கி.மீட்டர் வடமேற்கிலும் உள்ள பெருஞ்சாணி என்ற இடத்தில் இவ்வணை கட்டப்பட்டிருக்கிறது.



பேச்சிப்பாறை அணை

3. திர்ப்பரப்பு அணைத்தொகுதி

குலசேகரத்திலிருந்து 8.05 கி.மீட்டர் வடமேற்கிலுள்ள திருப்பரப்பு கிராமத்தில் பேச்சிப்பாறை அணைக்குக் கீழே கோதையார் ஆற்றின் குறுக்கே திர்ப்பரப்பு அணை கடந்த 1951 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. அதனுடைய இருபுறங்களிலும் இரண்டு கிளைகள் உள்ளன. கால்வாயின் நீளம் மட்டும் ஆயக்கட்டின் பரப்பளவு ஆகிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

திர்ப்பரப்பு இடகரைக்கால்வாய் -
11 மைல் 3 பர்லாங்கு 330 அடி - 401. 47 ஏக்கர்கள்

திர்ப்பரப்பு வலகரைக்கால்வாய்
5 மைல் 2 பர்லாங்கு 330 அடி 483.39 ஏக்கர்கள்

4. அருவிக்கரை அணைத்திட்டம்

திருவட்டாறுக்கு அருகே அருவிக்கரை என்ற இடத்தில், பரளியார் ஆற்றின் குறுக்கே இவ்வணை கட்டப்பட்டுள்ளது. இதற்கு இடபுறமும், வலபுறமும் இரு கிளைகள் உள்ளன. கிளைகளின் நீளம் மற்றும் ஆயக்கட்டின் பரப்பளவு ஆகிய விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன:

அருவிக்கரை இடகரைக்கால்வாய்
8 மைல் 0 பர்லாங் 00 அடி : 126. 91 ஏக்கர்கள்

அருவிக்கரை வலகரைக்கால்வாய்
2 மைல் 5 பர்லாங் 00 அடி : 530.08 ஏக்கர்கள்

இவ்விதமான பல்வேறு வளர்ச்சிகள் ஏற்பட்ட போதிலும்கூட கோதையார் மற்றும் பரளியார் ஆறுகளிலும் இன்னமும் மூலவாய்ப்பு வளம் இருக்கத்தான் செய்தது. எனவே, பட்டணங்கால் பகுதியில் கூடுதல் பரப்பளவும் (தாமிரபரணி ஆற்றின் இடகரை) மற்றும் அண்டை மாவட்டமான திருநெல்வேலியிலுள்ள இராதாபுரம் வட்டத்தில் கூடுதல் பரப்பளவும் பாசனத்திற்கு எடுத்துக் கொள்ள உத்தேசிக்கப்பட்டன.

பட்டணங்கால் தொகுதி

சித்தார் - பட்டணங்கால் தொகுதி இரண்டு மண்ணினாலான அணைகளைக் கொண்டது. இவ்விரு அணைகளும் சித்தார்-1 மற்றும்-2 ஆகியவற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளன. இரண்டு நீர்த்தேக்கங்களையும் ஒன்றோடொன்று பின்னி இணைக்கும் ஒரு கால்வாயினால் இணைத்தும், பேச்சிப்பாறை மற்றும் பெருஞ்சாணி அணைகளின் ஃளப்.ஆர்.எல்.லை., 6' உயர்த்தியும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. சித்தார்-1 அணையிலிருந்து தோண்டப்பட்டுள்ள கிளைவாய்க்கால், கோதையார் இடகரை கால்வாய்க்கு நீரை வழங்குகிறது. கோதையார் இடகரைக் கால்வாயின் எம்.6/4-200 என்ற இடத்திலிருந்து வெட்டப்பட்டுள்ள பட்டணங்கால் பல பிறகிளைகளுடன் 41.6 கி.மீ. தொலைவு சென்று

விளவங்கோடு மற்றும் கல்குளம் வட்டங்களிலுள்ள 15,000 ஏக்கர் நிலங்களுக்குப் பாய்கிறது. பட்டணங்கால் தொகுதியில் அடங்கிய தற்போதைய ஆயக்கட்டு நிலங்களையும் உள்ளடக்கி 9365.65 ஏக்கர் நிலங்கள் இதனால் இதுகாறு வளம் பெற்றுள்ளன.

இராதாபுரம் வாய்க்கால் தொகுதி

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள இராதாபுரம் பகுதியிலுள்ள ஏறத்தாழ 17,000 ஏக்கர் புஞ்சை நிலங்களுக்கு நீர்ப்பாய்ச்சும் நோக்கில் சித்தார் பட்டணங்கால் தொகுதியின் கீழ் நீலப்பாறை கால்வாயின் எம். ½ - 250 என்ற இடத்தில் இராதாபுரம் வாய்க்கால் தோண்டப்பட்டுள்ளது. இக்கால்வாயின் நீளம் ஏறத்தாழ 44 மைல், 6 பர்லாங்கு, 264 அடிகளாகும். பிற கிளைகளின் நீளம் 43 மைல், 2½ பர்லாங்கு ஆகும். நிலங்களுக்கான கால்வாய் 50 மைல் 1½ பர்லாங்கு நீளமானது. இதுகாறும் 6408 ஏக்கர் பரப்பளவுள்ள ஆயக்கட்டு நிலங்கள் விரிவுப்படுத்தப்பட்டுள்ளன. இக்குறைந்த அளவு விரிவாக்கம், தண்ணீர் பற்றாக்குறையினால் ஏற்பட்டதாகும். பரளயார் ஆற்றிலிருந்து விரிவுப்படுத்தப்படவிருக்கும் குழாய்த்திட்டம் மற்றும் தாடவையார் திட்டம் ஆகியவை இந்நிலையை மேம்படுத்த வாய்ப்புண்டு.

மேலும் 1964-70 ஆம் ஆண்டுகளில் சித்தார் - 1 மற்றும் சித்தார் - 2 முதலிய ஆறுகளின் குறுக்கே, சித்தார்-1 மற்றும் சித்தார்-2 ஆகிய இரண்டு அணைகள் கட்டப்பட்டன. இவ்விரு அணைகளும், இணைப்பு வாய்க்கால் மூலம், ஒன்றோடொன்று பின்னி இணைக்கப்பட்டுள்ளன. சித்தார்-1, ஒரு கிளை வாய்க்கால் மூலம் கோதையார் இடக்கரை வாய்க்காலுடன் இணைக்கப்பட்டது.

சித்தார் அணை-1

கோதையார் ஆறு சங்கமமாகும் இடத்தின், (நீரோட்டத்திற்கு) எதிர்த்திசையில் 1.61 கிலோ மீட்டர் தொலைவில், "எம்.எஸ்.எல்" விற்கு 2000 அடி உயரத்தில் எட்டுக்காணி மற்றும் வண்டிப்பிளவுக்காணி ஆகிய இடங்களுக்கருகே, கீழமலா ஒதுக்குக்காட்டு மலைப்பகுதியில் இவ்வணை தனது தலையூற்றைப் பெற்றுள்ளது. அணையின் முழுமொத்தக் கொள்ளளவு 610 மெட்ரிக் கன அடியாகும்.

	விவரங்கள்	*சித்தார் -1*
1.	கட்டப்பட்ட ஆண்டு	1964-70
2.	அணையின் நீளம்	706.2 மீட்டர்
3.	அணையின் அமைப்புரு	மண்ணினாலானது
4.	அணையின் எம்.எஸ்.எல்லின் உயரம்	85 மீட்டர்
5.	அதிகபட்ச நீர்நிலை	82 மீட்டர்
6.	ஃஎப்.ஆர்.எல்.	82 மீட்டர்

பெருஞ்சாணி அணை

7.	மதகின் அடித்தரக்கட்டின் நிலை	76.5 மீட்டர்
8.	நீர்ப்பிடி பரப்பளவு	2.90 சதுர கி.மீ.
9.	கொள்ளளவு (முழு மொத்தம்)	17.27 மெ.க்யூ.மீ.
10.	நிகர கொள்ளளவு	11.13 மெ.க்யூ.மீ.
11.	மோசமான கொள்ளளவு	6.14 மெ.க்யூ.மீ.
12.	நீர்வரும் பரப்பு	22 சதுர கி.மீ.
13.	சராசரி மழையளவு	2080 மி.மீட்டர்
14.	திட்ட அமைப்பு - வெள்ளம்	234 க்யூ.மீ.எஸ்
15.	சராசரி ஆண்டு விளைச்சல்	...
16.	உபரி ஒழுங்கியக்கி	2
17.	வாய்ப்பிடங்கள்	12.2 மீ x 4.6 மீ

சித்தார் அணை - 2

குறிஞ்சி மலையின் தெற்கு மற்றும் கிழக்கு சரிவில், நீரோட்டத்திற்கு எதிர்திசையில், ஏறத்தாழ 1.6 கிலோ மீட்டர் தொலைவில், "எம்.எஸ்.எல்."லிற்கு, 2300 அடி உயரத்தில், கீழ்மலா ஒதுக்குக்காட்டு மலைப் பகுதியில், இவ்வணை தனது தலையூற்றைப் பெற்றுள்ளது. இவ்வாறு 5.6 கிலோ மீட்டர் சென்ற பின்னர், சிவலோகம் எஸ்டேட்டில் சித்தார்-2 என உருப்பெற்று, 4.4 கிலோ மீட்டர் பாய்ந்த பின்னர், கோதையாற்றுடன் இணைகிறது. அணையின் முழு மொத்தம் கொள்ளளவு 1009 மெட்ரிக் கன அடியாகும்.

	விவரங்கள்	*சித்தார்-2*
1.	கட்டப்பட்ட ஆண்டு	1964-70
2.	அணையின் நீளம்	1133.9 மீட்டர்
3.	அணையின் அமைப்புரு	மண்ணினாலானது
4.	அணையின் எம்.எஸ்.எல்.லின் உயரம்	85 மீட்டர்
5.	அதிகபட்ச நீர்நிலை	82 மீட்டர்
6.	ஃஎப்.ஆர்.எல்.	82 மீட்டர்
7.	மதகின் அடித்தளக்கட்டின் நிலை	76.5 மீட்டர்
8.	நீர்ப்பிடி பரப்பளவு	4.10 சதுர கி.மீ.
9.	கொள்ளளவு (முழு மொத்தம்)	28.57 மெ.க்யூ.மீ.
10.	நிகர கொள்ளளவு	16.99 மெ.க்யூ.மீ.
11.	மோசமான கொள்ளளவு	11.58 மெ.க்யூ.மீ.
12.	நீர் வரும் பரப்பு	25.9 சதுர கி.மீ.
13.	சராசரி மழையளவு	2030 மி.மீ.
14.	திட்ட அமைப்பு - வெள்ளம்	265 க்யூ.மீ./எஸ்.
15.	சராசரி ஆண்டு விளைச்சல்	...
16.	உபரி ஒழுங்கியக்கி	6
17.	வாய்ப்பிடங்கள்	6.1 மீ x 4.6 மீ

இவ்வித பல வளர்ச்சிக்குப் பின்னரும், கோதையார் மற்றும் பரளியார் ஆறுகளில், இன்னமும் மூலவாய்ப்பு வளம் இருக்கத்தான் செய்தது, எனவே, பட்டணங்கால் பகுதியில் கூடுதல் பரப்பளவும் (தாமிரபரணி ஆற்றின் இடக்கரை) மற்றும் அண்டை மாவட்டமான திருநெல்வேலியிலுள்ள இராதாபுரம் வட்டத்தில் கூடுதல் பரப்பளவும், பாசனத்திற்கு சேர்த்துக் கொள்ள முடிவு செய்யப்பட்டன.

1964-70 ஆண்டுகளில், பேச்சிப்பாறை மற்றும் பெருஞ்சாணி அணைகள், கூடுதலாக நீரை சேமித்திட, ஃளப்.ஆர்.எல்.லை 1.83 மீட்டர் உயர்த்தி, வலுவூட்டப்பட்டு மற்றும் மேம்படுத்தப்பட்டன. கோதையார் இடக்கரை வாய்க்காலின் கொள்ளளவும், அதிகரிக்கப்பட்டது. கன்னியாகுமரி மாவட்டத்தில் 5557 எக்டேர் நிலத்தைப் பாசனம் செய்வதற்காக, கோதையார் இடக்கரை வாய்க்காலிலிருந்து, புது வாய்க்காலான பட்டணங்கால் தோண்டப்பட்டது. திருநெல்வேலி மாவட்டத்தின் இராதாபுரம் பகுதியிலுள்ள 6883 எக்டேர் புஞ்சை நிலங்களுக்குப் பாசனம் செய்திட மற்றொரு வாய்க்கால், நிலப்பாறையில் தோவாளை வாய்க்காலின் கடைக்கோடியிலிருந்து தோண்டப்பட்டது.

சித்தார்-1 மற்றும்-2 ஆகிய இரண்டு நீர்தேக்கங்கள், பேச்சிப் பாறை மற்றும் பெருஞ்சாணி நீர்த்தேக்கங்களின் சேமிப்புக் கொள்ளளவை அதிகரித்தல், இடக்கரை வாய்க்கால் மற்றும் தோவாளைக் கால்வாய் முதலியவற்றை மேம்படுத்துதல், பட்டணங்கால் மற்றும் இராதாபுரம் புதிய கால்வாய்கள், சித்தார் பட்டணங்கால் திட்டத்தில் (1964-70) அடங்கியவையாகும். மேலும் தீர்ப்பரப்பு அணையின் பாசனத்திலுள்ள 513 எக்டேர் பரப்பளவும், சித்தார் - பட்டணங்கால் திட்டத்தின்கீழ், (சித்தார்-2-ன் தனி விடுவிப்புகளாக) நிலப்படுத்துவதற்கு சேர்க்கப்பட்டன.

மேலே விவரிக்கப்பட்டுள்ள நான்கு (பாசன) நீர்த் தேக்கங்களுடன், இரண்டு (மின் சக்தி) நீர்த்தேக்கங்களும், 1963-71 இல், தமிழ்நாடு மின்சார வாரியத்தால் கட்டப்பட்டன. இவை, கோதையாற்றின் மேல்நிலை எல்லையில் முறையே 85 மெ.க்யூ.மீ., மற்றும் 0.8 மெ.க்யூ.மீ., கொள்ளளவில், 100 மெகவாட் மின் சக்தியை உற்பத்தி செய்ய, கட்டப்பட்டவையாகும், தற்போது நடைமுறை யிலுள்ள விதிகளின்படி, இந்த மின் சக்தி நீர்த்தேக்கங்களின் செய்முறை, பாசன நீர்த் தேக்கங்களின் செயல்முறையுடன் இணைக் கப்பட்டுள்ளது.

மாவட்டத்திலுள்ள ஏரிகள் (குளங்கள்) குறித்த விவரங்கள் வட்ட வாரியாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

தொடர் எண்.	வட்டங்களின் பெயர்	மழைநீர் சார்ந்த ஏரிகள் (மானவாரி)	நீர்ப்பாசனத்தொகுதி சார்ந்த ஏரிகள் (கால் வாய் மூலம் பாசன நீர் பெறுபவை)
1.	விளவங்கோடு வட்டம்	922	49
2.	அகஸ்தீஸ்வரம் வட்டம்	8	180
3.	கல்குளம் வட்டம்	464	614
4.	தோவாளை வட்டம்	92	118

கோதையார் மற்றும் பட்டணங்கால் ஆதிக்க ஆதாரப்பகுதியின் தட்ப, வெட்ப நிலை, மண்தரம் மற்றும் இட இயல்பு விவரம்

மாவட்ட முழுமையும் பரவியிருக்கும் கோதையார் மற்றும் பட்டணங்கால் ஆதிக்க ஆதாரப் பகுதிகள், குளிர் காலத்தில் மிகுந்த குளிருடன் சற்று வறண்ட, வெப்பமண்டல நிலையையுடையவை யாகவும், வெயிற்காலத்தில், மிகவெப்பமானதிலிருந்து, கடும்வெப்பமுள் ளவையாகவும் இருக்கும். குறைந்த அளவு தட்ப, வெட்ப நிலை 26.4° சென்டிகிரேடிலிருந்து, 30.51° சென்டிகிரேடு வரையிலிருக்கும். அதிக அளவு 32.54° சென்டிகிரேடிலிருந்து 37.38° சென்டிகிரேடு வரை மாறுபடும்.

நீர்ப்பாசன ஆதிக்க ஆதாரப்பகுதி, கடல் மற்றும் ஆறுகளை நோக்கி, கரடு, முரடான மற்றும் செங்குத்துச்சரிவான இட இயல்பையுடைய திணை நிலங்களாகும். ஆதிக்க ஆதாரப்பகுதியில், மூன்று முதன்மை யான மண்வகைகள் காணப்படுகின்றன. அவை, செவ்வண்ண இரும்புக் களிமண் வகை, சிவப்பு மற்றும் வண்டல் சார்ந்த கலப்பு மண் வகை, சிவப்புகளிச் சேற்று வண்டல் மண் மற்றும், கடற்கரை வண்டல் மண்ணுடன் கூடிய, செவ்வண்ண இரும்பகக் களிமண் ஆகியவையாகும். மண்வளம், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் அதிக அளவில் மாறுபடுகின்றன. மாவட்டத்தில் அதிக அளவு, காடித்தன்மை மண்ணில் காணப்படுவதன் காரணமென்னவெனில், குன்றுகள் அடர்ந்த பகுதியில், கசிவூரல் மூலம் உள் மாசு வெளியேற்றப் படுவதும், கடுமையான மழையுமேயாகும்.

பாசன வளர்ச்சியின் வரலாற்று வரிசை முறையை யொத்து, மாவட்டத்தில் பாசனப் பகுதிகள், கீழே குறிப்பிட்டவாறு, இரண்டு தனி ஆதிக்க ஆதாரங்களாகப் பிரிக்கப்படுகின்றன.

1) பத்மநாபபுரம் - புத்தனார் கால்வாய், தோவாளைக் கால்வாய், ஆனந்தனார் கால்வாய் மற்றும் நாஞ்சில்நாடு புத்தனார் கால்வாய் ஆகியவற்றால் பயனடையும் கோதையார் ஆதிக்க ஆதாரம்

(மொத்தம் - 21227 எக்டேர், இரு போக நெல்); மற்றும்

2) பட்டணங்கால் வாய்க்காலால் பயனுறும் பட்டணங்கால் ஆதிக்க ஆதாரம் (5583 எக்டேர், இரு போக நெல்).

தண்ணீர் வழிமுறை - மழைநீர், ஆற்று நீர் மற்றும் நிலத்தடி நீர்

மாவட்டத்தின் மழையளவு ஆண்டொன்றிற்கு சராசரியாக 1500 மில்லி மீட்டராகும். தென்மேற்குப் பருவக்காற்று (சூன் முதல் செப்டம்பர் வரை) மற்றும் வடகிழக்குப் பருவக்காற்று (அக்டோபர் முதல் டிசம்பர் வரை) இரண்டுமே ஆண்டுத் தேவைக்கு சரிசமமாக மழையை அளிக்கவல்லவை. சில ஆண்டுகளில் அவை எதிர்மாறான விளைவுகளையும் ஏற்படுத்தும். ஆண்டு மழையளவிலும், மழை பொழியும், பருவகாலம் மற்றும் காலவரை, இரண்டிலும் பொருந்தா நிகழ்வு ஏற்படுவதுண்டு. மாவட்டத்தின் வடமேற்குப் பகுதிகளிலுள்ள அணை அமைந்துள்ள இடங்களில் 2000 மில்லி மீட்டருக்கு அதிகமாகவும், தென் கிழக்குப் பகுதிகளிலுள்ள பாசனப் பகுதியின் கடைக்கோடியில் 800 முதல் 900 மில்லி மீட்டரும் மழை பொழிவதுண்டு.

கோதையார் ஆதிக்க ஆதாரப்பகுதியில், வேளாண்மை, மேற்பரப்புத் தண்ணீரை நம்பியே உள்ளது. நிலத்தடி நீரை, எடுத்துப் பயன்படுத்தும் வாய்ப்பு மிகக் குறைவேயாகும். நிலத்தின் மேல் பரப்பின் பொது இட இயல்பைத் தொடர்ந்தே, நிலத்தடிநீரின் இயக்கம் அமைந்துள்ளது. அடிநில நீர் மட்டத்தின் சரிவுநிலை, மாவட்டத்தின் கிழக்குப் பாதியில் தென் கிழக்காகவும், மேற்குப் பாதியில் தென் மேற்காகவும் உள்ளது. கோதையார் ஆறு, நிலத்தடிநீர் சேமிப்பைப் பெறுவதால், அது குறுக்கு வெட்டுப் பகுதியில், ஆதாயம் பெறக் கூடிய ஆறாகும்.

தேசிய நீர் செயலாட்சித் திட்டம்

இத்திட்டத்தின்படி, கோதையார் ஆற்றுத் தொகுதிக்கு, எல்லாவற்றையும் உள்ளிட்டு, புதுமைப்பாங்கில், மறு உருவம் அளிக்க, உத்தேசிக்கப்பட்டுள்ளது. கடந்த 15 ஆண்டுகளில் மேற்கொண்ட செயல்முறை அனுபவங்களைக் கருத்திற்கொண்டு விரிவான ஆய்வின் பின்னரும், தற்போதைய தொகுதியைப் பற்றி, கூர்ந்தாராய்ச்சி செய்த பின்னரும், தமிழ்நாடு பொதுப் பணித்துறையினரால், ஓர் திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டது. கடந்த 1985 ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் கன்னியாகுமரியில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட உலக வங்கி அலுவலர்கள் மற்றும், இந்திய அரசின் இணைக்குழுவினர், ஆகியோர் தயாரித்து அனுப்பிய அறிக்கையில் குறிப்பிட்ட கருத்துரைகளைப் பின்பற்றி, மேற்சொன்ன திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டது.

தற்போதுள்ள தொகுதியிற்கண்ட குறைபாடுகளைக் களைந்து, அதே நேரத்தில், எல்லாவற்றையும் உள்ளிட்ட அதனின் இயக்குதிறத்தை, மேம்படுத்தும் கருத்திற்குத் தகுந்த முக்கியத்துவம் அளித்தே, திட்ட கருத்துரு, வடிவமாக்கப்பட்டுள்ளது. பாசனத்திறிக்குப் பயன்படும் நீரில் நல்ல அளவு சேமிப்பும், அதே சமயம் அதிகமான அளவு பயிர் உற்பத்தியும், இதனால் எதிர்பார்க்கப்படுகிறது. உலக வங்கி நிதி உதவியுடன், 127 மிலியன் ரூபாய் செலவில் மேற்கொள்ளப் பட்டிருக்கும் இத்திட்டம், ஐந்து ஆண்டுகளில் முடிவடையலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

பாசனத் தொகுதியின் குறைபாடுகளைக் களையவும், எல்லாவற்றையும் உள்ளிட்ட இயக்குதிறத்தை அடையும் நோக்கிலும், தேசிய நீர் செயலாட்சித் திட்டம், கீழ்க்காணும் செயல்முறைகளை எதிர்நோக்குகிறது.

அ. உடல்சார்ந்த முதலீடு மூலம், கோதையார் இடக்கரை வாய்க்கால், தோவாளை வாய்க்கால், நாஞ்சில்நாடு புத்தனார் வாய்க்கால், பத்மநாபபுரம் புத்தனார் வாய்க்கால், பட்டணங்கால் மற்றும் இராதாபுரம் வாய்க்கால் ஆகியவற்றை மறுசீரமைப்பு செய்தல், வாய்க்கால்கள், வடிகால்கள் ஒழுங்கியக்கிகள் ஆகியவற்றைப் புதுப்பித்து, மேம்படுதுதல், ஈப்புத்தடங்களின் தரத்தை ஒழுங்குப்படுத்துதல், பரப்பி வழங்கும் பின்னல் வலையமைவு மற்றும் போக்குவரத்துத் திட்டங் களை மேம்படுத்துதல்;

ஆ. சுழற்சி முறையில், பெரிதும் உகந்த அளவு சிக்கனமாகவும், மிகந்தகட்டுப்பாட்டுடனும் நீரைப்பயன்படுத்துதல்.

இச்செயலாக்கங்களை நடைமுறையில் கடைப்பிடித்தால், நீர் வழங்குதலில், நடுநிலை நேர்மை இலக்கினை அடையலாம். அதனால். அதிக உற்பத்திக்கு வாய்ப்புண்டு.

இத்திட்டம், 1988-89 நிதியாண்டிலிருந்து துவங்கப்பெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

வாய்க்கால்தொகுதி

நீர்த்தேக்கங்களில் சேமித்து வைக்கப்பட்டோ, அல்லது நேரிடையாகவோ மேற்பரப்புத் தண்ணீர், போக்கு மாற்றி வாய்க்கால் நீர்ப்பாசன பின்னல் வலையமைவு முறையில், வழங்கப்படுகிறது. ஒரு தண்ணீர் சேமிப்பு அணைக்கட்டு அல்லது குறுக்கணை, அல்லது திசை மாற்று அணை ஆகியவற்றின் உயர் ஆதாரத்தினின்றும் ஒரு வாய்க்கால் துவங்குகிறது. பாசன நீர், உழவர் குடிமக்களின் விளை நிலத்தையடையுமுன், முழுமையான வாய்க்கால் தொகுதியின் மூலமாகப் பாய்கிறது. வாய்க்கால்கள், ஆற்றின் பிரிகிளைகள்,

நீர்ப்பாய்ச்சலாதாரங்கள் மற்றும் நில வாய்க்கால்கள் இவற்றை உள்ளடக்கியதே, வாய்க்கால் பின்னல் வலையமைவு முறையாகும்.

1. முல்லையார் நீர்த்தேக்கத் திட்டம்

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், ஆண்டுக்கொரு கிராமத்திற்கருகே, முல்லையார் நீர்த்தேக்கத் திட்டம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் உத்தேச மதிப்பீடு 1170 இலட்ச ரூபாய் ஆகும். இத்திட்டத்தினால், 500 ஏக்கர் புதிய புஞ்சை ஆயக்கட்டு நிலங்களைப் பாசனத்திற்குக் கொணரவும், நிலைப்படுத்தும் அடிப்படையில் 216 ஏக்கர் பரப்பளவில் நஞ்சைப்பயிர்கள் சாகுபடி செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. கூடுதல் உபரி உணவு உற்பத்தி 789 டன்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம், பூர்வாங்க ஆய்வு நிலையில் உள்ளது.

2. கோதையார் பாசனத் தொகுதிக்குப் புதுமைப்பாங்கில் மறுஉருவம் அளித்தல்

கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தின் இராதாபுரம் வட்டம், ஆகியவற்றிற்குப் பயனளிக்கும் கோதையார் பாசனத் தொகுதிக்குப் புதுமைப் பாங்கில் மறுஉருவம் அளிக்க, இத்திட்டம் வகை செய்கிறது. இத்திட்டத்தினால், தற்போதுள்ள ஆயக்கட்டு முழுமையையும் நிலைப்படுத்துதல், இடைவெளியை நிரப்புதல் மற்றும் கோதையார் தொகுதியிலுள்ள குறைகள் களையப்பெறுதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை செயல்முறைப் படுத்தினால், கீழ்க்குறிப்பிட்டுள்ள நிலங்கள் பயனடையும்.

	ஏக்கர்கள்
1. நிலைப்படுத்தப்பெறும் - இருபோக நஞ்சை நிலங்களின் பரப்பளவு	46,188
2. இடைவெளி நிரப்பப்படும் மற்றும் புதிய நஞ்சை ஆய்க்கட்டு உருவாக்கவிருக்கும் பரப்பளவு	18,375
3. இடைவெளி நிரப்பப்படும் மற்றும் உருவாகவிருக்கும் புஞ்சை ஆயக்கட்டின் பரப்பளவு	25,520

மத்திய நீர்க்குழு நிர்ணயித்துள்ள உருமாதிரியின்படி, திட்டத்தின் பயன் மதிப்பு விகிதம் 3:93:1 எனக் கணக்கிடப்பட்டுள்ளது. 1986-87 ஆம் ஆண்டின், அட்டவணைப்பட்டியலில் நிர்ணயித்துள்ள விலை மதிப்புப்படி, திட்டத்தின் செலவு 4,289 இலட்சம் ரூபாயாக இருக்கலாமென கணக்கிடப்பட்டுள்ளது[61].

திட்டம், தற்போது அரசின் பரிசீலனையிலுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள, வாய்க்கால்கள் மற்றும் கால்வாய்களின் திட்டஅமைப்பு, நீளம், வடிகால்கள் போன்ற விவரங்களடங்கிய பட்டியல்

தொடர் எண்.	வாய்க்காலின் பெயர்	திட்ட அமைப்பு கொள்ளளவு (க்யூ / எஸ்)	திட்ட அமைப்பு பரப்பளவு (ஹெஸ்.எக்டேர்)	நீளம் (கி.மீ.)		வடிகால்களின் எண்ணிக்கை		
				முதன்மை யான வாய்க்கால்	கிளைத் துணை வாய்க்கால்	முதன்மை யான வாய்க்கால்	கிளைத் துணை வாய்க்கால்	ஃஎப் எஸ்
1.	கோதையார் இடக்கரை வாய்க்கால்	32.99	1.054	16.80	-	-	-	2.07
2.	தோவாளைக் கால்வாய்	10.08	1.054	48.52	15.6	68	53	1.65
3.	நாஞ்சில் நாடு - புத்தனார் கால்வாய்	10.60	-	27.70	4.3	83	28	1.50
4.	அனந்தனார்	4.76	1.054	24.0	45.6	71	14.3	1.05
5.	பத்மநாபபுரம் - புத்தனார் கால்வாய்	9.77	1.054	30.0	93.0	72	292	1.45
6.	பட்டணங்கால்	5.78	0.986	53.07	92.0	109	-	1.65
7.	இராதாபுரம் வாய்க்கால்	4.25	0.586	28.0	87.67	31	102	1.20
8.	பாண்டியன்கால்	22.37	1.054	2.4	-	-	-	-
9.	ஒழுங்கியக்கிகால் (ரெகுலேட்டர்கால்)	-	-	2.02	-	-	-	-

நிருவாகப் பொறியாளர், பொதுப்பணித்துறை, கன்னியாகுமரிக் கோட்டம், நாகர்கோவில் , அறிக்கை நாள் 12-5-1988

3. மாம்பழத்துறையூர் நீர்த்தேக்கத் திட்டம்

மாம்பழத்துறையூர் நீர்த்தேக்கத் திட்டமென்பது, கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், வில்லுக்கீரி கிராமத்தில், மாம்பழத் துறையூர் ஆற்றின் குறுக்கே, 51 மெ. கன அடி பயனுறுதியுள்ள கொள்ளளவில், 575 இலட்ச ரூபாய் மதிப்பீட்டுச் செலவில், நிறுவப் படவிருக்கும் நீர்த்தேக்கமாகும். இதனால் பயனடையும் ஆயக்கட்டு, 475 ஏக்கர்கள் நிலைப்படுத்தப்பட்ட நஞ்சை நிலங்களாகும். கையகப் படுத்தப்படவிருக்கும் நிலத்தின் பரப்பளவு 101.20 ஏக்கர்களாகும். அதனில் 10.50 ஏக்கர் ஒதுக்குக்காட்டு நிலங்களாகும். இத்திட்டம் செயல்முறைப்படுத்தப் படுவதினால், எதிர்நோக்கப்படும் கூடுதல் உணவு உற்பத்தி 452 டன்களாகும். ஒரு டன், ஏக்கர், எக்டேர் ஆகியவற்றிற்கு விகிதம் முறையே ரூபாய் 1,27,212/-, 60,526/- மற்றும் 1,49,350/- ஆகிறது. பழைய உருமாதிரியின் படி, பயன்மதிப்பு விகிதம் 0:19:1 எனக்கணக்கிடப்பட்டுள்ளது. பூர்வாக மதிப்பீடு அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

4. பொய்கை நீர்த்தேக்கத்திட்டம்

பொய்கை நீர்த்தேக்கத்திட்டமென்பது, கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டம், ஆரல்வாய்மொழி கிராமத்தில், பொய்கையாற்றின் குறுக்கே 95.27 மெ.கன அடி கொள்ளளவில் 1087 இலட்ச ரூபாய் மதிப்பீட்டுத் தொகையில் உருவாகவிருக்கும் நீர்த்தேக்கமேயாகும். இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தினால், 1615 ஏக்கர் நிலங்கள் பயனுறும். எதிர்நோக்கப்படும் கூடுதல் உணவு உற்பத்தி 1484 டன்களாகும். ஒரு டன், ஒரு ஏக்கர் மற்றும் ஒரு எக்டேருக்கான விகிதம் முறையே ரூ.73,248/- ரூ.67,307/- மற்றும் ரூ.1,66,208/- ஆகும். மத்திய நீர்க்குழுவின் அறிவுரைகளின்படி, பயன்மதிப்பு விகிதம் 0.09:1 ஆகும். விரிவான மதிப்பீடு, அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டு, அரசு தனது 2.12.1988 நாளைய 1995 (பொதுப் பணித்துறை) அரசாணையில், இத்திட்டத்திற்கு, ஒப்புதலளித்துள்ளது.

நெய்யார் திட்டம்[62]

நெய்யார் திட்டத்தின், இடகரை வாய்க்கால் தோண்டும் பணி, கன்னியாகுமரி மாவட்டம், கலியக்காவலையில், கடந்த 1958ஆம் ஆண்டு சூலை மாதம் 27ஆம் நாள், மாண்புமிகு முதல்வரவர்களால், துவங்கிவைக்கப்பட்டது.

நெய்யார் திட்டம் என்பது, கேரள மாநிலம், திருவனந்தபுரத்தி லிருந்து தென் கிழக்கே 30.4 கிலோ மீட்டர் தொலைவில், செம்பில மோடு என்ற இடத்தில், நெய்யார் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள ஈர்ப்பாற்றல் (கற்கட்டுமான) அணையாகும். இவ்வணையினால் தேக்கப்படும் நீர், அணையின் இருபுறமும் செல்லும் கால்வாய்களின் மூலம், 34,100 ஏக்கர் நிலங்களுக்கு பாய்ச்சப்படுகிறது. வடபுறமுள்ள

கால்வாய், 33.6 கிலோ மிட்டர் நீளமானது. இது கேரள மாநிலத்திலுள்ள 15,000 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன நீரைக் கொண்டு செல்கிறது. இடதுபுறமுள்ள கால்வாய் 38.4 கிலோ மீட்டர் நீளமுள்ளது. இது கேரள மாநிலத்தில் ஒரு பகுதியும், தமிழ்நாடு மாநிலம், கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு பகுதியுமடங்கிய 19,100 ஏக்கர் பரப்பளவு நிலங்களுக்கு, நீர்ப்பாய்ச்சுகிறது.

அணையின் கட்டுமானப்பணி மற்றும் வடபுறக் கால்வாய் தோண்டும் பணி ஆகியவையடங்கிய திட்டத்தின் முதல் நிலை, 143 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில், முடிக்கப்பெற்றது. இடதுபுறக் கால்வாய் அமைக்கும்பணி 105 இலட்சம் ரூபாய் செலவில், இரண்டாவது ஐந்தாண்டுத்திட்ட காலத்தில் எடுத்து முடிக்க உத்தேசிக்கப்பட்டது. இக்கால்வாய் 38.4 கிலோ மீட்டர் தொலைவு கேரள மாநிலத்தில் செல்கிறது. பின்னர், தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டத்தில், 10,000 ஏக்கர் நிலத்தில் செல்கிறது.

கால்வாய்கள், மற்றும் நீர் வழங்கு, தொகுதி ஆகியவற்றைத் தோண்டும் பணி அந்தந்த மாநில எல்லையில், அந்தந்த மாநிலங்களாலேயே தோண்டி முடிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அணை மற்றம் உயர்நிலை ஆதாரப்பணிகள் ஆகியவற்றிற்கான செலவு கேரள மாநிலத்தால் மேற்கொள்ளப்பட்டிருப்பினும், அதற்கான தமிழ்நாடு மாநிலத்திற்குரிய பரிமாணம் மற்றும் தமிழ்நாடு மாநில எல்லையில் 10,000 ஏக்கர் நிலங்களைப் பாசனம் செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட செலவு, ஆகியவை 92.28 இலட்ச ரூபாய் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

பொதுப்பணித்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள, கோதையார் ஆற்றுப் பாசனத் தொகுதியிலடங்கிய குளங்கள் மற்றும் அவற்றின் ஆயக்கட்டுப் பரப்பளவு ஆகியவை, இணைப்பிற்கண்ட பட்டியலில் கொடுக்கப் பட்டுள்ளன.

பட்டியல்

கன்னியாகுமரி மாவட்டம்

கோதையார் திட்டத்திலடங்கிய ஏரிகளும், அவற்றின் ஆயக்கட்டுப்பரப்பளவும்
(பொதுப்பணித்துறையின் பொறுப்பிலுள்ளவை)

தொடர் எண். (1)	(குளத்தின்) ஏரியின் பெயர் (2)	ஏரியின் ஆயக்கட்டு பரப்பளவு (ஏக்கரில்) (3)
	Agastiswaram Taluk - அகஸ்தீஸ்வரம் வட்டம்	
1.	(Cherikulam) - சேரிக்குளம்	112.20
2.	(Thanumalaiyankulam) - தானுமலையான்குளம்	24.10

(1)	(2)	(3)
3.	(Puthankulam) - புத்தன்குளம்	25.21
4.	(Attu) - ஆட்டு	6.50
5.	(Thamarakulam) - தாமரக்குளம்	18.20
6.	(Attakulam) - ஆட்டாக்குளம்	32.40
7.	(Pallakulam) - பள்ளக்குளம்	61.28
8.	(Poolankulam) - பூலான்குளம்	97.16
9.	(Sabayarkulam) - சபையார்குளம்	42.94
10.	(Keezhakannankulam) - கீழ்க்கண்ணன்குளம்	16.07
11.	(Ayyanarpudukulam) - அய்யனார்புதுக்குளம்	8.24
12.	(Cherkulam) - சேர்குளம்	60.00
13.	(Chalapathukulam) - சாலப்பத்துகுளம்	150.00
14.	(Vayilakulam) - வயிலாகுளம்	50.00
15.	(Thulukkankulam) - துலக்கன்குளம்	196.42
16.	(Ptharakulam) - ப்தாரக்குளம்	5.00
17.	(Uachankulam) - ஓச்சன்குளம்	5.00
18.	(Narayana erikulam) - நாராயண ஏரிக்குளம்	40.00
19.	(Purushothamanerikulam) - புருஷோத்தமநேரிக்குளம்	80.00
20.	(Kurinthancikulam) - குருந்தாஞ்சிக்குளம்	50.00
21.	(Kalvettankuttinkulam) - கல்வேட்டன் குட்டின் குளம்	20.50
22.	(Anakulam) - ஆனக்குளம்	
23.	(Lakshmikulam) - லெக்ஷ்மிகுளம்	20.50
24.	(Poolankulam) - பூலான்குளம்	102.95
25.	(Kadanpathukulam) - கடன்பாத்துக்குளம்	96.69
26.	(Kandankulam) - கந்தன்குளம்	164.11
27.	(Nachiyarkulam) - நாச்சியார்குளம்	49.17
28.	(Pallikondarkulam) - பள்ளிகொண்டார்குளம்	21.40
29.	(Kumarankulam) - குமரன் குளம்	31.50
30.	(Parppanakulam) - பார்ப்பனக்குளம்	67.95
31.	(Kottupparakulam) - கோட்டுப்பாராக்குளம்	35.65
32.	(Thanappiramanamkulam) - தானப்பிரமணங்குளம்	60.77
33.	(Eyainainarkulam) - இயைநய்னார்குளம்	62.11
34.	(Thanarajayan kulam) - தனராஜயன்குளம்	20.78

(1)	(2)	(3)
35.	(Kothandaramar kulam) - கோதண்டராமர்குளம்	141.16
36.	(Chadayankulam) - சடையன்குளம்	51.68.640
37.	(Thathiyarkulam) - தாத்தியார்குளம்	295.47.248
38.	(Vallikulam) - வள்ளிக் குளம்	83.00.545
39.	(Nagarkulam / Kallarkulam) - நாகர்குளம் / கள்ளர் குளம்	22.80.438
40.	(Nagarkulam / Vadaserikulam) - நாகர்குளம் / வடசேரிக் குளம்	24.49.382
41.	(Uppanganerikulam) - உப்பங்கனேரிக்குளம்	26.13.870
42.	(Paulkulam) - பால்குளம்	131.01
43.	(Alavarkulam) - ஆலவார்குளம்	
44.	(Kannimulakundu) - கன்னிமூலக்குண்டு	30.00
45.	(Porumukulam) - பொருமுக்குளம்	303.29
46.	(Ambilikulam) - அம்பிலிக்குளம்	5.32
47.	(Nedumkulam) - நெடும்குளம்	53.25
48.	(Murukulam) - மூருக்குளம்	23.62
49.	(Amanjankulam)- அமஞ்சங்குளம்	44.91
50.	(Mattiyankulam) - மட்டியான்குளம்	38.98
51.	(Kalkulam) - கல்குளம்	27.25
52.	(Inamkuzhikulam) - இனாம்குழிக்குளம்	78.38
53.	(Putheri periakulam) - புத்தேரிபெரியகுளம்	233.11
54.	(Krishnankulam) - கிருஷ்ணன்குளம்	5.,16
55.	(Arasandakulam) - அரசந்தக்குளம்	29.20
56.	(Daniel Mahadwankulam) - டேனியல்மக்தவான்குளம்	5.12
57.	(Ananthakrishnankulam) - ஆனந்தகிருஷ்ணன்குளம்	25.30
58.	(Melakadukkarakulam) - மேலக்காடுக்காரக்குளம்	95.50
59.	(Kaniyankulam) - கானியான்குளம்	33.70
60.	(Minvaliyankulam) - மின்வலியாங்குளம்	22.65
61.	(Madiyankulam) - மடியான்குளம்	24.00
62.	(Panakulam) - பனக்குளம்	19.75
63.	(Attukulam) - ஆட்டுக்குளம்	28.25
64.	(Krishnasamudrakulam) - கிருஷ்ணசமுத்திரக்குளம்	100.62

(1)	(2)	(3)
65.	(Mikkamkulam) - மிக்காம் குளம்	29.00
66.	(Eravikulam) - எரவிக்குளம்	30.00
67.	(Kaniyankulam) - கனியான்குளம்	17.00
68.	(Thondansassambu) - தொண்டன் சாசம்பு	12.00
69.	(Kundankulam) - குண்டன்குளம்	7.00
70.	(Irattakulam) - ரெட்டக்குளம்	65.00
71.	(Chadiyankulam) - சாடியான்குளம்	75.00
72.	(Thellikulam) - தெல்லிக்குளம்	42.00
73.	(Attakulam) - ஆட்டாக்குளம்	63.28
74.	(Azhagankulam) - அழகன்குளம்	74.12
75.	(Padalakulam) - பாடாலக்குளம்	5.15
76.	(Kankulam) - கங்குளம்	20.21
77.	(Karumpatturkulam) - கரும்பட்டூர்குளம்	45.02
78.	(Rajendrakulam) - ராஜேந்திரகுளம்	50.60
79.	(Mantharamputhoorkulam) - மந்தரம்புத்தூற்குளம்	57.16
80.	(Kadayanerikulam) - கடயநேரிக்குளம்	42.59
81.	(Agastriarputhukulam) - அகஸ்திரியார்புத்துக்குளம்	55.79
82.	(Achankulam) - அச்சன்குளம்	27.14
83.	(Kannimakurdukulam) - கன்னிமக்கூர்துக்குளம்	12.21
84.	(Devakulam) - தேவாகுளம்	93.43
85.	(Dakkarakulam) - தக்கரக்குளம்	48.72
86.	(Lekshimiputhukulam) - லெக்ஷ்மி புத்துக்குளம்	6.42
87.	(Mottakulam) - முட்டக்குளம்	24.42
88.	(Bagavatikulam) - பகவதிகுளம்	6.53
89.	(Kavarkulam) - காவர்குளம்	28.36
90.	(Manambakulam) - மணம்பக்குளம்	101.65
91.	(Pannikundukulam) - பன்னிக்குண்டுக்குளம்	13.84
92.	(Ramanpathoerkulam) - ராமன்பத்தியோர்குளம்	17.82
93.	(Vilaikannarkulam) - விளங்கண்ணூர்குளம்	32.21
94.	(Chinnakulam) - சின்னக்குளம்	3458.57
95.	(Karrakulam) - காரக்குளம்	21.47
96.	(Thuvaramkulam) - துவரங்குளம்	32.17

(1)	(2)	(3)
97.	(Machimarkulam) - மாச்சிமார்குளம்	9.64
98.	(Mavazhikulam) - மாவழிக்குளம்	5.97
99.	(Palladikulam) - பல்லடிக்குளம்	5.00
100.	(Valiyakulam) - வலியக்குளம்	163.73
101.	(Nedumkulam) - நெடுங்குளம்	8.18
102.	(Mambukulam) - மாம்புக்குளம்	18.51
103.	(Anumankulam) - அனுமான்குளம்	10.60
104.	(Nandankulam) - நந்தன்குளம்	5.00
105.	(Mullankulam) - முள்ளன்குளம்	5.00
106.	(Kollenkulam) - கொல்லன்குளம்	5.00
107.	(Palakulam) - பாலக்குளம்	6.10
108.	(Radathattikulam) - ரடத்தட்டிக்குளம்	25.39
109.	(Mecottukulam) - மேக்கோட்டுக்குளம்	9.18
110.	(Macherikulam) - மாச்சேரிக்குளம்	6.69
111.	(Oottukulam) - ஒட்டுக்குளம்	16.01
112.	(Ottankulam) - ஒட்டன்குளம்	16.89
113.	(Gnarakulam) - ஞாரக்குளம்	13.60
114.	(Sambakulam) - சாம்பக்குளம்	13.72
115.	(Attukulam) - ஆட்டுக்குளம்	11.53
116.	(Pyottankulam) - பேயோட்டான்குளம்	19.07
117.	(Kurandikulam) - குரந்திக்குளம்	58.05
118.	(Pirayarakulam) - பிரயாரக்குளம்	6.00
119.	(Thamarakulam) - தாமரக்குளம்	8.40
120.	(Rayankulam) - ராயன்குளம்	17.63
121.	(Murippilakonattukulam) - முறிப்பிலக் கோனாட்டுக்குளம்	28.59
122.	(Anathakulam) - அனாதக்குளம்	57.27
123.	(Immarakulam) - இம்மரான்குளம்	6.82
124.	(Vembanoorkulam) - வேம்பனூர்குளம்	166.72
125.	(Porungankulam) - பொருங்கன்குளம்	71.53
126.	(Atthanimarkulam) - அத்தானிமார்குளம்	125.33
127.	(Azhaganakulam) - அழகானக்குளம்	21.40
128.	(Alathoorkulam) - ஆலத்தூர்குளம்	29.24

(1)	(2)	(3)
129.	(Puliangulam) - புளியங்குளம்	19.82
130.	(Ramasamudramkulam) - இராமசமுத்திரம்குளம்	295.87
131.	(Udanparakulam) - உடன்பாரக்குளம்	48.95
132.	(Chettikulam) - செட்டிகுளம்	65.46
133.	(Myladumparakulam) - மைலாடும்பாறக்குளம்	139.33
134.	(Periakulam) - பெரியகுளம்	37.59
135.	(Kangulam) - காங்குளம்	31.63
136.	(Amaravathikulam) - அமராவதிக்குளம்	52.47
137.	(Nhavathivinayagankulam) - நாவதிவிநாயகன்குளம்	14.19
138.	(Narikulam) - நரிக்குளம்	169.95
139.	(Vachankulam) - வாச்சாங்குளம்	14.71
140.	(Nachiyarpathukulam) - நாச்சியார்பத்துகுளம்	20.46
141.	(Kumarisalapathukulam) - குமரிசாலப்பத்துக்குளம்	185.28
142.	(Kumaripathukulam) - குமரிப்பத்துக்குளம்	14.72.2
143.	(Thiyagasoundarikulam) - தியாகசௌந்தரிக்குளம்	28.20
144.	(Valasoundarikulam) - வாலசௌந்தரிக்குளம்	18.89
145.	(Nhagavathisamudrakulam) - நாகவதிசமுத்திரக்குளம்	16.05
146.	(Ottappanaikulam) - ஒத்தப்பணைக்குளம்	32.49
147.	(Piranthnrikulam) - பிராந்தநரிக்குளம்	127.75
148.	(Mudaliarkulam) - முதலியார்குளம்	61.08
149.	(Punnarkulam) - புன்னார்குளம்	63.51½
150.	(Pallakulam) - பள்ளக்குளம்	100.21
151.	(Pottakulam) - பொட்டக்குளம்	9.57
152.	(Chettikulam) - செட்டிக்குளம்	9.65
153.	(Valasoundrikulam) - வாலசௌந்தரிக்குளம்	159.68
154.	(Kallamparakulam) - கல்லம்பாறக்குளம்	13.79
155.	(Suchindrakulam) - சுசீந்திரக்குளம்	739.27.817
156.	(Therkulam) - தெற்குளம்	779.34
157.	(Manichapathurikulam) - மானிச்சப்பத்துரிக்குளம்	77.55
158.	(Alwalkulam) - ஆல்வாக்குளம்	21.15
159.	(Thandarayagamkulam) - தாண்டராயகம்குளம்	61.09
160.	(Pathiyakulam) - பதியக்குளம்	8.35

(1)	(2)	(3)
161.	(Pallikondamkulam) - பள்ளிகொண்டாம்குளம்	19.00
162.	(Kundandikulam) - குந்தாண்டிக்குளம்	18.08
163.	(Pangulam) - பங்குளம்	151.82
164.	(Kollenkulam) - கொல்லங்குளம்	30.88
165.	(Pandiyankulam) - பாண்டியன்குளம்	7.63
166.	(Maryyankulam) - மரியாங்குளம்	11.70
167.	(Kannanrherikulam) - கண்ணன்ரேரிக்குளம்	77.25
168.	(Avinnakulam) - ஆவின்னக்குளம்	125.50
169.	(Kottankulam) - கொட்டாங்குளம்	33.97
170.	(Perumangkulam) - பெருமாங்குளம்	24.51
171.	(Ramankulam) - ராமன்குளம்	43.56
172.	(Mahadevanpattukulam) - மகாதேவன்பட்டுக்குளம்	37.87
173.	(Oochankulam) - ஓச்சங்குளம்	31.01
174.	(Piramuttakulam) - பிரமுட்டக்குளம்	34.61
175.	(Kothanerikulam) - கொத்தனேரிக்குளம்	43.46
176.	(Kuttuvankulam) - குட்டுவாங்குளம்	19.31
177.	(Parakkakulam) - பரக்காக்குளம்	517.75
178.	(Puthukulam) - புதுக்குளம்	23.64
179.	(Kandukondankulam) - கண்டுகொண்டான்குளம்	2.50
180.	(Edapathakulam) - எடப்பத்தக்குளம்	45.00
181.	(Lekshimipattukulam) - லெக்ஷ்மிபட்டுக்குளம்	82.12
182.	(Ponnankulam) - பொன்னன்குளம்	31.28
183.	(Ayyanpattikulam) - அய்யன்பட்டிக்குளம்	34.62
184.	(Matharankulam) - மதரங்குளம்	52.93
185.	(Viramarthandanputhukulam) - வீரமார்த்தாண்டன்புதுக்குளம்	101.30
186.	(Krishnankulam) - கிருஷ்ணன்குளம்	18.95
187.	(Perumalkulam) - பெருமாள்குளம்	10.65
188.	(Nambikulam) - நம்பிக்குளம்	61.86
189.	(Melakannarkulam) - மேலகண்ணார்குளம்	124.25
190.	(Boothapandiyankulam) - பூதபாண்டியன்குளம்	172.29
191.	(Choorakulam) - சூரக்குளம்	141.83
192.	(Ponnagiramazhikulam) - பொன்னகிராமாழிகுளம்	

(1)	(2)	(3)
193.	(Odiyakulam) - ஒடியக்குளம்	100.37
194.	(Edayankulam) - எடையான்குளம்	150.25
195.	(Puzhukollikulam) - புழக்கொல்லிக்குளம்	201.10
196.	(Puzhukollikulam) - புழுக்கொல்லிக்குளம்	
197.	(Karunkulam) - கருங்குளம்	
198.	(Chaenthanaserikulam) - செந்தனசேரிக்குளம்	
199.	(Vumbatharkulam) - உம்பத்தர்குளம்	115.63
200.	(Maruthankuzhikulam) - மருதங்குழிக்குளம்	112.20
201.	(Thiruvenganerikulam) - திருவேங்கனேரிக்குளம்	91.66
202.	(Perianerikulam) - பெரியனேரிக்குளம்	169.51
203.	(Agasthiankulam) - அகஸ்தியன்குளம்	33.,25
204.	(Nangakulam) - நங்கக்குளம்	92.84
205.	(Pottaikulam) - பொட்டைக்குளம்	14.18
206.	(Meniakulam) - மேனியக்குளம்	61.91
207.	(Thazhakudikulam) - தாழக்குடிக்குளம்	46.82
208.	(Chenthiakulam) - சேந்தியாக்குளம்	19.01
209.	(Thirupathisaramkulam) - திருப்பதிசாரம்குளம்	376.37
210.	(Keerakulam) - கீரக்குளம்	26.62
211.	(Ennakulam) - என்னக்குளம்	15.43
212.	(Puliyoorkurichikulam) - புலியூர்குரிச்சிக்குளம்	150.00
213.	(Nachiyarpattukulam) - நாச்சியார்பட்டுக்குளம்	25.00
214.	(Nambikulam) - நம்பிக்குளம்	25.00
215.	(Deerakeralappanerikulam) தீரகேரளப்பனேரிக்குளம்	400.00
216.	(Madakulam) - மாடக்குளம்	50.00
217.	(Seethapalkulam) - சீதப்பால்குளம்	150.00
218.	(Poolankuzhikulam) - பூலாங்குழிக்குளம்	75.00
219.	(Azhaganerikulam) - அழகனேரிக்குளம்	30.00
220.	(Melakollarkuzhikulam) - மேலக்கொல்லார் குழிக்குளம்	10.00
221.	(Pallankulam) - பள்ளங்ககுளம்	50.00
222.	(Therkkalkulam) - தேர்க்கால்குளம்	18.28
223.	(Vannankuzhikulam) - வண்ணான்குழிக்குளம்	3.34

(1)	(2)	(3)
224.	(Manaththittaikulam) - மணத்திட்டைக்குளம்	48.38
225.	(Palkondankulam) - பால்கொண்டான்குளம்	9.66
226.	(Palkondankulam) - பால்கொண்டான்குளம்	
227.	(Pathukulam) - பத்துக்களம்	88.94
228.	(Velankattukulam) - வேலங்காட்டுக்குளம்	55.58
229.	(Vikramanarikulam) - விக்ரமனேரிக்குளம்	64.50
230.	(Karaikandarkudikulam) - காரைகண்டார்குடிக்குளம்	6.15
231.	(Kanchiyaikulam) - காஞ்சியைக்குளம்	24.72
232.	(Vadakkankulam) - வடக்கன்குளம்	7.78
233.	(Vadakkankulam) - வடக்கன்குளம்	
234.	(Vadakkankulam) - வடக்கன்குளம்	
235.	(Pandarakulam) - பண்டாரக்குளம்	7.43
236.	(Puliveeramkulam) - புலிவிரங்குளம்	19.71
237.	(Vaniyankuzhikulam) - வாணியன்குழிக்குளம்	1.59
238.	(Gnarakulam) - நாரக்குளம்	50.00
239.	(Deviarkulam) - தேவியார்குளம்	2.06
240.	(Vannarkulam) - வண்ணார்குளம்	6.10
241.	(Navitankulam) - நாவிதன்குளம்	0.54
242.	(Chenbankuzhikulam) - செண்பன்குழிக்குளம்	0.92
243.	(Mavadikulam) - மாவாடிக்குளம்	0.74
244.	(Meppanthirthkulam) - மேம்பந்தீர்த்தக்குளம்	1.47
245.	(Erampattikulam) - இராம்பபடிக்குளம்	1.44
246.	(Pillayaroothukulam) - பிள்ளையாருத்துக்குளம்	3.00
247.	(Veeraulikulam) - வீரஉளிக்குளம்	187.31
248.	(Periakulam) - பெரியகுளம்	104.70
249.	(Palikulam) - பாளிக்குளம்	8.51
250.	(Pottakulam) - பொட்டக்குளம்	25.02
251.	(Pottakulam) - பொட்டக்குளம்	
252.	(Vairavikonathukulam) - வைரவிகோனாத்துகுளம்	18.75
253.	(Kuttikulam) - குட்டிக்குளம்	7.28
254.	(Peakulam) - பீக்குளம்	27.88
255.	(Edakottukulam) - எடக்கோட்டுக்குளம்	25.00

(1)	(2)	(3)
256.	(Kalladichankuzhikulam) - கல்லடிச்சான்குழிக்குளம்	12.00
257.	(Pulivarikulam) - புலிவாரிக்குளம்	13.20
258.	(Theeroallakulam) - தீரோல்லாக்குளம்	79.38
259.	(Adayamadakulam) - அடயமாடக்குளம்	23.15
260.	(Eluppakadattykulam) - இலுப்பக்காடாட்டிகுளம்	12.49
261.	(Kattuvankonathukulam) - காட்டுவான்கோனத்துகுளம்	4.85
262.	(Bhutharathankulam) - பூதரத்தன்குளம்	2.89
263.	(Melachettikulam) - மேலசெட்டிக்குளம்	2.30
264.	(Menimudarkarkulam) - மேனிமுதற்கார்குளம்	26.40
265.	(Variar Konathukulam) - வாரியார் கொனத்துகுளம்	4.53
266.	(Nedupangankulam) - நெடுப்பங்காங்குளம்	8.00
267.	(Putherikulam) - புத்தேரிக்குளம்	26.08
268.	(Thattanpallakulam) - தட்டான்பள்ளக்குளம்	100.38
269.	(Elanganerikulam) - எலங்கனேரிக்குளம்	16.94
270.	(Ilunichanparaikulam) - இலுச்சன் பாறைக்குளம்	9.70
271.	(Nainarkulam) - நயினார்குளம்	9.91
272.	(Vazhimarichankulam) - வழிமறிச்சான்குளம்	10.11
273.	(Vannankulam) - வண்ணான்குளம்	3.93
274.	(Mulachikulam) - மூலச்சிக்குளம்	9.25
275.	(Puyangankulam) - புயங்கங்குளம்	3.42
276.	(Palamudarkulam) - பாலமுதார்குளம்	5.70
277.	(Misanganerikulam) - மிசங்கனேரிக்குளம்	6.75
278.	(Ariyavalamkodettikulam)-அரியவாலம்கோடெட்டிக்குளம்	12.27
279.	(Erankottaikulam) - இரங்கோட்டைக்குளம்	4.11
280.	(Erankollikulam) - இரங்கொல்லிக்குளம்	15.25
281.	(Mullikulam) - முள்ளிக்குளம்	27.53
282.	(Alanganarkulam) - அலங்கனார்குளம்	10.5
283.	(Ariyankadettikulam) - அரியாங்காடெட்டிக் குளம்	31.70
284.	(Chankanerikulam) - சங்கனேரிக்குளம்	10.70
285.	(Thavalikulam) - தாவாலிக்குளம்	5.34
286.	(Vaniankulam) - வாணியன்குளம்	13.27
287.	(Pallamarthandankulam) - பள்ளமார்த்தாண்டன்குளம்	10.50

(1)	(2)	(3)
288.	(Azhayanerikulam) - அழயனேரிக்குளம்	5.00
289.	(Eliankonattukulam) - எலியன்கோனாட்டுக்குளம்	4.93
290.	(Vishupurattukulam) - விஷ்புராட்டுக்குளம்	114.37
291.	(Madapurattukulam) - மடப்புரட்டுக்குளம்	19.76
292.	(Devatherikulam) - தேவதேரிக்குளம்	16.18
293.	(Vadankulam) - வாடன்குளம்	5.33
294.	(Pechankulam) - பேச்சுங்குளம்	36.74
295.	(Nagarakulam) - நகரக்குளம்	37.80
296.	(Chemmankulam) - செம்மண்குளம்	19.57
297.	(Vembadikulam) - வேம்படிக்குளம்	4.69
298.	(Therkumettukulam) - தெற்குமேட்டுக்குளம்	17.93
	KALLKULAM TALUK - கல்குளம் வட்டம்	
298(a).	(Panankuzhikulam) - பனங்குழிக்குளம்	9.80
299.	(Mancottukulam) - மாங்கோட்டுக்குளம்	9.35
300.	(Mathakulam) - மாதாக்குளம்	11.88
301.	(Kusavankulam) - குசவங்குளம்	6.10
302.	(Panavilagathukulam) - பானவிலகத்துக்குளம்	5.73
303.	(Kalvikulam) - கல்விக்குளம்	14.32
304.	(Koozhivahalayyakulam) - கூழிவாஹாலய்யக்குளம்	24.19
305.	(Kunkuzha Akkiyadikulam) - குங்குழ அக்கியாடிக்குளம்	24.17
306.	(Kaithakulam) - கைத்தாக்குளம்	8.15
307.	(Attukulam) - ஆட்டுக்குளம்	7.70
308.	(Kanankulam) - கானங்குளம்	8.84
309.	(Puthukulam) - புதுக்குளம்	35.15
310.	(Kannankulam) - கன்னங்குளம்	7.96
311.	(Peyottuvakulam) - பேயோட்டுவாக்குளம்	16.75
312.	(Needuvalakulam) - நீடுவாலக்குளம்	10.94
313.	(Palchakulam) - பால்ச்சாக்குளம்	9.65
314.	(Punnachakulam) - புன்னச்சாக்குளம்	15.99
315.	(Akkattukulam) - அக்காட்டுக்குளம்	16.42
316.	(Mulikulam) - மூளிக்குளம்	5.64

(1)	(2)	(3)
317.	(Pulakudiykulam) - புலக்குடிக்குளம்	26.25
318.	(Ukulam) - உக்குளம்	28.40
319.	(Kokkudikulam) - கோக்குடிக்குளம்	12.68
320.	(Palottarakulam) - பாலோட்டாரக்குளம்	8.90
321.	(Keezhameruthoorperumkulam) - கீழமருதூர் பெருமாள்குளம்	30.60
322.	(Melamaruthooraperumkulam) - மேலமருதூர் பெருமாள்குளம்	38.58
323.	(Maruvoorkulam) - மருவூர்குளம்	13.34
324.	(Kavkulam) - காவக்குளம்	5.38
325.	(Perumkottukulam) - பெரும்கோட்டுக்குளம்	18.21
326.	(Mallikottukulam) - மல்லிகோட்டுக்குளம்	7.56
327.	(Urakulam) - உரக்களம்	12.60
328.	(Udappukulam) - உடப்புக்குளம்	27.60
329.	(Thalayachakulam) - தலையச்சாகுளம்	14.93
330.	(Puthukulam) - புதுக்குளம்	8.75
331.	(Manchadikulam) - மாஞ்சாடிக்குளம்	10.01
332.	(Gnarakuzhikulam) - ஞாரக்குழிக்குளம்	6.10
333.	(Perumkulam) - பெருங்குளம்	43.20
334.	(Kaithakulam) - கெய்த்தாகுளம்	15.35
335.	(Keezharkottukulam) - கீழார்கோட்டுக்குளம்	6.95
336.	(Karunanikottukulam - கருண்ணிக்கோட்டுக்குளம்	6.58
337.	(Manankulam) - மானான்குளம்	8.57
338.	(Keralapuram Peruneerkulam) - கேரளாபுரம் பெருநீர்குளம்	42.16
339.	(Vettikonathukattukulam) - வெட்டிக் கோணத்துக்காட்டுக்குளம்	5.31
340.	(Melakattukulam) - மேலகாட்டுக்குளம்	12.21
341.	(Thachankulam) - தச்சங்குளம்	32.57
342.	(Bhoothakulam) - பூதக்குளம்	15.73
343.	(Nullikulam) - நுள்ளிக்குளம்	13.59
344.	(Veepankulam) - விபங்குளம்	20.14

(1)	(2)	(3)
345.	(Illupparayarkulam) - இலுப்பராயர்குளம்	9.69
346.	(Thevarakulam) - தேவாரக்குளம்	5.15
347.	(Pottakulam) - பொட்டக்குளம்	42.20
348.	(Machakulam) - மச்சக்குளம்	7.18
349.	(Nirnayakulam) - நீர்நயக்குளம்	47.94
350.	(Palakulam) - பாலக்குளம்	48.82
351.	(Kanakulam Chettikulam) - காணக்குளம் செட்டிகுளம்	11.15
352.	(Kalavatukulam) - களவாட்டுக்குளம்	12.93
353.	(Charottukulam) - சாரோட்டுக்குளம்	46.33
354.	(Nedumkulam) - நெடுங்குளம்	32.88
355.	(Perukulam) - பெருகுளம்	10.00
356.	(Kurinjikulam) - குறிஞ்சிக்குளம்	7.00
357.	(Arunoothukulam) - அருணூத்துக்குளம்	5.13
358.	(Somacherikulam) - சோமச்சேரிக்குளம்	5.13
359.	(Pookuzhikulam) - பூக்குழிக்குளம்	45.80
360.	(Madathuvattukulam) - மடத்து வாட்டுக்குளம்	
361.	(Sasthankoilkulam) - சாஸ்தான் கோயில்குளம்	5.65
362.	(Puliykatnathukulam) - புளிகாட்நாத்துக்குளம்	5.32
363.	(Gnarakuzhikulam) - ஞாராகுழிக்குளம்	6.98
364.	(Urakulam) - ஊரக்குளம்	5.20
365.	(Annikyakulam) - அன்னிக்கியக்குளம்	19.19
366.	Mankulam - மாங்குளம்	37.26
367.	(Panavilaikulam) - பனவிளைக்குளம்	13.02
368.	(Chemdarikulam) - செம்தாரிக்குளம்	8.89
369.	(Annuvetrikulam) - அண்ணுவெட்டிக்குளம்	8.89
370.	(Cottukulam) - கோட்டுக்குளம்	12.46
371.	(Peruneeliyarakulam) - பெருகநீயார்க்குளம்	5.70
372.	(Nagakulam) - நாகாக்குளம்	10.13
373.	(Sathankulam) - சாத்தான்குளம்	32.73
374.	(Keriyamangalathikulam) - கேரியமங்கலாத்திக்குளம்	23.12
375.	(Kattukulam) - காட்டுக்குளம்	12.12

(1)	(2)	(3)
376.	(Sasthankoilkulam) - சாஸ்தான்கோயில்குளம்	15.85
377.	(Koothankuzhikulam) - கூத்தன் குழிக்குளம்	10.70
378.	(Kurungakulam) - குருங்கக்குளம்	16.25
379.	(Isaloorkulam) - ஏசலூர்க்குளம்	106.79
380.	(Parayankulam) - பரையன்குளம்	10.74
381.	(Velakulam) - வேலாக்குளம்	9.76
382.	(Karundikulam) - கருந்திக்குளம்	20.88
383.	(Nedunkulam) - நெடுங்குளம்	7.60
384.	(Utharankulam) - உத்தரங்குளம்	3.99
385.	(Periyakulam) - பெரியகுளம்	172.90
386.	(Kakathankuzhukulam) - காக்கத்தான்குழுக்குளம்	9.91
387.	(Nadachikulam) - நாடாச்சிகுளம்	5.84
388.	(Vembadykulam) - வேம்படிக்குளம்	9.10
389.	(Kannamparakulam) - கண்ணம்பராக்குளம்	19.11
390.	(Kozhuvanparakulam) - கழுவன்பாரக்குளம்	11.30
391.	(Punniyakulam) - புண்ணியக்குளம்	21.93
392.	(Alankuzhikulam) - ஆலங்குழிக்குளம்	5.36
393.	(Uralinkulam) - ஊராளிங்குளம்	13.25
394.	(Thangankuzhikulam) - தேங்காங்குழிக்குளம்	5.90
395.	(Valliambalkuzhikulam) - வள்ளியம்பாள்குழிக்குளம்	5.50
396.	(Sadayankuzhikulam) - சடையன்குழிக்குளம்	10.17
397.	(Satharathankulam) - சத்தரத்தான்குளம்	15.61
398.	(Ammakulam) - அம்மாக்குளம்	5.80
399.	(Perumkulam) - பெருங்குளம்	120.67
400.	(Pookkulam) - பூக்குளம்	40.60
401.	(Manchirakulam) - மாஞ்சிராக்குளம்	41.60
402.	(Kurukuttikulam) - குருக்குட்டிக்குளம்	25.20
403.	(Ananthavashikulam) - ஆனந்தவாஷிக்குளம்	12.16
404.	(Kaithottukulam) - கைத்தோட்டுக்குளம்	60.19
405.	(Nedunkulam) - நெடுங்குளம்	32.42
406.	(Arasankulam) - அரசங்குளம்	12.60
407.	(Mekkarakulam) - மேக்காரக்குளம்	5.70

(1)	(2)	(3)
408.	(Manalikulam) - மணலிக்குளம்	31.90
409.	(Neelakulam) - நீலாக்குளம்	22.10
410.	(Anniyakulam) - அன்னியகுளம்	49.20
411.	(Padappankulam) - படப்பன்குளம்	17.60
412.	(Anamkulam) - ஆனம்குளம்	41.12
413.	(Pathirikulam) - பத்திரிக்குளம்	21.60
414.	(Poochakulam) - பூச்சாக்குளம்	15.60
415.	(Mathirakulam) - மதிரக்குளம்	13.28
416.	(Chembanarakulam) - செம்பநாரக்குளம்	7.93
417.	(Thamarakulam) - தாமரக்குளம்	10.33
418.	(Arasakulam) - அரசக்குளம்	126.26
419.	(Uttukulam) - ஊட்டுக்குளம்	16.99
420.	(Perumkalkulam) - பெருங்கால்குளம்	27.75
421.	(Kannavarakulam) - கண்ணவாரக்குளம்	12.96
422.	(Manchakavikulam) - மஞ்சகவிக்குளம்	5.98
423.	(Parikulam) - பாரிக்குளம்	11.97
424.	(Vellavarakulam) - வெள்ளவாரக்குளம்	13.78
425.	(Chadayankuzhikulam) - சடையன் குழிக்குளம்	10.51
426.	(Ezhiyoorkulam) - எழியூர் குளம்	41.16
427.	(Cherkottukulam) - சேர்கோட்டுக்குளம்	28.73
428.	(Meelapupradukulam) - மீலப்புபிராதுக்குளம்	12.12
429.	(Keezhapeyodukulam) - கீழப்பேயோடுகுளம்	7.93
430.	(Idayakottukulam) - இடையக்கோட்டுக்குளம்	10.20
431.	(Iylikottukulam) - ஐலிகோட்டுக்குளம்	8.44
432.	(Melandankulam) - மேலாண்டான்குளம்	12.10
433.	(Koduvayakonathukulam) - கொடுவய் கோணத்துக்குளம்	7.60
434.	(Thavittukulam) - தவிட்டுக்குளம்	6.76
435.	(Puliyarakonathukulam) - புலியரகோணத்துக்குளம்	5.61
436.	(Chettyandarkulam) - செட்டியாண்டார்குளம்	15.41
437.	(Cheruchettyandarkulam) - சேருசெட்டியாண்டார்குளம்	13.90
438.	(Sundarakuzhikulam) - சுந்தரகுழிக்குளம்	14.67

(1)	(2)	(3)
439.	(Pullakulam) - பள்ளக்குளம்	8.31
440.	(Thudippankulam) - துடிப்பான்குளம்	12.41
441.	(Ekkadakuzhikulam) - எக்காடக்குழிக்குளம்	9.47
442.	(Avanthakulam) - அவந்தக்குளம்	8.40
443.	(Nayinkulam) - நாயிகுளம்	10.41
444.	(Pappankulam) - பாப்பான்குளம்	10.95
445.	(Sundaranainarkulam) - சுந்தரநயினார்குளம்	7.79
446.	(Thamarakulam) - தாமரக்குளம்	8.99
447.	(Kollakulam) - கொல்லக்குளம்	31.63
448.	(Kattukulam) - காட்டுக்குளம்	14.67
449.	(Madyaiduvakulam) - மத்யைதுவக்குளம்	13.88
450.	(Naikulam) - நாய்க்குளம்	9.66
451.	(Punkarichellamkulam) - புங்காரிச்செல்லங்குளம்	45.20
452.	(Paraserikulam) - பரசேரிக்குளம்	55.98
453.	(Ambalathadykulam) - அம்பலத்தாடிக்குளம்	15.50
454.	(Kuthirapanchankulam) - குதிரைபாஞ்சான்குளம்	43.33
455.	(Andarkulam Pillaikulam) - ஆண்டார்குளம், பிள்ளைக்குளம்	24.97
456.	(Devilankuzhikulam) - தேவிலங்குழிக்குளம்	11.70
457.	(Mohanarakuzhikulam) - மோஹனராகுழிக்குளம்	5.50
458.	(Karuppottukulam) - கறுப்போட்டுக்குளம்	22.25
459.	(Nettankuzhikulam) - நெட்டங்குழிகுளம்	16.11
460.	(Nagakulam) - நாகக்குளம்	35.13
461.	(Sundarakulam) - சுந்தரக்குளம்	5.25
462.	(Siloorkulam) - சிலூர்குளம்	55.6
463.	(Peruvilaikulam) - பெருவிளைக்குளம்	38.54
464.	(Chemanchikulam) - சேமஞ்சிக்குளம்	23.75
465.	(Pottakulam) - பொட்டக்குளம்	11.77
466.	(Chettayarkulam) - சேட்டயார்க்குளம்	10.82
467.	(Chenkulam) - செங்குளம்	20.94
468.	(Arappurakulam) - அரப்பூரக்குளம்	19.57
469.	(Uttankuzhikulam) - உத்தங்குழிக்குளம்	5.03

(1)	(2)	(3)
470.	(Piranthacherikulam) - பிறந்தசேரிக்குளம்	75.44
471.	(Ikiyankulam) - ஐக்கியன்குளம்	316.59
472.	(Perakulam) - பேரக்குளம்	60.85
473.	(Veerakulam) - வீரக்குளம்	111.49
474.	(Iyyankulammukkattukulam) - ஐயன்குளம்முக்காட்டுக்குளம்	12.17
475.	(Kollankulam) - கொல்லங்குளம்	6.43
476.	(Chenthancherikulam) - சேந்தாஞ்சேரிக்குளம்	9.40
477.	(Kothayarkonathukulam) - கோதையார்கொணத்துக்குளம்	11.20
478	(Kuzavankonathukulam) - குழவன்கொணத்துகுளம்	12.27
479.	(Kallvettankuzhikulam) - கால்வெட்டான்குழிக்குளம்	5.66
480.	(Keezhamavadikulam) - கீழ்மாவடிக்குளம்	5.66
481.	(Palkulam) - பால்குளம்	6.59
482.	(Annuvettikulam) - அண்ணுவெட்டிக்குளம்	11.00
483.	(Vannankulam) - வண்ணாங்குளம்	7.83
484.	(Kadamankottukulam) - கடமங்கோட்டுக்குளம்	8.63
485.	(Keezhavannankulam) - கீழவண்ணாங்குளம்	11.72
486.	(Keezhavannankulam) - கீழ்வண்ணாங்குளம்	
487.	(Kollakulam) - கொல்லக்குளம்	14.80
488.	(Mankkaraiputhukulam) - மாங்கரைப்புதுக்குளம்	28.39
489.	(Mankaraichenthamarikulam) - மாங்கரைசெந்தாமரைக்குளம்	7.22
490.	(Kodancherkulam) - கொடஞ்சேர்குளம்	8.43
491.	(Nanganarkulam) - நாங்கனார்குளம்	12.05
492.	(Pulankulam) - பூலான்குளம்	7.06
493.	(Munnottukulam) - முன்னோட்டுக்குளம்	14.76
494.	(Thamarakulam) - தாமரக்குளம்	24.40
495.	(Pambadikulam) - பாம்படிக்குளம்	14.03
496.	(Vedunkulam) - வேடுங்குளம்	11.47
497.	(Idakottukulam) - இடக்கோடுக்குளம்	11.98

(1)	(2)	(3)
498.	(Vilankakulam) - விளங்காக்குளம்	23.26
499.	(Valiakulam Puthukulam) - வாலியக்குளம் புதுக்குளம்	58.80
500.	(Pullancherikulam) - புல்லாஞ்சேரிக்குளம்	7.02
501.	(Ayyappanarkulam) - அய்யப்பனார்குளம்	17.97
502.	(Poonkottuvamakulam) - பூங்கோட்டுவாம்க்குளம்	13.02
503.	(Perunchakulam) - பெருஞ்சக்குளம்	10.17
504.	(Arasankottukulam) - அரசங்கோட்டுக்குளம்	8.00
505.	(Erattakulam) - எரட்டக்குளம்	7.67
506.	(Chettykulam) - செட்டிகுளம்	5.64
507.	(Nedunkulam) - நெடுங்குளம்	11.17
508.	(Urayikonathuthmarakulam) - ஊராயிகொணத்துத்தாமரக்குளம்	5.59
509.	(Nedumkulam) - நெடுங்குளம்	10.89
510.	(Alankottukattuvaikulam) - ஆலங்கோடுக்காட்டுவாய்க்குளம்	8.61
511.	(Kattaukulam) - காட்டுக்குளம்	5.62
512.	(Veeyankulam) - வியங்குளம்	6.42
513.	(Thazhayankulam) - தாழயாங்குளம்	8.63
514.	(Mavadikulam) - மாவடிக்குளம்	5.25
515.	(Melakulam) - மேலக்குளம்	7.19
516.	(Alankulam) - ஆலங்குளம்	7.78
517.	(Pandarakonathuputhukulam) - பண்டாரக்கொணத்துப்புதுக்குளம்	11.09
518.	(Pandarakonathupandarakulam) - பண்டாரக்கொணத்துப்பண்டாரக்குளம்	5.66
519.	(Kumarankaniyarkulam) - குமரன்காணியற்குளம்	5.95
520.	(Eswarankulam) - ஈஸ்வரன்குளம்	6.17
521.	(Thazhayankulam) - தாழயாங்குளம்	8.03
522.	(Kovilkulamthamarakulam) - கோவில்குளந்தாமாரக்குளம்	6.36
523.	(Vaniyankulam) - வாணியங்குளம்	6.69

(1)	(2)	(3)
524.	(Malamankottuayanarkulam) - மாலமன்கோடுஐயனார்குளம்	5.95
525.	(Gnarattuelanjiakulam) - நாதாட்டு எலந்சியக் குளம்	7.75
526.	(Karottukulam) - கொரட்டுக்குளம்	5.89
527.	(Karottunaduvattukulam)-காரோட்டு நடுவட்டுக்குளம்	7.10
528.	(Melavilanagakulam) - மேலவிலநாகக்குளம்	6.12
529.	(Kadettykulam) - காடேட்டிகுளம்	8.90
530.	(Kurunthenkottukulam) - குருந்தக்கோட்டுக்குளம்	7.32
531.	(Gnarottukaniyankulam) - நரோட்டுக்காணியாங்குளம்	8.64
532.	(Serenserykulam) - சேரன்சேரிக்குளம்	6.05
533.	(Vachakulam) - வாச்சாகுளம்	6.47
534.	(Odaparachakarakulam) - ஒடப்பரசாகாரக்குளம்	7.66
535.	(Kuthirakottukulam) - குதிரக்கோட்டுக்குளம்	7.56
536.	(Navithankottukulam) - நாவிதன்கோட்டுக்குளம்	7.11
537.	(Kannandankonamponthukulam) - கண்ணந்தன்கோனாம்பொந்துக்குளம்	6.67
538.	(Themmadikonamkulam) - தெம்மடிக்கோனங்குளம்	5.02
539.	(Karakuzhikulam) - காரக்குழிக்குளம்	8.76
540.	(Kodamankottukulam) - கோடமாங்கோட்டுகுளம்	6.63
541.	(Kutharakulam) - குத்தாரக்குளம்	7.11
542.	(Nagakonthuggakulam) - நாககோந்துக்குளம்	5.50
543.	(Thadakkakulam) - தாடக்கக்குளம்	9.61
544.	(Esvankulam) - எஸ்வங்குளம்	7.98
545.	(Thachankulam) - தச்சங்குளம்	9.38
546.	(Mutharunnikulam) - முத்தாருண்ணிக்குளம்	9.59
547.	(Nathankuzhikulam) - நாதன்குழிக்குளம்	8.03
548.	(Paruthikuzhikulam) - பருதிக்குழிக்குளம்	5.31
549.	(Keezhamankuzhikulam) - கீழமாங்குழிக்குளம்	6.72
550.	(Meelamankulam) - மேலமாங்குழிக்குளம்	6.72
551.	(Pottakuzhikulam) - பொட்டக்குழிக்குளம்	6.72
552.	(Pappankottukulam) - பாப்பாங்கோட்டுக்குளம்	5.77
553.	(Kumppakottukulam) - கும்பக்கோட்டுக்குளம்	

(1)	(2)	(3)
554.	(Thirukuzhikulam) - திருக்குழிக்குளம்	7.72
555.	(Kompakotukulam) - கொம்பாகோட்டுக்குளம்	7.96
556.	(Maramparampukulam) - மாரம்பரம்புக்குளம்	6.90
557.	(Kanjirankottukulam) - காஞ்சிராங்கோட்டுக்குளம்	5.40
558.	(Perumakulam) - பெருமக்குளம்	5.42
559.	(Kundukulam) - குண்டுக்குளம்	6.95
560.	(Neerazhikulam) - நீரழிக்குளம்	8.17
561.	(Kundukulam) - குண்டுக்குளம்	50.75
562.	(Kundukulam) - குண்டுக்குளம்	6.25
563.	(Kundukulam) - குண்டுக்குளம்	13.22
564.	(Kundukulam) - குண்டுக்குளம்	5.87
565.	(Kundukulam) - குண்டுக்குளம்	23.47
566.	(Kundukulam) - குண்டுக்குளம்	14.82
567.	(Kundukulam) - குண்டுக்குளம்	7.95
568.	(Kundukulam) - குண்டுக்குளம்	5.07
569.	(Kundukulam) - குண்டுக்குளம்	11.50
570.	(Kundukulam) - குண்டுக்குளம்	32.00
571.	(Kundukulam) - குண்டுக்குளம்	9.25
572.	(Kannamangalamkulam) - கன்னமங்கலங்குளம்	10.61
573.	(Vellaiyasanthikulam) - வெள்ளையாசாந்திக்குளம்	7.43
574.	(Pakkulam) - பாக்குளம்	5.35
575.	(Neerazhikulam) - நீரழிக்குளம்	12.13
576	(Neerazhikulam) - நீரழிக்குளம்	6.91
577.	(Neerazhikulam) - நீரழிக்குளம்	13.25
578.	(Parayankulam) - பறையன்குளம்	9.94
579.	(Annupattikulam) - அன்னுப்பட்டிக்குளம்	25.56
580.	(Kundukulam) - குண்டுக்குளம்	23.73
581.	(Mukunthankulam) - முகுந்தன்குளம்	13.86
582.	(Perumkulam) - பெருங்குளம்	7.76
583.	(Vannaparambukulam) - வண்ணப்பரம்புக்குளம்	39.35
584.	(Kalpatyakulam) - கல்பட்டியாக்குளம்	96.28
585.	(Periyakulam) - பெரியகுளம்	521.15

(1)	(2)	(3)
586.	(Akathakuzhikulam) - ஆக்தக்குழிக்குளம்	5.93
587.	(Pilakodukulam) - பிலாகோடுக்குளம்	6.34
588.	(Velarakulam)- வேலரக்குளம்	7.46
589.	(Puthuvettikulam / Murngapattukulam) - புதுவெட்டிக்குளம் / முருங்கப்பட்டுக்குளம்	5.38
590.	(Pathirlottukulam) - பதிர்லோட்டுக்குளம்	13.86
591.	(Kannattukulam) - கண்ணாட்டுக்குளம்	9.02
592.	(Kokkotukulam) - கோக்கோட்டுக்குளம்	11.88
593.	(Uthiradakulam) - உத்திராடக்குளம்	6.40
594.	(Mekkottukulam) - மேக்கோட்டுக்குளம்	32.59
595.	(Kottaramkulam) - கோட்டாரம்குளம்	18.59
596.	(Nediyankottukulam) - நெடியன்,கோட்டுக்குளம்	7.35
597.	(Nachikulam) - நாச்சிக்குளம்	24.01
598.	(Illampalakulam) - இலம்பலக்குளம்	8.66
599.	(Vazhottukulam) - வாழோட்டுக்குளம்	22.07
600.	(Peunkulam) - பீங்குளம்	73.07
601.	(Olakottuparambukulam)-ஓலக்கோட்டுப்பரம்புக்குளம்	5.43
602.	(Narakottukulam) - நாரக்கோட்டுக்குளம்	5.66
603.	(Puthukuzhkulam) - புதுக்கூழ்குளம்	5.31
604.	(Nelpattkulam) - நெல்பட்டக்குளம்	5.11
605.	(Manalacharikulam) - மணலசாரிக்குளம்	6.12
606.	(Kulapattukulam) - குலப்பாட்டுக்குளம்	20.70
607.	(Villaiyakulam) - வில்லையக்குளம்	77.33
608.	(Karyakulam)- கார்யக்குளம்	65.45
609.	(Erattakulam) - இரட்டக்குளம்	6.48
610.	(Vattarkulam) - வட்டார்குளம்	7.01
611.	(Magarankulam) - மகரங்குளம்	11.25
612.	(Vedankangherykulam) - வேடங்காக்கேரிக்குளம்	11.25
613.	(Alanjikulam) - அலஞ்சிக்குளம்	19.37
614.	(Kollayikulam) - கொல்லாய்க்குளம்	27.98
615.	(Puthukulam) - புதுக்குளம்	60.20
616.	(Veerakeralkulam) - வீரகேராளகுளம்	11.00

(1)	(2)	(3)
617.	(Amaravathikulam) - அமராவதிக்குளம்	67.71
618.	(Thottipalamkulam) - தோட்டிப்பாலங்குளம்	8.60
619.	(Thamarakulam) - தாமரக்குளம்	8.88
620.	(Thamarakulam) - தாமரக்குளம்	22.97
621.	(Thudicikulam) - துடிசிக்குளம்	3.38
622.	(Palakulam) - பாலக்குளம்	11.77
623.	(Vidarikulam) - விடாரிக்குளம்	7.09
624.	(Valiyakulam) - வலியக்குளம்	11.11
625.	(Velankulam) - வேலங்குளம்	8.65
626.	(Thengankuzhikulam) - தேங்காங்குழிக்குளம்	7.00
627.	(Pthiramangalamputukulam) - பிதிராமங்கலம் புதுக்குளம்	8.21
628.	(Kattukulam) - காட்டுக்குளம்	7.12
629.	(kalkulam) - கல்குளம்	35.18
630.	(Kappiyaraputhukulam) - காப்பியாரபுதுக்குளம்	15.12
631.	(Kappiyarkulam) - காப்பியார்குளம்	68.46
632.	(Nedunkulam) - நெடுங்குளம்	6.29
633.	(Pulimughuten Kunjakulam) - புளிமுகுலிங் குஞ்சாக்குளம்	49.57
634.	(Vembakottukulam) - வேம்பாக்கோட்டுக்குளம்	10.82
635.	(Edakkulam) - எடக்குளம்	14.48
636.	(Kattiyodukulam) - கட்டியோடுக்குளம்	10.41
637.	(Pilakudikulam) - பிலாக்குடிக்குளம்	25.36
638.	(Poonakulam) - பூனாகுளம்	17.25
639.	(Arasanerikulam) - அரசனேரிக்குளம்	5.00
640.	(Parakudykonathukulam) - பரக்குடிகோனாத்துக்குளம்	5.00
641.	(Poatnikulam) - பொயத்னிக்குளம்	10.00
642.	(Perumakulam) - பெருமாக்குளம்	100.00
643.	(Kannamangalathukulam) - கண்ணமாங்கலத்துக்குளம்	50.00
644.	(Mullavelikulam) - முல்லவேலிக்குளம்	7.00
645.	(Kattukulam) - காட்டுக்குளம்	22.42
646.	(Arasankulam) - அரசங்குளம்	8.33
647.	(Marakavookulam) - மாரக்கவூக்குளம்	5.48
648.	(Mylakulam) - மைலாகுளம்	14.81

(1)	(2)	(3)
649.	(Chemantharkulam) - சேமந்தார்குளம்	5.61
650.	(Alankulam) - ஆலங்குளம்	37.57
651.	(Manalikulam) - மணலிக்குளம்	10.27
652.	(Kurakottukulam) - குறக்கோட்டுக்குளம்	11.77
653.	(Anthiyakulam) - அந்தியக்குளம்	29.2
654.	(Pandarakulam) - பண்டாரக்குளம்	57.34
655.	(Parakkmangalathukulam) - பாரக்கமங்கலத்துக்குளம்	25.82
656.	(Kaithakottukulam) - கைத்தக்கோட்டுக்குளம்	53.10
657.	(Peyottankulam)- பேயோட்டான்குளம்	5.33
658.	(Puthukulam)- புதுக்குளம்	14.00
659.	(Azhiyankulam) - அழியான்குளம்	18.43
660.	(Tlhiruvikramaserikulam)- திருவிக்ரம்சேரிக்குளம்	10.76
661.	(Kafukuzhikulam) - காஃபுக்குழிக்குளம்	8.76
662.	(Thattarakulam) - தட்டாரக்குளம்	9.61
663.	(Kannottukulam) - கண்ணோட்டுக்குளம்	10.32
664.	(Chettuuvankottapillaikulam) - செட்டுவன்கோட்டுப்பிள்ளைக்குளம்	31.62
665.	(Kallupattakulam) - கல்லுப்பட்டக்குளம்	2.30
666.	(Kattukulam) - காட்டுக்குளம்	2.92
667.	(Pechikulam) - பேச்சிக்குளம்	3.68
668.	(Puachalkulam) - பாச்சல்குளம்	3.72
669.	(Alamottukulam) - ஆலமோட்டுக்குளம்	2.90
670.	(Suvarakottukulam) - சுவாரக்கோட்டுக்குளம்	3.60
671.	(Machukulam) - மச்சுக்குளம்	4.60
672.	(Idakulam) - இடக்குளம்	0.20
673.	(Velayankulam) - வேலையன்குளம்	3.28
674.	(Kattivarottukulam) - கட்டிவரோட்டுக்குளம்	1.88
675.	(Thettankulam) - தெட்டான்குளம்	2.2
676.	(Kattupakathukulam) - காட்டுப்பக்கத்துக்குளம்	1.10
677.	(Marankulam) - மாரங்குளம்	3.53
678.	(Kallankozhikulam) - கல்லங்கோழிக்குளம்	1.48
679.	(Idayankulam) - இடையங்குளம்	4.36

(1)	(2)	(3)
680.	(Kanukarakulam) - கணுக்காரக்குளம்	1.57
681.	(Kaiyalakonakulam) - கையாலாக்கொணத்துக்குளம்	0.53
682.	(Kollankunathukulam) - கொல்லங்குணத்துக்குளம்	2.16
683.	(Majadikulam) - மாஜடிக்குளம்	4.8
684.	(Vayakottukulam) - வயக்கோட்டுக்குளம்	3.55
685.	(Karikudikulam) - கரிகுடிக்குளம்	4.81
686.	(Anajhuvattikulam) - அனஜுவட்டிக்குளம்	3.88
687.	(Sooratharikulam) - சூரத்தாரிக்குளம்	2.61
688.	(Thulukankulam) - துலக்கன்குளம்	3.65
689.	(Kattukulam) - காட்டுக்குளம்	4.70
690.	(Kalavarkulam)- கலவார்குளம்	4.80
691.	(Chammankulam) - செம்மங்குளம்	0.02
692.	(Somacharikulam) - சோமசாரிக்குளம்	1.00
693.	(Vagalkulam)- வாகல்குளம்	3.10
694.	(Nanankulam) - நானங்குளம்	0.68
695.	(Somacharikulam) - சோமசாரிக்குளம்	0.50
696.	(Pirathankuzhikulam) - பிரதாங்குழிக்குளம்	14.20
697.	(Chenianeerkulam) - சாணியநீர்க்குளம்	0.01
698.	(Chenlikulam) - சென்லிக்குளம்	0.20
699.	(Erumbanakulam) - இரும்பனாக்குளம்	2.50
700.	(Panyankulam) - பனயங்குளம்	3.28
701.	(Vattiaramankonathukulam) - வட்டியராமங்கொணத்துக்குளம்	0.06
702.	(Thattankulam) - தட்டாங்குளம்	4.22
703.	(Alamparakulam) - ஆலம்பரக்குளம்	3.64
704.	(Puliyankulam) - புளியங்குளம்	4.50
705.	(Kannikannimarkuzhikulam) - கன்னிக்கன்னிமார்குழிக்குளம்	1.00
706.	(Vedakulam) - வேடக்குளம்	3.92
707.	(Olluppukonathukulam)-ஒல்லுப்புக்கொணத்துக்குளம்	2.59
708.	(Thevijakulam) - தேவிஜாக்குளம்	4.77
709.	(Pandarakulam) - பண்டாரக்குளம்	0.01

(1)	(2)	(3)
710.	(Nedumkulam) - நெடுங்குளம்	3.83
711.	(Korakuzhikulam) - கோரக்குழிக்குளம்	3.83
712.	(Perumankonathukulam)- பெருமாங்கொணத்துக்குளம்	4.10
713.	(Pathirikulam) - பாதிரிக்குளம்	0.16
714.	(Koduvakarakulam) - கொடுவக்காரக்குளம்	3.43
715.	(Sinianthiruthukulam) - சினியன்தீர்த்துக்குளம்	4.18
716.	(Kannanvarakulam) - கண்ணன்வாரக்குளம்	2.28
717.	(Kilatharkulam) - கிலேதார்குளம்	2.10
718.	(Karichakulam) - கரிச்சாக்குளம்	4.65
719.	(Kollankuzhikulam) - கொல்லங்குழிக்குளம்	3.77
720.	(Soorankudikulam) - சூரங்குடிக்குளம்	3.78
721.	(Mylottukulam) - மைலோட்டுக்குளம்	2.90
722.	(Vaniyankulam) - வாணியங்குளம்	4.35
723.	(Pudukuzhikulam) - புதுக்குழிக்குளம்	4.47
724.	(Kodupakuzhikulam) - கொடுப்பக்குழிக்குளம்	1.18
725.	(Nachikonathikulam) - நாச்சிக்கொணத்திக்குளம்	1.47
726.	(Alamkottukulam) - ஆலம்கோட்டுக்குளம்	2.19
727.	(Kavadikulam Thankkuzhi) - காவடிக்குளம் தங்குழி	0.99
728.	(Thiruthukuzhikulam) - திருத்துக்குழிக்குளம்	0.03
729.	(Kunjankuzhikulam) - குஞ்சான்குழிக்குளம்	1.54
730.	(Kodankuzhikulam) - கோடான்குழிக்குளம்	3.93
731.	(Mallankuzhikulam) - மல்லான்குழிக்குளம்	1.46
732.	(Vanankulam) - வானாங்குளம்	0.75
733.	(Vempadipuduthiruthukulam) - வேம்பட்டிப்புதுத்திருத்துக்குளம்	1.97
734.	(Ulankulam) - ஊலங்குளம்	1.73
735.	(Narasingamarkulam) - நரசிங்கமார்குளம்	4.19
736.	(Pudukulam) - புதுக்குளம்	3.99
737.	(Thiruchanakulam) - தீரிச்சானக்குளம்	2.98
738.	(Pottakkulam) - பொட்டக்குளம்	4.90
739.	(Pudukotukulam) - புதுக்கோட்டுக்குளம்	2.99
740.	(Manamuttikulam) - மணமுட்டிக்குளம்	1.20

(1)	(2)	(3)
741.	(Nachimarkulam) - நாச்சிமார்குளம்	3.42
742.	(Chandrankulam) - சந்திரன்குளம்	2.22
743.	(Chettipadukonathukulam)-செட்டிப்பதுக்கோணத்துக்குளம்	1.28
744.	(Thuvarankulam) - துவரங்குளம்	2.01
745.	(Malaranchakuzhi) - மலரஞ்சக்குழி	1.05
746.	(Mannimarkuzhi) - மன்னிமார்குழி	1.33
747.	(Malamvadikulam) - மலம்வாடிக்குளம்	2.46
748.	(Kunnenerikuzhiottukulam) - குன்னனேரிக்குழியோட்டுக்குளம்	2.19
749.	(Vannankulam) - வண்ணாங்குளம்	4.65
750.	(Thattamvilaiathuvelenkulam) தட்டம்விளையாத்துவேலன்குளம்	2.78
751.	(Pattankonathu Ezhakulam) - பட்டன்கொணத்துஎழ்குளம்	2.80
752.	(Kattimankuttuezakulam) - கட்டிமாங்குட்டி ஏழக்குளம்	1.25
753.	(Manamkonathuvanankulam) - மாணம்கோணத்து வாணான்குளம்	1.92
754.	(Suriyandiodai Chettikulam) - சூரியாண்டிஒடை செட்டிகுளம்	3.36
755.	(Ottankulam Ananthavattikulam) - ஒட்டன்குளம் ஆனந்தவட்டிக்குளம்.	3.17
756.	(Thirumanthakulam) - திருமந்தக்குளம்	1.90
757.	(Azhavankulam) - ஆழவான்குளம்	1.29
758.	(Naduvoorkurichikulam) - நடுவூர்குரிச்சிக்குளம்	3.03
759.	(Anthuvattikulam) - அந்துவட்டிக்குளம்	3.57
760.	(Manaliyarakonam - Illupukulam) - மணலியாரக்கோணம் இலுப்பக்குளம்	31.73
761.	(Cherukottukulam) - சேருகோட்டுக்குளம்	3.57
762.	(Akarankulam) - அகரன்குளம்	1.59
763.	(Edyankulam) - எடையன்குளம்	4.50
764.	(Cheruppankottuvernkulam) - சொருப்பான்கோட்டு வீரன்குளம்	3.44
765.	(Cheruthamarkulam) - செருதமார்குளம்	4.11
766.	(Alamilai Thirumangalkulam) - ஆலன்விளை திருமங்காள்குளம்	1.79

(1)	(2)	(3)
767.	(Kalaythankuzhikulam) - கலைதங்குழிக்குளம்	2.39
768.	(Keezpulayanpallathikulam) - கீழ்புலையன் பள்ளத்திகுளம்	3.40
769.	(Melapallathukulam) - மேலப்பள்ளத்துக்குளம்	4.02
770.	(Valyankulam) - வலையன்குளம்	2.41
771.	(Alanvilai Ammikkuzhikulam) - ஆலன்விளை அம்மிக்குழிக்குளம்	2.26
772.	(Odaimarichankulam) - ஓடைமரிச்சான்குளம்	0.06
773.	(Kuzhipallamvadakaikulam) - குழிப்பள்ளம்வடக்கைகுளம்	1.72
774.	(Kurikkulam) - குரிக்குளம்	4.76
775.	(Kannapottalmadyalkulam) - கண்ணன்பொட்டல் மத்யாள் குளம்	0.99
776.	(Navolivettithirthukulam) - நாவேலிவெட்டி தீர்த்துக்குளம்	0.62
777.	(Kannanpottalvettithiruthukulam) - கண்ணன்பொட்டல் வெட்டி தீருத்துக்குளம்	1.42
778.	(Kuzhipallamvadakaiodaimarichankulam) - குழிப்பள்ளம் வடக்கை ஓடை மரிச்சான்குளம்	1.96
779.	(Alanvilai Odaimarichankulam) - ஆலன்விளை ஓடைமரிசசான்குளம்	75.0
780.	(Alanvilai Karungalioda Marichankulam) - ஆலன்விளை கருங்காலி ஓடைமரிச்சான்குளம்	0.96
781.	(Kannan Pottalodaimarichankulam) - கண்ணன்பொட்டல் ஓடை மரிச்சான் குளம்	0.70
782.	(Chinnankulam) - சின்னான் குளம்	1.23
783.	(Veeravilaiathukulam) - வீரவிளையாட்டுக்குளம்	4.33
784.	(Kurunthankuzhikulam) - குருந்தன்குழிக்குளம்	1.49
785.	(Karottupundurakulam) - காரோட்டுப்புந்துரக்குளம்	3.14
786.	(Thodukuzhikulam) - தோடுக்குழிக்குளம்	1.03
787.	(Pottakuzhikulam)- பொட்டக்குழிக்குளம்	0.61
788.	(Manakattuvannankulam) - மணக்காட்டுவண்ணான்குளம்	0.46
789.	(Ramanpudurpandarakulam) - ராமன்புதூர் பண்டாரக்குளம்	1.69
790.	(Odupparakoilankulam) - ஒடுப்பாறக் கோயிலான்குளம்	4.26
791.	(Kandannarayankulam) - கந்தநாராயண்குளம்	4.20
792.	(Chettikulam) - செட்டிகுளம்	3.02

(1)	(2)	(3)
793.	(Ethamparakulam) - இதம்பாரக்குளம்	2.67
794.	(Pasupathikulam) - பசுபதிக்குளம்	1.54
795.	(Naduvakulam) - நடுவக்குளம்	2.65
796.	(Pottanamkulam) - பொட்டணங்குளம்	2.84
797.	(Naduvathukenarthukulam) - நடுவத்து கேனத்துக்குளம்	3.19
798.	(Anjalkulam) - அஞ்சல்குளம்	4.34
799.	(Neyyankuzhikulam) - நெய்யன்குழிக்குளம்	2.38
800.	(Gnarettuvalankenathukulam) - (ஞாரேட்டுவாலங்கேனத்துக்குளம்	0.59
801.	(Parayankulam) - பறையன்குளம்	3.27
802.	(Alankulam) - ஆலங்குளம்	3.50
803.	(Kakkandankulam) - காக்கந்தன்குளம்	3.50
804.	(Deriyandankulam) - தேரியந்தன்குளம்	1.70
805.	(Chakarivilaimanikulam) - சகாரிவிலை மணிக்குளம்	2.53
806.	(Chettikulam) - செட்டிக்குளம்	0.56
807.	(Amukuzhikulam) - அமுக்குழிக்குளம்	0.52
808.	(Bambapattaikulam) - பாம்பாட்டைக்குளம்	2.37
809.	(Kudumiyankottuthankulam) - குடுமியான்கோட்டுத்தான் குளம்	1.14
810.	(Chettivilaivettithiruthu Kottapuzhithanikulam) - செட்டிவிளைவெட்டி தீருத்தி கோட்டப் புழிதானிக்குளம்	0.47
811.	(Chettivilaivettithiruthu Kottapuzhithanikulam) - செட்டிவிளைவெட்டி தீருத்தி கோட்டப் புழிதானிக்குளம்	0.36
812.	(Chettivilaivettithiruthu Kottapuzhithanikulam) - செட்டிவிளைவெட்டி தீருத்தி கோட்டப் புழிதானிக்குளம்	0.42
813.	(Pottakuzhikulam)- பொட்டக்குழிக்குளம்	1.54
814.	(Thumbavilaivivettuthiruthu) - தும்பவிலைவிவெட்டு தீருந்து	1.07
815.	(Eriyakulam) - எரியாக்குளம்	1.71
816.	(Keezapalayanpallathukulam) - கீழப்பலயான்பள்ளத்துக்குளம்	3.57
817.	(Keezavilaithunnakulam) - கீழவிளைதுண்ணக்குளம்	2.82
818.	(Puduvilaithanikulam) - புதுவினைத்கணிக்குளம்	0.55
819.	(Aluvilaikaniyakulam) - ஆலுவிளைகானியாக்குளம்	2.95
820.	(Vathikonathukulam) - வாத்திகோணத்துக்குளம்	4.08

(1)	(2)	(3)
821.	(Kuruthikulam) - குருத்திக்குளம்	1.12
822.	(Pattanvilaikulam) - பட்டன்விளைக்குளம்	1.64
823.	(Sathanparakulam) - சாத்தன்பாரக்குளம்	4.41
824.	(Sakiyankottuvannankulam) - சகியன்கோட்டு வண்ணான்குளம்	3.72
825.	(Vdayankonathuparayankulam) - உதயன்கோணத்துப்பறையன் குளம்	1.76
826.	(Thamathuvilayam / Pandiyankulam) - தாமத்துவளையன் பாண்டியன்குளம்	0.37
827.	(Cherukuzhikonapottakulam) - சேருகுழிகோணம் பொட்டிக்குளம்	4.03
828.	(Adaviyarkulam) - ஆடவியார்குளம்	2.31
829.	(Malamkottathupottakuzhi) - மேலங்கோட்டத்துப் பொட்டக்குழி	0.87
830.	(Theniadikonthathuthengadadi) - தேனியடி கொந்தத்து தென்காதட்டி	2.14
831.	(Koonathankattuvilaikuzhi) - கூனாத்தான்காட்டுவிளைக்குழி	2.31
832.	(Pattakuzhikulam) - பட்டாகுழிக்குளம்	3.35
833.	(Panuookkonathuodakulam)-பானுஊக்கொணத்து ஓடக்குளம்	0.44
834.	(Kunttuhukulam) - குந்துக்குளம்	1.87
835.	(Vambiyarkonathukulam) - வேம்பியார்கொணத்துக்குளம்	4.45
836.	(Kumbakenattukulam) - கும்பகேணாட்டுக்குளம்	2.25
837.	(Vadakaithanikuzhi) - வடக்கைதானிக்குழி	0.89
838.	(Vadakaithanikuzhi) - வடக்கைதானிக்குழி	0.64
839.	(Nanthavanothu Thunsankuzhi)-நாந்தவந்து துன்சங்குழி	4.50
840.	(Thengaipalam Eswarankulam)- தெங்கைப்பாலம் ஈஸ்வரன்குளம்	1.30
841.	(Manakuzhikokulam) - மணக்குழிக்கூக்குளம்	3.97
842.	(Neralikulam) - நீரழிக்குளம்	1.96
843.	(Kundukulam) - குண்டுக்குளம்	3.66
844.	(Neralikulam) - நீரழிக்குளம்	2.39
845.	(Mankuzhikulam) - மண்குழிக்குளம்	4.56
846.	(Valliykonamkulam) - வள்ளிக்கோணம்குளம்	1.29

(1)	(2)	(3)
847.	(Kundukulam) - குண்டக்குளம்	0.20
848.	(Kundukulam) - குண்டக்குளம்	0.31
849.	(Kundukulam) - குண்டக்குளம்	1.78
850.	(Kundukulam) - குண்டக்குளம்	2.38
851.	(Kundukulam) - குண்டக்குளம்	4.99
852.	(Kundukulam) - குண்டக்குளம்	3.47
853.	(Kundukulam) - குண்டக்குளம்	4.53
854.	(Kundukulam) - குண்டக்குளம்	3.52
855.	(Neeralikulam) - நீரழிக்குளம்	2.41
856.	(Neeralikulam) - நீரழிக்குளம்	2.62
857.	(Neeralikulam) - நீரழிக்குளம்	2.75
858.	(Neeralikulam) - நீரழிக்குளம்	1.53
859.	(Neeralikulam) - நீரழிக்குளம்	4.28
860.	(Neeralikulam) - நீரழிக்குளம்	3.30
861.	(Nedumkulam) - நெடுங்குளம்	2.48
862.	(Chadyankulam) - சடையன்குளம்	3.09
863.	(Pattikulam) - பட்டிக்குளம்	2.29
864.	(Pattikulam) - பட்டிக்குளம்	0.79
865.	(Kundukulam) - குண்டக்குளம்	1.81
866.	(Ochankulam) - ஒச்சன்குளம்	0.72
867.	(Thuvaraapallikulam) - துவராப்பள்ளிக்குளம்	4.11
868.	(Thattankulam) - தட்டங்குளம்	1.90
869.	(Murvangakottukaniyarkulam) - முர்வாங்கக்கோட்டுக்கனியார் குளம்	2.42
870.	(Velayudankulam) - வேலாயுதன்குளம்	3.70
871.	(Pandiyankulam) - பாண்டியன்குளம்	4.19
872.	(Sripandarakonathukulam) - ஸ்ரீ பண்டாரக்கொணத்து குளம்	1.61
873.	(Pattankonathukulam) - பட்டன்கொணத்துக்குளம்	2.69
874.	(Akkappankulam) - அக்கப்பன்குளம்	4.59
875.	(Kollamkulam) - கொல்லங்குளம்	3.74
876.	(Anandavilaikulam) - ஆனந்தவிளைகுளம்	3.74
877.	(Chettikulam) - செட்டிகுளம்	2.59

(1)	(2)	(3)
878.	(Kurumavilaikulam) - குருமாவிளைக்குளம்	4.39
879.	(Veparavilakikulam) - வேபரவிளக்கிக்குளம்	3.62
880.	(Olakottuchanttidakulam) - ஒலக்கோட்சொண்டிக்குளம்	2.67
881.	(Wdayancharikulam) - உதயன்சாரிக்குளம்	2.42
882.	(Kattukulam) - காட்டுக்குளம்	3.23
883.	(Palakulam) - பாலக்குளம்	1.20
884.	(Maruthankottukulam) - மருதங்கோட்டுக்குளம்	4.10
885.	(Maruthankottukulam) - மருதங்கோட்டுக்குளம்	0.68
886.	(Paikulam) - பாய்க்குளம்	3.72
887.	(Ponnanikulam) - பொன்னணிக்குளம்	1.84
888.	(Pottakulam) - பொட்டக்குளம்	1.70
889.	(Murupanakulam) - முருபனக்குளம்	0.42
890.	(Pudukulam) - புதுக்குளம்	3.81
891.	(Illupakulam) - இலுப்பக்குளம்	1.54
892.	(Kalikulam) - காலிக்குளம்	0.77
893.	(Kalikulam) - காலிக்குளம்	1.06
894.	(Kolakulam) - கொலக்குளம்	3.17
895.	(Kattukulam) - காட்டுக்குளம்	0.36
896.	(Kattukulam) - காட்டுக்குளம்	1.30
897.	(Paruthaikulam) - பருதைக்குளம்	2.28
898.	(Paruthaikulam - பருதைக்குளம்	0.72
899.	(Thengankuzhikulam) - தேங்கான்குழிக்குளம்	1.66
900.	(Oorankulam) - ஊரான்குளம்	8.44
901.	(Kallikattukulam) - கல்லிக்காட்டுக்குளம்	9.15
902.	(Puthenkulam) - புத்தென்குளம்	0.41
903.	(Kuzhikulam) - குழிக்குளம்	11.67
904.	(Pulimpallikulam) - புலிம்பள்ளிக்குளம்	19.90
905.	(Pulimpallikulam) - புலிம்பள்ளிக்குளம்	0.75
906.	(Ponamkurikulam) - பொனம்குரிக்குளம்	0.35
907.	(Nedumkulam) - நெடுங்குளம்	25.75
908.	(Kuthiyakulam) - குத்தியக்குளம்	25.72
909.	(Vallichirakulam) - வள்ளிக்சிராக்குளம்	35.00

(1)	(2)	(3)
910.	(Kuthikulam) - குத்திக்குளம்	13.97
911.	(Kannukulam) - கன்னுக்குளம்	4.74
912.	(Puthukulam) - புதுக்குளம்	13.20
913.	(Chirakulam) - சிறாக்குளம்	25.65
914.	(Pirakal Amkathukulam) - பிரக்கால் அங்கத்துக்குளம்	3.85
915.	(Pirakalkulam) - பிரக்கால்குளம்	2.65
916.	(Elayamparakulam) - எளயம்பாரக்குளம்	2.55
917.	(Kannammakuthirchakulam) - கண்ணம்மா குதிரச்சாகுளம்	5.11
918.	(Thaltankonathukulam) - தள்டான்கொணத்துக்குளம்	4.13
919.	(Kurnikottukattukulam) - குர்னிக்கோட்டுக்காட்டுக் குளம்	2.00
920.	(Illanchikulam) - இளஞ்சிக்குளம்	5.17
921.	(Chembanathukulam) - செம்பநாத்துக்குளம்	3.12
922.	(Pulakulam) - புலக்குளம்	10.00
923.	(Manthakulam) - மந்தக்குளம்	25.00
924.	(Neerazhykulam) - நீரழிக்குளம்	1.20
925.	(Thottakulam) - தோட்டக்குளம்	1.15
926.	(Parakulam) - பாறக்குளம்	2.57
927.	(Mecherikulam) - மேச்சேரிக்குளம்	2.5
928.	(Uttakulam) - ஊட்டக்குளம்	7.00
929.	(Amuvathikulam) - அமுவதிக்குளம்	5.80
930.	(Kuttakavakulam) - குட்டக்காவக்குளம்	3.90
931.	(Gnarakulam) - ஞாரக்குளம்	15.00
932.	(Chernkottavilaikulam) - சேரன்கோட்ட விளைக்குளம்	20.00
933.	(Pudukulam) - புதுக்குளம்	7.13
934.	(Narakuzhikulam) - நாரக்குழிக்குளம்	4.79
935.	(Arumkottukulam) - அருங்கோட்டுக்குளம்	5.85
936.	(Kuramarkottukulam) - குருமார்கோட்டுக்குளம்	15.00
937.	(Kavikulam) - காவிக்குளம்	25.00
938.	(Neerazhikulam) - நீரழிக்குளம்	3.81
939.	(Vemkuzhikulam) - வேம்குழிக்குளம்	10.20
940.	(Kavookulam) - காவுக்குளம்	3.42
941.	(Mundakottukulam) - முண்டக்கோட்டுக்குளம்	12.00

(1)	(2)	(3)
942.	(Ukkikulam) - உக்கிக்குளம்	15.00
943.	(Nambikulam) - நம்பிக்குளம்	3.81
944.	(Thittamathukulam) - திட்டமாத்துக்குளம்	35.00
945.	(Kottachmakulam) - கோட்டச்சமாக்குளம்	30.00
946.	(Samiyarkulam) - சாமியார்குளம்	3.42
947.	(Udamboorkulam) - உடம்பூர்குளம்	12.00
948.	(Mankulam) - மாங்குளம்	6.00
949.	(Remkulam) - ரேம்குளம்	25.00
950.	(Palkulam) - பால்குளம்	20.00
951.	(Neerazhikulam) - நீராழிக்குளம்	30.00
952.	(Pudukulam) - புதுக்குளம்	6.86
953.	(Udappakulam) - உடப்பக்குளம்	4.40
954.	(Perumkulam) - பெருங்குளம்	4.40
955.	(Sottukulam) - சோட்டுக்குளம்	12.46
956.	(Maravoorkulam) - மறவூர்குளம்	22.73
957.	(Kamathiyoorkulam) - கமதியூர்குளம்	4.45
958.	(Sarvoorkulam) - சார்வூர்குளம்	12.46
959.	(Nedumkulam) - நெடுங்குளம்	22.73

(முதன்மைப்பொறியாளர் (நீர்ப்பாசனம்), பொதுப்பணித்துறை, சென்னை, அறிக்கை எண். 3/53209/86, சி.ஆர். (5 ஆண்டுகள்), நாள் 9-11-1987)

பொதுப்பணித்துறையின் கட்டுப்பாட்டிலடங்கிய பாசனத் தொகுதியிலடங்காத ஏரிகள் (குளங்கள்) அவற்றின் ஆயக்கட்டு பரப்பளவு ஆகிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன[63]:

கன்னியாகுமரி மாவட்டம் - நீர்ப்பாசனத் தொகுதியிலடங்காத ஏரிகள் (குளங்கள்)

சுருக்கம்

தொடர் எண்.	வட்டத்தின் பெயர்	ஏரியின் பெயர்	ஏரியின் பாசனத்திலுள்ள ஆயக்கட்டு நிலங்களின் பரப்பளவு	
			ஏ.	செ.
1.	தோவாளை	செம்பகராமன் புத்தூர் பெரிய குளம்	213.	49

சுருக்கம்

தொடர் எண்.	ஏரிகளின் வகை	மொத்த எண்ணிக்கை	100 ஏக்கர்கள் வரை	101–200 ஏக்கர்கள் வரை	201–500 ஏக்கர்கள் வரை	500 ஏக்கர்களுக்கு மேல்	மொத்த ஆய்க்கட்டு பரப்பளவு (ஏ.செ.)
1.	நீர்ப்பாசனத் தொகுதியில் அடங்கியவை	960	907	42	7	4	19186–98
2.	நீர்ப்பாசனத் தொகுதியில் அடங்காதவை	1	–	–	–	–	213–49
	மொத்தம்	961	907	42	7	4	19400–47

1970 முதல் 1986 வரை, கன்னியாகுமரி மாவட்டத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட தனி சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களைச் சார்ந்த பணிகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

தொடர் எண்.	பணியின் விவரம்	பணிக்கு அளிக்கப்பட்ட எண்.	மதிப்பீட்டுத் தொகை (ரூபாய்)
(1)	(2)	(3)	(4)
1.	மேத்துக்கும்மல் கிராமம், செங்கங்கோட்டுக் குளத்திற்குத் தனி செப்பனிடும் பணி	114 1/73–74	5,250/–
2.	இரவிப்புத்தூர் கிராமம், கந்தன் குளத்திற்குத் தனி செப்பனிடும் பணி	115 1/73–74	35,000/–
3.	மிடாலம் கிராமம், வீரவண்ணான் குளத்திற்குத் தனி செப்பனிடும் பணி	121 1/73–74	5,600/–
4.	வாள்வச்ச கோஷ்டம் கிராமம், பாலச்சா குளத்திற்குத் தனி செப்பனிடும் பணி	126 1/73–74	5,200/–
5.	பொன்மனை கிராமம், முக்குவசேரிக் குளத்திற்கு தனி செப்பனிடும் பணி	127 1/73–74	6,100/–
6.	அகஸ்தீஸ்வரம் கிராமம், சடையனேரிக் குளத்திற்குத் தனி செப்பனிடும் பணி	131 1/73–74	10,200/–
7.	வடசேரி கிராமம், கானியான்குளத்திற்குத் தனி செப்பனிடும் பணி	136 1/73–74	14,000/–
8.	கப்பியாரகுளம் கிராமத்திலுள்ள கப்பியாரா குளத்திற்குத் தனி செப்பனிடும் பணி	137 1/73–74	14,000/–
9.	எடைக்காடு கிராமம், அடத்துக்குளத்திற்குத் தனி செப்பனிடும் பணி	138 1/73–74	5,500/–
10.	குலசேகரபுரம் கிராமத்தில் சாலைப் புதுக்குளத்திற்குத்தனி செப்பனிடும் பணி	142 1/73–74	16,000/–
11.	இரணியல் கிராமத்தில், பூலாங் குளத்திற்குத் தனி செப்பணிடும் பணி	143 1/73–74	5,700/–

(1)	(2)	(3)	(4)
12.	ஆத்தூர் கிராமத்தில், கண்ணனூர் குளத்திற்குத் தனி செப்பனிடும் பணி	144 1/73–74	5,900/–
13.	கத்தநல்லூர் கிராமத்தில், பண்டாரக் கொணத்து சீரக்குளத்திற்குத் தனி செப்பனிடும் பணி	145 1/73–74	5,700/–
14.	கீழ்க்குளம் கிராமத்தில், ஒலூரியாக் குளத்திற்குத் தனி செப்பனிடும் பணி	146 1/73–74	5,250/–
15.	கொளச்சல் கிராமத்தில், முருகக்கோட்டு கரிஜிரான் குளத்திற்குத் தனி செப்பனிடும் பணி	147 1/73–74	4,600/–
16.	நல்லூர் கிராமத்தில், பொம்மக் குளத்திற்குத் தனி செப்பனிடும் பணி	150 1/73–74	5,200/–
17.	ஆத்தூர் கிராமத்தில், அயக்கோட்டுக் குளத்திற்குத் தனி செப்பனிடும் பணி	151 1/73–74	13,000/–
18.	திருவட்டார் கிராமத்தில், பாலக் குளத்திற்குத் தனி செப்பனிடும் பணி	152 1/73–74	10,000/–
19.	மேட்டுக்கும்மல் கிராமத்தில், பெருங் குளத்திற்குத் தனி செப்பனிடும் பணி	156 1/73–74	29,500/–
20.	தேவகுளத்தின் உபரித்தண்ணீரைத் தேக்கி வைக்கும் நான்காவது குறுக்குக்கால் – செப்பனிடும் பணி	160 1/73–74	2,000/–
21.	ஆலூர் கிராமத்தில், பெருங்கால் குளத்திற்குத் தனி செப்பனிடும் பணி	161 1/73–74	30,500/–
22.	கிள்ளியூர் கிராமத்தில், கள்ளிக்குளத் திற்குத் தனி செப்பனிடும் பணி	162 1/73–74	24,000/–
23.	கொல்லங்கோடு கிராமத்தில், கைத்தக்குளத்திற்குத் தனி செப்பனிடும் பணி	182 1/73–74	7,400/–
24.	அருமண கிராமத்தில், கொல்லக் குளத்திற்கு தனி செப்பனிடும் பணி	183 1/73–74	13,500/–
25.	கொல்லங்கோடு கிராமத்தில், வெங்கஞ்சி மேலப்பொருள் குளத்திற்குத் தனி செப்பனிடும் பணி	184 1/73–74	24,000/–

[முதன்மைப் பொறியாளர், சிறிய நீர்ப்பாசனம், பொதுப்பணித்துறை, அறிக்கை எண். எஸ்.3/1457/86 (3 ஆண்டுகள்), நாள் 23.7.1987]

1970 முதல் 1986 வரை, கீழ்க்குறிப்பிட்ட திட்டங்களும், எடுத்துக்கொள்ளப்பட்டன:

தொடர் எண்.	திட்டத்தின் விவரம்	சி.ஆர்./ சி.இ.ஆர் எண்.	மதிப்பீட்டுத் தொகை ரூபாய் (இலட்சத்தில்)
(1)	(2)	(3)	(4)
1.	தோவாளை வட்டம், தோவாளை கிராமம், கரும்பட்டுக்குளத்திற்குத் தனி செப்பனிடும் பணி	சி.ஆர். 1/72–73	0.630
2.	அகஸ்தீஸ்வரம் வட்டம், தாமரைக்குளம் கிராமம், தற்போதைய மண் அணையினை மாற்றி செப்பனிடும் பணி	சி.ஆர்.10 1/72–73	1.600
3.	அகஸ்தீஸ்வரம் வட்டம், பழையார் ஆற்றின் குறுக்கேயுள்ள தற்போதைய சோழன் திட்டை அணைக்கட்டை, திரும்பக்கட்டுதல்	சி.இ.(ஐ) பி.கே.கே. 1/73–74	5.060
4.	பரக்கை வடக்குக்குளம் புரகரைக் கால் வாயை, பரக்கை தென்குளம் மற்றும் பால்குளத்திற்குத் தண்ணீர் பாய்ச்சுவதற்கு வசதியாக நீட்டியமைத்தல், மற்றும் இக் குளங்களுக்கும் பழுதுபார்க்கும் பணி	சி.ஆர். எண்.7 1/73–74	0.770
5.	கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டம், ஆலத்துரையார் நீரை, திருநெல்வேலி மாவட்டம், நாங்குனேரி வட்டம், மனகுடி, பகுதிக்கு திசை திருப்பும் பணி	சி.இ.(ஐ) பி.டி.என். கே.கே.1 74–75 ஆர் இ.சி.இ. (எப்.இ) என் 25 சி.இ.எம் ஐ. / 80–81	32.600
6.	கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், பழையார் ஆற்றின் குறுக்கே, குமரி அணையை, விரிவாக்குதல்	சி.இ.ஆர்.20	13.827
		சி.இ.ஐ.79–80 ஆர்.இ.	17.450
7.	பொய்கை விரிவாக்கத்திட்டம்	சி.இ.(ஐ) எண்.25 சி. ஆர்.ஐ.79–80	21.60

[முதன்மைப் பொறியாளர், சிறிய நீர்ப்பாசனம், அறிக்கை எண். எஸ்.3/1457/86 (3 ஆண்டுகள்) நாள் 23.7.1987]

குறிப்புகள்

1. டேவிட். ஜே. பிரிக்ஸ் & ஃபிராங்க். எம். கோர்டஸி, வேளாண்மை மற்றும் சுற்றுச்சூழல், 1985, பக்கம் 3.
2. சேம்பியன், எச்.ஜி., ஃபாரஸ்ட்ரி, இலண்டன், 1984, பக்கம் 172
3. கடாக்ஷமணி, ஒய்.எஸ்., திருநெல்வேலி தெற்குக் காடுகள் பிரிவின் நடைமுறைத் திட்டம், 1976-77 முதல் 1985-86, பக்கம் 2.
4. தமிழ்நாடு ஆண்டுப்புள்ளிவிவரச் சுருக்கம், 1984-85, புள்ளி விவரத்துறை, சென்னை, பக்கங்கள் 70-71.
5. 1984-85-ல் வேளாண்மை ஆண்டிற்கான தமிழ்நாடு பருவ கால மற்றும் பயிர் அறிக்கை - 1987-ல் புள்ளிவிவரத்துறை ஆணையரால் வெளியிடப்பட்டது, பக்கம்.39.
6. மாஸ்ஃபீல்டு, ஜி.பி.ஏ., நிலவுலக வேளாண் கையேடு, லண்டன், பக்கம் 6
7. அகமது, சி., "இந்தியாவில் மண் அரிப்பு" - பம்பாய், 1973
8. முதன்மைப் பொறியாளர் (வேளாண் பொறியியல்), வேளாண் பொறியியல் துறை, சென்னை, அறிக்கை நாள் 11.8.1986.
9. மண் பாதுகாப்புத் திட்டம் தொடர்பான அறிக்கை, வேளாண் பொறியியல் துறை, நாகர்கோயில், 1987-88.
10. மண் பாதுகாப்புத் திட்டம், வேளாண் பொறியியல் துறை, நாகர்கோயில், 1987-88.
11. **கன்னியாகுமரியில் வேளாண்மை,** வேளாண்துறை இணை இயக்குநரின் 1987 ஆம் ஆண்டு அறிக்கை.
12. உதவி வேளாண் வேதியியல் வல்லுநர் (சமூக ஆய்வு), வேளாண்துறை, திருநெல்வேலி, அறிக்கை நாள் 5.5.1987.
13. வேளாண் புள்ளி விவரங்கள், கன்னியாகுமரி மாவட்டம், 1979, அறிக்கை, பக்கம் 1.
14. கன்னியாகுமரி மாவட்டத்தின் வேளாண்மை தொடர்பான அறிக்கை, வேளாண்துறை இணை இயக்குநர், நாகர்கோயில்.
15. தோட்டக்கலை மற்றும் தோட்டப்பயிர்கள் இயக்குநர், தர்மபுரி, அறிக்கை, நாள் 2.9.1986.
16. தோட்டக்கலை உதவி இயக்குநர், நாகர்கோயில், அறிக்கை நாள் 4.3.1987.

17. பட்டுப்புழு வளர்ப்பு இயக்குநர், சேலம், அறிக்கை நாள் 25-1-1989 மற்றும், 7.2.1989.

18. மேற்படி

19. கன்னியாகுமரி மாவட்டத்தில் வேளாண்மை என்பது குறித்த அறிக்கை, வேளாண்மை இணை இயக்குநர், நாகர்கோயில்.

20. வேளாண்துறை இயக்குநர், சென்னை, அறிக்கை நாள் 23.9.1986.

21. வேளாண்துறை இணை இயக்குநர், நாகர்கோயில், அறிக்கை நாள் 28.11.1958.

22. தோட்டக்கலை மற்றும் தோட்டப்பயிர்கள் இயக்குநர், தர்மபுரி, அறிக்கை நாள் 4.9.1981.

23. "நிலத்தை நன்முறையில் பயன்படுத்துதல்" - சமுதாய வளர்ச்சி அமைச்சகம், இந்திய அரசு, டில்லி, 1957.

24. மேற்படி

25. மேற்படி

26. காட்கேரி, டி.ஏ., "இந்தியாவில் இயந்திரங்களின் மூலம் வேளாண்மை", பக்கம் 12.

27. சென்னை மாநிலம், வேளாண்துறை - இழுவை இயந்திர நிறுவனத்தின் புள்ளி விவர அறிக்கை (1949 - 50 முதல் 1957 - 58 முடிய), புள்ளிவிவரத்துறை இயக்குநர், தமிழக அரசு, 1960.

28. தலைமைப் பொறியாளர், (வேளாண் பொறியியல்), சென்னை, அறிக்கை நாள் 11.8.1986.

29. நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு வேளாண் பொறியியல் மற்றும் சேவை கூட்டுறவு கூட்டிணைக் கழகம், அறிக்கை நாள் 1.3.1988.

30. வேளாண்துறை இயக்குநர், சென்னை, அறிக்கை நாள் 23.9.1986

31. கே.எஸ். யவால்கர், ஜே.பி. அகர்வால், எஸ்.போடே - "மக்கிப்போன எரு மற்றும் உரங்கள்" . நாக்பூர் 1977.

32. "கன்னியாகுமரியில் வேளாண்மை" என்பது பற்றிய அறிக்கை, வேளாண்துறை இணை இயக்குநர், நாகர்கோயில்.

33. வேளாண் துறை இயக்குநர், சென்னை, அறிக்கை நாள் 23.9.1986

34. வேளாண் அலுவலர் (பண்ணை மேலாண்மை), மாநில விதைப்பண்ணை, திருப்பதிசாரம், அறிக்கை நாள் 14.9.1988.

35. உதவி மண் வேதியியல் வல்லுநர், மண் பரிசோதனை ஆய்வுக்கூடம், நாகர்கோவில், அறிக்கை நாள் 22.11.1988.

36. வேளாண் உதவி இயக்குநர் (ட்டி. & டி. எண்ணெய் வித்துக்கள்) நாகர்கோவில், அறிக்கை நாள் 1988.

37. கோலியரிடன் பல்பொருள் விளக்கம் - தொகுதி 2, நியூயார்க், 1980, பக்கம் 226.

38. மீன் தொழில் துறை இயக்குநர், சென்னை. அறிக்கை நாள் 17.11.1980

39. சென்னை தகவல்கள் 1958, "கன்னியாகுமரி மாவட்டத்தில் மீன் வளம்" என்பது குறித்த கட்டுரை, பி.ஐ.சாக்கோ, மீன் விற்பனை மற்றும் தகவல் அலுவலகம்.

40. நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு மீன் தொழில்துறை வளர்ச்சிக் கழகம், அறிக்கை நாள் 20.9.1988.

41. தொழில் நுட்ப அறிக்கை 1.1.78, இந்திய அரசு, வேளாண்மை மற்றும் டி.என். நீர்ப்பாசனத்துறை அமைச்சகம்.

42. சின்ன முட்டம் மீன்பிடிக்கும் துறைமுகம் - மீன் பிடிக்கும் துறைமுகங்கள் பூர்வாங்க ஆய்வு, பெங்களூர், பிப்ரவரி 1978.

43. பி.எம். மானஸ் காலின்ஸ், ஃபிரெட்., எம்.ஒயிட்., துவக்கக் காட்டு நிலம், வர்ஜீனியா, 1981, பக்கம் 2.

44. பொது மேலாளர், அரசு இரப்பர் கழகம் லிமிடெட், நாகர்கோவில், அறிக்கை நாள் 2.12.1988.

45. பரப்புத் தோற்ற திட்ட அறிக்கை - 1987, காடுகள் வளர்ப்பு கோட்ட அலுவலர், கிராம்புத்தோட்டப் பண்ணைக் கோட்டம், நாகர்கோவில் அறிக்கை நாள் 23.11.1988.

46. திருநெல்வேலி தெற்கு காடுகள் கோட்டத்திற்கான செயல்திட்டம் - 1976-77 முதல் 1985-86 வரை, பக்கம் 38 (ஒய்.எஸ். கடாக்ஷாமணி)

47. தமிழ்நாடு ஆய்வு அறிக்கையில், சமுதாயக் காடுகள் வளர்ப்புத் திட்டம் குறித்த குறிப்பு - மனித சமுதாய வளர்ச்சி பற்றிய ஆய்வுத்துறை - பாரதியார் பல்கலைக்கழகம், 1983.

48. கூடுதல் முதன்மை வனக்காப்பாளர், சமுதாயக்காடுகள் வளர்ப்புத் திட்டம், சென்னை, அறிக்கை நாள் 22.12.1987.

49. முதன்மை வனக்காப்பாளர், தமிழ்நாடு காடுகள் வளர்ப்புத்துறை, சென்னை, அறிக்கை நாள் 29-12-1986.

50. மைக்கேல், ஏ.எம்., நீர்ப்பாசனம் - புனைக்கருத்தும், மற்றும் நடைமுறையும், 1978, புதுதில்லி, பக்கம் 15.

51. சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர், சென்னை, அறிக்கை நாள் 23.1.1989.

52. மாவட்ட ஆட்சித்தலைவர், கன்னியாகுமரி, அறிக்கை நாள் 18.5.1985

53. கன்னியாகுமரி மாவட்டத்தில் அரபிக்கடற்கரையையொட்டி, கட்டுமான கருங்கல் மேடாலான கடற்சுவர்-திட்ட அறிக்கை 1978, தொகுதி -1, தலைமைப் பொறியாளர் அலுவலகம், பொதுப்பணித்துறை (கட்டிடங்கள்), சென்னை, தமிழக அரசு.

54. உதவி நிர்வாகப் பொறியாளர், கடல் அரிப்புத்தடுப்புத்துறை, நாகர்கோவில், அறிக்கை நாள் 24.11.1988.

55. உதவி நிர்வாகப் பொறியாளர், கடல் அரிப்புத் தடுப்புத்துறை, நாகர்கோவில், அறிக்கை நாள் 24.11.1988.

56. தமிழகத்தில் கூட்டுறவு சங்கங்களின் பணி குறித்த அறிக்கை

57. தனி அலுவலர், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை கட்டிணைக் கழகம் லிட், அறிக்கை நாள் 13.1.1989.

58. வேளாண்துறை துணை இயக்குநர் (விற்பனை), சென்னை, அறிக்கை நாள் 27.9.1988.

59. வேளாண் பொருள் விற்பனை இயக்குநர், திருச்சிராப்பள்ளி, அறிக்கை நாள் 15.12.1988.

60. மைக்கேல், ஏ.எம்., நீர்ப்பாசனம். "புனைகருத்தும்" மற்றும் நடைமுறையும் 1978, புதுதில்லி, பக்கம் 1-2.

61. தலைமைப்பொறியாளர் (ஆய்வு - பொதுப்பணித்துறை), சென்னை, அறிக்கை நாள் 23.1.1989.

62. சென்னை தகவல் அறிக்கை, செப்டம்பர் 1958, பக்கம் 21

63. முதன்மைப் பொறியாளர் (நீர்ப்பாசனம்), பொதுப்பணித்துறை, சென்னை, அறிக்கை எண். என்.3-53 வரை / 86.சி.ஆர். (5 ஆண்டுகள்), நாள் 9.11.1987.

இயல் - 5

தொழில்கள்

ஒரு நாட்டின் தொழில் வளம், அந்நாட்டின் இயற்கை வளம், தொழில் செய்வதற்கேற்ற உள்ளமைப்பு, போக்குவரத்து, மற்றும் தொழில் நுட்பமான வழிவகையறிவு ஆகியவற்றைப் பொறுத்தே அமைகிறது. இவ்வழிவகைகள், எந்த அளவில் மாவட்டத்தின் தொழில் வளத்தை அமைத்துப் பெருக்கியுள்ளன என கீழே விவரிக்கப்பட்டுள்ளது. மொழி அடிப்படையில் மாநிலங்கள் அமைக்கும் கொள்கையின்படி, முந்தைய திருவாங்கூர் - கொச்சி மாநிலத்திலிருந்த சில வட்டங்களை உள்ளடக்கி, நவம்பர் 1, 1956 முதல் தற்போதைய கன்னியாகுமரி மாவட்டம் உருவாக்கப்பட்டது.

தமிழ்நாடு மாநிலத்திலேயே (சென்னை மாவட்டம் நீங்கலாக), மிகவும் சிறிய மாவட்டம், நாட்டின் தென்கோடி முனையில் அமைந்துள்ள இம்மாவட்டமே என அறுதியிட்டுக் கூறலாம். மாநிலத்திலுள்ள ஏனைய மாவட்டங்கள் போன்று, இம்மாவட்டமும், வேளாண் தொழிலையே அடிப்படையாகக் கொண்டதாகும். எனினும், இல்மினைட், ருடைல் போன்ற கனிமவளங்களைப் பெற்றுள்ள கடற்கரைப் பகுதியையுடைய தாகையால், இம்மாவட்டத்தில் இவற்றால், ஒரு இரண்டாவது வரிசைப் பொருளாதார விரிவாக்கம் காணப்படுகிறது.

கடற்கரைப் பகுதி வாழ் மீனவர்களின் அயராத உழைப்பினால், மீன் பிடிக்கும் தொழிலும் நல்ல முன்னேற்றம் பெற்றிருப்பதால், இத் தொழிலும் மாவட்டத்தின் பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிவகுக்கிறதென ஐயமின்றிக் கூறலாம். மற்றொரு பிரசித்திபெற்ற மற்றும் ஊக்கெழுச்சியுடைய தொழில், தென்னை மட்டையினின்றும் நார் எடுக்கும் தொழிலாகும். ஒரு பரவலான பகுதியில் ரப்பர் தோட்டங்கள் உருவானது, இந்நூற்றாண்டின் துவக்கத்திலாகும். இம்மாவட்டத்தில், பருத்தி அதிகமாகப் பயிரிடப்படுவதில்லை யெனினும், கைத்தறித் தொழில், முக்கியமாக, வடசேரி, கோட்டார், பள்ளியாடி ஆகிய இடங்களில், செழித்தோங்கியது. கைத்தொழிலுக்கு ஏற்ற தட்பவெட்ப நிலையும், அத்தொழிலை மேற்கொள்ளும் செயல்திறன் வாய்ந்த மக்கள் இப்பகுதியில் வாழ்வதும் இத்தொழில் வளம் பெற்றதற்கு மூல காரணமாயிருக்கலாம்.

இத்துணை வளமிக்க இம்மாவட்டத்தில், இத்தொழில்களை விஞ்ஞான ரீதியில் கையாண்டு மேம்படுத்த ஒரு நல்ல அமைப்பு உருவாகவில்லை. அதன் விளைவாக, ஒரு குறிப்பிட்ட நபர்கள் முன்பு

இச்சிறு தொழில்கள்பால், ஏகபோக உரிமை கொண்டாடி, தொழில்களை பொது நலனுக்காக விரிவாக்குவதற்கு முட்டுக்கட்டையாக இருந்து வந்தார்கள். எனவே, அக்காலத்தில், பெரிய தொழிற்சாலைகள் உருவாக வில்லை.

முதன்முதலில், தனியார் துறையில் 1955-ம் ஆண்டுதான் பெரிய தொழிற்சாலை உருவாகியது. 1956-ம் ஆண்டு, முந்தைய சென்னை மாநிலத்திற்கு இப்பகுதி மாற்றப்படும்போதிருந்த நிலை அதுதான்.

இத்தொழில் நிறுவனங்கள் ஆற்றிய பணிகளையும், அவற்றிற்கு ஊக்கமளிக்க வேண்டியதையும் கருத்திற்கொண்டு, அரசு தலையிட்டு, தனது கொள்கைகளைத் தீவிரமாக நடைமுறைப்படுத்திட ஒரு சில பொதுத்துறை நிறுவனங்களை உருவாக்கியது. அரசின் இத்தீவிர நடவடிக்கையால், இடைத்தரகர்களின் ஈடுபாடு குறைந்து, அதன் விளைவாக, இச்சிறு தொழில்நிறுவனங்கள், செல்வமிக்க இடைத்தரகர் களின் கட்டுப்பாட்டினின்றும் விடுபட்டன.

பழைய கால தொழிற்சாலைகள்

முன்னர் விவரித்தது போன்று, பழைய காலங்களில், மாவட்டத்தில் வளமிக்க தொழில்களாகத் திகழ்ந்தவை, கைத்தறி நெசவு, மரம் செதுக்கும் வேலை, தேங்காய் கூட்டை (கொட்டாங்கச்சி) அழகு மிகு பொருளாக உருவாக்குதல், கிராமக்கொல்லுப்பணி, கல் செதுக்குதல், சங்குத் தொழில், எண்ணெய் பிரித்தெடுத்தல் போன்ற தொழில்களாகும். இத்தொழில்கள் நல்ல முன்னேற்றம் கண்ட நிலையில், ஒரு காலத்தின் முனைப்பான சித்திரப்பூ வேலை பொறிக்கப்பட்ட தங்கம் மற்றும் வெள்ளி சரிகை கைத்தறி பட்டுத் துணி வகைத் தொழில் மட்டும், (கோட்டார் ரகம்) போதுமான தூண்டுதலும் ஊக்கமும் அளிக்கப்பெறாததால், அழிந்து போகும் நிலை ஏற்பட்டது. 1950 ஆம் ஆண்டின் துவக்கத்தில், இம்மாதிரியான கைத்தறித் தொழில், பெரிதும் பாதிக்கப்பட்டதால், இந்நிலையை மாற்றியமைத்து, மறுபடியும் இத்தொழிலுக்குக் கைகொடுத்து புத்துயிரூட்ட மத்திய மற்றும் மாநில அரசுகள் முற்பட்டன. மத்திய அரசு, அதனுடைய பங்காக, "அகில இந்திய கைத்தறி வாரியத்தை" நிறுவியது. அத்துடன், தைத்தறி வளர்ச்சி வரி அமைப்பு நிதியையும் ஏற்படுத்தியது. இதனால், ஆலைகள் உற்பத்தி செய்யும் துணிகளுக்கு, வரி விதிக்கும் ஆணை நடைமுறைப்படுத்தப்பட்டது. தமிழ்நாடு அரசு, தனது பங்கிற்கு, "தமிழ்நாடு கைத்தறி மற்றும் நெய்பொருள் துறையையும், தமிழ்நாடு, கைத்தறி வளர்ச்சிக் கழகத்தையும் நிறுவியது, கைத்தறித் தொழிலை மேம்படுத்த கூட்டுறவு நிறுவனங்களும் ஈடுபடுத்தப்பட்டு, திரித்த நூல் (இழை) தயாரித்து

வழங்குதல் மற்றும் நெசவுத்தறி அமைத்தல் ஆகியவற்றில், கூட்டுறவு நிறுவனங்கள் உதவத்துவங்கின. தறியில் நெய்யப்பட்ட பலரக துணிகளையும் கூட்டுறவு நிறுவனங்களே விலைக்கு வாங்கி, விற்பனையிலும் ஈடுபட்டன. இன்றைய நிலையில், தமிழ்நாடு முழுவதிலுமுள்ள "கோ-ஆப்டெக்ஸ்" நிறுவனங்கள் மற்றும் அவற்றின் வாணிப மையங்கள் ஆகியவை, பல்வேறு ரக கைத்தறித் துணிகளை விற்பனை செய்து, பொது மக்களிடையே கைத்தறித் துணிகளுக்குரிய மதிப்பையும் உயர்த்தி, அத்துணிகளுக்கு மக்களின் நல்லாதரவைப் பெற்றுத்தந்தமைக்கு பெரும் சான்றாக விளங்குகின்றன என்றால் மிகையில்லை. இவை தவிர, பொதுத்துறை நிறுவனங்களான, "சிட்கோ" (சிறுதொழில் வளர்ச்சிக் கழகம்), "ட்டிக்" (தமிழ்நாடு தொழில்துறை முதலீட்டுக் கழகம்), "சிப்காட்" (தமிழ்நாடு சிறு தொழிற்துறை முன்னேற்றக் கழகம்), ஆகியவை, மாவட்டத்தைத் தொழில்மயமாக்க, குறிப்பிடத்தக்கவகையில், பெரும்பங்காற்றியுள்ளன. இதன் விளைவாக, மாவட்டம் குறிப்பாக 1970-லிருந்து 1979-க்குள்ளாக; தொழில் துறையில், பிரமிக்கத்தக்க அளவு முன்னேற்றமடைந்துள்ளது.

தமிழ்நாடு சிறுதொழில்துறை முன்னேற்றக்கழகம் லிமிடெட்

"சிப்காட்" (தமிழ்நாடு சிறுதொழில்துறை முன்னேற்றக் கழகம்) தமிழ்நாடு அரசு முழு உரிமை பெற்ற, ஒரு பொதுத் துறை நிறுவன மாகும். இந்நிறுவனம், மாவட்டத்திலுள்ள நடுத்தர மற்றும் பெரிய தொழில்களின் முன்னேற்றத்திலும், வளர்ச்சியிலும், குறிப்பிடத்தக்க பங்காற்றி வருகிறது.

தமிழ்நாட்டிலேயே, கன்னியாகுமரி மாவட்டம் தொழிற்துறையில், ஒரு பின்தங்கிய மாவட்டமாகும். ரூபாய் மூன்று கோடிக்கு குறைவான திட்ட மதிப்பீட்டுடன் தொழில் செய்யும், புதிய நடுத்தர மற்றும் பெரிய அளவிலான தொழில் அலகுகளுக்கு, "சிப்காட்" பருவகாலக்கடன் அளிக்கிறது. தொழிலை விரிவாக்குதல், பல்வகைப்படுத்துதல் மற்றும் தற்கால வழக்குக்கேற்றவாறு புதுமைப்பாங்குடன் உருவாக்குதல் போன்ற பணிகளுக்கு, தற்போது பெரிய அளவில் தொழில் செய்து கொண்டு வரும் அலகுகளுக்கு, அவற்றின் திட்ட மதிப்பீடு ரூபாய் ஐந்து கோடிக்கும் குறைவாக இருப்பின், அவற்றிக்கும் பருவ காலக்கடன் வழங்குகிறது.

ரூபாய் ஒன்பது இலட்சம் வரை "சிப்காட்" கடன் தொகை வழங்குகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் துவங்கப்பட்டிருக்கும் புதிய தொழில்களுக்கு சலுகை அடிப்படையில் நிதி வழங்கப்படுகிறது. இதுகாறும் இரண்டு அலகுகள், கன்னியாகுமரி மாவட்டத்தில் "சிப்காட்" டின் உதவியைப் பெற்றுப் பயனடைந்துள்ள. விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

அலகின் பெயரும் இடமும்	உற்பத்திசெய்யும் பொருள்	"சிப்காட்" நிதியுதவி (ரூபாய் இலட்சத்தில்)	திட்டமொத்த மதிப்பீடு
1. பிரபா, நீர்கலந்த குடி வகை அலகு, மார்த்தாண்டம், விளவங்காடு வட்டம்	மென்மையான பருகுநீர் வகை	90.00	150.00
2. ஹோட்டல் இராஜம், நாகர்கோவில்	ஹோட்டல்	44.00	72.00

கன்னியாகுமரி மாவட்டத்தில், நிறுவப்பட்டுள்ள நடுத்தர மற்றும் பெரிய தொழில் அலகுகள், வட்டியில்லா விற்பனைக் கடன் பெறத் தகுதி பெற்றவை. பரந்த அளவில் தொழிலை விரிவாக்குதல் மற்றும் பல்வகைப்படுத்துதல் ஆகியவற்றில், ஈடுபட்டுள்ள தற்போதைய அலகுகள், வட்டியில்லா விற்பனை வரிக்கடன் பெறத் தகுதி பெற்றவையாகும். இக்கடன் தொகை, அவை, கடன் கோரி விண்ணப்பம் அளிக்கும் ஆண்டுடன் முடிவுறும், தொடர்ந்த மூன்றாண்டுகளில் செலுத்தியுள்ள விற்பனை வரிக்கீடான தொகையினைக் கடன் தொகையாகப் பெறலாம். ஆனால், தொழில் முனைவோர் உத்தேச தொழில் அலகின் நிலையான சொத்துக்களில் அதிகபட்சமாக 25 விழுக்காட்டுத் தொகையோ அல்லது, 50 இலட்சம் ரூபாயோ, இதில் எது குறைவானதோ அத்தொகையினைக் கடனாகப் பெறத் தகுதி பெற்றவராவர். புதிதாகத் துவங்கும் அலகுகள், உற்பத்தியைத் துவக்கிய ஆண்டிலிருந்து முதல் ஆறு ஆண்டுகளுக்கு, ஒவ்வொரு ஆண்டும் அவ்வாண்டில் செலுத்தும் விற்பனைத் தொகைக்கீடான தொகையினைக் கடனாகப் பெறத் தகுதியுடையவராவர். ஒவ்வொரு ஆண்டும் அவ்வாறான விற்பனைத் தொகையோ அல்லது ரூபாய் இருபது இலட்சமோ எது குறைவாக உள்ளதோ அத்தொகையினையோ, ஆனால், ஆறு ஆண்டுகளுக்கும் சொத்து மொத்தமாகக் கணக்கிடுகையில் ரூபாய் 1 கோடிக்கு மிகாமலோ, கடனாகப் பெறத் தகுதியுடையவராவர். மாவட்டம் "சி" என வகைப்படுத்தப்பட்டு, மத்திய அரசின் மானியம் பெறத் தகுதியுடையதாகிறது. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தோவாளை வட்டம், நிலையான முதலீட்டுத் தொகையில் 15 விழுக்காட்டுத் தொகையோ, அல்லது 18 இலட்சம் ரூபாயோ இதில் எது குறைவாக உள்ளதோ, அத்தொகையினை மாநில மானியத் தொகையாகப் பெறத்தகுதியுடையதாகிறது[1].

தமிழ்நாடு தொழில்துறை முதலீட்டுக் கழகம் லிமிடெட் (ட்டிக்)

மாவட்டத்தின் தொழில் வளர்ச்சியில், தமிழ்நாடு அரசு நிறுவன மான தமிழ்நாடு தொழில்துறை முதலீட்டுக் கழகம், ஒரு குறிப்பிடத்

தக்க அங்கம் வகிக்கிறது. குறிப்பாக, அதிக அளவு வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய சிறிய மற்றும் நடுத்தர தொழிற்துறைகளின் வளர்ச்சிக்கு உதவியளிப்பதையே இந்நிறுவனம் வலியுறுத்துகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் தமிழ்நாடு தொழிற்துறை முதலீட்டுக் கழகத்தின் பணியும், அதனின் சாதனையும் கீழே புள்ளி விவரங்களுடன் விவரிக்கப்பட்டுள்ளது:

1975ஆம் ஆண்டு முதல் 1987 ஆம் ஆண்டு வரை,[2] பயனடைந்த தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கையும், அவற்றிற்கு வழங்கப்பட்ட உதவிக் (கடன்) தொகையும்.

ஆண்டு	*தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை*	*தொகை (ரூ. இலட்சத்தில்)*
1975-76	5	34.65
1976-77	9	72.29
1977-78	3	7.15
1978-79	11	16.07
1979-80	20	8.26
1980-81	97	70.43
1981-82	123	82.32
1982-83	45	32.59
1983-84	95	84.64
1984-85	108	115.17
1985-86	115	83.75
1986-87	124	159.22

அகஸ்தீஸ்வரம், கல்குளம், விளவங்கோடு மற்றும் தோவாளை வட்டங்களின் பகுதிகள், 10 விழுக்காடு மத்திய அரசின், முதலீட்டு மானியத்தை - கைபெறத் தகுதியுடையவை. இது தவிர, தோவாளை வட்டம் மட்டும், 15 விழுக்காடு மாநில அரசு மானியமும் பெறத் தகுதியுடையதாகும்.

தமிழ்நாடு தொழில்துறை வளர்ச்சி கழகம் லிமிடெட் (ட்டிட்கோ)[3]

மாவட்டத்தில், சில நடுத்தர மற்றும் பெரிய அளவிலான தொழில் நிறுவனங்களை உருவாக்க, "ட்டிட்கோ"வும் முனைந்து செயல்பட்டு வருகிறது.

மின்சக்தி

"கோதையார் நீர்மின் ஆற்றல் சார்ந்த, மின்சக்தி திட்டம்" தான், மாவட்டத்திற்கு மின்சக்தி அளிக்கும் ஆதாரத் திட்டமாக விளங்குகிறது. கோதையார் மின் சக்திக்கூடம்-1, மற்றும் கோதையார் மின் சக்தி கூடம் -2 ஆகிய இரண்டு மின் சக்திக் கூடங்கள் மாவட்டத்திலுள்ளன. முதல் மின்சக்திக் கூடம் 60 மெகாவாட், அமைவுக் கொள்ளளவுடன் 2.1.1971-ல் செயல்படத்துவங்கிற்று. இரண்டாவது மின்சக்திக் கூடம் 40 மெகாவாட் அமைவுக் கொள்ளளவுடன், 1971-ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் செயல்படத் துவங்கியது.

துவங்கப்பெற்ற ஆண்டிலிருந்து, இன்றுவரை, இவ்விரண்டு மின் சக்தி விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன[4]:

தொடர் எண்.	ஆண்டு	மின்சக்திக்கூடத்தின் பெயர் (அளவு "எம்.யூல்")	
		கோதையார்-1	கோதையார்-2
1.	1970-71	11	-
2.	1971-72	85	36
3.	1972-73	84	60
4.	1973-74	149	77
5.	1974-75	130	63
6.	1975-76	175	79
7.	1976-77	101	49
8.	1977-78	117	59
9.	1978-79	190	81
10.	1979-80	251	98
11.	1980-81	106	50
12.	1981-82	165	76
13.	1982-83	178	68
14.	1983-84	148	69
15.	1984-85	198	46
16.	1985-86	170	70

பெரிய தொழில்துறை நிறுவனங்கள்[5]

தொடர் எண்.	பெயரும் அமைந்துள்ள இடமும்	உற்பத்தித் தொழில் விவரம்	பணியாட்கள்
(1)	(2)	(3)	(4)
1.	கன்னியாகுமரி மாவட்ட நூற்பாலை லிமிடெட், ஆரல்வாய்மொழி.	பருத்தி நூல்	655
2.	நாகம்மாள் நூற்பாலை, நாகர்கோயில்.	பருத்திநூல்	375
3.	இந்தியன் ரேர் எர்த்ஸ் (அரிய மண் வகைகள்) லிமிடெட், மணவாளக் குறிச்சி.	பயன்தருகிற பல்வேறு மணல் வகைகளை கண்டு பிடித்து, அவற்றை மேம்படுத்துதல்	805
4.	ட்டி.ஏ.சி.ஃளோர் கம்பெனி அம்மந்திவினை	நார்பாய் உற்பத்தி	142
5.	மெஸர்ஸ் பிரபா நீர்கலந்த குடிவகை அலகு, மார்த்தாண்டம்.	மென்மையான பருகு நீர் வகை	51

கனிப்பொருட்களும், கனிப்பொருட்கள் சார்ந்த தொழில்களும்

ஏற்கனவே கூறியது போன்று, மணவாளக்குறிச்சி கடற்கரையி லுள்ள மணல், இல்மினைட், மோனோஸைட் போன்ற கனிவளம் மிகுந்த சத்துக்களையுடையதாகும். மாவட்டத்தில் காணப்படும் ஏனைய கனிப்பொருட்கள், கார்னெட், ஸிர்க்கான், ரூட்டைல் போன்றவை.

முந்தைய திருவாங்கூர் - கொச்சி அரசு, மணவாளக்குரிச்சியில், மணலைப்புத்துருவாக்கும் தொழிற்சாலையைத் துவக்கியது. இங்கு மணலினின்று இல்மினைட் மற்றும் மோனோஸைட் ஆகியவை பிரிக்கப்படுகின்றன. பிரிட்டிஷ் கூட்டரசு, ஜப்பான் மற்றும் ஏனைய அயல்நாடுகளில், இல்மினைட் மிகவும் தேவைப்படுகிறது. மோனோஸைட் ஆல்வாயிலுள்ள இந்தியன் ரேர் எர்த்ஸ் லிமிடெட் நிறுவனத்தால் பயன்படுத்தப்படுகிறது.

1956 ஆம் ஆண்டு மாநில சீரமைப்பின்போது, இந்த நிறுவனம் தமிழ்நாடு அரசால் எடுத்துக் கொள்ளப்பட்டது. அது ஏறத்தாழ, 200 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்துள்ளது. 1956ஆம் ஆண்டின் நிலவரப்படி, ஒரு நாளைய இல்மினைட் உற்பத்தி 40 டன்களாகும்.

பின்னர், அதே ஆண்டு, சங்கங்கள் (கம்பெனிகள்) சட்டத்தின் படி, "திருவாங்கூர் கனிப்பொருள் நிறுவனங்கள் (பிரைவேட்) லிமிடெட்" என்ற கழகத்தைப் பதிவு செய்து, மத்திய அரசு துவக்கியது. இதன் முக்கிய நோக்கம் யாதெனில், தமிழ்நாடு மற்றும் கேரள மாநிலங்கள் உரிமை பெற்ற இத்தொழிலில் ஈடுபட்டுள்ள பல்வேறு தனியார் நிறுவன அலகுகளை ஒன்றாக இணைத்து அமைக்க வேண்டுமென்பதேயாகும்.

பின்னர், 1965ஆம் ஆண்டு, இந்நிறுவனம், "தி இந்தியன் ரேர் எர்த்ஸ் லிமிடெட்" என மறுபதிவு செய்யப்பட்டது. அதன்பின்னர், நிறுவனம் 805 நபர்களுக்கு வேலை வாய்ப்பளித்தது. (இது 1988 ஆம் ஆண்டின் புள்ளிவிவரமாகும்). இந்நிறுவனத்தின் தோராயமான ஆண்டு உற்பத்தி விவரம் கொடுக்கப்பட்டுள்ளது:

இல்மினைட்	72,000 மெட்ரிக் டன்கள்
ஸிர்க்கான்	5,000 மெட்ரிக் டன்கள்
கார்னெட்	5,000 மெட்ரிக் டன்கள்
மோனோஸைட்	4,000 மெட்ரிக் டன்கள்
ஸில்லிமனைட்	300 மெட்ரிக் டன்கள்
ரூட்டைல்	15,000 மெட்ரிக் டன்கள்
ஸிர்க்கோனியம் ஆக்ஸிகுளோரைடு	2 மெட்ரிக் டன்கள்
ஸிர்க்கோனியம் ஆக்ஸைடு	10 மெட்ரிக் டன்கள்

தி இந்தியன் ரேர் எர்த்ஸ் லிமிடெட், மணவாளக்குரிச்சி

தொழில்துறையில் பின் தங்கிய மாவட்டமான கன்னியாகுமரி மாவட்டத்தில், மணவாளக்குறிச்சியிலுள்ள தி இந்தியன் ரேர் எர்த்ஸ் லிமிடெட் நிறுவனம்தான், பெரிய முக்கியமான, தொழில்துறை நிறுவனமாகும். அது கனிப்பொருள் பயனுள்ள ஒரு இன்றியமையாத தொழில் நிறுவனமாகும். அதற்குத் தேவையான மூலப்பொருள், மாவட்டத்தில், மிகவும் அதிக அளவிலுள்ள கனிமச்சத்து அடங்கிய மணல் வகைதான். உண்மையில் கூறப்போனால், கனிமச்சத்து அடங்கிய மணல் வகை மிக அதிக அளவில் இம்மாவட்டத்திலிருப்பதால்தான். இத்தொழிற்சாலை இங்கு அமைக்கப்பெற்றது.

கன்னியாகுமரி மாவட்டம், இயற்கை வளங்களை, விலை மதிப்புள்ள அணுவைச்சார்ந்த கனிப்பொருட்கள் உருவத்தில் பெற்றுள்ளது. அவையாவன :- இல்மினைட், மோனோஸைட், ஸிர்க்கான், ரூட்டைல், கார்னெட், ஸில்லிமனைட், மற்றும் லியோக்ஸின் ஆகியவை. இக்கனிப் பொருட்கள் மாவட்ட முழுமையும் மிகக்

குறைந்த அளவே கிடைத்தாலும், மணவாளக்குறிச்சி கடற்கரையில், வள்ளியார் ஆற்றுவாயிலின் மேற்கே, ஒரு மைல் நீளத்திற்கு, அவை, பரந்து காணப்படுகின்றன. மிடாளம் கடற்கரை ஓரத்தில், சில பருவ காலங்களில் ஓரளவு இவை காணப்படுவதுண்டு. கிழக்குப் பகுதியான வட்டக்கோட்டை மற்றும் லீபுரம் ஆகியவை இக்கனிப் பொருட்கள் காணப்படும் மற்ற இடங்களாகும். உரிய பயன்பெற இந்தியன் ரேர் எர்த்ஸ் லிமிடெட் நிறுவனம் இவ்விடங்களனைத்தினின்றும் மணல் வகைகளைச் சேகரிக்கிறது.

தோற்றம்

தொடர்ந்து பொழியும் விசைமாரியான மழையினால் மேற்கு மலைத் தொடரிலுள்ள பகுதிகள் ஆக்கக் கூறுகளாகப் பிரிக்கப்பெற்று, ஆற்றுக்குக் கொணரப்படுகின்றன. பின்னர் ஆறு இவற்றைக் கடலுக்கு எடுத்துச் செல்கிறது. கடலில் ஏற்படும் கடையும் செயலாலும், கடல் குமுறலினாலும், இம்மணல் வகைகள் அலைகளால் கரையில் கொணர்ந்து சேர்க்கப்படுகின்றன. இக்கனிமப்பொருட்கள் மேற்கு மலைத்தொடர் குன்றுகளில் காணப்படுவதும், மேற்கு மலைத் தொடரில் தோன்றி பின்னர் அரபிக் கடலில் சங்கமம் ஆகும் வள்ளியார் படுகை மற்றும் வள்ளியார் ஆற்றுவாய் ஆகிய இடங்களில் இவை காணப்படுவதும், ஆக இவையனைத்தும் மேற்சொன்ன நம்பிக்கைக்கு வலுவளிக்கின்றன.

வரலாறு

இம்மணல் வகைகளில், கனிப்பொருட்களிலிருப்பதை முதன் முதலில் ஜெர்மானியர்கள்தான் கண்டுபிடித்து, மணலினின்றும் கனிப் பொருட்களைப் பிரிக்கும் இயந்திர சாதனத்தை நிறுவினார்கள். அது வரை, உள்ளூர் மக்கள் அவர்கள் வாழுமிடத்திலேயே உள்ள இந்த அரிய கனிவளத்தின் மதிப்பினை அறியாதிருந்தனர்.

ஜெர்மானிய விஞ்ஞானியான ஸ்காம்பர்க் என்பார், இம்மணல் வகைகளில், மோனோஸைட் என்ற கனிப்பொருள் இருப்பதைக் கண்டு அதனை ஜெர்மனிக்கு ஏற்றுமதி செய்து, அங்குள்ள கிடங்கினில் சேமித்தார். அங்கு மணவாளக்குறிச்சியினின்றும் ஏற்றுமதி செய்யப் பட்ட தென்னை நார் சேமித்து வைக்கப்பட்டிருந்ததும் காணப்பட்டது. தென்னை மட்டையிலிருந்தே தென்னை நார் இம்மணலைக் கொண்டு உருவாக்கப்படுவதால், நார் உற்பத்தி செய்வதற்காகவே, மட்டையில் மணலும் ஏற்றுமதி செய்யப்பட்டு, எடுத்துச் செல்லப்பட்டிருக்கலாம். உற்பத்தியாளர்களும், ஏற்றுமதியாளர்களும், நாருடன் சேர்த்து மண லையும் (அதனுடைய எடையை அதிகரிப்பதற்காக) எடுத்துச் சென்றிருக்கலாமெனவும் யூகிக்க முடிகிறது. எவ்வாறாயினும், மோனோஸைட் கனிப்பொருள் இருப்பதைக் கண்டு கொண்டு,

ஜெர்மானியர்கள் மணவாளக்குறிச்சிப் பகுதிக்கு வந்தது தெரிய வருகிறது.

மோனோஸைட் என்ற கனிப்பொருளில் தோரியம் கலந்திருந்த தால், அந்தக் காலத்தில் அது மிகவும் மதிப்பு மிக்க கனிப்பொருளாகக் கருதப்பட்டது. தோரியம் என்பது, சுடரொளி விளக்குகளின் வலைக்குப் பயன் படும் கதிரியக்க விசையுடைய உலோகத் தணிமமாகும். முன்பு சுடரொளி விளக்கு வலை தயாரிக்கும் தொழில், வளமிக்க தொழிலாக இருந்ததால், அத்தொழிலுக்கு, தோரியம் மூலப்பொருளாகப் பயன் படுத்தப்பட்டது. எனவே, கடற்கரை முழுவதும், மோனாஸைட் கலந்த மணல், மக்களால் பயன்படுத்தப்படாமல் கிடப்பதை ஜெர்மானியர்கள் கண்ணுற்று, திகைப்படைந்தார்கள். அவர்கள் நேரத்தை விணடிக்காமல், உடனடியாக, மணலினின்றும் மோனோஸைட்டைப் பிரித்தெடுக்க, 1911 ஆம் ஆண்டு, ஒரு தொழிற்சாலையைத் துவக்கினார்கள். பின்னர், விளக்கிற்கு மின் சக்தியைப்பயன்படுத்தத் துவக்கியபின், சுடரொளி விளக்குவலைத் தொழில் படிப்படியாக நசிந்தது. தொடர்ந்து மோனோஸைட்டிற்குத் தேவையும் குறையத் துவங்கியது. எனினும், மற்ற கனிப்பொருட்களான, இல்மினைட், ஸிர்க்கான், ரூட்டைல் ஆகிய கனிப்பொருட்கள் மணவாளக்குறிச்சி ஆற்று மணலில் கலந்திருப்பது பின்னர் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர், அவற்றை சிக்கனமாக மணலி னின்று பிரித்தெடுக்கும் முறை கையாளப்பட்டது.

முதலாம் உலகப்போர் காலத்தில், ஆங்கிலேயர்கள், மணல் தொழில் துறையினை, ஜெர்மானியரிடமிருந்து கைப்பற்றி, நாடு சுதந்திரம் அடையும் வரை, அவர்களது கட்டுப்பாட்டினில் வைத்திருந்தனர். சில தனியார் நிறுவனங்கள் அப்போது இத்தொழிலினை நடத்திவந்தன. அவற்றில் பெரும்பாலானவை, ஆங்கிலேயரால் நடத்தப்பெற்றவை. நாடு சுதந்திரமடைந்த பின்னர், அவையாவும் தேச உடமையாக்கப்பட்டன. தொடர்ந்து மோனோஸைட் ஏற்றுமதியும் தடை செய்யப்பட்டது.

தேச உடைமையாக்கப்பட்ட பின்னர், மாநில அரசு இத்தொழிலைத் தன்வசம் பொறுப்பேற்றுக்கொண்டது.

1965ஆம் ஆண்டு, "தி இந்தியன் ரேர் எர்த்ஸ் கம்பெனி", இத் தொழிலைப் பொறுப்பேற்றது. இந்த கம்பெனி, இப்பகுதியின் மணல் தொழில்துறைக்கு ஒரு வரப்பிரசாதமாகும். ஆழ்ந்த திறனுள்ள அக்கம் பெனியில் நிருவாகம், தற்கால வழக்குக்கேற்ற புதுமைப்பாங்குடன் இயந்திரசாதனங்களை முறையாக அமைத்து, மற்றும் இக்கால தொழில் நுட்பத்திறனை செயல் முறைப்படுத்தியுள்ளது. இந்த செயல்முறை தொடர்ந்து இன்றும் பின்பற்றப்பட்டு வருகிறது[5].

ஆறு,துறைமுகம் முதலியவற்றில் மண்பறித்து ஆழமாக்கும் இயந்திரத்தைப் பயன்படுத்துதல், கனிமப்பொருளைப் பிரித்தெடுத்தல்

மற்றும் ஈரத்தைப் போக்குதல் போன்ற நவீன முறைகள் 1986 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இவை, மேலும் சில அலகு களைத்துவக்கிடவும், மணவாளக்குறிச்சிக்கு அருகாமையில் மேலும் சில இடங்களைத் தேர்ந்தெடுக்கவும் வழி வகுத்துள்ளன.

நெசவுத் தொழிற்துறை

1. நாகம்மாள் நெசவு ஆலை, நாகர்கோவில் தனியார் நிறுவனங் களில், ஒரு பெரிய தொழிற்சாலையாகும். ஆயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்தைந்தாம் ஆண்டு துவக்கப் பெற்ற இவ்வாலை, கன்னியாகுமரி மாவட்டத்தில் இது போன்று துவங்கப்பட்ட ஆலைகளில் முதலாவ தாகும். ஆலையின் கொள்ளளவு 12,600 நூற்புக்கதிராகும். ஆண்டின் உற்பத்தி, 5000 பேல் (பெருங் கட்டு) திருத்த நூல் ஆகும். இவ்வாலையில், ஏறத்தாழ 450 நபர்கள் பணியாற்றுகிறார்கள்.

2. கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை லிமிடெட், ஆரல்வாய்மொழி

தமிழ்நாட்டிலுள்ள 17 கூட்டுறவு நூற்பாலைகளில் இதுவும் ஒன்றாகும். நாகர்கோவிலிலிருந்து, 14 கிலோ மிட்டர் தொலைவிலுள்ள ஆரல்வாய்மொழி என்ற இடத்தில், இவ்வாலை அமைந்துள்ளது. ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்தி மூன்றாம்மாண்டு, துவக்கப்பட்ட இவ்வாலை விற்பனைக்கு நூல் உற்பத்தி செய்ய டிசம்பர் 9, 1965-ந் தேதி துவங்கியது. துவக்கத்தில் 12,000 நூற்புக்கதிர்கள் உற்பத்தி செய்து, பின்னர், அது, நாளாவட்டத்தில், அதாவது 1979 ஆம் ஆண்டு, 24,960 ஆக உயர்ந்தது. ஜூலை, 31, 1986 தேதியன்று, இவ்வாலையில் 909 தொழிலாளர்கள் பணியாற்றி வந்தனர்.

1980 ஆம் ஆண்டு, இவ்வாலையில் 951 உறுப்பினர்களிருந்தனர் அவர்கள் செலுத்தியிருந்த மூலதன பங்குத் தொகை ரூ. 72.55 இலட்ச ரூபாயாகும். அதில், அதிகாரம் பெற்ற பங்கு தொகை 100 இலட்ச ரூபாயாகும். தேவைப்படும் மூலப்பொருளான பஞ்சு, இந்தியா பருத்திக் கழகம், பருத்தி பயிரிடுவோர் இணையம், மகாராஷ்டிரம், பஞ்சாப், குஜராத் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், சென்னை, ஆகியோரிடமிருந்து விலைக்கு வாங்கப்படுகிறது.

1980 முதல் 1986 வரையிலான ஆண்டுகளின் உற்பத்தி விவரம், ஆண்டு வாரியாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

ஆண்டு	*(40 இழை) உருமாற்று உற்பத்தி*	*மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்)*
1980	11,88,019	363.82
1981	16.50.,099	467.66
1982	17,69,775	553.37
1983	14,72,307	484.04
1984	20,71,523	636.86
1985	19,66,892	649.46
1986	புள்ளிவிவரங்களில்லை	368.03

1985 ஆம் ஆண்டு, இயந்திரங்கள் பயன்படுத்துதல் மற்றும் நூற்புக்கதிர் உற்பத்தி ஆகிவற்றில், தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவுத் துறையைச் சார்ந்த நூற்பாலைகளில், இவ்வாலை முதன்மையாகத் திகழ்ந்தது.

விற்பனை

இவ்வாலையில் உற்பத்தியாகும் நூலில் பெரும்பகுதி தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்குத்தான் விற்பனை செய்யப்படுகிறது. அதனுடைய கிடங்குகளின் மூலம் உற்பத்தியில் 75 விழுக்காடு நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்படுகிறது. ஆலையின் உற்பத்தியில் 20 விழுக்காடு கூம்பு வடிவிலுள்ளன. அவை, பம்பாயிலுள்ள இயந்திரத்தறி அலகுகளுக்கு, பம்பாயிலுள்ள பொது நூல் விற்பனைக் கிடங்கு மூலம், ஒப்படைப்புச் செயல் அடிப்படையில் விற்கப்படுகின்றன. பம்பாய்ச் சந்தையில், 60 இழை கூம்பு வடிவ நூலிற்கு, நல்ல வரவேற்பு உள்ளது. எனவே, அங்கு இந்த அளவு இந்நூல் தேவைப்படுகிறது. ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பதாம் ஆண்டு முதல் 1985ஆம் ஆண்டு வரை, விற்பனை மற்றும் ஈட்டிய இலாப விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

தொடர் எண்.	ஆண்டு	விற்பனை (ரூபாய் இலட்சத்தில்)	செயல்திறன் முடிவு முழுமொத்த இலாபம்	(ரூபாய் இலட்சத்தில்) ஆண்டிற்குரிய இலாபம்	நிகர இலாபம்
1.	1980	345.40 (+)	58.45 (+)	54.05	(+) 17.67
2.	1981	476.34 (+)	18.75 (-)	13.15	(-) 13.15
3.	1982	576.44 (+)	58.78 (+)	26.40	(+) 13.25
4.	1983	471.12 (+)	21.38 (-)	7.44	(-) 7.44
5.	1984	688.21 (+)	24.35 (-)	5.57	(-) 13.01
6.	1985	646.67 (+)	51.26 (-)	20.48	(+) 7.47

(தற்காலிகம்)

ஆலைக்குத் தேவைப்படும் மின்சக்தி அளவு 1250 கே.வி.ஏ. ஆகும், ஒரு 1000 கே.வி.ஏ. மின்னியல் விசைமாற்றமைவு, பொருத்தப் பட்டுள்ளது. கூடுதல் மின்னோட்ட அளவு 250 கே.வி.ஏக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மற்றொரு 500 கே.வி.ஏ., மின்னியல் விசை மாற்றமைவு அமைக்கும் திட்டம், நிருவாகத்தில் தீவிர பரிசீலனையி லிருந்து வருகிறது. தற்போது நான்கு மின் ஆற்றல் உண்டாக்கும் பொறி, இரண்டு அலையில் அமைக்கப்பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றும் 1142 கே.வி.ஏ. கொள்ளளவு கொண்டாதாகும். மின்

சக்தி குறைவாகக் கிடைக்கும் நேரத்திலோ, அல்லது மின் சக்தி தவறும் நேரத்திலோ, ஆலையின் பணியை மேற்கொள்ள. இப்பொறிகள் பயன்படுத்தப்படுகின்றன.

மென்மையான பருகுநீர் வகை இயந்திர சாதனங்கள் பிரபா நீர்கலந்த குடிவகை (பி) லிமிடெட், மார்த்தாண்டம்

தாகம் தணித்திடவும், கன்னியாகுமரி மற்றும் கேரள மாநிலத்தைச் சேர்ந்த அண்டைப்பகுதி வாழ் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், பம்பாயைச் சேர்ந்த பார்லே பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தார், மென்மையான பருகு நீர் வகைத் தொழிற்சாலையை நிறுவ, பிரபா நீர் கலந்த குடிவகை அலகிற்கு அங்கீகாரம் வழங்கினார் கள், அவர்களும், நாகர்கோவில், திருவனந்தபுரம் தேசிய நெடுஞ் சாலையில், நாகர்கோவிலிலிருந்து 30 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள மார்த்தாண்டம் என்ற இடத்தில் இத் தொழிற்கூடத்தை நிறுவினார்கள்.

இத்தொழில்சாலை, 1.12 கோடி ரூபாய் செலவில், கடந்த 1987 ஆம் ஆண்டு, பிரபா நீர் கலந்த குடிவகை (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தால் துவங்கப்பட்டது.[7] அது "கோல்ட் ஸ்பாட்", "லிம்கா", "தம்ஸ் அப்" மற்றும் "பிஸ்லேரி" சோடா போன்ற மென்மையான பருகு நீர் வகைகள் உற்பத்தி செய்கிறது. அதனின் உற்பத்தி, ஒரு நாளைக்கு நான்கு இலட்சம் குப்பிகளாகும். இவை தயார் செய்வதற்கான மூலப் பொருட்களாகிய நறுமணப் பொருள், கரியமில வாயு மற்றும் நரந்தக்காடி ஆகியவை, அஹமதாபாத், கொச்சி மற்றும் பம்பாய் ஆகிய இடங்களிலிருந்து பெறப்படுகின்றன. சர்க்கரையும் இதர பொருட்களும், உள்ளூரிலேயே கிடைக்கின்றன. 1988 ஏப்ரல் மாத நிலவரப்படி, இத் தொழிற்சாலை 69 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்துள்ளது.

சிறிய அளவிலான தொழிற்சாலைகள்

நுகர்வோர் நலன் கருதி, வேறு சில சிறிய அளவிலான தொழிற் சாலைகளும் இம்மாவட்டத்தில் துவங்கப்பட்டுள்ளன. அவையாவன : தீப்பெட்டி செய்தல், முந்திரி செய்முறை, மரச்சாமான்கள் செய்தல், ஒடுகள் செய்தல், உப்பு தயார் செய்யப்பயன்படும் கட்டை மற்றும் மேலடைப் பகட்டு, மென்பூச்சு வகை, சுண்ணாம்பு நீர், சிமிண்ட் பொருட்கள் செய்தல், தோல் பொருட்கள் செய்தல், மற்றும் பிளாஸ்டிக் (வார்ப்புப்பொருள்) பொருட்கள் செய்தல் ஆகியவை.

மாவட்டத்தில், சிறு அளவிலான தொழிற்சாலைகள் பெருகி வருவது கீழ்க்கண்ட புள்ளி விவரங்களை நோக்கின் தெரியவரும்:

ஆண்டு	இயங்கிவரும் சிறு அளவிலான தொழிற்சாலைகளின் எண்ணிக்கை	முதலீடு (ரூபாய் இலட்சத்தில்)	உற்பத்தி (ரூபாய் கோடியில்)	வேலை வாய்ப்பு பெற்றுள்ள நபர்களின் எண்ணிக்கை	தொழிற்சாலை வளர்ச்சி குறித்த விழுக்காடு
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1975-76	258	115.30	1.83	3160	ஆதார ஆண்டு
1976-77	360	147.75	2.93	8200	12%
1977-78	456	180.55	4.13	21273	27%
1978-79	522	241.06	6.98	24302	26%
1979-80	539	231.28	9.73	24472	2.40%
1980-81	664	436.95	13.43	29155	19%
1981-82	755	*472.00	**14.23	***32180	
1982-83	824	496.00	15.87	36600	
1983-84	900	526.00	17.10	38300	
1984-85	1149	611.00	18.95	41600	
1985-86	1480	683.62	20.98	48740	
1986-87	1683	817.69	24.14	51390	
1987-88	1903	907.02	27.03	57600	

மார்ச், 31, 1988 நிலவரப்படி, (*,**,*** - தோராயமான புள்ளிகள்) கன்னியாகுமரி மாவட்டத்தில் இயங்கி வரும் சிறு அளவிலான தொழிற்சாலை அலகுகள் குறித்த விவரங்கள்:

தொடர் எண்.	தொழில் வகைப்பாடு குறித்த விவரங்கள்	சிறு அளவிலான தொழிற்சாலை அலகுகளின் எண்ணிக்கை (நிரந்தரம்)
(1)	(2)	(3)
1.	உணவு மற்றும் உணவுப் பொருட்கள்	285
2.	நீர்கலந்த குடிவகை மற்றும் புகையிலைப் பொருட்கள்	8
3.	பருத்தி நெசவுப் பொருட்கள்	44
4.	நெசவுப் பொருட்கள்	135
5.	மரம் மற்றும் மரப் பொருட்கள்	237
6.	காகிதம் மற்றம் காகிதப்பொருட்கள்	148
7.	தோல் மற்றும் தோல் சார்ந்த பொருட்கள்	35
8.	இரப்பர், பிளாஸ்டிக் (வார்ப்புப்பொருள்) கரி மற்றும் தாது எண்ணெய் பொருட்கள்	92

(1)	(2)	(3)
9.	வேதியியல் மற்றும் வேதியியல் சார்ந்த பொருட்கள்	240
10.	உலோகம் சாராத கனிவளமிக்க பொருட்கள்	174
11.	ஆதார உலோகம் மற்றும் மட்ட உலோகம் (உலோகக் கலப்பு)	8
12.	உலோகப் பொருட்கள் மற்றும் பகுதிகள்	215
13.	மின் ஆற்றல் வாய்ந்த இயந்திர அமைப்பு மற்றும் ஆய்கருவி பழுது பார்த்தல்	50
14.	போக்குவரத்துக் கருவிகள் மற்றும் உதிரி பாகங்கள் பழுது பார்த்தல்	70
15.	நார்ப் பொருட்கள்	42
16.	ஏனைய ஆக்கத் தொழில் மேற்கொள்ளும் தொழிற்சாலைகள்	50
	மொத்தம்	1903

தொழிற்பேட்டைகள்

தொழிற்பேட்டைகள் சிறு அளவிலான தொழில் நிறுவனங்களுக்கு தொழில் நுட்பமான வழிவகையறிவினை அளிப்பதுடன், உள்ளமைப்பு வசதிகளையும் செய்து கொடுக்கின்றன. தொழிற் கூடங்கள் அமைத்தல், தொழில் அதிபர்களுக்கு, தவணை முறையிலோ அல்லது வாடகை அடிப்படையிலோ தொழிற்சாலைகள் அமைக்க, வளர்ச்சியுற்ற தொழிற் கூடங்களை ஏற்படுத்திக் கொடுத்தல் ஆகியவை, இவற்றில் அடங்கியவை. தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் (சிட்கோ) தான் முதன்மையான வாணிகத்துறை நிறுவனமாகும். இது இரண்டு தொழிற்பேட்டைகளை - ஒன்று மார்த்தாண்டத்திலும் மற்றொன்று நாகர்கோவிலிலும் நிறுவியுள்ளது. அவற்றைப் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

தொழிற்பேட்டை, மார்த்தாண்டம்

இத்தொழிற்பேட்டை, மார்த்தாண்டத்திலிருந்து, மூன்று கிலோ மீட்டர் தொலைவில், கப்பிக்காடு என்ற இடத்தில் அமைந்துள்ளது. இது 1959 ஆம் ஆண்டு 7.50 ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்தில் அமைக்கப்பட்டது. ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்தாராம் ஆண்டு ஒரு தொழில் அலகு நிறுவப்பட்டுள்ளது.

தொழிற்பேட்டை, நாகர்கோவில்

நாகர்கோவிலிருந்து, இரண்டு கிலோ மீட்டர் தொலைவிலுள்ள கோனம் என்ற இடத்தில் இத்தொழிற்பேட்டை அமைந்துள்ளது. அது, கடந்த 1963 ஆம் ஆண்டு 20.85 ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்தில் நிறுவப்பட்டது. அதில், வளர்ச்சியடைந்த 27 மனையிடங்கள் ஏற்படுத்தப்பட்டு, 27 தொழில் அலகுகள் துவக்கப்பட்டுள்ளன.

இவை தவிர, "சின்னஞ்சிறிய அளவிலான தொழில் கூடங்கள் அமைக்கும் திட்டத்தின், உரிய தேவைகளைப் பூர்த்தி செய்ய, எட்டு முறையான கூடங்கள் அமைக்கப்பட்டு, அவையும் முழுமையாக சிறு தொழிலதிபர்களால் பொறுப்பேற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. இச்சிறு தொழிற்சாலைகள் திண்ணிய இரும்புச் சாமான்கள், குழாய்கள், முரசுகள், மின் சக்திக்கருவிகள், இரப்பர் பொருட்கள் மற்றம் ஐ.வி. நெகிழ்ச்சி - ஊறல் நீர், ஆகியவற்றை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ளன.

சிறு தொழில் வளர்ச்சிக் கழகத்தில் சிட்கோ திட்டங்கள்-முக்கிய மூலப்பொருட்கள் வழங்கும் திட்டம்

இத்திட்டத்தின்படி. பற்றாக்குறையான மூலப்பொருட்களாகிய இரும்பு மற்றும் எஃகு, சுட்ட நிலக்கரி, திண்ணிய கன்மெழுகு, கொழுப்புப்படிவமுள்ள அமிலங்கள், பொட்டாஸியம் குளோரேட் முதலியவை, சிறு அளவிலான தொழிற்சாலை அலகுகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. கன்னியாகுமரி மாவட்டத்தில் வழங்கப்பட்டு வரும் மூலப்பொருட்களின் விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன:

தொடர் எண்.	*மூலப்பொருட்களின் பெயர்*	*பதிவு செய்யப்பட்ட அலகுகளின் எண்ணிக்கை*	*"சிட்கோ"வின் பணியினை பயன்படுத்திக் கொண்ட அலகுகளின் எண்ணிக்கை*
1.	இரும்பு மற்றும் எஃகு (எம்.எஸ். தட்டுகள், எச்.ஆர். தகடுகள், கூம்புகள், திரவத்தைத் தாங்கிய குழாய் அமைப்புகள், ஜி.பி. மற்றும் ஜி.ஸி. தகடுகள ஆகியவை)	20	20
2.	தீக்குச்சி மெழுகு	4	2
3.	திண்ணிய கன்மெழுகு / தரவகை - 2	32	32
4.	பொட்டாஸியம் குளோரேட்	29	29

2. வளர்ச்சிப் பணிகள்

தொழில்துறையில் பின்பட்ட பகுதிகளில், அமைந்துள்ள சிறிய அளவிலான தொழிற்சாலைகள், *மத்திய முதலீட்டு மானியம் / மாநில முதலீட்டு மானியம் /* பெறத்தகுதியுடையவை. அவற்றின் விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன:

தொடர் எண்.	வட்டத்தின் பெயர்	வகை	தகுதியுடைய மானியத்தின் விழுக்காடு	மத்திய முதலீட்டு மானியம் அல்லது மாநில முதலீட்டு மானியம் (ம.மு.மா / மா.மு.மா)
1.	கல்குளம்	'சி'	10 விழுக்காடு	ம.மு.மா.
2.	அகஸ்தீஸ்வரம்	'சி'		
3.	விளவங்கோடு	'சி'		
4.	தோவாளை	'பி'	10 விழுக்காடு அல்லது 15 விழுக்காடு	ம.மு.மா அல்லது மா.மு.மா

10 விழுக்காடு மத்திய முதலீட்டு மானியத்தின் கீழ் மானியம் வழங்க ஒப்புதலளிக்கப்பட்டு, மானியமும் வழங்கப்பட்ட விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன:

ஆண்டு	மானியம் ஒப்புதலளிக்கப்பட்டவை		மானியம் வழங்கப்பட்டவை	
	தொழிற்சாலைகளின் எண்ணிக்கை	தொகை (ரூபாய் இலட்சத்தில்)	தொழிற்சாலைகளின் எண்ணிக்கை	தொகை (ரூபாய் இலட்சத்தில்)
1983-84	2	0.38	-	-
1984-85	4	0.86	2	0.38
1985-86	11	1.93	9	2.03
1986-87	12	3.04	8	2.22
1987 அக்டோபர் மாத நிலவரப்படி	2	0.37	-	-
மொத்தம்	31	6.58	19	4.63

3. உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்ய உதவிடும் திட்டம்

இத்திட்டத்தின்படி, பல்வேறு அரசுத்துறைகள், அரசுத்துறை நிறுவனங்கள், கழகங்கள், உள்ளாட்சித்துறை நிறுவனங்கள், ஆகிய வற்றால், அவைகளின் தேவைக்குக் கோரப்படும் ஒப்பந்தப்புள்ளிகள், விசாரணைகள் ஆகியவற்றில் சிறு அளவுள்ள தொழிற்சாலைகள் சார்பாக "சிட்கோ" கலந்து கொண்டு, அவற்றின் உற்பத்திப் பொருட் களை விற்பனை செய்ய, உரிய உதவிகளை அளிக்கிறது. உரிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

கன்னியாகுமரி மாவட்டத்தில், உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யும் திட்டத்தின்கீழ், பதிவு செய்யப்பட்டுள்ள அலகுகளின் எண்ணிக்கை 32
உதவி பெற்ற அலகுகளின் எண்ணிக்கை 8

கூட்டுறவு தொழிற்பேட்டைகள்

கன்னியாகுமரிக்கு அருகாமையில், வட்டக்கோட்டை என்ற இடத்தில் ஒரு கூட்டுறவு தொழிற்பேட்டை நிறுவிட, தமிழ்நாடு அரசு, 80 இலட்ச ரூபாய் நிதி வழங்கியுள்ளது.

மாவட்ட தொழில் மையம்

மாநில அரசின் தொழிற் துறையினுடைய மாவட்ட அலகு, மாவட்ட தொழில் மையமாகும். இது, தனது தொழிலதிபர்களைத் தேர்ந்தெடுத்து அவர்கள் சிறிய தொழிற்சாலைகள் அமைக்க, உதவியளிக்கிறது.

நாகர்கோவிலுக்கு அருகாமையில் கோணம் என்ற இடத்தில், கடந்த ஆகஸ்ட், 1, 1978 ஆம் தேதியன்று, மாவட்ட தொழில் மையம் துவங்கப்பட்டது. உரிமங்கள் பெறுதல், நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் நிதியளிக்கும் நிறுவனங்களான "சிட்கோ" மற்றம் "ட்டிக்" ஆகியவற்றினின்றும் நிதி உதவிபெறுதல் மற்றும் மூலப் பொருட்களைப் பெறுதல் ஆகியவற்றிற்காக சிறு தொழிலதிபர்களுக்கு, இம்மையம் உதவியளிக்கிறது.

ஆகஸ்ட், 1, 1978 முதல் டிசம்பர் 28, 1984 முடிய, பல்வேறு தொழிற் சாலைகளுக்கு இம்மையம் அளித்த துணை நலன்கள் தொடர்பான விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன:

தொடர் எண்.	சிறுதொழில் நிறுவனங்களின் விவரம்	விண்ணப் பங்களின் எண்ணிக்கை	ஒப்புதலளித்து பெறப்பட்ட தொகை (ரூபாய்)	31.12.1986 நிலவரப்படி	
				இனங்கள்	வேலை வாய்ப்பு பெற்றவர் எண்ணிக்கை
1.	கைத்தறி	33	81,050	-	-
2.	கிராமக்கைத்தொழில்	67	2,74,900	244	560
3.	கைவினைத்திறன்	136	1,84,500	3134	4448
4.	சுய வேலைவாய்ப்பு	6	10,800	877	103.2 இலட்சம்
5.	சிறு அளவிலான தொழிற் அலகுகள்	174	1,22,18,025	1690	29,304
6.	நார் உற்பத்தி செய்யும் அலகுகள்	102	9,86,500	310	3,000
			1,37,55,775		

படித்த வேலையற்ற இளைஞர்களுக்கு, உதவியளிக்க, மத்திய அரசு ஆதரவில் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தினை நடைமுறைப் படுத்தும் பணியினையும் மாவட்டத் தொழில் மையம் கவனித்து வருகிறது[8].

முந்திரிக்கொட்டைத் தொழிற்சாலை

முந்திரிக்கொட்டை உருவாக்கம், முக்கியமாக ஏற்றுமதி செய்யப் படும் பருவகால தொழிலாகும். 1950-ல் தான் இத்தொழில் முதன்மை யான தொழிலாகக் கருதப்பட்டது. அதிலிருந்து முந்திரிக்கொட்டைத் தொழிற்சாலைகள் அதிகரித்து வருகின்றன. பாலுகலில் உள்ள தேசிய முந்திரிக்கொட்டை நிறுவனம், பாலவிலையிலுள்ள விஜயலட்சுமி முந்திரிக்கொட்டை தொழிற்சாலை மற்றும் ராசு விலாஸ், வறுக்கும் தொழிற்கூடம் ஆகியவைதான் மாவட்டத்திலுள்ள முதன்மையான தொழில் அலகுகளாகும். மற்றவை சிறிய அலகுகளேயாகும். அனைத்தையும் சேர்த்து, மாவட்டத்தில் மொத்தம் 196 முந்திரி தொழிற்சாலைகள் உள்ளன.

பெண்கள் தான், வறுத்த கொட்டையினின்றும் ஒடுகள் நீக்கும் பணியினையும், இயந்திரத்தின் உதவியால் வறுத்தெடுக்கப்பட்ட கொட்டைகளினின்றும் பருப்பை வெளிக்கொணரும் பணியினையும் மேற்கொண்டு வருகிறார்கள்.

கைவினை[9]

பெருமைக்குரிய மரபினைச் சார்ந்த இந்திய கைவினைப் பொருட்கள், அவற்றின் கலை அம்சம் மற்றும் பயனெறி முறைப்பண்பு ஆகியவற்றிற்காக, அனைவரின் பாராட்டுதலையும் பெற்றவையாகும். அதனால், நம் நாட்டிலும் சரி, வெளிநாட்டிலும் சரி, மிகவும் மதிப்பு வாய்ந்த ஏற்றுமதிப் பொருட்களாக இவை விளங்குகின்றன. மாவட்டத்தின் முக்கிய கைவினை, மரம் செதுக்குதல், கல் செதுக்குதல், உலோகப்பொருட்கள் செய்தல், இழைவார் மற்றும் பூந்தையல் வேலை செய்தல், கோவில் நகைகள் செய்தல், கோரைப்புல் பாய் முடைதல், மரத்தை மென்தகட்டு வடிவாக உருவாக்குதல், இசைக்கருவிகள் செய்தல், மற்றும் நார்ப்பொருள் கைவினை ஆகியவையாகும்.

நார்ப்பொருள் கைவினை

இது, மாவட்டத்திலுள்ள பிரசித்திபெற்ற கைவினைகளி லொன்றாகும். இதற்கு வேண்டிய மூலப்பொருளான வாழை உறை (கூடு) அதிக அளவில் இங்கு கிடைக்கிறது. மேலும், கண்கவர் பொருட்களை உருவாக்கும் செய் திறமிக்க கைவினைக் கலைஞர்கள் பலர் இம்மாவட்டத்தில் உள்ளதால், உற்பத்தியைப் பெருக்கி, மாநிலத் தின் எப்பகுதியிலும், குறிப்பாக, சுற்றுலா மையமான கன்னியாகுமரியில்

இப்பொருட்களுக்கு எப்பொழுதுமே நல்ல கிராக்கி உள்ளது. கிராமப்புற பெண்களுக்கு நல்ல வேலைவாய்ப்பு ஏற்படவும் அவர்களது ஆற்றல் வளத்தை மேம்படுத்தவும், இக்கைவினைத் தொழிலை, ஊக்குவித்து, பிரபலமாக்கிட, மத்திய, மாநில அரசுகள் பல திட்டங்கள் உருவாக்கி யுள்ளன. அத்திட்டங்களிலடங்கியவை - பைகள் முடைதல், தேநீர் தட்டுகள், மேஜை விரிப்புகள், கதவு மறைப்புகள், அழகுநயமிக்க பொம்மைகள், பூ வைக்கும் கொள்கலங்கள் மற்றும் சுவற்றை அலங் கரிக்கும் கையேடு போன்ற கண்கவர் தாள் போன்ற அமைப்பையுடைய வைகள் ஆகியவையாகும்.

நார்த்துகளைக்கூட வினாக்காது, அவற்றை சாயம் தோய்த்து வண்ணங்களாகப் பயன்படுத்துகின்றனர்.

நம் நாட்டிலேயே கேரள மாநிலத்திற்கு அடுத்தவாறு, கன்னியா குமரி மாவட்டம்தான், அதிக அளவில் நாரினாலான பொருட்களை உற்பத்தி செய்கிறது. புவியூர், நாகர்கோவில், திருவரம்பு, சுங்கங்கடை, மணலிக்கரை, ஆரல்வாய்மொழி, கொல்லல், பகோடு, இடைக்கோடு, அருமனை மற்றும் காட்டாத்துரை, ஆகியவை இப்பொருட்கள் உற்பத்தி செய்யப்படும் முக்கிய மையங்களாகும்.

தரமிக்க நார்ப்பொருள் உற்பத்திப் பணியாளர் கூட்டுறவு குடிசைத் தொழில் சங்கம், 300 பெண் உறுப்பினர்களைக் கொண்ட தாகும். இது, தமிழ்நாடு, காதி மற்றும் கிராம கைத்தொழில் வாரியத்தின் உதவியோடு துவங்கப்பட்டுள்ளது. இதன் உறுப்பினர்களுக்கு, நார் கைவினையில், மூன்று மாதங்களுக்குத் தீவிர பயிற்சியளிக்கப்படுகிறது.

மரம் செதுக்குதல்

இம்மாவட்டத்தில், மரம் செதுக்கும் தொழில், மிகவும் பிரசித்தி பெற்று விளங்குகிறது. இன்றுகூட, இக்கலைத்திறனை, கோவில் களிலுள்ள கதவுகளிலும், பத்மநாபபுரம் அரண்மனை போன்ற இடங்களிலுள்ள மரச் சாமான்களிலும் காணலாம். எனினும், இக்கை வினையினை சரியாக ஊக்குவிப்பதலில்லையாதலாலும், உற்பத்திச் செலவு மிகவும் அதிகமாக இருப்பதாலும், இம்மரபு சார்ந்த தொழில் தற்போது சிறிது சிறிதாகத் தேய்ந்து வருகிறது. எனவே, இத்தொழில் தற்போது மிகவும் பின் தங்கிய நிலையிலிருப்பதைக்காண முடிகிறது.

இந்நிலையினையுணர்ந்து, இக்கைவினையினை ஊக்குவிக்க, தமிழ்நாடு கைவினை வளர்ச்சிகழகம் லிமிடெட், நாகர்கோவிலில் பூம்புகார் கோவில் தேர் பயிற்சி மையத்தைத் துவக்கியுள்ளது. இம்மையத்தில், கைவினை மரப்பொருட்கள் செதுக்குதல், கோவில் தேர்கள் கட்டுதல் மற்றும் மரக் கதவுகள் செதுக்கிச் செய்தல் போன் றவை குறித்து, நன்கு பயிற்சியளிக்கப்படுகிறது. உற்பத்தியாகும்

பொருட்களை முறையாக விற்பனை செய்ய, பூம்புகார் நிறுவனத்தால், கன்னியாகுமரியில் விற்பனை மையத்துடன் கூடிய ஒரு காட்சிக்கூடம் அமைக்கப்பட்டுள்ளது. கன்னியாகுமரியில் இப்பொருட்களுக்கு நல்ல வரவேற்பு உள்ளது.

கல் செதுக்குதல்

நாஞ்சில் நாட்டைப் பாண்டியர்கள் ஆண்ட காலத்தில், மிகத் தாராள மனப்பான்மையில் கோயில்களைக்கட்டி, கோவில்தூண்கள் உட் கூரைகள் ஆகியவற்றிற்குப் பயன்படுத்தப்பட்ட கற்களில் மிகச்சிக்கலுடன் உருவாக்கிய உருவங்களைச் செதுக்கிடச் செய்து, மரபு சார்ந்த இக்கலையினைத் தழைத்தோங்கச் செய்தார்கள். மிக நேர்த்தியான முறையில், செதுக்கப்பட்ட ஒப்பனை செய்யப்பட்ட சிற்பங்கள், சுசீந்திரத்திலுள்ள தாணுமாலயசுவாமி கோயிலில் சிறப்புற்று விளங்குகின்றன. உண்மையிலேயே சுற்றுலாப் பயணியொருவர், இவற்றைக் கண்ணுற்றால், வியப்பு மேலிட்டு, அதனில் ஒன்றிவிடும் நிலை உருவாகிறது. இருபதாம் நூற்றாண்டிலும். இம்மரபு சார்ந்த கலை செழித்தோங்குகிறது. உதாரணமாக, கன்னியாகுமரியில் மிக உன்னிப்பாகவும், நேர்த்தியாகவும் நீல மற்றும் சிவப்பு நிறமுள்ள கருங்கற்களால் உருவாக்கப்பட்டுள்ள, விவேகானந்தர் நினைவு மண்டபத்தை, இதற்குச் சான்றாகக் கூறலாம். மண்டபத்தின் சிகரத்திற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கும் சிவப்பு நிற கருங்கற்கள், உலகோரனைவரின் பாராட்டுதலையும் பெற்ற தனித்தன்மை வாய்ந்ததாகும். இவ்விரு கற்கட்டிட வேலையமைப்புகளும், இப்பகுதி கைவினைக் கலைஞர்களின் மரபு சார்ந்த கைவினைத்தரத்திற்கும் கட்டிடக் கலை நுட்பத்தை அவர்கள் பயன்படுத்தியுள்ள ஆற்றலுக்கும் எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. வழிவழி வந்த இக்கலைத்திறன், மேலும் இப்பகுதியில் வளர்ச்சியுற்ற கட்டிட மற்றும் சிற்பக்கலை ஆகியவை ஒரு சேர அமைந்துள்ள சிறப்புப் பொருத்தம் எந்தப் பார்வையாளரையும், கவர்ந்திழுக்கிறது. இக்கலைகள், மைலாடி, திருப்பதிசாரம் மற்றும் ஆரல்வாய்மொழி ஆகிய இடங்களில் வேரூன்றி யுள்ளமை காணப்படுகிறது.

கலப்பு உலோகத்தொழில்

இது, செம்பும், வெள்ளியமும் கலந்த மணி செய்வதற்கான கலப்பு உலோகமாகும். இத்தொழில், முக்கியமாக, பித்தளைப் பாத்திரங்கள். விளக்குகள் (குத்துவிளக்கு) மற்றும் கோவில் மணிகள் ஆகியவை செய்வதற்கு பிரசித்தி பெற்றதாகும். பித்தளைப் பொருட்கள் பெரும்பாலும், இறைவனின் உருவங்கள், மலர்கள் மற்றும் புனிதமான மிருகங்கள் ஆகியவை செதுக்கப்பட்டு, வழிபாட்டிற்குப் பயன்படு பவையாயுள்ளன. அன்றாட வீட்டு வேலைக்குத் தேவைப்படும்

பாத்திரங்கள் செய்வதில், நாகர்கோவிலிலுள்ள கோட்டார் பல கால மாகவே பெயர் பெற்று விளங்குகிறது. இப்பாத்திரங்கள், வெள்ளோடு அல்லது மணி செய்வதற்குப் பயன்படுத்தப்படும் கலப்புலோகத் திலானவை.

இப்பொருட்களுக்கு சரியான கிராக்கி இல்லாததால், இத்தொழில் மந்த நிலையிலிருந்தது. எனவே, இப்பொருட்களை விற்பனை செய்யும் பொறுப்பினை, தற்போது பூம்புகார் நிறுவனம் எடுத்துக் கொண்டுள்ளது. அதன் விளைவாக, இத்தொழில் தற்போது மறுபடியும் புத்துயிர் பெற்றுள்ளது.

வார் இழை மற்றும் பூத்தையல் வேலை

இக்கைவினை, இந்த ஒரு நல்ல நிலையை அடைந்து, முதன்மை பெற்று விளங்குவதற்குக் காரணம், மேற்கத்திய நாடுகளினின்று வந்த சமய நெறி பரப்பாளர்களென்றால் மிகையில்லை. அவர்கள் இவ்விடத்தினை ஒரு நெறிபரப்பு மையமாகப் பயன்படத்திக் கொண்டார்கள். இம்மாவட்டத்தில், ஊசியின் உதவியால், இக்கைவினையாற்றலை வெளிப்படுத்துவது, எல்லோரது கவனத்தையும் ஈர்க்கும் விதத்தில் அமைந்துள்ளது. மிக அதிக அளவில் கிராமப் பெண்களை இந்த கைவினையில் பயன்படுத்துவதாலேயே இக்கைவினை முதன்மை பெற்று விளங்குகிறது. உற்பத்தித் திறனுக்கொப்ப வேலை வாய்ப்பும் அதிகரிக்கிறது. இவற்றிற்கான நிறம். முன்மாதிரி மற்றும் திட்ட அமைப்பு ஆகியவற்றை பெண்களே நிர்ணயிப்பது குறிப்பிடத்தக்கது.

வார் இழை மற்றும் பூத்தையல் வேலைப்பாடமைந்த பொருட்கள் உற்பத்தி செய்யும் மையங்கள், நாகர்கோவில், மார்த்தாண்டம், நெய்யூர், மூலகமூடு, காஞ்சிராக்கோடு, இராணிபுரம் மற்றும் கிள்ளியூர் ஆகிய இடங்களில் உள்ளன. நாகர்கோவிலிலுள்ள தென்னிந்திய திருக் கோயில் பூத்தையல் அலகு வழிகாட்டும் நிறுவனமாகும். கிராமங் களில் வாழும் பெண்களுக்கு வேலைவாய்ப்பளித்து, வார் இழை மற்றும் பூத்தையல் வேலைப்பாடமைந்த பொருட்களை உற்பத்தி செய்து, வெளிநாடுகளுக்கு முறையாக ஏற்றுமதி செய்கிறார்கள்.

கோவில் ஆபரணங்கள்

இவை, செயற்கை நகைகளையொத்தவை, மிகவும் மெல்லிய தங்கத் தகடுகள் இவற்றின் மீது பொறுத்தப்படுகின்றன. எனவே, இந்தப் பணியில் செய்யப்படும் ஆபரணங்கள் விலைமதிப்புள்ளவை. அந்தந்தக் கோவிலிலுள்ள இறைவனின் திருவுருவத்திற்கேற்றவாறு, உரிய அளவில் ஆபரணங்கள் செய்யப்படுகின்றன.

பகட்டான, செயற்கை நகைகள்

இவையும் கோவில் நகைகளுக்கொத்தவைதான், ஆனால், இவை தங்கமுமல்ல, வெள்ளியுமல்ல. எனவே, இவை மலிவான விலையில் கிடைக்கின்றன. நாடக நடிகர்கள் இவற்றைப் பயன்படுத்துவர். நாகர்கோவில் மற்றும் வடசேரியிலுள்ள விசுவகர்மா சமுதாயத்தைச் சார்ந்த ஒரு பிரிவு பொற்கொல்லர்களால், இக்கைவினை கையாளப் படுகிறது.

கோரைப்புல் பாய்கள்

இது, இம்மாவட்டத்தில் பெயர்பெற்ற கைவினைகளிலோன்றாகும். இது பெருமளவு கிராமப் பெண்களுக்கும், சிறார்களுக்கும் வேலை வாய்ப்பளித்து, மேம்பாடடையும் ஒரு குடிசைத் தொழிலாகும். இம்மாவட்டத்தில் கோரைப்புல் கிடைப்பதில்லை. ஆனால், திருச்சிராப் பள்ளி மாவட்டம், கரூரிலிருந்தும், வடஆற்காடு மாவட்டம், வேலூரிலிருந்தும் இவை கொள்முதல் செய்யப்படுகின்றன. வேலூரில் கிடைக்கும் கோரை கரூரில் கிடைக்கும் கோரையைப் போன்று, தரமிக்கதல்ல. இங்கு பயன்படுத்தப்படும் கோரை வகைகள், கூல மட்டம் மற்றும் மார்மட்டம் ஆகியவையாகும். பாய் நெய்யும் மையங்கள், தக்களை, மாதவளையம், சூரங்குடி, திட்டுமலை, ஏதம் பொலி, இரணிபுரம், கிள்ளியூர், அத்திக்கோடு, திருவாங்கோடு, கன்னி யாகுமரி மற்றும் கோட்டார் ஆகிய இடங்களிலுள்ளன.

நாணல் மற்றும் மூங்கில் பொருட்கள்

மேற்கு மலைத்தொடரின் நேர் கீழே அமைந்துள்ள பகுதி, புல்தழை வகையில் வளமை ததும்பிய பகுதியாகும். இங்கு, குன்றுகளில் இரப்பர், ஏலக்காய் மற்றும் இதர செடிகொடிகள் உள்ளன. அவற்றுடன், ஆங்காங்கே நாணல் வகைகள் மற்றும் மூங்கில் அதிக அளவில் காணப்படுகின்றன. இது, வீட்டிலுள்ளோர் அனைவரும் சேர்ந்து செய்யக்கூடிய, முற்றிலும் வீட்டுத் தொழிலன்றி வேறில்லை. இக்கைவினை, மலைச்சரிவுகளில், வாழ்ந்துவரும் மலை வாழ் மக்களின் கைவினையாகும். இம்மாவட்டத்தில், பலவிதமான பொருட்கள், நாணல், மற்றும் மூங்கிலில் செய்யப்பட்டாலும், மிகவும் பிரசித்தி பெற்ற வகை, கம்பு வடிவிலான கூடைகள்தான். இவை, வாணிப நோக்கில், பழங்கள், மலர்கள் மற்றும் வெற்றிலை ஆகியவற்றைக் கட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டு, வேறுஇடங்களுக்கு அனுப்பப் படுகின்றன. கன்னியாகுமரியில், அண்மை காலங்களில் துவக்கப்பட்ட அலகுகளில், (சாப்பாட்டுப்) பந்திப்பாய்கள், சுவற்றில் தொங்கவிடப் படும் மறைவுப் பாய்கள் முதலியவை உற்பத்தி செய்யப்படுகின்றன. நாணல்களினால் பாய்கள் நெய்யப்படுகின்றன. பாய்களில், மனதைக் தொடக்கூடிய கலை நுட்பம் வாய்ந்த உருவங்கள், தீட்டப்படுகின்றன.

பனையோலை மற்றும் திருகிலைப்பொருட்கள்

இது, மாவட்டத்திலுள்ள முக்கிய கைவினைகளிலொன்றாகும். பெரும்பாலும், மேற்கு மலைத் தொடர் சரிவுகளில் வாழ்ந்துவரும் ஆதிவாசிகளும், பிற்பட்ட வகுப்பினரும் பனையோலை மற்றும் திருகிலையில் கூடைகள், பாய்கள் ஆகியவற்றை இணைத் தொழிலாகச் செய்து வருகின்றனர். இக்கூடைகள், வெற்றிலை, பழங்கள் மற்றும் மலர்கள் ஆகியவற்றைக் கட்டி வெளியிடங்களுக்கு அனுப்பப் பயன்படுகின்றன. இக்கூடைகளுக்கு, மாவட்டத்திலேயே நல்ல வரவேற்புண்டு. அழகு நயமிக்க பைகளும், உற்பத்தி செய்யப் படுகின்றன. இத்தொழிற்கூடங்கள், எடைக்கோடு, மேக்கோடு, திருவிதாங்கோடு, பாலுகல், அழகிய மண்டபம், மேட்டுக்கடை மற்றும் தக்களை ஆகிய இடங்களில் அதிக அளவில் காணப்படுகின்றன.

கடற்சிப்பி மற்றும் சங்கு கைவினை

மிக அழகிய, நேர்த்தியான வகை, வகையான கடற்சிப்பி, மற்றும் சங்குகளால் அழகு நயமிக்க பல பொருள்கள், செய்திறமிக்க கைவினைக் கலைஞர்களால், செய்யப்பட்டு, விற்பனைக்கு வைக்கப் பட்டுள்ளன. இக்கலைஞர்களில் பெரும்பாலானோர் பெண்களே என்பது குறிப்பிடத்தக்கது. முக்கியமாக இப்பொருள்கள் கன்னியாகுமரியில் கண்ணைக்கவரும் வண்ணம் வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டுக் காட்சி தருவது, ரசிக்கத்தக்கது. இப்பொருள்கள் உள்ளூரில் நன்கு விற்பனையாகின்றன. பம்பாய், பெங்களூர் போன்ற இடங்களிலும் இப்பொருட்களுக்குத் தேவைப்பாடுண்டு.

மென்தகட்டு வடிவான மரவேலைப்பாடுகள்

தூய மரத்தினால் செய்யப்பட்ட, கலைத்திறன் மிக்க வேலைப் பாடுகளையுடைய பொருட்களை வெளிக் கொணர்வதில், பல ஆண்டுகள் அனுபவமுடைய, நாகர்கோவிலிலுள்ள கைவினைப் பொருள் விற்பனை மற்றும் பணி விரிவாக்க மையம், மென்தகட்டு வடிவான வேலைப்பாடுகளையுடைய மரப்பொருட்களை வெற்றிகரமாக விற்பனைக்குக் கொண்டுவந்துள்ளன. மாவட்டத்திலுள்ள தொழில் அலகுகளுக்கு, இம் மையத்தின் மூலம், தேவைப்படும் கருவிகளையும், தொழில் நுட்ப யோசனைகளையும், பெங்களூரிலுள்ள, மத்திய கைவினைப்பொருள் வளர்ச்சி மையம் வழங்கி வருகிறது. மக்கள் பாராட்டிற்குரிய பொருட்களான, மென் தகட்டு வடிவான மர வளையல்கள், செப மாலையின் உரு மணிகள், சாவிக் கொத்துக்கள், மெழுகுவர்த்தி நிலையடுக்கு, மரத்தட்டுகள், காகித வெட்டுக் கருவி, கதவுத்திரை மாட்டும் கொக்கிகள் மற்றும் ஏனைய பரிசுப் பொருட்கள் ஆகியவை இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன.

மரத்தினின்று, வெட்டியெடுத்து செய்யப்படும் பொருட்கள்

தேக்கு, கருங்காலி மற்றும் பூவரசு ஆகிய மரங்களினின்றும் வெட்டியெடுத்து செய்யப்படும், கலைத்திறன் மிக்க வேலைப் பாடுகளை யுடைய பொருள்கள் இம்மாவட்டத்தின் சிறப்புக்கூறாகும். விலையுயர்ந்த மரச் சாமான்களான கலைத்திறன் மிக்க கட்டில்கள், மேசைகள், நாற்காலிகள் மற்றும் அலமாரிகள் ஆகியவை அதிக அளவில் இம்மரங்களிலேயே செய்யப்படுகின்றன. இவற்றிற்கு பம்பாயில் நல்ல தேவைப்பாடு உள்ளது.

இவை முதன்மையாக உற்பத்தி செய்யப்படும் இடங்கள், நாகர் கோவில், குலசேகரம், மார்த்தாண்டம் மற்றும் கோட்டார் ஆகியவை யாகும்.

மெழுகிலிருந்து தயார் செய்யப்படும் பொருள்கள்

நாகர்கோவிலிலும், அதன் சுற்று வட்டாரத்திலும், தேன் மெழுகி லிருந்து காய்கறிகள், பழங்கள் போன்று, அவை உருவிலேயே மிக அழகாக செய்யப்படுகின்றன. எனினும், எதிர்பார்த்த அளவு இக்கைவினை வளர்ச்சியடையவில்லை.

இசைக்கருவிகள்

கோவில்கள், கோவில் நகைகள், கோவிலில் பயன்படுத்தப்பட்டுள்ள மரங்களில் செதுக்கப்பட்ட உருவ வேலைப்பாடு ஆகியவற்றிற்கு இப்பகுதி பெயர் பெற்று விளங்குகிறதோ, அதே போன்று, நாதஸ்வரம், தவில், ஆர்மோனியம், மிருதங்கம், புல்லாங்குழல் போன்ற பல தரப்பட்ட இசைக்கருவிகளுக்கும் பெயர் பெற்று விளங்குகின்றன. ஆனால், கலைஞர்களின் தகுதியற்ற மற்றும் திறமையற்ற நிலை, மேலும், அவர்களுக்கு அண்மைக்கால இசைக்கருவிகள் மீதான பற்று ஆகியவற்றினால், இந்த மரபு சார்ந்த கைவினையைக் கைவிடவேண்டிய நெருக்கடி ஏற்பட்டது. எனினும், மேட்டுக்கடை, மார்த்தாண்டம் ஆகிய இடங்களில், அங்குமிங்குமாக ஒரு சில குடும்பங்கள், சூழ்நிலையால் உந்தப்பட்டு, இத்துணைத் தொழிலில் இன்னமும் ஈடுபாடு கொண்டுள்ளனர்.

சிதறிய கண்ணாடியினின்று மேற்கொள்ளப்படும் பணி

சிலர் எதிர்ப்பார்ப்பது போன்று, இது கண்ணாடியை அறுத்து மேற்கொள்ளும் பணியல்ல. ஆனால், வீணாக ஒதுக்கப்படும் கண்ணாடித் துண்டுகளிலிருந்து, மாடக்குழிகள், மற்றும் கோவில் கோபுரங்கள், கிறித்தவர் திருக்கோயில்கள் போன்ற அமைப்பையொத்த வடிவங்கள் ஆகியவை செய்யப்படுகின்றன. அண்மைக்காலத்திலேயே துவங்கப்பெற்ற இக்கைவினை, அதிகமாக, நாகர்கோவிலிலேயே காணப்படுகிறது.

விற்பனை

மாவட்டத்தில் தயார் செய்யப்படும் கைவினைப் பொருள்கள், மத்திய அரசினால் நிறுவப்பட்டு, நாகர்கோவிலில் செயலாற்றி வரும், கைவினைப்பொருள் விற்பனை மற்றும் பணி விரிவாக்க மையம், சென்னையிலுள்ள தமிழ்நாடு கைவினைப்பொருள் வளர்ச்சிக் கழகம் மற்றும் திருவனந்தபுரத்திலுள்ள கேரள கைவினைப் பொருள் வளர்ச்சிக் கழகம் - இவற்றின் மூலம் இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் நன்முறையிலும் விற்பனையாகின்றன. கைவினைப்பொருள் விற்பனை மற்றும் பணி விரிவாக்க மையம், சென்னையிலும், திருவனந்த புரத்திலும், கைவினைப் பொருள் விற்பனைக் கூட்டங்களை அவ்வப் பொது நடத்தி, அவற்றின் விற்பனையை முறையாக ஒழுங்கு படுத்தியுள்ளதால், இவ்வணிகத்தில் தரகர்களின் ஈடுபாடு அறவே அகற்றப்பட்டு விட்டதெனக் கூறலாம். தக்களையிலுள்ள தீப்பெட்டி பணிக்கழகம், தொடக்கத் தீப்பெட்டி அலகுகளினால் உற்பத்தி செய்யப்படும், தீப்பெட்டிகளை விற்பனை செய்து வருகிறது.

காதி மற்றும் கிராமத்தொழில் துறை

1957ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதம் முதல் முதலில், கன்னியா குமரி மாவட்டத்தில் காதித் திட்டம், நடைமுறைப்படுத்தப்பட்டது. அப்போது, நாகர்கோவிலில் ஒரு, காதி உற்பத்தி மையமும், ஒரு காதி கிராஃப்ட் விற்பனைக் கிடங்கும், மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் காதி மற்றும் கிராமத் தொழில் துறைப் பொருட்களை விற்பனை செய்வதற்காகத் துவங்கப்பட்டன.

மாநிலத்தில், காதி மற்றும் கிராம தொழில்துறைப் பொருள்களை ஊக்குவிக்கவும், அத்தொழில் மேலும் வளர்ச்சியுறவும், 1960ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் தமிழ்நாடு காதி மற்றும் கிராமத் தொழில் வாரியம் அமைக்கப்பட்டது. இவ்வாரியம் கிராமப்பகுதிகளிலுள்ள மூலப் பொருள்களைப் பயன்படுத்தி, அப்பகுதிகளில், வேலை வாய்ப்புகளை உருவாக்கி, அதன் விளைவாக, வறுமையைப் போக்குகிறது.

காதி

நூற்புப்பணியில் ஈடுபட்டுள்ள கிராம மக்களுக்கு உதவியாக வாரியம் கிராம நெசவு மையங்களில் அவர்களுக்கு அம்பர் கைராட்டைகள் வழங்கி வருகிறது. ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்தேழாம் ஆம் ஆண்டில், இம்மாவட்ட கிராமங்களில் 11 காதி உற்பத்தி மையங்களும் நான்கு காதி கிராஃப்ட்களும் 52, கிராம நெசவு மையங்களும் இருந்தன.

இந்த 11 உற்பத்தி மையங்களும், நாகர்கோவில், மணவாளக் குறிச்சி, அகஸ்தீஸ்வரம், திங்கள் சந்தை, வில்லுக்குரி, மார்த்தாண்டம், தெங்கம்புதூர், பொட்டல், செம்பரத்திவிளை, பாலப்பள்ளம் மற்றும் மைலாடி ஆகிய இடங்களில் இயங்கி வந்தன. அவை நூற்போருக்கு பஞ்சாக வழங்கி, அவர்கள் உற்பத்தி செய்யும் நூலை விலைக்கு வாங்குகின்றன. வாரியம், இப்பணியினை இம்மாவட்டத்தில், வெற்றி கரமாக நிறைவேற்றி வருகிறது.

கிராம நெசவு மையங்கள் பயிற்சி பெற்ற ஆசிரியர்களால் நிருவகிக்கப்படுகின்றன. அவை, கிராமப்புற மக்களுக்கு, முறையான வேலை வாய்ப்பினை அளிக்கின்றன. இம்மையங்களுக்குத் தேவையான பொருள்கள், துணைக்கருவிகள் ஆகியவற்றை வாரியம் வழங்குகிறது.

கிராமத் தொழில்துறை

காதி மற்றும் கிராமத்தொழில் வாரியத்தின் அலகுகள் மற்றும் வாரியத்தால் பதிவு செய்யப்பட்ட தொழில் சார்ந்த கூட்டுறவு சங்கங்கள் இவற்றின் மூலம், கிராமத் தொழில்கள் வளர்ச்சியடைகின்றன. 1987ஆம் ஆண்டு நிலவரப்படி கன்னியாகுமரி மாவட்டத்தில், இவ்வாரியம், கீழ்க்கண்ட அலகுகளையுடையதாயிருந்தது:

தொழில் விவரம்	*அமைந்துள்ள இடம்*
1. உண்ணத்தகாத எண்ணெய் மற்றும் சவர்க்காரம் (சோப்)	1. அகஸ்தீஸ்வரம் 2. கொல்லல்
2. தேனீ வளர்ப்புத்துணை நிலையம்	3. மணலிக்கரை 4. வெங்கோடு 5. மேல்புரம் 6. தேமானூர் 7. சேனம்விளை 8. விவிள்ளை 9. கடையல்
3. தேனீ வளர்ப்புப் பண்ணை	10. கீழ்குளம்

இவை தவிர, மாவட்டத்தில், கூட்டுறவுத்துறையின் கட்டுப்பாட்டில் 95 தொழில் அலகுகள் உள. அவை பற்றிய விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன:

தொழில் விவரம்	*சங்கங்களின் எண்ணிக்கை*
1. பதநீர்	78
2. எண்ணெய்	3
3. பரம்பு மற்றும் மூங்கில் கைவினை	2
4. தேனீ வளர்ப்பு	2
5. சுண்ணாம்பு	2
6. தச்சுவேலை மற்றும் கொல்லு வேலை	1
7. கைக்குத்தலரிசி	1
8. நார்	5
9. கையினால் செய்யப்படும் காகிதம்	1
மொத்தம்	95

1980-81 முதல் 1986-87 முடிய கன்னியாகுமரி மாவட்டத்தில், தமிழ்நாடு காதி மற்றும் கிராமத் தொழில் வாரியம் வழங்கியுள்ள கடன் மற்றும் முன்பணத் தொகை

தொடர் எண்.	தொழில்துறை விவரம்	எண்ணிக்கை	கடன்தொகை ரூபாய்	பொருளுதவி ரூபாய்	மொத்தம் ரூபாய்
1.	சுண்ணாம்பு தொழிற்துறை	130	5,17,000	--	5,17,000
2.	கைக்குத்தலரிசி ஆலை மற்றும் ரொட்டி செய்யும் தொழிற்சாலை	87	2,29,000	21,500	--
3.	சவர்க்காரத் (சோப்) தொழில்துறை	22	81,500	--	81,500
4.	தோல் தொழில்துறை	80	1,28,150	1,56,500	2,84,650
5.	எண்ணெய் தொழில்துறை	57	7,74,500	20,375	7,94,875
6.	தச்சுவேலை மற்றும் கொல்லுவேலைத் தொழில்துறை	322	2,84,900	2,28,400	5,13,300
7.	தேனீ வளர்ப்புத் தொழில்துறை	187	2,35,380	1,90,075	4,25,455
8.	செங்கல் மற்றும் கோழிப்பண்ணைத் தொழில்துறை	287	7,02,734	3,20,587	10,23,321
9.	நார் தொழில்துறை	650	31,800	31,800	63,600

உதவி இயக்குநர், காதி மற்றும் கிராமத் தொழில்துறை, நாகர்கோவில், அறிக்கைநாள், 17-3-1988

மாவட்ட கூட்டுறவு பதநீர் இணையச்சங்கம், பனை பொருட்கள் உற்பத்தி மற்றும் விற்பனை ஆகியவற்றை ஒழுங்குப்படுத்துகிறது. காதி மற்றும் கிராமப் பொருட்களை விற்பனை செய்ய, வாரியம் காதி கிராஃப்ட் மற்றும் விற்பனைக் கிடங்குகளை, தக்களை, நாகர்கோவில், மார்த்தாண்டம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய இடங்களில் நடத்துகிறது. 1988ஆம் ஆண்டின் நிலவரப்படி காதி மற்றும் கிராமத் தொழில்துறைத் திட்டத்தின் கீழ், 50,700 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப் பட்டுள்ளது[10].

ஆயிரத்து தொள்ளாயிரத்து என்பது எண்பததொன்று முதல் 1986-87 முடிய மாவட்டத்தில் காதிப் பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை விவரங்களும், கிராமத் தொழில்துறை பொருட்களின் விற்பனை விவரங்களும்[11]:

ஆண்டு	காதிப் பொருட்கள் உற்பத்தி (மீட்டரில்)	காதிப் பொருட்கள் விற்பனை (ரூபாயில்)	கிராமத் தொழில் துறை பொருட்கள் விற்பனை (ரூபாயில்)
1980-81	4,60,239	33,97,718	12,59,146
1981-82	5,02,237	36,56,179	15,24,750
1982-83	5,19,557	40,49,598	13,93,477
1983-84	4,52,030	47,16,603	10,71,264
1984-85	2,88,754	53,80,239	9,29,902
1985-86	3,10,055	60,26,151	9,53,628
1986-87	2,72,987	44,09,335	17,12,200

கைத்தொழில்

இம்மாவட்டத்தில் கைத்தறித்தொழில், ஒரு தொன்மையான மற்றும் ஒரு முறையான அமைப்பாக இல்லாது, தொழிலாளர்களின் தீவிரமான ஒரு தொழில்துறையாகும். இம்மாவட்டத்தில் ஒவ்வொரு நெசவுத் தொழிலாளி வீடும் ஒரு சிறு கைத்தறித் தொழிற்கூடமாகும். எனவே, இதை ஒரு குடிசைத் தொழில் என்று கூறுவதே பொருத்த மாகும். ஆகையால், வேளாண்மை தவிர, கைத்தறியும் மாவட்டப் பொருளாதாரத்தில் ஒரு முக்கிய அங்கம் வகிக்கிறது.

இத்தொழில், கோட்டார், வடசேரி, இளங்காடை, இரனியல், பள்ளியாடி மற்றும் வாள்வச்சகோஷ்டம் ஆகிய இடங்களில் நன்கு இயங்கி வருகிறது. நாகர்கோவில் நகரத்தின் புறப்பகுதியிலுள்ள கோட்டார் மற்றும் கல்குளம் வட்டத்திலுள்ள இரனியல் ஆகிய இடங்கள் பழங்காலத்திலிருந்தே கைத்தறி நெசவுக்குப் பெயர் பெற்று விளங்கியவையாகும். குறிப்பாக, வார் இழைத்துணிகள் மற்றும் டர்க்கிப்பூத் துண்டுகள் ஆகியவை இங்கு அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. பண்டைய காலங்களில் இத்தொழில் உள்ளூர்

தேவையினைப் பூர்த்தி செய்ததோடு மட்டுமல்ல, இந்தியாவின் ஏனைய பகுதிகள் மற்றும் வெளிநாட்டுத் தேவைக்குக்கூட, உரிய அளவு இங்கு உற்பத்தி செய்யப்பட்டது. மற்ற இடங்கள் போன்று இங்கும், இத்தொழிலின் நிலையற்ற தன்மையினால், பல தடவைகள் வாணிக நெருக்கடியை இத்தொழில் செய்வோர் சந்திக்க நேரிட்டது. அதனால், நெசவாளர்கள் பணியினின்றும் நிறுத்தப்பட்டார்கள். கைத்தறித் தொழிலிலீடுபட்ட நடுத்தர வர்க்க நெசவாளர்களுக்குப் பெருத்த நஷ்டம் ஏற்பட்டு, தொழிலைத் தொடர்ந்து நடத்த இயலாத நிலைக்கு ஆளானார்கள்.

அதனால், அரசு அவர்களுக்குப் போதிய வசதி செய்து கொடுக்க முற்பட்டு, அதனைத் தொடர்ந்து, "தமிழ்நாடு மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தினை" நாகர்கோவிலில் துவக்கினார்கள். இச்சங்கம், நெசவாளர் சங்கங்களுக்கு நூல் வழங்கி, அவர்களிடமிருந்து, நெய்த துணிகளைப் பெற்று, விற்பனையிலீடுபடுகிறது. கைத்தறித் துணிகளை மக்களிடையே பிரபலமாக்கிட, நாகர்கோவிலில் ஒரு விற்பனை மையம் திறக்கப்பட்டுள்ளது.

ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்தெட்டு - எண்பத்தொன்பதாம் ஆண்டு நிலவரப்படி, மாவட்டத்திலுள்ள மொத்த கைத்தறி அலகுகள் 14,161 ஆகும். அவற்றில், 11,411 அலகுகள் கூட்டுறவுத் துறையைச் சார்ந்தவையாகும்[12]. ஏனைய அலகுகள், தனியார் துறையினரால் நடத்தப்பெறுபவையாகும். இம்மாவட்டத்தில், 1988-89 ஆம் ஆண்டின் நிலைப்படி, 77 நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் இயங்கி வருகின்றன.

நாகர்கோவில், கருங்கல், வடசேரி, திங்கள் சந்தை மற்றும் தக்கலை ஆகிய இடங்களில் விற்பனை அலகுகள் உள்ளன.

ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பது - எண்பத்தொன்று முதல் 1988-89 முடிய மாவட்டத்திலுள்ள கைத்தறி அலகுகள் விவரம் :

தொடர் எண்.	*ஆண்டு*	*கைத்தறி அலகுகளின் எண்ணிக்கை*
1	1980-81	11,713
2	1981-82	12,416
3	1982-83	12,610
4	1983-84	13,162
5	1984-85	13,217
6	1985-86	10,650
7	1986-87	11,212
8	1987-88	11,607
9	1988-89 (30-11-88 முடிய)	11,411

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பது - எண்பத்தொன்று முதல் 1988-89 முடிய கைத்தறித்துணி உற்பத்தி மற்றும் விற்பனை ஆகியவை பற்றிய விவரங்கள்

ஆண்டு	உற்பத்தி மீட்டர் (இலட்சத்தில்)	உற்பத்தி மதிப்பு (ரூ.இலட்சத்தில்)	உற்பத்தி மீட்டர் (இலட்சத்தில்)	உற்பத்தி மதிப்பு (ரூ.இலட்சத்தில்)
1980-81	69.89	227.35	62.22	256.83
1981-82	71.62	289.34	75.90	316.79
1982-83	83.00	380.01	76.62	366.56
1983-84	100.30	511.77	104.95	563.65
1984-85	97.03	511.38	111.56	544.60
1985-86	94.39	510.40	98.45	556.56
1986-87	97.12	619.22	103.12	698.46
1987-88	101.06	718.56	102.09	732.11
1988-89 30.11.88	முடிய 74.55	490.64	80.95	593.00

அரசுத்திட்டங்கள்

தமிழ்நாடு அரசு நெசவாளர்களின் நலனுக்காக பல நலத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது. தொகை குறைப்பு மானியம், தனி ஆக்கக் கூறுத்திட்டம், காளான் வளர்ச்சித் திட்டம், ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம் மற்றும் நெசவாளர்கள் வீட்டு வசதித்திட்டம் ஆகியவை அவற்றில் இடம் பெறுகின்றன. இத்திட்டங்கள், பல நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கடன் வழங்கிடவும் வழி வகுத்துள்ளன.

"கோ-ஆப்டெக்ஸ்" என அழைக்கப்படும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவு சங்கம் மாநிலத்தில் 1934ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இதன் நோக்கம் என்னவெனில், கைத்தறியைக் கூட்டுறவுத் துறையின் மூலம் வாணிக அடிப்படையில் மேம்படுத்து வதும், அதற்கான மூலப்பொருள்களை கைத்தறித் துணி உற்பத்தி யாளர்களுக்கு வழங்கி, அவர்கள் உற்பத்தி செய்யும் துணிகளை விற்பனை செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்வதுமேயாகும்.

கூட்டுறவுத் துறையினின்றும் பிரிக்கப்பட்டு, 1956ஆம் ஆண்டு அமைக்கப்பட்டுள்ள கைத்தறி மற்றும் நெசவாளர் இயக்குநரகம், கைத்தறித் தொழிலை மேம்படுத்த, உரிய திட்டங்களை வகுத்து, அவற்றை முறையாக நடைமுறைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது.

இவ்வியக்குநர் மாநில நெசவாளர் அலுவலராகவும் பணியாற்றி வருகிறார். என்வே, மாநிலத்தில் இயங்கிவரும் கைத்தறித்துறை தவிர, நெசவு மற்றும் கைத்தறித்தொழிலினை எங்கெங்கு அவசியமோ அங்கெல்லாம் வெற்றிகரமாக நடத்திட, உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொறுப்பினை வகிக்கிறார்.

தமிழ்நாடு கைத்தறி நிதி மற்றும் வாணிகக்கழகம், 1964ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. (தற்போது இது தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் என அழைக்கப்படுகிறது). இதன் நோக்கம் என்னவெனில், கூட்டுறவுத் துறைக்கு அப்பாற்பட்ட தனியார்-நெசவாளர்களுக்கு கைத்தறி, இயந்திரத்தறி மற்றும் துணையான தொழில் ஆகியவை மேற்கொள்ள நிதியுதவி அளிப்பதாகும்.

கயிறுத் தொழில்

இத்தொழில் வளர்ச்சியுற இம்மாவட்டத்தில் நல்ல வாய்ப்புள்ளது, கன்னியாகுமரியிலிருந்து கொல்லங்கோடு வரை கடற்கரைப்பகுதி முழுமையும் கயிறுத்தொழில் நடைபெறுகிறது. மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் கயிற்றில் 95 விழுக்காடு மாவட்டத்திற்கு வெளியேயுள்ள இடங்களுக்கு அனுப்பப்படுகிறது. ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்தி ஒன்றாம் ஆண்டு புள்ளிவிவரப்படி மாவட்டத்தில் 42 கூட்டுறவு கயிறு சங்கங்கள் இயங்கி வருகின்றன. ஈரிழை நூல் உற்பத்தி செய்வது குறித்து பல இடங்களிலுள்ள மக்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது. கன்னியாகுமரியில் மட்டும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், 500 பேர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.

பயிற்சித் திட்டத்தினை விரிவாக்கிட அரசு, 1962ஆம் ஆண்டு, ஈதமொழியில் ஒரு கயிறுப் பள்ளியை நிறுவியது. இப்பள்ளி கயிற்றுப் பாய்கள், பாய்முடை பொருள்கள், தூரிகைப் பாய்கள் ஆகியவை முடையும் பணியாளர்களுக்குப் பயிற்சியளித்தது.

பெரும்பாலும், நூற்பு ராட்டைகள் மூலம் கயிற்று நூலிழை, நூற்கப்படுகிறது. அஷ்டமுடி, அங்கெங்கோ, அரடோரே வைக்கம் மற்றும் பொது கடற்கரை வகை நூலிழை ஆகியவை, மாவட்டத்தில் உற்பத்தி யாகும் சில கயிறுவகைகளாகும்.

1986ஆம் ஆண்டின் நிலைப்படி, மாவட்டத்தில் தென்னை பயிரிடப்படும் பரப்பளவு 16,800 ஹெக்டேராகும். தென்னையின் ஆண்டு விளைச்சல் 20.6 கோடி என மதிப்பிடப்படுகிறது. இங்கு தயாரிக்கப்படும் நார்ப் பொருள், பதிவு செய்யப்பட்ட 60 நார்த்தொழிற்சாலைகளினால்

பயன்படுத்தப்படுகிறது. இத்தொழிற்சாலைகளில், 900 தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தின் சிறப்பியல்பு என்னவெனில், இங்குள்ள கயிறு, வெள்ளை வகையைச் சார்ந்ததாகும்.

இயந்திரத் தறிகளினால், கயிறுப்பொருள்கள் உற்பத்தி செய்யும் பெரிய அளவிலான தொழிற்சாலையொன்று அம்மண்டிவிளையிலுள்ளது. இத்தொழிற்சாலையில், 150 நபர்கள் பணியாற்றுகிறார்கள்.

தற்போது இயங்கி வரும் சிறு தொழில் கயிறு அலகுகளின் ஆண்டு உற்பத்தித்திறன் 4106 டன்களாகும்[13]. அம்மண்டிவிளையிலுள்ள ஒரே பெரிய அளவிலான தொழிற்சாலையின் ஆண்டு உற்பத்தித் திறன் 3750 டன்களாகும்.

தேயிலைப்பயிரிடுதல்

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பத்தாறாம் ஆண்டின் புள்ளிவிவரப்படி, கன்னியாகுமரி மாவட்டத்தில் தேயிலைபயிரிடப்படும் நிலத்தின் பரப்பளவு 2700 ஏக்கர்களாகும்.

இரப்பர் தொழில்

இந்தியாவில், இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்தில், இரப்பர் பயிரிடுதல் துவங்கப் பெற்றது. ஆனால், இரப்பர் தொழில் வேரூன்றத் தொடங்கியது, 1930ஆம் ஆண்டிற்குப் பிறகேயாகும். நம்நாட்டிலேயே, இயற்கை இரப்பர் உற்பத்தி செய்வதில், தமிழ்நாடு இரண்டாவது இடத்தை வகிக்கிறது. இதற்கான பெயரை கன்னியாகுமரி மாவட்டமே தட்டிச் செல்கிறது. ஏனெனில், மாநிலத்திலேயே, இம்மாவட்டத்தில்தான் இரப்பர் பயிரிடப்படுகிறது. இரப்பர் பயிரிடுவதற்கேற்ப மண் மற்றும் தட்ப, வெட்ப நிலையினை இம்மாவட்டம் பெற்றுள்ளது.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பதாம் வரை, இரப்பர் சாகுபடி, தனியார் நிறுவனங்கள் வசம் இருந்து வந்தது. ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுபதாமாண்டு, சூன் மாதம், அரசு , கீரிப்பாறை ஒதுக்குக்காட்டுப் பகுதியில், ஒரு திட்டத்தினைத்துவக்கி, 2000 ஏக்கர் நிலத்தில் இரப்பர் பயிரிட்டது. அப்போது, 16,000 ஏக்கர் பரப்பளவில் இரப்பர் பயிரிடப்பட்ட நிலங்கள், தனியார் நிறுவனங்கள் பொறுப்பிலிருந்தன. ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பதாம் ஆண்டு, தமிழ்நாட்டின் மொத்தம் இரப்பர் பயிரிடப்பட்ட பரப்பளவான 12,716 ஹெக்டேரில், 12,688 ஏக்கர் பரப்பளவு கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் இருந்தன. ஆயிரத்துத் தொள்ளாயிரது என்பது எண்பத்தொன்றாம் ஆம் ஆண்டு, 3000 பணியாளர்களை பணியிலமர்த்தி, 4,39,566 இரப்பர் மரங்களி னின்றும், இரப்பர் வடிக்கப்பட்டது. ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பத்தொறில் அரசு மற்றும் தனியார் துறையில் இரப்பர் பயிரிடப்பட்ட நிலப்பரப்பின் பரப்பளவு 13,168 ஹெக்டேராகும். அதனில், 50,000 நபர்கள்

பணியாற்றினார்கள். மேற்கு மலைத்தொடரையொட்டி, விளவங்கோடு, கல்குளம் மற்றும் தோவாளை வட்டங்களிலும், மேலும் திட்டவட்டமாகக் கூறினால், கீரிப்பாறை, பரளியார், மணலோடை, சித்தூர், மைலார் மற்றும் கல்லார் பகுதிகளில் இரப்பர் தோட்டங்கள் பரவலாகக் காணப்படுகின்றன. மலேசியாவில் உற்பத்தியாகும் இரப்பருக்கு ஈடான உயர்ரக இரப்பரே இங்கு பயிரிடப்படுகிறது.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பத்தெட்டாம் ஆண்டைய விவரப்படி, இம்மாவட்டத்தில் 42 இரப்பர் தொழிற்சாலைகள் உள்ளன. மிதியடி, அறுவை மருத்துவத்திற்குப் பயன்படுத்தப்படும் கையுறைகள், இசைமேளம், நெகிழும் தன்மையுள்ள நூல் மற்றும் கைவிரல் முனைப்பூண் போன்ற நிறைவுற்ற இரப்பர் பொருள்களாகவே இத்தொழிற்சாலைகள் உற்பத்திசெய்கின்றன. இவை தவிர, இரப்பர் மரம்பால், இரப்பர் தாள்கள் ஆகியவையும் உற்பத்தி செய்யப்படுகின்றன. இத்தொழிற்சாலைகள் உற்பத்தி செய்யும் நிறைவுற்ற இரப்பர் பொருள்கள், ஆண்டொன்டிற்கு 1500 டன்களாகும். இவை பிற மாவட்டங்கள், மற்றும் மாநிலங்களில் விற்பனை செய்யப்படுகின்றன.

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக்கழகம் (டான்சி), இம்மாவட்டத்தில், ஒரு இரப்பர் தொழிற்சாலை துவக்க உத்தேசித்துள்ளது[14]. இரப்பர்த் தொழில் மேலும் வளர்ச்சியுற, நாகர்கோவிலைத் தலைமையிடமாகக் கொண்ட "அரசு இரப்பர் கழகம் லிமிடெட்" என்ற ஒரு கழகம் நிறுவப் பட்டுள்ளது. இக்கழகத்தின் செயல்முறைகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

அக்டோபர் 1, 1984-லிருந்து, அரசு இரப்பர் கழகத்தின் வளர்ச்சியும், சாதனையும்

இரப்பர் தொழில் வகையான பணிகள், தொழில் நுட்பப்பணிகள் மற்றும் சொந்தப்பணிகள் ஆகியவற்றிற்குப்பெரிதும் பயன் அளிக்கும் ஒரு முதன்மையான பயிராகும். நாட்டிலேயே இன்றைய காலக்கட்டத்தில் மிகவும் அதிகமான இலாபம் ஈட்டித்தரக் கூடிய ரொக்கப்பயிர் இரப்பர் ஒன்றுதான் என்றால் மிகையில்லை. இரப்பர் பயிரிடப்பட்ட பின்னர், 14ஆம் ஆண்டு, பலனளிக்கத் துவங்கி, 30வது ஆண்டு வரை பலன் தொடர்கிறது. ஒரு எக்டேர் பரப்பளவு நிலத்தில் இரப்பர் பயிரிட ரூ.17,000/- செலவாகிறது. தமிழ்நாட்டில், கன்னியாகுமரி மாவட்டத்தின், மண் மற்றும் தட்ப, வெட்பம் தான், இயற்கை இரப்பர் வளரத் தகுதியானவையாகும். ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஆறுபதாம் ஆம் ஆண்டு முதல் 1980ஆம் ஆண்டுவரை, பலதரப்பட்ட திட்டங்களின் கீழ், கன்னியாகுமரி மாவட்டத்தில் 4785.7 ஹெக்டேர் நிலப்பரப்பளவில் இரப்பர் பயிரிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு, வனத்துறையின் கட்டுப்பாட்டில், செப்டம்பர், 30, 1984 வரை இயங்கி வந்த, அரசு இரப்பர் தோட்டங்கள் ஒரு கழகமாக மாற்றியமைக்கப்பட்டு, 1956ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டப்படி, ஆகஸ்ட், 20, 1984ஆம் தேதி,

பதிவு செய்யப்பட்டு, அக்கழகத்திற்கு "அரசு இரப்பர் கழகம் லிமிடெட்" என பெயரிடப்பட்டது[15]. இக்கழகம், ஆக்டோபர் 1, 1984 அன்று இயங்கத்துவங்கியது[16].

களத்தில் கிடைக்கும் இரப்பர் மரப்பாலைப் பல்வேறு வகைப்பட்ட இயற்கை இரப்பராகப் புத்துயிராக்கிட, மூன்று தொழிற்சாலைகள் நிறுவப்பட்டுள்ளன. இத்தொழிற்சாலைகள், கீரிப்பாறை, பெருஞ்சாணி மற்றும் மைலார் ஆகிய இடங்களில் உள்ளன.

பக்குவமடைந்த இரப்பர் மரங்களுக்கு, ஒரு ஹெக்டேருக்கு, ஆண்டு ஒன்றுக்கு ரூ.4000/- வீதமும், பக்குவமடையாத (பால் இறக்கும் பருவமடையாத) இரப்பர் மரங்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ஒரு ஆண்டுக்கு ரூ.400/- வீதமும், வனத்துறைக்குக் குத்தகைத் தொகையாக, இக்கழகம் செலுத்தி வருகிறது[17].

புதுமைப்பாங்கான வழியில் இரப்பர் கன்றுகளைக் காத்தல்

இளம் இரப்பர் கன்றுகளுக்கு, யானைகளும், இதர கொடிய மிருகங்களும் சேதம் விளைவிக்கின்றன. எனவே, மலேசியாவில் எண்ணெய் அளிக்கும் பனை போன்ற வகை மரங்களைப் பாதுகாத்திட அமைத்திருப்பதைப் போன்று, கொடிய மிருகங்களினின்றும் இளம் இரப்பர் கன்றுகளைப் பாதுகாத்திட, 2.25 இலட்ச ரூபாய் செலவில், மருதம்பாறை, சித்தார், கல்லார், மற்றும் குத்தியார் கோட்டங்களில் 30 கிலோமீட்டர் தொலைவிற்கு, மின்வேலி அமைக்கப்பட்டுள்ளது. கொடிய மிருகங்களினின்றும் இக்கன்றுகளைக் காத்திட, மேற்கொள்ளப்பட்ட மற்ற நடவடிக்கைகள் பயனளிக்கவில்லையாதலால், மின்வேலி அமைக்கும் முறை பின்பற்றப்பட்டது. மின் வேலிகள், யானைகளின் தொல்லைகளினின்றும் இரப்பர் கன்றுகளைப் பாதுகாத்திட பெரிதும் உதவியாயுள்ளன. யானைகளினால் விளையும் சேதத்தை அறவே ஒழித்திட, மைலாடி கோட்டத்திலும் 15 கிலோ மீட்டர் தொலைவிற்கு மின் வேலி அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பிற்கால வளர்ச்சி

அரசு இரப்பர் கழகத்தின் இரப்பர் தோட்டங்களை, மேம்படுத்தவும், மேற்கு அலகில், வளர்ச்சி குன்றியுள்ள பகுதிகளில், புதிய இரப்பர் கன்றுகளை பயிரிடவும் 1322 இலட்ச ரூபாய் முதலீட்டில், ஒரு ஐந்தாண்டுத் திட்டம், வரையப்பட்டு, கழகத்தினால் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.

உற்பத்தி

கழகம் நிறுவப்பட்ட 1984-85 ஆம் ஆண்டிலிருந்து, 1988-89 ஆம் ஆண்டு வரை, மரங்களினின்று இரப்பர்பால் இறக்கப்பட்ட அலகுகளின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

ஆண்டு	இரப்பர்பால் இறக்கப்பட்ட மர அலகுகளின் எண்ணிக்கை
1984-85	2058
1985-86	2207
1986-87	2259
1987-88	2356
1988-89	2412

இரப்பர் உற்பத்தி, (இரப்பர் மரப்பால் மற்றும் முறிவு துணுக்கு), 1984-85ஆம் ஆண்டு (அக்டோபர், 1, 1984 முதல் மார்ச், 3, 1985 முடிய) 1385 டன்களாகும். ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பத்தைந்து - எண்பத்தாறாம் ஆண்டில், 2207 இரப்பர் மர அலகுகளின்றும், 2412 டன்கள் இரப்பர் (இரப்பர் மரப்பால் மற்றும் முறிவு துணுக்கு) உற்பத்தி செய்யப்பட்டது. இது நிர்ணயிக்கப்பட்ட குறியீடான 2300 டன்களை விட, 112 டன்கள் அதிகமானதாகும். ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்தாறு - எண்பத்தேழாம் ஆண்டு, 2400 டன்கள் இரப்பர் குறியீடாக நிர்ணயிக்கப்பட்டிருந்ததில், 2359 டன்கள் இரப்பர் சேகரிக்கப்பட்டது. ஆயிரத்துத் தொள்ளாயிரத்து என்பத்தேழு - எண்பத்தெட்டாம் ஆண்டு, 2550 டன்கள் குறியீடு நிர்ணயிக்கப்பட்டிருந்ததில் 2678 டன்கள், (127 டன்கள் அதிகமாக) இரப்பர் சேகரிக்கப்பட்டது.

விற்பனை

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பத்திநான்கு - எண்பத்தைந்தாம் ஆண்டில் ஆறுமாத காலத்தில், 292.37 இலட்ச ரூபாய் மதிப்புள்ள இரப்பர், விற்பனை செய்யப்பட்டது. ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பத்தைந்து - எண்பத்தாறாம் ஆண்டு, 416.63 இலட்ச ரூபாய், 1986-87-ல், 401.38 இலட்ச ரூபாய் மற்றும் 1987-88ஆம் ஆண்டு 602.46 இலட்ச ரூபாய் மதிப்புள்ள இரப்பர் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

கழகம் துவங்கப்பட்ட காலத்திலிருந்தே, இரப்பர், பொது ஏலத்திலோ, ஒப்பந்தப்புள்ளி பெற்றோ 1986 அக்டோபர் இறுதி வரை விற்பனை செய்யப்பட்டு வந்தது. இதுகாறும் கையாளப்பட்டு வந்த இந்த நடைமுறையினால், கையிருப்பு இரப்பரில், தேக்கநிலை நீடித்தது. மேலும், இரப்பரின் அன்றாட சந்தை விலையிலுள்ள ஏற்ற இறக்கம் கருத்திற் கொள்ளப்படுவதில்லை. இதனால், வணிகர்கள் தங்கள் நோக்கப்படி, இருப்பு இரப்பரை அகற்றும் போக்கினைக் கையாண்டனர். மேலும், இரப்பர் ஏலத்தில் கலந்து கொள்ளும் ஏலதாரர்கள் இரப்பரைப் பயன்படுத்து வோரல்லர். ஆனால், பெரும் இலாபம் ஈட்டும் நோக்குடன் தொழிற் கூடங்களுக்கு இரப்பரை வழங்கும் வணிகர்களாகவே இருந்தனர். இம்மாதிரியான தரகர்களை ஒழித்திடவும், உற்பத்தி செய்யும் இரப்பருக்கு நல்ல விலை பெற்றிடவும் அனைத்திற்கும் மேலாக, இருப்புத் தேங்குவதைத் தவிர்த்திடவும், தற்போது, இரப்பர் பயன்படுத்தும் தொழில்

நிறுவனங்களுடன் இசைவிணக்க முறையிற் கலந்து பேசி, இரப்பரை விற்பனை செய்யும்முறை, கையாளப்பட்டு வருகிறது. கோட்டயம் இரப்பர் சந்தைவிலையை ஆதாரமாகக் கொண்டு, கழகத்தால் இரப்பர் விலை நிர்ணயிக்கப்படுகிறது. இவைதவிர, பொது ஏலத்தில் வரும் முறையும், ஒப்பந்தப்புள்ளி பெறும் முறையும் சில நேரங்களில் பின்பற்றப்படுகிறது. மொத்தமாக, இரப்பர் பயன்படுத்தும் தொழிற் சாலைகளுக்கு உடன் படிக்கை அடிப்படையில், நேரடியாக விற்பதற்கும் முயற்சி மேற்கொள்ளப் படுகிறது.

நிதி நிலை

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பத்தி நான்கு என்பத்தைந்தாம் ஆண்டிற்கான, கழகத்தின் தணிக்கையிடப்பட்ட கணக்குகளின்படி, நிகர இலாபம் 10.77 இலட்ச ரூபாயாகும். ஆயிரத்துத் தொள்ளாயிரத்து என்பத்தைந்து - எண்பத்தாறாம் ஆண்டின் நிகர இலாபம் 2.55 இலட்ச ரூபாயாகும். தணிக்கையிடப்படாத கணக்குகளின்படி, 1986-87 ஆம் ஆண்டிற்கான இலாபம் 3.16 இலட்ச ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கழகத்தின் 1987-88 ஆம் ஆண்டிற்கான நிகர இலாபம், 4.03 இலட்ச ரூபாயென மதிப்பிடப்பட்டுள்ளது.

கூலி மற்றும் தொழிலாளர் நல செயல்முறைகள்

கழகத்தில் பணியாற்றும் மொத்தத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 2562 ஆகும். இதனில், (இரப்பர் மரப்பால்) வடித்தெடுப்போர், களப்பணியாளர்கள், பாதுகாப்புப் பணியாளர்கள், தொழிலகப் பணியாளர்கள் மற்றும் நாட் (தற்செயல்) பணியாளர்கள் ஆகியோர் அடங்குவர்.

நாட்கூலி, தொழிலாளர்களுக்கு அவரவர்களின் நிலைக்கேற்ப, ரூபாய் 23.43யிலிருந்து ரூபாய்24.56 வரை, முறையாக நிர்ணயித்து வழங்கப்படுகிறது. மரப்பால் வடித்தெடுப்போருக்கு, இரப்பர் மரப்பால் மற்றும் முறிவு துணுக்கு ஆகியவை சேகரிப்பதற்கு, நிர்ணயிக்கப்பட்ட அளவு கிலோவுக்கு மேல்-அதாவது முறையே கிலோவுக்கு 65 பைசா மற்றும் 30 பைசா வீதம் கீழ்குறிப்பிட்டவாறு வேலையளவிற்கு மேல், கூலி வழங்கப்படுகிறது.

வேலையளவு வகுப்பு	இரப்பர் மரப்பால் (கிலோ)	முறிவுதுணுக்கு (கிலோ)
1	1.200	0.300
2	2.000	0.500
3	3.600	0.900
4	5.200	1.300

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பத்தி நான்காம்- என்பத்தைந்தாம் ஆண்டில், சட்டப்படி நியமிக்கப்பட்ட தணிக்கையாளர்களால் முடிக்கப்பெறும் கணக்குத்தணிக்கைக்குட்பட்டு, 15.07 இலட்ச ரூபாய், தொழிலாளர்களுக்கும், அலுவலகப் பணியாளர்களுக்கும், நல்லூதியமாக (போனஸ்) வழங்கப்பட்டது. ஆயிரத்து தொள்ளாயிரத்து என்பத்தைந்து - எண்பத்தாறு மற்றும் 1986-87 ஆகிய ஆண்டுகள் ஒவ்வொன்றிலும், ஏறத்தாழ 16 இலட்ச ரூபாய் நல்லூதியமாக வழங்கப்பட்டது. இது, சட்டப்படியுள்ள, குறைந்தபட்ச நிர்ணய அளவான 8.33 விழுக்காடாகும். சட்டப்படி நியமிக்கப்பட்ட தணிக்கையாளர்களால் கணக்குத் தணிக்கை முடிவுற்ற பின்னர், பணியாளர்களுக்கு நல்லூதியம் வழங்கும் சட்டத்தின்படி நல்லூதியம் வழங்கப்படவிருக்கிறது.

அகவிலைப்படி, நாகர்கோவில் நுகர்வோர் பொருள் விலைப்பட்டிய லின்படி, திருத்தியமைக்கப்படுகிறது.

இரப்பர் பயிரிடப்பட்டுள்ள பகுதிகளில், 1100 பணியாளர் குடும்பங்களுக்கு குடியிருப்பு வசதியளிக்கப்பட்டுள்ளது. முந்நூற்றைம்பது தொழிலாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன. வரும் ஆண்டுகளில் எஞ்சிய பணியாளர் அனைவருக்கும் குடியிருப்புகள் அமைத்துக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சித்தார் மற்றும் குத்தியார் கோட்டங்களில், ஸ்ரீலங்கா அகதிகளுக்கு வேலை வாய்ப்பு அளித்திட, இரப்பர் பயிரிடப்பட்டுள்ளது. தொழிலாளர்களாக நியமிக்கப்பட்டுள்ள அனைத்து அகதிகளுக்கும், இரப்பர் பயிரிடப்பட்ட பகுதியிலேயே குடியிருப்புகள் அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளன. இதுகாறும், இத்திட்டத்தின் கீழ், 285 அகதிகள் வேலைக்கு அமர்த்தப் பட்டுள்ளார்கள்.

தகுதிபெற்ற அனைத்துப் பணியாளர்களுக்கும், ஊதியத்துடன் தேசிய மற்றும் பண்டிகை விடுமுறைகள் அளிக்கப்படுகின்றன. இவைதவிர, அவர்களுக்கு ஆண்டிற்கொருமுறை, படுக்கை விரிப்புகளும், குடைகளும் இலவசமாக வழங்கப்படுகின்றன.

கழகப் பணியாளர்களின் குழந்தைகளுக்கு இலவசமாக கல்வி வசதியளித்திட, கழகத்தின் அனைத்துக் கோட்டங்களிலும், துவக்கப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. இந்த பள்ளி ஆண்டில், கீரிப்பாறை, சித்தார், மற்றும் குத்தியார் கோட்டங்களிலுள்ள துவக்கப்பள்ளிகள் நடுத்தரப்பள்ளிகளாக உயர்த்தப்பட்டுள்ளன.

கழகப்பள்ளிகளில், கல்வி பயிலும் அனைத்துக் குழந்தைகளும், மாண்புமிகு முதலமைச்சரின் சத்துணவுத்திட்ட சலுகையைப் பெற்றவராவர். இத்திட்டத்தினை செயலாற்றிட கழகத்தினால் தனிக்கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன.

கீரிப்பாறையில் பத்துப்படுக்கைகள் கொண்ட ஒரு மருத்துவ மனையும் சித்தாரில், ஆறு படுக்கைகள் கொண்ட ஒரு மருத்துவ மனையும், ஒவ்வொன்றும் தகுதிபெற்ற மருத்துவ அலுவலர் மற்றும் உதவிப்பணியாளர் கண்காணிப்பில் இயங்கி வருகின்றன. இவை தவிர, ஏழு மருந்தகங்களும் உள்ளன. மருத்துவ அலுவலர்கள் இம்மருந்தகங்களை வாரமொருமுறை பார்வையிட்டுச் செல்வர். மருத்துவமனைகளும், மருந்தகங்களும், அலுவலகப் பணியாளர்கள், தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள், ஆகிய அனைவருக்கும் மருத்துவ வசதியளிக்கிறது.

இக்கழகத்தில், பணியாளர்கள் சேமிப்பு நிதித்திட்டம், நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. தொழிலாளர்களின் ஊதியத்தினின்றும் உரிய நிதித்தொகை பிடித்தம் செய்யப்பட்டு நிருவாகத்தின் சரி சமமான பங்குத் தொகையுடன் சேர்த்து மண்டல சேமிப்பு ஆணையரிடம் செலுத்தப் படுகிறது.

இக்கழகத்தில், அண்டை கிராமங்களில் வாழும் 2562 மக்கள் பல்வேறு நிலைகளில், அதாவது (இரப்பர் மரப்பால்) வடித்தெடுப்போர், தொழிலகப்பணியாளர்கள் மற்றும் களப்பணியாளர்கள் ஆகிய வகைத் தொழிலாளர்களாகப் பணியாற்றுகின்றனர். கன்னியாகுமரி மாவட்டத்தில் மிகுந்த பிற்பட்ட நிலையில் பிழைப்பை நடத்தி வரும், மலைவாழ் மக்களான "காணிகளுக்கு" தொழிலாளர்கள் நியமனத்தில், முன்னுரிமையளிக்கப் படுகிறது.

போக்குவரத்து

போக்குவரத்து வசதியைப் பொருத்த வரையில், கழகம், 8.39 இலட்ச ரூபாய் செலவில், 16.89 கிலோ மீட்டர் தொலைவிற்கு, தார் சாலை அமைத்துள்ளது. இதன் பயனாக, அலுவலகப் பணியாளர்கள், தொழிலாளர் கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர், ஆகியோர் கழகத்தின் அனைத்துக் கோட்டங்களிலும் போக்குவரத்து ஊர்திகளில் பயணம் செய்து வர முடிகிறது.

புள்ளி விவரங்கள்[18]

1. இரப்பர் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை, அவற்றின் இருப்பிடம் தொழிற்சாலைகள் துவங்கப்பட்ட ஆண்டுகள் மற்றும் அவற்றின் அமைப்பு	இரண்டு 1. இரப்பர் தொழிற்சாலை, கீரிப்பாறை, கன்னியாகுமரி மாவட்டம். 2. இரப்பர் தொழிற்சாலை, பெருஞ்சாணி, கன்னியாகுமரி மாவட்டம். (இரப்பர் மரப்பால் மட்டும், சேகரிக்கப்பட்டு,

		பாலை இரப்பர் தாள்களாகவும், புதைமிதியடி அடிப்பகுதியாகப் பயன்படும் நீடித்துழைக்கக் கூடிய இரப்பராகவும் மாற்றும் பணி மேற்கொள்ளப்படுகிறது).
2.	ஒவ்வொரு தொழிற்சாலையிலும், பணியாற்றும் தொழிலாளர்களின் எண்ணிக்கை	1. இரப்பர் தொழிற்சாலை, கீரிப்பாறை 103 2. இரப்பர் தொழிற்சாலை, பெருஞ்சாணி 42
3.	முதலீட்டுத் தொகை (31.3.1985 நிலவரப்படி)	நிலையான சொத்துக்கள் ரூ.3,68,27,247 நடப்புச் சொத்துக்கள் ரூ.1,54,27,047 முழுமொத்த முதலீடு ரூ.5,22,54,294 நிகர முதலீடு ரூ.4,70,63,653
4.	மூலப்பொருட்கள் கிடைக்கப்பெறும் ஆதார இடங்கள்	அவர்களது சொந்த எஸ்டேட்களிலிருந்தே பெறப்படுகின்றன. (இரப்பர் தோட்டங்கள்).
5.	உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் விவரம்	1. ஆர்.எம்.ஏ. கிரேடுகள் 2. இ.பி.சி. கிரேடுகள் 3. பி.எஸ்.சி. கிரேடுகள் 4. முழுச்செறிவூட்டப்பட்ட இரப்பர் மரப்பால் 5. மேலீடாகச் சீவி எடுக்கப் பட்ட நீடித்துழைக்கக் கூடிய இரப்பர்.
6.	விற்பனை	பொதுஏலம்,ஒப்பந்தப்புள்ளி பெறுதல், நீண்டகால உடன்படிக்கை மற்றும் இசைவிணக்க முறையில் கலந்து பேசி, விலை நிர்ணயம் செய்தல்.
7.	உற்பத்தி செய்யும் செயல்முறைகளில், குறிப்பிடத்தக்க அம்சங்கள் ஏதேனுமிருந்தால் அவை	இயந்திர நுட்பம் சார்ந்த மற்றும் வேதியியல் சார்ந்த செயற்பாடு.
8.	இரப்பர் பயிரிடப்பட்டுள்ள நிலப்பரப்பளவு	4785.7 எக்டேர்கள்

9. ஆண்டொன்றுக்கு உற்பத்தி செய்யப்படும் பலதரப்பட்ட நிலையிலான இரப்பர் பற்றிய விவரங்கள்

தொடர் எண்.	தர நிலை	1985-86 (டன்னில்)	1986-87 (டன்னில்)
1.	ஆர்.எம்.ஏ.கிரேடுகள்	425	935
2.	இ.பி.சி. கிரேடுகள்	262	260
3.	பி.எல்.சி. கிரேடுகள்	இல்லை	63
4.	முழுச்செறிவூட்டப்பட்ட இரப்பர் மரப்பால்	1395	736
5.	மேலீடாகச்சீவி எடுக்கப்பட்ட நீடித்துழைக்கக்கூடிய இரப்பர்	...	27
6.	மற்றவை	560	554
	மொத்தம்	2,642	2,575

10. பலதரப்பட்ட நிலையான இரப்பர்களின் விலை மதிப்பு

தொடர் எண்.	தரநிலை	விலைமதிப்பு 1985-86	1986-87
		(ரூ. இலட்சத்தில்)	
1.	ஆர்.எம்.ஏ. கிரேடுகள்	62	166
2.	இ.பி.சி. கிரேடுகள்	32	45
3.	பி.எல்.சி. கிரேடுகள்	--	11
4.	முழுச்செறிவூட்டப்பட்ட இரப்பர் மரப்பால்	286	137
5.	மேலீடாகச்சீவி எடுக்கப்பட்ட நீடித்துழைக்கக்கூடிய இரப்பர்	--	--
6.	மற்றவை	36	35
	மொத்தம்	416	394

11. வேலை செய்யும் தொழிலாளர்களும், அலுவலகப் பணியாளர்களும்

தொழிலாளர்கள்	2562	2562
அலுவலகப் பணியாளர்கள்	472	473

12. **ஆண்டு வருவாய்** **ஆண்டுச் செலவு**

1985-86 ரூ. 424.29 இலட்சம் ரூ.402.40 இலட்சம்

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள இரப்பர் பயிரிடுவோரின் நலனுக்காக, ஒரு துணை வளர்ச்சி அலுவலர் தலைமையில், நாகர் கோவிலில் ஒரு மண்டல அலுவலகம் துவங்கப்பட்டுள்ளது. இவ்வலுவலகம், இரப்பர் கழகத்தின் கீழ்க்குறிப்பிட்ட திட்டங்களை நிறைவேற்றி வருகிறது:

திட்டத்தின் பெயர்	*அனுமதிக்கப்பட்ட மானியத்தொகை (ரூபாய்)*	*தேவைப்படும் குறைந்த பட்ச பரப்பளவு*
1. இரப்பர் திரும்பப்பயிரிடுவதற்குரிய மானியம்	ஹெக்டேருக்கு ரூ.5,000/- மற்றும் பாலிதீன் பைகளில் பாதுகாக்கப்படும் கன்றுகளுக்கு ரூ.2,700/-.	0-10 ஹெக்டேர்
2. இரப்பர் நடுதல் வளர்ச்சித் திட்டம் புதிய கன்றுகள் நடுதல்	ஹெக்டேருக்கு ரூ.5,000/- மற்றும் பாலிதீன் பைகளில் பாதுகாக்கப்படும் கன்றுகளுக்கு ரூ.2700/-.	0.20 ஹெக்டேர்
3. புகைப்பதன சேமிப்பு கிடங்கு மானியம்	85 கிலோ கொள்ளளவு ஒரு புகைப்பதன சேமிப்பு கிடங்குக்கு ரூ.5000/-.	
4. ரோலார் மானியத்திட்டம் (சிறு அளவில் இரப்பர் பயிரிடுவோருக்கு மட்டும்)	ஒரு ரோலருக்கு ரூ.3500/-	
5. மானிய விலையில் துணைப் பயிர் விதைகள் வழங்குதல்		
6. 50 விழுக்காடு மானிய விலையில், மழை பாதுகாப்புப் பொருட்கள் வழங்குதல்		
7. எஸ்டேட் இறக்குமதி சரக்குகள் சலுகை விலையில் வழங்குதல்		
8. இலவச ஆலோசனை வழங்குதல் மற்றும்		
9. நீர்ப்பாசன மானியத் திட்டம்	சிறிய அளவில் இரப்பர் பயிரிடுவோருக்கு, ஹெக்டேருக்கு ரூ.3500/- வீதமும், அதிக அளவில் பயிரிடுவோருக்கு ரூ.1500/- வீதமும் வழங்குதல்.	

இவைதவிர, மேலும் சில பயனளிக்கும் திட்டங்களும் உள்ளன. இத்திட்டங்களுக்குத் தேவையான விண்ணப்பங்கள் பெறப்பட்டு, நாகர்கோவில் மண்டல அலுவலகத்தில் உரிய செயற் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்திட்டங்களின் கீழ் கன்னியாகுமரி மாவட்டத்தில், ஒவ்வொரு ஆண்டும், ஏறத்தாழ 20 முதல் 25 இலட்ச ரூபாய் செலவிடப்படுகிறது.

பம்பாயிலுள்ள வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கி (நபார்டு) கழகத்தின் தொழில்நுட்ப ஒத்துழைப்புடன், அட்டவணையிற் சேர்க்கப்பட்ட வங்கிகள் மூலம் இரப்பர் பயிரிடுவோருக்கு நீண்ட காலக்கடன் வழங்க, திட்டங்களை செயல்முறைப்படுத்துகிறது.

இரப்பர்கன்றுகளைத் திரும்பப்பயிரிடுதல், பக்குவமற்ற இரப்பர் கன்றுகளைப் பேணிக்காத்தல், புகைப்பதன சேமிப்புக்கிடங்கு கட்டுதல், செய்முறை இயந்திரங்கள் வாங்குதல், தொழிலாளர்களின் குடியிருப்பு வீடுகள் கட்டுதல் ஆகியவற்றிற்குக் கடன் வழங்கப்படுகிறது.

இரப்பர் கன்றுகளுக்கு அளிக்க வேண்டிய இரசாயன உரங்களின் தேவை குறித்து, அறுதியிட்டுக் கூறிட, மண் மற்றும் இலை ஆய்வுப்பணி மேற்கொள்வதற்காக, ஒரு மண்டல ஆய்வுக்கூடம் உள்ளது. இக்கூடத்தின் ஆயவாளர்கள், முக்கியமான இரப்பர் பயிரிடும் மையங்களில் சுற்றுப் பயணம் செய்து, மண் மற்றும் இலை மாதிரிகளைச் சேகரித்து, முறையாக ஆய்வு செய்து, எந்த அளவு, எவ்வகையான உரங்கள் அளிக்க வேண்டுமென, இரப்பர் பயிரிடுவோருக்கு உரிய பரிந்துரை அளிக்கிறார்கள்[19].

மாச்சத்துத் தொழிற்சாலை

கல்குளம் வட்டம், புலியூர் குறிச்சியிலுள்ள, "தி ஆரோக்யா தீக்குச்சி மற்றும் மாச்சத்துத் தொழிற்சாலை," மரவள்ளியிலிருந்து மாச்சத்து தயாரிக்கும் முக்கியமான தொழிற்சாலைகளிலொன்றாகும். இங்கு உற்பத்தி செய்யப்படும் மாச்சத்து, உள்ளூரில் மட்டுமல்லாமல், இந்தியா முழுமையும் விற்பனையாகிறது. தொழிற்சாலை, ஏறத்தாழ 100 நபர்களுக்கு வேலை வாய்ப்பளித்துள்ளது. கூவைக்கிழங்கு மாவு தயார் செய்யத் தேவைப்படும் கூவைக்கிழங்கு, இங்கு உரிய அளவு கிடைக்கிறது.

சங்குத் தொழிற்சாலை[20]

காடியாப்பட்டினத்திலிருந்து நீரோடை வரையிலுள்ள கடற்கரைப் பகுதியில், சங்கு மிகுதியாகக் காணப்படுகிறது. தற்போதைய கன்னியாகுமரி மாவட்டத்தினை தமிழ்நாடு மாநிலத்துடன் இணைப்பதற்கு முன்பு, சங்கு பிடிக்கும் உரிமை திருவாங்கூர் மன்னரின் பொறுப்பிலிருந்தது. எனினும், இப்பகுதி, தமிழ்நாட்டுடன் இணைக்கபட்ட பின்னர், இவ்வுரிமை அரசுத்துறையின் பொறுப்பிலிருந்து வருகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் சங்கு பிடிக்கும் உரிமை, ஏப்ரல் 14, 1960 வரை, அரசுத்துறையின் பொறுப்பில் தொடர்ந்தது. ஏப்ரல் 1960 முதல், தனியார் துறைக்கு இவ்வுரிமை ஏலத்தில் விடப்பட்டது. பின்னர், சங்கு பிடிக்கும் உரிமை குறித்த கொள்கையை அரசு திருத்தியமைத்தது. அதன்படி, தூத்துக்குடி சங்கு பிடிக்கும் பகுதி நீங்கலாக, தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கடற்கரைப் பகுதியையும், அரசு உரிமம் பெற்ற சங்கு பிடிப்போருக்கு தனி இயங்குமுறைப் பகுதியாகப் பிரகடனம் செய்தது. இக்கொள்கை, மே 5, 1971 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது. அரசு இக்கொள்கையினை மறுபடியும் மாற்றியமைத்து, 1977ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதம் முதல், மாநில முழுமையிலும் சங்கு பிடிக்கும் உரிமையை, அரசின் ஏகபோகத் தனி உரிமையாக்கியது. தற்போது கன்னியாகுமரி மாவட்டத்தல், வலைப்படிவ பாணியில்தான் சங்கு சேகரிக்கப்படுகிறது.

சங்கு, முதன்மையாக, அழகுநயமிக்கப் பொருள்களான வளையல்கள், மோதிரங்கள் ஆகியவை செய்வதற்குப் பயன்படுத்தப் படுகிறது. "வலம்புரி சங்கு" சமயப்பற்றார்வமிக்க தனிச்சிறப்பு வாய்ந்த தாகும். எனவே, இச்சங்கினை விரும்பிப் பெருவோர், புதையல் போன்று இதனைப்பேணிக் காக்கிறார்கள். ஆகையால், இச்சங்கு, விலைமதிப் புள்ளதாகும். மேற்கு வங்க மாநிலம்தான் அதிக அளவில் சங்குகளை விலைக்குப் பெறுகிறது. கடலினின்று கிடைக்கப்பெறும் கிளிஞ்சிற் சிப்பியைப் பெரும்பாலும் பயன்படுத்தும் சிறு தொழில் நிறுவனங்கள் மற்றும் கைவினைப்பொருள் அலகுகள் ஆகியவையும் மாவட்டத்தில் துவங்கியுள்ளன. சுண்கைக்கரியகை மற்றும் தனிமம் அல்லது சேர்மம் வகையில் நீருடன் இணைந்த சுண்ணாம்பு ஆகியவை தயாரிக்க, கடற்கிளிஞ்சிற் சிப்பி பயன்படுத்தப்படுகிறது.

உப்புத் தொழில்துறை

உப்பு உற்பத்தி, ஒரு பண்டை காலத் தொழிலாகும். இது கன்னியாகுமரி மற்றும் குளச்சல் பகுதியில் முதன்மையாகக் காணப்படுகிறது. இந்த உப்புத் தொழிற்கூடங்கள், "உப்பளங்கள்" என அழைக்கப்படுகின்றன. இம்மாவட்டத்தில் 10 உப்புத் தொழிற்சாலைகள் உள்ளன. அவற்றில், மூன்று தொழிற்சாலைகள் கிழக்கு மலைத்தொடரை யொட்டியுள்ள வாரியூர், பால்குளம் மற்றும் தாத்தரிப்பு ஒடை ஆகிய இடங்களில் உள்ளன. ஏனைய தொழிற்சாலைகள், மேற்கு மலைத்தொடரில், இராசக்காமங்கலம் மற்றும் குளச்சல் ஆகிய இடங்களில் உள்ளன.

எண்ணெய் தொழில்துறை

தென்னங்கொப்பறையினின்று, எண்ணெய் பிழிந்தெடுப்பது, இம்மாவட்டத்தில் ஒரு முதன்மையான குடிசைத்தொழிலாகும். இத்தொழில் மேற்கொள்ளப்படும் முக்கியமான மையங்கள், கோட்டார், வடசேரி, எரணியல், புதுக்கடை மற்றும் மைலாடி ஆகியவையாகும். இப்பகுதியில் புன்னை, மருவெட்டியம், இலுப்பை, எள், தேவதாரு, அஞ்சிலி, இரப்பர்

விதை, கருஞ்சொட்டை, வேம்பு மற்றும் எலுமிச்சை இலை இவற்றி னின்றும், தயாரிக்கப்படும் எண்ணெய் வகைகள் நன்கு விற்பனையா கின்றன.

மீன்வலைத் தொழில் துறை[21]

இம்மாவட்டத்தின் கடற்கரைப்பகுதியில், கைகளினாலேயே மீன் பிடிக்கும் வலைகள் பின்னுவது, ஒரு ஊக்கெழுச்சியுடைய தொழிலாகும். முட்டத்தின் அருகில், வாரவிளை என்ற இடத்தில், கோட்டார் சமூகப் பணியினைக் குழுவினால், மீன் வலை பின்னும் தொழிற்கூடம் நடத்தப் படுகிறது. மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில், ஒரு சில சமய சார்புள்ள இயக்கங்கள், இம்மையங்களை நடத்தி வருகின்றன. அதனால், மீனவர் குடும்பத்தினர் பலர் பயனடைகிறார்கள். மீன் பிடிக்கும் நைலான் (தொய்வும், திண்மையும் மிக்க கண்ணாடி போன்ற செயற்கைத் துகில் வகை) வலையினை இயந்திர விசையூட்டில் உற்பத்தி செய்யும் ஒரு அலகு, மணவாளக்குரிச்சியில் இயங்கி வருகிறது. இப்பகுதிகளிலுள்ள, மீனவப்பெருமக்களின் தேவையினை இது பூர்த்தி செய்கிறது.

தேன் சேகரிக்கும் தொழில்

மார்த்தாண்டத்திலுள்ள கத்தோலிக்க இளைஞர் சங்க மறு அமைப்பு மையம் தேனீ வளர்ப்பில் ஈடுபட்டுள்ளது. இங்கு சேகரிக்கப்படும் தேன், மாநிலத்தின் பிற பகுதிகளில் நல்ல வரவேற்பினைப் பெறுகிறது. இது ஒரு பருவ காலத் தொழிலாகும். இரப்பர் மரங்கள் வளம்பெறும், ஏப்ரல் மற்றும் மே மாதங்களில், இத்தொழில் செழித்தோங்குகிறது.

செங்கற்கள் மற்றும் ஓடுகள் தொழில்துறை

இது ஒரு முக்கியமான மற்றும் மக்கள் பாராட்டிற்குரிய தொழில் துறையாகும். தோவாளை, கந்தன் விளை, முலகுமேடு, புதுக்கடை மற்றும் நல்லிவிளைப் பகுதிகளில், சாலையின் இரு மருங்கிலும் செங்கற்கள் மற்றும் ஓடுகள் தொழிற்சாலைகளை காணலாம். மாவட்டத்தின் மற்ற பகுதிகளிலும் கூட அங்குமிங்குமாக இதனைக்காண முடியும். இம்மா வட்டத்தில் தயாரிக்கப்படும் செங்கற்களும், ஓடுகளும் உயர்தரமானவை. மார்த்தாண்டத்திற்கு அருகாமையிலுள்ள பாக்கோடு, செங்கல் தொழிலுக்குப் பெயர்பெற்றதாகும்.

கோதுமை செயற்பாங்கு

நாகர்கோவிலுக்கருகாமையிலுள்ள சுங்கங்கடை என்ற இடத்தில், உள்ளூர் தொழிலதிபர்களால், சிறு அளவில், ஒரு உருளை மாவு ஆலை துவங்கப்பட்டுள்ளது. இதனுடைய உற்பத்தித் திறன், ஒரு நாளைக்கு 25 டன்களாகும். நாகர்கோவில் சிறுதொழில் அதிபர் ஒருவரால் ஒரு பிஸ்கோத்து (மாச்சில்லு) தொழிற்சாலை துவக்கப்பட்டுள்ளது.

சிறு தொழில் துறை

மாவட்டத்திலுள்ள சிறுதொழில் அலகுகள் கீழே பட்டியலிடப் பட்டுள்ளன:

உப்பளங்கள்

பால்குளம் உப்பு தயாரிக்கும் ஆலை

குடிசைத்தொழில்கள்

தொடர் எண்.	குடிசைத்தொழில்களின் பெயர்	உற்பத்தி செய்யப்படும் பொருள்கள்	மாவட்டத்தின் மொத்த மக்கள் தொகையில், பல்வேறு குடிசைத் தொழில்களில் ஈடுபட்டுள்ள மக்களின் விழுக்காடு/ விகிதம்
(1)	(2)	(3)	(4)
1.	கோரை மற்றும் திரு நிலைத் தாவர வகையில் பாய்முடைதல்	கோரை மற்றும் திரு நிலைத்தாவர வகைப் பாய்கள்	0.42
2.	பனையோலை	பனையோலைப் பொருட்கள்	0.35
3.	பிரம்புப்பனை மற்றும் மூங்கிலில் செய்யப்படும் பொருள்கள்	கூடை, வீட்டுச்சாமான்கள் தட்டுமுட்டுப் பொருட்கள்	0.09
4.	நைலான், (தொய்வும், திண்மையும் மிக்க கண் ணாடிபோன்ற செயற்கைத் துகில்வகை) அழகு நயமிக்க பைகள்	பைகள் மற்றும் கூடைகள்	0.02
5.	கையச்சு	துணிகளில் கையச்சு பதித்தல்	0004
6.	திருநிலைத்தாவர வகை யில், பல்வேறு பொருட்கள் செய்தல்	குறிப்பாக பாய்கள்	0.62
7.	மீன்பிடிக்கும் வலை பின்னுதல்	மீன்வலை	1.18
8.	முந்திரிக்கொட்டைக்குள் ளிருக்கும் பருப்பெடுத்தல்	முந்திரிப்பருப்பு	0.72
9.	மரச்சாமான்கள் செய்தல்	வேளாண் கருவிகள்	0.45
10.	கொல்லுவேலை	வேளாண் கருவிகள்	0.36
11.	செங்கற்கள் மற்றும் ஓடுகள் உற்பத்தி செய்தல்	செங்கற்கள் மற்றும் ஓடுகள்	0.18
12.	பிஸ்கோத்து (மாச்சில்லு) உற்பத்திசெய்யும் தொழில்	பிஸ்கோத்து(மாச்சில்லு)	0.1
13.	பீடி மற்றும் சுருட்டு, சுருட்டியடுக்குதல்	பீடிகள் மற்றும் சுருட்டுகள்	0.1
14.	பொம்மைகளும் மற்றும் குழந்தைகளின் வேடிக்	பொம்மைகள் மற்றும் குழந்தைகளின் வேடிக்கைப்	

கைப்பொருட்களும் செய்தல்	பொருட்கள்	0.1
15. மெழுகுவர்த்திகள் மற்றும் அகர்ப்பத்திகள் செய்தல்	மெழுகுவர்த்திகள் மற்றும் அகர்பத்திகள்	0.1
16. சுண்ணாம்புக் காளவாய்	சுண்ணாம்பு	0.1

தொழில் சார்ந்த கூட்டுறவு சங்கங்கள்[22]

கன்னியாகுமரி மாவட்டத்தில், சிறிய அளவிலான தொழில்கள், விரிவடைவதில், தொழில் சார்ந்த கூட்டுறவு சங்கங்களுக்கு பெரும் பங்குண்டென ஐயமறக் கூறலாம். தொழில் சார்ந்த மற்றும் நுகர்வோர் பொருட்களை அவை நன்கு உற்பத்தி செய்கின்றன. சிறு தொழில்களான, கயிறு உற்பத்தி, எண்ணெய் எடுத்தல், நார் இழை, உலோக வார்ப்பு, குடை தயார் செய்தல், தொழில் தொடர்பான பொறியியல், அச்சகத்தொழில், சுண்ணாம்பு உற்பத்தி மற்றும் இரப்பர் பொருட்கள் உற்பத்தி ஆகியவற்றில், தொழில்சார்ந்த கூட்டுறவு சங்கங்களின் முயற்சி பாராட்டிற்குரியது.

அதேபோன்று, மரபுசார்ந்த கைவினைகளான, கல்லில் உருவம் செதுக்குதல், மரத்தில் செதுக்குதல், பனையோலைப்பொருட்கள் உற்பத்தி செய்தல், வார் இழை மற்றும் பூத்தையல் வேலை, கடல் கிளிஞ்சற் சிப்பியில் பொம்மைகள் செய்தல், மூங்கில் பொருட்கள் செய்தல் ஆகியவற்றில் அவை பெரிதும் ஈடுபாடு கொண்டுள்ளன.

கயிறு உற்பத்தித்தொழில் கூட்டுறவு சங்கங்கள் இப்பால் மேம்பாடடைந்து வருகின்றன. அவை எதிர்காலத்தில், கயிறுத் தொழில் துறைக்குக் கட்டுறுதியான பங்காற்ற இயலுமென எதிர்பார்க்கலாம்.

மார்ச், 31 1981ஆம் நாளைய நிலைப்படி, மாவட்டத்தில் 18 தொழில் கூட்டுறவு சங்கங்கள் உள்ளன. எட்டு கயிறுத் தொழிலாளர்கள் தொழில் கூட்டுறவு சங்கங்கள், ஐந்து கைவினைத்தொழில் கூட்டுறவு சங்கங்கள், ஒரு தீக்குச்சித்தொழில் கூட்டுறவு சங்கம், மற்றும் நான்கு பலவகை கூட்டுறவு சங்கங்கள் ஆகியவை அவற்றில் அடங்கிய சங்கங்களாகும்.

தமிழ்நாடு மாநில தொழில் கூட்டுறவு வங்கி லிமிடெட்[23]

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபது முதல் 1969 வரை, தொழில், கூட்டுறவு சங்கங்கள் போதுமான நிதியினைப் பெறுவதில், கடுமையான பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அவர்களது சொந்த வழிமுறையிலும் சரி, வங்கிக்கடன் மூலமும் சரி, தேவையான நிதியைத் திரட்ட இயலவில்லை.

அவர்களது இடர்பாடு களையப்பெற, தமிழ்நாடு மாநில தொழில் நோக்குக் கூட்டுறவு வங்கி லிமிடெட் என்ற உச்சநிலை வங்கியைக் கடந்த செப்டம்பர், 13, 1961ஆம் நாளன்று, தமிழ்நாடு அரசு உருவாக்கியது.

(வங்கியின் நடவடிக்கை தொடர்பான தகவல்கள், "வங்கிகள்" என்ற தலைப்பிலான படலத்தில், விரிவாக அளிக்கப்பட்டுள்ளன.

மாவட்டத்திலுள்ள பல்வேறு தொழில் கூட்டுறவு சங்கங்களின் பெயர் விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன:

1. கன்னியாகுமரி மாவட்ட மத்திய கயிறு விற்பனைக் கூட்டுறவு சங்கம்
2. பண்டாரவிளை கயிறுத்தொழிலாளர் தொழில் கூட்டுறவு சங்கம்
3. முல்லங்கன் விளை கயிறுத் தொழிலாளர் தொழில் கூட்டுறவு சங்கம்
4. காளிங்கராசபுரம் கயிறுத்தொழிலாளர் தொழில் கூட்டுறவு சங்கம்
5. மணக்குடி கயிறுத்தொழிலாளர் தொழில் கூட்டுறவு சங்கம்
6. நாகர்கோவில் உலோக வார்ப்புத்தொழில் கூட்டுறவு சங்கம்
7. நாகர்கோவில் குடை உற்பத்தியாளர் தொழில் கூட்டுறவு சங்கம்
8. மைலாடி கல்தொழிலாளர் தொழில் கூட்டுறவு சங்கம்
9. பைன்குளம் கயிறுத் தொழிலாளர் தொழில் கூட்டுறவு சங்கம்
10. கொல்லங்கோடு கயிறுத்தொழிலாளர் தொழில் கூட்டுறவு சங்கம்
11. முகிலங்குடியிருப்பு நார்ப்பொருள் தொழில் கூட்டுறவு சங்கம்
12. பொறியாளர் தொழில் கூட்டுறவு சங்கம்
13. முன்னாள் இராணுவத்தினர் கூட்டுறவு பொறியியல் பணிகள் லிமிடெட்
14. கன்னியாகுமரி இரப்பர் தொழில் கூட்டுறவு சங்கம் லிமிடெட்
15. கன்னியாகுமரி அச்சகத்தொழில் கூட்டுறவு சங்கம்
16. கன்னியாகுமரி மரம் செதுக்கும் தொழில் கூட்டுறவு சங்கம்
17. நாகர்கோவில் பெண்கள் வார் இழை மற்றும் பூத்தையல், வேலைப் பணியாளர்கள் தொழில் கூட்டுறவு சங்கம்
18. கன்னியாகுமரி சிறிய தீக்குச்சி உற்பத்தியாளர் பணித்தொழில் கூட்டுறவு சங்கம்

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தொழில்சார்ந்த தொழிலாளர்களின் இயக்கங்கள்[24]:

1. கனிப்பொருள் பணியாளர் ஒன்றியம், மணவாளச்குரிச்சி
2. மணவாளக்குரிச்சி கனிப்பொருள் அலுவலகப்பணியாளர் சங்கம்
3. குமரி மாவட்ட ஆலைத்தொழிலாளர் ஒன்றியம், நாகர்கோவில்
4. நாகம்மாள் ஆலைகள் பணியாளர் மற்றும் பணிபயன்படுத்துவோர் ஒன்றியம், நாகர்கோவில்
5. குமரி நெல்லை மாவட்டப்பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம், நாகர்கோவில்
6. கன்யாஸ்பின் தொழிலாளர் சங்கம், ஆரல்வாய்மொழி
7. கன்னியாகுமரி கூட்டுறவு நூற்பு ஆலைகள் தொழிலாளர் முன்னேற்ற சங்கம், ஆரல்வாய்மொழி

8. கன்யாஸ்பின் தொழில் நுட்ப வல்லுநர்கள் ஒன்றியம், ஆரல்வாய்மொழி.
9. கன்னியாகுமரி மாவட்டப்பணி அலுவலர் முற்போக்கு ஒன்றியம், ஆரல்வாய்மொழி
10. அகதிகள் ஒருங்கிணைக்கப்பட்ட முன்னணி இணையம், ஆரல்வாய்மொழி

சிறுதொழில் நிறுவனங்களுக்கு உதவி[25]

மாநிலத்திலுள்ள சிறுதொழில் நிறுவனங்களின் வளர்ச்சியை உக்குவிக்குமுகத்தான், மாநில தொழில் மற்றும் வணிகத்துறை, நல்ல பல வளர்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது. அந்நிறு வனங்களின் தொழில் நுட்ப வழிவகையறிவிக்க முயற்சி எடுத்தல், வங்கிகள் மற்றும் தொழில் முதலீட்டுக் கழகங்களின் மூலம் நிதி உதவியளித்தல், பற்றாக்குறையான மூலப்பொருட்களை முன்னுரிமை அடிப்படையில் நியாய விலையில் வழங்குதல், இறுதியாக, முடிக்கப் பெற்ற உற்பத்திப்பொருட்களை முறையாக விற்பனை செய்ய, நடவடிக்கை மேற்கொள்ளுதல், போன்றவை இத்திட்டங்களில் அடங்கியுள்ளன.

மாநில தொழில்துறை தவிர, தமிழக அரசும், பல்வேறு பொதுத் துறை நிறுவனங்களான, தமிழ்நாடு சிறு தொழில் கழகம், தமிழ்நாடு கைவினை வளர்ச்சிக் கழகம் ஆகியவை, தொழில் நிறுவனங்களைத் துவக்கவும், எழுச்சியுடையத் தொழில் நிறுவனங்களை ஊக்குவிக்கவும், தொழிற்துறை உரிமையாளர்களுக்கு, உதவி அளித்தும் வருகின்றன. நிதியாகவும், மற்றும் உள்ளமைப்பாகவும் இவ்வுதவி அளிக்கப்படுகிறது.

1. கிராம தொழிற்துறைத் திட்டக்கடன்

புறப்பகுதியில், தொழில் நிறுவனங்கள் நிறுவவும், அவற்றை ஊக்குவிக்கவும், அரசு கன்னியாகுமரி மாவட்ட முழுமையும், (நாகர் கோவில் நகராட்சிப்பகுதி மற்றும் 1971ஆம் ஆண்டு மக்கட் தொகை கணக்கெடுப்புப் படி, 75,000-க்கும் குறைவாக மக்கட்தொகை உள்ள கிராமப்பகுதிகள் நீங்கலாக) கிராம தொழிற்துறை திட்டப் பகுதியாக அறிவித்துள்ளது. புதுத்தொழில் நிறுவனங்களுக்கு, மாவட்டத் தொழில் மையம், 6.25 விழுக்காடு வட்டியில், (அடையாள உதவித்தொகையாக) கடன் வழங்கி வருகிறது.

2. சிறு தொழில் வளர்ச்சிக் கழகத்தால், தொடக்க உதவித்தொகை

புறப்பகுதி மற்றும் குறை நகர்ப்புறங்களிலும் துவக்கப்படும் சிறு தொழில் நிறுவனங்கள், அவைகளது நிலையான முதலீட்டுத்தொகை ரூபாய் ஒரு இலட்சம் அல்லது அதற்கும் குறைவாக இருப்பின், அதனில் 10 விழுக்காடு, தொடக்க உதவித் தொகையாகப் பெற தகுதி பெறகின்றன.

3. நிதிச் சலுகை

இம்மாவட்டம், ஒரு பின் தங்கிய மாவட்டமாக அறிவிக்கப் பட்டுள்ளது. எனவே, 1971ஆம் ஆண்டு முதல், இது, நிதிச்சலுகை பெறத் தகுதியுடையது. இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி, மறு நிதி உதவித் திட்டத்தின் கீழ், மற்றவங்கிகளுக்கும், மாநில நிதி உதவிக் கழகங் களுக்கும், ஆறு விழுக்காடு வட்டியில் கடன் வழங்குகிறது. சலுகை பெறும் வங்கிகளும், உதவிக் கழகங்களும், அவை வழங்கும் கடனுக்கு 12.5 விழுக்காடு, வட்டி கோருகின்றன.

4. வட்டியில்லாத விற்பனை வரிக்கடன்

ஆண்டொன்றுக்கு ரூபாய் 4000த்துக்குக் குறைவின்றி, விற்பனை வரி செலுத்தும், புதிதாகத் துவக்கப்பட்டுள்ள சிறு தொழில் நிறுவனங்கள், இப்பயனைப் பெறத் தகுதியுடையவை. தற்போது இயங்கிவரும், சிறு தொழில் நிறுவனங்களுக்கு, அவைகளது நிலையான சொத்தில், 25 விழுக்காட்டிற்கீடாக, தொழில் விரிவாக்கத் திட்டமிருந்தால், ஏப்ரல் 1, 1978ஆம் நாளுக்குப் பிறகு, கடன் சலுகைபெறத் தகுதியுடையவைகள். குறைந்த பட்சமாக, ரூபாய் 4000/- மற்றும் அதிகபட்சமாக, மொத்த நிலையான சொத்தில் எட்டு விழுக்காடு அல்லது 1.25 இலட்ச ரூபாய் இதில் எது குறைவோ, அத்தொகையினைக் கடனாகப் பெறலாம். வட்டியில்லாக் கடனாகிய இத்தொகையினை மூன்று ஆண்டுத்தவணை களில் சரிசமமாகத் திருப்பிச் செலுத்தலாம். கடன் பெற்றதிலிருந்து, ஐந்தாண்டுகள் கழித்து, தொகையைத்திருப்பிச் செலுத்தினால் போதுமானது.

5. மின் கட்டண மானியம்

மின் இணைப்பு பெற்று, ஜனவரி 1, 1980-க்குப் பிறகு, உற்பத்தியைத் துவக்கிய பதிவு பெற்ற சிறு தொழில் நிறுவனங்கள், கீழ்கண்டவாறு மின் கட்டண மானியம் பெறத் தகுதியுடையவை.

முதல் ஆண்டு	- தொழில் நிறுவனத்தால், செலுத்தப்பட்ட மின் கட்டணத்தில், 30 விழுக்காடு.
இரண்டாம் ஆண்டு	- தொழில் நிறுவனத்தால் செலுத்தப்பட்ட மின்கட்டணத்தில், 20 விழுக்காடு.
மூன்றாம் ஆண்டு	- தொழில் நிறுவனத்தால் செலுத்தப்பட்ட மின் கட்டணத்தில், 10 விழுக்காடு.

தமிழ்நாடு மின் வாரியம் அளிக்கும் சலுகை[26]

உயர் இழுப்பு விசைக்காப்பு -1 என்ற வகையிலடங்கும், உயர் இழுப்பு விசைத் தொழில் நிறுவனங்களுக்குத் தமிழ்நாடு மின் வாரியம், கீழ்க்கண்டவாறு, காப்பு வரிச் சலுகை அளிக்கிறது.

புதிய தொழில் நிறுவனங்களுக்குச் சலுகை

1. முதன் மூன்றாண்டுகளுக்கு	-	உயர் இழுப்புவிசை-காப்புவரி விதிப்பில் 66 2/3 விழுக்காடு.
2. நான்காம் ஆண்டு	-	உயர் இழுப்பு விசை - காப்பு வரிவிதிப்பில் 80 விழுக்காடு.
3. ஐந்தாம் ஆண்டு	-	உயர் இழுப்பு விசை - காப்பு வரிவிதிப்பில் 90 விழுக்காடு.
4. ஆறாம் ஆண்டு	-	முழுக்காப்புவரி

அலகடிப்படை அளவில் உள்ள வரி விதிப்பு மற்றும் உயர்ந்த அளவு கேட்புக்கட்டணம் ஆகியவற்றைச் செலுத்தும் இரு தரப்பாருக்கும், இச்சலுகைகள் பொருந்தும். ஆனால், தொழில் உற்பத்திக்குத் தேவையான மின் சக்தியைத் தாங்களே தோற்றுவித்தோ, அல்லது தொழில் உற்பத்திக்குத் தேவையான மின் சக்தியை தங்களது சொந்த முறையில் ஏற்பாடு செய்து கொண்டு, துணைத் தொழிலுக்கு மட்டும் மின் வாரியத்திடமிருந்து மின் சக்தியைப் பெற்றோ, தொழில் நடத்தும் நிறுவனங்கள் இச்சலுகையினைப் பெறத் தகுதியற்றவை. சலுகை பெறும் நிறுவனங்களுக்கு, இலாபம் ஈட்டத் துவங்கும் வரையிலோ, அல்லது உயர்ந்த பட்ச காலவரையான ஐந்தாண்டுகள் வரையில் தான் இச்சலுகையுண்டு.

ஒரு புதிய தொழில் நிறுவனம், ஒரே ஒரு முறைதான் இக்காப்புவரிச் சலுகையினைப் பெற முடியும். பின்னரடையும் விரிவாக்கம் அல்லது தொழிலைப் பல்வகைப்படுத்துதல் ஆகியவற்றிற்கு, இச்சலுகை பொருந்தாது.

புதிய தொழில் நிறுவனங்களுக்கு இரவு பணிமுறைச் சலுகை

உற்பத்தி துவங்கியதிலிருந்து ஐந்தாண்டுகள் முடிவு பெறாத ஏற்கனவே இயங்கிவரும் புதிய தொழில் நிறுவனங்கள், பின்னர் நிறுவப்படவிருக்கும் கருவிகலமைவுக்கும் காப்புவரிச் சலுகை பெறத் தகுதியுள்ளவையாயிருந்து, அவ்வாறான தொழில் நிறுவனங்கள், இரவு 9.30 முதல் காலை 5.30 வரை, இரவுப் பணிமுறையினை நடைமுறைப் படுத்தினால், அவை இரவில் பயன்படுத்தும் மின்சக்திக்கு, கட்டணத்தில், மேலும் 40 விழுக்காடு சலுகை பெறத் தகுதியுள்ளவையாகின்றன. இச்சலுகையினை, இந்த நிறுவனங்கள், ஒவ்வொரு ஆண்டும், சூலைமுதல் சனவரி வரை ஏழு மாதகாலங்களுக்குப் பெற இயலும். இச்சலுகையினை உயர்ந்த அளவு ஐந்து ஆண்டுகளுக்குத் தான் பெற முடியும். இச்சலுகை, புது தொழில் நிறுவனங்களுக்கு, முந்திய பத்தியில் குறிப்பிட்டுள்ள சலுகையினைக் கொடுத்த பின்னர், கணக்கிடப்பட்ட மின்கட்டணத்தை ஆதாரமாக வைத்தே, நிர்ணயிக்கப்படுகிறது. பகல் பணிமுறையும் நடைமுறையிலுள்ள தொழில் நிறுவனங்களுக்கு, இரவுப்பணிமுறைச்

சலுகை, 40 விழுக்காட்டிலிருந்து, 20 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது. தொழிற்துறை, வளர்ச்சி நிறையாத பகுதிகளில், துவங்கப்பட்டுள்ள புதிய தொழில் நிறுவனங்கள், உற்பத்தியைத் துவக்கியதிலிருந்து, முதல் ஐந்தாண்டுகளுக்கு, காப்பு வரியில், மேலும் 15 விழுக்காடு குறைத்து சலுகை பெறத் தகுதியுடையவை[27].

6. மாநில அரசு முதலீட்டு மானியம்[28]

கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டத்தை தொழிற் துறையில் பின்தங்கிய மாவட்டமாக தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. இத்திட்டத்தின்படி, இப்பகுதியில், துவக்கப்பெறும் அனைத்துத் தொழில் நிறுவனங்களும் மொத்த நிலையான முதலீட்டில், 15 விழுக்காட்டிற்கீடான தொகையினை மானியமாகப்பெறத் தகுதியுள்ளவை. மொத்த நிலையான முதலீட்டில், நிலம், கட்டிடம் மற்றும் தொழிற்சாலை-இயந்திரக் கருவிகள் ஆகியவற்றில் முதலீடு செய்துள்ள தொகையாவும் அடங்கும். உயர்ந்தபட்ச மானியத்தொகை மூன்று இலட்ச ரூபாயென நிர்ணயிக்கப் பட்டுள்ளது. மேலும், நிலையான முதலீட்டின் 10 விழுக்காட்டிற்குக் குறையாமல், முதலீடு செய்து, விரிவாக்கத்திட்டத் தினை உருவாக்கும், தற்போது இயங்கிவரும், நிறுவனங்களும், சரிசமவீகித அளவில் மானியம் பெறத்தகுதியுடையவையாகும்.

7. மத்திய அரசு மானியம்

மத்திய அரசு, கடந்த 1980ஆம் ஆண்டு, கன்னியாகுமரி மாவட்ட முழுமையையும், தொழில்துறையில் பின் தங்கிய மாவட்டமாக அறிவித்துள்ளது. எனவே, 1.4.1983ஆம் நாளைக்குப் பிறகு துவங்கப்பெற்ற அனைத்து புதிய தொழில் நிறுவனங்களும், அவைகளது நிலையான முதலீட்டிற்கு, அதாவது,நிலம், கூடிடம், தொழிற்கூடம் மற்றும் இயந்திரக் கருவிகள் ஆகியவற்றிற்கு, 10 விழுக்காடு,- உயர்ந்த அளவு 10 இலட்சம் ரூபாய் வரை,- மானியம் பெறத் தகுதியுடையவை. மேலும், அவை சலுகை அடிப்படையில் நிதியுதவி பெறவும் தகுதியுடையவை.

8. அரசுத் தேவைப்பொருள் விலைக்கு வாங்குவதில் விலை முன்னுரிமை[29]

பதிவு செய்யப்பட்ட சிறு தொழில் நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை, மாநில அரசோ, அரசு போன்ற நிறுவனங்களோ விலைக்கு வாங்கும் போது, அத்தொழில் நிறுவனங்கள் 15 விழுக்காடு, விலை முன்னுரிமை பெற, அனுமதிக்கப்படுகின்றன.

வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி தேசிய வங்கி

இதுகாறும் வேளாண் தொடர்புள்ள செயல்களில் ஈடுபட்டிருந்த, வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி தேசியவங்கி, தற்போது, கன்னியாகுமரி மத்திய கூட்டுறவு வங்கி மூலம் சிறு தொழில் நிறுவனங்களுக்கும் உதவிட, தனது செயற்பாட்டினை விரிவாக்கியுள்ளது.

குறிப்புகள்

1. பொது மேலாளர், "சிப்காட்", சென்னை, அறிக்கை நாள் 3.5.1988
2. உதவி மேலாளர் (இ & ப்பி), "ட்டிக்", சென்னை, அறிக்கை நாள்: 17.11.1986.
3. நிருவாக இயக்குநர், "ட்டிட்கோ" , சென்னை, அறிக்கை நாள் 16-6-1987.
4. பெருந்தலைவர், தமிழ்நாடு மின்வாரியம், சென்னை, அறிக்கை நாள் 27-9-1986.
5. தொழிற்துறை ஆணையர் மற்றும் தொழில் மற்றும் வாணிகத்துறை இயக்குநர், சென்னை, அறிக்கை நாள்12.12.1988.
6. பணி மேலாளர், இந்தியன் ரேர் எர்த்ஸ் லிமிடெட், மணவாளக்குறிச்சி, கன்னியாகுமரி மாவட்டம், அறிக்கை நாள் 20-7-1988.
7. பொது மேலாளர், பிரபா நீர்கலந்த குடிவகை (பி) லிமிடெட், மார்த்தாண்டம், அறிக்கை நாள் 4-4-1988.
8. பொது மேலாளர், மாவட்டத் தொழில் மையம், நாகர்கோவில், அறிக்கை நாள் 12-8-1987.
9. கைவினைப்பொருள் கட்டளைச்சுவடி, கன்னியாகுமரி மாவட்டம், தமிழ்நாடு 1980 (திருத்தப்பட்டது)- கைவினைப்பொருட்கள் விற்பனை மற்றும் பணி விரிவாக்க மையம், நாகர்கோவில் (அகில இந்திய கைவினை வாரியம், வாணிகத்துறை அமைச்சகம், இந்திய அரசு).
10. முதன்மை நிர்வாக அலுவலர், காதி மற்றும் கிராமத் தொழில் வாரியம், அறிக்கை நாள் 17.3.1988.
11. உதவி இயக்குநர் (காதி மற்றும் கிராமத் தொழில்துறை), நாகர்கோவில், அறிக்கை நாள் 17.3.1988.
12. கைத்தறி மற்றும் நெசவுத்துறை இயக்குநர், அறிக்கை நாள் 2.1.1989.
13. பொது மேலாளர், மாவட்டத் தொழில் மையம், நாகர்கோவில், அறிக்கை நாள் 21.1.1987.
14. உதவி மேலாளர் (தொழில் பொறியியல்), சென்னை, அறிக்கை நாள் 28.12.1988.
15. அரசாணை எம்.எஸ்.221 (காடுகள் மற்றும் மீன் பிடிப்புத்துறை), நாள் 25.2.1983.

16. பெருந்தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் (பொறுப்பு), அரசு இரப்பர் கழகம் லிமிடெட், நாகர்கோவில், அறிக்கை நாள் 27.5.1988.

17. அரசாணை எண்.309 (காடுகள் மற்றும் மீன் தொழில் துறை), நாள் 19.3.1985.

18. விற்பனை மேலாளர், அரசு இரப்பர் கழகம் லிமிடெட், நாகர்கோவில், அறிக்கை நாள் 29.12.1987.

19. துணை வளர்ச்சி அலுவலர், இரப்பர் கழகம், மண்டல அலுவலகம், நாகர்கோவில், அறிக்கை நாள் 18.8.1988.

20. மீன் தொழில்துறை இயக்குநர், சென்னை, அறிக்கை நாள் 27.8.1987.

21. "இந்து" தேதி 4.6.1978.

22. மேலாளர், மாவட்டத் தொழில் மையம், நாகர்கோவில், அறிக்கை நாள் 1.3.1979. மற்றும் தொழில் மற்றும் வாணிகத்துறை இயக்குநர், சென்னை, அறிக்கை நாள் 12.12.1988.

23. செயல் நிறைவேற்ற மதிப்பீடு 1984-85, ஊரக மற்றும் சிறு தொழில் துறை, தமிழ்நாடு அரசு, பக்கம் 10.

24. தொழில் மற்றும் வாணிகத்துறை இயக்குநர், சென்னை, அறிக்கை நாட்கள் 7.9.1977 மற்றும் 12.12.1988.

25. செயல் நிறைவேற்ற மதிப்பீடு 1982-85, ஊரக மற்றும் சிறு தொழில்துறை, தமிழ்நாடு அரசு, பக்கம் 19.

26. முதன்மைப் பொறியாளர் (திட்டம்), தமிழ்நாடு மின் வாரியம், சென்னை, அறிக்கை நாள் 18.9.1987.

27. முதன்மைப் பொறியாளர் (திட்டம்), தொழில் நுட்பக்கிளை, தமிழ்நாடு மின் வாரியம், சென்னை, அறிக்கை 18.9.1987.

28. பொது மேலாளர், மாவட்டத் தொழில்மையம், கோணம், நாகர்கோவில், செயற்திட்டம்,1985-86 முதல் 1987-88 வரை.

29. பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம், தொழில் மற்றும் வாணிகத்துறை, அறிக்கை நாள் 12.8.1987.

இயல் - 6

வங்கித்தொழில், வணிகம் மற்றும் பெரு வாணிகம்

பகுதி-1

வங்கித் தொழில்

வங்கித்தொழில் என்பது, ஒரு நாட்டினுடைய பொருளாதாரத்தின் உயிர்நாடியாகத் திகழ்கிறது. அனைத்து மக்களின் அன்றாடத் தேவைகளாவையும் பூர்த்தி செய்கிறது. முறையான வாணிகம் சார்ந்த அனைத்துப் பொருளாதார செயற்பாடுகளையும் ஆயுங்கால், மக்களில் சிலர், வங்கித்தொழில் நடத்தி, ஓரளவு பொருள் திரட்ட முயன்று அதனில் வெற்றியும் கண்டுள்ளார்களென வரலாறு கூறுகிறது. சமுதாயத்தில் வாழும் மக்கள் பணம் உள்ளிட்ட தங்களது மதிப்புள்ள பொருட்களை ஒரு பாதுகாப்பான இடத்தில் சேமித்து வைக்க விரும்பினார்கள். பண்டைய காலத்தில், கோவில்கள் கூட வங்கித்தொழிலை நடத்தின. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கோவில்கள், தங்களது அன்றாட, சமயத் தொடர்புடைய பணிகளையாற்றுவதுடன் கூட, பொருளாதார நடவடிக்கைகளையும் மேற்கொண்டன.[1] அவைகள் மக்களிடமிருந்து, வைப்புத்தொகையினைப் பெற்று தேவையுள்ளோருக்குக் கடனும் அளித்து வந்தன.[2] கோவில்கள் நிலங்களைப் பொது ஏலத்தில் குத்தகைக்கு விடும் முறையினை கையாண்டு வந்ததாகக் கோவில்களிலுள்ள கல்வெட்டுகளினின்றும் தெரியவருகிறது. (இது குடிவாரயுரிமையைக் குறிக்கிறது)

. கோவிலிலுள்ள தற்காலிகக் கருவூலத்திலிருந்து மக்களுக்குக் கடன் வழங்குதல் போன்ற பணிகளை கோவில்களின் சார்பில், கோவிலில் பணியாற்றும் அலுவலர்கள் செய்து வந்தார்கள் என சுசீந்திரம் கோவிலிலுள்ள கல்வெட்டுக்களில் காணப்படுகிறது[3].

பண்டையகால வங்கித்தொழில் முறை

"வட்டித்தொழில்" என அழைக்கப்படும், பணம் கடன் கொடுத்தல் ஒரு பழைய கலையாகும். இந்திய நாட்டின் நிதி அமைப்பு முறையினது ஒரு பகுதியான பண்டைய கால வங்கித் தொழில் முறையின் தோற்றம், நெடுங்காலத்திற்கு முற்பட்டதாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைநிலை வரை, நாட்டின் நிதி அமைப்பு முறை, பண்டைய கால வங்கித் திட்ட அடிப்படையிலேயே இயங்கி வந்தது.

தென்னிந்தியாவின் பண்டைய கால வங்கி முறை

மக்களின், குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்ட மக்களின் முதன்மையான தொழில் "வேளாண்மை" தான் எனில் மிகையில்லை. எல்லாப் பருவ காலங்களிலும், வேளாண் பணியினை மேற்கொள்ள, வேளாண் பெருங்குடி மக்களுக்கு கடனும், முன்பணமும் தேவைப்படுகிறது.

முந்தைய திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த கல்லிடைக்குறிச்சி பிராமணர்களும், முந்தைய இராமநாதபுரம் மாவட்டத்தைச் சார்ந்த நாட்டுக்கோட்டைச் செட்டியார்களும், இரண்டு முதன்மையான வங்கித் தொழிலாற்றி வந்த சமுதாயத்தினராவர். அவர்கள், தங்களது வங்கி நடவடிக்கைகளை முந்தைய இராமநாதபுரம், மதுரை மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் மேற்கொண்டார்கள். பிராமணர்களும், வெள்ளாளர்களும், அதிக அளவு நிலம் படைத்தவர்களாக இருந்தார்கள். பருவக்காற்றுகள் உரிய காலங்களில் முறையாக வீசியதால், காலத்தில் மழை பொழிந்து, வேளாண்மை நல்ல பலனை அளித்தது. அதனால், வேளாண் வருவாயும் கணிசமான அளவு கிடைத்தது (அண்மைக்காலம் போன்று, பருவக்காற்று பொய்த்ததில்லையெனத் தெரிகிறது). அவர்கள் சிக்கனத்தைக் கடைப்பிடித்ததால், மற்றோரைவிட ஊக்கயெழுச்சியுடையவர்களாகத் திகழ்ந்தார்கள். முந்தைய திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த பிராமணர்கள், மேற்கு மலைத் தொடர் பகுதியில், தங்களது வாணிகத்தையும், அதனைச் சார்ந்த நடவடிக்கைகளையும் மேற் கொண்டார்கள். வெள்ளாளர்கள் வேளாண் தொழிலைத் தவிர, உள்ளூரிலேயே துணி மற்றும் மளிகைக்கடைகளை நடத்திவந்தார்கள்.

இடையிடையே, வெள்ளாளர்கள், தங்கள் வாணிகத்தொழிலுடன் கூட வங்கித் தொழில், வட்டித்தொழில் ஆகியவற்றையும் நடத்தி வந்தார்கள். அவர்களது தொழில் நடைமுறையை நோக்குங்கால், அவர்களை வங்கித்தொழில் நடத்துவோர் என்பதை விட வட்டித்தொழில் நடத்துவோர் என அழைப்பதே பொருத்தமாகத் தெரிந்தது.

மலபாரில் துணி வியாபாரம் செய்து வந்த பிராமணர்கள், வட்டித் தொழில் மிக வருவாய் அளிப்பதாகக் கருதினார்கள். எனவே அவர்கள் துணி வியாபாரத்துடன், வட்டித் தொழிலையும் நடத்தி வந்தார்கள். நாளடைவில், துணி வியாபாரம் மறையத் துவங்கியது, வட்டித் தொழில் அனைவரின் கவனத்தை ஈர்த்தது.

நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள்

முந்தைய திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த பிராமணர்களுக்கு, சரிநேர் நிலையில், முந்தைய இராமநாதபுரம் மாவட்டத்தைச் சார்ந்த நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் இருந்து வந்தார்கள். அவர்களும் முதன்மையாக வணிகத்திலீடுபட்டுள்ளவர்களேயாவர். நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் தூரக்கிழக்கு நாடுகளுக்கு முக்கியமான பொருட்களை அதிக அளவில், ஏற்றுமதி, இறக்குமதி செய்வதில், ஈடுபட்டு வந்தார்கள். வங்கித்தொழில் மற்றும் வட்டித் தொழில் முறைகளைச் செட்டியார் கையாண்டு வந்தமை கீழ்க்கண்டவாறு விவரிக்கப்பட்டுள்ளது.

"இம்மாநிலத்தில், வேளாண்தொழில், வணிகத்தொழில் இரண்டும் சீராக மேற்கொள்ளப்படுவதற்குத் தூண்டுதலளிப்பதும், உறுதியளிப்பதும்,

செட்டியார்களின் வங்கித் தொழில் மற்றும் வட்டித் தொழில் முறையே என்பதும், இந்நிமிர்நேர்வான இவர்களது தொழில் முறைக்கீடாக எந்த ஒரு நிதி அமைப்பு முறையும் மாநிலத்தில் இதுவரை ஏற்படவில்லையென்பதும் உண்மையிலேயே செட்டியார்களின் இந்த நிதி அமைப்பு முறைக்கு வழங்கப்படும் பாராட்டுதலேயன்றி வேறில்லை[4].

கல்லிடைக்குறிச்சி பிராமணர்கள்

கல்லிடைக்குறிச்சி பிராமணர்கள் பண்டைய கால வரலாறு குறித்து ஆதாரபூர்வமான ஆவணங்களேதுமில்லை. அவர்கள் பின்பற்றிய வங்கித் தொழில்முறை நூறாண்டுகளுக்கும் முந்தையதெனக்கூடக் கூறலாம். கல்லிடைக்குறிச்சி, குரியூர் மற்றும் வள்ளியூர் கிராமங்களைச் சார்ந்த பிராமணர்கள், முன்னர், திருவாங்கூர், கொச்சி மன்னர்களின் வங்கியாளர்களாக இருந்தனர் (திருவாங்கூர் மற்றும் கொச்சி ஆகியவை, முன்பு தென்னிந்தியாவின் இரு சிறிய மாநிலங்களாக இருந்தன. "தென்னிந்தியாவில் பண்டைய கால வங்கித் தொழில் முறை" என்ற வெளியீட்டில் பூனா கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியின், வங்கித்துறைப் பேராசிரியர், திரு.வி. கிருஷ்ணன், கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு விவரித்துள்ளார்.

"இன்றுகூட, சில நேரங்களில்[5] பண்டைய செல்வாக்குமிக்க வங்கியாளர்கள், போர்க்காலங்களிலும், ஏனைய தொல்லை நிறைந்த நேரங்களிலும், அவர்கள் ஆற்றிய திறமிக்க வங்கித்தொழில் முறையினைப் பாராட்டி மன்னர்கள், அவர்களுக்கு நன்கொடையளித்து வருகிறார்கள்"[6].

முந்தைய கொச்சியின் மன்னர், கல்லிடைக்குறிச்சியைச் சேர்ந்த இரண்டு வங்கியாளர்களிடம், அதிக அளவுத்தொகை, கடன் பெற்றிருக்கிறார். ஆனால் சரியான கடன் தொகை எவ்வளவு என்பதை, அந்த வங்கியாளர்கள் தெரிவிக்க மறுத்து விட்டார்கள். கடந்த 1850ஆம் ஆண்டு, தங்களது, மூதாதையர், கொச்சி மன்னருக்குக் கடன் கொடுத்திருந்ததாக அவர்கள் கூறுகிறார்கள். அக்கடன் தொகைக்குத் தவறாது அவர்கள் வட்டியிணைப் பெற்று வருகிறார்கள். "ஓணம்" திருவிழாவன்று, அவர்கள் மன்னரிடமிருந்து துணிகளை நன்கொடையாகப் பெற்று வருகிறார்கள்[7] (மலையாளப் பெருங்குடிமக்களால், ஓணம் திருவிழா, ஒவ்வொரு ஆண்டும், ஆகஸ்டு திங்களில், விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது).

கடந்த நூற்றாண்டின் துவக்கத்திலிருந்தே, கல்லிடைக்குறிச்சி பிராமணர்கள், முந்தைய திருவாங்கூர் கொச்சி மாநிலப் பகுதிகளில், பின்னல் வலை போன்று வங்கித்தொழில் அமைப்புகளைப் பெற்றிருந்தார்கள். அம்மாநிலங்களில் அரசுப் பணியாற்றிய இராணுவத்தினர்களுக்கும், மற்ற அலுவலர்களுக்கும் ஊதியம் வழங்கிட, முந்தைய திருவாங்கூர் மற்றும் கொச்சி மாநில மன்னர்களுக்கு அவ்வப்போது பணம் வழங்கி, இவ்வங்கியாளர்கள் உதவியளித்திருக்கக் கூடும்.

வட்டித்தொழிலின் தொன்மை நடைமுறை

வட்டித்தொழில் என்பது, ஒரு தொன்மையான கலையாகும். ஆரியர் காலத்து முதலே வட்டித்தொழில், பழக்கத்திலிருந்து வருகிறது. கேம்பிரிட்ஜ் வரலாற்று நூலில் (தொகுதி-1, பக்கம் 218) ஆரியர் காலத்தில், நான்கு நேர்மையான தொழில்களை மக்கள் பரவலாகக் கையாண்டனரெனவும், அதிலொன்று வட்டித் தொழிலெனவும், மற்ற மூன்றும், வேளாண்மை, வணிகம் மற்றும் விளைபொருள் அறுவடை ஆகியவையெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. கடன் தொகைக்கு விதிக்கப்படும் வட்டித் தொகையும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது, அதிக வட்டிகள் கண்டிக்கப்பட்டன.

வங்கித் தொழில் என்பது, வைப்புத்தொகையாகப் பணம் பெறுவது மற்றும் காசோலை வழங்குவது ஆகியவையாகும். காசோலை வழங்குவதால், கடன் பெறுவதற்கான முதலீட்டினை மாற்றுவது எளிதாகிறது. வைப்புத் தொகையாகப் பெறப்படும் நிதியும், வங்கித்தொழிலில் ஈடுபடுத்தப் பட்டுள்ள முதலீட்டுத் தொகையும் வங்கியாளர்களால், வாடிக்கையாளர்க ளுக்கு முன் பணம் வழங்குவது, முன்பணம் கருதி மாற்று முறைவகையில் தள்ளுபடி செய்வது, நிறைகாப்புடைய பத்திரங்கள் மீது முதலீடு செய்வது, மேலும், ஒரு பகுதித் தொகையினை நடப்புத் தேவைக்கு நிறுத்தி வைத்துக் கொள்வது, ஆகியவற்றிற்குப் பயன்படுத்தப்படுகின்றன. பண்டைய காலங்களில், வட்டித் தொழில் நடத்துவோருக்கும், வங்கித் தொழில் நடத்துவோருக்கும் அதிக வேறுபாடு இல்லாமலிருந்தது. பண்டையகால வங்கித்தொழில் நடத்துவோர் "துலைத் தொழில் நடைமுறை" என்ற பழக்கத்தினைக் கையாண்டார்கள் (இரண்டு அல்லது மூன்று அல்லது அதற்கும் மேற்பட்ட வாணிக மையங்களிலிருந்த வங்கித்தொழில் நடத்துவோரிடையே நடந்த தொழில் நடைமுறை, இவ்வாறு அழைக்கப்பட்டது). அதே நேரத்தில், ஒரு நகர்ப்புற வங்கியாளர், கிராமப் பகுதியில் தனது சொந்த முதலீட்டினை வைத்து, வங்கித்தொழிலை நடத்தும் ஒரு கிராம வங்கியாளரிடம், கிராம வணிகர்கள் சார்பாக, நகர் மையங்களில் தான் பொருட்களை வாங்கி, கிராமப்பகுதிகளுக்கு அனுப்பி வைத்ததற்கான பட்டியல்களுக்குரிய தொகையினை கிராம வணிகர்களிடம் வசூல் செய்து, தனக்கு அனுப்பி வைக்கக் கோருவதுண்டு.

சில வட்டித்தொழில் நடத்துவோர், அவர்களது சொந்த முதலீட்டை வைத்துத் தொழில் நடத்தி வந்தாலும், ஆண்டுக்கணக்காக தங்களிடம் தேங்கியுள்ள தொகையில் ஈட்டுத்தொகையாக, அதனின்றும் பெறுவார்களேயன்றி, காசோலை மூலம் தொகையினை திரும்ப எடுக்கும் முறையினைக் கையாளுவதில்லை. வட்டித் தொழில் நடத்தும் வேறு சிலர், சீட்டு என்னும் நிதிக்காக பங்களிப்புத் தொகை வடிவில், தொடர்ந்து வருகிற வைப்புத்தொகைகளாக (ரெகரிங் டெபாசிட்) பெற்று வந்தார்கள்.

நகர்ப்புற பண்டைய கால வங்கியாளர்களின் சார்பில், அவர்கள் அனுப்பும் காசோலைகளுக்கு, உள்ளூர் வணிகர்களிடம் அத்தொகையினை வசூல் செய்யும் பழக்கத்தினைக் கையாண்டு வந்த கிராம வங்கியாளர்கள், வங்கித் தொழிலில், பொதுவாக, இயல்பாக தொழில் முறையில், வைப்புத் தொகைகளைப்பெறும் பழக்கத்தைக் கையாளவில்லை. தங்களிடம், பிறர் காசோலைக்கு பணம் திரும்பப் பெறும் செயல் முறையையும் பின்பற்றியதில்லை. ஆகையால், அவர்களை முழுமையாக வங்கியாளர் களாகக் கருதாவிட்டாலும், அவர்கள், வங்கித்தொழில் மற்றும் வட்டித் தொழில் நடத்துவோராகப் பணியாற்றி வந்தனர். சில இனங்களில், வங்கித்தொழில் நடத்துவோர், சீட்டு என்றழைக்கப்பட்ட நிதியும் நடத்தியதுண்டு.

இயல்பான தொழில் முறையில் வைப்புத்தொகை பெறாமல், ஆனால், முதன்மையாக வேளாண்குடிமக்கள் மற்றும் கிராமக் கைவினைஞர் ஆகியோருக்கு, வட்டிக்குக் கடன் கொடுத்து, அதே நேரத்தில், தங்களிடம் பிறர் காசோலைக்கு அல்லது உண்டியலுக்குப் பணம் திரும்பப் பெற அனுமதிக்காமல் தொழில் நடத்தி வருபவர்களே "வட்டித் தொழிலர்" என அழைக்கப்படுவர்.

இயல்பான தொழில் முறையில், வைப்புத் தொகைகள் பெற்றும், முக்கியமாக, வணிகர்களை வைத்தே தொழில் நடத்தியும், தனது நிதியில், காசோலை மூலம் தொகை பெற அனுமதித்தும் தொழில் நடத்தக்கூடிய, ஒரு தனிப்பட்ட நபரோ, ஒரு அமைப்போ "வங்கி நடத்துபவர்" அல்லது "வங்கிளாளர்" என அழைக்கப்படுவர்.

தங்களது தொழிலை பண்டைய கால வங்கித்தொழில் முறையிலேயே நடத்தி, தொன்றுதொட்டு கையாளப்பட்டு வந்த பழக்கத்தையே கையாண்டு தொழில் நடத்தி வரும் நபர்கள் அல்லது வங்கிகள், "பண்டையகால தொழில் முறையில் வங்கி நடத்துபவர்" என அழைக்கப்படுகிறார்கள் (இதனில் கூட்டுப்பங்கு வங்கிகள் சேர்ந்தவையல்ல).

"வங்கி நடத்துவோர்" எனில், வங்கி நடத்துவோராக பணியாற்றும் நபர்கள், கழகம் அல்லது சங்கம் என, 1981ஆம் ஆண்டு செலாவணி முறிச்சட்டத்தில் கூறப்பட்டுள்ளது.

இயல்பான வங்கித்தொழில் முறையில், நடப்புக் கணக்கில், எவர்களிடமிருந்து அல்லது எவர்களுக்காக வங்கி நடத்துவோர் தொகை பெறுகிறார்களோ, அவர்கள் தங்களிடமிருந்து காசோலை மூலம் தொகையினைத் திரும்பப் பெறவும், அவ்வாறாக வாடிக்கையாளர்களுக்கு வழிவகை செய்துள்ளவர்களே "வங்கி நடத்துவோர்" என அழைக்கப்பட வேண்டியவர்களென டாக்டர் எச்.எல்.ஹார்ட் (வங்கிகள் சட்டம்) கூறுகிறார்.

வைப்புத்தொகை பெறும் நடைமுறையினைக் கையாளாமலோ, நடப்புக்கணக்கு பராமரித்திட அனுமதிக்காமலோ, தன்னுடைய

வாடிக்கையாளர்கள் செலுத்தும் குறியிடப்பட்ட அல்லது குறியிடப்படாத காசோலைகளுக்குப் பிற வங்கிகளிடமிருந்து உரிய தொகையினை வசூல் செய்தளிக்கும் பணியினை ஆற்றாமலோ உள்ள எந்த ஒரு நபரோ, கழகமோ, "வங்கி நடத்துவோராக" இயங்க முடியாதென, வங்கி நிருவாக வல்லுநர், ஸர். ஜான் போகெட் உய்த்துணர்த்துகிறார்.

முந்தைய திருநெல்வேலி மாவட்டத்தில், தொழில் நடத்திவந்த தொன்மையான வங்கித்தொழில் நடத்துவோர் "உண்டி வணிகர்கள்" என அழைக்கப்பட்டார்கள். அவர்களது வங்கிகள் "உண்டியர் கடைகள்" என அழைக்கப்பட்டன, அவர்களது தொழில் , பொதுவாக "உண்டியல் வியாபாரம்" என்ற பெயரில் நடந்துவந்தது. கல்லிடைக்குறிச்சி பிராமணர்களைப் போன்றே, நாட்டுக்கோட்டைச் செட்டியார்களும், வட்டித்தொழில் நடத்தி வந்தாலும், தங்களை "வங்கி நடத்துவோர்" என்று, அவர்கள் கூறிக் கொண்டார்கள், தொன்மையான வங்கித்தொழில் நடத்துவோர் மொழியில் ஒரு வங்கி நடத்துபவருக்கும் (உண்டி வணிகர்) ஒரு வட்டித்தொழில் நடத்துபவருக்கும் வேறுபாடு ஏதுமில்லை, என்றே கூறலாம். உண்டியல் வணிகர், "சில்லரை கடன் வாய்ப்பு" என்ற அடிப்படையில், தொகை வழங்குதல், உண்டியல்களைப் பெற்றுக் கொண்டு தனது நிதியிலிருந்து வாடிக்கையாளர்கள் தொகை பெற அனுமதித்தல், பிறரிடமிருந்து வசூல் செய்ததற்கான உண்டியல்களையும் பெற்றுக் கொண்டு, தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுதல், மற்றும் பல்வேறு தொழில்கள் செய்வோருக்குக் கடன் வழங்குதல் ஆகிய தொழில் முறைகளைக் கையாண்டு வந்தார்கள்.

வட்டித் தொழில் நடத்துவோர், வேளாண் தொழில் செய்ய கடனளித்தார்கள், தங்க நகைகளின் அடகின் பேரில் தொழில் நடத்தக் கடன் வழங்கினார்கள், வீடு, நிலங்கள் போன்ற அசையாச் சொத்துக்களின் ஒப்படைப்பின் பேரிலும் கடன் வழங்கப்பட்டது; கிராமக் கைவினைஞர் களுக்கு, சில்லரைக் கடன் வாய்ப்பளிக்கப்பட்டது. ஆனால், வழக்கமாக வட்டித்தொழில் நடத்துவோர், வைப்புத்தொகை பெறுவதில்லை. கடன் பெற்றோரிடமிருந்து வட்டித் தொகையினைப் பெறுதல், கடன்தொகை திருப்பிச் செலுத்துதலைப் பெறுதல், நகைமீது வழங்கப்பட்டுள்ள தொகையினைத் திரும்பப் பெறுதல், போன்றவை அன்றாடத்தொழில் நடைமுறையாக இருந்து வந்தது. வேளாண் குடிமக்கள் பொதுவாக, வேளாண் தொடர்புள்ள பணியினை மேற்கொள்ளவும், அன்றாட வாழ்க்கைத்தேவையினை பூர்த்தி செய்யவுமே கடன் பெற்றார்கள். பெற்ற கடன் தொகையினையும், வட்டியையும், ஒரு பெரிய இடைவெளிக்குப் பின்னரே, திருப்பிச் செலுத்தினர். உண்டியல் வணிகர்களின் வாடிக்கையாளர்கள் பெரும்பாலும் வேளாண்மையல்லாத இதர தொழில்களிலீடுபட்டவரேயாவர். அவர்களிடம் கடன் பெறுவோரில், வேளாண் செய்வோரின் எண்ணிக்கை மூன்று விழுக்காடாகும்.

'வங்கி' என்ற சொல், பெருமதிப்பு வாய்ந்த சொல் எனவும், வங்கித்தொழில் நடத்துபவர், நல்ல சொத்து படைத்தவராக இருக்க வேண்டுமெனவும், நடத்துபவரைவிட, அவர் செல்வாக்கில் உயர்ந்தவராய் இருந்தால்தான், அவரைப் பாதுகாப்பானவராகக் கருத முடியுமெனவும், எனவே, ஒரு சில குறிப்பிட்ட நபர்களுக்கே, இச்சொல்லைப் பயன்படுத்த வேண்டுமெனவும், ஆகவே, இச்சொல்லிற்கு, ஒரு சரியான விளக்கம் இன்றியமையாததாகிறதெனவும், சென்னை வங்கிகள் விசாரணைக்குழு (தொகுதி 1-பக்கம் 237) கூறுகிறது. "வங்கி" என்ற சொல், தொன்மையான வங்கித்தொழில் நடத்துவோரையும் குறிக்கிறது. ஆனால், அவர்கள், நகரத்திலோ, கிராமத்திலோ, வைப்புத்தொகை பெறும் தொழில் நடைமுறையினைக் கையாளுவதில்லை. எனவே, இவற்றை வங்கிகள் போன்று பெருமதிப்பு வாய்ந்தவையாகக் கருத இயலாது. ஆனால், கிராமப்புறங்களில், இதற்கு எதிர்நிலையாக உள்ளது. உதாரணமாக, கிராமங்களில், மற்றும் நகரங்களில் கூட ரொக்கக் கடை (வட்டித்தொழில் கடை), வங்கிகளைவிட பெருமதிப்பு வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

முந்தைய கல்லிடைக்குறிச்சி, வங்கித்தொழில் நடத்துவோரின் அமைப்பில் காணப்பட்ட, ஒரு முக்கியமான தனிச்சிறப்பு என்னவெனில், அவர்களது அமைப்பு முறையிலும் சரி, அமைப்பை நடத்த இயலாமல், கலைக்க வேண்டிய சூழ்நிலை உருவான போதிலும் சரி, - அக்கூட்டுவாணிக நிலையத்தின் ஆற்றல் பாதிக்கப்படாதவாறு, ஒரு மகத்தான நெகிழ்திறன் கையாளப்பட்டது. மற்றொரு தனிச்சிறப்பு, வங்கித் தொழில் நடத்துவோரிடம் காணப்பட்ட ஒழுக்கப்பண்பும், கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டாலோ அல்லது கலைப்பு நடவடிக்கை மேற்கொள்ள நேர்ந்தாலோ, நியமிக்கப்பட்ட வாரியம் அல்லது குழுவின் முடிவை ஏற்கும் கட்டுப்பாடுமாகும்.

நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள், அவர்களது தொழிலின் பெரும்பகுதியை பர்மா, கூட்டாட்சி அடிப்படை அமைப்பில் உருவாகிய மலேயா மாநிலங்கள், பழைய பிரிட்டிஷ் ஆட்சிப்பகுதி, மலேயா மாநில மற்ற முக்கியப் பகுதிகள், பிரெஞ்சு-இந்தோ-சைனா, சைனா மற்றும் ஸ்ரீலங்கா ஆகிய இடங்களில் நடத்தி வந்தனர். ஆனால், கல்லிடைக்குறிச்சி பிராமணர்கள் தங்களது தொழிலை, முந்தைய இராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி மாவட்டங்கள் மற்றும் முந்தைய திருவாங்கூர்-கொச்சி மாநிலங்கள் ஆகியவற்றுடன் நிறுத்திக் கொண்டனர்.

பொது நிதிகள் திரட்ட செட்டியார்கள் கையாண்ட மகிமை[8] ஆஸ்திவரி[9] மற்றும் புள்ளி வரி[10] போன்ற முறைகள், கல்லிடைக்குறிச்சி பிராமணர்களிடம் நடைமுறையிலிருந்திருக்கவில்லையெனக் கூற இயலாது. அவர்களும், ஆண்டு முடிவில், அவர்களது இலாபத்தின் ஒரு பகுதியை தர்மம் என்ற அறக்கொடைக்கு ஒதுக்கினார்கள். அவ்வாறு பெறப்பட்ட தொகையினை, கோவில்களை புதுப்பித்தல், சத்திரங்களைப் பராமரித்தல்,

திருவிழாக்கள் நடத்துதல் போன்ற நற்பணிகளுக்கு செலவு செய்தார்கள். செட்டியார்கள், பிராமணர்கள் ஆகிய இரு பிரிவினரும், மகிமை, புள்ளிவரி ஒத்தப்பணம்[11] போன்ற முறைகளில் பெறப்பட்ட தொகையினை, நொடித்துப் போன ஒரு வங்கியைப் புதுப்பிக்க பயன்படுத்தியதில்லை.

செட்டியார்களிடையே, ஒரு வங்கித்தொழில் நடத்துபவருக்கும், மற்றொரு வங்கித்தொழில் நடத்துபவருக்குமிகுந்த உறவுமுறை, வாடிக்கையாளர்களுக்கு இருப்புக்கு மேல் பணம் எடுக்க ஒப்புதலளித்தல், சில்லரைக்கடன் வழங்க வாய்ப்பளித்தல், பல்வேறு வாணிக மையங்களில், அவர்களது வங்கியின் பேரில் பணம்பெற அனுமதித்தல், அல்லது நிதியினை அனுப்புவதை எளிதாக்கிட, "துலை" முறையைக் கையாளுதல், கொடுக்கல்-வாங்கல் செயல்முறைகள் முறையாக மேற்கொள்ளப்பட ஆவனசெய்தல், மற்றும் தொழிலுக்குப் போதுமான நிதி திரட்டுதல், ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்திருந்தது. இம்முறை "அடத்தை முறை" என அழைக்கப்பட்டது. இதன்படி, தொழிலில் கையாளும் மொத்த பணத்தில், பங்குவரி (கமிஷன்)விதிக்கப்படுகிறது. இதனை "விந்தா" அல்லது "வட்டம்" எனக்கூறுவர்.

செட்டியார்களின் தொழில் நடைமுறையின்படி, ஒவ்வொரு நபரும் அப்போதைக்கப்போது செலுத்த வேண்டிய வட்டி, "நடப்பு வட்டி"யை யொட்டியதாகும், அல்லது பல்வேறு மையங்களில் நடைமுறையிலுள்ள நடப்பு வட்டி விகிதமாகும். ஆனால், கல்லிடைக்குறிச்சி பிராமணர்கள் வட்டி விகிதத்தை முன்கூட்டியே நிர்ணயித்தார்கள்; மேலும், அவர்கள் வாடிக்கையாளர்களுக்கு நிர்ணயிக்கும் வட்டி விகிதம், வாடிக்கையாளர்களின் நிதி நிலை, அனுபவம் மற்றும் அவர்களுக்கு வங்கியுடனான ஈடுபாடு இவற்றைப் பொருத்திருக்கும்.

தொன்மையான வங்கித் தொழில் நடத்துவோர், சிறு வணிகர்கள், கிராம கைவினைஞர்கள் மற்றும் சிறு தொழிலதிபர்கள் ஆகியோருக்கு நேரடியாகக் கடன் வழங்கினார்கள். தொன்மையான வங்கித தொழில் நடத்துவோருக்கு இம்பீரியல் வங்கியுடன் தொழில் நடைமுறைத் தொடர்பு இருந்து வந்தது. வட்டித் தொழில் நடத்துவோரில் சிலர், வேளாண் குடிமக்கள், கள் இறக்குவோர், வெற்றிலைக் கொடிக்கால் பயிரிடுவோர், ஆகியோருக்கு, அவர்களது பயிரை எதிர்நோக்கிக் கடன் வழங்கினார்கள். தொழில் ரீதியாக வட்டித்தொழில் நடத்துபவர்கள், வட்டித் தொழில் நடத்தும் விவசாயி, வட்டித் தொழில் நடத்தும் வணிகர், மண்டிவியாபாரம் செய்பவர், மளிகை வியாபாரி, மற்றும் பணம் வைத்துள்ள இதர தனிப்பட்ட நபர்கள் ஆகியோர் அனைவரும் வேளாண் குடிமக்களுக்கு ரொக்கமாகவோ, பொருளாகவோ விதைக்கும் காலத்தில் கடன் கொடுத்து, அதே போன்று ரொக்கமாகவோ, பொருளாகவோ அறுவடை காலத்தில் திரும்பப் பெற்றார்கள். அப்படித் திரும்பப்பெறுவது, முன் கூட்டியே

நிர்ணயிக்கப்பட்ட வட்டி விகிதத்திலோ அல்லது அறுவடைகால சந்தை நிலவரப்படியான விலையிலோ நிர்ணயம் செய்து, கடன் தொகையை, வட்டியுடன் சேர்த்துத் திரும்பப் பெற்றுவந்தார்கள்.

வட்டித்தொழில் நடத்துவோர் கையாண்டு வந்த நடைமுறைகள்

உறுதி மொழிக்கடன் பத்திரத்தின் மீது, கடன் வழங்குதல், வட்டித்தொழில் நடத்துவோர் அனைவரும் ஒரே மாதிரியாக பின் பற்றக்கூடிய நடைமுறையாகும். விவசாயிகளுக்கு உறுதி மொழிக்கடன் பத்திரத்தின் மீது, அக்காலத்தில், கடன் வழங்கி வந்த, வட்டித் தொழில் நடத்துவோர், விவசாயிகளால், எப்பணிக்காகக்கடன் தேவைப்பட்டதென்பது குறித்து, அக்கரை கொள்வதில்லை. ஆனால், தொன்மையான வங்கித்தொழில் நடத்துவோர், பொதுவாக, வேளாண் உற்பத்திக்காக அத்தொகை பயன்படுத்தப்பட்டதா என்பதில், கண்ணும் கருத்துமாக இருந்தார்கள். வட்டித்தொழில் நடத்துவோர், பாய் முடைவோர், பித்தளை மற்றும் வெண்கலப் பாத்திரங்கள் செய்வோர் மற்றும் இயல்பான ரக பருத்தித் துணி நெய்தல், போன்ற சிறுதொழில் செய்பவர்களுக்குநேரடியாக கடன் வழங்குகிறார்கள்.

உறுதி மொழிக்கடன் பத்திரம், கடன் பெறுவதற்கான ஒரு ஒப்பந்தப் பத்திரமாக, உற்பத்தியல்லாத காரியங்கள், பெரும்பாலும் திருமணச் செலவுகள், தேவையற்ற வழக்குகள் மற்றும் இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் செலவுமிக்க சுற்றுப்பயணங்கள் இவற்றிற்கான செலவுகளுக்குப் பணம் பெறுபவர்களால், பயன்படுத்தப்பட்டது. பெரிய அளவில் வட்டித் தொழில் நடத்துவோர், மேற்குறிப்பிட்ட செயல்களுக்காக, உறதிமொழிக்கடன் பத்திரத்தின் மீது, கடன் அளித்து வந்தார்கள். பொறுப்புறுதியளிப்பவரின் கையொப்பத்தை, பிணையாளாக கடன் பத்திரத்தில் பெறும்போது, குவார்ல்ஸின் விவேக முடைய முதுமொழியை, வட்டித்தொழில் நடத்துபவர், நினைவூட்டுவார்.

"எவருக்கு நீ பிணையாளாக இருக்கிறாயோ, அவரிடம் விழிப்புடனிரு, மனம்போன போக்கில் நடந்தால், கடனைத் தீர்ப்பது கடினம். பொறுப்புணர்ந்து செயல்பட்டால், கடன் பெரிதல்ல". இதுதான் அம்முதுமொழியாகும். தொன்மையான வங்கித்தொழில் நடத்துவோர் மேற்கொள்ளும் தொழில் நடைமுறையில், கடன் பெறுபவர், கடனளிப்பவருக்கு அடிமையாகக் கருதப்படுவார்; ஆனால், பிணையாள், இருவருக்குமே அடிமையாக இருப்பார்.

கிராமத்தில் வட்டித் தொழில் நடத்தியவர், விவசாயி மற்றும் கிராம கைவினைஞர் இருவருக்குமே, உற்ற நண்பர், தத்துவஞானி மற்றும் வழிகாட்டியாகச்செயல்படுவார். அவர், இவ்விருசாராருக்கும், உறுதி மொழிக்கடன் பத்திரத்தின் மீதும், நகைகளை ஈடாகப் பெற்றும் கடன் வழங்கி வந்தார். இவ்வகை வட்டித் தொழில் நடத்துவோர், விதிக்கும் வட்டி விகிதம்,

வங்கித்தொழில் நடத்துவோர், தங்களது வாடிக்கையாளர்களுக்கு விதிக்கும் வட்டி விகிதத்தைவிட சலுகையுள்ளதாகவே இருக்கும். அவர்களால், வட்டி 12 விழுகாட்டிலிருந்து 18 விழுக்காடு வரை, நிர்ணயிக்கப்பட்டது. கிராமத்திலுள்ள பெண்கள் கூட, உறுதிமொழிக் கடன் பத்திரத்தின் மீது, கடன் வழங்கி வந்தார்கள், சில நேரங்களில், அக்கடன் பத்திரங்கள், பதிவு செய்யப்படாமல் இருக்கும். கடன் பத்திரங்கள் பதிவுசெய்யப்படின், அவை கடன் கொடுத்தவருக்கு அதிகப்பாதுகாப்பளிக்கும். கையெழுத்திடக்கூடத் தெரியாத கல்வியறிவற்ற பாமர மக்களுக்குக் கடன் வழங்கும் முறை பின்பற்றத் துவங்கியவுடன், கடன் பத்திரங்களைப் பதிவு செய்ய வேண்டிய நிலை உருவாகியது. அம்மாதிரி இனங்களில், கடன் பெறுபவரின் கைரேகை, உறுதிமொழிக் கடன் பத்திரத்தில் பெறப்பட்டது.

விவசாயியாக இருந்துகொண்டு, வட்டித்தொழில் நடத்துவோர் பொருள்களாகவும் கடன்கள் வழங்கும் பழக்கத்தினை கையாண்டார்கள். வயல்களில் நெல்விதை விதைப்பு மற்றும் வீட்டு உபயோகம் ஆகியவற்றிற்கு கடனை விதையாக அளித்து வந்தார்கள். ஆனால், பெரிய அளவில் வட்டித்தொழில் நடத்துவோரால் பொருள்களாக கடன் வழங்கும் முறை மேற்கொள்ளப்படவில்லை. கிராமங்களில் கடனைப் பொருள்களாக வழங்கும் முறை பொதுவாகக் கையாளப்பட்டது; குறிப்பாக, விவசாயத் தொழிலாளர்களில், கடைநிலையிலிருந்தோர், இப்பழக்கத்தினைக் கடைப்பிடித்தார்கள். வேளாண் குடிமக்களுக்குக் கடன் வழங்கிய மண்டிக்கடைக்காரர்களில் இரு தரப்பினர் இருந்தனர். திருநெல்வேலி, மதுரை மற்றும் இராமநாதபுரம் ஆகிய தென் மாவட்டங்களில் தொழில் நடத்தும் மண்டிக்கடைக்காரர்கள் விவசாயிகளிடமிருந்து மொத்தமாக நெல்லை விலைக்கு வாங்கி, சில்லரையில் விற்று, நல்ல இலாப மடைந்தார்கள். இந்த வகையைச் சேர்ந்த மண்டிக்கடைக்காரர்கள் பொதுவாக, விவசாயிகளுக்குக் கடன் வழங்குவதில்லை. மற்றொரு வகையான மண்டிக்கடைக்காரர்கள், அவர்களது எளிமைக்கு எடுத்துக் காட்டான தரகு வணிகர் ஆவர். அவர்கள் விலைப்பொருட்களை ஒரேடியாக விற்றுவிடுவ தில்லை; ஆனால், விவசாயிகள் அவர்களது விளை பொருட்களை விற்பதற்கு உதவி செய்து, சிறிய மற்றும் மிதமான பங்குத் தொகையையே பெறுகிறார்கள்.

முன்னர் பழக்கத்திலிருந்த நடைமுறை யாதெனில், விவசாயிகள், கடன் தொகையினை முன்பணமாக, புரோகிதர்கள், கோவில் பூசகர்கள், பள்ளி ஆசிரியர்கள் மற்றும் விதவைகள் ஆகிய பிராமண வகுப்பைச் சார்ந்தோரிடமிருந்துப் பெற்று வந்தார்கள். அவர்கள் நிலமற்றவர்களாதலால், ஓராண்டிற்குச் சொந்த உபயோகத்திற்கு தேவையான அளவு நெல்லைப் பெற்றார்கள். விவசாயிகள் பெறும் கடனைப் பொருளாகத் (நெல்லாக) தான் திருப்பியளிக்க வேண்டுமென்ற நிபந்தனையின் பேரில் கடன் வழங்கப்பட்டது. நெல்லிற்கான விலை மதிப்பு முன் கூட்டியே, கடன்

வழங்கும் நேரத்திலேயே நிர்ணயிக்கப்பட்டது. விவசாயிகள் ஒப்படையின் பேரிலும் கடன் பெற்று வந்தார்கள். ஒரு நிர்ணயிக்கப்பட்ட விலையில், வட்டியை பொருளாகவே, அளிக்க வேண்டுமென்ற முறையும் பின்பற்றப்பட்டது.

ஆனால், பனை, கருப்புக்கட்டி, (கருப்பட்டி) மற்றும் வெற்றிலை போன்றவைகளில், இம்முறை மாறுபாடானது. அக்காலத்தில் "கருப்புக் கட்டிச் (கருப்பட்டி) செட்டி" என்ற செல்லப்பெயரில் அழைக்கப்பட்ட வட்டித் தொழில் - வணிகர், சிறிய அளவில் கள் இறக்குவோருக்குக் கடன் வழங்கினார். ஏனெனில் முன்புகள் ஒரு பருவகாலப் பொருளாக விளங்கியது. கடன் கொடுத்த வணிகர்கள், ஒரு நிர்ணயிக்கப்பட்ட விலையில், கடன் தொகை, பொருளாகத்திருப்பியளிக்கப்பட வேண்டுமென கட்டுப்பாடு விதித்தார்கள்.

வெற்றிலையைப் பொறுத்த வரையில், எப்பொழுதெல்லாம் வெற்றிலை பயிரிடுபவர், வட்டித்தொழில் வணிகரிடம் கடன் பெறுகிறாரோ, அப்பொழுதெல்லாம் முன் கடனைப் பொருளாகத் திருப்பித்தரக் கோரப்பட்டார்.அதுவும் ஒரு நிர்ணயிக்கப்பட்ட விலையில், கடன் பெற்றத் தொகை, முழுமையாகப்பொருள் வடிவத்தில் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். சிறிய அயலார் வட்டித்தொழில் வணிகரின் நிபந்தனை கடுவட்டி பெறுவதாக இருக்கும். கொடுத்த கடனை மிகவும் அச்சத்துடனேயே திரும்பப் பெற்றார்கள்.

முந்தைய புதுக்கோட்டை மாநிலத்தின் திவான் சர்.ர. சேஷைய்யா சாஸ்திரி இவ்வாறு கூறுகிறார்[12]:

"இந்தியநாட்டு, கிராமப் பொருளாதாரத்தைக் கருத்திற் கொண்டு ஆராயுங்கால், கிராம வட்டித்தொழில் வணிகர், ஒரு தவிர்க்க முடியாத வராகிறார்; எனவே, அவரை, எக்காரணத்தைக் கொண்டும், ஒதுக்கிவிட முடியாது."

எம்.எச். சின்ஹா, "கடந்த 60 ஆண்டுகளில், சென்னை மாநிலத்தின் முன்னேற்றம்" என்ற தனது நூலில் (பக்கம் 250-இணைப்புகள்), அதே முடிவினை எடுத்துள்ளார். திரு. தாகூர், "இந்தியாவில் முந்தைய கால ஐரோப்பிய வங்கித் தொழில் நடைமுறை" (பக்கம் 255) என்ற தனது நூலில், கிராம வட்டித்தொழில் வணிகர்களைப் பற்றிக் குறிப்பிடுகையில், அவர்கள் மீது, "தனி இரக்க உணர்ச்சியுடன் தனது கருத்தினை வெளிப்படுத்துகிறார். சென்னை மாநிலத்தைப் பொருத்த வரையில், வட்டித் தொழில் வணிகர், கிராமத்தில் தனிச்சிறப்புத் திறமையுடையவரெனவும், சில நூல்கள் கருத்துத் தெரிவித்துள்ளவாறு, அவர் கெட்ட நோக்குடையவரல்ல எனவும், எனவே, அவர் மீதான களங்கங்களை ஒதுக்கித் தள்ளிவிட்டு, அவரது பாதுகாப்பில் நலன் கொள்ள வேண்டியதவசியமெனவும்," திரு. கிருஷ்ணன் கூறுகிறார்.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலிருந்து இம்மாவட்டத்திற்குத் தற்காலிகமாகக் குடி பெயர்ந்து வந்த முகம்மதிய சமுதாயத்தைச் சார்ந்த உறுப்பினர்களும், உறுதிமொழிக் கடன் பத்திரத்தின் மீது, வட்டிக்குக் கடன் வழங்கும் முறையினைக் கையாண்டார்கள். அவர்கள் அதற்கான அச்சுப்படிவத்தைப் பயன்படுத்தினார்கள். கடன் பத்திரத்தில் கையெழுத்திடுபவரது பெயர், கடன் கொடுக்கும் வணிகரின் பெயர், கடன் தொகை, வட்டி விகிதம், ஆகியவற்றைப் பூர்த்தி செய்ய, படிவத்தில், வெற்றிடம் விடப்பட்டிருக்கும். உள்ளூர் விவசாயிகள் மற்றும் நாள் ஊதியத்தில் பணியாற்றும் இதர விவசாயத்தொழிலாளர்கள் ஆகியோர், வணிகர்களது நிலங்களையும் பயிரிட்டு வந்ததால், அவர்களது நலனில், வணிகர்கள் அக்கரை கொண்டிருந்தார்கள்.

தொன்மையான வங்கித் தொழில் நடத்துவோரின் தொழில் நடைமுறை யாதெனில் பணத்தை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு அனுப்புதல், உண்டியல் பட்டியல் மீது கழிவுத்தொகை நீங்கலாகப் பணத்தைப் பெற்று அளித்தல், வைப்புத் தொகை பெறுதல், பல்வேறு மையங்களிலுள்ள வணிகர்களுக்குத் தேவையான பணத்தை அளிப்பதற்காக, கடன் தொகைப்பட்டி அனுப்புவது தொடர்புள்ள தகவல் அறிவிப்பு முடங்கலை அனுப்புதல், ஆகியவையாகும். ஒரு இடத்தினின்றும் வேறொரு இடத்திற்கு விளை பொருள்களை அனுப்புவதற்கு நிதியுதவியளித்தல், மற்ற வணிகர்கள், கிராமத்திலுள்ள பெரிய கைவினைஞர்கள், மற்றும் நிலச்சுவான்தார்கள் ஆகியோருக்குச் சொந்தப்பிணையின் மீது குறுகியக் காலக்கடன் வழங்குதல் ஆகியவை, பொதுவாக அடுத்தபடியாக வட்டித்தொழில் வணிகர்கள் கையாண்ட முறையாகும். வட்டித்தொழிலுடன் வியாபாரத்தையும் இணைத்து செய்து வந்த தொழில்கள் யாதெனில், தங்க வார்இழை, நூல் துணிகள், உப்பு, சீரக்கரை, கல்லெண்ணெய் மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவற்றைக் கொண்டு செய்துவந்த தொழில்களாகும். எப்பொழுதாவது, தொன்மையான வங்கித்தொழில் வணிகர்கள், அப்காரி மற்றும் சுங்கச்சாவடி ஆகிய குத்தகைகளிலும் ஈடுபாடு கொள்வதுண்டு. பெரு அளவிலான தொழில் நிறுவனங்களுக்கு கல்லிடைக்குறிச்சி பிராமணர்கள் கடன் வழங்கியதில்லை; ஆனால், செட்டியார்கள், பெரு அளவிலான தொழில் நிறுவனங்களுக்கு ஐயமறக்கடன் கொடுத்துவந்தார்கள்.

வங்கித் தொழில் நடைமுறைகளைக் கற்றுக் கொடுத்து, மேலும் பணத்தை சேமித்து வைக்க மக்களை ஊக்குவிக்க, தென் இந்திய சூழ்நிலை மிகவும் உகந்ததாக இருத்தது. ஏனெனில், கல்லிடைக்குறிச்சி பிராமணர்கள் மற்றும் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் ஆகிய தென்னிந்தியாவிலிருந்த இரு தொன்மையான வங்கித்தொழில் வணிக சமுதாயத்தினரும், சேமிப்புக்குகந்த நிலையினை உருவாக்கி இருந்தார்கள்.

செட்டியார், கல்லிடைக்குறிச்சி பிராமணர்கள் ஆகிய தென்னிந்தியாவிலிருந்த இரு தொன்மையான வங்கித் தொழில் வணிகர்களுமே, தங்கள் சமுதாயத்தைச் சேர்ந்தோரிடமிருந்து மட்டுமல்லாது வெளியிலிருந்த ஏனையோரிடமும் வைப்புத் தொகையினைப்பெற்று வந்தார்கள். வைப்புத் தொகை பெறுதல், வங்கித்தொழில் நடைமுறையில் ஒரு முக்கியமான அம்சமாயிருந்தும், தொன்மையான வங்கித் தொழில் வணிகர்களைப் பொறுத்த வரையில் அவர்கள் அதற்கு முக்கியத்துவம் அளித்ததில்லை. இருந்தபோதிலும், ஒவ்வொரு வைப்புத்தொகை, உரிமைகள் மற்றும் கடன் பொறுப்புகள் ஆகியவை தொடர்பாக, வங்கித் தொழில் வணிகர், வாடிக்கையாளர் இருவருக்குமுள்ள உறவு முறையை ஆய்வு செய்ய வேண்டியிருந்தது.

தொன்மையான வங்கித் தொழில் வணிகர்கள் பெற்றுவந்த பல்வேறு வகையான வைப்புத்தொகைகள், நிலையான வைப்புத் தொகை (தவணைக் கணக்கு), மற்றும் நடப்பு வைப்புத் தொகை (நடப்புக் கணக்கு) ஆகியவையாகும். நடப்பு வைப்புத் தொகையினை, செட்டியார்கள் "கடைக்கணக்கு" என்பர். நிலையான வைப்புத்தொகையெனில், ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப்பிறகு அத்தொகை திருப்பியளிக்கப் படுவதற்குள்ளானது. அக்காலவரை ஒருசில மாதங்களிலிருந்து ஐந்து ஆண்டுகள் வரை வேறுபடக்கூடும், செட்டியார்களால் பெறப்படும் வைப்புத் தொகைகளில், ஒரு தனிச்சிறப்பென்னவெனில், அவை நிலையான தவணை வைப்புத் தொகைகளல்ல. "தவணை வைப்புத்தொகை", மற்றும் "வேயன் வட்டி வைப்புத்தொகை" ஆகிய இருவகையான நிலையான வைப்புத் தொகையினை செட்டியார்கள் பெற்றுவந்தனர். முந்தையது, அவர்களது சமுதாயத்தைச் சேர்ந்த நபர்களிடம், அவர்கள் இரண்டு, மூன்று மற்றும் ஆறு மாத காலங்களுக்குக் கடனாகப்பெற்று, அவற்றிற்கான வட்டி மாதாமாதம் நிர்ணயிக்கப்பட்டது. வேயின் வட்டிவைப்பு தொகையும், நிலையான வைப்புத் தொகையே; ஆனால், வட்டி விகிதம் உயர்ந்து கொண்டிருக்கும்: ஒவ்வொரு கூடுதல் மாதத்திற்கும், நூற்றுக்கு இவ்வளவு அணாக்கள் என கணக்கிடப்பட்டு, மூன்று, ஆறு மற்றும் 12 மாதங்களுக்குப் பொதுவாக நிர்ணயிக்கப்படும். செட்டியார்கள் நடப்புக்கணக்கிலும் வைப்புத்தொகை பெற்று வந்தனர். அதற்கான வட்டி, ஒவ்வொரு தமிழ் மாதமும் 16ஆம் தேதியன்று விதிக்கப்பட்டது. இது "நடப்பு வட்டி விகிதம்" என அழைக்கப்பட்டது.

செட்டியார்கள் போலல்லாது, கல்லிடைக்குறிச்சி பிராமணர்கள், நிலையான தவணை வைப்புத் தொகைக்களை முதலில் ஆறு மாதங்களிலிருந்து ஆறு ஆண்டுகள் வரையிலான காலவரைக்குப் பெற்று வந்தனர். இது கூட்டுப் பங்கு வணிகச் சங்கங்கள் கையாண்ட நடைமுறையாகும். செட்டியார்களைப் போலவே, பிராமணர்களும் அவர்கள் சமுதாயத்தைச் சார்ந்தோரிடம், பேரம் பேசுவதில் பெருமுனைப்

புடன் செயல்பட்டு அதற்குகந்த முறையில் கணக்குகளை பராமரித்தார்கள். ஆனால், மற்ற சமுதாயத்தினரிடம், ரொக்கக் கடன் முறையைக் கையாண்டுவந்தார்கள். செட்டியார் கையாண்டு வந்த நடப்புவீத முறையினை பிராமணர்கள் கடைப்பிடிக்கவில்லை: வாடிக்கையாளர் களைப் பரஸ்பரமாகப் புரிந்துகொண்டு, அதற்குகந்தவாறு, வட்டி வீதத்தை நிர்ணயித்தார்கள்.

நடப்பு வீதம், கந்து வீதம், மற்றும் உண்டியல் வீதம் முன்பு நடைமுறையிலிருந்து வந்தன; அவை கீழ்க்கண்டவாறு விளக்கப் படுகின்றன:

நடப்பு வட்டி வீதம்

வட்டியின் மீதான நடப்புக் கணக்கு மற்றும் உண்டியல் இரண்டிற்குமே, ஒவ்வொரு மாதமும், செட்டியார்களால், வட்டி நிர்ணயிக்கப்படுகிறது. செட்டியார் சமூகத்தினரிடையே ஏற்படும் வாணிக முறை ஈடுபாடுகளும், இந்த நடப்பு வீதத்திலேயே மேற்கொள்ளப்படு கின்றன. வட்டி வீதம், ஒரு மையத்திலிருந்து மற்றொரு மையத்திற்கு, ஆறு விழுக்காட்டிலிருந்து, 12 விழுக்காடு வரை மாறுபடும், நடப்பு வட்டி வீத முறை, 1929-30ஆம் ஆண்டு நடைமுறையிலிருந்தது. நடப்பு வட்டி வீதமும், தவணை வட்டி வீதமும், செட்டியார் சமூகத்தினரிடையேயான தொழில் நடைமுறைகளில்தான் மேற்கொள்ளப்பட்டது.

கந்து வட்டி வீதம்

இந்த முறையின்படி, ஒரு குறிப்பிட்ட தவணைகளில், திருப்பிச் செலுத்த வேண்டுமென்ற நிபந்தனையின் பேரில், கடன் வழங்கப்பட்டது; ஏற்றுக்கொள்ளப்பட்ட வட்டி வீதத்தில், கடன் கொடுக்குமுன்னரே, கடன் தொகையின் மீதான வட்டித் தொகை, கடன் தொகையினின்றும் பிடித்தம் செய்து கொள்ளப்பட்டது. இந்த கந்து வட்டி வீதம், திருநெல்வேலி பிராமண மற்றும் வைசிய வட்டித்தொழில் வணிகர்களால், "சந்தை வட்டி" என அழைக்கப்பட்டது.

உண்டி வட்டி வீதம்

இம்பீரியல் வங்கி நிர்ணயித்த, கழிவுத்தொகை வீதம்தான், "உண்டியல் வீதம்" என அழைக்கப்பட்டது. உண்டியல் பட்டியல்கள், வாணிகப் பட்டியல்கள் ஆகியவற்றின்மீது, தொனமையான வங்கித் தொழில் வாணிகர்கள் மற்றும் கூட்டுப்பங்கு வங்கிகள், இம்பீரியல் வங்கியிலிருந்து, கழிவுத்தொகை நீங்கலாக, பட்டியல்களில் குறிப்பிட்ட தொகையினைப் பெற்றன. அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட கழிவுத்தொகை வீதம் தான் உண்டியல் வீதமாகும். வங்கி வணிகர்கள் பொதுவாக "கடைவட்டி வீதத்தையும்" கையாண்டு வந்தனர்.

கிராமங்களில் போக்குவரத்து வளர்ச்சி ஏற்படும் முன்னர், கிராமம் தன்னிறைவு பெற்றதாக அமைய வேண்டுமென்பதற்காக, சீட்டு நிறுவனங்கள் போன்ற தொன்மையான சேமிப்பு நிறுவனங்கள் அக்காலத்தில் இயங்கி வந்தன. சீட்டு நிறுவனங்களுக்கு எதிரிணையான நிதி நிறுவனங்கள், மாநிலத்தின் வட மாவட்டங்களில் இயங்கிவந்தன.

குறிகள் அல்லது சீட்டுகள்

வணிக வங்கிகளும், கூட்டுறவுக் கடன் சங்கங்களும், மாவட்டத்தில் நிறுவப்படுவதற்கு முன், குறிகள் அல்லது சீட்டு நிறுவனங்கள், நெடுங்காலத்திற்கு, சேமிப்புப் பொறுப்பாட்சி நிலையத்தின் பணியினை ஆற்றிவந்தன. உற்பத்திப் பணிகளுக்குக் கடனளிக்கும் முறையையும், இந்நிறுவனங்கள் கையாளத் துவங்கின. ஆனால், உற்பத்திப் பணிகளுக்குரிய கடன் தேவை தொடர்புள்ள பகுதிகளில் அதிகரித்தவுடன், அதற்கான நிதி வசதி போதுமானதாக இல்லாததால், இந்நிறுவனங்கள், முந்தைய திருவாங்கூர் மாநிலத்தின், வேறு வகையான வங்கித் தொழில் நடைமுறைகளைத் துவக்கின. அதன் விளைவாக, தெற்கு திருவாங்கூர் பகுதியில், குறிகளின் தொழில் நடைமுறையிலேயே "ஏல நிதிகள் " துவங்கப்பெற்றன. 1886ஆம் ஆண்டு, திருவாங்கூர் வாணிகச் சங்கங்களின் ஒழுங்குமுறைச் சட்டம் இயற்றப்பட்ட பின்னர், இந்த ஏல நிதிகள், மேம்பாடடைந்தன. 1971ஆம் ஆண்டு வாணிகச் சங்கங்களின் ஒழுங்குமுறைச்சட்டம், திருவாங்கூர் மாநில அரசால் இயற்றப்பட்டவுடன், சிறிது சிறிதாக இவை விரிவடைந்து, வங்கித் தொழில் சங்கங்களாக உருவாகின. திருவாங்கூரில், இவைகளுக்கு சரிநேர் நிலையிலிருந்த நிறுவனங்கள் செல்வாக்குப்பெறத் துவங்கியவுடன், இம்மாவட்டத்திலும் வணிக வங்கிகள் சிறிது சிறிதாக வளர்ச்சியடைந்தன.

வணிக வங்கிகள்

நாளடைவில், பொதுவாகக் கிராமப்புற கைவினைஞர் மற்றும் சிறு அளவிலான தொழில் நடத்தும் தொழிலதிபர்களும், குறிப்பாக விவசாயிகளும், வழக்காற்றுத் தொடர்புள்ள வட்டித் தொழில் வணிகர்களை புறக்கணிக்கும் மனப்பாங்கினைக் கையாளத் தொடங்கினர். இதற்கு அவ்வணிகர்கள், பெற முற்பட்ட மிக அதிகமான வட்டி வீதமேயாகும். கிராம வட்டித் தொழில் வணிகர்கள் விவசாயிகளுக்குக் கடன் வழங்கக்கூடிய பயனுள்ள பணியினைச் செய்து வந்த போதிலும், விவசாயிகள் ஒரு இறுதி கட்டத்தில் அக்கடனைப் பெற்று வந்தது, அதுவும் மிக அதிக வட்டியில் அக்கடனைப் பெற்றது, ஆகியவற்றால், அவர்கள், ஒரு நிலையான கடனாளியாக்கப்படும் சூழ்நிலைக்கு அடிகோலியது. இச்சுமையினைத் தாங்க முடியாமல் அவர்கள் அவதியுறும் நிலைக்கு ஆளானார்கள். கிராம வட்டித்தொழில் வணிகரும், கடன் தொகை உற்பத்திப் பணிக்கு பெறப்படுகிறதா அல்லது உற்பத்தியல்லாத வேறு பணிகளுக்காகவா என்பது பற்றி கூட சிந்திப்பதில்லை. இந்நிலையில், ஒழுங்குமுறையிலும்,

நியாயமான வட்டி வீதத்திலும் கடன் பெறக்கூடிய ஒரு நிறுவனத்தை உருவாக்கிப்பெற வேண்டிய சூழ்நிலை விவசாயிகளுக்கு ஏற்பட்டது.

விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் கடன் வழங்கும் பயனுள்ள பணியினை கிராம வட்டித்தொழில் வணிகர் செய்துவந்தாரெனில், இடைப்பட்ட வணிகர், விளைபொருட்களை நெடுந்தொலைவு கிராமத்திலிருந்து உலகச் சந்தைக்குக் கொணர்ந்து மக்களுக்கு வழங்கும் ஒரு பாலமாகக் திகழ்ந்தார். ஆனால், அதே நேரத்தில், அதிக வட்டி வாங்கிவந்த வட்டித்தொழில் வணிகர், விவசாயிகளின் உபரி விளைபொருட்களை அப்படியே அபகரித்துக் கொண்ட இடைப்பட்ட வணிகர், இருவருமே விவசாயிக்கு ஒரு ஆபத்தான சூழ்நிலையினை உருவாக்கிவந்தனர். இவர்களது கொடிய நடவடிக்கைகளினால் வெறுப்படைந்த விவசாயிகள், கிராம கைவினைஞர் ஆகியோர், கொள்கையற்ற இவ்வணிகர்களின் பிடியினின்றும், விடுபட்ட ஒரு சீராக்கத்தை எதிர்நோக்கினர். இதன் விளைவாக, வட்டித் தொழில் வணிகரின் ஆதிக்கம் படிப்படியாகத் தளர்ந்தது. இது தவிர அங்கிலேய வணிகர்களால் வாணிகத்துறை நிறுவனங்கள், உருவாக்கப்பெற்றது, 1835ஆம் ஆண்டு செலாவணியிலிருந்த நாணயங்களை அரசு ஒன்றாக்கியது, போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தியது மற்றும் தொழில் வணிகம் மற்றும் வாணிகம் ஆகியவற்றில் ஒரு திருப்பம் ஏற்பட்டது. தொன்மையான வட்டித்தொழில் வணிகர்களின் நடவடிக்கையில் சரிவு ஏற்பட்டது.

வட்டித்தொழில் வணிகர்களின் சரிவால் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்பிடவும், ஆங்கில வணிகர்களின் வளர்ந்துவரும் நிதித் தேவைகளைப்பூர்த்தி செய்யவும், ஆங்கிலேயக் கிழக்கிந்திய சங்கம், வங்கி நிறுவனங்களை மேற்கத்திய நாடுகளின் பாணியில் உருவாக்கிட ஆயத்தமானது. ஆங்கிலேய வாணிகத்துறை நிறுவனங்கள். அவற்றின் வணிகத் தொழிலுடன் வங்கித் தொழிலையும் இணைத்து பணியாற்றத்துவங்கின. இவையே பிற்காலத்தில் ஆங்கிலேய மரபுவழியில் உருவான கூட்டுப்பங்கு வங்கிகளின் முன்னோடியாகத் திகழ்ந்தன.

மெஸர்ஸ். அலெக்சாண்டர், கம்பெனியின் புகழ்வாய்ந்த ஆங்கிலேய வாணிகத்துறை நிறுவனத்தால், கடந்த 1770ஆம் ஆண்டு, இந்துஸ்தான் வங்கி என்ற முதல் கூட்டுப்பங்கு வங்கி நிறுவப்பட்டது[13]. பின்னர், நிதி நெருக்கடி காரணத்தால் 1832ஆம் ஆண்டு இந்த வங்கி மூடப்பட்டது. 1785ஆம் ஆண்டு வங்காள வங்கி மற்றும் இந்தியப் பொது வங்கி ஆகியவை நிறுவப்பட்டன. மாநில வங்கிகளில் ஒன்றான வங்காள வங்கி கல்கத்தா வங்கி என்ற பெயரில் 1806ஆம் ஆண்டு கல்கத்தாவில் நிறுவப்பட்டது. 1809ஆம் ஆண்டு கல்கத்தா வங்கி என அது மாற்றி பெயரிடப்பட்டது. இதர இரண்டு மாநில வங்கிகளான பம்பாய் வங்கி மற்றும் சென்னை வங்கி ஆகியவை முறையே 1840, மற்றும் 1843 ஆம் ஆண்டுகளில் நிறுவப்பட்டன.

நாட்டின் முக்கியமான நகரங்களில், மாநில வங்கிகளுக்குக் கிளைகள் இயங்கிவந்தாலும் கூட, அவற்றின் நடவடிக்கைகளில், ஒரே பணியினை மீண்டும் மீண்டும் செய்தது போன்றதொரு கருத்து நிலவியதால் நாடு முழுமைக்குமாக ஒரே மாநில வங்கி இயங்க வேண்டுமென்ற பொதுமக்களின் கருத்திற்கு ஆதரவு மிகுந்தது. 1898ஆம் ஆண்டு; ஃபிளவர் நடப்பு நாணயக் குழுவிற்கு முன்பாக சாட்சியம் அளித்தோர் நாடு முழுமைக்குமாக ஒரு மத்திய வங்கி நிறுவ வேண்டிக்கோரினார்கள். ஆனால், அரசு இக்கருத்திற்கு அக்கரை காட்டவில்லை. 1913ஆம் ஆண்டு சேம்பர்லின் குழு இந்த முழு விவகாரத்தையும் ஆய்ந்திட ஒரு குழுவினை நியமிக்க வேண்டுமென கருத்து தெரிவித்தது. ஆயினும், 1913-1971ஆம் ஆண்டுகளில் நேரிட்ட வங்கித்தொழில் நெருக்கடி நாட்டில் அன்றைய முறையிலிருந்த பல குறைபாடுகளையும முன்னிலைப்படுத்தி, ஆற்றல் வாய்ந்த, மற்றும் ஒத்த தரமுடைய ஒரு மத்திய வங்கியினை நிறுவ வழி வகுத்தது. இடைவிடாது மேற்கொண்ட முயற்சிகளுக்குப் பின்னர், மூன்று மாநில வங்கிகளும் ஒரே வங்கியாக இணைக்கப்பட்டு, அதன் விளைவாக, 1921ஆம் ஆண்டு இந்திய இம்பீரியல் வங்கி உருவாகியது.

மூன்று மாநில வங்கிகள் தவிர, மேலும் சில கூட்டுப்பங்கு வங்கிகள் 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நிறுவப்பட்டன.

19ஆம் நூற்றாண்டின் இறுதியில் நாட்டின் வணிகவங்கிகளின் நடவடிக்கைகளில் ஒரு புதிய உத்வேகம் கிளம்பியது. நாட்டில் சுதேசி இயக்கம் பரவத் துவங்கியவுடன் வங்கிகளின் எண்ணிக்கையும் உயரத் தொடங்கியது. 1906 முதல் 1913 வரை தோன்றிய சிறு வணிக வங்கிகளின் எண்ணிக்கை மிக அதிகமானது.

இந்நிலையிலான "வங்கித்தொழில் எழுச்சி"யைத் தொடர்ந்து, நெருக்கடி காலம் துவங்கியது. 1913 முதல் 1924 வரை, இந்நெருக்கடியால், நாட்டின் வங்கி வளர்ச்சி பெரியதொரு அதிர்ச்சிக்குள்ளானது. வங்கித் தொழில் நடைமுறையில் இப்பெரிய வீழ்ச்சிக்கான முக்கிய சாதனங்களை 1929ஆம் ஆண்டு மத்திய வங்கித் தொழில் விசாரணைக்குழு தனது அறிக்கையில், விரிவாக விளக்கிக் காட்டியுள்ளது. வங்கித் தொழில் சாராத பணிகளை, வங்கித் தொழில் சார்ந்த பணிகளுடன் இணைத்து செயல்பட்டதும், கூட்டுப்பங்கு வங்கி நிறுவனங்களிடையே ஒருமித்த நிலை உருவாகாததுமே இவ்வீழ்ச்சிக்கு முக்கிய காரணங்களாகுமென, குழு தனது அறிக்கையில் கூறியுள்ளது.

உலகெங்கும் நிலவிய தொய்வினால், மறுமுறை 1930 இல் வங்கிக் குறைபாடுகள் காணப்பட்டன. எனவே, வங்கித்தொழில் முறையை சீரமைக்கோரி, நாடெங்கும் தொடர்ந்து குரலெழுப்பப்பட்டது. அவர்களது கோரிக்கைகளை ஏற்று, அரசு, 1929ஆம் ஆண்டு, எட்டு மாநிலங்களில்

மாநில வங்கித் தொழில் குழுக்களை நியமித்தது, இவைதவிர, மத்திய அரசின் நிர்வாகத்திலுள்ள பகுதிகளில், தனியாக ஒரு வங்கித் தொழில் விசாரணைக்குழுவினை நியமித்தது. பின்னர், சங்கிலித்தொடர் போன்ற அனைத்து விசாரணைகளையும் முடித்திட 1929ஆம் ஆண்டு சூலை திங்கள் 22ஆம் நாளன்று அரசு, திரு.பி.என்.மித்ரா அவர்களது தலைமையில் இந்திய மத்திய வங்கித்தொழில் விசாரணைக்குழுவினை நியமித்தது. இக்குழு, ஏனைய அம்சங்கள் நீங்கலாக, வங்கிகள் அமைப்பு, நிருவாகம், தணிக்கை மற்றும் வங்கிகளை மூடும் நிலை ஏற்பட்டால் அவற்றை மூடுவதற்கு முறையாக மேற்கொள்ளவேண்டிய நடைமுறைகள், ஆகியவை அடங்கிய உணர்வாற்றல்மிக்க வங்கித்தொழில் சட்டம் ஒன்றை இயற்றிட பரிந்துரை செய்தது. இப்பரிந்துரையின்படியும், மற்றும் 1934ஆம் ஆண்டின் இந்திய ரிசர்வ் வங்கி சட்டத்தின் கருப்பொருளை ஆதாரமாகக் கொண்டும், இந்தியாவில் மத்திய வங்கித் தொழில் நிறுவனமாக 1935ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம், இந்திய ரிசர்வ் வங்கி நிறுவப்பட்டது.

எனினும், நிர்வாக முக்கியத்துவமிக்க கருத்தில் ஆய்ந்தால், அப்போது நடைமுறையிலிருந்த சட்டம் போதுமானதாக இல்லை. மேலும், அதனை நடைமுறைப்படுத்துவது மிகவும் கடுமையாயுமிருந்தது. 1938ஆம் ஆண்டு, திருவாங்கூர் தேசிய மற்றும் கொல்லம் வங்கி லிமிடெட்டின் நொடிப்பும்,தென்னிந்தியாவில் தொடர்ந்து நிகழ்ந்த வாணிக நெருக்கடியும், வங்கி சேமிப்புதாரர்களின் நலனைப்பாதுகாக்க வேண்டிய சூழ்நிலையை உருவாக்கியது.

1942ஆம் ஆண்டின் இந்திய கம்பெனிகள் (இரண்டாம் திருத்தம்) சட்டத்தில், "வங்கி", வங்கி வணிகர் மற்றும் "வங்கித்தொழில்" ஆகிய சொற்களை, ஒவ்வொரு வங்கியும் கட்டாயமாகப் பயன்படுத்த வேண்டுமென்ற, பிரிவு ஏற்படுத்தப்பட்டது. மேலும், 1946ஆம் ஆண்டின், வங்கித்தொழில் கம்பெனிகள் (கிளைகள் துவக்குவதில் வரையறை) சட்டத்தில், ஒரு வங்கி, புது அலுவலகமோ அல்லது இயங்கி வரும் வங்கியின் இருப்பிடத்தை மாற்றவோ முற்பட்டால், அதற்கு, தொடர்புள்ள வங்கி, இந்திய ரிசர்வ் வங்கியின் அனுமதி பெறவேண்டுமென்ற விதிமுறை ஏற்படுத்தப்பட்டது.

அட்டவணையிற் சேர்க்கப்பட்ட வங்கிகள் மற்றும் அட்டவணையிற் சேர்க்கப்படாத வங்கிகள்

இந்திய ரிசர்வ் வங்கி சட்டத்தின்படி, வங்கிகள், அட்டவணையிற் சேர்க்கப்பட்ட வங்கிகள் மற்றும் அட்டவணையிற் சேர்க்கப்படாத வங்கிகள் என பாகுபாடு செய்யப்பட்டுள்ளன. இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டத்தின் இரண்டாவது அட்டவணையிற் சேர்க்கப்பட்ட வங்கிகளே, அட்ட வணையிற் சேர்க்கப்பட்ட வங்கிகள் எனப்படும்.

1942-1943 ஆம் ஆண்டுகளில், நாட்டில், அட்டவணையிற் சேர்க்கப்பட்ட வங்கிகளின் எண்ணிக்கை அதிகரித்தது. பின்னர், பல்வேறு வங்கித் தொழில் நிறுவனங்கள் திறக்கப்பட்டன. அவை, பாரத் வங்கி லிமிடெட், இந்துஸ்தான் வணிக வங்கி லிமிடெட், ஒருங்கிணைக்கப்பட்ட (யுனைடெட்) வணிக வங்கி லிமிடெட் மற்றும் திருவாங்கூர் வங்கி ஆகியவையாகும்.

வளர்ச்சித் திட்டங்கள் உருவாகிய காலகட்டம்

வளர்ச்சித் திட்டங்கள் உருவான கால கட்டத்தில், நாட்டிலுள்ள வணிக வங்கிகளின் தொழில் முறையில், குறிப்பாக அமைப்பு முறையில், முக்கியமான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. இந்திய வணிக வங்கிகளும், இந்திய ரிசர்வ் வங்கியும், நாட்டில், வங்கித் தொழில் அமைப்பு முறையிலும், வங்கித்தொழில் கொள்கைகளிலும், தொடர்ந்து நிகழும் பொருளாதார மாற்றங்களுக்கேற்ப தங்களைத் தயார் படுத்திக்கொண்டு உரிய வழி முறைகளை எவ்வாறு பின்பற்றின என்பதனை வளர்ச்சிக்கால ஆய்வுகள் தெளிவுபடுத்தின.

மேலும், பல முதன்மையான வளர்ச்சிகள் யாதெனில், கடன் வழங்கும் முறை மற்றும் வங்கித்தொழில் கொள்கைகள் ஆகியவை குறித்த ஆய்வு, வேளாண்மை மற்றும் வேறு சில முன்னுரிமை பெற்ற பகுதிகளுக்கு வங்கிகளுக்குதவியளித்தல், சிறுவாழ்வுடைய சமூகக்கட்டுப்பாட்டில், கிளைகள் விரிவாக்கும், திட்டம், 14 பெரிய வணிக வங்கிகளை 1969ஆம் ஆண்டு சூலை மாதம் நாட்டுடைமையாக்கியது, மேலும் ஆறு வணிக வங்கிகளைப் பின்னர், 1980ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நாட்டுடைமையாக்கியது போன்றவையாகும்.

மற்றொரு பெரிய வளர்ச்சியாதெனில், அகில இந்திய கிராமக் கடன் வழங்கு ஆய்வு அறிவுரைக்குழுவின் பரிந்துரைப்படி, இந்திய இம்பீரியல் வங்கியின் சொத்துக்கள், கடன் பொறுப்புகள் ஆகியவற்றைக் கைப்பற்றி ஜூலை 1, 1955ஆம் தேதி முதல் இந்திய ஸ்டேட் வங்கி நிறுவப்பட்டதாகும். நாட்டில் வங்கித் தொழில் வளர்ச்சியடைவதும், கூட்டுறவு மற்றும் இதர வங்கிகளுக்குப் போதிய வாய்ப்பு நலன்களிப்பதுமே, இதன் நோக்கமாகும்.

வழிகாட்டு வங்கி (லீடு பாங்க்) திட்டம்

கிராம மக்களுக்குத் தேவையான உதவிகளை வணிக வங்கிகள் மேற்கொள்ள வேண்டுமென்ற நோக்கில், இந்திய ரிசர்வ் வங்கி, 1969ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம், வழிகாட்டுவங்கி (லீடு பாங்க்) திட்டத்தை அறிமுகப்படுத்தியது. தேசிய கடன் வழங்குமன்றத்தால் நியமிக்கப்பட்ட ஆய்வுக்குழு, நாட்டின் பல்வேறு பகுதிகளிலுள்ள மாறுபடும் உள்ளூர் நிலைகளைக் கணக்கில் கொண்டே, நாட்டின் கடன் வழங்குத்துறை,

வங்கித்தொழில்துறை ஆகியவற்றின் வளர்ச்சியில் சாதனை எய்தமுடியு மென்று பரிந்துரை செய்ததன் தொடர் விளைவே, வழிகாட்டு வங்கித்திட்டமாகும். பேராசிரியர் டி.ஆர். காட்கில் அவர்களின் தலைமையில் ஒரு ஆய்வுக்குழு, இத்தருவாயில் ஒரு "பகுதி அணுகுமுறை" தேவையென வலியுறுத்தியது. அதனுடைய மற்றொரு கருத்து யாதெனில், இவ்வணுகுமுறையின் மையக்கருவாக, மாவட்டம் என்ற நிருவாக அலகினைக் கொள்ளலாமென்பதாகும். இக்கருத்துக்களை ஆய்வு செய்தும், வங்கியாளர்களது தனிக்குழுவின் ஒத்த பரிந்துரைகளைப் பரிசீலனை செய்தும், இந்திய ரிசர்வ் வங்கி, வழிகாட்டு வங்கித் திட்டத்தை வடிவமாக்கியது. இத்திட்டத்தின்படி, வழிகாட்டுவங்கியின் இடத்தைப் பெற்ற ஒரு நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கி, வங்கித்தொழில் வளர்ச்சி உள்ளிட்ட, மாவட்டத்தின் பல்வேறு வளர்ச்சிப்பணிகளிலும் கவனம் செலுத்தி அனைத்து உதவிகளையும் மேற்கொள்ளவேண்டும். கன்னியாகுமரி மாவட்டத்தில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, 'வழிகாட்டு வங்கி'யாக நியமிக்கப்பட்டுள்ளது.

அட்டவணையிற் சேர்க்கப்பட்ட வங்கி

1960ஆம் ஆண்டில், அட்டவணையிற் சேர்க்கப்பட்ட மற்றும் சேர்க்கப்படாத ஒரு சில வங்கிகளே மாவட்டத்தில் இயங்கி வந்தன. திருவாங்கூர் ஸ்டேட் வங்கி, மதுரை வங்கி லிமிடெட், கனரா வங்கி லிமிடெட், இந்தியன் வங்கி லிமிடெட் மற்றும் தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கி லிமிடெட் ஆகியவை அட்டவணையிற் சேர்க்கப்பட்ட வங்கிகளாகும். 1937ஆம் ஆண்டு நிறுவப்பட்ட அட்டவணையிற் சேர்க்கப்படாத ஒரே வங்கி நாஞ்சி நாடு வங்கியாகும்.

வங்கித் தொழில் ஆற்றலெல்லை சொற்கூற்றின்படி, வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்ட பின்னர், தமிழ்நாட்டில், அதிக வங்கிகள் உள்ள மாவட்டங்களில் கன்னியாகுமரியும் ஒன்றாகும். 1972ஆம் ஆண்டு சூலை மாத இறுதியில், மாவட்டத்தில் 46 அலுவலகங்களைக் கொண்ட 12 வணிக வங்கிகள் இயங்கி வந்தன[14]. வங்கியின் ஒவ்வொரு கிளையும் பணியாற்றிய மக்கட்தொகை 27,000 ஆகும். ஆனால், தமிழ்நாட்டு நீதியில் கணக்கிட்டால், வங்கிக்கிளை பணியாற்றிய மக்கட்தொகை 28,000 ஆகும்[15]. வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்ட பின்னர், வங்கிகளது அலுவலக எண்ணிக்கையில், உணரத்தக்க அளவு உயர்வு காணப் படுகிறது. அதாவது, மூன்று ஆண்டுகள் கால அளவில், வங்கி அலுவல கங்களின் எண்ணிக்கை இரு மடங்காகியது. 1969ஆம் ஆண்டு சூன் மாதம் 23 ஆக இருந்த வங்கிக்கிளைகளின் எண்ணிக்கை, 1972 சூலை மாதத்தில் 46 ஆக உயர்ந்தது. ஒரு வங்கிக்கிளையில் பணியாற்றும் மக்கட்தொகை எண்ணிக்கை 51,000 லிருந்து 27,000 ஆகக் குறைந்துள்ளது. (ஏறத்தாழ 100 விழுக்காடு குறைவு).

1971 ஆம் ஆண்டு, சூன் மாதம், மாவட்டத்திலுள்ள வங்கிகளின் மொத்த சேமிப்பு 569 இலட்சம் ரூபாயாகும். மொத்த முன்பணம் 249 இலட்சம் ரூபாயாக இருந்தது. வாணிக நடவடிக்கையில் பெரும் பகுதி மாவட்டத் தலைநகரான நாகர்கோவிலில் நடைபெற்றது. வங்கிகளின் சேமிப்பும், முன்பணமும் முறையே 61 மற்றும் 52 விழுக்காடாக இருந்தது.

1977ஆம் ஆண்டு, டிசம்பர் மாத இறுதியில், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள 49 மையங்களில், வணிக வங்கிகளின் 81 கிளைகள் இயங்கி வந்தன. ஒன்பது வட்டார வளர்ச்சி மையங்களில் வங்கி வசதிகள் உள்ளன.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அட்டவணையில் சேர்க்கப்பட்ட வணிக வங்கிகள்[16]:

ஆண்டு	அலுவலகங்களின் எண்ணிக்கை	சேமிப்புத்தொகை (ரூ.இலட்சத்தில்)	முன்பணத்தொகை
1972	47	784	402
1973	51	1022	595
1974	55	1363	741
1975	63	1520	917
1976	73	1838	1230
1977	81	2269	1236
உயர்வு 5 ஆண்டுகள்		72.34 (விழுக்காடு)	189.41

1972 ஆம் ஆண்டிலிருந்து, 1977ஆம் ஆண்டு வரை, வணிக வங்கிக்கிளைகளின் எண்ணிக்கை 47லிருந்து, 81ஆக உயர்ந்தது. இவ்வுயர்வு 72.34 விழுக்காடாகும். சேமிப்புத்தொகையில் 189.41 விழுக்காடு, உயர்வு காணப்பட்டுள்ளது. வணிக வங்கிகள் முன்பணத் தொகை கொடுத்ததில் அதிகரிப்பு 207.46 விழுக்காடாகும். அதாவது, ஐந்து ஆண்டு காலத்தில், 1972-ல், 402 இலட்ச ரூபாயிலிருந்து, 1977 ஆம் ஆண்டு, 1236 இலட்ச ரூபாயாக உயர்ந்தது.

கன்னியாகுமரி மாவட்டம்
வங்கித்தொழில் புள்ளி விவரங்கள்
(தொகை ரூபாய் இலட்சத்தில்)

ஆண்டு	கிளைகளின் எண்ணிக்கை	மொத்த சேமிப்பு தொகை	மொத்த முன் பணத் தொகை	சி.டி.ஆர்.
1980 (செப் 1980 வரை)	85	4122.87	2212.17	53.7
1981	91	5283.00	2912.00	55.1
1982	96	6447.00	3259.00	50.6

1983	102	7542.00	4328.00	57.4
1984	111	8482.00	5145.00	60.7
1985	113	10234.00	5719.00	55.9
1986	114	12117.00	6665.00	55.0
1987	115	14900.00	9040.00	60.7

* *[ஆலோசகர் (முன்னுரிமை கடன் வழங்குதல்), வழிகாட்டு வங்கித்துறை, இந்தியன் ஒவர்சீஸ் வங்கி, சென்னை, அறிக்கை நாள் 11-1-1989.]*

1979 ஆம் ஆண்டு, மார்ச் மாத நிலைப்படி, மாவட்டத்திலியங்கும் வணிக வங்கிகளின் மக்கட்தொகை அணி விகிதத்தில், மாவட்ட வாரியான எண்ணிக்கை[17] :

வட்டம்	மக்கட் தொகை அணி விகிதம்					மொத்த எண்ணிக்கை
	5000 -க்குக் கீழ்	5000-லிருந்து 10000 வரை	10001-லிருந்து 25000 வரை	25001-லிருந்து 50000 வரை	50001-கும் அதற்கு மேலும்	
விளவங்கோடு	-	-	11	5	-	16
கல்குளம்	-	2	9	10	2	23
தோவாளை	-	4	3	-	-	7
அகஸ்தீஸ்வரம்	1	3	9	2	22	37

1979 ஆம் ஆண்டு நிலைப்படி, கன்னியாகுமரி மாவட்டத்தின் வங்கி புள்ளிவிவரங்கள்

1.	ஒவ்வொரு வங்கி அலுவலகத்திற்கான மக்கள்தொகை (ஆயிரத்தில்)	17.60
2.	ஒவ்வொரு கிளைக்கும் சேமிப்புத்தொகை (ரூ.இலட்சத்தில்)	44.31
3.	ஒவ்வொரு கிளைக்கும் கடன்வழங்குத்தொகை (ரூ. இலட்சத்தில்)	23.07
4.	ஒவ்வொருவருக்கான (தனி நபர்) கடன் வழங்குத்தொகை (ரூபாய்)	132.10
5.	ஒவ்வொருவருக்கான (தனி நபர்) சேமிப்புத்தொகை (ரூபாய்)	253.70
6.	கடன் வழங்குத்தொகை-சேமிப்புத்தொகை ஆகியவற்றின் வீதத்தொடர்பு (விழுக்காட்டில் = %)	52.10

1979-ம் ஆண்டு, டிசம்பர் மாத நிலைப்படி, கீழே குறிப்பிட்டுள்ளவாறு, வாணிக வங்கிகளது கிளைகளின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது.

பகுதி	மையங்களின் எண்ணிக்கை	அலுவலகங்களின் எண்ணிக்கை	மொத்தத்திற்கான விழுக்காடு
1. கிராமப்புறம்	10	11	13
2. பாதிஅளவிலான நகர்ப்புறம்	39	51	61
3. நகர்ப்புறம்	1	22	26
மொத்தம்	50	84	

மாவட்ட கடன் வழங்குமுறைத் திட்டம்[18]

மாவட்டத்திற்கான கடன் வழங்குத் திட்டத்தின் முதல் சுற்றிணை இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, 1978-81இல் வடிவமாக்கியது. பிறகு, இந்தியன் ரிசர்வ் வங்கி, ஆலோசனை வழங்கியவாறு, மாவட்ட கடன் வழங்குத் திட்டத்தினை செயல்முறைப்படுத்தும் முதற்சுற்று 1979ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முடிக்கப்பட்டு, 1980-82 ஆம் ஆண்டுகாலத்திற்கான இரண்டாவது சுற்று, மாவட்ட கடன் வழங்குமுறைத் திட்டம், ஒவ்வொரு ஆண்டிற்கான செயல்திட்டத்துடன், தயாரிக்கப்பட்டது. இரண்டாவது சுற்று செயலீடுபாட்டின், தனிச்சிறப்பு யாதெனில், கடன் வழங்குத் திட்டம், வங்கி வாரியாக, திட்டவாரியாக மற்றும் வட்டாரவாரியாக, கடன் தொகையின் பங்கு ஒதுக்கப்பட்டு, நிர்ணயிக்கப்பட்டது. மாவட்டத்தில் தோற்றுவிக்கப்பட்ட பல்வேறு முக்கியத் திட்டங்கள், கடன் வழங்குமுறைத் திட்டம் மற்றும் ஆண்டு செயல் திட்டங்கள் ஆகியவை குறித்த விவரங்கள், கீழ்க்குறிப்பிட்ட பட்டியலில் இடம்பெற்றுள்ளன.

கன்னியாகுமரி மாவட்டம்

மாவட்ட கடன் வழங்குமுறைத் திட்டங்களின் தொழிற்பகுதிவாரியாக செலவினத்திற்கான முதலீடு

(தொகை ரூபாய் இலட்சத்தில்)

ஆண்டு	வேளாண்மை	தொழிற் துறை	பல்வேறு பணிகள்	மொத்தம்
1. மாவட்டக் கடன் வழங்கு முறைத்திட்டங்கள் (1978 ஏப்ரல் முதல் 1979 டிசம்பர் முடிய)	1371.25	139.10	54.43	1564.78
2. மாவட்டக் கடன் வழங்கு முறைத்திட்டங்கள் (1980 சனவரி முதல் 1982 டிசம்பர் முடிய)	854.92	372.18	126.67	1353.77

ஆலோசகர் (முன்னுரிமை கடன் வழங்குமுறை), வழிகாட்டு வங்கித்துறை, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, சென்னை, அறிக்கை நாள் 11.1.1989.

கன்னியாகுமரி மாவட்டம் ஆண்டுவாரியான செயல் திட்டங்களின், தொழில்பகுதி வாரியான குறியீடும், சாதனையும்,

(தொகை ரூபாய் இலட்சத்தில்)

ஆண்டு	ஒதுக்கீடு				சாதனை				
	வேளாண்மை	தொழில்துறை	பல்வேறு பணிகள்	மொத்தம்	வேளாண்மை	தொழில்துறை	பல்வேறு பணிகள்	மொத்தம்	விழுக்காடு
1980	567.36	110.33	38.47	716.16	969.88	219.60	126.51	1359.99	184
1981	646.09	142.05	88.91	877.05	2095.65	463.85	306.92	2839.42	327
1982	745.10	149.91	121.48	1017.49	1306.11	441.16	266.86	2014.13	197
1983	916.99	169.38	172.92	1259.29	1520.31	229.13	255.10	2004.54	159
1984	997.78	188.49	207.23	1393.50	1486.87	190.21	286.87	1963.95	141
1985	1281.65	468.75	291.17	2041.57	2211.04	1102.74	893.24	4207.02	206
1986	1993.28	237.62	591.26	2822.16	2299.64	239.21	1029.72	3568.57	126
1987	2133.00	872.00	736.00	3741.00	2313.79	379.20	782.66	3475.65	141

ஆலோசகர் (முன்னுரிமை கடன் வழங்கு முறை), வழிகாட்டு வங்கித்துறை, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, சென்னை, அறிக்கை நாள் 11.1.1989.

3. மாவட்டக் கடன் வழங்கு முறைத் திட்டங்கள் (1982 முதல் 1985 முடிய)	1281.90	383.68	392.51	2058.09
4. மாவட்டக் கடன் வழங்கு முறைத் திட்டங்கள்	4127.80	1157.54	2448.60	7733.94

வணிக வங்கிகளின் செயல்முறைகள் பற்றிய புள்ளி விவரங்கள்

1984 டிசம்பர் மாத நிலைப்படி, மாவட்டத்தில் 110 கிளைகளின் பின்னல் வலையமைவினைக் கொண்ட 22 வணிக வங்கிகள் இருந்தன. இந்திய ஸ்டேட் வங்கித் தொகுதி, நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் தனியார் துறை வங்கிகள், ஆகியவை, முறையே 34, 46 மற்றும் 28 கிளைகளைக் கொண்டிருந்தன. கன்னியாகுமரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி லிமிடெட் மற்றும் மாநில நிலவள வங்கி ஆகியவை ஒவ்வொன்றும் ஐந்து கிளைகளைக் கொண்டிருந்தன. தமிழ்நாடு தொழிற்றுறை முதலீட்டுக் கழகமும் மாவட்டத்தில் இயங்கி வருகிறது. (தமிழ்நாடு தொழிற்றுறை முதலீட்டுக் கழகத்தின் செயல்முறைகள் குறித்து, "தொழிற்சாலைகள்" என்ற இயலில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.)

வாணிக வங்கிகள் 79.73 கோடி ரூபாய் சேமிப்புத் தொகையினைப் புழக்கத்திற்குக் கொண்டுவந்தன. 66.87 கோடி ரூபாயினை 80.11 விழுக்காடு கடன் வழங்கு-சேமிப்பு விகிதத்தில், நிதி உதவியாக அளித்தன. முன்னுரிமைப் பிரிவினர் முன்பணம், 74.28 விழுக்காடாகும். இது ரூபாய் 47.45 கோடி கடனாக வழங்கும் தொகையாகும். டி.ஆர்.ஐ. முன் பணங்கள் நாட்டளவில் நிர்ணயிக்கப்பட்டுள்ள ஒரு விழுக்காட்டை விடக் கூடுகிறது. வாணிக வங்கிகளால், அட்டவணையிட்ட வகுப்பினர் மற்றும் மலைவாழ் மரபினர் ஆகியோருக்கு, 66.08 இலட்ச ரூபாய் நிதியுதவியாக அளிக்கப் பட்டமை, குறிப்பிடத்தக்கது.

1985ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் மாவட்டத்தில் இரண்டு இந்திய ஸ்டேட் வங்கித் தொகுதிகள், ஒன்பது நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் 11 தனியார் துறை வங்கிகள் ஆகியவை, அவற்றிற்கான 114 கிளைகளுடன் இயங்கிவந்தன. இந்திய ஸ்டேட் வங்கி, நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் தனியார் துறை வங்கிகள் ஆகியவை முறையே 37, 49 மற்றும் 28 கிளைகளைக் கொண்டிருந்தன. தனியார் துறை வங்கிகளில், அதிக அளவில் அதாவது, 14 கிளைகளைக் கொண்டதாக தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி திகழ்ந்தது. அதற்கடுத்தபடியாக, ஐந்து கிளைகளுடன் தமிழ்நாடு வங்கி லிமிடெட் பணியாற்றியது. கொச்சி வங்கி, இந்திய ஸ்டேட் வங்கியால்

பொறுப்பேற்கப்பட்டது. மாவட்டத்திலுள்ள வாணிக வங்கிகள், 95.93 கோடி ரூபாய் சேமிப்புத் தொகையினைப் புழக்கத்திற்குக் கொண்டுவந்தன ; அவர்கள் வழங்கிய கடன்களும், முன் பணங்களும் 54.08 கோடி ரூபாயாகும். இவற்றின் கடன் சேமிப்பு வீதத் தொடர்பு நிலை 56.4 விழுக்காடாகும். இது மனநிறைவிற்கேற்ப உள்ளது.

வாணிக வங்கிகள், பரந்த மனப்பான்மையுடன், முன்னுரிமை பெற்ற பிரிவிற்கு, 37.11 கோடி ரூபாய் நிதியுதவி அளித்துள்ளது. இது மாவட்டத்தில் வழங்கப்பட்ட மொத்த முன் பணத்தின் 68.6 விழுக்காடாகும்.

விரிவுறுத்தப்பட்ட மொத்தக்கடன் தொகை ரூபாய் 1.10 கோடியில், வாணிக வங்கிகள் 2.03 விழுக்காடு நிலையை எட்டியுள்ளதால், டி.ஆர்.ஐ. முன் பணங்கள் மொத்தத்தில், நல்லவிதமாக இருந்ததாகத் தெரிகிறது.

வேளாண்மையை விரிவுபடுத்த, சிறு மற்றும் நடுத்தர விவசாயிகள் 45162 பேர்களுக்கு வாணிக வங்கிகள், 12.34 கோடி ரூபாய் நிதியுதவி அளித்துள்ளன. கைத்திறம் பெற்றுள்ள கிராமக் கைவினைஞர்கள் 4054 பேர்களுக்கு, 1.14 கோடி ரூபாய் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. அட்டவணையிட்ட வகுப்பினர் மற்றும் மலைவாழ் மரபினர் 5827 பேர் களுக்கு, வாணிகவங்கிகள் 87.90 இலட்ச ரூபாய் நிதியுதவி அளித் துள்ளன. இருபது அம்சத்திட்டத்தின் கீழ் 5.79 கோடி ரூபாய் வழங்கப் பட்டுள்ளது.

1986ஆம் ஆண்டு டிசம்பர் மாதநிலைப்படி, மாவட்டத்திலுள்ள வாணிக வங்கிகள், 66.46 கோடி ரூபாய் சேமிப்புத் தொகையினைப் புழக்கத்திற்குக் கொண்டு வந்தன. இவற்றின் கடன்-சேமிப்பு வீதத்தொடர்பு நிலை 85 விழுக்காடாகும்.

வாணிக வங்கிகள் பரந்த மனப்பான்மையுடன் முன்னுரிமை பெற்ற பிரிவிற்கு 12.38 கோடி ரூபாய் நிதியுதவியளித்துள்ளன. இது மாவட்டத்தில் வழங்கப்பட்ட மொத்த முன் பணத்தின் 64 விழுக்காடாகும்.

விரிவுறுத்தப்பட்ட மொத்தக்கடன் தொகை ரூபாய் 1.59 கோடியில், வாணிக வங்கிகள் 24 விழுக்காடு நிலையை எட்டியுள்ளதால், டி.ஆர்.ஐ. முன்பணங்கள் நல்ல விதமாக உள்ளன[19]. வேளாண்மையை விரிவுப்படுத்த, சிறு மற்றும் நடுத்தர விவசாயிகளுக்கு, வாணிக வங்கிகள் 24.79 கோடி ரூபாய் நிதியுதவி அளித்துள்ளன. கைத்திறம் பெற்ற 6130 கிராம கைவினைஞர்களுக்கு 1.64 கோடி ரூபாய் நிதியுதவி அளிக்கப் பட்டுள்ளது. வங்கிகளிடமிருந்து அட்டவணையிட்ட வகுப்பினர் மற்றும் அட்டவணை யிட்ட மலைவாழ் மரபினர் 8638 பேர்கள் உதவி பெற்றுள்ளனர். 7.33 கோடி ரூபாய், இருபது அம்சத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளது.

ஒவ்வோராண்டும், டிசம்பர் இறுதி நிலையின்படி, ஒப்பீட்டுப்பட்டியல்[20]

தொடர் எண்.	விவரங்கள்	1984	1985	1986
(1)	(2)	(3)	(4)	(5)
1.	வங்கிக் கிளைகள் (கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கி மற்றும் சுசீந்திரம் நிலவள வங்கி உள்ளிட்டவை)	115	115	115
2.	சேமிப்புத்தொகை (ரூ. ஆயிரத்தில்)	7,97,320	9,59,317	12,09,474
3.	நிலுவையிலுள்ள முன் பணங்கள் (ரூ. ஆயிரத்தில்)	6,68,716	5,40,855	6,64,571
4.	கடன் வழங்குத்தொகை முன்பணத்தொகை வீதத் தொடர்பு	80.11	50.4	55
5.	டி.ஆர்.ஐ. திட்டம்	10,665	11,078	11,986
6.	அட்டவணையிட்ட வகுப்பினர்/ அட்டவணையிட்ட மலைவாழ் மரபினர்	10,665	8,750	12,555

1987 ஆம் ஆண்டு, டிசம்பர் இறுதியில், 97 மையங்களில் 115 வாணிக வங்கிக் கிளைகள் இயங்கிவந்தன. அவை, ஒரு வங்கி அலுவலகத்திற்கு சராசரி 12,339 மக்கட் தொகை என்ற கணக்கில் பணியாற்றின. 1987 ஆம் ஆண்டு மாவட்டத்தில் 10 பொதுத்துறை வங்கிகளும், 11 தனியார் துறை வங்கிகளும் செயற்பாட்டிலிருந்தன.

31.12.1987 நிலைப்படி வங்கி அலுவலங்கள் மற்றும் மையங்களின் எண்ணிக்கை

இந்திய ஸ்டேட் வங்கித் தொகுதி	அலுவலகங்களின் எண்ணிக்கை	மையங்களின் எண்ணிக்கை
1. திருவாங்கூர் ஸ்டேட் வங்கி	23	17
2. இந்திய ஸ்டேட் வங்கி	15	12
மொத்தம்	38	29
2. பொதுத்துறை நிறுவனங்கள் (நாட்டுடைமையாக்கப்பட்டவை)		
1. இந்தியன் ஓவர்சீஸ் வங்கி	22	18
2. கனரா வங்கி	13	9
3. சிண்டிகேட் வங்கி	4	4
4. இந்தியன் வங்கி	3	3

5. இந்திய மத்திய வங்கி	3	3
6. இந்திய யூனியன் வங்கி	2	2
7. யுனைடெட் கமர்சியல் வங்கி	1	1
8. விஜயா வங்கி	1	1
மொத்தம்	49	41
3. தனியார்துறை வங்கிகள்		
1. தமிழ்நாடு மெர்கன்டைல் வங்கி லிட்.	14	13
2. தமிழ்நாடு வங்கி லிமிடெட்	5	5
3. மதுரை வங்கி லிமிடெட்	1	1
4. தஞ்சாவூர் வங்கி லிமிடெட்	1	1
5. கத்தோலிக்க சிரியன் வங்கி லிமிடெட்	1	1
6. தனலெட்சுமி வங்கி லிமிடெட்	1	1
7. ஃபெடரல் வங்கி லிமிடெட்	1	1
8. கரூர் வைஸ்யா வங்கி லிமிடெட்	1	1
9. லெட்சுமி விலாஸ் வங்கி லிமிடெட்	1	1
10. நெடுங்காடி வங்கி லிமிடெட்	1	1
11. தெற்கிந்திய வங்கி லிமிடெட்	1	1
மொத்தம்	28	27
முழு மொத்தம்	115	97

1986ஆம் ஆண்டு செயல்திட்டத்தின்படி, வங்கிகளின் செயல் நிறைவேற்றம்

(ரூபாய் ஆயிரத்தில்)

துறை	சாதனை	
	எண்ணிக்கை	தொகை
(1)	(2)	(3)
1. வேளாண்மை		
அ. 1. பயிர்க்கடன்	64,985	1,59,902
2. சிறிய நீர்ப்பாசனம்		
1. கிணறுகள்	152	837
2. டீசல்/மின்சக்தி நீர்வாங்கு குழாய்	123	859

(1)	(2)	(3)
3. வேளாண் கருவிகள்		
1. இழுவை இயந்திரம்		
2. மாட்டு வண்டிகள்	487	3,142
3. மற்றவை	10,834	27,291
4. நிலவளம்	287	3,039
ஆ. வேளாண்மை சார்ந்த நடவடிக்கைகள்		
1. பால்பண்ணை	3,378	8,510
2. ஆடு வளர்ப்பு	159	265
3. மீன் பண்ணைகள்	2,817	12,231
4. எரிவாயுக்கலங்கள்	276	1,617
5. பட்டுப்புழு வளர்ப்பு	101	715
6. தேனீ வளர்ப்பு	4,785	114
7. மற்றவை	4,785	11,542
மொத்தம் (வேளாண்மை)	93,169	2,29,964
5. தொழிற்றுறை	(ரூபாய் ஆயிரத்தில்)	
அ. கிராமப்புறத் தொழில்கள்		
1. கைத்தறி	240	1,367
2. மரவேலை செய்வோர்/ கொல்லர்கள்	359	1,206
3. பனைத்தொழில்		
4. மற்றவை	3,286	20,566
ஆ. சிறுதொழில் நிறுவனங்கள்		
1. பொறியியல்	46	508
2. கயிறு அலகுகள்	95	274
மொத்த தொழில் நிறுவனங்கள்	4,026	23,921
6. பணிகள்	(ரூபாய் ஆயிரத்தில்)	
அ. போக்குவரத்து இயக்குவோர்		
1. வாடகை ஊர்திகள் / பாரமேற்றிச் செல்லும் கனரக ஊர்திகள்	233	9,581

	2. மற்றவை	433	1,991
ஆ.	சில்லரை வணிகர்கள்/சிறிய தொழில் வகை	8,536	79,537
இ.	வாழ்க்கைத் தொழிலர் / சுயவேலை வாய்ப்பு	4,005	11,022
ஈ.	கைத்தறி / கல்வி	189	400
	2. நுகர்வோர் சார்ந்தவை	309	438
	மொத்தப்பணிகள்	13,705	1,02,969

1986ஆம் ஆண்டு செயல்திட்டத்தின் வங்கி வாரியான, தொழில்பிரிவு வாரியான செயல்நிறைவேற்றம்[21]:

தொடர் எண்.	*வங்கிகள்*	*வேளாண்மை*	*தொழில் துறை*	*பணிகள்*	*மொத்தம்*
(1)	*(2)*	*(3)*	*(4)*	*(5)*	*(6)*
			(ரூபாய் ஆயிரத்தில்)		
1.	இந்திய ஸ்டேட் வங்கி	22,882	2,029	7,720	32,631
2.	திருவாங்கூர் ஸ்டேட் வங்கி	38,056	6,657	12,703	57,276
3.	இந்தியன் ஓவர்சீஸ் வங்கி	28,944	2,517	5,994	37,455
4.	சிண்டிகேட் வங்கி	6,462	854	2,144	9,460
5.	இந்தியன் வங்கி	13,321	132	1,237	14,990
6.	இந்திய யூனியன் வங்கி	2,557	577	1,398	1,532
7.	யுனைடெட் கமர்சியல் வங்கி	5,033	14	325	5,402
8.	கனரா வங்கி	15,720	1,098	3,634	20,457
9.	விஜயா வங்கி	62	57	383	502
10.	தென்னிந்தியன் வங்கி லிமிடெட்	314	189	785	1,288
11.	தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கி லிமிடெட்	5,595	85	1,127	6,807
12.	தனலட்சுமி வங்கி லிமிடெட்	38	-	215	253
13.	தஞ்சாவூர் வங்கி லிமிடெட்	835	1,516	676	3,047
14.	மதுரை வங்கி லிமிடெட்	44	-	48	92
15.	நெடுங்காடி வங்கி லிமிடெட்	-	-	133	133
16.	ஃபெடரல் வங்கி லிமிடெட்	999	274	492	1,765
17.	கத்தோலிக்க சிரியன் வங்கி லிமிடெட்	35	89	1,036	1,160

(1) (2)	(3)	(4)	(5)	(6)
18. லெட்சுமி விலாஸ் வங்கி லிமிடெட்	193	100	201	494
19. கரூர் வைஸ்யா வங்கி லிமிடெட்	311	3	23	337
20. கன்னியாகுமரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி லிமிடெட்	81,480	7,479	61,597	1,50,556
21. தமிழ்நாடு மாநில நிலவள வங்கி லிமிடெட்	4,671	-	-	4,671
மொத்தம்	2,29,964	28,921	1,02,972	3,56,857

31-12-1987 தேதி நிலைப்படி, கன்னியாகுமரி மாவட்டத்தில், இயங்கி வரும் வட்டார வாரியான வங்கி மையங்களின் பட்டியல்[22]:

வட்டார மையம்	இயங்கிவரும் வங்கிகள்
மேல்புரம்	
அருமணி	இந்திய ஸ்டேட் வங்கி தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கி லிமிடெட்
கலியக்காவளை	இந்தியன் வங்கி
கண்ணுமூடு	திருவாங்கூர் ஸ்டேட் வங்கி
குழித்துரை (நகராட்சி)	கனரா வங்கி இந்தியன் ஸ்டேட் வங்கி
மரியல்	இந்தியன் ஓவர்சீஸ் வங்கி
மருதங்கோடு	இந்தியன் ஓவர்சீஸ் வங்கி
மஞ்சலமூடு	இந்தியன் ஸ்டேட் வங்கி
மேல்புரம்	இந்தியன் ஓவர்சீஸ் வங்கி
படந்தல மூடு	தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கி லிமிடெட்
புல்லியூர் சாலை	இந்திய மத்திய வங்கி
முஞ்சிரை	
கஞ்சம்புரம்	தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கி லிமிடெட்
கப்பிக்காடு	தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கி லிமிடெட்
கொல்லெங்கோடு	திருவாங்கூர் ஸ்டேட் வங்கி
நதிக்காவூ	இந்தியன் ஓவர்சீஸ் வங்கி
புதுக்கடை	இந்தியன் ஓவர்சீஸ் வங்கி
தேங்காப்பட்டினம்	திருவாங்கூர் ஸ்டேட் வங்கி
தீத்தூர்	திருவாங்கூர் ஸ்டேட் வங்கி

வட்டார மையம்	இயங்கிவரும் வங்கிகள்
கிள்ளியூர்	
அளஞ்சி	திருவாங்கூர் ஸ்டேட் வங்கி
இரணிபுரம்	திருவாங்கூர் ஸ்டேட் வங்கி
கருங்கல்	இந்திய ஸ்டேட் வங்கி சிண்டிகேட் வங்கி
மாங்கரை	இந்தியன் ஓவர்சீஸ் வங்கி
மார்த்தாண்டம்	சென்ட்ரல் வங்கி
(குழித்துரை நகராட்சி)	திருவாங்கூர் ஸ்டேட் வங்கி இந்திய யூனியன் வங்கி
நாட்டாளம்	கனரா வங்கி
திக்கண மோடு	தமிழ்நாடு மொக்கண்டைல் வங்கி லிமிடெட்
எரியம்	இந்திய ஸ்டேட் வங்கி
திருவட்டார்	
அருவிக்கரை	திருவாங்கூர் ஸ்டேட் வங்கி
குலசேகரம்	கனரா வங்கி இந்தியன் ஓவர்சீஸ் வங்கி தமிழ்நாடு வங்கி லிமிடெட்
பொன்மணி	கனரா வங்கி
சுவாமியார் மடம்	இந்தியன் ஓவர்சீஸ் வங்கி
திருவட்டார்	திருவாங்கூர் ஸ்டேட் வங்கி
வார்கிளம்பி	தமிழ்நாடு மொக்கண்டைல் வங்கி லிமிடெட்
திருநந்திக்கரை	இந்தியன் ஓவர்சீஸ் வங்கி
தக்கலை	
இரனியல்	இந்தியன் ஓவர்சீஸ் வங்கி
கல்குளம்	இந்திய ஸ்டேட் வங்கி
கப்பியரை	இந்திய ஸ்டேட் வங்கி
கூத்தாநல்லூர்	இந்திய ஸ்டேட் வங்கி
முளகுமூடு	சிண்டிகேட் வங்கி
முட்டுக்காடு	திருவாங்கூர் ஸ்டேட் வங்கி
நெய்யூர்	சிண்டிகேட் வங்கி
பத்மநாபபுரம்	இந்தியன் ஓவர்சீஸ் வங்கி

வட்டார மையம்	இயங்கிவரும் வங்கிகள்
புள்ளியாடி	தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கி லிமிடெட் திருவாங்கூர் ஸ்டேட் வங்கி
திருவிதாங்கோடு	திருவாங்கூர் ஸ்டேட் வங்கி
தக்கலை	கனரா வங்கி
குருந்தங்கோடு	
ஆலூர்	இந்திய மத்திய வங்கி
கொளச்சல் (நகராட்சி)	திருவாங்கூர் ஸ்டேட் வங்கி தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கி லிமிடெட்
வெள்ளிச்சந்தை	இந்தியன் ஓவர்சீஸ் வங்கி
குருந்தெங்கோடு	இந்தியன் ஓவர்சீஸ் வங்கி
மணவாளக்குறிச்சி	தமிழ்நாடு வங்கி லிமிடெட் திருவாங்கூர் ஸ்டேட் வங்கி
திங்கள் சந்தை	இந்திய ஸ்டேட் வங்கி
தாலக்குளம்	தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கி லிமிடெட்
வில்லுக்கீரி	திருவாங்கூர் ஸ்டேட் வங்கி
தோவாளை	
ஆரல்வாய்மொழி	தமிழ்நாடு வங்கி லிமிடெட் இந்திய ஸ்டேட் வங்கி
பூதபாண்டி	கனரா வங்கி திருவாங்கூர் ஸ்டேட் வங்கி
தாழக்குடி	தமிழ்நாடு வங்கி லிமிடெட்
திட்டவிளை	இந்தியன் ஓவர்சீஸ் வங்கி
தோவாளை	இந்தியன் ஓவர்சீஸ் வங்கி
அழகியபாண்டிபுரம்	கனரா வங்கி
தாடக்காரங்கோணம்	இந்திய ஸ்டேட் வங்கி
இராசக்காமங்கலம்	
ஆசாரிப்பள்ளம்	திருவாங்கூர் ஸ்டேட் வங்கி
ஏந்தமொழி	இந்தியன் ஓவர்சீஸ் வங்கி
இராசக்காமங்கலம்	தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கி லிமிடெட்
தேங்காம்புத்தூர்	இந்திய மாநில வங்கி
நாகர்கோவில் நகராட்சி	தஞ்சாவூர் வங்கி கனரா வங்கி (4)

வட்டார மையம்	இயங்கிவரும் வங்கிகள்
	கத்தோலிக்க சிரியன் வங்கி லிமிடெட்
	இந்திய கனரா வங்கி
	தனலெட்சுமி வங்கி லிமிடெட்
	ஃபெடரல் வங்கி லிமிடெட்
	இந்தியன் வங்கி
	இந்தியன் ஓவர்சீஸ் வங்கி (3)
	கரூர் வைஸ்யா வங்கி லிமிடெட்
	நெடுங்காடி வங்கி லிமிடெட்
	தமிழ்நாடு வங்கி லிமிடெட்
	தென்னிந்திய வங்கி லிமிடெட்
	திருவாங்கூர் ஸ்டேட் வங்கி (2)
	இந்திய ஸ்டேட் வங்கி (3)
	சிண்டிகேட் வங்கி
	இந்திய யுனைடெட் வங்கி
	யுனைடெட் கமர்சியல் வங்கி
	தமிழ்நாடு மொக்கண்டைல் வங்கி லிமிடெட்(2)
	மதுரை வங்கி லிமிடெட்
	விஜயா வங்கி
அகஸ்தீஸ்வரம்[23]	
அகஸ்தீஸ்வரம்	தமிழ்நாடு மொக்கண்டைல் வங்கி லிமிடெட்
அஞ்சுகிராமம்	தமிழ்நாடு மொக்கண்டைல் வங்கி லிமிடெட்
அழகப்பபுரம்	இந்தியன் வங்கி
கன்னியாகுமரி நகரியம்	கனரா வங்கி
	திருவாங்கூர் ஸ்டேட் வங்கி
கோட்டாரம்	இந்தியன் ஓவர்சீஸ் வங்கி
மருங்கூர்	இந்தியன் ஓவர்சீஸ் வங்கி
மைலாடி	திருவாங்கூர் ஸ்டேட் வங்கி
தென்தாமரக்குளம்	இந்தியன் ஓவர்சீஸ் வங்கி
சுசீந்திரம்	திருவாங்கூர் ஸ்டேட் வங்கி
விவேகாநந்தபுரம்	இந்திய ஸ்டேட் வங்கி
வாடீஸ்வரம் (நாகர்கோவில் நகராட்சி)	இந்திய ஸ்டேட் வங்கி

31-12-1987 நாளைய நிலைப்படி, கன்னியாகுமரி மாவட்டத்தில் வங்கிகள் இயங்கிவரும் மையங்கள்[24]:

1. அருமனை
2. குழித்துரை
3. களியக்காவிளை
4. கருமமூடு
5. புதுக்கடை
6. கஞ்சம்புரம்
7. தேங்காப்பட்டிணம்
8. கொல்லெங்கோடு
9. கருங்கல்
10. திக்காம்கோடு
11. மார்த்தாண்டம்
12. மாங்கரை
13. சுவாமியார் மடம்
14. திருவட்டார்
15. குலசேகரம்
16. வேர்கிளம்பி
17. எரனியல்
18. நெய்யூர்
19. கல்குளம்
20. திருவிதாங்கோடு
21. தக்கலை
22. பத்மநாபபுரம்
23. பள்ளியாடி
24. முளுகமூடு
25. ஆலூர்
26. வில்லுக்குரி
27. மணவாளக்குறிச்சி
28. கொளச்சல்
29. தானக்குளம் (திங்கள்சந்தை)
30. வெள்ளி சந்தை
31. ஆரல்வாய்மொழி
32. தோவாளை
33. திட்டுவிளை
34. பூதபாண்டி
35. தாளக்குடி
36. ஈதமொழி
37. இராசக்காமங்கலம்
38. வடசேரி
39. நாகர்கோவில்
40. தேங்காம்புத்தூர்
41. அழகப்பபுரம்
42. கொட்டாரம்
43. மருங்கூர்
44. சுசீந்திரம்
45. கன்னியாகுமரி
46. அஞ்சுகிராமம்
47. விவேகாநந்தபுரம்
48. அகஸ்தீஸ்வரம்
49. வடிவான்வரம்
50. மைலாடி
51. புலியூர்சாலை
52. கலியல்
53. நாடைக்காவு
54. கருந்தெங்கோடு
55. தாடைக்காரங்கோணம்
56. எதலக்குடி
57. மருந்தங்கோடு
58. முட்டுக்காடு
59. ஆசாரிப்பள்ளம்
60. படந்தலுமூடு
61. மேல்புரம்
62. இரேனிபுரம்
63. அலஞ்சி
64. பொன்மணி
65. கப்பிக்காடு
66. அருவிக்கரை

67. காப்பியரை
68. கூத்தாநல்லூர்
69. தென்தாமரைக்குளம்
70. திருநந்திக்கரை
71. எனியம்
72. தூத்தூர்
73. நாட்டாலம்
74. அழகியபாண்டியபுரம்

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, நாஞ்சிநாடு வங்கியினைத் தன் பொறுப்பிலேற்று, அதனைத் தொடர்ந்து அவ்வங்கியின் நாகர்கோவில், இரனியல் மற்றும் திட்டுவாலா ஆகிய மூன்று இடங்களிலுமுள்ள கிளைகளையும், மாற்றப்பெற்று முதன்முறையாக 1963ஆம் ஆண்டு தனது செயலாக்கத்தைக் கன்னியாகுமரியில் துவங்கியது. அதன் பின்னர். 1969ஆம் ஆண்டு நாட்டுடைமையாகும் வரை, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மேலும் இரண்டு கிளைகளையே துவக்கியது. ஆனால் நாட்டுடைமையாக்கப்பட்ட பின்னர் 17 கிளைகள், குறிப்பாக கிராமப்புறங்களில் துவங்கப்பெற்றன. ஆக, மாவட்டத்தில் தற்போது 17 மையங்களில் 22 கிளைகள் இயங்கி வருகின்றன.

கிராமப்புற கடன் சுமை

கிராமப்புறங்களில் விவசாயிகளின் கடன் சுமை, ஒரு தீராத நோயாக உள்ளது. மறுப்புக்கிடமின்றி ஒரே ஒரு மருந்தால் மட்டும் இந்நோயைத் தீர்க்க இயலாது. திரு.கே.கே. பிள்ளை, தனது "இந்தியாவின் பொருளாதார நிலை" என்ற நூலில் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்: "மக்களின் ஏழ்மை மற்றும் கடன் சுமை ஆகியவற்றைக் களையுமுன், அதற்கான மூல காரணத்தை முதலில் கண்டு பிடிக்க வேண்டும். இல்லையேல், நோயின் அறிகுறிகளுக்கு மருத்துவம் செய்தது போலாகி விடுமேயன்றி நோய்க்கு மருத்துவம் அளித்ததாகாது, கடன் சுமையை அறவே ஒழித்திட ஒரே ஒரு பரிகாரம் மட்டும் போதாது. மாறுபட்ட பல வழிமுறைகளைக் கையாண்டுதான் இதனை ஒழித்திட வேண்டும். அதில், மிகவும் முக்கியமானதென்னவெனில், விவசாயிகளின் கடன் சுமையைக் குறைத்திடவும், அறவே ஒழித்திடவும் அவர்கள் எந்தெந்த வழிகளைப் பின்பற்ற வேண்டுமென முதலில் அவர்களுக்கு விளக்கி, அவர்கள் அதனை தவறாது பின்பற்றச் செய்ய வேண்டும்".

வேளாண்மை குறித்து, இராயல் குழு கீழ்க்கண்ட உண்மைகளைக் கூறியது:

"கடனைப் புறக்கணித்துவிட்டு, அதனைக் களைய எந்தவித நடவடிக்கையையும் மேற்கொள்ளாமலிருந்து வருவது மிகவும் மோசமான கொள்கையாகும்".

இந்தியாவில் வேளாண்மைச்சுமை என்பது அண்மை காலத்தில் ஏற்பட்ட ஒன்றல்ல[25]. 1895ம் ஆண்டு சர்.ஃபிரட்ரிக் நிக்கல்சன், சென்னையிலுள்ள மொத்த கிராம மக்கட்தொகையின் கடன் சுமை 45

கோடி ரூபாய் என மதிப்பீடு செய்தவர். 1930ஆம் ஆண்டு, சென்னை மாநில வங்கித்தொழில் விசாரணைக்குழு, கடன் சுமையை 150 கோடி ரூபாயென மதிப்பிட்டது. ஆனால், விவசாயி கடன் நிமித்தம் நிலத்தை ஈடாகக் காண்பிப்பதைப் பொறுத்து மட்டுமல்ல, அவர் சொந்த முறையில், கடன் தொகைப் பெறுவதைப் பொறுத்தும், கடன் சுமை மாறுபடுகிறது.

மக்களின் ஒழுக்கம் நீங்கலாக, இந்தியாவில் வேளாண்மை இலாபகரமாகவே இருக்குமென முன்கூட்டியே அறுதியிட்டுக் கூற இயலாது (இதில் வாணிகப்பயிர்கள் விதிவிலக்கு). சைமன் குழுவின் கீழ்க்கண்ட கருத்துக்கள் இன்றும் நிலவுகின்றன[26]:

"இந்திய மக்கட் தொகையில் பெரும்பாலோரின் வாழ்க்கைத் தரம் மிகவும் தாழ்ந்தே உள்ளதை, மேற்கத்திய நாட்டிலிருந்து, இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்யும் அயல்நாட்டினர் அறிகின்றனர். இந்திய மக்களின் பெரும்பாலோரது தேவை மிகக்குறைவு ; உணவுப்பழக்கம் மிகவும் எளிமையானது ; தட்ப வெட்ப நிலை வழக்கமாய் இயல்பாகவே உள்ளது ; ஆழமாக வேரூன்றிப் போன மரபு, சராசரி மனிதனை கிடைத்ததைக் கொண்டு, மனநிறைவு பெற்று, எளிமையான வாழ்வை நடத்திட அடிகோலியுள்ளது.

ஆனால், ஏழ்மையின் ஆழத்தையும், அது ஊடுருவிப் பரவி வருவதையும் அரசு கண்டுகொள்ளாமல் இருக்க முடியவில்லை ; ஆனால், இதனை வேளாண் மக்கள் உணர்ந்ததாகவும் தெரியவில்லை".

வேளாண் வர்க்கத்தினர், கடன் சுமையினால் மிகவும் அவதியுற்றதால் அவர்களுக்கு உடனடியாக நிவாரணம் இன்றியமையாததாகியது. வட்டி அல்லது அசல் அல்லது இரண்டும் சேர்த்து, கடன் தொகைக்கு இரு மடங்கிற்கு மிகாமல் திருப்பிச் செலுத்தினால் கடன் தீர்ந்து விட்டதாகக் கருதப்படுமென்ற விதி நடைமுறையிலிருந்து வந்தது. 1938ஆம் ஆண்டின் சென்னை விவசாயிகள் நிவாரணச் சட்டதினைப் போன்றே (1939ஆம் ஆண்டின் சட்டம் 4), வரையறை செய்யப்பட்ட விதியொன்றும் நடை முறையிலிருந்து வந்தது. ஆனால் அவ்விதியும் போதுமானதாக இல்லை. மிகவும் மோசமான சூழ்நிலையை சந்திக்கவும், விவசாயிகளுக்குப் போதிய நிவாரணமளிக்கவும், பின்னர் ஒரு சட்டம் பிறப்பிக்கப்பட்டது. அந்நிலையில், விவசாயிகளுக்கு மட்டுமல்லாது அவர்களைப் போன்று மிகவும் பரிதாபகரமான நிலையிலிருந்த நிலமற்ற ஏழை மக்களுக்கும் நிவாரணம் அளிக்க வேண்டியிருந்தது. சிறு ஊதியம் பெறும் வகுப்பினரும் அன்றாட வாழ்க்கையை நடத்த இயலாமல் கடு வட்டிக்குக் கடன் பெற்று பிழப்பை நடத்தக்கூடிய நிலையிலிருந்தார்கள்.

கடன் தொடர்புள்ள பத்திரங்களில் ஒப்புக்கொண்ட வட்டி வீதத்தைவிட மிகவும் குறைந்த அளவில் வட்டி குறிக்கப்பட்டது. ஆனால், வட்டித்தொழில் வணிகர்கள் உண்மையில் அதிக வட்டியினைப் பெற்று

வந்தார்கள். பத்திரத்தில் குறிக்கப்பட்ட வட்டி வீதத்திற்கு, அதிகமான தொகை முன்னதாகவே கடன் தொகையினின்றும் பிடித்தம் செய்து கொள்ளப்பட்டது. கடன் வழங்கியர்கள் எப்பொழுதாவது வட்டித் தொகையினைத் தள்ளுபடி செய்ய ஒப்புக்கொள்வதுண்டு. சட்டமன்றம் அவ்வப்போது தலையிட்டு கடன்களைக் காலந்தாழ்த்திக் கொடுப்பதற்கான சட்ட இசைவினை அளித்து உரிய முறையில் சட்டங்களையும் இயற்றியது. அச்சட்டங்கள், சட்ட நீதிமன்றங்களில் கடன் பெற்றோர் மீது நடவடிக்கை எடுப்பதற்குத் தடை விதித்தன. அதனால் கடன் பெற்றவர்களுக்கு சற்று நிவாரணம் கிடைத்தது. 1971ஆம் ஆண்டு சூன் மாதம் 30ஆம் தேதியன்று, குத்தகை பாக்கி வைத்திருந்த வேளாண் குத்தகை தாரர்களுக்கு, 1972ஆம் ஆண்டின் 21 எண் கொண்ட சட்டம் நிவாரணம் அளித்தது. அதாவது, குத்தகைதாரர்கள், ஜீலை 1, 1972 முதல் அப்போதைய நடப்பு ஆண்டு குத்தகையை மட்டும் செலுத்தினால் போதுமானது ; அவ்வாறு செலுத்தினால் நிலுவையிலுள்ள குத்தகை பாக்கி முழுமையும் தள்ளுபடி செய்வதற்குள்ளானது.

தொழிலாளர்கள், அன்றாடக் கூலிவேலை செய்வோர், அரசு அலுவலர்கள் ஆகிய குறைந்த ஊதியம் பெறும் நிலையிலுள்ளவர்களும், அவதியுற்றார்கள். எனவே, குறைந்த ஊதியம் பெறும் தொகுதியிலுள்ள வர்களும், விவசாயிகளைப் போலவே, நிவாரணம் அளிக்கப்பட வேண்டிய நிலையிலுள்ளார்களெனக் கருதப்பட்டது. பின்னர் 1972ஆம் ஆண்டின் கடன் நிவாரணச் சட்டம் (எண்.28/1972) இயற்றப்பட்டது. இச்சட்டத்தின் படி மார்ச் 1, 1972-க்கு முன்னர், கடன் பெற்ற இனங்களில் ஒரு கடன் பெற்றவர், கடன் பெற்ற தொகைக்கு இருமடங்காக, வட்டிக்காகவோ அல்லது அசலுக்காகவோ அல்லது இரண்டும் சேர்த்தோ செலுத்தி யிருந்தால், கடன் முழுமையாகத் தீர்த்து விட்டதாகக் கருதப்பட்டது. மார்ச், 1, 1972-க்கு முன்னர், பிறர் உடைமை நுகர்வுரிமை, ஒப்படை, செயலாற்றப்பெற்றிருந்தால், ஒப்படை சொத்துக்களின் மீது 30 ஆண்டுகள் உடைமை முடிந்த பின்னர் ஒப்படை விடுவிக்கப்படுவதாகக் கருதப்பட்டு, சொத்தின் உரிமையாளர், அதாவது ஒப்படைதாரர், சொத்தைத் திரும்ப உரிமைபெறத் தகுதியளிக்கப்பட்டது. நுகர்வுரிமை ஒப்படை பெற்றவர், அச்சொத்துக்களை ஒப்படை பெற்று, குறைந்த ஆண்டுகளே முடிந்திருந்தால், அந்நிலையில் சரிசமவீத அளவான தொகையினை ஒப்படையளித்தவர் செலுத்தி தனது சொத்தினைத் திரும்பப்பெறத் தகுதியுடையவரானார். ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு சொத்தை ஒப்படை செய்து, அக்காலவரை முடியாதிருந்தாலும், ஒப்படை செய்தவர் சொத்தைத் திரும்பப்பெற, சட்டத்தின் வழிவகை செய்யப்பட்டிருந்தது. சொத்தை ஒப்படை செய்தவருக்கு ஆதரவாக பல விதிகள், வகுக்கப்பட்டிருந்தன. மார்ச் 1972-ஆம் தேதிக்குப் பின்னர், பெற்ற கடனுக்கு ஆண்டுக்கு ஒன்பது விழுக்காடு வட்டிதான் உயர்ந்த அளவு வட்டியாக நிர்ணயிக்கப்பட்டது. நகராட்சி மற்றும் கண்டோன்மென்ட் எல்லையிலுள்ள நிலங்களை ஒப்படை செய்தவர்கள் முன்னர் இந்த நிவாரணங்களைப்பெறத்

தகுதியற்றவர்களாயிருந்தனர். ஆனால் 1973-ஆம் ஆண்டு 8-வது சட்டம் (1938ஆம் ஆண்டு, 4-வது சட்டத்தின் திருத்தம்) அவர்களையும் நிவாரணம் பெறத் தகுதியுடைவர்களாக்கியது. மேலும், 1.3.1972-க்கு முன்னர் அவர்கள் அந்நிலங்களின் ஒப்படை நிமித்தம் செலுத்த வேண்டிய வட்டியும் தள்ளுபடி செய்யப்பட்டன. மேலும் இதுகாறும் வட்டிக்காகவோ, அசலுக்காகவோ செலுத்தப்பட்ட தொகைகளும் அசலுக்கே வரவு வைக்கப்பட்டு, அசல் தொகை குறைக்கப்படவேண்டுமென்ற சட்ட திருத்தமும் அளிக்கப்பட்டது.

திருத்தத்திற்கு முன்னர், நகராட்சி அல்லது கன்டோன்மென்ட் பகுதி அல்லது ஊராட்சி எல்லையில் வீட்டை ஒப்படை செய்திருந்தவர்கள் மட்டும், மேற்குறிப்பிட்ட சலுகையைப்பெறத் தகுதியற்றவராயிருந்தனர். மேலும் படிப்படியான அளவு வீதத்தில் சிறிதாக்கிப்பெறவும் தகுதியற்றிருந்தனர். ஆனால், மேற்குறிப்பிட்ட சட்டத்திருத்தம் வழங்கப்பட்ட பின்னர், இத்தகுதியினை அவர்கள் பெற்றனர். மற்றொரு தகுதியற்ற நிலையும் அகற்றப்பட்டது. அதாவது, கடன் கொடுத்தவர்கள் ஆறாயிரம் ரூபாய்க்கும் குறைவாக சொத்துள்ளவர்களாக இருந்தாலும், மேற்குறிப்பிட்ட சட்டத்திருத்தம் பிறப்பிக்கப்பட்ட பின்னர், கடன் பெற்றவர்கள், இந்நிவாரணமும், படிப்படியான அளவு வீதத்தில் சிறிதாக்கிப்பெறவும் தகுதி பெறுகின்றனர்.

1975ஆம் ஆண்டின் 48-வது சட்டம், கடன் பெற்றோருக்கு, கடன் தொகையை காலந்தாழ்த்தி செலுத்த வழிவகை செய்தது. இச்சட்டம், கடன் பெற்றோர் பெற்ற கடன்களை ஓராண்டு காலந்தாழ்த்திக் கொடுப்பதற்கான இசைவினை பெற்றுத் தந்தது. அதாவது, இதன்படி அவர்களுக்கு ஜனவரி 16, 1976 வரை கால அவகாசம் அளிக்கப்பட்டது. சட்டத்திலுள்ள விதிமுறைகளின்படி, சில கடன்களைப் பொறுத்த வரையில், இச்சட்ட இசைவு நடைமுறையில் இருக்கும் காலத்தில், அசல்தொகைக்கு வட்டி கிடையாது. நான்கு சட்ட முன் வடிவுகள் இயற்றப்பட்டு, பின்னர் அவை சட்டமாக்கப்பட்டன.

1. தமிழ்நாடு கடன்பெற்ற விவசாயிகள் (தற்காலிக நிவாரண) சட்டம், 1976 ஆம் ஆண்டு 15-வது சட்டம்.
2. தமிழ்நாடு கடன் பெற்ற நபர்கள் (தற்காலிக நிவாரண) சட்டம், 1976 ஆம் ஆண்டு 16-வது சட்டம்.
3. தமிழ்நாடு கடன் பெற்ற விவசாயிகள் மற்றும் கடன் பெற்ற நபர்கள் (தனி சட்டப்பிரிவு) சட்டம், 1976 ஆம் ஆண்டு 17-வது சட்டம். மேலும்,
4. தமிழ்நாடு குத்தகைதாரர்கள் பாதுகாப்பு திருத்தச்சட்டம் (1976ஆம் ஆண்டு 18-வது சட்டம்).

ஜனவரி 15, 1976 முதல் ஓராண்டிற்கு, நடுவர் முடிவினை நிறைவேற்ற வழக்குகளோ, விண்ணப்பங்களோ அளிப்பதற்கு

மேற்குறிப்பிட்ட தொடர் எண்.1 மற்றும் 2-ல் குறிப்பிட்ட சட்டங்கள் தடை செய்தன.

விவசாயிகள் மற்றும் கடன் சுமையுள்ள நபர்கள் ஆகியோருக்கு (1976ஆம் ஆண்டின் 16-வது சட்டத்தில் கூறியுள்ளபடி) ஜூலை 22, 1975 முதல் ஜனவரி 15, 1976 முடிய உள்ள காலத்திற்கு வட்டி கிடையாதெனவும், ஆனால், ஜூலை 22, 1975-க்குப் பிறகு பெற்ற கடனுக்கு வட்டியுண்டு எனவும், தொடர் எண். 3-ல் குறிப்பிட்ட சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டது. வட்டியைப் பொறுத்தவரை, 1943 ஆம் ஆண்டு, தமிழ்நாடு அடமான வட்டிக் கடைக்காரர் சட்டத்திற்கும் திருத்தம் வழங்கியது. மேலும், ஜூலை 22, 1975 முதல் ஜனவரி 15, 1977 முடிய உள்ள காலத்தில் அடகுப் பொருட்களை ஏலம் விடுவதற்கும் இச்சட்டம் தடை விதித்தது.

தன்னுடைய நிலத்தைத் திரும்பப்பெற விழையும் ஒரு நபர், தொடர்புள்ள கோட்ட ஆட்சித் தலைவருக்கு விண்ணப்பம் கொடுத்துக் கொள்ளலாமெனவும், தனனுடைய நிலத்தைத் திரும்பப் பெறுமுன், அந்த நபர், அந்நிலத்திலுள்ள பயிர்களுக்கும், பயிர் செய்ய மேற்கொண்ட விவசாயச் செலவு ஆகியவற்றிற்குமான தொகையினை உரியவருக்கு அளித்து விட்டு, நிலத்தைத் திரும்பப்பெற கோட்ட ஆட்சித் தலைவர் அனுமதி அளிக்கலாமெனவும் தொடர் எண். 4-இல் குறிப்பிட்ட சட்டத்தில் விதிமுறை ஏற்படுத்தப்பட்டது.

குடும்பத்தினரின் ஆண்டு வருவாய் ரூபாய் 2400/-க்கு மிகாமலுள்ள, நிலமற்ற வேளாண் தொழிலாளர்கள், கிராமப்புற கைவினைஞர்கள், மற்றும் சிறு விவசாயிகள் ஆகியோர், ஜூலை 29, 1976-க்கு முன்னர் கடன் பெற்றிருந்தால், அவர்களுக்கு கடன் சுமையினின்றும் நிரந்தர நிவாரணம் அளித்திட, அரசு, 1976 ஆம் ஆண்டு, தமிழ்நாடு கடன் நிவாரணச்சட்டத்தை (1976 ஆம் ஆண்டு 31-வது சட்டம்) ஜூலை 29, 1976 முதல் நடைமுறைப்படுத்தியது. டிசம்பர் 13, 1976-க்குப் பின்னர் கடன் பெற்று, கடன் சுமையினால் அவதியுற்ற நலிந்த பிரிவினருக்கு நிவாரணம் அளித்திட அரசு 1979 ஆம் ஆண்டின் தமிழ்நாடு கடன் நிவாரணச் சட்டத்தை (1979 ஆம் ஆண்டு 49-வது சட்டம்) இயற்றி, டிசம்பர் 13, 1979 முதல் இச்சட்டத்தினை நடைமுறைப்படுத்தியது. அச்சட்டத்தின் கருப்பொருள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(1) அசல் தொகை ரூபாய் 500/-க்கு மிகாமலிருந்தால், அசல்தொகை முழுமையும், வட்டியுடன் சேர்த்து தீர்க்கப்பட்டு விட்டதாகக் கருதப்படும்;

(2) அசல் தொகை ரூபாய் 500/-க்கு மேலும், ரூபாய் 5000/-க்கு மிகாமலுமிருந்தால், அசல் தொகையில் சரிபாதியும், வட்டித் தொகையில் சரிபாதியும், தீர்க்கப்பட்டு விட்டதாகக் கருதப்படும்; மேலும்

(3) அசல் தொகை ரூபாய் 5000/-க்கு மேலும், ரூபாய் 10,000/-க்கு மிகாமலுமிருந்தால், வட்டித்தொகை முழுமையாகத் தீர்க்கப்பட்டு விட்டதாகக் கருதப்படும்.

ஜனவரி 1, 1980-க்கு முன்னர் கடன் பெற்றவர்களின் குடும்ப ஆண்டு வருவாய் ரூபாய் 4,800/-க்கு மிகாமலிருந்தால், சில வரையறைகளுக்குட் பட்டு, அவர்களுக்கும் கடன் சுமையினின்றும் நிவாரணம் அளித்து, ஏப்ரல் 19, 1980 முதல் 1980 ஆம் ஆண்டின் தமிழ்நாடு கடன் நிவாரணச் சட்டம் (1980 ஆம் ஆண்டின் 13-வது சட்டம்) நடைமுறைப்படுத்தப்பட்டது.

1980 ஆம் ஆண்டின் தமிழ்நாடு கடன் நிவாரணச் சட்டத்தின் கீழ் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் காலவரை ஜூலை, 7, 1982-ந் தேதியுடன் முடிவுற்றதால், ஜனவரி, 1, 1980 முதல் ஆகஸ்ட், 24, 1982 வரை பெறப்பட்ட கடன்கள் குறித்து நிவாரண நடவடிக்கை மேற்கொள்ள ஆகஸ்ட், 24, 1982 நாளைய சட்ட முன் வடிவு 9/1982 இயற்றப்பட்டு, பின்னர் 50/1982 சட்டம் இயற்றப்பட்டது. இந்த சட்ட முடிவிற்கு சட்ட வடிவமளிக்க, சட்ட வரைவு, சட்ட மன்றத்தினால் இயற்றப்பட்டு, இந்திய ஜனாதிபதியின் ஒப்புதலுக்கு பிப்ரவரி, 15, 1983 அன்று அனுப்பப்பட்டது. மார்ச், 15, 1983 அன்று ஜனாதிபதியின் ஒப்புதல் பெறப்பட்டது. மேற்குறிப்பிட்ட விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறவேண்டிய கடைசி தேதியினை, ஆகஸ்ட், 29, 1993, வரை நீட்டித்து, சட்ட வரைவில் விதிமுறை ஏற்படுத்தப்பட்டது. 1983 ஆம் ஆண்டு, 43 எண். கொண்ட தமிழ்நாடு கடன் நிவாரண (இரண்டாவது திருத்தம்) சட்டம் (வரைவு) சட்ட மன்றத்தால், நவம்பர், 18 1983ந் தேதி செயல்முறைப் படுத்தப்பட்டது. மேற்குறிப்பிட்ட விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறும் கடைசித் தேதியினை ஆகஸ்ட், 23 1984 முடிய நீட்டித்து, இச்சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டது.

இக்காலவரை, அவ்வப்போது நீட்டிக்கப்பட்டு, ஒரு நிலையில் ஆகஸ்ட், 23, 1988 முடிய நீட்டிக்கப்பட்டது. 1982 ஆம் ஆண்டின் தமிழ்நாடு கடன் நிவாரணச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 5/1982) செயலாக்கத்தினை அரசு ஆய்ந்து, சட்டத்தின், 5 மற்றும் 7 பிரிவுகளின் படி, விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கும் காலவரையினை ஆகஸ்ட், 23, 1988 ஆம் தேதிக்குப் பின்னரும் நீட்டித்தது.

தகுதி வாய்ந்த அலுவலர்

இச்சட்டத்தின்படியான அலுவல்களை மேற்கொள்ள வட்டாட்சியர், வட்டப்பொறுப்பு அல்லது துணைவட்டப்பொறுப்பிலுள்ள துணை வட்டாட்சியர், மற்றும் துணை வட்டாட்சியர் பதவிப் பொறுப்பிற்கு குறையாத வருவாய்த் துறையிலுள்ள மற்ற ஏதேனுமொரு அலுவலர், வட்டாட்சியரின் பணியினை ஆற்ற தகுதியுள்ளவர் ஆகிறார். வட்டாட்சியர், கடன் வழங்கியவர், கடன் பெற்றவர் ஆகியோரிடமிருந்து விண்ணப்பம்

கிடைக்கப்பெற்றவுடன், கடன் பெற்றவரால் அடகு வைக்கப்பட்டுள்ள அடகுப் பொருட்களை தனது ஆணையில் குறிப்பிட்டுள்ள தேதிக்குள் தன் முன் கொணர்ந்து ஒப்புவிக்குமாறு ஆணை பிறப்பிப்பார். அவ்வாறு ஒப்படைக்கத் தவறினால் வட்டாட்சியர், கடன் கொடுத்தவரின் அலுவலகத்திற்குள் நுழைந்து அப்பொருட்களைத் தேடிக் கைப்பற்றலாம். கடன் வழங்கியவர் அப்பொருட்களை அவரது ஆணையிற்கண்டவாறு குறிப்பிட்டத் தேதிக்குள் முன் கொணர்ந்து ஒப்படைத்துவிட்டால், வட்டாட்சியர் அச்சொத்துக்களைக் கடன் பெற்றவரிடம் முறையாக ஒப்புவிப்பார்.

தகுதிவாய்ந்த அலுவலரால் உரிய முடிவெடுக்கப்படும் வரை, கடன் கொடுத்தவர் அவரும் கடன் வாங்கியவரால் அடகு வைக்கப்பட்டப் பொருட்களை விற்கவோ, மறு அடகுவைக்கவோ அல்லது வேறு விதமாக முடிவு செய்யவோ கூடாது. 1973 ஆம் ஆண்டின் குற்றயியல் சாராத நடைமுறை சட்டத்தொகுப்பேட்டின் 100 மற்றும் 165 பிரிவுகளின்படியான விதிமுறைகளை பொருட்களைத் தேடுதல் மற்றும் கைப்பற்றுதல் ஆகியவற்றிற்கு பயன்படுத்த வேண்டும்.

வட்டாட்சியரின் ஆணைக்கெதிராக ஒருவர் மேல் முறையீடு செய்துகொள்ள விரும்பினால் அவர் சட்டத்திற்கண்ட விதிமுறைகளின்படி, குறிப்பிட்ட காலவரைக்குள்ளாக தொடர்புள்ள கோட்டாட்சித் தலைவருக்கு மேல் முறையிடு செய்து கொள்வார். அதன்மீது கோட்டாட்சித் தலைவரின் தீர்ப்பே இறுதியானது. அத்தீர்ப்பை ஆய்ந்து வேறு முடிவெடுக்க எந்த நீதிமன்றத்திற்கும் அதிகாரமில்லை.

இச்சட்டத்தின் சிறப்பியல்பு என்னவெனில், இவ்வழக்குகளில், கடன் வழங்கியவர், அல்லது கடன் பெற்றவர் அல்லது வேறு எவரும் தன் சார்பில் வழக்கறிஞரை நியமித்து வாதாடத் தகுதி பெற்றவராவர்.

தண்டனை பற்றிய சட்டப்பிரிவு

ஐந்தாவது பிரிவின்படியான விவர அறிவிப்புப் பட்டியினை எவரேனும் அளிக்கத்தவறினாலோ அல்லது 5-வது அல்லது 6-வது பிரிவின்படியான ஆணையினை ஏற்று செயல்படத்தவறினாலோ, அல்லது 5 அல்லது 6வது பிரிவின் சட்ட ஆணைகளை வேறு வகையாக நிறைவேற்றத் தவறினாலோ, அவர் மூன்று மாதங்களுக்குக் குறையாமலோ, ஓராண்டு வரையிலோ, சிறைத்தண்டனை பெறவும், ரூபாய் 1000/-த்துக்குறையாமலோ, ரூபாய் 5000/- வரையிலோ அபராதம் செலுத்தவும் கடமைப்பட்டவராவார்.

1980ஆம் ஆண்டில் தமிழ்நாடு கடன் நிவாரணச்சட்டத்தின் பிரிவு 4, மற்றவை நீங்கலாக, கடன் பெற்றவர்களுக்கு கடன் சுமையினின்றும் நிவாரணம் அளிக்கவும், குற்றயியல் சாராத நீதி மன்றங்கள், கடன்

தொகையினைத் திரும்ப வசூலிப்பது குறித்தோ, ஒரு கடன் பெற்றவர், சிறையில் தண்டனையாகத் தங்க வைக்கப்பட்டிருந்தாலும், கூட, அவர் பெற்ற கடன்தொகை மற்றும் வட்டியை விடுவித்தோ, ஆணை பிறப்பிக்கக் கூடாதென்பது குறித்து விரிவாகக் கூறுகிறது.

1980ஆம் ஆண்டின் தமிழ்நாடு கடன் நிவாரணச் சட்டத்தின் பிரிவு 5, மற்றவை நீங்கலாக, கடன் பெற்றவர்கள் தங்களால் அடகு வைக்கப் பட்டுள்ள அசையும் சொத்துக்களைத் திரும்பப் பெற விண்ணப்பங்கள் அளிப்பது குறித்தும், அச்சொத்துக்களை விடுவிக்க அதிகாரம் பெற்ற வட்டாட்சியரின் அலுவல்கள் மற்றும் அதிகார வரம்பு ஆகியவை குறித்தும் விவரிக்கிறது.

1981ஆம் ஆண்டின் 10-வது சட்டத்தில் திருத்தம் வழங்கப்பட்ட 1980ஆம் ஆண்டின் கடன் நிவாரணச் சட்டப்பிரிவுகள் 4 மற்றும் 5 ஆகியவற்றின் செயலாக்கத்தை நிறுத்தி வைத்து, இந்திய உச்ச நீதி மன்றம் ஜீன், 6, 1985 நாளைய தனது ரிட் மனு எஸ். 5433-33/1985-ல், தடையாணை பிறப்பித்துள்ளது. இவ்வாணையில் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் என்னவெனில் (மறு ஆணை பிறப்பிக்கப்படும் வரை) மனுதார் எண்.3இன் உறுப்பினர்களான அடமான வட்டிக் கடைக்காரர்கள், [ஜே.மோகன்லால் கார்டியா மற்றும் ஏனையோர் (மாறாக) தமிழ்நாடு மாநிலம்] இந்திய ஸ்டேட் வங்கியிலோ அல்லது தமிழ்நாட்டிலுள்ள வேறு ஏதாவதிலொரு நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளிலோ அடமானப்பொருட்களை சேமித்து வைக்கவேண்டும் என்பதேயாகும். இத்தடையாணை இன்னமும் செயலாக்கத்திலுள்ளது.

வட்ட அளவில் ஆலோசனைக்குழு நிறுவுதல்

தமிழ்நாடு கடன் நிவாரணச் சட்டத்தினை சரிவர, நடைமுறைப் படத்துவதை, எளிதாக்கிட, தமிழக அரசு, ஆகஸ்ட், 8, 1983 நாளைய 568 (உணவு மற்றும் கூட்டுறவுத் துறை) எண். கொண்ட அரசாணையில், வட்ட அளவில், ஆலோசனைக்குழுவினை நிறுவியது. இக்குழுவின், இயல்பு மற்றும் அலுவல்கள் ஆகியவை கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

1) ஆலோசனைக்குழு, வட்ட அளவில் நிறுவப்படும், அது தமிழ்நாடு கடன் நிவாரணச் சட்டங்கள் நடைமுறைப்படுத்தும் ஆலோசனைக் குழு என அழைக்கப்படும்.

2) தலைவரையும் சேர்த்து, குழு ஐந்து உறுப்பினர்களுக்கு மேலல்லா திருக்கும்.

3) குழுவின் ஒரு உறுப்பினர், வழக்கறிஞராக இருப்பார். ஏனையோர் சமூகப்பணியாற்றுவதில் ஆர்வங்கொண்ட வாழ்க்கையில் பல்வேறு தொழில்கள் மேற்கொள்பவர்களாக இருப்பார்கள்.

4) தொடர்புள்ள கோட்டாட்சியர்கள், குழுவின் தலைவரையும், மற்ற உறுப்பினர்களையும் நியமிப்பார்கள்.

5) குழுவின் அலுவல்கள் வட்ட அளவிலுள்ள கடன் பெற்றோருக்குத் தொடர்புள்ள ஆவணங்களை வைத்து, விண்ணப்பங்களைத் தயார் செய்தல் மற்றும் வழக்கினை தனிவட்டாட்சியர் மற்றும் கோட்டாட்சியர் முன்பு பதிந்திடல் ஆகியவற்றிற்கு உதவி செய்தல் ஆகியவையாகும். குழு, தகுதி வாய்ந்த ஒரு நபரை, கடன் பெற்றவரின் அதிகாரம் பெற்ற முகவராக அவரது வழக்கினை நடத்திட, அனுப்பி, போதிய உதவிகளை மேற்கொள்ளும்.

6) குழுவிற்கு சட்டப்படியாக நிறைவேற்ற வேண்டிய அலுவல்களேது மில்லை, சட்டப்படி நியமித்துள்ள அலுவலர்களின் அலுவல்களில் தலையிடவும் அதற்கு உரிமையில்லை.

7) குழு உறுப்பினர்கள், வட்டாட்சியர் அலுவலகத்தில், அவர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில், அவ்வப்போது கூடிக்கலந்துரையாடுவர்.

8) குழு உறுப்பினர்கள், வட்ட அளவிலான கூட்டங்களில் கலந்து கொண்டால், அதற்குப் பயணப்படியோ, அகவிலைப்படியோ அவர்களுக்கு வழங்கப்படமாட்டாது; அவர்களது பதவி, உழைப்பூதியமின்றி பணி செய்யும், கௌரவமானதாகும்[27].

கூட்டுறவு இயக்கம்[28]

கூட்டுறவு இயக்கத்தில் வேளாண் கடன் வழங்கும் சங்கங்களின் முக்கியத்துவத்திற்கான காரணங்கள்

கர்ஸன் பிரபு, 1904ஆம் ஆண்டு இந்தியாவின் பதில் ஆளுநராகப் (வைஸ்ராய்) பணியாற்றியபோது, கூட்டுறவு இயக்கம் துவங்கியது. இந்தியாவில், வேளாண் குடிமக்கள் அவர்கள் பெறும் கடன் தொகைக்கு அதிக வட்டி பெற்றுவந்த, பழிபாவங்களுக்கஞ்சாத, வட்டித்தொழில் வணிகர்களின் போக்கினால், மிகவும் சீர்குலைந்து, தங்களது நிலங்களை இழந்து, நிலமற்ற வேளாண் தொழிலாளர்கள் என்ற மூன்றாம் நிலைக்குத் தள்ளப்பட்ட, பரிதாபகரமான சூழ்நிலையினின்றும், அவர்களைக் காத்து, வட்டித்தொழில் வணிகர்களின் பிடியினின்றும் அவர்களை விடுவிக்கும் நோக்கத்தில்தான் கூட்டுறவு இயக்கம் துவங்கப்பட்டது. எனவே, வேளாண் சமுதாயத்தினரை, ஒரு நல்ல அமைப்பின் கீழ் கொணரவேண்டிய தேவை ஏற்பட்டது. அவ்வாறு கொணர்ந்தால், அவர்களை அதிக வட்டிபெறும் வட்டித் தொழில் வணிகர்களின் பிடியினின்றும் மீட்பது மட்டுமல்லாது, அவர்களுக்கு மிகக் குறைந்த வீதத்தில் கடன்தொகை வழங்கவும், பருவகால வேளாண் பணிகளை மேற்கொள்ள முதலீடு செய்ய, விளை

விதை, உரம் மற்றும் வேளாண் கருவிகள் ஆகியவற்றை, வட்டித்தொழில் வணிகர்களை நம்பி இராது, "சுய தேவை-மக்களாட்சி நிருவாகம்" என்ற சீரிய பண்பினைப்பெற்று, சேமிப்பு முறையையும் வளர்த்ததால், வேளாண் குடிமக்களுக்குப் பெரிய வரப்பிரசாதமாய் அமைந்தது. இந்திய நாடு, பெரும்பாலும் கிராமப்புறத்தைப் பெற்றதாகையால், அதனுடைய பொருளாதாரம் இயற்கையிலேயே வேளாண்மையை ஆதாரமாகக் கொண்டே அமைந்திருந்தது. எனவே, கூட்டுறவு வேளாண் கடன் வழங்கும் சங்கங்கள், மிகவும் மேம்பட்ட வழியில் உதயமாயின.

மேற்கூறியது போன்று, இந்தியா எனில் "கிராமங்கள்" எனவே பொருள்படும், வேளாண்மையே, மக்களின் ஆதாரத் தொழிலாகும். எனவே, விவசாயிகளின் கடன் தேவை, மற்றும் வோளாண் தொழிலில் அவர்கள் தீவிரமாக ஈடுபடத் தேவையான பொருட்கள் ஆகியவற்றை அவர்கள் தடையின்றிப்பெற, ஏறத்தாழ அனைத்து கிராமங்களிலுமே வேளாண் கூட்டுறவு சங்கங்கள் நிறுவப்பட்டன. இச்சங்கங்கள், முக்கியமான கிராமங்களிலும், சிறிய குக்கிராமங்களிலும் அவைகளின் மக்கட்தொகைக்கேற்ப, அவற்றைப் பல்வேறு தொகுதிகளாகப்பிரித்தும் ஆங்காங்கே நிறுவப்பட்டன. அனைத்து வேளாண் குடிமக்களையும், கூட்டுறவு இயக்கக்குடையின் கீழ் கொணரவேண்டுமென்ற நோக்கத்தில், இந்த செயல்முறை கடைப்பிடிக்கப்பட்டது.

இவ்விவசாய கடன் வழங்கு சங்கங்கள், வேளாண் குடிமக்களின் அதிக அளவு தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன. குறுகிய கால வேளாண் பயிர் சாகுபடிச்செலவு, வேளாண் பொருட்களான, உரங்கள், பூச்சிகொல்லி மருந்துகள், விதைகள் மற்றும் வேளாண் கருவிகள் ஆகியனவாங்க, குறுகிய காலக் கடன் தொகையினை இச்சங்கங்கள் விவசாயிகளுக்கு வழங்குகின்றன.

தற்போது, அனைத்து விவசாயச் சங்கங்களும், எந்த நோக்கத்திற்காக நிறுவப்பட்டனவோ, அந்நோக்கங்களை நிறைவேற்றி வைக்குமளவுக்கு, நன்முறையில் இயங்கிவருகின்றனவென்று கூற முடியாது. இந்தியாவில், விவசாய செயல்முறைகள் பருவக் காற்றைப் பொறுத்தே மேற் கொள்ளப்படுகின்றன. ஆனால், பருவக்காற்றுகள் இரு பருவத்திலும், பொதுவாக நிலையற்றதாகவே உள்ளன. அவற்றைப் போலவே விவசாயச் சங்கங்களின் செயல்களும் இருந்து வருகின்றன. எனவே, நாட்டிலுள்ள கடன் வழங்கும் சங்கங்களின் எண்ணிக்கை நமக்கு முக்கியமல்ல, அவை வேளாண் சமுதாயத்திற்கு ஆற்றிவரும் பல்வேறு பணிகளின் அளவே கருத்திற் கொள்ளற்பாலது. எனவே, அனைத்து வேளாண் சங்கங்களும், வளம் பெற்றவையாகவும், நிதிவசதி பெற்றவையாகவும், தன் துணைச் சார்புடையவையாகவும், அனைத்து விவசாயிகளுக்கும் பயனுறுதியுள்ள பல பணிகளை ஆற்றக்கூடியவையாகவுமிருக்க வேண்டுமெனக்

கருதப்பட்டது. இந்நோக்கத்தினைக் கருத்திற்கொண்டு, வளமிக்க கடன் வழங்கும் சங்கங்களை உருவாக்க வேண்டுமெனவும், நிதி வசதி பெற்ற சங்கங்களை மட்டும் தொடர்ந்து இயங்க அனுமதிக்க வேண்டுமெனவும், வலுக்குறைந்த சங்கங்களை அண்டை சங்கங்களுடன் அவை வளம் பெற்றவையா யிருப்பின், இணைக்கவேண்டுமெனவும், அல்லது அவற்றை மூடிவிட வேண்டுமெனவும் இந்திய ரிசர்வ் வங்கி, ஒரு கொள்கையினை வகுத்தது. சில சிறு சங்கங்களைத் தொகுத்து, ஒரு வளமிக்க சங்கமாக அமைப்பதும், ஒரு முறையாகும். இந்த இணைப்பு முறை, தமிழ்நாட்டில், 1980 ஆம் ஆண்டு முதல் நடை முறையிலுள்ளது. அதன் விளைவாக, தமிழ் நாட்டிலிருந்த 4,785 சங்கங்கள், 1982-83 கூட்டுறவு ஆண்டு இறுதியில், 4,691 சங்கங்களாகக்குறைந்தன. மார்ச் 31, 1987 நிலைப்படி, தமிழ்நாட்டின் மொத்த வேளாண் சங்கங்கள் 4,655 ஆயின. கன்னியாகுமரி மாவட்டத்தில், 117 சங்கங்கள் இயங்கிவந்தன. எனவே, இச்சங்கங்கள் கூட்டுறவு இயக்கத்தில் முக்கியத்துவம் வாய்ந்தவையாயிருந்தன; ஆனால், அவற்றின் எண்ணிக்கையினாலோ, அவை நிதி படைத்ததனாலோ அல்ல; மக்களின் போக்கில் பொருத்தமாக இயங்கிவந்ததாலேயே, அவை உயர்நிலை அடைந்தன.

ஜீன் 30, 1987 நாளைய நிலைப்படி, கன்னியாகுமரி மாவட்டத்தில், இயங்கி வந்த சங்கங்களின் - சாதனை குறித்த புள்ளி விவரங்கள்:

1.	வேளாண் சங்கங்களின் எண்ணிக்கை	117
2.	உறுப்பினர்களின் எண்ணிக்கை	2.12 இலட்சம்
3.	செலுத்தப்பட்ட பங்குத்தொகை	ரூ. 193.95 இலட்சம்
4.	ஒதுக்கீடு நிதி மற்றும் இதர நிதிகள்	ரூ. 62.50 இலட்சம்
5.	சேமிப்புத் தொகை	ரூ. 799.48 இலட்சம்
6.	கடன் தொகை	ரூ. 1559.29 இலட்சம்
7.	செயற்பாணி முதலீடு	ரூ. 3102.07 இலட்சம்
8.	முன் பணமாக வழங்கப்பட்ட கடன் தொகை (குறுகிய கால மற்றும் மத்திய தரக் காலம்)	ரூ. 643.57 இலட்சம்
9.	நிலுவையிலுள்ள கடன் தொகை அவற்றில் அதிகப்பற்று	ரூ. 189.30 இலட்சம் ரூ. 656.73 இலட்சம்
10.	இலாபத்தில் இயங்கிவரும் சங்கங்களின் எண்ணிக்கை (1986-87) தொகை	ரூ.74 ரூ. 45.55 இலட்சம்
11.	நட்டத்தில் இயங்கிவரும் சங்கங்களின் எண்ணிக்கை (1986-87) தொகை	ரூ. 43 ரூ. 16.08 இலட்சம்

வட்டித்தொழில் வணிகர்களின் பிடியிலிருந்து, விவசாயிகளை விடுவிக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்து, ஒரே மதிப்பீடு

பெயருக்கேற்ப, கூட்டுறவு சங்கங்கள் மக்களின் இயக்கங்களே. பல்வேறு நலத்திட்டங்களை செயற்படுத்தி, கூட்டுறவு சங்கங்கள் வெற்றிகண்டுள்ளன.

கூட்டுறவு இயக்கத்தினை அறிமுகப்படுத்தியதில், தமிழ்நாடு, ஒரு முன்னோடியான மாநிலமாகும். 1904 ஆம் ஆண்டு, தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட, கூட்டுறவு இயக்கம்தான், தனியார் வட்டித் தொழில் வணிகர்களின் பிடியினின்றும் விவசாயிகளை விடுவிக்க, செயல் முறைப்படுத்தப்பட்ட முதல் முன்னோடி நடவடிக்கையாகும். செங்கற் பட்டில், திருவாரூர் கூட்டுறவு வேளாண் கடன் வழங்கும் சங்கத்தினை, அப்பகுதியில் உள்ள வேளாண் குடிமக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யத் துவக்கி, முதன் முதலில் தமிழ்நாட்டில் இவ்வியக்கம் தனது பணியினைத் தொடங்கியது. இதுதான் மாநிலத்திலேயே முதன் முதலில் துவங்கப்பட்ட வேளாண் கடன் வழங்கும் சங்கமாகும். இன்றுகூட தொடர்ந்து அது தனது உறுப்பினர்களின் தேவைகளைத் தங்குதடையின்றி, பூர்த்தி செய்து வருகிறது. அவ்வாறு முதன் முதலில் துவங்கிய கூட்டுறவு இயக்கம், இன்று, நடைமுறையில், வேளாண் கடன் வழங்கும் பிரிவுகளில் புரட்சிகரமான நல்லபல மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்நாட்டில் வேளாண் கடன் வழங்கும் அமைப்பு, ஒரு மூன்றடுக்கு முறையினைக் கொண்டதாகும். தொடக்க வேளாண் கடன் வழங்கும் சங்கங்கள் அல்லது தற்போது அவை அழைக்கப்படுவது போன்று, வேளாண் பணி கூட்டுறவு சங்கங்கள் இவ்வமைப்பின் முதல் அடுக்காகும். ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்டத்திற்கொன்றாக இயங்கிவரும் மத்திய கூட்டுறவு வங்கிகள் இரண்டாவது அடுக்கில் அங்கம் வகிக்கின்றன. தஞ்சாவூர் மாவட்டத்தில் மட்டும் இவ்வங்கிகள் தஞ்சாவூரில் ஒன்றும், கும்பகோணத்தில் ஒன்றுமாக இயங்கி வருகின்றன. இந்த மூன்றடுக்கு அமைப்பில் மூன்றாவது மற்றும் மேல் அடுக்கில், தமிழ்நாடு மாநில கூட்டுறவு உயர் வங்கி இடம் பெற்றுள்ளது. இந்த மூன்று அடுக்கு அமைப்பில், இதுதான் தலைமை வங்கியாகும். வேளாண் பெருமக்களுக்கு நிவாரணம் அளிப்பது தொடர்பாக இம்மூன்று வகையான வங்கிகளும் ஆற்றும் முக்கிய பங்கு குறித்து கீழே விவரிக்கப்பட்டுள்ளது.

1. வேளாண் பணி கூட்டுறவு சங்கங்கள்

இச்சங்கங்களின் பெயர், 1988ஆம் ஆண்டில், "தொடக்கக் கூட்டுறவு வங்கிகள்" என மாற்றியமைக்கப்பட்டது. இச்சங்கங்கள் பெரிய கிராமங் களிலோ அல்லது ஒரு சில குக்கிராமங்களை இணைத்து அவ்விடங் களிலோ அமைக்கப்பட்டன. விவசாயிகளின் பருவகால வேளாண் பணிகளை மேற்கொள்ளத் தேவையான செலவிற்கும், அவர்களது

நீண்டகாலத் தேவைகளான உழவு மாடுகள் போன்றவை வாங்குவதற்கும் குறுகிய கால மற்றும் மத்திய காலக் கடன் வழங்குவதுதான் இச்சங்கங்களின் முக்கிய நோக்கமாகும். குறுகிய காலக் கடனின் காலவரை பொதுவாக, ஓராண்டு காலமாகும்: அதாவது,விவசாயப்பணி துவங்கும்போது கடன் வழங்கப்பட்டு, அறுவடை முடிந்த பின்னர், கடன் தொகை நிர்ணயிக் கப்பட்டு, முழுமையாக வேளாண் பணிகளை மேற்கொள்வதற்கே, இக்கடன் வழங்கப்படுகிறது. இக்கடனின் தனிச்சிறப்பு என்னவெனில், இது ரொக்கத் தொகையாக வழங்கப்படுவதோடு மட்டுமல்லாது பொருளாகவும் வழங்கப்படுகிறது. விவசாயத்திற்குத் தேவையான உரங்கள், விதைகள் மற்றும் பூச்சிகொல்லி மருந்துகள் ஆகியவை அப்பொருள்களாகும். இவ்வாறாக, குறுகிய காலக்கடன் என்பது ஒரு குறிப்பிட்ட காரணத்திற்காக வழங்கப்படுவதாகும். அக்கடன் விவசாயியின், ஒரு குறிப்பிட்ட கால தேவையினைப் பூர்த்தி செய்கிறது. தேவைப்படும் முக்கிய பணிக்காக அக்கடன் தொகையினைப்பயன்படுத்த வேண்டுமென்பதற்கும், அக்கடன்தொகை ஏழைகள் மற்றும் அவசியம் அத்தொகையினை எதிர் நோக்கியிருப்போர் ஆகியோருக்கும் போய்ச்சேர வேண்டுமென்ற நோக்கத்திலும், தமிழ்நாட்டில் ஆண்டுக்கடன் வழங்கும் முறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி, விவசாயிகள் ஆண்டுக்கடன் தேவை நிர்ணயிக்கப்பட்டு, அவர்களுக்குக் கடன் வழங்கப்பட்டது. நிர்ணயிக்கப்பட்ட வரம்பிற்குட்பட்டு, விவசாயி-உறுப்பினர் தனக்குத் தேவைப்படும்போது, அத்தொகையினைப் பெற்றுக்கொள்ளலாம். அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட ஆண்டுக்கடன்தொகை, ரொக்கமாகவும், பொருளாகவும் இருக்கும். சங்க உறுப்பினர்களின் கல்லாமையைப் பயன்படுத்தி சங்கத்தின் பழிபாவத்திற்கஞ்சாத பணியாளர்கள் சிலர் விவசாயி-உறுப்பினர்களை வஞ்சிக்க எத்தனிப்பதைத் தவிர்ப்பதற்காகவே, இந்த ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. விவசாயி-உறுப்பினர் பெற்ற கடன் தொகையினை அவரது கணக்கில் குறித்திடும் முறை கையாளப்படுகிறது. இத்திட்டம், "பற்று வரவு ஏட்டு" (பாஸ் புத்தகம்) -த்திட்டம் என அழைக்கப்படுகிறது. தமிழ்நாட்டிலுள்ள அனைத்து வேளாண் பணிச் சங்கங்களிலும் இந்த முறை பின்பற்றப்படுகிறது. கிராமப்புறப் பகுதிகளிலுள்ள உறுப்பினர்களைக் கெடுசெய்கைகளினின்று பாதுகாக்கவும், வங்கி சேமிப்பு பழக்கத்தினை அவர்கள் மனதில் ஆழப்பதிய வைக்கவும் இந்த முறை கையாளப்படுகிறது. உழவு மாடுகள், மின்விசைத் தெளிவாளி மற்றும் ஏனைய விவசாயத் தேவைப்பொருட்கள் ஆகியவை வாங்கிட, விவசாயிகளுக்கு நடுத்தர கால கடன் தேவையினைப்பூர்த்தி செய்யும் பொறுப்பும் விவசாயப்பணிச் சங்கங்களைச் சார்ந்ததாகும். இக்கடன்களின் காலவரை, மூன்று ஆண்டுகளிலிருந்து ஐந்து ஆண்டுகள் வரை நிர்ணயிக்கப்படுகிறது. பருவமழை பொய்க்கும் காலத்திலும், இயற்கை இடர்பாடுகளினால், வேளாண்மை பாதிக்கப்பட்ட நேரத்திலும், இந்த நடுத்தர காலக்கடன்கள் திருத்தியமைக்கப்பட்டு, தொகையினைத் திருப்பிச் செலுத்துவது எளிதாக்கப்படுகிறது.

தற்போது, நடைமுறையிலுள்ள அரசின் கொள்கைப்படி, இக்கடன்கள் தள்ளுபடி செய்யப்படுவதற்கும் சாத்தியக்கூறு உள்ளது. பருவமழை பொழியும் அளவினையும் பயிர் விளைச்சலையும் கருத்திற் கொண்டு, சில நேரங்களில் அபராத வட்டியினைத் தள்ளுபடி செய்தோ, விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கப்படுகிறது.

வேளாண் பணி கூட்டுறவு சங்கங்களால் வழங்கப்படும் மற்றொரு வகையான கடன் என்னவெனில், விளைப்பொருளையோ, தானியங் களையோ அடமானம் பெற்று, வழங்குவதாகும். உறுப்பினர் விவசாயி களின் நெல்போன்ற விளைபொருட்களைப் பிணையாகப் பெற்று, இக்கடன்கள் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன. அதனின் காலவரை ஓராண்டாகும். கடன் திருப்பிச் செலுத்தப்பட்டவுடன், பிணை வைக்கப் பட்ட தானியம், விவசாயிக்குத் திருப்பியளிக்கப்படுகிறது. விவசாயி-உறுப்பினர் கடன் தொகையைச் செலுத்தத் தவறினால், அவ்வாறு பிணை வைக்கப்பட்ட தானியம், சங்கத்தால் விற்பனை செய்யப்பட்டு, விற்பனைத் தொகையினின்றும் கடன் ஈடு செய்துகொள்ளப்படுகிறது. இவ்வகையான கடன், விவசாயியின் எதிர்பாராத மற்றும் அவசரத் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது. அனைத்திற்கும் மேலாக, இவ்வகைக்கடன், தானிய விற்பனையுடன் கடன் வழங்குதலையும் இணைக்கிறது.

இவ்வாறாக, வேளாண் பணி கூட்டுறவு சங்கங்கள் பல்வேறு வகைகளில், விவசாயிகளுக்குப் பணி செய்கின்றன: இந்நடவடிக்கை களினால், விவசாயிகள், கிராம வட்டித்தொழில் வணிகர்களை நம்பியே வாழும் நிலையினின்றும் விடுவிக்கப்படுகின்றனர்.

இந்த வேளாண் பணிச் சங்கங்கள், தங்கள் உறுப்பினர்களின் விவசாயத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, தங்களுக்கு நிதி வழங்கும் வங்கியான மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியிடம் கடன் பெறுகின்றன. தங்களது உறுப்பினர்-விவசாயிகளின் கடன் தேவை யினைக் கணக்கிட்டு, ஆண்டு கடன் வரம்பு விண்ணப்பங்களைத் தயார் செய்து, மாவட்ட மத்திய கூட்டுறவு சங்கத்திற்கு அனுப்பிவைத்து ஒப்புதலைப் பெறுகின்றன. மாவட்ட மத்திய கூட்டுறவு சங்கங்கள், தங்களது தலைமை வங்கியுடன், நிதியளிக்கும் வங்கியுமான மாநில கூட்டுறவு வங்கியினின்றும் உரிய நிதியினைப் பெறுகின்றன.

2. மத்திய கூட்டுறவு வங்கிகள்

மாநிலத்தில் 17 மத்திய கூட்டுறவு சங்கங்கள் இயங்குகின்றன. மத்திய கூட்டுறவு சங்கங்களின் முதன்மையான செயலாக்கம் என்னவெனில், தமிழ்நாடு மாநிலத்தலைமை கூட்டுறவு வங்கியிடமிருந்து/தேசிய வங்கியிடமிருந்து கடனாகப்பெற்ற தொகை மற்றும் பங்கு முதலீடு, வைப்புத் தொகைகள் ஆகியவற்றின் மூலம் தங்களது வங்கிகளுக்கு கிடைத்த நிதி ஆகியவற்றினின்றும், தங்களுடன் இணைந்துள்ள வேளாண் பணி கூட்டுறவு சங்கங்கள்

ஆகியவற்றிற்குக் கடன் வழங்குவதேயாகும். மாநில அரசு, மத்திய கூட்டுறவு சங்கங்களின் பங்குத் தொகையின் ஒரு பகுதியினை, அரசு நிதியிலிருந்து முதலீடு செய்து அவ்வங்கிகளுக்கு உதவுகிறது.

தொடக்க வேளாண் கூட்டுறவுக்கடன் வழங்கும் சங்கங்களுக்கு அவை குறுகியகால மற்றும் நடுத்தர கால கடன்கள் வழங்குவதற்கு உதவியாக நிதியளிப்பதோடு மட்டுமன்றி, மத்திய கூட்டுறவு வங்கிகள், சமுதாயத்தின் நலிந்த பிரிவினருக்குத் தனிப்பட்ட முறையில் நான்கு விழுக்காடு குறைந்த வட்டியில் கடன் வழங்கும் திட்டத்தினையும் 1981-82 முதல், நடைமுறைப்படுத்தியுள்ளன. இத்திட்டத்தின்படி, அனைத்து வகையிலும், கிராமப்புறப்பகுதியில் வாழும் நலிந்த பிரிவினர், ஆண்டொன்றிற்கு ரூபாய் 2500/-க்கு மிகாமல் வருவாய் உள்ளவர்களும், நகர மற்றும் சிறு நகர்ப்புறப்பகுதியில் வாழும் நலிந்தபிரிவினர், ஆண்டொன்றிற்கு ரூபாய் 3000/-க்கு மிகாமல் வருவாய் உள்ளவர்களும் இக்கடன்களைப் பெறத் தகுதியடைகிறார்கள். இயல்பான வட்டித் தொகைக்கும், சலுகையில் நிர்ணயிக்கும் வட்டி தொகைக்குமான வித்தியாசத்தொகை, மாநில அரசால் மானியமாக ஈடுசெய்யப்படுகிறது.

மேலும், கைத்தறிப்பொருட்களை உற்பத்தி செய்யவும், விற்பனை செய்யவும் தொடக்க நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கும் மத்திய கூட்டுறவு வங்கிகள், நிதியுதவியளிக்கின்றன. வேளாண் பெருமக்களல்லாத ஏனைய குடிசைத் தொழில் செய்யும் பிரிவினருக்கும், சிறு தொழில் செய்வோருக்கு நிதியுதவியளிக்கவும் மத்திய கூட்டுறவு வங்கிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

எதிர்பாரா ஊறுபாடு நிதி[29]

1962-63 ஆம் ஆண்டு முதல், மத்திய கூட்டுறவு வங்கிகளின் எதிர்பாரா ஊறுபாடு நிதிக்கு, அரசு பங்குத்தொகை அளித்து வருகிறது. முன்னர், இந்நிதி, மீட்கமுடியாத கடன் என அழைக்கப்பட்டது. இந்நிதிக்கு, நேரடிக்கொடைத் திட்டத்தின் கீழ், இப்பங்குத் தொகை அளிக்கப்படுகிறது. வாணிகத்துறை நிறுவனங்கள் பகுதிகளில், பணியாற்றும் விவசாயப்பணி கூட்டுறவு சங்கங்களுக்கு நிதியுதவி யளிக்க, இத்தொகை பயன்படுகிறது. தொடர்புள்ள வாணிகத்துறை நிறுவனங்கள், மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு, அவை வேளாண் பணி கூட்டுறவு சங்கங்களுக்கு நிதியுதவியளிப்பதற்காக, பங்குத் தொகையளித்து வருகின்றன. சிறு மற்றும் நடுத்தர விவசாயிகளுக்கு மத்திய கூட்டுறவு வங்கிகள் வழங்கிய கடன்களினால் ஏற்படும் நஷ்டத்தை ஈடுகட்ட இந்நிதி பயன்படுத்தப்படுகிறது. திருத்தப்பட்ட பாங்குப்படி, பங்குத் தொகை என்பது, மக்கள் தொகையில் நலிந்த பிரிவினருக்கு மத்திய கூட்டுறவு வங்கிகள் இரண்டு விழுக்காடும், சிறு மற்றும் நடுத்தர விவசாயி களுக்கு வழங்கப்பட்ட நடுத்தர காலக் கடன் தொகையில் இரண்டு விழுக்காடும் ஆகும். ஆக்டோபர் 2, 1980 முதல்

மாநிலத்திலுள்ள அனைத்து வட்டாரங்களுக்கும் ஒழுங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டம் விரிவாக்கப்பட்ட பின்னர், 1981-82 முதல் நிதிக்கு, உரிய பங்குத் தொகை தொடர்புள்ள வாணிகத் துறை நிறுவனங்களால் வழங்கப்படுமென அரசு சுட்டிக்காட்டியது. இத்திட்டம் இன்றும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

3. தமிழ்நாடு மாநில, உயர் கூட்டுறவு வங்கி

தமிழ்நாடு மாநில உயர் கூட்டுறவு வங்கியானது, மாநிலத்திலுள்ள மத்திய கூட்டுறவு சங்கங்களின் இணையமாகும். இது மாநில அளவில் தலைமை தாங்கும் நிறுவனமாகும். இத்தலைமைச் சங்கம், விவசாயக் கடன் அளிப்பதற்காக, மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு குறுகிய மற்றும் நடுத்தர கால தேவைகளை பூர்த்தி செய்கிறது. அனைத்து மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளும் மாநில அரசும் மற்றும் 52 முன்னுரிமை பெற்ற பங்குதாரர்களும், தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியின் உறுப்பினர்கள் ஆவார்கள். ஒவ்வொரு ஆண்டும் பருவகால விவசாயப் பணிகளை மேற்கொள்ள விவசாயிகளுக்குக் கடன் கொடுப்பதற்கு, மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு நிதியுதவி அளித்திட, தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி, ஊரக வளர்ச்சி தேசிய வங்கியிடம் நிதியுதவி பெறுகிறது.

விவசாயிகளின் பருவகால வேளாண் பணிகளுக்கான, தொடக்க விவசாயக் கூட்டுறவு வங்கிகள்/தொடக்க விவசாய கூட்டுறவு சங்கங்கள் மூலம் கடனுதவி அளிக்கும் மத்திய கூட்டுறவு வங்கிகளின் இணையமாக தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி இருந்த போதிலும், அது தமிழ்நாடு கைத்தொழில் நெசவாளர் கூட்டுறவு சங்கம், கைத்தறி தொழில் சங்கங்களின் தலைமைச் சங்கம் மற்றும் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் தலைமைச் சங்கமும், மாநில முழுமையும் உரங்கள் வழங்குதலுக்குப் பொறுப்பு வகிப்பதுமான தமிழ்நாடு, கூட்டுறவு விற்பனை இணையம் ஆகியவற்றிற்கும் நிதியுதவி அளிக்கிறது.

4. நீண்டகாலக் கடன்

குறுகிய கால மற்றும் நடுத்தரகால கடன் வழங்குவதற்கு, வேளாண்பணி கூட்டுறவு சங்கங்கள் பொறுப்பு வகிப்பது போன்று, மாநிலத்திலுள்ள 181 தொடக்க நில வள வங்கிகளும், தமிழ்நாட்டிலுள்ள விவசாயிகளின் விவசாயக் கடன் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன. மாநிலத்திலுள்ள நீண்டகால கடன் வழங்கு அமைப்பு முறை இரண்டு அடுக்கு முறையாகும். தொடக்க நிலவள வங்கிகள் ஆதார முதல் அடுக்காகவும், தலைமைச் சங்கமான தமிழ்நாடு மாநில நிலவள வங்கி, உயர் அடுக்காகவும் அமைந்து பணியாற்றுகின்றன.

தொடக்க நில வள வங்கிகளின் முக்கியப் பணிகள் என்னவெனில், விவசாயிகளுக்கு இழுவை இயந்திரம் வாங்கிட நீண்ட காலக்கடன்கள் வழங்குதல், புதிய கிணறுகள் வெட்டுதல், ஏற்கனவே புழக்கத்திலுள்ள கிணறுகளை ஆழப்படுத்துதல், மின் விசைக் குழாய்கள் நிறுவுதல், குழாய்க் கூடங்கள் கட்டுதல், முந்தைய கடன் தொகைகளைத் தீர்த்தல், நிலத்தை சீர்திருத்தம் செய்தல் போன்றவையாகும். அவை உறுப்பினர் களின் நிலங்களைப் பிணையாகப் பெற்று விவசாயிகளுக்கு கடன்களை வழங்குகின்றன.

பருவ மழை பொய்த்த காலங்களில், தொடக்க நில வள வங்கிகள் அளித்த கடன் தொகைகளில் வசூல் ஒத்திவைக்கப்படுகின்றன அல்லது தவணைத் தொகை நிறுத்திவைக்கப்படுகின்றன. இது உறுப்பினர்கள் பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்துவதை எளிதாக்குகிறது.

மாநிலத்தில் ஆழ்குழாய்க் கிணறுகளை வெட்டும் பொறுப்பினை மேற்கொண்டுள்ள வேளாண் பொறியியல் துறையுடன் இணைந்து தொடக்க நில வள வங்கிகள், நிலத்தடி நீரினை எடுத்து விவசாயத் திற்குப் பயன்படுத்த குழாய்க்கிணறுகள், ஆழ்குழாய் கிணறுகள் வெட்டுதல் போன்ற பணிகளுக்குக் கடன் வழங்கும் மிக முக்கிய செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளன. நிலையற்றதான இயற்கையின் கொடையை நம்பியே வேளாண் தொழிலிலீடுபட்டுள்ள விவசாயிகள் தங்களது நீர்ப்பாசனப் பிரச்சனையை சமாளித்திட, தொடக்க நிலவளவங்கிகள் மேற்கொண்டுள்ள இந்த நடவடிக்கை, வேளாண் பெருமக்களுக்கு நற்பயனளிக்கிறது. இவ்வங்கிகள், கிணறுகள் வெட்டு வதற்காக விவசாயிகளுக்கு கடன் வழங்குவதோடு மட்டுமின்றி, அவ்வாறு வழங்கப்பட்ட கடன் தொகையினால் வெட்டப்பட்ட கிணறுகள் பொய்த்துப் பயனற்றுப் போய்விட்டால், அதனால் ஏற்படும் பெருத்த நட்டத்தினின்றும் விவசாயிகளைக் காத்திட, ஒவ்வொரு விவசாயியின் தகுதியைப் பொறுத்தும் இதற்காகவே உருவாக்கப் பட்டுள்ள "பொய்த்துப் போன கிணறுகள் நிதி" யினின்றும், அவர்களது நட்டத்தை ஈடுகட்ட, அவர்களுக்கு நிதியுதவியளிக்கிறது.

விவசாயிகளுக்கு நிலவள வங்கிகள் நிவாரணமளிக்கும் பணியில் மற்றொரு முக்கியமான மைல்கள் என்னவெனில், வேளாண்மையல்லாத, ஒன்றுக்கொன்று மாறுபட்ட தன்மையுடைய பல்வகைத் தொழில்கள், மேற்கொள்ள அவர்களுக்குக் கடன் வழங்கும் திட்டத்தினை உருவாக்கியதேயாகும். அத்தொழில்கள், - ஆடுவளர்த்தல், கோழிப் பண்ணை, பால்வளம், பட்டுப்புழு வளர்ப்பு, தோட்டக்கலை ஆகியவை யாகும். நில வங்கிகள், கடன் வழங்குதலை, இவ்வாறு பல்வகைப் படுத்தி, விவாசயிகளுக்கு கூடுதலான ஆதரவு வருவாய்க்கு வழி வகுத்துக் கொடுத்துள்ளது. வேளாண்மைப் பணியில்லாத, காலங்களில்

மாற்றுப்பணி கிடைத்திட, விவசாயிகளுக்கு, பல்வகைத் தொழில் திட்டங்களை நில வள வங்கிகள் இவ்வாறு உருவாக்கி, அளித்து உதவியுள்ளன.

தொடக்க நில வள வங்கிகள், அவற்றிற்கு நிதியுதவியளித்திடும் தமிழ்நாடு மாநில நில வளத் தலைமை வங்கியின் உறுப்பினர்களாகும். தொடக்க நில வள வங்கிகள், தமிழ்நாடு மாநில நில வள வங்கியின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன. மாநில நில வள வங்கி, ஊரக வளர்ச்சி தேசிய வங்கியிடமும், மாநில, மைய அரசுகளிடமும் உதவி பெற்று, தேவையான விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்க நல்ல பல திட்டங்களை உருவாக்கி, சார்பு நிலை வங்கிகள் மூலம், நடைமுறைப் படுத்துகின்றன.

இந்திய அரசியல் சட்டத்தில், மக்களாட்சி பண்புக்கூறுகளும், கூட்டுறவு வேளாண் பணி கடன் வழங்கும் சங்கங்களின் நிருவாகமும்

ஒரு கூட்டுறவு சங்கத்தின் பொது நிருவாகம், அதனுடைய பொதுக்குழுவின் அதிகார வரம்பிற்குட்பட்டது. பொதுக்குழு, கூட்டுறவு சங்கத்தின் அனைத்து உறுப்பினர்களாலும் அமைக்கப்படுகிறது. ஒவ்வொரு உறுப்பினருக்கும் வாக்களிக்கும் உரிமையுண்டு. பொதுக் குழு, கூட்டுறவு சங்கத்தின், நிருவாகக்குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கிறது. ஆண்டிற்கு ஒரு முறையாவது, பொதுக்குழு, கூட்டப்படவேண்டும்.

நிருவாகக்குழுவினால், சிறப்புப் பொதுக்குழுக் கூட்டம் கூட்டப்படலாம். இயல்பான பொதுக்குழுக் கூட்டம், அறிவிப்பு கிடைக்கப்பெற்ற ஒரு மாத காலத்திற்குள் அடியிற் குறிப்பிட்ட சூழ்நிலையில் கூட்டப்படலாம்.

1) தேவையான எண்ணிக்கையுள்ள உறுப்பினர்கள் அல்லது உருவாக்கப்பட்டுள்ள முறைமையில் குறிப்பிட்டுள்ளவாறு, மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கையின் ஒரு வீதத்தினர் கோரினால்;

2) நிதியுதவியளிக்கும் வங்கியின் நிருவாகக் குழு கோரிக்கை விடுத்தால்; அல்லது,

பதிவாளர், பொதுக்குழுவைக் கூட்ட முற்பட்டால்:

அ) நிருவாகக் குழுவின் தேர்தல்;

ஆ) ஆண்டுத்தணிக்கை அறிக்கையினை ஆய்ந்து, அதனை ஏற்றுக் கொள்ளுதல் மற்றும் நிதி மதிப்பீட்டினை ஏற்றுக்கொள்ளுதல்;

இ) உருவாக்கப்பட்ட முறைமைக்குத் திருத்தங்களைப் பரிந்துரைத்தல்: நடைமுறையிலுள்ள முறைமைக்கு மாற்றம் சேர்க்கை அல்லது திருத்தம் அளித்தல்:

ஈ) சங்கத்தினின்றும் ஒரு உறுப்பினரை நீக்கம் செய்தல்-இவை குறித்து, ஆய்ந்து, உரிய முடிவினை மேற்கொள்ளலாம்.

நிருவாகம்

ஒரு கூட்டுறவு சங்கத்தின் நிருவாக மேற்பார்வை, பொதுக்குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்ட நிருவாகக் குழுவின் அதிகார வரம்பிற்குட்பட்டது.

1983 ஆம் ஆண்டின், தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களது சட்டம், 33 (3) (உ) பிரிவின்படி, நிருவாகக்குழுவில், அட்டவணையிற் குறிப்பிடப்பட்ட தொடக்கச் சங்கமல்லாத, வேறு தொடக்கச்சங்கத்தைப் பொறுத்தவரை, அதன் குழுவில், விதிகளிலோ, முறைமைகளிலோ, குறிப்பிட்டவாறு, 11 உறுப்பினர்களுக்குக் குறையாமலோ, 21 உறுப்பினர்களுக்கு மிகைப்படாமலோ, (உறுப்பினர்கள்) அங்கம் வகிக்கலாம்.

33(1) அ பிரிவின் சட்ட விலக்குக்கூறு

ஒவ்வொரு சங்கத்தின் நிருவாகக் குழுவிலும், அட்டவணையிற் சேர்க்கப்பட்ட வகுப்பினர் மற்றும் அட்டவணையிற் சேர்க்கப்பட்ட மலைவாழ் மரபினர் ஆகியோர் சார்பாக ஒரு பிரதிநிதி, பொருளாதார அடிப்படையில் நலிந்த பிரிவினர் சார்பாக ஒரு பிரதிநிதி, மற்றும் மகளிர் சார்பாக ஒரு பிரதிநிதி ஆகியோர் அங்கம் வகிப்பார்கள். பாசன வசதியுள்ள நிலமாயின் அரை எக்டேருக்கு மிகாமலோ, பாசன வசதியற்ற நிலமாயின் ஒரு எக்டேருக்கு மிகாமலோ, சொந்தமாகப் பெற்றோ, அல்லது பயிர் செய்தோ வருபவர்கள் பொருளாதார அடிப்படையில் நலிந்த பிரிவினர் ஆவார். பிரிவு 33(2) (ஆ) (இ) விளக்கம் 1-ன்படி, பாசன வசதிபெற்ற ஒரு எக்டேர் நிலம், பாசன வசதியற்ற இரண்டு எக்டேர் நிலத்திற்கீடானவை யாகும். எனவே, ஒருவர், பாசன வசதி பெற்ற மற்றும் பாசன வசதியற்ற, ஆன இரண்டுவகை நிலங்களையும் சொந்தமாகப் பெற்றோ அல்லது பயிர் செய்தோ வந்தால், அந்த நிலங்களின் பரப்பளவு மேற் குறிப்பிட்ட வரம்பிற்குள் இருத்தல் வேண்டும். எனைய நபர்களில், தேர்தல் தேதி அல்லது வேட்பு மனு அளிக்கும் தேதி ஆகியவற்றிற்கு 60 நாட்களுக்கு முன்னர். தொடர்ந்து வரும் இரு கூட்டுறவு ஆண்டுகளில், அனைத்து ஆதாரங்களிலிருந்தும் பெறப்படும் ஆண்டு வருவாய் ரூபாய் 2400/-க்கு மிகாமலிருந்தால், அவரும் பொருளாதார அடிப்படையில் நலிந்த பிரிவினர் ஆவார்.

நிருவாகக்குழுவினரின் சில முக்கிய அலுவல்கள் யாதெனில்,-

1. உறுப்பினர்களைச்சேர்த்தல், உறுப்பினர்களுக்கு பங்குகள் அல்லது கூடுதல் பங்குகள் வழங்குதல், மற்றும் பங்கு மாறுதலுக்கு ஒப்புதலளித்தல் ஆகியவையாகும்.

கூட்டுறவு இயக்கத்தில், கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள தலைமைச் சங்கம், கன்னியாகுமரி மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கியாகும். இவ்வங்கி செப்டம்பர், 14, 1957இல் துவங்கப்பட்டது[30]. ஐந்து கிளைகளுடனும், ரூபாய் 3.29 இலட்சம் பங்கு முதலீட்டுடனும் துவங்கப்பட்டது. 1969 ஆம் ஆண்டு, சூன் மாத இறுதியில், 465 கூட்டுறவு சங்கங்களைத் தனது உறுப்பினர்களாகப் பெற்றது. அப்போது, அதனுடைய சேமிப்பும் அது வழங்கிய முன்பணத் தொகையும், முறையே ரூபாய் 37.8 இலட்சம் மற்றும் ரூபாய் 166.1 இலட்சம் ஆகும்[31].

தொடர் எண்.	கிளை	துவங்கப்பட்ட நாள்
1.	மார்த்தாண்டம்	15.9.1965
2.	தக்கலை	20.10.1966
3.	திங்கள் சந்தை	29.6.1969
4.	இராசக்காமங்கலம்	29.6.1969
5.	நாகர்கோவில் நகரம்	27.12.1973
6.	எலங்கடை	10.2.1986
7.	புதுக்கடை	15.4.1987
8.	குலசேகரம்	15.4.1987

பங்கு முதலீடு, சேமிப்புகள், பெற்ற கடன்கள், நிலுவையிலுள்ள கடன்கள் மற்றும் செயற்பாணியிலுள்ள முதலீடு ஆகியவை குறித்த வங்கியின் செயல்நிறைவேற்றம் கீழே விவரிக்கப்பட்டுள்ளது[32].

வங்கி துவங்கப்பட்ட 1957-58 ஆம் ஆண்டு, செலுத்தப்பட்ட பங்கு முதலீடு ரூபாய் 3.29 இலட்சமாகும். அது, 1967-68 ஆம் ஆண்டு, 27.06 இலட்ச ரூபாயாக அதிகரித்தது. பின்னர், 1977-78 ஆம் ஆண்டு 62.20 இலட்ச ரூபாயாக, உயர்ந்தது; 1986-87 ஆம் ஆண்டு, 40 மடங்கு உயர்ந்து மொத்த பங்குமுதலீடு ரூபாய் 126.67 இலட்சமாகியது[33].

1982-83 முதல் 1987-88 முடிய பயிர்க்கடன் வழங்கியதில் முன்னேற்றம்

ஆண்டு	இலக்கு	சாதனை	பத்தி 3-ல் கண்ட தொகையில், சிறு விவசாயிகள், நடுத்தர விவசாயிகள் பொருளாதார அடிப்படை யில் நலிந்த பிரிவினர் ஆகியோருக்கு வழங்கப்பட்ட கடன்	பத்தி 4-ல் கண்டவாறு கடன் வழங்கப்பட்டதற்கு, சாதனையில் விழுக்காடு
(1)	(2)	(3)	(4)	(5)
1982-83	300.00	239.34	156.59	65.43
1983-84	300.00	184.79	121.00	65.47
1984-85	300.00	287.05	180.85	63.00

1985-86	400.00	379.54	237.78	62.65
1986-87	460.00	463.75	282.82	60.99
1987-88	540.00	591.03	323.30	54.70
1988-89	621.00	611.35	321.64	52.61

(30.11.1988 முடிய)

மேற்குறிப்பிட்ட ஏழாண்டு காலத்தில், பயிர்க் கடன் வழங்கியது,- 1982-83 ஆம் ஆண்டு, ரூபாய் 239.34 இலட்சத்திலிருந்து, 1988-89 ஆம் ஆண்டு, ரூபாய் 611.35 இலட்சமாக உயர்ந்துள்ளது.

கன்னியாகுமரி மத்திய கூட்டுறவு வங்கி லிமிடெட், நாகர்கோவில்[34]

(ரூபாய் இலட்சத்தில்)

ஆண்டு	செலுத்தப் பட்ட பங்கு முதலீடு	சேமிப்பும், பெற்ற கடனும்	நிலுவையிலுள்ள கடன்	நடைமுறை முதலீடு
(1)	(2)	(3)	(4)	(5)
1957-58	3.29	8.75	8.20	12.04
1958-59	4.60	27.07	27.67	31.67
1959-60	7.04	39.54	40.78	46.67
1960-61	8.54	60.64	60.73	69.47
1961-62	13.06	75.41	76.20	88.91
1962-63	16.65	91.77	94.76	109.25
1963-64	19.71	112.39	106.71	133.36
1964-65	22.09	101.24	109.31	124.99
1965-66	22.92	114.83	119.43	139.65
1966-67	24.37	110.55	125.53	137.56
1967-68	27.06	132.99	145.27	163.16
1968-69	30.16	159.29	165.90	198.33
1969-70	31.53	146.78	165.37	190.28
1970-71	30.24	97.40	115.23	143.82
1971-72	39.66	188.46	198.17	241.86
1972-73	44.26	217.96	230.70	283.58
1973-74	46.94	208.09	220.54	285.61
1974-75	46.75	267.13	259.29	348.71

1975-76	50.77	248.53	239.14	343.11
1976-77	52.76	357.43	364.27	459.84
1977-78	62.20	420.03	419.36	527.30
1978-79	67.64	434.78	442.35	560.24
1979-80	71.53	507.66	570.90	726.28
1980-81	77.09	666.77	555.33	809.68
1981-82	90.41	1054.79	992.36	1229.97
1982-83	96.35	1118.01	1058.97	1338.63
1983-84	99.63	1299.30	1122.95	1537.85
1984-85	107.69	1483.89	1361.05	1749.53
1985-86	114.37	1771.25	1669.78	2048.10
1986-87	126.67	2111.96	1998.78	2436.05
1987-88	169.63	2746.45	2627.67	3192.55

கூட்டுறவு வங்கிகள்

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கூட்டுறவு சங்கங்களின் குறுகிய கால மற்றும் நடுத்தர கால கடன் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நிதியுதவியளிக்கும் நிறுவனமாக, கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு வங்கி திகழ்கிறது. விவசாயிகளுக்கு, பயிரிடுவதற்கான நிதியுதவியளிப்பது தவிர, மற்ற துணைத் தொழில்களான பால் பண்ணை, உழவு மாடுகள் மற்றும் வண்டிகளை வைத்து உரிய தொழில்கள் மேற்கொள்ளல், கோழிப்பண்ணை, தேனீ வளர்த்தல் ஆகியவற்றிற்கும், குறுகியகால மற்றும் நடுத்தர கால கடன் வழங்கப்படுகிறது. இவ்வங்கி, கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், விற்பனை மற்றம் உருவாக்க சங்கங்கள், நுகர்வோர் சங்கங்கள், நகர்ப்புற வங்கிகள், பணியாளர் சங்கங்கள் முதலிய வற்றிற்கும் நிதியுதவியளிக்கிறது. நாகர்கோவிலில் தலைமையகத்தைக் கொண்ட கன்னியாகுமரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, மார்த்தாண்டம், தக்களை, திங்கள் சந்தை, நாகர்கோவில், இராசக்காமங்கலம், குலசேகரம், புதுக்கடை மற்றும் எலங் கடை ஆகிய எட்டு இடங்களில் கிளைகளைக் கொண்டுள்ளது. மத்திய கூட்டுறவு வங்கியின் இந்த எட்டுக் கிளைகளும், மாவட்டத்திலுள்ள 4 வட்டாரங்களில் இயங்கி வருகின்றன. எஞ்சியுள்ள 5 வட்டாரங்களில் வங்கியின் கிளைகளில்லை. எனினும். அண்டைய வட்டாரங்களில், கிளைகள்போதுமான அளவு பணியாற்றுகின்றன. மாவட்டத்தில் 118 தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள் உள்ளன. பயிர்களை விளைவிக்க நிதியுதவியளிப்பதுடன், அரிசி, கோதுமை, சர்க்கரை

நடுத்தர கால கடன்களை வழங்கியதில் முன்னேற்றம் குறித்த புள்ளி விவரங்கள்

ஆண்டு	குறியீடு	சாதனை விவரம்							
		ஒருங்கிணைக்கப்பட்ட ஊரக வளர்ச்சித் திட்டம்		ஒருங்கிணைக்கப்பட்ட ஊரக வளர்ச்சியில்லாத திட்டம்		ளரிவாயு		மொத்தம்	
		எண்ணிக்கை	தொகை	எண்ணிக்கை	தொகை	எண்ணிக்கை	தொகை	எண்ணிக்கை	தொகை
1982-83	40.00	2827	56.25	..	..	1	0.04	2826	56.28
1983-84	0.04	1118	15.14	..	..	3	0.20	1121	15.94
1984-85	40.00	1547	32.00	657	13.35	7	0.32	2211	45.67
1985-86	50.00	1236	30.34	984	21.66	47	2.30	2267	54.30
1986-87	88.10	2907	85.63	641	16.65	42	2.55	3590	104.83
1987-88	55.00	2569	81.19	924	22.85	76	3.32	3622	108.89
1988-89	71.25	1580	53.10	474	11.15	50	3.64	2132	69.12
(30.11.1988 முடிய)				.28	1.23				

போன்ற இன்றியமையாப் பொருட்களையும், சங்கங்கள் பொது மக்களுக்கு வழங்குகின்றன. தமிழ்நாடு மாநில கூட்டுறவு நில வள வங்கி, மாவட்டத்தில் ஐந்து கிளைகளை நிறுவியுள்ளது. அவை, நிலத்தை சமப்படுத்துதல், சிறிய நீர்ப்பாசனம் மற்றும் தோட்டப் பயிர் வளர்த்தல் போன்றவற்றிற்கு நீண்டகாலக் கடன்கள் வழங்குகின்றன. இவை தவிர, மக்கள் (நகர்ப்புற) கூட்டுறவு வங்கியும் மாவட்டத்தில் இயங்கி வருகிறது.

கடனின் அங்கமாக, வேளாண்மைக்குத் தேவையான உரமாக வழங்கப்பட்டதின் முன்னேற்றம் குறித்த புள்ளிவிவரங்கள் (உரங்கள்)

ஆண்டு	வழங்கப்பட்ட தொகை	வேளாண்மைக்குத் தேவையான உரமாக வழங்கப்பட்ட பகுதியின் மதிப்பு (ரூ இலட்சத்தில்)	விழுக்காடு
1982-83	239.34	47.43	19.81
1983-84	184.79	35.11	19.00
1984-85	287.05	55.44	19.31
1985-86	379.54	70.84	18.66
1986-87	463.75	100.10	21.58
1987-88	591.03	131.04	22.17
1988-89 (30.11.1988 முடிய)	611.35	127.16	20.80

ஒருங்கிணைக்கப்பட்ட ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ்1982-83 ஆம் ஆண்டு, நடுத்தர காலக் கடனாக 2827 நபர்களுக்கு, ரூபாய் 56.24 இலட்ச ரூபாய் வழங்கப்பட்டதாக இப்பட்டியலினின்றும் தெரிய வருகிறது. 1986-87 ஆம் ஆண்டில் இத்தொகை ரூபாய் 85.63 இலட்ச மாக உயர்ந்து அதன் மூலம் 2907 நபர்கள் பயனடைந்துள்ளார்கள்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சியல்லாத மற்ற திட்டங்களின் கீழ் 1987-88 ஆம் ஆண்டில், 890 நபர்களுக்கு, 21.95 இலட்ச ரூபாய் கடனாக வழங்கப்பட்டுள்ளது. எரிவாயுத் திட்டத்தின் கீழ், 1982-83 ஆம் ஆண்டு ஒரே ஒரு நபருக்கு ரூபாய் 4000/- கடனாக வழங்கப்பட்டது. இத்தொகை 1986-87-ல், 2.55 இலட்ச ரூபாயாக உயர்ந்து, அதன் மூலம், 42 நபர்கள் பயனடைந்துள்ளார்கள்.

கன்னியாகுமரி மத்திய கூட்டுறவு வங்கி லிமிடெட், நாகர்கோவில்

பயிர்வாரியாக, பகுதி வாரியாக கடந்த 5 ஆண்டுகளில் கடன்கள் வழங்கிய புள்ளிவிவரப்பட்டியல்

(ரூபாய் இலட்சத்தில்)

பயிர்	1983-84 விழுக்காடு			1984-85 விழுக்காடு			1985-86 விழுக்காடு		
	நிதியுதவியளிக்கப்பட்ட பரப்பளவு	வழங்கப்பட்ட கடன் தொகை	செயல் எல்லை பரப்பளவு விழுக்காடு	நிதியுதவியளிக்கப்பட்ட பரப்பளவு	வழங்கப்பட்ட கடன்தொகை	செயல் எல்லை பரப்பளவு விழுக்காடு	நிதியுதவியளிக்கப்பட்ட பரப்பளவு	வழங்கப்பட்ட கடன் தொகை	செயல் எல்லை பரப்பளவு விழுக்காடு
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)
நெல்	6,133	37.67	4.27	12	93.13	9.01	13,309	114.50	9.26
மரவள்ளி	17,146	119.46	49.96	19	147.28	53.96	21.377	172.89	58.56
தென்னை	844	5.93	2.61	1	12.15	4.82	2,034	17.45	6.29
நிலக்கடலை	--	--	--	--	--	--	--	--	--
பயிர்வகைகள்	--	--	--	--	--	--	--	--	--
வாழை	247	3.27	5.29	--	11.91	20.55	1,722	28.71	36.89
இரப்பர்	3,523	18.46	18.15	3	22.58	19.35	6,922	45.99	35.69
மலர்கள்	--	--	--	--	--	--	--	--	--
காய்கறிகள்	--	--	--	--	--	--	--	--	--
முந்திரி	--	--	--	--	--	--	--	--	--
வெற்றிலைக் கொடி	--	--	--	--	--	--	--	--	--
மொத்தம்	27,893	184.79	10.01	38	287.05	15.35	45.371	379.54	17.91

கன்னியாகுமரி மத்திய கூட்டுறவு வங்கி லிமிடெட், நாகர்கோவில்

பயிர்வாரியாக, பகுதி வாரியாக கடந்த ஐந்து ஆண்டுகளில் கடன்கள் வழங்கிய புள்ளிவிவரப்பட்டியல்

(ரூபாய் இலட்சத்தில்)

பயிர்	1986-87 விழுக்காடு			1987-88 விழுக்காடு		
	நிதியுதவியளிக்கப்பட்ட பரப்பளவு	வழங்கப் பட்ட கடன் தொகை	செயல் எல்லை பரப்பளவு விழுக்காடு	நிதியுதவியளிக்கப்பட்ட பரப்பளவு	வழங்கப் பட்ட கடன் தொகை	செயல் எல்லை பரப்பளவு விழுக்காடு
(1)	(11)	(12)	(13)	(14)	(15)	(16)
நெல்	12.766	116.16	8.88	12.577	114.45	10.94
மரவள்ளி	23.451	203.98	64.24	23,329	202.96	77.88
தென்னை	2,160	22.75	66.9	11,514	123.78	26.65
நிலக்கடலை	--	--	--	1,638	3.33	65.52
பயிர்வகைகள்	--	--	--	--	--	--
வாழை	2,174	57.24	46.57	1,046	42.90	16.72
இரப்பர்	7,964	63.62	41.02	9,903	101.39	29.02
மலர்கள்	--	--	--	573	2.22	96.79
காய்கறிகள்	--	--	--	--	--	--
முந்திரி	--	--	--	--	--	--
வெற்றிலைக்கொடி	--	--	--	--	--	--
மொத்தம்	48,515	463.75	19.15	60,580	591.03	23.96

(தனி அலுவலர் கன்னியாகுமரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி லிமிடெட், நாகர்கோவில், அறிக்கை நாள் 12.12.1988).

கன்னியாகுமரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி லிமிடெட், நாகர்கோவில் பயிர் காப்பீட்டு பற்றிய விவரங்கள்

ஆண்டு	வழங்கப்பட்ட கடன் தொகை ரூ. பை.	காப்பீடு செய்யப்பட்ட தொகை ரூ. பை.	செலுத்தப்பட்ட காப்பீட்டுக் கட்டணம் ரூ. பை.	செயல் எல்லை பரப்பளவு ஏ. செ.	பயன் அடைந்த விவசாயி
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
காரிஃப் 1983 முதல் போகம்	14,006.00	4,846.36	520.00	30.50	11
ராபி 1983-84-இரண்டாம் போகம்	2,64,315.00	3,56,239.46	7,125.31	643.56	178
காரிஃப் 1984-முதல் போகம்	2,30,587.00	3,59,763.00	10,894.15	381.60	196
ராபி 1984-85-இரண்டாம் போகம்	4,85,673.00	7,57,639.00	23,772.36	683.61	400
காரிஃப் 1985-முதல் போகம்	9,26,850.00	13,90,266.00	27,805.73	551.60	653
ராபி 1985-86-இரண்டாம் போகம்	39,91,963.00	59,87,965.00	1,19,759.35	2367.05	2142
காரிஃப் 1986-87 முதல் போகம்	73,36,030.00	1,10,04,056.00	1,67,897.87	4275.79	3571
ராபி 1986-87 இரண்டாம் போகம்	38,83,340.00	58,25,060.00	86,527.55	2177.80	1975
காரிஃப் 1987-முதல் போகம்	62,97,323.00	94,45,995.00	1,46,666.66	3432.13	2725
ராபி 1987-88-இரண்டாம் போகம்	46,01,758.00	69,02,645.00	1,07,345.05	2481.41.43(எக்)	1789
காரிஃப் 1988-முதல் போகம்	நடைமுறைப் படுத்தப்படவில்லை				
ராபி 1988-89-இரண்டாம் போகம்	—	—	—	—	—

காரிஃப் பருவம் முதல் போகம் - ஏப்ரல் முதல் செப்டம்பர் வரை
ராபி பருவம் - இரண்டாம் போகம் - அக்டோபர் முதல் மார்ச் வரை

ஆண்டு	முன் காப்பீடு		பகுதி 1	
	விவசாயிகளின் எண்ணிக்கை	தொகை ரூ. பை.		
(1)	(7)	(8)	(9)	
காரிஃப் 1983-முதல் போகம்	1	2,200.79	**குறுந்தங்கோடு வட்டாரம்**	ரூ. பை.
			1. ஏ. ஆந்தோணிமுத்து	
			நெய்யூர் காப்பீடு நிறுவனம்	1650.59
			அரசு	550.20
ராபி 1983-84-இரண்டாம் போகம்	83	26,653.00	மொத்தம்	2200.79
காரிஃப் 1984-முதல் போகம்	--	--		
ராபி 1984-85-இரண்டாம் போகம்	--	--	இராசக்கமங்கலம் வட்டாரம்	
காரிஃப் 1985-முதல் போகம்	100	13,016.30	மேல்புரம் வட்டாரம்	
ராபி 1985-86-இரண்டாம் போகம்	2088	24,83,573.28	தோவாளை மற்றும் அகஸ்தீஸ்வரம்	
காரிஃப் 1986-முதல் போகம்			வட்டாரங்கள்	
ராபி 1986-87இரண்டாம் போகம்	481	90,811.77	தோவாளை வட்டாரம்	
காரிஃப் 1987-முதல் போகம் ராபி 1987-88-இரண்டாம் போகம் கிடைக்கப்பெறவில்லை.	பருவகாலம் ஏற்கனவே முடிந்துவிட்டது. பயிர் அறுவடை மதிப்பீடு விவரம், இந்திய பொதுக்காப்பீட்டுக் கழகத்திடமிருந்து இதுகாறும்			
காரிஃப் 1988-முதல் போகம் ராபி 1988-89-இரண்டாம் போகம்	தற்போதைய ராபி பருவம், 1988-89 ஆம் ஆண்டின் ராபி பருவத்திற்கான பரப்பளவு, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளரால், இன்னமும், மத்திய கூட்டுறவு வங்கிக்கு அளிக்கப்படவில்லை.			

நகைக்கடன் வழங்குவதில் முன்னேற்றம் (ரூபாய் இலட்சத்தில்)[35]

ஆண்டு	இலக்கு		சாதனை	
	தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களுக்கு நிர்ணயிக்கப்பட்டது	மத்திய கூட்டுறவு வங்கியின் கிளைகளுக்கு நிர்ணயிக்கப் பட்டது	தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களால்	மத்திய கூட்டுறவு வங்கியின் கிளைகளால்
1982-83	800.00	30.00	408.08	26.49
1983-84	600.00	30.00	644.99	26.27
1984-85	650.00	30.00	714.63	26.09
1985.86	900.00	30.00	903.23	29.72
1986-87	1300.00	50.00	992.46	41.67
1987-88	1300.00	50.00	1469.69	69.23
1988-89 (30.11.1988 முடிய)	1770.00	85.00	877.24	55.65

1982-83ஆம் ஆண்டு, தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள், நகைக்கடனாக, 408.03 இலட்ச ரூபாய் வழங்கியுள்ளார்கள். இத்தொகை 1987-86ஆம் ஆண்டு, 1351.72 இலட்ச ரூபாயாக உயர்ந்தது. மத்திய கூட்டுறவு வங்கி, 1982-83 ஆம் ஆண்டு இக்கடன் 26.49 இலட்ச ரூபாய்க்கு வழங்கியது. இது, 1987-88 ஆம் ஆண்டு, 62.20 ரூபாயாக உயர்ந்தது (பயிர்வாரி, பரப்பளவு வாரியாக கடன்கள் வழங்கப்பட்ட விவரங்களை அடுத்த பக்கத்திலுள்ள பட்டியலில் காணலாம்).

1969 ஆம் ஆண்டு, ஏறத்தாழ, 160 கூட்டுறவு நிறுவனங்கள் இருந்தன. அவற்றில், 139 பலநோக்கு கூட்டுறவு சங்கங்களாகும்[36]. அவற்றின் உறுப்பினர்களது எண்ணிக்கை 84,649 ஆக இருந்தது. மாவட்டத்திலுள்ள பல்வேறு கூட்டுறவு சங்கங்களின் 1986-87 ஆம் ஆண்டின் செயலாக்கம் கீழே விவரிக்கப்பட்டுள்ளன[37].

சங்கங்களின் விவரம்	சங்கங்களின் மொத்த எண்ணிக்கை	உறுப்பினர் களது எண்ணிக்கை	பொது நிதி பங்குத் தொகை	முன்பணமாக வழங்கப்பட்ட கடன்தொகை	கையாளப்பட்ட பொருட்களின் மதிப்பு
			(ரூபாய் இலட்சத்தில்)		
1 தொடக்கக் கூட்டுறவு வங்கி	117	2,12,000	19.35	64.07	844.86
2. நிலவள வங்கியின் கிளைகள்	5	19,224	35	60.09	--
3. விற்பனை சங்கங்கள்	12	18,293	1,263	--	93.58

கன்னியாகுமரி மத்திய கூட்டுறவு வங்கி, வேளாண்மையல்லாத அடியிற்குறிப்பிட்ட பிற தொழில்களுக்கும், ஊரக வளர்ச்சி தேசிய வங்கி மற்றும் இந்திய தொழில் வளர்ச்சி வங்கி ஆகியவற்றின் உதவியுடன், நிதியுதவியளிக்கிறது.

கடன் வழங்குவதில் முன்னேற்றம்	ரூபாய் இலட்சத்தில் 1987–88	1988–89 (30.11.88 முடிய)
1. வேளாண்மையல்லா பிறதொழில்களுக்கு சிறு அளவிலான தொழிற்சாலை நிறுவ கடனுதவி	11.98	47.92
2. ஊர்திகள் வாங்க, சிறிய சாலைப் போக்குவரத்து ஊர்தி உரிமையாளர் களுக்குக் கடனுதவி	12.07	27.64
3. மீனவர்களுக்கு, படகின் புறத்தே, எண்ணையால் இயங்கிடும் பொறிகள் அமைத்து வாங்கிட கடனுதவி	8.94	5.24
4. பெரிய அளவிலான விசைப்பொறிப் படகு வாங்க கடனுதவி	--	2.00
5. தொலைக்காட்சி, இருசக்கர ஸ்கூட்டர் எனும் ஊர்தி, ஆகியவை வாங்க கடனுதவி	40.11	30.63

வைப்புத் தொகை ஆகியவை சேமிப்பதிலான முன்னேற்ற விவரம் பின்வருமாறு:-

(ரூபாய் இலட்சத்தில்)

ஆண்டு	ஆண்டின் துவக்கத்தி லிருந்த நிலை	ஆண்டிற் கான இலக்கு	ஆண்டின் சாதனை	ஆண்டு இறுதியிலிருந்த நிலை
(1)	(2)	(3)	(4)	(5)
1984-85	429.02	70.00	87.19	516.21
1985-86	516.21	80.00	45.28	561.49
1986-87	561.49	120.00	54.49	615.98
1987-88	615.98	200.00	271.94	887.92
1988-89 (30.11.1988 முடிய)	887.92	200.00	194.44	1082.36

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கூட்டுறவு கடன் வழங்கும் சங்கங்களின் விவசாய உறுப்பினர்களுக்கு, நாகர்கோவில் கன்னியாகுமரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி (லிமிடெட்) மூலம் அரசால் வழங்கப்பட்ட சலுகைகள்:

தொடர் எண்.	விவரம்	எண்ணிக்கை	தொகை (ரூபாய் இலட்சத்தில்)
(1)	(2)	(3)	(5)
1.	கடன் தொகைகளை முறையாகத் திருப்பி செலுத்திய உறுப்பினர்களுக்கு அபராத வட்டி செலுத்துவதினின்று சலுகை	23,586	4.51
2.	சிறு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு, 31.3.88 தேதியில் நிலுவையிலிருந்த நடுத்தர கால பயிர் கடன் தொகையினை முறையாகத் திருப்பி செலுத்தியதற்கான சலுகை	1,731	6.22
3.	1.7.1975 முதல் 31.3.1980 முடிய நடுத்தர கால பயிர்க்கடனை சிறு விவசாயிகள் திருப்பிச் செலுத்தியதற்கான சலுகை	3,279	15.12
4.	31.12.1980 அன்று, நிலுவையிலிருந்த கடன்களைத் திருப்பிச் செலுத்தியதற்காக சிறு மற்றும் பெரிய விவசாயிகளுக்கு வட்டிச் சலுகை	44,437	41.72
5.	நடுத்தர கால பயிர்க்கடன்களில், வட்டி வீதத்தில் குறைப்பு	9,021	0.25
6.	சிறு விவசாயிகள் முறையாகக் கடன் தொகையினைத் திருப்பிச் செலுத்தியமைக்கு 2 விழுக்காடு, குறைப்பு	12,833	1.57
7.	(அ) தற்போதைய வட்டி சலுகைபெறத் தகுதியான விவசாயிகளின் எண்ணிக்கையும் 31.3.1986 அன்று நிலுவையிலிருந்த கடன் தொகையும்	27,495	60.22
	(ஆ) 1.7.1985 முதல் 31.3.1986 முடிய கடன் தொகையினை முழுமையாகத் திருப்பிச் செலுத்தியவர்களுக்கு தொகையைத் திருப்பியளிப்பதன் மூலம் வட்டி சலுகை	16,107	22.82

நவம்பர், 30, 1988 அன்று, மாவட்டத்தில், 11 வேளாண் வங்கிகளும் இரண்டு வேளாண் மக்கள் பணிச் சங்கங்களும், 102 தொடக்கக் கூட்டுறவு வங்கிகளும், ஒரு மலைவாழ் மரபினரின் சங்கமும் இயங்கி வந்தன. நவம்பர், 30, 1988 அன்று, தொடக்கக் கூட்டுறவு வங்கிகளின் மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கை 2,19,042 ஆகும்[38]. அவற்றில் கடன் பெறும் உறுப்பினர்கள் 10,546 ஆவர்.

இவ்வங்கிகள் அவர்களது வலையமைவில், நலிந்த பிரிவினரை இணைத்து உதவிகளளிப்பதில் கண்ணும் கருத்துமாயுள்ளன. நவம்பர், 30, 1988 அன்று தொடக்கக் கூட்டுறவு வங்கிகளில், 15,627 அட்டவணையிற் சேர்க்கப்பட்ட மலை வாழ் மரபினரும் உறுப்பினர்களாக இருந்தனர். அவர்களுடைய இயங்கு முறை முதலீட்டுப் பங்கு 10,498 ஆக இருந்தது.

நில வள வங்கி[39]

மாவட்டத்தில் ஐந்து தொடக்க நில வள வங்கிகள் இயங்கி வருகின்றன. கடன் வழங்குவதற்கான நிதியினை நில வள வங்கிகள் அவைகளது தலைமை வங்கியான சென்னையிலுள்ள தமிழ்நாடு மாநில கூட்டுறவு நிலவள வங்கியிடமிருந்து பெருகின்றன.

தொடர் எண்.	தொடக்க நிலவள வங்கியின் பெயர்	1.7.87 முதல் 30.6.88 முடிய கேட்பு	1.7.87 முதல் 30.6.88 முடிய வசூல்	30.6.88 அன்று பாக்கி	பாக்கித் தொகைக் கான விழுக்காடு
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
			(ரூபாய் இலட்சத்தில்)		
1.	அகஸ்தீஸ்வரம்	27.97	14.25	13.72	49.1
2.	முஞ்சிரை	18.07	12.81	5.26	34.6
3.	தோவாளை	21.47	9.71	11.76	54.8
4.	தக்கலை	38.26	21.66	16.60	43.4
5.	திருவட்டார்	11.39	6.87	4.52	39.7
	மொத்தம்	117.16	65.30	51.86	44.3

ஜூன், 30, 1988 நாளன்று, இவ்வங்கிகளின் நிலுவை நிலை, 34 விழுக்காட்டிலிருந்து 35 விழுக்காடுவரை இருந்தது. பல திட்டங்கள், ஊரக வளர்ச்சி தேசிய வங்கியினால், நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. மறு நிதியுதவி நில வளத்திற்காகவேயளிக்கப்படுகிறது. அதே போன்று, திட்டங்களும் நிலவளத்தைச் சார்ந்தவையே. சில வணிகப் பயிர்களை சாகுபடிசெய்வதற்காகவும் நிதியுதவியளிக்கப்படுகிறது[40].

மறு நிதியுதவி வாய்ப்பு நலங்கள்

ஊரக வளர்ச்சி தேசிய வங்கி மற்றும் இந்திய தொழில் வள வங்கி,

ஆகிய இரண்டும், ஆதாரத்தை வளப்படுத்தும் இரண்டு மறு நிதியுதவி நிறுவனங்களாகும். ஊரக வளர்ச்சி தேசிய வங்கி, வேளாண்மை, வேளாண்மை சார்புள்ள தொழில்கள் மேற்கொள்வோர், மற்றும் கிராமக் கைவினைஞர்கள் ஆகியோருக்குக் கடன் வழங்குவதற்கு மறு நிதியுதவியளிக்கிறது. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி செயல்முறை ஏற்பாடுகளின் கீழான தகுதியுள்ள திட்டங்களுக்கு 90 விழுக்காடுவரை மறு நிதியுதவியளிக்கப்படுகிறது. ஊரக வளர்ச்சி தேசிய வங்கிகள், வங்கித் தொழில் திட்டங்களை ஏற்றுக்கொண்டு, பங்கேற்கும் வங்கி களனைத்திற்கும், மறுநிதியுதவியளிக்கின்றன[41].

சேமிப்பு வாய்ப்பு நலங்கள்

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள 117 வேளாண் பணி கூட்டுறவு சங்கங்களில், 97 சங்கங்கள், அவற்றிற்குச் சொந்தமான கிடங்குகளை வைத்துள்ளன. அவற்றின் தோராய சேமிப்புக்கொள்ளளவு 13,151 மெட்ரிக் டன்னாகும்.

கூட்டுறவு அச்சகம்

தக்கலையில் ஒரு கூட்டுறவுச் சங்கம் உள்ளது. அது பணியாற்றும் பகுதி கன்னியாகுமரி மாவட்ட முழுமையுமாகும். ஜூன் 10,1988 அன்றைய நிலைப்படி,366 'அ' வகுப்பு உறுப்பினர்களும் 7 'ஆ' வகுப்பு உறுப்பினர்களும் சங்கத்தில் பதிவு பெற்றவராவர். அவர்களது, செலுத்தப்பட்ட பங்கு முதலீடு ரூபாய் 2,21,085/- ஆகும்.

ஜூன் 10, 1976 முதல், ஒரு கூட்டுறவு துணைப் பதிவாளர், கூட்டுறவு அச்சகத்தின் தனி அலுவலராகப் பணியாற்றி வருகிறார். சங்கம் இரண்டு விற்பனைக் கிடங்குகளைத் திறந்திருக்கிறது. ஒன்று நாகர்கோவிலிலும், மற்றொன்று மார்த்தாண்டத்திலும் இயங்கி வருகின்றன. மாவட்டத் திலுள்ள பல்வேறு கூட்டுறவு சங்கங்களின் அச்சுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய இவை நிறுவப்பட்டுள்ளன.

கடந்த 3 ஆண்டுகளில் தொழிலில் கிடைத்த தொகை, ஈட்டிய இலாபம் ஆகிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன[42]:

ஆண்டு	*தொழிலில் கிடைத்த தொகை (ரூபாய்)*	*ஈட்டிய இலாபம் (ரூபாய்)*
1985-86	14,00,000	43,000-00
1986-87	14,26,000	53,000-00
1987-88	13,69,545	86,929.19

நீண்டகால கடன்கள் வழங்குதல்

இம்மாவட்டத்தில் ஐந்து தொடக்க நில வள வங்கிகள் இயங்கி வருகின்றன. கடந்த மூன்று ஆண்டுகளில் அவை வழங்கிய நீண்ட கால கடன் விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன:

தொடர் எண்.	நிலவள வங்கியின் பெயர்	வழங்கப்பட்ட கடன்தொகை (ரூ. இலட்சத்தில்)		
		1985–86	1986–87	1987–88
1.	அகஸ்தீஸ்வரம் நிலவள வங்கி	10.16	12.64	16.45
2.	தோவாளை நிலவள வங்கி	10.44	8.74	13.17
3.	தக்கலை	19.21	15.57	21.77
4.	முஞ்சிறை	8.69	10.80	10.80
5.	திருவட்டார்	12.23	12.34	20.03
	மொத்தம்	60.73	60.09	82.22

விற்பனை

மாவட்டத்தில், மூன்று பொது கூட்டுறவு விற்பனை சங்கங்களும், 9 காய்கறி பயிரிடுவோர் கூட்டுறவு விற்பனை சங்கங்களும், இயங்கி வருகின்றன. அவற்றால் விற்பனை செய்யப்பட்ட வேளாண் பொருட்கள் விவரம் கீழே அளிக்கபட்டுள்ளன[43]:

	1985-86	1986-87	1987-88
		(ரூபாய் இலட்சத்தில்)	
விற்பனை செய்யப்பட்ட விளை பொருட்கள்	73.6	81.28	68.84

கல்குளம் கூட்டுறவு விற்பனைச் சங்கம், (விளவங்கோடு வட்டம்) ஒரு பழம் பதனிடும் அலகும், ஒரு மரவள்ளி பதனிடும் அலகும் இயங்கி வருகிறது. இவற்றின் ஆண்டு உற்பத்தி 120 மெட்ரிக் டன்களாகும்.

பழம் பதனிடும் அலகு

1985-86 ஆம் ஆண்டின் உற்பத்தி 70.81 மெட்ரிக் டன்களாகும். 1986-87 ஆம் ஆண்டில், பதனிடப்பட்டவை 52.18 மெட்ரிக் டன்களாகும், 1987-88 ஆம் ஆண்டில் அது 47.34 மெட்ரிக் டன்களாக இருந்தது.

மரவள்ளி பதனிடும் அலகு

1985-86 ஆம் ஆண்டு, உற்பத்தி 44.36 மெட்ரிக் டன்களாக இருந்தது. 1986.87 ஆம் ஆண்டு, உற்பத்தி 48.58 மெட்ரிக் டன்களானது; 1987-88-ல், 38.96 மெட்ரிக் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டன.

காய்கறி உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கங்கள்

ஒன்பது காய்கறி உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கங்கள், மாவட்டத்திலுள்ள 902 மதிய உணவு மையங்களுக்கு காய்கறிகளை வழங்கி வருகின்றன. 1985-86ஆம் ஆண்டில் 19.95 இலட்ச ரூபாய் மதிப்புள்ள காய்கறிகளும், 1986-87 ஆம் ஆண்டில், 18.23 இலட்ச ரூபாய் மதிப்புள்ள காய்கறிகளும் இவை வழங்கியுள்ளன. 1987-88 ஆம் ஆண்டில் அவை மதிய உணவு மையங்களுக்கு வழங்கிய காய்கறிகளின் மதிப்பு ரூபாய் 16,14 இலட்சமாகும்.

நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள்

இந்த மண்டலத்தில், 18 தொடக்கக் கூட்டுறவு சங்கங்கள் இயங்கி வருகின்றன. சேர்க்கப்பட்ட உறுப்பினர்கள், பங்கு முதலீடு, சேமிப்புத் தொகை வசூல், 1986-88 ஆம் ஆண்டு விற்பனை செய்யப்பட்ட கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் கட்டுப்பாடற்ற பொருட்கள் ஆகியவற்றின் விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ள:

கடைகளின் எண்ணிக்கை	உறுப்பினர்களின் எண்ணிக்கை	பங்குத் தொகை	கட்டுப்பாடு விதிக்கப்பட்ட பொருள்கள் விற்பனை	கட்டுப்பாடற்ற பொருள்கள் விற்பனை	நட்டம்		இலாபம்	
					சங்கங்களின் எண்ணிக்கை	தொகை	சங்கங்களின் எண்ணிக்கை	தொகை
			(ரூபாய் இலட்சத்தில்)					
18	7139	3.71	240.80	117.71	10	3.34	8	1.86

இந்த மண்டலத்தில், 171 மாணவர் கூட்டுறவு சங்கங்கள் இயங்கி வருகின்றன. சங்கங்களின் உறுப்பினர்களது எண்ணிக்கை, பங்குத் தொகை, விற்பனை, நட்டம் மற்றும் இலாபம் ஆகிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன[44]:

சங்கங்களின் எண்ணிக்கை	உறுப்பினர்களின் எண்ணிக்கை	பங்குத் தொகை	விற்பனைத் தொகை	நிதி நிலை விளைபயன்			
				இலாபம்		நட்டம்	
				சங்கங்களின் எண்ணிக்கை	தொகை (ரூபாய் இலட்சத்தில்)	சங்கங்களின் எண்ணிக்கை	தொகை
171	5705	2.01	22.91	105	0.72	66	1.08

கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு மொத்த விற்பனை சங்கமென்ற, ஒரு கூட்டுறவு மொத்த விற்பனை சங்கம் நாகர்கோவிலில்

இயங்கிவருகிறது. அது வழிகாட்டு முதன்மை சங்கமாகப் பணியாற்று கிறது. அது, கோதுமை, மைதா, ரவை மற்றும் பாமாலின் போன்ற இன்றியமையாப் பொருட்களை இணைப்பு சங்கங்களுக்கு வழங்கு கிறது. அது நாகர்கோவிலில் பகவதி பல்வகைப் பொருள் சங்கத்தை நடத்துகிறது. அது தவிர, மார்த்தாண்டத்திலும், திட்டுவிளையிலும் சிறிய பல்வகைப் பொருள் சங்கங்களை நடத்துகிறது அது ஒரு விற்பனைப் பணி அலகினையும் நடத்திவருகிறது.

கடந்த 3 ஆண்டுகளில், இச்சங்கத்தின் கொள்முதல் மற்றும் விற்பனை ஆகிய விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன:

ஆண்டு	*கொள்முதல் (ரூபாய் இலட்சத்தில்)*	*விற்பனை*
1985-86	328.25	342.56
1986-87	355.35	385.01
1987-88	568.06	601.71

தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி லிமிடெட்

மாநிலத்திலுள்ள தொழில் கூட்டுறவு நிறுவனங்களை முடுக்கி விட்டு, கிராமப்புறம் மற்றும் ஓரளவு நகர்ப்புறமாக மாறிவிட்ட பகுதிகளில், வேலைவாய்ப்பினை ஏற்படுத்த, அம்மாதிரியான தொழில் கூட்டுறவு நிறுவனங்களின் நிருவாகக் கட்டுப்பாடு, 1956 ஆம் ஆண்டு, தொழில்கள் மற்றும் வாணிகத்துறையின் கீழ் கொணரப்பட்டது.

இந்த தொழில் கூட்டுறவு நிறுவனங்களுக்கும், இவற்றிற்கு நிதி வழங்கும் கூட்டுறவு நிறுவனங்களுக்குமிடையே நீண்ட இடைவெளி காணப்பட்டது. மாநில அரசின் சுமையைக் குறைத்திடு முகத்தான் இந்த தொழில் கூட்டுறவு நிறுவனங்களின் கடன் தேவையைப் பூர்த்தி செய்ய, மைய அரசின் தொழில் நடைமுறைக்குழு, ஒரு தனி நிதி நிறுவனத்தை உருவாக்கப் பரிந்துரை செய்தது. தொழில் கூட்டுறவு வங்கியை நிறுவ சூழ்நிலை சாதகமாக அமைந்ததால், தொழில் கூட்டுறவு வங்கியை நிறுவவும், அதில், மாநில அரசின் கூட்டுப் பங்காண்மைக்கும் மைய அரசு கொள்கையளவில் ஒப்புதலளித்தது. இந்த பின்னணியில்தான் "டைகோ பாங்க்" என அழைக்கப்படும் தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி, உருவாகியது. வங்கி செப்டம்பர் 13, 1961-ல் பதிவு செய்யப்பட்டு, 1962 நவம்பர் மாதம் இயங்கத்துவங்கியது.

அமைப்பு முறை

"டைகோபாங்க்"கின் அமைப்புமுறை தனித்தன்மை வாய்ந்ததும், அகன்று, விரிந்த ஆதார நிலையுடையதுமாகும். அது, ஊரக வளர்ச்சி தேசிய வங்கியால் பாகுபாடு செய்யப்பட்ட பல்வேறு பல நோக்கு

தொழில் நிறுவனங்களுக்கு நிதியுதவியளிக்கிறது. "டைகோபாங்க்" கினால் நிதியுதவிபெறும், தொழில் கூட்டுறவு நிறுவனங்கள் கீழே வகைப்படுத்தப்பட்டுள்ளன:

1) சிறுதொழில் நிறுவனங்கள்
2) கயிறு தொழிற்சாலைகள்
3) கைவினைப்பொருட்கள் தொழிற்சாலைகள்

உள்ளமைப்பு வாய்ப்பு நலங்கள்

வேளாண் பணியல்லாத இதர தொழில்களுக்கு, தனித்தன்மை வாய்ந்த உள்ளமைப்பு வாய்ப்பு நலங்களை மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கும், வாணிக வங்கிகளுக்கும், "டைக்கோபாங்க்" அளிக்கிறது.

அவையாவன:

அ) திட்டத்தினை வடிவமாக்குவதிலும், நடைமுறைப்படுத்துவதிலும், மாநில தொழில் துறைக்கு, தொழில் நுட்பம் சார்ந்த சிறப்புபதிவாளராகத் திகழ்தல்;

ஆ) பல்வேறு விற்பனைக் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் பணிக்கூட்டுறவு சங்கங்கள் ஆகியவற்றுடன், தொழிற்துறை இயக்கத்தின் தொழில் கூட்டுறவு அலகிலுள்ள விற்பனை ஆதரவினை அளித்தல்;

இ) இயக்கத்திலேயே "விலை மற்றும் வேறுபாடு" ஆய்வு மேற்கொள்ளுதல் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களின் ஆண்டு நிதி மதிப்பீட்டில் பங்கு கொள்ளுதல்;

ஈ) தொழில் மற்றும் வாணிகத்துறை இயக்கத்தினின்றும், மெழுகு, கந்தகம், சிமெண்ட், கரி, சுட்ட நிலக்கரி, இரும்பு, எஃகு மற்றும் பாலித்தீன் சிறு மணிகள் ஆகிய மூலப்பொருட்களை வழங்குதல்; மற்றும்

உ) தரக்கட்டுப்பாட்டிற்கான இயந்திர நுணுக்கம்.

நிருவாக அமைப்பு

வங்கியின் நிருவாகம், தொழில் மற்றும் வாணிகத்துறை இயக்குநர் மற்றும் தொழில் கூட்டுறவுப் பதிவாளர் ஆகியோரால் நியமிக்கப்பட்ட நிருவாகக் குழுவினிடம் ஜூன், 13, 1976 வரை ஒப்படைக்கப் பட்டிருந்தது. அதன் பின்னர், வங்கியின் நடைமுறைப் பணிகள், ஒரு தனி அலுவலரால் மேற்பார்வை செய்யப்பட்டு வருகின்றன. வங்கியின் தனி அலுவலருக்கு முக்கிய கொள்கை ரீதியான பணிகளிலும், வங்கியின் தொழில் சார்ந்த ஏனைய சிறப்புப்பணிகளிலும், வழிகாட்டவும், அறிவுரை வழங்கவும் தொழில் மற்றும் வாணிகத்துறை இயக்குநர் - தொழிற்துறை ஆணையர், மற்றும் தொழில் கூட்டுறவு சங்கங்களின் இயக்குநர் ஆகியோரால் மத்திய அரசின் முதன்மையான

நிறுவனங்களின் பிரதிநிதிகளடங்கிய ஒரு ஆலோசனைக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

கிளைகள்

சென்னையிலுள்ள தனது தலைமை அலுவலகம் தவிர கீழ்க்கண்ட இடங்களில் "டைகோபாங்க்" தனது கிளை வங்கிகளை இயக்கி வருகிறது.

1) கூனூர் (நீலகிரி மாவட்டம்)
2) கோவில்பட்டி (வ.உ.சிதம்பரனார் மாவட்டம்)
3) சாத்தூர் (காமராசர் மாவட்டம்)
4) மதுரை (மதுரை மாவட்டம்)
5) திருச்சிராப்பள்ளி (திருச்சிராப்பள்ளி மாவட்டம்)
6) சேலம் (சேலம் மாவட்டம்)
7) சென்னை (600 005) சேப்பாக்கத்தில் ஒரு தொழிலிட முகப்பு (சென்னை மாநகரம்)
8) வேலூர் (வேலூர்-அம்பேத்கார் மாவட்டம்)
9) நாகர்கோவில் (கன்னியாகுமரி மாவட்டம்)

வங்கியின் தலைமை அலுவலகத்தில், தொழில் கூட்டுறவுத் துறையைச் சார்ந்த, தொழில் மற்றும் வாணிகத்துறை துணை இயக்குநர் நிலையில் ஒரு பொது மேலாளரும், வங்கி நிலையிலிருந்து ஒரு துணைப் பொது மேலாளரும், நிருவாகத்தை மேற்பார்வை செய்து வருகிறார்கள். கிளைகளை, கிளை மேலாளர்கள் மேற்பார்வை செய்து வருகிறார்கள். நாகர்கோவில் கிளை, கடந்த டிசம்பர், 23, 1987 ஆம் நாளன்று, கன்னியாகுமரி மாவட்ட முந்தைய ஆட்சித்தலைவர், திரு.சையத் முனிர் கோதா, ஐ.ஏ.எஸ் அவர்களால், தொடங்கிவைக்கப்பட்டது.

வளர்ச்சி

துவக்க காலத்தில் மிகவும் எளிய முறையில் தொடங்கப்பெற்ற தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி, கடந்த 26 ஆண்டுகளில், பல்வேறு வகையான வங்கிநடை முறைகளிலும் முன்னேறியுள்ளது.

இவ்வாறாக, மாநிலத்திலுள்ள அனைத்து தொழில் கூட்டுறவு நிறுவனங்களுக்கும், அவற்றிற்குத் தேவையுள்ள நிலையான முதலீடு, மற்றும் செயற்பாணி முதலீடு ஆகியவற்றிற்கான நிதியுதவியினை இவ்வங்கி அளிக்கிறது.

தொழிற்துறைக்கு தாராள நிதியளிக்க வேண்டுமென்ற அரசின் கொள்கையைக் கருத்திற்கொண்டு, இவ்வங்கி, தொழில் கூட்டுறவு நிறுவனங்களின் மூலம், கிராமக் கைத்தொழில் கூடங்கள் மற்றும் சிறு அளவிலான தொழிற்சாலைகள் ஆகியவற்றின் வளர்ச்சிக்குக்

குறிப்பிடத்தக்க வகையில் தனது பங்கினை அளிக்கிறது.

வங்கியின் வளர்ச்சியைப் பொறுத்தவரையில், ஜூன், 30, 1988 தேதிய நிலையில் நோக்குங்கால், 1971ஆம் ஆண்டிலிருந்த நிகரப்பங்கு முதலீட்டுத் தொகை ரூ. 46.66 இலட்சத்திலிருந்து 296 இலட்ச ரூபாயாக உயர்ந்துள்ளது. ஒதுக்கீட்டு நிதியும், மற்ற ஒதுக்கீடுகளும், 1971ஆம் ஆண்டிலிருந்து 11.47 இலட்ச ரூபாயிலிருந்து, ஜூன், 30, 1988ல், 222.22 இலட்ச ரூபாயாக உயர்ந்துள்ளது. 1971ஆம் ஆண்டிலிருந்த சேமிப்புத் தொகை 46.61 இலட்ச ரூபாய், ஜூன், 30, 1988-ல் 546.27 இலட்ச ரூபாயாக உயர்ந்துள்ளது. அதேபோன்று, வழங்கப்பட்ட கடன்களும், முன் பணங்களும் 1971 ஆம் ஆண்டு 124.51 இலட்ச ரூபாயாக இருந்தன. ஜூன், 30, 1988 தேதியில், இவை 1081.52 இலட்ச ரூபாயாக அதிகரித்துள்ளன.

வாணிக வங்கியில், வழங்கிவரும் வட்டித் தொகையை விட 1/2 விழுக்காடு, அதிகமாக வழங்கிட, இந்திய ரிசர்வ் வங்கி, "டைகோ" வங்கிக்கு அனுமதி அளித்துள்ளது.

பயனடைந்து வரும் சங்கங்களின் எண்ணிக்கையும் படிப்படியாக உயர்ந்துள்ளது.

வங்கியின் செயற்பணி

தொழிற்துறை இயக்குநரின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும், தொழில் கூட்டுறவு சங்கங்களுக்கு, "டைகோ" வங்கி, கீழ்க்குறிப்பிட்ட வகையான நிதியுதவிகளை அளிக்கிறது.

அ) பருவகாலக்கடன்
ஆ) ரொக்க சில்லரைக்கடன்
இ) காசோலை மற்றும் பட்டியல் தொடர்பான கழிமானம்
ஈ) குளிர்பதன பெட்டி
உ) மூலத் தொழில் கடன்; மற்றும்
ஊ) வங்கி பொறுப்புறுதியளித்தல்

இன்றைய தேதியில், 458 சங்கங்கள் இவ்வங்கியின் உறுப்பினர்களாக உள்ளன. அவற்றில், 237 சங்கங்கள், வங்கியிலிருந்து நிதி உதவி பெற்றுள்ளன. பருவகாலக்கடன்கள், தனி மொத்த முதலீட்டுத் தேவையினைப் பூர்த்தி செய்யவும், ரொக்க சில்லரைக் கடன்கள் செயற்பாணி முதலீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், இவ்வங்கியால் உறுப்பினர் சங்கங்களுக்கு வழங்கப்படுகின்றன.

கடன்கள் மற்றும் முன் பணங்கள் ஆகியவற்றிற்கு இவ்வங்கி நிர்ணயித்துள்ள வட்டி வீதம் பின்வருமாறு:

பருவகால கடன்		*ரொக்க சில்லரைக்கடன்*	
அ) 5 இலட்ச ரூபாய் வரையில்	13.5 விழுக்காடு	அ) 5 இலட்ச ரூபாய் மற்றும் அதற்குள்ளாக	14 விழுக்காடு
ஆ) 5 இலட்ச ரூபாய்க்கு மேல்	14.5 விழுக்காடு	ஆ) 5 இலட்ச ரூபாய்க்கு மேல் 10 இலட்சம் ரூபாய் மற்றும் அதற்குள்ளாக	14.5 விழுக்காடு
		இ) 1) 10 இலட்ச ரூபாய்க்கு மேல்:	
		2) சமுதாயத்தின் நலிந்த பிரிவினருக்கு 5 இலட்சம் ரூபாய் வரை	8 விழுக்காடு

மாநில அரசின் உதவி

இவ்வங்கிக்கு, தமிழ்நாடு அரசு, கீழ்க்கண்டவாறு, நிதியுத வியினை அளித்துள்ளது:

(ரூபாய் இலட்சத்தில்)

1)	வங்கியின் பங்கு முதலீட்டுத் தொகையின் மாநில அரசின் பகுதி	193.30
2)	வங்கியால், உறுப்பினர்களிடமும், பொது மக்களிடமும், பெறப்பட்டுள்ள நிலையான வைப்புத்தொகை, தனி பருவ கால வைப்புத் தொகை ஆகியவற்றை, வட்டியும், முதலுமாகத் திருப்பி அளிக்க, வங்கியின் சார்பில் அரசு அளித்துள்ள பொறுப்புறுதி	500.00
3)	சென்னை 2, அண்ணாசாலை, இந்திய ஸடேட் வங்கியிடமிருந்து, தனி ரொக்க-சில்லரைக் கடனைத் திருப்பிச்செலுத்த, வங்கியின் சார்பில், அரச அளித்துள்ள பொறுப்புறுதி	20.00
4)	வழிவகைகள்-முன்பணம்	110.00

வழி வகை முன்பணத்தைப் பொறுத்த மட்டில், வங்கி இதுகாறும் 95 இலட்ச ரூபாய் செலுத்தியுள்ளது. எஞ்சிய 15 இலட்ச ரூபாயை திருப்பிச் செலுத்த வேண்டியுள்ளது.

பட்டியல்-1

தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி, நாகர்கோவில் கிளை, கன்னியாகுமரி மாவட்டம்.

ஜூலை 31, 1988 நிலையில் நிலுவையிலிருந்த ரொக்க சில்லரைக்கடன் விவரங்கள்

தொடர் எண்.	சங்கத்தின் பெயர்	ஒப்புதலளித்து வழங்கப்பட்ட வரம்பு (ரூபாய்)	முடிவுறும் நாள்	31.7.88 தேதிப்படி முடிவில் மிச்சக் கையிருப்பு (ரூபாய்)
(1)	(2)	(3)	(4)	(5)
1.	கன்னியாகுமரி சிறிய அளவில் தீக்குச்சி உற்பத்தி செய்வோர் தொழில் கூட்டுறவு சங்கம்	5,50,000	31.3.1989	6,96,028-14
		3,50,000	31.12.1988	34,752-86
2.	நாகர்கோவில் குடை உற்பத்தியாளர் தொழில் கூட்டுறவு சங்கம் லிமிடெட்	75,000	31.7.1988	34,752-86
	- & - (தனி ரொக்க சில்லரைக்கடன்)	60,000	30.9.1988	இல்லை
3.	நாகர்கோவில் உலோக வார்ப்பு-உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட்	50,000	31.3.1989	49,811-45
4.	கன்னியாகுமரி தொழில் கூட்டுறவு அச்சகம்	75,000	31.12.1988	70,095-19
5.	கன்னியாகுமரி மாவட்ட மத்திய கயிறுத் தொழில் உற்பத்தியாளர் சங்கம் லிமிடெட்	5,00,000	30.9.1988	4,96,110-72

பட்டியல்-1-தொடர்ச்சி

தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி, நாகர்கோவில் கிளை, கன்னியாகுமரி மாவட்டம்.

ஜூலை 31, 1988 நிலையில் நிலுவையிலிருந்த ரொக்க சில்லரைக்கடன் விவரங்கள்

(1)	(2)	(3)	(4)	(5)
6.	பொறியாளர்கள் தொழில் கூட்டுறவு சங்கம் லிமிடெட்	1,50,000	30.6.1988	1,46,472-56
7.	முன்னாள் இராணுவத்தினர் கூட்டுறவுப் பொறியியல் பணிகள் லிமிடெட் (சிமெண்ட்)	70,000	31.3.1989	51,221-21
	உதிரி பாகங்கள்	30,000	31.3.1989	8,975-90
8.	முகிலங்குடியிருப்பு தென்னை நார்-தொழில் கூட்டுறவு சங்கம்	1,00,000	31.3.1989	50,705-15
		20,10,000		5,50,000-00
1.	**பருவ காலக்கடன்**			
1.	கன்னியாகுமரி தொழில் கூட்டுறவு அச்சகம்			16,10,173-18
2.	கன்னியாகுமரி தொழில் கூட்டுறவுத்தொழிற்சாலை			21,261-00

(தனி அலுவலர், தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி, சென்னை, அறிக்கை நாள் 21-9-1988)

நிதிகளுக்கான ஆதாரம்

தொழில் கூட்டுறவு சங்கங்களின் முழுமொத்த நிலையான முதலீடு மற்றும் செயற்பாணி முதலீடு ஆகியவற்றிற்கு, நிதியுதவியளித்திட மிகப்பெரிய அளவுத் தொகை இவ்வங்கிக்குத் தேவைப்படுகிறது.

ஜூன், 30, 1988 அன்றைய நிலைப்படி, கீழ்க்குறிப்பிட்ட நிதி ஆதாரங்களினின்றும், 1048.10 இலட்ச ரூபாய் இவ்வங்கி திரட்டியுள்ளது.

(ரூபாய் இலட்சத்தில்)

1.	உறுப்பினர்-சங்கங்களால் செலுத்தப்பட்ட பங்கு முதலீட்டுத் தொகை	102.70
2.	அரசினால் செலுத்தப்பட்டுள்ள பங்கு முதலீட்டுத் தொகை	193.30
3.	அரசுக்கடன்	15.00
4.	தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியிடமுள்ள ரொக்க சில்லரைக்கடன்	190.83
5.	சேமிப்பு வைப்புத் தொகைகள் (சேமிப்புக் கணக்கு, நடப்புக் கணக்கு, வட்டி சேர்ந்து, தொடர்ந்து வருகிற சேமிப்பு, ரொக்கச் சான்றுகள் முதலியவை)	546.27
	மொத்தம்	1048.10

தொழில் மற்றும் வாணிகத்துறை இயக்குநரின் நிருவாகக் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிற தொழில் கூட்டுறவு சங்கங்களுக்கு, இவ்வங்கி, கடனுதவி அளித்து வருகிறது. ரொக்க சில்லரைக்கடன், செயற்பாணி முதலீட்டுக் கடன் முழுமொத்த நிலையான முதலீடு, காசோலை-பட்டியல் கழிமானம், மூலப் பொருள், ஆகியவற்றிற்கான கடன்களை இவ்வங்கி, தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கி வருகிறது. தகுதியான இனங்களில், நிபந்தனைகளுக்குட்பட்டு, சலுகை பெறும் சங்கங்களுக்கு உரிமையாணையின் கீழ் கடன் வழங்கும் பொறுப்பினை ஏற்றுக்கொள்கிறது.

ஜூலை 31, 1988 நிலைப்படி, நாகர்கோவில் கிளையின் சேமிப்புத் தொகை ரூபாய் 8,71,864,80 ஆகும். கன்னியாகுமரி மாவட்டத்தில் 13 தொழில் கூட்டுறவு சங்கங்கள் உறுப்பினர்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றில், ஒன்பது தொழில் கூட்டுறவு சங்கங்களுக்கு வங்கி நிதியுதவியளித்துள்ளது.

பட்டியல் - 2

தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி லிமிடெட், நாகர்கோவில் கிளை, ஜூலை 31, 1988 தேதியன்று வைப்புத் தொகையின் நிலை

		ரூ. பை.
அ)	நிலையான வைப்புத் தொகை - தனியார்	15,250.00
	நிலையான வைப்புத் தொகை - சங்கங்கள்	1,01,825.00
ஆ)	குறுகிய கால வைப்புத்தொகை - தனியார்	1,000.00
	குறுகியகால வைப்புத்தொகை - சங்கங்கள்	1,52,309.50
இ)	பணியாளர்களின் பிணைவைப்புத்தொகை-சங்கங்கள்	1,200.00
ஈ)	தொடர்ந்து சேரும் இயல்புடைய வைப்புத்தொகை - தனியார்	45,785.00
உ)	சேமிப்பு வங்கிக்கணக்கு-தனியார்	29,546.11
	சேமிப்பு வங்கிக்கணக்கு சங்கங்கள்	4,68,288.01
ஊ)	நடப்புக் கணக்கு ஏனையோர்	1,000.00
	நடப்புக் கணக்கு சங்கங்கள்	26,561.18
எ)	தவணை முற்றிய நிலையான வைப்புத் தொகை-ரொக்கச்சான்று-தனியார்	29,100.00
		8,71,864.80

(தனி அலுவலர், தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி, சென்னை, அறிக்கை நாள் 21.9.1988)

பட்டியல்-3

தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி லிமிடெட்

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள சங்கங்களினின்று கிடைக்கப் பெற்ற பங்குத் தொகை விவரம்

1.	கன்னியாகுமரி தொழில் கூட்டுறவு அச்சகம்	5,800.00
2.	கன்னியாகுமரி தொழில் கூட்டுறவு இரப்பர் தொழிற்சாலை	40,000.00
3.	கன்னியாகுமரி சிறிய அளவில் தீக்குச்சி உற்பத்தி செய்வோர் தொழில் கூட்டுறவு சங்கம் லிமிடெட்	60,000 00
4.	நாகர்கோவில் குடை தயாரிப்பாளர் தொழில் கூட்டுறவு சங்கம் லிமிடெட்	9,300 00

5.	நாகர்கோவில் உலோக வார்ப்பு உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட்	10,200 00
6.	கன்னியாகுமரி மாவட்ட மத்திய கயிறுத்தொழில் உற்பத்தியாளர் சங்கம் லிமிடெட்	35,000 00
7.	பொறியாளர்கள் தொழில் கூட்டுறவு சங்கம் லிமிடெட், கோணம்	8,800 00
8.	முன்னாள் இராணுவத்தினர் கூட்டுறவு பொறியியல் பணிகள் லிமிடெட்	15,700 00
9.	முகிலங்குடியிருப்பு தென்னை நார்-தொழில் கூட்டுறவு சங்கம்	10,000 00
10.	கன்னியாகுமரி சிமிண்ட்கிராதி உற்பத்தியாளர் சங்கம் லிமிடெட்	8,500 00
11.	கன்னியாகுமரி மாவட்ட ஆதி திராவிடர்-பெரிய செங்கல் தயார் செய்யும் பணியாளர்கள்-தொழில் கூட்டுறவு சங்கம் லிமிடெட்	100 00
12.	கன்னியாகுமரி மரக்கைவிளைஞர்கள் தொழிற் கூட்டுறவு சங்கம் லிமிடெட்	5,000 00
13.	நாகர்கோவில், மணி செய்யும் உலோகப் பணியாளர்கள் தொழில் கூட்டுறவு சங்கம்	2,500 00
	மொத்தம்	2,10,900 00

(தனி அலுவலர், தமிழ்நாடு தொழில்கூட்டுறவு சங்கம், சென்னை அறிக்கை நாள் 21.9.1988)

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக்கழகம் லிமிடெட் ("டிக்")

மாநிலத்தில் தொழிற்துறை வளர்ச்சியடையுமுகத்தான் கம்பெனிகள் சட்டப்படி 1949 ஆம் ஆண்டு ஒரு கம்பெனியாக, தமிழ்நாடு, தொழில் முதலீட்டுக்கழகம் நிறுவப்பட்டது. நிலையான சொத்துக்களை உருவாக்கிட, சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில் நிறுவனங்களுக்கு, நிதியுதவியளிக்கிறது. ஒவ்வொரு அண்டும், 4000 முதல் 5000 வரை கடன்களை வழங்குகிறது. இக்கடன்கள் ரூபாய் 25,000/-லிருந்து, 60 இலட்ச ரூபாய் வரை வழங்கப்படுகின்றன. எப்படியும் ஒரு ஆண்டிற்கு 100 கோடி ரூபாய், இக்கழகம் கடன் வழங்கி வருகிறது.

புதுத்தொழிற்சாலைகள் உருவாக்குதல், இயங்கி வரும் தொழிற் சாலைகளை விரிவாக்குதல், பல்வகைப்படுத்துதல், புதுப்பித்தல் மற்றும் தற்கால வழிமுறையில் மாற்றி அமைத்தல் போன்றவற்றிற்காக, இக்கழகம் பல தொழில் நிறுவனங்களுக்கு நிதியுதவியளித்து வருகிறது.

எவ்வகையான தொழிற்கடன்களுக்கு இக்கழகம் நிதியுதவியளிக்கிற தென்ற பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது:

1. உணவுப்பொருள் தயாரிக்கும் தொழிற்சாலைகள்;
2. சர்க்கரைத் தொழிற்சாலைகள், சர்க்கரை மற்றும் உலோகத்தினைத் தூய்மைப்படுத்தும் தொழிற்சாலைகள்;
3. தாள்கள் மற்றும் தாள்களினால் தயாரிக்கப்படும் பொருட்கள் (அச்சடிப்பது, பிரசுரிப்பது உள்ளிட்ட) உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள்;
4. நெசவுத் தொழிற்சாலைகள்;
5. வேதியல் சார்ந்த பொருட்களும், அவற்றினின்று பல்வேறு பொருட்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள்;
6. பாறை எண்ணெய் மற்றும் கரி நீங்கலாக, ஏனைய உலோகக்கலப் பில்லாத கனிப்பொருட்களினின்றும் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள்;
7. மின் இயந்திரம் தவிர, ஏனைய இயந்திரங்கள் உற்பத்தி செய்தல்;
8. ஆதார உலோகத் தொழிற்சாலைகள்;
9. உலோகப் பொருட்கள் உற்பத்தி செய்தல்;
10. மின்சக்தி இயந்திரங்கள், ஆய்கருவிகள், துணைக்கருவிகள் மற்றும் ஏனைய வழங்கு பொருட்கள் உற்பத்தி செய்தல்;
11. போக்குவரத்து மற்றும் படைக்கலக்கருவிகள் உற்பத்தி செய்தல்;
12. உணவகங்கள் கட்டுதல்;
13. கற்குவாரி, புகையிலை, மரச்சாமான்கள், இரப்பர், இயங்கு படக்காட்சி, கல் எண்ணெய் மற்றும் நீரில் கலந்த குடிவகை ஆகிய (வேறிடத்தில் வகைப்படுத்தப்படாத) பல்வேறு தொழில் வகைகள்.

நாகர்கோவிலிலுள்ள தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் கிளை 1979-80 முதல் இயங்கி வருகிறது. மத்திய அரசின் 10 விழுக்காடு முதலீட்டு மானியத்திற்கு, அகஸ்தீஸ்வரம், கல்குளம், தோவாளை மற்றும் விளவங்கோடு ஆகிய நான்கு வட்டங்களுமே தகுதி பெற்றவை. இதுதவிர, சிறு தொழில் நிறுவனங்களுக்கான, மாநில அரசின் 15 விழுக்காடு மானியத்தைப் பெற, தோவாளை வட்டம் தகுதியுடையதாகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தை பொறுத்தவரை, உணவுப் பொருள் தயாரிக்கும் தொழிற்சாலைகள், தாள்கள் மற்றும் தாள்களினால் தயாரிக்கப்படும் பொருட்கள் (அச்சடிப்பது, பிரசுரிப்பது உள்ளிட்ட) உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள், வேதியல் சார்ந்த பொருட்களும் மற்றும் அவற்றினின்று பல்வேறு பொருட்களும் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள், உணவகங்கள், போக்குவரத்து மற்றும் மீன் பிடிக்கப் பயன்படும் பைவலை இழுப்புப்படகு உற்பத்தி தொழிற்சாலைகள் மற்றும் ஏனைய கற்குவாரி, மரச்சாமான்கள், இரப்பர், நீரில் கலந்த குடிவகை ஆகிய பலவகை தொழிற்சாலைகளுக்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் பலவகைத் தொழில்களுக்கு, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக்கழகம் வழங்கியுள்ள நிதியுதவி[45]

1985-86 ஆம் ஆண்டு, 115 அலகுகளுக்கு, 84 இலட்ச ரூபாய் நிதியுதவியளிக்கப்பட்டுள்ளது. அதே போன்று, 1986-87-ல், 124 அலகுகளுக்கு, 160 இலட்ச ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. மார்ச், 31, 1987 வரை, முழுமொத்தமாக, (படிப்படியாக சேர்க்கப்பட்ட மொத்தம்) 710 அலகுகளுக்கு 767 இலட்ச ரூபாய் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

கொடுத்த கடனைத் திரும்பப் பெறுவதில், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக்கழகம், ஆண்டுக்கு ஆண்டு ஒரே சீரான மேம்பாட்டினை வெளிப்படுத்தி வருகிறது.

நன்னிலையற்ற தொழிற்சாலைகள் எங்கெங்கு உள்ளனவோ அவற்றை இக்கழகம் அவ்வப்போது சீரமைக்கிறது. காலங்கடந்த மற்றும் பயனற்ற கருவிகளையும், துணைக்கருவிகளையும், புதிய கருவிகளைக் கொண்டு புதுப்பிக்க தொழிற்சாலைகளுக்கு நிதியுதவியளிக்கப் படுகிறது. இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் "தற்கால வழிமுறை"த் திட்டத்தின் கீழ், கழகம், இந்நிதியுதவியினை செயல்முறைப்படுத்தி வருகிறது.

நன்கு வளம் பெற்று, நற்பெயரீட்டியுள்ள தொழிற்சாலைகளுக்கு, உள்நாட்டு/அயல்நாட்டு இயந்திரங்கள் வாங்கிட, முதலீடு செய்யப்பட்டுள்ள இயந்திரங்களின் மதிப்பீட்டில், 80 விழுக்காடு பருவகால கடனாக, 30 நாட்களுக்குள் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்படி, பயிற்சி பெற்ற ஒரு முழுநேர மருத்துவரின் சிறப்பறிவுத் திறமையின் ஆதரவுடன் சொந்த முறையிலோ, கட்டுப்பங்காண்மையிலோ, தனி அல்லது பொது வரை நிலைக் கழகமாகவோ நிறுவுதல் ஆகியவற்றிற்கும் நிதியுதவியளிக்கப்படுறது. மேலும், இத்திட்டத்தின் கீழ், மிகச்சிறிய தொழிற்கூடங்களுக்கு நிலையான சொத்துக்கள் மற்றும் செயற்பாணி முதலீடு ஆகியவை உருவாக்கவும், 10 இலட்சம் ரூபாய் வரை பருவகால உதவியளிக்கப்

படுகிறது. சிறிய மற்றும் நடுத்தர வகைத் தொழிற்சாலைகளுக்கு 3 இலட்சம் ரூபாய் வரை கடன் வழங்கிட, கிளை மேலாளரும், ரூ.7.50 இலட்சம் ரூபாய் வரை வழங்கிட மண்டல மேலாளரும், 12.50 இலட்சம் ரூபாய் வரை வழங்கிட தலைவர்-மற்றும் நிருவாக இயக்குநர் ஆகியோரும் அதிகாரம் படைத்தவர்கள் ஆவர். தலைவர் மற்றும் நிருவாக இயக்குநர் 12.50 இலட்சம் ரூபாய் வரையிலும், மண்டல மேலாளர் 7.50 இலட்சம் ரூபாய் வரையிலும் கடன் வழங்கி இசைவாணை பிறப்பித்த பின்னரே, கிளை மேலாளர் அத்தொகையினை தொடர்புள்ள நிறுவனத்திற்கு கொடுக்க முடியும்.

1985-86 முதல் 1987-88 வரை, கன்னியாகுமரி மாவட்டத்தில் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தால் இசைவாணை பிற்பிக்கப்பட்டு, தொடர்புள்ள நிறுவனங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள ரொக்கக்கடன் விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன[46]:

ஆண்டு	இசைவாணை பிறப்பிக்கப்பட்ட கடன் விவரம்				கொடுக்கப்பட்ட தொகை	
	சிறிய அளவிலான தொழிற்சாலைகள்		ஏனையவகை தொழிற்சாலைகள்		சிறிய அளவிலான தொழிற்சாலைகள்	ஏனையவகை தொழிற்சாலைகள்
	எண்ணிக்கை	தொகை	எண்ணிக்கை	தொகை	தொகை	தொகை
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
			(தொகை ரூபாய் இலட்சத்தில்)			
1985-86	115	83.75	--	--	95.14	--
1986-87	124	159.92	--	--	119.82	--
1987-88	242	445.84	2	106.00	138.37	--

காப்பீட்டுக் கழகங்கள்

நம் நாட்டைப் போன்ற எந்த ஒரு வளர்ச்சியுறும் நாட்டிலும், காப்பீட்டுத் தொழில் முன்னேற்றமானது, நாட்டின் ஒட்டு மொத்த முன்னேற்றம் மற்றும் நாடு தொழில் மயமாக்கப்படுவது இவற்றைப் பெரிதும் பின்னிப் பிணைத்து அமைந்ததாகும். அனைத்துத் துறையிலும் இந்தியா முன்னேறிவருவது போன்று, காப்பீட்டுத் தொழிலும் பெரிதும் முன்னேறி வருகிறது[47].

மத்திய அரசு, பொதுக் காப்பீட்டுத் தொழிலை, சார்பு நிலையங்களின் பங்குகளை வைத்திருக்கும் இந்திய பொதுக் காப்பீட்டுக் கழகத்தின் மூலமாக, தனது கட்டுப்பாட்டின் கீழ் கொணர்ந்தது.

இக்கழகத்தை நாட்டுடைமையாக்குவதன், பலருமறிந்த நோக்கமென்னவெனில், காப்பீட்டின் முக்கியத்துவத்தை நாடு

முழுமையும் பரப்புவதும், காப்பீட்டின் மூலம் பெரிதும் பயன்பெற உதவுவதேயாகும். சீரமைப்பிற்குப்பிறகு, இவ்விரு குறிக்கோளினையும் அடைந்திட, காப்பீட்டுக் கழகம் முனைந்து செயல்படத் துவங்கியது. பொதுநலன் கருதி, ஒரு திட்டமிட்ட முறையில், காப்பீட்டுக்கழகம், நாடு முழுவதும், புதிதாகக் கோட்ட மற்றும் கிளை அலுவலகங்களைத் துவக்கியது[48].

கன்னியாகுமரி மாவட்டத்தில், ஆயுள்காப்பீட்டுக் கழகத்தின் கிளைகள்

ஆயுள் காப்பீட்டுக் கழகத்திற்கு, நாகர்கோவிலில் ஒன்றும், குளித்துரையில் ஒன்றுமாக, இரு கிளை அலுவலகங்கள் இயங்கி வருகின்றன[49]. அகஸ்தீஸ்வரம் மற்றும் தோவாளை வட்டங்களை தனது கட்டுப்பாட்டில் கொண்டுள்ள நாகர்கோவில் கிளை, 1.9.1956 முதல் இயங்கி வருகிறது. கல்குளம் மற்றும் விளவங்கோடு வட்டங்களைத் தன்னகத்தே கொண்டுள்ள குழித்துரைக்கிளை, 12.9.1980 முதல் இயங்கி வருகிறது:

ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் 1965-66 முதல் 1969-70 வரையிலான செயல் நிறைவேற்றம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

தொடர் எண்.	விவரம்	1965–66	1966–67	1967–68	1968–69	1969–70
1.	காப்புறுதிப் பத்திரங்களின் எண்ணிக்கை	4,165	3,627	2,690	8,450	3,458
2.	காப்புறுதி பெற்றதொகை (ரூபாய் இலட்சத்தில்)	147.80	138.08	121.81	140.72	140.43
3.	மொத்தக் காப்பீட்டுக் கட்டணம் (ரூபாய் இலட்சத்தில்)	23.15	21.36	21.85	22.30	22.70

தொழிற் சாதனை (ரூபாய் கோடியில்)[51]

ஆண்டு	நாகர்கோவில் கிளை அலுவலகம்	குளித்துரை கிளை அலுவலகம்
1980-81	2.08	2.94
1981-82	2.52	3.38
1982-83	2.79	3.68

1983-84	3.46	5.28
1984-85	4.85	5.38
1985-86	6.50	6.45
1986-87	8.07	8.60
1987-88	9.70	10.64

நாகர்கோவில், புதிய இந்திய காப்புறுதிக்கழகம் லிமிடெட்[52]

புதிய இந்திய காப்புறுதிக் கழகத்திற்கு, நாகர்கோவிலில் ஒரு கிளை அலுவலகம் இயங்கிவருகிறது. 1987-ல் அதனின் தொழில் சாதனை கீழே அளிக்கப்பட்டுள்ளது:

	ரூபாய்
தீ	2,89,000
கப்பல் சரக்கு	2,41,000
கப்பலின் கட்டுமானம்	56,000
விசைப்பொறி	7,64,000
பலவகை	
ட்டி.பி	2,17,000
என்.ட்டி.பி	3,31,000
மொத்தம்	16,81,000

ஒருங்கிணைந்த இந்திய காப்பீட்டுக் கழகம் லிமிடெட்

கன்னியாகுமரி மாவட்டத்தில், ஒருங்கிணைந்த இந்திய காப்பீட்டுக் கழகத்தின் இரண்டு கிளை அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. ஒன்று, ஏப்ரல் 4, 1977 அன்று, நாகர்கோவிலிலும், மற்றொன்று ஜனவரி 1, 1986 அன்று மார்த்தாண்டத்திலும் துவங்கப் பெற்றன. தீ, விசைப்பொறி, கப்பல் சரக்கு மற்றும் ஏனைய புறப்பகுதி காப்பீட்டுத் திட்டங்கள் ஆகிய பல்வேறு வகையான காப்பீடுகளுக்கு, கடற்பொருட் காப்பீட்டுக்கட்டணமாக 51 இலட்ச ரூபாய்க்கு, முறையான ஆவணங்கள் எழுதியளிக்கப்பட்டுள்ளன. கிராம மக்களின் நலன்கருதி, கால்நடை மற்றும் வீட்டு விலங்குகள் ஆகியவற்றின் ஆயுள் காப்பீட்டிற்கு, மாவட்டத்திற்கு ஒரு கணிசமான ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக, ஒருங்கிணைந்த இந்திய காப்பீட்டுக் கழகத்தால், கீழ்க்குறிப்பிட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அ) வங்கிகள் மற்றும் கிராமப்புற வளர்ச்சி நிறுவனங்கள் ஆகியவற்றை உள்ளடக்கி, கால்நடை நல ஆய்வு முகாம்கள் நடத்துதல்;

ஆ) காப்பீட்டின் பயன் குறித்து, தாய்மொழியில் (தமிழில்) விளம்பரத் தட்டிகள் வைத்தல், மற்றும் துண்டு வெளியீடுகள் வழங்குதல்;

இ) மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படவும், மக்களை ஊக்குவிக்கவும் கிராமப் புறப்பகுதிகளில், ஆயுள் காப்பீடு குறித்த திரைப்படங்களைக் காண்பித்தல் மற்றும் தகடுகளில் எழுதி, திரைப்படங்கள் காண்பிக்கும்போது, பிரசுரம் செய்தல்;

ஈ) உள்ளூர் தலைவர்களையும் பங்கேற்கச் செய்து, கிராமப்புறங்களில் பொதுக் கூட்டங்கள் மற்றும் கருத்தரங்குகள் ஆகியவை நடத்துதல்;

உ) கால்நடைக் கண்காட்சி/பொருட்காட்சி நடத்தி, வளப்பமிகு கால் நடைக்குப்பரிசு வழங்குதல்.

கால்நடை மற்றும் வீட்டு விலங்குகளின் காப்பீடு தவிர நலிந்த பிரிவினரின் நலனுக்காகக் கீழ்க்குறிப்பிட்ட திட்டங்களும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன[53]:

1) ஏழைக்குடிகளின் நலனுக்காக, தனது விபத்துக்காப்பீடு சமூகப் பாதுகாப்புத்திட்டம்.

2) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், புதிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம் போன்றவற்றால் பயனடைந்தோருக்கு, குடியிருப்பு வீடுகள், ஏனைய இன்றியமையாப் பொருட்கள் ஆகியவற்றிற்கு ஒட்டு மொத்த காப்பீட்டுப் பாதுகாப்பு.

3) மீனவர்கள், கள் இறக்குவோர் மற்றும் தொழிற்சாலையில் பணியாற்றும் தொழிலாளிகள் ஆகியோருக்குச் சொந்த விபத்துக்கான காப்பீட்டுப் பாதுகாப்பு.

4) கிராமக் கைவினைஞர்களுக்கும், கிராம, குடிசை மற்றும் எரிவாயு துணைக்கருவித் தொகுதி உள்ளிட்ட சிறு தொழில் நிறுவனங்களுக்கும் காப்பீட்டுப்பாதுகாப்பு.

5) கைத்தறி நெசவாளர்களுக்குக் காப்புறுதிப் பத்திரம்

6) சொந்த விபத்து தொடர்புள்ள ஜனதா காப்பீட்டுப் பாதுகாப்பு.

7) விவசாயக்குழாய்களுக்கு காப்பீட்டுப் பாதுகாப்பு

8) கிணறு, நீரின்றி பயனற்றுப் பொய்த்துப் போனால், அதற்கான காப்பீட்டுப் பாதுகாப்பு.

9) இயந்திர மிதிகட்டையுடைய மிதிவண்டி மற்றும் இழுப்பு வண்டி, காப்பீட்டுப் பாதுகாப்பு.

10) கிராமப்பகுதிகளில் குடிசைக் காப்பீடு.

11) காளைவண்டிக் காப்பீடு.

தேசிய காப்பீட்டுக் கழகம் மற்றும் கீழ்த்திசை (ஓரியண்டல்) காப்பீட்டுக் கழகம்

தேசியக் காப்பீட்டுக் கழகம் லிமிடெட் மற்றும் கீழ்த்திசை (ஓரியண்டல்) காப்பீட்டுக் கழகம் லிமிடெட் ஆகியவற்றிற்கு, நாகர்கோவிலில் ஒவ்வொரு கிளை அலுவலகம் உளது. ஓரியண்டல் காப்பீட்டுக்கழகத்தின் கிளை அலுவலகம். 9.7.1984 முதல் இயங்கி வருகிறது[54].

அஞ்சலக சேமிப்பு வங்கி

முந்தைய திருவாங்கூர் - கொச்சி மாநிலத்தில், அஞ்சல் முறை நடைமுறையிலிருந்த போது, அதாவது, கடந்த 1882 ஆம் ஆண்டு, கன்னியாகுமரியில், அஞ்சலக சேமிப்பு வங்கித்திட்டம் துவங்கியது. பின்னர் அஞ்சல் முறை, 1950 ஆம் ஆண்டு, அகில இந்திய அஞ்சல் திட்டத்துடன் இணைந்தது[55].

1970 ஆம் ஆண்டு வரை, சேமிப்பு வங்கி வாய்ப்பு நலங்களுடன், மாவட்டத்தில் 55 அஞ்சல் அலுவலகங்கள் இயங்கி வந்தன. 35,865 கணக்குகளில், அவை 82.68 இலட்ச ரூபாய் சேமிப்புத் தொகையினைக் கொண்டிருந்தன[56].

1980 முதல் 1988 வரை (ஆண்டு) வாரியாக கன்னியாகுமரி மாவட்டத்தில், சேமிப்புப்பணியினை மேற்கொண்டிருந்த அஞ்சல் அலுவலகங்களின் எண்ணிக்கை[57]

1980	..	..	235
1981	..	..	236
1982	..	..	237
1983	..	..	239
1984	..	..	..
1985	..	..	..
1986	..	..	243
1987	..	..	..
1988	..	..	..

செப்டம்பர் 30, 1988 நிலைப்படி, மொத்த அஞ்சலக பல்வகை சேமிப்புக் கணக்குகள் மற்றும் புழக்கத்திற்குக் கொணரப்பட்ட வைப்புத் தொகை விவரங்கள் ஆகியவை, கீழே அளிக்கப்பட்டுள்ளன:

	கணக்கின் பெயர்	*கணக்குகளின் எண்ணிக்கை* ரூ. பை.	*தொகை* (ரூபாய்)
	(1)	*(2)*	*(3)*
1.	சேமிப்பு வங்கிக்கணக்குத் திட்டம்	10,402	2,73,48,381.78
2.	அஞ்சலக தொடர் வைப்புத் திட்டம்	1,17,725	5,71,96,454.10

(1)		(2)	(3)
3.	படிப்படியாகத்திரண்டு வளர்கிற வைப்புத்தொகைத் திட்டம்	3,420	38,93,776.95
4.	அஞ்சலக குறித்தகால வைப்புத் திட்டம்	15,771	1,97,63,900.00
5.	ஒன்று சேர்ந்து வளரும் வைப்புத் தொகைத் திட்டம்	25	1,907.00
6.	அஞ்சலக மாதாந்திர வருவாய்த் திட்டம்	285	45,97,000.00
7.	தேசிய சேமிப்புக் கணக்குப்பத்திரம்	6	2,246.00
8.	தேசிய சேமிப்புத்திட்டம்	39	3,13,400.00
9.	பொது சேமிப்பு நிதித்திட்டம்	26	1,34,475.00

அஞ்சலக சேமிப்பு வங்கியினால், நடத்தப்படும் சேமிப்புத் திட்டங்கள்

1. அஞ்சலக சேமிப்புக் கணக்குத் திட்டம்
2. அஞ்சலக தொடர் வைப்புத் திட்டம்
3. அஞ்சலக குறித்த கால வைப்புத் திட்டம்
4. பொது சேமிப்பு நிதித்திட்டம்
5. அஞ்சலக மாதாந்திர வருவாய்த்திட்டம்
6. தேசிய சேமிப்புத்திட்டம்

தேசிய சேமிப்புப் பத்திரம்

1. 7 ஆண்டு 3-வது வெளியீடு
2. 6 ஆண்டு 6-வது வெளியீடு
3. 6 ஆண்டு 7-வது வெளியீடு
4. 10 ஆண்டு சமுகப் பாதுகாப்புப் பத்திரங்கள்
5. இந்திரா விகாஸ் பத்திரம்
6. கிசான் விகாஸ் சேமிப்புப் பத்திரம்

தமிழ்நாடு சீட்டுக்கழகம் லிமிடெட் (தமிழ்நாடு அரசினால் பிணை கொடுக்கப்பட்ட நிறுவனம்)

சீட்டு நிதி, 1982ஆம் ஆண்டு, சீட்டு நிதிச் சட்டத்திற்குட்பட்டு, (மத்திய அரசு சட்டம் 40/1982) நடைபெற்று வருவதாகும். சீட்டு நிதிகளை ஒழுங்குப்படுத்தவும், அதன் தொடர்புள்ள அலுவல்களைக் கண்காணிக்கவும், இந்த சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

நோக்கம்

இந்த சட்டத்தின்படி, "சீட்டு" எனில், சீட்டு, சீட்டு நிதி, சிட்டி, குறி அல்லது எந்தப் பெயரிட்டு ஒரு நபர், ஒரு குறிப்பிட்ட

எண்ணிக்கையுள்ள நபர்களுடன் ஒரு உடன்படிக்கை செய்துகொண்டு ஒரு தொழில் நடைமுறையைத் துவக்குகிறாரோ அந்த தொழில் நடைமுறைப்படி, அவர்களில் ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட தொகையினை (அல்லது அதற்கு பதிலாக, ஒரு குறிப்பிட்ட அளவு தானியத்தை) ஒரு குறிப்பிட்ட காலவரைக்கும், நிர்ணயிக்கப்பட்ட தவணைகளில் செலுத்த வேண்டும்; அவ்வாறு செலுத்திய ஒவ்வொரு நபரும், குலுக்குத்தேர்வு முறையிலோ, பொது ஏலத்திலோ, ஒப்பந்தப் புள்ளி அளிக்கும் முறையிலோ, அல்லது சீட்டு உடன்படிக்கையில் குறிப்பிட்டுள்ள வேறெந்த முறையிலோ, அவரது சுழற்சிமுறை வருகை யில், பரிசுத்தொகையைப் பெற தகுதியுடையவராவார்.

இச்சட்டம், சென்னை சீட்டு இயக்குநரால் நடைமுறைப்படுத்தப் படுகிறது.

சீட்டுக்கழகம்-தோற்றம்

பொதுமக்களிடையே சேமிப்புப் பழக்கத்தை வளர்த்திட, அக்காலத்தில், பின்பற்றப்பட்ட பழைய முறைதான், சீட்டு நடைமுறையாகும். இம்முறை, இன்று கூட நம் நாட்டில் தொடர்ந்து இருந்து வருகிறது. பல தனியார் நிறுவனங்கள் இன்றும், சில நகர்ப்புற மையங்களில் இந்த சீட்டுத் தொழிலை நடத்திவருவதைக் காணலாம். ஆனால், அதனுடைய உட்கருத்து என்னவெனில், ஏல நேரத்தில், கழிவுத்தொகைக்கு, எவ்வித வரம்பும் நிர்ணயிக்காமல், கொள்ளை இலாபம் பெற வேண்டுமென்ற நோக்கமேயாகும்.

மக்களிடையே சேமிப்புப்பழக்கத்தை வளர்க்கும் நோக்கிலும், அதே நேரத்தில், பொதுமக்களின் நலனைக் கருத்திற்கொண்டு, ஏல சமயத்தில், கழிவுத் தொகைக்கு ஒரு நியாயமான வரம்பினை நிர்ணயித்து, மக்கள் பலனடைய வாய்ப்பளிக்கும் அடிப்படையிலும். தமிழ்நாடு அரசு. "தமிழ்நாடு சீட்டுக் கழகம்" என்ற பெயரில், 1984 ஆம் ஆண்டு, ஒரு சீட்டுக் கழகத்தை, சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு நிறவியது. இது தமிழக அரசினால் பிணை கொடுக்கப்பட்ட நிறுவன மாகும். தமிழ்நாடு அரசு, இக்கழகத்தில், 5.92 இலட்ச ரூபாய்க்கு பங்கு முதலீட்டுத் தொகையினை, முதலீடு செய்துள்ளது. தற்பொழுது, இக்கழகத்திற்கு, சென்னை, திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் மூன்று கிளைகளுள்ளன. கழகத்தின் தலைமை யிடம், தற்போது, சென்னை-17, ரெங்கநாதன் தெரு, எண். 32/1 உள்ள கட்டிடத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் நிலையிலுள்ள நிருவாக இயக்குநர் கட்டுப்பாட்டில் இயங்கிவருகிறது. கழகத்தின் அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போதுமான சார்பு நிலைப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இந்தியாவின் எந்த ஒரு குடி மகனும், சீட்டுத் தொகுதிகளுக்கு, நிதித்தொகை செலுத்தலாம்.

1. சீட்டுத் தொகுதிகள்

தற்போது கீழ்க்கண்ட சீட்டுத் தொகுதிகளை, தமிழ்நாடு சீட்டுக் கழகம், நடத்தி வருகிறது:

தொடர் எண்.	தவணைத் தொகை (ரூபாய்)	மாதத்தவணைகள்	சீட்டுத்தொகை (ரூபாய்)
1.	1,000	50	50,000
2.	1,000	30	30,000
3.	1,250	20	25,000
4.	1,000	20	20,000
5.	500	30	15,000
6.	500	20	10,000
7.	250	40	10,000
8.	200	30	6,000
9.	250	20	5,000
10.	125	40	5,000
11.	100	30	3,000
12.	50	40	2,000

2. தவணைத்தொகை செலுத்துதல்

சீட்டிற்கான முதல் மாத தவணைத் தொகையினை, சீட்டுத்தொகுதியில் சேருவதற்கான நுழைவு விண்ணப்பத்துடன், செலுத்த வேண்டும். தவணைத் தொகையினை ரொக்கமாகச் செலுத்தலாம். உள்ளூரில் வசிக்கும் தொகை செலுத்துவோர், காசோலையாக அளிக்கவும், வெளியூர்களில் வசிக்கும் தொகை செலுத்துவோர், பண அஞ்சலில் தொகையினை அனுப்பவும் அல்லது, கேட்பு காசோலையாக அனுப்பவும் வழிவகை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

3. ஏலம் நடத்துதல்

சீட்டு நிதிச் சட்டத்தில், விதிமுறை ஏற்படுத்தப்பட்டுள்ளவாறு, முதல் தவணைக்கான சீட்டுத் தொகை, ஏலமின்றியே, கழகத்தால், வரவு வைக்கப்படும். ஒரு சீட்டுத்தொகுதிக்கு உரிய நபர்கள் முழுமையாக சேர்க்கப்பட்டு, அவர்களிடமிருந்து, நிர்ணயிக்கப்பட்ட தொகை, வசூல் செய்யப்பட்ட பின்னர், சீட்டில் சேர்ந்துள்ள உறுப்பினர்கள் இரண்டாவது தவணைக்குச் செலுத்த வேண்டிய தொகை, தொகை செலுத்துவதற்கான கடைசி தேதி, ஏல தேதி மற்றும்

நேரம் ஆகிய விவரங்கள் அடங்கிய 'தகவல் அட்டை', அனைத்து உறுப்பினர்களுக்கும் அஞ்சலில் அனுப்பிவைக்கப்படும். மறு தவணைகளில் அனுப்பப்படும் "தகவல் அட்டையில்", முந்தைய தவணையில் பரிசு பெற்ற நபரின் பெயர், அவரது பரிசுச் சீட்டு எண். மற்றும் பரிசுத் தொகை ஆகியவை, குறிப்பிடப்பட்டிருக்கும்.

உறுப்பினர்கள், இரண்டாவது தவணையிலிருந்து, ஆதாயப்பங்கு பெறத் தகுதியுடையவராவர். பரிசுத் தொகையினைப் பெற்ற நபரால், கைவிடப்பட்ட கழிவுத் தொகையினின்றும் கழகத்திற்குச் சேரவேண்டிய ஐந்து விழுக்காடு பங்குவரித்தொகை நீங்கலாக, எஞ்சிய தொகை, அனைத்து உறுப்பினர்களுக்கும் சரிசம விகிதத்தில் பிரிக்கப்பட்டு, உறுப்பினர்களின் ஆதாயப்பங்குத்தொகை நிர்ணயிக்கப்படுகிறது.

ஏலத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட தேதியும், நேரமும் எக்காரணத்தைக் கொண்டும், மாற்றப்படமாட்டாது. பரிசு பெறாத மற்றும் பாக்கியின்றி, மாதத்தவணைத் தொகை செலுத்திய சீட்டு உறுப்பினர்களே ஏலத்தில் பங்குகொள்ள தகுதியுடையவராவர். கழிவுத்தொகை, சீட்டுத் தொகைக்கு 30 விழுக்காட்டிற்கு மிகாமலிருக்க வேண்டும். ஒரு உறுப்பினர், ஏலத்தில், நேரிலோ, ஒப்பந்தப்புள்ளி மூலமோ அல்லது செயலுரிமை பெற்ற பதிவாள் மூலமோ கலந்து கொள்ளலாம். இரண்டு அல்லது அதற்குமேற்பட்ட நபர்கள் ஒரே கழிவுத்தொகையினைக் கைவிட முன் வந்தால், வெற்றிபெறும் ஏலதார், சீட்டுக் குலுக்குத் தேர்வு முறையின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார். ஏலம் நடத்தப்பெற, குறைந்தது இரண்டு ஏலதார்களாவது இருக்கவேண்டும்.

4. சீட்டுக்கழகத்தின் பலவகைப்பட்ட தனிச் சிறப்புகள்

1. அது, தமிழ்நாடு அரசினால், பிணை கொடுக்கப்பட்ட நிறுவன மாகையால், அதற்கு நூற்றுக்கு நூறு விழுக்காடு பாதுகாப்புக் காப்பீடு பெற்றதாகும்.

2. சீட்டுத் தொகுதியில் சேருவதற்கு அனுமதி இலவசம்.

3. பிணை ஆவணங்கள் எழுதுவதற்கு எவ்விதக் கட்டணமும் வசூலிக்கப்படுவதில்லை.

4. பிணை ஏற்றுக்கொள்ளப்பட்ட இரண்டொரு நாட்களில், பரிசுத் தொகை வழங்கப்பட்டு விடுகிறது.

5. மற்றொரு தனிச்சிறப்பு என்னவெனில், மாநில அரசு அல்லது அரசு போன்ற அலுவலகங்களில் பணியாற்றுவோர், சீட்டுத் தொகுதியில் உறுப்பினர்களாகச் சேர்ந்து கொள்ளுமுன், எவ்விதத் தகவலும் அளிக்கவோ, அல்லது அனுமதி பெறவோ தேவையில்லை.

5. பிணையம்

ஏலத்தில் வெற்றி பெற்றவர், பரிசுத்தொகையினைப்பெறுமுன், கழகத்திற்கு பிற்காலத்திய பாக்கித் தவணைத் தொகையினை ஒழுங்காகச் செலுத்தி வைக்க, உரிய முறையில் பிணைப்பத்திரமளிக்க வேண்டும்.

சாதனை

1984-85 ஆம் ஆண்டு முதல், 1988 அக்டோபர் வரையிலான கழகத்தின் சாதனை விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன:

ஆண்டு	சீட்டுத் தொகுதிகளின் எண்ணிக்கை	சீட்டுத் தொகுதியிற் சேர்ந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை	சீட்டு மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்)
1984-85	79	2260	5.32
1985-86	135	4230	10.30
1986-87	199	6550	17.62
1987-88	258	8470	24.74
1988-89 (31.10.1988 முடிய)	331	10870	32.43

பொது

இத்திட்டத்தின் நோக்கம் மற்றும் தனிச்சிறப்பு குறித்து, கன்னியாகுமரி மாவட்டத்தில் தீவிரமாக விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் கன்னியாகுமரியில் ஒரு கிளை துவக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தாள் நாணயம் மற்றும் உலோக நாணயம்

முந்தைய திருவாங்கூர் மாநிலத்தில் நடைமுறையிலிருந்த பொது நாணய முறைக்கொப்ப, இம்மாவட்டத்தில், 1790 ஆம் ஆண்டினை யொட்டி, தங்கம், வெள்ளி மற்றும் துணையாக செம்பு ஆகிய உலோக நாணயங்கள் புழக்கத்திலிருந்தன. அந்த நேரத்தில், "கலியன் பணம், ராசி பணம்" மற்றும் கச்சாரூபாய் ஆகிய நாணயங்களும் புழக்கத்தில் காணப்பட்டன. இந்த நாணயங்களில் பல, பத்மநாபபுரத்திலிருந்த அரசு நாணயக்கூடத்தில் முத்திரையிட்டு வெளியிடப்பட்டன.

1869 ஆம் ஆண்டில், இந்திய ரூபாய் 180 கிராம் வெள்ளிக்கீடாக, தர அளவுப்படுத்தப்பட்டு, அதுவும் மாவட்ட முழுமையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஒரு இந்திய தர ரூபாய்க்கு 28½ சுக்ரம் என்ற வீதத்தில் உள்ளூர் நாணயத்துடன் அது பரிமாற்றம் செய்து கொள்ளப்பட்டது.

மாவட்டத்தின் புழக்கத்திலிருந்த பழைய நாணயங்கள் பெயர்கள், சர்க்கார் ரூபாய், பணம், சுக்ரம் மற்றும் காசு ஆகியவையாகும். சர்க்கார் ரூபாய் என்பதற்கு நாணயம் கிடையாது. எனவே, 28 சுக்ரம் அல்லது ஆங்கிலேயரின் இந்திய ரூபாய்க்கு அரை சுக்ரம் குறைவானது ஒரு சர்க்கார் ரூபாய் என கணக்கிடப்பட்டது. ஆனால், சர்க்கார் அரை ரூபாய், கால் ரூபாய் மற்றும் பணம், (எல்லாமே வெள்ளியினாலானவை) ஆகியவை புழக்கத்திலிருந்தன.

மாவட்டத்தில் நடைமுறையிலிருந்த நாணயங்கள் கீழே குறிக்கப்பட்டுள்ளன:

16 காசு	.. ..	1 சுக்ரம்
4 சுக்ரம்	.. ..	1 பணம் (வெள்ளி)
14 சுக்ரம்	.. ..	1 சித்ரா (வெள்ளி)
2 சித்ரா அல்லது 7 பணம் அல்லது 28 சுக்ரம்	..	1 திருவாங்கூர் ரூபாய் அல்லது வெள்ளி ரூபாய்

எடைகளும், அளவைகளும்[58]

அரசினுடைய முழு முதற்பணி, எடைகளையும், அளவைகளையும், தர அளவுப்படுத்துவதென்பது, உலக மக்களனைவராலும் ஏற்றுக் கொண்ட ஒன்றாகும். இந்தியாவில் பழங்காலத்தில், எடைகள் மற்றும் அளவுகளைப் பயன்படுத்துவதைக் கண்காணிப்பது, அரசின் கட்டுப்பாட்டிலிருந்து வந்தது. மொஹஞ்சாதாரோ நகராட்சி, வணிகர்களின் எடைகளை தர அளவுப்படுத்தப்பட்ட எடைகளுடன் ஒப்புநோக்க, ஆய்வாளர்களை நியமித்திருந்தது தெரிய வருகிறது. ஆங்கிலேயரின் அரசு காலத்தில், நிலைமையை சீர்திருத்த மேற்கொண்ட நடவடிக்கைகள் பலனளிக்கவில்லை;1870 ஆம் ஆண்டில், நாடு முழுமையும் மெட்ரிக் முறையைக் (பதின்மான அடுக்காயமைந்த பிரஞ்சு அளவைமுறை) கடைப்பிடிக்க சட்டமியற்றப்பட்டது. அதன் பின்னர், நாடு முழுவதும் ஒரே சீரான எடைகளையும், அளவுகளையும், (சேர் மற்றும் பவுண்டு என்ற பெயரில்) கடைப்பிடிக்க பல சட்டங்கள் இயற்றப்பட்டன. ஆனால், அவை, மன உறுதியுடனும், வலிமையுடனும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

உலகம் முழுவதும், இன்று, மெட்ரிக் அளவுமுறைதான், ஆட்சியின் அளவு முறையாக இருந்து வருகிறது. மெட்ரிக் முறையின் முதன்மையான நன்மை என்னவெனில், அது பதின்மான முறையில் இருப்பதால், கணக்குவைப்பு முறையினை மிகவும் எளிதாக்குகிறது.

1955 ஆம் ஆண்டின், இந்திய நாணயத்தொகுதி(திருத்த) சட்டம், ரூபாயை 100 அலகாகப் பிரித்தது. அணா மற்றும் பைசா நாணயங்கள், மறுக்கவொண்ணாச் செலாவணிப் பணங்களாக, தொடர்ந்து புழக்கத்திலிருந்து வந்தன. ஆனால், அவற்றின் மதிப்பு, புதிய அலகுகளில், கூறப்பட்டன. ஏப்ரல் 1, 1957 முதல் நடைமுறைப் படுத்தப் பட்ட சட்டத்தின்படி, நாணயத்தின் புதிய அலகு "நயா பைசா" என அழைக்கப்பட்டது.

நாணயங்கள், ஒரு ரூபாய் (100 நயா பைசே) அரை ரூபாய் (50 நயா பைசே), கால் ரூபாய் (25 நயா பைசே), 10 நயா பைசே, 5 நயா பைசே, 2 நயா பைசே மற்றும் 1 நயா பைசே என்ற ரீதியில் உருவாக்கப் பட்டு, அப்பெயர்களிலேயே அழைக்கப்பட்டன[59]. பழைய ஒரு ரூபாய் நாணயம் ஒரு தோலா எடையிலிருந்து, அது, தங்கம், மற்றும் வெள்ளி ஆகியவற்றை நிறுத்துப்பார்க்க, ஒரு எடைக்கல்லின் பணியினை ஆற்றியது. ஆனால், புது ரூபாய் நாணயத்திற்கு 10 கிராம் எடை என நிர்ணயிக்கப்பட்டது. மற்ற நாணயங்கள் கீழ்கண்ட எடைகளையுடையவை :

50 நயா பைசே	..	5 கிராம்
25 நயா பைசே	..	2.5 கிராம்
10 நயா பைசே	..	5 கிராம்
5 நயா பைசே	..	4 கிராம்
2 நயா பைசே	..	3 கிராம்
1 நயா பைசே	..	1.5 கிராம்

புது நாணயத்தொகுதிக்கு மக்களிடையே நல்ல வரவேற்பிருந்தது. ஆனால், புது மற்றும் பழைய நாணயங்கள் இரண்டுமே ஒரே நேரத்தில் புழக்கத்திலிருந்ததால், துவக்கத்தில் மக்கள் சில இடர்பாடுகளை சந்திக்க நேர்ந்தது. பழைய நாணயம், புதிய நாணயம் இரண்டையுமே, அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தியது. படித்த மக்களிடையே கூட சிக்கல்களை ஏற்படுத்தியது. எனவே, பழைய நாணயங்களை, புழக்கத்தை விட்டு முழுமையாக எடுத்துவிடுவதையே மக்கள் விரும்பினர். ஆனால், அவற்றை புழக்கத்தினின்றும் அகற்றுவது நாணய அச்சுக் கூடத்தின் திறமையைப் பொறுத்திருந்தது[60]. 1.1.1959 அன்று, நிக்கல் - (கலவைகளில் பெரிதும் பயன்படுத்தப்படும் கெட்டியான ஒளிரும் வெள்ளை உலோகம்) பித்தளை இரண்டணா நாணயங்கள், அனைத்து அரை அணா நாணயங்கள் மற்றும் ஒழுங்கற்ற நாணயங்கள் ஆகியவை, திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன. ஓராண்டிற்குப் பின்னர், அதாவது 1.1.1960 அன்று, நிக்கல்-பித்தளை, ஒரு அணா மற்றும் அரை அணா நாணயங்கள் திரும்பப் பெறப்பட்டன. 1.10.1960 அன்று,

செம்பும், நிக்கலும் சேர்ந்த கலவையினாலான அனைத்து இரண்டணா மற்றும் அரையணா நாணயங்கள் திரும்பப் பெறப்பட்டன. திரும்பப்பெறப்பட்ட அணா மற்றும் பைசா நாணயங்களின் மதிப்பு, 1961 சூன் மாதம்முடிய, புழக்கத்தில் விடப்பட்ட நாணயங்களின் மதிப்பு ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

ஆண்டு	திரும்பப்பெறப்பட்ட அணா மற்றும் பைசா நாணயங்களின் மதிப்பு	புழக்கத்தில் விடப்பட்ட பதின்மான நாணயங்களின் மதிப்பு
	(ரூபாய் மில்லியன் ரூபாயில்)	
1957-58	24.3	27.6
1958-59	26.0	22.4
1959-60	23.7	37.7
1960-61	41.4	54.5
1961 ஏப்ரல்-சூன்	12.3	23.8

30.6.1961 முடிய புழக்கத்தில் விடப்பட்ட புதிய நாணயங்கள், யாவும் நாணய-வாரியாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

	மில்லியன்
50 நயா பைசே	22.8
25 நயா பைசே	185.4
10 நயா பைசே	610.8
5 நயா பைசே	690.5
2 நயா பைசே	963.3
1 நயா பைசே	1918.5
மொத்தம்	4391.3

வெளியிடப்பட்ட பதின்மான நாணயங்களின் எண்ணிக்கை 439 மில்லியன் ஆகும். இதிலிருந்து நாணய அச்சுக்கூடத்தின் விடாமுயற்சி தெரியவரும். 30.6.1961 நிலைப்படி, புழக்கத்தில் விடப்பட்ட அணா பைசா நாணயங்களின் எண்ணிக்கை பின்வருமாறு:

பைசா	2,294 மில்லியன்
ஒரு அணா நாணயங்கள்	1,038 மில்லியன்
கால்ரூபாய் நாணயங்கள்	763 மில்லியன்
அரைரூபாய் நாணயங்கள்	385 மில்லியன்
மொத்தம்	4,480 மில்லியன்

1958 ஆம் ஆண்டு, தமிழ்நாடு எடைகள் மற்றும் அளவுகள் (நடைமுறைப்படுத்துதல்) சட்டத்தை மாநில அரசு இயற்றி, இம் மாநிலத்தில், பதின்மான சீர்திருத்த முறையினை செயற்படுத்த முடிவெடுக்கப்பட்டது[61]. இம்முடிவினைத் தொடர்ந்து பாராளுமன்றத் தால், 1956 ஆம் ஆண்டின் தர அளவுப்படியான எடைகள் மற்றும் அளவுகள் சட்டம் இயற்றப்பட்டது.

1958 ஆம் ஆண்டின் சட்டம், மெட்ரிக் முறையின் அடிப் படையில், மாநிலத்தின் தர அளவுப்படியான எடைகளையும், அளவு களையும் பயன்படுத்த வகை செய்கிறது. முத்திரையிட்டு மூடப் பட்டுள்ள கொள்கலங்களின் மேல், அதனின் நிரப்பி வைக்கப்பட்டுள்ள பொருட்களின் நிகர எடை அளவுகளை நன்கு தெரியுமாறு காண்பிக் கவும் வழி செய்கிறது. மாநில அரசிடமிருந்து முறையான உரிமம் பெறாமல், எடைகள் மற்றும் அளவுகளை உற்பத்தி செய்வதையும், இவற்றைப் பழுது பார்ப்பதையும் இவற்றை வைத்து வியாபாரம் செய் வதையும் இச்சட்டம் தடை செய்கிறது[62].

துவக்கத்தில், தமிழ்நாடு அரசு, மெட்ரிக் முறையிலான அளவுகளை சென்னை மாநகரம், செங்கற்பட்டு, தென் ஆற்காடு மற்றும் வட ஆற்காடு ஆகிய மாவட்டங்களில் ஆக்டோபர் 1, 1958 முதல் மரபார்ந்த இரண்டாண்டு கால அளவுக்கு அறிமுகப்படுத்தியது. இவ்விரு ஆண்டுகளிலும், பழைய மற்றும் புதிய முறைகள் ஒரே நேரத்தில் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டன. ஆக்டோபர் 1, 1960 முதல், இந்த நான்கு மாவட்டங்களிலும், மெட்ரிக் அளவு முறை, கட்டாயமாக பயன்படுத்த வலியுறுத்தப்பட்டது. ஏனைய மாவட்டங்களிலும், ஏப்ரல் 1, 1960 முதல் மரபார்ந்த இரண்டாண்டு கால அளவிற்கு, இம்முறை அறிமுகப் படுத்தப்பட்டு பின்னர், ஏப்ரல் 1, 1962 முதல், கட்டாயமாகப் பயன்படுத்த வலியுறுத்தப்பட்டது.

மெட்ரிக் கொள்திறமுள்ள அளவைகள், சென்னை, செங்கற்பட்டு, வட ஆற்காடு மற்றும் தென்ஆற்காடு மாவட்டங்களில் ஏப்ரல் 1, 1961 முதற் கொண்டும், சேலம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் ஆக்டோபர் 1, 1961 முதற்கொண்டும், அவற்றைக் கட்டாயமாகப் பயன்படுத்த வலியுறுத்து முகத்தான், முதலில், மரபார்ந்த இரண்டாண்டுகால, அளவிற்கு அறிமுகப்படுத்தப்பட்டது. அவ்வாறாக, கொள்திறம் அளவைகள், சென்னை, செங்கற்பட்டு, வட ஆற்காடு மற்றும் தென் ஆற்காடு மாவட்டங்களில், ஏப்ரல் 1, 1962 முதல் கட்டாயமாகப் பயன்படுத்தப்பட வலியுறுத்தப்பட்டன. கொள்திறம் அளவைகளைக் கட்டாயமாகப் பயன்படுத்துவது, தமிழ்நாடு மாநிலம் முழுமையும், ஆக்டோபர் 1, 1962

மற்றும் ஏப்ரல் 1, 1963 ஆகிய இரு கட்டங்களில் நடைமுறைப் படுத்தப்பட்டது.

முந்தைய சென்னை மாநிலத்தில் நீட்டலளவைகளும், 1.10.1961 முதல் அறிமுகப்படுத்தப்பட்டு, ஆக்டோபர் 1, 1962 முதல் கட்டாயமாகப் பயன்படுத்தப்பட வலியுறுத்தப்பட்டன.

ஆதார மெட்ரிக் அலகுகள்

அ. நீளம்

10 மி.மீ.	...	1 செ.மீ.
10 செ.மீ.	...	1 டெசி.மீ.
10 டெசி.மீ.	...	1 மீ
10 மீ.	...	1 டெக்.மீ.
10 டெக்.மீ.	...	1ஹெக்.மீ.
10 ஹெக்	...	1 கி.மீ.
1053 மீ.	...	1 கப்பல்துறைக் கணக்குப்படி யான மைல் (நாட்டிகல் மைல்)

ஆ. பரப்பளவு

100 மி.மீ.^{2}	...	1 செ.மீ.^{2}
100 செ.மீ.^{2}	...	1 டெ.மீ.^{2}
100 டெ.மீ.^{2}	...	1 மீ.^{2}
100 மீ^{2}	...	1 ஏர் அல்லது 1 டெக்.மீ.^{2}
100 ஏர்	...	1 ஹெக்டேர் அல்லது 1 ஹெக்.மீ.^{2}
100 ஹெ.மீ.	...	1 கி.மீ.^{2}

இ.பிரிவுத் தொகுதி மற்றும் கொள்திறம்

1000 கி.மீ.^{3}	..	1 செ.மீ^{3}
1000 செ.மீ.^{3}	..	1 டெசி.மீ^{3}
1000 டெசி.மீ^{3}	..	1 மீ^{3}
10 மில்லி லிட்டர்கள்	..	1 சென்டி லிட்டர்
10 சென்டி லிட்டர்கள்	..	1 டெசி லிட்டர்
10 டெசி லிட்டர்கள்	..	1 லிட்டர்
10 லிட்டர்கள்	..	1 டெக்கா லிட்டர்
10 டெக்கா லிட்டர்கள்	..	1 ஹெக்டேர் லிட்டர்
10 ஹெக்டேர் லிட்டர்கள்		1 கிலோ லிட்டர்

ஈ- எடைகள்

10 மில்லி கிராம்கள்	..	1 சென்டி கிராம்
10 சென்டி கிராம்கள்	..	1 டெசி கிராம்
10 டெசி கிராம்கள்	..	1 கிராம்
10 கிராம்கள்	..	1 டெக்கா கிராம்
10 டெக்கா கிராம்கள்		1 ஹெக்டோ கிராம்
10 ஹெக்டோ கிராம்கள்		1 கிலோ கிராம்
100 கிலோ கிராம்கள்		1 குவின்டால்
10 குவின்டால்கள்		1 டன்

முதன்மையான மாற்று ஆக்கக்கூறு :

அ.நீளம்

1 அங்குலம்	0.0254 மீ (துல்லியமான அளவை)
1 அடி	0.3048 மீ (துல்லியமான அளவை)
1 கெசம்	0.9144 மீ (துல்லியமான அளவை)
1 மைல்	1.609344 மீ (துல்லியமான அளவை)
1 சங்கிலி (66 அடி)	20.1168 மீ (துல்லியமான அளவை)

ஆ. பரப்பரளவு

1 சதுர அங்குலம்	6.4516 சதுர செ.மீ.
1 சதுர அடி	9.2903 சதுர செ.மீ.
1 ஏக்கர்	4.046.86 சதுர மீ.
1 சதுர மைல்	2.58999 சதுர கி.மீ.

இ. பிரிவுத்தொகுதி மற்றும் கொள்திறம்

1 காலன் (இம்பீரியல்)	4.54596 லி
(நீர்மப்பொருள்கள் கலவைகள் முதலியவற்றைக் கணிக்கும் முகத்தலளவைக்கூறு)	
1 காலன் (ஐக்கிய நாடுகள்)	3.78533 லி.

ஈ. எடைகள்

1 அவுன்ஸ் (வீசம் கல்லெடை)	28.3495 கி.
1 பவுண்டு (வீசங்கல்லெடைகள் பதினாறு கொண்ட நிறையளவு)	453.5924கி.
1 டன்	1.01605 மெ.டன் அல்லது 1,016.05 கி.கி.

சென்னை அளவைகள்[63]

3 தோலாக்கள்	1 பலம்
8 பலங்கள்	1 சேர்
5 சேர்கள்	1 வீசை
8 வீசைகள்	1 மணங்கு
20 மணங்குகள்	1 பாரம்

ஒரு வீசை என்பது 3.0857 பவுண்டாகும். அவ்வாறாக, ஒரு பட்டணம் மணங்கு, கிட்டத்தட்ட 25 பவுண்டுகளைக் கொண்டதாகும். (பவுண்டு என்பது, ஆங்கில நாட்டு நிறுத்தலளவை முறையின் பெயர் ஆகும்) (24.68) மற்றும் ஒரு பாரம் என்பது பொதுவாக 500 பவுண்டுகளைக் குறிக்கும்;

1 பவுண்டு = 38.88 தோலாக்கள்

சென்னையில் ஆங்கிலேய வணிகர்களால் பயன்படுத்தப்பட்ட அளவை முறை, மேலே கூறப்பட்டதைவிட சற்றே மாறுபட்டதாகும்.

1 பலம்	1¼ அவுன்ஸ் (ஆங்கில நாட்டு நிறுத்தலவை முறையின் பெயர்)
40 பலங்கள்	1 வீசை = 3 1/8 பவுண்டு
8 வீசைகள்	1 மணங்கு
20 மணங்கு	1 பாரம் = 500 பவுண்டு

கொள்திறம் குறித்த சென்னை அளவைகள்

இவற்றில் மிகுந்த வேறுபாடு காணப்படுகிறது. அவற்றில் மிகவும் விரிவாகத்தெரியக்கூடியவை, கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

8 ஒழக்குகள்	1 பட்டணம்படி (பக்காப்படி)
8 பட்டணம்படிகள்	1 மரக்கால்
1 மரக்கால்	½ கன அடி - 500(நெகிழ்ச்சிப் பொருள்)-அவுன்ஸ்

பட்டணம்படியின் வகை, 108 அங்குலம், கன அளவைக் கொள்திறம் உடையது. அதனுடைய கொள் அளவு 62.5 நெகிழ்ச்சிப் பொருள் - அவுன்ஸ் ஆகும். அது இயல்பாக 4.5 அங்குலம் குறுக்களவும், 6.75 அங்குலம் ஆழமும் கொண்டதாகும்.

சென்னை மற்றும் சைதாப்பேட்டை ஆகிய இடங்களில், பட்டணம் படியில் பொருட்கள் தலை தட்டி அளக்கப்படுகின்றன. ஏனைய இடங்களில், அவை படியில் குவித்து அளக்கப்படுகின்றன.

சேர், ஒரு அளவையாகப் பயன்படுத்துகையில், 50 தோலாக்களைக் கொண்டதாக உள்ளது. ஆனால், பயன்படுத்தப்பட்ட பொருட்களுக்குத் தக்கவாறு, அளவை மாறுபடும்.

1957 ஆம் ஆண்டு, மெட்ரிக் முறை அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர், சென்னை எடைகளும், பட்டணம் படிகள் மற்றும் அளவைகளும், திரும்பப் பெறப்பட்டன.

மெட்ரிக் முறைகள் மாற்றுப் (பயன்மாறுபாட்டுப்) பட்டியல்கள்

பட்டியல்-1

ஏக்கரிலிருந்து ஹெக்டேர்
0-1 முதல் 100 ஏக்கர் வரை

ஏக்கர்	ஹெக்டேர்	ஏக்கர்	ஹெக்டேர்
0.1	0.040	9	3.64
0.2	0.081	10	4.05
0.3	0.121	11	4.45
0.4	0.162	12	4.86
0.5	0.202	13	5.26
0.6	0.243	14	5.67
0.7	0.283	15	6.07
0.8	0.324	16	6.47
0.9	0.364	17	6.88
1	0.40	18	7.28
2	0.81	19	7.69
3	1.21	20	8.09
4	1.62	21	8.50
5	2.02	22	8.90
6	2.43	23	9.31
7	2.83	24	9.71
8	3.24	25	10.12

ஏக்கர்	ஹெக்டேர்	ஏக்கர்	ஹெக்டேர்
26	10.52	63	25.50
27	10.93	64	25.90
28	11.33	65	26.30
29	11.74	66	26.71
30	11.14	67	27.11
31	12.55	68	27.52
32	12.95	69	27.92
33	13.35	70	28.33
34	13.76	71	28.73
35	14.46	72	29.14
36	14.57	73	29.54
37	14.97	74	29.95
38	15.38	75	30.35
39	15.78	76	30.76
40	16.19	77	31.16
41	16.59	78	31.57
42	17.00	79	31.97
43	17.40	80	32.37
44	17.81	81	32.78
45	18.21	82	33.18
46	18.62	83	33.59
47	19.02	84	33.99
48	19.42	85	34.40
49	19.83	86	34.80
50	20.23	87	35.21
51	20.64	88	35.61
52	21.04	89	36.02
53	21.45	90	36.42
54	21.85	91	36.83
55	22.26	92	37.23
56	22.66	93	37.64
57	23.07	94	38.04
58	23.47	95	38.45
59	23.88	96	38.85
60	24.28	97	39.25
61	24.69	98	39.66
62	25.09	99	40.06
		100	40.47

பட்டியல்-2
(ஏக்கரிலிருந்து ஹெக்டேர்)
(200 முதல் 1000 ஏக்கர் வரை)

ஏக்கர்	ஹெக்டேர்
200	80.94
300	121.41
400	161.87
500	202.34
600	242.81
700	283.28
800	323.75
900	364.22
1000	404.69

பட்டியல்-3
(ஏக்கரிலிருந்து ஹெக்டேர்)
(2000 முதல் 10,000 ஏக்கர் வரை)

ஏக்கர்		ஹெக்டேர்
2000	:	809.37
3000	:	1214.06
4000	:	1618.74
5000	:	2023.43
6000	:	2428.11
7000	:	2832.80
8000	:	3237.49
9000	:	3642.17
10,000	:	4046.86

பட்டியல்-4
(அவுன்ஸிலிருந்து கிராம்)
(1 முதல் 15 அவுன்ஸ்)

அவுன்ஸ்	கிராம்
1	28
2	57
3	85
4	113
5	142
6	170
7	198
8	227
9	255
10	283
11	312
12	340
13	369
14	397
15	425

பட்டியல்-5
(பவுண்டிலிருந்து கிலோ கிராம்)
(1 முதல் 100 பவுண்டு)

பவுண்டு	கிலோ கிராம்	பவுண்டு	கிலோ கிராம்
1	0.45	14	6.35
2	0.91	15	6.80
3	1.36	16	7.26
4	1.81	17	7.71
5	2.27	18	8.16
6	2.72	19	8.62
7	3.18	20	9.07
8	3.63	21	9.53
9	4.08	22	9.98
10	4.54	23	10.43
11	4.99	24	10.89
12	5.44	25	11.34
13	5.90	26	11.79

பவுண்டு	கிலோ கிராம்	பவுண்டு	கிலோ கிராம்
27	12.25	64	29.03
28	12.70	65	29.48
29	13.15	66	29.94
30	13.61	67	30.39
31	14.06	68	30.84
32	14.52	69	31.30
33	14.97	70	31.75
34	15.42	71	32.21
35	15.88	72	32.66
36	16.33	73	33.11
37	16.78	74	33.57
38	17.24	75	34.02
39	17.69	76	34.47
40	18.14	77	34.93
41	18.60	78	35.38
42	19.05	79	35.83
43	19.50	80	36.29
44	19.96	81	36.74
45	20.41	82	37.19
46	20.87	83	37.65
47	21.32	84	38.10
48	21.77	85	38.56
49	22.23	86	39.01
50	22.68	87	39.46
51	23.13	88	39.92
52	23.59	89	40.37
53	24.04	90	40.82
54	24.49	91	41.28
55	24.95	92	41.73
56	25.40	93	42.18
57	25.85	94	42.64
58	26.31	95	43.09
59	26.76	96	43.54
60	27.22	97	44.00
61	27.67	98	44.45
62	28.12	99	44.91
63	28.58	100	45.36

பட்டியல்-6
(பவுண்டிலிருந்து கிலோ கிராம்)
(200 முதல் 1000 பவுண்டு வரை)

பவுண்டு	*கிலோ கிராம்*
200	90.72
300	136.08
400	181.44
500	226.80
600	272.16
700	317.52
800	362.81
900	408.23
1000	453.59

பட்டியல்-7
(பவுண்டிலிருந்து கிலோ கிராம்)
(2000 முதல் 10000 பவுண்ட் வரை)

பவுண்டு	கிலோகிராம்
2000	907.18
3000	1360.78
4000	1834.37
5000	2267.96
6000	2721.55
7000	3175.15
8000	3628.74
9000	4082.33
10,000	4535.92

ஆதாரம்: (பட்டியல் - 1 முதல் 7 வரை)

மெட்ரிக் அளவைகள் - மாற்றுப் (பயன்மாறுபாட்டுப் பட்டியல்கள் - பிரசுரம் : இயக்குநர், பிரசுரப்பிரிவு, டில்லி-8, சூலை 1959).

கீழ்க்குறிப்பிட்ட துறை அலகுகளும் அரசினால், அறிவிக்கப்பட்டுள்ளன:

நீளம்

மைக்ரென்	(ஒரு மீட்டரின், மில்லியனில் ஒரு பகுதி)
மில்லி மீட்டர்	(ஒரு மீட்டரின், ஆயிரமாவது பகுதி)
சென்டிமீட்டர்	(ஒரு மீட்டரின் நூறாவது பகுதி)
கிலோ மீட்டர்	(1000 மீட்டர்கள்)

எடை

மில்லி கிராம்	(ஒரு கிலோகிராமில் மில்லியனின் ஒரு பகுதி)
கிராம்	(ஒரு கிலோகிராமில், ஆயிரத்தில் ஒரு பகுதி)
குவின்டால்	(100 கிலோ கிராம்கள்)

கொள்ளளவு

மில்லி லிட்டர்	(ஒரு லிட்டரில், ஆயிரத்தில் ஒரு பகுதி)
கிலோ லிட்டர்	(1000 லிட்டர்கள்)

இந்தியாவில் மெட்ரிக் முறையைப் பின்பற்றுதல்-

பிரசுரம்: வாணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம், இந்திய அரசு, புது டில்லி, 1962.

பகுதி - 2
வாணிகம்

வாணிகம் என்பது, ஒவ்வொரு குடிமக்களின், - ஏன், பொதுவாக, நாடு முழுமையும் உள்ளடக்கிய அனைத்து சமுதாயப்பிரிவினரின் வாழ்க்கை முறையிலும், நேரடித் தொடர்பு கொண்ட, உலகம் முழுவதும் பரவியுள்ள கடினமான தொழிலாகும். வாணிகம், தடங்களின்றி இணக்கமாக நடைபெற்றுவந்தாலே, அது மனித சமுதாயத்திற்கு ஆற்றும் செயற்கரிய பணியாகும். அது தொழிற்துறைக்கு, ஒரு குறிப்பிட்ட பொருள் குறித்தோ அல்லது ஒரு சில பொருட்கள் குறித்தோ ஒன்றி, உற்பத்தி செய்ய, வழி வகுக்கும்[64]. இந்தத் தனித் துறைப்பாடானது, உலகமுழுமையும், உற்பத்தியைப் பெருக்கவும், மக்களின் வாழ்க்கைத்தரம் உயரவும் இன்றியமையாததாகிறது. நாடு முழுவதும் மக்களிடையே நாள்தோறும் நடந்து பெருகிவரும் வாணிகம் நல்ல எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

தற்போதைய கன்னியாகுமரி மாவட்டம், தொன்றுதொட்டு, ஒரு முதன்மையான வாணிகப்பகுதியாகத் திகழ்கிறது. பண்டைக்காலத்தில், தற்போது நாகர்கோவில் நகராட்சியின் ஒரு பகுதியாக விளங்கும் கோட்டார், புகழ்வாய்ந்த வாணிப மையாமாக விளங்கியது.[65] கிறித்தவ

வரலாற்றுப்பிரிவின் தொடக்கத்தில், மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த நகரங்களிலொன்றாக, கோட்டார் திகழ்ந்ததென தாலெமியின் நில இயலிலும், ப்ளீனியின் சுற்றுப்பயணத்தொகுப்பிலும் குறிப்பிடப் பட்டுள்ளது. இது, ஆயி நாட்டின் வாணிக முக்கியத்துவம் வாய்ந்த தலைநகராகத் திகழ்ந்ததெனவும், இதனை தாலமி, " கோட்டியா-ரா" எனவும், ப்ளீனி."கோட்டாரா" எனவும், குறிப்பிட்டுள்ளார்கள், டாக்டர் கால்டுவெல், தனது "திராவிட மொழி மாநிலத்தின் ஒப்பீடு சார்ந்த இலக்கணம்" என்ற நூலில் எழுதியுள்ளார். இந்நகரம் முன்னர் ஒரு கோட்டமாக இருந்திருக்கலாமெனவும், தென்திருவாங்கூர் பகுதியின் முதன்மையான நகரமாகத் திகழ்ந்த அதனை ஆங்கிலேயர்கள் "கோட்டார்" என உச்சரித்து வந்திருப்பார்களெனவும், கிரேக்கர்கள் காலத்தில், வாணிகத்திற்குப் பெயர் பெற்று விளங்கிய இந்நகரம் தொடர்ந்து அதே வாணிக முக்கியத்துவத்தை, நிலை நாட்டி வருகிறதெனவும் ஐயப்பாடின்றிக் கூறலாம்.

பல தரப்பட்ட பொருட்களை விற்பனை செய்துவரும் பல்வேறு கடை வீதிகள் இந்நகரத்திலுள்ளன. மிளகு, தந்தம், தேக்கு, சந்தனம், கருங்காலி மற்றும் பழவகைகள், இந்நகரத்தின் முக்கிய வாணிபப் பொருட்களாகும். இப்பொழுது கூட, கோட்டார் கடைவீதி புகழ்பெற்று விளங்குகிறது. அது உள்ளூர் மக்களால் "பண்டகசாலை" என அழைக்கப்படுகிறது. சம்பந்தர் அவரது பாடல்களில், கோட்டாரைப் பற்றிக் கூறுகையில் "தொழில் மிகு கோட்டார்" என வருணித்திருக் கிறார்[66]. அது, ஒரு சுறுசுறுப்பான நெல் அறவை மையமாகும்[67]. கன்னியாகுமரி ஒரு காலத்தில், துறைமுகமாக விளங்கியதென வரலாற்று நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது[68]. அதே போன்று, மணக்குடி, இராசக்காமங்கலம் ஆகியவையும் துறைமுகமாக விளங்கியுள்ளன[69]; மேலும், அவ்விடங்களும், வாணிகத் தொழில் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.

முட்டம்

முட்டம் ஒரு காலத்தில் தலைசிறந்த துறைமுகமாகவும், அயல் நாட்டு வாணிபத்தில் புகழ் பெற்ற மையமாகவும் விளங்கியதற்கு, அங்கு கிடைக்கப்பெற்ற பல அயல்நாட்டு நாணயங்கள் சான்று பகர்கின்றன[70].

கொளச்சல்

இந்த கடற்கரை நகரம், நாகர்கோவிலுக்கு மேற்கே 22 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது[71]. மிகத் தொன்மையான நகரமான இது, மேற்குக் கடற்கரையில், ஒரே ஒரு இயற்கைத் துறைமுகமாகத் திகழ்ந்ததெனக் கூறப்படுகிறது. இங்குதான், கப்பல்கள் கடற்கரையின் வெகு அருகாமையில் வரக்கூடும். 16 முதல் 18 ஆம் நூற்றாண்டுவரை, இது ஆங்கிலேய வணிகர்களுக்கு, தேவைப் பொருள்களுக்காக அல்லது செப்பணிடுவதற்காகக் கப்பல்கள் செல்லக் கூடிய ஒரு துறைமுகமாக



குளச்சல் துறைமுகம்

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில், விற்பனைக்கு வந்த பொருட்களும் விற்பனை செய்யப்பட்ட பொருட்களின் அளவும்

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் இயங்கிவரும் இடங்கள்	விற்பனைக்கு வந்த பொருட்கள்	விற்பனை அளவு (தென்னை இலட்சத்தில், ஏனைய பொருட்கள், மெட்ரிக் டன்னில்)						
1. ஏதம் மொழி	1. தென்னை	2.54	2.97	17.31	2.59	13.97	11.18	56.95
2. வடசேரி	2. முந்திரிப்பருப்பு	—	–	–	–	–	–	177.32
3. களியக்காவிளை	3. புளி	2.3	7.89	0.47	2.80	4.11	21.81	34.78
4. திங்கள் சந்தை	4. கருப்புக்கட்டி	3.6	7.18	23.31	12.85	14.76	21.10	14.09
5. தோடுவட்டி	5. மரவள்ளி	503.5	352.91	462.09	485.19	681.66	178.37	300.25
6. குலசேகரம்	6. நெல்	132.9	154.49	20.79	259.71	171.14	274.93	456.40
	7. நிலக்கடலை	1.7	1.03	–	–	–	–	0.56
	8. இரப்பர்	–	–	115.67	43.07	101.26	211.69	195.42
	(அனைத்து ஒழுங்குமுறைக் கூடங்களிலும்)							

(செயலர், கன்னியாகுமரி விற்பனைக் குழு, நாகர்கோவில், அறிக்கை நாட்கள் 23.7.1986 மற்றும் 12.8.1986.)

இருந்து வந்தது. டச்சுக்காரர்களும். ஆங்கிலேயர்களும் இங்கு குடியறே, வாணிக மையமாக இவ்விடத்தினைப் பயன்படுத்தினார்கள். இங்கிருந்து பல பொருட்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அவற்றில் முக்கியமானவை, பனை, அதனின் நார்ப்பொருள், கனிப் பொருள் நிறைந்த மணல்கள், மீன் மற்றும் உப்பு ஆகியவையாகும். பாய்ந் தோடக்கூடிய அயல்நாட்டு விசைக் கப்பல் பனை நார்ப்பொருள் மற்றும் கனிப்பொருள் நிறைந்த மணல் ஆகியவற்றை ஏற்றிச் செல்வதுண்டு.

மீன் ஸ்ரீலங்காவிற்கும், வாழைப்பழங்கள், காய்கறிகள், தென்னை, பலவகை மரங்கள், மிளகு, ரப்பர், ஆகியவை கேரளா மற்றும் தமிழ்நாட்டின் பல பகுதிகளுக்கும் அனுப்பப்படுகின்றன[72]. கயிற்றினால் செய்யப்பட்ட பொருட்கள், முந்திரி பருப்பு மற்றும் புருசுகள் ஆகியவை அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

வணிக மையங்கள்

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்

மாவட்டத்தில் 6 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் உள்ளன[73]. அவை ஏதம்மொழி, வடசேரி, திங்கள்சந்தை, தோடுவெட்டி, களியக்காவிளை, மற்றும் குலசேகரம் ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன. தேங்காய், புளி மரவள்ளி, கருப்புக்கட்டி மற்றும் நெல் ஆகியவை, சந்தைக்கு விற்பனைக்கு வரும் முக்கியப் பொருட்களாகும்.

செயல்முறையாற்றப்பட்ட பொருட்களின் அளவும், அவற்றின் மதிப்பும்

தொடர் எண்.	*பொருட்கள்*	*அளவு (தேங்காயின் எண்ணிக்கை–கோடியில் ; மற்றவை–மெட்ரிக் டன்னில்)*	*தோராய மதிப்பு (ரூபாய் கோடியில்)*
1.	தேங்காய்	10 கோடி	10.00
2.	முந்திரிப் பருப்பு	3150 மெ.டன்	1.26
3.	மரவள்ளி	1,00,000 மெ.டன்	2.50
4.	பனை கருப்புக்கட்டி	2,925 மெ.டன்	0.50
5.	புளி	1.575 மெ.டன்	0.48
6.	நெல்	97,500 மெ.டன்	9.75
7.	நிலக்கடலை	1,520 மெ.டன்	0.31
8.	இரப்பர்	7,700 மெ.டன்	7.7.

(செயலர், கன்னியாகுமரி விற்பனைக் குழு, நாகர்கோவில், அறிக்கை நாள் 21.1.1981.)

வாணிபக்கழகம்:

வாணிபக்கழகம் அதனுடைய உறுப்பினர்களின் நலனைப்

பாதுகாப்பதோடல்லாமல், அவர்களது வணிக நடவடிக்கைகளை மேம்படுத்தவும் பாடுபடுகிறது. அதனின் பணி, தனிப்பட்ட தொழில் முன்னேற்றத்துடன் நின்றுவிடவில்லை; வணிக சமுதாயத்தின் அனைத்துப்பிரிவினரின் நலனுக்காகவும் பணியாற்றி, அவர்களது கோரிக்கைகள் நிறைவேற்றப் பெற தனது ஒத்துழைப்பினை நல்குகிறது.

நெல்லை-குமரி வாணிபக் கழகம், மற்றும் திருநெல்வேலி மாவட்ட வாணிபக் கழகம், இரண்டும் இணைந்து, கன்னியாகுமரி மாவட்ட வணிக பெருமக்களின் வணிக நடவடிக்கைகளில், தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்கின்றன[74].

சந்தைகள்[75]

தொடர் எண்.	*சந்தை கூடுமிடம்*	*சந்தைகூடும் காலம்*	*பெரிய சந்தையா அல்லது சிறிய சந்தையா என்ற விவரம்*
(1)	*(2)*	*(3)*	*(4)*
1.	வடசேரி	தினச்சந்தை	பெரியசந்தைகள்
2.	கணக்கமூலம்		
3.	திங்கள் சந்தை	வாரச்சந்தை	பெரிய சந்தை
4.	தக்களை	வாரச்சந்தை	சிறிய சந்தைகள்
5.	வெள்ளிச்சந்தை		
6.	கருங்கல்	வாரமிருமுறை கூடும் சந்தை	பெரிய சந்தைகள்
7.	தோடுவட்டி		
8.	கலியக்காவளை		
9.	குலசேகரம்		
10.	ஆத்தூர்		
11.	கண்ணும மூடு	வாரமிருமுறை	சிறிய சந்தைகள்
12.	புதுக்கடை		
13.	தலியருத்தன்		
14.	மைலாடி		
15.	அருமணை		
16.	கஞ்சம்புரம்		
17.	புண்ணை முத்துக்கடை		

சராசரியாக, ஒவ்வொரு ஊராட்சியிலும், 2 முதல் 9 வரையிலான சிறிய சந்தைகள் இயங்கிவருகின்றன. இவை முதன்மையாக வேளாண் பொருட்கள் விற்பனையிலேயே ஈடுபட்டுள்ளன.

முக்கியமான விற்பனை மையங்கள், நாகர்கோவில், மார்த்தாண்டம், கரிங்கல், திங்கள்சந்தை மற்றும் குலசேகரம் ஆகிய மையங்களில் இயங்கி வருகின்றன. தேங்காய், கொப்பரை, முந்திரிப்பருப்பு, புளி, பனை கருப்புக்கட்டி மற்றும் மரவள்ளி ஆகியவை, விற்பனைக்குக்கூடும் முக்கியப் பொருட்களாகும். 4.36 கோடி ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் 1970-71 ஆம் ஆண்டில், மாவட்டத்தில் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. அதே ஆண்டு, ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களின் மதிப்பு ரூபாய் 3.95 கோடியாகும்.

கீழேயளிக்கப்பட்டுள்ள பட்டியலில், 1970-71 ஆம் ஆண்டு, இறக்குமதி செய்யப்பட்ட முக்கிய பொருட்களின் விவரங்களைக்காணலாம்:

தொடர் எண்.	பொருட்கள்	அளவு (டன்னில்)	மதிப்பு (ரூபாய் ஆயிரத்தில்)
1.	நெல்	23,389	1,637
2.	பயறு வகைகள்	6,912	13,043
3.	கரும்பு	3,200	5,760
4.	வாழை	8,500	4,500
5.	முந்திரிப்பருப்பு	13,290	14,770
6.	மளிகைப் பொருட்கள் (மிளகாய் மற்றும் கொத்துமல்லி)	920	3,927
	மொத்தம்		43,637

ஏற்றுமதி செய்யப்படும் முக்கியமான பொருட்கள் தொடர்பான விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:[76]

தொடர் எண்.	பொருட்கள்	அளவு (டன்னில்)	மதிப்பு (ரூபாய் ஆயிரத்தில்)
அ.	நெல்	4,080	3,957
ஆ.	பளிங்கூர்	8,502	7,653
இ.	புளி	622	653
ஈ.	உப்பு	37,825	1,513
உ.	வாழைப்பழம்	12,200	7,320
ஊ.	காய்கறிகள்	1,200	480
எ.	தேங்காய்	61,47,700 (எண்ணில்)	3,074
ஏ.	முந்திரிப்பருப்பு	1,680	14,822
	மொத்தம்		39,472

தேர் திருவிழாக்களும், கொண்டாட்டங்களும்

மாவட்டம், தேர், திருவிழாக்காலங்களில், மாவட்ட முழுமையிலிருந்தும், தமிழ்நாடு மற்றும் கேரள மாநிலங்களைச் சார்ந்த அண்டை மாவட்டங்களிலிருந்தும் பெரும்பான்மையான மக்களைக் கவர்கிறது. இந்நேரங்களில், வாணிபம் மிகவும் மும்முரமாகவும், இயல்பு நாட்களைவிட, அதிக அளவிலும் நடைபெறுகிறது. அகஸ்தீஸ்வரம் வட்டம், சுசீந்திரம் கோவிலில், தேர் திருவிழா ஒவ்வொரு ஆண்டும், டிசம்பர் மாதத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. கல்குளம் வட்டத்திலுள்ள மண்டக்காடு அம்மன் கோவில் ஆண்டுத் திருவிழா மற்றொரு முக்கியத்துவம் வாய்ந்த திருவிழாவாகும். தக்கலை மசூதியில், சந்தனக் குடம் திருவிழாவும் பிரசித்தி பெற்றது.

ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் மாதத்தில், கோட்டார் புனித சேவியர் கிறித்துவத் திருக்கோயிலில், ஆண்டுத் திருவிழா கொண்டாட்டம் கொண்டாடப்படுகிறது. திருவிழாக்காலங்களில், குறிப்பாக உள்ளூர் பொருட்களை வைத்து, வாணிபம் மிக சுறு சுறுப்பாக நடக்கிறது.

குறிப்புகள்

1. காலியரின் கலைக்களஞ்சியம், தொகுதி -3, பக்கம் 566
2. ட்டி.ஏஎஸ். 3, பக்கம் 72,59/1082, ட்டி.ஏ.ஆர். மற்றும் 107/1096 ட்டி.ஏ.ஆர்.
3. ட்டி.ஏ.எஸ். பக்கம் 71
4. சென்னை வங்கித்தொழில் விசாரணைக்குழு அறிக்கை தொகுதி - 3, பக்கம் 1103இல் இடம் பெற்றுள்ள, சென்னை நகரத்தார் சங்கத்தின் குறிப்பு.
5. தை மாதம், முதல் தேதி (சனவரி-15)
6. சித்திரை மாதம், முதல் தேதி (ஏப்ரல்-13)
7. ஐப்பசி மாதம், தீபாவளித் திருநாள் (அக்டோபர்)
8. தொழிலில் கிடைக்கும் இலாபத்தில் ஒரு விழுக்காடு வரியாகக் கணக்கிடப்படுகிறது.
9. தொழில் முதலீட்டில் ஒரு விழுக்காடு வரியாகக் கணக்கிடப்படுகிறது
10. திருமணமான தம்பதியரின் மீதான ஒருவித வரி
11. செட்டியார்களின் புள்ளிவரியைப்போன்றதாகும். ஒவ்வொரு குடும்பத்திற்கும் நான்கு அணாக்கள் வரியாக விதிக்கப்படுகிறது. வீட்டில் ஒரு குடும்பத்திற்கு மேலிருப்பின், ஒவ்வொரு கூடுதலான குடும்பமும் நான்கு அணாக்கள் வீதம் செலுத்த வேண்டும்.
12. இந்திய வங்கிகளின் அமைப்பு, பக்கம் 22
13. வைஷ், எம்.சி., தற்கால வங்கித் தொழில் (மாடர்ன் பாங்கிங்), ஜெய்ப்பூர், பக்கம் 143.
14. கன்னியாகுமரி மாவட்ட விவரமறியும் ஆய்வறிக்கை, 'இந்தியன் ஓவர்சீஸ் வங்கி' க்கு, 1973, பக்கம் 1.
15. தமிழ்நாடு, கன்னியாகுமரி மாவட்ட கடன் வழங்குத்திட்டம் - 1978 - வழிகாட்டுவங்கிக் குழு-இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, பக்கம் 30.
16. இந்திய ரிசர்வ் வங்கி, பொருளாதாரத்துறை, சென்னை-1, அறிக்கை நாள் 29-5-1980.
17. வழிகாட்டு வங்கி அலுவலர், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, நாகர்கோவில், அறிக்கை நாள் 10-9-1980.
18. ஆலோசகர் (முன்னுரிமை கடன் வழங்கு முறை), வழிகாட்டு வங்கித்துறை, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, சென்னை, அறிக்கை நாள் 11-1-1989.

19. கன்னியாகுமரி மாவட்டக் கடன் வழங்குமுறைத் திட்டம் - 1988-1990 மற்றும் ஆண்டு செயல் திட்டம் 1988, பக்கம் 25.

20. கன்னியாகுமரி மாவட்டத்திற்கான கடன் வழங்குமுறைத் திட்டம் 1988-1990 மற்றும் ஆண்டு செயல்திட்டம் 1988 - இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, வழிகாட்டு வங்கிப்பிரிவு, மண்டல அலுவலகம், திருநெல்வேலி, பக்கம் 7.

21. கன்னியாகுமரி மாவட்டத்திற்கான கடன் வழங்குமுறைத் திட்டம் 1988-1990 மற்றும் ஆண்டு செயல் திட்டம் 1985, பக்கம் 14.

22. கன்னியாகுமரி மாவட்டத்திற்கான கடன் வழங்குமுறைத் திட்டம் 1988-1990 மற்றும் ஆண்டு செயல் திட்டம் 1988, பக்கம் 15.

23. கன்னியாகுமரி மாவட்டத்திற்கான கடன் வழங்குமுறைத் திட்டம் 1988-1990 மற்றும் ஆண்டு செயல் திட்டம் 1988, பக்கம் 19.

24. ஆலோசகர் (முன்னுரிமைக் கடன் வழங்குமுறை), வழிகாட்டு வங்கித்துறை, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, சென்னை, அறிக்கை நாள் 11.1.1989.

25. சத்யநாதன், டபிள்யூ.ஆர்.எஸ்., வேளாண் மக்களின் கடன் சுமை தொடர்புள்ள அறிக்கை 1935, பக்கம் 11.

26. மேற்படி

27. தனி ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர், சென்னை, அறிக்கை நாள் 1.2.1989.

28. கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர், கன்னியாகுமரி மண்டலம், நாகர்கோவில், அறிக்கை நாள் 28.11.1988.

29. மேலாளர், வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி தேசிய வங்கி, சென்னை, அறிக்கை நாள் 26-12-1988.

30. தனி அலுவலர், கன்னியாகுமரி மத்திய கூட்டுறவு வங்கி லிமிடெட், நாகர் கோவில், அறிக்கை நாள் 21-4-1988.

31. கன்னியாகுமரி மாவட்டத்தின் நிலை அறியும் ஆய்வறிக்கை - இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, பக்கம் 53.

32. தனி அலுவலர், கன்னியாகுமரி மாவட்டம், மத்திய கூட்டுறவு வங்கி லிமிடெட், நாகர்கோவில், அறிக்கை நாள் 12-12-1988.

33. தனி அலுவலர், கன்னியாகுமரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி லிமிடெட், நாகர்கோவில், அறிக்கை நாள் 12.12.1988.

34. தனி அலுவலர், கன்னியாகுமரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி லிமிடெட், நாகர்கோவில், அறிக்கை நாள் 12-12-1988.

35. தனி அலுவலர், கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு வங்கி லிமிடெட், நாகர்கோவில், அறிக்கை நாள் 12.12.1988.

36. கன்னியாகுமரி மாவட்டம் பற்றிய நிலை அறியும் ஆய்வறிக்கை, இந்திய ஓவர்சீஸ் வங்கி, 1973, பக்கம் 54.
37. இணைப்பதிவாளர், கூட்டுறவுத் துறை, கன்னியாகுமரி மண்டலம், நாகர்கோவில், அறிக்கை நாள் 28.11.1988
38. தனி அலுவலர், கன்னியாகுமரி மத்திய கூட்டுறவு வங்கி லிமிடெட், நாகர்கோவில், அறிக்கை நாள் 12.12.1988.
39. கூட்டுப்பதிவாளர், கன்னியாகுமரி மண்டலம், நாகர்கோவில், அறிக்கை நாள் 28.11.1988.
40. கூட்டுறவு வங்கிகளின் இணைப்பதிவாளர், கன்னியாகுமரி மண்டலம், நாகர்கோவில், அறிக்கை நாள் 28.11.1988 .
41. கன்னியாகுமரி மாவட்டத்திற்கான கடன் வழங்கும் திட்டம் 1989-90 மற்றும் ஆண்டு செயல்திட்டம், 1988, பக்கங்கள் 47 மற்றும் 48.
42. கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர், நாகர்கோவில், அறிக்கை நாள் 28.11.1988.
43. கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர், அறிக்கை நாள் 28.11.1988
44. கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர், நாகர்கோவில், அறிக்கை நாள் 28.11.1988.
45. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக்கழகம், 38-வது ஆண்டறிக்கை, 1986-87
46. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக்கழகம்-ஆண்டு அறிக்கை 1,985-86 இணைப்பு-10, பக்கம் 50.
47. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக்கழகம் - ஆண்டு அறிக்கை 1986-87 இணைப்பு-10, பக்கம் 50 .
48. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக்கழகம் -1987-88, இணைப்பு-10, பக்கம் 48.
49. மண்டல அலுவலர், ஆயுள் காப்பீட்டுக் கழகம், சென்னை, அறிக்கை நாள் 14.7.1986 .
50. கன்னியாகுமரியின் நிலை கண்டறியும் ஆய்வறிக்கை,பக்கம் 53
51. மேலாளர் (திட்டம்)ஆயுள் காப்பீட்டுக்கழகம், கோட்ட அலுவலகம், மதுரை, அறிக்கை நாள் 15.11.1988.
52. கோட்ட மேலாளர், புதிய இந்திய காப்புறுதிக் கழகம் லிமிடெட், திருநெல்வேலி, அறிக்கை நாள் 12.5.1987.
53. உதவி மேலாளர், இந்திய ஒருங்கிணைந்த காப்பீட்டு கழகம் லிமிடெட், சென்னை, அறிக்கை நாள் 6.7.1988.
54. மேலாளர், ஓரியண்டல் காப்பீட்டுக் கழகம் லிமிடெட், மண்டல அலுவலகம், சென்னை, அறிக்கை நாள் - 7.12.1987.
55. அஞ்சலகங்களின் முதுநிலை கண்காணிப்பாளர், கன்னியாகுமரிக் கோட்டம், நாகர்கோவில், அறிக்கை நாள் 10.6.1988.

56. கன்னியாகுமரி மாவட்டத்தின் நிலை கண்டறியும் ஆய்வறிக்கை 1973, பக்கம் 54.
57. அஞ்சலகங்களின் முதுநிலை கண்காணிப்பாளர், கன்னியாகுமரிக் கோட்டம், நாகர்கோவில், அறிக்கை நாள் 25.11.1988.
58. இந்தியாவில் மெட்ரிக் முறையைப் பின்பற்றுதல்-ஐந்தாண்டில் முன்னேற்றம் - இந்திய அரசு, 1962.
59. இந்தியாவில் மெட்ரிக் முறையைப் பின்பற்றுதல் - ஐந்தாண்டில் முன்னேற்றம் - இந்திய அரசு 1962.
60. இந்தியாவில் மெட்ரிக் முறையை பின்பற்றுதல் - ஐந்தாண்டு முன்னேற்றம், இந்திய அரசு, 1962.
61. இந்தியாவில் மெட்ரிக் முறையைப் பின்பற்றுதல் - ஐந்தாண்டு முன்னேற்றம் - இந்திய அரசு, 1962.
62. சென்னையில் மெட்ரிக் (பதின்மான அடுக்காயமைந்த பிரஞ்ச் அளவை முறை) முறை - எடைகள் மற்றும் அளவுகளின் கட்டுப்பாட்டு அலுவலர், சென்னை, பக்கங்கள் 4-5.
63. பொதுப்பணித்துறை-மெட்ரிக் முறை நடைமுறைப்படுத்துதல்- சென்னை அரசு-1963, பக்கங்கள் 7-8.
64. உலகக் கலைக்களஞ்சியம் - 1960 தொகுதி-17, பக்கம் 280.
65. பத்மநாபன். எஸ்., தென்முனையின் புறக்கணிக்கப்பட்ட வரலாறு, பக்கம் 55.
66. பத்மநாபன் எஸ்., தென்முனையின் புறக்கணிக்கப்பட்ட வரலாறு, பக்கம் 56 .
67. (1) (தனித்தாளை நோக்குக)
(2) இந்திய மக்கட் தொகை 1981, கன்னியாகுமரி மாவட்ட மக்கட் தொகைக் கையேடு-பகுதிகள்-13, அ.ஆ. பக்கம் 14.
68. பிள்ளை, கே.கே., சுசீந்திரம் திருக்கோவில், 1953, பக்கம் 15.
69. திருவாங்கூரின் நிருவாகம் குறித்து, 1981-82 ஆம் ஆண்டின் அறிக்கை.
70. பத்மநாபன், எஸ்., தமிழ் உலகத்திற்கு கன்னியாகுமரியின் பங்கு.
71. இந்திய மக்கள் தொகை, 1981, கன்னியாகுமரி மாவட்ட மக்கட் தொகைக் கையேடு, பக்கம் 15.
72. மேற்படி
73. செயலர், கன்னியாகுமரி விற்பனைக்குழு, நாகர்கோவில், அறிக்கை நாள் 21.2.1981.
74. செயலர், தென்னிந்திய வாணிப மற்றும் தொழில் கழகம், அறிக்கை நாள் 20.5.1988.
75. செயலர் கன்னியாகுமரி விற்பனைக் குழு, நாகர்கோவில்.
76. கன்னியாகுமரி மாவட்டத்தில் நிலை கண்டறியும் ஆய்வறிக்கை - இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, சென்னை, நாள் 16.5.1973, பக்கம் 49 .

இயல் - 7

தகவல் தொடர்பு

'போக்குவரத்து' சமுதாயத்தில், கருத்துசொல் ஒத்த செய்திகளை பரிமாற்றம் செய்துகொள்ள, ஒரு வழிமுறையாகப் பின்பற்றப்படுவதால், இது ஒரு இன்றியமையாத ஆக்கக்கூறாகத் திகழ்கிறதென உறுதியாகக் கூறலாம், மனித சமுதாய வரலாற்றின் கவர்ச்சியுட்படுத்தும் பக்கங்களைப் புரட்டிப் பார்த்தால், போக்குவரத்து இன்றியமையாததாகிவிட்டதும், அது நாளுக்குநாள் வெகுவாக வளர்ச்சியடைந்து வருவதும் தெரியவரும். மக்கள் அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளவும், அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திக் கொள்ளவும், கடுமுயற்சி மேற் கொண்டதையொட்டி, போக்குவரத்து வழிவகையில் ஒரு முன்னேற்றம் காணப்பட்டது.

பண்டைக்காலத்தில், செய்திகளனைத்தும், தனி நபர்கள் மூலம், குதிரையின் முதுகிலும், அல்லது நடந்தே சுமந்தும் எடுத்துச் செல்லப்பட்டன. பல துறைமுகங்கள் வழியாக, கடல்களின் குறுக்கே கப்பல் போக்குவரத்தும் மேற்கொள்ளப்பட்டன. மறுமலர்ச்சி காலம் வரை அம்முறைகள் மேற்கொள்ளப்பட்டன.

தற்போதைய கன்னியாகுமரி மாவட்டப் பகுதியில், 'அஞ்சல்'எனும் பெயர் தாங்கிய அஞ்சல் முறை நடைமுறையிலிருந்து வந்தது. இது, இக்காலத்திய துறை அஞ்சல் முறையைப் போன்றதாகும். கி.பி.1784 ஆம் அண்டு, ராஜா ராமவர்மா, திருவாங்கூர் - கொச்சி மாநிலங்களை அரசோச்சி வந்த போது, "அஞ்சல்" முறையை ஒரு விஞ்ஞான ரீதியில் சீரமைத்தார்.

துறை அஞ்சல்முறை, 19 ஆம் நூற்றாண்டில், அறிமுகப் படுத்தப்பட்டது. கன்னியாகுமரி மாவட்டத்தில், அஞ்சல் பணி, 1865 ஆம் ஆண்டு, நாகர்கோவிலில், ஒரு அஞ்சல் அலுவலகம் திறக்கப்பட்டபோது துவங்கியது. எனினும், தொடர்ந்து இருந்து வந்த 'அஞ்சல்' முறையினை மக்கள் ஆதரித்தனர். ஏனெனில், துறை அஞ்சல் முறையைவிட, பழைய அஞ்சல் முறை, செலவில் குறைந்ததாக இருந்ததை மக்கள் உணர்ந்ததே இதன் முக்கியக்காரணமாகும். இறுதியில், இவ்விரண்டு முறைகளுக்கிடையே பெருத்த போட்டி நிலவியது.

1882 ஆம் ஆண்டில், சென்னை அஞ்சல்துறைத் தலைவரின் வேண்டுகோளுக்கிணங்க, திருவாங்கூர் மாநிலத்திற்கும், ஆங்கிலேயே அரசிற்குமிடையே ஒரு அஞ்சல் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது[1]. அதன்படி, மரபு வழிவந்த "அஞ்சல்முறை" ஓராண்டு காலத்திற்குத் தொடர்ந்து செயலாற்றப்பெற அனுமதி வழங்கப்பட்டது.

அஞ்சல் துறை, அஞ்சல் போக்குவரத்துப்பணியுடன், தொலைபேசி, தந்தி மற்றும் தொலையச்சு (டெலெக்ஸ்) போன்ற அஞ்சல் பணிக்கு அப்பாற்பட்ட பணிகளையும் ஆற்றி வருகிறது. இன்றைய நிலையில் அவை ஒரு தனித்துறையாக இயங்குகின்றன. மக்களின் பொருளா தாரத்திலும் அஞ்சல்துறை முக்கிய அங்கம் வகிக்கிறது. மேலும், நல்லபல அஞ்சல் சேமிப்புத் திட்டங்களையும், அஞ்சல் ஆயுட்காப்பீட்டுத் திட்டத்தினையும் அளித்து வருகிறது.

கன்னியாகுமரி அஞ்சல்துறைக் கோட்டம் மாவட்ட வருவாய் அலகிற்கு ஒத்ததாகவே, அமைந்துள்ளது.

கன்னியாகுமரி கோட்டத்தில், நான்கு துணைக் கோட்டங்கள் உள்ளன. அவற்றின் பெயர்களும், அவை எந்த ஆண்டில் நிறுவப்பட்டன போன்ற விவரங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

நாகர்கோவில் கிழக்கு	(1951),
தக்கலை	(1967),
குழித்துறை	(1976)மற்றும்
நாகர்கோவில் மேற்கு	(1981),

இவை 1987 ஆம் ஆண்டின் நிலையிலான புள்ளிவிவரங்களாகும். அஞ்சல் அலுவலகங்களைப் பொறுத்தவரை, நாகர்கோவிலில் ஒன்றும், தக்கலையிலொன்றுமாக, இரண்டு அஞ்சல் அலுவலகங்கள் உள்ளன. இவை தவிர, 75 துறை அஞ்சல் அலுவலகங்கள், 30 துறைக்கு மிகைப்படியான துணை அலுவலகங்கள் மற்றும் 136 துறைக்கு மிகைப்படியான கிளை அலுவலகங்கள் ஆகியவை இயங்கி வருகின்றன[2].

தந்திகள் மற்றும் தொலைபேசிகள்

போக்குவரத்துத் துறையில், மின்சாரத்தை அறிமுகப்படுத்தி, சொற்புரட்டான இயந்திர நுணுக்கப் பகுதிகளைக் கண்டுபிடித்து அவற்றைப் பயன்படுத்தத் துவங்கியபின்னர், மின்னல் வேகத்தில், போக்குவரத்து மேம்பாடடைந்து வருகிறது.

இந்த நூற்றாண்டில், மின்மம் சார்ந்த துறையில், பிரமிக்கத்தக்க முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. இதனால், வானொலி, தற்போது தொலைக்காட்சி மற்றும் துணைக்கோள் ஆகியவை இணைப்பு வழியில், புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தியுள்ள தோடல்லாமல், உலகத் தையே திகப்பிலாழ்த்தியுள்ளது. ஒரு காலத்தில், கிலோ மீட்டர் தொலைவிலிருப்பதாகக் கருதப்பட்ட ரஷ்யா, தற்போதைய தொலைக் காட்சி யுகத்தில் ஒரு வினாடியின் சிறு பகுதித் தொலைவில் இருப்பதாக நாம் உணர்கிறோம், இதற்குப் பொருள் யாதெனில், உலகத்தின் பல பகுதிகளிலுள்ள மக்களுடனும் நாம் பின்னிப் பிணைந்துள்ளோ மென்பதாகும்.

இம்மாவட்டத்தில் இத்துறையில் மேற்கொண்டுள்ள முன்னேற்றத் தின் செயல் விளைவு, கீழ்க்குறிப்பிட்ட பத்திகளில் விவரிக்கப் பட்டுள்ளது.

1956 ஆம் ஆண்டு வரை, தற்போதைய கன்னியாகுமரி மாவட்டப் பகுதி, திருவனந்தபுரம் தந்திப்பொறிக்கோட்டத்தில் இணைந்திருந்தது. நாகர்கோவிலில் ஒன்றும், குளித்துறையில் ஒன்றுமாக, இரண்டு தொலைபேசி நிலையங்கள் இயங்கிவந்தன. இவைதவிர, தக்கலை, கன்னியாகுமரி ஆகிய இரண்டு இடங்களிலும், பொதுத்தொலைபேசி நிலையங்கள் அமைந்திருந்தன.

இப்பகுதியினைத் தமிழ்நாட்டுடன் இணைத்தபின், சென்னை வட்டத்திலிருந்த முந்தைய ஒருங்கிணைந்த அஞ்சல் மற்றும் தந்தித்துறை, 1961 ஆம் ஆண்டு, கன்னியாகுமரியிலுள்ள மற்றொரு தொலைபேசி நிலையத்தைப் பொறுப்பிலெடுத்துக்கொண்டது. 1963 ஆம் ஆண்டு, மற்றொரு நிலையம் தக்கலையில் துவங்கியது. 1964-ல், பூதப்பாண்டி அலுவலகம், துவங்கப் பெற்றது. 1960 ஆம் ஆண்டில், ஐந்து தொலைபேசி நிலையங்களைக் கொண்டிருந்த இம்மாவட்டம், தொடர்ந்த ஆண்டுகளில், 26 நிலையங்களைப் பெற்றது. மேலும், தொலை தூர பொதுத் தொலைபேசி அலுவலகங்களும், 49 இணைந்த அலுவலகங்களும் மாவட்டத்தில் துவங்கப்பெற்றன. இம் மாவட்டத்தில் நிறுவப்பட்டுள்ள தொலைபேசி அலுவலகங்களின் பட்டியல் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

நாகர்கோவிலில் 3000 தொலைபேசிப் பாதையுடன் (எம்.ஏ. எக்ஸ்-1) இயங்கும் இயக்கம், மாவட்டத்திலேயே மிகப் பெரிய தொலைபேசி நிலையமாகும். இதற்கடுத்தபடியாக உள்ளது, 300 தொலைபேசிப் பாதையுடன் அமைந்துள்ள (எம்.ஏ.எக்ஸ்-2) குழித்துறையிலுள்ள தொலைபேசி நிலையம். நாகர்கோவிலில் 1982 ஆம் ஆண்டில் துவங்கிய தொலையச்சு நிலையத்தினைத் தொடர்ந்து, இம்மாவட்டம் தொலையச்சு வரைபடத்தில் இடம் பெற்றது. இவ்வாறாக நாகர்கோவில், 108 அயல்நாடுகளுடன் இருவழித் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டுள்ளது. சந்தாதாரர் தொலைபேசி இணைப்பு வகையில் ஊடிணைப்புத் தொடர்பு வாய்ப்பு (STD) நலங்கள் நாகர்கோவில், கன்னியாகுமரி மற்றும் குழித்துறை ஆகிய இடங்களில் உள்ளன. இவை, நாகர்கோவில் நகரத்துடன், சென்னை, பம்பாய், கல்கத்தா, புதுடில்லி மற்றும் தேசிய ஊடிணைப்புத் தொடர்பு பெற்றுள்ள இந்தியாவின் ஏனைய 400 நகரங்களை இணைக்கின்றன. மேலும், இம்மாவட்டத்திலுள்ள இம்மூன்று தொலைபேசி இயக்ககங்களுக்கும், பல்வேறு நாடுகளுடன் தொடர்பு கொள்ளும் ஊடிணைப்புத் தொடர்பு, ISDதுணை நலங்கள் உள்ளன. இவ்வசதி, உலகிலுள்ள 85 நாடுகளுக்கு விரிவாக்கப்பட்டுள்ளது. ஏனைய மாநிலத் தலை நகரங்களுக்கு, தேசிய



திருவாங்கூர் மன்னர் காலத்திய அஞ்சல் பெட்டி

சந்தாதாரர், NSD தொலைபேசி இணைப்பு அளிக்கப்பட்டுள்ளது. இவ்வகையான நகரங்களினூடேயான செய்திகளை ஒருவழிப்படுத்த, ஒரு முதன்மையான தொலைபேசித் தொடர்புப் படுத்தும் மையமான, மதுரை தொலைபேசி இணைப்பு, தானியங்கித் தொலைபேசி இயக்ககத்துடன், மதுரைக்கும், திருவனந்தபுரத்திற்குமிடையே ஒரு அடிநிலத்தந்தி வட இணைவு மூலமாக, நாகர்கோவில் இணைக்கப் பட்டுள்ளது. நாகர்கோவிலுக்கும், கன்னியாகுமரிக்குமிடையே, ஒரு மின்காந்த அலை முறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. நாகர்கோவிலில் ஒரு தந்திவட இணைவு நிலையமும் இயங்கி வருகிறது. தக்கலைக்கும், சந்தாதாரர் தொலைபேசி இணைப்பு வகையில், ஊடிணைப்புத் தொடர்பு வசதி, ஏற்படுத்த, தொலைபேசித்துறை முயன்று வருகிறது. நாகர்கோவிலில் ஒரு தொலையச்சு பொதுத் தொலைபேசி அலுவலகமும், நாகர்கோவில், குழித்துறை மற்றும் கன்னியாகுமரி ஆகிய இடங்களொவ்வொன்றிலும் ஒரு ஊடிணைப்புத் தொடர்பு பொதுத் தொலைபேசி அலுவலகமும், இயங்கி வருகின்றன.

மாவட்டத்தின் கிராமப்பகுதிகளில் இணைப்பு வசதிகளை மேம்படுத்த, இம்மாவட்டம் நாகர்கோவில் மற்றும் குழித்துறை ஆகிய இரண்டு அலகுக்கட்டண மண்டலமாகப் பிரிக்கப்பட்டுள்ளது. நாகர்கோவில், அலகுக் கட்டண மண்டலம், அகஸ்தீஸ்வரம், தோவாளை, ஆகிய வட்டங்களுக்கும், குழித்துறை மண்டலம், கல்குளம் மற்றும் விளவங்கோடு வட்டங்களுக்கும் அவற்றின் தேவைகளுக்கு உதவுகிறது. இவ்வேற்பாட்டின்படி, நாகர்கோவிலிருந்து, அகஸ்தீஸ்வரம் வட்டத்திலுள்ள கன்னியாகுமரி, அழகப்பபுரம், ஈத்தாமொழி, இராமாபுரம், சுவாமித்தோப்பு மற்றும் தெங்காம்புதூர் ஆகிய இடங்களுக்கும், தோவாளை வட்டத்திலுள்ள ஆரல்வாய்மொழி மற்றும் தாடிக்காரன் கோணம் ஆகிய இடங்களுக்கும் தொடர்பு கொள்ள முடிகிறது. பூதப்பாண்டியிலிருந்து கன்னியாகுமரி வரையிலும் மற்றும் ஆரல்வாய்மொழியிலிருந்து ஈத்தாமொழி வரையிலுள்ள பகுதிகள் நீங்கலாக, ஏனைய இடங்களுக்கிடையே தொகுப்புத் தொலைபேசி இணைப்பு உள்ளது. அதே போன்று, விளவங்கோடு வட்டத்தின் தலைமையிடமான குழித்துறை நகரமானது, பெயின்குளம், கலியக்காவிளை, அருமனை, குலசேகரம், கரிங்கல் மற்றும் காட்டாத்துறை ஆகிய இடங்களிடையே தொகுப்புத் தொலைபேசி இணைப்பு வசதியினைப் பெற்றுள்ளது. நாகர்கோவில் - முட்டம் இவையிடையே குறிப்பிட்ட சிற்சில இடங்களுக்கிடையே தொலைபேசி ஊடிணைப்புத் தொடர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

திறமைவாய்ந்த இணைப்பு வழி வசதியைக் கருத்திற்கொண்டு, "12 எம்.எச்.இஸட்" என்ற பெயருள்ள உயர்தர தந்தி வட

இணைவினை செயல்படுத்த ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. குழித்துறையில் ஒரு இடைப்பட்ட நிலையம் நிறுவி, ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள், இப்புதிய இணைவு செயல்பட உள்ளது.

தொலைபேசி ஊடிணைப்புத் தொடர்பு/(ISD) தொலைபேசித் தொடர்பு வசதியினை அறிமுகப்படுத்துவதற்கு ஒரு உறுதியான சாதனத்தை உருவாக்கிட, தக்கலைக்கு, ஒரு சிற்றிடைவெளி சார்ந்த முறை திட்டமிடப்பட்டுள்ளது.

தந்திகள்

நாகர்கோவிலில் ஒன்றும், குழித்துறையில் மற்றொன்றுமாக, இரண்டு தந்தி அலுவலகங்கள் இம்மாவட்டத்தில் இயங்கி வருகின்றன. இவைதவிர, 49 மோர்ஸ் (மோர்ஸ் என்பார் அமைத்த தந்திப் பதிவுக் குறியீட்டுமுறை) செயற்பாணி ஒருங்கிணைந்த அலுவலகங்களும் இம்மாவட்டத்தில் இயங்கி வருகின்றன. அவற்றில் 37 அலுவலகங்கள் நாகர்கோவிலிலும், 12 அலுவலகங்கள் குழித்துறையிலும் உள்ளன. மாநிலத்திற்கு வெளியேயுள்ள இடங்களுக்கு செய்திகளை விரைவாக அனுப்புவதற்கு, "சேமித்து - அனுப்புகை" முறை, தந்தி வசதி, நாகர்கோவில் தந்தி அலுவலகத்தில் உள்ளது. மாநிலத்திற்கு வெளியிலும், மாநிலத்திற்குள்ளேயுமுள்ள இடங்களுக்கு இவ்வசதி செய்துகொடுக்கப் பட்டுள்ளது. தமிழ்நாடு மாநிலத்திலுள்ள மிக முக்கியமான இடங்களுக்குச் செய்திகளை விரைவில் அனுப்புவதற்கு, நாகர்கோவில் மற்றும் குழித்துறை தந்தி அலுவலகங்களில் - "சேமித்து - அனுப்புகை-ஜென்டெக்ஸ்" முறை தந்தி வசதி, பயன்படுத்தப்பட்டு வருகிறது. முதன்மையான நீர்ப்பாசன வாய்க்காலாகிய, கோதையார் (பேச்சிப்பாறை அணை) சித்தார் பட்டணம்கால் வாய்க்கால் (சித்தார் அணை-1 மற்றும் 2) ஆகியவற்றை நாகர்கோவிலுள்ள பொதுப்பணித்துறை அலுவலகங் களுடன் இணைக்க, ஒரு பேச்சு நெறி, இணைப்பு வழித்திட்டம் என்ற திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, நல்லமுறையில் இயங்கி வருகிறது.

தொலைபேசி இணைப்பு வழிப்பின்னல்வலையழைவு, 5595 தொலைபேசிப்பாதையினைக் கொண்டதாகும்[3]. அவற்றின் 5085 தொலைப் பேசிப் பாதைகள் இயங்கிவருகின்றன. பயன்படுத்தப்பட்டு வரும், தொலைபேசிகளின் எண்ணிக்கை 5607 ஆகும். 26 தொலைபேசி இயக்ககங்களின் துணை இயக்ககங்கள் தவிர, மூன்று ஊடிணைப்புத் தொடர்பு இயக்ககங்கள் 15 மின்னலை நிலையங்கள் மற்றும் 20 பாதைகள் தொலையச்சு இயக்ககங்கள் நாகர்கோவிலில் உள்ளன. தொலைபேசி உள்ளூர் தொடர் மற்றும் வரிசையான தந்திப் பாதைகள், எல்லாம் இணைந்து, 1616 கிலோ மீட்டர் நீளமுள்ளன, இவை, இம்மாவட்டத்தில், 13,109 கிலோ மீட்டர் நீளமுள்ள கம்பிகளைப்

பெற்றுள்ளன. உள்ளூர் தொலைபேசி முறைக்கு இம்மாவட்டத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள அடிநிலக்கம்பி வடம் 311 கிலோ மீட்டர் நீளமுள்ளதாகும். மின் ஊடுகடத்தியின் நீளம் 34,426 கிலோ மீட்டர். ஒவ்வொரு 1000-மக்கள் தோகைக்கும், தொலைபேசியின் நெருக்க அளவு விகிதம் 3.6 ஆகும்.

நாகர்கோவில், குழித்துறை மற்றும் தக்கலையிலுள்ள தொலைபேசித் தொடர்பு இயக்ககங்கள், ஒரு நாளைக்கு ஏறத்தாழ 2600 தொலைபேசிச் செய்திகளைக் கையாளுகின்றன. சராசரியாக, இம்மாவட்டத்தில் செயல்முறைப்படுத்தப்படும், 1,20,00,000 அளவான உள்ளூர் செய்திகள், ஆண்டிற்கு 2.05 கோடி ரூபாய் வருவாயை ஈட்டித்தருகின்றன. 1986 ஆம் ஆண்டு, இம்மாவட்டத்தில், தொலைத் தொடர்பு சொத்து குறித்த, நிலை முதல் முதலீடு, 10 கோடி ரூபாயாகும். 1987 ஆம் ஆண்டு நிலைப்படி, தொலைத் தொடர்புத் துறையில், 513 பணியாளர்கள் செயலாற்றி வந்தார்கள்.

இம்மாவட்டத்திலுள்ள தொலைபேசி இயக்ககங்கள், தொலை பேசித் தொடர்பு அலுவலகங்கள் ஆகியவற்றின் விவரங்கள், வட்ட வாரியாகக் கீழே அளிக்கப்பட்டுள்ளன:

அகஸ்தீஸ்வரம் வட்டம்

நிலையங்கள்		*மொத்த கொள்ளளவு*
1. நாகர்கோவில் எம்ஏஎக்ஸ்	1	3000
2. ஈத்தாமொழி எம்ஏஎக்ஸ்	3	90
3. அழகப்பபுரம் எம்ஏஎக்ஸ்	3	90
4. கன்னியாகுமரி எம்ஏஎக்ஸ்	2	200
5. இராமாபுரம் எம்ஏஎக்ஸ்	3	35
6. தெங்கம்புதூர் எம்ஏஎக்ஸ்	3	45
7. சுவாமித் தோப்பு எம்ஏஎக்ஸ்	3	90
8. முட்டம் எம்.ஏ.எக்ஸ்	3	90

அகஸ்தீஸ்வரம் வட்டத்திலுள்ள தொலைபேசித் தொடர்பு அலுவலகங்கள்

இருளப்பபுரம், நாகர்கோவில் கிருஷ்ணன் கோவில், நாகர்கோவில் காத்தின்பூத் மருத்துவமனை. நாகர்கோவில் நேசமணி நகர், இராமாபுரம், வழுக்கம்பாறை, வரியூர், தேவகுளம், எட்லக்குடி மறவன்குடியிருப்பு, வடிவீஸ்வரம், பரக்கை, தெங்கம்புதூர், கணபதிபுரம் கேசவன்புத்தன் துறை, இராசக்கமங்கலம், தெற்கு சூரங்குடி, பொட்ரயாடி, கோவளம், மகாதானபுரம், தெற்கு தாமரைக்குளம், விவேகாநந்தபுரம், ஜேம்ஸ் நகரம், லீவங்கிபுரம், குலசேகரபுரம், மருங்கூர், குமாரபுரம், நல்லூர் மற்றும் தாமரைக்குளம்.

தொலைதூரமுள்ள பொதுத் தொலைபேசிகள்

குமாரபுரம், தோப்பூர், மருங்கூர் மற்றும் சாரல்

'என்.எஸ்.டி' மற்றும் 'ஐ.எஸ்.டி' வசதிகள் படைத்த நிலையங்கள்

நாகர்கோவில், குழித்துறை மற்றும் கன்னியாகுமரி

துறைசார்ந்த தந்தி அலுவலகங்கள்

1. நாகர்கோவில் டி.ட்டி.ஒ(DTO)-எஸ்.ட்டி.டி. (STD PT) பொதுத் தொலையச்சு வசதிகள் பெற்றுள்ளது.

தொலையச்சு இயக்ககம்

1. நாகர்கோவில் - 20 பாதைகள்

மார்ஸ் செயற்பாணி ஒருங்கிணைந்த அலுவலகங்கள்

அகஸ்தீஸ்வரம்,
மைலாடி,
சுசீந்திரம்,
கன்னியாகுமரி - 'எஸ்ட்டிடி' - பொது தொலையச்சு வசதிகளுடையது.
அழகப்பபுரம்
கொட்டாரம்
நாகர்கோவில் நகரம்
நாகர்கோவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
நாகர்கோவில் தொழிற்பேட்டை,
கோட்டார்,
புத்தாளம்,
ஈத்தாமொழி,
வடசேரி மற்றும்
வேட்டூர்ணிமடம்.

விளவங்கோடு வட்டம்[4]

	நிலையங்கள்			*மொத்த கொள்ளளவு*
1.	குழித்துறை	எம்ஏஎக்ஸ்	2	3000 பாதைகள்
2.	அருமனை	எம்ஏஎக்ஸ்	3	90 பாதைகள்
3.	கீழ்கோதையார்	எம்ஏஎக்ஸ்	3	25 பாதைகள்

4.	கொல்லங்கோடு	எம்ஏஎக்ஸ்	3	90 பாதைகள்
5.	பெயின்குளம்	எம்ஏஎக்ஸ்	3	90 பாதைகள்
6.	கலியக்காவளை	எம்ஏஎக்ஸ்	3	90 பாதைகள்

விளவங்கோடு வட்டத்திலுள்ள தொலைபேசித் தொடர்பு அலுவலகங்கள்

ஆத்தூர்,	கனகம்புரம்,
கபவிளை,	எஸ்.ட்டி.மாங்காடு
இரேணிபுரம்,	கலியல்
காஞ்சிரக்கோடு,	இத்தோடு
நல்லூர்,	இடைக்கோடு
நாட்டாளம்,	பாலுக்கல்
உண்ணாமலைக்கடை,	பாலப்பள்ளம்
தூத்தூர் புதுக்கடை,	திக்காணாம்கோடு மற்றும் உதய மார்த்தாண்டம்

துறைத்தந்தி அலுவலகம்

1. குழித்துறை - எஸ்.ட்டி.டி. வசதிகள் உள்ளன

தொலைதூர பொதுத் தொலைபேசிகள்

1. மேம்பாலை
2. ஆலஞ்சோலை

மார்ஸ் செயற்பாணி ஒருங்கிணைந்த அலுவலகங்கள்

1. கொல்லங்கோடு
2. கலியக்காவிளை
3. பாகோடு
4. அருமனை
5. புதுக்கடை
6. தேங்காப்பட்டினம்
7. குன்னத்தூர்

தோவாளை வட்டம்

நிலையங்கள்			*மொத்த கொள்ளளவு*
1. பூதபாண்டி	எம்ஏஎக்ஸ்	3	50 பாதைகள்
2. ஆரல்வாய்மொழி	எம்ஏஎக்ஸ்	3	90 பாதைகள்
3. கீரிப்பாறை	எம்ஏஎக்ஸ்	3	35 பாதைகள்
4. தாடிக்காரன்கோணம்	எம்ஏஎக்ஸ்	3	25 பாதைகள்

மார்ஸ் செயற்பாணி ஒருங்கிணைந்த அலுவலகம்

1. அழகிய பாண்டியபுரம்
2. பூதப்பாண்டி
3. ஆரல்வாய்மொழி

தோவாளை வட்டத்திலுள்ள தொலைபேசித் தொடர்பு அலுவலகங்கள்

செண்பகராமன் புதூர்	அருமநல்லூர்
இரச்சக்குளம்,	தரிசனம்கோப்பு
புத்தேரி,	கடுக்கரை
தாழக்குடி,	கீரிப்பாறை
திருப்பதிசாரம்,	பல்குளம் மற்றும்
தோவாளை,	தாடிக்காரன் கோணம்
வெள்ளமடம்	

கல்குளம் வட்டம்

	நிலையங்கள்			*மொத்த கொள்ளளவு*
1.	தக்கலை	எம்ஏஎக்ஸ்	3	200 பாதைகள்
2.	குலசேகரம்	எம்ஏஎக்ஸ்	3	300 பாதைகள்
3.	காட்டாத்துறை	எம்ஏஎக்ஸ்	3	90 பாதைகள்
4.	கரிங்கல்	எம்ஏஎக்ஸ்	3	90 பாதைகள்
5.	நெய்யூர்	எம்ஏஎக்ஸ்	3	135 பாதைகள்
6.	ஆலூர்	எம்ஏஎக்ஸ்	3	35 பாதைகள்
7.	கொளச்சல்	எம்ஏஎக்ஸ்	3	90 பாதைகள்
8.	மணக்காவிளை	எம்ஏஎக்ஸ்	3	90 பாதைகள்

தொலைதூர பொதுத்தொலை பேசிகள்

1. மேக்க மண்டபம்
2. மணியன் குழி

மார்ஸ் செயற்பாணி ஒருங்கிணைந்த அலுவலகங்கள்[5]

திருவட்டார்	மிளகுமூடு
குலசேகரம்	வில்லுக்கிரி
பள்ளியாடி	மணவாளக்குரிச்சி
கரிங்கல்	ஆசாரிப்பள்ளம்
நெய்யூர்	காப்பியாரா

கொளச்சல்	காட்டாத்துரை
திருவிதாங்கோடு	தக்கலை மற்றும்
மேக்க மண்டபம்	ஆலூர்

கல்குளம் வட்டத்திலுள்ள தொலைத்தொடர்பு அலுவலகங்கள்[6]

மேட்டுக்கடா	சுங்கங்கடை
பத்மநாபபுரம் கோட்டை	காட்டிமங்கோடு
மணலிக்கரை	வேம்பனூர்
குமாரபுரம்	கல்லுக்குட்டம்
அழகிய மண்டபம்	காரன்காடி
அம்மாண்டிவிளை	குருந்தங்கோடு
வெள்ளிச்சந்தை	லட்சுமிபுரம்
சாந்தபுரம்	மேக்கோடு
சாரல்	நெய்யூர் கோட்டை மற்றும்
கொடியப்பட்டினம்	குளச்சல்கோட்டை

வானொலி மற்றும் தொலைக்காட்சி நிலையங்கள்

1984 ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம் 30-ம் நாள் முதல், இந்தியாவிலேயே இவ்வகையில் முதன்மையான ஒரு உள்ளூர் வானொலி நிலையம், நாகர்கோவிலில் இயங்கி வருகிறது. அதனுடைய பரப்பரங்கம் மற்றும் ஒலிபரப்பனுப்பீட்டுக் கருவி, ஆகியவை, நாகர்கோவில் நகரத்திலேயே நிறுவப்பட்டுள்ளன. மண்டலப் பின்னலமைப்பிலடங்கிய, வானொலி நிலையங்களினின்றும் இந்நிலையம் சற்றே மாறுபட்டது. ஏனெனில், அது அடிப்படையிலேயே பயனுள்ளபணி சுடரிடுகின்ற ஒரு அமைப்பாகும். இது, ஒரு சிறிய பகுதியாகிய கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மட்டுமே பயனளிக்கிறது. அதனுடைய ஒலியெடுப்பு, உள்ளூர் பிரச்சனைகளைத் தீவிரமாக கையாளுவதேயாகும். பெரும்பாலும் களப்பணிகளடங்கிய நிகழ்ச்சிகளைத் தொகுத்தளிக்கும் முறையை மிகச் சிறப்பாக பின்பற்றிவந்த, உள்ளூர் வானொலி, பல்வேறு அரசியல் துறைகளின் விரிவாக்க செயலர்களுக்கும், ரசிகர்களுக்குமிடையே ஒரு இரு இணைப்பு வழிமுறையினை வகுத்துக்கொடுத்தது. சமுதாயத்திலுள்ள பல்வேறு வகுப்பினர்களும் தங்களது நிகழ்ச்சிகளை நடத்திக் காண்பிக்க, வாய்ப்பளிப்பதற்கும், அவர்களது திறமை, கருத்து இரண்டையும் இணைத்து வெளிப்படுத்துவதற்கும், உள்ளூர் வானொலி நிலையம், தக்க வழிமுறைகளை மேற்கொள்கிறது. மேலும், நேயர்களுக்கு, வேலை வாய்ப்பு, கல்வி, வீட்டுவசதி, சட்டம், ஒழுங்கு நிலை, பற்றி போதிய

விவரங்களை அளிக்கவும், குடும்பப் பிரச்னைகள் மற்றும் ஆர்வமிக்க அவர்களது பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்யவும் உள்ளூர் வானொலி, "உதவி இணை வழி" மூலம் உரிய நடவடிக்கை எடுக்கிறது[7].

100 மின்னாற்றல் விசைமான அலகு கொள்திறமுள்ள ஒலிபரப்பீட்டுக் கருவியுடன், ஒரு தொலைக்காட்சி மின் விசை அஞ்சல் ஒலிபரப்பு மையம் நிறுவப்பட்டுள்ளது.

தாழ்மின்விசை ஒலிபரப்பனுப்பீட்டுக்கருவி ஜி.சி.இ.எல். நிறுவனத்தால் வழங்கப்படுகிறது. இந்த ஒலிபரப்பு மையம், 18 கிலோ மீட்டர் தொலைவு வரையுள்ள பகுதிகளுக்குப் பணியாற்றுகிறது.

தற்போது, டில்லி நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படுகின்றன. ஆகஸ்ட், 15, 1988 ஆம் தேதியிலிருந்து, தொலைக்காட்சித்துறை, சென்னை தொலைக் காட்சி நிலையத்திலிருந்து, 90 நிமிடங்களுக்கு தமிழ் நிகழ்ச்சிகளை ஒலிபரப்புகிறது. ஒலி பரப்பனுப்பீட்டுக்கருவி. அவை இடைவெளிப் பகுதி 6 மூலம் இயங்குகிறது[8].

இருப்புப்பாதை நிறுவனம்

நாடு முழுவதையும், இருப்புப்பாதை நிறுவனம் இணைத்துள்ளது. மக்களை ஏற்றிச் சென்றாலும், பொருட்களை ஏற்றிச் சென்றாலும், இந்நிறுவனத்தால், பராமரிக்கப்படும் இருப்பூர்தி, மக்களின் மனநிறை விற்கேற்ப நற்பணியாற்றி வருகிறது.

1979 ஆம் ஆண்டு வரை, கன்னியாகுமரி மாவட்டத்தில், இருப்புப்பாதைகள் இல்லாமல், இரண்டு தேசியப்பெருவழிகள் மட்டும் கன்னியாகுமரியை ஏனைய பகுதிகளுடன் இணைத்தன. ஒன்று திருநெல்வேலியிலிருந்தும், மற்றொன்று திருவனந்தபுரத்திலிருந்தும் வரக்கூடிய பெருவழிகளாகும்.

மாவட்டத்திற்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகமாகிக்கொண்டு வருவதால், நாட்டின் இப்பகுதியினை, மற்ற பகுதிகளுடன் இணைப்பது இன்றியமையாத தாகியது. எனவே, கன்னியாகுமரி மாவட்டத்திற்குத் தற்போதைய இருப்புப்பாதை இணைப்பு அளிக்கப்பட்டது.

இருப்புப்பாதையின் நீளம் (இணைக்கப்பட்ட இடங்கள் மற்றும் முக்கிய இருப்புப்பாதை நிலையங்கள்)

56 கிலோ மீட்டர் நீளமுள்ள பெரு குறுக்கு இருப்புப்பாதை, குழித்துறை மேற்கு நிலையத்தையும், நேர் பாதையில் திருநெல்வேலி மற்றும் திருவனந்தபுரம் மையப்பிரிவில், காவல்கிணறு நிலையத்தையும் இணைக்கிறது. நாகர்கோவில் சந்திப்பு மற்றும் கன்னியாகுமரி நிலையம் இவற்றை 16 கிலோ மீட்டர் நீளமுள்ள கிளை இருப்புப்பாதை

இணைக்கிறது. இவையாவும் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ளவை யாகும்.

இவ்விருப்புப்பாதைகளால் பயனடையும் நிலையங்களின் பெயர்களின் பெயர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

நேர்வழி	*கிளைவழி*
1. குழித்துறை மேற்கு (நிலை)	நாகர்கோவில் சந்திப்பு
2. குழித்துறை	சுசீந்திரம் (நிலை)
3. பள்ளியாடி (நிலை)	தாமரைக்குளம்
4. இரண்ணியல்	அகஸ்தீஸ்வரம் (நிலை)
5. விரானியலூர்	கன்னியாகுமரி
6. நாகர்கோவில் நகரம்	
7. நாகர்கோவில் சந்திப்பு	
8. தோவாளை (நிலை)	
9. ஆரல்வாய்மொழி	
10. காவல்கிணறு (நிலை)	

குழித்துறை மேற்கு நிலையத்திலிருந்து நாகர்கோவில் சந்திப்பு வரையிலுமுள்ள இருப்புப்பாதையும், மற்றும் நாகர்கோவில் சந்திப்பிலிருந்து, கன்னியாகுமரிக்குச் செல்லும் கிளைப்பாதையும், ஏப்ரல் 16, 1979-ம் நாள் துவங்கப்பெற்றன.

கன்னியாகுமரி மாவட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கும், இருப்பூர்தி (Train Services) களின் விவரங்கள், கீழே கொடுக்கப் பட்டுள்ளன :

1. 371 - திருவனந்தபுரம் மத்திய இரயில் நிலையம் - கன்னியாகுமரி பயணிகள் இரயில்.
2. 372 - நாகர்கோவில் சந்திப்பு - திருவனந்தபுரம் மையம் (பயணிகள் இரயில்)
3. 375/376 - திருவனந்தபுரம் மத்திய இரயில் நிலையம் நாகர்கோவில் சந்திப்பு (பயணிகள் இரயில் இரயில்)
4. 377 - திருவனந்தபுரம் மத்திய இரயில் நிலையம் நாகர்கோவில் சந்திப்பு (பயணிகள் இரயில்)
5. 378 - கன்னியாகுமரி - திருவனந்தபுரம் மத்திய இரயில் நிலையம்(பயணிகள் இரயில்)
6. 81/82 - பம்பாய் வி.ட்டி. - கன்னியாகுமரி துரித இரயில்
7. 391/392- நாகர்கோவில் சந்திப்பு - கன்னியாகுமரி (பயணிகள் இரயில்)
8. 394 - கன்னியாகுமரி - நாகர்கோவில் சந்திப்பு (பயணிகள் இரயில்)

9. 381/386 நாகர்கோவில் சந்திப்பு - திருநெல்வேலி (பயணிகள் இரயில்)

மற்றும்

384/383

10. 382/385 திருநெல்வேலி - திருவனந்தபுரம் மத்திய இரயில் நிலையம் (பயணிகள் இரயில்)

ஹிம் சாகர் துரித ரயில் தான், முதன் முதலாக நாட்டின் வடக்கு எல்லையான இமயமலையையும், தென் கோடி முனையான கன்னியாகுமரியையும், முதன்முதலாக ஆகஸ்ட், 3, 1984 முதல் இணைத்து அறிமுகம் செய்யப்பட்டுவிடப்பட்ட இரயிலாகும்[9].

விமான நிலையம்

கன்னியாகுமரி மாவட்டத்தில், விமானப்போக்குவரத்து நடைமுறைப்படுத்தப்படவில்லை. நாகர்கோவிலிலிருந்து 85 கிலோமீட்டர் தொலைவிலுள்ள திருவனந்தபுரம் விமான நிலையம்தான், மிக அருகாமையிலுள்ள விமான நிலையமாகும்.

சாலைப் போக்குவரத்து

மனித உடலுக்கு நாடிகள் அமைப்புமுறை, எவ்வளவு இன்றியமை யாதவையோ, அதேபோன்று, ஒரு நாட்டிற்கு சாலையமைப்புப் பின்னலமைவு முக்கியமானவையாகும்.

ஒரு நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்கு சாலைகள் பெருமளவில் உதவி புரிகின்றன. அதே நேரத்தில் அவை முறையான போக்குவரத்திற்கும், நன்கு பயன்படுகின்றன. மேல்தளப்பரப்புப் போக்குவரத்தினை ஆய்ந்து நோக்குங்கால், அவை ஏறத்தாழ இருப்பூர்திகளுக்கு (ரயில்கள்) ஈடானவையாகும். இருப்பூர்திப் பின்னலைமைவு முறை, நாட்டின பல பகுதிகளையும் இம்மாவட்டத் துடன் இணைப்பது போன்று சாலையமைப்பும், அவ்வாறான இணைப்பு முயற்சியில் ஈடுபட்டு வெற்றியும் கண்டுள்ளன. இந்தச் சாலை ஊர்திப் போக்குவரத்து, ஒன்றுக்கொன்று இணையானதெனக் கொள்ள இயலாது; ஆனால், ஒன்றையொன்று பின்னிச் சார்ந்தவையெனக் கொள்ளலாம்.

சென்னை-கன்னியாகுமரிப் பெருவழி, ஆரல்வாய்மொழி அருகே, கன்னியாகுமரி-திருவனந்தபுரம் சாலையுடன் இணைகிறது. இந்த சாலை நாகர்கோவில் வழியாக, பல முக்கிய இடங்களைக் கடந்து, திருவனந்தபுரத்தில் முடிவுறுகிறது. ஆரல்வாய் மொழியிலிருந்து, கேரள எல்லையைக்கடக்கும் வரையிலான இச்சாலையின் நீளம் 62.4 கிலோ மீட்டராகும்: இச்சாலையின் இரு மருங்கிலுமுள்ள இயற்கைக் காட்சிகள் பயணிகளின் கவனத்தைக் கவரத் தவறுவதில்லை.



இரயில் நிலையம், கன்னியாகுமரி

கன்னியாகுமரிப் பகுதியிலுள்ள முறையான சாலைப் போக்குவரத்தின் வரலாற்றினை நோக்குங்கால், கி.பி.1860 ஆம் ஆண்டு, அவை துவங்கப் பெற்றமை அறியவருகிறது[10]. அதற்கான புகழும், பெருமையும், திருவாங்கூர்-கொச்சின் மாநிலத்தின் முந்தைய திவானாகப் பணியாற்றிய ஸர். மாதவராவ் அவர்களையே சாரும். அவரது காலத்தில், அப்பணியினை மேற்கொள்ள, பொறியியல்துறை நிறுவப்பட்டது. எனினும், இந்தச் சாலைகள், முதன்மையாக, இராணுவம் செல்வதற் காகவே போடப்பட்டவையாகும். ஆனால், நாளாவட்டத்தில், இது அனைத்துப் போக்குவரத்து சாலையாகப் பயன்படுத்தப்பட்டது. ராம வர்மா (கி.பி.1758-98) அரசோச்சிய காலத்தில், கன்னியாகுமரிக்கும், கொடுங்களூருக்குமிடையே (கிராங்களூர்) நல்ல சாலை அமைக்கப்பட்டது.

சாலைப் போக்குவரத்துப் பணிகள்

மிகப் பின்தங்கிய பகுதிகளில் சாலையமைப்பதால், மக்களுக்குப் போக்குவரத்து வசதி ஏற்படுத்துதல், வேளாண் உற்பத்தியை மேம்படுத்துதல், மற்றும் தொழிற்துறையில் முன்னேற்றம் காணுதல் ஆகியவற்றிற்கு வழிவகுக்கப்படுகிறது. எனவே, சாலைகள் பொருளாதார வளர்ச்சியில், ஒரு முக்கிய அங்கம் வகிக்கின்றனவென ஐயமின்றிக் கூறலாம்.

போக்குவரத்து இணையமைவின் ஒரு முக்கிய மூலப்பொருளான சாலைகள், இருப்பூர்திப் பாதைகளுடன், நாட்டின் உயிர்போன்ற முக்கியத்துவம் உடைய போக்குவரவு நெறியாகத் திகழ்கின்றன.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள சாலைகள் பின்னலமைவு, தேசிய நெடுஞ்சாலை, மாநில நெடுஞ்சாலை, மாவட்டச் சாலைகள் மற்றும் கிராமப்புற சாலைகள் ஆகியவற்றைக் கொண்டதாகும். சென்னையிலிருந்து, நாகர்கோவில் செல்லும் பெருவழி, ஆரல்வாய்மொழி அருகே கன்னியாகுமரி - திருவனந்தபுரம் சாலையுடன் இணைந்து, பின்னர் 62.4 கிலோ மீட்டர் நீளம், பல முக்கிய இடங்களைக் கடந்து, இறுதியாக கேரள மாநிலத்தில் நுழைகிறது. கன்னியாகுமரியிலிருந்து, திருவனந்தபுரம் செல்லும் சாலைதான், நாட்டிலேயே எப்பொழுதுமே மிகவும் சுறுசுறுப்பாக இயங்கும் சாலையாகக் காணப்படுகிறது.

முந்தைய திருவாங்கூர்-கொச்சின் மாநிலம், போக்குவரத்தினை நாட்டுடமையாக்கும் கொள்கையினை வகுத்தது. அதன் விளைவாக, 1938 ஆம் ஆண்டு, மாநிலத்தில் போக்குவரத்துத் துறை உருவாக்கப் பட்டது[11]. நாகர்கோவில், கொளச்சல் வழியாக, திருவனந்தபுரம் மற்றும் கன்னியாகுமரிக்குமிடையே துவங்கப்பட்ட வழித்தடம்தான், நாட்டுடைமையாக்குவதற்காக, முதன் முதலில் எடுத்துக் கொள்ளப்பட்ட சாலைப்பகுதியாகும். 1956 ஆம் ஆண்டு, மாநில சீரமைப்பிற்குப் பின்னர், கன்னியாகுமரி மாவட்டத்தின், ஊர்திப் போக்குவரத்துப்பணி, மாநில போக்குவரத்துத் துறையினால் பொறுப்பேற்றுக்கொள்ளப்பட்டது.

பயணீர் ஊர்திகள் (பி) லிமிடெட், பி.ட்டி.எஸ். ஊர்திப்பணி (Bus Services) மற்றும் நாகர்கோவிலிலிருந்த ஸ்ரீ கணபதி ஊர்திப்பணி, மார்த்தாண்டத்திலிருந்த ஆர்.கே.வி. ஊர்திகள் மற்றும் டிம்பர்ஸ் (பி) லிமிடெட், ப்பி.சி. ஊர்திகள் பணி ஆகியவற்றின் உரிமையாளர்கள் 1960-க்கு முன்னர், இம்மாவட்டத்தில், ஊர்திகளை இயக்கி வந்தன.

திறமையான போக்குவரத்துப்பணியினை, சீராகவும், போதுமான அளவிலும் அளித்திட, மாநில அரசு 1967 ஆம் ஆண்டு, சில வகையான வழித்தடங்களை நாட்டுடைமையாக்க முடிவு செய்தது. அதனைத் தொடர்ந்து, கீழ்க்குறிப்பிட்ட வழித்தடங்கள் நாட்டுடைமை யாக்கப்பட்டன[12]:

1.	மேட்டுக்கடை முதல் தொடுவெட்டி வரை	(1967)
2.	தொடுவெட்டி முதல் திருப்பரப்பு வரை	(1967)
3.	நாகர்கோவில் முதல் கொளச்சல் வரை	(1967)
4.	தொடுவெட்டி முதல் களியல் வரை	(1967)
5.	தக்கலை முதல் திருவரம்பூர் வரை	(1967)
6.	நாகர்கோவில் முதல் குரும்பனை வரை	(1967)
7.	தொடுவெட்டி முதல் ஆலஞ்சோலை வரை	(1968)
8.	தக்கலை முதல் குலசேகரம் வரை	(1968)
9.	நாகர்கோவில் முதல் மணக்குடி வரை	(1970)
10.	தொடுவெட்டி முதல் தேங்காப்பட்டினம் வரை	(1970)

பின்னர், அனைத்து வழித்தடங்களும் நாட்டுடைமையாக்கப் பட்டன.[13].

மாநில போக்குவரத்துக் கழகங்கள்

இம்மாவட்டத்தில், நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து வழித்தடங்கள் தொடர்பான பணிகள், திருநெல்வேலியினைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கிவரும், கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தினால், ஜனவரி 1, 1974 முதல் மார்ச், 31, 1983 வரை கண்காணிக்கப்பட்டு வந்தது. பின்னர், ஏப்ரல் 1, 1983 அன்று துவங்கப்பட்ட நேசமணி போக்குவரத்துக்கழகம், இதனைப் பொறுப்பேற்றுக் கொண்டது. இக்கழகம், கன்னியாகுமரி மாவட்டம் முழுமையும், ஊர்திப்போக்குவரத்து நலன்களை அளிக்கிறது. மேலும், இம்மாவட்டம் மற்றும் மாநிலம் முழுமையிலும், பின்னர் மாநிலத்திற்கு வெளியிலும், அதாவது, மதுரை, திருநெல்வேலி, தூத்துக்குடி, திருச்செந்தூர், பாபநாசம், திருவனந்தபுரம், கோட்டக்காரா போன்ற இடங்களுக்கான வழித்தடங்களில் ஊர்திகளை இயக்குகிறது. இக்கழகம். 436 வழித்தடங்களில், 471 ஊர்திகளை இயக்குகிறது. ஒவ்வொரு நாளும், இவ்வூர்திகளில் 1.41 இலட்சம் பயணிகள் பயணம் மேற்கொள் கிறார்கள்[14].

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம்

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம், கன்னியாகுமரிக்கும், கன்னியாகுமரியிலிருந்து மாநிலத்தின் பல்வேறு இடங்களுக்கும், மாநிலத்திற்கு வெளியிலுள்ள இடங்களுக்கும், தனது ஊர்திகளின் மூலம் போக்குவரத்துப் பணியினை மேற்கொள்கிறது. ஓய்வெடுக்கத் தங்கும் அறைகளும், பயணிகள் சுமைகளை வைப்பதற்கான அறைகளும், கன்னியாகுமரி பேருந்து நிலத்தில் உள்ளன[15]. நாகர்கோவில், கன்னியாகுமரி, மார்த்தாண்டம், களியக்காவிளை மற்றும் கொளச்சல் ஆகிய இடங்களில் பயணம் செய்ய ஊர்தி இருக்கைகள் முன்கூட்டியே ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

பெருவழி மற்றும் புறப்பகுதிப்பணிகள்

இத்துறை, தமிழ்நாட்டில், பல்வேறு பணிகளை செயலாற்ற முறையாகத் திட்டமிடுதல், சாலை ஆகியவை உருவாக்க அமைப்பான்மை மாதிரி வகுத்தல், மற்றும் சாலைகளும், பாலங்களும் அமைத்தல் ஆகியவற்றிற்கான பொறுப்பினை ஏற்றுள்ளது. இவைதவிர, பல்வேறு கிராமப்புற வேலைத்திட்டங்களுக்கு ஊராட்சி ஒன்றியங்களுக்கு அவ்வப்போது தொழில் நுட்ப அறிவுரை வழங்குகிறது. இத்துறை, சாலை வளர்ச்சிக்குத் திட்டம் வகுத்து, அதனை அறிமுகப் படுத்தவும் செய்கிறது.

பல்வேறு வகையான சாலைகளும், அவற்றின் நீளமும்

1962 ஆம் ஆண்டில், மாவட்டத்தின் மொத்த சாலைப் பின்னல மைவு 1323.2 கிலோ மீட்டர் நீளத்தைக் கொண்டிருந்தது[16]. 1980-81 ஆம் ஆண்டு, அது 3110 கிலோ மீட்டராக உயர்ந்தது.

ஏப்ரல் 1, 1986 நிலைப்படி, பெருவழி மற்றும் புறப்பகுதிப் பணித்துறையில்

பராமரிப்பிலிருந்த, சாலைகளின் நீளம்
(நீளம் - கிலோ மீட்டரில்)

சாலைகளின் வகைகள்	மொத்த நீளம்	தளப்பரப்பிடப்பட்ட சாலைகளின் நீளம்			மண்பரப்பப் பட்டவை
		சிமெண்ட் காங்கிரீட்	தார்	கற்சரளை	
1. மாநிலப் பெருவழி	48.90	--	48.90	--	--
1. முதன்மையான (பெரிய) மாவட்ட சாலைகள்	274.30	12.20	262.10	--	--
3. ஏனைய மாவட்ட சாலைகள்	571.50	--	567.40	2.90	1.20

தளப்பரப்பிடப்பட்ட சாலையின் நீளம் தலைக்கு, 0.0022 கிலோ மீட்டரென கணக்கிடப்பட்டுள்ளது[17]. இதனுடைய மாநிலப்புள்ளி விவரங்களை நோக்குங்கால், அது தலைக்கு 0.0025 கிலோ மீட்டரென கணக்கிடப்பட்டுள்ளது.

தேசியப்பெருவழிகள்

தேசியப் பெருவழி அலகு 1971 செப்டம்பர் மாதம் துவங்கப்பட்டது. இத்துறை, தேசியப்பெருவழித்துறை திட்டங்கள், (மைய அரசின் ஊக்க ஆதரவில்)மத்திய சாலை நிதித்திட்டங்கள் ஆகியவற்றை அறிமுகப்படுத்தும் பொறுப்பிலுள்ளது.

மாநில சீரமைப்பிற்குப்பின்னர், அவற்றின் பொறுப்பு, நகர்ப்புற தேசிய பெருவழிகளின் பராமரிப்பிற்கும் சேர்த்து விரிவுப்படுத்தப் பட்டுள்ளது. இம்மாவட்டத்தில், தேசிய நெடுஞ்சாலைத்துறை, தே.நெ. 7 மற்றும் தே.நெ. 47 ஆகிய இரு பெரும் சாலைகளைப் பராமரிக்கும் பொறுப்பினை ஏற்றுள்ளது[18]. கன்னியாகுமரி மாவட்ட எல்லையில், இவ்விரு பெருவழிகளின் நீளம் 63.2 கிலோ மீட்டர்களாகும். தே.நெ. 7-ல் மொத்த நீளம் 7.2 கிலோ மீட்டராகும். 224/4 வது கிலோ மீட்டர் என்ற முனையில் கன்னியாகுமரியில் துவங்கி, 231.6-வது கிலோ மீட்டர் என்ற இடத்தில், அஞ்சுக்கிராமத்தில் முடிவடைகிறது. கன்னியாகுமரி யிலிருந்து, கேரள மாநில எல்லை வரையிலான தே.நெ.47-ல் நீளம் 56 கிலோ மீட்டராகும்.

உள்ளாட்சித்துறையினரால் பராமரிக்கப்படும் சாலைகள்[19]
(நீளம் - கிலோ மீட்டரில்)

சாலைகளின் வகைகள்	மொத்த நீளம்	தளப்பரப்பிடப்பட்ட சாலைகளின் நீளம்			மண்பரப்பப் பட்டவை
		சிமெண்ட் காங்க்ரீட்	தார்	கற்சரளை	
ஊராட்சி ஒன்றிய சாலைகள்	1231	1	53	769	408
ஊராட்சி சாலைகள்	699	7	50	133	509
மொத்தம்	1930	8	103	902	917

மாநில பெருவழித்துறையினரால் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள்

அ) முடிவடைந்த திட்டங்கள்	செலவுத்தொகை (ரூபாய் இலட்சத்தில்)
(1) (2)	(3)
1. மார்த்தாண்டம் - பனச்சமோடு சாலையில், குழித்துறை ஆற்றின் குறுக்கே, 1/6 கிலோ மீட்டரில், ஒரு பாலம் கட்டியமை	24.00

பேருந்து நிலையம், கன்னியாகுமரி

(1)	(2)	(3)
2.	இரண்ணியல்-முட்டம் சாலையில், 1/8 கிலோ மீட்டரில், பாலம் திருத்தியமைத்தமை	5.64
3.	குமரன்குடி சாலையில், 2/8 கிலோ மீட்டர் பாலம் திருத்தியமைத்தமை	17.00
4.	வடக்கு தாமரங்குளம் - சாலையில் 0/4 கிலோ மீட்டரில் ஒரு பாலம் கட்டியமை	10.75
5.	மண்டைக்காடு சாலையினை (கிலோ மீட்டர் 0/0 முதல் 2.6 வரை) அகலப்படுத்தியமை	6.00
6.	திருவட்டாரில், ஊராட்சி ஒன்றிய பணியாளர்களின் குடியிருப்புகள் கட்டியமை	4.40

இந்திய அரசின் ஊக்க ஆதரவில், கிராமப்புறத் தொழிலாளர் வேலை வாய்ப்புப் பொறுப்புறுதித் திட்டத்தின் கீழ் 25 வேலைகள் முடிவுற்றன. 70.81 இலட்ச ரூபாய் செலவில், 40.2 கிலோ மீட்டர் தொலைவுள்ள சாலைகள் நிறுவப்பட்டுள்ளன. இவற்றினால், தோற்றுவிக்கப்பட்ட மனித சக்தி நாட்கள் 4.29 இலட்சமாகும்.

தொடர் எண்.	திட்டமிடப்பட்டுள்ள பணிகள்	மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்)
1.	நாகர்கோவில்- இராசாக்கமங்கலம்- குளச்சல் சாலையில், 16/2 கிலோ மீட்டரில், மணவாளக்குறிச்சிக்கு அருகாமையில், வள்ளியாற்றின் குறுக்கே அமைந்துள்ள பழுதடைந்த பாலத்தைத் திரும்பக் கட்டுதல்	27.50
2.	மார்த்தாண்டம் - பேச்சிப்பாறை சாலையில், 5/6 கிலோ மீட்டரில், திருவட்டார் அருகே, பரளியாற்றின் குறுக்கே அமைந்துள்ள, பழுதடைந்த பாலத்தைத் திரும்ப கட்டுதல்	33.00
3.	குலசேகரம்-திருவரம்பூர் சாலையில் 4/1 கிலோ மீட்டரில், கோதையார் ஆற்றின் குறுக்கே ஒரு நீர்மூழ்கிப் பாலம் கட்டுதல்	14.00
4.	குழித்துறை- ஆலஞ்சோலை சாலையில், 5/2 கிலோ மீட்டரில், முல்லையாற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டுதல்	11.20
5.	பாலமோர் சாலையில், கீரிப்பாறை அருகே, 26/2 கிலோ மீட்டரில், பழுதடைந்த பாலத்தைத் திரும்பக் கட்டுதல்	12.50

பாரஉந்தி & நிறுவனங்கள்[20]

1. ட்டி.வி.எஸ். & சன்ஸ் லிமிடெட்
2. ஏ.பி.ட்டி. பார்சல் சர்வீஸ், நாகர்கோவில்
3. ஸ்ரீ இராகவன் போக்குவரத்து, நாகர்கோவில்
4. ஓரியண்டல் லாரி சர்வீஸ், நாகர்கோவில்
5. ஆர். சோமநாதன் & கம்பெனி, நாகர்கோவில்
6. பிரின்ஸ் லாரி சர்வீஸ், மார்த்தாண்டம்
7. ஏ.ஆர்.சி., திங்கள் சந்தை, நெய்யூர்

கன்னியாகுமரி, நாகர்கோவில், தக்கலை, மார்த்தாண்டம், திங்கள் சந்தை மற்றும் குளச்சல் ஆகிய இடங்களில், கல்லெண்ணெய் நிறுவனங்கள் இயங்கி வருகின்றன.

1980 முதல் 1985 வரையிலான காலங்களில், இம்மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட ஊர்திகளின் வகைகள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன[21]:

தொடர் எண்.	*போக்குவரத்து ஊர்திகளின் வகை*	*1980*	*1981*	*1982*	*1983*	*1984*	*1985*
(1)	*(2)*	*(3)*	*(4)*	*(5)*	*(6)*	*(7)*	*(8)*
1.	வாடகைக்கட்டண ஊர்திகள்	643	690	760	781	790	823
2.	விசைப்பொறி இழுப்புவண்டி	445	465	477	480	510	524
3.	தானியங்கிகள் (போக்குவரத்துப் பணிக்கல்லாதவை)	4985	5100	5184	5280	5310	5460
4.	நகராட்சி அலுவலர் களின் கட்டுப்பாட்டி லுள்ள ஊர்திகள்	9	9	9	9	9	9
5.	நகரக்கட்டண ஊர்திகள்	158	163	167	175	186	207
6.	நாட்டுப்பகுதிகளுக்குச் செல்லும் ஊர்திகள்	59	61	61	58	62	64
7.	பொருட்கள் ஏற்றிச் செல்லும் பாரஊர்திகள் (பொதுவானவற்றை எடுத்துச்செல்பவை)	632	705	791	885	963	1078

8.	பொருட்கள் ஏற்றிச் செல்லும் பார ஊர்திகள் (தனியானவற்றை எடுத்துச்செல்பவை)	41	49	55	47	56	56

1.4.1988 தேதிப்படி, ஊர்திகளின் நிலை, கீழே கொடுக்கப் பட்டுள்ளது[22]:

தொடர் எண்.	*ஊர்திகள் விவரம்*	*வழித்தடங்கள்*	*ஊர்திகள்*
1.	நிலைக்கான பொறுப்பூர்திகள்	40	30
	ட்டி.ப்பி.	330	-
2.	பொதுவான பொருட்களை ஏற்றிச் செல்லும் பார ஊர்திகள்	1543	
3.	தனியான பொருட்களை ஏற்றிச் செல்லும் பார ஊர்திகள்	167	
4.	வாடகைக்கட்டண ஊர்திகள்	489	
5.	பயணிகள் வாடகைக் கட்டண ஊர்திகள்	575	7
6.	விசைப்பொறி இழுப்பு வண்டி	818	(அகில இந்திய அனுமதிச்சீட்டு பெற்றவை)

கன்னியாகுமரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பல இடங்களுக்குச் செல்லும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தினைச் சார்ந்த பயணிகள் - ஊர்திகளின் - வழித்தடங்கள்.

தொடர் எண். (1)	தடம் எண் (2)	ஊர்தி புறப்படுமிடம், சேருமிடம் (3)	வழித்தடத்தில் ஓடும் ஊர்திகளின் எண்ணிக்கை (4)	வழித்தடத் தின் நீளம் (5)	பயணத் தடவை களின் எண்ணிக்கை (6)	ஊர்தி செல்லும் வழியிலுள்ள முக்கிய ஊர்களின் பெயர்கள் (7)
1	501	நாகர்கோவில் – மதுரை	2	235	6	திருநெல்வேலி–கோவில்பட்டி–சாத்தூர்–விருதுநகர்–திருமங்கலம்
2	511	நாகர்கோவில் – திருச்சி	14	363	28	துவரங்குறிச்சி – கொட்டாம்பட்டி – மதுரை – கோவில்பட்டி – கயத்தாறு – திருநெல்வேலி–வள்ளியூர்
3	512	நாகர்கோவில் – மண்டபம்	3	314	6	கன்னியாகுமரி–திருச்செந்தூர்–தூத்துக்குடி–ஏர்வாடி–இராமநாதபுரம்
4	551	நாகர்கோவில் – சென்னை	20	682	20	வள்ளியூர்–திருநெல்வேலி–கயத்தாறு–கோவில்பட்டி–மதுரை–மேலூர்–திருச்சிராப்பள்ளி
5	552	நாகர்கோவில் – பெங்களூர்	2	664	2	திருநெல்வேலி–கோவில்பட்டி – மதுரை – கரூர் – சேலம் – தர்மபுரி – ஹோசூர்
6	562	நாகர்கோவில் – கம்பம்	2	323	4	திருநெல்வேலி – சங்கரன் கோவில் – இராசபாளையம் – துலுக்கபட்டி – பேரையூர் – உசிலம்பட்டி – தேனீ

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
7	584	நாகர்கோவில் – வேலூர்	4	687	4	நாங்குனேரி – திருநெல்வேலி – கோவில்பட்டி – மதுரை – மேலூர் – திருச்சிராப்பள்ளி – மடப்பேட் – திருவண்ணாமலை – போளூர்
8	646	நாகர்கோவில் – சென்னை	2	700	2	சேரன்மாதேவி–திருநெல்வேலி–மதுரை–திருச்சிராப்பள்ளி–விழுப்புரம்
9	521	நாகர்கோவில் – தஞ்சாவூர்	4	402	8	திருநெல்வேலி – கோவில்பட்டி – மதுரை – திருப்பத்தூர் – புதுக்கோட்டை
10	523	கன்னியாகுமரி – பாண்டி	2	606	2	வள்ளியூர் – திருநெல்வேலி – கோவில்பட்டி – மதுரை – திருப்பத்தூர் – தஞ்சாவூர் – மயிலாடுதுரை – கடலூர்
11	550	நாகர்கோவில் – பாண்டி	2	592	2	வள்ளியூர் – திருநெல்வேலி – கோவில்பட்டி – மதுரை – திருச்சிராப்பள்ளி – தொழுதூர் – நெய்வேலி – கடலூர்
12	511 சி	குளச்சல் – திருச்சிராப்பள்ளி	2	387	4	நாகர்கோவில் – திருநெல்வேலி – கோவில்பட்டி – மதுரை
13	512 ஏ	குளச்சல் – மண்டபம்	2	324	4	குளச்சல் – நாகர்கோவில் – திருநெல்வேலி – தூத்துக்குடி – சாயல்குடி – இராமநாதபுரம்

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
14	511 பி	கன்னியாகுமரி – திருச்சிராப்பள்ளி	2	381	4	நாகர்கோவில் – வள்ளியூர் – திருநெல்வேலி – கோவில்பட்டி – மதுரை – கொட்டாம்பட்டி
15	513	கன்னியாகுமரி – திருவனந்தபுரம்	1	88	6	நாகர்கோவில் – தொடுவெட்டி – கலியக்காவிளை – நெய்யாற்றங்கரை
16	514	கன்னியாகுமரி – கோயம்புத்தூர்	8	481	12	நாகர்கோவில் – திருநெல்வேலி – மதுரை – திண்டுக்கல் – பழனி
17	517	கன்னியாகுமரி – வேலூர்	2	674	2	நாகர்கோவில் – வள்ளியூர் – திருநெல்வேலி – கயத்தாறு – கோவில்பட்டி – மதுரை– திருச்சிராப் பள்ளி – ஆரணி
18	525	கன்னியாகுமரி – பெங்களூர்	2	682	2	நாகர்கோவில் – திருநெல்வேலி – மதுரை – கரூர் – சேலம் – தர்மபுரி– ஹோசூர்
19	564	கன்னியாகுமரி – திருப்பதி	2	788	2	நாகர்கோவில் – திருநெல்வேலி – கயத்தாறு – கோவில்பட்டி – மதுரை – திண்டுக்கல் – கரூர் – நாமக்கல் – சேலம் – திருப்பத்தூர் – ஆம்பூர் – சித்தூர்
20	588	கன்னியாகுமரி – மதுரை	2	253	6	நாகர்கோவில் – திருநெல்வேலி – கோவில்பட்டி – விருதுநகர்

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
21	589	கன்னியாகுமரி – சென்னை	8	700	8	நாகர்கோவில் – திருநெல்வேலி – கோவில்பட்டி – மதுரை – திருச்சிராப் பள்ளி – விழுப்புரம்
22	605	கன்னியாகுமரி – கோயம்புத்தூர்	2	518	2	ஒவேரி – நாஸரேத் – திருநெல்வேலி – மதுரை – திண்டுக்கல் – பழனி – பொள்ளாச்சி
23	630	கன்னியாகுமரி – உதக மண்டலம்	2	566	2	நாகர்கோவில் – திருநெல்வேலி – கயத்தாறு – மதுரை – திண்டுக்கல் – பழனி – கோயம்புத்தூர்– மேட்டுப்பாளையம்
24	642	கன்னியாகுமரி – காஞ்சிபுரம்	2	665	2	நாகர்கோவில் – திருநெல்வேலி – மதுரை – திருச்சிராப்பள்ளி – விழுப்புரம் – செய்யார்
25	533	மார்த்தாண்டம் – பாண்டி	2	618	2	நாகர்கோவில் – வள்ளியூர் – திருநெல்வேலி – கோவில்பட்டி – மதுரை–திருப்பத்தூர்–தொழுதூர்– கும்பகோணம் – கடலூர்
26	551–அ	மார்த்தாண்டம் – சென்னை	2	712	2	நாகர்கோவில் – தக்கலை– திருநெல்வேலி – மதுரை – திருச்சிராப்பள்ளி–

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
27	551–ஆ	மார்த்தாண்டம்–சென்னை	2	717	2	நாகர்கோவில் – திருநெல்வேலி–மதுரை–திருச்சிராப்பள்ளி–விழுப்புரம் (வழி) குளச்சல்
28	551–இ	மார்த்தாண்டம் – சென்னை	2	727	2	நாகர்கோவில், திருநெல்வேலி–மதுரை–திருச்சிராப்பள்ளி–விழுப்புரம் (வழி) குளச்சல்
29	551–ஈ	மார்த்தாண்டம் – சென்னை	2	740	2	குலசேகரம்–நாகர்கோவில்–திருநெல்வேலி–மதுரை–திருச்சிராப்பள்ளி–விழுப்புரம்
30	551–2	மார்த்தாண்டம் – சென்னை	2	737	4	கலியக்காவிளை – நாகர்கோவில்–திருநெல்வேலி–மதுரை–திருச்சிராப்பள்ளி–விழுப்புரம்
31	608	மார்த்தாண்டம்–கோயம்புத்தூர்	3	493	2	நாகர்கோவில்–திருநெல்வேலி–கோவில்பட்டி–மதுரை–திண்டுக்கல்–பழனி
32	656	மார்த்தாண்டம் – பெங்களூர்	2	699	2	நாகர்கோவில்–திருநெல்வேலி–மதுரை–கரூர்–சேலம்–தர்மபுரி
33	511–ஆ	மார்த்தாண்டம்–திருச்சிராப்பள்ளி	4	393	2	நாகர்கோவில்–திருநெல்வேலி–கோவில்பட்டி–மதுரை
34	589–ஆ	கன்னியாகுமரி – கல்பாக்கம்	2	694	2	(வழி) திருநெல்வேலி–மதுரை–செங்கல்பட்டு
35	511–ஆ	மார்த்தாண்டம் – திருச்சிராப்பள்ளி	2	393	4	

கன்னியாகுமரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் செல்லும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தினைச் சார்ந்த பயணிகள் - ஊர்திகளின் - வழித்தடங்கள்

தொடர் எண்.	தடம் எண்.	ஊர்திபுறப்படுமிடம், சேருமிடம்	வழித்தடத்தில் ஓடும் ஊர்திகளின் எண்ணிக்கை	வழித்தடத்தின் நீளம்	பயணத் தடவைகளின் எண்ணிக்கை	ஊர்தி செல்லும் வழியிலுள்ள முக்கிய ஊர்களின் பெயர்கள்
1	653	வேளாங்கண்ணி – திருவனந்தபுரம்	2	568	2	நாகை – தஞ்சாவூர்–மதுரை–நாகர்கோவில்–தொடுவெட்டி
2	654	மதுரை – திருவனந்தபுரம்	8	305	16	திருநெல்வேலி – நாகர்கோவில்–மார்த்தாண்டம்
3	660	கோயம்புத்தூர்–திருவனந்தபுரம்	2	533	2	பழனி–மதுரை–திருநெல்வேலி–நாகர்கோவில்–தொடுவெட்டி
4	663	திருவனந்தபுரம் – ஹோசூர்	2	705	2	நாகர்கோவில்–திருநெல்வேலி–மதுரை–கரூர்–சேலம்–தர்மபுரி
5	669	ஈரோடு – திருவனந்தபுரம்	2	513	2	கரூர் – திண்டுக்கல்–மதுரை–நாகர்கோவில்
6	670	பாண்டிச்சேரி–திருவனந்தபுரம்	2	660	2	நெய்வேலி – கும்பகோணம் – புதுக்கோட்டை – நாகர்கோவில்–தொடுவெட்டி
7	590	சென்னை – திருவனந்தபுரம்	8	752	8	விழுப்புரம் – திருச்சிராப்பள்ளி – மதுரை – திருநெல்வேலி – நாகர்கோவில்

பொது மேலாளர், திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம், அறிக்கை நாள் 5–12–1987

துறைமுகங்கள்

துறைமுகங்கள்தான் ஒரு நாட்டின் ஜன்னல்கள் எனவும், அவற்றின் மூலம்தான், ஒரு நாடு, உலகத்தின் பல பாகங்களைக் காண முடிகிறதெனவும் சரியாகவே கூறப்பட்டுள்ளது. இக்கூற்று கீழ்க்கண்ட காரணங்களால் மெய்ப்பிக்கப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில், கொளச்சலில் ஒன்றும், கன்னியாகுமரி மாவட்டத்தில் மற்றொன்றுமாக இரண்டு சிறிய துறைமுகங்கள் உள்ளன. அவைகளின் இருப்பிடம், மற்றும் முக்கியத்துவம் ஆகியவை கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

கொளச்சல் துறைமுகம்

கொளச்சல் துறைமுகம், 8°-10' (வடக்கு) பரப்பெல்லையிலும், 77°-14' (கிழக்கு) நிரைகோட்டிலும் அமைந்துள்ளது. இத்துறைமுகம், மிகவும் தொன்மையானதாகையால், 18-வது நூற்றாண்டில், மகாராஜா, ராமவர்மா காலத்தில், இத்துறைமுகத்திற்குப் புத்துயிர் அளிக்கப்பட்டது. தமிழ்நாட்டின் மேற்குக்கடற்கரைப்பகுதியில், இதுஒன்றே இயற்கைத் துறைமுகமாகும். இத்துறைமுகம் ஒரு விரிகுடா போன்று காட்சியளிக்கிறது. 10,000 முதல் 15,000 டன்கள் எடையுள்ள நீராவிக் கப்பல்கள், இத்துறைமுகத்தில், நங்கூரமிட்டு நிறுத்தப்படுகின்றன.

நங்கூரமிட்டுத் தங்குமிடம்

நங்கூரமிட்டுத் தங்குமிடம், தண்ணீரில், நிலைப்படுத்தப்பட்டுள்ள துறைமுகக் கொடிக்கம்பத்திலிருந்து, 5.5 நங்கூரச் சங்கிலித் தொலைவில், ஆறு அடி சம சதுரக் குறுக்கு முகத்தில், உள்ளது.- (பரப்பெல்லை 8°-10'-17.85" மற்றும் நிரைகோடு 77°-15'-21.97'' (கடல்பரப்பு விவர விளக்கப்படம்-2037).

இங்கிருந்து, பனைநார் மற்றும் கனிவள மணல் வகைகள் ஆகியவை, வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுவதன் பொருட்டு கப்பலில் ஏற்றியனுப்பப்படுகின்றன.

ஏற்றுமதி, இறக்குமதி செய்வதற்குரிய நீண்ட கப்பல்துறை மேடை, திறந்த கடற்கரை வெளியாகும். அது கொடிக்கம்ப வளாகத்திலிருந்து, 274 மீட்டர் வரை உள்ளது. கப்பல்களிலிருந்து, சரக்குகள், ஒவ்வொன்றும் 1½ முதல் 2¼ டன்கள் எடையுள்ள 195 பதிவு செய்யப்பட்ட சிறு படகுகளின் மூலம், கொண்டு செல்லப்படுகின்றன. இப்படகுகள், பெரிய விசைப்படகுகளின் உதவியால், இழுத்துச் செல்லப்படுகின்றன.

இத்துறைமுகத்தில், ஒவ்வொரு ஆண்டும், செப்டம்பர் 15 ஆம் தேதி முதல், மே 14 ஆம் தேதி வரை, சரக்குகளின் ஏற்றுமதி, இறக்குமதி மேற்கொள்ளப்படுகிறது. இடைக்காலவரை, தென் மேற்குப்பருவக்காற்று

வீசும் காலமாகும். கப்பல் சரக்குகளைக் கொண்டு செல்வதற்கு வசதியாக, ஒரு சாலையும், இடைகரை எல்லைச்சுவரும், அமைக்கப்பட்டுள்ளன. இத்துறைமுகம், இந்தியன் ரேர் எர்தஸ் லிமிடெட் நிறுவனம், இல்மினைட் மற்றும் மேனோசைட் ஆகிய கனிவள மணல்களை அனுப்புவதற்கே பெரும்பாலும் பயன்படுத்தப்படுகிறது.

கடற்பயண உதவிகள்

கொளச்சல் துறைமுகத்திலுள்ள கலங்கரை விளக்கம், அது நிருவப்பட்ட 1925 ஆம் ஆண்டிலிருந்து 1985 ஆம் ஆண்டு வரை எண்ணெய் விளக்குகளையே பயன்படுத்தி வந்தது.

தற்கால தொழில் நுட்ப மேம்பாட்டினைத் தொடர்ந்து, 1981 ஆம் ஆண்டு, எண்ணெய் விளக்குகளுக்கு பதிலாக, 100 மின்னாற்றல் விசைமான அலகு (வாட்ஸ்) பல்பு பொருத்தப்பட்டுள்ளது. இங்கே, 8°-10.3' வடக்கு மற்றும் 77°-35' கிழக்கு என்ற நிலையில் பொறுத்தப்பட்டுள்ள விளக்கு எட்டு கிலோ மீட்டர் தொலைவிற்கு வெளிச்சத்தினை அளிக்கவல்லது. இந்த விளக்கு நங்கூரமிட்டுத் தங்குமிடவிளக்கென அழைக்கப்படுகிறது. இவ்விளக்கு ஆண்டின் 365 நாட்களும், மாலை ஆறு மணியிலிருந்து, காலை ஆறு மணிவரையிலும் தொடர்ந்து எரிந்து கொண்டிருக்கும்.

இத்துறைமுகத்தில், கடந்த 1985 ஆம் ஆண்டு 40 அடி உயரத்தில், மற்றொரு 100 மின்னாற்றல் விசைமான அலகு சிவப்பு விளக்கு, பொருத்தப்பட்டுள்ளது. இது 8°-10-3' வடக்கு மற்றும் 77°-15' கிழக்கு என்ற நிலையில் பொருத்தப்பட்டுள்ளது. துறைமுக விளக்கு என அழைக்கப்படும் இவ்விளக்கு, 12.8 கிலோ மீட்டர் தொலைவு வரை, வெளிச்சத்தையளிக்கிறது.

1911 ஆம் ஆண்டு, 27½ அடி உயரத்தில், கருவண்ணப் பட்டையிட்ட ஒரு கட்டிட அமைப்பில், முதன் முதலாகக் கலங்கரை விளக்கம் நிருவப்பட்டது. இவ்விளக்கு, நங்கூரமிட்டு தங்குமிட விளக்கிற்குப் பின்புறம் நிருவப்பட்டுள்ளது.

துறைமுக அடையாளக்குறி நிலையம்

துறைமுகத்தில் ஒரு அடையாளக்குறி நிலையம் உள்ளது. அது மார்ஸ் அடையாளக் குறி விளக்கின் உதவியால், நங்கூரமிடப்பட்ட கப்பல்கள், அனைத்து நாடுகளின், சட்டத்தொகுப்பேட்டு அடையாளக் குறிகளைப் பயன்படுத்தி, கரைக்குத் தகவல் அனுப்ப வசதி செய்கிறது. துறைமுக அலுவலகத்திற்கு முன்பு கொடி மூலம் அடையாளக்குறி அளிக்க ஒரு கொடி மரக் கலக் கூம்பு உள்ளது. ஒரு புயல் (சூராவளி) அறிவிப்பு அமைப்பும் அங்கே இருக்கிறது.

கன்னியாகுமரி துறைமுகம்[23]

இது இந்தியாவின் தென்கோடியிலுள்ள ஒரு சிறிய துறைமுகமாகும். இது,8°-4.6'(வடக்கு) பரப்பெல்லையிலும் 77°-32.2' (கிழக்கு) நிரைகோட்டிலும் அமைந்துள்ளது. இத்துறைமுகம், சுற்றுலாப் பயணிகளை கன்னியாகுமரி கடற்கரையிலிருந்து, விவேகாநந்தர் நினைவுப் பாறைக்கு விசைப்படகுகளில் ஏற்றிச் செல்லுவதற்கு மட்டும் பயன்படுத்தப்படுகிறது. கரையிலிருந்து, விவேகாநந்தர் நினைவுப் பாறைக்கு சுற்றுலாப் பயணிகளை அழைத்துச் சென்று, திருப்பிக் கரைக்குக் கொணரும் பணியினை விவேகாநந்தர் நினைவுப் பாறைக்குழு மற்றும் விவேகாநந்தர் கேந்திரா எனும் நிறுவனம், ஜூலை, 20, 1981 வரை, கவனித்து வந்தது. பின்னர், அக்டோபர் 1, 1981 முதல் படகுப் பணியினை, தமிழ்நாடு அரசு பொறுப்பேற்று, தமிழக அரசின் துறைமுகத்துறை, ஆகஸ்ட், 16, 1984 வரை செயலாற்றி வந்தது. பின்னர், ஆகஸ்ட், 17 1984 அன்று, பூம்புகார் கப்பல் கழகத்திடம் இப்பணி ஒப்படைக்கப்பட்டு, இன்றுவரை இக்கழகம் படகுப்பணியினை ஆற்றி வருகிறது. மேற்குறிப்பிட்ட இவ்விரு துறைமுகங்களும், மாநில போக்குவரத்துத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள தமிழ்நாடு துறைமுகத்துறையின் கண்காணிப்பில் இயங்கி வருகின்றன.

கலங்கரை விளக்கம்

கன்னியாகுமரியில் ஒன்றும், முட்டத்தில் ஒன்றுமாக இரு கலங்கரை விளக்கங்கள் இம்மாவட்டத்திலுள்ளன.

முட்டம் முனைக்கலங்கரை விளக்கம்

இக்கலங்கரை விளக்கம், நாகர்கோவில் நகரத்திலிருந்து 16 கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது. அது, 1885 ஆம் ஆண்டு நிருவப்பட்டு, 1909 ஆம் ஆண்டு மேம்படுத்தப்பட்டது.

தற்போது, இதனுடைய ஒங்கியுயர்ந்த கோபுரப்பகுதி, 22 மீட்டர் உயரத்தில் எட்டடுக்குடையதாக அமைந்துள்ளது. இக்கட்டிட அமைப்பில் வெள்ளை மற்றும் கருவண்ணப்பட்டை தீட்டப் பட்டுள்ளது. இவ்வண்ணத்தினின்றும் கடலோடிகள் பகலில் கலங்கரை விளக்கத்தினை அடையாளங்கண்டு கொள்ளலாம்.

கண்பார்வைக்குரிய பயண சாதனத்தினை இரண்டாம் ஆணை யெனக்கொள்ளலாம், (எஃப் - 700 மி.மீ.) அது, மிதக்கும் நிலை பாதரச அடிப்பீடத்தின் மீது, நான்கு வகையான சுழலும் விழியிடைக்கோண அமைப்பினைக் கொண்டதாகும். முதன்மையான ஒளி ஆதாரம், 55 மி.மீ., ப்பி.வி., அளவிலான மெல் ஒளித்திரை வலையுள்ள விளக்காகும். கண் பார்வைக்குரிய சாதனம் ஒரு மணித்துளிக்கு மூன்று சுழற்சி என்ற வீதத்தில் சுழல்கிறது. அது, ஒவ்வொரு ஐந்து



கலங்கரை விளக்கம், கன்னியாகுமரி

நொடிகளுக்கு ஒரு முறை மின்விடும் கருத்துப் பாய்ச்சலிலீடுபடுகிறது. ஒவ்வொரு மின்வொட்டொளிக்கும் இரண்டு நொடிகளாகின்றன. பயனுறுதியுள்ள மின்கதிர் உச்ச அளவு 3,40,000 ஒளி அலகுக் கூறுகளாகும். எதிர்பாரா உடனடித் தேவைக்குப் பயன்படுவது, நுண்துளை எண்ணெய் விளக்கைக் கொண்டதாகும். கண்பார்வைக்குரிய சாதனம் 3.65 எம். அளவிலான கலங்கரை விளக்க ஒளிக்கூண்டில் வைக்கப்பட்டுள்ளது. இக்கலங்கரை விளக்கம் முட்டம் கிராமத்தில் நிருவப்பட்டுள்ளது. சராசரி வானிலையில் இது 23 கடல் நிலை கல்தொலையளவு காண்பு நிலையைக் கொண்டதாகும்.

கன்னியாகுமரி கலங்கரை விளக்கம்

இது நவீன மின் விசையினால் இயங்கும் கலங்கரை விளக்கமாகும். இது ஐந்தாண்டு திட்டங்களின் கீழ், வளர்ச்சிப் பணியின் ஒரு பகுதியாக, கன்னியாகுமரி நகரத்தில், நவம்பர், 4, 1971 அன்று நிருவப்பட்டது. கண்பார்வைக்குரிய பயண சாதனத்தினை மூன்றாம் ஆணையெனக் (சிறியது) கொள்ளலாம் (எஃப் - 375 மி.மீ.). இது நான்கு வகையான சுழலும் கண்ணாடிவில்லை ஆய்கருவியைக் கொண்டதாகும். இச்சாதனம், ஒரு மணித்துளிக்கு 1.5 சுழற்சி என்ற வீதத்தில் சுழன்று, ஒவ்வொரு 20 நொடிகளுக்கு, இரு முறை மின் விடும் கருத்துப்பாய்ச்சலிலீடுபடுகிறது. முதன்மை ஆதாரத்துடன், இதனுடைய பயனுறுதியுள்ள மின்கதிர் உச்ச அளவு, 28,95,000 ஒளி அலகுக் கூறுகளாகும். இங்கு முக்கியமாக ஒளிவிளக்கமளிப்பது, 3,000 மின்னாற்றல் விசைமான அலகினைக் கொண்ட 100 மின் அலகுக்கூறு மின் விளக்காகும். மற்றொரு சிறிய விளக்கும் உபரியாக அருகில் உள்ளது. முதன்மையான விளக்கு, அருகிலுள்ள உபரி விளக்கு, இரண்டுமே இயங்காவிட்டால், உடனடித் தேவைக்கு வெண்சுடர் வீசி எரிகிற (ஒளியுடைவளி) மெல் ஒளித்திரை வலை விளக்கு பயன்படுத்தப்படுகிறது. இது 60 லிட்டர் கொள்ளளவுள்ள விளக்காகும். கண்பார்வைக்குரிய சாதனம் 2.5 மீ. சுற்றளவுள்ள கலங்கரை விளக்க ஒளிக் கூண்டில் வைக்கப்பட்டுள்ளது. சராசரி வானிலையில் இது 29 கடல்நிலை கல்தொலையளவு (nautical mile) காண்பு நிலையைக் கொண்டதாகும்[24].

பாலங்கள்[25]

பெருவழி மற்றும் புறப்பகுதிப்பணித்துறை மற்றும் தேசியப் நெடுஞ்சாலைத் துறை ஆகியவற்றால் பராமரிக்கப்படும் பாலங்கள் பற்றிய விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன:

பெருவழி மற்றும் புறப்பகுதிப் பணித்துறை

தொடர் எண். (1)	பாலத்தின் பெயர் (2)	பாலத்தைக் குறுக்கிடும் ஆற்றின் பெயர் (3)	பாலம் அமைந்துள்ள இடம் (4)
1.	குழித்துறை–பாலம்	தாமிரபரணி ஆறு	தே.நெ.47–ன், 643/2 கி.மீ.
2.	பாலம்	பொதுப்பணித்துறை கால்வாய்	ஆரல்வாய் மொழி–நெடுமாங்காடு சாலையின் 9/4 கி.மீ.
3.	பாலம்	பொதுப்பணித்துறை கால்வாய்	ஆரல்வாய்மொழி–நெடுமாங்காடு சாலையின் 13/6 கி.மீ.
4.	பெருவழிக்கடவு பாலம்	பொதுப்பணித்துறை கால்வாய்	ஆரல்வாய்மொழி நெடுமாங்காடு சாலையின் 28/8 கி.மீ.
5.	களியல் பாலம்	கோதையார் ஆறு	ஆரல்வாய்மொழி நெடுமாங்காடு சாலையின் 40/8 கி.மீ.
6.	ஒழுகினசேரி பாலம்	பழையார் ஆறு	நாகர்கோவில் ஆரல்வாய்மொழி சாலையின் 68/2 கி.மீ.
7.	எரணியல் பாலம்	வள்ளியார் ஆறு	பரசேரி–கொளச்சல் சாலையின் 13/4 கி.மீ.
8.	கீரிப்பாறைப் பாலம்	பாம்பார் ஆறு	பாலமோர் சாலையின் 26/2 கி.மீ.
9.	மணவாளக்குறிச்சி பாலம்	வள்ளியார் ஆறு	நாகர்கோவில், இராசாக்க மங்கலம் – கொளச்சல் சாலையின் 16/2 கி.மீ.
10.	திருவட்டார் பாலம்	பரளியார் ஆறு	மார்த்தாண்டம் – பேச்சிப் பாறை சாலையின் 5/6 கி.மீ.
11.	பாலம்	வள்ளியார் ஆறு	மெய்க்கோடு–குலசேகரம் சாலையின் 1/10 கி.மீ.
12.	நேசமணிபாலம்	தாமிரபரணி ஆறு	மார்த்தாண்டம்–பனச்சமோடு சாலையின் 1/6 கி.மீ.

(1)	(2)	(3)	(4)
13.	பள்ளம்பாலம்–பாலம்	வள்ளியார் ஆறு	எரணியல் முட்டம் சாலையின் 1/8 கி.மீ.
14.	தாளக்குளம் நீர் மூழ்கிப்பாலம்	வள்ளியார் ஆறு	தாளக்குளம் சாலையின் 3/2 கி.மீ.
15.	குமரன்குடி பாலம்	பரளியார் ஆறு	குமரன்குடி சாலையின் 2/8 கி.மீ.
16.	தாமனூர் பாலம்	பரளியார் ஆறு	அருமனை–ஆத்தூர் சாலையின் 3/10 கி.மீ.
17.	மூவத்துமுகம் பாலம்	பரளியார் ஆறு	மூவத்துமுகம் சாலையின் 1/6 கி.மீ.
18.	பாலம்	தேரூர்வாய்க்கால்	புதுவீரமங்கலம் சாலையின் 1/2 கி.மீ.
19.	பாலம்	பருதிவாய்க்கால்	எலந்தயபாலம் சாலையின் 1/4 கி.மீ.
20.	நீர்மூழ்கிப்பாலம்	பழையார் ஆறு	பரக்கை–தாமரைக்குளம் சாலையின் 0/4 கி.மீ.

தேசிய நெடுஞ்சாலை

தொடர் எண். (1)	பாலத்தின் பெயர் (2)	பாலத்தின் இருப்பிடம் (3)	வட்டத்தின் பெயர் (4)
1.	குழித்துறை பாலம்	தேசியப்பெருவழித்துறை 47–ன் கி.மீ. 604/4	விளவங்கோடு
2.	வள்ளியூர் பாலம்	தேசியப்பெருவழித்துறை 47–ன் கி.மீ. 624/2	கல்குளம்
3.	புளியக்குரிச்சி பாலம்	தேசியப்பெருவழித்துறை 47–ன் கி.மீ. 622/6	கல்குளம்
4.	எடலங்குடி பாலம்	தேசியப்பெருவழித்துறை 47–ன் கி.மீ. 638/8	அகஸ்தீஸ்வரம்
5.	யானைப்பாலம்	தேசியப்பெருவழித்துறை 47–ன் 638/10	அகஸ்தீஸ்வரம்
6.	சுசீந்திரம் பாலம்	தேசியப்பெருவழித்துறை 47–ன் 641/6	அகஸ்தீஸ்வரம்
7.	கல் பாலம்	தேசியப்பெருவழித்துறை 47–ன், கி.மீ. 642/4	அகஸ்தீஸ்வரம்

(முதன்மைப் பொறியாளர், தேசியப் பெருவழித்துறை, சென்னை, அறிக்கை நாட்கள்16.3.1978 மற்றும் 23.9.1988.)

ஆண்டிற்கு ஏழு மாதங்கள் மழை காலமாக இருப்பதால், நெடுஞ்சாலை மற்றும் கிராமப்புறப் பணித்துறை, கீழ்க்குறிப்பிட்ட ஆறுகளின் குறுக்கே இலவசமாக படகுகளை செயல்படுத்துகிறது[26]:

1. தேமனூர் (வெள்ளமங்கோடு) பாரதியாப்பள்ளி சாலை குறுக்கிடுமிடம்
2. மார்த்தாண்டம் - பணிச்சமோடு சாலையில் - மார்த்தாண்டம் குறுக்கிடுமிடம்
3. பயணம் சாலையில் திகுரிச்சி குறுக்கிடுமிடம்
4. புதுக்கடை - கொல்லங்கோடு சாலையில் - கணபதியங்கடவு குறுக்கிடுமிடம்
5. முன்சிரை ஒன்றியப்பகுதியில் - பருதிக்கடவு குறுக்கிடுமிடம்
6. முன்சிரை - முலகுமூடுக்கடவு சலையில் - முலகுமூடுக்கடவு குறுக்கிடுமிடம்
7. திருவட்டூர் - மூவட்டுமுகம் சாலையில் - மூவட்டுமுகம் குறுக்கிடுமிடம்

நீர் வழிகளும், கால்வாய்களும்

மாவட்டம் நல்ல பல ஆறுகளை சீதனமாகப் பெற்றுள்ளதென்றால் மிகையில்லை. பரளியார், வள்ளியார், கோதையார், மற்றும் பழையார் ஆகியவை, மாவட்டத்திலுள்ள முக்கியமான ஆறுகளாகும். பழங்காலத்தில், மிகக் குறைந்த சாலைகளே இம்மாவட்டத்தில் அமைக்கப்பட்டிருந்ததால், மக்கள் பெரும்பாலும் ஆற்றுப் போக்குவரத்தினையே நம்பியிருந்தனர். இம்மாவட்டத்தில், கடற்கழிகளும், உப்பங்கழிகளும் ஆங்காங்கே காணப்படுகின்றன. உப்பங்கழிகளை, உள்ளூர் மக்கள் "கயல்" எனக்கூறுவர். கடற்கழிகளும், உப்பங்கழிகளும் கடலினின்றும் நீர் வரக்கூடிய நுழைவிடமாகும். இது கடற்கரைக்கு இணையாக அமைந்து, சீராக நீர் வரக்கூடிய வகையில் உருவாகியுள்ளது. கடற்கழிகள் முழுமையாக ஆழமாயில்லாதிருப்பினும், படகுகள் போக்குவரத்திற்கு வசதியாக உள்ளது. நீர் வெளிச் செல்வதற்கு "ஆழிகள்" நிலையான வடிகாலாகவும், பொழிகள் தற்காலிக வடிகாலாகவும் செயலாற்றுகின்றன.

அகஸ்தீஸ்வரம் வட்டம், மணக்குடிக்கு அருகாமையிலுள்ள கயலும், தேங்காப்பட்டினத்திற்கு அருகே பெயின் குளம் கிராமத்திலுள்ள சிறிய கடற்கழியும், மக்களுக்குப் பயனாற்றும் இரு நீர்வழிகளாகும். கால்வாய்களைப் பொறுத்தவரையில், திருவனந்தபுரத்திலிருந்து தேங்காப்பட்டினம் வரை, 21 கிலோ மீட்டர் தொலைவிற்குப் பாயும், ஏ.வி.எம், வாய்க்கால் என அழைக்கப்பெறும் ஆனந்த விக்டோரியா மார்த்தாண்டன் வாய்க்காலில், படகுப் போக்குவரத்து வசதிகள் உள்ளன.

தேங்காப்பட்டினத்திலிருந்து, நீரோடை வரையுள்ள எட்டு கிலோ மீட்டர் தொலைவிலான கால்வாய்ப்பகுதி தமிழ்நாடு மாநிலத்தில் அமைந்துள்ளது. இங்கு படகுப்போக்குவரத்துப்பணி, தனியார் நிறுவனங்களால் நடத்தப்பட்டு வருகிறது.

பயணிகள் விடுதிகள்[27]

பயணிகள் விடுதிகள் இம்மாவட்டத்தில் கீழ்க்குறிப்பிட்ட இடங்களிலுள்ளன:

ஸ்ரீ பத்மநாப நல்லூர், தாடிக்காரன் கோணம், கீரிப்பாறை, திருவட்டார், செருப்பாளூர், பேச்சிப்பாறை, கோதையார், வடசேரி மற்றும் இராமவர்மாபுரம்.

பார்வையாளர் விடுதிகள்

கன்னியாகுமரி, இராதாபுரம், திருவட்டார், கொளச்சல், புலியூர் குரிச்சி, பேச்சிப்பாறை, சிவலோகம் மற்றும் செருப்பளூர் ஆகிய இடங்களில் பார்வையாளர் விடுதிகள் உள. சுற்றுலாப்பயணிகள் விடுதிகள் பாலமோர் மற்றும் கன்னியாகுமரி ஆகிய இடங்களில் அமைந்துள்ளன. குழித்துறையில் ஒரு திட்ட விடுதியும், ஓய்வு விடுதியும் உள்ளன.

விருந்தினர் மாளிகை

பொதுப்பணித்துறையின் கட்டுப்பாட்டில், கன்னியாகுமரியில் ஒரு விருந்தினர் மாளிகை உள்ளது. கேரள அரசும், இங்கு "கேரள மாளிகை" என்ற பெயரில், ஒரு விருந்தினர் மாளிகையினைப் பராமரித்து வருகிறது.

தங்கும் விடுதிகள்

இவைதவிர, இங்கு தங்கும் விடுதிகளும் உள்ளன. தனியார் நிறுவனத்தினரும் பல தங்கும் விடுதிகளையும், (உணவு அளிக்கும் வசதியுடன்) நடத்தி வருகின்றனர், சுற்றுலா வரும் பயணிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்திட பயணிகள் தங்குமிடங்களும் கட்டப்பட்டுள்ளன. இவற்றுடன், தாடிக்காரன்கோணம், ஆரல்வாய் மொழி, திருப்பரப்பு மற்றும் கன்னியாகுமரி ஆகிய இடங்களில், முகாம் கூடாரங்களும் இயங்கி வருகின்றன.

குறிப்புகள்

1. நாகம்அய்யா, வி., திருவாங்கூர் மாநில நடைமுறை நூல், 1906
2. அஞ்சல்துறைகளின் முதுநிலை கண்காணிப்பாளர், கன்னியாகுமரி கோட்டம், நாகர்கோவில் - புள்ளிவிவரக்குறிப்பு, நாள் 4.2.1987.
3. பொது மேலாளர், தொலைத்தொடர்பு தமிழ்நாடு வட்டம், சென்னை -2, அறிக்கை நாட்கள் 3.9.1986 மற்றும் 18.11.1987.
4. அஞ்சல் அலுவலகங்களின் முதுநிலைக் கண்காணிப்பாளர், நாகர்கோவில், அறிக்கை நாள் 21.12.1988.
5. பொது மேலாளர், தொலைத்தொடர்பு, தமிழ்நாடு வட்டம், சென்னை, அறிக்கை நாட்கள் 3.9.1986 மற்றும் 18.11.1987 .
6. பொது மேலாளர், தொலைத்தொடர்பு, தமிழ்நாடு வட்டம் - சென்னை, அறிக்கை நாட்கள் 3-9-1986 மற்றும் 18-11-1987.
7. துணை இயக்குநர் (ரசிகர் ஆய்வு), அகில இந்திய வானொலி, சென்னை-4, நாள் 26.9.1988.
8. உதவிப்பொறியாளர், தொலைக்காட்சி ஒலிபரப்புமையம், நாகர்கோவில், நாள் 15.7.1988.
9. பொது மேலாளர், தெற்கு ரெயில்வே, தலைமையலுவலகம், சென்னை, அறிக்கை நாள் 19.4.1988.
10. நாகம் அய்யா, வி., திருவாங்கூர் நடைமுறை நூல், திருவனந்தபுரம், 1906, தொகுதி-3, பக்கம் 218.
11. இந்திய மக்கட்தொகை 1961, மாவட்ட மக்கட்தொகைக் கையேடு, கன்னியாகுமரி, 1966 , தொகுப்பு-9, பக்கம் 9.
12. அரசாணை எண். 2007 (தொழிற்துறை, தொழிலாளர் மற்றும் உடல் நலம்), நாள் 17.6.1967.
13. மண்டலப் போக்குவரத்து அலுவலர், நாகர்கோவில், அறிக்கை நாள் 20.4.1988.
14. நிருவாக இயக்குநர், நேசமணி போக்குவரத்துக் கழகம் லிமிடெட், நாகர்கோவில், அறிக்கை நாள் 31.7.86.
15. பொது மேலாளர், திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம், சென்னை, அறிக்கை நாள் 5.12.1987.
16. இந்திய மக்கட்தொகை, 1961, மாவட்ட மக்கட்தொகைக் கையேடு, கன்னியாகுமரி.
17. கன்னியாகுமரி மாவட்டத்தின், தொழில் நுட்பப் பொருளாதார ஆய்வறிக்கை, 1986, மத்திய அரசு, சிறுதொழில்பணி நிறுவனம்.

18. முதன்மைப் பொறியாளர், தேசிய நெடுஞ்சாலை, சென்னை, அறிக்கை நாள் 6.10.1986.

19. முதன்மைப் பொறியாளர், நெடுஞ்சாலை மற்றும் கிராமப்புறப்பணிகள் துறை, சென்னை, அறிக்கை நாள் 3.5.1988.

20. மண்டலப், போக்குவரத்து அலுவலர், நாகர்கோவில், அறிக்கை நாள் 16.7.1977.

21. மண்டலப் போக்குவரத்து அலுவலர், கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில், அறிக்கை நாள் 18.7.1986.

22. மண்டலப் போக்குவரத்து அலுவலர், நாகர்கோவில், அறிக்கை நாள் 20.4.1988.

23. மாநில துறைமுக அலுவலர், சென்னை, அறிக்கை நாள் 12.10.87

24. கலங்கரை விளக்கம் மற்றும் சிறு கப்பல்களின் இயக்குநர்,சென்னை, குறிப்பு நாட்கள் 23.7.1986 மற்றும் 3.1.1988.

25. முதன்மைப் பொறியாளர் (பு.ப.ப.து) சென்னை, அறிக்கை நாட்கள் 21.4.87 மற்றும் 3.5.88

26. முதன்மைப் பொறியாளர் (நெடுஞ்சாலை மற்றும் கிராமப்புறப் பணிகள்), சென்னை, அறிக்கை நாள் 22.10.1977.

27. மாவட்ட ஆட்சித் தலைவர், கன்னியாகுமரி, அறிக்கை நாட்கள் 30.6.1977 மற்றும் 27.10.1987.

இயல்கள் - 8 மற்றும் - 9

பலவகை வாழ்வுத் தொழில்கள் மற்றும் பொருளாதார போக்குகள்

முன்னுரை

ஒரு குறிப்பிட்ட காலத்தில், பொருளாதாரத்தினுடைய சமுதாய நிலையின் தனிச்சிறப்பு, வேளாண்மை, தொழில், தொழிலாளர் கூலி, இன்றியமையாப் பொருட்களின் பொது விலையின் நிலை, வேலை வாய்ப்பு போன்ற பொருளாதார ஆக்கக் கூறுகளின் பொது இயக்கத்தினை, பொருளாதாரப்போக்கு வெளிப்படுத்துகிறது. பொருளியல் சார்ந்த அலுவல்களில், அரசின் ஈடுபாடு தொடர்பான பொதுப்போக்கினை அது விவரித்துக் கூறுகிறது. பொருளாதாரப் போக்கில், வளர்ச்சியின் வழிமுறை, உண்மையிலேயே குறிப்பிடத்தக்க ஒன்றாகும். உண்மையான ஆதாரங்களின் பெருக்கம், மற்றும் அவற்றின் செயலாக்கமுடைய பயன்பாடு ஆகியவை ஒரு பொருளாதாரத்தின் முன்னேற்ற வீதத்தை நிர்ணயிக்கிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தின் பொருளாதாரப்போக்கு குறித்து ஆயுங்கால், தமிழ்நாட்டின் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்புநோக்க வேண்டியுள்ளது. அப்போது, நுட்ப நுணுக்கமான வேறுபாடு தென் படுகிறது. அண்டை மாநிலமான கேரள மாநிலத்தைவிட. கன்னியாகுமரி மாவட்டம், பண்பு வளத்தில் மாறுபட்டிருப்பினும், மாவட்டத்தின் தட்ப, வெட்ப நிலை, தாவர வளர்ச்சி, பயிர்களின் எடுத்துக்காட்டமைப்பு, மற்றும் மக்களின் உணவுமுறை ஆகியவை கேரளத்தையொத்தே யுள்ளது.

கன்னியாகுமரி 1684 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுள்ள ஒரு சிறிய மாவட்டமாகும். இது மாநிலத்தின் மொத்த பரப்பளவில் 1.29 விழுக்காடாகும். இம்மொத்தப் பகுதியில், 1641.3 சதுர கிலோ மீட்டர் கிராமப் பகுதியாகும். ஏனைய 42.7 சதுர கிலோ மீட்டர் நகரப்பகுதியென பாகுபாடு செய்யப்பட்டுள்ளது[1]. மொத்தப் பரப்பளவில் 32.7 விழுக்காடு, "காடுகள்" என வகைப்படுத்தப்பட்டுள்ளது. மாவட்டத்தின் பொருளா தாரம், பெரும்பாலும் வேளாண்மை மற்றும் தோப்பு, பண்ணை ஆகியவற்றை ஆதாரமாகக் கொண்டதாகும்.

கிராமப் பகுதியில், வேளாண்மையே மக்களின் முக்கியமான ஆதாரமாகும். மாவட்டத்தின் மொத்தப் பரப்பளவான 1,44,249.98 ஹெக்டேரில் பயிரிடப்படும் பரப்பளவு 60.86 விழுக்காடாகும். அதில், 38.98 விழுக்காடு நீர்ப்பாய்ச்சி பயிரிடப்படும் பரப்பளவாகும்.

மக்கள் தொகை மற்றும் வாழ்க்கைத் தொழில் எடுத்துக்காட்டமைவு

1981ஆம் ஆண்டு மக்கட்தொகைக் கணக்கெடுப்பின்படி, மாவட்டத்தின் மொத்த மக்கட்தொகை 14,23,399 ஆகும். இவர்களில்,

11,77,867 மக்கள் கிராமப்புறங்களிலும், 2,45,532 மக்கள் நகர்ப் புறங்களிலும் வாழ்கிறார்கள். மாவட்டத்தின் மொத்த மக்கட் தொகையில், நகர்வாழ் மக்களின் தொகை 17.25 விழுக்காடாகும். இதுவே தமிழ்நாட்டின் வீதத்தில், 32.95 விழுக்காடாகும். இதிலிருந்து, 82 விழுக்காடு மக்கள், மாவட்டத்தின் கிராமப்புறப் பகுதியிலேயே வாழ்வது தெரிய வருகிறது. கன்னியாகுமரி மாவட்டம் குறிப்பிடத்தக்க வகையில் கிராமப்புற சிறப்பியல்புகளைக் கொண்டதாகவே உள்ளதை, இது தெளிவுப்படுத்துகிறது. நகர்ப்புற மக்கட் தொகையில் 75 விழுக்காடு மக்கள் அகஸ்தீஸ்வரம் வட்டத்தில் வாழ்கிறார்கள். தோவாளை வட்டத்தில், நகர்ப்புறப்பகுதி ஏதுமில்லை.

மாவட்டத்தின் மொத்த மக்கட் தொகையான, 14,23,399 இல், 7,16,958 ஆண்களும், எஞ்சிய 7,06,441 பெண்களுமாவர். ஆக, ஆண்கள் மக்கட்தொகை 50.37 விழுக்காடு எனவும், பெண்கள் மக்கட் தொகை 49.63 விழுக்காடு எனவும் கணக்கிடப்பட்டுள்ளது.

உணவுப்பழக்க வழக்கங்கள்[2]

மாவட்டத்தின் முக்கியமான உணவுப்பொருள் அரிசியே. இதுதவிர, மரவள்ளி, பெருமளவில் துணை நிறைவு செய்கிறது. ஏழை எளியோர் கஞ்சி சாப்பிடுவதைப் பழக்கமாகக் கொண்டுள்ளார்கள். பணம் படைத்தவர்கள் அரிசி உணவு உண்பவர்கள். தொழிலாளி வர்க்கத்தினர் எளிய உணவான கஞ்சி, மரவள்ளி ஆகியவற்றை சாப்பிடுகிறார்கள். பக்க உணவாக காய்கறிகளுக்குப் பதிலாக மீன் சாப்பிடுவதைப் பழக்கமாகக் கொண்டுள்ளார்கள்.

குடியிருப்பு வசதி

1960 ஆம் ஆண்டு மக்கட்தொகை கணக்கெடுப்பு செயலாக்கத்தின் படி, மாவட்டத்திலிருந்த மொத்த வீடுகளின் எண்ணிக்கை 2,11,543 ஆக இருந்தது. அவற்றில், 1,80,046 வீடுகள், அதாவது 85.11 விழுக்காடு புறநகர்ப்பகுதியிலும், 31,497 வீடுகள் நகர்ப்புறப் பகுதியிலும் இருந்தன. மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு 1000 மக்கட்தொகை வீடுகளிலும், 938 வீடுகளில் மக்கள் குடியிருந்து வந்தனர். எஞ்சிய 62 வீடுகள் காலியாக இருந்தன. குடியிருப்பு வீடுகளின் மக்கள் நெருக்கம் சராசரி 7.17 நபர்களாகும். ஒவ்வொரு குடியிருப்பு வீட்டினிலும், மக்கட்தொகை நெருக்கமாக இருந்தமைக்கு இதுவே சான்றாகும். மொத்த குடியிருப்பு மக்கட் தொகை வீடுகளில் 829 கலப்பற்ற தனிக்குடித்தன வீடுகளாகவோ அல்லது, கலப்பான குடியிருப்பு வீடுகளாகவோ இருந்தன. எஞ்சிய 109 வீடுகள், கடைகள், தொழிற்சாலைகள், உணவு விடுதிகள், பள்ளிகள், கேளிக்கையிடங்கள் மற்றும் பொதுச்சுகாதார நிலையங்களாகப் பயன்படுத்தப்பட்டன. தனிப்பட்ட குடித்தனங்கள் மற்றும் கடைகள் ஆகியவை குறைந்த வீதத்திலிருந்தமையால், தோவாளை வட்டத்தில்,

காலியான வீடுகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்தன. குடியிருந்த வீடுகளில், அகஸ்தீஸ்வரம் வட்டத்தில் தான், தொழிற்சாலைகள், தொழிற்கூடங்கள் மற்றும் தொழில் கூடமாகவும், குடியிருப்பு வீடுகளாகவும் பயன்படுத்தப்பட்டவை ஆகியவற்றின் வீதம், மிக அதிகமாயிருந்தது. மாவட்ட மற்றும் வட்டத் தலைமையிடமாக நாகர்கோவில் விளங்குவதால், இங்கு தொழிற்சாலைகளின் வீதம், அதிகமாகவே இருந்தது. மாநில மற்றும் மாவட்ட நிலையில் கட்டப்படும் வீடுகளுக்கு மண், சுட்ட செங்கல், மற்றும் கற்கள் ஆகியவை முதன்மையாகப் பயன்படுத்தப்படுகின்றன. கன்னியாகுமரி மாவட்டத்தில், தெளிவாகத் தெரிகிற ஒரு தனிச்சிறப்புயாதெனில், வீடுகள் கட்ட சுடாத செங்கல், பனஞ்சட்டங்கள் மற்றும் மூங்கில்கள் ஆகியவை அதிக அளவில் பயன்படுத்தப்படுகின்றன. இந்தத் தனித்தன்மை, கன்னியாகுமரி மாவட்டத்தைத் தவிர, வேறெங்கும் காணப்படுவதில்லை. வீடுகள் கட்டுவதற்கு, மாநிலத்தின் பிற பகுதிகளில், மண் அவ்வளவாகப் பயன்படுத்தப்படுவதில்லை. சுவர்கள் எழுப்புவதற்கு பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களில், 60 விழுக்காடு, சுட்ட மற்றும் சுடாத செங்கற்களாகும். மாவட்டத்தில் காடுகள் உள்ள பகுதிகளினின்றும் மரங்களை எளிதாகப் பெற வாய்ப்புள்ளதால், மரங்கள் சுவர் எழுப்புவதற்கான மூலப்பொருட்களில் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இக்காரணங்களால் மாவட்டத்திலுள்ள வீடுகள் மிகவும் தரமிக்கவையாகவே உள்ளன[3].

கூரைப்புல், இலைகள் பனையோலை, தென்னையோலை போன்றவை மாநிலத்தில் வீடுகளுக்குக்கூரை வேய்ந்திடப் பயன்படும், முக்கிய மூலப்பொருட்களாகும். ஆனால், தற்போது மாவட்டத்தில், அவற்றிற்கு அவ்வளவு முக்கியத்துவம் அளிக்கப்படுவதில்லை. ஓடுகள், குறிப்பாக நகர்ப்புறங்களில், முக்கிய கூரைப்பொருளாகப் பயன்படுத்தப் படுகின்றன. மற்றொரு தனிச்சிறப்பு என்னவெனில், செங்கல் மற்றும் சுண்ணாம்பிலான, "சென்னை உருப்படிவ அடுக்குத்தள கட்டுமானம்", (மெட்ராஸ் தார்சு), மாவட்டத்தில் மிகக்குறைந்த அளவிலேயே வீடுகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது. ஆக, பொதுவாக, கிராமப்புறப் பகுதிகளில், ஓலை முறையிலான கூரை வீடுகளுக்கும், நகர்ப் புறங்களில், ஓட்டுக்கூரை வீடுகளுக்கும், கிராமப்புறம், நகர்ப்புறம் இரண்டிலுமே செங்கற் சுவர்களுக்கும் முன்னுரிமையளிக்கப்படுகிறது.

அனைத்து வட்டங்களிலுமே, 52 விழுக்காடுகளுக்கு மேற்பட்ட வீடுகள், சுட்ட அல்லது சுடாத செங்கற்களைக் கொண்டே கட்டப் படுகின்றன. விளவங்கோட்டில் வாழும் மக்கள் சுடாத செங்கற்களுக்கே மிகுந்த முக்கியத்துவமளிக்கின்றனர். ஏனைய வட்டங்களை விட இவ்வட்டத்தில் மண், மூங்கில், பனைச்சட்டங்கள் மற்றும் மரங்கள் ஆகியவை அதிக அளவில் பயன்படுத்தப்படுகின்றன.

மலைப்பகுதியான தோவாளையில் வீடுகள் கட்ட அதிக அளவில் கற்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வட்டத்தில் மண்சுவர்களும், அதிக அளவில் வீடுகளிலெழுப்பப்பட்டுள்ளன. கல் மற்றும் மூங்கிலிலான சுவர்கள் அகஸ்தீஸ்வரம் வட்டத்தில் பெரும்பாலும் காணப்படுகின்றன.

மொத்தத்தில், கற்களிலோ, அல்லது செங்கற்களிலோ சுவர்களை எழுப்பி 50 விழுக்காட்டிற்கு மேல் வீடுகளைக் கட்டி அகஸ்தீஸ்வரம் வட்டம் முதலிடம் வகிக்கிறது[4]. இதனில், 23 விழுக்காடே அடைந்துள்ள விளவங்கோடு கடைசியிடத்திலுள்ளது.

பொதுவாக இம்மாவட்டத்தில் கிராமப்புறம் மற்றும் நகர்ப்புறம் இரண்டு பகுதிகளிலுமே தனி வீடுகளைக் கட்டி, வீட்டு வளாகத்தினுள், மா, கோவா, பலா, வாழை, தென்னை, பப்பாளி போன்ற பல்வேறு வகைகளையும் மக்கள் பயிரிட்டு வளர்ப்பதைக் காணமுடிகிறது.

வாழ்க்கைத்தரம்

வாழ்க்கைத்தரம் என்பது, இயல்பாக, ஒரு தனிப்பட்ட நபர் அல்லது குடும்பமானது, எப்படிப்பட்ட பொருளாதார நிலையில் வாழ்கிற தென்பதைக் குறிப்பதாகும். ஒரு குறிப்பிட்ட காலத்தில், ஒரு தனிப்பட்ட நபர் அல்லது குடும்பத்தினர் உற்பத்தி செய்த பொருட்கள், ஆற்றிய பணித்திறம், ஆகியவற்றின் மதிப்பு, மற்றும் பயன்படுத்திய பொருட்கள் மற்றும் பணித்திறம் ஆகியவற்றின் மதிப்பு- இவற்றையொத்தே வாழ்க்கைத் தரத்தின் பொருளாதார நிலை நிர்ணயிக்கப்படுகிறது.

வருவாய் என்பது, சரி நிகர்வற்ற நிலையினை அளக்கும் கருவியாகும். ஆனால், பயன்பாட்டினை ஆதாரமாகக் கொண்டே, வாழ்க்கைத்தரம் பிரதிபலிக்கிறது. வருவாய்ப் பங்கீடு குறித்த நேர்புள்ளி விவரங்களும், பயன்பாட்டையொத்தே உள்ளன.

கன்னியாகுமரி மாவட்டம் தொடர்பான உணவுப்பொருள் பயன்பாடு குறித்து தனி ஆய்வு எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. எனினும், பொதுவாக, தமிழ்நாடு தொடர்பான விவரங்கள் சேகரிக்கப்பட்டு கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1961 ஆம் ஆண்டிற்கான தொடர்புள்ள புள்ளி விவரங்களை நோக்குங்கால், மொத்தத்தில், இந்தியாவின், சராசரி உணவு கொள்பொருள் அளவு தனிநபர் ஒருவருக்கு 2445 கலோரி ஆகும்[5]. மாநிலங்களுக்குள்ளாக இப்புள்ளி 1620 முதல் 3037 வரை மாறுபடுகிறது.

உணவுக் கொள்பொருள் அளவிற்கொப்ப, ஒவ்வொருவருக்கான உணவு உற்பத்தி புள்ளி விவரங்களை ஆய்வு செய்யுங்கால், கேரள

மாநிலத்தை விட, தமிழ்நாடு, மேம்பட்ட நிலையிலிருந்தது. உணவு உற்பத்தியில் தானியங்கள் முக்கிய அங்கம் வகித்ததாகக் கருதப்பட்டது. எனவே, உணவு கொள்பொருள் அளவிற்கும், ஒவ்வொருவருக்கான உணவு உற்பத்தி அளவிற்கும் நெருங்கிய தொடர்பு இருப்பது இதனின்றும் தெரிய வருகிறது.

1961-62 ஆம் ஆண்டு நடத்தப்பெற்ற 17-வது சுற்று தேசிய மாதிரி ஆய்வின், 1961-62 ஆம் ஆண்டின் உணவு கொள்பொருள் அளவு, 1975 ஆகும். இது சராசரிக்கும் குறைவாக உள்ளது. இவ்வுணவுக் கொள்பொருள் அளவில் அரிசி மற்றும் தானியங்களின் அளவு 87 விழுக்காடாகும். புரதப்பொருள் பயன்பாடு, தேசிய சராசரி அளவைவிடக் குறைவாகவே உள்ளது. கிராமப்புறம் மற்றும் நகர்ப்புறங்களில், அரிசி பெரும்பாலும் சமமான அளவில் தான் பயன்படுத்தப்படுகிறது. இரு பகுதிகளிலும், உணவுக்கொள்பொருள் அளவு, பரிந்துரைக்கப்பட்ட நிலையைவிடக் குறைவாகவே உளது. உணவுப்பழக்க, வழக்க ஆய்வு மற்றும் தமிழ்நாடு சத்துணவு ஆய்வு போன்ற பல தரப்பட்ட தேசிய மாதிரி ஆய்வுகளின்படி, 1961-62 ஆம் ஆண்டு, கிடைக்கக்கூடிய கலோரியின் அளவு 1965 ஆக இருந்தது. 1970-71-ல், இதனளவு 2001 கலோரி ஆக உயர்ந்தது. பத்தாண்டுகளுக்குப் பின்னரும் மிகக் குறைந்த அளவே உயர்ந்துள்ளது. புறப்பகுதி, நகர்ப்புறம் இரண்டிலுமே, உணவுக்கொள்பொருள் அளவில், பலதரப்பட்ட பயனடைவோரிடையே சரிநிகர்வற்ற நிலை மிகுந்த அளவில் காணப்படுகிறது.

படிப்படியாக நாடு வளர்ச்சியுறும் இந்நிலையில் மக்களுடைய வருவாயும் நாளுக்குநாள் அதிகரிக்கிறது. அதனைத் தொடர்ந்து மக்களின் தேவைப்பொருட்கள் அவர்கள் ஆற்றும் பணி, ஆகியவற்றின் பாங்கும் மாறி வருகிறது. இன்றியமையா உணவுப் பொருட்கள் மற்றும் துணிமணிகள் ஆகியவற்றினின்றும் உணவு அல்லாத மற்ற பொருட்களின் மீது மக்கள் நாட்டம் செலுத்துவதைக் காணமுடிகிறது. அதனைத் தொடர்ந்து, பொழுதுபோக்கு வசதிகளைப் பெருக்குவதிலும், இன்ப வாழ்க்கைப் பொருட்களை சேரிகப்பதிலும் அவர்கள் கவனம் செலுத்துவதைக் காண்கிறோம்.

இந்த இயல்பான நிலைக்கெதிராக, மாநிலத்தின் பயன்பாட்டுப் பாங்கிலேற்பட்டுள்ள வேறுபாட்டினை தேசிய மாநில ஆய்வின் முடிவினைக் கண்டு அறிந்து கொள்ளலாம். (24,27,32 மற்றும் 38-வது சுற்றுகளின் இறுதி முடிவு) இவ்வாய்வுகள் முறையே,

1969 சூலை, 1970 சூன், 1972 அக்டோபர்,

1973 செப்டம்பர் - 1970 சூன், அக்டோபர் 1972-செப்டம்பர்,

1977 சூலை, 1978 சூன் 1983 சனவரி-டிசம்பர் 1983 ஆகிய காலங்களில் நடத்தப்பெற்றன.

தமிழ்நாட்டிலுள்ள கிராமப்புற மற்றும் நாட்டுப்புற மக்களிடையே யான பயன்பாட்டு செலவுப்போக்கு, உணவுப்பொருட்கள் மற்றும்

உணவு சாரா பொருட்கள் ஆகியவற்றிற்கான செலவென இருகூறாகப் பிரிகிறது. பொருட்களின் பயன்பாட்டின் போக்கு, நோதிசையில் உணவுப்பொருட்கள் வகையிலிருந்து உணவு சாரா பொருட்களுக்கு செல்வதையே இது காட்டுகிறது. உணவு பொருட்களுக்கான செலவு 74-லிலிருந்து 72 ஆகக் குறைந்தது. பின்னர், மேலும் 65ஆகக் குறைந்தது. கிராமப்புறத்தில், உணவுப்பொருளின் பயன்பாட்டுப் போக்கு, நகர்ப்புறப் பகுதியிலுள்ளதைக் காட்டிலும் சிறிதளவு மாறுபட்டுள்ளது. அதாவது, 1970 சூனிலிருந்து, 1983 டிசம்பர்க் குள்ளாக 70-லிருந்து 67ஆக குறைந்து, பின்னர் மேலும் 58ஆக குறைந்து விட்டது. மக்கள் உணவு சாராப் பொருட்களைப் பயன்படுத்த முற்பட்டிருப்பது, அவர்களது வாழ்க்கைத் தரம் சிறிது சிறிதாக உயர்ந்து வருவதையே காட்டுகிறது. இந்த மாற்றம் நகர்ப்புறப் பகுதிகளிலேயே அதிகமாகக் காணப்படுகிறது. கிராமப்புறப்பகுதியும், சளைத்ததல்ல என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

உணவுப்பொருட்கள் பயன்படுத்துவோரில், தானியங்கள் பயன் படுத்துவதை நகர்ப்புறத்திலுள்ளோரை விட கிராமப்புறத்திலுள்ளோர், சற்றுக் குறைத்துக் கொண்டு வருவதைக்காண முடிகிறது. ஆனால், நகர்ப்புறத்திலுள்ளோரை விட கிராமப்புறத்தில், தானியங்கள் உட்கொள்ளுவோரின் விழுக்காடு அதிகமாகவே உள்ளதை மறுப்பதற்கில்லை. உணவுப்பொருள் தொகுதியிலமைந்த ஏனைய பொருட்கள் குறித்த செலவினங்களையும் கூர்நோக்க வேண்டியுள்ளது. அவற்றில் முக்கியமானவை, பயறுகள், பால் மற்றும் பால் பொருட்கள், உணவு எண்ணெய்கள், இறைச்சி, மீன், காய்கறிகள் ஆகியன. புறப்பகுதி மற்றும் நகர்ப்புறச் சூழ்நிலையில், செலவு வீதம், குறைந்துள்ளதையோ அல்லது அசையாதிருப்பதையோ, காணமுடிகிறது.

உணவு சாரா பொருட்களில், நகர்ப்பகுதி மற்றும் கிராமப்புறச் சூழ்நிலையில் செலவில் வேறுபாடு காணப்படுகிறது[6]. அதாவது, துணிகள், நீடித்து உழைக்கக்கூடிய பொருட்கள் மற்றும் பல்வகைப் பொருட்கள் மற்றும் பணிகள் ஆகியவற்றின் செலவு விழுக்காட்டில், குறிப்பிடத்தக்க அளவு ஏற்றம் தெரிகிறது. விறகு மற்றும் விளக்கு ஆகியவற்றிற்கான செலவினத்தில் கிராமப்புறம் மற்றும் நகர்ப்பகுதி ஆகிய இரண்டிலுமே, ஏறத்தாழ, ஒரே நிலையில் அதாவது மொத்த செலவில் ஏழு விழுக்காடு காணப்படுவது மற்றொரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

விலைகள்

1969 நவம்பர் மாதத்திலிருந்தே இந்தியாவின் பொருட்கள் விலைகளின் நிலையில் உயர்வு காணப்பட்டு வருகிறது. இன்றியமையாப் பொருட்கள் வழங்குதலில் பற்றாக்குறை, பணப்புழக்கத்தில் ஏறுமுகம் சில இனங்களில் உலக வாணிகம் ஆகியவற்றால் பொருட்களின் விலைகள் உயர்ந்து, அதன் விளைவாக அன்றாட வாழ்க்கைச் செலவினமும் உயர்ந்து விட்டது.

தமிழ்நாட்டின், கிராமப்புற மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் உணவு மற்றும் உணவு சார்ந்த பொருட்களைப் பயன்படுத்தும் பல்வேறு மக்களின் பயன்பாட்டுச் செலவு (விழுக்காடு)

தொடர் எண்.	உணவு வகை	புறநகர்ப் பகுதி				நகர்ப்புறம்			
		24–வது சுற்று	27–வது சுற்று	32–வது சுற்று	38–வது சுற்று	24–வது சுற்று	27–வது சுற்று	32–வது சுற்று	38–வது சுற்று
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)
1.	அனைத்து தானிய வகைகள்	42.66	41.68	36.03	34.94	27.96	27.57	24.66	23.56
2.	பயறு வகைகள்	0.00	0.00	0.03	0.08	0.00	0.00	0.03	0.07
3.	தானியங்களுக்குரிய மாற்றுப் பொருட்கள்	0.25	0.08	0.25	0.09	0.08	0.04	0.07	0.01
4.	பருப்புகள்	2.88	3.72	3.49	3.41	4.07	3.84	3.62	3.18
5.	பால் மற்றும் பால் பொருட்கள்	3.20	3.03	3.06	3.32	7.32	6.60	5.94	6.04
6.	உணவு எண்ணெய்கள்	3.35	3.48	2.91	3.32	4.00	3.68	3.37	3.44
7.	இறைச்சி, முட்டை மற்றும் மீன்	3.57	3.80	3.62	3.74	4.05	3.93	3.61	3.58
8.	காய்கறிகள்	3.01	3.46	3.90	3.80	4.05	3.60	3.66	3.97
9.	பழங்களும், உட்பருப்புள்ள கொட்டைகளும்	1.19	1.38	1.64	1.71	1.86	1.99	1.36	2.09
10.	சீனி	1.54	1.78	1.63	1.59	2.19	2.49	1.87	1.66
11.	உப்பு	0.23	0.19	0.22	0.14	0.12	0.14	0.15	0.09

தமிழ்நாட்டின், கிராமப்புற மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் உணவு மற்றும் உணவு சார்ந்த பொருட்களைப் பயன்படுத்தும் பல்வேறு மக்களின் பயன்பாட்டுச் செலவு (விழுக்காடு) - தொடர்ச்சி

தொடர் எண்.	உணவு வகை	புறநகர்ப் பகுதி				நகர்ப்புறம்			
		24–வது சுற்று	27–வது சுற்று	32–வது சுற்று	38–வது சுற்று	24–வது சுற்று	27–வது சுற்று	32–வது சுற்று	38–வது சுற்று
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)
12.	நறுமணச் சரக்குகள்	5.45	4.73	4.50	3.54	4.19	3.62	3.56	2.68
13.	நீரில் கலந்த குடிவகைகள் மற்றும் சிற்றுண்டி பானங்கள்	6.43	4.81	4.42	5.38	10.54	9.89	8.87	8.08
	உணவுப் பொருட்கள் மொத்தம்	73.76	72.14	65.70	65.06	70.41	67.39	60.80	58.45
14.	வெற்றிலை, புகையிலை மற்றும் குடிவகைகள்.	3.04	4.28	3.03	3.39	2.75	2.86	2.00	2.19
15	விறகு மற்றும் விளக்கு	7.03	6.80	6.03	6.85	6.87	6.72	6.66	6.52
16.	துணிமணிகள்	5.36	5.79	9.30	7.32	4.22	5.74	7.31	7.00
17	மிதியடி வகைகள்	0.06	0.03	0.14	0.40	0.19	0.14	0.29	0.68
18	பால்வகைப் பொருட்கள் மற்றும் பணிகள்	9.75	9.73	11.64	13.70	14.65	15.16	14.58	21.68
19.	நீடித்து உழைக்கக்கூடிய பொருட்கள்	1.00	1.23	3.59	3.28	0.92	1.99	8.36	3.28
	உணவு சாராப் பொருட்கள் மொத்தம்	26.24	27.86	34.30	34.94	29.60	32.61	39.20	41.55
	மொத்தச் செலவு	100.00	100.00	100.00	100.00	100.00	100.00	100.00	100.00

வறட்சி, வெள்ளம் போன்ற இயற்கை இடற்பாடுகளினால், விளைச்சல் பாதிக்கப்பட்டு அதன் விளைவாக, மொத்த விலைகள் பொது அட்டவணையில் 5.5 விழுக்காடு உயர்வு காணப்படுகிறது[7].

விலைவாசியினைக் கட்டுப்படுத்த மத்திய மற்றும் மாநில அரசுகளால், பலதரப்பட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இன்றியமையாப் பொருட்கள் விலைகளின் ஏற்றத்தைக் கட்டுப்படுத்த, தமிழ்நாட்டின் பின்னல்வலையமைவிலான பொது வழங்கு முறைத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி, இன்றியமையாப் பொருட்களான, அரிசி, லெவி கோதுமை, கோதுமை பொருட்கள், லெவி சர்க்கரை, மண்ணெண்ணெய், மற்றும் பாமாலின் எண்ணெய் ஆகியவை நியாயவிலைக் கடைகளின் மூலம் குடும்பஅட்டை தாரர்களுக்கு வழங்கப்படுகின்றன.

1985-1986 ஆம் ஆண்டு, மாவட்டத்தில் 464 நியாய விலைக் கடைகள், இயங்கி வந்தன. அவற்றின் 87 கடைகள் தமிழ்நாடு நுகர்ப் பொருள் வாணிபக் கழகத்தின் கட்டுப்பாட்டிலும், எஞ்சிய 377 கடைகள் கூட்டுறவுத் துறையின் கட்டுப்பாட்டிலும் இயங்கின[8]. ஏறத்தாழ, மொத்தக் கடைகளில் 86 விழுக்காடு, கிராமப்புறப் பகுதிகளில் செயலாற்றி வந்தன.

நுகர்வோர் விலைவாசி அட்டவணை எண்.

இட-காலத்தொடரளவையில், விலை வேறுபாடுகள், தேவைகளுக்கான நாணயம் சார்ந்த மதிப்பினை பெரிதும் பாதிக்கிறது. விலை வேறுபாடுகளின் விளைவினை நேர் செய்ய, அட்டவணை எண்கள் பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன.

பொருட்கள் மற்றும் பணிகளின் விலை மாற்றத்தினைக் கணக்கிட, நுகர்வோர் விலை அட்டவணை பெரிதும் பயன்படுத்தப் படுகிறது. அன்றாடவிலைவாசி உயர்வுக்கேற்ப, தொழிலாளர் கூலிகள், ஊதியங்கள், மற்றும் ஏனைய பணிகளுக்காகப் பட்டுவாடா செய்யப்படும் தொகைகளைத் திருத்தியமைக்கும் ஒரு அளவு கோலாகத் திகழ்கிறது. அது, பொருளாதாரத்தின் பண வீக்கத்தைத் தெளிவாகத் தெரிவிக்கும், ஒரு அறிகுறிகாட்டும் கருவியாகும்.

தற்போது, நுகர்வோர் விலைவாசி அட்டவணை எண்கள், சென்னை நகரிலும் மற்றும் நாட்டுப்புறத்திலுள்ள நகர் மையங்களிலுமுள்ள தொழிற்துறைப் பணியாளர்களுக்காகத் திரட்டப்படுகிறது. அதில் நாகர்கோவில் ஒரு மையமாகும். இம்மையத்திற்கான அட்டவணை, புள்ளிவிவரத்துறையினால், 1960 ஆம் ஆண்டினை ஆதார ஆண்டாகக் கொண்டு, கணக்கிடப்படுகிறது. இச்சீரமைப்பு முறை, 1970 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திலிருந்து நடைமுறையிலிருந்து வருகிறது.

சில்லரை விலைபற்றிய புள்ளிவிவரங்கள், ஐந்து பெரிய வகைகளில் பல பொருட்கள் குறித்து இம் மையத்தினின்றும் திரட்டப்படுகின்றன. அவை, உணவு, விறகு மற்றும் ஒளி, துணிமணிகள், வீட்டு வாடகை மற்றும் பல வகையாகும். விலை சார்ந்த விவரங்கள் ஆகியவை, ஆதார ஆண்டின் தொடர்புள்ள சில்லரை விலைகளுக்கொப்ப கணக்கிடப்படுகின்றன. தொகுதி அட்டவனை யினைக் கணக்கிட, ஆதார ஆண்டில் குடும்ப ஒதுக்கீட்டு ஆய்வுகளின் மூலம் தெரிவு செய்யப்பட்ட அளவுகள் பின்பற்றப்படுகின்றன.

1983-84 ஆம் ஆண்டிற்கான, நாகர்கோவில் மையத்தின் நுகர்வோர் விலைவாசி அட்டவணை எண்ணின் போக்கு, கீழே மதித்துரைக்கப்படுகிறது.

நாகர்கோவிலுக்கான நுகர்வோர் விலைவாசி அட்டவணை எண் 1983 சூலை மாதத்தில் 692 ஆக இருந்தது, 1984 சனவரியில், 723 ஆக முன்னேற்றம் கண்டது[9]. பின்னர், 1984 சூனில், 709 ஆக பின்னடைவானது. 1983 சூலை மாதத்திய நிலையினை ஒப்பிட்டு நோக்குகையில், 1984 சூன் மாதத்தில் 2.5 விழுக்காடு அதிகரிப்பு காணப்படுகிறது.

1983-84ஆம் ஆண்டில், தமிழ்நாட்டின் கிராமப்புறப் பகுதிகளில், தேர்வு செய்யப்பட்ட சில பொருட்களுக்கு, நுகர்வோர் விலைவாசி அட்டவணை எண்கள் (ஆதார ஆண்டு 1970-71=100)

1983 சூலை மாதத்தில், கிராமப்பகுதிகளில், தேர்வு செய்யப்பட்ட சில இன்றியமையாப் பொருட்களுக்கான நுகர்வோர் விலைவாசி அட்டவணை எண், 320.64 ஆக இருந்தது[10]. 1983 அக்டோபர், ஒரு மிகச்சிறிய குறைவு(0.88 விழுக்காடு) நீங்கலாக, 1983 டிசம்பர் வரை, ஏறுமுகத்திலேயே இருந்து வந்தது. 1983 ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம், அட்டவணை உயர் கட்டமான 332.06 ஐ எட்டியது. 1984 மார்ச் முதல் 1984 மே வரை, அட்டவணை மெல்ல மெல்ல அதிகரித்து, மறுபடியும் 1984 ஆம் ஆண்டு சூன் மாதத்தில், 320.84 ஆகக் குறைந்தது.

1983-84 ஆம் ஆண்டு, (சூலை முதல் சூன்) கன்னியாகுமரி மாவட்டத்தில் உணவு தானியங்கள் மற்றும் உப்பு ஆகியவற்றின், ஆண்டு சராசரி சில்லரை விலைகள்

(விலைகள் - ஒரு குவிண்டாலுக்கு - ரூபாயில்)[11]

மையத்தின் பெயர்	பொருட்கள்				
	அரிசி		சோளம்	கம்பு	ராகி
	முதல் வகை	இரண்டாம் வகை			
நாகர்கோவில்	408	403	198	203	206
மார்த்தாண்டம்	-	418	-	-	233
கருங்கல்	-	425	-	-	240
மாவட்ட சராசரி	408	415	198	203	266

	கொள்ளு	உப்பு
நாகர்கோவில்	279-00	32-00
மார்த்தாண்டம்	280-00	35-00
கருங்கல்	-	33-00
மாவட்ட சராசரி	280-00	33-00

நுகர்வோர் விலைவாசி அட்டவணை எண் - நாகர்கோவில் மையம் (1960-100)

காலம்			நாகர்கோவில்
1982	சூலை	-	584
	ஆகஸ்ட்	-	593
	செப்டம்பர்	-	588
	அக்டோபர்	-	591
	நவம்பர்	-	610
	டிசம்பர்	-	616
1983	சனவரி	-	620
	பிப்ரவரி	-	658
	மார்ச்	-	644
	ஏப்ரல்	-	650
	மே	-	660
	சூன்	-	686
1983	சூலை	-	692
	ஆகஸ்ட்	-	705
	செப்டம்பர்	-	700
	அக்டோபர்	-	700
	நவம்பர்	-	715
	டிசம்பர்	-	715
1984	சனவரி	-	723
	பிப்ரவரி	-	710
	மார்ச்	-	690
	ஏப்ரல்	-	707
	மே	-	706
	சூன்	-	709

1983-84 ஆம் ஆண்டில், சில தேர்வு செய்யப்பட்ட மையங்களில், முதன்மையான பொருட்களின் மாதாந்திர சராசரி மொத்த விலைகள்

1) வேறு விதமாகக் குறிப்பிடப்பட்டாலன்றி, அனைத்து விலைகளும் 100 கிலோ கொண்ட ஒரு குவிண்டாலுக்கு ரூபாயாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

2) எங்கெங்கு மாநில சராசரி விலை குறிப்பிடப்பட்டுள்ளதோ, அது, குறிப்பிட்ட மையங்களில் நிலவி வரும் விலையையே குறிக்கும்.

மையம்	பொருளின் பெயர்	1983 ஏப்ரல்	1983 ஆகஸ்ட்	1984 மார்ச்	ஆண்டு சராசரி
நாகர்கோவில்	நெல்–பொன்னி முதல் வகை	255.99	307.35	204.66	264.87
நாகர்கோவில்	நெல்–பொன்னி இரண்டாம் வகை	272.33	192.26	216.78	283.03
நாகர்கோவில்	அரிசி–பொன்னி முதல் வகை	414.00	432.50	337.00	421.51
நாகர்கோவில்	அரிசி–சம்பா இரண்டாம் வகை	402.67	470.00	361.00	416.98
நாகர்கோவில்	மரவள்ளி	80.00	95.00	80.00	85.92
நாகர்கோவில்	பனை–கருப்புக் கட்டி	374.00	505.00	456.00	453.77
குழித்துறை	தென்னை (மட்டையோடு கூடியது)1000 காய்களின் விலை	1640.00	2075.00	3400.00	2462.26
நாகர்கோவில்	தென்னை (மட்டையோடு கூடியது) 1000 காய்களின் விலை	1560.00	2000.00	3245.00	2496.70
குழித்துறை	தேங்காய் எண்ணெய் (10 கிலோவுக்கு விலை)	163.00	214.22	302.75	247.34
நாகர்கோவில்	பாக்கு(ஒட்டுடன்)	100.00	70.00	100.00	102.17
	உப்பு	16.00	16.00	28.40	17.17

(ஆண்டு புள்ளி விவரச்சுருக்கம் - தமிழ்நாடு-1983-84-புள்ளிவிவரத்துறை, தமிழ்நாடு அரசு, 1986, பக்கம் 242-245)

அறுவடையாகும் நெல் மற்றும் இதர பொருட்களின் பண்ணை வெளிவிலை (1960-61 முதல் 1985-86 வரை)

ஆண்டு	நெல் ரூ. பை.	அரிசி ரூ. பை.	கொள்ளு ரூ. பை.	மிளகு ரூ. பை.	தென்னை (100 காய்களுக்கு ரூ. பை.	பாக்கு ரூ. பை.	நெல் வைக்கோல் (ஒரு வண்டி பாகம்) ரூ. பை.	வெல்லம் ரூ. பை.	மிளகாய் ரூ. பை.	மரவள்ளி ரூ. பை
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)
1960–61	35.65	53.55	40.44	329.00	22.90	89.55	30.40	–	–	–
1961–62	37.90	61.41	41.61	243.80	22.99	99.64	41.50	–	–	–
1962–63	31.38	50.84	49.27	211.46	23.64	34.40	40.32	–	–	–
1963–64	38.45	59.01	50.55	243.74	23.94	23.57	24.09	–	–	–
1964–65	43.18	64.10	56.27	267.43	35.58	36.00	–	–	–	–
1965–66	41.25	73.25	58.72	308.59	45.86	42.00	–	–	–	–
1966–67	45.00	68.51	68.10	353.62	40.51	29.18	NT	–	–	–
1967–68	45.00	76.75	75.58	355.69	41.88	27.87	NT	–	–	–
1968–69	45.00	77.36	82.58	372.92	43.28	28.40	40.45	–	–	–
1969–70	53.90	84.44	79.27	419.08	53.95	33.90	41.00	–	–	–
1970–71	67.95	98.75	65.64	456.72	54.17	39.20	49.17	–	–	–
1971–72	71.99	107.01	74.06	406.37	48.93	30.60	56.55	–	–	–
1972–73	78.85	109.86	108.21	406.66	67.01	21.83	59.96	–	–	–
1973–74	114.47	164.20	118.95	549.37	95.52	30.36	–	–	–	–

அறுவடையாகும் நெல் மற்றும் இதர பொருட்களின் பண்ணை வெளிவிலை

(1960-61 முதல் 1985-86 வரை)- தொடர்ச்சி

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)
1974-75	145.88	280.40	–	544.58	73.75	29.75	–	–	–	–
1975-76	108.82	155.08	–	1004.20	60.00	28.00	–	–	–	–
1976-77	130.54	198.66	–	1090.00	88.00	64.00	–	–	–	–
1977-78	115.00	158.67	–	1230.00	78.50	42.74	–	–	–	–
1978-79	117.76	154.40	–	1264.00	78.33	48.65	–	–	–	–
1979-80	128.88	187.02	92.00	1325.00	96.67	1043.33	–	–	572.25	26.75
1980-81	157.46	207.34	–	1116.67	114.58	1419.04	–	–	–	23.75
1981-82	187.27	270.42	–	1200.00	116.67	1345.33	–	–	–	23.38
1982-83	202.75	278.51	–	1425.25	114.58	1525.93	–	–	674.37	56.25
1983-84	203.03	316.67	இல்லை	1640.00	172.00	1426.42	49.94	–	610.00	40.42
1984-85	257.40	311.22	260.00	2210.00	170.00	1510.45	35.00	–	1007.50	25.00
1985-86	290.10	357.00	300.00	3250.00	140.71	–	35.00	373.33	826.25	56.50

(புள்ளிவிவர ஆணையாளர், சென்னை, புள்ளிவிவரப்பட்டியல் நாள் 27.4.1987)

நெல் முதலிய இன்றியமையாப் பொருட்களின் விலை (1960-61 முதல் 1985-86 வரை)
(100 கிலோ கொண்ட ஒரு மூட்டை விலை ரூ. பை)

ஆண்டு	நெல் (முதல் ரகம்)	நெல் (2ஆம் ரகம்)	அரிசி (2ஆம் ரகம்)	ராகி	கொள்ளு	உப்பு	சோளம்	கம்பு	வரகு
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)
1960–61	39.55	37.54	61.40	44.89	42.97	5.14	37.42	46.37	46.68
1961–62	41.15	40.05	62.05	40.16	43.77	4.99	41.36	45.14	45.59
1962–63	37.79	35.92	60.25	51.24	41.59	4.60	43.04	41.13	44.56
1963–64	41.60	40.62	64.98	51.24	46.60	6.42	42.00	43.54	47.97
1964–65	48.15	46.12	79.63	48.04	48.41	5.84	45.35	43.93	47.07
1965–66	55.46	53.12	89.71	52.47	64.28	4.28	70.55	58.00	65.92
1966–67	வா.இ.	71.70	111.05	வா.இ.	68.36	4.32	வா.இ.	வா.இ.	73.78
1967–68	வா.இ.	96.04	81.00	வா.இ.	77.55	5.88	வா.இ.	வா.இ.	84.57
1968–69	வா.இ.	71.69	117.94	வா.இ.	79.59	6.39	வா.இ.	வா.இ.	78.00
1969–70	வா.இ.	84.50	126.57	வா.இ.	107.13	5.66	வா.இ.	வா.இ.	வா.இ.
1970–71	70.86	68.92	104.90	வா.இ.	85.42	5.15	85.01	வா.இ.	64.76
1971–72	77.77	70.91	107.43	வா.இ.	97.84	6.34	91.74	வா.இ.	70.33
1972–73	85.80	80.20	133.73	வா.இ.	09.92	0.54	82.00	வா.இ.	79.93
1973–74	வி.கி.	வி.கி.	வி.கி.	வி.கி.	வி.கி.	8.00	வி.இ	வி.இ.	வி.இ.

நெல் முதலிய இன்றியமையாப் பொருட்களின் விலை (1960-61 முதல் 1985-86 வரை) தொடர்ச்சி

(100 கிலோ கொண்ட ஒரு மூட்டை விலை ரூ. பை)

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)
1974–75	வி.கி.	வி.கி.	273.93	219.09	179.54	12.29	201.00	216.00	வா.இ.
1975–76	வி.கி.	வி.கி.	228.00	வா.இ.	161.00	12.00	வா.இ.	வா.இ.	வா.இ.
1976–77	வி.கி.	வி.கி.	188.00	146.00	135.00	11.00	148.00	வா.இ.	வா.இ.
1977–78	வி.கி.	வி.கி.	175.00	135.00	127.00	18.00	வா.இ.	வா.இ.	வா.இ.
1978–79	வி.கி.	வி.கி.	185.00	116.00	138.00	16.00	100.00	104.00	வா.இ.
1979–80	வி.கி.	வி.கி.	213.00	124.00	141.00	19.00	125.00	125.00	வா.இ.
1980–81	வி.கி.	வி.கி.	271.00	160.00	186.00	21.00	140.00	160.00	வா.இ.
1981–82	வி.கி.	வி.கி.	311.00	196.00	261.00	23.00	198.00	169.00	வா.இ.
1982–83	வி.கி.	வி.கி.	350.00	187.00	280.00	20.00	172.00	174.00	வா.இ.
1983–84	வி.கி.	வி.கி.	415.00	226.00	280.00	33.00	198.00	203.00	வா.இ.
1984–85	வி.கி.	வி.கி.	356.00	227.00	301.00	38.00	169.00	180.00	வா.இ.
1985–86	வி.கி.	வி.கி.	393.00	232.00	348.00	43.00	வா.இ.	190.00	வா.இ.

(புள்ளி விவரத்துறை ஆணையர், சென்னை, நாள் 27-4-1987)

குறிப்பு : வா.இ. = வாணிய நடவடிக்கை இல்லை
வி. கி = விலை விவரம் கிடைக்கவில்லை

தொழிற்துறை பணியாளர்களுக்கான நுகர்வோர் விலைவாசி அட்டவணை
(ஆதாரம் : 1960 - 100)

மாதாந்திர சராசரி - 1986

நாகர்கோவில் மையம்

சனவரி	..	776
பிப்ரவரி	..	780
மார்ச்	..	770
ஏப்ரல்	..	776
மே	..	791
சூன்	..	808
சூலை	..	826
ஆகஸ்ட்	..	831
செப்டம்பர்	..	835

(தமிழ்நாடு - ஒரு பொருளாதார மதிப்பீடு - 1986-87 - கணக்கீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை - பக்கம் 214)

வேளாண் மற்றும் திறமைத் தொழில்

தொழிலாளர்கள் ஆற்றும் பணிக்கு ஈடாக வழங்கப்படுவதே கூலியாகும். தொழிலாளர்கள், பொருட்களை விலைக்கு வாங்குவது அவர்கள் ஈட்டும் ஊதியத்தின் அளவைப்பொறுத்தே அமைகிறது. அவர்களது ஊதியத்தின்நிலை, அவர்களின் செய்பொருள் ஆக்க அளவையும், வாங்கவுள்ள பொருள்களின் விலையையும், பொறுத்து அமைகிறது.

தமிழ்நாட்டிலுள்ள வேளாண் மற்றும் திறமைத் தொழிலாளர்களுக்கு வழங்கப் பெறும் சராசரி நாள் ஊதிய விவரங்கள் 377 தேர்வு கிராமங்களில் திரட்டப்படுகின்றன. கூடிய வரையில், மாவட்ட முழுமையிலுமுள்ள வேளாண் தொழிலாளர்களின் நிலையினைப் பிரதிபலிக்கும் வகையில், கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன[12]. வேளாண் தொழிலாளர்கள் கீழ்க் கண்டவாறு, மூன்று வகையினராகப் பிரிக்கப்படுகிறார்கள்:

1) நிலங்களில் பணியாற்றும் தொழிலாளர்கள்,
2) மந்தைக்குரியவர், மற்றும்
3) வேளாண் தொழிலாளர்களுக்கு ஆதரவளிக்கும் ஏனையோர்.

ஏர் உழுவோர், விதை விதைப்போர், நாற்று நடுவோர், களை அகற்றுவோர், கதிரறுப்போர், மற்றும் அறுவடை தொடர்புப் பணியாற்றுவோர், ஆகியோர், வேளாண் தொழிலாளர்களில் அடங்குவர்.

1983-84 ஆம் ஆண்டில், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள சில வகையான வேளாண் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட ஊதிய விவரங்கள் மாதவாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளன[13]:

வேளாண் தொழிலாளர்களின் வகை	நாள் கூலியின் சராசரி வீதம். ரூ. பை.
1) உழுவோர்	13. 02
2) விதைப்போர், மற்றும் நாற்றுப்பிடுங்குவோர்	
அ) ஆண்	11. 18
ஆ) பெண்	9. 89
3) நாற்று நடுவோர் மற்றும் களை அகற்றுவோர்	
அ) ஆண்	9. 50
ஆ) பெண்	8. 14
4) கதிரறுப்போர் மற்றும் அறுவடை தொடர்புப் பணியாற்றுவோர்	
அ) ஆண்	20. 49
ஆ) பெண்	8. 13
5) கால்நடை பராமரிப்போர்	
அ) ஆண்	6. 00
ஆ) பெண்	5. 00

மாநிலத்தின், பல்வேறு தொழில்களையாற்றும் தொழிலாளர்களுக்கு, அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள, குறைந்த அளவு ஊதிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

1) வேளாண்மை மற்றும் வேளாண் சார்ந்த பணிகள் 5.4.1983 முதல் நடைமுறை

	தொழிலாளர்களின் வகை	நிர்ணயிக்கப்பட்ட குறைந்த அளவு நாள் கூலி ரூபாய்
1.	தானே, ஏர் கலப்பை, மற்றும் உழவு மாடுகள் ஆகியவற்றைக் கொணர்ந்து, நிலங்களை உழுவதில் ஈடுபடும் வேளாண் தொழிலாளர்கள்	18.00
2.	தானே ஏர், கலப்பை, மற்றும் உழவு மாடுகள் ஆகியவற்றைக் கொணராமல், நிலங்களை உழுவதிலீடுபடும் வேளாண் தொழிலாளர்கள்	11.00

3.	நெல் அறுவடையிலீடுபடும் தொழிலாளர்கள் (அறுவடை, களத்துமேட்டிற்குக் கொண்டு செல்லல், புடைத்தல், பதர் நீக்குதல், அளத்தல் மற்றும் மூட்டையில் கட்டுதல்)	11.00
4.	நெல் அல்லாத ஏனைய பயிர்களறுவடையிலீடு பட்டுள்ள தொழிலாளர்கள்	11.00
5.	விதைத்தல், நாற்றுப்பிடுங்குதல், நாற்று நடுதல் மற்றும் களையெடுத்தல்	8.00
6.	ஏனைய வேளாண் பணியாற்றுவோர், (நிலங்களையும், நிலங்களின் கரைகளையும் சீராக்குதல், தேனீ வளர்த்தல், கோழி போன்ற வளர்ப்புப் பறவைகள் வளர்த்தல், பால் பண்ணை, மற்றும் மரமேறுதல் போன்றவை).	10.00
7.	பற்றுதலுள்ள தொழிலாளர்/வீட்டுப்பணியாற்றும் தொழிலாளர்	210.00 (ஒருமாதத்திற்கு)

2. முந்திரிக்கொட்டைத் தொழிற்துறை

முந்திரிக் கொட்டைத் தொழிற்துறையில் குறைந்த அளவு உதிய நிர்ணயம் (21.1.1983 முதல்)

தொடர் எண்.	தொழிலாளர்கள் வகை /தொழில் விவரம்	குறைந்த அளவு ஊதியம் (அனைத்தும் சேர்ந்தது)
1.	வறுக்கும் பணி	ஒவ்வொரு 50 மூட்டைகளுக்கும் ரூபாய் 10/- என்ற வீதத்திலும் மேலும், ஒவ்வொரு கூடுதல் மூட்டைக்கும் 80 பை. என்ற வீதத்திலும்,-ஒரு நாளைக்கு குறைந்த அளவு ரூ.7/- என்ற வீதத்தில்
2.	கொட்டையுடைத்து,பருப்பெடுத்தல்,	கொட்டையுடைத்து எடுக்கப்பட்ட ஒரு கிலோ கொண்ட பருப்புகளுக்கு (உடைந்த பருப்புகள் உள்பட), 80 பை. வீதம், ஒரு நாளைக்கு குறைந்த அளவு ரூ. 7/- என்ற வீதத்தில்.
3.	தோலுரித்தல்	ஒரு கிலோ முழுப்பருப்புகளுக்கு 75 பை. வீதம், ஒரு நாளைக்குக் குறைந்த அளவு ரூ. 7/ என்ற வீதத்தில்
4.	தேர்வு/நிலை	ஒரு நாளைக்கு ரூ. 7/-
5.	நுழைந்தாய்பவர்	ஒரு நாளைக்கு ரூ. 7/-

6.	பழுதுபார்ப்பவர்	ஒரு நாளைக்கு ரூ. 8/–
7.	பிராத்மா இயந்திரம் இயக்குபவர்	ஒரு மாதத்திற்கு ரூ. 210/–
8.	சிப்பம் மற்றும் மூட்டை போன்றவை கட்டுதல்/நிரப்புதல் அல்லது தொளை அடைத்தல்	ஒரு மாதத்திற்கு ரூ. 210/–
9.	எழுத்தர்/தட்டச்சர்/காசாளர்/ சரக்கறைக்காப்பாளர்	ஒரு மாதத்திற்கு ரு. 250/–
10.	காவலாள்/பணியாள்/அலுவலக ஏவலாள்	ஒரு மாதத்திற்கு ரு. 210/–

3. கயிறு தொழிற்துறை

(கயிறு தொழிற்துறையில் தொழிலாளர்களுக்கு, நிர்ணயிக்கப்பட்ட குறைந்த அளவு ஊதியம் - 26.2.1986 முதல் நடைமுறை)

தொடர் எண்.	தொழிலாளர்களின் வகை / பணி விவரம் தனித்திறம் கொண்ட தொழிலாளர்	குறைந்த அளவு ஊதியம்
(1)	(2)	(3)
1	அ. ஒட்டுநர்	ஒரு மாதத்திற்கு ரூபாய் 450/-
	ஆ. இயந்திரம் இயக்குபவர்	
	இ. கம்மியர்	
	ஈ. இயக்குபவர்	
2	**ஓரளவு தனித்திறம் கொண்ட தொழிலாளர்**	
	அ. ஒட்டுநர் (உதவியாளர்)	ஒரு மாதத்திற்கு ரூபாய் 400/-
	ஆ. உதவி கம்மியர்	
	இ. நார்ப்பொருள் சேமிக்கும் கருவி இயக்குபவர்	
	ஈ. பிழிபவர்/நெருக்குபவர்	
3.	**பழகுதிறனித உடலுழைப்பு நல்குவோர்**	
	அ. அகல்வாய்ச் சங்கு, சிப்பி ஆகியவை தூய்மையாக்குபவர்	ஒரு மாதத்திற்கு ரூபாய் 300/-
	ஆ. இயந்திரங்கள் தூய்மையாக்குபவர்	ஒரு மாதத்திற்கு ரூபாய் 300/-
	இ. காயவைக்குமிடத்திற்குப் பொருட்களை சுமந்து செல்லும் சுமை கூலிக்காரர்	

4. அத்தக்கூலி/துண்டுக்கூலி

அ.	பிளத்தல் அல்லது உடைத்தல், மீந்தோல், புறத்தோடு, புறத்தோல் போன்றவற்றை, மக்கச் செய்யும் இடத்திற்குக் கொண்டு செல்லல், அவற்றைக் குழிகளில்போட்டு, ஊறப்போடுதல் (1000 உருப்படிகள்)	ரூ.25/-
ஆ.	அவற்றை எண்ணுதல் (1000 உருப்படிகள்)	ரூ.5.00
இ.	பிளந்த அல்லது உடைந்தவற்றைக் குழியினின்றும் அப்புறப்படுத்துதல் (1000 உருப்படிகள்)	ரூ.5.50
ஈ.	ஊறியவற்றை அடித்தல் (1000 உருப்படிகள்)	ரூ.32.00

5. மும்பிரி நார் திரித்தல்

அ.	1.80 மீட்டர் வீதம், 100 கயிறுகளை யுடைய ஒரு கட்டு	ரூ.30.75
ஆ.	2.16 மீட்டர் வீதம், 100 கயிறுகளை யுடைய ஒரு கட்டு	ரூ.30.75
இ.	2.88 மீட்டர் வீதம், 100 கயிறுகளை யுடைய ஒரு கட்டு	ரூ.43.00
ஈ.	3.60 மீட்டர் வீதம், 100 கயிறுகளை யுடைய ஒரு கட்டு	ரூ.55.00
உ.	4.32 மீட்டர் வீதம், 100 கயிறுகளை யுடைய ஒரு கட்டு	ரூ.67.50

இயந்திரத்தினால் தூய்மைப்படுத்தப்பட்ட நார்ப்பொருள் வழங்கப்பட்டிருந்தால், அவற்றைத் திரிப்பதற்கான ஊதிய விவரம் பின்வருமாறு:

அ.	1.80 மீட்டர் வீதம், 100 கயிறுகளை யுடைய ஒரு கட்டு	ரூ.24.50
ஆ.	2.16 மீட்டர் வீதம், 100 கயிறுகளை யுடைய ஒரு கட்டு	ரூ.24.50
இ.	2.88 மீட்டர் வீதம், 100 கயிறுகளை யுடைய ஒரு கட்டு	ரூ.34.50
ஈ.	3.60 மீட்டர் வீதம், 100 கயிறுகளை யுடைய ஒரு கட்டு	ரூ.44.50
உ.	4.32 மீட்டர் வீதம், 100 கயிறுகளை யுடைய ஒரு கட்டு	ரூ.53.50

		ரூ. பை.
6.	**கயிறு பின்னுதல்**	
அ.	33 கிலோ எடையுள்ள நார்ப்பொருளை 5 சென்டிமீட்டர் நீளமுள்ள கயிறாகப் பின்னுதல்	23.75
ஆ.	33 கிலோ எடையுள்ள நார்ப்பொருளை 5 சென்டிமீட்டர் நீளமுள்ள கயிறாகப் பின்னுதல்	21.50
இ.	33 கிலோ எடையுள்ள நார்ப்பொருளை 10 சென்டிமீட்டர் நீளமுள்ள கயிறாகப் பின்னுதல்	10.50
ஈ.	33 கிலோ எடையுள்ள நார்ப்பொருளை 3.80 சென்டி மீட்டர் நீளமுள்ள கயிறாகப் பின்னுதல்	24.50
7.	**பாய்முடைதல்** - ஒரு நாளைக்கு	20.00
8.	**கட்டுதல்** - ஒரு நாளைக்கு	12.50
9.	**நார்ப்பொருள் கட்டுதல்**	
	50 அல்லது 35 கிலோ நார்ப்பொருள் கட்ட,	
	அ) இயந்திரம் மூலம் செயலாற்ற, ஒரு கட்டிற்கு	0.80 வீதம்
	ஆ) கையினால் கட்டி முடித்திட, ஒரு கட்டிற்கு	6.00 வீதம்

4. தோட்டப்பண்ணை

தோட்டப்பண்ணைகளில், பணியாற்றுவோருக்கு குறைந்த அளவு ஊதியம் (19.6.1985 முதல் நடைமுறை)

தொழிலாளர்களின் வகை	*கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தேயிலை மற்றும் இரப்பர் தோட்டப்பண்ணைகள் (ஒரு நாளைக்கான குறைந்த அளவு ஊதியம்)*	
	ஆதார ஊதியம் ரூ.பை.	அகவிலைப்படி ரூ.பை.
வயது வந்தவர்	6.35	4.80
இளம் பருவத்தினர்	4.40	3.00

5. சோப் தொழிற்துறை

சோப் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் குறைந்த அளவு ஊதியம் மே 5, 1983 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. பல்வேறு வகையான தொழிலாளர்கள் பெறும் ஊதிய விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

தொடர் எண்.	தொழிலாளர்களின் வகை / தொழில் விவரம்	குறைந்த அளவு ஊதியம் ரூபாய்
1.	தொழிலாளர் மேன்முறையாள்/ மேற்பார்வையாளர்/வேதியியல் வல்லுனர்	12.00(ஒரு நாளைக்கு)
2.	இயந்திரக் கொதிகலம் இயக்குபவர்/கலப்பவர்/வேதியியல் வல்லுனர்	10.00(ஒரு நாளைக்கு)
3.	வெட்டுபவர்	8.00(ஒரு நாளைக்கு)
4.	முத்திரை பொறிப்பவர்	7.50 (ஒரு நாளைக்கு)
5.	கட்டுதல்	
	அ) உறைகள்	7.00 (ஒரு நாளைக்கு)
	ஆ) தாள் நறுக்கு	0.40(140 உருப்படிகளுக்கு) (ஒரு நாளைக்கு பொறுப்புறுதி கால விலையான ரூபாய் 7/– வீதம்)
பல்வகைப் பணியாளர்கள்		
	அ) உட்புறம்	7.00 (ஒரு நாளைக்கு)
	ஆ) வெளிப்புறம்	7.00 (ஒரு நாளைக்கு)
	அலுவலகப் பணியாள்	7.00 (ஒரு நாளைக்கு)
	ஊர்தி ஓட்டுனர்	300.00 (ஒரு மாதத்திற்கு)
	எழுத்தர்	250.00 (ஒரு மாதத்திற்கு)
	கணக்கர்	300.00 (ஒரு மாதத்திற்கு)
	தட்டச்சர்	300.00 (ஒரு மாதத்திற்கு)
	காசாளர்	300.00 (ஒரு மாதத்திற்கு)
	விற்பனையாளர்	250.00 (ஒரு மாதத்திற்கு)

வேலைவாய்ப்பு

பொருளாதார ஏற்றத் தாழ்வினை அகற்றிட, பலவகையிலும் வேலை வாய்ப்பினை விரிவுபடுத்துவதே சிறந்த வழியாகும். வேளாண்மையிலும் அதைச் சார்ந்த ஏனைய பணிகளிலும் மக்களை ஈடுபடுத்த வேளாண்மைதுறைதான் முக்கிய பணியாற்றுகிறது.

1971ஆம் ஆண்டின் மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி, கன்னியாகுமரி மாவட்டத்தில், தொழில் செய்வோர்களின் எண்ணிக்கை 3,50,494 ஆகும். இது, மாவட்டத்தில் மொத்த மக்கட் தொகையில், 28.7 விழுக்காடு ஆகிறது. மாவட்டத்தில் பல்வேறு தொழில்களில் ஈடுபடுவோரின் எண்ணிக்கை வீதம், மாநில சராசரியான 35.8 விழுக்காட்டை விட மிகக் குறைவாகவே உள்ளது. மாவட்டத்தில் தொழில் செய்வோரின் மக்கட் தொகை, மாநில சராசரியில் 2.4 விழுக்காடாகும்.

தொழில்களின் பாங்கு

மாவட்டத்தின் முதன்மையான தொழிலான வேளாண்மையில் மொத்த தொழிலாற்றுபவர்களில் 60.7 விழுக்காட்டு மக்கள் ஈடுபாடு கொண்டுள்ளனர். அடுத்தபடியாக, மாவட்டத்தின் மொத்த தொழிலாற்றுவோரில் 16.9 விழுக்காட்டினர், தொழிற்துறையில் பணியாற்றுகின்றனர்.

தொழிலாற்றுவோரில் ஏனையோர், கீழ்க்குறிப்பிட்டவாறு பல்வேறு தொழில்களை ஆற்றுகின்றனர்[14]: (1) தொழிலும் வாணிபமும் - 7.6 விழுக்காடு ; (2) போக்குவரத்து 2.6 விழுக்காடு: (3) மேலும் மற்ற பணிகள் 12.2 விழுக்காடு, மொத்தம் பணியாற்றுவோரில் 10.5 விழுக்காடு, பெண்களாவர். அதில் மூன்றில் ஒரு பிரிவினர், வேளாண் தொழில் மூலம் வாழ்க்கையை நடத்துபவர்களாவர்.

பணியாற்றும் மக்கட் தொகை

1971 ஆம் ஆண்டு, மக்கட் தொகை கணக்கெடுப்புப்படி, மொத்த தொழில் செய்வோரில், 84.2 விழுக்காடு, கிராமப்புறப் பகுதியைச் சேர்ந்தோராவர், ஏனையோர், நகர் மையங்களில் வாழ்பவர்கள். கிராமப்புற மொத்த மக்கட் தொகையில், 24.1 விழுக்காடு, கிராமப் புற பணியாளர் களாவர். நகர்ப்புறத்திலுள்ளோரின் மொத்த மக்கட் தொகையில், 27 விழுக்காடு, நகர்ப்புறத்தில் பணி செய்வோராவர். 1961 ஆம் ஆண்டு மக்கட் தொகைக் கணக்கெடுப்புப்படி, நகர்ப்புறத்திலுள்ள தொழிலாளர் களின் எண்ணிக்கையில் சிறிது கூடுதல் காணப்படுகிறது.

1981ஆம் ஆண்டு மக்கட் தொகை கணக்கெடுப்பு புள்ளி விவரங்களே அனைத்து அலுவல்களுக்கும் பயன்படுத்தப்படுகின்றன. 1981ஆம் ஆண்டு, மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி, கன்னியாகுமரி மாவட்டத்தில் மொத்தம் 3.82 இலட்சம் தொழிலாளர்கள் உளர். இது மாவட்டத்தின் மொத்தம் மக்கள்தொகையில், 26.9 விழுக்காடாகும். தொழில் செய்வோரில் வேளாண் குடிமக்கள் மற்றும் வேளாண் தொழிலாளர்களின் விழுக்காடு 48 ஆகும். இதற்கு சரிசமமான தொழிலாளர்களின், ஏனையப் பணிகளான, கட்டுமான வேலை, சுரங்கவேலை, போக்குவரத்து, செய்தித் தொடர்பு குடிசை அல்லது

வீட்டுத் தொழிலல்லாத வேறு தொழில்கள், கால்நடை வளர்த்தல், காடு வளர்த்தல், படித்தோட்டம் பராமரித்தல், மீன் பிடித்தல் போன்றவற்றில் ஈடுபட்டுள்ளார்கள். மொத்தத் தொழிலாளர் எண்ணிக்கையில், குடிசை அல்லது வீட்டுத் தொழிலாற்றுவோரின் எண்ணிக்கை 5.5 விழுக்காடாகும்.

மாவட்டத்தில் தொழிலாளர் அல்லாதோரின் எண்ணிக்கை, மொத்த மக்கட்தொகையில் 70.96 விழுக்காடாகும். விளவங்கோடு வட்டத்தில் தொழிலாளரல்லாதோரின் விழுக்காடு, 73.26 ஆக, மிக அதிகமாயுள்ளது. மொத்த மக்கட் தொகையில், மாவட்டத்தில் தொழிலாளர் அல்லாத ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகியோர் முறையே 51.5 மற்றும் 90.66 விழுக்காடு உள்ளனர். அனைத்து வட்டங்களையும் நோக்குங்கால், கல்குளம் வட்டத்தில்தான் அதிக அளவில், அதாவது 92.22 விழுக்காடு, தொழிலாளர் அல்லாத பெண்கள் உள்ளனர்.

கன்னியாகுமரி மாவட்டத்தின் கிராமப்புறம் மற்றும் நகர்ப்பகுதிகளிலுள்ள பல்வேறு வகையான தொழிலாளர்களின் எண்ணிக்கையினை தமிழ்நாட்டிலுள்ளோரின் எண்ணிக்கையுடன் ஒப்புநோக்கி, அது தொடர்பான புள்ளி விவரங்கள் கீழே அளிக்கப் பட்டுள்ளன[15]. (1981 ஆம் ஆண்டு, மக்கட் தொகைக்கணக்குப்படி):

தொடர் எண்.	தொழில் பிரிவு	தொழிலாளர்களின் எண்ணிக்கை			முதன்மையான மொத்தத் தொழிலாளர்களின் பக்கம் 5-ல் கண்டோரின் விழுக்காடு	மாநிலம்
		கிராமப் புறப் பகுதி	நகர்ப் பகுதி	மொத்தம்		
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1.	மொத்த முதன் மையான பணி–பணியாளர்கள்	3.12	0.70	3.82	100.00	189
	அ. வேளாண் குடி மக்கள்	0.44	0.02	0.46	12.00	55.6
	ஆ. வேளாண் தொழிலாளர்கள்	1.33	0.04	1.37	36.00	59.5
	இ. குடிசை அல்லது வீட்டுத் தொழில்	0.16	0.05	0.21	5.50	9.7
	ஈ. ஏனைய பணியாளர்கள்	1.2	0.6	1.8	47.00	64.3
2.	சிறுபணியாற்றும் தொழிலாளர்கள்	0.27	0.01	0.28	--	16.6
3.	தொழிலாளர் அல்லாதோர்	8.3	1.7	10.00	--	27.7

மாவட்டத்திலுள்ள தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கையில், ஏறத்தாழ சரிபாதியினர், வேளாண் தொழிலை நம்பியே பிழைப்பை நடத்தி வருகின்றனர். தொழிலில் ஈடுபாடு கொண்டோரின் வீதத்தொடர்பு, மொத்த மக்கட்தொகையில், முதன்மையான தொழிலாளர்களின் விழுக்காடாகக் கொடுக்கப்பட்டுள்ளது: இது 26.8 விழுக்காடாகும். தமிழ்நாட்டிலேயே, இதுதான் மிகவும் குறைவானதாகும். கன்னியாகுமரி மாவட்டம் ஒன்றில் தான், ஆண், பெண் இரு பாலரிடமும், நகர்ப்பகுதிகள் (28.7 விழுக்காடு) மற்றும் கிராமப்புறப்பகுதிகள் (26.6 விழுக்காடு) இரண்டிலுமே, தொழிலில் ஈடுபாடு கொண்டோரின் வீதத் தொடர்பு அதிகமாக உள்ளது. எல்லாவற்றையும் உள்ளிட்ட தொழில்களில் ஈடுபாடு கொண்டோரின் வீதத் தொடர்பு மிகக் குறைவாக இருந்தபோதிலும், தொழில்களில் ஈடுபாடு கொண்ட ஆண்களின் வீதத் தொடர்பு, அதிகமாக 46.2 விழுக்காடாகவும், பெண்களின் வீதத் தொடர்பு மிகக் குறைவாக 7.4 விழுக்காடாகவும் உள்ளது.

கூட்டிணைவான நிறுவனங்களில் வேலை வாய்ப்பு[16]

மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்திலியங்கி வரும் வேலை வாய்ப்புச் செய்தி அலகு, "பணியாளர் தொகுதி அறிவிப்பு முறை"யின் கீழ் பொதுத்துறை நிறுவனம் மற்றும் தனியார் துறை நிறுவனம் ஆகியவற்றில் உருவாகும் வேலை வாய்ப்பு தொடர்பான தகவல்களை அவ்வப்போது சேகரித்து வருகிறது. பொதுத்துறை நிறுவனங்களிலுள்ள அனைத்துப் பணியாளர் தொகுதி மற்றும் தனியார் துறை நிறுவனங்களிலுள்ள வேளாண் பணி அல்லாத மற்ற பணியாளர் தொகுதி ஆகியவற்றில் 25 அல்லது அதற்கு மேலாக பணியாளர்கள், பணியாற்றி வந்தால், பணியாளர்கள் குறித்த கால முறை அறிக்கைகளை, குறிப்பிட்ட படிவத்தில், ஒவ்வொரு காலாண்டும், மேற் குறிப்பிட்ட செய்தி அலகிற்கு அனுப்பி வைக்கவேண்டும். அவ்வறிக்கைகளில், தொடர்புள்ள காலாண்டில் உருவான காலியிடங்கள், அவற்றில் பூர்த்தி செய்யப்பட்டவை அல்லது பூர்த்தி செய்ய கோரிக்கை அனுப்பப்பட்டவை, தேவைப்படும் பணியாளர்களின் தொழில் ஈடுபாடு போன்ற விவரங்கள் இடம் பெற வேண்டும். இவ்விவரங்கள் மேற் குறிப்பிட்ட பொதுத்துறை மற்றும் தனியார் துறை நிறுவனங்களிடம், 1959 ஆம் ஆண்டு, வேலை வாய்ப்பு (காலியிடங்கள் அத்தியாவசிய அறிவிப்பு) சட்டத்தின் கீழ் திரட்டப்படுகின்றன. எனினும், பத்தும் அல்லது அதற்கு மேலாகவும், 25-க்குக் கீழும் பணியாளர்களை அமர்த்தியுள்ள சிறு நிறுவனங்கள் தாமாகவே முன் வந்து உரிய விவரங்களை அளிக்கின்றன.

1968 ஆம் ஆண்டு முதல், பொதுத் துறை நிறுவனங்களில் வேலை வாய்ப்பின் போக்கு உயர்நிலையில் காணப்படுகிறது. மொத்தப்புள்ளி விவரங்களுடன் ஒப்பிட்டு நோக்குகையில், அது 51 முதல் 60 விழுக்காடு வரையுள்ளது. ஆனால், 1978 ஆம் ஆண்டு, இது 47.9 விழுக்காடேயாகும். இந்நிறுவனங்களில்,3274 பணியாளர்கள் அதிகமாக வேலையிலமர்த்தப் பட்டுள்ளனர்; அதாவது முந்தைய ஆண்டினை விட, 1978 ஆம் ஆண்டு,

14.28 விழுக்காடு அதிகமாக பணியிலமர்த்தப்பட்டுள்ளனர். 1968 முதல் 1978 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில், பொதுத்துறை நிறுவனங்களில் பணியாளர்களை வேலையிலமர்த்தும் பாங்கினை தனியார் துறை நிறுவனங்களில் நியமிக்கப்படுவோருடன் ஒப்பிட்டுப் பார்த்தால் ஒரு கலப்படமான போக்கு காணப்படுகிறது. 1977 ஆம் ஆண்டுவரை தனியார் துறை நிறுவனங்களில், பணியாளர்கள் 40 விழுக்காட்டிற்கும் மேலாக ஒருமுகப்படுத்தப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது. இது, 1978 ஆம் ஆண்டு, 52.7 விழுக்காடாக உயர்நிலையை அடைந்தது. இரண்டு துறைகளிலுமே ஒட்டு மொத்தமாகக் கணக்கிட்டாலும், முந்தைய ஆண்டான 1977 ஐ விட 30.5 விழுக்காடு பணியாளர்கள் அதிகமாக வேலையில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள்.

தொழிற்துறை வாரியாக தொழிலாளர்களின் வகை

மாவட்டத்தில், வேளாண்துறை மற்றும் ஏனைய தொழிற்துறைகளில், தனியார்துறை நிறுவனங்களைவிட பொதுத்துறை நிறுவனங்களில், அதிக அளவு பணியாளர்கள் வேலை செய்கிறார்கள். போக்குவரத்து, செய்தித் தொடர்பு, நிதி மற்றும் பொதுப்பணிகள், ஆகியவற்றில், தனியார் துறை நிறுவனங்களைவிட, பொதுத்துறை நிறுவனங்களில், தொழில்களில் ஈடுபாடு கொண்டோர் அதிகமாக உள்ளார்கள்.

1968 முதல் 1978 வரையிலான காலத்தில், மாவட்டத்திலுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை 32,266 லிருந்து 54,706 ஆக உயர்ந்தது. இவ்வாறாக, சராசரி ஆண்டு வளர்ச்சி வீதம் 5.4 விழுக்காடாகப் பதிவாகியுள்ளது.

கூட்டிணைவான நிறுவனங்களில் பெண்களுக்கு வேலைவாய்ப்பு

மாவட்டத்தின் கூட்டிணைவான நிறுவனங்களில் பெண்களுக்கு வேலை வாய்ப்பு மிக அதிகமாக உள்ளது. பொதுத்துறை நிறுவனங்களில், எல்லா வகைப் பிரிவுகளிலும் அவர்கள் பணியாற்றிவருகிறார்கள். தனியார்துறை நிறுவனங்களில் கூட, அவர்கள் பல்வேறு தொழில்கள், உற்பத்தி, வேளாண்மை, சமூக மற்றும் பொதுத்தொண்டு ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளார்கள். இம்மூன்று வகைத் தொழில்களிலும், தனியார் துறை நிறுவனங்கள் குறிப்பிடத்தக்க அளவு பெண் தொழிலாளர்களை நியமித்துள் ளன. மிகச்சிறிய அளவில்தான், தொழிலாளர்களை, ஏனைய இருவகைத் தொழில்களில், பொதுத்துறை நிறுவனங்கள் நியமித்துள்ளன. மத்திய, மாநில அரசுகள், அரசு போன்ற நிறுவனங்கள், மற்றும் உள்ளாட்சி அலுவலங்கள் ஆகியவை பொதுத்துறை நிறுவனங்களாகும்; அவை அதிகப் பணியாளர்களை நியமிக்கின்றன.

வேலைவாய்ப்பு அலுவலகங்கள்

மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலரின் கட்டுப்பாட்டில், நாகர்கோவிலில், ஒரு வேலை வாய்ப்பு அலுவலகம், பிப்ரவரி 21, 1958 முதல் இயங்கி வருகிறது.

தனியார் துறை மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில், வேளாண்மை, தொழிற்துறை மற்றும் இதர பிரிவுகளில் பணியாற்றுவோரின் எண்ணிக்கை, மற்றும் 1970 முதல் 1986 முடிய பல்வேறு வகைப்பட்ட பணிகளிலுள்ளோர் எண்ணிக்கை ஆகியவை கீழே கொடுக்கப் பட்டுள்ளன[17]:

ஆண்டு	வேளாண்மை மற்றும் தொடர்புள்ள பிரிவுகள்	தொழிற்துறை மற்றும் தொடர்புள்ள பிரிவுகள்	மொத்தம்
(1)	(2)	(3)	(4)
1970	2894	32,867	35,761
1971	2981	33,716	36,697
1972	3268	34,861	38,130
1973	3472	35,985	39,457
1974	3713	37,696	41,409
1975	4092	42,438	46,530
1976	2625	39,697	42,322
1977	2604	39,646	42,250
1978	2949	51,857	54,806
1979	3118	57,301	60,419
1980	3068	57,045	60,113
1981	3032	65,135	68,167
1982	5194	61,356	66,550
1983	5399	64,022	69,421
1984	5453	62,276	67,729
1985	5084	64,867	69,951
1986	4385	64,862	69,247

1970-71 முதல் 1986 வரைக் கன்னியாகுமரி மாவட்டத்தில் பல்வேறு தொழில்களிலிடுபட்டுள்ள மக்களின் எண்ணிக்கை பணி விவரங்கள்

ஆண்டு	குறிப்பிட்ட தொழில் மற்றும் தொழில்நுட்ப பணி செய்வோர்	நிருவாகப் பணியிலிடுபட்டோர்	எழுத்தாளர் மற்றும் எழுத்து சார்ந்த பணி	விற்பனையிலிடுபட்ட பணியாளர்கள்	கைவினைஞர்கள்	திறமை வாய்ந்த பணியாளர்கள்	இயல்பான பணியாளர்கள் மற்றும் அலுவலகங்களில் பணியாற்றுவோர்	ஏனைய இயல்பான பணியாளர்கள்	மொத்தம்
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)
1970–71	242	21	179	21	18	84	49	420	1,197
1971–72	196	17	136	25	152	38	42	413	1,097
1972–73	72	15	101	19	134	47	53	419	860
1973–74	412	69	217	97	182	99	202	190	1,168
1974–75	128	23	106	26	61	49	67	103	–
1975–76	142	1	185	–	–	19	35	211	–
1976–77	194	–	198	8	–	21	48	290	759
1977–78	226	1	29	14	18	10	21	209	528
1978–79	193	10	605	19	81	38	10	200	1,156
1979–80	278	9	191	61	180	38	46	257	1,060
1980–81	370	6	110	67	112	50	55	181	951
1981–82	308	8	211	39	343	69	212	196	1,386

1970-71 முதல் 1986 வரைக் கன்னியாகுமரி மாவட்டத்தில் பல்வேறு தொழில்களிலீடுபட்டுள்ள மக்களின் எண்ணிக்கை பணி விவரங்கள்- தொடர்ச்சி

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)
1982–83	175	12	245	46	195	75	188	194	1,130
1983–84	340	7	260	63	153	113	429	201	1,566
1984–85	336	1	243	49	160	21	157	236	1,193
1985–86	207	–	326	32	149	24	124	202	1,064
1986–87 (டிசம்பர் 1986 வரை)	118	4	137	83	76	59	68	298	843

(மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர், நாகர் கோவில், அறிக்கை நாள் 16.11.1987)

1970 முதல் 1986 வரை, மாவட்டத்தில் வேலையற்றிருப்போரின் எண்ணிக்கை

ஆண்டு	வேலையற்றிருப்போரின் எண்ணிக்கை
(1)	(2)
1970	21,709
1971	23,647
1972	23,889
1973	24,886
1974	27,178
1975	30,455
1976	34,266
1977	39,607
1978	40,605
1979	40,609
1980	48,194
1981	54,519
1982	49,005
1983	53,887
1984	59,513
1985	73,937
1986	86,768

(மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர், நாகர்கோவில், அறிக்கை நாள் 16.11.1987)

இடப்பெயர்ச்சி

மனிதர்கள், தங்களது பொருளாதார, சமூக நிலையில் மேம்பாடடையவும், சற்று தரமுள்ள சூழ்நிலையில், அமைதியாக வாழ்வதற்கும், ஒரு இடம் விட்டு வேறொரு இடம் பெயர்ந்து செல்வது வழக்கமாயுள்ளது. வேலை வாய்ப்பின்மை, குறைந்த ஊதியம், பொருளாதாரப் பலனில்லாப் பணிகள் ஆகியவை, மனிதர்கள் இடம் பெயர்ந்து செல்வதற்கு வேறு காரணங்களாகும். வாழ்க்கையில் நல்ல நிலையிலிருப்போர் கூட, அவர்களது வேலை வாய்ப்பினை மேம்படுத்திக்

கொள்வதற்கான கல்வி மற்றும் தொழிற்துறையில் சாதனை படைத்துப் பொருளாதார ஊக்கம் பெற, இடம் விட்டு இடம் பெயர்ந்து செல்கிறார்கள். இதில் வயதும் ஒரு முக்கியமான அங்கம் வகிக்கிறது. அதிகமான இடப்பெயர்ச்சி வீதம், மனிதர்களின் 20-25 வயது வரம்பில் தான் உள்ளதென்பது மக்கட் தொகைக் கணக்கினின்றும் தெரிய வருகிறது.

மாவட்டத்திற்கு இடம் பெயர்ந்து வந்தோர்

1971 ஆம் ஆண்டு, மக்கட்தொகைக் கணக்கெடுப்பின்படி, மாவட்ட முழுமையிலும், 66 விழுக்காடு மக்கள், அவர்களது பிறந்த ஊரல்லாத வேறு ஊர்களில், கணக்கெடுக்கப்பட்டிருக்கிறார்கள். இடம் பெயர்ந்து வந்தோரில், கன்னியாகுமரி மாவட்டத்தில்தான், மிகக் குறைந்த வீதத்தில், - அதாவது 19.58 விழுக்காடு நபர்கள் உள்ளனர்.

இடம் பெயர்ந்து வந்தோரில், பிறந்த ஊரை ஆதாரமாக வைத்துக் கணக்கிடுகையில், பெண்களே அதிக எண்ணிக்கையிலுள்ளனர். மாநிலத்திலுள்ள 11.77 மில்லியன் இடம் பெயர்ந்து வந்தோரில், 7.54 மில்லியன் நபர்கள் பெண்கள். இவர்கள் மொத்தம் இடம் பெயர்ந்து வந்தோரில், 64.12 விழுக்காடு உள்ளனர். இவர்களில் கிராமப் பகுதியிலுள்ள பெண்கள் மிகவும் அதிக அளவில் உள்ளனர். கன்னியாகுமரி மாவட்டத்தில், மொத்தம் இடம் பெயர்ந்து வந்தோரில் 69 விழுக்காட்டிற்கும் மேற்பட்டோர் பெண்களாவர். அவர்கள் திருமணம் செய்து கொண்டதால், இடம் பெயர்ந்து வந்தோரில் ஆண்களைவிட பெண்களே அதிகமாகக் காணப்படுகின்றனர். இடம் பெயர்ந்து வந்தோரில் பெண்கள் அதிகமாகக் காணப்படுவதற்கு இது ஒரு காரணமாகும். வேறு கிராமங்களிலுள்ள, தங்களது பெற்றோரின் ஊர்களுக்குக் கருவுற்ற பெண்கள், பிள்ளைப்பேறுக்காகச் செல்லும் பழக்கம் நடைமுறையிலிருப்பது இடம் பெயர்ந்து வந்தோரின் எண்ணிக்கை கூடுவதற்கு மற்றோர் காரணமாகும்.

இடம் பெயர்ந்து வந்தோரின் எண்ணிக்கை, நகர்ப்புறப்பகுதியை விட, கிராமப்புறங்களில் தான் அதிகமாக உள்ளது. மாநிலத்தில் இடம் பெயர்ந்து வந்தோரில் 63 விழுக்காடு நபர்கள், கிராமப்புறப்பகுதியில் தான் வசித்து வருகிறார்கள்[18]. கன்னியாகுமரி மாவட்ட கிராமப்புறப் பகுதிகளில், இடம் பெயர்ந்து வந்தோரின் வீதத் தொடர்பு, மிக அதிகமாக, அதாவது 78.07 விழுக்காடு உள்ளது. 1971 ஆம் ஆண்டு, மக்கட்தொகைக் கணக் கெடுப்புப்படி, மொத்த மக்கட்தொகையான 12,22,549-ல், பிறந்த ஊரை ஆதாரமாக வைத்துக் கணக்கிடப்பட்ட இடம் பெயர்ந்து வந்தோரின் எண்ணிக்கை 2,39,390 ஆகும். இது 19.58 விழுக்காடாகும்.

மாவட்டங்களுக்குள் இடம்பெயர்ந்து வந்தோர் தொடர்புள்ள விவரம்[19]

ஒரு குறிப்பிட்ட மாவட்டத்திற்கு இடம் பெயர்ந்து வந்தோர், எனில், (1) மாநிலத்தின் மற்ற மாவட்டங்களிலிருந்து அந்த மாவட்டத்திற்கு

வந்தவர்கள் மற்றும் (2) இம்மாவட்டத்திலிருந்து, மாநிலத்தின் ஏனைய மாவட்டங்களுக்குச் சென்றவர்கள் ஆகியோர் என்பதாகும்.

1971 ஆம் ஆண்டு மக்கட்தொகைக் கணக்கெடுப்புப்படி, கன்னியாகுமரி மாவட்டத்திற்கு, மற்ற மாவட்டங்களிலிருந்து இடம் பெயர்ந்து வந்தோர் 23,498 நபர்களும், இம்மாவட்டத்திலிருந்து, மற்ற மாவட்டங்களுக்கு இடம் பெயர்ந்து சென்றோர் 54,647 நபர்களும் உள்ளனர். இதனால், இடம் பெயர்ந்தோரின் நிகர எண்ணிக்கை (-) 31,149 ஆகிறது.

அரசுத் திட்டங்கள்

ஒரு மாவட்டத்தின் வளர்ச்சி என்பது, அம்மாவட்டத்தின் கிராம வளர்ச்சியில்தான் அடங்கியுள்ளது. கிராமவளர்ச்சியானது, பல்வேறு வளர்ச்சித் திட்டங்களில், பொது மக்களின் ஈடுபாட்டினையொத்தே அமைகிறது. ஆகவே தான், வளர்ச்சித் திட்டங்களை செயலாக்கும் போதும், இனி புதிய திட்டங்களை செயலாக்க மேற்கொள்ளும்போதும், கிராமப்புறப்பகுதிகளுக்கே முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டங்களை, சமுதாய வளர்ச்சி என்ற பொதுக்கருத்துடன் துவக்குவதால், அனைவரும் கிராமப்புறப் பகுதியிலுள்ள வறுமையை ஒழிப்பதையே, தங்களை வழிகாட்டும் உயிர்நாடியாகக் கொண்டுள்ளார்கள்.

பகுதி வளர்ச்சித் திட்டமென அழைக்கப்படும் கிராமப்புற வளர்ச்சித் திட்டம், முந்தைய சென்னை அரசால், 1946 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது[20]. இத்திட்டம், கிராமத்தில், மக்கள், ஒருவருக்கு ஒருவர் உதவி செய்து கொள்வதையும், கிராம வாழ்க்கைக்குப் புத்தூக்கம் மற்றும் புத்துணர்ச்சி அளிப்பதையுமே குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இத்திட்டத்தினை சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் முன்னோடியாகக் கொள்ளலாம்[21]. 1952 ஆம் ஆண்டு, மாநிலத்தில், சமுதாய வளர்ச்சித் திட்டம், துவங்கப்பட்டு, இரண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில், தீவிர நிலையினை அடைந்தது. மக்களின் முயற்சிகளனைத்தையும், அரசு அலுவலர்களின் செயலாக்கத்தினையும் ஒருமுகப்படுத்தி, சமுதாய மக்களனைவரது பொருளாதார மற்றும் சமூக நிலையினை மேம்படுத்துவதும், சமூகப்பிரிவினரனைவரையும் தேசிய நீரோட்டத்தில் ஒருங்கிணைப்பதுமே இத்திட்டத்தின் சீரிய நோக்கமாகும்.

1958 ஆம் ஆண்டு, தமிழ்நாடு ஊராட்சித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் சமுதாய வளர்ச்சித் திட்டம் புத்துருப் பெற்றது. தேசிய விரிவாக்கப்பணி என்ற உருவில், அது விரிவு படுத்தப்பட்டது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், தேசிய விரிவாக்கப்பணி, ஒரு ஒருங்கிணைந்த கிராமப்புற அமைப்பினை உருவாக்கிடவும், கிராமப் பொருளாதார நிலையினை மேம்படுத்தவும், ஒரு ஆற்றல்மிகு சக்தியாகக் கருதப்பட்டது. தேசிய விரிவாக்கப்பணியும்,

சமுதாயத் திட்டங்களும், மக்களுக்குக் குறிப்பாக, கிராமப்புற மக்களுக்கு, நல்ல பல வளர்ச்சி மற்றும் சீர்திருத்தத் திட்டங்களை நிறைவேற்றியளிக்கும் முதன்மையான அமைப்பாகத் திகழ்ந்தன.

கன்னியாகுமரி மாவட்டத்தில், விளவங்கோடு வட்டத்திலுள்ள கிள்ளியூர் மற்றும் மேல்புரம் வட்டாரங்கள், 1957 ஆம் ஆண்டு, தேசிய விரிவாக்கப்பணிகளை நடைமுறைப்படுத்தும் பகுதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டன. 1959 ஆம் ஆண்டு, இராசக்காமங்கலத்தில், சமுதாய வளர்ச்சிப்பகுதிகளிலுள்ள கிராமக் கைவினைஞர்களுக்குப் பயிற்சி அளிக்க, ஒரு மரவேலைப் பயிற்சி மையம் துவங்கப்பட்டது. அயரா உழைப்பினாலும், விடா முயற்சியாலும், திட்டம் மேன்மேலும், விரிவடைந்தது.

வேளாண்துறையில் ஏழை எளிய நிலையிலுள்ளோரின் பொருளாதார தரத்தினை மேம்படுத்த, இந்திய அரசு, சிறு விவசாயிகள் வளர்ச்சி நிறுவனத்தை, அறிமுகப்படுத்தியது. சிறு விவசாயிகள் வளர்ச்சி நிறுவனம், சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டு, ஒரு சங்கமாகவும் பதிவு செய்யப்பட்டு, கன்னியாகுமரி மாவட்டத்தில், 1975-76 ஆம் ஆண்டு, துவங்கப்பட்டது[22]. ஏப்ரல், 1, 1981 முதல், இந்நிறுவனத்தின் பெயர், மாவட்ட ஊரக வளர்ச்சி நிறுவனமென மாற்றப்பட்டது.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் துவங்கப்பெற்றதிலிருந்து, திட்டத்தின் நடத்துமுறையில், மாறுபாடு காணப்பட்டு, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சியில் மிகுந்த ஈடுபாடு ஏற்பட்டது. சிறு விவசாயிகள் வளர்ச்சித் திட்டத்துடன், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டங்களும், 1978-79 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டன. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில், புதுத்திட்டங்களான மீன்கள் வளர்ச்சி, கிராமப்புற கைவினைஞர்கள் திட்டம், தமிழ்நாடு கிராமப்புற இளைஞர்கள் வேலை வாய்ப்புத் திட்டம் போன்றவை அடங்கும். ஆகவே, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில், நிவாரணமளிக்கும் பொதுக்கருத்தோடு, வறட்சி பாதிக்கப்பட்ட பகுதித் திட்டம், தரமுள்ள வகையில் மாற்றியமைக்கப்பட்டு, ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத் துவக்கத்தில், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்துடன் இணைந்து வெளிப்படத் துவங்கியது[23].

பின்னர், ஆறாவது, ஏழாவது ஐந்தாண்டுத்திட்டங்களில், தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம், கிராமப்புற நிலமற்றோர் வேலை வாய்ப்புப் பொறுப்புறுதித் திட்டம், கிராமப்புற இளைஞர்கள் சுய வேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டம், ஆகிய பல வறியோர் துயர் தணிப்புத் திட்டங்கள், கிராமப்புறத்திலுள்ள, தாழ்த்தப்பட்ட மற்றும் வறியோருள் சமூகப்பொருளாதார நிலையினை மேம்படுத்தும் ஆதார நோக்கத்துடன் செயல்படுத்தப்பட்டுள்ளன.

இத்திட்டங்கள் யாவும், கன்னியாகுமரி மாவட்ட கிராமப்புற வளர்ச்சி நிறுவனத்தால் நாகர்கோவிலில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சியின் பொதுக்கருத்து, வறுமையை ஒழித்து, பயனுள்ள வேலைவாய்ப்பிற்கு வழிவகுத்து, கிராமப்புறத்தில் வாழும் ஏழை, எளியோரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்குடையதாகும்.

கன்னியாகுமரி மாவட்டத்தின் 81 வருவாய் கிராமங்களிலுள்ள, ஒன்பது வட்டாரங்களிலும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மாவட்ட மக்கட்தொகையில், 50 விழுக்காடு மக்கள், வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழ்வோராவர். ஒவ்வொரு வட்டாரத்திலும் இத்திட்டத்தின் கீழ், 600 குடும்பத்தினருக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டியுள்ளது. அவர்களில், 300 குடும்பத்தினருக்கு வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த தொழில்கள் மூலமும், 150 குடும்பத்தினருக்கு கிராமத் தொழில்கள் மூலமும், ஏனைய 150 குடும்பத்தினருக்கு கிராமப்புறப்பணிகள், துணிவாண்மை மிக்க வாழ்க்கைத் தொழில்கள் மூலமும் பாதுகாப்பு தேவைப்படுகிறது[24]. இப்பணிகளுக்காக ஒவ்வொரு வட்டாரத்திற்கும், 11 இலட்சம் ரூபாய்க்கும் மேலாக நிதி ஒதுக்கீடு அளிக்கப்படுகிறது. இது மத்திய, மாநில அரசுகளால், சரிசமமாகப் பங்கீடு செய்து அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தால், அட்டவணையிட்ட வகுப்பினர், அட்டவணையிட்ட மலை வாழ் வகுப்பினர் கிராமப்புறப் பகுதியிலுள்ள மிகவும் தாழ்ந்த நிலையிலுள்ள வறியோர் ஆகியோருக்குத் தனி முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

தேர்ந்தெடுக்கப்பட்ட குடும்பத்தினர், 3000 ரூபாய் மானியமாகப் பெறுகின்றனர். அட்டவணையிட்ட மலை வாழ் வகுப்பினராயிருப்பின் அக்குடும்பத்தினர் 5000 ரூபாய் பெறத் தகுதி பெறுகின்றனர்.

தேர்ந்தெடுக்கப்படும் குடும்ப அமைப்புகளுக்கான முதலீடுகள், அரசு மானியங்கள் மற்றும் நிதி நிறுவனங்கள் அளிக்கும் கடன் ஆகியவற்றைக் கொண்டு, எழுப்பப்படுகின்றன. முதலீடுகளின் மொத்த மதிப்பீட்டில், 25 விழுக்காடு சிறிய விவசாயிகளுக்கும், 33 விழுக்காடு மிகச் சிறிய விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் கிராமப்புற கைவினைஞர்கள் ஆகியோருக்கும், 50 விழுக்காடு அட்டவணையிட்ட மலைவாழ் வகுப்பினருக்கும் மானியமாகக் கருதப்படுகிறது.

பால் வழங்கும் பிராணிகள் திட்டத்தின்கீழ், ஆதி திராவிட வகுப்பினர், குடும்பங்களுக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், 33 1/3 விழுக்காடும், தனி ஆக்கக்கூறுத்திட்டத்தின் கீழ், 16 2/3 விழுக்காடும், ஆக 50 விழுக்காடு, மானியமாகக் கிடைக்கிறது[25].

அரசு, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், 1985-86-க்கு, இயற்பியல் சார்ந்த குறியீடாக 4215 குடும்பங்களையும், நிதி

சார்ந்த குறியீடாக 72.05 இலட்ச ரூபாயும் நிர்ணயித்துள்ளது. மொத்தம், 62.80 இலட்ச ரூபாய் செலவில், 5008 நபர்கள் பயனடைந்துள்ளனர். இது, இரண்டாவது தடவையாக உதவிப் பெற்ற 1980-81 மற்றும் 1981-82 ஆகிய ஆண்டுகளுக்கான 1,809 பழைய குடும்பங்களையும் உள்ளடக்கியதாகும்.

தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம் (மத்திய மற்றும் மாநில அரசுகளின் திட்டங்கள்)

கிராமப்புறப் பகுதிகளில் வேலை வாய்ப்பினை உருவாக்கவும், கிராமப்புற மக்களின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கான இணைப்பமைவினை வலுவூட்டவும், கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தவும் 1979-80 ஆம் ஆண்டு "உழைப்பிற்கு உணவுத் திட்டம் " அறிமுகப்படுத்தப்பட்டது. பின்னர், அது தகுந்த அளவு மாற்றியமைக்கப்பட்டு, தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம் என்ற பெயரில், ஆறாவது ஐந்தாண்டு திட்டத்தின் ஒரு அங்கமாக்கப்பட்டது. அதற்கான செலவு, மத்திய மாநில அரசுகளால், சரிசம வீதத்தில் பங்கிட்டுக் கொள்ளப்படுவதற்குள்ளானது.

இத்திட்டத்தின் மேற்கொள்ளப்பட்ட பணி வகைகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன[28]:

1. காடு வளர்ப்பு மற்றும் சமுகக்காடுகள் வளர்க்கும் கலை
2. குடிநீர்க்கிணறுகள், சமுதாய நீர்ப்பாசனம், தொகுப்பு வீடுகள் மற்றும் அட்டவணையிட்ட வகுப்பினர் மற்றும் அட்டவணையிட்ட மலை வாழ் வகுப்பினர் ஆகியோருக்குப் பயனளிக்கக் கூடிய நில வளர்ச்சித் திட்டங்கள்.
3. கிராம ஏரிகள்/குளங்கள் கட்டுதல்
4. மண், நீர் பாதுகாப்பு மற்றும் நிலச் சீர்திருத்தம்
5. கிராமப்புற சாலைகள்
6. பள்ளிக் கட்டிடங்கள், பால்வாடிகள், ஊராட்சி அலுவலகம் மற்றும் (சமுதாய) மக்கள் மன்றங்கள் ஆகியவை.

துவக்கத்தில், "உழைப்பிற்கு உணவுத் திட்டத்"தின் நோக்கம் யாதெனில், உபரியாக இருப்பிலிருந்த தானியங்களை, கிராமப்புறப்பகுதிகளில் கூடுதல் வேலை வாய்ப்பினை உருவாக்கப் பயன்படுத்துவதாகும்.

வேளாண் உற்பத்தியைப் பெருக்கிட, சிறு மற்றும் மிகச் சிறிய விவசாயிகளுக்கு, பெரிய திட்டங்களின் மூலம் உதவியளித்தல்

இது மத்திய அரசின் ஆதரவுடன் செயலாற்றப்படும் ஒரு

திட்டமாகும். இத்திட்டம், 1983-84 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் அறிமுகம் செய்யப்பட்டது. ஒவ்வொரு வட்டாரத்திலும், 600 குடும்பங்களைச் சார்ந்த சிறிய மற்றும் மிகச் சிறிய விவசாயிகள் பயன்பெறவும், அவர்களுக்கு நிதியுதவியளிக்கவுமே இத்திட்டம் துவங்கப்பெற்றது. அவ்வாறு, ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ஐந்து இலட்சம் ரூபாய் நிதியுதவியளிக்கப் பட்டது. இத்திட்டம், சிறிய நீர்ப்பாசனம் மற்றும் நில வளர்ச்சிப் பணிகளுக்கு, கடனும், மானியமும் வழங்க வழி வகுக்கிறது. இத்திட்டத்திற்கான செலவு மத்திய, மாநில அரசுகளால், சரி சமமாகப் பங்கிட்டுக் கொள்ளப்படுகிறது. சிறிய விவசாயிகளுக்கு 25 விழுக்காடு மானியமும், மிகச்சிறிய விவசாயிகளுக்கு 33 1/3 விழுக்காடு மானியமும் அளிக்கப்படுகிறது.

இத்திட்டம், ஊரக வளர்ச்சித்துறையின் வட்டார அலுவலகங்களால் நடைமுறைப்படுத்தப்படுகிறது[27]. இம்மாவட்டத்தில், 1985-86 ஆம் ஆண்டு, சிறிய நீர்ப்பாசனத்திட்டத்தின்கீழ், 70 நபர்களுக்குக் கடன்கள் வழங்கப்பட்டன. அவர்களுக்கு வழங்கப்பட்ட மானியத்தொகை 1.92 இலட்ச ரூபாயாகும். நில வளர்ச்சித்திட்டத்தின் கீழ், இம்மாவட்டத்தில், 684 நபர்களுக்குக் கடன்கள் வழங்கப்பட்டதில், அவர்களுக்குக் கிடைத்த மானியத் தொகை 17.90 இலட்ச ரூபாயாகும்.

கிராமப்புற நிலமற்றோர் வேலைவாய்ப்புப் பொறுப்புறுதித் திட்டம்

வறியோர் துயர் தணிப்புத் திட்டமாக, கிராமப்புற நிலமற்றோர் வேலைவாய்ப்புப் பொறுப்புறுதித் திட்டம், ஆகஸ்ட் 15, 1983 முதல் நடைமுறைபடுத்தப்பட்டது. நிலமற்ற கிராமப்புற மக்களின் வேலை வாய்ப்பினை விரிவுபடுத்தவும் மேம்படுத்தவும், ஒவ்வொரு நிலமற்ற ஏழையின் குடும்பத்திற்கும் ஓராண்டில் 100 நாட்களுக்குக் குறையாமல் வேலைவாய்ப்பினை ஏற்படுத்த பொறுப்புறுதி அளிக்கவும், அவர்களது இணைப்பமைவினை வலுப்படுத்த நிலையான முதலீடுகளை உருவாக்கிடவும் இத்திட்டம் வழி வகுக்கிறது. கிராமப் புறப் பொருளாதாரத்தின், வளர்ந்துவரும் தேவையினைப் பூர்த்தி செய்திட இத்திட்டம் பெரிதும் உதவுகிறது.

இத்திட்டத்தின் கீழ், கிராம இணைப்பு சாலைகள் அமைத்தல், ஆதிதிராவிடர்களுக்கும், நலிவுற்ற பிரிவினருக்கும் தொகுப்பு வீடுகள் அமைத்தல், கிராமப்புறப்பகுதிகளில் பொதுக்கழிப்பிடம் கட்டுதல், சமூகக் காடு வளர்ப்புத் திட்டங்கள் போன்றவை செயல்படுத்தப்படுகின்றன[28].

ஒவ்வொரு தொழிலாளருக்கும், ஒரு நாள் கூலியாக, எட்டு ரூபாய் (1 கிலோ அரிசி, 2 கிலோ கோதுமை மற்றும் ரொக்கமாக ரூ.3-15 பை) வழங்கப்படுகிறது.

1985-86 ஆம் ஆண்டு, இம்மாவட்டத்தில், இணைப்பு சாலைகள் அமைக்கும் திட்டத்தின் கீழ், 31 இணைப்பு சாலைகள் அமைக்கப்பட்டன. தொகுப்பு வீடுகள் கட்டும் திட்டத்தின் கீழ், ஆதிதிராவிடர்களுக்கு 550 வீடுகளும், நலிந்த பிரிவினருக்கு 174 வீடுகளும், கட்டிக் கொடுக்கப்பட்டன. கிராமப்புற சுகாதாரத் திட்டங்களின் கீழ் 110 கழிப்பிடங்கள் கட்டியமைக்கப்பட்டன. சமூக காடுகள் வளர்ப்புத் திட்டத்தின் கீழ் 5,44,000 விதைக்கன்றுகள் நடப்பட்டன.

இவ்வேலைவாய்ப்புப் பொறுப்புறுதித் திட்டத்தின் கீழ், 1985-86 ஆம் ஆண்டு, 38.80 இலட்ச ரூபாய் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டு அதனில், 34.41 இலட்சம் ரூபாய் அக்காலவரையில் செலவிடப்பட்டது.

எரிவாயு

பசுவின் சாணம், இலை, தழைகள் மக்கிப்போன எரு ஆகியவற்றை தண்ணீருடன் சேர்த்து வெப்ப ஈரச் சூழலிற் புழுக்கி, வடித்திறக்கி வாயு உருவில், எரிவாயு தயாரிக்கப்படுகிறது. இந்த எரிவாயு, சமையலுக்கும், நல்வள உரமாகவும், ஆக இரு விதத்தில் பயன்படுகிறது. இம்மாவட்டத்தில், இத்திட்டம் மிகவும் பயனுறுதியுள்ள வகையில் நடைமுறைப் படுத்தப்படுறது.

கிராமப்புற இளைஞர்கள் சுயவேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டம்

தேசிய திட்டமான, கிராமப்புற இளைஞர்கள் சுயவேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டமானது, கிராமப்புற ஏழை மக்களின் வாழ்க்கையில், நல்ல தரமான மாற்றம் ஏற்பட அரசால் நடைமுறைப்படுத்தப்பட்ட முக்கியமான திட்டங்களில் ஒன்றாகும். கிராமப்புற ஏழை,எளிய குடும்பத்திலுள்ள 18 முதல் 35 வரை வயதிலான இளைஞர்களை அடையாளங்கண்டு, அவர்களுக்கு, குறிப்பிட்ட தொழில்களில் திறமையான பயிற்சி அளிக்கும் நோக்கில், இத்திட்டம் ஆகஸ்ட் 15, 1979 முதல் துவங்கப்பட்டது. இதனால், அவர்கள், சுயவேலை வாய்ப்பிற்கான துணிவான்மை பெறுகிறார்கள். அவர்களுக்கு உரிய பயிற்சி அளித்திட, தொழிற்பயிற்சி நிறுவனங்கள் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்கின்றன. இத்திட்டம், இம்மாவட்டத்தில், ஒருமுகப்படுத்தப்பெற்ற பாங்கில் செயலாற்றப்படுகிறது.

கல்வியறிவு பெற்ற வேலையில்லா இளைஞர்களுக்கு சுயவேலைவாய்ப்பு அளிக்கும் திட்டம்[29]

கல்வியறிவு பெற்ற வேலையில்லா இளைஞர்களுக்கு, ஆக்கவளமுடைய மற்றும் ஆதாயமிக்க சுயவேலை வாய்ப்பளித்திட, 1983 ஆம் ஆண்டு முதல், இந்திய அரசால், ஒரு திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டது. இத்திட்டத்தின் நோக்கம் யாதெனில், தொழிற்துறை, ஆக்கப்பணி, மற்றும் வாழ்க்கைத் தொழில் ஆகியவற்றில், படித்த வேலையில்லா இளைஞர்களை ஈடுபடுத்தி சுயவேலைவாய்ப்பு முயற்சிகளை, ஒரு

உதவித்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளச் செய்வதேயாகும். 1981 ஆம் ஆண்டிற்கான மக்கட்தொகைக் கணக்கெடுப்பின் படி, நகரங்கள் நீங்கலாக, நாட்டிலுள்ள அனைத்துப் பகுதிகளிலுமுள்ள ஒரு மிலியன் மக்களுக்கும் மேலானோர் ,இதனில் ஈடுபாடு கொண்டுள்ளார்கள்.

நாகர்கோவிலிலுள்ள மாவட்ட தொழில் மையம், தலைமை நிறுவனமாக, இயங்கி வருகிறது. மாவட்டத் தொழில் மையத்தின் பொது மேலாளரின் தலைமையில், சிறு தொழில் நிறுவனங்களின் அலுவலர்கள், தலைமை வங்கி, மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர் மற்றும் வணிக வங்கிகளின் பிரதிநிதிகள் ஆகியோரடங்கிய ஒரு சிறப்புக் கடமைப் பிரிவு அமைக்கப்பட்டது. இப்பிரிவு அலுவலர்களே, திட்டத்தினால் பயனடைவோரைத் தேர்ந்தெடுக்கின்றனர். இப்பிரிவு, ரூ.25,000/-க்கு மிகைப்படாமல் இணைப்புக் கடனைப் பரிந்துரை செய்கிறது. சுய வேலை வாய்ப்பு பெறும் இளைஞர்களின் முயற்சியைப்பொறுத்து, இந்த தொகை ரூபாய் 35,000/- வரை உயர்த்தப்படுகிறது. வாழ்க்கைத் தொழில்களுக்கு, உயர்ந்த அளவு ரூபாய் 15,000/- உதவியளிக்கப்படுகிறது. ஆக்கப்பணித் துணைத்தொழில்களுக்கு ரூபாய் 25,000/-மும் இத்திட்டத்தின் கீழ், வழங்கப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில், வணிக வங்கிகளின் ஒத்துழைப்புடன் இத்திட்டம், செயல்படுத்தப்படுகிறது.

1983-84 ஆம் ஆண்டு, 150.36 இலட்ச ரூபாய் அளவில் 1245 நபர்களுக்கு, உதவி வழங்க, சிறப்புக் கடமைப்பிரிவு பரிந்துரை செய்திருக்கிறது. அவற்றில், வணிக வங்கிகள், 877 நபர்களுக்கு, 103.27 இலட்ச ரூபாய்க்கு நிதியுதவி அளித்துள்ளது.

1983–84

தொடர் எண்.	தொழில் பிரிவு	பரிந்துரைக்கப் பட்டவை		உதவி வழங்க ஒப்பு தல் அளிக்கப்பட்டவை		வழங்கப்பட்ட உதவித்தொகை	
		(தொகை ரூபாய் இலட்சத்தில்)					
		நபர்கள்	தொகை	நபர்கள்	தொகை	நபர்கள்	தொகை
1.	தொழிற்துறை	618	74.41	453	51.50	453	51.50
2.	ஆக்கப்பணி	280	41.91	202	28.96	202	28.96
3.	வாழ்க்கைத் தொழில்	347	34.04	222	22.81	222	22.81

1984–85

தொடர் எண்.	தொழில் பிரிவு	பரிந்துரைக்கப் பட்டவை		உதவி வழங்க ஒப்பு தல் அளிக்கப்பட்டவை		வழங்கப்பட்ட உதவித்தொகை	
		(தொகை ரூபாய் இலட்சத்தில்)					
		நபர்கள்	தொகை	நபர்கள்	தொகை	நபர்கள்	தொகை
1.	தொழிற்துறை	293	55.38	197	38.08	144	23.60
2.	ஆக்கப்பணி	194	28.89	153	19.95	68	11.32
3.	வாழ்க்கைத் தொழில்	--	--	--	--	--	--
	மொத்தம்	487	84.27	350	58.03	212	34.92

1985–86

தொடர் எண்.	தொழில் பிரிவு	பரிந்துரைக்கப் பட்டவை		உதவி வழங்க ஒப்பு தல் அளிக்கப்பட்டவை		வழங்கப்பட்ட உதவித்தொகை	
		(தொகை ரூபாய் இலட்சத்தில்)					
		நபர்கள்	தொகை	நபர்கள்	தொகை	நபர்கள்	தொகை
1.	தொழிற்துறை	427	78.07	247	45.11	207	31.65
2.	ஆக்கப்பணி	131	14.19	52	8.20	42	6.46
3.	வாழ்க்கைத் தொழில்	243	24.46	119	11.74	94	8.73
	மொத்தம்	801	116.72	418	65.05	343	46.84

1986–87

தொடர் எண்.	தொழில் பிரிவு	பரிந்துரைக்கப் பட்டவை		உதவி வழங்க ஒப்பு தல் அளிக்கப்பட்டவை		வழங்கப்பட்ட உதவித்தொகை	
		(தொகை ரூபாய் இலட்சத்தில்)					
		நபர்கள்	தொகை	நபர்கள்	தொகை	நபர்கள்	தொகை
1.	தொழிற்துறை	349	78.86	205	50.03	168	37.97
2.	ஆக்கப்பணி	147	25.62	120	20.20	89	14.95
3.	வாழ்க்கைத் தொழில்	153	17.68	105	13.30	81	9.77
	மொத்தம்	649	122.16	430	83.53	338	62.69

1987–88

தொடர் எண்.	தொழில் பிரிவு	பரிந்துரைக்கப் பட்டவை		உதவி வழங்க ஒப்பு தல் அளிக்கப்பட்டவை		வழங்கப்பட்ட உதவித்தொகை	
		(தொகை ரூபாய் இலட்சத்தில்)					
		நபர்கள்	தொகை	நபர்கள்	தொகை	நபர்கள்	தொகை
1.	தொழிற்துறை	260	56.83	139	28.31	124	24.76
2.	ஆக்கப்பணி	36	5.62	18	2.28	17	2.21
3.	வாழ்க்கைத் தொழில்	45	5.85	29	3.75	28	3.65
	மொத்தம்[30]	341	68.30	186	34.34	169	30.62

நகர்ப்புற வாழ் ஏழை மக்களுக்கான சுயவேலைவாய்ப்புத் திட்டம்

தலைநகர்/நகர்ப்புறம் மற்றும் நகர்ப்புறம் சார்ந்த மையங்களில் வாழும், நலிந்த பிரிவினருக்கு சுய வேலை வாய்ப்பு அளித்திட, மத்திய அரசு, ஒரு திட்டத்தினை உருவாக்கியுள்ளது. இத்திட்டத்தின் நோக்கம் யாதெனில், மேற்சொன்ன பகுதிகளில், வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் நலிந்த பிரிவினரில் தகுதி வாய்ந்த குடும்பத்திற்கு மானியம் மூலமும், வங்கிக் கடன் மூலமாகவும் சுய வேலை வாய்ப்புபெற உதவியளிப்பதேயாகும். இச்சலுகையினைப் பெற எவர் முன் வருகிறாரோ அவர் அப்பகுதியில் வாழ்பவராக இருத்தல் அவசியமெனவும், அவரது மாத வருவாய் ரூபாய் 600/-க்கு மிகாமல் இருக்க வேண்டுமெனவும் மத்திய அரசு வரையரை செய்துள்ளது. அவ்விண்ணப்பதாரர் இவ்விதி முறைக்கு உட்பட்டவராயின், அவர் தொழில் செய்ய மேற்கொள்ளும் முயற்சிக்கேற்ப, உயர்ந்த அளவு உதவித் தொகையாக ரூ. 5000/- பெறத் தகுதியுடையவராகிறார். அப்பகுதியின் மக்கட்தொகைக்கேற்ப குறியீடு நிர்ணயிக்கப்படுகிறது. ஒவ்வொரு 300 மக்களுக்கும் ஒரு நபர் என்ற வீதத்தில், உதவித்தொகை சலுகை பெறத் தகுதியுடையவரைத் தேர்ந்தெடுக்க இலக்கு நிர்ணயிக்கப்படுகிறது. தரமான முறையில் இத்திட் டத்தினை செயல்படுத்த வங்கிகள் பொறுப்பேற்கின்றன.

1986-87 ஆம் ஆண்டு நாகர்கோவில், குளச்சல், பத்மநாபபுரம் மற்றும் குழித்துறை ஆகிய நான்கு நகராட்சிகள் இத்திட்டத்தினை செயல்படுத்திடத் தேர்ந்தெடுக்கப்பட்டன.

1986-87 ஆம் ஆண்டு, மக்கட்தொகைக் கணக்கெடுப்பின்படி, 1986-87 ஆம் ஆண்டிற்கு, மாவட்டத்திற்கு, 771 பயனடைவோரைக் குறியீடாக அரசு நிர்ணயித்தது:

தொடர் எண்.	நகராட்சியின் பெயர்	நகர் வட்டங்கள் (வார்டுகள்)	தகுதிவாய்ந்த நபர்களைத் தேர்ந்தெடுக்க, நிர்ணயிக்கப் பட்டுள்ள இலக்கு	1981ஆம் ஆண்டு மக்கட்தொகைக் கணக்கெடுப்பின் நகராட்சியின் மொத்த மக்கட் தொகை
(1)	(2)	(3)	(4)	(5)
1.	நாகர்கோவில்	36	572	1,71,648
2.	குழித்துறை	19	61	18,427
3.	குளச்சல்	20	77	23,129
4.	பத்மநாபபுரம்	20	61	18,240

நாகர்கோவில் மற்றும் பத்மநாபபுரம் மையங்களுக்கும், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, அவை கூட்டுநராகப் பணியாற்றுகிறது. அதே போன்று, இந்தியன் ஸ்டேட் வங்கியும், கனரா வங்கியும் முறையே குளச்சல் மற்றும் குழித்துறை மையங்களுக்கு, அவை கூட்டுநராக அங்கம் வகிக்கின்றன.

1986-87 ஆம் ஆண்டில், குறியீடாக 771 விண்ணப்பங்கள் நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும், 790 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்று, அவற்றில், 670 விண்ணப்பங்களுக்கு, உதவியளித்து ஒப்புதலாணை பிறப்பிக்கப்பட்டது[31]. ஆனால், உதவித்தொகை, நிதியுதவியளிக்கும் வங்கிகளினால், கீழே குறிப்பிட்டவாறு, 664 விண்ணப்பதாரர்களுக்குதான் வழங்கப்பட்டது:

தொடர் எண்.	மையம்	குறியீடு	கிடைக்கப் பெற்ற விண்ணப் பங்கள்	ஒப்புதலளிக்கப் பட்டவை		வழங்கப்பட்ட தொகை	
				விண்ணப் பங்களின் எண்ணிக்கை	ஒப்புதலளிக் கப்பட்ட தொகை	இனங் களின் எண் ணிக்கை	தொகை
				(தொகை ரூபாய் இலட்சத்தில்)			
1.	நாகர்கோவில்	572	576	494	15.27	492	14.90
2.	குளச்சல்	77	77	77	3.66	74	3.51
3.	பத்மநாபபுரம்	61	76	55	1.64	54	1.63
4.	குழித்துறை	61	61	44	1.68	44	1.68
	மொத்தம்	771	790	670	22.25	664	21.72

வங்கிகள்

சமுதாயத்தின் நலிந்த பிரிவினரது மேம்பாட்டைக் கருத்திற் கொண்டு, இப்பிரிவினருக்கு வங்கிகள் கடன் உதவியை மிகத் தாராளமாக அளித்து வருகின்றன. இவ்வாறாக, அரசின் நோக்கங்களைப்புரிந்து அவை முறையாக செயல்படுகின்றன.

மத்திய அரசின் ஆதரவிலாகிய திட்டங்களான திண்மையான திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், படித்த வேலையற்ற இளைஞர்களின் சுயவேலை வாய்ப்புத் திட்டம், பட்டுப்பூச்சி வளர்ப்புத்திட்டம், மற்றும் புதிய இருபது அம்சத்திட்டதிலடங்கிய ஏனைய திட்டங்கள், எரி வாயு வளர்ச்சித் திட்டம், மற்றும் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் வீடு கட்டும் திட்டம் ஆகியவற்றிற்கு வணிக வங்கிகள் உதவி அளித்து வருகின்றன.

இருபது அம்சத்திட்டம்[32]

1986 ஆம் ஆண்டு, ஆகஸ்ட் மாதத்தில், மத்திய அரசு, தனது இருபது அம்சத்திட்டத்தினைத் திருத்தியமைத்தது. வறுமை ஒழித்தல், உற்பத்தியைப் பெருக்குதல், வருவாய் ஏற்ற தாழ்வுகளைக்குறைத்தல், சமூக மற்றும் பொருளாதார ஏற்ற தாழ்வுகளை அறவே அகற்றுதல் மற்றும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் ஆகியவற்றை சீரிய முறையில் நடைமுறைப்படுத்த, உரிய மாற்றங்களை ஏற்படுத்தியது. இப்புதிய திட்டமான "இருபது அம்சத் திட்டம்-1986", ஏப்ரல் 1, 1987 முதல் நடைமுறையிலிருந்து வருகிறது.

ஏழைகளின் வரப்பிரசாதமான இருபது அம்சத் திட்டம் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது :

1. கிராமப்புற வறுமையை அகற்றுதல்
2. மழைநீர்ப்பாசன நிலங்களின் விளைச்சலை மேம்படுத்துதல்
3. பாசன நீரை, நல்ல முறையில், சீராகப் பயன்படுத்துதல்
4. மகசூல் பெருக்கம்
5. நிலச்சீர்திருத்த சட்டவிதிமுறைகளைத் தீவிரமாக செயல்படுத்துதல்
6. கிராமப்புறதொழிலாளர்களுக்குச் சிறப்புத் திட்டங்கள்
7. தூய்மையான குடிநீர் அளித்தல்
8. அனைவருக்கும் நல்ல உடல்நலம்
9. இரு குழந்தைத் திட்டம்
10. கல்வி விரிவாக்கம்
11. அட்டவணையிட்ட வகுப்பினர், மலை வாழ் வகுப்பினர் ஆகியோருக்கு நியாயம் வழங்குதல்
12. மகளிர்க்கு சமநிலை
13. இளைஞர்களுக்கு புதிய வாய்ப்புகள்
14. அனைத்து மக்களுக்கும் வீட்டு வசதி
15. குடிசைகள் மேம்பாடு
16. காடுகள் வளர்ப்பில் புதிய மாற்றம்

17. சுற்றுப் புறச் சூழலைப் பாதுகாத்தல்
18. நுகர்வோர் பாதுகாப்பு
19. அனைத்து கிராமங்களுக்கும் மின் இணைப்பு
20. பொறுப்புள்ள நிருவாகம்

1986 ஆம் ஆண்டின் புதிய இருபது அம்சத் திட்டத்தினை நன் முறையில் நடைமுறைப்படுத்த நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் முதன்மையான அங்கம் வகிக்கின்றன.

1984-85 ஆம் ஆண்டில், பல்வேறு வளர்ச்சித் திட்டங்களில் சாதனை[33]

தொடர் எண்.	*திட்ட விவரம்*	*சாதனை தொகை (ரூபாய்)*
(1)	*(2)*	*(3)*
1.	சமுதாயக்கல்வி	15,994
2.	மகப்பேறு மையங்களைப் பராமரிக்கப் பொருளுதவி	5,00,000
3.	மருந்தகங்கள் பராமரிக்கப் பொருளுதவி	5,400
4.	கூடுதல் மருந்துகள்	1,206
5.	பட்டினிச் சாவுகளைத் தடுத்தல்	2,200
6.	மீன்கள் தொழிற்துறை தொடர்புள்ள திட்டங்கள்	1,32,340
7.	உள்ளூர் வரி-ஈடுகொடுக்கும் மிகைவரிக் கொடை	45,00,000
8.	வீட்டுவரி- ஈடுகொடுக்கும் கொடை	4,62,892
9.	கையால் இயக்கப்பெறும் குழாய்கள் பராமரிப்பு	50,000
10.	கிராமப்புறத் தண்ணீர் வழங்கும் திட்டம்	6,00,000
11.	தனி கிராமப்புற வேலைவாய்ப்புத்திட்டக் கொடை	89,90,000
12.	தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம்	94,06,000
13.	உள்ளூர் (கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம்)	17,62,155
14.	இணைப்பு சாலைகள்	5,00,032
15.	பொதுச் சுகாதார-வறட்சி நிவாரணக் கொடை	4,000
16.	சிறிய நீர்ப்பாசனம்	4,50,000
17.	நில வளர்ச்சி	72,000
18.	ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்	36,00,000

உள்ளூர் மக்களில், கிராமப்புறம் மற்றம் நகர்ப்பகுதியில் வாழும் மக்களின் வருவாய் நிலைகளில் மிகுந்த வேறுபாடு காணப்படுகிறது. கிராமப் பகுதிகளில், மிகவும் ஏழ்மை நிலையிலுள்ளோர் ஒருமுகப்படுத்தப் பட்டிருப் பதைக் காணமுடிகிறது. ஆனால், ஒப்பீட்டு முறையில் நோக்கும்போது, நகர்ப்புறப் பகுதி மக்கள் செல்வ வளநிலையிலுள்ளவர் களாகவே உள்ளனர். இவ்வருவாய் வேறுபாடுகள், கூர்ந்து கவனித் தாலன்றி, வெளிப்படையாகத் தெரியாத மக்களின் சமூக-பொருளாதார நிலையினைக் காட்டுகின்றன.

கிராமப்புறம் மற்றும் நகர்ப்புற மக்களின் வருவாய் வேறுபாட்டின் உட் பொருளை வெளிப்படுத்துவது எளிதல்ல. குறிப்பாக, இவ்வருவாய் வேறுபாடு, அவரவர்களது வாழ்கைத்தரத்தின் உண்மை நிலையினைப் பிரதிபலிப்பது தெரிகிறது. ஆனால், அவர்களை வாழ்க்கையை நடத்துவதற்கான செலவுத்தொகை மாறுபாட்டினை சரியீடு செய்ய இயலவில்லையென்ற அளவில்தான் இப்பிரதிபலிப்பினை காண்கிறோம். மாவட்டம், வேளாண் தொழிலில் முதன்மையாகத் திகழ்வதால், மாவட்ட வருவாயின் ஒரு பெரிய பங்கு, விவசாய செயல்முறைகளினால்தான் கிடைக்கிறதென்பது வெள்ளிடைமலை.

தொழில்துறை தோற்றத்தின் மதிப்பீட்டில், மாவட்டத்தின் வருவாய் 1973 ஆம் ஆண்டின் விலைகளின் அடிப்படையில் கீழே கொடுக்கப்பட்டுள்ளன[34]:

பிரிவுகள்	(ரூபாய் இலட்சத்தில்)
1. வேளாண்மையும், அதனைச் சார்ந்த இதர தொழில் நடவடிக்கைகளும்	
அ. வேளாண்மை	3,170
ஆ. விலங்குப்பாதுகாப்பு	631
இ. காடுகள் வளர்ப்பு	34
ஈ. மீன்கள் தொழில் துறை	558
மொத்தம்	4,393
2. சுரங்கத் தொழில் மற்றும் ஆக்கத்தொழில்	
உ. சுரங்கத்தொழிலும், கற்கள் தோண்டி எடுக்கும் தொழிலும்	1
ஊ. தொழிற்சாலை பணியாளர் தொகுதி	65
எ. நின்சாரம்	134
ஏ. கட்டுமானப் பணி	145
ஐ. சிறு நிறுவனங்கள்	1,267
மொத்தம்	1,612

3.	**வாணிகம், போக்குவரத்து மற்றும் செய்தித் தொடர்பு**	
	ஒ. செய்தித் தொடர்பு மற்றும் போக்குவரத்து	19
	ஒ. இருப்புப்பாதை நிறுவனம்	--
	ஒள. வங்கி மற்றும் ஆயுள் காப்பீட்டு அமைப்புகள்	47
	அஅ. ஏனைய வாணிகம் மற்றும் போக்குவரத்து	1,141
	மொத்தம்	1,207
4.	**ஏனைய பணிகள்**	
	ஆஆ.அரசு நிருவாகம்	381
	இஇ.வாழ்க்கைத் தொழில், வளமான கலைகள் மற்றும் வீட்டிற்குரிய பணிகள்	1,341
	ஈஈ. வீட்டுச் சொத்து	180
	மொத்தம்	1,902
	நிகர வீட்டு உற்பத்திப் பொருட்கள்-தொழிற்சாலை விலையில் (ரூபாய் இலட்சத்தில்)	9,114
	தோராயமான மொத்த மக்கட் தொகை (இலட்சத்தில்)	12.3
	(தலைக்கு) நிகர வீட்டுப்பொருள் உற்பத்தி மதிப்பு (ரூபாயில்)	741

சிறுசேமிப்பு

பொருளாதார வளர்ச்சியின் செயல்முறையினை விரைவுபடுத்த, நாடு, தனது நிதி வாய்ப்பு வளத்தை மேலும் புழக்கத்திற்குக் கொணர்ந்து, சேமிப்பு நிலையினை மேம்படுத்துவது இன்றியமையாததாகிறது. தொடர்ந்து, சேமிப்பினைப் புழக்கத்திற்குக் கொண்டு வருவதும் தவிர்க்க முடியாததாகி விடுகிறது. அவ்வாறு சேமிக்கப்பட்ட தொகை, பல வளர்ச்சித் திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்க பயன்படுத்தப்படுகிறது.

1972-73 முதல், 1986-87 முடிய கன்னியாகுமரி மாவட்டத்தில் சிறு சேமிப்புத் திட்டத்தின் கீழ், சேமிக்கப்பட்ட தொகை விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன:

1972-73 முதல் 1986-87 முடிய கன்னியாகுமரி மாவட்டத்தில் சிறுசேமிப்பு வசூல் விவரம்[35]

ஆண்டு	*நிர்ணயிக்கப்பட்ட குறியீடு*	*முழு மொத்தத் தொகை*	*நிகரத் தொகை (ரூபாய் இலட்சத்தில்)*
(1)	*(2)*	*(3)*	*(4)*
1972–73	அளிக்கப்படவில்லை	133.44	12.38
1973–74	– –	120.56	19.50

1974–75	– –	200.33	24.95
1975–76	– –	222.72	13.74
1976–77	– –	227.97	15.76
1977–78	– –	274.78	40.29
1978–79	– –	329.99	49.44
1979–80	– –	387.81	63.60
1980–81	75	444.43	74.39
1981–82	75	505.27	87.98
1982–83	75	576.08	121.69
1983–84	100	660.81	123.17
1984–85	155	785.03	213.62
1985–86	300	883.68	265.84
1986–87	436	1,028.23	285.56

1972-73 இல் முழு மொத்த சேமிப்புத் தொகையான 133.44 இலட்ச ரூபாய் 1986-87 இல், 1028.23 இலட்ச ரூபாயாக உயர்ந்துள்ளது[36]. 15 ஆண்டு காலத்திற்குள், எட்டு மடங்கு உயர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது. அதே போன்று, 1972-73-ன் நிகர சேமிப்புத் தொகையான 12.38 இலட்ச ரூபாய், 1986-87-ல், 285.56 இலட்ச ரூபாயாக அதிகரித்துள்ளது. இது கிட்டத்தட்ட 20 மடங்கிற்கும் மேற்பட்ட சேமிப்பாகும். உண்மையிலேயே, இது கன்னியாகுமரி மாவட்ட மக்களிடையே சேமிப்புப் பழக்கம் வளர்ந்திருப்பதைக் காட்டுகிறது.

ஏனைய பொருளாதார அறிகுறிகள்[37]

இயற்கைத் தோற்றங்களை ஆதாரமாகக் கொண்டு, மாவட்டத்தினை மூன்று இயற்கைப் பகுதிகளாகப் பிரிக்கலாம். அவை, மலைப்பகுதித் திணை நிலம், தாழ்வான நிலப்பகுதி மற்றும் அலையலையான பள்ளத்தாக்குப் பகுதி ஆகியவையாகும். மொத்தத்தில், இப்பகுதி, அமைதியான ஆனால், கிழக்கிலிருந்து மேற்கே சாய்வான நிலையில் அமைந்துள்ளது. இந்த சாய்வான அமைப்பும், இயற்கைப் பகுதிகளும், அவற்றின் தாவர வளர்ச்சியுடன், அனைவரையும் வயப்படுத்துகிறது. தாழ்வான நிலப்பரப்பிலுள்ள நெல் வயல்கள், பெரிய அளவில் உள்ள தென்னஞ் சோலை மற்றும் பள்ளத்தாக்கில் மரவள்ளி பயிரிடப்பட்டுள்ள நிலங்கள் ஆகியவற்றுடன் கலந்து, அனைவரையும் கவருவதில் வியப்பில்லை. கடற்கரையிலுள்ள மணல்கள், மதிப்பு வாய்ந்த கனிப்பொருள்களைப் பெற்றுள்ளன. கடற்கரை, ஒரு இயற்கையான சூழ்நிலையையும் உருவாக்குகிறது.

மாவட்டத்தின் பொருளாதாரத்தில், இரப்பர் தோட்டங்கள் ஒரு முக்கிய அங்கமாகத் திகழ்கின்றன. மாநில முழுமையும இரப்பர் பயிரிடப்பட்டுள்ள 12,716 எக்டேரில், 12,686 எக்டேர், இம்மாவட்டத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

வேளாண்மை மாவட்டத்தின் முக்கியமான ஆதாரமாகும். மாவட்டத்தின் பெரும்பாலான தொழிலாளர்கள், அதாவது மொத்தத் தொழிலாளர்களில், 48.44 விழுக்காட்டைச் சார்ந்தோர், விவசாயிகளும், வேளாண் தொழிலாளர்களுமாவர். கிராமப்புறத் தொழிலாளர்களில், விவசாயிகள் மற்றும் வேளாண் தொழிலாளர்கள் ஆகியோரின் விழுக்காடு, 56.85 ஆகும். மாவட்டத்தில் மிக முக்கியமான பயிர் நெல்தான். மரவள்ளி அதிக பரப்பளவில், பயிர் செய்யப்படுகிறது.

நில பயன்பாடு

மாவட்டத்திலுள்ள மொத்த பரப்பளவான 1,44,249.98 ஹெக்டேரில் மொத்த பயிரிடத்தகுந்த பரப்பளவு 60.86 விழுக்காடாகும். அதனில், 38.98 விழுக்காடு பரப்பளவு நிலங்கள் நீர்ப்பாசனத்திற்குத் தகுதியானவையாகும்.

மின் சக்தி

நம் நாட்டிலேயே, அனைத்து கிராமங்கள் மற்றும் நகரங்கள் ஆகியவற்றில், மின் சக்தி பெற்றுள்ள ஒரு சில மாவட்டங்களில், கன்னியாகுமரியும் ஒன்றாகுமென்பது குறிப்பிடத்தக்கது.

மீன் தொழில் துறை

மீன் பிடித்தல் மாவட்டத்தில் ஒரு முக்கிய வாழ்க்கைத் தொழிலாகத் திகழ்கிறது.

மக்கள் கடலருகில் வாழ்கிற மாவட்டமான கன்னியாகுமரி, மேற்கு மற்றும் கிழக்கு மலைத்தொடர்களில், 68 கிலோ மீட்டர் தொலைவிற்கு, கடற்கரையோர எல்லையைப் பெற்றுள்ளது. கன்னியாகுமரி கடற்கரையில், 44 கிராமங்கள் உள்ளன. இக்கிராமங்களில், மீன் பிடிப்பது, மிகவும் முக்கியமான தொழிலாகும். 1986 ஆம் ஆண்டு, மக்கட் தொகைக் கணக்கெடுப்பின்படி, மாவட்டத்திலுள்ள மீனவர்களின் எண்ணிக்கை, 1,14,897 ஆகும். இயந்திர விசையில் 510 மீன்பிடிக்கப்பயன்படும் கப்பல்களும், இயந்திர விசையற்ற 12,757 கப்பல்களும், இம்மாவட்டத்திலுள்ளன[38]. ஆண்டுதோறும், சராசரியாக 62,400 டன் மீன்கள் பிடிக்கப்படுகின்றன. இது மாநிலத்தில் ஆண்டு தோறும் பிடிக்கப்படும் மீன்கள் எண்ணிக்கையில் 25 விழுக்காடாகும்.

மீனவர்களின் சமூக - பொருளாதார நிலைகளை மேம்படுத்த, மீன் தொழில்துறையினை தற்கால வழக்குக்கேற்றதாக மாற்றும் பொருட்டு, 1957 ஆம் ஆண்டு முதல் அவர்களுக்கு இயந்திர விசையுள்ள மீன் பிடிக்கும்

படகுகளும், வலைகள் செய்துருவாக்க, திண்முறுக்கேறிய நூற்கயிறும் வழங்கப்பட்டது. ஏப்ரல் 1, 1974 முதல், தமிழ்நாடு மீன் தொழில் வளர்ச்சிக் கழகம், இயந்திர விசையுள்ள படகுகளை வழங்கும் பொறுப்பினை மேற்கொண்டது. தற்போது, மீனவர் மேம்பாட்டு நிறுவனம் மூலம் உள்நாட்டுத் தொடர்புள்ள மீன் பிடிக்கும் முறை ஊக்குவிக்கப்படுகிறது.

சமூகப்பொருளாதாரத் திட்டங்களில், மீனவர் தொகுதி விபத்துக் காப்பீட்டுத் திட்டம் மிகவும் முக்கியமானதாகும். இத்திட்டத்தில் மீனவர் கூட்டுறவு சங்கங்களின் அனைத்து உறுப்பினர்களும் கொணரப் பட்டுள்ளார்கள். ஆண்டுக்காப்பீட்டுக் கட்டணமான ரூ.19/- மத்திய, மாநில அரசுகளால் சரிசம வீதத்தில் பங்கீடு செய்து கொள்ளப்படுகிறது. மீனவர் எவரேனும் விபத்தில் இறந்தால், அவரது குடும்பத்திற்கு, 15,000/- மும், விபத்தினால் மீனவரின் செயலுக்குத் தடங்கலான முடம் போன்ற குறைபாடு ஏற்பட்டால் 7,500/- ரூபாயும், காப்பீட்டுக் கழகம் அவரது குடும்பத்திற்கு அளிக்கிறது.

சமூக பொருளாதார நடவடிக்கைகளிலொன்றாக, மீனவர்கள் கடலில் மீன் பிடிக்கும்போது இறந்துபோனால், மாநில அரசு, அவர்களது குடும்பத்திற்கு ரூ.5000/- கொடுத்து உதவுகிறது. மீனவர்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளது[39].

தொழில்துறை

மாவட்டத்தில், 1950இல் பெரிய அல்லது நடுத்தரத் தொழிற் சாலைகள் உருவாகவில்லை. 1960-க்குப் பிறகு, மாவட்டத்தில் சில நடுத்தர தொழிற்சாலைகள், அதாவது, கனிப்பொருள் தொழிற்சாலை, நூற்பு அலகுகள் மற்றும் முந்திரிக்கொட்டை அலகுகள் ஆகியவை உருவாகின. மாவட்டத்தில், முந்திரி ஒரு முக்கிய வாணிகப்பயிரும், அயல்நாட்டு நாணய மாற்று கிடைக்கும் பயிருமாகும். கன்னியாகுமரி மாவட்ட தொழில்துறை வரைபடத்தில், முந்திரிப்பருப்பு உருவாக்கத் தொழில், ஒரு தனி இடத்தைப்பெற்றுள்ளது. 1980 ஆம் ஆண்டு, இம்மாவட்டத்தில், 171 சிறு தொழில், முந்திரிப்பருப்பு உருவாக்க அலகுகள் இயங்கிவந்தன. ஈத்த மொழியில் அரசு கயிறுப்பள்ளியொன்று இயங்கி வருகிறது. அது இளைஞர்களுக்குப் பயிற்சியளித்து வருகிறது.

மாவட்டத்தின் பொருளாதாரத்தில், இரப்பர் தோட்டத் தொழில், ஒரு முக்கியமான அங்கம் வகிக்கிறது. இத்தொழில், அதிக அளவு தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கிறது. விளவங்கோடு, கல்குளம் மற்றும் தோவாளை வட்டங்களிலுள்ள மேற்கு மலைத் தொடர்களில், இரப்பர் தோட்டம் பரவலாகக் காணப்படுகிறது. இம்மாவட்டத்திலுள்ள இரப்பர் தரமானதாகும்.

நாட்டில், தரமான இரப்பர் உற்பத்தி செய்வதில், தமிழ்நாடு இரண்டாவது நிலையிலுள்ளது. கன்னியாகுமரி மாவட்டம், இப்பெருமையைப் பெறுகிறது.

1981 மக்கட்தொகைக் கணக்குப்படி, மாவட்டத்தில், 223 பதிவு பெற்ற தொழிற்சாலைகள் 48096 தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பளித்து, இயங்கிவந்தன. இவற்றில், 160 அலகுகள் (72 விழுக்காடு) உணவுப்பொருட்கள் உற்பத்தி செய்கின்றன. பழுது பார்க்கும் தொழிற்சாலைகள், காகிதப் பொருட்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள், மரப்பொருட்கள் மற்றும் இரப்பர் தொழிற்சாலைகள் ஆகியவை, ஏனைய குறிப்பிடத்தகுந்த அலகுகளாகும்.

குடிசைத் தொழில்களில், கைத்தறித் தொழில், கயிறுத் தொழில் மற்றும் தேன் உற்பத்தி செயல் அலகுகள் ஆகியவை மிகவும் பெயர் பெற்றவையாகும். பற்றுதலுக்குரிய வீட்டுப்பொருள்கள் உற்பத்தி செய்வது ஒரு முதன்மை வாய்ந்த தொழிற்துறையாகும். மாவட்டத்திலுள்ள மொத்தத் தொழிலாளர்களில், 4.47 விழுக்காடு, வீட்டுப்பொருள்கள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர். கல்தச்சுத்தொழில் மாவட்டத்தில் உச்சவள நிலையிலுள்ள தொழிற்துறையாகும்.

மக்கட்தொகை[40]

1971 ஆம் ஆண்டு மக்கட்தொகைக்கணக்கெடுப்புப்படி, மாவட்டத்தின் மொத்த மக்கட்தொகை 12,22,549 ஆக இருந்தது. அது, 1981 ஆம் ஆண்டு மக்கட் தொகை கணக்கெடுப்பில், 14,23,399 ஆக உயர்ந்தது. 1971 முதல் 1981 வரையிலான பத்தாண்டு காலத்தில், 16.08 விழுக்காடு உயர்ந்தது. இது 1961 முதல் 1971 வரை 22.63 விழுக்காடாக இருந்தது. 1981 ஆம் ஆண்டு மக்கட்தொகையின் நெருக்கம், ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 843 ஆக இருந்தது. இதே ஆண்டில் மாநில மக்கட்தொகை நெருக்கம் ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 371 ஆகும்.

எழுத்தறிவு[41]

தமிழ்நாட்டு மக்களின் எழுத்தறிவு வீதம் 46.76 விழுக்காடு ஆகும்: எனினும், கன்னியாகுமரி மாவட்டத்தின் எழுத்தறிவு வீதம் 63.85 விழுக்காடாகும். தமிழ்நாட்டு கிராமப்புற மக்களின் எழுத்தறிவு வீதம் 38.56 விழுக்காடு தான், ஆனால், மாவட்ட கிராமப்புற மக்களின் எழுத்தறிவு வீதம் 61.80 விழுக்காடாகும். தமிழ்நாட்டு நகர்ப்புற மக்களின் எழுத்தறிவு வீதமும், மாவட்ட நகர்ப்புற மக்களின் எழுத்தறிவு வீதமும், முறையே 63.45 மற்றும் 73.60 விழுக்காடாகும்.

ஏனைய வசதிகள்

மாவட்டத்திலுள்ள 87 கிராமங்களில், 80 கிராமங்களில் பள்ளி வசதிகள் உள்ளன. அதாவது, மாவட்டத்தின், 91.95 விழுக்காடு கிராமங்கள்

கல்வி வசதிகளைப் பெற்றுள்ளன. மருத்துவ வசதி 73 கிராமங்களிலும், அஞ்சல், தந்தி வசதி 76 கிராமங்களிலும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

இது முறையே, 83.91 மற்றும் 87.36 விழுக்காடாகும். அனைத்து கிராமங்களும் குடிநீர் வசதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. மாவட்டத்திலுள்ள கிராமங்களில் 90 விழுக்காடு கிராமங்கள், நல்ல போக்குவரத்து வசதி, தரமான சாலைகள் மற்றும் மின் சக்தி ஆகியவற்றைப் பெற்றுள்ளன.

நிதியுதவியளிக்கும் நிறுவனங்கள்

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, மாவட்டத்தின் முதன்மையான வங்கியாகும். மாவட்டப் பொருளாதாரத்தின் பல பிரிவுகளைச் சார்ந்த தொழிற்துறை நிறுவனங்களின் மேம்பாட்டினைக் கருத்திற்கொண்டு, வங்கிகள் ஒப்புக்கொள்ளக் கூடிய பல கடனுதவித் திட்டங்களை இவ்வங்கி தீட்டியது. சமுதாயத்தின் நலிந்த பிரிவினருக்கான வேலை வாய்ப்பினை அதிகரிக்கும் குறிக்கோளுடன் அது செயல்பட்டது. தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்த, உற்பத்தியையும், அவர்களது வருவாயையும் பெருக்க வழிவகுத்தது.

வணிக வங்கிகளான, கன்னியாகுமரி மத்திய கூட்டுறவு வங்கி, தமிழ் நாடு கூட்டுறவு மாநில நில வள வங்கி, மற்றும் மாநில நிதியுதவிக் கழகங்களான தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், தமிழ்நாடு, சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் மற்றும் தமிழ்நாடு சிறு தொழில் மேம்பாட்டுக் கழகம் ஆகியவை மாவட்டத்தின் முதன்மையான நிதியுதவியளித்திடும் கழகங்களாகும்.

63 மையங்களில், வணிக வங்கிகளின் 115 கிளைகள் இயங்கிவருகின்றன. ஒவ்வொரு வங்கிக்கிளையும், பெற்றுள்ள சராசரி மக்கட்தொகை, 12,339 ஆகும்.

போக்குவரத்து

சாலைகள்

கன்னியாகுமரி மாவட்டம், மிகச்சிறந்த பின்னல் வலையமைவிலான சாலைகளைப் பெற்றுள்ளது. சென்னையிலிருந்து, நாகர்கோவிலுக்கும், பின்னர் திருவனந்தபுரத்திற்கும் செல்லும் நெடுஞ்சாலை, இம்மாவட்டத்தில் ஆரல்வாய்மொழியில் நுழைகிறது. பின்னர், அச்சாலை, பத்மநாபபுரம், அழகிய பாண்டிபுரம் மற்றும் குழித்துறை முதலிய முக்கிய இடங்கள் வழியாகச் செல்கிறது.

அஞ்சல் மற்றும் தொலைப்போக்குவரத்து

அஞ்சல் பணியினைப் பொறுத்தவரை, தமிழ்நாடு அஞ்சல் மையம், இந்தியாவிலுள்ள பெரிய அஞ்சல் மையங்களில் ஒன்றாகும்.

மாவட்டத்தில், இரண்டு தலைமை அஞ்சல் அலுவலகங்களும், 75 துணை அஞ்சல் அலுவலகங்களும் இயங்கி வருகின்றன. இவை தவிர, 30 மிகைப்படியான துறைத்துணை அஞ்சல் அலுவலகங்களும், 130 மிகைப்படியான துறைத் துணை அஞ்சல் அலுவலகங்களும் மாவட்டத்தில் இயங்கிவருகின்றன. 458 துறை ஊழியர்களும், 525 மிகைப்படியான துறை ஊழியர்களும், மாவட்டத்தில் பணியாற்றிவருகிறார்கள். மாவட்டத்திலுள்ள அனைத்து கிராமங்களிலும், நாள் தோறும் அஞ்சல் பணி நடைபெற்று வருகிறது. மாவட்டத்தில், 145 நகர்ப்புற அஞ்சல் பெட்டிகளும், 986 புறப்பகுதி அஞ்சல் பெட்டிகள் உள்ளன. கன்னியாகுமரி அஞ்சல் நிலையத்திலுள்ள தனி அஞ்சல் பெட்டியில், அஞ்சலிடப்படும், உறைகள் மற்றும் பொருள்களுக்கு விவேகாநந்தர் நினைவு மண்டபத்தின் பின்னல் வலை போன்ற அமைப்புடைய படத்தோற்றம், முத்திரை பொறிக்கப்படுகிறது. மாவட்டம் ஒரு சிறந்த தொலைப் போக்குவரத்தையும் பெற்றுள்ளது. தொலைப்போக்குவரத்து வசதிக்கான இயந்திர சாதனங்களை 10 கோடி ரூபாய் செலவில் மைய அரசு உருவாக்கியுள்ளது. இத்துறையில், ஏறத்தாழ, 513 அலுவலர்கள் பணியாற்றி வருகிறார்கள்[42].

ஒலிபரப்பு

ஒரு வானொலி நிலையமும், ஒரு தொலைக்காட்சி அஞ்சல் மையமும், இங்கு முறையே அக்டோபர் 30, 1984 மற்றும் ஆகஸ்ட், 8, 1987 முதல் இயங்குகின்றன.

இருப்புப் பாதை நிறுவனம்

திருவனந்தபுரத்திலிருந்து, திருநெல்வேலிவரை, நாகர்கோவில் வழியாக, மாவட்டம், அகலவழி பாதைப்பிரிவுடன் இணைக்கப்பட்டுள்ளது. திருநெல்வேலி - நாகர்கோவில் - கன்னியாகுமரி பெரியவழிப்பிரிவு[43] 16.4.1979-ந் தேதியும், நாகர்கோவில் - திருநெல்வேலி பிரிவு ஏப்ரல் 2,1981-ந் தேதியும் துவக்கப்பட்டது. இந்தியாவிலேயே மிக நீளமான, கன்னியாகுமரியிலிருந்து - ஜம்முதாவி வரையிலான வழி, கன்னியாகுமரி புகை வண்டி நிலையத்திலிருந்து துவங்குகிறது. இந்த வழி, தெற்குக்கோடியிலுள்ள உயர்பகுதியான தேயிலை, இரப்பர் எஸ்டேட்களுக்கும், நெல் நிறைந்த நடுநிலப்பரப்பிலான வேளாண் நிலங்களுக்கும், கடற்கரைப் பரப்பிலுள்ள மீன் தொழில், மற்றும் கயிறுத் தொழில், பரவலாக உள்ள பகுதிகளுக்கும் பயனளிக்கிறது. வடக்கிலுள்ள இடங்களுக்கு, அது ஒரு முக்கிய வாணிகத் தொடர்புப் பாதையாகத் திகழ்கிறது. இப்பெருவழி, சுற்றுப் பயணிகளுக்கும், யாத்ரிகர்களுக்கும் ஒரு பெரிய வரப்பிரசாதமாகும்.

"சுற்றுலாவாண்மை" என்பது, சமூக முன்னேற்றம், கடல்போன்ற அறிவாற்றல், சீரிய கருத்துக்கள் ஆகியவற்றை ஊக்குவிக்கிறது; இது மக்களிடையே நல்லெண்ணத்தை வளர்க்கிறதென்பது உண்மையே. இது

நாட்டிற்கு அயல்நாட்டு நாணய மாற்றை ஈட்டுத்தரக்கூடிய ஒரு முக்கிய அம்சமாகும். தமிழக அரசு, சுற்றுலாவாண்மையை ஒரு தொழில்துறையாக மிகவும் பெருமையுடன் பிரகடனப்படுத்தியுள்ளது. கன்னியாகுமரி மாவட்டம், சுற்றுலாவாண்மைக்கு, ஒரு நல்ல மூலவாய்ப்பு வளத்தைப் பெற்றுள்ளது[44]. ஒரு முனைப்பான தோற்றத்தில் ஏனையவற்றைவிட வேறுபடுத்திக் காட்டும் நிலம் என்ற அடிப்படையில், இம்மாவட்டம், பார்வையாளர்களுக்கும், சுற்றுலாப்பயணிகளுக்கும், தற்கால வழிமுறையில் உருவான விஞ்ஞானம், தொழில், நுட்பம் மிகுந்த இங்குள்ள கலைத்திறன் அமைந்த வேலைப்பாடு மிகுந்த கலைப்பொருள்கள் மற்றும் சிற்பக்கலையில் உருவான சிலைகள் ஆகியவற்றை உணர்ந்து ரசித்திட, ஒரு நல்வாய்ப்பினையளிக்கிறது.

வீரார்ந்த தன்மைமிகு, மேற்குமலைத்தொடர், தொன்மையான அருள்மிகு சுசீந்திரம் கோவில், பெரிய வரலாற்றுச் சின்னங்களான பத்மநாபபுரம் அரண்மனை, சுவாமி விவேகாநந்தர், மகாத்மா காந்தி, ஆகியோரின் நினைவுச் சின்னங்கள், பரந்து கிடக்கும் ரம்யமான கடற்கரை, பலவகைப்பட்ட மலர்கள், பறவைகள், பிராணிகள் மற்றும் மிருகங்கள், தோட்டங்கள், இவை யாவற்றையும் கண்டுகளித்திட, உள்ளூர் மற்றும் பல அயல் நாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு, அவர்கள் விருப்பத்திற்கேற்ற பயண இலக்காகக் கன்னியாகுமரி திகழ்கிறதெனில் மிகையில்லை.

மனதிற்குகந்த தட்ப, வெட்ப நிலை, பயன்தருகிற இயற்கையமைப்பு, வளமிக்க மண், சீரான, காலத்திற்கேற்ற பருவக்காற்று மற்றும் நீண்ட கடற் கரை ஆகியவை, வளமூட்டுவதுடன், மாவட்டத்தின் அழகிற்கழகூட்டுகிறது.

முக்கிய சமூக-பொருளாதார அறிகுறிகள்

மாநில திட்டக்குழு, உறுப்பினர் - செயலர், கன்னியாகுமரி மாவட்டத்தில் சில முக்கிய துறைகள் சார்ந்த சமூக - பொருளாதார அடையாளக் கூறுகளை அளித்துள்ளார். அவை தொடர்பான விவரங்கள் கீழ்க்கண்ட பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ளன:

பட்டியல்

கன்னியாகுமரி மாவட்டத்தில் முக்கிய சமூகப்பொருளாதார அடையாளக்கூறுகள்

தொடர் எண்.	*அடையாளக்கூறு*	*கன்னியாகுமரி*	*மாநிலம்*
(1)	*(2)*	*(3)*	*(4)*
1.	பரப்பளவு (சதுர கிலோ மீட்டரில்)	1684.4	1,30,058
2.	மக்கட் தொகை (000)	1423	48,408
	அ. ஆண்	717	24,488
	ஆ. பெண்	706	23,920

	இ. கிராமப்புறம்	1,178	32,456
	ஈ. நகர்ப்புறம்	245	15,952
3.	**படிப்பறிவு (விழுக்காடு)**		
	அ. ஆண்	68.6	58.3
	ஆ. பெண்	59.1	35.0
4.	**தொழில்புரிவோர் மக்கட்தொகை (000)**		
	அ. விவசாயிகள்	46	5,559
	ஆ. விவசாயத் தொழிலாளர்கள்	145	6,038
	இ. உற்பத்தித்தொழில், வீட்டுத் தொழில் மற்றும் பணிசார்ந்த தொழிற்துறை	17	898
	ஈ. ஏனைய தொழிலாளர்கள்	185	6531
	மொத்தம் முதன்மையான	393	19,026
	மிகச் சிறிய தொழிலாளர்கள் பணிபுரிவோர்	20	1,173
	தொழில் செய்யாதவர்கள்	1,010	28,209
5.	**மழையளவு (இயல்பு - மில்லிமீட்டரில்)**		
	அ. தென்மேற்குப் பருவக்காற்று	546.2	308.4
	ஆ. வடகிழக்குப் பருவக்காற்று	564.0	447.4
	இ. குளிர்காலம்	57.0	50.1
	ஈ. வெயிற்காலம்	312.5	139.1
6.	**பயிரிடப்பட்ட நிகர பரப்பளவு** (ஹெக்டேர் – மில்லிமீட்டரில்)	82,201	56,90,892
	ஒரு தடவைக்கு மேல் பயிரிடப்பட்ட நிலப்பரப்பு	25,017	11,27,903
	பயிரிடப்பட்ட மொத்த பரப்பளவு	1,07,218	68,18,795
7.	செயற்பாட்டு நில உடைமைகளின் எண்ணிக்கை (000)	301	61,111
	செயற்பாட்டு நில உடைமைகளின் நிலப்பரப்பு (000 எக்)	87	7,629
	நில உடைமைகளின் சராசரி அளவு (ஹெக்டேரில்)	0.29	1.25
வேளாண்மை			
8.	**நெல் உற்பத்தி (1986-87)**		
	அ. பரப்பளவு (000 ஹெக்)	31	1,955
	ஆ. மகசூல் (ஹெஎக்டேர் / கிலோ)	1,912	2,728
	இ. உற்பத்தி (000 டன்கள்)	59	5,333
9.	**மிருகங்கள் பாதுகாப்பு (சூலை 1982)**		
	அ. மொத்த கால்நடைகள்	2,02,615	2,61,86,091
	ஆ. மொத்த வளர்ப்புப் பறவைப் பண்ணைகள்	4,65,067	1,82,83,720

10.	**பால் பண்ணை (1986-89)**		
	பால் உற்பத்தி (000 டன்கள்)	45.6	3294.6
11.	**தொழிற்துறை (1983-84)**		
	அ. தொழிற்சாலைகளின் எண்ணிக்கை	286	12,478
	ஆ. அனைத்துத் தொழிலாளர்கள்	33,763	7,06,940
	இ. கூடுதல் மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்)	728	1,67,689
12.	**வங்கித் தொழில்**		
	அ. வங்கிகளின் எண்ணிக்கை	114	3,939
	ஆ. வைப்பு மற்றும் சேமிப்புத் தொகை (ரூபாய் இலட்சத்தில்)	12,904	6,84,318
	இ. முன் பணங்கள்	7,554	6,53,744
	ஈ. கடன்–சேமிப்பு வீதம் (விழுக்காடு)	59	96
	உ. ஒவ்வொரு வங்கியினால் பயன்பெறும் மக்கட்தொகை	13,667	1,33,033
13.	**முதன்மை வங்கி (ஒதுக்கீடு - 1986)**		
	அ. வேளாண்மையும், சார்ந்த இதர தொழில்களும் (ரூபாய் இலட்சத்தில்)	1,993	61,063
	ஆ. சிறுதொழில் நிறுவனங்கள்	238	18,823
	இ. பணிகள்	591	16,465
	மொத்தம்	2,822	96,351
14	**வேலை வாய்ப்பு (31.3.1987)**		
	அ. பொதுத்துறை நிறுவனங்கள் (000)	36	1,477
	ஆ. தனியார்துறை நிறுவனங்கள் (000)	32	690
	மொத்தம்	68	2,167
15.	**மின்சாரம் (31.3.1986)[45]**		
	அ. மொத்த கிராமங்களின் எண்ணிக்கை	66	15,735
	ஆ. மின்சார வசதி செய்துகொடுக்கப்பட்டுள்ள கிராமங்களின் எண்ணிக்கை	66	15,715
	இ. மின்சக்தி வழங்கப்பெற்ற குழாய்களின் எண்ணிக்கை	2,344	10,74,184
	ஈ. தெருவிளக்குகளின் எண்ணிக்கை	32,170	8,62,893

குறிப்புகள்

1. 1981, இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு, பக்கம் 8.
2. இந்திய மக்கட்தொகை 1961, தொகுதி-9, சென்னை, பகுதி-9, -ஆ- சென்னை மாநிலத்தில் உணவுப்பழக்க வழக்கங்கள், 1964, பக்கம் 10.
3. இந்திய மக்கட் தொகை கணக்கெடுப்பு - 1961, பக்கம் 30.
4. இந்திய மக்கட் தொகை கணக்கெடுப்பு - 1961, பக்கம் 31.
5. தேசியப்பொருளாதார செய்தித்தாள்-அக்டோபர்-டிசம்பர் 1977, பக்கம் 166.
6. தமிழ்நாடு-ஒரு பொருளாதார மதிப்பீடு-1986-87, கணக்கீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை, பக்கங்கள் 6 மற்றும் 7.
7. இந்தியா புள்ளி விவர திட்ட வரை, கல்கத்தா, 1973, பக்கம் 114.
8. தமிழ்நாடு புள்ளி விவர கையேடு, 1986, பக்கம் 431 மற்றும் 433.
9. தமிழ்நாட்டின் 1983-84 ஆம் ஆண்டிற்கான பருவ மற்றும் பயிர் அறிக்கை, புள்ளி விவரத்துறை, பக்கம் 37.
10. தமிழ்நாட்டின் 1983-84 ஆம் ஆண்டிற்கான பருவ மற்றும் பயிர் அறிக்கை, புள்ளி விவரத்துறை, பக்கம் 88.
11. பருவ மற்றும் பயிர் அறிக்கை - தமிழ்நாடு - 1983-84 , பக்கம் 284.
12. தமிழ்நாட்டின் ஆண்டுப்புள்ளிவிவரச் சுருக்கம் - 1983-84, பக்கம் 38.
13. பருவ மற்றும் பயிர் அறிக்கை - தமிழ்நாடு - 1983-84-புள்ளிவிவரத்துறை, சென்னை, பக்கம் 289.
14. கன்னியாகுமரி மாவட்டத்தில் பொருளாதாரப் போக்கு - (மே 1980 - பக்கம் 45), சென்னை, கணக்கீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சி துறை தயாரித்தது, பக்கம் 45.
15. கன்னியாகுமரி மாவட்டம் தொடர்பான தொழில் நுட்பப் பொருளாதார ஆய்வு அறிக்கை, 1986-சிறுதொழில் பணி நிறுவனம், இந்திய அரசு, சென்னை, பக்கம் 15.
16. கன்னியாகுமரி மாவட்டத்தில் பொருளாதாரப்போக்கு, மே 1980, சென்னை கணக்கீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித்துறை.
17. வேலைவாய்ப்பு அலுவலர், நாகர்கோவில், அறிக்கை நாள் 16.11.1987.

18. மக்கட்தொகை வரைபடம் - இந்திய மக்கட்தொகைக் கணக்கெடுப்பு, 1971, தமிழ்நாடு , பக்கம் 98.

19. மக்கட்தொகை வரை படம் - இந்திய மக்கட்தொகைக் கணக்கெடுப்பு, 1971, தமிழ்நாடு, பக்கம் 98.

20. சென்னை நிருவாக அறிக்கை - 1953-54, பகுதி - 3, பக்கம் 244-245.

21. சமுதாய வளர்ச்சி மற்றும் ஊரக வளர்ச்சி, கேட்பு எண். 28 (1975-76), ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை, பக்கம் 1.

22. மாவட்ட ஊரக வளர்ச்சி நிறுவனம் - திட்டமும், முன்னேற்றமும் - மாவட்ட ஊரக வளர்ச்சி நிறுவனம், கன்னியாகுமரி மாவட்டம் , நாள் 1.6.1981.

23. மாவட்ட கிராமப்புற வளர்ச்சி நிறுவனம் - திட்டம் மற்றும் முன்னேற்றம் - மாவட்ட கிராமப்புற வளர்ச்சி நிறுவனம், கன்னியாகுமரி மாவட்டம், நாள் 1.6.1981.

24. காதி கிராமோத்யோக், கிராமப்புற பொருளாதாரம் குறித்த செய்தித்தாள் - தொகுதி - 34 - டிசம்பர் 1987 மற்றும் திட்ட அலுவலர் (பொறுப்பு), மாவட்ட கிராமப்புற வளர்ச்சி நிறுவனம், நாகர்கோவில், அறிக்கை நாள் 11.8.1988.

25. மாவட்ட ஆட்சித் தலைவர், கன்னியாகுமரி மாவட்டம், அறிக்கை நாள் 17.12.1986.

26. காதி கிராமோத்யோக், கிராமப்புறப்பொருளாதாரம் தொடர்பான செய்தித் தாள் - 34, டிசம்பர் 1987.

27. மாவட்ட ஆட்சித்தலைவர், கன்னியாகுமரி, அறிக்கை நாள் 17.12.1986.

28. மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் (பொறுப்பு), கன்னியாகுமரி மாவட்டம், அறிக்கை நாள் 17.12.1986.

29. கன்னியாகுமரி மாவட்டத்திற்கான கடன் திட்டம், 1988-1990 மற்றும் ஆண்டு செயற்திட்டம் - 1988- இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, தலைமை வங்கிப் பிரிவு, திருநெல்வேலி, பக்கம் 26.

30. தொழிற்துறை ஆணையர் மற்றும் தொழில் மற்றும் வாணிபத்துறை இயக்குநர், சென்னை, நாள் 10.10.1988 .

31. இந்தியன் ஓவர்சீஸ் வங்கி - கடன் திட்ட வரைவு அறிக்கை - 1988-90, பக்கம் 31.

32. இந்திய ஸ்டேட் வங்கி மதித்துரை - ஏப்ரல் 1988, பக்கம் 183

33. மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் (பொறுப்பு), கன்னியாகுமரி, அறிக்கை நாள் 17.12.1986.

34. "ஒரு செல்வ மிகு மாவட்டம் பொருளாதாரத்தை நோக்கி" கன்னியாகுமரி வளர்ச்சி மாவட்டத்தின் ஒரு பரப்புத் தோற்றத் திட்டம் - தொகுதி-1- மாநில திட்டக்குழு, சென்னை, 1973, பக்கம் 85(பட்டியல் 31).

35. சிறு சேமிப்புத் துறை இயக்குநர், சென்னை, அறிக்கை நாள் 3.6.1988.

36. சிறு சேமிப்புத்துறை இயக்குநர், சென்னை, அறிக்கை நாள் 3.6.1988.

37. இந்திய மக்கட் தொகை - 1981 - மாவட்ட மக்கட் தொகைக் கையேடு, கன்னியாகுமரி மாவட்டம், கிராம மற்றும் நகர்வாரியான முதல்நிலை மக்கட்தொகை சுருக்கம், பக்கம் 8.

38. கன்னியாகுமரி மாவட்டம் பற்றிய சிறு குறிப்புகள் மற்றும் 1987-1988 ஆண்டின் பருவகாலநிலை குறித்த அறிக்கை - மாவட்ட ஆட்சித்தலைவர், கன்னியாகுமரி மீன் தொழில்துறை இயக்குநர், சென்னை, அறிக்கை நாள் 25.10.1988.

39. மீன்கள் தொழில்துறை இயக்குநர், சென்னை, அறிக்கை நாள் 25.10.88.

40. புள்ளி விவர உதவி இயக்குநர், நாகர்கோவில், அறிக்கை நாள் 28.7.1988.

41. இந்திய மக்கட் தொகை - 1981, பக்கம் 21

42. அஞ்சல் துறை முதுநிலைக் கண்காணிப்பாளர், கன்னியாகுமரிக் கோட்டம், நாகர்கோவில், அறிக்கை நாள் 22.8.1988.

43. "இந்து" நாள் 15.7.1983, பக்கம் 10

44. "இந்து", நாள் 12.4.1988, பக்கம் 10

45. உறுப்பினர் - செயலர், தமிழ்நாடு மாநில திட்டக்குழு, சென்னை, அறிக்கை நாள் 28.9.1988.

இயல்-10

பொது நிருவாகம்

முன்னுரை

"கௌடில்யர்" ஒரு அரசை, தேருடனும், அரசின் பல்வேறு துறைகளை தேரின் சக்கரங்களுடனும் ஒப்பிடுகிறார். ஒற்றைச்சக்கரம் தேரை இழுக்க இயலாதென்பதைத் தெளிவுபடுத்துகிறார். எனவே, தொன்மை காலத்திலிருந்தே, அரசினை இயக்கிட பல்வேறு துறைகள் தேவையென்பது உணரப்பட்டு வருகிறது.

தற்போதைய கன்னியாகுமரி மாவட்டத்தின் பகுதி, முன்னர், ஆய் மன்னர்கள், பாண்டியர்கள், சோழர்கள், நாயக்கர்கள் மற்றும் வேநாட்டு மன்னர்கள் ஆகியோரின் ஆளுகையிலிருந்து வந்தது. குறிப்பிடத்தக்க அம்சம் என்னவெனில், இப்பகுதி 1949 ஆம் ஆண்டு வரை, அதாவது, திருவாங்கூர் மாநிலம் இந்தியத் துணைக் கண்டத்துடன் இணையப்பெரும் வரை, முடியாட்சியின் கீழ் இருந்து வந்தது.

தொன்மையான காலத்தில் பொது நிருவாகம்

தொன்மையான காலத்தில், தென் இந்தியாவின் ஏனைய பகுதிகளிலுள்ளது போன்று, (உலக முழுமையும் எனக்கூட உரைக்கலாம்) பரம்பரை முடியாட்சிதான், முதன்மையான அரசியல் முறையாக இருந்து வந்தது. மரபு வழியில் ஆட்சி பீடமேறுவதிலோ, உள்நாட்டு சண்டைகள் இல்லாமலில்லை: மன்னர், தன் முனைப்பாட்சி செய்து வந்தாலும், மன்னருக்கு அமைச்சர்களும், கவிகளும், மற்ற அரச குலத்தின் மூத்தவர்களும் ஆலோசனை வழங்கி வந்தனர். அரசு நடவடிக்கைகளில் செல்வாக்கெல்லை வரையறுக்கப்பட்டிருந்தது. சமூகத்தில் வேருன்றிப் போன பழைய பழக்க வழக்கங்களுக்கு மதிப்பளிக்கப்பட்டு வந்தாலும், கட்டுமீறிய ஏகாதிபத்ய ஆட்சி நடத்தி வந்த மன்னர்கள் கூட தீங்கு செய்ய முனைந்ததில்லை. உண்மையிலேயே அந்த தலைமுறையில் வாழ்ந்த மக்கள் எதிலும் மனநிறைவு கொண்டு, மன்னர்களின் நம்பிக்கைக்குரியவர்களாகத் திகழ்வதில் பெருமை கண்டார்கள்[1].

மன்னர், ஒரு முன்மாதிரிக் குடிமகனாகப் போற்றப்பட்டார். ஆகையால் அவர், உயர்ந்த குறிக்கோள்களைப் பின்பற்ற வேண்டியவராயிருந்தார். "ஐயத்திற்கிடங்கொடலாகா"தென்ற மூதுரையினை. சொல்லிலும் செயலிலும் கடைப்பிடித்து வந்தார். இறைவனுக்கு அடுத்த இடத்தினை, மக்கள் மன்னனுக்கு அளித்தனர். பெருந்தன்மை மிகுந்த ஆதரவு, மதத்தின் பால் சகிப்புத்தன்மை, கலைத்திறனை ஊக்குவித்தல், ஆகியவை மன்னராட்சியின் உள்ளியல்பாகும். மன்னர்கள் நாளவை நடத்தி வந்தார்கள்.

மன்னர்களிடம் படிநிலை வரிசையும் இருந்து வந்தது. ஏழு மன்னர்களை ஒருவர் வெற்றி கொண்டால், அந்த மன்னருக்கு ஒரு உயர்ந்த நிலை அளிக்கப்பட்டது. பதவியிழந்த ஏழு மன்னர்களின் கீரீடங்களை வெற்றி கண்ட மன்னர் அணிந்து, வெற்றியைக் கொண்டாடினார். மிகவும் ஆற்றல் மிக்க மன்னர், அனைத்து நாடுகளையும் வென்றிட, 'திக்விஜயம்' என்ற படையெடுப்பை மேற்கொள்வதுண்டு[2].

நிருவாகம்

ஒரு நிருவாகி என்ற முறையில், "சுற்றம்" என்ற அமைப்பு மன்னருக்கு உதவி செய்து வந்தது. இந்த அமைப்பில், பலர் பிராமணர்களாகயிருந்தனர். "சுற்றம்" என்ற இக்குழு, பொது நிருவாகப் பணிகளில் மன்னருக்கு தகுந்த அறிவுரை வழங்கிவந்தது.

இதுதவிர, தலைநகரில் மன்னர், ஒரு சபை அல்லது மன்றத்தை நடத்தி வந்தார். மன்றம் என்பது உயர்நீதி மன்றமாகும்[3].

நாஞ்சில் நாடு மற்றும் வேநாட்டில், 12 மற்றும் 13-ம் நூற்றாண்டு களிலும், அதற்கு பிற்பட்ட காலங்களிலும், உள்ளூர் மன்றங்களும், கோவில் சபைகளும், அந்ததந்தத் துறைகளின் அன்றாடப் பணிகளைக் கண்காணித்து வந்தன. இது குறித்து, கி.பி.1196 ஆம் ஆண்டின் வெள்ளயினி கல்வெட்டுக்கள், கி.பி. 1209 ஆம் ஆண்டின் திருவனந்தபுரம் கல்வெட்டுகள் மற்றும் கி.பி. 1235 ஆம் ஆண்டின் மணலிக்காரா கல்வெட்டுகள் ஆகியவை சான்று பகர்கின்றன[4].

பண்டைக்காலத்தில், ஒவ்வொரு மன்னரும் திறமைமிக்க இராணுவத்தைப் பராமரித்து வந்தனர். இராணுவத்தின் தலைவர் "ஏனாதி" (கேப்டன்) என அழைக்கப்பட்டார். நான்கு வகைப் படைகளைக் கொண்ட இராணுவம் மரபார்ந்ததாகும். அதாவது தேர்ப்படை, யானைப் படை, குதிரைப்படை, மற்றும காலாட்படை ஆகியவையே அப்படைகளாகும். கத்திகள், வில், அம்புகள், ஈட்டிகள் மற்றும் வேல்கம்பு ஆகியவை போரில் பயன்படுத்தப் படும் படைக்கலங்களாகும். போர் வீரர்களை அழைத்திட, முரசு மற்றும் சங்கு ஆகியவை பயன்படுத்தப்பட்டன. மன்னரின் போர்முரசு மிகவும் புனிதமானதாகக் கருதப்பட்டது[5].

வேநாடு மன்னர்கள் காலத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தின் பொதுநிருவாகம்

கி.பி. 12 ஆம் நூற்றாண்டிலிருந்து, தற்போதைய கன்னியாகுமரிப் பகுதி, வேநாடு மன்னர்களின் ஆளுகையிலிருந்து வந்தது. தற்போதைய கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மிகச் சிறிய கிராமமான "திருவிதாங் கோடு" என்ற இடத்தைத்தான் "திருவாங்கூர்" குறிக்கிறது. வேநாடு மன்னர்களின் பூர்வீகக் காலத்தில், இந்த கிராமம் தான், மன்னர்களின் தலைநகரமாக விளங்கியது[6]. பின்னர், தற்போதைய வருவாய்க் கோட்டத்

தின், தலை நகரான பத்மநாபபுரம், தலைநகர், திருவனந்தபுரத்திற்கு மாற்றப்படும் வரை, வேநாடு மன்னர்களின் தலைநகராகத் திகழ்ந்தது.

"ஆங்கில அரசின் மேலாதிக்கத்தினால் திருவாங்கூர் அரசு எவ்வகையாலும் சிதைவுறவில்லை. ஏனெனில் திருவாங்கூர் மன்னர்கள் ஆங்கிலேய அரசுடன் சுமுகமான உறவு வைத்துக் கொண்டிருந்தார்கள்.

திருவாங்கூர் ஒரு சுயாட்சி பெற்ற மன்னர்கள் ஆண்டு வந்த மாநிலமாக இருந்த போதிலும், மாநிலத்திலுள்ள சட்டங்கள் இங்குமங்கும் ஒரு சில மாற்றங்கள் தவிர, பெரும்பாலும் சென்னை மாகாணத்தில், பயன்படுத்தப்பட்டு வந்தவையாகும்.

கி.பி. 1684-ல் ஆட்சி பீடமேறிய ராஜா ரவி வர்மா, சில ஆற்றல்மிகு நிருவாகச் சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தினார். அதாவது, உள்ளூர் தலைவர்களின் அதிகாரங்கள் சிலவற்றை திரும்பப் பெற்று, நாட்டின் பல பகுதிகளில் தனி வருவாய் முகவர்களை, அதாவது சர்வாதிகாரிகளை நியமித்தார். சர்வாதிகாரியகாரிகளின் ஆட்சி எல்லை, ஏறத்தாழ, தற்போதைய மாவட்ட ஆட்சித் தலைவரின் நிருவாக எல்லைக்குக்கீடான தாக இருந்தது.

மார்த்தாண்ட வர்மாவின் ஆட்சிக்காலத்தில், வருவாய் நிலவரித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, பின்னர் முடிக்கப்பட்டது. மாவட்ட அலகு "மண்டபத்து வாத்துக்கள்" என பிரிக்கப்பட்டது. இது, தற்போதைய வட்ட எல்லைக்கு ஒப்பானதாகும். இவை மேலும் "கெள்விகள்" என பிரிக்கப்பட்டன. முந்தையது, "கார்யகார்" என்ற அலுவலர் கட்டுப்பாட்டிலும், பிந்தையது, "பர்வாதிகார்" என்பவர் தலைமையிலும் இயங்கின[7].

மன்ரோ பிரபு என்ற ஆங்கிலேய அலுவலர், கி.பி. 1810 முதல் 1814 வரை, திருவாங்கூர் மாநில திவானாகப் பணியாற்றினார். அவர் மாநிலத்தின் பொது மற்றும் வருவாய் நிருவாகத்தில் பல மாற்றங்களை ஏற்படுத்தினார். வட்டங்களை நிறுவி, அவற்றை நிருவாகம் செய்ய, வட்டாட்சியர் பணியிடங்களை உருவாக்கினார். "கேள்விகள்" என்பதை "பகுதிகள்" என பெயரிட்டார். அவை, பர்வாதிகார்களின் கட்டுப்பாட்டிலேயே தொடர்ந்து இயங்கி வந்தன[8].

திருவாங்கூர் மாநிலம், 1949 ஆம் ஆண்டு, இந்திய துணைக் கண்டத்துடன், இணைந்த பின்னர், மாநிலம், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சர்களின் ஆளுகையின் கீழ் வந்தது. ஆனால், நிருவாக அமைப்பு, முன்னர் இருந்தது போலவே தொடர்ந்திருந்து வந்தது. கன்னியாகுமரி மாவட்டம் 1956 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. அதன்பின்னர், தமிழ்நாடு மாநிலத்திலுள்ள ஏனைய மாவட்டங்களிலுள்ளது போன்று, இம் மாவட்டத்திலும் படிப்படியாக உரிய மாற்றங்கள் முறையாக ஏற்றப்பட்டன.

மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நாகர்கோவில்

மாவட்ட ஆட்சித் தலைவர்

மாவட்டத்தில், அரசின் பிரதிநிதி என்ற முறையில், மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட நிருவாகத்தில் முதன்மையான அங்கம் வகிக்கிறார். மாவட்ட ஆட்சித் தலைவரின் அலுவல்களில் பல மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. அவரது இயல்பணிகள், பணிகளின் தன்மை, பணியாற்றும் முறை, பல்வேறு பணிகளுக்கு முன்னுரிமை அளித்தல் ஆகியவையும் நாளுக்கு நாள் பல மாற்றங்களைக் கண்டு வருகின்றன. அவர் பணியின் செயற் பாணியும் மாறி வருவதைக் காண முடிகிறது. அதிகார போக்குக் காணப்பட்டால், மக்களிடையே எதிர்ப்புணர்ச்சி உருவாகிறது. மாவட்டத்தில் அனைத்து வளர்ச்சிப் பணிகளிலும், ஒத்துழைப்பு நல்கி அவரது திறமையை நிலைப்படுத்துவதோடல்லாமல், வருவாய் நிருவாகத்தையும் சீறிய முறையில் இயக்கி வருகிறார். அனைத்து அரசு நடவடிக்கைகளிலும், பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை செயல்முறைப்படுத்துவதிலும், மக்கள் மற்றும் அவர்களது தலைவர்களின் ஒத்துழைப்பைபெற முடிகிறது. மக்கட்தொகைப் பெருக்கம், மக்களின் குறைந்தளவு தேவைகளைப் பூர்த்தி செய்தல், நிலம் மற்றும் நீரின் தேவை நெருக்கடி, இன்றியமையாப் பண்டங்கள் உள்ளிட்ட அனைத்துப்பொருட்களுக்கும், இருப்பிற்கு மேற்பட்ட தேவை, நல, வளர்ச்சி மற்றும் விதிகளுக்குட்பட்டு நிறைவேற்ற வேண்டிய பணிகளை சீராக ஆற்றுதல், சட்டம், ஒழுங்குப் பிரச்சனைகள், நலிந்தோர் மற்றும் தாழ்த்தப்பட்டோரின் மேம்பாடு, அவர்களது நலனைப் பாதுகாக்கும் பொறுப்பு, இவையனைத்தும் மாவட்ட ஆட்சித் தலைவரின் வேலையைக் கடுமையானதாகவும், சிக்கலானதாகவும் ஆக்கிவிட்டன. மாவட்ட ஆட்சித் தலைவர் எப்பொழுதும் அவசர நெருக்கடிகளுக்கு ஆளாக்கப்படுகிறார். அடிக்கடி மாவட்ட ஆட்சித் தலைவர் ஒன்றன்பின் ஒன்றாக தொடர்ந்து அரசியல் திருப்பங்களை சமாளிக்க வேண்டிய நிலையிலுள்ளார். அவரது நேரடி பொறுப்பில்லாத பல அலுவல்கள் மற்றும் பிரச்சனைகள் குறித்தும் அவர் தலையிட்டு தனது செல்வாக்கினைப் பயன்படுத்தி தீர்த்து வைக்கக் கடமைப்பட்டவராகிறார். அவர் பணிகளுக்கு முன்னுரிமை அளிப்பதும் மாற்றம் கண்டுள்ளது. வருவாய் நிருவாகம் தொடர்புள்ள அனைத்துப் பணிகளும், தற்போது பெரும்பாலும் மாவட்ட வருவாய் அலுவலரின் நேரடி பொறுப்பிற் கொணரப்பட்டு விட்டன. மாவட்ட ஆட்சித் தலைவர், எல்லாவற்றையும் உள்ளிட்ட முழுமொத்தப் பொறுப்பு வகித்துவந்த போதிலும், வருவாய் நிருவாகம் தொடர்புள்ள பணிகளை ஆற்றும் நிலை, மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், மாவட்ட வருவாய் அலுவலருக்குமிடையே நிலவி வரும், அலுவலக உறவு முறையைப் பொறுத்தே அமைகிறது[9].

தமிழ்நாடு அரசு, மக்களின் குறைகளைத் தீர்த்திட சில திட்ட வட்டமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. தங்களது குறைகளையப் பெற, மக்கள், முன்பு, மணிக்கணக்கில், கேட்பாரின்றி, அரசு அலுவலகங்களில் காத்துக் கிடந்த நிலை தற்போது மாறி வருகிறது. இது குறித்து, அலுவலர்களே தற்போது உரிய முயற்சிகளை மேற்கொள்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரும், அவரது சார் நிலை அலுவலர்களும், பொதுமக்களின் விண்ணப்பங்களைத் தலைமையிடத்திலேயே பெற்று அவர்களது குறைகளை அறிகிறார்கள். இக்குறைதீர்க்கும் நாள் பொதுவாக ஒவ்வொரு திங்கட்கிழமையன்றும் கடைப்பிடிக்கப்பட்டு, அலுவலர்களால் பொது மக்களிடமிருந்து நேரில் விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன. இது தவிர, "மனு நீதித்திட்டம்" என்றொரு சீரிய திட்டமும் செயல்முறைப் படுத்தப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட நாளில், ஒரு குறிப்பிட்ட கிராமத்தில், பல்வேறு துறைகளைச் சார்ந்த அலுவலர்களும், மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில் கூடி, அக்கிராம பொதுமக்களின் குறைகளைக் கண்டறிகிறார்கள். மற்ற துறைகளைச் சார்ந்த அலுவலர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொள்வதால், மாவட்ட ஆட்சித் தலைவர், கிராம மக்களின் குறைகளை அறிந்து, பெரும்பாலானவற்றிற்கு அங்கேயே தீர்வு காண முடிகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில், நாகர்கோவில் மற்றும் பத்மநாபபுரம் ஆகிய இரண்டு கோட்டங்கள் உள்ளன. ஒவ்வொரு கோட்டத்தையும், உதவி ஆட்சித் தலைவர் அல்லது கோட்ட ஆட்சித் தலைவர், நிருவகித்து வருகின்றனர். நாகர்கோவில் வருவாய்க்கோட்டத்தில், நாகர்கோவிலைத் தலைமையிடமாகக் கொண்ட அகஸ்தீஸ்வரம் வட்டமும், பூதபாண்டியைத் தலை நகராகக் கொண்ட தோவாளை வட்டமும் உள்ளன. பத்மநாபபுரம் வருவாய்க் கோட்டத்தில், தக்கலையைத் தலைநகராகக் கொண்ட கல்குளம் வட்டமும், குழித்துறையைத் தலைமையிடமாகக் கொண்ட விளவங்கோடு வட்டமும் உள்ளன. இவ்வட்டங்கள், பகுதி அளவில் வருவாய் ஆய்வாளர்கள், கிராம அளவில் கிராம நிர்வாக அலுவலர்கள் ஆகியோர் உதவியுடன் வட்டாட்சியர்களால் நிருவாகம் செய்யப்படுகின்றன.

இம்மாவட்டம் துவங்கப்பட்டதிலிருந்தே, முந்தைய திருவாங்கூர் - கொச்சி மாநிலத்திலிருந்தது போலவே, முழுநேர கிராம அலுவலர்கள் பணியாற்றி வருகின்றனர்.

மாவட்ட நிலையிலான அலுவலர்கள்

மாவட்டத்தின் பொது நிருவாகத்தில், மாவட்ட ஆட்சித் தலைவருக்கு, கீழ்க்கண்ட பட்டியலில் குறிப்பிட்டுள்ள பல்வேறு துறைகளைச் சார்ந்த அலுவலர்கள் உதவி புரிகின்றனர் :

அ. வருவாய்த்துறை

1. மாவட்ட வருவாய் அலுவலர், நாகர் கோவில்
2. முதுநிலை மண்டல மேலாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம், நாகர்கோவில்
3. மாவட்ட ஆட்சித் தலைவரின் தனி உதவியாளர் (பொது), நாகர்கோவில்.
4. மாவட்ட ஆட்சித் தலைவரின் தனி உதவியாளர் (கணக்கு), நாகர்கோவில்.
5. துணை ஆட்சியர், நாகர்கோவில்
6. கோட்ட ஆட்சித் தலைவர், பத்மநாபபுரம்
7. மாவட்ட வழங்கல் அலுவலர், நாகர்கோவில்
8. மாவட்ட பிற்பட்டோர் நல அலுவலர், நாகர்கோவில்
9. மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர், நாகர்கோவில்
10. உதவி ஆணையர் (கலால்) நாகர்கோவில்
11. வேளாண் வருமானவரி அலுவலர், நிலை-1, நாகர்கோவில்
12. வேளாண் வருமான வரி அலுவலர், நிலை-2, நாகர்கோவில்
13. உதவி ஆணையர் (வேளாண் வருமானவரி), நிலை-1, நாகர்கோவில்
14. மண்டல மேலாளர், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், நாகர்கோவில்
15. வட்டாட்சியர், விளவங்கோடு
16. வட்டாட்சியர், கல்குளம்
17. வட்டாட்சியர், அகஸ்தீஸ்வரம்
18. வட்டாட்சியர், தோவாளை
19. வட்ட வழங்கல் அலுவலர், விளவங்கோடு
20. வட்ட கலால் அலுவலர், கல்குளம்
21. வட்ட கலால் அலுவலர், விளவங்கோடு
22. வட்ட கலால் அலுவலர், அகஸ்தீஸ்வரம்
23. வட்ட கலால் அலுவலர், தோவாளை
24. உதவி குற்றவியல் அரசு வழக்குரைஞர், நாகர்கோவில்

ஆ. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை

1. திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகர்கோவில்.
2. மாவட்ட ஆட்சித் தலைவரின் தனி உதவியாளர் (ஊரக வளர்ச்சி), நாகர்கோவில்.

3. மாவட்ட ஆட்சித் தலைவரின் தனி உதவியாளர் (மாண்பு மிகு முதலமைச்சரின் மதிய சத்துணவுத் திட்டம்), நாகர்கோவில்.
4. கோட்ட வளர்ச்சி அலுவலர், நாகர்கோவில்
5. கோட்ட வளர்ச்சி அலுவலர், பத்மநாபபுரம்
6. ஆணையர், ஊராட்சி ஒன்றியம், மேல்புரம்
7. ஆணையர், ஊராட்சி ஒன்றியம், முஞ்சிரை
8. ஆணையர், ஊராட்சி ஒன்றியம், கிள்ளியூர்
9. ஆணையர், ஊராட்சி ஒன்றியம், தக்களை
10. ஆணையர், ஊராட்சி ஒன்றியம், திருவட்டார்
11. ஆணையர், ஊராட்சி ஒன்றியம், தோவாளை
12. ஆணையர், ஊராட்சி ஒன்றியம், குருந்தங்கோடு
13. ஆணையர், ஊராட்சி ஒன்றியம், இராசக்காமங்கலம்
14. ஆணையர், ஊராட்சி ஒன்றியம், அகஸ்தீஸ்வரம்
15. மாவட்ட பேரூராட்சி அலுவலர். நாகர்கோவில்
16. நிர்வாக அலுவலர். கன்னியாகுமரி நகரியம், கன்னியாகுமரி
17. மாவட்ட சேமிப்பு அலுவலர். நாகர்கோவில்
18. ஆணையர், நாகர்கோவில் நகராட்சி
19. ஆணையர், பத்மநாபபுரம் நகராட்சி
20. ஆணையர், குழித்துறை நகராட்சி
21. ஆணையர், குளச்சல் நகராட்சி

இ. உள்ளாட்சி நிதி மற்றும் தணிக்கைத்துறை

1. உதவி ஆய்வாளர். உள்ளாட்சி நிதிக்கணக்குகள், நாகர்கோவில்.

ஈ. மாநில வாணிகத் தொழில் திட்டத்துறை

1. ஆய்வாளர், மாநில வாணிகத் தொழில் திட்டம், நாகர்கோவில்.

உ. செய்தி மற்றும் மக்கள் தொடர்புத்துறை

1. செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர், நாகர்கோவில்.

ஊ. தொழிற் மற்றும் வணிகத்துறை

1. பொது மேலாளர், மாவட்டத் தொழில் மையம், நாகர்கோவில்.
2. தொழிற்துறை உதவி இயக்குநர், (தொழில் கூட்டுறவு), நாகர்கோவில்.
3. தொழிற்துறை உதவி இயக்குநர், நாகர்கோவில்
4. செயலர், கன்னியாகுமரி அரசு தொழில் கூட்டுறவு சங்கம், வடசேரி.

எ. கல்வித்துறை

1. முதன்மைக் கல்வி அலுவலர், நாகர்கோவில்
2. மாவட்டக்கல்வி அலுவலர், தக்கலை
3. மாவட்டக்கல்வி அலுவலர், நாகர்கோவில்
4. பெண்கள் பள்ளி ஆய்வாளர், நாகர்கோவில்
5. மாவட்ட திட்ட அலுவலர், முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகம், நாகர்கோவில்
6. உடற் பயிற்சிக்கல்வி மண்டல ஆய்வாளர், நாகர்கோவில்
7. மாவட்ட முதியோர் கல்வி அலுவலர், நாகர்கோவில்
8. பள்ளிகள் துணை ஆய்வாளர், நாகர்கோவில்
9. பள்ளிகள் துணை ஆய்வாளர், தக்களை
10. பள்ளிகள் துணை ஆய்வாளர், இராசக்ககாமங்கலம்
11. பள்ளிகள் துணை ஆய்வாளர், குளச்சல்
12. பள்ளிகள் துணை ஆய்வாளர், முஞ்சிறை
13. பள்ளிகள் துணை ஆய்வாளர், கரிங்கால்
14. பள்ளிகள் துணை ஆய்வாளர், திருவட்டார்
15. பள்ளிகள் துணை ஆய்வாளர், குழித்துறை
16. உதவிக் கல்வி அலுவலர், மேல்புரம்
17. உதவிக்கல்வி அலுவலர், முஞ்சிறை
18. உதவிக்கல்வி அலுவலர், கிள்ளியூர்
19. உதவிக்கல்வி அலுவலர், தக்கலை
20. உதவிக் கல்வி அலுவலர், திருவட்டார்
21 உதவிக் கல்வி அலுவலர், தோவாளை
22. உதவிக் கல்வி அலுவலர், குருந்தங்கோடு
23. உதவிக் கல்வி அலுவலர், இராசக்காமங்கலம்
24. உதவிக் கல்வி அலுவலர், அகஸ்தீஸ்வரம்

ஏ. வேளாண்துறை

1. வேளாண் துணை இயக்குநர், நாகர்கோவில்
2. வேளாண் துணை இயக்குநர், (விவசாயிகள் பயிற்சி மையம்), திருப்பதிசாரம்.
3. வேளாண் உதவி இயக்குநர் (பயற்சி மற்றும் பார்வையிடுதல்), நாகர்கோவில்.
4. வேளாண் உதவி இயக்குநர் (பயிற்சி மற்றும் பார்வையிடுதல்), தக்கலை.

5. வேளாண் உதவி இயக்குநர் (பயிற்சி மற்றும் பார்வையிடுதல்), குழித்துறை.
6. உதவி பயிர் வல்லுநர் (நெல்), நெல் செய்முறை துணை நிலையம், திருப்பதிசாரம்.
7. உதவி நிருவாகப்பொறியாளர் (வேளாண் பொறியியல்), மண் பாதுகாப்புத்திட்டம், நாகர்கோவில்.
8. உதவி மண் வேதியியல் வல்லுநர், மண் பரிசோதனை ஆய்வுக்கூடம், எடலக்குடி, நாகர்கோவில்
9. வேளாண் உதவி இயக்குநர் (விதை மையம்), நாகர்கோவில்.
10. வேளாண் உதவி இயக்குநர் (விதை மையம்), தக்கலை.
11. வேளாண் உதவி இயக்குநர் (எண்ணெய் விதைகள்), நாகர்கோவில்.
12. வேளாண் உதவி இயக்குநர் (பயிற்சி மற்றும் பார்வையிடுதல்), நாகர்கோவில்.
13. தோட்டக்கலை உதவி இயக்குநர் (பயிற்சி மற்றும் பார்வையிடுதல்), நாகர்கோவில்.
14. செயலர், கன்னியாகுமரி விற்பனைக்குழு, நாகர்கோவில்

ஐ. கூட்டுறவுத்துறை

1. கூட்டுறவு சங்கங்களின் கூடுதல் பதிவாளர், நாகர்கோவில்
2. மாவட்ட கூட்டுறவு தணிக்கை அலுவலர், நாகர்கோவில்
3. கூட்டுறவு சங்கங்களின் துணைப் பதிவாளர், தக்கலை
4. திட்ட அலுவலர் (ஊரக வளர்ச்சி தேசிய வங்கி மற்றும் ஐ.எஃப்), நாகர்கோவில்.

ஒ. வணிக வரித்துறை

1. உதவி ஆணையர் (வணிக வரிகள்), நாகர்கோவில்.
2. வணிக வரி அலுவலர், நாகர்கோவில் நகரம்.
3. துணை வணிக வரி அலுவலர், நாகர்கோவில் (புறப்பகுதி)
4. துணை வணிக வரி அலுவலர், தக்கலை
5. துணை வணிக வரி அலுவலர், குழித்துறை.
6. துணை வணிக வரி அலுவலர் (நகர சந்திப்பு), நாகர்கோவில்.

ஓ. தொழிலாளர்துறை

1. தொழிலாளர் உதவி ஆணையர் (இணைக்கப்படுத்தல்), நாகர்கோவில்.
2. தோட்டத் தொழிலாளர் ஆய்வாளர், நாகர்கோவில்
3. தொழிலாளர் துணை ஆய்வாளர், நாகர்கோவில்

4. தொழிலாளர் துணை ஆய்வாளர், (குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம்), நாகர்கோவில்
5. தொழிலாளர் துணை ஆய்வாளர்-1, நாகர்கோவில்
6. தொழிலாளர் துணை ஆய்வாளர்-2, நாகர்கோவில்
7. தொழிலாளர் துணை ஆய்வாளர்-3, நாகர்கோவில்
8. தொழிலாளர் துணை ஆய்வாளர்-1,தக்கலை
9. தொழிலாளர் துணை ஆய்வாளர்-2, தக்கலை
10. தொழிலாளர் துணை ஆய்வாளர், மார்த்தாண்டம்
11. மருத்துவ அலவலர் (தோட்டப்பண்ணை), நாகர்கோவில்

ஒள. மீன் வளத்துறை

1. மேற்பார்வைப் பொறியாளர், மீன் பிடிக்கும் துறைமுகத்திட்ட மையம், நாகர்கோவில்.
2. மீன் வளத்துறை உதவி இயக்குநர், நாகர்கோவில்
3. மீன் வளத்துறை உதவி இயக்குநர், (கரையோர மீன்பிடிக்கும் தொழில் நிலையம்), கன்னியாகுமரி
4. மீன் வளத்துறை உதவி இயக்குநர் (மீன் பிடிக்கும் தொழிற் பயிற்சி மையம்), குளச்சல்
5. முதன்மை நிருவாக அலுவலர், மீன் பிடிப்புத் தொழிலாளர்கள் மேம்பாட்டுக் கழகம், நாகர்கோவில்
6. நிருவாகப் பொறியாளர், சின்ன முட்டம் மீன் பிடிப்புத் துறை முகக் கோட்டம் - 2 நாகர்கோவில்
7. உதவி நிருவாகப் பொறியாளர், மீன் பிடிப்புத் துறைமுகத் துணைக் கோட்டம் - 1, நாகர்கோவில்
8. உதவி நிருவாகப் பொறியாளர், மீன் பிடிப்புத் துறைமுகத் துணைக் கோட்டம் - 2 , சின்ன முட்டம் சாலை, நாகர்கோவில்.
9. உதவி நிருவாகப் பொறியாளர், மீன் பிடிப்புத் துறை துறைமுக துணைக்கோட்டம் - 3, கன்னியாகுமரி.
10. உதவி நிருவாகப் பொறியாளர், மீன் பிடிப்புத் துறை துறைமுக துணைக்கோட்டம் - 4, கன்னியாகுமரி.

அஅ- வனத்துறை

1. மாவட்ட வன அலுவலர், கன்னியாகுமரிக் கோட்டம், நாகர்கோவில்.
2. கோட்ட வன அலுவலர், கிராம்பு தோட்டப்பண்ணைக் கோட்டம், கேசரித்தெரு, நாகர்கோவில்.
3. உதவி காடுகள் காப்பாளர், காடுகள் பாதுகாப்புப்படை, 13-ஏ, சைமன் காலனி, நாகர்கோவில்.

ஆஆ. நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணிகள்துறை

1. கோட்டப் பொறியாளர், நெடுஞ்சாலை மற்றும் ஊரக பணித்துறை, நாகர்கோவில்.
2. கோட்டப் பொறியாளர், நெடுஞ்சாலை மற்றும் ஊரக சாலைகள். நாகர்கோவில்.
3. உதவி கோட்டப் பொறியாளர், பெருவழி மற்றும் ஊரக பணித்துறை, நாகர்கோவில்.
4. உதவி கோட்டப் பொறியாளர் (பெருவழி), தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்ட துணைக்கோட்டம், தக்கலை.
5. உதவி கோட்டப் பொறியாளர் (பெருவழி மற்றும் கிராமப்புறப்பணி), தோவாலை தலைமையிடம் - பூதபாண்டி.
6. உதவி கோட்டப் பொறியாளர் (பெருவழி), புறநகர் சாலை, நாகர்கோவில்.
7. உதவி கோட்டப் பொறியாளர் (பெருவழி), புறநகர் சாலை, தக்கலை.
8. உதவி கோட்டப் பொறியாளர் (பெருவழி) (விசாரணைக்கோட்டம்), நாகர்கோவில்.
9. உதவி கோட்டப் பொறியாளர் (பெருவழி), தேசிய நெடுஞ்சாலை உதவிக் கோட்டம், நாகர்கோவில்.
10. உதவி கோட்டப் பொறியாளர் (பெருவழி மற்றும் கிராமப்புறப்பகுதிப் பணி), நாகர்கோவில்.
11. உதவி கோட்டப் பொறியாளர் (பெருவழி மற்றும் கிராமப்புறப்பகுதிப் பணி), குழித்துறை.
12. உதவி கோட்டப் பொறியாளர் (பெருவழி மற்றும் கிராமப்புறப்பகுதிப் பணி), தக்கலை.
13. உதவி கோட்டப் பொறியாளர் (பெருவழி), தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்ட துணைக் கோட்டம், நாகர்கோவில்.
14. உதவி கோட்டப் பொறியாளர் (பெருவழி), கிராமப்புற தொழிலாளர் வேலை வாய்ப்புப் பொறுப்புறுதித் திட்ட துணைக்கோட்டம், நாகர்கோவில்.

இஇ. இந்து சமய மற்றும் அறநிலைய நிருவாகத்துறை

1. உதவி ஆணையர், இந்து சமய மற்றும் அறநிலைய நிருவாகத் துறை, நாகர்கோவில்.
2. நிர்வாக அலுவலர், கூட்டிணைவாக்கப்பட்ட மற்றும் கூட்டிணைவாக்கப்படாத தேவஸ்தானம், சுசீந்திரம்.
3. கண்காணிப்பாளர், கோயில் தேர் உருவாக்கப் பயிற்சி மையம், நாகர்கோவில்.

ஈஈ. சிறைத்துறை

1. கண்காணிப்பாளர், கிளைச்சிறை, நாகர்கோவில்
2. கண்காணிப்பாளர், கிளைச்சிறை, தக்கலை
3. கண்காணிப்பாளர், கிளைச்சிறை, குழித்துறை

உஉ. மருத்துவத்துறை

1. மாவட்ட மருத்துவ அலுவலர், நாகர்கோவில்
2. கண்காணிப்பாளர், எலும்புருக்கிநோய் அரசு மருத்துவமனை, நாகர்கோவில்
3. மருத்துவ அலுவலர், தொழிலாளர் மாநில காப்பீடு மருத்துவமனை, நாகர்கோவில்
4. மருத்துவ அலுவலர், அரசு மருத்துவமனை, பத்மநாபபுரம்
5. மருத்துவ அலுவலர், அரசு மருத்துவமனை, ஆரல்வாய்மொழி.
6. மருத்துவ அலுவலர், அரசு மருத்துவமனை, குழித்துறை
7. மருத்துவ அலுவலர், அரசு மருத்துவமனை, அருமணை
8. மருத்துவ அலுவலர், அரசு மருத்துவமனை, பூதபாண்டி
9. மருத்துவ அலுவலர், அரசு மருத்துவமனை, குளச்சல்
10. மருத்துவ அலுவலர், அரசு மருத்துவமனை, அழகப்பபுரம்
11. மருத்துவ அலுவலர், அரசு மருத்துவமனை, குலசேகரம்
12. மருத்துவ அலுவலர், அரசு மருத்துவமனை, கோட்டாரம்
13. மருத்துவ அலுவலர், அரசு மருத்துவமனை, கணபதிபுரம்
14. மருத்துவ அலுவலர், அரசு மருத்துவமனை, கன்னியாகுமரி
15. மருத்துவ அலுவலர், அரசு மருத்துவமனை, தேங்காப் பட்டணம்
16. மருத்துவ அலுவலர், அரசு தொழு நோய் மையம், விளவங் கோடு
17. மருத்துவ அலுவலர், அரசு தொழு நோய் மைய அலகு, தக்கலை
18. மாவட்ட குடும்ப நல அலுவலர், நாகர்கோவில்.
19. உதவி மருத்துவ அலுவலர், அரசு ஆயுர்வேத மருத்துவ மனை, திருப்பதிசாரம்.
20. உதவி மருத்துவ அலுவலர், அரசு ஆயுர்வேத மருத்துவமனை, எடலக்குடி.
21. மாவட்ட மக்கள் நல்வாழ்வு அலுவலர், நாகர்கோவில்.
22. மாவட்ட சித்த மருத்துவ அலுவலர். நாகர்கோவில்.

ஊஊ. பொதுப்பணித்துறை

1. நிருவாகப் பொறியாளர் (பொதுப்பணித்துறை) (கடலரிப்புத் தடுப்புப் பிரிவு), நாகர்கோவில்.
2. நிருவாகப் பொறியாளர். கன்னியாகுமரிக் கோட்டம், நாகர்கோவில்.

3. உதவி நிருவாகப் பொறியாளர், பள்ளிக்கட்டிடங்கள் உதவிக்கோட்டம், குழித்துறை.
4. உதவி நிருவாகப் பொறியாளர், பட்டணங்கால் துணைக் கோட்டம், குழித்துறை.
5. உதவி நிருவாகப் பொறியாளர், நாகர்கோவில் துணைக்கோட்டம், நாகர்கோவில்.
6. உதவி நிருவாகப் பொறியாளர், தக்கலை துணைக்கோட்டம், தக்கலை.
7. நிருவாகப் பொறியாளர் (ஆநந்தனார்) கோட்டம், நாகர்கோவில்.
8. உதவி நிருவாகப் பொறியாளர். குழித்துறை
9. நிருவாகப் பொறியாளர் (திட்ட விசாரணைப் பிரிவு) நாகர்கோவில்.
10. நிருவாகப் பொறியாளர் (நிலத்தடி நீர்), நாகர்கோவில்

எஎ. காவல்துறை

1. காவல்துறைக் கண்காணிப்பாளர், நாகர்கோவில்
2. காவல்துறை கூடுதல் கண்காணிப்பாளர் (மதுவிலக்கு மற்றும் செயலாக்கப் பிரிவு), நாகர்கோவில்
3. காவல்துறை துணை கண்காணிப்பாளர், நாகர்கோவில்
4. காவல்துறை துணை கண்காணிப்பாளர், தக்கலை
5. காவல்துறை துணை கண்காணிப்பாளர், குழித்துறை
6. காவல்துறை துணை கண்காணிப்பாளர், குளச்சல்
7. காவல்துறை துணை கண்காணிப்பாளர், (காவல் துறை சேமப்படை), நாகர்கோவில்

ஏஏ. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

1. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், நாகர்கோவில்

ஐஐ. பத்திரப் பதிவுத்துறை

1. மாவட்டப் பதிவாளர். நாகர்கோவில்
2. மாவட்டப் பதிவாளர் (தணிக்கை), நாகர்கோவில்
3. மாவட்டப் பதிவாளர், மார்த்தாண்டம்
4. சார்ப் பதிவாளர், தக்கலை
5. சார்ப் பதிவாளர், வேர்கிளம்பி
6. சார்ப் பதிவாளர், கொல்லங்கோடு
7. சார்ப் பதிவாளர், தோவாளை
8. சார்ப் பதிவாளர், திருவட்டார்
9. சார்ப் பதிவாளர், மூஞ்சிறை
10. சார்ப் பதிவாளர், மணவாளக்குரிச்சி
11. சார்ப் பதிவாளர், இராசக்காமங்கலம்

12. சார்ப் பதிவாளர், பள்ளியாடி
13. சார்ப் பதிவாளர், எரணியல்
14. சார்ப் பதிவாளர், பூதபாண்டி
15. சார்ப் பதிவாளர், எடலக்குடி
16. சார்ப் பதிவாளர், அரமனை
17. சார்ப் பதிவாளர், காரிங்கல்
18. சார்ப் பதிவாளர், கோட்டாரம்
19. சார்ப் பதிவாளர், கொளச்சல்
20. சார்ப் பதிவாளர், புளுக்கல்
21. சார்ப் பதிவாளர், வடசேரி
22. கூடுதல் சார்ப் பதிவாளர் -1, பத்திரப் பதிவாளர் அலுவலகம், நாகர்கோவில்
23. கூடுதல் சார்ப் பதிவாளர் (நிலை 2), மார்த்தாண்டம்

ஒஒ. சமூக நலத்துறை

1. மாவட்ட சமூகநல அலுவலர், நாகர்கோவில்.

ஒஒ. பொருளியல் மற்றும் புள்ளியல் துறை

1. மாவட்டப் பொருளியல் மற்றும் புள்ளியல் அலுவலர், நாகர்கோவில்.

ஒளஒள. நில அளவை மற்றும் நில ஆவணங்கள்துறை

1. நில அளவை மற்றும் நில ஆவணங்கள் உதவி இயக்குநர், நாகர்கோவில்.

அஅஅ. போக்குவரத்து துறை

1. மண்டலப் போக்குவரத்து அலுவலர், நாகர்கோவில்
2. துறைமுக அலுவலர், கன்னியாகுமரி
3. சுற்றுலா அலுவலர், கன்னியாகுமரி

ஆஆஆ. கருவூலங்கள் மற்றும் கணக்குகள் துறை

1. கருவூல அலுவலர், நாகர்கோவில்
2. துணைக் கருவூல அலுவலர், தோவாளை
3. துணைக் கருவூல அலுவலர், கல்குளம்
4. துணைக் கருவூல அலுவலர், விளவங்கோடு
5. துணைக் கருவூல அலுவலர், நாகர்கோவில்
6. துணைக் கருவூல அலுவலர், கருங்கல்

இஇஇ. கதர் மற்றும் கிராமத்தொழில்துறை

1. கதர் உதவி இயக்குநர், நாகர்கோவில்
2. உதவி இயக்குநர் (கிராமத் தொழில்துறை), நாகர்கோவில்

ஈஈஈ. தமிழ் வளர்ச்சித்துறை

1. உதவி இயக்குநர், தமிழ் வளர்ச்சி (ஆய்வு), நாகர்கோவில்

உஉஉ. கால்நடைப் பராமரிப்புத்துறை

1. கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநர், நாகர்கோவில்
2. கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநர், தக்கலை
3. மாவட்ட கால்நடை பராமரிப்பு அலுவலர், நாகர்கோவில்
4. தலைமை கிராம அலுவலர், நாகர்கோவில்

நீதித் துறை

குற்றவியல்துறை, மாவட்ட நீதிபதியின் நிருவாக மற்றும் ஒழுங்குக் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது.

நீதியை நிலைநாட்ட, கீழ்குறிப்பிட்ட அலுவலர்கள், மாவட்ட நீதி பதிக்கு உதவி புரிகின்றார்கள்:

1. மாவட்ட குற்றவியல் நடுவர், நாகர்கோவில்
2. முதன்மைக் குற்றவியல் நீதிபதி, நாகர்கோவில்
3. துணை நீதிபதி, நாகர்கோவில்
4. துணை நீதிபதி, பத்மநாபபரம்
5. துணை நீதிபதி, குழித்துறை
6. மாவட்ட முன்சீஃப், நாகர்கோவில்
7. மாவட்ட உரிமையியல் நீதிபதி, குழித்துறை
8. மாவட்ட உரிமையியல் நீதிபதி, பத்மநாபபுரம்
9. குற்றவியல் முதல் வகுப்பு நடுவர், பத்மநாபபுரம்
10. குற்றவியல் இரண்டாம் வகுப்பு நடுவர், எரணியல்
11. குற்றவியல் முதல் வகுப்பு நடுவர், குழித்துறை
12. கூடுதல் குற்றவியல் முதல் வகுப்பு நடுவர், குழித்துறை
13. கூடுதல் முதன்மை குற்றவியல் நடுவர், நாகர்கோவில்
14. தனி முதல் வகுப்பு குற்றவியல் நடுவர், நாகர்கோவில்
15. இரண்டாம் வகுப்பு குற்றவியல் நடுவர், நாகர்கோவில் நகரம்
16. இரண்டாம் வகுப்பு குற்றவியல் நடுவர், நாகர்கோவில் வட்டம்
17. அலுவலக முறை உடைமைக் காப்பாளர், நாகர்கோவில்

தமிழ்நாடு அரசு நிறுவனங்கள், மற்றும் இதரதுறைகள்

1. நிருவாக இயக்குநர், அரசு இரப்பர் கழகம் லிமிடெட், நாகர்கோவில்.
2. நிருவாக இயக்குநர், அரசு இரப்பர் கழகம், தக்கலை
3. கோட்ட மேலாளார், அரசு இரப்பர் கழகம் லிமிடெட், பரளியார், கீரிப்பாறை அஞ்சல்
4. கோட்ட மேலாளர், அரசு இரப்பர் கழகம் லிமிடெட், கீரிப்பாறை அஞ்சல்
5. கோட்ட மேலாளர், அரசு இரப்பர் கழகம் லிமிடெட், காளிகேசம், கீரிப்பாறை அஞ்சல்

6. கோட்ட மேலாளர், அரசு இரப்பர் கழகம் லிமிடெட், மணலோடை பொண்மனை அஞ்சல்.
7. கோட்ட மேலாளர், அரசு இரப்பர் கழகம் லிமிடெட், கல்லார் கோட்டம், கோதையார் அஞ்சல்.
8. கோட்ட மேலாளர், அரசு இரப்பர் கழகம் லிமிடெட், கல்லார் கோட்டம், குத்தியார், கோதையார், கீத்தங்கல் அஞ்சல்.
9. கோட்ட மேலாளர், அரசு இரப்பர் கழகம் லிமிடெட், மருதம்பாறை ஊருனூரம் வயல், அருக்காணி அஞ்சல்.
10. கோட்ட மேலாளர், அரசு இரப்பர் கழகம் லிமிடெட், மைலார், சித்தார் காலனி அஞ்சல்.
11. கோட்ட மேலாளர், அரசு இரப்பர் கழகம் லிமிடெட், சித்தார், சித்தார் புதுக்குடியிருப்பு அஞ்சல்.
12. கோட்ட வளர்ச்சி அலுவலர், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி வளர்ச்சிக் கழகம் லிமிடெட், நாகர்கோவில்.
13. முன்னாள் இராணுவத்தினர் நல உதவி இயக்குநர், கன்னியாகுமரி (இருப்பிடம் - நாகர்கோவில்).
14. உதவிப் பொறியாளர், இந்திய ஊர்திகளின் அரசுப்பட்டறை, சுகாதாரத் துறை, நாகர்கோவில்.
15. பொறியர் (தானியங்கி), அரசுப்பட்டறை, நாகர்கோவில்
16. மண்ணியல் மற்றும் சுரங்கத்துறை உதவி இயக்குனர், நாகர்கோவில்.

குறிப்புகள்

1. கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி, தென்னிந்திய வரலாறு, நான்காம் பதிப்பு, சென்னை, 1976, பக். 131.
2. அதே நூற்பகுதி. பக். 132
3. அதே நூற்பகுதி.
4. கே.கே. பிள்ளை, சுசீந்திரம் கோயில், சென்னை, சென்னைப் பல்கலைக்கழகம், 1953, பக். 35.
5. கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி, முன்னர் குறிப்பிட்ட நூல், பக்.133
6. வி. நாகமய்யா, திருவாங்கூர் மாநில கையேடு, தொகுதி-1, திருவாங்கூர் அரசு அச்சகம், 1906, பக் 2.
7. இந்திய மக்கள் தொகைக் கணக்கீடு, 1961, கன்னியாகுமரி மாவட்டக் கையேடு, பக். 2.
8. அதே நூல்பகுதி.
9. எஸ்.பி. அம்ப்ரோஸ் மாவட்ட வருவாய் நிருவாகம் பற்றிய தனி நபர் குழு அறிக்கை - 1980, சென்னை, தமிழ் நாடு அரசு, 1980, பக். 31.

இயல்-11

வருவாய் நிருவாகம்

நிலவருவாய் நிருவாக வரலாறு

தொன்று தொட்டே இன்றைய கன்னியகுமரி மாவட்டம் தமிழகத்தின் மூவேந்தர்களுள் - ஒருவரான பாண்டியப் பேரரசின் ஒரு பகுதியாக விளங்கியுள்ளது. இப்பகுதியில் அரசியல் மாற்றங்கள் மிகச் சிலவே அதுவும் மிகக் குறைந்த காலகட்டத்தில் மாறியுள்ளது. நிலங்கள் யாவும் அரசுக்கே சொந்தம் என்ற பழந்தமிழ்முறை நில நிருவாகம் கன்னியாகுமரியிலும் புழக்கத்தில் இருந்தது. திருவாங்கூர் மன்னர்களின் நில நிருவாக முறை கேரளப்பகுதியில் நன்கு வெற்றி பெற்றிருந்தாலும். கன்னியாகுமரி பகுதியில் நிலையாக அம்முறையை செயல்படுத்த முடியவில்லை

தற்போது நடப்பிலுள்ள முறைகள் - இரயத்துவாரித் திட்டம் அறிமுகம்

கன்னியாகுமரி மாவட்டம் உருவான பின்னர், நில அளவை மேற்கொள்வதும் நில அளவை ஆவணங்கள் பராமரிக்கப்படுவதும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. அரசு, நில அளவை மற்றும் நில ஆவணங்கள் துறையைச் சார்ந்த ஒரு உதவி இயக்குநரை உரிய விசாரணைக்கு, அனுப்பிவைத்தது. அவரது பரிந்துரையின் அடிப்படையிலும், இப்பகுதி நில அளவை செய்யப்பட்டு 60 ஆண்டுகள் ஆனதை கருத்திற் கொண்டும், அரசு, மாவட்டம் முழுமைக்கும் புதிய நில அளவைக்கு, ஆணை பிறப்பித்தது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைமுறையிலிருந்த நில வருவாய் நிருவாகமுறை, மாநிலத்தின் ஏனைய பகுதியிலுள்ளவற்றினின்றும் முழுமையாக வேறுபட்டதாகும். தமிழ்நாட்டிலுள்ள இரயத்துவாரி பகுதியில், நிலவருவாய்த் தீர்வையானது, நிலத்தின் இருப்பிடம், உள்ளியல்பான மண் வளம், தரம், வகை ஆகியவற்றைப் பொறுத்து, நிர்ணயிக்கப்பட்டது. தற்போது மாற்றப்பட்டுள்ள கன்னியாகுமரி மாவட்ட எல்லையில், முந்தைய திருவாங்கூர் அரசு, ஒரே மாதிரியான வீதத்தில் அதாவது (ஏக்கருக்கு) ரூபாய் இரண்டு வீதம், நிலவரி விதித்தது. இந்த ஒரே மாதிரி வீதத்திற்கு பதிலாக, மண் இயல்பு, தரம், வகை மற்றும் நிலத்தின் இருப்பிடம் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு, பல்வேறு வீதத்தில், நிலவரி நிர்ணயிப்பதற்காக, 1964 ஆம் ஆண்டின், தமிழ்நாடு மாற்றப்பட்ட பகுதி (இரயத்துவாரி நிலவரித்திட்ட) சட்டம், (சட்டம் 30/64) பிறப்பிக்கப்பட்டது.

இரயத்துவாரி நிலவரித்திட்டத்தினை நடைமுறைப்படுத்திட, இப்பகுதியில் மறு நில அளவை மேற்கொள்ளப்பட்டு, அது, 1967 ஆம் ஆண்டு முடிவுற்றது. திருநெல்வேலி மாவட்ட நிலவரித்திட்ட விளம்பர

அறிவிப்பில் விவரிக்கப்பட்டிருந்த கொள்கைகளை உள்ளிட்டு, ஒரு நிலவரித்திட்ட விளம்பர அறிவிப்பு, பிப்ரவரி 14, 1966 நாளைய 297 எண் . கொண்ட அரசாணையில் (வருவாய்) பிறப்பிக்கப்பட்டது. இவ்வறிவிப்பின்படி, நிலங்கள், புஞ்சை, நஞ்சை மற்றும் மானவாரி என வகைப்படுத்தப்பட்டன. மண்கள் பல்வேறு வகுப்புகளாகவும், வகைகளாகவும் மேலும் பிரிக்கப்பட்டன. மண்களை வகைப்படுத்தும் பணி, வருவாய் ஆய்வாளர் களால், மண்களைப் பார்வையிட்டு ஆய்வு செய்த பின்னர், மேற்கொள்ளப்பட்டது. அப்பணி, நிலவரித்திட்ட துணை வட்டாட்சியர், அதன் பின்னர், உதவி நிலவரித்திட்ட அலுவலர், மற்றும் நிலவரித்திட்ட அலுவலர் ஆகியோரால் மேலாய்வு செய்யப்பட்டது. நஞ்சை நிலங்கள், நீர்ப்பாசன பாய்ச்சலாதாரங்களின் தேவைக்குக் கிடைக்கக்கூடிய நீரின் அளவிற்கொப்ப, பிரிக்கப்பட்டன. மண்ணின் வகை, தரம், வகுப்பு ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு, நிலத்திற்கான தரத்தீர்வை விதிக்கப்பட்டது. அறிவிப்புகளுக்கு , நல்ல விளம்பரம் அளித்த பின்னர் 1380 ஆம் பசலி முதல், மாற்றப்பட்ட நிலப்பகுதிகளில், இரயத்துவாரி வீதத் தீர்வை நடைமுறைப்படுத்தப்பட்டது.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கிராமங்கள் மிகவும் பெரியவை யாகவும், செயலாட்சிக்கு ஒவ்வாத வகையிலும் அமைந்திருந்தன. எனவே, அவற்றை நிருவாகம் செய்வதில், இடர்பாடுகள் எதிர்கொள்ளப்பட்டன. மிகப்பெரிய 17 கிராமங்கள், ஒவ்வொன்றும் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொன்றிற்கும் தனிக்கணக்குகள் தயார் செய்யப்பட்டன. கன்னியாகுமரி மாவட்டத்தில் தற்போதுள்ள மொத்த கிராமங்களின் எண்ணிக்கை 81 ஆகும். இவை முன்பு, 64 ஆக இருந்தன.

இப்பகுதியில், உதவியாளர்கள், மற்றும் இளநிலை உதவியாளர்கள் நிலையில் கிராம அலுவலர்கள், அடங்கிய, தனி கிராமப் பணியாளர் தொகுதி, இயங்கி வருகிறது. ஒவ்வொரு கிராமத்திற்குமான தனி அலுவலகத்தில் அவர்கள் தங்களது கணக்குகளைப் பராமரித்து வருகின்றனர். அவர்கள் மற்ற கிராமங்களுக்கு மாற்றம் செய்யப்பட உட்பட்டவராவர்.

கன்னியாகுமரி மாவட்டத்தின் மாற்றப்பட்ட நிலப்பகுதிகளில், விவசாயிகள் நில வருவாய் செலுத்துவதில், சில சிறப்பியல்புகள் காணப்பட்டன. அவர்கள், கோவில்கள் மற்றும் திருவாங்கூர் மன்னரிள் குடும்பம் தொடர்புள்ள சில சமயப்பணிகளையாற்றி வந்த இடையீட்டாளர்களின் நில வருவாயினைச் செலுத்தி வந்தார்கள். அம்மாதிரியான நடைமுறைக்கு முற்றுப்புள்ளி வைத்திட, கீழ்க்குறிப்பிட்ட சட்டங்கள் இயற்றப்பட்டு, அவை கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டத்தின் செங்கோட்டை மாவட்டத்திலும் செயல்முறைப்படுத்தப்பட்டன.

கன்னியாகுமரி பண்டாரவாகா நிலங்கள் (ஒழிப்பு மற்றும் இரயத்துவாரி மாற்றம்) சட்டம் 1965 (31/65)

திருவனந்தபுரத்திலுள்ள அருள்மிகு பத்மநாபசுவாமி கோவிலுக்குச் சொந்தமான "ஸ்ரீ பண்டாரவாகா நிலங்கள்" என அழைக்கப்பட்டுவந்த நிலங்கள், கன்னியாகுமரி மாவட்டத்தில் இருந்தன. இந்த நிலங்களினின்றும் கிடைக்கப்பட்டு வந்த வருவாய், அருள்மிகு பத்மநாபசுவாமி ஆலய நிர்வாகத்தார்களால் பராமரிக்கப்பட்டு வந்த சில கோவில்களின் பராமரிப்பிற்காகப் பயன்படுத்தப்பட்டது. இந்த நிலங்களின் மீதான உரிமைகளை, நிர்ணயிக்கப்பட்ட தேதியான மார்ச் 1,1965 முதல், கைப்பற்றவும், தொடர்புள்ள கோவில்களுக்கு நட்ட ஈட்டுத் தொகையினை வழங்கிவிட்டு, அந்தந்த நிலங்களின் குடிவார உரிமையாளர்களுக்கு இரயத்துவாரி பட்டா வழங்கவும், இச்சட்டம் வகை செய்தது. சட்டத்தின் 8(1) பிரிவின்படி, கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் யாவும் முடிக்கப்பட்டு விட்டன. இச்சட்டம், இம்மாவட்டத்தில் முழுமையாக செயலாக்கப்பட்டது.

தமிழ்நாடு மாற்றப்பட்ட நிலப்பகுதி திருப்புவாரம் பணவழங்கீடு (ஒழிப்பு) சட்டம் 1964 (32/64)

'திருப்புவாரம்' என்பது, எந்த ஒரு நிலத்திற்கும், வருவாய், அல்லது குத்தகையைப் பணமாகவோ, பொருளாகவோ, அல்லது இரண்டுமாகவோ வழங்குவதையோ, அல்லது சமய, கல்வி அல்லது அற நிலையங்கள் அல்லது தனி நபர்கள் ஆகியோருக்கு வழங்கும் வருவாயின் பகுதியையோ ஒப்படை செய்வதேயாகும். இச்சட்டம், நிர்ணயிக்கப்பட்ட தேதியான மார்ச் 1, 1965 முதல், தஸ்தீக் படி அல்லது நட்ட ஈடு அளிப்பதன் பேரில், 'திருப்புவாரம்' உரிமையை ஒழிக்க வகை செய்தது. இப்பணி, மாவட்டத்தில் முடிவடைந்து விட்டது.

தமிழ்நாடு மாற்றப்பட்ட நிலப்பகுதி ஜென்மிகானம் வழங்கீடு (ஒழிப்பு) சட்டம் 1964 (39/64)

மரபுவழி வந்த நில உரிமையாளர்களான ஜென்மிகள், ஜென்மிகானம் என அழைக்கப்பட்ட குத்தகைத்தொகையினை குடியன் உரிமையாளர் களிடமிருந்து வசூலித்து வந்தனர். குடியன் உரிமையாளர்களிடமிருந்து நட்ட ஈட்டுத் தொகையினை வசூலித்து, வழங்கிவிட்டு, நிர்ணயிக்கப்பட்ட தேதியான மார்ச், 16, 1965 முதல், இந்த உரிமையினை ஒழித்திட இச்சட்டம் வகை செய்தது.

கன்னியாகுமரி ஸ்ரீபாதம் நிலங்கள் (ஒழிப்பு மற்றும் இரயத்துவாரி மாற்றம்) சட்டம் 1973 (11/73)

கன்னியாகுமரி மாவட்டத்தில், ஸ்ரீ பார்தம் கைப்பற்று நில உரிமையாளர்கள் என அழைக்கப்படும் இடையீட்டாளர்களை ஒழித்திடவும் ஸ்ரீ பாதம் நிலங்களுக்கு இரயத்துவாரி நிலவரித்திட்டத்தினை நடை

முறைப்படுத்தவும், இச்சட்டம் வகை செய்கிறது. இம்மாவட்டத்திலுள்ள மொத்த ஸ்ரீ பாத நிலங்களின் பரப்பளவு, 20 கிராமங்களில், தோராயமாக 0.85 சதுர மைல்களாகும். இம் முழுப்பகுதியிலும், ஸ்ரீ பாதம் நிலங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டு இரயத்துவாரி நிலவரி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் நில அளவைகளின் வரலாறு

முக்கோணக் கோணச்சிறைக்கணிப்பாய்வு மற்றும் இடக்கிடப்பியல் சார்ந்த, முதல் நில அளவைகள், இந்தியாவில், ஆங்கில இராணுவத்தின் அலுவலர்களது, மேற்பார்வையில் கி.பி.1800 முதல் 1823 வரை, மேற்கொள்ளப்பட்டன.

முந்தைய திருவாங்கூர் மாநிலத்தின் நில அளவை முறை, கீழே விவரிக்கப்பட்டுள்ளது.

திருவாங்கூர்-கொச்சி பகுதியில், இடக்கிடப்பியல் சார்ந்த நில அளவை, அணுக்க முதன்மையரால், 1816 முதல் 1821 வரை, நடத்தப்பட்டது. இந்நில அளவையில், அளிக்கப்பட்ட புள்ளி விவரங்கள், யாதெனில், முக்கோண வழி அளவீட்டுப்பட்டியல்கள், மற்றும் மாவட்டங்கள், கிராமங்கள், காடுகள், மற்றும் கணவாய்கள் பற்றிய விவரங்களாகும். அவர்களது வரலாற்றுக் குறிப்புக்களில், திருவாங்கூரிலுள்ள மலைவாழ் மக்களைப்பற்றி விவரித்து, அதனை, சென்னை கலை மற்றும் அறிவியல் இதழில் (மெட்ராஸ் ஜோனல் ஆப் லிட்டரேச்சர் அண்ட் சயின்ஸ்) வெளியிட்டுள்ளார்.

கி.பி. 1884 முதல் 1906 வரை, இப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கடாஸ்ட்ரல் முறை நில அளவை செயலாக்கத்தில் பின்பற்றப்பட்ட முறைகள் கீழே தொகுத்தளிக்கப்பட்டுள்ளன:

1) எளிய முக்கோண வழி அளவீட்டு, சங்கிலித் தொடர் நில அளவை முறை;

2) இயல்பான நேர்கோடு மற்றும் குறை நிரப்புமுறை; மற்றும்

3) முக்கோணங்கள் மற்றும் குறைநிரப்புத் திட்டம்.

பலவகைப்பட்ட நில அளவை முறைகளில் தயாரிக்கப்படும் ஆவணங்களின் விவரங்கள் பின்வருமாறு:

தனிப்பட்ட நிலங்களை அளந்து, ஒவ்வொரு 'கடாஸ்ட்ரல்'* நில அளவைக்கும், வரைபடங்கள், 1 அங்குலம் = 1 சங்கிலி (1:792) மற்றும் 1 அங்குலம் = 5 சங்கிலிகள் (1:3960) என்ற அளவு வீதத்தில் தயாரிக்கப்பட்டன. கிராம வரை படங்கள், 16 அங்குலங்கள் =1 மைல் (1:3960) என்ற அளவிலும், சில விதிவிலக்கான இனங்களில், கிராம வரை படங்கள் 8 அங்குலங்கள் =1 மைல் (1:7920) என்ற அளவிலும் தயாரிக்கப்பட்டன. நில அளவையில் திட்ப நுட்பம், முதன்மையான எல்லைகளுக்கு, அதாவது,

*"கடாஸ்ட்ரல்" நில அளவை என்பது வரி விதிப்பு குறித்து வேளாண் நிலங்களை முறையாக அளந்து ஆவனங்கள் தயாரிக்கும் முறையாகும்.

கிராமம் அல்லது வட்டம் ஆகியவற்றிற்கு, '/1000 என கணக்கிட்டு கண்டறியப்பட்டது. பரப்பளவில், வேறுபாடு, ஒரு விழுக்காடு வரை அனுமதிக்கப்பட்டது. வேறுபாடு அதற்கு மேற்பட்டால், அது பரப்பளவில் பிழை அல்லது குறைபாடு எனக் கருதப்பட்டது. பரப்பளவில் பின்பற்றப்பட்ட ஆதார அலகு யாதெனில், ஏக்கர்கள் மற்றும் சென்ட்டுகள் ஆகியவையாகும். நீட்டலளகை சார்ந்த அளவுகளில், ஆதார அலகு, @லிங்க்சுகுகள் ஆகும். 'கடாஸ்ட்ரல்' நில அளவையில், தனிப்பட்ட நிலங்களை நில அளவை செய்யும் போது, நீட்டலளவை சார்ந்த பிழை, 16 அங்குலங்கள் = 1 மைல் என்ற அளவு வீதத்தில், ஏற்றுக் கெள்ளப்பட்டதில்லை. ஆனால், நில ஆவணங்கள் பராமரிக்கப்படும்போது பிழைகளில் ஓரளவு அனுமதிக்கப் பட்டன.

திருவாங்கூர் பகுதியில், 'கடாஸ்ட்ரல்' நில அளவை சார்ந்த நிலங்களின் அனைத்து உட்கோட்டமுனைகளும், நிலைத்து நிற்கக்கூடிய வகையில், கருங்கற்களால், எல்லைகள் வரையறுக்கப்பட்டன.

இப்பகுதியில் நில அளவை மேற்கொள்ளும்போது, "எவரெஸ்ட்" மற்றும் "டிரான்சிட்" வகைப்பட்ட கிடைநிலைக்கோண நிமிர்நிலைக்கோண எல்லை அளவைக் கருவி,(தியோடலைட்) (20 நொடி, அல்லது 30 நொடி என அளவுக் கருவிகாட்டும் குறிப்புடன்,) @@ கண்ட்டர் சங்கிலி, குறுக்குக்கட்டை, சமபரப்புள்ள மேசை, பட்டகைபோன்ற திசையறி கருவி (காம்பஸ்), ஆகிய கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன.

ஒவ்வொரு கிராமத்திற்கும் குறுக்கூடு வழி நில அளவை முறை வழக்கமாய் பின்பற்றப்பட்டது. நாற்கட்ட வடிவான இனமொத்த பொருள்கள், ஒவ்வொரு கிராமத்திற்கும், நிலப்படம் வரையும்போது, அளவிட்டு கணக்கிடப்பட்டன. குறுக்குக்கூடு வழி சுற்றளவுகள் கிராம முச்சந்திகளுக்கு கிடைக்கப்பெற்ற மதிப்பையொத்து, இசைவுபடுத்தப்படுகின்றன. ஒரு கிராமத்தின் முதன்மையான எல்லை வழக்கமாய் ஜி.ட்டி. நிலையத்துடன் இணைக்கப்படுகின்றன. குறுக்குக்கூடு வழித் தொலைவு, ஜி.ட்டி. மதிப்புகளுடன்,. சரிபார்க்கப்படுகின்றன. திருவாங்கூர்-கொச்சி பகுதிக்கு, சீராக பரப்பீடு செய்யப்பட்ட சிறிய ஜி.ட்டி. முக்கோண வழி அளவீட்டு, பின்னல் வலையமைவு, இருந்தமை குறிப்பிடத்தக்கது. எனவே, மைல் கணக்கில், நெடுந்தொலைவு சென்று,இடையூறுகளைக் கடந்து ஜி.ட்டி. நிலையங்களுக்கு இணைப்பினைப் பெற வேண்டியிருந்தது. ஆகையால், கணக்குமிகத் துல்லியமாக அமைந்தது. நிர்ணயிக்கப்பட்ட தேதியான நவம்பர் 1, 1956 முதல், தமிழ்நாடு மாநிலத்துடன், கன்னியாகுமரி மாவட்டம் இணைக்கப்பட்ட பின்னர், தங்களது அதிகாரங்களைப் பயன்படுத்தி, நில

@ "லிங்க்" என்பது நில அளவையில், ஏறத்தாழ, 8 அங்குலமுள்ள நீட்டலளவைக் கூறு ஆகும்.

@@ இந்த சங்கிலி அளவு முறையினை "கண்ட்டர்" என்பார் அறிமுகப்படுத்தியதால் இது "கண்ட்டர் சங்கிலி" என அழைக்கப்படுகிறது.

அளவைப் பணியைத் துவக்கிட, ஆகஸ்ட 24, 1957 நாளைய அரசாணை எண். 3379-ல் (வருவாய்த் துறை) நில அளவை அலுவலர்கள், நியமிக்கப்பட்டனர். இப்பகுதியில் முன்னர், மறு நில அளவை நடத்தப்பெறாததால், கன்னியாகுமரி மாவட்டத்தின் முழுப் பகுதியிலும், மறு நில அளவை நடத்திட, அரசு, தனது ஆகஸ்ட 1, 1958 நாளைய அரசாணை எண். 2789-ல் (வருவாய்த்துறை) ஆணை பிறப்பித்தது. பின்னர், கன்னியாகுமரி மாவட்டத்தின் அனைத்துப்பகுதியிலும் மறு நில அளவை முடிக்கப் பெற்று, தற்போது மறு நில அளவை ஆவணங்கள் பராமரிப்பி லிருந்து வருகின்றன.

நிலச் சீர்திருத்தம்

உணவுப்பொருள் உற்பத்திக்கு நிலம் முக்கிய ஆதாரமாகும். செல்வத்தின் நடுநிலை அணைவற்ற வழங்குமுறையினைத் தடுப்பது, அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கையாகும். இது, நமது மக்களிடையே சமூகப்பொருளாதார நியாயம் நிறுவப்பெற, அடிகோலுகிறது. இதைக் கருத்திற்கொண்டு, பலதரப்பட்ட நிலச்சீர்திருத்த நடவடிக்கைகள் நாடு விடுதலை பெற்ற பின்னர் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. நேர்மையான பொருளாதார முறையினைக் கொணரவே, இவை நடைமுறைப்படுத்தப்படு கின்றன. நாடு வெற்றிப் பொலிவுடன் திகழவும், உற்பத்தியைப் பெருக்கவும், இப்பொருளாதார முறை வழிவகுக்கிறது. மாண்புமிகு பிரதம மந்திரியின் 1986 ஆம் ஆண்டு, புதிய 20 அம்சப் பொருளாதாரத் திட்டத்தில் நிலச்சீர்திருத்த முறைகளை வலியுறுத்தி செயற்படுத்தும் திட்டம், ஐந்தாவது இடத்தைப்பெற்றுள்ளது.

தமிழ்நாடு நிலச்சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) சட்டம் 1961 (58/1961)

இச்சட்டம், ஏப்ரல் 6, 1960 முதல், நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. துவக்கத்தில், ஐந்து உறுப்பினர்களைக்கொண்ட ஒரு குடும்பத்திற்கான நில உச்சவரம்பு 30 தரப்படுத்தப்பட்டுள்ள ஏக்கர்களென நிர்ணயிக்கப்பட்டு, குடும்பத்தின் ஒவ்வொரு கூடுதல் உறுப்பினருக்கும் ஐந்து தரப்படுத்தப்பட்ட ஏக்கர், சலுகையாக வழங்கப்பட்டு, அவ்வாறான குடும்பத்திற்குரிய மொத்த நில உச்சவரம்பின் பரப்பளவு 60 தரப்படுத்தப்பட்ட ஏக்கர்களென நிர்ணயிக்கப்பட்டது.பின்னர், பிப்ரவரி 15, 1970 ஆம் தேதி முதல், ஐந்து உறுப்பினர் களைக் கொண்ட, ஒரு குடும்பத்தின் நில உச்சவரம்பு 15 தரப்படுத்தப்பட்ட ஏக்கர்களென நிர்ணயிக்கப்பட்டது. இதனுடன், பெண் உறுப்பினர்களுக்கு, 10 தரப்படுத்தப்பட்ட ஏக்கர்கள், அவர்கள் அந்நிலத்தினை சட்டம் துவங்கப்பட்ட நாளன்று கைப்பற்றில் வைத்திருந்தால், ஸ்ரீ தனச்சொத்தென வைத்துக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டது. எனினும், ஒரு குடும்பம், 30 தரப்படுத்தப்பட்ட ஏக்கர்களுக்கு மேல் நிலம், கைப்பற்றில் வைத்துக் கொள்ள இயலாது.

உச்சவரம்பிற்கு மேல் உபரியாக உள்ள நிலங்கள், உபரி நிலங்கள் எனக்கருதப்பட்டு, அரசால் எடுத்துக் கொள்ளப்படும். இந்த நில எடுப்பு, திருத்தப்பட்ட தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) சட்டம் 1961-ல் அறுதியிட்டுக் கூறப்பட்டுள்ள நடை முறைகளைப் பின்பற்றி, மேற்கொள்ளப்படுகிறது. உபரியாக எடுத்துக் கொள்ளப்பட்ட நிலங்கள், 1965 ஆம் ஆண்டு, நிலச்சீர்திருத்த (உபரி நிலம் பயன்படுத்துதல்) விதிகளில் கூறப்பட்டுள்ள நடைமுறைகளைப் பின்பற்றி, நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கும், மற்றோருக்கும் வழங்கப்படுகின்றன.

தமிழ்நாட்டில், நவம்பர் 30, 1988 முடிய, 1,70,763 ஏக்கர் நிலங்கள், உபரியென அறிவிக்கப்பட்டன. நவம்பர் 30, 1988 முடிய. 1.43.311 ஏக்கர் நிலங்கள் பிரித்து வழங்கப்பட்டுள்ளன. இவற்றில், 4.401 ஏக்கர் நிலங்கள் தமிழ்நாடு மாநில கூட்டுறவு பண்ணைகள் கழகத்திற்கு ஒப்படைக்கப் பட்டுள்ளன. 9.976 ஏக்கர் நிலங்கள், தமிழ்நாடு நிலசீர்திருத்த (உபரி நிலம் பயன்படுத்துதல்) விதிகளின் 13-வது விதியின்படி, பொதுப்பணிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன.

கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும், அக்டோபர் 31, 1986 வரை, 409 ஏக்கர் நிலங்கள், உபரியென அறிவிக்கப்பட்டுள்ளன. இவற்றில், 299 ஏக்கர் நிலங்கள், 244 தகுதியான நபர்களுக்கு அடைமானம் செய்யப்பட்டுள்ளன. இவற்றில், 75 ஏக்கர் நிலங்கள், அட்டவணையிட்ட வகுப்பைச் சார்ந்த 47 நபர்களுக்கு அடைமானம் செய்யப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 224 ஏக்கர் நிலங்களும், மற்ற வகையினைச் சார்ந்த 197 நபர்களுக்கு அடையாளம் செய்யப்பட்டுள்ளன.

1986-87 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலத்தில் உபரி நிலங்கள் அடைமானம் செய்ய, 2000 ஏக்கர் குறியீடு நிர்ணயிக்கப்பட்டது. அக்டோபர் 31, 1986 வரை,1,161 ஏக்கர் நிலங்கள் அடைமானம் செய்யப்பட்டுள்ளன. கன்னியாகுமரி மாவட்டத்திற்கு, 1986-87 ஆம் ஆண்டிற்கான குறியீடாக, 10 ஏக்கர் நிர்ணயிக்கப்பட்டது. இக்குறியீட்டில், நவம்பர் 30, 1988 வரை, எட்டு ஏக்கர் அடைமானம் செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு குடிவார உரிமையாளர்கள் (நியாய வாரம் வழங்கீடு)சட்டம் 1956

1956ஆம் ஆண்டு, தமிழ்நாடு குடிவார உரிமையாளர்கள் (நியாய வாரம் வழங்கீடு) சட்டப்பிரிவு மற்றும் 1961ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது பொறுப்பாட்சிகள் (வேளாண் நிலங்களின் நிருவாக ஒழுங்குமுறை) சட்டப் பிரிவு ஆகியவற்றின்படி, நில உரிமையாளருக்கு, குடிவார உரிமையாளர் வழங்க வேண்டிய நியாயவாரம், நஞ்சை நிலங்களல்லாத ஏனைய நிலங்களுக்கு இயல்பான முழுமொத்த விளைச்சலில் 33 1/3 விழுக்காட்டிலிருந்து நஞ்சை நிலங்களுக்கு இயல்பான முழுமொத்த விளைச்சல் 40 விழுக்காடு வரை, மாறுபடுகிறது. தேசிய அளவிலான கொள்கை என்னவெனில், குடிவார உரிமையாளரிடமிருந்து, நில உரிமையாளருக்குச் சேரவேண்டிய நியாயவாரம், முழுமொத்தக் கண்டு

முதலில் 25 விழுக்காட்டிற்கு மிகாமலிருக்க வேண்டுமென்பதாகும். தமிழ்நாடு குடிவார உரிமையாளர் (நியாயவாரம் வழங்கீடு) திருத்தப்பட்ட சட்டம் 1980 (தமிழ்நாடு சட்டம் 17/1980) மற்றும் தமிழ்நாடு பொது பொறுப்பாட்சிகள் (வேளாண்மை நிலங்களின் நிருவாக ஒழுங்குமுறை) திருத்தப்பட்ட சட்டம் 1980 (தமிழ்நாடு சட்டம் 18/1980) ஆகியவை, நியாயவாரத்தை, இயல்பான முழுமொத்த விளைச்சலில் 25 விழுக்காடாகக் குறைத்திட, இயற்றப்பட்டன. கரும்பிற்கு, நியாய வாரச் சட்டத்தினின்றும் விலக்களித்துப் பிறப்பிக்கப்பட்ட முந்தைய விதிமுறையும் திரும்பப்பெறப்பட்டது.

1976 ஆம் ஆண்டின் 4-வது தமிழ்நாடு சட்டத்தின்படி, 1956 ஆம் ஆண்டு, தமிழ்நாடு குடிவார உரிமைதாரர்கள் (நியாயவார வழங்கீடு) சட்டத்தின் பிரிவுகள், கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் விரிவாக்கப்பட்டன.

தமிழ்நாடு பொது பொறுப்பாட்சிகள் (வேளாண் நிலங்களின் நிருவாக ஒழுங்குமுறை) சட்டம், 1961 (சட்டம் 57/61)

பொது பொறுப்பாட்சிகள், 20 தரப்படுத்தப்பட்ட ஏக்கர்களுக்கு மேற்பட்ட நிலங்களை, பண்ணை சாகுபடியில் வைத்துக்கொள்ள இயலாது, எந்த ஒரு பொறுப்பாட்சியாவது, 20 தரப்படுத்தப்பட்ட ஏக்கர்களுக்கு மேற்பட்ட நிலங்களைத் தங்களது சொந்த சாகுபடியில் வைத்திருந்தால், அவற்றைத் தகுதியுள்ள நபர்களுக்கு குத்தகைக்கு விடுமாறு, தொடர்புள்ள பொறுப்பாட்சிக்குழு அல்லது நிலையத்திற்கு உதவி ஆணையாளரால், அறிவுரை வழங்கப்படுகிறது. ஆக, பொதுபொறுப்பாட்சியில் பண்ணை சாகுபடியில் 20 தரப்பட்டுத்தப்பட்ட ஏக்கருக்கும் அதிகமாக உள்ள நிலங்கள், நேர்மையுள்ள நபர்களுக்குக் குத்தகைக்கு விடப்படவேண்டும். சட்டத்தின் 52(1) பிரிவுப்படி, சில பொது பொறுப்பாட்சிகளின் கைப்பற்றிலுள்ள சில நிலங்களுக்கு, அரசு, சட்டத்தின் பிரிவுகளினின்றும், விலக்களிக்கிறது.

குடிவார உரிமையாளர்கள் வழங்கவேண்டிய நியாயவாரம், 1950 ஆம் ஆண்டின், தமிழ்நாடு குடிவார உரிமையாளர்கள் (நியாய வார வழங்கீடு) சட்டப்பிரிவுகளில் கூறியுள்ளவற்றிற்கு நிகரானது, அதாவது, அனைத்து இனங்களிலும் முழுமொத்த விளைச்சலில் 25 விழுக்காடாகும்.

தமிழ்நாடு வேளாண் நிலங்கள் (குடிவார உரிமைப் பதிவு) சட்டம், 1969 (தமிழ்நாடு சட்டம் 10/69)

ஐந்தாண்டுத் திட்டத்தில் எதிர்நோக்கப்படும இரு குறிக்கோள்கள் என்னவெனில்,

1. பண்டைகாலத்திலிருந்து மரபுரிமையாக வந்த நில உடைமை அமைப்புமுறையினின்றும் எழுந்த, இடர்பாடுகளைக் களைதல்;

2. நில உடைமை அமைப்பு முறையிலுள்ள சமூக அநீதி மற்றும் சுரண்டும் வர்க்கத்தை அகற்றிடுதல் மற்றும் நிலத்தை உழுது

பயிரிடுபவருக்குப் பாதுகாப்பளித்தல் மற்றும் கிராமப்புற மக்களின் அனைத்துப் பிரிவினருக்கும் சமுதாயப்படி நிலையில் சரிநிகர்வளிக்க வகை செய்தல் மற்றும் அவர்களனைவருக்கும் சம வாய்ப்பளித்தல்.

இவ்விரு குறிக்கோள்களையும் அடைந்திட, மாநிலத்தில், குடிவார உரிமை தொடர்பான சட்டங்கள் இயற்றப்பட்டன. உண்மையான குடிவார உரிமையாளர்களை சரிவர அடையாளங் கண்டால்தான், பலதரப்பட்ட குடிவார உரிமைச் சட்டங்களினாலான பயன்களை அவர்கள் அடையமுடியும். எனவே, உண்மையான குடிவார உரிமையாளர்களைக் கண்டறிந்து, அவர்களுக்கு அவர்கள் பயிரிடும் நிலங்கள் மீதான அவர்களது உரிமைகளை முறையாகப்பதிவு செய்தாலன்றி. அரசால் இயற்றப்பட்ட சட்டங்களினால் கிடைக்கும் பயன்களையும், தொடர்ந்து வேளாண் உற்பத்தியைப் பெருக்கிட நிதி உதவியையும் அவர்கள் அடைந்திட இயலாது. எனவே, 1969 ஆம் ஆண்டு, தமிழ்நாடு, வேளாண் நிலங்கள் (குடிவார உரிமைப்பதிவு) சட்டம் இயற்றப்பட்டது. மாநிலத்திலுள்ள வேளாண் நிலங்களின் குடிவார உரிமையினைப் பதிவு செய்து, அதற்கான ஆவணங்கள் தயார் செய்து பராமரித்திட, இச்சட்டம் வகை செய்கிறது. குடிவார உரிமையாளர்களுக்கு அவர்கள் உழுது சாகுபடி செய்யும் நிலங்களின் மீதான உரிமைகளைப் பாதுகாத்திட, ஒரு முழுமையான குடிவார உரிமை ஆவணம் தயார் செய்திடவும் இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது. நிலவரித்திட்ட செயலாக்கம் நடைமுறையிலுள்ள சில கிராமங்கள் தவிர, மாநில முழுவதிலும், இச்சட்டம் செயல்முறைப்படுத்தப்பட்டுள்ளது. குடிவார உரிமைப்பதிவு ஆவணம், பதிவு அலுவலரால் (தனி வட்டாட்சியர்) தயார் செய்யப்பட்டு, *தமிழ்நாடு அரசிதழ்* மற்றும் தொடர்புள்ள மாவட்ட அரசிதழ் இரண்டிலுமே பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. இந்த நிலையான ஆவணத்தில் ஒரு படி, தொடர்புள்ள வட்டாட்சியர் அலுவலகங்களில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. இது, குடிவார உரிமையாளர்களின் பார்வைக்கும் அவ்வப்போது, அளித்து, திரும்பப்பெறப்படுகிறது. குடிவார உரிமையாளர்களின் விண்ணப்பத்தின் பேரில், அவர்களுக்கு இவ்வாவணத்தின் சான்றளிக்கப்பட்ட படியும், தேவைப்படும்போது, வழங்கப்படுகிறது.

தனி அலுவலர்களால் தயார் செய்யப்பட்ட ஒப்புதலளிக்கப்பட்ட குடிவார உரிமைப்பதிவு ஆவணங்கள், *தமிழ்நாடு அரசிதழில்* பிரசுரம் செய்யப்பட்டு, வட்ட அலுவலர்களுக்கு, தொடர்ந்து பராமரித்துவருவதற்காக ஒப்படைக்கப்பட்டுள்ளன. வட்ட அலுவலர்களும் (வட்டாட்சியர்கள்) சட்டத்தின் 2(7) பிரிவுப்படி, பதிவு அலுவலர்களாக, அறிவிக்கப் பட்டுள்ளார்கள். அவர்கள் தற்போது, சட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறார்கள். ஒப்புதலளிக்கப்பட்ட குடிவார உரிமைப் பதிவு ஆவணங் களில், அவற்றிலுள்ள தகவல்களிலொன்றை நீக்கவும், புது தகவல்கள்

சேர்க்கவும், மற்றும் மேல் முறையீடு, திருத்தப்பட்ட முறையீடு ஆகியவற்றிற்கும் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. 1969 ஆம் ஆண்டின் தமிழ்நாடு வேளாண் நிலங்கள் (குடிவார உரிமைப்பதிவு) சட்டப்படியான குடிவார உரிமைப்பதிவு ஆவணம், சரிவர தயார் செய்யப்படவில்லையென, பரவலாக குற்றச்சாட்டுகள் எழும்பின. எனவே, இப்பணியினை மேம்படுத்த, ஒரு ஆலோசனைக்குழுவினை நிறுவி, அதில், அலுவலக சார்பற்றோரை இணைத்து, அவர்களது ஆலோசனைகளை அவ்வப்போது பெறவும் முடிவு செய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, 1981 ஆம் ஆண்டு, தமிழ்நாடு வேளாண் நிலங்கள் (குடிவார உரிமைப்பதிவு) திருத்தப்பட்ட சட்டம் (தமிழ்நாடு சட்டம் எண் 45/81) பிறப்பிக்கப்பட்டது. அதன்படி, குடிவார உரிமைப்பதிவு ஆவணத்தினைத் தயார் செய்வதிலும், பதிவு அலுவலர்கள், அவர்களது அலுவல்களைத் திறம்பட ஆற்றிடவும், அவ்வப்போது அவர்களுக்கு ஆலோசனை வழங்கிட, வட்ட நிலையில், ஆலோசனைக் குழுக்களை, அரசு, நிறுவியுள்ளது. அட்டவணையிட்ட வகுப்பினர், அல்லது அட்டவணையிட்ட மலைவாழ் குடியினர் ஆகிய வகுப்பினரைச் சேர்ந்த ஒரு நிலமற்ற வேளாண் தொழிலாளர், ஒரு குடிவார உரிமையாளர் மற்றும் மூன்று சமூக ஊழியர்கள் ஆகியோர் இக்குழு உறுப்பினர்களாவர். இக்குழு, தர்மபுரி, திருநெல்வேலி கட்டபொம்மன், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், மதுரை மற்றும் திண்டுக்கல் அண்ணா மாவட்டங்களிலுள்ள சில வட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இம்மாவட்டங்களின் பிற வட்டங்களிலும் மற்றும் இதர மாவட்டங்களிலும் இக்குழுவினை அமைக்க, பரிசீலனையிலிருந்து வருகிறது. கன்னியாகுமரி மாவட்டத்திலும் விரைவில், இக்குழுக்கள் வட்ட அளவில் அமைக்கப்பட விருக்கின்றன.

தமிழ்நாடு குடியிருப்பு உடைமை கைப்பற்றுபவர் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) சட்டம் 1961 (சட்டம் 38/1961)

மார்ச் 31, 1959 ஆம் நாளன்று, குடியிருப்புகளில் தங்கி வாழ்ந்து வரும், உடைமை கைப்பற்றுபவரை, நில உரிமையாளர்கள், குடியிருப்பினின்றும் வெளியேற்றுவதைத் தடுத்து, அவர்களது நலன் காத்திட, இச்சட்டம், வகை செய்கிறது. சட்டத்தின் 3(1) பிரிவின்படி, குடியிருப்பில் தங்கி வாழ்ந்து வரும் ஒருவரை, சட்டப் பிரிவில் கூறியுள்ள விதிகளின்படியல்லாது, வேறு வகையில் வெளியேற்றிட இயலாது. துவக்கத்தில், சட்டத்தின் காலவரை மூன்றாண்டு காலமாக இருந்தது. இக்காலவரை, அப்போதைக்கப்போது, நீடிக்கப்பட்டது. அரசு, பின்னர் இச்சட்டத்தினை நவம்பர் 29, 1973 முதல் பின்னோக்கிய பயனளித்து நிறைவேற்ற முடிவெடுத்து, அதனைத் தொடர்ந்து, 23/1975 சட்டத்தை நடைமுறைப்படுத்தியது.

தமிழ்நாடு குடியிருப்பு உடைமை கைப்பற்றுபவர் (உடைமையுரிமை வழங்கல்) சட்டம் 1971 மற்றும்
தமிழ்நாடு கிராமப்புறக்கைவினைஞர் (குடியிருப்பு உடைமையுரிமை வழங்கல்) சட்டம் 1976

விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் கிராமப்புற கைவினைஞர்கள், ஆகியோருக்கு அவர்களது வீட்டு மனைகளின் மீது, குடியிருப்பு உடைமையுரிமை வழங்கப்பெற இச்சட்டங்கள் வகை செய்கின்றன. குடியிருப்புகள், அவர்களுக்கு இலவசமாகவும், எவ்வித வில்லங்கங்களுமின்றியும் அடைமானம் செய்யப்படுகின்றன. நில உரிமையாளருக்கு, அரசால் அவ்விடத்திற்கான நட்ட ஈட்டுத் தொகை வழங்கப்படுகிறது. 1971 ஆம் ஆண்டின் குடியிருப்பு சட்டத்தின்படி, இவ்விடத்தைப் பராதீனம் செய்வது, 10 ஆண்டுகளுக்கு தடை செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாநிலத்தில், நவம்பர் 30, 1988 வரை, 1,80,217 நபர்களுக்கு குடியிருப்புப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. இவர்களில், அட்டவணையிட்ட வகுப்பினர் 99,010 நபர்களும், அட்டவணையிட்ட மலைவாழ் வகுப்பினர் 2,209 நபர்களும், பிற்பட்ட வகுப்புகளைச் சார்ந்தோர் 46,973 நபர்களும், இதர, வகுப்புகளைச் சார்ந்தோர் 32,025 நபர்களும் உள்ளனர்.

கன்னியாகுமரி மாவட்டத்தில், நவம்பர் 30, 1988 வரை, 944 நபர்களுக்குப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. இவர்களில், அட்டவணையிட்ட வகுப்பினர், 269 நபர்களும், பிற்பட்ட வகுப்பினர் 291 நபர்களும், மற்றும் இதர சமுதாய வகுப்பைச் சார்ந்தோர் 434 நபர்களும் உள்ளனர்.

1976 ஆம் ஆண்டின் தமிழ்நாடு (கிராமப்புற கைவினைஞர்கள் குடியிருப்பு உடைமையுரிமை வழங்கல்) சட்டத்தின்படி, இதே போன்றதொரு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த சட்டத்தின்கீழ், நவம்பர் 30, 1988-ந் தேதிப்படி, மாநிலத்தின் முழுவதிலும், 407 நபர்களுக்குப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. அவர்களில், அட்டவணையிட்ட வகுப்பைச் சார்ந்தோர் 43 நபர்களும், அட்டவணையிட்ட மலைவாழ் வகுப்பினர் 15 நபர்களும், பிற்பட்ட வகுப்பைச் சார்ந்தோர் 223 நபர்களும், ஏனைய சமுதாய வகுப்பைச் சார்ந்தோர் 122 நபர்களும் உள்ளனர்.

வேளாண்துறையில் வேளாண் தொழிலாளர்களின் ஊதியம் - 1948 ஆம் ஆண்டின் குறைந்த ஊதிய நிர்ணயச்சட்டம்

வேளாண் பணி மற்றும் அதனைச் சார்ந்த பணியினையாற்றும் தொழிலாளர்களுக்கு, குறைந்த அளவு ஊதியங்கள் நிர்ணயம் செய்யுமுகத்தான், 1948 ஆம் ஆண்டின் குறைந்த ஊதிய நிர்ணய சட்டப்பிரிவுகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. கிழக்கு தஞ்சாவூர் மாவட்டப் பகுதியில் ஒரு சில வட்டங்கள் தவிர, தமிழ்நாடு மாநிலத்தின் மற்ற அனைத்துப் பகுதிகளிலும் இச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. கிழக்கு தஞ்சாவூர் பகுதியில், 1969 ஆம் ஆண்டு, தமிழ்நாடு வேளாண் தொழிலாளர்கள் நியாய ஊதியச்சட்டம் நடைமுறையிலிருந்து வருகிறது.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், கோட்ட ஆட்சியாளர்கள், வட்ட ஆட்சியாளர்கள், துணை வட்டாட்சியர்கள் மற்றும் வருவாய் ஆய்வாளர்கள் ஆகியோர், 1948ஆம் ஆண்டு குறைந்த ஊதிய நிர்ணயச் சட்டத்தின் 19(1) பிரிவின்படி, ஆய்வாளர்களாக நியமிக்கப் பட்டுள்ளார்கள். இச்சட்டத்தினைத் தீவிரமாக செயல்முறைப்படுத்த, ஒவ்வொரு மாதமும், அரசு மட்டத்தில், பணி முன்னேற்றம் ஆய்வு செய்யப்படுகிறது.

வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த பணிகளையாற்றும் தொழிலாளர்களுக்குக் குறைந்த ஊதியங்கள் அப்போதைக்கப்போது அரசால் நிர்ணயம் செய்யப்படுகிறது. நடந்த ஏப்ரல் 5, 1983 முதல், தமிழ்நாடு அரசு, கீழ்க் குறிப்பிட்ட ஊதிய வீதங்களை, ஏப்ரல் 2, 1983 நாளைய 866 எண். கொண்ட (தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை) அரசாணையில் நிர்ணயித்துள்ளது:

தொடர் எண்.	*பணி விவரம்*	*ஊதிய வீதம்* (ஒரு நாளைக்கு)	*பணிநேரம்* (ஒரு நாளைக்கு)
1.	தானே ஏர், கலப்பை மற்றும் உழவு மாடுகள் ஆகியவற்றைக் கொணர்ந்து, நிலங்களை உழுவதில் ஈடுபடும் வேளாண் தொழிலாளர்கள்	18.00	5 மணிநேரம்
2.	தானே ஏர், கலப்பை மற்றும் உழுவு மாடுகள் ஆகியவற்றைக் கொணராமல், நிலங்களை உழுவதிலீடுபடும் வேளாண் தொழிலாளர்கள	11.00	5 மணிநேரம்
3.	நெல் அறுவடையிலீடுபடும் தொழிலாளர்கள் (அல்லது) முழுமொத்த விளைச்சலில், தொழிலாளரின் பங்கான 8–ல் 1 பங்கு நெல்லின் ரொக்க மதிப்போ இதில் எது அதிகமோ, அந்தத் தொகை.	11.00	7 மணிநேரம்
4.	நெல் அல்லாத, ஏனைய பயிர்களறுவடையிலீடுப்பட்டுள்ள தொழிலாளர்கள்	11.00	7 மணிநேரம்
5.	நாற்று நடுதல் மற்றும் களையெடுத்தல் ஆகிய பணிகளிலீடுபடும் தொழிலாளர்கள்	8.00	7 மணிநேரம்
6.	ஏனைய வேளாண் பணியாற்றுவோர் (நிலங்களையும், நிலங்களின் கரைகளையும், சீராக்குதல், மரமேறுதல் போன்றவை).	10.00	7 மணிநேரம்
7.	பற்றுதலுள்ள தொழிலாளர்/வீட்டுப் பணியாற்றும் தொழிலாளர்	210.00 (ஒருமாதத்திற்கு)	7 மணிநேரம்

நிலங்களைப் பயிராய்வு செய்யும் போது, மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட வருவாய் அலுவலர், கோட்டாட்சித் தலைவர்கள். வட்டாட்சியர்கள் ஆகியோர், திடீரென கூர் ஆய்வு விசாரணைகளை நடத்தி, விவசாயத் தொழிலாளர்களுக்கு, அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட ஊதியம் வழங்கப்படுகிறதாவென சரிபார்ப்பார்கள். எந்த நில உரிமையாளராவது, அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட ஊதியத்திற்குக் குறைவாக ஊதியம் வழங்குவதாக அறிந்தால், உடனடியாக, வேறுபாட்டுத் தொகையினை அந்த இடத்திலேயே நில உரிமையாளர், தொழிலாளருக்கு வழங்கிட நடவடிக்கை மேற்கொள்வார்கள். இந்நடவடிக்கை, அரசு நிர்ணயித்த ஊதியத்தை விட, குறைந்த ஊதியமளிக்கும் நில உரிமையாளர்க்கு ஒரு அச்ச உணர்வை ஏற்படுத்தி, அவர்கள் தவறாது அரசு நிர்ணயம் செய்யும் ஊதியத்தை வழங்க வகை செய்கிறது.

இத்திட்டத்தினை செவ்வனே நடைமுறைப்படுத்திட, அரசு தீவிர விளம்பரம் செய்கிறது. அரசு நிர்ணயித்துள்ள ஊதியத்திற்கும் குறைவாக ஊதியம் வழங்கும் நில உரிமையாளர்களை அடையாளம் கண்டு, உரிய தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும், குறைந்த ஊதிய நிர்ணயச்சட்டத்தை செயலாக்கம் செய்யும்போது எதிர்கொள்ளும் இடர்பாடுகளைக் களையவும், கிராம அளவில், மக்கள் குழுக்களும், கிராமக் குழுக்களும் பணியாற்று கின்றன.

வேளாண் தொழிலாளர்களின் சமூகப் பொருளாதார நிலையினைக் கண்டறியவும், ஏற்கனவே அரசு நிர்ணயித்துள்ள ஊதியத்தினைத் திருத்தியமைக்க கருத்துக்களை வழங்கவும், தமிழ்நாடு அரசு ஒரு குழுவினை அமைத்துள்ளது. இக்குழு, மாநிலத்தின் பல மாவட்டங்களி லுள்ள முக்கியப் பகுதிகளில் சுற்றுப்பயணம் செய்து, பகுதிப் பிரதிநிதிகள், நில உரிமையாளர்கள், வேளாண் தொழிலாளர்கள், போன்றோரிடம் கலந்துரையாடி, அவர்களிடமிருந்து உரிய தகவல்களையும், புள்ளி விவரங்களையும் சேகரித்துள்ளார்கள். இக்குழு அரசிற்குத் தனது அறிக்கையினை விரைவில் அனுப்பிவைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு, குடிவார உரிமையாளர்கள் பாதுகாப்புச்சட்டம்

எந்த குடிவார உரிமையாளரையும் நிலத்தைவிட்டு, நிலஉரிமையாளர் வெளியேற்றக்கூடாதெனவும், குடிவார உரிமையாளர். குத்தகைத் தொகையினை வழங்காமலிருந்தாலோ, நிலத்திற்குக் கேடு விளைவிக்கும் செயலிலீடுபட்டாலோ, நிலத்தில் பயிரிடாமலிருந்தாலோ தான், அவரை, வெளியேற்றும் வினா எழுகிறதெனவும் இச்சட்டத்தில் அறிவிக்கப்பட்டுள் ளது. இச்சட்டத்தைப் பின்பற்றாததால் எழும் வழக்குகள் முன்னர், கோட்ட ஆட்சித் தலைவரால் தீர்த்து வைக்கப்பட்டன. ஆனால், அவர்கள் பொதுநிருவாகம் தொடர்பான பல அலுவல்களை மேற்கொள்ள வேண்டி யிருந்ததால், இப்பணியில், நல்ல முன்னேற்றம்காட்ட இயலவில்லை; தற்போது இப்பணிகளை கவனிப்பதற்காகவே, 11 வருவாய் நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டு, அவை 11 துணை ஆட்சித் தலைவர்களின் தலைமையில்

இயங்கி வருகின்றன. 4/1976 எண். கொண்ட தமிழ்நாடு சட்டத்தின்படி, 1955 ஆம் ஆண்டு, தமிழ்நாடு குடிவாரயுரிமையாளர்கள் பாதுகாப்புச் சட்டம், கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் விரிவாக்கப்பட்டுள்ளது.

பூதானம் மற்றும் கிராமதானம்

பூதான மற்றும் கிராமதான இயக்கம், சர்வோதயா கருத்துத் தொகுதியை மையமாகக்கொண்ட, ஒரு சமூக-அரசியல் இயக்கமாகும்.மற்ற இயக்கங்களின் நடவடிக்கைகளைப் போலல்லாது, இது நிலத்தின் உரிமையில்காணும் ஒப்பின்மையை, வன்முறையற்ற மற்றும் வற்புறுத்தலற்ற வழிகளில் களைகிறது. 'பூதானம்' என்பது, நில உரிமையாளர்கள் தாமே முன்வந்து, தங்களது நிலத்தை நிலமற்ற எழை, எளியோருக்குப் பகிர்ந்தளிக்குமுகந்தான், இலவசமாக மனமுவந்து அளிக்கும் அரிய செயலாகும். 'கிராமதானம்' என்பது, 'பூதானத்தில் திட்டமிட்ட விரிவாக்கமே யாகும். அதாவது பூதானத்தில் பெற்ற நிலங்களுக்குப் பொறுப்பாட்சி ஏற்படுத்துவதாகும், மேலும், மாநிலத்தின் உரிமையை ஒட்டுமொத்தமாக கிராம சமுதாயத்திற்கு மாற்றுவதாகும்.

செயல்முறை விளக்கம்

1959 ஆம் ஆண்டின் பூதானச் சட்டத்தின்படி, தமிழ்நாடு அரசு, பூதான மற்றும் கிராமதான செயலாக்கத்திற்கும், பூதானத்தில் கிடைக்கப் பெற்ற நிலங்களை நிருவாகம் செய்வதற்கும், நிலங்களை நிலமற்ற ஏழைகளுக்கு வழங்குவதற்கும் சட்டபூர்வ அங்கீகாரமளித்தது.

கன்னியாகுமரி மாவட்டத்தில், 90 ஏக்கர் நிலங்கள் கீழ்க்குறிப்பிட்ட நான்கு வட்டங்களில், அவற்றின் எதிரே கண்டவாறு, பூதானமாக நன்கொடையளிக்கப்பட்டுள்ளன

தொடர் எண்.	*வட்டம்*	*இனங்கள்*	*பரப்பளவு ஏ.செ.*
1.	கல்குளம்	75	30-00
2.	அகஸ்தீஸ்வரம்	60	20-00
3.	விளவங்கோடு	50	31-00
4.	தோவாளை	10	10-00
		195	91-00

இந்நிலங்கள், 198 நிலமற்ற ஏழைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. அவர்களில், 173 பேர்கள், அட்டவணையிட்ட வகுப்பினர் மற்றும் மலை வாழ் வகுப்பினர் ஆவர்.

இம்மாவட்டத்தில், கீழ்க்கண்ட இரண்டு நில உரிமையாளர்கள், 10 ஏக்கர்களுக்கு மேற்பட்ட நிலங்களை பூதான இயக்கத்திற்கு நன்கொடையாக அளித்துள்ளனர்.

1.	திரு.உசேன் மரிக்கார்,மரிக்கார் இல்லம், திருவனந்தபுரம்	ஏழு தேசம் கிராமம், புல- எண்கள் 231/2 மற்றும் 234/2 (11.92 ஏக்கர்கள்)

2.	திரு.கே. நாராயண பிள்ளை, எலங்காத் இல்லம், நெய்யூர் மேற்கு அஞ்சல்	மேக்கோடு கிராமம் புல - எண். 695/1 (10.96 ஏக்கர்கள்)

திருவனந்தபுரத்தைச் சார்ந்த, திரு. உசேன் மரிக்கார் அவர்களால் பூதான இயக்கத்திற்கு நன்கொடையளிக்கப்பட்ட நிலம், அனைத்து சமுதாயப் பிரிவைச் சார்ந்த 42 நிலமற்ற ஏழைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது; அவர்களில் முதன்மையானோர் மீனவர்கள் ஆவர். இப்பயனைடைந்தோர், தங்களது நிலங்களில் பகுதிகளில் தென்னை பயிரிட்டுள்ளனர். இந்நிலங்களில், ஏறத்தாழ 1200 தென்னங்கன்றுகள் பயிரிடப்பட்டுள்ளன. அவற்றிற்கு நீர் பாய்ச்சிட, வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் அந்நிலத்திலேயே ஒரு பாசனக் கிணறு வெட்டப்பட்டுள்ளது. இந்நிலம் கடற்கரையிலமைந்துள்ளதால், இத்தென்னங்கன்றுகளுக்குத் தூய நீர் தேவைப்படுகிறது. தற்போது, இக்கிணற்றிலுள்ள நீரைக்குழாய் மூலம் இணைப்பு வாய்க்கால்கள் வழியாக கன்றுகளுக்குப் பாய்ச்சி, இதனை சர்வசேவா பண்ணையின் கீழ், ஒரு சீர்மைப் பண்ணையாக உருவாக்கிட, மதுரையிலுள்ள தமிழ்நாடு பூதான யக்ஞ வாரியம் திட்டமிட்டு வருகிறது. நிலபூதான வாரிய அலுவலர்களின் நேரடி மேற்பார்வையில், இப்பணி விரைவில் துவங்கப்படவிருக்கிறது.நெய்யூர் தெற்கு, திரு.கே.நாராயண பிள்ளை அவர்களால், பூதான இயக்கத்திற்கு நன்கொடையளிக்கப்பட்டுள்ள நிலம், 11 நிலமற்ற ஏழைகளுக்கு வழங்கப்பட்டு, அவர்கள் அதனில் இரப்பர் மரங்களைப் பயிரிட்டுள்ளனர்.

திருவட்டார் கிராமத்தின் புல எண். 826-ல் அடங்கிய 1 ஏக்கர் பரப்பளவுள்ள பூதான நிலம் திருவட்டார் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒப்படைக்கப்பட்டு, அந்நிலத்தில் தற்போது ஊராட்சி ஒன்றிய அலுவலகம் கட்டப்பட்டு இயங்கி வருகிறது. அதேபோன்று, அதே கிராமத்தின் புல - எண். 851/1 ஏ என்ற நிலத்தில் 5 சென்ட்டு, நிலம், பால்வாடி கட்டுவதற்காக, திருவட்டார் ஊராட்சி ஒன்றியத்தினிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கிராமதானம்

ஒரு கிராமதான கிராமத்தில், கிராமதானத்திற்கு நன்கொடையளிக் கப்பட்ட நிலமென்பது, பூதான இயக்கத்திற்கு நன்கொடையளிக்கப்பட்டதும், 19(1) பிரிவுப்படி, கிராமத்தால் அமைக்கப்பட்டுள்ள சர்வோதயா பஞ்சாயத்திற்கு வழங்கப்பட்டதுமாகும். ஒரு வருவாய் கிராமம் அல்லது கிராமங்கள் அல்லது பகுதி அல்லது பகுதிகளில், (1) குடியிருப்போரில் 3-ல் 2 பகுதியினருக்கு குறையாதோர் அல்லது அப்பகுதியில் நிலங்களைப் பெற்றவர்கள், தங்களது அனைத்து நிலங்களையும் கிராமதானத்திற்கு நன்கொடை அளித்திருந்தால் அது 'கிராமதான' கிராமம் என அழைக்கப்படும்.

அல்லது

(2) அந்த கிராமம் அல்லது கிராமங்கள், அல்லது பகுதி அல்லது பகுதிகள் ஆகியவற்றில் குடியிருக்கும் நபர்கள், தங்களுக்குச் சொந்தமான நிலங்களில், பாதி பரப்பளவினை நன்கொடையாக அளித்தாலோ, அப்பகுதிகளில் நிலங்களைப் பெற்றுள்ளோர், தங்களது நிலங்களனைத் தையும் நன்கொடையளித்தாலோ, அப்படிப்பட்ட கிராமத்தினை அரசு ஒரு

தனி அறிவிப்பின் மூலம், "கிராமதான கிராமம்" என விளம்பரப்படுத்தும். ஒரு கிராமதான கிராமத்தில் அமைக்கப்பட்ட பஞ்சாயத்து, "சர்வோதயா பஞ்சாயத்து" என அழைக்கப்படும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில், முதன்முதலில் நன்கொடையளிக்கப் பட்டு கிராமதான சட்டப்படி, "கிராமதான கிராமங்கள்" என அறிவிக்கப் பட்டவை, அதஸ்தீஸ்வரம் வட்டத்திலுள்ள, கோட்டாரம் கிராமத்தின் குக்கிராமமான பனிக்குளம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய கிராமங்களாகும். இவ்விரு கிராமங்களிலும், 36 பட்டாதாரர்கள் அறிவிப்புப்படிவம் 1-ல் கையெழுத்திட்டுள்ளார்கள். கிராமதானத்திலடங்கிய நிலப்பரப்பளவு 9.64 ஏக்கர்களாகும். இக்குக்கிராமத்தில் வசிப்போரனைவரும், ஏறத்தாழ ஆதிதிராவிடர் இனத்தை சார்ந்தவர்களோயாகும்.

வளர்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில், மற்ற கிராமங்களைவிட, கிராமதான கிராமங்களுக்குத்தான் முன்னுரிமை அளிக்கப்படுகிறது. அவ்வாறாக, நரிக்குளம் ஆதிதிராவிடர் காலனி என்ற கிராமதான கிராமம், முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. அதனுடைய தேவைகள் அறியப்பட்டு, அப்பணிகளை செயலாற்ற உரிய விவரங்கள் அகஸ்தீஸ்வரம் ஊராட்சி ஒன்றிய ஆணையருக்கு அளிக்கப்பட்டுள்ளன.

வருவாய் ஆதாரங்கள்

மாவட்டத்தின் முக்கியமான வருவாய் ஆதாரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

நிலவருவாய்

சில காலத்திற்கு முன்பு வரை, நிலவருவாய் அரசின் முக்கிய ஆதார வருவாயாக இருந்தது. வேளாண் வருமான வரி, மற்றும் வணிக வரி ஆகியவை நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர், இந்த பெருமை படைத்த இடத்தை, நில வருவாய் இழந்து விட்டது. எனினும், சுற்றி வளைத்துச் சொன்னால், வேளாண் நிலம்தான், நமது பொருளாதாரத்திற்கு ஈடு கொடுக்கிறது. எனவே, வருவாய் ஆதாரங்களைப் பற்றி ஆய்வு செய்யத்துவங்குமுன் நில வருவாயைப்பற்றி விவரிப்பதே பொருத்தமான செயலாகும்.

பசலி 1359 முதல் 1395 வரை, மாவட்டத்தில் வசூலிக்கப்பட்ட நில வருவாய் பற்றிய விவரங்கள் பட்டியல்-1-ல் அளிக்கப்பட்டுள்ளன.

1391 ஆம் பசலியை ஒப்பு நோக்கும்போது, 1395 ஆம் பசலியில், நிலவருவாய் இரண்டு மடங்கிற்கு மேலாகியுள்ளது. நில வருவாயின், ஒரு குறிப்பிட்ட வீதத்தில் நிர்ணயிக்கப்பட்டு கடந்த ஐந்து பசலிகளில் வசூலிக்கப்பட்ட உள்ளூர் வரி, மற்றும் உள்ளூர் மிகை வீத (உபரி) வரி ஆகியவை குறித்த விவரங்கள் பட்டியல்கள் - 2 மற்றும் 3-ல் அளிக்கப்பட்டுள்ளன.

1395ஆம் பசலியிலிருந்து, 1397ஆம் பசலி வரை, நில வருவாய் மேலும் அதிகரித்தமை, 1397ஆம் பசலியில் வசூலான கீழ்க்கண்ட புள்ளி விவரங்களினின்றும் தெரிய வருகிறது:

பட்டியல் - 1

பசலி 1391 முதல் 1395 முடிய கன்னியாகுமரி மாவட்டத்தில் வசூலிக்கப்பட்ட நிலவருவாய்

தொடர் எண்.	வட்டத்தின் பெயர்	பசலிகள்				
		1391	1392	1393	1394	1395
		ரூ. பை	ரூ. பை	ரூ. பை	ரூ. பை	ரூ. பை
1.	தோவாளை	4,07,11 59	4,07,240 44	4,26,300 59	4,80,773 33	7,64,943 55
2.	அகஸ்தீஸ்வரம்	5,92,879 16	5,04,530 73	5,11,484 82	8,53,358 76	13,05,752 70
3.	கல்குளம்	6,23,179 75	6,97,868 03	8,01,259 05	7,94,319 17	13,75,035 10
4.	விளவங்கோடு	3,93,542 80	5,36,921 50	5,91,944 45	5,51,639 86	6,70,613 24
	மாவட்டமொத்தம்	20,16,713 30	21,46,560 70	23,30,988 91	26,80,091 12	41,16,344 59

பட்டியல் - 2

கன்னியாகுமரி மாவட்டத்தில் 1391 ஆம் பசலி முதல், 1395 ஆம் பசலி வரை, வசூலிக்கப்பட்ட உள்ளூர் வரி விவரங்கள்

தொடர் எண்.	வட்டத்தின் பெயர்	பசலிகள்				
		1391	1392	1393	1394	1395
		ரூ. பை	ரூ. பை	ரூ. பை	ரூ. பை	ரூ. பை
1.	தோவாளை	62,041 54	82,265 76	1,09,687 92	89,719 76	1,30,692 91
2.	அகஸ்தீஸ்வரம்	1,02,082 00	89,197 17	1,56,513 38	1.85.600.50	3,12,548 59
3.	கல்குளம்	1,05,875 85	1,35,493 05	2,41,576 05	1,99,500 96	3,17,389 84
4.	விளவங்கோடு	54,793 17	1,07,475 09	1,38,875 07	1,07,795 19	1,30,596 10
	மாவட்டமொத்தம்	3,24,792 56	4,14,431 07	6,46,652 42	5,82,616 41	8,91,227 44

பட்டியல்-3

கன்னியாகுமரி மாவட்டத்தில், 1391 பசலி முதல் 1395 பசலி முடிய, வசூலிக்கப்பட்ட உள்ளூர் மிகைவீத (உபரி) வரி விவரங்கள்

தொடர் எண்.	வட்டத்தின் பெயர்	பசலிகள்				
		1391	1392	1393	1394	1395
		ரூ. பை	ரூ. பை	ரூ. பை	ரூ. பை	ரூ. பை
1.	தோவாளை	3,68,625 50	4,51,287 43	6,14,519 66	5,22,543 58	15,98,034 88
2.	அகஸ்தீஸ்வரம்	8,50,274,32	4,72,768 98	7,08,059 23	7,28,160 59	16,75,843 89
3.	கல்குளம்	8,90,290 76	8,75,695 01	10,82,139 03	10,46,875 76	17,69,592 01
4.	விளவங்கோடு	4,56,306 23	4,91,067 67	7,10,694 56	5,88,220 73	7,20,975 53
	மாவட்டத்தின்மொத்தம்	25,65,496 81	22,90,819 09	31,15,412 48	28,85,800 66	57,64,446 31

		ரூ. பை.
1.	தோவாளை வட்டம்	10,85,758.54
2.	அகஸ்தீஸ்வரம் வட்டம்	16,64,926.75
3.	கல்குளம் வட்டம்	18,46,080.05
4.	விளவங்கோடு வட்டம்	8,16,604.05
	மாவட்ட மொத்தம்	54,13,369.84

வேளாண் வருமான வரி

1955ஆம் ஆண்டின் திருவாங்கூர்-கொச்சி வேளாண் வருமான வரிச்சட்டம், மார்ச், 31,1972 வரை, கன்னியாகுமரி மாவட்டத்தில், நடைமுறையிலிருந்தது. 1973ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட சட்டத்தின்படி, 1955ஆம் ஆண்டின், தமிழ்நாடு வேளாண் வருமானவரிச்சட்டம், ஏப்ரல், 1, 1972 முதல் கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் விரிவாக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, 1955ஆம் ஆண்டின் திருவாங்கூர்-கொச்சி சட்டம் நீக்கம் செய்யப்பட்டது.

விலக்களிக்கப்பட்ட வரம்பிற்கு மேல், கைப்பற்று நிலங்கள் வைத்திருக்கக்கூடிய, தீர்வை செலுத்துபவருக்கு, அவரது முந்தைய ஆண்டின் மொத்த வேளாண் வருவாயில், ஒவ்வொரு நிதி ஆண்டும் வேளாண் வருமானவரி விதிக்கப்படுகிறது.

வேளாண் வருமானவரி விதிப்பது, சட்டத்தின் உட்கருத்தா யிருப்பினும், எவ்வித கணக்குகளும் பராமரிக்காத விவசாயிகளுக்கு உதவி செய்வதற்காக, சமரசம் செய்துகொள்ள வகை செய்யப்பட்டுள்ளது. அதாவது, தோட்டப் பண்ணைப்பயிர்கள் பயிரிடப்படாத நிலங்களையுடைய தீர்வை செலுத்துவோருக்கு, எவ்வித வரம்புமின்றி, அவர்களது கைப்பற்று நிலங்களின் அடிப்படையில், முழுமொத்தத் தொகை செலுத்தவும், தோட்டப் பண்ணைப் பயிர்கள் பயிரிடப்படும் நிலங்களையுடைய தீர்வை செலுத்துவோருக்கு ஒரு குறிப்பிட்ட வரம்பிற்குட்பட்ட, அவர்களது கைப்பற்று நிலங்களினடிப்படை யில், முழுமொத்தத் தொகை செலுத்தவும், சட்டம் இடங்கொடுக்கிறது. தோட்டப்பண்ணைப் பயிர் நிலங்களையுடைய தீர்வை செலுத்துவோருக்கு, 1978-79 தீர்வை ஆண்டுவரையில் 50 தரப்படுத்தப்பட்ட ஏக்கர்களெனவும், 1979-80 தீர்வை ஆண்டிலிருந்து 100 தரப்படுத்தப்பட்ட ஏக்கர்களெனவும், சமரசத்தொகை செலுத்த வரம்பு நிர்ணயிக்கப்பட்டது. ஏப்ரல், 1, 1979 ஆம் ஆண்டிற்கு முன்பு, இயல்பான நிலங்களின் பரப்பளவை, தரப்படுத்தப்பட்ட ஏக்கர்களாக மாற்றிக் கணக்கிடும்போது, நிலங்களில் பயிரிடப்பட்ட சில ரொக்கப் பயிர்களும், நிலங்களின் தரத்தீர்வையும் கணக்கிலெடுத்துக் கொள்ளப்பட்டன. 1979-80 தீர்வையாண்டிலிருந்து, தரப்படுத்தப்பட்ட ஏக்கராக மாற்றுவது, பயிர்களின் அடிப்படையிலும், நீர்ப்பாசன அடிப்படையிலும் கணக்கிடப்படுகிறது.

தரப்படுத்தப்பட்ட ஏக்கர்கள் கணக்கிடுவதினின்றும், முழுமையாக மேய்ச்சலுக்குப் பயன்படும் நிலங்களுக்கும், வீட்டு மனைகளுக்கும், விலக்களிக்கப்படுகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில், வேளாண் வருமானவரியிலிருந்து கிடைக்கும் கணிசமான தொகை, முதன்மையாக இரப்பரிலிருந்து கிடைக்கிறது. கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி மாவட்டங்களையடுத்து, மாநிலத்தின் மாவட்டங்களில் வேளாண் வருமானவரி வசூலில், கன்னியாகுமரி மாவட்டம், மூன்றாவது இடத்தை வகிக்கிறது.

இம்மாவட்டத்தில், வேளாண் வருமான வரித்துறை, வட்டாட்சியர் நிலையிலிருந்த இரண்டு வேளாண் வருமான வரி அலுவலர்களால், முன்னர் நிருவாகம் செய்யப்பட்டு வந்தது. திருநெல்வேலியிலிருந்த, துணை ஆட்சியர் நிலையிலிருந்த வேளாண் வருமான வரி உதவி ஆணையர், இம்மாவட்ட எல்லைக்கும் உள்ளிட்ட மேல் முறையீடு அலுவலராக 1979-80 தீர்வையாண்டு வரை, பணியாற்றிவந்ததார். வேளாண் வருமான வரித்துறை சீரமைக்கப்பட்ட பின்னர், மாவட்டத்திலிருந்த இரண்டு வேளாண் வருமான வரி அலுவலர்கள் பணியிடங்கள், துணை ஆட்சியர் நிலைக்கு உயர்த்தப்பட்டன. அதே போன்று, உதவி ஆணையர் பணியிடம், மாவட்ட வருவாய் அலுவலர் நிலைக்கு உயர்த்தப்பட்டு, 1980 மே மாதம் முதல் அவரது தலைமையிடமும் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மாற்றப்பட்டது. இச்சீரமைப்பில், நாகர்கோவில் உதவி ஆணையர், கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களுக்குப் பொறுப்பு வகித்தார்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவில்- 1, மற்றும் நாகர்கோவில்-2 ஆகிய இரண்டு வேளாண்வரி நிருவாக வட்டங்கள் உள. நாகர்கோவில்- 1 வட்டம், கீழ்க்குறிப்பிட்ட இரு வட்டங்கள் அடங்கியதாகும்.

1) அகஸ்தீஸ்வரம் 2) விளவங்கோடு

அகஸ்தீஸ்வரம் வட்டம், பெரும்பாலும், தோட்டப் பண்ணை நிலங்கள் அல்லாத பகுதியாகும். விளவங்கோடு வட்டம், தோட்டப்பண்ணை நிலங்களுள்ள பகுதியாக உள்ளது.

நாகர்கோவில்- 2 வட்டமானது, கல்குளம் மற்றும் தோவாளை ஆகிய இரு வட்டங்களைக் கொண்டதாகும்.

கல்குளம் மற்றும் தோவாளை வட்டங்கள், தோட்டப்பண்ணை நிலங்களையுடைய பகுதிகளாகும்.

நாகர்கோவில்- 1 மற்றும் நாகர்கோவில் -2 வட்டங்களிலுள்ள வேளாண்வரி செலுத்துவோரின் விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன:

விவரங்கள்	நாகர்கோவில் - 1				நாகர்கோவில் - 2			
	சமரசத் தொகை இனங்கள்	பட்டியலை ஏற்று தொகை செலுத்தப் படும் இடங்கள்	விளிம் படுத்த இனங்கள்	மொத் தம்	சமரசத் தொகை இனங்கள்	பட்டியலை ஏற்று தொகை செலுத்தப் படும் இடங்கள்	விளிம் படுத்த இனங்கள்	மொத் தம்
தோட்டப் பண்ணைப் பயிர் நிலங்கள்	339	138	69	546	346	52	145	543
தோட்டப் பண்ணைப் பயிர் அல்லாத நிலங்கள்	103	9	43	155	48	4	41	93
மொத்தம்	442	147	112	701	394	56	186	636

பின்பற்றப்பட்ட பல்வேறு நிலைகளும், 1985-86 வரிவிதிப்பு ஆண்டில் வசூலான தொகை விவரமும் :

விவரங்கள்	நாகர்கோவில்-1		நாகர்கோவில்-2	
	இனங்களின் எண்ணிக்கை	விதிக்கப் பட்ட வரி	இனங்களின் எண்ணிக்கை	விதிக்கப் பட்ட வரி
10 முதல் 20 தரப்படுத்தப்பட்ட ஏக்கர்கள்	112	--	148	--
20 முதல் 25 தரப்படுத்தப்பட்ட ஏக்கர்கள்	133	0.72	93	0.05
25 முதல் 30 தரப்படுத்தப்பட்ட ஏக்கர்கள்	100	0.61	74	0.07
30 முதல் 35 தரப்படுத்தப்பட்ட ஏக்கர்கள்	95	0.42	74	0.11
35 முதல் 40 தரப்படுத்தப்பட்ட ஏக்கர்கள்	34	0.36	41	0.08
40 முதல் 45 தரப்படுத்தப்பட்ட ஏக்கர்கள்	35	0.47	38	0.10
45 முதல் 50 தரப்படுத்தப்பட்ட ஏக்கர்கள்	38	0.64	14	0.03
50 மற்றும் அதற்கு மேற்பட்ட தரப்படுத்தப்பட்ட ஏக்கர்கள்	153	44.56	98	2.72
	700	47.78	580	3.16

(ரூபாய் இலட்சத்தில்)

வருவாயின் படிநிலை	நாகர்கோவில்-1		நாகர்கோவில்-2	
	இனங்களின் எண்ணிக்கை	விதிக்கப் பட்ட வரி	இனங்களின் எண்ணிக்கை	விதிக்கப் பட்ட வரி
ரூ.10,000/- வரை	67	–	20	--
ரூ.10,000/-க்க மேல் ரூ15,000/- வரை	25	0.69	14	0.03

ரூ. 15,000/–க்கு மேல் ரூ. 40,000/– வரை	15	1.79	4	0.15
ரூ. 40,000/– க்கு மேல் ரூ. 50,000/– வரை	4	0.51	–	––
ரூ. 50,000/– க்கு மேல் ரூ. 1,00,000/– வரை	11	2.84	2	––
ரூ. 1,00,000/–க்க மேல்	13	37,91	12	43.81
மொத்தம்	144	44.83	56	44.03

1977-78 தீர்வை ஆண்டிலிருந்து, 1985-86 வரிவிதிப்பு ஆண்டுவரை அடையப்பெற்ற வேளாண் வருமானவரி விவரங்கள்

(ரூபாய் இலட்சத்தில்)

	நாகர்கோவில் - 1			நாகர் கோவில் -2		
தீர்வை ஆண்டு	மொத்த இனங்களின் எண்ணிக்கை	விதிக்கப் பட்ட வரி	வசூலிக்கப் பட்ட வரி	மொத்த இனங்களின் எண்ணிக் கை	விதிக்கப் பட்ட வரி	வசூலிக்கப் பட்ட வரி
1977-78	549	28.00	13.21	641	15.06	11.55
1978-79	554	50.09	17.92	643	29.89	17.53
1979-80	502	46.42	34.09	655	35.96	34.04
1980-81	527	46.12	37.61	675	39.98	45.21
1981-82	546	56.21	51.89	672	41.68	40.45
1982-83	542	53.62	47.37	671	41.22	37.19
1983-84	581	64.00	33.80	646	45.47	29.69
1984-85	577	23.20	20.77	632	10.66	6.71
1985-86	577	47.79	41.01	636	47.94	40.61

மதுவிலக்கும், ஆயத்தீர்வையும்

1937ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டமானது, 1981ஆம் ஆண்டு, தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) சட்டத்தினால், திருத்தப்பட்டது. திருத்தச் சட்டத்தின் விதிமுறைகள், அனுமதிச் சீட்டு பெற்றோர், டிசம்பர், 31, 1986 வரை, மது (சாராயம்) மற்றும் கள் ஆகியவற்றை, சில்லரையில் விற்பனை செய்யும் சிறப்புரிமை அளிக்க, அரசிற்கு வழிவகை செய்தது.

மது (சாராயம்) மற்றும் கள் கடைகள்

அரசு, தனது ஜீன், 4, 1986 நாளைய அரசாணை எண். 666-ல் (மதுவிலக்கு மற்றும் ஆயத்துறை (2) 1986 ஆம் ஆண்டின், தமிழ்நாடு மதுக் (சாராயம்) கடைகள் (ஏலத்தில் ஒழுங்குப்படுத்துதல்) விதிகளை, உருவாக்கியது. இவ்விதியில், ஜீலை, 16, 1986 முதல் டிசம்பர் 31, 1986 முடிய உள்ள நடப்புக் காலத்தில், சாராயத்தை சில்லறையில் விற்கும்

சிறப்புரிமையை ஏலத்தில் விடும் அதிகாரத்தை அரசிற்கு அளித்தது. அறிவிப்பு செய்யப்பட்ட மற்றும் உரிமம் வழங்கப்பட்ட கடைகளின் எண்ணிக்கை, கிடைக்கப்பெற்ற கிஸ்தித் தொகை ஆகிய விவரங்கள் பட்டியல் எண். 4 இல் கொடுக்கப்பட்டுள்ளன.

அரசு, தனது ஜீன், 13, 1986ஆம் ஆண்டு அரசாணை 696-ல் (மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) கள்ளுக்கடைகளின் உரிம காலத்தை செப்டம்பர் 30, 1986-க்குப் பின்னர், அதாவது, டிசம்பர் 31, 1986 வரை நீடித்தது, 1981ஆம் ஆண்டு தமிழ்நாடு மது (சாராயம்) மற்றும் கள்ளுக்கடைகள் (ஏலத்தில் ஒழுங்குப்படுத்துதல்) விதிகள் மற்றும் 1981ஆம் ஆண்டு, தமிழ்நாடு, கள் விதிகள் ஆகியவற்றிற்க்கு திருத்தம் வழங்கியது. நடப்பு காலத்திற்கு அறிவிக்கப்பட்ட கடைகளின் கள்ளுக்கடைகள், உரிமம் வழங்கப்பட்டவை மற்றும் கிடைக்கப்பெற்ற கிஸ்தித்தொகை ஆகிய விவரங்களும் பட்டியல் 4-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

பட்டியல் - 4

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மது (சாராயம்) மற்றும் கள் கடைகளின் எண்ணிக்கையும், கிடைக்கப்பெற்ற கிஸ்தித் தொகை விவரங்களும்

(1981-82 முதல் 1986 முடிய)

ஆயத்தீர்வை ஆண்டு	அறிவிப்பு செய்யப்பட்ட கடைகள் உரிமம் வழங்கப்பட்ட கடைகள் கிடைக்கப்பெற்ற கிஸ்தித் தொகை					மொத்தத் தொகை ரூபாய்	
	(சாராயம்) மது	கள்	(சாராயம்) மது	கள்	(சாராயம்) ரூபாய்	கள் ரூபாய்	சாராயம்
1981-82	130	250	130	250	14,83,270	5,16,376	20,19,646
1982-83	130	250	130	250	17,76,963	8,67,254	26,44,217
1983-84	191	251	191	247	18,09,467	7,72,265	25,81,732
1984-85	177	240	177	238	27,11,969	6,59,713	33,71,682
1985-86	*	235	*	223	*	7,95,810	7,95,810
1986 (நடப்பு ஆண்டு)	177	235	172	216	34,99,969	6,55,108	41,55,068

* 1985-86 ஆம் ஆயத்தீர்வை ஆண்டில், மது (சாராயம்) சில்லரை விற்பனைத் தொழில், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தால் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் அயல்நாட்டு மது வகை

1981ஆம் ஆண்டின், தமிழ்நாடு மது (உரிமம் மற்றும் அனுமதிச் சீட்டு) விதிகள், 1981-82ஆம் ஆண்டில், இம்மாவட்டத்தில், இந்தியாவில் உற்பத்தியாகும் அயல்நாட்டு மது வகை சில்லரை விற்பனைத் தொழிலை மேற்கொள்ள வாய்ப்பளித்தது. 1981-82ஆம் ஆண்டில் மொத்தம் வழங்கப்பட்ட 27 உரிமங்களில், ஐந்து உரிமங்கள், தொழிலில் சில குறைபாடுகள் காணப்பட்டதால், நீக்கம் செய்யப்பட்டன. 1986-87ஆம் ஆண்டில், 39 கடைகளுக்கு, 171 உரிமங்கள் வழங்கப்பட்டன.

மருந்துவகை மற்றும் ஒப்பனைப்பொருட்கள் தயாரித்தல்

பலதரப்பட்ட பொருள்கள் தயார் செய்வதற்கு, உரிமங்கள் வழங்க, கீழ்க்கண்ட விதிகளைப் பின்பற்ற வேண்டியுள்ளது :

1) தமிழ்நாடு மருந்து வகைகள் மற்றும் ஒப்பனைப் பொருள்கள் தயார் செய்தல்-விதிகள், 1956.

2) தமிழ்நாடு, வடிநீர்மங்கள் (குடிவகைகள்) தயாரித்தல் மற்றும் கட்டுப்பாடு விதிகள், 1984.

3) தமிழ்நாடு, போதை மருந்து விதிகள், 1955

4) தமிழ்நாடு, குடிக்கத் தகுதியற்ற சாராய விதிகள், 1958.

5) தமிழ்நாடு, திருத்தியமைத்த சாராய விதிகள்

6) தமிழ்நாடு, கருப்பஞ்சாறு கட்டுப்பாடு விதிகள்

7) தமிழ்நாடு குளோரோ ஹைட்ரேட் விதிகள்

தமிழ்நாடு வடிநீர்மங்கள் (குடிவகைகள்) தயாரித்தல் மற்றும் கட்டுப்பாடு விதிகளின்படி, இம்மாவட்டத்தில் 28 சில்லரை விற்பனை மற்றும் 25 மொத்த விற்பனை உரிமதாரர்கள், (எஸ்.ப்பி.14 உரிமம்) தொழில் நடத்தி வருகிறார்கள்.

1956ஆம் ஆண்டு, மருந்து வகைகள் மற்றும் ஒப்பனைப்பொருள்கள் தயார் செய்தல் விதிகளின் கீழ், 33 எல். இரண்டு உரிமதார்களும், 27 எல். மூன்று உரிமதார்களும் இம்மாவட்டத்தில், தொழில் நடத்துகிறார்கள். மருந்து வகைகள் மற்றும் ஒப்பனைப் பொருள்கள் தயாரித்திட எல்.2 உரிமங்களும், ஆயுர்வேத, சித்த மற்றும் யுனானி மருத்துவர்களுக்கு, நோயாளிகளின் நோயைக் குணப்படுத்துவதற்கு வேண்டிய அளவு மட்டும், சாராயச் சத்து மருந்து வகைகளைத் தாமே தயார் செய்திட, (விற்பனைக்குப் பயன்படுத்தக் கூடாதென்ற நிப்ந்தனையின் பேரில்) எல்.3 உரிமங்களும் வழங்கப்பட்டுள்ளன.

1959ஆம் ஆண்டு, தமிழ்நாடு குடிக்கத் தகுதியற்ற சாராயங்கள் மற்றும் எண்ணெய்ச் சாயம் (வார்னிஷ்) (ஃபிரஞ்ச் பாலிஷ்) விதிகளின்படி,

டி.எல்.1, டி.எல்.2 மற்றும் டி.எல்.4 உரிமங்கள் வழங்கப்படுகின்றன. இம்மாவட்டத்தில், ஒரு டி.எல்.1 உரிமமும், 28 டி.எல்.2 உரிமங்களும் வழங்கப்பட்டுள்ளன. இம்மாவட்டத்தில், டி.எல்.4 உரிமமேதும் வழங்கப்படவில்லை.

வணிக வரிகள்

மாநில சீரமைப்பின்போது, இம்மாவட்டத்தில் கீழ்குறிப்பிட்ட நான்கு வணிக வரி அலுவலகங்கள் இயங்கி வந்தன :

1) துணை வணிக வரி அலுவலகம், குழித்துறை
2) துணை வணிக வரி அலுவலகம், தக்கலை
3) துணை வணிக வரி அலுவலகம், நாகர்கோவில்
4) வணிக வரி அலுவலகம், நாகர்கோவில்

ஆகஸ்ட், 31, 1992-க்குப் பின்னர், இவ்வலுவலகங்கள், திருநெல்வேலி (வணிகவரி) உதவி ஆணையரது கண்காணிப்பில், திருநெல்வேலி வணிகவரி மாவட்டத்தில் இருந்தன. ஆனால், திருநெல்வேலி வணிகவரி மாவட்டம், இரண்டாக, அதாவது திருநெல்வேலி வணிக வரி மாவட்டம் மற்றும் நாகர்கோவில் வணிக வரி மாவட்டம் என பிரிக்கப்பட்ட பின்னர், இந்நான்கு அலுவலகங்களின் நிருவாகம், நாகர்கோவில் (வணிகவரி) உதவி ஆணையரின் கண்காணிப்பில், கொணரப்பட்டது.

செப்டம்பர், 1, 1982 முதல், இம் மாவட்டத்தில் கீழ்க்கண்ட அலுவலகங்கள் இயங்கி வருகின்றன:

1. வணிகவரி அலுவலகம், நாகர்கோவில் (நகரம்)
2. துணை வணிகவரி அலுவலகம், நாகர்கோவில் (கிராமப்புறம்)
3. துணை வணிகவரி அலுவலகம், நாகர்கோவில் (கோபுர சந்திப்பு- டவர் ஜங்சன்)
4. துணை வணிகவரி அலுவலகம் (செயலாக்கப்பிரிவு), நாகர்கோவில் ஷிருநெல்வேலி (செயலாக்கப்பிரிவு)ல் உதவி ஆணையர் கண் காணிப்பில் இயங்குகிறது).
5. உதவி ஆணையர் (வணிகவரி), நாகர்கோவில் (நிருவாக அலுவலகம்)

இவை தவிர, கலியக்காவளை மற்றும் சுங்கானகடை ஆகிய இடங்களில், இரண்டு சோதனைச் சாவடிகள், இயங்கி வருகின்றன.

இந்த வணிகவரி மாவட்டத்தில், 1959ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ், 5,714 வணிகர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்களின் 2,708 வணிகர்கள் விற்பனை வரி

செலுத்துகிறார்கள். எஞ்சியுள்ள வணிகர்கள், வரி செலுத்தும் கட்டுப்பாட்டிற்குட்பட்டவர்களல்லர். மாவட்டத்தில் 32 திரையரங்குகள் உள்ளன. இத்துறையினால், இம்மாவட்டத்தில் அனைத்து சட்ட விதிமுறைகளின்படியும் ஈட்டப்படும் வருவாய் விவரங்கள் பட்டியல் 5-ல் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

பட்டியல் - 5

1982-83 முதல் 1985-86 வரை, கன்னியாகுமரி மாவட்டத்தில் வசூலிக்கப்பட்ட வணிகவரி விவரங்கள்

	வரி விவரம்	*1982–83*	*1983–84*	*1984–85*	*1985–86*
			ரூபாய் இலட்சத்தில்		
1.	தமிழ்நாடு பொது விற்பனை வரி	237.73	272.92	316.63	381.43
2.	மத்திய விற்பனை வரி	26.10	42.69	37.76	41.84
3.	தமிழ்நாடு பொழுதுபோக்கு (வகை) வரி	47.80	45.58	62.94	74.36
4.	தமிழ்நாடு ட்டி.எல்.எச்.எல்.எச்.	0.29	0.46	0.42	0.42
		311.92	361.65	417.75	498.05

பத்திரப் பதிவு சார்ந்த வருவாய்கள்

மாநில சீரமைப்பிற்குப்பின்னர், கன்னியாகுமரி மாவட்ட பத்திரப் பதிவாளர் அலுவலகம், ஜனவரி 2, 1957 அன்று, மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் 19 துணைப்பதிவாளர் அலுவலகங்களுடன் துவங்கப்பட்டது. ஆகஸ்ட் 1, 1978 அன்று, மார்த்தாண்டம் மாவட்ட பத்திரப் பதிவாளர் அலுவலகம். கல்குளம் மற்றும் விளவங்கோடு வட்டங்களில் ஒன்பது துணைப் பதிவாளர்கள் அலுவலகங்களுடன் துவங்கப் பெற்றது. அகஸ்தீஸ்வரம், தோவாளை மற்றும் கல்குளம் வட்டங்களிலுள்ள 10 துணைப் பதிவாளர் அலுவலகங்களும், கன்னியாகுமரி மாவட்டப்பதிவாளர் கண்காணிப்பிலேயே தொடர்ந்து இருந்து வந்தன. செப்டம்பர், 15, 1980-ல், வடசேரியில் ஒரு துணைப்பதிவாளர் அலுவலகமும், ஜீலை, 15, 1981 அன்று தோவாளையில் மற்றொரு துணைப் பதிவாளர் அலுவலகமும் துவங்கப்பட்டன. 1981-82 முதல் 1985-86 முடிய, மார்த்தாண்டம் மற்றும் கன்னியாகுமரி பத்திரப் பதிவு மாவட்டங்களில் ஈட்டப்பட்ட வருவாய் பற்றிய விவரங்கள், முறையே பட்டியல்கள்-6 மற்றும் 7-ல் அளிக்கப்பட்டுள்ளன.

பட்டியல் - 6

1981-82 முதல் 1985-86 வரை, மார்த்தாண்டம் பத்திரப்பதிவு மாவட்டத்தில், பல தலைப்புகளில் ஈட்டப்பட்ட வருவாய் பற்றிய விவரங்கள்

(ரூபாய் இலட்சத்தில்)

தொடர் எண்.	வருவாய் விவரம்	1981–82	1982–83	1983–84	1984–85	1985–86
1.	முத்திரை வருவாய்	1854.6	200.5	238.9	276.1	911.1
2.	பதிவுக் கட்டணங்கள்	596.8	60.4	626.6	692.6	942.9
3.	கூட்டுநிறுவனங்கள்	0.2	0.5	0.3	1.1	0.7
4.	தனித்திருமணங்கள்	–	0.03	–	0.03	0.01
5.	இந்துத்திருமணங்கள் (இந்துத்திருமண சட்டத்தின்படி)	0.2	0.8	1.3	1.6	1.7
6.	சீட்டு நிதிகள்(1982ஆம் ஆண்டு சீட்டு நிதிச் சட்டத்தின்படி)					30.2
7.	சீட்டு நிதிகள் (1961ஆம் ஆண்டு சீட்டு நிதி சட்டத் தின்படி)	32.0	55.7	6.2	2.5	11.9
8.	பிறப்பு இறப்பு (1969 ஆம் ஆண்டு பிறப்பு, இறப்பு ஒழுங்குமுறைச் சட்டத்தின் படி)	–	–	6.04	1.0	1.2
9.	பதிவுக்கட்டணம் (1975ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்படி)	3.6	3.1	5.8	3.6	4.6
	மொத்தம்	2487.4	321.03	885.14	978.53	1904.31

பட்டியல் - 7

1981-82 முதல் 1985-86 வரை, கன்னியாகுமரி பத்திரப்பதிவு மாவட்டத்தில், பல தலைப்புகளில் ஈட்டப்பட்ட வருவாய் பற்றிய விவரங்கள்.

(ரூபாய் ஆயிரத்தில்)

தொடர் எண்.	வருவாய் விவரம்	1981–82	1982–83	1983–84	1984–85	1985–86
1.	முத்திரை வருவாய்	7543.50	7257.50	7525.20	8520.80	12246.10
2.	முத்திரை பதிவுக் கட்டணங்கள்	1469.70	1540.20	1605.40	1711.40	2084.80
3.	சீட்டு நிதிகள் (தமிழ்நாடு சீட்டு நிதிகள் சட்டம் 1961–ன்படி)	100.40	180.30	164.20	106.80	34.00
4.	பதிவுக்கட்டணம் (1975ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் படி)	5.60	5.90	9.20	8.60	7.30
5.	கூட்டு நிறுவனங்கள் (கூட்டுப்பங்குண்மை சட்டத்தின்படி)	0.90	1.60	3.70	4.70	4.10
6.	இந்துத்திருமணங்கள் (இந்துத்திருமணச் சட்டத்தின் படி)	0.50	1.10	1.40	1.30	1.20
7.	தனித்திருமணங்கள் (தனித் திருமணங்கள் சட்டத்தின் படி)	0.01	0.06	0.02	0.02	0.02
8.	பிறப்பு இறப்பு (1969–ம் ஆண்டு, பிறப்பு,இறப்பு சட்டத் தின் படி)	--	--	--	19.70	63.10
	மொத்தம்	9120.61	8986.66	9309.12	10473.32	14440.62

விசை ஊர்திகள் வரி

1977-78 முதல் 1985-86 முடிய கன்னியாகுமரி மாவட்டத்தில், விசை ஊர்திகள் வரி தொடர்பான வருவாய் விவரம் கீழே அளிக்கப்பட்டுள்ளது:

ஆண்டு	தொகை (ரூபாய் ஆயிரத்தில்)
1977-78	13,664
1978-79	15,433
1979-80	24,903
1980-81	24,718
1981-82	17,400
1982-83	18,255
1983-84	19,941
1984-85	22,627
1985-86	28,363

காடுகளின் மூலம் வருவாய்

கன்னியாகுமரி மாவட்டத்தில், காடுகளினின்றும் முக்கிய வருவாய், தேக்கு, கருங்காலி, பல மரங்களான அய்னி, வெண் தேக்கு போன்ற மரங்களிலிருந்தும், மெல்லிய தேக்குக் கழிகள், விறகு, கிராம்பு மற்றும் இதர சிறிய காட்டுப் பொருட்களினின்றும் கிடைக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில், இரப்பர் மற்றொரு முக்கியமான வருவாய் ஆதாரமாகும். இரப்பர் தோட்டப் பண்ணையின் நிருவாகம், அரசு இரப்பர் கழகத்தின் கட்டுப்பாட்டிலிலுள்ளது.

1980-81 முதல் 1985-86 வரை, காடுகள் மூலம் கிடைத்த வருவாய் விவரம், பின்வருமாறு:

ஆண்டு	ரூபாய் (ஆயிரத்தில்)
1980-81	9,895
1981-82	3,603
1982-83	1,873
1983-84	3,505
1984-85	12,985
1985-86	12,163

மத்திய கலால் வரி

கன்னியாகுமரி மாவட்டம், தமிழ்நாட்டிலுள்ள சிறு மாவட்டங்களி லொன்றாகும். புகையிலைக்கு, மத்திய கலால்வரி நடை முறையிலிருந்த போது, மத்திய கலால்வரி வசூல் கோணத்தில் ஆய்ந்தால், மாவட்டம் செயல் திறமுடன் இயங்கியது. புகையிலை மீதான வரி நீக்கம் செய்யப்பட்டவுடன், இம்மாவட்டத்தினின்றும் மத்திய கலால் வரி நலியத்துவங்கியது. தற்போது, நாகர்கோவிலில் மத்திய கலால் வரி தொகுதி அலுவலகம் இயங்கி வருகிறது.

மாவட்டத்தில், மாநில கலால் வரி செலுத்தக் கூடிய இரண்டு நூற்பாலைகள், நான்கு மிதிப்பொலி இரப்பர் அலகுகள், ஒரு கம்பி வட அலகு, 120 தீக்குச்சித் தொழிற்சாலைகள், ஏழு தேயிலை எஸ்டேட்டுகள், 17 தேயிலை சிப்பம் கட்டும் அலகுகள், 55 மரக்கல வகை அலகுகள் ஆகியவையாகும். இத்தொகுதியில், மாநிலகலால் வரி செலுத்துவதினின்றும் அறவே விலக்களிக்கப்பட்ட சிறு தொழில் நிறுவனங்களும் உள. அவை, உரிமக் கட்டுப்பாட்டிலிருந்தும் கூட விலக்களிக்கப்பட்டுள்ளன.

1981-82 முதல் 1985-86 வரை, கன்னியாகுமரி மாவட்டத்தில், மத்திய கலால்வரி வசூலிக்கப்பட்ட புள்ளி விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன :

ஆண்டு	*நிலையான வருவாய்* (ரூபாய் ஆயிரத்தில்)
1981-82	3001.3
1982-83	3730.2
1983-84	4774.1
1984-85	4284.4
1985-86	4467.8

வருமானவரி

நாகர்கோவில் வருமான வரி அலுவலரின் அலுவல் எல்லைப்பகுதி கன்னியாகுமரி மாவட்ட முழுமையுமாகும். செப்டம்பர், 30, 1987 நாளன்று, நாகர்கோவில் வருமான வரி அலுவலகப் பதிவேட்டின்படி, 2426 வருமான வரி செலுத்துவோரும், 380 சொத்துவரி செலுத்துவோரும், 76 கொடைவரி செலுத்துவோரும், இருந்தனர்.

கடந்த ஐந்து நிதியாண்டுகளில், வசூலிக்கப்பட்ட வருமானம் மற்றும் அதனைச் சார்ந்த வரிகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

(ரூபாய் ஆயிரத்தில்)

நிதியாண்டு	வருமானவரி	சொத்து வரி	கொடை வரி	மொத்தம்
1982-83	7,254	785	97	8,136
1983-84	7,606	478	102	8,186
1984-85	6,933	590	102	7,625
1985-86	9,085	933	112	10,130
1986-87	9,057	523	109	9,689

மாவட்ட ஆட்சித் தலைவர்கள்

நாடு சுதந்திரம் பெற்ற பின்னர், மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பணியில், ஒரு குறிப்பிடத்தக்க மாற்றம், ஏற்பட்டுள்ளது. அவர்கள், தற்போது நிலவருவாய் வசூல், மற்றும் சட்டம், ஒழுங்கு நிலைநாட்டுதல் ஆகியவற்றைக் கண்காணிக்கும், மக்கள் பிரதிநிதிகளாக மட்டும் செயலாற்றிடவில்லை. அவர்கள் மக்களுடன் ஒன்றி, அவர்களது பிரச்சினைகளை பகுத்தாய்ந்து, அவற்றிற்கு அவ்வப்போது தீர்வுகாண வேண்டிய நிலையிலுள்ளார்கள், பல்வேறு, வளர்ச்சித் திட்டங்கள் குறித்தும், அவர்கள் முக்கியப் பணியாற்ற வேண்டியதாயுள்ளது. வருவாய் நிருவாகம் குறித்தும், அவர்கள் தொடர்ந்து முக்கிய அங்கம் வகித்து வருகிறார்கள்.

கன்னியாகுமரி மாவட்டம், அமைக்கப்பட்டதிலிருந்து, பணியாற்றிய மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

தொடர் எண்.	கன்னியாகுமரி மாவட்டம் அமைக்கப்பட்ட திலிருந்து, பணியாற்றியுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பெயர்கள்	பணியாற்றிய காலம்
(1)	(2)	(3)
1.	திரு.ஆர்.திருமலை. இ.ஆ.ப.	01.11.1956–01.12.1958
2.	திரு.ஜே.ஏ.அம்பாசங்கர்,இ.ஆ.ப.	02.12.1958–17.05.1962
3.	திரு.ஏ.எஸ். வெங்கட்ராமன், இ.ஆ.ப.	19.06.1962–14.12.1962
4.	திரு.எஸ்.கிருஷ்ணசுவாமி, இ.ஆ.ப.	15.12.1962–31.01.1963
5.	திரு.சி.வி.எஸ்.மணி, இ.ஆ.ப.	28.02.1963–25.07.1963
6.	திரு.கே.ஜே.எம்.ஷெட்டி, இ.ஆ.ப.	19.08.1963–03.08.1964
7.	திரு.வி.கே.சி.நடராசன், இ.ஆ.ப.	04.08.1964–26.04.1965
8.	திரு.பி.பி, கிருஷ்ணசுவாமி, இ.ஆ.ப.	27.04.1965–21.08.1967
9.	திரு.சி.என். இராகவன், இ.ஆ.ப.	22.08.1967–09.09.1968

10.	திரு.ஆர்.ஏ.சீதாராமதாஸ், இ.ஆ.ப.	12.10.1968–14.02.1970
11.	திரு. கே.எஸ். இராமகிருஷ்ணன், இ.ஆ.ப.	07.03.1970–22.04.1971
12.	திரு.ஏ.ப்பி.முத்துசுவாமி, இ.ஆ.ப.	24.04.1971–22.08.1973
13.	திரு.ஆர்.சுவாமிநாதன், இ.ஆ.ப.	22.08.1973–05.04.1974
14.	திரு.சி.தங்கராசு, இ.ஆ.ப.	22.04.1974–12.02.1975
15.	திரு.வி.ட்டி.துரைராஜ், இ.ஆ.ப.	12.02.1975–24.05.1976
16.	திரு. வி.சங்கரசுப்பையன், இ.ஆ.ப.	24.05.1976–03.05.1978
17.	திரு.எம்.கே. பாலசுப்ரமணியம், இ.ஆ.ப.	10.05.1978–03.05.1979
18.	திரு. துரை சுந்தரேசன், இ.ஆ.ப.	03.05.1979–13.02.1980
19.	திரு. ஏ.அப்துல் அஜிஸ், இ.ஆ.ப.	14.02.1980–26.05.1981
20.	திரு.ஜே.ட்டி. ஆச்சார்யுலு, இ.ஆ.ப.	28.05.1981–13.03.1982
21.	திரு. எம்.பி.பிரானேஷ், இ.ஆ.ப.	14.03.1982–19.03.1983
22.	திரு.எல்.கே.திரிபாதி, இ.ஆ.ப.	20.03.1983–21.08.1984
23.	திரு.எம்.கருப்பையா, இ.ஆ.ப.	22.08.1984–19.09.1985
24.	திரு.எஸ்.முனிர்ஹோடா, இ.ஆ.ப.	20.08.1985–13.02.1988
25.	திரு.என். சுந்தரதேவன், இ.ஆ.ப.	10.03.1988–இன்றுவரை.

மாவட்ட வருவாய் அலுவலர்கள்

பொதுவாக, நிருவாகத்திலும் குறிப்பாக வருவாய் தொடர்புள்ள அலுவல்களிலும் மாவட்ட அட்சித் தலைவருக்கு உறுதுணையாக இருந்து, குறிப்பிடத்தக்க உதவிகளையளித்துவரவே மாவட்ட வருவாய் அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

இம்மாவட்டத்தில் இப்பணியிடம் உருவாக்கப்பட்ட 1985 ஆம் ஆண்டிலிருந்து, இன்றுவரை, மாவட்ட வருவாய் அலுவலர்களாகப் பணியாற்றி வருபவர்களின் பட்டியல் கீழே அளிக்கப்பட்டுள்ளது:

தொடர் எண்.	*மாவட்டத்தில் பணியிடம் உருவாக்கப்பட்டதிலிருந்து பணியாற்றிய மாவட்ட வருவாய் அலுவலர்களின் பெயர்*	*பணியாற்றிய காலம்*
(1)	(2)	(3)
1.	திரு.எம்.கணபதி	1.12.1985–15.06.1987
2.	திரு.பி.சுப்பையா	25.09.1987–24.01.1988
3.	திரு.ஆர்.சாம்ராஜ்., எம்.ஏ.	24.01.1988–இன்றுவரை

இயல்-12

சட்டம், ஒழுங்கு மற்றும் நீதி

சட்டம் மற்றும் ஒழுங்கு ஆகியவை, வரலாற்று அடிப்படையிலும், அனுபவ அடிப்படையிலும், மக்களைத் தொடர்பு படுத்துபவையாகும். வரலாற்று அடிப்படையில் நோக்குங்கால், சமுதாயம் வளரும் நிலையில் இருந்தபோது, மக்களின் இவ்வீடுபாடு கொள்ளும் கொள்கை, துவங்கியது.[1] அமைதியை நிலை நாட்டுவதும், மக்கள் அமைதியுடன் வாழ வழி வகுப்பதுமே, சட்டம், ஒழுங்கை நிலை நாட்டும் பணியை மேற்கொண்டுள்ள காவல்துறையின் கடமையாகும். இவ்விரண்டுடன் இணைந்து செல்லும் மற்றொன்று, நீதியாகும். அதனால், குற்றங்களை ஒடுக்கவல்ல குற்றவியல் நீதி முறை முக்கியத்துவம் வாய்ந்ததாகும். சட்டம், ஒழுங்கு மற்றும் நீதி இவை இணைந்தால் குற்றம் மிகவும் குறைந்த அளவேயுள்ள சமுதாயத்தை உருவாக்க இயலும். மாவட்டத்தில் ஒருமுழுமையான இணக்கினை நாம் கண்டால், பின்னர் காவல்துறை, நீதித்துறை ஆகிய இரு துறைகளும், நன்றாகச் செயல்படுகின்றனவென உறுதியாக நம்பலாம்.

நமது நாட்டை வெகு காலமாக ஆண்ட கிழக்கிந்திய கம்பெனியார் அவர்கள் வெற்றி கொண்ட பகுதிகளில், சட்டம், ஒழுங்கினை நிலைநாட்ட அவர்களது விருப்பத்திற்கேற்ப, காவல்துறை நிருவாகத்தினை நடத்தி வந்தார்கள். 19 ஆம் நூற்றாண்டுத் துவக்கத்தில், காவல்துறை எந்த ஒரு எழுச்சியையும் எதிர்த்து நின்று போராடவில்லை, மாவட்டங்களில், காவல்துறை அமைப்பு, வருந்தத்தக்கதாகவும் மனநிறைவை அளிக்காத வகையிலும் செயல்பட்டது.[2]

19ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில், காவல்துறையின் வருந்தத்தக்க நிருவாக முறையுடன் குற்றவியல் நீதி நிருவாகமும் இணைந்து கொண்டது. இயற்றப்பட்ட பல்வேறு சட்டங்களும் பொது மக்களிடையே ஒருவிதமான குழப்பத்தினை ஏற்படுத்தின. நீதிமன்றங்களில் கடைபிடிக்கப்பட்ட நடைமுறைகள் சிக்கலானவையாகவும் ஒன்றுக்கொன்று முரணானவை யாகவும் இருந்ததால் மக்கள் சொல்லொணாத் துயரத்திற்காளானார்கள். அவர்களது நீண்ட அனுபவமும், மேலும் சேர்ந்து கொண்ட சிக்கலான பிரச்சனைகளும் நீதித்துறை நிருவாகத்தை சீரமைத்திடவும் மக்களுக்குகந்த முறையில் அதனை மாற்றிடவும் ஆங்கில அரசை வலியுறுத்தின.

காவல்துறையினை, பஞ்சாப் மற்றும் சிந்து ஆகிய பகுதிகளிலுள்ளது போன்று, திருத்தியமைக்க நீதிமன்ற இயக்குநர்கள் முந்தைய சென்னை அரசிற்கு ஆணை பிறபித்தனர். டார்ச்சர் குழுவின் பரிந்துரையை ஏற்று, முந்தைய சென்னை அரசு, காவல்துறை நிருவாகத்தினை வருவாய் நிருவாகத்தினின்று பிரித்து, ஆங்கிலேய அதிகாரிகளின் கட்டுப்பாட்டில் அமைத்தது. குற்றங்களைத் தடுக்கவும், கண்டுபிடிக்கவுமான சட்டத்தை செயல்படுத்தும் தனித்துறையாக அது இயங்க அங்கீகாரம் அளித்தது.

1857ஆம் ஆண்டின் கிளர்ச்சி, நாட்டில் நடைமுறையிலிருந்த பல்வேறு சட்டங்களால் துன்பத்திற்கு ஆளான மக்களின் துயர் துடைக்க முறையான சட்டத் தொகுப்பேடுகளைத் தொகுக்க, அரசைத் தூண்டியது. உறுதிப்பாடான ஒரு நீதி நிருவாகத்தினை அமைக்குமுன், அரசு பல சோதனைகளை எதிர்கொள்ள நேரிட்டது. 1857ஆம் ஆண்டின் கிளர்ச்சியைத் தொடர்ந்து, 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில், பல பெரிய மாற்றங்கள் நிகழ்ந்தன[3].

1956ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட தற்போதைய கன்னியாகுமரி மாவட்டம், முன்னர் மன்னர்களின் ஆளுகையிலிருந்த முந்தைய திருவாங்கூர் கொச்சி மாநிலத்தின் ஒரு பகுதியாக இருந்தது. எனவே, 19ஆம் நூற்றாண்டின் முதற் பகுதியில் அங்கு ஆங்கிலேயரின் சட்டங்கள் நடைமுறையிலில்லை, காவல்துறை நிருவாகமும், ஆங்கிலேயரின் விருப்பத்திற்கொப்ப அமையப் பெறவில்லை.

காவலர் தொகுதி அமைப்புமுறை விரிவுறுதல்

கன்னியாகுமரி மாவட்டத்தில், காவலர் தொகுதி, முதன் முதலில் 1809 ஆம் ஆண்டு, திவான் உம்மினித்தம்பி அவர்களால் அமைக்கப்பட்டு,"காவல்" என அழைக்கப்பட்டது. இதற்கு, தமிழில் "பாதுகாப்பு" என பொருள்படும். அதனுடைய திறமை மற்றும் கட்டுப்பாடு ஆகியவற்றை மிகவும் உயர்வாகக் கருத இயலாது. இக்காவல் தொகுதி 200 பேரைக்கொண்ட சிறிய அமைப்பாக இருந்தது. அது மக்களின் நலன் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு, கடமையாற்ற இயலவில்லை[4]. திருவாங்கூர் மாநில திவானாக, உம்மினித் தம்பிக்குப் பின்னர் பதவியேற்ற மன்ரோ பிரபுவிற்கு, காவலர் தொகுதியின் நிலை மனநிறைவளிக்கவில்லை. திறமையான அரசை அமைத்திட வேண்டுமென்ற நோக்கில் அந்த அமைப்பு முறையினைத் திருத்தியமைத்திட முற்பட்டார்[5].

இம்முடிவினைக் கருத்திற்கொண்டு, காவலர் தொகுதியை, வலிமை மிக்கதாக ஆக்கிட பல சீர்த்திருத்தங்களை அறிமுகம் செய்தார். அதனால் காரீயக்காரர்கள் மற்றும் கிராம அலுவலர்கள் தங்களது காவல்துறை தொடர்புள்ள அதிகாரங்களை இழந்தனர். இதுவே, ஒரு புரட்சிகரமான திட்டமாக அமைந்தது ஏனெனில், திருவாங்கூர் மாநிலத்தில், முன்னர் நடைமுறையிலிருந்த திட்டத்தின்படி, கிராம காரீயக்காரர்கள், காவல்தொடர்புள்ள அதிகாரம் மற்றும் மாநிலத்திற்குத் தேவையான வருவாய் வசூலித்தல் ஆகிய பொறுப்புகளை வகித்து வந்ததால், மிகுந்த செல்வாக்குடனும், அதிகாரத்துடனும், அலுவல் புரிந்து வந்தனர். 1834ஆம் ஆண்டு, காவல்துறை அமைப்பு முறையைத் திருத்தியமைக்க, ஒரு உணர்வாற்றல் மிக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, முதல் ஒழுங்குமுறைச் சட்டம் இயற்றப்பட்டது. 1854-55-ல், புதிய வருவாய்க் கோட்டங்கள் அமைக்கப்பட்டு, தற்போதைய கன்னியாகுமரி மாவட்டம், அன்று ஒரு பேஷ்காரின் கட்டுப்பாட்டில் இயங்கிய பத்மநாபபுரம் வருவாய் கோட்டத்தில் சேர்க்கப்பட்டது. தலைமை நிருவாகி மற்றும் முதன்மை குற்றவியல் நடுவராக திவான் பணியாற்றி வந்தார். திவானின் ஆணைப்படி பேஷ்கார், வருவாய் குற்றவியல் மற்றும் காவல் ஆகியவை தொடர்பான அதிகாரங்களைச் செலுத்தி வந்தார். அவர் காவல்துறையின் துணைக் கண்காணிப்பாளராகவும் பணியாற்றினார்[6]. வட்டாட்சியர், வட்டத்தில், காவல் தொடர்பாக உயர்ந்த அளவு அதிகாரம் படைத்தவராயிருந்தார். அவர் பேஷ்காரின் பொது மேற்பார்வையில் பணியாற்றினார்[7]. காவற்படைத் தொகுதியில், காட்வால், காவல் நாயக், சமீன்தார், முடப்பார் போன்றோர் அடங்குவர்.

நிருவாகம் மற்றும் குற்றவியல் அதிகாரங்கள் ஆகியவை ஒரே அலுவலரிடம் குவிந்திருந்ததால், காவல்துறையின் நிருவாகப் பணி மற்றும் குற்றவியல் நீதி நிருவாகம் ஆகியவற்றைச் செயலாற்றுவதில், கருத்தார்ந்த குறைபாடு காணப்பட்டது. 1860 ஆம் ஆண்டுவரை, காவல் நிருவாகம், நேரடியாக குற்றவியல் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கிவந்தது. அத்துறையின் அலுவலகப் பிரிவானது ஓரங்கமாகவும் பணியாற்றியது. வட்ட குற்றவியல் நடுவரின் கீழ், அந்தந்த வட்டத்தின் முக்கியத்துவத்தினடிப் படையில் ஒரு காவல் நாயக் ஒன்றிருந்து நான்கு வரையிலான முடப்பாரிகள், கணிசமான அளவு ஏவலாட்கள் ஆகியோர் பணியாற்றினர்.

இவர்கள் தவிர, மிகைப்படியான காவல் அலுவலர்கள் என அழைக்கப்படுவோரும் மாவட்டங்களில் பணியாற்றிவந்தனர். அவர்கள் ஒவ்வொருவரும் இரண்டு அல்லது மூன்று வட்டங்களை நிருவகித்துவந்தனர். அவர்களின் கீழ், நாயக், முடப்பாரிகள் மற்றும் ஏவலாட்கள் ஆகியோர் பணியாற்றினர்.

இவ்வலுவலர்கள் மாவட்ட குற்றவியல் நடுவர்களாகப் பணியாற்றும் கோட்ட பேஷ்காரர்களின் நேரடி மேற்பார்வையில் பணியாற்றிவந்தனர். அவர்கள், ஒவ்வொரு பெரிய குற்றமும் நடைபெறும் இடத்திற்குச் சென்று விசாரணை செய்தனர். ஒரு நாயக்குக்கு 10 சர்க்கார் ரூபாயும், ஒரு முடப்பாரிக்கு ஐந்து ரூபாயும், ஒரு ஏவலாளுக்கு 4ரூ ரூபாயும், ஊதியமாக வழங்கப்பட்டது. மிகைப்படியான காவல் அலுவலர்கள். 35 ரூபாயிலிருந்து 65 ரூபாய் வரை ஊதியம் பெற்று வந்தனர். மாட்சிமைமிகுந்த மன்னர் அவர்கள், காவல் முறையைத் திருத்தி அமைக்கவும் அதனை, நன்கு செயல்படுத்த ஒரு திட்டத்தினை தீட்டவும், திவான் இராமய்யங்கார் அவர்களைப் பொறுப்பாளராக நியமித்தார்.

அதனைத் தொடர்ந்து அவர், காவல் நிருவாக அமைப்பு முறையினை சீரமைக்க உரிய நடவடிக்கை எடுத்து, குற்றவியல் துறையினின்றும்

காவல்துறையினைப் பிரித்து அமைக்கப்பரிந்துரைத்து திருவாங்கூர் மன்னருக்கு அறிக்கை அனுப்பினார். குற்றவியல் வழக்குகளில், நடுவர்கள் நடுநிலையுடன் தீர்ப்பளிக்க வேண்டுமென்ற கருத்திலும், இரண்டாவதாக, காவல்படையின் அலுவலர்களை மேம்படுத்த வேண்டுமென்ற நோக்கிலும் இப்பரிந்துரையினைச் செய்தார்[8]. காவல்துறைப் பணியாளர்களுக்குக் கல்வித் தகுதி நிர்ணயிக்க வேண்டுமெனவும், அவர்களுக்குக் கவர்ச்சியான ஊதியத்தினை வழங்கவேண்டுமெனவும் அவர் வலியுறுத்தினார். புதிதாகப் பணியிற் சேருபவர்களுக்கு, திட்டமிட்ட பயிற்சியளிக்க வேண்டுமெனவும் வற்புறுத்தினார். திவான் இராமய்யங்கார் அவர்களது பரிந்துரைகளை ஆதாரமாக வைத்தும் சென்னை காவல்துறைக் கூட்டப்படியும் 1883-ம் ஆண்டு ஒரு வரையறை செய்யப்பட்ட விதி இயற்றப்பட்டது. துறை சீரமைப்பு, 1882-ல் முடிவுற்றது. 1882ஆம் ஆண்டு, 92,724 மக்கட்தொகையைக் கொண்ட ஒவ்வொரு 4.8 சதுர கிலோமீட்டருக்கும் ஒரு காவலாள் என்ற வீதத்தில், காவல்துறை சீரமைக்கப்பட்டது.

1919-ம் ஆண்டு, காவல்துறை நிருவாகத்தில், மேலும் சில சீர்திருத்தங்களை எதிர்கொண்டது. திருவாங்கூர் மாநிலத்தின் காவல் நிருவாகத்தின் தலைமை காவல் அதிகாரியான காவல்துறை ஆணையரின் பொது கட்டுப்பாட்டிலும், ஆளுகையிலும், கன்னியாகுமரி மாவட்ட காவல்துறை கொணரப்பட்டது. மாவட்டத்தினுள், காவல்துறை, மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளரின் மேற்பார்வையில் இயங்கியது. இவர் தனது பணியினை சீராக ஆற்றிட, ஒரு துணைக் கண்காணிப்பாளர் இவருக்கு உதவி புரிந்து வந்தார். மாவட்ட காவல்துறை அலுவலர்கள் மாவட்ட குற்றவியல் நடுவரின் நேரடி கண்காணிப்பில் இயங்கினர்[9].

காவல்துறையில் மேலும் சில சீர்திருத்தங்கள் 1938 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டன. துறைத்தலைமை அலுவலர், காவல் துறை ஆணையர் என்பதற்கு பதிலாக, காவல்துறை தலைமை ஆய்வாளர், என அழைக்கப்பட்டார். இம்மாவட்டத்தில் சட்டம், ஒழுங்கினைப் பராமரிப்பதற்கும் அப்பகுதியில் காவல் நிருவாகத்தினைத் திறம்பட செயல்படுத்துவதற்குமான பொறுப்பினை அவர் வகித்தார்.

1956 ஆம் ஆண்டின், மாநில சீரமைப்பைத் தொடர்ந்து, முந்தைய திருவாங்கூர்-கொச்சின் மாநிலத்தினின்றும் பிரித்து, தற்போதைய கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டது. எனவே, காவல்படையின் பாங்கும், மற்ற நிருவாக அலுவல்களும் இயல்பாகவே தமிழ்நாட்டிலுள்ள அமைப்பினைப் பின்பற்றலாயின.

மாவட்டத்தில் காவல்துறையின் தற்போதைய அமைப்பு முறை

தற்போது, மாவட்ட ஆட்சித்தலைவரின் பொதுக் கட்டுப்பாட்டில் மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளரின் நேரடி மேற்பார்வையில், காவல் நிருவாகம் மாவட்டத்தில் இயங்கி வருகிறது.

ஒரு கூடுதல் காவல்துறைக் கண்காணிப்பாளரும் துணை காவல்துறை கண்காணிப்பாளரும் மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளருக்கு நிர்வாகத்தில் உதவி செய்கிறார்கள். இருவருமே, மதுவிலக்குப் படைக்குப் பொறுப்பேற்கிறார்கள். இவர்கள் தவிர, ஐந்து காவல்துறைத் துணைக் கண்காணிப்பாளர்களும் உள்ளனர். அவர்களில் மூவர் துணைக் கோட்டங்களின் பொறுப்பினை ஏற்றுள்ளார்கள். மாவட்ட குற்றப் பதிவுக் கிளை மற்றும் மனித உரிமைகள் பாதுகாப்பு ஆகிய பிரிவுகளுக்குப் பொறுப்பு வகிக்கிறார்கள். எஞ்சிய ஒரு காவல்துறை துணைக் கண்காணிப்பாளர், சேமப்படைக்குத் தலைமை தாங்குகிறார்.

தமிழ்நாடு ஏழு சரகங்களாகவும், 25 காவல்துறை மாவட்டங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளது[10]. கன்னியாகுமரி மாவட்டம், காவல்துறை, துணைத் தலைமை ஆய்வாளரின் கண்காணிப்பில், திருநெல்வேலி சரகத்தில், சேர்க்கப்பட்டுள்ளது. மூன்று துணைக் கோட்டங்களான நாகர்கோவில், தக்களை மற்றும் கொளச்சல் ஆகியவை மூன்று காவல்துறைத் துணைக்கண்காணிப்பாளர்களின். மேற்பார்வையிலும் கட்டுப்பாட்டிலும் உள்ளன. நாகர்கோவில் துணைக் கோட்டத்தில் நாகர்கோவில் மற்றும் கன்னியாகுமரி ஆகிய இரு வட்டங்களும் 10 காவல் நிலையங்களும் உள்ளன. தக்கலைத் துணைக் கோட்டத்திலும், அதே போன்று தக்கலை விளவங்கோடு ஆகிய இரு வட்டங்களும் ஏழு காவல் நிலையங்களும் உள்ளன. கொளச்சல் துணைக்கோட்டம், கொளச்சல் இரணியல் ஆகிய இரு வட்டங்களும், எட்டு காவல் நிலையங்களும் பெற்றுள்ளது. இந்த காவல்நிலையங்கள் தவிர ஒவ்வொரு துணைக் கோட்டத்திலும், புறக்காவல் நிலையங்களும், போக்குவரத்துப் பிரிவுகளும் உள்ளன. பெண் குற்றவாளிகளைக் கண்காணிக்க, காவல்துறையில் பெண் அலுவலர்கள் இரண்டு காவல் நிலையங்களை நிருவகிக்கிறார்கள். இவ்விரு நிலையங்களும், கோட்டாரிலும், கன்னியாகுமரியிலும் இயங்கிவருகின்றன.

மாவட்டத்திலுள்ள காவல் நிலையங்கள், புறக்காவல்நிலையங்கள், மற்றும் போக்குவரத்துக் காவல் நிலையங்கள், காவல் படையின் மொத்த அளவு ஆகிய விவரங்கள் கீழேகண்ட பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ளன :

பட்டியல்

தொடர் எண்.	*காவல் நிலையங்கள்*
1.	கோட்டார் (கா.நி)
2.	கோட்டார் (பெண்கள் பிரிவு)
3.	வடசேரி (கா.நி)
4.	கோட்டார் (போக்குவரத்து)
5.	பூதப்பாண்டி (கா.நி)
6.	நேசமணிநகர் (கா.நி)
7.	ஆசாரிப்பள்ளம் (பு.கா.நி)
8.	கோட்டார் (மத்திய குற்றப்பதிவு நிலையம்)
9.	கோட்டார் (காவல் கட்டுப்பாட்டு அறை)
10.	கன்னியாகுமரி (கா.நி)
11.	கன்னியாகுமரி (பெண்கள் பிரிவு)
12.	கன்னியாகுமரி (போக்குவரத்து)
13.	சுசீந்திரம் (கா.நி)
14.	ஆரல்வாய்மொழி (கா.நி)
15.	அஞ்சுகிராமம் (கா.நி)
16.	தக்கலை (கா.நி)
17.	தக்கலை (போக்குவரத்து)
18.	கோட்டியோடு (பு.கா.நி)
19.	குலசேகரம் (கா.நி)
20.	மேல் கோதையார் (பு.கா.நி)
21.	கீழ் கோதையார்
22.	கீரிப்பாறை (கா.நி)
23.	குழித்துறை (கா.நி)
24.	குழித்துறை (போக்குவரத்து)
25.	திருவட்டார் (கா.நி)
26.	அருமனை (கா.நி)
27.	கடயலுமோடு (பு.கா.நி)
28.	கலியக்காவிளை (கா.நி)
29.	பலுகம் (பு.கா.நி)
30.	கொளச்சல் (கா.நி)
31.	கொளச்சல் (போக்கவரத்து)
32.	கோத்தன்கோடு (கா.நி)
33.	புதுக்கடை (கா.நி)
34.	நிதிரவிளை (கா.நி)

பட்டியல் - தொடர்ச்சி

35.	கரிங்கல் (கா.நி)
36.	இரணியல் (கா.நி)
37.	இரணியல் (போக்குவரத்து)
38.	மணவாளக்குரிச்சி (கா.நி)
39.	இராசக்கமங்கலம் (கா.நி)
40.	கீழ் கோதையார் (கா.நி)
41.	மாவட்ட குற்றப்பிரிவுக் கிளை (ஒழுகினசேரி)
42.	மனித உரிமைப் பாதுகாப்புப் பிரிவு (ஒழுகினசேரி)
43.	மாவட்ட தனிக்கிளை (நாகர்கோவில்)
44.	சேமப்படை (நாகர்கோவில்)

குறிப்பு: கா.நி.-காவல்நிலையம் பு.கா.நி :- புறக்காவல்நிலையம்

1965 ஆம் ஆண்டு, இம்மாவட்டத்திலுள்ள காவல் துறைப்பணியாளர்களின் எண்ணிக்கை 810 ஆக இருந்தது. இதில், அலுவலர்கள் மற்றும் ஊர்க்காவலரின் படைத்தொகுதி ஆகியவை அடங்கும். மக்கட்தொகை உயர்வு, புறப்பகுதிகள் நகர்ப்பகுதிகளாக மாறி வரும் வேகம், அனைத்துத் துறையிலும் நாம் காணும் மேம்பாடு ஆகியவற்றைக் கருத்திற்கொண்டால், காவல்துறைப் பணியாளர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்க வேண்டியது அவசியமாகிறது. 1965 ஆம் ஆண்டு, 810 ஆக இருந்த இப்பணியாளர்களின் எண்ணிக்கை வேலைப்பளுவிற்கொப்ப, பல்வேறு பிரிவுகளில் புதிய பணியாளர்கள் சேர்ந்த காரணத்தால், 1988 ஆம் ஆண்டு, 1670 ஆக உயர்ந்தது. 1981 ஆம் ஆண்டின் மக்கட்தொகைக் கணக்கெடுப்பின்படி, இம்மாவட்டத்தின் மக்கட்தொகை 14,23,399 ஆக இருந்தது. 1981 ஆம் ஆண்டின் காவல்துறைப் பணியாளர்களின் எண்ணிக்கையினை ஒப்பிட்டுப் பார்த்தால், ஒவ்வொரு 852 மக்களுக்கும் ஒரு காவல் துறை பணியாளர் என்ற வீதத்தில் கணக்கிடப்படுகிறது.[11]

மாவட்டத்தில் பணியாற்றும் கவால்துறைப் பணியாளர்களின் எண்ணிக்கை, விவரங்கள், பணியாளர் தொகுதி வாரியாக அடியிற்கண்ட பட்டியலில் அளிக்கப்படுகிறது: [12]

பிரிவு	காவல் துறைக் கண்காணிப் பாளர்	கூடுதல் காவல் துறைக் கண்காணிப் பாளர்	காவல் துறைக் துணைக் கண்காணிப் பாளர்	ஆய்வாளர்கள்	துணை ஆய்வாளர்கள்	தலைமை ஊர்க் காவலர்கள்	ஊர்க் காவலர்கள்
1. இயற்பணி முறை காவல் பகுதிப்பிரிவு	1	–	4	14	58	85	959
2. மதுவிலக்குப் பிரிவு	–	1	1	4	6	8	89

3. இலஞ்ச ஒழிப்புப்படை	–	–	–	3	–	3	3
4. சேமப்படை	–	–	1 (சேமப்படை ஆய்வாளர்)	1	11 சேமப்படை துணை ஆய்வாளர்	38	380
மொத்தம்	1	1	6	22	75	134	1431

கன்னியாகுமரி மாவட்டத்தில் சட்டம், ஒழுங்கு நிலை

கன்னியாகுமரி, பொதுவாக அமைதியான மாவட்டமாகும். இங்கு சட்டம், ஒழுங்குப் பிரச்சனை மிக மிகக் குறைவாகத்தானிருந்தது. அதாவது, பலகால இடைவெளிக்குப் பின்னர், எப்போதாவது நிகழும், எனினும், இந்தப்பத்தாண்டுத் துவக்கத்தில், நிகழ்ந்த ஒரு சில சட்டம், ஒழுங்குப் பிரச்சனைகள் கடுமையானவையாக இருந்ததோடல்லாது, மக்களுள் உள்முறிந்த உறவிற்கு வித்திட்டது. சமூகச் சூழ்நிலையிலும் மாறுபாடு காணப்பட்டது.

1977 ஆம் ஆண்டு முதல் 1986-ம் ஆண்டு வரையிலான காவல்துறை நிருவாக அறிக்கைகளை நோக்குங்கால், மாவட்டத்தில், சட்டம், ஒழுங்குப் பிரச்சனைகளை உருவாக்கிய சம்பவங்கள் நிகழ்ந்திருப்பது தெரியவருகிறது. பார வண்டி ஓட்டுநர்கள், தானியங்கி ஓட்டுநர்கள், மாணவர்கள் மற்றும் சில சமய சார்புள்ள குழு உறுப்பினர்கள் ஆகியோரால் தோற்றுவிக்கப்பட்ட சட்டம், ஒழுங்குப் பிரச்சினைகள் பொதுவாக விவரிக்கப்பட்டுள்ளன.

1977 ஆம் ஆண்டிலிருந்து இரு வகுப்புகளைச் சார்ந்த பிரிவினரிடையே தோன்றும் மோதல்கள் ஒவ்வொரு ஆண்டும் நிகழும் சம்பவங்களாகும். 1977 ஆம் ஆண்டு, முகம்மதியர்கள் மற்றும் கிறித்தவ மீனவர்களுக்கிடையே நடந்த தேங்காப்பட்டினம் நிகழ்ச்சி, அதே ஆண்டு ஆதிதிராவிடர்களுக்கும் மற்ற சாதி இந்துக்களுக்குமிடையே சுசீந்திரத்தில் நடந்த நிகழ்ச்சி, 1978 ஆம் ஆண்டு, கலியக்காவிளையில் இந்துக்களுக்கும், முகம்மதியர்களுக்குமிடையே நடந்த மோதல், 1979 ஆம் ஆண்டு தக்கலையில் இந்துக்களுக்கும், முகம்மதியர்களுக்கு மிடையே நடந்த சச்சரவு ஆகியவை சட்டம் ஒழுங்குப் பிரச்சனைகளில், குறிப்பிடத்தக்கவையாகும்.

ஏப்ரல் 20, 1977 ஆம் நாளன்று, தேங்காப்பட்டினத்தில், இராமன் துறையைச் சேர்ந்த ஒரு கிறித்தவ மீனவர், மீன் பிடித்துக்கொண்டு இருக்கும்போது ஒரு முகம்மதியர் இலவசமாக மீன்களை அளிக்கக்கோரினார்[13]. ஆனால், இலவசமாக மீன்களைக் கொடுக்க மீனவர் மறுத்துவிட்டார். மறுநாள் அந்த மீனவர் ஒரு முகம்மதியரின் கடையில் பொருட்கள் வாங்க தனது நண்பருடன் வந்து கொண்டிருந்தபொழுது, சில முகம்மதியர்கள் ஒளிந்திருந்து அவரைத் தாக்கி, அவரும் சண்டையிட்டு இறுதியில் அவரை குத்திவிட்டனர். இதைக் கேள்வியுற்று ஏறத்தாழ 300 மீனவர்கள் அங்கு ஒன்று கூடி, அங்கு குழுமியிருந்த 300-க்கும் மேற்பட்ட

முகம்மதியர்களைத் தாக்கினர். இதன் விளைவாக, இரண்டு மீனவர்களும், ஐந்து முகம்மதியர்களும், காயமுற்றார்கள். காவல் அலுவலர்கள் நிலைமையக் கட்டுக்குள் கொணர்ந்தார்கள். அமைதிக்குழு அமைக்கப்பட்ட பின்னர், இயல்பு நிலை மீண்டது.

சுசீந்திரம் நிகழ்ச்சியில், ஆதி திராவிடர்கள் ஒருபுறம், நாடார்கள், வெள்ளாளர் மற்றும் தேவர்கள் ஆகியோர் மற்றொருபுரம், ஆக இவ்விருதரப்பினருக்கும் மோதல் ஏற்பட்டது. ஆதிதிராவிடர்கள் ஒரு சில ஊர்வலத்தை இயல்பான பாதையை விடுத்து, ஊராட்சித்தெரு வழியாக நடத்திச் சென்றதை சாதி இந்துக்கள் எதிர்த்தபோது மோதல் துவங்கியது. வாய்ச்சண்டை மோதலாக மாறி அதன் விளைவாக இரு தரப்பிலும் சிலருக்குக் காயம் ஏற்பட்டது; காவல் அலுவலர்கள் நிலைமையைக் கட்டுக்குள் கொணர்ந்தார்கள்.

1978 ஆம் ஆண்டு வகுப்புக் கலவரம், கலியக்காவிளை மீனவர்களுக்கும், முகம்மதியர்களுக்குமிடையே ஏற்பட்டது. முகம்மதியர்கள் ஆதிக்கம் செலுத்தி வந்த மீனவர் சங்கத்தின் நடைமுறையில் மீனவர்கள் அதிருப்தி அடைந்ததால், தங்களுக்கென ஒரு மீனவர் சங்கத்தினை அமைத்தனர். அதனைத் தொடர்ந்து ஆகஸ்ட் 8, 1978 அன்று, கலியக்காவிளையில் புதிய சங்கத்தினர், மீன் பிடிக்கத் துவங்கினார்கள்[14]. இதனை முகம்மதியர்கள் எதிர்த்ததால் இரு தரப்பினரிடையே வாய்த்தகராறு முற்றி, சண்டை மூண்டதில் முகம்மதியர்கள், மீனவர்களைத் தாக்கினர். பிடித்த மீன்களை ஏலத்தில் விடுவதற்காக அவற்றை மீனவர்கள் கலியக்காவிளைக்குக் கொண்டு வந்தபோது ஒருவர் குத்தப்பட்டார். மற்றொருவர் காயமுற்றார். அன்று இரவு, முகம்மதியர்கள் மற்றும் மீனவர்கள் ஆகிய இரு தரப்புப் பிரதிநிதிகளடங்கிய அமைதிக் குழுக்கூட்டம் நடத்தப்பட்டது. இருதரப்பினரும், அமைதியை நிலை நாட்டுவதாக ஒப்புக்கொண்டார்கள்.

1979 ஆம் ஆண்டு சம்பவம் தக்கலையில் முகம்மதியர்களுக்கும், வெட்டிக்கோணம் கிராம இந்துக்களுக்குமிடையே முகம்மதியர்களின் இருப்பிடத்திற்கருகாமையிலுள்ள பாதையை இந்துக்கள் பயன்படுத்திய போது தகராறு மூண்டதைத் தொடர்ந்து நிகழ்ந்தது[15]. அப்பாதை தங்களுக்கு சொந்தமான பாதையென முகம்மதியர்கள் கூறினார்கள். ஆனால், அது அரசுக்கு சொந்தமான புறம்போக்குப் பாதையென இந்துக்கள் வாதாடினர். அய்யப்ப பக்தர்களை அந்தத் தெரு வழியாகச் செல்ல முகம்மதியர்கள் அனுமதிக்கவில்லை. மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் கன்னியாகுமரி காவல்துறை கண்காணிப்பாளர் ஆகியோர் முன்னிலையில் இருதரப்பு பிரதிநிதிகளுடனும், அமைதிக்குழுக் கூட்டம் நடைபெற்றது. இறுதியில், பள்ளிவாசல்தெரு, பொது மக்கள் பயன்படுத்தும் பொதுப் பாதையென முடிவெடுக்கப்பட்டது. அதன்பின்னர், எந்தவித சம்பவமும் நிகழவில்லை.

1982 ஆம் ஆண்டு, காவல்துறை மற்றும் வருவாய்த்துறை இரண்டிற்குமே, பிரச்சனைகள் நிறைந்த பல சம்பவங்கள் நிகழ்ந்த ஆண்டாகும். அவ்வாண்டில் சட்டம், ஒழுங்கு பிரச்சனை மிகவும் மோசமான

நிலையிலிருந்தது. மிகவும் அமைதி குலைந்தது. இந்துக்களுக்கும் கிறித்தவ மீனவர்களுக்குமிடையே நடந்த தகராறினால் பெரிய சட்ட ஒழுங்குப் பிரச்சனை எழுந்த மண்டைக்காடு சம்பவம் தான் அமைதி குலைவிற்குக் காரணமாகும்.

இம்மாவட்டம் அதிக விழுக்காட்டிலான படித்த மக்களுக்கும், சமய நல்லிணக்க முன்னோருக்கும் பெயர் பெற்றதாகும். சமூக நல்லெண்ணம் மற்றும் இப்பகுதி மக்களிடையே நல்லிணக்கம், ஆகியவை மாவட்டத்தின் முக்கிய சிறப்பியல்புகளாகும். மீனவர்கள் மற்றும் நாடார்களுக்கிடையேயும், மீனவர்கள் மற்றும் முகம்மதியர்களுக்கிடையேயும் நாடார்கள் மற்றும் கிருஷ்ணவாகை சமூகத்தினர் ஆகியோருக்கிடையேயும், அடிக்கடி வகுப்பு மோதல்கள் இருந்து வந்தாலும், இந்துக்களும், கிறித்தவர்களும் ஈடுபாடு கொண்ட பெரிய அளவிலான சமய மோதல்கள் ஏதும், 1981 அக்டோபர் வரை நிகழவில்லை.

1981 ஆம் ஆண்டு இறுதியில், மாவட்டத்தில், இந்துக்களுக்கும், கிறித்தவர்களுக்குமிடையே அடிக்கடி மோதல்கள் ஏற்பட்டன. ஆங்காங்கே நிகழ்ந்த சம்பவங்கள் முதலில் தக்கலையிலும், குலசேகரத்திலும், கிறித்துமஸ் பண்டிகை நேரத்தில் துவங்கி, பின்னர், கடற்கரை கிராமப் பகுதிகளனைத்திலும் பரவியது.

1982 ஆம் ஆண்டு, மார்ச் மாதம், கடற்கரை கிராமமான மண்டைக்காடுப்புத்தூரில் மண்டைக்காடு கோவில் திருவிழாக் காலத்தில் கிறித்தவ மீனவர்களுக்கும், இந்துக்களுக்குமிடையே சமய மோதல் நடந்தபோது ஒரு சம்பவம் நிகழ்ந்தது. அப்போது நடந்த துப்பாக்கிச் சூட்டில் ஆறு மீனவர்கள் இறந்தனர். 25 காவல் அலுவலர்கள் உள்ளிட்ட 40 பேர்கள் காயமுற்றனர்[16].

கல்குளம் வட்டம், மணவாளக்குறிச்சி கிராமத்தில், மண்டைக்காடு உள்ளது. இக்கோவில் கொளச்சலுக்கு மூன்று கிலோ மீட்டருக்குக் கிழக்கிலும் நாகர்கோவிலுக்கு 16 கிலோ மீட்டருக்கு மேற்கிலும் கடற்கரையில் அமைந்துள்ளது.[17] இக்கோவில், கி.மு.7-வது நூற்றாண்டில் நிறுவப்பட்டது.[18] இப்பகுதி சென்னை மாநிலத்துடன் 1956ஆம் ஆண்டு இணைக்கப்படும் வரை, இக்கோவில், திருவனந்தபுரம் தேவஸ்தானக் கட்டுப்பாட்டில் இருந்து வந்தது. 1956 ஆம் ஆண்டிற்குப் பின்னர், இக்கோவில் தமிழ்நாடு அரசைச் சார்ந்த இந்து சமய மற்றும் அறநிலைய நிருவாகத் துறையினால், பராமரிக்கப்பட்டு வருகிறது. இப்பகுதியில் மிகவும் புகழ்பெற்ற மற்றும் சக்தி வாய்ந்த பெண் தெய்வம் பகவதி அம்மனுக்கு, இக்கோவில் அர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. இத்தெய்வம் 12அடி உயரத்தில் எறும்புப்புற்று உருக்கொண்டிருப்பதாகவும், இப்புற்று நாளுக்கு நாள் வளர்ந்து வருவதாகவும், இத்தெய்வம் மிகவும் சக்தி வாய்ந்ததெனவும் மக்களால் நம்பப்படுகிறது.[19] ஒவ்வொரு ஆண்டும், மாசிமாதம் (மார்ச்) தொடர்ந்து 10 நாட்கள் நடக்கக் கூடிய "மண்டைக்காடுக் கோடை" என்ற திருவிழாவில், அருகிலுள்ள மற்றும் தொலைவிலுள்ள பல

இடங்களிலிருந்தும் குறிப்பாக, அண்டை மாநிலமான கேரளாவிலிருந்தும் பல இந்துக்கள் இங்கு கூடி, இத்திருவிழாவினைக் கண்டு களிக்கிறார்கள்.

1982ஆம் ஆண்டு இறுதிவரை, இத்திருவிழா எவ்வித பிரச்சனையுமின்றி, அமைதியாகக் கொண்டாடப்பட்டது. எனினும், இவ்வாண்டுகளில் மாவட்டத்தின் கிறித்தவர்களுக்கும், இந்துக்களுக்கு மிடையே கசப்புணர்ச்சி வளர்ந்தது. இதன் விளைவாக, மண்டைக்காட்டுப் புதூரில் கிறித்தவர்களின் பகுதி வழியாக இந்துக்கள், கடலில் குளிக்கச் செல்லும்போது மண்டைக்காட்டுப் புதூரைச் சார்ந்த கிறித்தவர்கள், இந்துக்கள் மீது சீற்றங்கொண்டனர். திருவிழாக் காலங்களில், கோவிலைச்சுற்றியுள்ள ஒலி பெருக்கிகளின் அச்சுறுத்தல், கிறித்தவ சமயத்தைப் பற்றி, அவற்றில் ஒலி பரப்பப்படும வெறுப்பூட்டும் செய்திகள் ஆகியவை இருதரப்பினரிடையே, கசப்புணர்ச்சியை மேலும் வளர்த்தன. நாளடைவில், இவ்விரு சமய வகுப்பினர்களிடையேயான இடைவெளி, பெரியதாகியது. கடற்கரைக்குச் செல்லும் பாதையில் அமைந்துள்ள கோவிலுக்கு ஒளி விளக்கு ஒப்பனை செய்தும், பதிவு செய்த பாட்டுகளைப் பாடச் செய்தும், மீனவர்கள் தங்களது கோபத்தை வெளிக்காட்டினர். கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவரின் அறிவுரையினைத் தொடர்ந்து, பத்மநாபபுரம் உதவி ஆட்சித்தலைவர், இருதரப்பினரிடையே பேச்சுவார்த்தை நிகழ்த்தி, அவர்களை சமாதானப்படுத்தி, அமைதியான சூழ்நிலையை உருவாக்கினார். இவ்வாறாக, அவர்களது பிரச்சனைமிக்க மற்றும் அருவெறுப்பான நடவடிக்கை முடிவுக்குக் கொணரப்பட்டது.

மார்ச்1, 1982 ஆம் நாளன்று, 2000 முதல் 3000 வரையிலான வலிமைமிக்க, கிறித்தவ மீனவர்கள், இந்துக்களைத் தாக்குதல், அவர்களது கடைகளைக் கொள்ளையிடுதல், இந்துப் பெண் பக்தர்களுக்குத் தொல்லையளித்தல், மற்றும் காவல் பணியாளர்களைத் தாக்குதல் போன்ற வெறிச்செயல்களிலீடுபட்டனர், என காவல்துறை நிருவாக அறிக்கையினின்றும் தெரியவருகிறது.[20] இக்கைகலப்பில் 25 காவல்துறையினர், காயமுற்றனர். இறுதி வகை முறையாக, காவல்துறையினர், துப்பாக்கி சூடு, நடத்தியதில், ஆறு மீனவர்கள் இறந்தனர். மற்றும் 15 மீனவர்கள் காயமுற்றனர். பின்னர், கொளச்சலிலிருந்து, மண்டைக்காடுப் புதூருக்கு ஒரு சவ ஊர்வலம் சென்றது. துப்பாக்கிச் சூட்டினால், சீற்றங் கொண்ட மீனவர்கள், வன்முறைச் செயல்களீடுபட்டனர். காவல்துறையினரின் துப்பாக்கிச் சூடு மற்றும் ஏனைய நடவடிக்கைகளுக்கு, இராஷ்ட்டிரிய ஸ்வயம்வக் சங்கத்தின் செல்வாக்கும், மீனவர்கள் மீது சங்கம் எழுப்பிய பொய்க் குற்றச்சாட்டுகளுமேயாகுமென மீனவர்கள் காரணங்காட்டி, தங்களது செயல்களை நியாயப்படுத்தினர். இந்து பக்தர்கள், கடலில் புனித நீராட அனுமதிக்கப்படாததால், இந்துக்கள் சினமுற்று, வன்முறைச் செயலில் இறங்கினர். இவ்விதமாக, ஒரு பெரிய சமயப்பிரச்னை எழுந்தது. பின்னர், 1982, ஆம் ஆண்டு முழுமையும் கன்னியாகுமரி மாவட்டத்தில் எழுந்த பல மோதல்கள் மற்றும் சம்பவங்களுக்கு இதுவே காரணமாக அமைந்தது.

இவற்றைத் தொடர்ந்து, மாவட்டத்தில் அமைதியற்ற சூழ்நிலை உருவானது. அதனால், சொத்துக்களுக்குப் பெருஞ்சேதமும், உயிர்ச்சேதமும் ஏற்பட்டன.

மறுமுறை, ஒருகடற்கரை கிராமமான மேலமணக்குடியில், மார்ச் 15, 1982 ஆம் நாளன்று, நடந்த துப்பாக்கிச் சூட்டில், இரு மீனவர்கள் உயிரிழந்தனர். இந்து தீவிரவாதிகளில் ஒரு தொகுதியினர், மீனவர்களின் வீடுகளை சேதப்படுத்தி, வீட்டிற்குப் பயன்படும் பொருட்கள் மற்றும் மீன் பிடிக்கும் வலைகள் ஆகியவற்றைச் சூறையாடி, பள்ளம் கிராமம் முழுமையும் தீ வைத்துக் கொளுத்தினர். சூபாய் 30 இலட்சத்திற்கும் மேலாக சேதம் விளைவிக்கப்பட்டதென மதிப்பிடப்பட்டது. இச்சம்பவத்தில் உயிர்ச்சேத மேதுமில்லை. 1982 ஏப்ரல் மாதம் குளச்சலில் (கலிமார் பாலம்), இந்துக்களுக்கும், கிறித்தவர்களுக்கும் நடந்த மோதலில், கலைந்து செல்ல மறுத்த மக்கள்கும்பல் காவல் துறையினரின் பல எச்சரிக்கைகள் மற்றும் தூண்டுதல்களுக்குப் பின்னரும், அச்சுறுத்தும் அளவிற்கு முன்னேறினர். கடைநிலையாக, காவல் அலுவலர்கள் துப்பாக்கிச்சூடு நடத்த நேரிட்டது. அதன் பின்னரே, முழு கும்பலும் கலைந்து சென்றது.

1982 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து. டிசம்பர் மாதத்திற்குள், 50 மோதல்கள் நடந்தன. வேறுபட்ட பல தொகுதிகளைச் சார்ந்த மக்கள் இவற்றில் ஈடுபட்டு, பெரும் பொருட்களுக்கு சேதம் விளைவித்தனர். பலர், காயமுற்றனர். இம்மாதிரியான தொடர்ச்சியற்ற சில சம்பவங்கள், அலுவலர்களுக்குக் கவலையளித்தாலும், மார்ச் 1982-ல் பெரிய மோதல்களோ, சட்ட ஒழுங்குக் குலைவோ வன்முறையோ இடம் பெறவில்லை.[21] இம்மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் காவல்துறைக் கண்காணிப்பாளர் ஆகியோரின் முயற்சியில், 1982-ம் ஆண்டு, ஏப்ரல் மற்றும் மே மாதங்களில், பல அமைதிக் குழுக் கூட்டங்கள் நடைபெற்றன. இக்கூட்டங்கள் மாவட்டத்தில் குழப்ப நிலை மாறி, நிலையான அமைதி ஏற்பட, அடிகோலின.

மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் காவல்துறை கண்காணிப்பாளர் ஆகியோரது அறிவுரையின் பேரில், தக்கலை காவல் துறை துணை கண்காணிப்பாளரும், பத்மநாபபுரம் உதவி ஆட்சியரும், ஜனவரி 1, 1982-ம் நாளன்று தக்கலையில், அமைதிக்குழுக் கூட்டம் நடத்தினர். கிறித்தவர்களும், இந்துக்களும், அமைதியை நிலைநாட்டுவதாக உறுதியளித்தனர். சிறிது காலத்திற்கு எவ்வித சம்பவமும் நிகழவில்லை.

திருநெல்வேலி சரகத்தின் காவல்துறைத் துணைத் தலைமை ஆய்வாளர், கன்னியாகுமரி மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர், ஆகியோர் அடங்கிய மாவட்ட அளவிலான அமைதிக்குழுக் கூட்டம் ஜனவரி 1, 1982 அன்று நடைபெற்றது. மாவட்டத்தில் உள்ள பல்வேறு சமயத்தலைவர்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் அனைவரும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். ஜனவரி 30, 1982 அன்று குலசேகரத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்

காவல்துறை கண்காணிப்பாளர் ஆகியோர் தலைமையில், அனைத்து கட்சி, சமய ஊர்வலம் நடந்தது. ஊர்வலத்தின் முடிவில் அமைதியை நிலை நாட்ட அமைதிக்குழுக் கூட்டத்தில், தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பல்வேறு சமயத் தலைவர்களும், அரசியல் தலைவர்களும், வன்முறையை விட்டொழித்து அமைதி காக்க அனைவரையும் கேட்டுக் கொண்டார்கள்.

மண்டைக்காடு துப்பாக்கிச்சூட்டிற்கு பிறகு, மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில், மார்ச் 6,1982 அன்று, நாகர்கோவிலில் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் மாவட்ட அளவிலான அமைதிக் குழுவின் மற்றொரு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், திருநெல்வேலி சரக காவல்துறை துணைத்தலைமை ஆய்வாளர், கன்னியாகுமரி மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர், ஏனைய சமய அரசியல தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். அதனைத் தொடர்ந்து அமைதிக்குழு கூட்டங்கள், ஏப்ரல், 10, 1982, ஏப்ரல், 18, 1982, மே, 2, 1982, மே, 3, 1982, மே, 10, 1982, மே, 23, 1982 மற்றும் மே, 30, 1982 [22] ஆகிய நாட்களில் முறையே ஈட்டமொழி, அம்மண்டிவினை, கொளச்சல், கன்னியாகுமரி, மேலகிருஷ்ணன் புதூர், மண்டைக்காடு மற்றும் தூத்தூர் ஆகிய இடங்களில் நடைபெற்றன. 1982ஆம் ஆண்டு ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் நடைபெற்ற பல அமைதிக்குழு கூட்டங்கள் மாவட்டத்தில் அமைதியை வலுவூட்டியுள்ளன.

இம்மாவட்டத்தில், 1983ஆம் ஆண்டு எவ்வித பெரிய வன்முறைச் செயலோ, வகுப்புக் கலவரங்களோ நடைபெறவில்லை யெனவும், 1982ஆம் ஆண்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இந்துக்கள் மற்றும் கிறித்தவர்கள் ஆகியோரிடையே வகுப்பு வேற்றுமையினடிப்படையில் எவ்வித சலசலப்போ, குழப்பமோ, ஏற்பட்டதில்லை எனவும், கன்னியாகுமரி மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளரின், நிர்வாக அறிக்கையினின்றும் தெரிய வருகிறது.

இந்து முன்னனி, இரண்டாவது இந்து புத்தெழுச்சி மாநாட்டினை பிப்ரவரி 13,1983 அன்று நாகர்கோவிலில் நடத்த திட்டமிட்டு இருந்தது. இது தடைசெய்யப்பட்டது. காவல்துறையின் எச்சரிக்கைகளுக்கு செவி சாய்க்காது, தடையாணையையும் மீறி, ஒரு பெரிய கும்பல் வன்முறையில் ஈடு பட்டதால், கடைசியாக காவல்துறை துப்பாக்கிச்சூடு நடத்தியது. இதில் ஒருவர் இறந்தார். பின்னர் அந்த மாநாடு, செப்டம்பர் 11, 1983 அன்று, நாகர்கோவிலில் தகுந்த காவல்துறை அலுவர்களின் பாதுகாப்புடன் நடைபெற்றது. மண்டைக்காடு பகவதி அம்மன் கோவிலில் ஆண்டுத் திருவிழா எவ்வித அசம்பாவிதமின்றி, பிப்ரவரி 27, 1983 முதல் மார்ச் 8,1983 முடிய நடைபெற்றது. பொதுவாக, 1983 ஆம் ஆண்டு சட்டம், ஒழுங்கு நிலை, கட்டுப்பாட்டில் இருந்தது. மாவட்டத்தில் அமைதி நிலவியது. [23]

1984ம் ஆண்டு, கன்னியாகுமரி மாவட்டத்தில் எவ்வித பெரிய வன்முறை சம்பவங்களோ வகுப்பு அல்லது அரசியல் கலவரங்களோ ஏற்பட்டதில்லை. [24] ஒரு சில சிறு சம்பங்களைத் தவிர வகுப்பு

குழப்பங்களையோ, சலசலப்பையோ மாவட்டம் எதிர்க்கொண்டதில்லை. 1984 சூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் இந்து முன்னணி மாநில அமைப்பாளர் தாக்கப்பட்டதற்கெதிராக, இம்முன்னணியைச் சேர்ந்த உறுப்பினர்கள் திடீர் தாக்குதலில் இறங்கினர். நாடார் மகாசன சங்கம் மற்றும் இந்து முன்னனி உறுப்பினர்களிடையே திடீர் தாக்குதல் நடந்தது. அப்போதைக்கப்போது, காவல் மற்றும் வருவாய்த்துறை அலுவலர்களால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, அமைதி நிலைநாட்டப்பட்டது.

1985 ஆம் ஆண்டு, மாவட்டத்தில் எவ்வித பெரிய மற்றும் வன்முறை அரசியல் மோதல்கள் நடக்கவில்லை.[25] எனினும், கொல்லங்கோடில் வகுப்புக் கலவரங்கள் நடைபெற்றதால் அமைதி குலைந்தது. காவல்துறையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இருவர் உயிர் துறந்தனர். நான்கு பேர்கள் காயமடைந்தனர். ஈட்டமொழி, பன்னிமலை (கொண்ட கட்டிமலை) மற்றும் பெரிஞ்சக்கோணம் ஆகிய இடங்களில் நடந்த சம்பவங்கள் காவல் மற்றும் வருவாய் அலுவலர்களின் தலையீட்டால் கட்டுக்குள் கொணரப்பட்டு சலசலப்பு ஒடுக்கப்பட்டது.

1985ஆம் ஆண்டு காவல்துறை நடத்திய துப்பாக்கி சூடுகளும், அவை தொடர்பான சம்பவங்களும்

கொளச்சல் துணைக் கோட்டத்திலுள்ள கொன்னல்கோடு காவல் நிலையமானது, கேரள மாநில எல்லையில் அமைந்துள்ள நிலையமாகும். நீரோடித்துறை, மார்த்தாண்டன்துறை மற்றும் வல்லவினைத்துறை ஆகிய மூன்று கடற்கரை கிராமங்களும் இந்த நிலையத்தின் கட்டுப்பாட்.டிலுள்ள கிராமங்களாகும். 8,000 முதல் 10,000 வரையிலான ரோமானிய கத்தோலி வகுப்பைச் சார்ந்த மீனவர்கள் இக்கிராமங்களில் வாழ்கிறார்கள். மற்ற இரண்டு கிராமங்களும், இந்து நாயர்கள் மற்றும் கிறித்தவ நாடார் ஆகிய வகுப்பைச் சார்ந்தோர் வாழும் கிராமங்களாகும். கடற்கரை கிராமங்களை ஒட்டியுள்ள பகுதிகளில், ஒரு சிறிய மக்கட்தொகையிலான முகம்மதியர்கள் மற்றும் இந்து அரயர்கள், ஆகியோர் வசிக்கின்றனர். இவர்கள் சமுதாய அமைப்பில், மீனவர்களேயாவர். 1000 மக்கட் தொகையைக் கொண்ட அரயர்கள் இனத்தைச் சார்ந்த 200 குடும்பங்கள் இங்கு வாழ்கின்றன. கேரள எல்லையிலுள்ள மற்றொரு கிராமம் பொழியூராகும். இங்கு ரோமானிய கத்தோலிக்க வகுப்பைச் சார்ந்த 30,000 மீனவர்கள் இங்கு வசிக்கின்றனர்.

இந்து முன்னணியைச் சேர்ந்த ஒருவர் மற்றும் கிறித்தவ மதத்தைச் சார்ந்த மற்றொருவர், ஆகிய இருவருக்குமிடையே வாய்த்தகராறு முற்றி, தொடர்ந்து ஒருவருக்கொருவர் அடித்துக்கொள்ள துவங்கியதைத் தொடர்ந்து இந்துக்கள் மற்றும் கிறித்தவ மீனவர்களுக்கிடையே, ஆகஸ்ட் 8, 1985 ஆம் நாளன்று பைங்குளம் என்ற இடத்தில், மோதல் நடந்தது. இதனைத் தொடர்ந்து, ஆகஸ்ட் 19, 1985 ஆம் நாளன்று, வலிமை மிக்க கிறித்தவ மீனவர்கள் இந்துக்களின் வீடுகளுக்குத் தீ வைத்தனர். அவர்களில் 200-க்கும் மேற்பட்டோர், பயங்கர ஆயுதங்களுடன் இந்துக்களைக்

கடுமையாகத் தாக்கி, வள்ளிசாலை கிராமத்தின் இந்துக்களை ஒடுக்கும் நோக்கத்தில் கூடினர். பெரிய மோதலைத் தவிர்க்க முற்பட்ட காவல் அலுவலர்களை சினங்கொண்ட மீனவர்கள் தாக்கியதில், நான்கு காவல் அலுவலர்கள் காயமடைந்தனர். நிலை கட்டுக்கடங்காமல் போகவே, தற்காப்பு நிமித்தம், காவல்துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர். அதில் இரு மீனவர்கள் உயிர் துறந்தனர். இருவர் காயமுற்றனர்.

ஆகஸ்ட் 21, 1985 அன்று, துணை ஆணையர் மற்றும் காவல்துறைக் கண்காணிப்பாளர் ஆகியோரால், குழித்துறையில் அமைதிக்குழுக் கூட்டம் நடத்தப்பட்டது. விளவங்கோடு மற்றும் பத்மநாபபுரம், சட்ட மன்ற உறுப்பினர்கள், கடற்கரை கிராமங்களின் கிறித்தவ சமய குரு, மற்றும் இந்துக்கள், அரயர்கள், முகம்மதியர்கள் மற்றும் கிறித்தவர்கள் ஆகியோரின் சார்பில் அவர்களது பிரதிநிதிகள் அடங்கிய அமைதிக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். கொளச்சல் காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் மற்றும் பத்மநாபபுரம் கோட்ட ஆட்சியாளர் ஆகியோரின் கூட்டத்தில் அவர்கள் பங்கு கொண்டனர்.

வகுப்பு இணக்கத்தைக் கடைப்பிடித்து அமைதியாக வாழ கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. மறுநாள் காலை, கொளச்சல் காவல்துறை துணைக் கண்காணிப்பாளர், பத்மநாபபுரம் கோட்ட ஆட்சித் தலைவர், இரு சட்ட மன்ற உறுப்பினர்கள் மற்றும் கிறித்தவ சமய குருக்கள் ஆகியோர் அடங்கிய குழுவினை அனுப்பி, இருதரப்பிலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மறுவாழ்வு அளித்திட முடிவெடுக்கப்பட்டது. அதனை தொடர்ந்து, ஆகஸ்ட் 22, 1985 அன்று அவர்கள் அங்கு சென்று மறுவாழ்வு மற்றும் நிவாரணப் பணி மேற்கொண்டனர்.

1986ஆம் ஆண்டு, மாவட்டத்தில் எவ்வித பெரிய அசம்பாவிதமோ, வகுப்பு அல்லது அரசியல் கலவரமோ நடைபெறவில்லை.[26] ஆங்காங்கே நடைபெற்ற சிறுசிறு மோதல்கள் காவல் மற்றும் வருவாய்த் துறை அலுவலர்களின் தலையீட்டினாலும், நடவடிக்கையினாலும் ஒடுக்கப்பட்டன.

மதுவிலக்கைப் பொறுத்தவரையில், மதுவிலக்குச் சட்டங்களை மீறுவதென்பது, மாவட்டத்தில் எப்பொழுதுமே காணப்படும் ஒரு செயலாகும். இம்மாவட்டம் மலைப்பாங்கான பகுதியில் அமைந்துள்ளதாலும், பல்வேறு சரகங்களை அணுகுவதே சற்று கடினமாக இருப்பதாலும், மதுவிலக்குச் சட்டத்தைத் தீவிரமாக செயலாற்றுவது காவல்துறையினருக்கு சிரமமாக உள்ளது. மாவட்டத்தில் பலதரப்பட்டோர் பல்வேறு குற்றங்களைப் புரிந்துள்ள விவரம், பட்டியல், 1-லிருந்து 3 வரை, கடந்த 20 ஆண்டுகளில் மக்கள் புரிந்துள்ள பொதுக் குற்றங்களுக்கான புள்ளி விவரங்களிலிருந்து அறியவரும்[27].

பட்டியல்-1

கடுமையான குற்றங்கள்

தொடர் எண்.	குற்றவிவரம்	1969	70	71	72	73	74	75	76	77	78	79	80	81	82	83	84	85	86	87	88
1.	கொலை	19	25	11	22	21	19	26	12	22	32	30	36	39	42	44	38	44	43	56	9
2.	சிக்கவைத்துப் பிடித்துத் தாக்குதல்	–	1	–	–	–	–	–	–	–	–	–	–	1	–	–	–	–	–	–	–
3.	வழிப்பறிக் கொள்ளை	1	–	–	–	–	–	–	–	1	2	4	1	8	3	6	10	10	10	3	2
4.	வீட்டை உடைத்தல்	124	125	123	121	135	186	164	154	242	261	223	230	273	231	336	272	260	225	160	54
5.	திருட்டுகள்	188	180	243	232	237	219	194	291	289	414	349	407	451	340	497	329	296	243	270	75
6.	கால்நடைத் திருட்டுகள்	11	16	22	11	12	11	16	11	11	22	6	12	13	13/	10	3	8	4	9	–
	மொத்தம்	343	347	399	386	405	435	400	468	565	931	612	686	785	629/	893	702	618	525	498	140

காவல்துறை நிருவாக அறிக்கை, கன்னியாகுமரி மாவட்டம்

பட்டியல் - 2

புலனாலுணரக் கூடிய குற்ற வழக்குகள், 1 முதல் 6 வகையான குற்றங்களின் பகுப்பாய்வு

வகுப்பு	1969	70	71	72	73	74	75	76	77	78	79	80	81	82	83	84	85	86
வகை–1	79	77	106	69	103	40	41	120	224	205	141	340	622	891	517	531	743	701
வகை–2	214	220	287	419	341	461	365	386	608	564	684	725	876	1074	896	827	937	1053
வகை–3	127	131	156	139	147	219	185	185	290	288	240	264	315	387	499	357	359	299
வகை–4	25	17	59	38	114	69	89	116	160	167	298	73	64	216	272	201	255	227
வகை–5	270	289	387	343	311	311	375	509	440	595	525	504	637	558	660	533	403	346
வகை–6	60	93	67	77	36	13	19	59	330	364	630	463	361	518	139	631	315	746
மொத்தம்	775	827	1062	1085	1081	1113	1034	1381	2052	2183	2518	2427	2875	3644	2983	3080	3014	3372

வகை–1 பொதுமக்கள் அமைதி, பாதுகாப்பு மற்றும் நீதி ஆகியவற்றிற்கு ஊறு விளைவிக்கும் குற்றங்கள்.

வகை–2 நபர்களின் உடலைத் தாக்கும், கடுமையான குற்றங்கள்.

வகை–3 நபர்களின் உடைமை மற்றும் உடல் அல்லது உடைமை ஆகியவற்றிற்கு ஊறு விளைவிக்கும் குற்றங்கள்.

வகை–4 நபர்களின் உடலைத் தாக்கும் சிறு குற்றங்கள்.

வகை–5 நபர்களின் உடைமையைத் தாக்கும் சிறு குற்றங்கள்.

வகை–6 இந்திய தண்டனை பற்றிய சட்டத்தொகுப்பேட்டில் குறிப்பிட்டுள்ள இதர குற்றங்கள் .

காவல்துறை கண்காணிப்பாளர், கன்னியாகுமரி மாவட்டம், அறிக்கை நாள் 28.7.1988

பட்டியல்-3

கன்னியாகுமரி மாவட்டத்தில் காணாமல்போன மற்றும் காவல்துறையினரால் மீட்கப்பட்ட சொத்துக்கள் விவரம்*

ஆண்டு	காணாமற்போன சொத்துக்கள்	மீட்கப்பட்ட பொருட்கள்	மீட்கப்பட்ட பொருட்களின் விழுக்காடு
1979	3,74,595	1,48,094	39,5
1980	6,35,809	1,73,813	27.3
1981	10,24,344	4,28,619	41.8
1982	9,01,606	4,60,084	51.3
1983	18,96,420	10,00,044	52
1984	18,67,068	7,12,968	38.2
1985	8,06,836	3,93,426	48.8
1986	9,48,841	5,35,844	56.5
1987	9,93,158	3,59,438	36.2

** காவல்துறைத் தலைவர், சென்னை, அறிக்கை நாள், 20.12.1988*

கொலைக் குற்றங்கள் 1969-ல் இருந்த 19-லிருந்து, 1987-ல் 56 ஆக உயர்ந்துள்ளது. வழிப்பறிக் குற்றங்கள் பெரும்பாலும் இல்லையெனக் கூறலாம். கொள்ளைக் குற்றம், சற்று அதிகரித்திருந்த போதிலும் 1984, 1985, மற்றும் 1986 ஆகிய ஆண்டுகளில் 10 குற்றங்களென நிலையாக இருந்திருக்கிறது. பிற்பட்ட ஆண்டுகளில், குறைந்துள்ளது. வீட்டை உடைத்துத் திருடும் குற்றம் மற்றும் திருட்டு ஆகியவை குற்றவாளிகள் பொதுவாகப் புரியும் குற்றங்களாகும். இவ்விரு குற்றங்களும், மிக அதிக அளவிலும், ஆண்டுக்கு ஆண்டு மாறுபட்ட போக்கிலும் உள்ளன. நபர்களுக்கு காயம் விளைவித்து கடுமையான குற்றங்கள் புரிதல் என முதலாவதாக வகைப்படுத்தப்பட்ட குற்றங்கள், நபர்களுக்குக் காயம் விளைவித்தும் பொருட்களை சேதப்படுத்தியும் கடுமையான குற்றங்கள் புரிதல் என இரண்டாவதாக வகைப்படுத்தப்பட்ட குற்றங்கள் மிக அதிகளவில் உள்ளன. இம்மாதிரியான குற்றங்கள், ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்துக் கொண்டு வருகின்றன. இரண்டாவதாக வகைப்படுத்தப்பட்ட குற்றங்கள் 1970 ஆம் ஆண்டு 220 ஆக இருந்தவை, 1980 ஆம் ஆண்டு 775 ஆகவும், 1986ம் ஆண்டு 1053 ஆகவும் உயர்ந்துள்ளன. இவ்வகையில் 1983 ஆம் ஆண்டு, அதிக அளவில் அதாவது 499 குற்றங்கள், நிகழ்ந்துள்ளன. சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்ட சிறிய குற்றங்கள் குறைந்த அளவிலேயே உள. எனினும், ஆண்டுக்கு ஆண்டு, பெரும்பாலும் அனைத்துவகைக் குற்றங்களிலும் அதிகரிக்கும் போக்கே காணப்படுகிறது.

பட்டியல் - 4

விரல்பதிவுத் துறையின் செயலாக்கம்

தொடர் எண்.	விவரங்கள்	1978	1979	1980	1981	1982	1983	1984	1985	1986	1987
1.	பணியாளர்கள் பார்வையிட்ட குற்றங்கள் நிகழ்ந்த இடங்கள்	309	260	269	310	225	321	290	250	230	212
2.	அச்சுப்பிரதிகள் பெரிதாக்கப் பட்ட இனங்கள்	102	77	60	120	82	95	71	76	82	70
3.	அச்சுப்பிரதிகளின் உதவியால் அடையாளங்கானப்பட்ட இனங்கள்	42	38	27	46	23	52	34	25	14	14
4.	குற்றவாளிகளுடன் அடையாளங்காணப்பட்ட அச்சுப்பிரதிகளிலடங்கிய இனங்கள்	16	10	11	30	22	25	13	25	36	21
5.	அடையாளங்கள் காணப்பட்ட தைத்தொடர்ந்து, கண்டுபிடிக்கப்பட்ட இனங்கள்	11	21	14	34	--	75	20	8	57	19
6.	செய்தி அறிவிக்கும் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட குற்றவாளிகள்	2878	3071	3062	3286	3400	3516	3662	3768	3882	3979
7.	ஒப்புநோக்கும் பொருட்டு, கிடைக்கப் பெற்ற கைரேகைச் சீட்டுகள்	683	574	704	664	838	1793	2372	2625	2335	2359
8.	ஆய்வு செய்யப்பட்டு சென்னை கைரேகை அலுவலகத்திற்கு அனுப் பப்பட்ட தண்டனைக்குறிப்பாணைகள்	470	314	303	303	254	506	481	426	541	406

ஆதாரம் : காவல்துறை கண்காணிப்பாளர், கன்னியாகுமரி மாவட்டம், அறிக்கை நாள் 28.7.1988

ஒவ்வொரு ஆண்டும் திருட்டுப்போன பொருட்களின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டு வருவது பட்டியல்-3இல் இருந்து தெரியவருகிறது. பொருட்கள் திருட்டுப்போன குற்றங்களின் எண்ணிக்கை, அதிகமாகியுள்ளதால், 1983 மற்றும் 1984 ஆம் ஆண்டுகளில் திருட்டுப்போன பொருட்களின் எண்ணிக்கையும் மிக அதிக அளவில் உள்ளது. ஆனால், 50 விழுக்காடு அளவுள்ள பொருட்களைத் தான் மீட்க்க முடிந்தது.

விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பம் ஆகிய துறைகளின் வளர்ச்சி மற்றும் கணக்கிடும் பொறியின் அறிமுகம் ஆகியவை, உலகம் முழுமையிலும் செயலாட்சி முறைகளில் தற்கால வழிமுறைகளைக் கையாள வழிவகுத்துள்ளது. இம்முறைகளை தமிழ்நாடு காவல்துறை நன்கு பயன்படுத்திக் கொண்டு குற்றத் தொடர்புள்ள புள்ளி விவரங்கள் மற்றும் குற்றங்களைக் கண்டுபிடித்தல் ஆகிய அலகுகளில் புதிய தொழில் நுட்பங்களை அறிமுகம் செய்துள்ளமை, குறிப்பிடத்தக்கது. குற்றங்களைத் தடுக்கும் திறன் மற்றும் காவல் பணியாளர்களின் அதனைச் சார்ந்த ஏனைய அலுவல்கள், ஆகியவற்றில் விஞ்ஞானத் தொழில் நுட்பங்களை முறையாகவும், மிகவும் உகந்த வகையிலும் பயன்படுத்தும் நோக்கில், காவல்துறையில் தற்கால வழிமுறைகளைக் கையாண்டு மேம்படுத்தும் மத்திய அரசுத் திட்டத்தின்படி காவல்துறைக் கணக்கிடும் பொறிஅலகு 1971-ம் ஆண்டு அமைக்கப்பட்டது.

கைரேகைகளை அடையாளங்கண்டுகொள்ளத் தேவையான காவல்துறையின் வகைப்படுத்தப்பட்ட எந்த புள்ளி விவரங்களையும் அதனைச்சார்ந்த எனைய தகவல்களையும் மிகக் குறுகிய நேரத்தில் நெடுந்தொலைவிலுள்ள காவல் துறை அலுவலர்களுக்கு தற்போது அனுப்பி வைக்கமுடியும். கன்னியாகுமரி மாவட்டத்தில் காவல்துறை கணக்கிடும் பொறிஅலகு, சென்னையிலுள்ள காவல்துறை கணக்கிடும் பொறி அலகிலிருந்து, பொருட்கள் தொடர்பான வாக்கு சார்ந்த விவரங்களடங்கிய படிவங்கள் அறிவுரைக்குறிப்பாணைகள் ஆகியவற்றைப் பெற்று விசாரணையைத் தொடர்கிறது. இவ்வறிவுரைக் குறிப்பாணைகள், பொருட்கள் குறித்த பல வழக்குகளைக் கண்டு பிடிக்க, விசாரணை அலுவலர்களுக்கு மிகவும் உதவியாக உள்ளன.

கைரேகை விவரச் சேகரப் பணிமனை

தற்போது குற்றங்களைத் தெளிவாகக் கண்டுபிடிக்க, விஞ்ஞான ரீதியான விசாரணைதான் மிகவும் பயனளிக்கிறது. இந்நாட்களில் குற்றம் புரிய குற்றவாளிகள் கடைப்பிடிக்கும் செயல்வகைகளைக் கூர்ந்தாய்ந்து, குற்றங்கள் களையப்பெறவும், குற்றங்களைத் தெளிவுறக் கண்டுபிடித்து சரியான குற்றவாளிகளை அடையாளங்காட்டவும் அரசு பலவிதமான புதிய முறைகளைக் கையாண்டு வருகிறது. அதிலொரு முக்கிய நடவடிக்கையாதெனில், மாநிலத்தில் நிறுவப்பட்டுள்ள கைரேகை விவரச்சேகர அலுவலகமும். அனைத்து காவல்துறை மாவட்டங்களிலும் அமைக்கப்

பட்டுள்ள ஒற்றிலக்க அச்சுப் பிரிவுகளுமாகும். கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள ஒற்றிலக்க அச்சு விவரச் சேகரப் பிரிவு, கன்னியாகுமரி மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளரின் நேரடி மேற்பார்வையில் ஒரு தனி அலகாக இயங்கி வருகிறது. ஒரு கண்காணிப்பாளர், மூன்று கைரேகை நிபுணர்கள் மற்றும் மூன்று கைரேகைத் தோ்வாய்வாளர் ஆகியோர் அடங்கிய இப்பிரிவு, கடந்த, ஜூன் 16, 1972 ஆம் நாளன்று இயங்கத் துவங்கியது.

குற்றங்களைக் கண்டுபிடிக்க விசாரணை அலுவலர்களுக்கு இந்த விவரச் சேகரப்பிரிவு பெரிதும் உதவி புரிந்து வருகிறது. வீட்டுத் திருட்டு, வீட்டை உடைத்துத் திருடுதல், வழிப்பறி கொள்ளை, கொலை மட்டும் தானியங்கும் ஊர்திகள் திருட்டு ஆகியவை தொடர்பாக மாவட்டத்தில் குற்றம் நடந்ததாக சந்தேகிக்கப்படும் இடங்களை இப்பிரிவுகளின் கைரேகை நிபுணர்கள் முறையாகப் பார்வையிடுகிறார்கள். அவர்கள் குற்றங்கள் நடந்த இடங்களில் கைரேகைகளைச் சேகரித்து, உரிய நடவடிக்கை தொடர்ந்து, அவற்றை ஒற்றிலக்கப்பதிவறைக்கு அனுப்பி வைக்கிறார்கள். இதைத் தவிர இப்பிரிவின் பணி, அடையாளங்காணப்படாத சவத்தின் கைரேகைகளைச் சேகரிக்கவும், அவற்றின் தனித்துவத்தை உறுதிப் படுத்தவும் பயன்படுத்தப் படுகிறது.

ஒற்றிலக்கப் பிரிவுகளின் ஆவணங்கள் மற்றும் சென்னை கைரேகை விவரச் சேகர அலுவலக ஆவணங்கள் ஆகியவற்றை கூர்ந்தாய்வு செய்த பின்னரும், அக்குற்ற வழக்குகள் கண்டுபிடிக்க இயலாத நிலையிலிருந்தால், குற்றவாளி மற்ற மாநிலங்களிலிருந்து வந்திருக்கலாமோவென்ற ஐயப்பாட்டில், அந்த மாநில ஆவணங்களுடன் கைரேகைகள் ஒப்பிட்டுப் பார்க்கப்படுகின்றன. மிகவும் கடுங்குற்றங்கள், இம்முறையைப் பின்பற்றியே கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றனவென்பது உண்மையே.

இந்த அடையாள முறையை நல்ல வகையில் பயன்படுத்தி, நல்ல பல முடிவுகளைக் காணும் நோக்கில், இந்திய குற்றவியல் சட்டம் (ஐ.பி.சி.) பிரிவு 454, அல்லது 457 அல்லது 380 அல்லது 381 ஆகியவற்றின் கீழ், குற்றவாளிகளாகக் கருதப்பட்டு தண்டனை வழங்கப்பட்ட உள்ளார்ந்த ஆற்றல் மிக்க, குற்றவாளிகளின் கைரேகைகள் பாதுகாப்பாக சேகரித்து வைக்கப்படுகின்றன.

வழிப்பறி கொள்ளை மற்றும் பயனை எதிர்நோக்கி மேற்கொள்ளப்படும் கொலை ஆகியவை வகைப்படுத்தப்பட்டு, "பாட்லி" முறைப்படி சீராக அமைக்கப்படுகின்றன. இது தொடர்பாக, ஆவணத்தொகுதியில் இடம் பெற்ற குற்றவாளிகள் மற்றும் பழக்கத்திற்காளாகிவிட்ட குற்றவாளிகள் ஆகியோரது கைரேகைச் சீட்டுகளும் பதிவு செய்யப்படுகின்றன.

மாவட்டத்தின் பல்வேறு காவல் நிலையங்களில், சந்தேகத்தின் அடிப்படையில் பிடித்து வைக்கப்பட்டுள்ள நபர்களின் கைரேகைகள் மாவட்டப் பிரிவிற்கு அனுப்பப்பட்டு, அவர்களது முன் வரலாற்றினைக்

குறித்திட பின்னர் அவையாவும் சென்னை கைரேகைப் பிரிவிற்கு அனுப்பப்படுகின்றன. குற்றம் நடந்த இடத்தில் இருந்து எடுக்கப்பட்ட புகைப்படங்களில் காணப்படும் கைரேகைகள், இந்த சீட்டுகளில் காணப்படும் கைரேகைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டு, அதன் பின்னரே சென்னை கைரேகை விவரச் சேகர அலுவலகத்திற்கு அனுப்பப்படுகின்றன.

காவல் நிலையங்களில் தயார் செய்யப்படும் குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்ட குற்றவாளிகள் தொடர்பான குற்றத் தீர்ப்புக் குறிப்பானைகளும், விவரச்சேகர அலுவலகத்திற்கு அனுப்பப்படுகின்றன. அவை ஆய்வு செய்யப்பட்டு, கைரேகை சேகரிப்பு அலுவலக தொடர் எண் வழங்குவதன் பொருட்டு, சென்னை கைரேகை விவரச் சேகரிப்பு அலுவலகத்திற்கு அனுப்பப்படுகின்றன.

இதர மாவட்டங்களில், குற்றங்கள் நடந்த இடங்களினின்று சேகரிக்கப்பட்ட அடையாளம் காணப்படாத கைரேகை அச்சுகள், இம்மாவட்ட உள்ளார்ந்த, ஆற்றல் மிக்க, குற்றவாளிகளின் ரேகைகளுடன் ஒப்பு நோக்கப்படுகின்றன. இம்மாவட்டத்தைச் சார்ந்த குற்றவாளிகள், வேறு மாவட்டங்களில், குற்றம் புரிந்திருந்தால், அச்சுப் பிரதியின் மூலம் அவர்களது தனித்துவமும் நிலைநாட்டப்படுகிறது. கைரேகை விவரச்சேகர அலுவலகத்தின், 1978 முதல் 1987 வரையிலான செயல்திறன், பட்டியல் 4இல் அளிக்கப்பட்டுள்ளது.[28]

எவ்வித வழிகாட்டும் குறிப்புமில்லாத பல சிக்கலான வழக்குகள், விவரச்சேகர அலுவலகத்தால், தற்செயல் அச்சுப் பிரதி மூலம், வெற்றிகரமாகக் கண்டுபிடிக்கப்படுகின்றன. கேரளா, கன்னியாகுமரி மாவட்டத்தின் எல்லை மாநிலமாக அமைந்துள்ளதால், கேரள மாநிலத்திலிருந்து வரும் குற்றவாளிகள், இம்மாவட்டத்தில், அடிக்கடி குற்றம் புரிகிறார்கள். அவர்கள் பல்வேறு குற்றங்களில் ஈடுபடுவது விவரச் சேகர அலுவலகம் மூலமாகத் தான் கண்டு வெளிப்படுத்தப்படுகிறது.

சிறப்பு முறைக் காவல்துறையினர் பிரிவு

ஒரு ஆய்வாளர், மூன்று துணை ஆய்வாளர்கள், ஆறு தலைமை ஊர்க்காவலர்கள் மற்றும் மூன்று ஊர்க்காவலர்கள் ஆகியோரைக்கொண்ட மாவட்ட சிறப்பு முறைக் காவல்துறையினர் பிரிவு, நாகர்கோவிலில் இயங்கி வருகிறது. அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள், அனைத்து அரசு ஊழியர் சங்கங்கள், பல்வேறு சமுதாய வகுப்புகளின் நிலை, மற்ற சட்ட ஒழுங்குப் பிரச்னைகள் ஆகியவை குறித்த வேவுத் தகவல்களைச் சேகரித்து, மேல் அலுவலர்களுக்கும், அரசிற்கும் அனுப்பி வைப்பதே, இப்பிரிவைச் சேர்ந்த அலுவலர்களின் பணியாகும். இவை தவிர, அயல் நாட்டினர், மாணவர்கள் மற்றும் தீவிரவாதிகள் ஆகியோர் தொடர்பான தகவல்களையும் சேகரித்து அரசிற்கும், மேல் அலுவலர்களுக்கும் இப்பிரிவு அளிக்கிறது.

1982 ஆம் ஆண்டு நடந்த மண்டைக்காடு சம்பவத்தின்போது, அரசிற்கு முன் கூட்டியே உரிய தகவல்களை அளித்து, சாரல், சாந்தபுரம் மற்றும் கொல்லங்கோடு ஆகிய கிராமங்களில், பெரிய மோதல்களைத் தவிர்த்து, சிறப்பு முறைக் காவல்துறையினர் அரும்பணியாற்றினர். அவர்கள் உரிய நேரத்தில் முன் கூட்டியே அரசிற்குத் தகவல் அனுப்பியதால், இம்மாவட்டத்தில், இப்பெரிய திருவிழா மிகவும் சுமுகமாகக் கொண்டாடப் பட்டது.

மதுவிலக்கு செயலாக்க அலகு

மதுவிலக்கு அலகு, 1937ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் மற்றும் அதன்மீது பிறப்பிக்கப்பட்ட விதிகள் ஆகியவற்றை மாவட்டத்தில் சீரிய முறையில், செயலாற்றி வருகிறது. மாவட்ட அளவில், பிராந்திய காவல்துறைக் கண்காணிப்பாளர் மற்றும் காவல்துறை துணை முதன்மை ஆய்வாளர் ஆகியோரின் நேரடி மேற்பார்வையில் இவ்வலகு இயங்குகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில், நாகர்கோவில், தக்கலை, குழித்துறை மற்றும் அருமனை ஆகிய நான்கு அலகுகள் இயங்கிவருகின்றன. ஒவ்வொரு அலகும், ஒரு ஆய்வாளர், இரண்டு துணை ஆய்வாளர்கள், இரண்டு தலைமை ஊர்க்காவலர்கள், இரண்டு நிலை, 1. ஊர்க்காவலர்கள் பதினெட்டு நிலை இரண்டாம். ஊர்க்காவலர்கள் ஆகியோர் கட்டுப்பாட்டில் உள்ளனர்.

மாநிலத்தின் வருவாயை சிதறவிடாது, தடுத்துக் காத்திட கள்ளத்தனமாக மது (சாராயம்) காய்ச்சுதல், மதுவினைக் கடத்தி விற்றல், இந்தியாவில் செய்த, அயல்நாட்டு மதுவினை அண்டை மாநிலங்களுக்குக் கடத்துவதைத் தடுத்தல் போன்ற பொறுப்பான பணிகளில், மதுவிலக்கு செயலாக்க அலகு ஈடுபட்டுள்ளது. தொடர்புள்ள உரிமைதாரர்களுக்கு ஒதுக்கப்பட்ட வடிகட்டித் தூய்மைப்படுத்தப்பட்ட மதுவையும், கருப்பஞ்சாறையும் தவறுதலாகப் பயன்படுத்துவதைத் தடுப்பதும் இவ்வலகின் பணியாகும்.

மனித உரிமைப் பாதுகாத்தல்

ஒரு ஆய்வாளர், இரண்டு துணை ஆய்வாளர்கள், ஒரு புள்ளிவிவர ஆய்வாளர், இரண்டு தலைமை ஊர்க்காவலர்கள், மற்றும் இரண்டு ஊர்க்காவலர்கள் ஆகிய பணியாளர்களுடன், இப்பிரிவு, செப்டம்பர் 11, 1979 முதல் கன்னியாகுமரி மாவட்டத்தில் பணியாற்றி வருகிறது. இப்பணியாளர் கள், மாவட்ட குற்ற வழக்கு ஆவணங்கள் பிரிவின் காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் மற்றும் மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர் ஆகியோரின் கட்டுப்பாட்டில் பணியாற்றி வருகிறார்கள்.

மனித உரிமை பாதுகாப்புச் சட்டம் முறையாகச் செயல்படுத்தப் படுவதைக் கண்காணிக்கும் பொறுப்பினை சென்னையைத் தலைமை யிடமாகக் கொண்ட, மனித உரிமைகள் சட்ட காவல்துறை முதன்மைத் துணை ஆய்வாளர் ஏற்றுள்ளார்.

மனித உரிமைப் பாதுகாப்புச் சட்ட வழக்குகள் குறித்து, தீவிர விசாரணை செய்வதற்காக இவ்வலகைச் சேர்ந்த பணியாளர்கள், மாவட்டம் முழுமையும், சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார்கள். ஒரு பொருளியல் ஆய்வாளர், மற்றும் மனித சமுதாயத்தின் வளர்ச்சி இயல்பு சட்டங்கள் ஆகியவை பற்றிய ஆய்வாளர் ஒருவர் ஆகியோர் அடங்கிய ஒரு தனி ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு அலகு, தீண்டாமை இன்னமும் இருக்கக் கூடிய கிராமங்களில் ஆய்வு நடத்தி, அப்பகுதி மக்களின் குறைகள் களையப் பெற மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிக்கை அனுப்புகிறது. மாவட்டத்திலுள்ள இவ்வலகில் இடம்பெற்றுள்ள அலுவலர்கள், சமூகத்தில் பின் தங்கிய நிலையிலுள்ள மக்களுக்கு, அரசின் கொள்கைப்படி ஆதார வசதிகளான, குடிநீர், தெரு விளக்குகள், வீட்டு மனைகள் மற்றும் இடுகாட்டிற்குப் பாதை ஆகியவற்றை செய்து கொடுக்க மற்ற அலுவலர்களுடன் கலந்தாலோசித்து, அவ்வப்போது உரிய நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்கள்.

மனித உரிமைப்பாதுகாப்பு அலகினால், கன்னியாகுமரி மாவட்டத்தில், 1986 ஆம் ஆண்டு, 23 வழக்குகளும், 1987ஆம் ஆண்டு 28 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. உள்ளூர் காவல்துறை பதிவு சேய்த சிலரது அட்டூழியம் தொடர்பான வழக்குகளையும் இவர்கள் கண்காணிக்கிறார்கள்.

காவல்துறை கட்டுப்பாட்டு அறை

நாகர்கோவில் காவல்துறை கட்டுப்பாட்டு அறை, ஒரு காவல் துறை ஆய்வாளர், மூன்று துணை ஆய்வாளர்கள், ஆறு, நிலை - 1 ஊர்க்காவலர்கள் மற்றும் ஒன்பது, நிலை - 2 காவலர்கள் ஆகியோருடன், ஏப்ரல் 20, 1974 நாளன்று, அமைக்கப்பட்டது. அது நாள் முழுமையும் (24 மணி நேரமும்) மூன்று முறை மாற்ற அடிப்படையில் இயங்கி வருகிறது. கட்டுப்பாட்டு அறையில் இயல்பான காவல்களைத் தவிர, படைக்கலம் பூண்ட நெருக்கடிகால அழைப்பு சேமப்படையின் ஒரு பிரிவினர், தாக்காற்றல் மிக்க பன்படையினராக, நெருக்கடிகளை சமாளிப்பதற்காக இயங்கி வருகிறார்கள். கட்டுப்பாட்டு அறையின் முதன்மையான பணி, நெருக்கடிநிலை அழைப்புகள் மற்றும் தீயணைப்பு அழைப்புகள் ஆகியவற்றை செவிசாய்த்து, செயலாற்றுவதாகும். ஒரு நாளைக்கு மூன்றிலிருந்து நான்கு அழைப்புகள் இப்படையினரால் கவனிக்கப்படுகின்றன.

படைக்கலம் பூண்ட சேமப்படையினர்

ஒரு சேமப்படை ஆய்வாளர், 12 சேமப்படை துணை ஆய்வாளர்கள், 38 தலைமை காவலர்கள், 10 நிலை-1 காவலர்கள், மற்றும் 370 காவலர்கள்

ஆகியோர் அடங்கிய படைக்கலம் பூண்ட சேமப்படை இம்மாவட்டத்தில் இயங்கி வருகிறது. சட்டம், ஒழுங்கு பராமரிப்பது, மிகவும் முக்கிய நபர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பது ஆகியவை, இப்படையினரின் முக்கியப் பணியாகும்.

மகளிர் காவல்படை

மாவட்டத்தில் இரண்டு மகளிர் காவல் நிலையங்கள், ஒன்று கன்னியாகுமரியிலும், மற்றொன்று கோட்டாற்றிலும் இயங்கிவருகின்றன. ஒவ்வொன்றிலும், ஒரு பெண் காவல் துணை ஆய்வாளர், ஒரு பெண் தலைமை காவலர் மற்றும் 10 நிலை-1 பெண் காவலர் ஆகியோர் பணியாற்றி வருகின்றனர்.

மற்ற காவலர்களைப் போன்று, பெண் காவலர்களும் பயிற்சி பெற்றுள்ளனர். அவர்களது பணிகள் சிறப்பியல்புடையனவாகும். அவர்களது பணிகள் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன :

1. பெண்கள் அதிக அளவில் கலந்து கொள்ளும் விழாக்களில் (கீழ்க்கண்டவாறு) பந்தோபஸ்து பணியாற்றுதல்;
2. பெண்கள் மற்றும் இளங்குற்றவாளிகளை அடையாளங்கண்டு அவர்களைக் கைது செய்தல்;
3. பெண் குற்றவாளிகளை சோதனை செய்தல்.
4. பெண் மற்றும் இளங்குற்றவாளிகளை நீதிமன்றங்களுக்கு அழைத்துச் செல்லும்போதும், நீதி மன்றத்திலிருந்து திரும்ப அழைத்து வர வழிகாப்பாளராகச் செல்லுதல்;
5. பள்ளிகளுக்கு அருகாமையில் போக்குவரத்தினை ஒழுங்கு படுத்துதல்; மற்றும்
6. விலைமகளிர் மனைகளை திடீர் சோதனை செய்யும்போது, சோதனைக் குழுவினைப் பின் தொடர்தல்.

குடிமக்கள் படை

இவ்வமைப்பு மாவட்டத்தில், 166 ஆண் குடிமக்கள் படையினருடனும், 56 பெண் குடிமக்கள் படையினருடனும் இயங்கி வருகிறது. குடிமக்கள் படையினர், ஒரு பகுதி படைத்தலைவர், பகுதி துணை படைத்தலைவர் ஆகியோரின் கட்டுப்பாட்டில் இயங்கிவருகின்றனர். கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள குடிமக்கள் படைக்கு மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் தான் படைத்தலைவராவார். மாவட்ட காவல்துறை அலகிற்கு வழங்கப்பட்ட பணியாளர் தொகுதியிலடங்கிய ஒரு சேமப்படை துணைக் காவல் ஆய்வாளர் கணக்குகள் பராமரிப்பு மற்றும் அலுவலக கடிதப் போக்குவரத்து ஆகிய பணிகளை கவனித்து வருகிறார். மக்கள் படையினர், படையணித் திரட்டில் பங்கு கொள்கிறார்கள். அவர்கள்,

போக்குவரத்து ஒழுங்குப் பணி, இரவு ரோந்து, தேர்தல் பணி மற்றும் பந்தோபஸ்து பணி ஆகியவற்றிற்கும் அனுப்பப்படுகின்றனர்.

சிறை-தோற்றம்-வளர்ச்சி

திருவனந்தபுரத்தில் ஒரு சிறையும், கொல்லத்தில் ஒரு சிறையும், ஆகிய இரு சிறைகள் முன்பு இயங்கி வந்ததாகத் திருவாங்கூர் நிருவாக முறையினின்றும் தெரியவருகிறது. அரசின் தண்டனைக்கைதிகள் இச்சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் ஒவ்வொரு நாளும், சாலைகள் முதலியவற்றைப் பழுதுப்பார்ப்பதற்காக அமர்த்தப்பட்டு வந்தனர்[29].

சிறைக் கைதிகளுக்கு உள்ளூர் மருத்துவர்கள் மருத்துவம் பார்த்து வந்தனர். இப்பணிக்கு அவர்களுக்கு ஆறு அல்லது ஏழு ரூபாய் மாத ஊதியமாக வழங்கப்பட்டு வந்தது. இம்முறையில், துப்புரவுக்கேடும், பெரிய அளவில் உயிர் இழப்பும் ஏற்பட்டதால், கி.பி.1860 ஆம் ஆண்டு, மருத்துவப் பொறுப்பு அரசின் முதன்மை மருத்துவ அலுவலரான தர்பார் மருத்துவருக்கு மாற்றப்பட்டது. இதனைத் தொடர்ந்து, ஒவ்வொரு சிறைக்கும் மருத்துவர்கள் இணைக்கப்பட்டார்கள்.

திருவனந்தபுரம், கொல்லம் மற்றும் ஆலப்புழை இவற்றில் இயங்கிவந்த மூன்று முதன்மை சிறைகளைத் தவிர, ஜில்லா குற்றவியல் நீதிமன்றங்களுடன் சிறிய சிறைகளும் இணைக்கப்பட்டிருந்ததாக, 1862-63 ஆம் ஆண்டு நிருவாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவை முக்கியமாக விசாரணைக் கைதிகளைப் பாதுகாத்திடவே இயங்கி வந்துள்ளன.

1872-73 ஆம் ஆண்டு சிறைகளின் எண்ணிக்கை, நான்காக உயர்ந்தபோதும் கூட, தற்போதைய கன்னியாகுமரி மாவட்டப்பகுதியில், சிறைகள் இயங்கிவந்ததில்லை. அனைத்து சிறைகளும், திவானின் பொதுக் கட்டுப்பாட்டிலிருந்து வந்தன. கண்காணிப்பாளர் அல்லது சிறைக் கூடப் பொறுப்பாளரின் நேரடி பொறுப்பில் சிறைகள் இயங்கிவந்தன[30].

இரவில் சிறைக் கைதிகள் பூட்டி வைக்கப்பட்டனர். சிறைக் காவலர்கள் அல்லது படைப்பகுதிப் போர் வீரர்கள் சிறைக் கைதிகளைக் காவல்புரிந்து வந்தனர். வெறுங்காவல் தண்டனை பெற்ற கைதிகளுக்கு எவ்வித வேலையும் அளிக்கப்படுவதில்லை. ஆனால், கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்ட கைதிகள், சாலைகளைப் பழுது பார்த்தல், தோட்டவேலை செய்தல், சமையல் செய்தல், பாத்திரங்கள் துலக்குதல், கிணற்றிலிருந்து தண்ணீர் இறைத்தல், அவர்களுக்கே பயன்படுத்தப்படும் சிறைக்கட்டு மற்றும் விலங்கீடு ஆகியவை செய்தல், போன்ற பணிகளுக்கு ஈடுபடுத்தப்படுகிறார்கள். பிராமணர்களும், அனைத்து சமுதாய வகுப்புகளையும் சார்ந்த பெண்களும், உழைப்பு மேலிட்ட பணிகள் செய்வதினின்றும் விலக்களிக்கப்பட்டவராவர்.

கைதிகளுக்கு வழங்கப்படும் உணவு, அவர்களது தண்டனையின் இயல்பையும், பணிப் பளுவினையும் பொறுத்ததாகும். சமுதாயத்தில் கடன் பட்டோரைத் தவிர, ஏனைய கைதிகளுக்கு அரையாண்டிற்கொரு முறை ஒரு துணியும், ஒவ்வொரு மூன்றாம் ஆண்டு ஒரு விரிப்பும் வழங்கப்பட்டன.

ஒரு தனிக் கட்டிடத்தில் இயங்கிவந்த மருத்துவமனை, சிறைக்கைதிகளுக்கு மருத்துவ உதவி அளித்து வந்தது. வியாதியுள்ள கைதிகள் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர். தொத்து நோயால் பாதிக்கப்பட்டு அவதியுற்ற கைதிகள், சிறை மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டனர், சாதாரண வியாதிகளினால் பாதிக்கப்பட்ட கைதிகள், சிறைக்கட்டிடத்திலேயே வைத்தியம் செய்யப்பட்டனர்.

ஒரு துணை உதவி அறுவை மருத்துவரின் தலைமையில், சிறை மருத்துவ அலகு இயங்கி வந்தது. அவருக்கு இருவர் உதவி செய்தனர். வழக்கறிஞர்கள் மற்றும் உறவினர்களுடன் கலந்துரையாட, தினமும அவர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

பாவ மன்னிப்பு வழங்கும் முறைய செயல்படுத்தப்படவில்லை. கைதிகள் கீழ்ப்படியாமல் இருந்தாலோ, சிறைக்கட்டுப்பாட்டினை மீறினாலோ, அவர்களது முதுகில் பிரப்பங்கழியினால் ஆறு அடி கொடுக்க, சிறை அலுவலர் அதிகாரம் பெற்றிருந்தார். ஆனால், கைதிகளை உணவை இழக்கச் செய்தல், ஒரு தண்டனையாக வழங்கப்பட்டதில்லை.

அந்நேரத்தில், அங்கீகரிக்கப்பட்ட சிறை ஒழுங்கு விதிகளின் சட்டத் தொகுப்பேடு நடைமுறையிலில்லை. ஒரு நீதிமன்ற சிறைச்சாலை நாகர்கோவிலில் இயங்கிவந்தது.[31]

சிறைக்கட்டுப்பாடு மற்றும் அங்கு செயலாற்றப்பட்டு வந்த சிறை நிருவாக முறை ஆகியவற்றை ஆய்ந்திட, மத்திய சிறைச்சாலைக் கண்காணிப்பாளர், கண்ணனூர் ஆங்கிலேய சிறைச் சாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். அதன் விளைவாக, சிறைக் கட்டிடத்தினுள் ளேயே கைதிகள் பணியாற்றும் முறை, மெதுவாகவும், படிப்படியாகவும் மத்திய சிறையில் அறிமுகப்படுத்தப்பட்டது. நாட்டுத்துணிகள், நூல் விரிப்பு, முரட்டுக் கம்பளங்கள், கால் விலங்குச் சங்கிலி மற்றும் சிறையில் பயன்படுத்துவதற்கான வண்டி ஆகியவைதண்டனை கைதிகளால் உற்பத்தி செய்யப்பட்டன. [32]

கைதிகளுக்கு வழங்கப்பட்ட உணவு அளவு முறை, ஆங்கிலேயச் சிறைசாலைகளில் உள்ளது போல் திருத்தி, மேம்படுத்தி அமைப்பட்டது[33].

1881-82 ஆம் ஆண்டு ஒரு அச்சகம் நிறுவப்பட்டது. அரசு அதிகாரத்திலுள்ள பார்வையாளர்கள் சிறையைப் பார்வையிட விதிமுறை ஏற்படுத்தப்பட்டது. குணமாக்க இயலாத வியாதிகளினால் அவதியுறும்

சிறைக்கைதிகளை விடுவிக்கவும் விதிமுறை ஏற்படுத்தப்பட்டது. ஆனால் அவர்களை விடுவிக்குமுன், அவர்கள் எவ்வித குற்றமும் செய்ய இயலாத அளவிற்கு அவர்களை முடமாக்கி, அதன் பின்னரே விடுவிக்க விதிமுறை ஏற்படுத்தப்பட்டது.

ஆதரவற்ற கைதிகள் அவர்கள் விடுவிக்கப்பட்டவுடன், சொந்த ஊருக்குச் செல்ல அவருக்கு ஒரு சிறு தொகையினை அளித்திட 1890-91 ஆம் ஆண்டு மன்னரால் ஒரு புது விதிமுறை ஏற்படுத்தப்பட்டது. இதற்காக, ஒரு மாதத்திற்கு 15 ரூபாய் நிலையான முன்பணமாக கண்காணிப்பாளருக்கு வழங்கப்பட்டது. தர்பார் மருத்துவரைத் தலைவராகக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டது. 1894ம் ஆண்டு ஆங்கில இந்தியச் சட்டத்தினைப் பின்பற்றி, 1895-96 ஆம் ஆண்டு, ஒரு வரையறை செய்யப்பட்ட விதி இயற்றப்பட்டது. சிறை நிருவாக முறையில், நன்கு தேர்ச்சி பெற்றிட, கண்காணிப்பாளர் சென்னை மற்றும் வேலூருக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

1896-97 ஆம் ஆண்டு, சிறைக்குழுவின் சில பரிந்துறைகளான : (அ) தண்டக் கைதிகளுக்கு, உரிமைச்சீட்டு அறிமுகம் செய்தல், (ஆ) அரைத்திங்களுக்கு ஒருமுறை எடை காணுதல், (இ) பழக்கத்திற்கு ஆளாகிவிட்ட குற்றவாளிகளை அங்கீகரிக்க உரிய நடவடிக்கை எடுத்தல் மற்றும் (ஈ) சிறை விதிகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ள உணவு முறையை அறிமுகம் செய்தல் ஆகியவை ஏற்றுக் கொள்ளப்பட்டு, பின்பற்றப்பட்டன. அடுத்த ஆண்டு, சிறைகளின் வரையறை செய்யப்பட்ட விதிகள் செயல்முறைக்கு வந்தது. இவற்றின் முக்கியமான சிறப்பியல்புகள், சிறைக்கு நியமிக்கப்பட்ட காவலர்களை நிறுத்துதல், சிறைக் கட்டிடத்தின் உள்ளேயே கைதிகள் பணியாற்றும் முறையை நீக்குதல், பாவமன்னிப்பு அளிக்கும் முறையை அறிமுகம் செய்தல், தண்டனைக்கைதிகளின் கைரேகையை எடுத்துப்பாதுகாக்கும் முறையினை அறிமுகம் செய்தல், ஆகியவையாகும்.

தண்டனைக்கைதிகளின் உடல் சார்ந்த அளவினை எடுக்கும் முறை நிறுத்தப்பட்டு கைவிரல் முனை முத்திரையினை, எடுக்கும் முறை அதற்கு பதிலாக, அறிமுகப்படுத்தப்பட்டது. சிறைக்காவலரின் நன்னடைத்தைக்காக, வண்ண வரியிட்ட பட்டை வழங்கும் முறையும், இந்த ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது. மாவட்ட சிறைகளைப் பற்றி அதிகமாகக் குறிப்பிடப்படாத போதிலும், சிறைப்பார்வையாளர்கள் என்ற முறையில், உயர் அலுவலர்கள் மத்திய சிறையின் நிருவாகம் பற்றி உயர்வான குறிப்புகளை அளித்துள்ளார்கள்.

தற்போதைய கன்னியாகுமரி மாவட்டம், திருவாங்கூர்-கொச்சின் மாநிலத்தின் ஒரு பகுதியாக இயங்கிவந்ததால், முந்தைய திருவாங்கூர் மாநிலத்தில் எவ்வாறான சிறை நிருவாக முறை செயலாற்றப்பட்டு வந்ததோ, அந்தமுறை, தற்போதைய கன்னியாகுமரி மாவட்டத்திலும் பின்பற்றப்பட்டு வந்தது. 1956 ஆம் ஆண்டு, இப்பகுதிகள், திருவாங்கூர்-கொச்சின்

மாநிலப்பகுதியினின்றும் பிரிக்கப்பட்டு, அந்நாளைய சென்னை மாநிலத்தின் நிருவாகக் கட்டுப்பாட்டில் வந்தது. கன்னியாகுமரி மாவட்டம், முந்தைய திருவாங்கூர் மாநிலத்தில் இருந்தபோதும், நாகர்கோவிலில் ஒரு கிளைச் சிறை தான் இயங்கிவந்தது. எனினும், அகஸ்தீஸ்வரம், பூதப்பாண்டி, கொளச்சல், இரணியல், கல்குளம், கோட்டார், குன்னத்தூர், புதன் சந்தை, திருவட்டார். மற்றும் விளவங்கோடு ஆகிய இடங்களில், கைதிகள் தற்காலிகமாக தங்குவதற்கு பயன்படும் மனைகள் (லாக்-அப்) இயங்கி வந்தன.

மாவட்டத்தில், பூதப்பாண்டி, அகஸ்தீஸ்வரம், கோட்டார், இரணியல், கல்குளம், விளவங்கோடு, கொளச்சல் மற்றும் திருவட்டார். ஆகிய இடங்களில், எட்டு சிறைகள் 1910 ஆம் ஆண்டில் இயங்கிவந்ததாக, திருவாங்கூர் நிருவாக அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.[34] தற்காலிகத் தங்கல் மனைகளில் இருந்த கைதிகளின் எண்ணிக்கை 180 எனவும் அறிய வருகிறது. இச்சிறைகளில், 1911-1912 மற்றும் 1912-13 ஆண்டுகளில் முறையே 476 மற்றும் 402 கைதிகள் அடைத்து வைக்கப்பட்டிருந்தார்கள்.

நாகர்கோவில் கிளைச் சிறை, முந்தைய திருவாங்கூர்-கொச்சின் அரசால், 1955 ஆம் ஆண்டு நாகர்கோவில் நகரத்தில் நிறுவப்பட்டது.[35] தற்போது அக்கிளைச் சிறையின் கைதிகள் கொள்ளளவு 84 ஆகும். இது முன்னர் கேரள மாநில சிறை நிருவாகத்தின் ஒரு அலகாக இயங்கி வந்தது. 1956 ஆம் ஆண்டு, மாநில சீர்திருத்தத்திற்குப் பின்னர், இவ்வலகு தமிழ்நாடு மாநிலத்துடன் இணைக்கப்பட்டது.

இவை தவிர, மாவட்டத்தில், தக்கலையில் ஒன்றும், குழித்துறையில் மற்றொன்றுமாக, இரண்டு கிளைச் சிறைகள் நிறுவப்பட்டன. தக்கலை கிளைச் சிறையில் 24 கைதிகளையும், குழித்துறை கிளைச் சிறையில் 16 கைதிகளையும் அடைத்து வைக்க வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

ஐயப்பாட்டின் மீது ஒப்படைக்கப்பட்ட கைதிகளும், விசாரணைக் கைதிகளும் கிளைச்சிறைகளில் அடைத்து வைக்கப்படுகிறார்கள். ஒரு மாதத்திற்கும், அதற்குக் குறைவாகவும் தண்டனை வழங்கப்பட்ட தண்டனைக்கைதிகளும், இக்கிளைச் சிறையில் அடைத்து வைக்கப்படுகின்றனர். ஒரு மாதத்திற்கு மேல் சிறை தண்டனை வழங்கப்பட்ட தண்டனைக் கைதிகள், பாளயம்கோட்டை மத்திய சிறைச்சாலைக்கு, தண்டனையை, அனுபவிப்பதற்காக அனுப்பி வைக்கப்படுகிறார்கள்.

துவக்க காலத்திலிருந்தே, நாகர்கோவில் கிளைச்சிறை, சிறைத்துறையின் கட்டுப்பாட்டில் இயங்கிவருகிறது. தக்கலை மற்றும்

குழித்துறை கிளைச் சிறைகளின் நிருவாகக் கட்டுப்பாடு, வருவாய்த் துறையிலிருந்து, சிறைத்துறைக்கு 1983 ஆம் ஆண்டு மார்ச் மாதம் மாற்றப்பட்டது[36].

பாளையம்கோட்டை மத்திய சிறையின் கண்காணிப்பாளர், இக்கிளைச் சிறைகளின் கட்டுப்பாட்டு அலுவலராவார். அன்றாட நிருவாகத்தில், ஒவ்வொரு கிளைச்சிறையும், ஒரு உதவி சிறைக் கூடப் பொறுப்பாளர் அல்லது கண்காணிப்பாளரின் பொறுப்பிலிருக்கிறது. இவருக்கு சிறைக் காவலர்கள் உதவி புரிகிறார்கள். நாகர்கோவில் கிளைச் சிறையில், உதவி சிறைக் கூடப்பொறுப்பாளர் நீங்கலாக, ஒரு இளநிலை உதவியாளர், ஒரு முதன்மை தலைமை சிறைக்காவலர், ஆறு இரண்டாம் நிலை சிறைக்காவலர்கள் ஆகியோர் பணியாற்றிவருகிறார்கள். தக்கலை மற்றும் குழித்துறை கிளைச் சிறைகள் ஒவ்வொன்றிலும் ஒரு உதவி சிறைக் கூடப்பொறுப்பாளர், இரண்டு முதல்நிலை சிறைக்காவலர்கள் மற்றும் எட்டு இரண்டாம் நிலை சிறைக் காவலர்கள் பணியாற்றி வருகிறார்கள்.

கிளைச் சிறைகளிலுள்ள ஒப்படைக்கப்பட்ட மற்றும் விசாரணைக் கைதிகள், எப்பணிக்கும் பயன்படுத்தப்படுவதில்லை. எனினும், சமையல் செய்தல், கிணற்றினின்றும் தண்ணீர் கொண்டு வருதல், மற்றும் சிறை வளாகத்தை சுத்தம் செய்தல் ஆகிய பணிகளுக்கு அவர்கள் பயன்படுத்தப்படுகின்றனர்.

வியாதியுற்ற சிறைக்குற்றவாளிகளை, உள்ளூர் அரசு மருத்துவ மனைகளிலுள்ள மருத்துவ அலுவலர்கள் கவனிக்கிறார்கள். மிகவும் அபாயகரமான நிலையிலுள்ள கைதிகள், மருத்துவத்திற்காக அரசு தலைமை மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர். மாநில இலவச சட்ட உதவி வாரியத்தின் வழக்கறிஞர்கள், அனைத்து மத்திய சிறைகளுடனும், கிளைச் சிறைகளுடனும், நெருங்கிய தொடர்பு வைத்துக் கொண்டுள்ளனர். இவ்வாரியத்தின் வழக்கறிஞர்கள், கிளைச் சிறைகளை ஒழுங்காகப் பார்வையிட்டு தேவைப்படும் சிறைக் கைதிகளுக்கு போதிய சட்ட உதவியளிக்கிறார்கள். விசாரணைக் கைதிகளும், அவர்களது வழக்குகள் விரைவில் முடிக்கப்பெறவும், சிறையினின்றும் பிணையில் வெளிவர நீதி மன்றங்களை அணுகவும் இவ்வாய்ப்பினை நன்கு பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

(1983 ஆம் ஆண்டு முதல் 1987 ஆம் ஆண்டு வரை) கடந்த ஐந்தாண்டுகளில் கன்னியாகுமரி மாவட்டத்தில் சிறைக்கருவூலங்களைப் பராமரித்திட, மேற்கொள்ளப்பட்ட ஆண்டுச் செலவு விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன[37]:

கிளைச் சிறைகளில் தற்காலிகமாகத் தங்கவைக்கப்பட்ட கைதிகள் எண்ணிக்கை விவரங்கள்

தொடர் எண்.	கிளைச் சிறையின் பெயர்	1983		1984		1985		1986		1987	
		த.கை*	ஒ.வி.கை**	த.கை	ஒ.வி.கை	த.கை	ஒ.வி.கை	த.கை	ஒ.வி.கை	த.கை	ஒ.வி.கை
1.	கிளைச்சிறை, நாகர்கோவில்	470	3069	528	3,348	770	3,430	419	3,919	280	4358
2.	கிளைச்சிறை, தக்கலை	-	510	52	758	61	817	122	1,009	131	1406
3.	கிளைச்சிறை, குழித்துறை	16	810	27	888	16	902	6	618	11	1258
	மொத்தம்	486	4389	607	4,994	847	5,149	547	5,546	422	7,022

* தண்டனைக்கைதிகள்

** ஒப்புவிக்கப்பட்ட மற்றும் விசாரணைக் கைதிகள்

ஆதாரம்: தமிழ்நாடு சிறைகள் முதன்மை ஆய்வாளர், அறிக்கை நாள் 7-7-1988

மாவட்ட சட்ட உதவிக்குழு

மாவட்ட சட்ட உதவிக்குழு நாகர்கோவிலில் இயங்கிவருகிறது. மாவட்ட நீதிபதி, அக்குழுவின் அலுவல் சார்பான தலைவராவார்[39]. இதனைத் தவிர, இருவட்டக்குழுக்கள், ஒன்று, தக்கலையிலும், மற்றொன்று, குழித்துறையிலும் இயங்கிவருகின்றன. அந்தந்த இடங்களிலுள்ள சார்நிலை நீதிபதிகள் (சப் ஜட்ஜ்) அவ்வட்டக் குழுக்களின் தலைவர்களாவர். குழுவில் "அ" பட்டியல் மற்றும் "ஆ" பட்டியல் ஆகியவற்றில் சேர்க்கப்பட்ட வழக்குரைஞர்கள் இடம் பெற்றுள்ளனர். இவர்களை அணுகும் பொது மக்களுக்கு அவர்கள், சட்ட ஆலோசனை மற்றும் உதவியினை வழங்குகிறார்கள்.

வழக்கறிஞர் சங்கங்கள்

மாவட்டத்தில், நாகர்கோவில், தக்கலை, குழித்துறை மற்றும் இரணியல் ஆகிய நான்கு இடங்களில் வழக்கறிஞர் சங்கங்கள் உள்ளன[40]. நாகர்கோவில் வழக்கறிஞர் சங்கத்தில், 200 உறுப்பினர்களும், தக்கலை மற்றும் குழித்துறை வழக்கறிஞர் சங்கங்கள் ஒவ்வொன்றிலும் 125 உறுப்பினர்களும், இரணியல் சங்கத்தில் 30 உறுப்பினர்களும் உள்ளனர். அனைத்து சங்கங்களின் உறுப்பினர்களும் குற்ற இயல் சாராத (சிவில்) மற்றும் குற்ற இயல்புள்ள (கிரிமினல்) வழக்குகள் யாவற்றையுமே நடத்துகிறார்கள்.

குற்ற நீதி மன்றங்களின் வளர்ச்சி

முற்காலத்தில், நீதித்துறை சார்ந்த அலுவல் முறைகள் வரையறுக்கப்படவில்லை. அரசால் நியமிக்கப்பட்ட அலுவலர்களே, நீதித்துறையிலும் அதிகாரம் செலுத்தி வந்தனர். நீதித்துறையைச் சார்ந்த அலுவலர்களாக நிருவாக அலுவலர்களே பணியாற்றி வந்தனர். அவர்கள், சர்வாதிகாரிகார், வாலியாசர்வாதிகாரிகார் மற்றும் தளவா என அழைக்கப் பட்டனர்[41]. இவர்கள் தவிர கிராம மற்றும் வட்ட நடுவர்கள், மேல் விசாரிப்புக்கார் என அழைக்கப்பட்டு வந்த, ஒரு கோட்ட அலுவலரும் இருந்தனர். இவர்களது பணி முற்றிலும் நீதி சார்புடையனவேயாகும். அவர்கள் தீர்ப்புக்குரிய விவரங்களை ஆராய்ந்து முடிவு செய்யுமுன், "மனு"வின் சட்டத் தொகுப்பேட்டினையே பின்பற்றினார்கள். "மாமூல்" என அழைக்கப்பட்டு வந்த வழக்கு முறையிலுள்ள சட்டங்கள் மற்றும் மரபு வழிமுறைகள் ஆகியவற்றையும் அவர்கள் கையாண்டு வந்தனர்[42]. நீதித்துறை அலுவலர்களுக்கு, எழுத்தினாலான சட்டத் தொகுப்பேடு ஏதும் வழிகாட்டுவதற்கு அமையப் பெறவில்லை. வழக்கு நடத்தும்போது, குற்றம் சாட்டப்பட்டவரை, உறுதிமொழி எடுத்துக்கொள்ளச் சொல்வது பழக்கத்திலிருந்து வந்தது. சோதனை முறையும் பின் பற்றப்பட்டது. சில நேரங்களில் சோதனை முறைகளில் தீயைப்பயன்படுத்தியதுண்டு. இவ்வாறான வழக்கு நடைமுறையில், குற்றம் சாட்டப்பட்டவர், அவர்

நிரபராதி என நிருபிக்கப்பட, உருகிய வெண்ணெய் அல்லது உருகிய ஈயம் ஆகியவற்றில் அவரது கையை நனைக்கச் செய்வது நடைமுறையிலிருந்தது. அந்த சோதனை முறைகள், குறிப்பாக, குற்றம் சாட்டப்பட்டவர் நம்பூத்திரியாக இருந்தால், சுசீந்திரம் போன்ற புனிதத் தலங்களில் நடத்தப்படுவதுண்டு. ஆனால், குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்குவதில், ஒரு ஒழுங்குமுறை கையாளப்படவில்லை. குற்றங்களின் இயல்பு தன்மை, முக்கியத்துவம் ஆகியவை, கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுவதில்லை. சில நேரங்களில் தண்டனை வழங்கும்போது குற்றவாளியின் சமூக நிலையும், சமுதாயமும் சீர்தூக்கிப்பார்க்கப்பட்டு, முடிவெடுக்கப்பட்டு வந்தது. வழக்குகளை விசாரணை செய்வது மற்றும் தீர்ப்பு வழங்குவது ஆகிய அதிகாரங்கள் இவற்றிற்காகவே நீதிபதிகளாக நியமிக்கப்பட்ட நடுவாளிகள் மற்றும் தேசவாளிகள், ஆகியோருக்கு வழங்கப்பட்டிருந்தன. மிகப்பெரியவழக்குகள் தலைமை நீதிபதியாக செயலாற்றி வந்த மனனராலேயே விசாரிக்கப்பட்டு முடிவெடுக்கப்பட்டன. உயர்ந்த அளவு தண்டனையான தூக்கு தண்டனை வழங்கும் போது, மன்னர் அவரது நீதிமன்றத்தின் அறிஞர்களுடன் கலந்தாலோசனை செய்து வந்தார்.

உம்மினித் தம்பி, திவானாக செயலாற்றிய காலத்தில் (1809-1811) அதாவது 1810 ஆம் ஆண்டு, நான்கு நீதிமன்றங்களை நிறுவி, நீதித்துறை நடைமுறைகளில், நல்ல பல சீர்த்திருத்தங்களைச் செய்தார். இந்நீதி மன்றங்கள் "இன்சூ ஆஃப் கச்சேரிகள்" என அழைக்கப்பட்டன[43]. இந்த நீதி மன்றங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒரு நாயர் நீதிபதி நியமனம் செய்யப்பட்டார். அவருக்கு உதவி செய்ய ஒரு சிறிய அலுவலகமும் இயங்கிவந்தது. இந்த நீதிமன்றங்களில் இரு குறைபாடுகள் காணப்பட்டன. அதாவது, வழக்குகளை நடத்துவதற்கு உரிய நடைமுறைகளை வகுத்து, திட்டவட்டமாக விதிகள் இயற்றப்படவில்லை. தீர்ப்பு வழங்குவதில் மிகுந்த காலதாமதம் காணப்பட்டது. அலுவலக ரீதியில் கையூட்டுப்பெறுவது பெறுமளவில் இருந்தது.

ஆனால், உம்மினித்தம்பி திவானாகப் பணியாற்றிய காலத்தில், திறமையின்மையும், லஞ்ச இலாவண்ணியமும் அதிக அளவு காணப்பட்டதால், அன்றாட நிருவாகத்தில் குழப்பமே தலைதூக்கி நின்றது. நிருவாகத்தை, குறிப்பாக நீதித்துறை நிருவாகத்தை, சீர்திருத்தியமைப்பது இன்றியமையாததாகி விட்டது. 1811 ஆம் ஆண்டு, இராணி இலட்சுமிபாய், உம்மினித்தம்பியைப் பதவியினின்றும் விலக்கிவிட்டு, முன்னர் திருவாங்கூரில் ஆங்கிலேய துணைக் காப்பரசின் ஆளுநராகப் பணியாற்றி வந்த மன்ரோ பிரபுவை, திருவாங்கூர் திவானாக நியமித்தார். [44] அடக்குமுறை, தாமதம், நீதித்துறை நிருவாகத்தில் கையூட்டு, ஆகியவற்றைக் களைந்திட அயராது உழைத்தார். முதலில் அவர் "இன்சுஆஃப் கச்சேரி" களை மூடிவிட்டு, வழக்குகளை நடத்தும் பொறுப்பினை அவரே ஏற்றார். மக்கள் வழக்குகளை,

திவானிடமே கொணர நீதிமன்ற விதிமுறைகளில் போதிய திருத்தங்களைச் செய்தார். நீதிகோரி அவரிடம் மக்கள் நாள்தோறும் வந்த வண்ணமிருந்தனர்.

மன்ரோ பிரபு நாள்தோறும் அவர்களில் சிலரை, அறிஞர்களின் உதவியுடன் விசாரணை செய்தார்.[45] முன்பு பின்பற்றப்பட்டு வந்த முறையை விட, மன்ரோ கையாண்டமுறை சற்று முன்னேற்றமுள்ளதாகத் தெரிந்தாலும், அந்த நடைமுறையிலும் சில இடர்ப்பாடுகள் காணப்பட்டன. அவற்றில் முக்கியமானது, வழக்குகளை முடிப்பதிலான தாமதமேயாகும். நீதித்துறையின் நடைமுறை நிலையினை நன்கு ஆய்ந்து, மாநிலத்தில் நீதித்துறைப் பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் பணியாற்றுவதையும் கண்ணுற்று, மன்ரோ பிரபு ஒரு புதிய சட்டத் தொகுப்பேட்டினை உருவாக்கி, நீதித்துறை நிருவாகத்தின் செயல்முறையினை சீரமைத்து, அதற்கு எழுத்து வடிவம் கொடுத்தார். அவை "சட்ட வரியோலைகள்" என அழைக்கப்பட்டன. அவை முதன்மையாக நாட்டின் தர்ம சாத்திரங்களையும், மரபுவழி முறை மற்றும் பழக்க வழக்கங்களையும் அடிப்படையாகக் கொண்டவையாக அமைந்தன. ஆங்கில சட்டமுறையில் காணப்பட்ட சில சிறப்பியல்புகளும், அவற்றில் கூட்டிணை வாக்கப்பட்டன. "சட்டவரியோலைகள்". இராணிலெட்சுமி பாய் அவர்களது ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டபோது, அவர்கள் புதிய வரையறை செய்யப்பட்ட விதியினைப் பின்பற்ற, ஒரு உரிமைக் கட்டளையைக் பிரகடனம் செய்தார்கள். இப்புதிய விதியினில் இராணி அவர்கள் செய்த ஒரே மாற்றம் என்னவெனில், வழக்கு நடத்தும்போது கடும் சோதனை முறையினைப் பின்பற்ற வேண்டுமென்பது தான். ஆனால், மன்ரோ பிரபு இக்கடும் சோதனை முறைக்கு முடிவுகட்ட வேண்டுமென தான் தயார் செய்திருந்த விதியில், பரிந்துரை செய்திருந்தார். ஆனால், வழக்கு நடத்தும்போது இக்கடும் சோதனை முறை, ஒரு சில குறிப்பிட்ட வழக்குகளில் தான் கையாளப் படவேண்டுமெனவும், அதுவும் திவான் அவர்களின் முன் அனுமதிபெற்றபின்னரே, இக்கடும் சோதனை முறை கையாளப்படவேண்டுமெனவும் இராணி அவர்கள் திட்டவட்டமாகக் குறிப்பிட்டுயிருந்தார்கள்.

பொதுவாக திருவாங்கூர் மாநில நீதித்துறை நிருவாக வரலாற்றில், குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்ட, இத்துறையின் வரலாற்றில். 1811 ஆம் ஆண்டு ஒரு முக்கிய திருப்பு முனையாக அமைந்தது. முதன் முறையாக, 1811 ஆம் ஆண்டுதான் மாவட்ட நீதிமன்றங்கள் நிறுவப்பட்டன.[46] அவ்வாறான ஏழு நீதி மன்றங்கள் திருவாங்கூர் மாநிலத்தில் இயங்கிவந்தன. அவற்றில் ஒன்று, பத்மநாபபுரத்தில் இயங்கியது. அனைத்துத் துறைகளுக்கும் முதன்மைத் தலைவரான திவானின் கட்டுப்பாட்டில், மாவட்ட நீதி மன்றங்கள் இயங்கின. பத்மநாபபுரத்தில் இயங்கிவந்த மாவட்ட நீதிமன்றமும், திவானின் கட்டுப்பாட்டிலும், மேற்பார்வையிலும் தான் இயங்கிவந்தது. வழக்குகளை மூன்று நீதிபதிகள் விசாரித்து வந்தனர். சாத்திரங்களிலுள்ள உரிமைக்கட்டளைப்படி, தர்ம சாத்திரத்தில் தேர்ச்சி

பெற்ற ஒரு அறிஞர், வழக்குகளை முடிப்பதற்கு நீதிபதிகளுக்கு உறுதுணையாக இருந்தார். மற்ற மாவட்ட நீதிமன்றங்களைப் போலவே, பத்மநாபபுரத்திலிருந்த மாவட்ட நீதிமன்றமும், குற்ற இயல்சாராத, குற்ற இயல்புள்ள மற்றும் காவல்துறை தொடர்பான வழக்குகள் யாவற்றையும் விசாரணை செய்தது. ஒவ்வொரு வழக்கு முடிவிற்கும், திவானின் ஒப்புதல் அவசியமெனக் கருதப்பட்டதால், அவர்களது வரைவு நடவடிக்கைகள் திவானின் ஒப்புதலுக்கு அனுப்பிவைக்கப்பட்டன. இவ்வகையான குடி முதல்வர் ஆட்சிமுறை, 1814 ஆம் ஆண்டு வரை செயலாக்கத்திலிருந்தது. அப்போது, மாவட்ட நீதிமன்றங்கள் பிறப்பித்த ஆணைக்கெதிராக மேல் முறையீடு செய்திட, ஒரு மேல்முறையிட்டு உயர்நீதி மன்றம் நிறுவப்பட்டது. இம்மாதிரியான மேல்முறையீட்டு நீதி மன்றம் நிறுவப்பட்டிருந்த போதிலும், அது தன்னுரிமையுடன் செயல்படுவதை விடுத்து, திவானுடைய கச்சேரியின் ஒரு இணைப்பாகவே செயல்பட்டு வந்தது.

1817 ஆம் ஆண்டு, காவல்துறை சார்ந்த சிறிய வழக்குகளை விசாரணை செய்ய வட்டாட்சியர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. முன்சீப் நீதிமன்றங்கள் நிறுவப்பட்டு, காவல்துறை சார்ந்த மிகச்சிறிய வழக்குகளையும், மதிப்பு ரூ.100-க்கு மேற்படாத குற்ற இயல் சாராத வழக்குகளையும் விசாரணை செய்திட அவற்றிற்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டன.[47] சென்னை மாநிலத்தில் கடைப்பிடிக்கப்பட்டு வந்த நடைமுறைகளுக்கொப்ப நீதித்துறை நிருவாகத்தினை நடத்திட, 1834 ஆம் ஆண்டு ஒரு புதிய திட்டம் தீட்டப்பட்டது. இத்திட்டம், ஏழு வரையறை செய்யப்பட்ட விதிகளின்படி, செயல்படுத்தப்பட்டது. அவற்றில், முதல் ஐந்து விதிகளும், குற்றவியல் சாரா நடைமுறைகளைப் பற்றியும், முன்சீஃப் மாவட்ட மற்றும் மேல்முறையீட்டு நீதிமன்றங்களை நிறுவுவது தொடர்பானவை யாகும். விதி எண். 1-ன்படி, ரூபாய் 100/- வரை மதிப்புள்ள அனைத்துவழக்குகளையும் விசாரித்திட முன்சீப்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. ஆனால், அரசு தொடர்பான வழக்குகளையும், ஆங்கிலேயர்கள் தொடர்புள்ள வழக்குகளையும் விசாரிக்க அவர்களுக்கு தடை விதிக்கப்பட்டது. வழக்குகள் தொடர்பாக ஊராட்சிகள் தீர்ப்பு வழங்கிட, இரண்டாவது விதி, வகை செய்தது. அனைத்து நீதி மன்றங்களும் பிறப்பித்த தீர்ப்பாணைகளை நிறைவேற்றும் அதிகாரத்தினை, மூன்றாவது விதி முன்சீஃப்களுக்கு வழங்குகிறது. நான்காவது விதியின்படி, மாவட்ட நீதிமன்றங்கள் திரும்ப நிறுவப்பட்டன. இந்நீதிமன்ற நீதிபதிகளில் ஒரு இந்து, ஒரு கிறித்தவர் மற்றும் ஒரு அறிஞர் (பண்டிட்) ஆகியோர் அடங்குவர். மாவட்ட நீதிமன்றங்களுக்கு அளவிலா பொருள் வகை சார்ந்த அதிகாரங்களை இவ்விதி அளிக்கிறது. இவ்விதியின்படி, நீதி மன்றங்களின் எண்ணிக்கை ஏழிலிருந்து, ஐந்தாகக் குறைக்கப்பட்டது. முன்னர் "சதார்" எனவும், பின்னர் "உயர்நீதிமன்றம்" எனவும் அழைக்கப்பட்ட மேல்முறையீடு மன்றம், ஐந்தாவது விதியின்படி நிறுவப்பட்டது. மூன்று இந்து, ஒரு

கிறித்தவர், ஒரு சாஸ்திரி மற்றும் ஒரு முகம்மதிய சட்ட அறிஞர் ஆகியோர் இந்நீதிமன்றத்தின் நீதிபதிகளாவர். ஐந்தாவது விதி, காவல்துறை சார்ந்த நிருவாக அதிகாரத்தை வட்டாட்சியருக்கும், குற்ற இயல்புள்ள அதிகாரங்களை மாவட்ட நீதிமன்றத்திற்கும் அளித்தது. ஏழவாது, எட்டாவது விதிகள், மேல்முறையீடு மன்றங்களின் நீதிபதிகளுக்கு, உலாவியல் நடுவர் கூட்டிணையமர்வு மன்றங்களின் (செசன்ஸ்) அதிகாரங்களை அளித்தன. ஏழாவது விதி, மேலும் உலா நடுவர்களை உருவாக்கியது. அவர்களது அதிகாரங்களை வகுத்தளித்து, குற்ற இயல்புள்ள வழக்குகளை விசாரணை செய்யவும், அவற்றை முறையீடு மனறங்களுக்கு ஒப்படைப்பு செய்ய மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை குறித்தும் முறையான விளக்கங்களை அளித்தது. இந்த விதிகள், பின்னர் சில விவரங்கள் குறித்து மாற்றங்கள் செய்தாலும், தற்போதைய நீதித்துறை நிருவாகத்திற்கான அடித்தளத்தை அமைத்துள்ளது. இதன் பின்னர், முன்சீஃப் ராயல் குழுவினால் நியமிக்கப்பட்டார். அவர் 25 வயதிற்கு மேற்பட்டவராயிருக்க வேண்டுமெனவும், முன்சீஃப் அலுவலகத்திலாவது, மாவட்ட அலுவலகங்களிலாவது பணியாற்றிய அனுபவம் பெற்றிருக்க வேண்டுமெனவும், விதிதுறை ஏற்படுத்தப்பட்டது. அவர்கள் மேல்முறையீடு நீதிமன்றத்தின் முன்னர், கடினமாகவும், நேர்மையுடனும் உழைப்பதாக, உறுதிமொழி எடுத்துக் கொள்ளவேண்டும். அவர்களது உறவினர்கள், அவர்களிடம் பணியாற்றுவோர் அவர்களைச் சார்ந்து வாழ்பவர்கள், ஆகியோர் தொடர்பான வழக்குகளில் அவர்கள் முடிவெடுக்கக் கூடாதென்ற தடையாணை நடை முறைப்படுத்தப்பட்டது. அவர்களுக்குத் தொகை சார்ந்த வழக்குகள் குறித்து மட்டும் அதிகாரம் வழங்கப்பட்டது. நிர்ணயிக்கப்பட்ட விலைகளுக்கு, நீதிமன்றங்களிலிருந்து பெறப்படும் முத்திரை ஓலைகளில் முறையீடுகள் ஏழுதப்பட்டன. வாக்கு மூலங்கள் விசாரணையின் போது எழுதப்பட்டு, சான்று, திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டது. [48] முன்சீப் நீதிமன்றங்களில் அதிக எண்ணிக்கையிலான வழக்குகள் நிலுவையிலிருப்பின், அவற்றில் சில மாவட்ட நீதிபதிக்கு விசாரணைக்காக மாற்றப்பட்டன. புதிய சட்டங்கள் பிறப்பிக்கப்பட்டதாலும், தகுந்த பாதுகாப்புடன் நீதித்துறை அலுவலர்களின் அதிகார வரம்பினை முறையாக, உயர்த்தி நிர்ணயித்ததாலும், நீதித்துறையின் நிருவாகம் மேம்பாடைந்தது.

ஒப்படைக்கப்பட்ட வழக்குகளில் வட்டாட்சியர் அல்லது காவல்துறை அலுவலர், இல்லாத நேரங்களில் உரிய ஆணை பிறப்பித்திட, முறையான அதிகாரம் வழங்கி, 1947-ல் துணை அலுவலர்கள் நியமிக்கப்பட்டார்கள்.[49] முன்சீப்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டது. மேல் முறையீட்டு மற்றும் மாவட்ட நீதிமன்றங்கள் பிறப்பித்த வழக்குகளின் தீர்ப்புகளை நிறைவேற்றுவதின்றும் 1849-ல் அவர்கள் விடுவிக்கப்பட்டனர். [50] 1854ஆம் ஆண்டு, ஒரு முக்கியமான நிருவாக மாற்றம் மேற்கொள்ளப்பட்டது.

வருவாய்க் கோட்டங்கள் நிறுவப்பட்டன. [51] இதுகாறும் தனித்துறைகளை மேற்பார்வையிட்டு, மாவட்ட உயர் அலுவலகத்தில் பணியாற்றிவந்த திவான் பேஷ்கார்கள், பொது மேறபார்வை அதிகாரங்களுடன் கோட்டங்களைப் பொறுப்பேற்க அனுப்பிவைக்கப்பட்டார்கள்.வருவாய், நீதி மற்றும் காவல் துறை தொடர்புள்ள அனைத்துப் பணிகளையும் கண்காணிக்கும் அதிகாரங்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டன. எனினும், அவர்கள் முதன்மை நடுவரும், நிர்வாகத்தின் தலைமைப் பொறுப்பினை ஏற்று செயல்பட்டு வந்த வருமான திவானின் ஆணைகளைச் செயல்படுத்தி பணியாற்றிவந்தார்.

1856ஆம் ஆண்டு, உலா நடுவர் நீதிமன்றங்கள் அகற்றப்பட்டு, அவற்றின் இடத்தில் நடுவர் கூட்டிணையமர்வு மன்றங்கள் (செசன்ஸ் நீதிமன்றங்கள்) நிறுவப்பட்டன[52]. 1860-ஆம் ஆண்டு, நடுவர் கூட்டிணையமர்வு மன்றங்களும் அகற்றப்பட்டு, முந்தைய உலா நடுவர்களின் அதிகாரங்களைனைத்தும் மாவட்ட நீதிபதிகளுக்கு வழங்கப்பட்டன. [53]

திருவாங்கூர் மாநிலத்தின் ஏனைய பகுதிகளுடன், கன்னியாகுமரி மாவட்டத்திலும், குறிப்பிட்ட சில மாற்றங்களுடன் குற்றஇயல் சாராத மற்றும் குற்ற இயல் சார்புள்ள நடைமுறைகளடங்கிய சட்டத்தொகுப் பேடுகள், 1863-ல் அறிமுகப்படுத்தப்பட்டன.[54] மேல்முறையீடு முதன்மை நீதிமன்றம், தற்போது, மேல்முறையீடு நீதிமன்றம் என்பதற்கு பதிலாக சதார் நீதி மன்றமென அழைக்கப்பட்டது. சதார் நீதி மன்றம் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. குற்ற இயல்சாராத மற்றும் குற்றயியல்புள்ள நீதிமன்றங்களென பிரிக்கப்பட்ட அவை ஒவ்வொன்றும் இரண்டு நீதிபதிகள் தலைமையில் இயங்கின. இவ்வாறு பிரிக்கப்பட்டதால், வழக்குகள் மிக விரைவில் முடிக்கப்பட்டன. தாமதம் தவிர்க்கப்பட்டது. ஐந்து மாவட்ட நீதி மன்றங்கள் அகற்றப்பட்டு, அவற்றிற்கு பதிலாக, குற்ற இயல் சார்புள்ள மற்றும் குற்ற இயல் சாராத வழக்குகள் இரண்டுமே நடத்தக் கூடிய அதிகாரம் பெற்ற நான்கு மாவட்ட நீதிமன்றங்கள் நிறுவப்பட்டன. பத்மநாபபுரம் கோட்டத்தில், ஒரு மாவட்ட நீதிமன்றம் நிறுவப்பட்டது.

1863 ஆம் ஆண்டு, முதலாவது வரையறை செய்யப்பட்ட விதி, தந்தி வழங்குவதற்கு எதிரான குற்றங்களுக்குத் தண்டனை வழங்கவகை செய்தது. நூல்களுக்குப் பதிப்புரிமை அளிக்க, விதி-2 வகை செய்தது. 1864 ஆம் ஆண்டு, வரையறை செய்யப்பட்ட விதியில், கிராமக் கைவினைஞர்கள் மற்றும் பணியாளர்கள் ஒப்பந்தத்தை மீறினால், தண்டனை வழங்க வகை செய்யப்பட்டது. அதே ஆண்டு, வழக்கறிஞர்களின் நிலை, நீதிமன்றங்கள் தொடர்பாக அவர்களது கட்டுப்பாடு மற்றும் உரிமைகள் ஆகியவற்றை விளக்கி, மற்றொரு வரையறை செய்யப்பட்ட விதி, இயற்றப்பட்டது. 1867 ஆம் ஆண்டு பிறப்பிக்கப்பட்ட வரையறை செய்யப்பட்ட விதி, குற்ற இயல்புள்ள வழக்குகளின் வழக்கறிஞர்களை (வக்கீல்கள்) நியமிக்க வகை செய்தது.

1865 ஆம் ஆண்டின் முதலாவது வரையறை செய்யப்பட்ட விதியின்படி, மாவட்ட நீதிமன்றங்களின் ஒற்றை நீதிபதிகள், குற்ற இயல் சாராத மற்றும் குற்ற இயல்புள்ள வழக்குகளை விசாரணை செய்யவும், முடிவுசெய்து தீர்ப்பு வழங்கவும் அதிகாரம் வழங்கப்பட்டார்கள். 1865 ஆம் ஆண்டு பிறப்பிக்கப்பட்ட விதிகளிலொன்று குற்ற இயல்புள்ள வழக்குகளில், ஒப்புதலை ஏற்க, வகை செய்தது.[55] 1871 ஆம் ஆண்டின் வரையறை செய்யப்பட்ட விதி, சதார் நீதி மன்றங்களில், பணி சீராக நடைபெற, சில வழக்குகளில், முதன்மை நீதிபதிக்கு, மேலுரிமையுடைய தீர்வு மொழிச்சீட்டு அளிக்க, அதிகாரம் வழங்கியுள்ளது. அதே ஆண்டு, குற்றயியல்புள்ள வழக்குகளை நடத்துவது குற்றயியல் பணிகளை மேற்கொள்வது இவற்றினின்றும், திவானை விடுவித்து மற்றொரு வரையறை செய்யப்பட்ட விதி இயற்றப்பட்டது. குற்றவியல் தொடர்புள்ள அதிகாரங்களை, பொதுவாக, வேறு சில அலுவலர்களுக்குப் பகிர்ந்தளிக்கவும், அவ்விதி, வகை செய்தது. வட்டாட்சியர், சுற்றுப்பயணம் மேற்கொண்ட நேரங்களில், காவல்துறை வழக்குகளை முடித்திட மாவட்டத்தின் துணை அலுவலர்களுக்கு, அவ்விதி அதிகாரம் அளித்தது. சதார் நீதிமன்றத்தின் அமைப்பு முறைக்கு புத்துயிர் கொடுத்தும், அந்நீதிமன்ற அலுவல்களை முறையாக நடத்திட, உரியமுறையில் மாற்றி அமைத்தும், 1878 ஆம் ஆண்டு இரண்டாவது வரையறை செய்யப்பட்ட விதியில், வழிவகை செய்யப்பட்டது. உரிய மாற்றங்களுடன், இந்திய தண்டனை பற்றிய சட்டம் இரண்டையும் நாட்டின் சட்டமாக ஏற்றுக் கொண்டு, 1880 ஆம் ஆண்டு இரண்டாவது மற்றும் மூன்றாவது வரையறை செய்யப்பட்ட விதி, இயற்றப்பட்டது.

1881-82 ஆம் ஆண்டு, இரண்டு புதிய சட்டங்களின் மூலம் குற்றயியல் நிருவாக அமைப்புமுறை முழுவதும், திருத்தியமைக்கப்பட்டது. 1881 ஆம் ஆண்டில், திருவாங்கூர் குற்றஇயல் சாராத நீதிமன்ற வரையறை செய்யப்பட்ட முதலாவது விதி, முன்சீப் மற்றும் மாவட்ட நீதிமன்றங்களின் நிருவாக அமைப்பு முறைக்கு புத்துருக்கொடுத்தது.[56] குற்ற இயல் சாராத நீதிமன்றங்களின் எண்ணிக்கை, அவற்றின் நிருவாக எல்லை, ஆகியவற்றை வரையறை செய்து நிர்ணயித்திட, அவ்விதி அரசிற்கு முழு அதிகாரம் அளித்தது. அவற்றிற்கான தொகை தொடர்புள்ள வரம்பினை ரூபாய் 200/- லிருந்து 500/- ஆக உயர்த்தியது. ரூபாய் இருபதுக்கு மிகாமலுள்ள, சொந்தசொத்துக்கள் தொடர்பான வழக்குகளில், சிறியகாரணங்களால் தொடரப்பட்ட வழக்கு குறித்து எல்லையை வகுத்து, அவற்றை விசாரித்துத் தீர்ப்பு வழங்கிட அதிகாரம் அளித்தது. மேலும் ரூபாய் 50/-க்கு மிகாமல் மதிப்புள்ள ரொக்கம் அல்லது இதர சொந்த சொத்துக்களை உள்ளடக்கிய மேல் முறையீடு வழக்குகளில், மாவட்ட நீதி மன்றத்தின் முடிவே இறுதியானதென அறிவித்தது.[57] நீதித்துறை நிருவாகத்தை மேம்படுத்திட உரிய வழிவகை செய்தும், சதார் நீதிமன்றத்தை திருத்தி அமைத்தும் இரண்டாவது வரையறை செய்யப்பட்ட விதி இயற்றப்பட்டது. கன்னியாகுமரி

மாவட்டம், சென்னை மாநிலத்துடன் இணையும் வரை, அதாவது 1956 வரை, 1881-82 ஆம் ஆண்டின் வரையறை செய்யப்பட்ட விதியின்படி, மாற்றியமைக்கப்பட்ட நீதித்துறை நிருவாக முறையே, நடைமுறையிலிருந்து வந்தது. அதன் பின்னர், புதிதாக அமைக்கப்பட்ட கன்னியாகுமரி மாவட்டத்தில், சென்னை மாநிலத்தில், நடைமுறையிலிருந்த நீதித்துறை நிருவாக முறை, பின்பற்றப்பட்டது.

ஊராட்சி நீதிமன்றங்கள்

திருவாங்கூர் கிராம ஊராட்சிகள் நீதிமன்றச் சட்டம் 1915ஆம் ஆண்டு பிறப்பிக்கப்பட்ட பின்னர், திருவாங்கூர் மாநிலம் முழுவதும் ஊராட்சி நீதி மன்றங்கள் புதிதாக அமைக்கப்பட்டன. இந்நீதி மன்றங்களில் தொடரப்பட்ட வழக்குகளை நடத்திட, ஒவ்வொரு நீதி மன்றத்திற்கும் தலைவர் மற்றும் நீதிபதிகளை நியமித்திட, சட்டத்தின் பரிவு - 7 வகை செய்தது. ரூபாய் 50-க்கு மிகாமல், தொகை அல்லது அசையும் பொருட்கள் தொடர்புள்ள குற்றயியல் சாராத வழக்குகள், அந்தந்த நீதிமன்ற ஆட்சி எல்லைக்குட்பட்டவையாகக் கருதப்பட்டன. சில வழக்குகளில் மதிப்புத் தொகையின் வரம்பு ரூபாய் 100/- ஆக உயர்த்தி நிர்ணயிக்கப்பட்டது. அவ்வழக்குகளில், வழக்கு நடத்தும் இரு தரப்பினரது இசைவின்பேரில், நீதிமன்றம் ரூபாய் 200/- வரை வரம்பு நிர்ணயித்துக் கொள்ள வகை செய்யப்பட்டது. மாநிலத்திலுள்ள குற்றஇயல் சாராத நீதிமன்றங்களில் நிலுவையிலிருந்த சிறிய வழக்குகளைக் கணிசமான அளவு குறைத்திடும் நோக்கில்தான், ஊராட்சி நீதி மன்றங்கள் பெரும்பாலும் நிறுவப்பட்டன.

1898ஆம் ஆண்டு குற்றவியல் வழக்குகளின் நடைமுறைச் சட்டத் தொகுப்பேடு (சி.ஆர்.பி.சி) பிரிவு 15 உட்பிரிவு (1)-ன் படி, கிராம ஊராட்சி நீதி மன்றங்களின் தலைவர்களுக்கும், நீதிபதிகளுக்கும், கௌரவ நடுவர்களின் அதிகாரங்கள் வழங்கப்பட்டன.[58] மாநிலங்கள் சீரமைப்புக்குப் பின்னர், இவை திரும்பப் பெறப்பட்டன. 1956 ஆம் ஆண்டு சென்னை மாநிலத்துடன் இணையும்போது, கன்னியாகுமரி மாவட்டத்தில், ஐந்து கிராம ஊராட்சி நீதிமன்றங்கள் இருந்தன. அவை, நாகர்கோவில், பத்மநாபபுரம், குழித்துறை, கொளச்சல் மற்றும் இரணியல் ஆகிய இடங்களில் இயங்கிவந்தன. நாகர்கோவில் ஊராட்சி நீதிமன்றத்தில் ஒரு தலைவரும், 10 நீதிபதிகளும், பத்மநாபபுரம் நீதிமன்றத்தில், ஒரு தலைவரும், மூன்று நீதிபதிகளும், கொளச்சல் மற்றும் இரணியல் நீதிமன்றங்கள் ஒவ்வொன் றிலும் நான்கு நீதிபதிகளும் ஒரு தலைவரும் பணியாற்றிவந்தனர். மாவட்ட ஆட்சித்தலைவரின் பரிந்துரையின் பேரில், இந்நீதிபதிகளும், தலைவர்களும், ஈராண்டுகளுக்குகொருமுறை அரசால் நியமிக்கப்பட்டனர்.

1956 ஆம் ஆண்டு, கன்னியாகுமரி மாவட்டம் அமைக்கப்பட்ட போது, நாகர்கோவிலில் ஒரு மாவட்ட நீதிமன்றமும், இரண்டு கூடுதல் மாவட்ட நீதிமன்றங்களும் இயங்கி வந்தன. இவை மூல வழக்குகள் மற்றும்

மேல்முறையீடு வழக்குகள் ஆகியவற்றை விசாரணை செய்திட அதிகாரம் பெற்றிருந்தன. மாவட்ட நீதிமன்றத்தின் கட்டுப்பாட்டில், நாகர்கோவில் பத்மநாபபுரம் மற்றும் குழித்துறை ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் இரு முன்சீப் நீதிமன்றங்கள் இயங்கி வந்தன. இவை நன்கு நிர்ணயிக்கப்பட்ட ஆட்சி எல்லைக்குட்பட்டு, குற்ற இயல் சாராத வழக்குகளை விசாரணை செய்து வந்தன. தோவாளை வட்டத்தில் முன்சீப் நீதிமன்றம் தனியாக இயங்கிடவில்லை. வழக்குகளின் அதிக நிலுவை எண்ணிக்கையைக் கருத்திற்கொண்டு, 1959 ஆம் ஆண்டு, நாகர்கோவில், பத்மநாபபுரம் மற்றும் குழித்துறை ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு தற்காலிக மாவட்ட முன்சீஃப் நீதிமன்றம் துவங்கப்பட்டது. ஆனால், அவை 1960ஆம் ஆண்டு, அகற்றப்பட்டு விட்டன. மாவட்டம், 1956 ஆம் ஆண்டு, சென்னை மாநிலத்துடன் இணைக்கப்பட்டபோது, கீழ்க்கண்ட குற்றவியல் நீதிமன்றங்கள் மாவட்டத்தில் இயங்கிவந்தன:

(1) மாவட்ட நடுவர் நீதிமன்றம் (நீதித்துறை), திருவனந்தபுரம்

(2) துணைக்கோட்ட நடுவர் நீதிமன்றம், பத்மநாபபுரம்

(3) முதல் வகுப்பு நடுவர் நீதிமன்றம், நாகர்கோவில்

(4) முதல் வகுப்பு நடுவர் நீதிமன்றம், குழித்துறை

(5) துணை நடுவர் நீதிமன்றம், நாகர்கோவில்

(6) துணை நடுவர் நீதிமன்றம், இரணியல்

(7) துணை நடுவர் நீதிமன்றம், பூதப்பாண்டி

1957ஆம் ஆண்டு, நாகர்கோவிலில் இரண்டு கூடுதல் மாவட்ட நீதிமன்றங்கள் அகற்றப்பட்டு, அவற்றிற்கு பதிலாக, இரண்டு சார்நிலை நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டன. பின்னர், இவற்றில் ஒன்று, 1961 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அகற்றப்பட்டது. துவக்கத்தில், பத்மநாபபுரத்தி லுள்ள சார்நிலை நீதிமன்றம், அம்மன்றத்திற்கு மாற்றப்பட்ட மூல மற்றும் மேல் முறையீட்டு ஆட்சி எல்லை வரம்பிற்குட்பட்ட மேல் முறையீடு வழக்குகளை விசாரித்து நடத்திட மட்டும் அதிகாரம் பெற்றிருந்திருந்தது. பின்னர், 1958 ஆம் ஆண்டு முதல், மேல் முறையீடு வழக்குகளை நேரடியாகப்பெற்று, விசாரணையை மேற்கொள்ள அந்நீதிமன்றத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டது.

1956 ஆம் ஆண்டு, மாநில சீரமைப்புச் சட்டத்தின் படி அமைக்கப்பட்ட கன்னியாகுமரி மாவட்டம், முந்தைய திருவாங்கூர் மாநிலத்தைச் சார்ந்த திருவனந்தபுரம் மாவட்டத்தின் பகுதியாயிருந்து பின்னர், வருவாய் நிருவாகப் பணிகளின் செயல்முறைகளைப் பொறுத்த வரையில் முந்தைய திருவாங்கூர் கொச்சின் மாநிலத்திலிருந்திருந்தாலும், நான்கு தமிழ் மாவட்டங்களான அகஸ்தீஸ்வரம், தோவாளை, கல்குளம்

மற்றும் விளவங்கோடு ஆகியவற்றில் எல்லைகளை உள்ளடக்கிய தனி நீதித்துறை மாவட்டமாகவே கருதப்பட்டது. முந்தைய திருவாங்கூர் மாநிலத்தின் உயர்நீதிமன்றமான தீர்ப்பு மன்றம் மாநிலத்தின் தலைமையிட மான திருவாங்கூரில் இயங்கி வந்தது. திருவாங்கூர்-கொச்சின் மாநிலம் உருவாக்கப்பட்ட பின்னர், உயர்நீதிமன்றம் எர்ணாகுளத்திற்கு மாற்றப் பட்டது. உயர்நீதி மன்றத்தின் ஒரு பிரிவு (பெஞ்ச்) திருவனந்தபுரத்தில் இயங்கி வந்தது, சில காலங்களுக்குப் பின்னர் அது நிறுத்தப்பட்டது. இம்மாவட்டத்தில் குற்ற இயல்புள்ள தீர்பாயங்கள், உயர்ந்து செல்கிற அளவில் அதாவது துணை நடுவர் மன்றங்கள், மாவட்ட நடுவர் மன்றங்கள் மற்றும் நடுவர் கூட்டிணைவமர்வு மன்றங்கள் என்ற அமைப்பில் நிறுவப் பெற்றுள்ளன.

மாநில சீரமைப்பிற்குப் பின், கன்னியாகுமரி மாவட்டம் உருவாக்கப்பட்டபோது, நாகர்கோவிலில், ஒரு மாவட்ட மற்றும் நடுவர் கூட்டிணைவமர்வு மன்றமும், இரண்டு கூடுதல் மாவட்ட மற்றும் நடுவர் கூட்டிணைவமர்வு மன்றங்களும் இயங்கிவந்தன. நடுவர் கூட்டிணைவமர்வு மன்றம் தொடர்பான வழக்குகள், நான்கு வட்டங்களிலுள்ள சார்நிலை நடுவர்களால், நடுவர் கூட்டிணைவமர்பு மன்றத்திற்கு ஒப்படைக்கப்பட்ட பின்னர், அவை முதன்மையாக அந்நடுவரால் விசாரணை மேற்கொள்ளப் பட்டன. அவர் கூடுதல் மாவட்ட மற்றும் நடுவர் கூட்டிணைவமர்வு மன்றங்களுக்கு மாற்றப்பட்ட வழக்குகள், அந்தந்த நடுவர்களால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. திருவனந்தபுரத்தில் ஒரு மாவட்ட நடுவர் நீதி மன்றமும், பத்மநாபபுரத்தில் ஒரு துணைக் கோட்ட நடுவர் நீதிமன்றமும், கோட்டார் மற்றும் குழித்துறையில் ஒவ்வொன்றிலும் ஒன்று வீதம் இரண்டு நிலையான முதல் வகுப்பு நடுவர் நீதிமன்றங்களும், கோட்டார், பூதப்பாண்டி மற்றும் இரணியல் ஆகிய இடங்களில் ஒவ்வொன்றிலும் ஒன்று வீதம் மூன்று நிலையான இரண்டாம் வகுப்பு நடுவர் நீதிமன்றங்களும் இயங்கிவந்தன. குற்ற நடுவர் ஆயங்கள் (பெஞ்ச் மாஜிஸ்திரேட்) நாகர்கோவில், இரணியல், தக்கலை மற்றும் குழித்துறை ஆகிய இடங்களில் இயங்கின. எந்தெந்த நாட்களில் எந்தந்த நீதிபதி அந்நீதிமன்றத்தில் தலைமை தாங்கி வழக்குகளை விசாரணை செய்கிறாரோ, அத்தலைமை நீதிபதியின் தகுதிநிலைக்கொப்ப (அந்தஸ்து) முதல் வகுப்பு அல்லது இரண்டாவது வகுப்பு அதிகாரங்களைப் பயன்படுத்தி, அவர் வழக்கு விசாரணை செய்து வந்தார்.

தற்போது நாகர்கோவிலில், ஒரு மாவட்ட மற்றும் நடுவர் கூட்டிணைவமர்வு மன்றம் இயங்கி வருகிறது. இதுதவிர, நாகர்கோவில் பத்மநாபபுரம் மற்றும் குழித்துறை ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும், ஒரு துணை நீதி மன்றம் இயங்கி வருகிறது. மேலும், நாகர்கோவில் ஒரு முதன்மைக் குற்ற இயல் நடுவர் நீதிமன்றமும், ஒரு கூடுதல் நீதி மன்றமும் இயங்கிவருகின்றன. முதன்மைக் குற்ற இயல் நடுவர், இவற்றில் துணை

நீதிபதியின் தகுதிநிலையிலுள்ளோர், நடுவர்களாகப் பணியாற்றுகின்றனர். துணை நீதிபதிகள், கூடுதல் கூட்டிணைவமர்வு மன்ற நீதிபதிகளாகவும் பணியாற்றுகிறார்கள். அவர்களுக்கு மாவட்டத்திலுள்ள துணை நடுவர்களால் ஒப்படைக்கப்பட்ட வழக்குகளையும் மாவட்ட மற்றும் கூட்டிணைவமர்வு நீதிபதிகளால் மாற்றப்பட்ட வழக்குகளையும் அவர்கள் நடத்துகிறார்கள். நாகர்கோவில் முதன்மைக் குற்றவியல் நடுவர் நீதி மன்றம் நிறுவப்பட்ட பின்னர், நாகர்கோவிலில் இயங்கிவந்த முந்தைய முதல் வகுப்பு நடுவர் நீதிமன்றம் அகற்றப்பட்டது. முதன்மைக் குற்ற இயல் நடுவர், 1974 ஆம் ஆண்டு வரை, மாவட்ட நடுவரென அழைக்கப்பட்டு வந்தார். அவர், பத்மநாபபுரம் துணைக் கோட்ட நடுவர் குற்றத் தண்டனை வழங்கி தீர்ப்பளித்த வழக்குகளின் மீதான, மேல் முறையீடுகளை விசாரணை செய்திட, அதிகாரம் பெற்றவர், இவ்வழக்குகளை விசாரிக்கையில் அவர் கூடுதல் கூட்டிணைவமர்வு மன்ற நடுவர் என்ற தகுதிநிலையைப் பெறுகிறார்.[59]

* தற்போது, இம்மாவட்டத்தில் கீழ்க்கண்ட ஆறு நிலையான மாவட்ட முன்சீஃப் நீதிமன்றங்கள், இயங்கிவருகின்றன:[60]

(1) முதன்மை மாவட்ட முன்சீஃப் நீதிமன்றம், நாகர்கோவில்

(2) கூடுதல் மாவட்ட முன்சீஃப் நீதிமன்றம், நாகர்கோவில்

(3) முதன்மை மாவட்ட முன்சீஃப் நீதிமன்றம், பத்மநாபபுரம்

(4) கூடுதல் மாவட்ட முன்சீஃப் நீதிமன்றம், பத்மநாபபுரம்

(5) முதன்மை மாவட்ட முன்சீஃப் நீதிமன்றம், குழித்துறை

(6) கூடுதல் மாவட்ட முன்சீஃப் நீதிமன்றம், குழித்துறை

மாவட்டத்தில் முதல் வகுப்பு குற்ற இயல் நடுவரின் குற்றத் தண்டனைத் தீர்ப்பின்மீது, நாகர்கோவிலுள்ள கூட்டிணைவமர்வு மன்ற நீதிபதிக்கு மேல் முறையீடு செய்து கொள்ளவகையுள்ளது.

மாவட்டத்திலுள்ள பல்வேறு நீதிமன்றங்களில் விசாரணை செய்யப்படும் வழக்குகளில் முதன்மையானது இந்திய தண்டனை பற்றிய சட்டத்தொகுப்பேடு மற்றும் சென்னை மதுவிலக்குச் சட்டம் ஆகியவற்றின் கீழ் தொடரப்பட்டவை ஆகும்.

குற்ற இயல் சாராத மற்றும் குற்ற இயல்புள்ள வழக்குகள் பற்றிய விவரங்களான நடுவர் நீதிமன்றங்கள் மற்றும் நடுவர் கூட்டிணைவமர்வு மன்றங்கள் ஆகியவற்றில் தொடரப்பட்ட வழக்குகள், முடிவுற்ற வழக்குகள் மற்றும் நிலுவையிலுள்ள வழக்குகள் ஆகியவற்றின் எண்ணிக்கை அபராதத் தொகை விதிக்கப்பட்டவை, மாவட்டத்திலுள்ள பல்வேறு நீதிமன்றங்களில்

** குற்றவியல் அரசாங்க வழங்குரைஞர், நாகர்கோவில் அறிக்கை பதிவாளர், உயர்நீதி மன்றம், சென்னை, அறிக்கை நாள் 19.1.1989.*

மேல்முறையீடு செய்யப்பட்டவை, அவற்றில் முடிவுற்ற மற்றும் நிலுவையிலுள்ள வழக்குகள் ஆகியவை, இணைப்பிற்கண்ட பட்டியல்களில் அளிக்கப்பட்டுள்ளன.

பட்டியல்களில் 1957 முதல் 1987 வரையிலான ஆண்டுகளுக்குரிய புள்ளி விவரங்கள் அளிக்கப்பட்டுள்ளன[61]. ஒவ்வொரு பட்டியலுக்கும், படவரைவும் அளிக்கப்பட்டுள்ளது. படவரைவில் புள்ளிவிவரங்கள், 1970 முதல் 1985 வரையில் மட்டும் கொடுக்கப்பட்டுள்ளன.

குற்ற இயல் சாராத நீதிமன்றங்களின் வழக்குகள் பற்றிய புள்ளி விவரங்கள்

மாவட்டத்தில் தொடரப்பட்ட வழக்குகள் (மூல வழக்குகள் மற்றும் சிறு காரணங்கள் குறித்த வழக்குகள்) மற்றும் மேல் முறையீடுகள் குறித்த புள்ளி விவரங்கள்

ஆண்டு *(1)*	*மூல வழக்குகள்* *(2)*	*மேல் முறையீடுகள்* *(3)*
1957	3148	909
1958	2716	967
1959	2626	803
1960	2639	2062
1961	5259	6428
1962	5338	6349
1963	4998	6051
1964	5318	6369
1965	5155	1041
1966	5329	6628
1967	6124	1277
1968	6291	1315
1969	9050	301
1970	8944	2333
1971	10610	1963
1972	9611	1962
1973	10257	2177
1974	9817	2064

(1)	(2)	(3)
1975	8114	2335
1976	3504	1930
1977	3175	896
1978	2283	538
1979	2855	1967
1980	2676	839
1981	6613	2423
1982	7375	2012
1983	7839	1897
1984	9273	1556
1985	14731	1250
1986	2853	150
1987	3347	203

கன்னியாகுமரி, மாவட்ட முன்சீஃப் நீதி மன்றங்களில் தொடரப்பட்ட, முடிவுற்ற மற்றும் நிலுவையிலுள்ள வழக்குகளின் எண்ணிக்கை

ஆண்டு	இயல்பான வழக்குகள்			சிறு காரணங்கள் குறித்த வழக்குகள்		
	தொடரப் பட்டவை	முடிக்கப் பட்டவை	நிலுவை	தொடரப் பட்டவை	முடிக்கப் பட்டவை	நிலுவை
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1957	2104	3153	2724	619	753	121
1958	1185	2998	1694	788	786	141
1959	1539	2661	1039	847	812	189
1960	1544	2084	1225	765	852	119
1961	1650	2158	1349	661	708	83
1962	1681	2222	1548	680	654	109
1963	1736	2331	1938	689	720	92
1964	1831	2428	1610	759	708	150
1965	1763	2369	1625	725	781	113
1966	1885	2214	1971	761	710	181
1967	2162	2582	2179	853	944	133
1968	2287	2318	2730	749	728	163
1969	3187	2572	3936	777	788	157
1970	2574	2813	4320	903	832	237
1971	2992	3826	4207	1016	1043	231
1972	2699	3784	3911	1025	1007	265

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1973	2657	3821	3643	1036	1027	284
1974	2792	3236	4028	1012	991	330
1975	1769	2740	3606	307	379	275
1976	1548	2848	2826	533	455	356
1977	2013	3161	2400	524	649	243
1978	2259	3593	1881	330	503	80
1979	2567	2859	2389	307	289	110
1980	2077	2633	2560	232	312	39
1981	2312	2199	3440	182	141	83
1982	2467	2695	3843	369	231	228
1983	2455	2322	5348	237	259	209
1984	3137	2026	6016	313	247	276
1985	3193	2993	6650	327	387	224
1986	2103	2429	7251	342	281	291
1987	2995	2052	8695	176	208	259

கன்னியாகுமரி மாவட்ட சார் நீதி மன்றங்களில் தொடரப்பட்ட, முடிவுற்ற மற்றும் நிலுவையிலுள்ள வழக்குகளின் எண்ணிக்கை

	இயல்பான வழக்குகள்			சிறு காரணங்கள் குறித்த வழக்குகள்		
ஆண்டு	தொடரப் பட்டவை	முடிக்கப் பட்டவை	நிலுவை	தொடரப் பட்டவை	முடிக்கப் பட்டவை	நிலுவை
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1957	82	223	199	28	8	20
1958	58	160	48	173	166	27
1959	59	82	44	167	164	30
1960	67	93	61	162	162	34
1961	75	113	77	75	103	77
1962	61	112	69	-	-	-
1963	83	115	73	-	-	-
1964	84	114	75	-	-	-
1965	77	104	79	-	-	-
1966	101	79	125	-	-	-
1967	84	94	142	-	-	-
1968	128	100	191	-	-	-
1969	145	106	252	-	-	-

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1970	176	167	294	-	-	-
1971	215	268	298	-	-	-
1972	225	256	342	-	-	-
1973	241	183	368	-	-	-
1974	226	361	321	-	-	-
1975	168	288	274	-	-	-
1976	207	225	311	-	-	-
1977	276	345	323	-	-	-
1978	340	431	316	-	-	-
1979	409	480	353	-	-	-
1980	362	419	410	-	-	-
1981	189	219	158	-	-	-
1982	139	103	-	-	-	-
1983	228	252	206	-	-	-
1984	274	334	236	-	-	-
1985	212	254	280	-	-	-
1986	248	216	435	-	-	-
1987	339	194	630	-	-	-

கன்னியாகுமரி மாவட்டத்தில், தொடரப்பட்ட, முடிக்கப்பட்ட மற்றும் நிலுவையிலுள்ள முறைப்பட்ட மேல்முறையீட்டு வழக்குகளின் எண்ணிக்கை

ஆண்டு	தொடரப்பட்டவை	முடிக்கப்பட்டவை	நிலுவை
(1)	(2)	(3)	(4)
1957	700	1031	1157
1958	891	1374	751
1959	709	1052	557
1960	793	949	333
1961	589	597	225
1962	442	500	188
1963	522	490	265
1964	420	530	176
1965	512	317	393
1966	500	345	559
1967	438	325	677
1968	457	392	764

(1)	(2)	(3)	(4)
1969	470	362	888
1970	538	366	1075
1971	612	615	1108
1972	617	465	1308
1973	584	532	1397
1974	556	519	1479
1975	535	454	1594
1976	914	653	1894
1977	728	789	1861
1978	846	782	1962
1979	583	830	1752
1980	565	835	1532
1981	426	760	1260
1982	520	701	1075
1983	559	667	1063
1984	299	566	841
1985	223	361	762
1986	150	203	757
1987	203	201	778

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள நீதி மன்றங்களில் தொடரப்பட்ட, முடிக்கப்பெற்ற மற்றும் நிலுவையிலுள்ள பலவகை மேல்முறையீட்டு வழக்குகளின் எண்ணிக்கை

ஆண்டு	தொடரப்பட்டவை	முடிக்கப்பட்டவை	நிலுவை
(1)	(2)	(3)	(4)
1957	116	212	17
1958	86	94	11
1959	92	83	22
1960	59	69	16
1961	171	157	30
1962	161	171	23
1963	189	187	24
1964	149	173	13
1965	158	89	85
1966	141	67	149
1967	141	251	47

(1)	(2)	(3)	(4)
1968	124	151	23
1969	136	112	43
1970	140	110	76
1971	210	235	93
1972	229	189	142
1973	156	216	94
1974	213	159	148
1975	223	192	183
1976	170	184	141
1977	181	150	179
1978	133	204	89
1979	115	140	61
1980	144	112	99
1981	177	89	192
1982	54	161	177
1983	125	127	176
1984	81	98	159
1985	59	66	160
1986	46	21	156
1987	36	86	105

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள, சார் நீதி மன்றங்களில் தொடரப்பட்ட, முடிக்கப்பட்ட மற்றும் நிலுவையிலுள்ள மூலவழக்குகள்

ஆண்டு	தொடரப்பட்ட மூல வழக்குகள்	முடிக்கப்பெற்ற மூல வழக்குகள்	நிலுவையிலுள்ள மூல வழக்குகள்
(1)	(2)	(3)	(4)
1957	81	232	198
1958	58	160	58
1959	59	82	44
1960	67	93	61
1961	75	103	77
1962	61	112	67
1963	83	115	73
1964	86	114	75
1965	77	102	79

(1)	(2)	(3)	(4)
1966	101	79	115
1967	84	94	142
1968	128	100	191
1969	145	106	252
1970	146	143	140
1971	126	156	139
1972	225	256	344
1973	241	356	182
1974	226	451	183
1975	168	358	274
1976	207	225	321
1977	276	366	343
1978	340	431	668
1979	409	216	353
1980	361	516	413
1981	189	219	158
1982	128	265	117
1983	248	252	206
1984	227	334	236
1985	212	254	280
1986	248	216	435
1987	339	194	630

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள, மாவட்ட முன்சீஃப் நீதிமன்றங்களில் தொடரப்பட்ட, முடிக்கப்பெற்ற மற்றும் நிலுவையிலுள்ள வழக்குகளின் எண்ணிக்கை

	மூல வழக்குகள்			சிறு காரணங்கள் குறித்த வழக்குகள்		
ஆண்டு	தொடரப் பட்டவை	முடிக்கப் பெற்றவை	நிலுவை	தொடரப் பட்டவை	முடிக்கப் பெற்றவை	நிலுவை
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1957	32					
1958	327	349	152	250	220	60
1959	1539	2561	133	65	61	12
1960	1644	2084	1225	765	852	119
1961	1650	2158	1309	661	708	83
1962	1681	2222	1558	680	654	109
1963	1736	2331	1538	689	720	92

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1964	1831	2428	1610	759	708	150
1965	1763	2369	1625	725	781	113
1966	1885	2114	1971	761	710	181
1967	2162	2682	2179	853	944	133
1968	2287	2318	2730	749	728	163
1969	3189	2572	3936	777	788	157
1970	2574	2813	1142	903	832	237
1971	2992	3826	4207	1016	1043	231
1972	2699	3784	3911	1025	1007	265
1973	2657	2821	3634	1036	1027	284
1974	2792	3236	4028	1012	991	330
1975	1769	2740	1255	307	379	275
1976	1548	2848	2826	533	455	356
1977	2013	3161	2400	544	649	243
1978	2259	3593	1881	930	503	80
1979	2567	2859	2389	307	289	110
1980	2077	2633	2560	232	312	39
1981	2312	2199	3430	182	141	83
1982	2467	2695	3843	369	232	228
1983	2455	2322	4538	237	259	209
1984	3137	2036	6016	313	246	276
1985	3225	2178	4219	132	171	44
1986	2603	2429	7261	342	281	291
1987	2995	2052	8695	176	205	259

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள சார்நீதி மன்றங்களில் தொடரப்பட்ட, முடிக்கப்பெற்ற மற்றும் நிலுவையிலுள்ள வழக்குகளின் எண்ணிக்கை

ஆண்டு	மூல வழக்குகள்			சிறு காரணங்கள் குறித்த வழக்குகள்		
	தொடரப் பட்டவை	முடிக்கப் பெற்றவை	நிலுவை	தொடரப் பட்டவை	முடிக்கப் பெற்றவை	நிலுவை
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1957	82	233	199	28	8	20
1958	58	140	48	173	166	27
1959	59	82	44	222	164	30
1960	67	91	61	161	162	34

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1961	75	103	77	43	53	--
1962	61	112	69	96	-	--
1963	83	115	73	-	-	-
1964	84	114	75	-	-	-
1965	77	102	79	-	-	-
1966	101	79	125	-	-	-
1967	84	94	142	-	-	-
1968	128	100	191	-	-	-
1969	145	106	252	-	-	-
1970	176	167	194	-	-	-
1971	215	268	296	-	-	-
1972	225	342	342	-	-	-
1973	241	283	126	-	-	-
1974	226	361	321	-	-	-
1975	-	-	-	-	-	-
1976	207	225	321	-	-	-
1977	276	345	323	-	-	-
1978	340	431	316	-	-	-
1979	409	480	353	-	-	-
1980	362	419	413	-	-	-
1981	189	219	158	-	-	-
1982	139	157	177	-	-	-
1983	248	257	206	-	-	-
1984	274	334	236	-	-	-
1985	212	254	280	-	-	-
1986	248	216	435	-	-	-
1987	339	194	630	-	-	-

குற்ற இயல் நீதிமன்றங்கள் தொடர்பான புள்ளிவிவரங்கள்

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள குற்ற இயல் நீதிமன்றங்கள் மற்றும் செசன்ஸ் நீதி மன்றங்களில் தொடரப்பட்ட வழக்குகள் மாவட்ட முழுமொத்தம்

ஆண்டு	நீதி மன்றங்களில் தொடரப்பட்ட வழக்குகள்	மேல் முறையீடுகள்	மொத்த வழக்குகள் மற்றும் மேல் முறையீடுகளின் எண்ணிக்கை
(1)	(2)	(3)	(4)
1964	15463	336	15799
1965	15589	281	15870
1966	14803	365	15168
1967	13167	230	13397
1968	14243	208	14451
1969	16904	169	17073
1970	18321	223	18544
1971	15681	235	15916
1972	14187	213	14400
1973	15128	283	15411
1974	20924	315	21239
1975	24521	452	24973
1976	28505	445	28960
1977	25048	494	25542
1978	17059	504	17563
1979	13289	606	13895
1980	11756	382	12391
1981	12992	448	13374
1982	14253	442	14701
1983	19239	674	19681
1984	18810	777	19484
1985	19456	-	20233
1986	23887	108	23995
1987	23547	94	23641

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள குற்ற இயல் நீதிமன்றங்கள் மற்றும் சார்நீதி மன்றங்களில் தொடரப்பட்ட வழக்குகள் முடிவுற்று விதிக்கப்பட்ட அபராதத்தொகை, வசூல் செய்யப்பட்ட அபராதத்தொகை மற்றும் நஷ்டஈடு அளிக்கப்பட்ட தொகை ஆகியவற்றைக் காட்டும் பட்டியல்.

ஆண்டு	விதிக்கப்பட்ட அபராதத் தொகை (ரூபாய்)	வசூல் செய்யப்பட்ட அபராதத் தொகை (ரூபாய்)	நஷ்ட ஈடாக அளிக்கப் பட்ட தொகை (ரூபாய்)
(1)	(2)	(3)	(4)
1957	விவரங்கள் கிடைக்கவில்லை		
1958	89084	66634	860
1959	77782	76769	1400
1960	115380	107618	791
1961	விவரங்கள் கிடைக்கவில்லை		
1962		"	
1963		"	
1964	209028	204215	2225
1965	175779	171108	675
1966	181221	179152	--
1967	187549	185605	50
1968	242848	231554	--
1969	267922	268314	100
1970	304576	304523	150
1971	260347	260092	--
1972	203397	199116	--
1973	260269	243370	1050
1974	375133	342484	296
1975	493866	486275	100
1976	584263	591818	--
1977	564141	559182	100
1978	448519	405044	400
1979	561580	375100	25
1980	361023	255533	100
1981	428602	267654	--
1982	467059	324370	400
1983	719320	368090	2350

(1)	(2)	(3)	(4)
1984	743870	387832	4350
1985	723730	579715	3550
1986	138675	80450	3000
1987	98725	72075	2000

கன்னியாகுமரி மாவட்டம் செசன்ஸ் நீதி மன்றத்தில் தொடரப்பட்ட குற்ற இயல் வழக்குகளின் மேல்முறையீடுகள், மற்றும் அவற்றில் முடிக்கப்பெற்றவை, நிலுவையிலுள்ளவை ஆகியவற்றின் எண்ணிக்கை.

ஆண்டு	தொடரப்பட்ட மேல் முறையீடுகள்	முடிக்கப்பெற்ற மேல்முறையீடுகள்	நிலுவையிலுள்ள மேல் முறையீடுகள்
(1)	(2)	(3)	(4)
1957	விவரங்கள் கிடைக்கவில்லை		
1958	104	105	9
1959	151	157	3
1960	299	216	16
1961	விவரங்கள் கிடைக்கவில்லை		
1962		"	
1963		"	
1964	118	119	6
1965	117	76	47
1966	94	137	4
1967	61	59	6
1968	62	68	-
1969	74	73	1
1970	89	82	7
1971	61	55	13
1972	69	52	30
1973	100	95	35
1974	235	101	95
1975	225	164	73
1976	256	184	55
1977	297	147	90
1978	258	156	73
1979	320	108	101

(1)	(2)	(3)	(4)
1980	321	118	126
1981	171	132	147
1982	227	137	207
1983	157	151	158
1984	343	130	376
1985	248	162	438
1986	265	167	424
1987	194	157	374

கன்னியாகுமரி மாவட்ட செசன்ஸ் நீதிமன்றத்தில், தொடரப்பட்ட, முடிக்கப்பெற்ற மற்றும் நிலுவையிலுள்ள வழக்குகளின் எண்ணிக்கை

ஆண்டு	முடிவுக்கான ஒப்படைப்பு மற்றும் தகவலுக்கான ஒப்புவிப்பு தொடர்பான வழக்குகள்	முடிக்கப் பெற்றவை	நிலுவை
(1)	(2)	(3)	(4)
1957	விவரங்கள் கிடைக்கவில்லை		
1958	24	21	5
1959	33	35	3
1960	31	32	3
1961	விவரங்கள் கிடைக்கவில்லை		
1962		"	
1963		"	
1964	23	18	-
1965	39	21	7
1966	30	25	1
1967	40	33	1
1968	34	33	2
1969	41	40	1
1970	46	38	8
1971	53	47	6
1972	58	34	24
1973	44	57	6
1974	60	57	10
1975	42	45	5
1976	30	25	5
1977	52	29	9
1978	28	44	6

(1)	(2)	(3)	(4)
1979	67	36	14
1980	82	45	23
1981	109	67	31
1982	126	77	33
1983	256	104	82
1984	158	94	83
1985	74	83	70
1986	89	46	23
1987	134	55	34

கன்னியாகுமரி மாவட்ட முதன்மை நடுவர் நீதி மன்றத்தில் தொடரப்பட்ட, முடிக்கப்பெற்ற மற்றும் நிலுவையிலுள்ள குற்றஇயல் வழக்கு-மேல் முறையீடுகளின் எண்ணிக்கை

ஆண்டு	தொடரப்பட்ட மேல் முறையீடுகள்	முடிக்கப்பெற்ற மேல்முறையீடுகள்	நிலுவையிலுள்ள மேல் முறையீடுகள்
(1)	(2)	(3)	(4)
1960	-	160	-
1961	-	-	-
1962	-	-	-
1963	-	-	-
1964	155	135	13
1965	139	108	9
1966	104	97	-
1967	88	107	5
1968	112	98	6
1969	99	57	13
1970	64	87	17
1971	91	133	1
1972	117	108	11
1973	118	130	6
1974	125	96	7
1975	95	89	14
1976	97	101	6
1977	94	113	5

(1)	(2)	(3)	(4)
1978	113	125	-
1979	120	156	26
1980	182	159	28
1981	164	39	6
1982	45	35	3
1983	38	35	5
1984	37	42	3
1985	47	43	6
1986	108	14	94
1987	94	5	89

குறிப்புகள்

1. பி. செகதீசன், சென்னை மாநிலத்தில் சட்டம் மற்றும் ஒழுங்கு, - 1850-1880, டெல்லி, பி.ஆர்.பிரசுரிக்கும் கழகம்.
2. அதே நூல்
3. அதே நூல்
4. எ. ஸ்ரீதரமேனன் டிரவான்கூர் டிஸ்டிரிக்ட் மேனுவல், Vol. III. திருவனந்தபுரம், 1906, பக்கம் 482.
5. அதே நூல்
6. வி. நாகம் அய்யா. டிரவான்கூர் ஸ்டேட் மேனுவல், 1906, பிக்கம் 482
7. அதே நூல்
8. பென்ஸ்பியின் அறிக்கை - நாகம் அய்யா மேனுவலில் குறிப்பிட்டது.
9. சி.டி. மெக்ளீன். மேனுவல் ஆப் அட்மினிஸ்ட்ரேசன் ஆப்தி மெட்ராஸ் பிரசிடென்சி, Vol - II - 1864, பக்கம் 288.
10. மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளரின் அறிக்கை, நாள் 28 ஜூலை 1988
11. மாவட்ட காவல்துறை ஆண்டறிக்கை, 1977 - பக்கம் 57
12. மாவட்ட காவல் கண்காணிப்பாளரின் அறிக்கை. நாள் 28 ஜூலை. 1988
13. மாவட்ட காவல் துறை ஆண்டறிக்கை, 1977
14. அதே நூல்
15. மாவட்ட காவல் துறை ஆண்டறிக்கை, 1979
16. மாவட்ட காவல் துறை ஆண்டறிக்கை, 1983
17. எஸ். பத்மனாபன், குமரிமாவட்டக் கோவில்கள் - நாகர்கோவில், 1970, பக் 166
18. ஜி.டி. விக்ரமன் தம்பி மற்றும் எஸ். செண்பகப்பெருமாள் - வரலாற்றில் மண்டைக்காடு, பக்கம் 17 - 18
19. எஸ்.பத்மநாபன், அதே நூல் பக்கம் 166.
20. கன்னியாகுமரி மாவட்ட காவல் துறை ஆண்டறிக்கை, 1982
21. அதே நூல்
22. அதே நூல்
23. கன்னியாகுமரி மாவட்ட காவல்துறை ஆண்டறிக்கை, 1983
24. கன்னியாகுமரி மாவட்ட காவல்துறை ஆண்டறிக்கை, 1984
25. கன்னியாகுமரி மாவட்ட காவல்துறை ஆண்டறிக்கை, 1985
26. கன்னியாகுமரி மாவட்ட காவல்துறை ஆண்டறிக்கை, 1986
27. அதே நூல்
28. மாவட்ட காவல் துறைக் கண்காணிப்பாளரின் அறிக்கை - 1988
29. வி. நாகம் அய்யா - அதே நூல்
30. திருவாங்கூர் மாநில நிர்வாக அறிக்கை 1862 - 63, அரசு அச்சகம் 1863

31. அதே நூல் - பக்கம் 449
32. அதே நூல் - பக்கம் 450
33. அதே நூல் - பக்கம் 451
34. திருவாங்கூர் நிர்வாகம் மற்றும் மறு ஆய்வு, 1909 - 1910 அரசு அச்சகம் பக் XXXI
35. ஏ.இராமசாமி, பதிப்பிக்கப்படாத அறிக்கை
36. சிறைத்துறைத் தலைவரின் அறிக்கை ஜூலை, 1988
37. அதே அறிக்கை
38. அதே அறிக்கை
39. மாவட்ட நீதிபதியின் அறிக்கை பிப்ரவரி, 1988
40. அதே அறிக்கை
41. வி. நாகம் அய்யா - அதே நூல்
42. சி.டி. மெக்லீன் - அதே நூல், Vol - II 1864 பக் 289
43. ஏ. ஸ்ரீதர மேனன், அதே நூல் 1961, பக்கம் 603
44. நாகம் அய்யா - அதே நூல், பக். 435
45. அதே நூல்
46. சி.டி. மெக்லீன், பக் 287
47. அதே நூல்
48. அதே நூல்
49. அதே நூல்
50. அதே நூல்
51. அதே நூல்
52. அதே நூல்
53. அதே நூல்
54. வி. நாகம் அய்யா - அதே நூல், பக்கம் 438
55. ஸ்ரீதரமேனன் அதே நூல் - பக். 604
56. மெக்லீன் - பக்கம் 287
57. திருவாங்கூர் மாநில ஆண்டறிக்கை - 1881 - 821 பக்கம 1-2
58. அரசாணை எண். 3607, உள்துறை, நாள் 18 டிசம்பர் 1959
59. குற்றவியல் வழக்கறிஞர் அறிக்கை (Public Prosecutor), நாகர்கோயில், 1988
60. பதிவாளர், சென்னை உயர்நீதி மன்றம் - அறிக்கை, 1985
61. (அ) குற்றவியல் நீதி மன்ற ஆண்டறிக்கைகள் - 1957 முதல் 1985 வரை
(ஆ) குடிமையியல் நீதிமன்ற ஆண்டறிக்கைகள் - 1957 முதல் 1985 வரை, அரசு அச்சகம், சென்னை.

இயல் - 13

பிற துறைகள்

முன்னுரை

இந்தியா சுதந்திரமடைந்த பின்னர், வளமிக்க நாடாக நீண்டநெடும் வளர்ச்சிப்பணிகளில், முழு கவனத்தையும் செலுத்தி, வெற்றி நடைபோடுகிறது. நாட்டு மக்களின் சமூக, பொருளாதார நிலையினை உயர்த்துவதோடு மட்டுமின்றி, நிர்வாக இயந்திரத்தினையும் சற்றே முடுக்கி, நிருவாகம் முழுநிறைவு பெற்றதாக அமையப்பெற, அனைத்து நடவடிக்கைகளையும மேற்கொண்டுள்ளது.

துவக்க காலத்தில், ஆங்கிலேயர் அரசை அமைத்தபோது, மாவட்ட ஆட்சித்தலைவர்களின் தலைமையினாலான, வருவாய்த்துறை, பொது நிருவாகத்தின் பல நடிவடிக்கைகளில், முக்கிய அங்கம் வகித்தது. மாவட்ட அளவில், சட்டம், ஒழுங்கு மற்றும் நீதி ஆகியவற்றைப் பராமரித்தல், நகர்ப்புறம் மற்றும் கிராம வளர்ச்சி, இதர வளர்ச்சிப் பணிகள், நீர்ப்பாசன பாய்ச்சலாதாரங்களைப் பராமரித்தல், சாலைகள் அமைத்தல், கட்டுமானப் பணிகள், குடிநீர் வழங்குதல், பிறப்பு, இறப்புப் புள்ளி விவரங்கள், மலேரியா மற்றும் காலரா ஒழிப்புத் திட்டங்கள், ஏழை மற்றும் தாழ்த்தப்பட்டோர் மேம்பாடு, குறிப்பாக, அட்டவணை வகுப்பினர், மற்றும் அட்டவணை மலைவாழ்ப் பிரிவினர், வணிக வரி, நிலவருவாய் தொடர்புள்ள வரிகளை வசூலித்தல், மாவட்ட அளவிலான பல்வேறு துறை அலுவலகங்கள் மற்றும் தலைமைக் கருவூலம், துணைக் கருவூலம் ஆகியவற்றை நிருவகித்தல் போன்ற பணிகளை வருவாய்த் துறை ஆற்றி வந்தது. ஆனால், ஜனவரி 26, 1950-ம் நாள் முதல் மக்களாட்சி குடியரசாக மலர்ச்சியுற்ற பின்னர், நாடு, மாநில நிலையிலல்லாது, மாவட்ட நிலையிலும், வியக்கத்தக்க முறையில், விரைவான முன்னேற்றத்துடன் மிகப்பெரிய அளவில் வளர்ச்சித்திட்ட நடவடிக்கைகளை, விரைவுப்படுத்தத் துவங்கியது. நாடு முழுவதும், சொல்லாலும், செயலாலும் காந்தியக் கொள்கையான பஞ்சாயத்து இராச்சியத்தை நிறுவ, முற்பட்டது. முன்னர் இருந்த நிருவாக அமைப்புப்போலல்லாது, பொது மக்களுக்கு அவர்களது இருப்பிடத்திலேயே அனைத்து வசதிகளையும் செய்து கொடுப்பதே முக்கிய நோக்கமாக இருந்தது. அதனைத் தொடர்ந்து, அரசின் நிருவாக அமைப்பிற்கு வீரிய மூட்டி, வட்டார அளவில், பல்வேறு சமுதாய வளர்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தியது. வளர்ச்சித் திட்டங்களை செயலாக்குவதில் பொறுப்பு வகிக்கும் பல்வேறு துறைகளான, ஊராட்சி, வேளாண்மை, விலங்கினப் பாதுகாப்பு, மருத்துவம், பொறியியல் ஆகியவற்றை ஒரே அமைப்பிற்கொணர்ந்து, திட்டங்கள் செயலாக்கப்பட்டன. இயல்பாக அரசு வகுத்துள்ள முறையின்படி, இவ்வளர்ச்சித் திட்டங்களை நடைமுறைப்

படுத்த, ஒவ்வொரு வட்டத்திலும், இரண்டு அல்லது மூன்று வட்டாரங்கள் ஏற்படுத்தப்பட்டன. தொடர்ந்து வந்த பல்வேறு ஐந்தாண்டுத் திட்டங்களை மிகவும் தீவிரமாக செயற்படுத்த அனைத்து மாநிலங்களுக்கும் ஒவ்வொரு திட்டத்திற்கும் கணக்கிட்டு மத்திய அரசு நிதி ஒதுக்கியது. பொது மக்களின், குறிப்பாக கிராமப்புற மக்களின் நலனைக் கருத்திற்கொண்டே ஒவ்வொரு பைசாவும் செலவிடப்படவேண்டுமென்ற நோக்கத்தில், அரசு ஒவ்வொரு திட்டத்திற்கும் நிதி ஒதுக்கியது. ஒரு துறையின் பொறுப்பில், அனைத்து நிருவாக இயந்திரமும் அமைந்து செயலாக்கியதை நோக்குங்கால், நிருவாக இயந்திரத்தின் பற்றாக்குறை திட்டங்கள் செயலாக்கப் பெறுவதிலான தாமதம், உணரப்பட்டது. தீவிர ஆலோசனைக்குப் பின்னர், மேலே குறிப்பிட்டவாறு, வட்டார அளவில், நிர்வாக இயந்திரத்தினை அமைத்து மக்களின் வளர்ந்து வரும் தேவைக்கொப்ப வட்டார நிலையிலுள்ள அலுவலர்கள் மூலம், பல்வேறு துறைகளில் வளர்ச்சித் திட்டங்களை செல்முறைப்படுத்தி, மக்களின் வாழ்வு வளம் பெறச்செய்யும் குறிக்கோளை அடைவதென முடிவு செய்யப்பட்டது. வகுக்கப்பட்ட கொள்கையின் அடிப்படையில், திட்டங்களை சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தத் தகுதியான நிருவாக அமைப்பு முறை, உருவாக்கப்பட்டது. அதன் விளைவே, தொடர்ந்து உருவாக பல்வேறு துறைகளான, வேளாண்மை, தோட்டக்கலை, பட்டுப்பூச்சி வளர்ப்பு, பொறியியல், கூட்டுறவு, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி கால்நடைப் பாதுகாப்பு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன், தொழில் ஆகியவையும், பெருந்தலைவர்கள் மற்றும் இயக்குநர்கள் ஆகியோர் பொறுப்பில் உருவான அரசு சார்ந்த பல்வேறு நிறுவனங்கள், கழகங்கள், கூட்டிணைக் கழகங்கள், மற்றும் வாரியங்கள் ஆகியவையாகும். சமுதாயத்தில் மாறிவரும் பல்வேறு தேவைக்களுக்குடன்பட்டு, அமையப்பெற்றுள்ள, பல துறைகள் மற்றும் பொது நிறுவனங்கள் ஆகியவற்றின் அமைப்பு முறை மற்றும் நடவடிக்கைகள் ஆகியவை கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

பெரிய துறைகளான, வருவாய், ஊரகவளர்ச்சி, நகராட்சி நிருவாகம், வேளாண்மை, பொறியியல் பெருவழிகள் மற்றும் கிராமப் புறப் பணிகள், பொதுப்பணி, கூட்டுறவு, தொழில், போக்குவரத்து, கல்வி, மருத்துவம், ஆகியவை நடைமுறைப்படுத்திய பல்வேறு திட்டங்கள், நிர்ணயிக்கப்பட்ட குறியீடு, சாதனை, மற்றும் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நலத்திட்டங்கள் ஆகியவை குறித்த விவரங்கள் அந்தந்த துறை தொடர்பான இதர இயல்களில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

தீவிர உணவுப்பொருள் உற்பத்தித் திட்டங்களான, உயர் விளைச்சல் வகைத் திட்டங்கள், தீவிர வேளாண் பகுதித் திட்டங்கள், பயறு வகைகள் மேம்பாட்டுத் திட்டங்கள் பருத்தி மற்றும் கரும்பு ஆகியவற்றின் தீவிர சாகுபடித் திட்டம் ஆகியவற்றை வேளாண்துறை செயல்படுத்தி வருகிறது.

மேலும், இத்திட்டங்களை நன்முறையில் செயலாற்றிட, விவசாயிகளின் தேவைகளுக்கேற்ப, உரிய நேரத்தில், தேவையான அளவு தரமுள்ள விளை பொருள்களை அவர்களுக்கு வழங்கிவருகிறது.[1]

இவை தவிர, தற்கால தொழில், நுட்ப வசதிகளை சிறு விவசாயிகளுக்கும், நிலமற்ற வேளாண் தொழிலாளர்களுக்கும் அளித்து, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்து முகத்தான், மேம்படுத்தப் பட்ட விவசாயம், விவசாயிகளுக்கு துணைத் தொழிலளித்தல், உபரி வேலைவாய்ப்பு வசதியளித்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளில், துறை தீவிர கவனம் செலுத்தி வருகிறது. இத்துறையினால் நடைமுறைப் படுத்தப்பட்ட திட்டங்கள், நிர்ணயிக்கப்பட்ட குறியீடு, சாதனை ஆகிய விவரங்கள், இவ்விவரச் சுவடியின் "வேளாண்மை மற்றும் நீர்ப்பாசனம்" என்ற தலைப்பிலான இயலில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

மாநில அளவில் வேளாண்துறை பணியாளர் தொகுதி அமைப்பு முறை

இத்துறையின் பணியாளர் தொகுதி அமைப்புமுறை, கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

வேளாண் இயக்குநர், துறைத் தலைமையலுவலர் ஆவார். இவரது கண்காணிப்பில், கீழ்க்கண்ட அலுவலர்கள் பணியாற்றி வருகிறார்கள் :

1. வேளாண் கூடுதல் இயக்குநர்கள் ... 4
(அ) பயிர் பாதுகாப்பு, (ஆ) விரிவாக்கத் திட்டங்கள்
(இ) விதைகள், (ஈ) மேற்பார்வை மற்றும்
மதிப்பீடு (ஆகிய ஒவ்வொரு பிரிவுப் பணிக்கும் ஒருவரென்ற வீதத்தில்)
2. வேளாண் இணை இயக்குநர்கள் ...9
3. நிதி ஆலோசகர் மற்றும் முதன்மைக் கணக்கு அலுவலர் ...1
4. துணை இயக்குநர்கள் ...5
5. நிருவாகப் பொறியாளர்கள் ...2
(அ) நீர் மேற்பார்வை
(ஆ) விதை புத்துருவாக்க, அலகு.
6. வேளாண் பொருளியல் ஆய்வாளர் ...1
7. கிராமப்புற மன்னாய நூல் ஆய்வாளர் ...1
8. நிருவாக அலுவலர்கள் ...2
9. வேளாண் உதவி இயக்குநர்கள் ...12

மாவட்ட அளவில் நிருவாக அமைப்பு முறை

கன்னியாகுமரி மாவட்டத்தில், இத்துறையின் நிருவாக அமைப்பும், துறையில் பணியாற்றும் ஒவ்வொரு அலுவலரின் பணிவிவரங்களும் கீழ்க் குறிப்பிட்ட பத்திகளில் விவரிக்கப்பட்டுள்ளன.

இம் மாவட்டத்தில், வேளாண் திட்டங்களை முறையாக நடைமுறைப்படுத்த மாவட்டம் ஒரு வேளாண் இணை இயக்குநரின் நிருவாகப் பொறுப்பிலிருந்து வருகிறது.

பயிற்சி மற்றும் பார்வையிடுத் திட்டம்

பயிற்சி மற்றும் பார்வையிடுத் திட்டம், இம் மாவட்டத்தில் ஜூலை 1, 1982 முதல் அறிமுகப்படுத்தப்பட்டது. திட்டத்தின் முக்கிய நோக்கமென்னவெனில், வேளாண் விரிவாக்கப்பண்பு வேறுபாட்டினை முடுக்கிவிட்டு, தற்கால தொழில் நுட்பத்தினை, வேளாண்குடி மக்களுக்குப் பயன்தரத்தக்க அளவில் மாற்றியமைப்பதேயாகும். பயிற்சி மற்றும் பார்வையிடுத் திட்டத்தினைத் தீவிரமாக நடைமுறைப்படுத்திட, களப்பணியாளர்களின் அமைப்புமுறை சீரமைக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில் திட்டத்தினைத் தீவிரமாக செயலாக்கிட, வேளாண் இணை இயக்குநருக்குப் பொறுப்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை சீரிய முறையில் செயலாற்றிட, அவருக்கு, ஐந்து வேளாண் துணை இயக்குநர்கள், ஆறு வேளாண் உதவி இயக்குநர்கள், 53 வேளாண் அலுவலர்கள், 158 உதவி வேளாண் அலுவலர்கள், ஒன்பது வேளாண் விதை அலுவலர்கள் மற்றும் 65 கள சான்று விளக்க அலுவலர்கள் உதவி புரிகின்றனர். ஐந்து வேளாண் துறை இயக்குநர்களில், நான்கு அலுவலர்கள், வேளாண் வல்லுநர்களாவர். மற்றொருவர், விதை உற்பத்தி மற்றும் வழங்குதல் ஆகிய பணியினை ஆற்றுகிறார்.

துணைக் கோட்ட அளவில், பயிற்சி மற்றும் பார்வையிடுத் திட்டத்தினை வேளாண் உதவி இயக்குநர்கள், நடைமுறைப்படுத்தும் பொறுப்பினை ஏற்றுள்ளார்கள். சில கிராமங்களின் தொகுதிக்கு வேளாண் அலுவலர், பொறுப்பிலுள்ளார். அவர், பயிற்சி மற்றும் பார்வையிடுத்திட்ட அடித்தள ஊழியர்களான கிராம விரிவாக்க ஊழியர்களை வழிநடத்திச் சென்று, அவர்களது பணியினையும் மேற்பார்வை செய்கிறார். ஒவ்வொரு 800 முதல் 1000 விவசாயக் குடும்பங்களுக்கு, ஒரு கிராம விரிவாக்க ஊழியர் வீதம், நியமிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களுக்கு ஒவ்வொரு அரைத்திங்களும் பயிற்சியளிக்கப்படுகிறது. அந்தக் கால அளவில் பயிரிடப்பட்டுள்ள பயிர்களின் வளர்ச்சித் தரத்தினைக் கருத்திற் கொண்டு, அடுத்த அரைத் திங்களில் பயிரிடப்படவிருக்கும் பயிர் தொடர்பாக, விவசாயிகள் கையாள வேண்டிய முறைகள் குறித்த பரிந்துரையினை, சம்பந்தப்பட்ட விவசாயி களுக்கு, அளிக்கவல்ல முறையில், திட்டமிட்டு இவ்வூழியர்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது. கிராம விரிவாக்கப் பணியாளர், ஒரு அட்டவணையைத் தயாரித்து, விவசாயிகளை அரைத்திங்கட்கொருமுறை சந்தித்து, தொடர்புள்ள பயிர் உற்பத்தி தொழில் நுட்பங்களை அவர்களுக்குத் தெளிவாக விவரிக்கிறார். இம்மாவட்டத்தில் இத்திட்டம் நல்லமுறையில் செயல்படுகிறது.

பல்வேறு நிலையிலுள்ள அலுவர்கள் ஆற்றும் பணி

வேளாண் இணை இயக்குநர், மாவட்டத்திற்கான உற்பத்தித் திட்டத்தினைத் தீட்டி, கிராம அளவில் அதனை சீரிய முறையில், நடைமுறைப்படுத்துகிறார். அவர், பயிற்சி மற்றும் பார்வையிடு முறையின்படி, இத்திட்டம் சரிவர இயங்கி வருவதையும், உற்பத்தப் பொருட்கள் முறையாக வழங்கப் பெறுவதையும் கண்காணித்து அவ்வவ்போது ஆய்வு மேற்கொள்கிறார். மாவட்டத்தில் பயிராகும் பயிர்கள், அவற்றின் உரிய பருவகாலம் இவை தொடர்புள்ள தொழில் நுட்பம் வாய்ந்த பொருள் குறித்து, மாதந்தோறும் நடத்தப்பெறும் கூட்டத்தில் ஆராய்ச்சி அலுவலர்களுடன் கலந்துரையாடி, அவர்களது கருத்தினை அறிந்து அவற்றிற்கொப்ப, அடுத்த மாதத்தில் விவசாயிகளுக்குப் பயிரிடுமுறை குறித்து அளிக்கவேண்டிய பரிந்துரையினை முடிவு செய்கிறார். அவர் மாவட்ட தொழில் நுட்பக்குழுவின் கூட்டத்தை நடத்தி, பணி முன்னேற்றத்தினை ஆய்வு செய்து, விவசாயிகளுக்கு அளிக்க வேண்டிய பரிந்துரைகள், சான்று விளக்கங்கள் மற்றும் சோதனை முறைகள் ஆகியவற்றை வகைப்படுத்துகிறார். அவர் பல்வேறு பயிற்சி முறைகளைத் திட்டமிட்டு அமைத்து, அவை சரிவர நடைமுறைப்படுத்தப்படுவதையும், கண்காணிக்கிறார். மேலும், அவர் குறிப்பிட்ட பொருள் குறித்த தனித்துறை வல்லுநர்களை வழிநடத்தி, அவர்களது பணித்திறனையும் ஆய்வு செய்கிறார். அவர் நிலத்தை ஆதாரமாகக் கொண்டுள்ள துறைகளுடன், தோட்டப்பயிர் வளர்ப்பு, எண்ணெய் வித்துக்கள், வேளாண் பொருள் சார்ந்த வாணிபம், வேளாண் பொறியியல், விதைத் தகுதிச் சான்று, ஆகியவை தொடர்பாக இணைப்பு அலுவலராகப் பணியாற்றுகிறார்.

துணை இயக்குநர்களின் அலுவல்கள், துணை இயக்குநர், பயிற்சி மற்றும் பார்வை

மாவட்ட அளவில், அவர், பயிற்சி மற்றும் பார்வை ஆகியவை குறித்த பணிகளை ஆற்றுகிறார். மேலும், பயிற்சி மற்றும் பார்வை தொடர்பான திட்டங்களைச் செம்மையாக நடைமுறைப்படுத்துவதில், வேளாண் இணை இயக்குநருக்கு உதவி புரிந்து வருகிறார். அவர் களப்பணியாளர்களின் பணியினை மேற்பார்வை செய்கிறார். மேலும், வேளாண் விரிவாக்கத்திட்ட அலுவலர்களுக்கு அவ்வப்போது அறிவுரை வழங்குகிறார்.

துணை இயக்குநர் - கிராமப் பொருளாதாரம்

அவரது எல்லைப் பகுதியில், பூச்சிகள் மற்றும் நோயினால் பாதிக்கப்பட்ட பயிர்கள் குறித்த, ஆய்வு மேற்கொள்கிறார். அவர் அனைத்துப் பகுதிகளிலும் குறிப்பாக திணையின முறைப்பட்ட நோய் கண்டுள்ள பகுதிகளில், பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை அதிக அளவில் எடுத்து, நோய் பரவாமல் தடுக்க முற்படுகிறார். பூச்சித் தடுப்புக் கண்காணிப்பு முறையினைக் கையாண்டு, பூச்சிகளும், நோய்களும் பயிர்களைத்

தாக்குவதை முன் கூட்டியே கணித்து, பூச்சிக் கொல்லி மருந்துகளும், அவற்றைப் பயன்படுத்தும் கருவிகளும், விவசாயிகளுக்கு வழங்கத் தகுந்த நடவடிக்கை மேற்கொள்கிறார்.

துணை இயக்குநர் (தகவல் தொடர்பு மற்றும் பயிற்சி)

அவர் விரிவாக்கப் பணியாளர்களுக்கு தகவல் தொழில நுட்பம், குறித்து பயிற்சியளிக்கிறார். மாவட்டத்தில் நடத்தப்படும் அனைத்து கருத்தரங்குகள், பயிற்சித்திட்டமுறை, பொருட்காட்சிகள், ஆகியவற்றிற்கு முழுப்பொறுப்பேற்கிறார். பத்திரிகைத்துறை, அகில இந்திய வானொலி மற்றும் ஏனைய பொதுமக்கள் மையம் ஆகியவற்றுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளார். இது தவிர, அவர் விரிவாக்கத் தொழில் நுட்பம் குறித்தும் விரிவாக்கக் கருவிகள் பயன்படுத்துவது குறித்தும், களப்பணியாளர்களுக்கு ஆலோசனை வழங்குகிறார்.

துணை இயக்குநர் (விதைகள்)

அவர், தரமுள்ள விதைகளைப் பன்மடங்கு பெருக்குதல் மற்றும் அவற்றை வழங்குதல் ஆகியவற்றிற்குப் பொறுப்பேற்கிறார். (விதைகள்) உதவி இயக்குநர் மற்றும் (கிடங்கு) வேளாண் அலுவலர்கள் ஆகியோரின் பணியினை மேற்பார்வையிடுகிறார். மாவட்டத்திலுள்ள 19 வேளாண் கிடங்குகள் மூலம் விவசாயிகளுக்குக் குறிப்பிட்ட காலத்தில், விதைகளும், பூச்சிகொல்லி மருந்துகளும் வழங்கப்படுவதற்குப் போதிய எற்பாடுகளைச் செய்கிறார்.

வேளாண் துறை இயக்குநர் (பயிற்சி மற்றும் பார்வை)

அவர், அவரது அலுவலக எல்லையிலுள்ள பகுதிகளில், அனைத்து விரிவாக்கத்திட்டங்களையும், நடைமுறைப்படுத்திட முழுப் பொறுப்பாளியாகிறார். மேலும், அவரது பகுதியிலுள்ள அனைத்து பணியாளர்களின் தொழில் நுட்பம், நிதி மற்றும் நிருவாகப் பணிகளை முழுமையாக மேற்பார்வை செய்கிறார்.

தனிப்பொருள் வல்லுநர்கள்

இவ்வல்லுநர்கள், வேளாண் அலுவலர்கள் மற்றும் உதவி வேளாண் அலுவலர்களுக்கு, அவரவர்களது துறைப்பணி குறித்து அதாவது கிராமப் பொருளாதாரம், பயிர் பாதுகாப்பு மற்றும் தகவல் தொடர்பு ஆகியவை பயிற்சியளிக்கிறார்கள். இது தவிர, அவர்கள் கள சோதனை முறை சான்று விளக்கம் மற்றும் பூச்சித் தடுப்புக் கண்காணிப்பு ஆகியவற்றை மேற்பார்வை செய்து, விரிவாக்கப்பிரசுரங்கள் அச்சிட்டு வெளியிடுதல் மற்றும் வேளாண்துறை தொடர்பான திரைப்படங்கள் காட்டுதல் ஆகியவற்றிலும் ஈடுபாடு கொண்டுள்ளார்கள். பயிற்சி மற்றும் பார்வையிடுத் திட்டத்தினை சரிவர நடைமுறைப்படுத்த, (பயிற்சி மற்றும் பார்வை) உதவி இயக்குநருக்கு அவர்கள் அவ்வப்போது, உதவி செய்கிறார்கள்.

வேளாண் அலுவலர்கள்

ஊராட்சி ஒன்றிய அளவிலுள்ள வேளாண் அலுவலர்கள், அவர்களது கடமையை ஆற்றுவதிலுள்ள தொழில் திறனை மேம்படுத்திக் கொள்வது குறித்து, உதவி வேளாண் அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்குகிறார்கள். கள சோதனை முறை நடத்துவதற்கும், "நில நாட்கள்" நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்வதற்கும் வேளாண் அலுவலர்கள் பொறுப்பாளியாவார்கள். அவர்கள் பயிர் அறுவடைப் பரிசோதனை மற்றும் சான்று விளக்கம் ஆகியவற்றை நடத்தி விளைச்சலை மதிப்பிடுகிறார்கள்.

ஆதி திராவிடர் மற்றும் மலைவாழ் வகுப்பினர் துறை

மாண்புமிகு ஆதிதிராவிட நல அமைச்சர் அவர்களது தலைமையில் அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரையின்படி, 1949 ஆம் ஆண்டு, ஆதி திராவிட மற்றும் மலைவாழ் வகுப்பினர் துறை துவங்கப்பட்டது.[2] இதற்கு முன்னர், ஆதி திராவிடர் நலம் குறித்த நடவடிக்கைகளை, தொழிலாளர் துறை, ஆணையர் அவர்கள் கவனித்து வந்தார்கள். பல நிலைகளிலுள்ள இத்துறையின் நிருவாக அமைப்பு கீழே விவரிக்கப்பட்டுள்ளது.

மாநில அளவில், நிருவாக அமைப்பு முறை துறைத்தலைமை அலுவலர்

ஆதி திராவிடர் மற்றும் மலைவாழ் வகுப்பினர் இயக்குநர், துறையின் தலைமைப் பொறுப்பேற்கும் அலுவலராவார். அவருக்கு உதவி செய்ய கீழ்க்கண்ட அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்:

1.	இணை இயக்குநர் (பொது)	..1
2.	இணை இயக்குநர் (மலைவாழ் வகுப்பினர் நலம்)	..1
3.	நிதி ஆலோசகர் மற்றும் கணக்கு அலுவலர்	..1
4.	துணை இயக்குநர் (கல்வி)	..1
5.	பொருளியல் ஆய்வாளர்	..1
6.	கிராமப்புற மன்னாய நூல் ஆய்வாளர்	..1
7.	உதவி இயக்குநர் (கல்வி)	..1
8.	இயக்குநரின் தனி உதவியாளர்	..1
9.	கணக்கு அலுவலர்	..1
10.	ஆராய்ச்சி அலுவலர்	..1
11.	கண்காணிப்பாளர்கள்	..16
12.	ஆராய்ச்சி உதவியாளர்கள்	..2
13.	தொழில் நுட்ப உதவியாளர்	..1
14.	விளம்பர அலுவலர்	..1
15.	இளநிலை ஆராய்ச்சி உதவியாளர்கள்	..2

16.	ஆராய்வாளர்கள்	..2
17.	உதவியாளர்கள்	..44
18.	கொள்கை பரப்பு உதவியாளர்	..1
19.	ஆராய்வாளர்கள் (உதவியாளர் நிலை)	..2
20.	திரைப்பட ஒளி நிழல் உருவரை இயக்குநர்	..1
21.	உயர்நிலை சுருக்கெழுத்தர்	..1
22.	இளநிலை உதவியாளர்கள்	..2
23.	இளநிலை சுருக்கெழுத்தர்கள்	..2
24.	தட்டச்சர்கள்	..13
25.	பதிவறை எழுத்தர்கள்	..6.

கன்னியாகுமரி மாவட்டத்தில், மாவட்ட ஆதிதிராவிட நல அலுவலர் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேரடி நிருவாகக் கட்டுப்பாட்டில் பணியாற்றி வருகிறார். மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்டத்தில் ஆதி திராவிடர் மற்றும் மலை வாழ் வகுப்பினர் குறித்து மேற்கொள்ளப்படும் நலத்திட்டங்களைக் கண்காணிக்கிறார். மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலருக்கு, ஒரு உதவிக்கணக்கு அலுவலர், தனிவட்டாட்சியர் (ஆதி திராவிடர் நலம்), ஒரு கண்காணிப்பாளர், ஒரு தலைமைக் கணக்கர், ஒரு மேற்பார்வையாளர் (ஓவர்சியர்) மற்றும் ஏனைய அமைச்சுப் பணியாளர்கள், ஆகியோர், மாவட்ட ஆட்சித் தலைவரின் ஆணையை அவ்வப்போது செயல்படுத்திட மாவட்ட ஆதி திராவிடர்நல அலுவலருக்கு உறுதுணையாக இருந்து வருகிறார்கள். இவை தவிர, ஆதி திராவிடர் வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்குவதும் தொன்றுத் தொட்டு கடைப்பிடிக்கப்பட்டு வரும் பழக்கமாகும். இதற்கு, ஆதி திராவிடர் மற்றும் மலைவாழ் வகுப்பினர் இயக்குநர் பொறுப்பிலுள்ளது. மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர், ஆதி திராவிடர்கள் மற்றும் மலைவாழ் வகுப்பினர் நலனுக்காக நடைமுறைப் படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்களை அவரிடம் பணியாற்றும் அலுவலர்கள் உதவியுடன் மேற்பார்வை செய்கிறார். அவையாவன: ஆதி திராவிடர் மற்றும் மலை வாழ் வகுப்பினர் தங்கும் விடுதிகள் மற்றும் பள்ளிகளை மேற்பார்வை செய்து பராமரித்தல், அரசு மலை வாழ் வகுப்பினர் குடியிருப்புப் பள்ளிகள் கட்டுதல், அவர்களுக்கு வீட்டு மனைகள் வழங்க நிலங்களைக் கையகப்படுத்துதல், இடுகாட்டிற்கு சாலைகளமைத்தல், மற்றும் பாலங்கள் கட்டுதல் ஆகியவையாகும்.

இத்துறையின் சாதனை பற்றிய விவரங்கள், "ஏனைய சமூகப்பணிகள்" என்ற தலைப்பில் உள்ள இயலில் தனியே விளக்கப்பட்டுள்ளன.

வேளாண் வாணிபத் துறை

வேளாண் வாணிபத் துறை, சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு, உருவாக்கப்பட்டு, அக்டோபர் 14, 1977 முதல் செயல்படத் துவங்கியது. பின்னர், துணைத் தலைமை அலுவலரது இயக்குநரகம் திருச்சிராப்பள்ளிக்கு மாற்றப்பட்டு, டிசம்பர் 1,1979 முதல் அங்கு அது செயல்பட்டுவருகிறது.

நோக்கங்கள்

இத்துறை கீழ்க்கண்ட நோக்கங்களுடன் உருவாக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது :

1) வேளாண் குடி மக்களுக்கு அவர்களது உற்பத்திப்பொருட்களுக்கான நியாய விலை கிடைப்பதற்கு, வேளாண்பொருட்களை வாங்கவும், விற்கவும், ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை நிறுவுதல்,

2) நுகர்வோரின் நலனிற்காக, வேளாண் பொருட்கள் மற்றும் கால்நடைப் பாதுகாப்புப் பொருட்களுக்கு, அக்மார்க் முறைப்படி, தரக்கட்டுப் பாட்டினையும், தரப்படுத்தும் நிலையையும் நிர்ணயித்தல்.

3) பருத்திச் சான்று அளித்தல் மற்றும் செயலாக்குத் திட்டத்தின் கீழ், நெசவுத் தொழிற்சாலை மற்றும் அழுத்தி இணைக்கும் தொழிற்கூடங்கள் ஆகியவற்றில், மென்மையான, சிறந்த பஞ்சுவகைகளுடன், மட்டரக பஞ்சு வகைகளையும் கலந்துப் பயன்படுத்துவதைத் தடுத்து நிறுத்துதல்,

4) ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில், வேளாண் விளை பொருள்களுக்கு, வாணிபம் சார்ந்த தரப்படுத்தும் நிலையை நிர்ணயித்து, விவசாயிகள் அவர்களது விளை பொருள்களுக்கு, ஆதாயமான விலையைப் பெற்றிட வகை செய்தல்,

5) பயன் படுத்தும் பஞ்சில் தூய்மையைக் கடைப்பிடித்தல்,

6) சந்தை விற்பனையில், தரக்கட்டுப்பாடு மற்றும் தரப்படுத்தும் நிலை நிர்ணயிப்பதன் முக்கியத்துவத்தை விவசாயிகளுக்கு விளக்குதல்,

மற்றும்

7) உதவி வேளாண் அலுவலர்கள் மற்றும் ஒழுங்குமுறை விற்பனைக் கூட மேற்பார்வையாளர்கள் ஆகியோருக்கு, "அக்மார்க்" தொழில் நுட்ப முறைகள் மற்றும் வாணிகத் தரப்படுத்தும் நடவடிக்கைகள் ஆகியவை குறித்து பயிற்சியளித்தல், வேளாண் விளை பொருட்களை விற்பனை செய்வதில் அவர்களின் திறமையை மேம்படுத்துதல் மற்றும் வாணிபப் போக்கினை அறிந்து கொள்ள வாணிகக் களத்தில் கொடுக்கல் வாங்கல் குறித்து, ஆய்வு நடத்துதல்.

நிருவாக அமைப்பு முறை (மாநில அளவு)

வேளாண் வாணிபத் துறை இயக்குநர், துறையின் தலைமை அலுவலராவார் [3] ஒரு வேளாண் துணை இயக்குநர் (வாணிபம்), மூன்று உதவி இயக்குநர்கள், மூன்று வேளாண் அலுவலர்கள், ஒரு நிருவாக அலுவலர் மற்றும், இதர இணை அலுவலர்கள், அவருக்கு உதவி புரிந்து வருகிறார்கள். தனி அலுவலர்கள், செயலர்கள், ஒழுங்குமுறை விற்பனைக் கூட கண்காணிப்பாளர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் இதர இணைப்பணியாளர்கள் ஆகியோர் பணியாற்றும் 14 விற்பனைக் குழுக்கள் இயங்கி வருகின்றன. இவை தவிர மாநிலத்தில் 35 'அக்மார்க் ஆய்வுக்-கூடங்கள், ஒவ்வொன்றும் ஒரு வேளாண் அலுவலர் கட்டுப்பாட்டிலும், 15 வேளாண் விற்பனை மையங்கலும், 11 பஞ்சு வகைகள் தரப்படுத்தும் மையங்கள், ஒவ்வொன்றும் ஒரு வேளாண் அலுவலர் கட்டுப்பாட்டிலும், 102 பொருட்கள் தரப்படுத்தும் மையங்கள் ஒவ்வொன்றும் ஒரு வேளாண் அலுவலர் மேற்பார்வையிலும், மேலும், ஒரு உதவி வேளாண் அலுவலர் ஏனைய இணைப்பணியாளர்கள், ஆகியோருடன் இயங்கிவருகின்றன.

கன்னியாகுமரி மாவட்டத்தில் நிருவாக அமைப்புமுறை

கன்னியாகுமரி மாவட்டத்தில், இரண்டு மாநில 'அக்மார்க்' தரப்படுத்தும் ஆய்வுக் கூடங்கள், ஒன்று நாகர்கோவிலிலும், மற்றொன்று குழித்துறையிலும் இயங்கி வருகின்றன. நாகர்கோவில் ஆய்வுக் கூடம், ஒரு வேளாண் அலுவலர் (வேதியியல்) மற்றும் ஒரு இளநிலை உதவியாளர் (இடர்க்காப்புறுதி) ஆகியோருடன் நவம்பர் 1, 1974 அன்று செயல்படத் துவங்கியது. மார்த்தாண்டம் ஆய்வுக்கூடம், ஒரு வேளாண் அலுவலர் (வேதியியல்) ஒரு இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர், ஆய்வுக் கூட உதவியாளர், ஆய்வுக் கூடப் பணியாள் ஆகியோருடன், குழித்துறையில் ஏப்ரல் 1, 1982 அன்று செயல்படத்துவங்கியது.

கன்னியாகுமரி விற்பனைக்குழு, வேளாண் விற்பனை இயக்குநரின் கட்டுப்பாட்டில், நாகர்கோவிலைத் தலைமையிடமாகக்கொண்டு, 1967 முதல் இயங்கிவருகிறது. இம் மாவட்டம் அமைக்கப்படுவதற்கு முன்னர், கன்னியாகுமரி விற்பனைக் குழு, திருநெல்வேலி மாவட்டத்தில் இணைந்திருந்தது.

இக்குழுவின் கீழ், ஆறு ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள், கீழ்க்குறிப்பிட்ட இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

1)வடசேரி, 2) குலசேகரம், 3)திங்கள் சந்தை 4) தொடுவெட்டி 5) கலியக்காவிளை மற்றும் ஈத்தமொழி.

விலங்கினப் பாதுகாப்புத் துறை

கால்நடைப் பாதுகாப்புத் துறையின் நடவடிக்கைகள் மூன்று வகையானவை. அவை யாவன:

கால் நடைகள் மற்றும் அவற்றின் உற்பத்திப் பொருட்களின், உற்பத்தித் திறனைப் பெருக்குதல்;

கால் நடைகளுக்குத் தேவையான மருத்துவ வசதிகளை உரிய நேரத்தில் அளித்தல்;

சமுதாயத்தில் தாழ்த்தப்பட்ட நிலையிலுள்ளோர் மற்றும், வறுமைக் கோட்டிற்கு கீழேயுள்ளோர் ஆகியோரின் பொருளாதார நிலையினை மேம்படுத்த, கால்நடைத் துணைத் தொழில் துறையின் மூலம், கூடுதல் கிராமப்புற தொழில் மூலம் வேலை வாய்ப்பை அளித்தல்.

நிருவாக அமைப்பு முறை (மாநில அளவில்)

கால்நடை பாதுகாப்பு இயக்குநர், இத்துறையின் தலைமை அலுவலராவார். அவரது கட்டுப்பாட்டில், கால்நடைப் பாதுகாப்புக்கூடுதல் இயக்குநர் நிலையில், இராணிப்பேட்டையில் உள்ள கால்நடை நோய் தடுப்பு நிறுவனத்தின் இயக்குநராகப் பணியாற்றுகிறார். அவர் நீங்கலாக, நான்கு கூடுதல் இயக்குநர்களும் உள்ளனர். அவர்களில், ஒருவர் கால்நடைப் பணிகளுக்கும், மற்றொருவர் திட்டங்கள் மற்றும் பண்ணைகள் ஆகியவற்றிற்க்கும், மூன்றாமவர் கால்நடை மேம்பாட்டிற்கும், எஞ்சிய அலுவலர் ஈச்சங்கோட்டையிலுள்ள, அயற்பண்புடைய கால்நடை இனப்பெருக்க பண்ணைக்கும் பொறுப்பேற்றுள்ளார்கள்.இவர்களுடன் 15 இணை இயக்குநர்களும் (பல்வேறு பிராந்தியங்களுக்கு 15 பேர்கள், மாதவரம் அரசு கால்நடைப்பண்ணைக்கு ஒருவர், விரிவாக்கப்பணிகளுக்கு ஒருவர், சிறப்புத்திட்டங்களுக்கு ஒருவர், புள்ளி விவரங்கள் சேகரிப்பதற்கு ஒருவர்) பணியாற்றுகிறார்கள். இவர்கள் தவிர, முதன்மைப்பணியாளர், தொகுதி அலுவலர், தனி உதவியாளர், நிதி ஆலோசகர் மற்றும் முதன்மை கணக்கு அலுவலர், நிருவாக அலுவலர்கள் துணை இயக்குநர்கள், வல்லுநர்கள், மருத்துவப் பயிற்சி போதகர், உதவி இயக்குநர்கள், உதவி திட்ட அலுவலர்கள், முதுநிலை ஆராய்ச்சி அலுவலர், ஆராய்ச்சி அலுவலர்கள், உதவி ஆராய்ச்சி அலுவலர்கள், கால்நடை உதவி அறுவை மருத்துவர்கள், விலங்கினங்கள் மற்றும் கால் நடை மேற்பார்வையாளர்கள், கால்நடை ஆய்வாளர்கள் ஆகியோரும் துறையின் பல்வேறு திட்டங்களை நடை முறைப்படுத்துவது தொடர்பாக இயக்குநருக்கு உதவி புரிந்து வருகிறார்கள்.[4]

கன்னியாகுமரி மாவட்டத்தில் நிருவாக அமைப்பு முறை

கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி மண்டலத்தின் ஒரு பகுதியாக உள்ளது. கால் நடைப்பாதுகாப்பு இணை இயக்குநர் இம்மண்டலத்திற்குத் தலைமை வகிக்கிறார். முதன்மை கிராமங்கள் திட்டத்திற்கு ஒரு துணை தமஇயக்குநரும், நாகர்கோவிலில் ஒருவரும்,

தக்கலையில் மற்றொருவருமாக கால்நடைப் பாதுகாப்பிற்காக, இருதுணை இயக்குநர்களும் பணியாற்றிவருகிறார்கள் இவர்கள் அனைவரும், திருநெல்வேலி கால்நடைப்பாதுகாப்பு மண்டல இணை இயக்குநரின் கட்டுப்பாட்டில் பணியாற்றி வருகிறார்கள். இந்த உதவி இயக்குநர்கள், அவரவர்களது ஆட்சி எல்லையிலுள்ள கால்நடைப் பாதுகாப்பு நடவடிக்கைகளை கவனித்து வருகிறார்கள். இந்தத்துறை நாகர்கோவிலில் ஒன்றும், தக்கலையில் ஒன்றுமாக, இரண்டு கால்நடைப்பாதுகாப்பு மருத்துவமனைகளையும், நாகர்கோவில் ஒரு நடமாடும் மருத்துவ அலகையும் நடத்திவருகிறது. இவை தவிர, கால்நடை உடல் நலம் பேணிக்காக்க, 14 கால் நடை மருத்துவ மனைகளும் இயங்கிவருகின்றன. மேலும், கொட்டாரத்தில், ஒரு வளர்ப்புப் பறவைகள் விரிவாக்க மையமும், கால் நடைகளைத் தாக்கிடும் கோமாரி நோயினை ஒழித்திட, நாகர்கோவிலில் ஒரு நோயற்ற மண்டலமும் எளிதில் கோமாரி நோய் பாதிக்கப்படக்கூடிய கால்நடைகளுக்கு அம்மைகுத்தும் பணியை மேற்கொள்ளும், மாவட்ட கோமாரி நோய்த்தடுப்பு படையும், காவல்கிணறு என்ற இடத்தில் ஒரு கோமாரி நோய்த் தடுப்பு சோதனைச் சாவடியும், இத்துறையினால் இயக்கப்பெற்று வருகின்றன. கூடுதல் தகவல்களுக்கு இவ்விவரச்சுவடியின் வேளாண் மற்றும் நீர்ப்பாசனம் என்ற இயலினை தயவு செய்து நோக்குக.

பிற்பட்டோர் நலத்துறை

மாநிலத்திலுள்ள பிற்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலத் திட்டங்களை இத்துறை, நடைமுறைப்படுத்தி வருகிறது.

நிருவாக அமைப்பு முறை (மாநில அளவு)

மாநிலத்தில், பிற்பட்டோர் நலத்துறை இயக்குநர்தான், இத்துறையின் தலைவராவார். ஒரு கணக்கு அலுவலர், ஒரு தனி அலுவலர் ஒரு தனி உதவியாளர், ஒரு நிருவாக அலுவலர், 20 மாவட்ட பிற்பட்டோர் நல அலுவலர்கள், ஒரு தனித்துணை ஆட்சியர் (கள்ளர் சீர்திருத்தம், மதுரை) மற்றும் ஏனைய அலுவலர்கள் அவரது கட்டுப்பாட்டில் பணியாற்றுகிறார்கள்.[5]

கன்னியாகுமரி மாவட்டத்தில் நிருவாக அமைப்பு

இம்மாவட்டத்தில், பிற்பட்டோர் நலம் தொடர்புள்ள அனைத்துத் திட்டங்களையும் நடைமுறைப்படுத்தும் பொறுப்பினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஏற்றுள்ளார். துணை ஆட்சியர் நிலையிலுள்ள மாவட்ட பிற்பட்டோர் நல அலுவலர் பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்த, மாவட்ட ஆட்சித்தலைவருக்கு உதவி புரிகிறார். இத்திட்டங்களை விரைவில் செயலாற்ற அவரிடம் பணியாற்றும் சார்நிலை அலுவலர்கள் அவருக்கு உதவி செய்கின்றனர்.

இத்துறை, இம்மாவட்டத்தில், பள்ளிகளையும், தங்கும் விடுதிகளையும் நடத்துகிறது. ஒவ்வொரு ஆண்டும், பிற்பட்டோர் வகுப்புகளைச் சேர்ந்த தகுதியுள்ள மாணவர்களுக்கு, கல்வி

உதவித்தொகையும், உணவிற்கான கொடைத் தொகையும் வழங்குகிறது.[5] பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த தகுதியுள்ள நபர்களுக்கு, இயந்திரக் கருவிகள் வழங்கப்படுகின்றன. சீர் மரபினருக்கும், பிற்பட்ட வகுப்பினருக்கும் குடிசைத் தொழில் வசதி, தோபிகானாக்கள் கட்டுவதற்கு மானியம் மற்றும் கடன், வீடுகள் கட்டுவதற்கு மானியம் ஆகியவையும் இத்துறையினால், பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த தகுதியுள்ள நபர்களுக்கு வழங்கப்படுகிறது. வட்டநிலையில், பல்வேறு திட்டங்களையும், சீரிய முறையில் செயலாற்றும் பொறுப்பினை பிற்பட்டோர் நல இயக்குநர் ஏற்றுள்ளார்.

கூட்டுறவுத்துறை

தமிழ்நாட்டில், பல்வேறு வளர்ச்சிப் பணிகள் குறித்தும் கூட்டுறவு இயக்கம் குறிப்பிடத்தக்க வகையில், முன்னேற்றம் கண்டுள்ளது. கிராமப்புற மக்களுக்கான கடன் வசதி, வேளாண் விளை பொருட்கள் வாங்கல், விற்றல் ஆகியவை குறித்து கூட்டுறவு ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களின் பணி, வேளாண் குடிமக்களுக்கு பல்வேறு உரங்கள் வழங்குதல், மலிவு விலையில், இன்றியமையாப் பொருட்களை, நியாய விலைக் கடைகள் மூலம், நகர்ப்புறம் மற்றும் கிராமப் பகுதி மக்களுக்கு வழங்குதல் ஆகியவற்றில் கூட்டுறவுத் துறை சீரிய பணியாற்றுகிறது.

நிருவாக அமைப்பு முறை

துறையின் நிருவாக அமைப்பு முறை, கீழே கொடுக்கப்பட்டுள்ளது :

பதிவாளர் (மாநில நிலை அலுவலர்)

தலைமையிடம் (சென்னை)	*மண்டல அலுவலகங்கள்*
1. கூடுதல் பதிவாளர் (நுகர்வோர் நடவடிக்கைகள்)	மண்டல இணைப் பதிவாளர் (ஒவ்வொரு வருவாய் மாவட்டத் திற்கும் ஒருவர் வீதம்)
2. கூடுதல் பதிவாளர் (கடனுதவி)	
3. கூடுதல் பதிவாளர் (விற்பனை, திட்டம் மற்றும் வளர்ச்சி)	இணைப் பதிவாளர்(பொது விநியோகத் திட்டம்-1), துணைப் பதிவாளர்கள்-81
4.இணைப் பதிவாளர்கள்	(55 வட்டங்களுக்கு 55 பேர்கள் மற்றும் பொது விநியோகத் திட்டத்திற்கு 26 பேர்கள்)
5. துணைப் பதிவாளர்கள் மற்றும் ஏனைய ஆதரவுப் பணியாளர்கள்.	

நாகர்கோவிலைத் தலைமையிடமாகக் கொண்ட கன்னியாகுமரி மண்டலம், நவம்பர், 4, 1981 அன்று அமைக்கப்பட்டது. கன்னியாகுமரி

மண்டலம், பணியாற்றும் துறை அலுவலர்களின் விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன:[6]

1. இணைப்பதிவாளர் (நாகர்கோவில்),
2. துணைப்பதிவாளர் (நாகர்கோவில்),
3. துணைப்பதிவாளர் (தக்கலை),
4. துணைப்பதிவாளர் மற்றும் திட்ட அலுவலர் (நபார்டு*) மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நாகர்கோவில்,
5. துணைப் பதியாளர், பொது விநியோகத் திட்டம்,
6. கூட்டுறவு உதவி துணை இயக்குநர் (தணிக்கை), நாகர்கோவில்,
7. தனி அலுவலர் (மத்திய கூட்டுறவு வங்கி), நாகர்கோவில்,
8. தனி அலுவலர் (கூட்டுறவு மொத்த விற்பனை சங்கம்), நாகர்கோவில்,
9. உதவித் திட்ட அலுவலர் (கூட்டுறவு), நாகர்கோவில்,
10. துணைப்பதிவாளர் (தனிஅலுவலர்), கருங்கல் விவசாயப்பணிக் கூட்டுறவு சங்கம்,
11. தனி அலுவலர் (விவசாயப் பணிக் கூட்டுறவு சங்கம்), இரணியல்,
12. துணைப் பதிவாளர் (பால் பண்ணை), நாகர்கோவில், மற்றும்
13. துணைப் பதிவாளர் (பொது விநியோகத் திட்டம்).

1985-86ஆம் ஆண்டு, 118 கூட்டுறவு கடன் வழங்கும் சங்கங்களும், 14 கூட்டுறவு சங்கங்களும் இயங்கி வந்தன. அவற்றில், 2,28,835 உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர். அரசால் நடைமுறைப்படுத்தப்பட்ட பல்வேறு திட்டங்கள், அது குறித்து தொடர்புள்ள அலுவலர்கள் ஆற்றிய பணிகள் ஆகியவை இவ்விவரச் சுவடியின் "வங்கி தொழில், தொழில் வணிகம் மற்றும் வாணிபம்" என்ற தலைப்பைக் கொண்ட இயலில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

வணிகவரித்துறை

முற் காலத்தில் விற்பனை வரி மற்றும் அதனைச் சார்ந்த வரிகள் பல நாடுகளில் விதிக்கப்பட்டன. "மனு" வின் கூற்றுப்படி, விற்பனைக்கு வரும் பொருட்களின் அடக்கவிலையில், ஐந்து விழுக்காடு வசூல் செய்யப்படும் வரி, நாட்டின் ஒரு வருவாயாகும்மென்பது பல பொருளாதார வல்லுநர்கள் மற்றும் அனுபவம் வாய்ந்தவர்கள் அளித்த தகவலாகும். வாங்கப்படும் அல்லது விற்கப்படும் பொருட்களுக்கு விதிக்கப்படும் இந்த வரி, இந்திய துணை கண்டத்தை ஆண்டு வந்த அரசுகள் சிலவற்றால் விதிக்கப்பட்டதென வரலாறு கூறுகிறது. அரசின் வருவாயை அதிகரித்திட, மௌரியப் பேரரசு விதித்த வரிகளில், மேற்குறிப்பிட்ட வரியும் ஒன்றாகும்.

---

* நபார்டு = வேளாண் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி தேசிய வங்கி

வணிகவரித்துறை, நாட்டின் வருமானத்திற்குரிய கீழ்க்குறிப்பிட்ட சட்டங்களை முறையாக நடைமுறைப்படுத்தி வருகிறது :

1. தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டம், 1959,
2. தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச்சட்டம், 1970,
3. தமிழ்நாடு விற்பனை வரிச் (மிகை வீத வரி) சட்டம், 1971,
4. மத்திய விற்பனை வரிச்சட்டம், 1956,
5. தமிழ்நாடு பொழுதுபோக்குக் காட்சிச் சட்டம், 1939,
6. தமிழ்நாடு உள்ளாட்சி நிதிச் சட்டம். 1961,
7. தமிழ்நாடு பந்தயங்கள் வரிச் சட்டம், 1955,
8. தமிழ்நாடு உணவு விடுதிகள் மற்றும் தங்கும் விடுதிகள் இன்ப வாழ்க்கை சட்டம் 1981,
9. தமிழ்நாடு விளம்பர வரிச் சட்டம் 1981,

வசூலில் பெரும்பகுதி, அக்டோபர் 1, 1939 முதல் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள, மாநிலத்தின் வணிக மற்றும் விற்பனை வரிச்சட்டத்தின் படி பங்கு பிரித்துக்கொள்ளப்படுகிறது.[7]

வணிக வரிகள் துறை, தற்போது ஒரு ஆணையரின் தலைமையில் (உயர்நிலை ஊதிய விகித அகில இந்தியப் பணி அலுவலர்) இயங்கிவருகிறது. அவருக்கு, நான்கு இணை ஆணையர்கள், 17 துணை ஆணையர்கள், 84 உதவி ஆணையர்கள், 204 வணிகவரி அலுவலர்கள், 574 துணை வணிகவரி அலுவலர்கள், 1151 உதவி வணிகவரி அலுவலர்கள், எட்டு மேலாளர்கள், கண்காணிப்பாளர்கள். மற்றும் இதர சார்நிலை அலுவலர்கள் ஆணையருக்கு உதவி புரிந்து வருகிறார்கள்.

மாநிலத்தில் இத்துறை, ஒன்பது வணிகவரிக் கோட்டங்களையும், 34 வணிகவரி மாவட்டங்களையும் மற்றும் 275 தீர்வை வட்டங்களையும், கொண்டதாகும், சென்னை தெற்கு, சென்னை வடக்கு, மத்திய சென்னை மையம், வேலூர், சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகியவை ஒன்பது வணிகவரிக் கோட்டங்களாகும். ஒவ்வொரு வணிகவரிக் கோட்டமும், மூன்று அல்லது அதற்கும் மேற்பட்ட வணிகவரி மாவட்டங்களைக் கொண்டதாகும்.

கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி வணிகவரிக் கோட்டத்தின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது. இது வணிகவரி துணை இயக்குநரின் பொறுப்பிலிருந்து வருகிறது. இம்மாவட்டத்தில், நாகர்கோவில் (கிராமப்பகுதி), நாகர்கோவில் (நகர்ப்பகுதி), நாகர்கோவில் (கோபுர சந்திப்பு), குழித்துறை மற்றும் தக்கலை ஆகிய ஐந்து தீர்வை வட்டங்களும் இயங்கி வருகின்றன.

மாநிலத்தில், 17 மேல்முறையீடு உதவி ஆணையர்கள் பணியாற்றி வருகின்றனர். அவர்கள் தீர்வை வட்டங்களில் அதிகாரம் செலுத்தும் பொறுப்பை வகிக்கின்றனர். திருநெல்வேலியிலுள்ள மேல்முறையீடு உதவி ஆணையர், திருநெல்வேலி தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி வணிகவரி மாவட்டங்களிலுள்ள தீர்வை வட்டங்களில் அதிகாரம் செலுத்தும் பொறுப்பை வகிக்கிறார்கள்.

விற்பனை வரி மேல்முறையீடு தீர்ப்பாயம்

விற்பனை வரி மேல்முறையீடு தீர்ப்பாயத்தின் முதன்மைப் பிரிவு, சென்னையில் இயங்கி வருகிறது. அதனுடைய மூன்று கூடுதல் கிளைகளும், சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன. முதன்மைப் பிரிவிற்கு பெருந்தலைவர் தலைமைப் பொறுப் பினை ஏற்கிறார். அவர் மாவட்ட நீதிபதியின் நிலையிலுள்ளவராவார். அவருக்கு உதவி புரியும் இரண்டாவது உறுப்பினர், இந்திய தணிக்கை மற்றும் கணக்குப் பணி அலுவலராகவோ, அல்லது வருமானவரி உதவி ஆணையர் நிலையிலுள்ள அலுவலராகவோ அல்லது ஐந்து ஆண்டு நடைமுறை அனுபவமும், இந்திய உரிமைக் கணக்காளர் நிறுவன உறுப்பினராகவுமுள்ள உரிமைக்கணக்காளராகவோ இருப்பார்.

கூடுதல் கிளைகளுக்கு வணிகவரி துணை ஆணையர் நிலையிலுள்ள துறை உறுப்பினர்கள் தலைமை தாங்கி நடத்துகிறார்கள். மதுரையில் இயங்கி வரும், கூடுதல் கிளையின் தலைவர், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி புதுக்கோட்டை, மதுரை, இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களுக்குப் பொறுப்பு வகிக்கிறார்.

செயலாக்க அலகு

இரண்டு வணிகவரி துணை ஆணையர்களின் கட்டுப்பாட்டில், சென்னையிலும், மதுரையிலும், செயலாக்க அலகுகள் இயங்கி வருகின்றன. மதுரை செயலாக்க அலகு, துறை ஆணையரின் மேற்பார்வையில் திருநெல்வேலி செயலாக்க அலகு உதவி ஆணையர் பணியாற்றி வருகிறார்.திருநெல்வேலி (செயலாக்க அலகு) உதவி ஆணையர், கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் பொறுப்பேற்கிறார். கன்னியாகுமரி மாவட்டம் கலியக்காவிளையில், இத்துறையினால் ஒரு பெரிய சோதனைச் சாவடி, பராமரிக்கப்படுகிறது. கலியக்காவிளையிலுள்ள மற்றொரு சோதனைச் சாவடி வழியாக கன்னியாகுமரி மாவட்டத்திற்குள் பொருட்கள் ஒழுங்கமைதி யுடன் அனுப்பப்படுகின்றன.

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

தேசிய வேலைவாய்ப்புப் பணியானது, இந்திய அரசு மற்றும் மாநில அரசு ஆகியவற்றின் கூட்டுப்பொறுப்பானதாகும். மத்திய அரசு, அப்போதைக்கப்போது, நல்ல தரத்தையும், நடைமுறைகளையும் உள்ளடக்கிய தேசிய கொள்கையினை வகுத்து, வேலைவாய்ப்புப் பணியினை ஒரு நிலைப்படுத்திவந்தது, அதே நேரம், தமிழக அரசு, தொடர்புள்ள வேலைவாய்ப்பு நிறுவனங்களில் தங்களது பெயர்களைப் பதிவு செய்துள்ளோருக்கு, அவரவர்களது கல்வித் தகுதி, தனித்திறனாற்றல் ஆகியவற்றிற்கேற்ப அரசு அலுவலகங்கள், கழகங்கள், வாரியங்கள் மற்றும் இதர அரசு நிறுவனங்கள் ஆகியவற்றில் அவர்களது முதுநிலைக்குஏற்ப வேலைவாய்ப்பளிக்கிறது. வேலையில்லா இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பளிப்பதன் பொருட்டு, அவர்களது பெயர்களைப் பதிவு செய்ய, ஒவ்வொரு மாவட்டத்திலும் வேலை வாய்ப்பு அலுவலகங்கள் நிறுவப்பட்டுள்ளன.

நிருவாக அமைப்பு முறை (மாநில அளவு)

சென்னை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்குநர், இத்துறையின் தலைமை அலுவலராவார். வேலை வாய்ப்பு அலகில் அவருக்கு மூன்று இணை இயக்குநர்கள் உதவி புரிந்து வருகின்றனர். இரண்டு துணை இயக்குநர்கள், ஏழு உதவி இயக்குநர்கள், மூன்று மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்கள், ஒரு விளம்பர அலுவலர், ஒரு புள்ளிவிவர வல்லுநர், ஒரு செயல்திட்ட வரைவாளர் மற்றும் ஒரு செயல்திட்ட புள்ளிவிவர வல்லுநர், இவர்களனைவருமே, மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர் நிலையிலுள்ளவர்களாக, கீழ்க்கண்ட பல்வேறு திட்டங்களை செயற்படுத்தி வருகிறார்கள்.

இம்மாவட்டத்திலுள்ள வேலை வாய்ப்பு நிறுவனங்களை ஆய்வு செய்யக் கூடிய, துறை இயக்குநர்கள் தலைமையிலான மண்டல இயக்குநரகங்கள், மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் இயங்கிவருகின்றன. மதுரை, திண்டுக்கல், இராமநாதபுரம், விருதுநகர் சிவகங்கை, திருநெல்வேலி தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களிலுள்ள வேலைவாய்ப்பு நிறுவனங்கள் மதுரை மண்டல எல்லைக்குட்பட்டவை, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, தஞ்சாவூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களிலுள்ள வேலை வாய்ப்பு நிறுவனங்கள், திருச்சிராப்பள்ளி மண்டலத்திலுள்ளன. கோயம்புத்தூர் நீலகிரி, சேலம்,தர்மபுரி மற்றும் ஈரோடு மாவட்டங்களிலுள்ள வேலை வாய்ப்பு அலுவலகங்கள் கோயம்புத்தூர் மண்டலத்திலும், சென்னை, மற்றும் வேலூர் திருவள்ளுர் காஞ்சிபுரம் மாவட்டங்களிலுள்ள வேலைவாய்ப்பு அலுவலகங்கள், சென்னை மண்டலத்திலும் உள்ளன.

மாநில வேலை வாய்ப்பு இயக்குநரகத்தின் முதன்மையான பணியாதெனில், வேலை வாய்ப்பு அலுவலகங்களை மேற்பார்வை செய்தல், அவைகளது நடவடிக்கைகளை ஒரு நிலைப்படுத்துதல் மற்றும் வேலை வாய்ப்பு அலுவலகங்களில் சீரான கொள்கைகள் மற்றும் வழிமுறைகளைப் பின்பற்றச் செய்தல், ஆகியவையாகும்.

திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்

இயக்குநரகம் கீழ்குறிப்பிட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்தும் பொறுப்பிலுள்ளது:

1. வேலைவாய்ப்பு தொடர்பான தகவல் திட்டம்,
2. வேலை வாய்ப்பு அலுவலகங்கள் (காலியிடங்கள் அறிவிப்பு) சட்டம் 1959 மற்றும் அது தொடர்பான விதிமுறைகள்,
4. வாழ்கைத் தொழில் போதனைத் திட்டம்,
5. வாழ்கைத் தொழில் சார்ந்த ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு,
6. பணித்துறையினரின் பயிற்சி,
7. கணக்கிடுதல் திட்டம்,
8. தமிழ்நாடு வேலையற்றோர் நிவராணத் திட்டம்,
9. அட்டவணையிட்ட வகுப்பினர்/அட்டவணையிட்ட மலைவாழ் வகுப்பினரின் தனிமைய நிலையம்,
10. வேலை வாய்ப்பு அலுவலகங்களின் ஆய்வு,
11. செய்திப் பரப்பு அலகு,
12. பட்டு இடைத் தடுப்பு அச்சு அலகு,
13. தொழிற்பயிற்சித் திட்டம்,
14. பர்மா/ஸ்ரீலங்கா அகதிகள் மறுவாழ்வு,

மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்கள்

ஒவ்வொரு மாவட்டத்திலும், அந்தந்த மாவட்டத் தலைமையிடத்தில், ஒரு மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் இயங்கிவருகிறது. சென்னை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், மதுரை மற்றும் வடஆற்காடு (வேலூர்) மாவட்டங்களில், தொழில்நுட்பம் சார்ந்த நபர்களுக்காக தனி மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. அவை, பட்டதாரி நிலைக்குக்கீழுள்ள தொழில் நுட்பம் வாய்ந்த நபர்கள், கைவினைஞர்கள் மற்றும் தொழில், நுட்பம் வாய்ந்த இதர நபர்கள் ஆகியோர் குறித்தும், அவர்கள் தொடர்பான காலியிடங்களை நிறை செய்வது குறித்தும் செயலாற்றுகின்றன.[6]

மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர்களின் முதன்மையான பணிகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன :

1. பதிவு செய்தல் மற்றும் வேலைக்கமர்த்தல்
2. வேலை வாய்ப்புத் தகவலறிவிப்புத்திட்டத்தின் கீழ் வேலை வாய்ப்புத் தொடர்பான விவரங்கள் சேகரித்தல்
3. வாழ்க்கைத் தொழில் போதனை மற்றும் வேலை வாய்ப்புக் கலந்தாய்வு,
4. வேலை வாய்ப்பு அலுவலகங்கள் சட்டம், 1959 - செயலாக்கம்

வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையைச் சார்ந்த பயிற்சி அலகின் அமைப்பு முறையும் செயல்களும்

வேலை வாய்ப்பு நிறுவனத்தின் நிருவாக அமைப்பு முறையும், கை விளைஞர்கள் பயிற்சித் திட்டமும், அக்டோபர் 31, 1956 வரை, இந்திய அரசைச் சார்ந்த, தொழிலாளர்கள். மற்றும் வேலை வாய்ப்பு அமைச்சகத்தின், கட்டுப்பாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது. இவ்விரு அலகுகளின் நிருவாக அமைப்பும், நவம்பர் 1, 1956 முதல், மாநில அரசிற்கு மாற்றப்பட்டது. துவக்கத்தில், வேலை வாய்ப்பு நிறுவனம், தொழிலாளர் ஆணையரின் கட்டுப்பாட்டிலும், பயிற்சி நிறுவனம், தொழில் மற்றும் வாணிபத்துறை இயக்குநரின் கட்டுப்பாட்டிலும் இயங்கிவந்தன. இந்திய அரசின் வலியுறுத்துதலின் பேரில், வேலை வாய்ப்புப் பணி நிறுவனம் மற்றும் கைவினைஞர் பயிற்சித்திட்ட நிறுவனம். இரண்டையும் இணைத்து பொறுப்புள்ள அலுவலர்களின், கட்டுப்பாட்டில் இயங்குவது குறித்து, தமிழக அரசு பரிசீலனை செய்தது. இரண்டு பிரிவுகளையும் இணைத்து, ஒரே அலுவலரின் கட்டுப்பாட்டில் கொணர்ந்து, அவ்வலுவலரைத் துறைத்தலைமை அலுவலராக நியமிக்க முடிவுச் செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து, இந்த "வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை "மார்ச் 18. 1963 முதல் ஒரு புதிய துறையாக அமைக்கப்பட்டது. * ஏனைய அலுவலல்களுடன், கைவினைஞர்கள் பயிற்சித்திட்டம் மற்றும் தொழில் பயில்வோர் பயிற்சித் திட்டம் ஆகியவற்றை நடைமுறைப்படுத்துவதையும், நோக்கமாகக் கொண்டு இத்துறை துவங்கப்பட்டது. வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநருக்கு, கைவினைஞர் பயிற்சித்துணை இயக்குநர் ஒருவரும், தொழில் பயில்வோர் பயிற்சித் துணை இயக்குநர் ஒருவரும், உதவி புரிந்து வருகிறார்கள்.

இத்துறை, பல்வேறு வகைத் தொழில்களுக்குத் தேவையான வாழ்க்கைத்தொழில் சார்ந்த பயிற்சித் திட்டத்தின் கீழ், திறமை வாய்ந்த கைவினைஞர்களுக்குப் பயிற்சியளிக்கிறது. ஐந்தாண்டு திட்ட காலத்தில், பொதுத்துறை மற்றும் தனியார் துறை நிறுவனங்களில், பல்வேறு வகைத்

** அரசாணை எண்.4545 (தொழிலாளர் துறை), நாள் 18-3-1963*

தொழில்களின் வளர்ச்சிக்காக திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதினால் பல தொழில் நுட்ப, வாணிகங்களுக்காக அப்படிப்பட்ட பயிற்சிபெற்ற இளைஞர்கள் பெருமளவில், தேவைப்படுகிறார்கள். இதனைக் கருத்திற்கொண்டு வேலைவாய்ப்பு மற்றும் தொழில் பயிற்சி இயக்குநரகத்தின், பயிற்சிப் பிரிவினால், கீழ்க்குறிப்பிட்ட திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

1. கைவினைஞர் பயிற்சித் திட்டத்தினை வாழ்க்கைத் தொழில் பயிற்சி தேசியக் குழுவின் பாங்கில், தொழில் பயிற்சி நிறுவனங்களின் மையங்களை நிருவகித்தல்;
2. 1961 ஆம் ஆண்டின், தொழிற் பயிற்சி சட்டத்தின்படி, தொழிற் பயிற்சியளித்தல்;
3. தொழில் சார்ந்த பள்ளிகளில் வரையறை செய்யப்பட்ட விதிகளின் சட்டத்தொகுப்பேட்டின்படி, தனியார் உதவித்தொழில் சார்ந்த பள்ளிகளில் கைவினைஞர்களுக்குப் பயிற்சியளித்தல்;
4. தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கு, மாலை நேர வகுப்புத் திட்டம்;
5. உயர்தரமான வாழ்க்கைத் தொழில் பயிற்சி முறைத் திட்டம்;
6. சென்னை அம்பத்தூரிலுள்ள தொழில் பயிற்சி நிறுவனத்தில், பணித்துறையினர் பயிற்சித் திட்டம் செயலாக்குதல்;
7. எதிர்பாரா திடீர் திட்டங்கள்;
8. சுயவேலை வாய்ப்பு தொடர்பாகக் கிராமப்புற இளைஞர்களுக்கு, குறுகிய காலப் பயிற்சியளிக்கும் திட்டம்;
9. பாடத்திட்ட வளர்ச்சிக்குழு, மற்றும்;
10. வேலை மற்றும் ஆற்றுப்படுத்தும் பயிற்சி

பயிற்சி அலகில் அங்கம் வகிக்கும் அலுவலர்களின் விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன :

இணை இயக்குநர் (கைவினைஞர் பயிற்சி)	..1
இணை இயக்குநர் (தொழிற் பயிற்சி)	..1
துணை இயக்குநர்கள் (பயிற்சி)/துணை தொழிற் பயிற்சி ஆலோசகர்கள்	..6
மண்டல துணை இயக்குநர்கள்	..4
கணக்கு அலுவர்	..1
பயிற்சி உதவி இயக்குநர் (தொழில் சார்ந்த பள்ளி)	..1
பயிற்சி உதவி இயக்குநர்கள் (தொழிற் பயிற்சி சட்டம்)	..2
நிருவாக அலுவலர்கள்	..17
அ. தொழிற் பயிற்சி நிறுவனங்களின் முதல்வர்கள்	..32
தனி அலுவலர் - பாடத்திட்ட வளர்ச்சிக் குழு	..1

ஆ) துணை இயக்குநர் நிலையிலுள்ள முதல்வர்கள் ..8

அ) அம்பத்தூர், கிண்டி, வட சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருநெல்வேலி, வேலூர் மற்றும் கடலூர் ஆகிய இடங்களிலுள்ள, தொடர்புள்ள பயிற்சி மையங்களின் பயிற்சி உதவி இயக்குநர்கள்.

ஆ) மூன்றாவது, சுழற்சி முறை உள்ளிட்ட - தொழிற் பயிற்சி நிறுவனங்களின் துணை முதல்வர்கள் ..15

கண்காணிப்பாளர் ..3

உதவி கணக்கு அலுவலர் ..1

தொழில் நுட்பம் சார்ந்த 2017 தொழிலாளர்களும் 1304 தொழில் நுட்பம் சாராத பணியாளர்கள் இத்துறையில் பணியாற்றுகிறார்கள்.

கன்னியாகுமரியில் துறையின் பணி

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில், ஒரு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், ஒரு வேலை வாய்ப்பு அலுவலரின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது. அது இம்மாவட்டத்திலுள்ள வேலை இல்லாதவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் பணியினை மேற்கொண்டுள்ளது.

நவம்பர் 30, 1988 அன்று, இவ்வலுவலகத்தின் நடை முறைப்பதிவேட்டின்படி, 43,989 பெண்கள் உள்ளிட்ட 1,03,912 நபர்கள் வேலை தேடி காத்திருந்தார்கள்.

1970 ஆம் ஆண்டிலிருந்து, 1986 ஆம் ஆண்டு முடிய, திறமை வாய்ந்தோர், ஓரளவு திறமைவாய்ந்தோர், பட்டதாரிகள், பட்ட முன் மாணவர்கள் மற்றும் ஏனையோர் ஆகியோருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டது தொடர்பான புள்ளிவிவரங்கள், மிகவும் விரிவாக, இவ்விவரச்சுவடியின் "பொருளாதாரப் போக்கு" என்ற இயலில் அளிக்கப்பட்டுள்ளது.

கல்வியறிவுபெற்ற வேலையில்லா இளைஞர்களின் துயர்துடைக்க, வேலை தேடி முயன்றுவரும், சில வகை இளைஞர்களுக்கு வேலையில்லாமை குறித்து நிவாரணமளிக்குமுகத்தான், ஒரு படித்தொகையினை அளித்துவர, அரசு 1980 ஆம் ஆண்டு முதல் திட்டம் வகுத்துள்ளது.

இத்திட்டத்தின்படி, மாதந்தோறும் பள்ளி இறுதி வகுப்பு படித்து தேர்ச்சி பெற்றோருக்கு, ரூபாய் 50/- வீதமும், அல்லது, புகு முக வகுப்பு அல்லது உயர்நிலை கல்வியில் தேர்ச்சி பெற்றோருக்கு ரூபாய் 75/- வீதமும் பட்டதாரிகளுக்கு ரூபாய் 100/- வீதமும் வழங்கப்படுகிறது. இதற்குரிய நிபந்தனை யாதெனில், இச்சலுகையைப் பெறும் இளைஞர்களின் பெற்றோரின் மாதாந்திர வருவாய் ரூபாய் 2000/-க்கு மிகாமலிருத்தல்

வேண்டும், இத்திட்டத்தின் கீழ், ஜூலை 1, 1980 முதல் செப்டம்பர் 30, 1988 வரை இம்மாவட்டத்தில் பள்ளி இறுதி வகுப்பில் தேர்ச்சி பெற்ற 10,551 மாணவர்களுக்கு, ரூபாய் 124.92 இலட்சமும், புகுமுக வகுப்பு அல்லது உயர்நிலைக்கல்வியில் தேர்ச்சி பெற்ற 4,669 மாணவர்களுக்கு ரூபாய் 71.21 இலட்சமும், 1374 பட்டதாரிகளுக்கு ரூபாய் 60.58 இலட்சமும் நிதி யுதவி அளிக்கப்பட்டுள்ளது.

கல்வித்துறை

பள்ளிக்கல்வி

பள்ளிக்கல்வி மற்றும் கல்வி சார்ந்த ஆராய்ச்சி மற்றும் பயிற்சி தொடர்புள்ள மாநிலக்குழு, ஆகியவை குறித்துத் திட்டமிடுதல், மேற்பார்வை வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுதல் போன்ற பணிகளை மாநில அளவில் நடை முறைப்படுத்தும் முதன்மை நிருவாக அலுவலராக, பள்ளிக்கல்வி இயக்குநர் திகழ்கிறார். [9]

துறைத் தலைமை அலுவலரான பள்ளிக் கல்வி இயக்குநருக்கு, மாநில அளவில், இரண்டு கூடுதல் இயக்குநர்கள், ஐந்து இணை இயக்குநர்கள், ஆறு துணை இயக்குநர்கள், எட்டு உதவி இயக்குநர்கள், ஒன்று நிதிக் கணக்குத் தணிக்கையாளர், ஒன்று நிருவாக அலுவர், ஒன்று முதன்மைக் கணக்கு அலுவலர் மூன்று தனி உதவியாளர்கள், இரண்டு முதுநிலைக் கணக்கு அலுவலர்கள், ஒன்று இளநிலைக்கணக்கு அலுவலர் மற்றும் இரண்டு மண்டலக் கணக்கு அலுவலர் ஆகியோர் உதவி புரிந்து வருகிறார்கள்.

மேலும், ஒரு இயற்பியல்கல்வி முதன்மை ஆய்வாளர், ஒரு இயல்பியல் கல்வி முதன்மை பெண் ஆய்வாளர், ஒரு நுழைவுரிமைப்பள்ளி ஆய்வாளர் 16 இயற்பியல் கல்வி மண்டல ஆய்வாளர், நான்கு இயற்பியல் கல்வி மண்டல பெண் ஆய்வாளர், மாண்புமிகு முதலமைச்சரின் மதிய உணவுத்திட்டத்தினைத் தீவிரமாக நடைமுறைப்படுத்திட 16 கள அலுவலர்கள், 15 பெண்கள் பள்ளி ஆய்வாளர்கள், 367 உதவிக்கல்வி அலுவலர்கள், 411 பள்ளிகள் துணை ஆய்வாளர்கள், 51 பள்ளிகள் துணை ஆய்வாளர்கள் (விஞ்ஞான ஊர்திகள்), 35 பள்ளிகள் கூடுதல் துணை ஆய்வாளர்கள் (விஞ்ஞான ஊர்த்திக்காக) மற்றும் 35 பள்ளிகள் இளநிலைத் துறை ஆய்வாளர்கள் ஆகியோர் மாநிலத்தில் பணியாற்றுகின்றனர்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் நிருவாக அமைப்பு முறை

நாகர்கோவிலுள்ள முதன்மைக்கல்வி அலுவலர், இம்மாவட்டத்தில், இத்துறையின் தலைமை அலுவலராவார். தத்தம் நிருவாகப்பகுதிகளில் கல்வி முன்னேற்றமடைய, தக்கலை, நாகர்கோவில் மற்றும் குழித்துறை ஆகிய இடங்களில் பணியாற்றும், மாவட்டக் கல்வி அலுவலர்களும், நாகர்கோவிலுள்ள பெண்கள் பள்ளிகளில் ஆய்வாளரும்இம்மாவட்டக்

கல்வித்துறைக்குப் பொறுப்பேற்கிறார்கள். பள்ளிகளை ஆய்வு செய்யவும், கல்வியின் தரத்தை மேம்படுத்தவும். ஒன்பது பள்ளிகள் துணை ஆய்வாளர்கள் இம்மாவட்டத்தில் பணியாற்றிவருகிறார்கள்.

கல்லூரிக் கல்வி

நிருவாக அமைப்பு முறை (மாநில அளவு)

இவ்வியக்கம், கல்லூரிக்கல்வி இயக்குநர் தலைமையில் இயங்கிவருகிறது. இவர் செவ்வனே பணியாற்றிட, இவருக்கு, ஒரு இணை இயக்குநர், ஒரு துணை இயக்குநர், ஒரு முதன்மைக்கணக்கு அலுவலர், ஒரு தனி அலுவலர் (ஆங்கிலம்), ஒரு உதவி இயக்குநர், ஒரு முது நிலைக்கணக்கு அலுவலர், உதவித் தொகை அளித்தல் தொடர்பாக இரண்டு தனி அலுவலர்கள், இயக்குநரின் ஒரு தனி உதவியாளர், ஐந்து (கல்லூரிக் கல்வி) மண்டல துணை இயக்குநர்கள் ஆகியோர் நிருவாகத்திலும், உதவி புரிந்து வருகிறார்கள். மண்டலத் துணை இயக்குநர்களின் அலுவலகங்கள், சென்னை, மதுரை, திருச்சி, திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் இயங்கிவருகின்றன.

கன்னியாகுமரி மாவட்டத்தில் நிருவாக அமைப்புமுறை

கன்னியாகுமரி இம்மாவட்டத்தில்,மண்டலத்துணை இயக்குநர், இத்துறை தொடர்பான அலுவல்களை கவனித்து வருகிறார். மாவட்டத்தி லுள்ள அனைத்துக் கல்லூரிகளும், திருநெல்வேலி மண்டலத்துணை இயக்குநரின் மேற்பார்வையிலுள்ளன. ஒவ்வொரு கல்வி நிறுவனத்தின் மாணவ, மாணவியர் எண்ணிக்கை, கற்பிக்கப்படும் பாடங்கள் கல்வித்தரம், கற்பிக்கப்படும் மொழி ஆகியவை, இவ்விவரச் சுவடியின் "கல்வி" என்ற தலைப்பிலான இயலில் விவரமாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

மீன் வளத்துறை

நிருவாக அமைப்பு முறை (மாநில அளவு)

மீன் வளத் துறை இயக்குநர், துறைத் தலைவராவார். அவருக்கு, இணை இயக்குநர்கள், துணை இயக்குநர்கள், உதவி இயக்குநர்கள், கணக்கு அலுவலர், ஒரு பொறியியல் அலகு மற்றும் ஏனைய இணை அலுவலர்கள், ஆகியோர் உதவி புரிந்து வருகிறார்கள். ஒரு முதல்வர்-தலைவர் பணியாளர் பயிற்சி நிறுவனமும் இயக்குநர் கட்டுப்பாட்டி லேயே இயங்கி வருகிறது. மீன்வளத் துறை இயக்குநரே, தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் நிருவாக இயக்குநராகவும் பணியாற்றிவருகிறார். நிருவாக நலனுக்காக இத்துறை ஐந்து மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. சென்னை, நாகப்பட்டினம், கோயம்புத்தூர், மதுரை மற்றும் தூத்துக்குடி ஆகிய மண்டலங்கள் ஒவ்வொன்றும், ஒரு துணை இயக்குநரின் பொறுப்பில் இயங்கிவருகின்றன.

கன்னியாகுமரி மாவட்டத்தில் நிருவாக அமைப்புமுறை

இம் மாவட்டம், தூத்துக்குடி மண்டலத்தில் உள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் இத்துறையினர் பல்வேறு திட்டங்களை, கீழ்க் குறிப்பிட்ட அலுவலர்கள் நடை முறைப்படுத்தி வருகிறார்கள் :

உதவி இயக்குநர் - நாகர்கோவில்

உதவி இயக்குநர் - மீனவர் பயிற்சி மையம், குளச்சல்.

உதவி இயக்குநர் - கரைக் கருகிலுள்ள மீன் பிடிக்கும் நிலையம், கன்னியாகுமரி.

மாவட்ட ஆட்சித் தலைவரின் கட்டுப்பாட்டில், ஒரு மீன் தொழிலாளர் வளர்ச்சி நிறுவனம், இயங்கி வருகிறது. இந்த நிறுவனம், முதன்மை நிருவாக அலுவலரால் மேற்பார்வை செய்யப்படுகிறது.

இவ்வியக்கத்தின் பொறியியல் அலகு, மீன் தொழில் துறைமுகத்திட்ட வட்ட மேற்பார்வைப் பொறியாளரின் கட்டுப்பாட்டில், நாகர்கோவில் இயங்கி வருகிறது. மேற்பார்வைப் பொறியாளர், சின்ன முட்டம், மீன் தொழில் துறைமுகம் இரண்டாவது திட்டக்கோட்டப் பணியையும் கவனித்து வருகிறார்.[10]

மீன் வளத் துறை ஆய்வாளர்கள், மீன் வளத் துறைத் துணை ஆய்வாளர்கள், கூட்டுறவுத் துணைப் பதிவாளர்கள், கூட்டுறவு சங்கங்களின் முதுநிலை ஆய்வாளர்கள், துணை உதவி ஆய்வாளர்கள், மீனவர்கள், மீன் தொழில் துறைக் காவலர், தொழிலாளர் மேன் முறையாள் மற்றும் அமைச்சுப் பணியாளர்கள் ஆகியோர் இத்துறையின் சார்நிலை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களாவர்.

காடுகள் துறை

முன்னுரை

காடுகள் புதுப்பிக்கக்கூடிய மிகவும் முக்கியமான இயற்கைச் சொத்துக்களாகுமெனில், மிகையில்லை, அவை, நமது சுற்றுப்புறச் சூழ்நிலையின் முக்கிய ஆக்கக் கூறாகும். காடுகள், உயிரின வாழ்க்கைச் சூழலில் சமநிலையை உண்டுபண்ணக் கூடியவை. காற்றைத் தூய்மைப்படுத்தி, ஊற்று நீரின் ஓட்டத்தைச் சீராக்கி, பருவக் கால மழையின் போது வெள்ளத்தையும், மண்ணரிப்பையும் தடுக்கவல்லவை.

நிருவாக அமைப்பு முறை (மாநில அளவு)

இத்துறைக்கு தற்போது, காடுகள் முதன்மைத் தலைமைக் காப்பாளர் ஒருவர், தலைமை தாங்குகிறார். அவருக்கு ஒரு கூடுதல் தலைமைக் காப்பாளர் (திட்டமும், வளர்ச்சியும்), தலைமைக் காப்பாளர் நிலையில் (கொடிய மிருகங்கள்) தலைமைப் பாதுகாவலர், கூடுதல் தலைமைக்

காப்பாளர் (சமுதாயக் காடுகள்), இதர தொழில் நுட்ப, மற்றும் அமைச்சுப்பணியாளர்கள், உதவி புரிந்து வருகிறார்கள்.

கொடிய மிருகங்கள் கோட்டம், இரண்டு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இராசபாளையத்தினைத் தலைமையிடமாகக் கொண்டு, தெற்கு மண்டலமும், வண்டலூரைத் தலைமையிடமாகக் கொண்டு, வடக்கு மண்டலமும் இயங்கிவருகின்றன. ஒவ்வொரு மண்டலத்திற்கும், ஒரு காடுகள் காப்பாளர் தலைமை தாங்குகிறார். நிருவாக நலனைக் கருத்திற்கொண்டு, இத்துறை, சேலம், வேலூர், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய ஆறு எல்லை வட்டங்களாகப் பாகுபாடு செய்யப்பட்டுள்ளது.[11]

செயலாக்க வட்டமானது, மூன்று காடுகள் காப்பாளர்களைக் கொண்டதாகும். ஒருவர் ஆராய்ச்சிப்பணியையும், மற்றொருவர் செயல் திட்டங்களையும் மூன்று மலர் வளர்ச்சிப் பணிகளையும் கவனித்து வருகிறார்கள். சமுதாயக் காடுகள் கோட்டத்தில், சமுதாயக்காடுகள் பணியினை ஒரு கூடுதல் தலைமைக் காப்பாளரும் ஆராய்ச்சிப்பணிக்கு ஒரு (காடுகள்) காப்பாளரும், திருச்சிராப்பள்ளி, மதுரை, சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய மண்டலங்களை நிருவாகம் செய்ய ஒவ்வொரு காப்பாளர் வீதம் நான்கு காப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் நிருவாக அமைப்பு முறை

கன்னியாகுமரி மாவட்டக் காடுகள் துறை அலகு, திருநெல்வேலி எல்லைவட்ட காடுகள் காப்பாளரின் தலைமையின் கீழ், இயங்குகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள காடுகள் நிருவாகமும், பாதுகாப்பும் (எல்லைப்பகுதி), மாவட்டக்காடுகள் அலுவலர், (கிராம்பு பயிர்), கோட்டைக் காடுகள் அலுவலர் மற்றும் காடுகள் பாதுகாப்புப் படையினர் ஆகியோரின் பொறுப்பில் உள்ளன. இவ்வலுவலர்கள் திருநெல்வேலி, காடுகள் காப்பாளரின் நேரடி மேற்பார்வையில் பணியாற்றுகிறார்கள்.

மாவட்டக் காடுகள் அலுவலர், காடுகள் நிருவாகத்தை மேற்பார்வை செய்துகொண்டு, மாவட்டத்தில், காடுகள் சார்ந்த அனைத்து வளர்ச்சித் திட்டங்களையும் நடைமுறைப்படுத்துகிறார். கோட்டக் காடுகள் அலுவலர், (கிராம்புப் பயிர்) மாவட்டத்தில் பயிர்செய்யப்பட்டுள்ள கிராம்புப் பயிர் பராமரிப்பு தொடர்புள்ள பணிகளை மேற்பார்வை செய்கிறார்.

காடுகள் பாதுகாப்புப் படைக்கு, காடுகள் உதவிக்காப்பாளர் ஒருவர், தலைமை தாங்குகிறார். அவருக்கு வன சரகர்களும், காடு பாதுகாவலர்களும் உதவி புரிகிறார்கள். காடுகளைப் பாதுகாத்தல், காடுகள் குற்றங்களான மரங்கள் வெட்டுதல், காட்டுப் பொருட்களை கள்ளத்தனமாகக் கடத்துதல் போன்றவற்றைக் கண்டுபிடித்து, குற்றவாளிகள் மீது குற்றயியல் நடவடிக்கை தொடர்தல் ஆகியவை, இப்படையின் முக்கியப் பணிகளாகும்.

காடுகள் காவல் காப்பாளர்கள் மற்றும் பாதுகாப்பாளர்கள் ஆகியோர், இப்படையின் முக்கியப் பணியாளர்கள். காடுகள் காவல் காப்பவர்கள் மற்றும் பாதுகாப்பாளர்கள் ஆகியோர், முறைக்காவல் பணியிலீடுபட்டு, காடுகளைப் பாதுகாப்பதில் முழுகவனம் செலுத்துகிறார்கள். மேலும், களப்பணிகளைனைத்தையும் அவர்கள் செய்து முடிக்கிறார்கள்.

1986-87 ஆம் ஆண்டில், இம்மாவட்டத்தில் ஊசியிலைக் காட்டு மரக்கன்றுகள், 1.01 இலட்ச ரூபாய் செலவில், 40 ஏக்கர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டுள்ளன. ஏழாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில், தரிசு நில மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ், மரக்கன்றுகள் பயிரிடுதல் போன்ற நல்ல பல திட்டங்களை இத்துறை நடைமுறைப்படுத்தவிருக்கிறது. படகுகள் கட்ட முதன்மையாகத் தேவைப்படும் "அல்பேசியா ஃபால்கோட்டா" வகை மரங்கள், இம்மாவட்டத்தில் பயிரிடப்படுகின்றன.

கிராம்பைப் பொறுத்தவரையில், அது அமெரிக்க வெள்ளி நாணங்களை ஈட்டித்தரவல்ல பயிர் எனக் கூறலாம். ஏனைய மாவட்டங்களுடன், ஒப்பிடுகையில் இம்மாவட்டத்தில் கிராம்பு மிக அதிக அளவில் பயிரிடப்படுகிறதெனவே கூறாலாம். கிராம்புக் கோட்டம், ஒரு தனி கோட்ட காடுகள் அலுவரின் மேற்பார்வையிலிருந்து வருகிறது. இம்மாவட்டத்தில் கிராம்பு பயிரிடப்படும் பரப்பளவு 110 எக்டேராகும். அவற்றைப் பராமரித்திட இத்துறை கடந்த 1986-87-ம் ஆண்டு 8.51 இலட்ச ரூபாய் செலவு செய்துள்ளது.

இம்மாவட்டத்திலுள்ள காட்டுப்பகுதிகளில் அதிகமாகப் பயிரிடப்படும் மற்றொரு மரவகை, ரப்பராகும். 1985-86-ம் ஆண்டு வரை ரப்பர் இம்மாவட்டத்தில் 4,786 எக்டேர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டது. இரப்பர் பயிர்கள், ஒரு தலைவர் மற்றும் நிருவாக இயக்குநரால் மேற்பார்வை செய்யப்படுகிறது. அவருக்கு, ஒரு பொது மேலாளர் மற்றும் கோட்டங்களுக்கு பொறுப்பு வகிக்கும் கோட்ட மேலாளர்கள் ஆகியோர் உதவி புரிகிறார்கள்.

தீயணைப்புத் துறை

1967 ஆம் ஆண்டு முதல், தனித்துறையாக இயங்கி வரும், தமிழ்நாடு தீயணைப்புத்துறை, மாநிலத்திலேயே மிகப்பெரிய மற்றும் திறமை மிக்க துறைகளிலொன்றாகும். உயிர்கள் மற்றும் உடைமைகள் தீயினால் அழிவதினின்றும் காக்கக்கூடிய மாபெரும் பணியை இத்துறை மேற்கொண்டு வருகிறது.

இத்துறைப் பணியாளர்களும், அலுவலர்களும் தீயைத் தடுத்தல் மற்றும் தீயை அணைத்தல் ஆகிய பணிகளோடல்லாது, ஆபத்து நேரங்களிலும் மக்கள் துயர்துடைப்பிலீடுபடுகிறார்கள். குறிப்பாகச்

சொன்னால், இயற்கை இடர்பாடுகளான வெள்ளம், புயல், இடி, மின்னல், நிலநடுக்கம், கட்டிட இடிபாடு மற்றும் நச்சுத் தன்மையுள்ள குளவி, பாம்பு வெறிநாய்கடி போன்றவற்றால், மக்கள் அவதியுறும்போது, போர்க்கால அடிப்படையில் அவர்களுக்கு நிவாரணப்பணி மற்றும் மருத்துவ உதவியளித்தல் போன்றவற்றில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டு, பல எதிர்பாரா ஊறுபாடுகளையும் எதிர்த்து நின்று, திறம்படப் பணியாற்றுகிறார்கள். அவர்கள் ஆற்றும் பணிக்கு எவ்விதக் கட்டணமும் வசூல் செய்யாது, இலவசப் பணியாற்றுவது குறிப்பிடத் தக்க அம்சமாகும்.

திருவிழா நேரங்களில், இத்துறை தீ பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்கிறது. விபத்து நேரங்களில் இத்துறையினர் மனித மற்றும் மிருக உயிர்களைக் காப்பாற்றுவது, போற்றத்தக்க செயலாகும். பெரிய நகரங்களில், இத்துறை காயமடைந்தோரை எடுத்துச் செல்வதற்கான பெரிய ஊர்திகளைப் பராமரித்து வருகிறது. நோயாளிகளையும், காயமடைந்தோரையும் உடனடியாக மருத்துவம் செய்ய மருத்துவமனைக்கு இவ்வூர்திகளில் மிகக் குறைந்த கட்டணத்தில் எடுத்துச்செல்ல வகை செய்யப்பட்டுள்ளது. 24 மணி நேரமும் இத்துறையின் செயற்கரிய பணி இன்றியமையாததாகிறது. பொதுத் தேர்தல்கள், கலகங்கள், போன்ற சட்ட ஒழுங்கு பிரச்சினை எழும்பும் நேரங்களில் இத்துறையைச் சார்ந்த களப்பணியாளர்களின் பணி பெரிதும் பயன்படுகிறது. தொத்துநோய் கண்டுள்ள காலங்களில், நோய் பராவாமலும், முழுமையாகக் களையப் பெறவும் பொதுநலத்துறைக்கு தீயணைப்புத்துறை பெரிதும் உதவி புரிகிறது. பல்வேறு வகையான மக்கள் பணியாற்றுவதோடு, இத்துறையைச் சார்ந்த அலுவலர்கள், குறிப்பிட்ட சட்டங்கள் மற்றும் விதிகளின்படி வணிக உரிமம் வழங்கப்பட்டுள்ள இடங்களைப் பார்வையிட்டு தீ பாதிப்பு ஏற்படாதென்ற வகைக்கு சான்றளித்தபின்னரே உரிமம் வழங்கப்படுகிறது. காவல்துறைபோன்ற தீயணைப்புத் துறையும் கள்ளச்சாராயம் காய்ச்சுதல் போன்ற பெரிய குற்றங்கள் புரியப்படுவதை தடுத்து சமுதாயத்திற்குப் பெருந்தொண்டாற்றுகிறது.

காவல்துறை தலைவர் ஆய்வாளர் நிலையிலுள்ள காவல்துறைப் பணி அலுவலர் ஒருவர் (ஐ.பி.எஸ்.) தீயணைப்புத்துறை இயக்குநராகப் பணியாற்றி வருகிறார். இவரது நிருவாகக் கண்காணிப்பில்தான் இத்துறை இயங்கி வருகிறது. நிருவாக நலனைக் கருதி, மாநிலம் மூன்று மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. வடக்கு மண்டலம் சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டும், மத்திய மண்டலம் திருச்சிராப்பள்ளியை தலைமையிடமாகக் கொண்டும் மற்றும் தெற்கு மண்டலம் மதுரையை மையமாகக் கொண்டும் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு மண்டலமும், தீயணைப்புப்பணி துணை இயக்குநர் தலைமையில் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு மண்டலமும், கோட்டங்களாக மேலும் பிரிக்கப்பட்டுள்ளன. ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாவட்டங்களை கொண்ட ஒவ்வொரு கோட்டமும் ஒரு கோட்ட தீயணைப்பு பணி அலுவலரின் பொறுப்பிலுள்ளது.

நிருவாகம் மற்றும் செயலாக்கப் பணிகளில், அவருக்கு ஒரு உதவி கோட்ட தீயணைப்பு அலுவலர், உதவியாற்றி வருகிறார். தற்போது 16 கோட்டங்களும், 171 தீயணைப்பு நிலையங்களும், இத்துறையின் பொறுப்பிலியங்கி வருகின்றன.

நிருவாக அமைப்பு முறை (கன்னியாகுமரி மாவட்டம்)

தற்போது, இம் மாவட்டத்தில், தீயணைப்புப்பணி நடவடிக்கைகள், நாகர்கோவில் கோட்ட தீயணைப்புத்துறை அலுவலரால், கண்காணிக்கப்பட்டு வருகின்றன. அவரது பொறுப்பில், நாகர்கோவில், கன்னியாகுமரி, குலசேகரம், பத்மநாபபுரம் மற்றும் குழித்துறை ஆகிய ஐந்து இடங்களிலும் தீயணைப்பு நிலையங்கள் இயங்குகின்றன.

ஒவ்வொரு தீயணைப்பு நிலையத்திலும் ஒரு தீயணைப்பு நிலைய அலுவலர், இரண்டு திறமைமிக்க முதுநிலை தீயணைப்பு வீரர்கள், ஊர்தி ஓட்டுநர்கள் மற்றும் கனிசமான அளவு இயல்பான தீயணைப்பு வீரர்கள் ஆகியோர் பணியாற்றுகிறார்கள். 1986 ஆம் ஆண்டு நிலவரப்படி, மாவட்டத்தில் ஏழு திறமைமிக்க முதுநிலை தீயணைப்பு வீரர்களும், 13 தீயணைப்பு ஊர்தி ஓட்டுநர்களும், 49 இயல்பான தீயணைப்பு வீரர்களும் பணியாற்றுகிறார்கள்.[12]

1985 ஆம் ஆண்டு, தீயணைப்புத்துறை மக்களிடமிருத்து செய்தியறிந்து 128 இடங்களில் தீயணைப்புப் பணியில் தீவிரமாக ஈடுபட்டு 42.80 இலட்ச ரூபாய் மதிப்புள்ள உடமைகளை பாதுகாத்து, 23 மனிதர்களின் உயிர்களையும் காப்பாற்றியுள்ளது. இவ்வாறாக, பொது நலப்பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு, இத்துறையைச் சார்ந்த அலுவலர்களும், பணியாளர்களும் அரும்பணியாற்றி வருகிறார்கள்.

நெடுஞ்சாலை மற்றும் கிராமப்பணித்துறை

திட்டமிடுதல், திட்ட அமைப்பாண்மை மாதிரி வகுத்தல், தமிழ்நாட்டில் சாலைகள் அமைத்தல், பாலங்கள் கட்டுதல், கிராமப்புறப்பணித்திட்டங்கள் தொடர்பாக ஊராட்சி ஒன்றியங்களுக்கு தொழில் நுட்ப ஆலோசனை வழங்குதல் மற்றும் 50 ஏக்கருக்கும் குறைவாக நீர்ப்பிடிப்பரப்பளவுள்ள சிறிய நீர்ப்பாசனக் குளங்களைச் செப்பனிடுதல் போன்ற பணிகளுக்கு இத்துறை பொறுப்பு வகிக்கிறது. சாலைகளை மேம்படுத்த, இத்துறை அவ்வப்போது திட்டங்களை வகுத்து, அத்திட்டங்களை நடைமுறைப்படுத்துகிறது. சாலைகளை, தங்கள் வசமுள்ள நிதி நிலைக்கேற்ப, மிகத்திறமையாகப் பராமரித்து வருகிறது. நிருவாகம் தொடர்பான அனைத்து நிகழ்வுகள் மற்றும் கொள்கை ரீதியான அலுவலர்கள் ஆகியவை குறித்து (நெடுஞ்சாலை மற்றும் கிராமப்புற பணிகள்) தலைமைப் பொறுப்பாளரே, இறுதி முடிவுயெடுக்கும்

பொறுப்பினை மேற்கொள்கிறார். மாநிலத்தில் தமிழ்நாடு, ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டத்தின் கீழும், சில தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில், "டானிடா" திட்டத்தின் கீழும் கட்டிடங்கள் கட்டி முடிக்கும் பணியும், இத்துறையின் பொறுப்பிலேயே உள்ளது. இயல்முறை முதன்மைப் பொறியாளரைத் தவிர, சில சிறப்புத் திட்டங்களை செயலாற்ற, கீழ்க்கண்ட முதன்மைப் பொறியாளர்களும் பணியாற்றிவருகின்றனர்:

முதன்மைப் பொறியாளர், தேசிய நெடுஞ்சாலை

முதன்மைப் பொறியாளர், பாம்பன் பாலத் திட்டம்

இயக்குநர், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம்

முதன்மைப்பொறியாளர், தேசிய நெடுஞ்சாலை-45

முதன்மைப் பொறியாளர் (நெடுஞ்சாலை), தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம். மற்றும்

முதன்மைப் பொறியாளர் (நெடுஞ்சாலை) கிழக்குக்கடற்கரை சாலை

இத்துறை 39,912 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளைப் பராமரித்து வருகிறது. அவை, தேசிய நெடுஞ்சாலை (நகர்ப்புறம்), மாநில நெடுஞ்சாலை, பெரிய மாவட்ட சாலைகள் மற்றும் ஏனைய மாவட்ட சாலைகள் ஆகியவை அடங்கியனவாகும். சாலை வசதிகள் தேவைப்படும் கிராமப் பகுதிகளை மேம்படுத்துவதில், அரசு அதிக கவனம் செலுத்தி வருகிறது. கிராமப்புற சாலைகள் அமைத்தல் மற்றும் அரசு தன் வசம் எடுத்துக் கொண்ட வழித்தடங்கள் தொடர்புள்ள திட்டங்கள் ஆகியவை தவிர, கிராமப்புறச் சாலைகள், இந்திய அரசின் முழு நிதி உதவியுடனும், கிராமப்புற நிலமற்றோர் வேலை வாய்ப்புப் பொறுப்புறுதி திட்டத்தின் கீழ், (ஆர்.எல்.இ.ஜி.பி.) மேம்படுத்தப்பட்டுவருகின்றன.

மாநில அளவிலான அலுவலர்கள் விவரங்கள் பின்வருமாறு:

முதன்மைப் பொறியாளர், நெடுஞ்சாலை மற்றும் கிராமப்புறப் பணித்துறை,

முதுநிலைத்துணை முதன்மைப் பொறியாளர் (நெடுஞ்சாலை மற்றும் கிராமப்புறப்பணி),

முதுநிலைத் துறை முதன்மைப் பொறியாளர் (திட்டம்),

முதுநிலை துணை முதன்மைப் பொறியாளர் (தொழில்நுட்பப்பிரிவு),

துணை முதன்மைப் பொறியாளர் (கிராமப்புற நிலமற்றோர் வேலை வாய்ப்புப் பொறுப்புறுதித் திட்டம்), மற்றும்

கணக்கு அலுவலர் (பொது),

அவர்களது சார்நிலைப் பணியாளர்களில், தனி உதவியாளர்கள், கூடுதல் தனி உதவியாளர்கள், தொழில் நுட்ப உதவியாளர்கள், முதன்மை

தலைமை வரைவாளர்கள், மற்றும் துணைக் கணக்கு அலுவலர்கள் ஆகியோர் அடங்குவர்.

ஒன்பது கண்காணிப்பு பொறியாளர்கள் இத்துறையின் களப்பணிபுரியும் அலுவலர்கள் ஆவார்கள். அவர்களில் மூன்று அலுவலர்கள், திட்ட அமைப்பு இயந்திர நுட்பம் சார்ந்த பணி மற்றும் போக்குவரத்துத் தொடர்புப் பிரிவு, ஆகியவற்றையும் நான்கு அலுவலர்கள் மண்டலங்களையும், ஏனைய இரு அலுவலர்கள் ஆராயும் அலகுகளையும் மேற்பார்வை செய்கிறார்கள். இந்த ஆராயும் அலகுகள் திருச்சிராப்பள்ளியிலும், விழுப்புரத்திலும் இயங்கிவருகின்றன.

சென்னை மண்டலத்தில், சென்னை, செங்கற்பட்டு அண்ணா, தென்ஆற்காடு மற்றும் வட ஆற்காடு மாவட்டங்களும், திருச்சிராப்பள்ளி மண்டலத்தில், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, தஞ்சாவூர் மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களும், கோயம்புத்தூர் மண்டலத்தில் நீலகிரி, சேலம் மற்றும் தர்மபுரி மாவட்டங்களும் மற்றும் திருநெல்வேலி மண்டலத்தில் திருநெல்வேலி சிதம்பரனார், கன்னியாகுமரி காமராசர், பசும்பொன் முத்துராமலிங்கம் மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களும் அடங்கியுள்ளன.

கண்காணிப்புப் பொறியாளர்களின் கட்டுப்பாட்டில், கோட்டப் பொறியாளர்கள், உதவி கோட்டப் பொறியாளர்கள், உதவிப் பொறியாளர்கள், இளநிலைப் பொறியாளர்கள், ஒன்றியப் பொறியாளர்கள் மற்றும் ஒன்றிய மேற்பார்வையாளர் ஆகிய பொறியியல் சார் அலுவலர்கள் பணியாற்றி வருகிறார்கள்.

இம்மாவட்டத்தில், இத்துறை (நெடுஞ்சாலை மற்றும் கிராமப்பணித்துறை)கோட்டப் பொறியாளர்கள் கட்டுப்பாட்டிலும், கண்காணிப்புப் பொறியாளரின் மேற்பார்வைப் பொறுப்பிலும், நாகர்கோவில் இயங்கிவருகிறது. மாவட்டத்திலுள்ள அனைத்து சாலைகளையும், சரிவர பராமரிக்கும் பொறுப்பு, கோட்டப் பொறியாளரைச் சார்ந்ததாகும். அவ்வப்போது அரசால் ஒப்புதலளிக்கப்பட்டு வரும் பல்வேறு பாலங்கள், புதிய சாலைகள் ஆகியவற்றைக் கட்டிமுடிக்கும் பணியினையும் அவரே மேற்கொள்கிறார். ஊராட்சி ஒன்றியங்களால் நடைமுறைப்படுத்தப்படும் அனைத்து வளர்ச்சித் திட்டங்களுக்கும் இவரே தொழில் நுட்பத் தொடர்பான பணிகளுக்குத் துறைத்தலைமை அலுவலராகப் பணியாற்றுகிறார்.

ஒவ்வொரு வட்டத்திலும், ஒரு உதவி கோட்டப் பொறியாளர் தலைமையிலான துணைக்கோட்டம் இயங்குகிறது. அரசிற்கு ஒப்படை செய்யப்பட்ட வட்டத்திலுள்ள அனைத்து சாலைகளின் பராமரிப்பிற்கும், இவரே பொறுப்பு வகிக்கிறார். புதிய பாலங்கள் கட்டுதல், மற்றும் புதிய சாலைகள் அமைத்தல் ஆகியவற்றையும் இவரே கவனித்து வருகிறார். ஊராட்சி ஒன்றிய அமைப்பு முறையில், செயல்முறைப்படுத்தப்படும்

பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை மேற்பார்வையிட இவரே தொழில்நுட்ப அலுவலராகப் பணியாற்றுகிறார். சாலை அமைப்பு முறையைத் திறம்படக் கண்காணிக்க, இவருக்கு ஒரு உதவிப்பொறியாளர் உதவி புரிகிறார். ஊராட்சி ஒன்றிய எல்லையில் உள்ள சாலைகளை செவ்வனே பராமரித்திட , அந்தந்த ஊராட்சி ஒன்றியப் பொறியாளர்கள் பொறுப்பேற்கிறார்கள்.

தற்போது, நாகர்கோவிலிலிருக்கும் கோட்டப் பொறியாளரின் நேரடிக் கட்டுப்பாட்டில், நான்கு உதவி கோட்டப் பொறியாளர்கள், நாகர்கோவில், தோவாளை, தக்கலை, மற்றும் குழித்துறை ஆகிய இடங்களில் பணியாற்றுகிறார்கள்.

நாகர்கோவில் உதவிக் கோட்டப் பொறியளாரின் கண்காணிப்பில் நாகர்கோவில், அகஸ்தீஸ்வரம் மற்றும் இராசாக்கமங்கலம் ஆகிய இடங்களில் முறையே ஒவ்வொரு உதவிப் பொறியாளர் வீதம் பணியாற்றுகிறார்கள்.

தோவளை உதவிக் கோட்டப் பொறியாளருக்கு ஒரு உதவிப் பொறியாளரும், ஒரு ஒன்றியப் பொறியாளரும் உதவி புரிகிறார்கள்.

தக்கலை உதவிக்கோட்டப் பொறியளாரின் கட்டுப்பாட்டில், ஒரு உதவிப் பொறியாளரும், தக்கலை, குருந்தங்கோடு மற்றும் திருவட்டார் ஆகியவற்றில் ஒவ்வொன்றிலும், ஒரு ஒன்றியப் பொறியாளர் வீதம் மூன்று ஒன்றியப் பொறியாளர்களும் பணியாற்றுகிறார்கள்.

குழித்துறை உதவிக்கோட்டப் பொறியாளர், ஒரு உதவிப்பொறியாளர் மற்றும் மேல்புரம், கிள்ளியூர் மற்றும் மூஞ்சிரை ஊராட்சி ஒன்றியப் பொறியாளர்கள் ஆகியோரின் பணியினை மேற்பார்வை செய்கிறார்கள்.

பல்வேறு வகையான வேலைகளை விரைவாக முடித்திட, ஒவ்வொரு கோட்டப்பொறியாளருக்கும், ஒரு கோட்டக் கணக்கர், மேலாளர், கண்காணிப்பாளர் மற்றும் ஒரு தலைமை விரைவாளர் ஆகியோர் உதவி புரிகிறார்கள். [13]

உதவிப் பொறியாளர்கள் மற்றும் ஒன்றியப் பொறியாளர்கள் ஆகியோருக்குக் களப்பணியாற்றும் சார் அலுவலர்கள், சாலை ஆய்வாளர்களென அழைக்கப்படுகிறார்கள். இவர்கள் சாலைப்பணியாட்கள் மற்றும் ஒப்பந்தப் பணியாட்கள் ஆகியோரின் பணியினை மேற்பார்வை செய்கிறார்கள். நடைமுறை படுத்தப்பட்ட பல்வேறு வகையான திட்டங்கள், ஒதுக்கப்பட்ட நிதி போன்ற விவரங்களுக்கு, இவ்விவரச்சுவடியின் "போக்கு வரத்து" என்ற இயலினை நோக்கிட வேண்டப்படுகிறது.

இந்து சமய மற்றும் அறநிலையத் துறை

இந்து சமய மற்றும் அறநிலையங்கள், மடங்கள் சமண அறநிலையங்கள் ஆகியவற்றை நிருவாகம் செய்யவும், தொன்மையான கல்வெட்டுகள், சிற்பங்கள் தாமிரத்தகடுகள், பொன் ஆபரணங்கள் மற்றும்

கோவில்களைச் சேர்ந்த நிதித் தொகைகள் ஆகியவற்றைப் பாதுகாக்கவும், இந்து சமய மற்றும் அறநிலைத்துறை, கடந்த 1960ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

சென்னையைத் தலைமையிடமாகக் கொண்ட இந்து சமய மற்றும் அறநிலையத்துறை, ஆணையரின் கட்டுப்பாட்டில் இயங்கிவருகிறது. அவருக்கு ஏழு உதவி இயக்குநர்களும், 15 துணை ஆணையர்களும், 40 உதவி ஆணையர்களும், மாவட்ட முழுமையும் உதவி புரிகிறார்கள். 1959ஆம் ஆண்டு தமிழ்நாடு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் சட்ட விதி முறைகளை (தமிழ்நாடு சட்டம் 22/1959) நடைமுறைப்படுத்திட, இவ்வலுவலர்கள், சட்ட அதிகாரம் பெற்ற அலுவலர்கள் ஆவர்.

மேற்குறிப்பிட்ட அலுவலர்களைத் தவிர, உதவி ஆணையர் நிலையில் செயலாக்க அலுவலர்கள், அவர்களது சார்நிலை அலுவலர்களின் உதவியுடன் பணியாற்றி வருகின்றனர். சமயம் சார்ந்த நிறுவனங்களுக்குச் சொந்தமான நகைகள், மற்றும் இதர விலைமதிப்புப் பொருட்கள் ஆகியவற்றை மதிப்பீடு செய்தல், இவர்களது பணியாகும். நிருவாகப் பணிகள் தொடர்பாக ஆணையருக்கு உதவிபுரிய, துணை ஆணையர் நிலையில், ஒரு தனி உதவியாளரும் பணியாற்றி வருகின்றனர்.

மாநிலத்திலுள்ள பல்வேறு சமய சார்புள்ள நிறுவனங்களின் கணக்குகளைத் தணிக்கையிட, இத்துறையில் தேவையான சார்நிலைப்பணியாளர்களுடன் ஒரு தலைமைத் தணிக்கை அலுவலர் பணியாற்றிவருகிறார்.

இவைத்தவிர, ஒரு பொறியியல் பிரிவும், இத்துறையில் இயங்கி வருகிறது. கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்காக, பொறியாளர்கள் நெடுஞ்சாலைத்துறையினின்றும், இத்துறைக்கு அனுப்பப்பட்டுள்ளார்கள். ஒரு கண்காணிப்புப் பொறியாளரின் தலைமையில் இப்பிரிவு இயங்குகிறது. இந்து சமய நிறுவனங்களின் கட்டுமானப் பணி, திருக்கோயில்களின் திருப்பணி ஆகியவற்றை செயலாற்றவும், அவை தொடர்பான மதிப்பீடுகளைத் தயார் செய்திடவும், பல்வேறு மாவட்டங்களில் மேற்பார்வை அலுவலர்களும், பணியாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்கள் மற்றும் கட்டிடங்கள் தொடர்புள்ள பணிகளை மேற்கொள்ளவும், தேவைப்படும் ஆவணங்களைத் தயாரித்து பராமரிக்கவும், வருவாய்த்துறையைச் சார்ந்த ஒரு மாவட்ட வருவாய் அலுவலரும், ஐந்து தனி வட்டாட்சியர்களும் பணியாற்றி வருகிறார்கள்.

துறைப்பணியாளர்கள் மீது எழுப்பப்படும் கடுமையான குற்றச்சாட்டுகள் மற்றும் புகார்கள் ஆகியவற்றை குறித்து விசாரணை செய்து உரிய ஒழுங்கு நடவடிக்கைளை முறையாக மேற்கொள்ள, உதவி ஆணையர்

நிலையில், ஒரு தனி அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார். மாநிலத்திலுள்ள சிலஇடங்களின் செயல்பாட்டில் காணப்படும் குறைபாடுகள் குறித்து விசாரணை நடத்திட, ஒரு துணை ஆணையரும் அவருக்கு உதவி புரிய உரிய பணியாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இந்த துணை ஆணையர் தொடர்புள்ள இடத்தில் எதிர்பாரா ஆய்வும் மேற்கொள்வதுண்டு.

இத்துறையில் மண்டல நிருவாக அலுவலர்கள் பணியாற்றிவருகிறார்கள். ஒவ்வொரு மண்டலமும், ஒரு துணை ஆணையரின் கட்டுப்பாட்டில் இயங்குகிறது. இந்த மண்டலங்கள், சென்னை, சேலம், கோயம்புத்தூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மயிலாடு துறை, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ளன. கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி மண்டல துணை ஆணையரின் கட்டுப்பாட்டில் இயங்கிவருகிறது.

தற்போதைய கன்னியாகுமரி மாவட்டமும், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள செங்கோட்டை வட்டமும், முந்தைய திருவாங்கூர் மாநிலத்தின் ஆளுகையில் இயங்கிவந்தன. திருவாங்கூர் மாநில நில வருவாய்த்துறை, கி.பி.1881 ஆம் ஆண்டு திருக்கோயில்கள் நிருவாகத்தைப் பொறுப்பேற்றுக் கொள்ளும்வரை, இப்பகுதியிலிருந்து திருக்கோயில்கள் திருவாங்கூர் மாநில மன்னர்களின் நிருவாகத்திலிருந்தன. அவை 1921ஆம் ஆண்டு வரை, நிலவருவாய்த்துறையின் கட்டுப்பட்டிலியங்கி வந்தன. 1922-ம் ஆண்டிலிருந்து, இத்திருக்கோயில்கள், திருவாங்கூர் மாநிலத்தில் உருவாக்கப்பட்ட 'தேவாஸ்வம் துறை' யின் நிருவாகத்தின் கீழ், கொணரப்பட்டன. இத்துறை ஜீலை 31,1949ஆம் நாள் வரை, திருக்கோயில்களை நிருவகித்து வந்தன. ஆகஸ்ட் 2, 1949 முதல் "திருவாங்கூர் தேவாஸ்வம் வாரியம்" என்ற ஒரு சட்டபூர்வமான அமைப்பு இக்கோயில்களைப் தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டது.

நவம்பர் 1, 1956 முதல் மொழிவழி அடிப்படையில் மாநிலங்கள் திருத்தியமைக்கப்பட்ட பின்னர், அதாவது, கன்னியாகுமரி மாவட்டம், உருவாக்கப்பட்ட பின்னர், மாவட்டம் உருவாகுமுன், திருவாங்கூர் மாநிலத்தின் நேரடி கட்டுப்பாட்டிலியங்கிய திருக்கோயில்கள், 1959 ஆம் ஆண்டின் 30-வது சட்டத்தின்படி, அமைக்கப்பட்ட "கன்னியாகுமரி தேவாஸ்வம் வாரியம்" என்ற அமைப்பின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டன. இக்கோயில்களை இந்த வாரியம் டிசம்பர் 31, 1974 வரை, நிருவாகம் செய்து வந்தது. ஜனவரி 1, 1975 முதல், 50/1974 சட்டத்தின்படி, இக்கோயில்கள், இந்து சமய மற்றும் அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ், கொண்டு வரப்பட்டன. இச்சட்டத்தின்படி, மாவட்டத்திலுள்ள 490 கோயில்களையும் நிருவாகம் செய்ய உதவி ஆணையர் நிலையில், ஒரு அலுவலர், நியமிக்கப்பட்டுள்ளார். அவர், இந்து சமய மற்றும் அறநிலையத்துறை ஆணையரது, நிருவாகம் மற்றும் கட்டுப்பாட்டில் பணியாற்றுகிறார்.

இக்கோயில்களை நிருவகிக்கவும், பராமரிக்கவும் ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட ஒரு பொறுப்பாண்மைக்குழு, தமிழக அரசால், கடைசியாக 1980 ஆம் ஆண்டு நிறுவப்பட்டுள்ளது. இக்குழு, அதனுடைய தலைவரது அறிவுரைப்படி இயங்கிவருகிறது. ஒரு தொகுதியிலடங்கிய கோயில்கள், கோயில் கண்காணிப்பாளர்களின் பொறுப்பிலியங்குகின்றன. இக்கண்காணிப்பாளர்கள், அந்தக் கோயில்களைக் கண்காணித்து வருகிறார்கள். மேலும், மேலாளர்கள் அல்லது ஸ்ரீகார்யம் என அழைக்கப்படும் துணைத் தொகுதி அலுவலர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர் அவர்கள் தங்களது தொகுதிகளிலடங்கிய கோயில்களின் தினசரிப் பணிகளைக் கண்காணித்து வருகிறார்கள். 'ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட பொறுப்பாண்மைக்குழு, மூன்றாண்டு காலத்திற்கு 1980 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. 1983 ஆம் ஆண்டு, அக்குழுவின் பதவிக்காலம், முடிவுற்ற பின்னர், புதிதாக குழு அமைக்கப்படவில்லை. முந்தைய பொறுப்பாண்மைக்குழுவின் தலைவரே செப்டம்பர் 3,1987 வரை பொறுப்பாண்மையின் அதிகாரங்களை, தகுதியுள்ள நபர் என்ற நிலையில் பயன்படுத்தி வந்தார்.[14]

செம்டம்பர் 3,1987 நாளைய 1990 (வணிக வரி மற்றும் இந்து சமய மற்றும் அறநிலைத்துறை) எண். கொண்ட அரசாணையின் படி, ஏப்ரல் 9,1987 முதல், திருநெல்வேலி மண்டல துணை ஆணையர், பொறுப்பாண்மையின் பணிகளை ஆற்றி, அதனுடைய அதிகாரங்களையும் மேற்கொண்டு வருகிறார். துணை ஆணையரின் கட்டுப்பாட்டில், கன்னியாகுமரி மாவட்டத்தில் இரு உதவி ஆணையர்கள் பணியாற்றி வருகின்றனர். ஒரு உதவி ஆணையர் /நிர்வாக அலுவலர், இம் மாவட்டத்திலுள்ள ஒன்றுபடுத்தப்பட்ட மற்றும் ஒன்றுப்படுத்தப்படாத திருக்கோயில்களின் நிருவாகத்தை, சுசிந்திரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு கவனித்து வருகிறார். மற்றொரு உதவி ஆணையர், இம் மாவட்டத்திலுள்ள ஒன்றுபடுத்தப்பெற்ற மற்றும் ஒன்றுப்படுத்தப்படாத, திருக்கோயில்கள், நீங்கலாக, ஏனைய திருக்கோயில்களின் நிருவாகத்திற்குப் பொறுப்பு வகிக்கிறார். இவரது தலைமையிடம் நாகர்கோவில் ஆகும். இம் மாவட்டத்திலுள்ள பட்டியலிடப்படாத 436 திருக்கோயில்கள் நாகர்கோவிலுள்ள உதவி ஆணையரின் கட்டுப்பாட்டிலியங்கி வருகின்றனர். அவரின் கீழ், ஒரு இளநிலைப் பொறியளர், ஒரு தலைமை எழுத்தர், ஆறு ஆய்வாளர்கள், இரு நிர்வாக அலுவலர்கள், இரு உதவியாளர்கள், நான்கு இளநிலை உதவியாளர்கள் ஒரு தட்டச்சர், ஒரு சுருக்கெழுத்தாளர், ஒரு பதிவறை எழுத்தர், ஒரு இரவுகாவலர், மற்றும் எட்டு அலுவலக உதவியாளர்கள் ஆகியோர் பணியாற்றுகின்றனர். சுசீந்திரத்திலுள்ள, உதவி ஆணையரின் நிருவாகக் கட்டுப்பாட்டில், கோயில் கண்காணிப்பாளர்கள், மேலாளர், மேற்பார்வையாளர்கள், உதவியாளர்கள், இளநிலை உதவியாளர்கள் ஆகிய 88 அரசுப் பணியாளர்களும், அர்ச்சகர்களும்,

நாதஸ்வரம் மற்றும் தவில் வித்வான்கள், ஏனைய குற்றேவலர்கள் ஆகிய 1040 கோயில் பணியாளர்களும் பணியாற்றுகின்றனர்.

கோயில்களின் வருவாயைப் பெருக்கிட, அடியிற்குறிப்பிட்ட திட்டங்களைச் செயலாற்ற, இத்துறை, நடவடிக்கை எடுத்து வருகிறது:

கோடி அர்ச்சனை வழிபாட்டுத் திட்டம்,

நாள் அர்ச்சனை பூஜை வழிபாட்டுத்திட்டம், மற்றும்

திருமண மண்டபங்கள், மற்றும் கடைகளை, திருக்கோயில்களுக்குச் சொந்தமான இடங்களில் கட்டுதல்.

இம் மாவட்டத்தில், இத்துறைக்குச் சொந்தமான 138 ஏக்கர் நஞ்சை நிலங்களும், 235 ஏக்கர் புஞ்சை நிலங்களும், 648 ஏக்கர் மானவாரி நிலங்களும் உள்ளன. இந்த நிலங்களை உள்ளூர் விவசாயிகள் குத்தகைக்கு சாகுபடி செய்து வருகிறார்கள். இந்த நிலங்களினின்றும், 1987-88 ஆம் ஆண்டில் ரொக்கக் குத்தகையாக ரூபாய் 3.75 இலட்சமும், குத்தகை நெல்லாக 60,900 லிட்டர்களும், எதிர்பார்க்கப்படுகின்றன. இத்துறை மூன்று யானைகளையும் பராமரித்து வருகிறது. 'கோபாலன்' 'இராசன்', மற்றும் 'இந்திரன்' என்பது அவற்றின் பெயராகும் தேவாஸ்வம் திருவிழாக்களின் போது, ஊர்வலங்களின் முன்செல்ல, அவை பயன்படுத்தப்படுகின்றன.

இந்திய அரசியல் நிர்ணயச்சட்டத்தின் 290 (அ) விதியின் படி, இம் மாவட்டத்திலுள்ள ஒன்றுபடுத்தப்பட்ட திருக்கோயில்களுக்கு 13.5 இலட்ச ரூபாய் தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது. இவைதவிர, நிலங்கள், தோட்டங்கள் மற்றும் கட்டிடங்கள் ஆகியவற்றின் மூலம் வாடகை மற்றும் குத்தகைத் தொகை உண்டியல்களின் மூலம் வரவு, மற்றும் அர்ச்சனைக் கட்டணங்கள் ஆகியவற்றால் திருக்கோயில்களுக்கு வருவாய் கிடைக்கிறது.

ஒன்றுபடுத்தப்பட்ட 458 திருக்கோயில்களின் 1986-87 ஆம் ஆண்டின் வரவு மற்றும் செலவு முறையே ரூபாய் 47.03 இலட்சம் மற்றும் 60.95 இலட்சமுமாகும். 490 திருக்கோயில்களின் விவரங்கள் பின்வருமாறு:

ஒன்றுபடுத்தப்பட்ட திருக்கோயில்கள்	..458
ஒன்றுபடுத்தப்படாத திருக்கோயில்கள்	..18
சங்கேதம் திருக்கோயில்கள்	..12
ஸ்ரீ பாதம் திருக்கோயில்கள்	..2

490 திருக்கோயில்களின் மிகவும் முக்கியமான மற்றும் தொன்மையானவற்றின் பெயர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

அருள்மிகு கன்னியாகுமரி அம்மன் திருக்கோயில், கன்னியாகுமரி,

அருள்மிகு தாணுமாலயப்பெருமாள்திருக்கோயில், சுசீந்திரம்,

அருள்மிகு நாகராஜ சுவாமி திருக்கோயில், நாகர்கோவில்.

அருள்மிகு பகவதியம்மன் திருக்கோயில், மண்டைக்காடு,

அருள் மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயில், வெளி மலை

மற்றும்,

அருள்மிகு ஆதிகேசவப் பெருமாள் திருக்கோயில், திருவட்டார்.

செய்தி, சுற்றுலா மற்றும் மக்கட்தொடர்புதுறை

அரசின் பல்வேறு கொள்கைகள் மற்றும் திட்டங்கள் ஆகியவை குறித்து, பொது மக்களுக்குத் தெரிவிக்கவும், விளக்கவும், நாட்டு முன்னேற்றத்திற்கு அரசு மேற்கொள்ளப்படும் பெருமுயற்சிகள் குறித்து அவ்வப்போது அறிவிக்கவும் இத்துறை அமைக்கப்பட்டது.

தற்போது, மாநில அளவில், செய்தி, சுற்றுலா மற்றும் மக்கள் தொடர்புத்துறைக்கு தனி ஆணையர் மற்றும் அரசுச் செயலர் (செய்தி மற்றும் சுற்றுலா), தலைமை தாங்குகிறார். அவருக்கு அரசு இணைச் செயலர் மற்றும் இயக்குநர் (செய்தி மற்றும் மக்கட் தொடர்பு), இணை இயக்குநர் (நிருவாகம்), இணை இயக்குநர் (பொருட்காட்சி), மற்றும் நான்கு துணை இயக்குநர்கள். ஆகியோர் உதவி புரிகிறார்கள். அவர்கள் தங்களுக்கு பிரித்தளிக்கப்பட்டுள்ள பொருட்களான, மக்களுக்குத் தகவலளித்தல், மற்றும் வெளியீடுகள் ஆகியவற்றை கவனித்து வருகிறார்கள். அரசின் இணைச் செயலாளர்தான், செய்தி மற்றும் மக்கட்தொடர்பு இயக்குநராவார்.

மாநிலங்கள் சீரமைக்கப்பட்டு, 1956 ஆம் ஆண்டு புதிய கன்னியாகுமரி மாவட்டம் உருவாக்கப்பட்ட பின்னர், முந்தைய சென்னை அரசு, விளம்பரத்திட்டங்களைக் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு விரிவாக்கியது. முதற்கட்டமாக, 1957 ஆம் அண்டு அக்டோபர் மாதம், ஒரு தகவல் நிலையம், ஒரு தகவல் உதவியாளர், பொறுப்பில் நாகர்கோவிலில் திறக்கப்பட்டது.

தற்போது, இம்மாவட்டத்தில், ஒரு செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர் பணியாற்றி வருகிறார். அவருக்கு இரண்டு மக்கள் தொடர்பு அலுவலர்கள் உதவி புரிகிறார்கள். செய்தித்தாட்கள், அகில இந்திய வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றின் நிருபர்களுக்கு, மாவட்ட நிருவாகம் மற்றும் பல்வேறு வளர்ச்சிப்பணி முன்னேற்றம், குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் ஒப்புதலுடன், செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர், செய்தித் தொகுப்பினை அளித்து வருகிறார். அவர், அரசு அவ்வப்போது பிறப்பிக்கும் ஆணைகளுக்கொப்ப, அரசு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து, சிறப்புற நடத்தி முடித்திடும் பொறுப்பினை வகிக்கிறார். அவர், சென்னை செய்தி மற்றும் மக்கட் தொடர்பு இயக்குநரின் நிருவாகக் கட்டுப்பாட்டில் இயங்கிவருகிறார். திரைப்படங்களை இயக்குவோர், அடிக்கடி கிராமங்கள்,

தகவல் நிலையங்கள் மற்றும் ஏனைய இடங்களைப் பார்வையிட்டு, குடும்ப நலத் திட்டங்கள், சிறு சேமிப்பு, வேளாண் அபிவிருத்தி, தேசிய ஒருமைப்பாடு போன்ற நாட்டு முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு அம்சங்கள் குறித்த, திரைப்படங்களை மக்களுக்குக் காண்பிக்கிறார்கள். மாவட்டச் செய்தி, மற்றும் மக்கள்தொடர்பு அலுவலரின் கட்டுப்பாட்டில் ஒரு முழு நேர நிழற்படம் எடுப்பவர் பணியாற்றுகிறார். முக்கிய அரசு நிகழ்ச்சிகள் நடைபெறும் போது மாவட்ட ஆட்சித் தலைவருடைய ஒப்புதலின் பேரில், நிழற்படம், எடுப்பவரின் பணி பயன் படுத்தப்படுகிறது.

நீதித் துறை

அரசியல் நிர்ணயச் சட்டத்தில் வகுத்துள்ளவாறு அனைத்துக் குடிமக்களுக்கும் நீதியை நிலை நாட்டுவதே, அரசின் கொள்கையாகும்.[15] நீதி நிருவாகம் என்பது, பல்வேறு நீதி மன்றங்களின் பொறுப்பாகும். நீதித்துறையின் அலுவல்கள், அரசு நிருவாகம் மற்றும் அரசு நிருவாக இயந்திரத்தின் பணி ஆகியவற்றிற்கு அப்பாற்பட்டதாகும். அனைத்துத் தரப்பிலும் தாமதத்தை தவிர்த்திட, அரசு அரும்பாடுபட்டு வருகிறது. குறிப்பாக, உயர்நீதி மன்றத்தின் பரிந்துரையின் பேரில், புதிய மற்றும் கூடுதல் நீதி மன்றங்களை அரசு உடனுக்குடன் நிறுவி, அவை சிறப்புற செயல்படத் தேவையான பணியாளர்கள், இருப்பிடங்கள் தட்டுமுட்டுபொருட்கள், போன்ற அனைத்து வசதிகளையும் செய்து கொடுப்பதிலிருந்தே அரசு, நீதித்துறையின் மீது, அக்கறை செலுத்தும் பாங்கு தெரியவரும்.

மாநில அளவில், உயர்நீதி மன்றங்கள், நீதித்துறை உயர் மட்ட நீதி மன்றங்களாகும். அவற்றில், (உயர் நீதி மன்றம்) நீதிபதிகள் நிருவாகம் செய்து வருகிறார்கள், மூலத் தரப்பு மற்றும் மேல் முறையீடுகள் தரப்புகளில் நீதிபதிகள் மற்றும் பதிவாளர் தவிர, மொழி பெயர்ப்பு மற்றும் அச்சுத்துறை, சட்டச் செய்தியாளர்கள் பணியாளர் தொகுதி, பாண்டிச்சேரி உதவிப் பதிவாளர், பாண்டிச்சேரிப் பகுதியில் பல்வேறு பணிகளைப் மேற்கொள்ளும் பணியாளர்கள், சென்னை மாநகர மணியம் (ஷெரிப்), அவரது பணியாளர்கள், பணித்துறைப்பிரதிநிதியாகச் செயலாற்றுபவர், மற்றும் அவரது பணியாளர்கள் ஆகியோர் அடங்கியவை, உயர்நீதி மன்றத்தின் பிற அலகுகளாகும். முதன்மை நீதிபதியைச் சேர்த்து, உயர்நீதி மன்றத்தின் மொத்த நீதிபதிகளின் எண்ணிக்கை 25 ஆகும். பதிவாளர், உயர்நீதி மன்றத்தின் தலைமை நிருவாகி ஆவார், கூடுதல் பதிவாளர், மேலாளர், துணைப் பதிவாளர், அலுவலக நடுவர், வழக்குகளை வகைப்படுத்தும் தனி அலுவலர் உதவிப்பதிவாளர், துணை உதவிப்பதிவாளர், முதுநிலைக் கணக்கு அலுவலர் மற்றும் அமைச்சுப் பணியாளர்கள் ஆகியோர், நிருவாகத்தில் பதிவாளருக்கு உதவி புரிந்து வருகிறார்கள்.

மாவட்ட நிலை

மாவட்டங்களில், அரசு வழக்குரைஞர்கள், அரசுப் பணியாற்றும் வழக்கறிஞர்கள், குற்றவியல் அரசாங்க வழக்குரைஞர்கள், உதவி குற்றவியல் அரசாங்க வழக்குரைஞர்கள் ஆகியோர், மாவட்ட ஆட்சித் தலைவரின் கட்டுப்பாட்டில் பணியாற்றிவருகின்றனர். மாவட்ட முன்சீஃப் நீதி மன்றங்கள், மற்றும் சார்நிலை நீதி மன்றங்கள் ஆகியவற்றில், அரசு வழக்கறிஞர்கள் நியமிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு இசைவளிக்கப்பட்ட கட்டணம் வழங்கப்படுகிறது. ஆனால், அவர்கள் வேலைத் தொடர்புத்தொகை, பெறத்தகுதியற்றவர்கள். துறைத் தலைமை அலுவலர்களால் இசைவளிக்கப்பட்ட கட்டணம், சட்ட அலுவலர்களுக்கு வழங்கப்படுகிறது. இக்கட்டணம், அரசாங்கத்தாலோ, அல்லது துறைத் தலைமை அலுவலராலோ, அவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள நிதி ஒப்புதல் வழங்கும் அதிகார வரம்பிற்கேற்ப அளிக்கப்படுகிறது. குற்றவியல் நீதி மன்றங்களில், அரசு சார்பில் வழக்குகளை நடத்துவதற்காக, 1973 ஆம் ஆண்டு, குற்றவியல் நடைமுறை, சட்டத்தொகுப்பேட்டின் 25-வது பிரிவின்படி, நிலை-1 மற்றும் 2 உதவி குற்றவியல் அரசு வழக்குரைஞர்கள், தமிழக அரசால் நியமிக்கப்படுகிறார்கள். அவர்கள் முறையான ஊதிய விகிதத்தில் நியமிக்கப்படும் முழுநேர அரசு அலுவலர்களாவர். தற்போது, உதவி குற்றவியல் அரசாங்க வழக்குரைஞர்களின் அலுவல்களை ஆய்ந்து மேற்பார்வையிட, தனியாக, துறைத்தலைமை இயங்கவில்லை. நிருவாக நலனுக்காக, மாவட்டங்களில் பணியாற்றும் குற்றவியல் அரசாங்க வழக்குரைஞர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கட்டுப்பாட்டிலும், சென்னை மாநகரில் பணியாற்றும் குற்றவியல் அரசாங்க வழக்குரைஞர்கள் சென்னை காவல் துறை ஆணையரின் கட்டுப்பாட்டிலும் பணியாற்றுகிறார்கள்.

அரசு, அண்மை காலத்தில், "குற்ற வழக்குத் தொடர்பு இயக்ககம்" என்ற ஒரு புதிய துறையினை அமைத்து, ஆணை பிறப்பித்துள்ளது. இவ்வாணையின் படி, குற்றவழக்குத் தொடர்பு இயக்குநரின் அலவலகம், சென்னையிலும், எட்டு உதவி இயக்குநர்களின் அலுவலகங்கள் சென்னை, செங்கல்பட்டு, திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர், வேலூர் மற்றும் இராமநாதபுரம் ஆகிய மண்டலங்களிலும் இயங்க உள்ளன. புதிய அலுவலகங்களை உருவாக்கிடும் பல்வேறு பணிகளை சென்னையிலுள்ள தனி அலுவலர் கவனித்து வருகிறார். இத்துறை, விரைவில் துவங்கவிருக்கிறது. இம் மாவட்டத்தில், ஒரு குற்றவியல் அமர்வு நீதிமன்றம் நாகர்கோவிலில் இயங்குகிறது. இது தவிர மூன்று சார்நிலை நீதி மன்றங்கள், நாகர்கோவில், குழித்துறை மற்றும் பத்மநாபபுரம் ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன. இத்துறை சார்ந்த கூடுதல் தகவல்களுக்கு "சட்டம் , ஒழுங்கு மற்றும் நீதி" என்ற இயலினை நோக்கிட வேண்டப்படுகிறது.

தொழிலாளர் துறை[16]

தொழில் நிறுவனங்களில் நிருவாகிகள் மற்றும் அவற்றில் பணியாற்றும் தொழிலாளர்கள் ஆகிய இரு தரப்பினரிடையே கருத்து வேறுபாடு எற்படும் போது அடிக்கடி தலையிட்டு, இருதரப்பினரிடையே பேச்சு வார்த்தையிலீடுபட்டு, தீர்வு காண்பதே, தொழிலாளர் துறையின் பணியாகும். இதுதவிர, தொழிலாளர்களுக்குப் பணிப்பாதுகாப்பு அளித்தல், தொழிலாளர் பணி மேம்பாடு மற்றும் தொழிலாளர் நலத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல், தொழிலாளர்கள் சார்பாக சமூகப்பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் ஆகியவை குறித்து அரசு பிறப்பித்துள்ள பல்வேறு தொழிலாளர் நலச்சட்டங்களை அவ்வப்போது செயலாக்கும் பொறுப்பினையும், இத்துறை ஏற்றுள்ளது.

சென்னையில் பணியாற்றிவரும் தொழிலாளர் நல ஆணையர் தான் துறைத்தலைமை அலுவலராவார். "இணக்கப் போச்சுவார்த்தைகள் நடத்துதல், தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச உதியம் வழங்குதல், சரியான எடைகள் மற்றும் அளவைகளை வணிகர்கள் பயன்படுத்துவதை நடைமுறைப்படுத்துதல்" போன்ற பல்வேறு பணிகள் தொடர்பாக, இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை அலுவலர்கள், ஆணையருக்கு உதவிபுரிந்து வருகிறார்கள். இவ்விதப் பணிகளுக்குப் பொறுப்பேற்றுள்ள அலுவலர்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

இணக்கப்படுத்தல்

தொழிலாளர் நல இணை ஆணையர் (இணக்கப்படுத்தல்)

தொழிலாளர் நல இணை ஆணையர் (நிருவாகம்)

தொழிலாளர் நல தனித்துணை ஆணையர்

தொழிலாளர் நல துணை ஆணையர் (மேல்முறையீடு)

தொழிலாளர் நல உதவி ஆணையர் (தலைமையிடம்)

குறைந்த அளவு ஊதியம்

தொழிலாளர் நல துணை ஆணையர் (குறைந்த அளவு ஊதியம்)

தொழிலாளர் நல உதவி ஆணையர் (ஒப்பந்தத் தொழிலாளர் நியமனம்)

நிருவாக அலுவலர் (குறைந்த அளவு ஊதியம்)

நிருவாகம்

தொழிலாளர் நல உதவி ஆணையர் (பணியாளர் தொகுதி மற்றும் பொது)

கணக்கு அலுவலர்

நிருவாக அலுவலர் (பொது)

மக்கள் தொடர்பு அலுவலர்.

எடைகளும், அளவைகளும்

தொழிலாளர் நல துணை ஆய்வாளர் -தலைமையிடம்

நிருவாக அலுவலர் - எடைகள் மற்றுக் களவுகள்

தொழிலாளர் நல துணை ஆணையர் - தலைமையிடம்

தொழிலாளர் நல இணை ஆணையர்கள், மண்டல துணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள், ஆய்வாளர்கள் மற்றும் துணை ஆய்வாளர்கள் ஆகியோர், மாவட்ட அளவில், நாகர்கோவில் அலுவலகங்களமைத்துக் கொண்டு, துறை சார்புள்ள பற்பல பணிகளை செயலாற்றிட, ஆணையருக்குத் துணை புரிகிறார்கள்.

மண்டல மற்றும் மாவட்ட அளவில் பணியாற்றும் அலுவலர்கள் மற்றும் அவர்களது சட்டபூர்வமான அலுவல்கள் ஆகியவை கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

மண்டல அளவில், சென்னை, கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் மூன்று தொழிலாளர் நல இணை ஆணையர்கள் பணியாற்றி வருகிறார்கள். சென்னையிலுள்ள தொழிலாளர் நல இணை ஆணையர், சென்னை செங்கல்பட்டு, எம்.ஜி.ஆர். வடஆற்காடு (வேலூர்) மற்றும் விழுப்புரம் திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களுக்குப் பொறுப்புவகிக்கிறார். கோயம்புத்தூர் மண்டல தொழிலாளர் நல இணை ஆணையாளர், கோயம்புத்தூர், நீலகிரி, ஈரோடு, சேலம் மற்றும் தர்மபுரி ஆகிய மாவட்டங்களுக்கும், மதுரை, தொழிலாளர் நல ஆணையர் மதுரை, இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், திண்டுக்கல்-தேனி, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், புதுக்கோட்டை மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களுக்குப் பொறுப்பேற்றுள்ளார்கள். இவர்கள் தவிர, சென்னை-1, சென்னை-2, திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர் மற்றும் சேலம் ஆகிய மண்டலங்களில், மண்டலத் துணை ஆணையர்கள் பணியாற்றி வருகின்றனர். அவர்களுக்கு, கீழ்க்குறிப்பிட்ட அலுவலர்களும், பணியாளர்களும் திறமையாக உதவி புரிந்து வருகின்றனர்.

மண்டல நிலை அலுவலர்கள்

தொழிலாளர் நல உதவி ஆணையர்கள்	15
தொழிலாளர் நல அலுவலர்கள்	20
தொழிலாளர் நல ஆய்வாளர்கள்	19
தோட்டப்பண்ணை ஆய்வாளர்	7

மருத்துவ அலுவலர் (தோட்டப்பண்ணை)	2
தொழிலாளர் நல துணை ஆய்வாளர்	65
தொழிலாளர் நல உதவி ஆய்வாளர்	206
முத்திரை பொறிப்பீடு ஆய்வாளர்	63
புள்ளிவிவர ஆய்வாளர்	16

இம்மாவட்டத்தில் நிருவாக அமைப்புமுறை

திருநெல்வேலியிலுள்ள தொழிலாளர் நல மண்டல துணை ஆணையர், மதுரை தொழிலாளர் நல மண்டல இணை ஆணையரின் மேற்பார்வையில், அவரது மண்டலத்திலுள்ள துறை தொடர்பான அலுவல்களை கவனித்து வருகிறார்கள். கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி தொழிலாளர் நல துணை ஆணையரது நிருவாகப் பொறுப்பிலுள்ளது. அவரது கட்டுப்பாட்டில், தொழிலாளர் நல (இணக்கப்படுத்தல்) உதவி ஆணையாளர் ஒருவர், ஒரு (தோட்டப்பண்ணை) ஆய்வாளர், இரண்டு தொழிலாளர் நல துணை ஆய்வாளர்கள் மற்றும் ஆறு தொழிலாளர் நல உதவி ஆய்வாளர்கள் ஆகியோர் பணியாற்றி வருகிறார்கள்.

தொழிலாளர் நல (இணக்கப்படுத்தல்) உதவி ஆணையரும், தொழிலாளர் நல அலவலர்களும், அவர்களது சரகத்தில் எழக்கூடிய தொழில் சார்ந்த கருத்து வேறுபாடுகளை, தாமதமின்றி அவ்வப்போது இணக்கப்படுத்தும் பொறுப்பினை ஏற்றுள்ளார்கள். 1951 ஆம் ஆண்டு தோட்டப் பண்ணை தொழிலாளர் நலச்சட்ட விதிமுறைகளை நடைமுறைப் படுத்தும் பொறுப்பினை தோட்டப்பண்ணை ஆய்வாளர் ஏற்றுள்ளார்.

தொழிற்சாலைகள் மற்றும் தோட்டப்பண்ணை நீங்கலாக, பல்வேறு பணியாளர் தொகுதி தொழிலாளர் நல சட்டங்களை நடைமுறைப்படுத்து வதில் தொழிலாளர் நல துணை ஆய்வாளர்களும், உதவி ஆய்வாளர்களும், தொழிலாளர் நல ஆய்வாளருக்கு உதவி புரிகிறார்கள். செயலாக்கப்பெறும் பல்வேறு தொழிலாளர் நல சட்டங்கள் குறித்து இவ்விவரச் சுவடியின்பிற சமூகப் பணிகள் என்ற இயலில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

மருத்துவத்துறை

பொது மக்களின் பல்வேறு உடல்நலம் பேணும் திட்டங்களை செயல் முறைப்படுத்த கீழ்க்குறிப்பிட்ட இயக்குநர்கள் தனித்தனித்துறையாக தமிழக அரசின் பொதுசுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறையின் கட்டுப்பாட்டில் இயங்கிவருகிறார்கள்.

1. இயக்குநர் (பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து)
2. இயக்குநர் (முதன்மை சுகாதார நிலையங்கள்)
3. இயக்குநர் (மருத்துவப்பணி மற்றும் குடும்ப நலம்)

4. இயக்குநர் (பொது சுகாதாரம், பயிற்சி மற்றும் தொடர்கல்வி)

5. இயக்குநர் (குடும்ப நலம்)

6. இயக்குநர் (மருத்துவக் கல்வி)

7. இயக்குநர் (இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி)

சென்னை, பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு இயக்குநர், பொதுசுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு துறையின் தலைமை அலுவலராவார். அவர், பிளேக் நோய் கட்டுப்பாடு, தொத்து நோய் கட்டுப்பாடு, நரம்புச் சிலந்தி ஒழிப்புத் திட்டம், மலேரியா, மற்றும் யானைக்கால், நோய்கள் கட்டுப்பாட்டுத்திட்டங்கள் ஆகியவற்றை நடைமுறைப்படுத்தி வருகிறார்.

இரண்டு கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர்கள், துணை இயக்குநர்கள், முதன்மைப்பூச்சி ஒழிப்பு அலுவலர், உதவி இயக்குநர் (புள்ளிவிவரங்கள்) மற்றும் முதன்மைக் கணக்கு அலுவலர், ஆகியோர் தலைமையிடத்திலும், பொது சுகாதாரம், மற்றும் நோய்த் தடுப்பு மருந்து மண்டல துணை இயக்குநர்கள் தொடர்புள்ள மண்டலங்களில், ஒவ்வொருவரும், ஒரு சுகாதார அலகு மாவட்டத்திற்கு பொறுப்பேற்று பணியாற்றி வருகிறார்கள்.

மருத்துவப் பணிகள் மற்றும் குடும்ப நலத்திட்டங்கள், மேலும் பணியாளர்கள் மாநில காப்பீட்டுத் திட்டம் ஆகியவற்றை மருத்துவப்பணிகள் மற்றும் குடும்ப நல இயக்குநர் நிறைவேற்றுகிறார். மருத்துவப் பணிகள் மற்றும் குடும்ப நல இயக்குநருக்கு, திட்டம் மற்றும் வளர்ச்சிப்பணி, நோய் நீக்கல் மருந்து மற்றும் மருத்துவம் சார்ந்த பணி ஆகியவை தொடர்பான மூன்று இணை இயக்குநர்கள் உதவி புரிகிறார்கள். இரண்டு உதவி இயக்குநர்களில் ஒருவர் தொழுநோய் கட்டுப்பாட்டுத்திட்டம், மற்றொருவர் பணியாளர் மாநிலக் காப்பீட்டுத் திட்டம் ஆகியவற்றை நடைமுறைப் படுத்துவதில் ஈடுபட்டுள்ளார்கள்.

மாவட்டத் தொழுநோய் அலுவலரும், மாவட்ட எலும்புருக்கி நோய் அலுவலரும், மாவட்ட நிலையில், தத்தம் திட்டங்களைச் செயலாக்கிட தனித்தனி அதிகாரம் பெற்ற அலுவலர்களாவர். அவர்களிருவரும் மாவட்ட மருத்துவ அலுவலரின் மேற்பார்வையில் பணியாற்றி வருகிறார்கள். எனினும், தொழுநோய் திட்டங்கள் மற்றும் பணியாளர் தொகுதி ஆகிய அலுவல் குறித்து, மாவட்ட தொழுநோய் அலுவலர், மாவட்ட மருத்துவ அலுவலருக்கு சமமான அதிகாரங்களைப் பெற்றவராவார். அரசு மருந்தகங்கள் உள்ளிட்ட மாவட்ட, வட்ட, வட்டத்திலடங்காத மருந்தகங்கள் மூலமாக கிராமப்புற மக்களுக்கு உரிய மருத்துவ உதவி அளித்திட அவர் பொறுப்பு வகிக்கிறார். திட்டம், வளர்ச்சிப் பணி, தொழுநோய் மற்றும் எலும்புருக்கி நோய்

கட்டுப்பாட்டுத் திட்டங்கள் ஆகியவற்றை செம்மையாக நடைமுறைப்படுத்திவரும், இயக்குநருக்கு மருத்துவப்பணி துணை இயக்குநர் உதவி புரிகிறார்.

ஆரம்ப சுகாதார நிலையங்களை நிருவகிக்கும் பொறுப்பினை, ஆரம்ப சுகாதார மையங்களின் இயக்குநர் வகிக்கிறார். மாநிலத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் அவரது கட்டுப்பாட்டிலியங்கி வருகின்றன. மாநில அளவில், ஒரு துணை இயக்குநரும், ஒரு நிருவாக அலுவலரும் இயக்குநருக்கு உதவி புரிந்து வருகின்றனர்.

மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும் அனைத்து மருத்துவப் பணிகளுக்கும் மாவட்ட மருத்துவ அலுவலரே பொறுப்பேற்கிறார். தொழு நோய் மற்றும் எலும்புருக்கி நோய் தடுப்பு மற்றும் ஒழிப்புத் திட்டங்களை மாவட்டத்தில் நடைமுறைப்படுத்திட, மாவட்ட தொழுநோய் அலுவலரும், மாவட்ட எலும்புருக்கி நோய் அலுவலரும் பணியாற்றி வருகிறார்கள்.

நடமாடும் சுகாதாரப் பணிகள், சமூக சுகாதார நிலையங்கள் மற்றும் சிறு சுகாதார நிலையங்கள் ஆகியவை தொடர்பான திட்டங்கள் ஆரம்ப சுகாதார நிலையங்களின் இயக்குநரது அறிவுரைகளின் பேரில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. மாவட்டத்தில் மாவட்ட சுகாதார அலுவலர், மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களின் மருத்துவ அலுவலர்கள் ஆகியோரால் பல்வேறு சுகாதாரத் திட்டங்கள் செயல் முறைப்படுத்தப்படுகின்றன.அவர்கள், ஆரம்ப சுகாதார நிலையங்களின் நிருவாகக் கட்டுப்பாட்டில் பணியாற்றுகிறார்கள். மாவட்டத்தில் பல்வேறு குடும்ப நலத்திட்டங்களை, நாகர்கோவிலுள்ள மாவட்ட குடும்ப நல மற்றும் குழந்தைகள் நல அலுவலர் செயலாற்றி வருகிறார். அவர், மாநில குடும்ப நல இயக்குநரின் கட்டுப்பாட்டில் பணியாற்றிவருகிறார். பல்வேறு குடும்ப நல திட்டங்கள் மற்றும் நடவடிக்கைகள் குறித்து இவ்விவரச் சுவடியின் "மருத்துவம் மற்றும் பொதுச் சுகாதாரப் பணிகள்" என்ற இயலில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

காவல்துறை

தமிழ்நாடு காவல்துறை, இந்தியா முழுமையிலுமே முதன்மையான இடத்தை வகிக்கிறது. பெண் காவல் அலகினைத் துவக்கியதிலும், காவல் துறையினருக்கு மானிய விலையில் இன்றியமையாப் பொருட்கள் வழங்குவதிலும், அவர்களுக்கு வசதி செய்து கொடுப்பதிலும் தமிழ்நாடு முன்னோடியாகத் திகழ்கிறது. இத்துறை நல்லமுறையில் பொது மக்கட் தொடர்பு வைத்துள்ளது. மிகுந்த திறமையுடனும், உறுதியுடனும், துணிவுடனும் இத்துறை பணியாற்றுகிறதெனில் மிகையில்லை.

மாநில அளவில், இத்துறை, காவல்துறை தலைவரால் நிர்வகிக்கப்படுகிறது. அவருக்கு நிருவாகத்தில் உதவி புரிய நான்கு துணைத்

தலைவர்களும் உதவித் துணைத் தலைவர்கள் கண்காணிப்பாளர்கள் தனி உதவியாளர்கள், முதுநிலைக் கணக்கு அலுவலர், சென்னை நகர காவல்துறை ஆணையர், துணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள், ஆய்வாளர்கள், துணை ஆய்வாளர்கள் மற்றும் காவலர்கள் ஆகியோர் உள்ளனர்.

இம்மாநிலம் ஆறு காவல் சரகங்களாகவும், 23 காவல் மாவட்டங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு சரகத்திற்கும் ஒரு காவல் துறை துணைத் தலைவர் ஆய்வாளர் தலைமை வகிக்கிறார். அதேபோன்று, ஒவ்வொரு காவல் மாவட்டமும், ஒரு கண்காணிப்பாளர் தலைமையில் இயங்கிவருகிறது.

கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி காவல்துறை துணைத் தலைவரின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது. அவரது ஆலோசனையைப் பெற்றும், மேலும் அவரது கண்காணிப்பிலும், கன்னியாகுமரி மாவட்டக் காவல்துறை கண்காணிப்பாளர் பணியாற்றுகிறார். இம் மாவட்டத்தில் காவற்றுறை கண்காணிப்பாளரின் கட்டுப்பாட்டில், கூடுதல் கண்காணிப்பாளர், ஆறு துணைக்கண்காணிப்பாளர், 22 ஆய்வாளர்கள் மற்றும் 75 துணை ஆய்வாளர்கள் ஆகியோர் பணியாற்றுகிறார்கள். இவ்விரச் சுவடியின் 'சட்டம் ஒழுங்கு மற்றும் நீதி" என்ற தலைப்பில் உரிய இயலில் இத்துறை தொடர்பான விரிவான தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

சிறைத்துறை

1977 ஆம் ஆண்டிற்கு முன்னர் 119 கிளைச்சிறைகள் வருவாய்த் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கி வந்தன. 1977ஆம் ஆண்டிற்கு பின்னர் 1983ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திற்குள்ளாக அவையாவும் சிறைத்துறையின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டுவிட்டன.

இத்துறை, எட்டு மத்திய சிறைகளையும், பெண்களுக்கு என வேலூரில் ஒரு தனிச் சிறையையும், மதுரையில் ஒரு தனி சிறையையும், புதுக்கோட்டையில் இளம் குற்றவாளிகள் சிறை ஒன்றையும், மூன்று சிறப்பு கிளை சிறைகளையும் 117 கிளைச்சிறைகளையும், சிங்காநல்லூரில் திறந்த வெளி சிறையொன்றினையும், பராமரித்து வருகிறது.

சிறைத்துறையின் தலைமை அலுவலர், சிறைகளின் முதன்மைத்தலைவர் ஆவார். அவருக்கு உதவியாற்ற, சிறைகளின் துணை முதன்மைத் தலைவர், கணக்கு அலுவலர், உதவி கணக்கு அலுவலர், தனி உதவியாளர், சிறைகள் துணை கண்காணிப்பாளர், கூடுதல் கண்காணிப்பாளர்கள், சிறை அலுவலர், உதவி அறுவை மருத்துவர், முதன்மை கண்காணிப்பாலோசனை அதிகாரி, கண்காணிப்பாலோசனை அதிகாரிகள், மற்றும் ஏனைய அமைச்சுப்பணியாளர்கள் ஆகியோர் உதவி புரிகிறார்கள்.

கன்னியாகுமரி மாவட்டத்தில், நாகர்கோவில், தக்கலை மற்றும் குழித்துறை ஆகிய இடங்களில், கிளைச்சிறைகள், இயங்கிவருகின்றன. இக்கிளைச் சிறைகளுக்கு, பாளையங்கோட்டை மத்திய சிறை கண்காணிப்பாளர் கட்டுப்பாட்டு அலுவலர் ஆவார். ஒவ்வொரு கிளைச் சிறையும் கிளைச்சிறை கண்காணிப்பாளர் என அழைக்கப்படும் உதவி சிறை அலுவலரின் பொறுப்பில் இயங்குகிறது. அவர்களுக்கு அன்றாட நிருவாகப்பணிகளில் சிறைக்காவலர் துணைபுரிகிறார். [18]

பொதுப்பணித்துறை

அணைக்கட்டுகள், நீர்த்தேக்கங்கள், பாலங்கள், வாரணைகள், மதகுகள், நிலங்கள் அமைத்தல், துறையின் கட்டுப்பாட்டிலுள்ள பெரிய நீர்ப்பாசனக் குளங்கள் மற்றும் ஏரிகளை ஆழப்படுத்துதல், ஆற்றுப்பாதுகாப்பு பணிகள், பெரிய கால்வாய்கள் மற்றும் வாய்க்கால்கள் அமைக்கும் திட்டங்கள், அரசு கட்டிடங்களைக் கட்டுதல் மற்றும் மராமத்துச் செய்தல் போன்ற பல்வேறு பணிகளை முறையாக செய்து முடித்திட பொறுப்பேற்கிறது. இப்பணிகளைத் தாமதமின்றி நிறைவேற்றி முடித்திட, ஒவ்வொரு பெரிய பணியும் ஒரு தலைமைப் பொறியாளரின் பொறுப்பில் மேற்கொள்ளப்படுகிறது. அவருக்கு, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை அலுவலர்களும், இதர பணியாளர்களும் உதவி புரிகிறார்கள்.

இத்துறைக்கு எட்டு முதன்மைப் பொறியாளர்கள் தலைமை வகிக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு முதன்மை கட்டிடக் கலைஞர், பல்வேறு கண்காணிப்புப் பொறியாளர்கள், முதன்மை துணைக் கண்காணிப்புப் பொறியாளர்கள், நிருவாகப் பொறியாளர்கள், துணைப் முதன்மைப் பொறியாளர்கள், இயக்குநர், துணை இயக்குநர், முதுநிலை கட்டிடக்கலைஞர், உதவி நிருவாகப் பொறியாளர்கள், உதவிப் பொறியாளர்கள், தலைமை வரைவு வல்லுநர், தனி அலுவலர்கள், நிருவாக அலுவலர் மற்றும் ஏனையோர் இணைந்து செயல்படும் பணியாளர்கள் ஆகியோர் உதவி புரிகிறார்கள். நிர்வாக நலனுக்காக இந்தத் துறை பல கோட்டங்களாகவும் துணைக் கோட்டங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. கண்காணிப்புப் பொறியாளர், திருநெல்வேலி கோட்டத்திற்கு பொறுப்பு வகிக்கிறார். திருநெல்வேலி வட்டத்தில், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் ஆகியவை அடங்கும்.

கன்னியாகுமரி கோட்டமானது, முந்தைய திருவாங்கூர் மாநிலத்திடலங்கிய பாசனக் கோட்டங்களிலொன்றாகும். இம்மாவட்டம், 1956 ஆம் ஆண்டு தமிழ்நாட்டுடன் இணைந்த பின்னர், இது தமிழ்நாட்டின் பொதுப்பணித்துறைக் கோட்டங்களிலொன்றானது. இக்கோட்டம், நீர்ப்பாசனக்கட்டுமானப் பணிகள் மற்றும் கட்டிடங்கள் ஆகியவை கட்டுவதில், மாவட்ட முழுமையும், அதிகார எல்லையினைப் பெற்றுள்ளது.

1968ஆம் ஆண்டு, பொதுப்பணித்துறை சீரமைக்கப்பட்ட பின்னர், இக்கோட்டம், முழுமையிலும், முறையான அதிகார எல்லையைக் கொண்ட கோட்டமாக இயங்குகிறது. இக்கோட்டம், தனது கட்டுப்பாட்டில் கீழ்க்கண்ட நான்கு நிலையான துணைக்கோட்டங்களைக் கொண்டதாகும்.

1. நாகர்கோவில் துணைக்கோட்டம் : நாகர்கோவில் - இதில் அகஸ்தீஸ்வரம், தோவாளை மற்றும் கல்குளம் வட்டங்கள் அடங்கியுள்ளன.
2. தக்கலை துணைக்கோட்டம்: தக்கலை கல்குளம் மற்றும் அகஸ்தீஸ்வரம் வட்டங்கள் இதனில் அடங்கியவை.
3. செருப்பாலூர் துணைக்கோட்டம்: செருப்பாலூர், விளவங்கோடு மற்றும் கல்குளம் வட்டங்கள் இத்துணைக் கோட்டத்தில் அடங்கியுள்ளன.
4. தக்கலையிலுள்ள மற்றொரு துணைக்கோட்டம், விசாரணைப்பணி மற்றும் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு மதிப்பீடுகள் தயாரித்தல், ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளது.

தக்கலையிலுள்ள இந்த விசாரணை உட்கோட்டத்தின் கட்டுப்பாடு, தற்காலிகமாக நாகர்கோவிலுள்ள பட்டணங்கால் கோட்டத்திற்கு ஜனவரி 1, 1975 முதல் மாற்றப்பட்டுள்ளது. பட்டணங்கால் கோட்டம் மூடப்பட்ட பின்னர், மார்ச் 1, 1977 முதல் இக்கோட்டம், பட்டணங்கால் கோட்டத்தினின்றும் பிரிக்கப்பட்டு, கன்னியாகுமரி கோட்டத்துடன் சேர்க்கப்பட்டது. தக்கலையிலுள்ள விசாரணைப்பணி சிறப்புக் கோட்டம், பின்னர், இக்கோட்டத்தினின்றும் பிரிக்கப்பட்டு, பாளையங்கோட்டையிலுள்ள திட்ட விசாரணைப் பணிக் கோட்டத்துடன், ஏப்ரல் 1, 1982 முதல் சேர்க்கப்பட்டது. அதே போன்று, நாகர்கோவில் துணைக்கோட்டத்திலுள்ள ஆறு பிரிவுகளில், நாகர்கோவிலுள்ள ஒரு மின் ஆற்றல் பிரிவு இக்கோட்டத்தினின்றும் பிரிக்கப்பட்டு, மதுரை மின்ஆற்றல் கோட்டத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பாளையங்கோட்டை மின் ஆற்றல் பிரிவுடன் பிப்ரவரி1, 1983 முதல் சேர்க்கப்பட்டது.

இதற்கிடையே, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பள்ளிக்கட்டிடங்களைக் கட்டுவதற்காகவே, ஒரு சிறப்பு துணைக்கோட்டம் அமைத்திட, ஒப்புதல் வழங்கப்பட்டது.[19] மே 18,1970 அன்று, நாகர்கோவில் அமைக்கப்பட்ட இந்த துணைக்கோட்டம், இன்னமும், இயங்கிவருகிறது. அது அமைக்கப்பட்ட பின்னர், நாகர்கோவிலில், தக்கலை மற்றும் குழித்துறைப் பிரிவுகளில், இத்துணைக் கோட்டத்தினால் பல்வேறு பள்ளிக் கட்டுமான பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன.

முந்தைய திட்டக் கோட்டத்தினால், 1 மற்றும் 2 சித்தார் அணைகள் மற்றும் பட்டணங்கால் திட்டங்கள் முடிக்கப்பெற்ற பின்னர், இரண்டு நீர்த்தேக்கங்கள் மற்றும் வாய்க்கால்கள் ஆகியவை, பராமரிப்புப் பணிக்காக இக்கோட்டத்துடன் சேர்க்கப்பட்டன.

இதற்கிடையே, குழித்துறையில் பட்டணங்கால் துணைக் கோட்டம் அமைத்திட ஒப்புதல் வழங்கப்பட்டது. [20] பராமரிப்புப் பணியினை மேற்கொள்ளவும், பட்டணங்கால் முதன்மைக் கால்வாய், அதனைச் சார்ந்த பிரிகரைகள் மற்றும் விளைநில வாய்க்கால்கள் ஆகியவற்றின் நீரை ஒழுங்கு முறைப்படுத்தவும் இந்த துணைக்கோட்டம் நிறுவப்பட்டது. இந்த துணைக் கோட்டம், மார்ச் 1, 1977 முதல் கன்னியாகுமரி கோட்டத்தின் கட்டுப்பாட்டிலியங்கி வருகிறது. கீழ்க்குறிப்பிட்ட நான்கு பிரிவுகளைக் கொண்ட பட்டணங்கால் கோட்டம் மூடப்பட்ட பின்னர், இந்த துணைக்கோட்டம் இயங்கத் துவங்கியது.

இயந்திரப்பணிபிரிவு, செருப்பாளூர்-சித்தார் அணை - 1 மற்றும் 2

திருவட்டார் பிரிவு, திருவட்டார் - பட்டணங்கால் வாய்க்கால்

குழித்துறை பிரிவு, பட்டணங்கால் வாய்க்கால் மற்றும்

கருங்கல் பிரிவு, கருங்கல் பிரிகிளை.

இத்துணைக் கோட்டங்கள் அவற்றின் நான்கு பிரிவுகளுடன் மேற்குறிப்பிட்ட இரு நீர்த்தேக்கங்கள், பட்டணங்கால் வாய்க்கால் மற்றும் அதனுடைய கிளைகள், ஆகியவற்றைப் பராமரிக்கும் பணியினையும், நீர்ப்பாசனத்திற்காக நீரை ஒழுங்குமுறைப்படுத்தும் பணியினையும் மேற்கொள்கின்றன.

இக்கோட்டத்தின் கட்டுபாட்டிலியங்கி வரும், நாகர்கோவில், தக்கலை மற்றும் செருப்பாளூர் ஆகிய மூன்று துணைக்கோட்டங்களும், பொதுப்பணித்துறையின் ஏரிகள், கட்டிடங்கள் ஆகியவற்றைப் பராமரிக்கும் பணியினையும் இரண்டு இலட்சம் ரூபாய்களுக்கு மேற்படாத அணைக்கட்டுகள் மற்றும் புதிய கட்டிடங்கள் கட்டுதல் ஆகியவற்றையும் கவனித்து வருகின்றன. இவை தவிர, நிலையான மற்றும் தற்காலிகக் கட்டிடங்களான திரையரங்கங்கள், பள்ளிகள், கல்லூரிகள், வலிமை வாய்ந்த அறைகள், கருவூலங்கள், கோவில் தேர்கள் ஆகியவற்றிற்கு உறுதிப்பாட்டுச் சான்றளித்தல் மற்றும் அக்கோட்டத்தின் அதிகார எல்லையிலடங்கிய பகுதியில், தனியார் கட்டிடங்களிலியங்கும் அரசு அலுவலகங்களுக்கு நிர்ணயிக்கும் வாடகைக்குரிய தரச்சான்று வழங்குதல் ஆகியவையும் இக்கோட்டத்தின் பணியாகும். மாவட்டத்திலுள்ள அனைத்து நீர்ப்பாசனத்திட்டங்கள், மற்றும் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள அனுமான் நதி திட்டங்கள், இராதாபுரம் கால்வாய் திட்டம் ஆகியவற்றின் செயலாக்கம் மற்றும் பராமரிப்புப் பணிகளையும் இக்கோட்டம் கவனித்து வருகிறது. சுருங்கக்கூரின், இக்கோட்டம் திருநெல்வேலி மாவட்டம் இராதாபுரம் வட்டத்துடன் கன்னியாகுமரி மாவட்ட முழுமையும் தனது பணியினைத் தொடர்ந்து செயலாற்றி வருகிறது. [21] ஆனந்தநாறு முதன்மை வாய்க்கால் மற்றும் அதனுடைய கிளைகள் ஆகியவற்றை "நவீனப்படுத்தி

அமைக்கவும், தாடகையார் ஆற்றின் குறுக்கே இரு அணைக்கட்டுகள் கட்டவும், நீர் வழங்கக் கால்வாயினைத் தோண்டுவதற்கும் ஜூலை 2, 1981 நாளைய (பொதுப்பணித்துறை)1019 எண். கொண்ட அரசாணையில் வழங்கப்பட்ட, நாகர்கோவில் ஆனந்தநாறு தற்காலிகக் கோட்டம், ஒரு நிலையில் மூடப்பட்டது. அதன் பின்னர், எஞ்சியுள்ள பணிகளை முடித்திடவும், நிலையான பாசன ஏரிகள், அணைக்கட்டுகள், வாய்க்கால்கள், கட்டிடங்கள் ஆகியவற்றைப் பராமரிக்கவும் பிப்ரவரி 23, 1988 நாளைய (பொதுப்பணித்துறை)181 எண். கொண்ட அரசாணைப்படி கன்னியாகுமரி கோட்டத்துடன், ஒரு துணைக்கோட்டம் சேர்க்கப்பட்டுள்ளது. இந்தத் துணைக்கோட்டம், மே 1, 1988 முதல் கன்னியாகுமரி கோட்டத்தின் கட்டுப்பாட்டில் இயங்கிவருகிறது.

இம்மாவட்டத்திலுள்ள பல்வேறு நீர்ப்பாசனத்திட்டங்கள், அவற்றின் ஆயக்கட்டு நிலங்கள், கடந்த ஆண்டுகளில் பயிரிடப்பட்ட பயிர்கள், நிர்ணயிக்கப்பட்ட இலக்கு, எய்தப்பட்ட சாதனை, ஆகியவை, குறித்த விவரங்கள் இவ்விவரச் சுவடியின் "வேளாண்மை மற்றும் நீர்ப்பாசனம்" என்ற இயலில் விரிவாக அளிக்கப்பட்டுள்ளன.

பத்திரப் பதிவுத்துறை

1834 ஆம் ஆண்டு, கிழக்கிந்தியச் சங்க நீதிமன்ற இயக்குநர்கள், அசையாச் சொத்துக்களைக் கட்டாயமாக முறையான பத்திரங்கள் மூலம் பதியவேண்டுமென்பதை சட்டமாக இயற்றவேண்டுமென வலியுறுத்தினார்கள். அதற்கு பதிவுக்கட்டணம் நிர்ணயிக்கப்பட வேண்டுமெனவும், அவ்வாறு பதியப்படும் சொத்துக்களுக்கு உரிய வகையில், பாதுகாப்பு அளிக்கப்படவேண்டுமெனவும், விரும்பினார்கள். சட்டமியற்றும் உரிமை, ஆற்றல், கருத்துரு, முறையாக அளிக்கப்பட்டு, இப்பொருளும், 1865 ஆம் ஆண்டு வரை பல்வேறு குழுக்களின் ஆய்விற்கு அனுப்பப்பட்டது. இப்பொருள் தொடர்பான தற்போதைய சட்டத்தின் உட்கருத்தடங்கிய மசோதா, 1864 ஆம் ஆண்டின் இந்திய சட்டம் என நிறைவேற்றப்பட்டது. கடந்த பல ஆண்டுகளில் இச்சட்டத்திற்குப் பல்வேறு திருத்தங்களும், மாற்றங்களும் கொண்டு வரப்பட்டன. இப்பொருள் குறித்த தற்போதைய சட்டம், 1908ஆம் ஆண்டின் இந்திய பத்திரப்பதிவுச் சட்டமாகும் (1908 ஆம் ஆண்டின், 16வது சட்டம்).

பத்திரப்பதிவுத் துறை , 1864 ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் முதல், தனித்துறையாக இயங்கத் துவங்கியது. கர்னல், ஆர்.எம்.மேக்டொனால்டு, முதல் பதிவுத்துறை தலைமைப்பதிவாளராகப் பதவி ஏற்றார். அப்போது மற்ற நிலைகளில் நியமிக்கப்பட்ட அலுவலர்கள், மாவட்டப் பதிவாளர்கள் ஆவர். 1942ஆம் ஆண்டு வரை, மற்ற துறைகளைச் சார்ந்த அலுவலர்கள், பத்திரப்பதிவுத்துறை தலைவர்களாக நியமிக்கப்பட்டார்கள். 1942 ஆம் ஆண்டு, இந்தத்துறையில், மாவட்டப்பதிவாளர் நிலையிலிருந்த ஒரு

அலுவலர், பதவி உயர்வு அளிக்கப்பட்டு, "இந்திய நிருவாகப் பணி அலுவலர்" என்ற சிறப்புப் பட்டம் அளிக்கப் பெற்ற, பத்திரப் பதிவுத் துறைத் தலைவர்களாக நியமிக்கப்பட்டார். ஆவணங்களைப் பதிவு செய்தல், நிலையான ஆவணங்களைப் பராமரித்தல் ஆகியவை தொடர்பான 1908 ஆம் ஆண்டின் பத்திரப்பதிவுச் சட்டத்தை நடைமுறைப்படுத்திடவே, இத்துறை நிறுவப்பட்டுள்ளது.

சார்ப்பதிவாளர்கள், மாவட்டப் பதிவாளர்கள், பத்திரப் பதிவு ஆய்வாளர்கள், மற்றும் பத்திரப்பதிவுத்துறை தலைவரின் நேர்முக உதவியாளர் ஆகியோருக்கு, இந்திய முத்திரைச் சட்டத்தின் கீழ், சில குறிப்பிட்ட பிரிவுகளின்படி, அதிகாரங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

பத்திரப்பதிவுத்துறை தலைவர், துறைத்தலைவராவார். மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்டப்பதிவாளர் அலுவலகங்கள் மற்றும் சார்பதிவாளர் அலுவலகங்கள் ஆகியவற்றின் நிருவாக மற்றும் ஒழுங்குமுறைக்கட்டுப்பாட்டினை அவர் நடைமுறைப்படுத்தி வருகிறார். அவரே பிறப்பு, இறப்பு மற்றும் திருமணம் ஆகியவற்றின் முதன்மைப் பதிவுத் தலைவராகவும் சீட்டுகள் இயக்குநராகவும் பணியாற்றி வருகிறார். தலைமையிடத்தில், அவருக்கு ஒரு பத்திரப்பதிவுத் துறைக் கூடுதல் தலைவர் நிலையில் தனி உதவியாளர், பத்திரப்பதிவுத்துறை, தலைவர் (சீட்டுகள்) கூடுதல் பதிவாளர், மற்றும் 21 தனி உதவியாளர்கள் (சீட்டுகள்) ஆகியோரும், இதர அமைச்சுப் பணியாளர்களும் உதவி புரிந்து வருகிறார்கள்.

அரசு இணைச்செயலர் நிலையில் கூடுதல் தலைவர், பத்திரப்பதிவுத்துறை தலைவரின் தனி உதவியாளர், துணை தலைவர் நிலையில் (சீட்டுகள்) கூடுதல் பதிவாளர் மாவட்டப் பதிவாளர் நிலையில் மூன்று (சீட்டுகள்) தனி உதவியாளர்கள் ஆகியோர் தலைவர் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றனர். அவர், 1961 ஆம் ஆண்டு, தமிழ்நாடு சீட்டு நிதிகள் சட்டப்படி கிடைக்கப்பெறும் புகார்கள் குறித்து விசாரணை நடத்தியும், சீட்டு நிறுவனங்களால் சீட்டு நிதிகள் சட்டத்தின் கீழ் பராமரிக்கப்படும பல்வேறுவகையான ஆவணங்களை ஆய்வு செய்தும், சீட்டுகள் இயக்குநர் ஆணையின் கீழ், சீட்டு நிதிகள் சட்டப்படியான பல்வேறு பணிகளை ஆற்றியும் வருகிறார்.

நிருவாக நலனுக்காக, மாநிலம் வேலூர், மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நான்கு மண்டலங்களாகவும் சென்னை, கோயம்புத்தூர், சேலம், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, கடலூர், தஞ்சாவூர், மற்றும் மதுரை ஆகிய பகுதிகளாகவும், 46 பத்திரப்பதிவு மாவட்டங்களாகவும அவற்றின் ஆளுகையில் 567 சார்பதிவாளர் அலுவலகங்களாவும் பிரித்தமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பகுதியும்

பல்வேறு பதிவுத்துறை மாவட்டங்களாகவும், ஒவ்வொரு பதிவுத்துறை மாவட்டமும் பல சார்பதிவு மாவட்டங்களாகவும் மேலும் பிரிக்கப்பட்டுள்ளன. (பத்திரப்பதிவுத்துறை மாவட்டமென்பது, வருவாய் மாவட்டத்தினின்றும் வேறுபட்டதாகும், ஒரு வருவாய் மாவட்டத்தில், ஒன்றுக்கும் மேற்பட்ட பத்திரப்பதிவு மாவட்டங்கள் அடங்கியுள்ளன).

ஐந்து அல்லது ஆறு பத்திரப்பதிவு மாவட்டங்களடங்கிய ஒரு பகுதிக்கு பத்திரப்பதிவுத்துறை ஆய்வாளர் பொறுப்பு வகிக்கிறார். அவர், சார்பதிவாளர் அலுவலகங்களை திடீரெனப்பார்வையிட்டும், ஆண்டு ஆய்வு மேற்கொண்டும் வருகிறார். மாவட்டப் பதிவாளரைப் போன்று, ஆய்வாளருக்கும் இந்திய முத்திரைச் சட்டத்தின் சில பிரிவுகளின் கீழ், அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மாவட்டப்பதிவாளர்கள், பத்திரப்பதிவு மாவட்டங்களின் நிருவாகத் தலைமை அலுவலர்கள் ஆவார்கள். அவரவர்களது பத்திரப்பதிவு மாவட்டங்களில் இயங்கி வரும் சார்பதிவு அலுவலகங்களில் திடீரென ஆய்வு மேற்கொள்ளுதல், குறைந்த நிலமதிப்பீட்டு முத்திரை பத்திரங்கள் பதியப்படும் இனங்கள் குறித்து விசாரணை செய்து, தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுதல் ஆகிய பணிகளை அவர்கள் கவனித்து வருகிறார்கள். அவர்கள் மேல்முறையீடுகளை விசாரணை செய்தும், சார்பதிவாளர்கள் பதிவதற்கு மறுத்த ஆவணங்களைப் பதிவு செய்யக் கோரும், விண்ணப்பங்களை ஆய்ந்தும் உரியமுடிவினை எடுக்கிறார்கள். சார்பதிவாளர் நீங்கலாக அவர்களது அதிகார எல்லைக்குள் பணியாற்றும் ஏனைய அமைச்சுப்பணியாளர்கள் ஆகியோரை, மாற்றம் செய்யவும், அவர்களுக்குப் பதவி உயர்வு அளிக்கவும் அதிகாரம் பெற்றவர்களாவர். அவர்கள், கூட்டு வாணிக நிலையங்கள் குறித்த பதிவாளர்கள் ஆவார்கள். மேலும் சிறப்புத் திருமணச் சட்டம், சங்கங்கள் பதிவுச்சட்டம் மற்றும் பிறப்பு, இறப்பு பதிவுச்சட்டம் ஆகியவற்றின் கீழ் பதிவாளராகவும் பணியாற்றுகிறார்கள். முத்திரைச் சட்டத்தின் சில பிரிவுகளின்படி, ஆட்சித் தலைவர்களாகப் பணியாற்றவும் அதிகாரம் பெற்றுள்ளனர். 1908ஆம் ஆண்டு இந்தியப்பதிவுச் சட்டத்தின்படி, சில சட்ட பூர்வமான செயல்களையும் ஆற்றி வருகிறார்கள். மாவட்டப்பதிவாளர் இல்லாத இடங்களில், அவரது சட்டப்பூர்வ அலுவல்களை இனைப்பதிவாளர் - ஐ கவனித்து வருகிறார்.

சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு, சார்பதிவாளர்கள் தான் தலைமை அலுவலர்களாவர். அவர்கள் இந்தியப் பதிவுச்சட்டத்தின் கீழ், ஆவணங்களைப் பதிவுசெய்தல், வில்லங்கமின்மைச் சான்றுகள் வழங்குதல், பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் மற்றும் பகர ஆள் (Power of Attorney) செயலுரிமைப்பத்திரம் ஆகியவற்றில் சான்றிடப்பட்ட பிரதிகள் வழங்குதல் ஆகிய சட்டபூர்வ அலுவல்களையும் கவனித்து வருகிறார்கள். சிறப்புத்

திருமணச் சட்டத்தின் கீழ், திருமணங்களை முறைப்படி நிறைவேற்றியும், இந்து திருமணச் சட்டத்தின் கீழ் திருமணங்களைப் பதிவு செய்தும், சட்டபூர்வ பணிகளையும் செய்து முடிக்கிறார்கள். சார்பதிவாளர்களால் சீட்டுகள் கூட பதியப்படுகின்றன. இந்திய முத்திரைசட்டத்தின் 41 மற்றும் 42 வது பிரிவுகளின் கீழ், அவர்கள் ஆட்சித்தலைவர்களாகப் பணியாற்றி, அதன்படி சில ஆவணங்கள் குறித்து முத்திரை கட்டணத்தைப்பெற்று, அது குறித்த உரிய சான்றுகளையும் முறையாக பத்திரங்களில் சேர்கிறார்கள். சில இடங்களில் மழைப்பதிவு நிலயங்களுக்கான மழைப்பதிவு அலவலர் களாகவும், பணியாற்றி வருகிறார்கள். சில இடங்களில் சார்பதிவாளர்கள், அரசுக் கருவூலம் மற்றும் சிறைக்கிளைக் கண்காணிப்பாளர்களாகவும் பணியாற்றுகிறார்கள்.

கன்னியாகுமரி மாவட்டமானது, பதிவுத்துறை ஆய்வாளரின் தலைமையிலும் கட்டுப்பாட்டிலியங்கும், திருநெல்வேலி மண்டலத்தில் அடங்கியதாகும். கன்னியாகுமரி வருவாய் மாவட்டத்தில், கன்னியாகுமரி பதிவுத்துறை மாவட்டம் மற்றும் மார்த்தாண்டம் பதிவுத்துறை மாவட்டம் ஆகிய இரு பதிவுத்துறை மாவட்டங்கள் அடங்கியுள்ளன. முந்தையதன் தலைமையிடம் நாகர்கோவிலாகவும், பிந்தையதன் தலைமையிடம் மார்த்தாண்டமாகவும் இயங்குகின்றன. கன்னியாகுமரி பதிவுத்துறை மாவட்டத்தில் 12 சார்பதிவு அலுவலகங்களும், மார்த்தாண்டம் பதிவுத்துறை மாவட்டத்தில் 9 சார்பதிவு அலுவலகங்களும் அடங்கியுள்ளன. பதிவுத்துறை மாவட்டத்தின் தலைமை அலுவலர், மாவட்டப் பதிவாளர் ஆவார். அவரது அதிகார எல்லையில் உள்ள துணைப்பதிவு அலுவலகங்கள், அவருடைய நிருவாகக் கட்டுப்பாட்டில் இயங்கிவருகின்றன. [22]

மறு வாழ்வுத் துறை

பர்மா மற்றும் ஸ்ரீலங்கா அகதிகளின் நலனில் அக்கறை கொண்டு அவர்கள் விருப்பப்படி அவர்களுக்கு மறு வாழ்வு அளித்திடும் திட்டங்களை வரையவும், அவற்றை செயல்படுத்துவதுமான பணிகளை மறுவாழ்வு இயக்குநர் கவனித்து வருகிறார்.

பர்மா மற்றும் ஸ்ரீ லங்கா ஆகிய நாடுகளிலிருந்து வந்துள்ள, அகதிகள், இம் மாவட்டத்தில் மிகக் குறைந்த அளவிலேயே உள்ளனர். மாவட்டத்தின் பல பகுதிகளிலும் ரப்பர் தோட்டப் பண்ணைகளும், அடர்த்தியான காடுகளும் அமைந்துள்ளதால், அகதிகளில் பலர், வாணிபக்கடன் பெற்று, வாணிபம் செய்வதை விட, ரப்பர் தோட்டப் பண்ணைகளிலும், காட்டுப்பகுதிகளிலும் வேலை வாய்ப்பினைப் பெறுவதையே பெரிதும் விரும்புகின்றனர். இம் மாவட்ட வன அலுவலர், அகதிகளில் பலருக்கு ரப்பர் தோட்டப் பண்ணைகளிலும், ரப்பர் வாரியத்தின் கட்டுப்பாட்டிலும், மறு வாழ்வுப் பணி அமைத்துக் கொடுத்திருக்கிறார். அகதிகளின் குழந்தைகளுக்குக் கல்வி புகட்ட இம் மாவட்டத்தில், தனியாக ஒரு பள்ளியும் நடத்தப்பட்டு வருகிறது.

சமூக நலத்துறை

சமுதாயத்தின் நலிவுற்ற பிரிவினரது நலனில் அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளமை, அனைவரும் அறிந்ததே. ஏழை, எளியோருக் குப் பயனளிக்கும் நல்ல பல திட்டங்களில் அத்துறையின் ஈடுபாடும், குறிப்பாக, ஆதரவற்ற பெண்கள், விதவைகள், அனாதைச் சிறார்கள், ஊனமுற்றோர், ஓய்வூதியம் பெறும் வயது முதிர்ந்தோர் ஆகியோருக்கு இத்துறை ஆற்றும் செயற்கரிய பணியும் எளிதில் மறக்க இயலாதவை.

சமூக நலத்துறைக்கு, சமூக நலத்துறை இயக்குநர் தலைமை வகிக்கிறார். அவருக்கு, ஒரு உதவி இயக்குநர், ஒரு இணை இயக்குநர், துணை இயக்குநர்கள், உதவி இயக்குநர்கள், உடல் ஊனமுற்றோருக்கான மாநில வாரியப் பொறுப்பினை ஏற்றுள்ள செயலர், ஆலோசனைக்குழுத் தனி அலுவலர், கணக்கு அலுவலர்கள், உதவி கணக்கு அலுவலர்கள், ஒரு மண்டல மறுவாழ்வு அலுவலர், வேலை வாய்ப்பு அலுவலர்கள், பணி இல்லங்களின் கண்காணிப்பாளர்கள், ஒருங்கிணைந்த குழந்தைகள் நலப் பணியினை மேற்கொள்ளும் மருத்துவ அலுவலர்கள் ஆகியோர், உதவி புரிந்து வருகின்றனர்.

நாகர்கோவில் பணியாற்றி வரும், மாவட்ட சமூக நல அலுவலர், அரசின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்திட பொறுப்பேற்றுள்ளார். மாவட்ட சமூக நல அலுவலரின் கட்டுப்பாட்டில் ஒரு உதவி சமூக நல அலுவலர், வட்டார அளவில், விரிவாக்க அலுவலர் (சமூக நலம்), மற்றும் கிராம அளவிலுள்ள (மதிய சத்துணவுத் திட்டங்களுக்கான) குழந்தைகள் நல மையங்களை கண்காணிக்கும் அமைப்பாளர்கள் (பெண்கள்) ஆகியோர், பணியாற்றி வருகின்றனர். சிறுவர், சிறுமியருக்கான அனாதை இல்லங்களின் பணியாளர்கள், பணியாற்றும் பெண்கள் தங்கும் விடுதிகள், பார்வையற்றோர், வாய்பேசாதோர், காதுகேளாதோர், ஆகியோருக்கான தனிப்பள்ளிகள், மற்றும், பணி மையங்களின் பயிற்றுநர்கள் ஆகியோரும் மாவட்ட சமூக நல அலுவரின் நிருவாகக் கட்டுப்பாட்டில் பணியாற்றி வருகின்றனர். நிருவாகப் பிரிவில், கண்காணிப்பாளர், கணக்கர், உதவியாளர்கள், இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் ஆகியோர் இவருக்கு உதவியாற்றுகின்றனர். மேலும், தேவைப்படும் தகவல்கள், இவ்விவரச் சுவடியின், "பிற சமூகப் பணிகள்" என்ற 17-வது இயலில் அளிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்[23]

நெல் ஏக போகக் கொள்முதல் கொள்கையினை, அரசு, தஞ்சாவூர் மாவட்டம் முழுமையிலும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சார்ந்த திருச்சிராப்பள்ளி, குளித்தலை, முசிறி, இலால்குடி, உடையார்பாளையம் மற்றும் அரியலூர் ஆகிய வட்டங்களிலும், புதுக்கோட்டை மற்றும் தென் ஆற்காடு (விழுப்புரம்) மாவட்டங்களின் பகுதிகளிலும் மறுபடியும் அறிமுகப்படுத்தியுள்ளதால், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்,

அரசின் பிரதிநிதி என்ற நிலையில் அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள கொள்முதல் விலையில், வேளாண் குடி மக்களிடமிருந்து உபரி நெல்லைக் கொள்முதல் செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளது. இக் கொள்முதல் விலை, வேளாண் குடிமக்கள் விவசாயப் பணிக்கு செலவிடும் தொகைக்கு தகுந்தாற்போல், அப்போதைக்கப்போது, மாறுபடுகிறது. நுகர்பொருள் வாணிபக் கழகமும், மேற்குறிப்பிட்ட நான்கு மாவட்டங்களிலும் ஏக போகக் கொள்முதல் அறிமுகம் செய்யப்பட்டுள்ள இடங்களில் பல நேரடிக்கொள்முதல் மையங்களைத் துவக்கியுள்ளது. இந்த நேரடிக் கொள்முதல் மையங்களின் மூலம், வாணிபக்கழகம், விவசாயிகளிடமிருந்து நெல்லைக்கொள்முதல் செய்கிறது. ஏக போக கொள்முதல் நடைமுறையிலுள்ள இடங்களில், விவசாயிகளிடமிருந்து மொத்த நெல் வியாபாரிகள், நெல்லைக் கொள்முதல் செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆனால், ஏக போகக் கொள்முதல் திட்டம் நடை முறையில்லாத இடங்களில் மொத்த வியாபாரிகள் விவசாயிகளிடம் நெல்லைக் கொள்முதல் செய்வதில், தடையேதுமில்லை, ஆனால், அரசு நிர்ணயித்துள்ள கொள்முதல் விலையில் தான், விவசாயிகளிடம் அவர்கள் நெல்லைக் கொள்முதல் செய்ய வேண்டுமென்ற நிபந்தனையின் பேரில், அவர்கள் நெல் கொள்முதல் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலும், அவ்வாறு அவர்கள், கொள்முதல் செய்யும் நெல்லில் 50 விழுக்காடு நெல்லை அரசு நிர்ணயித்துள்ள கொள்முதல் விலை வீதத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்திற்கு, விற்பனை செய்ய வேண்டும். ஏகபோகக் கொள்முதல் நடைமுறையிலில்லாத வாணிகர் உதவி செயல்முறைப்படுத்தப்பட்டுள்ள இடங்களில், இவ்வாறு வாணிபக் கழகத்தால் கொள்முதல் செய்யப்படும் நெல் கொள்முதல், "வாணிகர் லெவிக் கொள்முதல் முறை" என அழைக்கப்படுகிறது. நெல் வணிகத்தில் மட்டும் ஈடுபட்டுள்ள வணிகர்கள், தான் நெல்லாகவே உதவி அளிக்கலாம். நெல் மற்றும் அரிசி ஆகிய இரண்டு வணிகத்திலுமே ஈடுபட்டுள்ள, மொத்த வணிகம் செய்யும் ஆலை அதிபர்கள் 50 விழுக்காடு லெவியினைக் கொள்முதல் விலையில் கண்டிப்பாக அரிசியாகத்தான் அளிக்க வேண்டும். இவ்விதிமுறையினை மொத்தவணிகம் செய்பவர்களோ, ஆலை அதிபர்களோ, மீறி செயல்பட்டதாக, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட வழங்கல் அலுவலர் ஆகியோரின் கவனத்திற்குக் கொணர்ந்தால், மொத்த வணிகரின் உரிமம் நீக்கம் செய்யப்படுவதற்குள்ளாகும். மேலும், அவர் குற்றயியல் நடவடிக்கைக் குட்படவும் நேரிடும்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் நிர்ணயிக்கப்படும் நிபந்தனைகளுக்கிணங்க, இந்த மொத்த வணிகர்கள், கழக முதுநிலை மண்டல மேலாளரால், அறவை முகவர்களாகவும் நியமிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு அவ்வப்போது, கழகத்தால் கொள்முதல் செய்யப்பட்ட நெல் அறவைக்காக, ஒதுக்கப்படுகிறது. நெல்லை அறைப்பதற்கு அவர்களுக்கு நியாயமான முறையில் அறவைக் கூலி கழகத்தால் வழங்கப்படுகிறது.

அனைத்து அத்தியாவசியப் பொருட்களும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால், கூட்டுறவு நிறுவனங்களுக்கு, அரசுநிர்ணயித்தவாறான உரிய தொகையினை வசூல் செய்துக் கொண்டு, வழங்கப்படுகின்றன. கூட்டுறவு நிறுவனங்கள், அப்பொருட்களை, அவற்றின் செயல் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குடியிருக்கும் குடும்ப அட்டைதார்களுக்குத் தொடர்புள்ள நியாய விலைக் கடைகளின் மூலம், அரசு நிர்ணயித்துள்ள அளவில், மானிய விலையில் வழங்குகின்றன. நியாய விலைக்கடைகளும், அவற்றின் எல்லைப் பகுதியில் அரசால் ஒதுக்கப்பட்டுள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட அளவு மானிய விலையில் அத்தியாவசியப் பொருட்களை வழங்குகின்றன. இவை தவிர, தமிழ்நாடு, நுகர்பொருள் வாணிபக் கழகம், அரசால் அறிமுகப்படுத்தப்படும் பல்வேறு நலத் திட்டங்களுக்கும், அத்தியாவசியப் பொருட்களை வழங்குகின்றன. அவற்றில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சத்துணவுத் திட்டம், காவல்துறை பணியாளர்கள் மற்றும் தீயணைப்புப்படையினரின் நலத்திட்டங்கள் இலவச கண் மருத்துவ முகாம், தேசிய மாணவர்படை மற்றும் தேசிய மாணவ சமூகப் பணி முகாம் போன்றவை அதனில் அடங்கும். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கட்டுப்பாட்டில், 16 நவீன அரிசி ஆலைகள், இயங்கிவருகின்றன. அவற்றில் எட்டு ஆலைகள் தஞ்சாவூர் மண்டலத்திலுள்ளன.

இக்கழகத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் சென்னையில் இயங்கி வருகிறது. பெருந்தலைவர் மற்றும் நிருவாக மேலாளர், இக்கழகத்தின் முதன்மை நிருவாகி ஆவார். அவருக்கு, இணை நிருவாக அலுவலர், நான்கு பொது மேலாளர்கள், ஒரு நிதி ஆலோசகர், முதன்மைக் கணக்கு அலுவலர், கட்டுமானப் பணிப் பொறியாளர், நிறுவன செயலர், ஐந்து முதுநிலை மேலாளர்கள் (சட்டம், தொழிலாளர், வாணிகம், போக்குவரத்து, தணிக்கை ஆகிய பணிகளை மேற்கொள்ள) மற்றும் ஒரு கண்காணிப்பு (Vigilence Officer) அலுவலர் ஆகியோர் உதவி புரிகிறார்கள்.

இக்கழகம், 1972, சூலை மாதம் இயங்கத்துவங்கினாலும், மண்டல அலுவலகங்கள், சென்னை, தஞ்சாவூர், திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில், 1973 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் அமைக்கப்பட்டன. வாணிக நடவடிக்கைகள் நாளுக்கு நாள் அதிகரிக்கத் துவங்கியதால், 1974-75 மற்றும் 1975-76 ஆகிய ஆண்டுகளில் மேலும் சில மண்டலங்கள் அமைக்கப்பட்டன. தற்போது, துணை ஆட்சியர் நிலையிலுள்ள மண்டல மேலாளர் அல்லது மாவட்ட வருவாய் அலுவலர் நிலையிலுள்ள முதுநிலை மண்டல மேலாளர் ஆகியோர் கட்டுப்பாட்டில் 20 மண்டலங்கள் இயங்கி வருகின்றன. மண்டலத் தலைமை அலுவலர்கள், பணியாளர்களின் பணி தொடர்பான அலுவல்களை, அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில், விதிமுறைகளுக்குட்பட்டு, முடிவெடுக்க உகந்தவர்களாவர். ஒழுங்கு நடவடிக்கை இயக்கங்களில், அரசுப் பணியாளர்களுக்குப் பயன்படுத்தப்படும் விதிமுறைகள் கழகப் பணியாளர்களுக்கும் பொருந்தும்.

இம் மாவட்டத்தில், நாகர்கோவிலைத் தலைமையிடமாகக் கொண்ட மண்டலத்தினைத் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம், இயக்கிவருகிறது. இம்மண்டலத்தின் நிருவாகத்திற்கு மாவட்ட வருவாய் அலுவலர் நிலையிலுள்ள ஒரு முதுநிலை மண்டல மேலாளர். தலைமைப் பொறுப்பினை ஏற்றுள்ளார். ஒரு துணை முதுநிலை மண்டல மேலாளர் அவருக்கு நிர்வாகத்தில் துணை புரிகிறார். மண்டலத்தின் முக்கியமான செயல்முறைகள் யாதெனில், நெல்லை இருப்பில் வைத்தாலும், அதனை அறைத்திட, அறவை முகவர்களுக்கு வழங்குவதுமாகும். அத்தியாவசியப்பொருட்களை சேமித்து வைத்திட, இம்மண்டலத்தின் கட்டுப்பாட்டில், ஐந்து கிடங்குகள் உள்ளன. முன்னர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், இம்மாவட்டத்தில், 88 நியாய விலைக்கடைகள் நடத்தி வந்தது. இந்நியாய விலைக்கடைகள் மூலமாகவே, குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டன. இந்நியாய விலைக் கடைகள் ஆக்டேபர் 1, 1987 முதல் கூட்டுறவுத்துறையின் நிருவாகத்தின் கீழ் உள்ளன. ஆகையால், தற்போது எந்த நியாய விலைக்கடையும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால், இயக்கப்பெறவில்லை. ஆனால், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், அத்தியாவசியப் பொருட்களைத் தனது கிடங்குகளில் சேமித்து வைத்து, மொத்த விற்பனை அடிப்படையில், வட்ட வழங்கல் அலுவலர்கள், ஒப்புதலளிக்கும் தேவைப்பட்டியல்களை ஆதாரமாகக் கொண்டு கூட்டுறவு நிறுவனங்களுக்கு வழங்குகிறது.

கீழ்க்குறிப்பிட்ட பட்டியலில் கண்ட கிடங்குகள், பத்தி 3-ல் கண்ட இடங்களில் இயங்கிவருகின்றன. பத்தி 4-ல், அவற்றின், சேமிப்பின் கொள்ளவு குறிக்கப்பட்டுள்ளது :

தொடர் எண்.	கிடங்கின் பெயர்	இருப்பிடம்	சேமிப்புக் கொள்ளளவு (மெட்ரிக் டன்னில்)
1.	கோணம் –1	தொழிற்பேட்டை, கோணம், நாகர்கோவில்	4,500
2.	கோணம் – 2	மேற்படி	3,000
3.	கொளச்சல்	விற்பனைக்குழு, திங்கள் சந்தை	1,700
4.	காப்புக்காடு –1	தேங்காப்பட்டினம் காப்புக்காடு	2,000
5.	மேற்படி	மேற்படி	4,350

கிடங்குக் கண்காணிப்பாளர்கள், கிடங்குகளுக்குப் பொறுப்பு வகிக்கிறார்கள். அவர்களது முதன்மையான பணியாதெனில், பொருட்களைப் பெற்று இருப்பில் வைப்பதும், அவற்றை கூட்டுறவு நிறுவனங்களுக்கு முறையாக வழங்குவதுமாகும். தற்போது, சில நிபந்தனைகளுக்குட்பட்டு, 19 பிரசித்திப்பெற்ற தனியார் ஆலை அதிபர்கள், இம்மாவட்டத்தில், அறவை

முகவர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள். தஞ்சாவூர் மாவட்டத்தினின்றும் கிடைக்கப்பெறும் பதமான நெல், ஆலை வளாகத்திலமைந்துள்ள பூட்டுக் கிடங்குகளில் சேமித்து வைக்கப்படுகின்றன.

லெவிக்குரிய நெல், வணிகர்களிடமிருந்து, அரிசியாகவே பெறப்பட்டு, கோணம் 2 கிடங்கில் வைக்கப்படுகிறது.

தற்போது மாவட்டத்தின் கீழ்க்கண்ட இடங்களில் ஆறு அமுதம் "விற்பனைக் கூடங்கள்" இயங்கி வருகின்றன:

(1) நாகர்கோவில் (2) பொன்னப்பன் நகர்

(3) கன்னியாகுமரி (4) கொட்டாரம்

(5) தக்கலை (6) குலசேகரம்

மளிகைப்பொருட்கள், ஒப்பனைப் பொருட்கள், குளிர்பானங்கள், குழந்தைகளின் உணவுப் பொருட்கள் ஆகியவை பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. இவை தவிர, அரிசி, கோதுமை, மைதா, ரவை ஆகிய பொருட்களும் போட்டிக்குரிய விலையில் விற்கப்படுகின்றன. ஆறு 'அமுதம்' விற்பனைக் கூடங்களிலும், மொத்த விற்றுமுதல், ஆறு இலட்சம் ரூபாயாகும்.

தமிழ்நாடு மின் வாரியம்

தமிழ்நாடு மின்வாரியம் ஏழு உறுப்பினர்களைக் கொண்டதாகும். பெருந்தலைவர், கணக்குத்துறை உறுப்பினர், உறுப்பினர் (பெருக்கம்) மற்றும் உறுப்பினர் (பகிர்ந்தளித்தல்) ஆகியோர் முழு நேர உறுப்பினர்களாவார்.[24] பொதுப்பணித்துறை, நிதித்துறை மற்றும் தொழில்துறை ஆகியவற்றின் ஆணையர்கள் மற்றும் அரசுச் செயலர்கள் வாரியத்தின் ஏனைய உறுப்பினர்களாவர். மின் ஆற்றலைச் செலுத்தி, பகிர்ந்தளித்திட மாநிலம் ஐந்து மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஒரு தலைமைப் பொறியாளர் (பகிர்ந்தளித்தல்) பொறுப்பு வகிக்கிறார். கன்னியாகுமரி மாவட்டம், மதுரையில் அமைந்துள்ள முதன்மைப்பொறியாளரின் (பகிர்ந்தளித்தல்) கட்டுப்பாட்டிலியங்குகிறது.

கன்னியாகுமரி (பகிர்ந்தளித்தல்) வட்டம், நாகர்கோவிலைத் தலைமையிடமாகக் கொண்ட கண்காணிப்புப் பொறியாளரின் தலைமையிலியங்குகிறது. அவருக்கு அனைத்துத் தொழில்நுட்பம் மற்றும் நிருவாகம் சார்ந்த அலுவலர்களில், மின்சாரப் பொறியாளர் (பொது) உதவி புரிகிறார். உதவி நிருவாகப் பொறியாளர் (பொது) (மூலப் பொருள் நிருவாகம், மேம்பாடு, எம்.ஆர்.டி.டி. மற்றும் தனி பராமரிப்பு) மற்றும் சிவில் உதவி நிருவாகப் பொறியாளர் (பொது) ஆகியோர் அனைத்து தொழில் நுட்பப்பணிகளிலும், ஒரு தனி உதவியாளர் அனைத்து நிருவாகப் பணிகளிலும் அவருக்கு உதவி புரிகிறார்கள்.

இம்மாவட்டத்தில் மூன்று இயக்கம் மற்றும் பராமரிப்புக் கோட்டங்கள் உள்ளன. அவை ஒவ்வொன்றும், நாகர்கோவில், தக்கலை மற்றும் குழித்துறை ஆகியவற்றைத் தலைமையிடமாகக் கொண்டு, ஒவ்வொரு நிருவாகப்பொறியாளரின் தலைமையின் கீழும் இயங்கிவருகின்றன. இந்த மூன்று நிருவாகப் பொறியாளர்களும், அவரவர்களது அதிகார எல்லையில் வசிக்கும், நுகர்வோருக்கு மின்சாரம் சரிவர வழங்கப் பெற, பொறுப்பேற்கிறார்கள். ஒரு கட்டுமான மற்றும் வணிகக்கோட்டம், நிருவாகப் பொறியாளரின் தலைமையிலியங்கி வருகிறது. இக்கோட்டம், மாவட்டத்திலுள்ள புதிய நுகர்வோருக்கு புதிய இணைப்பு வழங்குவதற்குத் தேவையான கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டுவருகிறது.

மாவட்டத்திலுள்ள ஐந்து வருவாய் அலகுகளில், இரு அலகுகள் நாகர்கோவிலிலும், ஒன்று தக்கலையிலும், ஏனைய இரண்டு குழித்துறையிலும் இயங்கி வருகின்றன. மின் கட்டணம் போன்ற வருவாய் வசூலிப்பதும், அவற்றிற்கான கணக்குகளை பராமரிப்பதும் வருவாய் அலகுகளின் பணியாகும்.

மாவட்டத்திலுள்ள ஐந்து நகரங்கள், 66 கிராமங்கள் (1971 மக்கட் தொகைக்கணக்குப்படி) 2490 குக்கிராமங்கள், மற்றும் 371 ஆதி திராவிடர் குடியிருப்புகள் ஆகியவையனைத்துக்கும் மின் இணைப்பு அளிக்கப்பட்டுவிட்டது. மாவட்டத்தில் மார்ச் 31,1988 தேதிப்படி 2,850 விவசாயக்குழாய்கள் மற்றும் 2932 குடிசைகள் ஆகியவற்றிற்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்

வளர்ச்சியுறும் நாட்டில், மக்களுக்கு வீட்டு வசதியளிப்பதென்பது, பெரிய பிரச்னைகளில் ஒன்றாகும். பெருகிவரும் மக்கட்தொகையின் வீட்டுமனைத் தேவையினைக் கருத்தில் கொண்டு, 1947ஆம் ஆண்டு, நகர மேம்பாட்டுப் பொறுப்பாட்சிக்கூட்டு நிறுவனம் அமைக்கப்பட்டது. நிதி நெருக்கடியினால் அது ஒரு மிதமான வீதத்தில் இயங்கி வந்தது.[25] மாவட்டங்களில் நாளடைவில் பெருகி வந்த வீட்டு வசதி பிரச்னை, சென்னை மாநகரத்தில் ஒரு பெரிய அளவிலான நிறுவனத்தை அமைக்கவேண்டிய சூழ்நிலையினை உருவாக்கியது. இதன் விளைவாக, 1961ஆம் ஆண்டு, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் அமைக்கப்பட்டது. உரிய சட்டத்தின்படி, வீட்டுவசதி மேம்பாட்டுத் திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்குத்தேவையான நிதியினைத் திரட்டுவதற்கான அதிகாரங்கள் அளிக்கப்பட்டு இந்த வாரியம் அமைக்கப்பட்டது. வாரியம் பலதரப்பட்ட சமூக வீட்டுவசதித் திட்டங்களை மிகப் பெரிய அளவில், நடைமுறைப்படுத்தி, இதுகாறும், மாநிலம் முழுமையிலும், 1,65,911 குடியிருப்பு அலகுகளை உருவாக்கியுள்ளது. வாரியத்தின் முதலிட்டுச் செலவு, 1978 ஆம் ஆண்டு ஆறு கோடி ரூபாயாக இருந்தது. இது தற்போது, 1988-89-ஆம் ஆண்டு 98

கோடியாக உயர்ந்துள்ளது. அரசின் கொள்கை முடிவிற்கேற்ப. பொருளதார ரீதியில் மிகவும் நலிந்த பிரிவினருக்கு வீடுகள் கட்டிக்கொடுக்க, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் பெருமுயற்சியெடுத்து வருகிறது. தற்போது, இவ்வாரியம், பொருளாதார அடிப்படையில் நலிந்த பிரிவினர், குறைந்த வருவாயுள்ள தொகுதியினர், நடுத்தர வருவாய்ப் பிரிவினர், உயர் வருவாய் பெறுவோர் ஆகியோருக்கு வீடுகள் கட்டியளித்து வருகிறது. பல்வேறு சமூக வீட்டு வசதித் திட்டங்களை செயல்முறைப்படுத்திட, புது தில்லியிலுள்ள வீட்டு வசதி நகர்ப்புற மேம்பாட்டுக் கழகம் (ஹட்கோ)தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்கு நிதி உதவியளித்து வருகிறது.

மாநிலத்தின் அனைத்து வீட்டு வசதி செயலாக்கத்திற்கும், அரசின் சார்பில், அரசின் ஆதரவு பெற்ற, சட்டபூர்வ அதிகாரங்களைப்பெற்றுள்ள நிறுவனமே, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியமாகும். வாரியத்தின் நிருவாகத்திற்குப் பெருந்தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநரே தலைமைப் பொறுப்பேற்கிறார். அனைத்துத் தொழில் நுட்ப அலுவல்களுக்கும், பொறுப்பேற்றுள்ள முதன்மைத் தொழில் நுட்ப அலுவலர், முதன்மைப் பொறியாளராவார். தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், சென்னை மாநகரத்தில் பல கோட்டங்களை தனது கட்டுப்பாட்டில் அமைத்துள்ளது. அதே போன்று திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், சேலம், ஈரோடு, மதுரை, ஒசூர், வேலூர் திருநெல்வேலி மற்றும் இராமநாதபுரம் ஆகிய இடங்களில் பல்வேறு அலகுகளை இயக்கி வருகிறது.

தலைவர், மற்றும் நிருவாக இயக்குநருக்கு மூன்று தலைமைப் பொறியாளர்கள் உதவி புரிந்து வருகிறார்கள். ஒருவர் சென்னை மாநகரம் மற்றும் செங்கல்பட்டிற்கும், (திட்டம் மற்றும் நிருவாகம்) மற்றொருவர் சேலம் மற்றும் மதுரைக்கும், வேறொருவர் தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டத்தினை செயலாற்றவும் பொறுப்பு வகிக்கிறார்கள். தொழில் நுட்பம் வாய்ந்த இவ்வலுவலர்களைத் தவிர, செயலர் மற்றும் பணியாளர் தொகுதி அலுவலர், நிதி ஆலோசகர் மற்றும் முதன்மைக் கணக்கு அலுவலர் ஆகியோர் நிருவாக இயக்குநருக்கு உதவியாற்றுகின்றனர். மேலும், ஆறு கண்காணிப்புப் பொறியாளர்களும், பணியாற்றுகிறார்கள். அவர்கள், சென்னையிலுள்ள அண்ணாநகர், கே.கே.நகர், மற்றும் செங்கல்பட்டு, மதுரை, சேலம் ஆகிய பகுதிகளுக்குப் பொறுப்பு வகிக்கிறார்கள். முதுநிலை நகர்த்திட்ட வரைவாளர், நகர்த்திட்ட வரைவாளர், உதவி நகர்த்திட்ட வரைவாளர், உதவி கட்டிடக் கலைஞர், மற்றும் இவ்வலுவலர்களுக்குத் தலைமையிடத்திலுள்ள பணியாளர்கள் ஆகியோர் அனைவரும் நிருவாக இயக்குநருக்கு உதவியாக உள்ளனர். கண்காணிப்புப் பொறியாளருக்கு ஆதரவாக, நிருவாகப் பொறியாளர்கள், உதவி நிருவாகப்பொறியாளர்கள், வரைபடப்பிரிவு மேலாளர்கள் மற்றும் அவர்களது பணியாளர்கள் ஆகியோரும் உள்ளனர்.

திருநெல்வேலி வீட்டுவசதி அலகு, மதுரை கண்காணிப்புப் பொறியாளரின் நிருவாகக்கட்டுப்பாட்டில் இயங்கிவருகிறது. திருநெல்வேலி வீட்டு வசதி அலகிற்கு, செயற்பொறியாளர் மற்றும் நிருவாக அலுவலர் தலைமைப் பொறுப்பேற்கிறார். திருநெல்வேலி வீட்டு வசதி அலகின் செயற்பொறியாளர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் தொடர்பான பல்வேறு வீட்டுவசதித் திட்டங்களை நிறைவேற்றி வருகிறார். ஒரு உதவி செயற்பொறியாளர் (நாகர்கோவில்), ஒரு உதவிப்பொறியாளர் மற்றும் ஒரு இளநிலைப் பொறியாளர் ஆகியோர், செயற்பொறியாளருக்கு உதவிபுரிந்து வருகிறார்கள். செயற்பொறியாளர், ஆய்வு அலுவலரும், ரொக்கப்பட்டியல்களுக்கு தொகை வழங்க அதிகாரம் படைத்தவருமாவார் உதவி செயற்பொறியாளர். புதுப்பணிகளை நிறைவேற்றுதல் மற்றும் தற்போது நடைமுறையிலிருக்கும் பணிகளைப் பராமரித்தல் ஆகியவற்றைக் கண்காணிக்கிறார். உதவிப்பொறியாளர்கள் மற்றும் இளநிலைப் பொறியாளர்கள் ஆகியோரும் வேலைகளை நிறைவேற்றுதல் மற்றும் பராமரித்தல் ஆகிய பணிகளை கவனித்து வருகிறார்கள். பொருளாதார ரீதியில் நலிவடைந்தோருக்கு உதவியளிக்கும் திட்டத்தின்கீழ், வீட்டு வசதி அலகு, 1986 சூன் மாதம் முடிய நாகர்கோவிலில் 64 வீடுகளைக் கட்டியுள்ளது.

தமிழ்நாடு அரசு, குடியிருப்பு வீட்டு வசதித்திட்டத்தின் கீழ், நாகர்கோவிலிலும் தக்கலையிலும், முறையே 78 வீடுகளும், 36 வீடுகளும் கட்டியளிக்கப்பட்டுள்ளன. அண்மைகாலத்தில், மாவட்டத்தின் பல்வேறு இடங்களில், நிதித்துறை மற்றும் வருவாய்த்துறை அலுவலர்களுக்கு 30 வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன. தவணைக்கு வாங்கும் முறையிலான திட்டத்தின் கீழ் வாரியம், 64 குறைந்த விலைமதிப்பு வீடுகளை நாகர்கேவிலில் கட்டிமுடித்துள்ளது. வீட்டு வசதி மேம்பாட்டுத் திட்டங்களின் பெரிய வெற்றிக்கு முக்கியக் காரணம், வீடுகள் கட்டுவதற்குத்தேவையான தனியார் நிலங்களைமதிப்புத்தொகை வழங்கிக் கைப்பற்றுதல், புறம்போக்கு, தீர்வையேற்பட்ட மற்றும் தீர்வையேற்படாத நிலங்களைத்தாமதமின்றி குறுகிய கால அளவில் வாரியத்திடம் ஒப்படைப்பது ஆகியவற்றில் வருவாய்த்துறை, மிகத் துரிதமாக அரும்பணி ஆற்றியாதெனில் மிகையில்லை. இதனால், குறுகியகாலத்தில், கட்டுமானப் பணியினை முடித்து, தமிழக அரசு மற்றும் இந்திய அரசு ஆகியவற்றின் நன் மதிப்பை வாரியம் பெற்று, வரலாறு படைத்துள்ளது. எனவே, வருவாய்த்துறைக்கு வாரியம் நன்றிக்கடன்பட்டுள்ளது எனக் கூறிக்கொள்வதில் பெருமிதம் கொள்கிறது. கட்டுமானப் பணிகளை விரைவில் முடித்திட பல்வேறு நிறுவனங்களின் ஒத்துழைப்பும் குறிப்பிடத்தக்கதாகும். ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள், பல்வேறு வீட்டுவசதித்திட்டங்களையும் தீவிரமாக நடைமுறைப்படுத்திட, வாரியம் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாடு மாநில பண்டக சாலை விற்பனைப்பொருட்கள் திரட்டிவைத்திருக்கும் கழகம்

பாராளுமன்றத்தில் ஒரு சட்டம் இயற்றப்பட்டு, அதன் வாயிலாக பொதுத்துறை நிறுவனமாக, தமிழ்நாடு மாநில பண்டகசாலைக்கழகம், கடந்த 1957-ல் நிறுவப்பட்டு, டிசம்பர் 4, 1957-முதல் தமிழ்நாட்டில் செயல்படத்துவங்கியது. பண்டகசாலை நடவடிக்கைகளில், விதைகள், மக்கிப்போன எரு, நல்வள உரம், விவசாயக் கருவிகள் மற்றும் தனியார், கூட்டுறவு மற்றும் ஏனைய நிறுவனங்களின் (விளம்பரப்படுத்தப்பட்ட) பொருட்கள் ஆகியவை, விளைபொருட்களின் ஜாமினின் பேரில், நியாயமான வட்டி வீதத்தில், அரசு பண்டக சாலையில் சேமித்து வைக்கப்படுகின்றன.

தமிழ்நாடு பண்டகசாலைக் கழகம் நாட்டின் செல்வ வளத்திற்கு ஒரு காவலனாகத் திகழ்கிறது. கொறிக்கும் விலங்குகள், பூச்சிகள், ஈரக்கசிவு, மற்றும் வானிலையின் புதியற்போக்கு, ஆகியவற்றால் பொருட்கள் பாதிக்கப்படுதல், அவற்றின் விளைவால் பொருட்களின் தரம் குறைதல், மற்றும் பொருட்கள் நட்டமடைதல் ஆகியவற்றினின்றும் விஞ்ஞான "சரக்கு சேமிப்பு முறை"களைக் கையாண்டு பொருட்களைப் பாதுகாத்திடும், நம்பிக்கை நட்சத்திராமாகக் இக்கழகம் திகழ்கிறது. விற்பனைப்பொருட்கள் திரட்டிடும் ஒழுங்குமுறைத்திட்டமானது, மிகப்பெரிய உழைப்பில் உற்பத்தி செய்யப்படும் விளைபொருட்களை பல்வகை நட்டத்தினின்றும் காத்திட, விஞ்ஞான ரீதியிலான சேமிப்புமுறைதான், சிறந்ததாகுமென்ற விழிப்புணர்ச்சியினைக் கழகம் மக்களிடையே வளர்த்து வருகிறது. மாநில முழுமையிலான பண்டகசாலைப் பின்னல் வலையமைவு முறை, விளை பொருட்களுக்கு ஒழுங்குப்படுத்தப்பட்ட தரநிலை நிர்ணயித்து அவற்றின் விற்பனையை உயர்த்திடும், சான்று விளக்கக் கல்விக் கூடமாகத் திகழ்கிறது.

இக்கழகம், இந்திய நிருவாகப்பணி (ஐ.ஏ.எஸ்) அலுவலரான நிருவாக இயக்குநர் ஒருவரின் பொறுப்பில் இயங்கிவருகிறது. அவருக்கு, பொது மேலாளர், வாரியத்தின் செயலர், நிதி ஆலோசகர், முதன்மைக்கணக்கு அலுவலர், கட்டுமானப்பொறியாளர், மக்கள் தொடர்பு அலுவலர் மற்றும் மேலாளர்கள் ஆகியோர் உதவி புரிகிறார்கள்.

இக்கழகத்தின் பண்டகசாலையொன்று, அக்டோபர் 1, 1977 அன்று நாகர்கோவிலில் நிறுவப்பட்டது. அதனுடைய தற்போதைய பொருள் கொள்ளளவு, 1039 மெட்ரிக் டன்னாகும். இந்த அலகு, தற்போது, ஆதரவுப் பணியாளர்களுடன் கூடிய ஒரு பண்டகசாலை மேலாளரின் பொறுப்பிலியங்கி வருகிறது. மேலாளர் இருப்புப் பொருட்களின் பாதுகாவலராவார். தரநிலைமுறை, மற்றும் பண்டகசாலை வழங்கும் ரசீதுகளில் பொருட்களின் தரம் ஆகியவை குறித்திடுதல் போன்றவை, அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர், சேமிப்புப் பொருட்களின் சேதாரம் மற்றும்

இழப்பு ஆகியவை, மிகவும் குறைந்த அளவில்தான், பண்டகசாலையின் சேமிப்பிலுள்ள பொருட்களில் காணப்படுகிறது. பண்டகசாலையில் சேமித்து வைக்கப்பட்டுள்ள பொருட்கள், தீ, வெள்ளம், புயல் மற்றும் கன்னம் வைத்து, வீடுபுகுந்து திருடுதல் போன்றவற்றால் பாதிப்புக்குள்ளானால், காப்பீட்டுத்தொகை பெறுவதற்குதவியாக, காப்புறுதி செய்யப்படுகின்றன.

உற்பத்தியாளர்களின் நலனுக்காக, அவர்களுக்கு, வணிக வங்கிகள் மூலம், பண்டக சாலை, கடன் வசதி ஏற்படுத்திக் கொடுத்து வருகிறது. பயிர்களை நோய் தாக்கிடாது தடுத்தல், தங்களது வளாகத்தில் விவசாயிகளும், வணிகர்களும் சேமித்து வைத்துள்ள பொருட்களை பாதுகாத்திடத் தேவையான விரிவாக்கத் திட்டங்களை நடைமுறைப் படுத்துதல், பகிர்ந்தளித்தல், கையாளுதல் மற்றும் போக்குவரத்து வசதி போன்ற சேமிப்புக்குத் தேவையான தற்செயலாக நிகழும் நடவடிக்கைகளில் மண்டலசாலை தன்னை ஈடுபடுத்திக்கொள்வது, குறிப்பிடத்தக் கவையாகும்.

நாகர்கோவிலுள்ள ஒரு வாடகை வீட்டினில், துவங்கப்பெற்ற, கழகத்தின் இப்பண்டகசாலை, தற்போது 1140 மெட்ரிக் டன் பொருள் கொள்வினைக் கொண்டதாகும். இம்மாவட்டத்தில் ஆரல்வாய்மொழி மற்றும் கொளச்சல் ஆகிய கிராமங்களில், இருப்புக்கிடங்குகள் கட்டுவதற்குப் போதிய நிலங்களைக் கைப்பற்றுவதற்கான கருத்துரு அரசின் தீவிர பரிசீலனையில் திருத்திவருகிறது.[26]

வக்ஃப் வாரியம்

வக்ஃப் என்பது, அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களை, சமய கடமை பேணுகிற மற்றும் அறக்காரியங்களுக்கு மனநிறைவுடன் அர்ப்பணிப்பு எனப் பொருள்படும்.[27] 1954 ஆம் ஆண்டு, வக்ஃப் சட்டத்தின் 15-வது பிரிவின்படி, தமிழ்நாடு, வக்ஃப் வாரியமும், அதனுடைய கண்காணிப்பிலுள்ள சொத்துக்கள், நன்றாக கண்காணிக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு மற்றும் நிருவகிக்கப்படவும், அதனுடைய வருவாய் நிர்ணயிக்கப்பட்ட வீதத்தில் எந்த நோக்கத்திற்காக அந்த வக்ஃப் உருவாக்கப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேற்றப்பெறும் அளவில் முறையாகச் செலவு செய்யப்படவேண்டு மென்ற உட்கருத்துடனும், தனது அதிகாரங்களைப் பயன்படுத்தி வருகிறது. 1954ஆம் ஆண்டு, வக்ஃப் சட்டத்தின்படி, மாநிலத்திலுள்ள வக்ஃப் சொத்துக்கள் நல்லமுறையில் நிருவகிக்கப்பட வேண்டுமென்ற நோக்கில், தமிழக அரசு, 11 உறுப்பினர்களடங்கிய இவ்வாரியத்தை அமைத்துள்ளது. வாரியத்தின் பெருந்தலைவர், அதனுடைய உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். பொதுவாக, துணை ஆட்சியர் நிலையிலுள்ள முகம்மதிய சமயத்தைச் சார்ந்த வக்ஃப் சொத்துக்கள் குறித்து நன்கு அறிந்தவராகவும், அவற்றை நிருவகிக்கும் திறன்படைத்த வராகவும், உள்ளவரான ஒருவர் அரசினால்

தேர்ந்தெடுக்கப்பட்டு, வாரியத்தின் இசைவுடன், வாரியச் செயலராக, நியமிக்கப்படுகிறார்.

நிருவாக நலனைக் கருத்திற்கொண்டு, தமிழ்நாடு வக்ஃப் வாரியம், ஆறு மண்டலங்களை உருவாக்கியுள்ளது. வடக்கு மண்டலம் சென்னையிலும், வேலூர் மண்டலம் வேலூரிலும், மேற்கு மண்டலம் சேலத்திலும், மத்திய மண்டலம் திருச்சிராப்பள்ளியிலும், தெற்கு மண்டலம் மதுரையிலும் மற்றும் திருநெல்வேலி மண்டலம் திருநெல்வேலியிலும் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு மண்டலத்திற்கும் வக்ஃப் கண்காணிப்பாளர் தலைமைப் பொறுப்பிலுள்ளார்.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள வக்ஃப் நிறுவனங்கள், திருநெல்வேலி மண்டலத்திலுள்ள வக்ஃப் கண்காணிப்பாளரின் கட்டுப்பாட்டில் இயங்கிவருகின்றன. வக்ஃப் நிறுவனங்களால் செலுத்தப்படும் பங்குக்கட்டணத்தினை வசூலித்தல், அவர்களது கணக்குகளைத் தணிக்கை செய்தல், வக்ஃப் சொத்துக்களை ஆய்வு செய்தல், திறமையற்ற செயலாக்கம் குறித்து கிடைக்கப்பெற்ற புகார்கள் மீது விசாரணை செய்தல், ஆகியவை அவரது பணிகளாகும். நீதிமன்றங்களில் வக்ஃப் வாரியத்திற்கெதிராகத் தொடரப்படும் வழக்குகளில் வக்ஃப் நிறுவனத் தின் சார்பில் கண்காணிப்பாளர் ஆளுநராகிறார். திருநெல்வேலி வக்ஃப் வாரிய கண்காணிப்பாளரின் கட்டுப்பாட்டில், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள வக்ஃப் சொத்துக்கள் ஆகியவை தொடர்பான பணிகளை ஒரு வக்ஃப் ஆய்வாளர், நாகர்கோயிலைத் தலைமையிடமாகக் கொண்டு கவனித்துவருகிறார்.

இம்மாவட்டத்தில், 141 வக்ஃப் நிறுவனங்கள் உள்ளன. அவற்றில், கீழ்குறிப்பிட்டவை மிகப்பெரிய மற்றும் முதன்மை வாய்ந்த நிறுவனங்களாகும் :

1. ஹசரத் ஃபாஸில் ஷா ஆவுலியா தைக்கா	.. கோட்டார்
2. மாலிக் தினார் பைத்துல்மால்	.. கோட்டார்
3. இளங்கடை முஸ்லீம் சமுதாய டிரஸ்ட்	.. நாகர்கோவில்
4. முஸ்லீம் மொஹல்லம்	.. கொளச்சல்
5. அஞ்சுவனம் பீர் முகம்மதிய முஸ்லீம் சங்கம்	.. தக்கலை

தகுதியுள்ள வக்ஃப் நிறுவனங்களுக்கு, அவற்றின் நகர்ப்புறச் சொத்துக்களை மேம்படுத்திட, அரசு, குறிப்பிட்ட சில இலாபகரமான திட்டங்களுக்கு ஒரு கணிசமான தொகையினை ஒதுக்கி வைக்கிறது. மத்திய வக்ஃப் மன்றமும், இதனைப் போன்றதொரு, கடனை வழங்கி வருகிறது. இத்திட்டங்களின்படி, தமிழ்நாடு அரசு மற்றும் மத்திய வக்ஃப் மன்றம் ஆகியவற்றால், தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் மூலமாக, நகர்ப்புற நில வளத்திட்டத்தின் கீழ், கடன்கள் வழங்கப்படுகின்றன. ஒருகுறிப்பிட்ட

நிறுவனத்திற்கு வழங்கப்பெறும் அதிக அளவுத்தொகை ரூ.15 இலட்சமாகும். வக்ஃப் நிறுவனங்களின் வருவாயினைப் பெருக்கிட, கடைகள், தங்கும் விடுதிகள், சந்தைக் கூடங்கள் போன்ற நிலையான கட்டிடங்களைக் கட்டுவதற்கு, அப்படிப்பட்ட கடன்கள் வழங்கப்படுகின்றன.

வழங்கப்பட்ட ஒவ்வொரு தொடர்புள்ள வேலையும் சரிவர நிறைவேற்றப்பெறவும், அவற்றைப் பொதுவாகக் கண்காணித்திடவும், வக்ஃப் வாரியம் ஒரு வளர்ச்சிக்குழுவினை அமைக்கிறது. அவ்வளர்ச்சிக்குழுவில், வாரியத்தால் நியமிக்கப்பட்ட வாரிய உறுப்பினர் ஒருவர், குறிப்பிட்ட அதிகார எல்லையில் பணியாற்றும் வக்ஃப் நிறுவனங்களின் கண்காணிப்பாளர் ஒருவர், தொடர்புள்ள வக்ஃப் நிறுவனத்தின் முத்தாவள்ளிகள் அல்லது "ஜமாத்தின்" தலைவர் ஆகியோர் அடங்குவர்.

இம்மாவட்டத்திலுள்ள கீழ்க்கண்ட வக்ஃப் நிறுவனங்களுக்கு, அவற்றின் நகர்ப்புற சொத்துக்களை மேம்படுத்திட, கடன்கள் வழங்கப்பட்டுள்ளன:

1)	ஷேக் நூர்தீன் ஒலியுல்லா முஸ்லீம் மொஹல்லம், திருவிதாங்காடு	(1.5 இலட்ச ரூபாய்)
2)	முகைதீன் ஆண்டகை முஸ்லீம் ஜமாத் - தெற்கு சூரங்குடி, அகஸ்தீஸ்வரம் வட்டம்	ரூ.23,000/-
3)	இஸ்லாமிய அறிவு வளர்ச்சிக்கழகம், அகஸ்தீஸ்வரம்	1.20 இலட்ச ரூபாய்
4)	முஸ்லீம் சமுதாய டிரஸ்ட், இளங்கடை, கோட்டார்	9.25 இலட்ச ரூபாய்

வக்ஃப் நிறுவனங்களின் வருவாய்த் தொகை, ஏழை முகம்மதிய சமுதாயத்தினரின் நலன், முகம்மதிய சமுதாயத்தின் மேம்பாடு, ஏழை முகம்மதிய சமுதாய மாணவர்களின் படிப்பிற்கு உதவித்தொகையும், அவர்கள் உடுக்க உடைகளும், முகம்மதிய சமுதாயத்தைச் சார்ந்த பெண்களுக்கு நிதியுதவி அளித்தல் ஆகியவற்றிற்குப் பயன்படுத்தப் படுகின்றன (இந்த நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்தப்படும் வக்ஃப் நிதி, மாலிக் தினார் பெய்துல் மால் "கோட்டார் என அழைக்கப்படுகிறது.

வக்ஃப் கட்டிடங்களைப் புதுப்பிக்கவும் பழுது பார்க்கவும், ரூபாய் 5000/ -லிருந்து, ரூபாய் 10,000/- வரை தமிழக அரசின் நலத்திட்டத்தின் கீழ், வக்ஃப் நிறுவனத்தின் மூலம், புதுப்பித்தல் கொடை வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பல நிறுவனங்கள் பயனடைந்துள்ளன. தமிழ்நாடு வக்ஃப் வாரியம், பொது மக்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற நன்கொடையினின்றும் " நலநிதி" என்ற ஒரு நிதியினை உருவாக்கியுள்ளது. ஏழை எளியோர் மற்றும் நலிவுற்றோர் ஆகியோருக்கு நிதி உதவியளித்திட, இந்த நிதி பயன்படுத்தப்படுகிறது.

தமிழ்நாடு குடிநீர் வழங்கு மற்றும் வடிகால்வாரியம்

சென்னை தலைநகரப்பகுதி நீங்கலாக தமிழ்நாட்டின் ஏனைய பகுதிகளில், குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவுநிற்க் கால்வாய் அமைப்பு ஆகிய திட்டங்களை நிறைவேற்றிட, 1971ஆம் ஆணடு, தமிழ்நாடு அரசு, "தமிழ்நாடு குடிநீர்" வழங்கு மற்றும் வடிகால் வாரியத்தை (ட்வார்டு போர்டு) நிறுவியது. [28]

மாநில அளவில், தமிழ்நாடு குடிநீர் வழங்கு மற்றும் வடிகால் வாரியம், ஒரு அலுவலக சார்பற்ற தலைவர் மற்றும் ஏழு வாரிய இயக்குநர்கள் ஆகியோர் தலைமையில் இயங்குகிறது. இவர்களில் நிருவாக இயக்குநரும் அடங்குவர். நிருவாக இயக்குநர், வாரியத்தின் நிருவாகப் பணிக்குத் தலைமைப் பொறுப்பேற்கிறார். தலைமை அலுவலகத்தில் அவருக்கு பொறியியல் இயக்குநர் மற்றும் நிதித்துறை இயக்குநர் ஆகியோரும் மாநிலம் முழுமையும் பல தொழில் நுட்பம் வாய்ந்த மற்றும் தொழில் நுட்பம் சாரா அலுவலர்களும், உதவி புரிந்து வருகின்றனர். சென்னை தலைநகர்ப்புற மேம்பாட்டுப் பகுதி நீங்கலாக, மாநிலம் முழுவதிலுமுள்ள நகர்ப்புறம் மற்றும் புறப்பகுதிகளனைத்திலும், குடிநீர் வழங்குதல் மற்றும் வடிகால் வாரிய திட்டங்கள் யாவற்றையும் முறையாகத் திட்டமிட்டு, செயலாற்றும் பணிகளில் அவர்கள் நிருவாக இயக்குநருக்கு தத்தம் பிரிவில் உரிய உதவியினை அளித்துவருகின்றனர்.

மாநிலத்தில் தமிழ்நாடு குடிநீர் வழங்கு மற்றும் வடிகால் வாரியத்தின் நடவடிக்கைகள்

இம்மாநிலத்தில், 753 நகரங்களும், (சென்னை மாநகராட்சி நீங்கலாக) இரு மாநகராட்சிகளும், 98, நகராட்சிகளும், எட்டு நகராட்சி நகரியங்களும், 17 ஊராட்சி நகரியங்களும், 628 பேரூராட்சிகளும் உள்ளன. 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, இவற்றின் மொத்த மக்கள்தொகை 165 இலட்சங்களாகும். 753 நகரங்களில், 336 நகரங்களுக்கு குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. 40 குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்கள் செயலாக்கப்பட்டு வருகின்றன.

குடிநீர் திட்டங்கள் தவிர, பாதாள வடிகால் திட்டங்கள், 16 நகரங்களில், நடை முறைப்படுத்தப்பட உள்ளன. அவற்றில் நான்கு நகரங்களில், திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இவை தவிர, குறைந்த மதிப்பு சுகாதாரத்திட்டங்கள், உலக வங்கி உதவியுடன், 14 நகரங்களில் செயல்முறைப்படுத்தப்பட்டுள்ளன. 1985 ஆம் ஆண்டு ஆய்வின்படி, 64,083 கிராமப்புறக் குடியிருப்புகளில், 16,085 குடியிருப்புகளே, குடிநீர் வசதி பெறாமலிருந்தன. 27,356 குடியிருப்புகளில் ஒரு பகுதியினருக்குக் குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட்டது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்படி, 10,990 குடியிருப்புகளுக்கு, குடிநீர் வசதியளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. குறைந்த அளவு தேவைகள் திட்டத்தின்படி

மாநில அரசும், விரைவுபடுத்தப்பட்ட கிராமப்புற குடிநீர் வழங்குத் திட்டத்தின்படி மத்திய அரசும் இதற்கான நிதியினை அளித்து வருகின்றன. இவை தவிர, வறட்சி நிவாரணத்திட்டங்கள், ஐரோப்பியப் பொருளாதார சமுதாயத்திட்டம், உலக வங்கித் திட்டம் மற்றும் தொழில் நுணுக்க செயல்முறைத்திட்டப்பரப்புக்குழுப் பணித்திட்டம் ஆகிய திட்டங்களின் கீழும் குடிநீர் வழங்கும் திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன.

கன்னியாகுமரி மாவட்டத்தில், குடிநீர் வழங்கு திட்டங்கள் நிருவாகப் பொறியாளரால் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அவருக்கு, நாகர்கோவில், குழித்துறை, தக்கலை மற்றும் குலசேகரம் ஆகிய இடங்களைத் தலைமையிடங்களாகக் கொண்டு பணியாற்றும் நான்கு உதவி நிருவாகப் பொறியாளர்கள் உதவி புரிகிறார்கள். திருநெல்வேலி நகர்ப்புறக் கோட்டத்தின் கட்டுப்பாட்டிலுள்ள நாகர்கோவிலைத் தலைமையிடமாகக் கொண்ட ஒரு உதவி நிருவாகப் பொறியாளர், நகர்ப்புற குடிநீர் வழங்குதிட்டத்தினை செயல்படுத்தி வருகிறார். இக்கோட்டங்கள் மதுரையிலுள்ள தெற்கு மண்டல முதன்மைப் பொறியாளரின் கட்டுப்பாட்டில் இயங்கிவருகின்றன. இம்மாவட்டத்திலுள்ள 120 குடியிருப்புகளில், கிராமப்புற குடிநீர் வழங்கு திட்டங்களை மேலும் ஒரு நகராட்சி, எட்டு பேரூராட்சிகள், 11 சாலையோர கிராமங்கள் ஆகியவற்றிற்குப் பலனளிக்கும் கூட்டு குடிநீர் வழங்குத்திட்டத்துடன் கூட, இணைத்து நிறைவேற்றிட, கழகம் உத்தேசித்துள்ளது. 400 இலட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றிட உத்தேசிக்கப்பட்டுள்ள இத்திட்டத்திற்கு, குழித்துறையாறு, நீர் வழங்கும் ஆதாரமாகத் திகழ்கிறது. வறட்சி நிவாரணத்திட்டத்தின் கீழ், 1987ஆம் ஆண்டு முடிய, 549 குழாய்க் கிணறுகள் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் குடிநீர் வழங்கிடத் தேவை என குறிப்பிட்டுக் காட்டிய இடங்களில் வெட்டப்பட்ட 32 குழாய்க்கிணறுகள் ஆகியவை மக்களுக்கு நன்முறையில், குடிநீர் வழங்கி வருகின்றன.

குறிப்புகள்

1. வேளாண்துறை இயக்குநர், சென்னை, அறிக்கை நாள் 31.8.1987,
2. ஆதிதிராவிடர் மற்றும் மலைவாழ் வகுப்பினர் நலம், சென்னை, அறிக்கை, நாட்கள் 29.9.1988 மற்றும் 23.1.1989,
3. வேளாண் விற்பனை இயக்குநர், சென்னை, அறிக்கை நாள் 22.9.1988,
4. விலங்கினப் பாதுகாப்பு இயக்குநர், சென்னை, அறிக்கை நாள் 17.7.1986,
5. பிற்பட்டோர் நலத்துறை இயக்குநர், சென்னை, அறிக்கை நாள் 29.9.1988,
6. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், சென்னை, அறிக்கை நாள் 29.9.1988,
7. வணிகவரிகள் -வணிகவரிகள் இயக்குநர் அளித்த புள்ளி விவரங்கள் - தமிழ்நாடு 1986 மற்றும் சென்னை வணிக வரிகள் ஆணையரின் அறிக்கை நாள், 10.1.1989,
8. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்குநர், சென்னை, அறிக்கை ஜனவரி 1989,
9. 1984ஆம் ஆண்டு கல்வித்துறையின் நிருவாக அறிக்கை,
10. மீன் தொழில்துறை உதவி இயக்குநர், சென்னை, அறிக்கை நாள் 3.10.1988,
11. வனத்துறை முதன்மைத்தலைவர், சென்னை, அறிக்கை நாட்கள் 17.5.88 மற்றும் 16.12.88,
12. கோட்டத் தீயணைப்புப்பணி அலுவலர், நாகர்கோவில் கோட்டம் - அறிக்கை நாள் 16.9.1986 மற்றும் தீயணைப்புப்பணித்துறை, 1978-88 ஆம் ஆண்டிற்கான கொள்கைக்குறிப்பு,
13. முதன்மைப் பொறியாளர் (நெடுஞ்சாலை மற்றும் கிராமப்புறப்பணி) சென்னை, அறிக்கை நாட்கள் 8.5.1986 மற்றும் 21.12.1988,
14. இந்து சமய மற்றும் அறநிலையத்துறை ஆணையர்,உதவி ஆணையர் நிர்வாக அலுவலர் (இந்து சமய மற்றும் அறநிலையத்துறை) ஒன்றுபடுத்தப்பட்ட மற்றும் ஒன்றுபடுத்தப்படாத தேவாஸ்வம், சுசீந்திரம், அறிக்கை நாட்கள் 22.9.1987 மற்றும் 10.12.1988,
15. நீதித்துறை நிருவாகம், உள்துறை, 1987-88 ஆம் ஆண்டிற்கான கொள்கைக் குறிப்பு,
16. தொழிலாளர்துறை ஆணையர், சென்னை, அறிக்கை நாள் 3.10.1988,
17. தமிழ்நாடு காவல்துறை - செய்தி மற்றும் மக்கட் தொடர்புத்துறை இயக்குநரகம், சென்னை,
18. சிறைத்துறை முதன்மைத்தலைவர் (ஆய்வாளர்), சென்னை, அறிக்கை நாள் 8.7.1988,
19. அரசாணை எண்.541, பொதுப்பணித்துறை, நாள் 23.3.1970,
20. அரசாணை எண். 622, பொதுப்பணித்துறை, நாள் 21.3.1977,
21. (1) நிருவாகப் பொறியாளர், பொதுப்பணித்துறை, கன்னியாகுமரி கோட்டம், நாகர்கோவில், அறிக்கை நாள் 23.7.1987,
    (2) முதன்மைப்பொறியாளர், பொதுப்பணித்துறை, சென்னை - நிருவாக அமைப்புப்புள்ளி விவர விளக்கக்காட்சிப் படம்,
22. பத்திரப்பதிவுத்துறையின் கையேடு சென்னை, பத்திரப்பதிவுத்துறை முதன்மைத் தலைவரின் வெளியீடு,
23. பொது மேலாளர் (நிருவாகம்), தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், சென்னை, அறிக்கை நாள் 3.10.1988,
24. பெருந்தலைவர், தமிழ்நாடு மின்சார வாரியம், சென்னை, அறிக்கை நாள் 4.1.1989,
25. பெருந்தலைவர், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், சென்னை, அறிக்கை நாட்கள் 6.10.1988 மற்றும் 20.12.1988,
26. நிருவாக இயக்குநர், தமிழ்நாடு பண்டகச்சாலைகள் கழகம், சென்னை, அறிக்கை நாட்கள் 25.6.1986 மற்றும் 4.1.1989,
27. செயலர், தமிழ்நாடு வக்ஃப் வாரியம், சென்னை, அறிக்கை நாள் 16.12.1988,
28. பெருந்தலைவர், தமிழ்நாடு குடிநீர் வழங்கு மற்றும் வடிகால் வாரியம், சென்னை, அறிக்கை நாள் 19.1.1989,

இயல் - 14
உள்ளாட்சி

முன்னுரை

ஊராட்சிகள் நமது நாட்டு கிராம நிருவாகத்தின் ஒரு ஒருங்கிணைந்த பகுதியாகத்தான், இருந்து வந்திருக்கின்றன. தென்னிந்தியாவில், குறிப்பாக தமிழ்நாட்டில், ஊராட்சி நிருவாகம் பண்டைய காலம் முதலே வேரூன்றியிருந்து வந்தன. வரலாற்று ஆவணங்கள், கல்வெட்டுக்கள், தொன்மையான நினைவுச்சின்னங்கள் ஆகியவை, ஊராட்சிகள் கிராம மக்களது வாழ்க்கையில் ஒருங்கிணைந்து, அவர்கள் வளர்ச்சிக்கு முக்கியப் பங்காற்றியமைக்கு சான்று பகர்கின்றன.

பண்டைய காலத்தில் உள்ளாட்சியின் நோக்கம் மற்றும் ஈடுபாடு

தற்போதைய கன்னியாகுமரி மாவட்டம், ஆயிகள், பாண்டியர்கள், சோழர்கள், நாயக்கர்கள் மற்றும் வேநாடு மன்னர்கள் ஆகியோரின் ஆளுகையிலிருந்து வந்தது. நாடு சுதந்திரமடைந்த பின்னர், மாவட்டத்தில் மன்னராட்சி முடிவுற்று, மக்களாட்சி மலர்ந்தது.

மாவட்டத்தில் ஆயி மன்னர்கள் அரசோச்சிய காலத்தில் கிராம மன்றங்கள் (சபை) இயங்கி வந்ததாக, கல்வெட்டுச் சான்றுகள் கூறுகின்றன. மன்றங்களின் அலுவல்கள் பெரும்பாலும் கோவில் நிருவாகத்துடன் வரையறைப்படுத்தப்பட்டது.

பள்ளியம் செப்புத்தகடுகள் மற்றும் பார்த்திவபுரம் தகடுகள் ஆகியவற்றினின்றும் விளவங்கோடு வட்டம், முஞ்சிரையில் ஒரு மன்றம் இருந்ததாகவும், அம்மன்றம், மன்னரின் மேற்பார்வையில் நீதி வழங்கும் அதிகாரத்தினைப் பெற்றிருந்ததாகவும் தெரியவருகிறது.

கருணாந்தகன் என்ற ஆயி மன்னர், பார்த்திவபுரத்தில் அருள்மிகு விஷ்ணு ஆலயம் நிறுவுவதற்காக, முஞ்சிரை மன்றத்தினின்றும் சில நிலங்களை விலைக்கு வாங்கியதாக தலைமை அலுவலகத் தகடுகளில் குறிக்கப்பட்டுள்ளது.

சங்க இலக்கியங்கள், மன்றம் மற்றும் பொதியில் ஆகியவை பற்றிக் கூறுகின்றன. அக்காலத்தின் கிராம மன்றங்கள் இயங்கிவந்ததை அவை கோடிட்டுக்காட்டுவதாக திரு.கே.ஏ.என். சாஸ்திரி கூறுகிறார். [1]

பிரம்மதேய கிராமங்களில், "மா மன்றங்கள்" கிராம மன்றங்களாக இயங்கிவந்தன. பத்தாம் நூற்றாண்டினிடையில் மாவட்டத்தில் அருள்மிகு சிவபெருமான் கோவில் கொண்ட தலமான, சுசீந்திரம் என்ற கிராமம், பிரம்ம தேய கிராமமாகத் திகழ்ந்ததாகவும், அக்கிராமத்தில் "மா மன்றம்" இயங்கி வந்ததாகவும், வரலாறு கூறுகிறது. இம்மாமன்றம் நிருவாகத்தில் மாபெறும் அதிகாரங்களைக் கையாண்டதாகவும், "சுசீந்திரம் கோவில்" என்ற நூலாசிரியரான திரு.கே.கே. பிள்ளை கூறுகிறார்.[2]

இந்தியாவின் ரிக் வேத காலத்தில், கிராமங்களில் மன்றங்கள் திறம்படசெயல்பட்டமைக்குத் தெளிவான சான்றுகள் உள்ளன.

மன்றத்தின் இன்றியமையாக் கடமை, நீதியை நிலைநாட்டுவ தாயிருந்தது. கிராம மன்றத்தைப் பற்றிக் கூறிடும், தென் இந்தியாவிலுள்ள ஒவ்வொரு கல்வெட்டும், கிராம "மத்யஸ்தத்தை"ப் பற்றியும் கோடிட்டுக் காட்டுகிறது. ஆக, நீதி நிருவாகம்தான், மன்றத்தின் முதன்மையான கடமைகளில் ஒன்றாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. தென்னிந்தியாவின், பிந்தைய வரலாற்றுக் காலங்களில், இயங்கி வந்த கிராம மன்றம் வடக்கு அல்லது தெற்கு அல்லது இரண்டும் சேர்ந்த பகுதிகள், தமிழ் மற்றும் சமஸ்கிருதம் (வடமொழி) ஆகியவற்றின் செல்வாக்கினால் உண்டாக்கப் பட்டதேயன்றி, அது தொடர்பாக சிறப்பாகக் கூறுவதற்கொன்றுமில்லை.

சோழ மன்னர்கள் காலத்தில் உள்ளாட்சி நிருவாகம்

தமிழ்நாட்டில் சோழ மன்னர்கள் காலத்திய உள்ளாட்சி நிருவாகம், பொன்னெழுத்துக்களால்ப் பொறிக்கப்படவேண்டியவையாகும். சோழ மன்னர்கள் அரசோச்சிய காலத்தின் மிகச் சிறப்பு இயல்பு என்னவெனில் (கி.பி.850 முதல் 1173 வரை) தன்னாட்சி உரிமையுடன் மிக வேகமாகவும் திறமையுடனும் இயங்கி வந்த கிராம நிறுவனங்களின் பணியேயாகும். [3]

உள்ளூர் தொடர்பான வளர்ச்சிப்பணிகளை மேற்கொள்ளவும், திறம்பட நிருவாகம் செய்யவும் மிகப்பெரிய குழு அமைக்கப்பட்டு, சீறிய முறையில் அது இயங்கிவந்தது. அது "வாரியம் " என அழைக்கப்பட்டது. முதலாம் பராந்தகச் சோழர் காலத்தில் தனது அரசியலமைப்பு முறையினை, மிகக் குறுகிய காலத்தில், சூழ்நிலைக்கேற்ப இருமுறை மாற்றியமைத்து, செல்வாக்கு பெற்ற உத்திரமேரூர் மா மன்றம், இதற்கு முன்னுதாரணமாக விளங்கியது. நிருவாகத்தில், சீரமைப்பையும், மேம்பாட்டையும் மிகச் சிறந்த வகையில் நடைமுறைப்படுத்திய உத்திரமேரூர் மா மன்றத்தையே ஏனைய மன்றங்களும் பின்பற்றத்துவங்கின. "இந்த நிருவாக அமைப்பையே சோழ மன்னர்கள் ஆட்சியின் நிருவாகத் திறமைக் குறித்துக் கூறுகையில் முன் மாதிரியாகக் கொள்ளலாம்; ஆனால், தென்னிந்தியாவின் வெவ்வேறு ஆட்சிப்பகுதிகளில், நிருவாக தொடர்பான விதிமுறைகள் மாறுபட்டாலும், இதே நிலையே இருந்து வந்ததைக் காணமுடிகிறது".[4]

மாண்புமிகு இராஜ இராஜ சோழர்தான், நாஞ்சில்நாட்டினை, சோழ ஆளுகையின் கீழ் கொணர்ந்தார். இப்பகுதிதான், தற்போதைய கன்னியாகுமரி மாவட்டமாகும். இப்பகுதி, முதலாம் குலோத்துங்கரது ஆட்சிக்காலம் வரை, சோழ மன்னர்களின் அரசாட்சியிலிருந்தது. எனவே, தன்னாட்சி உரிமையுடன் இயங்கிவந்த கிராம நிருவாக சிறப்பியல்பு முறை, இப்பகுதியிலும் நடைமுறையிலிருந்து வந்தது.

சோழர் காலத்தில், உள்ளாட்சி நிறுவனங்களுக்குக் கடைப்பிடிக்கப் பட்டு வந்த தேர்தல் முறை "குடவோலை முறை" அல்லது "குடச்சீட்டு முறை" என அழைக்கப்பட்டது. இம்முறையின்படி, தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர்களை பனையோலைகளில் எழுதி அவற்றை ஒரு குடத்திலிட்டு குலுக்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய வேட்பாளர்கள் எவ்வளவு பேர்களோ, அவ்வளவு பனையோலைச் சீட்டுகளை, ஒரு குழந்தையின் உதவியுடன் எடுத்து, அச்சீட்டினில் குறிக்கப்பட்டோர், தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.[5] அக்குழந்தையினால் எடுக்கப்பட்ட சீட்டுகளில் குறிக்கப்பட்ட பெயர்களையுடையவர்கள், தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டார்கள்.

அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களை உள்ளடக்கி, பல "வாரியங்களும்" குழுக்களும் அமைக்கப்பட்டன. அவை, ஏரி வாரியம் அல்லது ஏரிக்குழு, தோட்ட வாரியம் அல்லது தோட்டக்குழு, பொன் வாரியம் அல்லது தங்கக்குழு போன்றவையாகும். அவற்றின் உறுப்பினர்கள் அவரவர்களது பணியினை ஆற்றி வந்தனர். உறுப்பினர்களது கால வரை, ஓராண்டென நிர்ணயிக்கப்பட்டது. கிராமம் அல்லது கிராம மண்டபத்திலுள்ள ஆலமரம் அலுவலகமாகத் திகழ்ந்தது.

ஊராட்சிகளின் கணக்குகளை "காரணாதன்" என்ற அலுவலர் பராமரித்து வந்தார். மிகுந்த கவனத்துடனும், உன்னிப்பாகவும் இப்பணியிடத்திற்குரிய நபர் நியமிக்கப்பட்டார். இப்பணியிடத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள், புடம் போட்ட தங்கத்திற் கொப்பானவ ராயிருந்தனர். ஊராட்சிக் கூட்டங்களில், இவர்களே கணக்குகளை அளித்தனர். கணக்கில், உறுப்பினர்களால் வேறுபாடு காணப்பட்டால், "காரணாதன்" கையில் மிகச்சூடான நெருப்பில் காய்ச்சிய இரும்புக் கோலினைக் கையில் ஏந்தி, கணக்கினைப் படிக்கப் பணிக்கப்பட்டார். கணக்கில் ஏதேனும் தவறு எற்படின், 'காரணாதன்' கைகளில் நெருப்புப் புண்கள் உண்டாகுமெனவும், கணக்குகள் சரியாக இருப்பின், கைகளில் புண்கள் ஏற்படாதெனவும் நம்பிக்கை கொண்டிருந்தார்கள்.

இவ்வாறாக பண்டைகாலத்தில், ஊராட்சிகள், கிராம நிருவாகத்தில், திறமைவாய்ந்த அலகுகளாகத் திகழ்ந்தன. நிருவாகிகள், கிராமக் குடிமக்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்து, நீதித்துறை நிருவாகத்தையும், நடுநிலை தவறாது நடத்தி வந்தனர்.

சோழ மன்னர்களின் ஆட்சி காலத்திற்குப் பின்னர், இரண்டாம் பேரரசு பாண்டியர்களும், அவர்களுக்குப் பின்னர் நாயக்கர்களும் தமிழ்நாட்டின் இப்பகுதியினை ஆண்டார்கள். இவர்களது காலத்திலும், உள்ளாட்சி நிறுவனங்கள் ஊக்குவிக்கப்பட்டு, அவையும் நன்முறையிலியங்கிவந்தன. தேர்தல் நடத்துதல், அலுவலக நேரம், அலுவலர்களின் பணிப்பெயர் போன்றவற்றில், சிற்சில மாறுதல்கள் இல்லாமலில்லை.

நாயக்க மன்னர்களின் ஆட்சி காலத்திற்குப் பின்னர், முன்பு நாஞ்சில் நாடு, ஈடநாடு என அழைக்கப்பட்டு வந்த தற்போதைய கன்னியாகுமரி மாவட்டம் வேநாடு அரசர்களின் ஆளுகையில் வந்தன. இந்தியத் துணைக் கண்டத்துடன் முந்தைய திருவாங்கூர் மாநிலம், 1949 செப்டம்பர் மாதத்தில் இணைக்கப்படும் வரை, அவர்களது ஆட்சிக்குட்பட்ட பகுதியாக இருந்து வந்தன. வேநாடு, மன்னர்களது ஆட்சியின் முன் பகுதியில், நாஞ்சில் நாட்டிலுள்ள உள்ளாட்சி நிறுவனங்கள் இயங்கி வந்தமை குறித்து, திரு.கே.கே.பிள்ளை கீழ்க்கண்டவாறு எழுதுகிறார்:

"பன்னிரண்டாம் மற்றும் 13 ஆம் நூற்றாண்டுகளிலும், அதன் பின்னர் பல காலம் வரையிலும், நாஞ்சில் நாடு மற்றும் வேநாட்டிலியங்கிவந்த உள்ளாட்சி மன்றங்களும், கோவில் மன்றங்களும், வீரியமிக்கவையாக இருந்தன. அன்றாடப் பணிகளையும் அவையே கவனித்து வந்தன. கி.பி.1196-ன் வெள்ளயிணி கல்வெட்டு, கி.பி1209-ன் திருவனந்தபுரம் கல்வெட்டு மற்றும் கி.பி. 1235-ன் மணலிக்காரக் கல்வெட்டு இவையாவும் கிராம குடிமக்களுக்குத் தேவையான வசதிகள் யாவற்றையும் கிராம மன்றங்களே கவனித்து வந்ததாக, சான்று பகர்கின்றன".[6]

இச்சபைகள் (அல்லது கிராம மன்றங்கள்) நாஞ்சில் நாட்டு மக்களின், சில குறிப்பிட்ட காலத்தில் மட்டும் செயல்படுகிற, இயக்கங்களாக இல்லாமல், நிலையாக மற்றும் நன்முறையில் அமைக்கப்பட்ட பொது மக்களின் சார்பில் இயங்கும் சக்தி வாய்ந்த மன்றங்களாகவும், மற்றும் அரசு, மக்கள் இரண்டு தரப்பிற்குமிடையே, "தாக்கும்-தடுக்கும் பொறி"யாக இயங்கியதென பேராசிரியர் திரு. பி.சுந்தரம்பிள்ளை கருத்து தெரிவிக்கிறார்.[7]

பல நூற்றாண்டுகளுக்கு முன்னரிலிருந்து, தற்காலம் வரை, கேரள நாட்டில் தாராகுட்டம், நாட்டுக்குட்டம் மற்றும் பெருங்குட்டம் ஆகிய மூன்று வகையான மன்றங்கள் இயங்கிவந்ததாக, கேரளோத்பத்தி என்ற மலையாள இலக்கியம் கூறுகிறது.[8] அவற்றில், "தாராகுட்டம்" என்பது கிராம மன்றமாகவும், "நாட்டுக்குட்டம்" என்பது கிராமங்களின் பிரதிநிதிகளடங்கிய மன்றமாகவும், "பெருங்குட்டம்" என்பது நாடு முழுமையுமுள்ள பிரதிநிதிகளடங்கிய தேசிய மன்றமாகவும் இயங்கி வந்தன.

முன்னர் கேரள நாட்டின் ஒரு பகுதியானதும், தற்போதைய கன்னியாகுமரி மாவட்டத்தின் பகுதியானதுமான நாஞ்சில் நாட்டில் அப்படிப்பட்ட மன்றங்கள் இயங்கிவந்தனவெனவும், மன்றங்களின் உறுப்பினர்களான "நாட்டார்கள்" என்போர், (நாகர்கோவிலுக்கு அருகாமையிலுள்ள) வடசேரி ஆசிரமம் மற்றும் எசந்திமங்கலம் ஆகிய இடங்களில் கூடி, அநீதி இழைப்பதாகத் தோன்றும் அரசின் சட்டங்களுக் கெதிராகத் தீர்மானங்களை இயற்றியதாகவும், கி.பி. 1703-ல் சான்றுகள் உள்ளன.

ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியார், அரசுப்பொறுப்பேற்று, சென்னை மாநிலம் அமைக்கப்பட்ட பின்னர், உள்ளாட்சிமன்றங்கள் ஊக்குவிக்கப்படவில்லை. மன்னராட்சியிலிருந்த முந்தைய திருவாங்கூர் மாநிலத்தின் ஒரு பகுதியாக நாஞ்சில் நாடு இருந்து வந்தது. அங்கே, உள்ளாட்சி மன்றங்களுக்குப் புதிய அதிகாரங்களை வழங்கி, அவற்றை ஊக்குவிக்கவில்லையென்றாலும், அவை தடை செய்யப்படவில்லை.

நாளடைவில், ஆங்கிலேய நிருவாகம், உள்ளாட்சி மன்றங்களின் முக்கியத்துவத்தை உணரத்துவங்கியது. இதன் விளைவாக, முன்னேற்றம் காணக்கூடிய வகையில் பல சட்டங்கள் இயற்றப்பட்டன.

கன்னியாகுமரி மாவட்டத்தில், தற்காலத்திய உள்ளாட்சி நிருவாகம்- உள்ளாட்சி நிருவாகம் தொடர்பான ரிப்பன் பிரபுவின் தீர்மானம்

இந்திய உள்ளாட்சியின் தந்தை என எல்லோராலும் உள்ளன்புடன் போற்றப்படும் ரிப்பன் பிரபு. இந்தியாவின் மாநில ஆட்சித் தலைவராக (கவர்னர் ஜெனரல்) 1880-84-ல் பணியாற்றியபோது, 1881 மற்றும் 1882 ஆகிய ஆண்டுகளில் இரு தீர்மானங்களை இயற்றினார்.[8(அ)] உள்ளாட்சி தொடர்பான அவரது தீர்மானங்கள் நாட்டின் உள்ளாட்சி வளர்ச்சிக்குத் திருப்பு முனைகளாக அமைந்தன.

1881ஆம் ஆண்டுத் தீர்மானம், உள்ளாட்சியின் கருத்தினைச் செயலாக்க வழிவகை செய்தது. இதனைத் தொடர்ந்து, மாநில அரசுகளைத் தங்களது வருவாயில், குறிப்பிடத்தக்க பகுதியை உள்ளாட்சிக்கு மாற்றிட, இந்திய மாநில ஆட்சித் தலைவர் ஆணை பிறப்பித்தார். உள்ளாட்சி நிருவாகம் சார்ந்த, உள்ளூர் குடி மக்களின் தேவைக்கான பணிகளைப் பொறுப்பேற்க உள்ளாட்சிகளுக்கும் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

மாநில, உள்ளாட்சி மற்றும் நகராட்சி குறித்த சட்டங்களை கவனமாக ஆய்வு செய்திட, மாநில அரசுகளுக்கு இந்திய அரசு ஆணை பிறப்பித்தது. இந்த ஆய்வின் நோக்கமென்னவெனில், எவ்வகையான வருவாயினை மாநில அரசுத் தலைப்பிலிருந்து, உள்ளாட்சி நிருவாகத் தலைப்பிற்கு மாற்றலாமெனக் கண்டுபிடிப்பதேயாகும். ஏனெனில், அவ்வருவாயினைக் கொண்டு நகராட்சிக் குழுக்கள் முறையாக நிருவாகத்தினை மேற்கொள்ளலாமென்பதே அதனின் உட்கருத்தாகும். இரண்டாவதாக, எவ்வகையான இனங்களை முழுமையாக உள்ளாட்சிகளுக்கு மாற்றிடலாமெனவும் முடிவெடுக்க வேண்டியிருந்தது. "உள்ளாட்சிகளின் எண்ணிக்கையினைக் கணிசமான அளவு உயர்த்த" நடவடிக்கை மேற்கொள்வதும், இவ்வாய்வின் மூன்றாவது நோக்கமாக இருந்தது.

இந்திய மாநில ஆட்சித் தலைவரின் ஆணைப்படி, மாநில அரசுகள் ஆய்வும், விசாரணையும் மேற்கொண்டு, அறிக்கைகளையும் அனுப்பி வைத்தன. அவ்வறிக்கைகளைப் பகுத்தாய்ந்து, அதனைத் தொடர்ந்து,

ரிப்பன் பிரபுவின் புகழ்பெற்ற 1882 ஆம் ஆண்டு, தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. 1882ஆம் ஆண்டின், இத்தீர்மானத்தில், ரிப்பன் பிரபு நல்ல கவனம் செலுத்தி, உள்ளாட்சி முறையில், கொணரப்படும் மேம்பாடு, நகராட்சி நிருவாகத்தின் திறமையை பாதிக்காதவாறு அமைய வழிவகை செய்தார். "இந்த நடவடிக்கை உள்ளாட்சி நிருவாகத்தை மேம்படுத்த வேண்டுமென்ற கருத்தை, முதன்மையாகக் கொண்டு மட்டும் மேற்கொள்ளப்படவில்லை. மக்கள், நிருவாகம் தொடர்பாக, அறிவு பூர்வமாக சிந்தித்து செயல்பட, அவர்களது அரசியல் அறிவினை வளர்ப்பதையே முக்கிய நோக்கமாகக் கொண்டதாகும்" என அவர் தெளிவுபடக் கூறியிருக்கிறார். சில காலத்திற்குப் பின்னர், மக்கள் உள்ளாட்சி நிருவாகத்தில் அக்கறை செலுத்தி அரசியல் அறிவு வளர்ச்சிப்பெற்ற பின்னர், உண்மையிலேயே நிருவாகத்திறமை இயல்பாக மேம்படுமென்பதில், இந்திய மாநில ஆட்சித்தலைவர், மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தார். ஆனால், புதிய முயற்சியில் துவக்க காலத்தில், தோல்வியை சந்தித்திட நேரிட்டது. உள்ளாட்சி நிருவாகத்தின் வளர்ச்சிக்கு அரசு அலுவலர்கள் முழு ஆதரவளித்து, மனப்பூர்வமாக செயல்பட்டால், தோல்வியைக் கண்டு துவள வேண்டியதில்லை என்ற நம்பிக்கையும், மிகக்குறுகிய காலத்திலேயே நல்ல முன்னேற்றம் காணலாமென்ற உறுதியும் தோன்றலாயிற்று. ஒவ்வொரு மாவட்டத்திலும் மின்னல் வலையமைவினாலான உள்ளாட்சிகளை உருவாக்கி, பராமரித்திட அனைத்து மாநில அரசுகளையும் தீர்மானம் வலியுறுத்தியது. ஒவ்வொரு உள்ளாட்சி நிறுவனமும், அவற்றின் உறுப்பினர்களுக்கு உள்ளூரைப் பற்றிய பொது அறிவு, உள்ளூர் மீதான நாட்டம் இவற்றிற்கொப்ப, அவற்றின் பரப்பளவு பொது நலத்தில் அக்கறை கொண்டு மற்றும் அப்பரப்பளவில் அடங்கிய கிராம எல்லைப் பகுதியின் வளர்ச்சியில் பற்றுக்கொண்ட உறுப்பினர் வாழ் எல்லையாக நிர்ணயிக்கப்பட வேண்டுமென தீர்மானம் சுட்டிக்காட்டியது. அலுவல் சாரா உறுப்பினர்கள் அதிகமாகவும், அலுவலர் உறுப்பினர்கள், மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில், 3-ல் 1 பாகத்தினராகவும் நிர்ணயிக்கப்பட்டது. இவ்வாறாக அலுவல் சாரா உறுப்பினர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. ஏனெனில், உள்ளாட்சி நிருவாகத்தில் அவர்களைத் தொடர்புடையோராகச் செய்வது நலன் பயக்குமெனக் கருதப்பட்டது.

செயல்முறைக்குகந்த இடங்களில், உள்ளாட்சி நிறுவனங்களுக்கான உறுப்பினர்களுக்கு, தேர்தல் முறையினை அறிமுகப்படுத்தியது.

உள்ளாட்சி நிறுவனங்களின் மீது, மாநில அரசுகளுக்குரிய அதிகார வரம்பினைப் பொறுத்தவரையில், கடைபிடிக்கப்படவேண்டிய "உண்மையான கொள்கை", அரசு, அவற்றின் நிருவாகத்தைக் கூர்ந்து நோக்கி, அதே நேரத்தில் அவற்றின் மீது, அதிகாரத்தைப் பயன்படுத்தக் கூடாதென்பதாகும். அதற்குத்தகுந்தாற்போல், அரசு உள்ளாட்சி குறித்த சட்டங்களை ஆய்ந்து, அவசியமேற்படின் அவற்றைத் திருத்தியமைக்க

வேண்டுமேயல்லாது, உள்ளாட்சிகளுக்கு அதிகார ஆணைகளைப் பிறப்பிக்கக்கூடாது". ஒப்புதல் வழங்கப்படவேண்டிய இனங்கள் துவக்கத்தில் அதிக அளவு இருந்தன. பின்னர் அவை கணிசமான அளவு குறைக்கப்பட்டன. உள்ளாட்சி நிறுவனங்களின் அலுவல்கள் புறக்கணிக்கப்பட்டாலோ, அரசியல் திருப்புமையம் ஏற்பட்டாலோ, உள்ளாட்சிகளின் செயல்முறைகளனைத்தும் தள்ளுபடி செய்யவோ, அவற்றைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கவோ மாநில அரசுக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. உள்ளாட்சி நிறுவனத்தை முழுமையாகவும், நிலையாகவும், தடைசெய்ய மாநில அரசு, மத்திய அரசின் இசைவினைப் பெற்ற பின்னரே இயலும். உள்ளாட்சிகளின் நடவடிக்கைகளை நன்கு கவனித்து, தீவிர ஆய்வு மேற்கொள்ள வேண்டிய இனங்களை அவர்களின் கவனத்திற்குக் கொணர்ந்து, அவர்களது அலுவல்களை அவர்கள் புறக்கணித்தால், தனது அதிகாரத்தினைப் பயன்படுத்தி அதனைத் தடுத்து நிறுத்துதல், அல்லது சட்டத்திற்குப் புறம்பாகவோ, மனம்போன போக்கிலோ அல்லது நியாயத்திற்கு ஒவ்வாத முறையிலோ, அவர்கள் செயல்பட்டால், அதனைத் தடுத்து, சட்டப்படியான தொடர் நடவடிக்கை மேற்கொள்ள, அரசு நிருவாக அலுவலர்களை நியமித்துள்ளது.

ஆங்கிலேய நிருவாகத்தின் இத்தீர்மானமும், அதனின் பின் விளைவுகளும், முடியாட்சி மன்னர்களின் மாநிலங்களிலும், பிரதிபலித்தன. தொடர்ந்து, திருவாங்கூர் அரசில், நகர்வளர்ச்சிக்குழு அமைத்திட, விதிமுறைகளடங்கிய 1894-ம் ஆண்டின் வரையறை செய்யப்பட்ட 2-வது விதி இயற்றப்பட்டது. அவ்வாறு அமைக்கப்பட்ட குழுக்களுக்கு, தொடர்புள்ள நகரங்களின் பாதுகாப்பு, சாக்கடைக் கழிவுநீர் நீக்குமுறை மற்றும் சுகாதாரம் ஆகியவற்றை மேம்படுத்த சில அதிகாரங்கள் வழங்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து, மாநிலத்தில் அதேபோன்று ஐந்து நகர் வளர்ச்சிக்குழுக்கள் அமைக்கப்பட்டன. அதிலொன்று நாகர்கோவிலில் இயங்கியது. விதிமுறைகளின்படி, "நகர் வளர்ச்சிக்குழுநிதி" என்றதொரு நிதி உருவாக்கப்பட்டது. அக்குழுக்களின் பணிகள் யாதெனில், நகரத்தில் சுகாதார நடவடிக்கைகளை மட்டும் மேற்கொள்வதாகும். பின்னர், அந்நோக்கம், விரிவடைந்து, பொதுக்கிணறுகள், பொதுக்கழிப்பிடங்கள், தெரு விளக்குகள் மற்றும் சாலைகள் ஆகியவற்றைப் பராமரிக்கும் பணியும் ஒப்படைக்கப்பட்டன. தொடர்ந்த ஆண்டுகளில், நகர் வளர்ச்சிக் குழுக்களுக்கு, தெருப்பெருக்கும் பணியினைக் கண்காணித்தல், சாலைப் போக்குவரத்தினைக் கட்டுப்படுத்துதல் மற்றும் பொதுச் சுகாதார செயலாக்கத்தினைக் கண்காணிக்கும் பணி ஆகியவை, அளிக்கப்பட்டன. வீட்டுவரி, வாகன வரி போன்ற உள்ளூர் வரிகளை விதித்து அவற்றை வசூல் செய்யும் அதிகாரமும் குழுக்களுக்கு வழங்கப்பட்டன. [9]

1913ஆம் ஆண்டு, குளச்சல் மற்றும் பத்மநாபபுரம் ஆகிய நகரங்களில், நகர்வளர்ச்சிக்குழுக்கள் அமைக்கப்பட்டன. இக்குழுக்களின் பணிகளில் முதன்மையானது யாதெனில், தொத்து நோய்களைப் பரவவிடாமல் தடுத்து நிறுத்துவதேயாகும். அக்குழுக்களின் தலைவர்கள், உணவுப் பொருட்கள் உற்பத்தியைக் கட்டுப்படுத்தவும், ஆய்வு செய்யவும், அதிகாரம் பெற்றிருந்தனர். கால்நடைப்பட்டிகளை (தொழுவங்கள்) மேற்பார்வை செய்வதும் அவர்களது கண்காணிப்பின் கீழ் கொண்டுவரப்பட்டன.

1914ஆம் ஆண்டு, குழித்துறையில் ஒரு நகர்வளர்ச்சிக்குழு அமைக்கப்பட்டது. இதனையும் சேர்த்து மொத்தம் நான்கு குழுக்கள் அமைக்கப்பட்டன.

1920ஆம் ஆண்டு, திருவாங்கூர் மாநிலத்தில் இயற்றப்பட்ட நகராட்சி சட்டம், கன்னியாகுமரி மாவட்டத்தின் உள்ளாட்சி நிருவாக வரலாற்றில் ஒரு முக்கிய திருப்புமுனையாக அமைந்தது. இச்சட்டம், 1884ஆம் ஆண்டின் சென்னை மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1884ஆம் ஆண்டின் சென்னை நகர, நகராட்சி சட்டம் மற்றும் 1891ஆம் ஆண்டின் பஞ்சாப் நகராட்சிகள் சட்டம் ஆகியவற்றின் அடிப்படையில் வரையப்பட்டது [10].

இச்சட்டம், நகராட்சிக்குட்பட்ட நகரங்களின் நிருவாகம் மற்றும் அமைப்புமுறை ஆகியவை குறித்து உயர்ந்த நோக்கங்களைக் கொண்டதாக வரையப்பட்டது. [11] உயர்தர கல்வித்திட்டம், பொதுச் சுகாதாரம் மற்றும் இதர வசதிகளைப் பொதுமக்களுக்கு அளித்திட, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. நகராட்சிக் குழுக்களில் இடம் பெற்றுள்ள உயர்ந்த அளவு மற்றும் குறைந்த அளவு அலுவலர் மற்றும் அலுவல்சாரா உறுப்பினர்களின் எண்ணிக்கை, குழுக்களின் நெறிமுறையாகக் கட்டுப்படுத்துகிற மற்றும் தன் விருப்புரிமையான அதிகாரங்கள் ஆகியவை சட்டத்தில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. சட்டத்திலுள்ள விதிமுறைகளின்படி, நகராட்சிப் பகுதியில் சாலைகள் மற்றும் தெருவிளக்குகள் ஆகியவை பராமரித்தல், தெருக்கள் கூட்டுவது உள்ளிட்ட பொதுச் சுகாதாரப்பணி, பிறப்பு இறப்புப் பதிவு, கல்வி தொடர்பான நடவடிக்கைகள், பொதுப்பூங்கா மற்றும் பொழுதுபோக்கு மையங்கள் பராமரித்தல் போன்றவை, நகராட்சி நிருவாகப் பொறுப்பினில் அடங்கிய அம்சங்களாகும்.

இச்சட்டத்தின்படி, இப்பகுதியில் நாகர்கோவில், பத்மநாபபுரம், குழித்துறை மற்றும் குளச்சல் ஆகிய நகராட்சிகள் அமைக்கப்பட்டன. சுருங்கக்கூறின், முந்தைய நகர் வளர்ச்சிக்குழுக்கள், இந்த சட்டத்தின்படி, நகராட்சிகளாக மாற்றியமைக்கப்பட்டன. 1946ஆம் ஆண்டு நகராட்சியின் நிருவாகத் தலைமைப் பொறுப்பாளர்களாக ஆணையர்கள் நியமிக்கப்பட்டனர். [12]

ஊராட்சிகள்

கிராமப்புற மக்களை உள்ளாட்சி நிருவாகத்தில் ஈடுபடுத்த முந்தைய திருவாங்கூர் அரசால் தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதுதொடர்பான சட்டம், 1935ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. இதற்கு திருவாங்கூர் கிராம ஊராட்சிச் சட்டம் என பெயர் சூட்டப்பட்டது.

இச்சட்டம் இயற்றப்பட்டவுடன் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை யாதெனில், இரு கிராம ஊராட்சிகள் அமைக்கப்பட்டதாகும். ஒன்று, தற்போதைய கன்னியாகுமரி மாவட்டத்தின் வட்டத் தலைமையிடமான பூதபாண்டியில் நிறுவப்பட்டது. சட்ட விதிமுறைகளின்படி, ஒரு கிராமம் அல்லது சில கிராமங்களின் தொகுதியினை ஒரு கிராம ஊராட்சியாக அறிவிக்க அரசு அதிகாரம் படைத்திருந்தது. ஒவ்வொரு ஊராட்சியிலும், ஐந்துக்குக் குறையாத மற்றும் 11-க்கு மிகாத உறுப்பினர்கள் அங்கம் வகித்தனர். ஊராட்சிகளின் விதிமுறையாகக் கட்டுப்படுத்துகிற மற்றும் தன் விருப்புரிமையான அதிகாரங்கள், நகராட்சிகளின் அதிகாரங்களுக்குக் கீடானவையாக அமைந்தன. ஒரு ஊராட்சிக்கு அரசினால் மனமுவந்து அளிக்கப்பட்ட அனைத்து ஈடுகொடுக்கும் கொடைகள் மற்றும் விதிக்கப்பட்டு மக்களிடம் வசூலிக்கப்படும் உள்ளூர் வரிகள் இவையாவும் கிராம நலனுக்காகவே ஊராட்சிகளால் செலவிடப்பட்டன. [13]

உள்ளாட்சி வரலாற்றில் மேலும் மேம்பாடு கண்டமை, 1940 ஆம் ஆண்டின் திருவாங்கூர் கிராம ஒன்றியச் (யூனியன்) சட்டமாகும். இச்சட்டம் கிராம ஒன்றியம் அமைத்திட வழிவகை செய்தது. அச்சட்டத்தின்படி கிராம ஒன்றியம், ஊராட்சியை விட சிறிது குறைந்த அதிகாரங்களைக் கொண்டதாகும். அவை தன்னாட்சியுரிமையுடைய நிறுவனங்களின் நிலையினையும், நிலையான பதவியுரிமையையும் பெற்றிருந்தன. ஒரு பொதுவான உறுதிச் சின்னமும் அவற்றிற்கு இருந்து வந்தது. அவைகளின் தன்னாட்சியுரிமையின் பெயரிலேயே அவை வழக்குத் தொடரவும் அவற்றின் மீது வழக்குத் தொடரப்படவும் சட்டம் வகை செய்தது. அவை, சொத்துக்களைக் கைப்பற்றுதல், சுயமாகப் பெறுதல், மாற்றம் செய்தல் மற்றும் ஒப்பந்தத்திலீடுபடுதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள இயலும். ஒரு உறுப்பினரின் பதவி காலவரை மூன்று ஆண்டுகளென நிர்ணயிக்கப்பட்டது. இச்சட்டம் பிறப்பிக்கப்பட்ட சில ஆண்டுகளுக்குப் பின்னர், இவ்வுள்ளாட்சி நிறுவனங்கள், கிராம ஒன்றியங்கள் மற்றும் ஊராட்சிகளின் பதிவாளரது கட்டுப்பாட்டின் கீழ் கொணரப்பட்டன. [14]

இந்த கிராம ஒன்றியங்கள், சில பொதுமக்கள் பயனுடைமைப் பணிகளான, தெருக்களைக் கூட்டி சுத்தம் செய்தல், பொது மக்களுக்குக் குடிநீர் வழங்க, பொதுக்கிணறுகள் மற்றும் குளங்கள் ஆகியனவற்றைக் கட்டுதல், பராமரித்தல் மற்றும் மேம்படுத்துதல், சுடுகாடுகள் அல்லது இடுகாடுகள் அமைத்தல், கால்நடைப் பட்டிகளை (தொழுவங்கள்)

மேற்பார்வையிடுதல், உள்ளூர் முக்கியத்துவம் வாய்ந்த ஏனைய பணிகள் ஆகியவற்றை திறம்பட ஆற்றிவருகின்றன.

நாடு சுதந்திரம் பெற்ற பின்னர், ஊராட்சிகள் தொடர்பாக முதன்முதலாக இயற்றப்பட்ட பெரிய அளவிலான சட்டம், 1950ஆம் ஆண்டின் திருவாங்கூர்-கொச்சி ஊராட்சி சட்டமாகும். மாவட்டத்தில், முதன்முதலாக ஆகஸ்டு 15, 1953 அன்று ஊராட்சித் தேர்தல்கள் நடத்தப்பட்டன. [15]

இணைப்பிற்குப்பின்

முந்தைய திருவாங்கூர் கொச்சி மாநிலத்தின் சில பகுதிகள், முந்தைய சென்னை மாநிலத்துடன் கடந்த 1956ஆம் ஆண்டு இணைக்கப்பட்டு, கன்னியாகுமரி மாவட்டம் அமைக்கப்பட்ட பின்னரும், முன்பு நடைமுறையிலிருந்த அதே உள்ளாட்சி நிருவாக அமைப்புமுறை மார்ச் 31, 1962-ம் நாள்வரை நீடிக்க அனுமதிக்கப்பட்டது. 1958ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் ஏப்ரல் 1, 1962 முதல் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு விரிவாக்கப்பட்டது. [16]

1958ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், கன்னியாகுமரி மாவட்டத்திற்கு விரிவாக்கப்படுவதற்கு முன்னர், நடைமுறையிலிருந்த ஊராட்சி நிருவாக அமைப்பு முறையில் ஒவ்வொரு ஊராட்சியிலும் ஒரு முழுநேர ஊராட்சி அலுவலர், பணியாற்றிவந்தார். ஆனால் 1957 ஆம் ஆண்டு, தமிழ்நாடு ஊராட்சிகளின் சட்ட விதிமுறைகளின்படி, ஊராட்சிகளின் நிருவாக அலுவலர்களே, நிருவாகம் செய்யும் அதிகாரம் படைத்தவர்கள் என்ற நிலையில், 1958ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் விதிமுறைகளை செயலாக்க இயலும். ஆனால், இச்சட்டத்தின் படி, பேரூராட்சிகள் மட்டுமே, நிருவாக அலுவலர்களால், இயக்கப் படுகின்றன. எனவே, மாவட்டத்திலுள்ள அனைத்து ஊராட்சிகளுமே முழு அளவிலான பேரூராட்சிகளாக உயர்த்தப்பட்டு, ஊராட்சி அலுவலர்களும், நிருவாக அலுவலர்களென பெயரிடப்பட்டு அழைக்கப்பட்டார்கள்.

ஏப்ரல் 1, 1962ஆம் நாளன்று, இராசக்காமங்கலம், அகஸ்தீஸ்வரம், மூஞ்சிறை, மேல்புரம், கிள்ளியூர், தாளக்குளம், (பின்னர் குருந்தன்கோடு) தக்கலை, தோவாளை மற்றும் திருவட்டார் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களுக்கு துவக்கவிழா நடைபெற்றது. [17]

நகராட்சிகள்

நிருவாகம்

1965ஆம் ஆண்டிற்கு முன்னர், மாநிலத்திலுள்ள அனைத்து உள்ளாட்சி நிறுவனங்களும், ஒரே துறைத்தலைமையின் கீழ், செயல்பட்டு வந்தன. துறைத்தலைமையின் பணிப்பெயரும் அவ்வப்போது மாற்றப்பட்டு வந்தது. துவக்கத்தில் துறைத்தலைவர், நகராட்சி மன்றங்கள் மற்றும்

உள்ளாட்சி வாரியங்களின் ஆய்வாளர் என அழைக்கப்பட்டார். இப்பணி பெயர் 1962ஆம் ஆண்டுவரை நடைமுறையிலிருந்து வந்தது. 1962ஆம் ஆண்டு இப்பணிப்பெயர் கூடுதல் வளர்ச்சி ஆணையர் என மாற்றியமைக்கப்பட்டது. 1964ஆம் ஆண்டு இணை வளர்ச்சி ஆணையரென பணிப்பெயர் மாறியது.

1965ஆம் ஆண்டு உள்ளாட்சி நிறுவனங்களின் நிருவாக அமைப்பு இரண்டாகப் பிரிக்கப்பட்டது. நகராட்சிகளுக்கு மாநில அளவிலான கட்டுப்பாட்டு அலுவலராக முதன்மைத் தேர்தல் அலுவலர் நியமிக்கப் பட்டார் [17அ]. உள்ளாட்சிகளுக்கு, துறைத்தலைவராக ஊரக வளர்ச்சி இயக்குநர் பணியாற்றினார்

1967ஆம் ஆண்டு, நகராட்சிகளின் துறைத்தலைமையலுவலரின் பணிப்பெயர், நகராட்சிகள் ஆய்வாளரென மாற்றப்பட்டது. [17ஆ] 1970ஆம் ஆண்டு, அது நகராட்சி நிருவாக இயக்குநர் என மாறியது.

மாவட்ட நிலையில் துறைக்கட்டுப்பாடு

மாவட்ட நிலையில் உள்ளாட்சி நிறுவனங்களின் முதன்மை அலுவலராக மாவட்ட ஆட்சித்தலைவர் பணியாற்றி வருகிறார். இதனுடன், ஊராட்சிகளைக் கண்காணிக்க மண்டல அளவிலான துறை அலுவலர்களும் உளர்.

மாநில அளவில், இயக்குநர் பணியாற்றுவது தவிர, நகராட்சிகளை நிருவகிக்க மண்டல இயக்குநர்களும் பணியாற்றி வருகிறார்கள். மண்டல அளவில் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள நகராட்சிகள், திருநெல்வேலி மண்டல இயக்குநரின் கட்டுப்பாட்டிலியங்கி வருகின்றன. அலுவலர்கள் சார்பில் ஆணையர்களும், அலுவல் சாரா மக்கள் பிரதிநிதிகள் சார்பில், பெருந்தலைவரும் அவரது மன்றமும் நகராட்சிகளின் தலைமைப் பொறுப்பினை ஏற்றுள்ளார்கள். நகராட்சியின் நிருவாக அமைப்பு முறை, இணைக்கப்பட்டுள்ள வரைபடத்தினின்றும் நன்கு தெரியவரும்.

நகராட்சிகளின் வகுப்பு முறை

மாநிலத்திலுள்ள நகராட்சிகள் அவற்றின் ஆண்டு வருவாய்க்கு ஏற்றவாறு பல்வேறு நிலைகளில் வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றை வகைப்படுத்துவதற்கான வருவாய் வரம்பு மார்ச் 23, 1983 நாளைய அரசாணை எம்.எஸ்.எண்.400-ல் (ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி) நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஒரு நகராட்சியின் ஆண்டு வருவாய் 100 இலட்சம் ரூபாய்க்கு மேற்படின் அது ஒரு சிறப்பு நிலை நகராட்சியாக அறிவிக்கப்படுகிறது. ஆண்டு வருவாய் 50 இலட்சம் ரூபாய்க்கு மேற்படின் அந்நகராட்சியின் நிலை தேர்வு நிலையாகும். முதல்நிலை நகராட்சியின் ஆண்டு வருவாய் 25 இலட்சம் ரூபாய்க்கு மேலிருக்க வேண்டும். ஒரு நகராட்சியின் ஆண்டு வருவாய் 10 இலட்சம் ரூபாய்க்கு அதிகமாக

இருந்தால், அது இரண்டாம் நிலை நகராட்சியாக வகைப்படுத்தப் படுகிறது. இயல்பாக, எந்த தேர்வு நிலைப் பேரூராட்சிகளின் ஆண்டு வருவாய் ஐந்து இலட்சம் ரூபாய்க்கும் அதிகமாக இருக்கிறதோ அம்மாதிரியான தேர்வுநிலைப் பேரூராட்சிகள் நகராட்சிகளாக வகைப்படுத்தப்படுகின்றன. அவ்வாறு வகைப்படுத்தப்படும் நகராட்சிகள், துவக்கத்தில் மூன்றாம் நிலை நகராட்சிகளாக வகைப்படுத்தப்படுகின்றன.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள நான்கு நகராட்சிகளில், நாகர்கோவில் நகராட்சி தேர்வுநிலை நகராட்சியாகும். ஏனைய மூன்றும் மூன்றாம் நிலை நகராட்சிகளாகும். இவை மூன்றும், 10 இலட்சம் ரூபாய்க்கு மேலும் ஆண்டு வருவாயை ஈட்டித் தரும் நிலையை அடைந்திருந்தும் அவை அமைக்கப்பட்ட 1920 ஆம் ஆண்டு முதலே அவை தொடர்ந்து மூன்றாம் நிலை நகராட்சிகளாகவே இயங்கி வருகின்றன.

நகராட்சிகளின் அலுவல்கள்

நகராட்சி சட்டத்தில், நகராட்சிகளின் நெறிமுறையாகக் கட்டுப் படுத்துகிற மற்றும் தன் விருப்புரிமையான கடமைகள் விவரிக்கப் பட்டுள்ளன.

நெறிமுறையாகக் கட்டுப்படுத்துகிற அலுவல்கள் [18]

1. பஞ்சம் மற்றும் பற்றாக்குறை காலங்களில் நிவாரணமளித்தல்,
2. பொதுச் சாலைகள், வீதிகள், சந்துகள், மதகுகள் மற்றும் கரைப் பாலங்கள் ஆகியவற்றைப் பராமரித்தல்,
3. படிப்பகங்கள் பராமரித்தல்,
4. பூங்காக்கள் மற்றும் தோட்டங்கள் பராமரித்தல்,
5. விளையாட்டுத் திடல்கள் பராமரித்தல்,
6. பொருட்காட்சி மற்றும் திருவிழாக்கள் நடத்துதல்,
7. தெருக்கள், வடிகால் மற்றும் கழிப்பிடங்கள் ஆகியவற்றைத் தூய்மைப்படுத்துதல்,
8. மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்கள் ஆகியவை பராமரித்தல்,
9. திணையின முறைப்பட்ட நோயினின்றும் மக்களைப் பாதுகாத்தல்,
10. பிறப்பு, இறப்புப் பதிவு,
11. நுழை வழி பராமரித்தல்,
12. தெரு விளக்குகள் பராமரித்தல்,
13. தொடக்கக் கல்வி,
14. குடிநீர் வழங்கல் மற்றும் பொது மின் இணைப்பு வழங்குதல்,
15. வடிகால் மற்றும்
16. நகர்த்திட்டம்.

விவர விளக்கப்படம்
நகராட்சிகளின் நிருவாக அமைப்பு முறை

அலுவலர் பிரிவு (ஆணையர்)		அலுவல் சாரா (மக்கள் பிரதிநிதிகள்)	
அமைச்சுப் பணியாளர்கள்	*தொழில்நுட்பப் பணியாளர்கள்*	*பெருந்தலைவர் மன்ற உறுப்பினர்கள்*	
மேலாளர்	நகராட்சி சுகாதார அலுவலர்	நகராட்சிப் பொறியாளர்	நகர்த்திட்ட அலுவலர்
தலைமை உதவியாளர்	சுகாதார ஆய்வாளர்கள்	மேற்பார்வையாளர்	கட்டிட ஆய்வாளர்
உதவியாளர்கள்	சுகாதார உதவியாளர்கள்	வரைவாளர்	வரைவாளர்
இளநிலை உதவியாளர்கள்	அம்மை குத்துபவர்கள்		
தட்டச்சர்கள்	**(சுகாதார) பாதுகாப்புப் பணியாளர்கள்**		
சுருக்கெழுத்தர்கள்	சுகாதார ஆய்வாளர்		
பதிவறை எழுத்தர்கள்	சுகாதார உதவியாளர்கள்		
பட்டியல் தொகை வசூலிப்போர்	மஸ்தூர்		
அலுவலக உதவியாளர்கள்	துப்புரவு செய்பவர்கள், தெருப் பெருக்குநர்கள்		

தன் விருப்புரிமையான அலுவல்கள் [19]

1. நடுநிலைக்கல்வி, நூல் நிலையங்கள் மற்றும் அருங்காட்சியகங்கள்,
2. ஏழை அனாதை இல்லங்கள்,
3. வீட்டு வசதி, மற்றும்
4. கால்நடை மருத்துவமனை,

தொடக்கக் கல்வி, நகராட்சிகளை நெறிமுறையாகக் கட்டுப்படுத்துகிற அலுவலராயிருந்தும், கன்னியாகுமரி மாவட்டத்தி லுள்ள எந்த நகராட்சியும் கல்வி நிறுவனங்களை நடத்தவில்லை. முன்னர், இவையாவும் முந்தைய திருவாங்கூர் மன்னராட்சி காலத்தில், அரசால் பராமரிக்கப்பட்டன. அம்மாநிலம் இந்திய துணைக்கண்டத்துடன் இணைந்த பின்னர் அவற்றை மாநில அரசே தொடர்ந்து நிருவகித்து வருகிறது.

நகராட்சி நிதி நிலை

நகராட்சி தனது வருவாயினை வீட்டுவரி, கேளிக்கை வரி, பயன்தரும் தொழில்களான சந்தைகள், ஊர்தி நிலையங்கள், நிலங்கள் மற்றும் கட்டிடங்களினின்று கிடைக்கக்கூடிய வாடகை, தொழில்வரி, வாகனவரி, வண்டிவரி, விலங்கினவரி, பல்வேறு வகைப்பட்ட வணிகங்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள உரிமக் கட்டணங்கள் மற்றும் தண்டக் கட்டணங்கள் ஆகியவற்றினின்றும் பெறுகிறது.

ஒவ்வொரு நகராட்சியின் துவக்கம், மக்கட்தொகை, வருவாய் நிலை போன்ற விவரங்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

நாகர்கோவில் நகராட்சி [20]

மாவட்டத் தலைநகரான நாகர்கோவில், 1920ஆம் ஆண்டு முதல் நகராட்சியைப் பெற்ற நகரமாகத் திகழ்கிறது. இந்நகராட்சி 1978ஆம் ஆண்டு தேர்வு நிலையினைப் பெற்றது. 1988 ஆம் ஆண்டு சூலைமாதம் முதல் இது சிறப்பு நிலை நகராட்சியாக உயர்வடைந்தது. இதுதான் மாவட்டத்திலேயே மிகப்பெரிய நகராட்சியாகும். இந்நகராட்சியின் எல்லை 24.27 சதுர கிலோ மீட்டர் தொலைவில் பரந்து கிடக்கிறது. 1981ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, இந்நகராட்சி நகரத்தின் மக்கள் தொகை, 1,71,648 ஆக இருந்தது. ஆனால், தற்போதைய (1988) தோராயமான மக்கட்தொகை 2,00,000 ஆகும். நகராட்சியின் இயல்பான ஆண்டு வருவாய் 195 இலட்ச ரூபாயாகும்.

நிதி நிலை

இந்நகராட்சி நிறுவப்பட்ட ஆண்டின் மறு ஆண்டான 1921-22 இதனுடைய ஆண்டு வருவாய் ரூபாய் 2076/- ஆக இருந்தது. இது 40 ஆண்டுகளில் சிறிது சிறிதாக உயர்ந்தது. அதாவது 1961-62 ஆம் ஆண்டில் ரூபாய் 80,635/- ஆகியது.

1978-79 முதல் 1987-88 வரையிலான காலத்தில் இந்நகராட்சியின் ஆண்டு வருவாயினைக் காட்டும் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

தொடர் எண்.	*ஆண்டு*	*ஆண்டு வருவாய் (ரூபாயில்)*
1.	1978-79	64,15,024
2.	1979-80	77,48,494
3.	1980-81	80,22,208
4.	1981-82	85,74,723
5.	1982-83	80,55,026
6.	1983-84	94,72,492
7.	1984-85	1,01,78,973
8.	1985-86	1,19,01,714
9.	1986-87	1,54,31,611
10.	1987-88	1,95,00,000

குடிநீர் வழங்குதல்

இந்நகராட்சிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் ஆதார நீர்நிலை நகரின் வடக்கே 15 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள முக்கூடல் அணையாகும். அணையினின்றும் குழாய் மூலம் இறைக்கப்படும் தண்ணீர், குளோரின் மற்றும் தூய்மைப்படுத்தும் பிற மருந்துகளைக் கொண்டு, கிருஷ்ணன் கோவிலில் கட்டப்பட்டுள்ள "வடிகட்டும் இல்லத்தில்" தூய்மைப்படுத்தப்படுகிறது. ஒருநாள் விட்டு ஒருநாள் குடிநீர் பொது மக்களுக்கு வழங்கப்படுகிறது. ஒரு நாளைக்கு வழங்கப்படும் நீரின் இயல்பான அளவு 144 இலட்சம் லிட்டர்களாகும். இந்நகராட்சியில் இரண்டு மேல் நிலை நீர்த்தேக்கத்தொட்டியும், தண்ணீரை மேலே ஏற்றும் ஒரு திணை உந்து கல நிலையமும் உள்ளன.

பொது மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு, இந்நகரத்தில் வீட்டு உபயோகத்திற்கு 13,088 நீர் வழங்கு இணைப்புகளும், 236 வீடுகள் அல்லது இதர பணிகளுக்கான இணைப்புகளும் நகராட்சியால் அளிக்கப்பட்டுள்ளன. நகரத்திலுள்ள முக்கியமான பொது இடங்களில் நீர் ஊற்றுகள் நிறுவப்பட்டுள்ளன. மொத்தமுள்ள 640 நீர் ஊற்றுகளில் 636 ஊற்றுகள் இருவடிமுனைக் குழாய்கள் கொண்டவையாகும். இவை நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

இம்மாதிரியான பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குமுறையினைத் தவிர, 259 ஆழ்குழாய்க் கிணறுகளும், நகராட்சி எல்லையில் தோண்டப்பட்டுள்ளன. அவற்றில் 90 ஆழ் குழாய்கள், 1986 மற்றும் 1987 ஆகிய ஆண்டுகளில் வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் தோண்டப்பட்டவையாகும்.

வீட்டு உபயோகத்திற்குப் பயன்படுத்தப்படும் ஒவ்வொரு 1000 லிட்டர்கள் தண்ணீருக்கு, 50 பைசா நீர்க்கட்டணமாக விதிக்கப்படுகிறது.

வீட்டு உபயோகமல்லாத பிற காரியங்களுக்குப் பயன் படுத்தப்படும் நீருக்கு ஒரு ரூபாய் நீர்க்கட்டணம் நிர்ணயிக்கப்படுகிறது. இது, அளவு கருவி (மீட்டர்) பராமரிப்பதற்கு விதிக்கப்படும் மாதாந்திர கட்டணமான 25 பைசாவிற்கு மேல் விதிக்கப்பட்டதாகும். வீட்டு உபயோகம் மற்றும் மற்ற உபயோகங்கள் ஆகியவற்றிற்கு விதிக்கப்படும் மாதாந்திர நீர்க்கூலி முறையே ரூபாய் நான்கு மற்றும் 10 ஆகும்.

இந்நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் குடிநீர் வழங்குமுறையில் நாகர்கோவில் நகராட்சி எல்லை மட்டுமல்லாது, முக்கூடலிலிருந்து நாகர்கோவில் வரை நிறுவப்பட்டுள்ள குழாய்ப்பாதையை யொட்டியுள்ள நகரங்கள் மற்றும் கிராமங்கள் ஆகியவற்றிற்கும் குடிநீர் வழங்கப்படுகிறது. இதனால் பயனடையக்கூடிய ஏனைய நகரங்கள், பூதபாண்டி, துவரங்காடு, விளாங்காடு, எசந்திமங்கலம், எறச்சக்குளம், புத்தேரி, சுசீந்திரம் மற்றும் கன்னியாகுமரி ஆகியவையாகும் (கன்னியாகுமரி நகரியம், முக்கூடல் நீர்த்தவிர தனக்கென உள்ள குடிநீர் வழங்குத் திட்டங்களின் மூலமும் குடிநீரைப் பெறுகிறது).

சாலைகள்

நாகர்கோவில் நகரம், மாவட்டத்தின் தலைநகராகத் திகழ்வதால், இந்நகராட்சி மிக அதிகமான சிமெண்ட், தார் மற்றும் சரளை சாலைகள், வீதிகள் ஆகியவற்றைப் பராமரித்து வருகிறது. 149.8120 கிலோ மீட்டர் நீளமுள்ள இச்சாலைகள் மற்றும் வீதிகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

1.	சிமெண்ட் சாலை	39.0770 கி.மீ.
2.	தார் சாலைகள்	96.7762 கி.மீ.
3.	சரளை சாலைகள்	5.9392 கி.மீ.
4.	துணுக்குச் சரளை சாலைகள்	0.0196 கி.மீ.
	மொத்தம்	141.8120 கி.மீ.

இச்சாலைகளின் பராமரிப்புச் செலவு ஆண்டொன்றுக்கு 15 இலட்ச ரூபாய்களாகும்.

தெரு விளக்குகள்

நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் தெரு விளக்குகளின் எண்ணிக்கை குறித்த விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன :

1.	பாதரச வெண்புகை ஆவி விளக்குகள்	211
2.	வெடிய வெண்புகை ஆவி விளக்குகள்	132
3.	குழல் விளக்குகள்	4048
4.	குவிமைய விளக்குகள்	7
	மொத்தம்	4398

தெரு விளக்குகள் பராமரிப்பதற்காக, நகராட்சி ஆண்டுதோறும் செலவழித்திடும் தொகை ஏழு இலட்சம் ரூபாயாகும்.

பொது சுகாதாரம்

இந்நகராட்சி ஒரு 'எதிர்முறை' மருத்துவமனையையும், 10 மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல மையங்களையும், ஒரு குடும்ப நல மையத்தினையும் பராமரித்து வருகிறது. இவற்றின் ஆண்டு பராமரிப்பு செலவு முறையே ரூ.1,10,000/- 2,75,000/- மற்றும் 94,000/- ஆகும். எனினும் குடும்ப நல மையம் முழு அரசுக் கொடையுடன் இயங்கிவருகிறது.

நகரத்தின் சுகாதாரத்தினை நகராட்சியின் கீழ்க்கண்ட அலுவலர்கள் கவனித்து வருகிறார்கள் :

1.	தேர்வு நிலை சுகாதார ஆய்வாளர்	1
2.	சுகாதார ஆய்வாளர்	8
3.	சுகாதார மேற்பார்வையாளர்	16
4.	தெரு பெருக்குநர்கள்	119
5.	துப்புரவு செய்பவர்	159
6.	சாக்கடைத் தூய்மைப்படுத்துவோர்	35

இவர்களனைவரும் நகராட்சி சுகாதார அலுவலரின் நிருவாகக் கட்டுப்பாட்டில் பணியாற்றி வருகின்றனர்.

நகராட்சி 52 பொதுக் கழிப்பிடங்களைப் பராமரித்து வருகிறது. அவற்றின் நான்கு கட்டணம் வசூலிக்கப்படும் வகையினைச் சேர்ந்தவை. இவற்றில் மூன்றில் குளியலறைகள் இணைக்கப்பட்டுள்ளன. நான்கு நச்சுத்தடை மலக்குழிக்கழிப்பிடங்களையும், நகராட்சி பராமரித்து வருகிறது. கட்டணம் வசூலிக்கப்படும், பொதுக் கழிப்பிடங்களின் 1987-88 ஆம் ஆண்டு வருவாய் ரூ. 1,75,000/- ஆகும்.

நகராட்சியில், கூட்டு உரம் உண்டு பண்ணும் சுற்று வட்டக் கைவெளி இடமும் உள்ளது. தெருக்களினின்றும் பெருக்கி எடுக்கப்படும், குப்பை கூளங்கள் இவ்விடத்தில் சேமித்து வைக்கப்படுகின்றன. இந்நகராட்சியைச் சேர்ந்த மூன்று பார உந்துகள், குப்பை கூளங்களை மேற்குறிப்பிட்ட இடத்திற்குக் கொண்டு செல்கின்றன. இவ்விடத்தில் சேகரித்து வைக்கப்பட்ட கூட்டு உரம் 1986-87 ஆம் ஆண்டில் 1,00,000/- ரூபாய் வருவாயை ஈட்டித்தந்துள்ளது.

பல்வேறு வகைப்பட்ட இயல்புடையவை

நகராட்சி கீழ்க்குறிப்பிட்ட பயன்தரும் தொழில்களை மேற் கொண்டுள்ளது. 1986-87 ஆம் ஆண்டில் இவை மூலம் ஈட்டிய வருவாய் அவற்றினெதிரே குறிக்கப்பட்டுள்ளது:

தொடர் எண்.	பயன்தரும் தொழிலின் பெயர்	மொத்த தொழில்களின் எண்ணிக்கை	ஆண்டு வருவாய் ரூபாய்
1.	இணைந்த தினசரி மற்றும் வாரச்சந்தை	3	11,00,000
2.	கடைகள் வளாகம்	1	6,00,000
3.	இறைச்சிக் கொட்டில்கள்	2	12,000
4.	பேருந்து நிலையம்	1	1,25,000
5.	வாடகை ஊர்தி நிலையம்	3	10,000
6.	பாரஉந்து நிலையம்	1	5,000
7.	கலையரங்கம்	1	50,000
8.	தங்குமிடம்	1	3,20,000

ஒரு நூல் நிலையம் மற்றும் இரண்டு படிப்பகங்கள் பராமரிக்க ரூ.50,000/-மும், எட்டு பூங்காக்கள் பராமரிக்க ரூ.1,00,000/-மும், ஆதரவற்றோர் இல்லம் பராமரிக்க ரூ.18,000/-மும் ஆண்டு தோறும் செலவு செய்யப்படுகின்றன.

நகராட்சித் தேர்தல்கள்

மாநிலத்திலுள்ள ஏனைய நகராட்சிகள் போன்று, இந்நகராட்சியிலும், தற்போதைய நகர்மன்றம், மக்களால் கடந்த பிப்ரவரி, 23, 1986 ஆம் நாள் தேர்ந்தெடுக்கப்பட்டது. நகராட்சியில் 36 நகர் வட்டங்கள் (வார்டு) உள்ளன. ஒவ்வொரு நகர் மன்ற உறுப்பினரும் அந்தந்த நகர் வட்டத்தின் பிரதிநிதி ஆவார். 36 நகர் வட்டங்களில் இருநகர் வட்டங்கள், ஒன்று பெண்களுக்கும், மற்றொன்று அட்டவணையிட்ட வகுப்பினருக்கும் ஒதுக்கப்பட்டவையாகும்.

நகர் மன்றத்தின் அலுவல்கள்

நகராட்சியில் 1986-87ஆம் ஆண்டு 11 அவசரக் கூட்டங்களும், 13 சிறப்புக் கூட்டங்களும், 14 இயல்புக் கூட்டங்களும் நடைபெற்றன. விவாதிக்கப்பட்ட 357 பொருள்கள் குறித்து முடிவுகள் எடுக்கப்பட்டன.

பத்மநாபபுரம் நகராட்சி[21]

வேநாடு மன்னர்களின் சான்றடையாளங்களைப் பெற்றுள்ள பத்மநாபபுரம், திருவாங்கூர் நகராட்சி சட்டப்படி, 1920ஆம் ஆண்டு நகராட்சியாக அமைக்கப்பட்டது. நகராட்சி அலுவலகம் தக்கலையில் இயங்கிவருகிறது. நகராட்சி 6.47 சதுர கிலோமீட்டர் பரப்பளவுள்ள எல்லையைக் கொண்டதாகும். இப்பரப்பளவில், கல்குளம் மற்றும் தக்கலை வருவாய் கிராமங்கள் அடங்கும். இந்நகராட்சி நிறுவப்பட்டது முதல், மூன்றாம் நிலை நகராட்சியாகத் தொடர்ந்து இருந்து வருகிறது. 1981ஆம் ஆண்டு மக்கட்தொகைக் கணக்கெடுப்பின்படி, இந்நகராட்சியின்

மக்கட்தொகை 18,264ஆக இருந்தது. இதனுடைய தற்போதைய (1987) மக்கட்தொகை 18,850 ஆகும்.

நிதி நிலை

இந்நகராட்சி நிறுவப்பட்ட மறு ஆண்டான, 1921-22-ல் அதனுடைய வருவாய் ரூ.5,141/- ஆக இருந்தது. 1961-62ஆம் ஆண்டு வருவாய் ரூபாய் 83,359/- ஆக உயர்ந்தது. நகராட்சியின் 1976-77 முதல் 1985-86 வரையிலான ஆண்டு வருமான கீழே கொடுக்கப்பட்டுள்ளது :

ஆண்டு	வருமானம் ரூபாயில்
1976-77	3,46,080.59
1977-78	4,36,562.57
1978-79	6,03,042.45
1979-80	4,90,819.45
1980-81	5,28,450.61
1981-82	6,83,974.21
1982-83	7,46,281.49
1983-84	18,27,562.44
1984-85	8,17,791.30
1985-86	10,53,214.34

குடிநீர் வழங்குதல்

பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குமுறை, இந்நகராட்சியில் இனி தான் அறிமுகப்படுத்தப்பட உள்ளது. 44 பொதுக்கிணறுகள் மற்றும் 52 ஆழ்குழாய்க் கிணறுகளும் நகராட்சி எல்லையில் உள்ளன. நகர மக்களின் குடிநீர்த் தேவையினை இவை பூர்த்தி செய்கின்றன. நகரத்தின் குடியிருப்பாளர்களின் பலர் சொந்த முறையில் தண்ணீர் வசதியினைப் பெற்றுள்ளார்கள்.

எனினும், குழித்துறை ஆற்றிலிருந்து, நகரத்திற்கு குடிநீர் கொண்டு வரும் திட்டம், தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்தின் விசாரணையிலும், ஆய்விலும் இருந்து வருகிறது. 231.10 இலட்ச ரூபாய்க்குத் தயாரிக்கப்பட்ட திட்டவரைக் கருத்துரு, தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்தின் பரிசீலனை முடிந்து இறுதியாக்க நிலையிலுள்ளது. [21அ]

சாலைகள்

20.04 கிலோ மீட்டர் நீளமுள்ள தார், சரளை மற்றும் மண் சாலைகளை இந்நகராட்சி பராமரித்து வருகிறது. இச்சாலைகளைப் பராமரித்திட

1985-86 ஆம் ஆண்டு நகராட்சி 23097.56 ரூபாய் செலவு செய்துள்ளது. இச்சாலைகளைப் பராமரிக்கும் பணியினை ஒரு மேற்பார்வையாளர் பொறுப்பேற்றுள்ளார். இந்நகராட்சிக்கு தனியாகப் பொறியாளர் இல்லாததால் பராமரிப்புப் பணியினை மேற்பார்வை செய்ய குழித்துறை நகராட்சிப் பொறியாளர் கூடுதல் பொறுப்பு வகிக்கிறார்.

தெரு விளக்குகள்

நகராட்சி எல்லையில் 523 குழாய் விளக்குகளும், நான்கு பாதரச வெண்புகை ஆவி விளக்குகளும், அமைக்கப்பட்டுள்ளன. 1980ஆம் ஆண்டிற்கு முன்னர் நகராட்சியால் தெருவிளக்குகள் பராமரிக்கப்பட்டன. ஆனால், பின்னர் நகராட்சி மின் கட்டணத்தைச் செலுத்தவேண்டுமென்ற நிபந்தனையின் பேரில் தமிழ்நாடு மின்வாரியம் அவற்றைப் பராமரித்து வருகிறது. 1986-87ஆம் ஆண்டு மின் சக்திக் கட்டணமாக 68,854 ரூபாயை நகராட்சி செலுத்தியுள்ளது.

படிப்பகம்

இந்நகராட்சி ஒரு படிப்பகத்தைப் பராமரித்து வருகிறது. அப்படிப்பகத்தை ஒரு நூலகர் பராமரித்து வருகிறார். அவருக்கு ஒரு காவலாள் துணை புரிகிறார். அப்படிப்பகத்தில் தமிழ், ஆங்கிலம் இரு மொழிகளிலுமுள்ள 4,483 நூல்கள் உள்ளன. இவைதவிர, நாள் செய்தித்தாள்கள், பிற பருவ இதழ்ச் சுவடிகள் ஆகியவையும், படிப்பவர்களின் நலனுக்காக, காப்பகத்தில் வைக்கப்பட்டுள்ளன. இந்நூலகத்தைப் பராமரிக்க 1985-86 ஆம் ஆண்டு, இந்நகராட்சி, ரூபாய்.22,539.80 செலவு செய்துள்ளது.

பொதுச் சுகாதாரம்

பொதுச் சுகாதாரப் பணியாளர்களில் ஒரு சுகாதார ஆய்வாளர், ஆறு சுகாதார மேற்பார்வையாளர்கள், எட்டு தெரு பெருக்குநர் மற்றும் 16 துப்புரவு செய்பவர், ஆகியோர் அடங்குவர். நகரத்தைத் தூய்மையாகவும், நேர்த்தியாகவும் வைத்துக்கொள்ள அவர்கள் பொறுப்பானவர்கள்.

நான்கு பொதுக் கழிப்பிடங்கள் மற்றும் நான்கு சிறுநீர் கழிப்பிடங்கள் ஆகியவற்றை நகராட்சி பராமரித்து வருகிறது. நகராட்சியில், கூட்டுஉரம் உண்டுபண்ணும் சுற்று வட்டக்கைவெளி இடம் ஒன்று உள்ளது. குப்பை கூளங்களை இவ்விடத்திற்குக் கொண்டு செல்ல, நகராட்சி ஒரு பார உந்தினைப் பராமரித்து வருகிறது. 1985-86 ஆம் ஆண்டு, நகராட்சி இக்கூட்டு உரங்களை விற்று, 1680/- ரூபாய் வருவாயினை ஈட்டியுள்ளது.

உணவுப் பொருட்களில் கலப்படம் செய்வதைத் தடுப்பதற்கான சட்டம், நகராட்சி எல்லையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. உணவுப் பொருட்களை சோதனை செய்வதற்காகவே, சிறப்பாக நியமிக்கப்பட்டுள்ள உணவுப் பொருட்கள் ஆய்வாளர் குறுகிய

இடைவெளிக் காலங்களில், திடீரென கடைகளைப் பார்வையிட்டு, மாதிரிப் பொருட்களைச் சேகரித்து அவற்றை மருத்துவச் சார்பான சட்ட ஆய்வுக்கூடத்திற்கு அனுப்பி சரிபார்த்து, கலப்படமிருப்பதாகக் கண்டறியப் பட்டால் தொடர்புள்ள குற்றவாளிகள் மீது, குற்றவியல் நடவடிக்கை தொடரப்படுகிறது.

அண்மைக்காலம் வரையில், இந்நகராட்சி 3282 மீட்டர் நீளத்திற்கு, திறந்த சாக்கடையை முறையாக பராமரித்து வந்தது. அது தற்போது, புயல்நீர் வடிகாலாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த நகர்வளர்ச்சித் திட்டம்

ஒருங்கிணைந்த நகர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், இந்நகராட்சிக்கு, 10.25 இலட்ச ரூபாய் நவம்பர் 19, 1987 அன்று வழங்கப்பட்டுள்ளது. இத்தொகை, ஊர்தி நிலையம் கட்டுவதற்காக செலவழிக்கப்பட திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணி விரைவில் துவங்கவிருக்கிறது.

பல்வேறு வகைப்பட்ட இயல்புடையவை

நகராட்சி ஒரு பேருந்து நிலையத்தைப் பராமரித்து வருகிறது. பேருந்து நிலையத்திலுள்ள கடைகளின் குத்தகை, 1985-86 ஆம் ஆண்டு 31,709/- ரூபாய் வருவாயினை ஈட்டிக் கொடுத்துள்ளது. பேருந்து நிலையத்திலிருந்து வெளிச் செல்லும் மற்றும் உள்புகும் உந்துகளிடம் 1985-86ஆம் ஆண்டு ஓட்டக் கட்டணமாக 46,298/- ரூபாய் வசூலிக்கப்பட்டுள்ளது. நகராட்சி எல்லையில் ஒரு இறைச்சிக் கொட்டிலும் உள்ளது. 1985-86 ஆம் ஆண்டு, அதனின்றும் 1331/- ரூபாய் நகராட்சிக்கு வருவாய் கிடைத்துள்ளது.

பேட்டை சந்தையில், ஒரு மின்விசைச் சங்கு பொறுத்தப்பட் டுள்ளது. அது நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. பொது மக்களின் நலனைக் கருதி, அச்சங்கு காலை 5.00 மணிக்கொருமுறையும், நண்பகல் 12.00 மணிக்கு ஒருமுறையும், இரவு 9.00 மணிக்கு ஒருமுறையும் மின் விசைத் தொடர்பு படுத்தப்படுகிறது.

நகராட்சித் தேர்தல்கள்

மாநிலத்திலுள்ள ஏனைய நகராட்சிகளுக்குத் தேர்தல் நடந்தது போன்று பிப்ரவரி, 23, 1986 அன்று இந்நகராட்சிக்கும் தேர்தல் நடைபெற்றது. பெருந்தலைவரும், நகர் மன்ற உறுப்பினர்களும், வாக்காளர்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

நகர்மன்றத்தின் அலுவல்கள்

நகராட்சியில் 20 நகர் வட்டங்கள் உள்ளன. ஒவ்வொரு நகர் வட்டத்திற்கும், ஒரு மன்ற உறுப்பினர் பிரதிநிதியாக உள்ளார். பதின்மூன்று மற்றும் 17-வது நகர் வட்டங்கள் முறையே அட்டவணையிட்ட வகுப்பினர்,

அட்டவணையிட்ட மலைவாழ்வகுப்பினர் ஆகியோருக்கும் 15-வது நகர்வட்டம், பெண்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன. மன்ற உறுப்பினர்களுக்குள் ஒப்பந்தக்குழு போன்று பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. 1985-86 ஆம் ஆண்டு 10 கூட்டங்கள் நடத்தப்பட்டு 118 பொருள்கள் விவாதிக்கப்பட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1986-87 ஆம் ஆண்டு, 25 கூட்டங்கள் நடத்தப்பட்டு, 282 பொருள்கள் விவாதிக்கப்பட்டன. 1987-88 ஆம் ஆண்டு 20 கூட்டங்கள் நடத்தப்பட்டு, 243 பொருள்கள் விவாதிக்கப்பட்டு இறுதி முடிவெடுக்கப் பட்டன.

குளச்சல் நகராட்சி [22]

மேற்குமலைத்தொடரிலுள்ள ஒரு துறைமுக நகரமான குளச்சல், 1920ஆம் ஆண்டு நகராட்சியாக அமைக்கப்பட்டது. நகராட்சியின் நிதிநிலை மனநிறைவிற்கேற்ப இல்லாததால், அது தொடர்ந்து மூன்றாம் நிலை நகராட்சியாகவே இயங்கி வருகிறது. இந்நகராட்சி எல்லை 5.78 சதுர கிலோ மீட்டரைக் கொண்டதாகும். மக்கட்தொகையானது, 1981ஆம் ஆண்டு மக்கட் தொகைக் கணக்கெடுப்பின்படி 23,124 ஆக இருந்தது. அது தற்போது (1988) 27,000 ஆக உயர்ந்துள்ளது.

நிதி நிலை

1957-58ஆம் ஆண்டு நகராட்சியின் ஆண்டு வருவாய் 33,772/- ரூபாயாக இருந்தது. 1961-62 ஆம் ஆண்டு இது 44,890 ரூபாயாக உயர்ந்தது.

1975-76 முதல் 1987-88 வரையிலான நகராட்சியின் ஆண்டு வருவாய் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

தொடர் எண்.	*ஆண்டு*	*ஆண்டு வருவாய் (ரூபாயில்)*
1.	1975-76	2,98,701
2.	1976-77	3,54,108
3.	1977-78	2,59,829
4.	1978-79	5,56,990
5.	1979-80	6,67,667
6.	1980-81	5,06,154
7.	1981-82	6,24,550
8.	1982-83	22,87,154
9.	1983-84	8,39,879
10.	1984-85	12,08,262
11.	1985-86	15,23,955
12.	1986-87	14,34,979
13.	1987-88	26,93,699

குடிநீர் வழங்குதல்

குளச்சல் நகராட்சியில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் முறை ஏதும் நடைமுறையிலில்லை. எனினும் முறையே இரண்டு இலட்சம் மற்றும் ஒரு இலட்சம் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை நகராட்சி இயக்கிவருகிறது. இதற்கான ஆதார நீர்நிலை, வெட்டுமடை என்ற ஒரு இயற்கை ஊற்றாகும். மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை நிரப்புவதற்கு, மூன்று குழாய் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. நகராட்சி 66 நீர் ஊற்றுகளைப் பராமரித்து வருகிறது. 282 வீடுகளுக்கு, குடிநீர் இணைப்புகளை நகராட்சி வழங்கியுள்ளது. இந்த குடிநீர் வழங்குமுறையைத் தவிர, ஐந்து ஆழ்குழாய் கிணறுகள், ஏழு திறந்த கேணிகள் மற்றும் 26 கையாலியக்கப்படும் குழாய்கள் ஆகியவற்றை நகராட்சி பராமரித்து வருகிறது.

வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ், 1986ஆம் ஆண்டு, 18 ஆழ்குழாய்க்கிணறுகள் வெட்டப்பட்டுள்ளன. நகர்ப்புற எல்லையில் செல்லும் பரம்புரி வாய்க்கால் என்ற சிற்றாறும், நகராட்சிக்கு குடிநீர் வழங்கும், ஒரு ஆதார நீர்நிலையாகும். நகராட்சி வீட்டு உபயோகத்திற்கான 1000 லிட்டர் தண்ணீருக்கு ஒரு ரூபாய் வீதமும், வணிகப் பயன்பாட்டிற்கு இரண்டு ரூபாய் வீதமும், நீர்வரி, விதித்து வசூல் செய்கிறது.

நகராட்சியின் கூற்று யாதெனில், நகராட்சி எல்லையிலுள்ள மக்கட் தொகையினரின் மூன்றில் ஒரு பங்கினரின் தண்ணீர் தேவையை மட்டும் பூர்த்தி செய்ய இயலுகிறதென்பதாகும்.

நூற்றி நாற்பத்தெட்டு இலட்ச ரூபாய் மதிப்பீட்டிலான குழித்துறை ஆற்றின் இணைந்த குடிநீர் வழங்குத்திட்டம் என்ற திட்டமானது, தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்தின் பூர்வாங்க ஆய்விலும், பரிசீலனையிலுமிருந்து வருகிறது. இத்திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டால், இந்நகராட்சியின் மக்கட்தொகை முழுமையும் பயனுறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

சாலைகள்

இந்நகராட்சி எல்லைக்குள், ஒரு சிறிய துறைமுகம் அமைந்துள்ளதால், இந்நகராட்சிப் பகுதியில், பேருந்துகள் அதிக அளவில் இயங்குகின்றன. அதுமுறையே 9.303 கிலோ மீட்டர்கள் மற்றும் 11.142 கிலோ மீட்டர்கள் நீளம் கொண்ட தார் மற்றும் சரளைச் சாலைகளைப் பராமரித்து வருகிறது. அவைதவிர, 1.350 கிலோ மீட்டர் நீளமுள்ள மண் சாலைகளையும் பராமரிக்கிறது.

தெரு விளக்குகள்

இந்நகரத்தின் தெருக்களில் 13 பாதரச வெண்புகை ஆவி விளக்குகள் மற்றும் 404 குழாய் விளக்குகள் ஆகியவற்றை நகராட்சி நிறுவி பராமரித்து

வருகிறது. 1986-87 ஆம் ஆண்டு மட்டும் இந்தத் தெரு விளக்குகளைப் பராமரித்திட 1,86,809/- ரூபாய் செலவழிக்கப் பட்டுள்ளது.

பொதுச் சுகாதாரம்

இந்நகரின் பொதுச் சுகாதாரத்தினை கீழ்க்குறிப்பிட்ட பணியாளர்கள் கண்காணித்து வருகின்றனர்:

1.	தேர்வு நிலை சுகாதார ஆய்வாளர்	1
2.	சுகாதாரப் பார்வையாளர்கள்	4
3.	சுகாதார உதவியாளர்	1
4.	சுகாதாரப் பணியாளர்கள்	22

நகராட்சி ஒரு மகப்பேறு மையத்தைப் பராமரித்து வருகிறது. அதில், ஒரு மகப்பேறு உதவியாளரும், ஒரு ஆயாவும் பணியாற்றி வருகிறார்கள்.

நகராட்சி நான்கு நச்சுத்தடை மலக்குழிக் கழிப்பிடங்களையும், 18 சிறுநீர் கழிப்பிடங்களையும் பராமரித்து வருகிறது.

நகரத்தின் தெருக்களிலிருந்து சேகரிக்கப்படும் குப்பை, கூளங்களையும், பிற சேதாரங்களையும் சேமித்து வைக்க நகராட்சி ஒரு கூட்டுஉரம் உண்டு பண்ணும் சுற்றுவட்டக் கைவெளி இடத்தைப் பராமரித்து வருகிறது. இந்த இடத்திலுள்ள உரத்தை விற்றதில் 1986-87 ஆம் ஆண்டு இந்நகராட்சிக்கு 1680/- ரூபாய் வருவாய் கிடைத்துள்ளது.

அண்மைக் காலம் வரை நகராட்சியில் புயல்நீர் வடிகால் இல்லை. துறைமுகத் தெரு, சந்தைத்தெரு மற்றும் குளச்சல் ஆதி திராவிடர் காலனி சாலைகள் ஆகியவற்றில் 1988ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம், புயல் நீர் வடிகால் கட்டப்பட்டுள்ளது. சுய தேவைத்திட்டத்தின் படி மழைநீர்க் கால்வாய்களும் ஆங்காங்கே வெட்டப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித்திட்டம்

ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்படி, குளச்சல் பேருந்து நிலையத்தை மேம்படுத்த 20 இலட்ச ரூபாய் வழங்கப்பட் டுள்ளது. பொதுப்பணித்துறையினரால் இப்பணி துவங்கப்பட்டுள்ளது.

நகராட்சித் தேர்தல்

1986ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் இந்நகராட்சிக்குத் தேர்தல் நடைபெற்றது. நகராட்சி 20 நகர வட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பதின்மூன்று மற்றும் 19-வது நகர் வட்டங்கள் முறையே பெண்களுக்கும், அட்டவணையிட்ட வகுப்பினருக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன. நகராட்சிப் பெருந்தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்கள் ஆகியோர் பிற நகராட்சிகளிலுள்ளது போன்ற வாக்காளர்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

மன்றத்தின் அலுவல்கள்

பிற நகராட்சிகளிலிலுள்ளது போன்று நியமனக்குழு, ஒப்பந்தக்குழு மேல்முறையீட்டுக்குழு போன்ற குழுக்கள் மன்ற உறுப்பினர்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு குழுவும் அதனதன் அலுவல்களைப் புரிந்து வருகிறது. 1986-87 ஆம் ஆண்டு 34 மன்றக் கூட்டங்கள் நடத்தப்பட்டு அவற்றில் 248 பொருள்கள் குறித்து, முடிவெடுக்கப்பட்டு தீர்மானங்கள் இயற்றப்பட்டன. 1987-88 ஆம் ஆண்டு 26 கூட்டங்கள் நடத்தப்பட்டு 225 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1986-87 ஆம் ஆண்டு கன்னியாகுமரி மாவட்டம் ஒரு கடுமையான வறட்சியை எதிர்கொள்ள நேரிட்டது. இந்நகராட்சியிலும், வறட்சி நிவாரண நிதி திரட்டப்பட்டது. வறட்சி நிவாரணத் திட்டத்தின் படி, கீழ்க்கண்ட பணிகள் செய்து முடிக்கப்பட்டன :

1. 24,000 ரூபாய் செலவில், திறந்த கிணறுகளில், தூர் எடுக்கும் பணி முடித்தல்;
2. 1,41,138.35 ரூபாய் செலவில், பார உந்துகள் மூலம், மக்களுக்குக் குடிநீர் வழங்குதல் ;
3. 2,13,810.80 ரூபாய் செலவில், திறந்த கிணறுகள் வெட்டுதல்;
4. 21,380.65 ரூபாய் செலவில், ஒருங்கிணைந்த குடிநீர் வளர்ச்சித் திட்டம் மேற்கொள்ளுதல் மற்றும்
5. ஐந்து ஆழ் குழாய்க் கிணறுகள் வெட்டி கட்டி முடித்தல்.

பல்வேறு வகைப்பட்ட இயல்புடையவை

நேரத்தை மக்களுக்குத் தெரிவித்திட நகராட்சி, ஒரு சங்கு பராமரிக்கிறது. நகராட்சி, ஒரு தினசரிச் சந்தையையும் பராமரித்து வருகிறது. அச்சந்தை ஆண்டுதோறும் குத்தகைக்கு விடப்படுகிறது. 1986-87 ஆம் ஆண்டு அது, 24,076/- ரூபாய்க்குக் குத்தகைக்கு விடப்பட்டது. 1986-87 ஆம் ஆண்டு, குளச்சல் பேருந்து நிலையத்திலுள்ள கடைகள், 17,288/- ரூபாய்க்குக் குத்தகைக்கு விடப்பட்டன. 1986-87 ஆம் ஆண்டு, குளச்சல் பேருந்து நிலையத்திலுள்ள கடைகள், 17,288/- ரூபாய்க்குக் குத்தகைக்கு விடப்பட்டன. நகராட்சி எல்லையில் ஒரு மீன் சந்தையும் இயங்கி வருகிறது. அது 1986-87 ஆம் ஆண்டு 7,000/- ரூபாய்க்கு குத்தகைக்கு விடப்பட்டது.

குழித்துறை நகராட்சி [23]

1914ஆம் ஆண்டு நகர் வளர்ச்சிக் குழுவாக நிறுவப்பட்ட குழித்துறை, முழுமையான நகராட்சியாக 1920ஆம் ஆண்டின் திருவாங்கூர் நகராட்சிச் சட்ட விதிமுறைகளின்படி, பின்னர் நகராட்சியாக அமைக்கப்பட்டது. அச்சட்ட விதிமுறைகளின்படி மார்ச், 31, 1959 வரை அவ்வாறே அது இயங்கி வந்தது. இந்நகராட்சியும், பிற நகராட்சிகளுடன் ஏப்ரல் 1, 1959 முதல்

1920ஆம் ஆண்டின் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டவிதிமுறைகளின் கீழ் கொணரப்படுகிறது.

இந்நகராட்சியில், விளவங்கோடு வட்டம், விளவங்கோடு, நல்லூர் மற்றும் பாலக்கோடு ஆகிய வருவாய் கிராமங்களின் பகுதிகள் அடங்கியுள்ளன. அவையனைத்தும் சேர்ந்து 5.22 சதுர கிலோ மீட்டர்கள் பரப்பளவு உள்ளன.

இந்நகராட்சி அமைக்கப்பட்டதிலிருந்து, மூன்றாவது நிலை நகராட்சியாகவே இயங்கி வருகிறது. 1981ஆம் ஆண்டு மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி இந்நகராட்சியின் மக்கட்தொகை 18,427 ஆகும். இன்றைய நிலவரப்படி நகராட்சியின் தோராயமான மக்கட்தொகை 19,600 ஆக உள்ளது.

ஆண்டு வருவாய்

1921-22 ஆம் ஆண்டு நகராட்சியின் ஆண்டு வருவாய் 6,673/- ரூபாயாக இருந்தது. படிப்படியாக இது 1961-62 ஆம் ஆண்டு, 94,890/- ரூபாயாக உயர்ந்தது. 1975-76 முதல் 1987-88 முடிய இந்நகராட்சியின் ஆண்டு வருவாய் விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன :

தொடர் எண்.	*ஆண்டு*	*ஆண்டு வருவாய் (ரூபாயில்)*
1.	1975-76	6,48,491.74
2.	1976-77	6,45,847.36
3.	1977-78	6,50,473.98
4.	1978-79	8,66,213.69
5.	1979-80	7,67,812.00
6.	1980-81	12,58,344.78
7.	1981-82	17,38,511.71
8.	1982-83	15,33,172.89
9.	1983-84	18,03,933.49
10.	1984-85	25,48,207.71
11.	1985-86	24,63,729.10
12.	1986-87	23,13,976.01
13.	1987-88	24,91,564.80

போக்குவரத்து

நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் பல்வேறு வகைப்பட்ட சாலைகளின் விவரங்கள் வருமாறு :

	விவரம்	நீளம் (கி.மீ.)
1.	சிமெண்ட் சாலை	0.938
2.	துணுக்கு சரளைக் கல்சாலைகள்	10.410
3.	டபிள்யூ.பி.எம்.	2.264
4.	சரளை பாவாத மண் சாலைகள்	6.119
	மொத்தம்	19.731

தெரு விளக்குகள்

நகராட்சி கீழ்க்கண்டவாறு நகராட்சி எல்லையில் தெரு விளக்குகளைப் பொறுத்தியுள்ளது :

	விவரம்	மொத்த எண்ணிக்கை
1.	பாதரச வெண்புகை ஆவி விளக்குகள்	1
2.	குழாய் விளக்குகள்	402
3.	இயல்பான விளக்குகள்	88
	மொத்தம்	491

தெரு விளக்குகள், தமிழ்நாடு மாநில மின்வாரியத்தால் பராமரிக்கப் படுகின்றன. பராமரிப்புக்கூலி நகராட்சியால் ஏற்கப்படுகிறது. 1986-87 ஆம் ஆண்டு பராமரிப்புக்கூலி 81,164 ரூபாயாக இருந்தது.

படிப்பகம்

நகராட்சி மூன்று படிப்பகங்களைப் பராமரித்து வருகிறது. 1986-87 ஆம் ஆண்டு, அவற்றின் பராமரிப்புச் செலவு ரூபாய் 16,460/- ஆக இருந்தது. நகராட்சியின் கண்காணிப்பில் ஒரு பூங்கா இயங்கி வருகிறது.

பொது நலம் மற்றும் சுகாதாரம்

இந்நகராட்சி ஒரு மகப்பேறு நிலையமும், குழந்தைகள் நல மையமும் நடத்துகிறது. இவை ஒரு மகப்பேறு உதவியாளரின் மேற்பார்வையில் இயங்கி வருகின்றன.

ஒரு நல உதவியாளர் குறிப்பிட்ட இடைவெளியில், அம்மை குத்தும் பணியினையும், பிறப்பு இறப்புப் பதியும் பணியினையும் மேற்கொண்டு வருகிறார்.

ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ், ஒரு "கட்டணம் செலுத்திப் பயன்படுத்தும் கழிப்பிடம்", தொடுவெட்டி சந்தை வளாகத்தில் நகராட்சியால் 20,000/- ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளது.

இந்த கட்டணம் செலுத்திப் பயன்படுத்தும் மலக்கழிப்பிடத்திற்கு 10 பைசாவும், சிறுநீர் கழிப்பிடத்திற்கு ஐந்து பைசாவும் வசூலிக்கப்படுகிறது. இக்கட்டணம் வசூலிக்கும் உரிமை ஒவ்வொரு ஆண்டும் குத்தகைக்கு

விடப்படுகிறது. 1986-87 ஆம் ஆண்டு குத்தகைத் தொகையாக ரூ.910/- நகராட்சியால் வசூலிக்கப்பட்டுள்ளது.

இந்த கட்டணம் செலுத்திப் பயன்படுத்தும் கழிப்பிடம் தவிர மேலும் ஏழு பொதுக்கழிப்பிடங்களும், ஆறு சிறுநீர் கழிப்பிடங்களும் நகராட்சியால் பராமரிக்கப்படுகின்றன.

காட்டு உர சுற்று வட்டக் கைவெளி

குப்பை, கூளங்களை சேமித்துவைக்க நகராட்சி மார்த்தாண்டத்தில் 2.07 ஏக்கர் பரப்பளவில் ஒரு சுற்றுவட்டக் கைவெளியைப் பராமரித்து வருகிறது.

உணவுப் பொருள் கலப்படத் தடுப்புச் சட்டம்

உணவுப் பொருள் கலப்படத்தடுப்புச் சட்டம், இந்நகராட்சியில் நடைமுறையிலிருந்து வருகிறது. 1986-87 ஆம் ஆண்டு, பகுத்தாய்வுக்கு எடுத்தனுப்பப்பட்ட உணவுப் பொருள் மாதிரிகளின் எண்ணிக்கை 37 ஆகும்.

குடிநீர் வழங்குதல்

பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம், நகராட்சியில் 1967 ஆம் ஆண்டு முதல், செயல்முறைப்படுத்தப்பட்டு வருகிறது. கீழ்க்குறிப்பிட்ட ஆதாரங்களின்றும் அவற்றினெதிரே கண்டவாறு நகராட்சி எல்லையில் வாழும் மக்களுக்குக் குடிநீர் வழங்கப்படுகிறது.

தொடர் எண்.	*ஆதாரங்கள்*	*மொத்த எண்ணிக்கை*	*கொள்ளளவு*
1.	மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி	2	1. 90,000 லிட்டர்கள் 2. 90,000 லிட்டர்கள்
2.	தரைநிலை நீர்த்தேக்கங்கள்	3	1. 1,35,000 லிட்டர்கள் 2. 90,000 லிட்டர்கள் 3. 90,000 லிட்டர்கள்
3.	கையினால் இயக்கப்பெறும் குழாய்கள்	12	–
4.	திறந்த கிணறுகள்	31	–

வீட்டு உபயோகம் மற்றும் வீட்டு உபயோகமற்ற ஏனைய காரியங்கள் ஆகியவற்றிற்குப் பயன்படுத்தப்படும் நீருக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ள குறைந்த அளவு தண்ணீர் கட்டணம் முறையே ரூபாய் 5.50 மற்றும் ரூபாய் 20.00 ஆகும். இக்குறைந்த அளவுக் கட்டணத்திற்கு வீட்டு உபயோகத்திற்கும், வீட்டு உபயோகமற்ற ஏனைய காரியங்களுக்கும் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ள அளவு தண்ணீர் முறையே 5,000 லிட்டர்கள் மற்றும் 10,000 லிட்டர்களாகும். கூடுதலாகப் பயன்படுத்தப்படும் ஒவ்வொரு 1000 லிட்டர்களுக்கு, வீட்டு

உபயோகமாயிருப்பின் ரூபாய் ஒன்று, வீட்டு உபயோகமற்ற இதர காரியங்களாயிருப்பின் ரூபாய் இரண்டு விதிக்கப்பட்டு வசூலிக்கப்படுகிறது. நகராட்சியிலுள்ள மொத்த நீரூற்றுகள் 64 ஆகும். வீட்டு உபயோகத்திற்கு 760 இணைப்புகளும், வீட்டு உபயோகமற்ற ஏனைய காரியங்களுக்கு 99 இணைப்புகளும், நகராட்சியால் வழங்கப்பட்டுள்ளன. வழங்கப்பட்டுள்ள இணைப்புகள் யாவும், அளவு கருவி முறையில் இயங்கி வருகின்றன. 1986-87 ஆம் ஆண்டு நகராட்சியால் தண்ணீர் கட்டணமாக வசூலிக்கப்பட்ட தொகை 1,58,548 ரூபாயாகும்.

பயன்தரும் தொழில்கள்

ஒரு தினசரி காய்கறிச் சந்தை, ஒரு வாராந்திர கால்நடைச் சந்தை ஒரு பார உந்து நிலையம் மற்றும் ஒரு பேருந்து நிலையம் ஆகியவற்றை நகராட்சி பராமரித்து வருகிறது. இவையாவற்றினின்றும் கிடைக்கக்கூடிய ஆண்டு வருவாய் 1984-85 முதல் 1986-87 முடிய கீழே கொடுக்கப் பட்டுள்ளது :

ஆண்டு	*சந்தைகளினின்றும் வருவாய் (ரூபாய்)*	*பார உந்து நிலையத்தினின்றும் வருவாய் (ரூபாய்)*	*பேரூந்து நிலையத்தினின்றும் வருவாய் (ரூபாய்)*
1984-85	1,44,775	2,201	42,946
1985-86	1,50,986	3,210	42,806
1986-87	1,89,660	7,100	54,992

நகராட்சிக்குச் சொந்தமான சில காலியிடங்கள் மற்றும் கட்டிடங்கள் ஆகியவற்றைக் குத்தகைக்கு அளித்த வகையில் 1984-85 ஆம் ஆண்டு 52,661/- ரூபாயும், 1985-86 ஆம் ஆண்டு 61,178/- ரூபாயும் மற்றும் 1986-87ஆம் ஆண்டு 70,668/- ரூபாயும் ஆண்டு வருவாயாக கிடைத்துள்ளன.

சுய தேவைத் திட்டங்கள்

இந்நகராட்சியில் சுய தேவைத்திட்டம், 1984-85ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் செலவிடப்பட்ட மொத்தத் தொகை ரூபாய் 16.71 இலட்சமாகும்.

நிறைவேற்றப்பட்ட பணிகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

தொடர் எண்.	*பணியின் விவரங்கள்*	*செலவிடப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்)*
1.	குடிநீர் வழங்குதலில் மேம்பாடு	6.20
2.	சாலைப்பணிகளில் மேம்பாடு	3.91

3.	மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல மையங்கள்	0.32
4.	பொதுக் கழிப்பிடங்கள்	0.27
5.	மதகுகள் மற்றும் புயல்நீர் வடிகால்கள்	1.02
6.	ஆதி திராவிடர் குடியிருப்புகள் மற்றும் இடுகாடுகளுக்குச் செல்லும் பாதைகள்	2.18
7.	துப்புரவுப் பணியாளர்களுக்கு வீட்டுவசதி	2.81
	செலவிடப்பட்ட மொத்தத் தொகை	16.71

இறைச்சிக் கொட்டில்

ஒரு இறைச்சிக் கொட்டிலும், நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. தொகை வசூலிக்கப்படும் உரிமை ஒவ்வொரு ஆண்டும், தினசரிச் சந்தையுடன் சேர்த்துக் குத்தகைக்கு விடப்படுகிறது.

நகராட்சி மன்றம்

பெருந்தலைவரும், 20 உறுப்பினர்களும் கொண்டது நகர் மன்றமாகும். ஒவ்வொருவரும், அவரவர்களது நகர் வட்டத்தினின்றும் பிரதிநிதித்துவம் பெறுகிறார்கள். அந்நகர் வட்டங்களிலொன்று, பெண்களுக்காக ஒதுக்கப்பட்டதாகும். மாநிலத்திலுள்ள ஏனைய நகராட்சிகள் போன்று, இந்நகராட்சியிலும், நகர் மன்றத்திற்கு பிப்ரவரி 23, 1986 ஆம் நாளன்று தேர்தல் நடைபெற்றது.

நகர் மன்றத்தின் செயல்பாடுகள்

1985-86 ஆம் ஆண்டு, 18 இயல்பான கூட்டங்களும், மூன்று அவசரக் கூட்டங்களும், ஒரு சிறப்புக்கூட்டமும் நடைபெற்றன. 1986-87 ஆம் ஆண்டு, நகர்மன்றம் 34 கூட்டங்களை நடத்தியது. அவற்றில், 13 இயல்பான கூட்டங்கள், 15 அவசரக் கூட்டங்கள் மற்றும் ஆறு சிறப்புக் கூட்டங்களாகும். 1986-87 ஆம் ஆண்டு நடைபெற்ற கூட்டங்களில், 403 பொருள்கள் விவாதத்திற்கு வைக்கப்பட்டன. அவையாவற்றிலும், முடிவுகளெடுக்கப்பட்டன. 1987-88ஆம் ஆண்டு, ஒரு சிறப்புக்கூட்டமும் 11 அவசரக் கூட்டங்களும், 11 இயல்பான கூட்டங்களும் நடைபெற்றன. அவற்றில், 314 பொருள்கள் விவாதிக்கப்பட்டு அவையாவற்றிலும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

நகர்மன்ற உறுப்பினர்களிடையே கீழ்க்கண்ட குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன :

1) ஒப்பந்தக்குழு
2) நியமனக்குழு, மற்றும்
3) வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு.

ஒப்பந்தக்குழு, இந்த ஆண்டில் மூன்று கூட்டங்களை நடத்தி, 17 பொருள்கள் குறித்து விவாதித்து, முடிவுகளை எடுத்துள்ளது. நியமனக்குழு ஐந்து கூட்டங்களை நடத்தி அனைத்துப் பொருள்களிலும் முடிவுகளை எடுத்துள்ளது. வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுவினரால் எக்கூட்டமும் நடத்தப்பெறவில்லை.

நகரத் திட்டமைப்பு

1971ஆம் ஆண்டு, நகர மற்றும் கிராமப்புற திட்டமைப்புச் சட்ட விதிமுறைகளின்படி, நகராட்சிகளும், பேரூராட்சிகளும் அவற்றின் எல்லைப்பகுதிகளின் திட்டமைப்பு அதிகாரிகளாக நியமிக்கப் பட்டுள்ளதால், மாவட்டத்திலுள்ள நகர மற்றும் கிராமப்புற திட்டமைப்புப் பணியினை நிறைவேற்ற நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் ஆகியவை அடிப்படையிலேயே பொறுப்பேற்க வேண்டிய அமைப்புகளாகும். இவ்வலுவல்களில் பல, நெறிமுறையாகக் கட்டுப்படுத்துகிற அலுவல்களாகும். அவற்றின் முதன்மையான அலுவல்கள் யாதெனில்[24],

(1) நகர விரிவாக்கத்திற்கு ஒரு பணிச்சட்டம் இயற்றுதலும், நகர வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்குத் தெளிவான திட்டங்களை வகுத்தலும்,

(2) தொழிற்சாலைகள் மற்றும் குடியிருப்புகள் அமைக்கவும், பிற உபயோகங்களுக்கும் திட்டவட்டமான பகுதிகளை உருவாக்குதல்,

(3) குடியிருக்கத்தக்க, குறைந்த அளவு தரமுள்ள கட்டிடங்களைக் கட்ட, கட்டிட ஒழுங்கு விதிமுறைகளை செயல்படுத்துதல், மற்றும்

(4) கட்டிடங்கள் கட்டுவதற்கு தனியார் நில மேம்பாட்டினை ஒழுங்கு முறைப்படுத்துதல் ஆகியவையாகும்.

இவ்வலுவல்களை செயலாற்ற, ஏற்படுத்தப்பட்டுள்ள பல்வேறு சட்டங்களின் விதிமுறைகள் மற்றும் மாவட்டம், நகர்ப்பகுதி மற்றும் கிராமப் புறக்குடியிருப்புகள் ஆகியவற்றிற்காகத் தயாரிக்கப்பட்ட தெளிவான திட்ட அமைப்புகள் ஆகியவை குறித்து, கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

உள்ளாட்சி மற்றும் நகராட்சிச் சட்டங்களின் வரலாறு

1884ஆம் ஆண்டிற்கு முன்னர், கிராமப்பகுதியிலுள்ள நகரங்கள் மற்றும் நகராட்சிப்பகுதியிலுள்ள நகரங்கள் ஆகியவற்றை விரிவாக்க நடைமுறையிலிருந்த சட்டவிதிகள், 1871ஆம் ஆண்டு, சென்னை உள்ளாட்சி நிதிகள் சட்டம் மற்றும் 1871ஆம் ஆண்டு, சென்னை நகர விரிவாக்கச் சட்டம், ஆகியவை ஆகும். 1884 ஆம் ஆண்டு, இச்சட்டங்கள், 1884 ஆம் ஆண்டு, சென்னை உள்ளாட்சி வாரியங்கள் சட்டம் மற்றும் சென்னை மாவட்ட நகராட்சிகள் சட்டம் ஆகியவற்றால் அகற்றப்பட்டன. இப்புதிய சட்டங்களில், உள்ளாட்சியின் கொள்கைகள்,

முந்தைய சென்னை மாகாணத்தில் அறிமுகப்படுத்தப்பட்டன. இச்சட்டங்களில் வெளிப்படையான குறைகள் காணப்பட்டாலும், தெருக்களையும், கட்டிடங்களையும் சரிவர ஒழுங்குப்படுத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. உள்ளாட்சி அலுவலர்களிடம் அக்கறையின்மையும், மிகுந்த கவனக்குறைவும் காணப்பட்டன. இந்நிலை 36 ஆண்டுகளுக்குத் தொடர்ந்தது. அதாவது, 1920 ஆம் ஆண்டின் சென்னை உள்ளாட்சி வாரியங்கள் சட்டம், 1920ஆம் ஆண்டின் சென்னை மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1919 ஆம் ஆண்டு, சென்னை நகர நகராட்சிகள் சட்டம் மற்றும் சென்னை நகர திட்டமைப்பு சட்டம் ஆகியவை இயற்றப்பட்டு, அவை நடைமுறைப்படுத்தப்படும் வரை பழைய நிலையினில் எவ்வித மாற்றமுமில்லை.

1971ஆம் ஆண்டின் நகர மற்றும் கிராமப்புற திட்டமமைப்புச் சட்டம்

செப்டம்பர் 15, 1973 ஆம் தேதி முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட தமிழ்நாடு நகர மற்றும் கிராமப்புறத் திட்டமமைப்புச் சட்டம், 1920 ஆம் ஆண்டின் சென்னை நகர திட்டமமைப்புச் சட்டத்திற்கு பதிலாக இயற்றப்பட்டது.

இச்சட்டம், பல்வேறு நிலைகளில் திட்டங்களைத் தயாரித்திடவும், திட்டமமைப்புப் பணிகளை கவனித்திட தனியாக அதிகாரம் பெற்றவர்களை அமைத்திடவும் வழிவகை செய்தது.

1. மாவட்டத்திற்கான மண்டலத் திட்டம்
2. நகரத்திற்கான, தனி முதன்மையான திட்டம்
3. நகரங்களின் பகுதிகளுக்கு விரிவான வளர்ச்சித் திட்டம்

மண்டலத் திட்டம்

தமிழ்நாடு முழுமைக்கு அறிவிக்கப்பட்ட எட்டு வளம்பெறும் திட்டமமைப்புப் பகுதிகளில் ஒன்றாக, திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய இரு மாவட்டங்களும் அறிவிக்கப்பட்டன. இந்த வளம்பெறும் பகுதிக்கு மண்டலத் திட்டம் வரையப்பட்டது.

மாவட்டத்தின் மக்கட்தொகை, வேலை வாய்ப்பு, மிகப்பெரிய போக்குவரத்து வசதி பின்னல்வலையமைவு, வேளாண்மை மற்றும் தொழில் வளர்ச்சி குறித்த முதன்மையான கொள்கைகள் மற்றும் நகரங்கள் கிராமங்கள் ஆகியவற்றிற்கான திட்டம் போன்றவை இம்மண்டலத்தினில் அடங்கும். பின்னர், இந்த வளம்பெறும் திட்டமமைப்பு மண்டலங்கள் மாற்றியமைக்கப்பட்டு, மாவட்ட மண்டலத்திட்டமமைப்புப் பகுதிகள் அரசால் அறிவிக்கப்பட்டன. அதன் 1983ஆம் ஆண்டு கன்னியாகுமரி மாவட்டம், கன்னியாகுமரி மண்டலத் திட்டமமைப்புப் பகுதியாக அறிவிக்கப்பட்டது. இப்பகுதிக்கு, மாவட்ட மண்டல திட்டமமைப்பு

அதிகாரம் பெற்றவர் அமைக்கப்படவேண்டும். தற்போது, நகர மற்றும் கிராமப்புறப் பகுதித்துறை மாவட்டத் திட்டம் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளது.

தனி முதன்மையான திட்டம்

1971ஆம் ஆண்டின், தமிழ்நாடு நகர மற்றும் கிராமப்புற திட்டமமைப்புச் சட்டத்தின் 10-வது பிரிவுப்படி, கீழ்க்குறிப்பிட்டவை ஐந்து உள்ளாட்சித் திட்டமமைப்புப் பகுதிகளாக அறிவிக்கப்பட்டவையாகும் :

1. குளச்சல்
2. கன்னியாகுமரி
3. குழித்துறை
4. நாகர்கோவில்
5. பத்மநாபபுரம்

இந்த ஐந்து உள்ளாட்சித் திட்டமமைப்புப் பகுதிகளில், நாகர்கோவில் பகுதி, நாகர்கோவில் நகராட்சி எல்லைக்கும் அப்பாற்பட்டதாகும். அதற்கு 1971ஆம் ஆண்டின் தமிழ்நாடு நகர மற்றும் கிராமப்புற திட்டமமைப்பு சட்டத்தின் 11-வது பிரிவுப்படி, அமைக்கப்பட்ட தனி உள்ளாட்சி திட்டமமைப்பு அதிகாரம் பெற்றவர் உள்ளார். நகர்மன்ற பெருந்தலைவர் அவ்வமைப்பிற்கும் பெருந்தலைவராவார். நகர்மன்றத்தின் நகர திட்டமமைப்பு அலுவலர், உறுப்பினர்-செயலராக நியமிக்கப் பட்டுள்ளார். பிற உள்ளாட்சித் திட்டமமைப்புப் பகுதிகள் யாவும், தனி உள்ளாட்சித் திட்டமமைப்பு பகுதியாகும். அவை தொடர்புள்ள நகராட்சி எல்லையின் முடிவிடத்தை ஒத்தவையாகும். தனி முதன்மையான திட்டங்கள் கொளச்சல் தவிர மற்ற அனைத்து உள்ளாட்சி திட்டமமைப்புப் பகுதிகளுக்கும் தயாரிக்கப்பட்டுள்ளன. தனி முதன்மையான திட்டமானது, தமிழ்நாடு நகர மற்றும் கிராமப்புற திட்டமமைப்பு சட்டத்தின்படி, ஒரு நகர்ப்புற குடியிருப்பு குறித்து, தயார் செய்யப்படும் வளர்ச்சித் திட்டமாகும். அது குடியிருப்பு, வாணிகம், தொழிற்சாலை, வேளாண் பணிகள் மற்றும் பூங்காக்கள், விளையாட்டுத் திடல்கள், திறந்த வெளிகள், பிற்கால வளர்ச்சி மற்றும் விரிவாக்கத் திட்டங்களுக்கான காலியிடங்கள் மற்றும் புதிய வீட்டுவசதி ஆகியவற்றை எடுத்துக்கூறுகிறது. அது போக்குவரத்து வாணிகத் தொடர்பு மற்றும் பெரிய சாலைகள் மற்றும் தெருக்களை மேம்படுத்துதல் ஆகியவற்றையும் எடுத்துக் கூறுகிறது. இந்த நான்கு தனி முதன்மையான திட்டங்களுக்கும் அரசு ஒப்புதலளித்து, *தமிழ்நாடு அரசிதழில்* அறிவிக்கையாக வெளியிடப்பட்டுள்ளது. அவற்றின் உட்கருத்து யாதெனில், எந்த ஒரு நபரும், தொடர்புள்ள உள்ளாட்சித் திட்டமமைப்புப் பகுதிகளில் அமைந்துள்ள ஒரு நிலம் அல்லது கட்டிடத்தை மேம்படுத்தவோ,

விரிவாக்கவோ விருப்பப்பட்டால், தொடர்புள்ள திட்டமமைப்பு அதிகாரம் பெற்றவருக்கு அனுமதி கோரி எழுத்து மூலமான விண்ணப்பம் அளிக்க வேண்டும். தனி முதன்மையான திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ள வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகளுக்கொப்ப விண்ணப்பதாரருக்கு அனுமதி வழங்கப்படும். தனி முதன்மையான திட்டத்திலடங்கியுள்ள வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிமுறைகளின் தொகுப்பு வருமாறு :

1. மண்டலம் சார்ந்த ஒழுங்கு விதிமுறைகள்

திட்டமமைப்புப் பகுதியிலுள்ள நிலத்தை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் மற்றும் கட்டிடங்கள், கட்டமைப்புகள் மற்றும் நிலம் ஆகியவற்றின் பயன்பாடு போன்றவை.

2. கட்டிடம் சார்ந்த ஒழுங்கு விதிமுறைகள்

கட்டிடங்களின் உயரம், மாடிகளின் எண்ணிக்கை, கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகளின் அளவு, பிற திறந்த வெளிகள் போன்றவை.

3. உட்பிரிவு ஒழுங்கு விதிகள்

மனைத்திட்ட அமைப்பு விதிகள் மற்றும், விரிவான வளர்ச்சித் திட்டங்கள்.

1971ஆம் ஆண்டின், நகர மற்றும் கிராமப்புற திட்டமமைப்பு சட்டத்தின்படி, விரிவான வளர்ச்சித் திட்டங்கள் நகர்ப்புற குடியிருப்புப் பகுதிகளுக்குத் தயாரிக்கப்படுகின்றன. அவற்றின் பெயரே சுட்டிக்காட்டுவது போன்று, இத்திட்டங்கள், வீட்டு மனைகள் கட்டப்படும் அல்லது இடித்து அப்புறப்படுத்தப்படும் வீடுகள், போக்குவரத்து வசதி, குடிநீர் வசதி, மின்வசதி மற்றும் அனுமதியிட்டுக் கூறப்பட்டுள்ள பிற விவரங்கள் ஆகியவற்றின் மனைத்திட்ட அமைப்புத் தெளிவாகக் காட்டுகின்றன. விரிவான வளர்ச்சித் திட்டங்கள், நாகர்கோவில் மற்றும் கன்னியாகுமரி உள்ளாட்சி திட்டமமைப்பு பகுதிகளுக்குத் தயார் செய்யப்பட்டுள்ளன. நான்கு ஒப்புதலளிக்கப்பட்ட மற்றும் ஒரு இசைவளிக்கப்பட்ட விரிவான வளர்ச்சித் திட்டங்கள், நாகர்கோவில் உள்ளாட்சி திட்டமமைப்புப் பகுதியைச் சார்ந்தவையாகும். கன்னியாகுமரி உள்ளாட்சி திட்டமமைப்புப் பகுதியில், ஒரு ஒப்புதலளிக்கப்பட்ட விரிவான வளர்ச்சித் திட்டமும், இரண்டு இசைவளிக்கப்பட்ட விரிவான வளர்ச்சித் திட்டமும் உள்ளன.

இந்த எட்டு விரிவான வளர்ச்சித் திட்டங்களும், நெறிமுறையாகக் கட்டுப்படுத்துகிற வாய்மை உறுதிப்பாட்டை உள்ளடக்கியவையாகும். மற்றும் எந்தஒரு வளர்ச்சியும், விதிமுறைகளுக்குட்பட்டதாக அமைதல் வேண்டும்.

ஒப்புதலளிக்கப்பட்ட மற்றும் இசைவளிக்கப்பட்ட திட்டங்கள் தொடர்பான விவரங்கள், தனியாக இணைப்பு ஒன்றில் கொடுக்கப் பட்டுள்ளன.

1920ஆம் ஆண்டின் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் மற்றும் 1958ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம்

கட்டிடங்களை ஒழுங்குப்படுத்துதல், கட்டிடங்களுக்குத் தனி நில மேம்பாடு, அனைத்து நகரங்களிலும், கிராமப்புறங்களிலுள்ள நகர்ப்பகுதிகளிலும் தொழிற்சாலைகள் உருவாக்குவதற்கும், ஏனைய பயன்பாடுகளுக்கும் தொடர்புள்ள பகுதிகளை மண்டலங்களாகப் பாகுபாடு செய்தல் போன்றவற்றை இச்சட்டங்கள் உறுதியிட்டுக் கூறுகின்றன. 1920ஆம் ஆண்டின் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படியான தமிழ்நாடு நகராட்சிகள் சார்ந்த கட்டிட விதிகளின்கீழ், நகர் மற்றும் கிராமப்புற திட்டமமைப்பு இயக்குநர், மேல்முறையீட்டு அலுவலராவார். இயக்குநரது தொழில், நுட்ப ஆலோசனையின்படி நகராட்சிகளாலும் பேரூராட்சிகளாலும் மனைத் திட்ட அமைப்புகளுக்கு ஒப்புதலளிக்கப்படுகிறது. இம்மாவட்டத்தில் அறிவிக்கப்பட்ட தொழில் சார்ந்த பகுதிகள் இணைப்பு இரண்டில் பட்டியலிடப்பட்டுள்ளன.

பூங்காக்கள் விளையாட்டுத் திடல்கள் மற்றும் திறந்த வெளிகள் சட்டம் 1959

இச்சட்டம், பூங்காக்கள் விளையாட்டுத் திடல்கள் மற்றும் திறந்த வெளிகள் ஆகியவற்றிற்கு எப்பகுதியினையும் ஒதுக்கிட வழிவகை செய்கிறது. இம்மாவட்டத்தில் பூங்காக்கள், விளையாட்டுத் திடல்கள் மற்றும் திறந்தவெளிகளாக அறிவிக்கப்பட்டுள்ளவை பற்றிய பட்டியல் இணைப்பு மூன்றில் உள்ளது.

ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்கள் (ஐ.ஆர்.டி.பி.)

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் துவக்கப்பட்ட இத்திட்டத்தின் நோக்கம் யாதெனில், உள்ளாட்சி நிறுவனங்களின் வருவாயினைப் பெருக்கிடுவதும், அவற்றிற்கு ஆதார உள்ளமைப்பு ஏற்படுத்திக் கொடுப்பதுமாகும். நகர மற்றும் கிராமப்புற பகுதி திட்டமமைப்பு இயக்குநர், இத்திட்டத்தினை மேற்பார்வை செய்கிறார். இத்திட்டத்தின்படி, ரூபாய் இருபது இலட்சம் நிதிஉதவி பெற்று ஒரு பேருந்து நிலையம் அமைத்திட கொளச்சல் நகரம் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது. ஐந்து இலட்ச ரூபாய் ஏற்கனவே அளிக்கப்பட்டு, திட்டம் தற்போது நடைபெற்று வருகிறது. ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித்திட்டத்தின்படி, பிற திட்டங்களுக்கு வழங்கப்பட்ட நிதிஉதவி தொடர்பான விவரங்கள், இணைப்பு நான்கில் கொடுக்கப்பட்டுள்ளன.

இணைப்பு - 1

விரிவான வளர்ச்சித் திட்டங்களின் நிலை

நாகர்கோவில் உள்ளாட்சித் திட்டமமைப்புப் பகுதி

ஒப்புதலளிக்கப் பட்டவை (1)	*விரிவான வளர்ச்சித் திட்டத்தின் பெயர் (2)*	*ஆணை (3)*
1.	விரிவான வளர்ச்சித் திட்டம் எண்.5 (ஆசாரிப்பள்ளம்–சாலை–வடக்கு).	நகர் மற்றும் கிராமப்புற திட்டமமைப்பு இயக்குநர், சென்னை–செயல்முறைகள் எண்.டி.2.2550/86, நாள் 30.9.1986.
2.	நகராட்சி திட்டமமைப்பு முறை எண்.1 (பார்வதிபுரம் வடக்கு நகரவரைவுத்திட்டம்).	செயல்முறைகள் எண். 44988/78, நாள் 27.4.1981.
3.	விரிவான வளர்ச்சித்திட்டம் எண்.2	செயல்முறைகள் எண்.டி.2. 10665/88, நாள் 8.4.1988.
4.	நகர வரைவுத்திட்டம் எண்.3 (பார்வதிபுரம் தெற்கு–நகர வரைவுத்திட்டம்).	செயல்முறைகள் எண்.டி2 5854/8, நாள் 24.3.1986.
	இசைவளிக்கப் விரிவான வளர்ச்சித்திட்டம் பட்டதிட்டம் எண்.4	செயல்முறைகள் எண்.டி.2 9735/82, நாள் 21.12.1986.

கன்னியாகுமரி உள்ளாட்சி திட்டமமைப்புப்பகுதி

ஒப்புதலளிக்கப் பட்ட திட்டம்	விரிவான வளர்ச்சித் திட்டம் எண்.1	செயல்முறைகள் எண்.டி.2. 1357/88, நாள் 8.4.1988.
இசைவளிக்கப் பட்ட திட்டம்	விரிவான வளர்ச்சித் திட்டம் எண்.2	செயல்முறைகள் எண்.டி.3. 4390/86, நாள் 30.9.88.
	விரிவான வளர்ச்சித் திட்டம் எண்.3	செயல்முறைகள் எண்.டி.2. 38270/85, நாள் 30.12.1988.

இணைப்பு - 2

அறிவிக்கப்பட்ட தொழில் சார்ந்த பகுதி

தொடர் எண்.	*நிகழ்விடத்தின் பெயர்*	*கிராமத்தின் பெயர்*	*புல எண்கள்*	*வழிவகை செய்துள்ள சட்டம்*
1.	குருந்தன்கோடு	முட்டம்	473, 475, 476 மற்றும் 477	தமிழ்நாடு ஊராட்சி சட்டம் 1958
2.	ஆரல்வாய்மொழி	ஆரல்வாய் –மொழி	69 முதல் 112 முடிய 124, 358 முதல் 365 முடிய 368, 369, 372	

(1)	(2)	(3)	(4)	(5)
			முதல் 374 முடிய, 376 முதல் 453 முடிய, 459 முதல் 468 முடிய, 487 முதல் 516 முடிய	ஷெ
3.	ஆத்தூர்	ஆத்தூர்	212/1 மற்றும் 212/3	ஷெ

இணைப்பு - 3

அறிவிக்கப்பட்ட பூங்காக்கள், விளையாட்டுத் திடல்கள் மற்றும் திறந்த வெளிப்பகுதிகள் ஆகியவை (அரசாணை எண்.2440/ஊரகத்துறை மற்றும் உள்ளாட்சி, நாள் 18.9.1963)

தொடர் எண்.	சொல்விளக்கம்	நிகழ்விடம் (நகர் வட்ட எண்.)	புல எண்கள்.	பரப்பளவு ஏ. செ.
(1)	(2)	(3)	(4)	(5)
	நாகர்கோவில் நகராட்சி (அரசாணை எண்.எம்.எஸ்.1515, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி), நாள் 17.8.1965			
	பூங்காக்கள்			
1.	மௌலானா அபுல்கலாம் ஆஸாத் நினைவு நகராட்சிப் பூங்கா	2	–	0.07
2.	கண்டச்சாங்குளம் பூங்கா	7	1679/3 முதல் 9 முடிய	1.21
3.	தாளியாபுரம் நகராட்சி பூங்கா	15	1898/72	0.65
4.	நகராட்சி முதன்மைப்பூங்கா	24	1382,825/1	4.31
5.	கோஷராமன் புதூர் நகராட்சி பூங்கா	1919	–	0.22
6.	எரளப்பபுரம் நகராட்சி பூங்கா	30	949	0.56
7.	புனித சூசையப்பர் கன்னிமாட பெண்கள் தொடக்க நடுத்தர மற்றும் உயர்நிலைப்பள்ளி பூங்கா நகராட்சிக் கட்டிடம்	29	1573	0.54
8.	டி.வி.டி. உயர்நிலைப்பள்ளி பூங்கா மற்றும் விளையாட்டுத்திடல்	1	1627	0.60
	விளையாட்டுத் திடல்கள்			
1.	எடலாண்டி அரசுப்பள்ளி விளையாட்டுத் திடல்	1	1679/207	1.40

(1)	(2)	(3)	(4)	(5)
2.	காவல்அலுவலர் அணிவகுப்புகள் விளையாட்டுத் திடல்கள்	9	1601	0.31
3.	அரசுத் தொடக்கப்பள்ளி விளையாட்டுத் திடல்	9	1595 (பகுதி)	–
4.	பொது வரிப்பந்தாட்ட மற்றும் பூப்பந்தாட்ட விளையாட்டுக் கூடம்	13	1769/189	0.83
5.	எஸ்.எம்.ஆர்.வி. பள்ளி மாணவ மாணவியர் விளையாட்டுத்திடல்	15	636, 635 மற்றும் 1676	2.65
6.	கத்தோலிக்க இளைஞர் சங்க (ஒய்.எம்.ஸி.ஏ.) விளையாட்டுத் திடல், நாகர்கோவில்	22	19264	0.14
7.	எஸ்.சி.எஸ்.எச். மற்றும் கல்லூரி விளையாட்டு திடல்	22	1925	4.0
8.	எஸ்.சி. எச்.சி. நாகர்கோவில் விளையாட்டுத் திடல்	22	1925	.91
9.	மாவட்ட பொழுதுபோக்குக்கழகம்	22	3167	1.49
10.	திருஉடன்படிக்கை (கன்கார்டியா) உயர்நிலைப்பள்ளி விளையாட்டுத் திடல்	22	274/7,10 278/1	0.27
11.	பொழுது போக்குச் சிறுவர்கள் விளையாட்டுத் திடல்	22	1882/75–1	0.27
12.	எஸ்.ட்டி., இந்து கல்லூரி விளையாட்டுத் திடல்	25	1679 (பகுதி) மற்றும் 1690 (பகுதி)	1.0 தோராயம்)
13.	டுத்தி பெண்கள் உயர்நிலைப் பள்ளி விளையாட்டுத் திடல்	25	1349 (பகுதி) மற்றும் 1400 (பகுதி)	1.62
14.	சிறுமலர் உயர்நிலைப்பள்ளி விளையாட்டுத் திடல்	26	2317 (பகுதி) 2318	1.62
15.	கார்மல் நடுத்தரப்பள்ளி விளையாட்டுத் திடல்	27	2026	1.44
16.	எஸ்.எல்.பி, அரசுப்பள்ளி விளையாட்டுத் திடல்	35	–	4.65
17.	வேங்கடாபதி விளையாட்டுத் திடல்	25	1445	0.75

	திறந்தவெளி			
1.	மடம் கோவில் திறந்தவெளி	22	1382/775அ	0.35
2.	எஸ்.பி.பி. தொடக்கப்பள்ளி குழந்தைகள் திறந்தவெளி வளாகம்	28	1510	14.25

இணைப்பு - 4

ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித்திட்டத்தின் கீழ், தொகை வழங்கப்பட்ட பணிகள் குறித்த விவரங்கள்

தொடர் எண்.	*பணிகளின் விவரம்*	*இடம்*	*வழங்கப்பட்ட தொகை (ரூ.லட்சத்தில்)*
(1)	*(2)*	*(3)*	*(4)*
1.	புதிய பேருந்து நிலையம் கட்டுதல்*	நாகர்கோவில்	25.00
2.	கடைகள் வளாகம் கட்டுதல்*	நாகர்கோவில்	24.00
3.	கட்டணம் செலுத்திப் பயன்படுத்தும்* கழிப்பிடங்கள் கட்டுதல்	1. குழித்துறை 2. பத்மநாபபுரம் 3. கன்னியாகுமரி	0.20 0.20 0.88
	* (பணி முடிவடைந்து விட்டது)		
4.	**ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கட்டிடம் கட்டுமானப் பணி மற்றும் மேம்பாட்டுப்பணி:**		
1.	புதிய பேருந்து நிலையம் கட்டுதல்	அஞ்சுகிராமம்	0.72
2.	பேருந்து நிலையங்களை மேம்படுத்துதல்	1. கருங்கல் 2. கலியங்காவிளை 3. குழித்துறை 4. பத்மநாபபுரம் 5. குளச்சல்	4.60 4.00 25.00 10.25 20.00
3.	சந்தையை மேம்படுத்துதல்	குலசேகரம்	5.60

ஊராட்சி ஒன்றியங்கள்

நிருவாக அமைப்பு முறை

மாநில அளவில் ஊரக வளர்ச்சித்துறை இயக்குநர், துறைத் தலைமை அலுவலராவார். மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சித் தலைவர் ஊராட்சி ஒன்றியங்களில் செயல் துறைக்கட்டுப்பாட்டு அலுவலராகப் பணியாற்றி வருகிறார்.

கன்னியாகுமரி மாவட்டத்தில், ஊராட்சி நிருவாகத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி நிறுவன திட்ட அலுவலர் தனி உதவியாளர், நாகர்கோவில் மற்றும் பத்மநாபபுரம் கோட்ட வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் ஆகியோருடன் ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் அலுவல்சாரா உறுப்பினர்களும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் உதவிபுரிந்து வருகின்றனர்.

1979ஆம் ஆண்டு வரை, கன்னியாகுமரி வருவாய் மாவட்ட முழுமையும், ஒரு வளர்ச்சிக் கோட்டமாக (பத்மநாபபுரம் கோட்டம்) இயங்கிவந்தது.

46 பேரூராட்சிகள் பிரிக்கப்பட்டு 64 பேரூராட்சிகளாகவும், 224 ஊராட்சிகளாகவும், செயல்பட்டபோது, வேலைப்பளு அதிகரித்தது. எனவே வளர்ச்சிக் கோட்டத்தினையும் பிரித்திட வேண்டிய நிலை உருவாகியது. இதன் விளைவாக, பத்மநாபபுரம் வளர்ச்சிக் கோட்டத்தினின்றும், ஒரு பகுதி பிரிக்கப்பட்டு, நாகர்கோவில் வளர்ச்சிக் கோட்டமென பெயரிடப்பட்டது.[25]

இவைதவிர, பல்வேறு வளர்ச்சிப்பணிகள் மற்றும் திட்டங்கள் ஆகியவற்றை செயலாற்றிட, தொழில் நுட்ப மற்றும் தொழில் நுட்பம் சாரா பணியாளர்கள், ஊராட்சி ஒன்றிய ஆணையருக்கு உதவி புரிந்து வருகின்றனர். ஊராட்சி ஒன்றிய நிருவாக அமைப்பிலுள்ள, அரசுப்பணியாளர்கள் மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்கள் ஆகியோரின் விவரங்கள் பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ளன.

இயல்பாக, ஒன்றியப் பொறியாளர்கள், வேளாண் அலுவலர்கள் மற்றும் (விலங்கினப் பாதுகாப்பு) விரிவாக்க அலுவலர்கள் ஆகியோர் ஊராட்சி ஒன்றியத்திற்கு, அலுவலர்களது துறையினின்றும் பணியாற்ற அனுப்பப்படுகின்றனர்.

ஊராட்சி ஒன்றியங்களின் அலுவல்கள்

ஊராட்சி ஒன்றியங்களின் முதன்மையான அலுவல்கள் யாதெனில், மாநில மற்றும் மத்திய அரசின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதாகும். அவற்றில், தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம், ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள்


ஊராட்சி ஒன்றியங்களின் நிருவாக அமைப்பு முறை
அலுவலர்கள்
ஆணையர் (வட்டார வளர்ச்சி அலுவலர்)
அலுவல்சாரா மக்கள் பிரதிநிதிகள்
ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள்
உறுப்பினர்கள்
தொழில்நுட்பம் சாரா அலுவலர்கள்
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்
மேலாளர்
விரிவாக்க அலுவலர் (ஊராட்சிகள்)
மேலாளர்
கணக்கர்கள்
உதவியாளர்கள்
கிராம நல அலுவலர்கள் நிலை–1
இளநிலை உதவியாளர்கள்/தட்டச்சர்கள்
கிராம நல அலுவலர்கள் நிலை–2
பதிவறை எழுத்தர்கள்
அலுவலக உதவியாளர்கள்
தொழில்நுட்ப அலுவலர்கள்
விரிவாக்க அலுவலர் (வேளாண்மை)
வேளாண் அலுவலர்
உதவி வேளாண் அலுவலர்
சான்று விளக்க அலுவலர் (வேளாண்மை)
அமைச்சுப்பணியாளர்கள்
விரிவாக்க அலுவலர் (கால்நடை பராமரிப்பு)
அமைச்சுப்பணியாளர்கள்
ஒன்றியப் பொறியாளர்
மேற்பார்வையாளர்
அமைச்சுப்பணியாளர்கள்
ஊராட்சி ஒன்றிய மருத்துவமனைகளின் மருத்துவ அலுவலர்கள்

வளர்ச்சித்திட்டம், மாண்புமிகு பிரதம மந்திரியின் இருபது அம்சத்திட்டம், ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித்திட்டம், சுயதேவைத்திட்டம், கிராமப்புற நிலமற்றோர் வேலை வாய்ப்பு பொறுப்புறுதித் திட்டம், தேசிய எரிவாயுத் திட்டம் போன்றவை அடங்கும். ஊராட்சி ஒன்றியங்கள், சிறிய நீர்ப்பாசனக் குளங்களின் கரைகளை செப்பனிடுதல் கிராமப்புற மருத்துவமனைகள், மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல மையங்கள் ஆகியவற்றைப் பராமரித்தல், சாலை வேலைகளை நிறைவேற்றுதல், மதகுகள், கரைப்பாலங்கள் பள்ளிக் கட்டிடங்கள் கிராம குடிநீர்க் கிணறுகள் மற்றும் துவக்க நல்வாழ்வு மையங்கள் ஆகியவை கட்டுதல் போன்ற பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

ஊராட்சி ஒன்றியங்களின் வருவாய்க்கான ஆதாரங்கள்

நில வருவாயில் ஒரே சீராக 45 விழுக்காடாக நிர்ணயிக்கப் பட்டுள்ள உள்ளூர் வரி, ஊராட்சி ஒன்றியத்தின் முக்கிய வருவாய் ஆகும். உள்ளூர் மிகை வீதவரி, அதிக அளவாக ஒவ்வொரு ரூபாய் நில வருவாய் மற்றும் பொழுதுபோக்கு வரி ஆகியவற்றிற்கு 2.50 ரூபாய்க்கு மிகாமல் விதிக்கப்படுகிறது (நில வருவாய் செலுத்தும் நிலச்சுவாந்தார், நில வருவாயுடன், உள்ளூர் வரி மற்றும் உள்ளூர் மிகை வீதவரி ஆகியவற்றையும் செலுத்திவைக்கக் கடமைப்பட்டவராகிறார்). இவை தவிர, உள்ளூர் மிகை வீதி வரி, ஈடு கொடுக்கும் கொடை, இணைப்புச் சாலைகள் உருவாக்கக் கொடை மற்றும் அவ்வப்போது இவை போன்ற கொடைகள் அரசு ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கி வருகிறது.

வரிகள் வசூல் செய்தல்

இயல்பாக, தமிழ்நாட்டிலுள்ள கிராம ஊராட்சிகளில், பல்வேறு வகையான வரிகளை வசூலிக்கும் பணி, கிராம நிருவாக அலுவலரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆனால், கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு தொகுதியிலடங்கிய கிராம ஊராட்சிகளுக்கு வரிவசூல் செய்யும் பணிக்கு ஒரு முழுநேர வரி வசூலிப்பவர் (பில் கலெக்டர்) நியமிக்கப்பட்டுள்ளார். முந்தைய திருவாங்கூர் மாநிலத்தில் நடைமுறையிலிருந்த இப்பழக்கம், தொடர்ந்து இங்கு கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

ஊராட்சி ஒன்றியங்களின் பாகுபாடுகள்

துவக்கத்தில், அரசால் ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்பட்டு வந்த கொடை ஒரே சீராக அமையவில்லை. வளர்ச்சிப்பணிகளில் எவை பின்தங்கிய நிலையிலிருந்தனவோ, அந்த ஊராட்சி ஒன்றியங்கள் மற்ற ஊராட்சி ஒன்றியங்களைவிட, அதிகக் கொடையினைப் பெற்று வந்தன. எனவே, அப்படிப்பட்ட கொடைகளுக்கு ஒரு உருமாதிரி நிர்ணயிப்பது அவசியமென கருதப்பட்டது. அதன் விளைவாக, 1961ஆம் ஆண்டு, ஊராட்சி ஒன்றியங்களின் பாகுபாடுகள் நிர்ணயிக்கப்பட்டு, சில

உருமாதிரிகளும் ஏற்படுத்தப்பட்டன. அவை, அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களின் ஒவ்வொருவருக்கான நில வருவாயின் அடிப்படையில், மேற்கொள்ளப்பட்டன. பின்னர், ஊராட்சி ஒன்றியங்கள், அ, ஆ, இ மற்றும் ஈ என பாகுபாடு செய்யப்பட்டன.

1978ஆம் ஆண்டு, இப்பாகுபாடுகள் மாற்றியமைக்கப்பட்டன. அவை இன்னமும் தொடர்ந்து நடைமுறையிலிருந்து வருகின்றன. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள ஊராட்சி ஒன்றியங்களின் பாகுபாடு விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:[26].

தொடர் எண்.	ஊராட்சி ஒன்றியத்தின் பெயர்	பாகுபாடு	உள்ளூர் மிகைவீதவரி ரூ. பை.	அரசு வழங்கும் கொடையின் விழுக்காடு (%)
1.	தோவாளை	2	2.50	50
2.	அகஸ்தீஸ்வரம்	4	2.10	70
3.	இராசக்காமங்கலம்	4	2.10	70
4.	குருந்தன்கோடு	4	2.50	70
5.	தக்கலை	5	2.50	85
6.	திருவட்டார்	6	2.50	95
7.	கிள்ளியூர்	6	2.50	95
8.	முஞ்சிறை	6	2.50	95
9.	மேல்புரம்	5	2.50	85

1969 ஆம் ஆண்டிற்கு முன்னர், ஊராட்சிகளின் பிரதிநிதிகளுக்கான தேர்தல், ஒரு பகுதி நேரடியாகவும், ஒரு பகுதி மறைமுகமாகவும் நடைபெற்றது. அதாவது, நகர் வட்டங்களில் உறுப்பினர்கள் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், ஊராட்சிகளின் தலைவர்களைத் தேர்ந்தெடுத்து வந்தார்கள். பின்னர், ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர், ஊராட்சிகளின் தலைவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார். முதன்முதலாக 1969ஆம் ஆண்டு, ஊராட்சிகளின் தலைவர்கள், மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அவ்வாறு 1969இல் அமைக்கப்பட்ட ஊராட்சிகள் 1979ஆம் ஆண்டு கலைக்கப்பட்டுவிட்டன.

அதன்பின்னர், ஊராட்சி நிறுவனங்களுக்கான தேர்தல், பிப்ரவரி 23,1986-ந் தேதி நடத்தப்பட்டன. இந்தத்தடவை, புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட முறை யாதெனில், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் நகராட்சிகளின் பெருந்தலைவர்களை மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்பதாகும். மேலும், இப்பதவிகளுக்கு அரசியல் கட்சிகள் யாவும் தங்களது வேட்பாளர்களை நிறுத்த அனுமதிக்கப்பட்டனர்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் 88 கிராம ஊராட்சிகளும், 66 பேரூராட்சிகளும் மற்றும் நகரியமும் உள்ளன. கடந்த தேர்தலில் 1170 வாக்குச் சாவடிகள் நிறுவப்பட்டன.[27] ஒன்பது ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள் 154 ஊராட்சித் தலைவர்கள் மற்றும் 2054 உறுப்பினர்கள் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இம்மாவட்டத்தின் அனைத்து உள்ளாட்சி நிறுவனங்களின் பகுதியிலும், வாக்களிக்கத் தகுதி பெற்ற 7,51,058 வாக்காளர்கள் இருந்தனர். உள்ளாட்சி நிறுவனங்களின் தேர்தலுக்கு வாக்களிக்கத் தகுதி பெற்ற வாக்காளர்களின் வயது வரம்பு 21-லிருந்து 18 ஆகக் குறைக்கப்பட்டுள்ளதை இங்கு குறிப்பிட வேண்டியது அவசியமாகிறது.

கிராம மற்றும் பேரூராட்சிகளிலுள்ள நகர்வட்டங்களின் எண்ணிக்கை[28] (ஊராட்சி ஒன்றியவாரியாக)

தொடர் எண். (1)	*ஊராட்சி / பேரூராட்சியின் பெயர்* (2)	*நகர் வட்டங்களின் எண்ணிக்கை* (3)
1.	**தக்கலை ஊராட்சி ஒன்றியம் :**	
	1. கூத்தாநல்லூர் பேரூராட்சி	14
	2. குமாரபுரம் "	14
	3. கப்பியாளி "	14
	4. திக்கணங்கோடு "	13
	5. திருவிதாங்கோடு "	13
	6. நுல்லிவினை "	14
	7. விளவூர் "	14
	8. வாள்வச்ச கோஷ்ட்டம்	14
	9. முளகுமூடு "	13
	10. எரனியல் "	12
	11. அத்திவிளை கிராம ஊராட்சி	15
	12. கல்குறிச்சி கிராம ஊராட்சி	4
	13. சடைய மங்கலம் பேரூராட்சி	3
	14. முத்தலாக்குறிச்சி "	5
	15. மருதூர் குறிச்சி "3	
2.	**குருந்தங்கோடு ஊராட்சி ஒன்றியம் :**	
	1. ரீத்தாபுரம் 14	
	2. நெய்யூர் 13	

(1)	(2)	(3)
	3. தெற்கரை	2
	4. வில்லுக்குரி	13
	5. ஆலூர்	12
	6. கட்டினமோடு	4
	7. நெட்வாங்கோடு	4
	8. காக்கோட்டுத்தலை	4
	9. திங்கள் நகர்	13
	10. கல்லுக்கோட்டம்	14
	11. சினான் காலனி	4
	12. மண்டைக்காடு	13
	13. தாளக்குளம்	5
	14. மணவாளக்குறிச்சி	13
	15. வெள்ளிமலை	13
	16. குருந்தங்கோடு	4
	17. வெள்ளிசந்தை	13
	18. முட்டம்	4
3.	**மேல்புரம் ஊராட்சி ஒன்றியம் :**	
	1. கலியக்காவிளை பேரூராட்சி	14
	2. பளுகல் "	14
	3. எடைக்கோடு "	15
	4. பாக்கோடு "	15
	5. அருமனை "	14
	6. கடயல் "	14
	7. வன்னியூர் கிராம ஊராட்சி	4
	8. மலயடி "	4
	9. தேவிக்கோடு "	4
	10. புலியூர் சாலை "	4
	11. மாங்கோடு "	4
	12. மருதங்கோடு "	4
	13. வெல்லங்கோடு "	5

(1)	(2)	(3)
	14. முழுக்கோடு "	4
	15. மஞ்சல மூடு "	3
	16. விளவங்கோடு "	4
4.	**முஞ்சிறை ஊராட்சி ஒன்றியம் :**	
	1. புதுக்கடை பேரூராட்சி	13
	2. பெயின் குளம் "	15
	3. விளாத்துறை "	14
	4. ஏழுதேசம் "	14
	5. மேத்துக்கும்மல் "	13
	6. கொல்லங்கோடு "	15
	7. முஞ்சிறை கிராம ஊராட்சி	4
	8. மாங்காடு "	4
	9. தூத்தூர் "	5
	10. வாவரை "	5
	11. அடைக்காகுழி "	5
	12. சூழல் "	3
	13. குலபுரம் "	6
	14. நடைக்காவூ "	5
5.	**திருவட்டார் ஊராட்சி ஒன்றியம் :**	
	1. கட்டாத்துறை பேரூராட்சி	14
	2. திருவட்டார் "	14
	3. தீர்பரப்பு "	14
	4. வேர்கிளம்பி "	13
	5. பொன்மனை "	14
	6. பேச்சிப்பாறை "	12
	7. ஆத்தூர் "	13
	8. குலசேகரம் "	14
	9. ஆயக்கோடு கிராம ஊராட்சி	4
	10. சோறுகோலோ "	4
	11. குமரங்குடி "	4

(1)	(2)	(3)
	12. அருவிக்கரை "	3
	13. கண்ணனூர் "	4
	14. சுருளங்கோடு கிராம ஊராட்சி	3
	15. பாலமோர் "	3
	16. ஏட்டாக்கோடு "	4
6.	**தோவாளை ஊராட்சி ஒன்றியம் :**	
	1. ஆரல்வாய்மொழி	14
	2. அருமநல்லூர்	3
	3. அழகிய பாண்டிபுரம்	14
	4. பீமநகரி	13
	5. பூதபாண்டி	13
	6. சி.ஆர்.புதூர்	3
	7. தெரிசனங்கோப்பு	3
	8. ஈரச்சகுளம்	3
	9. எசந்திமங்கலம்	3
	10. ஞாலம்	3
	11. கடுக்கரை	4
	12. காட்டுப்புத்தூர்	3
	13. முதுகன்விளை	3
	14. சகாயநகர்	5
	15. தாடிக்காரன் கோணம்	4
	16. தாழக்குடி	12
	17. தெல்லாந்தீ	3
	18. திருப்பதிசாரம்	3
	19. திடல்	5
	20. தோவாளை	4
7.	**இராசக்காமங்கலம் ஊராட்சி ஒன்றியம் :**	
	1. எல்லுவினை கிராம ஊராட்சி	3
	2. பொருவிளை "	3
	3. காணியாக்குளம் "	4

(1)	(2)	(3)
	4. புத்தேரி "	3
	5. காந்திபுரம் "	4
	6. பரக்கை கிராம ஊராட்சி	3
	7. மணக்குடி "	4
	8. பள்ளந்துரை "	4
	9. மேலகிருஷ்ணன் புதூர் "	3
	10. அத்திக்காட்டுவிளை "	3
	11. கசவன்புத்தன் துரை "	4
	12. வடக்கு சூரங்குடி "	3
	13. கணபதிபுரம் பேரூராட்சி	14
	14. இராசக்காமங்கலம் "	14
	15. மேலசனக்கரன்குடி "	14
	16. ஆசாரிப்பள்ளம் "	13
	17. தேங்காம்புதூர் "	14
	18. புத்தாலம் "	13
	19. பார்மாபுரம் "	14
8.	**கிளியூர் ஊராட்சி ஒன்றியம் :**	
	1. கரிங்கால் பேரூராட்சி	14
	2. கீழ்குளம் "	14
	3. கிள்ளியூர் "	14
	4. நல்லூர் "	14
	5. பாலப்பள்ளம் "	14
	6. உண்ணாமலக்கடை "	15
	7. பாயம்-புத்தன்துரை கிராம ஊராட்சி	5
	8. கொல்லங்கி கிராம ஊராட்சி	4
	9. மதிக்கோடு "	4
	10. மிடாளம் "	4
	11. முள்ளங்கிவிளை "	5
	12. நாட்டாளம் "	4
	13. பாலூர் "	4
	14. திப்பிரமலை "	3

9. அகஸ்தீஸ்வரம் ஊராட்சி ஒன்றியம் :

1. அகஸ்தீஸ்வரம் பேரூராட்சி	13
2. அஷ்டப்பபுரம் "	12
3. அஞ்சுக்கிராமம் "	13
4. கோட்டாரம் "	12
5. மைலாடி "	13
6. தெற்கு தாமரைக்குளம் "	13
7. சுசீந்திரம் "	13
8. தேரூர் "	13
9. மருகூர் "	13
10. எரணிபுதூர் கிராம ஊராட்சி	3
11. கோவளம் "	5
12. குலசேகரபுரம் "	4
13. கரும்பட்டூர் "	5
14. கரியமாணிக்கபுரம் "	4
15. லீபுரம் "	3
16. மஹாராஜபுரம் "	3
17. வடக்கு தாமரைக்குளம் "	4
18. நல்லூர் "	5
19. பார்ச்சலிங்கபுரம் "	3
20. இராமாபுரம் "	5
21. சுவாமிதோப்பு "	3
22. தேரக்கால்புத்தூர் "	3

மாவட்ட வளர்ச்சிக்குழு

மாவட்டத்திலுள்ள மாவட்ட வளர்ச்சிக்குழு, 1958ஆம் ஆண்டு, தமிழ்நாடு மாவட்ட வளர்ச்சிக்குழுச்சட்டத்தின் விதிமுறையின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது (1958ஆம் ஆண்டு, 18வது சட்டம்). இச்சட்டத்தின்படி, தமிழ்நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்திலும் இயங்கி வரும் வளர்ச்சிக்குழுவின் பெருந்தலைவர் மற்றும் உறுப்பினர்கள் விவரம் பின் வருமாறு:

அ. மாவட்ட ஆட்சித் தலைவர் - பெருந்தலைவர்;

ஆ. மாவட்டத்திலுள்ள தொகுதியினின்று உறுப்பினராகத் தேர்ந் தெடுக்கப்பட்ட அல்லது அதன் பகுதி, அல்லது மாவட்டத்தில் குடியிருக்கும், சட்டமன்ற மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள்;

இ. தமிழ்நாடு மாநிலத்தினின்றும் தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்ட மத்திய மேலவை உறுப்பினர்கள்

ஈ. தமிழ்நாடு மாநில மேலவை உறுப்பினர்கள் (தமிழ்நாட்டில், மாநில சட்ட மேலவை நவம்பர் 1, 1986முதல் கலைக்கப்பட்டுவிட்டது);

உ. பாராளுமன்றம் மற்றும் தமிழக சட்டப்பேரவை ஆகியவற்றிற்கு நியமன உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, மாவட்ட வளர்ச்சிக் குழு உறுப்பினர்களாகப் பணியாற்ற இசைவுதெரிவித்தவர்கள்,

ஊ. மாவட்டத்திலுள்ள ஊராட்சி ஒன்றியங்களின் பெருந்தலைவர்கள்,

எ. மாவட்டத்திலுள்ள நகராட்சி மன்றங்களின் பெருந்தலைவர்கள்,

ஏ. மாவட்டத்திலுள்ள கூட்டுறவு மத்திய வங்கிகளின் தலைவர்கள்,

ஐ. அரசால் நியமிக்கப்பட்டு, வளர்ச்சித்திட்டங்களில் முறையாக, சேர்க்கப்பட்ட பணிகளை நிறைவேற்றும் பொறுப்பிலிருக்கும் உயர்நிலை அலுவலர்கள்,

ஒ. அரசு அவ்வப்போது தனி அறிவிப்பின் மூலம் நியமிக்கும் தமிழ்நாடு மாநில பூதான யக்ஞ வாரியத்தின் பெருந்தலைவர், தமிழ்நாடு மின்வாரியத்தின் அலுவலர்கள், தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் அல்லது வேறு வாரியங்கள், அல்லது தற்போது நடைமுறையிலுள்ள சட்டங்களின்படி அமைக்கப்பட்டுள்ள குழு உறுப்பினர்கள் ஆகியோரை ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாவட்ட வளர்ச்சிக் குழுக்களின் உறுப்பினராக நியமிக்கலாம், மற்றும்

ஒ. மாவட்ட ஆட்சித்தலைவர், அறிவிப்பின் மூலம், ஒவ்வொரு ஆண்டின் துவக்கத்திற்கு முன்னரும், பேரூராட்சித் தலைவரொருவரை சுழற்சி முறையில், மாவட்ட வளர்ச்சிக்குழு உறுப்பினராக நியமிப்பார். அவ்வாறு நியமிக்கப்பட்ட உறுப்பினர், ஆண்டின் துவக்கத்தில் அக்குழு உறுப்பினராகப் பணியேற்பார்.

ஒரு பாராளுமன்ற அல்லது சட்டமன்றத்தொகுதி, ஒரு வளர்ச்சிக்குழுவிற்கு மேற்பட்ட குழுக்களின் எல்லைப்பகுதிகளி லமைந்தால், தொடர்புள்ள உறுப்பினர்கள், தான் எந்த மாவட்ட வளர்ச்சிக்குழுவில் உறுப்பினராகப் பணியாற்ற விருப்பப்படுகிறாரென்ற தனது இசைவினைக் குழுவின் பெருந்தலைவருக்குத் தெரிவிக்க வேண்டும்.

எந்த பாராளுமன்ற அல்லது சட்டமன்ற உறுப்பினரோ, ஒன்றுக்கு மேற்பட்ட மாவட்ட வளர்ச்சிக்குழுவில், உறுப்பினராகச் செயலாற்ற முடியாது. தேர்ந்தெடுக்கப்பட்ட எந்த ஒரு பாராளுமன்ற அல்லது சட்ட மன்ற உறுப்பினரோ, அல்லது ஊராட்சி ஒன்றிய அல்லது நகராட்சி மன்ற பெருந்தலைவரோ, அல்லது பேரூராட்சிப் பெருந்தலைவரோ, அப்பதவிகாலம் முடிவடைந்தால், மாவட்ட வளர்ச்சிக்குழுவிலும்அவரது உறுப்பினர் நிலை நீக்கம் செய்யப்படுவதற்குள்ளாகுமாதலால், அவர் குழு உறுப்பினர் பணியில் நீடிக்க இயலாது.

மாவட்ட வளர்ச்சிக்குழுவின் அலுவல்கள்

மாவட்ட வளர்ச்சிக்குழுவானது, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் நகராட்சிகள் ஆகியவற்றின் பல்வேறு நடவடிக்கைகள் குறித்த விவரங்கள், பொருளாதார ரீதியில் மாவட்டத்தின் வருவாயைப் பெருக்குதல், மாவட்டத்தில் வாழும் பல்வேறு வகை மக்களின் பண்பாடு மற்றும் நலம் ஆகியவற்றை மேம்படுத்துதல் ஆகியவை குறித்து, அரசிற்கு அவ்வப்போது, ஆலோசனை வழங்கும். குறிப்பாக, மாவட்ட வளர்ச்சிக் குழு கீழே குறிக்கப்பட்ட அலுவல்களை ஆற்றக்கடமைப்பட்டதாகும் :

அ) மாவட்டத்திலுள்ள உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் அரசின் கீழ்க்குறிப்பிட்ட துறைகளின் நிருவாகக் கட்டுப்பாட்டிலியங்கும் மாவட்ட அளவிலான துறைப்பிரிவுகள் ஆகியவை பல்வேறு வளர்ச்சித்திட்டங்கள் தொடர்பாக ஆற்றி வரும் பணிகள் ஆகியவை குறித்தும் அவற்றை மேம்படுத்துதல் குறித்தும் அரசுக்கு அவ்வப்போது ஆலோசனை வழங்குதல் -

(1) உணவு மற்றும் வேளாண்மை.

(2) தொழிற்துறை, தொழிலாளர் நலம் மற்றும் கூட்டுறவு.

(3) பொதுப்பணி மற்றும்

(4) உடல்நலம், கல்வி மற்றும் உள்ளாட்சி.

ஆ) அரசு, உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் பல்வேறு அரசுத்துறையைச் சார்ந்த நிறுவனங்கள் ஆகியவை மாவட்டத்தின் வருவாயைப் பெருக்குதல் மற்றும் வளர்ச்சித் திட்டங்களை நடைமுறைப் படுத்துதல் ஆகியவற்றில் மேற்கொண்டுள்ள நடவடிக்கை, மற்றும் முன்னேற்றம் ஆகியவற்றைக் கண்காணித்து, தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுதல் ;

(இ) கீழ்க்கண்டவாறான அம்சங்களில், தொடர்புள்ள சட்ட விதி முறைகளை நடைமுறைப்படுத்துவது குறித்து, அரசால் கோரப் பட்டுள்ள விவரங்களை அளித்து அரசுக்கு உரிய ஆலோசனை வழங்குதல் -

1) ஊராட்சிச் சந்தைகள், ஊராட்சி ஒன்றியச் சந்தைகள் ஆகியவற்றை முறையாகப் பாகுபாடு செய்து, ஒரு உள்ளாட்சி நிறுவனம் மற்றொரு உள்ளாட்சி நிறுவனத்திற்குக் கொடுக்க வேண்டிய பங்குக் கட்டணத்தை நிர்ணயித்தல்,

2) தேர்கள் மற்றும் திருவிழாக்களைப் பாகுபாடு செய்தல், பொதுச் சாலைகளை, ஊராட்சி ஒன்றியச் சாலைகள், மற்றும் கிராம ஊராட்சிச் சாலைகளெனப் பாகுபாடு செய்தல்,

(ஈ) சாலைப் போக்குவரத்தினை மேம்படுத்துவது குறித்த அனைத்து அம்சங்களிலும் அரசுக்கு ஆலோசனை வழங்குதல்.

கூட்டங்களை நடத்துதல் மற்றும் பல்வேறு குழுக்களை அமைத்தல்

மாவட்ட வளர்ச்சிக்குழு, தேவைப்படும் போதெல்லாம், கூடி கூட்டங்களை நடத்தலாம், ஆனால், இரண்டு கூட்டங்களுக்கிடையே மூன்று மாத இடைவெளிக்குமேல் இருக்கலாகாது. மாவட்ட வளர்ச்சிக் குழுவின் பெருந்தலைவரான, மாவட்ட ஆட்சித்தலைவர் இல்லாதபோது, பெருந்தலைவரால் நியமிக்கப்படும் உறுப்பினரொருவர், மாவட்ட வளர்ச்சிக் குழுவிற்குத் தலைமை தாங்கி, கூட்டத்தினை நடத்தலாம். மாவட்ட வளர்ச்சிக் குழுவில் எழுப்பப்படும் அனைத்து வினாக்களுக்கும், கூட்டத்திற்கு வருகை தந்துள்ள உறுப்பினர்களின் அதிக அளவு வாக்குச் சீட்டுகளின் அடிப்படையில் முடிவெடுக்கப்படும். கேள்விகளுக்கு சரிசமமான வாக்குச் சீட்டுக்கள் கிடைக்கப்படும் போது, மாவட்ட வளர்ச்சிக் குழுவின் பெருந்தலைவர் அல்லது அவர் இல்லாதபோது கூட்டத்திற்குத் தலைமை தாங்குபவர், இரண்டாவது வாக்குரிமை பெறவும் மற்றும் அதனைப் பயன்படுத்தவும் தகுதியுடையவராகிறார். விவாதத்தில் பங்கேற்க, அரசு அலுவலராக உள்ள மாவட்ட வளர்ச்சிக்குழு உறுப்பினருக்கு உரிமையுண்டு. ஆனால், குழுக்கூட்டத்தில், வாக்களிக்கும் உரிமை அவருக்குக் கிடையாது. மேலும், வேறு எக்காரணம் குறித்தும், அலுவல் குறித்தும், அவரைக்குழு உறுப்பினராக கருத இயலாது.

மாவட்ட வளர்ச்சிக்குழு, அதனுடைய பல்வேறு அலுவல்களையும், கடமைகளையும் முறையாக ஆற்றிடவும், கீழ்க்குறிப்பிட்ட பொருள்கள் குறித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும், நிலையான குழுக்களை அமைக்கலாம்:

1. உணவு மற்றும் வேளாண்மை,
2. தொழிற்துறை மற்றும் தொழிலாளர் நலம்,
3. பொதுப்பணிகள்,
4. கல்வி மற்றும்
5. உடல் நலம், மதுவிலக்கு உள்ளிட்ட நலப்பணிகள்.

குழு, மேலும் தேவைப்படுமிடத்திலும் தேவைப்படும் நேரத்திலும் நிலையான கூடுதல் குழுக்களை அமைக்கலாம். மாவட்ட வளர்ச்சிக்குழுவின் உறுப்பினர்களாக உள்ள அக்குழு உறுப்பினர்கள், ஒவ்வொரு நிலையான குழுவின் பெருந்தலைவரையும் அவர்களே நியமித்துக்கொள்ளலாம்.

நியமனம் வழங்கப்பட்ட, தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப் பட்ட இந்நிலையான குழுக்களின் உறுப்பினர்களின் பதவிகாலம், ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் முடிவடைகிறது. அடுத்த ஆண்டிற்குரிய நிலையான குழுக்களின் உறுப்பினர்கள், முதலாண்டின் இறுதிக்குள்ளாக, தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் அல்லது நியமிக்கப்படுகிறார்கள். ஆனால், அவர்கள், மறு ஆண்டு துவங்கும் வரை, பதவியேற்க இயலாது.

கன்னியாகுமரி மாவட்டத்தின் மாவட்ட வளர்ச்சிக்குழு [29]

கன்னியாகுமரி மாவட்டம் முழுமையும் ஒரே மாவட்ட வளர்ச்சிக் குழுவாக அமைக்கப்பட்டுள்ளது. அதற்கு மாவட்ட ஆட்சித்தலைவர், அலுவல் சார்பான பெருந்தலைவராவார். இக்குழுவில் 23 அலுவல் சாரா மற்றும் 65 அலுவல் சார்ந்த உறுப்பினர்களடங்குவர். குழு உறுப்பினர்களைக் கொண்டு அமைக்கப்பட்ட நிலையான குழுக்களும் அலுவல் புரிந்து வருகின்றன. இந்நிலையான குழுக்கள், கல்வி, பொதுப் பணிகள், உடல்நலம், குடும்ப நலம், உணவு மற்றும் வேளாண்மை, தொழிற்துறை மற்றும் தொழிலாளர் நலம் ஆகிய பணிகளை கவனிப்பதற்காக, அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுக்கள் தொடர்புள்ள பொருள்கள் குறித்த விளக்க உரைகளையும் நிகழ்ச்சி நிரல்களையும் குழுக்கூட்டத்தில் விவாதிப்பதற்காகத் தயார் செய்கின்றன. இக்குழுக்கள் தவிர, குழுக்கூட்டங்களில் விவாதிக்கவிருக்கும் பொருள் குறித்து, தனிப்பட்ட உறுப்பினர்களும் கோரிக்கைகளை வைக்கலாம்.

குழுக்கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவுகள், அனைத்து உறுப்பினர்களுக்கும் அரசுக்கும் அனுப்பி வைக்கப்படுகின்றன. அம்முடிவுகளின் பேரில், தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, குழுக்களில் தீர்மானங்கள் நிறைவேற்றப்படுகின்றன.

மாவட்ட ஆட்சித்தலைவர், குழுவின் பெருந்தலைவர் என்ற முறையில், மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட பல்வேறு மாநில மற்றும் தேசிய வளர்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து மாவட்ட வளர்ச்சிக்குழு கூட்டத்தில் ஆய்வு செய்து, எஞ்சியுள்ள திட்டங்களையும், விரைவில் முடித்து, உடனடியாக ஆலோசனை வழங்குகிறார்.

1. அகஸ்தீஸ்வரம் ஊராட்சி ஒன்றியம் [30]

அகஸ்தீஸ்வரம் ஊராட்சி ஒன்றியத்தில், 13 கிராம ஊராட்சிகளும், ஒன்பது பேரூராட்சிகளும் அடங்கியுள்ளன. ஊராட்சி ஒன்றியத்தின் தலைமையிலும், அகஸ்தீஸ்வரம் வட்டம், பெருமாள்புரத்தில் உள்ளது.

இவ்வொன்றியத்தின் கீழ்க்குறிப்பிட்ட கிராம ஊராட்சிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகள் மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இவற்றிற்கு கிணறுகளும், கையாலியக்கும் குழாய்களும் இணை நிறைவு செய்கின்றன:

1. இராமாபுரம்
2. நல்லூர்
3. எரவிப்புத்தூர்
4. குலசேகரபுரம்
5. வடக்கு தாமரைக்குளம்
6. சுவாமித்தோப்பு
7. மகாராசபுரம்
8. கரும்பட்டூர்
9. கோவளம்
10. பாஞ்சாலிநகரம்
11. லீபுரம்

பிற கிராம ஊராட்சிகளில், கிணறுகளும், கையாலியக்கப்படும் குழாய்களும் பொதுமக்களின் குடிநீர்த்தேவையைப் பூர்த்தி செய்கின்றன.

இவ்வூராட்சி ஒன்றியத்திலுள்ள குடிநீர் ஆதாரங்கள் வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியினைக் கொண்டு மேம்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் தற்போதைய கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டு, புதிய கிணறுகள் வெட்டப்பட்டுள்ளன.

அவை பற்றிய விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன.

தொடர் எண்.	ஆண்டு	வேலைகளின் விவரங்கள்	வேலைகள் நிறைவேற்றப் பெறுவதற்கான செலவுத் தொகை (ரூபாயில்)	மொத்தப் பணிகளின் எண்ணிக்கை
1.	1986–87	கிணறுகளை ஆழப்படுத்துதல்	1,98,323	2
2.	1987–88	1) திறந்த கிணறுகள் வெட்டிக் கட்டுதல்	3,35,226	5
		2) கிணறுகளை ஆழப்படுத்துதல்	79,971	27
		3) சுற்று வட்டக்கிணறு	48,483	10
		4) ஊரணிகள் மற்றும் சிற்றாறு	56,216	7

ஊராட்சி ஒன்றியம், 132.60 கிலோ மீட்டர்கள் நீளமுள்ள சாலைகளைப் பராமரித்து வருகிறது. 1985-86 ஆம் ஆண்டு, சாலைகளைச் செப்பணிடவும், புதிய சாலைகளமைக்கவும் ஊராட்சி ஒன்றியம் ரூ.2,24,745/-ஐ செலவு செய்துள்ளது. 1987-88-ல் வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் ரூ.1,34,303/- செலவில், 27 கச்சா சாலைகள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன.

தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் சுய தேவைத்திட்டம் போன்ற வளர்ச்சித் திட்டங்களின் கீழ், 1978 முதல் 1985 முடிய இவ்வூராட்சி ஒன்றியத்தில் நிறைவேற்றப்பட்ட பெரிய வேலைகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

1) இரண்டு வேளாண் கிடங்குகள்,

2) 12 பொது கழிப்பிடங்கள்,

3) 20 பால்வாடிக் கட்டிடங்கள்,

4) 21 குடிநீர் வழங்குத் திட்டங்கள் (மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள், கையால்இயக்கும் குழாய்கள், குழாய் வீடுகள் அல்லது குழாய்ப் பாதை விரிவாக்கம்),

5) 11 மதிய உணவு மையங்கள்,

6) 13 சமுதாயப் பொழுதுபோக்கு மையங்கள், மற்றும்

7) இராமாபுரத்தில் அலுவலகக் கட்டிடம்.

1985-86 நிதியாண்டில், ஊராட்சி ஒன்றியத்தின் மொத்த வருமானம் ரூபாய் 61,75,356.18-ம், செலவு ரூ.33,97,230.50-ம் ஆகும்.

ஊராட்சி ஒன்றிய மன்றம், பெருந்தலைவர் தவிர முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பேரூராட்சி மற்றும் கிராம ஊராட்சிகளின் தலைவர்களை உறுப்பினர்களாக உள்ளடக்கியதாகும்.

2. தக்கலை ஊராட்சி ஒன்றியம் [31]

தக்கலை ஊராட்சி ஒன்றியம், 10 பேரூராட்சிகளையும், ஐந்து கிராம ஊராட்சிகளையும் கொண்டதாகும். அது கல்குளம் வட்டத்திலுள்ளது. ஊராட்சி ஒன்றியத்தின் தலைமையிடம், கோழிப்பொறி விளையாகும். அது, பத்மநாபபுரம் கோட்ட வளர்ச்சி அலுவலரின் கட்டுப்பாட்டிலுள்ளது.

இவ்வொன்றியத்திலுள்ள பேரூராட்சிகள், மின் சக்திக்குழாய்கள் மூலம், பாதுகாக்கப்பட்ட குடிநீரை மக்களுக்கு வழங்குகின்றன. ஆனால் கிராம ஊராட்சிகளில், கிணறுகளும், கையினாலியக்கப்படும் குழாய்களும் குடிநீரை வழங்குகின்றன. ஒன்றியத்தின் ஐந்து கிராம ஊராட்சிகளில் 29 கையினால் இயக்கப்படும் குழாய்கள் உள.

1982-83ஆம் ஆண்டு முதல் இவ்வூராட்சி ஒன்றியத்தில், ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித்திட்டங்கள், விகிதாச்சார அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. ஒவ்வொருமுறையிலும், இத்திட்டத்தின்கீழ், கடனுதவியையும், இதர பயன்களையும் அடையப்பெற இரு வருவாய் கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. இறுதி சுற்றில், இவ்வூராட்சி ஒன்றியத்திலுள்ள அனைத்து கிராமங்களிலும், இத்திட்டம், 1986-87 ஆம் ஆண்டு, நடைமுறைப்படுத்தப்பட்டது.

தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம், சுயதேவைத் திட்டம், கிராமப்புற நிலமற்றோர் வேலைவாய்ப்புப் பொறுப்புறுதித் திட்டம், ஆகிய பிற வளர்ச்சித் திட்டங்களும், இவ்வூராட்சி ஒன்றியத்தில் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன.

தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத்திட்டத்தின் கீழ், உதயகிரி கிராமத்தில் 1983-84 ஆம் ஆண்டில், சமூகக்காடுகள் பயிரிடப்பட்டுள்ளன. அல்பீஸியா, மா போன்ற வகைகள் இங்கு பயிரிடப்பட்டுள்ளன. 1985-86 ஆம் ஆண்டு, மேலும், புளி, வேம்பு மற்றும் முந்திரி ஆகியவையும் பயிரிடப்பட்டுள்ளன.

தேசியத்திட்டமான எரிவாயு வளர்ச்சித்திட்டத்தின் கீழ், ஊராட்சி ஒன்றியம், எரிவாயுக்கருவி நிறுவுவதற்கு, 108 விண்ணப்பதார்களுக்கு உதவி அளித்துள்ளது. மானியத்துடன் கூடிய கடனாக, உதவியளிக்கப் பட்டிருக்கிறது. இன்னும் பலர் இப்பயனடையவிருக்கிறார்கள்.

பல்வேறு திட்டங்களின் கீழ், இந்த ஊராட்சி ஒன்றியத்தில், கீழ்க்கண்டவாறு கடனுதவி அளிக்கப்பட்டுள்ளது :

தொடர் எண்.	திட்டங்களின் பெயரும், ஆண்டுகளும்	பயனடைந்தோர் எண்ணிக்கை	பயன் அளிக்கப்பட்ட தொகை (ரூ. பை.)
தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம் :			
1.	1982-83	173	14,62,863.40
2.	1983-84	87	2,02,792.65
3.	1984-85	84	16,21,399.60
4.	1985-86	114	15,37,550.55
ஒருங்கிணைக்கப்பட்ட கிராமப்புற வளர்ச்சித்திட்டம் :			
1.	1982-83	185	2,00,000.00
2.	1983-84	350	3,50,000.00
3.	1984-85	74	2,50,000.00
4.	1985-86	600	4,60,000.00
5.	1986-87	600	5,50,000.00
ஆற்றல் வாய்ந்த திட்டம் :			
1.	1983-84	65	1,85,000.00
2.	1984-85	74	2,50,000.00
3.	1985-86	52	1,50,000.00
4.	1986-87	40	1,00,000.00

இவ்வூராட்சி ஒன்றியம் துவங்கப்பட்ட 1962-63ஆம் ஆண்டு, இதனுடைய வருவாய் 2,84,515.23 ஆகும். 1967-68-ல், அது 3,33,867.29 ஆக உயர்ந்தது. 1972-73 ஆம் ஆண்டு வருவாய் ஏறக்குறைய இரண்டு மடங்காக அதாவது ரூ.6,82,152/- ஆக மேலும் உயர்ந்தது. இவ்வாறாக, ஆண்டு வருவாய் சிறிது சிறிதாக உயர்ந்தது. 1976-77-ல் ரூபாய் 13,37,307.23 ஆகவும், 1982-83-ல் ரூபாய் 31,95,610.33 ஆகவும் வருவாய் உயர்ந்தது. 1985-86 ஆம் ஆண்டு, ஒன்றியத்தின் வருவாய் ரூபாய் 33,16,532.02 ஆகும்.

நிதி நிலைக்கேற்ப, ஊராட்சி ஒன்றியம், சாலைகளைப் பராமரித்து வருகிறது. தேவைக்கேற்ப தெருவிளக்குகளும் பொருத்தப்பட்டுள்ளன.

இவ்வொன்றியத்திலுள்ள தெரு விளக்குகள் பற்றிய விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன :

தொடர் எண்.	கிராம ஊராட்சிகளின் பெயர்	குழாய் விளக்குகளின் எண்ணிக்கை	குமிழ் விளக்குகளின் எண்ணிக்கை
1.	அத்திவிளை	134	-
2.	கல்குரிச்சி	50	-
3.	மருதூர் குரிச்சி	73	55
4.	முத்தாளக்குரிச்சி	51	-
5.	சடயமங்கலம்	74	-
	மொத்தம்	382	55

ஊராட்சி ஒன்றிய மன்றத்தில், பெருந்தலைவரும், 15 உறுப்பினர்களும் (ஊராட்சித்தலைவர்கள்) மற்றும் எட்டு ஒத்துத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களும் உள்ளனர்.

3. குருந்தங்கோடு ஊராட்சி ஒன்றியம் [32]

1983 மார்ச் மாதம் வரை, குருந்தங்கோடு, ஊராட்சி ஒன்றியத்தில் ஒன்பது பேரூராட்சிகளும், 23 கிராம ஊராட்சிகளுமிருந்தன. ஒன்றியத்தின் தலைமையிடம், கல்குளம் வட்டம், குருந்தங்கோடில் உள்ளது. இது, பத்மநாபபுரம் வளர்ச்சிக் கோட்டத்தின் எல்லைக்குள் அமைந்ததாகும். ஊராட்சிகள் இணைப்புத் திட்டம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள பட்டபோது ஊராட்சி ஒன்றியம், 10 பேரூராட்சிகளுடனும், 18 கிராம ஊராட்சிகளுடனும் மாற்றியமைக்கப்பட்டது. 1975 ஆம் ஆண்டு வரை, ஊராட்சி ஒன்றிய அலுவலகம், வாடகைக் கட்டிடத்திலியங்கி வந்தது. பின்னர், அது சொந்தக் கட்டிடத்திற்கு மாற்றப்பட்டது.

துவக்கத்தில், 1958, ஏப்ரல் முதல் நாள் அன்று சமுதாய வளர்ச்சி வட்டாரங்கள் அமைக்கப்பட்டபோது, இவ்வொன்றியம் தாளாக்குளம் வட்டாரம் என அழைக்கப்பட்டது. வட்டாரம், முழுமையான ஊராட்சி ஒன்றியமாக அமைக்கப்படும்வரை, அதாவது 1962, ஏப்ரல் முதல் நாள் வரை, அவ்வாறே அழைக்கப்பட்டு வந்தது. அதன் பின்னர், குருந்தங்கோடு ஊராட்சி ஒன்றியமென அதற்குப் பெயரிடப்பட்டது. ஒன்றியத்தின் தலைமையிடம் குருந்தங்கோடாகும்.

ஒன்றிய மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீரை வழங்கிட, ஒன்றியத்தில், 13 மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள், ஆறு தரை நிலை நீர்த்தேக்கங்கள், 273 திறந்த கிணறுகள், 95 குழாய்க் கிணறுகள் மற்றும் 42 கையாலியக்கும் குழாய்கள் ஆகியவை உள்ளன. ஊராட்சி ஒன்றியப்பகுதியிலுள்ள 18 ஊராட்சிகளில், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் 10 ஊராட்சிகளிலும், தலை நிலை நீர்த்தேக்கங்கள் ஆறு ஊராட்சிகளிலும், ஏனைய ஊராட்சிகளில் கிணறுகள் மற்றும் குழாய்க்கிணறுகளும் உள்ளன.

ஊராட்சி ஒன்றியத்தின் அனைத்து ஊராட்சிகளிலும், ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித்திட்டங்கள், சுய தேவைத்திட்டங்கள் மற்றும் கிராமப்புற நிலமற்றோர் வேலைவாய்ப்புப் பொறுப்புறுதித்திட்டங்கள் ஆகியவை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. தேசிய எரிவாயு வளர்ச்சித் திட்டத்தின் கீழ், 1981 முதல் 1987 வரை, 42 எரிவாயுக்கருவிகள் இவ்வொன்றியத்தில் நிறுவப்பட்டுள்ளன. இதற்கு மானியத்துடன் கூடிய கடன் உதவியாக 85,000/-ரூபாய் அளிக்கப்பட்டுள்ளது.

அல்ஃபீலின், தென்னை, புளி, வேம்பு மற்றும் வேங்கை போன்ற 30,000 கன்றுகள் தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் கிராமப்புற நிலமற்றோர் வேலைவாய்ப்பு பொறுப்புறுதித் திட்டம் ஆகியவற்றின் கீழ், சமூகக் காடுகளாக 2,80,704.65 ரூபாய் செலவில் பயிரிடப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ், ஏறத்தாழ 4,000 மக்கள் வேலை வாய்ப்புப் பெற்றனர்.

தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், 160 வீடுகள், ஆதி திராவிடர்களுக்குக் கட்டி அளிக்கப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டத்தின் கீழ், ஒன்றியப் பகுதிகளில் வேளாண்மை, கால்நடைப்பாதுகாப்பு மீன் தொழில் மற்றும் சிறு தொழில்கள் ஆகியவற்றை மேம்படுத்த கடனுதவியளிக்கப் பட்டுள்ளது. ஒருங்கிணைந்த கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், கிராமப்புற இளைஞர்களுக்கு சுயவேலை வாய்ப்புப் பயிற்சித்திட்டத்தை செயல்முறைப்படுத்தவும் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித்திட்டம் 48 இலட்ச ரூபாய் செலவில், இவ்வொன்றியத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதனால், 4,200 மக்கள் பயனடைந்துள்ளனர்.

சிறு விவசாயிகள், பழத்தோட்டங்கள் மற்றும் மரங்கள் பயிரிடுவதற்காக அவர்களது நீர்ப்பாசன ஆதாரங்களை மேம்படுத்த ஆற்றல் வாய்ந்த திட்டத்தின் கீழ், அவர்களுக்கு கடனுதவியாக ரூபாய் 5,45,000/- வழங்கப்பட்டுள்ளது.

ஊராட்சி ஒன்றியம், 19 கிலோ மீட்டர் நீளமுள்ள மண் சாலைகளையும், 54.40 கிலோ மீட்டர் நீளமுள்ள சரளைக் கல்சாலைகளையும் மற்றும் 2.50 கிலோ மீட்டர் நீளமுள்ள தார் சாலைகளையும் பராமரித்து வருகிறது. இந்த ஒன்றியத்திலுள்ள ஊராட்சிகள், 20.30 கிலோ மீட்டர் நீளமுள்ள மண் சாலைகளையும், 28.70 கிலோ மீட்டர் நீளமுள்ள சரளைக்கல் சாலைகளையும் மற்றும் 8.20 கிலோ மீட்டர் நீளமுள்ள தார் சாலைகளையும் பராமரித்து வருகின்றன.

ஆறு மகப்பேறு மையங்கள், 19 பால்வாடிகள், ஒரு கிராமப்புற மருத்துவமனை, இரண்டு கால்நடைமருத்துவ மனைகள், இரண்டு

முதன்மை கிராமத்துணை மையங்கள், இரண்டு முதன்மை உடல் நல மையங்கள், 42 வானொலி நிலையங்கள் மற்றும் 16 சமுதாயப் பொழுது போக்கு மையங்கள் ஆகியவற்றை ஒன்றியம் பராமரித்து வருகிறது.

இந்த ஒன்றியம் துவங்கப்பட்ட 1961-62 ஆம் ஆண்டு இதனுடைய ஆண்டு வருவாய் 1,32,700/- ஆக இருந்தது. 1966-67-ல் இது ஏறத்தாழ மூன்று மடங்காக அதாவது 4,17,055.50 ஆக உயர்ந்தது. 1971-72-ல் ஒன்றியத்தின் வருவாய் 7,48,396.18 ஆகும். அதன்படி ஆண்டுதோறும் வருவாய் படிப்படியாக உயர்ந்து, 1976-77 ஆம் ஆண்டு, 9,36,945/- ஆக உயர்ந்தது.

1981-82 முதல் 1985-86 வரை ஒன்றியத்தின், வருவாய் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :

ஆண்டு	வருவாய் ரூ.பை.
1981-82	29,13,156.75
1982-83	22,80,223.45
1983-84	21,79,430.47
1984-85	15,67,147.45
1985-86	22,43,942.18

இந்த ஒன்றியத்திலுள்ள அனைத்து கிராமங்களுக்கும் மின் இணைப்பு அளிக்கப்பட்டுவிட்டது. தேவையான இடங்களில் தெரு விளக்கு வசதியும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. கிராம ஊராட்சிகளில், மின் விளக்குகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் வருமாறு:-

தொடர் எண்.	கிராம ஊராட்சிகளின் பெயர்	அமைக்கப்பட்டுள்ள தெரு விளக்குகளின் எண்ணிக்கை
1.	குருந்தங்கோடு	166
2.	தென்கரை	24
3.	நெட்டங்கோடு	98
4.	காக்கோட்டுத்தடை	59
5.	தாளக்குளம்	115
6.	முட்டம்	92
7.	கட்டிமாங்கோடு	171
8.	சைமன் காலனி	109
	மொத்தம்	834

ஊராட்சி ஒன்றிய மன்றத்தில் பெருந்தலைவரையும் சேர்த்து 25 உறுப்பினர்கள் உளர். அவர்களில் 18 உறுப்பினர்கள் ஊராட்சித் தலைவர்கள் ஆவர். எஞ்சிய ஏழு பேர்களும் ஒத்துத்தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களாவர்.

4. மேல்புரம் ஊராட்சி ஒன்றியம் [33]

மேல்புரம் ஊராட்சி ஒன்றியத்தில், 10 கிராம ஊராட்சிகளும், ஆறு பேரூராட்சிகளும் அடங்கியுள்ளன. ஒன்றியத்தின் தலைமையிடம் விளவங்கோடு வட்டத்தைச் சார்ந்த பாக்கோடில் உள்ளது. இது பத்மநாபபுரம் வளர்ச்சிக் கோட்டத்தின் எல்லைக்குட்பட்ட பகுதியாகும்.

ஒன்றியத்திலுள்ள அனைத்து கிராமங்களிலும், தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் கிராமப்புற நிலமற்றோர் வேலைவாய்ப்பு பொறுப்புத் திட்டம் ஆகியவை, நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. 1986-87 ஆம் ஆண்டு, பாக்கோடு மற்றும் ஆண்டுக்கோடு ஆகிய கிராமங்கள், ஒருங்கிணைக்கப்பட்ட கிராமப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழான பயன்களை பெற்றிடும் பொருட்டு, "தொகுப்பு கிராம" மாகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன.

1986-87ஆம் ஆண்டில், கிராமப்புற வளர்ச்சி திட்டத்தின் கீழ், 434 கிராம மக்களுக்கு கடனுதவி அளிக்கப்பட்டுள்ளது. இவ்வுதவித் திட்டத்தின் கீழான மானியம் மட்டும் 5,34,854/-ரூபாய் ஆகும். ஆற்றல் வாய்ந்த திட்டத்தின் கீழ், மக்களுக்கு 1,21,756/- ரூபாய் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின் கீழ், 14,150 கன்றுகள் நடுவதற்கு 1986-87 ஆம் ஆண்டு, 80,000/- ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

ஒன்றியம், இது காறும் ஐந்து எரிவாயுக் கருவிகளை நிறுவ நடவடிக்கையெடுத்துள்ளது. மேலும், 10 கருவிகளை நிறுவ, விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருக்கிறது.

ஊராட்சி ஒன்றியப்பகுதியிலுள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் தெருவிளக்கு வசதி செய்து கொடுக்கப்பட்டு விட்டது. அதுகுறித்த விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன :

தொடர் எண். *(1)*	*கிராம ஊராட்சிகளின் பெயர்* *(2)*	*அமைக்கப்பட்டுள்ள தெரு விளக்குகளின் எண்ணிக்கை* *(3)*
1.	மருதங்கோடு	96
2.	தேவிகோடு	158
3.	மைலாடி	87
4.	புலியூர் சாலை	61
5.	மாங்கோடு	233
6.	வன்னியூர்	43
7.	விளவங்கோடு	184

(1)	(2)	(3)
8.	நஞ்சலமோடு	169
9.	வில்லாங்கோடு	208
10.	முழுக்கோடு	52

ஊராட்சி ஒன்றியம், 85.96 நீளமுள்ள பொடி சரளைக்கல் சாலையையும், 54.40 கிலோ மீட்டர் நீளமுள்ள சரளைக்கல் சாலையையும் மற்றும் 5.20 கிலோ மீட்டர் நீளமுள்ள தார் சாலையையும் பராமரித்து வருகிறது. ஊராட்சிகள், முறையே 24.200 கிலோ மீட்டர் மற்றும் நான்கு கிலோ மீட்டர் நீளமுள்ள பொடி சரளைக்கல் மற்றும் சரளைக்கல் சாலையையும் பராமரித்து வருகிறது.

மக்களுக்குக் குடிநீரை வழங்கிட திறந்த கிணறுகள் மற்றும் சிற்றாறுகள் நீங்கலாக 86 கையாலியக்கும் குழாய்களும், எட்டு மின் விசைக் குழாய்களும் உள்ளன.

பெருந்தலைவர், 16 ஊராட்சித்தலைவர்கள், இரண்டு ஒத்துத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் மூன்று நியமனஞ்செய்யப்பட்ட உறுப்பினர்கள் ஆகியோர் ஊராட்சி ஒன்றிய மன்றத்திலிடம் பெற்றுள்ளனர்.

5. முஞ்சிறை ஊராட்சி ஒன்றியம் [34]

முஞ்சிறை ஊராட்சி ஒன்றியம், எட்டு கிராம ஊராட்சிகளையும், ஆறு பேரூராட்சிகளையும் உள்ளடக்கியதாகும். விளவங்கோடு வட்டத்திலுள்ள, முஞ்சிறை இவ்வூராட்சி ஒன்றியத்தின் தலைமையிடமாகும். அது பத்மநாபபுரம் வளர்ச்சிக் கோட்ட எல்லையில் அடங்கியதாகும். ஆறு கிராம ஊராட்சிகள், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதியினைப் பெற்றுள்ளன. ஏனைய ஊராட்சிகள், திறந்த கிணறுகள் மற்றும் குழாய்க்கிணறுகள் மூலம், பொது மக்களுக்குக் குடிநீரை வழங்கி வருகின்றன. ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கிராம ஊராட்சிகளில் 41 கையாலியக்கும் குழாய்களும், 10 மின் விசைக் குழாய்களும் உள்ளன.

ஒன்றியம் 107.40 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளைப் பராமரித்து வருகிறது. அவற்றில், 2.30 கிலோ மீட்டர் மண் சாலைகளும், 102.8 கிலோ மீட்டர் மலைப்பகுதிப்பாதைகளும் மற்றும் 2.60 கிலோ மீட்டர் கடற்கரைப்பகுதியிலான சாலைகளுமாக அமைந்துள்ளன.

கல்லாமையைப் போக்கவும், மக்கள் சமுகப்பிரச்னைகளைத் தீர்த்துக்கொள்ள உரிய கல்வி அறிவு பெறவும், ஊராட்சி ஒன்றியப் பகுதியில் 52 சமூகக் கல்வி மையங்கள் இயங்கி வருகின்றன.

ஊராட்சி ஒன்றியத்திலடங்கியுள்ள அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. விவரங்கள் பின்வருமாறு :

தொடர் எண்.	ஊராட்சிகளின் பெயர்	நிறுவப்பட்டுள்ள தெரு விளக்குகள்
1.	முஞ்சிறை	111
2.	மாங்காடு	133
3.	தூத்தூர்	78
4.	வாவறை	152
5.	குலபுரம்	164
6.	அடைக்ககுழி	196
7.	சூழல்	162
8.	நடைக்காவு	105
	மொத்தம்	1101

ஊராட்சி ஒன்றியத்தின் அனைத்துப் பகுதியும், ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித்திட்டம், சுயதேவைத்திட்டம், கிராமப்புற நிலமற்றோர் வேலைவாய்ப்பு பொறுப்புறுதித் திட்டம் மற்றும் தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம் போன்ற தேசியவளர்ச்சித் திட்டங்கள் மூலம் பெரிதும் பயனடைந்துள்ளது.

தேசிய எரிவாயு வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மானியம் மற்றும் கடனுதவியுடன், 85 எரிவாயுக் கருவிகள் நிறுவப்பட்டுள்ளன. ஒன்றியப் பகுதியிலுள்ள கருவிகளின் எண்ணிக்கை கூடிய விரைவில் உயருமென எதிர்பார்க்கப்படுகிறது.

சமூகக்காடுகள் வளர்ப்புத்திட்டத்தின் கீழ், 1986-87 ஆம் ஆண்டு, 7,700 கன்றுகள் பயிரிடப்பட்டுள்ளன.

1985-86 ஆம் ஆண்டு, ஊராட்சி ஒன்றியத்தின் ஆண்டு வருவாய் ரூபாய் 20,06,857.33 ஆக இருந்தது. அதற்கு முன்னர், 1976-77 முதல் 1984-85 முடிய உள்ள காலத்தின் ஆண்டு வருவாய் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

தொடர் எண்.	ஆண்டுகள்	ஆண்டு வருவாய் (ரூ.பை.)
1.	1976-77	6,57,656.66
2.	1977-78	10,76,418.81
3.	1978-79	10,78,015.10
4.	1979-80	10,11,312.13
5.	1980-81	30,60,348.18

(1)	(2)	(3)
6.	1981-82	34,75,383.64
7.	1982-83	43,85,000.38
8.	1983-84	29,66,493.35
9.	1984-85	17,88,617.43

ஊராட்சி ஒன்றிய மன்றம், பெருந்தலைவர் 14 ஊராட்சித் தலைவர்கள், இரண்டு நியமனம்செய்யப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் ஆறு ஒத்துத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் ஆகியோரை உள்ளடக்கியதாகும்.

6. திருவட்டார் ஊராட்சி ஒன்றியம் [35]

திருவட்டார் ஊராட்சி ஒன்றியத்தில் எட்டு கிராம ஊராட்சிகளும், எட்டு பேரூராட்சிகளும் அங்கம் வகிக்கின்றன. இவ்வொன்றியம் கல்குளம் வட்டத்திலுள்ளது. திருவட்டாரை இது தலைமையிடமாகக் கொண்டுள்ளது. இது பத்மநாபபுரம் வளர்ச்சிக் கோட்ட எல்லைக்குள்ளடங்கிய ஊராட்சி ஒன்றியங்களிலொன்றாகும். ஒன்றியம், ஒரு துவக்க நல்வாழ்வு மையம், 12 மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலமையங்கள் இரண்டு கால்நடை மருத்துவ மனைகள், மூன்று கால்நடை மருத்துவ துணை மையங்கள் மற்றும் 26 சமூகக் கல்வி மையங்கள் ஆகியவற்றைப் பராமரித்து வருகிறது.

ஊராட்சி ஒன்றியம் 123.8 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளைப் பராமரித்து வருகிறது. அவற்றில் 7.3 கிலோ மீட்டர் சாலைகள் தார் சாலைகளாகவும், 83.7 கிலோ மீட்டர் சரளை போடப்பட்டவையாகவும், 32.8 கிலோ மீட்டர்கள் மண் சாலைகளாகவும் உள்ளன. ஒன்றியத்திலுள்ள 16 ஊராட்சிகளில், 11 ஊராட்சிகள் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டி, அவை மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீரை மக்களுக்கு வழங்குகின்றன. ஒன்றியத்தில் அவ்வாறான 15 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டுள்ளன. இவை தவிர, இரண்டு தரை அளவு நீர்தேக்கங்களும் ஒன்றிய எல்லைக்குள் அமைந்துள்ளன. 230 திறந்த கிணறுகளும், 91 கையாலியக்கப்படும் குழாய்களும் மக்களின் தாகத்தைத்தணிக்க பயன்பட்டு வருகின்றன.

ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித்திட்டம், தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம், சுய தேவைத்திட்டம், கிராமப்புற நிலமற்றோர் வேலைவாய்ப்புப் பொறுப்புறுதித் திட்டம் போன்ற அனைத்து வளர்ச்சித் திட்டங்களும் இவ்வொன்றியத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

1978 முதல் 1987 வரை, ஒன்றியப்பகுதியிலுள்ள 93 விண்ணப்பதார்களுக்கு எரிவாயுக்கருவி அமைத்திட, மானியத்துடன் கூடிய கடனுதவி அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் படி, ரூபாய் 1,83,230/- இதுகாறும் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வொன்றியத்தில், சமூகக்காடுகள் வளர்க்கும் திட்டமும், செயலாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் அல்ஃபீலியா, தென்னை, போன்ற 65,250 கன்றுகள் நடப்பட்டுள்ளன. தேசிய கிராமப்புற நிலமற்றோர் வேலைவாய்ப்புப் பொறுப்புறுதித்திட்டம் ஆகியவற்றின் கீழ் சமூகக்காடுகள் பயிரிடப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் ஏறத்தாழ 2000 கிராம மக்கள் வேலை வாய்ப்பைப் பெற்றனர்.

ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித்திட்டத்தின் கீழ் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு மானியத்துடன் இணைந்த கடனுதவி, வேளாண்மையை மேம்படுத்த வழங்கப்பட்டுள்ளது. வியாபாரத்திலீடுபட விரும்பும் வேலையற்ற கிராமமக்களுக்கு, அவர்களது பொருளாதார நிலையும், வாழ்க்கைத்தரமும் உயர, வியாபாரம் செய்வதற்கு, மானியத்துடன் இணைந்த கடனுதவி அளிக்கப்படுகிறது. இவ்வொன்றியத்தில் 2362 நபர்கள் பயனடைந்துள்ளார்கள். மற்றும் இத்திட்டத்தின் கீழ் செலவிடப்பட்ட தொகை 15,01,227 ரூபாயாகும்.

ஆற்றல் வாய்ந்த உதவித் திட்டத்தின் கீழ், 345 கிராம மக்கள் கடனுதவியாக ரூபாய் 7,04,248/- பெற்று பயனடைந்துள்ளனர்.

இவ்வொன்றியத்திலுள்ள அனைத்து ஊராட்சிகளிலுமுள்ள தெருக்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. கிராம ஊராட்சிகளிலுள்ள தெரு விளக்குகள் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

தொடர் எண்.	*ஊராட்சிகளின் பெயர்*	*மொத்தமுள்ள தெரு விளக்குகள்*
1.	அருவிக்கரை	158
2.	ஆயக்கோடு	157
3.	பாலமோர்	10
4.	சேருக்கோடு	103
5.	சுருனக்கோடு	76
6.	கண்ணூர்	73
7.	குமரன்குடி	66
8.	எட்டொக்கோடு	85
	மொத்தம்	728

ஊராட்சி ஒன்றிய மன்றத்தில், பெருந்தலைவர், 16 ஊராட்சித் தலைவர்கள், எட்டு நியமனம் செய்யப்பட்ட மற்றும் ஒத்துத்தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் ஆகியோர் உள்ளனர்.

ஆண்டு வருவாய்

1962-63 முதல் ஊராட்சி ஒன்றியத்தின் ஆண்டு வருவாய் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

தொடர் எண். (1)	ஆண்டு (2)	ஆண்டு வருவாய் (3)
1.	1962-63	2,23,420.45
2.	1963-64	2,80,604.82
3.	1964-65	2,01,998.33
4.	1965-66	2,81,667.97
5.	1966-67	3,01,964.12
6.	1967-68	3,63,869.62
7.	1968-69	3,03,690.17
8.	1969-70	3,99,465.30
9.	1970-71	5,97,688.79
10.	1971-72	4,74,855.20
11.	1972-73	4,72,454.22
12.	1973-74	8,75,076.82
13.	1974-75	11,28,937.19
14.	1975-76	12,06,697.55
15.	1976-77	8,91,459.27
16.	1977-78	14,78,031.30
17.	1978-79	18,70,671.67
18.	1979-80	16,51,162.63
19.	1980-81	36,01,161.55
20.	1981-82	30,77,268.84
21.	1982-83	47,73,137.66
22.	1983-84	33,86,456.72
23.	1984-85	30,82,672.42
24.	1985-86	35,31,984.47

7. தோவாளை ஊராட்சி ஒன்றியம் [36]

தோவாளை ஊராட்சி ஒன்றியத்தில் 16 கிராம ஊராட்சிகளும், நான்கு பேரூராட்சிகளும் உள்ளன. ஊராட்சி ஒன்றியத்தின் தலைமையிடம் தோவாளை வட்டத்திலுள்ள பூதபாண்டியாகும். அது நாகர்கோவில், வளர்ச்சிக் கோட்ட எல்லைக்குள் அடங்கியுள்ளது.

இந்த ஊராட்சி ஒன்றியத்திலுள்ள அனைத்து கிராமங்களும் 24 மின் விசைக் குழாய்கள், 113 கையாலியக்கும் குழாய்கள், கனிசமான அளவு திறந்த கிணறுகள் ஆகியவை மூலம், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதியினைப் பெற்றுள்ளன. இந்த ஊராட்சி ஒன்றியத்திற்கு முக்கூடல் ஏரி, குடிநீர் வழங்கும் ஆதாரமாகும். வறட்சி நிவாரணத்திட்டத்தின் கீழ் பழைய கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டு, புதிய கிணறுகள் வெட்டி கட்டப்பட்டுள்ளன. விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன :

தொடர் எண்.	வேலைகளின் விவரங்கள்	வேலைக்கான தொகை (ரூபாய்)	வேலைகளின் எண்ணிக்கை
1986–87	புதிய கிணறுகள் வெட்டிக் கட்டுதல்	34,575	1
	கிணறுகளை ஆழப்படுத்துதல்	95,153.	19
1987–88	புதிய கிணறுகள் வெட்டிக் கட்டுதல்	4,33,153	11
	கிணறுகளை ஆழப்படுத்துதல்	85,548	11

இவை தவிர, தொழிலாளர்கள் இணைந்து தொடர்பு கொள்ளும் திட்டங்களின் கீழ், 1987-88ஆம் ஆண்டு, 5,53,196/-ரூபாய் செலவில் அதிகக் கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டன.

சுய தேவைத் திட்டம், இந்த ஊராட்சி ஒன்றியத்தில் 1981-82 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், தற்போதைய பள்ளிகளுக்கு கூடுதல் கட்டிடங்களும், ஊராட்சி அலுவலகக் கட்டிடமும் இதுகாறும் கட்டப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டம், இவ்வூராட்சி ஒன்றியத்தில், 1983-84 முதல் செயல்முறைப்படுத்தப்பட்டது. 1982-83 ஆம் ஆண்டு, இத்திட்டத்தின் கீழ், 508 கிராம மக்கள் பயனடைந்துள்ளனர். இது, 1983-84, 1984-85 மற்றும் 1985-86-ம் ஆண்டுகளில், முறையே, 576, 762 மற்றும் 1436 ஆக உயர்ந்தது.

தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம், இந்த ஒன்றியத்தில், நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், பணியமர்த்தப் பட்டோரின் பணிகள், மூன்று சமுதாய பொழுதுபோக்கு மையங்கள் கட்டவும், 11 சாலைகள் செப்பணிடவும், புதிதாக அமைக்கவும், 15 ஏரிகள் தூர் அப்புறப்படுத்தவும் பயன்படுத்தப்பட்டன. தொழிலாளர்கள் இணைந்து தொடர்பு கொள்ளும் இத்திட்டத்தின் கீழ், 1987-88 ஆம் ஆண்டு, 1,10,083/- ரூபாய் செலவில் புதிய சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. 1977 முதல் 1986 முடிய, எரிவாயுக் கருவிகள் நிறுவுவதற்கு, 85 கிராமப்புற கடனுதவி பெற்றுப்பயனடைந்தனர்.

ஒன்றியத்திலுள்ள அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும் மின் இணைப்பு அளிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஊராட்சியிலும் நிறுவப்பட்டுள்ள தெரு விளக்குகளின் எண்ணிக்கை பின்வருமாறு:

தொடர் எண்.	ஊராட்சியின் பெயர்	நிறுவப்பட்ட தெரு விளக்குகளின் எண்ணிக்கை
(1)	(2)	(3)
1.	அரும நல்லூர்	80
2.	பீமநகரி	43
3.	சி.ஆர்.புத்தூர்	71
4.	தெரிசனம் கோப்	70
5.	எறச்சி குளம்	97
6.	ஞாலம்	110
7.	எசந்தி மங்கலம்	106
8.	கடுக்கரை	155
9.	காட்டுப்புத்தூர்	57
10.	மாதவளயம்	102
11.	சகாயநகர்	139
12.	தாடிக்காரன் கோணம்	63
13.	தெல்லந்தி	52
14.	திருப்பதிகாரம்	42
15.	திடல்	17
16.	தோவாளை	126

சமூகக் கல்வி மையங்கள், மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல மையங்கள் ஆகியவையும் இவ்வொன்றியத்தில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

ஆண்டு வருவாய்

இந்த ஊராட்சி ஒன்றியத்தின் 1962-63 முதல் 1985-86 வரை உள்ள காலத்திற்கான ஆண்டு வருவாய் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

தொடர் எண்.	ஆண்டு	வருவாய் (ரூபாயில்)
1.	1962-63	1,13,673.98
2.	1963-64	4,10,375.14
3.	1964-65	3,44,880.14
4.	1965-66	4,18,770.40
5.	1966-67	3,27,430.38
6.	1967-68	3,73,232.35
7.	1968-69	3,34,138.78

(1)	(2)	(3)
8.	1969-70	2,75,133.99
9.	1970-71	விவரமில்லை
10.	1971-72	4,70,240,37
11.	1972-73	5,25,264.76
12.	1973-74	8,19,330.38
13.	1974-75	15,47,605.52
14.	1975-76	17,33,145.16
15.	1976-77	10,78,763.84
16.	1977-78	25,56,505.32
17.	1978-79	16,81,757.46
18.	1979-80	10,26,168.71
19.	1980-81	22,25,378.50
20.	1981-82	35,65,079.31
21.	1982-83	32,16,198.80
22.	1983-84	20,69,427.62
23.	1984-85	24,02,119.65
24.	1985-86	37,59,054.09

பெருந்தலைவர் தலைமையிலான ஊராட்சி ஒன்றிய மன்றத்தில், தலைவர் நீங்கலாக, 20 ஊராட்சிகளின் தலைவர்களும், நியமனஞ் செய்யப்பட்டோர் மற்றும் ஒத்துத்தேர்ந்தெடுக்கப்பட்டோர் ஏழு பேர்கள் ஆகியோர் உறுப்பினர்களாக உள்ளனர்.

8. இராசக்காமங்கலம் ஊராட்சி ஒன்றியம் [37]

இராசக்காமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில், 12 கிராம ஊராட்சிகளும், ஏழு பேரூராட்சிகளும் உள்ளன. ஊராட்சி ஒன்றியத்தின் தலைமையிடம் அகஸ்தீஸ்வரம் வட்டம், பழிவினையில் உள்ளது. நாகர்கோவில் வளர்ச்சிக் கோட்ட எல்லைப்பகுதிக்குள் இந்த ஒன்றியம் அமைந்துள்ளது.

ஊராட்சி ஒன்றியத்தின் அனைத்து கிராமங்களும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதியினைப் பெற்றுள்ளன. அவை, 13 மேல்நிலை நீர்த்தொட்டிகளும், எட்டு தரைநிலை நீர்த்தேக்கங்களுமாகும். 1986-87 ஆம் ஆண்டு வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ், 27 சுற்றுக் கிணறுகள், 1,62,087/- ரூபாய் செலவில் ஆழப்படுத்தப்பட்டன. 1987-88 ஆண்டு, 17 குழாய்க் கிணறுகளும், 112 ஊரணிகள் மற்றும் சிற்றாறுகள் ஆகியவையும், 11,79,007/- ரூபாய் செலவில் ஆழப்படுத்தப்பட்டன.

ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டம், 1980-81ஆம் ஆண்டு முதல், இந்த ஒன்றியத்தில், நடைமுறைப்படுத்தப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் மூன்று அல்லது நான்கு ஊராட்சிகள் மானியத்துடன் கூடிய கடன் உதவி சலுகையைப் பெற தேர்ந்தெடுக்கப்பட்டன.

திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டான 1980-81 முதல், ஒவ்வொரு ஆண்டும், திட்டத்தின் கீழ் பயனடைந்தோர் எண்ணிக்கை கீழே அளிக்கப்பட்டுள்ளது:

தொடர் எண். (1)	*ஆண்டு* (2)	*பயனடைந்தோர் எண்ணிக்கை* (3)
1.	1980-81	617
2.	1981-82	685
3.	1982-83	600
4.	1983-84	711
5.	1984-85	583
6.	1985-86	487
7.	1986-87	1070
8.	1987-88	373

எரிவாயு

ஊராட்சி ஒன்றியப்பகுதியில் 211 விண்ணப்பதார்களுக்கு, எரிவாயுக்கருவிகள் நிறுவ, மானியத்துடன் கூடிய கடன் வழங்கப்பட்டுள்ளது. ஆண்டு வாரியான விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன :

ஆண்டு	*கடனாகவும், மானியமாகவும் வழங்கப்பட்ட தொகை* (ரூபாயில்)	*பயனடைந்தோர் எண்ணிக்கை*
1982-83	20,335	9
1983-84	25,575	13
1984-85	53,680	22
1985-86	1,34,490	57
1986-87	1,30,770	50
1987-88	1,55,650	60

சுயவேலைவாய்ப்புத்திட்டத்தின்படி, கிராமப்புற இளைஞர்களுக்குப் பயிற்சி (ட்ரைஸம்)

சுயவேலை வாய்ப்புத்திட்டத்தின்படி, கிராமப்புற இளைஞர்களுக்குப் பயிற்சியளிப்பது, இந்த ஊராட்சி ஒன்றியத்திலும் செயலாக்கப்பட்டுள்ளது.

தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம் (என்.ஆர்.ஈ.பி.)

தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம், மற்றும் கிராமப்புற நிலமற்றோர் வேலைவாய்ப்புப் பொறுப்புறுதித்திட்டம் ஆகியவற்றின் கீழ், வேலை வாய்ப்பளிக்கப்பட்டு, மனித சக்தியும் உருவாக்கப்பட்டது. அவ்வாறு வேலைக்கமர்த்தப்பட்ட கிராம மக்களின் பணித்திறன், சமூகக்காடுகள், உருவாக்கப்பயன்படுத்தப்பட்டுள்ளன.

ஊராட்சி ஒன்றிய பகுதியில், தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம், நடைமுறைப்படுத்தப்பட்ட விவரங்கள் கீழே கொடுக்கப்பட்ட பட்டியலில் அளிக்கப்பட்டுள்ளன :

தொடர் எண்.	ஆண்டு	செலவழிக்கப்பட்ட தொகை (ரூபாயில்)	முடிக்கப்பட்ட பணிகளின் எண்ணிக்கை
(1)	(2)	(3)	(4)
1.	1981-82	விவரம் அளிக்கப்படவில்லை	161
2.	1982-83	11,12,616	128
3.	1983-84	விவரம் அளிக்கப்படவில்லை	123
4.	1984-85	14,69,941	224
5.	1985-86	16,84,938	87
6.	1986-87	7,91,773	80
7.	1987-88	6,14,030	103

சாலைகள் அமைத்தல், கிணறுகள் வெட்டுதல், மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல மையங்கள், பள்ளிக்கட்டிடங்கள், சமூகப்பொழுது போக்கு மையங்கள், பொதுக் கழிப்பிடங்கள் மற்றும் தொகுதி வீடுகள் போன்றவை, இத்திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட்ட வேலைகளாகும்.

கிராமப்புற நிலமற்றோர் வேலை வாய்ப்புப் பொறுப்புறுதித் திட்டம்

இத்திட்டம், இந்த ஊராட்சி ஒன்றியப் பகுதியில், 1984-85 ஆம் ஆண்டு, அறிமுகப்படுத்தப்பட்டது. அதன்பிறகு, இத்திட்டத்தின் படி, ஒரு சாலையுடன் கூட, 69 தொகுப்பு வீடுகள், 44 பொதுக் கழிப்பிடங்கள் ஆகியவை கட்டி முடிக்கப்பட்டுள்ளன. ஆண்டுவாரியான விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன :

ஆண்டு	செலவழிக்கப்பட்ட மொத்தத் தொகை (ரூபாய்)	நிறைவேற்றி முடிக்கப்பட்ட வேலைகளின் எண்ணிக்கை
1984-85	2,94,000.00	49
1985-86	-	-
1986-87	1,65,842.00	32
1987-88	91,160.80	33

சமூகக் காடுகள்

சமூகக் காடுகள் வளர்க்கும் திட்டம், இவ்வொன்றியத்தில், 1984-85 ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது. அந்த ஆண்டு 19700 கன்றுகள் பயிரிடப்பட்டன. 1985-86ஆம் ஆண்டு புதிய கன்றுகள் பயிரிடப்பட வில்லையாயினும், 1986-87ஆம் ஆண்டு 210 கன்றுகள் பயிரிடப்பட்டன. 1987-88 ஆம் ஆண்டு, பெருவினைகாரவிளை வாய்க்கால் கரையில், 13,000 கன்றுகள் பயிரிடப்பட்டன. அதே ஆண்டு, ஏதமொழிபுத்தாளம் சாலையில், 11 கிலோ மீட்டர் நீளத்திற்கு, 1,200 வேம்புக்கன்றுகள் பயிரிடப்பட்டன. சிவந்தி ஆதித்தனார் கல்லூரித் திடலில் 210 பலாக்கன்றுகள், 350 நெல்லிக் கன்றுகள், மற்றும் 800 வேம்புக்கன்றுகள் ஆகியவை, நான்கு எக்டேர் பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ளன. ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் 160 பலாக் கன்றுகளும், 1450 இதர வகைக்கன்றுகளும் 1987-88 ஆம் ஆண்டே பயிரிடப்பட்டன.

தெரு விளக்குகள்

கிராம ஊராட்சிகள் முழுமைக்கும் மின் இணைப்பு அளிக்கப்பட்டு விட்டது. ஊராட்சிகளில் நிறுவப்பட்டுள்ள தெரு விளக்குகளின் விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன :

தொடர் எண்.	*கிராம ஊராட்சிகளின் பெயர்*	*நிறுவப்பட்ட தெரு விளக்குகளின் எண்ணிக்கை*
1.	வடக்கு சூரங்குடி	64
2.	மேலகிருஷ்ணன் புதூர்	47
3.	கேசவன் புத்தன் துறை	47
4.	அத்திக்காட்டுவிளை	33
5.	எல்லுவிளை	92
6.	பரக்கை	104
7.	பள்ளன்துறை	56
8.	காந்திபுரம்	109
9.	கன்னியாகுளம்	95
10.	புத்தேரி	85
11.	பெருவிளை	80
12.	மணக்குடி	63

குடிநீர் வழங்குதல்

இவ்வூராட்சி ஒன்றியத்திலுள்ள குடிநீர் வழங்கு ஆதாரங்களின் விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன :

தொடர் எண்.	கிராம ஊராட்சிகளின் பெயர்	திறந்த கிணறுகள்	கையாலியக்கும் குழாய்கள்	மின்விசைக் குழாய்கள்
1.	அத்திக்காட்டுவிளை	2	4	3
2.	எல்லுவிளை	2	5	2
3.	காந்திபுரம்	1	3	1
4.	கேசவன் புத்தன்துரை	2	-	4
5.	கன்னியாக்குளம்	2	5	1
6.	மேலகிருஷ்ணன் புத்தூர்	2	2	2
7.	மணக்குடி	2	-	3
8.	வடக்கு சூரங்குடி	-	3	1
9.	பள்ளன்துரை	3	3	4
10.	பரக்கை	4	3	2
11.	பெருவிளை	5	2	-
12.	பிற ஆதாரம் -1			

சாலைகள்

இந்த ஊராட்சி ஒன்றியம், 84.30 கிலோ மீட்டர் நீளமுள்ள இயல்பான சாலைகளையும், 3.80 கிலோ மீட்டர் கடற்கரை சாலைகளையும் பராமரித்து வருகிறது. ஒன்றியத்தைச் சேர்ந்த கிராம ஊராட்சிகள், 38.07 கிலோ மீட்டர் நீளமுள்ள இயல்பான சாலைகளையும், 7.01 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரை சாலைகளையும் பராமரித்துவருகின்றன.

1964-65 முதல் 1985-86 முடிய, ஊராட்சி ஒன்றியத்தின் ஆண்டு வருவாய் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

தொடர் எண்.	ஆண்டு	ஆண்டு வருவாய் ரூ.பை.
1.	1964-65	3,79,449.74
2.	1965-66	3,34,956.67
3.	1966-67	3,79,845.47
4.	1967-68	3,65,885.57
5.	1968-69	3,98,456.65
6.	1969-70	4,25,570.62
7.	1970-71	4,97,194.35
8.	1971-72	7,50,118.30
9.	1972-73	6,93,714.79
10.	1973-74	7,07,450.40

(1)	(2)	(3)
11.	1974-75	11,85,429.45
12.	1975-76	12,45,225.63
13.	1976-77	10,50,561.43
14.	1977-78	10,63,147.88
15.	1978-79	25,36,458.08
16.	1979-80	14,96,594.04
17.	1980-81	11,33,624.25
18.	1981-82	26,37,249.83
19.	1982-83	31,05,756.34
20.	1983-84	29,79,853.15
21.	1984-85	22,04,285.24
22.	1985-86	46.91.573.18

ஊராட்சி ஒன்றியத்தின் பெருந்தலைவர் நீங்கலாக, 17 ஊராட்சிகளின் தலைவர்களான உறுப்பினர்களும் இரண்டு நியமனஞ்செய்யப்பட்ட உறுப்பினர்களும் ஆறு ஒத்துத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களும் மன்றத்தில் அங்கம் வகிக்கின்றனர்.

9. கிள்ளியூர் ஊராட்சி ஒன்றியம் [38]

இவ்வூராட்சி ஒன்றியத்தின் ஆக்கக்கூறுகளாக, ஆறு பேரூராட்சிகளும், எட்டு கிராம ஊராட்சிகளும் இடம் பெற்றுள்ளன. இவ்வொன்றியத்தின் தலைமையிடம், விளவங்கோடு வட்டத்திலுள்ள தொலயவட்டையாகும். அது, பத்மநாபபுரம் வளர்ச்சிக் கோட்டத்தின் எல்லைக்குள் அடங்கிய பகுதியாகும்.

மூன்று ஊராட்சிகள் நீங்கலாக, ஒன்றியத்திலுள்ள மற்ற அனைத்து ஊராட்சிகளிலும் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி பொதுமக்களுக்கு செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வொன்றியத்தில் 23 மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகளும், 127 கையாலியக்கும் குழாய்களும், 238 திறந்த கிணறுகளும் உள்ளன. அவை, அந்தந்த ஊராட்சிகளால், பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்த ஊராட்சி ஒன்றியம், 129.20 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளைப் பராமரித்து வருகிறது.

1981-82 ஆம் ஆண்டு முதல், இவ்வொன்றியத்தில், ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித்திட்டம் செயல்முறைப்படுத்தப்படுகிறது. இத்திட்டம் செயலாக்கப்பட்டதிலிருந்து, இவ்வொன்றியத்தில் பயனடைந்தோர் எண்ணிக்கை ஆண்டு வாரியாகக் கீழே அளிக்கப்பட்டுள்ளது :

தொடர் எண்.	ஆண்டு	பயனடைந்தோர் எண்ணிக்கை
1.	1981-82	755
2.	1982-83	717
3.	1983-84	802
4.	1984-85	622
5.	1985-86	422
6.	1986-87	1158

சுயதேவைத் திட்டம், 1980-81 முதல் ஒன்றியத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதுகாறும் சாதனை யாதெனில் 3,28,000/- செலவிலான 16.6 கிலோ மீட்டர் நீளமுள்ள 10 இணைப்பு சாலைகள், 46,000/- ரூபாய் செலவிலான சிறிய பாலம் கட்டுமானப்பணி, 2,98,000/- ரூபாய் செலவிலான 30 சிறிய நீர்ப்பாசனப் பணிகள் மற்றும் 12,000/- ரூபாய் செலவில் மூன்று மகப்பேறு மையங்கள் கட்டுமானப் பணி ஆகியவையாகும்.

தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், 1981-82இல் பல்வேறு பணிகளை ஒன்றியம் செய்து முடித்துள்ளது. 1981-82 முதல் செய்து முடிக்கப்பட்ட பணிகளின் எண்ணிக்கை, செலவழிக்கப்பட்ட தொகை ஆகியவை, ஆண்டு வாரியாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

ஆண்டு	நிறைவேற்றப்பட்ட பணிகளின் எண்ணிக்கை	செலவிடப்பட்ட மொத்தத் தொகை ரூ. பை.
1981-82	166	7,32,395.00
1982-83	155	18,31,903.00
1983-84	122	22,42,642.00
1984-85	146	22,51,419.00
1985-86	123	35,77,965.00
1986-87	75	19,81,353.00

கிராமப்புற நிலமற்றோர் வேலைவாய்ப்புப் பொறுப்புறுதித் திட்டமும், இவ்வொன்றியத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

தேசிய கிராமப்புற நிலமற்றோர் வேலைவாய்ப்புப் பொறுப்புறுதித் திட்டத்தின் கீழ், சமூகக் காடுகளும் ஒன்றியத்தில் பயிரிடப்பட்டுள்ளன.

1981-82 முதல் எரிவாயுக்கருவி நிறுவிட ஊராட்சி ஒன்றியம், கிராமப்புற மக்களுக்குக் கடனுதவி அளித்துள்ளது. அவை தொடர்பான விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன :

ஆண்டு	நிறுவப்பட்ட கருவிகள்
1981-82	9
1982-83	3
1983-84	3
1984-85	25
1985-86	26
1986-87	60

இந்த தேசியத் திட்டங்கள் நீங்கலாக, ஆற்றல் வாய்ந்த திட்டங்களுக்கு உதவியளிப்பதும் இவ்வொன்றியத்தில் நடைமுறையிலிருந்து வருகிறது.

1962-63 ஆம் ஆண்டு முதல் ஊராட்சி ஒன்றியத்திற்கான ஆண்டு வருவாய் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

தொடர் எண்.	ஆண்டு	ஆண்டு வருவாய் ரூ.பை.
(1)	(2)	(3)
1.	1962-63	1,10,252.00
2.	1963-64	1,21,424.74
3.	1964-65	3,33,427.59
4.	1965-66	3,13,965.22
5.	1966-67	2,86,001.02
6.	1967-68	3,11,605.46
7.	1968-69	2,67,357.12
8.	1969-70	1,76,414.73
9.	1970-71	5,51,392.19
10.	1971-72	6,78,888.26
11.	1972-73	6,00,484.06
12.	1973-74	4,88,480.89
13.	1974-75	11,16,630.10
14.	1975-76	7,35,478.95
15.	1976-77	7,84,554.12
16.	1977-78	16,34,644.00
17.	1978-79	12,19,248.00
18.	1979-80	12,38,449.70
19.	1980-81	31,77,082.20
20.	1981-82	24,36,045.29

(1)	(2)	(3)
21.	1982-83	30,98,897.80
22.	1983-84	20,28,749.04
23.	1984-85	16,24,994.30
24.	1985-86	24,31,006.40
25.	1986-87	7,84,554.12

ஊராட்சி ஒன்றியத்திலுள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும், தெருவிளக்குகள் பொருத்தப்பட்டுள்ளது. விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன :

தொடர் எண்.	ஊராட்சியின் பெயர்	பொருத்தப்பட்டுள்ள தெரு விளக்குகளின் எண்ணிக்கை.
1.	கொல்லஞ்சி	88
2.	மத்திக்கோடு	189
3.	மிடாளம்	208
4.	முள்ளங்கிளவிளை	115
5.	நாட்டாளம்	96
6.	பாளூர்	160
7.	திப்ரமலை	63
8.	எனயம் - புத்தன்துறை	67

ஊராட்சி ஒன்றிய மன்றத்தில் பெருந்தலைவர் நீங்கலாக 22 உறுப்பினர்கள் உளர். அவர்களில் 14 ஊராட்சி மற்றும் பேரூராட்சித் தலைவர்கள், மூன்று ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த உறுப்பினர்கள், மூன்று பெண் உறுப்பினர்கள் மற்றும் இரண்டு ஒத்துத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் ஆகியோர் அடங்குவர்.

கன்னியாகுமரி நகரியம் [39]

இந்தியப் பெருங்கடல், வங்காள விரிகுடாக் கடல், மற்றும் அரபிக்கடல் ஆகிய முப்பெருங்கடல்கள் ஒன்று சேரக்கூடிய கன்னியாகுமரி, அகில உலக அளவில், பயணிகள் முக்கியத்துவம் வாய்ந்த புண்ணியத்தலமாகும். இப்பகுதியினை மிக விரைவாக மேம்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டதால், 1965 ஆம் ஆண்டு, அக்டோபர் ஒன்றாம் நாளன்று, இந்நகருக்கு ஒரு நகரியக்குழு அமைக்கப்பட்டது.[40] இயல்பாக அவ்வாறான நகரியக்குழு, தொடர்புள்ள மாவட்ட ஆட்சித்தலைவரின் தலைமையிலேயே செயல்படும். ஏனைய உறுப்பினர்களை அரசு நியமனம் செய்யும். தற்போது, நகரியத்தில் 11 அலுவல் சார்ந்த உறுப்பினர்களும், ஏழு அலுவல் சாரா உறுப்பினர்களும் அரசால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது இயங்கிவரும் குழு, மூன்றாண்டு காலங்களுக்கு அமைக்கப்பட்டதால், காலவரை 1984 ஆம் ஆண்டு மார்ச் பத்தொண்பதாம் நாளுடன் முடிவுற இருந்தது. புதுக்குழுவினை அமைத்திட, பேரூராட்சிகள் இயக்குநர் அரசுக்கு அனுப்பியுள்ள கருத்துரு அரசின் பரிசீலனையிலிருந்து வருகிறது.*

மாநில அளவில், இந்த நகரியம், நகரியங்களின் துறைத் தலைவரான பேரூராட்சிகள் இயக்குநரின் கட்டுப்பாட்டில் இயங்க, அமைக்கப்பட்டுள்ளது. மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சித்தலைவர், நகரியத்தின் பெருந்தலைவராவார். மாவட்ட பேரூராட்சிகள் அலுவலரும் குழுவின் பிற உறுப்பினர்களும், மாவட்ட ஆட்சித்தலைவருக்கு உதவிபுரிந்து வருகிறார்கள்.

அனைத்து ஆதாரங்களின்றும், நகரியத்திற்கான ஆண்டு வருவாய் ரூபாய் 16,85,800/- ஆகும். வீட்டு வரியானது, குடியிருப்பிற்காக பயன்படுத்தப்படும் நகரியத்திலுள்ள வீடுகளுக்கு, வீட்டின் மதிப்பில், ஒவ்வொரு 100/- ரூபாய்க்கும், 60 பைசா வீதம் கணக்கிடப்பட்டு, விதிக்கப்படுகிறது.

நகரியப் பகுதியில் வாழும் மக்களுக்கும், வந்துபோகும் மக்களுக்கும், கையிருப்பிலுள்ள நிதி நிலமைக்கொப்ப வேண்டிய வசதிகளை செய்துகொள்ள போதுமான நடவடிக்கை எடுத்துவருகிறது.

குடிநீர் வசதி

இது, கடற்கரைப்பகுதியை யொட்டியுள்ள நகரியமாக இருப்பதால், நகரியத்திற்கருகாமையில் குடிநீருக்கான ஆதாரங்கள் மிகக்குறைவே யாகும். எனவே, நகர மக்களின் தேவைக்கான குடிநீர், நகரத்திற்கு வெளியிலுள்ள ஆதாரங்கள், மற்றும் கிணறுகள் ஆகியவற்றிலிருந்து கொணரப்பட்டு, மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகள் மூலம் நகரின் முக்கிய இடங்களில் வழங்கப்படுகிறது.

நகரத்திற்கு அருகாமையிலுள்ள கல்லுவிளையில் கட்டப்பட்டுள்ள கிணற்றின் புகைப்படம், அடுத்த பக்கத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

மேல்நிலை நீர்த்தொட்டிகளின் விவரங்கள்

தொடர் எண்	*கட்டப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள்.*	*கொள்ளளவு (லிட்டர்களில்)*
1.	ஒதியல்விளை (2 தொட்டிகள்)	45,000
2.	அஞ்சுக்கோட்டுவிளை	1,20,000
3.	வடக்குக்குந்தால்	6,000

** கடிதஎண். 4651/84 நாள் 4.6.1984.*

(1)	(2)	(3)
4.	தெற்குக்குந்தால் (2 தொட்டிகள்)	45,000
5.	நகராட்சி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி	1,59,000
6.	புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி (அரசு மருத்துவ மனைக்கு அருகில்)	2,00,000
	மொத்தம்	5,75,000

நகரியம், 84 பொதுக்குழாய்களை நிறுவியுள்ளது. இவை தவிர, நகரிலுள்ள 397 வீடுகளுக்கு, குடிநீர் வழங்க குழாய்மூலம் இணைப்பு அளிக்கப்பட்டுள்ளது.

வறட்சி நிவாரணத்திட்டத்தின் கீழ், மந்தாரன்புதூரில் ஒரு புதிய கிணறு வெட்டப்பட்டுள்ளது. இவைதவிர, கீழ்க்குறிப்பிட்ட திறந்த கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டுள்ளன:

1. பாக்குளம் கிணறு
2. சுவாமிநாதபுரம் கிணறு
3. வடக்குக்குந்தால் கிணறு மற்றும்
4. குமரிசாலைக்குளம் கிணறு.

நகரில், மூன்று வட்டக்கிணறுகள் அண்மையில், தோண்டப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மருத்துவமனையில் ஒரு புதிய கிணறு வெட்டப்படும் பணி, முடிவடையும் நிலையிலுள்ளது.

இவை தவிர, 22 திறந்த கிணறுகளும், 30 குழாய்க்கிணறுகளும் நகரிய நிருவாகத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. நகரத்தில் ஆண்டு தோறும் குடிநீருக்காக செலவழிக்கப்படும் தொகை விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

ஆண்டு	செலவு (ரூபாய்)
1984-85	13,500
1985-86	28,200
1986-87	74,200

சாலைகள்

கீழ்க்கண்டவாறு, 14.145 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளை, நகரியம் பராமரித்து வருகிறது:

தொடர் எண்.	சாலையின் விவரம்	மொத்த நீளம் (கிலோ மீட்டரில்)
1.	தார்போடப்பட்ட சாலைகள்	6.411
2.	சரளைக்கல் சாலைகள்	6.828
3.	சிறுசரளை தூவிய சாலைகள்	0.906
	மொத்தம்	14.145

நகரத்தில் மொத்தம் 29 சாலைகளும், பாதைகளும் அமைக்கப்பட்டு, அவை நல்ல முறையில் பராமரிக்கப்படுகின்றன. இந்த சாலைகளின் ஆண்டு பராமரிப்புத் தொகை 1984-85, 1985-86 மற்றும் 1986-87 ஆம் ஆண்டுகளில் முறையே 1,91,200/-, 2,29,446/- மற்றும் 1,49,846/- ரூபாயாகும்.

பாதி கொடை வழங்கும் திட்டத்தின் கீழ், 1986-87 ஆம் ஆண்டு, நகரியம், அதனுடைய சாலைகளை மேம்படுத்த அரசிடமிருந்து 74,922/- ரூபாய் பெற்றுள்ளது. பாதி கொடைத்தொகையுடன் மற்றும் அதே அளவு நகரிய நிதித்தொகையினையும் சேர்த்து, நகரத்தில் நான்கு சாலைகளுக்கு தார் போடப்பட்டுள்ளது.

தெரு விளக்குகள்

நகரத்தில் சாலைகளிலும், தெருக்களிலும் 51, பாதரச வெண்புகை ஆவி விளக்குகள், 80 வெடிய வெண்புகை ஆவி விளக்குகள், 31 இரட்டைக் குழல் விளக்குகள், 356 ஒற்றைக்குழல் விளக்குகள் மற்றும் 12 பிற வகை விளக்குகள் ஆகியவை ஒளி அளிக்கின்றன. இவ்விளக்குகளைப் பராமரித்திட நகரியம், 1984 - 85 ரூபாய் 90,600/-ம் 1985 - 86இல் ரூபாய் 90,003/-ம் 1986 - 87ல் ரூபாய் 97,662/- ம் செலவு செய்துள்ளது.

நகரியத்தில், நகர்ப்புற எல்லைப்பகுதிகளில், 25 குழல் விளக்குகள் பொருத்த, ஒரு கருத்துரு, கன்னியாகுமரி தமிழ்நாடு மின்வாரிய உதவிப் பொறியாளரின் ஆய்விலிருந்து வருகிறது.

உடல் நிலை ஆக்க மேம்பாடு (சுகாதாரம்)

சுகாதாரப்பணியிணை, 29 துப்புறவுப் பணியாளர்கள், ஒரு துப்புறவு மேற்பார்வையாளர் மற்றும் ஒரு துப்புறவு ஆய்வாளர் ஆகியோர் கண்காணிப்பில், ஆற்றிவருகிறார்கள். நகரத்தில் அமைக்கப்பட்டுள்ள வடிகாலின் நீளம் 4.624 கிலோ மீட்டராகும். 1985 ஆம் ஆண்டு தான் நகரத்தில், ஒரு கூட்டிணைவான வடிகால் முறை, அமைக்கப்பட்டுள்ளது. 1985-86 ஆம் ஆண்டு, வடிகாலைப் பராமரித்திட, நகரியம் ரூபாய் 35,400/- செலவு செய்துள்ளது. இது, 1986-87 ஆம் ஆண்டு ரூபாய் 51,500/- ஆக உயர்ந்துள்ளது.

இந்த நகரியம், இரண்டு கட்டணம் செலுத்திப்பயன்படுத்தும் கழிப்பிடங்களைப் பராமரித்து வருகிறது.

பயன்தரும் தொழில் முயற்சிகள்

நகரியம் மூன்று தங்கும் விடுதிகளைப் பராமரித்து வருகிறது. அவற்றினின்றும், 1984-85, 1985-86, மற்றும் 1986-87 ஆகிய ஆண்டுகளில், நகரியம் முறையே 68,100/- 80,420/- மற்றும் 1,15,512/- ரூபாய் வருவாயினை ஈட்டியுள்ளது.

நகரியம் பராமரித்து வரும், இரண்டு கட்டணம் செலுத்தி பயன்படுத்தும், கழிப்பிடங்களினின்றும், கீழ்க்குறிப்பிட்ட ஆண்டுகளில் அவற்றினெதிரே கண்டவாறு வருவாயினை ஈட்டியுள்ளது:

ஆண்டு	*வருவாய்* (ரூபாயில்)
1984-85	30,900
1985-86	46,200
1986-87	66,905

ஒரு உந்து நிறுத்தும் நிலையத்தினை, கடற்கரையில் நகரியம் பராமரித்து வருகிறது. ஒவ்வொரு நாளும் இப்புனிதத் தலத்திற்கு வருகை தரும் எண்ணற்ற பயணிகள் உந்துகளை நிறுத்த, இது தகுந்த இடமாக உள்ளது. அவ்வாறு வந்து நிறுத்தக்கூடிய உந்துகளுக்குக் கட்டணமாக, 1984-85-ல் 3,399/- ரூபாயும், 1985-86-ல் 11,675/- ரூபாயும் மற்றும் 1986-87-ல் 14,304/- ரூபாயும் நகரியத்தால் வசூலிக்கப்பட்டுள்ளது.

உணவு விடுதி நடத்துவதற்காக, நகரியம் ஒரு பெரிய கட்டிடத்தைக் கட்டி வாடகைக்கு அளித்துள்ளது. 1987-88 ஆம் ஆண்டு, அக்கட்டிடத்திற்கு கிடைக்கப்பெற்ற வாடகை 30,000/- ரூபாயாகும். இது தவிர, நகரியத்திற்குச் சொந்தமான 25 கடைகள் ஆண்டு தோறும் குத்தகைக்கு விடப்படுகின்றன. ஒவ்வொரு கடைக்கும் ஒரு மாதத்திற்கான குத்தகைத் தொகை 200/- ரூபாயாகும்.

சுங்கச்சாவடி

இந்நகரில் நுழையும் உந்துகளிடம் சுங்க வரி வசூலிக்கும் உரிமை, ஆண்டு தோறும் ஏலத்திற்கு விடப்படுகிறது. கீழ்க்கண்ட ஆண்டுகளில் அவற்றினெதிரே குறிப்பிட்டவாறு குத்தகைத் தொகை நிர்ணயிக்கப்பட்டு வசூலிக்கப்பட்டுள்ளது:

தொடர் எண்.	*ஆண்டு*	*ஆண்டுக்குத்தகைத்தொகை* (ரூபாயில்)
1.	1985-86	1,15,200
2.	1986-87	2,15,000
3.	1987-88	1,62,200

நகரிய அலுவலகம், ஒரு வாடகை வீட்டிலியங்கி வருகிறது.

பேரூராட்சிகள்

கன்னியாகுமரி, தமிழ்நாட்டிலேயே சிறந்த முறையில் நகர்மயமாக்கப்பட்ட மாவட்டமெனில், மிகையில்லை. ஏனெனில், மாவட்டத்தில் 66 பேரூராட்சிகளும், ஒரு நகரியமும், நான்கு நகராட்சிகளும் உள. தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களுடனும் ஒப்பிட்டு நோக்கும்போது, கன்னியாகுமரி ஒரு சிறிய மாவட்டமாகும். எனினும், மாவட்டம் அதிக அளவிலான (66) பேரூராட்சிகளைக் கொண்டதாக விளங்குகிறது.

1958 ஆம் ஆண்டின், தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், இம்மாவட்டத்திற்கு மார்ச் 31, 1962 முதல் விரிவாக்கப்பட்டது. அதற்கு முன்பு மாவட்டத்திலுள்ள ஊராட்சிகள் 1950 ஆம் ஆண்டின் திருவாங்கூர் - கொச்சி ஊராட்சிகள் சட்டத்தின்படி, இயங்கிவந்தன. இச்சட்டத்தின்படி மாவட்டத்திலுள்ள அனைத்து ஊராட்சிகளும் முழுநேர ஊராட்சி அலுவலர்களால் (உரிய ஆதரவுப் பணியாளர்களுடன்) நிருவாகம் செய்யப்பட்டுவந்தன. ஆனால், தமிழ்நாட்டின் ஏனைய பகுதிகளில், 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட பேரூராட்சிகள் மட்டுமே, முழுநேர நிருவாக அலுவலர்களின் கட்டுப்பாட்டிலியங்கிவந்தன. எனவே, 1950ஆம் ஆண்டின் திருவாங்கூர் - கொச்சி ஊராட்சிகள் சட்டத்திற்கு பதிலாக 1958ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள ஊராட்சிகளுக்கு விரிவாக்கப்பட்டபோது, கன்னியாகுமரி மாவட்டத்தில் அவ்வமயம் இயங்கி வந்த 46 ஊராட்சிகளும் பேரூராட்சிகள் என பாகுபாடு செய்யப்பட்டு, அவற்றின் ஊராட்சி அலுவலர்களின் பணிப்பெயரும், நிருவாக அலுவலர்களென மாற்றியமைக்கப்பட்டன.

மாவட்டத்தில் 46 ஊராட்சிகளே இயங்கிவந்ததாலும், மேலும் அவையாவும் பேரூராட்சிகளாக ஒன்பது ஊராட்சி ஒன்றிய எல்லைப்பகுதிகளில் இயங்கிவந்ததாலும், சில நிருவாகச் சிக்கல்கள் எழுந்தன. எனவே, 46 பேரூராட்சிகளும் பிரிக்கப்பட்டு, பல்வேறு நிலையிலான 64 பேரூராட்சிகளாகவும், 224 கிராம ஊராட்சிகளாகவும், 1970 ஆகஸ்டு இரண்டாம் நாள் அன்று திருத்தியமைக்கப்பட்டன. பின்னர், 1981 ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம், சில கிராம ஊராட்சிகளை ஒன்றிணைத்து, மேலும் இரண்டு பேரூராட்சிகள் அமைக்கப் பட்டதால், மொத்த பேரூராட்சிகளின் எண்ணிக்கை 66 ஆக உயர்ந்தது.

பேரூராட்சிகள் அமைப்பு முறை[41]

துவக்கத்தில், கிராம ஊராட்சியின் மக்கட்தொகை 5000-க்கு மேலும், ஆண்டு வருவாய் 10,000/- ரூபாய்க்கு மேலும் இருந்தால், அவை பேரூராட்சியாக அமைக்கப்பட்டு வந்தன. பேரூராட்சிகள் அமைக்கப்பெறுவ தற்காக 1972-ல் வருவாய் 40,000/- ரூபாயாக உயர்த்தி நிர்ணயிக்கப்பட்டது.

பேரூராட்சிகளின் பாகுபாடு[42]

ஆண்டு வருவாயின் அடிப்படையில், பேரூராட்சிகள் இரண்டாம் நிலை, முதல் நிலை மற்றும் தேர்வு நிலை என பாகுபாடு செய்யப்பட்டன. பேரூராட்சியின் ஆண்டு வருவாய் 10,000/- ரூபாய்க்கு மேற்பட்டால், அது இரண்டாம் நிலை பேரூராட்சியாக உயர்நிலைப்படுத்தப்பட்டது. இரண்டாம் நிலை பேரூராட்சியின் ஆண்டு வருவாய் 40,000/- ரூபாய்க்கு மேற்பட்டால், அது முதல் நிலை பேரூராட்சியாக உயர்நிலைப்படுத்தப்பட்டது. முதல் நிலை பேரூராட்சியின் ஆண்டு வருவாய் 1,00,000/- ரூபாய்க்கு மேற்பட்டால், அது தேர்வு நிலைப் பேரூராட்சியாக உயர்நிலைப்படுத்தப் படுகிறது[42 அ]. கீழ்க்குறிப்பிட்ட பக்தி 2-ல் கண்ட வருவாய் வரம்பு, ஊராட்சி நடைமுறை நூலில் நிர்ணயிக்கப்பட்டிருந்தும் ஒரு நிலையினின்றும் மற்றொரு நிலைக்குப் பேரூராட்சிகளை உயர்த்த பத்தி 3-ல் கண்ட வருவாய் வரம்பு தான், நடைமுறையில் கடைபிடிக்கப்பட்டது.

தொடர் எண்.	*நூலில் ஒப்புதலளிக்கப்பட்ட வருவாய் வரம்பு*	*நடைமுறையில் கடைப் பிடிக்கப்பட்டு வந்த வருவாய் வரம்பு*
1.	நிலை - 2, ரூபாய் 40,000/-	1,00,000/-
2.	நிலை - 1, ரூபாய் 40,000/- க்கு மேல் ரூபாய் 1,00,000-க்குள்	1,00,000/-
3.	தேர்வு நிலை 2,00,000/- மும் அதற்கு மேலும்	

கன்னியாகுமரி மாவட்டத்தில் 10 தேர்வு நிலை பேரூராட்சிகள் 49 முதல் நிலை பேரூராட்சிகள் மற்றும் ஏழு இரண்டாம் நிலை பேரூராட்சிகள் ஆகியவை உள்ளன.

இவை தவிர, கன்னியாகுமரி நகரியமும் மாநில அளவில் பேரூராட்சிகள் இயக்குநரது கட்டுப்பாட்டிலும், மாவட்ட அளவில் மாவட்டப் பேரூராட்சிகள் அலுவலர் கட்டுப்பாட்டிலும் இயங்கிவருகிறது.

பேரூராட்சிகளின் நிருவாக முறை[43]

ஆயிரத்து தொள்ளாயிரத்து என்பத்தி ஒன்றாம் ஆம் ஆண்டு வரை பேரூராட்சிகள் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி இயக்குநரின் நிருவாக மற்றும் ஒழுங்குக் கட்டுப்பாட்டில் இயங்கி வந்தன. பேரூராட்சிகளின் நிருவாகத்தை சீரமைக்க, மே, ஏழாம் நாள் 1981 முதல், 1981 மே, ஏழாம் நாளைய 828 எண் (ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி) அரசாணைப் படி, பேரூராட்சிகளுக்கென தனி இயக்குநரகம் அமைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, இப்பணிக்காக மாநிலம் ஏழு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு மண்டல அலுவலகமும், பேரூராட்சிகளின் மண்டல இயக்குநரின் தலைமையிலியங்கிவந்தது. இந்த அமைப்பு முறையின்படி, கன்னியாகுமரி

மாவட்டம் திருநெல்வேலி மண்டல இயக்குநரின் தலைமையில் செயல்பட்டு வந்தது.

1982-83 ஆம் ஆண்டு, சுயதேவைத்திட்டம், பேரூராட்சிகளுக்கும் விரிவாக்கப்பட்டபோது, பேரூராட்சிகளில் இத்திட்டத்தினைத் தீவிரமாக நடைமுறைப்படுத்திட மண்டல நிலை நிருவாக அமைப்பு மட்டும் போதாதென அரசு கருதியது. எனவே, மாவட்ட நிலை நிருவாக அமைப்பு முறை அறிமுகப்படுத்தப்பட்டது. அதன்படி, (கோட்ட வளர்ச்சி அலுவலர் நிலையில்) ஒரு மாவட்ட பேரூராட்சி அலுவலர் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நியமிக்கப்பட்டார். அம்மாவட்டத்திலுள்ள பேரூராட்சி நிருவாகத்தினை திறம்பட சீரமைத்து, அரசின் பல்வேறு திட்டங்கள் பேரூராட்சிகளில் நல்லமுறையில் செயல்படுத்த முழுப் பொறுப்பினையும் அவர் ஏற்றுள்ளார். அவர் பேரூராட்சிகள் நிருவாகத்தைப் பொறுத்தவரை, மாவட்ட ஆட்சித் தலைவரின் அலுவல் சார்பான தனி உதவியாளராகவும் (பேரூராட்சிகள்) பணியாற்றிவருகிறார். 1979 முதல் 1986 முடிய, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மன்றம் இயங்காத நிலையில், பேரூராட்சிகளின் தனி அலுவலர்களாக, அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களின் ஆணையர்கள் பணியாற்றி வந்தனர். 1984-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை இந்நிலை நீடித்தது. அதிலிருந்து மாவட்டப் பேரூராட்சி அலுவலரே பேரூராட்சிகளின் தனி அலுவலராக இயங்கி வருகிறார். 1986ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் ஊராட்சித் தேர்தல் நடந்து முடிந்தபின் தனி அலுவலர்களின் அதிகாரங்கள் அரசால் திரும்பப் பெறப்பட்டு, ஊராட்சித் தலைவர்களும், அந்தந்த ஊராட்சிகளில் பொறுப்பேற்றனர். பேரூராட்சிகளின் அலுவல் சாராப்பிரிவின் தலைமைப் பொறுப்பாளர்களான, ஊராட்சித் தலைவர்கள் நீங்கலாக பேரூராட்சிகளின் அன்றாட நிருவாகப் பணியினை நிருவாக அலுவலர்கள், அவர்களின் கீழுள்ள அமைச்சுப் பணியாளர்கள், துப்புறவு பணியாளர்கள் மற்றும் தொழில் நுட்பப் பணியாளர்கள் ஆகியோரது உதவியுடன், கவனித்து வருகிறார்கள். அவர்களனைவரும், மாவட்ட பேரூராட்சி அலுவலரின் நிருவாகக் கட்டுப்பாட்டில் தொடர்ந்து பணியாற்றி வருகின்றனர்.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பேரூராட்சிகளின் பெயர்கள் கீழே பட்டியலிட்டுக் காட்டப்பட்டுள்ளன :

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பேரூராட்சிகள்[44]

1. தேர்வுநிலை

1. சுசீந்திரம்
2. ஆரல்வாய் மொழி
3. திங்கள் நகர் (திங்கள் சந்தை)
4. மணவாளக்குறிச்சி
5. பொன்மனை
6. திற்பரப்பு

1. தேர்வுநிலை - தொடர்ச்சி

7. குலசேகரம்
8. கலியக்காவிளை
9. புத்தக்கடை
10. கரிங்கல்

2. முதல் நிலை

1. அஞ்சுக் கிராம்
2. அகஸ்தீஸ்வரம்
3. அழகப்பபுரம்
4. மைலாடி
5. முருங்கூர்
6. கோட்டாரம்
7. தெற்கு தாமரைக்குளம்
8. தேரூர்
9. தாழக்குடி
10. அழகிய பாண்டிபுரம்
12. தர்மபுரம்
13. கணபதிபுரம்
14. மைலசங்கரம் குழி
15. இராசக்காமங்கலம்
16. ஆசாரிப்பள்ளம்
17. புத்தளாம்
18. தெங்கம் புத்தூர்
19. வெள்ளி மலை
20. வில்லுக்குரி
21. அல்லூர்
22. ரீதாபுரம்
23. கல்லுக்குட்டம்
24. நெய்யூர்
25. வெள்ளி சந்தை
26. எரனியல்
27. குமாரபுரம்
28. கூத்தாநல்லூர்
29. திருவதாங்கோடு
30. வால்வச்ச கோட்டம்
31. விளாவூர்
32. ஆத்தூர்
33. பேச்சிபாறை
34. திருவட்டார்

2. முதல் நிலை - தொடர்ச்சி

35. காட்டாத்துரை
36. வேர்கிளம்பி
37. பலுக்கல்
38. எடைக்கோடு
39. கடையல்
40. பாக்கோடு
41. அருமனை
42. விலாத்துறை
43. பெயின்குளம்
44. கொல்லங்கோடு
45. ஏழுதேசம்
46. நல்லூர்
47. உண்ணாமலைக்கடை
48. பழப்பள்ளம்.

3. இரண்டாம் நிலை

1. முலகு மூடு
2. நுல்லிவிளை *
3. திக்கனங்கோடு *
4. மேட்டுக்கும்மல்
5. கீழ்க்குளம்
6. மண்டைக்காடு
7. காப்பியறை

பேரூராட்சிகளில் செயற்பாடு

வரி கொடுப்போருக்கு அடிப்படை வசதிகளான, குடிநீர் வழங்குதல், பொதுக்கழிப்பிடங்கள் கட்டுதல், தெரு விளக்குகளமைத்தல், நகரத்தில் தெருக்களை சுத்தப்படுத்தி துப்புறவுப் பணிகளை சீராக மேற்கொள்ளுதல், சாக்கடைக் கழிவு நீரை அப்புறப்படுத்தி சாக்கடைகளை தூய்மையுடன் பராமரித்தல், கொசுக்கள் மற்றும் இதர பூச்சிகளினால் நோய்கள் பரவாமல் தடுக்க, கொசு போன்றவற்றின் ஒழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளுதல், அவ்வப்போது அம்மை குத்துதல் போன்றவை பேரூராட்சிகளின் செயல்முறைகளும் கடமைகளுமாகும்.

மாநில மற்றும் மத்திய வளர்ச்சித் திட்டங்களை முறையாக நடைமுறைப்படுத்தும் பொறுப்புகளையும் பேரூராட்சிகள் வகிக்கின்றன.

---

* இவை தனியார் கட்டிடங்களிலியங்கும் பேரூராட்சிகளாகும்

சுய தேவைத்திட்டம்[45]

பேரூராட்சிகளில் சீராக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பல்வேறு முக்கியமான வளர்ச்சித் திட்டங்களில் சுய வேலைத்திட்டமும் ஒன்றாகும். இத்திட்டம், மூன்று முறைகளில் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு விரிவாக்கப்பட்டுள்ளது. அதாவது, முதல் கட்டம் 1982-83 ஆம் ஆண்டிலும், இரண்டாவது கட்டம் 1983-84 ஆம் ஆண்டிலும், மூன்றாவது கட்டம் 1984-85 ஆம் ஆண்டிலும் விரிவாக்கப்பட்டுள்ளன.

ஆதி திராவிடர்களின் இடுகாடுகள் / சுடுகாடுகள் ஆகியவற்றிற்கு இணைப்பு சாலைகள் மற்றும் பாதைகள் அமைத்தல், மதகுகள், வடிகால்கள், குடிநீர் வழங்குத் திட்டங்கள் சலவைத் தொழிலாளரின் தொழிற் கூடங்கள் ஆகியவை கட்டுதல் போன்றவை சுய தேவைத் திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட்ட பல்வேறுவகைப் பணிகளாகும்.

பொது மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பொறுத்தவரை, நகர் மற்றும் கிராமம் தேவைக்கு ஏற்ற நிலையினை அடையவேண்டும் என்பதே இத்திட்டத்தின் முதன்மையான நோக்கமாகும்.

சுய தேவைத்திட்டத்தின் முதல் கட்டப் பணியாக பேரூராட்சிகளில் 9.960 இலட்ச ரூபாய் செலவில் 30.7 கிலோ மீட்டர் தொலைவில் இணைப்பு சாலைகள் அமைக்கப்பட்டு, 7.63 இலட்ச ரூபாய் செலவில் 64 மதகுகள் கட்டப்பட்டன. 2.91 இலட்ச ரூபாய் செலவில், 1.4 கிலோ மீட்டர் நீளமுள்ள வடிகால்கள் அமைக்கப்பட்டன. 0.29 இலட்ச ரூபாய் செலவில் சலவைத் தொழிலாளரின் தொழிற்கூடம் நிறுவப்பட்டு 0.040 இலட்ச ரூபாய் செலவில் தெரு விளக்குகள் அமைக்கப்பட்டன.

திட்டத்தின் இரண்டாம் கட்டமாக 9.98 இலட்ச ரூபாய் செலவில் 35 குடிநீர் வழங்கு பணிகள் முடிக்கப்பட்டன. மேலும், 16.97 இலட்ச ரூபாய் செலவில் இணைப்பு சாலைகளும், 6.92 இலட்ச ரூபாய் செலவில் 65 மதகுகளும், 0.08 இலட்ச ரூபாய் செலவில் மூன்று சலவைத் தொழிலாளர் தொழிற்கூடமும், 0.90 இலட்ச ரூபாய் செலவில் ஆதி திராவிடர்கள் இடுகாடுகளுக்கு நடைபாதைகளும் அமைக்கப்பட்டன.

பேரூராட்சிகளின் மூன்றாவது கட்டமாக கீழ்க்கண்ட சுய தேவைப் பணிகள் முடிக்கப்பட்டன:

தொடர் எண்.	*பணிகளின் விவரங்கள்*	*பணிகளின் எண்ணிக்கை*	*செலவழிக்கப்பட்ட தொகை (ரூபாய்இலட்சத்தில்)*
(1)	*(2)*	*(3)*	*(4)*
1.	குடிநீர் வசதி	95	37.56
2.	இணைப்பு சாலைகள்	358	64.05

(1)	(2)	(3)	(4)
3.	மதகுகள்	92	13.15
4.	வடிகால்கள்	137	24.99
5.	ஆதிதிராவிடர்கள் சுடுகாடு களுக்கு நடைபாதைகள்	5	1.15
6.	சலவைத் தொழிலாளர்கள் தொழிற்கூடங்கள்	2	0.52
7.	தெரு விளக்குகள்	17	-

ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்[46]

ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம், ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முக்கிய ஆக்கக்கூறாகும். இத்திட்டத்தின்படி, பேருந்து நிலையங்களும், சந்தைகளும் எங்கெங்கு தேவைப்படுகின்றனவோ, ஆங்காங்கு நிறுவுவதற்குப் போதிய கொடையினையும், நிதியினையும், அரசு பேரூராட்சிகளுக்கு அளித்து வருகிறது. ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித்திட்டமானது, நான்கு பேரூராட்சிகளுக்கு விரிவாக்கப்பட்டு, இத்திட்டத்தின் கீழான பணிகள், பொதுப்பணித்துறைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன. வேலைகள் இப்பால் துவங்கப்பட்டுள்ளன. வேலைகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

தொடர் எண்.	பேரூராட்சிகளின் பெயர்கள்	முன்னேற்றத்திலுள்ள பணிகள் குறித்த விவரங்கள்	ஒப்புதலளிக்கப் பட்டதொகை (ரூபாய் இலட்சத்தில்)
1.	கருங்கால்	பேரூந்து நிலையம்	4.60
2.	குலசேகரம்	சந்தை	5.60
3.	கலியக்காவிளை	பேரூந்து நிலையம்	4.60
4.	அஞ்சுக்கிராமம்	பேரூந்து நிலையம்	2.72

தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம்[47]

கிராமப்புற மக்கள், பேரூராட்சிப்பகுதிகளில், அதிக அளவிலுள்ளார்களென்பதைக் கருத்திற்கொண்டு, தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத்திட்டம், பேரூராட்சிகளுக்கு விரிவாக்கப்பட்டுள்ளது. இப் பகுதிகளிலுள்ள வேலையற்ற இளைஞர்களின் ஆற்றல் வளம் நன்கு பயன் படுத்தப்பட்டு, சாலைகள் அமைத்தல், மதகுகள் கட்டுதல் மற்றும் நீர்ப்பாசன ஏரிகளுக்கு தூர்வாருதல் போன்ற பணிகள் வெற்றிகரமாக முடிக்கப்பட்டுள்ளன.

1985-86ஆம் ஆண்டில், கீழ்க்குறிப்பிட்ட பேரூராட்சிகளில், தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தை, நடைமுறைப் படுத்திட 16.90 இலட்ச ரூபாய்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

1. கணபதிபுரம்
2. கடையால்
3. கோட்டாரம்
4. நல்லூர்
5. பேச்சிப்பாறை
6. மண்டைக்காடு
7. முளுகுமூடு

1986-87 ஆம் ஆண்டு, இத்திட்டத்தின் கீழ், இம்மாவட்டத்திலுள்ள கீழ்க்கண்ட பேரூராட்சிகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகை 17.68 இலட்ச ரூபாயாகும்.

பேரூராட்சிகளின் பெயர்கள்

1. அழகிய பாண்டியபுரம்
2. மைலாடி
3. திங்கள் நகர்
4. கூத்தாநல்லூர்
5. தீர்ப்பரப்பு
6. புத்தாளம்
7. இடைக்கோடு
8. விளாத்துரை
9. பள்ளப்பள்ளம்

நடப்பு ஆண்டான 1988-89-ல் மாவட்டத்தின் கீழ்க்குறிப்பிட்ட பேரூராட்சிகளில், தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத்திட்டத்தினை செயலாற்றிட 13.72 இலட்ச ரூபாய் அரசு ஒதுக்கியுள்ளது :

1. வெள்ளி சந்தை
2. நுல்லிவிளை
3 சுப்பியறை
4. வாள்வச்சகோட்டம்
5. கொல்லன்கோடு
6. மேட்டுக்கும்மல்
7. பளுகால்
8. கீழ்க்குளம்
9. கிள்ளியூர்

திருக்கோவில் நகரின் ஒருங்கிணைந்த மேம்பாடு[48]

திருக்கோவில் நகரின் ஒருங்கிணைந்த வளர்ச்சித்திட்டத்தின் கீழ் மாவட்டத்தின் முக்கிய இரு பேரூராட்சிகளான சுசீந்திரம் மற்றும் மண்டைக்காடு ஆகியவை பயனடைந்துள்ளன. சுசீந்திரத்தில், தூசியற்ற மேற்பரப்புடைய ஆறு சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், ஒரு கட்டணம் செலுத்திப் பயன்படுத்தப்பெறும் கழிப்பிடமும், ஆற்றங்கரை களில் குளியல் கூடங்களும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மண்டைக்காட்டில், 11 குடிநீர் வழங்குப்பணிகள் முடிக்கப்பெற்றதுடன், (குழாய்கள் விரிவாக்கம்) கடைகளைக் கொண்ட ஒரு தங்கும் விடுதியும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. எட்டு வெடிய வெண்புகை ஆவி விளக்குகளும், பொருத்தப்பட்டுள்ளன.

தொடர் எண். (1)	பேரூராட்சியின் பெயர் (2)	மொத்த வீட்டு இணைப்புகள்							
		திறந்த கிணறுகள் (3)	மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் (4)	தரை மட்ட நீர்த் தேக்கங்கள் (5)	விசைக் குழாய்கள் (6)	கையாலியக்கும் குழாய்கள் (7)	பொதுக் குழாய்கள் (8)	வீட்டு உபயோகத் திற்கு (9)	மற்ற பயன்களுக்கு (10)
1.	அஞ்சுக்கிராமம்	26	7	-	7	14	75	14	-
2.	அகஸ்தீஸ்வரம்	20	7	1	4	24	68	139	1
3.	அழகப்பபுரம்	7	2	-	2	7	27	56	-
4.	சுசீந்திரம்	14	-	-	-	3	63	394	6
5.	மைலாடி	14	3	-	4	11	36	280	-
6.	மருங்கூர்	13	6	4	7	13	72	72	-
7.	கோட்டாரம்	15	4	1	4	16	39	136	-
8.	தென் தாமரைக்குளம்	14	9	-	7	12	79	298	2
9.	தேரூர்	23	2	-	3	11	28	60	1
10.	தாழக்குடி	8	6	1	4	7	87	67	-
11.	அழகியபாண்டிபுரம்	18	4	-	3	6	57	-	-
12.	ஆரல்வாய்மொழி	54	7	-	5	28	128	158	-
13.	பூதபாண்டி	10	6	1	5	10	42	464	10
14.	தர்மாபுரம்	17	15	6	21	13	-	-	-

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)
15.	கணபதிபுரம்	14	6	3	8	15	32	-	-
16.	மேலசங்கரன் குழி	26	7	1	7	6	71	164	-
17.	இராசக்காமங்கலம்	16	7	-	7	6	9	-	240
18.	ஆசாரிப்பள்ளம்	9	6	-	7	14	72	43	-
19.	புத்தாளம்	10	8	-	9	9	-	162	-
20.	தங்கம்புத்தூர்	8	12	2	14	11	151	181	4
21.	திங்கள் நகர்	14	4	-	3	10	57	16	-
22.	மண்டைக்காடு	24	2	-	2	10	13	-	-
23.	வெள்ளிமலை	29	4	2	7	12	108	33	-
24.	வில்லுக்குரி	32	2	-	3	8	-	-	-
25.	அல்லூர்	20	8	-	4	13	-	38	-
26.	மணவாளக்குறிச்சி	14	2	-	2-	-	49	-	-
27.	ரீதாப்புரம்	29	5	-	4	5	-	28	-
28.	கல்லுக்கோட்டம்	29	9	-	8-	5	-	-	-
29.	நெய்யூர்	25	3	-	3	13	-	-	-

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)
30.	வெள்ளிச்சந்தை	21	3	1	2	-	-	-	-
31.	எரனியல்	21	2	1	-	13	58	36	-
32.	குமாரபுரம்	21	4	1	5	7	37	-	-
33.	கூத்தாநல்லூர்	-	1	1	2	9	-	-	-
34.	முலகுமூடு	54	4	1	6	9	-	-	-
35.	அல்லிவிளை	26	2	-	2	16	35	-	-
36.	திருவிதாங்கோடு	18	-	-	-	23	-	-	-
37.	காப்பியரை	29	4	-	2	13	-	12	-
38.	வாள்வச்ச கோட்டம்	35	2	-	2	9	-	-	-
39.	விளவூர்	25	1	2	3	12	-	-	-
40.	திக்கணங்கோடு	36	1	-	1	12	-	-	-
41.	ஆத்தூர்	36	1	-	1	12	-	-	-
42.	பொன்மனை	18	3	-	2	5	-	-	-
43.	பேச்சிப்பாறை	12	-	-	-	3	-	-	-
44.	திர்ப்பரப்பு	28	2	1	-	-	-	-	-

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)
45.	திருவட்டார்	35	3	-	-	18	-	39	
46.	வேர்கிளம்பி	59	4	-	4	17	24	-	-
47.	காட்டாத்துரை	13	2	-	2	16	20	-	-
48.	குலசேகரம்	17	1	-	1	6	-	-	-
49.	பலுக்கல்	25	2	-	-	14	-	-	-
50.	இடைக்கோடு	54	3	-	3	14	-	-	-
51.	கடையல்*	28	-	-	-	11	-	-	-
52.	பாக்கோடு	12	-	-	-	-	-	-	-
53.	கலியக்காவிளை	49	4	-	4	12	40	-	-
54.	அருமனை	47	-	-	1	6	48	-	-
55.	விளாத்துறை	47	-	-	-	-	12	-	-
56.	புதுக்கடை	19	4	-	2	3	-	260	15
57.	பெயன்குளம்	34	-	1	-	16	-	-	-
58.	மேதுக்கும்மல்	28	-	-	-	22	-	-	-
59.	கொல்லங்கோடு	35	1	-	1	5	19	-	-

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)
60.	ஏழுதேசம்	25	6	-	6	5	-	-	-
61.	பாலப்பள்ளம்	42	4	-	4	14	-	-	-
62.	நல்லூர்	37	-	1	-	5	12		
63.	கிளியூர்	49	3	-	2	9	-	-	-
64.	கருங்கால்	35	2	2	3	-	-	-	-
65.	கீழ்க்குளம்	23	3	-	3	11	-	-	-
66.	உண்ணாமலைக்கடை	33	-	-	-	6	-	-	-
	மொத்தம்**	1661	233	35	233	698	1687	3320	90

* பேரூராட்சியில் 21 தன்னாலியங்கும் நீர்த்தேக்கத் தொட்டிகளும் உள்ளன. **மாவட்ட பேரூராட்சிகள் அலுவலர், கன்னியாகுமரி மாவட்டம், அறிக்கை நாள் 28-9-1988.

குறைந்த செலவில் துப்புறவுச் செயலாக்கம்[49]

குறைந்த செலவில் துப்புறவுச் செயலாக்கத்திட்டத்தின் கீழ், மண்டைக்காடு பேரூராட்சி பயனடைந்துள்ளது. இத்திட்டம், மக்களைக் குறைந்த செலவில், அவர்களது சொந்த இல்லங்களில் கழிப்பிடம் கட்டிக்கொள்ள ஊக்குவிக்கிறது. மொத்தச் செலவில் 50 விழுக்காட்டுத் தொகையினை யுனிசேஃப் நிறுவனமும், 40 விழுக்காட்டுச் செலவுத் தொகையினை அரசும், கொடையாக ஏற்கின்றன. கழிப்பிடம் கட்டுவதற்கான செலவில் எஞ்சிய 20 விழுக்காட்டினை பயனடையும் நபர் ஏற்க வேண்டும்.

1986-87 ஆம் ஆண்டு, 12.50 இலட்சம் ரூபாய் செலவில் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதனால் 125 பேர்கள் பயனடைந்துள்ளனர்.

நகரிய வளர்ச்சித்திட்டம்[50]

நகரை மேம்படுத்த கன்னியாகுமரி நகரியத்திற்கு, அரசு, 10.50 இலட்ச ரூபாய் வழங்கியுள்ளது. 1.99 இலட்ச ரூபாய் செலவில் ஒரு குழந்தைகள் பூங்கா அமைத்தும், மேலும் 2.25 இலட்ச ரூபாய் செலவில் ஒரு கட்டணம் செலுத்திப் பயன்படுத்தும் கழிப்பிடமும், 7.25 இலட்ச ரூபாய் செலவில் ஒரு கைவினைப் பொருட்கள் சந்தை மற்றும் தங்கும்விடுதி ஆகியவையும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. கொடையில், எஞ்சியுள்ள 7.01 இலட்ச ரூபாய் ஒரு பயணிகள் வளாகம் கட்டுவதற்கு ஒதுக்கப்பட்டு, பணியும் துவங்கப்பட்டுள்ளது.

குடிநீர் வசதி[51]

மாவட்டத்திலுள்ள 66 பேரூராட்சிகளில் 56 பேரூராட்சிகளில் மக்களுக்குக் குடிநீர் வழங்க மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டுள்ளன. பேரூராட்சிகளில் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ள குடிநீர் ஆதாரங்கள் தொடர்பான புள்ளி விவரங்கள் கீழே பட்டியிலில் அளிக்கப்பட்டுள்ளன :

தெரு விளக்குகள் பொருத்துவது, ஊராட்சிகளின் பொது அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கும் கடமைகளில் ஒன்றாகும். மாவட்டத்திலுள்ள பேரூராட்சிகளில் பொருத்தப்பட்டுள்ள தெரு விளக்குகளின் விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன:

(அ) வெடியம் வெண்புகை ஆவி மற்றும் பாதரச விளக்குகள்

தொடர் எண்.	*பேரூராட்சியின் பெயர்*	*மொத்த வெடியம் வெண்புகை ஆவி விளக்குகள்*	*மொத்த பாதரச விளக்குகள்*
(1)	*(2)*	*(3)*	*(4)*
1.	சுசீந்திரம்	9	2
2.	கோட்டாரம்	1	3

(1)	(2)	(3)	(4)	(5)
3.	அழகியபாண்டியபுரம்		-	20
4.	ஆரல்வாய் மொழி		7	1
5.	பூதபாண்டி		6	7
6.	தர்மாபுரம்		-	2
7.	இராசக்காமங்கலம்		3	1
8.	ஆசாரிப்பள்ளம்		9	-
9.	திங்கள் நகர்		-	27
10.	மண்டலக்காடு		8	-
11.	மணவாளக்குறிச்சி		-	3
12.	வெள்ளி சந்தை		-	4
13.	எரனியல்		-	1
14.	நல்லிவளை		-	3
15.	காட்டாத்துரை		-	2
16.	குலசேகரம்		10	7
17.	மேட்டுக்கும்மல்		1	-
18.	கருங்கால்		8	-
19.	உண்ணாமலைக்கடை		-	1
20.	வல்லுக்குறி		5	15
21.	வாள்வச்ச கோட்டம்		-	2

குழல் விளக்குகள் மற்றும் சாதாரண மின் விளக்குகள்

தொடர் எண்.	பேரூராட்சியின் பெயர்	மொத்த குழல் விளக்குகள்		சாதாரண மின் விளக்குகள்
		4 அடி மின் விளக்கு	2 அடி மின் விளக்கு	
(1)	(2)	(3)	(4)	(5)
1.	அஞ்சுகிராமம்	179	-	-
2.	அகஸ்தீஸ்வரம்	259	-	-
3.	அழகப்பபுரம்	153	-	-
4.	சுசீந்திரம்	225	-	-
5.	மைலாடி	215	-	-
6.	மருங்கூர்	252	-	-
7.	கோட்டாரம்	208	2	-
8.	தென் தாமரைக்குளம்	212	-	-
9.	தேரூர்	192	-	-
10.	தாழக்குடி	232	-	-
11.	அழகியபாண்டியபுரம்	247	-	-
12.	ஆரல்வாய்மொழி	236	79	-

(1)	(2)	(3)	(4)	(5)
13.	பூதபாண்டி	309	-	-
14.	தர்மாபுரம்	416	-	-
15.	கண்பதிபுரம்	247	-	-
16.	மேலசங்கரன் குழி	282	-	1
17.	இராசக்காமங்கலம்	334	-	-
18.	ஆசாரிப்பள்ளம்	230	-	-
19.	புத்தாளம்	146	-	-
20.	தேங்காம் புத்தூர்	245	-	-
21.	திங்கள் நகர்	387	31	-
22.	மண்டைக்காடு	210	-	-
23.	வள்ளி மலை	327	-	-
24.	வில்லுக்குறி	265	-	-
25.	அல்லூர்	244	-	-
26.	மணவாளக்குறிச்சி	180	30	-
27.	ரீதாபுரம்	169	-	-
28.	கல்லுக்கோட்டம்	375	-	-
29.	திரய்யூர்	354	-	-
30.	வெள்ளிசந்தை	260	-	-
31.	எரனியல்	257	-	-
32.	குமாரபுரம்	295	-	-
33.	கூத்தாநல்லூர்	194	-	-
34.	முலகும்கோடு	354	-	-
35.	நுல்லிவிளை	254	-	-
36.	திருவிதாங்கோடு	156	134	-
37.	காப்பயரை	202	-	-
38.	வாள்வச்ச கோட்டம்	132	-	-
39.	விலாவூர்	276	-	-
40.	திக்கணங்கோடு	270	-	-
41.	ஆத்தூர்	203	-	-
42.	பொன்மனை	179	-	-
43.	பேச்சிப்பாறை	135	-	-
44.	தீர்ப்பரப்பு	291	-	-
45.	திருவட்டார்	351	-	-
46.	வேர்கிளம்பி	405	9	-
47.	காட்டாத்துரை	273	-	-

(1)	(2)	(3)	(4)	(5)
48.	குலசேகரம்	436	1	8
49.	பலுக்கல்	196	-	-
50.	எடைக்கோடு	463	-	-
51.	கடயால்	513	-	-
52.	பாக்கோடு	218	-	-
53.	கலியக்காவிளை	197	-	-
54.	அருமனை	209	-	-
55.	விளாத்துறை	57	-	115
56.	புதுக்டை	146	-	-
57.	பெயின்குளம்	126	-	-
58.	மேட்டுக்கும்மல்	163	-	21
59.	கொல்லங்கோடு	150	-	169
60.	ஏழுதேசம்	-	124	280
61.	பாலப்பள்ளம்	297	-	-
62.	நல்லூர்	383	-	-
63.	கிள்ளியூர்	381	-	-
64.	கருங்கால்	247	-	-
65.	கீழ் குளம்	221	-	-
66.	உண்ணாமலைக்கடை	265	-	37
	மொத்தம்	16489	430	683

பொதுக்கழிப்பிடங்கள்

மாவட்டத்திலுள்ள கீழ்க்குறிப்பிட்ட 35 பேரூராட்சிகள், அவற்றினெதிரே குறிப்பிட்டுள்ள அளவில் பொதுமக்களுக்கு கழிப்பிட வசதிகள் அமைத்துக்கொடுத்துள்ளன:

தொடர் எண். (1)	பேரூராட்சியின் பெயர் (2)	மொத்த பொதுக் கழிப்பிடங்கள் (3)
1.	அகஸ்தீஸ்வரம்	1
2.	அழகப்பபுரம்	1
3.	சுசீந்திரம்	3
4.	மைலாடி	5
5.	மருங்கூர்	3
6.	கோட்டாரம்	2

(1)	(2)	(3)
7.	தென் தாமரைக்குளம்	1
8.	தேரூர்	1
9.	தாழக்குடி	1
10.	ஆரல்வாய்மொழி	3
11.	பூதபாண்டி	1
12.	இராசக்காமங்கலம்	3
13.	திங்கள் நகர்	2
14.	வில்லுக்குறி	1
15.	அல்லூர்	2
16.	கல்லுக்கோட்டம்	1
17.	எரனியல்	3
18.	குமாரபுரம்	1
19.	கூத்தாநல்லூர்	1
20.	காப்பியரை	1
21.	வாள்வச்ச கோட்டம்	1
22.	ஆத்தூர்	1
23.	பேச்சிப்பாறை	1
24.	தீர்ப்பரப்பு	2
25.	திருவட்டார்	2
26.	வேர்கிளம்பி	1
27.	குலசேகரம்	2
28.	பலுக்கல்	1
29.	கடயால்	1
30.	கலியக்காவிளை	2
31.	புதுக்கடை	3
32.	நல்லூர்	2
33.	கிள்ளியூர்	1
34.	கருங்கால்	1
35.	கீழ்க் குளம்	1

வானொலி

பொது மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு கிராமமாயிருப்பினும், நகரமாயிருப்பினும், அதற்கு போக்குவரத்து செய்தி இணைப்பு மற்றும் தொடர்பு வசதியினை அமைத்துக் கொடுத்து, அதனை மேம்படுத்துவது, ஊராட்சிகளின் தலையாய மற்றும் சட்டப்படியான கடமைகளில் ஒன்றாகுமென்பது, அனைவரும் அறிந்ததே. பேரூராட்சிகளால் பராமரிக்கப்பட்டு வரும், பல்வேறு வகையான சாலைகள் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

தொடர் எண்.	பேரூராட்சியின் பெயர்	பல்வேறு சாலைகளின் மொத்த நீளம் (கிலோ மீட்டரில்)				
		பசைமண் (சிமெண்ட்)	தார்	பெருஞ்சரளை	பொடிச்சரளை	மண்
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1.	அஞ்சுக்கிராமம்	-	-	13.75	5.85	5.55
2.	அகஸ்தீஸ்வரம்	-	2.60	13.10	4.00	0.90
3.	அழகப்பபுரம்	0.30	1.61	5.81	0.54	1.46
4.	சுசீந்திரம்	1.67	50.87	0.08	0.62	2.06
5.	மைலாடி	-	0.55	6.51	-	3.03
6.	மருங்கூர்	-	-	1.06	1.37	5.14
7.	கோட்டாரம்	0.06	1.88	3.09	2.76	-
8.	தென் தாமரைக்குளம்	-	-	3.10	-	8.30
9.	தேரூர்	0.26	0.65	5.03	1.34	2.35
10.	தாழக்குடி	-	0.70	5.05	0.15	0.15
11.	அழகியபாண்டியபுரம்	0.736	-	1.13	0.16	2.89
12.	ஆரல்வாய்மொழி	5.28	2.20	4.20	5.60	21.51
13.	பூதபாண்டி	0.96	-	1.50	0.50	3.30

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
14.	தர்மாபுரம்	-	1.30	11.10	-	5.40
15.	கணபதிபுரம்	-	-	-	8.00	5.00
16.	மேலசங்கரங் குழி	-	-	6.66	-	9.13
17.	இராசக்காமங்கலம்	-	0.50	10.40	0.48	-
18.	ஆசாரிப்பள்ளம்	-	0.40	8.62	0.28	6.60
19.	புத்தாளம்	-	1.60	10.44	1.43	-
20.	தேங்கம்புதூர்	-	1.60	9.53	1.95	-
21.	திங்கள் நகர்	0.30	4.85	7.00	-	10.30
22.	மண்டைக்காடு	-	-	-	8.00	12.00
23.	வெள்ளிமலை	-	-	10.50	-	-
24.	வில்லுக்குறி	-	0.60	4.06	12.55	2.20
25.	அல்லூர்	-	-	2.60	2.50	6.85
26.	மணவாளக்குறிச்சி	-	2.70	1.40	3.40	4.00
27.	ரீதாபுரம்	-	-	14.40	-	25.30

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
28.	கல்லுக்கோட்டம்	-	2.60	17.48	-	25.75
29.	நெய்யூர்	-	2.30	5.80	-	11.70
30.	வெள்ளிச்சந்தை	-	2.40	3.40	2.00	1.60
31.	எரனியல்	-	0.40	10.8	0.50	1.98
32.	குமாரபுரம்	-	0.50	-	1.20	12.70
33.	கூத்தாநல்லூர்	-	-	2.36	-	0.32
34.	முலகுமேடு	-	-	4.66	-	5.80
35.	அல்லிவிளை	-	-	2.00	-	5.84
36.	திருவிதாங்கோடு	0.15	1.22	1.47	-	4.65
37.	காப்பியறை	-	2.14	2.79	-	6.93
38.	வாள்வச்ச கோட்டம்	-	-	5.25	-	9.02
39.	விளவூர்	-	1.00	3.50	-	6.75
40.	திக்கணங்கோடு	-	-	3.33	-	8.33
41.	ஆத்தூர்	-	1.20	1.80	-	9.90

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
42.	பொன்மனை	-	-	3.04	-	13.00
43.	பேச்சிப்பாறை	-	-	-	-	-
44.	திர்ப்பரப்பு	-	0.40	5.60	-	17.50
45.	திருவட்டார்	-	-	5.02	-	8.06
46.	வேர்கிளம்பி					
47.	காட்டாத்துரை					
48.	குலசேகரம்	0.49	1.60	7.00	-	-
49.	பலுக்கல்	-	-	10.20	-	18.97
50.	எடைக்கோடு	-	-	5.40	-	9.30
51.	கடயால்	-	1.00	8.85	-	26.00
52.	பாக்கோடு	-	-	13.80	-	8.50
53.	கலியக்காவிளை	-	-	10.01	-	1.78
54.	அருமனை	-	-	2.06	-	11.06
55.	விளாத்துரை	-	-	9.90	-	0.08

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
56.	புதுக்கடை	-	-	-	3.00	5.00
57.	பெயின்குளம்	-	-	2.60	-	2.20
58.	மேத்துக்கும்மல்	-	-	11.70	-	0.90
59.	கொல்லங்கோடு	-	-	-	-	7.60
60.	ஏழுதேசம்	-	-	10.20	-	9.40
61.	பாலப்பள்ளம்	-	1.20	9.80	-	14.40
62.	நல்லூர்	-	-	6.70	7.40	-
63.	கிள்ளியூர்	-	-	11.95	-	3.85
64.	கருங்கால்	-	5.20	16.20	7.20	1.10
65.	கீழ்க்குளம்	-	-	10.30	-	2.20
66.	உண்ணாமலைக்கடை	-	-	0.50	-	10.80

பயன்தரும் தொழில் முயற்சிகள்

மாவட்டத்திலுள்ள நான்கு பேரூராட்சிகள் பேருந்து நிலையங்களை பராமரிக்கின்றன. திங்கள் சந்தை, திருவட்டார், கலியக்காவிளை மற்றும் கருங்கால் ஆகிய பேரூராட்சிகளிலுள்ள இந்த பேருந்து நிலையங்கள், ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித்திட்டத்தின் கீழ், கட்டிமுடிக்கப்பட்டவையாகும். இந்த நிலையங்களிலிருந்து கிளம்பும் பேருந்துகள் மற்றும் இந்த நிலையங்களைக் கடந்து செல்லும் பேருந்துகள் ஆகியவற்றிடம் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

கீழ்க்குறிப்பிட்ட 14 பேரூராட்சிகள், அவற்றினெதிரே குறிப்பிட்ட அளவிலான சந்தைகளைப் பராமரிக்கின்றன:

தொடர் எண்.	*பேரூராட்சியின் பெயர்*	*சந்தைகளின் எண்ணிக்கை*
1.	அழகப்பபுரம்	1
2.	தென்தாமரைக்குளம்	1
3.	ஆரல்வாய்மொழி	5
4.	பூதபாண்டி	2
5.	மணவாளக்குறிச்சி	1
6.	கல்லுக்கோட்டம்	1
7.	கூத்தாநல்லூர்	1
8.	ஆத்தூர்	1
9.	குலசேகரம்	2
10.	பலுகால்	1
11.	விளாத்துரை	1
12.	புதுக்கடை	1
13.	ஏழுதேசம்	2
14.	திருவட்டார்	1
	மொத்தம்	46

சந்தைகள்

கீழ்க்குறிப்பிட்ட பேரூராட்சிகளில் வாராந்திர சந்தைகள் நடைபெறுகின்றன:

தொடர் எண்.	*பேரூராட்சிகளின் பெயர்கள்*	*சந்தைகளின் எண்ணிக்கை*
(1)	*(2)*	*(3)*
1.	அஞ்சுக்கிராமம்	1
2.	மைலாடி	1
3.	ஆரல்வாய்மொழி	1

(1)	(2)	(3)
4.	ஆசாரிப்பள்ளம்	1
5.	திங்கள் நகர்	1
6.	வெள்ளிச்சந்தை	1
7.	ஆத்துர்	1
8.	தீர்ப்பரப்பு	2
9.	வேர்கிளம்பி	2
10.	காட்டாத்துறை	1
11.	குலசேகரம்	1
12.	இடைக்கோடு	1
13.	அருமனை	1
14.	கலியக்காவிளை	1
15.	பெயின் குளம்	1
16.	மேதுக்கும்மல்	1
17.	கொல்லங்கோடு	1
18.	கிள்ளியூர்	1
19.	கருங்கால்	1
20.	கீழ்குளம்	1
	மொத்தம்	22

வடிகால்

நகரிலுள்ள முக்கிய சாலைகளின் ஓரத்தில், 39 பேரூராட்சிகள், வடிகால்களைப் பராமரிக்கின்றன. விவரங்கள் வருமாறு :

தொடர் எண்.	பேரூராட்சியின் பெயர்	வடிகாலின் மொத்த நீளம் (கிலோ மீட்டரில்)
(1)	(2)	(3)
1.	அஞ்சுக்கிராமம்	4.05
2.	அகஸ்தீஸ்வரம்	0.23
3.	அழகப்பபுரம்	3.26
4.	சுசீந்திரம்	7.20
5.	மைலாடி	6.00
6.	மருங்கூர்	1.00
7.	கோட்டாரம்	1.50
8.	தேரூர்	2.92
9.	தாழக்குடி	3.16
10.	அழகிய பாண்டியபுரம்	3.00

(1)	(2)	(3)
11.	பூதபாண்டி	3.30
12.	மேலசங்கரன் குழி	0.32
13.	இராசக்காமங்கலம்	10.39
14.	ஆசாரிப்பள்ளம்	2.00
15.	தங்கம்புத்தூர்	0.20
16.	திங்கள் நகர்	2.01
17.	மண்டைக்காடு	0.30
18.	வெள்ளிமலை	0.50
19.	வில்லுக்குறி	0.88
20.	அல்லூர்	1.25
21.	மணவாளக்குறிச்சி	0.50
22.	ரீதாபுரம்	8.00
23.	நெய்யூர்	1.00
24.	வெள்ளிச்சந்தை	1.00
25.	கூத்தாநல்லூர்	0.10
26.	திருவிதாங்கோடு	5.00
27.	காப்பியறை	0.80
28.	விலாவூர்	0.10
29.	ஆத்தூர்	0.50
30.	தீர்ப்பரப்பு	1.60
31.	காட்டாத்துறை	0.50
32.	பலுகால்	0.20
33.	கடயால்	0.05
34.	அருமனை	2.00
35.	புதுக்கடை	1.50
36.	பெயின்குளம்	0.10
37.	ஏழுதேசம்	0.50
38.	கருங்கால்	0.40

வருவாய் ஆதாரங்கள்

வீட்டுவரி, அளவு, கருவி வரி, நீர்த்தீர்வை, வாகனவரி, மற்றும் பேரூராட்சி எல்லைப்பகுதியில் வசூல் செய்யப்பட்ட பொழுது போக்குவரியின் ஒரு பகுதி, ஆகியவை, பேரூராட்சியின் முக்கிய வருவாய் ஆதாரங்களாகும்.

கீழ்க்குறிப்பிட்ட நகரங்களில், திரையரங்கங்கள் உள்ளன:

தொடர் எண்.	பேரூராட்சியின் பெயர்	திரையரங்கங்களின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)
1.	சுசீந்திரம்	1
2.	மைலாடி	1
3.	கோட்டாரம்	1
4.	பூதபாண்டி	1
5.	தர்மபுரம்	1
6.	தேங்காம்புத்தூர்	1
7.	திங்கள் நகர்	1
8.	குலசேகரம்	1
9.	அருமனை	1
10.	புதுக்கடை	1
11.	நல்லூர்	1
12.	கருங்கால்	1

பலவகை

நாட்டின் நடப்பினை மக்களுக்கு அவ்வப்போது தெரிவிக்கவும், பொழுதுபோக்கு அம்சத்தை மக்களுக்கு வழங்கவும், சில பேரூராட்சிகள், வானொலிப்பெட்டிகள் நிறுவியுள்ளன. பேரூராட்சிக ளாலும், சமூகப்பணி நிறுவனங்களாலும் பராமரிக்கப்பட்டு வரும் படிப்பகங்களும் நகரங்களில் உள்ளன. அவை பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

தொடர் எண்.	பேரூராட்சிகளின் பெயர்கள்	மேரீத்த	
		வானொலிப் பெட்டிகள்	படிப்பகங்கள்
(1)	(2)	(3)	(4)
1.	அஞ்சுக்கிராமம்	9	-
2.	அகஸ்தீஸ்வரம்	8	9
3.	அழகப்பபுரம்	4	4
4.	சுசீந்திரம்	9	5
5.	மைலாடி	7	-
6.	மருங்கூர்	13	-
7.	கோட்டாரம்	3	8
8.	தென் தாமரைக்குளம்	8	8
9.	தேரூர்	9	7
10.	தாழக்குடி	7	4
11.	ஆரல்வாய்மொழி	14	1
12.	பூதபாண்டி	21	4

(1)	(2)	(3)	(4)
13.	தர்மாபுரம்	11	4
14.	கணபதிபுரம்	6	2
15.	மேலசங்கரன் குழி	7	7
16.	இராசக்காமங்கலம்	8	5
17.	ஆசாரிப்பள்ளம்	12	-
18.	புத்தாளம்	4	-
19.	தெங்கம்புத்தூர்	12	-
20.	திங்கள் நகர்	7	1
21.	மண்டைக்காடு	-	1
22.	வெள்ளிமலை	17	-
23.	வில்லுக்குறி	9	-
24.	மணவாளக்குறிச்சி	3	-
25.	ரீதாபுரம்	4	-
26.	கல்லுக்கோட்டம்	5	2
27.	நெய்யூர்	5	2
28.	வெள்ளிச்சந்தை	-	2
29.	ஏரனியல்	11	-
30.	குமாரபுரம்	3	-
31.	கூத்தாநல்லூர்	3	2
32.	மிளகு மோடு	8	8
33.	நுல்லிவிளை	-	2
34.	திருவிதாங்கோடு	4	2
35.	காப்பியறை	9	-
36.	வாள்வச்ச கோட்டம்	2	-
37.	விலாவூர்	-	2
38.	திக்கனம்கோடு	12	-
39.	ஆத்தூர்	4	1
40.	பொன்மனை	7	-
41.	பேச்சிப்பாறை	3	2
42.	திர்ப்பரப்பு	7	1
43.	திருவட்டார்	2	-
44.	வேர்கிளம்பி	15	1
45.	காட்டாத்துறை	4	-
46.	குலசேகரம்	7	1
47.	பழுகல்	6	-
48.	எடைக்கோடு	-	1
49.	கடயல்	24	-
50.	பாக்கோடு	17	1
51.	கலியக்காவிளை	6	1

(1)	(2)	(3)	(4)
52.	அருமனை	1	1
53.	விளாத்துறை	6	1
54.	புதுக்கடை	7	1
55.	பெயின்குளம்	6	1
56.	கொல்லங்கோடு	1	-
57.	ஏழுதேசம்	4	6
58.	பாலப்பள்ளம்	11	-
59.	நல்லூர்	15	5
60.	கிள்ளியூர்	4	-
61.	கருங்கால்	9	1
62.	கீழ்க்குளம்	6	-
63.	உண்ணாமலைக்கடை	17	5

குறிப்புகள்

1 "சோழ வரலாறு மற்றும் நிருவாகம் குறித்த ஒரு ஆய்வு", பக்கங்கள் - 74-84

2 "சுசீந்திரம் கோவில்", பக்கங்கள் 143, 144 மற்றும் 242

3. சாஸ்திரி, கே.ஏ.என்., தென்னிந்திய வரலாறு, (1955), சென்னை 4-வது பதிப்பு (1976), பக்கம் 205.

4 சாஸ்திரி, கே.ஏ.என்., தென்னிந்திய வரலாறு, 4-வது பதிப்பு (1976), சென்னை, பக்கம் 205.

5 சாஸ்திரி, கே.ஏ.என்., "சோழர்கள்", (1937), இரண்டாவது பதிப்பு, (1955), பக்கம் 517, குறிப்பு 50.

6 கே.கே.பிள்ளை, ஏற்கனவே குறிப்பிட்டுள்ள நூல்

7 சுந்தரம்பிள்ளை, பி.பேராசிரியர், எம்.ஏ., திருவாங்கூரின் முந்தைய கால சில முடி மன்னர்கள், சென்னை, (1894), பக்கம் 54.

8 சாஸ்திரி, கே.ஏ.என்., சோழ வரலாறும், நிருவாகமும், சென்னை, (1932), பக்கம் 74.

8அ. வித்தியாதர் மகராசன், இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சி, (1976), புதுதில்லி, பக்கம் 480.

9. ஸ்ரீதர மேனன், ஏ., திருவனந்தபுரம் மாவட்ட விவரச் சுவடி, (1961), பக்கங்கள் 624 மற்றும் 625.

10. ஸ்ரீதர மேனன். ஏ., திருவனந்தபுரம் மாவட்ட விவரச் சுவடி, (1962), திருவனந்தபுரம், பக்கம் 625.

11. அதே நூல் பகுதியில்

12. ஸ்ரீதர மேனன். ஏ., திருவனந்தபுரம் மாவட்ட விவரச் சுவடி (1963), திருவனந்தபுரம், பக்கம் 623.

13. அதே நூற்பகுதியில், பக்கம் 626,

14. அதே நூற்பகுதியில், பக்கம் 627,

15. அதே நூல் பகுதியில்

16. அரசாணை எம்.எஸ்.எண்.741 (ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி), நாள் 27.3.1962.

17. அரசாணை எம்.எஸ்.எண்.685 (ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி), நாள் 21.3.1962.

17அ. அரசாணை எண்.2224 (ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி), நாள் 7.10.1965

17ஆ. அரசாணை எண்.2045 (ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி), நாள் 4.11.1967

18(1) தமிழக அரசு - நகராட்சிகள் மற்றும் நகரியக் குழுக்களின் செயலாக்க மதிப்பீடு, 1984 - 85.

(2) நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை, அறிக்கை நாள் 20.12.1988

19. தமிழ்நாடு அரசு - நகராட்சிகள் மற்றும் நகரியக்குழுக்களின் 1984-85ஆம் ஆண்டின் செயலாக்க மதிப்பீடு.

20 (1) ஆணையர், நாகர்கோவில் நகராட்சி, அறிக்கை நாட்கள் 16.2.1987, 5.4.1988 மற்றும் 24.11.1988.

(2) நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை, அறிக்கை நாள் 20.11.1988

21. ஆணையர், பத்மநாபபுரம் நகராட்சி அறிக்கை நாட்கள் 26.3.1987, 15.11.1986, 4.4.1988, 23.5.1988 மற்றும் 25.11.1988.

21(அ) நிருவாக இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை, அறிக்கை நாள், 12.1.1989.

22. ஆணையர், குளச்சல் நகராட்சி, அறிக்கை நாட்கள் 31.7.1987, 28.3.1988 மற்றும் 29.11.1988 மற்றும் ஆண்டு நிருவாக அறிக்கைகள் 1980-87.

23 ஆணையர், குழித்துறை நகராட்சி, அறிக்கை நாட்கள் 17.8.1988, 15.11.1988 மற்றும் 29.11.1988.

24. 1988 ஆம் ஆண்டு நகர மற்றும் கிராமப்புற திட்டமமைப்பு இயக்குநரின் அறிக்கை

25. அரசாணை எண்.1353 (ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி), நாள் 30.8.1979

26. (1). தமிழ்நாடு அரசு, சமுதாய வளர்ச்சி - செயலாக்க நிதி மதிப்பீடு 1987 - 88, பக்கம் 31.

(2). மாவட்ட ஆட்சித்தலைவர், கன்னியாகுமரி மாவட்டம், அறிக்கை நாள் 12.6.1987.

(3). கோட்ட வளர்ச்சி அலுவலர், பத்மநாபபுரம், அறிக்கை நாள் 28.11.1988.

27. மாவட்ட ஆட்சித்தலைவர், கன்னியாகுமரி, அறிக்கை நாள் 12.6.1987

28. தொடர்புள்ள ஊராட்சி ஒன்றிய ஆணையர்களின் அறிக்கைகள்.

28. (அ) 1958ஆம் ஆண்டு, தமிழ்நாடு மாவட்ட வளர்ச்சிக்குழுச்சட்டம், பிரிவுகள் 4.1 (அ) (ஆ) (இ) (ஈ) (உ) (ஊ), 2.3. (அ.1) (அ.2) (ஆ.1) (ஆ.2) (இ)4 ; பிரிவு அ(1) (2) மற்றும் 4ஆ.

29. மாவட்ட ஆட்சித்தலைவர், கன்னியாகுமரி மாவட்டம், அறிக்கை நாள் 12.6.1987

30 (1) ஆணையர், அகஸ்தீஸ்வரம் ஊராட்சி ஒன்றியம், அறிக்கை நாள் 29.8.1986

(2) கோட்ட வளர்ச்சி அலுவலர், நாகர்கோவில், அறிக்கை நாள் 25.11.1988

31. ஆணையர் தக்கலை ஊராட்சி ஒன்றியம், அறிக்கை நாள் 5-8-1986

32. (1) ஆணையர், குருந்தங்கோடு ஊராட்சி ஒன்றியம், அறிக்கை நாள் 10.10.1986

(2) கோட்ட வளர்ச்சி அலுவலர், பத்மநாபபுரம், அறிக்கை நாள் 28.11.1988

33. (1) ஆணையர், மேல்புரம் ஊராட்சி ஒன்றியம், அறிக்கை நாள், 8.10.1986

(2) கோட்ட வளர்ச்சி அலுவலர், பத்மநாபபுரம், அறிக்கை நாள், 28.11.1988

"தொகுப்பு கிராமம்" என்பது, ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டங்களின் கீழான பயன்களைப் பெறுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்படும் கிராமங்களாகும்.

34. 1) ஆணையர், முஞ்சிறை ஊராட்சி ஒன்றியம், அறிக்கை நாள் 8.10.1986

2) கோட்ட வளர்ச்சி அலுவலர், பத்மநாபபுரம், அறிக்கை நாள் 28.11.1988

35. ஆணையர், திருவட்டார் ஊராட்சி ஒன்றியம், அறிக்கை நாள் 28.2.1987

36 (1) ஆணையர் ஊராட்சி ஒன்றியம், தோவாளை அறிக்கை நாள் 25.11.1988

(2) கோட்ட வளர்ச்சி அலுவலர், நாகர்கோவில் அறிக்கை நாள் 25.11.1988

37 (1) ஆணையர், இராசக்காமங்கலம் ஊராட்சி ஒன்றியம், அறிக்கை நாட்கள் 2.4.1987 மற்றும் 4.11.1988.

(2) கோட்ட வளர்ச்சி அலுவலர், நாகர்கோவில், அறிக்கை நாள் 25.11.1988

38. ஆணையர், கிள்ளியூர் ஊராட்சி ஒன்றியம், அறிக்கை நாள் 4.3.1988

39. நிர்வாக அலுவலர், கன்னியாகுமரி நகரியம்,அறிக்கை நாள் 17.2.1988 மற்றும் "கன்னியாகுமரி நகரிய"த்தைப்பற்றிய சிறு குறிப்பு (பிரசுரிக்கப்படாத நூல், 1987-88).

40. 1) அரசாணை எண். 2157 ஊரக, வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி, அறிக்கை நாள் 25.9.1965.

2) பேரூராட்சிகள் இயக்குநர், சென்னை, அறிக்கை நாள் 19.12.1988

3) மாவட்ட பேரூராட்சி அலுவலர், நாகர்கோவில், அறிக்கை நாள் 24.11.1988

41 மற்றும் 42 :

பேரூராட்சிகள் இயக்குநரக "தமிழ்நாட்டில் பேரூராட்சிகளின் சாதனை" - என்ற வெளியீடு ஊரக வளர்ச்சி (1981-82 முதல் 1983-84 முடிய, பக்கங்கள் 1 மற்றும் 2).

42. அ பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை, அறிக்கை நாள் 19-12-1988.

43. பேரூராட்சிகளின் இயக்குநரக "தமிழ்நாட்டில் பேரூராட்சிகளின் சாதனை" என்ற வெளியீடு, ஊரக வளர்ச்சி (1981-82 முதல் 1983-84 முடிய , பக்கங்கள் 1 மற்றும் 2).

44. சென்னை பேரூராட்சிகளின் இயக்குநரது அறிக்கை

45. சென்னை பேரூராட்சிகளின் இயக்குநரின் அறிக்கை

46. பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை அறிக்கை

47. சென்னை, பேரூராட்சிகளின் இயக்குநர் அறிக்கை

48 மற்றும் 49:

சென்னை, பேரூராட்சிகளின் இயக்குநர் அறிக்கை

50. பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை, அறிக்கை நாள் 19-12-1998.

51. மாவட்ட பேரூராட்சிகள் அலுவலர், நாகர்கோவில், அறிக்கை நாள் 28-9-1988.

இயல்-15

கல்வி

முன்னுரை

"கல்வி" என்பது ஒருமொழி அல்லது மொழிகள், கலைகள் முதலியவற்றை திட்டமிட்டபடி கற்பித்தலென்பதாகும். அது பின்னர், பண்பாடு மற்றும் மன ஆற்றல் வளர்ச்சி ஆகியவற்றிற்கு வழிவகுக்கும். ஒரு மொழி அல்லது பகுதியில் கல்வி வளர்ச்சி முழுமையடைவதை அம்மொழிகள் மற்றும் பகுதிகளில் வெளியிடப்படும் இலக்கியங்களைப் பொறுத்தே கணக்கிட இயலும். சேர, சோழ, பாண்டியர்கள் ஆண்டு வந்த பண்டைத் தமிழ்நாடு, இலக்கிய முழுமையை சங்க காலத்திலேயே அடைந்திருந்ததெனில் மிகையில்லை (கி.பி. முதல் மூன்று நூற்றாண்டுகள்). சங்க காலத்தைப் பொறுத்தவரை, பல கருத்து மாறுபாடுகள் காணப்படினும் கி.பி. முதல் நூற்றாண்டிலிருந்து, மூன்றாம் நூற்றாண்டு வரையில் தமிழ்ச்சங்கங்கள் இயங்கின என்பதே மிகவும் ஏற்றுக் கொள்ளக்கூடிய கருத்தாகும்[1].

பாண்டிய மன்னர்கள், தமிழ்ச் சங்கங்களுக்குப் பெரிதும் ஆதரவு அளித்து வந்தார்கள். இந்தியாவின் தென்கோடி முனை, தற்போதுள்ள பகுதிக்கும் தெற்கே இருந்ததெனவும், அங்குதான் "தென் மதுரையும்", "கபாடபுரமும்" இருந்தனவென்பதும், அவ்விடங்களில்தான் முறையே, முதல் மற்றும் இரண்டாம் தமிழ்ச்சங்கங்கள் நடைபெற்றனவென்பதும் லெமூரியக் கொள்கையினை ஏற்கும் வரலாற்று அறிஞர்களின் கருத்தாகும். எனவே, முதல் இரண்டு தமிழ்ச்சங்கங்கள் கடலில் மூழ்கிய குமரிக் கண்டத்தில் நடந்திருக்கக்கூடும். தொன்மையான குமரிக்கண்டத்தின் ஒரு பகுதியே தற்போதைய கன்னியாகுமரி மாவட்டமென்பதும், எஞ்சிய பகுதி, கடலில் மூழ்கிவிட்டதென்பதும்தான் உண்மை நிலை.

அகத்தியர்

கடலில் மூழ்கிய குமரிக்கண்டத்தின் ஒரு பகுதியான தென் மதுரையில் நடைபெற்ற முதல் தமிழ்ச்சங்கத்திற்கு, மாமுனிவர் அகத்தியர் அணி செய்தார். தமிழ் மொழியின் முதல் இலக்கண நூலிற்கு அகத்திய மாமுனிவரே ஆசிரியராவார். இம்மாமுனிவரின் வாழ்க்கை, கன்னியாகுமரி மாவட்டத்துடன் பின்னிப் பிணைந்ததாகும். இவர் பொதிகை மலையில் வாழ்ந்ததாகக் கூறப்படுகிறது. கன்னியாகுமரிக்கு அருகிலுள்ள ஒரு சிற்றூர் இவரது பெயரால் "அகத்தீசுவரம்" என்று அழைக்கப்படுகிறது.

தொல்காப்பியர்

"தொல்காப்பியர்", அகத்திய மாமுனிவரின் முதன்மைச் சீடராகக் கருதப்படுகிறார். அவர் இரண்டாம் தமிழ்ச்சங்கத்தில் பங்கேற்ற முதன்மையான பெரும்புலவராவார். அவர் இயற்றிய காவியத்திற்குத் "தொல்காப்பியம்" எனப் பெயரிடப்பட்டது. "தொல்காப்பியம்" எனில், பண்டைய காவியம்" எனப் பொருள்படும். மாமுனிவர் அகத்தியரின் இலக்கண நூல் கிடைக்கப் பெறவில்லையாதலால், தொல்காப்பியமே, மிகப்பெரிய, மிகவும் சிறந்த பழமையான தமிழ் இலக்கணக் நூலாகத் திகழ்கிறது. தொல்காப்பியர் தற்போதைய கன்னியாகுமரி மாவட்டத்தில் வாழ்ந்ததாகக் கூறப்படுகிறது.

அக்காவியத்திற்கு நடுநிலை மதிப்பீடு அளிக்கவும், அதனை வெளியிடுவதற்கான இசைவினை அளிக்கவும், அதங்கோட்டு ஆசான் தலைமையிலான, நிலம் தருதிருவின் பாண்டியனின் அவையில் வைக்கப்பட்டதென தொல்காப்பியத்தின் உரையாசிரியரான பனம்பாரனர் தெரிவித்துள்ளார். கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டத்தில் அதங்கோடு ஒரு கிராமமென்பதும், அதங்கோட்டின் அருகில் காப்பிக்காடு மற்றொரு கிராமமென்பதும், நமது ஆர்வத்தைத் தூண்டுகிறது. "காப்பிக்காடு" என்பது "காப்பியக்குடி" என்பதிலிருந்து வருவிக்கப்பட்ட சொல்லாகும். இது தொல்காப்பியரின் உறைவிடமெனப் பொருள்படும். [1அ]. "காப்பியக்குடி" என்ற சொல் சிலப்பதிகாரத்தில் [2] குறிப்பிடப் பட்டுள்ளது. எனவே, இரண்டாம் தமிழ்ச்சங்க கால சிறப்புமிக்க தமிழ் அறிஞர், தொல்காப்பியர், அதங்கோட்டு ஆசான் இருவருமே, இம்மாவட்டத்தைச் சேர்ந்தவர்களென்பது புலனாகிறது[3].

திருவள்ளுவர்

தமிழர்களின் திருமறை (பைபிள்) என போற்றப்படும் "திருக்குறளின்" நூலாசிரியரான திருவள்ளுவர், கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த முட்டத்திற்கருகிலுள்ள திருநாயனார் குறிச்சியில் பிறந்தாரென கூறப்படுகிறது[4]. இக்கருத்து, பல சான்றுகளை அடிப்படையாகக் கொண்டதாகும். அவற்றில் பல சூழ்நிலைக்கொத்தவை. வள்ளுவநாடு என்ற பெயர் வள்ளுவன் கோடு என்று மருவி பின்னர் விளவங்கோடானதும், திருவள்ளுவ மாலையில் திருவள்ளுவரின் பெயரைக் குறிப்பிட்டிருப்பதும், திருவள்ளுவர் இம்மாவட்டத்தைச் சேர்ந்தவரென்பதற்கு சான்று பகர்கின்றன. ஆனால், வள்ளுவர் யார்? அவர் எச்சமுதாயப் பிரிவினைச் சார்ந்தவர்? அவர் வாழ்ந்த காலம் யாது? அவர் பிறந்த ஊர் எது? அவர் எச்சமயத்தைச் சார்ந்தவர் போன்ற வினாக்களுக்கு இதுவரை ஆதாரபூர்வமான விடைகள் அளிக்கப்பட வில்லையென 1953-ம் ஆண்டு திருக்குறள் மீதான பரிமேலழகர் உரையினை வெளியிட்டோர் கூறியிருப்பதையும் நாம் இங்கே நினைவு

கொள்ள வேண்டியுள்ளது. சிலர், திருவள்ளுவர் சென்னையைச் சேர்ந்தவர் மைலாப்பூரில் பிறந்தாரெனவும், வேறு சிலர் திருவள்ளுவர், திருச்சிராப்பள்ளி மாவட்டம் பெரம்பலூரில் பிறந்தாரெனவும் கூறுகின்றனர். எனவே, இது மேலும் தீவிரமாக ஆய்வு செய்யவேண்டிய பொருளாகும்.

ஔவையார்

பெரும் புலமை படைத்த பெண் கவிஞர் ஔவையார். கன்னியாகுமரி மாவட்டத்தின் ஒரு பகுதியான நாஞ்சில் நாட்டுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவராயிருந்தார். மாநிலத்தின் பிற பகுதிகளைப் போலன்றி, இம்மாவட்டத்தில் ஔவையாருக்கு மூன்று திருக்கோவில்கள் எழுப்பப்பட்டுள்ளன. நாஞ்சில் நாட்டினை ஆண்ட நாஞ்சில் வள்ளுவன் என்பாரைப் புகழ்ந்து அவர் பாடியுள்ளார். விளவங்கோடு பகுதியில், ஔவையை வழிபடுவதென்பது ஒரு தனி வழிபாட்டு மரபாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. இது "ஔவை விரதம்" என உள்ளூர் மக்களால் அழைக்கப்படுகிறது. நாஞ்சில் நாட்டைச் சேர்ந்த "ஒருச்சிரைப் பெரியனார்", கவிஞரும், பாண்டிய மன்னரும் இம் மாவட்டத்தில் தனது பெயரில் பூதபாண்டி என்ற கிராமத்தையுடைய "பூத பாண்டியன்" பெரும்குன்றார், இம்மாவட்டத்திலுள்ள எரணியல் முட்டத்தைச் சார்ந்த மலைபடு கடாம் என்ற சங்க நூலின் ஆசிரியரான "பெரும் கௌசிகனார்", "மருங்கூர் கிழார் கண்ணனார்", மருங்கூர் பட்டினத்து சேந்தன் குமரனார்" மற்றும் "மருங்கூர் பாகை ஏத்தம் பூதனார்" ஆகியோர் இம்மாவட்டத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்ட சங்ககால புலவர்கள் மற்றும் கற்றறிவாளர்களான மன்னர்கள் ஆவர்[5].

சங்ககாலத்தில் கல்வியின் நிலை

ஆண் மற்றும் பெண் கவிஞர்கள், கற்றறிவாளர்கள் மற்றும் கற்றறிவாளர் மன்னர்கள் ஆகியோர் வாழ்ந்த தமிழ்ச்சங்கக் காலத்தில், தமிழ் இலக்கியமும், மொழியும் மிக உயர்நிலையை அடைந்தன. ஆனால் பொதுவாக நாட்டில், கல்வி முறையாக போதிக்கப்படவில்லை. அக்கறையுள்ள மக்கள், "குரு-சீடர்" (குருகுலவாசம்) முறையில், அறிஞர்களிடம் கல்வி பயின்றனர்.

சங்ககாலத்தில் தமிழர்கள்[6] துணிச்சல் மிக்கவர்களாகவும், அதே சமயம் மென்மையான இதயம் படைத்தவர்களாகவும், மனவெழுச்சி மிகுந்தவர்களாகவும், உவகையளிக்கும் வாழ்க்கையில் அக்கறை கொண்டவர்களாகவும் திகழ்ந்தார்கள். அவர்கள் கவிதையை இசையாக வடிக்கும் கலையிலும், நடனத்திலும் நல்ல ஈடுபாடு கொண்டவர்களாக இருந்தனர். தற்போதைய கன்னியாகுமரி மாவட்டத்தினை அப்போது ஆண்டு வந்த சேர மன்னர்கள், கவிதைகள் மற்றும் பாட்டுகள் ஆகியவற்றைப் பெரிதும் விரும்பினர். எனவே, கவிஞர்களும், இசைக் கலைஞர்களும் மன்னர்களுடன் எளிதில் ஈடுபாடு கொள்ள முடிந்தது.

அவர்களில் ஆண், பெண் இருபாலருமிருந்தனர். அவர்கள் பல்வேறு வகைப்பட்ட சமுதாயப் பிரிவுகளைச் சேர்ந்தவராயிருந்தனர். சாதி, சமய, பால் வேறுபாடின்றி அவர்களுக்கு பரிசுகள் வாரி வழங்கப்பட்டன.

சங்க இலக்கியங்களில் குறிப்பிட்டுள்ள யாழின் வகைகள், நரம்பு மீட்டும் இசைக்கருவி, நாடு சுற்றிப் பாடல்களை இயற்றிப்பாடி மகிழ்விக்கும் "பாணர்களின்" குழு, ஆகியவற்றை இணைத்து நோக்கின், அப்போது காலமும் சூழ்நிலையில் இசைக்கலை நல்ல வளம்பெற, உகந்ததாக இருந்திருக்கின்றன. பாடற்குழுவினருக்கு நீதி மன்றங்களில் மட்டுமல்லாது, நகர்ப்புறத்திலும் ஆதரவு பெருகியது. கிராமப்புறப் பகுதிகளில், பொழுதுபோக்கிற்காக பல்வேறு இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுவதைக் காணமுடிகிறது. சங்க காலத்துக் கவிதைகள் உயிரோட்டமுள்ளவை; மேலும், அவை பண்டைத் தமிழ் சமுதாயத்தினைப் படம்பிடித்துக் காட்டுகின்றன. பல சேர மன்னர்களும், மன்னர்கள் குடும்பத்தைச் சார்ந்த உறுப்பினர்களும் சங்க காலத்துக் கவிஞர்களின் நன்மதிப்பைப் பெற்றிருந்தனர்[7].

சங்க காலத்திலேயே தமிழர்கள், கல்வியின் தேவையை உணரத் தொடங்கினர்[8]. கல்வியின் மதிப்பு குறித்து, திருக்குறளின் 40 முதல் 43 முடிய உள்ள இயல்களில், திருவள்ளுவர் விளக்கிக் காட்டியுள்ளார். ஒருசில முக்கிய குறட்பாக்களை இங்கே காணலாம்:

"கண்ணுடையார் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்" (393)

"அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண்" (421)

"அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்" (430)

அத்துடன் அவர் நிற்கவில்லை. கீழ்க்குறிப்பிட்ட குறளில் அறிவு வளர்ச்சிக்கு அவர் முக்கியத்துவத்தை அளிக்கிறார்:

"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு" (396)

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை" (400)

"யாதானும் நாடாமல் ஊராமால் என்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு" (397)

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக" (391)

நூல்களைப் படித்து, கல்வி அறிவினை வளர்த்துக் கொள்வதை விட, காதால் கேட்டு அறிவை வளர்த்துக் கொள்வதே சிறந்ததென திருவள்ளுவர் உறுதிபடக் கூறுகிறார்:

"செவியுணவிற் கேள்வி யுடையார் அவியுணவின்
ஆன்றாரோ டொப்பர் நிலத்து" (413)

"கற்றில னாயினும் கேட்க அஃதொருவற்கு
ஒற்கத்தின் ஊற்றாந் துணை" (414)

கல்வியின் இன்றியமையாமை குறித்தும், அனைவரும் கல்வியறிவு பெறவேண்டும் என்பது குறித்தும், இந்த குறட்பாக்களின் வாயிலாக திருவள்ளுவர் தெளிவுபடக் கூறியிருக்கிறார். ஆனால், இவ்விதியமைப்புகள் மன்னர்களுக்கானவையென்றே திருக்குறளின் புகழ்பெற்ற உரையாசிரியர் பரிமேலழகர் கற்பனை செய்தார். ஆனால், இக்கருத்து ஏற்புடையதன்று. கல்வியைப் பொருத்து, திருவள்ளுவரின் அறுதியுரை, மன்னர்களிலிருந்து மக்கள்வரை அனைவருக்குமே உரித்தான பொதுக்கருத்துடையவையே. கல்லாதவர், உயர்ந்த குடியில் பிறந்தவராக இருப்பினும், தாழ்ந்த குடியில் பிறந்திருந்தும் கல்வி கற்றவரைப் போன்ற பெருமை இல்லாதவரேயென்ற திருவள்ளுவரின் கூற்றை ஆய்ந்து நோக்கின் கல்வி தொடர்பான அவரது விதியமைப்பு மன்னர்களுக்காக மட்டும் ஏற்படுத்தப்பட்டதெனக்கொள்ள இயலாது.

மேலும், சங்கக்காலத்தில் பல்வேறு வகைப்பட்ட மக்களால் இயற்றப்பட்ட பாடல்களை நோக்குங்கால் அப்போது கல்வி மிகவும் புகழ்பெற்றிருந்ததைக் காணமுடிகிறது. சங்க காலத்திற்குப் பிந்தைய காலங்களிலும் கல்வி தொடர்பான செயல்பாடுகள் தெய்வின்றி தொடர்ந்தன. பதினென்கீழ்க்கணக்கு நூல்களுள் சிறந்தவையான "நாலடி நானூறு", "நான்மணிக்கடிகை", "ஏலாதி, திரிகடுகம்" மற்றும் "சிறுபஞ்சமூலம்" ஆகியவற்றில் போதிக்க வேண்டிய பொருட்கள், ஆசிரியர்களின் கல்வித் தகுதி தொடர்பான பிற பல செய்திகள் குறித்து விதியமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பெற்றோர், தங்களது குழந்தைகளின் கல்விக்கு முன்னுரிமை அளித்தனர். தன் மகனுக்கு நல்ல கல்வியை அளித்து, அவனை அறிவாளியாக உருவாக்குவது, தந்தையின் கடமையாகும். ("சான்றோனாக்குதல் தந்தைக்குகடனே" புறம் : 312) என புறநானூறுத் தொகுப்பில் ஒரு பாடல் கூறுகிறது. தமிழர்களின் இல்லங்கள், அறிவு வளர்ச்சி மற்றும் பண்பு ஆகியவற்றிற்குத் தகுந்த ஒரு சூழ்நிலையை உருவாக்கித் தந்தன ; தந்தை, தனது மகனுக்கு நல்லதொரு கல்வியை அளிப்பதனைத் தன் கடமையாகக் கருதினார்; தாய், முதுமொழிக்கேற்ப, துணிவு, பெருந்தகைமை போன்ற சிறந்த பண்புகளை தனது குழந்தைகளின் மனதில் ஆழப் பதிய வைத்தார் ; மகனை உயர்ந்தவனாக

குவதே, தாயின் பேராவலாக இருந்தது. தன் மகனை நற்பண்பு நிறைந்தவன் எனப் பிறர் சொல்லக் கேள்வியுற்ற தாய், தான் அவனைப் பெற்ற காலத்து உற்ற மகிழ்ச்சியை விடப் பெரிதும் மகிழ்வாள் எனத் திருவள்ளுவர் மிகப் பொருத்தமாகக் கூறியுள்ளார் ("ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோர் எனக்கேட்ட தாய்" - குறள் 69).

"பயால் பள்ளிகள்" என அழைக்கப்பட்ட மரபார்ந்த "திண்ணைப் பள்ளிகள் தனிப்பட்ட ஆசிரியர்களால் நடத்தப்பட்டு வந்தன. "பயால்" என்பது தாழ்வாரம் போன்ற திண்ணை அல்லது மேடையாகும். சில இனங்களில், கொட்டகைகள் அல்லது பந்தல்கள் ஆசிரியரது வீட்டினருகே நிறுவப்பட்டன. மன்றம் போன்ற பொது தங்கும் விடுதிகளிலும் மாணவர்கள் தங்கி பயின்றதாக நாம் அறிய முடிகிறது. சில நேரங்களில், இம்மன்றங்களும் பள்ளிகளாகப் பயன்படுத்தப்பட்டன.

எனினும், ஒவ்வொரு ஊரிலும் நடத்தப்பட்டு வந்த பள்ளிகளின் எண்ணிக்கை மற்றும் ஒவ்வொரு பள்ளியிலும் கல்வி பயின்ற மாணவர்களின் எண்ணிக்கை போன்ற புள்ளி விவரங்களை சேகரிக்க இயலவில்லை. சங்கக் காலத்திலோ அல்லது அதற்கு முற் காலத்திலோ, பல்வேறு இயற்கையமைப்புகளைச் சார்ந்த பகுதிகளான, பாலை, நெய்தல் மற்றும் கடற்கரைப் பகுதிகள் ஆகியவற்றில் பள்ளிகள் இயங்கி வந்ததாகச் சான்றுகளில்லையெனக் கூறலாம். வரலாற்றுக் காலத்தைப் பொருத்தவரை, இலக்கியங்களை ஆதாரமாகக் கொண்டு கணக்கிட்டுப் பார்த்தால்[9] உயர் வகுப்புகளைச் சார்ந்தோரான பிராமணர்கள், மன்னர்கள் மற்றும் மன்னர் குடும்பத்தைச் சார்ந்தோர், வைசியர்கள் மற்றும் வெள்ளாளர்கள் ஆகியோருக்கு கல்வி அளிக்கப்பட்டது. கைவினைஞர்களான பொற்கொல்லர்கள், தச்சர்கள் ஆகியோரும் கல்வி கற்றார்கள், மருதத்தில் மக்கள் பலரும், முல்லையில் சிலரும் அவர்களது குழந்தைகளைத் திண்ணைப் பள்ளிக்கு அனுப்பி வைத்தனர். உயர்கல்வி, குறிப்பாக சமயத்தைப் பற்றியது, பிராமணர்களின் ஏகபோகத் தனி உரிமையாக இருந்து வந்தது [10]. வேதம் தொடர்புள்ள கோட்பாட்டுத் தொகுதிகள், சூத்திரங்கள், உபநிஷதங்கள் வீரகாவியங்கள் மற்றும் தர்ம சாத்திரங்கள் ஆகியவை, அச்சமுதாயத்தைச் சார்ந்த கற்றறிந்த ஆசிரியர்களால் பிராமணர்களுக்கு போதிக்கப்பட்டன. பிற சமுதாய வகுப்புகளைச் சார்ந்தோருக்கு, கல்விக்குரிய பாடத்திட்டம், பொது சிறப்பியல்புகளைக் கொண்டதாயிருந்தது. போர்முனை இயந்திரம் தொடர்பான தொழில்கள் ஆகிய தொழில் நுட்பம் வாய்ந்த கலைகளில் ஈடுபாடு கொள்வோர்க்கு, அவரவர்களது தொழில்களுக்கேற்றவாறு, தனிப்பயிற்சி அளிக்கப்பட்டது. கல்வியின் துரதிர்ஷ்டவசமான அம்சம் (குறிப்பாக, உயர்கல்வி வகை) யாதெனில், அப்போது நடைமுறையிலிருந்த சமுதாய அடுக்கமைப்பால் அது நிர்வகிக்கப்பட்டதேயாகும். அண்மைக்காலம் வரை நடைமுறையிலிருந்த இந்நிலை சமுதாயத்தைப்

பொருத்தவரை ஒரு சரிசம நிலையற்ற வளர்ச்சிக்கு வழிவகுத்தது. அனைத்துத்தரப்பு மகளிரும், துவக்கக் கல்வி கூட பெறவில்லையென அறுதியிட்டுக் கூறலாம். சங்க காலத்தில் தோன்றிய ஒருசில பெண் கவிஞர்கள், தமிழ் நாட்டிலுள்ள அனைத்துப் பெண்கள் சார்பாக, பிரதிநிதித்துவம் அளித்ததாகக் கருத இயலாது. பிற்பட்ட வரலாற்றுக்கால நிலையினைக் கூர்ந்து நோக்கின், கல்வி, ஒருசில குறிப்பிட்ட வகுப்பைச் சார்ந்தோரின் உரிமைப்பேறாக இருந்து வந்ததாகவே நாம் முடிவெடுக்க வேண்டியுள்ளது.

திண்ணைப் பள்ளிகளில், மொழி, இலக்கியம் மற்றும் கணிதம் ஆகியவற்றிற்கு அடித்தளம் அமைக்கப்பட்டது. மொழியின் எழுத்துத் தொகுதி, "நெடுங்கணக்கு" என அழைக்கப்பட்டது. அதனால்தான், ஆசிரியர்கள் "கணக்காயர்" என அழைக்கலாயினர். வாய்மொழிக் கல்வி முக்கிய அங்கம் வகித்தது. அக்காலக் கல்விமுறையின் நோக்கம், நினைவாற்றல் பயிற்சியேயாகும். எழுத்தாணி மூலம் உலர்ந்த பனை ஓலையில் எழுத்துக்கள் வரையப்பட்டன. அண்மை காலம் வரையில் கூட, தமிழ்நாட்டில் பனையோலையில் எழுதும் பழக்கம் நடைமுறையிலிருந்து வந்தது. பனையோலையில் நாலடியிலேயே யாவும் எழுதப்பட்டன. அது, சங்க காலத்திலேயே பொதுவாகக் கடைப்பிடிக்கப்பட்டதென்பதில் ஐயமில்லை[11]. கல்வி கற்கும் காலத்தில் சில மாணவர்களுக்கு இலவச உணவு அளிக்கப்பட்டது. சிறுவர்களுக்கு, எழுதுவதற்கான துவக்கப் பயிற்சி, தரையில் பரப்பி வைத்துள்ள மணலில், அவர்களை எழுதச் செய்து, அளிக்கப்பட்டது. பயன்படுத்தப்படும் மொழி, ஐயமின்றித் தமிழாகவே இருந்தது. அக்காலத்தில் பயன்படுத்தப்பட்ட கைப்படி யெழுத்து, மாறுபட்ட கருத்தை அளிப்பதாக இருந்தது. தற்போது நடைமுறையிலுள்ள தமிழ் கைப்படியெழுத்து, சங்கக்காலத்திலும் பழக்கத்திலிருந்ததா? தமிழர்கள் அவர்களுக்குள் வளர்த்துக் கொண்ட பாங்கின் அடிப்படையில் வளர்ந்த கைப்படியெழுத்தா? அல்லது, தமிழ்நாட்டில் வெளியே நடைமுறையிலிருந்து, பின்னர் தொடர்ந்து தமிழ்நாட்டில் கடைப்பிடிக்கப்பட்டதா? விரிவாக ஆராயுங்கால், இது தொடர்பாக இரு கருத்துக்கள் நிலவுகின்றன. தமிழ் கைப்படியெழுத்து அதன் முன்னோடியான "வட்டெழுத்தும்", "பிரம்மி"யின் மரபு மூலத் தருவிப்பு எனவும், அது தனது சுழற்சியில் வட இந்தியாவிலிருந்தோ, இந்தியாவுக்கு வெளியிலிருந்தோ இரவல் வாங்கப்பட்டதெனவும், கூறப்படும் கருத்து ஒன்று நிலவுகிறது. தமிழ் கைப்படியெழுத்து வட்டெழுத்தினின்றும் மலர்ந்ததெனவும், வட்டெழுத்து தமிழ்நாட்டிலேயே தோன்றியதெனவும், அது 'பிரம்மி'யிலிருந்தோ, கிரந்தத்திலிருந்தோ வெளிப்பட்ட மரபு வரவல்ல எனவும் கூறப்படும் மற்றொரு மாறுபட்ட கருத்தும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், வட்டெழுத்து கி.பி.7ஆம் நூற்றாண்டிற்கு முன்னர் நடைமுறையிலிருந்ததல்ல என்ற கருத்தினை

நாம் முக்கியமாக நினைவிற்கொள்ள வேண்டியுள்ளது. ஒரு அண்டை காலக்கருத்து யாதெனில், "சானவக்ஞுகான சுத்தா" என்ற கி.மு. முதலாம் நூற்றாண்டைச் சார்ந்த சமண, சமய நூலில் குறிப்பிடப்பட்டுள்ள "தமிலி" எனும் கைப்படியெழுத்தின் மரபு மூலத்தருவிப்பு தான் "தமிழ்" என்பதாகும்.

ஆசிரியர்

ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு ஆசிரியர் வைத்துக் கொள்ளும் முக்கியத்துவத்தை "திரிகடுக"த்தின் நூலாசிரியர் அங்கீகரித்துள்ளார். ஆசிரியர் 'கணக்காயர்' என அழைக்கப்பட்டார். சங்ககாலத்திற்குப் பின்னர், அவர் "உபாத்தியாயர்" என அழைக்கப்படலானார். பெரிய அறிவாளியும், பல இலக்கிய நூல்களைப் படைத்தவருமாகிய ஒருவர், "ஆசிரியர்" என அழைக்கப்பட்டார். பல மாணவர்களுக்கு ஆசிரியரான ஒருவர் "குலபதி" என போற்றப்படலானார்.

புலவர்களும், படித்த அறிஞர்களும் பல சீடர்களுக்குப் பயிற்சியளித்தனர். படித்த அறிஞர்கள், தகுதியுள்ள சில இளைஞர்களை அவர்களது சீடர்களாக அமர்த்திக் கொண்டார்களென மரபு சார்ந்த ஆவணங்களினின்றும் தெரிய வருகிறது. சங்கக் காலத்தைச் சேர்ந்த சில கவிஞர்களே தங்களுக்கென சீடர்களை வைத்துக் கொண்ட விவரம் தெரியவருகிறது. மாணவர்களாலும், மற்றோராலும் ஆசிரியர்கள் பெரிதும் மதிக்கப்பட்டனர். தமிழர்கள், ஆசிரியர்களையும், படித்த அறிஞர்களையும் வெகுவாக மதித்துப் போற்றும் மரபினைக் கையாண்டு வந்தது.

சங்ககாலத்தில், சில இளைஞர்கள், திருமணமான பின்னரும், கல்வியின் பொருட்டு, தங்களது வீடுகளை விட்டு வெளியே சென்று வந்தனர். பண்டைக்கால தமிழர்கள், சிறு வயதிலேயே கல்வியைத் துவக்கிடும் முக்கியத்துவத்தை உணர்ந்து பாராட்டி வந்தனர். "ஆத்திச்சூடி"யினைப் படைத்த ஔவையாரின் மூதுரையான "இளமையிற் கல்" என்பதை சொல்லிலும், செயலிலும் அவர்கள் கடைப்பிடித்தனர். இளமையில் கற்பது, குன்றில் பொறிக்கப்பட்ட எழுத்துபோல் மனதில் நன்று பதியக்கூடியதென்பது, சங்க காலப் பாடலின் உட்பொருளாகும்.

அக்காலத்தில், தமிழ்நாட்டினில் குறிப்பாகக் கன்னியாகுமரி மாவட்டத்தில் மக்களின் கல்வி அறிவும், படிப்புத் திறமையும் மிக உயர்வான நிலையிலிருந்ததாக, சங்கக்கால இலக்கியங்களினின்றும் தெரிய வருகிறது. மூன்று தமிழ்ச் சங்கங்களில் முதலிரண்டு தமிழ்ச் சங்கங்களும் கடலில் மூழ்கிவிட்ட மாவட்டத்தின் ஒரு பகுதியில் நடைபெற்றதிலிருந்து, கல்வியறிவு பற்றிய இக்கூற்று, மெய்ப்பிக்கப் படுகிறது.

பாண்டியர்கள், சோழர்கள் மற்றும் ஆய் மன்னர்கள் ஆகியோர் காலத்துக் கல்விநிலை

சங்ககாலத்தில் சேரர்கள் தற்கால கன்னியாகுமரி மாவட்டத்தின் சில பகுதிகளைத் தங்கள் ஆளுகையில் வைத்துக் கொண்டிருந்தனர். பிற பகுதிகள் பாண்டியர் ஆட்சி எல்லைக்குட்பட்டிருந்தன. சங்ககால சேரர்களுக்குப் பின்னர், தற்போதைய கன்னியாகுமரி மாவட்டத்தின் முழுப்பகுதியும் பாண்டியர் ஆளுகையின் கீழ் வந்தன. அப்போது ஆய்குல ஆட்சியர்கள், சிலகாலம் தன்னாட்சி உரிமை பெற்றவர்களாகவும், சில காலம் பாண்டியர்களிடம் மேலாண்மையை ஏற்றுக் கொண்டவர்களாகவும் இயங்கி வந்தனர்.

பாண்டியர்கள், இலக்கிய வாணர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும் தங்களது நல்லாதரவினை அளித்து வந்தனர். மன்னர்களில் பலரே, புலவர்களாக இருந்தனர்.

"ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்" எனும் பாண்டிய மன்னர், கட்டணம் செலுத்தியோ அல்லது ஆசிரியர்களுக்குப் பணிவிடை செய்தோ கல்வி கற்குமாறு மக்களுக்கு ஒரு பாடலில் அறிவுரை வழங்கினார். (புறம் : 183) உண்மையிலேயே ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனின் , கல்வியின் மதிப்பு இப்பாடலில் உணர்த்தப் பட்டிருப்பதால், இப்பாடல் மிக முக்கியத்துவம் பெறுகிறது. மேலும் கீழ் சமுதாய வகுப்பைச் சார்ந்த ஒருவன் பிறரைவிட நன்றாகக் கல்வி கற்றிருந்தால் மேல் சமுதாய வகுப்பைச் சேர்ந்த உறுப்பினர்களும் அவனிடம் கல்வி கற்க வேண்டுமென தெளிவுபடக் கூறியிருக்கிறார். கல்வி என்பது உண்மையிலேயே சாதி, சமய வேறுபாடுகளுக்கெல்லாம் அப்பாற்பட்ட குறிக்கோளின் வடிவான மன்னரின் இப்பாடல் எப்பொழுதுமே நினைவு கூறத்தக்கதாகும்:

உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றை நிலைமுனியாது, கற்றல் நன்றே ;
பிறப்பு ஓர் அன்ன உடன் வயிற்றுள்ளும்,
சிறப்பின் பாலால், தாயும் மனம் திரியும்
ஒரு குடிப்பிறந்த பல்லோருள்ளும்,
'மூத்தோன் வருக' என்னாது, அவருள்
அறிவுரையோன் ஆறு அரசும் செல்லும்,
வேற்றுமை தெரிந்த நாற்பாருள்ளும்,
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்,
மேற்பால் ஒருவனும் அவன் கண் படுமே.

(புறம் 183-ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்)

அப்பகுதியிலுள்ள, கோவிலில் இணைந்து நூல் நிலையத்திற்கு (சரசுவதி பந்த்ரா) நிலம் வழங்கப்பட்டது குறித்தும் மற்றும் கோவிலில் வேதங்கள் மற்றும் புராணங்களைப் படித்தல் மற்றும் ஒப்புவித்தல்

ஆகியவற்றிற்காக அறக்கொடை அளிக்கப்பட்டது குறித்தும் சேரன் மாதேவி கிராமத்திலுள்ள பாண்டியர் கால கல்வெட்டு ஒன்றில் பதியப்பட்டுள்ளது[12].

பண்டைய தென்னிந்தியாவில் (பாண்டியர்கள், சோழர்கள் மற்றும் விசய நகர மன்னர்கள் காலத்தில்) கடைப்பிடிக்கப்பட்டு வந்த கல்விமுறை குறித்து, திரு. கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி, இவ்வாறு எழுதுகிறார்[13].

பல்வேறு கல்வி முறைகளில், உயர் கல்வித்தொடர்பான நேர் தகவல்களை, பொதுமக்கள் சார்ந்த கல்விமுறையை விட வடமொழியில் (சமஸ்கிருதம்) தான் நாம் அடைய முடிகிறது. இவற்றில் வடமொழி உயர் கல்வி குறித்து, தாராளமாக அறக்கொடை வழங்கப்பட்டதென்ற தகவல்களைக் கல்வெட்டுகள் நமக்கு அளிக்கின்றன. இதிலிருந்து கிராம ஆசிரியர் மற்றும் கிராமத்திலுள்ள சாகுபடி நிலத்தில் அவர்பெற்ற பங்கு, தமிழ், மராத்தி மற்றும் பிரக்ருதி ஆகியவை போதிப்பதற்காக வழங்கப்பட்ட அறக்கொடை ஆகியவை குறித்து நாம் ஊகிக்க முடிகிறது.

தொழில்நுட்ப மற்றும் வாழ்க்கைத் தொழில் பயிற்சி, ஒரு சொந்த அலுவல் என நாம் கூறுவதுபோன்று தந்தை தனது குழந்தைகளின் படிப்பு அவர்களின் வாழ்க்கைத் தொழில் ஆகியவற்றை இணையாக செயல்படுத்துகிறார். புதிய திறமை மற்றும் தெரிந்த ஆற்றல் இவற்றை வெளிப்படுத்திட, ஒரு திருக்கோவில் அல்லது அரண்மனை கட்டுவது முக்கியத் தருணமாகும் ; தொன்மை கால நினைவுச் சின்னங்களை நோக்கும்போதும், திறன் வாய்ந்த கைவினைஞர்கள் எக்காலத்திலும் தங்களது பணியை செவ்வனே ஆற்றிவந்துள்ளனரென்பது கைகூடு. கல்லிலும், செப்புத் தகட்டிலும் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுக்கள் அவற்றைப் பொறித்த கலைஞர்களின் எழுத்தறிவு மற்றும் கைத்திறம் ஆகியவற்றை நாம் போற்றக் கடமைப்பட்டிருக்கிறோம். பல கல்வெட்டுகளில் இலக்கியப் புலமை வாய்ந்த தரம், மற்றும் பல மொழிகளில் வெளியிடப்பட்டுள்ள இலக்கியங்கள் ஆகியவற்றை நோக்குங்கால் அப்பகுதி மக்களின் பேச்சுநடை, நிருவாகத் துறையிலும், கல்வித்துறையிலும் அவற்றின் பயன்பாடு ஆகியவை ஒருபோதும் புறக்கணிக்கப்படவில்லையென்பது தெளிவாகிறது. இச்சாதனைகளை எய்த, நாம் மேற்கொண்ட செயற்பாடுகள் குறித்து, - குறிப்பாக, மடங்கள் பிற்காலத்தில் பொதுமக்கள் பேச்சுமொழியினைப் படிப்பதற்கும், கல்வியை மேம்படுத்துவதற்கும் ஆதரவு காட்டியது போன்று பண்டைக் காலத்தில் (மடங்கள்) அவ்வளவு அதிக அளவில் பெருகாத காரணத்தால், போதிய அனுபவப் பழக்க அறிவு நம்மிடம் நிறைவாக இல்லையென்பதே இதன் பொருளாகும். கல்வியின் மூன்று முக்கியப் பிரிவுகளான, "படித்தல்", "எழுதுதல்" மற்றும் "கணிதம்" ஆகியவை, கிராமப் பள்ளிகளில் கற்றுக் கொடுக்கப்பட்டன. அப்பள்ளிகள் மர நிழலிலோ அல்லது

திருக்கோவில்களின் தாழ்வாரங்களிலோ நடத்தப்பட்டன ; கிராம ஆசிரியர், கிராம அலுவலர்களில் ஒருவராகப் பணியாற்றினார். கிராம அலுவலர்கள், அவர்களுக்குரிய பணிகளை முறையாக ஆற்றி முடிக்க வேண்டுமென்ற நிபந்தனையின் பேரில் அவர்களுக்கு கிராமத்தில் நிலங்கள் அடமானம் செய்யப்பட்டிருந்தன. இத்தாலிய நாட்டுப் பயணியாகிய பிட்ரோ டெல்லெர் வாலோ (1623) கிராமப் பள்ளிகளைப் பற்றியும், அவர்கள் பின்பற்றிய கற்பிக்கும் வழிமுறைகள் குறித்தும், ஒரு முனைப்பான குறிப்பினை அளித்துள்ளார். பொருளுணரா மனப்பாடம், அண்மைக் காலம் வரை முழுவேகத்தில் நடைமுறையிலிருந்த, - தற்போது கூட சில மிகச்சிறிய கிராமங்களில் இன்னமும் முடிவுராது நடைமுறையிலுள்ள, - தரையில் தரமான மணலைப் பரப்பி எழுதும் முறை, ஆகியவை அதனில் அடங்கும். "ஹனூரில் பெண்களுக்குக் கற்பித்திட 13 பள்ளிகளும், ஆண்களுக்குக் கற்பித்திட 23 பள்ளிகளும் உள்ளன. இதனை, நான் வேறெங்கும் கண்டதில்லை" என இபன்படூடா (1333-45) பதிவு செய்துள்ளார். மதுரையில் 10,000 மாணவர்கள் இறைமையியல் மற்றும் தத்துவப் பேராசிரியர்களிடம் கல்வி பயிலச் சென்றதாக 1610ஆம் ஆண்டு கடிதத்தில் இராபர்ட் டீ நோபிலி கூறியுள்ளார். கிறித்தவ சமயப் பரப்பாளர்கள் வந்த பின்னர், அவர்கள் பள்ளிகளையும், மருத்துவ மனைகளையும் நிறுவினார்கள். இவை, சமய நல்வாழ்வுக் கோட்பாடு களை பரப்பிட ஒரு இடைகழியாக அமைந்தன.

புராணங்களின் வீர காவியங்களை கோவில்களில், ஒப்புவித்தல் (பாராயணம்) மற்றும் விரிவுரையாற்றுதல் ஆகியவை வாயிலாக விளக்கிட அறக்கொடை அளிக்கப்பட்டு, அவ்வாறாக, நாடு முழுமையும், முதியோர் கல்வி பரப்பப்பட்டது. ஒரு அறிவுத்திறம் படைத்த மற்றும் மக்கள் போற்றும் விரித்துரைப்பவர், அவரது உரைமூலத்திற்கு, மிக அபூர்வமாக கட்டுப்பட்டவராயிருந்தார் ; ஆனால், பார்வையாளர்களுக்கு உடனுக்குடன் கற்பித்து, தற்கால நடைமுறைகள் தொடர்பான திறமிக்க விளக்கக் குறிப்பு அளிப்பது உள்ளிட்ட, பல்வேறு வகைப்பட்ட தலைப்புகள் குறித்து விளக்கி, வேடிக்கைகள் மூலம் அவர்களை மனங்குளிரச் செய்து வந்தார். மக்கள் விரும்பும் இவ்வகையான கற்பிக்கும் முறை, இன்றுகூட சில இடங்களில் நடைமுறையிலிருந்து வருகிறது. கோவில்களில் பலர் சேர்ந்து, தெய்வீகப் பாடல்களை இசைத்து, கூட்டு வழிபாட்டில் ஈடுபட்டு வந்தார்கள். இக்கூட்டு வழிபாட்டுக்குழு, இதற்காகவே பராமரிக்கப்பட்டு வந்தது. கூட்டு வழிபாட்டிற்காக, சிறுவர்களுக்கும் பள்ளிகளில் பயிற்சியளிக்கப்பட்டது. அதே நேரத்தில், பள்ளியில் பொதுவாக கணிதம் கற்பிக்கப்பட்ட மற்றொருபுறம் சிறுவர்கள் சேர்க்கப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கதாகும். கணிதம் தவிர, எங்கெங்கு சமண சமயப் பள்ளிகளும், புத்த விகாரங்களும் இருந்தனவோ, அவை மக்களுக்கு கல்வி அளிப்பதில், முக்கியப் பங்காற்றி வந்தன. கல்வியில் அனைத்துப் பிரிவுகள்

தொடர்பாகவும், பல நூல்கள் அடங்கிய நூல் நிலையங்களை அவை பராமரித்து வந்தன. அந்நூல்களினின்றும் அப்போதைக்கப்போது, பிரதிகள் தயாரிக்கப்பட்டன.

சமஸ்கிருதம், பயிலுவதில் சில விதிவிலக்குகளிருந்த போதிலும் பிராமணர்களின் ஏகபோக உரிமையாக இருந்து வந்தது. அது, குறிப்பாக பெரிய தனி அறக்கொடை மூலம் ஊக்குவிக்கப்பட்டது. சில சமயங்களில் நான்கு மற்றும் வேறுசில சமயங்களில் பதினெட்டு பொருள்கள் படிப்பதற்காக கணக்கிட்டுத் தொகுத்தளிக்கப்பட்டன. தத்துவம், வேதம், பொருளாதாரம் மற்றும் அரசியல் ஆகியவை முதல் நான்கு பொருள்களாகும். இத்தொகுதி மன்னர்களுக்குப் பொருத்தமானதாக இருந்தது. இது தொடர்பாக, கௌடில்யரின் அர்த்த சாத்திரத்தில் விளக்கப்பட்டுள்ளது. நான்கு வேதங்கள், ஆறு அங்கங்கள் (துணைமையானவை), ஒலியியல், செய்யுளமைப்பியல், இலக்கணம், சொல்லாக்க விளக்கம், வானியல் மற்றும் சடங்குமுறை, புராணம், அளவை நூல் பொருளுரை விளக்கம் மற்றும் சட்டம் (தர்ம சாத்திரம்) ஆகியவை 14 வித்தைகள் ஆகும். இவற்றுடன், ஆயுர்வேதம் (மருத்துவம்), (இடைப்படு காலத்திய) வேதியியல், இசை மற்றும் அர்த்த சாத்திரம் ஆகியவை, மேலும் சில பொருள்களாகும். இவற்றில் பலவற்றைக் கற்ற பிராமணர்கள், இராச குருக்களாகப் (மன்னர்களின் ஆசிரியர்கள்) பணியாற்றினர். ஒவ்வொரு கிராமம் மற்றும் நகரத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறை பற்றி, ஆன்மீகத் துறையில் அவர்கள் பயனடையச் செய்யும் வகையில், போதிய விவரங்களைப் பரப்பி வந்தனர். அவர்கள் விரும்பிய இடங்களில் நிலையாகத் தங்கி வாழ்வதற்குகந்த வகையில், அவர்களை ஊக்குவிப்பதற்காக, (படித்த) பிராமணர்களுக்கு, நிலங்களும், வீடுகளும் கொடையாக அளிக்கப்பட்டன. பல இடங்களில், அவர்கள் வாழும் இருப்பிடத் தொகுதிகள் கூட்டுரிமையுடைய கல்லூரிகளாக நிறுவப்பட்டு அவை பிரம்மபுரி எனவும், கடிகம் எனவும் அழைக்கப்பட்டன.

கேரளத்தில் (தற்போதைய கன்னியாகுமரி மாவட்டம் உள்ளிட்டது) நம்பூத்ரி பிராமணர்கள் குடும்பத்தில், மூத்த மகனுக்கு மட்டும் திருமணம் செய்யப்பட்டு, குடும்பத்தை நடத்திட அனுமதியளிக்கப்பட்டது. இளைய மகன்கள், குடும்ப தளையினின்றும் விடுவிக்கப்பட்டனர். பொதுவாக, தாங்கள் நன்றாகக் கல்வி பயின்று, மக்களுக்கும் கற்பித்திட தங்களை ஆயத்தப் படுத்திக் கொண்டனர்[14]. வடமொழி (சமஸ்கிருதம்) பயில, மன்னர்கள் ஆதரவளித்தார்கள். ஒன்பதாம் நூற்றாண்டின் இடையில், ஆய் மன்னர், கருநாந்தடக்கண் வேதம் பயிலும் 95 மாணவர்களைப் பராமரித்திட ஒரு கல்லூரியையும், தங்கும் விடுதியையும் அறக்கொடையாக வழங்கினார். அம்மாணவர்கள், இலக்கணம், விரிவுரை,

புரோகிதம், சட்டம், சேர, சோழ, பாண்டிய நாடுகளில் மூன்று நாட்டு விவகாரங்கள் தொடர்பான பொருள் ஆகியவற்றிற்கான நுழைவுத் தேர்வில் தேர்ச்சி பெற்றோர், கல்லூரிகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். தற்போதைய கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த பார்த்திவ சேகரபுரத்தில் கல்வி இயங்க விருந்தது.

பார்த்திவசேகரபுரம் பல்கால சாலையைப் பற்றிய தகவல் ஆயி மன்னர் கருநந்தடகனின் பார்த்திவசேகரபுரம் கல்வெட்டிலிருந்து தெரிய வருகிறது. மன்னர் உள்ளூர் முஞ்சிரை மன்றத்தினின்றும் நிலத்தைப் பெற்று, அங்கு ஒரு பெருமாள் திருக்கோவிலை நிறுவி, அவ்விடத்திற்குப் பார்த்திவசேகர புரமென பெயர் சூட்டியதாக கல்வெட்டிலிருந்து மேலும் தெரியவருகிறது. வேத பல்கலைக்கழகம் நிறுவுவதற்கு மன்னர் இவ்விடத்தைத் தேர்ந்தெடுத்தார். வேதங்கள் தொடர்பான பாடங்கள் தவிர, ஆட்சிக்கலையும் இப்பல்கலைக் கழகத்தில் கற்றுக்கொடுக்கப் பட்டது. இது சேர, சோழ, பாண்டிய அரசுகளின், நிருவாகப் பணியாளர்கள் பயிற்சிக் கல்லூரியாகவும் இயங்கியது. அஃது ஒரு போர்வீரர் கலைக்கழக மாகவும் திகழ்ந்தது. நல்ல ஒழுக்கமும், பண்பும் இன்றியமையாத் தேவைகளென பயிற்சியாளர்களுக்கு வலியுறுத்தப் பட்டது. அவர்களுக்கு நன்னடத்தை விதிகளும் நடைமுறைப்படுத்தப் பட்டன. இது, பார்த்திவ சேகரபுர கல்வெட்டில் விளக்கப்பட்டுள்ளது. இந்நன்னடத்தை விதியின்படி, ஒரு மாணவர் மற்றொரு மாணவரை முறைகேடான வகையில் தொல்லைப் படுத்துவதோ, சில்லறைச் சண்டைகளில் ஈடுபடுவதோ கூடாது. இவ்விதிமுறையினை மீறி செயல்படவும் கூடாது. இவ்விதிமுறையினை மீறி செயல்படும் மாணவர்கள் கடுமையாக தண்டிக்கப்பட்டனர். இரண்டு மாணவர்கள், கடும் ஆயுதங்களைக் கொண்டு ஒருவரையொருவர் தாக்கினால், அவர்கள் பல்கலைக் கழகத்தினின்றும் வெளியேற்றப்பட்டனர். அவர்கள் சூதாட்டத்தில் ஈடுபடுவதற்கும் பணிப்பெண் நியமித்துக் கொள்வதற்கும் தடை விதிக்கப்பட்டது[15].

பாண்டிய மன்னர்களது ஆட்சிக் காலத்தில், தற்போதைய கன்னியாகுமரி மாவட்டத்தில் செழித்தோங்கிய மற்றொரு முக்கிய வேதக்கல்லூரி அல்லது "சாலை" கன்னியாகுமரியிலுள்ள ஸ்ரீவல்லப பெருஞ்சாலையாகும்[16].

கல்வித் தொடர்பான செயற்பாடுகள், பாண்டிய மற்றும் சோழ மன்னர்களின் ஆட்சிப் பரப்பிற்குள் மட்டும் வரையறுக்கப்பட்டதாகக் கருதக்கூடாது[17]. இது தனிச்சிறப்பான ஒன்றாகும். பண்டைக் காலத்தில் செழித்தோங்கிய சுசீந்திரம் மற்றும் நாஞ்சில்நாடு உள்ளிட்ட ஆயி மன்னர்களின் ஆட்சிப்பரப்பும் அம்மாதிரியான நிறுவனங்களுக்குப் புகழ்பெற்று விளங்கியது. மூஞ்சிரை சாலை, கன்னியாகுமரியிலுள்ள

ஸ்ரீவல்லபபுரம் சாலை, புகழ்பெற்ற கந்தலூர் சாலை ஆகியவை குறிப்பிடத்தக்கவையாகும். சுசீந்திரத்திற்கு அண்மையிலுள்ள புரவசேரியில் கி.பி.1196ஆம் ஆண்டின் கல்வெட்டு ஒன்று உளது. ரிக் மற்றும் யஜுர் வேதங்களை விவரமாக எடுத்து விளக்குவதற்காக இரண்டு ஆசிரியர்களைப் பராமரித்திட, கிடைவிருத்தி என்ற நிலக்கொடை வழங்கியதாக அக்கல்வெட்டில் பதியப்பட்டுள்ளது.

குறிப்பாக பிராமண வகுப்பைச் சார்ந்த மாணவர்கள் கல்வி பயிலுவதற்காகவே இயங்கிவந்த மேற்குறிப்பிட்ட பாடசாலைகள் மற்றும் பள்ளிகள் நீங்கலாக பல சமுதாயப் பிரிவுகளைச் சார்ந்த மாணவர்கள் கல்வி பயிலவும் வழிவகை செய்யப்பட்டது[18]. பல தென்னிந்தியத் திருக்கோயில்களிலுள்ள அகன்ற கூடங்கள் மற்றும் மண்டபங்கள் ஆகியவற்றில் இராமாயணம், மகாபாரதம் போன்ற புராணக் கதைகள் தொடர்பான ஒப்புவித்தல் (பாராயணம்) மற்றும் விரிவுரையாற்றுதல் போன்றவை மேற்கொள்ளப்பட்டன. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள சசீந்திரம் திருக்கோவிலிலுள்ள மகாபாரதக் கழகம் என்ற இடம் இதற்காகவே ஒதுக்கப்பட்டதாகும்.

புனிதமான இலக்கியங்களைப் பரப்புவதிலும் அவற்றிற்கு ஆதரவு அளிப்பதிலும் மடங்கள் ஆற்றிய பங்கினைப் புறக்கணிக்க இயலாது. வட்டப்பள்ளி[19] மடம்தான் சசீந்திரத்தில் தோன்றிய மிகத் தொன்மையான மடமாகும்.

வேனாடு மன்னர்கள் காலத்தில் கல்வி வளர்ச்சி

12-வது நூற்றாண்டின் முதல் கால் நூற்றாண்டில் தற்போதைய கன்னியாகுமரி மாவட்டம், வேனாடு மன்னர்களின் ஆளுகைக்குட்பட்டிருந்தது. இந்த அரசர் குலம், 1949 செப்டம்பர் மாதம், திருவாங்கூர் மாநிலம் இந்தியத் துணைக்கண்டத்துடன் இணையும் வரை பதவியில் தொடர்ந்தது.

முந்தைய நூற்றாண்டுகளில் நடைமுறையிலிருந்தவை, காலத்திற்கேற்ற சில மேம்பாடுகளுடன் மேலும் தொடர்ந்தன. அக்காலத்தில் மாவட்டத்தில் இயங்கிவந்த ஒரே கல்வி நிறுவனம் திண்ணைப் பள்ளியாகும். இத்திண்ணைப் பள்ளிகள், இந்த இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் கூட, சில காலம்வரை இயங்கி வந்தன. கல்வித்துறை சிறுகச்சிறுக சீராக மேம்பாடு அடையத் துவங்கியதால், இந்தத் திண்ணைப் பள்ளிகள் மறையத் தொடங்கின. முந்தைய திருவாங்கூர் மாநிலத்தில் நடைமுறையிலிருந்த திண்ணைப் பள்ளிகள் தொடர்பாக, 1891ம் ஆண்டு திருவாங்கூர் மக்கட்தொகைக் கணக்கெடுப்பில், நாகமையா கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார் [20].

"ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு திண்ணைப் பள்ளி இயங்கி வந்தது. ஆசிரியர், ஆசான் என அழைக்கப்பட்டார். அங்கு, கிராமப் பையன்களும் பெண்களும், மலையாளத்தில் எளிதாக ஒருசில பாடங்கள் கற்பிக்கப்பட்டார்கள். ஆசான் அம்பலவாசியாகவும், அல்லது பிற்பட்ட வகுப்பைச் சார்ந்தவராகவும் அல்லது சில நேரங்களில் ஒரு ஈழவராகவும் இருக்கிறார். இவ்வறிக்கையினை எழுதும்போது, திருவாங்கூரில் அவ்வாறான 1,300 பள்ளிகள் இயங்கி வந்தன ; அவற்றில் 50,000 மாணவர்கள் கல்வி பயின்றனர். இப்பள்ளிகள் தனியார் நிறுவனங்களாகத் தங்களது சொந்த ஆதரவிலேயே இயங்கி வருகின்றன. அவை பல காலமாகவே, அவ்வாறு இயங்கி வருகின்றன. ஆசிரியர்கள் பள்ளியின் பராமரிப்பிற்குப் பெரும்பாலும் மாணவர்களையே நம்பியுள்ளனர். மாணவர்களின் பெற்றோரும், பாதுகாப்பாளர்களும், மிகுந்த மகிழ்ச்சியுடன் தங்களது ஆதரவினை அளித்து வருகின்றனர். இஃது ஓர் தெய்வீகக் கடமையெனவும், இதைப் புறக்கணிக்கலாகாததெனவும் மக்கள் கருதுகின்றனர். ஆதரவுத்தொகை எப்போதாவது தான் பணமாக அளிக்கப்பட்டது. மக்கள் பெரும்பாலும் பொருளாகவே அதனை அளித்து வந்தனர். பையனின் கல்வி துவங்கியவுடன் கிராமப்பள்ளி ஆசிரியர் பையனின் வீட்டிற்கு மிக மரியாதையுடன் அழைத்து வரப்படுகிறார். அவருக்கு மரபுப்படி, வெற்றிலை, பாக்கு, ஒரு பணம், நெல், தேங்காய்கள் மற்றும் வாழைப்பழங்கள் ஆகியவை கொடுக்கப்படுகின்றன. பையனின் கல்வித்துவக்கத்திற்கு (வித்யாரம்பம்) இதுவே முதல் பரிசாக அளிக்கப்படுகிறது. மாணவன் கல்வித்துறையில் முன்னேற இதுவே முதற்படியாகும். இசை மற்றும் இசைக்கருவிகள் முழக்கத்துடன், ஆசான் பையனைப் பள்ளிக்கு அழைத்துச் செல்கிறார். பின்னர், பனையோலைகளில், ஆசானாலோ அல்லது பள்ளியில் முதற் பையனாகிய அவரது உதவியாளராலோ, (சட்டாம்பிள்ளை) எழுத்தாணியால் எழுதப்பெற்ற புதிய கையெழுத்துப்படி பனையோலைகள், சிறிது மஞ்சள் மற்றும் குங்குமம் பூசப்பட்டு, பையனிடம் அளிக்கப்படுகிறது. தொடக்கப் பாடநூலாகிய இம்முதல் நூலைக் கொண்ட அவன் தனது பள்ளி வாழ்க்கையினைத் துவங்குகிறான். விநாயகப் பெருமானுக்குரிய வழிபாட்டுத் தொடக்க வாசகத்துடன் இந்நூல் துவங்குகிறது. திண்ணைப் பள்ளியில் படிக்கத்துவங்கியதிலிருந்தே இவ்வாசகம் மாணவர்களுக்குக் கற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. தனது பெற்றோர் தனக்கு வழங்கியுள்ள, பள்ளிப் புத்தக மரப்பெட்டியினுள் பையன் இப்புத்தகத்தினைப் பள்ளிக்கு எடுத்துச் செல்கிறான். சில மாதங்கள் பையன் பள்ளியில் படித்த பின்னர் நூல்களடங்கிய அவனது மரப்பெட்டி மிகவும் கனமானதாகிறது. தற்போது, அதனில் இரண்டாவது மூன்றாவது நூல்கள், கணிதத்தில் சில பாடங்கள், வானூல், குறித்த "நீதி சரித்திரம்" என அழைக்கப்பெறும், முதுமொழிகள் பெருமானின் ஆயிரம் நாமங்கள் (பெயர்கள்) வடமொழி (சமஸ்கிருதம்)

நூல் அகராதியின் ஒரு பகுதி, ஜாதகம் கணிப்பது தொடர்பான எளிதான பாடங்கள், ஆண்டு விவரக்குறிப்பு, மருந்துகள் தொடர்பான சில பாக்கள் மற்றும் பொதுசெய்யுட்பாக்கள். இவையாவும் முன்பு பனையோலையில் எழுதியது போன்றே எழுதப்பெற்றவை அதனில் அடங்கும். இவைதான் பள்ளிப் படிப்பின் பாடத்திட்டமாகும். ஒவ்வொருமுறை புதுக் கையெழுத்துப்படி பாடப்புத்தகம் அறிமுகமாகும் போதும், மாணவனின் பெற்றோரிடமிருந்து ஆசானுக்கு ஊதியம் வழங்கப்படுகிறது. புதன் கிழமைகளிலும், சனிக்கிழமைகளிலும் மாணவனின் தாயார், ஆசிரியர் குளிப்பதற்கு எண்ணெய் எடுத்து செல்ல நினைவூட்டுவார். சிறிதளவு அரிசி, பருப்பு, தேங்காய் மற்றும் வாழைப்பழம் ஆகியவற்றை துவாதசியன்று, அதாவது அரைத்திங்களின் 12-வது நாளன்று ஆசிரியருக்கு அளிப்பது நடைமுறையிலிருந்து வருகிறது. 13-வது நாளன்று வேறொரு பொருள் அதேபோன்று ஒவ்வொரு நாளும் ஒருபொருள் கொடுக்கப்பட்டு வருகிறது. விசு, ஓணம் ஆகிய இரண்டு விழா நாட்களிலும் ஆசானுக்கு, ஓர் ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. ஆசிரியரின் வீட்டுத் திண்ணையிலேயோ அல்லது பக்கத்து வீட்டுத் திண்ணையிலோ பள்ளி வகுப்பு நடத்தப்படுகிறது. மாணவர்கள் மிகவும் அதிகாலையிலேயே வகுப்பிற்கு வரும் பழக்கத்தைக் கையாண்டனர். காலை ஆறு மணிக்கு முன்னரே சிலர் பள்ளிக்கு வந்தனர். அப்படிப்பட்ட மாணவன் மிகவும் சிறந்த மாணவனாக மதிக்கப்பட்டான் ; அன்று மாலை, வருகைப் பட்டியலை முடிக்கும் போது, அம்மாணவனுக்கு ஆசிரியரின் பாராட்டுக் கிடைத்தது ; பள்ளிக்குத் தாமதமாக வந்த மாணவனுக்கு உரிய தண்டனை வழங்கப்பட்டது. முதலாவதாகப் பள்ளிக்கு வருகை தந்த மாணவனுடைய உள்ளங்கையில் ஆசிரியர் தனது கைப்பிரம்பினால் மிக மிருதுவாகத் தடவிக்கொடுப்பார். அதுதான், அப்பையனுக்கு அவர் தெரிவிக்கும் பாராட்டாகும். இரண்டாவதாக வருகை தந்த மாணவனுக்கு இரண்டு தடவை உள்ளங்கையில், மெதுவாக அடிப்பார். மூன்றாவதாக வந்த மாணவனுக்கு மூன்று தடவைகள் ; இவ்வாறு கடைசியாகப் பள்ளிக்கு வருகை தந்த மாணவனின் முறை வரும்போது, ஆசிரியர் மிகச் சினங்கொண்டு, "இந்த மாணவன்தான் கடைசியாக வருகை தந்தவனா? எனத் தனது உதவியாளரிடம் கேட்டுக்கொண்டே அம்மாணவனின் உள்ளங்கையில், மிகவும் பலமாக அடிப்பார். இவ்வாறாக, பள்ளிக்கு இனி கடைசியாக வரக்கூடாதென மாணவர்கள் முடிவெடுத்து ஆரோக்கியமான ஒரு போட்டியினை தங்களுக்குள் வளர்த்துக் கொள்கிறார்கள். அனைத்து மாணவர்களும் ஒரே குரலில் தங்களது பாடங்களை உரக்கப்படிப்பதும் ஆசிரியர் பள்ளியில் நுழையும் போது மிகவும் உரத்த குரலில் பாடங்களை ஒலிப்பதும் திண்ணைப்பள்ளியின் தனிச்சிறப்பாகும். ஆசிரியரின் உதவியாளர் நாள் முழுவதும் பள்ளிப் பொறுப்பை வகிக்கிறார். ஒரு நாளைக்கு ஒரு தடவை அல்லது இரண்டு முறை பள்ளியைப் பார்வையிட

மட்டுமோ அல்லது மாலையில் காலந்தாழ்த்தி வந்த மாணவருக்குத் தண்டனை வழங்கவோ, ஆசிரியர் பள்ளிக்கு வருகை தருகிறார். மற்ற நேரங்களில், தனது காய்கறித் தோட்டத்திற்கு தண்ணீர் ஊற்றுவதிலும், வீட்டில் மனைவி இட்ட பணிகளை மேற்கொள்வதிலும், சந்தைக்குச் சென்று வீட்டிற்கு வேண்டிய பொருட்களை வாங்குவதிலும் ஈடுபடுகிறார். எனினும், மாணவர்கள் மற்றும் கிராம மக்களின் நன்மதிப்பைப் பெற்றவராகத் திகழ்கிறார். ஆசிரியரின் உதவியாளர் பத்துப் பணங்கள் அதவாது ஒண்ணரை ரூபாய் தனது தலைமை அலுவலரான ஆசிரியரிடமிருந்து பெறுகிறார். அதனையும் மிகவும் மதிப்புடன் பெறுகிறார். ஆசிரியர் அவரது உதவியாளர் இருவருமே அதனை மிகவும் இயல்பாகக்கருதுகின்றனர். அவர்கள் ஆற்றும் பணி, பளுவானதாகவோ, மனதுக்கு ஒவ்வாத நிலையிலோ இல்லை. கட்டுப்பாடு பராமரிக்கப்படுகிறது. மாணவர்கள் பள்ளிக்கு மிக அதிகாலையில் வர வேண்டும்; மாலையில் தாமதமாக வீட்டிற்குச் செல்ல வேண்டும்; மேலும், பள்ளியில் பகலில் அளிக்கப்படும் வீட்டுப்பாடத்தை மாணவர்கள் இரவில் வீட்டில் படிக்க வேண்டும். இரவில் பாடத்தை முறையாகப் படித்தமைக்கு மாணவன் தனது தந்தையிடம் சான்று பெற்று, அதனைப் பள்ளியில் மறுநாள் அளிக்க வேண்டும். அச்சான்றினை, மாணவனின் தந்தை, தனது கையாலேயே எழுதிக்கையெழுத்திட்டுத் தர வேண்டும். அவர்களது கிராமப்பள்ளியிலுள்ள பாடத்திட்டங்களை தங்களது பையன்கள் சரிவர படித்து, பள்ளித் தேர்வில் தேர்ச்சி அடைந்தும், மாணவர்கள் தங்களுக்குள்ளும், தங்கள் உறவினர்கள், அண்டை வீட்டார் ஆகியோரிடமும் நல்ல விதமாகப் பழகியும் நல்ல பெயர் பெற்றாலே மனநிறைவடைகிறார்கள். தங்கள் பிள்ளைகள் இந்த அளவு முன்னேற்றமடையுமளவிற்கு ஆசான் அவர்களை வழிநடத்திச் சென்றால் போதுமென பெற்றோர் எண்ணுகின்றனர். ஆசானின் பணியினை அவர்கள் போற்றிப் புகழ்ந்து வருகின்றனர். அதிகாலையில் பள்ளிக்கு வரும் பழக்கத்தையும், மாலையில் தண்டனை வழங்குவதையும் ஆசிரியர் தளர்த்தினாலோ, ஒழுங்கின்றி மாணவர் அனைவரும் பள்ளியில் உரக்கப் படிப்பதை ஆசிரியர் கவனியாதிருந்தாலோ, மாணவர்கள் மிகவும் களிப்புறுகின்றனர். ஆசானும், அவரது உதவியாளரும், பள்ளிக்கு வருகை தராத நாட்களில், மாணவர்கள் தங்கள் விருப்பப்படி பள்ளிக்கு வருகை தருகின்றனர். ஒரு ஆண்டில், தொடர் சுற்றில் விடுமுறை வழங்கும் பழக்கம் நடைமுறையிலிருக்கிறது. ஒரு அரைத் திங்களின் துவக்க நாளிலும், இறுதி நாளிலும் விடுமுறை யளிக்கப்படுகிறது.அதே போன்று, சனிக் கிழமைகள் மற்றும் பதினான்காம் நாட்கள் ஆகிய காலங்களிலும் விடுமுறையளிக்கப்படுகிறது. பதின்மூன்றாம் நாள் பிற்பகல், அரை நாள் விடுமுறை வழங்கப்படுகிறது. சில நேரங்களில், டிசம்பர் மாதம் பதினோறாம் நாள் விடுமுறையளிக்கப்படுகிறது. கோகுலாட்டமி

விடுமுறையளிக்கப்படுகிறது. அதே போன்று, உள்ளூர் கோவில்களில் கொண்டாடப்படும் திருவிழாக்கள், விசு, ஓணம், தீபாவளி, தசரா, மன்னரின் பிறந்த நாள், இவை போன்ற எண்ணிலடங்கா நாட்கள் விடுமுறையளிக்கப்படும் போது, பள்ளி மாணவனின் உவகைக்கு எல்லையில்லை. வயல்களில் நாற்று நடப்படும் போதும், அறுவடைக் காலங்களிலும் மாணவர்கள் தங்களது பெற்றோர்களுக்கு உதவிடச் செல்வதால், அப்போதும் பள்ளிகள் மூடப்படுகின்றன."

சமயப்பரப்பாளர்களின் தொண்டும், மேற்கத்தியக் கல்வி முறையின் தோற்றமும்

கிறித்தவ சமயப்பரப்பாளர்கள், இந்தியாவின் ஏனைய பகுதிகளைப்போன்று, முந்தைய திருவாங்கூர் மாநிலத்தில், குறிப்பாக தற்போதைய கன்னியாகுமரி மாவட்டம் அடங்கிய தென் திருவாங்கூர் பகுதியில், ஆங்கிலக் கல்வியினைப் பரப்புவதில் முன்னோடியாகத் திகழ்ந்தார்கள்.

ஆங்கிலேயருக்கு முன்னரே திருவாங்கூர் மாநிலத்திற்கு வருகை தந்த போர்ச்சுகீசியர்களும், டச்சுக்காரர்களும் உரோமன் கத்தோலிக்க கிறித்தவ சமயத்தைச் சார்ந்தவராவர். அவர்கள் கல்வியைப் பரப்பிட எவ்வித முயற்சியும் மேற்கொள்ளவில்லை. ஆனால், அவர்களுக்கு பின்னர், நம் நாட்டிற்கு வருகை தந்த (அவர்களிடமிருந்து பிரிந்து வந்த) பிராட்டஸ்டண்ட் சமயப் பரப்பாளர்கள்தான், திருவாங்கூர் மாநிலத்தின் பகுதியாயிருந்த இம்மாவட்டத்தில் முதன் முதலில் ஆங்கிலக் கல்வியினை அறிமுகம் செய்தனர்[21].

முந்தைய திருவாங்கூர் மாநிலத்தில் ஆங்கிலப் பள்ளியைத் தொடங்கி வைத்தவர், புருசிய நாட்டைச் சேர்ந்த மிக வல்லமை படைத்தவரும், பண்பாளருமான மதிப்பிற்குரிய வில்லியம் தோபியாஸ் ரிங்கள் டாப் என்பராவார்[22]. இம்மாநிலத்திற்கு அவர் 1806ஆம் ஆண்டு வருகை புரிந்தார். அப்பொழுதிலிருந்து, "நற்செய்திகள்" எழுதிய நால்வரைச் சார்ந்த பிரசாரப் பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். அவர் எங்கு சென்றாலும், தன்னுடன் ஆங்கிலக் கல்வி பற்றிய சமயப்பரப்புக் குழுவினையும் அழைத்துச் சென்றார். அவர், இடைவிடாது சமயச் சொற்பொறிவாற்றுவதிலும், கற்பிப்பதிலும் ஈடுபாடு கொண்டார். ஏழைக் குழந்தைகள், கிறித்தவர்கள் மற்றும் கிறித்தவரல்லாதோர் அனைவருக்கும் பல பள்ளிகளை நிறுவினார். அவரது துணைமையினால், கல்வி முன்னேற்றமடைந்தமை குறித்து, 1813 ஆம் அண்டு, திருவாங்கூரின் திவானாக இருந்த மன்றோவுக்கு அவர் அளித்த பதிலின்றும் தெரிய வருகிறது[23]. அவர் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்:

"சமயச் சார்பற்ற பொது நிலை மக்களுக்கு ஆறுபள்ளிகள் இயங்கின: கற்பிக்கப்படும் பாடத் திட்டங்களில், படித்தல், எழுதுதல், கணிதம் ஆகியவை இடம்பெற்றன. கிறித்தவ சமயத்தைச் சார்ந்த

குழந்தைகள் பைபிள் குறித்தும் போதிக்கப்பட்டனர்". உள்ளூர் மக்கள் தங்களது குழந்தைகளைப்பள்ளிக்கு அனுப்புவதில் அக்கறை செலுத்துவதில்லை. தரங்கம்பாடியிலிருந்து சமயப்பரப்பாளர், நன்கொடையாகக் குழந்தைகள் படிப்பதற்கு வேண்டிய புத்தகங்களை வழங்கி வந்தனர். ஆனால் அவை போதுமான அளவிலில்லை.

கல்வியைப் பரப்பிடும் ரிங்கள் டாப் அவர்களது உயர்ந்த முயற்சிகளுக்கு, திவான் மன்ரோ அவர்களது பரிந்துரையின்படி, இராணி லெட்சுமி பாய், மிகக் குறைந்த குத்தகையில், ஒரு நிலத்தினை வழங்கினார்.

1809ஆம் ஆண்டு, ரிங்கள் டாப், கன்னியாகுமரி மாவட்டம், மைலாடியில் ஒரு கிறித்தவத்திருக்கோவிலை நிறுவினார் [24]. முந்தைய திருவாங்கூர் மாநிலத்தில் இது தான் முதன் முதலில் கட்டப்பட்ட பிராடஸ்டெண்ட் கிறித்தவத் திருக்கோவிலாகும். அவர், திரு. வேத மாணிக்கம் என்பவரை, கிறித்தவ சமய பரப்புத் திருச்சபையின் உள்ளூர் ஆசிரியராக நியமித்தார். மைலாடி கிறித்தவத் திருக்கோவில் தவிர, முந்தைய திருவாங்கூர் மாநிலத்தில், பிச்சக் குடியிருப்பு, தாமரக்குளம், புத்தாளம், அத்திக்கோடு, கோவில் வெள்ளை மற்றும் அனந்த நாதன் குடியிருப்பு மற்றும் ஈத்தாமொழி ஆகிய இடங்களில் மேலும் ஏழு திருக்கோவில்களை எழுப்பினார். இவ்விடங்கள் யாவும் தற்போதைய கன்னியாகுமரி மாவட்ட எல்லைப் பகுதியிலுள்ளன[25]. 1811 ஆம் ஆண்டு, ரிங்கள் டாப்பிற்கு கன்னியாகுமரியில் மாளிகை ஒன்று கட்டப்பட்டது[26].

அவர் முதன்மையான கிராமங்களில், சமய பரப்புத் திருச்சபையின் உள்ளூர் ஆசிரியர்களை அமர்த்தினார்[27]. அவர்கள் தவிர, இளைஞர்களுக்குக் கற்பித்திட ஒரு சில பள்ளி ஆசிரியர்களையும் நியமித்தார். மாணவர்களில் ஒருவன் ஆசிரியரது நீதிபோதனை சுற்றுப் பயணங்களின் போது, அவருக்குதவியாக அவரைப் பின் தொடர்ந்தான். சமய அடிப்படை உண்மை பயிற்றும் பள்ளி ஆசிரியர்கள் மற்றும் பள்ளி மாணவர்கள் ஆகியோருக்கு அளிக்கப்பட்ட முதன்மையான பணி யாதெனில், கிறித்தவ சமயத்திற்கு மாறி, பல ஊர்களில் சிதறிக் கிடக்கும் மக்களுக்கு இறை வணக்கம், கட்டளைகள் மற்றும் கிறித்தவ சமயத்துறையில் வினா, விடையாகக் கற்பிக்கப்படும் பாடங்கள் ஆகியவற்றின் அடிப்படைக் கொள்கைகளைக் கற்பித்தலேயாகும்.

ரிங்கள் டாப், மதம் மாறிய மக்களிடம் எதிர்நோக்கிய அறிவுத்தரம், 250 ஆண்டுகளுக்கு முன்னர் புனித சேவியர் தனது முயற்சியால் கிறித்தவ சமயத்திற்கு மாறியோரிடம் எதிர்பார்த்ததைவிட ஒரு சிறு அளவு அதிகமாக இருந்தால் போதுமென்பதேயாகும்.

"திருவாங்கூர் கிறித்தவத் திருக்கோவிலின் வரலாறு" என்ற ஆங்கில நூலின் ஆசிரியா, சி.எம். ஆகுர், கீழ்க்கண்டவாறு எழுதுகிறார்:

"தங்களது எதிர்பார்பிற்கு மேல் அடைய முயலுவது, விரைவில் கிட்டாது என்பதை அவர்கள் உணர்ந்து, சமயம் மாறிய மக்களின் குறைந்த தரத்திலேயே மனநிறைவு கொண்டது விவேகமுடைய செயலாகும். பெண்கள் கல்விப் பயிற்சி சாலையில் இறைமை நூல் சார்ந்த வகுப்புகள், சமய வினா, விடை பாடம் கற்பிக்கும் வகுப்புகள், ஞாயிறுப் பள்ளிகள், ஆண்-பெண் இருபாலருக்கும் கிறித்தவத் திருமறை வகுப்புகள் ஆகியவை பல ஆண்டுகளுக்குப் பின்னர் ஏற்பட்ட வளர்ச்சியேயாகும்."

மறைதிரு ரிங்கள் டாப், திருவாங்கூர் மாநிலத்திலுள்ள மைலாடி சிறிய கிறித்தவத் திருக்கோவிலில், 1816 ஆம் ஆண்டு சனவரி மாதம் பிரியா விடை பெற்று, இந்நாட்டினின்றும் தனது தாயகம் திரும்பினார்.

மிகக் குறுகிய பத்தாண்டு காலத்தில் (1806 முதல் 1816 முடிய) அவர், பிராட்டஸ்டெண்ட் கிறித்தவ சமயப் பிரிவின் வளர்ச்சிக்கு மட்டு மின்றி, இப்பகுதியில், மக்கள் பாராட்டிற்குரியவாறு, கல்வி வளர்ச்சிக்கும் அடிக்கல் நாட்டினாரெனில் மிகையில்லை.

மறைதிரு மீட்

மாவட்டத்தில் கல்வியை மேம்படுத்த அரும்பாடுபட்ட, இரண்டாவது முக்கியத்துவம் வாய்ந்த சமயப்பரப்பாளர், மீட் என்பவராவார். ரிங்கள் டாப் விட்டுச் சென்ற குழந்தைப் பருவத்திலான சமயப்பரப்புக் குழுவினை மிகச்சிறந்த வினைஞநாகச் செயலாற்றி, மேம்படுத்தி, ஒரு விரிவான நிறுவனமாக உருவாக்கிய பெருமை மீட் அவர்களையே சாரும். மறைதிரு ஆப்ஸ் கீழ்க்கண்டவாறு எழுதுகிறார்:

"திரு. மீட் அவர்கள், நாகர்கோவில் மற்றும் நெய்யூர் ஆகிய இரு சமயபோதனைக் கூடங்களின் நிறுவனர் ஆவார். அவர் தென்திருவாங்கூர் சமயப் பரப்புக்குழுவின் (தற்போதைய கன்னியாகுமரி மாவட்டம்) தந்தையாகவும் திகழ்ந்தார்[28]."

இங்கிலாந்திலுள்ள, பிரிஸ்டலில் கடந்த 1792 ஆம் ஆண்டு பிறந்த மீட் அவர்கள், 1816 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 28 ஆம் நாளன்று சென்னை வந்தடைந்தார்[29]. சென்னையில் சிலகாலம் கழித்த பின்னர், அவர் 1817 ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் குளச்சல் வந்தடைந்தார்.

துவக்கத்தில் அவர் மைலாடியைத் தலைமையிடமாகக் கொண்டு அங்கு தங்கியிருந்தார். பின்னர், நாகர்கோவிலில் குற்ற இயல் சாராத நீதிபதியாக 1818 ஆம் ஆண்டு மன்னரால் நியமிக்கப்பட்டதால், தனது தலைமையிடத்தை நாகர்கோவிலுக்கு மாற்றி அவர் கல்விக்காற்றும் தொண்டினையும் எவ்விதத் தடங்கலுமின்றித் தொடர்ந்தார்.

நாகர்கோவில் சமய போதனைக்கூடம் (செமினரி)

முதல் முழுமையான கல்வி நிறுவனத்தை மாவட்டத்தில், அதாவது

நாகர்கோவிலில், நிறுவிய பெருமை, முழுமையாக, மீட் அவர்களையே சாரும். கிறித்தவ சமயத்திற்கு மாறிய மக்களின் குழந்தைகளுக்கும், நீதி போதனை ஏனைய சமய சார்பற்ற பாடங்களுடன் கூட செவியுற்று, அம்மாதிரி பயிற்சி பெற்றோர் பின்னர், கிறித்தவ சமயக் கொள்கைகளையும், கோட்பாடுகளையும் அறிமுகபடுத்துபவர்களாகத் திகழ வேண்டுமென்ற தளராத நம்பிக்கையில் அப்படிப்பட்ட இளைஞர்களுக்கும் கல்வி கற்பித்திட, ஒரு திட்டத்தினை வகுத்தார்[30].

1819ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் அவரது திட்டம் வெற்றியடைந்து, அதன் பயனாக, அவர் ஒரு சமய போதனைக்கூடம் அதாவது உணவு வசதிகளுடன் கூடிய ஆண்கள் பள்ளியினைத் துவக்கினார். இப்பள்ளி, அவரது ஏனைய நிறுவனங்களை விட மிகவும் வெற்றிகரமாக அமைந்தது. அவரது நல்லார்வமிக்க நம்பிக்கையுடைய எதிர்பார்ப்பைவிட மேலான பலனை அது அளித்தது [31]. இந்த நாகர்கோவில் சமய போதனைக்கூடம், படிப்படியாக, நாகர்கோவில் கிறித்தவக் கல்லூரியாகவும் மற்றும் அது ஸ்காட் கிறித்தவக் கல்லூரியாகவும் வளர்ச்சியுற்றது. அஃது, இப்போதும் அதே பெயரில், வளமுடன் இயங்கி வருகிறது. திருவாங்கூர் மன்னர், 1834 ஆம் ஆண்டு, நாகர்கோவில் சமய போதனைக் கூடத்திற்கு வருகை தந்த போது, ஆங்கிலக் கல்வியின் முக்கியத்துவத்தினால் கவரப்பட்டு, சமூக முன்னேற்றத்தை மேம்படுத்தும் பொறுப்பினை ஏற்றிருந்த மன்னர், திருவனந்தபுரத்தில் ஒரு ஆங்கிலப்பள்ளியினைத் தகுதி வாய்ந்ததொரு ஆசிரியரின் முயற்சியில் துவக்க உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப் பணித்தார் [32].

அவரது மிகச் சிறந்த பணியில், மீட் அவர்களுக்கு, அவரது துணைவியார் திருமதி. மீட், பெரிதும் உதவி புரிந்து வந்தார். சமய பரப்புக்குழு போதனைக் கல்விக் கூடத்தையும், பெண்கள் உணவு விடுதியுடன் கூடிய பள்ளியையும் முதன் முதலில் நிறுவிட, அவருக்கு அவரது துணைவியார் உதவி புரிந்தார். திரு. மீட் அவர்கள் நாகர்கோவிலில் குடியேறத் துவங்கியது முதல், அவரிடம் சில இளைஞர்கள் கல்வி பயின்று வந்தனர். ஆனால், அவர்களின் உணவிற்கான வசதிகளை அவர்களே சொந்தப் பொறுப்பில் செய்து கொள்ள வேண்டியிருந்தது. திருமதி மீட் நாகர்கோவில் வந்தடைந்தவுடன், முதன் முதலில் 30 மாணவர்களுக்கான உணவு வசதியினைச் செய்து கொடுத்தார். 1819 ஆம் ஆண்டு, மையப் பள்ளியாக (அல்லது சமய போதனைக் கூடம்) அமைத்து, அதில் அவர் தேர்ந்தெடுத்த பெண்களையும் சேர்த்துக் கொண்டு, கிறித்தவ சமய போதனை வகுப்பினையும் சேர்த்து அமைத்தார் [33]. இவ்வாறாக, திருமதி மீட், மாணவர்களுக்காக உணவு விடுதியுடன் கூடிய தனிப் பள்ளியையும், மாணவிகளுக்காக அதே போன்ற பள்ளியையும் நிறுவினார். அவர்

பெண்களுக்காக, நாகர்கோவிலில் துவக்கிய உணவு விடுதியுடன் கூடிய பள்ளியினைத் திறமையாக நடத்திட, துவக்கத்திலிருந்தே அவருக்கு திருமதி. மால்ட் என்பவர் திறமையாக உதவி புரிந்து வந்தார்.

முதன் முதலில் ஒரு ஆண்கள் பள்ளி கட்டப்பட்டது. அதனுடன், ஒரு உணவறை, மருத்துவ மனை மற்றும் சமையலறை ஆகியவை அடங்கிய புதிய அலகு இணைக்கப்பட்டது. சமய போதனைக் கூடத்தின் மாணவர்களது எண்ணிக்கை 30 என கட்டுப்படுத்தப்பட்டது. சமயப்பரப்புக்குழுவின் நிலங்களிலிருந்து கிடைக்கும் வருவாயிலிருந்து, செலவு மேற்கொள்ளப்பட்டது. பள்ளியின் நோக்கங்கள் யாதென திரு. மீட் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்: [34]

"இப்பள்ளியின் மிகப்பெரிய நோக்கம் யாதெனில், மாணவர்களின் சமய சார்புள்ள மற்றும் பயனுள்ள அறிவுக்கருவூலத்தினை, மற்றவருக்குப் பயனுள்ள வகையில் வெளிக்கொணர்வதேயாகும். ஒரு மாணவன், சமய போதனைக் கூடத்தை விட்டு, வெளிச்செல்லும்போது, "ஒரு குழந்தையிடமிருந்து, சமயத்திருநூலை நாம் அறிந்து கொள்கிறோம். நாம் மெய்யறிவுடன் முக்தியை அடைய இவை வழிவகுக்கும்" என நாம் சொல்லக்கூடிய நிலையிலிருக்க வேண்டும்.

"இப்பள்ளியிலுள்ள பெரும்பாலான குழந்தைகள் கிறித்தவத் திருமறையைத் தங்குதடையின்றி படிப்பதோடு மட்டுமின்றி, அந்த இயலின் உட்பொருள் குறித்து, ஆய்வுக்குட்படும் போது கூட, அவர்கள் கற்றது குறித்து, தெளிவான விவரங்களை அளிப்பது போற்றுதற்கரியதாகும்."

"நிறுவனத்தின் அடுத்த நோக்கம் யாதெனில், சூழ்நிலைக்கொப்ப இலக்கியம் மற்றும் மொழிகளை மாணவர்களுக்குக் கற்பிப்பதாகும். ஒவ்வொரு பிரிவிலும் அறிவை வளர்த்திடும் பயனுள்ள நூல்கள் மற்றும் ஆய்வுக்கட்டுரைகள், நாட்டுப்படங்கள், வான் கோளக வடிவ விளக்கப்படங்கள், கணிதம் மற்றும் வானாராய்ச்சி சார்ந்த உபகரணங்கள், பள்ளிகளில் கல்வி போதிப்பதன் பொருட்டு பயன்படுத்தப்பட்டன. ஆங்கிலம், தமிழ், மலையாளம் மற்றும் வடமொழி (சமஸ்கிருதம்) ஆகிய மொழிகள் கற்றுக் கொடுக்கப்பட்டன. பெருமதிப்பிற்குரிய மீட் அவர்கள் இம்மொழிகளை மாணவர்களுக்குக் கற்றுக்கொடுக்க, முன்ஷிகளை (பண்டிட்) நியமித்தார். ஆசிரியர்கள், தஞ்சாவூரிலிருந்து வரவழைக்கப்பட்டனர். அவர்களில் எம்.சி. அல்லி, கிறித்தவ பிள்ளை, அஷ்டன், இராயப்பன் மற்றும் சிவசுப்ரமணியன் ஆகியோர் அடங்குவர்".

திரு. மீட் அவர்களால் துவக்கத்தில் செயல்வடிவம் கொடுக்கப்பட்டு, தொடங்கப்பெற்ற கல்வித்திட்டத்தின் தரம் மிகவும் உயர்ந்ததாகவும், திருவாங்கூர் மாநிலத்திலும், அதன் வெளியிலும் அனைவராலும் போற்றப்பட்டதாகவும் கூறப்படுகிறது [35].

பள்ளியினின்றும் தங்களது குழந்தைகளைத் திரும்பப் பெற்ற கிறித்தவ சமயம் சாராத, பிற சமுதாயப் பிரிவுகளைச் சார்ந்த பெற்றோரின் தவறான எண்ணங்கள் களையப்பெற, பள்ளி முன்னர் நடத்தப்பெற்று வந்த சமயப்பரப்புக் குழுவின் வளாகமல்லாத, நாகர்கோவில் நகரத்தின் மையப்பகுதியில், 1800ஆம் ஆண்டு துவக்கத்தில், ஒரு பள்ளி துவங்கப் பெற்றது. திரு. மகராசன் என்பவர் பள்ளியின் ஆசிரியராகப் பணியிற் சேர்ந்தார். அதிக அளவில் குழந்தைகள் பள்ளியில் சேர்ந்தனர். சமய வேறுபாடின்றி, அவர்கள் பள்ளியில் சேர்க்கப்பட்டனர்.

முறையான வாராந்திர ஆய்வு நீங்கலாக, அவர்கள் ஒவ்வொரு திங்கள் காலையிலும், சமயப் பரப்பாளர் வீட்டில் ஆய்வு செய்யப்பட்டனர். 1822ஆம் ஆண்டு, பள்ளியில் 40 குழந்தைகள் படித்து வந்தனர். திரு. மீட் கீழ்கண்டவாறு எழுதுகிறார்:

"1823ஆம் ஆண்டு, பள்ளியில் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை 50ஆக உயர்ந்தது. அவர்களில் பலர் பிராமண வகுப்பைச்சேர்ந்தவராவர். கிறித்தவத் திருமறை நூலில் அவர்களது முன்னேற்றம், பாராட்டும்படியாக இருந்தது. அவர்கள், சமயப்பரப்புக்குழு வீட்டில், தங்களது வாராந்திர ஆய்வினைத் தொடர்ந்தனர்"[36]

தொழிற்பள்ளிகள்

மாவட்டத்தில் கல்வி மேம்பாட்டிற்காக தொன்மையான சமயப்பரப்பாளர்களின் மற்றொரு பணி யாதெனில், 1820 ஆம் ஆண்டு நாகர்கோவிலில் நிறுவப்பட்ட தொழிற்பள்ளியாகும். இப்பள்ளியின் நோக்கம் குறித்து திரு. மீட் எழுதுகிறார்:

"இந்நிறுவனம் பிழைப்பாதாரமாகத் திகழ்வதுடன், அறியாமை, சோம்பேறித்தனம் மற்றும் தீயொழுக்கம் இவற்றுடன் வளர்க்கப்பட்ட நமது பேரவையைச் சார்ந்த குழந்தைகளுக்குக் கிறித்தவ சமயக் கல்வி முறையை அறிந்துகொள்ளும் வாய்ப்பையுமளிக்கிறது." சில குழந்தைகள் அநாதைகளாக உள்ளனர். சிலரை நாம் அடிமைத்தனத்தினின்றும் விடுவித்திருக்கிறோம். தனது குழந்தைகள் இச்சமூகத்தில் மிகவும் பயனுள்ளவர்களாக முன்னேற்றமடைந்து, பிற்காலத்தில் தங்களைப் பிறர் உதவியின்றி, தாங்களே பாதுகாத்துக்கொள்ளும் திறமை படைத்தவர் களாக உருவாக வேண்டுமென செயலூக்கமுள்ள பெற்றோரனைவரும் விரும்புகின்றனர். குழந்தைகள் பகலில் பள்ளியில் படிக்க வேண்டிய பகுதியினைப் படித்துவிட்டு, ஏனைய பகுதியினை முடித்திட உரிய பணியினை ஆற்றுகின்றனர். அவர்கள் சமயப்பரப்புக்குழுவிலேயே பணியாற்றும் உள்ளூர் ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகின்றனர். அவ்வாசிரியர்களில் பலர் இந்து சமயத்தைச்சார்ந்தவராவர். சிற்சில இடர்ப்பாடுகளுக்கிடையிலும், பின்தங்கிய வகுப்பினர் உள்ளிட்ட பலவித சமுதாயப்பிரிவுகளைச் சார்ந்தவர் பற்றிய விவரங்களை விரிவாக எடுத்து

விளக்கி வருகின்றனர் [37]. பயனுள்ள பல கலைகளை மேம்படுத்த இப்பள்ளி நிறுவப்பட்டது. அச்சுப்பணி, புத்தகங்கள் செப்பனிட்டுக் கட்டுதல், தோல் பதனிடுதல் மற்றும் தோலைத்தேய்த்து வாருதல் போன்றவற்றில், பல மாணவர்கள் முன்னேற்றம் காட்டியுள்ளனர்.

நாகர்கோவில் அச்சகம்

மாணவர்களுக்குக் கல்வியளித்திட அச்சகமும் இன்றியமையாத தென மீட் கருதினார். ஒரு அச்சகத்தை நிறுவினால், நாகர்கோவில் தொழிற்பள்ளியில் அச்சகத் தொழில் நுட்பக் கல்வி போதிக்க, ஒரு நீடித்த பயிற்சி முறையினைத் துவக்கலாமென ஒரு முடிவினை மேற்கொண்டார். இதனைக் கருத்திற்கொண்டு, தமிழ்நாட்டின் முதன் முதலாக அச்சகம் நிறுவப்பட்ட தஞ்சாவூர் மாவட்டம், தரங்கம்பாடிக்குக் கடந்த 1820ஆம் ஆண்டு, பெருமதிப்பிற்குரிய மீட் சென்று, அங்கு ஒரு அச்சகத்தையும், தரங்கம்பாடி சமயப்பரப்புக்குழு அச்சகத்திலிருந்து தேவையான பொருட்களையும் விலைக்கு வாங்கினார். அவ்வச்சகத்தினை இயக்குவதற்கும் குறிப்பாக, அச்சுத்தொழில் நுட்பம் குறித்து தொழிற்பள்ளி மாணவர்களுக்குக் கற்பித்திடவும், தாவிது மேஸ்திரி என்று அனைவராலும் பொதுவாக அழைக்கப்படும் டேவிட் ஆடியப்பன் என்ற அச்சடிப்பவரை வரவழைத்து, அவரை நியமித்து, அவருக்கு மாதந்தோறும் ரூ.21/- ஊதியம் வழங்கினார்[38]. அவ்வாறு நாகர்கோவிலில் நிறுவப்பட்ட அச்சகத்திற்கு மீட் மிக முக்கியத்துவம் அளித்தார். அவ்வாறு அதனை, "ஒரு சமயப்பரப்பாளர் நிறுவனத் தொகுதிக்கு விலை மதிக்கத் தக்க, ஆனால் இன்றியமையாத இணைப்பு" என வர்ணித்தார். 1820 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இந்த நாகர்கோவில் அச்சகம்தான், முந்தைய திருவாங்கூர் மாநிலத்திலேயே முதன்மையான அச்சகமாகும் [39]. 1820 ஆம் ஆண்டு,திரு. மீட் அவர்களால் முதன் முதலில், தமிழில் வெளியிடப்பட்ட நூல் "ஆத்ம போதம்" எனப்படுவதாகும்.

அச்சகம் நிறுவப்பட்ட இரண்டாம் ஆண்டு, திரு.மீட், அச்சகத்தைப் பற்றி, கீழ்கண்டவாறு கருத்துத்தெரிவித்தார்: [40].

"திருவாங்கூரில் முதன் முதலில் நிறுவப்பட்ட இம்மாதிரியான அச்சகம், பலரின் கவனத்தைக் கவர்ந்தது. அது, பல பள்ளிகளுக்குப் பல்வேறு நூல்களையும் பேரவைகளுக்கு சமய சார்புள்ள ஆய்வுக் கட்டுரைகளையும் வழங்கியுள்ளது. அலுவலக நிருவாகம், தொழிற் பள்ளியைச் சார்ந்த இளைஞர்களால் நடத்தப்படுகிறது. திருநெல்வேலியிலிருந்து வந்துள்ள கற்றறிந்த முன்ஷியின் உதவியுடன், செவ்வனே பணியாற்றும் இத்துறைச் சார்ந்த பணியாளர்களின் பணித் திறனில் நாங்கள் மனநிறைவடைந்துள்ளோம், இந்தியாவின் இப்பகுதியில், உள்ளூர் தமிழ் கற்றறிவாளர்களின் பற்றாக்குறையினால் நாம் ஒரு போதும் இடர்பாடுகளை மேற் கொண்டதில்லை"

நாகர்கோவில் சமயபோதனைப் பயிற்சிப் பள்ளியில் பயின்ற முதல் தொகுதி மாணவர்கள்

பள்ளிக்குத் தேவைப்பட்ட ஆசிரியர்கள் தஞ்சாவூரிலிருந்தும், தரங்கம்பாடியிலிருந்தும் வரவழைக்கப்பட்டார்களென நாம் முன்பே தெரிவித்தோம். ஆனால், பள்ளியினின்றும் வெளிவந்த முதல் தொகுதி மாணவர்கள்,[41] கல்வி கற்பிப்பது குறித்து நல்ல பயிற்சியளிக்கப்பட்டனர், உடனே அதன்பிறகு, வெளியிலிருந்து ஆசிரியர்களைக் கொணர வேண்டிய நிலை ஏற்பட்டதில்லை. கி.பி. 1818 ஆம் ஆண்டு, பயிற்சிப் பள்ளி நிறுவப்பட்டவுடன், திரு.மீட், மைலாடியிலிருந்து, நாகர்கோவிலுக்குத் தனது தலைமையிடத்தை மாற்றியவுடன், கன்னியாகுமரி மாவட்டம், மைலாடி கிராமம் மற்றும் அண்டைகிராமங்களைச் சார்ந்த 10 கற்றறிந்த இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களை நாகர்கோவிலுக்கு அழைத்து வந்தார்.

பயிற்சிப்பள்ளியில் முதல் தொகுதியில் ஆசிரியர்களாகச் சேர்க்கப்பட்ட இளைஞர்களின் பெயர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

1. தேவவாரம், மோசஸ் கிறிஸ்ட்டியன், மற்றும் மைலாடி கிராமத்தைச் சேர்ந்த ஏனைய மூவர்
2. மன்ரோ, குறிச்சி கிராமம்
3. பேரின்பநாயகம், கோவில்விளை
4. சத்யநாதன், சிவசுப்ரமணியன் மற்றும் கோட்டாரிலிருந்து மேலும் சிலர்.

இது அனைத்து சமுதாய வகுப்பினரும் சீரான விகிதத்தில் இணைந்த ஒரு அரிய சேர்க்கையாகும். அப்போது நாகர்கோவிலில் சீராக அவர்களுக்கு கற்பித்திட பள்ளி நிறுவப்படாததால், இந்த இளைஞர்களுக்கு முதன்முதலில் தரமான கல்வியளிக்கப்பட்டதெனக் கூற இயலாது, அவர்கள் பொதுமக்கள் பேச்சு மொழியினையும், துவக்க ஆங்கிலப் பாடங்களையும், கிறித்தவத் திருமறை நூல்பகுதிகளையும் தினமும் மனப்பாடம் செய்தனர். மீட் அவர்கள் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும்போது மாணவர்கள் அவருடன் சென்று, கிறித்தவ சமய போதனையுரை ஆற்றி வந்தனர். இந்த மாதிரியான வினா, விடைக் கல்வி கற்பிக்கும் ஆய்வு நெறிமுறையைவிட, உயர்ந்த முறையினை இவ்விளைஞர்களுக்கு அளிக்க இயலவில்லை; ஏனெனில், மீட், பல்வேறு பணிகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது; திருமதி மீட் வருகை தரும்வரை, இவ்விளைஞர்களுக்கு உணவு வசதியும் செய்து கொடுக்க இயலவில்லை. மேலும், துவக்க நிலையிலிருந்ததால், பள்ளிக் கட்டிடமும் அப்போது கட்டப்படவில்லை[42].

துவக்கத்தில், சமய போதனைப் பயிற்சிப்பள்ளியில் கல்வியின் தரம் சற்றுக் குறைவாகவே இருந்ததால், இந்திய இளைஞர்களுக்கு உயர்

தரக்கல்வி அளிக்கக் கூடிய நிறுவனங்களில் கல்வி பயில தேவவரம் மற்றும் மோசஸ் ஆகிய இரு இளைஞர்களைத் தேர்ந்தெடுத்தார். இவ்விரு இளைஞர்களும், தஞ்சாவூரிலும், சென்னையிலும் தரமான கல்வி கற்ற பின்னர், செயல் திறமைச் சான்றுகளுடன் நாகர்கோவில் திரும்பினார். இச்சான்றுகளை, ஆங்கிலம், தமிழ் இலக்கணம், இலக்கியம் மற்றும் இறைமை நூல் ஆகியவற்றில் சமயப்பரப்பாளர்களின் மன நிறைவிற்கேற்பப் பெற்றிருந்தனர். திறமைமிக்க இளைஞர்களான தேவவரம் மற்றும் மோசஸ் ஆகிய இருவரும், தமிழ் கிறித்தவ சமய இலக்கியம் படைப்பதிலும் மற்றும் பல பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவற்றை விரிவாக்குவதிலும் சிறந்த தொண்டாற்றியுள்ளனர்.

பெண் கல்வி

கிறித்தவ சமயப் பரப்பாளர்கள், மேற்கத்திய மற்றும் ஆங்கிலக்கல்வி ஆகியவற்றை முந்தைய திருவாங்கூர் மாநிலத்தில் பரப்புவதற்கு முன்னோடியாகத் திகழ்ந்ததோடு மட்டுமன்றி, பெண் கல்விக்கும் வழிமுனைபவர்களாகத் திகழ்ந்தனர்[43].

நாட்டில் முதன் முதலில் பெண்களுக்கான பள்ளி 1819 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. திருவாங்கூரிலிருந்த பெண்களில், இந்த முன்னோடி கல்வித்திட்டத்தில் ஈடுபாடு கொண்டு கௌரவித்தவர்களில், திருமதி மீட் திருமதி மால்ட், திருமதி மில்லர், திருமதி தாம்சன், திருமதி நார்ட்டன், திருமதி பெய்லி மற்றும் திருமதி பேக்கர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். மீட் அவர்கள், 1819ஆம் ஆண்டு, நாகர்கோவில் சமய போதனைப் பயிற்சிப் பள்ளியினைத் துவக்கிய போது, அதே ஆண்டு, நாகர்கோவிலில் பெண்களுக்காக திருமதி மீட் ஒரு பள்ளியை நிறுவினார். பெண்களைப் பள்ளிகளுக்கு அனுப்பப் பெற்றோர்கள் விருப்பப்படாததால், பெண்களைப் பள்ளியில் சேர்ப்பதில், துவக்கத்தில் மிகுந்த இடர்பாடுகளிருந்தன. தங்களது பெண்களைப் பள்ளிகளுக்கு அனுப்புவது வழக்கத்திற்கு மாறானதென மக்கள் கருதியதால், அவ்வழக்கத்தினை முறியடிக்க அவர்கள் விரும்பவில்லை. பின்னர், பள்ளியில் இலவச தங்கும் வசதி, உணவு வசதி, உடைகள் வழங்கல் ஆகிய சலுகைகள் அறிமுகப்படுத்தப்பட்டதால், துவக்கத்திலிருந்த இடர்ப்பாடுகள் ஓரளவு களையப்பட்டன.

இந்த இடையூறுகள் தவிர, பெண்களுக்கான பள்ளி 14 பெண்களுடன் துவக்கப்பட்டன. கிறித்தவ சமய போதனை, நீதி போதனை ஆகியவற்றுடன் இணைத்து கல்வி கற்பிப்பதே இதன் ஆரம்ப கால குறிக்கோளாக இருந்தது. கிறித்தவத் திருமறை நூலின் சில பகுதிகளை மனப்பாடம் செய்ததைக் கண்டு, அவர்களுக்குப் பின்னல் வேலை, நூற்பு, மற்றும் தையல் வேலை போன்ற தொழில்களில் பயிற்சியளிக்கப்பட்டது.

தையல் வேலை, நூற்பு ஆகியவற்றில், திருமதி மீட், பள்ளியில் பயிற்சியளித்தார். திருமதி மால்ட், பூத்தையல் வேலை, தலையணை பூத் தையல் பின்னல் வேலை ஆகிய தொழில்களில் பயிற்சியளித்தார். இதனில் தனிச்சிறப்பு யாதெனில், பொது நலனைக் கருத்திற் கொண்டு, பள்ளி நிறுவனர்களே மாணவிகளுக்குப் பாடம் கற்றுக் கொடுக்கும் புனிதப் பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர். கல்விக்காக அவர்கள் அரும்பாடு பட்டதனால் தான் இம் மாவட்டம், தமிழ்நாடு மாநிலத்திலேயே கல்வியைப் பொருத்தவரை, மிக உயர் நிலையிலுள்ளது குறிப்பிடத்தக்கது. பூத்தையல் இழைப்பின்னல் வேலை மிக எளிய முறையில் இப்பள்ளியில் துவங்கியது. பின்னர், இஃது உலகமுழுவதும் "இந்தியாவின் தென் திருவாங்கூர் சமயப்பரப்புக் குழு பூத்தையல் இழைப்பின்னல்" என எல்லோராலும் போற்றி அழைக்கப்படுமளவிற்கு சிறந்து விளங்கியது: மேலும், சென்னை, இலண்டன், பாரிஸ், சிகாகோ மற்றும் பல புகழ்பெற்ற பொருட்காட்சிகளில் பரிசுகளை வென்றமை குறிப்பிடத்தக்கதாகும் [44].

ஆண்டுக்கு ஆண்டு பள்ளி மாணவிகளின் எண்ணிக்கை அதிகரித்து மிகுந்த ஊக்கத்தையும், உற்சாகத்தையுமளித்தது. பெண் கல்வி குறித்து, உள்ளூர் மக்களிடையே நிலவிய தப்பெண்ணங்கள் சிறிது சிறிதாக மறையத் தொடங்கின.

1828ஆம் ஆண்டு, திருமதி மீட், பெண்களுக்காக நெய்யூரில் மற்றொரு பள்ளியை நிறுவினார். அது உணவு வசதிகளுடன் கூடிய பள்ளியாகும். அதன் பற்றார்வமிக்க நிறுவனரின் முயற்சியால் பல ஆண்டுகள் அது வளமுடன் இயங்கியது.

துவக்கத்தில் பெண் கல்வியினை ஊக்குவித்திட பல முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது. அதில் மிக முக்கியமான முயற்சியாதெனில், "பெண் கல்வியின் நன்மைகள்" என்ற தலைப்பில் தமிழில் வெளியிடப்பட்ட ஆய்வுக் கட்டுரையாகும். இவ்வாய்வுக் கட்டுரைக்கு 31 என இலக்கமளிக்கப்பட்டது. இது, நாகர்கோவிலிலுள்ள இலண்டன் சமயப்பரப்பாளர் அச்சகத்தில் அச்சடிக்கப்பட்டு, நாடு முழுவதும் வழங்கப்பட்டது. ஆய்வுக் கட்டுரையின் கீழ்க்குறிப்பிட்ட பகுதியே மக்களை மிகவும் கவர்ந்தது, அவர்கள் தங்களது பெண்களைப் பள்ளிகளுக்கு அனுப்பக் காரணமாக அமைந்தது.

"வங்காளம், பம்பாய் மற்றும் சென்னை ஆகிய இடங்களிலுள்ள இந்துக்கள், தங்களது பெண்களைப் பள்ளிகளுக்கு அனுப்புவதினாலான எண்ணிலடங்கா நன்மைகளை நன்கு உணர்ந்து, மன நிறைவடைந்து, தங்களது பெண்களை ஏற்கெனவே, பள்ளிகளுக்கு அனுப்பி விட்டதால் ....."

தொடர்ந்த ஆண்டுகளில், சமயப் பரப்பாளரான திருமதி நூயிஸ் அவர்களால், சாந்தபுரத்தில் ஒரு பெண்கள் பள்ளியும், தக்கலைக்கு

அருகாமையில் திருமதி ஆப்ஸ் அவர்களால், ஒரு பெண்கள் பள்ளியும் ஆக இரு பள்ளிகள் நிறுவப்பட்டன.

1837ஆம் ஆண்டு, முந்தைய தென் திருவாங்கூரில் 15 பெண்கள் பள்ளிகள் நிறுவப்பட்டு, அவற்றில் 361 பெண்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர் [45]. முந்தைய மாவட்டங்களான நாகர்கோவில் மற்றும் நெய்யூர் ஆகியவற்றில், கல்வி பயின்ற 7540 குழந்தைகளில் 998 குழந்தைகள் பெண்களாவர். 1857ஆம் ஆண்டு, நாகர்கோவில், நெய்யூர் சாந்தபுரம் மற்றும் தக்கலைக்கருகாமையிலுள்ள இடத்திலிருந்த பள்ளி, ஆகிய உணவு வசதி பெற்ற நான்கு பள்ளிகளிலும், உணவு வசதி பெற்ற 239 மாணவர்களையும் சேர்த்து, 1859 மாணவர்கள் பயின்று வந்தனர். அவர்களில் 1468 பேர் பெண்கள் ஆவர்.

சி.எம்.ஆகுர், தனது "திருவாங்கூர் கிறித்தவத்திருக்கோவிலின் வரலாறு" என்ற நூலில் கீழ்க்குறிப்பிட்டவாறு எழுதியுள்ளார் :

"19ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில், சமயப் பரப்புக் குழுக்கள் பெண்கள் கல்வியை மேம்படுத்த இந்த அளவிற்கு முயற்சிகள் மேற்கொண்ட பின்னரும் கூட, திருவாங்கூர் அரசு, கல்வித்துறையில் சிறிதும் கவலை கொள்ளவில்லை."[46]

திருவாங்கூர் மாநிலத்தின் தலைநகரான திருவனந்தபுரத்தில், பெண்களுக்கென தனி அரசுப் பள்ளிகளில்லை. சமயப்பரப்புக் குழுவினரால், இப்பணி துவங்கி, 40 ஆண்டுகளான பின்னரும், தற்போதைய கன்னியாகுமரி மாவட்ட பகுதியில் (முந்தைய தென் திருவாங்கூர்) பெண் கல்விக்காக அரசு எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

சி.எம். ஆகுர் மேலும் எழுதுகிறார்:

"இன்றைய நிலைப்படி, பெண்கள் கல்வியில், இந்தியாவின் பிற பகுதிகளைவிட, திருவாங்கூர் (மாநிலங்கள் உள்ளிட்ட பகுதி) முன்னணியிலுள்ளமை. மனநிறைவையளிக்கிறது.[47]"

இன்றைய நிலவரப்படி, மாவட்டத்திலுள்ள சமயப்பரப்பாளர்களின் நிறுவனங்கள்

நாகர்கோவிலில் ஒரு சமய போதனைப் பயிற்சிப்பள்ளி, மற்றும் ஒரு பெண்கள் பள்ளி ஆகியவற்றுடன் 1819 ஆம் ஆண்டு மிக எளிய முறையில் துவக்கி, இம்மாவட்டத்தில் கல்வியைப் பரப்பிட சமயப்பரப்பாளர்கள் கடும் முயற்சி மேற்கொண்டனர்.

துவக்கப் பள்ளிகள்

1931ஆம் ஆண்டு கோட்டார்[48] மாவட்ட திருச்சபை நிறுவப்பட்டு, சமயப்பரப்பாளர்களால் இதுகாறும் பராமரிக்கப்பட்டு வந்த பள்ளிகள், இச்சபையின் கண்காணிப்பில் கொணரப்பட்டன. 1931ஆம் ஆண்டு,

சமயப் பரப்பாளர்களால் 75 துவக்கப் பள்ளிகள் பராமரிக்கப்பட்டு வந்தன. இவற்றில் பலவற்றிற்கு முந்தைய திருவாங்கூர் அரசு ஏற்பு அளிக்கவில்லை. 1945ஆம் ஆண்டு, பள்ளிகளின் எண்ணிக்கை 93ஆக உயர்ந்தது.

1945ஆம் ஆண்டு, முந்தைய திருவாங்கூர் மாநிலத்தில், கட்டாயக் கல்வி முறை அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர், அனைத்துத் தனியார் துவக்கப் பள்ளிகளையும் சிறிது சிறிதாக ஒரு குறிப்பிட்ட காலவரைக்குள் நாட்டுடைமையாக்குவது குறித்து ஆய்ந்திட பரிசீலனை மேற்கொள்ளப்பட்டது. அதன் விளைவாக கிறித்தவத் திருக்கோவிலைச் சார்ந்தோரின் கடும் எதிர்ப்புக்கிடையே, சமயப் பரப்பாளர்களால் அகஸ்தீஸ்வரம் மற்றும் தோவாளை வட்டங்களில் பராமரிக்கப்பட்டு வந்த 26 துவக்கப் பள்ளிகள் அரசால் எடுத்துக் கொள்ளப்பட்டன. ஒப்புதலும் பணித்துறை உதவித்தொகையும் நிறுத்தப்பட்டன. சமயப்பரப்பாளர்கள் அவர்களது உரிமையினை நிலைநாட்டிட வாதாடினார்கள். ஆயினும், 73 துவக்கப்பள்ளிகளுக்கு மீண்டும் ஒப்புதல் அளிக்கப்பட்டு, சமயப்பரப்பாளர் களுக்கு பணித்துறை உதவித்தொகை வழங்கப்பட்டன.1955ஆம் ஆண்டு, மாவட்ட சமய முதல்வரின் அருளாட்சிப்பரப்பில் 81 முழுமையான துவக்கப் பள்ளிகள், அரசின் ஒப்புதலுடன் இயங்கி வந்தன. இவற்றிற்குப் பணித்துறை உதவித்தொகையும் அரசால் வழங்கப்பட்டது [49].

1977-78 ஆம் ஆண்டு, சமயப்பரப்பாளர்களால் மாவட்டத்தில், 100 துவக்கப் பள்ளிகள் பேணப்பட்டு வந்தன[50]. செப்டம்பர், 30, 1986 நிலையில் பள்ளிகளின் எண்ணிக்கை 120 ஆக உயர்ந்தது[51].

இடைநிலைப் பள்ளிகள்

1947ஆம் ஆண்டு வரை, திருவாங்கூர் மாநிலத்தில் இருவகையான ஆங்கிலப் பள்ளிகளும், பொது மக்கள் பேச்சு மொழிப் பள்ளிகளும் இயங்கி வந்தன. 1947ஆம் ஆண்டு, அவை இரண்டும் நடுநிலைப்பள்ளி அல்லது உயர்நிலைப்பள்ளி என்ற வகையில் இணைக்கப்பட்டு, தமிழ் அல்லது மலையாளம் பயிற்று மொழியாகவும், ஆங்கிலம் இரண்டாவது மொழியாகவும் ஆக்கப்பட்டன.

நடுத்தரக் கல்விக்கான சமயப்பரப்பாளர்களது பணி, துவக்கக் கல்விக்கு ஆற்றிய பணியை விட சற்றுக் குறைவுதான்[52]. நாகர்கோவிலில் 1907 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட புனித ஃபிரான்சிஸ் நிறுவனத்தை, 1908ஆம் ஆண்டு, நடுத்தரப்பள்ளியாக உயர்த்தியது, முதல் முயற்சியாகும். இதனைத்தொடர்ந்து, பிந்தைய ஆண்டுகளில், பல நடுத்தரப் பள்ளிகளும், உயர்நிலைப்பள்ளிகளும் நிறுவப்பட்டன. 1955ஆம் ஆண்டு, சமயப்பரப்பாளர்களால் 18 நடுத்தரப்பள்ளிகளும், ஐந்து உயர் நிலைப்பள்ளிகளும் நடத்தப்பட்டு வந்தன[53]. 1977-78ஆம் ஆண்டு, இவை 42 ஆக உயர்ந்தன. அவற்றில் 30 ஆண்களுக்காவும், 12 பெண்களுக்காகவும் நடத்தப்பட்டன.

1986ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் இருந்த நிலைப்படி, [54] சமயப்பரப்பாளர்கள் 32 மேல் நிலைப்பள்ளிகளையும், 34 உயர் நிலைப்பள்ளிகளையும் நடத்தி வந்தனர். அவற்றில், ஐந்து மேல்நிலைப் பள்ளிகளும் 12 உயர்நிலைப்பள்ளிகளும் பெண்களுக்காகவே நடத்தப் பெறுபவையாகும். அவற்றில் ஒரு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில், "ஆசிரியர்பயிற்சி", வாழ்க்கைத் தொழில் சார்ந்த பயிற்சியாக அளிக்கப்படுகிறது.

அரசின் முயற்சிகள்

ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளது போன்று, முந்தைய திருவாங்கூர் மாநிலம், புதிய கல்வித்திட்டத்தின் கீழ், தொடர்புள்ள பள்ளிகளைப் பொறுப்பேற்றுக்கொள்ளும் வரை, "ஆசான்" என அழைக்கப்பட்டு வந்த ஆசிரியர்கள் கிராமங்களில் பள்ளிகளை நடத்தி வந்தனர்[55]. சாதாரண மக்களுக்கு குறிப்பாக கிராமப்புற மக்களுக்கு, அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான கல்வியைப் புகட்டி வந்தனர்.

அக்காலத்தில், கல்வித்துறையில் அரசு நேரடி கவனம் செலுத்திவிடவில்லை. ஆசிரியர்களுக்கான ஊதியம், அரசு நிதியிலிருந்து அளிக்கப்படவில்லை மாறாக, பொதுமக்களே மனமுவந்து அதனை அளித்து வந்தனர். அரசின் கட்டுப்பாட்டில் இத்திட்டம், இயங்காமலிருந்தும், மனநிறைவிற்கேற்ப செயல்பட்டு வந்தது. ஒற்றுமையுடன் இணைந்து செயல்படக்கூடிய கிராம மக்களின் செயல்பாட்டினை அழிக்கும் நோக்கில், தனிப்பட்டோரின் போக்கு தலை தூக்கத்துவங்கும் வரை, கல்வித்திட்டம் சீராகவே நடந்து வந்தது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் அதுதான் முந்தைய திருவாங்கூர் மாநில சமுதாய மற்றும் கல்வித்துறையின் நிலையாக இருந்து வந்தது. தென் திருவாங்கூர் மாநிலப்பகுதியில் (தற்போதைய கன்னியாகுமரி மாவட்டம்) கல்வி தொடர்பான முன்னோடிப்பணிகள், கிறித்தவ சமயப் பரப்பாளர்களால் துவங்கப்பட்டவுடன், மாநிலத்தின் வடபகுதியில் கல்வியும் கல்வியின் தரமும் மங்க ஆரம்பித்தன.

இராணி கௌரி பார்வதிபாயின் சாசனம்

இத்தருணத்தில், திருவாங்கூர் அரசு நாட்டில் தொடக்கக் கல்வியினை ஆதரித்து வளர்த்திடும் பொறுப்பினை ஏற்றது. 1817ஆம் ஆண்டு திருவாங்கூர் மாநிலத்தின் முந்தைய ஆட்சியாளர் இராணி கௌரி பார்வதிபாய் ஒரு சாசனத்தைப் பிரகடனம் செய்தார். இந்த சாசனத்தில் கீழ்க்கண்டவாறு கூறப்பட்டுள்ளது:

"மக்களுக்குக் கல்வி புகட்டுவதில், எவ்வித ஏற்ற தாழ்வோ, பிற்பட்டநிலையோ கூடாது; எனவே, அனைத்து மக்களும் கல்வி பயில, மேற்கொள்ளப்படும் செலவு முழுவதையும் அரசே எற்கவேண்டும் :

கல்வியைப் பரப்புவதால், மக்களின் சமூகப் பொருளாதார நிலை உயர்ந்து, அவர்கள் பொதுப்பணியாளர்களாகவும், உயர்ந்த குடிகளாகவும் மேம்படும்போது, மாநிலத்தின் பொதுமதிப்பும் உயர்ந்திட வாய்ப்புண்டு."

இந்த சாசனம் பிறப்பிக்கப்படும்போது, கிறித்தவ சமயப்பரப்பாளர்கள் தாமே மனமுவந்து மேற்கொண்ட முயற்சிகளினால், மாநிலத்தில் ஆங்கிலக் கல்வியினைப் பரப்பிட, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

சாசனதைப் பிறப்பித்ததால், தொடக்கக் கல்வியினை மக்களுக்கு போதிப்பது, அரசின் தலையாய கடமையாகுமென்ற கொள்கையினை அரசு ஏற்றுக்கொண்டதற்கொப்பாகும்.

திருவனந்தபுரத்தில், மன்னர் இலவசப்பள்ளி 1836, டிசம்பர் திங்கள் 13-ம் நாள் முதல் துவங்கப்பட்ட பின்னர், அனைத்துமே ஏட்டளவில் தானிருந்தன. இப்பள்ளி திறக்கப்பட்டமை குறித்து கருத்தான கதை ஒன்று கூறப்படுவதுண்டு.

சமயப்பரப்பாளர்களால் நடத்தப்பட்டு வந்த நாகர்கோவில் சமய போதனைப் பயிற்சிப்பள்ளிக்கு மன்னர் வருகை புரிந்தார். இந்த சமய போதனைப் பயிற்சிப் பள்ளியில் கல்வி தொடர்பாக ஏற்பட்ட முன்னேற்றம் கண்டு வியப்படைந்து, மன்னர் இதே போன்றதொரு தரமான பள்ளியினை மாநிலத் தலைநகரில் துவக்கிடுவதற்கு திறமைமிக்க ஆசிரியர் ஒருவரை அனுப்பி வைக்குமாறு கோரினார். அதனைத் தொடர்ந்து, அச்சமய போதனை பயிற்சிப் பள்ளியின் தலைமை ஆசிரியரான திரு. ஜே. இராபர்ட்ஸ், திருவனந்தபுரம் சென்று, அங்கு முதல் ஆங்கிலப்பள்ளியினைத் துவக்கினார். இதுவே, முதன் முதலில் துவக்கப்பட்ட தனியார் பள்ளியாகும். அரசு எட்டு மாணவர்களுக்கான பள்ளிக் கட்டணத்தை வழங்கியது. "அங்கு அளிக்கப்பட்ட கல்வி முறை, சமயப்பரப்பாளரின் துணிவாண்மை ஆகியவை புதிய மேற்கத்திய கல்வி முறைக்கு மக்களிடையே ஒருமித்த ஆதரவினைப் பெருக்கியது."

"திருவாங்கூரின் வளர்ந்து வரும் தலைமுறையினருக்கான அறிவாற்றலுள்ள அரசுக்குரிய நடவடிக்கைகள்" தொடர்பாக உடன்பாடு மேற்கொள்ள பிப்ரவரி, 12, 1835 அன்று நடந்த கூட்டத்தில், இக்கருத்து வெளியிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து, இராபர்ட் பள்ளி அரசால் எடுத்துக் கொள்ளப்பட்டு, இறுதியாக டிசம்பர், 13, 1836 அன்று "மன்னர் இலவசப்பள்ளி" நிறுவப்பட்டது. பள்ளியின் பெயரில் குறிப்பிட்டுள்ளது போன்று, பள்ளிக் குழந்தைகளிடம், கட்டணம் வசூலிக்கப்படவில்லை, அது முழுமையான இலவசப்பள்ளியாகவே இயங்கியது. பள்ளி செல்லும் குழந்தைகளின் எண்ணிக்கை 100 ஆக இருந்தது. இப்பள்ளி பின்னர், தென்னிந்தியாவிலேயே மிகப்பெரிய, வளமிக்க கல்லூரிகளிலொன்றாக வளர்ந்தது[56].

மாவட்டப் பள்ளிகள்

திருவனந்தபுரத்தில் இலவசப்பள்ளி நிறுவப்பட்ட அதே நேரத்தில் பல்வேறு பல மாவட்ட ஆங்கிலப்பள்ளிகள் திறக்கப்பட்டன. அவற்றிலொன்று, தற்போதைய கன்னியாகுமரி மாவட்டத்தின் கோட்டாரில் துவக்கப்பட்ட பள்ளியாகும். ஆனால், இப்பள்ளிகளில் சில, மாநில அரசின் நிதிப்பற்றாக்குறையால், மூடப்பட்டன. ஆனால், அவை, 1855ஆம் ஆண்டு, பெருமதிப்பிற்குரிய மீட் அவர்கள் கல்வித்துறைக் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்ட பின்னர்,புதுப்பிக்கப்பட்டன. அவர் "நாட்டில் தீவிரமாக சுற்றுப்பயணம் மேற்கொண்டு பல பள்ளிகளைத் திறந்தார்." [57] இவ்விடங்களிலுள்ள வட்டாரப் பேச்சு மொழிப்பள்ளிகள் யாவும், ஆங்கிலக்கல்வி போதிப்பதற்காக, ஆங்கிலப் பள்ளிகளுடன் சேர்க்கப்பட்டன.

ஜே.ஈ.லாஃப்ரான்னெய்ஸ்[58] என்பவர், 1862ஆம் ஆண்டு, பெருமதிப்பிற்குரிய மீட் அவர்களுக்குப் பின்னர், காவல்துறைக் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார். அவரது சிறந்த திறமைமிக்க நிருவாகத்தில், பள்ளிகள் நன்றாக மேம்பாடடைந்தன. மாநிலத்தின் தலைநகரான திருவனந்தபுரத்திலுள்ள மைய அமைப்பிற்கு இணைப்பாக விளங்கும் மாவட்டப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கிடையே ஆரோக்கியமான போட்டியினை உருவாக்கவும், தகுதியுள்ள மாணவர்கள் திருவனந்தபுரம் பள்ளியில் தங்களது கல்வியினைத் தொடரவும், மாவட்டப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு, அவர்களது தகுதிக்கேற்ப, 1864ஆம் ஆண்டு, ஆறு உதவித் தொகைகள் வழங்கும் திட்டம், நடைமுறைப்படுத்தப்பட்டது.

பல பள்ளிகளை நிறுவ, ஜே.ஈ.லாஃப்ரான்னெய்ஸ் மேற்கொண்ட முயற்சிகள் அனைவராலும் பாராட்டப்பட்டன. திருவாங்கூர் திவான், ஸர் மாதவ ராவ், இவ்வாறு கூறுகிறார்:

"எப்பொழுதும் பணி செய்வதையே குறிக்கோளாகக் கொண்ட விடா முயற்சியுடைய பொதுப்பணியாற்றும் அலுவலர்களில் இவர் முதன்மையானவர்."

அவர் பணியிற் சேரும்போது, கோட்டார் பள்ளியையும் சேர்த்து எட்டு மாவட்டப்பள்ளிகளே இயங்கி வந்தன. ஆனால் பன்னிரெண்டு ஆண்டு காலங்களில் அவர் மேற்கொண்ட, கடுமுயற்சியாலும் சலியா உழைப்பாலும் பள்ளிகளின் எண்ணிக்கை 18ஆக உயர்ந்து, பள்ளியில் கல்வித் தரமும் உயர்ந்தது. 1874ஆம் ஆண்டு, மாநிலத்திலுள்ள மாவட்டப்பள்ளிகளின் எண்ணிக்கை 22ஆக உயர்ந்தது. இந்த எண்ணிக்கை பின்னர் நிலையாகவே இருந்து வந்தது. மாவட்டங்களில் ஆங்கிலக் கல்விக்குரிய தேவையினை அரசு உணர்ந்து, அரசுப் பள்ளிகளை நிறுவுவதற்கு பதிலாக, வட்டாரப் பேச்சு மொழிக்கல்விப்

பிரிவில், அரிய விளைபயனை அளித்த "பணித்துறை உதவித் தொகைத் திட்டத்தினை விரிவாக்க அரசு முடிவெடுத்து, அது தொடர்பாக 1887ஆம் ஆண்டு, ஒரு தீர்மானத்தையும் நிறைவேற்றியது[59].

1866-67ஆம் ஆண்டில், தற்போதைய கன்னியாகுமரி மாவட்ட எல்லைப் பகுதியில், மூன்று மாவட்ட ஆங்கிலப் பள்ளிகள் இயங்கி வந்தன. அவை, 146 மாணவர்கள் மற்றும் ஐந்து ஆசிரியர்களைக் கொண்ட கோட்டார் பள்ளி, 114 மாணவர்கள் மற்றும் நாண்கு ஆசிரியர்கள் ஆகியோரைக் கொண்ட தக்கலைப்பள்ளி மற்றும் 78 மாணவர்கள் மற்றும் 3 ஆசிரியர்களைக் கொண்ட ஏரணியல் பள்ளி ஆகியவையாகும். 1875-76ஆம் ஆண்டில், மாவட்டப்பள்ளிகளின் எண்ணிக்கை இரு மடங்காகியது. குழித்துறை. குளச்சல் மற்றும் பூதபாண்டி ஆகிய இடங்களில் புதிய பள்ளிகள் துவங்கப்பட்டன. [60] திருவாங்கூர் மாநில முழுமையிலும், துவங்கப்பட்ட 22 பள்ளிகளில், ஆறு பள்ளிகள் மட்டும் தற்போதைய கன்னியாகுமரி மாவட்ட எல்லைப்பகுதியில் துவங்கப்பட்டவையாகும்.

கோட்டார் பள்ளி மாணவர்களின் முதன்மையான செயல் நிறைவேற்றம் குறித்து, திரு. பென்ஸ்லே என்ற கல்வித்துறையைச் சார்ந்த ஒரு அலுவலர் கீழ்க்கண்டவாறு எழுதுகிறார்:

"மாணவர்கள் அனைவரும் தங்களது பாடங்களை நன்றாகத் தயார் செய்திருந்தார்களெனக் கூறுவதில் பெருமை கொள்கிறேன். அது மன நிறைவை அளிக்கிறது. குறிப்பாகச் சொன்னால், கோட்டார் மாணவர்கள் அனைவரும் உயர்நிலைப் பள்ளிகளில் நல்ல நிலையை அடைந்திருந்தனர்[61]."

வட்டாரப் பேச்சுமொழிக்கல்வி அறிமுகம்

கி.பி.1865-66-ல் வட்டாரப் பேச்சு மொழிக் கல்வியினை [62] மேம்படுத்துவதில், அரசின் கவனம் திரும்பியது. அதற்கு முன்பு, மாநிலத்தில் வட்டாரப் பேச்சு மொழி தனியார் பள்ளிகள் பல இயங்கி வந்தன. இந்த உள்ளூர் பள்ளிகள் மக்கள் அடிப்படை அறிவைப் பெற்றிட, வேண்டிய வசதிகளை அளித்து வந்தன. படித்தல், எழுதுதல் மற்றும் கணிதம் ஆகிய மூன்றிலும் தங்களது திறமையை வளர்த்திட, குழந்தைகள் தங்கள் கிராமத்தை விட்டு வெளியே செல்ல வேண்டியதில்லையென நிலை உருவாகியது. "ஆசான்" அல்லது "கிராம ஆசிரியர்" அத்தொழிலினைப் பரம்பரையாகச் செய்து வந்தார். அவர்களது முன்னோர்கள் வகித்து வந்த அப்பதவி, ஒவ்வொரு தலைமுறையிலும் வழிவழி மரபாகத் தொடரப்பட்டது. "ஆசானி"டம் கல்வி கற்று வந்த மக்கள் யாவரும் அவரைப் போற்றுதலுக்குரியவராக மதித்து வந்தனர். மேலும், அவர்களது குழந்தைகளுக்குப் பெறக்கூடிய உயர்ந்த மற்றும் தரமுள்ள கல்வியாக அதனைக் கருதினர்.

ஆனால், இப்பள்ளிகளில் அளிக்கப்பட்ட கல்வி முறை, தேவையான அளவு மனனம் செய்வதற்கான திறமையை வளர்க்க, முயலுவனவாக அமையவில்லை; மேலும், வயதிற்குரிய தேவையினைப் பூர்த்தி செய்வனவாயும் அமையவில்லை. எனவே, அரசு, இப்பணிக்காகக் ஆண்டொன்றிக்கு ரூபாய் 20,000/- (ரூபாய் இருபதாயிரம்) வழங்கிட 1866 ஆம் ஆண்டு, முடிவு செய்தது[63].

மைய மற்றும் வட்டப் பள்ளிகள்

வட்டாரப் பேச்சு மொழிக் கல்வித் திட்டத்தினை மேம்படுத்த அரசு கொள்கை முடிவு மேற்கொண்டதன் எதிரொலியே, மைய மற்றும் வட்டாரப் பள்ளிகள் துவங்கப் பெற்றதாகும். 1866 ஆம் ஆண்டு, தலை நகரத்தில் ஒரு மையப்பள்ளி துவங்கப்பட்டது: அதில், மலையாளத்துடன் சேர்த்து, வடமொழியும் (சமஸ்கிருதம்) கற்றுக் கொடுக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, மாநிலத்திலுள்ள அனைத்து வட்டங்களிலும், வட்டத்திற்கொரு பள்ளியாகத் துவக்கப்பட்டன. 1866 ஆம் ஆண்டில், முந்தைய திருவாங்கூர் மாநிலத்தில் அடங்கிய அகஸ்திஸ்வரம், தோவாளை, விளவங்கோடு, கல்குளம் மற்றும் இரணியில் ஆகிய ஐந்து வட்டங்களும், தற்போதைய கன்னியாகுமரி மாவட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளன; இவ்வட்டத் தலைமையிடங்களில், ஐந்து வட்டங்களும், தற்போதைய கன்னியாகுமரி மாவட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளன; இவ்வட்டத் தலைமையிடங்களில், ஐந்து வட்டாரப் பேச்சுமொழி வட்டப் பள்ளிகள் இயங்கி வந்தன. இப்பள்ளிகளில், கல்வி முறை ஆங்கிலப் பள்ளிகளில் உள்ளது போன்றே உருவாக்கப்பட்டன. அந்தந்த வட்டாரப்பேச்சு மொழியிலுள்ள புத்தகங்களிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப் பட்ட அல்லது முதன்மையான ஆங்கில நூல்களிலிருந்தோ வரலாறு, நில இயல், கணிதம் போன்ற பொருள்களில் திரட்டப்பட்டவற்றைக் கொண்டு, ஆங்கிலப் பள்ளிகளில் கற்பித்திடப் பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் மூலமாகக் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுக்கப்பட்டது. கல்வி முறையில் சேர்க்கப்பட்ட பாடத்திட்டத்தில் அடங்கியவை, இந்திய வரலாறு, திருவாங்கூர் மாநிலத்தின் நில இயல், இந்திய நில இயல், கணிதவியல், அரசியல் பொருளாதாரம், நீதி போதனை, வடமொழி (சமஸ்கிருதம்) ஆகியவையாகும்[64].

ஆனால், உரிய நூல்களையும், தகுதியான ஆசிரியர்களையும் தேர்ந்தெடுப்பதில் ஒரு இடர்ப்பாடு இருந்தது. இப்பிரச்சனை களையப்பெற, ஒரு தலைவர் மற்றும் மூன்று உறுப்பினர்கள் கொண்ட ஒரு நூல் குழு அமைக்கப்பட்டது. அவர்கள் அனைவரும் கற்றறிவாளர்களாயிருந்தனர். பாட நூல்களைத் தேர்ந்தெடுத்தல், தொகுத்தல் மற்றும் மொழியாக்கம் செய்தல்[65] ஆகிய பணிகள்

அவர்களிடமே ஒப்படைக்கப்பட்டன. வட்டாரப் பேச்சு மொழிப் பள்ளிகளில், மாணவர்களுக்கு போதிக்க, ஆசிரியர்களுக்குப் பயிற்சி யளிப்பதற்காக, திருவனந்தபுரத்தில், ஒரு வட்டாரப்பேச்சு மொழி இயல்புப் பள்ளி துவக்கப்பட்டது. வட்டாரப்பேச்சு மொழி இயக்குநர் பணியிடம் ஒன்றும் புதிதாக உருவாக்கப்பட்டது[66]. வட்டாரப்பேச்சு மொழி நிறுவனங்கள் யாவும் இயக்குநரின் கட்டுப்பாட்டில் கொணரப்பட்டன. வட திருவாங்கூர் பகுதியிலொருவரும், தென் திருவாங்கூர் பகுதியிலொருவரு மாக இரு ஆய்வாளர்கள் இயக்குநருக்கு உதவி புரிந்தனர். தென் திருவாங்கூரிலடங்கிய ஐந்து வட்டங்களிலுள்ள வட்டாரப் பேச்சுமொழி நிறுவனங்கள் (தற்போதைய கன்னியாகுமரி மாவட்டப் பகுதி) தென் திருவாங்கூர் ஆய்வாளர் கட்டுப்பாட்டில் இயங்கின. பள்ளிகளை ஆய்வு செய்து, அவற்றின் செயற்பாடு குறித்து அறிக்கைகள் அனுப்புவது, ஆய்வாளரின் பணியாகும். இந்த நிருவாக அமைப்பு 1866-67 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. வட்டாரப்பேச்சு மொழிக் கல்வி முதல் இயக்குநராக திரு. சங்கர சுப்பையர் பணியாற்றினார்.

வட்டாரப்பேச்சு மொழிப் பள்ளிகளுக்குப் பணித்துறை உதவித் தொகை

வட்டாரப்பேச்சு மொழிக் கல்விமுறை மேலும் மேலும் மக்கள் செல்வாக்கினைப் பெற்றதால், அனைத்துப் பள்ளிகளிலும் சீரான பாடத்தினை அமைத்திடும் நோக்கில், அனைத்து வட்டாரப் பேச்சு மொழித் தனியார் பள்ளிகளையும் தனது நிருவாகக் கட்டுப் பாட்டில் கொணர அரசு திட்டம் வகுத்தது. இதன் தனிச்சிறப்பிற்குரிய திட்டம், 1869-ல் உருவாக்கப்பட்டு, அரசு,தனியார் பள்ளிகளுக்கு - பணித்துறை உதவித்தொகைத் திட்டத்தினை [67] கிழ்க் காணும் நிபந்தனைகளின் பேரில் வெளியிட்டது.

1) அரசுப்பள்ளிகளில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் பாட நடைமுறை களையே தனியார் பள்ளிகளிலும் கடைப்பிடிக்க வேண்டும்;

2) அரசுப் பள்ளிகளில், பயன்படுத்தப்படும் பாடநூல்களும், தனியார் பள்ளிகளில் போதிக்கப்படவேண்டும்;

3) முழு நிறைவுடன் தகுதி வாய்ந்த ஆசிரியர்களையே நியமிக்க வேண்டும்.

தனியார் பள்ளிகள் நிருவாகத்தினை மேற்பார்வை செய்யவும்,பணித்துறை உதவித் தொகை நிபந்தனைகள் சரிவர நிறைவேற்றப் பெறுவதைக் கண்காணிக்கவும் ஒரு தனி ஆய்வாளர் நியமிக்கப்பட்டார். தொடர்ந்து, கல்வித் துறையைச் சார்ந்த ஆய்வாளர்கள் தனியார் பள்ளிகளை, குறிப்பிட்ட காலங்களின் ஆய்வு செய்தார்கள், எனவே, தனியார் வட்டாரப் பேச்சு மொழிப் பள்ளிகளின் திறமையும் எழுச்சியும் உரிய அளவு மேம்பட்டன.

பிரவிர்த்தி அல்லது கிராமப்பள்ளி

வட்டாரப்பேச்சு மொழிக் கல்வியினை விரிவுப்படுத்தவும், அக்கல்வி முறைக்கு மக்கள் ஆதரவினைப் பெறவும், அரசால் மேற்கொள்ளப்பட்ட மற்றொரு நடவடிக்கை பிரவிர்த்தி அல்லது கிராமப் பள்ளிகளைத் துவக்கியதாகும்.

தொடர்ந்து, "ஒரு கிராமத்திற்கு ஒரு பள்ளி" அல்லது "பிரவிர்த்தி" என்ற திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அவற்றில் தொடக்க வகுப்புகளே இருப்பினும், கற்பிக்கும் முறை வட்டப் பள்ளிகளிலுள்ளவற்றிக் கொப்பானதாகும். இத்திட்டத்தின்படி, பள்ளி நடத்துவதற்கான கட்டிடத்தை அளிப்பது கிராம மக்களின் பொறுப்பாகும். ஆசிரியருக்கு ஊதியம் வழங்க, ஒரு மாணவருக்கு "ஒரு பணம்" என்ற வீதத்தில் அரசு அளித்து வந்தது. தேவைப்படின், ஒரு கிராமத்தில் ஒரு பள்ளி மேலும் துவக்கப்பட்டது. அப்பள்ளிகள் சரிவர இயங்குவதைக் கண்காணித்திட, 14 பள்ளிகளுக்கு ஒரு துணை ஆய்வாளர் வீதம் அரசு நியமித்தது. இத்திட்டத்தின்படி, அடுத்த (1871-72) ஆண்டில், 141 பள்ளிகள்[68] திறக்கப்பட்டன. மாநிலத்திலுள்ள 141 பள்ளிகளில், தற்போதைய கன்னியாகுமரி மாவட்டப் பகுதியில் மட்டும் 36 பள்ளிகள்[69] திறக்கப்பட்டன.

இப்பகுதிகளில் இயங்கிவந்த பிரவிர்த்திப் பள்ளிகளின் வட்ட வாரியான எண்ணிக்கை கீழே அளிக்கப்பட்டுள்ளது:

தொடர் எண்.	*வட்டத்தின் பெயர்*	*பள்ளிகளின் எண்ணிக்கை*
1.	தோவாளை	7
2.	அகஸ்தீஸ்வரம்	8
3.	இரணியல்	6
4.	கல்குளம்	7
5.	விளவங்கோடு	8
	மொத்தம்	36

இந்த கல்வி சீர்திருத்தத் திட்டத்தினை மிக வெற்றிகரமாக செயல்படுத்தியவர் அறிவாற்றல் மிக்க முன்னாள் வட்டாரப் பேச்சு மொழிக் கல்வி இயக்குநர், திரு சங்கர சுப்பையராவார். கிராம, வட்ட மற்றும் நகர்ப்புற அளவிலான பல நிலைகளிலுள்ள வட்டாரப் பேச்சு மொழிப்பள்ளிகளில், போதிக்கும் வழிமுறை மாறுபட்டிருந்தது. கிராமப் பள்ளிகளில், படித்தல் மற்றும் பனையோலைகள், காகிதங்கள் ஆகியவற்றில் எழுதுதல், கணிப்பியல், நில இயல் (பொது மற்றும் திருவாங்கூர்) ஆகியவை போதிக்கப்பட்டன. இந்த பாடத்திட்டம் தவிர, வட்டப் பள்ளிகளில், இந்திய வரலாறு மற்றும் அடிப்படை வடமொழி

(சமஸ்கிருதம்) ஆகியவையும் கற்பிக்கப்பட்டன. திருவனந்தபுரத்திலுள்ள வட்டாரப் பேச்சு மொழிப்பள்ளியில், தரம் உயர்ந்ததாயும் எக்லிட்டின் முதல் நூலைத் தழுவியதாயுமிருந்தது. குறிக்கணக்கியல், நேர் ஒப்புரு வரையிலும், மேலும் இந்திய மற்றும் திருவாங்கூர் வரலாறு ஆகியவையும் பாடப்பகுதியில் சேர்க்கப்பட்டன. போதிக்கப்பட்ட வடமொழியின் (சமஸ்கிருதம்) தரமும் மிக உயர்ந்ததாயிருந்தது. வட்டாரப் பேச்சு மொழிப் பள்ளிகளும் படிப்படியாக உயர்ந்தன. அதனுடன், வட்டாரப் பேச்சு மொழிக் கல்வி தொடர்பான செலவும்[70] 1881ஆம் ஆண்டு, ரூபாய் 60,000/- ஆக உயர்ந்தது. இக்கல்வி முறைப்பிரிவிற்கு அரசும் அதிக முதலீட்டினை ஒதுக்க இயலாத நிலையிலிருந்தது. எனவே, அரசு நிலையில் புதிய பள்ளிகளைத் திறப்பதற்குப் பதிலாக உள்ளூரிலுள்ள தனியார் நிறுவனங்களை ஊக்குவித்து, அவர்களை புதிய பள்ளிகளைத் திறக்கச் செய்து, அரசு பணித்துறை உதவித் தொகை அளிக்கலாமென அரசு முடிவு செய்தது. அரசின் இந்நடவடிக்கை, மக்களின் பாராட்டுதலைப் பெற்றது. அரசு வழங்கும் நன்கொடையினை ஏற்று, மாநிலம் முழுவதும பல தனியார் பள்ளிகள் வட்டாரப் பேச்சு மொழிக் கல்வியினைப் பரப்பிட முன்வந்தன. அதன் வாயிலாக இக்கல்விமுறை தீவிரமாக மக்களுக்குப் பயனளித்ததோடன்றி, தனியார் பள்ளிகளும் பெரிதும் மேம்பாடடைந்தன.

கல்வி நிறுவனங்களின் வளர்ச்சி,[71] கீழ்க்காணும் விவரங்களிலிருந்து தெரிய வருகின்றது:

1878-79ஆம் ஆண்டு, கன்னியாகுமரி மாவட்டப் பகுதியிலுள்ள கிராமங்கள் தோவாளை, கல்குளம் மற்றும் விளவங்கோடு ஆகிய மூன்று தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டன, ஒவ்வொரு தொகுதியும் ஒரு ஆய்வாளர் தலைமையிலியங்கி வந்தன.

தோவாளைத் தொகுதியில், பள்ளிக் கட்டணத் தொகை வசூலிப்பதில் இடர்ப்பாடு நேர்ந்ததால் கோட்டாரபள்ளி நிறுத்தப்பட்டுவிட்டது. அதற்குப் பதிலாக, அதே ஆண்டு (1878-79) குலசேகரத்தில் ஒரு பள்ளி துவங்கப்பட்டது. அழகிய பாண்டியபுரம், ஆனந்தபுரம் மற்றும் பார்வதிபுரம் ஆகியவற்றிலுள்ள பள்ளிகள் முந்தைய ஆண்டைப் போன்ற அளவு நல்ல முறையில் இயங்கவில்லை; ஏனெனில், அவற்றில் பணியாற்றிய ஆசிரியர்கள் அருகில் போட்டியாக வேறு பள்ளிகளைத் துவக்கினர். ஏனைய பள்ளிகள் சரிவர இயங்கி வந்தன.

கல்குளம் தொகுதியில், மாணவர்கள் சரிவர பள்ளிக்கட்டணத்தைச் செலுத்தாததால், திருப்பரப்பு மற்றும் கூதைநல்லூர் ஆகிய இடங்களிலியங்கி வந்த பள்ளிகள் நிறுத்தப்பட்டன, அதனைத் தொடர்ந்து, நெய்யூர், மண்டைக்காடு ஆகிய இடங்களில் புதிய பள்ளிகள் நிறுவப்பட்டன. இத்தொகுதியில் 1878-79ஆம் ஆண்டில், ஆலூர், பத்தரை, திருவிதாங்கோடு, குலசேகரம், பொன்மணி, காட்டுத்தூரி,

மிடாளம் மற்றும் இராசக்காமங்கலம ஆகிய இடங்களில் பள்ளிகள் நன்முறையில் இயங்கி வந்தன.

விளவங்கோடு தொகுதியில், 50 விழுக்காடு அளவு பள்ளிகள் நன்றாக இயங்கின; ஏனைய பள்ளிகளின் முன்னேற்றம் சற்றுக்குறைவாகவே இருந்து வந்தது.

இந்த ஆண்டுதான் (1878-79) முந்தைய திருவாங்கூர் மாநிலத்திலிருந்து, இரு இளைஞர்கள், முதன் முறையாக சென்னை, சைதாப்பேட்டையிலுள்ள வேளாண் கல்லூரியில் பயிற்சி பெற அனுப்பப்பட்டனர்[72].

மாவட்டத்தின் கல்வி வளர்ச்சியைப் பொறுத்த வரையில், 1893-94 ஆம் ஆண்டு, ஒரு முக்கிய மாறுதல் இடம் பெற்றது. இந்த ஆண்டுதான்[73], வட்டாரப் பேச்சுமொழிப் பள்ளிகளின் பெயர் சிறிது மாற்றியமைக்கப்பட்டது.

முன்பு, வட்டாரப்பேச்சு மொழிப்பள்ளிகளின் மூன்று நிலைகள் கடைநிலை, நடுநிலை மற்றும் உயர்நிலை ஆகியவையாகும். 1894ஆம் ஆண்டு, 'கடைநிலை' என்பது 'துவக்க நிலை' என மாற்றியமைக்கப்பட்டது. எஞ்சிய இருநிலைகளும் அவ்வாறே தொடர்ந்து அழைக்கப்பட்டன. துவக்கம், நடுநிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகள் தொடர்பான, ஒரு உறுதியான போதனாமுறையும் வரையறுக்கப்பட்டது.

1894ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட மாநிலக் கல்விச் சீர்திருத்தம் கல்வி நிறுவனங்களின் நிருவாக மற்றும் ஆய்வு முறைகளை மாற்றியமைத்தது. 1894-க்குப் பல ஆண்டுகளுக்கு முன்னர், ஆங்கிலக்கல்வி மற்றும் வட்டாரப் பேச்சு மொழிக்கல்வி ஆகிய இரண்டிற்குமுள்ள வேறுபாடுகளின் அடிப்படையில் நிருவாகம் இயங்கியது. ஒவ்வொன்றும், வேறுபட்ட தன்மைகளையுடைய இரு தனி அமைப்புகளின் கட்டுபாட்டில் ஒப்படைக்கப்பட்டன. ஆங்கிலக் கல்வியின் முதன்மைத் தலைமை அலுவலர், ஆங்கிலக்கல்வி இயக்குநராவார். ஆங்கில பள்ளிகள் கண்காணிப்பாளர் இயக்குநரின் நேரடிக் கட்டுப்பாட்டிலியங்கி வந்தார்: அரசு உதவி பெறும் தனியார் வட்டாரப் பேச்சு மொழிப்பள்ளிகள் வட்டாரப் பேச்சு மொழிக் கல்வி இயக்குநரின் நிருவாகக் கட்டுப்பாட்டில் இயங்கின. கல்வி முறையைப் பற்றி, நாகமையா இவ்வாறு எழுதுகிறார்:

"இந்த முறை, குறைபாடு உள்ளதாகக் கருதப்பட்டது. ஆங்கிலக் கல்வி முறை தொடர்பாக அலுவல்கள் குறித்து, பிரிக்கப்பட்ட ஆணையுரிமை நடைமுறையிலிருந்தது. திருவனந்தபுரம், பெருமதிப்பிற்குரிய மன்னர் கல்லூரி, முதல்வர், ஆங்கிலக் கல்வி இயக்குநர் பதவியில், அலுவல் சார்பான பொறுப்பினை ஆற்றி வந்தார். பெயரளவில்தான் இப்பொறுப்பினை அவர் நிறைவேற்ற முடிந்தது.

ஆங்கிலக்கல்வி முறை குறித்து, இயக்குநர் அரசுக்கு ஆலோசனை கூற வேண்டுமென வரையறை செய்யப்பட்ட விதி இருந்தது. ஆனால் அரசு அபூர்வமாக அவரது ஆலோசனையைப் பெற்றது. கண்காணிப்பாளரும் இயக்குநரின் ஆலோசனையைக் கோருவதில்லை. வட்டாரப்பேச்சு மொழிக்கல்வி முறையிலோ, வேறுசில குறைபாடுகளும் காணப்பட்டன.[74]"

"இந்த பிரிவினைக் கொள்கை, கல்வி நிறுவனங்களுக்கு அரசின் உதவி வழங்குவது தொடர்பாக, அதாவது, ஆங்கிலக் கல்வி போதிக்கும் பள்ளிகளுக்கொன்றும், வட்டாரப் பேச்சு மொழிப் பள்ளிகளுக்கு மற்றொன்றுமாக, இணையாக இரண்டு வகையான விதிகளை வரையறுத்துக் கொள்ள வழிவகுத்தது. இருவகை விதிகளிலுமே, பொதுப்பண்பு குறித்த விவரங்களே அடங்கியுள்ளன. இடவசதி கருவிகள், ஆசிரியர்களின் கல்வித் தகுதி, போன்ற அரசு உதவி பெறுவதை நியாயப்படுத்தும் வகையிலான கட்டுப்பாட்டுப் பிரிவுகளேதும் இடம் பெறவில்லை.

எனவே, 1894 ஆம் ஆண்டு, தீவிர விசாரணைக்கும், ஆய்வுக்கும் பின்னர், கட்டுப்பாடு, ஆய்வு மற்றும் மாநில அரசு உதவி ஆகிய இனங்களில் அரசு சில சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தத் தீர்மானித்தது.

அதனைத் தொடர்ந்து, [75] மாநிலத்திலுள்ள அனைத்து ஆங்கில மற்றும் வட்டாரப் பேச்சு மொழிப்பள்ளிகளும், தனித்தனி தொகுதி எல்லைகளைக் கொண்ட மூன்று ஆய்வாளர்களின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டன. அம்மூவரும், அரசின் நேரடி மேற்பார்வையில் பணியாற்றினர். மாநில கல்வித் துறையின் ஆங்கிலக் கல்வி இயக்குநர், வட்டாரப்பேச்சு மொழி இயக்குநர், மாவட்டப்பள்ளிகளின் கண்காணிப் பாளர் மற்றும் பத்மநாபபுரம் மற்றும் பிற தொகுதிகளில் பணியாற்றிய தலைமை ஆய்வாளர் ஆகியோரடங்கிய நிருவாக அமைப்புமுறை நீக்கப்பட்டது.

புதிதாக அமைக்கப்பட்ட மூன்று தொகுதிகளும், தெற்கு, மையம் மற்றும் வடக்கு என நிர்ணயிக்கப்பட்டன. தற்போதைய கன்னியாகுமரி மாவட்டமும் தற்போதைய கேரள மாநிலம், திருவனந்தபுரம் மாவட்டத்தின் பிற நான்கு வட்டங்களும் தெற்குத் தொகுதி ஆய்வாளர் கட்டுப்பாட்டில் இருந்தன. அகஸ்தீஸ்வரம், தோவாளை, இரணியல், கல்குளம், விளவங்கோடு, திருவனந்தபுரம், நெய்யட்டிக்கரை, நெடுங்காடு மற்றும் சிரயிங்கல் ஆகியவை, தெற்குத் தொகுதியிலடங்கிய வருவாய் வட்டங்க ளாகும். தென் தொகுதியின் முதல் ஆய்வாளர் திரு.பி. இராமசாமி அய்யராவார். ஒவ்வொரு தொகுதியும், இரண்டு அல்லது அதற்கு மேற் பட்ட வட்டங்களையுடைய நான்கு மாவட்டங்களாக மேலும் பிரிக்கப்பட்டன.

"1894-கல்வித் துறை சீர்திருத்தத்தின் மற்றொரு தனிச்சிறப்பு, 1894 ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் பிறப்பிக்கப்பட்ட "திருவாங்கூர் கல்வி விதிகளாகும்". அரசு நிதி உதவி வழங்கப்படுமுன் நிறைவேற்ற வேண்டிய நிபந்தனைகள் குறித்து, இவ்விதி விவரிக்கிறது. இந்நிபந்தனைகள் பள்ளியின் பாடத்திட்டம், ஆசிரியர்களின் கல்வித் தகுதி, கட்டிட இட வசதி, சுகாதாரம், மரச் சாமான்கள், கல்வி சார்ந்த கருவிகள் மற்றும் நிதி உதவிகள் ஆகியவை தொடர்பானவையாகும்.

அறிமுகப்படுத்தப்பட்ட இச்சீர்திருத்தங்கள் பயனுள்ளவையாகும். பள்ளிகளின் பொது ஆய்வு பாங்கு குறித்து, உயர்வு காணப்படுகிறது. நிதி உதவி பெறும் பள்ளிகள் மிகவும் கண்டிப்பான ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இது திறமையை மேம்படுத்த வழி கோலுகிறது.

அரசாணையின்படி, மாநிலத்தின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும், கல்வி வசதியினைப் பெருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதன் விளைவாக, ஒவ்வொரு பிரவிர்த்தி அல்லது கிராமத்திலும் ஒரு அரசு துவக்கப்பள்ளி துவங்கியது. கல்விச் சீர்த்திருத்தம் நற்பயனளித்தது. கல்விச் சீர்திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர், (முந்தைய திருவாங்கூர் மாநிலத்தில் தனியார் நிருவாகத்திலிருந்த பள்ளிகள் உள்பட) ஒவ்வொரு 1.9 சதுர மைலுக்கும், 792 குடியிருப்பாளர்களுக்கு ஒரு பள்ளி வீதம் திறக்கப்பட்டது. தற்போதைய கன்னியாகுமரி மாவட்டப் பகுதியில், கல்வி நிறுவனங்களின் வளர்ச்சி குறித்து கீழ்க்காணும் பட்டியலை நோக்கின் தெரிய வரும்[78]:

வட்டம்	மக்கட்தொகை (1891 ஆம் ஆண்டு மக்கட்தொகைக் கணக்கெடுப்புப்படி)	1893		1894	
		பள்ளிகளின் எண்ணிக்கை (அரசு)	மாணவர்களின் எண்ணிக்கை (அரசு)	பள்ளிகளின் எண்ணிக்கை (அரசு)	மாணவர்களின் எண்ணிக்கை (அரசு)
தோவாளை	29,751	57	2,398	66	3,320
அகஸ்தீஸ்வரம்	87,241	108	6,021	123	7,122
இரணியல்	1,05,098	130	7,057	147	8,197
கல்குளம்	59,474	92	4,607	86	3,953
விளவங்கோடு	68,521	107	4,868	102	4,793

1893-94 ஆம் ஆண்டில், தற்போதைய கன்னியாகுமரி மாவட்டத்தில், கீழ்க்கண்ட அரசு மாவட்ட ஆங்கிலப்பள்ளிகளும், உதவி பெறும் தனியார் பள்ளிகளும், நன்றாக இயங்கி வந்தன:

1. கோட்டார் உயர்நிலைப்பள்ளி
2. இரணியல் மாவட்டப் பள்ளி
3. திருவட்டார் மாவட்டப் பள்ளி

4. பூதபாண்டி மாவட்டப் பள்ளி

5. நகர பெண்கள் பள்ளி, நாகர்கோவில்

6. நடுநிலைப்பள்ளி, மார்த்தாண்டம்

தொடர்ந்த ஆண்டுகளில், முந்தைய திருவாங்கூர் மாநிலத்தைச் சேர்ந்த (தற்போதைய கன்னியாகுமரி மாவட்டத்திலடங்கியவை) அகஸ்தீஸ்வரம், தோவாளை, கல்குளம், விளவங்கோடு மற்றும் இரணியல் ஆகிய ஐந்து வட்டங்களிலுமுள்ள கல்வி நிறுவனங்களில் கல்வியின் தரம், மிகப்பெரிய அளவில் வளர்ச்சியுற்றது. பல்வேறு வகையான கல்வி நிறுவனங்கள், மற்றும் (வட்ட வாரியான) அவற்றின் இருப்பிடம், ஆகிய விவரங்கள் 1895-96ஆம் ஆண்டின் நிலைப்படி கீழே அளிக்கப்பட்டுள்ளன[77].

ஆங்கில தொடக்கப்பள்ளி

திருவாங்கூர் மாநிலம் முழுமையும், அரசு ஒரே ஒரு ஆங்கில துவக்கப் பள்ளியினைப் பராமரித்து வந்தது. அது, கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டம, பூதபாண்டியில் இயங்கி வருகிறது. மற்றவை, உதவி பெறும் நிறுவனங்களாலோ, தனியார் நிருவாகத்தாலோ நடத்தப்படுகின்றன. முந்தைய இரணியல் வட்டம் நெய்யூரில், ஏ.வி. பெண்கள் பள்ளி என்ற பெண்களுக்கான ஆங்கில தொடக்கப்பள்ளியும், கரிங்கலில் தனியார் ஆங்கிலப்பள்ளியும் இயங்கி வருகின்றன (தனியார் பள்ளிகள் யாவுமே, அரசு உதவி பெறாத பள்ளிகளாகும்). அகஸ்தீஸ்வரம் வட்டம், கோட்டாரத்தில், ஏ.வி.பள்ளி எனும் ஆங்கில தொடக்கப்பள்ளி இயங்கி வருகிறது.

ஆங்கிலத் தொடக்கப்பள்ளிகளில் கல்வி போதிக்கப் பயன்படுத்தப்படும் மொழி ஆங்கிலமாகும். தாய் மொழியான தமிழோ, மலையாலமோ மற்ற பொருள்களில் ஒன்றாகக் கற்பிக்கப்பட்டது.

ஆங்கில நடுநிலைப்பள்ளி

மாவட்டத்தில் எட்டு ஆங்கில நடுத்தரப்பள்ளிகள் இயங்கி வந்தன. அவற்றில், மூன்று அரசாலும், ஐந்து உதவி பெறும் தனியார் நிறுவனங்களாலும் நடத்தப்படுகின்றன. இந்த எட்டு பள்ளிகளில் இரண்டு பெண்களுக்காகவே நடத்தப்படுபவையாகும். பள்ளிகளின் விவரம் பின்வருமாறு:

அரசு ஆங்கில நடுத்தரப்பள்ளி

1. இரணியல் வட்டம்

அ) இரணியல் ஆங்கிலப்பள்ளி

2. கல்குளம் வட்டம்

அ) தக்கலை ஆங்கிலப்பள்ளி

ஆ) திருவட்டார் ஆங்கிலப்பள்ளி

உதவிபெறும் தனியார் பள்ளிகள்

1. அகஸ்தீஸ்வரம் வட்டம்

அ) நாகர்கோவில் உணவு வசதியுள்ள பள்ளி

ஆ) நகர பெண்கள் பள்ளி, நாகர்கோவில்

2. இரணியல் வட்டம்

அ) நெய்யூர் ஏ.வி. ஆண்கள் பள்ளி

3. விளவங்கோடு வட்டம்

அ) மார்த்தாண்டம் பெண்கள் பள்ளி

ஆ) எல்.எம்.எஸ். பள்ளி, மார்த்தாண்டம்

ஆங்கில உயர்நிலைப் பள்ளிகள்

மாவட்டத்தில் இரணடு ஆங்கில உயர்நிலைப்பள்ளிகள் இயங்கி வந்தன. அவற்றிலொன்று கோட்டாரில் அரசால் நடத்தப்பட்டது. (கோட்டார் உயர் நிலைப்பள்ளி) மற்றொன்று, நாகர்கோவில் சமயபோதனைப் பயிற்சிப் பள்ளியின் சமயப்பரப்பாளர்களால் நடத்தப்பட்டது. அது மிகப்புகழ்பெற்ற வரலாற்றினைப் பின்னணியாகக் கொண்டதாகும். மாநிலம் முழுமையிலும் அரசால் நடத்தப்பெற்று வந்த ஆறு பள்ளிகளில், கோட்டாரிலுள்ள அரசு ஆங்கில உயர்நிலைப்பள்ளி ஒன்றாகும். எஞ்சிய ஐந்து பள்ளிகளில், இரண்டு திருவனந்தபுரத்திலும், கொல்லம், அம்பலப்புழா மற்றும் பரூர் ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு பள்ளியும் இயங்கி வருகின்றன.

வட்டாரப் பேச்சு மொழிப்பள்ளி

வட்டாரப்பேச்சு மொழித் தொடக்கப்பள்ளிகள்

பள்ளியை மூன்று நிறுவனங்கள் நடத்தி வந்தன. அவை, அரசு, அரசு உதவி பெற்ற தனியார் நிறுவனங்கள் மற்றும் அரசு உதவி பெறாத தனியார் நிறுவனங்கள் ஆகியவையாகும். 1895-96ஆம் ஆண்டில், இயங்கி வந்த, வட்டாரப்பேச்சு மொழித் தொடக்கப் பள்ளிகள் குறித்த விவரங்கள் நிறுவனங்கள் வாரியாக பட்டியல் 1-ல் அளிக்கப்பட்டுள்ளன[78].

வட்டாரப்பேச்சு மொழி நடுநிலைப்பள்ளிகள்

அரசு, அரசு உதவி பெறும் தனியார் நிறவனங்கள் மற்றும் அரசு உதவி பெறாத நிறுவனங்கள் ஆகிய மூன்று நிறுவனங்களால், வட்டாரப்

பேச்சு மொழி நடுத்தரப் பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன. அரசு உதவி பெறும் தனியார் நிறுவனங்கள், ஏனைய இரு நிறுவனங்களை விட அதிகமான பள்ளிகளை நடத்தி வருகின்றன. கி.பி. 1894ஆம் ஆண்டின் நிலவரப்படி, உரிய விவரங்கள் பட்டியல் - 2-ல் அளிக்கப்பட்டுள்ளன.

தோவாளை வட்டத்தில், அரசு வட்டாரப்பேச்சு மொழி நடுநிலை பள்ளியேதும் இயங்கவில்லை.

உதவிபெறும் வட்டாரப்பேச்சு மொழி நடுநிலைப்பள்ளி

கன்னியாகுமரி மாவட்டத்தில், வட்டாரப்பேச்சு மொழி நடுநிலை பள்ளிகள் இயங்கி வரும் இடங்களின் பெயர்கள், பட்டியல் - 3-ல் அளிக்கப்பட்டுள்ளன.

தனியார் வட்டாரப்பேச்சு மொழி நடுத்தரப்பள்ளிகள்

தோவாளை வட்டம், ஆரல்வாய்மொழி உச்சம்பாறை மற்றும் சேக்குடி, ஆகிய மூன்று இடங்களில் உதவிபெறாத மூன்று தனியார் வட்டாரப் பேச்சு மொழி நடுத்தரப்பள்ளிகளும், இரணியல் வட்டம், முலுகுமூடு மற்றும் பாரிக்கோடு ஆகிய இடங்களில் இரண்டு பள்ளிகளும், விளவங்கோடு வட்டம், அரம்போலி மற்றும் வுட்சம்பாரா என்ற இடத்தில் ஒரு பள்ளியும் இயங்கி வருகின்றன.

பட்டியல் - 1

வட்டாரத்தின் பெயர்	அரசு வட்டாரப் பேச்சு மொழித் தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை	உதவிபெறும் வட்டாரப் பேச்சு மொழித் தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை	உதவிபெறாத வட்டாரப் பேச்சு மொழித் தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை	அனைத்துவகை களையும் சார்ந்த பள்ளிகளின் மொத்த எண்ணிக்கை
(1)	(2)	(3)	(4)	(5)
1. தோவாளை	8	19	13	40
2. அகஸ்தீஸ்வரம்	9	63	23	95
3. இரணியல்	12	77	70	159
4. கல்குளம்	7	49	35	91
5. விளவங்கோடு	7	49	26	82

பட்டியல் - 2

வட்டத்தின் பெயர்	பள்ளிகள் இயங்கி வரும் இடங்கள்	பள்ளிகளின் பெயர்கள்
1. அகஸ்தீஸ்வரம்	1.சுசீந்திரம்	1.மலையாளம் பெண்கள் பள்ளி
	2.கோட்டாரம்	2. மாவட்ட பெண்கள் பள்ளி
	3. கோட்டார்	3. மலையாளம் பெண்கள் பள்ளி
2. இரணியல்	1. இரணியல்	1. இரணியல் மாவட்டப்பள்ளி
	2. பத்தரை	2. பரவிர்த்தி பள்ளி
3. கல்குளம்	1. கல்குளம்	1. மாவட்ட பெண்கள் பள்ளி
	2. திருவட்டார்	2. மாவட்ட பெண்கள் பள்ளி
	3. கல்குளம்	3. மாவட்ட மலையாளம் பள்ளி
	4. திருவட்டார்	4. மாவட்ட மலையாளம் பள்ளி
4. விளவங்கோடு	1. குழித்துறை	1. பெண்கள் பள்ளி
	2. விளவங்கோடு	2. மாவட்ட பள்ளி
	3. ஆறுதேசம்பட்டி	3. நடு நிலைப் பள்ளி
	4. பைங்குளம்	4. நடு நிலைப் பள்ளி
	5. பாங்கல்	5. நடு நிலைப் பள்ளி
	6. லட்சுமிபூதன்கோடு	6. நடு நிலைப் பள்ளி

பட்டியல் - 3

வட்டங்களின் பெயர்	வட்டாரப்பேச்சு மொழி அரசு உதவி பெறும் நடுநிலைப் பள்ளிகள் இயங்கி வரும் இடங்கள்	
1. தோவாளை	1.தோவாளை	2. தாளக்குடி
	3. திட்டுவிளை (ஆண்கள் பள்ளி)	4. திட்டுவிளை (பெண்கள் பள்ளி)
	5. கேசவனூர்	6. கருங்குழி
	7. ஆரல்வாய்மொழி	8. செம்பகராமன்புதூர்
	9. சகாயநகர்	10. ஆடித்தோப்பு
	11. அரசர்குடி	12. காட்டுப்புதூர்
	13. கொல்லன்துருத்தி	14. செம்பேரிவிளை
	15. புளியாடி	16. வின்னாச்சேரி
	17. பீமனேரி	18. பேயோட்டு
2.அகஸ்தீஸ்வரம்	1.நாகர்கோவில்	2. கேடாச்சேரி
	3. வடசேரி	4. அகத்தீபுரம்
	5. நாகர்கோவில் (கிராம ஆண்கள் பள்ளிகள்)	6. வீரவிளை
	7. மணக்குடி	8. கோட்டியாடி
	9. சியோன்புரம்	10. இருட்டைலாண்டி
	11. குளத்துவிளை	12. கோயில்விளை
	13. புத்தன்	
3. இரணியல்	1. சாந்தப்பூரன்குடி	2. அனந்தநாடார் குடியிருப்பு
	3. கொடுப்பேய்குழி	4. முட்டம்
4. கல்குளம்	கிருஷ்ணன் கோவில்	
5. விளவங்கோடு	1. பாக்கியபுரம்	2. பாலக்கோடு
	3. மேல்புரம்	4. உன்னவிளை
	5. நான்பாலி	6. மார்த்தாண்டம்

வட்டாரப்பேச்சு மொழி உயர்நிலைப்பள்ளி

மாவட்டத்தில் சுசீந்திரம் என்ற இடத்தில், ஒரு வட்டாரப்பேச்ச மொழி உயர்நிலைப்பள்ளி அரசால் நடத்தப்பட்டு வருகிறது.

உயர்நிலைக்கல்வியறிவு பெறுதல்

தொடக்க, நடுநிலை மற்றும் இடைநிலைக்கல்வி நிறுவனங்கள் தவிர, மாவட்டத் தலைநகரான நாகர்கோவிலில் கிறித்தவக் கல்லூரி எனும், கலைக்கல்லூரி இயங்கி வருகிறது. இந்த இயலின் மற்றொரு

பக்கத்தில், நாகர்கோவில் சமய போதனைப்பயிற்சிப் பள்ளியைப் பற்றிய விரிவான விவரங்கள் அளிக்கப்பட்டுள்ளன. இந்தப் பயிற்சிப்பள்ளி, சிறிது சிறிதாக வளர்ந்து, 1890ஆம் ஆண்டு இரண்டாவது நிலைக் கல்லூரியாக உயர்ந்தது. 1894ஆம் ஆண்டு, இக்கல்லூரி, மாநிலத்திலுள்ள ஐந்து கல்லூரிகளில் ஒன்றாக விளங்கியது. அப்போது இக்கல்லூரியில் 19 மாணவர்கள் கல்வி பயின்றனர்.

1896-'97-ம் ஆண்டில் கல்வி வளர்ச்சி

கல்வியைப் பரப்புவதில், அரசின் கொள்கைகளில், பெரிய மாற்றங்களேதுமில்லாதிருந்தும் கல்வி நிறுவனங்கள் ஓரளவு வளர்ச்சியடைந்தன.

அரசு ஆங்கில நடுநிலைப்பள்ளியைப் பொருத்தவரை, ஒரு பள்ளி புதிதாகத் துவக்கப்பட்டு மாவட்டத்திலுள்ள இவ்வகை அரசுப் பள்ளிகளின் எண்ணிக்கை மூன்றிலிருந்து ஐந்தாக உயர்ந்தது. தோவாளை வட்டம், பூதப்பாண்டியில், புதிய ஆங்கில நடுநிலைப்பள்ளி அமைக்கப்பட்டது. முன்பு இஃது அரசால் நடத்தப்பட்ட ஆங்கிலக்கல்விக்கான துவக்கப் பள்ளியாக இயங்கியது. பின்னர் அது, ஆங்கில நடுநிலை பள்ளியாக உயர்த்தப்பட்டது.

1894ஆம் ஆண்டு, மாவட்டத்தில், அரசு உதவி பெறாத தனியார் ஆங்கில நடுநிலைப்பள்ளிகள் ஏதும் இயங்கவில்லை; ஆனால், 1896-ல் கீழ்க்காணும் இடங்களில் அவ்வகையான பள்ளிகள் இயங்கின.

அகஸ்தீஸ்வரம் வட்டம்[79]

நாகர்கோவில் எல்.எம்.எஸ். ஆங்கில நடுநிலைப்பள்ளி.

இரணியில் வட்டம்

முட்டம் ஆங்கில நடுநிலைப்பள்ளி. 1898 ஆம் ஆண்டு, அரசு நிதிஉதவி பெறாத எட்டு தனியார் ஆங்கில நடுநிலைப்பள்ளிகள் மாநிலத்தில் இயங்கி வந்தன. அவற்றில் இரண்டு, இம்மாவட்டத்தில், இயங்கியவையாகும்.

ஆங்கில உயர்நிலைப்பள்ளியில், எவ்வித மாற்றமுமில்லை. ஆனால், வட்டாரப் பேச்சு மொழிப் பள்ளியில் ஒரு மாற்றமுள்ளது. மாணவர்களின் எண்ணிக்கை குறைந்ததால், சுசீந்திரத்திலுள்ள ஒரே வட்டாரப் பேச்சுமொழி உயர்நிலைப் பள்ளியின் நிலை, நடுநிலைப்பள்ளியாகக் குறைந்தது. திருவனந்தபுரத்திலொன்றும், பரூரில் ஒன்றுமாக இரண்டு வட்டாரப் பேச்சு மொழி உயர்நிலைப் பள்ளிகள் இயங்கிவந்தன. 1895 முதல் 1898 வரை, வட்டாரப் பேச்சு மொழி நடுநிலைப்பள்ளிகளில் எவ்வித வளர்ச்சியுமில்லை. ஆனால், வட்டாரப் பேச்சு மொழித் தொடக்க பள்ளிகளில் நல்ல முன்னேற்றம் காணப்பட்டது. அது தொடர்பான புள்ளிவிவரங்கள் கீழ்க்காணும் பட்டியலில் அளிக்கப்பட்டுள்ளன:

வட்டாரத்தின் பெயர்	அரசு தொடக்க வட்டாரப்பேச்சு மொழி தொடக்கப்பள்ளிகளின் எண்ணிக்கை		அரசு உதவி பெறும் வட்டாரப் பேச்சு மொழித் தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை		அரசு உதவி பெறாத தனியார் தொடக்கப் பள்ளிகளின் மொத்த எண்ணிக்கை	
	1895	1898	1895	1898	1895	1898
1. தோவாளை	8	19	19	19	13	25
2. அகஸ்தீஸ்வரம்	9	12	63	57	23	47
3. இரணியல்	12	19	77	75	70	84
4. கல்குளம்	7	8	49	32	35	60
5. விளவங்கோடு	7	11	49	34	26	36

அரசு உதவி பெறும் நிறுவனங்களின் எண்ணிக்கை சற்றே குறைந்து, அரசுப் பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெறாத தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை உயர்ந்து காணப்படுவது இதனின்றும் தெரிய வருகிறது. உதவி பெறும் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கொடையினை அரசு திரும்பப் பெற்றமையோ, அல்லது இந்நிறுவனங்களை அரசு பொறுப்பில் எடுத்துக் கொண்டமையோ இதற்குக் காரணமாகும்.

பட்டப்படிப்பிற்காக, நாகர்கோவில் கிறித்தவக் கல்லூரி என்ற ஒரே கல்லூரிதான் இயங்கி வந்தது. (பின்னர் இது ஸ்காட் கிறித்தவக் கல்லூரி என அழைக்கப்பட்டது) முந்தைய திருவாங்கூர் மாநிலம் முழுவதிலுமுள்ள ஐந்து கல்லூரிகளில், மூன்று திருவனந்தபுரத்திலும் ஒன்று கோட்டயத்திலும் உள்ளன. திருவனந்தபுரத்திலுள்ள முன்று கல்லூரிகளில், இரண்டு கல்லூரிகள் அரசால் நடத்தப்பட்டன.

1899 முதல் 1908 வரை மாவட்டத்தில் கல்வியின் முன்னேற்றம்

1899 முதல் 1901 வரை, கல்வித் துறையில், சிறந்த அளவில் வளர்ச்சியோ, அரசின் கொள்கையில் மாற்றமோ ஏற்படவில்லை. ஆனால், மாநிலத்தின் அனைத்துப் பள்ளிகளிலும் 1902 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட பாடத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட போது குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டது.[80] அது வரை நடைமுறையிலிருந்து வந்த பள்ளிகளின் வகைகள் மாற்றியமைக்கப்பட்டு, புது வகைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. அதனைத் தொடர்ந்து, பள்ளிகள், (1) உயர்நிலைப்பள்ளிகள் (2) நடு நிலைப் பள்ளிகள், (3) உயர் தொடக்கப்பள்ளிகள் மற்றும் (4) கடைநிலைப் பள்ளிகளென பாகுபாடு செய்யப்பட்டன.

வட்டாரப்பேச்சுமொழி கற்பிக்கும் மொழியாகப் பயன்படுத்தப்பட்டது

ஆங்கிலம் மூன்றாம் வகுப்பிலிருந்து, இரண்டாம் மொழியாக அறிமுகப்படுத்தப்பட்டது. உயர்நிலை மற்றும் நடுநிலைப்பள்ளிகள், ஆங்கிலம் மற்றும் வட்டாரப் பேச்சு மொழி உயர்நிலைப்பள்ளி என பாகுபாடு செய்யப்பட்டன. முந்தையதில் ஆறாம் வகுப்பு முதல் ஒன்பதாம் வகுப்புவரை ஆங்கிலம் முதன்மைப் போதனாமொழியாகவும், ஐந்தாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரையிலான பிந்தைய வகைப்பள்ளிகளில் வட்டாரப்பேச்சு மொழி போதனா மொழியாகப் பயன்படுத்தப்பட்டு, ஆங்கிலம் ஏனைய தலைப்புப் பொருள் பாடங்களில் ஒன்றாக நிர்ணயிக்கப்பட்டது. ஆங்கில உயர்நிலைப்பள்ளிகளில் வட்டாரப் பேச்சுமொழி இரண்டாம் மொழியாகக் கற்றுக் கொடுக்கப்பட்டது. ஆனால், வட்டாரப் பேச்சு மொழிப்பள்ளிகளில், ஆங்கிலம், மாற்றி இணைக்கப்பட்டது. ஒரு வட்டாரப் பேச்சு மொழிப் பள்ளியை விட்டுச் சென்ற மாணவன், பொது தலைப்புப் பொருள் பாடங்களில், பல்கலைக் கழக நுழைவுரிமை பெற்றவருக்கு (மெட்ரிகுலேட்) இணையான அறிவுத்திறன் பெற இயலும்; மேலும், ஒரு ஆங்கிலப்பள்ளியில் ஒன்பதாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றவருக்கிணையான ஆங்கில அறிவுத்திறனைப் பெற இயலும்.

ஒவ்வொரு வகுப்பிற்குரிய தலைப்புப்பொருள் பாடங்கள், மிகுந்த அக்கறையுடனும், நுண்மதியுடனும், மாறுபட்ட சிறப்பியல்புகள் கொண்டவையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டன. வரைபடங்கள் மற்றும் சித்திரங்கள் வரைதல், உடல்நல இயல், வேளாண்மை மற்றும் செயல்முறை நிலக்கணக்கியல் ஆகியவை பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டு, அறிவாற்றலை மேம்படுத்தும் நோக்கில் ஒவ்வொரு வகுப்பிற்குமான பாடத்திட்டம் ஓரளவு குறைத்து நிர்ணயிக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்ட மொழிப்பாடப் புத்தகங்கள் மற்றும் பாட நூல்கள் தவிர ஏனைய நூல்களைப் பயன்படுத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டு, போதனை விதிகள் திருத்தியமைக்கப்பட்டன.

பள்ளிகள் புதிய முறையில் பாகுபடுத்தப்பட்டமையால், கடைநிலை தொடக்கப்பள்ளித்துறை ஆங்கிலப்பள்ளிகளுக்குப் பதிலாக, வட்டாரப்பேச்சு மொழிப் பள்ளிகளுக்காக மாற்றப்பட்டது. அதனைத்தொடர்ந்து, ஆங்கில தொடக்கப்பள்ளிகள் வட்டாரப்பேச்சு மொழிப்பள்ளிகளாயின.

பள்ளிகள் இவ்வாறாக மாற்றி வகைப்படுத்தப்பட்ட பின்னர், முந்தைய திருவாங்கூர் மாநிலத்தில், அதாவது தற்போதைய கன்னியாகுமரி மாநிலத்திலடங்கிய அகஸ்தீஸ்வரம், தோவாளை, இரணியல், கல்குளம் மற்றும் விளவங்கோடு ஆகிய வட்டங்களில் இயங்கி வரும் கல்வி நிறுவனங்களின் நிலை கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

ஆங்கில உயர்நிலைப்பள்ளிகள்

கோட்டாரில் ஒரு ஆங்கில அரசு உயர்நிலைப்பள்ளியும், நாகர்கோவிலில் பெண்கள் உயர்நிலைப்பள்ளி மற்றும் இலண்டன் சமயப்பரப்புக்குழு உயர்நிலைப் பள்ளி ஆகிய இரண்டு உதவி பெறும் ஆங்கில உயர்நிலைப்பள்ளிகள் இயங்கி வந்தன.

ஆங்கில நடுநிலைப்பள்ளிகள்

இம்மாவட்டப் பகுதியான பூதபாண்டி, இரணியல், தக்கலை மற்றும் திருவட்டார் ஆகிய இடங்களில் நான்கு அரசு ஆங்கில நடுத்தரப் பள்ளிகள் இயங்கி வந்தன. இவை தவிர மார்த்தாண்டத்தில் இலண்டன் சமயப்பரப்புப் குழுப் பள்ளியொன்றும், நாகர்கோவிலில் ஒன்றிய ஆங்கிலப்பள்ளி என்றொரு பள்ளியும் இயங்கின.

வட்டாரப்பேச்சுமொழி உயர்நிலைப்பள்ளிகள்

தற்போதைய கன்னியாகுமரி மாவட்டப் பகுதியில், முன்னர் வட்டாரப் பேச்சு மொழிப்பள்ளி ஏதுமியங்கவில்லை. திருவாங்கூர் மாநிலம் முழுமைக்கும் திருவனந்தபுரத்தில் ஆண்களுக்கு ஒன்றும் பெண்களுக்கொன்றுமாக இரு வட்டாரப் பேச்சு மொழி உயர்நிலைப்பள்ளிகள் இயங்கின. உயர்நிலைப்பள்ளி நிலையில் ஆண்-பெண் இணைக்கல்வி முறை நடைமுறையிலில்லை.

வட்டாரப்பேச்சு மொழி நடுநிலைப் பள்ளிகள்

முந்தைய திருவாங்கூர் மாநிலத்தின் தற்போதைய கன்னியாகுமரி மாவட்டப் பகுதியில், வட்டாரப்பேச்சு மொழி நடுநிலைப்பள்ளிகள் கீழ்க் காணுமிடங்களில் அவற்றினெதிரே குறிப்பிட்டுள்ள நிறுவனங்களால் இயக்கப் பெற்றன.

அரசு வட்டாரப்பேச்சு மொழிப்பள்ளிகள்

1. சுசீந்திரம் 2. கோட்டார் 3. இரணியல் 4. கல்குளம் 5. திருவட்டார் 6. விளவங்கோடு

உதவி பெறும் வட்டாரப்பேச்சு மொழிப்பள்ளிகள்

1. நாகர்கோவில் 2. நெய்யூர்

கடைநிலை மற்றும் உயர் தொடக்கப்பள்ளிகள்[81]

1901-1902ஆம் ஆண்டில், மாவட்டத்திலியங்கி வந்த, கடைநிலை மற்றும் உயர்தொடக்கப்பள்ளிகள் பற்றிய விவரங்கள் பட்டியலில், கீழே அளிக்கப்பட்டுள்ளன:

பண்டைக்காலம் முதலே, ஒவ்வொரு கிராமத்திலும் உள்ளூர் பள்ளிகள், ஆசான்கள் அல்லது உள்ளூர் ஆசிரியர்களால் நடத்தப்பட்டு வந்தன என்பதை ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளோம். அவற்றில் பல

228149 சென்னை-600 008

பட்டியல்

வட்டத்தின் பெயர்	உயர் தொடக்கப் பள்ளிகள்			கடைநிலை துவக்கப் பள்ளிகள்		
	அரசு	உதவி பெறுபவை	உதவி பெறாமல் தனியாரால் நடத்தப்படுபவை	அரசு	உதவி பெறுபவை	உதவி பெறாமல் தனியாரால் நடத்தப்படுபவை
1. அகஸ்தீஸ்வரம்	1	1	-	12	68	41
2. இரணியல்	1	-	-	12	84	83
3. கல்குளம்	1	-	-	8	34	59
4. விளவங்கோடு	2	-	-	10	38	37
5. தோவாளை	-	-	-	10	21	28

பள்ளிகள் இருபதாம் நூற்றாண்டின் முந்தைய கால ஆண்டுகளில் தொடர்ந்து இயங்கி வந்தன: அதனால் தான், உயர் மற்றும் கடை நிலை தனியார் துவக்கப் பள்ளிகள் அதிக அளவிலிருந்தன. இவ்வாசான்களில் சிலர், மரபுத்தொடர்பில் இப்பதவியினை வகித்து வந்தனர். சில இனங்களில் தற்போதைய தலைமுறையிலுள்ள பள்ளி செல்லும் மாணவர்களின் பெற்றோர்கள், தற்போது ஆசானாக இருப்பவர் அல்லது அவரது மூதாதையரிடம் கல்வி கற்றவர்களாயிருக்கலாம். எனவே, அவர்கள் ஆசானுக்குப் பெருமதிப்பளித்து, அவர்களது குழந்தைகளுக்கு நல்ல தரமான கல்வியினை அளிப்பார் என்ற நம்பிக்கையில், அந்த ஆசானிடம் அவர்கள் தங்களது குழந்தைகளைக் கல்வி கற்க அனுப்பி வந்தனர். ஏனைய இனங்களில் அரைப்பட்டினி கிடக்கும் ஆசான்கள், கிராமத்திலுள்ள சில செல்வாக்கு பெற்ற மனிதர்களின் தயவால் பள்ளியைத் துவக்கியதால், அக்கிராமக் குழந்தைகள் பல அவர்களது பள்ளிக்கு வருகை தந்தன. பொதுவாக, மக்கள் குழந்தைகள் முறையாகப்பள்ளிக்கு வருகை தர வேண்டுமென்பதையோ, அவர்கள்பால் கடைப்பிடிக்கப்படும் கட்டுப்பாட்டையோ விரும்பியதில்லை. ஆசிரியர்களும் கல்வித்துறை அலுவலர்களின் மேற்பார்வை, கட்டுப்பாடு ஆகியவற்றிற்கடிபணிய ஆர்வமற்றிருந்தனர். அவ்வாறு செயல்பட்டால் அரசின் நிதியுதவி கிடைக்காதென்பதையும அவர்கள் அறியாமலில்லை. இந்நிலையில், பல தனியார் பள்ளிகள் அரசின் நிதியுதவி பெறாதவையாயிருந்தன. ஆனால், சுய ஆதரவில் இயங்கிவந்த ஒரு சில பள்ளிகள், மனநிறைவிற்கேற்ப, கற்பித்து வந்தன. ஆனால், அவை அரசின் உதவியை எதிர்நோக்கிய வண்ணமிருந்தன. இம்மாதிரியான தனியார் பள்ளிகளுக்குத் தாராளமாக நிதியுதவியளிக்க திருவாங்கூர் அரசு உரிய முயற்சிகளை மேற்கொண்டது. தொடர்ந்த ஆண்டுகளில் அரசு உதவி பெற்ற பள்ளிகள், சிறுகச் சிறுக அதிகரித்ததிலிருந்தே இவ்வுண்மை தெரியவரும்.

பிறகல்வி நிறவனங்கள்

இப்பள்ளிகள் தவிர, நாகர்கோவில் கிறித்தவக் கல்லூரி தொடர்ந்து மனநிறைவிற்கேற்ப இயங்கி வந்தது. 1905ஆம் ஆண்டு, 37 ஆக இருந்த கல்வி கற்ற மாணவர்களின் எண்ணிக்கை, மறு ஆண்டிலேயே 44 ஆக உயர்ந்தது[82].

இந்த நூற்றாண்டின் துவக்கத்திலேயே தொடங்கி இன்றும் தொடர்ந்து நன்முறையில் இயங்கி வரும் மற்றொரு பள்ளி நாகர்கோவிலிலுள்ள ஸ்ரீமூலம் இராமவர்மா தொழில்நுட்பப் பள்ளியாகும். 1902-1903 வரை, அரசு உதவி பெறாத தனியார் தொழில் நுட்பப்பள்ளியாக இ்ந்து இயங்கி வந்தது[83]. 1904ஆம் ஆண்டு முதல், மாநில அரசிடமிருந்து ஆண்டுக்கொடை பெறத் துவங்கியது. பின்னர்

1905-1906-ல், இந்நிறுவனம் அரசால் எடுத்துக்கொள்ளப்பட்டது[84]. இந்தத் தொழில் நுட்பப் பள்ளியில் கீழ்க்காணும் தொழில்கள் கற்றுக்கொடுக்கப்பட்டன:

1. பொறியியல் (நடுத்தரமானது மற்றும் உயர்தரமானது)
2. உருவரைப் படங்கள் வரைபவருக்கான பாடத்தொகுதி
3. நில அளவீடு
4. கட்டுமான வேலை
5. கல்தச்சு வேலை
6. மரவேலை மற்றும்
7. நெசவு வேலை

மிக முக்கியத்துவம் வாய்ந்த இந்த தொழில் நுட்பப் பள்ளி தவிர, 1903-04 ஆம் ஆண்டில், பிற இரண்டு தொழில் நுட்பப் பள்ளிகளும் மாவட்டத்தில் துவங்கின[85].

அவையாவன:[86]

1. முலகுமோடு மரவேலைப் பள்ளி மற்றும்
2. குழந்தை ஏசு பூத்தையல் இழை பின்னல் தொழில்நுட்பப் பள்ளி, முலகுமோடு.

பிற்பட்ட வகுப்பினரின் கல்வி மேம்பாடு

இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்திற்கு முன்னரே, அரசு ஆண்கள் பள்ளிகளில், பிற்பட்ட வகுப்பினர்களான ஈழவர்களுக்கு இடமளிக்கும் கோரிக்கை தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வந்தது. ஈழவர்கள் அணுக இயலாத சில பகுதிகள் தவிர, ஏனைய பகுதிகளிலுள்ள பள்ளிகளில் 1907-1908 ஆம் ஆண்டு முதல் ஈழவக் குழந்தைகளுக்கும் அனுமதி வழங்கப்பட்டது[87].

1908ஆம் ஆண்டில் கல்வி வளர்ச்சியின் நிலை [88]

சுருங்கக்கூறின், கல்வி முறையும் கல்வித்துறை நிருவாகமும், 1908 ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முன்னர் நிலவியபடி, பொதுக்கல்வியினை போதிக்க கல்லூரிகள் தவிர, இரண்டு வகையான பள்ளிகள் இயங்கி வந்தன. இந்த இரண்டு வகையான பள்ளிகளும் அவற்றின் நிறவனங்களுக்கேற்ப, "அரசு" அல்லது "தனியார்" என பாகுபாடு செய்யப்பட்டன. தனியார் பள்ளிகள் அரசு உதவி பெறுபவையாகவோ, அரசு உதவி பெறாதவையாகவோ இயங்கி வந்தன. அனைத்து அரசுப் பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெறாத பள்ளிகளில் ஒரு சில ஆகியவை, அரசால் அங்கீகாரமளிக்கப்பட்ட பள்ளிகளாகும். அங்கீகாரமளிக்கப்பட்ட பள்ளிகள் யாவும் கல்வித்துறையிலுள்ள தொடர்புள்ள அலுவலரின் ஆய்வுக்குட்பட்டவை

யாகும். போதிக்கப்படும் மொழித் தரத்திற்கேற்ப, ஆங்கிலப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகளாகவோ, நடுநிலைப் பள்ளியாகவோ இயங்கி வந்தன. வட்டாரப் பேச்சு மொழிப் பள்ளிகள் உயர்நிலை, நடுநிலை, உயர் துவக்கம் மற்றும் கடை நிலைத்துவக்கப் பள்ளிகளாக இயங்கின. வட்டாரப் பேச்சு மொழிப் பள்ளிகளிலும், துவக்க வகுப்புகள் இணைக்கப்பட்ட உயர்நிலை அல்லது நடுநிலைப்பள்ளிகளில், தொடக்கக் கல்வி அளிக்கப்பட்டது. வட்டாரப்பேச்சு மொழி நடுத்தர மற்றும் உயர் நிலைப் பள்ளிகள் மற்றும் ஆங்கில நடுநிலை மற்றும் உயர்நிலைப்பள்ளிகள் இடை நிலைக்கல்வி அளிக்கப்பட்டது. மாநிலத் தலைநகரில் ஒரு சட்டக்கல்லூரியும், ஐந்து பிற கலைக்கல்லூரிகளும் இயங்கி வந்தன. இவையாவும் சென்னைப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டவை யாயிருந்தன. பயிற்சிப்பள்ளிகள், வடமொழிப் (சமஸ்கிருதம்) பள்ளிகள் மற்றும் தொழிற்பள்ளிகள் ஆகியவற்றில் தனிக்கல்வி அளிக்கப்பட்டது.

தொடக்கப் பள்ளிகளின் முதல் மூன்றாண்டுகளில், முழுமையாக மலையாளத்தில்தான் கல்வி புகட்டப்பட்டது. தொடக்கக் கல்வியின் மூன்றாவது ஆண்டிற்குப் பிறகுதான் ஆங்கிலம் இரண்டாவது மொழியாக ஆக்கப்பட்டது. முதல் வகுப்பு முதல் மூன்றாம் வகுப்பு வரை, கடைநிலை துவக்கப்பள்ளிகளாகவும், நான்காம் வகுப்பில் உயர் தொடக்கப்பள்ளிகளாகவும் இயங்கின. வட்டாரப் பேச்சு மொழி நடுநிலைபள்ளிகள் ஐந்தாம், ஆறாம் வகுப்புகளுடனும், வட்டாரப்பேச்சு மொழி உயர்நிலைப் பள்ளிகள் ஏழாம், எட்டாம் வகுப்புகளுடனும் இயங்கின. இவ்விரு நிலைகளிலுமுள்ள பள்ளிகளில், கல்வி வட்டாரப் பேச்சு மொழியிலேயே புகட்டப்பட்டது. நடுநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் ஆங்கிலம் இரண்டாவது மொழியாகக் கற்பிக்கப்பட்டது. உயர் நிலைப் பள்ளிகளில், வடமொழியும் (சமஸ்கிருதம்) போதிக்கப்பட்டது.

நடுநிலைப்பள்ளி நடைமுறைத்தொகுதிக்குப் பின்னர், வட்டாரப்பேச்சு நடுநிலைப்பள்ளித் தேர்வும், உயர்நிலைப்பள்ளி நடைமுறைத் தொகுதிக்குப் பின்னர், வட்டாரப் பேச்சு மொழி உயர்நிலைத் தேர்வும், பொதுத் தேர்வாக நடத்தப்படுகிறது. ஆங்கில நடுநிலைப்பள்ளிகளில், முதல் படிவம், இரண்டாம் படிவம் மற்றும் மூன்றாம் படிவம் ஆக மூன்று படிவங்கள் இயங்கின. ஆனால், அதே நிலையில் ஆங்கில உயர்நிலைப் பள்ளிகளில் நான்காம் படிவம், ஐந்தாம் படிவம் மற்றும் ஆறாம் படிவம் ஆகிய படிவங்கள் இயங்கி வந்தன. தொடக்கப் பள்ளிகளில் முதல் நான்கு ஆண்டுகளுக்கான பாடத்திட்டத்தொகுதி, ஆங்கில நடுநிலைப்பள்ளியில் பாடத்திட்டத் தொகுதியின் பூர்வாங்கமாகும். இவ்வாறாகப் பள்ளிகளை ஆங்கிலப் பள்ளிகள் மற்றும் வட்டாரப் பேச்சு மொழி என இரண்டாக பிரிக்கப்படுவதற்கான திட்டம், தொடக்கப்பள்ளிகளில் நான்காவது (பாடத்திட்ட) நடைமுறைத்தொகுதிக்குப்பின்னர்தான் அறிமுகப்

படுத்தப்பட்டது. ஆங்கிலப்பள்ளிகள் மாணவர்களை, சென்னைப் பல்கலைக் கழகத்தின் புகுமுகத் தேர்விற்குத்தான் தயார் செய்து வந்தன.

மாணவர்களை கல்லூரிகள், இடைநிலைத் தேர்வு, (பி.ஏ)இளங்கலை, இளங் கலை - சட்டம் ஆகிய தேர்வுகளுக்குத் தயார் படுத்துகின்றன. அவ்வாறே வடமொழிப் (சமஸ்கிருதம்) பள்ளிகளைத் தவிர, ஏனைய தனிப்பள்ளிகள் மாணவர்களைத் தொழில் நுட்பத் தேர்வுகளுக்குத் தயார் படுத்துகின்றன. மாநில அரசினால் நடத்தப்பெறும் வடமொழிப் பாடத் திட்டத் தொகுதியின்படியாக, "சாஸ்திரி", "உபாத்யாயா" மற்றும் "மஹமஹோபாத்யாயா" ஆகிய பட்டங்களைப் பெறுவதற்கான தேர்வுகளுக்கு வடமொழிப்பள்ளிகள் மாணவர்களைத் தயார் செய்கின்றன.

அரசுப்பள்ளிகள், முழுமையாகப் பொது நிதியிலிருந்தே பராமரிக்கப்பட்டு வந்தன. கல்விக்கட்டணமாக வசூலிக்கப்பட்ட வருவாய், துறைவரவாகவே கருதப்பட்டது. தனியார் பள்ளிகள், இப்பொது நிதியிலிருந்துதான் பணித்துறை உதவித்தொகையினைப்பெற்று வந்தன.

ஆசிரியர்கள், பயிற்சிப்பள்ளிகளில் பயிற்சி பெற்றனர். ஆசிரியர் பயிற்சிக்கு வகுத்துரைக்கப்பட்ட பாடத்திட்டத் தொகுதி ஈராண்டுகளுக்கு விரிவாக்கப்பட்டது. பயிற்சிக் காலத்தின் இறுதியில், ஆசிரியர், எழுத்து மூலமான மற்றும் செயல்துறை சார்ந்த தேர்வுக்கு உட்படுத்தப்பட்டார். உயர்நிலைப்பள்ளி இயல்புச் சான்று மற்றும் நடுநிலைப்பள்ளி இயல்புச் சான்று ஆகிய இரண்டு நிலைகளிலான தேர்வுகள், ஆங்கிலப் பள்ளிகளின் ஆசியர்களுக்கு அறுதியிடப்பட்டன, அதேபோன்று, கடைநிலை மற்றும் உயர்நிலை வட்டாரப் பேச்சு மொழி ஆசிரியப்பயிற்சிப் பள்ளிகளின் ஆசிரியர்களுக்கும் இரண்டு தேர்வுகள் நிர்ணயிக்கப்பட்டன.

ஆங்கிலப்பள்ளிகளின் ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்க, முந்தைய தென் திருவாங்கூரில், ஆசிரியப் பயிற்சிப்பள்ளிகளேதுமில்லை. ஆனால், முதல் முறையாக 1884ஆம் ஆண்டு, கோட்டாரில் ஒரு வட்டாரப் பேச்சு மொழி ஆசிரியப் பயிற்சி பள்ளி துவங்கப்பட்டது. மாநிலத்திலுள்ள இரண்டு ஆசிரியப் பயிற்சிப்பள்ளிகளில், அது ஒன்றாகும். மற்றொன்று, மாநிலத்தின் தலைநகரிலுள்ளதாகும். ஆனால், 1894ஆம் ஆண்டு, கோட்டாரில் இயங்கிவந்த, ஆசிரியப் பயிற்சிப்பள்ளி மூடப்பட்டு தலைநகரத்திலுள்ள ஆங்கில ஆசிரியப் பயிற்சிப்பள்ளியும், வட்டாரப்பேச்சு மொழி ஆசிரியப்பயிற்சி பள்ளியும் ஒருங்கிணைக்கப்பட்டன. அதன் விளைவாக, 1908ஆம் ஆண்டு, திருவனந்தபுரத்தில் அரசு ஆண் ஆசிரியர்கள் ஆசிரியப் பயிற்சிப்பள்ளி மற்றும் அரசு பெண் ஆசிரியர்கள் ஆசிரியப் பயிற்சிப் பள்ளி ஆக இரு ஆசிரியப் பயிற்சிப்பள்ளிகள் இயங்கி வந்தன. ஆனால், மாநிலத்திலிருந்த அரசு உதவிபெறும் ஐந்து ஆசிரியப் பயிற்சி பள்ளிகள், மற்றும் அரசு உதவி பெறாத ஓர் ஆசிரியப் பயிற்சிப்

பள்ளி ஆகியவற்றில், அரசு உதவி பெறும் ஓர் ஆசிரியப் பயிற்சிபள்ளி மட்டும் நாகர்கோவிலில் இயங்கி வந்தது.

நிருவாக நலனைக் கருத்திற் கொண்டு மாநிலம், வடக்கு மையம் மற்றும் தெற்கு ஆகிய மூன்று தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு தொகுதியும் ஒரு உதவி ஆய்வாளர் பொறுப்பிலியங்கின. தொடக்கப் பள்ளிகளை ஆய்வு செய்வதற்காக, தனியே துணை உதவி ஆய்வாளர்கள் நியமிக்கப்பட்டனர்.

1909 முதல் 1955 வரை மாவட்டத்தின் கல்விக் கொள்கையில் மாற்றங்களும், கல்வித்துறையில் முன்னேற்றமும்

1909ஆம் ஆண்டு கல்வித்துறை நிருவாக முறையில் பெரிய சீர்திருத்தம் செய்யப்பட்டு, 1909ஆம் ஆண்டு சனவரி முதல் நாளிலிருந்து அச்சீர்திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட்டது,[89]

1909ஆம் ஆண்டு சீர்திருத்தம் [90]

1909ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட கல்வித்துறைச் சீர்திருத்தத்தைத் தொடர்ந்து, பொதுக்கல்வி இயக்குநரலுவலகம் நிறுவப்பட்டது. அதன்படி, முனைவர் ஏ.சி.மிட்செல், முதல் பொதுக்கல்வி இயக்குநராக நியமிக்கப்பட்டார். இதே போன்றதொரு அலுவலகம் முந்தைய சென்னை மாகாணத்தில் 1854ஆம் ஆண்டு துவக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். ஒரு தலைசிறந்த கற்றறிவாளரான அலெக்சாண்டர் ஆர்பத்னாட் என்பார் முதல் தடவையாக சென்னை மாகாணத்தில் பொதுக்கல்வி இயக்குநராகப் பதவியேற்றார்[91].

ஆய்வாளர்கள், பொதுக்கல்வி இயக்குநரின் நிருவாக மற்றும் ஒழுங்குக் கட்டுப்பாட்டினுள் இயங்கி வந்தனர். கீழ்க்கண்டவாறு, சில சிக்கன முறைகள் கையாளப்பட்டன.

தொகுதிகளின் எண்ணிக்கை மூன்றிலிருந்து இரண்டாகக் குறைந்தது. அதனைத் தொடர்ந்து, ஆய்வாளர்களின் பணியிடங்களும் இரண்டாகக் குறைக்கப்பட்டன. மாவட்ட ஆய்வாளர்கள் மற்றும் உதவி ஆய்வாளர்களின் எண்ணிக்கை அதே நிலையில் 12ஆகவே இருந்தது. துணை உதவி ஆய்வாளர்களது பணியிடங்கள் நீக்கம் செய்யப்பட்டன.

அதே நேரத்தில், பள்ளிகளை அப்போதைக்கப்போது ஆய்வு செய்யும் பணிக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. பெண்கள் பள்ளிகளை ஆய்வு செய்ய பெண்கள் பள்ளி - பெண் ஆய்வாளர் பணியிடம் முதன் முதலாகத் தோற்றுவிக்கப்பட்டது. பெண்கள் பள்ளிகளின் ஆய்வில் பெண் ஆய்வாளருக்குப்போதிய உதவி புரிய பெண்கள் உதவி ஆய்வாளர்கள் பணியிடங்களும் தோற்றுவிக்கப்பட்டன. கல்விமுறை முந்தைய ஆண்டிலுள்ளதைப் போன்றே இருந்தது.

1910-1911 இல் மாற்றங்கள்

கல்வி நிறுவனங்களின் நிருவாகத்தொகுதியில் வேலைப்பளு உயர்ந்ததைக் கருத்திற்கொண்டு, துறையின் பணியாளர்களின் எண்ணிக்கையையும் உயர்த்திட தீர்மானிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, இடைநிலைப் பள்ளிகளை ஆய்வு செய்திட, ஆங்கிலக்கல்வித் தகுதி மற்றும் பயிற்சி ஆகியவற்றுடன் கூடிய ஆய்வாளர் பணியிடம் ஒன்று உருவாக்கப்பட்டது. இடைநிலைப்பள்ளிகளின் முதல் ஆய்வாளராக திரு.ஜே.பிரைடு, எம்.ஏ., பிஎஸ்.ஸி., நியமிக்கப்பட்டார்.

1911 ஆம் ஆண்டில் ஆங்கீகாரம் பெறாத பள்ளிகளின் நிலை

அங்கீகாரம் பெறாத பள்ளிகள், தனியார் பள்ளி ஆசிரியர்களால் பராமரிக்கப்பட்டன. பல இனங்களில், ஆசான்கள் அல்லது கல்வித் தகுதி பெறாத மற்றும் உள்ளூர் பள்ளி ஆசிரியர்கள் பள்ளியை நடத்தினர். அரசு உதவி பெறும் தனியார் பள்ளிகள் மற்றும் அரசுப் பள்ளிகள் ஆகியவற்றுடன் ஒப்புநோக்குங்கால், உள்ளூர்பள்ளி ஆசிரியர்கள், கல்வி கற்பிப்பதில், தரம் குறைந்தவர்களாகவே காணப்பட்டனர்.

இம்மாதிரியான நிறுவனங்களைத் தடை செய்வதே அரசின் கொள்கையாக இருந்தது. கடந்த சில ஆண்டுகளில் இம்மாதிரியான நிறுவனங்கள் குறையத் தொடங்கின. அங்கீகாரம் பெறாத பள்ளிகளை விட்டு வெளி வந்து, அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் சேர்ந்த மாணவர்களுக்கு நல்ல தரமுள்ள கல்வி போதிக்கப்பட்டு வந்ததை, கல்வித் துறையும் அடையாளங்கண்டு கொண்டது. முந்தைய மூன்று ஆண்டுகளில் மட்டும் அப்பள்ளிக் குழந்தைகளின் எண்ணிக்கை 20,000 ஆக இருந்தது[92]. பின்னர், அங்கீகாரம் பெறாத அப்பள்ளிகளிலிருந்து, மாணவர்கள் சிறிது சிறிதாக விலகிச்சென்றதை மக்களும் உணரத் தொடங்கினர். அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளின் எண்ணிக்கை பெருகியிருப்பினும் மாநிலத்தில், 1916-17 ஆம் ஆண்டு, அங்கீகாரம் பெறாத பள்ளிகளின் எண்ணிக்கை 1000-த்துக்கும் மேலாக இருந்தது.

அரசின் பிரச்சனை யாதெனில், பள்ளிகளின்றும் வெளிவந்த மாணவர்கள் ஆங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் கல்வியினைத் தொடர்ந்திட, அவர்களுக்கு அனுமதி அளிக்க வேண்டியது இன்றியமையாததாகியது. அதே நேரத்தில், அங்கீகாரம் பெறாத பள்ளிகளில் கண்டிப்போ, கட்டுப்பாடோ, கல்வி போதிப்பதில் திறமையோ செலுத்தப்படாததால், அப்பள்ளி மாணவர்களின் தரத்தை ஒப்பு நோக்கும் போது, மிகவும் கல்வித்தரம் குறைந்தவர்களாகவே அவர்கள் காணப்பட்டார்கள்.

எனவே, அங்கீகாரம் பெறாத பள்ளிகள் கல்வி அளிப்பதில் அங்கீகாரம் பெற்ற பள்ளிகளின் நிலையை அடைந்திட, அவர்களுக்கு

பகுதி அங்கீகாரம் அளிக்கவும், சிறிது உதவித்தொகை வழங்கிடவும் அரசு திட்டமிட்டது. அரசு தரப்பிலும் அவற்றை படிப்படியாக அங்கீகாரம் பெற்ற பள்ளிகளின் வரிசையில் கொணர, முயற்சி மேற்கொள்ளப் பட்டது. அதே ஆண்டு, அப்பள்ளிகளுக்கும் பகுதி அங்கீகாரம் வழங்கியும், கொடை வழங்கியும் ஆணை பிறப்பிக்கப்பட்டது. தென் தொகுதியில் தனியார் பள்ளிகளின் எண்ணிக்கை மிகவும் அதிகமாக இருந்ததால் முதலாவதாக, அரசின் ஆணை தென் பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்டது. அதே ஆண்டு, அதே வகையில் அமைந்த 170 பள்ளிகளுக்குப் பகுதி அங்கீகாரம் வழங்கப்பட்டது.

நாளடைவில், தனியார் பள்ளிகள், முழுமையாக அங்கீகாரம் பெற்ற பள்ளிகளின் நிலைக்கு உயர்ந்தன. 1956ஆம் ஆண்டு மாவட்டம் அமைக்கப்படும்போது, தனியார் பள்ளிகளின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே இருந்தது.

பள்ளி இறுதிச்சான்று

துவக்க மற்றும் இடைநிலைப்பள்ளிப் பாடத்திட்டப் தொகுதியை முடித்த மாணவர்களுக்கு பள்ளி இறுதிச்சான்று வழங்கும் திட்டத்தினை 1910-1911 கல்வி ஆண்டில் கல்வித்துறை அறிமுகப்படுத்தியது. துவக்க மற்றும் இடைநிலைப்பள்ளிப்படிப்பு முடிந்தவுடன் சான்றுகள் வழங்கப்பட்டன. தொழிற்கல்வித் தொகுதி மற்றும் மேற்பார்வையாளர் களின் தொகுதி ஆகியவற்றின் உறுப்பினர்களினின்றும் தேர்ந்தெடுத்து அமைக்கப்பட்டு, பொதுக் கல்வி இயக்குநரின் கட்டுப்பாட்டிலியங்கும் தேர்வாளர்கள் வாரியத்தின் கண்காணிப்பில் சான்றுகள் வழங்கப்பட்டன. (அரசு) பொதுப்பணியில் நுழைந்திடுவதற்கான பாடத்திட்ட தலைப்புப் பொருள் பாடங்களில் பெற வேண்டிய குறைந்த அளவு குறியீட் டெண்களும் நிர்ணயிக்கப்பட்டன.

1913-14 ஆம் ஆண்டிலும், அதன் பின்னரும் கொணரப்பட்ட மாற்றங்கள்[93]

ஆண்கள் தொடக்கப் பள்ளிகளில், ஆய்வு முறையினை மிகத் தீவிரமாக கடைப்பிடிக்க வேண்டுமென்ற நோக்கில், மாநிலம் மறுமுறை மூன்று தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, அதனைத் தொடர்ந்து, ஒரு ஆய்வாளர் பணியிடமும் ஆறு உதவி ஆய்வாளர்கள் பணியிடங்களும் உருவாக்கப்பட்டன. இந்த ஆண்டிலிருந்து, ஆதி திராவிடர்களுக்குப் பள்ளிகளில் அரைக்கட்டணச் சலுகை விரிவாக்கப்பட்டது.

மாநிலத்தில் ஆறு ஆண்கள் கடைநிலைப்பயிற்சிப் பள்ளிகள் துவக்கப்பட்டன[94]. அவற்றில் தென் திருவாங்கூரில் இரண்டும், குழித்துறையில் ஒன்றும், பரூரில் ஒன்றுமாக இயங்கி வருகின்றன.

இந்நிலையில், மாநிலத்திலுள்ள துவக்கப் பள்ளிகளில் அதிக மாணவர்கள் சேரத் தொடங்கினர். இச்சூழ்நிலையை எதிர்கொள்ள,

இடைமாற்றுக்[95]. கடைநிலை தொடக்கப் பள்ளிகள் 1914-15ஆம் ஆண்டில் திறக்கப்பட்டன. மொத்தத்தில், மாநிலத்தின் பல்வேறு பிரிவுகளில், அவ்வாறான 111 பள்ளிகள் திறக்கப்பட்டன.

அரசுப் பள்ளிகளில் அனைத்து சமுதாய வகுப்பினரையும் சேர்த்துக் கொள்ள கோரிக்கை எழும்பியது. சில பகுதிகளில், பிற்பட்ட வகுப்பினருக்குத் தனிப்பள்ளிகள் அமைக்க வேண்டியது இன்றியமையாத தானது. எனவே, தனியார் பள்ளிகளின் மேலாளர்கள், பிற்பட்ட வகுப்புகளைச் சார்ந்த மாணவர்களுக்குக் கல்வி அளித்திட, அதிகப் பள்ளிகளைத் துவக்கி, பராமரித்திட, ஊக்குவிக்கப்பட்டார்கள். அரசின் பணித்துறை உதவித்தொகை பெற விதிமுறைப்படி தேவையான குறைந்த அளவு மாணவர்களின் எண்ணிக்கை 25-லிருந்து, 10ஆகக் குறைக்கப்பட்டது.

1916-17ஆம் ஆண்டில், பிற்பட்ட வகுப்புகளைச் சார்ந்த உறப்பினர்களின் நலனுக்காகத் துவக்கப்பட்ட பல பள்ளிகளுடன், அட்டவணையிட்ட வகுப்பினர், மற்றும் அட்டவணையிட்ட மலைவாழ் வகுப்பினர் ஆகியோரின் பொருளாதார, சமூக நிலையினை உயர்த்தும் நோக்கில், 292 ஆண்கள் தொடக்கப்பள்ளிகள் அட்டவணையிட்ட வகுப்புகள் மற்றும் அட்டவணையிட்ட மலைவாழ் வகுப்புகள் ஆகியவற்றைச் சார்ந்த மாணவர்களைப் பதிவுப் பட்டியலில் சேர்த்துக் கொண்டன.[96]

முகம்மதிய மதத்தைச் சார்ந்த மாணவர்களை ஊக்குவிக்க, "உருது" மொழி கற்பிக்கப்படுகிறது. இதற்காக 10 தொடக்கப்பள்ளிகளில், அரேபிய முன்சிப்கள் நியமிக்கப்பட்டனர்.

தமிழ்க் கல்வி

1915ஆம் ஆண்டிற்கு முன்னர், தமிழ் பல தலைப்புப்பொருள் பாடங்களில் ஒன்றாக இருந்த போதிலும், மாநிலத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் மலையாளம் ஒன்றே பயிற்று மொழியாக இருந்து வந்தது. 1915ஆம் ஆண்டு, மக்களுக்குத் தமிழ் தாய்மொழியாக இருக்கக் கூடிய தென் திருவாங்கூரிலும், செங்கோட்டை வட்டத்திலும் தமிழ்க்கல்விக்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில், கீழ்க்கண்டவாறு ஆணை பிறப்பிக்கப்பட்டது:

(1) தோவாளை மற்றும் அகஸ்தீஸ்வரம் வட்டங்களிலுள்ள அனைத்து அரசுத் துறைப் பள்ளிகளிலும் முதல் இரண்டாம் வகுப்புகளுக்கு, மலையாளம், தமிழ் இரண்டுமே கற்றுக்கொடுக்கப் படவேண்டும்.

(2) இப்பள்ளிகளில், அப்பகுதிகளிலுள்ள தமிழ் அல்லது மலையாளம் பேசும் மக்கட்தொகைக்கேற்ப, தமிழோ, மலையாளமோ கற்றுக்கொடுக்கப்படவேண்டும்

(3) எந்த மாணவர்களுக்கு, தொடக்கப்பள்ளி இறுதிச்சான்றுக்குரிய கட்டாய மொழி தமிழோ, அம்மாணவர்களுக்கு விருப்பப்பாடமாக மலையாளத்தை அறிமுகப்படுத்தலாம்.

தமிழ் கற்பிக்கும் மொழியாக அறிமுகப்படுத்தப்பட்ட பள்ளிகளின் இயக்கத்தை நிர்ணயித்திடவும், தமிழ் பேசும் மக்களின் கல்வித் தேவைகளை மேலும் விரிவாக்குவது குறித்து ஆய்வு மேற்கொள்ளவும், தமிழ் முழுமையாகவும், பகுதியாகவும் பேசப்படும் வட்டங்களில், பொதுக்கல்வி இயக்குநர் 1921-22ஆம் ஆண்டு, ஒரு கூட்டத்தை நடத்தினார். 1922-23ஆம் ஆண்டு, 22 ஆண்கள் பள்ளிகளில், முதலாம் வகுப்பில், தமிழ் கற்பிக்கும் மொழியாக, அறிமுகப்படுத்தப்பட்டது[97]. ஆனால், வில்லுக்குறி மற்றும் உதயமார்த்தாண்டம் ஆகிய இருபள்ளிகளிலும் தமிழ் கற்பித்தல் நிறுத்தப்பட்டது. 1923ஆம் ஆண்டில், 37 பள்ளிகளில் கற்பிக்கும் மொழியாகத் தமிழ் அறிமுகப்படுத்தப்பட்டது.

ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில், உயர்நிலை மற்றும் கடைநிலைத் தேர்வுகள், ஆசிரியர்களுக்கு முதன்முறையாக 1923ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.

தற்போதைய கன்னியாகுமரி மாவட்டத்திலடங்கிய பகுதியில், ஒவ்வொரு ஆண்டும் தமிழ் கற்பிக்கும் மொழியாக அறிமுகம் செய்யப்பட்ட பள்ளிகளின் எண்ணிக்கை அதிகரித்தது. 1956ஆம் ஆண்டு கன்னியாகுமரி மாவட்டம் அமைக்கப்படும்போது, தொடக்க, இடைநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகள் அளவில், பல பள்ளிகளில், தமிழ் கற்பிக்கும் மொழியாக ஆக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

முந்தைய திருவாங்கூர் மாநிலத்திலும், மாநிலம் பின்னர் இந்தியத் துணைக் கண்டத்துடன் இணைந்த பிறகும், சிறு மாறுதல்களுடன், கல்வியின் பாங்கும், பல்வேறு வகைப்பட்ட கல்வி நிறவனங்களும் தொடர்ந்தன.

1956ஆம் ஆண்டு, மாநில சீரமைப்புச் சட்டத்தின்படி, கன்னியாகுமரி மாவட்டம் அமைக்கப்பட்டு, அது திருவாங்கூர்-கொச்சி மாநிலத்திலிருந்து பிரிந்து, சென்னை மாநிலத்துடன் இணைந்தது.

அப்போதும், அதன் பின்னரும் கல்வி நிறுவனங்களின் நிலை, மற்றும் நடைமுறையிலிருந்த கல்வி நிருவாகப்பணி ஆகியவை குறித்து, கீழ்க்காணும் பத்திகளில் விளக்கப்படுகிறது.

இணைப்பின்போது கல்வித்துறையின் நிருவாக அமைப்பு

திருவாங்கூர் - கொச்சி மாநில பொதுக்கல்வி இயக்குநர், கல்வித் துறையின் தலைமை அலுவலராயிருந்தார். அவரது நிருவாகக் கட்டுப்பாட்டில், தொகுதி அளவில் ஆண், பெண் ஆய்வாளர்கள், மாவட்ட அளவில் ஆண், பெண் உதவி ஆய்வாளர்கள் ஆகியோர் பணியாற்றினர்.

பின்னர், மாவட்டக் கல்வி அலுவலர் பணியிடங்கள் உருவாக்கப்பட்டன. முந்தைய திருவனந்தபுரம் மாவட்ட எல்லையிலடங்கிய அகஸ்தீஸ்வரம், கல்குளம், தோவாளை மற்றும் விளவங்கோடு வட்டங்கள், மார்ச், 31, 1954 வரை, திருவனந்தபுரம் மாவட்டக் கல்வி அலுவலரின் கட்டுப்பாட்டிலிருந்தன. ஏப்ரல், 1, 1954 முதல், ஒரு மாவட்டக் கல்வி அலுவலர் தலைமையில், நாகர்கோவில் கல்வி மாவட்டம் அமைக்கப்பட்டது[98]. மாவட்டத்திலடங்கிய கல்வித்துறை செயல்பாடுகளைப் பொருத்தவரை, அவர் நிருவாகத்தின் முக்கிய அங்கமாகத் திகழ்ந்ததார்[98அ]. அனைத்து உயர் நிலைப் பள்ளிகள் பயிற்சிப்பள்ளிகள் மற்றும் தனிப் பள்ளிகள் ஆகியவை அவரது நேரடி கட்டுப்பாட்டிலியங்கி வந்தன. அவரது அலுவலகத்தில், தனி உதவியாளர் அவருக்கு உதவி புரிந்து வந்தார். கல்வி மாவட்டம் பல துணை மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொன்றும் ஒரு துணைக் கல்வி அலுவலரின் பொறுப்பிலியங்கின. தொடக்க மற்றும் இடைநிலைப்பள்ளிகளை ஆய்வு செய்யும் பொறுப்பினை உதவிக் கல்வி அலுவலர்கள் ஏற்றனர்.

இணைப்பிற்குப் பின் கல்வித்துறையின் நிருவாக அமைப்பு

கன்னியாகுமரி மாவட்டம் அமைக்கப்பட்டு சென்னை மாநிலத்துடன் 1956 ஆம் ஆண்டு இணைக்கப்பட்ட போது, கல்வித்துறை, பொதுக்கல்வி இயக்குநரின் தலைமையில் இயங்கி வந்தது. மாநில அளவில், அவரது அலுவலகத்தில் அவருக்கு இரண்டாம் நிலை அலுவலர்களும், தகுந்த பணியாளர்களும் உதவி புரிந்தனர். அவர்கள் தவிர, கோட்ட அளவில் கோட்ட ஆய்வாளர்கள், கல்வி மாவட்ட அளவில் மாவட்டக் கல்வி அலுவலர்கள், வட்ட அளவில் பெண்கள் பள்ளிகளின் பெண்-ஆய்வாளர்கள் ஆகியோரது பணியிடங்கள் பொதுக்கல்வி இயக்குநரின் நிருவாக மற்றும் ஒழுங்குக் கட்டுப்பாட்டில் உருவாக்கப்பட்டன.

கல்வி மாநிலம் இரண்டு கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டு, அவற்றிர்க்கு மதுரை மற்றும் கோயம்புத்தூரில் தலைமையிடங்கள் நிர்ணயிக்கப்பட்டன. ஒவ்வொரு கோட்டமும் ஒரு கோட்ட ஆய்வாளரது கண்காணிப்பில் இயங்கியது. கன்னியாகுமரி மாவட்டம் அமைக்கப்பட்ட போது, அது, மதுரை கோட்ட ஆய்வாளரது எல்லைப்பகுதியில் இயங்கியது. அக்கோட்டத்தில், அப்போது சென்னை, செங்கற்பட்டு, தென் ஆற்காடு, தஞ்சாவூர் மதுரை, இராமநாதபுரம் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்ட எல்லைகள் இணைக்கப்பட்டிருந்தன. கன்னியாகுமரி வருவாய் மாவட்டம் முழுமையும் ஒரு கல்வி மாவட்டமாக அமைக்கப்பட்டது. கன்னியாகுமரி மாவட்டக் கல்வி அலுவலரையும் சேர்த்து, மாநில முழுமைக்கும் 15 மாவட்டக் கல்வி அலுவலர்கள் இருந்தனர்[99]. மாநிலங்கள் சீரமைப்பினைத் தொடர்ந்து, 13 அரசிதழ் பதிவுற்ற பணியிடங்கள் திருவாங்கூர் - கொச்சியிலிருந்து, சென்னை மாநிலத்திற்கு மாற்றப்பட்டன. அவற்றில் நான்கு பணிகள், சார்நிலைக் கல்விப்பணியின் கீழ் கொணரப்பட்டன.

1956ஆம் ஆண்டு, நவம்பர் மாதம், இம்மாவட்டம் அமைக்கப்பட்டபோது, அனைத்துவகையிலும், 585 கல்வி நிறுவனங்கள் (மாவட்டத்தில்) செயல்பட்டன[100]. அவற்றில், 1,03,225 ஆண்களும், 81,919 பெண்களும் கல்வி கற்றனர். இந்த 585 கல்வி நிறுவனங்களில், 344 நிறுவனங்கள், அரசு தொடக்கப்பள்ளிகள், 82 அரசு உதவி பெறும் தொடக்கப்பள்ளிகள், மற்றும் 15 பள்ளிகள் அரசு கொடை பெறாத பள்ளிகளாகும். தொடக்கப்பள்ளிகளில், 64,587 மாணவர்களும், 56,473 மாணவிகளும் கல்வி பயின்று வந்தனர். மாணவர்களுக்காக 39 அரசு இடைநிலைப் பள்ளிகளும், 59 சமயப்பரப்புக் குழுப்பள்ளிகளும், 2 அரசு உதவி பெறாத பள்ளிகளும் இயங்கின. 6 சமயப்பரப்புக் குழுப்பள்ளிகள், பெண்களுக்காக இயங்கின. இவ்வணைத்துப் பள்ளிகளிலும், 33,923 ஆண்களும், 20,786 பெண்களும் கல்வி பயின்றனர். அனைத்துப் பெண்கள் பள்ளிகளிலும், 438 ஆண்களும், 2840 பெண்களும் கல்வி புகட்டப்படுகின்றனர். ஆக, அனைத்து பள்ளிகளிலும் ஆண்-பெண் இணைக்கல்வி முறை நடைமுறையிலிருந்தது. புதிய பொதுக்கருத்தின் படி, ஆதாரப் பள்ளிகளும் நிறுவப்பட்டன. அவ்வாறான ஏழு அரசு ஆதாரப் பள்ளிகளும், அரசு உதவி பெற்ற ஓர் ஆதாரப்பள்ளியும், 1327 ஆண்கள் மற்றும் 1116 பெண்கள் ஆகியோருடன் இயங்கின. இவ்வணைத்து வகைப் பள்ளிகளிலும், 1242 ஆண் ஆசிரியர்களும், 1123 பெண் ஆசிரியர்களும் கல்வி புகட்டி வந்தனர்.

இவை தவிர, டத்தி குழந்தைகள் வளர்ப்பரங்கம் மற்றும் இலண்டன் சமயப்பரப்புக்குழு வளர்ப்பரங்கம் ஆகிய இரண்டு வளர்ப்பரங்கங்களும், ஹோம் சர்ச் கிண்டர் கார்ட்டன் பள்ளி என்ற சிறுவர்களுக்குரிய விளையாட்டு முறைக் கல்விப்பள்ளியும், சித்ரா வரைப்படப்பள்ளி என்ற வரைபடப்பள்ளியும் இயங்கி வந்தன.

ஆசிரியர்கள் பயிற்சியைப் பொறுத்த வரை, மூன்று ஆண்கள் ஆசிரியர் பயிற்சிப்பள்ளிகள் இயங்கின. அவற்றில் இரண்டு அரசாலும், ஒன்று அரசு உதவி பெற்ற தனியார் நிறுவனத்தாலும் இயக்கப்பெற்றன. இப்பள்ளிகளில் 136 ஆண்களும், 60 பெண்களும் பயிற்சி பெற்றனர். அரசு உதவி பெற்ற இயல்பான பயிற்சிப்பள்ளி ஒன்றும் இயங்கியது. அதனில், 50 பெண்கள் பயிற்சி பெற்றனர். ஒரு ஆண்கள் அரசு ஆதாரப் பயிற்சிப்பள்ளியும் இயங்கி வந்தது. அதில் 56 ஆண்களும், 15 பெண்களும் பயிற்சி பெற்றனர்.

தொழில்கல்வித் தொகுதியில், பல தொழில் நுணுக்கப்பயிற்சி நிறுவனம் ஏதும் இயங்காதிருந்தும், தொழில் பயிற்சிப்பள்ளிகள் அரசு சார்பில் இரண்டும், உதவி பெறும் தனியார் நிருவாகிகளால் ஆறும் நடத்தப்பெற்றன. இவற்றில், 195 ஆண்களும், 66 பெண்களும் பல தொழில் நுட்ப வாணிகம் குறித்து, பயிற்சி பெறுகின்றனர்.

ஒப்புதலளிக்கப்பட்ட 9 வாணிகப் பள்ளிகளில், 536 ஆண்களும், 165 பெண்களும் கல்வி பயின்றனர்.

பள்ளிக் கல்வி

தமிழ்நாட்டின் கல்வித் துறையின் தற்போதைய நிருவாக அமைப்பு முறையின் விரிவாக்கம் (கன்னியாகுமரி மாவட்டத்திற்கான தனிக் குறிப்புடன்)

சென்னை மாநில கல்வித்துறை வரலாற்றில், "**1854ஆம் ஆண்டு முக்கியத்துவம் பெற்ற ஆண்டாகும். இவ்வாண்டிலிருந்து நடைமுறைக்கு வந்த சர் சார்லஸ் உட்ஸ் என்பவரின் சிபாரிசின் பெயரிலான கல்விக் சீர்திருத்தங்கள்**" இந்தியாவில் ஆங்கிலக்கல்வி முறையின் "அரசின் பேருரிமைப்பத்திர"மென அழைக்கப்படுகிறது. கல்வித்துறையினை நிருவாகம் செய்ய ஒரு தனித்துறை அமைக்க வேண்டுமென இந்த நடவடிக்கைக் குறிப்பு வலியுறுத்தியது.[101]

1854ஆம் ஆண்டு நடவடிக்கைக் குறிப்பு கிடைக்கப் பெற்றவுடன், கல்வித்துறையினை நிருவாகம் செய்யவும், கண்காணித்திடவும் தேவைப்படக்கூடிய, ஒரு துறையினை உருவாக்கிட சென்னை அரசு அனுமதி கோரியது, அதனைத் தொடர்ந்து, புதிய பணியிடங்கள் - அதாவது ஒரு பொதுக்கல்வி இயக்குநர், நான்கு பள்ளிகள் முதன்மை ஆய்வாளர்கள், 20 மாவட்டப் பார்வையாளர்கள், 60 துணை உதவி ஆய்வாளர்கள் ஆகியோரை நியமனம் செய்வதன் பொருட்டு, உருவாக்கப்பட்டன. பொதுக்கல்வி இயக்குநராக, முதன் முதலில் சர். அலெக்சாண்டர் ஆர்பத்நாட் பணியேற்றார்.

பின்னர், அதிகரித்து வந்த வேலைப்பளுவினைக் கருத்திற்கொண்டு, கோட்ட ஆய்வாளர்களின் நிருவாகக் கட்டுப்பாட்டில், மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகியவற்றைத் தலைமையிடங்களாகக் கொண்ட இரு கோட்டங்களாக, மாநிலம் பிரிக்கப்பட்டது. கன்னியாகுமரி கல்வி மாவட்டம், ஏனைய கல்வி மாவட்டங்களான மதுரை வடக்கு, மதுரை தெற்கு, செங்கற்பட்டு, தஞ்சாவூர் கிழக்கு, தஞ்சாவூர் மேற்கு, திண்டுக்கல், மதுரை, இராமநாதபுரம், விருதுநகர், திருநெல்வேலி தெற்கு, திருநெல்வேலி வடக்கு மற்றும் திருநெல்வேலி மையம்[102]. ஆகியவற்றுடன் மதுரை கோட்ட ஆய்வாளரின் கட்டுப்பாட்டின் கீழ் கொணரப்பட்டது. கோயம்புத்தூர் கோட்ட ஆய்வாளர் ஏனைய கல்வி மாவட்டங்களுக்குப் பொறுப்பு வகித்தார்.

1962-63ஆம் ஆண்டு, மாநிலத்திலுள்ள கல்விக் கோட்டங்களின் எண்ணிக்கை இரண்டிலிருந்து நான்காக உயர்ந்தது[103]. சென்னை மற்றும் திருநெல்வேலி ஆகியவை புதிய கோட்டங்களாகும். கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி கோட்ட எல்லைப் பகுதியில் கொணரப்பட்டது.

1963 ஆம் ஆண்டிற்கு முன்னர், நாகர்கோவிலைத் தலைநகராகக் கொண்ட கன்னியாகுமரி கல்வி மாவட்டப் பகுதி, கன்னியாகுமரி வருவாய் மாவட்ட எல்லைப்பகுதிக்கு இணையானதாக இருந்தது. ஆனால், ஆகஸ்ட், 24, 1963 முதல், கல்வி மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, புதுக்கல்வி மாவட்டம், தக்கலையைத் •தலைமையிடமாகக் கொண்டு, இயங்கத் துவங்கியது[104].

மாநிலத்தில் கல்வித்துறை நிருவாக அமைப்பு முறையில், 1965 ஆம் ஆண்டு ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்டது. இதுகாறும் மாநிலத்தில், பள்ளி, கல்லூரி மற்றும் தொழில்நுட்பம் போன்ற அனைத்துக் கல்விப் பிரிவுகளுக்கும் ஒரு இயக்குநர்தான் பணியாற்றி வந்தார். அவரது வேலைப்பளுவும், பொறுப்பும் நிருவாகத்தில் பன் மடங்கு அதிகரித்து விட்டதால் துறையின் நிருவாக அமைப்பினை அரசு இரண்டாகப் பிரித்தது. அதனைத் தொடர்ந்து, 1965 ஆம் ஆண்டு பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் கல்லூரிக் கல்வி இயக்குநர் ஆகிய இரு பணியிடங்கள் உருவாக்கப்பட்டன[105]. அதன்விளைவாக, பொதுக்கல்வி இயக்குநர் பணியிடம் நீக்கம் செய்யப்பட்டது. சட்டக்கல்வி மற்றும் தொழில் நுட்பக்கல்வி ஆகியவை பொதுக்கல்வி இயக்குநரிடமிருந்து ஏற்கனவே, முறையே 1951 மற்றும் 1957 ஆம் ஆண்டுகளில் பிரிக்கப்பட்டு, அதனைத் தொடர்ந்து, சட்டக் கல்வி இயக்குநர் மற்றும் தொழில் நுட்பக்கல்வி இயக்குநர் ஆகிய பணியிடங்கள் தொடர்புள்ள ஆண்டுகளில் உருவாக்கப்பட்டன[106].

கல்வித்துறையில், மாநில நிருவாக அமைப்பின் மற்றொரு முக்கிய வளர்ச்சி யாதெனில், 1968-69 ஆம் ஆண்டில், கோட்ட ஆய்வாளர்கள் பணியிடங்கள் நீக்கம் செய்யப்பட்டு, முதன்மைக் கல்வி அலுவலர்கள் பணியிடங்கள் உருவாக்கப்பட்டதாகும். அதனைத் தொடர்ந்து, பத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் பணியிடங்கள் உருவாக்கப்பட்டன. கன்னியாகுமரி வருவாய் மாவட்டத்திலடங்கிய நாகர்கோவில் மற்றும் தக்கலை கல்வி மாவட்டங்கள், திருநெல்வேலி முதன்மைக் கல்வி அலுவலரின் கட்டுப்பாட்டில் கொணரப்பட்டன. [107]

மாவட்டத்தில் கல்வி நிறுவனங்கள் படிப்படியாக அதிகரித்து விட்டதால், புதிதாகத் திறக்கப்பட்ட நிறுவனங்களைக் கவனிக்க, ஒரு புதிய கல்வி மாவட்டம் உருவாக்க வேண்டியது இன்றியமையாததெனக் கருதப்பட்டதால், 1973 ஆம் ஆண்டு, குழித்துறை கல்வி மாவட்டம் உருவாக்கப்பட்டது. இவ்வாறாக, கன்னியாகுமரி வருவாய் மாவட்டத்தில், நாகர்கோவில், தக்கலை மற்றும் குழித்துறை ஆகிய மூன்று கல்வி மாவட்டங்கள் இடம் பெற்றன.[108] ஒரு கல்வி மாவட்டத்திற்கு ஒருவர் வீதம், மூன்று மாவட்டக் கல்வி அலுவலர்கள் பணியாற்றி வந்து போதிலும், கட்டுப்பாட்டு அலுவலரான முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகம் திருநெல்வேலியில் அமைக்கப்பட்டது. இக்குறை

களையப்பெறவும், கல்வி நிருவாகத்தை சீராக்கி மேம்படுத்த செப்டம்பர், 5,1974 முதல், நாகர்கோவிலைத் தலைமையிடமாகக் கொண்ட கன்னியாகுமரி மாவட்டத்திற்கு ஒரு முதன்மைக் கல்வி அலுவலர் பணியிடம் வழங்கப்பட்டது.

பின்னர், கல்லூரிகளில் புதுமுக வகுப்பு முறையினை நீக்கம் செய்து, உயர்நிலை வகுப்பு முறை அறிமுகப்படுத்தப்பட்டது. உயர்நிலைப் பள்ளிகள் துவக்கப்பட்டபின்னர், அனைத்துப்பள்ளிகளையும் ஒரே குடையின் கீழ் கொணர்ந்து, ஓர் இயக்குநர் நிருவகிப்பதில் இடர்பாடுகள் எழுந்தன. இத்தகைய இடர்பாடுகளை நீக்கும் பொருட்டு, 1986 ஆம் ஆண்டு, தொடக்கப் பள்ளிகளை மட்டும் நிருவகிப்பதற்காக ஒரு புதிய இயக்ககம் அமைக்கப்பட்டது. பின்னர், இணை இயக்குநர், துணை இயக்குநர், மற்றும் உதவி இயக்குநர்கள் ஆகிய பணியிடங்கள் உருவாக்கப்பட்டன. தலைமையிடத்தில் மட்டும் இந்த இயக்ககம் தனியாக இயங்கி வருகிறது. மாவட்ட அளவில், பள்ளிக்கல்வி இயக்கத்தைச் சார்ந்த அலுவலர்களே, தொடக்கப்பள்ளி நிருவாகத்திற்குப் பொறுப் பேற்றுள்ளனர்.

பள்ளிகளில் உடற்பயிற்சிக்கல்வியை ஊக்குவித்திட, மாநில அளவில் ஆண்களுக்காக ஒரு முதன்மை உடற்பயிற்சி ஆய்வாளரும், பெண்களுக்காக ஒரு முதன்மை உடற்பயிற்சி மண்டல அளவில் மண்டல ஆய்வாளர்களும், பெண்கள் உடற்பயிற்சி மண்டல ஆய்வாளர்களும் முறையே ஆண்கள் முதன்மை ஆய்வாளர் மற்றும் பெண்கள் முதன்மை ஆய்வாளர் ஆகியோரது கட்டுப்பாட்டில் இயங்குகின்றனர்.

கன்னியாகுமரி மாவட்டத்திற்கு, நாகர்கோவிலில் ஒரு உடற்பயிற்சி மண்டல ஆய்வாளர் பணியாற்றி வருகிறார். பெண்களுக்கான உடற்பயிற்சி ஆய்வாளர், மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டுள்ளார். அவரது எல்லைப் பகுதி கன்னியாகுமரி மாவட்டத்தையும் சேர்ந்ததாகும்.

மாவட்ட அளவிலான பள்ளிக் கல்வி நிருவாகத்தினை நாகர்கோவிலிலுள்ள முதன்மைக்கல்வி அலுவலர் கவனித்து வருகிறார். அவருக்கு நாகர்கோவில், குழித்துறை மற்றும் தக்கலை மாவட்டக்கல்வி அலுவலரும், நாகர்கோவிலிலுள்ள பெண்கள் பள்ளிகள் ஆய்வாளரும் உதவிபுரிகின்றனர்.மாவட்டக்கல்வி அலுவலர்களும் பெண்கள் பள்ளிகள் ஆய்வாளரும், உயர்நிலை மற்றும் மேல் நிலைப்பள்ளிகளின் நேரடி மேற்பார்வைப் பொறுப்பினை வகிக்கின்றனர். நடுநிலை மற்றும் துவக்கப் பள்ளிகளை ஆய்வு செய்ய, தொகுதி அளவில், பள்ளிகள் துணை ஆய்வாளர்கள் உள்ளனர். மாவட்டத்தில், அவ்வாறாக ஒன்பது தொகுதிகள் உள்ளன. ஒவ்வொரு தொகுதிக்கும் பள்ளிகள் துணை ஆய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். நாகர்கோவில், சுசீந்திரம், இராசக்காமங்கலம், தக்கலை, குளச்சல், திருவட்டார், குழித்துறை, முஞ்சிறை, மற்றும் கருங்கல் ஆகியவை இவர்களது தலைமையிடங்களாகும்.

பள்ளிக்கல்வி இயக்குநர்
↓
கூடுதல் இயக்குநர்
↓
இணை இயக்குநர்கள்
↓
துணை இயக்குநர்கள்

தொடக்கக் கல்வி இயக்குநர்
↓
இணை இயக்குநர்
↓
துணை இயக்குநர்கள்

முதன்மை உடற்பயிற்சி ஆய்வாளர், (ஆண்கள்) சென்னை

முதன்மைக்கல்வி அலுவலர் நாகர்கோவில்

உடற்பயிற்சி முதன்மை ஆய்வாளர்கள் சென்னை (பெண்கள்)

உடற்பயிற்சி மண்டல ஆய்வாளர் (ஆண்கள்) நாகர்கோவில்,
↓
நாகர்கோவில்

மாவட்டக்கல்வி அலுவலர்கள்
↓
தக்கலை **குழித்துறை**

பெண்கள் பள்ளிகள் (பெண்) ஆய்வாளர்
நாகர்கோவில்

உடற்பயிற்சி மண்டல ஆய்வாளர்கள் (பெண்கள்) மதுரை

பள்ளிகள் துணை ஆய்வாளர்கள், நாகர்கோவில், சுசீந்திரம், இராசக்காமங்கலம், தக்கலை, குளச்சல், திருவட்டார், குழித்துறை, முஞ்சிறை, கருங்கல்.

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், கல்வித்துறையின் மாநில மற்றும் மாவட்ட அளவிலான நிருவாக அமைப்புமுறை, கீழ்க்காணும் வரை படத்தில் அளிக்கப்பட்டுள்ளது.

பள்ளிக் கல்வியின் பிரிவுகள்

மாநிலத்தின் பள்ளிக்கல்வியினை மூன்று முதன்மையான பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவையாவன: தொடக்கக் கல்வி, (தொடக்க மற்றும் இடைநிலைப் பள்ளிகளில் கற்பிக்கப்படுபவை, இடைநிலைக் கல்வி (உயர்நிலைப் பள்ளிகளில் கற்பிக்கப்படுபவை) மற்றும் மேல் நிலைக்கல்வி (மேல்நிலைப் பள்ளியில் கற்பிக்கப்படுபவை).

தொடக்கக் கல்வி

1956 ஆம் ஆண்டு மாவட்டம் அமைக்கப்பட்டு, சென்னை மாநிலத்துடன் இணைக்கப்படும்போது, ஆறு வகையான முதன்மை அல்லது தொடக்கப் பள்ளிகள் மாவட்டத்திலிருந்தன. அவையாவன:

1. கடைநிலை தொடக்கப்பள்ளிகள் (முதல் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை)
2. உயர்நிலை தொடக்கப்பள்ளிகள் (முதல் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை)
3. இளநிலை ஆதாரப்பள்ளி (முதல் நிலை முதல் ஐந்தாம் நிலை வரை)
4. முதுநிலை ஆதாரப் பள்ளிகள் (முதல் நிலை முதல் எட்டாம் நிலை வரை)
5. மேல்நிலைப் பள்ளிகளின் தொடக்கத் துறைகள் (முதல் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை)
6. ஆங்கிலோ இந்திய சமூகத்தினரின் தொடக்கப்பள்ளிகள் (முதல் வகுப்பு முதல் ஆறாம் வகுப்புவரை)

ஆதாரப்பள்ளிகள்

1950 ஆம் ஆண்டு, புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டு, திறக்கப்பட்ட ஆதாரப்பள்ளிகள், புதிய கருத்துப் படிவங்களைக் கொண்டிருந்தன. அவற்றில், முறையான பாடத்திட்டத்திலுள்ளவற்றைத் தவிர, குழந்தைகள், வாழ்க்கைத் தொடர்புள்ள கல்வியையும் கற்றுக்கொள்ள முடிந்தது. அவை, கைத்திறனுள்ள தொழில்களான பாய் முடைதல், மற்றும் தோட்டவேலை, வாய்மொழிக் கல்வி ஆகியவையாகும். ஆதாரப் பள்ளிகளில் கற்பிக்கும் திறன் பெறுவதற்காக, புதிதாகத் திறக்கப்பட்ட ஆதாரப்பயிற்சிப் பள்ளிகளில் ஆசிரியர்கள் தனியாக பயிற்சி பெற்றனர்.

தோட்ட வேலைக்கான நிலப்பரப்பு, கைத்திறனுள்ள தொழில்கள் தொடர்பாகக் கற்றுக்கொடுப்பதற்குத் தேவையான நிலப்பரப்பு மற்றும்

கைத்திறனுள்ள தொழில்களைக் கற்றுத் தருவதற்கு ஆசிரியர்கள் பயன்படுத்துவதற்குத் தேவையான நிலப்பரப்பு ஆகிய வசதிகளுக்கேற்ப, மாநிலத்திலுள்ள இயல்பான தொடக்கப்பள்ளிகள் ஆதாரப்பள்ளிகளாக மாற்றியமைக்கப்பட்டன. இயல்பான பொது மாதிரிப்பள்ளிகள் அல்லது பயிற்சிப் பள்ளிகள் இளநிலை அல்லது முதுநிலை ஆதார பயிற்சிப்பள்ளியாக மாற்றியமைக்கப்பட்டன. இவ்வாறாக, மாணவர்களுக்கு ஆதாரப்பயிற்சியளிப்பதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

தொடக்கக்கல்வி

முதல் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு வரை, அல்லது முதல் நிலையிலிருந்து எட்டாம் நிலை வரை, வகுப்பு நடத்திட தொடக்க மற்றும் ஆதாரக் கல்வியில், எட்டாண்டு காலவரை நிர்ணயிக்கப்பட்டது. 1959-60 ஆம் ஆண்டு, இது திருத்தியமைக்கப்பட்டது[109]. திருத்தியமைக்கப்பட்ட திட்டங்களின்படி, இயல்பு மற்ற ஆதாரத் தொடக்கக்கல்வியின் காலவரை ஏழாண்டுகளாகக் குறைக்கப்பட்டது. இம்முறை, 1963-64 வரை, தொடர்ந்தது[110]. பின்னர், தொடக்கக்கல்விக்கான எட்டாண்டு காலவரை மற்றும் இடைநிலைக் கல்விக்கான மூன்றாண்டு காலவரை ஆகிய பழைய பாங்கிலான முறை, புதுப்பிக்கப்பட்டது. புதிய திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டபடி, பின்னர் தொடக்கக் கல்வியில் இரு நிலைகளிலிருந்தன. முதல் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை.... தொடக்க நிலை. ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை.... உயர் தொடக்க நிலை. இடைநிலைக் கல்வி ஒன்பதாம் வகுப்புமுதல் பதினோராம் வகுப்பு வரை கொண்டதாகும்.

இதுதான் தற்போது மாநிலத்தில் நடைமுறையிலிருக்கும் தொடக்கக் கல்வி முறையாகும்.

பள்ளிகளை நடத்திவரும் நிறுவனங்கள்

அரசால் மாவட்டத்தில் நடத்தப்பட்டுவரும் தொடக்கப்பள்ளிகளின் எண்ணிக்கை தான் மிகவும் அதிகமானதென்பது குறிப்பிடத்தக்க தாகும். அரசு, மாவட்டத்தில் தற்போது 319 பள்ளிகளை நடத்தி வருகிறது. திருவாங்கூர்-கொச்சி மாநிலம், இந்திய துணை கண்டத்துடன் இணைந்த பிறகு, கட்டாயக் கல்வி உதவித்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதால், அரசால் எடுத்துக்கொள்ளப்பட்ட அனைத்து உதவிபெறும் தொடக்கப் பள்ளிகளின் நிருவாகமும் சென்னை மாநிலத்தின் பொதுக் கல்வித் துறைக்கு மாறியதால், அரசுப்பள்ளிகளின் எண்ணிக்கை இதனால் அதிகமாகியது. 1958ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் திருத்தப்பட்ட பின்னர், தொடக்கப் பள்ளிகளின் நிருவாகம் மற்றும் பராமரிப்பு ஆகியவை ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒப்படைக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து, அவை தொடக்கக் கல்வி நிருவாகத்தினை கவனித்து வருகின்றன. ஊராட்சி ஒன்றியங்களால் நடத்தப்பட்ட பள்ளிகளில் பணியாற்றிய ஆசிரியர்கள், ஊராட்சி ஒன்றிய மன்றங்களின்

நிருவாகக் கட்டுப்பாட்டில் பணியாற்றினர். அப்பள்ளிகள் யாவும் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளென அழைக்கப்பட்டன. ஆனால், 1980-81 முதல், ஊராட்சி ஒன்றியங்களால் பராமரிக்கப்பட்டு வந்த பள்ளிகள் கல்வித்துறையினால் பொறுப்பேற்கப்பட்டன[111]. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் உதவிக் கல்வி அலுவலர்கள் நியமிக்கப்பட்டு, அவர்கள் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளின் நிருவாகக் கட்டுப்பாட்டினை மேற்கொண்டார்கள். எனினும், கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் இவ்வினா எழவில்லை, ஏனெனில், ஊராட்சி ஒன்றியங்களால் நடத்தப்படும் பள்ளிகளேதும் கன்னியாகுமரி மாவட்டத்திலில்லை. எனவே, இம்மாவட்டத்தில் உதவிக் கல்வி அலுவலர்கள் பணியிடங்களை உருவாக்க வேண்டிய அவசியமில்லாதிருந்தது.

கட்டாயக் கல்வி

நாட்டின் அனைத்து குடிமக்களுக்கும் கல்வி இன்றியமையாததாகிறது. அதனுடைய முக்கியத்துவத்தை சிறப்பு வாய்ந்த நமது முன்னோர்களும், உணர்ந்திருந்தனர். குறிப்பாக மக்களாட்சி மலர்ந்துள்ள ஒரு நாட்டில், ஆட்சி நடத்த, குடிமக்கள் தங்களது வாக்குரிமையைப் பயன்படுத்தி, பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கின்றனர். அப்படிப்பட்ட நாட்டில் கல்வி, முக்கிய அங்கம் வகிக்கிறது. ஆனால், ஏதாவதொரு காரணத்திற்காக, கிரமப்புற பகுதிகளில் கல்வி புறக்கணிக்கப்பட்டது. எனவே, பள்ளி செல்லும் குழந்தைகளனைவரையும் கட்டாயக் கல்விக்குட்படுத்த, அரசு ஒரு திட்டத்தினை வரைந்தது. அதனைத் தொடர்ந்து, இந்த கட்டாயக் கல்வித் திட்டத்தினைப் படிப்படியாக அறிமுகப்படுத்தும் கொள்கையினை அரசு மேற்கொண்டது.

1930ஆம் ஆண்டு, இம்மாநிலத்தில் கட்டாயக் கல்வித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட போது, முதன் முதலில் இத்திட்டம் சில நகராட்சிப் பகுதிகளுக்கு மட்டுமென வரையறுக்கப்பட்டது. சில மையங்களில் மாணவர்களுக்கு மட்டுமெனவும், வேறு மையங்களில் அவை மாணவ, மாணவியர் ஆகிய இரு பாலருக்கெனவும் வரையறுக்கப் பட்டது. உலகப் போருக்குப் பிந்தைய வளர்ச்சித் திட்டத்தின் கீழ், கட்டாயக் கல்வி முறை பெரிய அளவு கிராமப்புறப் பகுதிகளுக்கும் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆண்கள், பெண்கள் அனைவருக்கும் அத்திட்டம் பயன்படத்தக்கதாக அறிவிக்கப்பட்டது.

முந்தைய திருவாங்கூர் மாநிலத்தில் கட்டாயக் கல்வித் திட்டம் 1946-47ஆம் ஆண்டு, அறிமுகப்படுத்தப்பட்டது[112]. அறிமுகப்படுத்தப் பட்ட முதல் ஆண்டிலேயே, இத்திட்டத்தினால் 617 கிராமப்புறப் பகுதியினரும் ஆறு நகர்ப்புறப் பகுதியினரும் பயனடைந்தனர். ஆனால், முந்தைய சென்னை மாகாணத்தில் கட்டாயக் கல்வி அறிமுகப்படுத்தப் பட்ட மாவட்ட வாரியான மையங்கள் மிகவும் குறைவாகவே இருந்தன.

உதாரணமாகக் கன்னியாகுமரி மாவட்டத்திற்கடுத்தபடியாக, இத்திட்டம் சிறப்பாக நிறைவேற்றப்பட்ட மையங்களையுடைய மாவட்டம் தர்மபுரியாகும். அம்மாவட்டத்திலுள்ள மையங்களின் எண்ணிக்கை 31 ஆகும்.

மாவட்டத்தில் 5 முதல் 10 வரையிலான வயதிலுள்ள குழந்தைகளுக்கு இத்திட்டம் செயல்முறைப்படுத்தப்பட்டது. மாநிலத்தின் ஏனைய பகுதிகளில் வயது தொகுதி, 6-லிருந்து, 11 வரைக்குட்பட்ட தாகும். கன்னியாகுமரி மாவட்டத்தில், இத்திட்டத்தை அறிமுகப்படுத்திய அதிகாரக் குழுவும், முந்தைய சென்னை மாநிலத்தில் திட்டத்தை அறிமுகப்படுத்திய குழுவும் ஒன்றில்லையாதலால் இதில் மாறுபாடு காணப்படுகிறது. முந்தைய திருவாங்கூர் மாநில அரசு, கட்டணக் கல்விக்கான வயது வரம்பினை 5 முதல் 10 என நிர்ணயித்தது. கன்னியாகுமரி மாவட்டம், தமிழ்நாட்டுடன் இணைந்த நாலாண்டுகளுக்குப் பின்னர் அதாவது 1960-61-ல், கட்டாயக் கல்விக்கான வயது வரம்பு 5 முதல் 10லிருந்து 6 முதல் 11 என நிர்ணயிக்கப்பட்டது[113]. இப்பொழுது வட, மாநிலத்தில் கட்டாயக்கல்வி நடைமுறையிலுள்ளது. எனினும், கிராமப்புறப் பகுதிகளில், சில பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளைப் பள்ளிகளுக்கு அனுப்புவதில்லை. மாறாகக் குடும்பத் தொழிலாற்றத் தங்களுக்கு உதவி செய்ய, அவர்களது பணியினைப் பயன்படுத்துகின்றனர். கட்டாயக் கல்வியினைக் கண்டிப்பாக கடைப்பிடிக்காதோர், நீதிமன்ற நடவடிக்கைக்குள்ளாவார்களென ஆணை பிறப்பித்தாலன்றி, கட்டாயக் கல்வி நூற்றக்கு நூறு விழுக்காடு வெற்றியடையாது. எல்லாவற்றிற்கும் மேலாக, மக்கள், தாங்கள் பொருளாதார நிலையிலும், சமூக நிலையிலும் மேம்பாடடைய கல்வி முதுகெலும்பு போன்றதென்பதையும், தங்களது குழந்தைகள் வாழ்க்கையில் முன்னேற்றமடைய கல்வி இன்றியமையாத தெனவும் மக்கள் உணர்ந்தாலன்றி, நூற்றுக்கு நூறு முன்னேற்றத்தை எண்ணிப் பார்க்க இயலாது. இன்றைய நிலைப்படி பார்த்தால், சர்வாதிகார, ஏகாதிபத்திய ஆட்சியில், இது சாத்தியமானதாகும்.

இலவச தொடக்கக்கல்வி

தற்போது, உயர்நிலைக்கல்வி வரை அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில், இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. கல்விக் கட்டணத்தை நீக்கி விடும் முறை, உடனடியாக அறிமுகப்படுத்தப்பட வில்லை. படிப்படியாக அம்முறை செயலாக்கப்பட்டது. முதலாவதாக, சென்னை (தற்போது தமிழ்நாடு) கல்வி விதிகளின் 9-வது விதியின்படி, கட்டணம் செலுத்துவதில், அட்டவணையிட்ட வகுப்பினர், அட்டவணையிட்ட மலைவாழ் வகுப்பினர் ஆகியோருக்குப் பல சலுகைகள் அளிக்கப்பட்டன. 1955-56 பள்ளி ஆண்டிலிருந்து பள்ளி செல்லும் குழந்தைகளின் பெற்றோரின் ஆண்டு வருவாய், ரூபாய் 1,200-க்கு

மிகாமலிருந்தால், அக்குழந்தைகளுக்கு மூன்றாவது படிவம் வரை (தற்போது எட்டாம் வகுப்பு) பள்ளிக் கட்டணம் செலுத்துவதினின்றும் விலக்களிக்கப் பட்டது[114]. இச்சலுகையினைத் தொடர்ந்து, மாணவர்கள் பள்ளிக்குக் கட்டணம் செலுத்தாததால் பள்ளிக்கு ஏற்படும் இழப்பு அரசால் ஈடுசெய்யப்பட்டது.

1956-57 கல்வி ஆண்டிலிருந்து, அரசால் நடத்தப்பெறும் பள்ளிகள் அரசு உதவி பெறும் தனியார் பள்ளிகள் ஆகியவற்றில் பணியாற்றும் ஆசிரியர்கள் காவலர்கள், தலைமைக் காவலர்கள் மற்றும் கடைநிலை ஊழியர்கள் ஆகியோரின் குழந்தைகள் நான்காம் படிவத்திலிருந்து ஆறாம் படிவம் வரை உள்ள வகுப்புகளில் இடைநிலைப் பள்ளிகளில் படித்து வந்ததால், அவர்களுக்கு பாதிக்கட்டணம் செலுத்த சலுகையளித் திருந்தது, முழுக்கட்டணச் சலுகையாக தளர்த்தப்பட்டது.

1957-58 முதல், தனியார் நிருவாகிகளின் கட்டுப்பாட்டிலியங்கி வந்த அனைத்துப் பள்ளிகளிலும், தொடக்கப்பள்ளிக்கல்வி, பொதுவாக இலவசமாக அளிக்கப்பட்டது[115]. ஆனால், அவர்களது பள்ளிகளில் கட்டணச் சலுகை பெறத் தகுதியற்ற மாணவர்களிடம், தனியார் பள்ளி நிருவாகிகள் தாங்கள் நிர்ணயித்திடும் தொகையினைக் கட்டணத் தொகையாகப் பெற, அவர்களுக்கு அரசு அனுமதி அளித்தது. பெற்றோர் களின் ஆண்டு வருவாய் ரூ.1200/-க்குக் குறைவாக இருந்த மாணவர் களுக்குக் கட்டணச் சலுகை அளிக்கப்பட்டு, கட்டணம் வசூலிக்காததால், தனியார் பள்ளிகளுக்கு ஏற்படும் நட்டத்தை அரசு ஈடுகட்டி வந்தது.

1964ஆம் ஆண்டு வரை, பொதுப்பள்ளிகளில் தொடக்கக் கல்வி வரை இலவசக்கல்வி அளிக்கப்பட்டது[116]. 1964ஆம் ஆண்டு முதல் உயர்நிலைப் பள்ளிகளில், கல்விக் கட்டணம் நீக்கம் செய்யப்பட்டு, அரசு மற்றும் உதவி பெறும் பள்ளிகளில் முதல் வகுப்பு முதல் பதினோராம் வகுப்புவரை இலவசக்கல்வியளிக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

எனினும், ஆய்வுக்கூடங்கள், விளையாட்டுகள் மற்றும் பந்தயங்கள், பிறசில முக்கிய நோக்கங்களுக்கு தனிக்கட்டணம் வசூலிக்க, சில அரசு உதவி பெறும் கல்லூரிகளுக்கு அனுமதியளிக்கப்பட்டது.

புகுமுக வகுப்பில் சேருவோர் கட்டணம் செலுத்தி 1969-70 ஆம் ஆண்டு வரை பயின்று வந்தனர். அம்முறை அவ்வாண்டு முதல் நீக்கப்பட்டு, இலவசக்கல்வி வழங்கப்பட்டது. பின்னர், 1978-79ஆம் ஆண்டு முதல் கல்லூரிகளில் புகுமுக வகுப்புப் பிரிவு நீக்கம் செய்யப்பட்டு உயர்நிலைப் பள்ளிகளுக்கு அடுத்து மேல் நிலைப் பள்ளிகள் உருவாக்கப்பட்டு பிளஸ் 2 (+2) கல்விமுறை அமுல்படுத்தப்பட்டது.

தற்போது, அனைத்து வகுப்புகளுக்கும் இலவச கல்வி அளிக்கப்படுகிறது. அனைத்து வகுப்புகளிலும் கற்கும் மாணவர்களுக்கு சாதி, சமய வேறுபாடின்றி முதல் வகுப்பிலிருந்து மேல்நிலை வகுப்பு வரை, அனைத்து அரசுப் பள்ளிகள் மற்றும் நிதியுதவி பெறும் பள்ளிகள் யாவற்றிலும் முழுக் கல்விச் செலவினையும் அரசே ஏற்கிறது. பல்கலைக்கழகப் புகுமுகத் தேர்வுப் பள்ளிகள் மற்றும் அரசிடமிருந்து நிதி உதவி பெறாத அதே போன்ற பிற பள்ளிகள் ஆகியவை இவ்வகுப்புகளுக்குக் கல்விக்கட்டணத்தை மாணவர்களிடம் வசூல் செய்கின்றன:

கட்டணச் சலுகை தவிர, அரசைச் சார்ந்த, தொடர்புள்ள நலத்துறைகளினால், தகுதியுள்ள பிற்பட்ட வகுப்புகள் அட்டவணையிட்ட வகுப்புகள் மற்றும் அட்டவணையிட்ட மலைவாழ் வகுப்புகள் ஆகியவற்றைச் சார்ந்த மாணவர்களுக்கு உதவித் தொகையும் வழங்கப்படுகிறது. இந்த விவரச் சுவடியின் "பிற சமூகப் பணிகள்" என்ற இயலில், அவை குறித்த முழுத்தகவல்கள் அளிக்கப்பட்டுள்ளன.

நலத்துறைகளினால் வழங்கப்பட்ட உதவித்தொகை தவிர, "பாராட்டுத் திறனுடைய உதவித் தொகை", "தேசிய கடன் சார்ந்த உதவித்தொகை" போன்றவையும் தகுதியுள்ளோருக்கு வழங்கப்படுகின்றன.

கிராமப்புற மாணவர்களுக்கு உதவித்தொகைகள்

ஊராட்சி ஒன்றிய அளவில், தேர்வுகள் நடத்தப்பட்டு, திறமை வாய்ந்த கிராமப்புற மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். எட்டாம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் இத்தேர்வுகளில் கலந்துகொள்ள இயலும். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும், தேர்வுகளில் அதிகக் குறியெண்கள் பெற்ற நான்கு மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஒன்பதாம் வகுப்பிலிருந்து பதினோறாம் வகுப்பு வரை, படிப்பதற்கு அவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்படுகிறது.

தேசிய கடன் சார்ந்த உதவித்தொகை

மேல்நிலைப்பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு அவர்களது படிப்பினைத் தொடர, சமுதாய வேறுபாடின்றி, அவர்களுக்கு தேசிய கடன் சார்ந்த உதவித்தொகை வழங்கப்படுகிறது. மாநிலத்தின் ஒவ்வொரு ஆண்டும், இவ்வுதவித்தொகையினால், 1500 மாணவர்கள் பயனடைகிறார்கள். தேசிய கடன் சார்ந்த உதவித்தொகை வழங்கும்போது, முந்தைய தேர்வுகளில் மாணவர்களின் செயல்நிறை வேற்றம், கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகிறது. வழங்கப்பட்ட கடன் சார்ந்த உதவித்தொகை, அம்மாணவர், ஊதியமீட்டத்துவங்கிய ஓராண்டிற்குப் பின்னரோ அல்லது உதவித்தொகை வழங்கப்பட்ட மூன்று ஆண்டுகளுக்குப் பின்னரோ, அவற்றில் எது விரைவிலோ அது முதல், கடன் தொகை

வசூலிக்கப்படுகிறது. திரும்ப வசூலிக்கப்படும் தொகை அம்மாணவரின் மாதாந்திர வருவாயைப் பொறுத்து 25 ரூபாய்க்குக் குறையாமல் நிர்ணயிக்கப்படுகிறது.

பாடத்திட்டமும், பாடநூல்களும்

தொடக்கக் கல்வி முதல் மேல்நிலைக்கல்வி வரை, அனைத்து வகுப்புகளுக்கும் பள்ளிகளில், பாடத்திட்டம், தேவைக்கேற்ப, அவ்வப்போது திருத்தியமைக்கப்படுகிறது. பாடத்திட்டம் வகுப்பதன் முக்கிய நோக்கமே கல்வியினை போதிப்பதில், ஒரு சீரான முறை பின்பற்றப்பட வேண்டுமென்பதனாலாகும்.

1959-60ஆம் ஆண்டு நான்காம் படிவத்திற்கு பாடத்திட்டத்தில் ஒரு பெரிய திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்டு, அப்படிவத்தின் பெயர், எட்டாம் வகுப்பு என மாற்றப்பட்டது[117].

1961-62ஆம் ஆண்டு, ஆறாம் படிவத்திற்குத் திருத்தப்பட்ட பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, அதற்கான பெயரும் பத்தாம் வகுப்பு என மாற்றப்பட்டது. அதே போன்று, ஆதாரக்கல்வி முறையில்லாத, தொடக்கப்பள்ளிகளின் ஆறாம் வகுப்புகள் மற்றும் இடைநிலைப் பள்ளிகளின் முதல் படிவம் ஆகியவற்றிற்கு, திருத்தப்பட்ட பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, முதல் படிவத்தின் பெயர், ஆறாம் வகுப்பு என மாற்றப்பட்டது.

அடுத்த 1962-63ஆம் ஆண்டில், ஆதாரப் பள்ளிகளின் இரண்டாம் படிவத்திற்கும், ஆதாரக் கல்வியில்லாத பள்ளிகளின் ஏழாம் வகுப்பிற்கும் திருத்தப்பட்ட பாடத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப் பட்டன[118]. ஆதாரப் பள்ளிகளின் இரண்டாம் படிவத்திற்கான பெயர், இரண்டாம் படிவம் என்பதிலிருந்து ஏழாம் வகுப்பு என மாற்றியமைக்கப்பட்டது.

1963-64ஆம் ஆண்டிற்கு முன்னர், பாடத்திட்டத்தினை அரசே வகுத்து வந்தது. தனியார் நூல் வெளியிடுவோர், அரசின் ஒப்புதலுடன், பாடத்திட்டப்படி, பாடநூல்களைத் தயார் செய்திட அனுமதிக்கப்பட்டனர். அவ்வாறு அவர்களால் தயாரிக்கப்பட்ட நூல்கள், அலுவலர்களின் ஆய்வுக்குப்பின், அங்கீகரிக்கப்பட்ட பாடநூல்களாகப் பரிந்துரைக்கப்பட்டன. ஆனால், 1963-64 ஆம் ஆண்டிலிருந்து, பாட நூல்களை நாட்டுடைமையாக்கும் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டது. துவக்கத்தில், முதல் இரண்டு மற்றும் ஏழாம் வகுப்புக்களுக்கான தமிழ் பாட நூல்கள், ஐந்து மற்றும் ஏழாம் வகுப்புகளுக்கான ஆங்கிலப்பாட நூல், ஏழாம் வகுப்பிற்கான ஆங்கில மற்றும் தமிழ் துணைப்பாட நூல்கள் ஆகியவை அரசாலேயே வெளியிடப்பட்டு, அவ்வாறாக, இத்தலைப்புப் பொருள் பாடங்களுக்கான தனியார் வெளியீடு, நிறுத்தப்பட்டது.

1964-65ஆம் ஆண்டு மூன்று, நான்கு மற்றும் ஐந்தாம் வகுப்புகளுக்காக தமிழ்ப் பாடநூல்களும், நான்காம் வகுப்பிற்கான ஆங்கிலப்பாட நூலும் அரசாலேயே தயாரித்து வெளியிடப்பட்டு, தொடர்புள்ள வகுப்புகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்டன[119].

அதன்பின்னர், 1965-66ஆம் ஆண்டுதான், பெரிய அளவிலான பாடத்திட்டத்திருத்தம், மேற்கொள்ளப்பட்டது. திருத்தப்பட்ட பாடத்திட்டம், கீழ்க்காணும் ஆண்டுகளில், அவற்றெதிரிலே குறிப்பிட்டவாறு பல்வேறு வகுப்புகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. (விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன):[120]

வரிசை எண்	*வகுப்பு*	*புதிய பாடத்திட்டம் அறிமுகப் படுத்தப்பட்ட ஆண்டு*
1.	1 முதல் 5	1965-66
2.	6 மற்றும் 9	1966-67
3.	7 மற்றும் 10	1967-68
4.	8 மற்றும் 11	1968-69

1978-79ஆம் ஆண்டில், தொடக்கப்பள்ளியிலிருந்து, கல்லூரிக் கல்வி வரை, 10 +2 +3 முறை, அறிமுகப்படுத்தப்பட்டதன் விளைவாக, பாடத்திட்டமும் தகுந்தவாறு, திருத்தியமைக்கப்பட்டது. 10 மற்றும் 11வது வகுப்புகளுக்கான தேர்ந்தெடுப்புக்குரிய தலைப்புப்பொருள் பாடங்களைப் படிக்கும் முறை, 1967-68-ல் அறிமுகப்படுத்தப்பட்டு, பின்னர், அம்முறையும் நீக்கப்பட்டது. தற்போது, மூன்றாம் வகுப்பிலிருந்து பத்தாம் வகுப்பு வரை, கற்பிக்கப்படும் தலைப்புப்பொருள் பாடங்கள் தமிழ் மற்றும் ஆங்கிலம், அறிவியல், கணிதம், வரலாறு மற்றும் புவியியல் ஆகியவையாகும்.

1970ஆம் ஆண்டு, தமிழ்நாட்டுப் பாட நூல் கழகம் நிறுவப்பட்ட பின்னர், முதல் வகுப்பு முதல் மேல் நிலை வகுப்பு (ப்ளஸ் 2) வரையிலான அனைத்து பாடநூல்களையும் கழகமே தயாரித்து, அச்சிட்டு, வெளியிடுகிறது. நூல்கள் ஏழைக்குழந்தைகள் வாங்குவதற்குதவியாக ஆதரவு விலையில் விற்கப்படுகின்றன. தகுதியுள்ள மாணவர்களுக்குப் பாடநூல்கள் இலவசமாகவும் வழங்கப்படுகின்றன. (பிற விவரங்களுக்கு இவ்விவரச் சுவடியின் " பிற சமூகப் பணிகள்" என்ற இயலை நோக்கிட வேண்டப்படுகிறது).

இந்தியா, மாறுபட்ட தன்மையுடைய மொழிகளைப் பேசும் நாடாகையால், ஆங்கிலம் பொது மொழியாகத் தொடர்ந்து நீடிக்கிறது. நீண்ட ஆய்வுக்குப்பின்னர், ஆங்கிலம் கற்பிப்பது, தொடக்க நிலையிலிருந்தே, அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

முன்பு, வட்டாரப்பேச்சு மொழிப்பள்ளிகளில் ஆங்கிலம் போதிப்பது ஆறாம் வகுப்பிலிருந்தே (முதல் படிவம்) துவங்கியது. பின்னர் ஆங்கில மொழியில் நம் மாணவர்கள் உயர்நிலையை அடையும் நோக்கில், 1962-63ஆம் ஆண்டிலிருந்து நான்காம் வகுப்பிலிருந்தே ஆங்கிலம் கற்றுக் கொடுக்கப்பட்டது[121]. அடுத்த ஆண்டு, அதாவது 1963-64-ல், ஆங்கிலம் கற்பிப்பது மூன்றாம் வகுப்பிலிருந்தே துவங்கியது. தற்போது, 1987-88-ஆம் கல்வி ஆண்டிலிருந்து, முதல் வகுப்பிலிருந்தே ஆங்கிலம் கற்பிக்கப்பட்டு வருகிறது.

தொடக்கப் பள்ளி விரிவாக்கம்

தொடக்க நிலை வரை கல்வி கட்டாயமாக்கப்பட்டதால், மாநில முழுமையும் தொடக்கப்பள்ளிகளைத் துவக்குவது அரசின் கடமையாகும்.

பள்ளிகள் - கன்னியாகுமரி மாவட்டத்தில் அடக்க எண் அளவு

கன்னியாகுமரி மாவட்டத்தில், தோராயமாக, 2000 மக்கட்தொகையை பெற்றுள்ள 85 கிராமங்களும், 1000-லிருந்து 2000 வரை மக்கட்தொகையைப் பெற்றுள்ள 133 கிராமங்களும், 500-லிருந்து 1000 வரை மக்கட்தொகையைப் பெற்றுள்ள 133 கிராமங்களும் உள்ளன. இந்த 351 கிராமங்களும், குறைந்த அளவு ஒரு பள்ளியைப் பெற்றுள்ளன. சில கிராமங்களில், ஒரு பள்ளிக்கு மேலும் உள்ளன. 200-லிருந்து 500 வரையிலான மக்கட்தொகையைக் கொண்ட 377 கிராமங்கள் உள்ளன. இவற்றில் 126 கிராமங்களில் தான் பள்ளிகள் இயங்கி வருகின்றன. 200க்கும் கீழ் மக்கட்தொகை கொண்ட, 418 குக்கிராமங்களில், 44 குக்கிராமங்கள் பள்ளிகளைப் பெற்றுள்ளன. பள்ளிகள் இல்லாத குக்கிராமங்களைச் சேர்ந்த மாணவர்கள், அவர்களது சொந்த குக்கிராமத்திற்கருகிலுள்ள கிராமங்களிலியங்கும் பள்ளிகளில் பயின்று வருகின்றனர்.

மாவட்டம் அமைக்கப்பட்டு, சென்னை மாநிலத்துடன் இணைக்கப்பட்ட போது, 344 அரசு துவக்கப்பள்ளிகளும், அரசு உதவி பெற்ற 82 தனியார் பள்ளிகளும், அரசு உதவி பெறாத 15 தனியார் பள்ளிகளும் இயங்கிவந்தன. 64,216 மாணவர்களும், 56,309 மாணவிகளும் தொடக்கப் பள்ளிகளில் பயின்று வந்தனர்[122]. 1242 ஆண் ஆசிரியர்களும், 1123 பெண் ஆசிரியர்களும் கற்பித்து வந்தனர் எனினும், சென்னை அரசு, அரசு சார்பிலேயே சில புதிய பள்ளிகளைத் துவக்கியது. மேலும், தனியார் நிருவாகிகளுக்கு உதவி வழங்கி அவர்கள் புதிய பள்ளிகளைத் துவக்கவும் வழி வகுத்தது. விவரங்கள் படியலில் கொடுக்கப்பட்டுள்ளன[123].

செப்டம்பர், 9, 1986 நிலைப்படி, 213 அரசு தொடக்கப் பள்ளிகளும், 120 அரசு உதவிபெறும் சமயப்பரப்புக் குழுப்பள்ளிகளும், 7 அரசு உதவி பெறும் தனியார் பள்ளிகளும் மாவட்டத்தில் இயங்கிவந்தன[124]. 146

பட்டியல்

திறக்கப்பட்ட ஆண்டு	திறக்கப்பட்ட இடம்	திறந்த நிறுவனம்	பள்ளிகளின் வகை
1960–61	1.வீயனூர்	அரசு	அரசு நடுநிலைப் பள்ளி
	2.புலியூராலை	அரசு	அரசு நடுநிலைப் பள்ளி
	3. காரக்கோணம்	அரசு	அரசு நடுநிலைப் பள்ளி
	4. புத்தன் திடல்	அரசு உதவிபெறும் பள்ளி	அரசு உதவி பெறும் நடுநிலைப் பள்ளி
	5. எட்டக்கோடு	“	“
1961–62	1. எடைக்கோடு	“	அரசு உதவி பெறும் உயர்நிலைப் பள்ளி
	2. பாதல் புரம்	“	“
1963–64	1. கடமலைக்காடு	“	எல்.பி.வி.யி.எஸ். அரசு உதவி பெறும் உயர்நிலைப் பள்ளி
	2. நாகர்கோவில்	அரசு	பெண்கள் உயர்நிலைப் பள்ளி
	3. சாந்தபுரம்	அரசு உதவி பெறும் பள்ளி	எல்.எம்.உயர்நிலைப் பள்ளி
	4. மார்த்தாண்டம்	அரசு	பெண்கள் உயர்நிலைப் பள்ளி
	5. குலசேகரபுரம்	அரசு உதவிபெறும் பள்ளி	புனித உர்சுலா உயர்நிலைப் பள்ளி
	6. பள்ளியாடி	அரசு உதவிபெறும் பள்ளி	ஜான் ரியோனிஸ் அரசு உதவி பெறும் உயர்நிலைப் பள்ளி
1964–65	1. விலான்குமாரவிளை	அரசு	அரசு உயர்நிலைப் பள்ளி
	2. இராசாக்காமங்கலம்	அரசு	அரசு உயர்நிலைப் பள்ளி
	3. காட்டாத்துறை	அரசு	அரசு உயர்நிலைப் பள்ளி
	4. கண்டன்விளை	அரசு	அரசு உயர்நிலைப் பள்ளி
	5. பழுகல்	அரசு	அரசு உயர்நிலைப் பள்ளி
	6. விளவங்கோடு	அரசு	அரசு உயர்நிலைப்பள்ளி மற்றும் பயிற்சிப் பள்ளி

நடுநிலைப் பள்ளிகளில், 106 அரசாலும், 34 அரசு உதவிபெறும் சமயப்பரப்புக் குழுவினாலும், 6 அரசு உதவிபெறும் தனியார் நிறுவனங்களாலும் நடத்தப்பட்டன. தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளி களில் பயின்று வந்தோர் எண்ணிக்கை பின்வருமாறு:

மாணவர்கள்	*மாணவிகள்*
தொடக்கப்பள்ளிகள்	66,72363,702
நடுநிலைப்பள்ளிகள்	47,46348,005

1980 ஆம் ஆண்டு, செப்டம்பர் மாத நிலைப்படி, தொடக்கப் பள்ளிகளில் 1,170 ஆண் ஆசிரியர்களும், 2222 பெண் ஆசிரியைகளும் பணியாற்றினர். நடுநிலைப்பள்ளிகளில் 1001 ஆண் ஆசிரியாகளும், 1347 பெண் ஆசிரியைகளும் பணியாற்றினர்.

கற்பிக்கப் பயன்படுத்தும் மொழி

தொடக்கப்பள்ளிகள் மற்றும் மாநில அரசு பாடத்திட்ட முறையில் கல்வியளிக்கப்படும் நடுநிலைப்பள்ளிகள் ஆகியவற்றில், வட்டாரப் பேச்சு மொழியான தமிழிலேயே கல்வியளிக்கப்படுகிறது[125]. எந்த மாணவர்களது தாய் மொழி தமிழினின்றும் வேறுபட்டதாக உள்ளதோ, அவர்களுக்கு அவர்களது தாய் மொழியில் கல்வியளிக்கப்படுகிறது. ஆனால், அவ்வாறு கல்வியளிக்கப் பெறுவதற்கு முதல் வகுப்பிலிருந்து, எட்டாம் வகுப்பு வரை குறைந்த அளவு 45 மாணவர்கள் வீதமிருக்கவேண்டும். கன்னியாகுமரி மாவட்டத்தை மலையாளம் பேசக்கூடிய மன்னர்கள் ஆண்டு வந்ததால், மலையாள மொழி அதிக அளவில் பேசப்பட்டுவரும் கிராமங்கள் கேரளா மற்றும் தமிழ்நாடு மாநில எல்லைப் பகுதிகளில் உள்ளன. இம்மாதிரியான கிராமங்களிலுள்ள பள்ளிகளில், தொடக்க மற்றும் நடுநிலை அளவில் மலையாளம் கற்பிக்கும் மொழியாகப் பயன்படுத்தப்படுகிறது.

பள்ளி உணவு

கட்டாயத் தொடக்கக் கல்வி, நடைமுறையிலிருந்த போதிலும், சில உட்கிராமங்களில், கிராமப்புற மக்கள் தங்களது மகன்களையும், மகள்களையும் பள்ளிக்கு அனுப்புவதில்லை. கல்விக்காக சிறிதளவு தொகை கூட செலவு செய்ய இயலாத நிலையில் அவர்கள் இருப்பதோ அல்லது குடும்பத்தின் அன்றாட தேவையைப்பூர்த்தி செய்து பிழைப்பை நடத்திட, சிறிதளவு பொருளை ஈட்டிட, மரபார்ந்த குடும்பத் தொழிலிலேயே அவர்களை ஈடுபடுத்தி வருவதோ, குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பாததன் காரணமாயிருக்கலாம்.

கிராமப்புற மக்களுக்குப் பொறுப்புணர்ச்சி ஏற்படவும், பள்ளி செல்லக் குழந்தைகளைக் கவரும் வண்ணமும், பாடநூல்கள், சீருடைகள் ஆகியவற்றை இலவசமாக வழங்குதல் போன்ற பல ஊக்குவிப்புத் திட்டங்களை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. அவற்றில் குழந்தைகளுக்குப்

பள்ளியிலேயே இலவசமாக மதிய உணவு வழங்குதல் மிகவும் முக்கியமானதாகும்.

பல இடங்களில் கட்டாயக் கல்வி முறை வெற்றிகரமாகத் திகழ்வதற்கு முக்கியக் காரணம், துறை அலுவலர்கள் மிகவும் பொறுப்புடன் திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றரென்பதோ, மக்கள் இத்திட்டத்திற்குப் பெரிதும் ஆதரவு அளித்து வருகின்றனரென்பதோடு மட்டுமின்றி, இம்மாதிரியான ஊக்குவிப்புத் திட்டங்களும் முக்கியக் காரணங்களாக அமைகின்றன.

இத்திட்டம் 1956 சூலை மாதம் தொடங்கியது[126]. துவக்கத்தில் இது ஒரு (தன்) விருப்பார்வச் செயலாகவே உருவெடுத்தது. கல்வித்துறை, இத்திட்டத்தினைப் பல நன்கொடையாளர்கள் அளித்த பங்குத் தொகையினைக் கொண்டு நடைமுறைப்படுத்தியது.

நவம்பர், 1, 1957ஆம் நாளன்று, அரசு இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தத் துவங்கி, தொடக்கப்பள்ளிகளுக்கு மட்டும், ஒரு குழந்தைக்கான உணவிற்கு ஆறு பைசா வீதம் கொடை வழங்கியது. அரசு இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்திய முதலாண்டில், தொடக்கப்பள்ளி களில் 8,270 மதிய உணவு மையங்கள் துவக்கப்பட்டன. அவற்றில், 22,884 மாணவர்கள் உணவளிக்கப்பட்டனர், அதே போன்று, நடுநிலைப் பள்ளிகளில் 385 மையங்கள் திறக்கப்பட்டு, அவற்றில், 12,523 மாணவர்கள் நாள்தோறும் உணவளிக்கப்பட்டனர். ஆண்டுச் செலவு ரூபாய் 7.32 இலட்சமெனக் கணக்கிடப்பட்டது[127].

இத்திட்டம், நன்கு வெற்றியடையவே, ஜீலை, 1, 1982 முதல், அது, மாண்புமிகு முதலமைச்சரின் மதிய உணவுத்திட்டமாக விரிவடைந்தது. இத்திட்டத்தின்படி, எழை, எளிய வகுப்புகளைச் சார்ந்த குழதைகளுக்கு சத்துள்ள மதிய உணவு அளிக்கப்பட்டது. இது தொடர்பான விவரங்களை, இவ்விவரச் சுவடியின் 'பிற சமூகப்பணிகள்' என்ற இயலில் காணலாம்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் கல்வியைப் பரப்பிட முன்னோடிகளாகத் திகழ்ந்த கிறித்தவ சமயப் பரப்பாளர்கள், கடந்த நூற்றாண்டின் துவக்கத்தில் இலவச உணவு, பால் ஆகியவற்றை வழங்கி, மாணவர்களைக் கவர்ந்தார்களென்பது வரலாற்று உண்மையாகும். இலவச மதிய உணவுத்திட்டம், மாவட்டத்தின் பல பள்ளிகளிலுள்ள கற்றறிவாளர்களுக்குப் புதிதல்ல என்றாலும் 1982ஆம் ஆண்டு, மாண்புமிகு முதலமைச்சரின் மதிய உணவுத்திட்டம் நடைமுறைக்கு வந்த பின்னர், மாவட்டத்திலுள்ள அரசுப் பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள் போன்ற அனைத்துப் பள்ளிகளும் இத்திட்டத்தின் கீழ் கொணரப்பட்டன.

கீழ்க்காணும் 1 முதல் 9 முடிய உள்ள பட்டியல்களில், வருவாய் மாவட்ட வாரியாகவும், கல்வி மாவட்ட வாரியாகவும், மொத்தத் தொடக்க பள்ளிகள், நடுநிலைப்பள்ளிகள், கல்வி பயிலும் மாணவர்கள், பள்ளிகளில் கற்பித்திடும் ஆசிரியர்கள் ஆகியோர் தொடர்பான புள்ளி விவரங்கள் அளிக்கப்பட்டுள்ளன:

பட்டியல்-1

கன்னியாகுமரி வருவாய் மாவட்டத்திலுள்ள பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியரது எண்ணிக்கை (வகுப்பு வாரியாக-முதல் வகுப்பிலிருந்து, மூன்றாம் வகுப்பு வரை)

ஆண்டுகள்	முதல் வகுப்பு		இரண்டாம் வகுப்பு		மூன்றாம் வகுப்பு	
	ஆண்கள்	பெண்கள்	ஆண்கள்	பெண்கள்	ஆண்கள்	பெண்கள்
1.	2.	3.	4.	5.	6.	7.
1973-74	23709	21208	22203	20343	20682	18904
1974-75	25000	22409	21865	19249	22430	19405
1975-76	27007	23956	23535	21514	22592	20436
1976-77	27056	23564	22224	21155	21582	20065
1977-78	27231	24887	23287	21730	22401	20653
1978-79	..				..	
1979-80	..				..	
1980-81	22363	21638	21202	20533	22658	21231
1981-82	22373	22323	21373	21758	22502	22548
1982-83	23417	23605	23269	23663	21881	22681
1983-84	23328	24815	23554	23300	23229	22036
1984-85	26241	25256	26667	23556	23650	23668
1985-86	27323	24994	23596	24602	23505	23237
1986-87	26616	26067	23992	23813	24204	23051
1987-88	32422	27793	23259	25084	22523	24476

ஆதாரம் : சென்னை கல்விப்பள்ளி இயக்குநரது (வெளியிடப்பட்ட மற்றும் வெளியிடப்படாத) தமிழ்நாடு பொதுக்கல்வி அந்தந்த ஆண்டிற்கான அறிக்கைகளின் பட்டியல்கள் 3,4 மற்றும் 5.

கல்விப் பள்ளி இயக்குநர், சென்னை - 6, அறிக்கை நாள் 27.12.1988.

பட்டியல்-2

கன்னியாகுமரி வருவாய் மாவட்டத்திலுள்ள பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியரின் மொத்த எண்ணிக்கை, (வகுப்பு வாரியாக, நான்காம் வகுப்பிலிருந்து, ஆறாம் வகுப்பு வரை)

ஆண்டுகள்	நான்காம் வகுப்பு		ஐந்தாம் வகுப்பு		ஆறாம் வகுப்பு	
	ஆண்கள்	பெண்கள்	ஆண்கள்	பெண்கள்	ஆண்கள்	பெண்கள்
1.	2.	3.	4.	5.	6.	7.
1973-74	19252	17437	17269	15094	12974	10546
1974-75	19782	17467	17149	15862	13641	10939
1975-76	20695	18328	18629	16519	13749	10992
1976-77	19426	17625	17839	15991	14672	11550

1.	2.	3.	4.	5.	6.	7.
1977-78	21280	19265	18920	16782	14922	12053
1978-79	..	Not Available			..	
1979-80	..	Please See Table - 5			..	
1980-81	24007	23087	21017	20817	16037	14523
1981-82	23858	23578	22181	22785	16531	14112
1982-83	23543	23240	22657	22550	15931	13802
1983-84	23709	24456	23208	21386	16492	15977
1984-85	24073	23696	23019	22242	16909	15286
1985-86	24519	24446	23646	21665	18889	16518
1986-87	25101	24030	24633	24501	19522	16446
1987-88	25159	24055	21516	24231	18720	18325

பட்டியல்-3

கன்னியாகுமரி வருவாய் மாவட்டத்திலுள்ள பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியரின் எண்ணிக்கை (வகுப்புவாரியாக - ஏழாம் வகுப்பு மற்றும் எட்டாம் வகுப்பு)

ஆண்டுகள்	ஏழாம் வகுப்பு		எட்டாம் வகுப்பு	
	மாணவர்கள்	மாணவியர்	மாணவர்கள்	மாணவியர்
	1	2	3	4
1973-74	11643	9342	9485	743
1974-75	11307	8765	9972	7723
1975-76	11470	9160	10205	7522
1976-77	11942	9503	10385	7989
1977-78	12510	10333	10892	8827
1978-79	..		..	
1979-80	..	*	..	
1980-81	13274	11535	12165	10245
1981-82	13913	11449	12764	10806
1982-83	14302	11909	13098	10616
1983-84	15017	13412	14679	12029
1984-85	15711	13729	14694	13091
1985-86	15687	15021	14377	13232
1986-87	16860	15462	15285	14654
1987-88	18009	16369	16290	15052
1979-80				

	மாணவர்	மாணவியர்
1. தொடக்கபள்ளிகளில் பயிலுவோர் :	12.358	1,07,804
2. நடுநிலைப் பள்ளிகளில் பயிலுவோர் :	42,820	35,648

பட்டியல்-4

1956 முதல், நாகர்கோவில் கல்வி மாவட்டத்திலுள்ள தொடக்கப் பள்ளிகள் மற்றும் அவற்றில் கல்வி பயிலும் மாணவ, மாணவியர், அப்பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் ஆகியோரின் எண்ணிக்கை

ஆண்டுகள்	பள்ளிகளின் எண்ணிக்கை	மாணவ மாணவியர்		ஆசிரியர்களின் எண்ணிக்கை
		மாணவர்கள்	மாணவியர்	
1956-57	61	6314	5231	272
1957-58	61	6329	5457	275
1958-59	61	6350	5452	276
1959-60	61	6519	5351	282
1960-61	61	7086	5547	216
1961-62	61	6634	5626	321
1962-63	62	6745	6318	359
1963-64	62	8441	7132	456
1964-65	63	8381	7232	439
1965-66	64	8615	7522	445
1966-67	65	8613	8589	453
1967-68	65	9064	8012	461
1968-69	66	9280	9511	482
1969-70	67	9859	9271	537
1970-71	70	10470	9600	604
1971-72	71	10500	10431	596
1972-73	75	10750	9917	596
1973-74	77	11121	10431	600
1974-75	80	11851	11822	624
1975-76	81	11921	10999	623
1976-77	84	12944	11140	651
1977-78	87	12815	11410	668
1978-79	89	12746	11275	702
1979-80	88	15230	14864	856
1980-81	88	16251	15025	852
1981-82	88	13456	14949	854
1982-83	85	13551	14177	822
1983-84	84	13851	11410	817
1984-85	84	13105	14420	820
1985-86	82	13113	14370	820

ஆதாரம்: மாவட்டக் கல்வி அலுவலர், கன்னியாகுமரி, அறிக்கை நாள் 21.7.1985.

பட்டியல்-5

1956 ஆம் ஆண்டு முதல், நாகர்கோவில் கல்வி மாவட்டத்திலுள்ள, இடைநிலைப் பள்ளிகள், அவற்றில் கல்வி பயிலும் மாணவ, மாணவியர், அப்பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் ஆகியோரின் எண்ணிக்கை

ஆண்டுகள்	பள்ளிகளின் எண்ணிக்கை	மாணவ மாணவியர்		ஆசிரியர்களின் எண்ணிக்கை
		மாணவர்கள்	மாணவியர்	
1956-57	44	5292	3850	187
1957-58	44	6819	3950	196
1958-59	44	6750	3850	190
1959-60	44	6760	4100	210
1960-61	43	5700	4001	205
1961-62	42	5250	3701	204
1962-63	42	5096	4910	211
1963-64	42	5453	4514	205
1964-65	42	5613	5692	225
1965-66	42	6713	6113	240
1966-67	42	6800	5917	240
1967-68	41	5951	4904	250
1968-69	40	5839	4969	314
1969-70	38	5831	5087	323
1970-71	38	6020	5280	330
1971-72	37	6011	5275	360
1972-73	37	6154	5174	368
1973-74	37	6364	5182	340
1974-75	37	6454	5389	356
1975-76	36	6538	5378	348
1976-77	35	6595	5448	356
1977-78	34	6879	5300	363
1978-79	28	5955	5847	364
1979-80	29	6912	6513	482
1980-81	27	7539	7253	436
1981-82	23	6324	6416	416
1982-83	28	6692	6869	419
1983-84	29	6293	6364	413
1984-85	28	4962	4766	331
1985-86	30	5082	5023	349

ஆதாரம்: மாவட்டக் கல்வி அலுவலர், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம், அறிக்கை நாள் 21.7.1988.

பட்டியல்-6

1956-57 முதல், குழித்துறை கல்வி மாவட்டத்திலுள்ள, தொடக்கப்பள்ளிகள், மற்றும் அவற்றில் கல்வி பயிலும் மாணவ, மாணவியர், அப்பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் ஆகியோரின் எண்ணிக்கை

ஆண்டுகள்	பள்ளிகளின் எண்ணிக்கை	மாணவ மாணவியர்		ஆசிரியர்களின் எண்ணிக்கை
		மாணவர்கள்	மாணவியர்	
1.	2.	3.	4.	5.
1956-57	85	12073	12166	657
1957-58	85	12100	12340	561
1958-59	85	12180	12351	566
1959-60	83	12350	12340	601
1960-61	85	12410	12437	681
1961-62	81	12860	12646	683
1962-63	79	12996	12774	592
1963-64	79	12956	12836	700
1964-65	82	12921	12698	678
1965-66	80	13106	13063	686
1966-67	84	13508	13326	693
1967-68	124	20063	19554	914
1968-69	123	20497	19664	930
1969-70	123	22646	19725	930
1970-71	124	20686	19841	933
1971-72	125	20913	19645	942
1972-73	125	21067	19845	960
1973-74	127	21399	20011	955
1974-75	128	21456	20326	962
1975-76	128	21649	20188	970
1976-77	128	22301	20709	860
1977-78	122	22054	20898	1026
1978-79	119	21631	20996	1016
1979-80	122	22686	22098	1041
1980-81	125	22584	21238	1076
1981-82	125	22793	21823	1084
1982-83	124	23670	21688	1055
1983-84	131	27629	26537	1111
1984-85	130	29322	28674	1093
1985-86	128	29361	28761	1093
1986-87	129	25686	24881	1280
1987-88	125	29360	28460	1280

ஆதாரம்: மாவட்டக் கல்வி அலுவலர், குழித்துறை, கன்னியாகுமரி மாவட்டம், அறிக்கை நாள் 13.8.1988.

பட்டியல்-7

1956 ஆம் ஆண்டு முதல் குழித்துறை கல்வி மாவட்டத்திலுள்ள இடைநிலைப்பள்ளிகள், அவற்றில் கல்வி பயிலும் மாணவ, மாணவியர், அப்பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் ஆகியோரின் எண்ணிக்கை

ஆண்டுகள்	பள்ளிகளின் எண்ணிக்கை	மாணவ மாணவியர்		ஆசிரியர்களின் எண்ணிக்கை
		மாணவர்கள்	மாணவியர்	
1.	2.	3.	4.	5.
1956-57	30	10036	10149	490
1957-58	31	10050	10086	495
1958-59	31	10135	10137	509
1959-60	33	10305	10207	480
1960-61	35	10396	10286	554
1961-62	39	10546	10326	550
1962-63	41	11200	10615	558
1963-64	41	10703	8924	554
1964-65	41	10708	9905	549
1965-66	33	10605	9545	535
1966-67	50	11756	10672	832
1967-68	51	11913	10810	835
1968-69	51	11982	10920	867
1969-70	50	12001	10921	868
1970-71	50	12001	10921	868
1971-72	50	12001	10921	868
1972-73	48	11791	10715	854
1973-74	48	11791	10815	868
1974-75	47	12474	10963	890
1975-76	47	12324	10854	895
1976-77	48	12918	11536	962
1977-78	55	13228	11982	1004
1978-79	59	15095	13464	1032
1979-80	58	14800	14094	1025
1980-81	55	12655	11542	922
1981-82	53	12039	11953	924
1982-83	51	12073	11366	891
1983-84	51	10387	9573	900
1984-85	50	13334	12668	925
1985-86	52	13221	12682	916
1986-87	51	19158	18080	747
1987-88	55	19200	18280	750

ஆதாரம்: மாவட்டக் கல்வி அலுவலர், குழித்துறை, கன்னியாகுமரி மாவட்டம், அறிக்கை நாள் 13.8.1988.

பட்டியல்-8

1956 முதல், தக்கலை கல்வி மாவட்டத்திலுள்ள தொடக்கப் பள்ளிகள் மற்றும் அவற்றில் கல்வி பயிலும் மாணவ, மாணவியர், அப்பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் ஆகியோரின் எண்ணிக்கை

ஆண்டுகள்	பள்ளிகளின் எண்ணிக்கை	மாணவ மாணவியர்		ஆசிரியர்களின் எண்ணிக்கை
		மாணவர்கள்	மாணவியர்	
1.	2.	3.	4.	5.
1955-56	66	5365	4533	446
1956-57	65	5285	4913	479
1957-58	65	6081	5117	569
1958-59	65	5869	5020	578
1959-60	64	8156	6542	578
1960-61	64	6783	5213	571
1961-62	64	7268	6130	584
1962-63	64	7749	6931	584
1963-64	63	7893	7043	584
1964-65	63	7588	6542	594
1965-66	63	7727	6901	609
1966-67	62	9683	7011	669
1967-68	60	10484	9615	682
1968-69	60	10355	8994	692
1969-70	65	10384	9515	692
1970-71	65	10654	9845	635
1971-72	91	13168	10831	785
1972-73	91	13146	12003	816
1973-74	91	12668	11982	819
1974-75	91	12686	11813	835
1975-76	92	11997	11802	840
1976-77	92	12965	11934	922
1977-78	92	13178	12183	966
1978-79	115	13151	12130	1004
1979-80	125	13499	12282	1054
1980-81	126	13236	12121	1064
1981-82	126	13298	12133	1084
1982-83	126	13381	12151	1083
1983-84	129	13452	12163	1093
1984-85	129	13698	12193	1050
1985-86	129	13621	12814	1142

ஆதாரம் : மாவட்டக் கல்வி அலுவலர், தக்கலை, அறிக்கை நாள் 25-11-1988.

பட்டியல்-9

1956 ஆம் ஆண்டு முதல், தக்கலை கல்வி மாவட்டத்திலுள்ள இடைநிலைப் பள்ளிகள், அவற்றில் கல்விபயிலும் மாணவ, மாணவியர், அப்பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் ஆகியோரின் எண்ணிக்கை.

ஆண்டுகள்	பள்ளிகளின் எண்ணிக்கை	மாணவ மாணவியர்		ஆசிரியர்களின் எண்ணிக்கை
		மாணவர்கள்	மாணவியர்	
1.	2.	3.	4.	5.
1955-56	32	7522	6589	427
1956-57	33	7690	6721	460
1957-58	34	8598	7113	570
1958-59	34	8080	7031	575
1959-60	35	8537	7541	575
1960-61	36	8704	8624	569
1961-62	38	9465	8213	581
1962-63	41	9931	8749	581
1963-64	42	10208	8791	581
1964-65	43	9916	8683	591
1965-66	43	9967	9132	606
1966-67	45	10855	10144	646
1967-68	45	13191	11213	672
1968-69	45	12631	11023	682
1969-70	45	13181	11223	682
1970-71	48	13561	11343	596
1971-72	48	15191	13213	713
1972-73	62	1533	14121	733
1973-74	62	15133	13821	734
1974-75	62	14903	13901	748
1975-76	62	14885	13219	752
1976-77	65	15175	14027	827
1977-78	65	15363	14141	870
1978-79	65	15386	14138	907
1979-80	66	15601	14323	957
1980-81	66	15671	14829	967
1981-82	66	15702	14851	987
1982-83	66	15739	14903	987
1983-84	66	15857	14931	997
1984-85	66	15886	14984	1047
1985-86	66	16172	15124	1042

ஆதாரம்: மாவட்ட கல்வி அலுவலர், தக்கலை, அறிக்கை நாள் 25-11-1988.

உயர்நிலைக்கல்வி

1966-67 ஆம் ஆண்டிற்கு முன்னர், உயர்நிலைக்கல்வியானது, ஆறாவது வகுப்பு முதல் எட்டாவது வகுப்பு வரையிலான உயர் துவக்கக் கல்வி வகுப்புகளைக் கொண்டதாகவும், நடுநிலைக்கல்வி ஒன்பது முதல் பதினொன்று வரையிலான வகுப்புகளைக் கொண்டதாகவும் இருந்தது. ஒன்று முதல் பதினொன்று வரையிலான வகுப்புகள், நான்கிலிருந்து பதினொன்று வரையிலான வகுப்புகள் மற்றும் ஒன்பதிலிருந்து, பதினொன்று வரையிலான வகுப்புகள் ஆகியவற்றைக் கொண்ட பள்ளிகள் நடுநிலைப்பள்ளிகள் என வரையறுக்கப்பட்டன. ஆனால், 1966-67 ஆம் ஆண்டு, உயர்நிலைக் கல்வி, சீரமைக்கப்பட்ட பின்னர், நடுநிலைப்பள்ளிகள் உயர் நிலைப்பள்ளிகளென மாற்றியமைக்கப்பட்டன. அதே ஆண்டு, ஒன்று முதல் எட்டு வரையிலான வகுப்புகள் அல்லது ஆறு முதல் எட்டு வரையிலான வகுப்புகள் ஆகியவற்றைக் கொண்ட உயர்தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப்பள்ளிகளென அமைக்கப்பட்டன. ஒன்று முதல் ஆறுவரையிலான வகுப்புகளைக் கொண்ட தொடக்கப்பள்ளிகள் அதே பெயரிலேயே அழைக்கப்படலாயின.

நடுநிலைக் கல்வி, 1964 முதல் (21-4-1964 நாளைய (கல்வி) 575 எண். கொண்ட அரசாணைப்படி) இலவசமாக்கப்பட்டது. அதற்கு முன்னர், நடுநிலைக்கல்விக்கு, மாணவர்களால், கல்விக்கட்டணம் செலுத்தப்பட்டு வந்தது.

1956 நவம்பர் மாதம், கன்னியாகுமரி மாவட்டம் அமைக்கப்பட்ட போது, இருந்த நிலை

1956 ஆம் ஆண்டு, நவம்பர் மாதம், மாவட்டம் அமைக்கப்படும்போது, 41 அரசு ஆண்கள் நடுநிலைப்பள்ளிகளும், 59 அரசு உதவி பெற்ற சமயப் பரப்புக் குழு ஆண்கள் நடுநிலைப்பள்ளிகளும், இரண்டு அரசு உதவி பெறாத, ஆண்கள் நடுநிலைப்பள்ளிகளும், இயங்கி வந்தன. இவ்வனைத்துப் பள்ளிகளிலும், 3,393 மாணவர்களும் 20,786 மாணவிகளும் கல்வி பயின்றனர். இவை தவிர, ஆறு அரசு உதவி பெற்ற சமயப்பரப்புக் குழு பெண்கள் நடுநிலைப் பள்ளிகளும் இயங்கின. அவற்றில், 438 மாணவர்களும் 2840 மாணவிகளும் கல்வி கற்று வந்தனர்[128].

மாவட்டம் அமைக்கப்பட்ட பத்து ஆண்டுகளுக்குப் பின்னர் கல்வியின் வளர்ச்சி

1966 ஆம் ஆண்டு, இரண்டு அரசு பெண்கள் நடுநிலைப் பள்ளிகளையும் சேர்த்து, 50 பள்ளிகள் இயங்கிவந்தன. அவற்றுடன் 12 அரசு உதவி பெறும் பெண்கள் சமயப்பரப்புக்குழுப் பள்ளிகளையும் சேர்த்து, 71 அரசு உதவி பெறும் சமயப்பரப்புக்குழு நடுநிலைப்பள்ளிகள் இயங்கின. அவற்றில், 46,733 பையன்களும், 32,961 பெண்களும் கல்வி பயின்றனர். மேலும், 1966ஆம் ஆண்டில், இம்மாவட்டத்தில், 123 உயர்நிலைப் பள்ளிகள் நடுநிலைக் கல்வியினைப் பரப்பிடும் பணியை மேற்கொண்டிருந்தன. இதன்பின்னர், 1978-79ஆம் ஆண்டு, மாநிலத்தில்

கல்வித்திட்டம், ஒரு பெரிய மாறுதலை எதிர்கொண்டது. அதுதான், மேல் நிலைக் கல்வியினை (10 +2 பாடத் திட்டம்) அறிமுகப்படுத்தியதாகும். உயர்நிலைப்பள்ளிகளில், மேலும் இரண்டாண்டுகள் மேல்நிலைப் பள்ளி பாடத்தொகுதி சேர்க்கப்பட்டது. அதன் விளைவாக, பல உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைக் கல்வி வகுப்புகள் இணைக்கப்பட்ட போதிலும் உயர்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை குறைந்தது.

மேல்நிலைக்கல்வி அறிமுகப்படுத்தப்பட்டபின் மாவட்டத்தின் நிலை

1977-78-ல், மேல்நிலைக்கல்வி அறிமுகப்படுத்தப்பட்ட போது, 56 அரசு உயர்நிலைப்பள்ளிகளும், 30 அரசு உதவி பெற்ற சமயப்பரப்புக்குழு உயர் நிலைப்பள்ளிகளும், 18 அரசு உதவிபெறும் சமயப்பரப்புக்குழு அல்லாத தனியார் ஆண்கள் உயர்நிலைப்பள்ளிகளும், ஐந்து அரசு உயர்நிலைப் பள்ளிகளும், 12 சமயப்பரப்புக்குழு உதவிபெற்ற பள்ளிகளும், இரண்டு சமயப்பரப்புக்குழு அல்லாத தனியார் பெண்கள் பள்ளிகளும், மாவட்டத்தில் இயங்கி வந்தன. அனைத்துவகை உயர் நிலைப் பள்ளிகளின் மொத்த எண்ணிக்கை 123 ஆகும். அடுத்த ஆண்டு, மாவட்டத்திலுள்ள உயர்நிலைப்பள்ளிகளின் எண்ணிக்கை 78 ஆகக் குறைந்தது. ஆண்கள் பள்ளிகள் 64, பெண்கள் பள்ளிகள் 14 உயர் நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை குறைந்திடக் காரணம், உயர்நிலைப் பள்ளிகள் மேல் நிலைப்பள்ளி நிலைக்கு உயர்த்தப்பட்டதேயாகும்.

1986ஆம் ஆண்டு, செப்டம்பர் மாத நிலைப்படி, 61 அரசு உயர் நிலைப்பள்ளிகளும், 46 அரசு உதவி பெற்ற சமயப்பரப்புக்குழு உயர்நிலைப்பள்ளிகளும், 57 அரசு உதவி பெற்ற சமயப்பரப்புக்குழு அல்லாத தனியார் உயர்நிலைப்பள்ளிகளும் இயங்கி வந்தன. (இவற்றில் பெண்களுக்கான மூன்று அரசுப் பள்ளிகள், 12 அரசு உதவி பெற்ற சமயப்பரப்புக்குழுப் பள்ளிகள், இரண்டு அரசு உதவி பெற்ற சமயப்பரப்புக்குழு அல்லாத தனியார் உயர்நிலைப் பள்ளிகள் ஆகியவை அடங்கும்.) தமிழ்நாடு நடுநிலைக்கல்வி மாநிலக் கழகத்தினால் வகுத்துரைக்கப்பட்ட பாடத்திட்டத்தினைப் பின்பற்றக்கூடிய இப்பள்ளிகள் தவிர, பல்கலை புகுமுகத்தேர்வுப் பள்ளிகள் இரண்டும் நடுநிலைப்பள்ளி கள் மைய வாரியப் பள்ளி ஒன்றும் அவற்றிற்குரிய பாடத்திட்டத்தினைப் பின்பற்றி இயங்கி வந்தன. உயர்நிலைப் பள்ளிக்கல்வி முறையில் மேல் நிலைக்கல்வியை அறிமுகப்படுத்தியதன் எதிரொலியாக, உயர்நிலைப் பள்ளிகளில் கல்விக்கான காலவரை குறைக்கப்பட்டது. முன்பு, உயர் நிலைப்பள்ளிப்படிப்பில், மூன்றாண்டு கால பாடக்கல்வி முறை (வகுப்புகள் 9, 10 மற்றும் 11) நடைமுறையிலிருந்தது. மேல்நிலைப் பாடக்கல்வி முறை நடைமுறைக்கு வந்த பின்னர், உயர்நிலைப்பள்ளி அளவில், பதினோராம் வகுப்பு நீக்கம் செய்யப்பட்டு, அது மேல்நிலைப் பாடக்கல்வி முறையுடன் இணைக்கப்பட்டது. பதினோராம் வகுப்பு பாடக்கல்வி முடிந்தவுடன், நடுநிலைப்பள்ளி இறுதிச் சான்றுத் தேர்வு முன்னர் நடைபெற்று வந்தது. தற்போது, அது பத்தாண்டுகாலப் படிப்பு முடிந்தவுடன் (5 ஆண்டுகள் = தொடக்கப்பள்ளி, 3 ஆண்டுகள் =

நடுநிலைப்பள்ளி, 2 ஆண்டுகள் = உயர்நிலைப்பள்ளி) இத்தேர்வு நடைபெறுகிறது. இயல்பாக, நடுநிலைப்பள்ளி அளவில், அனைத்துப்பள்ளிகளிலுமே, ஆண், பெண் இணைக்கல்வி முறை பின்பற்றப்படுகிறது. உயர்நிலைப்பள்ளியளவில் ஒரு சில பள்ளிகள் தவிர, பெரும்பாலும் அனைத்துப் பள்ளிகளிலுமே இணைக்கல்வி முறை நடைமுறையிலிருந்து வருகிறது. அந்த ஒரு சில பள்ளிகள், முழுமையாகவே ஆண்களுக்காகவோ, அல்லது முழுமையாகவே பெண்களுக்காகவோ இயங்கி வருகின்றன.

கன்னியாகுமரி மாவட்டத்தில் நடமாடும் அறிவியல் ஊர்திகள்

அறிவியலை போதிக்கும் வசதிகளைக் கிராமப்புறப்பகுதி களிலுள்ள நடுநிலைப் பள்ளிகள் பெருகாததால், அப்பகுதிகளிலுள்ள நடுநிலைப்பள்ளிகளில், அறிவியல் குறித்த வசதிகளைப் பெருக்க வேண்டிய தேவை உணரப்பட்டது. அதனைத் தொடர்ந்து 1972-73 முதல் நடமாடும் அறிவியல் ஆய்வுக்கூட ஊர்திகள் அமர்த்தப்பட்டன. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும அவ்வாறான ஓர் ஊர்தி அமர்த்தப்பட்டுள்ளது. நாகர்கோவில், குழித்துறை மற்றும் தக்கலை ஆகிய மூன்று கல்வி மாவட்டங்கள் இவ்வருவாய் மாவட்டத்திலுள்ளன. அவை ஒவ்வொன்றிலும் ஒரு ஊர்தி உளது. ஊர்தி ஒரு துணை ஆய்வாளரின் (அறிவியல்) பொறுப்பிலுள்ளது. அனைத்துப் பள்ளிகளுக்கும் இவர் சுற்றுப்பயணம் செய்து, அறிவியல் குறித்து, சான்று விளக்கங்கள் மற்றும் பரிசோதனைகள் நடத்தி, அவ்வாறாக மாணவர்களுக்கு அறிவியல் கற்பிக்கப்படுகிறது.

மேல்நிலைக்கல்வி

1977-78 வரை, * தமிழ்நாட்டின் கல்விமுறை, தொடக்க மற்றும் உயர்நிலைப்பள்ளிகளில், பதினோராண்டு பாடத்திட்டங்களையும், ஓராண்டு புகுமுக வகுப்புத் திட்டத்தினையும் மேலும் மூன்றாண்டுகள் கல்லூரிகளில் பட்டக் கல்வி பாடத்திட்டத்தினையும் கொண்டதாகும். (11 +1 +3).

1978-79ஆம் ஆண்டில், பதினோராண்டுகள் நடுநிலைப்பள்ளி இறுதிச் சான்று மற்றும் ஓராண்டு பல்கலைக்கழகப் புகுமுக வகுப்பு ஆகிய பாடத்திட்ட முறை முடிவுற்று, பத்தாண்டுகள்- நடுநிலைப்பள்ளி இறுதிச் சான்று மற்றும் இரண்டாண்டு மேல்நிலைக் கல்வி பாடத்திட்ட முறை அறிமுகமானது.

அதனைத் தொடர்ந்து, 1977-78ஆம் ஆண்டு, உயர்நிலைப் பள்ளிகளில், பத்து மற்றும் பதினொன்று ஆகிய இரு வகுப்புகளிலும் படித்த மாணவர்கள், உயர்நிலைப்பள்ளி இறுதிச் சான்றுத்

** 1978-79 ஆம் ஆண்டின் தமிழ்நாடு பொதுக்கல்வி அறிக்கை*

தேர்வுகளெழுதி, பதினோராம் வகுப்பில் வெற்றி பெற்று தகுதி பெற்ற மாணவர்கள் கல்லூரிகளில் புகுமுக வகுப்பிலும், பத்தாம் வகுப்பில் தோச்சியடைந்தோர், தேர்ந்தெடுக்கப்பட்ட உயர் நிலைப்பள்ளிகளில் இணைக்கப்பட்ட மேல்நிலைக்கல்வி (பாடத்திட்ட) முதலாண்டு வகுப்பிலும் சேர்ந்து, கல்வியினைத் தொடர்ந்தார்கள்.

இப்புதியக் கல்விக் கொள்கை, பல்வேறு வகைப்பட்ட மாணவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்திட, "பொது", மற்றும் "வாழ்க்கைத் தொழில்" ஆகிய இரு பிரிவுகளாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. பள்ளிகளில் 10 +2 நிலையினைத் தோற்றுவிக்கும் முக்கிய நோக்கம் யாதெனில், மேல்நிலைக்கல்வி பாடத்திட்டத்தின் பயனை மாநிலத்திலுள்ள அனைத்துப்பிரிவு மக்களும் குறிப்பாக கிராமப்புற மக்கள் பெற வேண்டுமென்பதேயாகும். இடைநிலைப்பள்ளி இறுதிச் சான்று நிலை வரையில், பல்கலைக்கழகப் புகுமுகத்தேர்வுப்பள்ளிகள் மற்றும் ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள் ஆகியவையனைத்திலும், பல்வேறுவகைப்பட்ட பாடத்திட்டங்கள் நடைமுறையிலுள்ளன: ஆனால், மேல்நிலை அளவில், மாநில முழுமையும், ஒரே சீரான பாடத்திட்டமே நடைமுறையிலுள்ளது.

ஆனால், மைய அரசுப்பள்ளிகளுக்கு இத்திட்டம் பயன்படத்தக்க தல்ல. மேல்நிலைக்கல்வி முறையினை அறிமுகப் படுத்தும் போது, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியப் பகுதியிலும், குறைந்த அளவு, ஒரு மேல்நிலைப்பள்ளி நிறுவ, கவனமாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் மேல்நிலைக்கல்வி பாடத்திட்டம் அறிமுகம்

கன்னியாகுமரி மாவட்டத்தில் மேல்நிலைக்கல்வி பாடத்திட்டம், 42 ஆண்கள் உயர்நிலைப்பள்ளிகளிலும், ஐந்து பெண்கள் உயர்நிலைப் பள்ளிகளிலும் இணைக்கப்பட்டது. இத் திட்டம், அறிமுகப்படுத்தப் படும்போது, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியப் பகுதியிலும், சராசரியாக ஐந்து மேல்நிலைப் பள்ளிகள் இயங்கின. செப்டம்பர் 9, 1988 இருந்த நிலவரப்படி 33 அரசு மேல்நிலைப் பள்ளிகளும் 37 அரசு உதவி பெற்ற சமயப்பரப்புக்குழு அல்லாத தனியார் மேல்நிலைப் பள்ளிகளும் மாவட்டத்தில் இயங்கின. இவற்றில் எட்டு பெண்கள் மேல்நிலைப் பள்ளிகளும் அடங்கும். இந்த எட்டு பெண்கள் பள்ளிகளில் இரண்டு அரசாலும், ஐந்து அரசு உதவி பெறும் சமயப்பரப்புக் குழுக்களினாலும், ஓர் அரசு உதவி பெறும் சமயப்பரப்புக்குழு அல்லாத இதர நிறுவனத்தாலும் நடத்தப்படுகின்றன. 1973-74ஆம் ஆண்டு முதல், மாவட்டத்தில் உயர்நிலைக்கல்வி மற்றும் மேல் நிலைக்கல்வி ஆகியவற்றின் முன்னேற்றம் வளர்ச்சி ஆகிய விவரங்கள் "அ" முதல் "ஓ" வரையிலான இணைப்புப்பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ளன.

பட்டியல்-அ

1956-57ஆம் ஆண்டு முதல், நாகர்கோவில் கல்வி மாவட்டத்திலுள்ள, உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் அவற்றில் கல்வி பயிலும் மாணவ, மாணவியர் அப்பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் ஆகியோரின் எண்ணிக்கை

ஆண்டுகள்	பள்ளிகளின் எண்ணிக்கை	மாணவ மாணவியர்		மொத்த ஆசிரியர்களின் எண்ணிக்கை
		மாணவர்கள்	மாணவியர்	
1.	2.	3.	4.	5.
1956-57	12	5747	2172	402
1957-58	12	6142	2227	392
1958-59	12	5891	2064	408
1959-60	14	7338	2836	494
1960-61	17	6969	3455	500
1961-62	19	8155	3753	627
1962-63	20	8733	3813	660
1963-64	20	8965	4049	664
1964-65	20	9277	4409	681
1965-66	20	9494	4675	708
1966-67	20	9596	5251	732
1967-68	21	10280	5182	691
1968-69	23	10859	6127	750
1969-70	25	11454	6584	792
1970-71	26	13163	7044	817
1971-72	27	12338	7483	859
1972-73	27	12767	7455	803
1973-74	21	13208	7431	899
1974-75	21	12924	7409	905
1975-76	28	13671	8072	919
1976-77	29	14000	8329	892
1977-78	30	14421	9055	958
1978-79	18	6098	5239	440
1979-80	18	6248	5093	453
1980-81	18	6776	5347	488
1981-82	21	7377	6004	512
1982-83	21	7383	5648	512
1983-84	22	9415	6108	525
1984-85	21	7406	5550	521
1985-86	19	6974	6372	475

ஆதாரம்: மாவட்டக் கல்வி அலுவலர், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம், அறிக்கை நாள் 21.7.1988.

பட்டியல்-ஆ

1956 ஆம் ஆண்டு முதல், தக்கலை கல்வி மாவட்டத்திலுள்ள, உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் அவற்றில் கல்வி பயிலும், மாணவ, மாணவியர் அப்பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் ஆகியோரின் எண்ணிக்கை.

ஆண்டுகள்	பள்ளிகளின் எண்ணிக்கை	மாணவ மாணவியர்		மொத்த ஆசிரியர்களின் எண்ணிக்கை
		மாணவர்கள்	மாணவியர்	
1.	2.	3.	4.	5.
1955-56	46	28994	27691	1114
1956-57	47	29441	27980	1114
1957-58	50	30871	28815	1280
1958-59	50	30466	28621	1280
1959-60	51	31244	30843	1294
1960-61	56	32666	30921	1278
1961-62	58	34104	32483	1306
1962-63	58	35906	33681	1309
1963-64	59	36746	34741	1362
1964-65	59	36436	34620	1382
1965-66	59	36531	35524	1427
1966-67	59	39013	36942	1507
1967-68	59	41162	39893	1547
1968-69	60	40310	39683	1677
1969-70	63	41489	39963	1724
1970-71	63	41998	40215	1872
1971-72	63	44916	43425	2012
1972-73	65	45812	44531	2052
1973-74	65	45803	45519	2045
1974-75	65	45799	44503	2064
1975-76	65	45702	44419	2069
1976-77	41	21415	20103	1087
1977-78	41	21673	20245	1110
1978-79	41	21297	20621	1140
1979-80	45	21284	20114	1148
1980-81	45	21726	20317	1148
1981-82	45	21897	20415	1168
1982-83	45	21958	20409	1165
1983-84	45	21891	20374	1175
1984-85	46	22069	20418	1225
1985-86	46	21050	20813	1215

ஆதாரம்: மாவட்டக் கல்வி அலுவலர், தக்கலை, அறிக்கை நாள் 25-11-1988.

பட்டியல்-இ

1956-57 ஆம் ஆண்டு முதல், குழித்துறை கல்வி மாவட்டத்திலுள்ள, உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் அவற்றில் கல்வி பயிலும், மாணவ, மாணவியர், அப்பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் ஆகியோர்களின் எண்ணிக்கை

ஆண்டுகள்	பள்ளிகளின் எண்ணிக்கை	மாணவ மாணவியர்		மொத்த ஆசிரியர்களின் எண்ணிக்கை
		மாணவர்கள்	மாணவியர்	
1.	2.	3.	4.	5.
1956-57	7	8626	5235	494
1957-58	8	8789	5404	532
1958-59	10	9160	5726	549
1959-60	15	10085	5626	588
1960-61	15	10275	5598	637
1961-62	16	10669	5945	708
1962-63	19	10256	6079	737
1963-64	20	12083	6028	780
1964-65	21	12047	6673	772
1965-66	21	12099	6879	801
1966-67	23	153891	7207	870
1967-68	24	15464	8090	914
1968-69	26	15871	8543	918
1969-70	26	16457	9238	937
1970-71	26	16645	9157	966
1971-72	27	16656	8963	983
1972-73	27	16709	9196	982
1973-74	27	16678	9165	1005
1974-75	28	16540	9395	1011
1975-76	29	16486	9231	1034
1976-77	29	16113	9294	1051
1977-78	35	17101	9256	1099
1978-79	30	17490	9781	1106
1979-80	30	3799	2820	252
1980-81	26	6196	5314	437
1981-82	31	7926	5603	509
1982-83	32	8170	6642	524
1983-84	32	8463	1765	512
1984-85	32	8683	7317	577
1985-86	31	9058	7780	583
1986-87	30	11029	9318	638
1987-88	30	12025	9500	642

ஆதாரம்: மாவட்டக் கல்வி அலுவலர், குழித்துறை, கன்னியாகுமரி மாவட்டம், அறிக்கை நாள் 13.8.1988.

பட்டியல்-ஈ

நாகர்கோவில் கல்வி மாவட்டத்திலுள்ள மேல் நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கையும் மாணவர் சேர்க்கையும் மேல்நிலைப்பள்ளிகள் துவங்கப்பட்ட 1978-79 ஆம் ஆண்டிலிருந்து

ஆண்டு	பள்ளிகளின் மொத்த எண்ணிக்கை	மாணவ மாணவர்கள்	மாணவிகள் மாணவிகள்	ஆசிரியர்கள்
1	2	3	4	5
1978-79	15	15198	6543	811
1979-80	15	144459	5401	781
1980-81	17	16201	7204	922
1981-82	18	14900	7676	969
1982-83	18	16799	7737	956
1983-84	18	16600	6253	956
1984-85	19	16506	7351	1004
1985-86	21	17464	8274	1063

ஆதாரம் : மாவட்ட கல்வி ஆலுவலர் நாகர்கோவில் கன்னியாகுமரி மாவட்டம் அறிக்கை நாள் ஜூலை 31, 1988

பட்டியல்-உ

குழித்துறை கல்வி மாவட்டத்திலுள்ள மேல் நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கையும் மாணவர் சேர்க்கையும் மேல்நிலைப்பள்ளிகள் துவங்கப்பட்ட 1978-79 ஆம் ஆண்டிலிருந்து

ஆண்டு	பள்ளிகளின் மொத்த எண்ணிக்கை	மாணவ மாணவர்கள்	மாணவிகள் மாணவிகள்	ஆசிரியர்கள்
1	2	3	4	5
1978-79	8	15855	8103	941
1979-80	11	15727	8521	942
1980-81	17	15921	9404	1027
1981-82	22	12738	9226	1104

ஆண்டு	பள்ளிகளின் மொத்த எண்ணிக்கை	மாணவ மாணவர்கள்	மாணவிகள் மாணவிகள்	ஆசிரியர்கள்
1	2	3	4	5
1982-83	23	13775	9332	1093
1983-84	23	13775	9332	1093
1984-85	23	12780	9613	1092
1985-86	24	14053	10029	1108
1986-87	26	15619	12090	1217
1987-88	26	15620	12595	1225

ஆதாரம் : மாவட்ட கல்வி ஆலுவலர் குழித்துறை கன்னியாகுமரி மாவட்டம் அறிக்கை நாள் ஆகஸ்ட் 13, 1988

பட்டியல்-ஊ

தக்கலை கல்வி மாவட்டத்திலுள்ள மொத்த மேல்நிலைப் பள்ளிகள் குறித்த அட்டவனை

ஆண்டு	பள்ளிகளின் மொத்த எண்ணிக்கை	மாணவ மாணவர்கள்	மாணவிகள் மாணவிகள்	ஆசிரியர்கள்
1	2	3	4	5
1976-77	24	27441	23501	1070
1977-78	24	26237	24905	1097
1978-79	24	26590	24689	1141
1979-80	24	26505	24879	1249
1980-81	24	26790	24799	1149
1981-82	24	27925	23170	1173
1982-83	25	26769	24901	1171
1983-84	25	26118	25898	1181
1984-85	25	27135	24989	1231
1985-86	25	27449	24873	1221

ஆதாரம் : மாவட்ட கல்வி ஆலுவலர், தக்கலை அறிக்கை நாள், ஆகஸ்ட் 21, 1988

பட்டியல்-எ

கன்னியாகுமரி வருவாய் மாவட்டத்திலுள்ள பள்ளிகளில், பயிலும் மாணவ, மாணவியரின் எண்ணிக்கை
(வகுப்பு வாரியாக- ஒன்பதாம் வகுப்பு முதல், பதினோராம் வகுப்பு வரை)

ஆண்டுகள்	ஒன்பதாம் வகுப்பு		பத்தாம் வகுப்பு		பதினொன்றாம் வகுப்பு	
	மாணவர்கள்	மாணவிகள்	மாணவர்கள்	மாணவிகள்	மாணவர்கள்	மாணவிகள்
1973-74	8462	5902	7652	5515	7010	5511
1974-75	8337	5393	7783	5543	7236	5554
1975-76	8545	6409	7761	5496	7634	5620
1976-77	8906	6465	7071	5257	8274	6075
1977-78	9796	7067	8330	5836	6524	4899
1978-79	புள்ளி விவரங்கள் இல்லை				@	@
1979-80	*	*	*	*	@	@
1980-81	10140	7911	8369	6271	-	-
1981-82	10662	7922	8328	6517	-	-
1982-83	9581	6765	8274	5662	-	-
1983-84	11054	9325	9278	7590	-	-
1984-85	10450	9857	9351	7286	-	-
1985-86	11207	10351	8981	8263	-	-
1986-87	11593	10682	8453	9094	-	-
1987-88	12397	10496	8752	8248	-	-

@ 1978-79 முதல், மேல்நிலைப்பள்ளிக் கல்வி முறை அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர், பள்ளி இறுதிச் சான்று பெறும், பதினோராம் வகுப்புக் கல்வி முறை, நிறுத்தப்பட்டது.

* 1979-80 ஆம் ஆண்டு, மாவட்டத்திலுள்ள உயர்நிலைப் பள்ளிகளில், முறையே 17,916 மற்றும் 13,608 மாணவ, மாணவியர் கல்வி பயின்றனர்.

(பட்டியல்களுக்கான ஆதாரங்கள்

சென்னை கல்விப் பள்ளி இயக்குநரது (வெளியிடப்பட்ட மற்றும் வெளியிடப்படாத) அந்தந்த ஆண்டுகளுக்கான தமிழ்நாடு பொதுக்கல்வியறிக்கை.)

பட்டியல்-ஏ

கன்னியாகுமரி வருவாய் மாவட்டத்தில் 1978-79ஆம் ஆண்டிலிருந்து பயின்று வரும் மொத்த மேல்நிலை வகுப்பு மாணவ, மாணவிகள்

ஆண்டுகள்	பதினொன்றாம் வகுப்பு		பன்னிரெண்டாம் வகுப்பு	
	மாணவர்கள்	மாணவிகள்	மாணவர்கள்	மாணவிகள்
1978-79	புள்ளி விவரங்கள் இல்லை			
1979-80	@	@	@	@
1980-81	4457	3453	3911	3286
1981-82	4762	4101	3796	3475
1982-83	4166	3963	3758	3619
1983-84	4148	3918	3402	3728
1984-85	4459	4451	3617	3650
1985-86	5144	4737	4076	3707
1986-87	41721	4663	4045	4034
1987-88	4433	5156	4062	4553

N.A - *புள்ளி விவரங்கள் கிடைக்கவில்லை*

@ - 1979-80 ஆம் ஆண்டு பயின்ற மொத்த மாணவர்கள் 7845 மொத்த மாணவிகள் 6346.

பட்டியல்-ஐ

கன்னியாகுமரி வருவாய் மாவட்டத்தில் 1985-86ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு பாடப்பிரிவும் ஆங்கில வழி மற்றும் தமிழ்வழி கல்வி பயின்ற மாணவ மாணவிகள் விவரம் :

		முதல் தொகுதி		இரண்டாம் தொகுதி		மூன்றாம் தொகுதி		நான்காம் தொகுதி	
		மாணவர்கள்	மாணவிகள்	மாணவர்கள்	மாணவிகள்	மாணவர்கள்	மாணவிகள்	மாணவர்கள்	மாணவிகள்
1	2	3	4	5	6	7	8	9	10
முதல் ஆண்டு	தமிழ் வழி	1127	1089	691	723	-	-	280	312
	ஆங்கில வழி	756	558	392	354	-	260	351	131

		முதல் தொகுதி		இரண்டாம் தொகுதி		மூன்றாம் தொகுதி		நான்காம் தொகுதி	
		மாணவர் கள்	மாணவி கள்	மாணவர் கள்	மாணவி கள்	மாணவர் கள்	மாணவி கள்	மாணவர் கள்	மாணவி கள்
1	2	3	4	5	6	7	8	9	10
இரண்டாம்தமிழ் ஆண்டு வழி		990	330	765	483	-	-	505	474
	ஆங்கில வழி	605	517	325	373	233	291	235	159

தொகுதி-1 : கணக்கு, இயற்பியல், வேதியல் மற்றும் உயிரியல்

தொகுதி-2 : இயற்பியல் வேதியியல் தாவரவியல் மற்றும் விலங்கியல்

தொகுதி-3 : கணக்கு, பொருளியல், கணக்கியல் மற்றும் வணிகவியல்

தொகுதி-4 : வரலாறு, பொருளியல், கணக்கியல், வணிகவியல் இந்திய பண்பாடு, அரசியல், புவியியல், சிறப்பு தமிழ், சிறப்பு ஆங்கிலம்

பட்டியல்-ஒ

பள்ளி இறுதி தேர்வு மற்றும் மேல்நிலை தேர்வுகள் எழுதிய மற்றும் தேர்ச்சியுற்ற மாணவர்கள் விவரம்

	பள்ளி இறுதி சான்றிதழ்				மேல்நிலைக் கல்வி தேர்ச்சி			
ஆண்டு	தேர்வு எழுதிய மொத்த மாணவர்கள்		தேர்ச்சி பெற்ற மொத்த மாணவர்கள்		தேர்வு எழுதிய மொத்த மாணவர்கள்		தேர்ச்சி பெற்ற மொத்த மாணவர்கள்	
	மாணவர் கள்	மாணவி கள்	மாணவர் கள்	மாணவி கள்	மாணவர் கள்	மாணவி கள்	மாணவர் கள்	மாணவி கள்
1	2	3	4	5	6	7	8	9
1981-82	7828	6105	3330	3053	-	-	-	-
1982-83	7711	6347	3662	3301	-	-	-	-
1983-84	7662	6525	4290	4038	-	-	-	-
1984-85	7676	7124	4675	4268	-	-	-	-
1985-86	8360	7821	4810	4520	-	-	-	-
1986-87	8643	8167	4374	4535	4210	4333	2899	3003
1987-88	8816	8472	4399	4296	4293	4600	2053	2395

உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகள், கல்வி பயிலும் மாணவர்கள், கற்பித்திடும் ஆசிரியர்கள், ஆகியோர் எண்ணிக்கை விவரங்கள். வருவாய் மாவட்டங்கள் மற்றும் கல்வி மாவட்டங்கள் வாரியாக, பட்டியலில் அளிக்கப்பட்டுள்ளன.

பாடத்திட்டம்

உயர்நிலைக்கல்வி முறை, "பொது" எனவும் "வாழ்க்கைத் தொழில்" எனவும் பாகுபாடு செய்யப்பட்டுள்ளன.

பொதுக்கல்வி முறை, "அறிவியல்" மற்றும் "கல்வி" என மேலும் வகைப்படுத்தப்பட்டுள்ளது. முன்பு, பல்கலைக்கழக புகுமுகத்தேர்வு கல்விமுறையில் "கணக்கியல்", "அறிவியல்" மற்றும் "கலை" ஆகிய மூன்று தொகுதிகளிருந்தன. கணக்கியல் தொகுதி படித்தவர்கள், பட்டப்படிப்பிற்குப் "பொறியியல்" மற்றும் அதனைச் சார்ந்த தலைப்புப் பொருள் பாடங்கள் படித்திடவும், "அறிவியல்" படித்தவர்கள், பட்டப்படிப்பிற்கு, "மருத்துவம்" மற்றும் அதனைச் சார்ந்த தலைப்புப்பொருள் பாடங்கள் படித்திடவும், "கலை" படித்தவர்கள் அவர்களது பட்டப்படிப்பிற்குக் "கலை" சார்ந்த தலைப்புப்பொருள் பாடங்கள் படித்திடவும் தகுதி பெற்றார்கள்.

ஆனால், உயர்நிலைக்கல்வி முறையில், கணக்கியல், அறிவியல் இவையிரண்டும் ஒன்றையொன்று பின்னிச் சார்ந்தவையாக உள்ளன. அவற்றுடன் தமிழ் அல்லது பிறமொழிகளைச் சார்ந்த பொருள், பகுதி 1 ஆகவும், ஆங்கிலம் பகுதி 2 ஆகவும் பகுதி 3-ல் நான்கு பொருள்களும் பாடத்திட்டத்தில் அமைந்தன. ஆனால், முன்பு நடைமுறையிலிருந்த பல்கலைக்கழக புகுமுகத் தேர்விற்கு பகுதி 3-ல், மூன்று தலைப்புப் பொருள் பாடங்களே இருந்தன.

மேல்நிலைக்கல்வி முறையில் மாணவர்கள் நான்கு தலைப்புப் பொருள் பாடங்களைப் பயிலுகின்றனர்.

1. கணக்கியல், இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல்

அல்லது

2. தாவரவியல், விலங்கியல், இயற்பியல், வேதியியல்

அல்லது

3. உயிரியல், இயற்பியல், வேதியியல் மற்றும் சித்த மருத்துவம்.

முதல் தொகுதியினைத் தேர்ந்தெடுத்து, தேவைப்படும் மதிப்பெண்களைப் பெற்று, வெற்றிகரமாகக் 'கல்விமுறையை' முடித்திடும் மாணவன், "பொறியியல்" அல்லது "மருத்துவத் தொழில்", அல்லது ஒரு அறிவியல் அல்லது கணக்கியல் பட்டங்கள் (பி.எஸ்.ஸி.) முதலியன பெறத் தகுதியுடையவராகிறார். ஏனைய அறிவியல் தொகுதிகளான 2 மற்றும் 3ஐத் தேர்ந்தெடுத்த மாணவன், மருத்துவத் தொழிலிலோ அல்லது பிற அறிவியல் சார்ந்த பட்டப்படிப்பிலோ தான், தனது கல்வியினைத் தொடர முடியும்; ஆனால், பொறியியலில் தொடர முடியாது.

கலைத் தொகுதியின் பகுதி 3-ல், பட்டப்படிப்பிற்குப் பல தலைப்புப் பொருள் பாடங்கள் உள. அவற்றில் சில - "வரலாறு","புவியியல்", "வணிக இயலின் அடிப்படைக் கல்விக் கூறுகள்", "பொருளாதாரம்" கணக்குப் பதவியியல்", "சிறப்புத் தமிழ்", சிறப்பு ஆங்கிலம்", (இலக்கியம்), "அரசியல்", "இசை" மற்றும் "உணவூட்டம்" ஆகியவையாகும்.

கல்வி கற்பிக்கும் மொழி ஆங்கிலமோ, தமிழோ ஆகும்.

1986-87ஆம் ஆண்டு, அரசு, இணைந்த கணக்கியல் - அறிவியல் தொகுதியினை நீக்கம் செய்து, தாவர இயல், விலங்கியல், இயற்பியல் மற்றும் வேதியியல் ஆகியவை அடங்கிய அறிவியல் தொகுதி அல்லது, கணக்கியல்-1 கணக்கியல்-2, இயற்பியல் மற்றும் வேதியியல் ஆகியவை அடங்கிய கணக்கியல் தொகுதி ஆகியவற்றை வகுத்துரைத்தது. ஆனால், அடுத்த கல்வியாண்டான 1987-88-ல், கணக்கியல் மற்றும் அறிவியல் ஆகியவை இணைந்த தொகுதி, திரும்பக் கொணரப்பட்டு, 1986-87 வரை பின்பற்றப்பட்ட பாடத் திட்டங்கள் நீக்கப்பட்டன.

வாழ்க்கைத்தொழில் கல்வி

அறிவு செறிந்த அல்லது பொதுக்கல்வி முறை தவிர, உயர்நிலைப்பள்ளி அளவில், வாழ்க்கைத் தொழில் கல்வி முறையும் கற்றுக் கொடுக்கப்படுகிறது. இக்கல்விமுறை, இத்தொழில் சார்ந்த வேலைகளைத் தேடிக்கொள்ளவோ, பயனுள்ள சுயவேலை வாய்பினைப் பெற்றிடவோ மாணவர்களுக்கு வழி வகுக்கிறது. குறிப்பிட்ட தலைப்புப் பொருள்களில் கல்வியினை மேலே தொடரவும் இக்கல்விமுறை, படிக்கல்லாக அமைகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில், மேல்நிலைக்கல்வி நிலையில் கற்பிக்கப்படும் பிற கல்வி முறைகள்

மாவட்டத்தின் மேல்நிலைப் பள்ளிகளில், வேளாண் கல்வி முறைகளான, பயிர் உற்பத்தி, தாவர உற்பத்தி, பட்டுப்புழு வளர்த்தல், தேனீ வளர்த்தல் பொறியியல் கல்வி முறைகளான, வீட்டுக்குரிய மின் துணைக்கருவிகள், மின் விசைப்பொறி பழுது பார்த்தல், இயந்திர இயக்க வல்லுநர், அச்சுத்தொழில் நுட்பம், வரைவாளர் (கட்டுமானம் மற்றம் இயந்திர நுட்பம்), கணக்கிடும் பொறி செயல்திட்டம், கட்டிட பராமரிப்பு மற்றும் வானொலி பராமரிப்பு, வாணிகம் மற்றும் தொழில் கல்வி முறைகளான, கணக்குவேலை, தணிக்கை, அலுவலக செயலாளர் நிலை, வங்கி உதவியாளர், கூட்டுறவு மேற்பார்வை, மற்றும் காப்பீடு, அறிவியல் கல்வி முறைகளான, மருத்துவ ஆய்வுக்கூட உதவியாளர், நோயாளிகளைப் பேணிக் காப்பவர், மற்றும் ஆசிரியர் பயிற்சிக் கல்வி முறைகளான பள்ளிக்கு முந்தைய மற்றும் நடுநிலை ஆசிரியர் பயிற்சி ஆகியவை கற்றுக்கொடுக்கப்படுகின்றன.

மாவட்டத்தில், கற்றுக்கொடுக்கப்படும் இம்மாதிரிக் கல்வி முறைகள், மற்றும் கற்றுக்கொடுக்கக் கூடிய பள்ளிகள் ஆகியவற்றின் பட்டியல் பின்வருமாறு இணைக்கப்பட்டுள்ளன.[129]

மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற்கல்வி

தொடர் எண்.	கற்பிக்கப்படும் கல்வி முறை	கற்பிக்கப்படும் மேல்நிலைப் பள்ளிகளின் பெயர்
(1)	(2)	(3)
அ.	**வேளாண் கல்வி :**	
	1. பயிர் உற்பத்தி	அரசு மேல்நிலைப்பள்ளி, பூதபாண்டி
	2. தாவர உற்பத்தி	1. அரசு மேல்நிலைப் பள்ளி, ஆரல்வாய்மொழி 2. அரசு மேல் நிலைப்பள்ளி, குலசேகரம் 3. ஏ.வி.டி. மேல்நிலைப்பள்ளி, கணபதிபுரம் 4. அரசு மலைவாழ் வகுப்பினர் உறைவிட மேல் நிலைப் பள்ளி, பேச்சிப்பாறை
	3. தாவர உற்பத்தி (நறுமணப் பொருட்கள் மற்றும் தோட்டப் பண்ணைப் பயிர்கள்)	அரசு மேல்நிலைப் பள்ளி, கொல்லங்கோடு
	4. பட்டுப்புழு வளர்த்தல் மற்றும் தேனீ வளர்த்தல்	1. அரசு மேல்நிலைப் பள்ளி, மார்த்தாண்டம் 2. அரசு மேல்நிலைப்பள்ளி, அருமனை
ஆ.	**பொறியியல் கல்வி :**	
	1. வீட்டுக்குரிய மின் துணைக்கருவிகள்	1. எஸ்.எம்.எஸ்.எம். சுசீந்திரம் 2. அரசு மேல்நிலைப் பள்ளி, தோவாளை 3. ஸ்காட் கிறித்தவ மேல்நிலைப் பள்ளி, குறத்தியறை 4. எஸ்.எல்.பி. (பெண்கள்) மேல்நிலைப் பள்ளி, நாகர்கோவில் 5. டி.வி.டி. மேல்நிலைப் பள்ளி, கோட்டார் 6. அரசு மேல்நிலைப் பள்ளி, இரணியல் 7. அரசு மேல்நிலைப் பள்ளி, குலசேகரம் 8. அரசு மேல்நிலைப் பள்ளி, தக்கலை 9. எல்.எம்.எஸ். மேல்நிலைப் பள்ளி, கிறிஸ்துக்கோவில் 10. புனித சூசையப்பர் மேல்நிலைப் பள்ளி, செல்லக்கோணம் 11. புனித மேரி மேல்நிலைப் பள்ளி, குளச்சல்

(1)	(2)	(3)
	வீட்டுக்குரிய மின் துணைக்கருவிகள் –தொர்ச்சி	12. ஏ.வி.டி. மேல்நிலைப் பள்ளி, கணபதிபுரம் 13. பாபுஜி மேல்நிப் பள்ளி, மணவாளக்குரிச்சி 14. சரோஜினி நினைவு மேல்நிலைப் பள்ளி, மணவாளக்குரிச்சி 15. எல்.எம்.பி.சி. மேல்நிலைப் பள்ளி, புத்தாலம் 16. அரசு மேல்நிலைப் பள்ளி, மூஞ்சிறை 17. பி.பி.எம். மேல்நிலைப் பள்ளி, ஆண்டுக்கோடு 18. புனித பெண்டிக்ட் மேல்நிலைப் பள்ளி, மங்கலக்குன்னு 19. புனித ஃபிரான்சிஸ் மேல்நிலைப் பள்ளி, வாவாரி 20. புனித மேரி மேல்நிலைப் பள்ளி, மேலப்பாளை 21. அரசு மேல்நிலைப் பள்ளி, மத்திக்கோடு 22. அரசு மேல்நிலைப் பள்ளி, கருங்கால் 23. அரசு மேல்நிலைப் பள்ளி, நட்டாளம் 24. அரசு மேல்நிப் பள்ளி, மார்த்தாண்டம்
2.	மின்விசைப்பொறி பழுது பார்த்தல்	1. அரசு மேல்நிலைப் பள்ளி, கோட்டாரம்
3.	இயந்திர இயக்க வல்லுநர்	1. அரசு மேல்நிலைப் பள்ளி, பூதபாண்டி 2. ஸ்காட் கிறித்தவ மேல்நிலைப் பள்ளி, நாகர்கோவில் 3. டி.வி.டி. மேல்நிலைப் பள்ளி, கோட்டார்
4.	அச்சுத் தொழில்நுட்பம்	1. அரசு மேல்நிலைப் பள்ளி, கொல்லங்கோடு
5.	வரைவாளர் (கட்டுமானம், இயந்திர நுட்பம்)	1. அகஸ்தீஸ்வரம் மேல்நிலைப் பள்ளி, அகஸ்தீஸ்வரம்
6.	கணக்கிடும் பொறிசெயல் திட்டம்	1. அரசு மேல்நிலைப் பள்ளி, குலசேகரம் 2. ஏ.வி. மேல்நிலைப் பள்ளி, மத்திக்கோடு 3. அரசு மேல்நிலைப் பள்ளி, மார்த்தாண்டம்
7.	கட்டிட பராமரிப்பு	1. எல்.எம்.எஸ், மேல்நிலைப் பள்ளி, சியான்புரம்
8.	வானொலி மற்றும் தொலைக்காட்சி பராமரிப்பு	1. ஏ.எம். மேல்நிலைப் பள்ளி, மருதங்கோடு

(1)	(2)	(3)
இ.	**வாணிகம் மற்றும் தொழில்கல்வி :**	
1.	கணக்கு வேலை மற்றும் தணிக்கை	1. புனித அந்தோணியார் மேல்நிலைப் பள்ளி, மைலாடி 2. ஆரல்வாய்மொழி மேல்நிலைப் பள்ளி, ஆரல்வாய்மொழி 3. கோட்டாரம் மேல்நிலைப் பள்ளி, கோட்டாரம் 4. அகஸ்தீஸ்வரம் மேல்நிலைப் பள்ளி, அகஸ்தீஸ்வரம் 5. என்.எம்.ஆர்.யூ. மேல்நிலைப் பள்ளி, அகஸ்தீஸ்வரம் 6. அழகப்பபுரம் மேல்நிலைப் பள்ளி, அழகப்பபுரம் 7. குமாரபுரம் தோப்பு மேல்நிலைப் பள்ளி, குமாரபுரம் தோப்பு 8. எடலக்குடி மேல்நிலைப் பள்ளி, எடலக்குடி 9. தாழக்குடி மேல்நிலைப் பள்ளி, தாழக்குடி 10. வெட்டுர்னிமடம் மேல்நிலைப் பள்ளி, வெட்டுர்னிமடம் 11. கார்மைல் மேல்நிலைப் பள்ளி 12. எப்.எம்.எஸ். மேல்நிலைப் பள்ளி, தாமரக்குளம் 13. அரசு மேல்நிலைப் பள்ளி, காட்டாத்தீரை 14. அரசு மேல்நிலைப் பள்ளி, மோனிக்கெட்டிப்பொட்டல் 15. அரசு மேல்நிலைப் பள்ளி, சூரன்குடி 16. அரசு மேல்நிலைப் பள்ளி, குலசேகரம் 17. அரசு மேல்நிலைப் பள்ளி, திருவிதாங்கோடு 18. புனித ஜோசப் மேல்நிலைப் பள்ளி, ஆசாரிப்பள்ளம் 19. வி.கே.பி. மேல்நிலைப் பள்ளி, குளச்சல் 20. எல்.எம்.எஸ் மேல்நிலைப் பள்ளி, காடமலைக்குண்டு 21. தேவாஸ்வம் மேல்நிலைப் பள்ளி, மண்டைக்காடு 22. அருணாசலம் மேல்நிலைப் பள்ளி, திருவட்டார் 23. அரசு மேல்நிலைப் பள்ளி மூஞ்சிறை 24. அரசு மேல்நிலைப் பள்ளி, பலுகல் 25. அரசு மேல்நிலைப் பள்ளி, மார்த்தாண்டம் 26. அரசு மேல்நிலைப் பள்ளி, அருமனை

(1)	(2)	(3)
2.	அலுவலக செயலாளர் நிலை	1. எஸ்.எம்.எஸ்.எம். சுசீந்திரம் 2. அகஸ்தீஸ்வரம் மேல்நிலைப் பள்ளி, அகஸ்தீஸ்வரம் 3. எஸ்.எம்.ஆர்.வி. மேல்நிலைப் பள்ளி, 4. ஜேம்ஸ் நகர உயர்நிலைப் பள்ளி, 5. ஸ்காட் கிறித்தவ மேல்நிலைப் பள்ளி, நாகர்கோவில் 6. எஸ்.எல்.பி. மேல்நிலைப் பள்ளி, நாகர்கோவில் 7. கார்மெல் மேல்நிலைப் பள்ளி, 8. ஏ.வி.டி. மேல்நிலைப் பள்ளி 9. அரசு மேல்நிலைப் பள்ளி, இரணியல் 10. வி.கே.பி. மேல்நிலைப் பள்ளி, குளச்சல் 11. புனித மேரி கோரெட்டி மேல்நிலைப் பள்ளி, மணலிக்கரை 12. எல்.எம்.எஸ். மேல்நிலைப் பள்ளி, மார்த்தாண்டம் 13. அரசு மேல்நிலைப் பள்ளி, மார்த்தாண்டம்
3.	வங்கி உதவியாளர்	1. புனித லாரன்ஸ் மேல்நிலைப் பள்ளி, மடத்தட்டுவிளை 2. அரசு மேல்நிலைப் பள்ளி, குலசேகரம் 3. புனித சூசையப்பர் மேல்நிலைப் பள்ளி, குல்குமோடு 4. மேல்நிலைப் பள்ளி, அருமனை 5. அரசு மேல்நிலைப் பள்ளி, கொல்லங்கோடு 6. அரசு மேல்நிலைப் பள்ளி, மார்த்தாண்டம்
4.	கூட்டுறவு மேற்பார்வை	1. அரசு உதவிபெறும் மேல்நிலைப் பள்ளி, முட்டுக்காடு 2. அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, மார்த்தாண்டம்
5.	காப்பீடு	1. அரசு மலைவாழ் மக்கள் உறைவிட மேல்நிலைப்பள்ளி, பேச்சிப்பாறை
ஈ.	**அறிவியல் கல்வி :**	
1.	உருவப் படம் வரையும் கலை, சாயத் தொழில் மற்றும் அச்சுத் தொழில்	1. எல்.எம்.எஸ். மேல்நிலைப் பள்ளி, கிறித்தவக்கோவில்
2.	ஆடை வடிவமைப்பு மற்றும் தயாரிப்பு	2. எல்.எம்.எஸ். மேல்நிலைப் பள்ளி, காடமலைக்குண்டு

(1)	(2)	(3)
உ.	**உடல் நலம் சார்ந்த கல்வி :**	
1.	மருத்துவ ஆய்வுக்கூட உதவியாளர்	1. எல்.எம்.எஸ். மேல்நிலைப் பள்ளி, ஜேம்ஸ்நகரம் 2. அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளி, அருமனை 3. எல்.எம்.எஸ். மேல்நிலைப் பள்ளி, மார்த்தாண்டம்
2.	நோயாளிகளைப் பேணிக் காப்பவர்	1. எஸ்.ஏ. மேல்நிலைப் பள்ளி, வெட்டுர்னிமடம் 2. அரசு மேல்நிலைப் பள்ளி, தக்கலை 3. புனித ஜோசப் மேல்நிலைப் பள்ளி, செல்லங்கோணம் 4. எல்.எம்.எஸ். மேல்நிலைப் பள்ளி, கிறித்தவக்கோவில் 5. புனித மேரி மேல்நிலைப் பள்ளி, குளச்சல் 6. எல்.எம்.எஸ். மேல்நிலைப்பள்ளி, காடமலைக்குண்டு 7. புனித மேரி கோரெட்டி மேலநிலைப் பள்ளி, மணலிக்கரை 8. எல்.எம்.பி.சி. மேல்நிலைப் பள்ளி, புத்தாளம் 9. முனைவர் சாமுவேல் மேல்நிலைப் பள்ளி, சாந்தபுரம் 10. அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளி, எட்டக்கோடு
ஊ.	**மேல்நிலை ஆசிரியர் பயிற்சிக் கல்வி (பெண்களுக்கு மட்டும்)**	1. மைலாடி மேல்நிலைப் பள்ளி, மைலாடி 2. கோட்டாரம் மேல்நிலைப் பள்ளி, கோட்டாரம் 3. அகஸ்தீஸ்வரம் மேல்நிலைப் பள்ளி, அகஸ்தீஸ்வரம் 4. ஜேம்ஸ்நகரம் மேல்நிலைப் பள்ளி, ஜேம்ஸ்நகரம் 5. தோவாளை அரசு மேல்நிலைப் பள்ளி, தோவாளை 6. அரசு மேல்நிலைப் பள்ளி, மணிக்கொட்டிப்பொட்டல் 7. அரசு மேல்நிலைப் பள்ளி, காட்டாத்துரை 8. புனித மேரி மேல்நிலைப் பள்ளி, குளச்சல் 9. புனித லாரன்ஸ் மேல்நிலைப் பள்ளி, மடத்தட்டுவிளை 10. சரோஜினி நினைவு மேல்நிலைப் பள்ளி, ஓரப்பன்விளை

(1)	(2)	(3)
உள.	**மேல்நிலை ஆசிரியர் பயிற்சிக் கல்வி** தொடர்ச்சி	11. பாபுஜி நினைவு மேல்நிலைப் பள்ளி, மணவாளக்குறிச்சி 12. அரசு உதவிபெறும் மேல்நிலைப் பள்ளி, ஏட்டக்கோடு 13. புனித மேரி கோரெட்டி மேல்நிலைப் பள்ளி, மணலிக்கரை 14. முனைவர் சாமுவேல் மேல்நிப் பள்ளி, சாந்தபுரம் 15. புனித ஜோசப் மேல்நிலைப் பள்ளி, முளகுமூடு 16. அரசு மேல்நிலைப் பள்ளி, கடயால் 17. புனித பெர்னாடெட் மேல்நிப் பள்ளி, மங்கலக்குண்டு 18. எல்.எம்.எஸ். மேல்நிலைப் பள்ளி, மத்திக்கோடு 19. புனித ஃபிரான்சிஸ் மேல்நிலைப் பள்ளி, மேலப்பாளை 20. அரசு மேல் நிலைப் பள்ளி, மத்திக்கோடு 21. அரசு மேல் நிலைப் பள்ளி, கடுங்கால் 22. டி.சி.கே. மேல்நிலைப் பள்ளி, பதன்தலுமூடு 23. அரசு மேல்நிலைப் பள்ளி, மார்த்தாண்டம் 24. அரசு மேல்நிலைப் பள்ளி, அருமனை
	பெண்கள் பள்ளிகள்	
அ.	**பொறியியல் கல்வி**	
1.	வரைவு வல்லார் (கட்டுமானம், இயந்திரநுட்பம்)	கவிமணி தேசிக விநாயம் பிள்ளை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, கோட்டார்
ஆ.	**வணிகம் மற்றும் தொழில் கல்வி :**	
1.	கணக்கு வேலை மற்றும் தணிக்கை	1. தூத்தி பெண்கள் மேல்நிலைப் பள்ளி, நாகர்கோவில் 2. சிறுமலர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, நாகர்கோவில் 3. அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, மார்த்தாண்டம் 4. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, நாகர்கோவில்.
இ.	**அலுவலக செயலாளர் நிலை :**	1. சிறுமலர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, நாகர்கோவில் 2. புனித சூசையப்பர் பெண் துறவியர்மட மேல்நிலைப் பள்ளி, நாகர்கோவில்.

(1)	(2)	(3)
இ.	**அலுவலக செயலாளர் நிலை–தொடர்ச்சி**	3. அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, மார்த்தாண்டம் 4. கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, கோட்டார்.
ஈ.	**வீட்டுத்தொழில் அறிவியல் கல்வி :**	
1.	உணவு ஏற்பாடு செய்து வழங்குதல்	1. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, கோட்டார்.
2.	ஆடை வடிவமைப்பு மற்றும் தயாரிப்பு	2. புனித சூசையப்பர் துறவியர் மடத்தைச் சார்ந்த மேல்நிலைப் பள்ளி, நாகர்கோவில்.
		3. டுத்தி பெண்கள் மேல்நிலைப் பள்ளி, நாகர்கோவில்
3.	பள்ளிக்கு முந்தைய ஆசிரியர் பயிற்சி	1. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, கோட்டார்.
உ.	**உடல் நலம் சார்ந்த கல்வி :**	
1.	மருத்துவ ஆய்வுக்கூட உதவியாளர்	1. எல்.எம்.எஸ். பெண்கள் மேல்நிலைப் பள்ளி, மார்த்தாண்டம்
2.	நோயாளிகளைப் பேணிக் காப்பவர்	1. எல்.எம்.எஸ். பெண்கள் மேல்நிலைப் பள்ளி, நெய்யூர்
		2. எல்.எம்.எஸ்.பெண்கள் மேல்நிலைப் பள்ளி, மார்த்தாண்டம்
		3. கவிமணி தேசிக விநாயம் பிள்ளை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, கோட்டார்.
3.	கண் மருத்துவ தொழில்நுட்ப வல்லுநர்	1. எல்.எம்.எஸ்.பெண்கள் மேல்நிலைப் பள்ளி, மார்த்தாண்டம்
ஊ.	**மேல்நிலை ஆசிரியர் பயிற்சி**	1. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, கோட்டார்.
		2. அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, கோட்டார்
		3. புனித சூசையப்பர் பெண் துறவியர் மடத்தைச் சார்ந்த மேல்நிலைப் பள்ளி, நாகர்கோவில்.
		4. ஸ்ரீதேவி பெண்கள் மேல்நிலைப் பள்ளி, கொல்லங்கோடு
		5. சிறுமலர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, நாகர்கோவில்
		6. டுத்தி பெண்கள் மேல்நிலைப் பள்ளி, நாகர்கோவில்

1989 ஆம் ஆண்டு நிலைப்படி, தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளி இயங்கி வரும் கிராமங்களின்/இடங்களின் பெயர்கள்

(கல்வி மாவட்டம் மற்றும் கல்வித் தொகுதிவாரியாக)

நாகர்கோவில் கல்வி மாவட்டம்

சுசீந்திரம் தொகுதி

நடுநிலைப்பள்ளிகள்

அரசு நடுநிலைப்பள்ளிகள்:

1. தேவ குளம்
2. ஈச்சன்விளை
3. குலசேகரபுரம்
4. கனகாபுரம்
5. கோட்டையடி
6. மகாதானபுரம்
7. நல்லூர்
8. ஒரட்டையால்விளை
9. பொற்றையாடி
10. சுசீந்திரம்
11. தாமரைக்குளம் (வடக்கு)
12. வரியூர்
13. பொட்டல்குளம்

அரசு உதவி பெறும் நடுநிலைப்பள்ளிகள்:

1. கன்னியாகுமரி - மேரி இம்மேகுலேட்
2. தேரூர் - கஸ்தூர்பா
3. இராசாளூர் - புனித மைக்கேல்

அரசு தொடக்கப் பள்ளிகள்:

1. அச்சன் குளம்
2. அழகப்பபுரம்
3. ஆத்தலவிளை
4. ஆமணக்கன் விளை
5. ஆண்டார்குளம்
6. ஆச்ரமம்
7. சடையங்குளம்
8. சந்தியாடி
9. ஜேம்ஸ் நகரம்
10. கன்னியாகுமரி
11. கார்காடு
12. கரும்பட்டூர்
13. கல்குராம் பொத்தை
14. கோட்டவிளை
15. கோதைகிராமம்
16. குந்தால்
17. லீபுரம்
18. மகாராஜபுரம்
19. முகிலங்குடி
20. மைலாடி கிழக்கு
21. மைலாடி மேற்கு
22. புண்ணியாடி
23. புதுக்கிராமம்
24. சமாதானபுரம்
25. சுசீந்திரம்
26. தாமரைக்குளம் - தெற்கு
27. தேரூர்
28. வழுக்கன்பாறை

தனியார் தொடக்கப் பள்ளிகள்:

1. அழகப்பபுரம் (புனித அந்தோனியார்)
4. இராமாநாதீச்சன்புத்தூர் (சிறுமலர்)

2. கன்னியாகுமரி (புனித சூசையப்பர்)
3. கோவளம் (டைனேசியஸ்)
5. திருமூலநகர் (புனித ஜார்ஜ்)
6. ஆரோக்கியபுரம் (ஆரோக்ய அன்னை)

நாகர்கோவில் தொகுதி

அரசு நடுநிலைப் பள்ளிகள்:

1. ஆரல்குமாரபுரம்
2. ஆரல்பெருமாள்புரம்
3. பூதப்பாண்டி
4. செண்பகராமன்புதூர்
5. தரிசனம் கோப்பு
6. எசந்திமங்கலம்
7. வடலிவிளை
8. வடசேரி - நெசவாளர் குடியிருப்பு
9. காட்டுப்புதூர்
10. இருளப்பபுரம்

தனியார் நடுநிலைப்பள்ளி :

1. கோட்டார் (புனித சேவியர்)
2. வேதக்காரன் குடியிருப்பு (புனித மைக்கேல்)
3. ஆரல்கோயில் (உரோமன் கத்தோலிக்க சமயம்)
4. மருக்கல்தாளை (லூத்தரன்)
5. தடிக்காரன்கோணம் (கிறித்தவ நலம்)
6. காரமணி (தென்னிந்தியத் திருச்சபை)
7. குருசாடி புனித அந்தோணியார்

அரசு தொடக்கப் பள்ளிகள்:

1. சாரக்கல்விளை
2. செட்டிகுளம்
3. எளங்கடை - வடக்கு
4. எளங்கடை - தெற்கு
5. கல்லியங்காடு
6. கோட்டார் - கடைவீதி
7. கோட்டார் - வகியாடி
8. கிருஷ்ணன்கோவில்
9. நாகர்கோவில் நகரம்
10. மறவன் குடியிருப்பு
11. பருக்கை சந்திப்பு
12. வடசேரி
13. வடசேரி கலுங்காடி
18. அழகியபாண்டியபுரம்
19. சிராமடம்
20. க்ஞாளம்
21 நவல்காடு
22. பார்வதிப் புதூர்
23. இரத்தினபுரம்
24. பரளியாறு (வனத்துறை)
25. உடையாடி (ஆதிதிராவிடர் நலத்துறை)
26. சீதப்பால்
27. திட்டுவிளை
28. வீரநாராயணமங்கலம்
29. விசுவாசபுரம்
30. வாழையூத்துவயல்

14. வடிவேச்வரம்
15. வெட்டூரணிமடம்
16. ஆரல்தாணுமாலயன்புதூர்
17. ஆரல் வடக்கூர்
31. கீரிப்பாறை (வனத்துறை)

அரசு உதவிபெறும் தொடக்கப் பள்ளிகள்:

1. நாகர்கோவில் (டூத்தி பள்ளி)
2. நாகர்கோவில் (புனித சூயைப்பர் பெண்துறவியர் மடம்)
3. சாயக்காரன்பரப்புவிளை (புனித அலாஷியஸ்)
4. இராமன்புதூர் (சிறுமலர்)
5. வடசேரி (எஸ்.எம்.ஆர்.வி.)
6. இராமன்புதூர் (உரோமன் கத்தோலிக்க சமயம்)
7. கணேசபுரம் (லூத்ரன்)
8. மறவன் குடியிருப்பு (புனித மேரி)
9. நாகர்கோவில் (லூத்ரன்)
10. வடசேரி (லூத்ரன்)
11. நாகர்கோவில் (புனித ஃபிரான்சிஸ்)
12. ஆரல்வாய்மொழி (லூத்ரன்)
13. செண்பகராமன்புதூர் (லூத்ரன்)
14. நாடூர் (லூத்ரன்)
15. புதுச்சேரி (லூத்ரன்)
16. காமராஜபுரம் (கிறித்தவ)
17. நாகர்கோவில் (புதிய நர்சரி)
18. அட்டமடை
19. நாகர்கோவில் (உறாம் கிறித்தவத் திருக்கோவில்)

தக்கலை கல்வி மாவட்டம்
இராசாக்கமங்கலம் தொகுதி

அரசு நடுநிலைப் பள்ளி:

1. பரக்கை
2. ஆசாரிப்பள்ளம்
3. தம்மத்துக்கோணம்
4. பிள்ளையார்விளை
5. சோத்து விளை
6. எறும்புக்காடு
7. மேலகிருஷ்ணன்புதூர்

தனியார் நடுநிலைப் பள்ளிகள்:

1. மணக்குடி (சிறுமலர்)
2. மேல ஆசாரிப்பள்ளம் (புனித ஜூடாஸ்)
3. பொழிக்கறை (புனித மேரி)

4. புத்தன்துறை (குழந்தை ஏசு)
5. ஈத்தமொழி (எல்.எம்.எஸ்.)
6. செண்பகராமன் புத்தன்துறை (புனித அந்தோனியார்)

அரசு தனியார் பள்ளிகள்:

1. ஆலங்கோட்டை
2. சித்திரைத்திருமகாராஜபுரம்
3. எலந்தியாடி
4. கணபதிபுரம்
5. கன்னல்குறிச்சி
6. பால் டேனியல்புரம்
7. பூச்சிவிளாகம்
8. காற்றாடித்தட்டு
9. குழக்காட்டுவிளை
10. கிடன்கங்கரை
11. கோவில்விளை
12. குளத்துவிளை
13. மணவாளபுரம்
14. பாம்பன்விளை
15. காடெற்றி
16. புல்லுவிளை
17. புத்தாளம்
18 சாந்தபுரம்
19. சூரங்குடி
20. சூரப்பள்ளம்
21. வேம்பனூர்
22. வைரக்குடி
23. சியான்புரம்

தனியார் தொடக்கப் பள்ளிகள்:

1. ஆசாரிப்பள்ளம் (புனித மைக்கேல்)
2. மணக்குடித்துறை (புனித ஆண்ரோஸ்)
3. பெரியகாடு (புனித அந்தோனியார்)
4. கீழ ஆசாரிப்பள்ளம் (புனித மேரி)
5. பள்ளம் (புனித ஜூடாஸ்)
6. பிள்ளைத்தோப்பு (புனித மேரி)
7. இராசாக்கமங்கலம் (புனித ஜோசப்)
8. சியான்புரம் (எல்.எம்.எஸ்.)

குளச்சல் தொகுதி
அரசு நடுநிலைப் பள்ளிகள்:

1. குளச்சல்
2. செட்டியார் மடம்
3. வெள்ளிச்சந்தை
4. கட்டுமாங்கோடு
5. சாராவிளை
6. கல்பாடி
7. காட்டுமங்கலம்
8. மூங்கில்விளை
9. மேல்கரை
10. கல்லுக்கோட்டம்
11. குன்னம்கோடு
12. ஆலன்விளை
13. மண்டைக்காடு
14. தாளப்பள்ளம்
15. தாளக்குளம்
16. தொட்டிக்கோடு

தனியார் நடுநிலைப் பள்ளிகள்:

1. காடியாப்பட்டினம் (இயேசுநாதர் இதயம்)
2. சாரல் (உரோமன் கத்தோலிக்க சமயம்)
3. காரங்காடு (உரோமன் கத்தோலிக்க சமயம்)
4. மங்களம்பாடு (உரோமன் கத்தோலிக்க சமயம்)
5. ரீதாபுரம்
6. கொடுமுனை (புனித மைக்கேல்)
7. மாங்குழி (புனித ஃபிரான்சிஸ் சேவியர்)
8. சாரல்விளை (லூத்ரன்)
9. ரீத்தேல்புரம் (என்.எம்.)
10. குரும்பனை (புனித இக்னேஷியஸ்)
11. பாட்டாரிவிளை (புனித சேவியர்)
12. வானியக்குடி (புனித ஜேம்ஸ்)

அரசு தொடக்கப் பள்ளிகள்:

1. செம்பொன்விளை
2. சுங்கான்கடை
3. குளச்சல் (எல்.எம்.எஸ்.)
4. எரும்பிலி
5. காடியாப்பட்டினம்
6. மணவிளை
7. நெய்யூர் - 1
8. நெய்யூர் - 2
9. குளச்சல் (பெண்கள்)
10. நெய்யூர் - 3
11. ஊத்துக்குரி
12. நெட்டங்கோடு
13. பிலாக்கோடு
14. சாஸ்தான்கரை
15. வில்லுக்குறி
16. காரவிளை
17. சூனாம்விளை

தனியார் தொடக்கப் பள்ளிகள்:

1. சின்னவிளை (புனித சூசையப்பர்)
2. புதூர் (லூசியஸ்)
3. குளச்சல் (புனித மேரி)
4. காடியாப்பட்டினம் (புனித பீட்டர்)
5. கோகம்காடு (உரோமன் கத்தோலிக்க சமயம்)
6. மடத்தட்டுவிளை (புனித அலோசியஸ்)
7. முரசல்கோடு (புனித மேரி)
8. முட்டம் (புனித ஜான்)
9. கொட்டில்பாடு (புனித அலெக்ஸ்)
10. குளச்சல் (புனித ஆன்ஸ்)

11. உள்ளங்குளம் (வெஸ்லி)
12. திருநாயனார்குறிச்சி (சரோஜா நினைவுப்பள்ளி)
13. எலந்தைவிளை (வெஸ்லி)
14. காத்தவிளை (சுப்ரமணிய நினைவுப்பள்ளி)
15. நெய்யூர் (குழந்தை வளர்ப்பரங்கம்)
16. பாளயம் (லேடி ஆஃப் ஹெல்த்)

திருவட்டார் தொகுதி

அரசு நடுநிலைப் பள்ளிகள்:

1. இட்டக்காவேலி
2. கண்ணூர்
3. மாத்தூர்
4. முத்தாலர்
5. கோதையூர் மேல்அணைக்கட்டு
5. பொன்மனை
6. பூவங்கோடு
7. புலிப்பணம்
8. உன்னியூர்கோணம்
10. வில்லுண்ணிக்கோணம்

தனியார் நடுநிலைப்பள்ளிகள்:

1. மூலவிளை (புனித சூசையப்பர்)
2. பிலான்கலை (புனித சூசையப்பர்)
3. புத்தன் கடை (புனித சூசையப்பர்)
4. சுக்லாடு (புனித சூசையப்பர்)
5. குட்டைக்காடு (புனித சூசையப்பர்)
6. செங்கோடை (உதவிபெறும் - எம்.வி.)

அரசு தொடக்கப் பள்ளிகள்:

1. ஆண்டூர்
2. ஆத்தூர்
3. பாரதப்பள்ளி
4. செங்கோடை
5. செருக்கால்
6. ராவிப்புதூர்கடை
7. கல்லங்குழி
8. கேசவபுரம்
9. குலசேகபுரம்
10. கொல்வேல்
11. கூரக்குடி
12. மாலவிளை
13. முண்டவிளை
14. முகிலங்கரை
15. தாச்சூர்
16. தொட்டாவரம்
17. எற்றக்கோடு
18. திருவட்டார்
19. திற்பரப்பு
20. கோதையார் (கீழணை)

தனியார் தொடக்கப் பள்ளிகள்:

1. புத்தன்கடை (உரோமன் கத்தோலிக்க சமயம்)
2. அணைக்கரை (உரோமன் கத்தோலிக்க சமயம்)
3. குலசேகரம் (உரோமன் கத்தோலிக்க சமயம் புனித உர்சுலா)
4. சேக்கால் (புனித பீட்டர்)
5. தேமானூர் (புனித தாமஸ்)
6. ஈச்சன்கோடு (சகாயமாதா)
7. சித்தரங்கோடு (ஆதிதிராவிடர் நலம்)
8. மணலோடை (ஆதிதிராவிடர் நலம்)

தக்கலைத் தொகுதி

அரசு நடுநிலைப்பள்ளிகள்:

1. ஆலங்கோடு
2. பிரம்மபுரம்
3. இரணியல்
4. கொஞ்சிக்குழி
5. கோதியூர்
6. காட்டுமனு
7. குமாரபுரம்
8. மணலிக்கரை
9. பொற்றிக்கோடு
10. பாதிரமங்கலம்
11. புலியூர்குறிச்சி
12. பிலாவிளை
13. திருவிதாங்கோடு
14. விலாவூர்
15. தக்கலை நகரம்
16. பெருஞ்சிலம்பு
17. வாத்தியார்கோணம்

தனியார் நடுநிலைப் பள்ளிகள்:

1. செம்பருத்திவிளை (உரோமன் கத்தோலிக்க சமயம்)
2. நெய்யூர் (கக்கார் நினைவுப் பள்ளி)
3. கல்குறிச்சி (புனித சூசையப்பர்)
4. வெள்ளிலக்கோடு (உரோமன் கத்தோலிக்க சமயம்)
5. முலகுமூடு (உரோமன் கத்தோலிக்க சமயம்)
6. மணலிக்கரை (உரோமன் கத்தோலிக்க சமயம்)
7. பள்ளியாடி (உரோமன் கத்தோலிக்க சமயம்)
8. முட்டுக்காடு (எஸ்.கே.வி.)
9. வட்டம் (புனித அந்தோனியார்)

அரசு தொடக்கப் பள்ளிகள்:

1. சடையமங்கலம்
2. செல்லங்கோணம்
3. கிறிஸ்துவக்கோயில்
13. முட்டுக்காடு
14. நெய்காட்டான்விளை
15. பள்ளியாடி

4. ஈத்தவிளை
5. கிராமம்
6. காடமலைக்குன்று
7. கல்குளம் (ஆண்கள்)
8. கல்குளம் (பெண்கள்)
9. கேரளபுரம்
10. கொல்லன்விளை
11. மாரன்கோணம்
12. குழிக்கோடு
16. பெரும்சிலம்பு
17. போர்வான்காப்பரங்கு
18. புத்தூர்
19. சிந்தன்விளை
20. தாரவிளை
21. திருவிதாங்கோடு
22. திட்டுமேல்கோணம்
23. தக்கலை (முகம்மதியர்)
24. தக்கலை (மருத்துவமனை நிலை)

தனியார் தொடக்கப் பள்ளிகள்:

1. அப்பாட்டுவிளை (புனித அந்தோனியார்)
2. செல்லங்கோணம் (எம்.எஸ்.ஸி.)
3. கந்தன்விளை (புனித தெரசா)
4. காப்பியறை (புனித கேத்தரின்)
5. மணலிக்கரை (புனித சூசையப்பர்)
6. தக்கலை (புனித எல்லியஸ்)
7. கைலாசவிளை (புனித சேவியர்)

குழித்துறை கல்வி மாவட்டம்

குழித்துறை தொகுதி

அரசு நடுநிலைப் பள்ளிகள்:

1. ஆண்டுக்கோடு
2. அருமனை
3. அருமனை (எல்.எம்.)
4. செம்மங்கலை
5. குழித்துறை (பெண்கள்)
6. மலைக்கோடு (எல்.எம்.)
7. மலைக்கோடு (எஸ்.வி.)
8. மார்த்தாண்டம் (எம்.வி.)
9. மேக்கோடு
10. பரவூர்
11. திக்குரிச்சி
12. வன்னியூர்
13. பதுக்காணி

தனியார் நடுநிலைப் பள்ளிகள்:

1. திக்குறிச்சி (புனித கேப்ரியல்)
2. எடைக்கோடு (அரசு உதவிபெறும் பள்ளி)
3. கடையல் (சேக்ரட் ஹார்ட் Sacred Heart)
4. கொடுங்குளம் (எம்.எஸ்.ஸி.)
5. குலப்பாறை (எம்.எஸ்.ஸி.)

6. நேட்டா (புனித தாமஸ் அரசு உதவி பெறும் பள்ளி)
7. முக்கூட்டுக்கால்
8. மேல்பலால்
9. பந்தல்விளை

அரசு தொடக்க நிலைப் பள்ளிகள்:

1. ஆண்டுக்கோடு (எச்.சம்.)
2. சேரால்
3. தேவிக்கோடு (பி.எஃப்.எம்.)
4. எடைக்கோடு
5. எடைக்கோடு
6. எளஞ்சிறை
7. கலியக்காவிளை
8. கலியக்காவிளை (முகம்மதியர்)
9. குட்டைக்காடு
10. குழித்துறை
11. மஞ்சலமூடு
12. மார்த்தாண்டம் (எல்.எம்.)
13. மருதங்கோடு (பி.வி.)
14. மருதங்கோடு (பி.யு.எல்.எம்.)
15. மார்த்தாண்டம்
16. மேல்பாளை
17. முழுக்கோடு
18. ஒற்றப்பனவிளை
19. பாக்கோடு குடியிருப்பு
20. பாக்கோடு - கொடித்தாரவிளை
21. பாக்கோடு (எல்.எம்)
22. பாலவிளை
23. பலுக்கல் (டி.வி)
24. பிறை
25. சிவலோகம்
26. சிற்றார்
27. ஒருமுறம்வயல்
28. மாரப்பாடி

தனியார் தொடக்கப் பள்ளிகள்:

1. ஆலம்பாறை (புனித வெனிசுலா)
2. நெல்லிக்காவிளை (புனித மேரீஸ்)
3. கலியக்காவிளை (புனித அலோசியஸ்)
4. மேல்பாளை
5. பரக்குன்று (புனித ஜேம்ஸ்)
6. மாங்கோடு (புனித தாமஸ்)
7. திருத்துனபுரம்
8. காரோடு
9. களியல் (புனித மேரீஸ்)
10. மேல்பாலை (புனித மேரீஸ்)
11. அருக்காணி (கிறித்தவ திருக்கோவில் குடும்பம்)
12. கல்லுப்பாலம் (பி.எஸ்.)
13. குழித்துறை (தேவாஸ்வம்)
14. மொட்டக்கலை
15. செம்மன்விளை

மூஞ்சிறைத் தொகுதி

அரசு தொடக்கப் பள்ளிகள்:

1. அடைக்காக்குளி
2. சாத்தன்கோடு
3. கலியக்காவிளை
4. கீராத்தூர்
10. பெயின்
11. பாக்குளம்
12. பள்ளிக்கால்
13. பூத்துறை

5. கொல்லங்கோடு
6. குன்னாத்தூர்
7. மடிச்சல்
8. மாராயபுரம்
9. பார்த்திவபுரம்
14. புதுக்கடை
15. மாங்காடு (பி.வி.)
16. பூரங்கோடு
17. மேக்கோடு

தனியார் நடுநிலைப் பள்ளிகள்:

1. புதுக்கடை
2. சிலுவைபுரம்
3. வளவனூர்
4. வருதட்டு (எல்.எம்.கே.எம்.)
5. கல்ப்பாறை
6. நீரோடி

அரசு தொடக்கப் பள்ளிகள்:

1. அம்சி (பழையது)
2. அம்சி (புதியது
3. கொத்தன்கோடு
4. குலப்புரம்
5. குட்டமத்திக்கோணம்
6. லட்சுமிபுதுக்கடை
7. மாங்காடு (எல்.எம்.)
8. மருதாண்டாந்துறை
9. மேலங்குளம்
10. மேட்டுக்கும்மல்
11. நீரோடி
12. உடச்சிக்கோட்டை
13. சூர்யக்கோடு
14. தூத்தூர்
15. தோட்டாவரம்
16. வாவாரி
17. வேங்கஞ்சி
18. வேங்கஞ்சி (எல்.எம்.)
19. விளத்திவிளை
20. ரெய்மாந்துரை

தனியார் தொடக்கப் பள்ளிகள்:

1. வேங்கஞ்சி
2. காப்புக்காடு
3. கீராத்தூர்
4. மேட்டுக்கம்மல்
5. காமராஜ்நகர் (இயேசுநாதர் இதயம்)
6. மார்த்தாண்டன்துறை (புனித அலோசியஸ்)
7. கொல்லங்கோடு
8. மாங்குழி
9. அண்ணிக்கரை (புனித மாத்யூ)
10. ரவிப்புத்தன்துறை (புனித சூசையப்பர்)
11. காருண்யபுரம் (புனித சூசையப்பர்)
12. வேங்கஞ்சி (தென்னிந்தியத் திருச்சபை)
13. வாவாரி (புனித ஃபிரான்சிஸ்)
14. வால்விளை (புனித ஜூடாஸ்)
15. தும்பலி (இயேசுநாதர் இதயம்)
16. தூத்தூர் (பயஸ் 2)
17. தெற்குபாலவிளை
18. சூழல்
19. மணலி
20. புதுக்கடை (புனித மேரீஸ்)
21. மணியாரன்குன்று (இம்மாக்குலேட் - இயேசுநாதர் மேரி)

கருங்கால் தொகுதி

அரசு நடுநிலைப் பள்ளிகள்:

1. தேவிக்கோடு
2. கடமன்குழி
3. காஞ்சிராபுரம்
4. மாங்கறை
5. பறவை
6. வடக்கு வேங்கோடு
7. கீழ்குளம்
8. மாங்கன்றுவிளை.

தனியார் நடுநிலைப் பள்ளிகள்:

1. எனயம்
2. எழுவுவிளை
3. நட்டாளம்
4. துண்டத்திவிளை (புனித அந்தோனியார்)
5. வெள்ளியவிளை
6. ராமன்துறை
7. காட்டுக்கடை (புனித சூசையப்பர்)
8. கரும்பளை (புனித இக்னேசியஸ்)
9. மதிரவிளை (புனித ஜூடாஸ்)

அரசு தொடக்கப் பள்ளிகள்:

1. இழவுவிளை
2. இரெஸிபுரம்
3. காக்காவிளை
4. கருங்கால்
5. கீழ்க்குளம்
6. குஞ்சக்கோடு
7. கிள்ளியூர் (உள்ளூர்)
8. கிள்ளியூர் (எல்.எம்.)
9. கொடுங்குளம்
10. மேலமிடாளம்
11. மத்திக்கோடு
12. மார்த்தாண்டம்
13. மத்திக்கோடு
14. மூலங்குழி
15. முல்லங்கினவிளை
16. நாட்டாளம்
17. பாலூர்
18. பரம்பு
19. பூத்தேற்றி (எம்.வி.)
20. பூத்தேற்றி (எல்.எம்.)
21. தட்டான்விளை
22. திப்பிரமலை
23. உண்ணாமலைக்கடை
24. வடக்கன்கரை
25. வாழத்தோட்டம்
26. வாழித்தாளம்பள்ளம்
27. வீரிக்கோடு

தனியார் தொடக்கப் பள்ளிகள்:

1. அலஞ்சி (புனித ஃபிரான்சிஸ் சேவியர்)
2. கனவூர்
3. மிடாளம்
4. முள்ளங்கிவாவிளை
5. புத்தன்துறை
6. அரசன்குளம் (மதியாஸ் நினைவுப் பள்ளி)
7. பறவைஎனயம்
8. பள்ளியாடி
9. வழுத்தாலம்பள்ளம்
10. வேங்கோடு
11. மாங்கன்றுவிளை
12. விழுத்தணியம்பலம் (புனித சூசையப்பர்)
13. தொலையாவட்டை (புனித மேரீஸ்)
14. வலியவிளை (மாங்கரை)

உயர்நிலைப் பள்ளிகள்:

அரசு உயர்நிலைப் பள்ளிகள் (கல்வி மாவட்டம் வாரியாக)
நாகர்கோவில் கல்வி மாவட்டம்:

1. அரமநல்லூர்
2. ரவிப்புத்தூர்
3. இறச்சகுளம்
4. குலசேகரபுரம்
5. இலந்தையடிவிளை
6. மாதவலாயம்
7. பொற்றியூர்
8. இராமாபுரம்
9. திட்டுவிளை
10. திருப்பதிசாரம்
11. வடசேரி
12. நாகர்கோவில் (எஸ்.எல்.பி.) (பெண்கள்)
13. மீனாட்சிபுரம்
14. ஆனந்தபுரம்
15. ஒழுகினசேரி
16. வெள்ளமடம்
17. ஈழக்காரம்
18. சூரங்குடி மேற்கு

தக்கலை கல்வி மாவட்டம்:

1. அம்மாண்டிவிளை
2. சேருப்பாளூர்
3. திருநந்திக்கரை
4. வில்லுண்ணிக்கோணம்
5. தங்கம்புத்தூர்
6. ஆலூர்
7. ஆனந்தநாதர்குடி
8. சேரமங்கலம்
9. இலப்பநிலை
10. ஈத்தாமொழி
11. கொடுப்பை குழி
12. கல்குளம்
13. கந்தன்விளை
14. கண்ணாட்டுவிளை
15. கங்காளம்
16. புதூர்
17. புத்தேரி
18. பார்வதிபுரம்
19. இராசக்காமங்கலம்
20. சுண்டப்பற்றிவிளை
21. இரணியல்
22. கடியப்பட்டினம்
23. மூலச்சி
24. பறக்கை
25. வேயனூர்
26. பேயன்குழி
27. திருவரம்பு
28. திருவட்டார்
29. பெருவிளை
30. வில்லுக்குறி
31. வாத்தியார்கோணம்
32. பூவன்கோடு

குழித்துறை கல்வி மாவட்டம்:

1. புலியூர்சாலை
2. தேங்காய்ப்பட்டிணம்
3. உண்ணாமலைக்கடை
4. கீழ்க்குளம்
7. ஆத்தங்கோடு
8. நல்லூர்
9. உதயமார்த்தாண்டம்
10. மேல்புரம்

5. வெல்லங்கோடு
6. காஞ்சிராக்கோடு
11. ஆனந்தமங்கலம்

தனியார் உயர்நிலைப் பள்ளிகள்
(கல்வி மாவட்டம் வாயிலாக)

நாகர்கோவில் கல்வி மாவட்டம்:

1. நாகர்கோவில் (புனித ஃபிரான்சிஸ்)
2. நாகர்கோவில் (கங்கார்டியா)
3. நாகர்கோவில் (ஹோம் சர்ச் - பெண்கள் பள்ளி)
4. அழகப்பபுரம் (புனித சூசையப்பர் - பெண்கள் பள்ளி)
5. தடிக்காரன்கோணம் (இயேசுநாதர் நலப்பள்ளி)
6. மறவன்குடியிருப்பு (ஆரோக்யசாமி)

தக்கலை கல்வி மாவட்டம்:

1. காட்டாத்துறை (அரசு உதவி பெறும் பள்ளி)
2. தீர்ப்பரப்பு (தேவாசுவம்)
3. முட்டம் (ஆல் செயிண்ட்ஸ்)
4. முளகுமூடு
5. சாந்தபுரம் (எல்.எம்.எஸ். பெண்கள் பள்ளி)
6. முளகுமூடு (குழந்தை இயேசு)
7. குலசேகரம் (புனித உர்சுலாஸ்)
8. குன்னம்கல் (அரசு உதவி பெறும் பள்ளி)
9. பட்டாரிவிளை (புனித சேவியர்)
10. காரன்காடு (புனித அலோசியஸ்)
11. பள்ளம் (புனித ஜூடாஸ்)
12. நெய்யூர் (ஹாக்கர் நினைவுப்பள்ளி)
13. பேத்தல்புரம் (மெரீனா நினைவுப் பள்ளி)
14. சாரல் (புனித சூசையப்பர்)
15. இராதாபுரம் (பிராவிடன்ஸ் - பெண்கள் பள்ளி)
16. கடியப்பட்டினம் (இயேசுநாதர் இதயம்)
17. பிலார்கலை (புனித சூசையப்பர்)
18. செக்கால் (புனித பீட்டர்ஸ்)
19. மணலிக்காரை (கார்மல் - பெண்கள்)
20. வெள்ளியவிளை (புனித அலோசியஸ் - பெண்கள் பள்ளி)

குழித்துறை கல்வி மாவட்டம் :

1. குழித்துறை - தேவாசுவம்
2. அம்சி (தேங்காப்பட்டினம்)
3. அருக்காணி (கிறித்தவ திருக்கோயில் குடும்பம்)
4. முல்லங்கினவிளை (புனித அந்தோனியார்)
5. மொட்டக்காளை
6. வெங்கஞ்சி (ஆர்.ட்டி.எல்.எம்.எஸ்.)
7. கீராத்தூர் (மார்க்ரா கோரியஸ்)
8. நீட்டா (புனித மேரீஸ்)
9. துண்டத்துளை (புனித அந்தோனியார் - பெண்கள் பள்ளி)
10. கலியல் (புனித மேரீஸ்)
11. சூர்யக்கோடு (புனித ஆப்ரகாம்)
12. வெங்கோடு (புனித ஃபிரான்சிஸ்)
13. காப்பிக்காடு (புனித அந்தோனியார்)
14. காகோடு (இயேசுநாதர் இதயம்)
15. இலருவிளை (புனித அலோசியஸ்)
16. பிராக்கோடு (கிறிஸ்த்து இராசா)
17. கொடுங்குளம் (எம்.எஸ்.சி)
18. விளந்தையம்பலம் (புனித சூசையப்பர்)
19. அலஞ்சி (புனித ஃபிரான்சிஸ் சேவியர்)
20. இரேனிபுரம் (வி.வி. - பெண்கள் பள்ளி)
21. இனையன்புத்தன்துறை (புனித அந்தோனியார் பெண்கள் பள்ளி)
22. பள்ளியாடி (புனித ஜான் வியன்னிஸ்)
23. பால்விளை தெற்கு (ஸ்டீபன்)

சுருக்கம்

நாகர்கோவில் கல்வி மாவட்டம்:

அரசு நடுநிலைப் பள்ளிகள்		23
தனியார் நடுநிலைப் பள்ளிகள்		10
	மொத்தம்	33
அரசு தொடக்கப் பள்ளிகள்		59
தனியார் தொடக்கப் பள்ளிகள்		25
	மொத்தம்	84

தக்கலை கல்வி மாவட்டம்:

அரசு நடுநிலைப் பள்ளிகள்		56
தனியார் நடுநிலைப் பள்ளிகள்		33
	மொத்தம்	89

அரச தொடக்கப் பள்ளிகள்		84
தனியார் தொடக்கப் பள்ளிகள்		39
	மொத்தம்	123

குழித்துறை கல்வி மாவட்டம்:

அரசு நடுநிலைப் பள்ளிகள்		38
தனியார் நடுநிலைப் பள்ளிகள்		24
	மொத்தம்	62
அரசு தொடக்கப் பள்ளிகள்		75
தனியார் தொடக்கப் பள்ளிகள்		50
	மொத்தம்	125

கன்னியாகுமரி வருவாய் மாவட்டத்திலுள்ள மொத்த நடுநிலைப் பள்ளிகள்

அரசு		117
தனியார்		67
	மொத்தம்	184

தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை:

அரசு		308
தனியார்		114
	மொத்தம்	422

உயர்நிலைப் பள்ளிகள்:

	அரசு	*தனியார்*
நாகர்கோவில் கல்வி மாவட்டம்	18	6
குழித்துறை கல்வி மாவட்டம்	11	23
தக்கலை கல்வி மாவட்டம்	32	20
மாவட்டத்தின் மொத்த எண்ணிக்கை	61	49

மொத்த அரசு உயர்நிலைப் பள்ளிகள்	61
மொத்த தனியார் உயர்நிலைப் பள்ளிகள்	49
மாவட்டத்திலுள்ள மொத்த உயர்நிலைப் பள்ளிகள்	110

ஆசிரியர் பயிற்சி

ஆசிரியர்கள், சமுதாயத்தைத் தோற்றுவிப்பவராவர். ஒரு நாட்டின் தலைவிதி உண்மையிலேயே ஆசிரியர்களால், வகுப்பறைகளில் தான் வடிவமைக்கப்படுகிறது. அவ்வாறு அவர்கள் வடிவமைப்பதற்கு முன், அவர்களது மாணவர்களை முழுமையாகத் தயார் செய்திட, தங்களை அவர்கள் சரியான முறையில் தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு தமிழ்நாடு கல்வி விதிகளில் நிர்ணயித்துள்ள கல்வித் தகுதி, மேல்நிலைத் தேர்வில்

தேர்ச்சியும் (1987-க்கு முன்னர், இது இடைநிலைப் பள்ளி இறுதிச் சான்றில் தேர்ச்சி பெற்றிருத்தலாகும்), இடைநிலை கற்பிக்கும் திறனில் சான்றோ, அல்லது பல்கலைக்கழகப் பட்டச் சான்றிதழோ பெற்றிருத்தல் ஆகும்.

மாவட்டத்தில், மேல்நிலைக்கல்வி முறைப்படி, ''வாழ்க்கைத்தொழில்'' கல்வி முறையினைப் படித்து வரும் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை

தொடர் எண்.	வாழ்க்கைத் தொழில் கல்வி முறையின் பெயர்	முதலாண்டு		இரண்டாம் ஆண்டு	
		ஆண்கள்	பெண்கள்	ஆண்கள்	பெண்கள்
1.	வேளாண்மை	82	25	87	14
2.	பொறியியல்	574	30	420	5
3.	வணிகம் மற்றும் தொழில் கல்வி	496	566	354	436
4.	வீட்டுத்தொழில் அறிவியல்	--	77	--	36
5.	நல்வாழ்வு (உடல் நலம்)	37	385	74	374
6.	பிறகல்வி முறைகள்	--	--	--	--

ஒரு நடுநிலைப்பள்ளியின் தலைமை ஆசிரியர் ஒரு பட்டதாரி ஆசிரியராகவும், அல்லது ஒரு தமிழாசிரியராகவும் இருக்கலாம். அவர்களும் ஆசிரியர் பயிற்சி பெறவேண்டியவர்களாவர்.

உயர்நிலைப்பள்ளி வகுப்புகளுக்கு, கல்வி கற்பித்திட, ஆசிரியர் கலை மற்றும் அறிவியலில் பட்டம் பெற்றிருக்க வேண்டும். மேலும், ஆசிரியர் பயிற்சி பெற்று, அதற்கான "பி.எட்" சான்றினையும் பெற்றிருக்க வேண்டும். உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்களென அழைக்கப்படுகின்றனர். மேல்நிலைப்பள்ளி வகுப்பிற்குப் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்கள், பட்டம் பின் பெற்ற பயிற்சி பெற்றவர்களாவர். அவர்கள் பட்டம் பின்பயிற்சிச் சான்றுகளை, தொடர்புள்ள தலைப்புப் பொருள் பாடங்களில் அதாவது, எம்.ஏ., எம்.எஸ்.ஸி அல்லது எம்.காம். ஆகியவற்றில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். அத்துடன், "பி.எட்" ஆசிரியர் பயிற்சியினையும் பெற்றிருக்க வேண்டும்.

தொழில்நுட்பக் கல்வித் தகுதி பெற்ற ஆசிரியர்கள், மேல்நிலைப் பள்ளிகளில் வாழ்க்கைத் தொழில் தொடர்பான பொருள் குறித்து, கற்பிக்கின்றனர். உதாரணமாக, அலுவலக செயலாளர் நிலைப் பயிற்சியினை அவர்களுக்குஅளித்திட. ஒரு தொழில்நுட்ப ஆசிரியர் சான்று பெற்றிருப்பவரை நியமிக்கலாம். கணக்குவேலை மற்றும் தணிக்கை, வங்கி உதவியாளர் கல்வி முறை போன்றவற்றை போதித்திட. ஒரு பட்டதாரி அல்லது பட்டம் பின் பயிற்சி பெற்றவர் ஆகியோர் நியமிக்கப்படுகின்றனர்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களும், இயல்பான பயிற்சிப் பள்ளிகளை ஆதாரப் பயிற்சிப் பள்ளிகளாக மாற்றியமைத்தலும்

முந்தைய திருவாங்கூர் பேரரசு, அரசு சார்பில் பள்ளிகளைத் துவக்கியும், தனியார் நிறுவனங்களுக்கு உதவியளித்து அவர்களைப் பள்ளிகளைத் திறக்கச் செய்தும், கல்வித்துறையினை அமைத்தது. தொடர்ந்து, இயல்பான பள்ளிகள் திறக்கப்பட்டன. அவை குறித்த தகவல்கள் இந்த இயலின் குறிப்பிட்ட இடங்களில் கொடுக்கப்பட்டுள்ளன.

1956ஆம் ஆண்டு, மாவட்டம் அமைக்கப்பட்டபோது, கீழ்க்குறிப்பிட்ட ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் இயங்கி வந்தன: [130].

1. இடைநிலை ஆசிரியர் பயிற்சிக் கல்வித்தகுதிபெற, ஆண்களுக்காக இரண்டு அரசு மற்றும் ஒரு தனியார் இயல்பு பயிற்சிப் பள்ளிகள். இம்மூன்று பயிற்சிப் பள்ளிகளிலும், அவ்வாண்டு பயிற்சி பெற்றோர் 136 மாணவ மாணவிகள்.
2. இடைநிலை ஆசிரியர் பயிற்சிக் கல்வித் தகுதி பெறுவதற்கு மட்டும், பெண்களுக்காக ஒரு இயல்பு ஆசிரியர் பயிற்சி பள்ளி இயங்கிவந்தது. இப்பள்ளியில், 1956-57ஆம் ஆண்டு, 50 பெண்கள் பயிற்சி பெற்று வந்தனர்.
3. முதுநிலை ஆதாரப் பயிற்சி கல்வித் தகுதி பெறுவதற்கு மட்டும் ஆண்களுக்காக ஒரு அரசு ஆதார பயிற்சிப் பள்ளி இருந்தது. இப்பள்ளியில், 56 ஆண்களும், 15 பெண்களும் பயிற்சி பெற்றனர். இந்நிலை 1958-59 வரை தொடர்ந்தது. 1959-60-ல், நிறுவனங்களின் எண்ணிக்கை மாற்றம் வகை ஆகியவற்றில் மாறுபாடு காணப்பட்டது[131].

ஆதாரக் கல்வி குறித்த பொதுக்கருத்து வெகுவாகப் பரவியதால், பல இயல்பான பயிற்சிப் பள்ளிகள், ஆதாரப் பயிற்சிப் பள்ளிகளாக மாற்றம் பெற்றன. அதன் விளைவாக, 1959-60 ஆம் ஆண்டில், பயிற்சி நிறுவனங்களின் எண்ணிக்கை கீழ்க்கண்டவாறு பெருகியது:

1. இடைநிலைப் பயிற்சி பெறும் வாய்ப்புள்ள ஒரு இயல்பு தனியார் பயிற்சிப்பள்ளி இயங்கியது; அதில், 77 ஆண்களும், 112 பெண்களும் பயிற்சி பெற்றனர்.
2. முதுநிலை ஆதாரப் பயிற்சி பெறுவதற்கு மட்டும் வாய்ப்பளித்த இரு அரசு மற்றும் அரசு உதவி பெற்ற ஒரு தனியார் ஆதார பயிற்சிப்பள்ளிகள் ஆகியவை இயங்கின; அதில் 190 ஆண்களும், 82 பெண்களும் பயிற்சி பெற்றனர்.

3. முதுநிலை ஆதாரப் பயிற்சி பெறுவதற்கு மட்டும் வாய்ப்பளித்த ஒரு அரசு உதவி பெற்ற ஆதார பயிற்சிப்பள்ளி இயங்கியது. அதில் 98 பெண்கள் பயிற்சி பெற்றனர்.

இவ்வாறாக, இவ்வணைத்து பயிற்சிப் பள்ளிகளிலும் ஆதாரப் பயிற்சியின் முக்கியத்துவம் உணரப்பட்டு, பயிற்சியாளர்களது எண்ணிக்கை சிறிது சிறிதாக உயர்ந்தது.

1964-65 முதல் 1986-87 முடிய நிலை

1964-65ஆம் ஆண்டில், பெண்களுக்காக ஒரு இயல்பு அரசு பயிற்சி, பள்ளி இயங்கியது. அதில் 20 பெண்கள் பயிற்சி பெற்று வந்தனர். இது தவிர, ஆண்களுக்காக மூன்று அரசு ஆதார பயிற்சிப் பள்ளிகள் இயங்கின. இப்பள்ளிகளில் 531 ஆண்கள் பயிற்சி பெற்று வந்தனர். மேலும், அரசு உதவி பெற்ற ஆதார பயிற்சிப்பள்ளியொன்று, பெண்களுக்காக இயங்கியது. அப்பள்ளியில் 80 பெண்கள்பயிற்சி பெற்று வந்தனர். மொத்தத்தில், மூன்று அரசு பயிற்சிப் பள்ளிகளும், இரண்டு அரசு உதவி பெற்ற தனியார் பயிற்சிப் பள்ளிகளும் ஆக மொத்தம் ஐந்து நிறுவனங்கள் மாவட்டத்தில் இயங்கி வருகின்றன. 1973-74 ஆம் ஆண்டில் இவை நான்காகக் குறைந்தன[132]. இந்நான்கும், 1981-82 வரை தொடர்ந்து இயங்கின. 1982-83 முதல் இவை ஐந்தாக உயர்ந்தன[133]. இந்த ஐந்து பயிற்சிப் பள்ளிகளும் மாவட்டத்தில் 1955-க்கு முன்னர் நிறுவப்பட்டவையாகும். பள்ளிகளின் எண்ணிக்கை ஐந்திலிருந்து நான்காகக் குறைந்தமை, ஒரு சில ஆண்டுகளுக்கு ஒரு பள்ளி இயங்காமலிருந்ததினாலாகும்.

1988ஆம் ஆண்டில், கன்னியாகுமரி மாவட்டத்தின் நிலை

1988ஆம் ஆண்டில் மூன்று ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளும், இரண்டு தனியார் பயிற்சிப் பள்ளிகளும் இயங்கி வருகின்றன[134]. அவை தொடர்பான விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன:

1. அரசு மேல்நிலைப்பள்ளி மற்றும் பயிற்சிப் பள்ளி, குழித்துறை

இது 1943ஆம் ஆண்டு, நிறுவப்பட்டது. இந்நிறுவனத்தில் கல்வியளிக்கப் பயன்படுத்தப்படும் மொழி, "மலையாள"மாகும். இப்பள்ளியில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், கன்னியாகுமரி மற்றும் கேரள மாநிலம் எல்லை இவற்றிற்கிடையேயுள்ள பகுதிகளிலமைந்த, மலையாளத்தை போதனா மொழியாகக்கொண்ட பள்ளிகளின் தேவைகளை ஈடுசெய்கின்றனர். ஒவ்வொரு ஆண்டும் 40 மாணவர்கள் இந்நிறுவனத்தில் சேர்க்கப்படுகின்றனர். இது ஆண் பெண் இணைக் கல்வி முறை பின்பற்றக்கூடிய நிறுவனமாகும்.

2. அரசு ஆசிரியர்கள் பயிற்சிப் பள்ளி, குலசேகரம்

இந்த ஆசிரியர் பயிற்சிப் பள்ளி, 1955ஆம் ஆண்டு, சூன் மாதம் திறக்கப்பட்டது. இது ஆண்களின் பயிற்சிக்குரியதாகும். ஒவ்வொரு ஆண்டும் நாற்பது மாணவர்கள் பயிற்சிக்கு சேர்க்கப்படுகின்றனர்.

3. தேசிக விநாயகர் தேவஸ்தானம் மேல்நிலைப்பள்ளி மற்றும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி, நாகர்கோவில்

அரசு உதவிபெறும் இந்த தனியார் ஆசிரியர் பயிற்சிப்பள்ளி 1953ஆம் ஆண்டு, மே மாதம் நிறுவப்பட்டது. இந்நிறுவனம் ஆண்களுக்காக செயல்படுவதாகும். ஒவ்வொரு ஆண்டும் 40 ஆண்கள் பயிற்சிக்கு சேர்க்கப்படுகின்றனர்.

4. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அரசு மேல்நிலைப்பள்ளி மற்றும் ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, கோட்டார், நாகர்கோவில்

இந்நிறுவனம், 1850ஆம் ஆண்டிலேயே, ஒரு இயல்பான பள்ளியாக நிறுவப்பெற்ற, வரலாறு படைத்த நிறுவனமாகும். இந்நிறுவனம் முழுமையாக பெண்களுக்காகவே செயல்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும், 40 பெண்கள் இந்நிறுவனத்தில், மேல்நிலை ஆசிரியர் பயிற்சி தொடர்பாக, முறையாகப் பயிற்சி பெறுகிறார்கள்.

5. குழந்தை ஏசு ஆசிரியர் பயிற்சிப் பள்ளி, முலகுமோடு

இந்நிறுவனம், ஒரு கிறித்தவ சமயப்பரப்புக் குழுவினால் நடத்தப்படுகிறது. இது பெண்களுக்காகவே நடத்தப்படும் நிறுவனமாகும். இது 1937ஆம் ஆண்டு முதல் இயங்குகிறது. மேல்நிலை ஆசிரியர் பயிற்சிக்காக இது ஒவ்வொரு ஆண்டும் 40 பெண்களை அனுமதிக்கிறது.

இந்த ஐந்து ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களைத் தவிர, மேலும் 24 இணைக்கல்வி முறை மேல்நிலைப் பள்ளிகளும் ஆறு பெண்கள் மேல் நிலைப் பள்ளிகளும் இயங்குகின்றன. இப்பள்ளிகளில் பெண்களுக்கு, வாழ்க்கைத் தொழில் கல்வியாக, மேல்நிலை ஆசிரியர் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இந்த இயலின் "வாழ்க்கைத் தொழில் கல்வி முறை" என்ற தலைப்பில் மேலும் பல தகவல்கள் அளிக்கப்பட்டுள்ளன.

அங்கீகரிக்கப்பட்ட இந்நிறுவனங்கள் தவிர, சில அங்கீகரிக்கப்படாத நிறுவனங்களும் இயங்குகின்றன. அவை இந்திய அரசியல் சட்டத்தில் போற்றி வைத்து பேணக்கூடிய சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாக்கின்றன. பொதுவாக, அரசின் கொள்கை அவ்வாறான நிறுவனங்களின் திடீர் வளர்ச்சியினைத் தடை செய்வதேயாகும். ஏனெனில், இம்மாதிரியான நிறுவனங்களில் மாணவர்கள் அவர்களது தகுதியின் அடிப்படையில் சேர்க்கப்படுவதில்லை, அவர்கள் அளிக்கும் மிகப்பெரிய அளவிலான உதவித் தொகை மற்றும் இதர கட்டணங்களைப்

பொறுத்தே அவர்கள் பயிற்சியில் சேர்க்கப்படுகிறார்கள்; அவர்கள் பெறும் பயிற்சி தரமற்றதாக உள்ளதால், அவர்களது கற்பிக்கும் திறனும் தரம் குறைந்ததாகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில், அங்கீகாரம் பெறாத தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் கீழ்க்குறிப்பிட்ட இடங்களில் நிறுவப்பட்டுள்ளன[135].

1. வேலாயுத நகர்
2. மேலக்கும்மல்
3. செல்லன்குளம்
4. நாகர்கோவில்

மழலையர் பள்ளிகள்

மழலையர் பள்ளிகள், சிறுவர்களுக்குரிய விளையாட்டு முறை இடைநிலைக்கல்வி பள்ளிகள், உயர்நிலைக் கல்விப் பள்ளிகள், ஆகிய இரு வகைகள் உள. கன்னியாகுமரி மாவட்டத்தில் அங்கீகாரம் பெற்ற மூன்று மழலையர் பள்ளிகள் உள்ளன. அவையாவன:

1. டூத்தி மழலையர் பள்ளிகள்
2. எல்.எம்.எஸ். மழலையர் பள்ளிகள்
3. குழந்தை ஏசு சிறுவர் விளையாட்டு முறை கல்விப் பள்ளி

ஆனால், இவை தவிர அங்கீகாரம் பெறாமலோ, அல்லது கல்வித்துறையின் உதவி பெறாமலோ இயங்கும் மழலையர் பள்ளிகள் பல உள்ளன. எனினும், தனியார் கல்வியளிக்கும் முறையினை கல்விக்கொள்கை, அனுமதிப்பதால் அரசு அங்கீகாரம் பெறாமலேயே இப்பள்ளிகள் நன்கு இயங்குகின்றன. மழலையர் பள்ளிகள்/பெண் துறவியர் மடங்களின் பள்ளிகள் அல்லது பல்கலைக்கழக புகுமுக தேர்வு வகுப்புகள் ஆகியவற்றில் கல்வியளிக்கும் மொழி, ஆங்கிலமாகும். அவை, மாணவர்களிடமிருந்து மாதம் தோறும் கற்பிக்கும் கட்டணம் வசூலிக்கின்றன. அவற்றில் பல பள்ளிகள், மாணவர்களிடம் மிக அதிக கட்டணம் வசூல் செய்தே, தங்களது வருவாயினைப் பெருக்கிக் கொள்கின்றன. சில பள்ளிகள் அதிக அளவு உதவித் தொகை மாணவர்களிடம் கோருகின்றன. எனினும், அவை அவ்வாறு அதிக உதவித் தொகை வசூலிப்பதை நிறுத்த வேண்டுமென அரசு அவ்வப்போது எச்சரிக்கை விடுத்து வருகிறது.

குழந்தைகளைப் பேணி வளர்க்கும் பொது நிறுவனங்கள் மற்றும் பால்வாடிகள் ஆகியவை நடத்திட சமூகப்பணி நிறுவனங்களுக்கு, சமூக நலத்துறை கொடை அளித்து வருகிறது. அது பள்ளிப்படிப்புக்கு முந்தைய ஒரு விதமான குறிப்பாக ஏழைக் குழந்தைகளின் நலத்திற்கான

கல்விமுறையாகும். மாவட்டத்திலுள்ள மொத்த குழந்தைகளைப் பேணி வளர்க்கும் பொது நிறுவனங்கள் மற்றும் பால்வாடிகள் ஆகியவை தொடர்பான விவரங்கள், இவ்விரச் சுவடிகளின் "பிற சமூகப் பணிகள்" என்ற இயலில் அளிக்கப்பட்டுள்ளன.

அரசுத் தேர்வுகள் துறை

பத்தாம் வகுப்பு, (மேல்நிலைப் பள்ளி இறுதிச் சான்று) மேல்நிலை வகுப்புகள், பிற தொழில் நுட்ப மற்றும் கல்வி தொடர்பான பாடத்திட்டங்கள் குறித்து ஏறத்தாழ 40 தேர்வுகளை அரசுத் தேர்வுத்துறை நடத்துகிறது.

அரசுத் தேர்வுகளின் இயக்குநர் இத்துறையின் தலைவராவார். தலைமையிடத்தில் அவரது நேரடி மேற்பார்வையில் இரு இணை இயக்குநர்கள் பணியாற்றுகின்றனர். ஒருவர் அலுவலகப் பணியாளர் தொடர்பான தேர்வுகளிலும், மற்றொருவர் மேல்நிலைப்பள்ளித் தேர்வுகளிலும் அவருக்கு உதவிபுரிகின்றனர். பின்னவர், மேல்நிலைப் பள்ளித்தேர்வுகளுக்கான வாரியத்தின் செயலாளராவார். மற்றொருவர், மேல்நிலைப்பள்ளிக் கல்விப் பிரிவான வாழ்க்கைத் தொழில் கல்வி தொடர்புள்ள பணிகளை கவனிக்கிறார். செயலர், (இவர் மேல் நிலைக்கல்வி வாரியத்திற்கும் செயலராவார்), அரசின் தொழில் நுட்ப மற்றும் இதர தேர்வுகளை நடத்தும் பொறுப்பு வகிக்கும் நான்கு கூடுதல் செயலர்கள், பல்வேறு வகைப்பட்ட நிருவாக மற்றும் பணியாளர் தொகுதி குறித்த பணிகளைச் செய்துவரும் மூன்று தனி உதவியாளர்கள் ஆகியோரும் பணியாற்றி வருகின்றனர். இவர்கள் தவிர, அரசு புள்ளிவிவர மையத்துடன், தேர்வுகள் தொடர்பான பணிகள் குறித்து இணைப்பு அலுவலராகப் பணியாற்றிவரும் இயக்குநருக்கு உரிய உதவிகளையளித்து வருகிறார்.

மண்டல நிருவாகத்தினை கவனித்திட, மாநிலம் திருச்சிராப்பள்ளி, சென்னை, திருநெல்வேலி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய ஐந்து மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. திருநெல்வேலி தவிர ஏனைய மண்டல அலுவலகங்களுக்கு மண்டலத்துணை இயக்குநர்கள் தலைமை வகித்து வருகின்றனர். ஆனால், திருநெல்வேலி மண்டல அலுவலகம் மண்டல செயலரின் தலைமையில் இயங்குகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில், நிருவாக அமைப்பு முறை

கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி மண்டலத்தில் அடங்கியுள்ளது[137]. தேர்வுகள் நடத்துவதற்கான மையங்களைத் தேர்ந்தெடுத்தல், அவரவர்களது பகுதியிலுள்ள தேர்வு மையங்களுக்கு எழுது பொருட்களை எடுத்துச்சென்று வழங்குதல், அவரவர்களது பகுதிகளில் தனிப்பட்ட முறையில் பத்தாம் வகுப்பு (மேல்நிலைப் பள்ளி இறுதிச்சான்று) தேர்வு எழுதும் மாணவர்களின் விண்ணப்பங்களை

ஆய்ந்து தொடர் நடவடிக்கை மேற்கொள்ளல் ஆகிய பணிகள் குறித்து, மண்டல நிலை அலுவலர்கள் அரசுத் தேர்வு இயக்குநருக்கு உதவி புரிகின்றனர்.

தேசிய பணித்திட்டங்கள்

மாணவர்களிடையே தேசிய மற்றும் சமூக விழிப்புணர்வு ஏற்படுத்த, கல்லூரிகளிலும், மேல்நிலைப் பள்ளிகளிலும் தேசிய பணித்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டுள்ள ஒவ்வொரு விருப்பார்வத்தொண்டரும் , ஒரு ஆண்டிற்கு 120 மணி நேரங்களுக்குக் குறையாமல் பணியாற்றிட வேண்டும். உறுப்பினர் களுக்கான காலவரை இரண்டாண்டுகளாகும்.

கீழ்க்காணும் பல பகுதிப் பணிகளில், 240 மணி நேரங்களுக்குக் குறையாமல் பணியாற்றிட வேண்டும் :

1. முதியோர் கல்வி
2. பொது மக்களுக்குத் தொத்து நோய் தடுப்பு ஊசி, அம்மை ஊசி ஆகியவை செலுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளுதல்
3. மருத்துவ சோதனை முகாம்கள் நடத்துதல்
4. சுகாதாரம் மற்றும் உடல்நல இயல் பற்றிய பணி
5. இரத்த தானம் செய்தல்
6. அனாதை இல்லங்கள் மற்றும் தண்டனை நிறைவேற்றும் நிறுவனங்கள் ஆகியவற்றில் விருப்பார்வ பணியாற்றுதல்
7. உடல் ஊனமுற்றோர் மற்றும் இயலாதவர் ஆகியோருக்கு உதவுதல்
8. போக்குவரத்துக் கட்டுப்பாடு
9. புகைவண்டி நிலையங்களில் கட்டணச்சீட்டு சரி பார்த்தல்
10. திருக்கோவில்கள், குளங்கள் மற்றும் சுற்றுப்புறங்களை சுத்தம் செய்தல்
11. மரங்கள் நடுதல் மற்றும் மரங்களுக்கு நீர் ஊற்றுதல்
12. வீட்டுத்தோட்டத்தினைப் பராமரித்தல்
13. சாலை அமைத்தல்
14. ஏரிகள் மற்றும் கால்வாய்கள் ஆகியவற்றில் வண்டல் அகற்றுதல்
15. கிராமங்களைத் தத்தெடுத்தல்
16. நாகரீக நயமுள்ள மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகள்

உறுப்பினர்களாகப் பணியாற்றும் காலத்தில், 240 மணி நேரங்கள் முறையாக பணியாற்றுவது தவிர, திட்டத்தின் குறிப்பிட்ட அலுவலுக்காக,

நிறுவனங்களின் உயர்நிலை குழுக்களால், தனி முகாம்களும் அமைக்கப்படுகின்றன.

கல்லூரிகளிலும், உயர்நிலைப்பள்ளிகளிலும் செயல்திட்ட அலுவலர்களால் தேசிய பணித்திட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன.

கன்னியாகுமரி மாவட்டத்தில், தேசிய பணித்திட்ட அலகுகள், அனைத்து கல்லூரிகளிலும், பல்வேறு மேல்நிலைப் பள்ளிகளிலும் இயங்குகின்றன. தேசிய பணித்திட்டத்தில் ஆண்கள், பெண்கள் அனைவருமே உறுப்பினர்களாக சேர்க்கப்பட தகுதி உடையவராவர்.

கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மாநிலக்குழு

முன்னுரை

மாநிலக்கல்வி நிறுவனம், பள்ளிக்கல்வி இயக்குநரது கல்வி சார்ந்த அலகாக, ஜீலை 1, 1965 முதல், இயங்கத் துவங்கியது. இது, மே, 15, 1976 அன்று, கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி தேசிய குழுவுக்கு ஈடான கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மாநிலக்குழுவாக உயர்த்தப்பட்டது.

கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மாநிலக் குழுவின் செயற்பாடுகள்

கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மாநிலக் குழுவின் அலுவல்கள் நான்கு வகைப்பட்டவையாகும் அவை :

1. வேலையிலிருந்தே பயிற்சி பெறுதல்,
2. விரிவாக்கப் பணி,
3. ஆராய்ச்சிப் பணி மற்றும்
4. வெளியீட்டுப்பணி.

மாநிலத்தின் தலைமையிடமான சென்னையிலோ அல்லது சில சமயங்களில் மாவட்டத் தலைமையிடங்களிலோ, தொடக்க, நடுநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளி ஆசியர்களின் நலனுக்காக பொருட்காட்சிகள், கருத்தரங்குகள் மற்றும் வேலையிலிருந்தே பயிற்சி பெறுதல் ஆகியவற்றை, கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மாநிலக்குழு பொதுவாக நடத்துகிறது.

தொலைக் கல்வி

தொலைக் கல்வி அல்லது அஞ்சல் வழிக் கல்வி அல்லது தொடர் கல்வி என்பது, பிற இடங்களில் பணியாற்றுவதாலோ அல்லது தொலைதூர இடங்களில் தங்கி கல்லூரிப் படிப்பினை கவனிக்க இயலாததாலோ பகல் நேரங்களில் பள்ளிக்கோ, கல்லூரிக்கோ செல்ல இயலாமல் அவதியுறுவோருக்கு ஒரு வரப்பிரசாதமாகும்.

சென்னை பல்கலைக்கழகம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம் மற்றும் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஆகியவை, அஞ்சல் வழி மற்றும் தொடர்கல்வி பணியினை மேற்கொண்டுள்ளன. அவை, அடித்தளக் கல்விமுறை பட்டப்படிப்பு மற்றும் பட்டப் பயிற்சி, ஆகியவற்றினைத் தகுதியுள்ள நபர்களுக்கு அஞ்சல் மூலம் கற்றுக் கொடுக்கின்றன. இப்பல்கலைக்கழகங்கள் திறந்த வெளிப் பல்கலைக்கழகத் திட்டங்களையும் செயல்முறைப்படுத்துகின்றன. விருப்பம் தெரிவிக்கும் நபர்களுக்கு,திறந்த வெளிப் பல்கலைக் கழகத்தில், மேல்படிப்பினை தொடர்ந்திட, எவ்வித குறைந்த அளவு கல்வித் தகுதியினையும் நிர்ணயிக்காமல் பட்டக்கல்வி முறையினை அளிக்கின்றன.

இவைதவிர, இந்த பல்கலைக்கழகங்கள், அரசுத்தேர்வு இயக்குநரகம் மற்றும் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மாநிலக்குழு ஆகியவை, தனியார் மாணவர்களுக்குத் தொடக்கப் பள்ளி இறுதிச்சான்று, மேல்நிலைப்பள்ளி இறுதிச்சான்று மற்றும் மேல்நிலைத் தேர்வுகள் ஆகிய தேர்வுகளையும் நடத்துகின்றன. இத்திட்டத்தின்படி, ஒருவர் எவ்விதக்கல்வி அறிவுமின்றி ஒரு குறிபிட்ட வயதினை அடைந்தால் தொடக்கப் பள்ளி இறுதிச்சான்றுத் தேர்வு எழுத முடியும். தொடக்கப் பள்ளி இறுதிச் சான்று தேர்வில் தேர்ச்சி பெற்றோர் சொந்தமாக இடைநிலைப்பள்ளி இறுதிச் சான்று எழுதவும் பின்னர் மேல்நிலைக்கல்வித் தேர்வுகள் எழுதவும் தகுதியுடையவராகின்றனர்.

மாவட்டத்தில், தொலைக் கல்வித் திட்டத்தினால் பயனடைந்தோர் உள்ளனர். இக்கல்வி முறைப்படி படித்து சான்றிதழ் பெற்ற பல ஆசிரியர்கள், பணியாளர்கள், தொழில் நிறுவன உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் இம்மாவட்டத்தில் உள்ளனர்.

தேசிய மாணவ இளைஞர் படை

1948ஆம் ஆண்டு, தேசிய மாணவ இளைஞர் படை சட்டத்தின்படி (சட்ட எண்.31) தேசிய மாணவ இளைஞர் படை இங்கு துவக்கப்பட்டது. இச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர், கல்வி நிறுவனங்களில் தேசிய மாணவ இளைஞர் படையின் அலகுகள் துவக்கப்பட்டன. கல்வி நிறுவனங்களில் தேசிய மாணவ இளைஞர் படையினை அறிமுகப்படுத்தியதின் நோக்கம் யாதெனில், மாணவர்களிடையே, தேசிய ஆர்வ எழுச்சியினை ஊக்குவிப்பதும், தேசிய ஒருமைப்பாட்டினை மையக்கருத்தாகக் கொண்டுள்ள நாட்டுப்பாதுகாப்பின் முக்கியத்துவத்தை உணர்ந்து பாதுகாப்பிற்குத் தேவையான வழிமுறைகளை செயல்படுத்துதல் ஆகியவையுமேயாகும்[138].

தேசிய மாணவ இளைஞர் படை 1948-ல் அமைக்கப் பட்டதிலிருந்து, அவ்வியக்கத்தில் இடம்பெற்ற பெரிய வளர்ச்சிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

1948 தேசிய மாணவ இளைஞர்படை அமைப்பு மற்றும் படைப்பகுதி முதல்வர் நிலையில், படைக்கு இயக்குநர் நியமித்தல்;

1949 தேசிய மாணவ இளைஞர் படையில், பெண்கள் பிரிவு அறிமுகம் செய்தல்;

1950 தேசிய மாணவ இளைஞர் படையுடன் வான்படை அலகு சேர்த்தல்;

1952 தேசிய மாணவ இளைஞர் படையுடன் கப்பற்படை அலகு சேர்த்தல்; சமூகப்பணியினை, தேசிய மாணவ இளைஞர் படையின் ஒரு பகுதியாகச் சேர்த்துக் கொள்ளுதல்;

1953 (1) பள்ளிகளில் தேசிய மாணவ இளைஞர் படை அலகுகளுக்கான பல கோரிக்கைகளையொட்டி, துணை மாணவ இளைஞர் படையினை அறிமுகப்படுத்துதல்;

(2) தில்லியில் பிரதமரின் முதல் அணிவகுப்பு மரியாதை; அதுமுதல் ஒவ்வொரு ஆண்டும், சனவரி 27ஆம் நாள், பிரதமரின் அணிவகுப்பு மரியாதை ஆண்டுத் திருவிழாவாகத் கொண்டாடுதல்;

1954 இயக்குநரின் பதவியிடம், படைப்பகுதி முதல்வர் நிலையிலிருந்து படைப்பகுதித் தலைவர் நிலைக்கு உயர்த்தப்படுதல்;

1957 இதுகாறும் தேசிய மாணவர் இளைஞர் படை அலுவலர்களுக்கு, படை அணிவகுப்பு மையங்களில் பயிற்சியளிக்கப்பட்டது. தற்போது, தேசிய மாணவர் இளைஞர் படை அலுவலர்களுக்குப் பயிற்சி அளித்திட, தனியாக அலுவலர்கள் பயிற்சிப்பள்ளி நிறுவப்பட்டது;

1963 சீனாவின் தாக்குதலைத் தொடர்ந்து, கல்லூரிகளில் தேசிய மாணவர் இளைஞர் படைப்பயிற்சி கட்டாயமளிக்கப்பட்டது. தேசிய மாணவர் இளைஞர் படை இயக்குநர், இந்த ஆண்டு முதல் தலைமை இயக்குநர் என அழைக்கப்பட்டார்;

1968 கல்லூரிகளில், கட்டாய தேசிய மாணவர் இளைஞர் படைப்பயிற்சி நீக்கப்பட்டு, அது விருப்பார்வ பயிற்சியாக்கப்பட்டது;

1972 தேசிய மாணவர் இளைஞர் படை, சிறுவர் படைப்பிரிவிற்கு குறுகிய காலப் பயிற்சியளித்தல்;

1974. துணைப்படைப் பயிற்சியினைப் பெண்களுக்கும் விரிவாக்குதல்

1974 முதல் பெண்கள் படையணிப்பிரிவு உயர்த்தப்பட்டது;

1975 தேசிய மாணவர் இளைஞர் படை கப்பற்படை அலகினை பெண்கள் படைப் பிரிவிற்கும் விரிவாக்குதல்;

1978 பெண் படைகளுக்காக ஏற்கப்பட்ட, படைக்கலக்காப்புடைய படை வீரர்களுக்கான மருத்துவமனையுடன் இணைப்பு

1980 கனடா உலக இளைஞர் அமைப்புடன் முதல் இளைஞர் படைவீரர் பரிமாற்றத் திட்டம் அமைக்கப்பட்டது. பின்னர், 17 இளைஞர்கள் கனடா சென்றனர்:

1985 முதல் தேசிய மாணவர் இளைஞர் படை ஐந்தாண்டுத் திட்டம் (1985-90) நடைமுறைப்படுத்தப்பட்டது; தேசிய மாணவர் இளைஞர் படையைச் சார்ந்த இளைஞர்களுக்கு தொகுதி காப்பீட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது; படையைச் சார்ந்தோர் பயிற்சி காலத்தில், இறந்தாலோ, உடலில் நிலையான ஊனமேற்பட்டாலோ, அவர்களுக்கு காப்பீட்டின் சலுகையினைப் பெற தகுதியளிக்கப்பட்டது; மற்றும்

1986 தேசிய மாணவர் இளைஞர் படைப் பயிற்சி, மாண்புமிகு. பிரதம மந்திரியின் 20 அம்சத் திட்டத்தில் துணை அம்சமாக இடம் பெற்றுள்ளது.

முறையான அணிவகுப்புகள் மற்றும் பயிற்சிகள் ஆகியவை தவிர, தேசிய மாணவ, இளைஞர் படையின் கீழ்க்காணும் நடவடிக்கைகளும் மிக முக்கியமானவையாகும் :

1. ஆண்டுப் பயிற்சி முகாம்கள்
2. சுமையைத்தாங்கிச் செல்லுதல்
3. மரம் நடுதல், இரத்ததானமளித்தல், தொழுநோய் ஒழிப்பு நடவடிக்கை, வரதட்சிணை ஒழிப்பு நடவடிக்கை போன்ற சமூகப்பணி நடவடிக்கைகளில் ஈடுபடுதல்
4. இராணுவ மற்றும் கப்பற்துணைப் படைப் பயிற்சி
5. பொறியற்ற வானவூர்தியிற் பறத்தல்
6. கப்பற்படையெழுச்சி
7. மலையேற்றம்
8. பாறையேற்றம்
9. வில்லாண்மை/அம்பெய்தல்/சுடுதல்/வேட்டையாடுதல்
10. வீரச்செயல் புரியும் தலைமை முகாம்
11. ஆதிரத்தலைமை முகாம்
12. மைய அமைப்பு முகாம்
13. இயக்க அமைப்பு முகாம்

தேசிய மாணவர் இளைஞர் படையைச் சார்ந்த இளைஞர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சி, பிற இளைஞர் அமைப்புகளான தேசிய பணித்திட்டங்கள், விளையாட்டுகள் தொடர்பான இளைஞர் பணிக்குழு, சாரணர்படை ஆகியவற்றைச் சார்ந்த இளைஞர்களுக்கு அளிப்பது போன்றதல்ல. மாறாக, போர்வீரர்களுக்குப் பயிற்சி அளிப்பது போன்ற வீரச்செயல் வகையினைச் சார்ந்தது மற்றும் நாட்டுப்பற்றுடையதாகும். தேசிய மாணவர் இளைஞர் படையினருக்குப் பயிற்சியளிப்பது, மத்திய மற்றும் மாநில அரசுகளின் கூட்டுப் பொறுப்பாகும். தேசிய மாணவர் இளைஞர் படை, நிலையான படைத் துறையை வலிமைப்படுத்துவதற்காக வகுக்கப்பட்ட ஒரு துணைப்படையமைப்பாகும். இதில் கல்வித்துறை அலுவலர்களும், அமைப்பைச் சார்ந்த அலுவலர்களும் முக்கிய அங்கம் வகிக்கின்றனர்.

தமிழ்நாடு மாநிலத்தில், தேசிய மாணவர் இளைஞர் படை, சென்னையைத் தலைமையிடமாகக் கொண்ட துணைத்தலைமை இயக்குநரது தலைமையில் இயங்குகிறது. அவர், படைப்பகுதித் தலைவர் அல்லது பிற பணிகளில் அதற்கீடான பணியிடத்தினை வகிக்கிறார். அவருக்குப்பல சார்நிலை அலுவலர்கள் உதவி புரிகின்றனர்.

கன்னியாகுமரி மாவட்டத்தில், தேசிய மாணவர் இளைஞர் படை அமைப்பின் செயலாக்கம்

இம்மாவட்டத்தில், தேசிய மாணவர் இளைஞர் படை, ஆறு கல்லூரிகள் 19 மேல்நிலைப்பள்ளிகள் மற்றும் இரண்டு உயர்நிலைப்பள்ளிகள் ஆகியவற்றில் இயங்குகிறது. அவை, நாகர்கோவிலுள்ள தேசிய மாணவர் இளைஞர் படையின் படைத்தலைவரின் (தமிழ்நாடு அணிப்பிரிவு) நேரடிக் கட்டுப்பாட்டில் இயங்குகிறது. இந்த அணிப்பிரிவு, மதுரை-தேசிய மாணவர் இளைஞர் படை தலைமையிடத் தொகுதியின் பகுதியாகும். தேசிய மாணவர் இளைஞர் படைப்பிரிவு (துணை அலகு) இயங்கும் ஒவ்வொரு கல்வி நிறுவனத்திலும் பகுதி நேர அடிப்படையில் ஒரு தேசிய மாணவர் இளைஞர் படை அலுவலர் பணியாற்றி வருகிறார்.

நாகர்கோவிலிலுள்ள எண். 2 (தமிழ்நாடு) அணிப்பிரிவு, முதுநிலை மற்றும் இளநிலை ஆகிய இரு கோட்டங்களைக் கொண்டதாகும். முந்தையதில் 647 இளைஞர்களும், பிந்தையதில் 2,200 இளைஞர்களும் பயிற்சி பெறுகின்றனர். இவ்வணிப்பிரிவு துணைநிலை படைப்பகுதி முதல்வர் நிலையிலுள்ள ஒரு முறையான படை அலுவலரின் நேரடிப் பொறுப்பில் இயங்குகிறது. ஒவ்வொரு ஆண்டும் அளிக்கப்படும் இயல்பான பயிற்சி தவிர, இந்த அணிப்பிரிவு தேசிய ஒருமைப்பாடு முகாம், ஆண்டுப் பயிற்சி முகாம் போன்ற பல இணைப்பு முகாம்களையும் நடத்தி வருகிறது.

மனித ஆற்றல் (சக்தி)

மாவட்டத்திலுள்ள கல்லூரிகள், உயர்நிலைப்பள்ளிகள், மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் ஆகியவற்றின் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு நிறுவனத்திலும் பயிற்சி பெறும் இளைஞர்களின் எண்ணிக்கையும் அவற்றினெதிரே அளிக்கப்பட்டுள்ளது:

தொடர் எண்.	நிறுவனத்தின் பெயர்	பயிற்சி பெறும் இளைஞர்களின் எண்ணிக்கை
1.	புனித இந்து கல்லூரி, நாகர்கோவில்	120
2.	ஸ்காட் கிறித்துவக் கல்லூரி நாகர்கோவில்	92
3.	என்.எம்.சி. கல்லூரி, மார்த்தாண்டம்	120
4.	லெட்சுமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நெய்யூர்	75
5.	விவேகாநந்தா கல்லூரி, அகஸ்தீஸ்வரம்	80
6.	புனித ஜுட்ஸ் கல்லூரி, தூத்தூர்	160
	மொத்தம்	647
1.	புனித சூசையப்பர் மேல்நிலைப் பள்ளி, ஆசாரிப்பள்ளம்	100
2.	புனித அந்தோனியார் மேல்நிலைப் பள்ளி, அழகப்பபுரம்	100
3.	எஸ்.எல்.பி. அரசு மேல்நிலைப் பள்ளி, நாகர்கோவில்	100
4.	அரசு மேல்நிலைப் பள்ளி, மார்த்தாண்டம்	100
5.	அரசு மேல்நிலைப் பள்ளி, தக்கலை	100
6.	அரசு மேல்நிலைப் பள்ளி, இரணியல்	100
7.	டி.வி.டி. அரசு மேல்நிலைப் பள்ளி, கோட்டார்	100
8.	ரிங்கிள் ட்யூப் மேல்நிலைப் பள்ளி, மைலாடி	100
9.	ஸ்காட் கிறித்தவ மேல்நிலைப் பள்ளி, நாகர்கோவில்	200
10.	எஸ்.எம்.எஸ்.எம். மேல்நிலைப் பள்ளி, சுசீந்திரம்	100
11.	புனித மேரி கோரெட்டி மேல்நிலைப் பள்ளி, மணலிக்கரை	100
12.	அரசு மேல்நிலைப் பள்ளி, திருவிதாங்கோடு	100
13.	அரசு மேல்நிலைப் பள்ளி, ஆரல்வாய்மொழி	100
14.	புனித ஃபிரான்சிஸ் மேல்நிலைப்பள்ளி, வாவறை	100
15.	டி.சி.டி. மேல்நிலைப்பள்ளி, படன்தலுமோடு	100
16.	தேவாசுவம் மேல்நிலைப்பள்ளி, மண்டைக்காடு	100
17.	அரசு மேல்நிலைப் பள்ளி, மற்றும் ட்டி.ட்டி.எஸ்.	100
18.	அருணாசலம் மேல்நிலைப்பள்ளி, திருவட்டார்	100
19.	எல்.எம்.எஸ். மேல்நிலைப் பள்ளி, காடமலைக்குண்டு	100
	மொத்தம்	2000
1.	அரசு மேல்நிலைப்பள்ளி, வடசேரி	100
2.	புனித எப்ரெம்ஸ் எம்.எஸ்.சி. உயர்நிலைப் பள்ளி, சூரியக்கோடு	100
	மொத்தம்	200

தேசிய மாணவர் இளைஞர் படையின் முகாம்கள் மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் நடைபெற்றுள்ளன. முகாம்கள் தொடர்பான விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன.

தேசிய மாணவர் இளைஞர் படை முகாம்கள் இம்மாவட்டத்தில் நடைபெற்ற இடங்கள் மற்றும் அவற்றின் விவரங்கள் கீழ்வருமாறு :

தொடர் எண். (1)	முகாம் பற்றிய விவரம் (2)	முகாம் நடந்த இடம் (3)	முகாம் நடந்த காலவரை (4)
1.	ஆண்டுப்பயிற்சி முகாம், முதுநிலைப்பிரிவு (ஆண்கள்)	மார்த்தாண்டம்	14.01.1978 முதுல் 27.6.1978 முடிய
2.	ஆண்டுப்பயிற்சி முகாம் இளநிலைப் பிரிவு (ஆண்கள்)	மார்த்தாண்டம்	25.9.1978 முதல் 04.10.1978 முடிய
3.	ஆண்டுப் பயிற்சி முகாம், இளநிலைப்பிரிவு (ஆண்கள்)	நாகர்கோவில்	24.12.1978 முதல் 02.01.1980 முடிய
4.	ஆண்டுப் பயிற்சி முகாம், முதுநிலைப்பிரிவு (ஆண்கள்)	மார்த்தாண்டம்	16.07.1981 முதுல் 27.07.1981 முடிய
5.	ஆண்டுப் பயிற்சி முகாம், முதுநிலைப்பிரிவு (ஆண்கள்)	மார்த்தாண்டம்	24.12.1982 முதல் 04.01.1983 முடிய
6.	ஆண்டுப் பயிற்சி முகாம், இளநிலைப்பிரிவு (ஆண்கள்)	சுசீந்திரம்	02.10.1983 முதல் 11.10.1983 முடிய
7.	ஆண்டுப் பயிற்சி முகாம், இளநிலைப்பிரிவு (ஆண்கள்)	மார்த்தாண்டம்	30.09.1984 முதல் 09.10.1984 முடிய
8.	ஆண்டுப் பயிற்சி முகாம், வேளாண்மை சார்ந்தது – முதுநிலைப்பிரிவு (ஆண்கள்)	மார்த்தாண்டம்	24.12.1982 முதல் 04.1.1983 முடிய
9.	ஆதாரத் தலைமை பயிற்சி முறை, முதுநிலைப்பிரிவு (ஆண்கள்)	நாகர்கோவில், தக்கலை	24.5.1984 முதல் 06.6.1984 முடிய
10.	ஆண்டுப் பயிற்சி முகாம், இளநிலைப்பிரிவு (ஆண்கள்)	மார்த்தாண்டம்	26.9.1985 முதல் 05.10.1985 முடிய
11.	ஆண்டுப் பயிற்சி முகாம், முதுநிலைப்பிரிவு (பெண்கள்)	நாகர்கோவில்	08.6.1984 முதல் 28.6.1984 முடிய
12.	ஆண்டுப் பயிற்சி முகாம், முதுநிலைப்பிரிவு (ஆண்கள்)	நாகர்கோவில்	22.5.1986 முதல் 31.5.1986 முடிய
13.	ஆண்டுப் பயிற்சி முகாம், முதுநிலைப்பிரிவு (ஆண்கள்)	மார்த்தாண்டம்	24.12.1986 முதல் 05.1.1987 முடிய
14.	ஆண்டுப் பயிற்சி முகாம், இளநிலைப்பிரிவு (ஆண்கள்)	மார்த்தாண்டம்	24.12.1986 முதல் 05.1.1987 முடிய
15.	தனிஆண்டுப் பயிற்சி முகாம், முதுநிலைப்பிரிவு (ஆண்கள்)	எம்.எம்.சி.கல்லூரி, மார்த்தாண்டம்	09.6.1986 முதல் 20.6.1986 முடிய
16.	தேசிய ஒருங்கிணைப்பு முகாம், இளநிலைப்பிரிவு (ஆண்கள்)	மார்த்தாண்டம்	27.9.1987 முதல் 06.10.1987 முடிய
17.	தேசிய ஒருங்கிணைப்பு முகாம், இளநிலைப்பிரிவு (ஆண்கள்)	நாகர்கோவில்	14.5.1988 முதல் 23.5.1988 முடிய

**** படைத் தலைவர், தேசிய மாணவர் இளைஞர் படைத் தொகுதித் தலைமையகம், மதுரை, அறிக்கை நாள் 31.10.1988.*

ஆண் சாரணர் மற்றும் பெண் வழிகாட்டிகள்

சமூகப் பணிகளிலும் நாட்டுப் பணிகளிலும் தன்னார்வத்துடன் மாணவர்கள் ஈடுபட அவர்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்முகத்தான், கல்வி நிறுவனங்களில் நிறுவப்பட்டுள்ள சமூகப்பணி அமைப்புகள்தான் ஆண் சாரணர் மற்றும் பெண் வழிகாட்டிகள் இயக்கங்களாகும். பல நடுநிலைப்பள்ளிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும், "சாரணர்"களும், "வழிகாட்டி"களும் பொதுப்பணியிலீடுப்பட்டு இயங்கி வருகின்றனர்.

மக்கள் விரும்பும் தொடர்பு சாதனங்களும் கல்வியும்

மாணவர்கள் தங்களது பொது அறிவினை வளர்த்துக் கொள்ளவும், பல தலைப்புப்பொருள் பாடங்களில் கவனம் செலுத்தி, அரசு வகுத்துள்ள பாடத்திட்ட அமைப்பினைப் பின்பற்றி கல்வியறிவினைப் பெற்றிடவும், கல்வித்துறை மக்களிடையே விரிந்து பரந்த செய்தித்தொடர்பு சாதனங்களான வானொலி மற்றும் தொலைக்காட்சி ஆகியவற்றை நன்கு பயன்படுத்தி வருகிறது.

ஆசிரியர்களுக்கும் பல செயலாக்கத்திட்ட நிகழ்ச்சிகளும், புதுமுறை ஆதரவும் பயிற்சிகளும் இச்சாதனங்கள் மூலம் அளிக்கப்படுகின்றன. பள்ளி நேரங்களில் கல்வி நிகழ்ச்சிகளை மாணவர்கள் கேட்டுப் பயன்பெற, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளுக்கும் வானொலிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. 1981-82ஆம் ஆண்டின் நிலவரப்படி, மாவட்டத்தில் 150 மேல்நிலைப் பள்ளிகளுக்கும், 130 நடுநிலைப் பள்ளிகளுக்கும், 367 தொடக்கப் பள்ளிகளுக்கும் வானொலிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. நாகர்கோவிலில் உள்ள வானொலி நிலையம் உள்ளிட்ட அனைத்து வானொலி நிலையங்களும் அவைகளுக் குள்ள நிகழ்ச்சிகளை, மாணவர்கள் பயனுறும் வண்ணம் ஒலிபரப்பு கின்றன. கல்வியைப் பரப்பிட சில செய்தித்தாள் வெயிடுவோரும் தங்களாலியன்ற முயற்சிகளை மேற்கொள்கின்றனர். சிறு இடைவெளிகளில், மாதிரி வினா-விடைத் தாள்களை தினந்தோறும் செய்தித் தாள்களில் வெளியிட்டு, அவ்வாறாக மாணவர்களை இடை நிலைப்பள்ளி இறுதிச்சான்று ஆகிய தேர்வுகளுக்குத் தயார் செய்கின்றனர்.

உடற்கல்வி

உடல் சார்ந்த கல்வி, பள்ளிப் பாடத்தொகுதியில் ஒருங்கிணைந்த பகுதியாகும். முழுநலம் வாய்ந்த உடலே, ஊறுபடாத உணர்வு நிலையாகுமாதலால் உடல் சார்ந்த கல்வியே நலமுள்ள உடல் நலம் பேண உதவும். அஃது உடற்பயிற்சியளிப்பதை ஊக்குவிக்கிறது. மேலும், பள்ளிகளுக்கிடையேயான, மாவட்டங்களுக் கிடையேயான மற்றும் மாநில அளவிலான விளையாட்டுகள் மற்றும் திறமைப் போட்டிப் பந்தயங்கள் ஆகியவற்றை அது வெற்றியுடன் நடத்தி, பல்வேறு பயிற்சிகளை ஊக்குவிப்பதால், அதுவும் உடற்பயிற்சியாலேற்படும் பண்பு வளக்கல்வி யாகும். நான்காவது வகுப்பிலிருந்து, ஒன்பதாவது வகுப்பு வரை உடற்

சார்ந்த கல்வி கட்டாயக் கல்வியாக்கப்பட்டுள்ளது. ஒரு மாணவனைக் கீழ் வகுப்பிலிருந்து, மேல் வகுப்பிற்கு உயர்த்தும் பொழுது, உடற் சார்ந்த கல்வி, அவரது செயலாக்கம் கணக்கிலெடுத்துக் கொள்ளப்படுகிறது.

1916 ஆம் ஆண்டிலிருந்தே உடற் கல்வித்துறை, வரலாறு படைத்துள்ளது. அப்போதுதான், உடற் கல்விக்காக அரசின் ஆலோசகர் நியமிக்கப்பட்டார். இப்பணியிடம் 1949 ஆம் ஆண்டு வரை, தொடர்ந்தது. அப்போது,அப்பணியிடத்தின் பெயர், உடற் சார்ந்த கல்வியின் முதன்மை ஆய்வாளரென திருத்தியமைக்கப்பட்டது. பெண்களின் உடற் கல்வி தொடர்பான நிருவாகம், கட்டுப்பாடு, ஆய்வு ஆகியவற்றை மேற்கொள்ள, பெண்கள் உடற் கல்வி சார்ந்த வல்லுநர் பணியிடமும் இயங்கியது.

உடற்கல்வி முதன்மை ஆய்வாளர்

ஆண்கள் பள்ளிகள் மற்றும் இணைக்கல்வி முறைப்பள்ளிகள் ஆகியவற்றில், உடற் கல்வியின் மாநில அளவிலான தலைமை அலுவலர், உடற் கல்வியின் முதன்மை ஆய்வாளராவார். மண்டல அளவில் அவருக்கு உடற் கல்வி மண்டல ஆய்வாளர் துணை புரிந்து வருகிறார்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் உடற் கல்வி

உடற் கல்வித் துறையில் வருவாய் மாவட்டம், மண்டலங்களில் ஒனறாக உளது. உடல் நலம் சார்ந்த மண்டல ஆய்வாளர் அதனுடைய தலைமை அலுவலராவார். அவரது முதன்மையான அலுவல் அப்பள்ளிகளைப் பார்வையிட்டு, மாவட்டத்தில், உடற் சார்ந்த கல்வியினை ஓரினப்படுத்துவதாகும். ஒவ்வொரு உயர்நிலைப் பள்ளியிலும் சில இடைநிலைப்பள்ளிகளிலும், உடற் கல்வி ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர். உடற் கல்வியில், பல்கலைக் கழகப் பட்டச்சான்று பெற்றோரும், இயல்புச் சான்று பெற்றோரும் உள்ளனர். மேல்நிலைப் பள்ளிகளில், உடற் கல்வி ஆசிரியரின் கல்வித் தகுதிச் சான்று, கலை அல்லது அறிவியலில் ஒரு பட்டமும், உடற் கல்வியில் பட்டப்பின் பயிற்சியுமாகும். உயர்நிலைப் பள்ளிகளில், உடற் கல்வி அசிரியரின் கல்வித் தகுதி, அறிவியல் அல்லது கலையில், ஒரு பட்டமும் உடல் சார்ந்த கல்வியில் ஒரு பட்டமுமாகும்.

உடற் கல்வியின் முதன்மை பெண் ஆய்வாளர்

மாநில அளவில், பெண் பள்ளிகளுக்கு உடற் கல்விப் பொறுப்பினை முதன்மை (பெண்) ஆய்வாளர் ஏற்கிறார். அவருக்கு மண்டல (பெண்) ஆய்வாளர் உதவி புரிந்து வருகிறார். மண்டல அளவிலான நான்கு மண்டல (பெண்) ஆய்வாளர்கள் மதுரை, கோயம்புத்தூர், சென்னை மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் பணியாற்றி வருகிறார்கள்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் பெண்களிடையே உடற் கல்வி வளர்ச்சி

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பெண்கள் பள்ளிகள் மதுரையிலுள்ள உடல் கல்வி மண்டல பெண் ஆய்வாளரின்

எல்லைக்கட்டுப்பாட்டிலியங்கி வருகின்றன. மதுரை மண்டலம், ஜனவரி, 31, 1978-ல் நிறுவப்பட்டது[139].

கன்னியாகுமரி மாவட்டம் தவிர, மதுரை, திண்டுக்கல்-அண்ணா, வ.உ.சிதம்பரனார், திருநெல்வேலி கட்டபொம்மன், இராமநாதபுரம், காமராசர் மற்றும் பசும்பொன் முத்துராமலிங்கம் ஆகிய மாவட்டங்கள் மதுரை மண்டல எல்லைப் பகுதியில் அடங்கியுள்ளன.

பள்ளிகளில் பணியாற்றும் உடற் கல்வி ஆசிரியர்கள், நாள் தோறும் படைப்பயிற்சி மற்றும் உடற்பயிற்சி ஆகியவற்றை மாணவர்களுக்கு கட்டாயப் பாடமாகக் கற்பித்து வருகின்றனர். இது தவிர, ஊக்கம் நிறைந்த மற்றும் தகுதியுள்ள மாணவர்கள், பல்வேறு வகைப்பட்ட உடற்பயிற்சி தொடர்பான நிகழ்ச்சிகள் மற்றும் விளையாட்டுகள் ஆகியவற்றில் சேர்க்கப்பட்டு, பலநிலைகளில் நடத்தப்படும் போட்டிகளில் கலந்து கொள்ள, திறமையாகப்பயிற்சியளிக்கப்படுகின்றனர். ஒவ்வொரு ஆண்டும், ஒவ்வொரு பள்ளியிலும் ஆண்டு விளையாட்டுப் போட்டி நடத்தப்பட்டு, ஒவ்வொரு விளையாட்டுப் போட்டியிலும், உடற்பயிற்சிப் போட்டியிலும் வெற்றி பெற்றோருக்கு, பள்ளி அளவிலான பரிசுகளும், சான்றுகளும் வழங்கப்படுகின்றன.

உடற் கல்வித்துறை, மாநில அளவில் குடியரசு நாள் விளையாட்டுப் போட்டிகள் நடத்துகிறது. மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதற்கு வசதியாக, ஒவ்வொரு ஆண்டும் ஒரு மாவட்டம் வீதம், சுழற்சி முறையில், போட்டிகளுக்கான பந்தய இடம் தேர்வு செய்யப்படுகிறது.

போட்டிப்பந்தயங்களில் போட்டியாளர்கள் கலந்து கொள்ளுமுன்னர், விளையாட்டுகளையும், உடற்பயிற்சிகளையும் பல நிலைகளில் நடத்தி, இறுதியாகக் குடியரசு நாள் பந்தயத்தில் கலந்துகொள்ளும் போட்டியாளர்களின் பட்டியல் சுருக்கப்படுகிறது.

முதல்நிலை, மண்டல போட்டிப் பந்தயமென அழைக்கப்படுகிறது. அதில் 10 பள்ளிகள் பங்கு கொள்கின்றன. ஒவ்வொரு கல்வி மாவட்டமும் மாணவர்களுக்கு நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்படுகின்றது. அடுத்த நிலை, கல்வி மாவட்ட நிலை போட்டியாகும். இதில், நாகர்கோவில், குழித்துறை மற்றும் தக்கலை ஆகிய மூன்று கல்வி மாவட்டங்கள் பங்கு கொள்கின்றன. அடுத்தது கோட்ட அளவிலான போட்டியாகும். இதில், ஒவ்வொரு வருவாய் மாவட்டமும், ஒரு மண்டலமாக அமைக்கப்படுகிறது. கோட்டங்களுக்கிடையேயான போட்டி கோட்ட அளவிலான பந்தயம் முடிந்தபின், நடத்தப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டம், கோட்டங்களுக்கிடையேயான பந்தயத்தில் கலந்துகொண்டு, திருநெல்வேலி - கட்டபொம்மன் மாவட்டத்துடன் மோதுகிறது.

இறுதியில், மாநில அளவிலான குடியரசு நாள் போட்டிப் பந்தயம் இடம் பெறுகிறது, வழக்கமாய், குடியரசு நாளையொட்டி நடைபெறுகிறது.

இப்போட்டி பந்தயங்கள் யாவற்றிலும் பத்தாம் வகுப்பில் படிக்கும் மாணவர்கள் வரை (இடைநிலைப்பள்ளி இறுதிச் சான்று) கலந்து கொள்ளத் தகுதியுள்ளவர்கள். ஆனால், மேல்நிலைக்கல்வி வகுப்புகளில் படிக்கும் மாணவர்கள், உடற்பயிற்சி விளையாட்டுகளில் மட்டும் கலந்து கொள்ளத் தகுதியுடையவராகின்றனர். எனவே, மேல்நிலைக் கல்வி அளவிலான மாணவர்களுக்கு, மாநில அளவில் ஒரு தனி விளையாட்டுப்போட்டி 1981-83-ல் நடத்தப்பட்டது. அதனிலிருந்து அம்மாதிரியான மாநில அளவுப் போட்டி ஒவ்வொரு ஆண்டும் நடைபெற்று வருகிறது. இப்போட்டி, "பாரதியார் நாள் விளையாட்டுப் போட்டி" என அழைக்கப்படுகிறது. பாரதியார் பிறந்த நாளை நினைவு கொள்ளுமுகத்தான், இது ஒவ்வொரு ஆண்டும் நடத்தப் பெறுகிறது.

மேல்நிலைக்கல்வி பயிலும் மாணவர்களுக்கு, இப்போட்டி, மண்டல, கல்வி மாவட்ட மற்றும் கோட்ட அளவிலான போட்டிகள் நடந்து முடிந்த பின்னரே நடத்தப்படுகிறது.

பரிசுப்பணத் திட்டம்

பள்ளிகளில் விளையாட்டுகளையும், வேடிக்கைகளையும் ஊக்குவித்திட, 1986-87-ல் மைய அரசு ஒரு திட்டத்தினை அறிமுகப்படுத்தியது. அத்திட்டத்தின்படி, போட்டிகளில் வெற்றிபெறும் மாணவ, மாணவியர் கல்வி பயிலும் பள்ளிகளுக்கு ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திற்கும், ஆண்களாயின் ஓராண்டிற்கு ரூபாய் 50,000/-மும், பெண்களாயின் ரூபாய் 40,000/-மும் ஒதுக்கப்படுகிறது. பள்ளிகளின் விளையாட்டுத் திடல்களை மேம்படுத்தவும் விளையாட்டுப் பொருட்கள் வாங்கிடவும், இப்பரிசுப் பணம் பயன்படுத்தப்படுகிறது. இப்பரிசுப் பணத்தை வழங்கிட, பள்ளி நிலை, கல்வி மாவட்ட நிலை மற்றும் வருவாய் மாவட்ட நிலைகளிலான போட்டிகள் நடத்தப் பெற்று, வெற்றி பெற்ற பள்ளிகளுக்கு பரிசுப்பணம் வழங்கப்படுகிறது.

"பாராதீயன்"

"பாராதீயன்" என்ற இந்திய-ருசிய உடற்பயிற்சிகள் சார்ந்த கட்டுப்பாட்டுப் பயிற்சி அமைப்பு முறை, பள்ளிகளில் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. 1988ஆம் ஆண்டு, ஆகஸ்ட் மாதம், 12 உடல் சார்ந்த கல்வியளிக்கும் ஆசிரியர்களுக்கு, அரைத்திங்கள் காலத்திற்கு குவாலியரில் பயிற்சியளிக்கப்பட்டது. இந்த 12 ஆசிரியர்களும் பயிற்சி முகாம்கள் நடத்தி, இம்மாநிலத்திலுள்ள ஏனைய உடற்கல்வி ஆசிரியர்களுக்கு முறையாகப் பயிற்சியளித்திடப் பணிக்கப்பட்டார்கள். அனைத்து உடற் கல்வி போதிக்கும் ஆசிரியர்களுக்கும் பயிற்சி யளிக்கப்பட்ட பின்னர், பள்ளிகளில் "பாராதீயன்" அறிமுகப்படுத்தப்பட விருக்கிறது.

உடல் சார்ந்த கல்வியின் விரிவான நோக்கங்கள் பின்வருமாறு:[140]

1. இளைஞர்களை உடல் வலிமையுடையவர்களாகவும், உடற்தகுதி,

உழைப்பாற்றல், துணிவு, மற்றும் ஒழுக்கம் ஆகியவற்றை உடையவர்களாகவும் உருவாக்குதல்;

2. உடனொத்த மனிதர்களின் வாழ்க்கை, மற்றும் அன்பு ஆகியவற்றின் விலைமிக்க மதிப்பினையுணர்ந்து போற்றும் மனப்பான்மையினை மாணவர்களிடையே வளர்த்தல்; மற்றும்

3. நல்ல உடலமைப்பினைப் பெற்ற மாணவர்கள், பல்வேறு நாடுகளுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகள் மற்றும் வேடிக்கைகளில் பங்கேற்கும் வாய்ப்பினைப் பெறுவதால், அவர்கள் அப்போட்டிகளில் வெற்றி பெற முடிகிறது, அப்படி வெற்றி பெறுவதால், அது நம் நாட்டிற்கு நற்பெயர் ஈட்டி, பிற நாடுகளின் நடுவில், நமது நாட்டின் பெருமையைப் பெரிதும் உயர்த்துகிறது.

ஆறிலிருந்து ஒன்பது வரையிலான அனைத்து வகுப்புகளுக்கும் உடல் கல்வி சார்ந்த பாடத்திட்டம், எட்டு பெரிய செயலாக்கத் தலைப்புகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவையாவன:

1. அணிவகுப்பு;
2. உடற்பகுதி சீராக்கப் பயிற்சிகள்;
3. திணைத்தோன்றலான உடற்பயிற்சிகள்;
4. யோகாசனங்கள்;
5. விளம்பரத் தந்திரங்கள், பட்டைக்கூம்பு வடிவுடைய விளையாட்டுகள்;
6. ஆதார விளையாட்டுத் திறம் மற்றும் உடற்பயிற்சி விளையாட்டுகள்;
7. தொகுதி உடற்பயிற்சி வேடிக்கைகள்; மேலும்
8. விளக்கு வேடிக்கை, ஒசையெழக்கூடிய விளையாட்டுகள்.

நீச்சல், இரு சக்கர மிதி வண்டி ஓட்டுதல் , படகு ஓட்டுதல், சிலம்பாட்டம் ஆடுதல், பனிச் சறுக்கு ஆட்டம், குதிரையோட்டம், மலையேறுதல் மற்றும் தனிப்பட்ட தற்காப்புக் கலைகள் ஆகியவையும் இப்படிப்பட்ட உடற்கல்வி சார்ந்த ஆட்டங்களுக்கு எங்கெங்கு வசதிகள் உள்ளனவோ, ஆங்காங்கு விருப்ப ஆட்டங்களாகக் கற்றுக் கொடுக்கப்படுகின்றன.

பள்ளிகளில், இவ்வாறான உடற் கல்வித்துறை தவிர, "விளையாட்டுக்கள் துறை" என்ற தனித்துறையும் இயங்குகிறது. மாநில அளவில் இயக்குநரும், மாவட்ட அளவில் மாவட்ட விளையாட்டுக்கள் அலுவலரும் இத்துறைக்குப் பொறுப்பு வகிக்கின்றனர். இத்துறை, மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவில் விளையாட்டுக்களையும், உடற்பயிற்சி தொடர்பான வேடிக்கை களையும் நடத்துகிறது.

தமிழ்நாடு அரசிடமிருந்து நிதியுதவி பெற்று, விளையாட்டுக்கள் துறை இயக்குநர், குறிப்பிட்ட இடைவெளிகளில், ஒவ்வொரு

மாவட்டத்திலும் சுழற்சி முறையில் விளையாட்டுக்களை நடத்துகிறார். இது, மாநிலங்களுக்கிடையேயான போட்டிப் பந்தயங்களென அழைக்கப்படுகிறது. இதில் ஒவ்வொரு மாநிலத்திலுள்ள விளையாட்டு வீரர்களும், வீராங்கனைகளும் கலந்து கொள்கிறார்கள். அப்படியொரு போட்டிப் பந்தயம் 1985-86 ஆம் ஆண்டு, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் நடைபெற்றது. அதில், பல நிகழ்ச்சிகளில் தமிழ்நாடு முதலிடங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் கல்வி வளர்ச்சி

சமயப்பரப்பாளர்களின் கல்வி தொடர்பான நடவடிக்கைகளினாலும், குக்கிராமங்களில் கூட எண்ணிலடங்காத் திண்ணைப் பள்ளிகள் இயங்கி வந்ததாலும், முந்தைய திருவாங்கூர் மாநிலம், மற்ற மாநிலங்கள் மற்றும் இந்திய துணைக் கண்டத்தின் ஏனைய மாகாணங்கள் ஆகியவற்றுடன் ஒப்பிடுகையில், கல்வியறிவில் முதலிடம் வகித்தது. 1931 ஆம் ஆண்டின் மக்கட்தொகை தொகுப்பவர், கீழ்க்கண்டவாறு எழுதுகிறார்[141].

"பர்மா, கொச்சி மற்றும் திருவாங்கூர் ஆகியன, இந்தியாவிலுள்ள மற்ற மாகாணங்களை விட, கல்வியறிவில் உயர்ந்து நிற்கின்றன. பல துறவியர் மடங்கள் தொடர்பான பள்ளிகளில், புத்த சமயத்தைச் சார்ந்த மக்கள் அனைவரும் முறையாகப் பயின்று பர்மா கல்வியறிவில் முன்ன ணியில் நிற்பதற்கு வழி வகுத்தார்கள். கொச்சியிலும், திருவாங்கூரிலும் பண்டைக் காலத்திலிருந்தே, மக்கள் தனி கவனம் செலுத்தி வந்தார்கள்.

இந்நிலை தற்போதும் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. கல்வி கற்றோரில் அதிக அளவு மக்கட்தொகையினைக் கேரள மாநிலம் பெற்றுள்ளது. அங்கு கல்வி கற்றோரின் விழுக்காடு 69.17 ஆகும் [142].

தமிழ் நாட்டில் கன்னியாகுமரி மாவட்டம், தொடக்கத்திலிருந்தே, உயர்ந்த அளவு கல்வி கற்றோரைக் கொண்ட, மரபுரிமைப் பண்பினைக் கடைப்பிடித்து வருகிறதென்பதை மறுபடியும் கூறவேண்டியுள்ளது. இது (1986) தமிழ்நாடடின் புள்ளிவிவரக் கையேட்டில் உள்ள கீழ்க்கண்ட வாறான விவரங்களிலிருந்து மெய்ப்பிக்கப்படுகிறது.

அண்மையில் எடுக்கப்பட்ட (1981) மக்கட்தொகை கணக்கெடுப்புப்படி, மாவட்டத்தில் கல்வி கற்ற மக்களின் விழுக்காடு 63.8 ஆகும். இதில் ஆண்களின் விழுக்காடு 68.55 பெண்களின் விழுக்காடு 59.08 ஆகும்[143].

1901, 1961, 1971 மற்றும் 1981 ஆகிய ஆண்டுகளில் கல்வி கற்றோரின் நிலையினை, கீழ்க்குறிப்பிட்ட பட்டியல்கள் சித்தரிக்கின்றன:

பட்டியல்

மாவட்ட மக்கட்தொகையில் கல்வியறிவு பெற்றோர் எண்ணிக்கை

மாநிலம் / மாவட்டம் (1)		மொத்த மக்கட்தொகை			கல்வியறிவு பெற்ற மக்கட்தொகை		
		மொத்தம் (2)	ஆண்கள் (3)	பெண்கள் (4)	மொத்தம் (5)	ஆண்கள் (6)	பெண்கள் (7)
தமிழ்நாடு மாநிலம்	மொ	48408077	24487624	2392453	22637659	14267331	8370328
	கிராம	32456202	16334231	1612971	12516223	8356454	4159769
	நகர்	15951875	8153393	779482	10121436	5910877	4210559
சென்னை மாவட்டம்	மொ	3276622	1694107	158215	2241149	1280772	960377
	கிராம	..	..	..	..	..	..
	நகர்	3276622	1694107	158215	2241149	1280772	960377
கன்னியாகுமரி மாவட்டம்	மொ	1423399	716958	70641	908894	491499	417395
	கிராம	1177867	593006	58391	727979	395700	332279
	நகர்	245532	123052	12240	180915	95799	85116

குறிப்பு:- மொ-மொத்தம்
கிராம - கிராமப்புறம்
நகர் - நகர்ப்புறம்

ஆதாரம்: தமிழ்நாடு புள்ளிவிவரக்கையேடு (1986)

1901
விளவங்கோடு வட்டம்
மக்கட்தொகை

வயதுத் தொகுதி	மொத்த மக்கட்தொகை			கல்வியறிவு பெற்றோர்			கல்வியறிவு அற்றோர்		
	மொத்த நபர்கள்	ஆண்கள்	பெண் கள்	மொத்த நபர்கள்	ஆண்கள்	பெண் கள்	மொத்த நபர்கள்	ஆண்கள்	பெண் கள்
0–10	22,437	11,130	11,307	225	153	72	22,212	10,977	11,235
10–15	9,211	4,906	4,305	537	414	123	8,674	4,492	4,182
15–20	7,582	3,707	3,875	657	511	146	6,925	3,196	3,729
20–ம் அதற்கு மேலும்,	40,354	20,950	19,404	5,000	4,512	488	35,354	16,438	18,916
மொத்தம்	79,581	40,693	38,891	6,419	5,590	829	73,165	35,103	38,062

கல்வியறிவு பெற்றோர் எண்ணிக்கை

மலையாளம்			தமிழ்			பிறமொழிகள்			ஆங்கிலக்கல்வி		
மொத்த நபர்கள்	ஆண் கள்	பெண் கள்	மொத்த நபர்கள்	ஆண் கள்	பெண் கள்	மொத்த நபர்கள்	ஆண் கள்	பெண் கள்	மொத்த நபர்கள்	ஆண் கள்	பெண் கள்
133	80	53	114	92	22	..	..	..	1	1	..
377	281	96	269	222	47	1	1	..	19	15	4
433	322	111	397	340	57	3	3	..	30	24	6
2,977	2,650	327	3644	3429	215	58	54	4	147	140	7
3,920	3,333	587	4,424	4,083	341	62	58	4	197	180	17

ஆதாரம்: *இந்திய மக்கட்தொகை - 1901- தொகுதி-24ஆ, திருவாங்கூர் (திருவனந்தபுரம்), 1903.*

கல்குளம் வட்டம் 1901
மக்கட்தொகை

வயதுத் தொகுதி	மொத்த மக்கட்தொகை			கல்வியறிவு பெற்றோர்			கல்வியறிவு அற்றோர்		
	மொத்த நபர்கள்	ஆண்கள்	பெண் கள்	மொத்த நபர்கள்	ஆண்கள்	பெண் கள்	மொத்த நபர்கள்	ஆண்கள்	பெண் கள்
0–10	18,789	8906	9883	135	86	49	18654	8820	9834
10–15	8,190	4222	3968	410	311	99	7780	3911	3869
15–90	6,626	3267	3359	687	539	148	5939	2728	3211
20–ம் அதற்கு மேலும்	36,642	18595	18047	5462	5007	455	31180	13588	17592
மொத்தம்	70,247	34990	35,257	6694	5943	751	63553	29047	34506

கல்வியறிவு பெற்றோர் எண்ணிக்கை

மலையாளம்			தமிழ்			பிறமொழிகள்			ஆங்கிலக்கல்வி		
மொத்த நபர்கள்	ஆண் கள்	பெண் கள்	மொத்த நபர்கள்	ஆண் கள்	பெண் கள்	மொத்த நபர்கள்	ஆண் கள்	பெண் கள்	மொத்த நபர்கள்	ஆண் கள்	பெண் கள்
89	56	33	70	48	22	1	1	..	8	4	4
300	227	73	244	199	45	..	..	..	21	20	1
428	321	107	516	434	82	7	7	..	21	12	9
2,243	2,654	289	2795	2622	173	66	65	1	330	312	18
3,700	3,258	502	3625	3303	322	74	73	1	380	348	32

ஆதாரம்: *இந்திய மக்கட்தொகை - 1901, தொகுதி-24ஆ, திருவாங்கூர் (திருவனந்தபுரம்), 1903.*

1901
இரணியல் வட்டம்
மக்கட்தொகை

வயதுத் தொகுதி	மொத்த மக்கட்தொகை			கல்வியறிவு பெற்றோர்			கல்வியறிவு அற்றோர்		
	மொத்த நபர்கள்	ஆண்கள்	பெண் கள்	மொத்த நபர்கள்	ஆண்கள்	பெண் கள்	மொத்த நபர்கள்	ஆண்கள்	பெண் கள்
0–10	29,600	14102	15498	288	213	75	29312	13889	15423
10–15	13,749	7161	6588	1011	782	229	12738	6379	6359
15–20	9,632	4841	4791	1243	1016	227	8389	3825	4564
20-ம் அதற்கு மேலும்	57,180	28994	28186	9468	8733	735	47712	20261	27451
மொத்தம்	1,10,161	55,098	55063	12010	10744	1266	9811	44354	53797

கல்வியறிவு பெற்றோர் எண்ணிக்கை

மலையாளம்			தமிழ்			பிறமொழிகள்			ஆங்கிலக்கல்வி		
மொத்த நபர்கள்	ஆண் கள்	பெண் கள்	மொத்த நபர்கள்	ஆண் கள்	பெண் கள்	மொத்த நபர்கள்	ஆண் கள்	பெண் கள்	மொத்த நபர்கள்	ஆண் கள்	பெண் கள்
117	88	39	229	178	51	..	..	..	7	5	2
436	338	98	877	702	175	15	14	1	52	35	17
482	387	95	1127	958	169	12	12	..	80	67	19
2,548	2,286	262	8981	8412	569	88	82	6	346	302	38
3,593	3,099	494	11214	10250	964	115	108	7	485	409	76

ஆதாரம்: *இந்திய மக்கட்தொகை - 1901 - தொகுதி - 24 ஆ, திருவாங்கூர் (திருவனந்தபுரம்), 1903.*

அகஸ்தீஸ்வரம் வட்டம் 1901

மக்கட்தொகை

வயதுத் தொகுதி	மொத்த மக்கட்தொகை			கல்வியறிவு பெற்றோர்			கல்வியறிவு அற்றோர்		
	மொத்த நபர்கள்	ஆண்கள்	பெண் கள்	மொத்த நபர்கள்	ஆண்கள்	பெண் கள்	மொத்த நபர்கள்	ஆண்கள்	பெண் கள்
0–10	25,439	12036	13403	205	143	62	25234	11893	13341
10–15	10,702	5552	5150	771	591	180	9931	4961	4970
15–20	8,345	4081	4264	1242	1000	242	7103	3081	4022
20–ம் அதற்கு மேலும்	49,027	23608	25419	7745	7026	719	41282	16582	24700
மொத்தம்	93,513	45277	48236	9963	8760	1203	83550	36517	47033

கல்வியறிவு பெற்றோர் எண்ணிக்கை

மலையாளம்			தமிழ்			பிறமொழிகள்			ஆங்கிலக்கல்வி		
மொத்த நபர்கள்	ஆண் கள்	பெண் கள்	மொத்த நபர்கள்	ஆண் கள்	பெண் கள்	மொத்த நபர்கள்	ஆண் கள்	பெண் கள்	மொத்த நபர்கள்	ஆண் கள்	பெண் கள்
28	25	3	192	137	55	6	1	5	––	7	6
184	158	26	739	567	172	8	4	4	––	40	6
371	338	33	1207	971	236	16	14	2	1	133	15
1889	1811	78	7548	6872	676	150	135	15	593	546	47
2,472	2,332	140	9686	8547	1139	180	154	26	594	726	74

ஆதாரம் : *இந்திய மக்கட்தொகை 1901 – தொகுதி – 24–ஆஇ, திருவாங்கூர் (திருவனந்தபுரம்), 1903.*

1901

தோவாளை வட்டம்

வயதுத் தொகுதி	மொத்த மக்கட்தொகை			கல்வியறிவு பெற்றோர்			கல்வியறிவு அற்றோர்		
	மொத்த நபர்கள்	ஆண்கள்	பெண் கள்	மொத்த நபர்கள்	ஆண்கள்	பெண் கள்	மொத்த நபர்கள்	ஆண்கள்	பெண் கள்
0–10	8,458	4098	4360	24	22	2	8434	4076	4358
10–15	3,581	1875	1706	218	185	33	3363	1690	1673
15–20	2,750	1268	1482	365	309	56	2385	959	1426
20–ம் அதற்கு மேலும்	17621	8438	9183	3127	2998	129	14494	5440	9054
மொத்தம்	32,410	15679	16731	3734	3514	220	28676	12165	16511

கல்வியறிவு பெற்றோர் எண்ணிக்கை

மலையாளம்			தமிழ்			பிறமொழிகள்			ஆங்கிலக்கல்வி		
மொத்த நபர்கள்	ஆண் கள்	பெண் கள்	மொத்த நபர்கள்	ஆண் கள்	பெண் கள்	மொத்த நபர்கள்	ஆண் கள்	பெண் கள்	மொத்த நபர்கள்	ஆண் கள்	பெண் கள்
6	5	1	22	20	2	..	..	..	..	..	..
64	56	8	214	183	31	1	1	..	4	4	..
116	97	19	358	303	55	3	2	1	10	9	1
611	596	15	3088	2964	124	64	63	1	108	103	5
797	754	43	3682	3470	212	68	66	2	122	116	6

ஆதாரம்: *இந்திய மக்கட்தொகை – 1901– தொகுதி 24–ஆ, திருவாங்கூர் (திருவனந்தபுரம்), 1903.*

1961- பட்டியல் - அ
அனைத்துப் பகுதிகளிலும், வயது, பால் மற்றும் கல்வி பயின்றமை போன்ற விவரங்கள்

வயதுத் தொகுதி	மொத்த மக்கட்தொகை			கல்வி கற்காதோர் எண்ணிக்கை	
	மொத்த நபர்கள்	ஆண்கள்	பெண்கள்	ஆண்கள்	பெண்கள்
அனைத்து வயதுத் தொகுதிகளும்	996,915	503,735	493,180	220,441	292.297
0 –லிருந்து, 4 வரை	140,099	71,255	68,844	71,255	68,844
5 முதல் 9 வரை	138,921	70,642	68,279	27,685	29,739
10 முதல் 14 வரை	131,627	66,297	65,330	13,690	18,748
15 முதல் 19 வரை	95,526	46,185	49,341	12,624	17,560
20 முதல் 24 வரை	81,101	41,173	39,928	12,054	18,165
25 முதல் 29 வரை	74,215	36,516	37,699	12,036	21,196
30 முதல் 34 வரை	61,534	30,549	30,985	10,421	18,581
35 முதல் 44 வரை	109,072	56,214	52,858	21,654	35,798
45 முதல் 59 வரை	109,498	56,733	52,765	24,732	40,435
60–க்கு மேல்	55,271	28,145	27,126	14,000	23,212
வயது குறிப்பிடப்படவில்லை	51	26	25	20	19

வயதுத் தொகுதி	கல்வி கற்றோரில் பல்வேறு கல்வி நிலையிலுள்ளோரது மொத்த எண்ணிக்கை		தொடக்கநிலை அல்லது இளநிலை ஆதார நிலை		பல்கலைக்கழகம் புதுமுகத்தேர்வு அல்லது அதற்குமேலும் தேர்ச்சியற்றோர்	
	ஆண்கள்	பெண்கள்	ஆண்கள்	பெண்கள்	ஆண்கள்	பெண்கள்
அனைத்து வயதுக் தொகுதிகளும்	187,487	140,223	72,100	51,500	23,707	9,070
0 முதல் 4 வரை	–	–	–	–	–	–
5 முதல் 9 வரை	41,878	37,412	1,079	1,128	–	–
10 முதல் 14 வரை	23,893	22,975	28,389	23,552	55	55
15 முதல் 19 வரை	13,308	16,175	14,661	11,715	5,592	3,891
20 முதல் 24 வரை	15,474	13,784	6,550	4,960	7,095	3,019
25 முதல் 29 வரை	15,926	12,439	4,405	3,407	4,419	1,017
30 முதல் 34 வரை	14,528	9,855	3,626	2,141	1,974	408
35 முதல் 44 வரை	26,147	13,798	6,187	2,892	2,226	370
45 முதல் 49 வரை	24,736	10,377	5,405	1,741	1,860	212
60–க்கு மேல்	11,593	3,402	1,797	414	755	98
வயது குறிப்பிடப்படவில்லை	4	6	1	–	1	–

ஆதாரம்: *இந்திய மக்கட்தொகை (1961), மாவட்ட மக்கட்தொகைக் கையேடு – கன்னியாகுமரி மாவட்டம், பக்கங்கள் 246 முதல் 249 முடிய.*

1961 பட்டியல்–ஆ

அனைத்துநகர்ப்புறப் பகுதிகளில் உள்ளோரின் வயது, பால் மற்றும் கல்வி போன்ற விவரங்கள்

வயதுத் தொகுதி	மொத்த மக்கட்தொகை			கல்வி கற்காதோர்		கல்வி பயின்றோர் (கல்வித்தகுதி நிலையினை அடையாதோர்)	
	மொத்த நபர்கள்	ஆண்கள்	பெண்கள்	ஆண்கள்	பெண்கள்	ஆண்கள்	பெண்கள்
அனைத்து வயதுத் தொகுதிகளும்	150,079	75,515	74,564	26,044	37,623	26,970	22,658
0–4	20,304	10,349	9,955	10,349	9,955	–	–
5–9	19,509	9,736	9,773	4,645	4,761	4,865	4,758
10–14	19,155	9,692	9,463	11,225	1,786	3,205	3,339
15–19	14,321	6,977	7,344	1,070	1,706	1,685	2,208
20–24	12,773	6,379	6,394	1,076	1,965	2,202	2,328
25–29	11,846	5,802	6,044	1,030	2,356	2,419	2,416
30–34	9,806	4,876	4,930	876	2,155	2,354	1,926
35–44	16,733	8,881	7,852	1,957	4,192	4,312	2,611
45–59	16,898	8,558	8,340	2,315	5,368	4,023	2,223
60–க்கு மேல் வயது	8,729	4,263	4,466	1,499	3,376	1,905	849
குறிப்பிடப்பட வில்லை	5	2	3	2	3	–	–

1961 - பட்டியல்-ஆ

அனைத்து நகர்ப்புறப் பகுதிகளில் உள்ளோரின் வயது, பால் மற்றும் கல்வி போன்ற விவரங்கள் - தொடர்ச்சி

கல்வி நிலை

வயதுத் தொகுதி	தொடக்கநிலை அல்லது இளநிலை ஆதார நிலை		பல்கலைக்கழகம் புதுமுகத்தேர்வு நிலை (அ) மேல்நிலைக் கல்வித்தகுதி		பட்டப்படிப்பிற்கு ஈடற்ற தொழில் நுட்பக் கல்வித் தகுதிப் பட்டயம்		பட்டப்படிப்பிற்கு ஈடற்ற, தொழில் நுட்பம் சாரா கல்வித்தகுதி பட்டயம்	
	ஆண்கள்	பெண்கள்	ஆண்கள்	பெண்கள்	ஆண்கள்	பெண்கள்	ஆண்கள்	பெண்கள்
அனைத்து வயதுத் தொகுதிகளும்	15,031	11,320	5,862	2,634	82	59	90	30
0–4	–	–	–	–	–	–	–	–
5–9	226	254	–	–	–	–	–	–
10–14	5,243	4,328	19	10	–	–	–	–
15–19	2,836	2,342	1,327	1,042	10	17	–	2
20–24	1,296	1,225	1,507	774	21	12	3	7
25–29	1,090	903	933	288	10	10	15	7
30–34	915	660	468	157	6	1	14	7
35–44	1,643	836	714	182	13	1	24	4
45–59	1,327	610	602	116	12	7	30	2
60-க்கு மேல்	455	162	292	65	10	11	4	1
வயது குறிப்பிடப்படவில்லை	–		–	–	–	–	–	–

வயதுத் தொகுதி	தொழில்நுட்ப் பட்டப் படிப்பு நீங்கலாக, பல்கலைக்கழகம் பட்டப்படிப்பு மற்றும் பட்டம் பெற்ற பின் படிப்பு படித்து முடித்துள்ளோர்		தொழில் நுட்பப்பட்டப்படிப்பு அல்லது, பட்டப்படிப்பு, பட்டம்பெற்றபின் படிப்பு ஆகியவற்றிற்கீடான பல்கலைக்கழகம் பட்டச்சான்றிதழ்					
			பொறியியல்		மருத்துவம்		வேளாண்மை	
	ஆண்கள்	பெண்கள்	ஆண்கள்	பெண்கள்	ஆண்கள்	பெண்கள்	ஆண்கள்	பெண்கள்
அனைத்து வயதுத் தொகுதிகளும்	1062	155	88	..	44	4	5	2
0–4	..	..	..	..	..	..	..	..
5–9	..	..	..	..	..	..	..	..
10–14	..	..	..	..	..	..	..	..
15–19	12	27	7	..	..	..	..	..
20–24	217	58	34	..	..	1	2	..
25–29	206	34	19	..	11	1	2	2
30–34	164	18	14	..	12	..	..	..
35–44	165	12	5	..	10	1	1	..
45–59	191	6	6	..	8	..	..	..
60-க்கு மேல்	77	...	3	..	3	..	..	..
வயது குறிப்பிடப்படவில்லை	..		..	..	..	..	..	..

வயதுத் தொகுதி	கால்நடை மருத்துவம் மற்றும் பால்பண்ணை தொடர்பான கல்வி		தொழில் நுணுக்கம்		கற்பித்தல்		மற்றவை	
	ஆண்கள்	பெண்கள்	ஆண்கள்	பெண்கள்	ஆண்கள்	பெண்கள்	ஆண்கள்	பெண்கள்
அனைத்து வயதுத் தொகுதிகளும்	4	..	..	..	219	79	14	..
0–4	..	..	..	..	..	..	..	..
5–9	..	..	..	...	..	..	..	..
10–14	..	..	..	..	..	..	..	..
15–19	..	..	..	..	..	..	..	..
20–24	1	..	..	..	14	24	6	..
25–29	2	..	..	..	63	27	2	..
30–34	1	..	..	..	50	6	2	..
35–44	..	..	..	..	37	13	..	..
45–59	..	..	..	..	40	7	4	..
60–க்கு மேல்	..	..	..	..	15	2	..	..
வயது குறிப்பிடப்படவில்லை	..		..	..	..	..	..	..

1961 - பட்டியல்-இ

அனைத்துக் கிராமப்புறப்பகுதிகளிலும், மக்களின் வயது, பால் மற்றும் கல்வி பயின்றோர் எண்ணிக்கை விவரங்கள்

வயதுத் தொகுதி	மொத்த மக்கட்தொகை			கல்வி கற்றோர்	
	மொத்த நபர்கள்	ஆண்கள்	பெண்கள்	ஆண்கள்	பெண்கள்
அனைத்து வயதுத் தொகுதிகளும்	846,836	428,220	418,616	194,397	254,674
0முதல்4வரை	119,798	60,906	58,889	60,906	58,889
5முதல்9வரை	119,412	60,906	58,506	23,040	24,978
10முதல்14வரை	112,472	56,605	55,867	12,735	16,962
15முதல்19வரை	84,205	39,208	41,997	11,554	15,854
20முதல்24வரை	68,328	34,794	33,534	10,978	16,200
25முதல்29வரை	62,369	30,714	31,655	11,906	18,840
30முதல்34வரை	51,728	25,673	26,055	9,545	16,426
35முதல்44வரை	92,339	47,333	45,006	19,697	31,606
45முதல்59வரை	92,600	48,175	44,425	22,417	35,067
60–ம் அதற்கு மேலும்	46,542	23,882	22,660	12,501	19,836
வயது குறிப்பிடப்படவில்லை	46	24	22	18	16

வயதுத் தொகுதி	கல்வி கற்றோர் (கல்வி நிலை அடையாதோர்)		கல்வி நிலையடைந்தோர்			
			தொடக்கநிலை (அ) இளநிலை ஆதாரநிலை		பல்கலைக்கழகம் புதுமுகத்தேர்வு (அ) அதற்கு மேலும் தேர்ச்சியற்றோர்	
	ஆண்கள்	பெண்கள்	ஆண்கள்	பெண்கள்	ஆண்கள்	பெண்கள்
அனைத்து வயதுத் தொகுதிகளும்	160,517	117,565	57,069	40,270	16,237	6,107
0முதல்4வரை	..	..	..	..	..	..
5முதல்9வரை	37,013	32,654	853	874	..	..
10முதல்14வரை	20,688	19,636	23,146	19,224	36	45
15முதல்19வரை	11,623	13,967	11,825	9,373	4,206	2,803
20முதல்24வரை	13,272	11,456	5,254	3,735	5,290	2,143
25முதல்29வரை	13,507	10,023	3,315	2,144	2,886	648
30முதல்34வரை	12,174	7,929	2,711	1,481	1,243	219
35முதல்44வரை	21,835	11,187	4,544	2,056	1,257	157
45முதல்59வரை	20,713	8,154	4,078	1,131	967	73
60–ம் அதற்கு மேலும்	9,688	2,553	1,342	252	351	19
வயது குறிப்பிடப்படவில்லை	4	6	1	..	1	..

பட்டியல்-1971

மாவட்ட மற்றும் வட்டங்களின் மக்கட்தொகையில் கல்வியறிவு பெற்றோர் எண்ணிக்கை

மாவட்டம்/வட்டம்		மொத்த மக்கட் தொகை			கல்வியறிவு பெற்ற மக்களின் விழுக்காடு		
		மொத்த நபர்கள்	ஆண்கள்	பெண்கள்	மொத்த நபர்கள்	ஆண்கள்	பெண்கள்
கன்னியாகுமரி மாவட்டம்	மொ.	1,22,549	6,19,884	6,02,665	7,11,676	3,97,453	3,14,223
	கிராம	10,18,144	517164	500980	578483	323836	252647
	நகர்	204405	102720	101685	135195	73617	61576
விளவங்கோடு வட்டம்	மொ.	389828	198609	191219	211812	120540	991272
	கிராம	373630	190419	183211	201254	114771	86493
	நகர்	16198	8190	8008	10548	5769	4779
கல்குளம் வட்டம்	மொ.	414497	211514	202983	230058	127976	102082
	கிராம	378789	193470	185319	209596	116629	92967
	நகர்	35708	18044	17664	20462	11347	9115
தோவாளை வட்டம்	மொ.	78252	39260	38992	46885	26569	20316
	கிராம.	78252	39260	38992	46885	26569	20316
	நகர்.	..	..	..	..	..	..
அகஸ்தீஸ்வரம் வட்டம்	மொ.	339972	170501	169471	222928	122368	100553
	கிராம.	187473	94015	93458	1118738	65867	52871
	நகர்.	152449	76486	76013	104183	56501	47682

ஆதாரம்: *மக்கட்தொகை, 1971 தமிழ்நாடு பகுதி-10 (அ மற்றும் ஆ), கிராம மற்றும் நகர கட்டளைச் சுவடி தொடர் எண். -19 மற்றும் தொடக்க நிலை மக்கட் தொகைச் சுருக்கம் - மாவட்ட மக்கட்தொகைக் கையேடு - கன்னியாகுமரி மாவட்டம், பக்கங்கள் 2 மற்றும் 3.*

குறிப்பு: மொ-மொத்தம், கிராம-கிராமப்புறம், நகர்-நகர்ப்புறம்

பட்டியல்-1981

1981 ஆம் ஆண்டு மக்கட்தொகைக் கணக்கெடுப்புப்படி, கல்வியறிவு பெற்றோர் எண்ணிக்கையும் விழுக்காடுகளும்

மாவட்டம்/வட்டம்		மொத்த மக்கட் தொகை			கல்வியறிவு பெற்ற மக்களின் விழுக்காடு		
		மொத்த நபர்கள்	ஆண்கள்	பெண்கள்	மொத்த நபர்கள்	ஆண்கள்	பெண்கள்
கன்னியாகுமரி மாவட்டம்	மொ.	14,23,399	716958	706441	63.85	68.55	59.08
	கிராம	1177067	593906	503961	61.00	66.63	56.00
	நகர்	245532	123052	122480	73.68	77.85	69.49
விளவங்கோடு வட்டம்	மொ.	458590	231592	226998	59.49	64.64	54.24
	கிராம	440163	222400	217763	58.95	64.13	53.66
	நகர்	18427	9192	9235	72.30	76.90	67.72
கல்குளம் வட்டம்	மொ.	476633	241642	234991	61.48	65.54	57.31
	கிராம	435263	220701	214562	61.15	65.25	56.93
	நகர்	41370	20941	20429	65.02	68.57	61.38
தோவாளை வட்டம்	மொ.	88176	44258	43918	65.10	71.11	59.05
	கிராம.	88176	44258	43918	65.10	71.11	59.05
	நகர்.	..	..	..	..	..	..
அகஸ்தீஸ்வரம் வட்டம்	மொ.	400000	199466	200534	71.41	76.18	66.65
	கிராம.	214265	106547	107718	67.64	72.82	62.52
	நகர்.	185735	92919	92816	75.75	80.04	71.46

ஆதாரம்: *1981 - இந்திய மக்கட்தொகை - மாவட்டக் கையேடுகள்- கன்னியாகுமரி மாவட்டம், பக்கம் 20*

குறிப்பு: மொ-மொத்தம், கிராம-கிராமப்புறம், நகர்-நகர்ப்புறம்

பல்கலைக் கழகக் கல்வி

சென்னைப் பல்கலைக் கழகம், இந்திய மேலவையில் இயற்றப்பட்ட செப்டம்பர், 5, 1857 நாளய சட்டத்தால், தோற்றுவிக்கப்பட்டது. பம்பாய் மற்றும் கல்கத்தா ஆகிய இடங்களிலுள்ள உடனிலை நிறுவனங்களைப் போன்று, இலண்டன் பல்கலைக் கழகப்பாங்கில், சென்னைப் பல்கலைக்கழகமும் அமைக்கப்பட்டது[144அ].

இம்மூன்று பல்கலைக் கழகங்களும் மேலவையின் 1857 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சட்டத்தால் நிறுவப்பட்டாலும், சென்னைப் பல்கலைக் கழகம் முந்தைய சென்னை மாநிலத்தின் ஆளுநராக இருந்த எல்ஃபின்ஸ்டான் பிரபுவின் தளராத முயற்சியினால், [144 ஆ] சற்று முன்னதாகவே, அதாவது, ஏப்ரல் 14, 1841 அன்றே துவங்கப்பெற்றது.

ஒரு கலைக்கல்லூரியுடனும், இரண்டு பிற மொழிக் கல்லூரிகளுடனும் 1929 ஆம் ஆண்டு, சிதம்பரத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் நிறுவப்படும் வரை, முந்தைய சென்னை மாகாணத்தில், சென்னைப் பல்கலைக் கழகம் ஒன்று மட்டுமே இருந்து வந்தது[144இ].

மதுரைப்பல்கலைக்கழகம் [144ஈ], நமது மாநிலத்தில், 1966 ஆம் ஆண்டு, நிறுவப்பட்ட மூன்றாவது பல்கலைக் கழகமாகும். மகாத்மா காந்தியின் உண்மையான சீடரும், காங்கிரசின் நிறுவனத்தலைவரும், சுதந்திரப் போராட்ட வீரரும், முந்தைய தமிழ்நாடு முதலமைச்சருமான திரு.கே. காமராசர் அவர்களது பெயரிடப்பட்டு, இக்கல்லூரி "மதுரை காமராசர் பல்கலைக்கழகம்" என பின்னர் அழைக்கப்பட்டது.

இந்தப் பல்கலைக்கழகம் நிறுவப்படுவதற்கு முன், மாநிலத்திலுள்ள அனைத்து கலை மற்றும் தொழில் கல்லூரிகள் சென்னை பல்கலைக் கழகத்துடன் தான், இணைந்திருந்தன. அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அதனுடைய வளாகத்திற்கு வெளியேயுள்ள எந்தக் கல்லூரியும் இணைக்கப்பெறாத தனி முழுமையான பல்கலைக்கழகமாக, இயங்குவதாகும். பின்னர், மதுரை-காமராஜ் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டவுடன், மதுரை, திண்டுக்கல் அண்ணா, திருநெல்வேலி-கட்டபொம்மன், வ.உ. சிதம்பரனார், பசும்பொன் முத்துராமலிங்கம், காமராசர், இராமநாதபுரம், மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களிலுள்ள கல்லூரிகள் இப்பல்கலைக்கழக நிருவாக எல்லையில் கொணரப்பட்டன. ஏனைய மாவட்டங்களிலுள்ள கல்லூரிகள், பின்னர் ஒரு நிலையில், திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் இரு பல்கலைக்கழகங்கள் அமைக்கப்படும்வரை சென்னை பல்கலைக் கழகத்திலேயே தொடர்ந்து இணைந்திருந்தன.

பல்கலைக்கழக ஆட்சி உரிமையினைப் பன்முகப்படுத்தும் கொள்கையின்படி, உயர்நிலைக்கல்வியில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க

வளர்ச்சி யாதெனில், நான்கு புதிய பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்பட்டதாகும். அவையாவன: தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் (1981) பாரதிதாசன் பல்கலைக்கழகம் திருச்சிராப்பள்ளி (1982), பாரதியார் பல்கலைக்கழகம் கோயம்புத்தூர் (1982) மற்றும் கொடைக்கானல் அன்னை தெரசா பெண்கள் பல்கலைக் கழகம் (1984) இவற்றில் தஞ்சாவூர் தமிழப் பல்கலைக் கழகம் மற்றும் அன்னை தெரசா பெண்கள் பல்கலைக் கழகம் ஆகியவற்றுடன் கல்லூரிகள் எவையும் இணைக்கப்படவில்லை. அவை இரண்டும் பெரும்பாலும் ஆராய்ச்சி மேற்கொள்வதை மையமாகக் கொண்ட பல்கலைக் கழகங்களாகும். பாரதியார் பல்கலைக்கழகத்துடன் கோயம்புத்தூர், நீலகிரி, மற்றும் பெரியார் மாவட்டங்களிலுள்ள 32 கல்லூரிகள் இணைக்கப்பட்டுள்ளன. அதே போன்று, பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களிலுள்ள 39 கல்லூரிகள் இணைக்கப்பட் டுள்ளன. சென்னை பல்கலைக்கழகத்தின் முதுகலை பட்ட படிப்பின் விரிவாக்க மையங்கள், ஒரு சில துறைகளுடன் சேர்ந்து திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூர் நகரங்களில் பல ஆண்டுகள் இயங்கி, பின்னர், இரு பல்கலைக்கழகங்களாக வளர்ந்துள்ளன.

இந்தப்பல்கலைக்கழகங்கள் உருவான பின், சென்னைப் பல்கலைக்கழகத்தின் சுமை குறைந்ததோடு மட்டுமின்றி, உள்ளூர் மக்களின் நீண்ட கால கோரிக்கையும் நிறைவேறியது. இதன் விளைவாக, சென்னைப் பல்கலைக் கழகத்தின் நிருவாக எல்லையும் அளவுடன் உள்ளதாக அமைந்தது. தற்போது சென்னைப் பல்கலைக்கழகத்தில், சென்னை, செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர்., தென் ஆற்காடு, வட ஆற்காடு, சேலம் மற்றும் தர்மபுரி ஆகிய மாவட்டங்களிலுள்ள கல்லூரிகளே இணைக்கப்பட்டுள்ளன.

புதிய பல்கலைக் கழகங்களில், இரண்டு பல்கலைக் கழகங்களுக்கு, புகழ்பெற்ற இம்மண்ணின் மைந்தர்களின் பெயர்கள், அதாவது திருச்சி பல்கலைக்கழகத்திற்குப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பெயரும், கோயம்புத்தூர் பல்கலைக் கழகத்திற்கு தேசியக் கவிஞர் பாரதியார் பெயரும், அதனைத் தொடர்ந்து, கொடைக்கானல் பல்கலைக் கழகத்திற்கு அன்பின் இருப்பிடம் மற்றும் சமயப்பரப்பாளரான அன்னை தெரசா அவர்களது பெயரும் சூட்டப்பட்டுள்ளது.

தமிழ் ஆராய்ச்சிக்கும், தமிழைக் கற்றறியவும், ஒரு புது உந்து விசையளிக்கும் நோக்கில் தமிழ்ப்பல்கலைக் கழகம் நிறுவப்பட்டது. தமிழ் மொழியையும், இலக்கியங்களையும் பேணி வளர்த்தும், சீராக்கியும், தொன்மை கால முதலே புகழ் பெற்ற தஞ்சைத் தரணியில் இப்பல்கலைக்கழகத்தினை நிறுவியது மிகப் பொருத்தமேயாகும்.

தமிழ்நாட்டில் பெண் கல்வியினைப் பரப்பிட, மேலும் பல வசதிகளை செய்து அளித்திடும் நோக்கத்தில், பெண்கள் பல்கலைக்கழகம் கொடைக்கானலில் நிறுவப்பட்டது.

1976-77 ஆம் ஆண்டில், காந்திக் கிராமம் மேல்நிலைக்கல்வி கிராமப்புற நிறுவனத்திற்கு நிகர்நிலைப் பல்கலைக்கழகம் (டீம்டு யுனிவர்சிட்டி)[144(உ)] என்ற நிலை அளிக்கப்பட்டது. இந்நிறுவனத்தில், பட்டப் படிப்பு, முதுகலைப் பட்டப் படிப்பு, ஆராய்ச்சிப் படிப்பு ஆகியவை கற்றுக் கொடுக்கப்படுகின்றன. இவை பெரும்பாலும், காந்தீயக் கொள்கை களால் கிராமப்புற வளர்ச்சியினை மையமாகக் கொண்டவையாகும்.

இப்பொதுப் பல்கலைக் கழகங்களைத் தவிர, முழுமையாகவே தொழில் நுட்பம் மற்றும் தொழில் கல்வி சார்ந்த மூன்று பல்கலைக்கழகங்கள் இயங்கிவருகின்றன.

முதன் முதலில், கடந்த 1971 ஆம் ஆண்டு கோயம்புத்தூரில், வேளாண் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது. 1907 ஆம் ஆண்டு, கோயம்புத்தூரில் நிறுவப்பட்ட, நாட்டிலேயே மிகப்பழைமையான வேளாண் கல்லூரிகளில் ஒன்றான கோயம்புத்தூர் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்தான், தற்போது நிறுவப்பட்டுள்ள வேளாண் பல்கலைக் கழகத்தின் மையக்கருவாகும். பல்கலைக் கழகத்திற்கு, ஐந்து கல்லூரி வளாகங்கள் உள்ளன. அவையாவன: கால்நடை மருத்துவக் கல்லூரி, சென்னை, வேளாண் கல்லூரி, மதுரை, மீன் தொழில் கல்லூரி, தூத்துக்குடி, வேளாண் கல்லூரி, கிள்ளிக்குளம் (திருநெல்வேலி) மற்றும் கால்நடை மருத்துவக் கல்லூரி நாமக்கல் மற்றும் கால்நடை மருத்துவக்கல்லூரி சென்னை, சென்னை பல்கலைக் கழகத்துடன் இணைந்த மிகப்பழைய நிறுவனமாக இருந்த போதிலும், இது, கடந்த 1976 ஆம் ஆண்டு, வேளாண் பல்கலைக் கழகத்திற்கு மாற்றப்பட்டது. தூத்துக்குடி மீன் தொழில் கல்லூரியும், திருநெல்வேலிக்கு அருகாமையிலுள்ள கிள்ளிக்குள்ளம் வேளாண் கல்லூரியும், அவைகள் நிறுவப்பட்ட, முறையே 1978 மற்றும் 1984 ஆம் ஆண்டுகளிலிருந்து, கோயம்புத்தூர் வேளாண் பல்கலைக் கழகத்தின் கட்டுப்பாட்டிலேயே இயங்கி வருகின்றன[144ஊ].

இந்தப் பல்கலைக் கழகத்துடன் இணைந்த நிறுவனங்களைத் தவிர, தமிழ்நாடு முழுமையும், 70 ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையங்கள் உள்ளன. உயர்நிலை தனித்துறைப் பயிற்சியினை ஊக்குவித்திட பல்கலைக்கழகம் ஏழு "தனித் தகுதி மைய"ங்களை நடத்திவருகிறது.

உயர்நிலைக் கல்வி மற்றும் பொறியியல், தொழில் நுட்பம் ஆகியவற்றில் தீவிர ஆராய்ச்சி மேற்கொள்ள "தனித்தகுதி மைய"த்தினை மேலும் வளப்படுத்தும் சீரிய நோக்குடன், 1978 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் அண்ணா பல்கலைக் கழகம் நிறுவப்பட்டது. சொல்வன்மை

வாய்ந்த பேச்சுத் திறமையுடையவரும், தலை சிறந்த எழுத்தாளரும் மேலும் தமிழகத்தின் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சருமான திரு.சி.என். அண்ணாத்துரை அவர்களது பெயரால் இப்பல்கலைக் கழகம் அழைக்கப்படுகிறது. சென்னையிலுள்ள புகழ் பெற்ற நான்கு தொழில் நுட்ப நிறுவனங்களை ஒருங்கிணைத்து, இப் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது. அவையாவன: பொறியியல் கல்லூரி, கிண்டி; அழகப்பா தொழில் நுட்பக் கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள தொழில் நுட்பத் துறை, சென்னை பல்கலைக்கழகம்; கட்டிடக்கலை மற்றும் நகரமைப்புப் பள்ளி, சென்னை பல்கலைக்கழகம்; மற்றும் சென்னை தொழில் நுட்ப நிறுவனம், குரோம்பேட்டை. இப்பல்கலைக் கழகம் பல்வேறு தனிப்பட்ட தொழில் நுட்பத்திறமையில், 18 துறைகளைக் கொண்டதாகும்.

மாநிலத்தில் மருத்துவக் கல்விக்காக, தனியாக ஒரு பல்கலைக்கழகத்தினை நிறுவ வேண்டுமென்ற பொதுக் கோரிக்கையும், 1988 ஆம் ஆண்டு, டாக்டர் எம்.ஜி. ஆர் மருத்துவப் பல்கலைக் கழகம் துவக்கப்பட்டதனால் நிறைவேற்றப்பட்டு விட்டது. தமிழ்நாடு மாநிலத்தின் முந்தைய மாண்புமிகு முதலமைச்சரான டாக்டர் எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்கள் இப்பல்கலைக்கழகத்திற்கு உருக்கொடுத்தார், எனினும், அதனைத் துவக்க நிர்ணயிக்கப்பட்ட நாளன்று 1987 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள், துரதிட்டவசமாக, இயற்கையெய்தினார். அதன்பின்னர், துவக்க விழா ஒத்திப்போடப்பட்டு, 1988 ஆம் ஆண்டில், பல்கலைக்கழகம் திறக்கப்பட்டது. மாநிலத்திலுள்ள அனைத்து மருத்துவ மற்றும் மருந்து ஆக்கத் தொழிலுக்குரிய கல்லூரிகளும், இப்பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

இதுவே, தமிழ்நாட்டில் பல்கலைக் கழகங்களின் வரலாற்றுச் சுருக்கமாகும். பல்கலைக்கழகங்கள் மற்றும் அவற்றுடன் இணைந்த கல்லூரிகள் அகியவற்றின் நிலை குறித்து, இவ்விவரச் சுவடியின் "கல்லூரிக் கல்வி" என்ற தலைப்பிலான கீழ்க்காணும் பத்தியில், விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

கல்லூரிக் கல்வி

கல்லூரிக் கல்வி என்பது, இளங்கலைபட்டப்படிப்பு, முதுகலைப் பட்டப் படிப்பு, ஆகிய கல்வி முறையில், அறிவியல், கலை, வணிகவியல் கல்வி மற்றும் பிற உயர் மனிதப் பண்புகள் தொடர்பான தலைப்புப் பொருள்களில், மாணவர்களுக்கு கல்வி அளித்து பட்டம் அளிக்கும் மாபெரும் பொறுப்பு, கல்லூரிக் கல்வியினை அளிக்கும் துறையைச் சார்ந்ததாகும். பொது கலைநிலைக்கு ஒத்த கல்வி முறையில், பல்கலைக் கழகங்களுடன் கல்லூரிகள் இணைந்திருந்தும் கூட, கல்லூரிகளே பட்டத்தினை அளிக்கும் உயர் அதிகாரத்தினைப் பெற்றுள்ளன.

கன்னியாகுமரி மாவட்டத்தில் கல்லூரிக் கல்வி

தமிழ்நாட்டில், கன்னியாகுமரி மாவட்டம், நான்கே வட்டங்களையுடைய, சிறு மாவட்டமாயிருந்தும் கூட, 15 கல்லூரிகள் இம்மாவட்டத்தில் இயங்குகின்றன. அவற்றில், 14 கல்லூரிகள், கலை அறிவியல் கல்லூரிகளாகும் மற்றொரு கல்லூரி பட்டதாரி ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கிறது. இரண்டு கல்லூரிகள் சுய நிதியிலியங்கும் கல்லூரிகளாகும். ஒன்றைத் தவிர ஏனைய கல்லூரிகள், அரசு உதவி பெறும் தனியார் கல்லூரிகளாகும். நெய்யூரிலுள்ள இலட்சுமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, அரசின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது.

பதினைந்து கல்லூரிகளில், ஒன்று ஆண்களுக்காகவே இயங்குகிறது. அவற்றில் நான்கு கல்லூரிகள் பெண்களுக்காக இயங்கு பவையாகும். பிற இணைக்கல்வி முறையில் இயங்கிவருகின்றன.

மாவட்டத்தில் கல்லூரிக் கல்வியின் வரலாறு, கடந்த 1893 ஆம் ஆண்டிற்கு முற்பட்டதாகும். அப்போது, நாகர்கோவிலில் திரு. மீட் அவர்களால் 1819 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட நாகர்கோவில் சமயப் பரப்புக்குழு, இரண்டாம் நிலை கல்லூரியாக உயர்த்தப்பட்டு, சென்னை பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டது.

இது துவக்கப்பட்டபோது, முந்தைய திருவாங்கூர் மாநிலத்திலிருந்த நான்கு கல்லூரிகளிலொன்றாக இருந்தது. பிற மூன்று கல்லூரிகளில், இரண்டு திருவனந்தபுரத்திலும், ஒன்று கோட்டயத்திலும் இயங்கி வந்தன. திருவனந்தபுரத்திலியங்கிய இரு கல்லூரிகளில் ஒன்றைத் தவிர, ஏனைய கல்லூரிகள் யாவும் கிறித்தவ சமயப்பரப்புக் குழுவால் நடத்தப்பட்டன. திருவனந்தபுரத்திலிருந்த அந்த ஒரு கல்லூரியினை அரசு இயக்கியது.

1952ஆம் ஆண்டு வரை, தற்போதைய கன்னியாகுமரி மாவட்ட எல்லையில், இந்த ஒரு கல்லூரிதான் இயங்கி வந்தது. 1952-ல், தென் திருவாங்கூர் இந்துக்கல்லூரி என்ற கல்லூரி சேர்க்கப்பட்டது. 1956ஆம் ஆண்டு, கன்னியாகுமரி மாவட்டம் அமைக்கப்பட்டு, சென்னை மாநிலத்துடன் இணைக்கப்பட்டபோது, இவ்விரு கல்லூரிகள்தான் மாவட்டத்திலியங்கி வந்தன. 1964-65ஆம் ஆண்டு, மார்த்தாண்டம் கிறித்தவக் கல்லூரி, மற்றும் நெய்யூர் இலட்சுமிபுரம் கல்லூரி ஆகிய கல்லூரிகள் நிறுவப்பட்டு, மொத்தக் கல்லூரிகளின் எண்ணிக்கை நான்காக உயர்ந்தது.

அடுத்த ஆண்டான 1965-66-ல், மேலும் மூன்று கல்லூரிகள் மாவட்டத்தில் துவக்கப்பட்டன:

1. விவேகாநந்தா கல்லூரி, அகஸ்தீஸ்வரம்,
2. ஹோலி கிராஸ் கல்லூரி, நாகர்கோவில், (முதல் பெண்கள் கல்லூரி),

3. ஸ்ரீதேவி குமரி பெண்கள் கல்லூரி, திருவட்டார் (பின்னர், குழித்துறைக்கு மாற்றப்பட்டது).

1965-66ஆம் ஆண்டு, ஆத்தூரில் 1963-ல் நிறுவப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் பயிற்சிக் கல்லூரியையும் சேர்த்து, மாவட்டத்தில் எட்டு கல்லூரிகள் இயங்கின. பின்னர், 1967ஆம் ஆண்டு, வழி முனைவர் குமாரசாமி கல்லூரி நாகர்கோவிலில் நிறுவப்பட்டது. 1970-71ஆம் ஆண்டு, சுங்கங்கடையில், ஸ்ரீ அய்யப்பா அறிஞர் அண்ணா கல்லூரியும் நிறுவப்பட்டன. அவற்றைச் சேர்த்து, மாவட்டத்திலுள்ள கல்லூரிகளின் எண்ணிக்கை 11 ஆக உயர்ந்தது. பனிரெண்டாவது கல்லூரியான புனித ஜூட்ஸ் கல்லூரி, தூத்தூரில் 1980-81ஆம் ஆண்டு, திறக்கப்பட்டது. நாகர்கோவிலில் பெண்கள் கிறித்தவக் கல்லூரி திறக்கப்பட்டது.

இந்த 13 கல்லூரிகள், தவிர, சுயநிதிக்கல்லூரிகளாக இரு கல்லூரிகள் இயங்குகின்றன. அவை, திருவிதாங்கோட்டிலுள்ள முகம்மதியர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் நாகர்கோவிலிலுள்ள சிவந்தி ஆதித்தன் கல்லூரி ஆகியவையாகும். 1984 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இக்கல்லூரிகளிரண்டும், மாவட்டத்தில் அண்மையில் துவக்கப்பட்ட கல்லூரிகளாகும்.

கல்லூரிகளின் மாநில நிலை நிருவாகம்

1958 ஆம் ஆண்டிற்கு முன்னர், மாநிலத்திலுள்ள அனைத்துக் கல்லூரிகளுக்கும், தனது இதர அலுவல்களுடன், பொதுக்கல்வி இயக்குநர், மாநில நிலையில், தலைமை அலுவலராகப்பணியாற்றினார். 1965 ஆம் ஆண்டு, கல்லூரிக் கல்விக்கென தனித்துறை துவக்கப்பட்டு, கல்லூரிகளின் நிருவாகத்தினைக் கவனித்திட தனியாகக் கல்லூரிக்கல்வி இயக்குநர் பதவி உருவாக்கப்பட்டது. அது முதல், மாநிலத்திலுள்ள அனைத்துக் கல்லூரிகளும், கல்லூரிக்கல்வி இயக்குநரின் நிருவாகக் கட்டுப்பாட்டிலியங்கின. அரசு உதவிபெறும் கல்லூரிகளைப் பொறுத்த வரையில், இயக்குநரால் உதவித்தொகை மற்றும் கொடை ஆகியவை வழங்கப்பட்டு, மேலும் விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள், மற்றும் தொடர்புள்ள பணியாளர்கள் ஆகியோரின் பணியிடங்களுக்குத் தகுதியான நபர்களை நியமித்திட, இசைவும் அளிக்கப்படுகிறது. இயக்குநருக்கு உதவிட, மண்டல அளவிலான நிருவாக அமைப்பும் உருவாக்கப்பட்டு, மண்டலத்துணை இயக்குநர்களின் தலைமையினாலான ஐந்து மண்டலங்களாக, மாநிலம் பிரிக்கப்பட்டுள்ளது. இம் மண்டலங்கள், சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் இயங்குகின்றன. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கல்லூரிகள், திருநெல்வேலி கல்லூரிக்கல்வி மண்டல இயக்குநரின் நிருவாக எல்லையில், இடம் பெறுகின்றன.

கல்லூரி நிருவாகம்

ஒவ்வொரு கல்லூரிக்கும் முதல்வர் நிருவாகத் தலைமை அலுவலராவார். அவருக்கும் துணை முதல்வர், உதவி புரிகிறார். ஒவ்வொரு தலைப்புப் பொருள் பாடத்திட்டத்துறையும் ஒரு பேராசிரியரின் தலைமையிலியங்குகிறது. அவர்தான், துறைத்தலைவராவார். அவருக்குத் துணை புரிய, உதவிப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மற்றும் செய்முறை ஆசிரியர்கள் ஆகியோர் உளர். கல்லூரி நிருவாகத்தினை, தலைமை அமைச்சு அலுவலரான, பொருளாளர் பொறுப்பேற்கிறார். அவருக்கு மேலாளர்கள், உதவியாளர்கள், இளநிலை உதவியாளர்கள், தட்டச்சர்கள் மற்றும் சுருக்கெழுத்தர்கள் ஆகியோர் உதவி புரிகின்றனர்.

ஒவ்வொரு கல்லூரியிலும், மாணவர்களுக்கு உடற் கல்வியில் பயிற்சி அளித்திட, ஒரு உடற் கல்வி இயக்குநர் பணியாற்றி வருகிறார். கல்லூரியின் அறிவு செறிந்த பணியாளர்களான முதல்வர், பேராசிரியர்கள், உதவிப் பேராசிரியர்கள் மற்றும் பிறபணியாளர்கள், பல்கலைக் கழகக் கொடைக்குழு விதித்துள்ள பணி நிபந்தனைகளின் அடிப்படையில் பணியாற்றுகின்றனர்.

கல்லூரிகளில் பாடத்திட்டக்கல்வி முறைகளுக்கு இணைப்பாணை வழங்குதல், ஒரு பாடத்திட்டக் கல்வி முறைக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள பணியாளர்களின் எண்ணிக்கையினை அதிகரித்தல், தேர்வுகள், நடத்துதல், தேர்வு முடிவினை வெளியிடுதல் போன்றவை, கல்லூரிகள் இணைக்கப்பட்டுள்ள பல்கலைக்கழகங்களைச் சார்ந்தவையாகும்.

முந்தைய திருவாங்கூர் மாநிலத்திலிருந்த ஸ்காட் கிறித்தவக் கல்லூரி, சென்னை பல்கலைக் கழகத்துடன் இணைந்து இயங்கிய ஒரே கல்லூரியாகும். 1893 ஆம் ஆண்டு முதல் 1937 வரை, இது சென்னை பல்கலைக் கழகத்துடன், இணைந்திருந்தது. 1938 ஆம் ஆண்டு, திருவனந்தபுரம் பல்கலைக்கழகம் திறக்கப்பட்டவுடன், இக்கல்லூரி, திருவனந்தபுரம் பல்கலைக்கழகத்துடன் இணைந்தது. 1956 ஆம் ஆண்டு, கன்னியாகுமரி மாவட்டம் அமைக்கப்படும் வரை, தற்போதைய கன்னியாகுமரி மாவட்டப் பகுதியிலுள்ள அனைத்துக் கல்லூரிகளும், திருவனந்தபுரம் பல்கலைக் கழகத்துடன் இணைந்திருந்தன. பின்னர், இக்கல்லூரிகள் சென்னை பல்கலைக் கழகத்தின் கட்டுப்பாட்டில் கொணரப்பட்டன. 1966 ஆம் ஆண்டு, மதுரை பல்கலைக் கழகம் (பின்னர் மதுரை-காமராசர் பல்கலைக்கழகமென மாற்றப்பட்டது) நிறுவப்பட்டு, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கல்லூரிகள் மதுரை காமராசர் பல்கலைக் கழக நிருவாகக் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளன. கல்லூரிகளுக்குரிய கட்டுப்பாட்டைப் பொறுத்தவரை, மாவட்டத்திலுள்ள அனைத்துக் கல்லூரிகளும், மதுரை-காமராஜ் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு கல்லூரியின் வரலாறு, வளர்ச்சி, அளிக்கப்பட்டுள்ள தலைப்புப் பொருள் பாடத்திட்டங்கள், கல்லூரி இயங்கும் முறை ஆகியவை, கீழ்க்காணும் பத்திகளில் விரிவாக அளிக்கப்பட்டுள்ளன.

ஸ்காட் கிறித்தவக் கல்லூரி, நாகர்கோவில்

கல்லூரிக் கல்வி, மாவட்டத்தின் பல பகுதிகளிலும் பரவியதற்கான பெருமை, ஸ்காட் கிறித்தவக் கல்லூரியையே சாரும் என முழுமனதுடன் அறிவிப்பதில் தவறில்லை. ஏனெனில், நாகர்கோவில் சமயப்பரப்புக்குழு, கி.பி. 1893 ஆம் ஆண்டிலேயே, இடைநிலை வகுப்புகளுடன் கூடிய இரண்டாம் நிலைக் கல்லூரியாகத் திகழ்ந்தது: கல்லூரியின் வளர்ச்சிக்கும் விரிவாக்கத்திற்கும் பரந்த மனதுடன், தாராளமாக நன்கொடை வழங்கிய ஆங்கிலேயக் கொடையாளியான திரு. செப்டிமஸ். ஆர்.ஸ்காட், என்பவரது பெயரில், ஸ்காட் கிறித்தவக் கல்லூரி என அஃது அழைக்கப்பட்டது.

இக்கல்லூரியின் முதல் தொகுதியிலடங்கிய மாணவர்கள், கிறித்தவ சமயத்தைச் சார்ந்தோர் அறுவரும், இந்து சமயத்தைச் சார்ந்தோர் அறுவரும் ஆவர்[144].

1950 ஆம் ஆண்டு, இந்நிறுவனம்,[145] முதல் நிலைக் கல்லூரியாக உயர்த்தப்பட்டு, கணக்கியல் (பி.எஸ்.சி.), மற்றும் வரலாறு (பி.ஏ.) ஆகிய பட்டப்படிப்புப் பாடத்திட்டங்கள் துவங்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து பல பாடத்திட்டங்கள் பிந்தைய ஆண்டுகளில் அறிமுகப்படுத்தப்பட்டன. அவை பற்றிய விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன.

பட்டப்படிப்பு முன்நிலை

பட்டப் படிப்பின் பெயர்	*பெருஅளவிலான பாடத்திட்டத் தலைப்புப் பொருள்*	*துணைப் பாடங்கள் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு*	
(1)	*(2)*	*(3)*	*(4)*
பி.ஏ.	வரலாறு	1.பொருளியல்	
		2. தற்கால ஆங்கிலம்	1954
பி.ஏ.	பொருளியல்	1. வரலாறு	
		2. பொருளியல்-புள்ளித் தொகுப்பியலின் ஆக்கக் கூறு	1954
பி.ஏ.	ஆங்கிலம்	-	1971
பி.ஏ.	தமிழ்	-	1979
பி.எஸ்.சி.	கணக்கியல்	1. இயற்பியல்	
		2. கணக்கியலின் பயன்பாடு	1950
பி.எஸ்.சி.	வேதியியல் (அ)	1. கணிதம்	
		2. இயற்பியல்	1952

(1)	(2)	(3)	(4)
பி.எஸ்.சி.	வேதியியல் (ஆ)	1. இயற்பியல் 2. விலங்கியல்	1952
பி.எஸ்.சி	இயற்பியல்	1. கணிதம் 2. வேதியியல்	1951
பி.எஸ்.சி.	விலங்கியல்	1. வேதியியல் 2. தாவரவியல்	1956
பி.எஸ்.சி.	தாவரவியல்	1. விலங்கியல் 2. வேதியியல்	1966
பி.காம்.	வணிகவியல்		1978

பட்டப் பின்பயிற்சிப் பாடத்திட்டம்

பட்டப் படிப்பின் பெயர்	பெருஅளவிலான பாடத்திட்டத் தலைப்புப் பொருள்	அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு
எம்.ஏ.	பொருளியல்	1971
எம்.ஏ.	ஆங்கிலம்	1971
எம்.எஸ்.எஸி.	விலங்கியல்	1980
எம்.காம்.	வணிகவியல்	1981
எம்.எஸ்.ஸி.	வேதியியல்	1982
எம்.எஸ்.ஸி.	தாவரவியல்	1983
எம்.எஸ்.ஸி.	இயற்பியல்	1987
எம்.ஃபில்.	விலங்கியல்	1983
எம்.ஃபில்.	தாவரவியல்	1986
எம்.ஃபில்.	பொருளியல்	1986

பட்டியலில் விவரிக்கப்பட்டவாறு, இக்கல்லூரி, ஆங்கிலம் மற்றும் பொருளியல் ஆகியவற்றின் முதுகலைப்பட்ட பாடத்திட்டங்களை 1971ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தியது. பின்னர், விலங்கியல், பெரு வாணிகம், வேதியியல், தாவரவியல் மற்றும் இயற்பியல் ஆகிய முதுகலைப்பட்டப் படிப்புக்களை பாடத்திட்டங்களால், கல்லூரியில், படிப்படியாக அறிமுகப்படுத்தப்பட்டன.

1983 ஆம் ஆண்டு, விலங்கியலில் எம்.ஃபில். கல்விப் பாடத் திட்டத்தையும், 1986 ஆம் ஆண்டு, தாவரவியல் மற்றும் பொருளியல் ஆகிய தலைப்புப் பொருள்களில் எம்.ஃபில். கல்விப் பாடத்திட்டத்தையும், இக்கல்லூரி அறிமுகப்படுத்தி, "ஆராய்ச்சி நிறுவனம்" என்ற நிலையினை அடைந்துள்ளது.

இக்கல்லூரி ஆண்-பெண் இணைக் கல்வி முறையினைத் தேந்தெடுத்துள்ளது. இக்கல்லூரியில், பட்டப் படிப்பின் பகுதி 1-ல், தமிழ் தவிர, மலையாளம் மற்றும் இந்தி மொழியும் மாணவர்களுக்கு அளிக்கப்படுகிறது.

இந்நிறுவனத்தில், துறைவாரியாகப் பணியாற்றும் பேராசிரியர்கள், விரிவுரையாளர் போன்ற கல்வி அளிக்கும் அலுவலர்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

தொடர் எண்.	*துறையின் பெயர்*	*எண்ணிக்கை*
1.	தமிழ்	11
2.	மலையாளம்	1
3.	இந்தி	1
4.	ஆங்கிலம்	18
5.	கணிதம்	6
6.	இயற்பியல்	9
7.	வேதியியல்	13
8.	தாவரவியல்	11
9.	விலங்கியல்	12
10.	பொருளியல்	9
11.	வணிகவியல் (பகுதி நேர வழக்கறிஞர்)	10+1
12.	வரலாறு	4
13.	உடற்கல்வி	1
14.	நூலகர்	1

நூலகம்

பல்வேறு பாடத்திட்டத் தலைப்புப் பொருள்களடங்கிய 52,024 நூல்களைக் கொண்ட தொகுதி, இக்கல்லூரி நூலகத்திலுள்ளது.

முறையான பாடத்திட்டங்களல்லாத பிற செயற்பாடுகள்

இக்கல்லூரியில் 20 சங்கங்கள் உள்ளன. அவற்றின் அலுவலக நிருவாகிகள் ஆண்டுதோறும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். கீழ்க்கண்ட வாறான சங்கங்கள் இயங்கி வருகின்றன:

1. ஆங்கிலம் (பொது)
2. ஆங்கிலம் (இலக்கியம்)
3. தமிழ் (பொது)
4. தமிழ் (இலக்கியம்)
5. மலையாளம்
6. இந்தி
7. கணிதம்
8. இயற்பியல்
9. வேதியியல்
10. தாவரவியல்
11. விலங்கியல்
12. வரலாறு
13. பொருளியல்
14. பெரு வாணிகம்
15. பொருளியல் (முதுகலைபட்டம்)
16. ஆங்கிலம் (முதுகலைபட்டம்)
17. விலங்கியல் (முதுகலைபட்டம்)
18. தாவரவியல் (முதுகலைபட்டம்)
19. வேதியியல் (முதுகலைபட்டம்)
20. பெரு வாணிகம் (முதுகலைபட்டம்)

1979-80 முதல் மூன்றாண்டு பட்டப்படிப்பு மற்றும் ஈராண்டு முதுகலைப்பட்டப்படிப்பு ஆகிய கல்லூரி வகுப்புகளில் கல்வி பயின்ற, மாணவ, மாணவியரின் எண்ணிக்கை கீழ்கண்ட பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ளது

ஸ்காட் கிறித்தவக் கல்லூரி, நாகர்கோவில்

ஆண்டு	மூன்றாண்டு பட்டப்படிப்பு மற்றும் ஈராண்டு பட்டம்பெற்ற பின் படிப்பு ஆகிய கல்லூரி வகுப்புகளில் கல்வி பயின்ற மாணவ, மாணவியர் எண்ணிக்கை (தனித்தனியாக)													
	பி.ஏ.		பி.எஸ்.சி.		பி.காம்.		எம்.ஏ.		எம்.எஸ்.சி.		எம்.காம்.		எம்.ஃபில்.	
	ஆண்கள்	பெண்கள்	ஆண்கள்	பெண்கள்	ஆண்கள்	பெண்கள்	ஆண்கள்	பெண்கள்	ஆண்கள்	பெண்கள்	ஆண்கள்	பெண்கள்	ஆண்கள்	பெண்கள்
1979–80	219	73	403	122	81	24	65	37	--	--	--	--	--	--
1980–81	350	77	400	126	137	32	64	36	13	7	--	--	--	--
1981–82	350	87	412	113	143	30	66	34	21	14	--	--	--	--
1982–83	388	95	442	147	183	19	65	41	18	31	22	29	--	--
1983–84	366	74	466	113	167	24	47	50	26	61	14	35	--	--
1984–85	341	74	467	115	163	32	60	48	29	76	13	39	3	5
1985–86	354	56	455	94	166	31	73	41	42	63	24	33	4	6
1986–87	324	42	429	97	171	26	63	47	36	70	30	29	11	7
1987–88	311	37	462	82	175	21	51	46	36	75	25	28	11	13
1988–89	209	35	406	93	155	20	61	40	50	99	29	29	13	17

ஆய்வுக்கூடங்கள்: பட்டப்படிப்பு மற்றும் பட்டம் பெற்ற பின் படிப்பு ஆகிய நிலைகளில், பல்வேறு அறிவியல், கல்வி முறைகள் உள்ளதால், இயற்பியல், வேதியியல், தாவரவியல், மற்றும் விலங்குநூல் ஆகிய துறைகள், அந்தந்த துறைகளைச் சார்ந்த, பொருள்கள் தொடர்பான மாணவ, மாணவியரின் தேவைகளைப் பூர்த்தி செய்திட, தங்கள் தங்களது ஆய்வுக்கூடங்களை இயக்குகின்றன.

இக்கல்லூரியில், தேசிய மாணவர் இளைஞர் படை, தேசிய பணித் திட்டக்குழு, தேசிய முதியோர் கல்வி அமைப்புத் திட்டம், திட்டப் பொதுவிடம் சமூகப்பணி இணைக்குழு, நுண்கலைகள் கழகம், புகைப்படங்கள் கழகம், மற்றும் சுழல் கழகம் ஆகியவை இயங்கி வருகின்றன.

தென்னிந்திய திருச்சபையைச் சேர்ந்த, கன்னியாகுமரி திருமண்டல சபையால் இக்கல்லூரி நடத்தப்பட்டு வருகிறது.

தென்திருவாங்கூர் இந்துக்கல்லூரி

தென் திருவாங்கூர் இந்துக் கல்லூரி, மாவட்டத்தில் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது[146]. அது, கடந்த ஜூலை 11, 1952 ஆம் நாளன்று, தென்திருவாங்கூர் இந்து கல்லூரி சங்கத்தின் தளராத முயற்சியால் நிறுவப்பட்டது. துவக்கத்தில், அது இரண்டாம் நிலை கல்லூரியாகத் தான் இயங்கி வந்தது. 1955 ஆம் ஆண்டு, அது முதல் நிலைக்கு உயர்த்தப்பட்டது. அப்போதுதான், பொருளியல், தமிழ், கணிதம் மற்றும் வணிகவியல் ஆகியவற்றில் பட்டப்படிப்புக் கல்விமுறை, அறிமுகப்படுத்தப்பட்டது. அது, 1956 ஆம் ஆண்டு, முதுகலைப்பட்டப் படிப்புக்கான பாடத்திட்டமுறை அறிமுகப்படுத்தப்பட்டது.

இக்கல்லூரியில், அளிக்கப்பட்டுவரும், பாடத்திட்ட முறைகளும், அவை அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டும், கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

பட்டப்படிப்புப் பாடத் திட்டங்கள்

	பாடத்திட்டத் தலைப்புப்பொருள் (1)	அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு (2)
1. பி.ஏ:		
1.	பொருளியல்	1955
2.	தமிழ்	1955
3.	ஆங்கிலம்	1966
4.	சமூகவியல்	1966
5.	வரலாறு	1972
2. பி.எஸ்.ஸி:		
1.	கணிதம்	1955
2.	விலங்கியல்	1957
3.	வேதியியல்	1966
4.	இயற்பியல்	1972
5.	தாவரவியல்	1973
6.	கணினி அறிவியல்	1986

	(1)	(2)
3.	**பி.காம்:**	
	வணிகவியல்	1955
4.	**எம்.ஏ:**	
1.	தமிழ்	1955
2.	பொருளியல்	1977
3.	ஆங்கிலம்	1979
4.	வரலாறு	1981
5.	**எம்.எஸ்.ஸி:**	
1.	வேதியியல்	1980
2.	இயற்பியல்	1983
3.	விலங்கியல்	1984
6.	**எம்.காம்:**	
	ஆராய்ச்சிப் பட்டப்படிப்பு வகை	
1.	எம்.ஃபில். தமிழ்	1979
2.	எம்.ஃபில். வேதியியல்	1986

இந்த பட்டப் படிப்பு, முதுகலைப்பட்ட படிப்பு மற்றும் ஆராய்ச்சிப் பட்டப் படிப்பு வகை, ஆகியவை தவிர, கீழ்க்கண்ட கல்லூரிப்பட்டப் படிப்புகளும் பட்டயச்சான்றிதழ் மற்றும் சான்றிதழ் வழங்குவது குறித்த பாடத் திட்டங்களும் கூட, இக்கல்லூரியில் கற்றுக் கொடுக்கப்படுகின்றன.

	கல்லூரிப் பட்டயசான்றிதழ் பாடத் திட்டங்கள் (1)	*அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு* (2)
1.	காந்தீய சிந்தனைகளில் கல்லூரிப் பட்டயப் படிப்புச் சான்றிதழ், பாடத் திட்ட முறை	1970
2.	மொழியியலில், கல்லூரிப்பட்டயப் படிப்புச் சான்றிதழ் பாடத் திட்ட முறை	1972
3.	மார்க்ஸீய சிந்தனைகளும், கருத்துக் கோட்பாடுகளும் சார்ந்த கல்லூரிப் பட்டயப் படிப்புச் சான்றிதழ் பாடத்திட்டமுறை	1976
4.	வாழ்க்கைத் தொழில் நிருவாகம் சார்ந்த கல்லூரிப் பட்டயப் படிப்புச் சான்றிதழ் பாடத்திட்ட முறை	1977
5.	அலுவலக மேற்பார்வை குறித்த கல்லூரிப் பட்டயப் படிப்புச் சான்றிதழ் பாடத்திட்ட முறை	1979
6.	சுற்றுலா தொடர்பான கல்லூரி பட்டயப் படிப்புச் சான்றிதழ் பாடத்திட்ட முறை	1979

	(1)	(2)
7.	மேற்பார்வை தொடர்பான கல்லூரி பட்டயப்படிப்புச் சான்றிதழ் பாடத்திட்டமுறை	1979
8.	விற்பனை மற்றும் அயல்நாட்டு வாணிகம் தொடர்பான கல்லூரி பட்டயப்படிப்புச் சான்றிதழ் பாடத்திட்ட முறை	1979
9.	நிலயியல் கல்லூரி பட்டயப்படிப்புச் சான்றிதழ் பாடத்திட்டமுறை	1979
10.	மக்கள் செய்தித்தொடர்பு மற்றும் செய்தி இணைப்பு தொடர்பான பட்டயப்படிப்புச் சான்றிதழ் பாடத்திட்டமுறை	1979
11.	வளர்ச்சித்திட்ட நிருவாகம் தொடர்பான பட்டயப் படிப்புச் சான்றிதழ் பாடத்திட்ட முறை	1979
12.	பொதுத் துணிவாண்மை தொடர்பான பட்டயப் படிப்புச் சான்றிதழ் பாடத்திட்டமுறை	1979
13.	பத்திரிகை எழுத்தாற்றல் தொடர்பான பட்டயப் படிப்புச் சான்றிதழ் பாடத்திட்ட முறை	1979
14.	மொழியாக்கம் தொடர்பான பட்டயப்படிப்புச் சான்றிதழ் பாடத்திட்ட முறை	1980
15.	பணியாளர் தொகுதி மேற்பார்வை மற்றும் தொழிற்றுறை உறவுமுறை சார்ந்த பட்டயப் படிப்புச் சான்றிதழ் பாடத்திட்ட முறை	1980

சான்றிதழ் வழங்கும் பாடத்திட்ட முறை

பாடத்திட்ட முறையின் பெயர் (1)		*அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு* (2)
1.	ஆங்கிலம் போதிப்பதற்கான பட்டயப்பின் பயிற்சிச் சான்றிதழ் வழங்கும் பாடத்திட்டமுறை	1984
2.	காந்தீய சிந்தனையில் சான்றிதழ் வழங்கும் பாடத்திட்ட முறை	1970
3.	இந்திய நாகரிகத்தன்மை சார்ந்த சான்றிதழ் வழங்கும் பாடத்திட்ட முறை	1971
4.	மொழியியலில் சான்றிதழ் வழங்கும் பாடத்திட்ட முறை	1972
5.	விற்பனைத்திறம் தொடர்பான சான்றிதழ் வழங்கும் பாடத்திட்ட முறை	1977
6.	பத்திரிகை எழுத்தாற்றல் தொடர்பான சான்றிதழ் வழங்கும் பாடத்திட்ட முறை	1978
7.	நடைமுறை மற்றும் உரையாடல் சார்ந்த இந்தி பயில, சான்றிதழ் வழங்கும் பாடத்திட்டமுறை	1985

இந்த பட்டயப்படிப்புச் சான்றிதழ் மற்றும் சான்றிதழ் வழங்கும் பாடத்திட்ட முறை, இக்கல்லூரியில் இயங்கும் மாலை நேரக் கல்லூரி வகுப்புகளில் பயிற்றுவிக்கப்படுகிறது. பி.காம். பட்டப்படிப்புப் பாடத்திட்ட முறை, நாள் கல்லூரி மற்றும் மாலை நேரக் கல்லூரி ஆகிய இரண்டிலுமே அளிக்கப்படுகிறது.

வேதியியல் மற்றும் தமிழ் ஆகியவற்றில், இக்கல்லூரி, எம்.ஃபில். பட்டம் அளித்து வருவதாலும் மதுரை- காமராசர் பல்கலைக்கழகத்தில் தமிழில் முனைவர் (பி.எஃச்.டி.) பட்டம் பெற, கற்றறிவாளர்களுக்கு வழிகாட்டி வருவதாலும், இக்கல்லூரியும் ஒரு ஆராய்ச்சி நிறுவனமாகவும் கருதப்படுகிறது[147].

1987-88 ஆம் ஆண்டு நிலவரப்படி கல்வியளிக்கும் ஆசிரியர்கள் மற்றும் கல்வி அளிக்கப் பெறும் மாணவர்கள் ஆகியோர் குறித்த துறைவாரியான புள்ளி விவரங்கள் கீழே பட்டியலில் அளிக்கப்பட்டுள்ளன:

தொடர் எண்	*துறை*	*ஆசிரியர்களின் எண்ணிக்கை*	*மாணவர்களின் எண்ணிக்கை*
1.	வரலாறு மற்றும் நிலயியல்	10	101
2.	பொருளியல்	11	141
3.	சமூகவியல்	5	45
4.	ஆங்கிலம்	17	73
5.	தமிழ்	16	87
6.	மலையாளம்	2	16
7.	இந்தி	1	6
8.	கணிதம்	7	81
9.	இயற்பியல்	11	85
10.	வேதியியல்	13	120
11.	தாவரவியல்	5	83
12.	விலங்கியல்	11	126
13.	கணினி அறிவியல்	1	19
14.	வணிகவியல்	11	242

இக்கல்லூரியில் ஆண்-பெண் இருபாலர் பயிலும் முறை நடைமுறையிலுள்ளது.

ஆய்வுக்கூடங்கள்

இயற்பியல், வேதியியல், தாவரவியல், விலங்கியல் மற்றும் கணினி அறிவியல் ஆகிய துறைகளின் ஆய்வுக்கூடங்கள் செயல்படுகின்றன.

நூலகம்

இக்கல்லூரியில் 46558 நூல்களைக்கொண்ட நூலகமும் இயங்கி வருகிறது.

பாடத்திட்டங்களல்லாத பிற நடவடிக்கைகள்

கல்லூரியில் ஓர் மாணவர் கூட்டமைப்பு செயல்பட்டு வருகிறது. தமிழ், ஆங்கிலம், இயற்பியல் போன்ற 21 செயலுரிமையுடைய சங்கங்கள், நுண்கலைகள் சங்கம், தேசிய மாணவ படை, தேசிய பணித்திட்டம் மற்றும் தேசிய முதியோர் கல்வித் திட்ட அலகுகள் ஆகியவையும் இக்கல்லூரியில் இயங்கி வருகின்றன. இக்கல்லூரி, நாகர்கோவில், தென் திருவாங்கூர் இந்து கல்லூரி சங்கத்தினால், நடத்தப்படுகிறது.

நேசமணி நினைவு கிறித்தவக் கல்லூரி, மார்த்தாண்டம்[148]

பல்கலைக்கழக புகுமுக வகுப்புப் பாடத்திட்டத்துடன், கிறித்தவக் கல்லூரி, மார்த்தாண்டத்தில், ஆகஸ்ட், 6. 1964 ஆம் நாளன்று, இயங்கத் துவங்கியது. தென்னிந்தியத் திருச்சபையின், மாவட்டச் சமய முதல்வரின் அருளாட்சிப் பரப்பினால் இக்கல்லூரி நிறுவப்பட்டு , நடத்தப்பட்டு வருகிறது. அடுத்த ஆண்டிலேயே, இக்கல்லூரியின் நிலை உயர்த்தப்பட்டு, கணிதம், வரலாறு மற்றும் பொருளியல் ஆகியவற்றில் பட்டப்படிப்புப் பாடத்திட்டங்கள் துவங்கின. பல்கலைக் கழகப் புகுமுக வகுப்புகளின் கிளைகளும் ஐந்தாக உயர்த்தப்பட்டன. 1966-67 ஆம் ஆண்டு, பி.எஸ்.ஸி. (இயற்பியல்) மற்றும் பல்கலைக் கழக புகுமுக வகுப்பு, இக்கல்லூரியில் புதிதாக அறிமுகப் படுத்தப்பட்ட பாடத்திட்டமாகும். 1967-68 ஆம் ஆண்டு, தமிழைப் பாட மொழியாகத் கொண்ட விலங்கியல் மற்றும் வரலாறு ஆகிய பட்டப் படிப்புப்பாடத் திட்டங்களும், துவங்கப்பட்டன. இவ்வாறாக, பல்கலைக்கழகப் புகுமுக வகுப்புப் பாடத்திட்டங்களின் எண்ணிக்கை எட்டாக உயர்ந்தது. 1968 ஆம் ஆண்டு, வேதியியலில், பி.எஸ்.ஸி. பட்டப் படிப்புப் பாடத் திட்டம். அறிமுகப்படுத்தப்பட்டது. 1971-72 ஆம் ஆண்டில், பி.எஸ்.ஸி. (தாவர இயல்) மற்றும் பி.ஏ. (ஆங்கிலம்-இலக்கியம்) ஆகிய பாடத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. 1980-81 ஆம் ஆண்டில் எம்.எஸ்.ஸி. (இயற்பியல்) பாடத்திட்டமும், 1981-82 ஆம் ஆண்டில் எம்.எஸ்.ஸி. (கணக்கியல்) பாடத் திட்டமும் அறிமுகப்படுத்தியதால், இக்கல்லூரி, பட்டப்பின் பயிற்சி நிலைக்கு உயர்த்தப்பட்டது. 1982-83 ஆம் ஆண்டு, பி.காம். (வணிகவியல் பட்டப்படிப்பு) பாடத்திட்டமும் துவக்கப்பட்டது. 1983-84 ஆம் ஆண்டு, பட்டப்பின் பயிற்சி - எம்.ஏ (ஆங்கிலம்) பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டது. இக்கல்லூரி, நிறுவப்பட்டு, வளர்ந்து, மேலும் பல வளர்ச்சிகளைக் கண்டுள்ளதற்கு, அயராது பாடுபட்ட திரு.ஏ.நேசமணி அவர்களது நினைவாக, நேசமணி கிறித்தவக் கல்லூரி என இக்கல்லூரிக்கு பெயரிடப்பட்டுள்ளது. 1986-87 ஆம் ஆண்டு, அப்போதிருந்த பாடத்திட்டங்களுடன், எம்.ஃபில். (வரலாறு) பாடத் திட்டமும் சேர்க்கப்பட்டது. 1988-89 ஆம் ஆண்டில் புதிதாக சேர்க்கப்பட்ட பாடத்திட்டம் அறிவியலாகும்.

இக்கல்லூரி, ஆண்-பெண் இருபாலார்க்கும் பொதுவானது. தமிழுடன், பகுதி-1, பட்டப் படிப்புப் பாடத்திட்டத்தில், மலையாளமும் அளிக்கப்படுகிறது. பட்டப்படிப்பு மற்றும் பட்டப்பின் பயிற்சி ஆகிய நிலைகளிலான வகுப்புகளுக்கு அறிவியல் செய்முறைகள் நடத்தத் தேவையான ஆய்வுக் கூட வசதிகளை இக்கல்லூரி பெற்றுள்ளது. பல்கலைக்கழகக் கொடைக் குழு அளித்த நிதி உதவியினால், இக்கல்லூரியின் நூலகம் பல அரிய நூல்களைக் கொண்டதாக உள்ளது.

பாடத்திட்டக் கல்வி முறையல்லாத பிற நடவடிக்கைகள்

மாணவர்களின் பண்புகளை வளர்த்திடும் பல்துறை சங்கத்தினைத் தவிர, தேசிய மாணவர் படை, தேசிய பணித்திட்டங்கள், ஆகியவையும் இக்கல்லூரியில், நன்கு செயலாற்றி வருகின்றன. இக்கல்லூரியில் கீழ்க்காணும் பட்டியலில் கண்ட பல்வேறு பாடத்திட்டங்கள் படிப்படியாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன:

பட்டப்படிப்பின் பெயர்	*பெரு அளவிலான பாடத்திட்டத் தலைப்புப் பொருள்*	*அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு*
பி.எஸ்.ஸி.	1. கணிதம்	1965-66
	2. இயற்பியல்	1966-67
	3. விலங்கியல்	1967-68
	4. வேதியியல்	1968-69
	5. தாவரவியல்	1971-72
	6. கணினி அறிவியல்	1988-89
பி.ஏ.	1. வரலாறு (தமிழ் மற்றும் ஆங்கில போதனா முறை)	1965-66
	2. பொருளியல்	1965-66
	3. ஆங்கிலம்	1971-72
	4. தமிழ்	1980-81
பி.காம்.	வணிகவியல்	1982-83
எம்.எஸ்.ஸி.	1. இயற்பியல்	1980-81
	2. கணிதம்	1981-82
எம்.ஏ.	வரலாறு	1983-84
எம்.ஃபில்.	வரலாறு	1987-88

இக்கல்லூரியில் 67 பேராசிரியர்கள் மற்றும் 38 உதவி பேராசிரியர்கள் ஆகியோர் பணிபுரிகின்றனர்.

மூன்றாண்டு பட்டப்படிப்பு, அதனைத் தொடர்ந்து இரண்டாண்டு பட்டப்பின் பயிற்சி, பின்னர் ஓராண்டு எம்.ஃபில், ஆகியவை பயின்று வரும் மாணவர்கள் தொடர்பான புள்ளி விவரங்கள், ஆண்டு வாரியாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

நேசமணி நினைவு கிறித்தவக் கல்லூரி, - மார்த்தாண்டம்

ஆண்டு	மூன்றாண்டு பட்டப் படிப்பு மற்றும் ஈராண்டு பட்டப்பின் பயிற்சி ஆகிய பாடத்திட்ட வகுப்புகளில் பயிலும் மாணவ, மாணவியர் தொடர்பான புள்ளி விவரங்கள்											
	பி.ஏ.		பி.எஸ்ஸி.		பி.காம்.		எம்.ஏ.		எம்.எஸ்ஸி.		எம்.ஃபில்.	
	மாணவர்	மாணவியர்	மாணவர்	மாணவியர்	மாணவர்	மாணவியர்	மாணவர்	மாணவியர்	மாணவர்	மாணவியர்	மாணவர்	மாணவியர்
1979-80	431	136	370	122	--	--	--	--	26	18	-	-
1980-81	457	200	380	144	--	--	--	--	25	19	-	-
1981-82	453	255	368	186	31	19	--	--	29	27	-	-
1982-83	397	253	339	226	62	39	14	12	33	24	-	-
1983-84	365	245	308	260	110	62	35	21	26	30	-	-
1984-85	402	238	313	255	126	72	40	18	22	39	-	-
1985-86	364	244	339	252	120	80	37	25	19	49	4	2
1986-87	398	260	313	235	115	77	34	28	26	50	4	2
1987-88	320	254	290	236	94	76	31	27	31	41	3	3

லெட்சுமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நெய்யூர்

நெய்யூரில், லெட்சுமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஜீலை, 16, 1964 ஆம் நாளன்று, லெட்சுமிபுரம் கல்லூரிச் சங்கத்தால் பல்கலைக் கழகப் புகுமுக வகுப்புப் பாடத் திட்ட வகுப்புகளுடன், துவக்கப்பட்டது. இக்கல்லூரியில் 180 மாணவர்கள், கல்வி பயில்கின்றனர். பதினாறு ஆசிரியர்கள், கல்வியளிக்கின்றனர். 1966 ஆம் ஆண்டு, வரலாறு, கணிதம், மற்றும் விலங்கியல் ஆகிய பாடத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு, முதல் நிலைக்கல்லூரியாக உயர்த்தப்பட்டது[149]. 1967 ஆம் ஆண்டு, பி.ஏ. (வரலாறு) தமிழ் போதனா முறை பாடத்திட்ட வகுப்பு துவக்கப்பட்டது. 1979 ஆம் ஆண்டு, பி.எஸ்.ஸி. (இயற்பியல்), மற்றும் பி.ஏ. (ஆங்கிலம்) ஆகிய பாடத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. அண்மையில், அதாவது 1980 ஆம் ஆண்டு, இக்கல்லூரியில், பி.ஏ. (தமிழ்) பாடத்திட்டம், துவக்கப்பட்டது.

கல்லூரி நிருவாகக் குழு உறுப்பினர்களிடையே எழுந்த கருத்து வேறுபாடு காரணமாகத் தமிழக அரசு கல்லூரி நிருவாகத்தினைப் பொறுப்பேற்றுக் கொண்டது[150]. இது, ஆண்-பெண் இருபாலருக்காக இயங்கும் கல்லூரியாகும்.

இக்கல்லூரியிலுள்ள நூலகம், 12,584 புத்தகங்களை கொண்டுள்ளது. 23, பத்திரிகைகளை தொடர்ந்து பெரும் வண்ணம் சந்தா செலுத்தி மாணவர்கள் பயன் பெறத்தக்க வகையில் வழிவகுக்கப்பட்டுள்ளது. தேசிய மாணவர் இளைஞர் படை, தேசிய பணித்திட்டக்குழு ஆகியவை இக்கல்லூரியில் இயங்கி வருகின்றன. 1978 ஆம் ஆண்டு முதல், இக்கல்லூரி, முதியோர் கல்வி மையங்களை நடத்திவருகிறது. 1986-87 ஆம் ஆண்டு, கல்லூரி இம்மாதிரியான 30 மையங்களை நடத்தியது.

விவேகானந்தர் கல்லூரி, அகஸ்தீஸ்வரம்

சுவாமி விவேகானந்தரது நூற்றாண்டு விழாவினை ஒட்டி, அகஸ்தீஸ்வரத்தில் ஒரு முழுமையான கல்லூரியினைத் துவக்கும் நோக்கில், 1964 ஆம் ஆண்டு, திரு. எஸ். பாண்டியன் மற்றும் பலரால், விவேகானந்தா கல்விச் சங்கம் அமைக்கப்பட்டது. சுவாமி விவேகானந்தர் கல்லூரி, 11-8-1975 ஆம் தேதி துவங்கப் பெற்று, அந்நோக்கம் நிறைவேறியது[151]. அது துவங்கப் பெற்ற முதலாண்டில், கல்லூரி, அறிவியல் மற்றும் மனித இயல் ஆகிய பல்கலைக்கழகப் புகுமுக வகுப்புப் பாடத்திட்டங்களை அளித்தது. முதலாண்டில், கல்வி பயின்ற மாணவர்களின் எண்ணிக்கை167 ஆக இருந்தது.

பி.ஏ. பொருளியல் மற்றும் பி.எஸ்.ஸி. கணிதம் ஆகிய பட்டப் படிப்புப் பாடத் திட்டங்கள், 1966ஆம் ஆண்டு, அறிமுகப்படுத்தப்பட்டன. அடுத்த 1967 ஆம் ஆண்டு, பி.ஏ. (ஆங்கில இலக்கியத்தில்) பட்டப் படிப்பு பாடத் திட்டம் துவங்கியது.

கல்லூரி மேலும் விரிவாக்கப்பட்டு, 1968 ஆம் ஆண்டு, பி.எஸ்.ஸி. வேதியியல் மற்றும் 1969 ஆம் ஆண்டு, பி.எஸ்.ஸி. விலங்கியல் ஆகியவை துவங்கப்பட்டன. பின்னர், பி.எஸ்.ஸி. இயற்பியல் மற்றும் பி.காம். ஆகிய பாடத்திட்டங்களைத் துவக்கிட, மதுரை-காமராசர் பல்கலைக்கழகத்தின் அனுமதி பெறப்பட்டு, அப்பாடத்திட்டங்கள் முறையே 1979 மற்றும் 1981 ஆம் ஆண்டுகளில் துவக்கப்பட்டன.

பின்னர், பி.எஸ்.ஸி. தாவரவியல் மற்றும் பி.ஏ. தமிழ் இலக்கியம் ஆகிய பாடத்திட்டங்களும், அதன் பின்னர், எம்.ஏ. பொருளியல் மற்றும் எம்.எஸ்.ஸி. கணிதம் ஆகியவையும் அறிமுகப்படுத்தப்பட்டன. துவக்கத்தில் அது ஆண்கள் கல்லூரியாகத் தொடங்கப் பெற்று, பின்னர் 1973ஆம் ஆண்டு, அது, ஆண்-பெண் இருபாலர் பயிலும் கல்லூரியாக மாற்றப்பட்டது.

தேசியப் பணித்திட்டம் மற்றும் தேசிய மாணவர் படை ஆகியவை, இக்கல்லூரியில் இயங்குகின்றன. அறிவியல் பாடத்திட்டத்தை அளித்திட, ஆய்வுக்கூட வசதிகள் உள்ளன. இக்கல்லூரியில் முதல் ஆய்வுக்கூடப்பகுதி, புகழ் பெற்ற வழக்கறிஞரும், கொடையாளருமான நாகர்கோவிலைச் சேர்ந்த திரு.எஸ்.கே. பாண்டியன் பி.ஏ., பி.எல். அவர்களால், நன்கொடையாக அமைத்தளிக்கப்பட்டது.

1979-80 ஆம் ஆண்டிலிருந்து, கல்லூரியில் மூன்றாண்டு இளங்கலை பட்டப் படிப்பு மற்றும் ஈராண்டு முதுகலைபட்டப்படிப்பு ஆகியவை பயிலும் மாணவ, மாணவியரின் எண்ணிக்கை ஆண்டுவாரியாகக் கீழ்காணும் பட்டியலில் அளிக்கப்பட்டுள்ளது.

லெட்சுமிபுரம் கலை அறிவியல் கல்லூரி - நெய்யூர்

1979-80 ஆம் ஆண்டு முதல், ஒவ்வொரு ஆண்டும், பல்வேறு பாடத் திட்ட வகுப்புகளில், கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை

ஆண்டு	பி.ஏ.			பி.ஏ.			பி.ஏ.			பி.ஏ.			பி.எஸ்.ஸி.			பி.எஸ்.ஸி.			பி.எஸ்.ஸி.		
	வரலாறு (ஆங்கிலத்தில் போதனை)			வரலாறு (தமிழில் போதனை)			தமிழ்			ஆங்கிலம்			கணிதம்			இயற்பியல்			விலங்கியல்		
	ஆண்டுகள்			ஆண்டுகள்			ஆண்டுகள்			ஆண்டுகள்			ஆண்டுகள்			ஆண்டுகள்			ஆண்டுகள்		
	1	2	3	1	2	3	1	2	3	1	2	3	1	2	3	1	2	3	1	2	3
1979–80	47	29	21	49	25	15	–	–	–	24	–	–	23	31	28	20	–	–	33	29	27
1980–81	60	45	37	60	52	27	22	–	–	34	22	NA	45	23	27	30	20	–	40	30	31
1981–82	38	54	43	40	52	49	15	19	Na	32	30	22	45	41	24	30	29	19	40	38	30
1982–83	40	34	51	36	40	51	12	15	18	32	28	30	42	42	40	40	28	29	30	40	34
1983–84	35	38	32	37	36	35	9	9	14	28	31	26	43	42	42	29	29	24	40	40	39
1984–85	32	38	40	27	36	31	23	26	9	13	10	30	39	42	41	27	29	29	40	36	38
1985–86	20	29	35	25	24	40	5	13	12	14	23	24	30	38	41	30	24	28	37	39	36
1986–87	19	17	27	38	19	21	6	5	12	13	12	22	21	26	36	24	25	19	40	32	38
1987–88	9	18	16	32	35	19	11	6	5	17	9	29	20	21	26	28	24	22	36	36	30

ஹோலி கிராஸ் கல்லூரி, நகர்கோவில்

சாவநாடு சிலுவை சார்ந்த அறத்துறை நங்கைகள் திருச்சபை ஆட்சிப் பொறுப்புக் குழுவினால், 1965ஆம் ஆண்டு, இக்கல்லூரி நிறுவப்பட்டது. இது ஓர் கத்தோலிக்கக் கல்லூரியாகும். இக்கல்லூரி இன்றும் அவர்களது நிருவாகத்திலேயே தொடர்ந்து இயங்கி வருகிறது[151அ].

இம்மாவட்டத்தில், முதன்முறையாக, பெண்களுக்காகவே, இரண்டு கல்லூரிகள் திறக்கப்பட்டன. அதில், ஹோலி கிராஸ் கல்லூரி ஒன்றாகும். மற்றொன்று, குழித்துறை ஸ்ரீதேவி குமரி பெண்கள் கல்லூரியாகும். துவக்கத்தில், பல்கலைக்கழகப் புகுமுக பாடத்திட்ட வகுப்புகளில் நான்கு வகுப்புகளிருந்தன. கல்லூரி துவங்கப்பட்ட முதலாண்டில், 327 பெண்கள் கல்வி பயின்றனர்.

1966 ஆம் ஆண்டு, பி.எஸ்.ஸி. கணிதம், இயற்பியல், வேதியியல், தாவரவியல், மற்றும் விலங்கியல், ஆகியவையுடன் பி.ஏ. வரலாறு, பொருளியல் மற்றும் ஆங்கில இலக்கியம் ஆகிய பாடத்திட்டங்களும் துவங்கப்பெற்று, இக்கல்லூரி முதல் நிலைக்கல்லூரியாக உயர்த்தப்பட்டது.

1971 ஆம் ஆண்டு, முதல் முதுகலைபட்டப்படிப்பான எம்.ஏ. ஆங்கில இலக்கியம் இக்கல்லூரியில் அறிமுகப்படுத்தப்பட்டது. எம்.எஸ்.ஸி. (கணிதம்) மற்றும் எம்.எஸ்.ஸி. (விலங்கியல்) ஆகிய பாடத் திட்டங்கள் முறையே 1978 மற்றும் 1979 ஆம் ஆண்டுகளில், இக்கல்லூரியில் துவங்கப்பட்டன. அண்மையில் 1984 ஆம் ஆண்டு, இக்கல்லூரியில் முதுகலைப்பட்டப்படிப்பான எம்.எஸ்.ஸி. இயற்பியல் துவக்கப்பட்டது. 1980 ஆம் ஆண்டு முதல், வணிகவியல் பாடத்திட்டம் அளிக்கப்படுகிறது. இக்கல்லூரியில், "காந்தீய சிந்தனை" என்ற சான்றிதழ் வழங்கும் பாடத் திட்டமும் அளிக்கப்படுகிறது.

1966 ஆம் ஆண்டு முதல், இக்கல்லூரி ஒரு தங்கும் விடுதியினை நடத்தி வருகிறது. தற்போது ஒவ்வொன்றும் இரண்டு மாடிகளைக் கொண்ட மூன்று தங்கும் விடுதிகளைக் கல்லூரி இயக்கிவருகிறது. இவற்றில், 350 மாணவர்கள் தங்கியுள்ளனர்.

ஒரு கல்லூரிக்குத் தேவையான ஆய்வுக்கூடம், மற்றும் நூலக வசதிகள் ஆகியவையும் உள்ளன. பல்கலைக்கழகக் கொடைக்குழு வழங்கிய தொகையினின்றும், 9,561 நூல்கள் வாங்கப்பட்டு, இந்நூலகத்தில் சேமித்து வைக்கப்பட்டுள்ளன. இக்கல்லூரியில், நூல் வங்கியும் இயங்கி வருகிறது.

பாடத்திட்டங்களல்லாத இதர நடவடிக்கைகள்

1973-74 ஆம் ஆண்டு முதல், இக்கல்லூரியில், இரண்டு அலகுகள் தேசிய நலத்திட்டப்பணிகள், தேசிய சேமநலப் படை இயங்கி வருகின்றன. 1979 ஆம் ஆண்டு முதல், கல்லூரி 10 முதியோர் கல்வி மையங்களை

விவேகானந்தர் கல்லூரி - அகஸ்தீஸ்வரம்
இளங்கலை மற்றும் முதுகலை பட்டப்படிப்பில் பயிலும் மாணவர்கள் விவரம்
(1979-80 முதல் 1998-89 வரை)

	பி.ஏ.		பி.எஸ்.சி.		பி.காம்.		எம்.ஏ.		எம்.எஸ்.சி.	
ஆண்டு	மாணவர்கள்	மாணவியர்	மாணவர்கள்	மாணவியர்	மாணவர்கள்	மாணவியர்	மாணவர்கள்	மாணவியர்	மாணவர்கள்	மாணவியர்
1979-80	146	52	180	33	--	--	--	--	--	--
1980-81	149	53	187	43	--	--	--	--	--	--
1981-82	141	59	186	44	51	13	--	--	--	--
1982-83	150	56	138	72	99	32	--	--	--	--
1983-84	141	65	214	90	140	51	--	--	--	--
1984-85	124	59	210	103	133	52	16	5	--	--
1985-86	104	64	190	95	117	56	28	12	16	4
1986-87	87	50	182	108	105	61	28	11	29	11
1987-88	91	74	201	117	116	67	32	8	24	16
1988-89	87	66	188	142	96	64	32	7	19	20

நடத்தி வருகிறது. 30 அறிவுரையாளர்கள், 1 மேற்பார்வையாளர் மற்றும் ஒரு திட்ட அலுவலர் ஆகியோர் இம்மையங்களில் கல்வியைப்பரப்பி வருகின்றனர். ஒவ்வொரு ஆண்டும் 300 முதியோர் இம் மையங்களில் கல்வி பயின்று பயனடைகின்றனர். முதியோர் கல்வி மையங்கள் மூலமாக, முதியோர் பயன்பெறுவதற்கு, பல நூல்கள் இந்த நூலகத்தில் உள்ளன. 1972 ஆம் ஆண்டு முதல், இக்கல்லூரியில், ஒரு சுழல் கழகம் இயங்கி வருகிறது.

இக்கல்லூரியில் அளிக்கப்படும் பாடத் திட்டங்களும், அவை அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டுகளும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

பட்டப் பாடத் திட்டத்தின் பெயர்	*பெரு அளவிலான பாடத் திட்டத் தலைப்புப் பொருள்*	*அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு*
பி.எஸ்.ஸி.	1. கணிதம்	1966
	2. இயற்பியல்	1966
	3. வேதியியல்	1966
	4. தாவரவியல்	1966
	5. விலங்கியல்	1966
பி.ஏ.	1. வரலாறு	1966
	2. பொருளியல்	1966
	3. ஆங்கில இலக்கியம்	1966
பி.காம்.	வணிகவியல்	1980
எம்.ஏ.	ஆங்கிலம்	1971
எம்.எஸ்.ஸி.	1. கணிதம்	1978
	2. விலங்கியல்	1978
	3. இயற்பியல்	1984

1979-80 முதல், இக்கல்லூரியில், பி.ஏ., பி.எஸ்.ஸி., எம்.ஏ., மற்றும் எம்.எஸ்.ஸி., ஆகிய பாடத்திட்டங்களைப் பயின்று வரும் மாணவிகளின் எண்ணிக்கை, கீழ்க்காணும் பட்டியலில் அளிக்கப்பட்டுள்ளது:

ஹோலி கிராஸ் கல்லூரி - நாகர்கோவில்
இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டப்படிப்பில் பயிலும் மாணவிகள் விவரம்
(1979-80 முதல் 1988-89 வரை)

ஆண்டு	பி.ஏ.			பி.எஸ்.ஸி.			பி.காம்.			எம்.ஏ.		எம்.காம்.	
	முத லாண்டு	இரண்டாம் ஆண்டு	மூன்றாம் ஆண்டு	முத லாண்டு	இரண்டாம் ஆண்டு	மூன்றாம் ஆண்டு	முத லாண்டு	இரண்டாம் ஆண்டு	மூன்றாம் ஆண்டு	முத லாண்டு	இரண்டாம் ஆண்டு	முத லாண்டு	இரண்டாம் ஆண்டு
1979-80	139	89	85	174	167	156	--	--	--	19	5	34	13
1980-81	129	134	87	200	171	164	161	--	--	19	15	41	30
1981-82	115	117	128	206	177	166	66	59	--	20	19	42	40
1982-83	145	104	116	206	197	174	63	60	57	20	20	41	42
1983-84	145	135	102	215	199	192	65	68	57	19	22	40	41
1984-85	136	135	131	-211	199	191	64	68	55	19	22	52	38
1985-86	101	128	133	186	197	192	65	63	65	21	18	52	53
1986-87	116	94	124	209	173	191	60	61	60	20	20	52	52
1987-88	101	101	92	180	201	171	58	55	54	17	19	54	50
1988-89	90	94	98	196	179	199	57	54	54	12	16	50	52

இக்கல்லூரியில், 93 ஆசிரியர்கள், கல்வியளிக்கின்றனர். துறை வாரியான ஆசியர்கள் குறித்த புள்ளி விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன.

தொடர் எண்.	துறையின் பெயர்	ஆசிரியர்களின் எண்ணிக்கை
1.	ஆங்கிலம்	17
2.	தமிழ்	8
3.	மலையாளம்	1
4.	பிரஞ்ச்	1
5.	வரலாறு	5
6.	பொருளியல்	5
7.	வணிகவியல்	6
8.	கணிதம்	12
9.	இயற்பியல்	12
10.	வேதியியல்	8
11.	தாவரவியல்	6
12.	விலங்கியல்	12
	மொத்தம்	93

ஸ்ரீதேவி குமரி பெண்கள் கல்லூரி, குழித்துறை

ஸ்ரீ தேவி குமரி பெண்கள் கல்லூரி, கடந்த 1965ஆம் ஆண்டு, திருவட்டாரில் துவங்கப்பட்டது. பின்னர், அது குழித்துறைக்கு மாற்றப்பட்டது[152]. இக்கல்லூரி, கன்னியாகுமரி தேவாசுவம் வாரியத்தால் நிறுவப்பட்டது. இது தற்போது, கூட்டிணைவாக்கப்பட்ட மற்றும் கூட்டிணைவு ஆக்கப்பெறாத தேவாசுவங்களின் மேற்பார்வையில் இயங்கி வருகிறது.

இக்கல்லூரி, 1965ஆம் ஆண்டு, பல்கலைக்கழகப் புகுமுக வகுப்புகளுடன் துவங்கப்பட்டது. அடுத்த ஆண்டு, பி.ஏ. (பொருளியல்) பி.எஸ்.ஸி. (வேதியியல்) மற்றும் பி.எஸ்.ஸி (விலங்கியல்) ஆகியவை தொடர்பான பட்டப்படிப்பு வகுப்புகள் நடத்த, மதுரை பல்கலைக்கழகத்தால் இணைப்பு ஆணை வழங்கப்பட்டது. இக்கல்லூரியில், பி.எஸ்.ஸி. (கணிதம்) பி.எஸ்.ஸி. (தாவரவியல்) மற்றும் பி.காம். பட்டப்படிப்பு வகுப்புகள் ஆகியவை முறையே 1985, 1986 மற்றும் 1987 ஆகிய ஆண்டுகளில் அறிமுகப்படுத்தப்பட்டன.

இக்கல்லூரியிலுள்ள நூலகத்தில் 1748 நூல்கள் சேமித்து வைக்கப்பட்டுள்ளன. இக்கல்லூரியிலுள்ள அறிவியல் துறைகளில், ஆய்வுக் கூட வசதிகள் உள்ளன. பொருளியல் சங்கம், தமிழ் சங்கம், வேதியியல் சங்கம், கணக்கியல் சங்கம் போன்ற பல்வேறு துறைகளின் இலக்கியப்படிப்பு சார்ந்த சங்கங்கள் தவிர, கல்லூரியின் உயர்மட்டக் குழுத்

தலைமையில் தேசிய பணிக்குழுப் படை, திட்டப்பொதுக் கூட்டம், சமூகப்பணி இணைகுழு ஆகியவையும் இயங்கி வருகின்றன.

இக்கல்லூரியில் கற்றுத் தரப்படும் பாடத்திட்டங்கள், மற்றும் அவ்வகுப்புகள் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டுகள் ஆகிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

பட்டப்படிப்பின் பெயர்	பெரு அளவிலான பாடத்திட்டத் தலைப்புப் பொருள்	அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு
பி.ஏ.	பொருளியல்	1966
பி.எஸ்.ஸி	1. வேதியியல்	1966
	2. விலங்கியல்	1966
	3. கணிதம்	1985
	4. தாவரவியல்	1986
பி.காம்.	வணிகவியல்	1987

பி.ஏ. மற்றும் பி.எஸ்.ஸி. பாட வகுப்புகளில் 1980-81 முதல் கல்வி பயிலும் மாணவ, மாணவியர் மற்றும் கல்வியளிக்கும் ஆசிரியர்கள் ஆகியோரது எண்ணிக்கை கீழ்க்காணும் பட்டியலில் அளிக்கப்பட்டுள்ளது:

ஆண்டு	பி.ஏ. வகுப்பு மாணவர்கள்	பி.எஸ்.ஸி. வகுப்பு மாணவர்கள்	பி.காம். வகுப்பு மாணவர்கள்	ஆசிரியர்கள்
1980-81	124	158	--	30
1981-82	152	170	--	30
1982-83	152	182	--	31
1983-84	150	175	--	32
1984-85	120	193	--	31
1985-86	100	235	--	33
1986-87	100	279	--	32
1987-88	87	312	40	35

பயோனியர் குமாரசாமி கல்லூரி, நாகர்கோவில்

மாவட்டத்தின் புகழ் பெற்ற குடிமகனும், பெரிய தொழிலதிபருமான திரு. எஸ்.குமாரசாமி (1897-1960) அவர்களது குடும்பத்தினரால், 1967ஆம் ஆண்டு, பயோனியர் குமாரசாமி கல்லூரி துவங்கப்பட்டது[153]. இக்கல்லூரி பல்கலைக்கழக புதுமுக வகுப்புகளுடன் துவங்கப்பட்டு, அடுத்த ஆண்டிலேயே, மதுரைப் பல்கலைக்கழகத்தின் இணைப்பு ஆணையுடன், பி.ஏ. (பொருளியல்), பி.எஸ்.ஸி. (விலங்கியல்) பி.காம். (வணிகவியல்) ஆகிய பாடத்திட்ட வகுப்புகள் துவங்கப்பட்டன. 1969 ஆம் ஆண்டு பி.எஸ்.ஸி. கணிதம் பாடத்திட்டம், துவக்கிட, இணைப்பு ஆணை வழங்கப்பட்டது. பின்னர், 1972ஆம் ஆண்டு, (இயற்பியல்) பாடத்திட்ட வகுப்பும் 1975ஆம் ஆண்டு பி.எஸ்.ஸி. (வேதியியல்)

வகுப்பும், 1979-ல் தமிழ் மற்றும் ஆங்கிலம் (இலக்கியம்) பாடத்திட்ட வகுப்புகளும் இக்கல்லூரியில் துவங்கப்பட்டன.

இக்கல்லூரியில் அளிக்கப்பெறும் பாடத்திட்டங்கள் மற்றும் அவை அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு ஆகிய விவரங்கள் கீழ்க்காணும் பட்டியலில் அளிக்கப்பட்டுள்ளன:

பட்டப் படிப்பின் விவரம்	பாடத்திட்டத் தலைப்புப் பொருள்	அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு
பி.ஏ.	பொருளியல்	1968
பி.எஸ்.சி.	விலங்கியல்	1968
பி.காம்.	வணிகவியல்	1968
பி.எஸ்.சி.	கணிதம்	1969
பி.எஸ்.சி.	இயற்பியல்	1972
பி.எஸ்.சி.	வேதியியல்	1975
பி.ஏ.	தமிழ்	1979
பி.ஏ.	ஆங்கிலம்	1979

இக்கல்லூரி ஆண்-பெண் இணைக்கல்வி முறையில் இயங்கி வருகிறது. நிருவாகிகளிடையே எழுந்த கருத்து வேறுபாடு காரணமாக, டிசம்பர் 1 1978ஆம் ஆண்டு முதல் அரசால் பொறுப்பேற்கப்பட்டது. அதிலிருந்து இக்கல்லூரி, அரசின் கட்டுப்பாட்டிலியங்கி வருகிறது. திருநெல்வேலி மண்டலத்தைச் சார்ந்த கல்லூரிக் கல்வி துணை இயக்குநர், இக்கல்லூரியின் பொறுப்பாளராக இருந்தார். ஆனால், பின்னர் இக்கல்லூரியின் மேற்பார்வை மறுமுறை நிருவாகத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது. தற்போது இக்கல்லூரி, பயோனியர், குமாரசாமி அவர்களின் குடும்ப உறுப்பினர் ஒருவரான முனைவர் கே. பத்மநாபன் அவர்களால் மேற்பார்வை செய்யப்படுகிறது[153அ].

1979-80 முதல், மூன்றாண்டு பட்டப்பாடத்திட்ட வகுப்புகளிலும், ஈராண்டு முதுகலைப்பட்டப்படிப்பு வகுப்புகளிலும் கல்வி பயிலும் மாணவ, மாணவியரின் எண்ணிக்கை கீழே அளிக்கப்பட்டுள்ளது:

கல்லூரி நூலகத்தில், 13,085 நூல்கள் சேமிப்பிலுள்ளன. கல்லூரி ஒரு தங்கும் விடுதியினையும் நடத்துகிறது.

பயோனியர் குமாரசாமி கல்லூரி - நாகர்கோவில்

	பி.ஏ. (தமிழ்)		பி.ஏ. (ஆங்கிலம்)		பி.காம்.		பி.எஸ்ஸி.		எம்.காம்.	
ஆண்டு	மாணவர்கள்	மாணவியர்	மாணவர்கள்	மாணவியர்	மாணவர்கள்	மாணவியர்	மாணவர்கள்	மாணவியர்	மாணவர்கள்	மாணவியர்
1979-80	21	--	40	--	117	--	214	--	--	--
1980-81	41	--	61	--	181	--	308	--	--	--
1981-82	40	--	61	--	167	--	325	--	--	--
1982-83	31	--	51	--	194	--	246	--	--	--
1983-84	16	--	30	--	186	--	278	--	--	--
1984-85	8	1	21	3	163	22	256	21	--	--
1985-86	4	1	18	4	135	36	293	44	--	--
1986-87	10	-	23	4	119	47	212	70	--	--
1987-88	8	2	18	1	128	36	209	63	10	10

பாடத்திட்டங்களல்லாத இதர நடவடிக்கைகள்

ஆங்கிலம், தமிழ், கணக்கியல், இயற்பியல், வேதியியல், உயிரியல் மற்றும் பெரு வாணிகம் ஆகிய கல்வித்துறைகள் ஒவ்வொன்றிற்கும், மாணவர் சங்கங்கள் உள. இவை தவிர, திட்டப் பொதுவிடம், சமூகப்பணி இணை குழு, நுண்கலைகள் கழகம் மற்றும் ஓய்வு நேர விருப்பார்வத் தொழில் கழகம் ஆகியவையும் இக்கல்லூரியில் இயங்குகின்றன.

நாட்டு நலப் பணித்திட்டம், தேசிய மாணவர் இளைஞர் பயிற்சித் திட்டம், மற்றும் தேசிய முதியோர் கல்வித் திட்டம் ஆகியவையும் இக்கல்லூரியில் நடைபெறுகின்றன.

அறிஞர் அண்ணா கல்லூரி, ஆரல்வாய் மொழி

அறிஞர் அண்ணா கல்லூரி, ஆரல்வாய்மொழியில், ஜீலை 1, 1970 அன்று துவங்கப்பட்டது. திருவாளர்கள், எம்.சங்கரலிங்கம், கே.சிதம்பரதாணு மற்றும் வி.பரவைக்கரசு ஆகியோரை முக்கியக் காப்பாளர்களாகக் கொண்ட கன்னியாகுமரி கல்வி பரப்புக் கழகத்தால், இக்கல்லூரி நிறுவப்பட்டு, நடத்தப்பட்டு வருகிறது.

பல்கலைக்கழக புகுமுக வகுப்புகளின் பாடத் திட்டங்களான அறிவியல், கணக்கியல் மற்றும் கலை ஆகியவற்றுடன் கல்லூரி துவக்கப்பட்டு, பின்னர், வரலாறு, பொருளியல், கணக்கியல், தாவரவியல், மற்றும் பெரு வாணிகம் ஆகியவை அறிமுகப்படுத்தப் பட்டன. பின்னர், வேதியியல், விலங்கியல், இயற்பியல் மற்றும் வரலாற்றில் முதுகலைப்பட்ட படிப்புக்கான பாடத் திட்டங்கள் கல்லூரியில் துவக்கப்பட்டன.

கல்லூரியில் அளிக்கப்படும் பல்வேறு பாடத் திட்டங்களும், அவை அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டுகளும் கீழே அளிக்கப் பட்டுள்ளன:

தொடர் எண்.	*ஆண்டு*	*பட்டப்படிப்பின் பெயர்*	*பாடத்திட்டத் தலைப்புப் பொருள்*
1.	1970-71	பி.ஏ.	பொருளியல்
2.	1971-72	பி.எஸ்.ஸி.	கணிதம்
3.	1972-73	பி.எஸ்.ஸி.	தாவரவியல்
4.	1973-74	பி.ஏ.	வரலாறு
5.	1975-76	பி.காம்.	வணிகவியல்
6.	1979-80	பி.எஸ்.ஸி.	வேதியியல்
7.	1983-84	பி.எஸ்.ஸி.	விலங்கியல்
8.	1988-89	பி.எஸ்.ஸி.	இயற்பியல்
9.	1984-85	எம்.ஏ.	வரலாறு

அறிஞர் அண்ணா கல்லூரி – ஆரல்வாய்மொழி

தொடர் எண்.	பட்டப் படிப்பு	முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆண்டுப் பட்டப்படிப்பு பயிலும் மாணவர்கள் மற்றும் முதலாம், இரண்டாம் முதுகலைப்பட்டபடிப்பு பயிலும் மாணவ, மாணவியரது மொத்த எண்ணிக்கை (ஆண்டு வாரியாகவும், பாடத்திட்ட வகுப்புகள் வாரியாகவும்)																	
		1985–86			1986–87			1987–88						1988–89					
		மாணவர்கள் மட்டும்			மாணவர்கள் மட்டும்			1		2		3		1		2		3	
		1	2	3	1	2	3	மாணவர்கள்	மாணவியர்	மாணவர்கள்	மாணவியர்	மாணவர்கள்	மாணவியர்	மாணவர்கள்	மாணவியர்	மாணவர்கள்	மாணவியர்	மாணவர்கள்	மாணவியர்
1.	பி.ஏ.வரலாறு	13	16	27	12	12	14	19	4	10	–	12	–	9	10	18	4	9	–
2.	பி.ஏ. பொருளியல்	21	32	31	20	21	31	36	–	10	–	20	–	14	–	36	–	18	–
3.	பி.எஸ்.ஸி. கணிதம்	20	32	33	13	10	31	14	1	12	–	10	–	15	–	14	–	12	–
4.	பி.எஸ்.ஸி. இயற்பியல்	––	––	––	––	––	––	––	–	––	–	––	–	14	2	––	–	––	–
5.	பி.எஸ்.ஸி. வேதியியல்	20	20	21	21	19	19	18	1	16	–	19	–	18	8	18	1	16	–
6.	பி.எஸ்.ஸி. தாவரவியல்	7	11	––	9	4	10	19	4	8	–	4	–	9	6	19	4	7	–
7.	பி.எஸ்.ஸி. விலங்கியல்	13	21	20	22	13	19	16	4	22	–	13	–	13	6	15	3	22	––
8.	பி.காம்	61	57	50	48	56	53	42	11	43	–	53	–	42	12	42	11	44	––
9.	எம்.ஏ. (வரலாறு)	20	20	––	19	20	––	10	2	10	–	––	–	14	4	10	2	––	––

கல்லூரியில் தங்குமிட வசதிகளும் உள்ளன. 3,963 நூல்களைக் கொண்ட புத்தக வங்கியொன்று, கல்லூரியில் இயங்கி வருகிறது. ஒவ்வொரு ஆண்டும், இப்புத்தக வங்கியினால் 300 மாணவர்கள் பயனடைகின்றனர். கல்லூரி நூலகத்தில், 17,287 நூல்கள் உள. கல்லூரியில், அறிவியல் தலைப்புப் பொருள்கள் குறித்து, போதித்திட, போதுமான ஆய்வுக்கூட வசதிகளும் உள்ளன.

நாட்டு நலப் பணித் திட்டம், இக்கல்லூரியில் 1975 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. தேசியப் பணித்திட்ட அலகுகளிரண்டு, கல்லூரியில் இயங்குகின்றன.

1986-87 ஆம் ஆண்டு வரை இக்கல்லூரி மாணவர்களுக்கு மட்டுமே இயங்கி வந்தது. 1987-88 ஆம் ஆண்டு முதல், மாணவிகளையும் கல்லூரி சேர்த்துக்கொள்கிறது. 1985-86 முதல், கல்லூரியில் ஒவ்வொரு பாடத்திட்ட வகுப்பிலும் கல்வியளிக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கை கீழ்க்காணும் பட்டியலில் கொடுக்கப் பட்டுள்ளது:

துறைகளின் விவரமும், ஆசிரியர்களின் எண்ணிக்கையும்:-

1. தமிழ்	5	(6) இயற்பியல்	2	(11) உடல் சார்ந்த கல்வி	1
2. ஆங்கிலம்	5	(7) வேதியியல்	5	(12) நூலகம்	1
3. வரலாறு	8	(8) தாவரவியல்	5		
4. பொருளியல்	5	(9) விலங்கியல்	5		
5. கணிதம்	5	(10) வணிகவியல்	7		

திரு. அய்யப்பா பெண்கள் கல்லூரி, நாகர்கோவில்

திரு. அய்யப்பா கல்வி பரப்புக் கழகம், நாகர்கோவிலுக்கருகாமையிலுள்ள சுங்கங்கடையில் ஆண்களுக்கான, 1969-70ஆம் ஆண்டு, பல்கலைக்கழகப் புகுமுகப் பாடத்திட்ட வகுப்புகளுடன் ஒரு கல்லூரியினைத் துவக்கியது[154]. அடுத்த ஆண்டு, இக்கல்லூரி பெண்கள் கல்லூரியாக மாற்றியமைக்கப்பட்டது.

ஆங்கில மற்றும் தமிழ் பாடக் கல்வி முறையில் வரலாறு தலைப்புப் பொருளில் பி.ஏ. பட்டப்படிப்புக் கல்வி, போதிக்கப்படுகிறது. பி.ஏ. (ஆங்கில இலக்கியம்) பி.எஸ்.சி. (கணிதம்), (விலங்கியல்), (தாவரவியல்) மற்றும் (இயற்பியல்) மற்றும் பி.காம். (வணிகவியல்) ஆகிய பிற பாடத்திட்டத் தொகுதிகளும், இக்கல்லூரியில் கற்பிக்கப்படுகின்றன. 1986-87ஆம் ஆண்டு முதல், முதுகலை பட்டபடிப்பு அளிக்கும் நிறுவனமாக இது உயர்ந்துள்ளது. அப்போது, எம்.ஏ. (ஆங்கிலம் மற்றும் ஆங்கில இலக்கியம்) ஆகிய தலைப்புப் பொருள்களின் முதுகலைப் பட்டப் படிப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இக்கல்லூரியில்

அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பல்வேறு வகைப்பட்ட பாடத்திட்டங்களின் விவரங்கள் ஆண்டு வாரியாகக் கீழ்காணும் பட்டியலில் அளிக்கப்பட்டுள்ளன:

தொடர் எண்.	ஆண்டு	அறிமுகப்படுத்தப்பட்ட பட்டக் கல்வி	பாடத் திட்ட தலைப்புப் பொருள்
1.	1970-71	பி.ஏ.1	வரலாறு
2.	1971-72	பி.ஏ.	ஆங்கில இலக்கியம்
3.	1975-76	பி.எஸ்.ஸி.	விலங்கியல்
4.	1979-80	பி.எஸ்.ஸி.	கணிதம்
5.	1979-80	பி.எஸ்.ஸி.	தாவரவியல்
6.	1981-82	பி.காம்.	வணிகவியல்
7.	1984-85	பி.எஸ்.ஸி	இயற்பியல்
8.	1986-87	எம்.ஏ.	ஆங்கில இலக்கியம்

மூன்றாண்டு பட்டக்கல்வி முறை, மற்றும் இரண்டாண்டு முதுகலைப்பட்டம் பாடக் கல்வி முறை ஆகியவற்றில், பயின்ற மாணவியரின் எண்ணிக்கை மற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை ஆகியவை, ஆண்டுவாரியாக கீழே அளிக்கப்பட்டுள்ளன:

ஆண்டு	பி.ஏ. பெண்கள்	பி.எஸ்.ஸி. பெண்கள்	பி.காம். பெண்கள்	எம்.ஏ. பெண்கள்	ஆசிரியர்களின் எண்ணிக்கை
1980-81	260	229	--	--	43
1981-82	267	307	43	--	44
1982-83	230	346	101	--	44
1983-84	219	350	158	--	54
1984-85	195	343	173	--	54
1985-86	165	340	185	--	57
1986-87	147	350	186	15	57
1987-88	166	370	188	25	61
1988-89	140	355	154	30	61

பட்டக் கல்வி வகுப்புகளில், பகுதி, 1-ல், தமிழ், மலையாளம் மற்றும் இந்தி ஆகிய மொழிகள் பயிற்றுவிக்கப்படுகின்றன.

கல்லூரியில் ஒரு தங்கும் விடுதியும் உள்ளது. நூலகம் மற்றும் ஆய்வுக் கூடங்கள் ஆகியவையும் கல்லூரியில் இயங்குகின்றன.

கல்வி சாராத பிற நடவடிக்கைகள்

துறைவாரியான மாணவக் கழகங்களைத் தவிர, தேசிய பணித்திட்ட அலகுகள், சுழல் மற்றும் திட்டப் பொதுவிடம் ஆகியவை இக்கல்லூரியில் இயங்குகின்றன.

புனித ஜூட்ஸ் கல்லூரி, தூத்தூர்

தூத்தூரில் புனித ஜூட்ஸ் கல்லூரி, 1980-81ஆம் ஆண்டு, லத்தீன் கத்தோலிக்க மீனவர் கல்வி பரப்புக்கழகத்தால், துவக்கப்பட்டது[155]. இக்கழகம் தொடர்ந்து இக்கல்லூரியினை நடத்துகிறது. அது, 26 கத்தோலிக்க சமய குருமார்களும், திருவனந்தபுரம் மாவட்டச் சமய முதல்வரின் அருளாட்சிப் பரப்பின் அதிகாரம் பெற்ற தூத்தூர் சமயகுரு, மற்றும் கோட்டார் மாவட்டச் சமய முதல்வரின் அருளாட்சிப் பரப்பின் அதிகாரம் பெற்ற குளச்சல் சமயகுரு, ஆகியோர் அடங்கியதாகும். தங்களது குழந்தைகளைக் கல்லூரிப் படிப்பிற்கு, தொலைவிலுள்ள இடங்களுக்கு அனுப்ப இயலாத நிலையிலுள்ள தூத்தூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் வாழும் ஏழை மீனவர்களுக்கு உதவிடும் நோக்கத்தில் இக்கல்லூரி, துவங்கப்பட்டது.

இக்கல்லூரி, வரலாற்றுப் பாடத்தில், பி.ஏ. பட்டக் கல்வியுடனும், விலங்கியல் பி.எஸ்.சி. பட்டக் கல்வியுடனும், கடந்த 1980-81 ஆம் ஆண்டு, துவங்கியது. பின்னர், பி.காம். (வணிகவியல்) பட்டக்கல்வி, பி.எஸ்.சி. (கணிதம், தாவரவியல், இயற்பியல்) பட்டக்கல்வி மற்றும் பி.ஏ. (ஆங்கில இலக்கியம்) பட்டக்கல்வி ஆகிய பாடத் திட்டங்களும் அறிமுகப்படுத்தப்பட்டன.

அறிமுகப்படுத்தப்பட்ட பல்வேறு பாடத்திட்டங்கள் மற்றும் அவை அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு ஆகிய விவரங்கள் கீழ்க்காணும் பட்டியலில் அளிக்கப்பட்டுள்ளன:

பட்டியல் - 1

தொடர் எண்.	*பட்டப் படிப்பு மற்றும் தலைப்புப் பொருள்*	*அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு*
1.	பி.ஏ. (வரலாறு)	1980-81
2.	பி.எஸ்.சி. (விலங்கியல்)	1980-81
3.	பி.காம்.	1981-82
4.	பி.எஸ்.சி. (கணிதம்)	1982-83
5.	பி.எஸ்.சி. (தாவரவியல்)	1984-85
6.	பி.எஸ்.சி. (இயற்பியல்)	1986-87
7.	பி.ஏ. (ஆங்கிலம்)	1987-88

பட்டியல் 2

புனித ஜூட்ஸ் கல்லூரி - தூத்தூர்

	பி.ஏ., ஆண்டுகள்						பி.எஸ்ஸி. ஆண்டுகள்						பி.காம். ஆண்டுகள்					
	1		2		3		1		2		3		1		2		3	
	மாணவர்கள்	மாணவியர்	மாணவர்கள்	மாணவியர்	மாணவர்கள்	மாணவியர்	மாணவர்கள்	மாணவியர்	மாணவர்கள்	மாணவியர்	மாணவர்கள்	மாணவியர்	மாணவர்கள்	மாணவியர்	மாணவர்கள்	மாணவியர்	மாணவர்கள்	மாணவியர்
1980-81	28	-	-	-	-	12	14	10	-	-	-	-	-	-	-	-	-	-
1981-82	29	12	28	12	-	-	13	14	14	10	-	-	-	-	-	-	-	-
1982-83	22	27	30	12	29	12	37	35	13	14	14	10	56	9	54	15	-	-
1983-84	19	21	22	26	22	11	43	31	32	36	13	14	54	11	52	10	46	14
1984-85	25	24	18	22	23	26	50	61	41	30	33	36	50	15	54	11	52	10
1985-86	27	18	25	24	17	21	56	56	48	60	39	31	45	20	47	15	52	11
1986-87	39	21	27	18	25	24	68	44	56	56	48	60	42	23	45	20	47	15
1987-88	47	17	37	19	21	18	79	57	70	60	53	14	50	14	39	23	44	19
1988-89	26	31	40	14	34	17	70	61	72	56	64	58	28	15	50	13	35	21

பட்டியல் 3

தொடர் எண்.	கல்வித்துறை விவரம்	ஆசிரியர்களின் எண்ணிக்கை
1.	தமிழ்	4
2.	மலையாளம்	1
3.	ஆங்கிலம்	8
4.	வரலாறு	4
5.	பொருளியல்	1
6.	புறப்பகுதி மன்னாய நூல்	1
7.	கணிதம்	5
8.	இயற்பியல்	4
9.	வேதியியல்	3
10.	தாவரவியல்	5
11.	விலங்கியல்	5
12.	மீன் தொழில்	1
13.	வணிகவியல்	6
14.	உடற்கல்வி	1
15.	நூலகம்	1

இது ஆண்-பெண் இணைக்கல்வி முறைக் கல்லூரியாகும். கல்லூரியில் பயிலும் மாணவ, மாணவியரின் தேவைகளைப் பூர்த்தி செய்திட ஒரு நூலகமும், ஆய்வுக் கூட வசதிகளும் உள்ளன.

முகம்மதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருவிதாங்கோடு

சிறுபான்மையினரான முகம்மதிய சமுதாயத்தினரின் வெகு நாளையத் தேவைகளாகிய நாகரீகப் பண்பு மற்றும் கல்வி ஆகியவற்றை அம்மக்களிடையே வளர்த்து மேம்படுத்தும் நோக்கில், 1981 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட முகம்மதிய கல்வி பரப்புக் கழகம்[156], 1984 ஆம் ஆண்டு, வணிகவியல் பட்டப்படிப்புப் பாடத்திட்டத்துடன், முகம்மதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரியினைத் துவக்கியது. இது, முகம்மதிய கல்வி பரப்புக் கழகத்தினால் நடத்தப் பெறும் தந்நிதியினாலியங்கும் கல்லூரியாகும்.

1985 ஆம் ஆண்டு, பி.ஏ. (வரலாறு) மற்றும் பி.எஸ்.ஸி. (கணிதம் மற்றும் இயற்பியல்) ஆகிய பாடத்திட்டங்கள் இக்கல்லூரியில் அறிமுகப்படுத்தப்பட்டன. பி.ஏ. (கூட்டுரிமையுடைய செயலாண்மைத்துறை), மற்றும் பி.எஸ்.ஸி. (விலங்கியல்) ஆகியவை, முறையே 1986 மற்றும் 1987 ஆம் ஆண்டுகளில் இக்கல்லூரியில் அறிமுகப்படுத்தப்பட்டன.

இக்கல்லூரியில் இதுகாறும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பாடத் திட்டக் கல்வி முறை, மற்றும் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு போன்ற விவரங்கள், கீழ்க்காணும் பட்டியலில் அளிக்கப்பட்டுள்ளன :

பட்டப் படிப்பு	*பெரிய தலைப்புப் பொருள்*	*அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு*
பி.காம்.	வணிகவியல்	1984
பி.ஏ.	வரலாறு	1985
பி.எஸ்.சி.	கணிதம்	1985
பி.எஸ்.சி.	இயற்பியல்	1985
பி.ஏ.	கூட்டுரிமையுடைய செயலாண்மைத்துறை	1986
பி.எஸ்.சி.	விலங்கியல்	1987

இக்கல்லூரி துவக்கப்பட்டதிலிருந்து, பல்வேறு பாடத்திட்ட வகுப்புகளில் கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை, ஆண்டு வாரியாகக் கீழ்க்காணும் பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ளது:

பட்டப் படிப்பு விவரம்	*முதல், இரண்டாம், மூன்றாம் ஆண்டுகளில் மாணவர்களின் எண்ணிக்கை*				
	1984–85	*1985–86*	*1986–87*	*1987–88*	*1988–89*
பி.காம்.	12	83	150	184	173
பி.ஏ. (வரலாறு)	-	34	72	82	80
பி.எஸ்.சி. (கணிதம்)	-	28	50	67	57
பி.எஸ்.சி. (இயற்பியல்)	-	27	58	77	74
பி.ஏ. (கூட்டு உரிமையுடைய செயலாண்மைத் துறை	-	-	32	74	92
பி.எஸ்.சி. (விலங்கியல்)	-	-	-	26	51

1987 ஆம் ஆண்டு, நிலவரப்படி, இக்கல்லூரியில் பணியாற்றிய ஆசிரியர்களின் எண்ணிக்கை கீழே அளிக்கப்பட்டுள்ளது.

தொடர் எண்.	*துறையின் பெயர்*	*ஆசிரியர்களின் எண்ணிக்கை*
1.	தமிழ்	4
2.	ஆங்கிலம்	5
3.	மலையாளம்	1
4.	வரலாறு	5
5.	வணிகவியல்	7
6.	கணிதம்	5
7.	இயற்பியல்	6

தொடர் எண்.	துறையின் பெயர்	ஆசிரியர்களின் எண்ணிக்கை
8.	விலங்கியல்	4
9.	தாவரவியல்	1
10.	பொருளியல்	2
11.	வேதியியல்	1
12.	கூட்டுறிமையுடைய செயலாண்மைத்துறை	4

இது, ஆண்-பெண் இணைக் கல்வி முறைக் கல்லூரியாகும். கல்லூரியின் அறிவியல் துறையில் ஆய்வுக் கூட வசதிகள் உள. கல்லூரியில் 1,500 நூல்களைக் கொண்ட ஒரு நூலகம் இயங்குகிறது.

கல்லூரியின் கல்வி சாரா பிற நடவடிக்கைகளை மேம்படுத்தும் நோக்கில், துறை மாணவர்கள் கழகங்களும், நாட்டுநலப் பணித்திட்ட அலகும் இக் கல்லூரியில் இயங்கி வருகின்றன.

சிவந்தி ஆதித்தனார் கல்லூரி, பிள்ளையார்புரம், நாகர்கோவில்

நாகர்கோவிலைச் சேர்ந்த பிள்ளையார்புரத்தில், பிள்ளையார்புரம் தென்குமரி கல்விக் கழகம், கடந்த 12.7.1984 ஆம் நாளன்று, சிவந்தி ஆதித்தனாரால் இக்கல்லூரியினைத் துவக்கியது[157]. இது ஆண்-பெண் இணைக்கல்வி முறையைப் பின்பற்றும் கல்லூரியாகும். இது பி.ஏ (வரலாறு), (பொருளியல்), பி.எஸ்.ஸி. (கணிதம்) (இயற்பியல்) மற்றும் பி.காம். (வணிகவியல்) ஆகிய பாடத் திட்டங்களுடன் துவங்கியது.

இக்கல்லூரியின் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பல்வேறு பாடத் திட்டங்கள் தலைப்புப் பொருள்களுடன் ஆண்டுவாரியாகக் கீழ்க்காணும் பட்டியலில் அளிக்கப்பட்டுள்ளன:

பட்டப்படிப்பின் பெயர்	பெரும்பகுதியான, பாடத்திட்டத் தலைப்புப் பொருள்	அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு
பி.ஏ.	வரலாறு	1984-85
பி.ஏ.	பொருளியல்	1984-85
பி.எஸ்.ஸி.	கணிதம்	1984-85
பி.காம்.	வணிகவியல்	1984-85
பி.எஸ்.ஸி.	விலங்கியல்	1985-86
பி.எஸ்.ஸி.	இயற்பியல்	1985-86
பி.எஸ்.ஸி.	கணினி அறிவியல்	1986-87

கல்லூரியின் பட்டப் படிப்பு வகுப்புகளில், 1984-85-லிருந்து மூன்றாண்டுகளிலும் கல்வி பயின்ற மாணவ, மாணவியரின் எண்ணிக்கை, ஆண்டுவாரியாகக் கீழே அளிக்கப்பட்டுள்ளது

ஆண்டு	பி.ஏ., ஆண்டுகள்			பி.எஸ்ஸி., ஆண்டுகள்			பி.காம்., ஆண்டுகள்		
1	2			3			4		
	1	2	3	1	2	3	1	2	3
1984-85	48	--	--	38	--	--	63	--	--
1985-86	26	47	--	67	23	--	50	63	--
1986-87	51	28	38	107	58	23	65	62	46
1987-88	58	47	26	103	101	36	69	62	60
1988-89	22	52	45	100	93	98	49	62	58

ஒவ்வொரு துறையிலும் பணியாற்றும் ஆசிரியர்கள் மற்றும் நூலகப் பணியாளர்கள் ஆகியோரது எண்ணிக்கை கீழ்க்காணும் பட்டியலில் அளிக்கப்பட்டுள்ளது:

தொடர் எண்.	துறையின் பெயர்	ஆசிரியர்களின் எண்ணிக்கை
1.	தமிழ்	3
2.	ஆங்கிலம்	3
3.	வரலாறு	4
4.	பொருளியல்	4
5.	கணிதம்	4
6.	இயற்பியல்	7
7.	விலங்கியல்	4
8.	வணிகவியல்	5
9.	வேதியியல்	1
10.	தாவரவியல்	1
11.	கணினி அறிவியல்	4
12.	சட்டம் (பகுதி நேரம்)	1
13.	உடற்கல்வி (இயக்குநர்)	1
14.	நூலகர்	1

கல்லூரி நூலகத்தில் 200 நூல்கள் உள. பல்கலைக் கழகத்தில் நிர்ணயிக்கப்பட்ட அளவிற்கொப்ப, அறிவியல் துறையில் ஆய்வுக் கூட வசதிகள் உள்ளன. துறை நிலை மாணவர்கள் கழகங்கள் தவிர, இரு தேசியப் பணித் திட்ட அலகுகளும் கல்லூரியில் இயங்கி வருகின்றன.

கொடைக்கானலிலுள்ள அன்னை தெரசா பெண்கள் கல்லூரி, பெண்களின் நலனுக்காக ஆராய்சி நடவடிக்கைகளையும், பல்வேறு சமூக நலத்திட்டங்களையும் விரிவாக்கும் நோக்கில், ஒவ்வொரு மாவட்டத்திலும், கல்வி மையங்கள் நிறுவ உத்தேசித்துள்ளது[158]. அதனைத் தொடர்ந்து, கன்னியாகுமரி மாவட்டத்தில், கடந்த 1987 ஆம் ஆண்டு மார்ச் 30 அன்று, பல்கலைக் கழகம் ஒரு கல்வி மையத்தைத் துவக்கியது. இம்மையம், தற்போது சிவந்தி ஆதித்தனார் கல்லூரி வளாகத்தில் இயங்குகிறது.

பெண்கள் கிறித்தவக் கல்லூரி, நாகர்கோவில்

தென்னிந்தியத் திருச்சபையில் கன்னியாகுமரி மாவட்டச் சமய முதல்வரது அருளாட்சிப் பரப்பு, மாவட்டத்தில் மூன்று கல்லூரிகளை நடத்தி வருகிறது. அவற்றிலொன்று பெண்கள் கிறித்தவக் கல்லூரியாகும். நாகர்கோவில் ஸ்காட் கிறித்தவக்கல்லூரி மற்றும் மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறித்தவக் கல்லூரி ஆகியவை பிற இரு கல்லூரிகளாகும் (இவை குறித்து ஏற்கனவே விரிவான தகவல்கள் அளிக்கப்பட்டுள்ளன). பெயரில் குறிப்பிட்டுள்ளதுபோன்று, இக்கல்லூரி முற்றிலும் பெண்களுக்காவே இயங்கி வருகிறது.

1974-75-ல் துவங்கப்பட்ட இக்கல்லூரி பி.ஏ. (வரலாறு, ஆங்கில இலக்கியம் மற்றும் தமிழ் இலக்கியம்), பி.எஸ்.சி. (கணிதம், இயற்பியல், வேதியியல், விலங்கியல் மற்றும் தாவரவியல்) ஆகிய பட்டக் கல்விப் பாடத்திட்டங்களை அளிக்கிறது[159]. இது எம்.ஏ. (வரலாறு) மற்றும் எம்.எஸ்.ஸி. (தாவரவியல்) ஆகிய முதுகலை கல்விப் பாடத் திட்டங்களையளித்து வரும் கல்லூரியாகும்.

இக்கல்லூரி, முன்னர் 1893 முதல் 1974-75 வரை, ஸ்காட் ஆண்கள் கிறித்தவக் கல்லூரி இயங்கி வந்த கட்டிடத்தில் இயங்கியது. பெண்கள் கிறித்தவக் கல்லூரி துவக்கப்பட்டபோது, ஸ்காட் கிறித்தவக் கல்லூரி, பார்வதிபுரத்திற்கருகிலுள்ள புதிய கட்டிடத்திற்கு மாற்றப்பட்டது.

கல்லூரியில் அளிக்கப்பட்டுவரும் கல்விப் பாடத் திட்டங்கள், அவை ஒவ்வொன்றும் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு, 1979-80 முதல் கல்லூரியில் பயின்று வரும் மாணவிகளின் எண்ணிக்கை மற்றும், கல்லூரியில் போதிக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கை ஆகிய விவரங்கள் கீழ்க்காணும் பட்டியல்கள்-1 மற்றும் -2-ல் அளிக்கப்பட்டுள்ளன:

பட்டியல்-1

கல்வியளிக்கப்படும் பல்வேறு பாடத் திட்டங்களும், அவை அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டுகளும்

பட்டப்படிப்பு	பாடத் திட்டத் தலைப்புப் பொருள்	அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு
பி.ஏ.	வரலாறு	1977
	பொருளியல்	1986
	ஆங்கிலம்	1980
	தமிழ்	1975
பி.எஸ்.ஸி.	கணிதம்	1979
	இயற்பியல்	1985
	வேதியியல்	1979
	தாவரவியல்	1975
	விலங்கியல்	1983
	கணினி அறிவியல்	1987
பி.காம்.	வணிகவியல்	1977
எம்.ஏ.	வரலாறு	1984
எம்.எஸ்.ஸி.	தாவரவியல்	1981

முதுகலை மூன்றாண்டு பட்டப் படிப்பு கல்வி முறை மற்றும் ஈராண்டு பட்டப் பாடத் திட்டக் கல்வி முறை ஆகியவை தொடர்பான புள்ளிவிவரங்கள் கீழ்வருமாறு.

பட்டியல்-2

1979-80 முதல் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களது எண்ணிக்கை

ஆண்டு	பி.ஏ.,	பி.எஸ்ஸி.	பி.காம்.,	எம்.ஏ.,	எம்எஸ்ஸி	மொத்தம்	ஆசிரியர்களின் எண்ணிக்கை
1979–80	160	185	210	–	–	555	40
1980–81	235	250	205	–	–	690	47
1981–82	293	320	210	–	17	840	50
1982–83	300	340	212	–	34	904	55
1983–84	333	345	206	–	34	918	60
1984–85	322	375	210	25	35	967	64
1985–86	356	420	216	48	37	1077	68
1986–87	361	525	242	49	44	1221	78
1987–88	443	591	232	49	40	1335	80
1988–89	472	641	227	49	34	1423	89

என்.வி.கே.எஸ்.டி. ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, ஆத்தூர்

ஆத்தூரில் என்.வி.கே.எஸ்.டி. ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, நல்லூர், வேட்டுவண்ணி கந்தன் சாஸ்தா தேவாசுவத்தால் நிறுவப்பட்டு, 1963 சூலை திங்களில் செயல்படத் துவங்கியது. என்.வி.கே.எஸ். கல்விப் பரப்புக் கழகத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட, செயலாட்சிக் குழுவினால் கல்லூரி மேற்பார்வை செய்யப்பட்டு வருகிறது. என்.வி.கே.எஸ். மொழி சார்ந்த சிறுபான்மைச் சமூகமான ஒரு நாயர் குடும்பத்தைச் சார்ந்த ஐவர், இந்த தேவாசுவத்தின் அறங்காவலர்கள் ஆவர். திரு.கே.பி. இராமகிருஷ்ண பிள்ளையின் தலைமையில் கூடிய நிருவாகக் குழு, இந்நிதியினைக் கல்வி நிறுவனங்களுக்காகப் பயன்படுத்த, அக்டோபர், 1, 1961 நாளைய கூட்டத்தில், முடிவெடுத்தது. அதனைத் தொடர்ந்து, மாவட்டத்தின் பலகாலத் தேவையான என்.வி.கே.எஸ்.டி. ஆசிரியர் கல்லூரி, 1963 சூலை மாதம், துவக்கப்பட்டது. இக்கல்லூரி பி.எட். பட்டப்படிப்புப் பாடத் திட்டத்தினை அளித்து வருகிறது. பட்டப்பின் பயிற்சிப் பாடத் திட்டமான எம்.எட். இக்கல்லூரியில் 1987 ஆம் ஆண்டு, வெள்ளி விழாவின் நினைவாகத் துவக்கப்பட்டது. எம்.எட். பட்டப்பின் பயிற்சிப் பாடத் திட்ட முதல் நாள் தொடர்பு வகுப்பில் பயின்ற மாணவர்களின் எண்ணிக்கை 15 ஆகும்.

இது, இம்மாவட்டத்திலுள்ள ஒரே ஆசிரியர் பயிற்சிப் பள்ளியாகும். இக்கல்லூரி ஆண்-பெண் இருபாலரும் பயிலும் நிறுவனமாகும். கல்லூரியிலுள்ள நூலகத்தில், கல்வி மற்றும் பிற பொருட்கள் பற்றிய 7,337 நூல்கள் சேமித்து வைக்கப்பட்டுள்ளன.

இப்பயிற்சிக் கல்லூரியில் பயின்ற ஆசிரியர்கள், அவர்களுக்கு போதித்த ஆசிரியர்கள் ஆகியோர் தொடர்பான புள்ளி விவரங்கள் கீழ்க்காணும் பட்டியலில் அளிக்கப்பட்டுள்ளன[159அ].

ஆண்டு	*மொத்த பயிற்சியாளர்களின் எண்ணிக்கை*	*மொத்த ஆசிரியர்கள் எண்ணிக்கை*
1963-64	60	6
1964-65	60	6
1965-66	60	6
1966-67	75	6
1967-68	100	6
1968-69	110	7
1969-70	60	6
1970-71	60	7
1971-72	70	8
1972-73	65	8

(1)	(2)	(3)
1973-74	85	8
1974-75	80	10
1975-76	80	10
1976-77	70	10
1977-78	90	10
1978-79	90	10
1979-80	130	10
1980-81	130	10
1981-82	100	10
1982-83	100	10
1983-84	100	10
1984-85	110	10
1985-86	110	10
1986-87	110	12
1987-88	115	13

பி.எட். பயிற்சிப் பாடத் திட்டத்தில், கல்லூரியில் அளிக்கப்படும் விருப்பப் பாடத் திட்ட தலைப்புப் பொருள்கள், ஆங்கிலம், கணக்கியல், உயிரியல் மற்றும் வரலாறு ஆகியவையாகும். 1968-69ஆம் ஆண்டு, புவியியல் அளிக்கப்பட்டு, பின்னர், அது நிறுத்தப்பட்டுவிட்டது. 1976-77 முதல், பி.எட். பயிற்சிப்பாடத் திட்டத்தில், "பள்ளிப்பருவ முன் பயிற்சிக் கல்வி" என்ற தலைப்புப் பொருளும் விருப்பப்பாடமாக அளிக்கப்படுகிறது.

தொழில் கல்வி

மேல்நிலைக் கல்வி முடிந்த பின்னர், மருத்துவம், பொறியியல், வேளாண்மை, கால்நடை அறிவியல், சட்டம் போன்ற கல்விப் பாடத் திட்டங்களை முறையாகக் கற்பதே தொழிற் கல்வியாகும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில், ஆத்தூரிலுள்ள ஹோமியோபதி மருத்துவக் கல்லூரியைத் தவிர, வேறு தொழில் கல்வியளிக்கும் கல்லூரிகளில்லை. தொழில் கல்வி பெறுவதற்குத் தகுதியுள்ள மாணவர்கள், கேரள மாநிலத் தலைநகரான திருவனந்தபுரத்திற்குச் செல்ல வேண்டி நேரிடுகிறது. ஏனெனில், அங்குதான் பல்வேறு வகையான தொழில் கல்வி நிறுவனங்களும் உள்ளன. திருநெல்வேலியில் ஒரு மருத்துவக் கல்லூரி உள்ளது. மதுரையில் மருத்துவ, சட்ட மற்றும் வேளாண்கல்லூரிகள் உள்ளன. மாவட்டத்தின் அருகாமையிலுள்ள இந்நகரங்களிலியங்கும் நிறுவனங்கள் தவிர, தகுதியுள்ள மாணவர்கள், மாநிலம் மற்றும் நாட்டிலுள்ள அனைத்துத் தொழில் கல்லூரிகளிலும் பயில இயலும்.

ஒயிட் நினைவு ஹோமியோபதி மருத்துவக் கல்லூரி, ஆத்தூர்

ஆத்தூரில், ஒயிட் நினைவு ஹோமியோபதி மருத்துவக் கல்லூரி தனியார் ஹோமியோபதி மருத்துவக் கல்லூரியாக, கடந்த 1976ஆம் ஆண்டு, ஒயிட் நினைவு கல்வி பொறுப்பாட்சி நிலையத்தால் துவங்கப்பட்டது[160]. இங்கு, ஓமியோபதி இயல்பு மருத்துவம் மற்றும் அறுவை மருத்துவக் கல்லூரி பட்டயச் சான்றிதழ் (டிப்ளமா) பெறுவதற்கான கல்வி பயிலும் பாடத்திட்டக் கல்வி முறையினை செயல்படுத்திட, தமிழ்நாடு ஓமியோபதிக் குழு, 1982ஆம் ஆண்டு, தற்காலிக இணைப்பாணை வழங்கியது. 1988ஆம் ஆண்டு சூன் 20 அன்று நடைபெற்ற கூட்டத்தில், இக் கல்லூரிக்கு நிலையான இணைப்பாணை வழங்கி, ஹோமியோபதி இயல்பு மருத்துவம் மற்றும் அறுவை மருத்துவ கல்லூரி பட்டப் படிப்புப் பாடத்திட்டக் கல்வி முறையினையும் துவக்கிட இக்குழு, அனுமதி வழங்கியது. ஹோமியோபதி இயல்பு மருத்துவம் மற்றும் அறுவை மருத்துவக்கல்லூரி பட்டச் சான்றிதழ் (டிப்ளமோ) பெறும் பாடத்திட்டக் கல்வியின் காலவரை (உள்ளுறை மருத்துவத்திற்கான காலவரையும் சேர்த்து) 4½ ஆண்டுகள் எனவும், கல்லூரி பட்டப் படிப்புப் பாடத்திட்டக் கல்வியின் காலவரை (உள்ளுறை மருத்துவத்திற்கான காலவரையும் சேர்த்து) ஐந்து ஆண்டுகள் எனவும் நிர்ணயிக்கப் பட்டுள்ளது. தற்போது, கல்லூரி பட்டச் சான்றிதழ் (டிப்ளமா) பெறும் பாடத்திட்டக் கல்வியையும், கல்லூரி பட்டப் படிப்புப் பாடத்திட்டக் (டிகிரி) கல்வியையும் இக்கல்லூரி அளித்து வருகிறது.

பட்டயச் சான்றிதழ் (டிப்ளமா) பாடத் திட்டத்திற்கு இணைப்பாணை வழங்கப்பட்டதிலிருந்து, ஒவ்வொரு ஆண்டும் 50 மாணவர்கள் சேர்க்கப்பட்டனர். 1988-89ஆம் ஆண்டிலிருந்து பட்டயச் சான்றிதழ் (டிப்ளமா) பாடத் திட்டத்திற்கு ஆறு மாணவர்களும், கல்லூரி பட்டப் படிப்புப் (டிகிரி) பாடத்திட்டத்திற்கு 50 மாணவர்களும் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

மேற்குறிப்பிட்டக் கல்விமுறைப் பாடத் திட்டங்களுக்கு, தமிழ்நாடு ஹோமியோபதி மருத்துவக் குழுவினால், மாணவர்கள், தகுதியின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

ஹோமியோ மருத்துவம் தொடர்பான கல்வி முறையினை அளித்திடத் தேவையான உள்ளமைப்பைப் பெற்றுள்ள இக்கல்லூரி, ஆண்-பெண் இருபாலரும் கல்வி பயிலும் இணைக்கல்வி முறைக்கல்லூரியாகும்.

தொழில்நுட்பக் கல்வி

பண்டைக் காலத்தில், தொழில்நுட்பக் கல்வி மரபார்ந்ததாக இருந்தது. முன்பு குடும்பத் தலைவரான தந்தை, மருத்துவத் தொழில்,

கட்டிடத் தொழில், தோட்டத் தொழில், நெசவுத்தொழில் போன்ற தொழில்களைச் செய்து வந்ததால், அவரது மகன்கள் பின்னர் அவர்களது சந்ததியினர் யாவரும் அத்தொழில்களையே செய்து வந்து, நாளடைவில், அத்தொழில்கள் முறையே அவர்களது குடும்பத் தொழில்களாயின. ஆனால் சமுதாயத்தில், தொழில் புரட்சி ஏற்பட்ட பின்னரும், அறிவியல் முன்னேற்றத்தின் விரிவாக்கத்தினைத் தொடர்ந்தும், பொறியியல், இயந்திரத் தொழில் போன்ற தொழில் நுட்பம் வாய்ந்தவற்றில் ஆர்வமிக்கவர்களும், தேர்ச்சி பெற்றவர்களுமான பொருத்தமான நபர்களைத் தேர்ந்தெடுப்பது, இன்றியமையாததாகியது.

மன்னர்கள் அரசாண்ட காலத்தில், பல தொழில் நுட்ப வல்லுநர்களும், பொறியாளர்களும் அவர்களிடம் பணியாற்றியமை கண்கூடு. மிகப்பெரிய நேர்த்தியான பங்கயாக்கரும், பத்மநாபபுரம் அரண்மனையும், மற்றும் கோவில்களும் அத்தொழில்நுட்ப வல்லுநர்களின் கைத்திறனை வெளிப்படுத்துகின்றன. பத்மநாபபுரம் அரண்மனைக்கும், வெட்டுக்கோட்டைக்கும் இடையே போடப்பட்ட சுரங்கப்பாதை மிக கம்பீரமான சுசீந்திரம் திருக்கோயில் கோபுரம் மற்றும் ஏனைய திருக்கோவில்கள், ஆகியவை, அறிவியல் முன்னேற்றமடையாத காலத்திலேயே எவ்வாறு இவ்வளவு நேர்த்தியாகக் கட்டப்பட்டன என்பது அனைவருக்கும் வியப்பை அளிக்கிறது. எனவே, தொழில்கல்வி, மாநிலம் முழுவதிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தற்கால மற்றும் ஒரே சீரான அமைப்பு முறையினை உருவாக்கியதென, தெளிவாகக் கூறலாம். மக்களது தொழில்நுட்பத்திறனின் வரலாற்றினை மனித இனத்தின் தோற்ற வரலாற்றுடன் சிறிதும் தயக்கமின்றி ஒப்பிட்டுக் கூறலாம்.

எனினும், இம்மாவட்டத்தில் முறைப்படுத்தப்பட்ட தொழில்கல்விப் பள்ளிகள் 1820ஆம் ஆண்டும், அதன் பின்னரும், கிறித்தவ சமயப்பரப்புக் குழுவினரால் நிறுவப்பட்டன. அவை குறித்த முழுமையான விவரங்கள் இவ்வியலின் "கிறித்தவ சமயப் பரப்பாளரின் துணிவாண்மையும், மாவட்டத்தில் மேற்கத்தியக் கல்வியின் துவக்கமும்" என்ற தலைப்பில் விரிவாக அளிக்கப்பட்டுள்ளன. சமயப் பரப்பாளர்களால் நாகர்கோவில், நெய்யூர், முளகுமோடு போன்ற இடங்களில் நிறுவப்பட்ட பழைய தொழில் கல்விப் பள்ளிகள், ஏதாவதொரு காரணத்தினால், ஒன்றன்பின் ஒன்றாக மங்கத் தொடங்கின. அரசு உதவி பெற்ற சமயப்பரப்புக்குழு அல்லாத தனியார் தொழில் பள்ளியான ஸ்ரீமூலம் ராம வர்மா (எஸ்.எம்.ஆர்.வி.) தொழில் நுட்பக் கல்லூரி 1905-06ஆம் ஆண்டு, முந்தைய திருவாங்கூர் அரசால் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்நிறுவனம் எஸ்.எம்.ஆர்.வி. அரசு பெண்கள் தொழில் பயிற்சி நிறுவனம் என்ற பெயரில் இன்றும் தொடர்ந்து இயங்கி வருகிறது. துவக்கத்தில் இப்பள்ளியில் நெசவுத் தொழில், மரத் தச்சுத் தொழில்,

கல்தச்சுத் தொழில், நில அளவை மற்றும் வரைபடங்கள் வரைதல் போன்றவற்றில் பயிற்சியளிக்கப்பட்டது[161].

தொழில் நுட்ப கல்வி நிருவாகம்

மாவட்டத்தில், பொறியியல் கல்லூரிகள், பல தொழில் நுணுக்கப் பயிற்சி நிறுவனங்கள், தட்டச்சு நிறுவனங்கள், வாணிகப் பயிற்சிப் பள்ளிகள் மற்றும் ஏனைய தனி நிறுவனங்கள் இயங்குகின்றன. தொழில் பயிற்சி நிறுவனங்களில் பொறியியல் தலைப்புப்பொருள் பாடத் திட்டங்கள் கற்பிக்கப்பட்ட போதிலும், துவக்கத்திலிருந்தே அவை சென்னை வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்குநராலேயே, மேற்பார்வை செய்யப்படுகின்றன. ஆனால், தொழில் நுட்ப கல்வி நிறுவனங்கள் முதலில் கல்வித்துறை இயக்குநரின் கட்டுப்பாட்டிலிருந்த போதிலும், பின்னர், 1957ஆம் ஆண்டு அக்டோபர் முதல், தொழில் நுட்ப கல்வித்துறை தொழில் நுட்ப கல்வி இயக்குநரின் தலைமையில் உருவாக்கப்பட்டது[162].

தொழில் நுட்ப கல்வி இயக்குநரகம் மற்றும் தொழில் நுட்ப கல்வி மற்றும் பயிற்சி வாரியம் ஆகிய இரண்டும் ஒரே நேரத்தில் அமைக்கப்பட்டன. மாநில பல்கலக் கழகங்களின் துணைவேந்தர், தொழில்நுட்ப நிறுவனங்களின் முதல்வர்கள், புகழ் வாய்ந்த தொழிலதிபர்கள், தொழில் நுட்ப அறிஞராட்சிக்கோட்பாட்டாளர், மாநில மற்றும் மத்திய அரசு அலுவலர்கள் மற்றும் தொடர்புள்ள தொழில், பெரு வாணிகம் மற்றும் கல்வி ஆகிய துறைத்தலைமை அலுவலர்கள் ஆகியோர் இவ்வாரிய உறுப்பினர்களாவர். மாண்புமிகு கல்வி அமைச்சர் வாரியத்தின் தலைவராவார்[163]. இவ்வாரியம், தொழில் கல்வி, இணைப்பாணை வழங்குதல், தொழில் கல்வி நிறுவனங்களுக்கு அங்கீகாரம் அளித்தல், தொழில் கல்வி குறித்து, அரசின் கொள்கைகளை வகுத்தல், போன்றவற்றில் அரசுக்கு அறிவுரை வழங்குகிறது.

தேசிய அளவில், தொழில் நுட்ப கல்வியில், உயர்மட்ட கொள்கை வகுக்கும் குழு, தொழில் கல்வி, ஆகிய அகில இந்தியக் குழுவாகும். இக்குழுவிற்கு உதவியாக மண்டலக்குழுக்களும் இயங்கி வருகின்றன. தமிழ்நாடு, தென் மண்டலக்குழுவின் கட்டுப்பாட்டில் உள்ளது. இது தனது ஆளுகையில் ஆந்திரப்பிரதேசம், கர்நாடகம், மற்றும் கேரள மாநிலங்கள், மற்றும் யூனியன் பிரதேசங்களான பாண்டிச்சேரி, லட்சத்தீவுகள், மினிகாய் மற்றும் அந்தமான் தீவுகள் ஆகியவற்றைக் கொண்டதாகும்.

மாவட்டத்தின் நிலை

கன்னியாகுமரி மாவட்டத்தில் தொழிற் கல்வி அளித்திட, கீழ்க்கண்ட நிறுவனங்கள் செயலாற்றுகின்றன:

1) ஆறு தொழில் கல்வி நிலையங்கள் உள்ளன. அவற்றில் ஒன்று அரசாலும், மற்றொன்று அரசு உதவித்தொகை பெறும் தனியார் நிறுவனத்தாலும், ஏனைய நான்கும் தனி சுயநிதி நிறுவனங்களாலும் இயங்குகின்றன[164].

2) பதினெட்டு தொழில் பயிற்சி நிறுவனங்கள் இயங்குவதில், இரண்டு அரசாலும், 16 தனி நிருவாகத்தினராலும் நடத்தப்படுகின்றன.

3) எழுபது அரசு அங்கீகாரம் பெற்ற வாணிபப் பள்ளிகளும், 63 அங்கீகாரம் பெறாத பள்ளிகளும் மாவட்டத்தில் திறக்கப்பட்டுள்ளன.

மாவட்டத்திலுள்ள தொழில் பயிற்சிப் பள்ளிகளின் பட்டியல் கீழே அளிக்கப்பட்டுள்ளது[165].

தொட்ர் எண். 1	*தொழில் பயிற்சிப் பள்ளியின் பெயர்* 2	*பள்ளியினை நடத்தும் நிறுவனத்தின் பெயர்* 3
1.	அரசு தொழில்பயிற்சிப் பள்ளி, நாகர்கோவில்	அரசு
2.	எஸ்.எம்.ஆர்.வி. அரசு பெண்கள் தொழில் பயிற்சிப் பள்ளி, நாகர்கோவில்	அரசு
3.	புனித லாரன்ஸ் தொழில் பயிற்சிப் பள்ளி, நாகர்கோவில்	தனியார்
4.	நிர்மலா தொழில் நுட்பப்பள்ளி, மணலிக்கரை	தனியார்
5.	கிறித்தவ சமயப்பரப்புக்குழுப்பணி தொழில் பயிற்சிப் பள்ளி, அழகியபாண்டியபுரம்	தனியார்
6.	மாதர் தொழில் பயிற்சிப்பள்ளி, குழித்துறை	தனியார்
7.	நவபாரத்தொழில் பயிற்சிப்பள்ளி, குழித்துறை	தனியார்
8.	ஜே.எம். தொழில்பயிற்சிப்பள்ளி, குளச்சல்	தனியார்
9.	பொறியியல் தொழில்கல்விக் கல்லூரி, நாகர்கோவில்	தனியார்
10.	பாரத் பொறியியல் பயிற்சி மையம், நாகர்கோவில்	தனியார்
11.	கன்னியாகுமரி, தென்னிந்திய திருச்சபையைச் சார்ந்த மாவட்டச் சமய முதல்வரின் அருளாட்சிப் பரப்பினரின் தொழில் பயிற்சிப்பள்ளி, முட்டம்	தனியார்.
12.	புனித ஜான் தொழில் பயிற்சிப்பள்ளி, மார்த்தாண்டம்	தனியார்
13.	நேசமணி தொழில் பயிற்சிப்பள்ளி, நாகர்கோவில்	தனியார்
14.	ஜே.இ. தொழில் பயிற்சிப்பள்ளி, தக்கலை	தனியார்
15.	நண்பர்கள் தொழில் பயிற்சிப் பள்ளி, மத்திக்கோடு	தனியார்
16.	தொழில் பயிற்சிப்பள்ளி, முஞ்சிறை	தனியார்
17.	ஏ.எம்.எம். அருணாசலம் தொழில் நுட்பப் பயிற்சிப்பள்ளி, குலசேகரம்	தனியார்
18.	ஜீவஜோதி தொழில நுணுக்கப் பயிற்சிப் பள்ளி, முத்தப்பங்கோடு	தனியார்

பல தொழில் நுணுக்கப்பயிற்சி நிறுவனங்கள்

1. அரசு பலதொழில் நுணுக்கப் பயிற்சி நிறுவனம், நாகர்கோவில்[166]

பொறியியல் கல்வியின் பல தலைப்புப் பொருள்களில் பட்டச் சான்றிதழ் (டிப்ளமா) பெறும் பாடத்திட்டக் கல்வியளிக்கும் தொழில் கல்வி நிறுவனங்களே, பல தொழில் நுணுக்கப்பயிற்சி நிறுவனங்களாகும். கன்னியாகுமரி மாவட்டத்தில், கட்டுமானப் பணி, இயந்திரப் பொறியியல் மற்றும் மின் ஆற்றல் பொறியியல் ஆகிய பட்டச் சான்றிதழ் பெறும் பாடத்திட்டக் கல்வியுடன், 1959 ஆம் ஆண்டு, கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் முதல் பல தொழில் நுணுக்கப் பயிற்சி நிறுவனம், துவங்கப்பட்டது. பின்னர், மின்மங்கள் போன்ற அணுவுள் துகள்களைப் பற்றிக்கூறும் இயற்பியல் பிரிவும் சேர்க்கப்பட்டது.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பல தொழில் நுணுக்கப் பயிற்சிப் பள்ளிகளின் பட்டியல் கீழே அளிக்கப்பட்டுள்ளது[167]:

தொடர் எண். 1	பல தொழில் நுணுக்கப் பயிற்சிப் பள்ளியின் பெயர் 2	பள்ளியினை நடத்தும் நிறுவனத்தின் பெயர் 3
1.	அரசு பல தொழில் நுணுக்கப் பயிற்சிப் பள்ளி, நாகர்கோவில்	அரசு
2.	என்.எம்.எஸ். காமராசர் பல தொழில் நுணுக்கப் பயிற்சிப்பள்ளி, பழவிளை	அரசு உதவிபெறும் தனியார் பள்ளி
3.	நடுவர் ஞானதாசன் பல தொழில் நுணுக்கப்பயிற்சிப் பள்ளி, நாகர்கோவில்	சுயநிதி நிர்வாகத்தி லியங்கும் தனியார் பள்ளி
4.	மார்னிங் ஸ்டார் பலதொழில் நுணுக்கப்பயிற்சிப் பள்ளி, சுங்கங்கடை	தனியார்
5.	நூருள் இஸ்லாம் பலதொழில் நுணுக்கப்பயிற்சிப் பள்ளி, திருவிதாங்கோடு	தனியார்
6.	கலைவாணர் என்.எஸ்.கே. பலதொழில் நுணுக்கப் பயிற்சிப்பள்ளி, செண்பகராமன் புதூர்	தனியார்

1959-60 முதல் 1965-66 முடிய, ஒவ்வொரு ஆண்டும், ஒவ்வொரு பாடத்திட்டக்கல்வி வகுப்பிலும் 40 மாணவர்கள் சேர்க்கப்பட்டார்கள். 1966-67 முதல் 1987-88 முடிய, ஒவ்வொரு பட்டச் சான்றிதழ் (டிப்ளமா) பெறும் பாடத் திட்டக் கல்வி வகுப்பிற்கும் 60 மாணவர்கள் சேர்க்கப்பட்டனர்.

ஆண்-பெண் இணைக்கல்வி முறை, இப்பள்ளியில், நடைமுறையிலுள்ளது. மாணவர்களுக்காக ஒரு தங்கும் விடுதி உள்ளது. இவ்விடுதியில், 60 மாணவர்கள் தங்கியுள்ளனர்.

இயந்திரம் செய்வதற்குரிய கருவி அறை, தொழிற்கூடம் மற்றும் நூலகம் ஆகியவையும் இங்குள்ளன. இப்பல் தொழில் நுணுக்கப் பயிற்சி நிறுவனத்துடன், ஒரு தொழில் நுட்ப மேல் நிலைப்பள்ளியும் இணைக்கப்பட்டுள்ளது.

ஒரு முதல்வர், இரண்டு துறைத் தலைவர்கள், ஆறு விரிவுரையாளர்கள், ஆறு துணை விரிவுரையாளர்கள், 18 அறிவுரையாளர்கள் மற்றும் ஒரு உடல் கல்வி இயக்குநர் ஆகியோர், இப்பல் தொழில் நுணுக்கப்பயிற்சி நிறுவனத்தில் பணியாற்றும் ஆசிரியப் பெருமக்களாகும்.

கல்வி சாரா பிற நடவடிக்கைகள்

கல்லூரிகள் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளிலுள்ளது போன்று, இம்மாவட்டத்திலுள்ள பல தொழில் நுணுக்க பயிற்சி நிறுவனங்களில், பல்வேறு துறைகளின் மாணவர் கழகங்களும், சமுதாயப் பணி இணை குழுக்களும் இயங்கிவருகின்றன.

2. என்.எம்.எஸ். காமராஜ் பல தொழில் நுணுக்கப்பயிற்சி நிறுவனம்[168]

பழவிளை நாடார் மகா ஜன சங்க காமராஜ் பல தொழில் நுணுக்கப் பயிற்சி நிறுவனம், 1982 செப்டம்பர் மாதம் துவக்கப்பட்டது.

இந்த பல தொழில் நுணுக்கப் பயிற்சி நிறுவனம், கட்டுமானப்பணி, இயந்திரப் பொறியியல், மின் ஆற்றல் பொறியியல் மற்றும் மின்மங்கள் போன்ற அணுவுள் துகள்களைப் பற்றிக் கூறும் இயற்பியல் ஆகிய பட்டச் சான்றிதழ்கள் (டிப்ளமா) பெறும் பாடத் திட்டக் கல்விகளை இப்பள்ளி அளிக்கிறது. அனைத்து பட்டச் சான்றிதழ்கள் பெறும் பாடத் திட்டத்தில், 1985-86 முதல், ஒவ்வொரு ஆண்டிலும், முதல் ஆண்டு, சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 120 ஆகும். 1985-86 முதல், பின்னர், அது 180 ஆக உயர்ந்தது.

இஃது ஆண்-பெண் இணைக்கல்வி முறையளிக்கும் நிறுவனமாகும். 1986-87 ஆம் ஆண்டு, இந்த பல தொழில் நுணுக்கப் பயிற்சி நிறுவனத்தில் பயின்ற மாணவ, மாணவியரின் எண்ணிக்கை கீழே அளிக்கப்பட்டுள்ளது:

	விவரம்	ஆண்கள்	பெண்கள்
1.	அனைத்து பட்டச் சான்றிதழ் (டிப்ளமா) பெறும் பாடத்திட்டக்கல்வி – முதலாம் ஆண்டு	160	19
2.	அனைத்து பட்டச் சான்றிதழ் (டிப்ளமா) பெறும் பாடத்திட்டக்கல்வி – இரண்டாம் ஆண்டு	178	12
3.	அனைத்து பட்டச் சான்றிதழ் (டிப்ளமா) பெறும் பாடத்திட்டக்கல்வி – மூன்றாம் ஆண்டு	144	இல்லை

இந்நிறுவனத்தில், தேவையான இயந்திரம் செய்வதற்குரிய கருவி அறை, கடைசல் இயந்திரம் மற்றும் தொழிற்கூடம் ஆகியவை உள்ளன. இந்நிறுவனத்தின் நூலகத்தில் 3,000 நூல்கள் உள்ளன.பல்வேறு தொழில் நுட்பம் சார்ந்த இதழ்களுக்கு இந்நிறுவனம் முறையாக உரிய தொகை செலுத்தி வருகிறது.

நூற்றிருபது மாணவர்கள் தங்கக்கூடிய அளவிற்கு இங்கு தங்கும் விடுதி வசதியுள்ளது. 27 ஆசிரியர்கள் இந்நிறுவனத்தில் பணிபுரிகின்றனர்.

இந்நிறுவனத்தில் கட்டுமானப் பொறியியல் துறை ஆண்டுதோறும் பெருமளவில் வெற்றி பெறும் மாணவர்களை அளிக்கிறது. அதாவது 90 விழுக்காட்டிற்குக் குறையாமல் தேர்வு முடிவு அமைகிறது. விளையாட்டுத் துறையினை எடுத்துக்கொண்டால், தொடர்ந்து 1985-86 மற்றும் 1986-87 ஆகிய ஆண்டுகளில் மாநில அளவிலான பல தொழில் நுணுக்கப் பயிற்சி நிறுவனங்களுக் கிடையேயான கபடிப் போட்டிகளில், இந்நிறுவனத்தின் மாணவர்கள் முதல் பரிசு பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

3. நடுவர் ஞானதாசன் பல தொழில் நுணுக்கப் பயிற்சி நிறுவனம், நாகர்கோவில்

தனி நிதி நிறுவனமான, நடுவர் ஞானதாசன் பல தொழில் நுணுக்கப்பயிற்சி நிறுவனம் 1983ஆம் ஆண்டு. கட்டுமானப் பணிப்பொறியியல், மின் ஆற்றல் பொறியியல் மற்றும் மின்மங்கள் போன்ற அணுவுள் துகள்கள் மற்றும் செய்தித் தொடர்புப் பொறியியல் ஆகிய பட்டச் சான்றிதழ் (டிப்ளமா) பெறும் பாடத்திட்டக் கல்வி வகுப்புகளை 1983ஆம் ஆண்டு துவக்கியது[169].

இந்நிறுவனம் துவக்கத்தில், பெண்களுக்காகவே தொடங்கப் பட்டது. பின்னர், 1987ஆம் ஆண்டு முதல், மாணவர்களும் இதனில் சேர்க்கப்பட்டனர். ஒவ்வொரு ஆண்டும் இந்நிறுவனத்தில், முதலாண்டு பட்டச் சான்றிதழ் பெறும் (டிப்ளமா) பாடத் திட்டக் கல்வி வகுப்பில் சேர்க்கப்பட்ட மாணவர்கள் தொடர்பான புள்ளி விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

ஆண்டு	கட்டுமானப் பணிப் பொறியியல்	மின் ஆற்றல் பொறியியல்	மின்மங்கள் போன்ற அணுவுள் துகள்கள் மற்றும் செய்தித் தொடர்பு பொறியியல்
1984-85	60	56	60
1985-86	55	9	35
1986-87	66	54	60

பொறியியல் தலைப்புப் பொருள் பாடத்திட்டங்களைப் பயிற்றுவிக்க போதுமான நூலகம், இயந்திரம் செய்வதற்குரிய கருவி அறை, கடைசல்

இயந்திரம் மற்றும் தொழிற்கூடம் ஆகிய வசதிகள் இந்நிறுவனத்தில் உள்ளன. ஆண்கள், பெண்கள் இருவருக்குமே தனித்தனியாக தங்கும் விடுதிகள் உள.

இந்த பல தொழில் நுணுக்கப்பயிற்சி நிறுவனத்தில் 24 ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர்.

4. நூருள் இஸ்லாம் பலதொழில் நுணுக்கப் பயிற்சி நிறுவனம், பூங்கரை, (திருவிதாங்கோடு)

திருவிதாங்கோடிற்கு அருகாமையில், பூங்கரையிலுள்ள நூருள் இஸ்லாம் பல தொழில் நுணுக்கப் பயிற்சி நிறுவனம், சுய நிதி நிறுவனமாக, 1984-85 ஆம் ஆண்டு, துவக்கப்பட்டது[170] . அது, ஆண்-பெண் இணைக் கல்வி முறையில் இயங்குகிறது. கட்டுமான பணிப் பொறியியல், மின் ஆற்றல் பொறியியல், மின் அணுவியல் பொறியியல் மற்றும் தானியங்கிப் பொறியியல் ஆகியவற்றில் பட்டச் சான்றிதழ் பெறும் (டிப்ளமா) பாடத் திட்டக் கல்வி கற்க, 1984-85 ஆம் ஆண்டு, 94 மாணவர்களும், 13 மாணவியரும், 1985-86 ஆம் ஆண்டு 154 மாணவர் களும், 11 பெண்களும், 1986-87 ஆம் ஆண்டு 184 மாணவர்களும், 14 பெண்களும் இப்பாடத் திட்டக்கல்வி முறையில் சேர்க்கப்பட்டார்கள்.

உள்ளமைப்பு வசதிகளான நூலகம், தொழிற்கூடம் மற்றும் கடைசல் இயந்திர அறை ஆகியவை இந்நிறுவனத்திலுள்ளன. மாணவர்களுக்கான தங்குமிட வசதியும் இங்குண்டு.

5. மார்னிங் ஸ்டார், பல தொழில் நுணுக்கப் பயிற்சி நிறுவனம், சுங்கங்கடை[171]

சுங்கங்கடையில், மார்னிங் ஸ்டார் பல தொழில் நுணுக்கப் பயிற்சி நிறுவனம், 1984ஆம் ஆண்டு, சுய நிதி நிறுவனமாக அமைக்கப்பட்டது. இது ஆண்-பெண் இணைக்கல்வி அளிக்கும் நிறுவனமாகும்.

இந்நிறுவனம், 1986-87 லிருந்து கட்டுமானப்பணிப் பொறியியல், இயந்திரப் பொறியியல், மின் அணுவியல் மற்றும் செய்தித் தொடர்புப் பொறியியல் ஆகியவற்றில் பட்டச் சான்றிதழ் (டிப்ளமா) வழங்கும் பாடத் திட்டக் கல்வி முறையினை அளிக்கிறது. கணக்கிடும் பொறிப் பொருத்தம் என்ற புதிய தொரு பட்டச் சான்றிதழ் வழங்கும் கல்வி முறையினையும், இந்நிறுவனம் அளித்து வருகிறது.

1984-85 ஆம் ஆண்டு, இந்நிறுவனம் துவங்கப்பட்டபோது, இந்நிறுவனம் 162 மாணவர்களையும், 18 மாணவிகளையும் முதலாண்டு பட்டச் சான்றிதழ் வழங்கும் பாடத்திட்ட வகுப்பில் சேர்த்துக் கொண்டது. ஒவ்வொரு பாடத்திட்ட வகுப்புவாரியான மாணவ, மாணவியரின் எண்ணிக்கை கீழே அளிக்கப்பட்டுள்ளது:

பாடத்திட்டக் கல்வி முறையின் பெயர்	ஆண்டுகள் 1985 மாணவர்கள்	1986 மாணவியர்	1980 மாணவர்கள்	1988 மாணவியர்
கட்டுமானப் பொறியியல்	54	7	61	2
இயந்திரப் பொறியியல்	62	-	70	-
மின் அணுவியல் மற்றும் செய்தித் தொடர்பு பொறியியல்	114	6	71	4
கணினி அறிவியல்	-	-	53	7

இந்த பல தொழில் நுணுக்கப் பயற்சி நிறுவனம், பல்வேறு பாடத் திட்டங்களிலடங்கிய தலைப்புப் பொருள்களில் கல்வி அளித்திட, உள்ளமைப்பு வசதிகளான தொழில் கூடம், நூலகம் போன்றவற்றை அமைத்துக் கொடுத்துள்ளது. இங்கு மாணவர்களுக்குத் தங்குமிடவசதி செய்து கொடுக்கப்பட்டு, 110 மாணவர்கள் அதனில் தங்கியுள்ளனர். 40 ஆசிரியர்கள் இந்நிறுவனத்தில் பணியாற்றுகின்றனர்.

6. கலைவாணர் என்.எஸ்.கே. பல தொழில் நுணுக்கப் பயிற்சி நிறுவனம்,செண்பகராமன் புதூர்[172]

செண்பகராமன்புதூர் கலைவாணர் என்.எஸ்.கே. (என்.எஸ். கிருட்டிணன்) பல தொழில் நுணுக்கப்பயிற்சி நிறுவனம், வெள்ளாளர்கள் கல்விபரப்பு அறக்கட்டளையால், ஒரு சுயநிதி நிறுவனமாக, 1985 அக்டோபர் மாதம் துவங்கப்பட்டது. நாகர்கோவிலிலுள்ள புத்தேரியில், ஒரு வாடகைக் கட்டிடத்தில், இந்நிறுவனம் துவங்கப்பட்டது. நிலையான கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட பின்னர், செப்டம்பர், 5, 1986 முதல் அக்கட்டிடத்தில் இயங்கத் தொடங்கியது.

இந்நிறுவனத்தில் கீழ்க்காணும் பட்டச் சான்றிதழ் வழங்கும் கல்வி முறைப் பாடத் திட்டங்கள் துவங்கப்பட்டுள்ளன:

1. கட்டுமானப் பணிப் பொறியியல்
2. இயந்திரப் பொறியியல் மற்றும்
3. மின் ஆற்றல் மற்றும் மின் அணுவியல் பொறியியல்

இந்த பல தொழில் நுணுக்கப் பயிற்சி நிறுவனம், ஆண்-பெண் இணைக்கல்வி முறையில் இயங்கி வருகிறது. 1985-86 ஆம் ஆண்டு இந்நிறுவனத்தில் 40 மாணவர்களும் ஐந்து மாணவியரும் சேர்க்கப்பட்டனர். பின்னர், 1986-87-ல், 145 மாணவர்களும் ஆறு மாணவியரும் இந்நிறுவனத்தில் சேர்ந்தனர்.

பொறியியல் கல்வி போதித்திடத் தேவைப்படும், துணைப்பொருள் களைக் கொண்ட துணைக்கருவி கலத்தொகுதி, பற்றவைப்புக்கூடம்,

மற்றும் கடைசல் இயந்திரக் கூடம் ஆகியவை இந்நிறுவனத்திலுள்ளன. இந்நிறுவனத்திலுள்ள நூலகத்தில் பொறியியல் மற்றும் அதனைச் சார்ந்த தலைப்புப் பொருள்கள் தொடர்பான 2000 நூல்கள் சேமித்துவைக்கப்பட்டுள்ளன.

இம்மாவட்டத்திலுள்ள சுயநிதி பல தொழில் நுணுக்கப் பயிற்சி நிறுவனங்கள் யாவும் 1984-85 ஆம் ஆண்டு, இங்கு நிறுவப்பட்டன. பின்னர், அவற்றில், உள்ளமைப்புத் தேவைகள் படிப்படியாக வளர்ந்து, நாளாவட்டத்தில், அவை முழுமையான நிறுவனங்களாகத் திகழ்கின்றன.

என்.எஸ்.கே. பல தொழில் நுணுக்கப் பயிற்சி நிறுவனத்தில், தங்குமிட வசதியில்லாததால், 10 மாணவர்கள் ஒரு வாடகை வீட்டில் தங்கியிருக்கிறார்கள். நிறுவனத்திற்குச் சொந்தமான ஒரு தங்கும் விடுதி கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிறுவனத்தில் 16 ஆசிரியர்கள் பணியாற்றி வருகின்றனர்.

தொழில் பயிற்சிப் பள்ளி

தொழில்கள் மற்றும் காலவரை

தொழில்களின் இயல்பைப் பொறுத்து, ஓராண்டோ அல்லது ஈராண்டுகளோ பயிலவேண்டிய தொழில்கள் தொழில் பயிற்சிப் பள்ளிகளில், கற்றுக் கொடுக்கப்படுகின்றன. இம்மாவட்டத்திலுள்ள பல்வேறு தொழில் பயிற்சிப் பள்ளிகளும், அவற்றில் அளிக்கப்படும் தொழில் கல்வி விவரங்களும், அவற்றின் காலவரையும் கீழ்காணும் பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ளன[173]:

தொடர் எண்.	தொழிலின் பெயர்	பாடக்கல்வி முறையின் காலவரை
1.	கம்மியர் (டீசல்)	2
2.	கம்மியர் (உலாவிசை ஊர்தி)	2
3.	பற்ற வைப்பவர் (ஆவி மற்றும் மின் ஆற்றல்)	1
4.	கம்பி வினைஞர்	2
5.	இயந்திரங்களை இயக்குபவர்	2
6.	இணைப்பவர்	2
7.	மின் பிரி பூச்சுமாண வினைஞர்	2
8.	மின் அமைவு செப்பனிடுபவர்	2
9.	வரைவு வல்லார் (கட்டுமானப் பணி)	2
10.	வரைவு வல்லார் (இயந்திரப் பொறியியல்)	2
11.	கம்மியர் (வானொலி மற்றும் தொலைக்காட்சி)	1

பொறியியல் சாராத தொழில்கள் (காலவரை-ஓராண்டு)

1. சுருக்கெழுத்துக் கலை
2. செயலாண்மைத்துறை, தொழில்முறைப்பணி
3. கையால் அச்சுக்கோப்பவர்
4. தையற்கலை

1. அரசு தொழில் பயிற்சிப் பள்ளி, நாகர்கோவில்

மாவட்டத்தின் முதல் தொழில் பயிற்சிப் பள்ளி 1964 ஆம் ஆண்டு, நாகர்கோவிலில் துவக்கப்பட்டது. துவக்கத்திலிருந்தே, இப்பள்ளியில் கீழ்க்காணும் தொழில்கள் கற்றுக்கொடுக்கப்படுகின்றன[174] :

1. வரைவு வல்லார் (கட்டுமானப் பணி)
2. மின் பிரிப்பூச்சுமான வினைஞர்
3. இணைப்பவர்
4. கம்மியர் (உலா விசை ஊர்தி)
5. மின் அமைவு செப்பனிடுபவர்.
6. பற்ற வைப்பவர்
7. கடைசல்காரர்

இந்த இயல்புத் தொழில்களில், 1986-87 ஆம் ஆண்டு, கீழ்க்காணும் மாணவ, மாணவியர் சேர்க்கப்பட்டனர்:

	தொழிலின் பெயர்	மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கை	
		மாணவர்கள்	மாணவியர்
	1	2	3
1.	வரைவு வல்லார் (கட்டுமானப்பணி)	9	9
2.	மின்பிரிப்பூச்சுமான வினைஞர்	17	-
3.	இணைப்பவர்	35	-
4.	கம்மியர் (உலா விசை ஊர்தி)	18	-
5.	மின் அமைவு செப்பனிடுபவர்	35	-
6.	பற்ற வைப்பவர்	26	-
7.	கடைசல்காரர்	(புள்ளி விவரங்களில்லை)	

கட்டுமானப் பணி வரைவு வல்லார் தொழில் பிரிவில், பெண்களும் சேர்க்கப்படுகின்றனர்.

துணைக் கருவிகள் அறை, தொழிற் கூடம், நூலகம் மற்றும் தங்கும் விடுதி ஆகிய வசதிகளும் இந்நிறுவனத்திலுள்ளன.

2. எஸ்.எம்.ஆர்.வி. அரசு பெண்கள் தொழில் பயிற்சிப்பள்ளி, நாகர்கோவில்

இந்நூற்றாண்டின் துவக்கத்திலேயே தொடங்கப்பட்ட ஸ்ரீமூலம் இராம வர்மா தொழில் நுட்ப நிறுவனம், ஒரு முழுமையான பெண்கள்

தொழில் பயிற்சிப் பள்ளியாக 1982 ஆம் ஆண்டு, உயர்த்தப்பட்டது[175]. இது குறித்த முழுமையான விவரங்கள் இவ்வியலில் பிரிதொரு தலைப்பில் அளிக்கப்பட்டுள்ளன. துவக்கத்தில், இந்நிறுவனம், கைத்தறி நெசவு, விசை நெசவு மற்றும் உயர்தரமான கைத்தறி நெசவு ஆகிய தொழில்களில் பயிற்சி அளித்தது.

தற்போது, இத்தொழில் பயிற்சிப் பள்ளி, கீழ்க்காணும் தொழில்களில் பயிற்சி அளிக்கிறது:

1. கம்மியர் (வானொலி மற்றும் தொலைக்காட்சி)
2. செயலாண்மைத்துறை தொழில்முறைப்பணி
3. தையற்கலை
4. கையினால் அச்சுக் கோர்ப்பது.

துணைக்கருவிகள் அறை, தொழிற்கூடம் மற்றும் நூலக வசதிகள் ஆகியவை உள. தங்குமிட வசதிகள் செய்துதரவேண்டியுள்ளது.

அறிவுரையாளர்கள், பயிற்சி அலுவலர்கள், படவரைவாளர்கள், உடல் சார்ந்த கல்வியளிப்பவர்கள் தச்சுத் தொழில் வல்லுநர்கள் (தொழில் நுட்பம்) ஆகியோர் உள்ளிட்ட ஏழு ஆசிரியர்கள் இந்நிறுவனத்தில் பணியாற்றுகின்றனர்.

இந்நிறுவனம் 1982 ஆம் ஆண்டு, தொழில்பயிற்சிப் பள்ளியாக நிலை உயர்ந்த பின்னர், இந்நிறுவனத்தின் 95 விழுக்காடு மாணவர்கள் அகில இந்திய தொழில் தேர்வுப் போட்டியில் வெற்றிக்கொடி நாட்டினர்.

3. நிர்மலா தொழில் நுணுக்கப் பயிற்சிப்பள்ளி, மணலிக்கரை

இணைப்பவர், பற்ற வைப்பவர், மின் அமைவு செப்பனிடுபவர், தொலைபேசி செய்தித் தொடர்பு, மற்றும் வானொலி-கம்மியர் ஆகியோர் தொடர்பான தொழில் நுணுக்கப்பயிற்சி 1965 ஆகஸ்டு 17 முதல் நிர்மலா தொழில் நுணுக்கப் பயிற்சிப் பள்ளியில் அளிக்கப்படுகிறது. 1981 ஆம் ஆண்டு வரை, ஒவ்வொரு ஆண்டும், இந்நிறுவனம், இணைப்பவர், மின் அமைவு செப்பனிடுபவர் மற்றும் வானொலி கம்மியர் பயிற்சிக்கு 18 பயிற்சியாளர்களையும், பற்றவைப்பவர் மற்றும் தொலைபேசிச் செய்தித் தொடர்புப் பயிற்சிக்கு 13 பயிற்சியாளர்களையும் சேர்த்துக்கொண்டது. 1981 ஆம் ஆண்டு, இணைப்பவர் தொழிலுக்கு 54 பயிற்சியாளர் களையும், மின் அமைவு செப்பனிடுபவர் தொழிலுக்கு 36 பயிற்சியாளர் களையும், பற்றவைப்பவர் தொழிலுக்கு 26 பயிற்சியாளர்களையும் இந் நிறுவனம் சேர்த்துக்கொள்ள அனுமதியளிக்கப்பட்டது. வானொலி இயந்திர நுட்பம், தொலைபேசிச் செய்தித் தொடர்பு இயந்திர நுட்பம் ஆகியவை, பின்னர் கைவிடப்பட்டன. ஆனால், 1985 ஆம் ஆண்டு, (உலா விசை ஊர்தி) கம்மியர், (கட்டுமானப்பணி) வரைவு வல்லார், ஈயக்கம்மியர்,

மற்றும் (டீசல்) கம்மியர் ஆகியோருக்கான நான்கு புதிய தொழில்கள் துவக்கப்பட்டன. இந்நிறுவனம் (ஆங்கிலம் மற்றும் தமிழ் தட்டச்சு, (கீழ்நிலை மற்றும் உயர்நிலை) சுருக்கெழுத்து மற்றும் கிராமப்புறக் கைவினைஞர் திட்டம் ஆகியவற்றிலும் பயிற்சி அளிக்கிறது.

தட்டச்சு, சுருக்கெழுத்துக் கல்வி முறை, (கட்டுமானப்பணி) வரைவு வல்லார் ஆகிய தொழில்களுக்கு, இந்நிறுவனம் பெண்களையும் சேர்த்துக் கொள்கிறது. ஆனால், பிறதொழில்களுக்கான பயிற்சிகள் ஆண்களுக்கே அளிக்கப்படுகின்றன.

1986-87 ஆம் ஆண்டில், ஒவ்வொரு தொழிலிலும் சேக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது[176].

தொடர் எண்.	*தொழில் விவரம்*	*மாணவர்களின் எண்ணிக்கை*
1.	இணைப்பவர்	108
2.	மின் அமைவு செப்பனிடுபவர்	72
3.	கம்மியர் (உலா விசை ஊர்தி)	72
4.	பற்றவைப்பர்	26
5.	வரைவு வல்லார் (கட்டுமானப்பணி)	54
6.	கம்மியர் (டீசல்)	18
7.	ஈயக்கம்மியர்	18
8.	கிராமக்கைவினைஞர் திட்டம்	14
9.	தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்து	88

ஒவ்வொரு ஆண்டும், இறுதித் தேர்வில், இந்நிறுவனத்தில், 90 முதல் 100 விழுக்காடு மாணவர்கள் தேர்ச்சி பெறுகின்றனர்.

துணைக்கருவி அறை, நூலகம் ஆகிய வசதிகள் இந்நிறுவனத்தி லுள்ளன. தங்குமிட வசதிகள் இன்னமும் ஏற்படுத்தப்படவில்லை. இந்நிறுவனத்தில், 25 ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர்.

சி.எம்.எஸ். தொழில் பயிற்சிப்பள்ளி, அழகிய பாண்டியபுரம்

கிறித்தவ சமயப்பரப்புக்குழு தொழில் பயிற்சிப்பள்ளி, 1969 ஆம் ஆண்டு, அழகியபாண்டியபுரத்தில், துவக்கப்பட்டது[176அ]. இப்பள்ளியியல், இணைப்பவர், (உலாவிசை ஊர்தி) கம்மியர், மற்றும் மின் அமைவு செப்பனிடுபவர் ஆகியோருக்கான தொழில்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும், ஒவ்வொரு தொழிலிலும், 18 மாணவர்கள் சேர்க்கப்படுகின்றனர்.இணைக்கருவிகள் அறை, நூலகம் மற்றும் தங்கும் விடுதி வசதிகள் இந்நிறுவனத்தில் உள்ளன.

முதல்வர் நீங்கலாக, எட்டு ஆசிரியர்களும், தொழிலாளர் மேன்முறையாள் மற்றும் உடற் கல்வி போதிப்பவர் ஆகியோரும் பணியாற்றுகின்றனர்

5. புனித லாரன்ஸ் தொழில் நுட்ப நிறுவனம், நாகர்கோவில்

கம்மியர் (டீசல்) தொழிலுக்கான பயிற்சியுடன் இந்த தொழில் நுட்ப நிறுவனம் 1978 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது[176]ஆ. பின்னர் (கட்டுமானப்பணி) வரைவாளர், ஈயக்கம்மியர் மற்றும் மரத்தச்சு வல்லுநர் ஆகிய தொழில் பயிற்சி பாடத்திட்ட முறையும் துவங்கப்பட்டன. (கட்டுமானப்பணி) வரைவாளர் பாடத்திட்டப் பயிற்சியில் பெண்களும் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர்.

ஒவ்வொரு கல்வி ஆண்டிலும், ஒவ்வொரு பாடத்திட்டத்திலும், கீழ்க்காணும் பயிற்சியாளர்கள் சோத்துக் கொள்ளப்படுகின்றனர்:

தொடர் எண்.	*தொழிலின் பெயர்*	*ஆண்கள்*	*பெண்கள்*
1.	கம்மியர் (டீசல்)	36	-
2.	வரைவாளர் (கட்டுமானப் பணி)	42	18
3.	ஈயக்கம்மியர்	17	-
4.	மரத்தச்சு வல்லுநர்	14	-

துணைக்கருவிகள் அறை, தொழிற்கூடம், நூலகம் போன்ற உள்ளமைப்பு வசதிகள் இந்நிறுவனத்திலுள்ளன. ஆனால் தங்கும் விடுதி இன்னமும் கட்டப்படவில்லை. முதல்வர் தவிர, பத்து இளநிலைப் பயிற்சி அலுவலர், ஆசிரியர்களில் அடங்குவர்.

6. நவபாரத் தொழிற் பயிற்சிப்பள்ளி, குழித்துறை

இணைப்பவர், மற்றும் (கட்டுமானப் பணி) வரைவாளர் ஆகிய தொழில் பயிற்சியுடன் கடந்த 1982 ஆம் ஆண்டு, [177] நவபாரத் தொழில் பயிற்சிப்பள்ளி, குழித்துறையில் தொடங்கப்பட்டது. 1986 ஆம் ஆண்டு, (உலா விசை ஊர்தி) கம்மியர் தொழில் பயிற்சி புதிதாகத் துவங்கப்பட்டது.

வரைவாளர் (கட்டுமானப் பணி) தொழில் பயிற்சிக்கு பெண்களும் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். 1986-87 ஆம் ஆண்டு ஒவ்வொரு பாடத் திட்டத்திலும் சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை, கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

தொடர் எண்.	*தொழிலின் பெயர்*	*எண்ணிக்கை*	
		மாணவர்கள்	*மாணவியர்*
1.	இணைப்பவர்	77	--
2.	வரைவாளர் (கட்டுமானப் பணி)	22	--
3.	கம்மியர் (உலா விசை ஊர்தி)	(புள்ளி விவரங்களில்லை)	

துணைக்கருவிகள் அறை, தொழிற் கூடம் மற்றும் தங்கும் விடுதி வசதிகள் இந்நிறுவனத்திலுள்ளன. இந்நிறுவனத்தில் 12 ஆசிரியர்கள் தொழில் பயிற்சியளிக்கின்றனர்.

7. புனித அன்னை தொழிற் பயிற்சிப் பள்ளி, குழித்துறை:

புனித அன்னை தொழில் பயிற்சிப் பள்ளி, குழித்துறையில், வரைவாளர் (கட்டுமானப்பணி) மற்றும் ஆகியோருக்கான (உலா விசை ஊர்தி) கம்மியர் தொழில் பயிற்சிக்கல்விப் பாடத்திட்டங்களுடன், 1982, ஆம் ஆண்டு துவங்கப்பட்டது[178]. 1983 ஆம் ஆண்டு, இணைப்பவர் தொழிலுக்கான பயிற்சியும், புதிதாகத் துவங்கப்பட்டது.

ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு தொழிலுக்கும், 36 பயிற்சியாளர்கள் சேர்க்கப்படுகிறார்கள். வரைவாளர் (கட்டுமானப் பணி) தொழிற்பயிற்சியில் பெண்களும் சேர்க்கப்படுகின்றனர். தற்போது, (1986-87), 196 மாணவர்களும், 20 மாணவியரும் பயிற்சி பெற்று வருகின்றனர்.

மாணவர்கள் மற்றும் மாணவியருக்குத் தனித்தனியாக தங்கும் விடுதி வசதியுள்ளது. பிற உள்ளமைப்பு வசதிகளும் செய்துகொடுக்கப் பட்டுள்ளன. முதல்வரைத் தவிர, 15 ஆசிரியர்கள், பணியாற்றுகின்றனர்.

8. கன்னியாகுமரி தென்னிந்தியத் திருச்சபை மாவட்டச் சமய முதல்வரது அருளாட்சிப் பரப்பின் தொழில் பயிற்சிப் பள்ளி, முட்டம்

தென்னிந்தியத் திருச்சபை - மாவட்டச் சமய முதல்வரது அருளாட்சிப் பரப்பின் தொழில் பயிற்சிப்பள்ளி, (இயந்திரப் பொறியியல்) வரைவாளர் தொழில் பயிற்சிக்கான பாடத்திட்டத்துடன், 1983 ஆம் ஆண்டு, முட்டத்தில் துவக்கப்பட்டது. அடுத்த ஆண்டு வரைவாளர் (கட்டுமானப்பணி) பாடத்திட்டம் துவக்கப்பட்டது.[179]

இத்தொழில் பயிற்சிப்பள்ளி, இவ்விரண்டு பாடத்திட்டங்களை மட்டும் பயிற்சி அளிக்கிறது. 1986-87ஆம் ஆண்டு, முதல் மற்றும் இரண்டாம் ஆண்டுகளுக்கான வரைவாளர் (இயந்திரப் பொறியியல்) தொழில் பயிற்சிப் பாடத்திட்ட வகுப்பில், 30 மாணவர்களும், இரண்டு மாணவியரும் பயிற்சி பெற்றனர். வரைவாளர் (கட்டுமானப் பணி) தொழில் பயிற்சிப் பாடத்திட்ட வகுப்பில், 17 மாணவர்களும், 14 மாணவிகளும் பயிற்சி பெற்றனர். இந்நிறுவனத்தில், தங்கும் விடுதி வசதியில்லை. 10 ஆசிரியர்கள் பயிற்சியளிக்கின்றனர்.

9. நேசமணி போக்குவரத்துக் கழக தொழில் பயிற்சிப் பள்ளி மற்றும் ஒட்டுநர் பயிற்சிப்பள்ளி, நாகர்கோவில்

நேசமணி போக்குவரத்துக் கழக தொழில் பயிற்சிக் கழகம் மற்றும் ஒட்டுநர் பயிற்சிப்பள்ளி ஆகிய இரண்டும், 1984ஆம் ஆண்டு, நாகர்கோவிலில் துவக்கப்பட்டது[180]. கம்மியர் (உலா விசை ஊர்தி)

பாடத்திட்டப் பயிற்சியினை மட்டும் தொழில் பயிற்சிப் பள்ளி அளிக்கிறது. இதனில், ஒவ்வொரு ஆண்டும் 16 மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள், ஓட்டுநர் பயிற்சிப் பள்ளியில், கனரக ஊர்தி ஓட்டுநர் பயிற்சிக்கு ஒவ்வொரு ஆண்டும் 23 மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள்.

முதல்வர் மற்றும் பகுதி நேர அறிவுரையாளர் உள்பட, ஐந்து ஆசிரியர்கள் இந்நிறுவனத்தில், மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கின்றனர். ஓட்டுநர் பயிற்சிப் பள்ளியில் ஆறு அறிவுரையாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

10. ஜே.ஈ. தொழில் பயிற்சிப் பள்ளி, தக்கலை

1984ஆம் ஆண்டு தக்கலையில் துவங்கப்பட்ட ஜே.ஈ. தொழில் பயிற்சிப் பள்ளி, கீழ்க்குறிப்பிட்ட தொழில் கல்விகளில் பயிற்சியளிக்கிறது[180அ].

1. வரைவாளர் (கட்டுமானப் பணி)
2. இணைப்பவர் மற்றும்
3. கம்மியர் (உலா விசை ஊர்தி)

வரைவு வல்லார் தொழில் (கட்டுமானப்பணி) பயிற்சியில், பெண்களும் சேர்க்கப்படுகின்றனர். இந்த ஒவ்வொரு தொழிலுக்கும், ஒவ்வொரு ஆண்டும் 18 பயிற்சியாளர்கள் சேர்க்கப்படுகின்றனர். இந்நிறுவனத்தில், 11 ஆசிரியர்கள் பயிற்சி அளித்து வருகின்றனர். மாணவர்கள் தங்கும் விடுதி, நூலகம் மற்றும் துணைக்கருவி அறை ஆகிய வசதிகள் இந்நிறுவனத்திலுள்ளன.

11. புனித ஜான் தொழில் பயிற்சிப் பள்ளி, மார்த்தாண்டம்

மார்த்தாண்டத்தில் புனித ஜான் தொழில் பயிற்சிப்பள்ளி 1984 ஆம் ஆண்டு, துவக்கப்பட்டது[181]. இந்நிறுவனத்தில், வரைவாளர் (கட்டுமானப் பணி), இணைப்பவர், மற்றும் கம்மியர் (உலா விசை ஊர்தி) ஆகிய தொழிற்பயிற்சிகள் கற்றுக்கொடுக்கப்படுகின்றன. வரைவாளர் (கட்டுமானப்பணி) தொழிலில் ஆண்-பெண் இணைக்கல்வி முறை பின்பற்றப்படுகிறது. 1986-87 ஆம் ஆண்டு, (கட்டுமானப்பணி) வரைவாளர் தொழில் பயிற்சி பாடத் திட்டத்தில் 14 மாணவர்களும், மூன்று மாணவிகளும், இணைப்பவர் தொழில்பயிற்சி பாடத்திட்டத்தில், 38 மாணவர்களும், (உலா விசை ஊர்தி) கம்மியர் தொழில்பயிற்சி பாடத் திட்டத்தில் 40 மாணவர்களும் முறையாகப் பயிற்சி பெற்று வருகிறார்கள். தங்கும் விடுதி, நூலகம் மற்றும் துணைக் கருவிகள் அறை ஆகிய வசதிகள் இந்நிறுவனத்தில் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. 17 ஆசிரியர்கள் தொழில் பயிற்சியளிக்கிறார்கள்.

12. நண்பர்கள் தொழில் பயிற்சிப் பள்ளி, மத்திக்கோடு

நண்பர்கள் தொழில் பயிற்சிப் பள்ளி, மத்திக்கோடில், 1984 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது[182].

இந்நிறுவனத்தில், கீழ்க்காணும் தொழிற் பாடத் திட்டங்கள் கற்பிக்கப்படுகின்றன.

1. இணைப்பவர் 2. வரைவாளர் (கட்டுமானப்பணி) மற்றும் 3. மின் அமைவு செப்பனிடுபவர்.

ஒவ்வொரு ஆண்டும், இணைப்பவர் மற்றும் (கட்டுமானப்பணி) வரைவாளர் ஆகிய தொழில் பயிற்சிப் பாடத்திட்டங்களில் 36 மாணவர்களும், மின் அமைவு செப்பணிடுபவர் தொழில் பயிற்சிப் பாடத்திட்டத்தில் 18 மாணவர்களும் பயிற்சியில் சேர்க்கப்படுகின்றனர். வரைவாளர் (கட்டுமானப் பணி) தொழில் பயிற்சியில் பெண்களும் சேர்க்கப்படுகின்றனர். ஒரு நூலகமும், ஒரு துணைக்கருவிகள் கூடமும் இந்நிறுவனத்தில் உள்ளன. ஆனால், தங்கும் விடுதி இல்லை. முதல்வரையும் சேர்த்து 15 ஆசிரியர்கள் இந்நிறுவனத்தில் பணியாற்றுகின்றனர்.

13. பாரத் பொறியியல் பயிற்சி மையம், நாகர்கோவில்

நாகர்கோவிலில் பாரத் பொறியியல் பயிற்சி மையம் 1983ஆம் ஆண்டு துவக்கப்பட்டது[183]. இப்பயிற்சி மையத்தில் கம்மியர் (உலா விசை ஊர்தி) மற்றும் இணைப்பவர் ஆகிய தொழிற் பயிற்சிப் பாடத்திட்டங்களில் பயிற்சியளிக்கப்படுகிறது. 1986-87 ஆம் ஆண்டு,(உலா விசை ஊர்தி) கம்மியர் தொழில் பயிற்சிப் பாடத்திட்டத்தில் 51 மாணவர்களும், இணைப்பவர் தொழில் பயிற்சிப் பாடத்திட்டத்தில் 30 மாணவர்களும் பயிற்சி பெறுகின்றனர்.

ஒரு துணைக்கருவி அறை, ஆய்வுக்கூடம், மற்றும் 10,000 நூல்களைக் கொண்ட ஒரு நூலகம் ஆகியவை, இந்நிறுவனத்தில் உள்ளன. ஐந்து தொழில் பயிற்றுநர், ஒரு கணக்கியல் பயிற்றுநர் இந்நிறுவனத்தில் பணியாற்றுகின்றனர்.

14. பொறியியல் தொழில் நுணுக்க நிறுவனம் மற்றும் தொழில் பயிற்சி மையம், நாகர்கோவில்

இணைப்பவர், தொழில் பயிற்சிக் கல்விப் பாடத்திட்டத்துடன் மட்டும், இந்நிறுவனம் 1983 ஆம் ஆண்டு, துவங்கப்பட்டது. வரைவாளர் (கட்டுமானப்பணி), மற்றும் கம்மியர் (உலா விசை ஊர்தி), ஆகிய தொழில் பயிற்சிப் பாடத் திட்டங்கள் முறையே 1984 மற்றும் 1986 ஆம் ஆண்டுகளில் தொடங்கப்பட்டன[183அ].

துவக்கத்தில், இணைப்பவர் தொழில் பயிற்சிப்பாடத்திட்டத்தில் 18 மாணவர்களும், வரைவாளர் (கட்டுமானப்பணி) தொழில் பயிற்சிப் பாடத்திட்டத்தில் 15 மாணவர்களும், கம்மியர் (உலா விசை ஊர்தி) பாடத்திட்டத்தில் 35 மாணவர்களும் சேர்க்கப்பட்டனர். 1988 ஆம் ஆண்டு,

இணைப்பவர் பாடத்திட்டத்தில் 53 பயிற்சியாளர்களும், கம்மியர் (உலா விசை ஊர்தி) பாடத்திட்டத்தில் 35 பயிற்சியாளர்களும் சேர்க்கப்பட்டனர். வரைவாளர் (கட்டுமானப்பணி) பாடத்திட்ட வகுப்புகளில் பெண்களும் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர்.

15. ஜே.எம். தொழில் பயிற்சி நிறுவனம், குளச்சல்

இந்நிறுவனம், கடந்த 1981-82 ஆம் ஆண்டு, இணைப்பவர் (Fitter) தொழில் பயிற்சிப் பாடத்திட்டத்தில் 18 பயிற்சியாளர்களுடன் துவங்கியது. 1981-82 ஆம் ஆண்டு, ஆண்டுதோறும் 16 பயிற்சியாளர்களைச் சேர்க்கும் அளவில் பற்ற வைப்பவர், தொழில் பயிற்சிப் பாடத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. 1984-85 ஆம் ஆண்டு, வரைவாளர் (கட்டுமானப்பணி) தொழில் பயிற்சிப் பாடத் திட்டம் துவக்கப்பட்டது. அதில் 16 பயிற்சியாளர்கள் சேர்க்கப்பட்டனர். 1987-88 ஆம் ஆண்டு, இணைப்பவர், தொழில் பயிற்சியில் 56 மாணவர்களும், வரைவு வல்லார் (கட்டுமானப்பணி) தொழில் பயிற்சியில் 16 மாணவர்களும், பயிற்சி பெற்றனர். 1984-85 ஆம் ஆண்டு, பற்றவைப்பவர் (Welder) தொழில் பயிற்சிப் பாடத் திட்டம் கைவிடப்பட்டது.

16. தொழிற் பயிற்சிப்பள்ளி, முஞ்சிரை

இந்த தொழில் பயிற்சிப்பள்ளி 1981 ஆம் ஆண்டு, தொடங்கப்பட்டது. இந்நிறுவனத்தில், இணைப்பவர், (இயந்திரப் பொறியியல்) வரைவாளர் மற்றும் சுருக்கெழுத்து ஆகிய தொழில் பயிற்சிகள் கற்றுக்கொடுக்கப்படு கின்றன.

17. ஏ.எம்.எம் அருணாசலம் தொழில் நுணுக்கப்பயிற்சிப்பள்ளி, குலசேகரம்

இப்பயிற்சிப்பள்ளி, 1985 ஆம் ஆண்டு, துவங்கப்பட்டது. (கட்டுமானப் பணி) வரைவாளர் தொழிலில், இந்நிறுவனம் பயிற்சியளிக்கிறது.

18. ஜீவஜோதி தொழில் நுணுக்க நிறுவனம், முத்தப்பன்கோடு

இந்நிறுவனம் 1985 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இணைப்பவர் மற்றும் வரைவாளர் (கட்டுமானப்பணி) ஆகிய தொழில்கல்விகள் தொடர்பாக இந்நிறுவனத்தில் பயிற்சியளிக்கப்படுகிறது.

19. பெரு வணிகப் பள்ளிகள்[184]

தட்டச்சு, சுருக்கெழுத்து, வணிகக் கணக்குமுறை மற்றும் கணக்குவைப்பு முறை ஆகிய பாடத் திட்டங்கள் போதிக்கும் பெருவாணிகப் பள்ளிகளும் இம்மாவட்டத்தில் இயங்குகின்றன. 1981 ஆம் ஆண்டு முதல் இம்மாவட்டத்திலியங்கி வரும் ஒப்புதலளிக்கப்பட்ட பெரு வணிகப் பள்ளிகளின் புள்ளிவிவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன:

ஆண்டு	மொத்த பள்ளிகள்
1981	36
1982	50
1983	41
1984	46
1985	50
1986	46
1987	41
1988	70

அரசால் அங்கீகாரமளிக்கப்பட்ட 70 பொது வணிகப் பள்ளிகள் தவிர, அரசு அங்கீகாரம் பெறாத பள்ளிகளும் மாவட்டத்தில் இயங்குகின்றன. அவற்றில் 63 பள்ளிகள் அரசின் அனுமதியைக் கோரியுள்ளன. அவற்றின் மீது அரசின் ஆணை எதிர்பார்க்கப்படுகிறது.

பெண்கள் கல்வி

பண்டைக் காலத்திலிருந்தே தமிழ்நாட்டுப் பெண்கள் சமுதாயத்தின் மிக மதிப்பு வாய்ந்த ஒரு நிலையினைப் பெற்றவராவர். அவர்கள் வீட்டின் ஒளிப்பிழம்பாகக் கருதப்பட்டனர். வரலாற்றின் இடைநிலைக் காலத்திய பெண்களை "வீட்டின் ஒளிவிளக்கென" ஒரு புறநானூற்றுக் கவிதை வர்ணிக்கிறது[185].

ஆனால், ஆண்கள் கல்வி கற்ற அளவு, பெண்களும் கல்வி கற்றதாகக் கூற இயலாது, கிராமப்புறப் பகுதி வாழ் பெண்களில் பலர், தொடக்கக் கல்வி கூடப் பெறாதவர்கள்[186]. ஔவையார் போன்ற ஒரு சில சங்ககாலப் பெண்புலவர்கள்தான் கல்வியறிவு பெற்று, சிறந்து விளங்கிய தமிழ்நாட்டு பெண்களின் பிரதிநிதிகளாவர்.

மாவட்டத்தில் பெண் கல்வியின் வளர்ச்சிக்காக மேற்கொள்ளப்பட்ட சீரிய முயற்சிகள் குறித்து, "சமயப்பரப்புக்குழுவினரின் துணிவான்மையும், மேற்கத்திய நாட்டுக் கல்வித் தொடக்கமும்", என்ற தலைப்பில் விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

மாவட்ட பெண்கள் கல்லூரியில் பெண் கல்விக்கான வசதிகள்

மாவட்டத்தில், பெண்களுக்காகவே நான்கு கல்லூரிகள் நடத்தப்பெறுகின்றன. அவைதவிர, பத்துக் கல்லூரிகளில் ஆண்கள், பெண்கள் இருபாலரும் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர் (மேலும், விரிவான பல தகவல்கள், "கல்லூரிக்கல்வி" என்ற தலைப்பில் அளிக்கப்பட்டுள்ளன). கொடைக்கானல் அன்னை தெரசா பெண்கள் பல்கலைக் கழகம், மாவட்டத்தில், தற்போது, ஒரு கல்வி மையத்தினைத் துவக்கியுள்ளது. அக்கல்வி மையம், நாகர்கோவில் சிவந்தி ஆதித்தனார் கல்லூரி வளாகத்தில்

இயங்கி வருகிறது[187]. கல்வி மையம் நிறுவப்பட்டதன் நோக்கம் யாதெனில், பெண்களின் நலனுக்காக ஆராய்ச்சி செயற்பாடுகளையும், சமூக நலத்திட்டங்களையும் விரிவாக்குவதேயாகும். இந்தக் கல்வி மையத்தின் ஆராய்ச்சி உதவியாளர்கள், "மாவட்டத்தில் பரவியுள்ள வரதட்சிணைக் கொடுமையினால் எழும் பிரச்னைகள் குறித்த புள்ளி விவரங்கள் சேகரிப்பதிலீடுபட்டுள்ளனர்."

இடைநிலைக்கல்வி

இம்மாவட்டத்தில் எட்டு மேல் நிலைப் பள்ளிகள் இயங்கிவருகின்றன. அவற்றில் இரண்டு அரசாலும், ஆறு பள்ளிகள் அரசிடமிருந்து உதவி பெறும் தனியார் நிருவாகிகளாலும், தனியாகப் பெண்களுக்காகவே நடத்தப் படுகின்றன.

இப்பெண்கள் பள்ளிகளைத் தவிர, மாவட்டத்திலுள்ள பல மேல்நிலைப் பள்ளிகளில் பெண்களும் சேர்க்கப்படுகின்றனர்.

மாவட்டத்திலுள்ள பெண்கள் மேல்நிலைப் பள்ளிகளின் பட்டியல் கீழே அளிக்கப்பட்டுள்ளது:

அரசு, பெண்கள் மேல்நிலைப்பள்ளிகள்

1. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி, நாகர்கோவில்.
2. அரசு பெண்கள் மேல் நிலைப்பள்ளி, மார்த்தாண்டம்

அரசு உதவி பெறும் பெண்கள் மேல்நிலைப்பள்ளி

1. புனித சூசையப்பர் பெண்துறவியர் மடமேல்நிலைப்பள்ளி, நாகர்கோவில்.
2. டூத்தி பெண்கள் மேல்நிலைப்பள்ளி, நாகர்கோவில்
3. சிறுமலர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, நாகர்கோவில்
4. எல்.எம்.எஸ். பெண்கள் மேல்நிலைப்பள்ளி, நெய்யூர்
5. எல்.எம்.எஸ். பெண்கள் மேல்நிலைப்பள்ளி, மார்த்தாண்டம்
6. ஸ்ரீதேவி பெண்கள் மேல்நிலைப்பள்ளி, கொல்லங்கோடு

இம்மாவட்டத்தில் பெண்களுக்காகவே, மூன்று அரசு உயர்நிலைப் பள்ளிகளும், 14 அரசு உதவி பெறும் உயர்நிலைப்பள்ளிகளும் இயங்கி வருகின்றன. இவைதவிர, ஆண்களுக்காக இயங்கும் ஒரு சில உயர்நிலைப் பள்ளிகள் தவிர, மற்ற உயர்நிலைப்பள்ளிகளில், பெண்களும் சேர்க்கப்படுகின்றனர்.

இந்த உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில், எட்டாவது வகுப்புவரை, மாணவர்களும் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். மாவட்டத்திலுள்ள பெண்கள் உயர்நிலைப் பள்ளிகளின் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

அரசு உயர்நிலைப்பள்ளிகள்

1. எஸ்.எல்.பி. அரசு பெண்கள் உயர்நிலைப்பள்ளி, நாகர்கோவில்
2. அரசு பெண்கள் உயர்நிலைப்பள்ளி, இரணியல்
3. அரசு பெண்கள் உயர்நிலைப்பள்ளி, காடியாப்பட்டிணம்

அரசு உதவிபெறும் உயர்நிலைப்பள்ளிகள்

1. புனித சூசையப்பர் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, அழகப்பபுரம்
2. ஹோம் சர்ச் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, நாகர்கோவில்
3. எல்.எம்.எஸ். பெண்கள் உயர்நிலைப்பள்ளி, சாந்தபுரம்
4. அமலா பெண் துறவியர் மடம் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, தக்கலை
5. குழந்தை ஏசு பெண்கள் உயர்நிலைப்பள்ளி, முளகுமோடு
6. புனித ஜான் லியன்னி பெண்கள் உயர்நிலைப்பள்ளி, புளியாடி
7. புனித உருசுலா பெண்கள் உயர்நிலைப்பள்ளி, குலசேகரம்
8. கார்மெல் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, மணலிக்கரை
9. அரசு உதவிபெறும் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, வாணிகுடி
10. கடவுள் அருள் (பிராவிடன்ஸ்) பெண்கள் உயர்நிலைப்பள்ளி, ரீட்டாபுரம்.
11. புனித அலோசியஸ் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, வெள்ளியவிளை
12. புனித அந்தோணியார் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, துங்கத்துவிளை
13. வாசுதேச விலாசம் (தென்னிந்திய திருச்சபை) பெண்கள் உயர்நிலைப்பள்ளி, இரெணிபுரம்.
14. புனித அந்தோணியார் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, என்புத்தென்துரை.

இந்த உயர்நிலைப்பள்ளிகள் யாவும், நாகர்கோவில், பெண்கள் பள்ளிக்களுக்கான பெண்-ஆய்வாளரின் கட்டுப்பாட்டில் உள்ளன[188].

1961 ஆம் ஆண்டிற்கு முன்னர், மாவட்டத்திலுள்ள அனைத்துப் பெண்கள் பள்ளிகளும், மதுரை வட்டம் பெண்கள் பள்ளிகளின் பெண் ஆய்வாளரது கட்டுப் பாட்டிலியங்கின[189]. 1961 ஆம் ஆண்டு, திருநெல்வேலி வட்டம் அமைக்கப்பட்டபோது, கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி வட்டம் பெண்கள் பள்ளிகளின் ஆய்வாளரது எல்லைக்குள் கொணரப்பட்டது. 1982 ஆம் ஆண்டு, கன்னியாகுமரி மாவட்டம் முழுமையும் ஒரே வட்டமாக அமைக்கப்பட்டு, இம்மாவட்டத்திற்கு, பெண்கள் உயர்நிலைப்பள்ளியின் புதிய பெண்-ஆய்வாளர் பணியிடம் உருவாக்கப்பட்டது. இந்நிலை 1988 ஆம் ஆண்டிலும் நீடிக்கிறது.

மாவட்டத்திலுள்ள அனைத்து பெண்கள் பள்ளிகளிலும் 1986 ஆம் ஆண்டு முதல், பயின்ற மாணவர்கள், கற்பித்த ஆசிரியர்கள் ஆகியோர் எண்ணிக்கை, பட்டியலில் அளிக்கப்பட்டுள்ளது (விவரங்களைப் பட்டியலில் காண்க).

ஆண்டு	பள்ளிகளின் எண்ணிக்கை	ஆசிரியர்கள்			மாணவ, மாணவியர்		
		ஆண்	பெண்	மொத்தம்	ஆண்	பெண்	மொத்தம்
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
1956-57	13	42	165	207	811	3492	4303
1957-58	13	43	174	217	974	4045	5019
1958-59	13	37	187	224	864	4199	5063
1959-60	14	32	204	236	873	4649	5522
1960-61	14	30	216	246	967	5184	6151
1961-62	14	31	222	253	927	5145	6072
1962-63	14	31	222	253	927	5145	6072
1963-64	15	34	290	324	1055	6263	7320
1964-65	16	32	334	366	817	6442	7259
1965-66	16	27	331	358	709	6715	7424
1966-67	16	27	337	364	974	8165	9139
1967-68	16	28	334	362	783	8165	9139
1968-69	17	37	340	377	875	8098	8923
1969-70	17	38	343	381	868	8076	8944
1970-71	17	41	357	398	890	8090	8980
1971-72	17	26	373	399	900	8191	9091
1972-73	17	--	397	397	581	8451	9032
1973-74	17	--	409	409	928	8732	9660
1974-75	17	--	411	411	475	8614	9079
1975-76	17	--	426	426	676	8877	9553
1976-77	17	--	425	425	571	8882	9453
1977-78	20	--	513	513	1410	9242	11252
1978-79	14	--	244	244	1208	3925	5133
1979-80	12	--	246	246	1289	4031	5320
1980-81	13	--	258	258	1332	4283	5615
1981-82	13	--	263	263	1308	4575	5883
1982-83	14	--	283	283	1439	6432	7871
1983-84	17	--	327	327	1883	6564	8407
1984-85	17	--	328	328	1483	6860	8343
1985-86	17	--	342	342	1516	7344	8660
1986-87	17	--	355	355	1447	7568	9015

பெண்கள் மேல்நிலைப் பள்ளிகள்

ஆண்டு	பள்ளிகளின் எண்ணிக்கை	ஆசிரியர்கள்			மாணவ, மாணவியர்		
		ஆண்	பெண்	மொத்தம்	ஆண்	பெண்	மொத்தம்
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
1978-79	6	--	277	277	160	6661	6821
1979-80	8	2	296	298	237	7467	7704
1980-81	8	2	343	345	233	8076	8309
1981-82	8	1	374	375	270	8805	9035
1982-83	8	2	382	384	187	8496	8683
1983-84	8	4	386	396	237	8863	9100
1984-85	8	3	395	398	215	9473	9688
1985-86	8	2	399	402	223	9994	10217
1986-87	8	2	404	406	228	9783	10011

பண்டை காலத்தில்., தொழில் நுட்பக் கல்வி கற்க பெண்கள் முன்வரவில்லை. ஆனால், தற்போது, அனைத்துப் பிரிவுகளிலும் பெண்கள் தொழில் நுட்பக் கல்வி பயின்று வருகின்றனர்.

மாவட்டத்திலுள்ள பல்வேறு, பல தொழில் நுட்பப் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் தொழில் பயிற்சிப் பள்ளி ஆகியவற்றில், பெண்கள் கட்டுமானப் பொறியியல், மின் ஆற்றல், மற்றும் மின் அணுவியல் மற்றும் மின்மங்கள் போன்ற அணுவுள் துகள்கள் மற்றும் செய்தித் தொடர்புப் பொறியியல் கணக்கிடும் பொறி அறிவியல் வரைவாளர் (கட்டுமானப்பணி), கைத்தறி மற்றும் மின் விசைத்தறி நெசவு போன்ற தொழில் பயிற்சிகளில் பட்டயச் சான்றிதழ் (டிப்ளமா) பெறும் பாடத் திட்டங்களைப் பயின்று வருகின்றனர். இவ்வியலின் "தொழில் நுட்பக் கல்வி" என்ற தலைப்பில், மேலும் தகவல்கள் அளிக்கப்பட்டுள்ளன.

தற்போதைய நாகர்கோவில் டூத்தி பெண்கள் மேல்நிலைப் பள்ளி, நெய்யூர் எல்.எம்.எஸ். பெண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் நாகர்கோவில் புனித சூசையப்பர் பெண்கள் துறவியர் மடம் மேல்நிலைப் பள்ளி ஆகியவை, முறையே 1919, 1928 மற்றும் 1910 ஆகிய ஆண்டுகளில் நிறுவப்பட்டன. இந்த நிறுவனங்கள் முதன் முதலில், இம்மாவட்டத்தில் பெண்களுக்காகவே நிறுவப்பட்டவையாகும்.

1969ஆம் ஆண்டு, மாநிலத்தில் நடந்த இடைநிலைப் பள்ளி பொதுத் தேர்வில், புனித சூசையப்பர் மேல்நிலைப் பள்ளி மாணவி, செல்வி பரிமளா, மாநிலத்திலேயே முதல் நிலையில் தேர்ச்சி பெற்றார். அதே பள்ளியைச் சார்ந்த சாந்தி என்ற மாணவி 1984ஆம் ஆண்டு, நடந்த மேல் நிலைப் பள்ளி தேர்வில், மாநில அளவில் இரண்டாம் நிலையிலும், மாவட்ட அளவில் முதல் நிலையிலும் தேர்ச்சி பெற்றார்[190].

முதியோர் கல்வி

கல்லாமையைக் குறிப்பாக நாட்டின் கிராமப்புற மக்களிடையே அகற்ற, முதியோர் கல்வித் திட்டத்தை மத்திய மற்றும் மாநில அரசுகள் செயல்படுத்தி வருகின்றன. திட்டங்களை நடைமுறைப்படுத்திட. புறவடிவம் சாராத மற்றும் முதியோர் கல்வித்துறை என்ற தனித்துறை உருவாக்கப்பட்டது. மாநில அளவில், புறவடிவம் சாராத மற்றும் முதியோர் கல்வித்துறை இயக்குநர், தலைமை அலுவலராவார். மாநில அளவில், இத்திட்டத்தினை செயல் படுத்த, புற வடிவம் சாராத மற்றும் முதியோர் கல்வி அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

திட்ட அலுவலர்கள் அவர்களுக்கு உதவி புரிகின்றனர். கல்லாதோருள்ள பகுதியினைக் கண்டறியவும், மையங்கள் திறந்திடவும் மற்றும் அம்மையங்களில் கல்வி பயிலும் முதியோர் கல்வி நிலை முன்னேற்றத்தினைக் கண்காணிக்கவும் திட்ட அலுவலருக்கு உதவி புரிய பல அலுவலர்கள் உள்ளனர். அரசின் இது போன்ற கல்வி வளர்ச்சித் திட்டங்கள் தவிர, தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் கல்வியறி வற்றோரிடையே கல்வி என்ற ஒளிவிளக்கினை ஏற்றிட அயராது உழைக்கின்றனர்.

கிராமப்புற எழுத்தறிவு செயல்முறைத்திட்டம்

இத்திட்டம், இந்திய அரசின் ஆதரவில், தமிழக அரசால் செயல் முறைப்படுத்தப்படுகிறது[191]. திட்டத்திற்கான செலவினை மத்திய அரசே முழுமையாக ஏற்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் இத்திட்டம் 1984 ஆம் ஆண்டு, மார்ச் மாதம் முதல், பல நிலைகளில் அறிமுகப்படுத்தப் பட்டது. முதல் நிலையில், இத்திட்டம், அகஸ்தீஸ்வரம், இராசாக்கமங்கலம், குருந்தங்கோடு மற்றும் கிள்ளியூர் ஆகிய நான்கு ஊராட்சி ஒன்றியங்களிலும், அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த நான்கு ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலும், 300 முதியோர் கல்வி மையங்கள் திறக்கப்பட்டன. இம்மையங்களில் பெண்களுக்கு மட்டுமே கல்வி போதிக்கப்பட்டது. முதல் நிலையில், இத்திட்டத்தினால் 10,198 பெண்கள் பயனடைந்தனர். அவர்களில் 5,472 பெண்கள் ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்தவர்களாவர்.

இரண்டாவது நிலை, 1985 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் துவங்கியது. இந்நிலையில், ஏற்கெனவே திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட பகுதிகளுடன் மூஞ்சிரை ஊராட்சி ஒன்றியப் பகுதிகளும் சேர்க்கப்பட்டன. இவ்வைந்து ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலும், பெண்களுக்காக, 300 முதியோர் கல்வி மையங்கள் துவக்கப்பட்டன. இதன்மூலம் 9,140 பெண்கள் பயனடைந்தனர். அவர்களில் 3,342 பெண்கள் ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்தவர்களாவர்.

மூன்றாவது நிலை, கிராமப்புற எழுத்தறிவு செயல்முறைத்திட்டம், அதே ஐந்து ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், 1986ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம்

துவங்கியது. 300 மையங்களில், பயின்ற 9000 பெண்களில் 2667 பெண்கள் ஆதிதிராவிட வகுப்பையும், 27 பெண்கள் மலைவாழ் வகுப்பையும் சார்ந்தவர்களாவர்.

கிராமப்புற எழுத்தறிவு செயல்முறைத் திட்டத்தின் நான்காம் நிலை, 1987ஆம் ஆண்டு, துவங்கப்பட்டது. இது, தோவாளை, தக்கலை மற்றும் திருவட்டார் ஊராட்சி ஒன்றியங்களுக்கும் விரிவாக்கப்பட்டது. இம்மூன்று ஊராட்சி ஒன்றியங்களிலும், 300 மையங்கள் இயங்கின. கல்வி பயின்ற 10,500 பேர்களில், 2,369 பேர்கள் ஆதிதிராவிடர்களாவர். 1988ஆம் ஆண்டு துவங்கப்பட்ட இத்திட்டத்தின் ஐந்தாவது நிலையில், இம்மூன்று ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலும் மையங்கள் திறக்கப்பட்டன. மேலும், இத்திட்டம் பத்மநாபபுரம் மற்றும் குழித்துறை ஆகிய நகராட்சிப் பகுதிகளுக்கும் விரிவாக்கப்பட்டன. ஐந்தாவது நிலையிலும் திறக்கப்பட்ட மையங்களின் எண்ணிக்கை 300 ஆகும். அவற்றில் 10,500 பெண்கள் கல்வி பயின்றனர்.

வளர்ச்சித் திட்டங்களும் முதியோர் கல்வியும்

முதியோர் கல்வித் திட்டமானது, குடும்பக் கட்டுப்பாடு மற்றும் குழந்தைகள் நலம், ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டம், சுயவேலைவாய்ப்புத் திட்ட இளைஞர் பயிற்சி (Trysem), பெண்கள் வளர்ச்சி மற்றும் குழந்தைகள் நலத்திட்டம் ஆகியவற்றுடன் இணைக்கப்பட்டுள்ளது. இத்திட்டங்களின் குறிப்பிடத்தக்க நோக்கங்கள் யாதெனில், பெண்களின் சமூக மற்றும் பொருளாதார நிலையினை மேம்படுத்துதல், அட்டவணை யிட்ட வகுப்பினர், மலை வாழ் வகுப்பினர், மற்றும் உடல் ஊனமுற்றோர், ஆகியோர் உள்ளிட்ட நலிந்த பிரிவினரின் நிலையினை சீர்படுத்துதல், ஆற்றல் வளத்தைப் பாதுகாத்தல், குறிப்பாக, சுற்றுச் சூழல் மேம்பாடு தொடர்பான மரம் வளர்த்தல், மற்றும் சமூகக்காடுகள் பாதுகாப்பு ஆகியவற்றில் தனி முயற்சி மேற்கொள்ளுதல் ஆகியவையாகும். இத்திட்டங் களை நடைமுறைப்படுத்தும்போது, அவை மறைமுகமாக பயனடைவோருக் கும் அறிவு புகட்டுகிறது.

அடித்தள வகுப்பு மக்கள் எழுத்தறிவுத் திட்டம்

கிராமப்புற எழுத்தறிவு செயல்முறைத் திட்டத்தின் கீழ், அடித்தள வகுப்பு மக்கள் எழுத்தறிவுத் திட்டங்களும் அறிமுகப்படுத்தப்படுகின்றன. மேலும், 3,000 கிராமப்புற எழுத்தறிவு செயல்முறைத்திட்ட மையங்களும், 200 தொடர் கல்வித் திட்ட மையங்களும் 1986 சூலை முதல் இம்மாவட்டத்தில், இயங்கி வருகின்றன. இம்மையங்களில், சுய படிப்பு முறையினை வளர்த்திட, படிப்பதற்கான நூல்களும், மற்ற தேவைப் பொருட்களும், வழங்கப்படுகின்றன. படிப்பதற்கும், எழுதுவதற்கும் கற்றுக்கொடுக்கப்படும் முதியோர் கல்வி மையங்களில் எழுத்தறிவு பெறுவோர் இம்மையங்களினால் பயனடைகின்றனர்.

மாவட்டத்தில் கிராமப்புறக் கல்வியறிவுத் திட்டத்திற்கு மேற்கொள்ளப்படும் செலவினம்

இத்திட்டத்திலடங்கும் 300 மையங்களுக்கு மேற்கொள்ளப்படும் ஆண்டுச் செலவு முதலாண்டில் ரூபாய் 10,48,300/- பின் வரும் ஆண்டுகளில், ஆண்டொன்றிற்கு ரூபாய் 9,78,300/- ம் ஆகும்.

இத்திட்டத்தினை செயல்முறைப்படுத்திட, 300 பகுதி நேர ஊக்குநர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களது குறைந்த அளவு கல்வித்தகுதி, "எட்டாம் வகுப்பில் தோர்ச்சி" என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அவர்கள் எந்த மையத்திற்கு ஊக்குநர்கள் நியமிக்கப்பட்டுள்ளனரோ, அந்த மையப் பகுதியிலுள்ள கல்வியறிவற்ற முதியோர்களை அடையாளங்கண்டு அவர்களை அம்மையத்தில் கல்வி கற்போராகச் சேர்த்திடல் வேண்டும். ஊக்குநர்கள், குறைந்தது இரண்டு மணி நேரம் வகுப்பு நடத்த வேண்டும். அவர்களுக்குக் கரும்பலகைகள், சுண்ணாம்புக் கட்டிகள், துடைக்கும் துணிகள், மண்ணெண்ணெய் விளக்குகள், தேவையான பதிவேடுகள் மற்றும் படிவங்கள், கற்பலகைகள், நோட்டுப்புத்தகங்கள் எழுதுகோல்கள் போன்ற எழுதுவதற்கான பொருட்கள், மற்றும் படிப்பதற்குத் தேவையான பாடநூல்கள் போன்றவை, மையத்தில் பயன்படுத்துவதற்காக வழங்கப்படுகின்றன. ஊக்குபவர்கள் மற்றும் கல்வி பயிலும் முதியோர் ஆகியோரது ஓய்வு நேரத்தில் வகுப்புகளை நடத்த வேண்டியிருப்பதால், பெரும்பாலும் அவ்வகுப்புகள் இரவு நேரங்களில்தான் நடைபெறுகின்றன. ஆகையினால்தான், ஊக்குநர்கள் மண்ணெண்ணெய் விளக்குகள் வழங்கப்படுகின்றன. மையங்கள் இயங்குவதைக் கண்காணிக்கவும், கல்வி பயில்வோரின் கல்வித்திறன் முன்னேற்றத்தினை ஆய்வு செய்யவும், அவர்களின் மேம்பாட்டினை மதிப்பீடு செய்யவும், 30 மையங்களுக்கு ஒரு கண்காணிப்பாளர் வீதம் நியமிக்கப்படுகிறார்கள்.

முதியோர் கல்வி மையங்களுக்கான பாடத்திட்டம், கல்வி கற்கும் முதியோர் எளிதில் கல்வியறிவு பெறத்தக்க வகையில் அமைந்துள்ளது. கல்வித்துறையால் வழங்கப்படும் தொடக்கப் பாடப் புத்தகத்திற்கும் முந்தைய நிலையிலுள்ள அறிவேடுகள் இம்மையங்களில் பயன்படுத்தப்படுகின்றன.

இம்மையங்களில், பாடத் திட்டப் படிப்பு முடிவுற்ற பின்னர், கல்வி பயின்ற ஒரு முதியவர், கடிதங்கள் அறிவிப்புகள், துண்டு வெளியீடுகள் மற்றும் ஊர்திப் பெயர்ப் பலகைகள் அகியவற்றைப் படித்திடவும், பற்றுவரவு ஏட்டினை சரிபார்த்திடவும், பண அஞ்சல் படிவங்கள் போன்றவற்றைப் பூர்த்தி செய்திடவும், உரிய தகுதியினைப் பெற்றிருக்க வேண்டும்.

கலந்துரையாடல் முறையில் வகுப்புகள் நடத்தப்படுகின்றன. விரிவுரைகளும் அவ்வாறே அளிக்கப்படுகின்றன. மையங்களில், மெய்ந் நிகழ்வு காட்டும் நோக்குடைய திரைப்படங்கள் காட்டப்படுகின்றன.

மக்கள் கல்வியறிவு பெற்றபின், கிராமப்புறக் கல்வியறிவு செயல்முறைத் திட்டத்தின் கீழ், தொடர் திட்டங்களும், நிகழ்ச்சிகளும்

முதியோர் கல்வி மையங்களின் மூலம், புதிதாகக் கல்வியறிவு பெற்றவர்களின் நிலையினை மேம்படுத்திட, 1986 சூலை மாதம், மாவட்டத்தில், 200 தொடர்கல்வி எழுத்தறிவு மையங்கள் திறக்கப்பட்டன. இந்த மையங்களில், 975 ஆண்களும், 6805 பெண்களும் சேர்க்கப்பட்டனர். இதில் குறிப்பிடத்தக்க அம்சம் யாதெனில், மையங்களில் சேர்க்கப்பட்டோரில், 284 ஆண்கள் மற்றும் 1972 பெண்கள் ஆகியோர், அட்டவணையிட்ட வகுப்பைச் சார்ந்தோராவர். இந்த 200 தொடர் கல்வி எழுத்தறிவு மையங்களும், தொடர் கல்விப் பணியாளர்களாலும், ஒரு உதவித்திட்ட அலுவலராலும் பராமரிக்கப்படுகின்றன. இந்த மையங்களில், முதியோரிடையே மேலும் கல்விகற்கும் பழக்கத்தினை ஊக்குவித்திட, நூல்கள் காலமுறை வெளியீடுகள், செய்தித் தாள்கள், மற்றும் படிப்பதற்குத் தேவையான பிற பொருட்கள் ஆகியவை, அளிக்கப்படுகின்றன. பயனடைவோரின் இருப்பிடத்திலேயே படிப்பதற்குத் தேவையான பொருட்களை வழங்கிட இம்மையங்களின் நடமாடும் அலகுகளும் இயங்குகின்றன.

இம்மாவட்டத்தில், தொடர்கல்வி மையங்களை நடத்திட மேற்கொள்ளப்படும் செலவின விவரங்கள் கீழ்க்காணும் பட்டியலில் அளிக்கப்பட்டுள்ளன:

	விவரம்	*செலவுத்தொகை (ரூபாய்)*
1.	துவக்கத்தில் பாட நூல்கள் வாங்குதல்	4,000
2.	நடப்பு பாடநூல்களை அகற்றி அவற்றிற்குப் பதிலாக வேறு நூல்களைப்பெறுதலும், கால முறை வெளியீடுகளை வாங்குதலும்	2,000
3.	அலமாரி வாங்குதல்	1,000
4.	பயணப்படி	2,000

மக்கள் பயிலும் மையங்கள் (ஜனஷிக்ஷான்)

மக்கள் பயிலும் மையங்கள் முதியோர் கல்வியறிவு மையங்கள் மூலம் கல்வியறிவு பெற்றோருக்காக நடத்தப்படுகின்றன. இத்திட்டம், இந்திய அரசின் ஆதரவில், செயல்படுத்தப்படுகிறது. ஐயாயிரத்துக்கு மேல் மக்கட்தொகை உள்ள அனைத்து கிராமங்களிலும் இம்மையங்கள் துவக்கப்பட்டுள்ளன.

இம்மையங்கள் 'ப்ரீரக்' அல்லது மேற்பார்வையாளர்களின், கட்டுப்பாட்டிலியங்குகின்றன. ஓர் ஒலி நாடா பதிவு செய்யும் கருவி, மற்றும் ஒரு இரு சக்கர மிதி வண்டி ஆகியவை, ஒவ்வொரு மையத்திலும் உள்ளன. ஒவ்வொரு மையத்திலும், செய்தித் தாள்கள் மற்றும் காலமுறை

வெளியீடுகள் ஆகியவை வாங்கிட, மாதந்தோறும் ரூபாய் 150/- செலவிடப்படுகிறது. இம்மையங்களின் மூலம் விளையாட்டுப் பந்தயங்கள் மற்றும் நாகரிக நயமுள்ள நடவடிக்கைகள் ஆகியவையும் ஊக்குவிக்கப்படுகின்றன. ஒவ்வொரு மையத்திற்கும் பந்துகள், சதுரங்கப் பலகைகள் மற்றும் பிற விளையாட்டுக் கருவிகள் ஆகியவை வழங்கப்படுகின்றன. செய்தித் தாள்கள் மற்றும் காலமுறை வெளியீடுகள் ஆகியவை படிப்பதற்கு, மேற்பார்வையாளர் மக்களுக்கு உதவி புரிகிறார். மேலும், ஒலிபரப்புப் பொறியினை இயக்கிக் காண்பித்து, அவர்களது பொது அறிவினை வளர்த்திடப் பாடுபடுகிறார். ஜனஷிக்ஷான் நிலையம் நடத்துவதுடன் அந்நிலையங்கள் முறையாக இயங்கிட, அவர்களது எல்லைப்பகுதியிலமைந்துள்ள கிராமப்புற எழுத்தறிவு செயல்முறை சார்ந்த நிலையங்களை, மேற்பார்வையாளர்கள் அவ்வப்போது பார்வையிடுகின்றனர். இந்த நிலையத்தினை நடத்திட, மாதம் ரூ.200/- வீதமும், இம்மையங்களைப் பார்வையிட மாதம் ஒன்றுக்கு ரூபாய் 450/- வீதமும், மேற்பார்வையாளர்களுக்கு வழங்கப்படுகிறது. மேற்பார்வையாளர்கள், வாதங்கள், கருத்தரங்குகள், மற்றும் திறமைப் போட்டிப் பந்தயங்கள் ஆகியவற்றை கிராமங்களில் நடத்துகிறார்கள். மையங்களிலுள்ள முதியோர்கள் அம்மாதிரியான நிகழ்ச்சிகளில், தங்களை ஈடுபடுத்திக் கொள்ளவே, அவை நடத்தப்படுகின்றன. கிராமங்களில் திறக்கப்பட்டுள்ள இம்மையங்கள், நிலையானவையாகும். மேற்பார்வையாளர்கள், மக்களின் பிரச்னைகள், அவர்களது தேவைகள் போன்றவை குறித்து, அரசின் கவனத்திற்குக் கொண்டு சென்று, மக்களது தேவையை நிறைவு செய்து அளிக்குமுகத்தான், மக்களுக்கும், அரசுக்குமிடையே ஓர் இணைப்புப் பாலமாகத் திகழ்கிறார்கள்.

இம்மாவட்டத்தில், மக்கள் கல்வி பயிலும் மையங்கள் கடந்த அக்டோபர் 2, 1988 அன்று, கீழ்க்கண்ட இடங்களில் திறக்கப்பட்டு, அவையாவும் வெற்றிகரமாக நடத்தப்படுகின்றன:

தோவாலை ஊராட்சி ஒன்றியப் பகுதி :

1. அழகிய பாண்டியபுரம்
2. தோவாளை
3. காடுக்கரை
4. அருவாநல்லூர்
5. பூதபாண்டி
6. தாழக்குடி
7. செண்பகராமன்புதூர்
8. ஆரல்வாய்மொழி

பத்மநாபபுரம் நகராட்சிப்பகுதி :

1. பத்மநாபபுரம்
2. புலியூர்குறிச்சி.

தக்கலை ஊராட்சி ஒன்றியப்பகுதி :

1. இரணியல்
2. திக்கணாங்கோடு
3. திருவிதாங்கோடு
4. மருதூர் குறிச்சி
5. மாலச்சல்
6. பாறைக்கோடு
7. கட்டாத்துரை

குழித்துறை நகராட்சிப் பகுதி :

1. குழித்துறை
2. மார்த்தாண்டம்

திருவட்டார் ஊராட்சி ஒன்றியப்பகுதி :

1. சித்திராங்கோடு
2. பூவன்கோடு
3. கண்ணூர்
4. கல்லுப்பாலம்
5. புத்தன்கோடு
6. குலசேகரம்

மைய அரசுகளின் ஆதரவிலான திட்டங்களைத் தவிர, மக்களிடையேயான கல்லாமையைப் போக்கிட, மாநில அரசும், முக்கிய அங்கம் வகிக்கிறது. 1988 ஆம் ஆண்டு, மாவட்டத்தில் கீழ்க்கண்டவாறு, முதியோர் கல்வி மையங்கள் திறக்கப்பட்டு, கல்வியறிவற்ற, முதியோர்கள் சேர்க்கப்பட்டு, கல்வி கற்பிக்கப்பட்டன.

தொடர் எண்.	*பகுதி*	*திறக்கப்பட்ட மையங்களின் எண்ணிக்கை*
1.	நாகர்கோவில் நகராட்சிப்பகுதி	100
2.	குருந்தங்கோடு ஊராட்சி ஒன்றியப்பகுதி	100

இந்த 200 மையங்களிலும், 1988 ஆம் ஆண்டு, கல்வியறிவற்ற 7000 முதியோர்கள் கல்வியறிவு பெற்றனர். அவர்களில், 767 பேர்கள் ஆதி திராவிட வகுப்பையும், 70 பேர்கள் மலைவாழ் வகுப்பையும் சார்ந்தவராவர்.

தன்னார்வ நிறுவனங்கள்

மத்திய அரசின் திட்டமான கிராமப்புற கல்வியறிவு செயல்முறைத் திட்டம் தவிர, தன்னார்வ நிறுவனங்களும், இம்மாவட்டத்தில் மத்திய அரசின் நிதியுதவியுடன், முதியோர் கல்வி மையங்களை நடத்துகின்றன.

1986-87 ஆம் ஆண்டு, மாவட்டத்தில் அது போன்ற நான்கு நிறுவனங்கள் இயங்கின. அவை கல்வி புகட்டிய 804 ஆண்கள் மற்றும் 8364 பெண்கள் ஆகியோரில் முறையே 216 ஆண்களும், 1247 பெண்களும் அட்டவணையிட்ட வகுப்புகளையும், நான்கு ஆண்களும் 12 பெண்களும் அட்டவணையிட்ட மலை வாழ் வகுப்புகளையும் சார்ந்தவர்களாவர்.

இந்த அரசு உதவி பெறும் தன்னார்வ நிறுவனங்களைத் தவிர, நாட்டு நலப்பணி ஊழியர்கள், மாவட்டத்தின் பல்வேறு கல்லூரிகள் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளிலுள்ள தேசிய முதியோர் திட்ட நிருவாகிகள் ஆகியோரும் முதியோர் கல்வி மையங்களை நடத்துகின்றனர். 1987-88 ஆம் ஆண்டு, கல்லூரிகள் மற்றும் உயர்நிலைப்பள்ளிகளிலுள்ள தன்னார்வ, நாட்டுநலப் பணித்திட்ட அமைப்பாளர்கள், முதியோர்கள் பயனடைந்தனர். பயனடைந்தோரில், 290 பேர்கள் ஆதிதிராவிடர் இனத்தையும், 308 பேர்கள் மலைவாழ் வகுப்புகளையும் சார்ந்தவர்கள் ஆவர்.

உடலூனமுற்றோருக்குக் கல்வியளித்தல்

கல்வி புகட்டும் பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் தொழிற் கல்வி நிறுவனங்கள் தவிர, இம்மாவட்டத்திலுள்ள விழியிழந்தோர் மற்றும் காது கேளாதோர் ஆகியோருக்குக் கல்வி புகட்ட மூன்று தனிப் பள்ளிகளும் இயங்கி வருகின்றன. அவையாவன[193]:

1. காது கேளாதோருக்கான தென்னிந்தியத் திருச்சபைப்பள்ளி, கொட்டாரம்:
2. தென்னிந்தியத் திருச்சபை விழியிழந்தோர் பள்ளி, இரேணிபுரம் மற்றும்
3. அரசு விழியிழந்தோர் பள்ளி, நாகர்கோவில்.

மேற்கண்ட மூன்று பள்ளிகளில், முதலிரண்டு பள்ளிகளும் அரசு உதவி பெறும் சமயப்பரப்புக்குழுவினால் நடத்தப்படுகின்றன. மூன்றாவது பள்ளி அரசால் நடத்தப்படுகிறது.

1. காதுகேளாதோருக்கான தென்னிந்தியத் திருச்சபை உயர்நிலைப்பள்ளி, கொட்டாரம், கன்னியாகுமரி மாவட்டம்

காதுகேளாதோருக்கான தென்னிந்தியத் திருச்சபைப் பள்ளி, கொட்டாரத்தில், ஜீன், 29, 1966 ஆம் நாள் துவக்கப்பட்டது[194]. அப்பள்ளி துவக்கப்பட்டதிலிருந்து, ஒவ்வொரு ஆண்டும் பள்ளியில் கல்வி கற்றோரது எண்ணிக்கை, கீழ்க்காணும் பட்டியலில் அளிக்கப்பட்டுள்ளது:

ஆண்டு (1)	*மாணவர்களின் எண்ணிக்கை (2)*
1966-67	26
1967-68	22
1968-69	28
1969-70	27
1970-71	26
1971-72	16
1972-73	21
1973-74	21
1974-75	36
1975-76	31
1976-77	31
1977-78	22
1978-79	30
1979-80	26
1980-81	24
1981-82	22

(1)	(2)
1982-83	36
1983-84	19
1984-85	27
1985-86	30
1986-87	29
1987-88	28

பத்தாவது வகுப்பு வரையிலான இப்பள்ளியில் ஆண்-பெண் இருபாலர்க்கும் கல்வி அளிக்கப்படுகிறது. ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனியாகத் தங்கும் விடுதிகள் உள்ளன. பட்டதாரி ஆசிரியர்கள், 14 மேல் நிலைக்கல்விப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் ஒரு தையற்கலைப் பயிற்சி பெற்ற ஆசிரியை, ஒரு அலுவலக உதவியாளர், மற்றும் ஒரு பகுதி நேர துப்புரவுப் பணியாளர் ஆகியோர் அரசுக் கொடையில் இப்பள்ளியில் ஊதியம் பெற்று பணியாற்றுவோராவர், இவ்வாசிரியர்கள் தவிர, ஒரு தையற்கலைப் பயிற்சி பெற்ற ஆசிரியை, மூன்று இடைநிலை பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், மற்றும் உடல் சார்ந்த கல்வி போதிக்கும் ஆசிரியர்கள் ஆகியோரையும் நிருவாகம் நியமித்துள்ளது. அவர்களுக்கும், பள்ளி நிதியிலிருந்தே, நிருவாகம் ஊதியமளிக்கிறது.

அரசின் கொடை தவிர, இந்தியாவிலுள்ள உலக அறிவு விளக்க நிறுவனம், (World Vision) மற்றும் மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த கிறிஸ்தாஃபெல், பிளைன்டன் (Christoppel Blinder Mission) சமயப்பரப்புக்குழு ஆகியவற்றிலிருந்தும் இப்பள்ளி நிதியுதவி பெறுகிறது.

இப்பள்ளியுடன் இணைந்துள்ள தங்கும் விடுதியின் பராமரிப்புச் செலவு, பல்வேறு நிறுவனங்கள் நன்கொடை மற்றும் இப்பள்ளி நிருவாகக்குழு ஆகியவற்றால் மேற்கொள்ளப்படுகிறது. இவ்விடுதியில் தங்கியுள்ளோருக்கு வாடகை ஏதும் நிர்ணயிக்கப்படவில்லை. இலவசமாகவே தங்குவதற்கு அவர்கள் அனுமதிக்கப்படுகின்றனர்.

தென்னிந்தியத் திருச்சபை விழி இழந்தோர் பள்ளி, இரேணிபுரம்[193]

இரேணிபுரத்திலுள்ள தென்னிந்தியத் திருச்சபை விழி இழந்தோர் பள்ளி, 1970 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் துவக்கப்பட்டது. ஆனால், சமூக நலத்துறை இப்பள்ளிக்கு, 1974-75 ஆம் ஆண்டு தான், அங்கீகாரமளித்தது. அரசு ஐந்து, இடைநிலை ஆசிரியர் பதவிகளுக்கு அனுமதியளித்து. இதன் நோக்கம் யாதெனில், விழியிழந்தோருக்குக் கல்வியறிவு புகட்டி, அவர்களுக்கு மறு வாழ்வு அளிப்பதேயாகும்.

இப்பள்ளி மாணவர்களுக்கு, நெய்யூர், தென்னிந்தியத் திருச்சபை மருத்துவமனையில் பணியாற்றும் கண் மருத்துவர்களால், குறிப்பிட்ட இடைவெளியில் கண் மருத்துவமளிக்கப்படுகிறது. முறையான

கல்விப்பயிற்சி தவிர, கண்பார்வை பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகளுக்கு, ஒருங்கிணைந்த கல்வித் திட்டம் 1984-85 ஆம் ஆண்டு துவக்கப்பட்டு, பின்னர், அது விரிவாக்கப்பட்டது.

இப்பள்ளி மாணவர்கள், புது தில்லியில் நடைபெற்ற 1986 ஆம் ஆண்டின் நான்காவது தேசிய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் 1987 ஆம் ஆண்டின் தேசிய விளையாட்டுப் போட்டிகள் ஆகியவற்றில் கலந்து கொண்டு, பரிசுகளை வென்றனர்.

விழியிழந்த மாணவர்களுக்குக் கல்வி புகட்ட, கீழ்க்காணும் கல்வி போதிக்கும் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன:

1.	விழியிழந்தோர் கல்வி முறை கற்பலகைகள்	4
2.	தையற்காரர் கட்டுமானம் (அலுமினியம்)	52
3.	தையற்காரர் கட்டுமானம் (பிளாஸ்டிக்)	7
4.	கணக்கியல் கற்பலகை	10
5.	வெப்பநிலைக் கருவி	1
6.	படிப்பெருக்கி	1
7.	விழியிழந்தோர் கல்விமுறைக் கருவி (Brailer)	5
8.	விழியிழந்தோர் கல்வி சார்ந்த கருக்கள் வைத்துக் கொள்ளும் பை	42
9.	விழியிழந்தோர் சட்டைப்பையில் வைத்துக்கொள்ளும் கருவி	3
10.	விழியிழந்தோர் பயன்படுத்தும் கைக்கடியாரம்	1
11.	அடையாள விளக்கக்குறி வரைவு கற்பலகை	5
12.	வண்ணப் பலகை	2
13.	விழியிழந்தோர் கல்வி சார்ந்த கற்பலகை நிலைகோள் (Stand)	10

மேற்கண்ட உதவிப் பொருட்களும், கல்வியளிக்க பயன்படும் துணைக் கருவிகளும் மேற்கு ஜெர்மனியிலுள்ள நிறுவனமான கிறிஸ்த்தாஃபெல் பிளைண்டன் சமயப்பரப்புக் குழுவினால் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. இப்பள்ளியில் ஆண்கள், பெண்கள் இருசாராருமே கல்வி கற்கின்றனர். ஆண்கள், பெண்கள் ஆகியோருக்குத் தனித்தனியே தங்கும் விடுதிகள் உள்ளன.

இப்பள்ளி துவங்கியதிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் கல்வி கற்ற மாணவர்களின் எண்ணிக்கை கீழ்காணும் பட்டியலில் அளிக்கப்பட்டுள்ளது:

ஆண்டு	*மாணவர்களின் எண்ணிக்கை*
1970-71	18
1971-72	27
1972-73	33

1973-74	39
1974-75	44
1975-76	46
1976-77	48
1977-78	66
1978-79	63
1979-80	56
1980-81	55
1981-82	53
1982-83	63
1983-84	63
1984-85	62
1985-86	58
1986-87	60
1987-88	55
1988-89	59

இது எட்டாவது வகுப்பு வரை கல்வி கற்பிக்கும் நடுநிலைப்பள்ளியாகும். கல்வியளிப்பது தவிர, வாழ்க்கைத்தொழில் பிரிவும் இப்பள்ளியில் உள்ளது. அதில், விழியிழந்தோருக்கு நெசவுத் தொழில் கற்றுக்கொடுக்கப்படுகிறது. விழியிழந்தோர் நலனுக்காக, இப்பிரிவு 1983-84 முதல் இங்கு இயங்குகிறது. அதிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் பயிற்சி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

ஆண்டு	*பயிற்சி பெற்ற மாணவர்கள்*
1983-84	18
1984-85	18
1985-86	18
1986-87	17
1987-88	19
1988-89	19

தலைமை ஆசிரியை நீங்கலாக, ஏழு இடைநிலை ஆசிரியர்கள், ஒரு தங்கும் விடுதி பாதுகாவலர், ஒரு உடற்கல்வி ஆசிரியர், ஒரு கைவினை ஆசிரியர், ஒரு நெசவுத் தொழில் கற்பிக்கும் ஆசிரியர், ஒரு பகுதி நேர தையற்கலை பயிற்றுநர், ஒரு பகுதி நேர பிரம்பு வேலை மற்றும் மரத்தச்சுத் தொழில் பயிற்றுநர், ஒரு பனையோலை கைவினை பயிற்றுநர் ஆகியோர், ஆசிரியர் பணியாளர் தொகுதியில் பணியாற்று கின்றனர். ஐந்து இடைநிலை ஆசிரியர்களுக்கு, தமிழக அரசின் சமூக நலத்துறை ஒவ்வொரு ஆண்டும்,

ஊதியத்திற்கான தொகையினைக் கொடையாக வழங்குகிறது. நம் நாட்டிலும் மற்றும் அயல் நாடுகளிலும், நன்கொடையாளர்கள் அளிக்கும் உதவித் தொகையிலிருந்து, நிருவாகக் குழு, பிற ஆசிரியர்களுக்கும் பயிற்றுநர் ஊதியத்தினை வழங்குகிறது.

அரசு விழியிழந்தோர் பள்ளி, நாகர்கோவில்

தமிழக அரசு, விழியிழந்தோர் பள்ளியினைக் கடந்த செப்டம்பர் 22, 1975 அன்று, நாகர்கோவிலில் துவங்கியது. பின்னர், 1980 ஆம் ஆண்டு, இப்பள்ளி சமூக நலத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டது[192]. இது ஐந்தாம் வகுப்பு வரையிலுள்ள ஒரு தொடக்கப்பள்ளியாகும். இப்பள்ளியினை இடைநிலைப் பள்ளியாக உயர்த்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

குழந்தைகளுக்குக் கல்வி புகட்ட, விழியிழந்தோர் கல்விமுறை எழுத்துப் பலகையுள்ள கட்டுமானம், கணக்கியல் பலகை, விழியிழந்தோர் பயிலும் தட்டச்சுப் பொறி, விழியிழந்தோர் படிக்கும் புத்தகங்கள், மற்றும் அறிவியல் கருவிகள் ஆகியவை, தமிழ்நாடு அரசால் வழங்கப்படுகின்றன. சில தன் விருப்பார்வ நிறுவனங்கள், ஒலிபரப்பினைப் பதிவு செய்யும் நாடாவினையுடைய கருவி, வானொலி மற்றும் மரச்சாமான்கள் ஆகியவற்றை நன்கொடையாக வழங்கியுள்ளன. பள்ளியில், ஒரு இலவச தங்கும் விடுதியும் உள்ளது. விடுதியில் தங்கும் மாணவர்களுக்கு இலவசமாக சீருடைகள் வழங்கப்படுகின்றன.

இப்பள்ளி நிறுவப்பட்டதிலிருந்து, ஒவ்வொரு ஆண்டும், இப்பள்ளியில் கல்வி பயின்ற மாணவர்களின் எண்ணிக்கை கீழே அளிக்கப்பட்டுள்ளது:

ஆண்டு	*மாணவர்களின் எண்ணிக்கை*
1975-76	13
1976-77	3
1977-78	3
1978-79	3
1979-80	4
1980-81	1
1981-82	4
1982-83	6
1983-84	16
1984-85	2
1985-86	7
1986-87	13
1987-88	18

இப்பள்ளியில், தலைமை ஆசிரியர் தவிர, மூன்று இடைநிலை ஆசிரியர்களும், ஓர் இசைப்பயிற்சி ஆசிரியரும் பணியாற்றுகின்றனர்.

பிற்பட்ட வகுப்பினர், அட்டவணையிட்ட வகுப்பினர் மற்றும் மலை வாழ் வகுப்பினர் ஆகியோரது கல்வி

சிலருக்கு மட்டும் கல்வி சொந்தமாயிருந்த காலம் மாறி, அனைவரும் தடையின்றி கல்வி கற்கலாமென்ற நிலையிலும், சமூக, பொருளாதார நிலையில் பின் தங்கிய வகுப்பினர், கல்வி கற்கத் தடையில்லாமலிருந்த தில்லை.

இந்திய அரசியல் நிர்ணயச் சட்டத்தில் தெளிவாகக் கூறியுள்ளது போன்று, அனைவருக்கும் கல்வியளிப்பது அரசின் கொள்கையாக இருந்து வருகிறது. அரசியல் நிர்ணயச் சட்டத்தின் 46-வது விதி, கீழ்க்கண்டவாறு கூறுகிறது.

"சமுதாயத்தில் நலிந்த பிரிவினரின், குறிப்பாக, அட்டவணையிட்ட வகுப்பினர் மற்றும் மலை வாழ் வகுப்பினர் ஆகியோரது கல்வி மற்றும் பொருளாதார நலனைத் தனிக்கவனத்துடன் பேணிக் காத்து, மேம்படுத்திடவும், அவர்களைப் பிறர் தங்களின் சுயநலத்திற்காகப் பயன்படுத்துவதினின்றும் மற்றும் சமூக அநீதிகளினின்றும், அவர்களைப் பாதுகாக்கவும் அரசு பொறுப்பேற்க வேண்டும்".

எனவே, அவர்களின் இன்னல்களைப் போக்கிட, இலவச தங்கும் விடுதிகள், மற்றும் உறைவிடப்பள்ளிகள், நிறுவுதல், உதவித் தொகை வழங்குதல், கல்லூரிகளில் கல்விக் கட்டணச் சலுகை வழங்குதல் மற்றும் கல்வி நிறுவனங்களில் இடஒதுக்கீடு போன்ற பல திட்டங்களை அரசு, நடைமுறைப்படுத்தியது.

ஆதி திராவிட மற்றும் மலைவாழ் மக்கள் நலனுக்காக, மூன்று உறைவிடப்பள்ளிகள், நான்கு உறைவிடமல்லாத பள்ளிகள் மற்றும் 14 இலவச தங்கும் விடுதிகள், ஆகியவற்றை அரசு பராமரித்து வருகிறது. அவற்றில் ஒன்று கல்லூரி மாணவிகளுக்காகவும், ஒன்று கல்லூரி மாணவர்களுக்காகவும், எஞ்சியவை உயர்நிலைப்பள்ளி மாணவ, மாணவியருக்காகவும் இயங்குகின்றன. உயர்நிலைப்பள்ளி மாணவ, மாணவியருக்கான பன்னிரண்டு தங்கும் விடுதிகளில், இரண்டு மலைவாழ் வகுப்புகளைச் சார்ந்த மாணவிகளுக்காகவும் நான்கு இதர மாணவிகளுக்காகவும் இயங்குகின்றன.

பிற்பட்டோர் நலத்துறை இம்மாவட்டத்தில் 13 தங்கும் விடுதிகளை நடத்துகிறது. அவற்றில், மூன்று கல்லூரி மாணவிகளுக்காகவும், எட்டு உயர்நிலைப் பள்ளி மாணவிகளுக்காகவும் மற்றும் இரண்டு உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்காகவும் இயங்குகின்றன.

இந்த தங்கும் விடுதிகள் இயங்கி வரும் இடங்கள், தங்கியுள்ள மாணவ, மாணவியர் பிற்பட்ட வகுப்பினர், அட்டவணையிலுள்ள வகுப்பினர்

மற்றும் மலை வாழ் வகுப்பினர் ஆகியோருக்குத் தரமான கல்வி அளிக்க மேற்கொள்ளப்படும் பல்வேறு நலத்திட்டங்கள் ஆகியவை தொடர்பான விவரங்கள், இவ்விவரச் சுவடியின், "பிற சமூகப் பணிகள்" என்ற இயலில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

மாவட்டத்தில் நூலக இயக்கம்

நூலகம் என்பது 'அறிவுக் களஞ்சிய' மாகும். "கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாமென்பது பழமொழி." இதனை, இன்றைய சூழ்நிலையில்,. "கோயிலும், நூலகமும் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாமென மாற்றி அமைப்பின் தவறில்லை." பாமர மக்களின் கல்வியறிவு மற்றும் பொது அறிவு ஆகியவற்றை மேம்படுத்த, நூலகங்கள் இன்றியமையாதவையாகும். தமிழக அரசின் 1948 ஆம் ஆண்டு, பொது நூலகங்கள் சட்டம், இம்மாவட்டத்திற்கு, 1982 ஆம் ஆண்டில்தான் விரிவாக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, மாவட்ட மைய நூலகமும், கிளை நூலகங்களும் திறக்கப்பட்டன.[195]

மாவட்டம் அமைக்கப்பட்ட 1956 ஆம் ஆண்டிற்கு முன்னரும், அதன் பின்னரும், அதாவது 1982 ஆம் ஆண்டுவரை, மாவட்டத்திலுள்ள நூலகங்கள், முந்தைய திருவாங்கூர் மாநிலத்திலிருந்தும், இணைப்பிற்குப் பின்னர், தமிழக அரசினிடமிருந்தும் கொடையினைப் பெற்றுவந்தன. நூலகங்களுக்கான கொடையின் வகை, மற்றும் தொகை அளவு ஆகியவை, அரசால் நியமிக்கப்பட்ட மாநில நூலக நிர்ணயக்குழுவின் அலோசனைப்படி, வழங்கப்பட்டன. இந்நிலை, 1948 ஆம் ஆண்டின் பொது நூலகங்கள் சட்டம், 1982 ஆம் ஆண்டு மாவட்டத்திற்கு நீடிக்கப்பட்ட வரை, தொடர்ந்து, தற்போது, நூலகங்களுக்கான கொடை, மாவட்ட நூலக அலுவலர் மற்றும் மாவட்ட மைய நூலகத்தின் முதல் நிலை நூலகர் ஆகியோரின் பரிந்துரைப்படி, வழங்கப்படுகிறது.

கவிமணி நூல்நிலையம் (மாவட்ட மைய நூலகம்)

இம்மாவட்டத்தைச் சேர்ந்த, இந்த நூற்றாண்டின் நாட்டுப்பற்று மிக்க கவிஞரான கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் நினைவாக, ஒரு நூலகம் நிறுவப்பட்டு, கவிமணி நினைவுக்குழுவினால் நடத்தப்படுகிறது. இந்நூலகத்தைத் திறமையாக நிருவகித்திட, அக்குழு, நூலகத்தை, அதனிலிருந்து நூல்கள், நூலகக் கட்டிடம் ஆகியவற்றுடன் கடந்த நவம்பர், 10, 1966 அன்று, தமிழ்நாடு அரசிடம் ஒப்படைத்தது. அதுமுதல், இது, ஒரு அரசு நூலகமாக இயங்கி வந்தது. பின்னர், 1982 ஆம் ஆண்டின் பொது நூலகங்கள் சட்டம், இம்மாவட்டத்திற்கு விரிவாக்கப்பட்டவுடன், இந்த நூலகம் ஜூலை 15, 1982 முதல், மாவட்ட மைய நூலகமாக மாற்றப்பட்டது. இந்நூலகத்தில், 19,280 நூல்கள் உள்ளன. இந்நூலகம் கீழ்க்காணும் பணியாளர்களால் இயக்கப்படுகிறது.

1.	முதல் நிலை நூலகர்	1
2.	இரண்டாம் நிலை நூலகர்	2
3.	மூன்றாம் நிலை நூலகர்	3

கிளை நூலகங்கள்

மாவட்ட நூலகம் அமைக்கப்பட்ட பின்னர், பல கிளை நூலகங்களும் திறக்கப்பட்டன. அவை குறித்த விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன:

தொடர் எண்.	கிளை நூலகம் இயங்குமிடம்	வட்டம்	நூலகம் திறக்கப்பட்ட நாள்	நூல்களின் எண்ணிக்கை	நிலை
1.	குளச்சல்	கல்குளம்	1.11.1982	7768	இ
2.	ஆரல்வாய்மொழி	தோவாளை	12.11.1984	7760	இ
3.	மணவாளக்குரிச்சி	கல்குளம்	22.11.1984	6171	இ
4.	இடைக்கோடு	விளவங்கோடு	17.12.1984	5650	〃
5.		அகஸ்தீஸ்வரம்	17.12.1984	5986	〃
6.	அழகப்பபுரம்		25.2.1987	1543	〃
7.	கல்லுக்கோட்டம்		27.11.1987	1459	〃

மாவட்ட மைய நூலகம் உள்ளிட்ட இந்த அனைத்து நூலகங்களிலும், 1988 ஆம் ஆண்டில், நூல்களைக் கடனாகப்பெறத் தகுதி வாய்ந்த 5,734 நபர்கள் உறுப்பினர்களாயிருந்தனர். இவர்கள் தவிர, செய்தித் தாள்கள், காலமுறை வெளியீடுகள், அகலப் புனை கதை நூல்கள் மற்றும் பல்வேறு பொருள்கள் தொடர்பான பிற நூல்கள் ஆகியவற்றை முறையாகப் படிக்க நூலகத்திற்கு வருகை தரும் வாசகர்களும் உளர். 1986-87 ஆம் ஆண்டில் மாவட்டத்திலுள்ள அனைத்து நூலகங்களுக்கும், 1,77,691 வாசகர்கள் வருகை புரிந்துள்ளனர்.

மிடாளம், அம்மாண்டிவிளை ஆகிய இடங்களில் இரு ஒப்படைப்பு நிலையங்கள் இயங்கி வருகின்றன. அங்கு அருகிலுள்ள கிளை நூலகங்களி னின்றும் நூல்கள் கொணரப்பட்டு, உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகிறது.

பொது நூலகத் துறையினால் முழுமையாகப் பராமரிக்கப்படும் இந்நூலகங்கள் தவிர, மாவட்டத்திலுள்ள நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சி, ஊராட்சிகள், மற்றும் பிற சமூகப் பணி நிறுவனங்கள் ஆகியவற்றால் நடத்தப்பெறும் நூலகங்களும் படிப்பகங்களும் இயங்கி வருகின்றன. அவற்றில் சில அரசிடமிருந்து கொடையினைப் பெறுகின்றன.

மாவட்டத்திலியங்கும் அவ்வகையான நூலகங்களின் பெயர்கள் கீழ்க்காணும் பட்டியலில் அளிக்கப்பட்டுளளன:

அரசிடமிருந்து கொடை பெறும் நூலகங்கள்

தொடர் எண். (1)	நூலகத்தின் பெயர் (2)	இருப்பிடம் (3)
தோவாளை வட்டம்:		
1.	அகஸ்தியர் நூல் நிலையம்	கேசவன்புத்தூர்
2.	கஸ்தூரிபாய் நினைவு நூலகம்	நாவல்காடு
3.	காந்தி நூல் நிலையம்	எரச்சாகுளம்
4.	ஸ்ரீ மூலம் வெள்ளிவிழா நூலகம்	தாழக்குடி
5.	செண்பக விலாஸ் நூலகம்	செண்பகராமன்புதூர்
6.	இராம விநாயகர் சுவடிச் சாலை	கண்ணன்புதூர்
7.	தமிழர் நூல் நிலையம்	வீரநாராயணமங்கலம்
8.	விவேகாபிவிர்த்தி நூலகம்	திருப்பதிசாரம்
9.	வாலிபர் சங்கம் நூலகம் மற்றும் ஜீவா நூல் நிலையம்	பூதபாண்டி
அகஸ்தீஸ்வரம்:		
10.	யாதவா வாலிபர் சங்கம்	குரந்தி, தேரூர்
11.	வ.உ.சிதம்பரனார் நூலகம்	வாரியூர்
12.	புத்தகாலயம் மற்றும் படிப்பகம்	குலசேகரபுரம்
13.	பாரதி வாலிபர் சங்கம்	நல்லூர்
14.	கிராம முன்னேற்ற சங்க நூலகம்	இராசக்கமங்கலம்
15.	தேசாயி நூலகம் மற்றும் படிப்பகம்	பெருஞ்சவிளை
16.	ஆசாத் நூலகம் மற்றும் படிப்பகம்	கோட்டார், நாகர்கோவில்
17.	திருவள்ளுவர் வாலிப சங்கம்	வடசேரி
18.	அன்னை கஸ்தூரிபாய் நினைவு நூலகம் மற்றும் காப்பகம்	தாமரைக்குளம் (வ)
19.	கவிமணி நினைவு நூலகம் மற்றும் படிப்பகம்	தேரூர்
20.	ஸ்ரீ சண்முகானந்தா நூலகம் மற்றும் படிப்பகம்	மருங்கூர்
21.	எஸ்.எம்.ஆர்.வி. நூலகம்	வடசேரி, நாகர்கோவில்
கல்குளம் வட்டம்:		
22.	தேச சேவா சங்கம் நூலகம் மற்றும் படிப்பகம்	கேரளபுரம்
23.	ஸ்ரீ கிருஷ்ண விலாசம் நூலகம் மற்றும் படிப்பகம்	பரசேரி
தக்கலை வட்டம்:		
24.	ஸ்ரீ சிம்ஹரசூ விநாயகர் தேவஸ்தானம் நூலகம்	இரணியல்
விளவங்கோடு வட்டம்:		
25.	இராசகேசவ தாஸ் நூலகம் மற்றும் படிப்பகம்	குன்னத்தூர்
26.	புனித அந்தோணியார் கிராமோதாரண சங்க நூலகம்	வல்லவிளை

(1)	(2)	(3)
27.	ஸ்ரீ வித்ய விலாசனி நூலகம்	அருமனை
28.	மகாத்மா நூலகம் மற்றும் படிப்பகம்	மேட்டுக்கம்மல்

கொடைபெறா நூலகங்கள்

தோவாளை வட்டம்:

1.	சமதர்ம நூல் நிலையம்	ஆண்டித்தோப்பு
2.	திருவள்ளுவர் நூலகம்	வீரவநல்லூர்
3.	கிருஷ்ஹர் சங்கம் நூலகம்	அருமநல்லூர்
4.	வாலிபர் சங்கம் மற்றும் பொது நூலகம்	தெர்சனம்கோப்பு
5.	மகாத்மா காந்தி நூலகம்	காடுக்கரை
6.	ஜவகர் நூலகம்	தோவாளை
7.	புத்தகாலயம் மற்றும் படிப்பகம்	வீரமார்த்தாண்டார் புத்தூர்
8.	பாரதி நூல் நிலையம்	வெல்லமடம்
9.	ஸ்ரீ சித்திரைவிலாஸ் நூலகம்	ஆரல்வாய்மொழி
10.	நேதாஜி வாலிபர் சங்கம்	கல்லுப்புத்தூர்
11.	பாரதி வாலிபர் சங்கம்	வில்லங்கோடு

அகஸ்தீஸ்வரம்:

12.	காந்தீஜி கிராம முன்னேற்றக்கழகம்	சங்கரன்புத்தூர்
13.	புனித மேரி நூலகம் மற்றும் படிப்பகம்	வாஞ்சிமார்த்தாண்ட நல்லூர்
14.	கிருபாளணி நூலகம்	கருப்புக்கோட்டை
15.	புனித அலோசியஸ் நூலகம் மற்றும் படிப்பகம்	அழகப்பபுரம்
16.	குலசேகர விநாயகர் நூலகம்	அகஸ்தீஸ்வரம்
17.	ஞானப்பூ அம்மாள் நூலகம்	மேலச்சந்தையடி
18.	ஜயாநந்தா நூலகம்	கன்னிமடம்
19.	ஸ்ரீ சித்ரா நூலகம்	ஒதயல்விளை
20.	சௌந்தர பாண்டியன் நினைவு நூலகம்	தெற்கு குந்தால்
21.	தென் திலக அறிவகம், நூலகம்	அச்சன்குளம்
22.	காமராஜ் படிப்பகம்	விஜயன்கிரி
23.	விடிவெள்ளி (மார்னிங் ஸ்டார்) நூலகம் மற்றும் படிப்பகம்	தென்தாமரைக்குளம்
24.	திருவள்ளுவர் நூலகம் மற்றும் படிப்பகம்	புலியூர்
25.	சஞ்சீவி நூலகம்	பரமாத்தலிங்கபுரம்
26.	வாலிபர் சங்கம் நூலகம்	மார்த்தாண்டபுரம்
27.	ஜவகர் நூலகம்	பரக்கை
28.	கிருஷ்ணமணி நூலகம் மற்றும் படிப்பகம்	மேலகிருஷ்ணபுத்தூர்
29.	குமரன் நூல் நிலையம்	வல்லன்குமாரவிளை

(1)	(2)	(3)
30.	இந்திய குடியரசு நினைவு நூலகம்	சர்க்கார்விளை
31.	பாரதி படிப்பகம்	மணவிளை
32.	கலைமகள் படிப்பகம்	கார்மாணிக்கபுரம்
33.	பெனிஸ்கார் நூலகம் மற்றும் படிப்பகம்	இராஜாவூர்
34.	இளங்கோமந்தன் நூலகம்	பார்வதிபுரம்
35.	விஸ்வகர்மா தொழிலாளர் சங்கம் நூலகம் மற்றும் படிப்பகம்	வடசேரி
36.	திரு.வி.க. வாலிபர் சங்கம் நூலகம்	வடசேரி
37.	வீரமாமுனிவர் நூலகம்	வடசேரி
38.	இராமவர்மபுரம் கழகம்	நாகர்கோவில்
39.	இளைஞர் நூலகம் மற்றும் படிப்பகம்	ஆசாரிப்பள்ளம்
40.	கட்டபொம்மன் நூலகம்	கீழத்தெரு, நாகர்கோவில்
41.	வாலிபர் சங்கம் நூலகம்	சூரங்குடி வடக்கு
42.	ஸ்ரீ சித்ரஜோதி நூல் நிலையம்	சுசீந்திரம்
43.	காந்தீஜி படிப்பகம்	தெற்குரதவீதி, சுசீந்திரம்
44.	விஸ்வகர்ம தொழிலாளர் சங்கம் நூலகம்	கீழத்தெரு, நாகர்கோவில்
45.	திலகர் வாலிபர் சங்கம் மற்றும் படிப்பகம்	கீழத்தெரு, நாகர்கோவில்
46.	ஜவகர் கிராம அபிவிருத்தி சங்கம் நூலகம்	தெற்கு சூரங்குடி
47.	மகாதேசாய் இந்தி நூலகம்	இராமவர்மபுரம் நாகர்கோவில்
48.	பாவலர் மந்திரம் படிப்பகம்	எடலக்குடி, நாகர்கோவில்
49.	வ.உ. சிதம்பரனார் இளைஞர் குழாம்	வடசேரி
50.	மனோன்மணீயம் சுந்தரனார் நூலகம்	வடசேரி
51.	கற்பக விநாயகர் நூலகம்	இராமநாதபுரம்
52.	சுவாமி விவேகாநந்தா நூலகம் மற்றும் படிப்பகம்	கன்னியாகுமரி
கல்குளம் வட்டம்:		
53.	ஜவகர் விலாஸ் நூலகம் மற்றும் படிப்பகம்	மாலங்கோடு
54.	முகம்மதியர் இளைஞர் சங்கம்	குளச்சல்
55.	அருளாநந்த விலாஸ் நூலகம்	திக்கணங்கோடு
56.	கிராம சேவா சங்கம் நூலகம் மற்றும் படிப்பகம்	சாரல்
57.	சர்வோதயா பொது நூலகம் மற்றும் படிப்பகம்	மணவாளக்குரிச்சி

(1)	(2)	(3)
58.	வள்ளுவர் நூலகம் மற்றும் படிப்பகம்	அம்மாண்டிவிளை நாகர்கோவில்
59.	நாராயணப்பெருமாள் நாடார் நினைவு நூலகம்	அம்மாண்டிவிளை
60.	ஜவகர் நூலகம்	காரவிளை
61.	சாஹகரண நூலகம் மற்றும் படிப்பகம்	மார்வூர்கோணம்
62.	பாபுஜி படிப்பகம்	முண்டவிளை செங்குடி அஞ்சல்
63.	இந்து இளைஞர் இயக்கம்	குளச்சல்
64.	நேதாஜி நினைவு நூலகம்	திருநந்திக்கரை
65.	ஜெய் பாரத் நூலகம் மற்றும் படிப்பகம்	இரணியல்கோணம்
66.	தேசபந்து நூலகம் மற்றும் படிப்பகம்	மணக்கரை
67.	தேசாய் நூலகம் மற்றும் படிப்பகம்	ஆலூர்
68.	ஸ்ரீ விவேகாநந்தா நூலகம்	நெட்டங்கோடு
69.	ஜெய்ஹிந்த் நூலகம்	கந்தன்விளை
70.	தெய்வ விநாயகர் தேவஸ்தானம் நூலகம் மற்றும் படிப்பகம்	தாலக்குளம்
71.	கே.வேலுத்தம்பி நினைவு நூலகம்	அரமணம்
72.	கே.வேலுத்தம்பி நினைவு நூலகம்	திருவட்டார்
73.	கிராம நல நூலகம் மற்றும் படிப்பகம்	ஆத்தூர்
74.	பொது நூலகம்	வெல்லுக்கீரி
75.	பிரம்ம வித்யாலய நூலகம் மற்றும் படிப்பகம்	குலசேகரம்
76.	நகராட்சி நூலகம்	குளச்சல்
77.	திவான் நாணுப்பிள்ளை நினைவு நூலகம்	நெய்யூர் மேற்கு
78.	யு.எம்.எம்.ஏ.நூலகம் மற்றும் படிப்பகம்	திருவிதாங்கோடு
79.	லலித விலாசம் நூலகம்	பத்மநாபபுரம்
80.	நகராட்சி நூலகம் மற்றும் படிப்பகம்	தக்கலை
81.	கிராம நல நூலகம் மற்றும் படிப்பகம்	பொன்மனை
82.	மைய நூலகம் மற்றும் படிப்பகம்	கெண்டலக்கோடு
தக்கலை:		
83.	புனித அலோசியஸ் நூலகம் மற்றும் படிப்பகம்	முலுகுக்கோடு
84.	மார்த்தாண்ட விலாஸ் நூலகம் மற்றும் படிப்பகம்	இரணியல்கோட்டை
85.	கேசவ விலாசம் நூலகம்	மணலிக்கரை
86.	நேதாஜி நூலகம்	மங்கலம்
விளவங்கோடு:		
87.	பாரதி நூல் நிலையம்	புதுக்கடை
88.	காந்தி நினைவு நூலகம்	மஞ்சலமூடு
89.	ஆசாத் நூலகம்	கலியக்காவளை

(1)	(2)	(3)
90.	மகாத்மா படிப்பகம்	கிள்ளியூர்
91.	ஸ்ரீ பாலசுப்ரமணிய நூலகம்	அம்சி
92.	தேவி பிரஸ்தா நூலகம் மற்றும் படிப்பகம்	வெங்கஞ்சி
93.	கிராமோதாரணா நூலகம்	எஸ்.ட்டி.மாணீட்
94.	எஸ்.ட்டி. நிகோலஸ் இளைஞர் சங்கம் நூலகம்	
95.	ஊராட்சி நூலகம் சகோதரர்கள் ஒன்றியம்	ப்ருதிவிபுரம்
96.	ஒன்றிய நூலகம் மற்றும் படிப்பகம்	சேமங்கலா
97.	கிராமதாரணாசங்கம் நூலகம்	மருதங்கோடு
98.	கஸ்தூரிபாய் நினைவு நூலகம்	பாக்கோடு
99.	கிராம சேவா சங்கம் நூலகம்	பறவூர்
100.	காந்தி நூலகம் மற்றும் படிப்பகம்	உண்ணாமலைக்கடை
101.	ஸ்ரீ சித்ராலயம் நூலகம்	அருமணை
102.	ஸ்ரீ பட்டம் நினைவு நூலகம்	மலைக்கோடு
103.	ஆர்.ஏ.வி. நூலகம்	பெயின்குளம்
104.	சுபோதா தயானி நூலகம் மற்றும் படிப்பகம்	பார்த்திவபுரம்
105.	திருமூல மகாதேவர் விலாசம் நூலகம்	மூஞ்சிரை
106.	அன்னை கஸ்தூரிபாய் நினைவு நூலகம்	வயக்கல்லூர்
107.	கிராம நல நூலகம்	கஞ்சம்புரம்
108.	கிராமோத்தாரண சங்கம்	கொல்லகோடு
109.	மகாத்மாஜி நூலகம்	பிலாக்கோடு

இந்த நூலகங்களைத் தவிர, முக்கிய அலுவலகங்களான, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வட்டாட்சியர் அலுவலகங்கள், பல தொழில் நுணுக்கப்பயிற்சி நிறுவனங்கள் மற்றும் பிற நிறுவனங்கள், ஆகியவை, தங்களது நூலகங்களை இயக்கி வருகின்றன. அவற்றில் ஒன்றான காத்தரின் பூத் மருத்துவமனை நூலகத்தின் அமைப்பினை இத்துடன் இணைக்கப் பட்டுள்ள புகைப்படத்தில் காணலாம்.

அருங்காட்சியகங்கள்

அருங்காட்சியத்துறை அல்லது, தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினால் பராமரிக்கப்பட்டு வரும், அருங்காட்சியகங்கள் எவையும் மாவட்டத்திலில்லை. தற்போதும் கேரள அரசின் கட்டுப்பாட்டிலிருந்து வரும் பத்மநாபபுரம் அரண்மனையில் ஒரு அருங்காட்சியகம் பராமரிக்கப்பட்டு வருகிறது. அங்கு அரண்மனையைச் சார்ந்த முந்தைய வேநாட்டு மன்னர்கள் பயன்படுத்தி வந்த ஆயுதங்களும் சேமித்து வைக்கப்பட்டுள்ளன. அரண்மனையிலுள்ள (அருங்காட்சியகம் தொடர்பான விவரங்கள் இவ்வியலில் விளக்கப்பட்டுள்ளன). அரண்மனை தொடர்பான பிற விவரங்கள் இவ்விவரச்சுவடியின் "முக்கிய இடங்கள்" என்ற இயலில் கூறப்பட்டுள்ளன.

இவ்வரண்மனையின் பழமைச் சின்னங்களைக் கொண்ட அருங்காட்சியகம் 1940ஆம் ஆண்டு திறக்கப்பட்டது. கீழ்க்காணும் காட்சிப் பொருட்கள், அருங்காட்சியகத்தில், பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது[196].

தொடர் எண்.	விவரங்கள்	மொத்த எண்ணிக்கை
1.	கற்சிற்பங்கள்	118
2.	மர உருவச்சிலைகள்	13
3.	செப்புத் தகட்டு ஆவணங்கள்	11 தொகுதிகள்
4.	நாணயங்கள்	396
5.	வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஓவியங்கள்	17
6.	ஆயுதங்களும், கருவிகளும்	131
7.	கல்வெட்டுகள்	67

அருங்காட்சியகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள பொருட்கள், வரலாற்றின் இடைநிலைக்காலம் அல்லது தற்காலத்தை சார்ந்தவையாகும்.

சராசரியாக நாள்தோறும், அரண்மனைக்கு 400 பார்வையாளர்கள் வருகை தருகிறார்கள். அவர்களில், 300 பொது மக்களும், 50 மாணவர்களும், 50 அயல் நாட்டினரும் அடங்குவர். அரண்மனை நுழைவுக் கட்டணமாக பெரியவர்களுக்கு ரூபாய் இரண்டு வீதமும், சிறுவர்களுக்கு ரூபாய் ஒன்று வீதமும் வசூலிக்கப்படுகிறது.

அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு காட்சிப் பொருளும் வரலாற்றுப் பிண்ணனியுடையவை. அவை தொடர்பான விவரங்கள், அரண்மனையிலுள்ள வழிகாட்டிகளால், பார்வையாளர்களுக்கு விளக்கப்படுகிறது. அரண்மனையிலுள்ள பல பகுதிகள் மற்றும் அங்கு சேமித்து வைக்கப்பட்டுள்ள காட்சிப் பொருட்கள் ஆகியவை குறித்து தெளிவாகப் பார்வையாளர்களுக்கு விளக்கிட, தனியாக அரண்மனை யிலேயே அரசால், வழிகாட்டிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஒவ்வொருவரும் தங்களது வரலாற்று அறிவினை வளர்த்துக் கொள்ளவும், பழமைச் சின்னங்கள் குறித்த விவரங்களை விரிவாகத் தெரிந்து கொள்ளவும், இவ்வரண்மனை, தவறாமல் கண்டு ரசிக்க வேண்டிய முக்கிய இடமாகும். மேலும் அரண்மனையில் காணப்படும் கட்டிடக்கலை மற்றும் சிற்பக்கலை ஆகியவற்றின் மேம்பாடு, அவற்றிற்குப் பின்பற்றப்பட்டுள்ள உருவரை முன்மாதிரி, எல்லாவற்றிற்கும் மேலாக, அரண்மனையில் பிரதிபலிக்கும், வேநாடு மன்னர்களின் உணர்வாற்றல் இவையாவும் கண்களுக்கு விருந்தாகும்.

பத்மநாபபுரம் அரண்மனை தவிர, தொன்மையான கோட்டைகளான வட்டக்கோட்டை, உதயகிரி மற்றும் திருப்பரப்பு கோவில், சித்தாராவிலுள்ள சமண சமயக் கல்வெட்டுக்கள், ஆகியவை வரலாற்று முக்கியத்துவம்

வாய்ந்தவையாகும். பாதுகாக்கப்படும் தொன்மையான நினைவுச் சின்னங்களாகிய இவையாவும் தொல் பொருள் ஆராய்ச்சித்துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இவ்விடங்களிலும், முந்தைய ஆட்சியாளர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் தொடர்பான வரலாற்று சிறப்புமிக்க மற்றும், அருங்காட்சியகத்தில் வைக்க வேண்டிய காட்சிப் பொருட்கள் பல உள்ளன. இவ்விடங்கள் தொடர்பான பிற விவரங்கள், இவ்விவரச் சுவடியின் "முக்கிய இடங்கள்" என்ற இயலில் விளக்கப்பட்டுள்ளன.

கல்வியால் மேம்பட்ட இலக்கியஞ்சார்ந்த மற்றும் அறிவியல் பூர்வமான சங்கங்களும், பருவ இதழ்களும்

கன்னியாகுமரி மாவட்டத்தில், கலாசாரம், அறிவியல் மற்றும் இலக்கியம் ஆகியவற்றை மேம்படுத்த, மாநில அல்லது மாவட்ட நிலையில் புகழ்பெற்ற சங்கங்கள் எவையுமில்லை. எனினும், தன்னார்வத்தொண்டு நிறுவனங்கள் இம்மாவட்டத்திலுள்ளன. அவைகளின் முக்கிய நோக்கம் யாதெனில், இலக்கியம், அறிவியல் அல்லது கலாசாரத்தை மேம்படுத்துவதேயாகும். இவை தொடர்பான விவரங்கள் இவ்விவரச் சுவடியின் "பொது வாழ்க்கை மற்றும் தன்னார்வ சமூகப்பணி நிறுவனங்கள்" என்ற இயலில் விளக்கப்பட்டுள்ளன.

கல்லூரிகளிலும், பல தொழில் நுணுக்கப் பயிற்சி நிறுவனங்களிலும் மாணவர்களிடையே பண்படுநிலை மற்றும் அறிவியல் சார்ந்த உணர்வினை ஊக்குவித்திட மாணவர் சங்கங்களும், நுண் கலைகள் சங்கங்களும் இயங்குகின்றன.

அறிவியல், பண்பாடு மற்றும் இலக்கியம் ஆகியவை குறித்து, பலரும் படிக்குமளவிலான பருவ இதழ்கள் இம்மாவட்டத்திலிருந்து வெளிவரவில்லை. இருப்பினும், மாவட்டத்திலுள்ள 15 கல்லூரிகளும், பல தொழில் நுட்ப பயிற்சிப் பள்ளிகளும், சில மேல்நிலைப் பள்ளிகளும், தொடர்புள்ள நிறுவனங்களின் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எழுதும் கட்டுரைகளைத் தாங்கிய பருவ இதழ்களை ஒவ்வொரு ஆண்டும் (Periodicals) வெளியிடுகின்றன.

மாவட்டத்தில், பருவ இதழ்கள் மற்றும் பத்திரிகைகளின் அங்கம் குறித்து, இவ்விவரச் சுவடியின் "பொது வாழ்க்கை மற்றும் தன்னார்வ சமூகப்பணி நிறுவனங்கள்" என்ற தலைப்பிலான இயலில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தின் இலக்கிய மேதைகள்[197]

தமிழ்மொழி மற்றும் இலக்கியம் ஆகியவற்றின் வளர்ச்சிக்கும், வளமைக்கும் இம்மாவட்டத்தின் பங்கும், பணியும் தனித்தன்மை வாய்ந்தவையாகும். தமிழ்மொழியைப் போன்று, என்றும்நினைவிற்

கொள்ளவேண்டிய திறமைமிக்க ஆன்றோர்களை மாவட்டம் படைத்திருக்கிறது.

செய்குத்தம்பிப் பாவலர்

அவரது காலத்திய தமிழ் கற்றறிவாளர்களில் செய்குத்தம்பிப் பாவலர் மிகவும் முத்தவர். அவர் "கம்ப இராமாயணத்தின் சான்று வலிமை பெற்றவராகத் திகழ்ந்தார். கூட்டத்திலிருப்போரின் சிந்தனையை ஊகித்து, சுடரிட்டுப் பேசிடும் சொல் வன்மை வாய்ந்த பொதுப்பேச்சாளராவார். அவர் "சதாவதானி" என பிரபலமாக அழைக்கப்பட்டார். இதற்கு, ஒரே நேரத்தில் பல பணிகளைப் புரியும் வித்தகர் எனப் பொருள். அவர் பல நூல்களை எழுதியுள்ளார். அவற்றில் முதன்மை வாய்ந்தவை, திருக்கோட்டாற்று பதிற்றுப்பத்து அந்தாதி மற்றும் திருநாகூர் திருவந்தாதி ஆகியவையாகும். 5027 பாடல்களடங்கியுள்ள, சீறாப்புராணத்திற்கு, அவர், விளக்கவுரை எழுதியுள்ளார்.

தேங்காய்புத்தூரைச் சேர்ந்த சாஸ்தான்குட்டி பிள்ளை, அவரது முதன்மையான சீடராவார். அவரும், ஒரு புகழ் பெற்ற தமிழ் கற்றறி வாளராவார். "சேர நாடும், செந்தமிழும்" என்ற நூலாசிரியரான வித்துவான் சதாசிவம் பிள்ளை, சாஸ்தான் குட்டி பிள்ளையின் சீடர்களிலொருவராவார்.

கே.என்.சிவராச பிள்ளை

தமிழில் புலமை வாய்ந்த கற்றறிவாளரான திரு.கே.என். சிவராசபிள்ளை, இம்மாவட்டத்தைச் சேர்ந்தவராவார். 1927ஆம் ஆண்டு, சென்னையில் நிறுவப்பட்ட தமிழ் ஆராய்ச்சி மையத்திற்கு, இவர் தான் முதல் இயக்குநராக நியமிக்கப்பட்டார். இவர் "நாஞ்சில் நேசன்" என்ற தமிழ் மாத இதழுக்குப் பதிப்பாசிரியராக பணியாற்றினார். இவ்விதழ், திருவனந்த புரத்திலிருந்து பிரசுரமாகியது. இவர் தமிழ் இலக்கியத்திற்கு மட்டுமின்றி, வரலாற்றிற்கும் பெருந்தொண்டாற்றினார். "பழந்தமிழர் களின் காலக்கணிப்பு முறை" என்ற இவரது நூல் சென்னை பல்கலைக் கழகத்தால் 1932ஆம் ஆண்டு, வெளியிடப்பட்டது. இந்நூல் இவர் தமிழ் இலக்கியத்தில் மேற் கொண்ட விரிவான ஆராய்ச்சியின் பலனாகும். சங்க காலத்து அரசியல் வரலாற்றினை இந்நூல் தெளிவாகக் கூறுகிறது. தமிழ் மற்றும் வரலாற்று ஆராய்ச்சித் துறைகளில் இவர் ஒரு முன்னோடி எனில் மிகையில்லை.

கே.என். குமரேச பிள்ளை

திரு.கே.என். சிவராச பிள்ளையின் இளவலான திரு.கே.என். குமரேசபிள்ளை, கம்ப இராமாயணத்தில் நுட்பத் திறமை மிக்கவராகத் திகழ்ந்தார். அவர், இசைக்கருவிகளுடன் கம்ப இராமாயண சமயவுரை நிகழ்த்தி வந்தார்.

பி.சிதம்பரம் பிள்ளை

1930ஆம் ஆண்டு, முதலியார் பனையோலை கையெழுத்துப் பிரதியினை வெளியிட்டதன் மூலம், திரு.பி.சிதம்பரம் பிள்ளை வரலாற்றசிரியர்களுக்கு விலைமதிப்புமிக்க தொண்டினை ஆற்றியுள்ளார். கன்னியாகுமரி மாவட்டத்தின் தற்காலத்திய வரலாற்றினை எழுதிட, முதலியார் பனையோலை கையெழுத்துப் பிரதிகளே முதன்மையான ஆதார ஆவணங்களாகத் திகழ்கின்றன. அவர் பிரபல ஆங்கில எழுத்தாளருமாவார். "ஆலயப் பிரவேசம்" (திருக்கோயில் நுழைவு) மற்றும் "ஆரியர்களும், திராவிடர்களும்" ஆகிய இரு நூல்களை அவர் எழுதியுள்ளார். அவர், "தமிழன்" என்ற தமிழ்ப் பருவ இதழையும் வெளியிட்டுள்ளார்.

ஆறுமுக நாவலர்

"தொண்டர் குழாம் மகா வித்வான்" என அனைவராலும் மதிப்புடன் அழைக்கப்பட்டு வந்த திரு. ஆறுமுக நாவலர், ஆர்வமிக்க ஆத்திகராகத் திகழ்ந்தார். அவர், திருநெறித் தொண்டர் குழாம் என்ற சமய சார்புள்ள நிறுவனத்தை நாகர்கோவிலில் 1928 ஆம் ஆண்டு, அமைத்தார். இந்நிறுவனத்திற்குத் தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் கிளைகள் உள்ளன. இந்நிறுவனத்தின் வாயிலாக, மக்களுக்குத் தேவாரம், திருவாசகம் மற்றும் திருப்புகழ் ஆகியவை தொடர்பான அறவுரை வழங்கப்பட்டது. "இந்து மத விளக்கம்" என்ற நூல், அவரது இலக்கியப் பெரும் படைப்பாகும். இந்து சமயத் தத்துவத்தின் ஆதாரக் கொள்கைகளை இந்நூல் விளக்குகிறது. திங்கள் பருவ இதழான "தொண்டன்" என்ற இதழையும் அவர் வெளியிட்டு வந்தார்.

கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை

1876 ஆம் ஆண்டு, தேரூரில் பிறந்த, கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, புகழ் பெற்ற கவிஞராவார். தற்காலத்திய தமிழ் கவிதைகளின் வளர்ச்சிக்கு, அவர் ஆற்றிய அருமதிப்புள்ள தொண்டு, குறிப்பிடத்தக்க தாகும். அவர் ஒரு கவிஞர் மட்டுமல்ல, தொல்பொருள் மற்றும் வரலாற்று ஆராய்ச்சியாளருமாகும். "காந்தளூர்ச்சாலை" என்பது, கவிமணி அவர்களின் புகழ்பெற்ற நூலாகும். அது இராச இராச சோழரின் கேரள வெற்றி குறித்து மாறுபட்ட கருத்து விளக்கமளிக்கிறது. கவிமணி அவர்களது கூற்றுப்படி, "அறுத்து" என்ற சொல், "வரையறுத்து" என்ற சொல்லின் குறுகிய வடிவமாகும். இதனை ஆதாரமாகக் கொண்டு, அச்சொற்றொடருக்கு அவர் மாறுபட்ட பொருள் விளக்கமளித்துள்ளார். மன்னர், ஒரு அறக்கொடை வழங்கி, கலத்தின் அளவினை நிர்ணயித்தார். எனவே, காந்தளூர் நிறுவனத்தில் உணவளிக்கப்படவேண்டிய நபர்களும் நிர்ணயிக்கப்பட்டனர். கவிமணி அவர்களின் கருத்து முடிவு, தொல் பொருள் ஆராய்சித் துறையில் ஒரு மைல் கல்லை உருவாக்கிறது. "மருமக்கள் வழி மான்யம்" என்பது அவரது கவிதைத் தொகுதிகளில் ஒன்றாகும். தற்காலத் தமிழ் இலக்கியத்தில்,

இது ஒரு மிகச் சிறந்த வகைச் செய்யுளாகும். முந்தைய நாஞ்சில் நாட்டில், ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தில் தாய் குடும்பத் தலைவியாகவுள்ள சமுதாய அமைப்பான தாய் வழியாட்சி முறை பின்பற்றப்பட்ட, "மருமக்கள் வழி மான்ய" முறையினை கவிமணி அவர்கள் தாக்கியுள்ளார். அதன் விளைவு, அத்திட்டமே, 1926 ஆம் ஆண்டு சட்டரீதியாக நீக்கம் செய்யப்பட்டது. எளிய முறையில், ஆனால் சிந்தனையைத் தூண்டும் அளவில் அமைந்துள்ள மற்றொரு செய்யுள் தொகுப்பு, "மலரும், மலையும்", என்பதாகும்.

ஜீவானந்தம்

"ஜீவா" என மக்களால் பாசத்துடன் அழைக்கப்பட்ட "ஜீவானந்தம்", ஒரு புரட்சிகரமான அரசியல்வாதியும், சுதந்திர போராட்ட வீரரும், நல்ல எழுத்தாளருமாவர். "கலையும், இலக்கியமும்", "பாரதி வழி" மற்றும் "மதமும், மனித வளமும்" ஆகியவை, அவர் எழுதி வெளியிட்ட முக்கிய நூல்களாகும். ஆங்கில அரசால் தூக்கிலிடப்பட்ட புரட்சிகரமான சுதந்திரப் போராட்ட வீரராகத் திகழ்ந்த பஞ்சாப்-பகவத்சிங்கைப் பற்றி, ஒரு நூல் எழுதியதால், திரு. ஜீவானந்தம் சிறையிலடைக்கப்பட்டார்.

முனைவர் கே.கே. பிள்ளை

இந்தியாவில் அவர் காலத்திய பேராசிரியர்களில், திறமை வாய்ந்த வரலாற்றுப் பேராசிரியரான முனைவர் கே.கே. பிள்ளை, தென்னிந்திய வரலாற்றின் சான்று வலிமை பெற்றவராவார். அவர், கன்னியாகுமரி மாவட்டம், ஆலூரில் பிறந்தார். விரிவான ஆராய்ச்சிக்குப்பின்னர் அவர் சுசீந்திரம் திருக்கோயிலைப்பற்றி எழுதிய தனிவரைவு நூல், ஏற்கப்பட்டு, அதனைத் தொடர்ந்து, சென்னை பல்கலைக் கழகம், அவருக்கு (இலக்கியப் புலமை) முனைவர் பட்டமளித்து கௌரவித்தது. ஒருசில கற்றறிவாளர்களே இப்பெரிய பட்டத்தினைப் பெற்றுள்ளனரென்பது குறிப்பிடத்தக்கது. இந்நூலினை அவர், கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை அவர்களுக்காக அற்பணித்தார். இவர் அதிகார பூர்வமான சான்றுகளை அளித்து, "தென்னிந்திய வரலாறு" என்ற நூலினைத் தமிழிலும், ஆங்கிலத்திலும் அளித்த நூலாசிரியராவார். இந்திய வரலாறு, மற்றும் தென்னிந்திய வரலாறு குறித்து, அவர் பல நூல்களை எழுதியுள்ளார்.

பிற திறமை வாய்ந்த அறிஞர்கள்

அனைத்து நாட்டுப்புகழ்பெற்ற பொருளியல் ஆய்வாளரும், தமிழ் புலவருமான முனைவர் பி.நடராசன், "அருள்மணி மாலை", "நாஞ்சில் நாடு" போன்ற பல நூல்களை இயற்றிய, நாகர்கோவிலைச் சேர்ந்த பண்டித இராமசுப்ரமணிய நாவலர், முதன்மையான நூல்களான "குமரிக்கண்டம்", "தென்னாட்டுப் போர்க்களங்கள்" ஆகியவற்றின் ஆசிரியரான ஆரல்வாய்மொழியைச் சேர்ந்த, திரு.கே. அப்பாத்துரை, ஆகியோரும் இம்மாவட்டத்தைச் சேர்ந்தோராவர். "தொல்காப்பிய யாப்பு" மற்றும்

“திருவாசகம்”, “திருமுருகாற்றுப்படை” ஆகியவற்றிற்கு விளக்கவுரை ஆசிரியரான தமிழ்பெரும் புலவர் அப்ரகாம் அருளப்பனாரும் இம்மாவட்டத்தில் பிறந்தவராவார்.

தமிழ் மொழியியலில் அனைத்து நாட்டு சான்று பெற்ற மூவரையும் இம்மாவட்டம் ஈன்றெடுத்துள்ளது. அவர்கள் தஞ்சாவூர் தமிழ் பல்கலைக் கழகத்தின் முதல் மற்றும் இரண்டாம் துணைவேந்தர்களான, முறையே முனைவர் வி.அய். சுப்ரமணியன் மற்றும் முனைவர் எஸ். அகஸ்தியலிங்கம் அகியோரும், முனைவர் முத்து சண்முகனாருமாவர்.

இம்மாவட்டத்தில் பிறந்த, புகழ்பெற்ற புனைக் கதை எழுத்தாளர் களும், கதை எழுத்தாளர்களும் உள்ளனர். அவர்களில், சுந்தர இராமசாமி. நீலபத்மநாபன், பொன்னேழன், நாஞ்சில்நாடன், என்.ஏ. வேலாயுதம், பா.பெருமாள், ஹெப்சிபா, ஜேசுதாசன், ஐசக் அருமணிராசன் மற்றும் பலர், தமிழ்நாட்டு வாசகர்களுக்கு நன்கு அறிமுகமானவராவர்.

இம்மாவட்டத்தைச் சேர்ந்த, இதழாசிரியரும், எழுத்தாளருமான முனைவர் எஸ்.பத்மநாபன், மாவட்ட வரலாற்றின் மறந்து, மறைந்து போன பல நிகழ்ச்சிகளை நம் முன் கொணர்ந்துள்ளமை, குறிப்பிடத்தக்கது. தமிழ் மொழிக்கும், மாவட்டத்திற்கும், நாட்டிற்கும் பெரும்பங்காற்றிய இம்மாவட்டத்தைச் சார்ந்த கற்றறிவாளர்களின் முழுமையான பட்டியலை அளிக்க இயலவில்லை யெனினும் அவர்களது புகழ், குடத்திலிட்ட விளக்கு போல் ஒளி வீசுகிறதெனில் மிகையில்லை.

தமிழ் பண்பாட்டினை வளர்த்திட, இம்மாவட்டத்தைச் சார்ந்த நீடித்த அனுபவமுடைய பலர், கடுமுயற்சி மேற்கொண்டனர். அவர்களில், மறைந்த டி.கே.எஸ். சகோதரர்கள், மற்றும் திரு.கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். திரு.டி.கே. சண்முகம் நடித்து, இயக்கிய “இராசராச சோழன்” மற்றும் “ஔவையார்” நாடகங்கள் மக்களின் வரவேற்பைப் பெற்றவையாகும். “தமிழ் நாடக வரலாறு” என்ற நூலையும் அவர் எழுதி வெளியிட்டுள்ளார்.

குலையாத உறுதியின் மொத்த உருவான கலைவாணர் அவர்கள், நாடகங்களிலும், திரைப்படங்களிலும் சிரிப்பு நடிகராக நடித்து, ரசிகர்களின் சிந்தனையைத் தூண்டி, அவர்களிடையே ஒழுக்கத்தையும், நற்பண்பையும் வளர்த்தவராவர்.

குறிப்புகள்

1. சேச அய்யர், கே.ஜி., சங்க காலத்திய சேர மன்னர்கள், இலண்டன், (1937), பக்கம் 121
1. (அ) முனைவர் எஸ். பத்மநாபன், தமிழ் உலகிற்குக் கன்னியாகுமரியின் பங்கு
2. காப்பியக்குடி கவின்பெற வளர்ந்து–சிலப்பதிகாரம்–வரிகள் 30, 83
3. முனைவர் எஸ். பத்மநாபன், தமிழ் உலகிற்குக் கன்னியாகுமரியின் பங்கு, பக்கம் 8
4. அதே நூற்பகுதியில்
5. அதே நூற்பகுதியில் பக்கங்கள் 14 மற்றும் 15
6. சேச அய்யர், கே.ஜி., சங்கக்காலத்து சேர மன்னர்கள், (இலண்டன்), (1937), பக்கம் 147
7. அதே நூற்பகுதியில், பக்கம் 147 மற்றும் 148
8. பிள்ளை கே. கே., தமிழர்களின் சமுதாய வரலாறு, சென்னைப் பல்கலைக்கழகம், (1975), தொகுதி 1, பக்கம் 395
9. அதே நூற்பகுதியில், பக்கம் 397
10. அதே நூற்பகுதியில், பக்கம் 398
11. கே.கே. பிள்ளை, தமிழர்களின் சமுதாய வரலாறு, சென்னை, சென்னைப் பல்கலைக்கழகம், 1975, தொகுதி, பக்கம் 395
12. சாஸ்திரி கே.ஏ.என்., பாண்டிய அரசு, சென்னை, (1929), மறுபதிப்பு, 1972, பக்கம் 206
13. சாஸ்திரி கே.ஏ.என்., தென்னிந்திய வரலாறு, சென்னை, (1955), நான்காம் பதிப்பு, 1976, பக்கங்கள் 320 மற்றும் 321
14. அதே நூற்பகுதியில், பக்கம் 323
15. முனைவர் கே.வி. இராமன், பாண்டியர் வரலாறு (தமிழ்), சென்னை, (1977), பக்கங்கள் 236, 237.
16. முனைவர் கே.வி. இராமன், பாண்டியர் வரலாறு (தமிழ்), சென்னை, (1977), பக்கம் 236
17. கே.கே.பிள்ளை, சசீந்திரம் திருக்கோவில், சென்னை, 1953, பக்கம் 268
18. அதே நூற்பகுதியில், பக்கம் 268
19. அதே நூற்பகுதியில், பக்கம் 270
20.அ. நாகமையா, திருவாங்கூர் மாநில நடைமுறை நூல் – தொகுதி 2, (1906), திருவனந்தபுரம், பக்கங்கள் 453–454.
20.ஆ. திருவாங்கூர் மக்கட்தொகை அறிக்கை 1891
21. அதே நூற்பகுதியில், பக்கம் 446
22. அதே நூற்பகுதியில்
23. சி.எம். ஆகுர், திருவாங்கூர் கிறித்தவத் திருக்கோவிலின் வரலாறு, (1902), சென்னை, பக்கம் 595.
24. அதே நூற் பகுதியில், பக்கங்கள் 552–553
25. அதே நூற் பகுதியில், பக்கம் 592
26. அதே நூற் பகுதியில், பக்கம் 579
27. அதே நூற் பகுதியில், பக்கம் 581
28. சி.எம். ஆகுர்., திருவாங்கூர் கிறித்தவக் கோவிலின் வரலாறு, (1902), சென்னை, பக்கம் 647
29. அதே நூற் பகுதியில் – பக்கம் 648 மற்றும் 674
30. அதே நூற் பகுதியில், பக்கம் 721
31. மேற்படி
32. நாகமையா, திருவாங்கூர் மாநில நடைமுறை நூல் – தொகுதி–2 (1906), திருவனந்தபுரம், பக்கம் 447
33. சி.எம். ஆகுர், திருவாங்கூர் கிறித்தவக் கோவிலின் வரலாறு, (1902), சென்னை, பக்கம்721
34. சி.எம். ஆகுர், திருவாங்கூர் கிறித்தவக் கோவிலின் வரலாறு (1902), சென்னை, பக்கம்722
35. அதே நூற்பகுதியில், பக்கம் 723
36. அதே நூற்பகுதியில், பக்கம் 728

37. அதே நூற்பகுதியில், பக்கம் 729
38. அதே நூற்பகுதியில், பக்கம் 745
39. அதே நூற்பகுதியில், பக்கம் 745
40. அதே நூற்பகுதியில், பக்கம் 747
41. அதே நூற்பகுதியில், பக்கம் 748
42. அதே நூற்பகுதியில், பக்கம் 750
44. அதே நூற்பகுதியில், பக்கம் 767
45. அதே நூற்பகுதியில், பக்கம் 769
46. அதே நூற்பகுதியில், பக்கம் 770
47. ஆகுர் சிஎம்., திருவாங்கூர் கிறித்தவத் திருக்கோவிலின் வரலாறு, சென்னை, பக்கம் 771
48. கோட்டார் மாவட்ட சமய முதல்வரின் அருளாட்சிப்பரப்பு – அதன் வளர்ச்சி குறித்து ஒரு ஆய்வு (1956), பக்கம் 54.
49. அதே நூற்பகுதியில், பக்கம் 56
50. பொதுக்கல்வி தொடர்பான அறிக்கை 1977–78, தமிழ்நாடு அரசு, (1981), பக்கம் 74 முதல் 77.
51. முதன்மைக் கல்வி அலுவலர், நாகர்கோவில், அறிக்கை (1986)
52. கோட்டார் மாவட்ட சமய முதல்வரின் அருளாட்சிப்பொறுப்பு – அதன் வளர்ச்சி குறித்த ஆய்வு (1986), பக்கம் 57.
53. பொதுக்கல்வி தொடர்பான அறிக்கை 1977–78, தமிழ்நாடு அரசு, சென்னை, (1981), பக்கங்கள் 74 முதல் 77.
54. முதன்மைக் கல்வி அலுவலர், நாகர்கோவில், அறிக்கை
55. இந்திய மக்கட்தொகை 1931, தொகுதி – 27 திருவாங்கூர் – பகுதி – 1 அறிக்கை, பக்கம் 301.
56. நாகமையா. திருவாங்கூர் மாநில நடைமுறை நூல் – தொகுதி – 2, (1906), திருவனந்தபுரம், பக்கம் 447–448.
57. நாகமையா. திருவாங்கூர் மாநில நடைமுறை நூல் – தொகுதி – 2, (1906), திருவனந்தபுரம், பக்கம் 452.
58. நாகமையா. திருவாங்கூர் மாநில நடைமுறை நூல் – தொகுதி – 2, (1906), திருவனந்தபுரம், பக்கம் 452.
59. 1866–67ஆம் ஆண்டிற்கான திருவாங்கூர் மாநில நிருவாக அறிக்கை, பக்கம் 73
60. 1875–76ஆம் ஆண்டிற்கான திருவாங்கூர் மாநில நிருவாக அறிக்கை, பக்கம் 75
61. திருவாங்கூர் நிருவாகம் தொடர்பான அறிக்கை, 1866–67, பக்கம் 75
62. திருவாங்கூர் நிருவாகம் தொடர்பான அறிக்கை, 1866–67, பக்கம் 78
63. நாகமையா, திருவாங்கூர் மாநில நடைமுறை நூல் – தொகுதி 2, (1906), திருவனந்தபுரம், பக்கம் 455.
64. 1866–67 ஆம் ஆண்டிற்கான திருவாங்கூர் மாநில நிருவாக அறிக்கை, பக்கங்கள் 79–80
65. அதே நூற்பகுதியில்
66. அதே நூற்பகுதியில்
67. நாகமையா, திருவாங்கூர் மாநில நடைமுறை நூல் – தொகுதி 2, (1906), திருவனந்தபுரம், பக்கம் 455.
68. அதே நூற்பகுதியில், பக்கம் 456
69. 1871–72ஆம் ஆண்டு திருவாங்கூர் மாநில நிருவாக அறிக்கை, பக்கம் 75
70. நாகமையா, திருவாங்கூர் மாநில நடைமுறை நூல் – தொகுதி 2, (1906), திருவனந்தபுரம், பக்கம் 457.
71. 1878–79ஆம் ஆண்டின் திருவாங்கூர் மாநில நிருவாக அறிக்கை, பக்கங்கள் 80 மற்றும் 81
72. அதே நூற்பகுதியில், பக்கம் 133
73. 1893–94ஆம் ஆண்டின் திருவாங்கூர் மாநில நிருவாக அறிக்கை, பக்கம் 138
74. நாகமையா, திருவாங்கூர் மாநில நடைமுறை நூல், தொகுதி–2 (1906), திருவனந்தபுரம் பக்கம் 457

75. 1893–94 ஆம் ஆண்டின் திருவாங்கூர் மாநில நிருவாக அறிக்கை பக்கம், 138.
76. 1893–94 ஆம் ஆண்டு திருவாங்கூர் மாநில நிருவாக அறிக்கை, பக்கம் 138.
77. 1893–94 திருவாங்கூர் மாநில நிருவாக அறிக்கை, பக்கம் 138
78. 1893–94 திருவாங்கூர் மாநில நிருவாக அறிக்கை, பக்கம் 138
79. திருவாங்கூர் மாநில நிருவாக அறிக்கை
80. 1901–1902 ஆம் ஆண்டு திருவாங்கூர் மாநில நிருவாக அறிக்கை, பக்கம் 47
81. 1902–03ஆம் ஆண்டின் திருவாங்கூர் மாநில நிருவாக அறிக்கை, பக்கம் 47
82. 1905–06 ஆம் ஆண்டின் திருவாங்கூர் மாநில நிருவாக அறிக்கை, பக்கம் 55
83. அதே நூற்பகுதியில்
84. அதே நூற்பகுதியில்
85. நாகமையா, திருவாங்கூர் மாநில நடைமுறை நூல், பக்கங்கள் 486 மற்று 487
86. நாகமையா, திருவாங்கூர் மாநில நடைமுறை நூல், பக்கங்கள் 486 மற்று 487
87. 1907–1908ஆம் ஆண்டின் திருவாங்கூர் மாநில நிருவாக அறிக்கை, பக்கம் 57
88. 1908–1909 ஆம் ஆண்டின் திருவாங்கூர் மாநில நிருவாக அறிக்கை, பக்கம் 53
89. 1907–08 ஆம் ஆண்டின் திருவாங்கூர் நிருவாக அறிக்கை, பக்கம் 57
90. 1908–09ஆம் ஆண்டின் திருவாங்கூர் நிருவாக அறிக்கை, பக்கம் 54
91. சத்யநாதன். எஸ். சென்னை மாகாணத்தில் கல்வியின் வரலாறு
92. 1910–1911ஆம் ஆண்டின் திருவாங்கூர் மாநில நிருவாக அறிக்கை, பக்கம் 48
93. 1913–14 ஆம் ஆண்டின் திருவாங்கூர் மாநில நிருவாக அறிக்கை, பக்கம் 56
94. 1913–14 ஆம் ஆண்டின் திருவாங்கூர் மாநில நிருவாக அறிக்கை, பக்கம் 62
95. 1914–15ஆம் ஆண்டின் திருவாங்கூர் மாநில நிருவாக அறிக்கை
96. திருவாங்கூர் மாநில நிருவாக அறிக்கை
97. 1922–23ஆம் ஆண்டின் திருவாங்கூர் மாநில நிருவாக அறிக்கை
98. மாவட்டக்கல்வி அலுவலர், நாகர்கோவில், அறிக்கை நாள் 28.11.1988
98அ. ஸ்ரீதர மேனன், திருவனந்தபுரம் மாவட்ட விவரச் சுவடி , (1961), திருவனந்தபுரம், பக்கம் 657.
99. சென்னை மாநில 1956–57 ஆம் ஆண்டு பொதுக் கல்வி அறிக்கை, பக்கங்கள் 3 முதல் 5 வரை.
100. 1956–57 ஆம் ஆண்டு பொதுக்கல்வி அறிக்கை, பக்கங்கள் 290, 291, 330, 331, 338, 341, 343 மற்றும் 344.
102. 1957/58 ஆம் ஆண்டின் சென்னை மாநில பொதுக் கல்வி அறிக்கை, பக்கம் 6.
101. சத்தியநாதன் எஸ். மேற்குறிப்பிட்ட நூல் பக். 41
103. 1962–63 ஆம் ஆண்டின் தமிழ்நாடு மாநில பொதுக் கல்வி அறிக்கை, பக்கம் 3.
104. 1963–64 ஆம் ஆண்டின் சென்னை மாநில பொதுக்கல்வி அறிக்கை, பக்கம் 3.
105. அரசாணை எண். 808, கல்வி, நாள் 20.5.1965 மற்றும் 1965–66 ஆம் ஆண்டின் தமிழ்நாடு மாநில பொதுக் கல்வி அறிக்கை, பக்கங்கள் 4 மற்றும் 6.
106. 1965–66 ஆம் ஆண்டின் தமிழ்நாடு மாநில பொதுக்கல்வி அறிக்கை, பக்கங்கள் 12 மற்றும் 73.
107. தமிழ்நாடு அரசின் பொதுக் கல்வி அறிக்கை 1966–67 முதல் 1972–73 வரை பக்–4
108. அரசு ஆணை எண்.90, கல்வித்துறை, நாள் 21 சனவரி 1973
109. 1959–60ஆம் ஆண்டின், தமிழ்நாட்டில் பொதுக்கல்வி தொடர்பான அறிக்கை, பக்கம் 15.
110. அதே போன்ற பகுதியில் ... 1963–64, பக்கம் 10
111. அரசாணை எண். 2161, கல்வி, நாள் 6.10.1980
112. தமிழ்நாட்டில் பொதுக்கல்வி நிருவாக அறிக்கை, பக்கங்கள் 11 மற்றும் 92.
113. 1959–60ஆம் ஆண்டின் தமிழ்நாடு பொதுக் கல்வி அறிக்கை , பக்கம் 10.
114. 1956–57ஆம் ஆண்டின் தமிழ்நாடு பொதுக்கல்வி அறிக்கை, பக்கம்21.

115. 1957–58ஆம் ஆண்டின் தமிழ்நாடு பொதுக்கல்வி அறிக்கை , பக்கம் 58
116. அதே போன்ற நூற்பகுதியில் – 1964–65
117. 1961–62ஆம் ஆண்டின் தமிழ்நாடு பொதுக்கல்வி அறிக்கை , பக்கம் 23
118. 1962–63ஆம் ஆண்டின் தமிழ்நாடு பொதுக்கல்வி அறிக்கை , பக்கம் 10
119. அதே போன்ற நூற்பகுதியில் – 1964–65
120. 1964–65ஆம் ஆண்டின் பொதுக்கல்வியறிக்கை, பக்கம் 14
121. 1962–63 ஆம் ஆண்டின், பொதுக்கல்வி அறிக்கை, பக்கம் 10
122. 1957–58 ஆம் ஆண்டின் பொதுக்கல்வி அறிக்கை, பக்கம் 340
123. அதே போன்ற நூற்பகுதியில் (தொடர்புள்ள ஆண்டுகள்)
124. முதன்மைக் கல்வி அலுவலர், நாகர்கோவில், அறிக்கை நாள் செப்டம்பர் 1986
125. 1957–58 ஆம் ஆண்டின் தமிழ் நாடு பொதுக்கல்வி அறிக்கை, பக்கம் 21
126. 1957–58ஆம் ஆண்டு, தமிழ்நாடு பொதுக்கல்வி அறிக்கை, பக்கம் 58
127. அதே நூற்பகுதியில், பக்கம் 58
128. 1956–57 ஆம் ஆண்டின் தமிழ்நாடு பொதுக்கல்வி அறிக்கை, பக்கம் 57
129. பள்ளிக் கல்வி உதவி இயக்குநர் (புள்ளி விவரங்கள்), சென்னை
130. 1956–57ஆம் ஆண்டின் தமிழ்நாடு பொதுக் கல்வி அறிக்கை, பக்கங்கள்354 முதல் 361
131. 1957–60 ஆம் ஆண்டின் தமிழ்நாடு பொதுக் கல்வி அறிக்கை, பக்கம் 372
132. 1973–74ஆம் ஆண்டின் தமிழ்நாடு பொதுக்கல்வி அறிக்கை , பக்கம் 37
133. 1980–81ஆம் ஆண்டின் தமிழ்நாடு பொதுக்கல்வி அறிக்கை , (வெளியிடப்படாதது), பக்கம் 35.
134. முதன்மைக் கல்வி அலுவலர், கன்னியாகுமரி மாவட்டம், அறிக்கை நாள் 9.4.1988
135. 1984 ஏப்ரல் மாதம் உதவி பதிப்பாசிரியர், மாவட்டத்தில சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது, சேகரிக்கப்பட்ட தகவல்கள்.
137. 1983–84ஆம் ஆண்டின் தமிழ்நாடு பொதுக்கல்வி அறிக்கை (1987), பக்கம் 19
138. படைத் தலைமை அலுவலர் (த.நா), படை வகுப்பு , நாகர்கோவில், அறிக்கை நாள் 28.1.1988
139. அரசாணை எண், 2602, (கல்வி), நாள் 16–12–1977
140. உடல் சார்ந்த கல்வி – வகுப்பு 6 முதல் 11 வரை (1975), தமிழ்நாட்டுப் பாடநூல்கழகம்
141. இந்திய மக்கட்தொகை –1931, தொகுதி–27, திருவாங்கூர் பகுதி–1, அறிக்கை பக்கம் 301
142. ஆண்டு நூல் – 1988 – மனோரமா (1988), திருவனந்தபுரம், பக்கம் 583
143. இந்திய மக்கட்தொகைக் கணக்கெடுப்பு – 1981 – மாவட்டக்கையேடு, கன்னியாகுமரி மாவட்டம், பக்கம் 20.
144. சத்யநாதன். எஸ்., சென்னை மாநிலத்தில் கல்வியின் வரலாறு, (1894), சென்னை, பக்கம் 57.
144.அ அதே நூற்பகுதி, பக்கம் – 3
144.ஆ சென்னை மாநிலத்தின் நிருவாக அறிக்கை, 1929–30 சென்னை, (1931), பக்கம் 206
144.இ 1965–66 ஆம் ஆண்டின் தமிழ்நாடு பொதுக்கல்வி அறிக்கை
144.ஈ 1977–78 ஆம் ஆண்டின் தமிழ்நாடு மாநில நிருவாக அறிக்கை, பக்கம் 177
144உ தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் தொடர்பான அறிக்கை, நாள் 21.6.1984
144ஊ. ஸ்காட் கிறித்தவக் கல்லூரி,–பவள விழா மலர் –1967, பக்கம் 1
145. முதல்வர், ஸ்காட் கிறித்தவக் கல்லூரி, நாகர்கோவில், அறிக்கைகள் நாள் 6.3.1987 மற்றும் 14.12.1988
146. முதல்வர், தென் திருவாங்கூர் இந்து கல்லூரி, அறிக்கை நாள் 21.4.1987
147. திருநெல்வேலி மண்டலம், கல்லூரிக் கல்வி துணை இயக்குநரின் 17.12.1987 நாளைய அறிக்கை
148. முதல்வர் நேசமணி நினைவு கிறித்துவக் கல்லூரி மார்த்தாண்டம், நாள் : 29–7–1987 மற்றும் 18–12–1988
149. கல்லூரிக் கல்வித் துணை இயக்குநர், திருநெல்வேலி மண்டலம், அறிக்கை

150. கல்லூரி முதல்வரின் அறிக்கைகள், நாள் 27–9–1977, 1–12–1988 மற்றும் அரசாணை எண்.180 (கல்வி), நாள் 4–2–1975

151. கல்லூரி முதல்வரின் அறிக்கை நாள் 12–12–1988

151அ. முதல்வர், ஹோலி கிராஸ் கல்லூரி, நாகர்கோவில், அறிக்கை நாள் 17.11.1986 மற்றும் 22.12.1988.

152. முதல்வர், ஸ்ரீ தேவி குமரி பெண்கள் கல்லூரி, அறிக்கை நாள் 1986

153. முதல்வர், வழிமுனைவர் குமாரசாமி கல்லூரி, நாகர்கோவில் , அறிக்கை நாள் 30.6.1982.

153அ. கல்லூரிக் கல்வி துணை இயக்குநர், திருநெல்வேலி மண்டலம், திருநெல்வேலி, அறிக்கை நாள் 17.12.1987

154. முதல்வர், திரு அய்யப்பா பெண்கள் கல்லூரி, நாகர்கோவில், அறிக்கைகள் நாள் 30.10.1986 மற்றும் 29.11.1988

155. முதல்வர், புனித ஜூட்ஸ் கல்லூரி, அறிக்கை நாட்கள் 13.1.1988 மற்றும் 3.12.1988

156. முதல்வர், முகம்மதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருவிதாங்கோடு, அறிக்கை நாள் 11.12.1987

157. முதல்வர், சிவந்தி ஆதித்தனார் கல்லூரி, பிள்ளையார்புரம் அறிக்கைகள் நாள் 20.2.1987, 9.3.1987 மற்றும் 26.11.1988

158. பதிவாளர், அன்னை தெரசா பெண்கள் கல்லூரி, கொடைக்கானல், அறிக்கை நாள் 17.9.1987

159. 1) கல்லூரிகள் கல்வி இயக்குநர், சென்னை, அறிக்கை நாள் 13.3.1987

2) முதல்வர், பெண்கள் கிறித்தவக் கல்லூரி, நாகர்கோவில் , அறிக்கை, நாள் 28.11.1988

159அ. முதல்வர், என்.வி.கே.எஸ்.டி. ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, ஆத்தூர், அறிக்கை நாள் 28, .நவம்பர் 1988

160. பதிவாளர், தமிழ்நாடு ஹோமியோபதிக்குழு, நாள் 30.8.1988

161. 1905–1906 மற்றும் 1909–1910 ஆண்டுகளின் தமிழ்நாடு பொதுக்கல்வி குறித்த அறிக்கை, பக்கம் 57

162. தொழிற்றுறை இயக்குநரகத்தின் 1979–81 ஆண்டு அறிக்கை, பக்கம் 6

163. தொழிற்றுறை இயக்குநரகத்தின் 1979–81 ஆண்டு அறிக்கை, பக்கம் 6

164. 1984–85 ஆம் ஆண்டு, தனியார் கல்வி நிறுவனங்கள், பல தொழில் நுணுக்கப் பயிற்சி நிறுவனங்கள், பொறியியல் கல்லூரிகள், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரி போன்றவற்றை, விதிமுறைப்படி நடத்த அரசு கொள்கை முடிவெடுத்துள்ளது. இந்நிறுவனங்கள், அரசுக் கொடை பெறாத போதிலும், கலை நிலைக்கொத்த மற்றும் கல்லூரிகளின் சேர்க்கும் பொறுப்பு அரசினிடம் உள்ளது

165. வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்குநர், சென்னை, அறிக்கைகள் 12.8.1986 மற்றும் 23.12.1988.

166. முதல்வர், அரசு பல தொழில் நுணுக்கப் பயிற்சி நிறுவனம், நாகர்கோவில், அறிக்கை நாள் 7 சனவரி 1987.

167. தொழில் நுட்பக்கல்வி இயக்குநர், மதுரை, அறிக்கை நாள் 10 செப்டம்பர் 1986

168. முதல்வர், என்.எம்.எஸ். காமராஜ் பல தொழில் நுணுக்கப் பயிற்சி நிறுவனம், அறிக்கை நாள் 31 மார்ச் 1987.

170. முதல்வர், நூருள் இஸ்லாம் பல தொழில் நுணுக்கப் பயிற்சி நிறுவனம், பூங்கரை, அறிக்கை நாள் 13. ஏப்ரல் 1986.

171. முதல்வர், மார்னிங் ஸ்டார் பல தொழில் நுணுக்கப் பயிற்சி நிறுவனம், சுங்கங்கடை, அறிக்கை நாள் 25–7–1987.

172. முதல்வர், கலைவாணர் என்.எஸ்.கே. பல தொழில் நுணுக்கப் பயிற்சி நிறுவனம், செண்பகராமன் புதூர், அறிக்கை நாள் 10 அக்டோர் 1986.

173. வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்குநர், சென்னை, துண்டு வெளியீடு, நாள் 3–4–1987.

174. முதல்வர், அரசு தொழில் பயிற்சிப் பள்ளி, நாகர்கோவில், அறிக்கை நாள் 29 செப்டம்பர் 1986.

175. (1). முதல்வர், எஸ்.எம்.ஆர்.வி. பெண்கள் அரசு தொழில் பயிற்சிப் பள்ளி, நாகர்கோவில், அறிக்கை நாள் 20 அக்டோபர் 1986.

(2) வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்குநர், சென்னை, அறிக்கை நாள் 23 டிசம்பர் 1985.

176. முதல்வர், நிர்மலா தொழில் நுணுக்கப் பயிற்சிப் பள்ளி, அறிக்கை நாள் 8 அக்டோபர் 1986.
176.அ. முதல்வர், சி.எம்.எஸ். தொழில்பயிற்சிப் பள்ளி, அழகிய பாண்டியபுரம், அறிக்கை நாள் 24 நவம்பர் 1986.
176.ஆ. முதல்வர், புனித லாரென்ஸ் தொழில் நுணுக்க நிறுவனம், நாகர்கோவில், அறிக்கை நாள் 20, அக்டோபர் 1986.
177. முதல்வர், நவபாரத் தொழில் பயிற்சிப் பள்ளி, குழித்துறை, அறிக்கை நாள் 15 அக்டோபர் 1986.
178. முதல்வர், புனித அன்னை தொழில் பயிற்சிப்பள்ளி, குழித்துறை, அறிக்கை நாள் 4 அக்டோபர் 1986.
179. முதல்வர், கன்னியாகுமரி தென்னிந்தியத் திருச்சபை மாவட்டச் சபைய முதல்வரது அருளாட்சிப் பரப்பின் பயிற்சிப்பள்ளி, அறிக்கை நாள் 20, அக்டோபர் 1986.
180. நேசமணி போக்குவரத்துக் கழகம் தொழில் பயிற்சிப்பள்ளி, நாகர்கோவில் அறிக்கை அக்டோபர் 1986.
180.அ. முதல்வர், ஜே.ஈ. தொழில் பயிற்சிப்பள்ளி, நாகர்கோவில், அறிக்கை நாள் 7 அக்டோபர் 1988.
182. முதல்வர், நண்பர்கள் தொழில் பயிற்சிப் பள்ளி, மத்திக்கோடு , அறிக்கை நாள், அக்டோபர் நாள் 18, 1986.
183. முதல்வர், பாரத் பொறியியல் பயிற்சி மையம், நாகர்கோவில், அறிக்கை நாள் 6, அக்டோபர் 1986.
183.அ. முதல்வர், தொழில் நுணுக்க நிறுவனம் மற்றும் தொழில் பயிற்சிப் பள்ளி, நாகர்கோவில், அறிக்கை நாள் 30, நவம்பர் 1988
184. இயக்குநர், தொழில் நுணுக்கக்கல்வித்துறை, சென்னை, அறிக்கை நாள் 19, செப்டம்பர் 1988.
185. பிள்ளை.கே.கே. தமிழர்களின் சமூக வரலாறு, தொகுதி–1 (1975), சென்னை, பக்கம் 384.
186. அதே நூற்பகுதியில், பக்கம் 398
187. பதிவாளர், அன்னை தெரசா பல்கலைக் கழகம், கொடைக்கானல், அறிக்கை நாள் 14, அக்டோபர் 1987
188. பெண்கள் பள்ளிகளின் பெண்–ஆய்வாளர், நாகர்கோவில் , அறிக்கை நாள் 17, செப்டம்பர் 1987
189. 1961–62 ஆம் ஆண்டின், சென்னை மாநில பொதுக்கல்வி அறிக்கை.
190. மற்றசாரா மற்றும் முதியோர் கல்வித்துறை இயக்குநர், சென்னை அறிக்கை நாள் 31, ஆகஸ்டு 1987
(1). மாவட்ட முதியோர் கல்வி அலுவலர், நாகர்கோவில் , அறிக்கை நாள் 28, நவம்பர்1988.
(2) புறவடிவம் சாராத மற்றும் முதியோர் கல்வித்துறை இயக்குநர், சென்னை, அறிக்கை நாள் 23, டிசம்பர் 1988.
191. சமூக நல இயக்குநர், சென்னை–35. அறிக்கை 25, ஆகஸ்டு 1987
192. தலைமை ஆசிரியர் அரசு விழியிழந்தோர் பள்ளி நாகர்கோயில் அறிக்கை நாள் 10, மே 1988
193. ஜானிபுரம் சி.எஸ்.ஐ. பார்வையிழந்தோர் பள்ளி தாளாளரின் அறிக்கை. நாள் 4 செப் 1988
194. கோட்டாரம், காது கோளாதோர்கான சி.எஸ்.ஐ. உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியரின் அறிக்கை நாள் 10, மே, 1988.
195. கன்னியாகுமரி மாவட்ட நூலக அலுவலரின் அறிக்கை நாள் 28 செப். 1977
196. காப்பாளர், பத்மநாபபுரம் அரண்மனை, அறிக்கை நாள் செப்டம்பர் 8, 1988
197. பத்மநாபன் எஸ்., முனைவர், தமிழ் உலகத்திற்குக் கன்னியாகுமரியின் பங்கு, பக்கங்கள் 20 முதல் 27.

இயல் - 16

மருத்துவம் மற்றும் பொது சுகாதாரப்பணிகள்

பண்டைக் காலத்தில் மக்கள் நல்வாழ்வும், மக்களுக்கான மருத்துவ வசதிகளும்

மருந்து, மனிதர்களைப் போன்றே மிகப் பழமையானதாகும். மருத்துவத் தொழிலும், பழக்கமும், கிறிஸ்து பிறப்பதற்கு, மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, இந்தியாவில் நடைமுறையிலிருந்து வந்ததாக, தொல்பொருள் ஆராய்ச்சி மற்றும் இலக்கிய ஆதாரங்களினின்றும் தெரிய வருகிறது. சாரகா, சுஸ்ருதா மற்றும் வாக்பதா ஆகியோரது நூல்கள், தொன்மையான மற்றும் புகழ் சான்ற இந்திய மருத்துவ ஏடுகளாகக் கருதப்பட்டன. கௌடில்யரின் அர்த்தசாஸ்திரம், அசோகரின் அரசாணைகள், சோழர்களின் கல்வெட்டுக்கள், மற்றும் ஏனைய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆவணங்கள், இந்தியாவின் மருத்துவத் துறையில் இன்றியமையாத சான்றுகளாக விளங்குகின்றன. தமிழ்நாட்டில் பின்பற்றப்பட்டு வந்த பண்டைகால மருத்துவ முறையைப்பற்றிய மிகப்பயனுள்ள சான்றுகளை, தொல்காப்பியம், திருக்குறள் மற்றும் பிற சங்க இலக்கியங்களில் காண முடிகிறது. மூலிகை வேர்களிலிருந்து கிடைக்கப்பெறும் சித்த மருத்துவ முறையிலான மருந்துகள் தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே, பழக்கத்திலிருந்து வந்தமைக்கும் பற்பல சான்றுகள் உள[1].

மருத்துவத் துறையில், கன்னியாகுமரி மாவட்டம், மிகுந்த ஈடுபாடு கொண்டதாகும். இயற்கையிலேயே, விலை மதிக்க முடியாத, அபூர்வ மூலிகைகளையும், தாதுப்பொருள்களையும் தன்னகத்தே கொண்ட பல மலைகள் மற்றும் குன்றுகள் சூழ்ந்து, மிகப்புகழுடன் இம்மாவட்டம் அமையப்பெற்றுள்ளது. கன்னியாகுமரிக்கு அருகாமையில் அமைந்துள்ள மருத்துவமலை, அதனுடைய பெயர் அமைப்பிற்கேற்ப, "மருத்துவாழ் மலை", அதாவது, "மருந்துகளையுடைய மலை" என அழைக்கப்படுகிறது. அசோக மாமன்னர் காலத்து புத்த பிட்சுக்கள், இம்மலை, மருத்துவ மூலிகைகளையும், உயிர் சார்ந்த தாதுப் பொருள்களையும் பெற்றுள்ளதாகக் கூறியுள்ளனர். இராமாயண வீரகாவியத்தில் குறிப்பிட்டுள்ள இராம, இராவணப், போர் நடந்தபோது, இலங்கை செல்ல, அனுமான் சுமந்து வந்த, கந்தமதன மலையின் ஒரு துண்டு, இங்கே சிதறி விழுந்து விட்டதாகவும், அதுவே மருத்துவமலை என அழைக்கப்படுகிறதெனக் கூறப்படுகிறது. அபூர்வமான மூலிகைகள், மற்றும் வேர்கள் ஏராளமாக இம்மலையில் உள்ளன[2]. பழந்தமிழுக்கு இலக்கணம் வகுத்த, அகத்திய மாமுனிவர், மிகப்பெரும் சித்தராக, சித்த மருத்துவ நிபுணராகத் திகழ்ந்தார் (மூலிகைகளை வைத்து மருத்துவம் செய்தவர்களே, சித்தராக அக்காலத்தில், அழைக்கப்பட்டனர்). நாட்டின் தென் முனையிலுள்ள இவ்விடத்தில்தான் அகத்திய மாமுனிவர் வாழ்ந்து வந்ததாகப் புராணம் கூறுகிறது. மிகுந்த அறிவாளியான இம்

முனிவர், மருத்துவமலைக்கு அருகாமையிலுள்ள கிராமத்தில் வாழ்ந்து வந்ததாகவும், இம்மாமுனிவரை கௌரவிக்குமுகத்தான், இக்கிராமத்திற்கு, அகஸ்தீஸ்வரம் என பெயர் சூட்டப்பட்டதாகவும், புராணங்கள் கூறுகின்றன. இக்கிராமத்தில், "அகஸ்தீஸ்வரமுடையாருக்கு அர்ப்பணம் செய்யப்பட்ட கோவில் ஒன்று உள்ளது. இக்கோவில், அகத்திய மாமுனிவரால் புனிதமாக்கப்பட்டதென நம்பப்படுகிறது. மருத்துவம், இலக்கணம் இவை தவிர, அகத்தியர் வர்ம சாத்திர வல்லுநராகவும் திகழ்ந்தார்; பனையோலை ஆவணங்களான "வர்மணி" மற்றும் வர்ம சாத்திரம் ஆகியவை, அகத்தியரால் எழுதப்பட்டவையாகும். இன்று கூட, வர்ம மருத்துவக்கலை, கன்னியாகுமரி மாவட்டத்தில், குரு-சிஷ்ய பரம்பரை முறைப்படி, கற்பிக்கப்படுவதாகவும், இக்கலையை நன்கு கற்ற பெரிய மருத்துவர்கள் முறையான அளவில் தமிழ் மருந்துகளை அளித்து, நோயினை குணப்படுத்தி வருகிறார்கள். பல இனங்களில் இம்மருத்துவ முறை வெற்றி கண்டுள்ளது கண்கூடு.

கிறிஸ்த்துவ சகாப்தத்திற்கு முன்பிருந்தே, அகில உலக மருத்துவத் துறையில், கன்னியாகுமரி மிக முக்கியமான பங்காற்றி வருகிறது. சாரக சமிதத்தை நோக்குங்கால், மருத்துவத் துறையில் ஒரு முக்கியமான கூட்டம் நடந்ததாக நாம் அறிகிறோம். அதாவது, இமயமலைச் சரிவில் கி.மு. 1000 ஆண்டில், முதல் அகில உலக மருத்துவ மாநாடு நடந்ததாகவும், அதில் 53 முனிவர்கள் இந்திய மருத்துவ விஞ்ஞானம் தொடர்பான மூன்று வித மருத்துவ முறை குறித்து ஆழ்ந்து ஆராய்ந்ததாகவும், அவை ஹேது சூத்ரா நோய் காரணம் பற்றிய ஆய்வு நூல், வியாதி சூத்ரா எனும் நோய்க்குண நூல், மற்றும் ஔஷத சூத்ரா எனும் மருத்துவப் பொருளியல் ஆகியவையெனவும் தெரிய வருகிறது. சமிதா என்ற நூலில் ஒரு இயலில் இவ்வுலக மாநாட்டில் கலந்து கொண்டோரின் பட்டியல் கொடுக்கப்பட்டுள்ளது. இக்கூட்டத்திற்கு பரத்வாஜ முனிவர் தலைமையேற்றதாகவும் அகத்திய முனிவர் தென்னிந்தியாவின் சார்பில் கூட்டத்தில் கலந்து கொண்டதாகவும் அப்பட்டியலினின்றும் தெரிய வருகிறது. இக்கூட்டத்தில், அகத்தியர் எட்டுவகையான மருத்துவம் குறித்து, விரிவான உரையினை நிகழ்த்தியிருக்கிறார். இவற்றில், பொது மருத்துவம், குழந்தை மருத்துவம், இசிவு நோய் மருத்துவம், கண், காது, தொண்டை அறுவை மருத்துவம், நச்சு நீக்கு மருத்துவம் மற்றும் ஆண்கள் இனப்பெருக்க ஆற்றல் மருத்துவம் ஆகியவை அடங்கும். அகத்தியர் காலத்திலிருந்து இன்றுவரை, சித்த மருத்துவமுறை, கன்னியாகுமரி வாழ்மக்களால், பேணிக்காக்கப்பட்டு வருகிறது.

"எதிர்முறை" (ஆங்கில) மருத்துவமும் கன்னியாகுமரி மாவட்டத்தில் மிக கவனத்துடன் மேம்பாடடைந்து வருகிறது. மாவட்டத்தின் "எதிர்முறை" மருத்துவத் துறையில், பண்டைய பிராடெஸ்டென்ட் கிறிஸ்த்தவ சமய பரப்பாளர்கள் முன்னோடியாகக் கருதப்பட்டார்கள். நாகர்கோவிலில் ஒரு

மருத்துவ மனையை நிறுவி, தென்னிந்திய, திருச்சபை என அழைக்கப்படும் இலண்டன் சமய பரப்புக்குழு, 1838ஆம் ஆண்டு, இம்மாவட்டத்தில் தற்கால, "எதிர்முறை" மருத்துவத்திற்கு, அடித்தளம் அமைத்தது. மாவட்டத்தில், மருத்துவத் துறையில் இச்சமயப் பரப்பாளர்களின் பணி மகத்தானது, ஆங்கிலேயரால் அறிமுகப்படுத்தப்பட்ட "எதிர்முறை" மருத்துவப்பணி, பிணி நீக்கும் முறையாக மாவட்டத்தில், நாளாவட்டத்தில் கடைப்பிடிக்கப்பட்டது.

கன்னியாகுமரி மாவட்டத்தில், மக்கள் நல்வாழ்வுப்பணி, முந்தைய திருவாங்கூர் மாநிலத்தில், அம்மை குத்தும் பணி முறையாகக் கையாளப் பட்டு வந்ததால், வளர்ச்சியுறத் துவங்கியது. அம்மை குத்துதல் ஒரு மாநிலக் கொள்கையாக, 1813ஆம் ஆண்டு, அறிமுகப்படுத்தப்பட்டது. ஒரு தலைமை அம்மை குத்துபவர், மேலும் கூலி அம்மை குத்துபவர்கள் ஆகியோரால், 1864ஆம் ஆண்டு வரை, அம்மை குத்தும் பணி மேற்கொள்ளப் பட்டது. அவர் தர்பார் மருத்துவ அலுவலரின் நேரடி ஆணையின் படி செயல்பட்டு வந்தனர். 1865-66ஆம் ஆண்டு, அம்மை குத்தும் பணிக்கென தனித்துறை அமைக்கப்பட்டது. சென்னையைச் சேர்ந்த டாக்டர் பழனியாண்டி (Palney Andy) என்பர், அம்மை குத்தும் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார். மக்களின் செல்வாக்கினைப் பெற்ற அவர், சாதி வேறுபாடுகளைக் களைய பெரிதும் பாடுபட்டார்.[3]

துவக்க காலத்தில், உயர் சமுதாய வகுப்பினர், மிகவும் எளிதாக அம்மை குத்திக்கொள்ள முடிந்தது. தாழ்த்தப்பட்ட வகுப்பினர் அம்மை குத்திக்கொள்ள இயலவில்லை. ஏனெனில், அம்மை குத்துபவர்கள், உயர் சமுதாய வகுப்பினராக இருந்ததால், அவர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பி னருக்கு, அம்மை குத்த அச்சப்பட்டார்கள். இந்நிலை களையப்பெற, புலையர் வகுப்பைச் சார்ந்த இரு இளைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அம்மை குத்துபவர்களாக நியமனம் பெற, 1869-70-ல், இலண்டன் சமய பரப்புக் குழுப் பள்ளியில், பயிற்சியளிக்கப்பட்டார்கள். அக்கால சூழ்நிலையில் இது ஒரு புரட்சிகரமான செயலாக மட்டும் அமையாது, ஒரு பெரிய சாதனை யாகவே கருதப்பட்டது.

சாதி வேறுபாடு மட்டுமின்றி, இந்து சமயத்தைச் சார்ந்த உயர் சமுதாய வகுப்புப் பெண்களும் முகம்மதிய சமயத்தைச் சார்ந்த பெண்களும், அம்மை குத்திக்கொள்ள மறுத்தனர். இதுதவிர, மலைவாழ் வகுப்பினருக்கு அம்மை குத்துவதிலும் சில இடையூறுகள் எதிர்கொள்ளப்பட்டன.

துவக்கத்திலிருந்தே, நாட்டு மருந்து மருத்துவத்தில் பழக்கப்பட்ட மக்கள், ஆங்கிலேய மருத்துவ முறைக்கு எதிர்ப்புக் காட்டி வந்தனர். இந்த எதிர்ப்புக்கிடையிலும் இலண்டன் சமயப் பரப்புக் குழு, 1830 ஆம் ஆண்டு, நெய்யூரில், ஒரு மருத்துவ மனையை நிறுவி, தனது பணியினைத் துவங்கியது.[4] நாகர்கோவிலிலுள்ள வடசேரியில், இரட்சணிய சேனை

(சால்வேசன் ஆர்மி), 1892 ஆம் ஆண்டு, நிறுவப்பட்ட இம்மருத்துவ மனை, கன்னியாகுமரி மாவட்ட மருத்துவ வரலாற்றில், மற்றுமொரு மைல் கல்லாகும்.

பின்னர், தொடர்ந்து பணியாற்றிய தர்பார் மருத்துவர்கள், பல்வேறு வகைப்பட்ட மருந்துகளை மக்களிடையே பிரபலமாக்க உரிய வழிவகைகளை மேற்கொண்டார்கள். உள்ளூர் மக்களில், தேவையானவர்களுக்கு ஐரோப்பிய மருத்துவப் பள்ளியில், பயிற்சியளிக்கும் கொள்கையினைக் கையாண்டார்கள். உள்நாட்டு மருத்துவ மனைகளில் பணியாற்றிய மருத்துவர்கள், வியாதிகளை அறிய பூதக்கண்ணாடி, இதயத்துடிப்பு மாணி, மருத்துவர் வெப்பமானி, வேதியியல் சார்ந்த எதிர்த்தாக்குதல் காட்டும் பொருள், மற்றும் பிற துணைக்கருவிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தியமை, குறிப்பிடத்தக்கது.

தனியார் மருத்துவ நிறுவனங்களின் செயல் முறையை ஊக்குவித்திட, முறையாக அந்நிறுவனங்களுக்கு மருத்துவ உதவியளித்திடும் முறை, 1895-96ஆம் ஆண்டு அரசால் துவங்கப்பட்டது. கன்னியாகுமரி மாவட்டத்தில் பராமரிப்புக் கொடையாக, நெய்யூரிலுள்ள தென்னிந்தியத் திருச்சபை மருத்துவமனை ஆண்டொன்றிற்கு, ரூபாய் 1200/- (ரூபாய் ஆயிரத்து இருநூறு) பெற்றது[5]. சிறிய மருத்துவ மனைகள், (வைத்திய சாலைகள்), ஆண்டொன்றிக்கு ரூபாய் 35/- (ரூபாய் முப்பந்தைந்து) மதிப்பூதியம் பெற, அனுமதிக்கப்பட்டன. ஐரோப்பிய முறையில் செயலாற்றிய, நிறுவனங்களை தர்பார் மருத்துவர், மேற்பார்வை செய்து, கண்காணித்து வந்தார்.

மறுபுறம், *அட்டாங்கரிதயம்* என அழைக்கப்படும் நாட்டு மருத்துவ முறை, அரசின் நல்லாதரவுடன் புதுப்பிக்கப்பட்டது. அங்கீகரிக்கப்பட்ட மருத்துவர்கள் தவிர, முந்தைய திருவாங்கூர்-கொச்சி மாநில முழுமையிலும், நூற்றுக்கணக்கான அங்கீகாரமற்ற நாட்டு மருத்துவர்கள் பணியாற்றி வந்தனர். பணம் படைத்தோர், நாட்டு மருந்துகளின் மீது, நல்ல நம்பிக்கை கொண்டிருந்தனர். மருத்துவர்களில் பலர், போலி மருத்துவர்களாயிருந்தும், அவர்களின் மீதான மக்களின் நம்பிக்கை மிகுந்த செல்வாக்கு, நிலையானதாகவே இருந்தது. நாட்டு மருத்துவ முறையில், பொதுவான மருந்துகள் யாதெனில், லேகியங்கள், கஷாயங்கள், உடலின் அவயங்களில் பயன்படுத்த எண்ணெய் ஆகியவற்றுடன், கண்டிப்பான மற்றும் அளவான உணவு முறையுமாகும்.[6]

ஆயுர்வேத விஞ்ஞான மருத்துவ முறையில் *சிந்தாமணி* என்ற மற்றொரு நாட்டு மருத்துவ முறையும் இம்மாவட்டத்தில், நடைமுறையிலிருந்து வந்தது. நாடியை வைத்து நோயினைக் கண்டுபிடிப்பதே இந்த முறையின் முக்கிய அம்சமாகும். இந்த முறையில், மிகுந்த கவனத்துடன் தாதுப்பொருள்களடங்கிய மருந்துகள் தயாரிக்க வேண்டியிருந்ததால், இந்த மருத்துவ முறையில், நோயாளிகளின் எண்ணிக்கை, குறைந்த அளவிலேயே காணப்பட்டது.

பிறப்பு, இறப்புப் புள்ளிவிவரங்கள், மக்களின் உடல் நிலையின் தரம் மற்றும் இறப்பிற்கான காரணங்கள்

கி.பி. 1893-94 வரை, மாவட்டத்தில் பிறப்பு, இறப்புப் புள்ளி விவரங்களைப்பதிய, முறையான நிறுவனமில்லை. கிராம அலுவலர்கள், "ஜனன மரணக் கணக்கு" என அழைக்கப்படும் "பிறப்பு-இறப்புப் பதிவேட்டினைப் பராமரித்து வந்தனர். இப்பதிவேடு, உரிய விவரங்களடங்கியதாகவோ, விரிவானதாகவோ இல்லை. 1893-94 ஆம் ஆண்டின், நகரங்கள் மேம்பாடு மற்றும் பாதுகாப்பு வரையறை - II (Towns Improvement and Conservancy Regulation - II) விதி இயற்றப்பட்ட பின்னர், அவ்விதியின் கீழ், அரசால் நியமிக்கப்பட்ட நகர மேம்பாட்டுக் குழுவின் கட்டுப்பாட்டிலிருந்த, முந்தைய திருவாங்கூர் மாநிலத்தின், திருவனந்தபுரம், கொல்லம், ஆலப்புழை, கோட்டயம் மற்றும் நாகர்கோவில் ஆகிய நகரங்களில், பிறப்பு-இறப்பு பதியும் முறை துவக்கப்பட்டது. 1895 ஆம் ஆண்டு, ஆகஸ்டு மாதம், முந்தைய திருவாங்கூர் மாநில முழுமையிலும், சீரான முறையில், பிறப்புகள் மற்றும் இறப்புகளைப் பதிய, அரசால் ஒரு திட்டம் வகுக்கப்பட்டது. பின்னர், சுகாதார ஆணையரின் கட்டுப்பாட்டில், *சுகாதாரத் துறை* என்ற புதிய துறை நிறுவப்பட்டது. நகர மேம்பாட்டு வரையறை செய்யப்பட்ட விதியின் செயல்பாட்டிலடங்கிய நகரங்கள் நீங்கலாக, திருவாங்கூர் மாநிலத்திலுள்ள ஏனைய நகரங்களனைத்திலும் பிறப்புகள்-மற்றும் இறப்புகளைப் பதிய அவர், பொறுப்பிலமர்த்தப்பட்டார்[7]. சுகாதாரம் தொடர்பான திட்டங்களைத் தீவிரமாக செயல்முறைப்படுத்திட, திருவனந்தபுரம், கொல்லம், கோட்டயம் மற்றும் வைக்கம் (தற்போதைய கேரள மாநிலத்திலுள்ளவை) ஆகிய நான்கு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. தற்போதைய கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தோவாளை, அகஸ்தீஸ்வரம், எரணியல், கல்குளம் மற்றும் விளவங்கோடு ஆகியவை, திருவனந்தபுரம் மாவட்டத்தில் அமைந்திருந்தன. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு ஆய்வாளர் நியமிக்கப்பட்டார். அவர், மாவட்டத்தில் நகர மேம்பாட்டு வரையறை செய்யப்பட்ட விதி செயல்முறைப்படுத்தப் படாத நகரங்களனைத்திலும பிறப்பு-இறப்பு பற்றிய புள்ளிவிவரங்களை சரிபார்ப்பதும், சுகாதாரம் தொடர்பான பணிகளை மேற்கொள்வதுமாகும். அம்மைகுத்தும் பணியினையும் அவர் கண்காணித்து வந்தார். கிராம மக்களின் வீடுகளுக்குச் சென்று, அவர்களுக்கு மருத்துவ உதவியும் செய்து வந்தார்.

பிறப்பு-இறப்புப் புள்ளிவிவரங்களைப் பதிவு செய்யும் பணி, பிராவர்த்திக் கச்சேரியில் மேற்கொள்வதற்காகவே, தனியாக நியமிக்கப்பட்ட ஒரு பிராவர்த்தி கணக்கரால் (சாதாரணமாக ஒரு நாலுவேலி கணக்கர்) மேற்கொள்ளப்பட்டது. ஒவ்வொரு பகுதிக்கும், இப்புள்ளிவிவரங்களை சேகரிப்பதற்காகவே அனுப்பப்படும் "விருத்திகாரன்", என்பவர், புள்ளி விவரங்களைச் சேகரித்து கணக்கருக்கு அளித்துவந்தார். அகஸ்தீஸ்வரம் மற்றும் தோவாளை வட்டங்களில், கிராமக்காவலர், பிறப்பு-இறப்பு தொடர்பான புள்ளி விவரங்களைச் சேகரித்து அளித்து வந்தார்.

பதிவேடுகளிலுள்ள பதிவுகளை, அம்மை குத்துபவர்களும், அடிக்கடி ஆய்ந்து சரிபார்த்து வந்தனர். (நகர் மேம்பாட்டுக் குழுவிலடங்கிய பகுதிகளைப் பொறுத்தவரை, குழுவின் கட்டுப்பாட்டில் பணியாற்றியோர், அப்புள்ளி விவரங்களை சேகரித்து, சுகாதார ஆணையருக்கு அளித்து வந்தனர்) கிராமப்புறப் பகுதிகளில், வீட்டு வழங்கு கிராம முறையோ, நகர்ப்புறப் பகுதிகளில், பிறப்புகள்-இறப்புகள் கட்டாய அறிவிப்பு முறையோ, நடைமுறையிலில்லை.

கன்னியாகுமரி மாவட்டத்தில், 1953ஆம் ஆண்டின், திருவாங்கூர்-கொச்சி பதிவுச் சட்டத்தின்படி, பிறப்புகளும், இறப்புகளும் பதியப்பட்டு வந்தன. பல இனங்களில், பிறப்புகளும், இறப்புகளும் சரிவர பதியப்படவில்லையென்ற விவரம் தெரிய வந்ததால், பிறப்பு-இறப்பு பதிவு, கட்டாயமாக்கப்பட்டது. பிறப்பு-இறப்பு பதியும் பணியில், மாவட்டப் பதிவாளர் அலுவலகங்கள், புள்ளி விவர அலகுகள், மற்றும் உள்ளாட்சி நிறுவனங்கள் ஆகியவையும் ஈடுபடுத்தப்பட்டன.

மாவட்டம், தமிழ்நாட்டுடன் இணைந்த பின்னர், மக்கள் நல்வாழ்வு மற்றும் தடுப்பு மருந்துகள் இயக்குநர்தான், புதிதாக இயற்றப்பட்ட 1977 ஆம் ஆண்டின், பிறப்புகள்-இறப்புகள் சட்டத்தின்படி, பிறப்புகள் மற்றும் இறப்புகள் சட்ட பூர்வ முதன்மைப் பதிவாளர் ஆவார்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் 1978 முதல் 1987 முடிய மேற்கொள்ளப்பட்ட பிறப்பு-இறப்பு புள்ளி விவரங்கள், கீழே கொடுக்கப் பட்டுள்ளன[8]:

ஆண்டு	*பிறப்பு வீதம்*	*இறப்பு வீதம்*
(1)	(2)	(3)
1978	25.43	7.08
1979	26.58	7.02
1980	27.07	6.85
1981	26.94	7.44
1982	24.45	6.96
1983	25.39	6.78
1984	22.98	6.17
1985	23.72	6.27
1986	22.50	6.08
1987	21.10	5.20

கிராமப்புறப் பகுதியில், பிறப்பு-இறப்புப் பதிவுப் பணி, மருத்துவத் துறையைச் சார்ந்த சுகாதார உதவியாளரால் மேற்கொள்ளப்படுகிறது. தரத்திலும், அளவிலும் முக்கிய விளைவுகள் தொடர்பான இப்பணி, ஏனைய மாவட்டங்களை விட, நல்ல முறையில் செயலாற்றப்படுகிறது. பிறப்பு-இறப்புப் பதிவில் மாநிலத்திலேயே சிறந்த மாவட்டமாக, இம்மாவட்டம், மத்திய அரசால், 1981 மற்றும் 1986 ஆகிய இரு ஆண்டுகளில், தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

இறப்புக்கான காரணங்கள் - 1978 முதல் 1985 வரை

காரணங்கள்	1978	1979	1980	1981	1982	1983	1984	1985
டைபாய்டு காய்ச்சல்	48	19	4	21	4	3	10	7
பிற காய்ச்சல்	434	437	390	432	390	214	151	123
வயிற்றுப்போக்கு	186	282	81	78	81	20	31	27
எலும்புருக்கிநோய்	350	293	179	307	179	290	249	301
பிற வியாதிகள்	1369	1346	1362	1466	1362	1441	1527	1212
மஞ்சக்காமாலை	97	87	69	77	69	57	152	32
புற்றுநோய்	231	211	281	264	281	250	205	263
இதய நோய்கள்	692	863	981	1113	981	788	784	937
நீரழிவு நோய்	124	131	128	141	128	188	335	182
பக்கவாதம்	1300	1337	1358	1498	1358	916	957	914

இறப்புக்கான காரணங்கள் - 1978 முதல் 1985 வரை - தொடர்ச்சி

காரணங்கள்	1978	1979	1980	1981	1982	1983	1984	1985
ரண ஜன்னி	89	103	78	75	78	38	30	35
தொண்ட அழற்சி	4	4	9	6	9	1	13	–
தற்கொலை	19	18	61	21	61	59	32	67
விபத்து	62	58	71	45	71	104	54	144
விஷ உணவு	2	–	2	1	2	–	52	–
ஊட்டச்சத்துக் குறைபாடு	302	242	181	213	181	43	4	33
குடல் புண்	228	156	239	233	239	293	305	263
வெறிநாய்க்கடி	7	12	9	9	9		10	3
பாம்புகடி	16	16	21	22	21	21	14	16
கொடிய விலங்குகளால் மரணம்	14	1	–	–	–	1	–	1
பிரசவகால மரணம்	46	61	47	55	47	40	29	34
பிற காரணங்கள்	3668	4029	3886	4116	4180	5060	4837	4912

மாநிலத்திலுள்ள ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பு நோக்கும்போது, கன்னியாகுமரி மாவட்டத்தின் பிறப்பு வீதம், மாநிலத்திலேயே மிகக்குறைந்த, அதாவது 15.6 வீதமுள்ள நீலகிரி மாவட்டத்திற்கு அடுத்த நிலையிலுள்ளது. இறப்பு வீதத்தை ஒப்பிடும்போது, மாநிலத்திலேயே மிகக் குறைந்த, அதாவது, 1000 மக்கட்தொகைக்கு ஆறு என்ற வீதத்தைக்கொண்ட தர்மபுரி மாவட்டத்திற்கு அடுத்த நிலையில், இம்மாவட்டம் உள்ளது.

மாவட்டத்தின் ஆண், பெண் இரு பாலரது திருமண வயது முறையே 27.4 மற்றும் 23 ஆண்டுகள் ஆகும். இது மாநிலத்திலேயே அதிகமான சராசரி வயதாகும். மாவட்டத்தின் பிறப்பு வீதம், குறைவாக உள்ளதற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

1985ஆம் ஆண்டிற்குப் பிறகு, இம்மாவட்டத்தில், மலேரியா காய்ச்சல் பெரியம்மை, நரம்புச் சிலந்தி மற்றும் கொள்ளை நோய் ஆகியவற்றால் இறப்பேதுமில்லை. அரசு மேற்கொண்ட தீவிர நோய் தடுப்பு நடவடிக்கைகளும், நோய்களுக்கான காரணங்களை விளக்கவும், மேற்கொள்ள வேண்டிய தடுப்பு நடவடிக்கைகள், மக்களுக்குப், புரியுமளவு விளம்பரக் கூட்டங்களும் அவ்வப்போது நடத்தியதுமே, மக்களுக்கு நோய் பரவாததன் முக்கிய காரணமாகும்.

எனினும், 1986 மற்றும் 1987ஆம் ஆண்டுகளில், ஒரு சில நோய்களால், இறப்புகள் ஏற்பட்டுள்ளன. இறப்பிற்குக் காரணமான நோய், மற்றும் இறப்பு எண்ணிக்கை ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன:[9]

தொடர் எண்.	நோயின் பெயர்	1986		1987	
		பாதிக்கப் பட்டோரின் எண்ணிக்கை	இறப்பு எண் ணிக்கை	பாதிக்கப் பட்டோர் எண்ணிக்கை	இறப்பு எண் ணிக்கை
1.	சின்னம்மை	1146	4	999	இல்லை
2.	வாந்தி பேதி	1	1	–	–
3.	தட்டம்மை	375	இல்லை	211	இல்லை
4.	வெறிநாய்க்கடி	2	2	–	–
5.	தொற்று நோய்	3	1	–	–
6.	எலும்புருக்கி நோய்	179	88	147	89
7.	முறைக்(மலேரியா) காய்ச்சல்	31	–	10	–
8.	இளப்பிள்ளை வாதம்	3	–	1	–
9.	தொண்டை அழற்சிநோய்	4	இல்லை	–	–
10.	கக்குவான்	3	–	–	–

* இறப்பு வீதத்தை ஒப்பிடும்போது, மாநிலத்திலேயே மிகக்குறைந்த, அதாவது 1000 மக்கட் தொகைக்கு ஆறு.

மாதிரிப் பதிவுத் திட்டம்[10]

இத்திட்டம், பிறப்பு இறப்பு விகிதம், மற்றும் மாநில, தேசிய அளவிலும், கிராமப்புற மற்றும் நகர்ப்புறப் பகுதிகளிலும் மக்கள் தொகை அதிகரிப்பு விகிதம் தொடர்பான நம்பகமான மதிப்பீடுகளைப் பெறுகிறது. கிராமப் பகுதிகளில் பொது சுகாதார மற்றும் தடுப்பு மருந்து இயக்குநரும், நகர்ப்புறங்களில், மக்கள் தொகைக் கணக்கெடுப்பு இயக்குநரும் இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தி வருகின்றனர். கிராமப்புறத் திட்டத்தில் 150 அலகுகளும், நகர்ப்புறத் திட்டத்தில் 100 அலகுகளும் உள. எனினும், மாவட்ட அளவிலான பிறப்பு-இறப்பு விகிதத் தொடர்புகளின் நம்பகமான மதிப்பீடுகளை, இத்திட்டம் அளிக்கவில்லை. கன்னியாகுமரி மாவட்டத்தில் பாலூர், மாங்கோடு, விளவங்கோடு, வல்லங்கோடு மற்றும் ஆத்தூர் ஆகிய இடங்களில் ஐந்து மாதிரிப்பதிவு அலகுகள் இயங்கி வருகின்றன.

முன்மாதிரிப் பதிவுத் திட்டம்

இத்திட்டத்தின் முக்கிய நோக்கமே, இறப்பின் சரியான காரணத்தை அறிவதாகும். குற்றவியல் சாராத பதிவு முறை போன்று, கிராம நிருவாக அலுவலர்கள், பதிவாளர்களாவர். இந்த முறையில், ஆரம்ப சுகாதார மையத்தின் தலைமை கிராமமே அலகாகும். மாநிலத்தில், முன்மாதிரிப் பதிவுத் திட்டம், 64 ஆரம்ப சுகாதார நிலையங்களில் இயங்கி வருகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில், ஆறு தேசம், ஆரம்ப சுகாதார நிலையம் இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்திட, தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.

இத்திட்டத்தில், ஆரம்ப சுகாதார நிறுவனத்தின் சுகாதாரஆய்வாளரே, கள முகவராவார். அவர், அவரது பகுதியில் (வீடுகளில்) நிகழும் அனைத்து பிறப்பு-இறப்புகளைப் பதிவு செய்கிறார். மருத்துவ அலுவலர், ஒரு மாதத்தில், 10 விழுக்காடு அல்லது ஒரு இறப்பினை ஆய்வு செய்கிறார். இறப்பின் சரியான காரணத்தினை அறிய இத்திட்டம் பயனுள்ளதாக இருக்கிறது.

மாவட்டத்தில் பொதுவான நோய்கள்

நீண்ட நெடுங்காலமாக, வாந்திபேதி இம்மாவட்டத்தில் மிகக் கொடிய தொத்து நோயாக இருந்து வந்தது. மக்கள் தொகை அதிகமாயுள்ள கடற்கரை வட்டங்களான கல்குளம் மற்றும் விளவங்கோடு ஆகியன, இக்கொடிய நோய் பரவுமிடங்களாக இருந்தன. 1869ஆம் ஆண்டு, இந்நோய் மிகக் கடுமையாகத் தாக்கியது. இதனைத் தொடர்ந்து 1881, 1883, 1890 மற்றும் 1894 ஆம் ஆண்டுகளில், இந்நோயின் கடுமை அதிகரித்து, பெரிய உயிர்ச் சேதத்தை விளைவித்தது. இதன் வேகத்தில், சில சமயங்களில் குடும்பம் முழுமையுமே, இந்நோய்க்கு பலியாக நேர்ந்தது. 1895ஆம் ஆண்டு, இதற்கென ஒரு தனித் துறை அமைக்கப்பட்ட பின்னர், இந்நோய் தீவிரமாகக் களையப்பட்டது.

அதிக மக்கட் பெருக்கமான வீடுகள், குடிநீர்த் தட்டுப்பாடு, ஏழைத்தொழிலாளர்களிடம் காணப்படும் அசுத்தம், கழிவு நீர் செல்ல

வடிகால் வசதி இல்லாமை, சுகாதார வசதியில் குறைபாடு, ஆகியவையே வாந்திபேதி நோய்க்குக் காரணமாயிருந்தன.

இம்மாவட்டத்தில் மிகக் கடுமையான உயிர்ச்சேதம் விளைவித்த பிற நோய்கள், காய்ச்சல்கள், சீதபேதி மற்றும் வயிற்றுப் போக்கு ஆகியவையாகும். ஆனால், இந்நிலை தற்போது முற்றிலும் மாறிவிட்டது. தடுப்பு மருந்துகளின் வளர்ச்சி, சுகாதாரத்தைக் குறித்து மக்களிடையே நல்ல பிரசாரம் அதற்கும் மேலாக, பல்வேறுவகைப்பட்ட தொற்று நோய் ஒழிப்புத் திட்டங்கள் மற்றும் தொற்று நோய்களினின்றும் பாதுகாப்பு அளிக்கும் திட்டங்கள் ஆகியவை அறிமுகம் செய்யப்பட்டபின், நோய்த் தொல்லை களினின்றும் மக்களைக்காத்து, நோய்களையும் ஓரளவு குறைத்து விட்டன. எனினும், மூச்சை இழுத்து மற்றும் வெளியே விடும் போது பற்றிக்கொள்ளும் தொற்று நோய், வயிற்றுப்போக்கு, புழுக்களினால் பரவும் தொற்று நோய்கள், நீர்க்கட்டு நோய் ஆகியவை மாவட்டத்தில் பொதுவாகக் காணப்படுகின்றன[11]. மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட நோய்த்தடுப்பு நடவடிக்கை தொடர்பான விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன.

எலும்புருக்கி நோய்க்கட்டுப்பாட்டுத் திட்டம்

இந்தியாவைப் போன்ற வளர்ந்து வரும் நாடுகளில், எலும்புருக்கி நோய், உடல் நலத்தைப் பாதிப்பது பெரிய பிரச்னையினை எழுப்புகிறது. இந்நோய், இளைஞர்/முதியோர் ஆகிய இரு பாலரையும் தாக்குகிறது. நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறப் பகுதிகளிலும் இந்நோய் காணப்படுகிறது. மக்கள் தொகையில் 1.8 விழுக்காட்டினர், நுரையீரல்கள் சார்ந்த எலும்புருக்கி நோயினால் பாதிக்கப்பட்டிருப்பதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அவற்றில் நான்கில் ஒரு பகுதி, தொற்றும் தன்மையுடையனவாகும். இப்பிரச்சனையினைத் தீவிரமாக எதிர்த்து முறியடித்திட, மூன்றாவது திட்ட காலத்தில், தேசிய எலும்புருக்கி நோய் கட்டுப்பாட்டுத் திட்டம் தோற்றுவிக்கப்பட்டது. அதிலிருந்து, தமிழ்நாட்டில், இத்திட்டம், தொடர்ந்து பின்பற்றப்பட்டு வருகிறது. எலும்புருக்கி நோயினைத் தீவிரமாகக் கட்டுப்படுத்திட, மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட எலும்புருக்கி நோய் மையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

தேசிய எலும்புருக்கி நோய்க்கட்டுப்பாட்டுத்திட்டம், தனியான உள்ளமைப்பினையுடைய நிமிர் நிலையான திட்டமன்று. தற்போதுள்ள சுகாதார மற்றும் மருத்துவ வசதிகளைப் பயன்படுத்தியமைந்துள்ள ஒருங்கிணைந்த திட்டமாகும். அனைத்து ஆரம்ப சுகாதார மையங்கள், மருத்துவ மனைகள் மற்றும் மருந்தகங்கள் ஆகியவற்றில், (அரசு மற்றும் சமூகப் பணி நிறுவனங்களால் அமைக்கப் பெற்றவை) எலும்புருக்கி நோய்க்கு இலவச மருத்துவம் அளிக்கப்படுகிறது. எலும்புருக்கி நோய் மாவட்ட ஆரம்ப சுகாதார மையங்கள் தவிர, நெஞ்சை (மார்பு)த் தூய்மைப் படுத்தும் மருத்துவ பயிற்சிப் போதனைச்சாலைகளும், எலும்புருக்கி நோயால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளிகளுக்கு தனி மருத்துவம் அளிக்கிறது.

இத்திட்டம், இரு வகையில் நடைமுறைப்படுத்தப்படுகிறது:

(1) பி.சி.ஜி. அம்மை குத்துவதன் மூலம், துவக்கத்திலேயே நோய்த் தடுப்பு முறையைக் கையாளுதல்;

(2) சளியினை முறையாக சோதனை செய்து, அடையாளம் கண்டு கொள்ளப்பட்ட அனைத்து எலும்புருக்கி நோயாளிகளுக்கும், மருத்துவம் அளிப்பதன் மூலம், நோய்த்தடுப்புத் துணை நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

கிராமத்திலேயே பயிற்சிபெற்ற சுகாதாரப் பணியாளர்கள், பி.சி.ஜி. அம்மை குத்தும் பணியினை மேற்கொள்கிறார்கள். இந்த அம்மைப்பால், குழந்தைகளின் உடலில் ஆக்க மூலப்பொருள்களை உற்பத்தி செய்து, அவர்களை நோய் தாக்கா வண்ணம், பாதுகாக்கிறது. மேலும், எலும்புப் புடைப்பு நோய் நுண்மத்துடன் போரிட்டு, அதனை அழித்திடும், தற்காப்பு நடவடிக்கையிலும் ஈடுபாடு கொள்கிறது.

மாவட்ட எலும்புருக்கி நோய் மையம், ஆரம்ப சுகாதார மையம், மருத்துவ மனைகள், மருந்தகங்கள் ஆகியவற்றிற்கு வருகை தரும் அல்லது தனி மருத்துவ அலுவலர்கள், சமூகப்பணி நிறுவனங்கள் ஆகியவற்றால் அனுப்பிவைக்கப்படும் நோயாளிகளின் மார்புச்சளி சோதனை செய்யப்பட்டு, திராவக சோதனையும் முடிக்கப்பெற்று, பின்னர் மார்பு, ஊடுகதிர்க்கூராய்வு (எக்ஸ்ரே) செய்யப்பட்டு, இடைத்தடுப்பு முறையினையும் கையாண்டு இவ்வாறாக இத்திட்டம் தீவிரமாக செயலாக்கப்படுகிறது. நோய் கண்டுபிடிக்கப்பட்ட நோயாளிக்கு அவர் குடியிருக்கும் இடத்திற்கு அருகாமையிலுள்ள ஒரு அரசு மருத்துவ மனையில் தொடர்ந்து ஓராண்டு காலத்திற்கு மருத்துவம் அளிக்கப்படுகிறது. அவ்வாறு மருத்துவம் செய்துகொள்ளத் தவறுபவர்களுக்கு அவர்கள் மருந்துகள் பெற்றுக் கொள்ளத் தவறியதை ஒரு கடிதம் மூலம் சுட்டிக்காட்டியோ, அல்லது அவர்களது இருப்பிடத்தில் அவர்களை நேரில் சந்தித்துத் தெரிவித்தோ, அவர்களுக்கு செயல் நோக்கமளிக்கப்படுகிறது.

புதிய 20 அம்சத் திட்டத்தின்படி, புதிய எலும்புருக்கி நோயாளிகளுக்கு மருத்துவமளிக்க 1982-83 ஆம் ஆண்டு முதல், ஒரு குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது, ஒவ்வொரு கிராமத்திலும் எலும்புருக்கி நோயாளிகளை அடையாளம் கண்டு கொள்வதையும் அவர்களுக்கு சரிவர மருத்துவம் அளிப்பதையும் எளிதாக்குகிறது.[12] புதிய கன்னியாகுமரி மாவட்டத்தில், எலும்புருக்கி நோய் கட்டுப்பாட்டுத் திட்டம், 1965ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. அது, 49 ஆரம்ப சுகாதார நிலையங்களில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. அவற்றில், மாவட்டத்திலுள்ள அனைத்து அரசு மருத்துவ மனைகள், அரசு மருந்தகங்கள், ஆரம்ப சுகாதார மையங்கள் மற்றும் ஒத்த தரமுடைய தனியார் மருத்துவமனைகள் ஆகியவை அடங்கும்.[13]

இத்திட்டத்துடன் பிணைக்கப்பட்டுள்ள ஒரு பி.சி.ஜி. குழு, இம்மாவட்டத்தில் மூன்று முறை தனது பணியினை செய்து முடித்துள்ளது.

தற்போது, நான்காவது சுற்றில் உள்ளது. 1985ஆம் ஆண்டு, ஆகஸ்ட் மாதம் முதல் "எலும்புருக்கி நோயாளிகளைக் கண்டறியும் முகாம்கள்" சமூகப்பணி நிறுவனங்களின் ஒத்துழைப்புடன், மாவட்ட எலும்புருக்கி நோய் மையத்தினால் நடத்தப்படுகின்றன. 1986ஆம் ஆண்டு, மாவட்டத்தில் அதே போன்ற 12 முகாம்கள் நடத்தப்பட்டு, அதில், 4335 பேர்கள் சோதனை செய்யப்பட்டனர். மார்புச்சளி சோதனைகள் போன்றவை, முகாம் இடத்திலேயே செய்து பார்க்கப்பட்டன. இந்த முகாம்களில் தகுதியுள்ள குழந்தைகளுக்கு, பி.சி.ஜி. அம்மை குத்தலும் மேற்கொள்ளப்படுகிறது.

1986ஆம் ஆண்டு, மாவட்டத்தில், 9066 பேர்களுக்கு புதிய ஊடுகதிர் கூராய்வு செய்யப்பட்டு, 13210 பேர்களுக்குப் புதிய மார்புச் சளி சோதனையும் மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்தினைப் பொறுத்த வரையில், 1978ஆம் ஆண்டு முதல், 1987ஆம் ஆண்டு வரை, 97,770 பேர்களுக்கு, ஊடுகதிர்க் கூராய்வு செய்யப்பட்டுள்ளது. அதே போன்று இம்மாவட்டத்தில், புதிய சளி பரிசோதனை 72,770 பேர்களுக்கு நடத்தப்பட்டு, 32,475 புதிய நுரையீரல் சார்ந்த எலும்புருக்கி நோய் இனங்களும் 3215 உபரி புதிய நுரையீரல் சார்ந்த எலும்புருக்கி நோய் இனங்களும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்ட காலத்தில், இம்மாவட்டத்தில், 5,24,639, குழந்தைகளுக்கு, பி.சி.ஜி. அம்மை குத்துதல் முடிக்கப்பட்டுளளது.[14]

தொழுநோய் கட்டுப்பாட்டுத் திட்டம்

தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டத்தினைத் தமிழ்நாடு, மிகவும் நுட்பமாகப் பின்பற்றுகிறது. இதனில், இனங்கள் கண்டுபிடித்தல், இனங்கள் பற்றுதல் மற்றும் சுகாதாரம் குறித்துக் கற்பித்தல் ஆகிய முறைகளைக் கையாண்டு, துவக்கத்தில் தொழுநோயால் பாதிக்கப்பட்ட நபர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு உரிய மருத்துவம் அளித்து, அவர்களது உடல் நிலையில் எதிர்பார்க்கும் அளவு முன்னேற்றம் காணப்பட்டால், அவர்களை மருந்துகளின் கட்டுப்பாட்டினின்றும் விடுவித்திட, போதிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில், மக்கள் தொகையனைத்தும், தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டத்தினால், பாதுகாக்கப்பட்டுள்ளதெனக் கூறலாம். நோய் கண்டுள்ள மக்களின் விகிதாச்சாரம், ஒரு ஆயிரத்திற்கு 7.5 ஆகிறது.[15] தற்போது, கீழ்குறிப்பிட்ட மருத்துவ நிறுவனங்கள், தொழுநோய் கண்டுள்ள நோயாளிகளுக்கு மருத்துவம் அளிக்கின்றன:[16]

1. அரசு தொழுநோய்க் கட்டுப்பாட்டு அலகு, தக்கலை
2. அரசு தொழுநோய்க் கட்டுப்பாட்டு அலகு, விளவங்கோடு
3. அரசு ஆரம்ப சுகாதார நிலையத்துடன் பிணைக்கப்பட்ட அலகு, குட்டக்குழி
4. அரசு மருத்துவமனையுடன் பிணைக்கப்பட்ட அலகு, பூதப்பாண்டி
5. அரசு தலைமை மருத்துவமனையுடன் இணைக்கப்பட்ட நகர்ப்புறத் தொழுநோய் மையம், நாகர்கோயில்

6. அரசு மருத்துவ மனையுடன் பிணைக்கப்பட்ட நகர்ப்புறத் தொழுநோய் மையம், பத்மநாபபுரம்.
7. அரசு மருத்துவ மனையுடன் பிணைக்கப்பட்ட அலகு, கொளச்சல்.
8. அரசு தொழுநோய்க் கட்டுப்பாட்டு அலகு, நாகர்கோயில்[12].

1986ஆம் ஆண்டு, ஆகஸ்ட் மாதம் முதல், மாவட்ட தொழுநோய் அலுவலர் அலுவலகம், தனித்தியங்குகிறது. நெடுந்தொலைவிலுள்ள பகுதிகளில், கணக்கிட இயலா பல குக்கிராமங்கள் உள்ளதால், தொழுநோய் கண்டுள்ள இனங்களை விடுதலின்றி, அடையாளம் காண இயலுவது மிகக் கடினமான பணியாகும். எனினும், 1986 வரை, இம் மாவட்டத்திலுள்ள தொழுநோய் ஒழிப்புக்குழு 6762 தொழுநோயாளிகளைக் கண்டுபிடித்தது, அவற்றில், 5500 பேர்களுக்கு முறையாக மருத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில், வட ஆற்காடு மாவட்டம், பல்வேறு மருந்துகளளிக்கும் மருத்துவத் திட்டத்தினை செயலாற்றிடத், தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. ஆக, இத்திட்டம், கன்னியாகுமரி மாவட்டத்தில், இன்னமும் செயலாக்கப்பட வில்லை. எனினும், அனைத்து மாவட்டங்களிலும், இத்திட்டத்தினை, நிர்ணயிக்கப்பட்ட காலத்தில், முறையாக செயல்படுத்த, முடிவெடுக்கப்பட்டுள்ளது. தொழுநோய் கண்டுள்ள நோயாளிகளுக்கு டேப்டோன் மாத்திரைகள் ஒழுங்காக வழங்கப்படுகின்றன.

மாவட்ட தொழுநோய் அலுவலருடன் பிணைக்கப்பட்டுள்ள "சுகாதாரக் கல்வியாளர்", கிராமங்களுக்கு அடிக்கடி வருகை தந்து, மக்களுக்குத் தொழுநோய்த்தடுப்பு குறித்து, போதித்து வருகிறார். நாகர்கோயில் தலைமை மருத்துவமனையில், 20 படுக்கைகள் கொண்ட ஒரு மருத்துவக்கூடம் அமைக்கப்பட்டுள்ளது. பிற நிறுவனங்களால் அனுப்பப்படும் நோயாளிகள், இம்மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு, மருத்துவமளிக்கப்படுகின்றனர்.

கன்னியாகுமரி மருத்துவ சமயபரப்புக் குழுவினால் கொளச்சலில் நிறுவப்பட்டு, பராமரிக்கப்பட்டு வரும், சார்லஸ்பீஸ் நினைவு மருத்துவமனை, தொழுநோயாளிகளுக்கு மருத்துவமளிக்கிறது.

தேசிய முறைக்காய்ச்சல் (மலேரியா) ஒழிப்புத்திட்டம்

தேசிய முறைக்காய்ச்சல் கட்டுப்பாட்டுத் திட்டம், இம்மாவட்டத்தில், 1953-54 முதல், 1957-58 வரை, நடைமுறையிலிருந்தது. 1958-59ஆம் ஆண்டு, தேசிய முறைக்காய்ச்சல் ஒழிப்புத்திட்டம், செயல்படுத்தப்பட்டது. 1977ஆம் ஆண்டு முதல், தேசிய முறைக்காய்ச்சல் தடுப்புத் திட்டத்தின்கீழ், திருத்தப்பட்ட முறை, மாவட்டத்தில் செயலாக்கப்பட்டு வருகிறது. திருத்தப்பட்ட செயலாக்கத்திட்டத்தின்படி, வட்டார நிலையிலுள்ள ஆரம்ப சுகாதார மையங்கள் முறைக்காய்ச்சல் ஒழிப்பு செயலாக்கத்தின் ஆதார அலகுகளாக விளங்குகின்றன.

திருத்தப்பட்ட செயலாக்கத்திட்டத்தின்படி, கீழ்க்குறிப்பிட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன[17]:

1. கிராமப்புறப் பகுதிகளில், தேசிய சுகாதாரப் பணியாட்கள் மாதம் இருமுறை வருகை தந்து, நோயால் பாதிக்கப்பட்ட மக்களைக் கண்டறிதல்;
2. மருத்துவமனைகள், மருந்தகங்கள், ஆரம்ப சுகாதார மையங்கள், சமூகப்பணி நிறுவனங்கள் மற்றும் காய்ச்சல் மருத்துவக்கிடங்குகள், ஆகியவை மூலம் இயல்பாயமைந்ததல்லாத இனங்களைக் கண்டுபிடித்தல்;
3. சேகரிக்கப்பட்ட கொழுப்பார்ந்த இரத்தத்தை, ஆரம்ப சுகாதார மைய ஆய்வுக்கூடத்தில் ஆய்ந்து, முறைக்காய்ச்சல் கிருமியினைக் கண்டறிதல்;
4. முறைக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டதாகக் கண்டறியப்பட்ட இனங்களில் மூன்று நாட்களுக்கு, மூல தத்துவ மருத்துவமளித்தல்;
5. இயல்பாயமைந்ததல்லாத இனங்களுக்கு கூட்டு இரத்த ஆய்வுப்பணி மேற்கொள்ளுதல்; மற்றும்
6. முறைக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில், மருந்து தெளிக்கும் செயலாக்கப்பணி மேற்கொள்ளுதல்.

கன்னியாகுமரி மாவட்டத்தில், 22 ஆரம்ப சுகாதார மையங்கள் உள்ளன. ஒவ்வொரு மையத்திலும் துணை சுகாதார மையங்கள் உள்ளன. இதில், பலநோக்கு சுகாதாரப் பணியாளர்கள் பணியாற்றுகின்றனர். அவர்கள், முறைக்காய்ச்சல் ஒழிப்பு ஆய்வாளர்களால், கண்காணிக்கப்படுகின்றனர். மாவட்ட மருத்துவ அலுவலரின் கட்டுப்பாட்டில் பணியாற்றிவரும், மாவட்ட மலேரியா ஒழிப்பு அலுவலர், கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும், பல்வேறு மலேரியா ஒழிப்புத் திட்டங்களுக்கு முழுப்பொறுப்பு வகிக்கிறார். மாவட்டத்தில் புதிய முறைக் காய்ச்சல் ஒழிப்புத் திட்டங்களை செயலாக்கிட, 114 பல நோக்கு சுகாதாரப் பணியாளர்கள், 19 ஆதார சுகாதார ஆய்வாளர்கள், ஐந்து முறைக்காய்ச்சல் ஒழிப்பு ஆய்வாளர்கள் மற்றும் ஒரு மாவட்ட முறைக் காய்ச்சல் தடுப்பு அலுவலர் ஆகியோர் பொறுப்பிலுள்ளனர்.[18]

1984ஆம் ஆண்டு முதல் 1988ஆம் ஆண்டு முடிய மாவட்டத்தில் முறைக்காய்ச்சலினால் பாதிக்கப்பட்டோர், ஆய்வுக்குட்படுத்தப்பட்டோர் ஆகியோர் குறித்த புள்ளி விவரங்கள் கீழே அளிக்கப்பட்டள்ளன:

ஆண்டு	கொழுப்பார்ந்த இரத்தம் சேகரிக்கப்பட்டு, ஆய்வு மேற்கொள்ளப்பட்ட இனங்கள்	இயல்பாலமைந்த தல்லாத இனங்கள்	ஃபோல்லி பாரம் இனங்கள்	முறைக் காய்ச்சலினால் இறந்தோர் எண்ணிக்கை
(1)	(2)	(3)	(4)	(5)
1984	1,38,046	92	2	இல்லை
1985	1,12,298	48	1	இல்லை
1986	1,89,749	53	1	இல்லை

(1)	(2)	(3)	(4)	(5)
1987	2,26,948	28	2	இல்லை
1988 (சூலை முடிய)	1,08,638	887	இல்லை	இல்லை

மாவட்டத்தில், கண்காணிப்பு செயல்முறை நன்கு முடுக்கிவிடப் பட்டுள்ளது. தற்போது, மாவட்டத்தில், முறைக்காய்ச்சல் அடியோடு ஒழிக்கப்பட்டுவிட்டதென்பது, குறிப்பிடத்தக்கது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் தேசிய யானைக்கால் வகை நீர்சார்ந்த நோய்கள் கட்டுப்பாட்டுத் திட்டம்

பத்மநாபபுரம், கொளச்சல் மற்றும் குழித்துறை ஆகிய இடங்களில், மூன்று மருத்துவப்பயிற்சிப் போதனைச் சாலையுடனும், நாகர்கோவிலில் ஒரு கட்டுப்பாட்டு அலகுடனும் கன்னியாகுமரி மாவட்டத்தில், தேசிய யானைக்கால் வகை நீர் சார்ந்த நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம், நடைமுறைப்படுத்தப்பட்டது. கட்டுப்பாட்டு அலகு, நாகர்கோவில் நகரத்தில் இயங்கி வருகிறது. யானைக் கால் வகை நீர்சார்ந்த நோய்களைப் பரப்பும் கொசுக்களின் முட்டைப் புழுக்களை ஒழிக்க இவ்வலகு அவ்வப்போது தூரித நடவடிக்கை எடுத்துவருகிறது. முட்டைப்புழுக்களை ஒழிக்கும் நடவடிக்கைகள் தவிர, மிகச் சிறிய, நோய் நுண்மம் பரப்பும் உயிரினங்களைக் கண்டுபிடிக்க, இரவு நேர இரத்த ஆய்வும் மேற்கொள்ளப்படுகிறது. அவ்வாறு கண்டுபிடிக்கப்படும் நுண்ணிய உயிரினங்கள், நீர்த்தேக்கங்களிலுள்ள நீர் மூலம், இந்நோய்களைப் பரவாமல் தடுத்திட, அவ்வுயிரினங்கள் தண்ணீரினின்றும் அகற்றப்படுகின்றன. முட்டைப்புழுக்களை ஒழிப்பதற்காக, எண்ணெய் மற்றும் பாய்டெக்ஸ் போன்ற மருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன.

ஒரு கட்டுப்படுத்தும் அலகைத்தவிர, மேற்குறிப்பிட்ட மருத்துவப் பயிற்சி போதனைச் சாலைகளும், இரவு நேர இரத்த ஆய்வு நடத்தி, மருந்து அளித்து, நோய்கள் பரவா வண்ணம், தடுப்பு நடவடிக்கையும் மேற்கொள்கின்றன.

நோயாளிக்கு, மருத்துவம் அளித்து, நோய் நுண்மம் பரப்பும் உயிரினங்களைக் கண்பிடித்தது தொடர்பான ஆண்டுவாரி புள்ளிவிவரங்கள் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன (கன்னியாகுமரி மாவட்டத்தில், மேலும் சில பகுதிகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன). இம் மாவட்டத்தில் மேலும் இரண்டு கட்டுப்பாட்டு அலகுகள் திறந்திட நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

இம்மாவட்டத்தைப் பொறுத்த வரையில், நோய் கட்டுப்பாட்டுத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு முனனர், இந்நுண்ணிய நோய்க் கிருமிகளின் வீதம் ஆறு விழுக்காடாக இருந்தது. தேசிய யானைக்கால் வகை நீர் சார்ந்த நோய்க்கட்டுப்பாட்டுத் திட்டம் நடைமுறையிலுள்ள இடங்களில், நோயினால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை குறைந்து காணப்பட்டது.[19]

தேசிய யானைக்கால் வகை நீர் சார்ந்த நோய்கள் கட்டுப்பாட்டுத் திட்டம் - நாகர்கோவில் அலகு

தொடர் எண்.	ஆண்டு	ஆய்வு மேற்கொள் ளப்பட்ட நபர்கள்	யானைக்கால் வகை நீர் சார்ந்த நோய்க்கிருமிகள் உள்ளதாகக் கண்டுபிடிக்கப் பட்டோர்	யானைக்கால் வகை நீர் சார்ந்த நோய்க்கிருமிகள் கண்டுள்ள வீதம்	யானைக்கால் வகை நீர் சார்ந்த நோய்களினால் பாதிக்கப்பட்டோர்	நோய் கண்டுள்ள வீதம்	குறிப்பு
1.	1985	6801	265	2.3	215	1.7	
2.	1986	59975	1164	2.0	643	1.1	1985ஆம் ஆண்டில், நடைமுறைப் படுத்தப்பட்டது.
3.	1987	53088	1044	1.8	385	0.6	
4.	1988 (7/88 முடிய)	30773	490	1.5	157	0.5	

தேசிய யானைக்கால் வகை நீர் சார்ந்த நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டத்துடன், இந்நோய் தடுப்பு நடவடிக்கைகளும், நாகர்கோவில், இரணியல், திருவிதாங்கோடு, புதுக்கடை, விளவங்கோடு, கருங்கல் மற்றும் குருந்தங்கோடு ஆகிய உள்ளாட்சி ஒன்றியங்களில் நடைமுறைப்படுத்தப் படுகின்றன. இத்திட்டத்திற்கான மொத்தச் செலவில், மூன்றில் இரண்டு பகுதியினை உள்ளாட்சி நிறுவனங்களும், எஞ்சிய ஒரு பகுதியினை அரசு கொடை வழங்குவதன் மூலமும் ஏற்கின்றன.

தொற்று நோய்த் தடுப்புத் திட்டம்

விரிவாக்கப்பட்ட தொற்று நோய்த்தடுப்புத் திட்டம், தமிழ்நாட்டில், 1979 நவம்பர் மாதம் முதல், நடைமுறைப்படுத்தப்படுகின்றன. துவக்க ஆண்டுகளில், இத்திட்டம், தேர்ந்தெடுக்கப்பட்ட சில மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு, நாளடைவில், இத்திட்டம் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவாக்கப்பட்டது. திட்டத்தின் நோக்கம் யாதெனில், ஆறு பெரிய குழந்தைகள் நோயான, இளம்பிள்ளை வாதம், கக்குவான், தொண்டை அழற்சி நோய், நரம்பிசிவு நோய், தட்டம்மை, மற்றும் எலும்புருக்கி நோய் ஆகியவற்றைத் தடுப்பதேயாகும்.

பொது மருத்துவமனைகளும், மருந்தகங்களும்

1885ஆம் ஆண்டின், திருவாங்கூர் மாநிலத்தின் நிருவாக அறிக்கையில், ஐரோப்பிய விஞ்ஞான மருத்துவ முறைப்படி, நோயாளிகளுக்கு நான்கு மருத்துவமனைகள் மருத்துவமளித்து வந்ததாக, ஒரு குறிப்பு உள்ளது. அவை, நெய்யாற்றங்கரை, பரசாலா, (தற்போதைய கேரள மாநிலத்தில் நிறுவப்பட்டது) பத்மநாபபுரம் மற்றும் நாகர்கோவில் (தற்போதைய கன்னியாகுமரி மாவட்டத்தில் நிறுவப்பட்டது) ஆகிய இடங்களில் நிறுவப்பட்டன. நாகர்கோவில்,உள்நாட்டு மருத்துவமனை, மிக அதிகமாக மக்கள் தொகையுள்ள பகுதியில், இயங்கி வந்தது. இது, நாயர் படை அணிப்பகுதி போன்று, போர்ப்படை வீரர்களுக்கு மருத்துவம் அளித்து வந்தது. இம்மருத்துவ மனைகள், திருவாளர்கள் சுவாமிநாத பிள்ளை, கந்தசாமி, நாராயணராவ் மற்றும் எஸ்.பி. சோயிர் (Soir) ஆகிய அனைவராலும் புகழ்ந்து போற்றப்பட்ட பெரியவர்களால் நடத்தப்பட்டு வந்தன.

1962ஆம் ஆண்டு, மாவட்டத்தில், நாகர்கோவில், பத்மநாபபுரம் மற்றும் குழித்துறை ஆகிய மூன்று இடங்களில் தான் மருத்துவமனைகள் இருந்தன. மேலும், அகஸ்தீஸ்வரம், முட்டம், கருங்கல், ஆறுதேசம், இராசக்கமங்கலம் மற்றும் இடைக்கோடு ஆகிய இடங்களில் ஆறு துவக்க நல்வாழ்வு மையங்கள் இயங்கி வந்தன. தற்போது ஏழு அரசு மருத்துவ மனைகள், 22 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், மற்றும் ஆசாரிப்பள்ளத்தில் ஒரு அரசு எலும்புருக்கி நோய் நல ஆக்க நிலையம் ஆகியவை மாவட்டத்தில் இயங்கி வருகின்றன. அவற்றின் பட்டியல் கீழே அளிக்கப்பட்டுள்ளது. இவை தவிர, "இந்திய மருத்துவம் மற்றும்

தொழுநோய் கட்டுப்பாட்டுத் திட்டம் என்ற தலைப்பின் கீழ், விவரிக்கப்பட்டுள்ளவாறு, பல அரசு மருத்துவமனைகளில், நாட்டு மருத்துவ முறையான, சித்த வைத்தியம், ஆயுர்வேதம் மற்றும் ஹோமியோபதி ஆகிய முறைகளில் மருத்துவமளிக்க, தனி அலகுகள் இயங்கி வருகின்றன.

அரசு மருத்துவமனைகளின் பட்டியல்[20]

தொடர் எண். (1)	மருத்துவமனையின் பெயர் (2)	இருப்பிடம் (3)	படுக்கைகளின் எண்ணிக்கை (4)
1.	அரசு எலும்புருக்கி நோய் மருத்துவ மனை	ஆசாரிப்பள்ளம்	370
2.	அரசு தலைமை மருத்துவமனை	நாகர்கோவில்	342
3.	அரசு மருத்துவமனை	பத்மநாபபுரம்	70
4.	அரசு மருத்துவமனை	குழித்துறை	32
5.	அரசு மருத்துவமனை	கொளச்சல்	32
6.	அரசு மருத்துவமனை	பூதப்பாண்டி	15
7.	அரசு மருத்துவமனை	குலசேகரம்	16
8.	அரசு மருத்துவமனை	அருமனை	15
9.	ஆரம்ப சுகாதார நிலையம்	கன்னியாகுமரி	–
10.	ஆரம்ப சுகாதார நிலையம்	ஆரல்வாய்மொழி	–
11.	ஆரம்ப சுகாதார நிலையம்	சிங்களாயர்புரி	–
12.	ஆரம்ப சுகாதார நிலையம்	தேங்காப்பட்டிணம்	–
13.	ஆரம்ப சுகாதார நிலையம்	கொட்டாரம்	–
14.	ஆரம்ப சுகாதார நிலையம்	அழகப்புரம்	–
15.	ஆரம்ப சுகாதார நிலையம்	தூத்தூர்	–
16.	ஆரம்ப சுகாதார நிலையம்	கணபதிபுரம்	–
17.	ஆரம்ப சுகாதார நிலையம்	பள்ளியாடி	–
18.	ஆரம்ப சுகாதார நிலையம்	அகஸ்தீஸ்வரம்	6
19.	ஆரம்ப சுகாதார நிலையம்	ஆறுதேசம்	6
20.	ஆரம்ப சுகாதார நிலையம்	செண்பகராமன்புதூர்	30
21.	ஆரம்ப சுகாதார நிலையம்	எடைக்கோடு	6
22.	ஆரம்ப சுகாதார நிலையம்	கருங்கல்	6
23.	ஆரம்ப சுகாதார நிலையம்	கோத்தாநல்லூர்	6
24.	ஆரம்ப சுகாதார நிலையம்	கூட்டுக்குழி	6
25.	ஆரம்ப சுகாதார நிலையம்	முட்டம்	6
26.	ஆரம்ப சுகாதார நிலையம்	இராசக்கமங்கலம்	6
27.	ஆரம்ப சுகாதார நிலையம்	மூஞ்சிறை	6
28.	ஆரம்ப சுகாதார நிலையம்	குருந்தங்கோடு	6
29.	ஆரம்ப சுகாதார நிலையம்	அருமநல்லூர்	–
30.	ஆரம்ப சுகாதார நிலையம்	வெள்ளிச் சந்தை	–

மருத்துவத்துறை அமைப்பு முறை

1964ஆம் ஆண்டு வரை, அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், மாநில அளவில் மருத்துவப் பணிகள் இயக்குநரின் கட்டுப்பாட்டிலும், மாவட்ட அளவில் மாவட்ட மருத்துவ அலுவலரின் கட்டுப்பாட்டிலும் இயங்கி வந்தன. 1965ஆம் ஆண்டு, அவை மாநில அளவில் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துகள் இயக்குநரின் கட்டுப்பாட்டிலும், மாவட்ட அளவில், மாவட்ட சுகாதார அலுவலரது கட்டுப்பாட்டிலும் மாற்றியமைக்கப்பட்டன.

1966 ஆம் ஆண்டு, மருத்துவப் பணிகள் இயக்குநரகம் மற்றும் பொது சுகாதாரம் மற்றும் இயக்குநரகம் இரண்டையும் இணைத்து, சுகாதாரப் பணிகள் மற்றும் குடும்பநலத்துறை, அமைக்கப்பட்டது. மறுபடியும் 1976 ஆம் ஆண்டு, ஒருங்கிணைந்த சுகாதாரப் பணிகள் மற்றும் குடும்பநலத் துறை, பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்துகள் துறையெனவும், மருத்துவப் பணிகள் மற்றும் குடும்ப நலத்துறையெனவும் இரண்டாகப் பிரித்தமைக்கப்பட்டது.

பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்துகள் துறையுடன் இணைக்கப்பட்டிருந்த மருந்துக் கட்டுப்பாட்டுப் பிரிவு, 1981 ஆம் ஆண்டு முதல், ஒரு தனித்துறையாக அமைக்கப்பட்டது.

1980 ஆம் ஆண்டு, ஆரம்ப சுகாதார நிலையங்கள், பொது சுகாதாரத் துறையினின்றும் பிரிக்கப்பட்டு, ஆரம்ப சுகாதார மையங்களின் இயக்குநரது கட்டுப்பாட்டில் ஒரு புது இயக்ககமாக அமைக்கப்பட்டது. இயக்குநர், மாநிலத்தில் பொது சுகாதார/ பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துகள் துறையின் கண்காணிப்பிலியங்கும் அனைத்து அலுவலகங்களையும் நிருவகிக்கும் பொறுப்பிலிருக்கிறார். அவர், பொது சுகாதாரம், மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலம், தொற்றுநோய்த் தடுப்பு நடவடிக்கை, உணவுப் பொருள் கலப்படத் தடுப்பு நடவடிக்கை ஆகியவை தொடர்பான பல திட்டங்களை முறையாகச் செயலாக்கும் பணிகளுக்குப் பொறுப்பு வகிக்கிறார்.

சிறந்த மருத்துவம் மற்றும் மக்கள் நலத் திட்டங்களை, தீவிரமாக நடைமுறைப்படுத்திட, மக்கள் நல்வாழ்வுத்துறை, மே, 26, 1980 நாளைய சுகாதாரம் மற்றும் குடும்ப நலம் 905 எண். கொண்ட அரசாணையில் சீரமைக்கப்பட்டது. அதன்படி, ஒவ்வொன்றும் ஒரு பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்துகள் மண்டலத் துணை இயக்குநரின் கட்டுப்பாட்டில், ஏழு மண்டலங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஏழு மண்டலங்களிலுமுள்ள ஒவ்வொரு மண்டலத் துணை இயக்குநரும், இரண்டு அல்லது மூன்று வருவாய் மாவட்டங்களுக்குப் பொறுப்பு வகிக்கிறார். இவை தவிர, 25 சுகாதார அலகு மாவட்டங்கள் நிறுவப்பட்டு, ஒவ்வொரு மாவட்டமும் ஒரு மாவட்ட சுகாதார அலுவலரது கண்காணிப்பில், இயங்கி வருகிறது. சராசரியாக ஒவ்வொரு சுகாதாரஅலகு மாவட்டத்தின் பொறுப்பிலும், 22 ஆரம்ப சுகாதார நிலையங்கள் அடங்கியுள்ளன.

கன்னியாகுமரி சுகாதார அலகு மாவட்டம், திருநெல்வேலி, பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்துகள் மண்டலத் துணை இயக்குநரது கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது. மக்கள் நல்வாழ்வு தொடர்பான அனைத்துத் திட்டங்களையும், திட்ட அலுவலரான மாவட்ட சுகாதார அலுவலர், நடைமுறைப்படுத்துகிறார். அனைத்து அரசு மருத்துவ மனைகளுக்கும் மாவட்ட மருத்துவ அலுவலர், பொறுப்பு வகிக்கிறார். எலும்புருக்கி நோய் மற்றும் தொழுநோய் ஒழிப்பு தொடர்பான தேசிய முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்களை அவர் செயல்படுத்துகிறார்.

மாவட்டத்தில், பல்வேறு குடும்ப நலத்திட்டங்களை மாவட்ட குடும்பநல, மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல அலுவலர் நடைமுறைப்படுத்தி வருகிறார். சென்னை, இந்திய மருத்துவ முறை இயக்குநரது நேரடிக் கண்காணிப்பில் மாவட்ட சித்த மருத்துவ அலுவலர் பணியாற்றி வருகிறார்.

மருத்துவர்களும், செவிலியர்களும்

நாகர்கோவில், மாவட்டத்திலுள்ள அனைத்து அரசு மருத்துவமனை களில், 79 மருத்துவர்களும், 102 செவிலியர்களும் பணியாற்றி வருகின்றனர். மாவட்ட மருத்துவ அலுவலரின் கட்டுப்பாட்டில் 52 மருத்துவர்களும், ஆறு செவிலியர்களும் பணியாற்றுகின்றனர். அரசு எலும்புருக்கி நோய் ஒழிப்பு மருத்துவ மனையின் பணியாளர் தொகுதியானது, ஏழு மருத்துவர்களையும், 50 செவிலியர்களையும் கொண்டதாகும்.

மாவட்டத்திலுள்ள அனைத்து மருத்துவ மனைகளிலுமுள்ள நோயாளிகளது படுக்கைகளின் எண்ணிக்கை 1038 ஆகும். அவற்றில், அரசு மருத்துவமனைகள் 580 படுக்கைகளையும், அரசு எலும்புருக்கி நோய் ஒழிப்பு மருத்துவமனை 370 படுக்கைகளையும் மற்றும் ஆரம்ப சுகாதார மையங்கள் 118 படுக்கைகளையும் கொண்டவையாகும்.

பொது மருத்துவம், அறுவை மருத்துவம், பெண்கள் மருத்துவம், குழந்தைகள் மருத்துவம், கண் மருத்துவம், கண், மூக்கு, காது மற்றும் தொண்டை நோய் மருத்துவம், மனநோய் மருத்துவம், பல் மருத்துவம் மற்றும் சர்க்கரை நோய் மருத்துவம் ஆகியவை தொடர்பான பல்வேறு தனித்துறைகள் நாகர்கோவில் தலைமை மருத்துவமனையில் இயங்கி வருகின்றன. இவை தவிர, அனைத்துக் கருவிகளும் பொருத்தப்பட்ட ஊடுகதிர் நிழற்படி அலகு, மற்றும் ஒரு இரத்த சேமிப்புக் கூடம் ஆகியவையும், மாவட்டத் தலைமை மருத்துவமனையில் உள்ளன. பத்மநாபபுரம் மருத்துவமனையில், பொது மருத்துவம், அறுவை மருத்துவம், மகளிர் மருத்துவம், குழந்தைகள் மருத்துவம், மற்றும் பல் மருத்துவத் துறைகள் இயங்கி வருகின்றன. இங்கு சித்த மருத்துவமும், நோயாளிகளுக்கு அளிக்கப்படுகிறது.

குழித்துறை அரசு மருத்துவமனையில், பொது மருத்துவம், அறுவை மருத்துவம், மகளிர் மருத்துவம், பல் மருத்துவம் ஆகியவை சார்ந்த துறைகள்

இயங்கி வருகின்றன. கொளச்சல் அரசு மருத்துவமனையில் ஒரு பொது மருத்துவத்துறையும் ஒரு பல் மருத்துவத் துறையும் இயங்கி வருகின்றன. ஆசாரிப்பள்ளத்திலுள்ள அரசு எலும்புருக்கி நோய் ஒழிப்பு மருத்துவ மனையில், அனைத்துக் கருவிகளையுமுடைய ஒரு ஆய்வுக்கூடமும், ஒரு ஊடுகதிர் நிழற்பட அலகும் நிறுவப்பட்டுள்ளன.

மாவட்டத்திலுள்ள பல்வேறு அரசு மருத்துவமனைகளிலும், மருந்தகங்களிலும் 1980 முதல் 1985 வரை, மருத்துவமளிக்கப்பட்ட அக நோயாளிகள் மற்றும் புற நோயாளிகளின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது:[21]

ஆண்டு	*அக நோயாளிகள்*	*புறநோளிகள்*	*மொத்தம்*
1980	16,767	2,96,761	3,13,528
1981	17,979	3,06,421	3,24,400
1982	18,785	2,82,591	3,01,376
1983	21,445	2,69,064	2,90,509
1984	20,881	3,08,476	3,29,357
1985	21,354	3,76,706	3,98,060
1986	20,591	3,04,128	3,24,719
1987	22,296	2,96,354	3,18,650

சிறப்பு மருத்துவமனைகள்

அரசு எலும்புருக்கி நோய் ஒழிப்பு மருத்துவமனை

நாகர்கோவில் நகரத்திலிருந்து, ஐந்து கிலோ மீட்டர் தொலைவில், ஆசாரிப்பள்ளம் என்ற இடத்தில், இந்த மருத்துவமனை நிறுவப்பட்டுள்ளது. இது கடல்-நிலையினின்றும் 150 அடி உயரத்தில், அமையப்பெற்றுள்ளது. இங்கு தட்ப, வெட்ப நிலை, குறைந்த அளவு 60° ஃபாரன்ஹீட், மற்றும், அதிக அளவு 85° ஃபாரன்ஹீட், ஆகும். இம்மருத்துவமனை, 100 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. மேதகு, லின்லித்கோ அம்மையார் அவர்களால், 1939 ஆம் ஆண்டு, இம்மருத்துவ மனைக்கான அடிக்கல், நாட்டப்பட்டது. 1941 ஆம் ஆண்டு, மருத்துவ மனை, சேத் அம்பாலை சாராபாய் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. 1956 ஆம் ஆண்டு, நவம்பர் மாதம், இம்மாவட்டம், சென்னை மாநிலத்துடன் இணையும் வரை, இம்மருத்துவமனை, திருவாங்கூர் மாநிலத்தின் நிருவாகக் கட்டுப்பாட்டில் இயங்கி வந்தது. மாநிலங்கள் சீரமைப்பிற்குப் பின்னர், இம்மருத்துவமனை தமிழ்நாடு அரசால் பொறுப்பேற்றுக்கொள்ளப்பட்டது. தற்போது, அது சென்னை மருத்துவப் பணிகள் இயக்குநரின் கண்காணிப்பில் இயங்கி வருகிறது.

இந்த மருத்துவமனையில், சளி சோதனை மேற்கொள்ள, அனைத்துக் கருவிகளும் அமையப்பெற்ற ஆய்வுக் கூடமும், ஊடுகதிர் நிழற்பட அலகும் நிறுவப்பட்டுள்ளன. 1958 ஆம் ஆண்டிற்கு முன்னர், இங்கு முறையான

புறநோயாளித் துறை இயங்கவில்லை. 1958ஆம் ஆண்டு தான், ஒரு முறையான புற நோயாளித்துறை, இயங்கத் துவங்கியது.

மருத்துவமனையின் அக நோயாளித் துறையில் 370 படுக்கைகள் உள்ளன. மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் முறையே ஏழு மற்றும் 50 பேர் பணியாற்றி வருகின்றனர்.

நோயாளிகளுக்கு, எலும்புருக்கி நோய் எதிர்ப்பு மருந்துகள், கொடுக்கப்படுகின்றன. பொது படுக்கைக் கூடத்தில் உள்ள நோயாளிகளின் மாதாந்திர வருவாய் ரூபாய் 300/-க்குக் குறைவாக இருப்பின் அவர்களுக்கு, இலவசமாக மருத்துவமளிக்கப்படுகிறது. அறுவை மருத்துவம் தேவைப்படும் நோயாளிகளுக்கு, அவர்களின் நிலைக்கேற்ப, பெரிய அல்லது சிறிய அறுவை மருத்துவம் அளிக்கப்படுகிறது.

1980 ஆம் ஆண்டு முதல் 1986 ஆம் ஆண்டு முடிய, மருத்துவம் அளிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை, கீழே கொடுக்கப்பட்டுள்ளது:[22]

ஆண்டு	*அகநிலை நோயாளிகள்*	*புறநோயாளிகள்*	*மொத்தம்*
1980	4,014	27,920	31,934
1981	4,240	26,369	30,609
1982	4,237	24,047	28,254
1983	4,008	19,959	23,967
1984	3,744	21,085	24,829
1985	4,149	22,699	26,848
1986	3,743	18,258	22,011

சார்லஸ் பீஸ் நினைவு (தொழுநோய் ஒழிப்பு) மருத்துவமனை, கொளச்சல்

இந்த மருத்துவமனை, தொழுநோய் நோயாளிகளுக்கு, ஒரு மறுவாழ்வு மையமாகத் திகழ்கிறது. ஒரு சில, வீடில்லா தொழுநோய் நோயாளிகளுக்கு மருத்துவமளிக்க, தென்னிந்திய திருச்சபை மருத்துவமனையில், ஒரு கூடத்தில், 1890 ஆம் ஆண்டு, டாக்டர் இ. சர்கூத்ஃப்ரை என்பவரால் துவக்கப்பட்டது. நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிக்கத் துவங்கிய பின்னர், இம்மையம், கொளச்சலிலுள்ள தற்போதைய இடத்தில், 95 நோயாளிகளுடன், மாற்றியமைக்கப்பட்டது. இவ்விடம், விரிவான நான்கு கட்டிடங்களுடனும், தனி தொழுகையிடத்துடனும் திருவாட்டி சார்லஸ் பீஸ் என்ற உயர்குடியைச் சேர்ந்த பெண்மணியால் நன்கொடையாக அளிக்கப்பட்டது. அவரது நினைவாக இந்நிறுவனத்திற்கு அவரது பெயர் சூட்டப்பட்டுள்ளது.

தற்போது, ஒரே நேரத்தில் 200 அகநிலை நோயாளிகளுக்கு மருத்துவமளிக்க இம்மருத்துவமனையில் வசதி உள்ளது. ஒவ்வொரு ஆண்டும், இம்மருத்துவமனையில் 7000 புற நோயாளிகளுக்கும் மேலாக மருத்துவமளித்து வருகிறது. எண்பதுக்கும் மேற்பட்ட தொழுநோயால்

பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு இம்மருத்துவமனையில், நாள்தோறும், உணவும், மருத்துவமும் அளிக்கப்பட்டு வருகிறது. முழுமையாக குணப்படுத்தப்பட்ட நோயாளிகள், பாய்முடைதல், துணி நெய்தல், துணி தைத்தல், வேளாண் பணியாற்றுதல் மற்றும் சிமிண்ட் பானைகள் செய்தல் போன்ற பணிகளை ஆற்றுகிறார்கள்.[23]

மனநோயாளிகளுக்கு மருத்துவமளித்தல்

கன்னியாகுமரி மாவட்டத்தில் மன நோயாளிகளுக்கு மருத்துவமளிக்க, தனி மருத்துவமனை இல்லை. மனநோயினால் பாதிக்கப்பட்டோர், சென்னையிலுள்ள, மனநோய் மருத்துவமனைக்கு, அனுப்பப்படுகிறார்கள்.

கிராமப்புறப் பகுதிகளில் மருத்துவ வசதிகள்

உடல் நலம் என்பது, இயல்பாயமைந்ததல்லாத, உடைமையாகக் கருதப்படுகிறது. நோயால் பாதிக்கப்படாததால், நல்ல உடல் நலம் பெற்றிருப்பதாக கருத இயலாது. ஒருவரின் உடல்நிலை, மனநிலை மற்றும் சமூக நிலை இவை யாவற்றையும் பொறுத்தே நலமுடன் வாழ இயலும். அரசின் நோக்கம் யாதெனில், பின்னல் வலையமைவிலான ஆரம்ப சுகாதார மையங்கள் சமுதாய நல்வாழ்வு மையங்கள், நல்வாழ்வு உதவி மையங்கள், சிறு நல்வாழ்வு மையங்கள் மற்றும் நடமாடும் சுகாதார மையங்கள் ஆகியவை மூலம் குறியீட்டினை எய்துவதேயாகும். பல நோக்கு சுகாதாரப் பணியாளர்கள் திட்டம் நடைமுறைப்படுத்தியவுடன், ஒரு பெரிய பகுதியில் பல்வேறு மக்களுக்கு ஒற்றைப் பணியினை ஆற்றி வந்த சுகாதாரப் பணியாளர்கள், குறைந்த மக்கள் தொகையினையுடைய இணைப்பற்ற பகுதியில், பல நோக்குப் பணிகளை ஆற்ற, பயிற்சியளிக்கப்படவில்லை. மக்களுக்கு மிகுந்த திறமையுடன் அவர்கள் சுகாதாரப் பணியில் ஈடுபடவேண்டுமென்பதே. இதன் உட்கருத்தாகும். மக்களின் உடல்நிலையினை மேம்படுத்திட, ஆரம்ப சுகாதார நடவடிக்கையே, நடைமுறைக்குரிய அணுகுமுறையாகும். இந்த நோக்கத்தினைக் கருத்திற் கொண்டு, *கி.பி.2000ஆம் ஆண்டில், அனைவருக்கும் நல்வாழ்வு* என்ற திட்டக் குறியீட்டினை எய்த அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.

இந்நோக்கத்தினைத் தொடர்ந்து, பாராளுமன்றம், தேசிய நல்வாழ்வுக் கொள்கைக்கு ஒப்புதலளித்துள்ளது. மக்களுக்கு நல்வாழ்வினை அளிப்பதில் முன்னேற்றம், மக்களின் மறுவாழ்வு நோக்கு ஆகியவற்றை அக்கொள்கை நன்கு வலியுறுத்துகிறது. மேலும், கிராம மக்களுக்கு அவர்களது, வீட்டு வாயிலில், அவர்களுக்கான சுகாதாரப் பணியினை மேற்கொள்ள வேண்டும்; மேலும், பல்வேறு வகையான உடல்நல பராமரிப்பு திணையியல் நிலையவுருவினை எய்த வேண்டும்,[24] இவையே, தேசியக் கொள்கையின் உட்கருத்தாகும். வாக்குறுதியை நிறைவேற்ற, குறிப்பாக கிராமப்புற மக்களுக்கு, அளவிலும், தரத்திலும் நல்ல மருத்துவ வசதியினையும், உடல் நலம் பேணிக் காப்பதற்கான நடவடிக்கைகளையும் அரசு, துரிதமாக

மேற்கொள்கிறது. கிராமப்புற சுகாதாரப் பணியினை மேம்படுத்த அரசு, ஏற்கெனவே இயங்கி வரும் ஆரம்ப சுகாதார மையங்களை நன்கு பராமரித்தல் கூடுதலான ஆரம்ப சுகாதார மையங்களை நிறுவுதல், நடமாடும் நல்வாழ்வுக் குழுக்களை அமைத்தல், சிறிய சுகாதார மையங்களைத் தோற்றுவித்தல், ஒரு குறிப்பிட்ட , கட்டத்தில், சுகாதார மையங்களின் நிலையினை உயர்த்துதல் ஆகியவற்றில் அரசு உரிய கவனம் செலுத்தி வருகிறது.

கிராமப்புற மக்களுக்கு நோய்த் தடுப்பு, நோய் குணப்படுத்தும் செய்முறை மற்றும் உடல் நலத்தைப் பேணிக்காத்தல் ஆகியவற்றை கவனிக்கும் முக்கிய மையமாக ஆரம்ப சுகாதார மையம் திகழ்கிறது. ஒவ்வொரு 30,000 மக்கள் தொகைக்கும் ஒரு ஆரம்ப சுகாதார மையம் நிறுவுவதே, அரசின் நோக்கமாகும். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரை, 22 ஆரம்ப சுகாதார மையங்கள் இயங்கி வருகின்றன. தற்போது, ஒவ்வொரு ஆரம்ப சுகாதார மையத்திலும் மூன்று மருத்துவ அலுவலர்கள் பணியாற்றி வருகின்றனர். (அதாவது, ஒருவர் பொது மருத்துவத்திற்கும், மற்றொருவர் குடும்ப நலப்பணிக்கும், வேறொருவர், கிராம மக்கள் சுகாதாரப் பணிகளுக்காகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்). மேலும் பிற துணை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களான நல்வாழ்வு ஆய்வாளர் கள் சுகாதார பார்வையாளர்கள், பல நோக்கு சுகாதாரப் பணியாளர்கள் (ஆண் மற்றும் பெண்) சுகாதார உதவியாளர்கள், மருந்தாளுநர்கள் மற்றும் ஆண், பெண் சுகாதார உதவியாளர்கள் - மற்றும் துப்புரவுப் பணியாளர்கள் ஆகியோரும் பணியாற்றுகின்றனர்.

மருத்துவ மேற்பார்வை

1987ஆம் ஆண்டு, இம்மாவட்டத்திலுள்ள 11 ஆரம்ப சுகாதார மையங்களிலும், 3,11,245 நோயாளிகள் புற நோயாளிகளாக மருத்துவமளிக்கப்பட்டனர். இந்த மையங்களில் அக நோயாளிகளாக மருத்துவமளிக்கப்பட்டோரது எண்ணிக்கை, 621 ஆகும்.[25]

நீரினால் பரவும் நோய்களில், வாந்திபோதி முக்கியமானதாகும். நீர்க்கூறகற்றப்படுவதை விரைவில் கண்டு பிடித்து மருத்துவமளித்தால், இறப்பு விகிதத்தை ஓரளவு குறைத்திட வாய்ப்புண்டு, நீர்க்கூறகற்றப்படுவதைத் தடுத்து, நீர்ச்சத்தினைத் தக்கவைத்து மற்றும் மேம்படுத்திக்கொள்வது குறித்து, பொதுமக்களுக்கு, சுகாதாரத்துறைப் பணியாளர்கள், தீவிரமாகப் பயிற்சியளித்து வருகின்றனர். ஆரம்ப சுகாதார மையங்களின் மருத்துவ அலுவலர்களும், களப் பணியாளர்களும், நீர் மற்றும் காற்று மூலம் பரவக்கூடிய நோய்கள் குறித்து, விழிப்புடன் செயலாற்றுமாறு, அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

அம்மைப் பாலினை ஊசி மூலம் உடலில் செலுத்தி நோய்த்தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. தடுப்பூசியினைச் செலுத்தியும் நோய்த் தடுப்பு முறை கையாளப்படுகிறது. மருத்துவ மேற்பார்வை மற்றும் சுகாதாரக் கல்வி, இவை தவிர, அம்மைப் பாலுக்குக் கட்டுப்படாத நோய்களை

குணப்படுத்தும் பணி மூலமும், துப்புரவுப் பணி மற்றும் சுகாதாரக் கல்வி ஆகிய முறைகளைக் கையாண்டும், இறப்பு விகிதம் குறைக்கப்படுகிறது.

பள்ளி நல்வாழ்வுத் திட்டங்கள்

மாவட்டத்திலுள்ள அனைத்து ஆரம்ப சுகாதார மையங்களிலும், நகராட்சிகளிலும் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. ஆறு முதல் 11 வயதிற்குட்பட்ட பள்ளிக் குழந்தைகளின் சுகாதார மதிப்பீட்டினை, மருத்துவக் குழுவினைச் சார்ந்த மருத்துவ அலுவலர்களும், சுகாதாரப் பார்வையாளர்களும் மேற்கொள்கிறார்கள். சிறப்பு மருத்துவமளிக்கப்பட வேண்டிய குழந்தைகள், அதற்கென ஒதுக்கப்பட்ட மருத்துவ மனைகளுக்கு அனுப்பப்படுகிறார்கள், உடல் நலம் குறித்தும், பல்வேறு வகைப்பட்ட நோய்கள் குறித்தும், ஆதார விவரங்களை அறிந்து கொள்வதற்காக, அனைத்து மாணவர்களுக்கும், பள்ளிகளில், சுகாதாரக் கல்வி போதிக்கப்படுகிறது. ஒவ்வொரு பள்ளிக் குழந்தைக்கும், சுகாதார அட்டை வழங்கப்படுவதே இத்திட்டத்தின் தனிச்சிறப்பாகும். பல்வேறு குழுக்களைச் சார்ந்த மருத்துவ அலுவலர்களும், சுகாதாரக் கண்காணிப்பாளர்களும் உடற் பரிசோதனை செய்கிறார்கள். சிறிய மருத்துவங்கள் அங்கேயே அளிக்கப்படு கின்றன. சிறப்பு மருத்துவம் தேவைப்படும் நோயாளிகள், நாகர்கோவில் தலைமை மருத்துவமனைக்கு அனுப்பப்படுகிறார்கள். மேலும், ஆசிரியர் களுக்கும், பெற்றோர்களுக்கும் கூட, சுகாதாரக் கல்வியின் பல விவரங்கள் குறித்து போதிக்கப்படுகிறது. 1988ஆம் ஆண்டு, பிப்ரவரி மாதம் வரை, ஆரம்ப சுகாதார மையங்களைச் சார்ந்த மருத்துவ அலுவலர்கள், 22,633 பள்ளிக் குழந்தைகளை ஆய்ந்து, 4,957 குழந்தைகளின் உடலில் குறைபாடு உள்ளதெனக் கண்டறிந்து, அவர்களுக்கு உரிய மருத்துவம் அளித்தார்கள்.

நடமாடும் மருத்துவ மேற்பார்வை

ஒரு சில தேர்ந்தெடுக்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் இத்திட்டம், 1977-78ஆம் ஆண்டு செயலாக்கப்பட்டது. அதன் பின்னர், இத்திட்டம், பல்வேறு கட்டங்களில், சில தேர்ந்தெடுக்கப்பட்ட ஆரம்ப சுகாதார மையங்களுக்கு விரிவாக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், ஒரு மருத்துவ அலுவலர் மற்றும் இரண்டு மருந்தாளுநர்கள் ஆகியோரடங்கிய ஒரு குழு, கிராமப்புற மக்களுக்கு அவர்களது இருப்பிடத்திற்கு சென்று, மருத்துவப் பணியளிக்கிறது. இவை தவிர, கிராம நலக்குழு அமைக்கப்பட்டு, கிராமப்புற மக்களுக்கு, மிகத் தீவிரமாகப் பணியாற்ற, மருத்துவக் குழுவிற்குப் போதிய உதவியினை அளித்திட, ஊக்குவிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், 1988 பிப்ரவரி மாதம் வரை 501 கிராமங்கள் பார்வையிடப்பட்டு, 27,211 நோயாளிகளுக்கு, மருத்துவ உதவி அளிக்கப்பட்டுள்ளது.

நல்வாழ்வுக் கல்வி

பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துகள் இயக்கத்தைச் சார்ந்த, மாநில பொது சுகாதாரக் கல்வி புள்ளி விவரச் சேகரப் பணிமனையின் ஒரு அலகு, கன்னியாகுமரி மாவட்டத்தின், பல்வேறு பகுதிகளில், கீழ்க்குறிப்பிட்ட நோக்கங்களுடன் செயல்படுகின்றன.

(1) "கி.பி.2000-ல் அனைவருக்கும் நல்வாழ்வு" என்ற குறியீட்டினை எய்திட மக்களின் ஒவ்வொரு செயல் முறையுடனும், சுகாதாரக் கல்வியினை ஒருங்கிணைத்திட, கிராமப்புற மக்களுக்கு உதவி புரிதல்;

(2) மக்கள் தங்களது சுகாதாரப் பிரச்னைகளை அடையாளங்கண்டு, அவற்றைப் புரிந்து கொண்டு, பிரச்னைகளைத் தீர்த்துக்கொள்ள, அவர்களுடன் ஒத்துழைத்தல் ; மற்றும்

(3) சுகாதாரக் கல்வியின் ஆக்கக் கூறுகளைப் புரிந்து கொண்டு, மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களை வெற்றிகரமாக, நடைமுறைப்படுத்திட, சுகாதாரப் பணியாளர்களுக்கு உதவி புரிதல்.

மக்கள் நலப்பணி தொடர்பான பல்வேறு திட்டங்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்திட, கிராம மக்களை சிறு குழுக்களாகத் திரட்டி, அவர்களுக்கு சுகாதாரக் கல்வி போதிக்கப்படுகிறது. அதாவது (1) கல்வியளிப்பது தொடர்பான உதவிகள் (2) தொலைபேசி, வானொலி, செய்தித் தாள்கள், பொருட்காட்சி, திரையரங்குகள் போன்றவை வாயிலாக, கலைநுணுக்கத்திறன் தொடர்பாக விளக்குதல் மற்றும் வரைபடம் மூலமாகவும் விளக்குதல் (3) சுவரொட்டிகள், கைப்பிரசுரங்கள் மூலம் விளம்பரப்படுத்துதல் மற்றும் (4) சுகாதாரக் கல்வி நடத்துமுறையின் ஒரு பகுதியாக, சிறப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல் ஆகியவை இவற்றில் அடங்கும்.

இம்மாவட்டத்திலியங்கிவரும் விளம்பர அலகு, கிராம மக்களுக்கு சுகாதாரக் கல்வி போதிப்பது தொடர்பான, அனைத்து உதவிகளும் அளிக்கிறது.

கிராமப்புற சுகாதாரப் பயிற்சித் திட்டம்

கிராமப்புற சுகாதாரப் பயிற்சி மையங்கள், மாவட்டத்தில், இராசக்கமங்கலம், செண்பகராமன்புதூர் மற்றும் கூத்தாநல்லூர் ஆகிய ஆரம்ப சுகாதார மையங்களில் இயங்கி வருகின்றன. தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்ட செயல்முறைக்கு உலக வங்கி உதவியுடன் கிராமப்புற சுகாதாரப் பயிற்சி மையங்கள் அமைக்கப்பட்டன. பலநோக்கு சுகாதாரப் பணியாளர். (பெண்கள்) பயிற்சியாளர்களுக்கு, அவர்களது பயிற்சிக் காலத்தின் கடைசி ஆறு மாதங்களில் பயிற்சி அளித்திட, இம்மையங்கள் நிறுவப்பட்டன. பயிற்சி காலத்தில், நோய்தடுப்பு நடவடிக்கை, குணப்படுத்தும் நடவடிக்கை, உடல்நல மேம்பாட்டு நடவடிக்கை மற்றும் குடும்ப நலப்பணிகள் ஆகியவை குறித்து, பயிற்சியாளர்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது.

மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலம்

இதுதான், ஆரம்பி சுகாதார மையங்கள் மூலம் மக்களுக்கு அளிக்கப்படும் ஆதராப் பணியாகும். கருவுற்றுள்ள அனைத்துத் தாய்மார்களின் பெயர்களும், "தாய் கண்காணிப்புப் பதிவேட்டில்

பதியப்பெற்று, அவர்களுக்கு மருத்துவம் அளிப்பது குறித்து, தனி கவனம் செலுத்தப்படுகிறது. அவர்கள், நரம்பிசிவு நோயினால் பாதிக்கப்படாதிருக்க அவர்களுக்குத் தடுப்பூசி செலுத்தப்படுகிறது. இரத்தச் சோகை நோயினால் பாதிக்கப்பட்ட தாய்மார்களுக்கு 100 இரும்புச்சத்து மாத்திரைகள் வழங்கப் படுகின்றன. 1987ஆம் ஆண்டு, ஆரம்ப சுகாதார மையப் பணியாளர்கள், 5851, மகப்பேறு மருத்துவம் அளித்துள்ளனர்.

புதிதாகப் பிறந்த குழந்தைகள் யாவும், குழந்தைகள் கண்காணிப்புப் பதிவேட்டில் பதியப்படுகின்றன. அவற்றிற்குத் தடுப்பூசி செலுத்திட, அவ்வப்போது நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. தொண்டை அழற்சி நோய், கக்குவான், நரம்பிசிவு நோய், எலும்புருக்கி நோய், இளம்பிள்ளை வாதம், தட்டம்மை, மற்றும் குடற்காய்ச்சல் ஆகிய நோய்கள் வராமல் தடுத்திட குழந்தைகளுக்குத் தடுப்பூசி செலுத்தப்படுகிறது.

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி

மருந்துகள் உட்கொள்வது, நோயினைக் குணப்படுத்துவதற்காக மட்டுமல்ல, உடல் நலத்தைப் பேணிக் காக்கவும் உதவும், மனிதன் தோன்றிய காலத்திலிருந்தே, இப்பிரச்னையினை விஞ்ஞான பூர்வமாக, மருந்து தீர்த்துவைத்து வருகிறது

உள்நாட்டு மருத்துவ முறையில், சித்த மருத்துவம் மற்றும் ஆயுர்வேத மருத்துவம் ஆகியவை, இம்மாவட்டத்தில், ஒரு முதன்மையான அங்கம் வகிக்கின்றன. பழங்காலந்தொட்டு, சித்த மருத்துவ முறை மாவட்டத்தில் பிரபலமடைந்துள்ளது. இம்மாவட்டத்தில், சித்த மருத்துவ முறையினில் நல்ல பயிற்சி பெற்றோர், அரும்பணியாற்றியுள்ளனர். பட்டணம் வைத்தியர் எனப் பிரபலமாக அழைக்கப்பட்ட மைதீன் அடிமை, ராஜ வைத்தியர் என அழைக்கப்பட்ட நாராயணசாமி, சண்முக வைத்தியர் மற்றும் கொச்சு வைத்தியர் ஆகியோரது பணி மறக்க முடியாததாகும். இருபதாம் நூற்றாண்டின் முதற்பாதியில், அவர்கள் மக்களுக்குப் போற்றத்தக்க வகையில் பணியாற்றியுள்ளனர்.[28] ஆயுர்வேத மருத்துவத்தில் குறிப்பிடத்தக்க வர்கள் இம்மாவட்டத்தைச் சேர்ந்த சுசீந்திரம், வட்டப்பள்ளி மடத்தின் உறுப்பினர்கள், தரிசனங்கோப்பு மகாதேவ அய்யர், நீலகண்ட வைத்தியர், வேலு வைத்தியர் மற்றும் தாமோதரம் பிள்ளை வைத்தியர், ஆகியோராவர். காட்டுக்கடை ஆசான், மற்றும் ஆத்தூர் செல்லம்மாள் ஆகியோர், பிரசித்திபெற்ற மருத்துவர்கள் ஆவர். அவர்களில் காட்டுக்கடை ஆசான், தமிழ்நாட்டின் தென்பகுதியில் மிகவும் புகழுடன் திகழ்ந்தவராவார்.

வைக்காட்டுப் பாச்சி மூத்தாத்து என அழைக்கப்பட்ட சுசீந்திரம் வட்டப் பள்ளி பரமேஸ்வர சர்மா, (கி.பி. 1813-1882) புகழ்பெற்ற ஆயுர்வேத மருத்துவர் மட்டுமல்ல, ஒரு (சமஸ்கிருத) வடமொழிப்புலவர். திறமைவாய்ந்த ஓவியர், கவிஞர், இலக்கணப் புலவர், புகழ்பெற்ற வரலாற்றாசிரியர், எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு சோதிடருமாவர். அவர், ஆயுர்வேதப்பள்ளியின் முதலில் நியமிக்கப்பட்ட முதல்வரும்,

இயக்குநருமாவார். திருவனந்தபுரத்திலுள்ள தற்போதைய ஆயுர்வேதக் கல்லூரி துவங்குவதற்கு இவர்தான் மையக்கரு எனில் மிகையில்லை. இன்றைய நிலையில், இம்மாவட்டத்தில், 500-க்கும் மேற்பட்ட சித்த மற்றும் ஆயுர்வேத மருத்துவர்கள் மக்களுக்கு மருத்துவமளித்து வருகின்றனர்.

ஓமியோபதி மருத்துவத்தில் டாக்டர் பத்மநாப பிள்ளை முன்னோடியாகத் திகழ்ந்தார். ஆனால், கன்னியாகுமரி மக்களிடையே ஓமியோபதி மருத்துவ முறையினை நன்கு பரப்பிய பெருமை, டாக்டர் தோபியாஸ் அவர்களையே சாரும், தற்போது, மாவட்டத்தில் தகுதி வாய்ந்த 50 மருத்துவர்களும், (டாக்டர்கள்), 200 ஓமியோபதி மருத்துவச் சான்று பெற்றவர்களுமுள்ளனர். இப்பொழுதெல்லாம், தற்கால எதிர்முறை (ஆங்கில)மருத்துவர்களே, உள்நாட்டு முறைகளை மனமார அங்கீகரிக்கின்றனர். நாகர்கோவிலிலுள்ள புற்றுநோய் ஆராய்ச்சி, மருத்துவ மையம் தனது ஆராய்ச்சிப் பணியின் ஒரு அங்கமாக, அண்மையில் ஒரு மாதிரி ஆய்வு நடத்தியது. மாவட்டத்தின் கிராமப்புறப் பகுதிகளில் நடைமுறையிலுள்ள பல்வேறு மருத்துவ முறைகளை அடையாளங்காணவே, இந்த ஆய்வு நடத்தப்பட்டது. ஆய்வின்முடிவு மிகுந்த ஆர்வத்தை ஊட்டியது. நேரடியாக சந்தித்துப் பேசியதில் கலந்துகொண்ட 1000 பேர்களில், 72 விழுக்காட்டினர் உள்நாட்டு மருத்துவ முறையினையும், 28 விழுக்காட்டினர் எதிர்முறை (ஆங்கில) மருத்துவ முறையினையும், தங்களது முதல் தெரிவாகத் தேர்ந்தெடுத்தனர். உள்நாட்டு மருத்துவத்தின் மீதான வழிவழிவந்த நம்பிக்கை மட்டுமல்லாது, அவற்றை செயற்படுத்தும் திறனுக்காகவும் அவற்றை மக்கள் தெரிவு செய்தார்களென்பது குறிப்பிடத்தக்கது. மஞ்சள் காமாலை, வாதநோய், மூட்டுவலி நோய், எலும்பு முறிவு, தலைமயிர் இழப்பு, கண் சார்ந்த நோய்கள், கக்குவான், மூலநோய், நச்சுக்கடி, புழுக்கடி மற்றும் குறுதி வெள்ளை நுண்மப்பெருக்கக் கோளாறு ஆகிய நோய்கள் தொடர்பான அவர்களது தெரிவு நூற்றுக்கு நூறு விழுக்காடு உள்நாட்டு மருத்துவ முறையேயாகும்.

"எதிர்முறை" மருத்துவ முறையில், மாவட்டத்தினுடைய மக்கள் தொகையில் 96.8 விழுக்காடு மக்களுக்குத் தேவையான அளவிற்கு இருந்த போதிலும், மக்கள் உள்நாட்டு மருத்துவ முறையினையே, விரும்பித் தேர்வு செய்கின்றனர். உள்நாட்டு முறை மருத்துவர்கள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள். அவர்களை மக்கள் எளிதில் அணுக முடிகிறதென்பதும், இதற்கு முக்கியக் காரணமாகும்.

அரசு மருத்துவமனைகளில், சித்த, ஆயுர்வேத மற்றும் ஓமியோபதி மருத்துவ அலகுகள்

இந்திய மருத்துவ முறைப்படியும், ஓமியோபதி மருத்துவ முறைப்படியும் மக்களுக்கு மருத்துவ வசதி அளித்திட, அரசு மிகுந்த

அக்கறை செலுத்தி வருகின்றது. அதன்படி, மாவட்டத்திலுள்ள கீழ்க்குறிப்பிட்ட இடங்களிலுள்ள அரசு மருத்துவமனைகளில் சித்த மற்றும் ஆயுர்வேத அலகுகளையும், ஓமியோபதி மருந்தகங்களையும் அரசு திறந்துள்ளது.[27]

தொடர் எண்.	நிறுவனத்தின் பெயர்	இருப்பிடம்
1.	சித்த மருத்துவ அலகு, அரசு தலைமை மருத்தவமனை	நாகர்கோவில்
2.	வட்ட மருத்துவ மனை	பத்மநாபபுரம்
3.	அரசு மருத்துவ மனை	குழித்துறை
4.	ஆரம்ப சுகாதார மையம்	அகஸ்தீஸ்வரம்
5.	ஆரம்ப சுகாதார மையம்	ஆறுதேசம்
6.	ஆரம்ப சுகாதார மையம்	செண்பகராமன்புதூர்
7.	ஆரம்ப சுகாதார மையம்	எடைக்கோடு
8.	ஆரம்ப சுகாதார மையம்	கரிங்கால்
9.	ஆரம்ப சுகாதார மையம்	கூட்டுக்குழி
10.	ஆரம்ப சுகாதார மையம்	முட்டம்
11.	ஆரம்ப சுகாதார மையம்	இராசக்காமங்கலம்
12.	கிராம சித்த மருந்தகம்	பூவன்கோடு
13.	ஆயுர்வேத மருந்தகம்	எடலக்குடி
14.	ஆயுர்வேத மருந்தகம்	திருப்பதிசாரம்
15.	ஆயுர்வேத மருந்தகம்	புதுக்கடை
16.	ஓமியோபதி மருந்தகம், அரசு தலைமை மருத்துவ மனை	நாகர்கோவில்
17.	சித்த மருத்துவ அலகு, அரசு சமுதாய சுகாதார மையம்	கன்னியாகுமரி
18.	சித்த மருத்துவ அலகு, ஆரம்ப சுகாதார மையம்	குருந்தங்கோடு

அக நோயாளிகள் மருத்துவம் பெற வசதியாக, நாகர்கோவில் தலைமை மருத்துவ மனை, பத்மநாபபுரம் வட்ட மருத்துவமனை, மற்றும் குழித்துறை அரசு மருத்துவ மனை ஆகியவை ஒவ்வொன்றிலும் 10 படுக்கைகள் உள்ளன.[28] இந்த அலகுகள், மாவட்ட சித்த மருத்துவ அலுவலரின் கண்காணிப்பில் இயங்கி வருகின்றன. கன்னியாகுமரி மாவட்டத்தில், அக்டோபர், 31, 1988-ன்படி, சித்த மருத்துவத்திற்கு 14 உதவி மருத்துவ அலுவலர்களும், ஆயுர்வேத மருத்துவத்திற்கு மூன்று மருத்துவர்களும், ஓமியோபதி முறை மருத்துவத்திற்கு ஒரு மருத்துவரும், மற்றும் 14 மருந்தாளுநர்களும் பணியாற்றி வருகின்றனர்.

கடந்த ஆறாண்டுகளில், இந்த உள்நாட்டுவகை மருத்துவத்தின்படி, மருத்துவம் பெற்ற நோயாளிகளின் எண்ணிக்கை கீழே கொடுக்கப் பட்டுள்ளது:

தொடர் எண்.	ஆண்டு	புற நோயாளிகளின் எண்ணிக்கை			அக நோயாளிகளின் எண்ணிக்கை
		சித்த மருத்துவம்	ஆயுர்வேத மருத்துவம்	ஒமியோபதி மருத்துவம்	சித்த மருத்துவம்
1.	1982	1,36,983	65,999	-	81
2.	1983	1,26,016	60,494	-	4
3.	1984	1,87,747	65,230	-	18
4.	1985	1,51,500	57,418	2,974	55
5.	1986	1,21,663	43,217	15,327	54
6.	1987	1,95,986	33,860	21,405	630

இலவச மருத்துவ முகாம்கள்

இம்மருத்துவ முறைகள் கிராமப்புற மக்களின் பாராட்டுதலைப் பெற்றிட கிராமப்புற பகுதிகளில் ஒவ்வொரு மாதமும், சித்த, ஆயுர்வேத மற்றும் ஓமியோபதி மருத்துவ முறைகள் சார்ந்த இலவச மருத்துவ முகாம்கள் நடத்தப்படுகின்றன. இந்த இலவச மருத்துவ முகாமிற்கு, கிராம மக்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு வருகிறது. இம்மாவட்டத்தில், 1986ஆம் ஆண்டு, இரண்டு இலவச மருத்துவ முகாம்களும், 1987ஆம் ஆண்டு, ஒன்பது இலவச மருத்துவ முகாம்களும் நடத்தப்பெற்று, அவற்றில் முறையே 1214 மற்றும் 5936 நோயாளிகள் மருத்துவமளிக்கப்பட்டனர்.

மருந்து (பூண்டு சார்ந்த) வேர்வகைத் தோட்டம்

பத்மநாபபுரம் மற்றும் குழித்துறை அரசு மருத்துவமனைகள், அகஸ்தீஸ்வரம், ஆறுதேசம், செண்பகராமன்புதூர், எடைக்கோடு, கருங்கல், முட்டம் மற்றும் குழித்துறை ஆகிய ஆரம்ப சுகாதார மையங்களில், பூண்டு சார்ந்த வேர்வகைத் தோட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தனியார் மருத்துவமனைகளும், மற்றும் நோயாளிகளைப் பேணும் மனைகளும்

தற்கால மருத்துவ சாதனங்கள் அமையப்பெற்ற பல மருத்துவ மனைகளையும், நோயாளிகளைப் பேணும் தனியார் மருத்துவமனைகளை யும் கன்னியாகுமரி மாவட்ட மக்கள் பெற்றிருப்பது, அவர்கள் அதிர்ஷ்டசாலிகள் என்பதை உறுதிப்படுத்துகிறது. இது சிறிய மாவட்டமாயிருப்பினும் இங்கு சுமார் 100 தனியார் மருத்துவ மனைகள் இயங்கி வருகின்றன. ஐநூறுக்கும் மேற்பட்ட மருத்துவர்கள் மாவட்டத்தில் பணியாற்றுகின்றனர். மாவட்டத்திலுள்ள தனியார் மருத்துவர்களைப் பொறுத்த வரையில், இந்நூற்றாண்டின் முதற் பாதியில், பொது

மருத்துவத்தைப் பொறுத்த வரையில் டாக்டர் எம்.கோபால பிள்ளை அவர்கள் ஆற்றிய பணி, அறுவை மருத்துவத்தில் டாக்டர் எம்.மத்தியாஸ் அவர்களது பணி, நோயாளிகளைக் கண்டறிய டாக்டர் ஹில்கியா அவர்களது பணி, மற்றும் மகப்பேறுத்துறையில், டாக்டர் எம்.இ. நாயுடு ஆகியோரது பணி, மறக்க இயலாது. மாவட்டத்தில் முதல் பெண் மருத்துவராகப் பணியாற்றிய டாக்டர் தாயம்மாள் ஏசுதீன் என்பவர், மகப்பேறு மற்றும் குழந்தைகள் மருத்துவர் துறையில் ஆற்றிய பணி, தனிச்சிறப்பிற்குரியது. மற்றொரு புகழ்பெற்ற மருத்துவரான டாக்டர் எஸ்.முத்துக்கருப்பப் பிள்ளை அவர்கள், அகஸ்தீஸ்வரம் மற்றும் தோவாளை வட்டங்களிலுள்ள கிராமப்புற மக்களுக்குப் பொது மருத்துவத் துறையில் ஆற்றிய பணி குறிப்பிடத்தக்கது. 1933ஆம் ஆண்டு, அவர் தேரூர் என்ற கிராமத்தில், தனி மருத்துவ மனையினைத் துவக்கி, சுற்று வட்டார கிராமங்களுக்கு ஒரு மாட்டு வண்டியில் சென்று, கிராம மக்களுக்கு மருத்துவம் செய்து வந்தார். மாநிலத்திலுள்ள முதன்மையான கிராமப்புற மருத்துவப் பணியாற்றிய மருத்துவர்களுக்கு, 1982 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட டாக்டர் பந்தாரி பரிசினை இவர் முதன் முதலில் வென்ற பெருமைக்குரியவராவார்.[29]

மாவட்டத்தில், பல மருத்துவ நிறுவனங்கள் இயங்கி வந்த போதிலும், பொது மக்களுக்கு அவை சிறப்புற ஆற்றிவரும் பணிக்கு எடுத்துக்காட்டாக, கீழ்க்கண்ட மருத்துவ மனைகள் விளங்குகின்றன. அவை, கன்னியாகுமரி மாவட்டத்தின் நெய்யூர், நாகர்கோவில், மார்த்தாண்டம், குலசேகரம் மற்றும் கொளச்சல் ஆகிய இடங்களிலுள்ள கன்னியாகுமரி மருத்துவ சமயப்பரப்புக் குழுவின் தென்னிந்திய திருச்சபை மருத்துவமனைகள், வடசேரியிலுள்ள கேத்ரின் பூத் மருத்துவமனை, மணலிக்கரையிலுள்ள கார்மேல் மருத்துவமனை, வெட்டூர்ணிமடத்திலுள்ள சிலுவை மேம்பாட்டு மருத்துவமனை, மற்றும் சுசீந்திரத்திலுள்ள இந்து சமயப்பரப்புக் குழு மருத்துவமனை ஆகியவையாகும். இம்மருத்துவ மனைகள் ஆற்றிய அரும்பணி குறித்த தொகுப்பு கீழே அளிக்கப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மருத்துவ சமயபரப்புக் குழுவின் தென்னிந்திய திருச்சபை மருத்துவமனை, நெய்யூர்[30]

இலண்டன் சமயப்பரப்பு சங்கத்தின் ஒரு சமயப்பரப்பாளரான டாக்டர் எச்.ஏ. ராம்சே என்பவரால் இந்த சமயப் பரப்புக் குழு நிறுவப்பட்டது. அவர், இப்பகுதி மக்களுக்கு 1838ஆம் ஆண்டு முதல், தொண்டாற்றினர். சமயப் பரப்புப் பணியினின்றும், அவர், ஓராண்டு காலத்தில், ஓய்வு பெற்றார். பின்னர், இங்கிலாந்திலிருந்து இந்தியாவிற்கு வந்த மருத்துவர்களும், செவிலியரும் அவரது பணியினைத் தொடர்ந்தனர்.

துவக்கத்தில் இந்த சமயப் பரப்புக்குழு, தென் திருவாங்கூர் மருத்துவ சமயப்பரப்புக் குழுவின் கட்டுப்பாட்டில் இயங்கி வந்தது. கன்னியாகுமரி மாவட்டம், 1956ஆம் ஆண்டு நிறுவப்பட்டு அது, சென்னை மாநிலத்துடன் இணைந்த பின்னர், கன்னியாகுமரி மாவட்ட சமய முதல்வரின் அருளாட்சிப்

பரப்பில், தென்னிந்தியத் திருச்சபை அமைக்கப்பட்டு, மருத்துவ சமயப்பரப்புக் குழுவின் பெயர், கன்னியாகுமரி மருத்துவ சமயப்பரப்புக்குழு என மாற்றியமைக்கப்பட்டது.

டாக்டர் லெய்ட்ச் (Dr. Leitch) என்பார், 1852ஆம் ஆண்டு சிறிய அளவில் நெய்யூரில், ஒரு மருந்தகத்தைத் திறந்தார். 1861ஆம் ஆண்டு, நெய்யூரில் தனியாக ஒரு மருத்துவ மனைக் கட்டிடம் கட்டப்பட்டது. அதிலிருந்து, அது இலண்டன் சமயப்பரப்புக் குழுவினது மருத்துவப் பணியின் தலைமையிடமாக உருவாகியது. அங்கு, 1864-ஆம் ஆண்டு டாக்டர் ஜான் லெனஸ் என்பவர் முதல் மருத்துவர் பள்ளியினை நிருவினார். 1885ஆம் ஆண்டு, "செவிலியர் பயிற்சிப் பள்ளி" இயல்பாக துவங்கப்பட்டது. 1923ஆம் ஆண்டு முறையான செவிலியர் பள்ளிப் பணி துவங்கப்பட்டு, 1926ஆம் ஆண்டில், முதல் தொகுதி மாணவர்கள் சென்னை "செவிலியர்" பதிவாளரின் அங்கீகாரத்தைப் பெற்றனர். 1930 ஆம் ஆண்டு, இந்திய கிறிஸ்த்தவ மருத்துவச் சங்கத்தின் முதல் தொகுதி மாணவர்கள், இந்நிறுவனத்தினின்றும் பட்டம் பெற்று வெளி வந்தனர்.

தாய், சேய்நல மருத்துவ உதவி சார்ந்த பயிற்சிக்கு, 1939ஆம் ஆண்டு அரசின் அங்கீகாரம் பெறப்பட்டது. ஃபெல்ஸ் மற்றும் பெண்ட்டால் (Fells and Bentall) போன்ற திறமை வாய்ந்த மருத்துவர்கள் மருத்துவ சமயப்பரப்புக் குழுவினை, உலகிலேயே மிகப் பெரிய மருத்துவ சமயப்பரப்புக் குழுவாக, 1910 ஆம் ஆண்டு, இரண்டு சமயப் பரப்பாளர்கள், 17 இந்திய மருத்துவர்கள், ஆறு இந்திய செவிலியர், ஆகியோருடன் உயர்த்தியமைத் தனர். அவ்வாண்டு, 76,000 நோயாளிகளுக்கு மருத்துவமளிக்கப்பட்டது. மேலும், 5,000 நோயாளிகள் அறுவை மருத்துவம் செய்து கொண்டனர். 1912ஆம் ஆண்டு, டாக்டர் எஸ்.எச். பூஜ் (Pugh) என்பவரது கண்காணிப்பில், மருத்துவமனை 100 படுக்கைகள்பெற்றது. அகில உலகப் புகழ் பெற்ற எவரெஸ்ட் மலையேற்ற சாதனை நாயகன் டாக்டர் ட்டி.எச். சோமெர்வெல் (T.H. Somerwell), என்பார், இங்கு 30 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றினார். 1922ஆம் ஆண்டு இந்தியாவிற்கு வருகை தந்த அவர், அறுவை மருத்துவத்தில் நற்பெயரீட்டினார். 1932ஆம் ஆண்டு, இந்த சமயப்பரப்புக் குழு, 2,17,000 நோயாளிகளுக்கு மருத்துவம் அளித்தது.

ஜெயசேகரன், வில்லியம் மற்றும் கிங்ஸ்லி ஆகிய இந்திய மருத்துவர்கள் ஆற்றிய பணியும் குறிப்பிடத்தக்கதாகும். தற்போது, டாக்டர் ஜே.ஸி. விஜயன், இந்த மருத்துவமனையின் கண்காணிப்பாளராவார்.

1963ஆம் ஆண்டு, நெய்யூர் மத்திய மருத்துவமனையுடன், அகில உலக புற்றுநோய் மையம் நிறுவப்பட்டது. அது இலண்டனிலுள்ள ஒரு அறக்கட்டளையின் கட்டுப்பாட்டில் இயங்கியது. டாக்டர் ஜென்கின் என்பார், இம்மையத்தைத் தோற்றுவித்தவரும், இதனுடைய முதன் இணை இயக்குநருமாவார்.

ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்தாறாம் ஆண்டு, இந்த சமயப்பரப்புக் குழு, 50,502 புற நோயாளிகளுக்கும், 14,959 அக நோயாளிகளுக்கும் மருத்துவம் அளித்துள்ளது. 1988ஆம் ஆண்டின் இறுதிக்குள், இந்த சமயப்பரப்புக்குழு, அதனுடைய 150-வது ஆண்டு விழாவினைக் கொண்டாடவிருப்பது, மனநிறைவடையச் செய்கிறது.

இம்மருத்துவமனையிலுள்ள படுக்கைகளின் தற்போதைய எண்ணிக்கை 250 ஆகும். அறுவை மருத்துவம், மகப்பேறு மருத்துவம், மகளிர் மருத்துவம், பொது மருத்துவம், கண் மருத்துவம், தோல் சார்ந்த மருத்துவம், குழந்தை மருத்துவம், கதிரியியக்க முறையில் நோயைக் கண்டறிதல், மயக்க மருந்து அளித்தல் சார்ந்த மருத்துவம் மற்றும் பல் அறுவை மருத்துவம் ஆகிய அனைத்து வசதிகளையும், மருத்துவமனை பெற்றுள்ளது. ஒரு நாளைக்கு 250 புற நோயாளிகளும், 200 அக நோயாளிகளுக்கும், மருத்துவமளிக்கப்படுகிறார்கள்.

சாதி, சமய வேறுபாடின்றி, ஏழை, எளிய நோயாளிகள் அனைவருக்கும் மருத்துவ வசதிகளை அளிப்பதே, இச்சமயப்பரப்புக் குழுவின் நோக்கமாகும். வாராந்திர புறஎல்லை மருத்துவமனை இலவச கண் மருத்துவ முகாம், மற்றும் மாதாந்திர மருத்துவப் பரிசீலனைகள் ஆகியவையும் கிராமங்களில் இச்சமயப்பரப்புக் குழுவினால், நடத்தப்படுகின்றன. செவிலியர் பள்ளி தவிர, கதிரியியக்க முறையில் நோயைக் கண்டறிதல் மற்றும் ஆய்வுக்கூட தொழில் நுட்ப பயிற்சி ஆகியவற்றிற்கு 1985ஆம் ஆண்டு, சமயப்பரப்புக் குழுவினால் தனிப் பள்ளிகள் துவக்கப்பட்டுள்ளன.

தென்னிந்தியத் திருச்சபை மருத்துவமனை, நாகர்கோவில்

நாகர்கோவிலில், 1838ஆம் ஆண்டு, டாக்டர் எச்.ஏ. ராம்சே என்பவரால், இலண்டன் சமயப்பரப்பாளர் சங்கத்தால் முதன் முதலில் நிறுவப் பட்ட மருத்துவமனையாகும். பின்னர், இது நெய்யூருக்கு மாற்றப்பட்டது. தற்போதுள்ள மருத்துவமனை 1880ஆம் ஆண்டு, டாக்டர் ஸ்மித் தாம்சன் என்பவரால் துவக்கப்பட்டது. இது ஊடுகதிர் மற்றும் ஆய்வுக்கூட வசதிகளைப் பெற்ற, 25 படுக்கைகளைக் கொண்ட பொது மருத்துவ மனையாகும்.

தென்னிந்தியத் திருச்சபை மருத்துவமனை, மார்த்தாண்டம்

இது, 1883ஆம் ஆண்டு, தொடுவெட்டி என்ற இடத்தில் டாக்டர். ப்பி.வேதமாணிக்கம் என்பவரால், ஒரு சிறிய கட்டிடத்தில் நிறுவப்பட்டது. இது விளவங்கோடு வட்டத்தில், நிறுவப்பட்ட முதல் மருத்துவ மனையாகும். வளர்ந்து வரும் மக்களின் தேவையைக் கருதி, 1892 ஆம் ஆண்டு, அது மார்த்தாண்டத்திலுள்ள புது கட்டிடத்திற்கு மாற்றப்பட்டது. இது, ஊடுகதிர் மற்றும் ஆய்வுக்கூட வசதிகளையுடைய ஒரு பொது மருத்துவமனையாகும். இம்மருத்துவமனையில், நான்கு மருத்துவர்களும், 22 செவிலியர்களும் பணியாற்றி வருகின்றனர்.

தென்னிந்தியத் திருச்சபை மருத்துவமனை, குலசேகரம்

ஐம்பது படுக்கைகள், மூன்று மருத்துவர்கள் மற்றும் ஏழு செவிலியர் ஆகியோருடன் இந்த மருத்துவமனை, குலசேகரத்தில், 1900-ம் ஆண்டு, டாக்டர் எஸ்.ஜி. சாமுவேல் என்பவரால், நிறுவப்பட்டது. இது ஆய்வுக்கூட மற்றும் ஊடுகதிர் வசதிகளை பெற்றுள்ளது.

கேத்தரின் பூத் மருத்துவமனை, வடசேரி

இரட்சணிய சேனையின் கேத்தரின் பூத் மருத்துவமனை, தமிழ்நாட்டின் மருத்துவ உலகிலேயே, ஒரு முதன்மையான மருத்துவ நிறுவனமாகும். இது, நாகர்கோவிலிலுள்ள வடசேரியில், 1892 ஆம் ஆண்டு, திரு. ஹரி ஆண்ட்ரூஸ் என்பவரால் நிறுவப்பட்டது.[31] இது, மகப்பேற்று மருத்துவம், பல் மருத்துவம், கண் மருத்துவம், முதுகுத்தண்டுவட மருத்துவம், இயன் மருத்துவம், ஆகியவற்றிற்கான தனித்துறைகளும் மற்றும் தொற்று நோயாளிகளுக்காக தனிப்படுத்தப்பட்ட பிரிவு, மறு வாழ்வுப் பிரிவு ஆகியவையும், கொண்டுள்ளது.

சமயப்பரப்பாளராக இந்தியாவிற்கு வருகை தந்த திரு. ஹாரி ஆண்ட்ரூஸ் என்பவர், ஏழை, எளிய மக்களுக்கு, மருத்துவ வசதி அளித்திட, ஒரு சிறிய குளியலறையில், இந்த மருத்துவமனையினைத் துவக்கினர். இச்சிறிய குளியலறை மருந்தகத்தில் சிறுகச் சிறுக, அதிக நோயாளிகள் வருகைதரத் துவங்கியதால், நாளடைவில், அனைவருக்கும் மருத்துவமளித்திட, இந்த இடம் போதவில்லை. எனவே, மருத்துவ மனைக்கான முதல்கட்டிடம், 1897 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. அதற்கு, இரட்சணிய சேனையின் நிறுவனரான ஜெனரல் வில்லியம் பூத் அவர்களது மனைவி, கேத்தரின் பூத் என்பாரின் நினைவாக, "கேத்தரின் பூத் மருந்தகம்" என பெயரிடப்பட்டது.

புகழ் பெற்ற கண் மருத்துவரான டாக்டர் பெர்ஸி டர்னர் என்பார், இம் மருத்துவமனையின் பல பிரிவுகளையும் விரிவாக்கி, வளர்ச்சியுறச் செய்து, மருந்தகத்திற்கே ஒரு புத்துயிரளித்தார். டாக்டர் வில்லியம் என்ற உயர்குணமுடைய மருத்துவர் காலத்தில் தான், மருத்துவ மனை பல புதிய மாறுதல்களைக் கண்டது.

1895 ஆம் ஆண்டிலிருந்து, இம் மருத்துவமனை வியக்கத்தக்க முறையில், விரைவான முன்னேற்றத்துடன் வளர்ச்சியுற்று, தற்போதைய நிலைக்கு உயர்ந்துள்ளது. இன்றைய நிலையில், இங்கு 300 படுக்கைகள் உள்ளன. நன்கு பயிற்சி பெற்ற, பணியில் முழு கவனம் செலுத்தும் மருத்துவர்கள் மற்றும் மருத்துவம் சார்ந்த ஏனைய பணியாளர்கள் ஆகியோர் மருத்துவமனையில் பணியாற்றுகின்றனர். ஒரு தீவிர நெஞ்சகப் பாதுகாப்பு அலகும், கண் மருத்துவத்திற்காக ஒரு தனிகட்டிடமும், குளிர்பான அறுவை அரங்கமும், அறுவைக் கருவிகளும் இங்குள்ளன. பொது அறுவை



கேத்தரின் பூத் மருத்துவமனை, வடசேரி

மருத்துவத்திற்கான, குளிர்சாதன அறுவை அரங்கம், இந்த மருத்துவமனையில் பொருத்தப்பட்டுள்ளன. இவை தவிர, தாய், சேய் மருத்துவத்திற்கெனத் தனிக் கட்டிடங்களும் கட்டப்பட்டுள்ளன.

இந்த மருத்துவமனையில், மிகவனத்துடனும், அக்கறையுடனும் மருத்துவம் அளிப்பதைக் கண்டு, கன்னியாகுமரி மாவட்டப் பொது மக்கள் மிகவும் மன நிறைவு கொண்டுள்ளார்கள். இதற்கு 1986 ஆம் ஆண்டு, இம்மருத்துவமனையில், 15,048 புற நோயாளிகளும், 6751 அகநோயாளி களும் மருத்துவமளிக்கப்பட்டிருப்பதே, சான்று.

ஆண்டு தோறும், இரட்சணிய சேனையினால், கேத்தரின் பூத் மருத்துவமனைக்கு, ரூபாய் 40 இலட்சம் வழங்கப்படுகிறது. அதினின்றும், 12 முதல் 15 இலட்சம் ரூபாய் வரை, ஏழை, எளியோருக்கு மானியமாக வழங்கப்படுகிறது. அவர்களில் 85 முதல் 90 விழுக்காடு மக்கள், மருத்துவ மனை நிர்ணயிக்கும் இயல்பான கட்டணத்தைச் செலுத்துவதற்கே, மானியம் பெறுகிறார்கள்.

1938ஆம் ஆண்டு முதல், செவிலியர் பள்ளி ஒன்று இங்கு இயங்கி வருகின்றது. ஆண்டுதோறும், 25 பட்டதாரி செவிலியர்களை இப்பள்ளி உருவாக்குகிறது. இன்றும் கூட சமுதாய நல்வாழ்வுத் திட்டங்கள் உடல் ஊனமுற்றோருக்கு மறுவாழ்வு மற்றும் வாழ்க்கைத் தொழில் சார்ந்த பயிற்சி மையம், கிராமப்புறம் மற்றும் நகர்ப்புறம் ஆகிய இருதரப்பினரிடையேயான, ஏழை, எளியோர், உடல்நலமற்றோர் ஆகிய அனைவரது முன்னேற்றத்திற்கு மான நடவடிக்கைகள் ஆகியவை, மேற்கொள்ளப்படுகின்றன.

கேத்தரின் பூத் மருத்துவமனை தோவாளை வட்டத்தைச் சார்ந்த ஆரல்வாய்மொழி மற்றும் நாகர்கோவில் ஆகிய இரு இடங்களில் வாழ்க்கைத் தொழில் சார்ந்த பயிற்சி மையங்களை உடல் ஊனமுற்றோர் நலனுக்காக நடத்தி வருகிறது. ஆரல்வாய்மொழியிலுள்ள பயிற்சி மையத்தின் மேலாளர் திரு.சுந்தர் எக்பர்ட் (Egbert), ஒழுக்கத்தினைக் கடைப்பிடிக்கச் செய்பவராவர்.

ஒவ்வொரு ஆண்டும், கேத்தரின் பூத் மருத்துவ மனை, நான்கு முறை இலவச கண் அறுவை மருத்துவ முகாம்களை வெற்றிகரமாக நடத்துகிறது. மாவட்ட சுகாதார அலுவலரின் ஒத்துழைப்புடன், கேத்தரின் பூத் மருத்துவமனை, 1986ஆம் ஆண்டு, ஒரு அலகில், 10,000 மக்கள் தொகை என்ற வீதத்தில், அகஸ்தீஸ்வரம் வட்டம் ஒசரவிளையில் ஒன்றும், கல்குளம் வட்டம், செம்பருத்திவிளையில் மற்றொன்றுமாக, இரு சுகாதார மையங்களை நிறுவியுள்ளது. ஒசரவிளை சுகாதார மையத்திற்கு, சகாயபுரத்தில், ஒரு துணை மையமும், செம்பருத்திவிளை சுகாதார மையத்திற்கு, பெருஞ்சிலம்பில் ஒரு துணை மையமும் இயங்கி வருகின்றன. நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்களில் தாய், சேய் நலப்பணியும், குடும்பநலப் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

கிராமப்புற ஆரம்ப சுகாதார மையங்களில், குடும்ப நலப் பணிகள் கருவுற்ற தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்கும், தொற்றுநோய் தடுப்பூசி செலுத்துவதுடன், தாய்மார்களுக்கு சுகாதாரம் குறித்தும், கற்பிக்கப்படுகிறது. எளிய முறையில் நோய் குணப்படுத்தும் பணி, மகப்பேற்றிற்கு முற்பட்ட மற்றும் பிறப்பிற்குப் பின் நிகழ்கிற, நிகழ்வுகளுக்கேற்ப பணியாற்றுதல் மற்றும் சுகாதாரம் குறித்து, கற்பித்தல், ஆகிய பணிகளை கிராம மக்களுக்காக, இம் மையங்கள் ஆற்றுகின்றன.

மருத்துவத் துறையில், விவேகானந்தர் கேந்திரம் ஆற்றும் பணி

கன்னியாகுமரியிலும், அதன் சுற்றுவட்டார கிராமங்களிலும், பொது நோய்களினால் அவதியுறும் மக்களுக்கு மருத்துவம் அளிக்க விவேகாநந்தா கேந்திரம், 12 இலவச மருத்துவ மையங்களை நடத்துகிறது.[32] 1974ஆம் ஆண்டு முதல், நடமாடும் மருத்துவப் பணியினையும், மக்களுக்கு அளித்து வருகிறது. 1987ஆம் ஆண்டு வரை, இந்த கேந்திரத்தினால், ஆறு கண் அறுவை மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு, அதில், 979 நோயாளிகள் பரிசோதனை செய்யப்பட்டு, அவர்களில், 37 பேர்களுக்கு அறுவை மருத்துவமளிக்க ஆலோசனை கூறப்பட்டது.

கன்னியாகுமரி இந்து சமயப்பரப்புக் குழு மருத்துவமனை, சுசீந்திரம்

இது, கன்னியாகுமரி இந்து சமயப்பரப்புக்குழு சங்கத்தின் ஆதரவில் இயங்கி வரும் மருத்துவமனையாகும். இது, 1978ஆம் ஆண்டு, சுசீந்திரத்தில், மேதகு ஜகத்குரு திரு. ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளால் திறந்து வைக்கப்பட்டது. இந்த சமயப்பரப்புக் குழுவின் நோக்கம் என்ன வெனில், அனைத்து மக்களுக்கும், குறிப்பாக, சமுதாயத்தில் நலிந்த பிரிவி னருக்கு மிக இயல்பான கட்டணத்தில், மருத்துவ உதவி அளிப்பதேயாகும்.

இந்த சமயப்பரப்புக்குழு, கடந்த 10 ஆண்டுகளில், நாகர்கோவிலின் சுற்று வட்டாரத்தைச் சார்ந்த ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட ஏழை, எளிய கிராம மக்களுக்கு மருத்துவம் அளித்துள்ளது. இம்மருத்துவ மனை, தோல் நோய், இதய நோய், குழந்தைகள் மற்றும் கண், காது மற்றும் தொண்டை நோய் ஆகியவற்றிற்கு இலவசமாக சிறப்புமருத்துவப்பணி அளித்து வருகிறது.

டாக்டர் எம்.இ.நாயுடு மருத்துவமனை, கோட்டார்

இந்த மருத்துவ மனை, காலஞ்சென்ற டாக்டர் எம்.இ.நாயுடு அவர்களால் கடந்த 1914ஆம் ஆண்டு, நிறுவப்பட்டது. துவக்கத்தில், 10 படுக்கைகளுடன், கோட்டாரில் ஒரு சிறிய கட்டிடத்தில் இயங்கிய, இம் மருத்துவமனை. ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள், மிகப்பிரபலமடைந்து, அனைத்து வசதிகளுடன் 40 அறைகள் கட்டப்பட்டு அக்கட்டிடம் விரிவாக்கப்பட்டது. இரத்தத்தின் ஒளியூடுருவும் நீர்த்த பகுதியினைப்

பரிசோதனை செய்தல், மற்றும் இரத்தம் மற்றும் சிறுநீர் ஆகியவை தொடர்பாக, உயர்வேதியியல் சார்ந்த தோவாராய்ச்சி ஆகியவை குறித்த ஆய்வுக்கூடங்கள், இம்மருத்துவமனையில் உள்ளன.

இந்த மருத்துவமனை தாய், சேய் மருத்துவ உதவிக்குப் பெயர் பெற்றதாகும். இம்மருத்துவமனையில் அனைத்து அறுவை மருத்துவக் கருவிகளுமுள்ள அறுவை அரங்கமும், ஊடுகதிர் நிழற்படத்துறையும் இணைந்துள்ளன. அனைத்து வகை நோய்களுக்கும், இம்மருத்துவ மனையில் வெகு கவனமாக மருத்துவமளிக்கப்படுகிறது.

டாக்டர் கோபால் பிள்ளை மருத்துவமனை, நாகர்கோவில்[33]

டாக்டர் கோபால் பிள்ளை தனது மருத்துவத் தொழிலைக் கடந்த 1934ஆம் ஆண்டு கோட்டாரில் துவக்கினார். பின்னர், அவர், பொது மருத்துவ நோயாளிகளுக்குக் குறிப்பாக, ஏழை, எளியோருக்கு மருத்துவமளிக்க, இராமவர்மபுரத்தில், ஒரு 30 படுக்கைகளுள்ள மருத்துவமனையினை நிறுவினார். 1960ஆம் ஆண்டு, அவர், காலஞ்சென்ற பின்னர், இப்புனிதப் பணியினை அவரது மூத்த மகன் டாக்டர் சுரேந்திரன் அவர்களும், அவரது மருமகள் டாக்டர் இந்திரா சுரேந்திரன், அவர்களும் தொடர்ந்தனர். தற்போது இம்மருத்துவமனையில், பொது மருத்துவம், மகப்பேறு, பெண்கள் தொடர்பான நோய் மருத்துவம், மயக்க மருந்தளித்தல், ஊடுகதிர் - கதிரியக்க மருத்துவம், கதழ் ஒயிலை அதிர்வாய்வு மற்றும் கண்நோய் மருத்துவம் ஆகியவற்றிற்கு தனித்துறைகள் இயங்கி வருகின்றன. பொது அறுவை மருத்துவம் செய்யும் பார்வையிடும் அறுவை மருத்துவர்கள், நோய் குறித்து ஆலோசனை வழங்கும் குழந்தை மருத்துவ நிபுணர், ஒரு பார்வையிடும் நரம்பியல் அறுவை மருத்துவர் மற்றும் ஒரு பார்வையிடு அங்கக் கோணல் சார்ந்த அறுவை மருத்துவர் ஆகியோரும் இம்மருத்துவ மனையில் உள்ளனர்.

முழுநேர நோய்க்குறியாய்வு மற்றும் உயிர்வேதியியல் சார்ந்த ஆய்வுக் கூடங்களும், நுண் ஆய்வு மற்றும் நுண்ணுயிர் ஆகியவை தொடர்பான ஆய்வுக்கூடங்களும் உள்ளன. மருத்துவத் துறையில், தீவிர நெஞ்சுப்பை சுற்றிய குருதியோட்டம் குறித்து கவனிப்பதற்கும் மற்றும் நெஞ்சுத்துடிப்பைப் பதிவு செய்வதற்குமான அலகுகளும் உள்ளன. தாய்மை மருத்துவம் மற்றும் மகளிர் நோய் இயல் மருத்துவம் ஆகிய துறைகளில், இடுப்பிலுள்ள குருதிக் குழாய் முறிவினால் ஏற்படும் குடல் சரிவினைச் சரி செய்தல், கருவக அறுவை மருத்துவம், மின்விசையலகு மருத்துவம், கதழ் ஒலியலை அதிர்வாய்வு ஆகிய அலகுகளும் உள்ளன. "இன் விட்ரோ ஃபெர்ட்டிலைசேஷன் கிஃப்ட்" (ஐ.வி.எஃப். கிஃப்ட்) அலகும், கூடிய விரைவில் இங்கு துவங்கப்படவிருக்கிறது. அக நோயாளிகளில், மிகவும் ஏழை மற்றும் பின் தங்கிய நிலையிலுள்ளோர் 10 விழுக்காட்டினர் அடையாளம் காணப்பட்டு, அவர்களுக்கு அறுவை மற்றும் பிற மருத்துவம், இலவசமாக அளிக்கப்படுகிறது. மருத்துவ உதவி தவிர, நோய்த் தடுப்பு மருத்துவம் மற்றும் பொது சுகாதாரம் ஆகியவை குறித்தும் பொதுமக்களுக்குக் கற்பிக்கப்படுகிறது.

மகளிர் நோய் இயல் மருத்துவ அலகுடன் இணைக்கப்பட்டுள்ள குடும்ப நலத்துறை தமிழக அரசின் அங்கீகாரம் பெற்றதாகும். இந்த மருத்துவமனை, சமுதாயத்திலுள்ள செல்வந்தர்கள் மற்றும் ஏழை எளியோர் ஆகிய அனைவரது தேவைகளையும் பூர்த்தி செய்கிறது. மருத்துவமனை அலுவலர்களால் இங்கு ஒரு நூலகம் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்நூலகத்தில் பொது மருத்துவத்துறை, மகப்பேறு மற்றும் மகளிர் நோய் இயல் மருத்தவ துறைகள் ஆகியவற்றில் தற்போதைய முன்னேற்றம் குறித்த நூல்களும், மருத்துவம் தொடர்பான செய்தித்தாள்கள் ஆகியவையும் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன.

மத்தியாஸ் மருத்துவமனை, நாகர்கோவில்[34]

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலிலுள்ள கோட்டாரில் கடந்த 1928ஆம் ஆண்டு நவம்பர் மாதம், துவக்கபட்ட பெரிய தனியார் மருத்துவமனைகளில் இதுவும் ஒன்றாகும். டாக்டர் மத்தியாஸ் பொது வாழ்வு மற்றும் மருத்துவம் ஆகியவற்றில் பெயர்பெற்று விளங்கியவராவர். அக நோயாளிகளுக்கு நல்ல படுக்கை வசதி அளிக்க வேண்டிய தேவையினை அவர் தான் முதல் முதலில் உணர்ந்து, கோட்டாரில் அனைத்து வசதிகளையுமுடைய 30 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனையினை நிறுவினார். 1950ஆம் ஆண்டு, இந்த மருத்துவ மனை கோட்டாரிலிருந்து, இராமவர்மபுரத்திற்கு மாற்றப்பட்டது. அங்கு அவர், 150 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவ மனையினைத் துவக்கினார். இவற்றில், 20 படுக்கைகள், ஏழை, எளிய மக்களுக்கு இலவச மருத்துவம் அளிப்பதற்காக ஒதுக்கப்பட்டன. இம்மருத்துவமனையில் ஊடுகதிர்-கதிரியக்க மருத்துவத்துறை, அறுவை அரங்கம், காது, மூக்கு மற்றும் தொண்டை ஆகியவற்றிற்கு மருத்துவமளிப்பதற்கான துறை ஆகியவை உள்ளன. அதில், அனைத்து வசதிகளையும் கொண்ட ஒரு ஆய்வுக்கூடமும் அமைந்துள்ளது. டாக்டர் மத்தியாஸின் மறைவுக்குப் பின் இம்மருத்துவ மனை அவரது மகன்களால் நடத்தப்பட்டு வருகிறது.

நாகர்கோவிலிலும், அதன் சுற்று வட்டாரத்திலும் இயங்கி வரும் மருத்துவமனைகள், கீழே பட்டியலிடப்பட்டுள்ளன:

1. அப்துல் காதர் மருத்துவமனை, நாகர்கோவில்
2. பென்சம் மருத்துவமனை, நாகர்கோவில்
3. ஜெயசேகரன் மருத்துவமனை, நாகர்கோவில்
4. லதா மருத்துவமனை, நாகர்கோவில்
5. தனியார் பலவகை மருத்துவமனை, நாகர்கோவில்
6. கணேசமணி மருத்துவமனை, நாகர்கோவில்
7. ஷீலா தாமஸ் மருத்துவமனை, நாகர்கோவில்
8. பயனீர் இந்திரா மருத்துவமனை, நாகர்கோவில்
9. சங்கர் மருத்துவமனை, நாகர்கோவில்

10. இராமமூர்த்தி மருத்துவமனை, நாகர்கோவில்
11. ஜே.ஜே. மருத்துவமனை, நாகர்கோவில்
12. எனோக் மருத்துவமனை, குலசேகரம்
13. வேலாயுதம் பிள்ளை நினைவு மருத்துவமனை, குலசேகரம்
14. ஜார்ஜ் மருத்துவமனை, தக்கலை
15. விஜய் மருத்துவமனை, தக்கலை
16. இந்தராஸ் மருத்துவமனை, திட்டுவிளை
17. ஜான் ஜோசப் மருத்துவமனை, குழித்துறை
18. சந்திரா மருத்துவமனை, மார்த்தாண்டம்
19. தேவதாஸ் மருத்துவமனை, நித்திரவிளை
20. வில்லியம் மருத்துவமனை, நாகர்கோவில்
21. இராமன் மருத்துவமனை, நாகர்கோவில்
22. சங்கரலிங்கம் மருத்துவமனை, நாகர்கோவில்
23. பிஸ்வாஸ் மருத்துவமனை, மார்த்தாண்டம்
24. இந்திரா மருத்துவமனை, தக்கலை
25. சுப்ரமணிய பிள்ளை நினைவு மருத்துவமனை, தேரூர்

மருத்துவம் மற்றும் புற்றுநோய் ஆராய்ச்சி மற்றும் மருத்துவ மையம், நாகர்கோவில்

உலக நல்வாழ்வு அமைப்பு (World Health Organisation) எதிர்பார்த்திருக்கக்கூடிய "கி.பி.2000-ல், அனைவர்க்கும் சுகாதாரம்" என்ற திட்டத்தினை நடைமுறைப் படுத்துவதில், கன்னியாகுமரி மாவட்டம், அதனுடைய உயர்ந்த மருத்துவ மரபுரிமை நலன்களை ஆதாரமாகக் கொண்டு, முதன்மையான அங்கம் வகிக்கிறது. முதல் கட்டமாக 1987ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதம், நாகர்கோவில் மருத்துவம் மற்றும் புற்றுநோய் ஆராய்ச்சி மற்றும் மருத்துவ மையம் அமைக்க, அடிக்கல் நாட்டப்பட்டது. அது, நல்வாழ்வுப் பணியிலும், மருத்துவப் பணியிலும் புது மாறுதல் உண்டுபண்ணக்கூடிய ஒரு திட்டமாக அமைந்தது. உலக சுகாதார அமைப்பின் திட்டத்திற்கு, அது ஒரு தனிச்சிறப்பான பங்கு என்பதில் ஐயமில்லை.

இத்திட்டத்தின் தனிதன்மையாதெனில், அது அனைத்து சமயத்தினரது, கூட்டு முயற்சியாகும். போற்றுதலுக்குரிய ஆர்ச்.பிஷப், டாக்டர் எம்.ஆரோக்கியசாமி அவர்கள், துவக்கிய அறக்கட்டளையில், அனைவரும் இணைந்துள்ளனர். அவர், இந்த அறக்கட்டளையினை நிறுவ அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொண்டது மட்டுமல்ல - நாகர்கோவிலிலுள்ள ஆசாரிப்பள்ளம் சாலையிலுள்ள பிஷப் வளாகத்தில் ஒரு கட்டிடத்தையும், மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம் கட்டுவதற்கு, இலவசமாக ஐந்து ஏக்கர் நிலைத்தையும் மனமுவந்து அளித்துள்ளார்.

அறக்கட்டளையின் முக்கிய நோக்கமென்னவெனில், மலைவாழ் மக்கள் மற்றும் கடற்கரைப் பகுதியில் வாழும் ஏழை மீனவர்கள் ஆகியோரது நோயினைக் கண்டுபிடித்து தக்க மருத்துவமளிப்பதேயாகும். இருபத்தைந்து வயதிற்கு மேற்பட்ட பெண்களின் உடல்நிலையை சோதிக்கவும் அவர்களுக்கு புற்றுநோய் உள்ளதா எனக் கண்டறியவும், பெண்கள் சுகாதாரத் திட்ட அமைப்பு இயங்கி வருகிறது. இந்த மருத்துவமனையில், நோயாளிகளில் மிகவும் ஏழையாக உள்ள 80 விழுக்காடு மக்களுக்கு இலவச மருத்துவ உதவி அளிக்கப்படுகிறது, ஏனையோரிடம் மிகக் குறைந்த கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

குடும்ப நலம்

மக்கள் தொகை வளர்ச்சி விகிதத்தினைக் கட்டுப்படுத்துவது, பல காலமாக, அரசின் கவனத்தை ஈர்த்து வருகிறது. குடும்பநலத் திட்டங்களைத் தீவிரமாக நடைமுறைப்படுத்திட, அப்போதைக்கப்போது, புதுத்திட்ட முறைகளை வகுக்க, அரசிற்கு மாநில குடும்ப நல புள்ளி விவரச் சேகரப்பணிமனை, உதவி புரிந்து வருகிறது. குடும்ப நலத்திட்டங்கள் இம்மாநிலத்தில் 1945ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும், ஊரக வளர்ச்சி வட்டாரங்கள் அமைக்கப்பட்ட பின்னர், அவைகளது செய்தி விளம்பரத் தொடர்பு அலகின் மூலம், 1958ஆம் ஆண்டுதான் இத்திட்டம், போர்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. இம்மாநிலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட இத்திட்டத்தில், நோய் நுண்மத் தீர்வாக அறுவை மருத்துவத்திற்கு, முன்னுரிமை அளித்து அதனில், போற்றத் தகுந்த வகையில், சாதனை நிகழ்த்தப்பட்டது.

நாட்டின் பொருளாதார மேம்பாட்டினைக் கருத்திற்கொண்டு, இன்றைய நிலையில், பிறப்பு, இறப்பு, குழந்தை இறப்பு மற்றும் பேறுகாலத்தில், தாயின் இறப்பு ஆகியவற்றின் வீதங்களை, மேலும் குறைப்பது, இன்றியமையாததாகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் குடும்ப நலம்

நாகர்கோவில், மாவட்ட மருத்துவ அலுவலரின் நேரடிக் கண்காணிப்பில் 1966ஆம் ஆண்டு, இம்மாவட்டத்தில் திருத்தியமைக்கப் பட்ட குடும்ப நலத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.[35] 1969 ஆம் ஆண்டு குடும்ப நலப்புள்ளி விவரச்சேகர பணிமனை, மாவட்ட குடும்ப நலம் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல அலுவலரின் கண்காணிப்பில் நிறுவப்பட்டு, இது நாகர்கேவிலில் இயங்கி வருகிறது.

1981ஆம் ஆண்டு, மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, மாவட்டத்தின் மொத்த மக்கள் தொகை, 14,23,399 ஆகும். 1985ஆம் ஆண்டு மார்ச் மாத நிலவரப்படி, ஒவ்வொரு ஆயிரம் மக்கள் தொகைக்கும், பிறப்பு வீதம் 23 ஆகும். 1987ஆம் ஆண்டு, சூன் மாத புள்ளிவிவர, பாதுகாக்கப்பட்ட தம்பதியரின் எண்ணிக்கை வீதம் ஒவ்வொரு ஆயிரம் மக்கள் தொகைக்கும், 45.6 ஆகும். குழந்தை பெறத் தகுதி பெற்ற தம்பதிகளின் எண்ணிக்கை வீதம் 2,20,080 ஆக இருந்தது.

செய்தி விளம்பரத்துறை, விளம்பரப் பணியினையும் மக்கள் தொடர்புள்ள நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. மற்ற அலகுகள், அவற்றிற்கு ஒதுக்கப்பட்டுள்ள அலுவல்களை கவனித்து வருகின்றன. கிராமப்புற குடும்பநல மையங்களைப் பொறுத்த வரையில், ஒவ்வொரு மையத்திலும், ஏழு களப் பணியாளர்கள், வட்டார அளவில் செயல் நோக்கமளிக்கும் பணிகள் மற்றும் பல்வேறு திட்டங்கள் தொடர்பான விளம்பரப் பணிகள் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளனர்.

ஒன்பது கிராமப்புற குடும்ப நல மையங்கள் தவிர, மக்களிடையே குடும்ப நலம் குறித்த தகவல்களைப் பரப்பிட, மாவட்டத்தில், ஆறு நகர்ப்புற குடும்ப நல மையங்களும், 101 துணை மையங்களும் இயங்கி வருகின்றன.

கிராமப்புற குடும்ப நல மையங்கள், ஆரம்ப சுகாதார மையங்கள் எனவும், அழைக்கப்படுகின்றன. அவை, இம்மாவட்டத்தில், அகஸ்தீஸ்வரம், ஆறுதேசம், செண்பகராமன்புதூர், எடைக்கோடு, கரிங்கல், கூத்தாநல்லூர், குட்டுக்குழி, இராசக்கமங்கலம் மற்றும் முட்டம் ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன.

கன்னியாகுமரி மாவட்டத்திற்கு, முன்னர் ஒப்புதலளிக்கப்பட்டு, நிறுவப்பட்ட அனைத்து நகர்ப்புற குடும்ப நல மையங்களும் (அரசு மருத்துவமனைகள்) நகர்ப்புற நல்வாழ்வுக் களங்களாக (Urban Health Posts) அங்கீகாரம் செய்யப்பட்டுள்ளன. 1988ஆம் ஆண்டு, டிசம்பர் மாத நிலையின்படி, நாகர்கேவிலிலுள்ள அனைத்துப் பகுதிகளிலும் நகர்ப்புற நல்வாழ்வுக்களங்கள் அமைக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டுள்ளன. நாகர்கோவில் நகரத்தில் நகர்ப்புற குடும்ப நல மையம் (Urban Family Welfare Centre) ஏதுமில்லை.

நகர்ப்புற புணரமைப்புத் திட்டத்தின் கீழ், குடும்பநலம், மகப்பேறு மற்றும் குழந்தைநல, மற்றும் துவக்க சுகாதார பணியை வலுவூட்டவும் நகர்ப்புற மக்களுக்கு, குறிப்பாகப் புழக்கடைப் (Slums) பகுதிகளில் வாழும் மக்களின் மேம்பாட்டினைக் கருதியும், நாகர்கோவில் நகரத்திற்குக் கீழ்க்கண்டவாறு, 4 நகர்ப்புற நல்வாழ்வுக்களங்கள் (Urban Health Posts) வழங்கப்பட்டுள்ளன.

தொடர் எண்.	*நகர்ப்புற நல்வாழ்வுக்களம் அமைந்துள்ள இடம்*	*வகை*	*நடைமுறைப் படுத்தும் நிறுவனம்*
1.	வெட்டூரணி மடம்	ஈ	உள்ளாட்சி நிறுவனம்
2.	நகரம்	ஈ	உள்ளாட்சி நிறுவனம்
3.	செட்டிகுளம் (நாகர்கோவில் அரசு தலைமை மருத்துவ மனையுடன் இணைந்தது)	ஈ	மாநில அரசு நிறுவனம்
4.	எடலக்குடி	இ	உள்ளாட்சி நிறுவனம்

மாவட்டத்தில் குடும்ப நலத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் கேத்தரீன் பூத் மருத்துவமனை, தென்னிந்தியத் திருச்சபை மருத்துவமனை மற்றும் கன்னியாகுமரி மருத்துவ சமய பரப்புக்குழு ஆகிய தனியார் சமூகப்பணி நிறுவனங்கள் முக்கிய பங்காற்றி வருகின்றன.

மாவட்டத்திலுள்ள ஆரம்ப சுகாதார மையங்கள் உள்ளடக்கிய அனைத்து அரசு மருத்துவமனைகள், மற்றும் நாகர்கோவிலுள்ள கேத்தரீன் பூத் மருத்துவமனை, நெய்யூரிலுள்ள தென்னிந்திய திருச்சபை மருத்துவ மனை ஆகிய சமூக நிறுவனங்கள் ஆகியவற்றில், விதை நாள அறுவை, பெண்கள் மகப்பேறுத் தடை அறுவை மற்றும் கருப்பை சார்ந்த மருத்துவ முறைகள், போன்ற வசதிகள் செய்துகொடுக்கப்பட்டுள்ளன. இவை தவிர, குடும்ப நலத்திட்டத்தின்படி, ஏனைய தனியார் மருத்துவ மனைகளும் அறுவை மருத்துவம் செய்திட அரசால் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன.

இம்மாவட்டத்தில், 1987ஆம் ஆண்டு, சனவரி மாத நிலைப்படி, விதைநாள அறுவை (Vasectomy) செய்திட 13 மருத்துவர்கள், பெண்கள்-மகப்பேறுத் தடை அறுவை (Tubectomy) செய்ய 11 மருத்துவர்கள், அடிவயிற்றுச் சுவரில் ஓர் கருவியினைப் பொருத்தி, (Laparascopy) தற்காலிக கருத்தடை செய்யும் அறுவை மருத்துவத்தினை மேற்கொள்ளும் 10 மருத்துவர்கள், நிரந்தரக் கருத்தடை அறுவை மருத்துவமளிக்க (Medical Termination of Pregnancy) 12 மருத்துவர்கள் மற்றும் கருப்பை சார்ந்த மருத்துவ முறைகளை மேற்கொள்ள 16 மருத்துவர்கள் ஆகிய பல்வேறு குடும்ப நல அறுவை மருத்துவம் செய்யும் 62 மருத்துவர்கள் பணியாற்றி வருகின்றனர்.

குழந்தைகள் இறப்பு மற்றும் மகப்பேறு காலத்தில் தாய்களின் இறப்பு ஆகியவற்றின் வீதங்களை குறைத்திட, தொன்றுதொட்டு மருத்துவம் பார்த்து வரும், அதிக இனங்கள் மருத்துவம் பார்ப்போருக்கு ஆரம்ப சுகாதார மையங்களில் 30 நாட்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது. தசையழுகலைத் தடுக்கும் முறையில் மகப்பேறு மருத்துவம் செய்திடவும், அவ்வாறு மகப்பேறு காலத்தில் தாய்களின் இறப்பினைக் குறைத்து, புதிதாகப் பிறந்திடும் குழந்தைகள்பால் அதிகவனம் செலுத்திடவுமே இப்பயிற்சி அளிக்கப்படுகிறது. 1975ஆம் ஆண்டு, இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட திலிருந்து இம்மாவட்டத்தில், மேலும் 221 பேர்களுக்குப் பயிற்சியளிக்க வேண்டியுள்ளது. அவர்களுக்கு விரைவில் பயிற்சியளித்திட போதிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

குடும்ப நல அறுவை மருத்துவ முகாம்கள்

மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில், மாவட்ட ஆட்சித் தலைவரால், அடிக்கடி குடும்பநல அறுவை மருத்துவ முகாம்கள் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு முகாமிலும், பல இனங்களில் இனப்பெருக்கம் அழிக்கப்பெறும் அறுவை மருத்துவம் நடத்தப்படுகின்றன. அவ்வாறான முகாம்களை திறம்பட நடத்திட, அரசு சிறப்பு தற்காலிக முன்பணங்கள் வழங்கியுள்ளது. மேலும், ஏப்ரல் 1, 1983 நாளைய நிலவரத்தின்படி, பொது நிதியில் 3,00,000

பட்டியல் - 1

ஆண்டு	விதை நாள அறுவை	பெண்கள் மகப்பேறுத் தடை அறுவை	கருப்பை சார்ந்த மருத்துவ முறைகள் (இனங்களின் எண்ணிக்கை)	சி.சி. பயன்படுத்து வோர்	ஒ.பி. பயன்படுத்து வோர்
1975-76	1,685	3,254	552	3,419	--
1976-77	14,478	7,812	574	2,996	506
1977-78	3,270	6,813	222	2,679	412
1978-79	6,404	5,390	379	2,393	428
1979-80	848	3,429	321	2,500	970
1980-81	27	2,328	300	2,408	826
1981-82	51	2,284	414	2,040	1,015
1982-83	54	3,298	476	2,016	799
1983-84	791	12,947	452	1,650	70
1984-85	414	10,304	700	4,071	253
1985-86	447	10,984	1,219	5,980	664
1986-87	864	11,520	3,062	5,091	2,487
1987-88	508	11,955	9,904	8,954	5,591

ரூபாய்க்கு மேல் இருப்பு வைத்திருக்கும் நகராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் தங்களது உபரி நிதியினின்றும், மாவட்டத்தில், அவ்வாறான சிறப்பு முகாம்கள் நடத்திட, ரூபாய் 25,000/- வழங்கிட, அரசு ஆணை பிறப்பித்துள்ளது. கடந்த 10 ஆண்டுகளில், மாவட்டத்தில், குடும்ப நலம் தொடர்பான சாதனை விவரங்கள் கீழ்க்காணும் பட்டியல்-1-ல் அளிக்கப்பட்டுள்ளது. அதே கால வரையில், குடும்ப நலத்திட்டத்தின் கீழான செலவு விவரங்கள் பட்டியல்-2-ல் அளிக்கப்பட்டுள்ளது.

பட்டியல்-2

1975-76 முதல் 1987-88 வரை, கன்னியாகுமரி மாவட்டத்தில், குடும்ப நலத்திட்டத்தின் கீழ்,செலவு விவரங்கள்

தொடர் எண்.	*ஆண்டு*	*செலவுத் தொகை (ரூபாய்)*
1.	1975-76	15,86,089
2.	1976-77	41,21,995
3.	1977-78	31,93,423
4.	1978-79	30,27,271
5.	1979-80	24,75,478
6.	1980-81	20,48,234
7.	1981-82	23,49,627
8.	1982-83	25,23,737
9.	1983-84	49,41,968
10.	1984-85	49,38,037
11.	1985-86	50,11,378
12.	1986-87	56,65,829
13.	1987-88	65,15,054

திட்டம் துவக்கப்பட்டதிலிருந்து, 1987ஆம் ஆண்டு, சனவரி மாதம் வரை, இம்மாவட்டத்தில், 302 குடும்ப நல முகாம்கள் நடைபெற்றுள்ளன. குடும்ப நலத்திட்ட அறுவை மருத்துவத்தை ஒத்திபோட விரும்புவோருக்கு, மேலுறை (நிரோத்)மற்றும் மாத்திரைகள் வழங்கப்படுகின்றன.

கள விளம்பரம்

நாகர்கோவிலிலுள்ள மாவட்ட குடும்ப நலப்புள்ளி விவரச் சேகரப்பணிமனை, "சிறு குடும்ப மாதிரி" (Small Family Norm)குறித்து, மாவட்ட முழுமையும் திறம்பட விளம்பரமளிக்கிறது. அவை மூலம், மக்களுக்குக் குடும்ப நலத்திட்டப் பல்வேறு வழிமுறை குறித்து, விரிவாக விளக்கப்படுகிறது. மலைவாழ் மக்கள் வாழும் உள்ளடங்கிய பகுதிகளான அருக்காணி மற்றும் கணபதிகல்லு ஆகிய இடங்களிலும், கடற்கரைப்

பகுதிகளான சைமன் காலனி, மற்றும் மேல்மிடாளம் ஆகிய இடங்களிலும் மக்கள்தொடர்பு விளம்பர அலுவலர்களால், விளம்பரப் புகைப்படங்கள் காண்பிக்கப்படுகின்றன. 1987ஆம் ஆண்டு, சனவரி மாதம் முடிய, மாவட்டத்தில் 290 படங்கள் திரையிடப்பட்டன. நாடகங்கள், பண்பாட்டு செயல் திட்டம், மற்றும் கிராப்புற மக்கள் கேட்போர் கூட்ட செயல் திட்டம் ஆகியவை, விளம்பர அலகினால், மேற்கொள்ளப்படுகின்றன. இச்செயல் திட்டங்கள் தொடர்பாக சுவர்களில் ஓவியங்கள் வரைதல், சுவரொட்டிகள் ஒட்டுதல், பல்வேறு குடும்ப நலத்திட்டங்கள் தொடர்பான கொள்கைக் குரலை (Slogans) வெளிப்படுத்தி விளம்பரம் செய்தல், ஆகிய பல்வேறு பணிகளையும் இவ்வலகு, ஆற்றுகிறது. இப்புள்ளி விவரச் சேகரப் பணிமனையின் வட்டார விரிவாக்கக் கல்வியாளர்கள், பொது மக்களுக்குப் பல்வேறு குடும்ப நல வழிமுறைகள் குறித்து, போதிக்கும் பணியினை ஏற்றுள்ளனர்.

புகைப்படத் தொடர்கள் திரையிடப்படுவது தவிர, கிராமத் தலைவர் பயிற்சி முகாம்களும், மக்கள் தொகைக்கட்டுப்பாடு குறித்த போதனைக் கருத்தரங்குகளும் இத்துறையினால் நடத்தப்படுகின்றன. இந்த முகாம்களிலும், கருத்தரங்குகளிலும், பல்வேறு குடும்ப நலத்திட்ட வழிமுறைகள் குறித்து, ஆழ்ந்து விவாதிக்கப்படுகின்றன. ஆசிரியர்கள், மருத்துவ அலுவலர்கள், மற்றும் பொது மக்கள் பிரதிநிதிகள் ஆகியோர், இக்கருத்தரங்குகளில் கலந்து கெள்கின்றனர்.

பிறப்பு வீதத்தினை 21 ஆகவும், இறப்பு வீதத்தினை ஒன்பது ஆகவும் குறைத்தல், குழந்தைகள் இறப்பு வீதத்தை, பிறந்து உயிருடனிருக்கும் குழந்தைகளின் அளவினை கருத்திற் கொண்டு, 60/1000 என்ற வீதத்தினை, தமிழ்நாட்டில், 1991-92-ல் 60 விழுக்காடாக உயர்த்துதல் ஆகியவையே, இச்செயல் திட்டத்தின் நோக்கமாகும். செயல் நோக்கமளித்தலும், தீவிர விளம்பரமும், இச்செயல் திட்டத்தினை நடைமுறைப்படுத்திட, முக்கியான அம்சங்களாகும். குடும்ப நல களப்பணியாளர்கள், மற்றும் வருவாய்த்துறை மக்கள் நல்வாழ்வுத் துறை, நகராட்சி நிருவாகத்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை, ஆகிய பிறதுறைகளைச் சார்ந்த களப் பணியாளர்கள் ஆகியோர், இத்திட்டத்திற்கு ஊக்கமளித்து வருகின்றனர். மக்கள் தொடர்பு மற்றும் குடும்ப நலத்துறைகளின் களப் பணியாளர்கள் அவர்கள் ஆண்டுப் பருவ முறையில், அல்லது ஆண்டுப் பருவம் சாரா முறையில் கையாண்ட மகப்பேறு இனங்களில், 60 விழுக்காட்டு இனங்களை முறையாகப் பாதுகாத்து-அதாவது-கி.பி. 1991-92ல் நிகர இனப்பெருக்க வீதம் - ஒன்று என்ற குறிக்கோளினை எய்த, பணிக்கப்பட்டுள்ளார்கள். மகப்பேறு இனங்களின், இந்த 60 விழுக்காடு, தேசிய திட்டத்தின் முக்கிய அம்சமாக

ஆய்வு செய்யப்பட்டுள்ளது. மேலும் இதனைக் கருத்திற் கொண்டு, ஆரம்ப சுகாதார மையங்களின் மருத்துவ அலுவலர்களும், மாவட்ட அலுவலர்களும், களப் பணியாளர்களை உரிய முறையில் ஊக்குவித்து வருகின்றனர்.

துறையின் ஒவ்வொரு அலுவலருக்கும் இனங்களின் எண்ணிக்கை வீதத்தில் குறியீடு நிர்ணயிக்கப்படுகிறது. குறிப்பிட்ட காலவரைக்குள், குறியீட்டை எய்த வேண்டுமென அவர்கள் பணிக்கப்படுகின்றனர். இம்மாவட்டத்தில், குறியீட்டினைத் தாண்டிய அலுவலர்களுக்கு சிறப்பு ஊக்கத்தொகை அளிக்கப்படுகிறது.

விழிப்புணர்ச்சி ஏற்படுத்திடுமுகத்தான், 1985ஆம் ஆண்டு, பச்சை அட்டைத் திட்டம், அறிமுகப்படுத்தப்பட்டு, இம்மாவட்டத்தில், 8,300 பச்சை அட்டைகள் இதுகாறும், புதுப்பிக்கப்பட்டன. இரண்டு குழந்தைகளைப் பெற்று வளர்த்து வரும் இனப்பெருக்கத்திறம் அழிக்கப் பெறும் அறுவை மருத்துவம் மேற்கொண்டுள்ள தாய்மார்களுக்கு இந்த அட்டைகள் வழங்கப்பட்டன. அனைத்து மருத்துவ நிறுவனங்களிலும், இப்பச்சை அட்டை வைத்திருப்போருக்கு முன்னுரிமை அளிக்கப்படுமென்ற காரணத்தால், இது இத்திட்டத்திற்கு ஒரு நுகைப்பானாகச் (Catatyst) செயலாற்றுகிறது.

சுகாதாரம்

கன்னியாகுமரி மாவட்டத்தின் இயற்கை வளமானது, இம்மாவட்டத்திற்கு ஓர் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. மாவட்டத்திலுள்ள குன்றுகள், கடற்கரைகள், பள்ளத்தாக்குகள், ஆறுகள், காடுகள் ஆகியவை எப்பொழுதுமே மாவட்டத்திற்கு நல்ல தட்ப, வெட்ப நிலையினை அளித்து வருவது கண்கூடு. மாவட்டத்தில் உரிய காலத்தில் தேவைக்கேற்ப மழை பொழிவதும், இயற்கை அளிக்கும் பரிசாகும்.

மாவட்டத்தின் தட்ப வெட்ப நிலை, சுகாதார நிலையினை மேம்படுத்துகிறது. அயராத உழைப்பினைக் குறிக்கோளாகக் கொண்ட மக்களின் தொண்டு மற்றும், உள்ளாட்சி நிறுவனங்களின் சிறந்த பணி ஆகியவையும், சுகாதார நிலையினை மேம்படுத்துகின்றன.

சோழர்கள் அரசோச்சிய காலத்திலும், அதன் பின்னரும், உள்ளாட்சி நிறுவனங்களின் அடிப்படைக் கொள்கைகளும், அவை பூர்த்தி செய்ய வேண்டிய தேவைகளும், உள்ளூர்ப் பகுதிகளின், சுகாதாரத்தை மேம்படுத்துவதாக அமைந்தன.

இத்தருணத்தில் "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்ற தமிழ் பழமொழியினை நினைவூட்ட விழைகிறோம். இந்த நோயற்ற

வாழ்வினை அடைந்திட சமூகப் பணியாளர்களும், உள்ளாட்சி நிறுவனங்களும் "சுகாதார"த்திற்கு மிக முக்கியத்துவம் அளிக்கின்றனர். சுத்தமான குடி தண்ணீர் வழங்குதல், தெருக்களைத் தூய்மைப்படுத்துதல், தூய்மைக்கேட்டினைக் களைதல், நல்ல வடிகால் முறையினை அமைத்துக்கொடுத்தல், ஆகியவை சுற்றுப்புற சுகாதார நிலையினை மேம்படுத்த உள்ளாட்சி நிறுவனங்கள் கடைப்பிடித்து வரும் அளவுகளாகும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில், நாகர்கோவில், பத்மநாபபுரம், கொளச்சல் மற்றும் குழித்துறை ஆகிய நான்கு நகராட்சிகளும், 68 பேரூராட்சிகளும், மற்றும் 88 கிராம ஊராட்சிகளும், திறமையாக சுகாதாரத்தினைப் பேணிக்காக்கின்றன. நகராட்சிகளும், பெரிய பேரூராட்சிகளும், நகரங்களும் நல்ல நிலையில் சுகாதாரத்தினை பேணிவர, சுகாதாரப் பணியாளர்களை நியமித்துள்ளன. கொசு ஒழிப்பு மருந்துகளை ஆங்காங்கே தூவி வருவது, கொசு பரவாமல் தடுக்க வழி வகுக்கிறது.

கிராமப்புறப் பகுதிகளில், பொதுக் கழிப்பிடங்கள் ஒரு பெரிய பிரச்னையல்ல. நகரப்புறப் பகுதிகளில், பல வீடுகளில், விசை நீர்க் கொட்டுதலால் துப்புரவு செய்விக்கப் பெறும் கழிப்பிடங்கள் உள்ளன. நகர்ப்புறங்களில் ஏற்றத் தாழ்வுடைய மக்கள் தொகை மற்றும் கழிப்பிடங்கள் கட்டிக் கொள்ள வசதியற்ற மக்கள் ஆகியோரின் தேவையினை நிறைவு செய்திட, நகராட்சிகளும், நகரியங்களும், பொதுக்கழிப்பிடங்களைப் பராமரித்து வருகின்றன.

நாகர்கோவில் நகராட்சியானது, 48 பொதுக் கழிப்பிடங்களையும் நான்கு நச்சுத்தடை மலக்கழிப்பிடங்களையும், மற்றும் நான்கு கட்டணக் கழிப்பிடங்களையும் பராமரித்து வருகிறது. அவற்றில், மூன்று குளியலறை வசதிகளைப் பெற்றவை. மாவட்டத்தில், அலையலையாகச் செல்கிற கட்டமைப்பு முறையினைப் பெற்றுள்ள பூமியின் அமைப்பு, தண்ணீர் தேங்கி நிற்பதைத் தடுப்பதோடு, வடிகால் திட்டம் நல்ல முறையில் செயல்படவும் வழி வகுக்கிறது.

மாவட்டத்திலுள்ள பல நகரங்கள் மற்றும் கிராமங்கள் ஆகியவற்றில் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி, அல்லது தரை மட்ட நீர்த்தேக்கங்கள், கையாலியக்கும் குழாய்கள் மற்றும் கிணறுகள் ஆகியவற்றைத் தொடர்புள்ள நகராட்சிகளும், ஊராட்சிகளும் அமைத்து, பாதுகாக்கப்பட்ட குடிநீரை மக்களுக்கு வழங்குகின்றன. நாகர்கோவில் நகராட்சி மட்டும், இரண்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மற்றும் 640 பொது நீர் ஊற்றுகள் ஆகியவை மூலம், ஒரு நாளைக்கு 144 இலட்சம் லிட்டர்கள் குடி நீரினை மக்களுக்கு வழங்குகிறது.

கொளச்சல் நகராட்சி, 42 பொதுக் கழிப்பிடங்களையும், 18 சிறுநீர் கழிப்பிடங்களையும் பராமரிக்கிறது. பத்மநாபபுரம் நகராட்சி நான்கு பொதுக் கழிப்பிடங்களையும், நான்கு சிறுநீர் கழிப்பிடங்களையும் பராமரித்து வருகிறது. நகரங்களைத் தூய்மையாக வைத்திருக்கவும், மக்கள் நல்வாழ்வினைப் பேணிக்காக்கவும், இம்மாவட்டத்திலுள்ள நான்கு நகராட்சிகள், கன்னியாகுமரி நகரியம் மற்றும் அனைத்துப் பேரூராட்சிகள், சுகாதார ஆய்வாளர்கள், தெருப் பெருக்குநர்கள் மற்றும் துப்பறவு செய்பவர்கள் அடங்கிய பணியாளர்களை நியமித்துள்ளன. சுகாதாரத்தினை மேம்படுத்த, உணவில் கலப்படத்தைக் கண்டுபிடித்தல், பொது இடங்களான உணவு விடுதிகள் மற்றும் திரை அரங்கங்கள் ஆகியவற்றை ஆய்வு செய்தல் போன்ற பணிகளை உள்ளாட்சி நிறுவனங்களைச் சார்ந்த சுகாதாரப் பணியாளர்கள் மேற்கொள்கின்றனர்.

தன்னார்வத் தொண்டு (Voluntary Social Service) நிறுவனங்களுடன் கூட, பல்வேறு கல்லூரிகள் மற்றும் உயர்நிலைப்பள்ளிகள் ஆகிய வற்றைச் சார்ந்த தேசிய சேவைப்படை மாணவர்களும், தேர்த் திருவிழா காலங்களில், நல்ல சுகாதாரத்தினைப் பராமரித்திட உதவி புரிகிறார்கள்.

உணவுக் கலப்படம்

1954ஆம் ஆண்டின் உணவுக் கலப்படத் தடுப்புச் சட்டம், மாவட்டத்தில், நடைமுறையிலிருந்து வருகிறது. மாவட்டத்திலுள்ள 4 நகராட்சிகள், குருந்தங்கோடு மற்றும் மூஞ்சிரை ஊராட்சி ஒன்றியங்கள், கன்னியாகுமரி நகரியம், அழகர்புரம், ஆசாரிப்பள்ளம், கொட்டாரம், மைலாடி, மருங்கூர், புதுக்கடை, புத்தாளம், சுசீந்திரம், வேலாத்துறை மற்றும் வில்லுக்குரி ஆகிய பேரூராட்சிகள் ஆகியவற்றிற்கு, உணவுப்பொருட்களின் மாதிரிகளெடுக்க மாதாந்திரக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. உள்ளாட்சி நிறுவனங்களின் மக்கள் தொகை மற்றும் பகுதியிலுள்ள வணிகர்களின் எண்ணிக்கை ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு, மாதாந்திரக் குறியீடு நிர்ணயிக்கப்படுகிறது. கடந்த ஐந்தாண்டுகளில் கிடைக்கப் பெற்ற மாதிரிகளின் எண்ணிக்கை, ஆய்வு செய்யப்பட்டவை, அறிக்கை அனுப்பப்பெற்றவை, கலப்படமுள்ளவையென கண்டறியப்பட்டவை ஆகியவை தொடர்பான விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன:

உணவுக் கலப்படத்தினைத் தடுத்தல்

தொடர் எண்.	தகவல்கள்	1982	1983	1984	1985	1986	1987 (செப்டம்பர் முடிய)
1.	கிடைக்கப்பெற்ற மாதிரிகளின் எண்ணிக்கை	332	362	313	336	427	367
2.	ஆய்ந்தறிந்த மாதிரிகளின் எண்ணிக்கை	341	349	299	370	424	350
3.	கலப்படமுள்ளதாகக் கண்டறியப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை	37	41	22	34	45	15
4.	கலப்படத்தின் விழுக்காடு	10.85	11.75	7.36	9.19	10.61	4.29
5.	குற்ற வழக்குத் தொடரப்பட்ட இனங்களின் எண்ணிக்கை	45	26	17	28	45	17
6.	தண்டனை வழங்கப்பட்ட இனங்களின் எண்ணிக்கை	14	19	5	14	1	2
7.	விடுவிக்கப்பட்ட இனங்களின் எண்ணிக்கை	11	31	11	20	37	9
8.	அபராதத் தொகை (ரூபாயில்)	8,000	12,000	3,500	14,100	3,000	700

நோய்த்தடைக்காப்பு (Immunisation):

மனித இனம், தொன்று தொட்டு நோய்த் தடுப்பு நடவடிக்கைகளில் அயராது ஈடுபட்டு வருகிறது. ஆதலால், ஓரளவிற்கு அதன் பலனையும், நன்கு அனுபவிக்க முடிகிறது. சில நோய்கள் பரவாமல் தடுக்க வேண்டிய வழிமுறைகளில், குறிப்பாக தொற்று நோய்கள் பரவாமலிருக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளில், "தொற்று நோய்களினின்றும் தடைகாப்பு அளித்தல் அல்லது அம்மை குத்துதல்" சிறந்த முறையாகும்.

அம்மை குத்துதல், ஒரு தடைகாப்பு நிலையினை விரைவுபடுத்துகிறது. அதாவது ஒருவர் நோயினால், அவதியுறாது, அல்லது நோயினால் பாதிக்கப்பட்டால் குறைந்த அளவு உடல் நலமின்மையை சந்திக்கக்கூடிய நிலையினையே, இக்காப்புரிமை அளிக்கிறது. நோய்த்தடுப்புச் சத்து நீரென்ற அம்மைப் பாலின் தரத்தை பொருத்தே, காப்புரிமையின் எதிர்பாரா ஊறுபாடு அமைகிறது. பலவகைத் தொற்று நோய்களான, தொண்டை அழற்சி நோய், நரம்பிசிவு நோய், கக்குவான், இளம்பிள்ளை வாதம், எலும்புருக்கி நோய் மற்றும் குடற்காய்ச்சல் ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவதிலும், ஒழிப்பதிலும், அம்மைப்பால் முக்கிய அங்கம் வகிக்கிறது. தொற்று நோய்களுடன் எதிர்த்துப் போராடக் கையாளப்படும் பல்வேறு முறைகளாலும், நோய்த் தடுப்பு முறையாக, பலருக்கு அம்மைப்பால் ஊசி செலுத்தி வருவதாலும், நோய் நிலை வீதமும், இறப்பு வீதமும் ஓரளவு குறைந்துள்ளன.

நுண் உயிரினங்கள் அல்லது அவற்றின் பெருக்கம் ஆகியவற்றை முறைப்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டே அம்மைப்பால் செலுத்தப்படுகிறது. இதனால், முன்னர் கூறியது போன்று, நோயினால் பாதிக்கப்பட்ட ஒருவர் குறைந்த அளவு உடல்நலமின்மையையே சந்திக்க வேண்டிய நிலையினை இது அளித்து, பாதுகாப்பு அரணாகத் திகழ்கிறது.

இக்காப்புரிமை விரிவாக்கத்திட்டம், மாநில முழுமையும், 1979 நவம்பர் மாதம் முதல், அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. காப்புரிமைப் பணிகள் கிராமப்புறப் பகுதிகளில், ஆரம்ப சுகாதார மையங்கள் மற்றும் துணை சுகாதார மையங்கள் மூலமாகவும், நகர்ப்புறப் பகுதிகளில் பொது மருத்துவ மனைகள் மற்றும் குழந்தைகள் நல மையங்கள் மூலமாகவும் விரிவாக்கப்படுகின்றன.

போதுமான "குளிர் சங்கிலித் தொடர் வசதிகள்" (Cold chain facilities) மேற்கொள்ளப்பட்ட அம்மைப்பால் வகைகள், புற எல்லைப் பகுதிகளுக்கு வழங்கப்படுகின்றன.

இந்த முறையானது, பல்வேறு வகைப்பட்ட அம்மைப்பால்கள், அவை ஆற்றல் வாய்ந்த மருந்துகளாகத் திகழ்வதற்கு, குளிர் பதனப்பெட்டிகளில்

பாதுகாக்கப்படுகின்றன. ஏனெனில், "குளிர் சங்கிலித்தொடர் வசதி முறைகள்", அம் மருந்துகளை விஞ்ஞான ரீதியில் பாதுகாத்திட, இயன்றியமையாத வழிமுறைகளாகும். இப்பணியினை கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள ஆரம்ப சுகாதார மையங்களில் பணியாற்றும், மருத்துவ அலுவலர்கள், கோட்ட சுகாதார ஆய்வாளர்கள், சுகாதாரப் பார்வையாளர்கள், சுகாதார உதவியாளர்கள் மற்றும் அம்மை குத்துவோர் ஆகியோர், பல்வேறு வகையான அம்மைப்பால் செலுத்திட, நிர்ணயிக்கப்பட்டுள்ள கால அட்டவணைப்படி, இப்பணியினை ஆற்றி வருகிறார்கள். கருவுற்ற தாய்மார்களுக்கு, அவர்களது பேறுகாலத்தின் பிற்பகுதியில், நரம்பிசிவு நோய் நச்சு அம்மைப்பால் செலுத்தப்படுகிறது.

மாவட்டத்தில் 1980ஆம் ஆண்டு முதல், 1988 ஆம் ஆண்டு வரை, காப்புரிமை செயல் நிறைவேற்றம் தொடர்பான புள்ளி விவரங்கள் கீழேகண்ட பட்டியலில் அளிக்கப்பட்டுள்ளன:

கன்னியாகுமரி மாவட்டத்தில் நோய்த்தடுப்பூசி திட்ட செயலாக்க விவரம்

வ.எண். (1)	தடுப்பூசி (2)	1981–82 (3)	1982–83 (4)	1983–84 (5)	1984–85 (6)	1985–86 (7)	1986–87 (8)	1987–88 (9)	Total (10)
1.	இளம்பிள்ளை வாதம்	No Programe		30864	32757	41220	34019	39531	178391
2.	DPT	18324	17780	33238	38940	41220	20259	41761	211522
3.	DT	19974	20863	28349	27761	187759	51693	43855	380254
4.	TT (EM)	12848	13869	21595	15404	19238	28874	36918	158746
5.	TT (10 years)	2677	NIL	2795	15767	195112	27698	25775	94224
6.	TT (16 years)	1658	NIL	1980	16041	13005	27448	18589	78721
7.	TA (5-6)	4962	17095	21416	52411	26334	5254	18947	146419
8.	தட்டம்மை	Rotarians	6983	193	NIL	NIL	NIL	33955	41131
9.	BCG	-	-	-	-	33806	26221	26473	86500
10.	FS (L)	56772	12508	26841	57413	32166	20651	39997	232824
11.	FST (S)	23600	33238	27940	37579	64956	21522	83417	248832
12.	Vit. (A)	56892	39102	27893	56247	160190	61480	129013	530827

EM - Expectant mothers, TA - Typhoid

மேற்கோள் நூல்கள்

	ஆசிரியர்/வெளியீட்டாளர்	நூலின் பெயர்
1.	மாதவன் வி.ஆர்., அனைத்து நாட்டு தமிழாராய்ச்சி நிறுவனம் Madhavan V.R., International Institute of Tamil studies,	சித்த மருத்துவ நூல் (தமிழில்), பக்கம் 6. Siddha Medical Manuscript in Tamil, p-6.
2.	முனைவர் எஸ்.பத்மநாபன், நாகர்கோவில் Dr. S. Padmanabhan, Nagarcoil	குமரி மாவட்டத்தின் மருத்துவ மரபுரிமை முறைகள். Medical Heritage of Kumari District.
3.	நாகம் அய்யா, வி., திருவனந்தபுரம் Nagam Aiyah. V., Trivendrum	திருவாங்கூர் மாநில நடைமுறை நூல், 1906. பக்கம் 524. The Travancore State Manual, Trivendrum
4.	எமிலி கில்ச்ரிஸ்ட் ஹட்ச், திருவாங்கூர் Emily Gilchriest Hatch, Travancore	ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழக அச்சகம் 1933–பக்கம் 222. Oxford University press, 1933, p.222.
5.	நாகம் அய்யா. வி., திருவனந்தபுரம் Nagam Aiyah. v., Trivendrum	திருவாங்கூர் மாநில நடைமுறை நூல், பக்கம் 545. Travancore State Manual, p.545
6.	அதே நூற்பகுதியில் Ibid	பக்கம் 546
7.	அதே நூற்பகுதியில் Ibid	பக்கம் 499
8.	பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு இயக்குநர், சென்னை Director of Public Health and preventive Medicine, Madras.	குறிப்பு நாள் 14.12.1987 Note dated 14-12-1987
9.	அதே நூற்பகுதியில் Ibid	
10.	அதே நூற்பகுதியில் Ibid	
11.	மாவட்ட நலவாழ்வு அலுவலர், நாகர்கோவில் District Health Officer/ Nagercoil	குறிப்புகள் நாள் 28.4.1987 மற்றும் 21.12.1988. Notes dated 28-4-1987 and 21-12-1988.
12.	மருத்துவப்பணிகள் மற்றும் குடும்ப நலத்துறை, சென்னை Department of Medical Services & Family Welfare/ Madras.	செயலாக்க நிதி ஒதுக்கீடு 1984–85. Performance Budget
13.	மாவட்ட மருத்துவ அலுவலர், நாகர்கோவில் District Medical officer, Nagercoil	குறிப்பு நாள் 31.3.1987 Note dated 31.3.1987
14.	அதே நூற்பகுதியில் Ibid	
15.	அதே நூற்பகுதியில் Ibid	
16.	அதே நூற்பகுதியில் Ibid	
17.	அதே நூற்பகுதியில் Ibid	
18.	பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு இயக்குநர், சென்னை. Director of Public Health &Preventive Medicine, Madras.	குறிப்பு நாள் 14.12.1987 Note dated 14.12.1987
19.	அதே நூற்பகுதியில் Ibid	

20.	மாவட்ட மருத்துவ அலுவலர், நாகர்கோவில் Dirstrict Medical Officer, Nagrcoil	குறிப்பு நாள் 31.3.1987 Note dated 31.3.1987
21.	அதே நூற்பகுதியில் Ibid	
22.	கண்காணிப்பாளர், அரசு எலும்புருக்கி நோய் மருத்துவ மனை, ஆசாரிப்பள்ளம், நாகர்கோவில். Superintendent, Govt. Tuberculosis Hospital, Acharipallam, Nagrcill.	குறிப்பு நாள் 19.12.1986 Note dated 19-12-1986
23.	முனைவர் ஜே.சி.விஜயன், தென்னிந்தியத் திருச்சபை மருத்துவமனை, நெய்யூர். Dr.J.C. Vijayan, the CSI Hospital, Neyyur.	குறிப்பு நாள் 1.7.1987 Note dated 1.7.1987
24.	மாவட்ட நலவாழ்வு அலுவலர், நாகர்கோவில் District Health Officer, Nagercoil	குறிப்பு நாள் 5.4.1988 Note dated 5.4.1988
25.	அதே நூற்பகுதியில் Ibid	
26.	முனைவர் எஸ். பத்மநாபன் Dr.S.Padmanabhan	குமரி மாவட்டத்தின் மருத்துவ மரபுரிமை முறைகள். Medical Heritage of Kumari District.
27.	இந்திய மருத்துவத்துறை இயக்குநர், சென்னை. Director of Indian Medicine, Madras.	குறிப்பு நாள் 8.9.1986 Note dated 8.9.1986
28.	அதே நூற்பகுதியில் Ibid	
29.	முனைவர் எஸ். பத்மநாபன் Dr. S. Padmanabhan	குமரி மாவட்டத்தின் மருத்துவ மரபுரிமை முறைகள். Medical Heritage of Kumari District.
30.	முனைவர் ஜே.சி. விஜயன், தென்னிந்தியத் திருச்சபை மருத்துவமனை, நெய்யூர். Dr. J.C. Vijayan, the CSI Hospital, Neyyur.	குறிப்பு நாள் 1.7.1987 Note dated 1-17-1987 and 5-7-1988.
31.	திரு.ஜேம்ஸ். டி.கூட், நிர்வாக அலுவலர், கேத்தரின் பூத் மருத்துவ மனை, நாகர்கோவில். Thiru James D. Hood, Administrator, Catherine Booth Hosptial, Nagercoil.	குறிப்புகள் நாள் 20.3.1987 மற்றும் 20.7.1988. Notes dated 20-3-1987 and 20.7.1988.
32.	விவேகாநந்தா கேந்திரம்–கன்னியாகுமரி ஆண்டறிக்கை–1987. Annual Report Vivekananda Kendra Kanniyakumari - 1987.	
33.	மருத்துவர் இந்திரா சுரேந்திரன், நாகர்கோவில். Dr. Indira Surendran/ Nagercoil	குறிப்பு நாள் 23.11.1988 Note dated 23.11.1988
34.	மருத்துவர் மோசஸ், மத்தியாஸ், மருத்துவமனை, நாகர்கோவில். Dr. Moses, Mathias Hosptial, Nagercoil.	குறிப்பு நாள் 24.11.1988 Note dated 24.11.1988
35.	(அ) மாவட்ட குடும்ப நல அலுவலர், நாகர்கோவில் (ஆ) குடும்ப நல இயக்குநர், சென்னை (a) District Family Welfare Officer Nagrcoil. (b) Director of Family Welfare, Madras	குறிப்பு நாள் 10.12.1987 குறிப்பு நாள் :20.12.1988 Note dated 10.12.1987 Note dated 20.12.1988

இயல்-17

பிற சமூகப் பணிகள்

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பத்தாறாம் ஆண்டு முந்தைய திருவாங்கூர்-கொச்சி மாநிலத்தினின்று, தற்போதைய கன்னியாகுமரி மாவட்டம் பிரித்தமைக்கப்பட்டது. திருவாங்கூர் - கொச்சி மாநிலத்தில் ஏற்பட்ட சமூக மேம்பாடு, குறிப்பாக குடிப்பழக்கத்தினை அடியோடு களைந்ததன் விளைவுதானெனில் மிகையில்லை. இது தொடர்பாக பல சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இம்மாநிலத்தில் மதுவிலக்கினை நன்கு செயல்படுத்த, 1878-79ஆம் ஆண்டு, ஒரு, வரையறை செய்யப்பட்ட விதி, வகுக்கப்பட்டது. 1948ஆம் ஆண்டு, சோதனை அடிப்படையில், அகஸ்தீஸ்வரம், தோவாளை, கல்குளம் மற்றும் விளவங்கோடு ஆகிய வட்டங்களில் மதுவிலக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. அது வெற்றியடைந்த தனைத் தொடர்ந்து, 1950ஆம் ஆண்டில் திருவாங்கூர்-கொச்சி மதுவிலக்குச் சட்டம் இயற்றப்பட்டது. அதே நேரத்தில், பிற்பட்ட வகுப்பினரின் முன்னேற்றத்தில் அரசு தனி கவனம் செலுத்தியது. ஆகையால், பல்வேறு கொள்கைகள் வகுக்கப்பட்டு, களப் பணியாளர்களின் உதவியுடன், அவை, நடைமுறைப்படுத்தப்பட்டன. ஆனால், விரிவானதொரு செயல் விளைவு அதனால் ஏற்படவில்லை. ஆனால் சமூகப் பணிகளில் ஒரு உண்மையான உந்துகை, கன்னியாகுமரிப் பகுதி தமிழ்நாட்டுடன் இணைந்த பின்னரே, அதாவது 1965-க்குப் பின்னர், காணப்பட்டது.

சமூகப் பணிகளைப் பற்றி ஆயுங்கால், பொதுவாக, அரசின் ஒவ்வொரு சட்டமும், சமூக முன்னேற்றத்தைக் குறிக்கோளாகக் கொண்டதாகும். சமூகப்பணிகள் என்பவை, குறிப்பாக ஏழை, எளியோரைச் சென்றடையும் பணிகளாகும்; அதாவது, தொழிலாளர் நலம் மற்றும் பெண்கள் நல நடவடிக்கைகள், அட்டவணை வகுப்பினர், அட்டவணை மலை வாழ் வகுப்பினர் மற்றும் பிற்பட்ட வகுப்பினர் ஆகியோரின் முன்னேற்றத்திற்கான திட்டங்கள் ஆகியவை இவற்றில் அடங்கும்.

தொழிலாளர் நலம்

ஒருமுகப்படுத்தப்பெற்ற, இயந்திரத் தொழில் சார்ந்த தொழில் வளம், முந்தைய திருவாங்கூர்-கொச்சி மாநிலத்தைச் சார்ந்த கன்னியாகுமரி மாவட்டப் பகுதியில் இந்நூற்றாண்டின் துவக்கம் வரை நடைமுறையி லில்லை. அக்காலத்தில், தொழிலாளர் வர்க்கம் என வேளாண் தொழிலாளர் கள்தான் அழைக்கப்பட்டனர். ஆனால், 1947ஆம் ஆண்டு, இந்தியா சுதந்திரமடைந்த பின்னர், சூழ்நிலை மாறி, தொழிற்சாலைகள் பெருகத் துவங்கின. அதுவரை, தொழிலாளர் வர்க்கமென வேளாண் தொழிலாளர்கள் மட்டும் அழைக்கப்பட்டு வந்தது போக, தொழிற்சாலைப் பணியாளர்களும் அவ்வாறு அழைக்கப்படலாயினர். எனவே, தொழிலாளர்களின் நலனில் கவனம் செலுத்துவதும், அவர்களைப் பாதுகாப்பதும், அரசின் இன்றியமை யாத கடமையாகியது, எனவே, 1926ஆம் ஆண்டு, தொழிலாளர்கள்

இழப்பீட்டுச் சட்டம், 1926ஆம் ஆண்டு, தொழிற் சங்கச் சட்டம், 1936ஆம் ஆண்டு, உழைப்புக்கூலிச் சட்டம், 1938ஆம் ஆண்டு, குழந்தைகளை வேலைக்கமர்த்தும் சட்டம், 1946ஆம் ஆண்டு, தொழிலாளர் வேலை வாய்ப்பு (நிலையான ஆணைகள்) சட்டம், 1947ஆம் ஆண்டு, தமிழ்நாடு கடைகள் பணியாளர் தொகுதிச் சட்டம், 1947ஆம் ஆண்டு, தொழில் சார்ந்த கருத்து வேறுபாடுச்சட்டம், 1948ஆம் ஆண்டு, தொழிற்சாலைகள் சட்டம், 1948ஆம் ஆண்டு, குறைந்த கூலி நிர்ணயச் சட்டம், 1951ஆம் ஆண்டு, தோட்டப்பண்ணைத் தொழிலாளர் சட்டம், 1961ஆம் ஆண்டு, பேருந்துப்போக்குவரத்துப் பணியாளர்கள் சட்டம், 1965ஆம் ஆண்டு, மிகையூதியம் வழங்கும் திட்டம், 1958ஆம் ஆண்டு, தொழிற்சாலைப் பணியாளர் தொகுதிச் சட்டம் மற்றும் 1972ஆம் ஆண்டு தமிழ்நாடு, தொழிலாளர் நல நிதிச் சட்டம் ஆகிய பல்வேறு சட்டங்கள் இயற்றப்பட்டன.

கன்னியாகுமரி மாவட்டம், ஒரு பகுதியாக அமைந்த முந்தைய திருவாங்கூர்-கொச்சி மாநிலத்தில், தொழிலாளர் நலம், மாவட்ட குற்றவியல் நீதிபதிகள் மற்றும் மருத்துவ அலுவலர்கள் ஆகியோரிடம் ஒப்படைக்கப் பட்டன. அவர்கள், தங்களது எல்லைப் பகுதியிலுள்ள தொழிற்சாலைகளை அவ்வப்போது ஆய்வு செய்து, காற்றோட்டம் மற்றும் சுகாதார வசதி மற்றும் விபத்துகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் ஆகியவை குறித்து அரசுக்கு அறிக்கைகள் அனுப்பி வந்தனர்.

இதற்கிடையே, ஆங்கிலேயரின் ஆதிக்க வரம்பிற்குட்பட்ட இந்திய மாநில எல்லைப்பகுதிகளில் இயற்றப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்ட தொழிலாளர் நலச் சட்டங்களின் செயல் விளைவு, திருவாங்கூர் மாநில மேலவையில் ஒலிக்கத் தொடங்கியது. அதன் பயனாக, ஏறத்தாழ 1911ஆம் ஆண்டு, ஆங்கில-இந்திய 12-வது சட்டத்திற்கொப்பான, 1914ஆம் ஆண்டு, ஐந்தாவது தொழிற்சாலைகள் சட்டம் இயற்றப்பட்டது[1].

கன்னியாகுமரி மாவட்டப் பகுதி, சென்னை மாநிலத்துடன் இணைக்கப்பட்ட போது, மாநிலத்தின் ஏனைய மாவட்டங்களிலுள்ளது போன்று, இம்மாவட்டத்தின் தொழிலாளர் நலமும், சென்னை தொழிலாளர் ஆணையரின் நேரடி கண்காணிப்பில் கொணரப்பட்டது. தொழிலாளர் தொகுதி அலுவலர்கள், தொழிற்சாலைகள் ஆய்வாளர்கள், தொழிலாளர் தொகுதி ஆய்வாளர்கள் மற்றும் தோட்டப்பண்ணைகள் ஆய்வாளர்கள் ஆகியோர் ஆணையருக்கு உதவி புரிந்து வருகிறார்கள். மாவட்டத்திற்கென, நாகர்கோவிலில் ஒரு தொழிலாளர் தொகுதி அலுவலர், நாகர்கோவிலில் பணியாற்றி வந்தார். அவர், 1947ஆம் ஆண்டின், தொழில் சார்ந்த கருத்து வேறுபாடுகள் சட்டத்தின்படி, இணைக்கப்படுத்தும் அலுவலராகப் பணியாற்றி வந்தார்.

மூன்று தொழிலாளர் தொகுதி உதவி ஆய்வாளர்களில், இரண்டு பேர்கள் நாகர்கோவிலிலும், எஞ்சிய ஒருவர் தக்கலையிலும், திருநெல்வேலி தொழிலாளர் தொகுதி ஆய்வாளரின் நிருவாக கட்டுப்பாட்டின் கீழ், பணியாற்றி வந்தனர்.

திருநெல்வேலி தொழிற்சாலைகள் ஆய்வாளரின் கண்காணிப்பில், நாகர்கோவிலில் ஒரு தொழிற்சாலைகள் உதவி ஆய்வாளர் பணியாற்றி வந்தார்.

தொழிலாளர்களின் நல்வாழ்வு தொழிற்சாலைகளில் அவர்களுக்கான பாதுகாப்பு வழிமுறைகள், தொழிற்சாலைப் பணியாளர்களின் நல வசதிகள் ஆகிய நல்ல தொழில் சூழ்நிலையினை உருவாக்கும் நோக்கில், தொழிலாளர் சட்டத்தினையும், அதனைச் சார்ந்த ஏனைய சட்ட விதிமுறைகளையும், நல்ல முறையில் செயல்படுத்திட, திருநெல்வேலி தொழிற்சாலைகள் துறை முதன்மை ஆய்வாளர், தொழிற்சாலைகள் ஆய்வாளர்கள், தொழிற்சாலைகள் உதவி ஆய்வாளர் மற்றும் திருநெல்வேலி (தொழிற்சாலைகள்) மருத்துவ அலுவலர் ஆகியோர், பொறுப்பு வகிக்கின்றனர்[2], மாவட்டத்திலுள்ள தொழிற்சாலை ஆய்வகத்தினை வலுவூட்ட, நாகர்கோவிலில் கூடுதலாக ஒரு, தொழிற்சாலை ஆய்வாளர் பணியிடம், உருவாக்கும் கருத்துரு, பரிசீலனையிலிருந்து வருகிறது.

தொழிலாற்றுவதற்கான நல்ல சூழ்நிலை, தொழிலாளர்களின் நல வாழ்வு மற்றும் நல வசதிகள் ஆகியவற்றை உறுதிப்படுத்தும், தோட்டப் பண்ணைகள் தொழிலாளர் தொகுதிச் சட்டம், நாகர்கோவில், தோட்டப் பண்ணைகள் ஆய்வாளரால் நடைமுறைப்படுத்தப்படுகிறது. தொழில் சார்ந்த கருத்து வேறுபாடுகளை, நாகர்கோவிலிலுள்ள (இணைக்கப் படுத்தல்), தொழிலாளர் தொகுதி உதவி ஆணையர், கவனித்து வருகிறார். தொழில்நுட்பம், சாரா ஏனைய தொழிலாளர் நலச் சட்டங்களை, தூத்துக்குடி தொழிலாளர் தொகுதி ஆய்வாளரும், மற்றும் இரு தொழிலாளர் தொகுதி துணை ஆய்வாளர்கள், ஏழு தொழிலாளர் தொகுதி உதவி ஆய்வாளர்கள் ஆகியோரடங்கிய அவரது களப் பணியாளர்கள், நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

பெண் தொழிலாளர்களைப் பொறுத்தவரை, சீரான ஊதியச் சட்டம் மற்றும் பேறுகாலப் பயன் திட்டம் ஆகியவை நடைமுறைப்படுத்தப்படு கின்றன. மற்றொரு சமூககொடுமை யாதெனில், தொழிற்சாலைகளில் சிறு குழந்தைகளை வேலைக்கமர்த்துவதாகும். இது தொடர்பான, தொழிலாளர் துறை அலுவலர்கள் விழிப்புடனிருந்து, குற்றவாளிகள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்கிறார்கள், 1985ஆம் ஆண்டு சட்டத்திற்குப் புறம்பாக குழந்தைகளை வேலைக்கமர்த்திய, 25 நிருவாகிகள் மீது குற்றவியல் நடவடிக்கை தொடரப்பட்டது.

கன்னியாகுமரி மாவட்டத்தில், தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட பல்வேறு தொழிலாளர் நலத்திட்டங்கள்

1972ஆம் ஆண்டு, தமிழ்நாடு தொழிலாளர் தொகுதி நிதிச்சட்டம்

தொழிலாளர்களின் நலனைக் கருத்திற்கொண்டு, ஒரு நிதி அமைத்திட, இச்சட்டம் வழி வகுக்கிறது. ஓராண்டில் 30 நாட்களுக்குக்

குறையாமல் பணியாற்றியுள்ள ஒரு தொழிலாளர், இச்சட்டத்தின்படியான பயனைப் பெற்றிடத் தகுதியுடையவராகிறார். அவர் ஓராண்டிற்கு ரூபாய் இரண்டு இந்நிதிக்கு செலுத்த வேண்டும். தொழிலதிபர், ஒவ்வொரு தொழிலாளர் சார்பிலும் ஓராண்டிற்கு ரூபாய் நான்கு செலுத்துகிறார். இவை தவிர, அரசும், ஒரு தொழிலாளிக்கு ரூபாய் இரண்டு ஈடுகொடுக்கும் கொடையளித்து வருகிறது. இத்தொகை தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தில் சேர்க்கப்பட்டு, தொழிலாளர் நல நடவடிக்கைகள் குறித்து செலவிடப்படுகின்றன. இம்மாவட்டத்தில் மட்டும், 1986 டிசம்பர் மாத நிலவரப்படி, இச்சட்டத்தின் வரம்பிலடங்கும் தொழிலாளர்களின் எண்ணிக்கை 49,172 ஆகும்.

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்[3]

இவ்வாரியம், 1973ஆம் ஆண்டு, அமைக்கப்பட்டது. மாண்புமிகு தொழிலாளர்துறை அமைச்சர் இவ்வாரியத்தின் தலைவராவார். கீழே விவரித்துள்ளவாறு, வாரியம், தொழிற்சாலைப் பணியாளர்களுக்கென, பல்வேறு நலத்திட்டங்களை உருவாக்கியுள்ளது.

தொழிலாளர் நல மையங்கள்

மாவட்டத்தில், நாகர்கோவில், குலசேகரம் மற்றும் கீழ்க்கோதையார் ஆகிய இடங்களில், இம்மையங்கள் இயங்கி வருகின்றன. தொழிலாளர்களின் குடும்பங்களைச் சார்ந்த பெண் உறுப்பினர்கள், 12 மாத காலங்களுக்குத் தையற்கலையில், பயிற்சியளிக்கப்படுகிறார்கள். அந்தக் கால வரையில், அவர்களுக்கு ரூபாய் 60/- மாத ஊதியம் வழங்கப்படுகிறது.

சிறுவர்களுக்குரிய விளையாட்டு முறைக்கல்விப் பள்ளியும் இவ்வாரியத்தால் நாகர்கோவிலிலுள்ள தொழிலாளர் நல மையத்தில் நடத்தப்படுகிறது.

தோட்டப் பண்ணைத் தொழிலாளர்களின் வீட்டு வசதித் திட்டங்கள்

இத்திட்டம், தோட்டப் பண்ணைத் தொழிலாளர்கள், சொந்தத்தில் வீடுகள் கட்டிக்கொள்ள, மானியத்துடன் கூடிய கடன்பெற, வழிவகை செய்கிறது. ஒவ்வொருவருக்கும் 37.5 விழுக்காடு மானிய வீதத்தில், அதிக அளவு மானியம் வழங்கப்பெறும் தொகை, ரூபாய் 4,000/- ஆகும். இத்திட்டத்தினால், அதிக அளவிலான தோட்டப்பண்ணைத் தொழிலாளர்கள் இம்மாவட்டத்தில் பயனடைந்துள்ளனர்.

மாவட்டத்தில் ஒரு எலும்புருக்கி நோய் ஒழிப்பு மருத்துவமனை நிருவிட கருத்துரு

தொழிலாளர்களின் நலனைக் கருத்திற்கொண்டு, ஆசாரிப்பள்ளத்தில், 30 படுக்கைகள் கொண்ட எலும்புருக்கி நோய் ஒழிப்பு மருத்துவ மனை ஒன்றினை நிறுவிட, தொழிலாளர் நல வாரியம் அரசுக்குக் கருத்துரு அனுப்பியுள்ளது.

விபத்துக்களுக்கான இழப்பீட்டுத் தொகை

தொழிற்சாலை ஆய்வாளர்கள், அடிக்கடி தொழிற்சாலைகளைப் பார்வையிட்டு, தொழிற்சாலைகள் சட்டத்தின்படி, தொழிலாளர்களுக்கு உரிய பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள நிருவாகிகளுக்கு அறிவுரை வழங்குகின்றனர். அவ்வாறான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளத் தவறினால், நிருவாகிகள் மீது குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. பாதுகாப்பு முறை குறித்து, தொழிலாளர்களுக்குப் பயிற்சியளித்தல், தொழில் சார்ந்த பாதுகாப்பின் முக்கியத்துவத்தை நன்கு புலப்படுத்துதல் ஆகியவை தொழிலாளர் துறை நடைமுறைப்படுத்தும் பல்வேறு திட்டங்களின் ஒரு பகுதியாகும்.

வரையறை செய்யப்பட்ட விதிகளைக் கடைப்பிடிக்கத் தவறிய ஐந்து நிருவாகிகள் மீது, 1985ஆம் ஆண்டு, குற்றயியல் நடவடிக்கை தொடரப்பட்டுள்ளது. விபத்தினால் பாதிக்கப்பட்டு, சிறுகாயங்கள் மற்றும் பெரிய காயங்களுக்காளானோர். மேலும் உயிரிழந்தோர் ஆகியோருக்கு உரிய இழப்பீடு வழங்க, பணியாட்கள் இழப்பீட்டுச் சட்டத்தில், வழிவகை செய்யப்பட்டுள்ளது. இழப்பீட்டுத் தொகையின் அளவு, தொழிலாளர் அடைந்த குறைபாட்டின் தன்மை மற்றும் அளவிற்கொப்ப நிர்ணயிக்கப்படுகிறது. திருநெல்வேலி, தொழிலாளர் துணை ஆணையர், தீர்ப்பு மன்றத்தின் தலைவராவார். 1985ஆம் ஆண்டு, 3,17,029/-ரூபாய் இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

தொழிலாளர்களின் நலன் குறித்து, பெரிய தொழில் நிறுவனங்களான ஆரல்வாய்மொழியிலுள்ள கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு ஆலை, மற்றும் நாகர்கோவிலிலுள்ள நாகம்மை ஆலை ஆகியவை, நற்பணியாற்றி வருகின்றன. நல்ல உணவகங்கள், ஓய்வு அறைகள், சிற்றுண்டி நிலையங்கள் மற்றும் கூட்டுறவு (சிக்கன) சேமிப்பு சங்கங்கள் ஆகியவற்றை அமைத்துக் கொடுத்துள்ளன. இந்த வசதிகள் தொழிலாளர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றுள்ளது.

தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் மலைவாழ் வகுப்பினர் ஆகியோர் முன்னேற்றம்

இந்திய அரசியல் சட்டத்தில் அளிக்கப்பட்டுள்ள பொறுப்புறுதிகளில், "சமுதாயப்படி நிலையில் சரி நிகர்வளித்தல், உரிய வாய்ப்பளித்தல், தனிப் பட்டவரின் கண்ணியம் காத்து, தோழமை உணர்ச்சியை வளர்த்தல்" என்பது மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இந்த நன்றிக்கடனை நிறைவேற்றிட, அரசு கட்டுப்பட்டதாகும்.

1956ஆம் ஆண்டுக்கு முன்னர், அட்டவணையிட்ட வகுப்பினர் மற்றும் பிற்பட்ட வகுப்பினர் ஆகியோர் தொடர்பான வளர்ச்சிப் பணிகளை, திருவாங்கூர்-கொச்சி மாநிலம், பிற்பட்டோர் வகுப்பினர் முன்னேற்றத் துறையின் மூலம் நிறைவேற்றி வந்தது. ஒரு கள அலுவலர் மற்றும் ஒரு

குடியேற்ற நிலை ஆய்வாளர் ஆகியோர், இப்பணியினை கவனித்து வந்தனர்.[4] சென்னை மாநிலத்துடன் மாவட்டம் 1956ஆம் ஆண்டு இணைந்த பின்னர், மாநிலத்தின் ஏனைய மாவட்டங்களிலுள்ள நிர்வாக அமைப்புமுறை போன்று கன்னியாகுமரி மாவட்டத்திலும், ஒரு மாவட்ட நல அலுவலர் மற்றும் ஏனைய சார்நிலை அலுவலர்களைக் கொண்ட அமைப்பு உருவாக்கப்பட்டது. மாவட்ட அளவிலான நலத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு மாவட்ட நல அலுவலரைச் சார்ந்ததாயிருந்தது. அலுவலர்கள் மற்றும் அலுவலரல்லாதோர் அடங்கிய ஒரு மாவட்ட நலக்குழுவினை அரசு அமைத்தது. அக்குழுவிற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் தலைவராகவும், மாவட்ட நலஅலுவலர் செயலாளராகவும் நியமிக்கப்பட்டனர். நடைமுறைப் படுத்தப்படும் பல்வேறு திட்டங்களின் நிலைகுறித்து இக்குழு காலாண்டிற்கொருமுறை ஆய்வு செய்தது.

மாவட்டம் சென்னை மாநிலத்துடன் இணைக்கப்பட்ட பின்னர், முதன்முதலில் அறிமுகப்படுத்தப்பட்ட நலப்பணியாதெனில், 1947ஆம் ஆண்டின் சென்னை சமயச்சார்பற்ற இயலாமைகள் களையப்பெறும் (திருத்த) சட்டமாகும். இச்சட்டம் இயற்றப்படுவதற்கு வெகு காலத்திற்கு முன்னரே, ஒரு தொலைநோக்கு அடிப்படையிலான நடவடிக்கையினை, 1936ஆம் ஆண்டு, திருவாங்கூர் அரசு எடுத்தது. அதன்படி, கோவில் நுழைவுப் (ஆலயப் பிரவேசம்) பிரகடனம் வெளியிடப்பட்டு, கோவில்களின் கதவுகள் ஆதி திராவிடர்களுக்காகத் திறந்து விடப்பட்டன. எனவே, 1947ஆம் ஆண்டின் சட்டம் நடைமுறைப்படுத்துவதற்கு முன்பிருந்தே திருவாங்கூர்-கொச்சி மாநிலத்தின் ஒரு பகுதியாக இருந்த, தற்போதைய கன்னியாகுமரி மாவட்டப் பகுதி, ஒருபடி முன்னதாகவே இருந்ததென்பது வெள்ளிடைமலை. சமூக சீர்திருத்தத்திற்காக மேற்கொள்ளப்பட்ட பல்வேறு அறப்போராட்டங்களின் குறிப்பாக, தீண்டாமையை ஒழிக்கப் பாடுபட்டதன் விளைவுதான் இப்பிரகடனமாகும். தாழ்த்தப்பட்ட வகுப்பினர் உயர்வகுப்பைச் சார்ந்தோரால், பலவகையிலும் ஒடுக்கப்பட்டனர். அதனைத் தொடர்ந்து அவர்கள் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் நிலைகளில் பெரும்பாதிப்புக்குள்ளாயினர். கோவில்கள், பள்ளிகள், சாலைகள் மற்றும் கிணறுகள் ஆகிய பொது இடங்களை அவர்கள் நெருங்க இயலாத நிலையிலிருந்தனர். பொது அலுவலகங்களில்கூட அவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. எனினும், இராணி இலட்சுமிபாய் அரசோச்சிய காலத்தில்தான், முற்போக்குக் கருத்தினைக் கொண்ட இந்துக்களில் ஒரு பிரிவினரின் ஆதரவைப் பெற்ற, தாழ்த்தப்பட்ட வகுப்பினர், தீண்டத்தகாதவர்களென கூறப்பட்ட தங்களுக்குப் பொது இடங்களில் அனுமதியளிக்கக்கோரி வலியுறுத்தினர். திருவாங்கூர் மாநிலத்தில், தாழ்த்தப் பட்ட வகுப்பினரின் நலனைக் காக்க, முனைவர் எம்.சி.நாயுடுவும் மற்ற சிலரும் தனிக்கவனம் செலுத்தினர். வைக்கம் நகரில், வைக்கம் கோவிலுக்குச் செல்லும் அனைத்துக் கோவில்களையும் பயன்படுத்திட, ஒரு கிளர்ச்சி மேற் கொள்ளப்பட்டது. இவ்வாறாக, ஏற்புடைச் சமயத்தைச் சார்ந்த இந்துக்கள்,

மதத்தின் பெயரால் இதனை வன்மையாக எதிர்த்தனர். தவறினால் கோவில்கள் தூய்மைக்கேடடையுமென்ற அச்சத்தினை எழுப்பினர்.

இதனைத் தொடர்ந்து, வைக்கத்தில் ஒரு அறப்போராட்டம் நடந்தது. அதில், கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த மக்கள் பலர் தீவிரப் பங்கேற்றனர். அதேநேரத்தில், தீண்டத்தகாதவர்களெனக் கருதப்பட்டவர்கள் மற்றும் இந்துக்கள் ஆகியோரிடையேயுள்ள ஏற்றத் தாழ்வினைக் களைந்திட, அரசின் கவனத்தை ஈர்க்குமுகத்தான், மாநில சட்டமன்றத்தில் ஒரு கிளர்ச்சி உருவானது. அதன் விளைவாக, வைக்கத்திலுள்ள கோவில் மற்றும் கோவிலுக்குச் செல்லும் சாலைகள் ஆகியவற்றில் தீண்டத்தகாதவர்களெனக் கருதப்பட்டோர் தடையின்றி செல்ல அனுமதி வழங்கக்கோரி, திருவாங்கூர்-கொச்சி மாநில மேலவையில் ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டது. ஆனால், ஒரு வாக்கு வித்தியாசத்தில், அத்தீர்மானம் தோல்வியைத் தழுவியது. ஆனால், இத்தோல்விகளைக் கண்டு துவளாமல், மக்களும் மக்கள் பிரதிநிதிகளும் கிளர்ச்சியைத் தொடர்ந்தனர். இக்கிளர்ச்சிக்கு திராவிடர் கழகத்தலைவர் திரு. பெரியார் இ.வெ. இராமசாமி அவர்கள், தனது முழு ஆதரவினை அளித்தார். அதனைத் தொடர்ந்து, அவருக்கு "வைக்கம் வீரர்" என்ற பட்டப்பெயர் சூட்டப்பட்டது. இதற்கிடையே 1925ஆம் ஆண்டு மாநிலத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட மகாத்மா காந்தி அவர்கள், ஆட்சியாளர்களை அணுகி மக்களின் கோரிக்கையினை ஏற்க வலியுறுத்தினார். அதன் விளைவாக, தாழ்த்தப்பட்ட வகுப்பினர் அனைத்துச் சாலைகளிலும் தடையின்றி சென்றுவர அனுமதியளிக்கப்பட்டது.

பின்னர், சுசீந்திரத்திலுள்ள கோவிலுக்குள் அனைத்து இந்துக்களும் நுழைய அனுமதி கோரி, கிளர்ச்சி மேலும் பரவியது. இறுதியாக, 1956ஆம் ஆண்டு கோவில் பிரகடனத்தின்படி, கன்னியாகுமரி மாவட்டம் உள்ளிட்ட அனைத்துக் கோவில்களிலும் இந்துக்கள் அனைவரும் நுழைந்து, கடவுளை வணங்கிட அனுமதியளிக்கப்பட்டது.

அரசியல் நிர்ணயச் சட்டத்தின் 17-வது விதியில், தீண்டாமைக்குத் தடைவிதிக்கப்பட்டது. மேலும், தீண்டாமை (குற்றங்கள்) சட்டத்தின்படி, தீண்டாமையினைக் குற்றமாகக்கருதி மாநில அரசு பிரகடனம் வெளியிட்டது.

எந்த ஒரு பிரகடனமும் முறையாகப் பின்பற்றப்பட வேண்டுமெனில், அதை நடைமுறைப்படுத்துவதைப் பொருத்தே அது அமைந்துள்ளது. அதற்கு மக்களிடையே விழிப்புணர்ச்சியினை ஏற்படுத்துவது இன்றியமையாததாகிறது. இதனைக் கருத்திற்கொண்டு, அரசின் கொள்கையினை மக்களிடையே பரப்பிட நான்கு துணை சேவகர்கள் தனியாக நியமிக்கப்பட்டனர். சமுதாயத்தில், உயர்ந்த நிலையில், முற்பட்ட வகுப்பினர்கள் இருந்து வந்தார்கள், சமுதாய ஏற்றத்தாழ்வு நிலையினை சீர்படுத்த அரசு பல்வேறு வழிமுறைகளைக் கையாண்டது.

பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்திட, 1974ஆம் ஆண்டு, மாவட்டங்களில் வருவாய் நிர்வாக அமைப்புமுறை திருத்தியமைக்கப் பட்டது. அதனைத் தொடர்ந்து, மாவட்ட நல அலுவலரின் அலுவல்களும், கடமைகளும் பிரிக்கப்பட்டு, ஆதிதிராவிடர்களின் நலனைப் பாதுகாத்திட துணை ஆட்சியர் நிலையில் ஒரு ஆதிதிராவிட நல அலுவலரும், பிற்பட்டோர் நலனைக்காக்க மாவட்ட பிற்பட்டோர் நல அலுவலரும் தனித்தனியாக நியமிக்கப்பட்டனர். அவர்கள் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவரின் நேரடி கண்காணிப்பில் பணியாற்றி வந்தனர். மாநில அளவில், ஆதிதிராவிட நல அலுவலர், ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கட்டுப்பாட்டிலும், மாவட்ட பிற்பட்டோர் நல அலுவலர் பிற்பட்டோர் நல இயக்குநரது கட்டுப்பாட்டிலும் இயங்கி வந்தனர்.[5] மாநிலத்தின் இதர மாவட்டங்களில் நிலவி வந்த இதே நிலை கன்னியாகுமரி மாவட்டத்திலும் விரிவாக்கப்பட்டது. பின்வரும் பத்திகளில், இவ்விருதுறைகளின் செயல்முறைகளும் விவரிக்கப்படுகின்றன.

ஆதிதிராவிடர் மற்றும் மலைவாழ் வகுப்பினர் நலம்

1981 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, மாவட்டத்தின் மொத்த மக்கள்தொகை 14,23,399 ஆகும். இவர்களில், ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்த 60,173 நபர்களும், மலைவாழ் வகுப்பினர் 6,358 நபர்களும் அடங்குவர். பெரும்பாலும் ஆதிதிராவிடர் மற்றும் மலைவாழ் வகுப்பினரின் தொழில் "வேளாண்மை"யாகும். ஏனையோர் இரப்பர் தோட்டப்பண்ணைகளில் பணியாற்றுபவர்களாவர். மாவட்டத்தில் 341 ஆதிதிராவிடர் குடியிருப்புகள் உள்ளன. மலைவாழ் வகுப்பினரில், "காணி" எனும் பிரிவினைச் சார்ந்தோரது 47 குடியிருப்புகள், கல்குளம் மற்றும் விளவங்கோடு வட்டங்களிலுள்ள ஒதுக்கப்பட்ட காடுகளிலுள்ளன. ஒவ்வொரு காணி குடும்பத்திற்கும் ஐந்து எக்டேர் வீதம், 1259 எக்டேர்களை வேளாண்மை செய்வதற்காக வனத்துறை ஒதுக்கியுள்ளது. இந்நிலங்களைக் காணிகள் விற்கவோ, பராதீனம் செய்யவோ கூடாதென்ற நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. குத்தகைத் தொகை, வாடகை மற்றும் வரி ஆகிய வற்றினின்றும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இந்நிலங்களுக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது.[6]

கல்வியறிவு பெற்றோரின் எண்ணிக்கை கன்னியாகுமரி மாவட்டத்தில், அதிகமாக உள்ளது. இவர்களில் ஆதிதிராவிடர்களும் அடங்குவர். ஆதிதிராவிடர்களில் 50 விழுக்காட்டினர் கல்வியறிவு பெற்றவர்கள். எனவே, கல்வியறிவு பெற்ற ஆதிதிராவிட இளைஞர்களைப் பொருத்தமான வேலைகளில் அமர்த்துவது, இன்றியமையாததாகிறது.

கிராமப்புற இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்பு அளிக்கும் திட்டத்தின் கீழ், சுயவேலைவாய்ப்புத்திட்டம் ஓரளவு, வேலையில்லாத் திண்டாட்டத்தினைக் குறைத்துள்ளது. ஆதிதிராவிடர்களின் சமூகப் பொருளாதார வளர்ச்சியினை விரைவுப்படுத்த, 1980-81ஆம் ஆண்டு தனி ஆக்கக்கூறுத் திட்ட பொதுக்கருத்து அறிமுகம் செய்யப்பட்டது. குடிநீர்

வசதி, மின்சக்தி, நல்வாழ்வு, பள்ளி மற்றும் போக்குவரத்து வசதி ஆகிய ஆதார வசதிகளையளித்து, ஆதி திராவிடர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதே இதன் நோக்கமாகும். இதன் முதல்படியாக, நடப்புத்திட்டக் காலத்தில், ஆதிதிராவிடர் வகுப்பைச் சார்ந்த 50 விழுக்காடு மக்கள் உதவி பெறுகின்றனர். இஃது அவர்கள் வறுமைக் கோட்டினின்றும் உயர நல்வாய்ப்பினை அளிக்கிறது.

கல்வி

முன்னர் விவரித்தபடி, கல்வியறிவைப் பொறுத்தவரையில், மாவட்டம் ஒரு தனித்தன்மை வாய்ந்ததாகத் திகழ்கிறது. ஆதிதிராவிடர் மற்றும் மலைவாழ் மக்கள் நலத்துறையானது மாவட்டத்தில் ஏழு உறைவிடப் பள்ளிகள் மற்றும் 14 தங்குமிடங்கள் ஆகியவற்றை நடத்தி வருகின்றன. உறைவிடப் பள்ளிகள், பேச்சிப்பாறை, வாழையூத்துவயல், பதுக்காணி, மணலோடை, ஒருநூதம்வயல், சித்ரம்கோடு மற்றும் உதையாடி ஆகிய இடங்களில் உள்ளன. தங்கும் விடுதிகளின் விவரங்கள் கீழே பட்டியல் 17.1 இல் அளிக்கப்பட்டுள்ளன.

பட்டியல்-17.1

தொடர் எண்.	*தங்குமிடங்களின் பெயர்கள்*	*இருப்பிடம்*
1.	அரசினர் ஆண்கள் கல்லூரி தங்கும் விடுதி	நாகர்கோவில்
2.	அரசினர் பெண்கள் கல்லூரி தங்கும் விடுதி	நாகர்கோவில்
3.	அரசினர் ஆண்கள் தங்கும் விடுதி	நாகர்கோவில்
4.	அரசினர் பெண்கள் தங்கும் விடுதி	நாகர்கோவில்
5.	அரசினர் ஆண்கள் தங்கும் விடுதி	பூதபாண்டி
6.	அரசினர் ஆண்கள் தங்கும் விடுதி	தக்கலை
7.	அரசினர் ஆண்கள் தங்கும் விடுதி	குழித்துறை
8.	அரசினர் பெண்கள் தங்கும் விடுதி	மார்த்தாண்டம்
9.	அரசினர் பெண்கள் தங்கும் விடுதி	கன்னியாகுமரி
10.	அரசினர் ஆண்கள் தங்கும் விடுதி	அருமனை
11.	அரசினர் பெண்கள் தங்கும் விடுதி	அருமனை
12.	அரசினர் மலைவாழ்வகுப்புப் பெண்கள் தங்கும் விடுதி	பேச்சிப்பாறை
13.	அரசினர் மலைவாழ் வகுப்புப் பெண்கள் தங்கும் விடுதி	பதுக்காணி
14.	அரசினர் தொழில்சார்ந்த பயிற்சி, ஆண்கள் தங்கும் விடுதி	நாகர்கோவில்

1986-87ஆம் ஆண்டு, இத்தங்கும் விடுதிகளினால் பயனடைந்த மாணவர்களது எண்ணிக்கை 697 ஆகும். கல்லூரி மாணவர்கள் மற்றும் கல்லூரி மாணவியரின் தங்கும் விடுதிகள் பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்களின் பொறுப்பில் இயங்கி வருகின்றன. ஏனைய தங்கும் விடுதிகள். நடுநிலை ஆசிரியர்களின் கண்காணிப்பில் இயங்கி வருகின்றன.

இந்தத் தங்கும் விடுதிகளில், மாணவ, மாணவியர் தங்குவதற்கோ, உணவருந்துவதற்கோ கட்டணம் வசூலிப்பதில்லை. பல்கலைக்கழக நுழைவுக்கு முந்தைய வகுப்புகளில் படிக்கும் அட்டவணையிட்ட வகுப்பினர் மற்றும் அட்டவணையிட்ட மலைவாழ் வகுப்பினருக்கு தனி போதனைக் கட்டணம் மற்றும் பிற சிறப்பு கட்டணங்கள் ஆகியவை அரசால் ஈடு செய்யப்படுகின்றன. பல்கலைக்கழக நுழைவுக்குப் பிந்தைய வகுப்புகளில் பயிலும் இப்பிரிவு மாணவர்களுக்கு இந்திய அரசின் உதவித்தொகை வழங்கப்படுகிறது. விடுதியில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு ரூபாய்1067/- முதல் 1820/- வரையிலும் மற்றும் வீட்டில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு ரூபாய் 557/- முதல் 1125/- வரையிலும் இவ்வுதவித் தொகை வழங்கப்படுகிறது[7].

1982-83 முதல் 1987-88 வரை 58,98,854/- ரூபாய் உதவித் தொகையாக 25,433 மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இவைத்தவிர, தகுதியுள்ள பல்கலைக்கழக நுழைவுக்குப் பிந்தைய வகுப்புகளில் படிக்கும் மாணவர்களுக்குக் கடன் உதவித்தொகையும் ரூபாய் 500/- லிருந்து ரூபாய் 900/- வரை, தமிழ்நாடு அரசால் வழங்கப்படுகிறது. இக்கடன்தொகை சிறு சுலப தவணைகளில் வசூலிக்கப்படுகிறது. அதாவது, மாணவர் வேலைவாய்ப்பினைப் பெற்று, சம்பாதிக்கத் துவங்கியதிலிருந்து அல்லது கடன் வழங்கப்பெற்ற தேதியிலிருந்து மூன்று ஆண்டு காலத்திற்குள் எது விரைவில் முடிகிறதோ அக்காலவரைக்குள்ளாக திரும்ப வசூல் செய்யப்படுகிறது. கடன் உதவித்தொகையாக 1982 முதல் 1988 வரை, 181 மாணவர்களுக்கு 1,48,050/- ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில், பல்கலைக்கழக நுழைவுக்கு முந்தைய வகுப்புகள் மற்றும் பல்கலைக்கழக நுழைவுக்குப் பிந்தைய வகுப்புகள் ஆகியவற்றில் உதவித்தொகை பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் கடந்த ஆறாண்டுகளில் செலவு செய்யப்பட்ட தொகை ஆகிய விவரங்கள், கீழே பட்டியல் 17.2 இல் அளிக்கப்பட்டுள்ளன.

பட்டியல் - 17.2

ஆண்டு	பல்கலைக்கழக நுழைவுக்கு முந்தைய வகுப்புகளில், உதவித்தொகை பெற்று பயனடைந்தோரின் எண்ணிக்கை	அரசால் தோர்வு செய்யப்பட்ட தொகை (ரூபாய்)
1981-82	24,738	3,11,408
1982-83	25,695	3,59,310
1983-84	22,810	3,75,000
1984-85	27,193	7,23,509
1985-86	(புள்ளி விவரங்களில்லை)	
1986-87	11,626	1,68,526
1987-88	12,822	2,53,323

பல்கலைக்கழக நுழைவுக்குப் பிந்தைய வகுப்புகளில் உதவித்தொகை பெற்று பயனடைந்தோர்

ஆண்டு	*பல்கலைக்கழக நுழைவுக்கு பிந்தைய வகுப்புகளில், உதவித்தொகை பெற்று பயனடைந்தோரின் எண்ணிக்கை*	*அரசால் செலவு செய்யப்பட்ட தொகை (ரூபாய்)*
1981-82	6,289	11,13,475
1982-83	6,354	12,38,090
1983-84	12,777	12,30,745
1984-85	1,952	11,12,584
1985-86	2,043	11,68,327
1986-87	934	16,842
1987-88	1,373	11,32,266

வேலைவாய்ப்பும், பொருளாதார முன்னேற்றமும்

ஆதிதிராவிடர்கள் மற்றும் அட்டவணை வகுப்பினர் ஆகியோரின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திட, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், கீழ்க்கண்ட திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

வேளாண்மை

வண்டி மற்றும் காளை மாடுகள் வழங்குதல்

இத்திட்டத்தின் கீழ், ஒரு வண்டியும், ஒரு ஜோடி காளைகளும் வாங்க கிராம கூட்டுறவு வேளாண் கடன் வழங்கும் சங்கம், அல்லது துவக்க நிலவள வங்கி அல்லது வணிக வங்கிகள் மூலம், நடுத்தர கால கடன் தொகையாக ரூபாய் 5,000/- வேளாண் குடி மக்களுக்கு வழங்கப்படுகிறது. இக்கடனுக்காக ரூ.1,666/- மானியமாகவும் வழங்கப்படுகிறது. வண்டியும் காளை மாடுகளும் வாங்க கடன் வழங்கப்பெறும் இத்திட்டம் மிகவும் வெற்றியடைந்துள்ளது.

கால்நடைக்கூடம் கட்டுதல்

இத்திட்டம், 1978-79ஆம் ஆண்டு இம்மாவட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. ஒரு கால்நடைக் கூடம் கட்டுவதற்கான செலவு ரூபாய்.3,000/- ஆகும். நடுத்தர கால மற்றும் நீண்டகால அடிப்படையில், நிலவள வங்கி அல்லது மத்திய கூட்டுறவு வங்கி அல்லது வணிக வங்கிகள் ஆகியவை மூலம் இக்கடன் தொகை, வேளாண் குடிமக்களுக்கு வழங்கப்படுகிறது. இக்கடனுக்காக ஒவ்வொருவருக்கும் ரூபாய் 1,000/- மானியமாகவும் வழங்கப்படுகிறது.

உயிரினப் பாதுகாப்பு

பால் தருகிற உயிரினங்கள்

இந்நிறுவனத்தால், பால் தரும் உயிரினங்களை வேளாண் குடிமக்களுக்கு வழங்கும் திட்டமும், நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

மானியத்தைப் பெறும் நோக்கத்தில், உயிரினத்தை விலைக்கு வாங்கும் வேளாண் குடிமக்களுக்கு, ஒரு உயிரினத்தின் விலை ரூபாய் 2,500/- என்ற அளவில் நிர்ணயிக்கப்படுகிறது. இதனில் 25 விழுக்காடு சிறு விவசாயிகளுக்கும், 33 1/3 விழுக்காடு, குறு விவசாயிகள் மற்றும் வேளாண் தொழிலாளர்கள் ஆகியோருக்கும் மானியமாக கருதப்படுகிறது.

பன்றிகள் வழங்குதல் (யார்க்ஷைர் மற்றும் ஹெர்க்ஷைர் மேம்பட்ட வகைகள்)

மாவட்டத்தில், பன்றி இறைச்சிக்கு நல்ல கிராக்கி உள்ளது. எனவே, மிக வருவாய் அளிக்கும் பன்றித் தொழுவம் வைத்துப் பன்றி வளர்க்கும் தொழிலினை சில குறிப்பிட்ட பகுதியிலுள்ள விவசாயிகள் துணைத் தொழிலாக மேற்கொண்டுள்ளனர். இத்திட்டத்தின்கீழ் ஒரு விவசாயிக்கு மூன்று பசுக்கள் மற்றும் ஒரு பன்றி ஒன்றை கொண்ட அலகு வழங்கப்படுகிறது. ஒருஅலகின் விலை மதிப்பான ரூபாய் 2,200/- மத்திய கால கடனாக, துவக்க வேளாண் கடன் வழங்கும் சங்கங்கள் மூலமாகவோ, நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகள் மூலமாகவோ வழங்கப்படுகின்றன.

வெள்ளாடுகள் வழங்குதல் (சூர்த்தி இனம்)

இத்திட்டம் 1981-82 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் நான்கு பெண் வெள்ளாடுகளும், ஒரு ஆண் வெள்ளாடும் அடங்கிய ஒரு அலகு, ஒவ்வொரு விவசாயிக்கும் வழங்கப்படுகிறது. ஒரு அலகின் சந்தை விலை மதிப்பு ரூபாய் 3,600/- ஆகும். துவக்க வேளாண் கடன் வழங்கும் சங்கங்கள் மூலமாகவோ, வணிக வங்கிகள் மூலமாகவோ, மத்திய காலக்கடனாக இத்தொகை வழங்கப்படு கிறது. சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு, முறையே 25 விழுக்காடு மற்றும் 33 1/3 விழுக்காடுத்தொகை மானியமாக வழங்கப்படுகிறது.

மீனவர்களுக்கு இரு சக்கர மிதிவண்டி வழங்குதல்

கடற்கரைப் பகுதிகளிலுள்ள மீனவர்களின் குடும்ப உறுப்பினர்கள் அவர்கள் பிடிக்கும் மீன்களை சந்தையில் விற்பனை செய்ய தலைச்சுமையாகவும், இரு சக்கர மிதிவண்டியிலும் எடுத்துச் செல்கின்றனர். உட்பகுதிகளில் வசிக்கும் விற்பனையாளர்கள் மீன்களைக் கொள்முதல் செய்ய, கடற்கரைப் பகுதிகளுக்குச் செல்ல வேண்டியது அவசியமாகிறது. எனவே, மீனவர்கள் தாங்கள் பிடித்த மீன்களை இரு சக்கர மிதிவண்டிகளில் விற்பனைக்கு எடுத்துச் சென்றால், தாமதத்தைத் தவிர்ப்பதோடல்லாமல், பழக்கப்பட்ட மீன்களை அவை கெடாத நிலையில் வெகு விரைவாக விற்பனை செய்யவும் இயலும். எனவே, இத்திட்டம் கடற்கரைப்பகுதி மற்றும் உள்நாட்டுப்பகுதி ஆகியவற்றில் வசிக்கும் மீனவர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. இத்திட்டத்தின்படி உட்பகுதி மீனவர் கூட்டுறவு சங்கத்தின் ஒவ்வொரு மீனவ உறுப்பினருக்கும் மத்திய கால கடனாக ரூபாய் 750/- வழங்கப்படுகிறது. கடன்தொகை வணிக வங்கிகள் மூலம் வழங்கப்படுகிறது. கடன் தொகையில் 33 1/3 விழுக்காடு மானியமாக வழங்கப்படுகிறது

பிற திட்டங்கள்

தேனீ வளர்த்தல்

வெகு வேகமாக செயலாற்றப்படும் பிற திட்டங்களில், தேனீ வளர்க்கும் விவசாயிகளுக்கு கடன் வழங்குவதும் முக்கியத் திட்டமாகும். குலசேகரத்திலும், மார்த்தாண்டத்திலும் இயங்கிவரும் இரு தேனீவளர்க்கும் சங்கங்கள் விவசாயிகளுக்குத் தொழில்நுட்ப உதவியளித்து வருகின்றன. நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகளும், ஒவ்வொரு விவசாயிக்கும், ரூபாய் 1,700/- மத்திய கால கடனாக வழங்கிவருகின்றன.

கிராம கைத்தொழில்கள்

கொல்லர்களுக்கு உதவி

தகுதியுள்ள கொல்லர்களுக்கு (கருமான்) சுத்தி, (சம்மட்டி), பட்டடைக்கல், உலைத்துருத்தி போன்ற கருவிகள் மற்றும் பொருட்கள் வாங்கவும், பணிக்கூடம் கட்டவும், மத்திய காலக்கடனாக ரூபாய். 1,000/- வழங்கப்படுகிறது.

தச்சர்களுக்கு உதவி

மரசுத்தி, உளி, சம்மட்டி, இரம்பம் ஆகிய கருவிகள் வாங்கவும், பணிக்கூடம் கட்டவும் ஒவ்வொரு தகுதியுள்ள தச்சருக்கும், மத்திய காலக்கடனாக ரூபாய் 1,000/- வழங்கப்படுகிறது.

சலவைத் தொழிலாளர்களுக்கு உதவி

சலவை மேசை, சலவைப்பெட்டி மற்றும் பிற துணைப் பொருட்கள் ஆகியவை வாங்குவதற்கு சலவைத் தொழிலாளர்களுக்கு, மத்திய காலக்கடனாக ரூபாய் 1,500/- வழங்கப்படுகிறது.

குயவர்களுக்கு உதவி

கருவிகளும், துணைப் பொருட்களும், வாங்கவும் காளவாய் அமைக்கவும் குயவர்களுக்கு மத்திய காலக்கடனாக ரூபாய் 1,000/- வழங்கப்படுகிறது.

கோரைப் பாய் முடைவோருக்கு உதவி

இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு விவசாயிக்கும் மத்திய காலக்கடனாக ரூபாய் 500/- வழங்கப்படுகிறது. இந்தக்கடன்கள் யாவற்றிலும் 33 1/3 விழுக்காடு மானியமாகக் கருதப்படுகிறது.

சுண்ணாம்புத் தொழில்

கடற்கிளிஞ்சிற் சிப்பி, கன்னியாகுமரி மாவட்டத்தில் அதிக அளவில் காணப்படுகிறது. கிளிஞ்சிற் சுண்ணாம்பு கட்டிடங்கள் கட்டுவதற்குக் குறிப்பாக, சுவர்களுக்கு (சுண்ணாம்பு நீர்) அடிப்பதற்குப் பயன்படுகிறது. அதிக அளவிலான மக்கள், குறிப்பாக கடற்கரை கிராமங்களில் வசிக்கும் மக்கள் இத்தொழிலிலீடுபட்டுள்ளார்கள். இச்சிறு தொழிற்கூடத்தினை

நிறுவுவதற்குத் தேவையான துவக்கத் தேவைகள், காற்றோட்டமியக்கும் பொறியும் சுண்ணாம்புக் காளவாயுமாகும். இத்தொழிலிலீடுபட்டுள்ளோருக்கு அரசுக் கடனாக ரூபாய் 3,000/- வழங்கப்படுகிறது.

பெட்டிக்கடை அல்லது சிறுபொருள் விற்பனைக் கூடம்

பெட்டிக்கடை நிறுவ கடனாக அரசு ரூபாய் 3,000/- வழங்குகிறது. பலர் இவ்வாய்ப்பினைப் பெற்று பலனடைந்துள்ளனர்.

ஒலிபெருக்கித் தொகுதி

இம்மாவட்டத்தின் பல கிராமங்களிலும், நடக்கும் விழாக்களுக்கு ஒலிபெருக்கிகள் பரவலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஒரு ஒலிபெருக்கித் தொகுதியில் ஒலி அல்லது மின் தாக்குதலின் ஆற்றலை அதிகப்படுத்தும் கருவி, ஒரு ஒலிப்பதிவுக் கருவி இரண்டு ஒலிபெருக்கிகள் மற்றும் இரண்டு ஒலிக்கருவியை ஒலிக்கச் செய்யும் துணைக்கருவி, ஒருசில நீட்டலளவுள்ள தந்திக்கம்பி மற்றும் சில விளக்குகள் ஆகியவை அடங்கியுள்ளன. இதற்கு அரசால் ரூபாய் 5,000/- வழங்கப்படுகிறது. இத்திட்டம் 1982-83 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இருசக்கர மிதி வண்டிக்கடை

இருசக்கர மிதிவண்டியானது நகரங்கள் மற்றும் கிராமங்கள் யாவற்றிலுமே இயல்பான மனிதர்களின் போக்குவரத்து வாகனமாகக் கருதப்படுகிறது. எனவே ஐந்து இரு சக்கர மிதி வண்டிகளை வைத்துக் கடை நடத்துபவர். எளிதில் வாழ்க்கையை நடத்த முடிகிறது. மிதி வண்டிக்கடை நடத்தவிழைபவருக்கு அரசு 5,000/-ரூபாய் உதவி வழங்குகிறது. பயனடைந்தோர் பற்றிய விவரங்கள் கீழே பட்டியல் - 17.3-ல் அளிக்கப்பட்டுள்ளன.

பட்டியல்-17.3

தொடர் எண்.	*திட்டத்தின் விவரம்*	*பயனடைந்தோர் எண்ணிக்கையும் ஆண்டும்*		
		1982-83	*1983-84*	*1984-85*
(1)	*(2)*	*(3)*	*(4)*	*(5)*
1.	**வேளாண்மை :**			
	1. உழவு மாடுகள்	263	166	227
	2. வண்டிகளில் பூட்டப்படும் காளை மாடுகள்	102	39	54
	3. கால்நடைத் தொழுவங்கள் கட்டுதல்	73	22	19
	4. வெற்றிலை பயிரிடுதல்	17	1	--
2.	**உயிரினப் பாதுகாப்பு :**			
	1. பால்தரும் விலங்கினம்	506	228	504
	2. வெள்ளாடுகள்	31	146	149

(1)	(2)	(3)	(4)	(5)
3.	வாத்துப்பண்ணை	3	2	18
4.	பன்றிகள்	-	-	4
3.	**தொழில் சார்ந்த பணிகள் மற்றும் வணிகம் :**			
1.	நாவிதர்களுக்கு உதவி	7	16	15
2.	சலவைத் தொழிலாளர்களுக்கு உதவி	4	26	64
3.	தேனீ வளர்த்தல்	31	28	--
4.	கோரைப்பாய் முடைதல்	44	6	--
5.	கயிறு திரித்தல்	24	12	5
6.	பெட்டிக்கடைகள்	18	35	--
7.	ஒலிபெருக்கித் தொகுதி	23	5	7
8.	சுண்ணாம்புக் களவாய்	52	11	9
9.	இருசக்கர மிதிவண்டிக்கடைகள்	17	10	23
10.	நெசவாளர்கள்	42	14	--
11.	பனையோலைப் பணியாளர்கள்	45	208	286
12.	தையற்காரர்கள்	31	13	52
13.	தச்சர்கள்	-	2	-
14.	கூடை முடைவோர்	-	1	2
15.	குயவர்கள்	-	6	-
16.	கள் இறக்குவோர்	-	30	-
17.	செருப்பு தொழிலாளிகள்	-	2	-
18.	பூவாளிகள் (இயக்குவோர்)	-	22	-
19.	காய்கறி விற்போர்	-	2	32
20.	மாவரைக்கும் கருவி (இயக்குவோர்)	-	-	11
21.	மீன் விற்போர்	-	-	9
22.	இடியாப்பம் விற்போர்	-	-	1
23.	மளிகைக்கடை	-	-	27
24.	கை மிதிவண்டி	-	-	38
25.	தேநீர்கடை	-	-	2
26.	கொத்தனார்	-	-	1
4.	**மீன் தொழில் துறை :**			
1.	உட்பகுதிவாழ் மீனவர்களுக்கு இருசக்கர மிதிவண்டி	-	16	79

பிற வளர்ச்சித் திட்டங்கள்

அட்டவணையிட்ட வகுப்பினர் மற்றும் அட்டவணையிட்ட மலைவாழ் வகுப்பினர் ஆகியோருக்கு வேலைவாய்ப்பு அளிப்பதன் பொருட்டு, தனி ஆக்கக்கூறுகள் திட்டம், தொகுதி வளர்ச்சித்திட்டம் மற்றும் கதர், கிராமத்தொழில் திட்டம் ஆகியவை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டங்களின் விவரங்கள் பின்வருமாறு :

தனி ஆக்கக்கூறுகள் திட்டம்

இந்தத் திட்டத்தின்படி இம்மாவட்டத்தில் இரண்டு கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள் - ஒன்று தாளக்குளத்திலும் மற்றொன்று மேலக்கலுங்காடியிலும் இயங்கி வருகின்றன. இச்சங்கங்கள், ஏறத்தாழ 100 நபர்களுக்கு வேலை வாய்ப்பளித்து வருகின்றன. இவைதவிர, ஆரல்வாய்மொழியில் ஒரு செங்கல் உற்பத்தி அலகும், ஏழு தேசத்தில் பாய், பாய்விரிப்பு, கால் துடைக்கும் இரட்டு ஆகிய தொழில்சார்ந்த கூட்டுறவு சங்கமும், மணவிளையில் கயிறுத் தொழில் கூட்டுறவு சங்கமும், குறிப்பாக ஆதிதிராவிடர்களின் நலனுக்காகவே இயங்கி வருகின்றன.

மேலும், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வளர்ச்சிக் கழகம், மிகவும் ஏழ்மையான நிலையிலுள்ள ஆதிதிராவிடர்களுக்குக் கறவை மாடுகள் போன்றவை அளித்திட (பால் பண்ணை) துணைப்பதிவாளருக்கு 2,10,000/- ரூபாய் ஒதுக்கியுள்ளது. பயனடையும் ஆதிதிராவிடர்களின் கடனில் 50 விழுக்காடு மானியமாகக் கருதப்படுகிறது.

தொகுதி வளர்ச்சித் திட்டம்

இத்திட்டத்தின்படி, தொழில் சார்ந்த 14 பணிகளும் இரண்டு தனித்திட்டங்களும் அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவை, அகஸ்தீஸ்வரம் வட்டாரத்தில் 68.39 இலட்ச ரூபாய் செலவில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இத்தொகை நூல்நூற்பு, நேபாளத்தறி, கையால் செய்யப்படும் காகிதம், கைத்தறித்துணிகள், பாய் முடைதல், செங்கல் உற்பத்தி, பனையோலைப் பொருட்களுக்கான அலகுகள், கயிற்றினால் செய்யப்படும் பாய்கள், கயிறு முறுக்குதல், கற்கள் தூளாக்குதல், பிரம்பு மற்றும் மூங்கிலால் செய்யப்படும் பொருட்கள், நூலுக்கு சாயம் தோய்த்தல், தோல் பதனிடுதல், கிளிஞ்சற் சுண்ணாம்பு உற்பத்தி செய்தல் பால்பண்ணை மற்றும் பெட்டிக்கடை நடத்துதல் போன்ற தொழில்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது. இத்தொழில்களை நடத்திட உரிய பயிற்சியளிக்கப்படுகிறது. நிரந்தரமான பணிக்கூடங்களின் கட்டுமானப்பணி, திருநெல்வேலி தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வளர்ச்சிக் கழக நிருவாகப் பொறியாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நூல் நூற்புப் பணிக்கூடங்கள், கார்காடு, இலுப்பையாடி மற்றும் சங்கரன் புதூர் ஆகிய இடங்களில் கட்டி முடிக்கப்பட்டு, பயிற்சியும் துவக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 941 ஆதிதிராவிடர்கள் பயனடைந்து வருகின்றனர்.

கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்தால் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்கள்

இக்கழகம், 1959 முதல் கண்ணன் கோயில், ஒரு கையால் செய்யும் காகித உற்பத்திப் பணியாளர்களின் கூட்டுறவு சங்கம் ஒன்றினை நடத்தி வருகிறது. முல்லைப் பூங்காணியில், ஆதிதிராவிடர்களின் நலனுக்காகவே இயங்கிவரும் மற்றொரு சங்கம் மூங்கில் பணியாளர்கள் கூட்டுறவு சங்கமாகும். இச்சங்கங்களில் பயிற்சி பெற்றுள்ள இளைஞர்கள், அவர்களே முதலில் இம்மாதிரியான சங்கங்களில் தங்களையே உறுப்பினர்களாகப் பதிவு செய்துகொண்டு அதே போன்ற கூட்டுறவு சங்கங்களை ஆங்காங்கே அமைத்திட, அறிவுறுத்தப்படுகிறார்கள். அம்மாதிரி சங்கங்களை உருவாக்கிட, அவர்களுக்கு நிதி உதவியும் தொழில்நுட்ப உதவியும் அளிக்கப்படுகிறது. கடந்த ஆண்டுகளில் இச்சங்கங்களின் செயல்முறை குறித்த விவரங்கள், கீழே பட்டியல் - 17.4இல் கொடுக்கப்பட்டுள்ளன.

பட்டியல்-17.4

கையால் செய்யும் காகித வேலைப் பணியாளர் கூட்டுறவு சங்கங்களின் செயலாக்கம்

ஆண்டு	உற்பத்தி	விற்பனை	இலாபம்	பணியாற்றுவோர் முழு நேரம்	பகுதி நேரம்
1982-83	1,02,554	77,825	22,470	20	40
1983-84	1,53,269	91,384	91,384	20	65
1984-85	1,63,901	1,15,689	1,15,689	20	90

விசைப்பொறி கம்மியர், மரவேலை செய்வோர் மற்றும் மின்னல் ஆய்வாளர் ஆகியோர் ஆற்றும் தொழில் சார்ந்த பணிகளுக்கு, அட்டவணை வகுப்பினர் மற்றும் அட்டவணை மலைவாழ் வகுப்பினர் ஆகியோருக்குப் பயிற்சியளித்தல்

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், கிராமப்புற இளைஞர்கள் சுயவேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டம், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வளர்ச்சிக் கழகத்தின் திட்டங்கள் ஆகியவற்றின்கீழ் அட்டவணையிட்ட வகுப்பினர். அட்டவணையிட்ட மலைவாழ் வகுப்பினர் ஆகியோருக்கு தொழில் பயிற்சிக்கழகம் மற்றும் பிற அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களில், பல்வேறு தொழில்கள் தொடர்பாக ஆறுமாத காலத்திற்குப் பயிற்சியளிக்கப்படுகிறது. பயிற்சி காலத்தில் உற்பத்தி மூலப்பொருட்கள் வாங்கிட ஒவ்வொருவருக்கும் மாதமொன்றிற்கு ரூபாய் 125/- உதவி ஊதியமாக வழங்கப்படுகிறது. திட்டத்தின் விவரங்கள் மற்றும் கடந்த மூன்று ஆண்டுகளில், இத்திட்டத்தினால் பயனடைந்தோரின் எண்ணிக்கை போன்ற விவரங்கள் கீழே பட்டியல் 17.5இல் கொடுக்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம் மற்றும் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வளர்ச்சிக் கழகம் அறிமுகம் செய்துள்ள திட்டம் ஆகியவற்றின்கீழ் அப்பயிற்சியாளர்கள் சிறு தொழில்களைத் துவக்கிட

ஊக்குவிக்கப்படுகிறார்கள். அதற்கு மாவட்ட தொழில் மையத்தினால், வங்கிகள் மூலம் கடன்கள் வழங்கப்படுகின்றன. இக்கடனில் மூன்றில் ஒருபகுதி மானியமாகக் கருதப்படுகிறது. இம்மானியத்தின் அதிக அளவு ரூபாய் 3,000/- ஆகும்.

பட்டியல்-17.5

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்

தொடர் எண்.	ஆண்டு	பயிற்சியார்களின் எண்ணிக்கை
1.	1982-83	649
2.	1983-84	708
3.	1984-85	170

கிராமப்புற இளைஞர்கள் சுய வேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டம்

தொடர் எண்.	தொழில் விவரம்	பயிற்சியளிக்கப்பட்டோர் எண்ணிக்கை		
		1982–83	1983–84	1984–85
(1)	(2)	(3)	(4)	(5)
1.	தீக்குச்சித் தொழிற்சாலைகள்	-	260	-
2.	பால்பண்ணை	40	21	-
3.	பிரம்பு மற்றும் மூங்கில் கூடைகள் முடைதல்	55	17	-
4.	வாழை நார்ப்பொருள்கள் செய்தல்	97	97	-
5.	தேனீ வளர்த்தல்	54	27	-
6.	கோரைப்பாய் முடைதல்	25	-	-
7.	கயிறு பின்னுதல்	166	17	-
8.	கயிற்றுப்பாய், விரிப்பு போன்றவை பின்னுதல்	50	35	-
9.	வளைவரை மற்றும் நச்சுப்புகை பற்ற வைத்தல்	14	-	-
10.	துணைக்கருவிகளை இணைத்தல் மற்றும் சாணைப்பொறி இயக்குதல், உருவ மாற்றம் செய்தல்	14	15	6
11.	தந்திக்கம்பி இணைத்தல்	28	22	12
12.	குழாய் இயந்திர நுணுக்க செயலமைவு	21	13	-
13.	இரண்டு சக்கர வண்டி, இயந்திர நுணுக்க செயலமைவு	20	32	9
14.	அச்சுக்கோர்வை மற்றும் நூல் கட்டுதல்	25	-	-

15.	தானியங்கி இயந்திர நுணுக்க செயலமைவு	28	10	-
16.	பட்டுப்புழு வளர்ப்பு	-	38	-
17.	பாய் முடைதல்	-	25	-
18.	தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்து	-	-	34
19.	வானொலி, தொலைக்காட்சி பழுது பார்த்தல்	-	-	20
20.	தொலைக்காட்சி	-	-	16

தமிழ்நாடு ஆதிதிராவிட வீட்டு வளர்ச்சிக் கழகத் திட்டங்கள்

தொடர் எண்.	*தொழில் விவரம்*	*பயிற்சியளிக்கப்பட்டோர் எண்ணிக்கை*	
		1983–84	*1984–85*
(1)	*(2)*	*(3)*	*(4)*
1.	கனரக உந்துகள் ஓட்டுதல்	4	14
2.	தையற்கலை மற்றும் பூத்தையல் வேலை	30	41
3.	மின்பிரிப்பூச்சு மானம்	1	-
4.	சாணைப்பொறி இயக்குதல், உருவ மாற்றம் செய்தல் மற்றும் கடைசல் இயந்திரத்தின் உதவியுடன் வாட்டுதல்	5	-
5.	அச்சுத்தொழில்	15	-

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள காணிகளின் குடும்பத் தொடர்பான திட்டங்கள்

1988-89ஆம் ஆண்டில், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள 100 காணிகளின் குடும்பத்தினருக்கு, கறவை மாடுகள் வழங்க திட்டமிடப் பட்டுள்ளது. இதற்காக, அரசு நான்கு இலட்ச ரூபாய் செலவிட உத்தேசித்துள்ளது. கன்னியாகுமரி மாவட்டம், பேச்சிப்பாறையில் காணி மலைவாழ் வகுப்பினரின் நலனுக்காக, 2.11 இலட்ச ரூபாய் செலவில் ஒரு துவக்க நல்வாழ்வு மையம் அமைத்திட, உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று, காணி மலைவாழ் வகுப்பினரை மேம்பாடடையச் செய்ய, 1988-89ஆம் ஆண்டு வேறு சில திட்டங்கள், நிறைவேற்றப்பட உள்ளன. அவை விவரம் வருமாறு :

(அ) (1) அடிப்படை இணைப்பமைவு அளித்தல் ; மற்றும்

(2) நிலத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார வகைமுறை வாய்ப்பு வளர்ச்சித் திட்டம்.

இத்திட்டங்களுக்கான செலவு 276 இலட்சம் ரூபாயாகும். இவை மூன்றாண்டு காலங்களில், திட்டமிட்ட காலக்கெடுவில் நடைமுறைப் படுத்தப்படவிருக்கின்றன.

(ஆ) வேலிப்பிலாமலை மற்றும் மதிரமலை ஆகிய இடங்களில் வசிக்கும் காணிகளின் நலனுக்காக மூங்கில் கைவினைப் பொருட்கள் செய்வது தொடர்பான பயிற்சி மையத்தினை, 5.56 இலட்ச ரூபாய் செலவில் அமைத்தல்.

வீட்டு வசதித் திட்டங்கள்

தற்போதுள்ள குடியிருப்புகளில் அதிகக் கூட்டத்தினைத் தவிர்த்திட, நிலமில்லா அனைத்து ஆதிதிராவிட குடும்பத்தினருக்கும் வீட்டுமனை அளித்திடு முகத்தான், இத்திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படுகின்றன. இதனைக் கருத்திற்கொண்டு, தகுதியான நிலங்கள் அரசால் முறையாகக் கையகப்படுத்தப்பட்டு மூன்று சென்ட் பரப்பளவுள்ள வீட்டுமனைகளாக அவை பிரிக்கப்பட்டு, வீட்டு மனையில்லாத, தகுதியுள்ள குடும்பத்தினருக்கு அளிக்கப்படுகின்றன. இத்திட்டம் 1949ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப் பட்டுள்ளது. 21.64 இலட்ச ரூபாய் செலவில், 174.09 ஏக்கர் நிலங்கள் அரசால் முறையாகக் கைப்பற்றப்பட்டு 3,634 குடும்பத்தினருக்கு அளிக்கப் பட்டுள்ளன. வீடுகள் கட்டும் பணியினை அரசே ஏற்று, திட்டமிட்ட கால கெடுவில் முடித்துக்கொடுக்கிறது. இவற்றுடன் கூட கீழ்க்கண்டவாறான வேறுசில வீடுகள் கட்டிக்கொடுக்கும் திட்டங்களும் நடைமுறைப்படுத்தப் படுகின்றன.

அ) தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தினால் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் ;

ஆ) தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் ;

இ) கிராமப்புறத் தொழிலாளர் வேலை வாய்ப்புப் பொறுப்புறுதித் திட்டம் ; மற்றும்

ஈ) கிராமப்புற வீட்டு வசதித் திட்டம்.

இத்திட்டங்கள் யாவும், கிராமப்பகுதிகளுக்காகவே, நடைமுறைப் படுத்தப்பட்டவையாகும். தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் வளர்ச்சிக் கழகத்திட்டம், தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத்திட்டம் மற்றும் கிராமப்புறத் தொழிலாளர் வேலைவாய்ப்புப் பொறுப்புறுதித் திட்டம் ஆகியவற்றின்கீழ் சீரான சம நிலங்களில் ஒரு வீட்டிற்கு 6,000/- ரூபாய் மதிப்பீட்டிலும், குன்றுப் பகுதிகளில் 9,000/- ரூபாய் மதிப்பீட்டிலும் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தின்கீழ், வட்டியில்லாக் கடனாக ஒரு வீட்டிற்கு ரூபாய் 4,500/- வீதம் வழங்கப்படு கிறது. அதில் 1,000/- ரூபாய் வீடுகட்டி முடிந்த பின்னர், மானியமாகக்

கருதப்படுகிறது. 1974ஆம் ஆண்டிற்கு முன்னர், ஜெயந்தி திட்டத்தின்படி 48 வீடுகள் கட்டப்பட்டன. 1974-75 முதல் 1980-81 முடிய 776 வீடுகள் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதித் திட்டத்தின்படியும், 681 வீடுகள் கிராமப்புறத் தொழிலாளர் வேலைவாய்ப்புப் பொறுப்புறுதித் திட்டத்தின் படியும், 177 வீடுகள் தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின்படியும் கட்டப்பட்டன. தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் வளர்ச்சித் திட்டத்தின்கீழ், 1984-85ஆம் ஆண்டில் 214 வீடுகளும், கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் ஏறத்தாழ 6,446 வீடுகளும் இம்மாவட்டத்தில் கட்டி முடிக்கப்பட்டன.

நகர்ப்புறப் பகுதிகளைப் பொறுத்தவரையில், எடலக்குடி, குளத்துச்சேரி மற்றும் மேல காலங்குடி ஆகிய இடங்களில், தகுதியுள்ள 102 வீடில்லா ஆதிதிராவிடர்களுக்கு வீட்டு மனைகளை அளித்திட நாகர்கோவில் நகராட்சி தேவையான நிலங்களை முறையாகக் கையகப்படுத்தியுள்ளது.

தீண்டாமை ஒழிப்பு

தீண்டாமை இன்றைய நிலையில் மிகப் பழமையானதாக ஆகிவிட்ட தென தெள்ளத் தெளிவாகக் கூறமுடியும். பல சமூக சீர்திருத்தங்கள் மற்றும் மக்களின் மாறுபட்ட மனநிலை, இவற்றைப் பொதுவாகக் கருத்திற்கொண்டால், இக்கொடுமைக்கு சமூகத்தில் இடமில்லை என்பது வெள்ளிடைமலை. குறிப்பிடத்தக்கதாக இம்மாவட்டத்தைப் பொறுத்த வரையில், இந்த முன்னேற்றமான சூழ்நிலை உருவானதற்குக் காரணம் மக்களிடையே கல்வி, அறிவு வீதம் அதிகரித்ததனால்தான் என்பதில் ஐயமில்லை. இக்கொடுமையினை அறவே களைந்திடவும், மக்களின் எண்ணிக்கை உள்ளத்தின் நினைவாழத்தினின்றும் வெளிவரச் செய்யவும், மாவட்டத்தில் கலப்பு மணங்கள் ஊக்குவிக்கப்பட்டன. ஆனால், பழமையில் ஊறிய ஒரு சிலர், இன்னமும் விழிப்புணர்ச்சியடையாதது வருந்தத் தக்கதாகும். அவர்கள் இன்றைய சமுதாய வளர்ச்சி நிலையினை உணர்ந்து செயலாற்றிட அரசு ஒவ்வொரு ஆண்டும் சனவரி மாத இறுதியில் "தீண்டாமை ஒழிப்பு" வாரத்தினை வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறது. அப்போது தீண்டாமை ஒழிப்பினை மிகச் சிறப்பாகச் செயலாற்றிய கிராமங்களுக்கு பரிசுகள் வழங்கப்படுகின்றன. மேலும் ஒவ்வொரு வட்டத்திலும் மிகத் தூய்மையாகப் பராமரிக்கப்படும் ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கும் பரிசுகள் வழங்கப்படுகின்றன. 1985-86 ஆம் ஆண்டில் தீண்டாமை ஒழிப்பினைத் தீவிரமாக நடைமுறைப் படுத்திய ஆனந்தபுரம் மற்றும் மாங்கோடு ஆகிய கிராமங்கள் முறையே முதல் மற்றும் இரண்டாவது பரிசுகளைத் தட்டிச் சென்றன. அதே ஆண்டு, நரிக்குளம், வேம்படி, சிவந்த மண்ணு மற்றும் செங்குருட்டி ஆகிய ஆதிதிராவிடர் குடியிருப்புகள் மிகச்சிறந்த முறையில் பராமரிக்கப்பட்ட குடியிருப்புகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டன. மனித உரிமைகளைப் பாதுகாத்திட மாவட்டத்தில்

ஒரு தனி காவற்படை இயங்கி வருகிறது. பிரச்சனை எழும் கிராமங்களுக்கு இச்சிறப்புக் காவற்படை அரைத் திங்களுக்கொருமுறை நேரில் சென்று முகாமிட்டு சூழ்நிலையைக் கவனமாகக் கண்டு, அப்பிரச்சனையைத் தீர்க்கும் வழிமுறைகளைக் கையாளுகிறது. தேவைப்படின், தடுப்பு முறையாக அங்கு தீவிரமான பாதுகாப்புப் பணியாற்றவும் அவ்வப்போது நடவடிக்கை மேற்கொள்ளப் படுகிறது.

பிற்பட்டோர் நலத்துறை

பிற்பட்ட வகுப்பினரின் கல்வி மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கென அரசு பல நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

பிற்பட்டோருக்கு சலுகை - பொருளாதாரத்துறை

மாவட்டத்தின் கிராமப்புறப் பகுதியிலுள்ள பிற்பட்ட வகுப்பினரின் பொருளாதார நிலையினை மேம்படுத்த குழித்துறையில் நார் தொழில் சார்ந்த பயிற்சி மையம் மற்றும் தக்களையில் பிரம்புப்பனை தொழில் சார்ந்த பயிற்சி மையம் ஆகிய இரண்டு பயிற்சி மையங்களை, இத்துறை நடத்திவருகிறது.[8] நார் மற்றும் பிரம்புப்பனை உற்பத்தியில் ஆண்டு தோறும், 40 கிராமப்புறப் பெண்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். பயிற்சி காலத்தில் அவர்களுக்கு உதவி ஊதியமாக மாதமொன்றுக்கு ரூபாய் 30/- வழங்கப்படுகிறது.

நாவிதர்களுக்கு கைத்துணைப் பொறிகள் வழங்குதல்

சாதி மத வேறுபாடின்றி முடிதிருத்துவதைத் தொழிலாகக் கொண்ட ஒருவர் இத்திட்டத்தின்படி ரூபாய் 135/- மதிப்புடைய கருவிகளைப் பெறத் தகுதியுடையவர். 1986 டிசம்பர் வரை இத்திட்டத்தின்கீழ் 382 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

வீட்டுமனையளித்தல்

நரிக்குறவர், நாவிதர், ஒட்டர், சலவைத்தொழிலாளர் ஆகிய சமுதாயப் பிரிவினைச் சார்ந்தோரில் மிகவும் ஏழ்மையான நிலையிலும் சொந்தத்தில் வீட்டுமனைகள் இல்லாமலும் உள்ளோருக்கு ஒரு குடும்பத்திற்கு மூன்று சென்ட் வீதம் வீட்டுமனைகளை அளித்திட அரசு 1981ஆம் ஆண்டு, ஆணை பிறப்பித்தது. ஆனால் இம்மாவட்டத்தில் சலவைத் தொழிலாளர்கள் அட்டவணையிட்ட வகுப்பினராகக் கருதப்படுகின்றனர்.[9] இம்மாவட்டத்தில் நரிக்குறவர் மற்றும் ஒட்டர் வகுப்பைச் சார்ந்தோர் எவருமில்லை. எனவே இந்த அரசாணையால் பயனடைவோர், நாவிதர்களே. அவர்களில் 93 குடும்பத்தினர் இவ்வரசாணையில் நடைமுறைப்படுத்தப்பட்ட சலுகை யினைப் பெறத் தகுதியுடைவர்களென 1986ஆம் ஆண்டு இறுதிவரை அடையாளங் காணப்பட்டுள்ளனர். ஏனையோருக்கும், இச்சலுகையினை வழங்கிட அரசு திருவிதாங்கோடில், 1.75 ஏக்கர் நிலங்களையும், மருங்கூரில் 2.3 ஏக்கர் நிலங்களையும் முறையாகக் கையகப்படுத்தியுள்ளது.

கல்வி

பொருளாதார ரீதியாக பிற்பட்டோரின் கல்வி மேம்பாட்டிலும் அதேமுறையில் அரசு அக்கறை செலுத்தி வருகிறது. 1977-78ஆம் ஆண்டிற்கு முன்னர் ரொக்க உதவித்தொகை பல்கலைக் கழக நுழைவுக்கு முந்தைய வகுப்புகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு மட்டும் வழங்கப்பட்டு வந்தது. ஆனால் 1977-78 ஆம் ஆண்டு இத்திட்டம் கைவிடப்பட்டு அதற்கு பதிலாக பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த தகுதிபெற்ற மாணவர்களுக்கு (நூல்கள்) புத்தகங்கள் வழங்கப்படுகின்றன.

பல்கலைக்கழக நுழைவுக்கு முந்தைய வகுப்புகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்பட்ட விவரங்கள் கீழே பட்டியல். 17.6-ல் அளிக்கப்பட்டுள்ளன.

பட்டியல்-17.6

பல்கலைக்கழக நுழைவுக்கு முந்தைய வகுப்புகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட உதவித்தொகை விவரம்

தொடர் எண்.	*ஆண்டு*	*பயனடைந்தோர் எண்ணிக்கை*	*செலவுத் தொகை ரூபாய்*
1	1980-81	5317	--
2	1981-82	2815	--
3	1982-83	3115	--
4	1983-84	5954	61,629
5	1984-85	6927	1,22,873
6	1985-86	6978	1,41,075
7	1986-87	1653	60,756

பல்கலைக்கழக நுழைவிற்குப் பிந்தைய வகுப்புகளில் கல்வி கற்கும் மாணவர்களில் பிற்பட்ட வகுப்புகளைச் சார்ந்தவர்கள், மற்றும் சீர் மரபினர் ஆகியோரில், தகுதியுள்ள மாணவர்களுக்கும் உதவித் தொகை வழங்கப்படுகிறது. ஆனால், சீர் மரபினர் சார்பான மாணவ பிரதிநிதித்துவம் மாவட்டத்தில் இல்லையெனவே கூறலாம். எனவே, உதவித்தொகையில் அடங்கக்கூடிய புத்தகங்களின் மதிப்பு போதனைக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் ஆகியவை பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கு மட்டும் அளிக்கப்படுகின்றன. உறைவிட உதவித் தொகை தங்கும் விடுதிகளிலிருந்து கொண்டு படிக்கும் மாணவர்களுக்கும் வழங்கப்படுகிறது. உதவித்தொகை பெற்ற மாணவர்கள் தொடர்பான விவரங்கள் கீழே பட்டியல்-17.7இல் அளிக்கப்பட்டுள்ளன.

பட்டியல்-17.7

பல்கலைக்கழக நுழைவிற்குப் பிந்தைய வகுப்புகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட உதவித்தொகை பற்றிய விவரங்கள்

தொடர் எண்.	ஆண்டு	பயனடைந்தோர் எண்ணிக்கை	செலவு செய்யப்பட்ட தொகை (ரூபாய்)
1	1980-81	4,506	8,27,927
2	1981-82	4,630	7,25,321
3	1982-83	4,816	8,04,672
4	1983-84	6,498	11,40,001
5	1984-85	8,704	13,81,853
6	1985-86	8,966	15,39,470
7	1986-87	7,849	16,11,435

கன்னியாகுமரி மாவட்டத்தில் பிற்பட்டோர் நலத்துறை பிற்பட்டோர் வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்காக மொத்தத்தில் 13 தங்கும் விடுதிகளை நடத்துகிறது. அவற்றில் எட்டு உயர்நிலைப் பள்ளி மாணவிகளுக்கும், இரண்டு உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கும் எஞ்சிய மூன்று கல்லூரி மாணவிகளுக்கும் உரித்தானவை. அவை தொடர்பான விவரங்கள் கீழே பட்டியல் - 17.8-ல் அளிக்கப்பட்டுள்ளன.

பட்டியல்-17.8

கன்னியாகுமரி மாவட்டத்தில் பிற்பட்டோர் நலத்துறையினரால் நடத்தப்படும் தங்கும் விடுதிகள்

தொடர் எண்.	தங்கும் விடுதியின் பெயர்	இருப்பிடம்
1.	கல்லூரி மாணவிகள் தங்கும் விடுதி	அகஸ்தீஸ்வரம்
2.	கல்லூரி மாணவிகள் தங்கும் விடுதி	குழித்துறை
3.	கல்லூரி மாணவிகள் தங்கும் விடுதி	நாகர்கோவில்
4.	அரசு உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் தங்கும் விடுதி	ஆரல்வாய்மொழி
5.	அரசு உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் தங்கும் விடுதி	பொட்டெட்டி
6.	அரசு உயர்நிலைப்பள்ளி மாணவியர் தங்கும் விடுதி	பூதபாண்டி
7.	அரசு உயர்நிலைப்பள்ளி மாணவியர் தங்கும் விடுதி	கொளச்சல்
8.	அரசு உயர்நிலைப்பள்ளி மாணவியர் தங்கும் விடுதி	குலசேகரம்
9.	அரசு உயர்நிலைப்பள்ளி மாணவியர் தங்கும் விடுதி	தக்கலை
10.	அரசு உயர்நிலைப்பள்ளி மாணவியர் தங்கும் விடுதி	கருங்கால்
11.	அரசு உயர்நிலைப்பள்ளி மாணவியர் தங்கும் விடுதி	அழகப்பபுரம்
12.	அரசு உயர்நிலைப்பள்ளி மாணவியர் தங்கும் விடுதி	எரணியல்
13.	அரசு உயர்நிலைப்பள்ளி மாணவியர் தங்கும் விடுதி	புதுக்கடை

1983-84ஆம் ஆண்டு இத்தங்கும் விடுதிகளில் தங்கியிருந்த மாணவர்களின் எண்ணிக்கை 596 ஆகும். 1984-85, 1985-86 மற்றும் 1986-87ஆம் ஆண்டுகளில் தங்கியிருந்தோரின் எண்ணிக்கை முறையே 624, 605 மற்றும் 580 ஆகும்.

திறமை வாய்ந்த மாணவர்களுக்குப் பரிசு

துவக்கப்பள்ளி இறுதிச் சான்று (ஈ.எஸ்.எல்.சி.), உயர்நிலைப்பள்ளி இறுதிச்சான்று (எஸ்.எஸ்.எல்.சி.) மற்றும் மேல்நிலைப்பள்ளி இறுதிச் சான்று (எச்.எஸ்.சி.) ஆகிய தேர்வுகளில் மாவட்ட அளவிலான இடங்களைப் பெற்ற பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியருக்குப் பரிசு வழங்கும் திட்டத்தினை இத்துறை அறிமுகப்படுத்தியுள்ளது. மேல்நிலைப்பள்ளி இறுதித்தேர்வில் (எச்.எஸ்.சி.) மாவட்ட அளவிலான இடத்தினைப் பெறுவோருக்கு ஒவ்வொருவருக்கும் ரூபாய் 500/- வீதம் பரிசுத்தொகை வழங்கப்படுகிறது. துவக்கப்பள்ளி இறுதித் தேர்வு மற்றும் உயர்நிலைப் பள்ளி இறுதித்தேர்வு ஆகியவற்றில் மாவட்ட அளவிலான இடத்தைப்பெற்ற மாணவ, மாணவியருக்கு மூன்று பரிசுகள் முறையே ரூபாய் 150/- ரூபாய் 100/- மற்றும் ரூபாய் 50/- வழங்கப்படுகிறது.

சமூக நலத்துறை

ஒரு சமுதாயத்தின் பண்பாடு, அது மகளிர் மற்றும் குழந்தைகள் பால் கொண்டுள்ள அன்பு மற்றும் அக்கறை ஆகியவற்றை வைத்தே கணக்கிடப்படுகிறது. நமது சமுதாயத்தின் முதுகெலும்பு நம்நாட்டு மகளிர்தான் எனில் ஐயமில்லை. மகளிர் முன்னேற்றத்தில் அரசு மிகுந்த அக்கறை காட்டி வருகிறது. அதன் விளைவாக பிழைப்புக்கு ஆதாரம் தேடும் பெண்களை அடையாளம் கண்டு, அவர்களின் நல்வாழ்வு, அவர்களுக்கு இருப்பிடம், கல்வி மற்றும் அவர்களில் ஏழை, எளிய மகளிர்க்கு அவர்களது தகுதிக்கேற்ற வேலை வாய்ப்பளித்தல் போன்ற நடவடிக்கைகளை அரசு அவ்வப்போது மேற்கொண்டு வருகிறது.

கன்னியாகுமரியில் பல்வேறு மகளிர் நலத்திட்டம் 1956ஆம் ஆண்டு துவக்கப்பட்டன. பெண்கள் நலத்துறையின் நிருவாக அமைப்பு திருத்தியமைக்கப்பட்டு 1972ஆம் ஆண்டு இத்துறை சமூக நலத்துறை என மறு பெயரிடப்பெற்றது. அதிலிருந்து இத்துறை பல்வேறு நலத்திட்டங்களை செயலாற்றி வருகிறது.

1972ஆம் ஆண்டிற்கு முன்னர் நாகர்கோவில் பெண்கள் நல அலுவலர் மாவட்டத்தின் முழுப்பொறுப்பினையும் ஏற்று சென்னை பெண்கள் நல இயக்குனரின் நேரடிப் பொறுப்பிலியங்கி வந்தார். மாதர் சங்கங்கள் அமைத்தல், ஆதாரப் பள்ளிகள் நடத்துதல், பெண்கள் மற்றும் குழந்தைகளின் பொது நலனில் அக்கறை செலுத்துதல் போன்றவை பெண்கள் நலத்துறையின் முக்கியப் பொறுப்புகளாக இருந்து வந்தன.

1972-ல் துவங்கிய இந்த அமைப்பு முறையிலும், சமூக நலத்துறை, பெண்கள், குழந்தைகள் மற்றும் உடல் ஊனமுற்றோர் ஆகியோர் முன்னேற்றத்திற்காக உருவாக்கப்பட்ட நலத்திட்டங்களை முன்னர் செயல்படுத்தியவாறு புதிய திட்டங்களுடன் தொடர்ந்து நடைமுறைப் படுத்தி வருகிறது. பெண்களுக்கான பல்வேறு நலத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் பொறுப்பினை மாவட்ட சமூக நல அலுவலர் ஏற்கிறார். இத்துறையினால் செயலாக்கப்பெற்ற பல்வேறு நலத் திட்டங்கள் குறித்த விவரங்கள் கீழே அளிக்கப்படுகின்றன.

மகளிர் மன்றங்கள்

சமூகப் பொருளாதாரத் தடைகளைக் கடந்து கிராமப்புறப் பகுதிகளி லுள்ள பெண்களை ஒருங்கிணைத்துக் கொணர்வதும் அவர்கள் ஒருவரையொருவர் நன்கு புரிந்து மரியாதையுடன் பழகும் பக்குவமான சூழ்நிலையினை உருவாக்குவதும் கிராமப் பொருளாதாரத்தினை மேம்படுத்தும் வகையிலும், அவர்களுக்கும் பயன்படும் வகையிலும் வேலைவாய்ப்பினை ஏற்படுத்தியளித்து தன்னுதவிக்கு வழியற்ற பெண்களுக்கு உதவியளிப்பதும் மகளிர் மன்றங்களின் நோக்கங்களாகும்.

பத்து மாவட்டத்தில் 270 மகளிர் மன்றங்கள் இயங்கி வருகின்றன. ஒவ்வொன்றும் ஒரு குழுத்தலைவரின் தலைமையிலியங்குகிறது.[10] உணவுப் பொருட்களைப் பாதுகாத்தல், உடல்நலம் பேணுதல், குழந்தைகளை அக்கறையுடன் கவனித்தல், ஊட்ட உணவிற்கு வகை செய்தல் மற்றும் சமையல்பணி ஆகியவை குறித்து முகாம்கள் நடத்தி பெண்களுக்குப் பயிற்சியளிக்கின்றன. குழந்தைகள் கண்காட்சிகள் மற்றும் கல்வி முகாம்கள் ஆகியவையும் இத்திட்டங்களின் பகுதியாகும். மகளிர் மன்றங்கள் பல்வேறு வகைப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளிலும் ஈடுபட ஊக்குவிக்கப்படுகின்றன. திறமையாகப் பணியாற்றும் மகளிர் மன்றத்திற்கு ரொக்க ஊக்கத்தொகை பரிசாக வழங்கப்படுகிறது. மகளிர் மன்றங்களில் திறமை வாய்ந்த ஒன்று ஒவ்வொரு ஆண்டும் மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையிலான மாவட்டக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்படுகிறது. இத்திட்டம் அறிமுகப்படுத்தியதிலிருந்து இதுகாறும் 46 மன்றங்கள் பரிசினைத் தட்டிச் சென்றுள்ளது.

பணி மையங்கள்

இத்துறையினால் இராமவர்மபுரம், பலுகால் மற்றும் விளவூர்க்கோணம் ஆகிய இடங்களில் தையற்பணி மையங்கள் நடத்தப்படுகின்றன. 18 வயதிலிருந்து 35 வயது வரையிலான கிராமப்புற மற்றும் நகர்ப்புறப் பெண்களுக்கு ஓராண்டு காலத்திற்குப் பயிற்சியளிக்கப்படுகிறது. இராமவர்மபுரத்திலுள்ள மையம் பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த பெண்களின் நலனுக்காகவே நடத்தப்படுகிறது. ஏனைய இரண்டும் அட்டவணையிட்ட வகுப்பினர் மற்றும் அட்டவணையிட்ட மலைவாழ் வகுப்பினர் ஆகியோரின்

நலனுக்காக இயங்குகின்றன. ஊர்திக் கட்டணச் செலவாக ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் ஒவ்வொரு மாதமும் 30 ரூபாய் வழங்கப்படுகிறது.

ஏழை, எளிய விதவைகளின் குழந்தைகளுக்கு பாடநூல்கள் மற்றும் குறிப்பேடுகள் வழங்குதல்

குடும்பத்தின் ஆண்டு வருவாய் 3,000/- ரூபாய்க்கும் குறைவாக உள்ள விதவைகளின் குழந்தைகளுக்கு பயனளிக்கும் இத்திட்டம் 1978-79ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. 1980-81ஆம் ஆண்டுவரை துவக்கப்பள்ளி நடுநிலைப்பள்ளி மற்றும் உயர்நிலைப்பள்ளி முதலியவற்றில் படிக்கும் மாணவர்களுக்கு நூல்கள் வழங்கப்பட்டன. 1987-88ஆம் ஆண்டிலிருந்து, இத்திட்டம் மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளது. இதுகாறும் இம்மாவட்டத்தில் 1560 மாணவர்கள் இத்திட்டத்தினால் பயனடைந்துள்ளனர்.

ஏழை, எளிய விதவைகளின் பெண்கள் மற்றும் அனாதைப் பெண்கள் ஆகியோருக்குத் திருமண உதவி

தாழ்ந்த பொருளாதார நிலையிலுள்ள ஆதரவற்ற விதவைகள், தங்களது பெண்களுக்குத் திருமணம் செய்ய இயலாது அவதியுறுவது கண்கூடு. துரதிருஷ்டவசமான அப்பெண்களை இக்கோர சூழ்நிலையி னின்றும் காத்திட அரசு ஒரு திட்டத்தினை அறிமுகப்படுத்தி யுள்ளது. இத்திட்டத்தின்படி அப்படிப்பட்ட ஆதரவற்ற விதவைகளுக்கு அரசு உதவியளிக்கிறது. அதாவது ஒரே ஒரு பெண்ணிற்கு ஒரே தடவைதான் இந்த உதவியினை அரசு அளிக்கிறது. அவ்விதவை உதவி வழங்கும் அலுவலரான தொடர்புள்ள மாவட்ட ஆட்சித் தலைவரை அணுகி உதவி யினைப் பெறலாம். மாவட்ட ஆட்சித் தலைவர் தகுதியுள்ள நபர்களைத் தேர்ந்தெடுத்து ஒருவருக்கு ரூபாய் 1,000/- வீதம் உதவித் தொகை அளிக்கிறார். இத்திட்டத்தினால் இம்மாவட்டத்தில் இதுகாறும் 405 பெண்கள் பயனடைந்துள்ளனர்.

1985-86ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டம் அனாதைப் பெண்களுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளது. 1988ஆம் ஆண்டு சூலை திங்கள் வரை இத்திட்டத்தின் கீழ் 46 பெண்கள் பயனடைந்துள்ளனர்.

தையல் இயந்திரங்கள் வழங்குதல்

இத்திட்டத்தின்கீழ் 18 வயதிலிருந்து 40 வயது வரையிலுள்ள உடல் ஊனமுற்ற ஆண், பெண் இருபாலருக்கும் ஆதரவற்ற விதவைகளுக்கும் தையல் இயந்திரங்கள் வழங்கப்படுகின்றன. இத்திட்டம் 1975-76ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. 1987-88ஆம் ஆண்டு வரை 476 நபர்கள் இத்திட்டத்தினால் பயனடைந்துள்ளனர்.

விதவைகள் மறுமணம்

பதினெட்டு வயதிலிருந்து 30 வயது வரையிலான விதவைகள் மறுமணம் செய்துகொண்டு மறுவாழ்வுபெற இத்திட்டம் ஊக்குவிக்கிறது.

இவ்வாறு மறுமணம் செய்துகொள்ளும் தம்பதியருக்கு 5,000/- ரூபாய் மதிப்புள்ள ஒரு தேசிய சேமிப்புச் சான்று வழங்கப்படுகிறது. 1977ஆம் ஆண்டு முதல் 1986ஆம் ஆண்டுவரை இத்திட்டத்தினால் இம்மாவட்டத்தில் 226 விதவைகள் பயனடைந்துள்ளனர்.

அறிவுரை வழங்கும் அரசியல் துறையரங்கம்

பெண்களின் நலனைக் காத்திட அறிவுரை வழங்கும் அரசியல் துறையரங்கத்தினை அமைக்கும் திட்டம் இம்மாவட்டத்திலும் 1983-84ஆம் ஆண்டு விரிவாக்கப்பட்டுள்ளது.

சமூக நலத்துறையால் நடத்தப்படும் இவ்வலுவலகம் பெண்களுக்கு குறிப்பாக பொருளாதார அடிப்படையில் பின்தங்கியவர்களாகவும், ஆதரவற்ற வர்களாகவும், விதவைகளாகவும் உள்ளோர் சுயவேலை வாய்ப்பினைப் பெற்றிட அவர்களுக்கு வங்கிகள் மூலம் கடனுதவி பெற்றளிக்கிறது.

மேலும், ஆதரவற்ற பெண்களின் குழந்தைகளை அரசு மற்றும் தன்னியலான தனியார் நிறுவனங்கள் ஆகியவை நடத்தும் அனாதை விடுதிகளில் சேர்ந்திட அவர்களுக்கு உதவி புரிகிறது. முதியோர் உதவித்தொகை பெறுவோர் மற்றும் ஏனையோரின் பிரச்சனைகளை தொடர்புள்ள துறையினருடன் கலந்து விவாதித்து உரிய தீர்வு காண்கிறது. இதுகாறும் இவ்வலுவலகம் இம்மாவட்டத்தில் 5,544 பேர்களுக்கு இவ்வகைகளில் உதவி புரிந்துள்ளது.

உடல் ஊனமுற்றோர் நலம்

இம்மாவட்டத்தில் உடல் ஊனமுற்ற குழந்தைகள் மற்றும் முதியோருக்குப் பல திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

உடல் ஊனமுற்ற மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை

1981-82ஆம் ஆண்டு முதல் தமிழக அரசும், மத்திய அரசும் ஊனமுற்ற மாணவர்களுக்கு உதவித்தொகையளித்து வருகின்றன. மாநில அரசு ஒன்று முதல் எட்டு வரையிலான வகுப்புகளுக்கும் மத்திய அரசு ஒன்பதாவது வகுப்பு முதலும் மாணவர்களுக்கு உதவித்தொகையினை அளித்து வருகின்றன. இம்மாவட்டத்தில் 1987 முதல் 1988 வரை மாநில அரசால் 938 மாணவர்களுக்கு 45,600/- ரூபாயும், மத்திய அரசால் 773 மாணவர்களுக்கு 66,720/- ரூபாயும் உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

இருசக்கர மிதி வண்டிகள், சக்கர நாற்காலிகள் மற்றும் காது கேளாதோர் கேட்க உதவும் பொறியமைவு ஆகியவை வழங்குதல்

இம்மாவட்டத்தில் 1983 முதல் 1986 வரை 70 மூன்று சக்கர மிதிவண்டிகளும், 24 சக்கர நாற்காலிகளும், காது கேளாதோர் கேட்க உதவும் 127 பொறியமைவுகளும், ஊனமுற்றோருக்கு இத்துறையினால் வழங்கப்பட்டுள்ளன.

ஊனமுற்றோரின், சுயவேலை வாய்ப்பு முயற்சிகளுக்கு உதவியளித்தல்

ஊனமுற்றோரில் பலரை பெரும்பாலும் கிராமப்புறம் போன்ற பகுதிகளில்தான் காணமுடிகிறது. அவர்களில் பலர் கல்வியறிவற்றவர்களாகவே உளர். அவர்களை மாத ஊதியம் பெறும் பணிகளில் அமர்த்துவதென்பது, கடினமானதோர் செயலாகும். எனவே சுயவேலை வாய்ப்பு அளித்திட ஊனமுற்றோருக்கு உதவியளித்திடும் திட்டங்களை தமிழக அரசு நடைமுறைப்படுத்தியுள்ளது. வித்தியாசமான வட்டிவீதத்தில் அதாவது நான்கு விழுக்காடு வட்டி வீதத்தில், வங்கிக்கடனும் ஒருவருக்கு 500 ரூபாய் வரையில் அரசு மானியமும் கடை நிறுவ வழங்கப்படுகிறது. இத்திட்டம் 1979ஆம் ஆண்டு முதல் நடைமுறையிலிருந்து வருகிறது. 1986ஆம் ஆண்டுவரையில் 496 ஊனமுற்றோருக்கு இவ்வாறு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

கடைகள் நிறுவிட வேறுவகையில் உதவித்தொகை வழங்க இயலாத ஊனமுற்றோருக்கு வங்கிகள் மூலம் வேறுபாடான வட்டி வீதத்தில் சுயவேலை வாய்ப்பின் பொருட்டு கடன் வழங்கப்படுகிறது. கடன் தொகைக்கீடான தொகை பயனடையும் ஒருவருக்கு அதிக அளவாக ரூபாய் 1,000/- வரையில் நிதியுதவி கிடைக்கப்பெற்ற பின்னர் அரசு மானியமாக வழங்கப்படுகிறது.

தொழில் சார்ந்த பயிற்சியளிக்கப்பட்ட ஊனமுற்றோர் ஏப்ரல், 17, 1979-க்கு முன்னர் அவர்களது பெயர்களை வேலைவாய்ப்பு நிறுவனத்தில் பதிந்திருந்தால் அவர்கள் பல தொழில் சார்ந்த நிறுவனங்களில் பணிபயில்பவராக நியமிக்கப்படுகிறார்கள். நிறுவன உரிமையாளர் மீது எவ்வித பொருள் சார்ந்த வலியுறுத்தலுமின்றி, ஓராண்டு காலங்களுக்கு அவர்கள் நியமிக்கப்படுகின்றனர். பயிற்சி காலத்தில் அவர்களுக்கு மாதந்தோறும் 150/- ரூபாய் அரசு உதவித்தொகையாக வழங்குகிறது. பயிற்சி காலம் முடிந்தபின்னர் அவர்கள் முறையான பணியாளர்களாக அந்நிறுவனத்தில் நியமிக்கப்படவேண்டுமென்ற நிபந்தனையின் பேரில் அவர்களுக்கு இந்த உதவித்தொகை வழங்கப்பட்டது. உயர்நிலைப்பள்ளி இறுதிச்சான்று அல்லது தொழில் பயிற்சிப் பள்ளியில் படித்து சான்று பெற்ற வேலையற்ற விழி இழந்தோர் அவர்களது பெயர்களை வேலை வாய்ப்பு நிறுவனங்களில் பதிவுசெய்து அவர்களது பெயர்களும் வேலை வாய்ப்பு நிறுவனத்தின் நடைமுறைப் பதிவேட்டில் தொடர்ந்து மூன்று ஆண்டு காலத்திற்கு இடம் பெற்றிருந்தால் அவர்களுக்கு வேலையில்லாப் படியாக மாதந்தோறும் ரூபாய் 50/- தமிழக அரசால் வழங்கப்படுகிறது.

விழி இழந்தோருக்குப்பள்ளி

1979ஆம் ஆண்டிற்கு முன்னர் இம்மாவட்டத்தில் விழி இழந்தோருக்கான பள்ளி கல்வித்துறையின் கட்டுப்பாட்டில் இயங்கி வந்தது. 1979ஆம் ஆண்டு சமூக நலத்துறை, இப்பள்ளிகளைத் தமது பொறுப்பில் எடுத்துக்கொண்டது.

ஒவ்வொரு பள்ளியும் ஓராண்டிற்கு 25 மாணவர்களைச் சேர்க்கிறது. முதல் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை, பள்ளிகள் மாணவர்களுக்கு கல்வியளிக்கிறது. ஒவ்வொரு பள்ளியிலும் தனியாகப் பயிற்சிபெற்ற ஐந்து ஆசிரியர்களும் ஆசிரியர் அல்லாத இரண்டு பணியாளர்களும் ஒவ்வொரு பள்ளியிலும் பணியாற்றி வருகின்றனர். மாணவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் இலவச தங்கும் விடுதி வசதிகளுடன் பாடநூல்கள், இரண்டு தொகுதி சீருடைகளும் ஒவ்வொரு ஆண்டும் மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது. 1986-87ஆம் ஆண்டு இப்பள்ளிகளைப் பராமரித்திட 1.90 இலட்ச ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

குழந்தைகள் நலம்

மாண்புமிகு முதலமைச்சரின் மத்திய சத்துணவுத்திட்டம்

1982 ஆம் ஆண்டு ஜீலை முதல் நாள் தமிழ்நாடு அரசு இரண்டு முதல் ஏழு வயதிலான இலட்சக்கணக்கான ஏழைக் குழந்தைகளுக்கு இலவசமாக சத்துணவு அளித்திடும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த திட்டத்தினைத் தமிழக அரசு அறிமுகம் செய்தது. அன்றைய தினம் நண்பகல் 12.00 மணிக்கு 20,747 குழந்தைகள் நல மையங்களிலும் 32,470 துவக்கப் பள்ளிகளிலும் 55.96 இலட்சம் குழந்தைகள் கலந்துகொண்டு அவர்களுக்குத் தமிழக அரசினால் சூடான சத்துணவு அளிக்கப்பட்டது. இந்த பிரம்மாண்டமான மற்றும் தனித்தன்மை வாய்ந்த துணிகர முயற்சிக்கு அரசு தனது நிதியினின்றும் ஆண்டுதோறும் 100 கோடி ரூபாய் செலவிட வேண்டியுள்ளது. ஆனால் இத்திட்டத்தினால் குழந்தைகளின் குறிப்பாகக் கிராமப்புறத்திலுள்ள குழந்தைகளின் உடல்நிலையில் குறிப்பிடத்தக்க மாற்றம் காணப்படுவ தோடல்லாமல் சமூக சூழ்நிலையிலும் ஆரோக்கியமான முன்னேற்றம் தெரிகிறது.

ஒரு சாப்பாட்டின் அடக்கவிலை 45 பைசா ஆகும். நான்கு வயதிற்குட்பட்ட குழந்தைகள் உட்கொள்ளும் உணவின் ஆக்கக்கூறுகள், 80 கிராம் அரிசி 10 கிராம் பருப்பு, ஏழு கிராம் எண்ணெய், 50 கிராம் காய்கறிகள் மற்றும் சுவையூட்டுப் பொருள் ஆகியவையாகும். நான்கு வயதிற்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு 100 கிராம் அரிசியும், 15 கிராம் பருப்பும் கொடுக்கப் படுகின்றன.

முந்தைய முதலமைச்சர் காலஞ்சென்ற திரு. கே. காமராஜ் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டு பின்பு நடைமுறையிலிருந்த மதிய உணவுத்திட்டத்தில் எட்டாவது வகுப்புவரை படித்துவந்த குழந்தைகளுக்கு ஓராண்டில் 200 நாட்களுக்கு மதிய உணவு அளிக்கப்பட்டது. ஆனால் தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள திட்டத்தில் ஆண்டின் 365 நாட்களுக்கும் சத்துள்ள மதிய உணவு அளிக்கப்படுகிறது. மேலும் இரண்டு வயதிலிருந்து ஐந்து வயது வரையிலான குழந்தைகளும் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். இதற்கான முழுச் செலவிற்கும் தமிழக அரசே பொறுப்பேற்கிறது. இத்திட்டத்திற்குத்

தேவைப்படும் உணவுப் பொருட்களைத் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் வழங்குகிறது. முன்னர் தமிழ்நாடு முழுவதிலும் சமூக நலத்துறை 4343 குழந்தைகள் நல மையங்களை நடத்தி வந்தது. அவைத்தவிர ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு மையம் செயல்பட வேண்டுமென்ற அடிப்படையில் மேலும் 15,501 மையங்கள் துவக்கப் பட்டுள்ளன. 1984ஆம் ஆண்டு மாநிலத்தில் இலட்சம் குழந்தைகளுக்கு சத்துணவு அளிக்கப்பட்டது.

இத்திட்டம் குழந்தைகளின் பசியைத் தடுப்பதோடு மட்டுமின்றி அவர்களது நல்வாழ்வு மற்றும் பண்பு ஆகியவற்றிற்கும் வழி வகுக்கிறது. இதுவே அவர்களை பொறுப்புள்ள குடிமக்களாக உருவாக்குகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் 803 குழந்தைகள் நல மையங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் 803 குழந்தைகள் நல அமைப்பாளர்களும், 1606 குழந்தைகள் நல உதவியாளர்களும் பணியாற்றி வருகின்றனர். பயனடைந்துவரும் குழந்தைகளின் எண்ணிக்கை 58,368 ஆகும். மாண்புமிகு முதலமைச்சரின் மதிய சத்துணவுத் திட்டத்தினை கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைமுறைப்படுத்திட 1,48,82,074/- ரூபாய் தமிழக அரசு வழங்கியுள்ளது.

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப்பணி

இது, மாநிலத்தின் சில தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டாரங்களில் மத்திய அரசின் ஆதரவுடன் செயலாக்கப்பட்டு வரும் திட்டமாகும். நோய் தொற்றும் குழந்தைகளுக்கும், மகப்பேறு காலத்திலுள்ள பெண்கள் மற்றும் கைக்குழந்தைகளுக்கு பால் கொடுத்துவரும் தாய்கள் ஆகியோருக்கு ஒருங்கிணைந்த முறையில் தொகுத்து உரிய பணிகளை ஆற்றிட இத்திட்டம் வழி வகுக்கிறது. இத்தொகுப்புப் பணிகளில் துணை சத்துணவு, பள்ளிப் படிப்புக்கு முந்தைய படிப்பு, உடல் நல்வாழ்வுக் கல்வி, உடல் நல்வாழ்வு சோதனைக்கான நுண்ணாய்வு முதலியவை அடங்கும். ஒருங்கிணைந்த குழந்தைகள் நலப் பணித்திட்டம் தற்போதைய முதலமைச்சரின் மதிய சத்துணவுத் திட்ட மையங்களை இணைத்து 1983-ம் ஆண்டு துவங்கப் பட்டது. இரண்டு வயதுக்குக் குறைவாகவும், இரண்டு வயதிலிருந்து நான்கு வயது வரையிலும் உள்ள குழந்தைகள் துணை சத்துணவு பெற்று பயனடைகின்றன. இவ்விரு வகைகளிலும் பயனடையும் குழந்தைகளின் எண்ணிக்கை முறையே 2,428 மற்றும் 2,304 ஆகும். "கோ" நிறுவனம் 1839 பேறுகால மற்றும் குழந்தை களுக்குப் பால் கொடுக்கும் தாய்மார்களின் நலனைப் பாதுகாக்கிறது.

அனாதை இல்லங்கள்

மாவட்டத்தில் ஆகஸ்டு 22, 1959 முதல் நாகர்கோவிலிலும் ஆகஸ்ட்டு 20 1986 முதல் திக்கணங்கோடியிலும், அரசு அனாதை இல்லங்கள் இயங்கி வருகின்றன. நாகர்கோவிலிலுள்ள அனாதை இல்லத்தில் 250 குழந்தைகளும், திக்கணங்கோடு அனாதை இல்லத்தில் 70 குழந்தைகளும்

தங்கியுள்ளனர். முந்தைய பெண் குற்றவாளிகளின் குழந்தைகள் தங்குவதற்கும் இங்கு ஓர் இடம் உள்ளது. இங்குள்ள குழந்தைகளுக்கு உணவு, தங்குமிடம், உடை, புத்தகங்கள், குறிப்பேடுகள் மற்றும் மருந்துகள் ஆகியவை இலவசமாக அளிக்கப்படுகின்றன. அனைவருக்கும் கல்வியும் போதிக்கப்படுகிறது. உணவுக்காக மட்டும் ஒரு குழந்தைக்கு ரூபாய் 60/- செலவிடப்படுகிறது. முதல் வகுப்பிலிருந்து, எட்டாம் வகுப்புவரை படிக்கும் குழந்தைகள் ஒவ்வொருவருக்கும், உடைக்காக ரூபாய் 35/-ம் படுக்கை வசதி செய்து கொடுக்க ரூபாய் 20/-ம் மற்றும் பாடப்புத்தகங்களுக்கு ரூபாய் 25/-ம் செலவிடப்படுகிறது. உயர்நிலைப்பள்ளி வகுப்பு மற்றும் மேல்நிலைப்பள்ளி வகுப்புகளில் படிக்கும் மாணவர்களுக்கு பாடப்புத்தகங்களுக்காக முறையே ரூபாய் 90/-ம் மற்றும் ரூபாய் 190/-ம் அரசு செலவிடுகிறது.

முதியோர் உதவித்தொகை

சமூகப் பாதுகாப்பு நடவடிக்கையாக, பிழைப்புக்கு வழியில்லாத முதியோருக்கு நிவாரணம் அளித்திட ஏப்ரல் 1, 1962 முதல் அரசு முதியோர் உதவித்தொகைத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தி வருகிறது. 65 வயதும் அதற்கும் மேற்பட்ட ஆதரவற்ற முதியோர் இவ்வுதவித் தொகையினைப் பெறத் தகுதியுள்ளவராவர். இதுதவிர, மேலும் சில சமூகப்பாதுகாப்புத் திட்டங்கள் உள்ளன. அவைபற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

உடல் ஊனமுற்றோருக்கு முதியோர் உதவித்தொகை

இத்திட்டம் 1974ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது. உடல் ஊனமுற்ற ஆதரவற்றோர் இவ்வுதவித் தொகையினைப் பெறத்தகுதியுடையவராவர்.

விதவைகளுக்கு உதவித்தொகை

இத்திட்டம் இம்மாவட்டத்தில் 1975 முதல் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது. நாற்பது வயதும் அதற்கு மேற்பட்டும் உள்ள ஆதரவற்ற விதவைகள் உதவித்தொகை பெறத் தகுதி பெற்றவராவர்.

வேளாண் தொழிலாளர் முதியோர் உதவித்தொகை

ஆதரவற்ற வேளாண் தொழிலாளர்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டம், மார்ச் 15, 1981 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது. அறுபது வயதும் அதற்கும் மேற்பட்ட ஆதரவற்ற வேளாண் தொழிலாளர்கள் உதவித்தொகை பெற தகுதியுள்ளவராவர்.

மேற்க்குறிப்பிட்ட அனைத்துத் திட்டங்களின்படியும் வழங்கப்படும் உதவித்தொகை நபர் ஒன்றுக்கு ரூபாய் 35/- ஆகும். இவைத்தவிர அவர்களுக்கு ஒருநாளைக்கு ஒருவேளை இலவச உணவு அளிக்கப்படு கிறது. மேலும் அவர்களுக்குப் புடவைகளும், வேஷ்டிகளும் ஆண்டொன் றுக்கு இருமுறை இலவசமாக வழங்கப்படுகிறது. வாரந்தோறும் ஒருவருக்கு ½ கிலோ கிராம் வீதம் அரிசி இலவசமாக வழங்கப்படுகிறது.

இம்மாவட்டத்தில் உதவித்தொகை பெறுபவர்களின் எண்ணிக்கை, வழங்கப்படும் உதவித்தொகை ஒவ்வொரு மாதமும் இலவசமாக வழங்கப்படும் அரிசியின் அளவு ஆகியவை கீழ்க்குறிப்பிட்ட பட்டியலில் அளிக்கப்பட்டுள்ளது.

பட்டியல்
(30.4.1988 தேசிய நிலை)

தொடர் எண்.	உதவித்தொகை பெறுவோரின் எண்ணிக்கை வகை	உதவித்தொகை பெறுவோரின் எண்ணிக்கை	ஒரு மாதத்திற்கு ரூ.35/– வீதம் வழங்கப்படும் உதவித்தொகை (ரூபாயில்)	ஒரு மாதத்திற்கு இலவசமாக வழங்கப் படும் அரிசியின் அளவு (கி.கி.)
1.	உதவித்தொகை பெறுவோர் (பொது)	2,714	84,990	10,856
2.	ஆதரவற்ற விதவைகள்	1,060	37,100	4,240
3.	உடல் ஊனமுற்றோர்	408	14,280	1,632
4.	வேளாண் தொழிலாளர்கள்	1,098	38,430	4,392
5.	டி.டி. டபிள்யூ.பி.	45	1,575	180
		5,325	**1,76,375**	**21,300**

சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு உதவித்தொகை

மாவட்டத்திலுள்ள சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு மத்திய மற்றும் மாநில அரசுகளால் உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. மாநில அரசு உதவித்தொகைத் திட்டம், 1966 முதல் நடைமுறையிலிருந்து வருகிறது. மத்திய அரசு உதவித்தொகைத் திட்டம் ஆகஸ்டு, 15, 1972 முதல் செயலாக்கப்பட்டுள்ளது. மொத்தம் 53 நபர்கள் அதாவது மத்திய அரசு உதவித்தொகைத் திட்டத்தினால் 41 நபர்களும், மாநில அரசு உதவித்தொகைத் திட்டத்தினால் 12 பேர்களும் பயனடைந்துள்ளனர்.

முன்னாள் படைவீரர் நலம்

தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டிலியங்கிவரும் துறைகளிலொன்றான முன்னாள் படைவீரர் நலத்துறை, மாநிலத்திலுள்ள முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவரைச் சார்ந்து அவரது ஆதரவில் வாழ்பவர்கள் ஆகியோரது மறுவாழ்விற்குப் பொறுப்பேற்கிறது. முன்னாள் படை வீரர்களுக்கும், அவர்களது குடும்பத்தாருக்கும் பயனளிக்கக்கூடிய பல்வேறு நலத்திட்டங்களும் மாவட்டத்திலுள்ள மாவட்ட தரைப்படை, கப்பற்படை மற்றும் விமானப்படை வீரர்கள் வாரியங்களால் நடைமுறைப் படுத்தப்படுகின்றன.

மாவட்ட தரைப்படை, கப்பற்படை மற்றும் விமானப்படை வீரர்கள் வாரியங்களின் நடவடிக்கைகளை முன்னாள் படைவீரர்கள் நல இயக்குநரகம் இணக்கி ஒருநிலைப்படுத்துகிறது. மாவட்ட அலுவலகங்கள் முன்னாள் படைவீரர்கள் நலஉதவி இயக்குநர்களின் தலைமையிலியங்குகின்றன.

மாநில அரசு, பொதுத்துறையின் இணைச்செயலர், முன்னாள் படைவீரர் நல அலுவல் சார்பான இயக்குநராவார்.

தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு தலைப்படை, கப்பற்படை மற்றும் விமானப்படை வாரியத்தை அமைத்து முன்னாள் படைவீரர்கள் தொடர்பான பொறுப்பு வகிக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களை அவ்வாரியத் தலைவராகவும் பல்வேறு அலுவலர்கள், அலுவலரல்லாதோர் ஆகியோரை உறுப்பினர்களாகவும் நியமித்துள்ளது.

நிருவாக செலவினங்கள்

மாவட்டங்களிலுள்ள முன்னாள் படைவீரர்கள் நல இயக்குநரகத்தைச் சார்ந்த துணை அலுவலகங்களைப் பராமரிக்கும் செலவினத்தை தமிழ்நாடு அரசும், மத்திய அரசும் சரி விகிதத்தில் ஏற்கின்றன.

நிதிகள்

தமிழ்நாட்டிலுள்ள முன்னாள் படைவீரர்களுக்கு மறுவாழ்வு அளித்திடவும் அவர்களைக் குடியமர்த்தவும் இயக்குநரகம் உதவி புரிந்து வருகிறது. அதற்காக (1) தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் மற்றும் படைப்பணியாளர்கள் அறச்செயல் நிதி (2) ஒருங்கிணைந்த நிதி (3) கொடி நாள் நிதி ஆகிய நிதிகளை தமிழ்நாடு இயக்குநரகம் துவக்கியுள்ளது. இந்நிதிகளின் நோக்கங்கள் பின்வருமாறு :

தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் மற்றும் படைப்பணியாளர்கள் அறச்செயல் நிதி

படைவீரர்கள், படைப்பணியாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர் ஆகியோருக்குப் பலவகைப்பட்ட கொடைத்தொகை அளித்து உதவிட இந்நிதி வைக்கப்பட்டுள்ளது. இந்நிதிக்குரிய வருவாய் ஆண்டுதோறும் வசூல் செய்யும் கொடிநாள் தொகையினின்றும் கிடைக்கிறது.

இந்நிதி இதற்கென அமைக்கப்பட்டுள்ள குழுவால் நிருவகிக்கப் படுகிறது. இக்குழுவிற்கு தமிழ்நாடு அரசு பொது (முன்னாள் படைவீரர்) துறை இணை இயக்குநரைத் தலைவராகவும் மேலும் மூன்று அலுவலர்களை அலுவல் சார்ந்த உறுப்பினர்களாகவும் அரசு நியமித்துள்ளது. இவைகள் தவிர தமிழ்நாடு தரைப்படை, கப்பற்படை மற்றும் விமானப்படை வீரர்கள் வாரியத்தால் நியமிக்கப்பட்ட மூன்று அலுவல் சாரா உறுப்பினர்களும் இக்குழுவில் இடம் பெறுகின்றனர்.

ஒருங்கிணைக்கப்பட்ட நிதி

இது ஒரு அறக்கட்டளை நிதியாகும். இது முன்னாள் படை வீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோருக்கு அவர்களது குழந்தைகளின் கல்விக்காக உதவித்தொகை வழங்குதல், போரில் வீரமரணம் எய்திய வீரர்களின் மனைவிகளுக்குப் பராமரிப்புக் கொடை வழங்குதல், வங்கிகளினின்றும் தொழிற்கடன் பெற்றவர்களுக்கு மானியம் வழங்குதல் ஆகிய தேவைகளைப் பூர்த்தி செய்திட இந்நிதி பயன்படுகிறது.

கொடிநாள் நிதி

கொடிநாள் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் மாதம் அனுசரிக்கப்படுகிறது. அதற்கான வசூலினை மேதகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களைத் தலைவராகக் கொண்ட கொடிநாள் அமைப்புக்குழு மேற்கொண்டு வருகிறது.

கொடிநாளன்று குறிப்பாக பொதுமக்களிடமிருந்து தொகை எதிர் நோக்கப்படுகிறது. பலதரப்பட்ட மக்கள் இந்நிதிக்குத் தொகை அளிப்ப தனால், அவர்கள் அளிக்கும் தொகையின் அளவில் மாறுபாடு காணக் கூடும். இந்நிதிக்குக் கணிசமான தொகை தேவைப்பட்டபோதிலும் பொது மக்களனைவரும் இந்நிதியில் பங்கேற்று தொகையளிப்பதால் திரட்டப்படும் தொகை மனநிறைவிற்கேற்ப அமைகிறது. மற்ற மாநிலங் களைப் போலவே தமிழ்நாடும் அத்தேதியில் நிதித்தொகை திரட்டுகிறது. கொடிநாள் நிதிவசூல் மத்திய மற்றும் மாநில அரசுகளால் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. மத்திய அரசின் நிதிப்பங்குத் தொகை பாதுகாப்பு அமைச்சரின் தலைமையிலான மேற்பார்வைக் குழுவினால் நிருவகிக்கப்படுகிறது. கொடிநாள் வசூல் தொகையில் மாநில அரசின் பகிர்வுத் தொகை தமிழ்நாடு முன்னாள் படைவீரர் மற்றும் படைப்பணியாளர் அறச்செயல் நிதிக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

மாவட்ட அலுவலகம் துவக்கப்பட்ட சூழ்நிலையும், துவக்கப்பட்ட ஆண்டும்

இரண்டாவது உலகப்போர் முடிவுக்கு வந்த பின்னர் தற்காப்புப்படை வீரர்களின் அமைப்புகளைக் கலைத்து அவர்களை விடுவித்தபோது அதிக வீரர்களைக் குடியமர்த்த வேண்டிய நிலை ஏற்பட்டது. எனவே அவர்கள் நாட்டு தற்காப்பு படையில் பணியாற்றியதை கௌரவித்து அவர்களைப் படைத்துறைச் சாரா அலுவலகங்களில் நியமித்து, அவர்கள் ஒருவருக் கொருவர் கருத்து பரிமாறி கலந்து பணியாற்றிட வாய்ப்பளிக்க முடிவு செய்யப்பட்டது. இதனைக் கருத்திற்குகொண்டு கன்னியாகுமரி மாவட் டத்தில் மாவட்ட தரைப்படை, கப்பற்படை மற்றும் விமானப்படை வீரர்கள் வாரியத்தினை நிறுவிட தமிழக அரசு தனது அக்டோபர், 5, 1960 நாளய (தொழிலாளர் துறை) 4607 எண். கொண்ட அரசாணையில் ஒப்புதலளித்தது.

முன்னாள் படை வீரர்களுக்கு ஆதரவு அளித்து அவர்களை மத்திய அரசு, மாநில அரசு மற்றும் பொது நிறுவனம் ஆகியவற்றிலுள்ள ஒதுக்கப்பட்ட பணியிடங்களில் நியமித்திட ஏப்ரல், 1, 1982 முதல் ஒரு "தனி வேலை வாய்ப்பு மைய நிலையம்" மாவட்டத்தில் இயங்கி வருகிறது. 1986ஆம் ஆண்டு இந்நிலையத்தின்மூலம் மத்திய, மாநில அரசு அலுவலகங்களில் 36 முன்னாள் படைவீரர்கள் பல்வேறு பணிகளில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

"வங்கிக்கடன் - வட்டி மானியத்திட்டம்" குறிப்பாக முன்னாள் படை வீரர்களுக்காக ஜூலை, 1, 1978 முதல் பல வங்கிகளின் ஒத்துழைப்புடன்

அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 1986ஆம் ஆண்டு மாவட்டத்தில் பல்வேறு வங்கிகளிலிருந்து 26 முன்னாள் படை வீரர்கள் 25,300/- ரூபாய் கடன் உதவியினைப் பெற்றுள்ளனர்.

முடமாக்கப்பட்ட மற்றும் போரில் உயிர் துறந்த வீரர்கள் மற்றும் வீரர்களின் குடும்பத்தினருக்கு மறுவாழ்வளிக்கும் நடவடிக்கையாக, உயிர் துறந்த வீரர்களின் மனைவிகள் மற்றும் தகுதியுள்ள முன்னாள் படை வீரர்கள் ஆகியோருக்கு சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ், கன்னியாகுமரி மாவட்டத்தில் 12 கடைகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

1984ஆம் ஆண்டு டிசம்பரில் நடந்த தனித்தன்மை வாய்ந்த பாராளுமன்ற மற்றும் சட்டமன்ற பொதுத் தேர்தலுக்கு ஏறத்தாழ 314 முன்னாள் படை வீரர்கள் "தனி காவல் அலுவலர்"களாக நியமிக்கப்பட்டனர். அதேபோன்று 1986 பிப்ரவரி மாதம் நடைபெற்ற கன்னியாகுமரி மாவட்ட ஊராட்சித் தேர்தல்களுக்கு 476 முன்னாள் படை வீரர்கள் "தனி காவல் அலுவலர்"களாக நியமிக்கப்பட்டார்கள். 80,550/- ரூபாய் பங்கு முதலீடு செலுத்தியுள்ள 103 உறுப்பினர்கள் அடங்கிய முன்னாள் படை வீரர்கள் பொறியியல் கூட்டுறவு சங்கம் நாகர்கோவிலில் இயங்கி வருகிறது. இச்சங்கத்தின் முதன்மையான நோக்கம் யாதெனில் முன்னாள் படைவீரர் உறுப்பினர்களுக்கு ஆதாயமுள்ள வேலைவாய்ப்பு அளிக்க வேண்டும் என்பதேயாகும்.

பொறியினால் ஓடும் இழுப்பு வண்டி (ஆட்டோ ரிக்ஷா), ஒதுக்கீடு செய்தல், சிமிண்ட் வழங்குதல் மற்றும் தானியங்கி உதிரியுறுப்புகள், விற்பனை செய்தல் போன்றவற்றினை சங்கம் மேற்கொள்கிறது.

குலசேகரம் முன்னாள் படைவீரர் நில குடியேற்ற கூட்டுறவு சங்கம், மார்ச், 7, 1948 அன்று துவங்கப்பட்டது. இச்சங்கத்தில் 0.2 இலட்ச ரூபாய் பங்கு முதலீடு செலுத்திய 199 உறுப்பினர்கள் உளர். இச்சங்கத்திற்கு அரசு 500 ஏக்கர் நிலத்தை ஒதுக்கிக்கொடுத்துள்ளது.

மாவட்டத்தில் செயல்களை மேம்படுத்த, மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

நாகர்கோவில் மாவட்ட முன்னாள் படைவீரர்கள் மையம் மற்றும் படைவீரர்கள் இல்லம் ஆகியவை கட்டுவதற்கு, நாகர்கோவிலிலுள்ள வாகீஸ்வரன் கிராமத்தில் 3.47 இலட்ச ரூபாய் மதிப்பில் 30.87 ஏக்கர் நிலம் கைப்பற்றப்பட்டுள்ளது.

முன்னாள் படைவீரர்கள் இல்லத்தில் ஒரு கடைகள் வளாகம் நிறுவிடவும் மாவட்ட முன்னாள் படை வீரர்கள் மையத்தில் தங்கும் அறைகள், முன்னாள் படை வீரர்களுக்குப் பொழுதுபோக்கு அம்சங்கள் மற்றும் முன்னாள் படைவீரர்கள் நல உதவி இயக்குநர் அலுவலகம் ஆகியவை நிறுவிடவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தற்போது, கன்னியாகுமரி மாவட்டத்தில் முன்னாள் படை வீரர்களுக்கான அனைத்து நலத்திட்டங்களையும் உதவி இயக்குநர் (செயலர், மாவட்ட தரைப்படை, கப்பற்படை மற்றும் விமானப்படை வாரியம்) நடைமுறைப்படுத்தி வருகிறார்.

முன்னாள் படைவீரர்கள் வீட்டுப் பெண்மணிகளுக்கு பயிற்சி யளித்திட ஒரு தனி தையல் அலகு மாவட்டத்தில் துவக்கப்பட்டுள்ளது. இந்த தையல் அலகு, ஓராண்டு பயிற்சி அளித்த பின்னர், பயிற்சியின் இறுதியில் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் திட்டத் துறையினால், அவர்களுக்கு ஒரு சான்றுத் தேர்வு நடத்தப்படுகிறது. அதனைத் தொடர்ந்து அவர்கள் தையற்கலையில், அடிப்படை செயலாக்க அறிவுத்திறனுடைய, ஆறுமாதப் பயிற்சியொன்றும் அளிக்கப்படுகிறது.

இவற்றுடன் முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர் ஆகியோர் நலனுக்காக ஒரு தட்டச்சுத் தொழில் பயிற்சி நிறுவனமும் துவக்கப்பட்டுள்ளது.

இந்து சமய மற்றும் அற நிலையங்கள்[11]

யாத்திரிகர்களுக்கு உணவும், நீர்மோரும் வழங்கும் பணியினை செயலாற்றி வரும் கீழ்குறிப்பிட்ட பொது பொறுப்பாட்சி நிறுவனங்கள் மற்றும் அறநிலையங்கள் இந்து சமய மற்றும் அறநிலையத் துறையின் மேற்பார்வையில் இயங்குகின்றன :

1. அன்னதான பொறுப்பாட்சிக்குழு (புத்திணைப்புப் பகுதி), இராமேஸ்வரர் விநாயகர் கோயில், அக்கரை.
2. துவாதசி பொறுப்பாட்சிக்குழு ஆஸ்ரமம்
3. அன்னதான அறநிலையம் (புத்திணைப்புப் பகுதி), சுப்ரமணியசுவாமி கோயில், திருச்செந்தூர், கோட்டார்.
4. ஸ்ரீ பராங்குதாச சுப்ரமணிய தர்மாலயம், கோட்டாரம்
5. ஸ்ரீ குருபூஜா பொறுப்பாட்சிக்குழு, குலசேகரன்புதூர்
6. இராமஜெய பொறுப்பாட்சிக்குழு பரிபூர்ணமடம், தண்ணீர் பந்தல் பொறுப்பாட்சிக்குழு, இலட்சுமிபுரம்.
7. ஸ்ரீ காவடி பொறுப்பாட்சிக்குழு, சுசீந்திரம்
8. ஸ்ரீ கார்த்திகை அஷ்டமி பொறுப்பாட்சிக்குழு, சுசீந்திரம்
9. ஸ்ரீ காவடி பொறுப்பாட்சிக்குழு, கார்காடு
10. துவாதசி பொறுப்பாட்சிக்குழு, விஷ்ணுபுரம்
11. ஸ்ரீ தண்ணீர்மட பொறுப்பாட்சிக்குழு, மந்தாரம்புதூர்
12. பிராமண போஜன (அன்னதான) அறநிலையம் (புத்திணைப்புப் பகுதி), மதுசூதனப் பெருமாள் கோயில், பரக்கை.

13. ஸ்ரீ துவாதசி பொறுப்பாட்சிக்குழு, கரியமாணிக்கபுரம்
14. பங்குனி உத்தரம்-இரண்டாம் மற்றும் நான்காம் நாள் விழா, அறநிலையம் பரக்கை.
15. பங்குனி உத்தரம்-மூன்றாம் நாள் பொறுப்பாட்சிக்குழு, பரக்கை
16. துவாதசி பொறுப்பாட்சிக்குழு, வேம்பனூர்
17. விசுவநாத விசாலாட்சி அம்பாள் துவாதசி பொறுப்பாட்சிக்குழு
18. துவாதசி பொறுப்பாட்சிக்குழு. மகாதேவர் திருக்கோயில், தாளியால்
19. ஆறுவத்திக்குள மடம் என்ற சோனாச்செட்டிமடம், நாகர்கோவில்
20. அருள்மிகு செண்பகத்தடி நந்தவன (பூந்தோட்டம்) மாலை அறநிலையம், அழகியபாண்டியபுரம்.
21. அருள்மிகு அரசடிக்கந்தன் சாஸ்தா மாலை அறநிலையம், அந்தாரபுரம்
22. அருள்மிகு சிறை மீட்ட பெருமாள்சுவாமி வேலாயுத அறநிலையம் (புத்திணைப்புப் பகுதி), குமரர் கோவில், இராமமடம்.
23. எட்டாம் நாள் திருவிழா அறநிலையம் (புத்திணைப்புப் பகுதி), அருள்மிகு சுப்ரமணியசுவாமி கோவில், திருச்செந்தூர் , தாழக்குடி.
24. அருள்மிகு அழகம்மன் கோயில், திருவாதிரை அற நிலையம், தாழக்குடி
25. அருள்மிகு திருவழிமார்பன் கோவில், ஆதிசுவாதி பொறுப்பாட்சிக் குழு, திருப்பதிசாரம்.
26. அருள்மிகு கார்த்திகை அஷ்டமி பொறுப்பாட்சிக்குழு, (புத்திணைப்புப் பகுதி), மகாதேவசுவாமி கோயில், க்ஞாலம்.
27. அருள்மிகு அக்ரஹாரம், துவாதசி பொறுப்பாட்சிக்குழு திருப்பதிசாரம்
28. அருள்மிகு திருவழிமார்பசுவாமி ஏழாம் நாள் அறநிலையம், திருப்பதிசாரம்.
29. அருள்மிகு அன்னதான பொறுப்பாட்சிக்குழு (புத்திணைப்புப் பகுதி), திருச்செந்தூர் கோவில், திருப்பதிசாரம்.
30. அருள்மிகு கார்த்திகை அஷ்டமி பொறுப்பாட்சிக்குழு, (புத்திணைப்பு பகுதி), ஜடாயுபுரம் கோவில், திருப்பதிசாரம்.
31. அருள்மிகு கீழ அரசாழ்வார் துவாதசி பொறுப்பாட்சிக்குழு, தரிசனங்கோப்பு.

இத்துறையினால் இயங்கப்பெறும் பள்ளிகளும், கல்லூரிகளும்

1. தேவாஸ்வம் உயர்நிலைப்பள்ளி, குழித்துறை
2. தேவாஸ்வம் உயர்நிலைப்பள்ளி, திர்ப்பரப்பு
3. என்.வி.கே.எஸ். மேல்நிலைப்பள்ளி, நல்லூர்
4. தேவாஸ்வம் துவக்கப்பள்ளி, குழித்துறை

5. தேவாஸ்வம் மேல்நிலைப்பள்ளி, மண்டைக்காடு
6. ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, ஆர்த்தூர்
7. என்.வி.கே.எஸ். ஆங்கில துவக்கப்பள்ளி, ஆர்த்தூர்
8. தேவிகுமாரி பெண்கள் கல்லூரி, குழித்துறை

மடங்கள்

விளவங்கோடு வட்டம், மூஞ்சிறையிலுள்ள மூஞ்சிரை மடம், கல்குளம் வட்டம், திருவட்டாரிலுள்ள நரசிம்ம மடம், தேரூரிலுள்ள உமையோருபாகன் மடம், அகஸ்தீஸ்வரம் வட்டத்திலுள்ள பணந்திட்டு மடம் ஆகியவை இந்து சமய மற்றும் அறநிலையத் துறையின் கட்டுப் பாட்டிலியங்கி வருகின்றன.

நூல்நிலையங்கள் மற்றும் தேவார பாடசாலைகள்

இத்துறை, இம்மாவட்டத்தில் மூன்று நூல்நிலையங்களையும், ஒரு தேவார பாடசாலையையும் பராமரித்து வருகிறது. நூல்நிலையங்கள் நாகர்கோவில், இராதாகிருஷ்ணபுரம் ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன. இந்த நூல் நிலையங்கள் ஸ்ரீ சித்திரை இந்து சமய நூல் நிலையங்களென அழைக்கப்படுகின்றன.

சசீந்திரம் தேவாஸ்வத்தில் தேவார பாடசாலை உள்ளது.

நூல் அட்டவணை

ஆசிரியர்/வெளியீட்டாளர்	நூலின் பெயர்
1. Sreedhara Menon	Kerala Dist. Gazetteers, p. 729.
ஸ்ரீதர மேனன்	கேரள மாவட்ட விவரச் சுவடிகள் பக்கம் 729.
2. Commissioner of Labour, Madras.	Note dated 21.1.1987
தொழிலாளர் ஆணையர், சென்னை	குறிப்பு நாள் 21.1.1987
3. Secretary, Tamilnadu Labour Welfare Board, Ms.	Letters dated 5.1.1987 and 5.10.1987.
செயலர், தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம், சென்னை.	அறிக்கைகள் நாள் 5.1.1987 மற்றும் 5.10.1987.
4. Government of Tamil Nadu	Second, Five Year Plan, 1956-61, Kanniyakumari District, p.82.
தமிழ்நாடு அரசு	இரண்டாவது ஐந்தாண்டு திட்டம்–1956–61,கன்னியாகுமரி மாவட்டம் பக்கம் 82.
5. Government of Tamil Nadu	G.O. Ms.No.387, Social Welfare Department, dated 17.5.1974.
தமிழ்நாடு அரசு	அரசாணை எண்.387, சமூக நலத்துறை, நாள் 17.5.1974.
6. District Adi Dravidar & Tribal Welfare Officer, Kanniyakumari District.	Note dated 23.7.1986
மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் மலைவாழ் வகுப்பினர் நல அலுவலர், கன்னியாகுமரி மாவட்டம்.	குறிப்பு நாள் 23.7.1986
7. Ibid	அதே நூற்பகுதியில்
8. District Backward Classes Welfare Officer, Kanniyakumar District.	Note dated 2.12.1986.
மாவட்ட பிற்பட்டோர் நல அலுவலர், கன்னியாகுமரி மாவட்டம்.	குறிப்பு நாள் 2.12.1986
9. Government of Tamil Nadu	Schedule-I to Part-I Tamilnadu State & Subordinate Service Rules
தமிழ்நாடு அரசு	தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப்பணி விதிகள் – பாகம்–1, அட்டவணை–1.
10. Director, Social Welfare Department, Madras.	Note dated 31.10.1986
இயக்குநர், சமூக நலத்துறை, சென்னை	குறிப்பு நாள் 31.10.1986
11. Commissioner, Hindu Religious & Charitable Endowments, Madras.	Report dated 9.1.1989
ஆணையர், இந்து சமய மற்றும் அறநிலையத்துறை, சென்னை.	அறிக்கை நாள் 9.1.1989

இயல் - 18

பொதுவாழ்வு மற்றும் சமூகப்பணி அமைப்புகள்

முன்னுரை

முந்தைய திருவாங்கூர் கொச்சி மாநிலத்தில் அடங்கிய திருவனந்த புரம் மாவட்டத்தின் ஒரு பகுதியாக இருந்துவந்த தற்போதைய கன்னியாகுமரி மாவட்டப்பகுதி, மாநில சீரமைப்புச் சட்டத்தின்படி 1956 நவம்பர் மாதம் தனி மாவட்டமாக உதயமானது. 1956 ஆம் ஆண்டிற்கு முன்னர் மாவட்டத்தில் பொது வாழ்க்கை துவக்கத்தில் மன்னர் ஆட்சியிலிருந்து திருவாங்கூர் சமஸ்தானம், பின்னர் உருவாகிய இந்தியத் துணைக் கண்டத்திலடங்கிய திருவாங்கூர் - கொச்சி மாநிலம், ஆகியவற்றிலேற்பட்ட நிகழ்வுகளின் அடிப்படையில் அமைந்தது என்றால் மிகையில்லை.

முதன் முதலில் மக்களை பொது வாழ்க்கையிலீடுபடச் செய்து மக்கள் பிரதிநிதித்துவ அரசு அமைப்பதற்கான முயற்சி ஸ்ரீ மூலம் திருநாள் திருவாங்கூர் - கொச்சி மன்னராக அரசோச்சிய காலத்தில் மேற்கொள்ளப் பட்டது (1885-1924)[1]. மேலவைச் சட்டவிதிகளுக்கொப்ப, சட்ட மேலவை 1888 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. அதனைத் தொடர்ந்து மாநிலத்தில், தற்கால பிரதிநிதித்துவ நிறுவனங்கள் அமையப்பெற அடிக்கல் நாட்டப்பட்டது. 1921-22 ஆம் ஆண்டு, தற்போதைய கன்னியாகுமரி மாவட்டம் அடங்கியுள்ள பகுதிகளில், மூன்று பொதுத்தொகுதிகள் இருந்தன. அவை, அகஸ்தீஸ்வரம், எரணியல் என்ற விளவங்கோடு மற்றும் கல்குளம் என்ற தோவாளை ஆகியவையாகும்.[2] 1921-22-ல் இம்மூன்று தொகுதிகளிலும் பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கை முறையே 6448, 5464 மற்றும் 4701 ஆகியவையாகும். இந்தியத்துணைக் கண்டத்தின் முதல் பொதுத்தேர்தல் 1952 ஆம் ஆண்டு நடத்தப்பட்டது. தற்போதைய கன்னியாகுமரி மாவட்டப் பகுதியில் ஐந்து, ஒரு உறுப்பினர் சட்டமன்றத் தொகுதிகளும், (அதாவது திருவட்டார், நாகர்கோவில், கல்குளம், கிள்ளியூர் மற்றும் விளவங்கோடு ஆகியவை) இரண்டு, இரு உறுப்பினர் தொகுதிகளும் (அதாவது அகஸ்தீஸ்வரம் மற்றும் எரணியல் ஆகியவை) அடங்கியிருந்தன. இப்பகுதியிலிருந்த ஒரே பாராளுமன்றத்தொகுதி நாகர்கோவிலாகும்.

ஒன்பது சட்டமன்றத்தொகுதிக்கு நடந்த தேர்தல்களில் திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி ஆறு இடங்களிலும் சோஷலிஸ்ட் கட்சி இரண்டு இடங்களிலும் வெற்றி பெற்றன. ஓர் இடத்தில் சுயேச்சை வேட்பாளர் வெற்றிபெற்றார்[3]. பாராளுமன்ற இடங்கள் மூன்றிலும் திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி வெற்றிகொண்டது. தற்போதைய கன்னியாகுமரி மாவட்டத்திலடங்கிய பகுதி, தமிழ்நாடு மாநிலத்துடன் இணைந்த பின்னர்

திருவாங்கூர் - கொச்சி மாநில சட்டமன்றத்திற்குரிய பிரதிநிதித்துவம் முடிவுற்றது.

மாநில சட்டசபையிலும், மத்திய பாராளுமன்றத்திலும் மாவட்டத்திற்குரிய பிரதிநிதித்துவம்

பொதுத்தேர்தல்

இரண்டாவது தடவையாக 1957 ஆம் ஆண்டு நாட்டில் பொதுத் தேர்தல் நடைபெற்றது. ஆனால் சென்னை மாநிலத்துடன் தற்போதைய கன்னியாகுமரி மாவட்டப்பகுதி இணைந்த பின்னர் மாவட்டத்தில் நடந்த முதல் பொதுத்தேர்தல் இதுவேயாகும். கன்னியாகுமரி, நாகர்கோவில், குளச்சல், பத்மநாபபுரம், கிள்ளியூர் மற்றும் விளவங்கோடு ஆகிய ஆறு சட்டமன்றத்தொகுதிகள் மாவட்டத்தில் இருந்தன. மாவட்டத்திலிருந்த ஒரே பாராளுமன்றத்தொகுதி நாகர்கோவிலாகும். அதனில், நாகர்கோவில், குளச்சல், கிள்ளியூர், பத்மநாபபுரம் மற்றும் விளவங்கோடு ஆகிய ஐந்து சட்டமன்றத்தொகுதிகள் அடங்கியிருந்தன. கன்னியாகுமரி சட்டமன்றத் தொகுதி, திருச்செந்தூர் பாராளுமன்றத் தொகுதியில் இணைக்கப்பட்டது.

1962ஆம் ஆண்டு மூன்றாவது பொதுத் தேர்தல் நடைபெறும் வரை, எவ்வித மாற்றமுமின்றி இதே அளவிலான பாராளுமன்ற மற்றும் சட்டமன்றத் தொகுதிகள் தொடர்ந்தன.

1962ஆம் ஆண்டு பாராளுமன்ற சட்டமன்றத் தொகுதிகளுக்கு எல்லைக்குறி வரையறுக்கும் குழு தமிழ்நாட்டில் 234 சட்டமன்றத் தொகுதிகளை அமைத்திட பரிந்துரைத்தது. அதன் விளைவாக கன்னியாகுமரி மாவட்டத்திற்கு 1967 ஆம் ஆண்டு நடந்த நான்காவது பொதுத்தேர்தலுக்கு ஒரு சட்டமன்றத்தொகுதி அதாவது திருவட்டார் தொகுதி அதிகமாகச் சேர்ந்துள்ளது. அதனைத் தொடர்ந்து, மாவட்டத்திலுள்ள சட்டமன்றத் தொகுதிகள் எண்ணிக்கை 6-லிருந்து 7 ஆக உயர்ந்தது. கன்னியாகுமரி சட்டமன்றத்தொகுதி முன்னர் போன்றே, திருச்செந்தூர் பாராளுமன்றத் தொகுதியில் தொடர்ந்து இருந்து வந்தது. ஏற்கனவே இருந்து வந்த ஐந்து சட்டமன்றத்தொகுதிகளும் புதிதாக உருவான திருவட்டார் சட்டமன்றத் தொகுதியும் சேர்ந்து நாகர்கோவில் பாராளுமன்றத் தொகுதியாக அமைக்கப்பட்டன.

1972ஆம் ஆண்டின் தொகுதிகள் எல்லைக்குறி வரையறுக்கும் சட்டத்தின்படி சட்டமன்ற மற்றும் பாராளுமன்றத் தொகுதிகளில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. மாநில சட்டமன்றத்தைப் பொறுத்த வரை தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு பாராளுமன்றத்தொகுதியும், ஆறு சட்டமன்றத்தொகுதிகளைக் கொண்டதாக அமைய வேண்டுமென குழு முடிவு செய்தது. இம்மாவட்டத்தைப் பொறுத்தவரை, முந்தைய நிலையில் எவ்வித மாற்றமுமில்லை. மாவட்டத்தில் ஏற்கனவே, ஆறு சட்டமன்றத்தொகுதிகளிருந்தன. அவற்றிலொன்று திருச்செந்தூர்

பாராளுமன்றத்தொகுதியில் அடங்கியிருந்தது. எனவே பாராளுமன்றத் தொகுதி, குழுவினால் நிர்ணயிக்கப்பட்ட உருமாதிரியைப் பூர்த்தி செய்தது. இத்தொகுதிகளின் எல்லைகள், இ.பி. 2000 வரை எவ்வித மாறுதலுக்கும் உட்படுத்தப்படாமல் அவ்வாறே தொடர்ந்து நீடிக்கும்[4].

அரசியல் கட்சிகளின் நிலை

1952ஆம் ஆண்டு முதல் பொதுத்தேர்தலில் மாவட்டத்தில் போட்டியிட்ட அரசியல் கட்சிகள் சோசலிஸ்ட், காங்கிரஸ், திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் ஆகியவையாகும். அவற்றுடன் சில சுயேச்சை வேட்பாளர்களும் போட்டியிட்டனர். 1957ஆம் ஆண்டின் இரண்டாவது பொதுத்தேர்தலின்போது, இந்திய தேசிய காங்கிரஸ், திராவிட முன்னேற்றக்கழகம், கம்யூனிஸ்ட், மக்கள் முன்னேற்றக்கட்சி மற்றும் பிரஜா சோஷலிஸ்ட் கட்சி ஆகியவை போட்டியிட்டன. மாவட்டத்திலுள்ள ஆறு சட்டமன்றத் தொகுதிகளில் கிள்ளியூர் மற்றும் விளவங்கோடு ஆகிய தொகுதிகளுக்கு இரு காங்கிரஸ் வேட்பாளர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டனர்[5]. எஞ்சிய தொகுதிகளில் மூன்றை காங்கிரஸ் வேட்பாளர்களும் ஒன்றை சுயேச்சை வேட்பாளரும் கைப்பற்றினர். நாகர்கோவில் பாராளுமன்றத் தொகுதி இந்திய தேசிய காங்கிரஸ் வேட்பாளரைத் தனது பிரதிநிதியாகத் தேர்ந்தெடுத்தது.

1962 பொதுத்தேர்தலில் மாவட்டத்தின் ஆறு சட்டமன்றத் தொகுதிகளில் நான்கு தொகுதிகளில் காங்கிரஸ் கட்சி வேட்பாளர்கள் வெற்றிபெற்றனர். எஞ்சிய இரண்டு தொகுதிகளை சுயேச்சை வேட்பாளர்கள் கைப்பற்றினர்[6]. பாராளுமன்றத் தொகுதியினை, இந்திய தேசிய காங்கிரஸ் தக்கவைத்துக்கொண்டது.

1967ஆம் ஆண்டு நடைபெற்ற நான்காவது பொதுத்தேர்தலில் காங்கிரஸ் கட்சி ஆறு சட்டமன்றத்தொகுதிகளைக் கைப்பற்றியது எஞ்சிய ஓர் இடத்தினை திராவிட முன்னேற்றக்கழகம் வென்றது[7]. நாகர்கோவில் பாராளுமன்றத்தொகுதியினை இந்திய தேசிய காங்கிரஸ் தக்கவைத்துக் கொண்டது[8].

நிர்ணயிக்கப்பட்ட காலவரம்பிற்கு ஓராண்டிற்கு முன்னதாகவே பாராளுமன்றம் கலைக்கப்பட்டு, 1971 மார்ச் மாதம் ஐந்தாவது பொதுத்தேர்தல் நடைபெற்றது. திராவிட முன்னேற்றக்கழகம், சுதந்திரக் கட்சி, இந்திய தேசிய காங்கிரஸ் (ஸ்தாபனம்) மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவை ஏழு சட்டமன்றத் தொகுதிகளுக்குப் போட்டியிட்டன. இந்திய தேசிய காங்கிரஸ் நிறுவனம் ஐந்து இடங்களையும், திராவிட முன்னேற்றக்கழகம் மற்றும் சுதந்திராக்கட்சி ஏனைய இரண்டு இடங்களையும் (தலா ஒன்றுவீதம்) கைப்பற்றின.[9] பாராளுமன்ற இடத்தினை இந்திய தேசிய காங்கிரஸ் (ஸ்தாபனம்) வென்றது.[10]

ஆறாவது பொதுத்தேர்தல் 1977ஆம் ஆண்டு நடைபெற்றது. இந்திய தேசிய காங்கிரஸ், ஜனதாக்கட்சி, திராவிட முன்னேற்றக்கழகம், அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவை இத்தேர்தலில் போட்டியிட்டன. ஜனதாக்கட்சி நான்கு இடங்களையும், அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் இரண்டு இடங்களையும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஒரு இடத்தையும் வென்றது. பாராளுமன்றத்தொகுதி இடத்தினை இந்திய தேசிய காங்கிரஸ் (ஸ்தாபனம்) கைப்பற்றியது.

1980ஆம் ஆண்டு நடைபெற்ற ஏழாவது பொதுத்தேர்தலில் காந்தி காமராஜ் தேசிய காங்கிரசும் களத்தில் குதித்தது. இந்தத் தடவை ஜனதா (ஜெ.பி.), அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் பார்ட்டி ஆகியவை ஒவ்வொன்றும் இரு இடங்களை வென்றன. எஞ்சிய சட்டமன்றத்தொகுதியை திராவிட முன்னேற்றக் கழகம் வென்றது. பாராளுமன்றத்தொகுதியினை இந்திய தேசிய காங்கிரஸ் (இ) வென்றது.

எட்டாவது பொதுத்தேர்தல் பாராளுமன்ற மற்றும் சட்டமன்றத் தொகுதிகளுக்கு ஒரே நேரத்தில் 1984 ஆம் ஆண்டு நடத்தப்பெற்றது. அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம், திராவிட முன்னேற்றக்கழகம், காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ், இந்திய தேசிய காங்கிரஸ், பாரதீய ஜனதாக்கட்சி, ஜனதா, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் பார்ட்டி ஆகிய அரசியல் கட்சிகளுடன் சுயேட்சை வேட்பாளர்களும் போட்டியிட்டனர். அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம், இரண்டு இடங்களையும், ஜனதா, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய தேசிய காங்கிரஸ், திராவிட முன்னேற்றக்கழகம் ஆகிய ஒவ்வொன்றும் முறையே ஓர் இடத்தை வென்றன. எஞ்சிய ஓர் இடத்தை சுயேச்சை வேட்பாளர் வென்றார். பாராளுமன்றத் தொகுதியினை இந்திய தேசிய காங்கிரஸ் வென்றது.

தமிழ்நாடு சட்டமன்றம் 1988 சனவரி மாதம் கலைக்கப்பட்டு, ஜனவரி 28, 1989 வரை மாநிலம், ஜனாதிபதி ஆட்சியின்கீழ் கொணரப்பட்டதாகப் பிரகடனம் செய்யப்பட்டது. பின்னர், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து சட்டமன்றத் தொகுதிகளுக்கும், ஜனவரி, 21, 1989 அன்று பொதுத்தேர்தல் நடைபெற்றது.

திராவிட முன்னேற்றக்கழகம், இந்திய தேசிய காங்கிரஸ், அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் (ஜெயலலிதா), அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் (ஜானகி இராமச்சந்திரன்), பாரதீய ஜனதாக்கட்சி ஆகிய கட்சிகளுடன், சில சுயேட்சை வேட்பாளர்களும் மாவட்டத்திலுள்ள ஏழு சட்டமன்றத் தொகுதிகளுக்குப் போட்டியிட்டனர். இந்திய தேசிய காங்கிரஸ் நான்கு தொகுதிகளில் வென்றது. எஞ்சிய மூன்று தொகுதிகளும், திராவிட முன்னேற்றக்கழகம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் பார்ட்டி மற்றும் ஒரு சுயேச்சை வேட்பாளர் ஆகியோரால் வெற்றி கொள்ளப்பட்டன.

இந்த பொதுத் தேர்தல்களின் முடிவுகள் தேர்தல் வாரியாக மாவட்டத்திலுள்ள வாக்காளர்களது எண்ணிக்கையின் ஒப்பீட்டுணர்ந்த மதிப்பீட்டு விவரங்கள் கீழ்க்குறிப்பிட்ட பட்டியலில் அளிக்கப் பட்டுள்ளன:

இரண்டாவது பொதுத் தேர்தல் முடிவுகள் - 1957

தொடர் எண். (1)	தொகுதியின் பெயர் (2)	வெற்றிபெற்ற கட்சியின் பெயர் (3)	வாக்காளர் களின் எண்ணிக்கை (4)	பெற்ற வாக்கு களின் எண்ணிக்கை (5)
	சட்டமன்றத் தொகுதிகள்[11]			
1.	கன்னியாகுமரி	சுயேச்சை	71,481	24,551
2.	நாகர்கோவில்	காங்கிரஸ்	90,534	44,073
3.	குளச்சல்	டி	78,859	14,055
4.	பத்மநாபபுரம்	டி	77,102	29,276
5.	கிள்ளியூர்	டி	66,513	போட்டி யின்றித்
6.	விளவங்கோடு	டி	67,159	தேர்வு
	பாராளுமன்றத் தொகுதி[12]			
1.	நாகர்கோவில்	காங்கிரஸ்	3,80,167	1,43,288

மூன்றாவது பொதுத் தேர்தல் முடிவுகள் - 1962

தொடர் எண். (1)	தொகுதியின் பெயர் (2)	வெற்றிபெற்ற கட்சியின் பெயர் (3)	வாக்காளர் களின் எண்ணிக்கை (4)	பெற்ற வாக்கு களின் எண்ணிக்கை (5)
	சட்டமன்றத் தொகுதிகள்[13]			
1.	கன்னியாகுமரி	காங்கிரஸ்	80,199	46,263
2.	நாகர்கோவில்	டி	99,408	37,079
3.	குளச்சல்	சுயேச்சை	88,634	36,054
4.	கிள்ளியூர்	காங்கிரஸ்	78,086	25,278
5.	பத்மநாபபுரம்	சுயேச்சை	87,999	23,747
6.	விளவங்கோடு	காங்கிரஸ்	76,820	30,386
	பாராளுமன்றத் தொகுதி			
1.	நாகர்கோவில்	காங்கிரஸ்	4,30,947	1,57,208

நான்காவது பொதுத் தேர்தல் முடிவுகள் - 1967

தொடர் எண்.	தொகுதியின் பெயர்	வெற்றிபெற்ற கட்சியின் பெயர்	வாக்காளர் களின் எண்ணிக்கை	பெற்ற வாக்கு களின் எண்ணிக்கை
(1)	(2)	(3)	(4)	(5)
		சட்டமன்றத் தொகுதிகள்[14]		
1.	கன்னியாகுமரி	இந்திய தேசிய காங்கிரஸ்	85,534	37,998
2.	நாகர்கோவில்	திராவிட முன்னேற்றக் கழகம்	86,263	36,502
3.	குளச்சல்	இந்திய தேசிய காங்கிரஸ்	86,726	22,325
4.	பத்மநாபபுரம்	ஷை	78,992	24,663
5.	திருவட்டார்	ஷை	75,416	29,345
6.	விளவங்கோடு	ஷை	73,410	27,511
7.	கிள்ளியூர்	ஷை	73,403	21,423
		பாராளுமன்றத் தொகுதி[15]		
1.	நாகர்கோவில்	இந்தியதேசிய காங்கிரஸ்	47,210	1,80,265

ஐந்தாவது பொதுத் தேர்தல் முடிவுகள் - 1971

தொடர் எண்	தொகுதியின் பெயர்	வெற்றிபெற்ற கட்சியின் பெயர்	வாக்காளர் களின் எண்ணிக்கை	பெற்ற வாக்கு களின் எண்ணிக்கை
(1)	(2)	(3)	(4)	(5)
		சட்டமன்றத் தொகுதிகள்[16]		
1.	கன்னியாகுமரி	திராவிட முன்னேற்றக் கழகம்	93,383	35,884
2.	நாகர்கோவில்	சுதந்திராக்கட்சி	1,01,962	34,726
3.	குளச்சல்	இந்திய தேசிய காங்கிரஸ் (ஸ்தாபனம்)	97,695	37,401
4.	பத்மநாபபுரம்	ஷை	89,344	32,416
5.	விளவங்கோடு	ஷை	85,839	32,139
6.	கிள்ளியூர்	ஷை	85,361	34,573
		பாராளுமன்றத் தொகுதி[17]		
1.	நாகர்கோவில்	இந்திய தேசிய காங்கிரஸ் (ஸ்தாபனம்)	5,53,220	2,15,325

ஆறாவது பொதுத் தேர்தல் முடிவுகள் - 1977

தொடர் எண். (1)	தொகுதியின் பெயர் (2)	வெற்றிபெற்ற கட்சியின் பெயர் (3)	வாக்காளர் களின் எண்ணிக்கை (4)	பெற்ற வாக்கு களின் எண்ணிக்கை (5)
		சட்டமன்றத் தொகுதிகள்[18]		
1.	கன்னியாகுமரி	அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்	1,04,698	23,222
2.	நாகர்கோவில்	ஷி	1,32,870	26,973
3.	குளச்சல்	ஜனதா	1,11,755	21,131
4.	பத்மநாபபுரம்	ஷி	97,615	22,910
5.	திருவட்டார்	ஷி	96,167	27,812
6.	விளவங்கோடு	மார்க்சிஸ கம்யூனிஸ்ட் கட்சி	1,17,831	32,628
7.	கிள்ளியூர்	ஜனதா	95,659	34,237
		பாராளுமன்றத் தொகுதி		
1.	நாகர்கோவில்	இந்திய தேசிய காங்கிரஸ்	6,45,032	2,44,526

ஏழாவது பொதுத் தேர்தல் முடிவுகள் - 1980

தொடர் எண். (1)	தொகுதியின் பெயர் (2)	வெற்றிபெற்ற கட்சியின் பெயர் (3)	வாக்காளர் களின் எண்ணிக்கை (4)	பெற்ற வாக்கு களின் எண்ணிக்கை (5)
		சட்டமன்றத் தொகுதிகள்		
1.	கன்னியாகுமரி	அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்	1,12,972	35,613
2.	நாகர்கோவில்	ஷி	1,30,424	39,328
3.	குளச்சல்	திராவிட முன்னேற்றக் கழகம்	1,15,330	42,349
4.	பத்மநாபபுரம்	ஜனதாக்கட்சி (ஜெ. நா)	1,01,364	19,758
5.	திருவட்டார்	மார்க்சிஸ கம்யூனிஸ்ட் கட்சி	1,01,139	29,463
6.	விளவங்கோடு	ஷி	1,22,522	34,170
7.	கிள்ளியூர்	ஜனதாக்கட்சி (ஜெ.நா)	97,360	31,521
		பாராளுமன்றத் தொகுதி		
1.	நாகர்கோவில்	இந்திய தேசிய காங்கிரஸ் (இ)	6,63,322	1,87,111

எட்டாவது பொதுத் தேர்தல் முடிவுகள் - 1984

தொடர் எண். (1)	தொகுதியின் பெயர் (2)	வெற்றிபெற்ற கட்சியின் பெயர் (3)	வாக்காளர் களின் எண்ணிக்கை (4)	பெற்ற வாக்கு களின் எண்ணிக்கை (5)
		சட்டமன்றத் தொகுதிகள்[19]		
1.	கன்னியாகுமரி	அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம்	1,21,584	45,353
2.	நாகர்கோவில்	திராவிட முன்னேற்றக்கழகம்	1,35,489	41,572
3.	குளச்சல்	அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்	1,23,569	33,589
4.	பத்மநாபபுரம்	சுயேச்சை	1,10,266	28,465
5.	திருவட்டார்	மார்க்சிஸ கம்யூனிஸ்ட் கட்சி	1,10,731	26,851
6.	விளவங்கோடு	இந்திய தேசிய காங்கிரஸ்	1,35,185	47,169
7.	கிள்ளியூர்	ஜனதா	1,05,740	36,944
		பாராளுமன்றத் தொகுதி		
1.	நாகர்கோவில்	இந்திய தேசிய காங்கிரஸ்	7,20,980	2,35,365

ஒன்பதாவது பொதுத் தேர்தல் முடிவுகள் - 1989

தொடர் எண். (1)	தொகுதியின் பெயர் (2)	வெற்றிபெற்ற கட்சியின் பெயர் (3)	வாக்காளர் களின் எண்ணிக்கை (4)	பெற்ற வாக்கு களின் எண்ணிக்கை (5)
		சட்டமன்றத் தொகுதிகள்		
1.	கன்னியாகுமரி	திராவிட முன்னேற்றக் கழகம்	1,40,558	33,376
2.	நாகர்கோவில்	இந்திய தேசிய காங்கிரஸ்	1,56,744	35,647
3.	குளச்சல்	ஜெ	1,41,330	36,611
4.	பத்மநாபபுரம்	மார்க்சிஸ கம்யூனிஸ்ட் கட்சி	1,25,883	21,489
5.	திருவட்டார்	இந்திய தேசிய காங்கிரஸ்	1,29,184	39,193
6.	விளவங்கோடு	ஜெ	1,55,021	41,168
7.	கிள்ளியூர்	சுயேச்சை	1,21,936	30,127
		பாராளுமன்றத் தொகுதி		
1.	நாகர்கோவில்	இந்திய தேசிய காங்கிரஸ்	9,52,947	2,92,817

கன்னியாகுமரி மாவட்ட வாக்காளர்கள் தொடர்பாக ஒப்பிட்டுணர்ந்த மதிப்பேடு

தொடர் எண்.	ஆண்டு	வாக்காளர்களின் எண்ணிக்கை
1.	1952	-
2.	1957	4,51,648
3.	1962	5,11,146
4.	1967	5,59,764
5.	1971	6,46,603
6.	1977	7,56,595
7.	1980	7,81,111
8.	1984	8,42,564
9.	1989	9,70,656

செய்தித்தாள்களும், பருவ இதழ்களும்

தீவுப்பகுதிகள் தொடர்பாக வரலாற்று நுட்பத்திறங்கொண்டோர், கன்னியாகுமரிக்குத் தெற்கே ஒரு பெரிய நிலப்பகுதி கடலில் அமிழ்ந்து போயிருப்பதான தங்களது ஊகக்கருத்தை வெளியிட்டுள்ளனர்[20]. முதல் இரண்டு தமிழ்ச் சங்கங்கள், (அறிவு செறிந்த) நடந்தேறிய தென்மதுரை மற்றும் கபாடபுரம் ஆகியவை, கடலில் அமிழ்ந்துபோன கண்டத்தில், இருந்திருக்கலாமெனவும் தெரிவிக்கப்படுகிறது. நாட்டிலுள்ள பலவேறு இலக்கியப் புலமை வாய்ந்த படைப்புகளுக்கு இச்சங்கங்களே இசைவாதை யளிக்கும் அமைப்புகளாகத் திகழ்ந்ததால், இம்மாவட்டம் மிகப் பண்டைக் கால வரலாற்றுச் சிறப்பினைப் பெற்றதாகு மென்பதில் ஐயமில்லை.

தற்காலத்தில் கூட அச்சுத்துறை வளர்ச்சியில் மாவட்டம் ஒரு குறிப்பிடத்தக்க சாதனை படைத்துள்ளது. 1840 ஆம் ஆண்டில், "பால தீபிகா" என்ற குழந்தைகளுக்கான தமிழ் பருவ இதழ், நாகர்கோவிலில் துவக்கப்பட்டது. தமிழ்நாட்டில் இதுவே முதன்மையில் வெளியான பருவ இதழாகும். 1861 ஆம் ஆண்டு "தேசோபகாரி" என்ற மாதாந்திர இதழ், தமிழில் இலண்டன் சமயபரப்புக்குழுச் சங்கத்தால் துவங்கப்பட்டது. இது இன்னமும் கன்னியாகுமரி மாவட்ட சமய முதல்வரின் அருளாட்சிப் பரப்பு அமைப்பினால் வெளியிடப்பட்டுவருகிறது[21].

1874 ஆம் ஆண்டு நாட்டிலேயே முதன்முதலில் "திருவாங்கூர் அபிமானி" என்ற தமிழ் நாளிதழை வெளியிட்டார். பின்னர் அது தொடர்ந்து வெளிவரவில்லை[22].

அண்மைக்காலத்தில் மாவட்டத்தினின்றும் பல உள்ளூர் பருவ இதழ்கள் வெளியிடப்பட்டன. ஆனால் அவற்றை ஏதாவதொரு காரணத்தை முன்னிட்டு தொடர்ந்து வெளியிட இயலவில்லை. அவற்றில் முக்கிய பருவ

இதழ்கள், தமிழியன் (திரு. பி. சிதம்பரம் பிள்ளை வெளியிட்டது), தேவி (திரு. மகாலிங்க முதலியார் வெளியிட்டது), சதங்கை (வானமாளிகை வெளியிட்டது), நான்சில், தமிழருவி, கன்னியாகுமரி, புதுமை, சுடர் மற்றும் உழவன் ஆகியவையாகும்.

தற்போது மாவட்டத்தில் கீழ்க்குறிப்பிட்ட பருவ இதழ்கள் வெளியிடப்படுகின்றன :

தொடர் எண்.	பருவ இதழின் பெயர்	பருவ காலம்	பதிப்பாசிரியரின் பெயர்
1.	தீவிரவாதி (தமிழ்)	மாதாந்திரம்	திரு. என்.ஏ.வேலாயுதம்
2.	தேன்குரல் (தமிழ்)	ஷெ	அர்ச்சுணன்
3.	கவி அமுது (தமிழ்)	ஷெ	சிவசுப்பிரமணியன்
4.	கை விளக்கு (தமிழ்)	ஷெ	பூதை–அண்ணாமலை
5.	தேசோபகாரி (தமிழ்)	ஷெ	கன்னியாகுமரி சமய முதல்வரின் அருளாட்சிப் பரப்பு அமைப்பு

மாவட்டத்திற்கு வெளியே வெளியிடப்பட்டு மாவட்டத்தில் சுற்றுக்கு விடப்பட்டுள்ள செய்தித்தாள்களும், பருவ இதழ்களும்

கீழ்க்குறிப்பிட்ட செய்தித்தாள்களும், பருவ இதழ்களும், பிறமாவட்டங்களிலிருந்து வெளியிடப்பட்டு தற்போது இம்மாவட்டத்தில் சுற்றுக்கு விடப்பட்டுள்ளன:

1. செய்தித்தாள்கள் (நாளிதழ்)

தொடர் எண்.	செய்தித்தாளின் பெயர்	மொழி	வெளியிடப்படும் இடம்
1.	இந்து	ஆங்கிலம்	மதுரை
2.	இந்தியன் எக்ஸ்பிரஸ்	ஷெ	ஷெ
3.	தினத்தந்தி	தமிழ்	திருநெல்வேலி
4.	தினமணி	ஷெ	மதுரை
5.	தினமலர்	ஷெ	திருநெல்வேலி
6.	மாலை முரசு	ஷெ	ஷெ
7.	மாலை மலர்	ஷெ	ஷெ
8.	தினகரன்	ஷெ	ஷெ
9.	அண்ணா	ஷெ	சென்னை
10.	முரசொலி	ஷெ	ஷெ
11.	மனோரமா	மலையாளம்	திருவனந்தபுரம்
12.	கேரளகுமுதி	ஷெ	ஷெ
13.	வாஞ்சிநாடு	தமிழ்	ஷெ

2. பருவ இதழ்கள் (தாய்மொழி)

தொடர் எண். (1)	பருவ இதழின் பெயர் (2)	பருவகாலம் (3)	மொழி (4)	வெளியிடப்படும் இடம் (5)
1.	தமிழரசு	மாதாந்திரம்	தமிழ்	சென்னை
2.	குமுதம்	வாராந்திரம்	ஷெ	ஷெ
3.	ஆனந்த விகடன்	ஷெ	ஷெ	ஷெ
4.	கல்வி	ஷெ	ஷெ	ஷெ
5.	துக்ளக்	மாதமிருமுறை	ஷெ	ஷெ
6.	குங்குமம்	வாராந்திரம்	ஷெ	ஷெ
7.	ஜூனியர் விகடன்	ஷெ	ஷெ	ஷெ
8.	ராணி	ஷெ	ஷெ	ஷெ
9.	தேவி	ஷெ	ஷெ	ஷெ
10.	கல்கண்டு	ஷெ	ஷெ	ஷெ
11.	கலைமகள்	மாதாந்திரம்	ஷெ	ஷெ

3. பருவ இதழ்கள் (ஆங்கிலம்)

1.	பிரண்ட்லைன்	மாதமிருமுறை	ஆங்கிலம்	சென்னை
2.	இல்லஸ்ட்டிரேட்டட் வீக்லி ஆஃப் இந்தியா	வாராந்திரம்	ஷெ	பம்பாய்
3.	சண்டே	ஷெ	ஷெ	கல்கத்தா
4.	இந்தியா டுடே	ஷெ	ஷெ	புதுடில்லி
5.	தி வீக்	ஷெ	ஷெ	திருவனந்தபுரம்
6.	மிர்ரர்	மாதாந்திரம்	ஷெ	பம்பாய்
7.	காம்பெடிஷன் சக்சஸ்–ரிவ்யூ	ஷெ	ஷெ	புதுடில்லி
8.	காம்பெடிஷன் மாஸ்டர்	ஷெ	ஷெ	சண்டிகார்
9.	விஸ்டம்	ஷெ	ஷெ	சென்னை

சமூகப்பணி அமைப்புகள்

நமது நாட்டில், சமூகப்பணி அமைப்புகள், அண்மை காலத்தில் தோன்றியுள்ளவையே. இந்திய வரலாற்றின் தொன்மையான மற்றும் இடைநிலைக் காலத்தில் அதற்கு வாய்ப்பில்லாத ஒரு சூழ்நிலை உருவாகியிருந்தது. இந்து சமயம் அப்போது கடைப்பிடிக்கப்பட்டு வந்த, கூட்டுக் குடும்ப மற்றும் சமுதாயமுறை ஆகியவற்றில் சமூகப்பணியமைப்புகள் தேவையெனக்கருதவில்லை. கூட்டு குடும்ப அமைப்பில் இடம்பெற்ற உறுப்பினர்கள், வலுக்குறைந்திருந்தாலும், வலிமை பெற்றிருந்தாலும்,

உடல்நலத்தைப் பெற்றிருந்தாலும், நோயுற்றிருந்தாலும், வேலை வாய்ப்பினைப் பெற்றிருந்தாலும், வேலையற்றிருந்தாலும், கூட்டுக் குடும்பத்தலைவர் அவர்களின் நலனில் அக்கறை செலுத்தி வந்தார். குடும்ப உறுப்பினர்கள், எந்த இடர்பாடுகளுக்கும் அஞ்சியதில்லை. எனவே, குடும்பத்திற்கு வெளியிலிருந்து, எவ்விதத்தேவையையும், அவர்கள் எதிர்நோக்கியதில்லை. இந்திய நாட்டில் ஆங்கில ஏகாதிபத்தியம், வேரூன்றிய பின்னர், சமூக ஒட்டிணைவாற்றல் மற்றும் பிணைப்பு தளரத்துவங்கியது. மாறாக, தன்னல உணர்ச்சி மேலோங்கியது. அது தவிர, மேற்கத்திய நாகரீகத்தின் மீதான மோகம், இந்திய மக்களை சுயநலமிகளாக்கியது. அதன் செயல் விளைவு கடுமையாக இருந்தது. கூட்டுக்குடும்பம் மற்றும் சமுதாய முறை சிறிது சிறிதாக மங்கத் தொடங்கியது. எனினும், சமயப் பரப்பாளர்களின் நடவடிக்கைகள், ஓரளவிற்கு, இந்தத் தொன்மையான அமைப்புகளின் அழிவினால் ஏற்பட்ட வெறுமையினை நிரப்பி வந்தன.

சமயப் பரப்பாளர்கள், பள்ளிகள், அனாதை விடுதிகள், மருந்தகங்கள் மற்றும் மருத்துவமனைகள் ஆகியவற்றைத் திறந்து இவற்றின் வாயிலாக நாட்டில் சமூகப் பணியினைத் துவங்கினார்கள். இதுதான் நாட்டில், சமூகப்பணிக்குத் துவக்கமாக அமைந்தது.

கன்னியாகுமரி மாவட்டத்தில், 1818 ஆம் ஆண்டு சமூகப் பணி வேரூன்றத் தொடங்கியது. பிராடெஸ்டெண்ட் (கத்தோலிக்க திருச்சபையிலிருந்து பிரிந்து சென்றோர்) சமயப் பரப்பாளர்கள், முதல் ஆங்கிலப் பள்ளியினை நாகர்கோவிலில் அமைத்து இவ்வாறாக மேலும் பல வளர்ச்சிப் பணிகளை மேற்கொண்டனர். பெண்களின் கல்விக்காக, திருமதி மீட் என்ற சமயப்பரப்பாளர் சீரிய முயற்சியெடுத்து பெண்களுக் கென்றே 1819 ஆம் ஆண்டு நாகர்கோவிலில் ஒரு தங்கும் மற்றும் உணவு வசதிகள் உடைய பள்ளியினை நிறுவினார்[23]. புனித அந்தோனியர் கிறித்தவத் திருக்கோவிலின் பெருமதிப்பிற்குரிய விக்டர் என்பார், ஏழை எளிய மக்களுக்குப் பணிபுரிய வேண்டுமென்ற உயர்நோக்கத்தில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார். அதன் விளைவாக 1860 ஆம் ஆண்டு முளகுமோடில் ஒரு ரோமன் கத்தோலிக்க மையம் நிறுவப்பட்டது. இரண்டாண்டுகள் கடந்த பின்னர், சிறிய பணச்செலவில் ஒரு அனாதை விடுதியும், ஒரு பெண் துறவியர் மடமும் அமைக்கப்பட்டன[24].

1899 ஆம் ஆண்டு மதிப்புமிக்க தாய் லூயிசா மற்றும் தாய் உர்சுலா என்ற பெல்ஜியத்திலிருந்து வந்த பெண் துறவியர், பெண் துறவியர் மடத்தினைப் பொறுப்பேற்றுக்கொண்டு பெண்கள் நலனுக்காக தங்களை அர்பணித்துக் கொண்டனர். அவர்களது காலத்தில்தான் புகழ்பெற்ற முலகுமூடு, வார் இழை மற்றும் சித்திரப்பின்னல் வேலைப்பாடுடைய துணிவகைகள் வெளிவந்தன[25].

மாவட்ட சமூகப்பணி வரலாற்றின் மற்றொரு திருப்புமுனை யாதெனில், இரட்சனிய சேனை, கடந்த 1897 ஆம் ஆண்டு, தாழ்த்தப்பட்ட

வகுப்பினரின் நலனுக்காக நாகர்கோவிலில் கர்த்தரின் பூத் மருத்துவமனை நிறுவப்பட்டது[26]. இலண்டன் சமயப் பரப்பாளரும், அதனைப் பின்பற்றி 1938 ஆம் ஆண்டு நெய்யூரில் ஒரு மருத்துவ சமய பரப்புக்குழுவினை நிறுவியது. இது, தற்போது தென்னிந்திய திருச்சபை மருத்துவமனை என அழைக்கப்படுகிறது (இதைப்பற்றிய விவரங்கள், "மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுப் பணிகள்" என்ற இயலில் அளிக்கப்பட்டுள்ளன). ஆனால் இன்றைய நிலை மிகவும் மாறுபட்டதாகும். எங்கு நோக்கினும் குறிப்பாக இம்மாவட்டத்தில் பல சமூகப்பணி அமைப்புகள் தோன்றியுள்ளன. அவை பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

காந்தி ஆஸ்ரமம், தேரூர்

எஸ். சிவன்பிள்ளை என்ற வழக்கறிஞரான சமூக ஊழியர், 1946 ஆம் ஆண்டு தேரூரில், கஸ்தூர்பா ஆதாரப்பள்ளியினைத் துவக்கினார்[27] காந்திஜியின் கொள்கையினால் கவரப்பட்டு காந்தீய வழியில் அவர் குருகுலவாச முறையில் பள்ளி நடத்தினார்.

அவர் வார்தாவில் பயிற்சி பெற்றதால், காந்திஜியின் மீது பற்றுக் கொண்டு 1949 ஆம் ஆண்டு தேரூரில் காந்தி ஆசிரமத்தை நிறுவினார்.

1. துவக்கத்தில் இவ்வாசிரமத்தில் கதர் நூற்பு ஊக்குவிக்கப்பட்டது. நூற்புக்கலை நுணுக்கத்திறம், முன்னேற்றமடைந்து, நூற்புச் சக்கரத்திற்கு பதிலாக நூற்புக்கதிர் இயந்திரம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் பயனாக, ஆசிரமம் ஒரு கிராம நெசவு மையத்தினைத் துவக்கியது. அதில் 30 குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பளிக்கப்பட்டது.

2. 1951 ஆம் ஆண்டு பல்வேறு வகைப்பட்ட சமயம் மற்றும் சமுதாயத்தைச் சார்ந்த 20 குடும்பங் களுக்கு ஒரு மாதிரி வீட்டுவசதி குடியிருப்பு வளாகத்தை நிறுவியது. அவ் வீடுகளின் அடக்கவிலையினை சுலபத்தவணைகளில் செலுத்துவோருக்கு வீடுகள் ஒப்படைக்கப்பட்டு, உடைமையுரிமையும் அளிக்கப்பட்டுள்ளது.

3. குலசேகரன் புத்தூரில், ஆசிரமம் ஒரு மாதிரி நெற்பண்ணையைப் பராமரிக்கிறது. இங்கு வேளாண்மையின் தற்கால தொழில் நுணுக்கம் கற்பிக்கப்படுகிறது.

4. ஒரு பால்வாடி மையமும், அழகிய சோழநங்கை மாதர் சங்கம் என்ற சங்கமும், முறையே 1963 மற்றும் 1964-ல் துவங்கப்பெற்றன[28]. 40 குழந்தைகளைக்கொண்ட ஒரு பால்வாடியினைச் சங்கம் பராமரித்து வருகிறது. அனாதைப் பெண்களுக்குத் தனியாக, ஒரு தையல் வகுப்பும் நடத்தப்படுகிறது.

பணியாற்றும் தொழிற்சங்கம்

மாவட்ட ஆட்சித்தலைவரை பெருந்தலைவராகக் கொண்ட, "பணியாற்றும் தொழிற்சங்கம்" 1986 ஆம் ஆண்டு, நாகர்கோவிலில்

துவங்கப்பட்டது. இத்தொழிற்சங்கத்தின் ஏனைய அலுவல் குழு உறுப்பினர் கள் இரண்டு துணைத்தலைவர்கள் ஒரு கௌரவப் பொருளாளர் மற்றும் ஒரு கௌரவச் செயலர் ஆகியோராவார். இந்நிறுவனம் 44 உறுப்பினர்களைக் கொண்டதாகும். அவர்களில் 19 பேர் ஆயுள் உறுப்பினர்களாவர்.

இத்தொழிற்சங்கம், ஒரு குழந்தைகளைப் பேணி வளர்க்கும் ஒரு நிறுவனம், இரண்டு சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் காகிதக்கூடுகள் செய்யும் அலகு ஆகியவற்றை நாகர்கோவிலில் நடத்திவருகிறது. இத்தொழிற்சங்கத் தினால் துவங்கப்பெற்ற உயர்தரமான கிராம நெசவு மையம், தற்போது கதர் மற்றும் கிராமக் கைத்தொழில் வாரியத்தின் கட்டுப்பாட்டிலியங்கி வருகிறது. இம்மையத்தில் 40 கிராமப்புறப் பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது[29].

சரோஜினி புதுவாழ்வு மையம்

திரு. வின்சென்ட் என்பவரால் அவரது மனைவியின் நினைவாக, 1979 ஆம் ஆண்டு சரோஜினி புதுவாழ்வு மையம் நிறுவப்பட்டது. அவர் இம்மையம் நடத்துவதற்காக தனது பூர்வீக வீட்டையும், நிலத்தின் ஒரு பகுதியையும் இம்மையம் நடத்துவதற்காக, அளித்துள்ளார். சாதி, சமய வேறுபாடின்றி ஏழை, எளிய பெண்களுக்கு மறுவாழ்வு அளிப்பதே இம்மையத்தின் நோக்கமாகும். துவக்கத்தில் இம்மையம் 20 பெண்களுக்கு வேலை வாய்ப்பளித்தது. கூடுதல் தொழில்களான தையல், நார்பொருள் பை செய்தல், திருநிலைத்தாவர வகை மற்றும் பனயோலை இவற்றினால் பொருள்கள் செய்தல் ஆகியவை குறித்தும் பயிற்சி அளிக்கப்படுகிறது. தற்போது பயிற்சி பெறுவோரின் எண்ணிக்கை 58 ஆக உயர்ந்துள்ளது[30].

ஸ்ரீ கன்னியாகுமரி குருகுல ஆசிரமம், கன்னியாகுமரி

கன்னியாகுமரியிலுள்ள ஸ்ரீ கன்னியாகுமரி குருகுல ஆசிரமம், திருமதி. வி. அலமேலு அம்மாள் அவர்களால், 1952 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. ஆசிரமத்தைப் பராமரிப்பது குறித்து மகான் அரவிந்து அவர்களது சீடர்களான சுவாமி ஸ்ரீ நித்யம் கிரி மற்றும் சேலுக்கனி சீதாராமன் ஆகியோர் அவருக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தனர்[31].

ஏழை, எளிய மக்களின் நலனுக்காகப் பாடுபடுவதே, இவ்வாசிரமத்தின் நோக்கமாகும். அனாதைகளுக்கு உண்ண உணவு, இருக்க இடம் ஆகியவை அளித்து, அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதே இவ்வாசிரமத்தின் முக்கிய நோக்கமாகும்.

ஆசிரமத்தின் ஏனைய நடவடிக்கைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

1. நித்யாநந்தகிரீசா பாலாலயம் - 1964 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட குழந்தைகள் காப்பகம்.
2. ஜவஹர்லால் நேரு - பாலா க்ஷேத்ரா - மாநில சமூக நல வாரியத்தின் உதவிபெற்ற குழந்தைகள் வளர்ப்பரங்கம்.

3. "வள்ளலார் வனிதா மண்டலி" - பெண்களுக்கு வாழ்க்கைத் தொழில் சார்ந்த பயிற்சியளிக்கும் பயிற்சிக்கூடம்.

4. ஸ்ரீ குழந்தையானந்த சிசு பவன் - மத்திய அரசைச்சார்ந்த சமூக நலத்துறையின் உதவிபெற்ற குழந்தைகளைப் பேணி வளர்க்கும் நிறுவனம்.

தற்போது இந்த ஆசிரமத்தில் 150 குழந்தைகளும், 20 பெண்களும் 10 முதியோரும் உள்ளனர். ஐரோப்பியப் பொருளாதாரச் சமுதாயம் (இ.இ.சி.) மற்றும் டானிடா ஆகிய அகில உலக பிரசித்திபெற்ற நிறுவனங்களும் இந்நிறுவனத்திற்கு சில உதவிகளை அளித்துள்ளன.

மோகன் ஆசிரமம், நாகர்கோவில்

மாநில சமூகநல வாரியத்தின் நிதி உதவியுடன், இவ்வாசிரமம் 1961 முதல், ஒரு குழந்தைகள் நல மையத்தினை நடத்திவருகிறது. இரண்டரை வயதிலிருந்து ஐந்து வயது வரையிலான 50 குழந்தைகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் துவக்கக்கல்வி கற்பிக்கப்படுகிறது.

1961 ஆம் ஆண்டிலிருந்து இதுகாறும் 1250 குழந்தைகள், பயனடைந்துள்ளனர். வேலை பார்த்துவரும் பெண்களின் நலனுக்காக அவர்களின் மூன்றுக்கும் குறைவான வயதுள்ள 25 குழந்தைகளுக்காக, குழந்தைகளைப் பேணி பாதுகாக்கும் நிறுவனமொன்றினையும் அது நடத்தி வருகிறது.[32]

நாகர்கோவில் கழகம்

1889 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இக்கழகம், சிறிது காலம் இயங்காமலிருந்து பின்னர் புதுப்பிக்கப்பட்டு தற்போது ஒரு வரிப்பந்தாட்டக்கழகமாக நல்ல முறையில் நடைபெற்று வருகிறது.

கலைவாணர் மறைந்த என்.எஸ். கிருஷ்ணன் அவர்கள் இக்கழகத்தின் ஒரு பணியாளராக இருந்து பின்னர் பிரபல திரைப்பட நடிகரானார். அவர் திரைவானில் நன்கு பிரகாசித்த போதுகூட இக்கழகத்துடன் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். அவர் கழகத்தின் வளர்ச்சிக்கு தாராளமான நன்கொடை வழங்கினார். மாவட்டத்தின் ஏனைய பகுதியில் வரிப்பந்தாட்டக்கழகம் துவக்கிட இக்கழகம் பயிற்சி அளிக்கிறது[33].

கஸ்தூரிபா மாதர் சங்கம், நாகர்கோவில்[34]

தேரூரைச் சார்ந்த திருமதி. கமலாட்சி சிவன்பிள்ளை என்பவரது சீரிய தலைமையில், பொதுப்பணியாற்றும் நோக்கங்கொண்ட சில பெண்களின் கடுமையான உழைப்பினால் கடந்த 1944 செப்டம்பர் மாதம் 14-ம் நாள், கஸ்தூரிபா மாதர் சங்கம் துவங்கப்பட்டது. முந்தைய திருவாங்கூர் - கொச்சி மாநிலத்தின் முதலமைச்சர் திரு. ஏ.ஜே. ஜான் குத்தகைப்பட்டமாக அளித்த 9½ சென்ட் பரப்பளவுள்ள புறம்போக்கு நிலத்தில் சங்கத்தின் கட்டிடம் கட்டப்பட்டது. சங்கத்தின் உறுப்பினர்களாலளிக்கப்பட்ட சந்தாத்தொகை

மற்றும் நாகர்கோவிலிலுள்ள சங்கத்தின் நலம் விழைவோர், கொடையாளிகள், சங்க உறுப்பினர்கள் மற்றும் வெளியார்கள் ஆகியோர் வழங்கிய நன்கொடை இவற்றைக் கொண்டு சங்கக்கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டது. முந்தைய திருவாங்கூர் மாநில மன்னரால் இச்சங்கம், செப்டம்பர், 29, 1956-ந் தேதி அன்று திறந்துவைக்கப்பட்டது.

நூல் நூற்பு, நெசவு, பாடல், நாட்டியம், அம்பர் சக்கரத்தில் நூற்பு, இந்தி வகுப்புகள் நடத்துதல் ஆகிய பல்வேறு பணிகளில் சங்கம் ஈடுபட்டுள்ளது. சங்க உறுப்பினர்கள் அடிக்கடி பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லங்கள் மருத்துவ மனைகள் ஆகியவற்றிற்கு அடிக்கடி சென்று, தேவைப்பட்டோருக்கு உரிய உதவிகளைப் புரிகின்றனர். புயல், வெள்ளம், வறட்சி, தீ விபத்து போன்ற நேரங்களில் சங்கம் தாராளமாக அரசுக்கு நன்கொடை அளிக்கிறது. நாகர்கோவில் நகரிலுள்ள "காந்தி காலனி" என்ற பின்தங்கிய குடியிருப்பினை தத்தெடுத்துக்கொண்டு அப்பகுதியில் வாழும் மக்களுக்கு சமூகப்பணியாற்றி வருகிறது.

தற்போது கஸ்தூரிபா மாதர் சங்கத்தில் 190 உறுப்பினர்கள் உளர். அவர்களில் 51 பேர்கள் ஆயுள் உறுப்பினர்களாவர். சங்கம் தையற்கலையில் வாழ்க்கைத்தொழில் சார்ந்த பயிற்சித் திட்டத்தில் 12-வது தொகுதியினை தற்போது நடத்துகிறது. இத்திட்டங்களை வெற்றிகரமாக நடத்திட மத்திய சமூக நல வாரியம் உதவியளித்து வருகிறது.

தையல் இயந்திரங்களை விலைக்கு வாங்கிட திருவாங்கூர் மாநில வங்கி 50 பெண்களுக்கு கடனுதவி அளித்துள்ளது. ஒவ்வொரு ஆண்டும் பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு இலவசமாக சீருடை தைத்து வழங்கிட சங்கம் 100-க்கும் மேற்பட்ட பெண்களை நியமித்து வருகிறது. சங்கம் மாநில சமூக நல வாரியத்தினின்றும் நிதிஉதவி பெற்று வருகிறது. இத்தொகை உடல் ஊனமுற்றோர், ஆதரவற்ற பெண்கள் மற்றும் விதவைகள், அனாதைப் பெண்கள் மற்றும் விதவைகள் ஆகியோரின் நலம் மற்றும் மேம்பாட்டிற்குப் பயன்படுத்தப்படுகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக வரதட்சணை எதிர்ப்பு இயக்கத்திற்குத் தனது மனப்பூர்வமான ஆதரவையும் ஒத்துழைப்பையும் இச்சங்கம் அளித்து வருகிறது.

குமரி கலைக்கழகம், நாகர்கோவில்

தென்னிந்திய இலக்கிய நலம் வாய்ந்த நாட்டியங்கள் மற்றும் இலக்கிய நலம்வாய்ந்த இசை ஆகியவற்றை மேம்படுத்துதல், இக்கலைகளில் ஆர்வமுள்ளோருக்கு வகுப்புகள் நடத்துதல், புது கலைஞர்களை முன்னணிக்குக் கொணர்தல், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் ஆகியோருக்கு ஒவ்வொரு ஆண்டும் போட்டிகள் நடத்துதல் மற்றும் ஆற்றல்மிக்க இளைஞர்களை ஊக்குவித்தல் ஆகியவையே இச்சங்கத்தின் முக்கிய நோக்கமாகும். இசையைத் தொழிலாகக் கொண்ட கலைஞர்கள் வயது முதிர்வு, உடல் நலமின்மை அல்லது உடல் ஊனம் ஆகிய

காரணங்களால், இசையரங்கு நிகழ்ச்சிகள் இல்லாத நிலையிலிருந்ததால், அப்படிப்பட்ட ஏழ்மை நிலையிலுள்ள கலைஞர்களுக்கு கழகம் நிதியுதவியளித்து வருகிறது. கற்பனைத் திறமை ஈடுபடுத்தும் கலைகள் தொடர்பாக முறையான நிகழ்ச்சிகளைச் சங்கம் நடத்தி வருகிறது.

உறுப்பினர்கள் செலுத்தும் சந்தாத்தொகை மற்றும் கொடையாளிகள் அளிக்கும் நன்கொடை ஆகியவற்றால் கழகம் நடத்தப்பட்டு வருகிறது.

நாகர்கோவில் பெண்கள் வளர்ச்சித் திட்டங்கள்

பம்பாயிலுள்ள இந்தியக் குடும்பக்கட்டுப்பாட்டுக் கழகம் "பெண்கள் வளர்ச்சி" குறித்து நாகர்கோவிலில் கடந்த 1983 ஆம் ஆண்டு ஒரு செயல் திட்டத்தினைத் துவக்கியது. கிராமப்புறப் பெண்களின் தேவையின் அடிப்படையில் வளர்ச்சிப் பணிகளை நடைமுறைப் படுத்துவதும், அதனைத் தொடர்ந்து அவர்களது வாழ்க்கையினை ஓரளவிற்கு உயர்த்துவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். சிறிய குடும்ப உருமாதிரியினை தன் விருப்பார்வ முறையில் ஏற்று, அதனைப் பின்பற்றி மேலும் ஊக்குவிப்பவர் களையும் இத்திட்டம் தொடர்பாக மக்களுக்குக் கற்பிக்க ஆண்களையும் தொடர்பு படுத்துவதும் இதனிலடங்கும்.

இத்திட்டம் பம்பாய் இந்திய குடும்பக் கட்டுப்பாட்டுக் கழகத்தின் மேற்பார்வையில் செயலாற்றப்பட்டு வந்தாலும் இத்திட்ட நடவடிக்கை களைக் கண்காணித்து வழிகாட்டி நடைமுறைப்படுத்திட ஒரு தலைவரை யும் நான்கு அலுவல் சாரா உறுப்பினர்களையும் கொண்ட மாவட்ட அளவிலான இணைப்புக் குழு நாகர்கோவிலில் அமைக்கப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டத்திலுள்ள 153 கிராமங்களில் வாழும் 76,588 மக்கள் இத்திட்டப்பகுதியில் அடங்குவர். கருத்தரங்குகள், மாநாடுகள், கூட்டங்கள், குழந்தைகள் காப்பகத் திட்டங்கள், இலவச போதனை வகுப்புகள், கண்காட்சிகள், பெண்கள் வளர்ச்சி மற்றும் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள் ஆகியவை குறித்த திரைப்படக்காட்சிகள் மாநில மண்டல அலுவல் குழு உறுப்பினர்கள், நல்வாழ்வு விருப்பார்வக்குழு உறுப்பினர்கள், குழந்தைகள் காப்பக ஆசிரியர்கள், ஆயாக்கள், உள்ளூர் ஆசிரியர்கள் ஆகியோருக்குப் பயிற்சித் திட்டங்கள், குழந்தைகள் திரைப்படக் காட்சிகள், சத்துணவு சான்று விளக்கங்கள், தொற்று நோய்களினின்று தடைகாப்பு அளிக்கும் திட்டங்கள், தகுதியுள்ள தம்பதியருக்குத் கூட்டங்கள் நடத்துதல், தூய்மைப்படுத்தும் முகாம்கள், பெண்களுக்குப் பேறு காலத்துக்கு முற்பட்ட மற்றும் பேறு காலத்துக்குப் பிற்பட்ட மருத்துவ பரிசோதனைகள், முதலுதவிப் பொருட்களடங்கிய பெட்டிகள் வழங்குதல், மற்றும் பல்வேறு வகைப்பட்ட சமூக நலப்பணிகளுக்கு அரசின் உதவி பெற மஹிலமண்டலங்களுக்கு உதவி செய்தல் ஆகியவை உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சிப் பணிகள் செயலாக்கப்படுகின்றன.

இத்திட்டத்தின் மூலம் நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகள் மூலமும், ஏழை விதவைகள் மற்றும் அவர்களது பெண்கள், அனாதைகள், ஆகியோருக்கு நிதயுதவி அளிக்கப்படுகிறது. இந்த செயற்பணிகள் 139 மஹில மண்டலங்கள், 50 யுவதி மண்டலங்கள், 124 நல்வாழ்வு விருப்பார் வத் தொகுதிகள், ஏழு பண்பாட்டுத் தொகுதிகள் மற்றும் 14 இளைஞர் கழகங்கள் ஆகியவை மூலம் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

முதன்மையான பணிகள்

இத்திட்டத்தின் கீழ் மிகவும் பிற்பட்ட நிலையிலுள்ள கிராமங்களில் ஆறு குழந்தைகளைப் பேணிகாக்கும் நிறுவனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றினால் 150 குழந்தைகள் பயனடைகின்றனர். இவற்றைப் பராமரிப்பதற்காக செலவில் 90 விழுக்காடு மாநில சமூக நல வாரியத்தா லும், 10 விழுக்காடு மஹில மண்டலங்களினாலும் ஈடு செய்யப்படுகிறது.

ஏழை விதவைகள், அவர்களது பெண்களின் திருமணத்தை நடத்திட, ஒவ்வொருவருக்கும் ரூ.1,000/- நிதியுதவி அளிக்கப்படுகிறது. சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 552 பெண்களுக்கும், எட்டு ஆண்களுக்கும் வங்கிகள் மூலமாகவும், இத்திட்டங்கள் வாயிலாகவும் ரூ.500/- முதல் ரூ.2,000/- வரை கடனுதவி அளிக்கப்படுகிறது. இதுகாறும் வங்கிகள் மூலமாக 4,03,050/- ரூபாயும் இந்த வளர்ச்சித் திட்டங்கள் மூலமாக ரூ.82,250/- ரூபாயும் கடனாக வழங்கப்பட்டுள்ளன.

21,000/- ரூபாய் நிதிஉதவியில் மருங்கூரில் ஒரு சவர்க்கார (சோப்) அலகும், கோவளத்தில் ஒரு தையல் மற்றும் கைவினைப் பொருட்கள் அலகும் இயங்கிவருகின்றன. சவர்க்கார அலகு 11 பேர்களுக்கு வேலை வாய்ப்பளித்துள்ளது. தற்போது இத்திட்டத்தில் 11 உறுப்பினர்கள் உளர். திட்டத்தினை மேற்பார்வையிட ஒரு திட்ட கூட்டுறவாளர், பொறுப்பில மர்த்தப்பட்டுள்ளார். அவருக்கு ஒரு கணக்காளர், புள்ளிவிவர உதவியாளர், பயிற்சி அலுவலர், தட்டச்சு கள அமைப்பாளர், எட்டு பெண்கள் நல ஊழியர்கள், ஓட்டுநர் மற்றும் திரைப்பட ஒளியுருப்படிவுக்கருவி இயக்குநர் மற்றும் ஒரு தையல் ஆசிரியர் ஆகியோர் உதவி புரிகின்றனர். திட்ட இணைப்புக்குழுவினால் இப்பணியாளர்களுக்கு குறிப்பிட்ட காலங்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது. அரசு மற்றும் அரசுசார்பற்ற நிறுவனங்களின் ஒத்திசைவுடன், அனைத்து திட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் படுகின்றன.

இயற்கை நண்பர்கள் சங்கம்

பல்வேறு வகைப்பட்ட தாவரங்களையும் விலங்கினங்களையும் உடையது இம்மாவட்டம். ஆண்டு முழுவதும் உகந்த வானிலையைப் பெற்று, நல்ல இயற்கை வளத்தையுமுடைய கன்னியாகுமரி மாவட்டம், "இயற்கை நண்பர்கள்" முழு ஆதரவால் செழித்தோங்குகிறதெனில் மிகையில்லை. மாவட்ட முழுமையும் பரந்து விரிந்து காணப்படும் தென்னை,

பனை மரங்கள் இனிமையான காற்றில் அழகாக அசைந்தாடும் நெற்பயிர்கள், இங்கும் அங்குமாகக் காட்சித்தரும் குன்றுகள் எல்லாவற்றிற்கும் மேலாக மூன்று பக்கங்களிலும் அரபிக்கடல், வங்காள விரிகுடாக்கடல் மற்றும் இந்திய பெருங்கடல் ஆகியவற்றால் சூழப்பட்டு, எல்லையோரத்தில் மணற்பாங்கான கடற்கரை ஆகிய இயற்கைக் காட்சிகள் மாவட்டத்தின் அழகுக்கு அழகூட்டுகின்றன.

நாட்டின் ஏனைய பகுதிகளில் வாழும் மக்களைப் போன்று, இம்மாவட்டத்திலுள்ள மக்களும், மாவட்டத்தின் முழுநிறைவான உயிரின வாழ்க்கைச் சூழலைக் கருத்திற்கொண்டு, மரபு வழிவந்த மற்றும் விலைமதிக்க முடியாத இவ்வியற்கை வளத்தில் உதவி வாய்ப்பினை, முறையாகப்பயன்படுத்துதல் நலம்.

உயிரின வாழ்க்கைச் சூழல், காடு வளர்ப்பு, இயற்கை வாய்ப்பு வளத்தைப் பாதுகாத்தல், வன விலங்குகள் அழிக்கப்படுவதினின்றும் பாதுகாத்தல் ஆகியவை தொடர்பாக மக்களிடையே ஒரு விழிப்புணர்ச்சியினை உருவாக்கிட "இயற்கை - நண்பர்கள் சங்கம்" அமைக்கப்பட்டது. மாவட்டத்தின் முன்னாள் மாவட்ட ஆட்சித்தலைவர், திரு. முனிர் ஹோதா, ஐ.ஏ.எஸ., இச்சங்கத்தின் முதல் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மாவட்ட வன அலுவலர், செயலாளராகவும், டாக்டர் மோரிஸ், பொருளாளராகவும், நியமிக்கப்பட்டனர். 15 அலுவல் சாரா உறுப்பினர்களும் சங்கத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்கள், மாவட்டத்தின் முதன்மையான குடிமக்கள், விஞ்ஞானிகள், அறிஞர்கள் மற்றும் பிற பிரிவினர் ஆகியோர் அலுவல்சாரா உறுப்பினராவர்.

சங்கத்தின் முதல் கூட்டம் ஜனவரி, 18, 1988 அன்று நடைபெற்றது. "இயற்கையைப் பேண்" என்ற சொல்நடை, சங்கத்தின் கொள்கைக்காக ஏற்கப்பட்டது. சங்கத்தின் நிருவாகக் குழு, ஒவ்வொரு மாதத்தின் முதல் செவ்வாயன்று மாலை ஐந்து மணிக்கு விளையாட்டரங்கக் கட்டிடத்தில் நடைபெறுகிறது. சங்கத்தின் பல்வேறு திட்டங்களைத் தீவிரமாக நிறைவேற்றிட, பல்வேறு வகைப்பட்ட துணைக்குழுக்கள் அமைக்கப் பட்டன. மாவட்டத்திலுள்ள அரசின் பல்வேறு துறைத் தலைவர்கள், பாராளு மன்ற உறுப்பினர்கள், தொடர்புள்ள பகுதிகளின் சட்டமன்ற உறுப்பினர்கள் முதலியோர் சேர்க்கப்பட்டுள்ளனர். மற்றும் பல்வேறு சமூகப்பணி நிறுவனங்களும் நிர்வாகக் குழுவில் சேர்க்கப்பட்டுள்ளன.

சங்கத்தின் நோக்கங்கள், பின்வருமாறு :

1. விலங்கினங்கள், தாவரயினங்கள் மற்றும் மலைகள், ஆறுகள், குளங்கள் மற்றும் கடற்கரைகள் இவற்றைப் பாதுகாத்தல் மற்றும் வளமாக்குதல் ;

2. சுற்றுப்புறச்சூழல் மற்றும் அவற்றைச் சார்ந்த பிரச்சனைகள், ஆகியவை தொடர்பாக மக்களின் விழிப்புணர்ச்சியையும், ஊறுகோள் உணர்ச்சியினையும் உயர்த்துதல் ;

3. குடிமக்கள், குறிப்பாக இளைஞர்கள் மற்றும் குழந்தைகள் ஆகியோருக்குச் சுற்றுப்புறச்சூழல் மற்றும் இயற்கை வளம் ஆகியவை பால் ஒரு நாட்டம் ஏற்பட்டு, பொறுப்புணர்ச்சியுடனும், உண்மையான ஈடுபாட்டுடனும் மக்கள் அவைகளைப் பாதுகாத்து, மேம்படுத்த அவர்களை ஊக்குவித்தல் ;

4. உயிரின வாழ்க்கைச் சூழல், அரசியல், பொருளாதாரம், சமூகம் மற்றும் கலையுணர்ச்சி ஆகியவை சார்ந்த நோக்கில், சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்கும் நடவடிக்கைகள் மற்றும் அதுதொடர்பான கல்வித்திட்டங்கள் ஆகியவற்றை முறையாகக் கணித்து தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுதல் ;

5. பொது மக்களுக்கு, குறிப்பாக காடுகள், வனவிலங்குகள் வாழுமிடங்கள், கடற்கரை, ஆற்றங்கரைகள் ஆகியவற்றின் சுற்றுப்புறங்களில் வாழ்பவர்களுக்கு முறையாக கற்பித்தல் மற்றும் சங்கத்தின் நோக்கங்களை நிறைவேற்றி, நிருவாகத்தில் முடிவுகளை எடுக்கும் நிருவாகிகளின் ஒத்துழைப்பை நல்குதல்;

6. சங்கத்தின் நோக்கங்களுக்கேற்ற வகையில் அமையும் அரசின் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளை செயலாக்கிட அரசு இயந்திரத்துடன் ஒத்துழைத்தல் மற்றும் அரசு இயந்திரத்திற்கு உதவி புரிதல் ;

7. சுற்றுப்புறச்சூழல் மற்றும் அது தொடர்பான பிரச்சனைகளை மக்கள் புரிந்துகொள்ளச் செய்து அவர்களது சுற்றுப்புறங்களை முறையாகக் காத்திடப் பொறுப்பேற்றிடுமாறு மக்களை வலியுறுத்துதல் ;

8. குடிமக்களை குறிப்பாகக் குழந்தைகளை மரம் நடுதலிலும் மற்றும் வீடுகள், வீட்டின் சுற்றுப்புறங்கள், கிராமங்கள், நிறுவனங்கள், நகர்ப்புறப் பகுதிகள், தரிசு நிலங்கள் ஆகியவற்றை அழகு படுத்திடலிலும் ஊக்குவித்தல் ;

9. சமூகக் காடுகள் வளர்ப்பு, வேளாண் காடுகள் வளர்ப்பு மற்றும் புறம்போக்கு நிலங்கள் உள்ளிட்ட தரிசு நிலங்களை பயன்படுத்துவது ஆகியவற்றை ஊக்குவித்தல் ;

10. முகாம்கள், மாநாடுகள், கருத்தரங்குகள், கல்வித்தொகுதிகள் ஆகியவை நடத்தியும், பிற நடவடிக்கைகளையெடுத்தும், சுற்றுப்புறச் சூழல் விழிப்புணர்ச்சியை மக்களிடையே ஏற்படுத்துதல்; இது தொடர்பான பயனுள்ள தகவல்களை மக்களிடையே சேகரித்தல்

மற்றும் பரப்புதல் ; பருவ இதழ்களையும் வெளியிடுதல்; சங்கத்தின் நோக்கங்கள் மற்றும் குறியீடுகளை அடைவதற்கு உதவியாக, தகவல் சேகரித்து அளிக்கும் காப்பகமாகத் திகழ்தல்;

11. காற்று, நீர் மற்றும் ஒலி ஆகியவற்றின் தூய்மைக்கேட்டினை அகற்றுவது தொடர்பான முயற்சிகளுக்கு ஆதரவளித்தல் மற்றும் அவற்றை ஊக்குவித்தல் மக்கள் நல்வாழ்வினை மேம்படுத்த பாடுபடுதல் ;

12. வனவிலங்குகள் மற்றும் சுற்றுப்புறச் சூழல் நடவடிக்கைகள் இவை தொடர்பாகப்படிக்கும் மாணவர்களுக்கு, உதவித்தொகையும், கல்வி உதவியும் அளித்தல் ;

13. இதே போன்ற செயலாக்கங்களிலீடுபட்டுள்ள பல்வேறு வகைப்பட்ட விருப்பார்வ நிறுவனங்களின் முயற்சிக்கு ஆதரவளித்து அவைகளுடன் ஒத்துழைத்தல் ;

14. சங்கத்தின் இந்நோக்கங்கள் நிறைவேற்றப்பெற உறுப்பினர்களிடம் சந்தாத்தொகை வசூலித்தல் மற்றும் பொது மக்களிடம் நன்கொடைத் துணையுதவி ஆகியவை பெறுதல் ;

15. சங்கம் மற்றும் பொது மக்கள் பயன்பெறும் வகையில், நூல் நிலையங்கள் மற்றும் படிப்பகங்கள் நடத்துதல் ; மற்றும்

16. சங்கத்தின் நோக்கங்களை அடையும் வகையிலான துணைமை முயற்சிகளையும் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல்.

கல்வியறிவுடையோர் சங்கம் (லயன்ஸ் கிளப்)

1962ஆம் ஆண்டு, நாகர்கோவில் கல்வியறிவுடையோர் சங்கம், துவங்கப்பட்டது. அது 1970ஆம் ஆண்டு ஒரு கண்ணொளி வழங்கும் முகாமினை நடத்தியது. அதில் 420 பேர்களுக்கு கண் படலம் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது[34].

மாவட்டத்தில் சமூகப்பணியாற்றும் முதன்மைவாய்ந்த அரசு மற்றும் தனியார் நிறுவனங்களின் பெயர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

1. சமூகப்பணி சங்கம், கோட்டார்
2. சமூக சீரமைப்பு மையம், நாகர்கோவில்
3. சமூகக்கல்வி வளர்ச்சி சங்கம், நெய்யூர்
4. சமூக நல சங்கம், திங்கள் சந்தை
5. திருவள்ளுவர் கல்வி வளர்ச்சி சங்கம், குளச்சல்
6. சாந்தி விடியலொளி, நாகர்கோவில்
7. ஆதிதிராவிடர் நல சங்கம், நாகர்கோவில்

8. புனித பயஸ் சமூகப்பணி மையம், குமாரபுரம்
9. மலைவாழ் மக்கள் நல சங்கம், கீரிப்பாறை
10. கிராம நல சங்கம், குளச்சல்
11. கிராமப்புற விழிப்புணர்ச்சி மற்றும் வளர்ச்சி சங்கம், அழகிய பாண்டியபுரம்.
12. தமிழ்நாடு புனித அன்னையார் சகோதரிகள் மடம், நாகர் கோவில்
13. திருவள்ளுவர் உயர்கல்வி சங்கம், வடசேரி
14. சமூக மாற்ற, மேம்பாட்டு சங்கம், நாகர்கோவில்
15. சமுதாய வளர்ச்சி மையம், பூதபாண்டி
16. அமைதி - நீதி மையம், கன்னியாகுமரி
17. சட்டக்கல்வி மற்றும் ஏழைகளுக்குதவியளிக்கும் நிறுவனம், நாகர்கோவில்.
18. தமிழ்நாடு உடல் ஊனமுற்றோர், முற்போக்காளர் சங்கம், இராமவர்மபுரம்.
19. அரிசி பண்ணை, பயிற்சிநிலையம், பால்குலனி
20. முதியோர் இல்லம், பிலங்கலை
21. மனித உரிமைப் பாதுகாப்பு மன்றம், நாட்டாளம்
22. மனித கல்வி மற்றும் விடுதலை இயக்கம், அம்மாண்டிவிளை
23. சமூகக்கல்வி மற்றும் கிராமப்புற மறுஅமைப்பு மையம், அழகிய பாண்டிபுரம்
24. ஆதிதிராவிடர் வளர்ச்சி சங்கம், தக்களை
25. இளைஞர் சமயப்பரப்புக்குழு, இராமவர்மபுரம்
26. குழந்தை ஜீசஸ், அனாதை இல்லம், முலகுக்கோடு
27. முதியோர் கல்வி நிறுவனம், திருத்துவபுரம்
28. விமலா அனாதை இல்லம், கொடுங்குளம்
29. விழி இழந்தோர் பள்ளி, இரனிபுரம்
30. புனித ஜோசப் அனாதை இல்லம், சின்னத்துறை
31. புனித சேவியர் சகோதரிகள் சங்கம், மஞ்சலுமூடு
32. கிறிஸ்தவ சமயப்பரப்புக்குழுப் பணி நிலையம், தாடிக்காரங் கோணம்.
33. கேத்தரின் பூத் மருத்துவமனை வாழ்க்கைத்தொழில் சார்ந்த பயிற்சிமையம், தோவாளை.
34. சர்வோதய சங்கம், தோவாளை
35. விவேகானந்தா நினைவு மண்டபக்குழு மற்றும் விவேகானந்தா கேந்திரம், கன்னியாகுமரி.

36. பாகா நிலையம், கன்னியாகுமரி
37. காந்தி கஸ்தூர்பாஜி குழந்தைகள் இல்லம், என். குந்தல்
38. அன்பு மனை ஆண்கள் இல்லம், மந்தரம்புதூர்
39. கன்னியாகுமரி கேந்திரா, கன்னியாகுமரி
40. பிலாய் வாழ்க்கைத்தொழில் சார்ந்த நோய்நீக்கல் துறை மையம், கன்னியாகுமரி.
41. கேத்தரின் பூத் உடல் ஊனமுற்றோர் வாழ்க்கைத்தொழில் சார்ந்த பயிற்சி மையம், ஆரல்வாய்மொழி.
42. ஆதன் கோட்டாசான் முத்தமிழ் கழகம், மண்டைக்காடு
43. புனித தெரசா சிறுவர் இல்லம், மண்டைக்காடு
44. புனித வின்சென்ட் - டீ - பால் சிறுவர் இல்லம், கலியல்
45. தோரியாஸ், நாகர்கோவில்
46. பெண்கள் விருப்பார்வப்பணி இயக்கம், நாகர்கோவில்
47. பனைப்பணியாளர் வளர்ச்சிக்கழகம், மார்த்தாண்டம்
48. ஸ்ரீகண்ட சாஸ்தா அறிவு இல்லம், ஆதன்கோடு
49. பாசா - புளிபுரம்
50. இந்திய செஞ்சிலுவைச் சங்கம், நாகர்கோவில்
51. பாலமந்திர் இல்லம், நாகர்கோவில்
52. இன்னர் வீல் சங்கம், நாகர்கோவில்
53. சிறுவர்கள் சங்கம், நாகர்கோவில்

நூல் அட்டவணை

ஆசிரியர்/வெளியீட்டாளர்	நூலின் பெயர்
1. ஸ்ரீதர மேனன் .ஏ., திருவனந்தபுரம் Sreedhara Menon, Trivandram	திருவனந்தபுரம் மாவட்ட விவரச்சுவடி (1962), பக்கம் 227. Trivandram District Gazetteer (1962), p. 227.
2. திருவாங்கூர் – கொச்சி மாநிலம் Travancore - Cochin State	நிருவாக அறிக்கை (1921 – 22), பகுதி–1, பக்கம் 40. Report on the District Travancore for the year 1097 M.E. (1921-22), Part - I , p. 40.
3. இந்திய தேர்தல் ஆணையம், புதுடில்லி Election Commission of India, New Delhi	இந்தியாவின் முதல் பொதுத்தேர்தல் அறிக்கை – 1951–52, தொகுதி – 2, புள்ளி விவரங்கள், பக்கம் 122. Report on First General Elections in India - 1951-52, Vol.II - Statistical, p. 122
4. பொது (தேர்தல்) துறை, தமிழ்நாடு மாநில அரசு Public Elections Dept., Govt. of Tamil Nadu	தமிழ்நாடு சட்டமன்ற அறிக்கை, ஆறாவது பொதுத்தேர்தல் அறிக்கை, 1977. Report on the Sixth General Elections to the Tamil Nadu Legislative Assembly-1966.
5. பொது (தேர்தல்) துறை, சென்னை அரசு (1960) Public (Elections) Dept., Govt. of Madras	சென்னை மாநில பொதுத் தேர்தல், 1957, தேர்தல் புள்ளி விவரங்கள் ஆய்வு, பக்கங்கள் 68–69. General Elections in Madras State. 1957 - Election Data Analysis (1960), pages 68-69.
6. சென்னை அரசு Government of Madras	1962–பொதுத் தேர்தல் அறிக்கை, (1963), பக்கங்கள் 266–288. Report on 1962 General Elections. (1963), pages 266-288.
7. சென்னை அரசு	சென்னையில் நான்காவது பொதுத் தேர்தல் பற்றிய அறிக்கை – தொகுதி – 3, பக்கங்கள் 348–349.

	Government of Madras	Report of Fourth General Elections in Madras, - Vol.III, pages 348 - 349.
8.	சென்னை அரசு	சென்னையில் நான்காவது பொதுத் தேர்தல் பற்றிய அறிக்கை, தொகுதி –2, பக்கம் – 306.
	Government of Madras	Report on Fourth General Elections in Madras, Vo.II, page - 306.
9.	தமிழ்நாடு அரசு	தமிழ்நாட்டில் ஐந்தாவது பொதுத் தேர்தல் பற்றிய அறிக்கை – 1971, தொகுதி 3, பக்கம் – 505.
	Government of Tamil Nadu	Report on Fifth General Elections in Tamil Nadu, 1971, Vol.III, page - 505.
10.	தமிழ்நாடு அரசு	தமிழ்நாட்டில் ஐந்தாவது பொதுத் தேர்தல் பற்றிய அறிக்கை, 1971, தொகுதி–3, பக்கம் 505.
	Government of Tamil Nadu	Report of Fifth General Elections in Tamil Nadu, 1971, Vol.III, page 505.
11.	சென்னை அரசு	1957 – சென்னை மாநில பொதுத் தேர்தல்–தேர்தல் புள்ளி விவரங்கள் ஆய்வு, (1960) பக்கங்கள் 68–69
	Government of Madras	General Elections in Madras State - 1957 - Election Data Analysis, - 1960, pages 68 & 69.
12.	அதே நூற்பகுதியில்	பக்கம் 90
	Ibid	page 90
13.	சென்னை அரசு	1962, பொதுத் தேர்தல்அறிக்கை, (1963), பக்கங்கள் 236,266 மற்றும் 288.
	Government of Madras	1962, Report on General Elections, (1963), pages 236, 266 & 288.
14.	சென்னை அரசு	சென்னையில் நான்காவது பொதுத் தேர்தல் பற்றிய அறிக்கை, தொகுதி–3, பக்கங்கள் 348–349.

	Government of Madras	Report on Fourth General Elections in Madras, 1967, Vol.III, pages 348 - 349.
15.	சென்னை அரசு	சென்னையில் நான்காவது பொதுத் தேர்தல் பற்றிய அறிக்கை, 1967 தொகுதி–2, பக்கம் 306.
	Government of Madras	Report on Fourth General Elections in Madras, 1967, Vol.II, page 306.
16.	தமிழ்நாடு அரசு	தமிழ்நாட்டில் ஐந்தாவது பொதுத் தேர்தல் பற்றிய அறிக்கை,1971, தொகுதி – 3, பக்கம் 505.
	Government of Tamil Nadu	Report on Fifth General Elections in Tamil Nadu, 1971, Vol.III, page 505.
17.	தமிழ்நாடு அரசு	தமிழ்நாட்டில் ஐந்தாவது பொதுத் தேர்தல் பற்றிய அறிக்கை, 1971, தொகுதி – 2, பக்கம் 285.
	Government of Tamil Nadu	Report on Fifth General Elections in Tamil Nadu, 1971, Vol. II,p. 285.
18.	பொது (தேர்தல்) துறை, தமிழ்நாடு அரசு	தமிழ்நாடு சட்டமன்றத்திற்கு, 1977 பொதுத் தேர்தல் குறித்த முடிவுகள், பக்கங்கள் 457 முதல் 470 மற்றும் 1977, 1980 மற்றும் 1984 ஆண்டுகளில் பாராளுமன்ற பொதுத் தேர்தலுக்கான முடிவுகள், பக்கங்கள் 81 மற்றும் 82.
	Public (Elections) Dept. Government of Tamil Nadu	Results on General Elections to Tamil Nadu Legislative Assembly, 1977, pages 457 to 470 and Results on General Elections to Lok Sabha, 1977, 1980 and 1984, pages 81, 82.
19.	தமிழ்நாடு அரசு	பாராளுமன்ற மற்றும் தமிழ்நாடு சட்ட மன்றத்திற்கான 1984 ஆம் ஆண்டு, எட்டாவது பொதுத் தேர்தல்கள், (1985), பக்கம் 161.

	Government of Tamil Nadu	Report on the 1984-Eighth General Elections to Lok Sabha and Tamil Nadu Legislative Assembly, (1985), page 161.
20.	பிள்ளை, கே.கே., சென்னை	சசீந்திரம் திருக்கோயில், (1953), பக்கம் 14.
	Pillai, K.K. Madras	The Sucindram Temple, 1953, Madras, p.14.
21.	பத்மநாபன், எஸ்., நாகர்கோவில்	தமிழ் உலகிற்கு, கன்னியாகுமரியின் பங்கு, (1981), பக்கம். 20.
	Padmanabhan, Nagerkoil	The Contribution of Kanniyakumari to the Tamil World, (1981), page 20.
22.	அதே நூற்பகுதியில்	பக்கம் 20
	Ibid	page 20
23.	எமைல் ஜி, ஹடேல், Emile-G, Hatel	"திருவாங்கூர்" 1933, பக்கம் 191, ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக அச்சகம். Travancore, 1933, page - 191 Oxford University Press
24.	அதே நூற்பகுதியில்	பக்கம் 219
	Ibid	page 219
25.	அதே நூற்பகுதியில்	
	Ibid	
26.	அதே நூற்பகுதியில்	பக்கம் 242
	Ibid	page 242
27.	எஸ். சிவன்பிள்ளை, காந்தி ஆசிரமம், தேரூர்.	குறிப்பு
	S. Sivan Pillai, Gandhi Ashram, Therur.	Note
28.	அதே நூற்பகுதியில்	
	Ibid	
29.	கௌரவ செயலர், பணிக் கூட்டுறவுக் குழு, நாகர்கோவில்.	அறிக்கை
	Honorary Secretary Guild of Service, Nagarcoil.	Report

30.	தலைவர், "சரோஜினி புதுவாழ்வு மையம்", தென்தாமரைக்குளம்.	அறிக்கை
	President, Sarojini New Life, Centre, South Thamaraikulam.	Report
31.	செயலர், ஸ்ரீ கன்னியாகுமரி. குருகுல ஆசிரமம், கன்னியாகுமரி.	அறிக்கை
	Secretary, Sri Kanniyakumari Gurukula Ashram.	Report
32.	செயலர், மோகன் ஆசிரமம்	அறிக்கை
	Secretary, Mohan Ashram	Report
33.	செயலர், நாகர்கோவில் வரிப்பந்–தாட்டக்கழகம், நாகர்கோவில்.	அறிக்கை
	Secretary, Nagercoil Tennis Club, Nagarcoil.	Report
34.	டாக்டர் இந்திரா சுரேந்திரன், நாகர்கோவில்.	அறிக்கை நாள் 23.11.1988
	Dr. Indira Surendran, Nagarcoil	Report dated 23.11.1988

இயல்-19

முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள்

அகஸ்தீஸ்வரம், (மக்கள் தொகை - 12857)[1]

நாகர்கோவிலுக்குத் தெற்கே 18 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள அகஸ்தீஸ்வரம் என்ற கிராமம், நாகர்கோவில் - கன்னியாகுமரி முதன்மைச் சாலையில் கன்னியாகுமரியினின்று மூன்று கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. புராண இலக்கியங்களில் தமிழ் முனிவர் அகத்தியர் இக்கிராமத்தில் வாழ்ந்ததாகக் கூறப்படுவதால் இக்கிராமத்திற்கு இப்பெயர் சூட்டப்பட்டதாகத் தெரிகிறது. அகத்தியரால் உருவாக்கப்பட்ட[2] ஒரு சிவன் கோவில் இக்கிராமத்திலுள்ளது. சிவபெருமானை அகத்தியர் வழிபட்டு வந்ததால், இத்தெய்வம் அகத்தியலிங்கம் என அழைக்கப்படுகிறது. வில்வ மரமொன்று இங்கு உள்ளது. அதன் கீழமர்ந்து அகத்தியர் ஆழ்ந்த நிட்டையில் வாழ்க்கையைக் கழித்ததாக நம்பப்படுகிறது. இந்த மரத்தின் சிறப்பியல்பு யாதெனில், இந்த மரத்தில் மலர்கள் மலர்ந்தாலும் அவை பழங்களாக முதிர்வதில்லை. இத்தெய்வத்தின் பெயர் பலருக்கு சூட்டப்பட்டுள்ளது. மாவட்டத்தில் அகத்திய முனிவருக்கு நேர்ந்தளிக்கப் பட்ட திருக்கோவில்கள் பலவற்றை நாம் காண முடிகிறது.

இக்கிராமத்தில் குலசேகர வினாயகருக்கு நேர்ந்தளிக்கப்பட்ட பல திருக்கோவில்களை நாம் காணமுடிகிறது. ஒவ்வொரு ஆண்டும், சித்திரைத் திங்களில் இத்திருக்கோவிலில் நடக்கும் திருவிழாவிற்குப் பெருந்திரளாக மக்கள் வருகை தருகின்றனர்.[3]

இவ்விடத்தின் மக்களது முதன்மையான தொழில், வேளாண்மையும் நெசவுமாகும். அகத்தியாநந்தா நூலகம் என்ற பெயரில் இங்கு ஒரு பெரிய நூலகம் உள்ளது. நாகர்கோவிலிலிருந்து, அகஸ்தீஸ்வரத்திற்கு பேருந்து செல்கிறது.

ஒரு அரசு உயர்நிலைப் பள்ளி, ஒரு ஆரம்ப சுகாதார மையம், ஒரு சவர்க்கார (சோப்) அலகு மற்றும் ஒரு கதர் துணை மையம் ஆகிய முக்கிய நிறுவனங்கள் உள்ளன. இங்கு மக்களின் நலனுக்காக ஒரு பால் பண்ணையும் இயங்கி வருகிறது.

அகஸ்தீஸ்வரம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம், நாகர்கோவில் கன்னியாகுமரி சாலையில், மூன்று கிலோ மீட்டர் தொலைவில் பெருமாள்புரம் என்ற இடத்தில் உள்ளது. வேளாண் குடிமக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த, இங்கு ஒரு விவசாயிகள் கழகமும், ஒரு விவசாயிகள் பணி கூட்டுறவு சங்கமும் இயங்கி வருகின்றன. அவை சங்க உறுப்பினர்களுக்கு கடன்கள், விதைகள், உரங்கள் ஆகியவற்றை அளிக்கின்றன. தனியார் நிறுவனத்தால் நடத்தப்பெறும் "மோகன் ஆசிரமம்" பால்வாடி வகுப்புகளை நடத்தி வருகிறது. ஊராட்சி ஒன்றிய

அலுவலகத்தின் பின்புறம், ஒரு (கோழிப்பண்ணை) மாவட்ட கால்நடை மருத்துவ அலுவலரின் கண்காணிப்பில் இயங்கி வருகிறது[4]. அகஸ்தீஸ்வரத்தில் 1965-66ஆம் ஆண்டு நிறுவப்பட்ட "விவேகானந்தா கல்லூரியும் இயங்கி வருகிறது. இது விவேகானந்தா கல்விக் கழகத்தினால் நடத்தப்படுகிறது.

ஆரம்பொலி அல்லது ஆரல்வாய்மொழி (தோவாளை வட்டம்)
மக்கள்தொகை - 14,641 (ஆண்-7359 + பெண்-7,282)[5]

ஆரம்பொலி, தமிழில் "ஆரல்வாய்மொழி" என அழைக்கப்படுகிறது. மலையாள மொழியில் அது "அருவாமொழி"யாகும். சொல்லிலக்கணப்படி இத்தமிழ்ச்சொல், "தென்றல் பேசுமிடம்" எனப் பொருள்படும். கணவாய் வழியாக மிக வேகமாக வீசக்கூடிய காற்றைக் கருத்திற்கொண்டு, பண்டைய கால மக்கள், இந்த அடையாளப் பெயரினைச் சூட்டியிருப்பர் போலும்! இவ்விடம் மேற்கு மலைத்தொடரின் மலையடிவாரக் குன்றுப் பகுதியில் அமைந்துள்ளது. தேசிய நெடுஞ்சாலையின் நுழைவுமுனை, அதாவது நாகர்கோவில்-திருநெல்வேலி சாலை - ஆரம்பொலிக் கணவாய் ஆகும். மாநிலங்கள் சீரமைப்பிற்கு முன்னர் அது முந்தைய திருவாங்கூர்-கொச்சி மாநிலத்தின் எல்லைக்கிராமமாகும். எனவே, இன்றியமையாப் பொருட்கள் கள்ளத்தனமாய்க் கடத்தப்படுவதைத் தடுக்கும் பொருட்டு, இங்கு ஒரு சோதனைச் சாவடி இயங்கி வந்தது. இது தற்போது, நீக்கப்பட்டுவிட்டது. முந்தைய திருவாங்கூர் மாநிலத்தை ஏனைய தென்னிந்தியப் பகுதியினின்றும் பிரித்துக்காட்டும் மேற்கு மலைத் தொடரிலுள்ள மலைப் பிரதேசங்கள் யாவும் இயற்கை தடையரணாக இருந்தன. எனினும், ஆரம்பொலிக் கணவாய் அனைவரும் செல்லும் வழியாகப் பயன்படுத்தப்பட்டது. பண்டை மற்றும் இடைநிலை காலத்தில் தென் திருவாங்கூர், பல்வேறு தாக்குதலுக்குள்ளானது. இந்த ஐந்து கிலோ மீட்டர் நீளமுள்ள கணவாய் வழியாகத்தான், சோழர்கள், விசயநகரப் படைப்பெருந்தலைவர்கள், மதுரையை ஆண்ட நாயக்க மன்னர்கள் ஆகியோர் வளமிக்க பகுதியான நாஞ்சில் நாட்டின் மீது படையெடுத்துத் தாக்கினர்[6]. பதினெட்டாம் நூற்றாண்டின் இடையில், திருவாங்கூர் மன்னர், மார்த்தாண்ட வர்மா, (1729-58) ஆரம்பொலியினை அரண்காப்புகளால் வலுப்படுத்தி, எதிரிகள் படையெடுப்பினின்றும் நாஞ்சில் நாட்டைப் பாதுகாத்து வந்தார்[7]. எல்லைப்புற படையெடுப்புகளைத் தடுத்து நிறுத்தி அவரது படைகளின் ஒரு பிரிவினை இந்த இடத்தில் நிறுத்தியிருந்தார். கி.பி. 1809 ஆம் ஆண்டு ஆங்கிலேயருக்கெதிராக வேலுத்தம்பி கிளர்ச்சியிலீடுபட்டபோது, கர்னல் வெல்ஷின் (Welsh) படைகள், எதிர்பாராத திடீர் தாக்குதலால் ஆரம்பொலி அரண்காப்பினைக் கைப்பற்றின.

கிராமத்தின் வடபுறத்தில், மீனாட்சி சுந்தரேஸ்வரரின், கோவில் உள்ளது. முப்பந்தலில், அவ்வையாரின் நினைவுச் சின்னமும்அமைக்கப் பட்டுள்ளது[8].

தாணுமாலயம் புத்தூர், மிஷன் குழுக்குடியிருப்பு, வடக்கூர், குருசடி மற்றும் பெருமாள்புரம் ஆகியவை ஆரம்பொலியிலுள்ள முக்கியமான

பகுதிகளாகும். இவ்விடத்தின் மக்கள்தொகை, 14,500-க்கும் அதிகமாக உள்ளது. கிராம மக்களின் முக்கியத் தொழில் வேளாண்மையாகும். கடலை மற்றும் எள் ஆகியவை இங்கு பயிரிடப்படும் முக்கிய பயிர்வகைகளாகும். மழைநீரால் நிரம்பும் குளங்கள் மற்றும் கிணறுகள் ஆகியவைதான், இக்கிராமத்தின் முக்கிய நீர்ப்பாசன ஆதாரங்களாகும். எண்ணெய் எடுப்பது இங்கு ஒரு பெரிய தொழிலாகக் கருதப்படுகிறது. இவைதவிர, இங்கு தனியார் ஒருவரால் பஞ்சினின்றும் கொட்டைகளை அகற்றும் ஆலை நடத்தப்படுகிறது.

வடக்கூரில் ஒரு புகழ்ப்பெற்ற கோவில் உள்ளது. இங்கு "நம்பூரன் விளையாட்டு" என்ற திருவிழா, மிக விமரிசையாக நடத்தப்படுகிறது. இத்திருவிழா இந்த கோவிலில் மட்டுமே கொண்டாடப்படும் சிறப்பியல் பினைப் பெற்றது. ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதத்தில் இத்திருவிழா கொண்டாடப்படுகிறது.

குருசடி, ஆரம்பொலியின் புறநகர்ப்பகுதியாகும். இங்கு புகழ்பெற்ற கிறித்தவத் திருக்கோவில் ஒன்று உள்ளது. இவ்விடத்தைச் சேர்ந்த தேவசகாயம் பிள்ளை என்பவர் கிறித்தவ சமயத்திற்கு மாறி, பின்னர் முந்தைய திருவாங்கூர் மன்னர் மார்த்தாண்டவர்மனின் கோரிக்கைகளை செவி மடுக்காது, கிறித்தவ மதக்கொள்கைகளைக் கைவிடாத காரணத்தால், மன்னரது ஆணையின் பேரில், சுடப்பட்டு உயிர் துறந்தார். எனவே, இங்குள்ள மக்களால் அவர் புனிதத் தியாகியெனப் போற்றப்படுகிறார்.

உயர்குடி மகனான நீலகண்டன் பிள்ளை என்பார், மன்னரின் நீதி மன்றத்தில், உயர் அலுவலராகப் பணியாற்றி வந்தார். திருவாங்கூர் படையில் பணியாற்றிய டீ-லானாய் என்ற ஒரு பெல்ஜியம் நாட்டு அலுவலருடன் கிறித்தவ சமயத்தைப்பற்றி விரிவாகக் கலந்துரையாடிய பின்னர், கிறித்தவராக மாறினார். நீலகண்டன் பிள்ளை, 32 வயதாக இருந்தபோது, மெய்யுணர்வு நீராட்டு சடங்கு (ஞானஸ்தானம்) மேற்கொண்டார். தனது பெயரையும் தேவசகாயம் என மாற்றிக் கொண்டார். நான்காண்டுகளுக்குப் பின்னர், அவர் கிறித்தவ சமயத்திற்கு மாறியது குற்றமாகக் கருதப்பட்டு, அவருக்கு மூன்று ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டது. மூன்றாண்டு சிறை தண்டனைக்குப் பின்னர், கி.பி.1752ஆம் ஆண்டு அவர் மன்னரின் ஆணைப்படி, திருவனந்தபுரத்திலிருந்து, திருநெல்வேலி செல்லும் சாலையில் 82வது கிலோமீட்டரிலுள்ள ஆரம்பொலியில் சுட்டுக் கொல்லப்பட்டார். நீலகண்டன் பிள்ளை சுட்டுக் கொல்லப்பட்ட இடத்தில், அதற்கடையாளமாக இன்றும் ஒரு சிலுவை பதிந்து பொருத்தி வைக்கப்பட்டுள்ளது.

இங்கு, ஒரு ரோமன் கத்தோலிக்கக் கிறித்தவ திருக்கோவில் கட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதத்தில், விருந்து நடத்தப் படுகிறது. மாவட்டத்தில் இது ஒரு மிகப்பெரிய திருவிழாவாகும். ஏறத்தாழ 25,000-க்கும் மேலான பொதுமக்கள் இதற்கு வருகை தருகின்றனர்.

ஆரல்வாய்மொழியில் கடந்த 1970ஆம் ஆண்டு, கன்னியாகுமரி கல்விக் கழகத்தினால், "அறிஞர் அண்ணா கலைக் கல்லூரி" என்ற பெயரில்

ஒரு கல்லூரி நிறுவப்பட்டுள்ளது[9]. கற்பிக்கப்படும் பொருள்கள் மற்றும் கற்பிக்கப்படும் மொழி ஆகியவை குறித்து "கல்வி" என்ற இயலில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

ஒரு அஞ்சல் மற்றும் தந்தி அலுவலகம், ஒரு வனத்துறை அலுவலகம், பேரூராட்சி அலுவலகம், தமிழ்நாடு மின்சார வாரிய உதவி கோட்டப்பொறியாளர் அலுவலகம் ஆகியவை இங்கு இயங்கி வருகின்றன. ஒரு மேல்நிலைப்பள்ளி, கலைக்கல்லூரி மற்றும் இரட்சணிய சேனையினால் நடத்தப்படும் உடல் ஊனமுற்றோர் பள்ளி ஆகியவை இக்கிராமத்திலுள்ள கல்வி நிறுவனங்களாகும். இவைத்தவிர, ஆரல்வாய்மொழியில் ஒரு புகைவண்டி நிலையமும் உளது[10].

அழகிய பாண்டியபுரம் (தோவாளை வட்டம்), மக்கள் தொகை-12,303 (ஆண்கள்-6240 + பெண்கள்-6063)

அழகிய பாண்டியபுரம், நாகர்கோவிலிலிருந்து, மகேந்திர மலைப்பகுதிகளிலுள்ள முக்கிய எஸ்டேட்களுக்கு செல்லும் சாலையில், நாகர்கோவிலிலிருந்து 16 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள உயர்நிலை கிராமமாகும். இக்கிராமம் ஒரு காலத்தில், நாஞ்சில் நாட்டை ஆண்டு வந்த குறவர்கள், அவர்களை தொடர்ந்து பதவியேற்ற முதலியார்கள் ஆகியோரின் தலைமையிடமாகத் திகழ்ந்தது. இது தொல்பொருள் ஆராய்ச்சி முக்கியத்துவம் வாய்ந்த இடமாகும்[11]. இவ்விடத்திலுள்ள மலைக்கோவிலில் சோழ மன்னர் ஒருவரின் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன[12]. இக்கிராமத்திற்கும், பாண்டிய மன்னருக்கும் தொடர்பிருந்திருக்கக்கூடும் என்பது, கிராமத்தின் பெயரிலிருந்தே தெரிய வரும்[13]. மட்பாண்டங்களுக்குப் பெயர் பெற்ற குறத்தியாறை, இங்கிருந்து இரண்டு கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது. குறத்தியறையில், "அவ்வை அம்மன் கோவில்" என அழைக்கப்படும் பாறையைக் குடைந்து கட்டப்பட்ட குகைக்கோவில் உள்ளது [14].

ஆயி இனத்தவரை, வெற்றிகொண்ட அழகிய பாண்டியன் என்ற பாண்டிய மன்னர், தனது வெற்றியின் நினைவாக, பொதிகைமலை அடிவாரத்திலுள்ள இக்கிராமத்திற்கு "அழகிய பாண்டியபுரம்" என பெயர் சூட்டினார்[15].

இங்கு ஒரு அஞ்சல் அலுவலகம், வன பாதுகாவலர் அலுவலகம் மற்றும் கிராம நிருவாக அலுவலர் அலுவலகம் ஆகியவை உள. ஒரு மேல்நிலைப் பள்ளியும், இரண்டு துவக்கப்பள்ளிகளும், இங்குள்ள கல்வி நிலையங்களாகும். அழகம்மன் கோவில் என்பது, இங்குள்ள புகழ் பெற்ற கோவில்களில் ஒன்றாகும். சுற்றுப்புறப் பகுதியிலுள்ள 100-க்கும் மேற்பட்ட குழந்தைகளை காத்திட, கிறித்தவ சமயப்பரப்புக் குழு, ஒரு அனாதை இல்லத்தினை நடத்துகிறது. இந்திய மாநில வங்கி மற்றும் தமிழ்நாடு வங்கி லிமிடெட் ஆகியவற்றின் கிளைகளும் இங்கு இயங்குகின்றன. கன்னியா குமரி மாவட்டக் கூட்டுறவு நெசவாலை மற்றும் ஆரம்பொலி பால் வழங்கும் கூட்டுறவு சங்கம் ஆகியவையும் இங்குள்ளன[16].

பூதபாண்டி (தோவாளை வட்டம்) மக்கள் தொகை-12,403 (ஆண்கள் - 6224 + பெண்கள் - 6179)[17]

தோவாளை வட்டத்தின் தலைமையிடமான பூதபாண்டி, தாடக மலைக் குன்றுகளின் அடிவாரத்தில் அமைந்துள்ளது. நாகர்கோவில் - பாலமோர் சாலையில் நாகர்கோவிலிருந்து 12 கிலோ மீட்டர் தொலைவிலும், ஆரம்பொலி கணவாயிலிருந்து வடமேற்கே ஒன்பது கிலோ மீட்டர் தொலைவிலும் அமைந்துள்ளது. இது பூதபாண்டியன் என்ற பாண்டிய மன்னர் தோற்றுவித்த தொன்மையான இடமாகும்[18]. பழையார் ஆற்றின் கரையில் மிக அருமையான இயற்கைச் சூழலில் இக்கிராமம் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. தொல்பொருள் ஆராய்ச்சி முக்கியத்துவம் வாய்ந்த பூதலிங்கத்திற்கு நேர்ந்தளிக்கப்பட்ட ஒரு பழைய கோயிலும் இங்கு உள்ளது. அக்கோவிலில் பல கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன.

இக்கோவிலின் பிரதான தெய்வமான லிங்கம், மூலதத்துவங்களாக முற்காலங்களில் கருதப்பட்டவைகளிலொன்றாக உலகம் வகைப்படுத்தப் பட்ட "ப்ரித்வி" என்பதைக் குறிப்பதாகக் கூறப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி மாதத்தில் நடத்தப்படும் தேர்த்திருவிழாவானது, தோவாளை வட்டத்தில் நடத்தப்படும் இந்துக்களின் மிகப்பெரிய திருவிழாவாகும். சுற்றுவட்டாரத்திலிருந்தும் மற்றும் நெடுந்தொலைவி லிருந்தும் ஆயிரக்கணக்கான மக்களை இத்திருவிழா கவர்ந்திழுக்கிறது.

வட்டாட்சியர் அலுவலகம், காவல் நிலையம், காடுகள் பேணும் அலுவலர் அலுவலகம், வட்டார வளர்ச்சி அலுவலகம் மற்றும் துணை பதிவாளர் அலுவலகம் ஆகியவை இந்த வட்டத் தலைமையிடத்தில் இயங்கி வருகின்றன. ஒரு துவக்கப்பள்ளி, ஒரு துவக்க மற்றும் நடுத்தரப் பள்ளி மற்றும் ஒரு மேல்நிலைப்பள்ளி ஆகியவை இப்பகுதியில், மாணவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பள்ளி நிறுவனங்களாகும். வங்கி வசதிகளைப் பொறுத்தவரை, திருவாங்கூர் மாநில வங்கி, இங்கு ஒரு கிளையினை துவக்கியுள்ளது[19].

இக்கிராமத்தின் பிற பகுதியிலுள்ள திட்டுவளை, பூதபாண்டியி லிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது. மக்கட்தொகையில், இஸ்லாமியர்கள் அதிக அளவில் அங்கம் வகிக்கின்றனர். அவர்களது முக்கியத் தொழில், நெசவுத் தொழிலாகும். மூன்று கிறித்தவ திருக்கோவில்களும், ஒரு மசூதியும் இக்கிராமத்திலுள்ளது.

சித்ரால் (விளவங்கோடு வட்டம்) - இதனுடைய வருவாய் கிராமம் - அருமனை ஆகும். அக்கிராமத்தின் மக்கட்தொகை-10,177 ஆகும். (ஆண்கள் 5119 + பெண்கள் 5058).

குழித்துறை - திக்குரிச்சி - சித்ரால் சாலையில், குழித்துறையிலிருந்து எட்டு கி.மீ. தொலைவில் இக்கிராமம் அமைந்துள்ளது.

இக்கிராமத்திற்கருகாமையில் கரடுமுரடான மற்றும் மேடு பள்ளமான திருச்சாராணாட்டுமலை என்ற சிறிய குன்று உள்ளது. சாரணர்களால் மிகவும்

புனிதமான குன்றாக இது கருதப்படுவதால், இது அவ்வாறு அழைக்கப்படுகிறது. "சாரணர்" என்ற சொல் "சமண சமயத்துறவி"களைக் குறிக்கிறதென நிகண்டஸ் கூறுகிறார். தமிழ் அகராதிப்படி, "சாரணர்" என்றசொல் இயற்கையையும் மிஞ்சும் சக்திகளை பெற்றுள்ள சமண அல்லது புத்த சமய சாதுக்களைக் குறிக்கும். ஆகையால் இக்குன்று சமண சமயத்துறவிகளுக்கு புனிதமானதெனவோ அல்லது அவர்கள் அதிக அளவில் அங்கு வாழ்ந்திருக்கலாமெனவும் ஊகிக்க முடிகிறது. மேலும் கி.பி. 9-ம் நூற்றாண்டில், சமயப்பற்றுள்ள சமணர்கள், இந்தப் புனிதமான குன்றுப் பகுதியில் செல்வாக்குடன் வாழ்ந்திருக்கலாமெனவும் கல்வெட்டு சான்றுகளினின்று அறிய முடிகிறது [20].

இது ஒரு சிறிய இடமாக இருப்பினும், ஒரு நூற்றாண்டிற்கு முன்னர், முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்ட மலையைக் குடைந்து எழுப்பப்பட்ட குகைக் கோவில்களுக்கு பெயர்பெற்ற இடமாகும். பெரிய பாறைகளுடைய குன்றுப் பகுதிகளின் உச்சியில் இவை காணப்படுகின்றன[21]. கற்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள கரடுமுரடான பாதையில்தான் நடந்து இவற்றை அடையமுடியும். இங்குள்ள கோவில்களில் மிகவும் பழுதடைந்த நிலையில், மேற்குமுகம் பார்த்த கோபுரத்துடன் தாழ்வான கூரையையுடைய கோவில்தான், மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த கோவிலாகும். இதுஒரு பாறையில் குடையப்பட்டு, வெளியே கட்டப்பட்ட ஒரு அறையுடன் அழகுறும் வேலைப்பாடுடன் கூடிய கருங்கல்லாலான தூண்களின் ஆதரவில் உள்ள தாழ்வான அமைப்பைக் கொண்டதாகும். வடபுறமிருக்கும் சுவற்றிலுள்ள பாறையில், சமண சமய தீர்த்தங்கரர்கள் பற்றிய சிற்பப்படைப்பு களை நோக்குங்கால் இது சமண சமய சமயத்தினரின் திருக்கோவில் எனத் தெரிய வருகிறது[22]. கோவிலின் உட்புறத்தில் அம்பிகை, புத்தர் மற்றும் கோபாலகிருஷ்ணர் ஆகியோரின் சிலைகள் உள. கோவிலின் ஆண்டுத் திருவிழா வைகாசி விசாகத்திற்கு முன்னர் நடைபெறுகிறது. தொடர்ந்து 10 நாட்களுக்கு நடைபெறும் இத்திருவிழாவிற்கு மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்து மக்கள் வருகின்றனர்.

இங்குள்ள குகைக்கோவிலில் மூன்று உட்பிரிவுகள் உள்ளன. "பத்மாசன" தோற்ற அமைவில் மத்திய உட்பிரிவில், மூன்று குடைகளுக்குக் கீழே அமைந்துள்ள மூலவர் மகாவீரர் ஆவார். மகாவீரருக்கு இடதுபுறம், படமெடுத்து ஆடும் நாகத்தினுடைய விதானத்தின் கீழ், நின்றுகொண்டு காட்சி தருவது பார்சவநதியாகும். அவருக்கு வலது புறம் பத்மாவதி தேவியின் இடத்தில் நின்றுகொண்டு காட்சியளிப்பது பகவதியாகும்.

திருச்சாராணாத்து மலையில் பெயர்பெற்ற ஒரு சமண சமயப் பல்கலைக் கழகம் இயங்கி வந்ததாக, கல்வெட்டுச் சான்றுகளினின்றும் தெரிய வருகிறது[23].

கோவிலும், அதன் பின்புறமுள்ள பெரிய பாறையும் கண்ணைக் கவர்கின்றன. அவற்றின் உச்சியில் பசுமையான மரங்களினால் அணி பூட்டப்பட்டது போன்ற அழகிய தோற்றத்தை அளிக்கும் குன்றுகள், தாழ்வான பகுதியிலுள்ள நெல்வயல்கள், ஆறு மற்றும் கணக்கிலடங்கா

பனஞ்சோலைகள் இவையாவும் இயற்கையழகிற்கு எழிலூட்டுகின்றன. கோவிலின் முன் மண்டபத்திலிருந்து காணும் கதிரவன் மறைவு, உண்மையிலேயே கண்கொள்ளாக் காட்சியாகும்.

ஒவ்வொரு பயணியின் கவனத்தையும் கவர்வது, கோவிலுக்கும் வடபுறமுள்ள "உறிஞ்சிப் பாறை" என்ற பாறையாகும். உறிஞ்சினால் ஒரு சிறிய துவாரத்தினின்றும் தூய்மையான குடிநீர் வெளிவருவது வியப்பை அளிக்கிறது[24].

கொளச்சல் (கல்குளம் வட்டம்) மக்கள் தொகை-26,603 (ஆண்கள்-13508 + பெண்கள்-13095)

இக்கடற்கரை நகரம், நாகர்கோவிலுக்கு மேற்கே 22 கிலோ மீட்டர் தொலைவிலும், இரணியலுக்கு தென்மேற்கே ஏழு கிலோ மீட்டர் தொலைவிலும் அமைந்துள்ளது. 16-18-வது நூற்றாண்டில், ஆங்கிலேய வணிகர்களுக்கு தேவைப்படும் பொருள்களுக்காக அல்லது செப்பனிடுவதற்காக கப்பல்கள் செல்லக்கூடிய துறைமுகமாக இது இயங்கி வந்தது. இந்த காலங்களில் ஆங்கிலேய வணிகர்களின் கப்பல்கள், இங்கு அடிக்கடி வந்து போவதுண்டு. டச்சுக்காரர்களும், ஆங்கிலேயர்களும் இங்கு குடியேறி வாணிப தளம் அமைத்தனர்[25]. கொளச்சலில், திருவாங்கூர் மன்னர் மார்த்தாண்டவர்மனுக்கும், டச்சுக்காரர்களுக்கும் கி.பி. 1741-ல் நடந்த வரலாற்று சிறப்புமிக்க கடற்போர் டச்சுக்காரர்களுக்குப் பெரும் விளைவுகளை உண்டாக்கி, பெரும் தோல்வியை அளித்தது[26]. இதனால் டச்சுக்காரர்கள், இந்நாட்டில் தங்களது (கடல் கடந்த) குடியமைப்பினை அமைக்கும் திட்டத்தினை கைவிட நேரிட்டது. இப்போரில் பல டச்சுப்படைவீரர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களில் இ-பி-டீ-லென்னாய் என்பவர் மார்த்தாண்டவர்மனின் படையிற் சேர்ந்தார். அவர் மன்னரின் படைகளைத் திருத்தியமைக்கவும், தலைநகரிலும், எல்லைப்புறங்களிலுமுள்ள கோட்டைகளைக் கட்டி முடித்திடவும் உதவி புரிந்தார். இந்தப்படை மன்னர் மார்த்தாண்டவர்மனுக்கு பல வெற்றிகளை ஈட்டித் தந்தது. துறைமுக அலுவலகத்தின் ஒருபுறத்தில் எழுப்பப்பட்டுள்ள தூண் இந்த வெற்றிகளுக்கு சான்று பகர்கிறது.

குளச்சல் துறைமுகம், இயற்கையிலேயே கப்பல் போக்குவரத்துக் குத் தேவையான அமைப்பினைப் பெற்றுள்ளது. மைய இடத்திலிருந்து மிகத்தொலைவில் விலகியிருக்கிற பாறைகள், நடைமுறைக்குரிய அலைதாங்கியினை அமைக்கின்றன. இந்தப்பாறைகளின் இயற்கை அமைப்பினால்தான் சரக்குகளை ஏற்றுதல் மற்றும் இறக்குதல் போன்ற பல்வேறு கப்பல் செயல்பாடுகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இங்கிருந்து பல பொருட்கள் குறிப்பாக பனை, அவற்றின் நார்ப்பொருட்கள் கனிவளமுள்ள மண்கள், மீன் மற்றும் உப்பு ஆகியவை ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

சிறிய கப்பல்கள், கரையிலிருந்து ஏழு இருகைப்பாவு அகலமுள்ள கடலாழத்தில், நங்கூரமிட்டு நிறுத்தப்படுகின்றன.[27] சிறிய கப்பல்கள் கரையினின்றும் ஐந்து இருகைப்பாவு அகலமுள்ள கடலாழத்தில், அதாவது

கால் மைலுக்கும் குறைவான தொலைவில் நங்கூரமிட்டு நிறுத்தப்படுகின்றன. கொடிக்கம்ப வளாகத்திலுள்ள கொடிக்கம்பம் பகல் நேரங்களில், அனைத்து நாட்டுத் தொடர்புடைய "குழுஉக்குறி" (சுருக்கம் அல்லது மறைபொருளைக் குறிப்பதற்கான இலக்கம் - எழுத்து அல்லது சொற்கோவை) முறையில், செய்திகள் கப்பல்களுக்கு அனுப்பப்படு கின்றன. விளக்கு மூலம் சுட்டுக்குறி அறிவிக்கும் வசதி இத்துறைமுகத்தில் இல்லை. துறைமுகத்தைக் காண்பிப்பதற்காக ஒரு மரக்கலக்கூம்பு முன்விளக்கு, சிவப்பு இடைத்தடுப்புடன் கொடிக்கம்ப வளாகத்தில் பொருத்தப்பட்டுள்ளது. மற்றொன்று கப்பல் நங்கூரமிடப் பட்டுள்ளதைக் காண்பிக்க, நல்ல ஒளியினை வெளிப்படுத்தி, துறைமுக அடையாளக்குறி காட்டும் நிலையத்தில் உள்ளது. அது நல்ல வானிலையில் எட்டு கிலோ மீட்டர் தொலைவு வரை தெளிவாகத் தெரிகிறது. இத்துறைமுகத்தில், அணைகரை இல்லை[28]. கொடிக்கம்ப வளாகத்தின் முன்புறம் 300 மீட்டர் தொலைவிற்கு திறந்த கடற்கரை உள்ளது. அகஸ்தீஸ்வரம் வட்டம், மணக்குடி மற்றும் கோவளம் ஆகியவை இத்துறைமுகத்தின் துணைத்துறைமுகங்களாகும்.

இது, பண்டை காலத்தில் தொழில் மற்றும் வாணிபத்திலும், பல்வேறு கடல் வாணிபத்திலும் மிகப்பெரும் துறைமுகமாகப் புகழ்பெற்று விளங்கியது. இது, முன்பு கோட்டார் மற்றும் இரணியலில் உற்பத்தி செய்யப்பட்ட மிகநேர்த்தியான பருத்தி நூலிழை அயல்நாடுகளுக்கு அனுப்பி வைக்கும் போக்குவரத்து மையமாகத் திகழ்ந்தது [29].

தற்போது, குளச்சலில் இரண்டு நூலிழை தொழிற்சாலைகள் உள்ளன. இங்கிருந்து முழுமையாகத் தயாரிக்கப்பட்ட பொருட்கள், ஏற்றுமதி செய்யப்பட்டு, தூத்துக்குடிக்கு அனுப்பப்படுகின்றன. நூலிழை பொருட்கள் தரம் பிரிக்கப்பட்டு, இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் பிறநாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன[30].

ஒரு நகராட்சி பொதுச்சந்தை மற்றும் ஒரு குளியலிடம் ஆகியவை, பாம்பூரி வாய்க்காலுக்கு அருகாமையில் கட்டப்பட்டுள்ளன. உயர்நிலைப் பள்ளிகள், அஞ்சல் நிலையம், துணைப்பதிவாளர் அலுவலகம், காவல் நிலையம், காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம், கூட்டுறவு வீட்டு வசதி சங்கம், அரசு மருந்தகம், பயணிகள் தங்குமிடம், சுங்கவரி அலுவலகம் மற்றும் துறைமுக அலுவலகம் ஆகியவை இங்கு இயங்கி வருகின்றன. திருவாங்கூர் மாநில வங்கி, தமிழ்நாடு மொக்கண்டைல் வங்கி ஆகியவற்றின் கிளைகளும் இங்கு உள்ளன. நகராட்சியின் புறப்பகுதியில், ஏறத்தாழ இரண்டு கிலோ மீட்டர் தொலைவில், சார்லஸ் பீஸ் நினைவு மருத்துவமனை என்ற ஒரு தொழுநோய் மருத்துவமனை உள்ளது. இது கன்னியாகுமரி, தென்னிந்தியத் திருச்சபை சமயப்பரப்புக் குழுவினால் நடத்தப்படுகிறது. மீன் தொழில்துறை உதவி இயக்குநர் அலுவலகம் மற்றும் நகராட்சி அலுவலகம் ஆகியவையும் இங்கு உள்ளன. இந்த நகரம், முக்கிய மையங்களான திருவனந்தபுரம், நாகர்கோவில், தேங்காப்பட்டிணம், மார்த்தாண்டம் ஆகிய நகரங்களுடன் பேருந்துகள் செல்லும் நல்ல சாலைகளால் இணைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாநில பதநீர் கூட்டுறவு கூட்டணைக் கழகமும் இங்கு நிறுவப்பட்டுள்ளது[31].

இவ்விடத்தின் வடக்கே இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் ரீடாபுரம் உள்ளது. (புனித ருகுஸ்டைன்) சமயப்பெண் துறவியர் மடம் ஒன்று, இங்கு 1924ஆம் ஆண்டு நிறுவப்பட்டு பெல்ஜியம் சகோதரிகளால் நடத்தப்படுகிறது. இந்தப்பெண் துறவியர் மடத்துடன் ஓர் உயர்நிலைப் பள்ளியும் இயங்கி வருகிறது.

இரணியல் (கல்குளம் வட்டம்), மக்கள் தொகை-27,693 (ஆண்கள்-13863 + பெண்கள்-18330)

முன்னர் தனி வட்டமாக விளங்கிய இரணியல், தற்போது 4172 சதுர மைல்களைக் கொண்ட கிராமமாக உள்ளது. நாகர்கோவில் திங்கள் சந்தை சாலையிலிருந்து 15 கிலோ மீட்டர் தொலைவிலும், தக்கலைக்குத் தெற்கே ஐந்து கிலோ மீட்டர் தொலைவிலும், இரணியல் நகரம் அமைந்துள்ளது. தென் திருவாங்கூரில் பத்மநாபபுரம் தலைமை நகரமாக இயங்கியதற்கு முன் இரணியல்தான் திருவாங்கூர் மன்னர் குடும்பத்தின் தலைமையிடமாகத் திகழ்ந்தது[32]. வசந்த மண்டபமென அழைக்கப்பட்டு வந்த அரண்மனையின் பகுதி, மிக முக்கியத்துவம் வாய்ந்த கல்லாலான துயிலிடத்தைக் கொண்டதாகும். இம்மாநிலத்தை ஆண்டு வந்த இளவரசி, இத்துயிலிடத்தில் நித்திரையிலாழ்ந்திருந்த போது, மறைந்து விட்டதாகவும், பின்னர் திரும்பி வரவேயில்லை எனவும் கூறப்படுகிறது. அவரது நினைவாக, இத்துயிலிடத்தின் அருகே ஒரு விளக்கு இன்னமும் எரிந்து கொண்டிருக்கிறது. ஆனால், தற்போது இப்பழைய அரண்மனை பாழடைந்து இடிந்து காணப்படுகிறது. இடிந்த கட்டிடத்தின் தூண்கள் மட்டும் தற்போது காணப்படுகின்றன.

பண்டைக்காலத்திலிருந்தே, இந்த இடம் நேர்த்தியான பருத்தித் துணிகளுக்கு புகழ்பெற்று விளங்கியதாகும். தற்போதுகூட, பல்வேறு வகைப்பட்ட மிக நேர்த்தியான கைத்தறித் துணிகளுக்கு இவ்விடம் பெயர் பெற்று விளங்குகிறது. எண்ணெய் பிழிந்து எடுத்தலும், இங்கு செழித்தோங்கும் தொழிலாகும்.

ஒரு உயர்நிலைப்பள்ளி, காவல் நிலையம், துணைப் பதிவாளர் அலுவலகம், அஞ்சல் நிலையம், நிற்ற இயல் நீதி மன்றம், இந்து சமயப்பரப்புக் குழு மருத்துவமனை, பொதுப்பணித்துறைப் பிரிவு அலுவலர் அலுவலகம் மற்றும் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் கிளை [33] ஆகியவை இங்குள்ள முக்கிய அலுவலகங்களும், நிறுவனங்களுமாகும்.

"அரசர்கள்" என்ற சிறுபான்மையினர் வழிபடுவதற்காக, ஆங்கிலேயரது பாணியில் கட்டப்பட்ட ஒரு பழைய கிறித்தவ திருக்கோவிலும் இங்கு உளது[34]. அது ஒரு பழைய கோவிலாக இருப்பினும், உள்ளூர் கிறித்தவ சமயத்தினரால் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. நாகர்கோவில்-கொளச்சல் சாலை கிராமத்தின் நடுவே செல்கிறது.

ஜேம்ஸ் டவுன் (அகஸ்தீஸ்வரம் வட்டம்) மக்கள் தொகை 700 [35]

இது, நாகர்கோவிலிலிருந்து 16 கிலோ மீட்டர் தொலைவில், நாகர்கோவில் அஞ்சுக் கிராமம் சாலையில் அமைந்துள்ள ஒரு சிறு

கிராமமாகும்[36]. இது அகஸ்தீஸ்வரம் ஊராட்சி ஒன்றியத்திலடங்கிய கிராமமாகும். இங்குள்ள தென்னிந்தியத் திருச்சபை கிறித்தவத் திருக்கோவில் மிகப் புகழ்பெற்றதாகும். அதற்கு, இக்கிராமத்தில் தென்னஞ் சோலையுள்ள 4 ஏக்கர் நிலமுள்ளது. மிகப் பழமையான கிறித்தவ திருக்கோவில், பிச்சைக்குடியிருப்பில் உள்ளது. இது, திருவாங்கூர் பண்டை எல்.எம்.எஸ். சமயப்பரப்பாளரான ரிங்கல்ட்யூப் என்பவரால் 1870-ல் நிறுவப்பட்ட ஏழு திருக்கோவில்களிலொன்றாகும். துவக்கத்தில், வரியூர் சமயப்பரப்புக்குழு என அழைக்கப்பட்டு வந்த, ஜேம்ஸ் நகர சமயப் பரப்புக்குழு, மதிப்புமிக்க ஜேம்ஸ் ரஸ்ஸல் என்பவரால், 1840-ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது[37]. அவரது நினைவாக இது ஜேம்ஸ் நகரமென அழைக்கப்படுகிறது. இந்த சமயப்பரப்புக்குழு பின்னர் 28 கிறித்தவ கோவில்களுடனும், 25 பள்ளிகளுடனும் கோட்டாரம் வரை விரிவாக்கப் பட்டது. இந்த இடம், தென்னஞ்சோலைகளுக்கும், நெல் வயல்களுக்கும் மிகவும் பெயர் பெற்று விளங்கும் நகரமாகும். ஒரு எல்.எம்.எஸ். துவக்கப் பள்ளியும், ஓர் அரசு துவக்கப்பள்ளியும் இங்கு இயங்கி வருகின்றன [38].

கல்லியங்காடு (கல்குளம் வட்டம்)

இது அடங்கிய வருவாய் கிராமமான அல்லூரின் மக்கட்தொகை 9,130 ஆகும். இது நாகர்கோவில்-திருவனந்தபுரம் சாலையில், நாகர்கோவிலிலிருந்து ஏழு கிலோ மீட்டர் தொலைவிலுள்ள சிறிய கிராமமாகும். இங்கு ஒரு சிவன் கோவில் உள்ளது. இக்கோவில் அர்ச்சகரின் அரசப்பற்றும், பேராண்மையும் கொண்ட வீரச்செயலினைப் புகழ்ந்து, பேசுவதுண்டு. மார்த்தாண்டவர்மன் அரசோச்சிய காலத்தில், திருவாங்கூர் ஆட்சிப்பகுதியில் ஆற்றல்மிக்க குடி மரபுத் தலைவர்களாக இருந்த எட்டு வீட்டில் பிள்ளைமார்கள், மார்த்தாண்டவர்மனைக் கொலை செய்ய சதி செய்து, அதற்கு ஒரு திட்டம் தீட்டினர். அவரைக் கொல்ல முயற்சி மேற்கொள்ளப் பட்டபோது, மன்னர் இந்த கிராமத்திலுள்ள சிவன் கோவிலில் ஒளிந்து கொண்டார். மன்னரைத் தொடர்ந்து வந்த பிள்ளைமார்கள், இக்கோவிலை முற்றுகையிட்டனர். தப்பிக்க வழியில்லாத குழப்ப நிலையில், மார்த்தாண்டவர்மன் தவித்துக் கொண்டிருக்கையில், அர்ச்சகர் ஒரு திறமையான திட்டம் தீட்டி, கோவில் அர்ச்சகர் வேடத்தில் மன்னர் தப்பிக்கத் துணைபுரிந்தார். இது பிள்ளைமார்களின் கவனத்திற்கு வந்தவுடன் அவர்கள் மன்னரின் உடுப்பிலிருந்த கோவில் அர்ச்சகரைக் கொலை செய்தனர்[39]. இக்கோவிலைப் பராமரிக்க போதிய கவனம் செலுத்தப்படுவதில்லை.

கன்னியாகுமரி (அகஸ்தீஸ்வரம் வட்டம்), மக்கள் தொகை-14,087 (ஆண்கள்-7047 + பெண்கள்-7040)

கன்னியாகுமரியின் இயற்கையமைப்பினாலேயே, அது இந்தியாவிலுள்ள சுற்றுலாத் தலங்களில், சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது. இது மாவட்டத்தின் தலைமையிடமான நாகர் கோவிலிலிருந்து, 19 கிலோ மீட்டர் தென் கிழக்கே அமைந்துள்ளது. இது 88 கிலோ மீட்டர் அளவுள்ள நீளமான சாலையில், திருவனந்தபுரத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. கன்னியாகுமரி, பழமைச்சின்னங்களையுடைய

ஒரு இடமாகும். அங்கு எழுந்தருளியுள்ள கன்னித்தெய்வமான கன்னியாகுமரி அம்மனின் பெயரிலேயே இந்த இடமும் அமைந்துள்ளது. இஂந்து அரபிக்கடல், இந்தியப் பெருங்கடல் மற்றும் வங்காள விரிகுடாக் கடல் ஆகிய மூன்று கடல்களும் இணையும் இந்திய தீபகற்பத்தின் தென் முனையிலுள்ள இடமாகும். இந்தியாவின் மிகமுக்கிய சுற்றுலா மையங்களில் இதுவும் ஒன்றாகும். இயற்கை காட்சிகளையுடைய கடற்கரையும், எண்ணற்ற நிறங்களையுடைய மணல்களும், கன்னியாகுமரியின் தனித்தன்மைக்கு சான்றாக விளங்குகின்றன. அழகுற அமைந்து கடற்கரையினின்றும் பௌர்ணமியன்று மாலை முழுமதி கிளம்புவதும், ஞாயிறு மறைவதும் கண்கொள்ளாக் காட்சியாகும்.

பண்டை காலந்தொட்டே இது மிக புகழ்பெற்ற சுற்றுலா மையமாகத் திகழ்கிறது. பெரிப்ளஸ் (கி.பி. முதல் நூற்றாண்டு) மற்றும் தாலமி (கி.பி. இரண்டாம் நூற்றாண்டு) ஆகியோர் இவ்விடத்தைப் பற்றிக் கூறியுள்ளார்கள். **சிலப்பதிகாரம்**, "புறநானூறு" மற்றும் "மணிமேகலை" ஆகிய சங்க இலக்கியங்களும் கன்னியாகுமரியைச் சுட்டிக்காட்டியுள்ளன. **தொல்காப்பியத்**திலுள்ள கீழ்க்குறிப்பிட்ட ஈரடிச் செய்யுள், பண்டைக் காலத்திலிருந்தே, கன்னியாகுமரி, தமிழ்நாட்டின் தென்கோடி எல்லையாக இருந்து வருவதற்கு சான்று பகர்கிறது.

"வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுகம்"

இது இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் மக்கள் வருகை தந்து புனித நீராடும் முக்கிய சுற்றுலா மையமாகத் திகழ்கிறதென சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பெண் தெய்வம் கன்னியாகுமரிக்கு நேர்ந்தளிக்கப்பட்ட, கற்சுவரினால் சூழப்பட்ட இங்குள்ள கோவில் கடலின் முனையில் எழுப்பப்பட்டுள்ளது. இப்பெண் தெய்வத்தின் சிற்பக்கலைப் படைப்பு, இந்தியாவிலேயே மிகவும் அழகு வாய்ந்தவற்றுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. நாட்டின் தென்கோடியில் எழுந்தருளியுள்ள கன்னிப்பெண் தெய்வமான கன்னியாகுமரி அம்மன், வடஎல்லையான இமயமலையிலுள்ள தனது தலைவனை வழிபடுவதே இந்தியாவின் இறையருள் சார்ந்த மற்றும் இயற்பொருள் சார்ந்த ஒற்றுமையைக் குறிக்கிறதெனில் மிகையல்ல.

இது ஆரோக்கிய வாழ்வை அளிப்பதோடு மட்டுமல்லாது, மனைப்புற விருந்திற்குகந்த இடமுமாகும். புனித நாட்களில் யாத்ரிகர்கள் நீராட, ஒரு குளியற்கூடமும் உள்ளது. கேப் உணவகம் எதிரே, கடல்நீரில் மீன்பிடிக்கும் வசதியுடன் கூடிய ஒரு நீச்சல் குளம் அமைந்துள்ளமை இவ்விடத்தின் மற்றொரு தனிச் சிறப்பாகும்.

நாட்டின் தலைசிறந்த மகான்களான சுவாமி விவேகானந்தர், மகாத்மா காந்தி ஆகியோருடன் இவ்விடம் சம்பந்தப்பட்டுள்ளது. மற்றொரு சிறப்பியல்பாகும். அவர்களுக்கு இங்கு நினைவு மண்டபங்கள் எழுப்பப்பட்டுள்ளன. அழகுற அமைந்துள்ள இம்மண்டபங்கள் இப்புனித இடத்தின் கவர்ச்சிக்கு எழிலூட்டுகின்றன. கருத்தைக் கவர்கிற காந்தி

மண்டபம், தேசத் தந்தையின் நினைவாகக் கட்டப்பட்டு 1956ஆம் ஆண்டு முடிக்கப்பட்டது. மகாத்மா காந்தியின் புதைகலம் (தாழி) கடலில் மூழ்குவிப்பதற்கு முன் பொது மக்கள் இறுதி அஞ்சலி செலுத்திட இங்கு வைக்கப்பட்டது.

1925 மற்றும் 1937 ஆம் ஆண்டுகளில் அதாவது இரு தடவைகள் மகாத்மா காந்தி அவர்கள் கன்னியாகுமரிக்கு வருகை தந்தார்கள். 1925-ம் ஆண்டு அவர் பெண் தெய்வமான கன்னியாகுமரியை வழிபட முனைந்த போது அவர் அயல்நாடு சென்றுவந்த காரணத்தால், கோவிலில் அவர் நுழைய முந்தைய திருவாங்கூர் மாநில அரசு அனுமதி மறுத்தது. ஆனால், திருவாங்கூர் மாநிலத்திலுள்ள கோவில்களில் இந்துக்கள் வழிபட, 1937-ம் ஆண்டு அனுமதியளித்தபோது, கன்னியாகுமரியை வழிபட அவருக்கு தனி அழைப்பு விடுக்கப்பட்டது. 1937-ம் ஆண்டு, சனவரி மாதம் மகாத்மா காந்தி அவர்கள் கன்னியாகுமரிக்கு வருகை புரிந்தார்கள். 1948-ம் ஆண்டு அவர்களது (அஸ்தி) சாம்பல் கன்னியாகுமரி பெருங்கடல் நீரில் கரைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியை நினைவு கூறு முகத்தான், இங்கு ஒரு அழகுமிகு நினைவுச்சின்னம் எழுப்பப்பட்டுள்ளது. அதனுடைய மைய வடிவு 79 அடி உயரமாகும். இது மகாத்மா அவர்கள் உயிர் துறக்கும் போதான அவரது வயதைக் குறிக்கிறது. மகாத்மா காந்தி அவர்களது பிறந்த நாளான அக்டோபர் இரண்டாம் தேதியன்று நண்பகல் கதிரவனின் ஒளிக்கதிர்கள், கூரையிலுள்ள துவாரத்தின் வழியாக பீடத்தில் விழுவது போன்றதொரு அமைப்பில், இந்நினைவுச் சின்னம் கட்டப்பட்டுள்ளது.

இந்நினைவு மண்டபத்தின் மேற்பார்வைப் பொறுப்பு, பொதுப் பணித்துறையிடமிருந்து பொது (தகவல் மற்றும் மக்கள் தொடர்புத்) துறைக்கு கடந்த 1978-ம் ஆண்டு மாற்றப்பட்டுள்ளது.

விவேகானந்தா நினைவுப்பாறை

கன்னியாகுமரியில் அதிக அளவிலான சுற்றுலாப் பயணிகளின் கவனத்தைக் கவரக்கூடிய மற்றொரு இடம் விவேகானந்தா நினைவுப் பாறையாகும். அதனுடைய பெயர் குறிப்பிடுவது போன்று இது உண்மையிலேயே விவேகானந்தா நினைவுப்பாறைக் குழுவினால் கட்டப்பட்ட புனிதமான நினைவுச் சின்னமாகும். இக்குழுவில் திரு. மன்னத் பத்மநாபன் தலைவராகவும், மனனேய ஏக்நாத் ரானடே அமைப்புச் செயலாளராகவும், பல்வேறு மாநிலங்களைச் சார்ந்த முக்கியப் பிரமுகர்கள் நிருவாகக் குழு உறுப்பினர்களாகவும் பணியாற்றினர். சுவாமி விவேகானந்தா அவர்கள், 1892ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் 24, 25 மற்றும் 26-ந் தேதிகளில் ஆழ்ந்த தியானத்தில் ஈடுபடவும், ஒளியூட்டப் பெறவும் ஸ்ரீபாத பாறைக்கு வருகை புரிந்ததை நினைவு கூறவே, இந்த நினைவுப்பாறை எழுப்பப்பட்டது[40].

பண்டைக் காலத்திலிருந்தே இப்பாறை ஒரு புனித இடமாகக் கருதப்பட்டு வருகிறது. பெண் தெய்வம் கன்னியாகுமரியின் ஸ்ரீபாதம் பட்ட நிலையில் இப்பாறை புனிதத் தன்மை பெற்றதென்பது புராண மரபாகும். குமரிக் கோவிலின் தென்கிழக்கே, கடலின் நடுவில் விவேகானந்தா

பாறைகள் எனக் கூறப்படும் இரட்டைப் பாறைகள் உள்ளன. இப்பாறைகள் ஒன்றைவிட்டு ஒன்று 220 அடி தொலைவு விலகி, அவற்றினிடையே கடலிலிருந்து கற்குவியல்கள் துருத்திக் கொண்டுள்ளன. இரண்டு பாறைகளில் சிறிய பாறை, கரைக்கு அருகாமையில், சமமான மேல் தளப்பரப்பின்றி உள்ளது. தொலைவிலுள்ள பெரிய பாறை, அகலமான மேல் தளத்தையும் 55 அடி உயரத்தையும் கொண்டதாகும். எனவேதான், சுவாமி விவேகானந்தா அவர்கள் தியானத்திற்கு இப்பாறையைத் தேர்ந்தெடுத்தார். அதிலிருந்து இது "விவேகானந்தா பாறை" என அழைக்கப்படுகிறது.

பிரதான நிலத்தின் முடிவிலிருந்து 450 கெசத் தொலைவிலும், நல்ல உயரத்திலுள்ள பாறை, இமயமலை வரை பறந்து விரிந்து கிடக்கும் நமது புனித பூமியை தரிசிக்க ஆர்வமுள்ள யாத்ரிகர்களுக்கு, ஒரு தனித்தன்மை வாய்ந்த இடமாக விளங்குகிறது.

பாறையில், ஒரு மனிதக் காலை ஒத்தும், சிறிது பழுப்பு நிறத்திலும் நீட்டிக்கொண்டு காட்சி தரும் வடிவ அமைப்புதான் "ஸ்ரீ பாதத்தின்" அடையாளமாகும். புராண மரபுப்படி, இந்தப் பாறையில்தான் பெண் தெய்வம் "கன்னியா" தவம் புரிந்தார்[41].

துவக்கத்தில் குமரிக்கோவில் இப்பாறையிலோ அல்லது அதற்கு அருகாமையிலோ இருந்ததாகவும், பாறையே பிரதான நிலத்தின் ஒரு பகுதியாக இருந்ததாகவும் நம்பப்படுகிறது. பின்னர் கடல் பிரதான நிலத்தை ஆக்கிரமித்துக் கொண்டு, பாறையை ஒரு தீபகற்பமாக மாற்றி விட்டதாகவும், அதன் விளைவாக பழைய கோவில் தற்போது கோவிலிலுள்ள இடத்தில், திரும்ப நிர்மாணிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. காலங்காலமாக சக்தியை வழிபடுபவர்கள், இப்பாறையை "சாதனா" செய்வதற்கு உயிர் நலஞ் சார்ந்த செயற்படுத்தும் திறன் கொண்ட இடமாகப் போற்றி, மரியாதை செலுத்தி வருகிறார்கள்[42].

சுவாமி விவேகானந்தர், உயர்ந்த ஞான மார்க்கத்தினை அடைய வேண்டுமென்ற நோக்கில் பொங்கியெழும் அலைகளையும் பொருட்படுத்தாது, கடலில் மூழ்கி நீந்தி, 500 மீட்டர் தொலைவினைக் கடந்து, இப்பாறையை விரைவில் அடைந்து தன் பணியினைத் தொடர்ந்ததற்கு இதுவே காரணமாக இருந்திருக்க முடியும். தெய்வத்தாயின் அருளாசியைப் பெற்றிட சுவாமிஜி, தெய்வ வழிபாட்டினையும், தியானத்தினையும் தொடர்ந்து கடைப்பிடித்து வந்தார். அகநிலையின் மிக உயர்ந்த செல்வமான தெய்வ ஒளியினை சுவாமிஜி பெற்றார்.

சுவாமிஜியின் வாழ்க்கையின் மிகப்பெரிய அந்நிகழ்ச்சியினை நினைவு கூறுமுகத்தான், அந்த இடத்தில் மகத்தான இந்த நினைவுச் சின்னத்தை எழுப்ப முனைந்தார்கள். இந்தியாவிலுள்ள தொல்பொருள் சிற்ப பாணிகள் அனைத்தும் ஒருங்கே அமையப்பெற்ற ஸ்தபதி, திரு. எஸ்.கே. ஆசாரி அவர்களால் உருவாக்கப்பட்ட இந்த நினைவுச் சின்னத்தை முந்தைய இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. வி.வி. கிரி அவர்கள் 2.9.1970-ம் நாளன்று திறந்து வைத்தார்கள்.

இந்த நினைவுச் சின்னத்தினைக் கட்டுவதற்கு இந்தியாவின் அனைத்து மாநிலங்களினின்றும், 1.5 கோடி ரூபாய் நிதியுதவி கிடைத்தது. துறைமுக அணைகரை தளமேடைகள் அமைக்க உதவியாகவும், கப்பல்கள் பாறையில் தங்குவதற்கு வசதியாக பாதுகாப்பு அளித்திடவும், கரையில் தமிழ்நாடு அரசு ஒரு அலை தாங்கியினை 4.25 இலட்ச ரூபாய் செலவில் அமைத்துள்ளது.[43] நினைவுச் சின்னமாக, இரண்டு கட்டிட அமைப்புகள் உள்ளன. அவை, 1. விவேகானந்தா மண்டபம் மற்றும் 2. ஸ்ரீபாத மண்டபம் ஆகியவையாகும்.

விவேகானந்தா மண்டபம்

இந்த 180' - 11½" x 56' மண்டபத்தில், 1. தியான மண்டபம் அதாவது ஆறு பக்க அறைகளைக் கொண்ட தியான மன்றம், 2. சபா மண்டபம் அல்லது கூடத்துடன் கூடிய பிரளிம மண்டபம் (உருவச் சிலைப்பிரிவு), இரு அறைகள், ஒரு நடைக்கூடம் மற்றும் சபா மண்டபத்தைச் சுற்றியுள்ள திறந்த பிரகாரம் இவையாவும் அடங்கிய சபா மண்டபம் அல்லது பேரவை மன்றம் ; 3. முக மண்டபம் (பகுதி) மற்றும் 4. இரண்டு அறைகளைக் கொண்ட முகப்பு நுழைவுப்படிகள் மற்றும் படிகளுக்குக் கீழே நடைக்கூடம், ஆகியவை அடங்கியுள்ளன.

ஸ்ரீபாத மண்டபம்

இச்சதுர மன்றம் கருவறை, உள் பிரகாரம், வெளிப்பிரகாரம் மற்றும் சுற்றியும் வெளி தளமேடை ஆகியவை அடங்கியதாகும். உருவச்சிலை யிலுள்ள சுவாமிஜி அவர்களது பார்வை, ஸ்ரீ பாதத்தை நோக்குவதான வேலைப்பாட்டுடன் இரு மண்டபங்களும் அமைக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

புதிய விவேகானந்தா மண்டபம்

புதிதாகக் கட்டப்பட்டுள்ள விவேகானந்தா மண்டபம், சுவாமி ரெங்கநாதானந்தா அவர்களால் விவேகானந்த புரத்தில், 6.9.1988 அன்று, இந்திய நாட்டு இளைஞர்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டதாகும். கறுப்பு மற்றும் சிவப்புக் கற்களால் மிக நேர்த்தியாகக் கட்டப்பட்ட மண்டபத்தில், சுவாமி விவேகானந்தரின் பெரிய கருங்கல் உருவச்சிலை நிறுவப் பட்டுள்ளது. விவேகானந்தா மண்டபத்தின் நிறுவனரான காலஞ்சென்ற ஏக்நாத் இராணடேயின் கல்லரையும், அதற்கருகிலுள்ள தோட்டமும், கடல்நீரில் ரம்யமாக மிதந்துக் கொண்டு நிற்கும் இம்மண்டபத்திற்கு அழகூட்டுகிறது[44].

விவேகானந்தா கேந்திரா

கன்னியாகுமரியில் சுவாமி விவேகானந்தருக்கு ஒரு தேசிய நினைவுச் சின்னத்தை நிறுவி அதை நாட்டிற்குக் கடந்த 2.9.1970 அன்று அர்ப்பணித்த பின்னர், கன்னியாகுமரியைத் தலைமையிடமாகக் கொண்டு, விவேகானந்தா கேந்திரா என்ற சமுதாயப்பணி நோக்கம் கொண்ட சமயப்பரப்புக் குழுவினை நிறுவி நடத்திட, விவேகானந்தா பாறை நினைவுச் சின்னக்குழு, தீர்மானித்தது. இந்த கேந்திரம், "மனித இனத்திற்குப் பணி செய்வ"தையே, தாரக மந்திரமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. சுயநலமின்றியும், சாதி,

விவேகானந்தர் சிலையின் தோற்றம்

கன்னியாகுமரி அம்மனின் 'திருவடி'

சமய, நிற மற்றும் சமுதாய வேறுபாடின்றி மக்களுக்கு உழைப்பதையே குறிக்கோளாகக் கொண்டோர் கேந்திரத்தின் உறுப்பினராகத் தகுதியுள்ள வராவர். மனித இனத்திற்குச் சேவை செய்யும் மனப்பாங்குடைய அனைவரையும் ஒன்று திரட்டி, மனித நலத்திற்கு அவர்கள் அயராது உழைக்கத் தங்களைத் தயார் படுத்திக் கொள்ளப்போதிய பயிற்சியினை அவர்களுக்கு அளிக்கும் நோக்கில், நமது நாட்டின் பல்வேறு இடங்களிலும், அயல்நாடுகளிலும் பல்வேறு அலுகுகளை அமைக்க கேந்திரம் பாடுபட்டு வருகிறது.

இளைஞர்களிடையே, சுயநலமற்ற தொண்டுள்ளம் கொண்ட ஊழியர்களுக்கென தனி நிலையினை உருவாக்கி, ஆயுள் கால ஊழியர்களாக, ஆனால் துறவறமற்ற நிலையில் அவர்களைத் தோந்தெடுத்து, தேவைப்படும் பகுதிகளில் மக்களின் பொருளாதார, சமூக, கலாச்சார மற்றும் அறநிலை ஆகியவற்றை மேம்படுத்தப் பாடுபட அவர்களுக்கு தனிப்பயிற்சி அளிக்க இக்கேந்திரம் முனைகிறது[45].

சுருங்கக்கூறின், கடவுளை உணர்ந்து, காண்பதற்கான வழிமுறை, மனித இனத்திற்கு சுயநலமின்றி பணியாற்றுவதேயாகுமென்பதை உணர்த்திட ஆண், பெண் இளம்பட்டதாரிகள் மற்றும் நல்ல உடல் நிலையிலுள்ள பெரியவர்கள் ஆகியோருக்கு இக்கேந்திரம் பயிற்சி அளிக்கிறது.

துறவறம் பூணாத நிலையிலும், சுயநலமற்ற இவ்வூழியர்கள் சுவாமி விவேகானந்தர் கூறியது போன்று இந்தியா முழுவதும் பொதுப்பணியாற்றுவதில் ஈடுபட்டுள்ளார்கள்.

1. இக்கேந்திரா, பாறை நினைவுச் சின்னத்தையும், பயணியர் குடியிருப்பு மற்றும் ஏனைய வசதிகளுடன்கூடிய 100 ஏக்கர் வளாகத்தையும், விவேகானந்தர் மண்டபத்தையும் பராமரித்து வருகிறது
2. இந்தியா முழுமையுள்ள சாதாரண மனிதர்களுக்கு, யோகப்பயிற்சி அளித்தல், யோகப்பயிற்சி முறைகளைக் கற்பித்தல், நோய் நீக்கல், யோகப்பயிற்சி முகாம்கள் மற்றும் யோகா குறித்த ஆராய்ச்சி செய்ய ஈடுபடச் செய்தல் ஆகியவை குறித்து பயிற்சி அளித்தல் ;
3. யுவ பாரதி என்ற மாதாந்திரப் பருவ இதழையும், கேந்திரப் பத்திரிகா என்ற அரையாண்டுப் பருவ இதழையும் வெளியிடுதல் ;
4. அதிக அளவில், கன்னியாகுமரி மாவட்டத்தில், கிராமப்புற வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளுதல் ;
5. கன்னியாகுமரியில், பள்ளிகள் நடத்துதல் ;
6. கன்னியாகுமரி நகரிய வளாகத்தில், இலவச மருந்தகம் பராமரித்தல்;
7. தமிழ்நாட்டிலுள்ள, கன்னியாகுமரி, இராமநாதபுரம் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில், சமூகப்பொருளாதாரத் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல், குழந்தைகள் காப்பகங்கள் நடத்துதல், சத்துணவுத் திட்டங்கள், இளைஞர் நலத்திட்டங்கள், பண்பாட்டு வளர்ச்சித் திட்டங்கள் போன்றவற்றை செயல்முறைப் படுத்துதல்,

பல்வேறு தொழில்கள் குறித்துப் பயிற்சி அளித்தல், நடமாடும் மருந்தகங்கள் நடத்துதல், குடிநீர் வசதிகள் செய்து கொடுத்தல் போன்ற பல்வேறு மக்கள் நலப்பணிகளிலும் கேந்திரா ஈடுபட்டு வருகிறது. இவைதவிர, மேற்குறிப்பிட்ட மூன்று மாவட்டங்களிலும், இயற்கை வள வாய்ப்பு வளர்ச்சித் திட்டங்களை ஏற்று, அவற்றைத் தீவிரமாக செயல்படுத்தி வருகிறது[46].

மேற்பார்வைக்குழு[47]

விவேகானந்தா கேந்திரா, சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்படி, பதிவு செய்யப்பட்டுள்ளது. கேந்திரம் மற்றும் பாறை நினைவுச் சின்னம் தொடர்பான அலுவல்களை கவனித்து வரும் மேற்பார்வைக்குழு ஒரு தலைவர், இரண்டு துணைத்தலைவர்கள், ஒருபொதுச் செயலர், ஒரு இணை பொதுச் செயலர், ஒரு பொருளாளர் மற்றும் 19 உறுப்பினர்களைக் கொண்டதாகும். அதனுடைய பல நோக்கங்கள் நிறைவேறுவதற்காக, நிதி திரட்டிட, இச்சங்கம், பொது மக்கள், கொடையாளர்கள், மத்திய மற்றும் மாநில அரசுகள் மற்றும் ஏனைய நிறுவனங்கள் ஆகியவற்றிடமிருந்து நன்கொடைத்தொகை பெற்று வருகிறது.

கிறித்தவ திருக்கோவில்

குமரி முனையிலிருந்து, வடகிழக்கே இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் குமரி முட்டத்தில், தொம்மை பள்ளி என்று அழைக்கப்படும் புனித தாமஸ் கிறித்தவ பழைய திருக்கோவில் உள்ளது. தற்போது அது மிகவும் இடிந்து, பாழடைந்த நிலையில் காணப்படுகிறது. பழைய திருக்கோவிலின் அடிக்கல்லும், புனித செபஸ்தியாரின் திருக்கோட்டம் எனப்படும் தொழுகையிடமும் மட்டும் காணப்படுகின்றன. 16-ம் நூற்றாண்டின் துவக்கத்தில், இவ்வழியாக செல்லும் மாலுமிகள், இந்த இடத்திற்கு வந்து தங்களது பயணம் நன்முறையில் அமைய வேண்டுமென, இத்திருக்கோவிலில் வழிபாடு செய்துவிட்டுச் சென்றதாகக் கூறப்படுகிறது. கி.பி. 1494-ம் ஆண்டு, வெளியிடப்பட்ட அரசாணையில், இத்திருக்கோவிலின் விளக்கினை ஏற்றுவதற்காக, துறைமுகக் கட்டணத்திலிருந்து குமரி முட்டத்திலுள்ள இத்திருக் கோவிலுக்கு சில கொடைகள் வழங்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கத்தோலிக்க கிறித்தவ சமயத்தைச் சார்ந்த பறவர்கள் மற்றும் அரசர்கள் ஆகியோர் கிராமத்தின் கடற்கரைப் பகுதியில் குடியிருந்து வருகின்றனர். மீன்பிடிப்பது அவர்களது முதன்மையான தொழிலாகும். இக்கிராமத்தினருடன் பணியாற்றிய புனித பிரான்ஸிஸ் சேவியர் என்பார், கி.பி.1542 ஆம் ஆண்டு, எழுதியுள்ள கடிதத்தில் அங்கு வாழ்ந்த பறவர்களும், அரசர்களும் மதுரையை ஆண்ட நாயக்கர்களின் ஆணையின் பேரில் படகர்கள் மற்றும் வடுகர்கள் ஆகியோரால் அடிக்கடி சூறையாடப் பட்டனர்[48].

கடற்கரையையொட்டி, பல கிறித்தவத் திருக்கோவில்கள் உள்ளன. அவற்றில் முதன்மையானது கன்னியாகுமரி கோவிலுக்கு வடக்கே உள்ளதாகும். அது மிகவும் பொருத்தமாகவும், இடைநிலைக்காலக் கூர்மாடச் சிற்பப் பாணியிலும் உள்ள கட்டிட அமைப்பினைக் கொண்ட தாகும். அது

கன்னியாகுமரியிலுள்ள கிறித்துவ ஆலயம்

153 அடி நீளமும், 53 அடி அகலமும் கொண்டதாகும். அங்கு பொருத்தப்பட்டுள்ள மணி, தரை நிலையிலிருந்து 53 அடி உயரத்திலுள்ளதாகும். மத்திய கோபுரத்தின் உச்சியில், தங்கத்தினாலான சிலுவை உள்ளது. முன்புறம் 130 அடி உயரத்தில் கொடிக்கம்பம் நிறுத்தப்பட்டுள்ளது. கன்னி மேரி-டீ-மெர்கோடின் (Mary-de-Mercoden அழகான உருவச்சிலை அமையப்பெற்றுள்ள இக்கிறித்துவத் திருக்கோவில், தென்னிந்தியாவிலுள்ள மிக அழகான கிறித்தவத் திருக்கோவில்களில் ஒன்றாகும். கேப் விடுதியின் மேற்கே, ஒரு பெண் துறவியர் மடம் உள்ளது.

அரசு விருந்தினர் மாளிகை, ஹோட்டல் தமிழ்நாடு, கேரளா இல்லம், தேவஸ்தானம் (இந்து சமய மற்றும் அறநிலையத்துறை) தங்கும் இல்லம், நகரீய தங்கும் விடுதி, பொதுப்பணித்துறை அறைகள் மற்றும் புகைவண்டி நிலைய தங்கும் அறைகள் ஆகியவை, கடலை நோக்கி உயர்ந்து காணப்படும் பிற முக்கிய கட்டிடங்களாகும். இந்தப் புண்ணிய நகருக்கு வருகைதரும், அலுவலர்கள் மற்றும் சுற்றுலாப்பயணிகள் ஆகியோருக்கு இவ்விடங்கள் பாதுகாப்பளிக்கின்றன.

ஒரு உயர்நிலைப்பள்ளி அரசு மருந்தகம், தீயணைப்பு நிலையம், காவல்நிலையம் மற்றும் இரண்டு ஆராய்ச்சி நிலையங்களுடன் கூடிய மீன் பதப்படுத்திப் பாதுகாக்கும் இடம், மத்திய கடல்மீன் தொழில் ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் அவற்றுடனிணைந்த சென்னை மீன் தொழில், தொழில்நுட்ப ஆராய்ச்சி நிலையம், அஞ்சல் நிலையம் மற்றும் பொதுமக்களுக்குக் குடிநீர் வழங்கிட உயர்மட்ட நீர்த் தேக்கத் தொட்டி ஆகியவை மக்கள் நலனுக்காக இங்கு இயங்கி வருகின்றன. கன்னியாகுமரியிலிருந்து, முதன்மையான சாலையில் இரண்டு கிலோ மீட்டர்கள் உட்புறம் சென்றால், ஒரு அரசு பழங்கள் ஆராய்ச்சி நிலையம் உள்ளது. அங்கு பலவகைப்பட்ட அரிய மாங்கன்றுகள் பயிரிடப்படுகின்றன. இது, கடந்த 1922-ம் ஆண்டு திருவாங்கூர் மன்னர் குடும்பத்தைச் சேர்ந்தோரால் துவக்கப்பட்டது[49]. இவ்விடத்தின் தனித்தன்மை வாய்ந்த தட்ப, வெப்பநிலை ஆண்டு முழுவதும் நல்ல காய்ப்பினை அளிக்கும் ஒட்டு இன மரக்கன்றுகளுக்கு சாதகமாக அமைந்துள்ளமை, குறிப்பிடத்தக்கதாகும்.

கோட்டப்பொறியாளர் (கட்டுமானப்பணி), தமிழ்நாடு மின்சார வாரியம், மீன்தொழில் உதவி இயக்குநர், மண்டல சுற்றுலா அலுவலர், (தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்), திருவள்ளூர் போக்குவரத்துக் கழகம் மற்றும் கன்னியாகுமரி தேவஸ்தானம் அலுவலகம் ஆகியவையும் இங்குள்ளன. பூம்புகார் கப்பற்கழகம், விவேகானந்தர் நினைவுப் பாறைக்குச் சென்றுவர, பயணப்படகுகளை நடத்துகிறது. கனரா வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, இந்திய மாநில வங்கி, திருவாங்கூர் மாநில வங்கி மற்றும் தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கி ஆகியவை அவற்றின் கிளைகளை இங்கு அமைத்துள்ளன.

கன்னியாகுமரி நகரியக்குழு, கடந்த 1.10.1965 அன்று நிறுவப்பட்டது. மாவட்ட ஆட்சித்தலைவர் இக்குழுவின் தலைவராவார். அரசு தற்போது இக்குழுவிற்கு பதினொரு அலுவலர் உறுப்பினர்களையும்,

ஏழு அலுவலர் சாரா உறுப்பினர்களையும் நியமித்துள்ளது. இது நகரத்தின் மேம்பாட்டிற்குப் பாடுபட்டு வருகிறது. மேலும் சுற்றுலாப் பயணிகளின் நலனுக்காக இது மூன்று தங்கும் விடுதிகளையும் நடத்துகிறது.

இக்கால கோபுரம் போன்ற அமைப்பில், 1979-ம் ஆண்டு, ஒரு புதிய புகைவண்டி நிலையம் கட்டப்பட்டுள்ளது. இது கன்னியாகுமரியின் அழகுக்கு அழகூட்டுகிறது. புகைவண்டித் துறையினால் அறிமுகப் படுத்தப்பட்டுள்ள ஹிம்சாகர் துரித புகை வண்டி, நாட்டின் வடபகுதியி லிருந்து, இப்புனித நகருக்கு வருகை தரும் பயணிகளுக்கு வசதியாக உள்ளது.

கன்னியாகுமரி பொதுப்பள்ளி, கன்னியாகுமரி குருகுல ஆசிரமம், அவர் லேடி ஆஃப் ராண்சன் கிறித்தவ திருக்கோவில், கன்னியாகுமரி மாவட்ட சர்வோதய சங்கம், விஷ்வ இந்து வித்யா கேந்திரா மற்றும் இளைஞர் கத்தோலிக்கக் கழகம் மற்றும் கிராமப்புற மேம்பாட்டு மையம் ஆகியவை, இங்குள்ள ஏனைய நிறுவனங்களாகும்.

தற்கால வசதிகள் மற்றும் ஓய்வு அறைகள் ஆகியவற்றுடன் ஒரு புதிய பேருந்து நிலையம், பயணிகளின் நலனுக்காக நேசமணி போக்குவரத்துக் கழகத்தினால் 1987-ஆம் ஆண்டு கட்டப்பட்டுள்ளது.

கன்னியாகுமரித் துறைமுகம்[50].

இது 8° - 4.6 நிலநடுக்கோடு மற்றும் 77° - 33.2' (கிழக்கு) நிரைகோடு ஆகியவற்றிற்கிடையே, இந்தியாவின் தென்கோடி முனையில் அமைந்துள்ள ஒரு சிறிய துறைமுகமாகும். இச்சிறு துறைமுகம், சுற்றுலாப் பயணிகளை கன்னியாகுமரி கடற்கரையிலிருந்து, விவேகானந்தா நினைவுப் பாறைக்குப் பயணப் படகில் ஏற்றிச் செல்வதற்காக அமைக்கப்பட்டுள்ளது. இவ்விரு முனைகளுக்குமிடையே பூம்புகார் கப்பற்கழகத்தினால், 1984-ஆம் ஆண்டு முதல் பயணப் படகுகள் நடத்தப்படுகின்றன. இதற்கு முன்னர், இது தனியார் நிறுவனங்களின் கட்டுப்பாட்டிலியங்கி வந்தன. எனவே உண்மையில் இதனை ஒரு துறைமுகமெனக்கூற இயலாது. இத்துறைமுகம், மாநில போக்குவரத்துத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கிவரும் தமிழ்நாடு துறைமுகத் துறையின் கீழ் இயங்குகிறது. கன்னியாகுமரியில் ஒரு கலங்கரை விளக்கம் உள்ளது.

(இது தொடர்பான முழு விவரங்களும் "போக்குவரத்து" என்ற தலைப்பிலான இயலில், கொடுக்கப்பட்டுள்ளன).

குமாரகோவில் (கல்குளம் வட்டம்),
மக்கள் தொகை - 1114 (ஆண் - 624 + பெண் - 490)

குமார கோவில், நாகர்கோவிலிலிருந்து 15 கிலோ மீட்டர் வடமேற்கிலும், தக்கலையிலிருந்து 3 கிலோ மீட்டர் கிழக்கிலும், கல்குளம் வட்டம், வேலிமலைக் குன்றுகளின் அடிவாரத்தில் அமைந்துள்ளது. இது பத்மநாபபுரம் நகர்மன்ற எல்லைப்பரப்பிலுள்ளது. இது மிகப் புகழ்பெற்ற 'குமரன்' என அழைக்கப்படும், 'முருகப் பெருமானுக்கு நேர்ந்தளிக்கப் பட்ட கோவிலாகும். 200 அடி உயரமுள்ள ஒரு சிறிய குன்றின் உச்சியில்,



வெள்ளியமலைக் குன்றில் உள்ள குமரன் கோயில்

இக்கோவில் கட்டப்பட்டுள்ளது. இங்கு முருகன் கிழக்குமுகம் பார்த்து எழுந்தருளியுள்ளார். சீரான படிக்கட்டுகள் மூலம் சென்று சந்நிதியை அடையலாம். மூலக்கடவுளான சுப்ரமணியரின் மனைவி, பெண் தெய்வம் வள்ளியும், மூலக்கடவுளின் அருகே எழுந்தருளிக் காட்சியளிக்கிறார். முருகப்பெருமான் இங்கு குழந்தை வடிவில் காட்சி தருகிறார். முருகப் பெருமானின் உருவச்சிலை 8' - 8" உயரத்திலுள்ளது. அவர் வள்ளியுடன் மட்டுமே காட்சி தருகிறார்.

பெண் தெய்வம் வள்ளி, குழந்தையாக இருக்கையில், வள்ளி மலைக்குன்றுகளில் அக்குன்று உள்ளிட்ட பகுதியின் அதிபதியான குறவர்களின் மன்னர் நம்பிராசனால் வள்ளி படர்கொடிகளினிடையே கண்டுபிடிக்கப்பட்டதாக மரபுவழிக் கதை கூறுகிறது. இந்த இடத்தில்தான் முருகப்பெருமான் முதலில் வேடனாகவும், பின்னர் ஒரு முதியவராகவும் வேடம் தரித்து இறுதியில் வள்ளியை மணந்து கொண்டதாகக் கூறப்படுகிறது. தினைப்பயிர் காத்துவந்த வள்ளி அந்த முதியோர் மீது இரக்கங்காட்டி, ஈகைப் பண்புடன் நடந்து கொண்டார். ஆனால், அம்முதியவர் வள்ளியின் மீதான தனது காதலை வெளிப்படுத்தியமை, வள்ளியைத் திகைப்படையச் செய்தது. மாறுவேடம் பூண்டிருந்த முதியவர் (சுப்ரமணியர்) வள்ளியை விளைவாட்சிக்கு உட்படுத்த இயலவில்லை. எனவே அவர் தனது அண்ணன் விநாயகரை உதவிக்கு அழைக்கவே, விநாயகப்பெருமான் அங்கு யானை உருவில் தோன்றினார். யானைக் கண்டு மிகக் கலக்கமடைந்த வள்ளி, முதியவரின் உதவியை நாடினார். வள்ளி தன்னைத் திருமணம் செய்துகொள்ள இசைந்தால், அவளை யானையிடமிருந்து காப்பாற்றுவதாக உறுதியளித்தார். அதற்கு இசையாத வள்ளி, மயக்கமடையவே பின்னர் சுப்ரமணியர் தனது சுயஉருவத்தில் காட்சியளித்து பின்னர் வள்ளி தனது கனவுக் காதலனான முருகனை மனம் செய்து கொள்ள தனது சம்மதத்தை வெளிப்படுத்தினார். அவர்களது திருமணம் மிகுந்த விமரிசையுடன் நடந்தேறியது[51].

அச்சிறு குன்றில் கட்டப்பட்டுள்ள திருமண மண்டபத்தில்தான் முருகன்-வள்ளி திருமணம் நடந்தேறியதாகக் கூறப்படுகிறது. முருகப்பெருமான் முதியவராக மாறுவேடத்தில் ஒய்வெடுத்த இடம், கிழவன் சோலை என அழைக்கப்படுகிறது. அக்குன்றில், வள்ளி சோலை என்ற மற்றொரு இடமும் உள்ளது. அருகாமையிலுள்ள குக்கிராமத்தின் பெயர் தினைவிளை ஆகும். வள்ளி-சுப்பிரமணியர், திருமணத்தின் நினைவினை வழிபட, இங்கு ஒவ்வொரு ஆண்டும் மார்ச்-ஏப்ரல் மாதங்களில், திருக்கல்யாணத் திருவிழா கொண்டாடப்படுகிறது. அதற்கு மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்தும் மக்கள் வருகை தருவார்கள். ஒவ்வொரு தமிழ் மாதமும் மிக முக்கிய நாட்களான, அனைத்து வெள்ளிக் கிழமைகளிலும், குறிப்பாக கடைசி வெள்ளிக்கிழமையன்று, முருகனை தரிசிக்க பக்தகோடிகள், அதிக அளவில் வருகை தருகிறார்கள். மே மாதத்தில் நிகழும் தேர் திருவிழா, இங்கு மற்றுமொரு முக்கியத் திருவிழாவாகும்.

குன்னத்தூர் (விளவங்கோடு வட்டம்)
மக்கள் தொகை-19297 (ஆண்கள் - 9709 + பெண்கள் - 9588)

மார்த்தாண்டம் - தேங்காப்பட்டணம் சாலையில் அமைந்துள்ள விளவங்கோடு வட்டத்திலுள்ள குன்னத்தூர் ஒரு வருவாய் கிராமமாகும். இது, மார்த்தாண்டத்திலிருந்து ஏழு கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது. இங்குதான் புகழ்பெற்ற ஓடச்சிக்கோட்டை உளது.

இது கல்லால் கட்டப்பட்ட அரணாகும். தற்போது, இது பாழடைந்த நிலையிலுள்ளது. இது மார்த்தாண்டம் - தேங்காப்பட்டணம் சாலையின் தெற்கே ஏறத்தாழ நான்கு கிலோ மீட்டர் தொலைவில், ஐந்து ஏக்கர் நிலப்பரப்பிலமைந்துள்ளது. நாஞ்சில் நாட்டின் மீது படையெடுத்த புகழ்பெற்ற மதுரை மன்னர், திருமலை நாயக்கரின் தாய், இராணி ஓடச்சி இந்தக் கோட்டையில் வசித்ததாகவும், எனவே இது ஓடச்சிக்கோட்டை என அழைக்கப்படுவதாகவும் தெரிகிறது. ராணி ஓடச்சிக்கு பலகாலம் குழந்தை பிறக்கவில்லையெனவும், ஒரு அர்ச்சகரின் அறிவுரையின் பேரில், ராணி மதுரையிலிருந்து முன்சிரை வந்து, அங்குள்ள இறைவன் திருமலையப்பனை வழிபட்டதாகவும் அண்மைகால மரபுகதை கூறுகிறது. அப்பொழுதுதான் இராணி தங்குவதற்காக இக்கோட்டை கட்டப்பட்டதாகவும் இறைவன் இராணிக்கு ஒரு மகனைத்தந்து அருள் புரிந்ததாகவும், அம்மகனுக்கு திருமலை என ராணி பெயர் சூட்டியதாகவும் கூறப்படுகிறது. திருமலை நாயக்கர் மதுரை மன்னராக முடிசூட்டப் பட்டவுடன், அவர் இக்கோவிலுக்கு ஒரு தங்கக் கிரீடமும், பிற மதிப்புள்ள பொருட்களையும் மனமுவந்து அளித்தார்[52].

இங்கு தொழில்சார்ந்த குடியிருப்பு ஒன்று அமைக்கப் பட்டுள்ளது. அங்கு மரவேலை மற்றும் உலோக வேலை ஆகியவை மேற்கொள்ளப்படுகின்றன. மார்த்தம், தச்சுத்தொழில் கூட்டுறவு சங்கத்தால் இந்த மரவேலை அலகு, 1958-ம் ஆண்டு துவக்கப் பட்டது.

இங்கு தரமான மரச்சாமான்கள் உற்பத்தி செய்யப்பட்டு அரசு அலுவலகங்களுக்கு வழங்கப்படுகிறது. மற்றொரு அலகான குமரி உலோகப்பொருள் தொழிற் சாலையில், பித்தளை சாமான்கள் மற்றும் பிற பாத்திரங்கள் உற்பத்தி செய்யப் படுகின்றன. இக்குடியிருப்பில் சிலருக்குப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

குன்னத்தூருக்கு அருகாமையிலுள்ள மேலங்குளம் என்ற கிராமத்தில், திருவாங்கூர் மாநிலத்தின் 1788-98-ல் திவானாக இருந்த "இராசா கேசவ தாஸ்" பிறந்தார். அங்குள்ள "கார விளகத்துப் புத்தன்வீடு" என்ற வீட்டில், ஆண் வரிசையின் மூலம் வந்த ராச குடும்பத்தினர் இன்னமும் வாழ்ந்து வருகிறார்கள். இராசாகேசவதாஸ், திவானாகப் பணியாற்றியபோது, அவராலேயே இவ்வீடு கட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது.

கேசவதாஸைப் பற்றிய ஒரு கருத்துள்ள கதை உண்டு. அதாவது, கேசவதாஸ் சிறுவனாக இருந்தபோது, ஒரு செல்வந்த வணிகரிடம் பணியாற்றி வந்தார். அவர் தன்னுடன் இச்சிறுவனையும் அரண்மனைக்கு

அழைத்துச் சென்று மன்னனை சந்தித்துப் பேசினார். பின்னர், வணிகர் மறதியாகப் பையனை அரண்மனைப் புல்வெளியில் விட்டு விட்டுத் தனதிருப்பிடம் திரும்பி விட்டார். புல்வெளியில் உறங்கிவிட்ட சிறுவன் விழித்தவுடன், காலையில் அருவருப்பான உடைகளை அணிந்து வந்த அதே பையன்தான் என்பதை மன்னர் உணர்ந்து, அந்த நிகழ்ச்சியை நற்குறியற்றதாகக் கருதி, சிறுவனுக்கு உரிய தண்டனை வழங்க ஆணை பிறப்பித்தார். ஆனால், அதேநேரம் அதிக சரக்குகளை ஏற்றிக்கொண்டு, அயல்நாட்டிலிருந்து தனது நாட்டிற்கு ஒரு கப்பல் விரைந்து கொண்டிருக்கும் ஒலியினைக் கேட்ட பின்னர் அன்றுகாலை அச்சிறுவனை முதல்முதலில் கண்டது "நற்குறி"யென மன்னர் உணர்ந்து, அவனை அரண்மனைக்கு அழைத்துச் சென்று அவனுக்கு ஒரு அரசருக்குரிய மரியாதையினை வழங்கினார். பின்னர், அச்சிறுவன் வளர்ந்து, கருவூலத்தில் திறமையுள்ள நிருவாகியாகப் பணியாற்றி அரசரின் வெற்றிக்குப் பொறுப்பாளியாகத் திகழ்ந்தான்[53].

அவருடைய காலத்தில்தான் முதலமைச்சரின் சிறப்புப் பெயர், தளவாய் என்பதிலிருந்து திவான் என மாற்றியமைக்கப்பட்டது. அவர்தான், திருவாங்கூரின் முதல் திவானாகப் பதவியேற்றார். அவருடைய செயலறிவையும், கிழக்கு இந்திய கம்பெனியாருடன் அவருக்குரிய நெருங்கிய ஈடுபாட்டினையும் கருத்திற்கொண்டு, அவருக்கு "இராசா" எனும் கௌரவ பட்டம் அளிக்கப்பட்டது. அவர் பயன்படுத்திய கத்திகள், காப்புக் கருவி (கவசம்) ஆகிய ஆயுதங்கள், அவரது குடும்ப உறுப்பினர்களால், தொல்பொருள் ஆராய்ச்சித் துறைக்கு ஒப்படைக்கப்பட்டுவிட்டன. அவை தற்போது பத்மநாபபுரம் அரண்மனையில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

குழித்துறை (விளவங்கோடு வட்டம்), மக்கள் தொகை-18,427 (ஆண்கள் - 9192 + பெண்கள் - 9235)

விளவங்கோடு வட்டத்தின் தலைமையிடமான குழித்துறை, கன்னியாகுமரி மாவட்டத்தின் பண்டை நகரங்களிலொன்றாகும். இந்நகரம் தாமிரபரணி ஆற்றின் கரையில் அமைந்துள்ளது. இவ்வாற்றிற்கு குழித்துறை ஆறு என்ற பெயரும் உண்டு. இவ்வாற்றின் இரு புறங்களிலும் நகரின் நிலப்பரப்பு உள்ளது. இவ்வாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலம், இம்மாவட்டத்திலேயே மிகப்பெரிய மற்றும் நீளமான பாலமாகும். ஆற்றின் வலதுகரையிலுள்ள நகரம் குழித்துறையெனவும் இடதுகரையிலுள்ள நகரம் மார்த்தாண்டம் எனவும் அழைக்கப்படுகின்றன. குழித்துறை நகரமானது நாகர்கோவில் மற்றும் திருவனந்தபுரம் ஆகிய நகரங்களிடையே நடுவாக அமைந்துள்ளது.

இங்கு, குற்ற இயல் சாராத மற்றும் குற்ற இயல் நீதிமன்றங்கள், காவல்துறை ஆய்வாளர் அலுவலகம், கால்நடை மருத்துவமனை, பொதுப்பணித்துறை அலுவலகங்கள், தமிழ்நாடு மின்வாரிய உதவிப் பொறியாளர் அலுவலகம், நகராட்சி ஆணையர் அலுவலகம், துணை வணிகவரி அலுவலர் அலுவலகம், விளவங்கோடு வட்ட கூட்டுறவு சிறப்பு அங்காடி, ஏற்றுமதி ஆய்வு நிறுவனம், தொலைபேசி அலுவலகம்,

(குழித்துறை மற்றும் மார்த்தாண்டம் இரண்டிலுமுள்ள அலுவலகங்கள்) புகைவண்டி நிலையம், தேன் உற்பத்தி நிறுவனம், தேன் விற்பனைக்கிடங்கு, கதர் மற்றும் கிராம கைத்தொழில் வாரியம், குழித்துறை கூட்டுறவு வீட்டு வசதிக் கழகம், மார்த்தண்டம் தேனீவளர்ப்போர் கூட்டுறவு சங்கம். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் தீயணைப்பு நிலையம் ஆகியவை இங்குள்ள பிற அலுவலகங்களாகும்.

அஞ்சல் அலுவலகத்திற்கருகாமையில் ஒரு பழைய அரண்மனையும், ஒரு சத்திரமும் உள்ளன. இவற்றிற்கருகாமையில் புகழ்பெற்ற ஒரு கோவில் உள்ளது. இங்கு இரண்டு தொழுகையிடங்கள் உள்ளன. ஒன்று சிவபெருமானுக்கும் மற்றொன்று கண்ணனுக்கும் அர்பணிக்கப்பட்டவை யாகும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில், இது ஒரு முதன்மையான நகரமாகும். நாட்டுடமையான வங்கிகளான திருவாங்கூர் மாநில வங்கி, கனரா வங்கி, இந்திய யூனியன் வங்கி, மத்திய வங்கி, இந்திய மாநில வங்கி மற்றும் தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கி[54] ஆகியவை இங்கு அவற்றின் கிளைகளைப் பெற்றுள்ளன. இவ்வங்கிகள் தொழில் மற்றும் வாணிபம் ஆகியவற்றை அதிக அளவில் வளர்த்திடவும், மக்களின் வாழ்வு வளம்பெறவும் பெரிதும் உதவுகின்றன. அண்டை கிராம வேளாண் பொருட்களை விற்பனை செய்திட, தொடுவெட்டியில் புகழ்பெற்ற சந்தை இயங்கி வருகிறது[55]. மார்த்தாண்டத்திலுள்ள நேசமணி நினைவு கிறித்தவக் கல்லூரி, தேவி குமரி பெண்கள் கல்லூரி, அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, இரண்டு எல்.எம்.எஸ். உயர்நிலைப் பள்ளிகள் (ஒன்று ஆண்களுக்கும் மற்றொன்று பெண்களுக்கும்) அரசு மருந்தகம், இரண்டு தனியார் மருத்துவ மனைகள், துணைப்பதிவாளர் அலுவலகம் மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம் ஆகியவையும் இங்கு உள்ளன. பல துவக்கப் பள்ளிகளும் இவ்விடத்தில் நடைபெற்று வருகின்றன. இலண்டன் சமயப்பரப்புக்குழு சங்கத்தால், ஒரு கிறித்தவ திருக்கோவில் இங்கு எழுப்பப்பட்டுள்ளது. இதுதவிர, மலங்கரா சிரியன் கத்தோலிக்க கிறித்தவ திருக்கோவிலும் இங்கு உள்ளது. "மரிய அன்னையினது குழந்தைகளின் பெண்கள் துறவியர் மடம்" என்ற மடமும், இங்கு முதன்மை வாய்ந்ததாகும். மார்த்தாண்டத்திலுள்ள பெண்கள் துறவியர் மடத்திற்குத் தமிழ்நாடு மற்றும் கேரள மாநிலங்களில் பல இடங்களில் கிளைகள் உள்ளன.

தொடுவெட்டி ஒரு முக்கிய கால்நடைச் சந்தையாகும். மாவட்டத் திலுள்ள முதன்மையான விற்பனை மையமாகிய தொடுவெட்டியில், கருப்புக்கட்டி, மரவள்ளி, வாழை, மீன், கைத்தறித்துணிகள் ஆகியவை விற்பனை செய்யப்படுகின்றன. காய்கறி மற்றும் கால்நடைச் சந்தைகள் நகராட்சியின் கட்டுப்பாட்டிலியங்கி வருகின்றன.

நகரினை இரண்டாகப் பிரித்திடும், குழித்துறை ஆறு, கிராமத்திற்கு என்றுமே வற்றாத நீர் ஆதாரமாக விளங்குகிறது. குழித்துறை ஆற்றினால் பயனுறும் நிலங்கள் மிகவும் வளமுள்ளவை. இப்பகுதி முழுமையிலும் தென்னை, பாக்கு மற்றும் வாழைத் தோட்டங்கள் உள்ளன. இந்த ஆற்றுப்

பாசனமுறை குறித்து மிகவும் விரிவாக, "வேளாண்மை மற்றும் நீர்ப்பாசனம்" என்ற தலைப்பிலான இயலில் விளக்கப்பட்டுள்ளது.

மார்த்தாண்டத்திலுள்ள முக்கிய நிறுவனங்களில் இளைய மரிய அன்னையின் கிறித்தவச் சங்கம் ஒன்றாகும். இது கிராமப்புற சீரமைப்பில் மிகுந்த ஈடுபாடு கொண்டுள்ளது. வேளாண் மற்றும் தொழில்துறையில் அவர்கள் உணர்ச்சியை வெளிப்படுத்தும் பாங்கு, தனித்தன்மை வாய்ந்ததாகும். அண்டை கிராமங்களின் கைவினைப் பொருட்களை விற்பனை செய்யவும் இது நடவடிக்கை மேற்கொள்கிறது. இளைஞர் கத்தோலிக்க சங்கமும், தேனீ வளர்த்தல், கோழிப்பண்ணை பராமரித்தல், பதனீர் தயாரித்தல், நன்னீரில் மீன், இனப்பெருக்கம் மற்றும் கால்நடை இனப்பெருக்கம் ஆகியவற்றை ஊக்குவிக்கிறது. சிந்திபொலி காளைகளுக்கும், கால்நடைகளுக்கு பெரிய கூடங்கள் அமைத்தும், ஒரு பெரிய கோழிப்பண்ணை மற்றும் மரச்சாமான்கள் செய்யும் அலகு ஆகியவற்றை உருவாக்கியும் அவற்றை முறையாகப் பராமரித்தும் வருகிறது. பால் வழங்குதலை மேம்படுத்த சுவிட்சர்லாந்திலுள்ள சானான் பள்ளத்தாக்கு வகை பசுக்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. உள்ளூர் மக்களில் பலருக்கு இந்த அலகுகளில் வேலை வாய்ப்புகள் அளிக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு ஆண்டும், நகராட்சியால் குழித்துறையில் "வாருபாலி பொருட்காட்சி" என்ற மாபெரும் பொருட்காட்சி, திறக்கப்பட்டு நடத்தப்படுகிறது. மாவட்டத்தில் இது ஒரு புகழ்பெற்ற பொருட்காட்சி யாகும். இங்கு ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் மாதத்தில் ஒரு சந்தை விழா நடத்தப்படுகிறது. வேளாண் பொருட்கள் மற்றும் பல்வேறு தொழில் உற்பத்தி பொருட்கள் ஆகியவற்றின் பொருட்காட்சியையும் நகராட்சி நடத்துகிறது. அதில் தென்னை, பாக்கு, மா, பலா மற்றும் காய்கறி விதைக்கன்றுகள், பனை உற்பத்திப் பொருட்கள், தூயதேன், வேளாண் கருவிகள், மட்பாண்டங்கள், அழகான விளையாட்டுப் பொருட்கள், செம்பும், வெள்ளீயமும் கலந்த தட்டு முட்டுக் கலங்கள் ஆகியவையும் காட்சிப் பொருட்களாக வைக்கப்படுகின்றன.

1914-ம் ஆண்டு நகர மேம்பாட்டுக் குழுவாகத் துவக்கப்பட்ட குழித்துறை, 1920-ம் ஆண்டு முழு வளர்ச்சியுற்ற நகராட்சியாக அமைக்கப் பட்டது[56]. 1981ம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்குப்படி இந்நகராட்சியின் மக்கட்தொகை 18,427 ஆகும்.

மருங்கூர் (அகஸ்தீஸ்வரம் வட்டம்) மக்கள் தொகை-48,469
(ஆண்கள் - 4,124 + பெண்கள் - 4,345)

நாகர்கோவிலிலிருந்து 12 கிலோ மீட்டர் தொலைவில் மருங்கூர் உள்ளது. இக்கிராமம் இறைவன் சுப்பிரமணியருக்கு அர்ப்பணிக்கப் பட்டதாகும். இக்கோவில், உயரமான குன்றில் பாதுகாப்பாக அமைக்கப் பட்டுள்ளது. ஆண்டுதோறும் அக்டோபர்-நவம்பர் மாதங்களில் இங்கு நடத்தப்பெறும் சூரசம்ஹாரத் திருவிழா சுற்றுப்புறக் கிராமங்களினின்றும் பல்லாயிரக்கணக்கான பக்தர்களைக் கவருகிறது.

ஒரு சரளைக்கல் சாலை, இக்கிராமத்தினை சுசீந்திரத்துடன் இணைக்கிறது. சில காலங்களுக்கு முன்னர், மருங்கூரின் சுற்றுப்புறப் பகுதிகளிலுள்ள சுரங்கத்திலிருந்து இரும்புத்தாது எடுக்கப்பட்டதாகவும், அதன்பின்னர், இரும்புத் தொழில் இங்கு செழித்து ஓங்கியதாகவும் கூறப்படுகிறது. மருங்கூர் பண்டைய ரோமன் கத்தோலிக்க சமயப்பரப்புக்குழு மையங்களிலொன்றாகும். இங்குதான் "பிரைடு" கி.பி.1699-ல் ஒரு கிறித்தவத் திருக்கோவிலை எழுப்பினார்.

மருதங்கோடு (விளவங்கோடு வட்டம் -
(பகோடு வருவாய் கிராமத்தின் பகுதியாகும்)
மக்கள் தொகை-25,110 (ஆண்கள் - 12,712 + பெண்கள் - 12398)

மேம்பாடடைந்துவரும் குக்கிராமமான மருதங்கோடு, விளவங்கோடு வட்டத் தலைமையிடத்திலிருந்து மூன்று கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது. இதனை கிழவன்திட்டையில் ஒரு கிராமசாலை, குழித்துறை-ஆலஞ்சோலை சாலையுடன் இணைக்கிறது. இங்குள்ள புனித அந்தோனியார் கிறித்தவத் திருக்கோவில் மிகவும் புகழ்பெற்ற தாகும். இது ஒவ்வொரு வாரமும் குறிப்பாக செவ்வாய் கிழமையன்று பலரைக் கவருகிறது. இதற்கருகாமையில் ஒரு தென்னிந்திய திருச்சபையைச் சேர்ந்த கிறித்தவத் திருக்கோவிலும் உள்ளது. இங்குள்ள சிவபெருமான் ஆலயம், ஏறத்தாழ 500 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டதாகும். இக்கோவில் கயங்கோலம் மன்னரது தளவாயால் கட்டப்பட்டதாகும். திருவாங்கூர் மன்னர், மஹாராஜா மார்த்தாண்டவர் மனிடம், தோல்வியடைந்த கயங்கோலம் அரசர் இங்கு வந்து குடியேறியதாக வரலாறு கூறுகிறது.

மருதங்கோடில் 1949-ம் ஆண்டு நிறுவப்பட்டுள்ள கஸ்தூர்பா கேந்திரம், மக்களிடையே காந்திஜீயின் கொள்கைகளைப் பரப்புகிறது. இது நூல் நூற்றுதல், நெசவுத்தொழில், சாயம் தோய்த்தல், பாய் முடைதல், சவர்க்காரம் (சோப்) உற்பத்தில் செய்தல் மற்றும் எண்ணெய் பிழிதல் ஆகியவற்றில் உள்ளூர் மக்களுக்குப் பயிற்சி அளிக்கிறது. இந்நிறுவனம் ஒரு ஏழைகள் இல்லத்தையும், அனாதை இல்லத்தையும் நடத்தி வருகிறது.

மருத்துவமலை (ஓசரன்விளையின் குக்கிராமம்)
மக்கள் தொகை-1026 (ஆண்கள் - 559 + பெண்கள் - 467)

மருத்துவமலை, மருந்துவாழும் மலை என அனைவராலும் அழைக்கப்படுகிறது. இதற்கு மருந்தாகவோ, உணவாகவோ, மணமூட்டும் பொருளாகவோ சுவையூட்டு பொருளாகவோ உள்ள இலைகளையுடைய செடியினங்களின் இருப்பிடம் எனப் பொருளாகும். இது மேற்கு மலைத்தொடரின் பகுதியாக உள்ளது. இராமாயணக் கதாநாயகரான, இராமனின் இளவல் இலக்குவன், இராம-இராவணப் போரில், படுகாயமுற்று இலங்கையில் உயிருக்கு மன்றாடிக் கொண்டிருக்கையில், அனுமன், இலக்குவனின் காயங்களை ஆற்றுவதற்காக, நன்மருந்துகள் உள்ள மகேந்திரகிரியிலிருந்து, சஞ்சீவி மலையினைத் தனது தோளில் சுமந்து பறந்து வரும்போது அதனின்றும், ஒரு மிகச்சிறிய பகுதி சிதறி கீழே விழுந்ததெனவும் அதுவே மருத்துவமலையெனவும், மரபுவழிக்கதை

பத்மநாபபுரம் அரண்மனை

கூறுகிறது[57]. மருத்துவமலை, ஒரு கிலோ மீட்டர் நீளத்திலுள்ளது. அதனுடைய உயரம், (உச்சி முனையில்) 800 அடியாகும். இம்மலை நாகர்கோவிலிலி ருந்து 11 கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது. நாகர்கோவில் - கன்னியாகுமரி சாலையில் 11-வது கிலோ மீட்டரிலுள்ள பரமார்த்தலிங்கபுரத்திலிருந்து, பேருந்து செல்லக்கூடிய சாலையில் சென்று, இவ்விடத்தை அடையலாம். கார்த்திகை விளக்கு விழாவின்போது, இக்குன்றின் 300 அடி உயரத்திலுள்ள ஒரு சிறிய கோவிலில், அதிக அளவிலான பக்தர்கள் வருகை தந்து, இறைவனை வழிபடுகிறார்கள். இக்கோவிலிலிருந்து சுற்றுப்புறப் பகுதிகளை நோக்கும்போது, இயற்கை வளம் மிகுந்த நிலப்பகுதி கண்ணைக் கவருகிறது.

இங்கிருந்து, கன்னியாகுமரி கிராமம், லீ புரத்திலிருந்து, கல்குளம் வட்டம், முட்டம் வரையிலான கடற்கரைப் பகுதி, சீராக அமைந்துள்ள கண்ணுக்குக் குளுமையான நெல்வயல்கள், மணக்குடியிலுள்ள கழிமுகம், பழையாறு ஆற்றின் வாயிலிலுள்ள ஏரி, பனைமரச் சோலைகள், மணக்குடி, தாமரக்குளம் மற்றும் வாரியூரிலுள்ள பரந்து, விரிந்து கிடக்கும் உப்பளங்கள் ஆகியவற்றைக் காணலாம்.

மாத்தூர் தொங்கு பாலம் [58]

மாத்தூர் தொங்கு பாலம்தான், ஆசியாவிலேயே உயரமானதும், நீளமானதுமாகும். அது 115 அடி உயரமும், ஒரு கிலோ மீட்டர் நீளமும் கொண்டதாகும். 1966-ம் ஆண்டு கட்டப்பட்ட இப்பாலம், சுற்றுலாத் தலமாக விளங்குகிறது. நூற்றுக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் நாள்தோறும் இங்கு வருகை தருகின்றனர். இது திருவட்டார் ஊராட்சி ஒன்றியம், அருவிக்கரை வருவாய் கிராமத்தைச் சேர்ந்த மாத்தூர் குக்கிராமத்திலுள்ளது.

இது, பரணியாற்றின் குறுக்கே 12.90 இலட்ச ரூபாய் செலவில், மாத்தூர் என்ற இடத்தில் கட்டப்பட்டுள்ளது. பாலத்திலுள்ள பட்டணங்கால் கால்வாய் குன்றின் ஒருபுறத்திலிருந்து, மறுபுறத்திற்குப் பாசன நீரை எடுத்துச் செல்கிறது. தண்ணீர் எடுத்துச் செல்லும் இக்கால்வாயின் உயரம் 7 அடி மற்றும் அகலம் 7 அடி 6 அங்குலமாகும். 28 பெரிய தூண்கள் இக்கால்வாயினைத் தாங்குகின்றன. தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் திரு. கே. காமராஜ் அவர்களது விடாமுயற்சியின் காரணமாக, விளவங்கோடு மற்றும் கல்குளம் வட்டங்களில், விவசாயத்தை மேம்படுத்துவதற்காக இந்தக் கால்வாய், வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டது.

இப்பாலம் தொடர்பான விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

பட்டணங்கால் முதன்மைக் கால்வாயின் குறுக்கே பரளியார் - செயற்கை நீர்க்கால் குழாய் வழி செல்லும், கால்வாய் நீருக்குரிய தகவல்கள்

1.	செயற்கை நீர்க்காலின் நீளம்	.. 1240'	(378.05 மீட்டர்)
2.	அகலம்	.. 7' – 6"	(2.286 மீட்டர்)
3.	கால்வாயின் உயரம்	.. 7'	(2.13 மீட்டர்)
4.	முழு அளவு	.. 5' – 6"	(1.68 மீட்டர்)

5.	தொடர் எண்–3 மற்றும் 4–க்கும் உள்ள வித்தியாசம்	.. 1' – 6" (0.46 மீட்டர்)
6.	சாய்வளவு	.. 1/1000
7.	விரைவளவு	.. 5.1" (ஒரு வினாடிக்கு) 1.55 மீட்டர்/வினாடிக்கு)
8.	நீர்வெளியேற்றம்	.. 204 க.அ. / வினாடிக்கு 5.78 க.மீட்டர்கள்/வினாடிக்கு
9.	கால்வாயைத் தாங்கும் தூண்களின் எண்ணிக்கை	.. 28
10.	பால வில் விட்டத்தின் அளவு	.. 40 அடி (12.195 மீட்டர்)
11.	துவக்கத்தில் கால்வாயின் அடிப்பரப்பு அளவு	.. 230.55 (செ.மீ.)
12.	இறுதியில் கால்வாயின் அடிப்பரப்பு அளவு	.. 229.17 (செ.மீ.)
13.	நில மட்டத்திற்குமேல் அதிகபட்ச அளவு – உயரம்	.. 104'.00 (28 மீட்டர்)
14.	கட்டுமானச் செலவு	.. 12.90 இலட்ச ரூபாய்

மேல்புரம் (விளவங்கோடு வட்டம்) மக்கள் தொகை - 18,832

இது மேல்புரம் ஊராட்சி ஒன்றியத்தின் தலைமையிடமாகும். குழித்துறை - ஆலஞ்சோலை சாலையில், குழித்துறையிலிருந்து மூன்று கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது. ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு அருகாமையில், ஒரு அழகான ரோமன் கத்தோலிக்க கிறித்தவத் திருக்கோவில் உள்ளது. இவ்விடத்தில் ஃபிரான்சிசன் சகோதரர்களால் ஒரு அறநிலையம் நடத்தப்படுகிறது. இது "அசீசி-சீ-ஆசிரமம்" என அழைக்கப்படுகிறது. இது ஃபிரான்சீசன் வழிவந்த மாமுனிவர் மற்றும் நிறுவனர், புனித அசீசி பிரான்சிஸ் அவர்களது பெயரில் அழைக்கப்படுகிறது. இது, உறுப்பினர்களின் சமய நோன்புக்கூடமாகவும், பிற சமய நிகழ்ச்சிகள் நடத்தும் இடமாகவும் பயன்படுத்தப்படுகிறது.

இங்குள்ள மக்கட்தொகையில் பெரும்பாலானோர், வேளாண் தொழிலாளர்களாகவும், தோட்டப்பண்ணை ஊழியர்களாகவும் பணியாற்றுகின்றனர். பாகோடு பேரூராட்சி அலுவலகமும், கிராம நிர்வாக அலுவலர் அலுவலகமும் மேல்புரம் கிராமத்திலியங்கி வருகின்றன. இரண்டு அரசு உயர்நிலைப்பள்ளிகளும் இங்கு உள்ளன. இப்பகுதி மக்களுக்காக ஒரு துவக்கக் கூட்டுறவு வங்கியும் இயங்கி வருகிறது.[59]

மண்டைக்காடு (கல்குளம் வட்டம் - மணவாளக்குரிச்சி வருவாய் கிராமம்)
மக்கள் தொகை - 18,723 (ஆண்கள்-9557 + பெண்கள்-9166)

கல்குளம் வட்டத்திலுள்ள கிராமமான மண்டைக்காடு, கடற்கரைப் பகுதியில் குளச்சல் துறைமுகத்திற்கு வடகிழக்கே உள்ளது. இது நாகர் கோவில் மற்றும் திருவனந்தபுரம் நகரங்களை பேருந்து செல்லும் சாலை மூலம் இணைக்கிறது. பகவதி அம்மனுக்கு நேர்ந்தளிக்கப்பட்ட கோவில்



மருத்துவமலை, அகஸ்தீஸ்வரம்

தொங்கு பாலத்தின் தோற்றம், மாத்தூர்

இவ்வூரில் புகழ்பெற்ற கோவிலாகும். இது கி.மு.ஏழாம் நூற்றாண்டில் உருவானது. இங்கு ஐந்து தலைகளுடன் 12 அடி உயரத்தில் எறும்புக்குன்று உருவில் பகவதி அம்மன் எழுந்தருளியுள்ளது. இக்குன்று சிறிது சிறிதாக வளர்ந்து வருவதாகவும் கூறப்படுகிறது[60]. மண்டைக்காடு கோடை என்ற ஆண்டுத் திருவிழா, மார்ச் மாதம் 10 நாட்களுக்கு நடைபெறுகிறது[61]. இது, இவ்விடத்தில் அனைவரையும் கவரக்கூடியதாகும்[62].

இக்கோவில் மிகவும் சிறியதாக இருப்பினும் மாவட்ட முழுமையிலிருந்தும் பெருமளவில் மக்களைக் கவர்கிறது. 10 நாட்களுக்கு நடைபெறும் ஆண்டுத் திருவிழாவில் 160 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள கேரள மாநிலம், கொல்லத்திலிருந்து அதிக அளவில் பக்தர்கள் வந்து அம்மனின் அருளைப் பெற்றுச் செல்கின்றனர்.

இக்கோவில் குறித்தும் மரபு வழிக்கதை ஒன்று உண்டு. பல ஆண்டுகளுக்கு முன்னர், கொல்லத்திலிருந்து மூவர், தொழில் தொடர்பாக, தெற்கு நோக்கிவந்த போது முறையான வழியினைத் தவற விட்டுவிட்டு ஒரு குடிசையில் அன்று இரவு தங்கினார்கள். இங்கு வயதான ஒரு மூதாட்டி அவர்களுக்கு உணவினை அளித்தார். அவர்கள் மறுநாள் காலை, தூங்கி விழித்தபோது, குடிசைக்கு பதிலாக, ஒரு கோவிலில் தங்கள் இருப்பதை உணர்ந்தனர். அவர்களுக்கு உண்ண உணவும், இருக்க இருப்பிடம் அளித்தது. இறைவி பகவதியம்மனைத் தவிர வேறு எவருமில்லையென் பதை அறிந்தனர். இக்கோவிலைப்பற்றி பல விந்தையான கதைகள் கூறப்படுகின்றன. அவற்றில் முதன்மையானது கீழே விவரிக்கப்படுகிறது.

ஒருநாள் மாடு மேய்த்திடும் சிறுவன் ஒருவன், புற்களை வெட்டினான். அவன் அவ்வாறு செய்த மாத்திரத்தில் எறும்புக் குன்றிலிருந்து, ரத்தம் கசிய ஆரம்பித்தது. வியப்பு மேலிட்ட சிறுவன் இதனை கிராமத்தாரிடம் கூற, அவர்கள் உடனடியாக விரைந்து வந்து, ரத்தம் கசிந்த இடத்தில் மண்ணை வைத்து அடைத்து, ரத்தக் கசிவினை நிறுத்தினர். பின்னர், அப்பகுதி மக்கள் ஒரு கோவிலை எழுப்பினர். அக்கிராமத்தின் பெயரைச் சேர்த்து, கோவிலின் மூல தெய்வத்திற்கு "மண்டைக்காட்டு அம்மன்" என பெயர் சூட்டினர். துவக்கத்தில் பிற சமயத்தைச் சார்ந்தோறும் அம்மனை வழிபடத் தடையேதுமிருந்ததில்லை. கடும் நோயினால் பாதிக்கப்பட்டவர்கள், அம்மனை வழிபட்டால் உடல் குணமடைகின்றாரென நம்பப்படுகிறது.

செவ்வாய்கிழமைகளிலும், வெள்ளிக்கிழமைகளிலும் முக்கிய பூஜைகள் நடத்தப்படுகின்றன. இந்நாட்களில் பல பெண் பக்தைகள் இறைவியை வழிபடுகின்றனர். ஒவ்வொரு மாத பௌர்ணமியும், மற்றொரு முக்கியமான நாளாகும். ஒவ்வொரு ஆண்டும், மாசி மாதம் 10 நாட்களுக்கு, "மண்டைக்காடுக் கொடை" என்ற திருவிழா விமரிசையாகக் கொண்டாடப் படுகிறது. அதில் கடைசி செவ்வாய் மிக முக்கியமான நாளாகும். "வலியப்படுக்கை விழா" என்பது, திருவிழா காலத்தில் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும்.

உப்பு, மிளகு, மரப்பொம்மைகள், பட்டுத்துணிகள், கறுப்பு வளையல்கள் முதல் அறுவடையினின்றும் பெற்ற பொருள்கள் ஆகியவை

அம்மனுக்கு அளிக்கப்படுகின்றன. மாசித் திருவிழாவிற்குப் பின்னர், ஆடித்திருவிழாவும், கார்த்திகை மாதம் சிறப்பு பூஜைகளும் முக்கியமானவையாகும். மாசித் திருவிழாவின்போது பல்லாயிரக்கணக் கில், மக்கள் இங்கு வருகைதந்து, இறைவியை வழிபடுகின்றனர்[63].

1982-ம் ஆண்டு, திருவிழாக்காலங்களில் இந்துக்களுக்கும், கிறித்தவ மீனவர்களுக்குமிடையே ஒருபெரிய மோதல் ஏற்பட்டது[64]. கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் தலைமையில் காவல்துறை மற்றும் வருவாய்த்துறை அலுவலர்களின் காலந்தவறாத நடவடிக்கையினால் சூழ்நிலை கட்டுக்குள் கொணரப்பட்டு, இயல்பு நிலை திரும்பியது. பின்னர், மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில் அமைதிக்குழு அமைக்கப்பட்டு, பதட்டநிலை எதிர்நோக்கப்பட்டால், அமைதிக்குழு தலையிட்டு, திருவிழா குழப்பமின்றி நடைபெற வேண்டுமென்பதையும், சட்டம் ஒழுங்கினை நிலைநாட்ட வேண்டுமென்பதையும் கருத்திற்கொண்டு, பொது நல நோக்கில் அமைதி நிலைநாட்டப்பட்டு வந்தது[65]. இது தொடர்பாக, "சட்டம், ஒழுங்கு மற்றும் நீதி" என்ற இயலில் விரிவாக தகவல்கள் அளிக்கப்பட்டுள்ளன.

முக்கூடல் அணை (சின்னமடம் வருவாய் கிராமத்தில் அடங்கியது - தோவாளை வட்டம்)
மக்கள் தொகை - 916 (ஆண்கள் - 464 + பெண்கள் - 452)

நாகர்கோவில் நகராட்சிப் பகுதியில் குடிநீர் வழங்கிட, முந்தைய திருவாங்கூர் அரசு, முக்கூடல் நீர்த்தேக்கத்தினை அமைத்து, தோவாளை வட்டம் சிராமடம் கிராமத்திற்கு அருகே, இரு குன்றுகளுக்கிடையே ஒரு மண் அணையினை நிறுவியது. இந்த அணை நாகர்கோவில் நகரிலிருந்து 16 கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது. நாகர்கோவிலுக்கு குழாய் மூலம் தண்ணீர் வழங்கப்படுகிறது. நீர்ப்பிடிப்பகுதி 90 ஏக்கர்களாகும். ஏரியின் நீர் வரும் பரப்பில் மழை பெய்யும் காரணத்தால், இவ்வணைப் பகுதியில் ஆண்டு முழுவதும், தண்ணீர் வரத்து இருந்து கொண்டேயிருக்கும். குழாய் மூலம் வீடுகளுக்குத் தண்ணீர் வழங்கும் விவரங்கள் மற்றும் பயனடைந்த வீடுகளின் எண்ணிக்கை போன்ற தகவல்கள் விரிவாக, "உள்ளாட்சி" என்ற இயலில் அளிக்கப்பட்டுள்ளன.

மூஞ்சிறை (விளவங்கோடு வட்டம் - ஆறுதேசம் வருவாய் கிராமத்திலடங்கியது) மக்கள் தொகை - 17,226 (ஆண்கள் - 8776 + பெண்கள் - 8450)

விளவங்கோடு வட்டத்தின் தலைமையிடமான குழித்துறையிலிருந்து ஏழு கிலோ மீட்டர் தொலைவில், மார்த்தாண்டம்-தேங்காப்பட்டணம் சாலையில், மூஞ்சிறை உள்ளது.

இராமாயணக் காவியநாயகன் இராமன் இலங்கையை அடைய கடலுக்குக் குறுக்கே அணை கட்டுவது தொடர்பாக மூஞ்சிறைக்கு வருகை தந்ததாகவும், ஆனால் மூஞ்சிறை தகுதியான இடமில்லையெனக் கருதியதால், இக்கருத்தினை இராமன் கைவிட்டு விட்டு பின்னர் இராமேஸ்வரத்தைத் தேர்ந்தெடுத்ததாகவும் கூறப்படுகிறது.

கி.பி.9-ம் நூற்றாண்டில் மூஞ்சிறையும், சுற்றுப்புறப்பகுதிகளும், ஆயி மன்னரின் கட்டுப்பாட்டிலிருந்து வந்தன. ஆயி குல மன்னரான "கருணாந்த தாக்கன்" என்பவர் இப்பகுதியினை ஆண்டு வந்தார். மன்னர் "உழக்குடிவிளா" என்ற நிலத்தை, மூஞ்சிறை சபையிடமிருந்து விலைக்குப் பெற்றதாகவும், பின்னர் அதனில், ஒரு விஷ்ணு கோவிலைக் கட்டியதாகவும், அம்மன்னர் காலத்திய ஒரு கல்வெட்டில் குறிக்கப் பட்டுள்ளது. கோவிலைச் சுற்றியுள்ள பகுதி பார்வதிசேகரபுரம் என அழைக்கப்பட்டது. இதே அரசர், ஒரு வேதக் கல்லூரியைத் துவக்கி, ஏறத்தாழ 95 மாணவர்களுக்கு உண்ண உணவு, இருக்க இடம், கற்பிக்க வசதி ஆகியவற்றை மன்னர் அமைத்துக் கொடுத்ததாக கல்வெட்டினின்றும் தெரிய வருகிறது.

முத்துக்குழி வயல் (கல்குளம் வட்டம் - இதனுடைய வருவாய் கிராமம்
கலியம் : மக்கள் தொகை - 17169
(ஆண்கள் - 8724 + பெண்கள் - 8445)

இது உடல் நலம் பேண, ஓய்வெடுத்திட நல்ல ஒரு இடமாகும். இது, பேச்சிப்பாறைக்கருகாமையில் கடல் அளவிற்கு 4400 அடி உயரத்தில் உள்ள ஒரு மேட்டு நிலமாகும். இது நாகர்கோவிலிலிருந்து, 50 கிலோ மீட்டர் வடக்கிலுள்ளது. கி.பி.19-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில், இங்கு தங்கம் கிடைப்பதாக அறிந்து, ஒரு ஆங்கிலேய நிறுவனம், கீழே தோண்டும் செயலைத் துவங்கியது. பின்னர், இம்முயற்சி கைவிடப் பட்டது. புல் மற்றும் புதர்களையுடைய சிறு குன்றுகளால் சூழப்பட்ட இந்த மேட்டு நிலத்தின் வழியாக தூயநீர் செல்கிறது. கம்பீரமான மலைமுகடுகள், சிறப்புவாய்ந்த பள்ளத்தாக்குகள், அலையலையான மேடு பள்ளங்களையுடைய புல்மயமான சரிவுகள், இவற்றிலிருந்து கண்ணுற்றால், அடர்த்தியான காடுகளையுடைய குன்றுகள் ஒருபுறமும், பிளவுபடாது, ஒரே வரிசையாக அமைந்துள்ள கடற்கரை மறுபுறமும் கண்களுக்கு பிருந்தளிக்கின்றன[66]. இங்குபல காப்பி மற்றும் தேயிலை எஸ்டேட்டுகள் உள்ளன. அங்கு உள்ளூர் மக்கள் பலருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

இவ்விடத்தைக் குதிரைக்காரர்களுக்கான வண்டி செல்லாத பாட்டையில் தான் அடைய இயலும். திருவாங்கூர் நாட்டு மன்னர்கள், முன்னர் பல்லக்குகளில் இங்கு வந்து, தங்கிச் சென்றதற்கு அடையாளமான சில பழைய கட்டிடங்கள் இங்கு உள்ளன. சில இடங்களில் ஆழமாக உள்ள ஒரு குறுகிய சாலை, இம்மேட்டு நிலத்தினை இணைக்கிறது. பாலமோர் எஸ்டேட், குன்றுகளின் பாதி தொலைவில் சாலையில் உள்ளது. இந்த மேட்டு நிலத்தில், இதுதான் மனிதர்கள் வாழும் முதன்மையான இடமாகும்.

முட்டம் (கல்குளம் வட்டம்)

கல்குளம் வட்டக்கடற்கரையில், முட்டம்தான், உவகையூட்டும் இடமாகும். கடற்கரையோரத்தில் விடுமுறையைக் கழித்திட விரும்பும் மக்களைக் கவரக்கூடிய இடமாக முட்டம் விளங்கி வருகிறது. இது, நாகர்கோவிலிலிருந்து இராசக்கமங்கலம் வழியாக, 17 கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது. இதனை குளச்சல் அல்லது மண்டைக்காடு வழியாகவும் அடைய முடியும். முதலாம் இராசராச மன்னர், முட்டத்தைக் கைப்பற்றி

அதற்கு மும்முடிச்சோழநல்லூர் என பெயர் சூட்டியதாக, திருநந்திக்கரையிலுள்ள 18ஆம் நூற்றாண்டின் குகைக்கோவில் கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டிருப்பதாக, தெரிகிறது[67].

இந்த இடத்தில், கடலுக்குள் முதலைப்பாறை, புடைத்துக் கொண்டிருப்பதால், கப்பலோட்டும் மாலுமிகளுக்கு இந்த இடம் நன்கு தெரிந்த இடமாகும். மீன்கள் பதனிடும் கூடம் மற்றும் தல்லக்குளம் வட்டாரத்தைச் சார்ந்த ஆரம்ப சுகாதார மையம் ஆகியவை இவ்விடத்தில் உள்ளன.

முட்டம் கிராமத்தில், ஒரு கலங்கரை விளக்கம் நிறுவப்பட்டுள்ளது. இக்கலங்கரை விளக்கத்தில் சராசரி வானிலையில், 23 கடல் வழி மைல்களுக்கு, சூழ்பொருள் காண் ஒளியளவு நிலை உள்ளது. இக்கலங்கரை விளக்கம், 1875-ம் ஆண்டு நிறுவப்பட்டது. பின்னர் 1909 ஆம் ஆண்டு மேம்படுத்தப்பட்டது[68]. இக்கலங்கரை விளக்கம், செயல்நிலைப்படுத்தப் பட்ட ஆண்டு, மற்றும் பிற முக்கிய விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன[69]:

அமைப்பு : விரிவகலம் - 8^{0} - 7.4^{0}வ
நீளப்பாங்கு - 77^{0} - 19-1^{0}கி

தனிக்குறியீடு	-	வெண் ஒற்றை மின்வெட்டொளி = ஒவ்வொரு 5 வினாடிகளும் (0.2 + 4.8 = 5 வினாடிகள்)
பிரிவுகள்	-	90^{0} கொண்ட 4
சுழற்சியின் வேகம்	-	ஒரு மணித்துளியில் 3 சுழற்சிகள்
குவிமையத்திற்குரிய தளத்தின் உயர்நிலை	-	42.97 மீட்டர்கள்
விழியிடை அளவு	-	இரண்டாம் வரிசைமுறை
குவிமையத்தூரம்	-	700 மி.மீ.

ஒளிவிளக்கம்	55 மி.மீ.-பி.வி. விளக்கு	(மயிரிழை போன்ற) நுண்குழல் விளக்கு
திடீரொளியின் காலவரை	0.2 வினாடிகள்	
கப்பலின் பக்கம் ஒளிக்கதிர் மூலம் தெரிவிக்கும் உச்சஅளவு	340000 மெழுகுத்திரி	(மெழுகு விளக்கொளி)
வெவ்வேறு திசையில் இயங்குதல்		
கிடைநிலை	4:48	
செங்கோட்டு நிலை	4:29	
'லாமினான்ஸ்' செயல் எல்லை -	15 மைல்கள் (ஏ.ட்டி.எஃப்.-0.60) 22.8 மைல்கள் (ஏ.ட்டி.எஃப்-.-74)	

நிலஇயல் சார்ந்த செயல் எல்லை - 18 மைல்கள்

நிறுவப்பட்டமை - 1875 ஆம் ஆண்டு

தற்போதைய கருவி நிறுவப்பட்டமை - 1909 ஆம் ஆண்டு

"முட்டம் முனையிலுள்ள விளக்கு, ஆறுபக்க தூபியிலிருந்து, கறுப்புப் பட்டையுடனான, வெள்ளை வர்ணம் பூசப்பட்டு, ஒளியை வீசுகிறது. 85 மீட்டர் (279 அடி) உயரத்தில், உயரமான சிவப்பு மண் நிலத்தில், விளக்கு பொருத்தப்பட்டுள்ள கட்டிட அமைப்பினின்றும் ஒரு மைல் வடக்கேயுள்ள பனைமரச் சோலைகள், நல்ல நில எல்லைக்குறியாக அமைந்துள்ளன. இயல்பாக, மூடுபனிக்கு மேலே பனஞ்சோலை காணப்படுகிறது. இம்மூடுபனி, உயரமான கலங்கரை விளக்கத்தையும் கூட மறைக்கக்கூடும். முட்டம் முனையிலிருந்து, மூன்று மைல்கள், மேற்கு-வடமேற்கே 3.2 மீட்டர் (10 அடி) ஆழத்தில் சிப்பி கூளமடைந்த அருவருக்கத்தக்க நிலப்பகுதி உள்ளது. கடற்கரையிலிருந்து சற்று விலகி, இணையாக, கரையில் ஒரு கிறித்தவ திருக்கோவில் எழுப்பப்பட்டுள்ளது.

மைலாடி (அகஸ்தீஸ்வரம் வட்டம்)
மக்கள் தொகை - 5215 (ஆண்கள் - 2605 + பெண்கள் - 2610)

நாகர்கோவில்-அஞ்சுக் கிராமம் சாலையில், நாகர்கோவிலிலிருந்து ஒன்பது கிலோ மீட்டர் தொலைவில், இவ்விடம் அமைந்துள்ளது. மிகத் தொன்மையான பிராடஸ்டண்ட் கிறித்தவ திருக்கோவில், மதிப்பிற் குரிய ரிங்கிள் டாபே என்பவரால் கி.பி. 1810 ஆம் ஆண்டு இங்கு கட்டப்பட்டது[70].

நாகர்கோவில் (அகஸ்தீஸ்வரம் வட்டம்)
மக்கள் தொகை-171648 (ஆண்கள்-85872 + பெண்கள்-85776)

நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டத்தின் தலைநகரமாகும். இது ஆரம்பொலி கணவாயிலிருந்து 12 கிலோ மீட்டர் தொலைவில், கணவாய் முகட்டில் திருவனந்தபுரம்-திருநெல்வேலி சாலையிலேயே அமைந்த நகரமாகும். இது, கன்னியாகுமரி மாவட்டத்தில் மிகப்பெரிய நகரமாகும். நாகர் கோவில் நகரத்தின் நடுவிலமைந்துள்ள, "நாகராசா" கோவிலின் முதன்மை தெய்வம் ஐந்து தலைகளைக் கொண்ட நாகப்பாம்பாகும். இந்த பாம்பு தெய்வத்தின் பெயரைக் கொண்ட இந்நகரம் நாகர்கோவில் என அழைக்கப்படுகிறது. துவக்கத்தில் இது ஒரு சமண சமயக்கோவிலாக இருந்ததெனக் கூறப்படுகிறது[71]. நாகராசா கோவில், நெல் வயல்கள், பல்வேறு வகையான மலர்களையுடைய தோட்டங்கள் மற்றும் அழகான தென்னஞ்சோலை ஆகியவற்றால் நாகராசா கோவில் சூழப்பட்டுள்ளது[72]. நாகராச சுவாமியை அடையாளங்காணுமுகத்தான், நாக மலருக்கு (கௌரோபிடா கைனெஸ்ஸிஸ்) இத்தோட்டம் புகழ் பெற்றதாகும். இக்கோவிலும், தோட்டமும் நல்ல பாம்பினால் பாதுகாக்கப்பட்டு வருவதாகவும், அந்த நம்பிக்கையில்தான், திருட்டுத்தனமாக எவரும், மலர்களையோ, தேங்காய்களையோ பறிப்பதில்லையெனவும் கூறப்படுகிறது. கோவிலுக்குள்ளே பல நல்ல பாம்புகள் குடியிருந்து வருவதாகக் கூறப்பட்ட போதிலும், நாகர்கோவிலிலோ, அதன் சுற்றுப்புறப் பகுதிகளிலோ, நல்ல பாம்புக் கடியினால் எவரும் இறந்ததாக வரலாறு இல்லை. இச்சிறப்பியல்பினை டாக்டர் ஜேம்ஸ் ஹேஸ்டிங்ஸ் தாம் எழுதியுள்ள சமயம் பற்றிய கலைக்களஞ்சியம் என்ற நூலில், இவ்வாறு கூறுகிறார்:

"கோவிலிலிருந்து ஒரு மைல் சுற்றளவுக்குள்,
பாம்பு கடியினால் எவரும் உயிர் துறக்கவில்லை"
(தொகுதி-XI பக்கம் 418)

நாகராசா மற்றும் அனந்த கிருஷ்ணா ஆகியோருக்கு அர்பணிக்கப்பட்ட இரண்டு தனிச்சிறப்புத் தொழுகையிடங்கள் இங்குள்ளன[73]. "துவஜஸ்தம்பம்" அனந்த கிருஷ்ணரின் முன்னிலையிலுள்ளது. இவ்விரு சிறப்புத் தொழுகையிடங்களுக்குமிடையே அங்கி அணியப்பெற்ற 'லிங்கம்' உள்ளது. அர்த்த மண்டபத்தின் தூண்கள் மற்றும் சுவர்களில், சமண சமய தெய்வங்களான மஹாராசா, பார்சுவநாதர் மற்றும் பத்மாவதி ஆகியோர் உருவச்சிலைகளும், இந்து சமய தெய்வங்களான முருகன், கிருஷ்ணன், பத்மநாபர் மற்றும் நரசிம்மர் ஆகியோரது உருவச் சிலைகளும் உள்ளன. விநாயகரின் உருவச்சிலை ஒன்று, உள்பிரகாரத்தின் தென்மேற்கு மூலையில், பிரதிட்டை செய்யப்பட்டு, மக்கள் அதனை வழிபட்டு வருகின்றனர். விநாயகரின் வழிப்பாட்டுத் தலத்திற்கருகாமையில் உற்சவமூர்த்தி அவரது இருபுறமும் அவரது வாழ்க்கைத் துணைவியருடன் காட்சியளிக்கிறார். வெளிப் பிரகாரத்தில், சாஸ்தா மற்றும் பாதுகாக்கும் தெய்வமான பூதகணம் ஆகியவற்றின் சிறப்புத் தொழுகையிடங்களுள்ளன[74]. வளாகத்தினுள், வைணவ தனிச்சிறப்புடன் கூடிய துர்காதேவி காட்சியளிக்கிறாள். இந்த சிறப்பு வழிபடும் இடத்திற்கருகாமையில், விநாயகப்பெருமானுடன் கூட முருகப்பெருமானின் சிறப்பு வழிபடும் இடமும் உள்ளது. இவ்வழிபடுமிடத்திற்கு முன்னர், இரு அரச மரங்களும், அவற்றைச் சுற்றி பலவகைப்பட்ட நாகர் உருவச்சிலைகளும் உள்ளன[75]. இவை பெண் பக்தைகளால் புனிதமானவையெனப் போற்றப்படுகின்றன. நாகராசரை வழிபடுவோர், நோய் நொடியின்றி பல்லாண்டு வாழ்வாரென்ற நம்பிக்கை, அனைத்து மக்களிடமும் நிலவி வருகிறது. எவ்வித மருந்துகளினாலும் குணப்படுத்த இயலாத நோய்கள், நாகராசரை நம்பிக்கையுடன் வழிபட்டால் குணமடைந்துவிடு மென்ற உறுதியுடன் மக்கள் ஒவ்வொரு ஞாயிறன்றும் நாகராசரை வழிபடுகின்றனர். ஞாயிற்றுக்கிழமைகளிலும், ஆயில்ய நக்ஷத்ரம் வரக்கூடிய நாட்களிலும் நாகராசருக்கு பால் வார்ப்பது புனிதமானதாகக் கருதப்படுகிறது. ஆவணி மாத ஞாயிற்றுக்கிழமைகளில், இத்திருக்கோவில் விழாக்கோலம் பூண்டிருக்கும். அன்றைய தினம், சுற்றுப்புற கிராமங்களிலுள்ள மக்கள் இங்குவந்து இங்குள்ள தெய்வத்திற்கு பால், உப்பு, மிளகு மற்றும் மரப்பொம்மைகள் ஆகியவற்றைக் காணிக்கையாக அளிக்கின்றனர். பிற சமயத்தைச் சார்ந்தோர் கூடி இவ்விறைவனுக்கு காணிக்கையளிப்பது வழக்கம். ஒவ்வொரு ஆண்டும், தை மாதத்தில் 10 நாட்கள் தொடர்ந்து திருவிழா விமரிசையாக நடக்கிறது[76].

இங்கு மிக நேர்த்தியான சிற்ப வேலைப்பாடுகளமைந்த பல தலைப்பாம்புகள் செதுக்கப்பட்டு அவற்றில் திருகுச் சுருள் அமைப்பினாலான ஒன்றில் சமண முனிவர் பார்சுவநாதர் ஓய்வெடுப்பது போன்ற சிற்ப வேலைப்பாடுகளைக் காணலாம். தருக்கு நிறைந்த ஒருவனால் கொல்லப்பட்ட கணவன் மனைவியரான இரு பாம்புகள் அவை இறக்குமுன் முனிவர் பார்சுவநாதருடைய ஆறுதலான பாசுரங்களைக் கேட்டதால்,



மண்டைக்காடு அம்மன் கோவில்

மறுபிறவியில், தாய்நாட்டிலேயே பாம்பு இராசா, பாம்பு இராணியாகப் பிறந்தனர். ஒரு நாள் முனிவர் ஆழ்ந்த தியானத்திலீடுபட்டிருந்த போது அவரது அகநிலை சுடரொளி அவ்வழியே பறந்து வந்த இறைவன் சாமவாரரின் தேரை நிறுத்தியது. இதனால் ஆத்திரமடைந்த இறைவன், பெரிய மழையைப் பொழிந்தார் ; ஆனால், இந்த மழையினால் பார்சுவநாதரின் தியானத்திற்கு எந்தத் தடையும் ஏற்படவில்லை. இவ்வாபத்தினின்றும் முனிவரைக் காத்திட, பாம்பரசர் தாரனேந்திரர் தனது படத்தினை விரித்துக்காத்தார். அவரது இராணி பத்மாவதி, அவரது கால்களுக்கு கீழே ஒரு தாமரையினை நடவு செய்தார். முனிவர், தண்ணீருக்கு மேலே கிளம்பி வந்து, அவ்வாறாக அவர் காப்பாற்றப்பட்டார். இந்த உட்கதை நன்றாக செதுக்கி வைக்கப்பட்டுள்ளது. பல்வேறு பெரிய, சிறிய பாம்புகளின் உருவங்கள், வழிபாட்டிடங்கள் யாவற்றிலும் செதுக்கி வைக்கப்பட்டுள்ளன[77].

கோவிலின் புகழ்வாய்ந்த தனிச்சிறப்பு யாதெனில், இறைவனின் கருவறை மண் சுவர்களினால் சூழப்பட்டுள்ளது. அவற்றின்மீது, ஒரு எளிய கூரை, தென்னோலைகளினாலும், மூங்கில் கம்புகளினாலும், வேயப்பட்டுள்ளது[78]. இறைவன் நாகராசர் களக்காடு மன்னரின் கனவில் வந்து கருவறை மேல் வேயப்பட்ட மூங்கில் கூரையினை அப்புறப்படுத்த வேண்டாமெனக் கூறியதாக புராணக்கதையினின்றும் தெரிய வருகின்றனது[79].

கலைத்திறனோடு செய்யப்பட்ட கோவிலின் நுழைவாயில், மலபார் பாணியினாலான கட்டிடப்பாங்கினைக் கொண்டதாகும். இக்கோவில், இந்துக் கோவிலாக மாற்றப்பட்டதாக, கி.பி.1521ஆம் ஆண்டின் கல்வெட்டுகளினின்றும் தெரிய வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் மார்கழி மாதம் (டிசம்பர் - சனவரி) 10 நாட்கள் இங்கு விமரிசையாகக் கொண்டாடப்படும் திருவிழா, இம்மாவட்டத்திலுள்ள மக்களனைவரையும் கவருகிறது.

புனித சேவியர் கிறித்தவத் திருக்கோவில், நாகர்கோவில்

இயேசுநாதர் சங்கத்தைச் சார்ந்த முதன்மையான திருச்சபை சமய குரு புனித சேவியர், மக்களுக்காகப் பல சேவைகளைப் புரிந்து, மக்கள் மத்தியில் மிகுந்த செல்வாக்கினைப் பெற்றார்[80]. அவர் கோவாவிலிருந்து தமிழ்நாட்டின் கடற்கரைப் பகுதிக்கு வருகை தந்தபோது, அக்காலத்தில் பிரசித்தி பெற்ற வாணிப மையமாக விளங்கிய, கன்னியாகுமரி மாவட்டம் கோட்டார் நகரத்தைப் பார்வையிடத் தவறியதில்லை. அவர் கோட்டாரில் தங்கியிருந்த போது, அங்குள்ள சிறிய திருக்கோவிலில், புனித அன்னை மேரியை வழிபட்டு வந்தார். அவர் "வாலிப பண்டாரம்" என கோட்டார் மக்களால் மிகவும் பிரியமாக அழைக்கப்பட்டார்.

அவர் கோட்டாரிலிருக்கும் போது, வேநாடு மக்களின் மீது படகர்கள் படையெடுத்து வந்ததைத் தடுத்து நிறுத்தினார். இதனால், மகிழ்ச்சியடைந்த மன்னர், கோட்டாரில் ஒரு கத்தோலிக்கக் கிறித்தவத் திருக்கோவில் கட்டுவதற்கு அவருக்கு ஒரு நிலத்தை ஒதுக்கினார். அங்கு ஏற்கனவே கி.பி.1544-ல் கட்டப்பெற்ற கிறித்தவ திருக்கோவில் ஒன்றிருந்தது. அங்குதான் புனித சேவியர் திருக்கோவில் தற்போது உள்ளது.

"கடற்கரைப் பாதையிலேயே அவர் 45 கிறித்தவத் திருக்கோவில்களைக் கட்டியுள்ளார்". கோட்டாரிலுள்ள மாவட்டத் தலைமைக் கிறித்தவக் கோவிலிலுள்ள தனிப்பட்ட தொழுகையிடம் அவற்றில் மிகவும் சிறப்புப் பெற்றதாகும்.

கோட்டாரிலுள்ள மாவட்டத் தலைமைத் திருக்கோவில், பல்வேறு சமயங்களில், கட்டப்பட்ட பல கட்டிடங்களைக் கொண்டதாகும். கி.பி. 1600ஆம் ஆண்டு, இத்திருக்கோவில் கட்டப்பட்டதாகத் இத்திருக்கோவில் ஆவணங்களினின்றும் தெரியவருகிறது. 1865ஆம் ஆண்டு இத்திருக்கோவில் பெரிதாக்கப்பட்டு, சிறப்புத் தொழுகையிடமும் புதுப்பிக்கப்பட்டது. 1930 ஆம் ஆண்டு இத்திருக்கோவில் மாவட்டத் தலைமைக் கிறித்தவத் திருக்கோவிலின் நிலைக்கு உயர்த்தப்பட்டது. சிலுவை உருவுடைய இத்திருக்கோவிலில் பல்வேறு வகையான சிற்ப வேலைப்பாடுகள் காண்போரைக் கவர்கின்றன. வட்ட வடிவமான வளைவுகள் மற்றும் கவிகை மாடங்களைக் கொண்ட பழைய கிறித்தவத் திருக்கோவில், ரோமானிய பாணியிலானதாகும். உயர்மட்ட வளைவுகளைக் கொண்ட விரிவாக்கம், முக்கியத்துவம் வாய்ந்ததாகும். முகப்பிலுள்ள அழகான கல் மண்டபம் இந்திய பண்பாட்டினையொத்து அமைந்துள்ளது.

புனித சேவியர், இந்தியாவிற்கு வருகை தந்த நான்காவது நூற்றாண்டினை நினைவு கூறும் வகையில், அந்த அருட்தொண்டருக்கு ஒரு அழகான மண்டபமும், அருள்மிகு அன்னைக்கு அழகுச்செறிவான குகையும், புனித சேவியரை இந்தியாவிற்கு அனுப்பி வைத்த புனித இக்னேஷியஸ்க்கு சிறப்புத் தொழுகையிடமொன்றும், 1942-ஆம் ஆண்டு மாவட்டத் தலைமைத் திருக்கோவில் வளாகத்தில் கட்டப்பட்டன. 1955-ம் ஆண்டு இத்திருக்கோவில் மேலும் விரிவாக்கப்பட்டு, அன்னையின் தொழுகையிடம், விரிவாக்கப்பட்ட திருக்கோவிலுடன் இணைந்து ஒன்றுபடுத்தப்பட்டது.

பண்டைய காலம் முதலே, புனித சேவியர் திருக்கோவில், வியத்தகு செயல்கள் நிகழும் இடமாகப் புகழ்பெற்று விளங்குகிறது. ஆண்டுத் திருவிழா நவம்பர்-டிசம்பர் மாதங்களில் 10 நாட்கள் தொடர்ந்து விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. ஒன்பதாம் நாள் நடைபெறும் தேர்த் திருவிழா மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. இந்தத் திருவிழாக் காலங்களில், தென்னிந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும், அலையலையாக மக்கள் இங்கு வருகை தருகிறார்கள்[81]. 12.3.1692ம் நாள் பதினைந்தாவது மாவட்டச் சமய முதல்வர், சேவியரை ஒரு அருட்டொண்டராக அறிவித்தார். அன்றிலிருந்து அத்திருக்கோவில் புனித பிரான்சிஸ் சேவியரது திருக்கோவிலென அழைக்கப்படலாயிற்று. ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 24 முதல் டிசம்பர் 3-ந் தேதி வரை எவ்வித சாதி, சமய, இன, மொழி, நிற வேறுபாடின்றி புனித சேவியருக்கு மரியாதை செலுத்திட, மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்தும் மக்கள் பெருமளவில் வருகை தருகின்றனர்.

ஹோம் கிறித்தவத் திருக்கோவில்

நாகர்கோவிலிலுள்ள ஹோம் கிறித்தவத் திருக்கோவில், சமயப்பரப்பு குழுக்களின் சிற்பக்கலை சாதனைக்குப் புகழ் வாய்ந்ததாகும். திருவாங்கூர்

மாநில மகாராணியின் அனுமதியின் பேரில், மதிப்பிற்குரிய சார்லஸ் மீட், நாகராசர் திருக்கோவில் யானைகளையும், கிளைச்சிறையிலுள்ள கைதிகளையும், இத்திருக்கோவில் கட்டுமானப் பணிக்கு பயன்படுத்திக்கொண்டார். இத்திருக்கோவிலில் பெரிய கற்களைக் கொண்டு கட்டப்பட்டுள்ளதால், இது (கற்கோவில்) "கல்லுக்கோவில்" என அழைக்கப்படுகிறது. 14.1.1819-ம் நாள் அடிக்கல் நாட்டப்பட்டு, 1836-ல் கூட்டுவழிபாடு துவங்கப்பெற்றது. கிரேக்க பாணியிலான திருச்சபைக்கட்டுமானப்பணி 1843 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டது.

இத்திருக்கோவில் 140 அடி நீளமும், 70 அடி அகலமும் கொண்டதாகும். 70 அடி நீளமும், 20 அடி அகலமுள்ள வராந்தா முகப்பிலுள்ளது. அலுவலக அறைகள் பின்புறமுள்ளன. ஹோம் கிறித்தவத் திருக்கோவில் தென்னிந்தியாவிலுள்ள மிகப் பழமையானதும், பெரியதுமான திருக்கோவில்களில் ஒன்றாகும். இதன் தொழுகைக் கட்டிடத்தில், ஒரே நேரத்தில், ஏறத்தாழ 2,000 மக்கள் அமரலாம்.

கிறித்தவ சமயப்பரப்புக் குழுக்களான, தென்னிந்தியத் திருச்சபை, இரட்சணிய சேனை மற்றும் ரோமன் கத்தோலிக்க சமயப்பரப்புக் குழுக்கள் ஆகியவை, நாகர்கோவிலைப் பொறுத்த வரை, பெரும் பணியாற்றியுள்ளன. தற்போதைய நிலைக்கு, குறிப்பாகக் கல்வித்துறையில் உயர்ந்திடக் காரணமாயிருந்தமைக்கு, நாகர்கோவில், அவற்றிற்கு பெரிதும் கடமைப்பட்டுள்ளது. 1818ஆம் ஆண்டு, இலண்டன் சமயப்பரப்புக்குழுச் சங்கத்தினைச் சார்ந்த மதிப்பிற்குரிய மீட், நாகர்கோவிலில், நாகர்கோவில் கல்விக் கூடத்தினைத் துவங்கினார். இதுதான் ஆங்கிலத்தில் முறையான போதனையை முதன்முதலில் துவக்கிய கல்விக்கூடமாகும். 1893ஆம் ஆண்டு, இக்கல்விக்கூடம் சென்னைப் பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டிலமைந்த இரண்டாம் நிலைக் கல்லூரியாக வளர்ந்தது.

கார்மெல் உயர்நிலைப்பள்ளி, பெல்ஜியத்திலுள்ள ப்ரூகெஸ்ஸைத் தலைமையிடமாகக் கொண்ட புனித அகஸ்டின் சமயப் பெண் துறவிக்குழுவினைச் சார்ந்த பெல்ஜியம் சகோதரிகள் நடத்தி வந்த புனித ஜோசப் பெண்கள் உயர்நிலைப் பள்ளி, பாண்டிச்சேரியைத் தலைமையிடமாகக் கொண்ட இம்மேக்குலேட் ஹார்ட் ஆஃப் மேரி பிரிவினைச் சார்ந்த சகோதரிகளால் நடத்தப்பட்டு வரும் சிறுமலர் பெண்கள் உயர்நிலைப்பள்ளி ஆகியவை, கத்தோலிக்க நிறுவனங்களால் நடத்தப்பெறும் முக்கியமான கல்வி நிறுவனங்களாகும். இந்நிறுவனங்களில், கற்றுக்கொடுக்கப்படும். பல்வேறுவகைப் பயிற்சி முறைகள், மாணவர்களின் மொத்த எண்ணிக்கை, கல்வித்தரம், கல்வி போதிக்கப்படும் மொழி ஆகியவையும், பல்வேறு வகையான புள்ளிவிவரங்களும், "கல்வி" என்ற தலைப்பிலான இயலில் அளிக்கப்பட்டுள்ளன.

கோட்டார் லத்தீன் மேற்றிராசனப்பிரிவு, வேப்பமூடில் பேருந்து நிலையத்திற்கருகே, "அஸிலி அச்சகம்" என்ற அச்சகத்தை நடத்தி வருகிறது. இவ்வச்சகத்தால், "தேனொளி" என்ற ஒரு தமிழ் மாதாந்திர இதழ் வெளியிடப்படுகிறது.

பிராடஸ்டெண்ட் சமயப்பரப்புக் குழுவின் செயல்முறைகள், இப்பகுதியில் 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் துவங்கின. இலண்டன் சமயப் பரப்புக்குழுச் சங்கத்தின் தென்திருவாங்கூர் சமயப்பரப்புக்குழு, மதிப்பிற்குரிய ரிங்கெல்டாப் தலைமையில், மாவட்டங்களில், தனது பணியினை 1806 ஆம் ஆண்டு துவங்கியது.

ஏழை மற்றும் நோயாளிகளுக்கு நிவாரணம் அளிப்பதன் பொருட்டு, தென்னிந்தியத் திருச்சபை, பல சமூக நலப்பணிகளை மேற்கொண்டுள்ளது. சமயப்பரப்புக்குழு, 1838 ஆம் ஆண்டு, நாகர்கோவிலிலும், 1852ஆம் ஆண்டு நெய்யூரிலும், மருத்துவப் பணியினை மேற்கொண்டுள்ளது.

சமயப்பரப்புக்குழு, ஒரு பின்னலிழை இழைத் தொழிற்சாலையினை நாகர் கோவிலில் ஊக்குவித்தது. அது, நாளடைவில், பல மாதர்களுக்கு வேலை வாய்ப்பளித்திடும், வளமிக்க குடிசைத் தொழிலாக வளர்ந்தது. பல கிறித்தவக் கல்வி நிறுவனங்கள், மற்றும் பல்வேறு உணவு விடுதிகள் ஆகியவற்றை சமயப் பரப்புக்குழு நடத்தி வருகிறது. அவற்றில் முதன்மையானவை, நாகர்கோவிலிலுள்ள கிறித்தவ திருக்கோவிலிலும், ஸ்காட் கிறித்தவக் கல்லூரியுமாகும். (வில்லியம் பெத் என்பவரால், இங்கிலாந்தில், 1855ஆம் ஆண்டு நிறுவப்பட்ட) இரட்சணிய சேனை, (Salvation Army) 1889 ஆம் ஆண்டு திருவாங்கூரில் துவங்கப்பட்ட மற்றொரு சமயப்பரப்பு நிறுவனமாகும். அது, 1892-ல் நாகர்கோவிலின் புறப்பகுதியான கிருஷ்ணன் கோவில், நிலையான ஆதாரம் பெற்றது, பின்னர், 1924 ஆம் ஆண்டு, அது, திருவனந்தபுரத்தில் தனது தலைமையிடத்தை நிறுவியது. இச்சேனை பல நலத்திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது. அதன் விளைவாக, மாவட்டத்திலுள்ள ஆதிதிராவிட வகுப்பினர், பல்வேறு துறைகளில், குறிப்பாக கல்வி மற்றும் மருத்துவத் துறைகளில் பெரிதும் பயனடைந்துள்ளனர். இச்சேனை பல பள்ளிகளைத் துவக்கி, பல்வேறு ஆசிரியர்களுக்குப் பயிற்சியளித்துள்ளது. பெண்கள் பலதரப்பட்ட தொழிற்கூடங்களில் குறிப்பாக, பின்னலிழை, தையல் வேலை மற்றும் புத்தகங்கள் கட்டுதல் போன்ற பணிகளை ஆற்ற ஊக்குவிக்கப்படுகிறார்கள். சேனை தற்போது, உணவு வசதிகள் உடைய இரு பள்ளிகள், ஒரு ஆங்கிலப்பள்ளி, மற்றொரு நடுநிலைப்பள்ளி ஆகியவற்றை, நாகர்கோவிலில் நடத்தி வருகிறது. அது, ஆரல்வாய்மொழியில், ஊனமுற்றோர் வாழ்க்கைத் தொழில் சார்ந்த கல்வி மையத்தை நடத்தி வருகிறது. இம்மையத்தில், ஊனமுற்றவர்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது. பயிற்சியை முடித்தவுடன், அவர்களுக்கு அம்மையத்திலேயே வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது. இம்மையத்தின் தனிச்சிறப்பு யாதெனில், இம்மையத்தின் மேலாளரே, உடல் ஊனமுற்றவர். அவர் விழிப்புடன் செயலாற்றுகிறார். பயிற்சியாளர்களும், பணியாளர்களும் சரிவர தங்களது பணிகளை ஆற்றி வருகின்றனரா என தனது சக்கர நாற்காலியிலேயே துடிப்புடன் சுற்றி கண்காணித்து வருகிறார்.

மருத்துவத்துறையில், 1897 ஆம் ஆண்டு, நிறுவப்பட்ட கேத்தரின் பூத் மருத்துவ மனை, பாராட்டத்தக்க வகையில், தனது பணியினை ஆற்றி வருகிறது. இம்மருத்துவ மனையில், நவீன மருத்துவக் கருவிகள் சேகரித்து

வைக்கப்பட்டுள்ளன. மருத்துவமனையோடு கூட, இரட்சணிய சேனையும் பின்னலிழை மற்றும் ஊசி வேலை செய்யும் தொழில் அலகுகளையும் நாகர்கோவிலில் நடத்தி வருகிறது.

1907 ஆம் ஆண்டு, நாகர்கோவிலில் நிறுவப்பட்ட மார்டின் லூதர் சார்ந்த சமயப்பரப்புக்குழு, மாவட்டத்திலுள்ள பிற்பட்ட வகுப்பினரின் நலனுக்காக பல நலப் பணிகளை ஆற்றி வருகிறது. அது நாகர்கோவிலில் ஒரு கிறித்தவ திருக்கோவிலை நிறுவி, ஒரு உயர்நிலைப்பள்ளியினையும் நடத்தி வருகிறது. இது தவிர, திருவாங்கூர் தேவாஸ்வம் துறை ஆதரவில், 1941 ஆம் ஆண்டு துவங்கப்பெற்ற, ஒரு இந்து சமய நூல்நிலையமும், நாகர்கோவிலில் இயங்கி வருகிறது. இந்நூல் நிலையம், ஆங்கிலம், மலையாளம், தமிழ், சமஸ்கிருதம் மற்றும் இந்தி ஆகிய மொழிகளில் 2000 நூல்களை சேமித்து வைத்துள்ளது. ஒவ்வொரு ஆண்டும், செப்டம்பர் - அக்டோபர் மாதங்களில் 10 நாட்கள் நவராத்திரி திருவிழா, சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் நான்கு நாட்கள் பேராண்மைப் பேரவையும் நடைபெறுகிறது.

சதாவதானி செய்குத்தம்பிப் பாவலர் அவர்கள் நினைவாக, ஒரு நினைவுச் சின்னமும் இங்கு எழுப்பப்பட்டுள்ளது.

சதாவதானி செய்குத்தம்பிப் பாவலர்[82]

இம் மாவட்டத்திலுள்ள கோட்டார் பல கற்றறிவாளர்களைத் தோற்றுவித்துள்ளது. மிகவும் புகழ்பெற்றவரும் அவர்களில், கற்றறிவாளருமான சதாவதானி செய்குத்தம்பிப் பாவலர், அவர்கள் ஒருவராவார். "பாவலர்" எனில், தமிழ் கற்றறிவாளர்களில் சிறந்தவரெனப் பொருள்படும். (சதாவதானி எனில், ஒரே நேரத்தில் பல பணிகளை தடங்கலின்றி ஆற்றுகின்றவரெனப் பொருள்). பாவலர் கோட்டாரிலுள்ள சங்கரநாராயண பட்டாரியா என்பவரது சீடராவார். பாவலர் கம்ப இராமாயணத்தில் நிபுணராவார். அவர், தனது 15-வது வயதிலேயே தமிழ் மொழியில் புலமை பெற்றுத் திகழ்ந்தார். அவரது தமிழ் இலக்கியப் படைப்புகளில், திருக்கோட்டாற்றுப்பதி, திருப்பாட்டு அந்தாதி, திருநாகூர் மற்றும் திருஅந்தாதி ஆகியவை முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். அவர் சீறாபுராணம் பற்றிய 5027 பாடல்களடங்கிய விளக்கவுரையினை எழுதியுள்ளார்.

பாவலர் இராமலிங்கசுவாமி அவர்களது பண்பு, செயல்களிற் பற்றார்வ முடையவராகத் திகழ்ந்தார். சுவாமிகளது பாடல்கள் "மருட்பா" எனவும் அவை அருட்பா அல்ல எனவும் சில கற்றறிவாளர்களால் குறை கூறப்பட்டன. ஆனால் பாவலர் அவை "அருட்பா" தானென விளக்கினார். இவரது இக்கருத்து இறுதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இவ்வெற்றியினைத் தொடர்ந்து, "தேவாமிருத பிரசங்கக் களஞ்சியம்" போன்ற பட்டங்கள் அவருக்கு சூட்டப்பட்டன. அவர்களது சீடர்களில், சாஸ்தான் குட்டிப்பிள்ளை மற்றும் பாவலர் மாணிக்க வாசகம் பிள்ளை ஆகியோர் புகழ்பெற்றவர்கள்.

நாகர்கோவில் கிராமம், கோட்டாரைச் சேர்ந்த அரிப்புத் தெரு பகுதியிலும், வடிவேஸ்வரம் கிராமம் ஏலங்காடா பகுதியிலும், முஸ்லிம்கள் அதிக அளவில் வாழ்கின்றனர். அவர்களின் தொழுகைக்காக இப்பகுதியில் நான்கு மசூதிகள் உள்ளன. மக்கள் அதிக அளவில் வாழும் வடசேரி பகுதியில் அவர்கள் அங்குமிங்குமாக வசிக்கின்றனர். எடலக்குடியிலுள்ள நான்கு இசுலாமியர்கள் இஸ்லாமின் அகமதியா இயக்கத்தைப் பின்பற்றுகின்றனர். அவர்களுக்கென எடலக்குடியில் தனியாக ஒரு மசூதி உள்ளது. நகரத்தின் மையப்பகுதியில், ஒரு கோபுர கடிகாரம் நிறுவப்பட்டுள்ளது. இவ்விடத்தி லிருந்து, நான்கு சாலைகள், பல்வேறு திசைகளில் திரும்பிச் செல்கின்றன.

நாகர்கோவிலில், ஸ்காட் கிறித்தவக் கல்லூரி, பெண்கள் கிறித்தவக் கல்லூரி, இந்துக் கல்லூரி, ஹோலி கிராஸ் பெண்கள் கல்லூரி, ஸ்ரீ அய்யப்பா பெண்கள் கல்லூரி, பயனீர் (Pioneer) குமாரசுவாமி கல்லூரி மற்றும் சிவந்தி ஆதித்தன் கல்லூரி (சுயநிதி) ஆகிய கல்லூரிகள் இயங்கி வருகின்றன. நகர எல்லையில், தனியார் நிறுவனங்களால், நடத்தப்படும் பிற கல்வி நிறுவனங்கள், ஸ்காட் கிறித்தவ உயர்நிலைப் பள்ளி, டுத்தி பெண்கள் உயர்நிலைப்பள்ளி, சிறுமலர் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, புனித ஜோசப் பெண் துறவியர் மடம் உயர்நிலைப்பள்ளி, கார்மெல் உயர்நிலைப்பள்ளி மற்றும் கன்கார்டியா (லூத்தரன் சமயப்பரப்புக் குழு) உயர்நிலைப்பள்ளி ஆகியவையாகும். மாவட்ட மற்றும் செஷன்ஸ் நீதிமன்றத்திற்கு அருகாமையில், உயர்ந்த பூமியில், பிரம்மாண்டமான தனது இரு மாடிக்கட்டிடங்களும் அமைந்துள்ள எஸ்.எல்.பி. உயர்நிலைப்பள்ளி கீழேயுள்ள சாலையிலிருந்து, அனைவரையும் கவரகூடிய தோற்றத்தினை அளிக்கிறது. கட்டிடம், புறவீடுகள், மற்றும் விளையாட்டுத் திடல்கள் ஆகியவை 25 ஏக்கர் நிலப்பரப்பிலுள்ளன. அங்கு ஒரு ஆசிரியர் பயிற்சிப்பள்ளியும் உள்ளது. பல துவக்கப்பள்ளிகளும் இங்கு இயங்கி வருகின்றன. மாணவர்களின் எண்ணிக்கை, கற்பிக்கப்படும் பொருட்கள், மற்றும் இதர விவரங்கள் "கல்வி" என்ற தலைப்பிலான இயலில் கொடுக்கப்பட்டுள்ளன.

முன்பு திருவாங்கூரை ஆண்ட மன்னர்கள், தென்திருவாங்கூரில் சுற்றுப் பயணம் செய்யும் காலங்களில் இராமவர்மபுரம் அரண்மனை தற்காலிக இருப்பிடமாக அவர்களால் பயன்படுத்தப்பட்டது. தற்போது, இங்கு கோட்ட ஆட்சியர் அலுவலகம், வருவாய்த்துறை மற்றும் இதர துறைகளைச் சார்ந்த அலுவலகங்கள் இயங்கி வருகின்றன.

மாவட்ட குற்றவியல் நீதி மன்றம், மாவட்ட மற்றும் இரண்டாம் வகுப்பு குற்றவியல் நீதி மன்றம், மாவட்டக் கருவூலம், மாவட்ட வேளாண் அலுவலகம், உள்ளாட்சி நிதித் தணிக்கை அலுவலகம், கூட்டுறவு சங்கங்களின் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், மாவட்டப் புள்ளி விவர அலுவலர் ஆலுவலகம், மாவட்டப் பதிவாளர் அலுவலகம் வனப்பாதுகாவலர் அலுவலகம், மத்திய கலால் வரி அலுவலகம், உப்புத்துறைக் கண்காணிப்பாளர் அலுவலகம் ஆகிய நல்ல அலுவலகங்கள் இங்கு இயங்கி வருகின்றன.

இம்மாவட்டம் நல்ல போக்குவரத்து வசதிகளைப் பெற்றுள்ளது. மாவட்ட முழுமையும் நேசமணி போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் இயங்கி வருகின்றன. திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தைச் சார்ந்த பேருந்துகள், சென்னை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், மதுரை போன்ற இடங்களை இம்மாவட்டத்துடன் இணைக்கிறது. நகரப் பேருந்துகளும் மக்களுக்காக நற்பணியாற்றுகின்றன.

இங்கு, 1984-ல், ஒரு வானொலி நிலையமும், 1987-ல் ஒரு தொலைக் காட்சி அஞ்சல் நிலையமும் நிறுவப்பட்டுள்ளன. இவை தொடர்பான பிற தகவல்கள், "போக்குவரத்து" என்ற இயலில் விரிவாக கொடுக்கப் பட்டுள்ளன.

நாகர்கோவில், 1920 முதல் நகராட்சியாக இயங்கி வருகிறது[83]. அது தேர்வு நிலை நகராட்சியாக, 1978 ஆம் ஆண்டு, உயர்த்தப்பட்டது. 24.27 சதுர கிலோ மீட்டருள்ள இந்நகராட்சி, மாவட்டத்திலேயே மிகப் பெரிய நகராட்சியாகும். 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்புப்படி, இந்நகராட்சியின் மக்கட்தொகை 1,71,648 ஆகும். சுகாதாரம், நல் வாழ்வு தெருவிளக்கு போன்றவற்றை நகராட்சி கவனித்து வருகிறது. நகரம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதியினைப் பெற்றுள்ளது. "மார்த்தாண்டவர்மா நீருற்று" என அழைக்கப்படும் நீரூற்று 1945ஆம் ஆண்டு கட்டிமுடிக்கப்பட்டது. இதற்கு நீர்வரத்து ஆதாரம், நகரத்திலிருந்து 16 கிலோ மீட்டர் வடமேற்கிலுள்ள முக்கூடல் (நீர் சேமித்து வைக்கப்பட்டுள்ள) நீர்த்தேக்கமாகும்.

நகராட்சி ஒரு "ஆங்கில" மருத்துவ மனையையும், 10 பேறு காலம் மற்றும் குழந்தைகள் நல மையங்களையும், ஒரு குடும்ப நல மையத்தையும் நடத்தி வருகிறது.[84] ஒரு எலும்புருக்கி நோய் ஒழிப்பு அரசு மருத்துவ மனையும், ஹோலி கிராஸ் மருந்தகமும், மாவட்டத் தலைமை மருத்துவமனையும் இங்கு இயங்கி வருகின்றன. இம்மருத்துவ மனைகளைப் பற்றிய ஏனைய விவரங்கள் "மருத்துவம் மற்றும் பொது சுகாதாரப் பணிகள்" என்ற இயலில் விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

ஆயுதப்படை, தீயணைக்கும் படை ஆகியவை நாகர்கோவிலில் இயங்கி வருகின்றன. வடசேரியில் இரண்டு சுற்றுலாப் பயணிகள் விடுதி உள்ளன; அவை பொதுப்பணித்துறை தங்கும்விடுதி, வடசேரி மற்றும் ஸ்ரீ இராமவர்மபுரம் ஓய்வு விடுதி ஆகியவையாகும்.

நாகர்கோவில் அண்மை காலங்களில், பல நவீன கட்டிடங்கள் எழுப்பப்பெற்று, நகரின் / புறநகர்ப் பகுதி, குறிப்பாக வளர்ச்சி பெற்று வருகிறது. கோட்டார், வடசேரி, வடிவேஸ்வரம், கிருஷ்ணன் கோவில், இராமன்புதூர் மற்றும் ஒழுகினசேரி ஆகியவை நாகர்கோவில் நகரின் புறநகரப் பகுதிகளாகும். இந்திய அரசின் கட்டுப்பாட்டிலுள்ள இரப்பர் வாரியம், இரப்பர் தோட்டப்பண்ணைக்கான வனப்பாதுகாவலர், தமிழக அரசு நிறுவனமான அரசு இரப்பர் தோட்டப்பண்ணைக்கான வனப்பாதுகாவலர், தமிழக அரசு நிறுவனமான அரசு இரப்பர் கழகம் ஆகிய அலுவலகங்களும், நிறுவனங்களும்

இங்கு இயங்கி வருகின்றன. சுற்றுலாப்பயணிகள் மற்றும் உள்ளூர் மக்களின் தேவைகளைப் புகைவண்டி நிலையம் பூர்த்தி செய்கிறது. ஒரு ராமர் கோவிலின் சிறப்பு யாதெனில், கி.பி. 1784ஆம் ஆண்டு, இராசா இராம வர்மா காலத்தில் நடைமுறையிலிருந்த அஞ்சல் பெட்டி, இன்னமும் பயன்படுத்தப்பட்டு வருவதாகும். இந்தப் பெட்டி, இராச இராமவர்மாவின் முந்தைய அரண்மனையும், தற்போது நாகர்கோவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் இயங்கி வருவதுமான கட்டிடத்தின் முகப்பில் வைக்கப்பட்டுள்ளது. பதினெட்டாம் நூற்றாண்டின் துவக்கத்திலேயே, அஞ்சல் திட்டம் நடைமுறையிலிருந்தமைக்கு இதுவே சான்றாக விளங்குகிறது.

கோட்டார்

நாகர்கோவிலின் ஒரு பகுதியான கோட்டார் பழைய நகரமாகும். இது நாகர்கோவிலின் மிகப்பழைய பகுதியாகும். நகரின் இப்பகுதியானது, பழங்காலமுதற்கொண்டே, வணிகத்தில் வளமிக்க மையமாகத் திகழ்ந்தது. தாலமி (கி.பி.150), கோட்டார் நகரம், நல்ல தொழில் வளமிக்கத் தலைநகரமாக இருந்ததெனக் கூறுகிறார். ப்ளீனி இந்நகரத்தைக் "கோட்டாரா" என அழைக்கிறார். நகரின் இப்பகுதி, இன்றுகூட, தொழில், வாணிபம், ஆகியவற்றில், புகழ்பெற்ற மையமாகத் திகழ்கிறது.[85]

நெய்யூர் (கல்குளம் வட்டம் - இரணியல் வருவாய் கிராமத்தின் குக்கிராமம், மக்கள் தொகை - 27,693 (ஆண்கள் - 13,863 + பெண்கள் - 13,830)

நாகர்கோவிலிருந்து, 19 கிலோ மீட்டர் தொலைவிலும், திங்கள் சந்தையிலிருந்து மூன்று கிலோ மீட்டர் தொலைவிலும், அழகிய மண்டபம் - கொளச்சல் கிளை சாலையில் நெய்யூர் அமைந்துள்ளது. கே.கே. மருத்துவ சமயப்பரப்புக்குழு மருத்துவமனையினால், இவ்விடம் , புகழ் பெற்று விளங்குகிறது. இது "நெய்யூர் மருத்துவமனை" எனவும் அழைக்கப்படுகிறது. நவீன மருந்து வகைகளை கிராமப்புற ஏழை, எளிய மக்கள் விலைக்கு வாங்க இயலாத நிலையிலிருந்த போது, தென் திருவாங்கூர் மருத்துவ சமயப்பரப்புக்கு, 1838 ஆம் ஆண்டு, உருவாக்கிய நிறுவனங்களின் முயற்சியில் இது துவங்கியது.

அடிவயிறு மற்றும் இரப்பை, முடக்குவாதம், பிளாஸ்டிக் மற்றும் மகப்பேறு ஆகியவை தொடர்பான அறுவை மருத்துவமும், இம்மருத்துவமனையில், வல்லுனர்களால், மேற்கொள்ளப்படுகிறது. இங்குள்ள அறுவை மருத்துவ அரங்கம், மாநிலத்திலேயே நல்ல தரமுள்ள அறுவை மருத்துவக் கருவிகளைக்கொண்டுள்ள அரங்கங்களில் ஒன்றாகும். மனநோயாளிகளுக்கு நவீன முறைப்படியாக மருத்துவமளிக்கப்படுகிறது. இம்மருத்துவமனை, எம்.ப். ஆர். சி. எஸ். தேர்வுக்கு பயிற்சி மருத்துவர்கள், அவசர சிகிக்சை மருந்துவர்கள் மற்றும் அறுவைப் பதிவாளர்கள் ஆகியோருக்கு முறையான பயிற்சியளிக்கும், இங்கிலாந்து நாட்டு, அறுவை மருத்துவர்களின் ராயல் கல்லூரியினால் ஒப்புதலளிக்கப்பட்ட முதுநிலைப் பட்டதாரிகளின் மருத்துவ பயிற்சி மையமாகும். இங்கு ஒரு செவிலியர்

பயிற்சிப் பள்ளியும் செயல்படுகின்றது இங்கு ரோமன் கத்தேலிக்க கிறித்தவத் திருக்கோவிலும், தென்னிந்தியத் திருச்சபையைச் சார்ந்த திருக்கோவிலும் உள்ளன.

லட்சுமிபுரம் கலை மற்றும் விஞ்ஞானக் கல்லூரி, அரசின் பொறுப்பில், இங்கு, துவக்கப்பட்டுள்ளது. தனியார் நிறுவனங்களால், சில துவக்கப்பள்ளிகளும், அரசு பெண்கள் உயர்நிலைப்பள்ளி மற்றும் எல்.எம்.எஸ். பெண்கள் உயர்நிலைப்பள்ளி ஆகியவையும் இயக்கப் பெறுகின்றன[86]. இந்நிறுவனங்களில் பணியாற்றும் மாணவர்களின் எண்ணிக்கை கற்பிக்கப்படும் பொருட்கள் மற்றும் பிற விவரங்கள், "கல்வி" எனும் இயலில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

ஒலக்கயருவி (தோவாளை வட்டம் - அழகியபாண்டியபுரம் வருவாய் கிராமத்தின் குக்கிராமம், மக்கள் தொகை - 12,303 (ஆண்கள் - 6240 + பெண்கள் - 6063)

அழகிய பாண்டியபுரத்திலிருந்து வடக்கே 8 கிலோ மீட்டர் தொலைவிலும், நாகர்கோவிலிருந்து 14 கிலோ மீட்டர் தொலைவிலும் மேற்கு மலைத் தொடரில், ஒலக்கயருவி மலையருவி உள்ளது[87]. அழகான இம்மலையருவி மற்றும் இதனைச் சுற்றியுள்ள இயற்கை வளங்கள் பல சுற்றுலாப் பயணிகளைக் கவர்கிறது. இம்மலையருவிக்கருகாமையில் உள்ள வழிபாட்டுத்தலம், அகத்திய மாமுனிவர் தொடர்புள்ளதாகத் தெரிகிறது. ஒவ்வொரு ஆண்டும், சித்திரை மாத பௌர்ணமியன்று (ஏப்ரல்-மே), தெய்வ சிந்தனையுள்ள மக்கள் இங்கு அதிக அளவில் கூடி, மலையருவியில் நீராடிய பின், இவ்விடத்தில் வழிபடுகின்றனர்.

பத்மநாபபுரம், மக்கள் தொகை-18,246 (ஆண்கள்-9156 + பெண்கள்-9090)

உதயகிரி கோட்டையிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவில், திருவாங்கூரின் பழைய தலைநகரமான புகழ் வாய்ந்த பழைய பத்மநாபபுரம் கோட்டை உள்ளது. தலைநகரம். திருவிதாங்கோடிலிருந்து, பத்மநாபபுரத்துக்கு எப்போது மாற்றப்பட்டதென்பதற்கான விவரங்கள் ஏதுமில்லை. திருவாங்கூரின் மாமன்னரான மார்த்தாண்டவர்மர், பத்மநாபபுரத்தில் இவ்வரண்மனையில் வசித்து வந்த காலத்தில், பத்மநாபபுரத்திற்கு முக்கியத்துவம் ஏற்பட்டது. அரண்மனையில் மக்களைக் கவரக்கூடிய கோபுரமொன்றுள்ளது. இவ்விடத்திலிருந்து ஒரு பாதாளவழி கிளம்பி (அடிவழிப்பதை), கோட்டைச் சுவர்களின் அடியே சென்று சுற்றுப்புற நெல்வயலொன்றினை அடைகிறது. அயல் நாட்டு எதிரிகள் மற்றும் பண்ணை நிலக்குடியுரிமையாளர்கள் ஆகியோர் அடிக்கடி தாக்குதல் நடத்தும் போது, தப்பிக்கும் பாதையாக இது பயன்படுத்தப்பட்டது.

பத்மநாபபுரம் அரண்மனை, திருவாங்கூரில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களிலொன்றாகும். பல மன்னர்கள் இங்கு அரசோச்சி வந்தனர். பெருவிளைவுகளை உண்டாக்கிய பல நிகழ்ச்சிகள் இங்கு இடம் பெற்றன. அடிக்கடி கூறக்கூடிய வரலாற்றுச் சம்பவம் யாதெனில், இராசா மார்த்தாண்டவர்மா மீது, எட்டுவீட்டில் பிள்ளைமார்களும், அவர்களது இரு

தலைவர்களான பாப்புத்தம்பி மற்றும் இராமன் தம்பி ஆகியோரும் தாக்குதல் நடத்தியதேயாகும். இரு தம்பிமார்களும், காலஞ்சேன்ற மன்னரின் மகன்கள் ஆவர். இவர்களில் மூத்தவர், ஆட்சியைக் கைப்பற்ற பல முயற்சிகளை மேற்கொண்டார். திருச்சிராப்பள்ளி நவாபிடம் கூட, அவர் இது குறித்து முறையீடு செய்தார். மன்னர் மார்த்தாண்டவர்மா, மக்கள் மத்தியில், நல்ல செல்வாக்கினைப் பெற்று வந்ததைக் கண்டு ஆத்திரமுற்ற இரு தம்பிமார்களும் பிள்ளைமார்களும் மன்னரைக் கொல்ல சதி செய்தனர். அவர்களது சதியினை, அவர்கள் பிற சதிகாரர்களுக்கு அனுப்பியிருந்த ஓலை மூலம் அறிந்த மன்னர், அவர்கள் மன்னரைக் கொல்ல எத்தனித்த போது, இரண்டு தம்பிமார்களையும் கொன்று, ஏனையோரைக் கைது செய்தார். பின்னர், மன்னரைக்கொல்ல முயற்சி மேற்கொண்ட பிள்ளைமார்கள் மீது ஒரு குற்றவியல் விசாரணை நடத்தினார். விசாரணையின்போது, அவர்கள் தங்களது குற்றத்தினை ஒப்புக் கொண்டனர். எனவே, அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. பின்னர் அவர்களது வீடுகளும் சோதனைக்குள்ளாக்கப்பட்டு, அவர்களது உடைமைகள் கைப்பற்றப்பட்டன[88].

பத்மநாபபுரம் அரண்மனை[89]

தொன்மையான வரலாற்றுச் சிறப்பு மிக்க, நகரமாகிய பத்மநாபபுரம், மாவட்டத்திலுள்ள நான்கு நகராட்சிகளிலொன்றாகும். இது, திருவனந்தபுரம் - கன்னியாகுமரி சாலையில், திருவனந்தபுரத்திற்கு தெற்கே 55 கிலோ மீட்டர் தொலைவிலும், தக்கலைக்குக் கிழக்கே இரண்டு கிலோ மீட்டர் தொலைவிலும், கன்னியாகுமரியிலிருந்து 55 கிலோ மீட்டர் தொலைவிலும் அமைந்துள்ளது. இந்நகரம், 187 ஏக்கர் பரப்பளவில், ஒரு கோட்டையினால் சூழப்பட்டுள்ளது. திருவாங்கூரின் தொன்மையான இத்தலைநகர் கி.பி. 1601-க்கு முன்னர், நிர்மாணிக்கப்பட்டிருக்கக் கூடும். ஏழு ஏக்கர் பரப்பளவில் பத்மநாபபுரம் கோட்டைக்கு மையப்பகுதியில், குன்றுகள், பள்ளத்தாக்குகள் மற்றும் ஆறுகள் ஆகியவை சூழ, அரண்மனை அமைக்கப்பட்டிருக்கிறது. கி.பி. 1744-வரை, கோட்டையும், அரண்மனையும் முறையே கல்குளம் கொட்டை மற்றும் கல்குளம் கோட்டாரம் என அழைக்கப்பட்டன. கி.பி. 1744-ல், அரண்மனை ஸ்ரீ பத்மநாபசுவாமிக்கு அர்ப்பணிக்கப்பட்டதிலிருந்து, கோட்டையும் அரண்மனையும் முறையே பத்மநாபபுரம் கோட்டை மற்றும் அரண்மனை என அழைக்கப்படுகின்றன. கோட்டையின் கீழ்ப்புறம் வெள்ளிமலையுள்ளது. அது, அழகுமிகு சிற்பங்கள், அரிய காசுகள், சுவர்ச்சித்திர ஓவியத்தீட்டுகள், மற்றும் போருக்குப் பயன்படும் ஆயுதங்கள் ஆகியவை சேமித்து வைக்கப்பட்ட அரிய தொல்பொருள் ஆராய்ச்சி அருங்காட்சியகமாகும். கன்னியாகுமரி மாவட்டத்தில், இவ்வரண்மனை இருப்பினும், கேரள அரசு, தொல்பொருள் துறையைச் சார்ந்த ஒரு காப்பாட்சியர், இதற்குப் பொறுப்பு வகிக்கிறார். அரண்மனையின் கலையும், கட்டிடப்பாங்கும், கேரள மாநிலத் தோற்றத்திலும், சூழ்நிலையிலும் உள்ளது. மன்னர் இராமவர்மா

நாகராஜர் கோவில்



நாகராஜர் கோவில் – கர்ப்பக் கிரகம்

கார்த்திகைத்திருநாள் முந்தைய திருவாங்கூர் மாநிலத்தை, அரசாண்ட காலத்தின் பிற்பகுதிவரை, பத்மநாபபுரம், வேநாடு ஆட்சியாளர்களின் தலைநகரமாக இருந்துவந்தது.

மண்ணால் கட்டப்பட்ட கோட்டை, மகாராசா மார்த்தாண்ட வர்மா காலத்தில் இடிக்கப்பட்டு, கற்களால் கோட்டை திரும்ப கட்டப்பட்டது. நில அடிப்பரப்பின் வாட்டத்திற்கெப்ப, கோட்டையின் சுவர்களது உயரம் 15 அடியிலிருந்து, 24 அடிவரை மாறுபட்டன. ஒவ்வொரு பக்கமும் ஒன்று வீதம், முதன்மையான நான்கு நுழைவாயில்கள் நீங்கலாக, அவசரத் தேவைக்காக சில சிறிய நுழைவாயில்களும் இருந்தன. கோட்டையின் நான்கு மூலைகளிலும், நான்கு முதன்மையான அரண்கள் உள்ளன. இப்படையரண், முந்தைய பலமிக்க திருவாங்கூர் ஆட்சியாளர்களின் போர்த்திறஞ் சார்ந்த புகழுக்கும், அக்காலத்தில் கட்டிடங்களை அமைத்தோரின் தொழில் நுட்பத்திற்கும் சான்றாக விளங்குகிறது.

நுழைவு மன்றம்

பழைய கேரள இல்லத்தின் தனிச்சிறப்பான முகப்பில், தோட்டம், மத்தியில் புல்வெளி, சுற்றிலும் நடைபாதை ஆகிய வசதிகளை அரண்மனை தன்னகத்தே பெற்று, அழகுறக்காட்சியளிக்கிறது. முதன்மையான கட்டிடத்தின் முகப்பில், கண்கவர், வேலைப்பாடு களமைந்த நுழைவாயிலில் காவலுக்கும், பாதுகாப்பிற்கும் உகந்த காவலர்கள் உளர். தாமரை வடிவான அலங்கார வேலைப்பாடமைந்த மர உட்கூரையுடைய மஞ்சடைப்புச் சுவரினிடையேயுள்ள நுழைவாயில், ஒற்றைக் கல்லாலான கட்டில், முந்தைய திருவாங்கூர் மன்னர்களின் மரபு வரலாற்றுப் பட்டியல், முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகளில் நாட்டை ஆண்ட மன்னர்களுக்கு அழகாக வண்ணம் தீட்டப்பட்டு பரிசாக வழங்கப்பட்ட மர வில்கள் ஆகியவை, மன்றத்தில் அனைவரது கவனத்தையும் கவர்கின்றன. இக்கோட்டை முகப்பின் தனிச்சிறப்பு யாதெனில் கி.பி. 1832-ல் நிறுவப்பட்டு இன்றும் நல்ல நிலையில் இயங்கிவரும் கோபுர கடிகாரமாகும்.

பூ முகத்தின் முதல் தளத்தில் மந்திரசாலை என்ற மன்றம் உள்ளது. இது, அமைச்சர்களுடனும், முக்கியத்துவம் வாய்ந்த குடிமக்களுடனும் கருத்து பரிமாற்றம் செய்து கொள்ளும் இடமாகும். மன்னருக்கும், அவரது முதன்மை ஆலோசகர்களுக்கும் தனி இருக்கைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. உள்ளூர் பிரமுகர்களுக்கு, புராணச் சார்பான வரிசையில் இருக்கைகள் உள்ளன. நல்ல காற்று புகுவதற்காக பலகைகள் பொருத்தப்பட்டுள்ளன இது, மன்றத்தினுள், நிலையான தட்ப, வெட்ப நிலை நிறுவிட வழி வகுக்கிறது. காற்றுப்புகுப் பலகையின் மேற்பகுதி, வெளிப்புறமாக வளைந்தும், அதனின் இணைப்பு, அகற்புற அலைவளைவார்ந்த ஓரங்களையுடைய பலமான குமிழ் முகப்புக்கூரையின் குழிப் பகுதியை, கீழேயுள்ள வேலிபோன்ற சுவற்றுடன் பொருத்துகிறது. அழகு வேலைப்பாடுகளுடன் கூடிய தூண்கள் சுவற்றைத் தாங்குகின்றன. தேங்காய் ஓடுகளின் சாம்பல், கருப்பஞ்சாறு ஆகியவற்றின் கலவை மற்றும் சுண்ணாம்பு ஆகியவற்றுடன் முட்டைகளைக் கலந்து புளிப்பேறிய நிலையில் பொங்க வைத்து, அவற்றையும் கலந்து, தரையில்

தேய்த்து மெருகேற்றப்படுகிறது. இந்தத் தரை ஒருவரது உருவத்தைக் கண்ணாடி போன்று பிரதிபலிக்கிறது. மந்த்ர சாலையினை அடுத்து, நடன அரங்கம் உள்ளது. இது, அரசு குடும்பத்தைச் சேர்ந்தோரால் மட்டுமே பயன்படுத்தப்பட்டது.

ஆட்சிமுறைப் பேரவைக்கு அருகாமையில், நடன அரங்கத்திற்குத் தெற்கே, உணவறை உள்ளது. "ஊட்டிப்பூரா" என அழைக்கப்படும் இவ்வறை, தரை தளத்தையும், முதல் மாடி தளத்தையும் கொண்டது. இதன் நீள, அகலம், 78-க்கு 6 மீட்டர் என்ற அளவாகும். ஒரே நேரத்தில், இப்பெரிய அறையில் 2,000 மக்கள் உணவருந்த இயலும். மாநிலத்தை மன்னர் ஆண்ட காலத்தில் நாள் தோறும், 2000 ஏழை மக்களுக்கு உணவளிக்கப்பட்டது. எனவே, மன்னரை, "தர்மராஜா" என அனைவரும் அழைத்தனர். இவ்வறையின் கூரை, சீனா மற்றும் பிற நாடுகளிலுள்ள, வலிவான இணைப்புக் கூரை வடிவத்தில், ஒவ்வொரு ஆண்டும், வறட்சிக்குப்பின் கனமழை என மாறி மாறி நிகழக்கூடிய இயற்கையின் இடற்பாடுகளுக்கு ஈடு கொடுக்கக் கூடிய வகையில் அமைக்கப்பட்டுள்ளன.

"தாய்க்கொட்டாரம்" என அழைக்கப்படும் தாயார் அரண்மனை, அரண்மனையிலுள்ள கட்டிடங்களில் மிகவும் பழமையானதாகும். அழகாக செதுக்கப்பட்ட மரத்தூண்களையுடைய "ஏகாந்த மண்டபம்", மரத்தினால் செதுக்கப்பட்ட பல உரு மாதிரிகளால் அணி செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும், நவம்பர் - டிசம்பர் மாதங்களில், 41 நாட்கள் துர்க்கா பூஜை நடத்தப்படுகிறது. கட்டிடம் மரபார்ந்த, குறிப்பிடத்தக்க பாணியிலான, மத்தியில், "நடுமுற்றம்" என்ற திறந்த வெளியுடன் நாற்கோண வடிவத்தில் "நாலு கெட்டு" என அழைக்கப்படும் நான்கு வீடுகளாக அமைந்துள்ளது.

உப்பரிகை மாளிகை

அரண்மனையிலேயே மிகவும் மனதைக்கவர்ந்த கட்டிடம், மூன்று மாடிகளையுடைய "உப்பரிகை மாளிகையாகும்". "உப்பரிகை" என்பது குடும்பத்தின் மூத்த உறுப்பினரது இருப்பிடம் எனப் பொருள்படும். "முப்பிரிகை" என்பதன் சுருக்கமே, "உப்பரிகை" ஆகும். உயரமான மூன்றாவது தளத்தில், ஒரு கட்டில் பொருத்தப்பட்டுள்ளது. முதன்மையான இறைவன், "மகாவிஷ்ணு" ஒவ்வொரு நாளும் இதனில் ஒருக்கணித்து, சாய்வாகப் படுத்திருப்பதான நம்பிக்கை நிலவி வருகிறது.

முதல் தளத்தில், 64 மருந்து வகைச் செடிகளிலான மரக்கட்டில் உள்ளது. இதில்தான் மன்னர் உறங்கினார். இரண்டாவது தளத்தில், மற்றொரு இயல்பான கட்டில் உள்ளது. இதனையும், மன்னர், அவ்வப்போது பயன்படுத்தி வந்தார். நட்பின் அடையாளமாக, டச்சு கிழக்கிந்தியக் கம்பெனியால், கி.பி. 1750-ல் மருந்து வகைச் செடிகளாலான கட்டில் மன்னர் "மார்த்தாண்ட வர்ம"னுக்கு வழங்கப்பட்டது[90].

மூன்றாவது உயர் தளத்தில், மற்றொரு கவர்ச்சியுட்படுத்தும் தனிச்சிறப்பு யாதெனில், கி.பி. 17 மற்றும் 18ஆம் நூற்றாண்டுகளைச் சார்ந்த சுவரோவியங்களாகும். கி.பி. 17 மற்றும் 18ஆம் நூற்றாண்டுகளைச் சார்ந்த இவை "திருவாங்கூரின் அஜந்தா" என எல்லோராலும் புகழப்படுகின்றன. இது

மன்னரின் தொழுகையறையாக விளங்கியது. இச்சுவரோவியங்களின் சூழ்நிலை மற்றும் பிண்ணனி வண்ணம், ஆகியவற்றுடன் சமயப்பொதுக் கருத்து, மனித இன உணர்ச்சி வேகம் ஆகியவை ஊடுருவிப்படர்கின்றன. இந்த சுவரோவியங்களுக்கு பயன்படுத்தப்பட்ட கலவையின் கூறு, சில செடிகளின் இலைகளாகும். பதினெட்டாம் நூற்றாண்டைச் சார்ந்த இச்சுவரோவியங்கள், கலைச்சுவையுள்ளவை மற்றும் கேரள பாரம் பரியத்தைப் பிரதிபலிப்பவை.

அரண்மனையின் மற்றொரு அழகான கட்டிடம், மன்னர் மார்த்தாண்டவர்மனின் திவானான தளவாய் இராமையானால் கட்டப்பட்ட இந்திர விலாஸ் அரண்மனையாகும். மன்னர் இங்குதான் புகழ்பெற்ற மனிதர்களுடன் கருத்துப் பரிமாற்றம் செய்து வந்தார். மேலும், பல அயல் நாட்டுப் பார்வையாளர்களுக்கு விருந்தினர் விடுதியாகவும் இது பயன்படுத்தப்பட்டது.

வரலாற்றுச் சிறப்புமிக்க சுவரேவியங்களைக்கொண்ட "சித்ராலாயா" என்ற மன்றம் தான், அரண்மனையிலேயே மிக நீளமான கட்டிடமாகும். பல வண்ண (Oil Paintings) ஓவியங்கள் இம்மன்றத்தில் தொங்க விடப்பட்டுள்ளன. இதில் மிகவும் குறிப்பிடத்தக்க ஓவியம் புகழ்பெற்ற கொளச்சல் போரில், வெற்றி பெற்ற மன்னர் மார்த்தாண்ட வர்மனிடம் டச்சுக்காரர்களின் படைத் தளபதி டி'லானாய், சரணடைந்ததைக் குறிப்பதாகும்.

நவராத்திரி மண்டபம்

உப்பரிகை மண்டபத்திற்கு மேற்கே, நவராத்திரி மண்டபம் உள்ளது. அது, கீழ்நோக்கி சாய்ந்து தொங்குகிற விதத்தில், பழஞ்செய்திகளை நினைவூட்டுகிற நாயக்கர் காலத்து சிற்பவேலைப்படுகளின் பாணியில், அழகான கற்தூண்களையுடைய அகலமான மன்றமாகும். நமஸ்கார மண்டபம் என அழைக்கப்படும் தூண்களையுடைய வராந்தாவுடன் இணைக்கப்பட்ட சரஸ்வதி வழிப்பாட்டுத்தலத்தின் முகப்பில் இம்மண்டபம் உள்ளது. இக்கட்டிடம் முழுமையும் இந்துக் கடவுளர்களின் உருவங்களால் அழகாக அணிசெய்யப்படுள்ளது. நவராத்திரி மண்டபத்தில், நம் நாட்டுக் கைவினைஞர்களின் கைத்திறன், அரசவையில், நடத்தப்பட்ட பரத நாட்டியம் மற்றும் இசை நிகழ்ச்சிகள் குறித்து, வரையப்பட்டுள்ள ஓவியங்களினின்றும் பெரிதும் வெளிப்படுகின்றன. மண்டபத்தின் கிழக்கு மற்றும் தென்புறங்களில், அமைக்கப்பட்ட மரத்திலான தடுப்புகளுக்குப் பின்னாலிருந்து, அரசு குடும்பத்தைச் சார்ந்த பெண்கள், மண்டபத்தில் நடைபெற்ற நடன மற்றும் பிற நிகழ்ச்சிகளைக் கண்டு களித்தார்கள். இந்த தனி ஒதுக்கிடத்தினை மக்கள் அறியாதவாறு இது இடைத்தடுப்பு மூலம் மறைக்கப்பட்டுள்ளது[91].

அரசு தலைமைச் செயலகம், ஆவண அறைகள் மற்றும் அவற்றிற்கு சனுரா விலாசம் அரண்மனையிலும் அதனுடைய பக்க அறைகளிலும் மேற்கொள்ளப்பட்ட தனி ஏற்பாடுகள் ஆகியவை குறிப்பிடத்தக்க வையாகும். சுவர்களில் முறையாக செதுக்கிப் பொருத்தப்பட்ட மர மேசைகள், மற்றும் அவற்றில் வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஆவணங்கள்

ஆகியவை, அக்காலத்தில் எவ்வளவு ஒழுங்காக அலுவலகப்பணி நடந்து வந்தென்பதற்கு சான்று பகர்கின்றன. இவ்வரண்மனையிலிருந்து, மூன்று கிலோ மீட்டர் தொலைவிலுள்ள சாரோடு அரண்மனைக்கு ஒரு சுரங்கப்பாதை அமைக்கப்பட்டிருந்தது. ஆபத்து காலங்களில், மன்னரின் குடும்பத்தினர் இப்பாதையினைத் தப்பிக்கும் வழித்தடமாகப் பயன்படுத்துவதுண்டு. இந்த இரகசியப்பாதை வள்ளியூர் ஆற்றின் கீழே அமைக்கப்பட்டுள்ளது.

போர்க்காலங்களில் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள், கி.பி. 1741ஆம் ஆண்டு புகழ்பெற்ற கொளச்சல் போரில் தோல்வியைத் தழுவிய டச்சுப்படையிடமிருந்து கைப்பற்றப்பட்ட தற்கால ஆயுதங்கள் மற்றும் குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கப்பயன்படுத்தப்படும் கருவிகள் ஆகியவை, மிகவும் கவனமாக, படைக்கால மன்றத்திலுள்ள கண்ணாடி, மர இழுப்பறை மேசையில் சேமித்து வைக்கப்பட்டுள்ளன.

ஒரு காலத்தில் மிகவும் சுறுசுறுப்பான செயல்களுக்குப் பெயர் பெற்று விளங்கிய இந்த அரண்மனை, தற்போது ஆன்மீகத்தின் இருப்பிடமாகவும், அதே நேரத்தில் சமயக்கட்டுப்பாடற்ற கொள்கையினைப் பேணும் காப்பகமாகவும் திகழ்கிறது. இவ்வரண்மனையினைப் பார்வையிடுவோர், 17 மற்றும் 18ஆம் நூற்றாண்டின் முக்கியத்துவத்தை, நன்கு உணர முடிகிறது. இவ்வரண்மனை வேநாடு மன்னர்கள் காலத்து, நிகழ்ச்சிகளை நமக்கு நினைவூட்டுவதோடல்லாமல், அவர்களது, சமுக, சமய மற்றும் அரசியல் வரலாற்றினை நம்முன் நிறுத்துகிறது.[92] "இந்த அரண்மனை இந்திய நாட்டின் கல், மரம் ஆகியவற்றின் செயற்பாட்டிலேயே கலைத்திறன் மற்றும் சிற்பக்கலை வளம் ஆகியவை ஒருங்கே அமையப்பெற்ற களஞ்சியம் எனக் கூறினால் மிகையில்லை".

பாரக்குந்து (விளவங்கோடு வட்டம் - பாக்கோடு வருவாய் கிராமத்தின் குக்கிராமம்) மக்கள் தொகை-25,110 (ஆண்கள்-12,712 + பெண்கள்-12,398)

பாரக்குந்து, மருதங்கோடியிலிருந்து, மூன்று கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது. இங்கு, திராவிட சிற்பக்கலை பாணியில், தென்னிந்திய இந்து கோவில்களை பிரதிபலிக்கும் வகையில், ஒரு அழகான கத்தோலிக்க கிறித்தவ திருக்கோவில் கட்டப்பட்டுள்ளது.[93] வழிபாட்டுத்திருவனைக்குரிய இடத்திற்கு மேல் ஒரு ஸ்தூபி உள்ளது. உட்புறம், இந்து கோவில்களில் செதுக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ள கல்தூண்களைப் போன்று, கருங்கற்களாலான தூண்கள் உள்ளன. அவை, சலவைக் கற்களாலான ஜன்னல்களை உடையன. அவற்றிலுள்ள பின்னற் பூவேலைப் பாடுகளைக் கொண்ட சலவைக்கற்கள் அனைவராலும் போற்றப்படுகின்றன.

நெசவுத் தொழில் மற்றும் தையற்தொழில் ஆகியவை மேற்கொள்ள ஒரு தொழில் சார்ந்த பள்ளி, தனியார் துறையில் நடத்தப்படுகிறது. இப்பகுதியிலுள்ள கள் இறக்கும் தொழிலாளர்கள் நலனுக்காக, ஒரு பதநீர் கூட்டுறவுச் சங்கம் நிறுவப்பட்டுள்ளது. 1954ஆம் ஆண்டு, துவக்கப்பெற்ற, பாரக்குந்து பதனீர் கூட்டுறவு சங்கம், இனிப்புப் பனஞ்சாறு உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ளோரின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்த, உரிய

நடவடிக்கை, மேற்கொள்கிறது. கதர் மற்றும் கிராமக் கைத்தொழில் கழகம், பனஞ்சாறு காய்ச்சுவதற்கு தேவையான மேம்படுத்தப்பட்ட உலோகக் கொதிகலன்களை கூட்டுறவு சங்கத்திற்கு வழங்கி, உதவி புரிகிறது. பனஞ் சாற்றிலிருந்து, அதிக அளவில் தின்பண்டங்கள் செய்யவும், நீரில் கலந்த குடிவகைகள் செய்யவும், பண்பட்ட பனை சர்க்கரை உற்பத்தி செய்யவும், உரிய கருவிகள் சங்கத்தில் நிறுவப்பட்டுள்ளன. கூட்டுறவு அடிப்படையில் கருப்புக்கட்டியினை அதிக அளவில் சங்கம் விற்பனை செய்து வருகிறது.

பேச்சிப்பாறை அணை (கல்குளம் வட்டம் - கலியல் வருவாய் கிராமத்தின் குக்கிராமம்) மக்கள் தொகை - 17,109 (ஆண்கள்-8724 + பெண்கள்-8445)

நாகர்கோவிலிலிருந்து 43 கிலோ மீட்டர் தொலைவில், இவ்வணைகட்டப்பட்டுள்ளது. மன்னர் ஸ்ரீமூலம் திருநாள் அரசோச்சிய காலத்தில் கோதையாற்றின் குறுக்கே, இவ்வணை, எழுப்பப்பட்டது.[94] மதுரை மாவட்டத்திலுள்ள பெரியார் அணையின் பாங்கில் இவ்வணை அமைந்துள்ளது. அணையின் நீளம் 425.1 மீட்டர்களாகும். இது 204.8 சதுர கிலோ மீட்டர், நீர் வரும் பரப்பினைப் பெற்றுள்ளது. அணை கட்டப்பட்டுள்ள இடத்தில், பார்வையாளர்களுக்காக ஒரு முகாம் கூடம் உள்ளது. இங்கு வானிலை மிகவும் இனிமையாக உள்ளதால், அதிக அளவில் சுற்றுலாப் பயணிகளைக் கவர்கிறது.

இந்நீர்த்தேக்கம் அடர்த்தியான காடுகளால் சூழப்பட்டுள்ளது. இக்காடுகள் விலை மதிப்புள்ள மரங்களுக்கும், புலி, யானை, மான் போன்ற கொடிய மிருகங்களுக்கும் பெயர் பெற்றவை. பின்புறம் பெரிய மலை முகடுகளுடனுள்ள அடர்த்தியான காடுகள், கண்கொள்ளக் காட்சியாகும். நீர்த்தேக்கத்தில் பல்வேறு வகையான மீன்கள் உள்ளன. இங்கு சுற்றுலாப் பயணிகள் படகுகளில் செல்வதற்கு பொதுப்பணித்துறை உரிய ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

ஏரியைச் சுற்றியுள்ள அடர்த்தியான காடுகளில், "கணிக்கர்கள்" என அழைக்கப்படும் மலை வாழ் வகுப்பினர், வாழ்ந்து வருகின்றனர். அவர்களது வாழ்க்கை முறை, உடை, மொழி ஆகியவை இன்னமும், முற்பட்ட காலத்திய மற்றும் நாகரீக முதிர்ச்சியற்றதாகவே உளது. அவர்கள் குட்டையானவர்கள்; ஆனால், கட்டுறுதியுள்ளவர்களல்லர். கூடைகள் முடைதல், மீன் பிடித்தல் மற்றும் தேன் சேகரித்தல் ஆகியவை அவர்களது முக்கியத் தொழில்களாகும். முதிராப் பண்புடைய இம்மக்களின் மேம்பாட்டிற்காக, தமிழக அரசின் ஆதி திராவிடர் நலத்துறை, தனி முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. பேச்சிப் பாறையில், காணி வகுப்புக் குழந்தைகள் படிப்பதற்காக ஒரு உறைவிடப் பள்ளி நிறுவப்பட்டுள்ளது. அவர்களுக்கு கிராமப்புறத் தொழில்கள், நெசவுத் தொழில் மற்றும் தையற்கலை ஆகியவற்றில் பயிற்சியளிக்கப்படுகிறது. இவ்விடத்தில் தேனீ வளர்க்கும் மையமென்றும் நிறுவப்பட்டுள்ளது.

புதுக்கடை (விளவங்கோடு வட்டம்), மக்கள் தொகை - 9,440

முஞ்சிறை ஊராட்சி ஒன்றியப் பகுதியிலுள்ள சிறு கிராமமாகிய புதுக்கடை, மார்த்தாண்டம் - தேங்காப்பட்டிணம் சாலையில், மார்த்தாண்டத்திற்கு ஏழு கிலோ மீட்டர் தெற்கே உள்ளது. இது குன்னத்தூர்,

ஆறுதேசம் மற்றும் பயின்குளம் ஆகிய மூன்று கிராமங்கள் சந்திக்குமிடமாகும். புதுக்கடையில், பெண் துறவியர் மடத்தின் சமயப்பரப்பாளர்கள் பராமரித்து வரும் இரு ரோமன் கத்தோலிக்க திருக்கோவிலின் கட்டுப்பாட்டில் குழந்தைகள் அருங்காட்சியகமொன்று இயங்கி வருகிறது. அரும்பாடுபட்டு சேகரிக்கப்பட்ட அரிய அஞ்சல் தலைகள், நாணயங்கள், கடல் ஓடுகள், மெழுகினால் செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் காய்கறிகள் ஆகியவை அருங்காட்சியகத்தில் உள்ளன.

இப்பகுதி மக்களுக்காக தினச்சந்தை ஒன்றும் இயங்கிவருகிறது. இது ஒரு முக்கிய வாணிப மையமாகும். திருவாங்கூரின் முதல் திவானான, "இராசா கேசவதாஸ்" அருகிலிருந்தும், வெளியிடங்களிலிருந்தும், வணிகர்களை வரவழைத்து, புதுக்கடை வாணிபத்தை கோட்டார், ஆலப்புழையைப் போன்றே, மேம்படுத்தினார். தேங்காய் எண்ணெய் பிழிந்து எடுப்பதே இவ்விடத்தின் முதன்மையான தொழிலாகும். இங்கு கதர் மற்றும் கிராமக் கைத்தொழில் வாரியத்தால் ஒரு கூட்டுறவு சங்கம் நடத்தப்படுகிறது.

ஒரு காவல் நிலையத்துடன், ஒரு அஞ்சல் மற்றும் தந்தி அலுவலகமும் இங்கு இயங்கி வருகிறது. குழந்தைகள் பூங்காவுடன் கூடிய சில பொழுதுபோக்கு மையங்களும் இங்குள்ளன. இப்பகுதியிலுள்ள கால்நடைகளின் இனத்தினைப் பெருக்கிட, செயற்கைக்கருவுறும் மையமும் இயங்கி வருகிறது. வட்டார அளவில், கோழிப்பண்ணை வளர்ப்போர் சங்கம், செயற்கைக்கருவுறும் மையத்தினருகே அமைக்கப்பட்டு இயங்கி வருகிறது. தனியார் நிருவாகம் ஒன்று ஒரு உயர்நிலைப் பள்ளியினை நடத்தி வருகிறது.

சுசீந்திரம் மக்கள் தொகை 6649)[95]
(ஆண்கள் - 3,267 + பெண்கள் - 3,382)

சசீந்திரம், கன்னியாகுமரியிலிருந்து 12 கிலோமீட்டர் தொலைவிலும், நாகர்கோவிலிலிருந்து ஏழு கிலோ மீட்டர் தொலைவிலும் அமைந்துள்ள ஒரு சிறிய கிராமமாகும். வளமுள்ள நிலங்கள் மற்றும் தென்னஞ்சோலைகள் ஆகியவற்றிற்கருகாமையில், பழையார் ஆற்றின் கரைகளில், இப்புனித கிராமம் உள்ளது. இங்குள்ளதிருக்கோவில் அருள்மிகு தாணுமாலையாருக்கு நேர்ந்தளிக்கப்பட்டதாகும். "தான்" என்ற சொல் சிவபெருமானையும், "மால்" என்ற சொல் "திருமாலையும்", "அயர்" என்ற சொல் பிரம்மாவையும் குறிக்கிறது. அதாவது சிவன், விஷ்ணு மற்றும் பிரம்மா மூவரும் ஒரே உருவில் இங்கு உள்ளனர்.

"சுசீந்திரம்" என்பது, "இந்திரன் தூய்மைபெற்ற இடம்" எனப் பொருள்படும். அதாவது, இந்திரன், கௌதம மா முனிவரின் மனைவியான அகல்யை மீது மோகங்கொண்டு, முனிவரில்லாத நேரத்தில் அகல்யையைத் தீண்டியுள்ளார். ஞானதிருஷ்டியினால் இதையறிந்த மாமுனிவர், இந்திரனுக்கு ஒரு சாபம் கொடுத்தார். சாபத்தினின்றும் மீள, இந்திரன் (தற்போது சுசீந்திரம் என அழைக்கப்படும்) "ஞான ஆரண்ய"த்திற்கு வந்து, சிவபெருமானைத் தொழுதார். சிவபெருமான் இந்திரனுக்கு சாபவிமோசனத்தை அளித்து, இந்திரன் தூய்மை பெற்ற இத்தலத்திற்கு சுசீந்திரம் எனப் பெயரிட்டாரென தலபுராணம் கூறுகிறது.



அருள்மிகு ஸ்தாணுமாலைய மூர்த்தி

ஆஞ்சநேயர்

கணேசினி, சுசீந்தரம்

இது தொடர்பாக, மற்றொரு கதையும் கூறப்படுகிறது. மும்மூர்த்திகளான, பிரம்மா, விஷ்ணு, சிவன், ஆகியோர், அவர்களது பக்தையான அத்ரி மாமுனிவரின் மனைவி அனுசூயையின் பக்தியை சோதிப்பதற்காக பூ உலகத்திற்கு வந்து அனுசூயையின் கற்பினை சோதிக்க விரும்பினார். ஆனால், அனுசூயையுடைய கற்பின் மகிமையினால், கடவுளர், பேரிடர்பாட்டினை சந்திக்க நேர்ந்தது. அவர்கள் தங்களது புகழினை மீண்டும் பெற, தூய்மைப்படுத்தப் பெறும் சோதனையினை மேற்கொண்டார்கள்.

தாணுமாலய திருக்கோவில் ஒன்றுதான், இந்தியாவிலேயே மும்மூர்த்திகளுக்காக நேர்ந்தளிக்கப்பட்ட திருக்கோவிலாகும். இக்கோவிலை, பல்வேறு தரப்பினர், பல நூற்றாண்டுகள் பாடுபட்டுக் கட்டியதாகும். அழகான வேலைப் பாடுகள் யாவும் ஒருங்கே அமையப்பெற்ற மொத்த உருதான் இது என்றால், மிகையல்ல. இது திராவிட பாணியில் அமைந்த கலைத்திறன் மற்றும் சிற்பக்கலை ஆகியவற்றின் சேமிப்புக் கூடமாகும்.

முதல் நுழைவாயில்

நுழைவாயிலில், இரண்டு யாளி சிற்பங்கள் உள்ளன. அவற்றின் அருகாமையில், இரண்டு சிற்பங்கள் ஒன்றையொன்று பார்ப்பது அமைக்கப்பட்டுள்ளன. இச்சிற்பங்களில் கண்ட இரு உருவங்களும் ஸ்ரீபலிபுரம் கட்டுவதற்கான நிதி சேகரிப்பதில் பெரும்பங்கு ஆற்றியதாக நம்பப்படுகிறது. அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் மக்கள் இவற்றை நிறுவியதாகக் கூறப்படுகிறது.

கோபுரம்

கி.பி. 1545ஆம் ஆண்டு, விஜயநகரப் படைப்பெருந்தலைவரான, விட்டல் மகாராஜாவும், அவரது சகோதரரும், கோபுரத்தைக் கட்டியதாகத் தெரிகிறது. அதை, மின்னல் தாக்கியதால் கோபுரத்தைப் புதுப்பிக்கும் பணி, 1880ஆம் ஆண்டு துவக்கப்பட்டு, 1888 ஆம் ஆண்டு நிறைவுற்றது. கீழ் தளத்திலிருந்து, உயரத்திலுள்ள கலசம் வரை, கோபுரத்தினுடைய உயரம், 134'.6" ஆகும். (ஏறத்தாழ 90' நீளம், 60' அகலமாகும்). அதனுடைய தகவுப் பொருத்தங்கள், அளவொத்த முறையில் அமைக்கப்பெற்று, அதனுடைய வெளிப்புறத்தில், பல்வேறு புராணக்கதைகளை விளக்கும் வகையில், சித்திர வேலைப்பாடுகள் அமைக்கப்பெற்றுள்ளன.

அது ஒரு ஏழு அடுக்கு கோபுரமாகும். ஒவ்வொரு அடுக்கின் உட்புறமும், இராமாயணத்திலிருந்தும், தலபுராணத்திலிருந்தும், சுவர்ச்சித்திரங்கள் வரையப்பட்டுள்ளன. கோபுரத்தின் உச்சியினின்றும் காணும் காட்சி சுற்றுப்புற இடங்களின் அழகான இயற்கையமைப்பினை வெளிக்கொணரும் தனித்தன்மை வாய்ந்ததாகும்.

நாடகசாலை

கி.பி. 1797 முதல் 1819 வரை, தேவதாசிகளின் நன்கொடையை வைத்து கட்டப்பட்டதாகக் கூறப்படும், "நாடகசாலை", மிக நேர்த்தியான விதான மண்டபமாகும். தரை மட்டத்திலிருந்து, 24 அடி உயரத்தில் கட்டப் பட்ட இம்மண்டபம், 124 அடி நீளமும், 32 அடி அகலமும் கொண்டதாகும்.

பண்டை காலத்தில், தேவதாசிகளால் இங்கு நடன, நாடக நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

நாடகசாலையின் உட்கூரையில் பல்வேறு வகைப்பட்ட மலர்கள், கற்களில் மிக நேர்த்தியாக செதுக்கப்பட்டுள்ளன. கதவின் அருகில் சரஸ்வதி, லெட்சுமி, பார்வதி ஆகியோரின் உருவங்கள், அவர்கள் தங்களது கணவர்களை அடைய தவமிருக்கும் கோலத்தில் செதுக்கப்பட்டுள்ளன. படிக்கட்டுகளின் அருகாமையில் அமைக்கப்பட்டுள்ள நந்திகேஸ்வரர், சாஸ்தா, நடராஜர் மற்றும் காளி ஆகியோரது உருவங்கள் அற்புதமான கலையம்சம் பொருந்தியவையாகும்.

ஊஞ்சல் மண்டபம்

இதனின் உட்கூரை 24 அடி உயரம் கொண்டதாகும். ஒட்டப்பட்ட மேல் தளத்திலிருந்து 2½ அடி உயரத்தில், எழுப்பப்பட்ட' இந்த "ஊஞ்சல் மண்டபம்", 30'6" நீளம் மற்றும் 28'4" அகலமுள்ள நீண்ட, சதுர வடிவிலான விதான மண்டபமாகும். நான்கு மூலைகளிலுமுள்ள தூண்களில் மன்மதன், ரதி, அர்ச்சுனன் மற்றும் கண்ணன் ஆகியோரது அழகான சிற்பங்கள் செதுக்கப் பட்டுள்ளன. இச்சிற்பங்கள் நேர்த்தியான கலைச்சுவையுடன், மிக அழகாக அமைக்கப்பட்டுள்ளன. 12'க்கு 8½ என்ற அளவில், ஒரு உயர்ந்த மேடை, திருக்கல்யாண விழாவிற்காக, மையப் பகுதியில், அமைக்கப்பட்டுள்ளது.

கிழக்கு ஸ்ரீபலிபுரத்தின் நுழைவாயிலுக்கருகில் வலப்புறத்தில், சுஹாசத்தில், தட்சிணாமூர்த்தியின் தனிச்சிறப்பு வழிபாட்டிடம் உள்ளது. பின்னர் நாம், கிழக்கு ஸ்ரீபலிபுரத்தில் நுழைகிறோம்.

வசந்த மண்டபம்

கி.பி. 17ஆம் நூற்றாண்டில், பரக்கை, மாட்டுக்குட்டி மலையம்மா என்பவரால், புதிய "வசந்த மண்டபம்" நிறுவப்பட்டது. அது, 24' நீளத்திலும், 21'.9" அகலத்திலும், மிக நேர்த்தியாகக் கட்டப்பட்ட விதான மண்டபமாகும். அது இன்றும், அக்காலக் கலைத்திறனுக்குச் சாட்சியமாகத் திகழ்கிறது. அதன் மையப்பகுதியில் 19' உயரத்திலும், 16½' அகலத்திலும் 3½' உயரத்திலும் ஒரு உயரமான மேடை உள்ளது. பங்குனி உத்திரத்திலிருந்து, சித்திரை உத்சவம் துவங்கப்பெறும் வரை, சுசீந்திரப் பெருமாள் இளங்காற்றை அனுபவிக்கும் பொருட்டு, இம்மேடையில் வைக்கப்படுகிறார். அடித்தளத்தைச் சுற்றியுள்ள குழிவுநடைபாதை, குளிர்ச்சியாக இருக்கும் வகையில், தூய குளிர்நீரினால் நிரப்பப்படுகிறது.

விதான மண்டபத்தின் உட்கூரையினை, மிக நேர்த்தியான கலைத்திறன் கொண்ட சிற்பம் அலங்கரிக்கிறது. சதுரமான இடைவெளி; இறை வாரக்கை மரம் போன்ற தோற்றமளிக்கக்கூடிய, சிறிய உத்தரங்களால் ஒன்பது சிறிய சதுரங்களாகப் பிரிக்கப்படுகிறது. மற்ற கோவில்களின் உட்கூரையிலுள்ளதைப் போலல்லாது, மிகச் சிறப்பாகச் செதுக்கப்பட்ட, நவக்கிரகங்களின் உருவங்களை அளிக்கின்றன. நான்கு தூண்களின் மேல், தெய்வங்களின் அழகான சிற்பங்கள் உள்ளன.

நீலகண்ட விநாயகர்

வசந்த மண்டபத்தின் மேற்கே, கல்லில் செதுக்கப்பட்ட ஒரு பெரிய "கணபதி" சிற்பம், காணப்படுகிறது. இக்கோவில் கி.பி. 1587-ல், கோவிலின் யோகக்காரர்களிலொருவரான புருஷோத்தம நீலகண்டரால், நிறுவப்பட்ட தெனவும், எனவே, இங்குள்ள விநாயகர், "நீலகண்ட விநாயகர்" என அழைக்கப்படுகிறாரெனவும் கூறப்படுகிறது. பத்துக்கைகளுடன், ஆறு அடி உயரத்தில் அமர்ந்த நிலையிலுள்ள இத்தெய்வத்தின் தோற்ற அளவு, "மகா கணபதி" எனவும், "முக்குருணிப் பிள்ளையார்" எனவும் இத்தெய்வம் அழைக்கப்படுவதை நியாயப்படுத்துகிறது. மிகத்தொலைவிலுள்ள இடதுகை, இறைவனின் மடியில் அமர்ந்துள்ள "சக்தி தேவி"யை அணைத்துக் கொள்வது போன்று தெய்வத்தின் சிலை உரு அமைக்கப்பட்டுள்ளது.

மடப்பள்ளி மற்றும் ஊட்டிப்புரம்

"மடப்பள்ளி" என்பது 'சமையலறை' யாகும். "ஊட்டிப்புரம்" என்பது, "உணவருந்துமிடத்தைக் குறிக்கும். சமையலறை, தென்கிழக்கு மூலையில், 82 அடி நீளமும், 18½ அடி அகலமும் கொண்டதாக, அமைந்துள்ளது. பெருந்திருவிழாக்காலங்களில், ஸ்ரீபலிபுரத்தின் தென்மேற்குப்புறத்தில், இலவசமாக உணவளிக்கப்பட்டது. இவ்வுணவுக்கூடத்தில், ஆண்டு முழுவதும், ஒருநாளைக்கிருமுறை இலவச உணவளிக்கப்பட்டது. பண்டைக் கால சோழ மன்னர்களின் புகழ்பெற்ற மரபு வழிப்படி, கி.பி. 1772 ஆம் ஆண்டு, "ஊட்டிப்புரம்" நிறுவப்பட்டதெனக் கூறப்படுகிறது.

ஸ்ரீபலிபுரம்

தென்புறமுள்ள ஸ்ரீபலிபுரத்தில், கீழ்புற ஸ்ரீபலிபுரத்தில் உள்ளவற்றை விட, மிக நேர்த்தியான வேலைப்பாடமைந்த தூண்களையுடைய கவர்ச்சி மிகுந்த அறை உள்ளது. கீழ்புற ஸ்ரீபலிபுரம் தவிர, மற்ற மூன்று புறங்களும் கி.பி. 1795 ஆம் ஆண்டு, கார்த்திகைத் திருநாள் மகாராஜாவினால் கட்டப்பட்டவையாகும். இவை கட்டப்படுவதற்கு முன், இங்கு ஒரு சிறிய ஸ்ரீபலிபுரம் இருந்தது. புதிதாகக் கட்டப்பட்ட ஸ்ரீபலிபுரத்தின் தென் நடை கூடம், 303'6" நீளமும், 26'9" அகலமும் மற்றும் 21' உயரமும் கொண்டதாகும். ஸ்ரீ பலிபுரத்தின் இரு புறங்களிலும், நேர்த்தியான சிற்ப வேலைப்பாடுகளமைந்த மிகப்பெரிய தூண்கள் வரிசையாக உள்ளன. தென் ஸ்ரீ பலிபுரத்தில், சிறிய பலகணிகளுடன் கூடிய, மரத்தினாலான தொங்கு அறைகள் கட்டப்பட்டுள்ளன. தேவதாசிகளின் நடன நிகழ்ச்சிகளையும், எழை, எளியோருக்கு விருந்தளிக்கப்படுவதையும் மன்னர் குடும்பத்தைச் சார்ந்தோர், இந்த தொங்கு அறையிலிருந்து தான் கண்டுகளித்தனர்.

நீலகண்ட விநாயகர் கோவிலுக்கு மேற்கே கண்கால நாதரை வழிபடும் இடம் உள்ளது. இங்கு கண்கால நாதனாகிய, சிவபெருமான் பிச்சை (பிக்ஷை) பெறும் உருவில் பிக்ஷாதனமூர்த்தி என்ற பெயரில் காட்சியளிக்கிறார். இவ்வெண்கல உருவச்சிலை, சோழர் காலத்தைச் சார்ந்தவையாக இருக்கலாமென கருதப்படுகிறது.

கண்காலநாதர் கோவிலுக்கு மேற்கே ஒரு சில மீட்டர் தொலைவில் ஒரு பெரிய பாறை உள்ளது. இங்கு, பல்வேறு கல்வெட்டுக்கள் தமிழ், மொழியிலும், பிரிதொரு மொழியிலும் காணப்படுகின்றன. ஒருசில படிகள் ஏறிய பின்னர், நாம் கோவிலை அடைகிறோம். இக்கோவிலின் தனிச்சிறப்பியல்பு யாதெனில், அது மேற்கு முகமாக உள்ளது. அதனெதிரே சிவபெருமான் மற்றும் நந்திகேஸ்வரர் ஆகியோரின் உருவச்சிலைகள் உள்ளன. லிங்கமும், பீடமும் பிரிக்க இயலாத அளவில் செதுக்கப்பட்டுள்ளன. கோவிலின் முன்புறம் நீளத்தொடராக அமைந்துள்ள கருவறை, முக மண்டபம் மற்றும் புகுமுக மண்டபம் ஆகியவற்றின் நேர்த்தியான கட்டுமானப் பாணி அவை கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் கட்டப்பட்டதெனத் தெரிகிறது.

தென் ஸ்ரீபலிபுரத்தின் மேல்கோடிப் பகுதியில், சாஸ்தாவை (ஐயப்ப சுவாமி) வழிபடும் இடமுள்ளது. இங்கு மூன்றடி உயரமுள்ள சாஸ்தாவின் உருவச் சிலை வழிபாட்டிற்காக வைக்கப்பட்டுள்ளது. தற்போது, அதற்குத் தெற்கே, விநாயகரை வழிபடும் இடமும் அமைக்கப்பட்டுள்ளது.

மேற்கு நடைக்கூடத்திற்கு வடக்குக்கோடியில், "இராமசுவாமி கோவில்" உள்ளது. அங்கு 1 அடி 3 அங்குல உயரத்தில், "சிகாஸன" நிலையில், 'இராமர்' மற்றும் 'சீதை' ஆகியோரின் கவர்ச்சியான உருவச் சிலைகள் உள்ளன. நுழைவாயிலின் தெற்கே, "இலக்குமண"னுடைய சிலையையும், வடக்கே, கை கூப்பி அஞ்சலி செலுத்திய வண்ணம் "அனுமானு"டைய சிலையையும் காணலாம். மேற்கு நடைக்கூடத்தின் நீள அகலம் 227 அடி மற்றும் 76 அடியாகும். இது தென் ஸ்ரீபலிபுரத்தை விட சிறியதாகும்.

'சுப்பிரமணியசுவாமி' கோவிலின் வழிபாட்டு இடம், கி.பி. 1238-ல் கட்டப்பட்டது. புகுமுக மண்டபம் நன்றாக செதுக்கப்பட்டு, அமைக்கப்பட்டுள்ளது. நடனமாடும் நிலையிலுள்ள துவாரபாலகர்களை தெளிவாக செதுக்கி உருவாக்கப்பட்டுள்ளனர். அவர்களது தலை அலங்காரம், போர்க்கவசம், மற்றும் ஆடையணிமணிகள் ஆகியவை, நன்கு செதுக்கப்பட்டுள்ளன. இச்சிற்பங்கள் பேய்கள் போல் உக்கிரமான தோற்றமளிக்கின்றன.

3½ அடி உயரமுள்ள "சுப்ரமணியரின்" உருவம், சமபாத ஸ்தானக நிலையிலுள்ளது. சுப்ரமணியரின் இருபுறமும், மூன்று அடி உயரத்தில். "வள்ளி", "தேவசேனா" ஆகிய இருவரும் உள்ளனர். கதவிற்கருகாமையில், நுழைவாயிலின் இரு புறமும், விளக்கேற்றும் பெண்மணிகளிருவரைக் காணலாம். இவ்விரு உருவங்களும் புகுமுக மண்படத்தினைக்கட்ட ஏற்பாடுகள் செய்த, 'சீதம்மா' மற்றும் அவரது தாயார் "மாலிக்குட்டி" ஆகியோரைக் குறிப்பதாக புராணக்கதை கூறுகிறது. புகுமுக மண்படத்தின் மேல்கோடியில், பத்மாசன நிலையில், ஒரு சிலை செதுக்கப்பட்டுள்ளது. அச்சிலையினை சரிவர அடையாளம் கண்டு கொள்ள, வலது உள்ளங்கையில் ஒரு ஆணி அடிக்கப்பட்டது போன்று சில வடிவமைக்கப்பட்டுள்ளது. திருவாங்கூரை பாலமார்த்தாண்டவர்மா

அரசாண்ட காலத்தில் (கி.பி. 1798 - 1810) சுசீந்திரம் திருக்கோவில் கருவூலப் பணியாளர் ஒருவர், கணக்குகளைக் கள்ளத்தனமாக எழுதியதை வேலுத்தம்பி தளவாய் கண்டுபிடித்து, அவருக்கு கடுமையான தண்டனையை வழங்கினார். மற்றப்பணியாளர் களுக்கு ஒரு படிப்பினையாக, குற்றவாளியின் உள்ளங்கையில் ஒரு ஊசியினை ஏற்றினார்.

சுப்ரமணியசுவாமி சன்னிதி கோபுரத்திற்கருகாமையில், "மஹாதேவர்" "நாராயணர்" "இராமேசுவரர்" "கிருஷ்ணர்" "ஸ்ரீசக்ரர்" மற்றும் "துர்க்கை" ஆகியோருக்கு நேர்ந்தளிக்கப்பட்ட ஜயந்தீஸ்வரர் கோயில் உள்ளது. பாண்டவர்கள் வனவாசம் சென்றபோது, ஞானாரண்யத்திற்கு வருகை தந்து, ஜயந்தீஸ்வரர் கோவிலிலுள்ள தெய்வங்களை வணங்கிச் சென்றதால், இது பஞ்ச பாண்டவர் கோவில் எனவும் அழைக்கப்படுகிறது. இத்திருக்கோவில் கி.பி. 1593-ல் எழுப்பப்பட்டது.

வடக்கு ஸ்ரீபலிபுரத்தின் நடுவில், காலபைரவரின் கோவில் உள்ளது. 3½ அடி உயரமுள்ள தெற்குமுகம் பார்த்த இந்த தெய்வம், இக்கோவிலைப் பாதுகாக்கும் தெய்வங்களிலொன்றாகும்.

காலபைரவரின் தென்புறம், இசைத்தூண்களென அழைக்கப்படும் நான்கு அழகான தூண்கள் உள்ளன. இரண்டு வடபுறமும், இரண்டு தென்புறமுமாக, நான்கு தொகுதிகளாக இவை எழுப்பப்பட்டுள்ளன. அவை, இணையொத்த வரிசையிலுள்ளன. வடபுறமுள்ள இரண்டு தொகுதிகளில், 24 தூண்கள் வீதமும், தென்புறமுள்ள இரண்டு தொகுதிகளில் 33 தூண்கள் வீதமும் உள்ளன. அனைத்துத் தூண்களும், ஒரே கருங்கல்லில் மிக நேர்த்தியாக செதுக்கப்பட்டு, அரிய கலை வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்டுள்ளன. கைவினைஞர்களின் திறனுக்கு அது ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். இத்தூண்களை மெதுவாகத் தட்டினால், இசை வெளிப்படுவது கண்கூடு. கி.பி. 1798 ஆம் ஆண்டு, இவை எழுப்பப்பட்டன.

வடக்கு ஸ்ரீபலிபுரம் மற்றும் வீரபாண்டிய மணி மண்டபம் இரண்டிற்குமிடையே நீண்டு அமைந்துள்ள மேடை, "குலசேகர மண்டபம்" என அழைக்கப்படுகிறது. தென்புறமுள்ள இரண்டு தொகுதி இசை எழுப்பும் தூண்கள், குலசேகர மண்டபத்தின் வடபகுதியிலுள்ளன.

இசையெழுப்பும் தூண்களின் கீழ்ப்பகுதியிலுள்ள மேற்கு வரிசை, "அலங்கார மண்டபம்" என அழைக்கப்படுகிறது. 37' 3" அகலமுள்ள "அலங்கார மண்டபம்", ஸ்ரீபாலிபுரத்தைவிட அகலமானது. சில வாகனங்கள் இங்கு அணி செய்கின்றன.

ஆஞ்சநேயர்

இராமாயணத்தில் விவரித்துள்ளது போன்று, இலங்கையிலுள்ள அசோக வனத்தில், சீதாப்பிராட்டியாருக்கு "விசுவரூப தரிசனம்" அளித்த உருவில், "ஆஞ்சநேயரின்" சிலை, வடக்கு நடைக்கூடத்தின், கிழக்குக்கோடியில் அமைந்துள்ளது. 18' 4" உயரமுள்ள இவ்வுருவம், பளபளப்பான கல்லில் மிக நேர்த்தியாக செதுக்கப்பட்டுள்ளது. மிகச் சிறந்த சிற்ப வேலைப்பாடுகளமைந்த இச்சிலை இந்தியாவிலுள்ள அனுமன்

சிலைகளிலேயே மிகப் பெரியதாகும். மேற்குக் கோடியிலுள்ள இராமசுவாமி திருக்கோவிலை நோக்கி, குவிந்த கைகளுடன் நின்று கொண்டு, காட்சியளிக்கிறார்.

சித்ர சபை

அனுமார் சிலையின் வலது புறம், கிழக்கு ஸ்ரீபலிபுரம் உள்ளது. அதனுடைய வடபுறத்தில், சித்திர சபைக் கட்டிடம் உள்ளது. 43' 6" நீளமும், 12'6" அகலமுள்ள சித்திர சபை தென்புறம் நோக்கி அமைந்துள்ளது. சபையின் நுழைவாயில் மற்றும், இதர பகுதிகள் ஆகியவற்றின், நாற்புறங்களிலும் அழகாக செதுக்கப்பட்ட ஒரே கல்லிலாலான சிற்பங்கள் அணி செய்கின்றன. அங்கு, பல்வேறு அளவுகளிலான, பல நிலைகளிலுள்ள பலதரப்பட்ட சிற்பங்களைக் காணலாம்.

சித்திர சபையின் கீழ்புறமுள்ள நீதிமன்றம், தேவேந்திர விநாயகர் கோவிலைத் தனித்துக் காட்டுகிறது. மும்மூர்த்திகள் தனக்கு தண்டனை விதித்தபடி தேவேந்திரன் கொதிக்கும் நெய்யில் மூழ்கி, தண்டனையை நிறைவேற்றுமுன், இக்கணபதியை வணங்கினாரென நம்பப்படுகிறது. உட்கார்ந்திருக்கும் நிலையிலுள்ள இச்சிலை, 1½ அடி உயரமுள்ளது.

கிழக்கு ஸ்ரீபலிபுரத்தின் கீழ்புறத்தில், மாகாளை (நந்தி) வாகனபுரத்தையும், கொன்னை ஆதிநாதர் மற்றும் கருடாழ்வார் ஆகியோரின் கோவில்களையும் காணமுடிகிறது. இந்தியாவிலேயே மிகவும் பெரிதானவற்றுள் இரண்டாவதான இந்த நந்தி, தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் திருக்கோவிலுள்ள நந்தியைவிடப் பெரியதாகும். இது 21 அடி நீளமும், 12' 8" உயரமும், 9' 6" அகலமும் கொண்டதாகும்.

முதன்மையான திருக்கோவிலை நோக்கியும், நந்திக்குத் தெற்கிலும், வழிபாட்டிற்குரிய முதன்மையான சிலையாகிய, கொன்னை ஆதி நாதரின் உருவச் சிலை அமைந்துள்ளது. கொன்னை மரத்தின் உச்சியிலுள்ள குழிவான பகுதியில், ஒன்றின் மீதொன்றாக மேலெழும்பியவாறு மூன்று லிங்கங்கள் அமைந்துள்ளன. அபிசேகம் நடக்கும்போது இவை மிகத் தெளிவாகத் தெரியுமளவில் அமைக்கப்பட்டுள்ளன. இதற்குத் தெற்கே, கருடாழ்வார் கோவில் உள்ளது. அங்கு தெக்காடம் பெருமாளை நோக்கி, நின்றுகொண்டு தனது கைகளை அஞ்சலியாகக் கூப்பியவண்ணம், கருடாழ்வாரின் சிலை வடிவமைக்கப்பட்டு, நிறுவப்பட்டுள்ளது.

கலையம்சம் பொருந்திய மற்றொரு அழகான மண்டபம், விதான மண்டபமாகும். இது 110' நீளம், 85' 3" அகலம் மற்றும் 32' உயரம் கொண்டதாகும். கலைத்திறனோடு கூடிய அழகான பெரிய தூண்கள் இரண்டு வரிசைகளில் மண்டபத்தை அலங்கரிக்கின்றன. கொன்னை ஆதி நாதர் மற்றும் கருடாழ்வார் ஆகியோர் சன்னிதிக்கு முன்னே, கிழக்கு ஸ்ரீபலிபுரத்தின் மேல்புறமுள்ள புகுமுக மண்டபம் உள்ளது. இது, த்வஜஸ்தம்ப மண்டபம் எனவும் அழைக்கப்படுகிறது. மேற்கே, அது, செண்பகவல்மன் மண்டபத்துடன் சேர்கிறது. வடக்கு நுழைவாயிலில், இரு துவாரபாலகர்களுக்குமிடையே, செண்பகராமன் மண்டபத்தைவிட ஒரு அடி

தாழ்வாக, நான்கடி உயரத்தில் ஒரு சிறிய நீதி மன்றம் உள்ளது. இங்கு பல நூற்றாண்டு காலமாக, மிகக் கடுமையான தண்டனையாகிய "கைமுக்கு" நடத்தப்படுகிறது. ஐயப்பாட்டிற்கிடங்கொடுக்கும் குற்றவாளி நிரபராதியா என சோதித்திட, அவரது கை கொதிக்கும் நெய்யில் அமிழ்த்தப்பட்டது. கையில் புண்கள் ஏற்படாவிடில், அவர் குற்றமற்றவர் என உறுதி செய்யப்பட்டது.

செண்பகராம மண்டபத்தின் மேல்புறத்தில், கி.பி. 1334 ஆம் ஆண்டு, கட்டப்பட்டுள்ள வீரபாண்டிய மணி மண்டபம் உள்ளது. இது 89' நீளம், 5'3" அகலமுள்ள நீண்ட சதுரமான மன்றமாகும், வீரபாண்டிய மணி மண்டபத்திலிருந்து, கோவிலின் வடக்கெடம் என்ற பகுதியில் நாம் நுழைகிறோம். அதற்கு வடக்கே, உதய மார்த்தாண்ட வர்மா பெயரில் . கலசபுர உதய மார்த்தாண்ட மண்டபம் உள்ளது. இந்த மண்டபத்தின் மேற்கு நுழைவாயில் வழியாக, மையப் பகுதியிலுள்ள ரிஷப மண்டபத்தில் நாம் நுழைகிறோம். அங்கு கருவறையிலுள்ள இறைவனை நோக்கி நந்தி அமைந்துள்ளது.

கருவறை

நந்தியின் மேற்கே, ஒரு சிறிய பாதை உள்ளது. நடைக் கூடத்தின் முடிவில், நாம் "ஸ்தாணுமாலய மூர்த்தி"யினைக் காணலாம், கருவறையில், 2½ அடி உயரமுள்ள சிவலிங்கம் உள்ளது. கருவறையை வலப்புறமாகச் சுற்றி வந்தால், மேல்புறமாகச் செல்லக்கூடிய ஒரு பாதையினை நாம் அடைகிறோம். அங்கு "துர்க்கை", "கணபதி" மற்றும் "சங்கரநாராயணர்" ஆகியோரது திருக்கோவில்கள் உள்ளன. கருவறைக்கு முன்புள்ள ஒரு பெரிய மன்றத்தில், "விஷ்ணு" வின் சிலை உள்ளது.

முதல் சுற்றுப் பகுதியின் (பிரகாரம்) தென்மேற்கே, பள்ளிகொண்ட நிலையில் விஷ்ணுவின் சிலை உள்ளது. (அனந்த சயன நிலை). இங்கிருந்து ஒரு சில அடி தொலைவில், உமாதேவியுடன் கூடிய சுசீந்திரப்பெருமாளின் கோவில் உளது. "சந்திர சேகர"ரை வழிபட்டபின்னர். நாம் நடராசர் கோவிலுக்குள் நுழைகிறோம். இங்குள்ள நடராசர் சிலை, சிதம்பரத்திலுள்ள சிலையினை நமக்கு நினைவூட்டுகிறது.

கோபுரத்தின் கட்டிட அமைப்பில் பல ஆண், பெண் தெய்வங்களின் சிற்பங்கள் உள்ளன. அவை, பல புராணக்கதைகளை நினைவூட்டுகின்றன. 'லிங்கோத்பவமூர்த்தி', 'தட்சிணாமூர்த்தி', 'ஜாவரதேவமூர்த்தி', 'கசாரமூர்த்தி', 'த்ரிவிக்ரமர்', 'கருட நாராயணர்', 'பராசக்தி', (விசுவ ரூப உருவில்), "சூரியன்", "சந்திரன்", "உமா மகேசுவரர்", மற்றும் 'விஷ்ணு' ஆகியவை புகழ்வாய்ந்த சிற்பங்களாகும். இச்சிற்பங்கள், கல்லில் மிக நேர்த்தியாகச் செதுக்கப்பட்டுள்ளன. சைவ மற்றும் வைணவ சமயத்தினரிருவருமே இத்திருக்கோவிலை மிக உயர்வாகக் கருதுகின்றனர்.

இத்திருக்கோவிலிலுள்ள பல்வேறு வகைப்பட்ட கட்டிட அமைப்புகளிலுள்ள சிற்பங்களின் பாங்கு, பல்வேறு ஊழிமுல முதற்காலங்களில் நடைமுறையிலிருந்து தனிச் சிறப்புகளுக்கு எடுத்துக்

காட்டாக விளங்குகின்றன. சுசீந்திரம் திருக்கோவிலின் குறிப்பிடத்தக்க தனிச்சிறப்பு யாதெனில், அதனுடைய ஒட்டு மொத்த அமைப்பேயாகும். திருக்கோவிலினுள்ளே முப்பதுக்கும் மேற்பட்ட பல்வேறு தெய்வங்களை வழிபடுமிடங்கள் இருந்த போதிலும், அவையனைத்தும், அடுத்தடுத்து சீராக அமைந்துள்ளன. திருக்கோவிலின் மொத்தப் பரப்பளவு, 93,900 சதுர அடியாகும். வடக்கு வெளிப்புறச் சுவரின் நீளம் 402' 10" ஆகும். மேற்கிலுள்ள வெளிப்புறச்சுவர், 233' 4" நீளமுள்ளது.

திருக்கோவிலில் மிகபெரிய தெப்பக்குளம் உள்ளது. இதனுடைய பரப்பளவு திட்டவரைபடப்படியான கோவில் நிலப் பரப்பளவிற்குச் சமமானதாகும். ஒவ்வொரு ஆண்டும், சித்திரை மாதத்தில் (ஏப்ரல் - மே) 10-வது திருவிழா நாளன்று, தெப்பத்திருவிழா நடைபெறுகிறது.

திருவிழாக்கள்

ஆண்டு தோறும் சுசீந்திரம் திருக்கோவிலில், மூன்று பெரிய திருவிழாக்கள் நடைபெறுகின்றன. மார்கழி (டிசம்பர் - சனவரி), சித்திரை (ஏப்ரல்-மே) மற்றும் ஆவணி (செப்டம்பர் - அக்டோபர்) ஆகிய மாதங்களில் இவை நடைபெறுகின்றன. விழாக்காலங்களில், வழிபாட்டு முறைகளும், புறச் செயல் முறைமையும், தமிழ் மற்றும் மலையாளம் இரண்டும் கலந்த மராபார்ந்த முறையில் கடைப்பிடிக்கப்படுகின்றன.

சுசீந்திரத்தின் முக்கிய தனிச்சிறப்புகள்

இக்கோவிலில் மிகப் புராதனமானது, கொன்னையடி நாதரின் வழிபடுமிடமாகும், மும்மூர்த்திகளிலொருவரான சுயம்புலிங்கம், இங்கு "இந்திரன்" வழிபட்ட பின்னரே, புனிதமடைந்ததாகக் கூறப்படுகிறது. செண்பகராமன் மண்டபத்திற்குத் தென்புறம், கல் உத்தரங்கள், மரத்தினாலான கைமரம் போன்று, செதுக்கப்பட்டுள்ளன. அலங்கார மண்டபத்தில், இசை எழுப்பும் தூண்கள், ஒரே கல்லினால் செதுக்கப்பட்டு, மிக நேர்த்தியாக அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு தூண் எழுப்பும் இசையும், வேறுபடுவது, வியப்பை அளிக்கிறது.

இத்திருக்கோவில், பல்வேறு காலங்களைச்சார்ந்த கல்வெட்டு களின் ஒட்டு மொத்தக் கருவூலமாகும். இயற்கைக் காட்சிகள், மலர் வகைகள், மிருகங்கள் மற்றும் பறவைகள், மனித உருவங்கள், மன்னர்கள் மற்றும் குறிப்பிடத்தக்க உயர்வான மனிதர்களின் உருவப்படங்கள், மற்றும் ஆண், பெண் தெய்வங்கள் ஆகியவற்றை இத்திருக்கோவிலில் காணலாம்.

சுப்ரமணியசுவாமி திருக்கோவிலின் புகுமுக மண்டபத்தின் முன்னே, இரு யாளி உருவங்கள் வைக்கப்பட்டுள்ளன. தூணுடன் இணைத்து அமைக்கப்பட்டுள்ள யாளியின் வாய் பாதி திறந்த நிலையிலுள்ளது. அதனுள் கல்லினால் செய்யப்பட்ட பந்து ஒன்றினைக் காண முடிகிறது. யாளியின் வாயினுள், கையை நுழைத்தால், அப்பந்தினைத் தொட இயலும், அப்பந்து, மிகச் சிறியதாகத் தெரிந்தாலும் அதனை வெளியே எடுக்க இயலாது.

சில அரிய தனிச் சிறப்பு வாய்ந்த கலையம்சம் பொருந்திய சிற்பங்கள் இங்கு காணப்படுகின்றன. செண்பகராமன் மண்டபத்தில் பெண் உருவில்

"கணேசினி" [96] என்ற பெயரில் உள்ள கணேசர், கோபுர அடித்தளத்தில் ஜ்வர தேவர், தனது மடியில் துணைவியருடன் நீலகண்ட விநாயகர், கீதை உபதேசம் செய்யும் நிலையில் மும்மூர்த்திகளின் முகங்களையுடைய பார்த்தசாரதி, மற்றம் ஆஞ்சநேயர் ஆகியோரது சிற்பங்கள் ஆகியவை அவற்றில் அடங்கும்.

கோவிலின் கோபுரத்தின் உட்புறச் சுவர்களில் வண்ணச் சித்திரங்கள் வரையப்பட்டுள்ளன. இவை மிகத்தரம் வாய்ந்தவையாகும். வடக்கு ஸ்ரீபலிபுரத்திலிருந்து வரும் போது, உதய மார்த்தாண்ட மண்டபத்தின் நுழைவாயிலின் மேல் ஒரு சுவர் வண்ணச் சித்திரம் உள்ளது.

சுசீந்திரம் திருக்கோவிலின் ரதோத்சவம் அல்லது தேரோட்டம், கண் கொள்ளாக்காட்சியாகும். ஒவ்வொரு ஆண்டும் மார்கழி (டிசம்பர் - சனவரி) மாதத்தில், மிகப் பெரிய அளவில், திருவாதிரை உத்சவம் நடைபெறு கிறது. சித்திரைத்திருவிழாவில் (ஏப்ரல்-மே) இரு சிறிய தேர்களில், பெரிய அம்மன் தேர், வீதிகளின் வழியாக வரும்போது, மாவட்டத்திலுள்ள அனைத்துப் பகுதி மக்களும் கண்டு தரிசிப்பது, தனிச் சிறப்பாகும்.

சுசீந்திரம் திருக்கோவில் திராவிடக் கலைத்திறன், மற்றும் சிற்பக்கலை ஆகியவற்றின் சேமிப்புக்கூடமாகத் திகழ்கிறதெனில், மிகையில்லை. அருகிலிருந்தும் மற்றும் தொலை தூரத்திலிருந்தும் வரக்கூடிய அனைத்து, யாத்ரிகர்களும் இத்திருக்கோவிலை மிக உயர்வாகக் கருதுகிறார்கள்.

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள், சுசீந்திரம் கோவிலைப் பற்றி கீழ்க்கண்டவாறு, விவரிக்கிறார்கள்:

"தொன்னகரம் ஆன சுசிந்தைச் சிறப்பெல்லாம்
என்னொரு நாவால் எடுத்துரைக்க ஏலாதே".

தேசிய வங்கியாகிய, திருவாங்கூர் மாநில வங்கி, அஞ்சல் அலுவலகம், காவல் நிலையம், துவக்கக் கூட்டுறவு வங்கி, ஒரு பால் பண்ணை, ஒரு மேல் நிலைப்பள்ளி, தமிழ்நாடு மின் வாரிய அலுவலகக் கிளை, தேவா சுவம் வாரிய அலுவலகம், ஊராட்சி அலுவலகம், ஒரு தனியார் ஆயுர்வேத மருத்துவமனை, மற்றும் ஒரு புகைப்பட அரங்கம் ஆகியவை இங்கு இயங்கி வருகின்றன[97].

தடிக்காரன் கோணம் (தோவாளை வட்டம்)
மக்கள் தொகை - 5184 (ஆண்கள்-2579 + பெண்கள்-2605)[98]

நாகர்கோவில் - பாலமோர் சாலையில், நாகர்கோவிலிருந்து 18 கிலோ மீட்டர் தொலைவில், தடிக்காரன் கோணம் உள்ளது. அது தோவாளை வட்டத்திலுள்ள அருமநல்லூர் கிராமத்தின் மலைப்பகுதியாகும். இது, இயற்கையிலேயே மலைப் பகுதியாகையால், மக்கள் ஆங்காங்கே, அங்கொருவர் இங்கொருவராக வாழ்கின்றனர்.

மக்கள் தொகையில் பெரும்பாலோர், அருகாமையிலுள்ள எஸ்டேட்டுகளில், விவசாயக் கூலியாட்களாகப் பணியாற்றுகிறார்கள். ஒரு ரோமன் கத்தோலிக்கத் திருக்கோவிலைத் தவிர, இங்கு, ஜஹோவா சமயப்

பரப்புக் குழுவினால், ஒரு அனாதை இல்லமும் நடத்தப்படுகிறது. தோவாளை வாய்க்காலில், ஒரு கவான் குழாய் இயங்கி வருகிறது. கோதையார் திட்ட அமைப்பிலிருந்து, தோவாளை வாய்க்காலில், கடல் மட்டத்திற்கு 200.5 அடிக்கு உயரே, தடையின்றிச் செல்கிற, தண்ணீர், சாலை மற்றும் தாடமையார் ஆறு ஆகியவற்றின் குறுக்கே, 199.64 அடி உயரத்தில், மறுபுறத்திற்கு எடுத்துச் செல்லப்படுகிறது. இது தொடர்பாக, "வேளாண்மை மற்றும் நீர்ப்பாசனம்" என்ற தலைப்பிலான இயலில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

ஒரு நடுநிலைப் பள்ளி, ஒரு துவக்கப் பள்ளி மற்றும் ஒரு கிறித்தவ சமயப் பரப்புக்குழுப் பள்ளி, அனாதை இல்லம் ஆகிய கல்வி நிறுவனங்கள் இங்கு இயங்கி வருகின்றன. ஊராட்சி அலுவலகம், மற்றும் கீரிப்பாறையில் ஒரு காவல் நிலையம் ஒரு பயணியர் இல்லம் ஆகியவை இங்குள்ளன.

தல்லாகுளம் (கல்குளம் வட்டம்)

மக்கள் தொகை - 17739 (ஆண்கள் - 8945 + பெண்கள் - 8794)

தல்லாக்குளம், கல்குளம் வட்டத்திலுள்ள ஒரு சிற்றூராகும். மாபெரும் புரட்சித் தலைவரும், ஆங்கிலேயருக்கு எதிராகக் குரல் கொடுத்தவருமான திரு. வேலுத்தம்பியின் பிறந்த இடமாகையால், இது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஆங்கிலேயரால் அழிக்கப்பட்ட தொன்மையான அவரது வீடு, அவருடைய உடன்பிறந்தார் மகள்களால் திரும்பக் கட்டப்பட்டது. அவ்வீட்டில் அவரது உடமைகளும், ஆங்கிலேயருடன் அவர் போரிட்டபோது, அவரால் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களும் வைக்கப்பட்டுள்ளன. தளவாய் வேலுத்தம்பியின் பணி குறித்து, "வரலாறு" என்ற தலைப்பிலான இயலில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

இக்கிராமத்தில், மண்பாண்டங்கள் செய்வது புகழ்பெற்ற கைத்தொழிலாகும். இங்கு செய்யப்படும் மண்பாண்டங்கள், அதிக நாட்கள் உழைக்கக்கூடிய தொழில் நுட்பம் வாய்ந்தவையாகும். இம்மண்பாண்டங்கள் கேரள மாநிலத்தில் நன்கு விற்பனையாகின்றன.

தாழக்குடி (தோவாளை வட்டம்)
மக்கள் தொகை - 7,663 (ஆண்கள் - 3819 + பெண்கள் - 3844)

இது தோவாளை வட்டத்திலுள்ள பெரிய கிராமங்களிலொன்றாகும். இதனுடைய பரப்பளவு 1½ சதுர மைல்களாகும். இது நாகர் கோவிலிலிருந்து 8 கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது. வரலாற்றுப் புகழ் பெற்ற தமிழ் கவிஞரான அவ்வையாருக்கு நேர்ந்தளிக்கப்பட்ட கோவில் ஒன்று இங்கு உள்ளது. அழகம்மனுக்கு நேர்ந்தளிக்கப்பட்ட மற்றொரு கோவிலும் இங்கிருக்கிறது. பெரும்பான்மையான கிராம மக்கள் வேளாண்மையிலீடுபட்டுள்ளார்கள். தல்லாக்குளத்தைப் போன்று, இக்கிராமமும் மண்பாண்டங்கள் செய்வதற்குப் பெயர் பெற்று விளங்குகிறது. மண்பாண்டங்கள் செய்வதில், பல குடும்பங்கள் ஈடுபட்டுள்ளன. அவர்களது நலனை மேம்படுத்த, ஒரு மண்பண்டங்கள் கூட்டுறவு சங்கமும் இயங்கிவருகிறது. ஒரு அரசு மேல்நிலைப்பள்ளி, ஒரு துவக்கப்பள்ளி மற்றும் ஒரு சமுதாய (மக்கள்)

மன்றம் ஆகியவை, ஆதிதிராவிடர் நலனுக்காக, ஆதி திராவிட நலத் துறையால் நடத்தப்படுகின்றன. ஒரு வேளாண் அடைமான வங்கியும், ஒரு கூட்டுறவு பால் வழங்கும் சங்கமும் இக்கிராமத்தில் இயங்கி வரும் ஏனைய நிறுவனங்களாகும். ஒரு பேறுகால மையமும் இங்குள்ளது. தாழக்குடியில் அமைந்திருக்கும் ஊராட்சி அலுவலகம், இக்கிராமத்தினை நிருவகித்து வருகிறது. இவை தவிர, ஒரு அஞ்சல் அலுவலகமும் இங்கு இயங்கி வருகிறது. கிராமத்தில் நல்ல போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப் பட்டுள்ளன.

தேங்காப்பட்டணம் (விளவங்கோடு வட்டம் - இது பெரியகுளம் வருவாய் கிராமத்தின் குக்கிராமமாகும்)
மக்கள் தொகை - 22522 (ஆண்கள் - 11482 + பெண்கள் - 11040)

விளவங்கோடு வட்டம், பைங்குளம் கிராமத்திற்கு அருகாமையில், மேற்கு மலைத்தொடரில், அமைந்துள்ள தேங்காப்பட்டினம், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கிராமமாகும். இது நாகர்கோவிலிலிருந்து 35 கிலோ மீட்டர் தொலைவிலும், குழித்துறையிலிருந்து 12 கிலோ மீட்டர் தொலைவிலும் அமைந்துள்ளது. இங்கு தென்னை மரங்கள் ஏராளமாகப் பயிரிடப்பட்டுள்ளதால், தேங்காயின் பெயரைத் தாங்கி, "தேங்காய்ப்பட்டினம்" என இக்கிராமம் அழைக்கப்படலாயிற்றென கூறப்படுகிறது. ஆயிகுல மன்னர்கள், ஒரு காலத்தில், ஆண்டு வந்த தேங்கா நாட்டின் மையப் பகுதியில் இக்கிராமம் அமைந்திருந்ததால், இப் பெயர், சூட்டப்பட்டிருக்கலா மெனவும் நம்பப்படுகிறது.

பண்டை காலங்களில், அரேபியா போன்ற அயல்நாடுகளுடன் இக்கிராமம், வாணிகத் தொடர்பு கொண்டிருந்தது[99]. தேங்காப்பட்டினத் திற்கும், கப்பல் போக்குவரத்து நடந்து வந்த பிற அயல்நாட்டு நகரங்களுக்கும் நேரடியான கப்பல் சரக்கு படகுப் போக்குவரத்துப்பணி நடைமுறையிலிருந்து வந்தது. கொப்பரைத் தேங்காய், உலர்ந்த மீன், கயிறு மற்றும் சுரா மீனின் உகைப்பியக்க உறுப்பு, ஆகியவை, முக்கிய ஏற்றுமதிப் பொருள்களாக இருந்தன.

இங்கு வருகை தந்த சில அரேபிய நாட்டு வணிகர்கள், அவர்களது வாணிபத்தைப் பொருக்கிட, இதைத் தகுந்த இடமாகக் கருதினர், இந்த அரபு வணிகர்கள், முந்தைய மன்னரின் ஒத்துழைப்புடன், முகம்மதிய சமய நெறியினைப் பரப்பிட, பல மசூதிகளை நிறுவினர். தேங்காப் பட்டினத்திலுள்ள மசூதி ஏறத்தாழ 1200 ஆண்டுகளுக்கு முன்னர், கட்டப்பட்டதாகும்[100]. மசூதி கட்டப்பட்டுள்ள இடம், சாஸ்தம் பரம்பு என அழைக்கப்படுகிறது. இந்த மசூதி எழுப்பப்படு முன்னர், இங்கு ஒரு சாஸ்தா திருக்கோவில் இருந்ததாக உள்ளூர் மக்கள் கூறுகின்றனர்.

தற்போது, இங்கு, கொப்பரைத் தேங்காய், உலர்ந்த மீன் மற்றும் கயிறு வாணிகம் நடைபெற்று வருகிறது. உலர்ந்த மீனும், சுரா மீனின் உகைப்பியக்க உறுப்பும், சிங்கப்பூருக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இங்குள்ள மக்கள் தொகையில் பெரும்பாலோரான நாடார்கள், தொழிலாளர்களாகவும், விவசாயிகளாகவும் இருந்து வருகிறார்கள். ஆனால்,

முகம்மதியர்கள், அனைத்து வகை வாணிபத்திலும், ஈடுபட்டு வருகிறார்கள். கடற்கரைப் பகுதியிலுள்ள பரவர்கள், மீன் பிடிப்பதையும், கிளிஞ்சிற் சிப்பி, சங்கு ஆகியவற்றைச் சேகரிப்பதையும் தொழிலாகக் கொண்டவர்கள். அனைவரும் தென்னையின் புறத்தோடுகளைப் பதப்படுத்துதல், மற்றும் கயிறு பின்னுதல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளனர். கேரள மாநிலம் பூவாரிலிருந்து, 16 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள தேங்காப்பட்டினத்திற்கு, ஏ.வி.எம். கால்வாய் வழியாகச் சிறு படகுகள் செல்கின்றன.

ஒரு அஞ்சல் அலுவலகம், ஒரு அரசு மருந்தகம், ஒரு வேளாண் வங்கி, ஆகியவை இப்பகுதி மக்களுக்கு உதவி செய்வதற்காக இங்கு நிறுவப்பட்டுள்ளன. நாகர்கோவில் மற்றும் திருவனந்தபுரம் போன்ற நகரங்களுக்கு இவ்விடத்திலிருந்து முறையான பேருந்து வழித்தடங்கள் உள்ளன. விக்டோரியா மகாராணியார் முடிசூட்டிக்கொண்டதன் நினைவாக, மன்னர் ஆனந்த மார்த்தாண்ட வர்மா, கிராமத்தின் மையப் பகுதி வழியாக ஏ.வி.எம். கால்வாயை வெட்டினார். தேங்காய்ப்பட்டினத்திற்கு வடக்கே மூன்று கிலோ மீட்டர் தொலைவில், அம்சி என்ற கிராமம் உள்ளது. இங்கு ஓர் உயர்நிலைப்பள்ளி, கூட்டுறவு சங்கங்கள், ஒரு அரசு கதர் மையம் மற்றும் ஒரு அம்பர் சர்க்கா மையம் ஆகியவை உள்ளன.

திருப்பதிசாரம் (தோவாளை வட்டம்)
மக்கள் தொகை - 3489 (ஆண்கள் - 1760 + பெண்கள் - 1729)

ஆரல்வாய் மொழிக்குச் செல்லும் முதன்மையான சாலையில், திருப்பதி சாரம் உளது. இது, நாகர்கோவிலிருந்து ஐந்து கிலோ மீட்டர் தொலைவாகும். ஸ்ரீ திருவாழி மார்பனுக்கு நேர்ந்தளிக்கப்பட்ட திருக்கோவில் இங்கு உள்ளது. இந்தியாவிலுள்ள 108 வைணவத் திருக்கோவில்களில், இத்திருக்கோவில் ஒன்றாகும். முந்தைய மலைநாட்டின் 13 திவ்யத்தலங்களில் இதுவும் ஒன்று. கி.பி. ஒன்பாதம் நூற்றாண்டைச் சார்ந்த வைணவ மாமுனிவர், நம்மாழ்வார், இத்திருத்தலத்தையும், இங்குள்ள இறைவனையும் கீழ்க்குறிப்பிட்டவாறு, புகழ் பாடிப்போற்றியுள்ளார்.

"வான்பரிசாரத்து இருந்த என் திருவாழ்மார்பர்"[101] மாமுனிவர் நம்மாழ்வார் பிறந்ததனால், இவ்விடம் பெரும் புகழ் பெற்றது. இத்திருக்கோவிலுள்ள கல்வெட்டுக்களில், இக்கிராமத்தின் பெயர், "திருப்பதி சாரம்" என பொறிக்கப்பட்டிருப்பினும், வைணவர்களின் நூல்களில் இக்கிராமம் "திருவாம்பரிசாரம்" என அழைக்கப்படுகிறது. இப்பெயர் சூட்டப்பட்டதற்கு மரபு வழிக்கதையுண்டு.

கி.பி. எட்டாம் நூற்றாண்டில், இப்பகுதியை அரசாண்ட மன்னர் குலசேகரன், பல அண்டை நாடுகளை வென்று, தலை நகரம் திரும்பிய போது, தனது பிரியமான குதிரையைத் தொலைத்துவிட்டார். மிகவும் தீவிரமாகத் தேடிய பின்னர், சோம தீர்த்த ஆற்றங்கரையில், தனது குதிரை புல் மேய்ந்து கொண்டிந்ததைக் கண்டார். அதிலிருந்து இவ்விடம், "திருவாம்பரிசாரம் என அழைக்கப்பட்டது (தமிழில் "பரி" எனில் குதிரை எனப் பொருள்படும்)[102].

"திருவாழ்மார்பர்" என்று அழைக்கப்படும் இவ்விடத்திலுள்ள இறைவன், அவரது துணைவியர் இலக்குமியை தனது மார்பில் வைத்துக் கொண்டிருப்பதால், இவ்வாறு அழைக்கப்படுகிறார். இலக்குமி தேவிக்கு இங்கு தனியாக வழிபடும் இடம் இல்லை. இங்கு நடைபெறும் திருவிழாக்களில், ஆதி சுவாதித் திருவிழா மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. ஆண்டுத் திருவிழா தொடர்ந்து 10 நாட்கள், "சித்திரை" மாதத்தில் கொண்டாடப்படுகிறது[103].

இவ்விடத்திலுள்ள மக்கள் "வேளாண்மையைத் தங்கள் முக்கியத் தொழிலாகக் கொண்டுள்ளனர். இங்குள்ள மாநில விதைப்பண்ணை, பல்வேறு ஊராட்சி ஒன்றிய கிடங்குகள் மூலம், விவசாயிகளுக்கு தரமான விதைகளை அளிக்கிறது. இதுபற்றி, "வேளாண்மை மற்றும் நீர்ப்பாசனம்" என்ற தலைப்பிலான இயலில், விரிவாக விளக்கப்பட்டுள்ளது. திருப்பதிசாரத்திற்கு அருகே தேரிக்கால்புதூர் என்ற கிராமம் உளது. இங்கு, நல்ல தரமான ஓடுகளை உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலை இயங்கிவருகிறது.

திருவட்டார் (கல்குளம் வட்டம்)
மக்கள் தொகை - 23492 (ஆண்கள்-11897 + பெண்கள்-11595)

"திருவட்டார்", கல்குளம் வட்டத்திலுள்ள ஒரு கிராமமாகும். இது, கண்ணைக்கவரும் இயற்கைக் காட்சிகளுடன், திருவட்டார் ஆற்றின் கரைகளில் அமைந்து உள்ளது. இது நாகர்கோவில் - குலசேகரம் சாலையில், தக்கலைக்கு வடக்கே 11 கிலோமீட்டர் தொலைவிலுள்ளது. இது, ஊராட்சி ஒன்றியத்தின் தலைமையிடமாகும். மூன்று புறமும் சூழ்ந்துள்ள ஆற்றின் கரைகளில் இந்நகரம் அமைந்துள்ளதால், இக்கிராமம் இப்பெயரைப் பெற்றது. சர்க்கில் என்பதற்கு தமிழில் "வட்டம்", எனப் பொருள். கவிஞர், மாங்குடிகோலார் என்பார், தனது தொகை நூலில் (புறநானூறு, 396) "வளநீர் வட்டாறு" என விளக்கியுள்ளார். நம்மாழ்வார் இதனை "வளமிக்க வட்டரை" எனக்கூறுகிறார்[104] திருவட்டாரிலுள்ள திருக்கோவில், அனந்த சயனம் நிலையிலுள்ள ஆதிகேசவப் பெருமாளுக்கு நேர்தளிக்கப்பட்டதாகும்[105]. வைணவர்களுக் குரிய 13 புனிதத் தலங்களில், ஒன்றாக இது கருதப்படுகிறது. அது பழமைச் சின்னங்கள் உள்ள இடமாகும். சங்க இலக்கியமான புறநானூற்றில் திருவட்டாரைப் பற்றி கூறப்பட்டுள்ளது. திருவட்டாரிலுள்ள ஆதிகேசவப் பெருமாள் திருக்கோவில் 1100 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டதென கூறப்பட்ட போதிலும் கோவிலிலுள்ள கல்வெட்டுக்களில், அது, 12-வது நூற்றாண்டில் கட்டப்பட்டதென குறிப்பிடப்பட்டுள்ளது.

சந்திரன், மற்றும் பரசுராமர் ஆகியோர், இத்திருக்கோவிலில் குடி கொண்டுள்ள இறைவன் ஆதிகேசவப் பெருமாளை வழிபட்டதாக நம்பப்படுகிறது. ஆதிகேசவப் பெருமாளைப் புகழ்ந்து, நம்மாழ்வார், பல பாடல்களை இயற்றியுள்ளார். 16-வது நூற்றாண்டில், வங்காளத்தைச் சார்ந்த ஸ்ரீ கிருஷ்ணசைதன்யா, திருவட்டாருக்கு வருகை தந்து, இந்து பகுத்தறிவு

சிந்தனையை வளர்த்திட, "ஸ்ரீ பிரம்ம சம்ஹீதா" என்ற நூலை எழுதினார். கோவில் ஒரு உயர்ந்த மேடையில் உள்ளது. மையப்பகுதியிலுள்ள கோவில் மண்டபத்தில், இறைவன், இடமகன்ற நாகத்தில், சயனமூர்த்தியாகக் காட்சி தருகிறார். இவ்விறைவன், திருவனந்தபுரம் ஸ்ரீ பத்மநாபசுவாமி திருக்கோவிலிலுள்ள இறைவனை ஒத்துள்ளார்.

வலிமையுள்ள தலையையுடைய கேசன் என்ற அசுரன், ஆண்டவனிடம் அழியாவரம் பெற்ற காரணத்தால், உலகத்தில், அதிக அளவு கேடு விளைவித்து வந்ததாகத் தலபுரணம் கூறுகிறது. தங்களது குறைகள் களையப்பெற, உலக மக்கள் மகாவிஷ்ணுவிடம் முறையிட்டனர். துன்பத்தால் அவதியுறுவோரைக் காத்திட மகா விஷ்ணு தனது மேலாளான ஆதிசேஷனுடன் உலகத்தில் அவதரித்தார் திருவட்டாரில், ஆதிசேஷன், கேசனை வட்டவடிவமாகச் சூழ்ந்து வளைத்து தன்னுள் அடக்கி, சுருட்டி, இறைவனுக்குப் படுக்கையமைத்தவாறு உள்ளார். அதனுள் இறைவன் அனந்த சயனனாகக் காட்சி தருகிறார். இறைவன் "கேசவன்" என அழைக்கப்பெறுவதற்கு இக்கதை சான்று பகர்கிறது. இறைவனது பெயருக்கு முன்னர் உள்ள "ஆதி" என்ற சிறப்புப்பட்டம், அக்கோவிலின் தொன்மையான தோற்றத்தைக் குறிப்பதாகும். ஆதி கேசவப் பெருமாள் தனது அனந்த சயன நிலையினை மாற்றிக் கொண்டாராயின், கேசன் மறுபடியும் உலகத்தில் அவதரித்து, அதனால், உலகெங்கிலும் அதர்மம் பெருகுமென நம்பப்படுகிறது.

இத்திருக்கோவில், அங்குள்ள கல் மற்றும் மர வேலைப்பாடுகளுக்குப் பெயர் பெற்றதாகும். பிரதான வாயிலுக்கு முன்னர் உள்ள பாறையினின்றும் செதுக்கியெடுக்கப்பட்டு, ஒரு பெரிய கருங்கல்லில் 18 அடி உயரத்திலும், 3 அடி கனத்திலும், அமைக்கப்பட்டுள்ள "ஒத்தக்கல் மண்டபம்", இவ்வேலைப் பாடுகளுக்கு ஒரு சிறந்த முன்மாதிரியாக விளங்குகிறது. பிரகாரத்தைச் சுற்றிலும், "தீப இலக்குமி" என அழைக்கப்படும், 222 பெண் விளக்கேந்துவோரின் உருவச்சிலைகள் தூண்களில் செதுக்கப்பட்டுள்ளன. இவ்விளக்கு ஏந்துவோரின் தனிச் சிறப்பு யாதெனில், அவர்களது தலை அலங்காரமும், உடை அணியும் முறையும், ஒரு தூணிலுள்ள சிலைக்கும், மற்றொன்றின் சிலைக்கும் மாறுபடுகின்றன. உயிர்க்களையுள்ள இலக்குமணர், இந்திரஜித், வேணுகோபால், சக்தி மற்றும் விஷ்ணு, பிரம்மா ஆகியோருடன் நடராஜரும், இசைக்கருவிகளை வைத்துக் கொண்டு, பலி பீடமண்டபத்தின் இருபுறமும் காட்சிதருவது வேறெங்கும் காணப்படாத அரிய காட்சியாகும். ரதி மற்றும் மன்மதன் ஆகியோரது சிலைகள் நன்றாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

தூணில் செதுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு சிலையும், புராண இலக்கிய முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் கலைத் திறனோடு, உருவாக்கப்பட்டதாயுள்ளது. ஆதி கேசவப்பெருமாளின் சிலை, கருப்பஞ்சாறு மற்றும் கடுகு இவற்றை அரைத்துச் சேர்த்து உற்பத்தி செய்த, பசைக்குழம்பை, சுண்ணாம்பு மற்றும் கருங்கல் கலந்த கலவையில் ஒன்றுபடுத்தி, "கடுசர்க்கரயோகம் என்ற பொருளைத் தயாரித்து, அதனின்றும் உருவாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இத்திருக் கோவிலிலுள்ள "ஒத்தைக் கல்மண்டம்" திருவாங்கூர் மன்னர், வீர ரவி வர்மாவால் கி.பி. 1603-1607-ல் கட்டப்பட்டதாகும்[106]. உட்கோபுரச் சுவர்களில், 17 ஆம் நூற்றாண்டிற்குப் பிற்படாத காலத்தைச் சார்ந்த, சுவரோவியங்களின் மீந்த பகுதிகள் காணப்படுகின்றன. கோவிலின் சில கட்டமைப்புகளை, மரத்தில் செதுக்கப்பட்ட சில நேர்த்தியான சிற்பங்கள் அலங்கரிக்கின்றன. இத்திருக்கோவிலின் இறைவனைப் புகழ்ந்து, திருவாங்கூர் மன்னர்களில் ஒருவரான ஆதித்ய வர்மா, வடமொழியில் (சமஸ்கிருதம்) "அவதார தசாகம்" என்ற பத்து செய்யுட்களை இயற்றியுள்ளர். இங்குள்ள பழைய அரண்மனை, பயணிகள் விடுதியாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. ஒரு துணைப்பதிவாளர் அலுவலகம், அஞ்சல் அலுவலகம், மற்றும் காவல் நிலையம் ஆகியவை இங்கு இயங்கி வருகின்றன. இவை தவிர, வனத்துறை அலுவலகங்களும் இங்குள்ளன. இங்கு உற்பத்தி செய்யக்கூடிய கருப்புக்கட்டி மற்றும் நார்ப் பொருள் ஆகியவை கேரள மாநிலத்திற்கு, விற்பனைக்கனுப்பப்படுகின்றன. தென்னஞ்சோலைகள் இங்கு ஏராளமாக உள்ளன.

திருவிதாங்கோடு (கல்குளம் வட்டம்)
மக்கள் தொகை - 18644 (ஆண்கள்-9388 + பெண்கள்-9256)

திருவிதாங்கோடு, பத்மநாபபுரத்திற்குத் தென் மேற்கே உள்ளது. ஸ்ரீ வாழும்கோடு என்பதிலிருந்து, இக்கிராமத்திற்கு இப்பெயர் சூட்டப்பட்டது. வளம் கொழிப்பதற்கான பெண் தெய்வம் இலக்குமி வாழும் இடமென்பது இதன் பொருளாகும். இது சில காலம் வேநாட்டின் தலைநகராக இருந்து வந்தது. மாநிலத்திற்கு, இக்கிராமத்தின் பெயரை வைத்தே, திருவாங்கூர் எனப் பெயரிடப்பட்டது. இங்கு பழைய படையரணின் அழிவு நிலையிலுள்ள பகுதிகளைக் காணலாம். திருவாங்கூர் மன்னர் ரவி வர்மாவால், பொறிக்கப்பட்ட அரசாணையைக் கொண்ட தூண் திருவிதாங்கோட்டில் நிறுவப்பட்டிருந்தது. அது இப்போது, பத்மநாபபுரம் அருங்காட்சியகத்தில் உள்ளது. அக்காலத்தில் நடைமுறையிலிருந்த அடிமைத்தனம் போன்ற சமூக அநீதிகள் ஒழிக்கப்படுவதாக, இத்தூணில் பொறிக்கப்பட்டுள்ள அரசாணை அறிவிக்கிறது. இவ்வறிவிப்பு கி.பி. 1696-97 ஆம் ஆண்டினைச் சார்ந்ததாகும். இவை தவிர, இங்கு இரு மசூதிகள், ஒரு ரோமன் கத்தோலிக்க கிறித்தவத் திருக்கோவில், சிரியா நாட்டவருக்கான கிறித்தவத் திருக்கோவில், மற்றும் ஒரு இந்து திருக்கோவில் ஆகியவை உள்ளன. இக்கிராமத்தில் வசிப்போரில் பலர், முகம்மதிய சமயத்தைச் சார்ந்தவராவர். அவர்கள், கேரளம் மற்றும் தமிழ்நாடு மாநிலங்களிலுள்ள பல்வேறு முக்கிய வாணிப மையங்களுடன் தொடர்பு கொண்டு வணிகம் செய்து வருகிறார்கள். இது பித்தளை மற்றும் செம்புப் பாத்திரங்கள் உற்பத்தி செய்வதிலும், பனை ஓலையிலிருந்து பாய்கள் முடைவதிலும் பெயர் பெற்று விளங்குகிறது.

தூத்தூர் (விளவங்கோடு வட்டம், ஏழுதேசம் வருவாய் கிராமத்தில் குக்கிராமம்), மக்கள் தொகை - 30570 (ஆண்கள் - 15430 + பெண்கள் 15140)

இது தேங்காப்பட்டினத்திலிருந்து ஐந்து கிலோ மீட்டர் தொலைவிலும், குழித்துறையிலிருந்து 18 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள ஒரு கடற்கரை கிராமமாகும். இது முஞ்சிரை ஊராட்சி ஒன்றிய எல்லைப்பகுதியில் அமைந்துள்ளது. இக்கிராமத்தில் வாழும் மக்களில் பெரும்பாலோர், மீன் பிடிப்பதைத் தொழிலாகக் கொண்டவராவர். மீனவர்களின் நலனை மேம்படுத்த இங்கு சில கூட்டுறவு சங்கங்கள் இயங்கிவருகின்றன. மீன் தொழில்துறை, இங்குள்ள மீனவர்கள் வலைகள் பின்னுவதற்கு நூல் வழங்கி, உதவி புரிகிறது இங்கு சிறிய அளவில், சுராமீனின் ஈரற்குலையினின்றும், ஒருவிதமான எண்ணெய் தயாரிக்கப்படுகிறது. இங்கு, ஏ.வி.எம். கால்வாயின் இருபுறமும், தொழில் செய்யத்தேவையான திருநிலைத் தாவர வகை, (Screupine) அதிக அளவில் காணப்படுகின்றன. விருப்பார்வமுள்ள பொருட்களான பாய்கள், கைப்பைகள், அரைக்கச்சை (பெல்ட்), ஆண்கள் மற்றும் பெண்களின் தலையணிகள் ஆகியவை, இத்திருநிலைத் தாவர வகையினின்றும் செய்யப்படுகின்றன.

ஒரு பெரிய கிறித்தவத் திருக்கோவில் மற்றும் பெண் துறவியர் மடம் ஆகியவை, கடற்கரையில் எழுப்பப்பட்டுள்ளன. இங்கு ஒரு உயர்நிலைப்பள்ளியும் இயங்கி வருகிறது. ஒரு அரசு மருத்துவமனை, கிளை அஞ்சல் அலுவலகம், மற்றும் மூன்று பொழுதுபோக்கு மையங்கள் ஆகியவையும் இங்குள்ளன. ஏ.வி.எம். கால்வாய் மீது கட்டப்பட்டுள்ள பாலம், கடற்கரை கிராமங்களை வட்டாரத்தின் ஏனைய பகுதிகளுடன் இணைக்கிறது. இவ்விடம் பேருந்து தடங்களால் இணைக்கப்பட்டுள்ளது.

புனித ஜூட் கல்லூரி, (ஆண், பெண் இருபாலாரும் கல்வி பயிலும்) கூட்டுக்கல்வி முறைக் கல்லூரியாகும். இது, லத்தீன் கத்தோலிக்க மீனவர் கல்வி நிறுவனத்தால், 1980-81 ஆம் ஆண்டு, துவக்கப்பட்டது.

தக்கலை (கல்குளம் வட்டம்)
மக்கள் தொகை - 25610 (ஆண்கள்-12979 + பெண்கள்-12631)

தக்கலை கல்குளம் வட்டத்தின் தலைமையிடமாகும். இது கன்னியாகுமரி - திருவனந்தபுரம் நெடுஞ்சாலையில் நாகர்கோவிலி லிருந்து, 16 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. இது, பத்மநாபபுரம் நகராட்சி எல்லையினுள் உள்ளது. அரண்மனை, தக்கலையிலிருந்து இரண்டு கிலோமீட்டர் தொலைவிலுள்ளது. தக்கலை மாவட்டத்திலுள்ள அனைத்து முக்கிய இடங்களுடனும், சாலை மூலம் இணைக்கப் பட்டுள்ளது.

சார்நிலை நீதி மன்றம், முன்சீஃப் நீதி மன்றம், முதல்வகுப்பு நடுவர்கள் நீதி மன்றம், காவல்துறைத் துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம், வட்ட அலுவலகம், துணைக்கருவூலம், காவல் நிலையம், கிளைச் சிறை, பத்திரப்பதிவுத் துணைப் பதிவாளர் அலுவலகம், வருமான வரி அலுவலர்

பீர் முகமது தர்கா, தக்கலை

அலுவலகம், ஆகிய அரசு அலுவலகங்களும், நிறுவனங்களும் இங்கு இயங்கி வருகின்றன. அரசு மருத்துவ மனை, அரசு உயர்நிலைப்பள்ளி, ஆதி திராவிட மாணவர் தங்கும் விடுதி, அமலா அரசனிர், பெண்கள் உயர்நிலைப்பள்ளி, திருத்தூதர்களுக்குரிய கார்மல் சகோதரிகள் நடத்தும் உணவு விடுதி ஆகியவையும் இங்கு உள்ளன. (இவ்விடுதியின் தலைமையிடம், கேரளமாநிலம் எர்ணாக்குளத்திலுள்ளது.) கனரா வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி போன்ற சில வங்கிகளின் கிளைகளும் இங்கு இயங்கி வருகின்றன.

ரோமன் கத்தோலிக்க கிறித்தவத் திருக்கோவிலுடன் இணைந்து கிறித்தவ துறவி மடம் இங்கு 1913-ல் நிறுவப்பட்டது. இத்துறவியர் மடத்தில் சமயகுரு நிலையை அடைய விரும்பும் கிறித்தவர்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது.

பீர் முகம்மது தர்கா[107]

திருநெல்வேலி மாவட்டம், தென்காசியில் பிறந்த பெரிய அறிவாராய்ச்சி சிந்தனையாளரான முகம்மது அப்பா அவர்களின் நினைவாக தக்கலையில் "பீர் முகம்மது ஒலியுல்லா தர்கா" நிறுவப்பட்டுள்ளது. இவர் கேரள மாநிலம், பீர்மேட்டில் சிலகாலம் சமயத்துறை சார்ந்த பணிகளில் ஈடுபாடு கொண்டு, பின்னர், தக்கலையில் தங்கினார். திறன் வாய்ந்த தமிழ் கவிஞரான அவர், மெய்யுணர்வு குறித்து, பல நூல்களை இயற்றினார். சேரகுல மன்னர்களுடன் அவர் நல்ல உறவு முறையை மேற்கொண்டார். பத்மநாபபுரம் கருங்கல் கோட்டைக்கு அவர் அடிக்கல் நாட்டியதாகக் கூறப்படுகிறது.

ஒவ்வொரு ஆண்டும், ரஜாப் மாதம் பௌர்ணமியன்று, மிகப் பெரிய அளவில், உயர்ந்த அறிவாராய்ச்சி சிந்தனையாளரும், கவிஞருமான முகம்மது அப்பா அவர்களுக்கு ஆண்டு விழா கொண்டாடப்படுகிறது. கேரளம் மற்றும் தமிழ்நாடு மாநிலங்களிலுள்ள மக்கள் சாதி சமய வேறுபாடின்றி, அதிக அளவில் இவ்விழாவில் கலந்து கொள்கின்றனர். இம்மாவட்டத்திற்கு இவ் ஆண்டுவிழாவன்று விடுமுறையளிப்பது குறிப்பிடத் தக்கதாகும்.

திருப்பரப்பு அருவி (திருப்பரப்பு கிராமம்), மக்கள் தொகை - 7804 (ஆண்கள் - 4009 + பெண்கள் - 3795)

திருப்பரப்பு கிராமத்தில்தான் கோதையாறு, மேலிருந்து கீழே இறங்குகிறது. இங்குள்ள நீரருவி, குலசேகரம் - திருப்பரப்பு சாலையிலுள்ள பேச்சிப் பாறை அணையிலிருந்து 13 கிலோ மீட்டர் தொலைவிலும் குழித்துறை - அலங்கோலா சாலையிலுள்ள குழித்துறையிலிருந்து, 13 கிலோ மீட்டர் தொலைவிலும் உள்ளது.

ஆற்றுப்படுகை, பாறையாக உள்ளது. அதனுடைய நீளம் 300 அடியாகும். ஏறத்தாழ 50 அடி உயரத்திலிருந்து, தண்ணீர் கீழே விழுகிறது. ஆண்டிற்கு ஏழு மாத காலம் தண்ணீர் பாய்கிறது. அருவியின் மேல்புறம் அமைந்துள்ள ஆற்றுப்படுகை, பாறையுள்ள பெரும் பரப்பாகும். அது நீரோட்டத்திற்கெதிர் திசையில், ஏறத்தாழ கால் கிலோ மீட்டர் தொலைவிற்கு, விரிந்து காணப்படுகிறது. அங்குதான் புகழ்வாய்ந்த திருப்பரப்பு அணை,

நெல் வயல்களுக்கு தண்ணீர் வழங்கப் பெறுவதற்காகக் கட்டப்பட்டுள்ளது. ஆற்றின் இரு புறமும் ஆற்றின் இடக்கரையில் அருவிக்கும், அணைக்குமிடையே, வலிமையுள்ள கல் அரணின் ஊடே சிவபெருமானுக்கு நேர்ந்தளிக்கப்பட்ட திருக்கோவிலொன்று கட்டப்பட்டுள்ளது[108]. அருவியைச் சுற்றியமைந்துள்ள, பசுமையான குன்றுகள், கணவாய்கள், தென்னஞ் சோலைகள், பச்சைப் பசேலென்ற நெல் வயல்கள், தோட்டங்கள் மற்றும் இரப்பர் தோட்டப் பண்ணைகள் ஆகியவை கண்ணைக் கவருகின்றன.

மேற்குத் தொடர்ச்சி மலையினின்றும் உற்பத்தியாகும், தாமிரபரணியாறு, கிழக்கே திருநெல்வேலி மாவட்டத்திலும், மேற்கே கன்னியாகுமரி மாவட்டத்திலும் பாய்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் பாயும் ஆற்றினை மக்கள், "குழித்துறை ஆறு" என அழைக்கிறார்கள். தர்மபுரி மாவட்டம், ஒகேனக்கல் பாறைகளிலிருந்து பாயும் காவிரி போன்று, திருப்பதிசாரம் அருவியும் பாறைகளிலிருந்து கீழ்நோக்கிப் பாய்கிறது. இப்பாறைகளினின்றும் அருவிகள் பாய்ந்துவிழும் கண்ணைக் கவர்ந்து ஈர்க்கிற காட்சி, சுற்றுலாப் பயணிகன் மனதை விட்டகலாததாகும்.

திருப்பரப்பு கிராமத்தில், திருப்பரப்பு மகாதேவர் கோவில் உள்ளது. இது மாவட்டத்திலுள்ள 12 சிவன் கோவில்களிலொன்றாகும். இக்கோவில் மேற்கு நோக்கியுள்ளது. முதன்மையான இறைவன் "வீரபத்திரர்" ஆவார். தக்கலையை அழித்த பின்னர், தனது தலையினை குளிரச் செய்ய, சிவபெருமான் இந்த அழகான இடத்தைத் தேர்ந்தெடுத்தார். இங்கு சிவபெருமான் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த போது, அவரது கோபமான முகத்தைக் காண அச்சப்பட்ட நந்திகேஸ்வரர் வடபுறம் திரும்பியமர்ந்தார். அதனால்தான், இங்கு மகாதேவர் கீழ்புறம் நோக்குவதற்கு பதிலாக, மேல்புறம் நோக்கி அமர்ந்தாரென கூறப்படுகிறது. ஒன்றரை ஏக்கர் நிலத்தில் அமைந்துள்ள இத்திருக்கோவிலில் இரு பிரகாரங்கள் உள்ளன. அதில், முதல்பிரகாரத்தில் அருவிக்கு செல்லக் கூடிய மலையூடுவழி ஒன்றிருப்பதாகக் கூறப்படுகிறது. மண்டபத்தின் ஒருபுறம் அம்பாளும், மற்றொரு புறம் விநாயகரும் வீற்றிருக்கின்றனர். இரண்டாவது பிரகாரத்தில், கண்ணனும் முருகனும் அருள்பாலிக்கின்றனர்.

கி.மு. 13-வது நூற்றாண்டில், இத்திருக்கோவில், ஒரு புகழ்பெற்ற சிவன் கோவிலாக இருந்தது. அனைத்து இடங்களிலிருந்தும் மக்கள் இத்திருக்கோவிலுக்கு வருகை தந்த வண்ணமாக இருந்தனர். பல கல்வெட்டுக்கள் இத்திருக்கோவிவில் உள்ளன. அவற்றிலொன்றில் கீழ்க்கண்டவாறு, பொறிக்கப்பட்டுள்ளது[109]:

"வெற்றி, நிலைத்த நல் வாழ்வுற்ற நிலை மகிழ்ச்சி,
செல்வச் செழிப்பு மற்றும் மக்கள் வளமுடன்
வாழ்தல், போன்றவற்றிற்கு, சிவபெருமான்
முழுப்பொறுப்பினையும் ஏற்று, அவ்வாறே செயல்படுகிறார்".

உதயகிரிக் கோட்டை

திருவாங்கூர் - நாகர்கோவில் நெடுஞ்சாலையிலுள்ள புலியூர்குரிச்சி என்ற இடத்தில், பத்மநாபபுரம் கோட்டைக்கு அருகாமையில், உதயகிரிக்கோட்டை உள்ளது. திருவாங்கூர் மன்னர்கள், பத்மநாபபுரத்தைத் தலைநகராகக் கொண்டு அரசாண்ட காலத்தில், உதயகிரிக்கோட்டை தான், மிக முக்கிய படைப்பிரிவுத் தளமாக இருந்து வந்தது. இது, நாகர்கோவிலிலிருந்து 14 கிலோ மீட்டர் தொலைவிலும், தக்கலை மற்றும் பத்மநாபபுரம் ஆகிய இடங்களிலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தொலைவிலும் உள்ளது. அதனை ஒரு தேசிய நினைவுச் சின்னமாக அறிவித்திட, பூர்வாங்க அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது[110].

இது, தனிப்படுத்தப்பட்ட சிறு குன்றினைச் சுற்றியுள்ள மிகப்பெரிய கருங்கல்லினால் கட்டப்பட்டதாகும். இது ஏறத்தாழ 90 ஏக்கர் சுற்றளவுள்ள நிலத்தில், 260 அடி உயரத்தில் கட்டப்பட்டதாகும். இது, கி.பி. 1600 ஆம் ஆண்டு, புதுப்பிக்கப்பட்டது. இக்கோட்டை, இராச ராச சோழனால் தகர்க்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.[111] கி.பி. 1741-44-ல் வேநாடு மன்னர், மார்த்தாண்ட வர்மா அரசாண்ட காலத்தில், இக்கோட்டை, மறுமுறை கட்டப்பட்டது. பெல்ஜியம் படைப்பெருந்தலைவரும், திருவாங்கூர் இராணுவத்தின் முதன்மை தளபதியாகப் பணியாற்றியவருமான டீ லானாய் (Delennoy) மேற்பார்வையில், 19ஆம் நூற்றாண்டின் மையக்காலம் வரை, கிழக்கிந்தியக் கம்பெனியின் படைகள் அங்கு நிலைத்திருந்தன. படைப்பெருந்தலைவரின் தலைமையில், துப்பாக்கிகள், சிறு பீரங்கிகள் மற்றும் பீரங்கிக் குண்டுகள் ஆகியவை உற்பத்தி செய்யும் வார்ப்படச் சாலை கோட்டைக்குள்ளேயே நிறுவப்பட்டது[112].

பண்டைக்காலத்தில், கோட்டை போர்த்திரன் முக்கியத்துவம் வாய்ந்ததாகத் திகழ்ந்தது. திப்புவிடம் போரிட்டபோது, கைது செய்யப் பட்ட, கைதிகள், சிலகாலம் இக்கோட்டையில்தான் சிறைவைக்கப்பட்டனர். வேலுத்தம்பி தளவாயின் தலைமையில் உருவான எதிர்க்கிளர்ச்சிப் படையினை முறியடிக்க, கி.பி. 1810 ஆம் ஆண்டு, கிழக்கிந்தியக் கம்பெனியின் படைத் துணைத் தலைவர் புனித லீகரின் (St.leger) தலைமையில், ஆங்கிலப்படை ஆரம்பொலிக் கணவாய் வழியாக திருவாங்கூர் மாநிலத்தினுள் அணிவகுத்துச் சென்றது. இறுதியில் கோட்டை கைப்பற்றப்பட்டது. கோட்டையினுள் 100 துப்பாக்கிகளும், 50,000 நிலையடுக்கு கொண்ட போர்க்கலங்கள் ஆகியவை, இருந்ததாக, படைப்பகுதித் துணைத் தலைவர் வெல்ஷ் (Colonel Welsh) தனது, போர்வீரர்கள் சார்ந்த முன் நினைவுச் செய்திகளின் இலக்கியவடிவான திரட்டில், பதிவு செய்துள்ளார். 22 பவுண்டு எடைக் குண்டுகளையுடைய 16 அடி நீளமான பித்தளைத் துப்பாக்கி, கோட்டையில் காணப்பட்டதாகவும், அதனை, பெரிய அளவிலான மக்கள் மற்றும் 16 யானைகளின் உதவியுடன் சில அடிகள் கூட, அகற்ற முடியவில்லையெனக் கூறப்படுகிறது. 19ஆம் நூற்றாண்டின் மையக்காலம் வரை, கம்பெனியின் படைகள் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

டீ லானாய் மார்த்தாண்ட வர்மனிடம், தொடர்ந்து 37 ஆண்டுகள், பற்றுதியுடன் பணியாற்றி வந்தார். தற்கால போர் முறையில், அவரது படை வீரர்களுக்கு, நன்கு பயிற்சியளித்தார். அவர், அவரது குடும்பத்தினருடன் பல ஆண்டுகள் கோட்டையிலேயே வாழ்ந்து வந்தார். அவர் 1.6.1777 அன்று தனது 62வது வயதில் காலமானார். அவரது உடல், கோட்டை வளாகத்தினுள் நல்லடக்கம் செய்யப்பட்டது. அவரது உடல் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில், கல்லறை கட்டப்பட்டது. கோட்டையிலுள்ள டீ லானாயின் மனைவி, அவரது மகன் ஆகியோரது உடல்களும், அவரது கல்லறைக்கு அருகாமையிலேயே நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன.

கோட்டையின் தென் மேற்கு மூலையில், நெடுஞ்சாலையை நோக்கி, ஒரு பயணிகள் விடுதி உள்ளது. கோட்டையில், பயணிகள் விடுதிக்கு அருகாமையில், ஒரு முகாம் கூடம் உள்ளது. பயணிகள் விடுதிக்கு ஒரு சில மீட்டர்களுக்குப்பால், பாறையின் மீது, ஒரு ரோமன் கத்தோலிக்கக் கிறித்துவத் திருக்கோவில் கட்டப்பட்டுள்ளது. அதே பாறையில், அத்திருக்கோவிலுக்கு முன்னே, ஒரு நீருற்று காணப்படுகிறது. பத்மநாபபுரம் அரண்மனையில் அலுவலராக இருந்த தேவசகாயம் பிள்ளையின் சாதனையால் இவ்வூற்று தோன்றியதாகக் கூறப்படுகிறது. படையின் பெருந்தலைவரான டீ லானாய், தேவசகாயம் பிள்ளையின் நெருங்கிய நண்பராக இருந்தாரெனவும், அவரது செல்வாக்கினால் தான் தேவசகாயம் பிள்ளை கிறித்தவ சமயத்திற்கு மாறிவிட்டதாகக் கூறப்படுகிறது.

இதனை திருவாங்கூர் மன்னர் விரும்பாததால், அவர் தேவசகாயம் பிள்ளையிடம் தனது முடிவினை மாற்றிக் கொள்ளக் கோரினார். ஆனால், தேவசகாயம் பிள்ளை மன்னரின் கோரிக்கையினை ஏற்றுக் கொள்ளவில்லை. தேவசகாயம் பிள்ளை சிறை தண்டனை அனுபவிக்கும்போது, ஒரு பெரிய வியக்கத்தகு நிகழ்ச்சி நேர்ந்ததாகக் கூறப்படுகிறது. அவர் அங்குள்ள பாறையினை தனது முழங்கையினால் முட்டியதாகவும் அப்போது பாறையினின்றும் நீர் பீறிட்டு வழிந்ததாகவும் கூறப்படுகிறது. இப்பாறை தற்போது "முட்டிடிச்சான் பாறை" என அழைக்கப்படுகிறது[113].

கோட்டையின் எதிரே ஒரு கிராமம் உருவாகியுள்ளது. இங்குள்ள மக்கள் அனைவரும், பெரும்பாலும் வேளாண்குடிமக்களாவர். அவர்களின் சிலர், வணிகத்திலீடுபட்டுள்ளனர். ஒரு பிரிவு மக்களின் முக்கியத் தொழில் மண்பாண்டங்கள் செய்வதாகும். ஒரு தீக்குச்சித் தொழிற்சாலையும், மாச்சத்துத் தொழிற்சாலையும் இங்கு உருவாகியுள்ளன. அவற்றில், இப்பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இரும்புப் பாதுகாப்பு பெட்டகங்கள், எஃகு அலமாரிகள், ரொக்கப் பெட்டிகள், கொதிகலன்கள், எஃகு பெட்டிகள், கருப்புகட்டி கொதிக்க வைக்கும் இயந்திர சாதனங்கள், நெல் கொதிகலன்கள், வேளாண் கருவிகள், எலுமிச்சை புல் எண்ணெய் ஆகியவை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்று இங்கு இயங்கி வருகின்றது. பயணிகள், விடுதிக்கருகில் ஒரு கிளை அஞ்சல் நிலையம்

உள்ளது. இரண்டு அறைகளையுடைய பொது மராமத்துத் துறையைச் சேர்ந்த ஓர் ஓய்வு விடுதியும் இங்கு நிறுவப்பட்டுள்ளது[114].

வடசேரி, மக்கள் தொகை - 5,067

இது நாகர்கோவில் நகரத்தின் ஒரு பகுதியாகும். நல்ல ரக பருத்தி துணிகளை உற்பத்தி செய்யும், நெசவுத்தொழில் மையமாக இது திகழ்கிறது. மாவட்டத்திலேயே மிகப் பெரிய சந்தை இங்கு தான் கூடுகிறது. இந்த தினசரி சந்தை "வடசேரி பொது சந்தை" என அழைக்கப்படுகிறது. காய்கறிகள் மற்றும் பழங்கள் வாங்கவும், விற்கவும், இங்கு நாள்தோறும் 10,000 மக்கள் கூடுகின்றனர். இது கால்நடை விற்பனைக்கு குறிப்பாக உழவு மாடுகள் விற்பனைக்கு பெயர் பெற்றதாகும். இங்கு பல்வேறு வகைப்பட்ட வாழைப் பழங்கள் விற்கப்படுகின்றன. மேலும், கேரள மாநிலம், திருவனந்தபுரம், கொல்லம் மற்றும் இதர இடங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அது, மரங்கள் மற்றும் செம்பு பித்தளைப் பாத்திரங்கள், இரும்பு பொருட்கள், மரச்சாமான்கள், கயிறு பொருட்கள், பாய்கள் ஆகியவை தொடர்பான வணிகமையமாகும். இங்கு பல கைத்தறிக் கூட்டுறவு சங்கங்களும், ஒரு சில எண்ணெய் ஆலைகளும் உள்ளன.

வாள்வச்ச கோஷ்டம் (கல்குளம் வட்டம்), மக்கள்தொகை - 30,883 (ஆண்கள் - 15,829 + பெண்கள் - 15,054)

வால்வச்ச கோஷ்டம், நாகர்கோவில் - திருவனந்தபுரம் சாலையில், கோட்டாத்துறையிலிருந்து 2 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இவ்விடத்தின் பெயரினது தோற்றம், ("பரசுராம" ருடன் இணைத்துக் கூறப்படுகிறது. கோகர்ணத்திற்கும், கன்னியாகுமரிக்கும் இடைப்பட்ட நிலப்பகுதியான கேரளம், கடலினின்றும் மீட்கப் பட்டதாகவும், அது பின்னர் பரசுராமர் கோஷ்டம் (பரசுராமரின் இருப்பிடம்) என அழைக்கப் படலாயிற்றெனவும் பழங்கதை மரபு கூறுகின்றது. தனது தந்தை ஜமதக்னி முனிவரது விருப்பத்தைப் பூர்த்தி செய்ய, பரசுராமர் தனது தாய் ரேணுகா அம்மையாரை கொலை செய்ததாகவும் பின்னர், தான் செய்த பாவம் களையப் பெற, படித்த பிராமணர்களின் அறிவுரையை நாடியதாகவும், அவர்கள், பரசுராமரை தனது எல்லையை விட்டகன்று, இமயமலை சென்று தவம் செய்து, அழியவிருக்கும் தனது உயிரைக் காப்பாற்றிக் கொள்ள அறிவுரை வழங்கியதாகவும், அப்பழங்கதை மரபு மேலும் கூறுகிறது[115]. அதன்படி, பரசுராமர் தனது வில்லை (பரசு) ஒரு இடத்தில் வைத்துவிட்டு, இமயமலைக்குச் சென்று விட்டதாகவும் அவ்விடம் பின்னர் பரசுவாக்கல் (கேரள மாநிலத்திலுள்ள நெய்யாத்தங் கரை) என அழைக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது. அதே போன்று அவர் தனது வாளை இவ்விடத்தில் விட்டுச் சென்றதாகவும், அதிலிருந்து இவ்விடம் வாள்வச்ச கோஷ்டம் (கோஷ்டம் எனில் கோவில் என பொருள்படும்) என அழைக்கப்படுவதாகவும் தெரிகிறது. பின்னர், சேர மன்னர், இவ்விடத்தில், ஒரு பெரிய கோவிலைக் கட்டினார்.

அக்கோவில் பகவதி அம்மனுக்கு நேர்த்தளிக்கப்பட்டது. அம்மனது கையிலுள்ள வாள் பரசுராமரது வாள் எனக் கூறப்படுகிறது சேரமன்னரால் கட்டப்பட்ட இத்திருக்கோவில் மிகப் பழமை வாய்ந்த தெனவும், மிக உயர்ந்ததெனவும் அனைவராலும் கருதப்படுகிறது. தொன்மையான திருவாங்கூர் பெருமாள் மன்னர்கள் தங்களது முடிசூட்டு விழா நடைபெறுமுன்னர், இக்கோவிலுக்கு வந்து வழிபட்டுச் செல்வதுண்டு.

இத்திருக்கோவிலின் பெண் தெய்வம், "மகிஷாசுர மர்த்தினி"[116]. முக்கியமான ஆண்டுத் திருவிழா, வைகாசி மாதம் (மே/சூன்) நடைபெறுகிறது. மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் திரளான மக்கள் இங்கு கூடுகின்றனர்.

இக்கிராம மக்களின் முக்கியத் தொழில் வேளாண்மையே, நெடுஞ்சாலையிலிருந்து 2 கி.மீ. தொலைவில் கட்டுத்துறையில் ஒரு உயர்நிலைப்பள்ளியும், உட்புறம் மூன்று கிலோ மீட்டர் தொலைவில், பள்ளியாடியில், மற்றொரு பள்ளியும் இயங்கி வருகின்றன. இக்குக்கிராமம் வாள் வச்ச கோட்டம் ஊராட்சிப் பகுதியிலடங்கியுள்ளது.

வட்டக்கோட்டை (அகஸ்தீஸ்வரம் வட்டம்)

நாஞ்சில் நாட்டில் தற்காப்புக்காக, மன்னர் மார்த்தாண்டவர்மனால், கட்டப்பட்ட தென் திருவாங்கூர் "அரண் வரிசை" என அழைக்கப்படும், அரண் வரிசையிலுள்ள மதில்களின் கடைக்கோடி முடிவாக, வட்டக் கோட்டை கட்டப்பட்டது.[117] இது, கன்னியாகுமரி முனைக்கு வடகிழக்கே ஆறு கிலோ மீட்டர் தொலைவிலமைந்துள்ள கருங்கற்கோட்டையாகும். நீள்சதுர வடிவிலுள்ள இக்கோட்டை, 3½ ஏக்கர் நிலப்பரப்பினைக் கொண்டதாகும். கோட்டையைச் சுற்றி கைப்பிடிச் சுவரையும் சேர்த்து 25 முதல் 26 அடி உயரத்தில், மதில் சுவர் உள்ளது. இவற்றின் கனம், முன்புறம் 29 அடியாகவும், மூலையில், 18 அடியாகவும், பின்புறம் 6 அடியாகவும் உள்ளன. கி.பி. 1729 முதல் 1758 வரை, மார்த்தாண்டவர்மன் அரசோச்சிய காலத்தில், போர்ப்படை பெருந் தலைவர், டீ லானாயின் ஆணையின்படி, இப்பகுதி, மிகவும் வலிமையுள்ளதாகக் கட்டப்பட்டது. கி.பி. 1810-ம் ஆண்டு, ஆங்கிலேயப்படை லீகர் தலைமையில் ஆரம்பொலி கணவாய் வழியாக நாஞ்சில் நாட்டினுள் அணி வகுத்து தற்காப்பு அரண் வரிசையினை அழித்தது. கோட்டையின் அருகில் செல்லும் ஆறு, சுற்றிலும் உள்ள பசுமையான தாவரங்கள் ஆகியவை, கோட்டையின் அழகிற்கு அழகு சேர்க்கின்றன. இது தற்போது ஒரு விடுமுறைக்கால பொழுது போக்கிடமாகவும், இனிய விருந்துண்ணும் மையமாகவும் கருதப்படுகிறது.

பத்மநாபபுரம் அரண்மனையை இணைக்கக்கூடிய 4 அடி அகலமுள்ள ஒரு சுரங்கப்பாதை இருந்து வந்ததாக கூறப்படுகிறது. தற்போது அச்சுரங்கப் பாதை மூடப்பட்டுவிட்டது. கோட்டையின் வடப்புறத்தில் சரிவாக உள்ளது.

அது கீழேயுள்ள பள்ளத்தாக்கிற்கு செல்கிறது. அருகில் ஆறடி சுற்றளவுள்ள ஒரு கிணறு உள்ளது. கோட்டையைச் சுற்றியுள்ள சுவர் முழுவதும் பழுது பாக்கப்பட்டு நன்கு பாதுகாக்கப்பட்டு வருகிறது.

வட்டக்கோட்டையின் வரலாறு குறித்து மிகவும் அதிகமாகக் கூறக்கூடிய இலக்கிய அல்லது கல்வெட்டு ஆதாரங்கள் எவையுமில்லை. எனினும், இக்கோட்டை ராணுவ படைத்தளமாக இருந்து வந்திருக்கிறது. விலை மதிப்புள்ள முத்துக்கள் எடுக்கும் குமரி கடற்கரையை இப்படைத்தளம் பாதுகாத்து வந்ததாக, கோட்டையிலுள்ள சான்றுகளினின்றும் தெரியவருகிறது. பாண்டிய மன்னர்களின் மரபுச்சின்னம், மீனாதலால், கோட்டையின் சில இடங்களில் நாம் இம்மரபுச் சின்னத்தினைக் காண்கிறோம். இதிலிருந்து, பாண்டிய மன்னர்கள் சில காலம் இக்கோட்டையினை தங்கள் கட்டுப்பாட்டினில் வைத்திருந்ததாக தெரிய வருகிறது[118].

வட்டக் கோட்டையினையடுத்த லீபுரத்தில் ஒரு கலங்கரை விளக்கம் இருந்ததற்கான தடயங்களை நாம் காண்கிறோம். கி.பி. 1806 ஆம் ஆண்டு கடுக்கரை கன்னியாகுமரி கோட்டைக்கு சேதம் விளைவித்த படைத் தளபதி லீயின் பெயர் இக்கிராமத்திற்கு சூட்டப்பட்டுள்ளது. இது ஒரு சுற்றுலாத் தலமாக கருதப்படுகிறது. இங்கு கடல் மிகவும் அமைதியாக உள்ளதால், கடலில் குளிப்பதற்கு மிகவும் ஏற்ற இடமாகும். மகேந்திரகிரியில், 1986ஆம் ஆண்டு இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் நிறுவப்பட்டுள்ளது.

குறிப்புகள்

1. இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு, 1961 கன்னியாகுமரி மாவட்டம், பகுதி XIII சென்னை.
2. எஸ். பத்மநாபன், குமரி மாவட்டக் கோவில்கள், நாகர்கோவில், 1970, பக்கம் 25
3. அகஸ்தீஸ்வரம் பஞ்சாயத்து யூனியன், ஆணையரின் அறிக்கை, நாள் 15–11–1988
4. முதல்வர், விவேகானந்தர் கல்லூரியின் அறிக்கை நாள் 3.4.1987
5. தோவாளை பஞ்சாயத்து ஆணையரின் அறிக்கை நாள் 28.11.1988
6. எமிலி கில்கிறிஸ்ட் கேட்ச், (Emily, Gilchrist Catch), திருவான்கூர், லண்டன் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம். 1933.
7. பி. சங்குண்ணி மேனன் (P. Shangunny Menon) A Histroy of Travancore, from the Earliest times 1878, Page 115
8. எஸ். பத்பநாபன், குமரிமாவட்டக் கோவில்கள், 1970, பக்கம் 61 – 65
9. கல்லூரிக்கல்வி மண்டல துணை இயக்குநர் திருநெல்வேலி, அறிக்கை நாள் 17–12–1987.
10. தோவாளை பஞ்சாயத்து யூனியன் ஆணையரது அறிக்கை நாள் 3.11.1988
11. வீ. நாகம் அய்யா (Travancore State Manual) தொகுதி III பக்கம் 575
12. எமிலி ஜி. காட்சி அதேநூற் பகுதி பக்கம் 236
13. ரா.பி. சேதுப்பிள்ளை. ஊரும் பேரும் 1946, பக் 99
14. எஸ். பத்பநாபன், Forgotton History of the Lands End. 1971, பக் 90
15. ரா.பி.சேதுப்பிள்ளை பக் 99
16. தோவாளை பஞ்சாயத்து யூனியன் ஆணையரது அறிக்கை நாள் 3.11.1988
17. அதே அறிக்கை
18. எஸ். பத்பநாபன், குமரி மாவட்டக் கோவில்கள், பக் 101
19. ரா.பி. சேதுப்பிள்ளை, பக் 98
20. தோவாளை பஞ்சாயத்து ஆணையரின் அறிக்கை
21. எஸ். பத்பநாபன், OP.Cit. பக் 127
22. இ.ஜி.கேட்ச், பக்கம் 207,
23. தென்னிந்தியக் கல்வெட்டுக்கள், தொகுதி V எண்கள் 321, 324 மற்றும் 326
24. எஸ். பத்பநாபன், பக்கம் 130
25. கன்னியாகுமரி மாவட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பு கையேடு – 1961
26. அதே நூல்
27. வி. நாகம் அய்யா, அதே நூல், பக்கம் 582
28. மாநில துறைமுக அலவலகம், சென்னை அறிக்கை நாள் 17.7.1986
29. எமிலி.ஜி.கேட்ச், அதே நூற்பகுதி, பக்கம் 224.
30. கன்னியாகுமரி மாவட்டம் ஆட்சித்தலைவரின் அறிக்கை
31. இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு–1991

32. வி. நாகம் அய்யா, அதே நூல், பக்கம் 584
33. கன்னியாகுமரி மாவட்ட கடன் திட்டம் (Credit Plan), 1988–90
34. கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவரின் அறிக்கை நாள். 28.10.1987
35. இந்தியமக்கள் தொகை கணக்கெடுப்பு 1991.
36. கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவரின் அறிக்கை, நாள் 28.10.1987
37. வட்டாட்சியர்–அகஸ்தீஸ்வரம், அறிக்கை நாள் 28.11.1988
38. அதே அறிக்கை.
39. எமிலி. ஜி. காடச், பக்கம் 233–34
40. பொதுச்செயலாளர். விவேகானந்தர் கேந்திரம், அறிக்கை நாள் 24.11.1988
41. விவேகானந்தர் நினைவு மண்டபத்தின கதை (The Tale of Vivekanandha Rock Memorial), விவேகானந்தா கேந்திரம் பதிப்பு – பக்கங்கள் 50–52
42. எஸ். பத்பநாபன்–கன்னியாகுமரி மாவட்டக் கோவில்கள் பக்கம் 7
43. விவேகானந்தா நினைவு மண்டபத்தின் கதை.
44. பொதுச்செயலர், விவேகானந்தா கேந்திரம், அறிக்கை நாள், 24.11.1988
45. விவேகானந்தர் நினைவு மண்டபத்தின் கதை,
46. பொதுச்செயலர், விவேகானந்தா கேந்திரம் அறிக்கை.
47. விவேகானந்தர் நினைவு மண்டபத்தின் சட்டதிட்டங்கள் (Memorandum and Rules) 1954.
48. எமிலி. ஜி.காட்சி, அதே நூல், பக்கம் 245
49. கன்னியாகுமரி மாவட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பு, 1981 பகுதி XIII, A & B பக்கம் 15
50. மாநில துறைமுக அலுவலரின் அறிக்கை (State port officer) நாள், 17.7.1986 மற்றும் 12.10.1987.
51. எஸ். பத்பநாபன், குமரி மாவட்டக் கோவில்கள், பக்கங்கள் 118 மற்றும் 119.
52. அதே நூல், பக்கம் 138
53. எமிலி. ஜி. காட்ச்., பக்கம் 200–201
54. கன்னியாகுமரி மாவட்ட கடன்திட்ட அறிக்கை (Credit plan and Annual Action plan) 1988
55. மண்டல கல்லூரிக் கல்வித்துறை துணை இயக்குநரது அறிக்கை நாள். 17.12.1987
56. குழித்துறை, நகராட்சி ஆணையரது அறிக்கை, நாள். 17.8.1988
57. எஸ். பத்மநாபன், கன்னியாகுமரி மாவட்டக் கோவில்கள், பக்.12
58. செயற் பொறியாளர், (PWD), கன்னியாகுமரி அறிக்கை நாள். 18.11.1988
59. எஸ். பத்பநாபன், குமரி மாவட்டக் கோவில்கள், பக்கம்.166
60. கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியரின் அறிக்கை.
61. வி. நாகம் அய்யா, அதே நூல்
62. மேல்புர, பஞ்சாயத்து யூனியன் ஆணையரது அறிக்கை, நாள் 13.1.1989
63. வரலாற்றில் மண்டைக்காடு ஜீ.டி. விக்ரமன் தம்பி மற்றும் எஸ். செண்பக பெருமாள், பக்கங்கள் 30–36

64. மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர், கன்னியாகுமரி, அறிக்கை 1982
65. கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவரின் அறிக்கை
66. கன்னியாகுமரிக்கு வாருங்கள் (Welcome to Kanniyakumari) பயணியர் வருகை பற்றிய ஆலோசனைக்கமிட்டி கன்னியாகுமரி மாவட்டம், 1980.
67. எஸ். பத்மநாபன் (Forgotten History of Lands' End)
68. இயக்குநர், கலங்கரை விளக்கம் (Light House and Light Ships) சென்னை நாள், 23.7.1986
69. இந்திய வெளியீடு, West Coast of India Pilot - Chief Hydrographs, முதல் பதிப்பு 1981
70. வி. நாகம் அய்யா, பக்கம் 590
71. எஸ். பத்நாபன், குமரிமாவட்டக் கோவில்கள் பக்கங்கள் 50–53
72. எஸ். பத்நாபன், நாகராஜர்கோவில் 1969 பக்கங்கள் 8–9
73. கன்னியாகுமரி மாவட்டம், ஒரு சிறு குறிப்பு– மாவட்ட ஆட்சித்தலைவர்
74. அதே நூல்
75. அதே நூல்
76. எஸ். பத்நாபன், குமரி மாவட்டக் கோவில்கள் பக்கங்கள் 53–54
77. கன்னியாகுமரி மாவட்டம்– ஒரு சிறு குறிப்பு
78. அதே நூல்
79. அதே நூல்
80. அதே நூல்
81. எஸ். பத்நாபன் – Three Historic churches in Kanniyakumari 1987 பக்கங்கள் 10–12
82. எஸ். பத்நாபன் தமிழ்உலகிற்கு கன்னியாகுமரி அளித்த கொடை (Contribution of Kanniyakumari to Tamil World) 1981 – நாகர்கோவில் – பக்கங்கள் 21–22
83. நாகர்கோவில் நகராட்சி ஆணையரது அறிக்கை நாள் 1.2.1987
84. அதே அறிக்கை
85. திருவாங்கூர் தொல்பொருள் தொகுதி (Travancore Archaeological Service), தொகுதி VI – பகுதி 1, பக்கம் 1
86. பெண்கள் பள்ளி ஆய்வாளர் (inspectors of Girsl Schools) நாகர்கோவில், அறிக்கை, நாள் 17.9.1987
87. கன்னியாகுமரி மாவட்ட கற்றுலா அலுவலர் அறிக்கை நாள் 5.9.1986.
88. வி. நாகம் அய்யா, அதே நூல்
89. என்.ஜி. உன்னிதன்–பத்மநாபபுரம் அரண்மனை ஒரு வழிகாட்டி நூல்
90. எஸ்.பத்நாபனின் கட்டுரை – இந்தியன் எக்ஸ்பிரஸில் வெளிவந்தது நாள் 20.8.1988
91. என்.ஜி.உன்னிதன், அதே நூல்
92. எஸ். பத்மநாபனின் அதே கட்டுரை
93. மாவட்ட ஆட்சியரின் அறிக்கை
94. அதே நூல்

95. டி.என். நீலகண்டலு, சுசீந்திரம் கோவில் –1984
96. அதே நூல், பக்கம் 32
97. அகஸ்தீஸ்வரம் வட்டார வளர்ச்சி அலுவலரின் அறிக்கை நாள் 25.1.1988
98. தோவாளை, பஞ்சாயத்து ஆணையரது அறிக்கை நாள் 20.11.1988
99. மாவட்ட ஆட்சியரது அறிக்கை நாள் 28.10.1987
100. அதே நூல்
101. எஸ். பத்மநாபன், குமரி மாவட்டக் கோவில்கள், 1970, பக்கம் 53
102. அதே நூல் பக்கங்கள் 55–56
103. அதே நூல் பக்கங்கள் 58–59
104. கன்னியாகுமரிக்கு வாருங்கள், (Welcome to Kanniyakumari)
105. மக்கள் தொகை கணக்கெடுப்பு, 1961, பக்கம் 15
106. கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியரின் அறிக்கை
107. கன்னியாகுமரி மாவட்டம் – ஒரு சிறு குறிப்பு ஆட்சித்தலைவர்
108. கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியரின் அறிக்கை
109. எஸ்.பத்மநாபன், குமரிமாவட்டக் கோவில்கள் பக்கங்கள் 179–183.
110. இயக்குநர், தொல்பொருள்துறைஅறிக்கை நாள். 7.12.1988
111. எஸ். பத்மநாபன், குமரிமாவட்டக் கோவில்கள் 179–183
112. மக்கள் தொகை கணக்கெடுப்பு, 1981, பகுதி, XIII - A & B, பக்கம் 15
113. மாவட்ட ஆட்சித்தலைவரின் அறிக்கை
114. மாவட்ட சுற்றுலா அலுவரின் அறிக்கை 19.7.1986
115. மாவட்ட ஆட்சியரின் அறிக்கை நாள் 28.10.1987
116. எஸ். பத்மநாபன் குமரி மாவட்டக் கோவில்கள், பக்கம் 151
117. மக்கள் தொகை கணக்கெடுப்பு, பகுதி, XIII - A & B, பக்கம் 15
118. எஸ். பத்மநாபன், குமரிமாவட்டக் கோவில்கள், பக்கங்கள் 1–8

தேர்ந்தெடுக்கப்பெற்ற நூற்பெயர்க்கோவை

1. அகமது, .இ — இந்தியாவில் மண் அரித்தழிப்பு – பம்பாய் (1973)
2. ஆகூர், சி.எம். — திருவாங்கூர், கிறித்தவத் திருக்கோயில் வரலாறு – சென்னை (1902)
3. கால்டுவெல் — திருநெல்வேலியின் வரலாறு சென்னை (1881)
4. சாம்பியன், எச்.ஜி. — காடுகளின் தொகுதி – இலண்டன் (1954)
5. டானியல், டி. — திருவாங்கூரின் பொறுப்புள்ள அரசு அமைக்கப் போராட்டம் – மதுரை (1985)
6. டேவிட். ஜே. பிரிகிள் மற்றும் ஃப்ராங்க் எம். கர்ட்டசி — வேளாண்மை மற்றும் சுற்றுச்சூழல் (1985)
7. கட்காரி டி.ஏ. — இந்தியாவில் இயந்திர நுட்பம் சார்ந்த வேளாண்மை (1957)
8. கோபிநாத ராவ், டி.ஏ. — திருவாங்கூர் தொல்பொருள் ஆராய்ச்சித் தொடர்
9. ஹாட்சி, இ.ஜி. — திருவாங்கூர் – பார்வையாளருக்கு ஒரு வழிகாட்டி நூல் இலண்டன் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக அச்சகம் (1933)
10. ஹென்றி, ஏ.என் மற்றும் சுவாமிநாதன், எம்.எஸ். — கன்னியாகுமரி மாவட்ட தாவர வளர்ச்சியின் கூர் நோக்கு – தமிழ் நாடு இந்திய தாவரவியல் ஆய்வுத்துறை வெளியீடு – தொகுதி–23, எண்.3 மற்றும் 4 (1981)
11. ஜெகதீசன் .பி. — சென்னை மாகாணத்தில் சட்டமும், ஒழுங்கும், 1850 – 1880
12. கிருஷ்ணன், .வி. — தென்னிந்தியாவில் திணைத் தோன்றலான வங்கித் தொழில் பம்பாய் (1959)
13. மெக்ளின் — சென்னை மாகாணத்தின் நிருவாக நடை முறை நூல் சென்னை தொகுதி–3 (1864)
14. மாதவன் வி.ஆர். — சித்த மருத்துவ கையெழுத்துப்பிரதி அனைத்து நாட்டுத் தமிழ்க்கல்வி நிறுவனம், சென்னை
15. மாணிக்கவாசகம், எம்.இ. — பி.எஸ்.மோணி– ஒரு வாழ்க்கை வரலாற்று இலக்கியம், நாகர் கோவில் (1987)
16. மாஸ்ஃபீல்டு, .ஜி. — நிலவுலக வெப்ப மண்டலப் பகுதி சார்ந்த வேளாண்மை பற்றிய கையேடு, – இலண்டன் (1949)

17. மீ மானஸ் காலின்ஸ்,பி. மற்றும் ஃரெட் எம். ஓயிட் — தொடக்கக் காட்டுத் தொகுதி, வெர்ஜீனியா (1981)

18. மேனன், சங்குண்ணி — பண்டை கால முதல் திருவாங்கூர் வரலாறு திருவனந்தபுரம் (1878)

19. மைக்கேல், ஏ.எம். — நீர்ப்பாசனம் – புனைகருத்து மற்றும் நடைமுறைப்பழக்கம், புதுடில்லி (1978)

20. நாகம் அய்யா. வி. — திருவாங்கூர் மாநில நடைமுறைநூல் தொகுதிகள்–1,2 மற்றும் 3, திருவனந்தபுரம் (1906)

21. நீலகண்ட சாஸ்திரி. கே.ஏ. — 1. தென்னிந்திய வரலாறு, சென்னை, ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழக அச்சகம், (1976) – நான்காம் பதிப்பு

2. பாண்டியப் பேரரசு, சென்னை (1929) – (மறுபதிப்பு – 1972)

3. சோழர்கள் – சென்னை பல்கலைக் கழக வெளியீடு – சென்னை (1935)

4. சோழவரலாறு மற்றும் நிருவாகம், சென்னைப்பல்கலைக் கழகம், சென்னை, (1932)

22. நீலகண்டாரு, டி.என். — சுசீந்திரம் திருக்கோயில் – நாகர்கோவில் முன்னோடி முத்து அச்சகம் (1984)

23. பத்மநாபன், எஸ். — 1. கன்னியாகுமரி மாவட்ட திருக்கோவில்கள், நாகர்கோவில் (1970)

2. தமிழ் உலகிற்குக் கன்னியாகுமரியின் பங்களிப்பு

3. நாட்டின் தென் முனையில் மறந்து மறைந்து கிடக்கும் வரலாற்று நிகழ்ச்சிகள், நாகர்கோவில்

24. பிள்ளை, கே.கே. — 1. தமிழர்களின் சமூக வரலாறு – சென்னை பல்கலைக்கழகம் – தொகுதி-1 (1975)

2. சுசீந்திரம் திருக்கோயில் கலாஷேத்திரா வெளியீடு, சென்னை (1953)

25. இராமச்சந்திரன் ,பி. — ஏ.சி. சுந்தரம்பிள்ளை – வாழ்க்கையும், படைப்புகளும் – கேரள வரலாற்றுக் கழகம், திருவனந்தபுரம் (1982)

26. இராமன், கே.வி. பாண்டியர் வரலாறு (தமிழ்) – தமிழ்நாட்டுப் பாட நூல் கழகம், சென்னை (1977)

27. சதாசிவம், சி. சேர நாடும், செந்தமிழும் (தமிழ்)

28. சண்முகம் பிள்ளை கவிமணி வாழ்க்கை (தமிழ்), பாரி நிலையம், சென்னை (1977)

29. சத்தியநாதன், எஸ். சென்னை மாகாணத்தில் கல்வியின் வரலாறு, சென்னை (1894)

30. சேச அய்யர், கே.ஜி. சங்க கால சேரர்கள், இலண்டன் (1937)

31. சேதுப்பிள்ளை, ஆர்.பி. தமிழக ஊரும், பேரும், தமிழ், சென்னை (1946)

32. சிவராஜபிள்ளை, கே.என் பண்டைத் தமிழர்களின் காலக்கணிப்புமுறை நூல், சென்னை (1932)

33. ஸ்ரீதர மேனன், ஏ. திருவனந்தபுரம் மாவட்ட விவரச் சுவடி திருவனந்தபுரம் (1961)

34. சுந்தரம்பிள்ளை, பி. திருவாங்கூரின், சில பண்டைகால முடி மன்னர்கள், சென்னை (1894)

35. உன்னிதன், என்.ஜி. பத்மநாபபுரம் அரண்மனைக்கு ஒரு சிறு வழிகாட்டி, திருவனந்தபுரம், கேரள அரசு அச்சகம் (1978)

36. வைஷ், எம்.சி. சென்னை வங்கித் தொழில், ஜெய்ப்பூர் (1984)

37. வெங்கட்ரங்கய்யா, என். சென்னை மாகாணத்தில் உள்ளாட்சியின் வளர்ச்சி, உள்ளாட்சி அரசு நிறுவனம், பம்பாய் (1938)

38. வித்யாதர் மகாஜன் இந்தியாவில் ஆங்கில ஆட்சியும், அதன் பின்னரும், புதுடில்லி (1976)

39. விக்ரமன் தம்பி. ஜி.டி மற்றும் செம்பகப் பெருமாள், எஸ். வரலாற்றில் மண்டைக்காடு (தமிழ்), மணவாளக்குறிச்சி, திரிவேணி பதிப்பகம், (1988)

40. யாவார்க்கான், கே.எஸ். அகர்வால் ஜே.பி. மற்றும் பாக்டே இயற்கை உரங்களும், வேதியல் சார்ந்த உரங்களும், நாக்பூர் (1971)

அறிக்கைகள் / பருவ இதழ்கள் / பருவ இதழ்ச் சுவடிகள் போன்றவை

1. கடாக்ஷமணி, ஒய்.எஸ்., திருநெல்வேலி தெற்கு காடுகள் கோட்டத்தின் செயற் திட்டம் – 1976–77 முதல் 1985–86 முடிய.
2. தமிழ்நாட்டின் ஆண்டுப்புள்ளிவிவரச் சுருக்கம் – 1984–85, புள்ளிவிவரத்துறை, தமிழ்நாடு அரசு.
3. 1983–84 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாட்டின் பருவ மற்றும் பயிர் அறிக்கை, புள்ளிவிவரத்துறை, தமிழ்நாடு அரசு.
4. நிலத்தை நன்முறையில் பயன்படுத்துவது குறித்த அறிக்கை – இந்திய அரசு, சமுதாய வளர்ச்சி அமைச்சகம், புதுடில்லி, 1957.
5. தமிழ்நாடு மாநில அரசின், வேளாண் துறையைச் சார்ந்த, இழுவை இயந்திர நிறுவனம் தொடர்பான புள்ளி விவர அறிக்கை – 1949–50 முதல் 1957–58 முடிய, புள்ளிவிவர இயக்குநர், தமிழ்நாடு அரசு, 1960.
6. காலியரின் கலைக்களஞ்சியம், நியூயார்க், 1980
7. சென்னைச் செய்தி, 1958.
8. சமூகக் காடுகளின் தொகுதித் திட்ட அறிக்கை – மன்னாய நூல் துறை, பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர், 1983.
9. செயல்நிறைவேற்ற மதிப்பீடு – 1984–85 – கிராமப்புற மற்றும் சிறு தொழில் சாலைகள், தமிழக அரசு.
10. கைவினைக் கட்டளைச் சுவடி, கன்னியாகுமரி மாவட்டம், தமிழ்நாடு 1980 (திருத்தப்பட்டது) – கைவினை விற்பனை மற்றும் பணி விரிவாக்க மையம், நாகர்கோவில்.

    (அகில இந்திய கைவினை வாரியம், வாணிகத்துறை அமைச்சகம், இந்திய அரசு)
11. கன்னியாகுமரி மாவட்டத்தின் விளக்க விவரங்கள் அறியும் ஆய்வு அறிக்கை
12. கன்னியாகுமரி மாவட்டத்தின் கடன் மதிப்புத் திட்டம், தமிழ்நாடு, 1978, முதன்மை வங்கிக் குழு, இந்திய ஒவர்சிஸ் வங்கி.
13. கன்னியாகுமரி மாவட்டத்தின் கடன் மதிப்புத் திட்டம், 1988 – 1990 – மற்றும் ஆண்டு செயல்திட்டம் – 1988.
14. இந்தியாவில், பதின்மான அடுக்காயமைந்த பிரஞ்சு அளவை மேற்கொள்ளப்பட்டமை – ஐந்தாண்டுகள் முன்னேற்றம், இந்திய அரசு (அறிக்கை) – 1962.
15. சென்னையில், பதின்மான அடுக்காயமைந்த பிரஞ்சு அளவை முறை மேற்கொள்ளப்பட்டமை – சென்னை எடைகள் மற்றும் அளவைகள் கணக்குத் தணிக்கையாளரின் அறிக்கை.
16. பதின்மான அடுக்காயமைந்த பிரஞ்சு அளவை முறை நடைமுறைப்படுத்துதல் – சென்னை அரசு – பொதுப்பணித்துறை அறிக்கை – 1963.

17. வேளாண்மை தொடர்பான விளக்க விவரங்கள் மற்றும் புள்ளிவிவரங்கள் பற்றிய குறிப்பு நூல் (ஆறாவது) வெளியீடு – சென்னை அரசு, 1961.

18. பதின்மான அடுக்காயமைந்த பிரஞ்சு அளவைகள் – மாற்றியமைக்கும் பட்டியல்கள், டில்லி, வெளியீட்டுக் கோட்ட இயக்குநரின் வெளியீடு.

19. 1981 ஆம் ஆண்டின் மக்கட்தொகை, கன்னியாகுமரி மாவட்டம், மக்கட்தொகைக் கையேடு, பகுதிகள் "அ" மற்றும் "ஆ".

20. திருவாங்கூர் நிருவாக அறிக்கை – 1981 – 82

21. இந்திய மக்கட்தொகை 1961 – தொகுதி–9 – சென்னை, பகுதி–11–ஆ, சென்னை மாநிலத்தில் உணவுப் பழக்க வழக்கங்கள்.

22. இந்தியப் பொருளியல் நடவடிக்கைக் குறிப்புகள் – 1977, அக்டோபர் முதல் டிசம்பர் வரை.

23. தமிழ்நாடு மாநிலம், கன்னியாகுமரி மாவட்டத்தில் பொருளாதாரப் போக்கு குறித்த அறிகை – ஒரு பொருளாதார மதிப்பீடு – 1986 – 87 – தொகை மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித்துறை.

24. இந்தியா – ஒரு புள்ளிவிவர உருவரைக்குறிப்பு – கல்கத்தா, 1973

25. தமிழ்நாடு புள்ளிவிவரக்கையேடு, 1986

26. 1983–84 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாட்டின் பருவ மற்றும் பயிர் அறிக்கை

27. 1983–84 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாட்டின் ஆண்டுப் புள்ளி விவரச் சுருக்கம் – புள்ளிவிவரத் துறை, தமிழக அரசு.

28. பொதுக் கல்வி அறிக்கைகள் – தமிழ்நாடு (தொடர்புள்ள ஆண்டுகளுக்கானவை)

29. திருவாங்கூர் மாநில நிருவாகம் பற்றிய அறிக்கை (தொடர்புள்ள ஆண்டுகளுக்கானவை)

30. திருவாங்கூர் மக்கட்தொகை அறிக்கைகள், 1909

31. தமிழ்நாடு மாநில நிருவாக அறிக்கைகள் – தொடர்புள்ள துறைகளின் செயல் நிறைவேற்ற மதிப்பீடு அறிக்கைகள்.

32. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் – 1956–61, கன்னியாகுமரி மாவட்டம் சென்னை அரசு.

33. இந்தியாவில் முதல் பொதுத் தேர்தல் அறிக்கை – 1951–52 – தொகுதி–2, (புள்ளிவிவரங்கள்) – இந்திய தேர்தல் ஆணையம்.

34. சென்னை மாநிலத்தில் பொதுத் தேர்தல், 1957 – தேர்தல் புள்ளி விவரங்கள் – பகுபாய்வு, சென்னை அரசு, 1960.

35. 1962 பொதுத் தேர்தல், அறிக்கை, சென்னை அரசு, 1963

36. சென்னையில் நான்காவது பொதுத் தேர்தல் பற்றிய அறிக்கை – தொகுதி – 3

37. சென்னையில் நான்காவது பொதுத் தேர்தல் பற்றிய அறிக்கை – தொகுதி 2

38. தமிழ்நாட்டில் ஐந்தாவது பொதுத் தேர்தல் பற்றிய அறிக்கை – தொகுதி 3, 1971

39. தமிழ்நாட்டில் ஐந்தாவது பொதுத் தேர்தல் பற்றிய அறிக்கை – தொகுதி 2, 1971

40. தமிழ்நாடு சட்டப்பேரவைக்கான 1977 ஆண்டின் ஆறாவது பொதுத் தேர்தல் பற்றிய அறிக்கை

41. தமிழ்நாடு சட்டப் பேரவைக்கான 1977, 1980 மற்றும் 1984 ஆம் ஆண்டுகளில் நடந்த பொதுத் தேர்தல்கள் முடிவுகள் – பொது (தேர்தல்) துறை, தமிழக அரசு.

42. தமிழ்நாடு சட்டப் பேரவை மற்றும் பாராளுமன்றத்திற்கு நடந்த 1984 ஆம் ஆண்டு, எட்டாவது பொதுத் தேர்தல் அறிக்கை.

43. கன்னியாகுமரி மாவட்ட தொழில் நுட்பப் பொருளியல் ஆய்வு அறிக்கை, 1986, சிறு தொழில் பணி நிறுவனம், சென்னை, இந்திய அரசு.

சட்டங்கள்

1. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1958

2. மாவட்ட வளர்ச்சி மன்ற அரசுச் சட்டம், 1958

3. மாநிலங்கள் சீரமைப்புச் சட்டம், 1956.

அருஞ்சொல் விளக்கக் கோவை

1.	அபிமானி	பற்றுமிக்கவர்
2.	அஹல்யா	கௌதம முனிவரின் மனைவி (இந்து சமய புராண இலக்கியம்).
3.	அகஸ்தியர்	இந்து இலக்கியத்தில் கூறப்பட்டுள்ள குள்ள உருவமுடைய மாமுனிவர். ''அகஸ்த்யன்'' என்ற தமிழ் இலக்கணத்தின் ஆசிரியர் (இந்நூல் கிடைக்கப்பெறவில்லை).
4.	அஞ்சல்	முந்தைய திருவாங்கூர் மாநிலத்தில் நடை முறையிலிருந்த கடிதப்போக்குவரத்து (அஞ்சல்) முறை.
5.	அனுசூயா	அத்ரி முனிவரின் மனைவி (இந்து சமய புராண இலக்கியம்).
6.	அர்ச்சகர்	கோயிலில் வழிபாடு நடத்தும் பூசகர் அல்லது பூசாரி
7.	அருவி	நீர்வீழ்ச்சி
8.	பால கேஷத்ரா	குழந்தைகளைப் பேணி வளர்க்கும் பொது நிறுவனம்
9.	பரத நாட்யா	முதல் தரமான இலக்கிய நயம் வாய்ந்த, ஒரு தென்னிந்திய நடனம்.
10.	தளவாய்	முந்தைய திருவாங்கூர் மன்னர்களின் அரசவையில், மதிப்புமிக்க மற்றும் அதிகாரம் படைத்த ஒரு பதவி, (படைத்தலைவர் அல்லது முதலமைச்சருக்கு ஈடானது).

11. தேவாசுவம்	முந்தைய திருவாங்கூர் மாநிலத்தில், சமயங்களின் அறநிலையத்துறை.
12. தேசோபகாரி	நாட்டின் புரவலர் அல்லது காப்பாளர்
13. தேவி குமரி	கன்னிப்பெண் தெய்வம் (தமிழில் "கன்னியாகுமரி") என அழைக்கப்படுகிறது; கிராமத்தின் பெயரும், மாவட்டத்தின் பெயரும், இக்கன்னிப்பெண் தெய்வத்தின் பெயரால் கன்னியாகுமரி என அழைக்கப்படுகின்றன.
14. திரவிடியன்	தென்னிந்தியாவிலுள்ள ஆரியரல்லாதோரின் ஒரு இனமாகும்.
15. எழுத்தாணி	பண்டை காலங்களில் எழுதுவதற்குப் பயன் படுத்தப்பட்ட, இரும்பினாலான கூர்மையான கருவி.
16. கணேசனி	விநாயகப்பொருமானின் பெண் வடிவம்
17. கர்ப்பக்கிரகம்	கடவுளின் கருவறை
18. உண்டி	'உண்ட்' என்ற வடசொல்லினின்று மருவி வந்ததாகும்; இச்சொல் "திரட்டுதல்" எனப் பொருள்படும். உள்நாட்டுத் தொழில் வாணிபத்தில் பயன்படுத்தப் படும் செலாவணி முறி, மாற்று முறி, உறுதி மொழிக் கடன் பத்திரம் ஆகியவை இதனின் அடங்கும்.
19. உண்டி வணிகர்	நிதிமனை நடத்துபவர்
20. உண்டியல் கடை	நிதிமனை நிறுவனம்
21. உண்டியல் வியாபாரம்	நிதிமனைத் தொழில்
22. ஜென்மம்	பிறப்புரிமை (முந்தைய திருவாங்கூர் மாநிலத்தில், சொத்துக்களை, மரபுரிமையாக அடைதல், தொடர்பானது).
23. ஜென்மி	ஜென்ம உரிமையைப் பெற்றிருப்பவர்
24. கைமுக்கு	முந்தைய திருவாங்கூர் மாநிலத்தில், குற்றவாளியெனக் கருதப்பட்டவர், கைமுக்கு என்ற கடுமையான தண்டனைக்குள்ளாக்கப்படுவதுண்டு; அதன்படி, அவரது கைகளைக் கொதிக்கும் நெய்யில், அமிழ்த்தச் செய்து, அதனால், அவருக்கு எவ்வித ரணமும் நேராவிட்டால், அவர் குற்றமற்றவரெனக் கருதப்பட்டார்.
25. கைவிளக்கு	கையிலெடுத்துச் செல்லும் விளக்கு

26. கலைமகள்	கல்விக்கதிபதியான பெண் தெய்வம் ; (இந்து சமய புராண இலக்கியம்) அறிவாற்றலுக்குரிய பண்டை ரோமரின் பெண் தெய்வமான .''மினர்வா'' மற்றும் கிரேக்க நாட்டினரின் ''அதீனா'' ஆகியோர் போன்ற தெய்வம்.
27. கல்கண்டு	படிகங்களாக்கப்பட்ட சர்க்கரை
28. கார்யகார்	செயலர்; ஒரு குறிப்பிட்ட பணியினைச் செய்து முடிக்கப் பொறுப்பேற்றுள்ளவர்.
29. கனி அமுது	சுவையுள்ள பாக்கள்
30. கேரளோத்பத்தி	ஒரு மலையாள மொழி நூல்
31. கேரள மகாத்மியம்	ஒரு வடமொழி நூல்
32. கேள்வி	முந்தைய திருவாங்கூர் மாநிலத்தில், தற்காலத்திய வட்டத்திற்கீடான ஒரு நிருவாகக் கோட்டம்.
33. குங்குமம்	தெய்வங்களை வழிபடவும், நெற்றியில் பொட்டிடவும் பயன்படுத்தப்பெறும் கனிப்பொருள் செந்நிறத்தூள்.
34. குறிஞ்சி	தமிழ் இலக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஐந்து வகையான நிலங்களிலொன்றாகும். மலைகளும் அவற்றைச் சுற்றியுள்ள பகுதிகளும் அல்லது குன்றுப் பகுதிகள் எனப்பொருள்படும். பிறவகை நிலங்களாவன : முல்லை – காடுகளும் அவற்றைச் சுற்றியுள்ள பகுதிகளும் அல்லது மேய்ச்சல் நிலங்கள்; மருதம் – பயிரிடப்படும் நிலங்களும், அவற்றைச் சுற்றியுள்ள பகுதிகளும்; நெய்தல் – கடற்கரைப் பகுதியும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளும்; மற்றும் பாலை – பாலைவனங்கள்.
35. லெமூரியா	மடகாஸ்கரிலிருந்து, ஸ்ரீலங்கா, இந்தியா மற்றும் மலாய் தீவுகள் வரை – புத்துயிருழியின், முன் பிரிவின் மூன்றாங்காலிலிருந்து, தொல்லுயிர் ஊழியின் கடைசி மேலடுக்குப் பிரிவு வரை, முன்னர் பரவியிருந்த பெருநிலப்பகுதி.
36. மஹாமஹோபாத்யாய	இது, வடமொழியில் புலமை பெற்ற, மிகச் சிறந்த கற்றறிவாளருக்கு அளிக்கப்படும் கௌரவப் பட்டமாகும்.

37. மன்றம்	ஒரு நீண்ட பொது அறை. பண்டைத் தமிழகத்தில், தீர்ப்பு வழங்கிவந்த மிகப் பெரிய நீதி மன்றமும் இப்பெயரால் அழைக்கப்பட்டுவந்தது.
38. நமஸ்கார மண்டபம்	பத்மநாபபுரம் அரண்மனையிலுள்ள இறை வழிபாட்டு அறை.
39. நாடக சாலை	பத்மநாபபுரம் அரண்மனையில், வழக்கமான நாடகங்கள் நடைபெற்ற அரங்கம்.
40. நீதி சாஸ்திரம்	பழக்க நடைமுறைகளைக் கற்கவும், பின் பற்றவும் பயன்படும் நூல்களும், தத்துவங்களும்.
41. நூல் நிலையம்	பயனுள்ள பல்வேறு நூல்களைச் சேமித்து வைத்துள்ள அரும்பொருட் களஞ்சியம்.
42. ஓனம்	ஒவ்வோராண்டும், ஆகஸ்டு திங்களில், கேரள மாநிலத்தில் கொண்டாடப்படும் திருவிழா.
43. உற்சவங்கள்	திருவிழாக்கள்
44. பகோடா	புனிதமான கட்டிடங்கள், குறிப்பாக இந்தியா, சீனா போன்ற நாடுகளில் உள்ள, பட்டைக்கம்பு வடிவுடைய கோபுரங்கள்.
45. பானர்	பண்டைத் தமிழ்நாட்டில், இசைக்கருவிகளுடன், மன்னர்களின் அரண்மனைக்கு வருகை தந்து, அவர்களைப் புகழ்ந்து பாடி, பரிசுகளைப் பெற்றுச் சென்ற இசைக் குழுவினர்.
46. பரசுராமர்	தனது கடுந்தவத்தின் பயனால், திருவாங்கூர் மாநில முழுமையையும் கடனின்று மீட்டதாகக் கூறப்படும், புராண இலக்கிய முக்கியத்துவம் வாய்ந்தவர்.
47. திண்ணைப்பள்ளி	வரலாற்றின் பண்டைகால, மற்றும் இடை நிலைக் காலத் தென்னிந்தியாவில், ஆசிரியரது வீட்டின் மேடை வடிவிலான வெளிப் பகுதியில் (திண்ணை) நடத்தப்பட்ட பள்ளிகள், இப்பெயரில் அழைக்கப்பட்டன.
48. பிராவர்த்தி	கிராமம்
49. ரிஷிபதி	முனிவர்
50. சாஸ்தா	சிவன், விஷ்ணு ஆகியோரது புதல்வர் – சுவாமி அய்யப்பன் (இந்து சமய புராண இலக்கியம்).
51. சாஸ்திரி	வடமொழி இலக்கிய கௌரவப் பட்டம்
52. சதங்கை	நடனமாடுவோர் கணுக்காலில் அணியும் மணியிழை
53. சிசு பவன்	குழந்தைகளைப் பேணி வளர்க்கும் காப்பகம்

54. சித்தா	தமிழ்நாட்டில் தொன்று தொட்டு கடைப் பிடிக்கப்பட்டு வரும், திணைத்தோன்றலான சித்த மருத்துவ முறை
55. ஸ்ரீபாதம்	கன்னித் தெய்வம், கன்னியாகுமரி அம்மனின் திருவடிகள்.
56. சுடர்	அனற்கொழுந்து (சுடரொளி)
57. தீவிரவாதி	கடுமையான (தீவிர) நடவடிக்கைகளிலிடுபட்டு, தொல்லைகொடுப்போர்.
58. தென்குரல்	?தற்கிலிருந்து கிளம்பும் ஒலி
59. திருவள்ளுவர்	அறிவுப்பெட்டகமான – திருமறை – திருக்குறளின் நூலாசிரியர்
60. தொல்காப்பியர்	தமிழ் இலக்கண நூலான, தொல்காப்பியத்தின், நூலாசிரியர்.
61. ஊஞ்சல் மண்டபம்	பத்மநாபபுரம் அரண்மனையில், ஊஞ்சல் பொருத்தப்பட்டிருக்கும் நீண்ட பொது அறை.
62. உபாத்யாயா	வடமொழி இலக்கியம் பயின்று, ஆசிரியராகவும் பணியாற்றிடும் ஒரு கற்றறிவாளருக்கு அளிக்கப்படும் கௌரவப்பட்டம்.
63. வசந்த மண்டபம்	இன்ப நேரங்களை, குடும்ப உறுப்பினர்களுடனோ, நண்பர்களுடனோ பகிர்ந்து கழிக்கும், அரண்மனை அல்லது வீட்டிலுள்ள ஒரு நீண்ட பொது அறை அல்லது தனி இடம் – பத்மநாபபுரம் அரண்மனையிலுள்ள இம்மாதிரியான இடம், இப்பெயரில் அழைக்கப்படுகிறது.
64. வழிபாடு	குறிப்பாக இறைவனைத்துதிக்கும் முறை
65. வித்வான்	வடமொழி அல்லது தமிழ் இலக்கியத்தில் புலமை பெற்றோருக்கு அளிக்கப்படும், கௌரவப் பட்டம்.
66. விசுவரூபம்	எல்லையற்ற பரம்பொருளான, மகாவிஷ்ணுவின் திருவடிகளும், தலையும் காணப்பெற முடியாத, பேருருவத் தோற்ற அமைவு (இந்து சமய புராண இலக்கியம்).

அட்டவணை

பக்க எண்கள்

அ

அஸ்ஸாம் 16
அரிகேசரி மாறவர்மன் 70
அச்சுதராயப் பைடயம் 94
அக்மார்க் 333
அரசுத்திட்டங்கள் 430
அலெக்சாண்டர் மெஸர்ஸ் 469
அஞ்சல் 570
அகத்தியர் 952
அருங்காட்சியகங்கள் 1189
அர்த்தசாஸ்திரம் 1202
அட்டாங்கரிதயம் 1205

ஆ

ஆரல்வாய் மொழிக்கணவாய் 1326,5
ஆயர்கள் 64
ஆரியப்படை கட்ந்த நெடுஞ்செழியன் 960

இ

இடவியல்பு 3
இராச இராச சோழன் 76
இராசேந்திர சோழர் 78
இராணி மங்கம்மாள் 100
இராமசுவாமி அய்யர் 116
இராமாயணம் 211
இடப்பெயர்ச்சி 636
இருபது அம்சத் திட்டம் 648

பக்க எண்கள்

இ - தொடர்ச்சி

இரயத்துவாரித் திட்டம் 680
இந்து சமய மற்றும் அறநிலைத் துறை 804
இலக்கிய மேதைகள் 1191
இந்து சமய மற்றும் அறநிலையங்கள் 1293
இயற்கை நண்பர்கள் 1314

ஈ

ஈத்தா மொழி 970

உ

உழைப்போர் மேம்பாட்டுத் திட்டங்கள் 321
உண்மையான கொள்கை 845
உடல்நிலை ஆக்க மேம்பாடு 918
உடற்கல்வி 1089
உலக நல்வாழ்வு அமைப்பு 1241
உயிரினப் பாதுகாப்பு 1267
உதயகிரிக் கோட்டை 1391

ஊ

ஊராட்சி ஒன்றியங்கள் 879

எ

எவரெஸ்ட் 684
எதிர்முறை மருத்துவம் 1204

பக்க எண்கள்

ஏ

ஏலாதி 956

ஐ

ஐக்கிய கேரள கிளர்ச்சி 115

ஒ

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் 640

ஔ

ஔவையார் 954

க

கனரக கனிப்பொருள் மணல்கள் 13
கலங்கரை விளக்கம் 598
கன்னியாகுமரி நகரியம் 915
கல்வி 952
கன்னியாகுமரி மாவட்டம் அமைப்பு (1956) 1038
கவிமணி தேசிக விநாயகம் 1077
கல்லூரிக் கல்வி 1104
கல்வியறிவுடையோர் சங்கம் 1317
கன்னியாகுமரி துறைமுகம் 1342

கா

காடுகள் 25
காமராசர் 116
கார்யகார் 666
காரணாதன் 842

பக்க எண்கள்

கி

கிள்ளியூர் 9
கிராமதான இயக்கம் 693- 695
கிழக்கிந்திய கம்பெனியார் 714
கிரந்தம் 958
கிராம கைத்தொழில்கள் 1268

கு

குன்றுகள் 4
குடிசைத் தொழில்கள் 445
குடிவார உரிமையாளர்கள் பாதுகாப்பு சட்டம் (1955) 692
குருந்தங் கோடு 9
குற்றஇயல் நீதிமன்றங்கள். புள்ளி விவரங்கள் 766
குழந்தைகள் நலம் 1286
குமார கோவில் 1342

கூ

கூட்டிணைவான நிறுவனங்கள் 631
கூட்டுறவுத் துறை 786
கூட்டுறவு இயக்கம் 497
கூட்டுறவு அச்சகம் 521

கெ

கெள்விகள் 666

கே

கேப் காமரின் 1

பக்க எண்கள்

ச

சமஸ்தானம் 58
சமயம், சமுதாயப் பிரிவு 145
சமுதாய வாழ்க்கையமைப்பு 168
சமூகப்பணி அமைப்புகள் 1307
சதாவதானி செய்குத் தம்பிப் பாவலர் 1361

சா

சாரணர் 1329

சி

சிட்ட அலகு 250
சிப்காட் 402
சிறிய அளவிலான தொழிற்சாலைகள் 412
சின்ஹா எம்.எச். 464
சிறு பஞ்ச மூலம் 956
சிறு குடும்ப மாதிரி 1246
சித்த ஆயுர்வேத மற்றும் ஓமியோபதி 1230
சிலப்பதிகாரம் 1335
சித்ர சபை 1378

சீ

சீட்டுக் கழகம் தோற்றம் 542
சீர்திருத்தம்(1909) 1007

சு

சுவாமித் தோப்பு 209
சுய வேலை வாய்ப்புத் திட்டம் 908
சுசீந்திரம் 1372

பக்க எண்கள்

சே

சேதுலட்சுமி பாய் 112

டி

டிரான்சிட் 684
டீலானாய் 1391

ட்

ட்டிக் 403
ட்டிட்கோ 404

ந

நபார்டு 787
நகர் வளாச்சிக் குழநிதி 846
நகராட்சிகள் 849
நகர திட்டமைப்பு 870

நா

நான்கு சட்ட முன் வடிவுகள் 492
நான்மணிக் கடிகை 956

நி

நில இயல் 62
நிலச்சீர்திருத்தம் 222
நிதிகள் 1290

நீ

நீலிக்கதை 213
நீர்ப்பாசனம் 340
நீலகண்ட விநாயகர் 1375

பக்க எண்கள்

நூ

நூலக இயக்கம் 1183

நே

நேசமணி 1120,120

த

தணுப்பு மையம் 292
தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் 830
தனியார் உயர்நிலைப் பள்ளிகள் 1071
தடிக்காரன் கோணம் 1381

தா

தாகூர் 464

தி

திவான் பேஷ்கர் 2
திராவிட பாரம்பரியம் 60
திருமலை நாயக்கர் 98
திருவாயிர வருகை 165
திணை நிலம் 259
திருவள்ளுவர் 953
திரிகடுகம் 956
திருவாங்கூர் 982
திருப்பதிசாரம் 1384
திருப்பரப்பு அருவி 1389

தெ

தெக்கி முக்கம் 2

பக்க எண்கள்

தொ

தொலை தூரமுள்ள பொதுத் தொலை பேசிகள் 576
தொழிலாளர் துறை 812
தொல்காப்பியர் 953
தொழில் நுணுக்கப் பயிற்சி நிறுவனங்கள் 1152

தோ

தோட்டக் கலை 241,246

ப

பத்மநாபபுரம் 3
பழையாறு 6
பரளியாறு 7
பர்மா 16
படகர்கள் 100
பட்டம் தாணுப் பிள்ளை 118
பர்வாதிகார் 666
பள்ளிக் கல்வி 1014
பத்மநாபபுரம் அரண்மனை 1366

பா

பாடும் பறவை வகை 39
பால் வகை வீதத் தொடர்பு 139
பாராதீயன் 1091
பாரக்குந்து 1370

பி

பிரம்மி 958
பிரவிர்த்தி 987
பிற்பட்டோர் நலத்துறை 1278

பக்க எண்கள்

பு

புவியியல் 11
புறநானூறு 66, 68
புருசிய நாடு 969
புனித சேவியர் 1352

பெ

பெரிய தொழில்துறை நிறுவனங்கள் 406
பெருவழி மற்றும் புறப்பகுதிப் பணித்துறை 600
பெண்கள் கல்வி 1166
பெண்கள் வளர்ச்சித் திட்டங்கள் 1312

பொ

பொதுத் தேர்தல் 1297

போ

போக்குவரத்து 656 438

ம

மன்னார் வளைகுடா 3
மகேந்திர கிரி மலை 6
மணிக்கல் 16
மக்கள் நல அரசு 137
மரபாராய்ச்சி 209
மனித உரிமைப் பாதுகாத்தல் 736
மன்ரோ பிரபு [illegible] 748
மண்டைக் காடு 1350
மறு வாழ்வுத் துறை 824
மத்யஸ்தத்தை 841

பக்க எண்கள்

ம – தொடர்ச்சி

மண்டலத் திட்டம் 871
மருத்துவாழ் மலை 1112
மருத்துவ மனைகளும் மருந்துகங்களும் 1219

மா

மாநில போக்குவரத்துக் கழகங்கள் 584
மாவட்ட நிலையிலான அலுவலர்கள் 668
மாவட்ட சட்ட உதவிக்குழு 746
மா மன்றங்கள் 840
மாவட்ட வளர்ச்சிக் குழு 888

மீ

மீன் தொழில் துறை 293

மு

முக்கூடல் 1352
முதியோர் கல்வி 1171

மெ

மெட்ராஸ் தார்சு 608

மொ

மொழியியல் ஆராய்ச்சி 179

யா

யாத்ரிகர் மையங்கள் 176

பக்க எண்கள்

லி

லிமுராய்டியா 31
லிங்க் 684

வ

வங்கித் தொழில் 454
வங்கித் தொழில் எழுச்சி 470
வங்கி மையங்கள் 484
வணிக வரிகள் 706, 707
வணிக வரித்துறை 787
வட்டாரப் பேச்சு மொழிப்பள்ளி
வக்ஃப் வாரியம் 993
வட்டக் கோட்டை 1394-95

வா

வாணிகம் 559
வாழ்க்கைத் தொழில் 1074
வாள்வச்ச கோஷ்டம் 1393

வி

விக்கிர மாதித்ய வரகுணா 74
விலங்கின வளர்ப்பு 284
விற்பனைக் கூடங்கள் 829

பக்க எண்கள்

வே

வேநாடு மன்னர்கள் 83
வேலுத் தம்பி 106, 108
வேளாண் விரிவாக்க மையங்கள் 256
வேளாண் வாணிபத் துறை 782

ஜ

ஜடில பராந்தகன் 72

ஜே

ஜேம்ஸ் டவுன் 1333

ஹோ

ஹோம் 1358